# THE BOOK OF MORMON

## TAMIL – ENGLISH PARALLEL EDITION

Version 1, published April 2023. *bencrowder.net/book-of-mormon-parallel-edition/*

This parallel edition © 2023 Benjamin Crowder. All rights reserved. You have permission to print this document for your own use. For other uses, send requests to *ben.crowder@gmail.com*.

Text of the Book of Mormon © 2023 Intellectual Reserve, Inc. All rights reserved.

The text of this edition is licensed from The Church of Jesus Christ of Latter-day Saints with the following disclaimer: *The Product offered by Benjamin Crowder is neither made, provided, approved, nor endorsed by, Intellectual Reserve, Inc. or The Church of Jesus Christ of Latter-day Saints. Any content or opinions expressed, implied, or included in or with the Product offered by Benjamin Crowder are solely those of Benjamin Crowder and not those of Intellectual Reserve, Inc. or The Church of Jesus Christ of Latter-day Saints.*

# மார்மன் புஸ்தகம்

## நேபியின் தகடுகளிலிருந்து எடுக்கப்பட்ட தகடுகளின் மீது மார்மனின் கரத்தால் எழுதப்பட்ட விவரம்

ஆதலால் இது நேபியின் ஜனங்கள் மற்றும் லாமானியர்களின் குறிப்பின் சுருக்கமாக இருக்கிறது – இஸ்ரவேல் வீட்டாரில் மீதியானவர்களாகிய லாமானியருக்கும் யூதருக்கும், புறஜாதியாருக்கும் எழுதப்பட்டது – கட்டளையின் வாயிலாகவும், தீர்க்கதரிசன ஆவி மற்றும் வெளிப்பாட்டின்படியேயும் எழுதப்பட்டவையாகும் – அவைகள் அழிக்கப்படமுடியாதபடி எழுதப்பட்டு, முத்திரையிடப்பட்டு, கர்த்தருக்குள் மறைத்து வைக்கப்பட்டன – தேவனுடைய வரத்தாலும், வல்லமையினாலும் மொழிபெயர்க்கப்படுவதற்கு அதிலிருந்து வெளியே வர புறஜாதியார் வாயிலாக ஏற்ற காலத்தில் வெளியே வரும்படிக்கு, மரோனியின் கரத்தால் முத்திரிக்கப்பட்டு, கர்த்தருக்குள்ளாக மறைத்து வைக்கப்பட்டது. அதிலிருக்கும் மொழிபெயர்ப்போ தேவனுடைய வரம்.

பரலோகத்துக்குச் செல்ல கோபுரத்தைக் கட்டிக்கொண்டிருந்தபொழுது, ஜனங்களின் பாஷையை கர்த்தர் தாறுமாறாக்கிய சமயத்தில், சிதறடிக்கப்பட்ட யாரேதின் ஜனங்களின் குறிப்பாகிய ஏத்தேரின் புஸ்தகத்திலிருந்து எடுத்த சுருக்கம் – இது கர்த்தர் அவர்களுடைய பிதாக்களுக்கு எவ்விதமான மகத்தான காரியங்களைச் செய்தார் என்பதையும், இஸ்ரவேல் வீட்டாரில் மீதியானோர் கர்த்தருடைய உடன்படிக்கைகளையும் அவர்கள் என்றென்றைக்குமாய் தள்ளப்படவில்லை என்பதையும் அறிந்துகொள்ளக் காட்டுவதாயிருக்கிறது. எல்லா தேசங்களுக்கும் தம்மை வெளியரங்கமாக்குகிற இயேசுதான் கிறிஸ்துவாகிய நித்திய தேவன் என்பதை யூதருக்கும் புறஜாதியாருக்கும் அறிவுறுத்துகிறதுமாயிருக்கிறது, இப்பொழுதும் இதில் குறைகள் இருப்பின் அவைகள் மனுஷர்களின் தவறுகளாகவே இருக்கின்றன. ஆகையால் நீங்கள் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் கறையற்றவர்களாகக் காணும்படி, தேவனுடைய காரியங்களைக் கண்டனம் பண்ணாதிருப்பீர்களாக.

*தகடுகளிலிருந்து ஆங்கிலத்தில் மூலமொழிபெயர்ப்பு ஜோசப் ஸ்மித் இளையவரால் செய்யப்பட்டது.*

# The Book of Mormon

## An Account Written by the Hand of Mormon upon Plates Taken from the Plates of Nephi

Wherefore, it is an abridgment of the record of the people of Nephi, and also of the Lamanites—Written to the Lamanites, who are a remnant of the house of Israel; and also to Jew and Gentile—Written by way of commandment, and also by the spirit of prophecy and of revelation—Written and sealed up, and hid up unto the Lord, that they might not be destroyed—To come forth by the gift and power of God unto the interpretation thereof—Sealed by the hand of Moroni, and hid up unto the Lord, to come forth in due time by way of the Gentile—The interpretation thereof by the gift of God.

An abridgment taken from the Book of Ether also, which is a record of the people of Jared, who were scattered at the time the Lord confounded the language of the people, when they were building a tower to get to heaven—Which is to show unto the remnant of the house of Israel what great things the Lord hath done for their fathers; and that they may know the covenants of the Lord, that they are not cast off forever—And also to the convincing of the Jew and Gentile that Jesus is the Christ, the Eternal God, manifesting himself unto all nations—And now, if there are faults they are the mistakes of men; wherefore, condemn not the things of God, that ye may be found spotless at the judgment-seat of Christ.

*TRANSLATED BY JOSEPH SMITH, Jun.*

# மூன்று சாட்சிகளின் சாட்சியம்

இந்த மொழிபெயர்ப்பைப் பெறும் எல்லா தேசத்தாரும், இனத்தாரும், பாஷைக்காரரும், ஜனங்களும் இதனால் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், நேபியர், அவர்களின் சகோதரர்களாகிய லாமானியர் மற்றும் சொல்லப்பட்டிருக்கிற கோபுரத்திலிருந்து வந்த யாரேதியர் வரலாறாகிய, இந்த வரலாற்றை அடக்கியுள்ள தகடுகளை பிதாவாகிய தேவன் மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆகியோரது கிருபையின்மூலம் நாங்கள் கண்டோம். அவை தேவனுடைய வரத்தினாலும், வல்லமையினாலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன என்பதையும் நாங்கள் அறிவோம், ஏனெனில் தேவனுடைய சத்தம் அதை எங்களுக்கு அறிவித்தது. ஆகையால் இந்த மொழிபெயர்ப்பு உண்மையானது என்பதை நிச்சயமாக அறிவோம். இந்தத் தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்தவைகளை நாங்கள் பார்த்தோம் என்பதையும் சாட்சியமளிக்கிறோம். மேலும் அவைகள் மனுஷனால் அல்லாமல், தேவனுடைய வல்லமையினால் எங்களுக்குக் காண்பிக்கப்பட்டன. மேலும் நாங்கள் தகடுகளையும் அவற்றின்மேல் பொறிக்கப்பட்டிருந்தவைகளையும் நோக்கிப் பார்க்கும்படியாக, பரலோகத்திலிருந்து ஒரு தேவதூதன் இறங்கிவந்து இவைகளை எங்கள் கண்கள் முன்பாகக் கொண்டுவந்து வைத்தான் என்பதைத் தெளிவான புத்தியின் வார்த்தைகளால் நாங்கள் அறிவிக்கிறோம். பிதாவாகிய தேவன், மற்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையினால் நாங்கள் கண்டு, இந்தக் காரியங்கள் உண்மையென சாட்சி கொடுக்கிறோம் என்பதை நாங்கள் அறிவோம். மேலும் இது எங்கள் கண்களுக்கு அற்புதமாயிருக்கிறது. இருந்தபோதிலும் நாங்கள் இதைக் குறித்து சாட்சி கொடுக்க வேண்டுமென கர்த்தருடைய சத்தம் எங்களுக்குக் கட்டளையிட்டபடியால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படியாய் இந்தக் காரியங்களைக் குறித்து சாட்சி கொடுக்கிறோம். நாம் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமெனில், எல்லா மனுஷருடைய இரத்தத்தையும் நம் வஸ்திரங்களிலிருந்து நீக்கிப்போட்டு, கிறிஸ்துவின் நியாயாசனத்தின் முன் கறையற்றவர்களாய் காணப்பட்டு, நித்தியமாய் பரலோகத்தில் அவருடன் வாசம் செய்வோம் என்பதை நாங்கள் அறிவோம். ஒரே தேவனாயிருக்கிற பிதாவுக்கும் குமாரனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் கனமுண்டாவதாக, ஆமென்.

ஆலிவர் கௌட்ரி
டேவிட் விட்மர்
மார்ட்டின் ஹாரிஸ்

# The Testimony of Three Witnesses

Be it known unto all nations, kindreds, tongues, and people, unto whom this work shall come: That we, through the grace of God the Father, and our Lord Jesus Christ, have seen the plates which contain this record, which is a record of the people of Nephi, and also of the Lamanites, their brethren, and also of the people of Jared, who came from the tower of which hath been spoken. And we also know that they have been translated by the gift and power of God, for his voice hath declared it unto us; wherefore we know of a surety that the work is true. And we also testify that we have seen the engravings which are upon the plates; and they have been shown unto us by the power of God, and not of man. And we declare with words of soberness, that an angel of God came down from heaven, and he brought and laid before our eyes, that we beheld and saw the plates, and the engravings thereon; and we know that it is by the grace of God the Father, and our Lord Jesus Christ, that we beheld and bear record that these things are true. And it is marvelous in our eyes. Nevertheless, the voice of the Lord commanded us that we should bear record of it; wherefore, to be obedient unto the commandments of God, we bear testimony of these things. And we know that if we are faithful in Christ, we shall rid our garments of the blood of all men, and be found spotless before the judgment-seat of Christ, and shall dwell with him eternally in the heavens. And the honor be to the Father, and to the Son, and to the Holy Ghost, which is one God. Amen.

Oliver Cowdery
David Whitmer
Martin Harris

# எட்டு சாட்சிகளின் சாட்சியம்

இந்த மொழிபெயர்ப்பைப் பெறும் எல்லா தேசத்தாரும், இனத்தாரும், பாஷைக்காரரும், ஜனங்களும் இதனால் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால், இந்தப் பணியின் மொழிபெயர்ப்பாளரான ஜோசப் ஸ்மித் இளையவர் என்பவர், சொல்லப்பட்டிருக்கிறதும், தங்கத்தின் தோற்றத்தை உடையதுமான தகடுகளை எங்களிடத்தில் காண்பித்தார். சொல்லப்பட்ட ஸ்மித் என்பவர் எத்தனைத் தகடுகளை மொழிபெயர்த்தாரோ அத்தனையையும் நாங்கள் கைகளில் எடுத்தோம். அவைகளில் பொறிக்கப்பட்டுள்ளவைகளையும் நாங்கள் பார்த்தோம். அவை எல்லாம் பழங்கால வேலையாகவும், சிறந்த வேலைப்பாடு அமைந்த தோற்றமுடையதாயும் இருந்தன. பேசப்பட்ட ஸ்மித் அவைகளை எங்களுக்குக் காண்பித்தார் என்பதைத் தெளிந்த புத்தியுள்ள வார்த்தைகளினால் சாட்சி கொடுக்கிறோம். ஏனெனில் நாங்கள் அவைகளைப் பார்த்தோம், கைகளினால் தூக்கிப் பார்த்தோம். நாங்கள் சொன்ன அத்தகடுகளைப் பேசப்பட்ட ஸ்மித் என்பவர் பெற்றிருந்தார் என்பதை நாங்கள் நிச்சயமாக அறிவோம். நாங்கள் பார்த்தவைகளுக்காக உலகத்திற்கு சாட்சிகளாக இருப்பதற்கு, உலகத்திற்கு எங்கள் பெயர்களைக் கொடுக்கிறோம். இதற்கு தேவன் சாட்சி கொடுப்பதால், நாங்கள் பொய்யுரைக்கவில்லை.

கிறிஸ்டியன் விட்மர்
ஜேக்கப் விட்மர்
பீட்டர் விட்மர், இளையவர்
ஜான் விட்மர்
ஹைரம் பேஜ்
ஜோசப் ஸ்மித், மூத்தவர்
ஹைரம் ஸ்மித்
சாமுவேல் ஹெச். ஸ்மித்

# The Testimony of Eight Witnesses

Be it known unto all nations, kindreds, tongues, and people, unto whom this work shall come: That Joseph Smith, Jun., the translator of this work, has shown unto us the plates of which hath been spoken, which have the appearance of gold; and as many of the leaves as the said Smith has translated we did handle with our hands; and we also saw the engravings thereon, all of which has the appearance of ancient work, and of curious workmanship. And this we bear record with words of soberness, that the said Smith has shown unto us, for we have seen and hefted, and know of a surety that the said Smith has got the plates of which we have spoken. And we give our names unto the world, to witness unto the world that which we have seen. And we lie not, God bearing witness of it.

Christian Whitmer
Jacob Whitmer
Peter Whitmer, Jun.
John Whitmer
Hiram Page
Joseph Smith, Sen.
Hyrum Smith
Samuel H. Smith

# நேபியின் முதலாம் புஸ்தகம்

## அவனுடைய ஆளுகையும் ஊழியமும்

*லேகி அவனுடைய மனைவியாகிய சரயா, அவனுடைய நான்கு குமாரர்களாகிய (மூத்தவனிலிருந்து தொடங்கி) லாமான், லெமுவேல், சாம், நேபி எனப்பட்டவர்களின் விவரம். ஜனங்களுடைய அக்கிரமத்தைக் குறித்து லேகி தீர்க்கதரிசனமுரைத்ததினிமித்தம், அவர்கள் அவனுடைய ஜீவனை அழிக்கத் தேடுகிறார்கள் என்பதால் கர்த்தர் எருசலேம் தேசத்தைவிட்டுப் புறப்பட்டுச் செல்லும்படி அவனை எச்சரித்தல். அவன் தன் குடும்பத்தாருடன் வனாந்தரத்தினுள் மூன்று நாள் பயணம் செய்தல். நேபி தன் சகோதரரை அழைத்துக்கொண்டு, யூதர்களின் பதிவேடுகளுக்காக எருசலேம் தேசத்திற்குத் திரும்பிவருதல். அவர்களுடைய பாடுகளின் விவரம். இஸ்மவேலின் குமாரத்திகளை அவர்கள் மனைவிகளாக விவாகம் செய்தல். அவர்கள் தங்கள் குடும்பங்களை அழைத்துக்கொண்டு, வனாந்தரத்திற்குள் புறப்பட்டுப்போகுதல். வனாந்தரத்தில் அவர்களின் பாடுகளும், உபத்திரவங்களும் மற்றும் அவர்களுடைய பயணத்தின் மார்க்கம். அவர்கள் திரளான தண்ணீர்களண்டைக்கு வருதல். நேபியின் சகோதரர்கள் அவனுக்கு எதிராக கலகஞ்செய்தல். அவன் அவர்களைத் திகைக்கப்பண்ணி, ஒரு கப்பலைக் கட்டுதல். அவர்கள் அந்த இடத்தை உதாரத்துவஸ்தலம் என்று அழைத்தல். அவர்கள் திரளான தண்ணீர்களைக் கடந்து வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு வருதல் முதலியன. இது நேபியின் விவரத்தின்படியானது அல்லது வேறு வார்த்தைகளிலெனில், நேபியாகிய நான் இந்தப் பதிவேடுகளை எழுதினேன்.*

# The First Book of Nephi

## His Reign and Ministry

*An account of Lehi and his wife Sariah, and his four sons, being called, (beginning at the eldest) Laman, Lemuel, Sam, and Nephi. The Lord warns Lehi to depart out of the land of Jerusalem, because he prophesieth unto the people concerning their iniquity and they seek to destroy his life. He taketh three days' journey into the wilderness with his family. Nephi taketh his brethren and returneth to the land of Jerusalem after the record of the Jews. The account of their sufferings. They take the daughters of Ishmael to wife. They take their families and depart into the wilderness. Their sufferings and afflictions in the wilderness. The course of their travels. They come to the large waters. Nephi's brethren rebel against him. He confoundeth them, and buildeth a ship. They call the name of the place Bountiful. They cross the large waters into the promised land, and so forth. This is according to the account of Nephi; or in other words, I, Nephi, wrote this record.*

## 1 நேபி 1

1 நேபியாகிய நான், நற்கீர்த்தி பெற்ற பெற்றோருக்குப் பிறந்தவனாய் இருந்தபடியால், என் தகப்பன் கற்றறிந்த சகலவற்றிலும் சற்றே போதிக்கப்பட்டிருந்தேன்; என்னுடைய வாழ்நாட்களில் அநேக உபத்திரவங்களைக் கண்டிருப்பினும், என் வாழ்நாள் முழுவதும் நான் கர்த்தரால் மிகத் தயவுபெற்றவனாயிருந்தேன்; ஆம், தேவனின் நன்மைகளையும், இரகசியங்களையும் குறித்து சிறந்த ஞானமுடையவனாய் இருந்தபடியால், என் நாட்களில் நடந்த என் நடவடிக்கைகளை ஒரு பதிவேடாக எழுதிவைக்கிறேன்.

2 ஆம், யூதர்களின் கற்றறிவும், எகிப்தியர்களின் பாஷையும் அடங்கிய என் தகப்பனின் பாஷையிலே நான் ஒரு பதிவேட்டை எழுதிவைக்கிறேன்.

## 1 Nephi 1

I, Nephi, having been born of goodly parents, therefore I was taught somewhat in all the learning of my father; and having seen many afflictions in the course of my days, nevertheless, having been highly favored of the Lord in all my days; yea, having had a great knowledge of the goodness and the mysteries of God, therefore I make a record of my proceedings in my days.

Yea, I make a record in the language of my father, which consists of the learning of the Jews and the language of the Egyptians.

3 நான் எழுதும் இந்தப் பதிவேடுகள் உண்மையானவை என்று நான் அறிவேன்; நான் என் சொந்தக் கைகளினால் இவைகளைச் செய்கிறேன்; நான் இவைகளை என் அறிவின்படியே எழுதுகிறேன்.

And I know that the record which I make is true; and I make it with mine own hand; and I make it according to my knowledge.

4 யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின் ஆளுகையின் முதலாம் ஆண்டின் ஆரம்பத்தில் (என் தகப்பனாகிய லேகி எருசலேமிலே, தன் வாழ்நாள் முழுவதும் வாசமாயிருந்தபடியால்) அதே ஆண்டில் அநேக தீர்க்கதரிசிகள் வந்து, அவர்கள் மனந்திரும்ப வேண்டுமெனவும், இல்லையேல் மகாநகரமாகிய எருசலேம் அழிக்கப்படும் எனவும் ஜனங்களுக்குத் தீர்க்கதரிசனமுரைத்தார்கள்.

For it came to pass in the commencement of the first year of the reign of Zedekiah, king of Judah, (my father, Lehi, having dwelt at Jerusalem in all his days); and in that same year there came many prophets, prophesying unto the people that they must repent, or the great city Jerusalem must be destroyed.

5 ஆனபடியால், என் தகப்பனாகிய லேகி, கர்த்தரிடத்தில் சென்று, ஆம், அவருடைய முழு இருதயத்தோடும் தம்முடைய ஜனத்துக்காக ஜெபித்தார்.

Wherefore it came to pass that my father, Lehi, as he went forth prayed unto the Lord, yea, even with all his heart, in behalf of his people.

6 அவர் கர்த்தரிடம் ஜெபித்துக் கொண்டிருந்தபொழுது, ஒரு அக்கினி ஸ்தம்பம் அவர் முன்பாக வந்து, அவருக்கு முன்னிருந்த ஒரு பாறையின் மேல் இறங்கியது; மேலும் அவர் அதிகமானவற்றைக் கண்டும் கேட்டுமிருந்தார், அவர் கண்டும் கேட்டும் இருந்த காரியங்களினிமித்தம், அவர் மிகவும் அதிர்ந்து, நடுக்கம் கொண்டார்.

And it came to pass as he prayed unto the Lord, there came a pillar of fire and dwelt upon a rock before him; and he saw and heard much; and because of the things which he saw and heard he did quake and tremble exceedingly.

7 அவர் எருசலேமில் இருந்த தம் சொந்த வீட்டிற்குத் திரும்பினார்; அவர் ஆவியினால் மேற்கொள்ளப்பட்டும், தாம் கண்டகாரியங்களினிமித்தமும் தாமாகவே படுக்கையின்மேல் விழுந்தார்.

And it came to pass that he returned to his own house at Jerusalem; and he cast himself upon his bed, being overcome with the Spirit and the things which he had seen.

8 ஆவியினால் மேற்கொள்ளப்பட்டவராய், அவர் ஒரு தரிசனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, வானம் திறந்திருப்பதைக்கூட அவர் கண்டு, எண்ணிலடங்கா தூதர்களின் கூட்டங்கள் தங்களுடைய தேவனைப் பாடியும், துதித்தும் இருக்கும் நிலையில், தேவன் தன்னுடைய சிங்காசனத்தில் வீற்றிருப்பதையும், அவர் கண்டதாக நினைத்தார்.

And being thus overcome with the Spirit, he was carried away in a vision, even that he saw the heavens open, and he thought he saw God sitting upon his throne, surrounded with numberless concourses of angels in the attitude of singing and praising their God.

9 ஒருவர் வானத்தின் மத்தியிலிருந்து இறங்கி வருவதை அவர் கண்டார். அவருடைய பிரகாசம் மத்தியானவேளையின் சூரியனைக் காட்டிலும் மேலானதாக இருந்ததையும் கண்டார்.

And it came to pass that he saw One descending out of the midst of heaven, and he beheld that his luster was above that of the sun at noon-day.

10 அவரைப் பின்தொடர்ந்து வந்த பன்னிரண்டுபேரையும் அவர் கண்டார், அவர்களுடைய பிரகாசம் ஆகாய விரிவிலுள்ள நட்சத்திரங்களையும் மிஞ்சுவதாக இருந்தது.

And he also saw twelve others following him, and their brightness did exceed that of the stars in the firmament.

11 அவர்கள் கீழே இறங்கிவந்து, பூமியின் பரப்பின் மீதெங்கும் போனார்கள்; முதலாமவர் வந்து என் தகப்பனின் முன்பாக நின்று, அவரிடம் ஒரு புஸ்தகத்தைக் கொடுத்து, அவர் வாசிக்க வேண்டுமெனக் கட்டளையிட்டார்.

And they came down and went forth upon the face of the earth; and the first came and stood before my father, and gave unto him a book, and bade him that he should read.

12 அதனை அவர் வாசித்தபொழுது, அவர் கர்த்தருடைய ஆவியினால் நிரப்பப்பட்டார்.

And it came to pass that as he read, he was filled with the Spirit of the Lord.

13 அவர், வாசித்துச் சொன்னதாவது: எருசலேமே,
உனக்கு ஐயோ, ஐயோ, ஏனெனில், நான் உன் அரு-
வருப்புகளைக் கண்டிருக்கிறேன்! ஆம், அதுவும்
அதன் குடிகளும் அழிக்கப்படவேண்டுமெனவும்,
அநேகர் பட்டயத்தால் அழிவார்கள் எனவும், அநே-
கர் பாபிலோனுக்குச் சிறைப்பிடிக்கப்பட்டுக்
கொண்டுபோகப்படுவார்கள் எனவும் எருசலே-
மைக் குறித்து அநேக காரியங்களை என் தகப்பன்
வாசித்தார்.

And he read, saying: Wo, wo, unto Jerusalem, for I have seen thine abominations! Yea, and many things did my father read concerning Jerusalem—that it should be destroyed, and the inhabitants thereof; many should perish by the sword, and many should be carried away captive into Babylon.

14 என் தகப்பன் பெரிதும் அதிசயமுமான காரியங்-
களை வாசித்தும், கண்டுமிருந்தபோது, அவர் கர்த்-
தரை நோக்கி அநேக காரியங்களை ஓலமிட்டுச்
சொன்னதாவது: சர்வ வல்லமையுள்ள தேவனா-
கிய கர்த்தாவே! உம்முடைய கிரியைகள் பெரிதும்,
அதிசயமுமானவைகள்; உம்முடைய சிங்காசனம்
வானங்களில், உயரத்திலிருக்கிறது; உம்முடைய
வல்லமையும், நன்மையும், இரக்கமும், பூமியின் கு-
டிகள் எல்லோர்மீதும் உள்ளது; மேலும் நீர் இரக்கமு-
டையவராய் இருக்கிறபடியால், உம்மிடத்தில் வரு-
கிறவர்களை அழிந்துபோகவிடீர்!

And it came to pass that when my father had read and seen many great and marvelous things, he did exclaim many things unto the Lord; such as: Great and marvelous are thy works, O Lord God Almighty! Thy throne is high in the heavens, and thy power, and goodness, and mercy are over all the inhabitants of the earth; and, because thou art merciful, thou wilt not suffer those who come unto thee that they shall perish!

15 என் தகப்பன், தன் தேவனைத் துதித்த வார்த்தை-
கள் இவ்விதமானதாயிருந்தது; அவர் கண்ட காரி-
யங்களினிமித்தம், ஆம், கர்த்தர் அவருக்குக் காட்டி-
யவைகளினிமித்தம் அவருடைய ஆத்துமா களி-
கூர்ந்தது மற்றும் அவருடைய முழு இருதயமும் நி-
ரப்பப்பட்டது.

And after this manner was the language of my father in the praising of his God; for his soul did rejoice, and his whole heart was filled, because of the things which he had seen, yea, which the Lord had shown unto him.

16 இப்பொழுதும், நேபியாகிய நான் என் தகப்பன்
எழுதிய எல்லாக் காரியங்களின் முழு விவரத்தை-
யும் எழுதுவதில்லை, ஏனெனில், அவர் தரிசனங்க-
ளிலும் சொப்பனங்களிலும் கண்ட அநேக காரியங்-
களை எழுதி இருக்கிறார்; மேலும் அவர் தம்முடைய
பிள்ளைகளிடத்தில் தீர்க்கதரிசனம் உரைத்து, பே-
சிய அநேக காரியங்களையும் எழுதியிருக்கிறார்,
அவைகளைக் குறித்த முழு விவரத்தையும் நான்
எழுதப் போவதில்லை.

And now I, Nephi, do not make a full account of the things which my father hath written, for he hath written many things which he saw in visions and in dreams; and he also hath written many things which he prophesied and spake unto his children, of which I shall not make a full account.

17 ஆனால், என் வாழ்நாட்களில் என் நடவடிக்கை-
களைக் குறித்த விவரத்தை நான் எழுதுகிறேன்.
இதோ, என் சொந்தக் கைகளினால் செய்த தகடுக-
ளின்மேல், என் தகப்பனுடைய பதிவேடுகளைச் சு-
ருக்கி பொறிக்கிறேன், ஆகையால், என் தகப்-
பனின் பதிவேடுகளைச் சுருக்கி பொறித்த பின்பு,
நான், என் சொந்த வாழ்க்கையைக் குறித்த விவரத்-
தை எழுதுவேன்.

But I shall make an account of my proceedings in my days. Behold, I make an abridgment of the record of my father, upon plates which I have made with mine own hands; wherefore, after I have abridged the record of my father then will I make an account of mine own life.

18 ஆகையால், எருசலேமின் அழிவைக் குறித்த,
அநேக அதிசயமான காரியங்களை என் தகப்பனா-
கிய லேகிக்குக் கர்த்தர் காட்டிய பின்னர், இதோ,
ஜனங்கள் மத்தியில் போய், அவர் கண்டும் கேட்டும்
இருக்கிற காரியங்களைக் குறித்து அவர்களிடம்
தீர்க்கதரிசனம் உரைத்து, அறிவிக்கத் தொடங்கி-
னார் என்பதை நீங்கள் அறியவேண்டுமென நான்
விரும்புகிறேன்.

Therefore, I would that ye should know, that after the Lord had shown so many marvelous things unto my father, Lehi, yea, concerning the destruction of Jerusalem, behold he went forth among the people, and began to prophesy and to declare unto them concerning the things which he had both seen and heard.

19 அவர்களைப்பற்றி அவர் சாட்சிகொடுத்த காரி-
யங்களினிமித்தம், யூதர்கள் அவரைப் பரியாசம்
பண்ணினார்கள், ஏனெனில், அவர் அவர்களு-
டைய துன்மார்க்கத்தையும், அருவருப்புகளையும்
குறித்து உண்மையாகவே சாட்சி கொடுத்தார்; அவர்
கண்டும் கேட்டும் இருக்கிற காரியங்களும், மேலும்
அவர் புஸ்தகத்தில் வாசித்த காரியங்களும், மேசி-
யாவின் வருகையையும், உலகத்தின் மீட்பையும்
தெளிவாக வெளிப்படுத்துவதாய் இருக்கிறது என்-
பதையும் அவர்களுக்குச் சாட்சி கொடுத்தார்.

And it came to pass that the Jews did mock him because of the things which he testified of them; for he truly testified of their wickedness and their abominations; and he testified that the things which he saw and heard, and also the things which he read in the book, manifested plainly of the coming of a Messiah, and also the redemption of the world.

20 யூதர்கள் இந்தக் காரியங்களைக் கேட்டபொழுது,
அவர்கள் புறம்பே தள்ளி, கல்லெறிந்து, கொலை-
பண்ணின பூர்வகால தீர்க்கதரிசிகளிடம் கோபம்-
கொண்டதுபோலவே அவரிடமும் கோபம்கொண்-
டார்கள். அவர்கள் அவருடைய ஜீவனை எடுத்துப்-
போடும்படி, அதை வாங்க வகைதேடினார்கள்.
ஆனாலும் கர்த்தருடைய உருக்கமான இரக்கங்கள்,
அவர் தெரிந்துகொண்டவர்களின் விசுவாசத்தினி-
மித்தமாக, அவர்கள் விடுதலையின் வல்லமை-
யைப் பெறுமளவும், அவர்களைப் பலவான்க-
ளாக்கும்படி அவர்கள் எல்லோர் மேலுமிருக்கு-
மென்று இதோ, நேபியாகிய நான் உங்களுக்குக்
காண்பிப்பேன்.

And when the Jews heard these things they were angry with him; yea, even as with the prophets of old, whom they had cast out, and stoned, and slain; and they also sought his life, that they might take it away. But behold, I, Nephi, will show unto you that the tender mercies of the Lord are over all those whom he hath chosen, because of their faith, to make them mighty even unto the power of deliverance.

# 1 நேபி 2

1 இதோ, கர்த்தர் என் தகப்பனுடன் பேசினார், ஆம்
ஒரு சொப்பனத்திலே கூட அவரிடம் சொன்னதாவ-
து: லேகி, நீ செய்த காரியங்களினிமித்தம் நீ ஆசீர்வ-
திக்கப்பட்டவனாயிருக்கிறாய்; மேலும் நீ உண்மை-
யுள்ளவனாயிருந்து, நான் உனக்குக் கட்டளையிட்-
டவைகளை இந்த ஜனங்களுக்கு அறிவித்ததினி-
மித்தம், இதோ, அவர்கள் உன் ஜீவனை வாங்க
வகைதேடுகிறார்கள்.
2 தன் குடும்பத்தை அழைத்துக்கொண்டு வனாந்-
தரத்திற்குள்போகும்படி ஒரு சொப்பனத்தில்கூட,
கர்த்தர் என் தகப்பனுக்குக் கட்டளையிட்டார்.
3 அவர் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படித-
லுடையவராயிருந்தார், ஆகையால் கர்த்தர் தனக்-
குக் கட்டளையிட்டபடியே அவர் செய்தார்.
4 அவர் வனாந்தரத்திற்குள் போனார். அவர் தன் கு-
டும்பத்தாரையும், ஆகாரங்களையும், கூடாரங்க-
ளையும் தவிர வேறெதையும் எடுத்துக்கொள்ளா-
மல், தம்முடைய வீட்டையும், தம் சுதந்திர தேசத்தை-
யும், தம் பொன்னையும், வெள்ளியையும், தம்மு-
டைய விலையேறப்பெற்ற பொருட்களையும் விட்-
டுவிட்டு, வனாந்தரத்திற்குப் புறப்பட்டுப்போனார்.
5 அவர் சிவந்த சமுத்திரத்தின் கரையோரமான எல்-
லைப்பகுதிகளுக்கு வந்தார்; அவர் சிவந்த சமுத்தி-
ரத்தின் எல்லைகளுக்கு அருகாமையிலுள்ள
வனாந்தரத்தில் பயணம் செய்தார்; அவர் என் தா-
யாகிய சரயா, என் மூத்த சகோதரர்களாகிய லா-
மான், லெமுவேல், சாம் ஆகியோர் அடங்கிய தம் கு-
டும்பத்துடன் வனாந்தரத்தில் பயணம் செய்தார்.
6 அவர் வனாந்தரத்தில் மூன்று நாள் பயணம்
செய்தபின்பு, அவர் ஒரு பள்ளத்தாக்கிலே தண்ணீ-
ருள்ள நதியின் பக்கத்திலே பாளயமிறங்கினார்.
7 அவர் கற்களினால் ஒரு பலிபீடத்தைக்கட்டி,
கர்த்தருக்குப் பலிசெலுத்தி, எங்களின் தேவனாகிய
கர்த்தருக்கு நன்றி செலுத்தினார்.
8 அவர் அந்த நதியின் பெயரை லாமான் என
அழைத்தார், அந்த நதி சிவந்த சமுத்திரத்தினுள்
பாய்ந்தது; அதனுடைய முகத்துவாரத்தின் அருகா-
மையின் எல்லைகளிலே அந்தப் பள்ளத்தாக்கு
இருந்தது.
9 அந்த நதியின் தண்ணீர்கள் சிவந்த சமுத்திரத்-
தின் ஊற்றுக்கண்களில் கலப்பதை என் தகப்பன்
கண்டபொழுது அவர் லாமானை நோக்கிச் சொன்-
னார்: நீ இந்த நதியைப்போல சகல நீதியின் ஊற்-
றுக்கண்ணை நோக்கி தொடர்ந்து ஓடிக்கொண்டி-
ருப்பாயாக.

# 1 Nephi 2

For behold, it came to pass that the Lord spake unto my father, yea, even in a dream, and said unto him: Blessed art thou Lehi, because of the things which thou hast done; and because thou hast been faithful and declared unto this people the things which I commanded thee, behold, they seek to take away thy life.

And it came to pass that the Lord commanded my father, even in a dream, that he should take his family and depart into the wilderness.

And it came to pass that he was obedient unto the word of the Lord, wherefore he did as the Lord commanded him.

And it came to pass that he departed into the wilderness. And he left his house, and the land of his inheritance, and his gold, and his silver, and his precious things, and took nothing with him, save it were his family, and provisions, and tents, and departed into the wilderness.

And he came down by the borders near the shore of the Red Sea; and he traveled in the wilderness in the borders which are nearer the Red Sea; and he did travel in the wilderness with his family, which consisted of my mother, Sariah, and my elder brothers, who were Laman, Lemuel, and Sam.

And it came to pass that when he had traveled three days in the wilderness, he pitched his tent in a valley by the side of a river of water.

And it came to pass that he built an altar of stones, and made an offering unto the Lord, and gave thanks unto the Lord our God.

And it came to pass that he called the name of the river, Laman, and it emptied into the Red Sea; and the valley was in the borders near the mouth thereof.

And when my father saw that the waters of the river emptied into the fountain of the Red Sea, he spake unto Laman, saying: O that thou mightest be like unto this river, continually running into the fountain of all righteousness!

10 அவர் லெமுவேலை நோக்கி சொன்னார்: இதோ நீ கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதில், இந்தப் பள்ளத்தாக்கைப்போல உறுதியாயும், திடமாயும், அசைக்கப்பட முடியாதவனுமாயும் இருப்பாயாக!

And he also spake unto Lemuel: O that thou mightest be like unto this valley, firm and steadfast, and immovable in keeping the commandments of the Lord!

11 இப்பொழுதும் அவர் லாமான், லெமுவேல் ஆகியோருடைய வணங்காக்கழுத்தினிமித்தம் இவைகளைச் சொன்னார்; ஏனெனில் அவர் தரிசனங்காண்கிறவராயிருந்து, அவர்கள் சுதந்தரித்த தேசத்தையும், பொன்னையும் வெள்ளியையும், விலையேறப்பெற்ற பொருட்களையும் அவர்கள் விட்டுவிட்டு, வனாந்தரத்தில் அழியும்படியாய், அவர்களை எருசலேம் தேசத்தை விட்டு வழிநடத்தி வந்தார் என அவர்கள் தம் தகப்பனுக்கு எதிராக அநேக காரியங்களில் முறுமுறுத்தார்கள். மேலும் அவருடைய இருதயத்தின் புத்தியற்ற யோசனைகளினிமித்தம் அவர் இதைச் செய்தார் என்றும் சொன்னார்கள்.

Now this he spake because of the stiffneckedness of Laman and Lemuel; for behold they did murmur in many things against their father, because he was a visionary man, and had led them out of the land of Jerusalem, to leave the land of their inheritance, and their gold, and their silver, and their precious things, to perish in the wilderness. And this they said he had done because of the foolish imaginations of his heart.

12 இவ்வாறாக மூத்தவர்களாயிருந்த லாமானும், லெமுவேலும் தங்கள் தகப்பனுக்கு எதிராக முறுமுறுத்தார்கள். மேலும் அவர்களை சிருஷ்டித்த தேவனுடைய நடவடிக்கைகளை அறியாததினிமித்தம் அவர்கள் முறுமுறுத்தார்கள்.

And thus Laman and Lemuel, being the eldest, did murmur against their father. And they did murmur because they knew not the dealings of that God who had created them.

13 தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளின்படியே மகா நகரமாகிய எருசலேம் அழிக்கப்படும் என்பதையும் அவர்கள் விசுவாசிக்கவில்லை. என் தகப்பனின் ஜீவனை வாங்க வகைதேடிய எருசலேமிலிருந்த யூதர்களைப்போலவே அவர்கள் இருந்தார்கள்.

Neither did they believe that Jerusalem, that great city, could be destroyed according to the words of the prophets. And they were like unto the Jews who were at Jerusalem, who sought to take away the life of my father.

14 லெமுவேலின் பள்ளத்தாக்கிலே, வல்லமையோடு, ஆவியால் நிரப்பப்பட்டவராய் அவர்களுடைய சரீரங்கள் அவருக்கு முன்னாக நடுங்கும் வரைக்கும் என் தகப்பன் அவர்களிடம் பேசினார். மேலும் அவர்கள் அவருக்கு எதிராகப் பேசாதபடிக்கு அவர் அவர்களை மலைக்கப்பண்ணினார்; ஆகையால் அவர்கள் அவர் கட்டளையிட்டபடியே செய்தார்கள்.

And it came to pass that my father did speak unto them in the valley of Lemuel, with power, being filled with the Spirit, until their frames did shake before him. And he did confound them, that they durst not utter against him; wherefore, they did as he commanded them.

15 என் தகப்பன் ஒரு கூடாரத்திலே வாசமாயிருந்தார்.

And my father dwelt in a tent.

16 நேபியாகிய நான் மிகவும் இளையவனாய் இருந்தபோதிலும், பெரிய சரீரம் உடையவனாயிருந்தபடியாலும், தேவனுடைய இரகசியங்களை அறிந்துகொள்ள பெரும் வாஞ்சையுடையவனாயிருந்ததாலும், நான் கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டேன்; இதோ அவர் என்னைச் சந்தித்து, என் இருதயத்தை மிருதுவாக்கினபடியால், என் தகப்பனால் பேசப்பட்ட எல்லா வார்த்தைகளையும் நான் விசுவாசித்தேன்; ஆனபடியால் என் சகோதரர்களைப்போல நான் அவருக்கு எதிராகக் கலகஞ் செய்யவில்லை.

And it came to pass that I, Nephi, being exceedingly young, nevertheless being large in stature, and also having great desires to know of the mysteries of God, wherefore, I did cry unto the Lord; and behold he did visit me, and did soften my heart that I did believe all the words which had been spoken by my father; wherefore, I did not rebel against him like unto my brothers.

17 நான் சாமிடம் பேசி, கர்த்தர் தம்முடைய பரிசுத்த
ஆவியினால் எனக்கு வெளிப்படுத்திய காரியங்க-
ளை அவனுக்குத் தெரியப்படுத்தினேன். அவன்
என்னுடைய வார்த்தைகளை விசுவாசித்தான்.

And I spake unto Sam, making known unto him the things which the Lord had manifested unto me by his Holy Spirit. And it came to pass that he believed in my words.

18 ஆனாலும் இதோ, லாமானும் லெமுவேலும் என்-
னுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்-
லை; அவர்களுடைய இருதயக்கடினத்தினிமித்தம்
துக்கமடைந்தவனாய், நான் கர்த்தரிடம் அவர்க-
ளுக்காகக் கூக்குரலிட்டேன்.

But, behold, Laman and Lemuel would not hearken unto my words; and being grieved because of the hardness of their hearts I cried unto the Lord for them.

19 கர்த்தர் என்னை நோக்கி: நேபியே, உன்னுடைய
விசுவாசத்தினிமித்தம் நீ ஆசீர்வதிக்கப்பட்டவனா-
யிருக்கிறாய், ஏனெனில் மனத்தாழ்மையுடன்,
கருத்தாய் என்னைத் தேடினாய் என்றார்.

And it came to pass that the Lord spake unto me, saying: Blessed art thou, Nephi, because of thy faith, for thou hast sought me diligently, with lowliness of heart.

20 நீ என் கட்டளைகளைக் கைக்கொள்கிற அள-
வில், நீ செழிப்படைவாய். ஆம், நான் உனக்காக
ஆயத்தம்பண்ணியிருக்கிற தேசமாகிய வாக்குத்-
தத்தத்தின் தேசத்திற்கு நீ நடத்திச் செல்லப்படு-
வாய்; ஆம், அந்த தேசம் மற்ற எல்லாத் தேசங்களுக்-
கும் மேலாகத் தெரிந்துகொள்ளப்பட்டது.

And inasmuch as ye shall keep my commandments, ye shall prosper, and shall be led to a land of promise; yea, even a land which I have prepared for you; yea, a land which is choice above all other lands.

21 உன் சகோதரர்கள் உனக்கெதிராக கலகம் செய்-
கிற அளவில், அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்-
திலிருந்து அறுப்புண்டு போவார்கள்.

And inasmuch as thy brethren shall rebel against thee, they shall be cut off from the presence of the Lord.

22 நீ என் கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அள-
வில், நீ உன் சகோதரர் மேல் அதிகாரியாயும், ஆசிரி-
யனாயும் ஏற்படுத்தப்படுவாய்.

And inasmuch as thou shalt keep my commandments, thou shalt be made a ruler and a teacher over thy brethren.

23 ஏனெனில் இதோ, அவர்கள் எனக்கெதிராகக் கல-
கஞ்செய்யும் நாளிலே நான் அவர்களைக் கொடிய
சாபத்தால் சபிப்பேன். எனக்கெதிராய் கலகஞ்
செய்தாலொழிய, உன்னுடைய சந்ததியார்மேல்
அவர்களின் பலம் செல்லாது.

For behold, in that day that they shall rebel against me, I will curse them even with a sore curse, and they shall have no power over thy seed except they shall rebel against me also.

24 இந்த நிலைமையில் எனக்கெதிராக அவர்கள்
கலகஞ்செய்வார்களெனில், நினைவுகூரும்வித-
மாக அவர்களுக்கு உணர்த்தும்படியாய், அவர்கள்
உன் சந்ததியாருக்கு ஒரு சவுக்காயிருப்பார்கள்.

And if it so be that they rebel against me, they shall be a scourge unto thy seed, to stir them up in the ways of remembrance.

## 1 நேபி 3

1 நேபியாகிய நான், கர்த்தருடன் பேசிவிட்டு, என்
தகப்பனின் கூடாரத்திற்குத் திரும்பினேன்.

2 அவர் என்னை நோக்கி: இதோ, நான் ஒரு சொப்-
பனம் கண்டேன், அதில் நீயும் உன் சகோதரரும் எரு-
சலேமுக்குத் திரும்பிச் செல்லவேண்டுமெனக் கர்த்-
தர் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார், என்று
சொன்னார்.

3 ஏனெனில் இதோ, யூதர்களின் பதிவேட்டையும்,
என் முற்பிதாக்களின் வம்சவரலாற்றையும் லா-
பான் வைத்திருக்கிறான். அவைகள் பித்தளைத்
தகடுகளின்மேல் பதிக்கப்பட்டிருக்கின்றன.

4 ஆகையால், நீயும் உன் சகோதரரும் லாபானு-
டைய வீட்டிற்குள் சென்று, அந்தப் பதிவேடுக-
ளைத் தேடி, அவைகளை இங்கே வனாந்தரத்திற்-
குள் கொண்டுவர வேண்டுமென, கர்த்தர் எனக்குக்
கட்டளையிட்டிருக்கிறார்.

5 இதோ, இப்பொழுதும், நான் அவர்களிடத்தில்
கேட்டது ஒரு கடினமான காரியம் என்று சொல்லி,
உன் சகோதரர்கள் முறுமுறுக்கிறார்கள்; ஆனாலும்
இதோ, நான் அவர்களிடத்தில் இவற்றைக் கேட்க-
வில்லை, ஆனால் இது கர்த்தருடைய கட்டளையா-
யிருக்கிறது.

6 ஆகையால் என் மகனே, நீ போ, நீ முறுமுறுக்காத-
தினிமித்தம் கர்த்தரிடத்திலிருந்து தயைபெற்றுக்-
கொள்வாய்.

7 நேபியாகிய நான் என் தகப்பனை நோக்கி சொன்-
னேன்: நான் போய் கர்த்தர் கட்டளையிட்ட காரியங்-
களைச் செய்வேன், ஏனெனில் மனுபுத்திரருக்கு
தாம் கட்டளையிட்ட காரியத்தைச் செய்துமுடிக்கக்-
கூடிய ஒரு வழியை ஆயத்தப்படுத்தினாலொழிய,
கர்த்தர் எந்தக் கட்டளைகளையும் அவர்களுக்குக்
கொடுப்பதில்லை என்பதையும் நான் அறிகிறேன்.

8 என் தகப்பன் இந்த வார்த்தைகளைக் கேட்டபொ-
ழுது, கர்த்தரால் நான் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளேன்
என்பதை அவர் அறிந்ததினால், மிகவும் மகிழ்ச்சி-
யடைந்தார்.

9 நேபியாகிய நானும், என் சகோதரர்களும், மேலே
எருசலேம் தேசத்திற்குப் போவதற்காக, எங்கள் கூ-
டாரங்களுடன் வனாந்தரத்தில் எங்களுடைய பய-
ணத்தைத் தொடங்கினோம்.

10 நாங்கள் மேலே எருசலேம் தேசத்தை வந்தடைந்த-
பொழுது, நானும் என் சகோதரரும் ஒருவரோடொ-
ருவர் ஆலோசித்தோம்.

11 எங்களில் யார் லாபானுடைய வீட்டிற்குள் செல்-
லவேண்டுமென, நாங்கள் சீட்டுப்போட்டோம். அந்-
தச்சீட்டு லாமான் பேருக்கு விழுந்தது; லாபானு-
டைய வீட்டிற்கு லாமான் சென்று, தன்னுடைய வீட்-
டில் அவன் உட்கார்ந்திருந்தபொழுது, அவனுடன்
பேசினான்.

## 1 Nephi 3

And it came to pass that I, Nephi, returned from speaking with the Lord, to the tent of my father.

And it came to pass that he spake unto me, saying: Behold I have dreamed a dream, in the which the Lord hath commanded me that thou and thy brethren shall return to Jerusalem.

For behold, Laban hath the record of the Jews and also a genealogy of my forefathers, and they are engraven upon plates of brass.

Wherefore, the Lord hath commanded me that thou and thy brothers should go unto the house of Laban, and seek the records, and bring them down hither into the wilderness.

And now, behold thy brothers murmur, saying it is a hard thing which I have required of them; but behold I have not required it of them, but it is a commandment of the Lord.

Therefore go, my son, and thou shalt be favored of the Lord, because thou hast not murmured.

And it came to pass that I, Nephi, said unto my father: I will go and do the things which the Lord hath commanded, for I know that the Lord giveth no commandments unto the children of men, save he shall prepare a way for them that they may accomplish the thing which he commandeth them.

And it came to pass that when my father had heard these words he was exceedingly glad, for he knew that I had been blessed of the Lord.

And I, Nephi, and my brethren took our journey in the wilderness, with our tents, to go up to the land of Jerusalem.

And it came to pass that when we had gone up to the land of Jerusalem, I and my brethren did consult one with another.

And we cast lots—who of us should go in unto the house of Laban. And it came to pass that the lot fell upon Laman; and Laman went in unto the house of Laban, and he talked with him as he sat in his house.

12 என் தகப்பனின் வம்சவரலாறு அடங்கியிருந்த பித்தளைத் தகடுகளின்மேல், பொறிக்கப்பட்டிருந்த பதிவேடுகளை, லாபானிடத்தில் அவன் கேட்டான்.

And he desired of Laban the records which were engraven upon the plates of brass, which contained the genealogy of my father.

13 இதோ, லாபான் கோபம்கொண்டு அவனைத் தன் சமுகத்திலிருந்து வெளியே தள்ளிவிட்டான், லாமான் அந்தப் பதிவேடுகளை எடுத்துக்கொள்ள அவன் விரும்பவில்லை. ஆகையால் அவன் அவனை நோக்கி: இதோ, நீ கொள்ளைக்காரனாயிருக்கிறாய், நான் உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான்.

And behold, it came to pass that Laban was angry, and thrust him out from his presence; and he would not that he should have the records. Wherefore, he said unto him: Behold thou art a robber, and I will slay thee.

14 ஆனால் லாமான் அவன் சமுகத்தைவிட்டுத் தப்பியோடி, லாபான் செய்த காரியங்களை எங்களுக்குச் சொன்னான். நாங்கள் மிகவும் வருத்தப்படத் தொடங்கினோம், மேலும் என் சகோதரர்கள் வனாந்தரத்திலுள்ள என் தகப்பனிடத்திற்கு திரும்பிப் போகவிருந்தார்கள்.

But Laman fled out of his presence, and told the things which Laban had done, unto us. And we began to be exceedingly sorrowful, and my brethren were about to return unto my father in the wilderness.

15 ஆனாலும் இதோ, நான் அவர்களை நோக்கி: கர்த்தர் ஜீவிக்கிற மட்டும், நாம் உயிரோடிருக்கு மட்டும், கர்த்தர் நம்மிடத்தில் கட்டளையிட்ட காரியத்தைச் செய்து முடிக்காமல், கீழே நாம் வனாந்தரத்தில் இருக்கும் நம் தகப்பனிடத்திற்குப் போகப் போவதில்லை என்றேன்.

But behold I said unto them that: As the Lord liveth, and as we live, we will not go down unto our father in the wilderness until we have accomplished the thing which the Lord hath commanded us.

16 அதனால் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறதில் நாம் உண்மையுள்ளவர்களாயிருப்போம்; ஆகையால் நாம் கீழே நம்முடைய தகப்பனின் சுதந்திர தேசத்திற்குச் செல்வோம், ஏனெனில், இதோ, அவர் பொன்னையும், வெள்ளியையும், சகலவிதமான ஆஸ்திகளையும் துறந்தார். மேலும் இவைகள் எல்லாவற்றையும் கர்த்தருடைய கட்டளைகளினிமித்தமே அவர் செய்தார்.

Wherefore, let us be faithful in keeping the commandments of the Lord; therefore let us go down to the land of our father's inheritance, for behold he left gold and silver, and all manner of riches. And all this he hath done because of the commandments of the Lord.

17 ஏனெனில், ஜனங்களுடைய துன்மார்க்கத்தினிமித்தம், எருசலேம் அழிக்கப்படவேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

For he knew that Jerusalem must be destroyed, because of the wickedness of the people.

18 ஏனெனில் இதோ, அவர்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளைப் புறக்கணித்தனர். ஆகையால், தேசத்தைவிட்டு ஓடிப்போகும்படி கட்டளையிட்ட பின்பும், நம் தகப்பன் தேசத்திலே தங்கி வாசம் செய்திருப்பாரெனில், அவரும் அழிவார். ஆகையால் அவர் தேசத்தைவிட்டு ஓடிப்போவது தேவையாயிருக்கிறது.

For behold, they have rejected the words of the prophets. Wherefore, if my father should dwell in the land after he hath been commanded to flee out of the land, behold, he would also perish. Wherefore, it must needs be that he flee out of the land.

19 இதோ, நம்முடைய பிள்ளைகளுக்காக, நம் பிதாக்களின் பாஷையைப் பாதுகாப்பதற்காக, நாம் இந்தப் பதிவேடுகளைப் பெறவேண்டும் என்பது தேவ ஞானமாயிருக்கிறது.

And behold, it is wisdom in God that we should obtain these records, that we may preserve unto our children the language of our fathers;

20 உலகம் ஆரம்பமானது முதல், இந்தக் காலம் வரைக்கும், ஆவியினாலும், தேவனின் வல்லமையினாலும், அவர்களிடத்தில் கொடுக்கப்பட்ட, எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாயால் பேசப்பட்ட வார்த்தைகளை, நாம் அவர்களுக்காக பாதுகாப்பதற்காகவுமே.

And also that we may preserve unto them the words which have been spoken by the mouth of all the holy prophets, which have been delivered unto them by the Spirit and power of God, since the world began, even down unto this present time.

21 இவ்விதமான வார்த்தைகளால், என் சகோதரர், தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதில் உண்மையாயிருக்கவேண்டுமென நான் அவர்களை இசையச் செய்தேன்.

And it came to pass that after this manner of language did I persuade my brethren, that they might be faithful in keeping the commandments of God.

22 நாங்கள் எங்களின் சுதந்திர தேசத்திற்கு இறங்கிச் சென்று, எங்களின் பொன்னையும், எங்களின் வெள்ளியையும், எங்களின் விலையேறப்பெற்ற பொருட்களையும் சேகரித்தோம்.

And it came to pass that we went down to the land of our inheritance, and we did gather together our gold, and our silver, and our precious things.

23 இந்தப் பொருட்களைச் சேகரித்த பின்பு, நாங்கள் மறுபடியும் லாபானுடைய வீட்டிற்கு ஏறிச் சென்றோம்.

And after we had gathered these things together, we went up again unto the house of Laban.

24 நாங்கள் லாபானிடம் சென்று, அவனிடத்திலிருந்த பித்தளைத் தகடுகளின் மேல் பதிக்கப்பட்டுள்ள பதிவேடுகளை, அவன் எங்களுக்குத் தரும்படி, விரும்புவதாகக் கூறி, அதற்குப் பதிலாக எங்களின் பொன்னையும், எங்களின் வெள்ளியையும், எங்களின் விலைமதிப்பற்ற பொருட்களையும் அவனுக்குத் தர விரும்புவதாகச் சொன்னோம்.

And it came to pass that we went in unto Laban, and desired him that he would give unto us the records which were engraven upon the plates of brass, for which we would give unto him our gold, and our silver, and all our precious things.

25 லாபான் எங்களுடைய ஆஸ்தி மிகவும் அதிகமாய் இருப்பதைக் கண்டபொழுது, அவன் எங்களை வெளியே தள்ளி, எங்களுடைய ஆஸ்தியை அவன் அடைந்துகொள்ளும்படிக்குத், தன் வேலையாட்களை அனுப்பி எங்களைக் கொலை செய்யும் அளவுக்கு, அவன் அதை இச்சித்தான்.

And it came to pass that when Laban saw our property, and that it was exceedingly great, he did lust after it, insomuch that he thrust us out, and sent his servants to slay us, that he might obtain our property.

26 நாங்கள் லாபானின் வேலைக்காரருக்கு முன்பாக ஓடிப்போனோம், மேலும் நாங்கள் எங்கள் ஆஸ்திகளைவிட்டுச் செல்ல வேண்டியவர்களானோம், அது லாபானின் கரங்களில் சிக்கியது.

And it came to pass that we did flee before the servants of Laban, and we were obliged to leave behind our property, and it fell into the hands of Laban.

27 நாங்கள் வனாந்தரத்தினுள் ஓடிப்போனோம், லாபானுடைய வேலைக்காரர்கள் எங்களை முந்தவில்லை, நாங்கள் ஒரு பாறையின் பிளவிலே மறைந்துகொண்டோம்.

And it came to pass that we fled into the wilderness, and the servants of Laban did not overtake us, and we hid ourselves in the cavity of a rock.

28 லாமான், என் பேரிலும் என் தகப்பனின் பேரிலும் கோபம் கொண்டான், லாமானுடைய வார்த்தைகளைக் கேட்டபடியினால், லெமுவேலும் அவ்வாறே செய்தான். ஆகையால் லாமானும் லெமுவேலும் அவர்களுடைய இளைய சகோதரர்களாகிய எங்களை கடினமான வார்த்தைகளால் பேசி, ஒரு கோலால் எங்களை அடிக்கவும் செய்தார்கள்.

And it came to pass that Laman was angry with me, and also with my father; and also was Lemuel, for he hearkened unto the words of Laman. Wherefore Laman and Lemuel did speak many hard words unto us, their younger brothers, and they did smite us even with a rod.

29 அவர்கள் எங்களைக் கோலால் அடித்தபொழுது, இதோ, கர்த்தருடைய தூதன் வந்து, அவர்களுக்கு முன்பாக நின்று அவர்களை நோக்கி: ஏன் உங்கள் இளைய சகோதரனை கோலால் அடிக்கிறீர்கள்? அவனை உங்கள் மேல் அதிபதியாய்க் கர்த்தர் தெரிந்துகொண்டார் என்பதை நீங்கள் அறியீர்களா, இதுவும் உங்கள் அக்கிரமம் நிமித்தமே? இதோ நீங்கள் மறுபடியும் மேலே எருசலேமுக்குப் போவீர்கள், கர்த்தர் லாபானை உங்கள் கரங்களில் ஒப்படைப்பார் என்றான்.

And it came to pass as they smote us with a rod, behold, an angel of the Lord came and stood before them, and he spake unto them, saying: Why do ye smite your younger brother with a rod? Know ye not that the Lord hath chosen him to be a ruler over you, and this because of your iniquities? Behold ye shall go up to Jerusalem again, and the Lord will deliver Laban into your hands.

30 மேலும், தூதன் எங்களிடம் பேசிய பின்பு, அவன் போனான்.

And after the angel had spoken unto us, he departed.

31 தூதன் எங்களைவிட்டுப் போனபின்பு லாமானும் லெமுவேலும் மறுபடியும் முறுமுறுக்கத் தொடங்கி, கர்த்தர் லாபானை நம் கரங்களில் ஒப்படைப்பது எப்படி இயலும்? இதோ, அவன் பெலசாலியான மனுஷன், அவன் ஐம்பது பேரை கட்டளையிடக் கூடியவன், ஆம், அவனால் ஐம்பதுபேரைக் கொல்லவும் முடியும்; அப்படியிருக்கையில் நம்மை ஏன் கொல்லமாட்டான் என்று சொன்னார்கள்.

And after the angel had departed, Laman and Lemuel again began to murmur, saying: How is it possible that the Lord will deliver Laban into our hands? Behold, he is a mighty man, and he can command fifty, yea, even he can slay fifty; then why not us?

# 1 நேபி 4

1 நான் என் சகோதரர்களுடன் பேசி, நாம் மறுபடியும்
மேலே எருசலேமுக்குப் போவோம், நாம் கர்த்தரு-
டைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதில்
உண்மையுள்ளவர்களாயிருப்போம்; ஏனெனில்
இதோ, அவர் பூமி முழுவதையும் விட வல்லவர்.
அப்படியாயின் லாபானையும் அவனுடைய ஐம்ப-
து பேரையும், ஆம், அல்லது அவனுடைய பதினா-
யிரம் பேரைக் காட்டிலும் வல்லவராய் ஏன் இருக்க-
முடியாது? என்றேன்.
2 ஆகையால் நாம் மேலே போவோம்; நாம் மோசே-
யைப்போல் பெலமுள்ளவர்களாயிருப்போம்.
ஏனெனில் அவன் உண்மையாகவே சிவந்த சமுத்-
திரத்தின் தண்ணீர்களிடத்தில் பேசினான், அவை-
கள் அங்கேயும் இங்கேயுமாகப் பிரிந்தன, நம்மு-
டைய பிதாக்கள் சிறையிருப்பிலிருந்து வெளியே,
அதன் வழியாய் வெட்டாந்தரையில் வந்தார்கள்,
பார்வோனுடைய சேனைகள் பின்தொடர்ந்து வந்-
து, சிவந்த சமுத்திரத்தின் தண்ணீர்களிலே அமிழ்ந்-
து போனார்கள்.
3 இப்பொழுதும் இதோ, இது உண்மை என்பதை
நீங்கள் அறிவீர்கள். மேலும் ஒரு தூதன் உங்களிடம்
பேசியதையும் நீங்கள் அறிவீர்கள், அதனால் நீங்-
கள் சந்தேகப்படலாமா? நாம் மேலே போவோம்; நம்-
முடைய பிதாக்களைப்போலவே நம்மை விடுவிப்-
பதற்கும், எகிப்தியர்களைப் போலவே, லாபானை
அழிப்பதற்கும் கர்த்தரால் இயலும்.
4 இப்பொழுதும், நான் இந்த வார்த்தைகளைப் பே-
சியபொழுது, அவர்கள் இன்னும் கடுங்கோபமு-
டையவர்களாய், தொடர்ந்து முறுமுறுத்துக்
கொண்டிருந்தார்கள்; இருந்தபோதிலும், எருசலே-
மின் மதில்களுக்கு வெளிப்புறம் வரும்வரைக்கும்
அவர்கள் என்னைப் பின்தொடர்ந்து மேலே வந்-
தார்கள்.
5 அது இரவாயிருந்தது; மதில்களுக்கு வெளியே
அவர்களை ஒளிந்து கொள்ளும்படிச் செய்தேன்.
மேலும் அவர்கள் தங்களை ஒளித்துக்கொண்ட
பின்பு, நேபியாகிய நான் நகரத்தினுள் ஊர்ந்து
சென்று, லாபானுடைய வீட்டை நோக்கிப்போ-
னேன்.
6 நான் செய்யவேண்டிய காரியங்களை முன்னதா-
கவே அறியாதவனாய், நான் ஆவியினால் நடத்திச்
செல்லப்பட்டேன்.
7 இருந்தபோதிலும் நான் போய், லாபானுடைய
வீட்டின் அருகில் வந்தபொழுது, நான் ஒரு மனு-
ஷனைக் கண்டேன், அவன் எனக்கு முன்பாக பூமி-
யில் விழுந்து கிடந்தான், ஏனெனில் அவன் திராட்-
சைரசத்தைக் குடித்து வெறித்தவனாயிருந்தான்.
8 நான் அவனிடத்தில் வந்தபொழுது, அது லா-
பான் எனக் கண்டேன்.

# 1 Nephi 4

And it came to pass that I spake unto my brethren, saying: Let us go up again unto Jerusalem, and let us be faithful in keeping the commandments of the Lord; for behold he is mightier than all the earth, then why not mightier than Laban and his fifty, yea, or even than his tens of thousands?

Therefore let us go up; let us be strong like unto Moses; for he truly spake unto the waters of the Red Sea and they divided hither and thither, and our fathers came through, out of captivity, on dry ground, and the armies of Pharaoh did follow and were drowned in the waters of the Red Sea.

Now behold ye know that this is true; and ye also know that an angel hath spoken unto you; wherefore can ye doubt? Let us go up; the Lord is able to deliver us, even as our fathers, and to destroy Laban, even as the Egyptians.

Now when I had spoken these words, they were yet wroth, and did still continue to murmur; nevertheless they did follow me up until we came without the walls of Jerusalem.

And it was by night; and I caused that they should hide themselves without the walls. And after they had hid themselves, I, Nephi, crept into the city and went forth towards the house of Laban.

And I was led by the Spirit, not knowing beforehand the things which I should do.

Nevertheless I went forth, and as I came near unto the house of Laban I beheld a man, and he had fallen to the earth before me, for he was drunken with wine.

And when I came to him I found that it was Laban.

9 நான் அவனுடைய பட்டயத்தைக் கண்டு, அதை
உறையிலிருந்து வெளியே இழுத்தேன்; அதனு-
டைய பிடி பசும்பொன்னாயும், அதிலுள்ள வே-
லைப்பாடு மிகவும் நேர்த்தியாயும் இருந்தது, மேலும்
அதன் வாய்தாரை மிகவும் விலையுயர்ந்த எஃகி-
னால் ஆனது என்பதையும் நான் கண்டேன்.

And I beheld his sword, and I drew it forth from the sheath thereof; and the hilt thereof was of pure gold, and the workmanship thereof was exceedingly fine, and I saw that the blade thereof was of the most precious steel.

10 லாபானைக் கொல்ல வேண்டுமென, நான் ஆவி-
யானவரால் நெருக்கி ஏவப்பட்டேன்; ஆனாலும்
மனுஷனுடைய இரத்தத்தை எந்த சமயத்திலும்
நான் சிந்தியதில்லை என என் இருதயத்தில் சொல்-
லிக்கொண்டேன். மேலும் அவனைக் கொல்லக்கூ-
டாதென எண்ணி, நான் பின்வாங்கினேன்.

And it came to pass that I was constrained by the Spirit that I should kill Laban; but I said in my heart: Never at any time have I shed the blood of man. And I shrunk and would that I might not slay him.

11 ஆவியானவர், மறுபடியும் என்னை நோக்கி:
இதோ, கர்த்தர் அவனை உன் கரங்களில் ஒப்புவித்-
திருக்கிறார் என்றார். ஆம், அவன் என் ஜீவனை
எடுத்துப்போடும்படி வகை தேடினான் என்பதை-
யும் நான் அறிவேன்; ஆம், அவன் கர்த்தருடைய
கட்டளைகளுக்குச் செவிகொடுக்கவும் மாட்டான்;
மேலும் அவன் எங்கள் ஆஸ்தியையும் எடுத்துக்-
கொண்டான்.

And the Spirit said unto me again: Behold the Lord hath delivered him into thy hands. Yea, and I also knew that he had sought to take away mine own life; yea, and he would not hearken unto the commandments of the Lord; and he also had taken away our property.

12 மறுபடியும் ஆவியானவர் என்னை நோக்கி:
அவனைக் கொல், ஏனெனில் கர்த்தர் அவனை
உன் கரங்களில் ஒப்புவித்திருக்கிறார்;

And it came to pass that the Spirit said unto me again: Slay him, for the Lord hath delivered him into thy hands;

13 இதோ, அவரின் நீதியான நோக்கங்களை நிறை-
வேற்றும்படியாகக் கர்த்தர் துன்மார்க்கரைக் கொல்-
கிறார். ஒரு தேசம் அவிசுவாசத்தில் நலிந்து, அழிவ-
தைக்காட்டிலும் ஒரு மனுஷன் அழிந்துபோவது
நலமாயிருக்கும் என்றார்.

Behold the Lord slayeth the wicked to bring forth his righteous purposes. It is better that one man should perish than that a nation should dwindle and perish in unbelief.

14 இப்பொழுதும், நேபியாகிய நான் இந்த வார்த்தை-
களைக் கேட்டபொழுது, என் கட்டளைகளை உன்
சந்ததியார் கைக்கொள்கிற அளவில், அவர்கள்
வாக்குத்தத்தத்தின் தேசத்திலே செழிப்படைவார்-
கள் என்று வனாந்தரத்தில் என்னுடன் பேசிய கர்த்-
தருடைய வார்த்தைகளை நான் நினைவு கூர்ந்-
தேன்.

And now, when I, Nephi, had heard these words, I remembered the words of the Lord which he spake unto me in the wilderness, saying that: Inasmuch as thy seed shall keep my commandments, they shall prosper in the land of promise.

15 ஆம், நியாயப்பிரமாணம் இருந்தாலொழிய,
அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி-
யான, கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்-
கொள்ள முடியாது என்பதையும் நான் எண்ணிப்-
பார்த்தேன்.

Yea, and I also thought that they could not keep the commandments of the Lord according to the law of Moses, save they should have the law.

16 நியாயப்பிரமாணம், பித்தளைத் தகடுகளின்-
மேல் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நான்
அறிவேன்.

And I also knew that the law was engraven upon the plates of brass.

17 மீண்டும் அவருடைய கட்டளைகளின்படியே
நான் இந்தப் பதிவேடுகளைப் பெறுதல் வேண்டும்
என்ற அந்தக் காரணத்திற்காக, லாபானை கர்த்தர்
என்னுடைய கரங்களில் ஒப்புவித்தார் என்பதை
நான் அறிவேன்.

And again, I knew that the Lord had delivered Laban into my hands for this cause—that I might obtain the records according to his commandments.

18 ஆகையால் நான் ஆவியானவருடைய சத்தத்-
திற்குக் கீழ்ப்படிந்து, லாபானை நான் தலைமயி-
ரைப் பிடித்து, அவனுடைய சொந்தப் பட்டயத்தா-
லேயே, அவனது தலையை வெட்டிப்போட்டேன்.

Therefore I did obey the voice of the Spirit, and took Laban by the hair of the head, and I smote off his head with his own sword.

19 அவனுடைய தலையை அவனுடைய சொந்தப்
பட்டயத்தினாலே வெட்டிப்போட்ட பின்பு, நான் லா-
பானுடைய வஸ்திரங்களை எடுத்து என் சொந்த
சரீரத்தின்மேல் போட்டுக்கொண்டேன்; ஆம், ஒவ்-
வொன்றையும் கூட; மேலும் அவனுடைய கவசத்-
தை என் அரையில் கட்டிக்கொண்டேன்.

And after I had smitten off his head with his own sword, I took the garments of Laban and put them upon mine own body; yea, even every whit; and I did gird on his armor about my loins.

20 நான் இதனைச் செய்தபின்பு, லாபானுடைய
பொக்கிஷ அறைக்குச் சென்றேன். மேலும் அவ்வா-
று நான் லாபானுடைய பொக்கிஷ அறைக்குச்
சென்றபொழுது இதோ, பொக்கிஷ அறையின் திற-
வுகோல்களை வைத்திருந்த லாபானுடைய வே-
லைக்காரனை நான் கண்டேன். நான் லாபானு-
டைய குரலிலே, அவன் என்னுடன் பொக்கிஷ
அறைக்குள் வரவேண்டுமெனக் கட்டளையிட்-
டேன்.

And after I had done this, I went forth unto the treasury of Laban. And as I went forth towards the treasury of Laban, behold, I saw the servant of Laban who had the keys of the treasury. And I commanded him in the voice of Laban, that he should go with me into the treasury.

21 வஸ்திரங்களையும், என் அரையில் கட்டப்பட்டி-
ருந்த பட்டயத்தையும் கண்டபடியால், என்னைத்
தன்னுடைய எஜமானனாகிய லாபான் என அவன்
எண்ணிக்கொண்டான்.

And he supposed me to be his master, Laban, for he beheld the garments and also the sword girded about my loins.

22 அவன் தன் எஜமானனாகிய லாபான், இரவில் யூ-
தர்களின் மூப்பர் மத்தியில் இருந்ததை அறிந்த-
வனாய், அவர்களைக் குறித்து அவன் என்னுடனே
பேசினான்.

And he spake unto me concerning the elders of the Jews, he knowing that his master, Laban, had been out by night among them.

23 லாபானைப் போலவே, நான் அவனிடம் பேசி-
னேன்.

And I spake unto him as if it had been Laban.

24 பித்தளைத் தகடுகளின் மேல் பொறிக்கப்பட்டி-
ருப்பவைகளை, மதிலுக்கு வெளிப்புறமாய் உள்ள
என் மூத்த சகோதரரிடத்திற்கு நான் கொண்டு செல்-
லவேண்டும் என்றும் அவனிடம் சொன்னேன்.

And I also spake unto him that I should carry the engravings, which were upon the plates of brass, to my elder brethren, who were without the walls.

25 அவன் என்னைப் பின்பற்றி வரவேண்டும் என-
வும் நான் அவனுக்குக் கட்டளையிட்டேன்.

And I also bade him that he should follow me.

26 நான் சபையின் சகோதரர்களைக் குறித்துப் பேசி-
னேன் என்பதாலும், நான் கொன்றுபோட்ட லா-
பான் மெய்யாகவே நான்தான் என எண்ணிக்-
கொண்டபடியாலும், அவன் என்னைப் பின்பற்றி
வந்தான்.

And he, supposing that I spake of the brethren of the church, and that I was truly that Laban whom I had slain, wherefore he did follow me.

27 நான், மதிலுக்கு வெளிப்புறமாயிருந்த என் சகோ-
தரரிடத்திற்குச் செல்லும்பொழுது, யூதர்களின் மூப்-
பர்களைக் குறித்து அவன் அநேகந்தரம் என்னோடு
பேசினான்.

And he spake unto me many times concerning the elders of the Jews, as I went forth unto my brethren, who were without the walls.

28 லாமான் என்னைக் கண்டு மிகவும் பயந்தான்,
லெமுவேலும், சாமும், கூட பயந்தார்கள். மேலும்
அவர்கள் என் சமுகத்தைவிட்டு ஓடிப்போனார்கள்;
ஏனெனில் அவர்கள் அது லாபான் எனவும்,
அவன் என்னைக் கொன்றுபோட்டு, அவர்கள் ஜீ-
வனையும் வாங்கத் தேடுகிறான் எனவும் எண்-
ணிக்கொண்டார்கள்.

And it came to pass that when Laman saw me he was exceedingly frightened, and also Lemuel and Sam. And they fled from before my presence; for they supposed it was Laban, and that he had slain me and had sought to take away their lives also.

29 நான் அவர்களை அழைத்தபொழுது, அவர்கள் என் சத்தத்தைக் கேட்டார்கள்; ஆகையால் அவர்கள் என் சமுகத்திலிருந்து ஓடாமல் நின்றார்கள்.

And it came to pass that I called after them, and they did hear me; wherefore they did cease to flee from my presence.

30 என் சகோதரரை லாபானின் வேலைக்காரன் கண்டபோது, அவன் நடுங்கத்தொடங்கி, என் முன்பிருந்து ஓடி எருசலேம் பட்டணத்திற்கு திரும்பிப் போகவிருந்தான்.

And it came to pass that when the servant of Laban beheld my brethren he began to tremble, and was about to flee from before me and return to the city of Jerusalem.

31 இப்பொழுதும், நேபியாகிய நான் உருவமைப்பில் பெரிய மனுஷனாயும், கர்த்தரிடமிருந்து மிகுந்த பெலத்தைப் பெற்றிருந்தபடியால், நான் லாபானுடைய வேலைக்காரனைப் பற்றிப் பிடித்து, அவன் ஓடிப்போகாதபடி பிடித்துக்கொண்டேன்.

And now I, Nephi, being a man large in stature, and also having received much strength of the Lord, therefore I did seize upon the servant of Laban, and held him, that he should not flee.

32 நான் அவனிடம் பேசி, அவன் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பானெனில், கர்த்தர் ஜீவிக்குமளவுக்கும், நான் ஜீவிக்குமளவுக்கும், அவன் எங்கள் வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பானெனில், நாங்கள் அவன் ஜீவனைத் தப்புவிப்போம் என்றேன்.

And it came to pass that I spake with him, that if he would hearken unto my words, as the Lord liveth, and as I live, even so that if he would hearken unto our words, we would spare his life.

33 அவன் பயப்படவேண்டியதில்லை என நான் அவனிடம் வாக்களித்தேன்; அவன் எங்களுடனே கீழே வனாந்தரத்தினுள் வருவானெனில் எங்களைப்போல அவனும் சுதந்திரமுள்ள மனுஷனாக இருப்பான், என்றேன்.

And I spake unto him, even with an oath, that he need not fear; that he should be a free man like unto us if he would go down in the wilderness with us.

34 நான் அவனிடம், மெய்யாகவே கர்த்தர் இந்தக் காரியங்களைச் செய்யும்படி எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்; கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி நாம் கருத்தாய் இருக்கவேண்டாமா? ஆகையால், கீழே என் தகப்பனிடம் வனாந்தரத்திற்கு வருவாயெனில், எங்களுடனே தங்க உனக்கு இடமிருக்கும் என்று சொன்னேன்.

And I also spake unto him, saying: Surely the Lord hath commanded us to do this thing; and shall we not be diligent in keeping the commandments of the Lord? Therefore, if thou wilt go down into the wilderness to my father thou shalt have place with us.

35 நான் பேசிய வார்த்தைகளால் சோரம் தைரியமடைந்தான். அந்த வேலைக்காரனின் பெயர் சோரம் என்பதாயிருந்தது. அவன் எங்களுடன் எங்கள் தகப்பனிடத்திற்கு வனாந்தரத்திற்கு இறங்கி வருவதாக வாக்களித்தான். ஆம், அந்த சமயம் முதல் எங்களுடன் தங்கியிருப்பதாக அவன் எங்களிடத்தில் ஆணையிட்டான்

And it came to pass that Zoram did take courage at the words which I spake. Now Zoram was the name of the servant; and he promised that he would go down into the wilderness unto our father. Yea, and he also made an oath unto us that he would tarry with us from that time forth.

36 இப்பொழுதும் யூதர்கள், நாங்கள் வனாந்தரத்தினுள் ஓடிப்போனதைக் குறித்து அறிந்து, அவர்கள் எங்களைப் பின்தொடர்ந்து வந்து அழித்துப்போடக்கூடாது என்ற இந்தக் காரணத்திற்காகவே, அவன் எங்களுடன் தங்கியிருக்கவேண்டுமென நாங்கள் வாஞ்சித்தோம்.

Now we were desirous that he should tarry with us for this cause, that the Jews might not know concerning our flight into the wilderness, lest they should pursue us and destroy us.

37 சோரம் எங்களிடம் ஆணையிட்டபொழுது, அவனைக் குறித்த எங்களுடைய பயம் நீங்கியது.

And it came to pass that when Zoram had made an oath unto us, our fears did cease concerning him.

38 நாங்கள் பித்தளைத் தகடுகளை எடுத்துக்கொண்டு லாபானுடைய வேலைக்காரனையும் அழைத்துக்கொண்டு, வனாந்தரத்திற்குப் புறப்பட்டுச் சென்று, எங்கள் தகப்பனின் கூடாரத்திற்குப் பயணம் செய்தோம்.

And it came to pass that we took the plates of brass and the servant of Laban, and departed into the wilderness, and journeyed unto the tent of our father.

## 1 நேபி 5

1 இதோ, நாங்கள் எங்கள் தகப்பனிடம் வனாந்தரத்திற்கு இறங்கி வந்த பின்பு, இதோ, அவர் ஆனந்தத்தால் நிரப்பப்பட்டார். என் தாயாகிய சரயாவும் மிகுதியாய் மகிழ்ச்சியடைந்தாள். ஏனெனில் அவள் எங்கள் நிமித்தம், மெய்யாகவே துக்கித்துக்கொண்டிருந்தாள்.

2 ஏனெனில் நாங்கள் வனாந்தரத்தில் அழிந்துபோனோமென அவள் எண்ணியிருந்தாள்; அவள் என் தகப்பனுக்கு எதிராக முறையிட்டு, அவரை தரிசனங்காண்கிற மனுஷன் என்று சொல்லி: இதோ, நம் சுதந்திர தேசத்திலிருந்து நீர் எங்களை நடத்திக்கொண்டு வந்தீர், என் குமாரர்களும் இல்லை, நாமும் வனாந்தரத்தில் அழிந்துபோகிறோம், என்றாள்.

3 பின்னர் இந்த விதமான வார்த்தைகளில் என் தாய், என் தகப்பனுக்கு எதிராக முறையிட்டாள்.

4 என் தகப்பன் அவளிடம் பேசிச் சொன்னதாவது: நான் தரிசனங்காணும் மனுஷன் என்பதை நான் அறிவேன்; நான் தேவனுடைய காரியங்களைத் தரிசனத்தில் காணாதிருந்தால், தேவனுடைய நன்மைகளை நான் அறியாதிருந்திருப்பேன், ஆனால் எருசலேமில் தங்கியிருந்திருப்பேன், என் சகோதரர்களோடு அழிந்துபோயிருப்பேன் என்றார்.

5 ஆனாலும் இதோ, வாக்குத்தத்தத்தின் தேசத்தை நான் அடைந்துகொண்டேன், அந்தக் காரியங்களில் நான் களிகூருகிறேன்; ஆம், லாபானுடைய கரங்களிலிருந்து என் குமாரரை கர்த்தர் விடுவித்து, வனாந்தரத்தில் நம்மிடம் மறுபடியும் கொண்டுவருவார் என நான் அறிவேன்.

6 நாங்கள் யூதருடைய பதிவேடுகளைப் பெறும்படி, வனாந்தரத்தில் எருசலேம் தேசத்தை நோக்கி மேலே பயணம் செய்தபொழுது, இந்த விதமான வார்த்தைகளில் என் தகப்பனாகிய லேகி, என் தாயாகிய சரயாவைத் தேற்றினார்.

7 நாங்கள் எங்கள் தகப்பனின் கூடாரத்திற்குத் திரும்பியபொழுது, அவர்கள் சந்தோஷம் நிறைவாயிருந்தது, என் தாய் ஆறுதலடைந்தாள்.

8 அவள் சொன்னதாவது: கர்த்தர் என் புருஷனை, வனாந்தரத்திற்கு ஓடிப்போகக் கட்டளையிட்டார் என்பதை நான் இப்பொழுது திட்டமாய் அறிவேன்; ஆம், கர்த்தர் என் குமாரர்களைப் பாதுகாத்து, லாபானுடைய கரங்களிலிருந்து விடுவித்து, கர்த்தர் அவர்களுக்குக் கட்டளையிட்ட காரியத்தைச் செய்துமுடிக்கும்படி அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்தார் என்பதையும் நான் திட்டமாய் அறிவேன். இந்த விதமான வார்த்தைகளில் அவள் பேசினாள்.

## 1 Nephi 5

And it came to pass that after we had come down into the wilderness unto our father, behold, he was filled with joy, and also my mother, Sariah, was exceedingly glad, for she truly had mourned because of us.

For she had supposed that we had perished in the wilderness; and she also had complained against my father, telling him that he was a visionary man; saying: Behold thou hast led us forth from the land of our inheritance, and my sons are no more, and we perish in the wilderness.

And after this manner of language had my mother complained against my father.

And it had come to pass that my father spake unto her, saying: I know that I am a visionary man; for if I had not seen the things of God in a vision I should not have known the goodness of God, but had tarried at Jerusalem, and had perished with my brethren.

But behold, I have obtained a land of promise, in the which things I do rejoice; yea, and I know that the Lord will deliver my sons out of the hands of Laban, and bring them down again unto us in the wilderness.

And after this manner of language did my father, Lehi, comfort my mother, Sariah, concerning us, while we journeyed in the wilderness up to the land of Jerusalem, to obtain the record of the Jews.

And when we had returned to the tent of my father, behold their joy was full, and my mother was comforted.

And she spake, saying: Now I know of a surety that the Lord hath commanded my husband to flee into the wilderness; yea, and I also know of a surety that the Lord hath protected my sons, and delivered them out of the hands of Laban, and given them power whereby they could accomplish the thing which the Lord hath commanded them. And after this manner of language did she speak.

9 அவர்கள் மிகுதியாக களிகூர்ந்து பலிகளையும்
தகனபலிகளையும் கர்த்தருக்குச் செலுத்தினார்-
கள்; அவர்கள் இஸ்ரவேலின் தேவனுக்கு நன்றி செ-
லுத்தினார்கள்.

10 இஸ்ரவேலின் தேவனுக்கு அவர்கள் நன்றி செ-
லுத்திய பின்பு, என் தகப்பனாகிய லேகி, பித்த-
ளைத் தகடுகளின்மேல் பொறிக்கப்பட்டிருந்த பதி-
வேடுகளை எடுத்து, அவைகளைத் தொடக்கத்தி-
லிருந்து ஆராய்ந்து பார்த்தார்.

11 அவைகள் உலகத்தின் சிருஷ்டிப்பையும், நம் மு-
தல் பெற்றோராகிய ஆதாம், ஏவாளைப்பற்றிய வி-
வரங்களையும் கொண்ட, மோசேயின் ஐந்து புஸ்த-
கங்களை உடையனவாயிருந்ததை அவர் கண்-
டார்.

12 ஆதிமுதலான யூதர்களின் பதிவேடுகளையும் யூ-
தேயாவின் ராஜாவாகிய சிதேக்கியாவின் ஆளு-
கையின் தொடக்கம்வரை உள்ளவற்றையும்;

13 ஆதிமுதலிருந்து, சிதேக்கியாவின் ஆளுகையின்
தொடக்கம்வரை உள்ள பரிசுத்த தீர்க்கதரிசிகளின்
தீர்க்கதரிசனங்களையும், எரேமியாவின் வாயி-
னால் உரைக்கப்பட்ட அநேக தீர்க்கதரிசனங்களை-
யும் அவர் கண்டார்.

14 என் தகப்பனாகிய லேகி, பித்தளைத் தகடுக-
ளின்மேல் அவருடைய பிதாக்களின் வம்சவர-
லாற்றையும் கண்டார்; ஆம், எகிப்தியருக்கு விற்-
கப்பட்டு, தம்முடைய தகப்பனாகிய யாக்கோபு-
வையும், அவருடைய குடும்பத்தார் அனைவரை-
யும் பஞ்சத்தால் அழிந்துபோகாமல் காக்கும்படி-
யாக, கர்த்தருடைய கரத்தால் பாதுகாக்கப்பட்ட,
யாக்கோபின் குமாரனாகிய யோசேப்பின் சந்ததி,
தான் என்பதையும் அவர் கண்டுகொண்டார்.

15 அவர்களைப் பாதுகாத்த அதே தேவனால், அவர்-
கள் சிறையிருப்பிலிருந்தும், எகிப்து தேசத்திலி-
ருந்தும் வழிநடத்திச் செல்லப்பட்டார்கள்.

16 இப்படியாக என் தகப்பனாகிய லேகி, தம்முடைய
பிதாக்களின் வம்சவரலாற்றை அறிந்தார். மேலும்
லாபானும் யோசேப்பின் சந்ததியாயிருந்தான்.
ஆகையால் அவனும் அவன் பிதாக்களும் பதிவே-
டுகளை வைத்திருந்தார்கள்.

17 மேலும் இப்பொழுது இந்தக் காரியங்களை எல்-
லாம் என் தகப்பன் பார்த்தபொழுது, ஆவியினால்
நிரப்பப்பட்டவராய் தன் சந்ததியைக் குறித்தும்,

18 இந்த பித்தளைத் தகடுகள், தம்முடைய சந்ததியா-
ராகிய, சகல தேசத்தாருக்கும், இனத்தாருக்கும், பா-
ஷைக்காரருக்கும், ஜனங்களுக்கும் செல்லவேண்-
டும் எனவும், தீர்க்கதரிசனம் உரைக்கத் தொடங்கி-
னார்.

And it came to pass that they did rejoice exceedingly, and did offer sacrifice and burnt offerings unto the Lord; and they gave thanks unto the God of Israel.

And after they had given thanks unto the God of Israel, my father, Lehi, took the records which were engraven upon the plates of brass, and he did search them from the beginning.

And he beheld that they did contain the five books of Moses, which gave an account of the creation of the world, and also of Adam and Eve, who were our first parents;

And also a record of the Jews from the beginning, even down to the commencement of the reign of Zedekiah, king of Judah;

And also the prophecies of the holy prophets, from the beginning, even down to the commencement of the reign of Zedekiah; and also many prophecies which have been spoken by the mouth of Jeremiah.

And it came to pass that my father, Lehi, also found upon the plates of brass a genealogy of his fathers; wherefore he knew that he was a descendant of Joseph; yea, even that Joseph who was the son of Jacob, who was sold into Egypt, and who was preserved by the hand of the Lord, that he might preserve his father, Jacob, and all his household from perishing with famine.

And they were also led out of captivity and out of the land of Egypt, by that same God who had preserved them.

And thus my father, Lehi, did discover the genealogy of his fathers. And Laban also was a descendant of Joseph, wherefore he and his fathers had kept the records.

And now when my father saw all these things, he was filled with the Spirit, and began to prophesy concerning his seed—

That these plates of brass should go forth unto all nations, kindreds, tongues, and people who were of his seed.

19 ஆகையால், இந்தப் பித்தளைத் தகடுகள் ஒரு-
போதும் அழியக்கூடாது என்றார்; காலத்தால் இனி-
மேல் அவைகள் மங்கிப்போகவும் கூடாது. மேலும்
அவர் தம்முடைய சந்ததியைக் குறித்து அநேக கா-
ரியங்களை தீர்க்கதரிசனமாக உரைத்தார்.

Wherefore, he said that these plates of brass should never perish; neither should they be dimmed any more by time. And he prophesied many things concerning his seed.

20 இதுவரைக்கும் நானும் என் தகப்பனும் கர்த்தர்
எங்களுக்குக் கட்டளையிட்ட கட்டளைகளைக்
கைக்கொண்டுவந்தோம்.

And it came to pass that thus far I and my father had kept the commandments wherewith the Lord had commanded us.

21 கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்ட பதிவேடுக-
ளை நாங்கள் பெற்று, அவைகளை ஆராய்ந்து,
அவைகள் விரும்பப்படத்தக்கவையாய் இருப்ப-
தைக் கண்டோம்; ஆம் கர்த்தருடைய கட்டளைக-
ளை எங்கள் பிள்ளைகளுக்குப் பாதுகாத்து வைக்-
கும்படி எங்களுக்கு அவைகள் அவ்வளவு பெரும-
திப்பு உடையனவாய் இருந்தன.

And we had obtained the records which the Lord had commanded us, and searched them and found that they were desirable; yea, even of great worth unto us, insomuch that we could preserve the commandments of the Lord unto our children.

22 ஆகையால் வாக்குத்தத்தத்தின் தேசத்தை நோக்கி
வனாந்தரத்தில் நாங்கள் பயணம் செய்யும்போது,
அவைகளை எங்களுடன் எடுத்துச் செல்வது கர்த்-
தரின் ஞானமாயிருந்தது.

Wherefore, it was wisdom in the Lord that we should carry them with us, as we journeyed in the wilderness towards the land of promise.

# 1 நேபி 6

1 இப்பொழுது நேபியாகிய நான் இந்தப் பதிவேட்டின்
பகுதியில், என் பிதாக்களின் வம்சவரலாற்றைக்
கொடுப்பதில்லை; பின்னரும் எந்தச் சமயத்திலும்
நான் எழுதிக்கொண்டிருக்கும் இந்தத் தகடுகளின்-
மேல் கொடுக்கப்போவதுமில்லை; ஏனெனில் என்
தகப்பன் வைத்துள்ள பதிவேடுகளில் அவைகள்
கொடுக்கப்பட்டுள்ளன; ஆகையால் இந்தப் பதிவு-
களில் அவற்றை நான் எழுதுவதில்லை.
2 ஏனெனில் நாங்கள் யோசேப்பின் சந்ததி என்று
சொல்லுவது எனக்கு போதுமானதாயிருக்கிறது.
3 என் தகப்பனைக்குறித்த எல்லாக் காரியங்களின்
முழு விவரத்தையும் முக்கியமாக இந்தத் தகடுக-
ளின்மேல் எழுதவேண்டும் என்பது எனக்கு ஒரு
பொருட்டல்ல. ஏனெனில் அவைகளை இந்தத்
தகட்டின் மேல் எழுத முடியாது, ஏனெனில் தேவ கா-
ரியங்களை நான் எழுதும்படி அவைகளில் இடமி-
ருக்க நான் வாஞ்சிக்கிறேன்.
4 ஏனெனில் மனுஷர்களை, ஆபிரகாமின் தே-
வனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனு-
மாயிருக்கிறவரிடம் வர இசையச் செய்து, அவர்கள்
இவ்விதம் இரட்சிக்கப்படவேண்டும் என்பதே என்
முழுமையான நோக்கமாயிருக்கிறது.
5 ஆகையால் உலகத்திற்கு பிரியமாயிருக்கிற காரி-
யங்களை நான் எழுதுவதில்லை, ஆனால் தே-
வனுக்கும், உலகப்பிரகாரமாய் இல்லாதவர்களுக்-
கும் பிரியமாயிருக்கிற காரியங்களை நான் எழுது-
கிறேன்.
6 ஆகையால், மனுபுத்திரருக்கு உபயோகமில்லாத
காரியங்களால் இந்தத் தகடுகளை நிரப்பக்கூடாது
என என் சந்ததியாருக்கு நான் கட்டளையிடுவேன்.

# 1 Nephi 6

And now I, Nephi, do not give the genealogy of my fathers in this part of my record; neither at any time shall I give it after upon these plates which I am writing; for it is given in the record which has been kept by my father; wherefore, I do not write it in this work.

For it sufficeth me to say that we are descendants of Joseph.

And it mattereth not to me that I am particular to give a full account of all the things of my father, for they cannot be written upon these plates, for I desire the room that I may write of the things of God.

For the fulness of mine intent is that I may persuade men to come unto the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob, and be saved.

Wherefore, the things which are pleasing unto the world I do not write, but the things which are pleasing unto God and unto those who are not of the world.

Wherefore, I shall give commandment unto my seed, that they shall not occupy these plates with things which are not of worth unto the children of men.

## 1 நேபி 7

1 இப்பொழுது, என் தகப்பனாகிய லேகி தம்முடைய
சந்ததியைக் குறித்த தீர்க்கதரிசனத்தை முடித்த
பின்பு, கர்த்தர் அவருடனே மறுபடியுமாய்ப் பேசி,
அவர் தம்முடைய குடும்பத்தைத் தனியாக வனாந்-
தரத்திற்கு அழைத்துச் செல்வது அவருக்கு உகந்த-
தல்ல என்றும், ஆனால் அவருடைய குமாரர்கள்
வாக்குத்தத்தத்தின் தேசத்திலே கர்த்தருக்கு சந்ததி
உண்டாக்கும்படி குமாரத்திகளை மனைவிகளாகக்
கொள்ளவேண்டுமென்றும் சொன்னார்.
2 நேபியாகிய நானும், என் சகோதரரும், மறுபடியும்
எருசலேம் தேசத்திற்குச் சென்று, இஸ்மவேலையும்,
அவன் குடும்பத்தாரையும், வனாந்தரத்திற்கு
கொண்டுவரவேண்டுமெனவும் கர்த்தர் அவருக்குக்
கட்டளையிட்டார்.
3 நேபியாகிய நான் மறுபடியும் என் சகோதரருடன்
எருசலேமுக்கு ஏறிப்போகும்படிக்கு வனாந்தரத்தி-
னுள் சென்றேன்.
4 நாங்கள் மேலேறி இஸ்மவேலின் வீட்டிற்கு சென்-
றோம். மேலும் கர்த்தருடைய வார்த்தைகளை
அவனிடத்தில் பேசும்படிக்கு இஸ்மவேலின் பார்-
வையில் நாங்கள் தயை பெற்றோம்.
5 அவர்கள் எங்களுடனே எங்கள் தகப்பனின் கூ-
டாரத்தை நோக்கி வனாந்தரத்தினுள் பயணத்தை
மேற்கொள்ளும்படிக்கு, கர்த்தர் இஸ்மவேல் மற்றும்
அவன் வீட்டாரின் இருதயத்தையும் இளக்கினார்.
6 நாங்கள் வனாந்தரத்தில் பயணம் செய்துகொண்-
டிருந்தபொழுது, இதோ, லாமானும் லெமுவேலும்,
இஸ்மவேலின் இரண்டு குமாரத்திகளும், இஸ்மவே-
லின் இரண்டு குமாரரும் அவர்களுடைய குடும்பத்-
தாரும், ஆம், நேபியாகிய எனக்கும், சாம், அவர்கள்
தகப்பனாகிய இஸ்மவேல், அவனுடைய மனைவி,
அவனுடைய பிற மூன்று குமாரத்திகள் ஆகியோ-
ருக்கு எதிராகவும் கலகஞ் செய்தார்கள்.
7 அப்போது, இந்தக் கலகத்தினாலே, அவர்கள் எரு-
சலேம் தேசத்திற்குத் திரும்பிப்போக வாஞ்சையு-
டையவர்களாய் இருந்தார்கள்.
8 இப்பொழுதும், நேபியாகிய நான் அவர்களுடைய
இருதயக் கடினத்தினிமித்தம் துக்கப்பட்டுக்
கொண்டிருந்தபடியால், நான் அவர்களிடத்தில்,
ஆம், லாமானுடனும் லெமுவேலுடனும் பேசி,
இதோ, நீங்கள் என் மூத்த சகோதரர்களாய் இருக்கி-
றீர்கள். உங்கள் இளைய சகோதரனாகிய நான் உங்-
களுடனே பேசும்படிக்கும், உங்களுக்கு ஒரு மாதிரி-
யை ஏற்படுத்தும்படிக்கும், நீங்கள் உங்கள் இருத-
யத்தில் கடினமுள்ளவர்களாயும், மனதில் குருடரா-
யும் இருப்பது எப்படி என்றேன்.
9 கர்த்தருடைய வார்த்தைக்கு நீங்கள் செவிகொ-
டாமல் இருப்பது என்ன?

## 1 Nephi 7

And now I would that ye might know, that after my father, Lehi, had made an end of prophesying concerning his seed, it came to pass that the Lord spake unto him again, saying that it was not meet for him, Lehi, that he should take his family into the wilderness alone; but that his sons should take daughters to wife, that they might raise up seed unto the Lord in the land of promise.

And it came to pass that the Lord commanded him that I, Nephi, and my brethren, should again return unto the land of Jerusalem, and bring down Ishmael and his family into the wilderness.

And it came to pass that I, Nephi, did again, with my brethren, go forth into the wilderness to go up to Jerusalem.

And it came to pass that we went up unto the house of Ishmael, and we did gain favor in the sight of Ishmael, insomuch that we did speak unto him the words of the Lord.

And it came to pass that the Lord did soften the heart of Ishmael, and also his household, insomuch that they took their journey with us down into the wilderness to the tent of our father.

And it came to pass that as we journeyed in the wilderness, behold Laman and Lemuel, and two of the daughters of Ishmael, and the two sons of Ishmael and their families, did rebel against us; yea, against me, Nephi, and Sam, and their father, Ishmael, and his wife, and his three other daughters.

And it came to pass in the which rebellion, they were desirous to return unto the land of Jerusalem.

And now I, Nephi, being grieved for the hardness of their hearts, therefore I spake unto them, saying, yea, even unto Laman and unto Lemuel: Behold ye are mine elder brethren, and how is it that ye are so hard in your hearts, and so blind in your minds, that ye have need that I, your younger brother, should speak unto you, yea, and set an example for you?

How is it that ye have not hearkened unto the word of the Lord?

10 நீங்கள் கர்த்தருடைய தூதனைப் பார்த்தீர்கள்
என்பதை மறந்துபோனது என்ன?

How is it that ye have forgotten that ye have seen an angel of the Lord?

11 ஆம், லாபானுடைய கரங்களில் இருந்து விடு-
வித்ததையும், மேலும் நாம் பதிவேடுகளைப் பெ-
றும்படியாகவும் கர்த்தர் நமக்குச் செய்த மகத்தான
காரியங்களையும் நீங்கள் மறந்துபோனது என்ன?

Yea, and how is it that ye have forgotten what great things the Lord hath done for us, in delivering us out of the hands of Laban, and also that we should obtain the record?

12 ஆம், கர்த்தரில் தங்கள் விசுவாசத்தை வைப்பார்-
களெனில், அவர் தம்முடைய சித்தத்தின்படியே
மனுபுத்திரருக்கு எல்லாக் காரியங்களையும் செய்-
யப் போதுமானவராய் இருக்கிறார் என்பதை நீங்-
கள் மறந்துபோனது என்ன? ஆகையால் நாம் அவ-
ரில் விசுவாசமுள்ளவர்களாய் இருப்போமாக.

Yea, and how is it that ye have forgotten that the Lord is able to do all things according to his will, for the children of men, if it so be that they exercise faith in him? Wherefore, let us be faithful to him.

13 நாம் அவருக்கு விசுவாசமுள்ளவர்களாய் இருப்-
போமெனில், நாம் வாக்குத்தத்தத்தின் தேசத்தை
அடைவோம்; எருசலேமின் அழிவைக் குறித்த கர்த்-
தருடைய வார்த்தை நிறைவேற்றப்படுவதை,
வருங்காலத்தில் ஒரு சமயத்தில் நீங்கள் அறிவீர்-
கள்; ஏனெனில் எருசலேமின் அழிவைக் குறித்து
கர்த்தர் பேசிய எல்லாக் காரியங்களும் நிறைவேற்-
றப்படவேண்டும்.

And if it so be that we are faithful to him, we shall obtain the land of promise; and ye shall know at some future period that the word of the Lord shall be fulfilled concerning the destruction of Jerusalem; for all things which the Lord hath spoken concerning the destruction of Jerusalem must be fulfilled.

14 ஏனெனில் இதோ, கர்த்தருடைய ஆவி அவர்க-
ளில் கிரியை செய்வதிலிருந்து விரைவில் நின்று-
போகும்; இதோ, அவர்கள் தீர்க்கதரிசிகளை மறுத-
லித்தார்கள், எரேமியாவை சிறையிலே போட்டார்-
கள். மேலும் அவர்கள் என் தகப்பன் தேசத்திலிருந்-
து ஓடிப்போகுமளவிற்கு அவர்கள் அவருடைய ஜீ-
வனை வாங்க வகை தேடினார்கள்.

For behold, the Spirit of the Lord ceaseth soon to strive with them; for behold, they have rejected the prophets, and Jeremiah have they cast into prison. And they have sought to take away the life of my father, insomuch that they have driven him out of the land.

15 இதோ, இப்பொழுதும், நான் உங்களுக்குச் சொல்-
லுகிறேன், நீங்கள் எருசலேமிற்குத் திரும்பிப்போ-
னால் நீங்களும் அவர்களுடன் அழிவீர்கள். மேலும்
இப்பொழுதும் நீங்கள் அதைத் தெரிந்துகொள்வீர்-
களானால், நீங்கள் மேலேறி தேசத்திற்கு போங்கள்;
மேலும் நீங்கள் போவீர்களானால் நீங்களும் அழி-
வீர்கள் என்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்-
தைகளை நினைவுகூருங்கள்; ஏனெனில் நான்
இப்படியாகப் பேசவேண்டுமென கர்த்தருடைய
ஆவியானவர் என்னை நெருக்கி ஏவினார்.

Now behold, I say unto you that if ye will return unto Jerusalem ye shall also perish with them. And now, if ye have choice, go up to the land, and remember the words which I speak unto you, that if ye go ye will also perish; for thus the Spirit of the Lord constraineth me that I should speak.

16 நேபியாகிய நான் இந்த வார்த்தைகளை என்
சகோதரரிடம் பேசியபொழுது, அவர்கள் என்மீது
கோபமடைந்தார்கள். இதோ, அவர்கள் மிகவும்
கோபமாயிருந்தபடியால், என்மீது கைபோட்டு என்-
னைக் கயிறுகளினால் கட்டினார்கள், ஏனெனில்
காட்டுமிருகங்கள் என்னை பட்சித்துப்போடும்ப-
டிக்கு வனாந்தரத்தில் என்னை விட்டு விட்டு அவர்-
கள் என் ஜீவனை எடுத்துப்போடும்படியாக வகை-
தேடினார்கள்.

And it came to pass that when I, Nephi, had spoken these words unto my brethren, they were angry with me. And it came to pass that they did lay their hands upon me, for behold, they were exceedingly wroth, and they did bind me with cords, for they sought to take away my life, that they might leave me in the wilderness to be devoured by wild beasts.

17 நான் கர்த்தரை நோக்கி, கர்த்தாவே, உம்மீதுள்ள என்னுடைய விசுவாசத்தின்படியே, என் சகோதரருடைய கரங்களிலிருந்து என்னை விடுவியும்; ஆம் நான் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கட்டுகளை நான் அறுத்துப்போடும்படி, எனக்கு பெலன் தாரும் என்று ஜெபம்பண்ணினேன்.

But it came to pass that I prayed unto the Lord, saying: O Lord, according to my faith which is in thee, wilt thou deliver me from the hands of my brethren; yea, even give me strength that I may burst these bands with which I am bound.

18 நான் இந்த வார்த்தைகளைச் சொன்னபொழுது, இதோ, என் கரங்களிலும், கால்களிலும் இருந்த கட்டுகள் தளர்ந்துபோயின, நான் என் சகோதரர் முன்பாக நின்று மறுபடியும் அவர்களுடன் பேசினேன்.

And it came to pass that when I had said these words, behold, the bands were loosed from off my hands and feet, and I stood before my brethren, and I spake unto them again.

19 அவர்கள் மறுபடியும் என்மேல் கோபமடைந்தவர்களாய், என்மேல் கைபோடப்பார்த்தார்கள்; ஆனால் இதோ, இஸ்மவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும், ஆம், அவளுடைய தாயும், இஸ்மவேலின் குமாரரில் ஒருவனும் என் சகோதரருடைய இருதயங்களை இளக்கும் அளவுக்கு அவர்களிடம் பரிந்து பேசினார்கள்; அப்பொழுது அவர்கள் என் ஜீவனை எடுத்துப்போட முயற்சிப்பதை நிறுத்திவிட்டார்கள்.

And it came to pass that they were angry with me again, and sought to lay hands upon me; but behold, one of the daughters of Ishmael, yea, and also her mother, and one of the sons of Ishmael, did plead with my brethren, insomuch that they did soften their hearts; and they did cease striving to take away my life.

20 அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தம் அவர்கள் துக்கமடைந்தவர்களாய், அவர்கள் என் முன்னால் தலைவணங்கி, அவர்கள் எனக்கு எதிராகச் செய்த காரியத்தை நான் மன்னிக்கும்படி என்னிடம் மன்றாடினார்கள்.

And it came to pass that they were sorrowful, because of their wickedness, insomuch that they did bow down before me, and did plead with me that I would forgive them of the thing that they had done against me.

21 அவர்கள் செய்த எல்லாவற்றையும் நான் அவர்களுக்கு உண்மையாகவே மன்னித்தேன், கர்த்தராகிய தங்கள் தேவனிடம் மன்னிப்பிற்காக ஜெபிக்கும்படி நான் அவர்களுக்கு புத்திசொன்னேன். அவர்கள் அப்படியே செய்தார்கள், அவர்கள் கர்த்தரிடம் ஜெபித்த பின்பு, நாங்கள் எங்கள் தகப்பனின் கூடாரத்தை நோக்கி மறுபடியும் பயணம் செய்தோம்.

And it came to pass that I did frankly forgive them all that they had done, and I did exhort them that they would pray unto the Lord their God for forgiveness. And it came to pass that they did so. And after they had done praying unto the Lord we did again travel on our journey towards the tent of our father.

22 நாங்கள் எங்கள் தகப்பனின் கூடாரத்திற்கு வந்து சேர்ந்தோம். மேலும் நானும் என் சகோதரர்களும் இஸ்மவேலின் வீட்டார் எல்லோரும், என் தகப்பனின் கூடாரத்திற்கு வந்துசேர்ந்த பின்பு, அவர்கள் தங்கள் கர்த்தராகிய தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்; அவர்கள் அவருக்கு பலியையும் தகனபலியையும் செலுத்தினார்கள்.

And it came to pass that we did come down unto the tent of our father. And after I and my brethren and all the house of Ishmael had come down unto the tent of my father, they did give thanks unto the Lord their God; and they did offer sacrifice and burnt offerings unto him.

# 1 நேபி 8

1 நாங்கள் எல்லாபிரகாரமான ஒவ்வொரு வகையிலுள்ள விதைகளையும், ஒவ்வொரு தானிய வகையிலும் மற்றும் ஒவ்வொரு கனி வகையிலுள்ள விதைகளையும் சேர்த்து வைத்திருந்தோம்.

2 என் தகப்பன் வனாந்தரத்தில் தங்கியிருந்தபொழுது அவர் எங்களை நோக்கி, இதோ, நான் ஒரு சொப்பனம் கண்டேன், வேறு வார்த்தைகளிலெனில், நான் ஒரு தரிசனத்தைக் கண்டேன் என்றார்.

3 இதோ, நான் கண்ட காரியத்தினிமித்தம், நேபி மற்றும் சாமைப்பற்றி கர்த்தரில் களிகூருவதற்கு எனக்குக் காரணமுண்டு, அதனால் அவர்களும் அவர்களின் பல சந்ததியாரும் இரட்சிக்கப்படுவார்கள், என நான் எண்ணக் காரணமுண்டு.

4 ஆனால் இதோ, லாமான் மற்றும் லெமுவேலே, உங்களைக் குறித்து நான் மிகவும் அஞ்சுகிறேன், ஏனெனில் இதோ, நான் என் சொப்பனத்திலே ஒரு மந்தாரமான இருண்ட வனாந்தரத்தைக் கண்டேன் என நினைக்கிறேன்.

5 நான் ஒரு மனுஷனைக் கண்டேன். அவர் வெள்ளை அங்கியை அணிந்திருந்தார். பின்பு அவர் வந்து எனக்கு முன்பாக நின்றார்.

6 அவர் என்னிடம் பேசினார் மற்றும் நான் அவரைப் பின்தொடர்ந்து செல்ல அழைத்தார்.

7 நான் அவரைப் பின்தொடர்ந்தபோது, ஒரு இருண்ட, மந்தாரமான பாழ் நிலத்தில் நிற்பதை நான் பார்த்தேன்.

8 நான் பலமணி நேரங்களாக, இருளில் பயணம் செய்த பின்னர், அவருடைய உருக்கமான, திரளான இரக்கங்களின்படியே என்மீது இரக்கமாயிரும் என கர்த்தரிடத்தில் நான் ஜெபிக்க ஆரம்பித்தேன்.

9 நான் கர்த்தரிடத்தில் ஜெபித்த பின்னர், நான் ஒரு பரந்த விசாலமான வெளியைக் கண்டேன்.

10 நான் ஒரு விருட்சத்தைக் கண்டேன். அதன் கனி ஒருவரை மகிழ்விக்கக்கூடியதாய் இருந்தது.

11 நான் போய் அதிலிருந்த கனியைப் புசித்தேன்; நான் முன்னால் சுவைத்த எல்லாவற்றைக் காட்டிலும் அது மிக மதுரமாய் இருந்ததைக் கண்டேன். ஆம் அதிலிருந்த கனி வெண்மையாய், நான் என்றைக்கும் கண்ட எல்லா வெண்மையையும் மிஞ்சுவதாய் இருக்கக் கண்டேன்.

12 நான் அதிலிருந்த கனியைப் புசித்தபொழுது, அது என் ஆத்துமாவை மிகுந்த மகிழ்ச்சியால் நிறைத்தது; ஆகையால் என் குடும்பத்தினரும் அதைப் புசிக்கவேண்டும் என்று வாஞ்சிக்கத் தொடங்கினேன்; ஏனெனில் அது மற்ற எல்லாக் கனிகளையும்விட விரும்பத்தக்கது என்று நான் அறிவேன்.

# 1 Nephi 8

And it came to pass that we had gathered together all manner of seeds of every kind, both of grain of every kind, and also of the seeds of fruit of every kind.

And it came to pass that while my father tarried in the wilderness he spake unto us, saying: Behold, I have dreamed a dream; or, in other words, I have seen a vision.

And behold, because of the thing which I have seen, I have reason to rejoice in the Lord because of Nephi and also of Sam; for I have reason to suppose that they, and also many of their seed, will be saved.

But behold, Laman and Lemuel, I fear exceedingly because of you; for behold, methought I saw in my dream, a dark and dreary wilderness.

And it came to pass that I saw a man, and he was dressed in a white robe; and he came and stood before me.

And it came to pass that he spake unto me, and bade me follow him.

And it came to pass that as I followed him I beheld myself that I was in a dark and dreary waste.

And after I had traveled for the space of many hours in darkness, I began to pray unto the Lord that he would have mercy on me, according to the multitude of his tender mercies.

And it came to pass after I had prayed unto the Lord I beheld a large and spacious field.

And it came to pass that I beheld a tree, whose fruit was desirable to make one happy.

And it came to pass that I did go forth and partake of the fruit thereof; and I beheld that it was most sweet, above all that I ever before tasted. Yea, and I beheld that the fruit thereof was white, to exceed all the whiteness that I had ever seen.

And as I partook of the fruit thereof it filled my soul with exceedingly great joy; wherefore, I began to be desirous that my family should partake of it also; for I knew that it was desirable above all other fruit.

13 என் குடும்பத்தாரை ஒருவேளை கண்டுபிடிக்க-
லாம் என்று என் கண்களைச் சுற்றிலும் ஏறெடுத்த-
தில், நான் தண்ணீருள்ள ஒரு நதியைக் கண்டேன்;
அது நெடுக ஓடிற்று, மேலும் நான் புசித்துக்கொண்-
டிருந்த கனியிருந்த விருட்சத்தின் பக்கத்திலே அது
இருந்தது.

And as I cast my eyes round about, that perhaps I might discover my family also, I beheld a river of water; and it ran along, and it was near the tree of which I was partaking the fruit.

14 அது எங்கிருந்து வந்தது என்று கண்டுபிடிக்க
நான் பார்த்தேன்; கொஞ்ச தூரத்துக்கு அப்பால்,
அதனுடைய ஊற்றுக்கண்ணைக் கண்டேன்; மே-
லும் அதனுடைய ஊற்றுக்கண் அருகிலே, உன்னு-
டைய தாய் சரயா, சாம் மற்றும் நேபியைக் கண்-
டேன்; மேலும் அவர்கள் எங்கே போகவேண்டு-
மென்று தெரியாதவர்களைப்போல நின்றுகொண்-
டிருந்தார்கள்.

And I looked to behold from whence it came; and I saw the head thereof a little way off; and at the head thereof I beheld your mother Sariah, and Sam, and Nephi; and they stood as if they knew not whither they should go.

15 நான் அவர்களிடத்தில் சைகை காட்டினேன்; மே-
லும் அவர்கள் என்னிடத்தில் வந்து எல்லாக் கனிக-
ளையும் விட, விரும்பத்தக்க இந்தக் கனியைப் பு-
சிக்கவேண்டும் என்று உரத்த குரலிலும் அவர்களி-
டத்தில் சொன்னேன்.

And it came to pass that I beckoned unto them; and I also did say unto them with a loud voice that they should come unto me, and partake of the fruit, which was desirable above all other fruit.

16 அவர்கள் என்னிடம் வந்து அந்தக் கனியைப் பு-
சித்தார்கள்.

And it came to pass that they did come unto me and partake of the fruit also.

17 லாமானும் லெமுவேலும் வந்து கனியைப் புசிக்க-
வேண்டுமென நான் ஆசைப்பட்டேன்; ஆகையால்
அவர்களை ஒருவேளை பார்க்கலாமென்று, என்
கண்களை ஆற்றின் ஊற்றுக்கண்ணை நோக்கி
ஏறெடுத்தேன்.

And it came to pass that I was desirous that Laman and Lemuel should come and partake of the fruit also; wherefore, I cast mine eyes towards the head of the river, that perhaps I might see them.

18 நான் அவர்களைக் கண்டேன், ஆனால் அவர்கள்
என்னிடம் வந்து கனியைப் புசிக்கவில்லை.

And it came to pass that I saw them, but they would not come unto me and partake of the fruit.

19 ஒரு இருப்புக்கோலை நான் கண்டு, அது நதியின்
கரையோரமாக நீண்டு, நான் நின்றுகொண்டிருந்த
விருட்சத்திற்கு நடத்திச் சென்றது.

And I beheld a rod of iron, and it extended along the bank of the river, and led to the tree by which I stood.

20 நான் அருகில் நின்றுகொண்டிருந்த விருட்சம்வ-
ரைக்கும், இருப்புக்கோல் அருகிலே வந்த, இடுக்க-
மும், நெருக்கமுமான பாதை, நெடுக வருவதை
நான் கண்டேன்; அது மேலும் ஊற்றுக்கண் பக்கத்-
தில், ஒரு உலகம்போல் இருந்த ஒரு பரந்த விசால-
மான நிலத்திற்கு வழிநடத்தியது.

And I also beheld a strait and narrow path, which came along by the rod of iron, even to the tree by which I stood; and it also led by the head of the fountain, unto a large and spacious field, as if it had been a world.

21 நான் எண்ணிலடங்கா ஜனக்கூட்டத்தைக் கண்-
டேன், அதில் பலர், நான் நின்றுகொண்டிருந்த வி-
ருட்சத்திற்கு நடத்திச்சென்ற பாதையை அடைய-
வேண்டுமென்பதற்காக அவர்கள் முன்னேறிச்
சென்றனர்.

And I saw numberless concourses of people, many of whom were pressing forward, that they might obtain the path which led unto the tree by which I stood.

22 அவர்கள் வந்து, விருட்சத்திற்கு நடத்திச்சென்ற
பாதையில் செல்லத்தொடங்கினர்.

And it came to pass that they did come forth, and commence in the path which led to the tree.

23 அங்கே ஒரு இருள் மூடுபனி எழும்பியது; ஆம்,
அந்த மிகப் பெரிய மூடுபனி, அந்தப் பாதையில்
செல்லத்தொடங்கினவர்கள், தங்கள் வழிதவறி,
அலைந்துபோய், காணாமற் போகுமளவிற்கு
இருந்தது.

And it came to pass that there arose a mist of darkness; yea, even an exceedingly great mist of darkness, insomuch that they who had commenced in the path did lose their way, that they wandered off and were lost.

24 மற்றவர்கள், முன்னேறிச் செல்வதை நான் கண்-
டேன், மேலும் அவர்கள் வந்து இருப்புக்கோலின் நு-
னியைப் பிடித்தார்கள்; அவர்கள் முன்னேறிச்
சென்று, விருட்சத்தின் கனியைப் புசிக்கும் மட்டும்
இருப்புக்கோலைப் பற்றிப்பிடித்து, இருளின் மூடு-
பனியில் முன்னேறினார்கள்.

And it came to pass that I beheld others pressing forward, and they came forth and caught hold of the end of the rod of iron; and they did press forward through the mist of darkness, clinging to the rod of iron, even until they did come forth and partake of the fruit of the tree.

25 அவர்கள் விருட்சத்தின் கனியைப் புசித்த பிறகு
அவர்கள் வெட்கப்பட்டவர்கள் போலாகி, அவர்-
கள் தங்கள் கண்களை ஏறெடுத்தார்கள்.

And after they had partaken of the fruit of the tree they did cast their eyes about as if they were ashamed.

26 என் கண்களை நான் சுற்றுமுற்றிலும் ஏறெடுத்து,
ஒரு பெரிய விசாலமான கட்டிடத்தை நீருள்ள
நதிக்கு மறு பக்கத்தில் கண்டேன்; மேலும் அது
உயர்ந்து, பூமிக்கு மேலே காற்றில் இருப்பதைப்-
போல அது நின்றது.

And I also cast my eyes round about, and beheld, on the other side of the river of water, a great and spacious building; and it stood as it were in the air, high above the earth.

27 அது, முதியோரும், இளைஞரும், ஆண்களும்,
பெண்களுமாய் ஜனத்தால் நிரப்பப்பட்டிருந்தது;
மேலும் அவர்களின் ஆடைகளின் தன்மை மிகவும்
அருமையாய் இருந்தது; மேலும் வந்து கனியைப் பு-
சிக்கிறவர்களுக்கு நேராக தங்கள் விரல்களை நீட்-
டி, பரிகாசம் செய்யும் மனநிலையில் அவர்கள்
இருந்தனர்.

And it was filled with people, both old and young, both male and female; and their manner of dress was exceedingly fine; and they were in the attitude of mocking and pointing their fingers towards those who had come at and were partaking of the fruit.

28 அவர்களை நிந்தித்தவர்களினிமித்தம் கனியை
ருசி பார்த்த பின்பும், அவர்கள் வெட்கம்கொண்ட-
வர்களாகி, அவர்கள் தவிர்க்கப்பட்ட பாதைகளில்
தவறிச்சென்று, காணாமற்போனார்கள்.

And after they had tasted of the fruit they were ashamed, because of those that were scoffing at them; and they fell away into forbidden paths and were lost.

29 இப்பொழுது நேபியாகிய நான், என் தகப்பனின்
எல்லா வார்த்தைகளையும் சொல்லப்போவதில்-
லை.

And now I, Nephi, do not speak all the words of my father.

30 ஆனால், சுருக்கமாக எழுத வேண்டுமெனில்,
இதோ, மற்ற திரளான ஜனங்கள் முன்னேறுவதை
அவர் கண்டார்; அவர்கள் முன்பாக வந்து, இருப்-
புக்கோலின் நுனியைப் பிடித்துக் கொண்டார்கள்;
மேலும் அவர்கள் வந்து கீழே விழுந்து, விருட்சத்-
தின் கனியைப் புசிக்கும் மட்டும் தொடர்ந்து இருப்-
புக்கோலை இறுக்கமாகப் பிடித்து, அவர்கள் தங்-
கள் வழியில் முன்னேறிச் சென்றனர்.

But, to be short in writing, behold, he saw other multitudes pressing forward; and they came and caught hold of the end of the rod of iron; and they did press their way forward, continually holding fast to the rod of iron, until they came forth and fell down and partook of the fruit of the tree.

31 மற்ற திரளான ஜனங்கள் அந்தப் பெரிய விசால-
மான கட்டிடத்துக்கு நேராகத் தங்கள் வழியை
உணர்வதை அவர் கண்டார்.

And he also saw other multitudes feeling their way towards that great and spacious building.

32 பலர் நீரூற்றின் ஆழங்களிலே அமிழ்ந்து போ-
னார்கள்; மேலும் அவர் பார்வையிலிருந்து பலர்
காணாமற்போய், அறியாத பாதைகளில் அலைந்-
தனர்.

And it came to pass that many were drowned in the depths of the fountain; and many were lost from his view, wandering in strange roads.

33 அந்த விசித்திரமான கட்டிடத்திற்குள் நுழைந்த
கூட்டமோ மிகப் பெரியதாய் இருந்தது. மேலும்
அவர்கள் அந்தக் கட்டிடத்தில் நுழைந்த பின்னர்,
என்னையும் கனியைப் புசித்துக்கொண்டிருந்த-
வர்களையும் இகழும்படியாய் விரல்களைக் காண்-
பித்தனர்; ஆனால் நாங்கள் அவர்கள்மேல் கவனம்
செலுத்தவில்லை.

And great was the multitude that did enter into that strange building. And after they did enter into that building they did point the finger of scorn at me and those that were partaking of the fruit also; but we heeded them not.

34 இவைகளே என்னுடைய தகப்பனின் வார்த்தை-
கள், அவற்றிற்கு செவிகொடுத்தவர்கள் அனைவ-
ரும் வழி தவறினர்.
35 லாமானும் லெமுவேலும் கனியைப் புசிக்கவில்-
லை என்று என் தகப்பன் சொன்னார்.
36 தன்னுடைய சொப்பனம் அல்லது தரிசனத்தின்
வார்த்தைகள் அனைத்தையும் என் தகப்பன் பே-
சிய பின்பு, ஒரு தரிசனத்திலே அவர் கண்ட காரி-
யங்களினிமித்தம் லாமான் லெமுவேலுக்காக
அவர் மிகவும் பயந்தார் என்று எங்களிடத்தில்
அவர் சொன்னார்; ஆம், அவர்கள் கர்த்தரின் பிர-
சன்னத்திலிருந்து தள்ளப்படக்கூடுமே என்று
அவர் பயந்தார்.
37 அவரின் வார்த்தைகளுக்கு அவர்கள் செவிகொ-
டுக்கவேண்டும் என்றும், ஒருவேளை கர்த்தர் அவர்-
களுக்கு இரக்கமாயிருந்து அவர்களை தள்ளிவிட-
மாட்டாரென்று, ஒரு உருக்கமான பெற்றோரின் எல்-
லா உணர்ச்சிகளையும்கொண்டு, அவர்களுக்கு
அவர் புத்திசொன்னார்; ஆம், என் தகப்பன் அவர்-
களிடத்தில் பிரசங்கம் செய்தார்.
38 அவர்களிடத்தில் அவர் பிரசங்கித்து, பல காரி-
யங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த பின்பு,
அவர்களைக் கர்த்தரின் கட்டளைகளைக் கைக்-
கொள்ளுமாறு கட்டளையிட்டார்; பின்னர் அவர்க-
ளிடத்தில் பேசுவதை நிறுத்தினார்.

These are the words of my father: For as many as heeded them, had fallen away.

And Laman and Lemuel partook not of the fruit, said my father.

And it came to pass after my father had spoken all the words of his dream or vision, which were many, he said unto us, because of these things which he saw in a vision, he exceedingly feared for Laman and Lemuel; yea, he feared lest they should be cast off from the presence of the Lord.

And he did exhort them then with all the feeling of a tender parent, that they would hearken to his words, that perhaps the Lord would be merciful to them, and not cast them off; yea, my father did preach unto them.

And after he had preached unto them, and also prophesied unto them of many things, he bade them to keep the commandments of the Lord; and he did cease speaking unto them.

# 1 நேபி 9

1 என் தகப்பன் இந்த எல்லாக் காரியங்களையும் மற்-
றும் இந்த தகடுகளின்மீது எழுதப்படமுடியாத
அநேக பெரிய காரியங்களையும், அவர் லெமுவே-
லின் பள்ளத்தாக்கில் ஒரு கூடாரத்தில் வாசமாய்
இருந்தபொழுது கண்டும், கேட்டும், பேசியும் இருந்-
தார்.
2 இப்பொழுது, இந்தத் தகடுகளைக் குறித்து, நான்
சொன்னதுபோல, இதோ, என் ஜனத்தின் வரலாற்-
றை முழு விவரமாக நான் எழுதுகிற தகடுகள்
அவை அல்ல; ஏனெனில் என் ஜனத்தின் முழு வி-
வரத்தையும் எழுதியுள்ள அந்தத் தகடுகளுக்கு நே-
பியின் பெயரைக் கொடுத்துள்ளேன்; ஆகையால்
என்னுடைய சொந்தப் பெயரிலே அவைகள் நேபி-
யின் தகடுகள் என்று அழைக்கப்படுகின்றன; மே-
லும் இந்தத் தகடுகளும் நேபியின் தகடுகள் என்று
அழைக்கப்படுகின்றன.
3 இருந்த போதிலும், என் ஜனத்தின் ஊழியத்தின்
விவரம் பொறிக்கப்படவேண்டும் என்ற முக்கிய
நோக்கத்திற்காக, நான் இந்தத் தகடுகளை உரு-
வாக்கவேண்டுமென்று கர்த்தருடைய கட்டளை-
யை நான் பெற்றிருக்கிறேன்.
4 மற்ற தகடுகளின்மீது, ராஜாக்களின் ஆளுகை
மற்றும் என் ஜனத்தின் யுத்தங்கள், பிணக்குகளின்
விவரத்தைப் பதிக்க வேண்டும்; ஆதலால் இந்தத்
தகடுகள், ஊழியத்தின் அதிகமான பகுதிக்கான-
வை; மற்ற தகடுகள், ராஜாக்களின் ஆளுகைகள்
மற்றும் என் மக்களின் யுத்தங்கள் மற்றும் பிணக்கு-
களின் அதிகமான பகுதிகளுக்கானவை.
5 ஆகையால், அவரில் ஒரு ஞானமுள்ள நோக்கத்-
திற்காகக் கர்த்தர், இந்தத் தகடுகளை எழுதவேண்-
டுமென எனக்குக் கட்டளையிட்டுள்ளார். அதன்
நோக்கத்தையோ, நான் அறியாமலிருக்கிறேன்.
6 ஆனால் கர்த்தரோ ஆதியிலிருந்து சகல காரியங்-
களையும் அறிந்திருக்கிறார்; ஆகையால் மனுபுத்-
திரர்களிடையே அவர் எல்லா கிரியைகளையும் நி-
றைவேற்ற அவர் ஒரு வழியை ஆயத்தப்படுத்துகி-
றார்; ஏனெனில் இதோ, அவருடைய எல்லா வார்த்-
தைகளையும் நிறைவேற்ற அவருக்கு எல்லா வல்-
லமையுமுள்ளது. இது இப்படியாக இருக்கிறது.
ஆமென்.

# 1 Nephi 9

And all these things did my father see, and hear, and speak, as he dwelt in a tent, in the valley of Lemuel, and also a great many more things, which cannot be written upon these plates.

And now, as I have spoken concerning these plates, behold they are not the plates upon which I make a full account of the history of my people; for the plates upon which I make a full account of my people I have given the name of Nephi; wherefore, they are called the plates of Nephi, after mine own name; and these plates also are called the plates of Nephi.

Nevertheless, I have received a commandment of the Lord that I should make these plates, for the special purpose that there should be an account engraven of the ministry of my people.

Upon the other plates should be engraven an account of the reign of the kings, and the wars and contentions of my people; wherefore these plates are for the more part of the ministry; and the other plates are for the more part of the reign of the kings and the wars and contentions of my people.

Wherefore, the Lord hath commanded me to make these plates for a wise purpose in him, which purpose I know not.

But the Lord knoweth all things from the beginning; wherefore, he prepareth a way to accomplish all his works among the children of men; for behold, he hath all power unto the fulfilling of all his words. And thus it is. Amen.

## 1 நேபி 10

1 இப்பொழுது, நேபியாகிய நான் என்னுடைய நடவ-
டிக்கைகளையும், என்னுடைய ஆளுகையையும்
மற்றும் ஊழியத்தையும் குறித்து, இந்தத் தகடுக-
ளின்மீது, ஒரு விவரத்தைக் கொடுக்கத் தொடருகி-
றேன். ஆகையால் என்னுடைய விவரத்தைத் தொ-
டர்வதற்கு, நான் என்னுடைய தகப்பன் மற்றும்
சகோதரர்களின் காரியங்களைக் குறித்துச் சற்றே
பேசுதல் வேண்டும்.
2 இதோ, அவர்களுக்குக் கருத்தாய் எல்லா புத்திம-
திகள் சொல்லியும், தன் சொப்பனத்தைக் குறித்த
வார்த்தைகளையும் என் தகப்பன் பேசுவதை மு-
டித்த பின்னர் அவர்களிடத்தில் யூதர்களைப்பற்றி
அவர் பேசினார்.
3 அதாவது, கர்த்தருக்கு ஏற்ற காலத்தின்படி,
அவர்களும், அந்த பெரிய நகரமாகிய எருசலேமும்-
கூட, அழிக்கப்பட்டு, பலர் பாபிலோனுக்குள் சிறை-
பிடிக்கப்பட்டு கொண்டு செல்லப்பட்ட பின்பு,
அவர்கள் மீண்டும் திரும்ப, ஆம், சிறைத்தனத்திலி-
ருந்து திரும்பவும் வெளியே கொண்டுவரப்படு-
வார்கள்; மேலும் அவர்கள் சிறைத்தனத்திலிருந்து
திரும்பவும் வெளியே கொண்டுவரப்பட்ட பின்பு
அவர்கள் தங்கள் சுதந்திர தேசத்தை பெற்றுக்-
கொள்வார்கள்.
4 ஆம், என் தகப்பன் எருசலேமை விட்டுவந்த கா-
லத்திலிருந்து, அறுநூறு வருஷங்களில், யூதர்கள்
மத்தியில் ஒரு தீர்க்கதரிசியை கர்த்தராகிய தேவன்
எழும்பப்பண்ணுவார், ஒரு மேசியா அல்லது வேறு
வார்த்தைகளிலெனில், அவரே உலகத்தின் இரட்ச-
கர்.
5 அவர் தீர்க்கதரிசிகளைக் குறித்தும் பேசினார்,
அவர் பேசப்பட்ட இந்த மேசியாவை அல்லது உல-
கத்தின் மீட்பரைக் குறித்த இந்தக் காரியங்களை
எவ்வளவு அதிகமானோர் சாட்சி பகர்ந்துள்ளனர்
எனவும் சொன்னார்.
6 ஆகையால், மனுக்குலம் யாவும், தொலைந்த மற்-
றும் வீழ்ந்த நிலையிலே இருந்தார்கள், மேலும்
அவர்கள் இந்த மீட்பரைச் சார்ந்தாலொழிய என்-
றைக்கும் அப்படியே இருப்பார்கள்.
7 கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்த, மேசியாவிற்-
கு முன்னர் வரப்போகிற ஒரு தீர்க்கதரிசியைக் கு-
றித்தும் அவர் சொன்னார்.

## 1 Nephi 10

And now I, Nephi, proceed to give an account upon these plates of my proceedings, and my reign and ministry; wherefore, to proceed with mine account, I must speak somewhat of the things of my father, and also of my brethren.

For behold, it came to pass after my father had made an end of speaking the words of his dream, and also of exhorting them to all diligence, he spake unto them concerning the Jews—

That after they should be destroyed, even that great city Jerusalem, and many be carried away captive into Babylon, according to the own due time of the Lord, they should return again, yea, even be brought back out of captivity; and after they should be brought back out of captivity they should possess again the land of their inheritance.

Yea, even six hundred years from the time that my father left Jerusalem, a prophet would the Lord God raise up among the Jews—even a Messiah, or, in other words, a Savior of the world.

And he also spake concerning the prophets, how great a number had testified of these things, concerning this Messiah, of whom he had spoken, or this Redeemer of the world.

Wherefore, all mankind were in a lost and in a fallen state, and ever would be save they should rely on this Redeemer.

And he spake also concerning a prophet who should come before the Messiah, to prepare the way of the Lord—

8 ஆம், அவன் போய் வனாந்தரத்திலே கூக்குரலிட்-
டான், கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்-
கள்; அவரின் பாதைகளைச் செவ்வைபண்ணுங்-
கள், ஏனெனில் உங்கள் மத்தியில் நிற்கும் அவரை
நீங்கள் அறியாமலிருக்கிறீர்கள்; என்னைவிட
அவர் வல்லமையுள்ளவர், அவருடைய பாதரட்-
சையின் வாரையோ அவிழ்ப்பதற்கு நான் பாத்தி-
ரனல்ல. மேலும் இந்தக் காரியத்தைக் குறித்து என்
தகப்பன் அதிகமாய்ப் பேசினார்.

Yea, even he should go forth and cry in the wilderness: Prepare ye the way of the Lord, and make his paths straight; for there standeth one among you whom ye know not; and he is mightier than I, whose shoe's latchet I am not worthy to unloose. And much spake my father concerning this thing.

9 யோர்தானுக்கு அக்கரையிலுள்ள பெத்தாபரா-
வில் அவன் ஞானஸ்நானம் கொடுக்க வேண்டு-
மென்று என் தகப்பன் சொன்னார்; மேலும் அவன்
தண்ணீரால் ஞானஸ்நானம் கொடுப்பான்; மேசி-
யாவுக்கும் அவன் தண்ணீரால் ஞானஸ்நானம்
கொடுப்பான் என்றும் சொன்னார்.

And my father said he should baptize in Bethabara, beyond Jordan; and he also said he should baptize with water; even that he should baptize the Messiah with water.

10 மேசியாவுக்கு அவன் தண்ணீரால் ஞானஸ்நா-
னம் கொடுத்த பின்னர், அவன் உலகத்தினுடைய
பாவங்களை நீக்கப்போகிற தேவ ஆட்டுக்குட்டிக்கு
ஞானஸ்நானம் கொடுத்தேன் என்று அவன் அடை-
யாளம் கண்டு சாட்சி சொல்லவேண்டும்.

And after he had baptized the Messiah with water, he should behold and bear record that he had baptized the Lamb of God, who should take away the sins of the world.

11 என் தகப்பன் இந்த வார்த்தைகளைப் பேசிய
பின்பு, யூதர்கள் மத்தியில் பிரசங்கிக்கப்படவேண்-
டிய சுவிசேஷத்தைக் குறித்தும், யூதர்கள் அவிசு-
வாசத்தில் நலிவதைக் குறித்தும் அவர் என் சகோத-
ரரிடத்தில் பேசினார். மேலும் வரப்போகிற மேசியா-
வை அவர்கள் கொன்ற பின்னரும், அவர் கொலை
செய்யப்பட்ட பின்னரும், அவர் மரித்தோரிலிருந்து
எழுந்து, புறஜாதியாரிடத்தில் பரிசுத்த ஆவியான-
வரால் தன்னை வெளியரங்கப்படுத்துவார்.

And it came to pass after my father had spoken these words he spake unto my brethren concerning the gospel which should be preached among the Jews, and also concerning the dwindling of the Jews in unbelief. And after they had slain the Messiah, who should come, and after he had been slain he should rise from the dead, and should make himself manifest, by the Holy Ghost, unto the Gentiles.

12 ஆம், புறஜாதியாரைப்பற்றியும், இஸ்ரவேல் வீட்-
டாரைக் குறித்தும் என் தகப்பன் மிகுதியாய்ப் பேசி,
அவர்களை ஒரு ஒலிவ விருட்சத்திற்கு ஒப்பிட்டு,
அதன் கிளைகள் முறிக்கப்பட்டு, பூமியின் பரப்-
பின்மேலெல்லாம் சிதறடிக்கப்படுதல் வேண்டும்
என்றும் சொன்னார்.

Yea, even my father spake much concerning the Gentiles, and also concerning the house of Israel, that they should be compared like unto an olive tree, whose branches should be broken off and should be scattered upon all the face of the earth.

13 ஆகையால், நாம் பூமியின் பரப்பின் மேலெல்-
லாம் சிதறடிக்கப்பட்டு, கர்த்தரின் வார்த்தை நிறை-
வேறும்படியாய், ஒருமனதோடு வாக்குத்தத்தத்தின்
தேசத்திற்கு நடத்திச் செல்லப்படுதல் அவசியமாய்
இருக்கிறது என்று அவர் சொன்னார்.

Wherefore, he said it must needs be that we should be led with one accord into the land of promise, unto the fulfilling of the word of the Lord, that we should be scattered upon all the face of the earth.

14 இஸ்ரவேல் வீட்டார் சிதறடிக்கப்பட்ட பின்பு,
அவர்கள் மீண்டும் ஒன்றுசேர்க்கப்பட வேண்டும்;
அல்லது முடிவில் புறஜாதியார் பூரண சுவிசேஷத்-
தைப் பெற்றபின்பு, ஒலிவ விருட்சத்தின் சுபாவ கி-
ளைகள் அல்லது இஸ்ரவேல் வீட்டாரின் மீதியான-
வர்கள் ஒட்டப்படுதல் வேண்டும் அல்லது அவர்க-
ளின் கர்த்தரும், மீட்பருமாகிய உண்மையான மே-
சியாவைப்பற்றிய ஞானத்திற்கு வருதல் வேண்-
டும்.

And after the house of Israel should be scattered they should be gathered together again; or, in fine, after the Gentiles had received the fulness of the Gospel, the natural branches of the olive tree, or the remnants of the house of Israel, should be grafted in, or come to the knowledge of the true Messiah, their Lord and their Redeemer.

15 என் சகோதரர்களுக்கு, இந்த விதமான வார்த்தைகளில் என் தகப்பன் தீர்க்கதரிசனம் உரைத்தும், பேசியுமிருக்கிறார். இன்னும் இப்புஸ்தகத்தில், நான் எழுதாத, அநேக பல காரியங்கள் உள்ளன. ஏனெனில் எனக்கு அதில் பொருத்தமாகத் தோன்றுகிற பலவற்றை, என்னுடைய மற்ற புஸ்தகத்தில் நான் எழுதியுள்ளேன்.

And after this manner of language did my father prophesy and speak unto my brethren, and also many more things which I do not write in this book; for I have written as many of them as were expedient for me in mine other book.

16 நான் பேசியிருக்கிற இந்த எல்லாக் காரியங்களும், லெமுவேலின் பள்ளத்தாக்கில் ஒரு கூடாரத்தில் என் தகப்பன் வாசமாய் இருந்தபோது நடந்தவைகளாகும்.

And all these things, of which I have spoken, were done as my father dwelt in a tent, in the valley of Lemuel.

17 நேபியாகிய நான், என் தகப்பன் அவர் தரிசனத்திலே கண்ட காரியங்களைக் குறித்த அவருடைய எல்லா வார்த்தைகளையும், வரப்போகிற மேசியாவாயிருந்த தேவனின் குமாரனாகிய, தேவ குமாரன் மீதிருந்த விசுவாசத்தின் மூலம் அவர் பெற்ற வல்லமையான பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால், அவர் பேசின காரியங்களையும் கேட்டிருப்பினும், பூர்வகாலத்தில் மட்டும் அல்ல, அவர் மனுபுத்திரருக்கு தன்னையே வெளிப்படுத்தவிருக்கிற காலத்திலும், அவரைக் கருத்தாய் தேடுகிற எல்லோருக்கும் தேவனின் ஈவாய் இருக்கின்ற பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இந்தக் காரியங்களை, நானும் பார்க்கவும், கேட்கவும், அறியவும் நேபியாகிய நான் வாஞ்சையாயிருந்தேன்.

And it came to pass after I, Nephi, having heard all the words of my father, concerning the things which he saw in a vision, and also the things which he spake by the power of the Holy Ghost, which power he received by faith on the Son of God—and the Son of God was the Messiah who should come—I, Nephi, was desirous also that I might see, and hear, and know of these things, by the power of the Holy Ghost, which is the gift of God unto all those who diligently seek him, as well in times of old as in the time that he should manifest himself unto the children of men.

18 ஏனெனில் அவர் நேற்றும், இன்றும், என்றும், மாறாதவராயிருக்கிறார்; உலக ஆரம்பத்திலிருந்தே எல்லா மனுஷருக்கும் வழி ஆயத்தம் பண்ணப்பட்டுள்ளது. அப்படியானால் அவர்கள் மனந்திரும்பி, அவரிடத்தில் வர வேண்டும்.

For he is the same yesterday, today, and forever; and the way is prepared for all men from the foundation of the world, if it so be that they repent and come unto him.

19 ஏனெனில், கருத்தாய்த் தேடுகிறவன் கண்டடைவான்; பூர்வகாலங்களைப்போலவே இக்காலங்களிலும், வரப்போகிற காலங்களிலும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் தேவனின் இரகசியங்கள் அவர்களுக்கு வெளிப்படுத்தப்படும்; ஆகையால் கர்த்தரின் மார்க்கமோ ஒரு நித்தியச் சுற்று.

For he that diligently seeketh shall find; and the mysteries of God shall be unfolded unto them, by the power of the Holy Ghost, as well in these times as in times of old, and as well in times of old as in times to come; wherefore, the course of the Lord is one eternal round.

20 ஆகவே, மனுஷனே, நினைவுகூர்வாயாக, ஏனெனில் உன்னுடைய எல்லா செயல்களுக்காகவும் நீ நியாயத்தீர்ப்புக்குள் கொண்டுவரப்படுவாய்.

Therefore remember, O man, for all thy doings thou shalt be brought into judgment.

21 ஆகையால், நீ உன்னுடைய சோதனைக் காலத்தில் அக்கிரமத்தைச் செய்ய நாடியிருப்பாயெனில், தேவனுடைய நியாயாசனத்தின் முன் அசுத்தமாகக் காணப்படுவாய்; மேலும் எந்த ஒரு அசுத்தமுள்ள பொருளும் தேவனுடன் வாசம் செய்யமுடியாது; ஆகையால் நீ என்றென்றைக்கும் தள்ளப்பட்டவனாய் இருப்பாய்.

Wherefore, if ye have sought to do wickedly in the days of your probation, then ye are found unclean before the judgment-seat of God; and no unclean thing can dwell with God; wherefore, ye must be cast off forever.

22 நான் இந்தக் காரியங்களைப் பேசவேண்டும், என்று பரிசுத்த ஆவியானவர் அதிகாரத்தைக் கொடுத்துள்ளார், நான் அவைகளை மறுதலிப்பதில்லை.

And the Holy Ghost giveth authority that I should speak these things, and deny them not.

# 1 நேபி 11

1 என் தகப்பன் கண்ட காரியங்களை அறிய வாஞ்-
சித்து, அவைகளை எனக்குக் கர்த்தர் தெரியப்ப-
டுத்துவார் என விசுவாசித்தவனாய், நான் அமர்ந்து
என் இருதயத்தில் சிந்தனை செய்து கொண்டிருக்-
கையில், ஆம், நான் முன்பு கண்டிராததும், என் பா-
தம் பட்டிராததுமான மிக உயர்ந்த மலையின் மீது
கர்த்தரின் ஆவியில் எடுத்துக்கொள்ளப்பட்டேன்.

2 ஆவியானவர் என்னை நோக்கி: இதோ, நீ வாஞ்-
சிப்பது என்ன? என்றார்.

3 என் தகப்பன் கண்ட காரியங்களைக் காண நான்
வாஞ்சிக்கிறேன் என்றேன்.

4 ஆவியானவர் என்னை நோக்கி: உன் தகப்-
பனால் பேசப்பட்டிருக்கின்ற விருட்சத்தை அவன்
கண்டானென்று விசுவாசிக்கிறாயா? என்றார்.

5 நான்: ஆம், என் தகப்பனின் எல்லா வார்த்தைக-
ளையும் நான் விசுவாசிக்கிறேன் என்பதை நீர்
அறிவீர், என்றேன்.

6 நான் இந்த வார்த்தைகளைப் பேசின பின்பு,
ஆவியானவர் உரத்த சத்தமாய், அதி உன்னத தே-
வனாகிய கர்த்தருக்கு ஓசன்னா; அவர் பூமி-
யனைத்தின் மேலும், ஆம், எல்லாவற்றிற்கும் தே-
வனாயிருக்கிறார். மேலும் நேபியே, நீ அதி உன்னத
தேவனுடைய குமாரனை விசுவாசிப்பதால் நீ
ஆசீர்வதிக்கப்பட்டவனாயிருக்கிறாய்; எனவே நீ
வாஞ்சித்த காரியங்களை நீ காண்பாய், என்றார்.

7 உன் தகப்பன் புசித்த கனியைக் கொடுத்த விருட்-
சத்தை நீ கண்டபின்பு, ஒரு மனுஷன் வானத்திலி-
ருந்து இறங்குவதையும் நீ காண்பாய்; இதோ, இந்தக்
காரியம் உனக்கு அறிகுறியாகக் கொடுக்கப்படும்; நீ
அவரைத் தரிசிப்பாய்; மேலும் நீ அவரைத் தரிசித்த
பின்பு, அவர்தான் தேவனுடைய குமாரன் என்ப-
தை நீ சாட்சி கொடுப்பாயாக.

8 ஆவியானவர் என்னை நோக்கி: பார்! என்றார்.
நான் பார்த்தபொழுது ஒரு விருட்சத்தைக் கண்-
டேன். அது என் தகப்பன் கண்ட விருட்சம்போல
இருந்தது; அதன் அழகு எல்லா அழகையும் மிஞ்சு-
வதாயிருந்தது; அதனுடைய வெண்மை சிதறிய
பனியின் வெண்மையையும் மிஞ்சுவதாயிருந்தது.

9 அந்த விருட்சத்தை நான் பார்த்த பின்பு, நான்
ஆவியானவரை நோக்கி: இதோ, எல்லாவற்றைக்
காட்டிலும் விலையேறப்பெற்ற நீர் எனக்குக் காண்-
பித்த விருட்சத்தை நான் கண்டேன், என்றேன்.

10 அவர் என்னை நோக்கி: நீ வாஞ்சிப்பது என்ன?
என்றார்.

# 1 Nephi 11

For it came to pass after I had desired to know the things that my father had seen, and believing that the Lord was able to make them known unto me, as I sat pondering in mine heart I was caught away in the Spirit of the Lord, yea, into an exceedingly high mountain, which I never had before seen, and upon which I never had before set my foot.

And the Spirit said unto me: Behold, what desirest thou?

And I said: I desire to behold the things which my father saw.

And the Spirit said unto me: Believest thou that thy father saw the tree of which he hath spoken?

And I said: Yea, thou knowest that I believe all the words of my father.

And when I had spoken these words, the Spirit cried with a loud voice, saying: Hosanna to the Lord, the most high God; for he is God over all the earth, yea, even above all. And blessed art thou, Nephi, because thou believest in the Son of the most high God; wherefore, thou shalt behold the things which thou hast desired.

And behold this thing shall be given unto thee for a sign, that after thou hast beheld the tree which bore the fruit which thy father tasted, thou shalt also behold a man descending out of heaven, and him shall ye witness; and after ye have witnessed him ye shall bear record that it is the Son of God.

And it came to pass that the Spirit said unto me: Look! And I looked and beheld a tree; and it was like unto the tree which my father had seen; and the beauty thereof was far beyond, yea, exceeding of all beauty; and the whiteness thereof did exceed the whiteness of the driven snow.

And it came to pass after I had seen the tree, I said unto the Spirit: I behold thou hast shown unto me the tree which is precious above all.

And he said unto me: What desirest thou?

11 நான் அவரை நோக்கி: அதன் அர்த்தத்தை அறியவேண்டும் என்றேன், ஏனெனில் நான் அவரோடு மனுஷன் பேசுகிற பிரகாரமாய்ப் பேசினேன்; ஏனெனில் அவர் ஒரு மனுஷனின் சாயலில் இருப்பதை நான் கண்டேன்; எனினும் அவர் கர்த்தருடைய ஆவி என்பதை நான் அறிவேன்; மேலும் ஒரு மனுஷன் மற்றொருவனுடன் பேசுவதைப்போல அவர் என்னிடத்தில் பேசினார்.

And I said unto him: To know the interpretation thereof—for I spake unto him as a man speaketh; for I beheld that he was in the form of a man; yet nevertheless, I knew that it was the Spirit of the Lord; and he spake unto me as a man speaketh with another.

12 அவர், என்னை நோக்கி: பார்! என்றார். மேலும் அவரின் மீது பார்வையைச் செலுத்த பார்த்தபோது, அவரை நான் காணவில்லை; ஏனெனில் என் முன்னிருந்து அவர் சென்றுவிட்டார்.

And it came to pass that he said unto me: Look! And I looked as if to look upon him, and I saw him not; for he had gone from before my presence.

13 நான் பார்த்தபொழுது, மகா எருசலேம் பட்டணத்தையும், மற்ற பட்டணங்களையும் கண்டேன். மேலும் நான் நாசரேத்து பட்டணத்தையும் கண்டேன்; நாசரேத்து பட்டணத்தில் ஒரு கன்னிகையைக் கண்டேன், அவள் மிகுந்த சௌந்தரியமும் வெண்மையும் உடையவளாக இருந்தாள்.

And it came to pass that I looked and beheld the great city of Jerusalem, and also other cities. And I beheld the city of Nazareth; and in the city of Nazareth I beheld a virgin, and she was exceedingly fair and white.

14 நான் வானங்கள் திறப்பதைக் கண்டேன்; ஒரு தூதன் கீழே இறங்கிவந்து எனக்கு முன்பாக நின்றான்; மேலும் அவன் என்னை நோக்கி: நேபியே, நீ என்ன காண்கிறாய்? என்றான்.

And it came to pass that I saw the heavens open; and an angel came down and stood before me; and he said unto me: Nephi, what beholdest thou?

15 நான் அவனை நோக்கி: மற்ற எல்லா கன்னிகைகளையும் விட மிகுந்த அழகும் சௌந்தரியமுமுள்ள ஒரு கன்னிகையை என்றேன்.

And I said unto him: A virgin, most beautiful and fair above all other virgins.

16 அவன் என்னை நோக்கி: நீ தேவ சித்தமிறங்கியதை அறிவாயா? என்றான்.

And he said unto me: Knowest thou the condescension of God?

17 நான் அவனை நோக்கி: அவர் தம் பிள்ளைகளை நேசிக்கிறாரென அறிவேன்; எனினும் எல்லாக் காரியங்களின் அர்த்தத்தையும் நான் அறியேன் என்றேன்.

And I said unto him: I know that he loveth his children; nevertheless, I do not know the meaning of all things.

18 அவன் என்னை நோக்கி: இதோ நீ காண்கிற கன்னிகை மாம்சப்பிரகாரமான தேவகுமாரனின் தாய் என்றான்.

And he said unto me: Behold, the virgin whom thou seest is the mother of the Son of God, after the manner of the flesh.

19 அவள் ஆவிக்குள்ளாக எடுத்துக்கொள்ளப்பட்டதைக் கண்டேன்; அவள் ஆவிக்குள்ளாக சிறிது நேரம் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு ஒரு தூதன் என்னிடம்: பார்! என்றான்.

And it came to pass that I beheld that she was carried away in the Spirit; and after she had been carried away in the Spirit for the space of a time the angel spake unto me, saying: Look!

20 நான் பார்த்தபோது, அந்தக் கன்னிகை தன் கரங்களில் ஒரு குழந்தையை ஏந்திக்கொண்டிருப்பதைக் கண்டேன்.

And I looked and beheld the virgin again, bearing a child in her arms.

21 தூதன் என்னை நோக்கி: இதோ, தேவ ஆட்டுக்குட்டி. ஆம், நித்திய பிதாவின் குமாரன்! உன் தகப்பன் கண்ட விருட்சத்தின் பொருளை நீ அறிந்திருக்கிறாயா? என்றான்.

And the angel said unto me: Behold the Lamb of God, yea, even the Son of the Eternal Father! Knowest thou the meaning of the tree which thy father saw?

22 நான் பிரதியுத்தரமாக: ஆம், அதுதான் மனுபுத்திரரின் இருதயங்களில் முழுவதுமாக ஊற்றப்படுகிறதான தேவனின் அன்பு; ஆகையால் அது எல்லாக் காரியங்களுக்கும் மேலாக வாஞ்சிக்கத்தக்கது என்றேன்.

And I answered him, saying: Yea, it is the love of God, which sheddeth itself abroad in the hearts of the children of men; wherefore, it is the most desirable above all things.

23 அவன் என்னை நோக்கி: ஆம், ஆத்துமாவுக்கு மி-
குந்த மகிழ்ச்சியளிக்கக்கூடியது என்றான்.

And he spake unto me, saying: Yea, and the most joyous to the soul.

24 இந்த வார்த்தைகளைச் சொன்னபின்பு, அவன்
என்னை நோக்கி: பார்! என்றான். நான் பார்த்த-
பொழுது தேவ குமாரன் மனுபுத்திரர் மத்தியில்
செல்வதைக் கண்டேன்; மேலும் அநேகர் அவர் பா-
தங்களில் விழுந்து தொழுதுகொள்ளுவதையும்
நான் கண்டேன்.

And after he had said these words, he said unto me: Look! And I looked, and I beheld the Son of God going forth among the children of men; and I saw many fall down at his feet and worship him.

25 நான், என் தகப்பன் கண்ட இருப்புக்கோலைப்
பார்த்தேன், அது ஜீவதண்ணீருள்ள நீர்வீழ்ச்சிக்கு
அல்லது ஜீவவிருட்சத்தினிடத்திற்கு நடத்திச் செல்-
கிற, தேவனுடைய வார்த்தையாயிருந்தது. அந்தத்
தண்ணீர்கள் தேவனுடைய அன்புக்கு அடையாள-
மாய் இருப்பவை; மேலும் ஜீவவிருட்சமும் தேவனு-
டைய அன்புக்கு அடையாளமாய் இருந்தது என
நான் கண்டேன்.

And it came to pass that I beheld that the rod of iron, which my father had seen, was the word of God, which led to the fountain of living waters, or to the tree of life; which waters are a representation of the love of God; and I also beheld that the tree of life was a representation of the love of God.

26 மறுபடியும் தூதன் என்னை நோக்கி: இதோ, தே-
வனுடைய அனுக்கிரகத்தையும் பார்! என்றான்.

And the angel said unto me again: Look and behold the condescension of God!

27 நான் பார்த்தபொழுது என் தகப்பனால் பேசப்பட்-
டிருக்கின்ற உலகத்தின் மீட்பரைக் கண்டேன்; அவ-
ருக்கு முன்பாக வழியை ஆயத்தப்படுத்தவேண்டிய
தீர்க்கதரிசியையும் கண்டேன். தேவ ஆட்டுக்குட்டி-
யானவர் போய் அவரால் ஞானஸ்நானம் பெற்றார்;
மேலும் அவர் ஞானஸ்நானம் பெற்றபின்பு வா-
னங்கள் திறக்கப்பட்டதையும், பரிசுத்த ஆவியான-
வர் பரலோகத்திலிருந்து இறங்கி, புறாவின் வடி-
வில் அவர்மேல் அமர்வதையும் கண்டேன்.

And I looked and beheld the Redeemer of the world, of whom my father had spoken; and I also beheld the prophet who should prepare the way before him. And the Lamb of God went forth and was baptized of him; and after he was baptized, I beheld the heavens open, and the Holy Ghost come down out of heaven and abide upon him in the form of a dove.

28 வல்லமையிலும், அதிக மகிமையிலும் ஜனங்க-
ளிடத்தில் அவர் சென்று ஊழியம் செய்வதை நான்
கண்டேன்; மேலும் திரளானோர் அவரைக் கேட்ப-
தற்கு ஒன்றாகக் கூடினார்கள்; அவர்கள் மத்தியிலி-
ருந்து அவரை அவர்கள் புறம்பே தள்ளுவதையும்
கண்டேன்.

And I beheld that he went forth ministering unto the people, in power and great glory; and the multitudes were gathered together to hear him; and I beheld that they cast him out from among them.

29 பிற பன்னிரண்டுபேர் அவரைப் பின்தொடர்வ-
தையும் நான் கண்டேன். என் முகத்திற்கு முன்பி-
ருந்து அவர்கள் ஆவியில் எடுத்துக்கொள்ளப்பட்-
டார்கள், நான் அவர்களைப் பார்க்கவில்லை.

And I also beheld twelve others following him. And it came to pass that they were carried away in the Spirit from before my face, and I saw them not.

30 தூதன் மறுபடியுமாய் என்னிடம்: பார்! என்றான்.
நான் பார்த்தபோது வானங்கள் மறுபடியும் திறப்ப-
தையும், தூதர்கள் மனுபுத்திரரிடம் இறங்குகிறதை-
யும் கண்டேன்; அவர்கள் அவர்களுக்கு ஊழியம்
செய்தார்கள்.

And it came to pass that the angel spake unto me again, saying: Look! And I looked, and I beheld the heavens open again, and I saw angels descending upon the children of men; and they did minister unto them.

31 அவன் மறுபடியும் என்னிடம்: பார்! என்றான். நான் பார்த்தேன், மனுபுத்திரர் மத்தியில் தேவ ஆட்டுக்குட்டியானவர் செல்வதைக் கண்டேன். எல்லா வியாதியஸ்தரையும், சகலவித நோய்களினாலும், பிசாசுகள் மற்றும் அசுத்த ஆவிகளினாலும் துன்பப்பட்டிருந்தவர்களையும், திரள் ஜனமாய்க் கண்டேன்; மேலும் தூதன் என்னிடம் பேசி, இந்த எல்லாக் காரியங்களையும் காண்பித்தான். அவர்கள் தேவ ஆட்டுக்குட்டியானவரின் வல்லமையால் சொஸ்தமாக்கப்பட்டார்கள்; பிசாசுகளும் அசுத்த ஆவிகளும் துரத்தப்பட்டன.

And he spake unto me again, saying: Look! And I looked, and I beheld the Lamb of God going forth among the children of men. And I beheld multitudes of people who were sick, and who were afflicted with all manner of diseases, and with devils and unclean spirits; and the angel spake and showed all these things unto me. And they were healed by the power of the Lamb of God; and the devils and the unclean spirits were cast out.

32 தூதன் மறுபடியும் என்னிடம்: பார்! என்றான். நான் பார்த்து, தேவ ஆட்டுக்குட்டியானவரையும் அவர் ஜனத்தால் பிடித்துச் செல்லப்படுவதையும், ஆம், நித்திய தேவனின் குமாரனாகிய அவர் உலகத்தால் நியாயந்தீர்க்கப்படுவதையும் கண்டேன்; நான் பார்த்தவற்றைச் சாட்சி கொடுக்கிறேன்.

And it came to pass that the angel spake unto me again, saying: Look! And I looked and beheld the Lamb of God, that he was taken by the people; yea, the Son of the everlasting God was judged of the world; and I saw and bear record.

33 அவர் சிலுவையின் மீது உயர்த்தப்பட்டு, உலகத்தின் பாவங்களுக்காகக் கொலை செய்யப்பட்டதையும் நேபியாகிய நான் கண்டேன்.

And I, Nephi, saw that he was lifted up upon the cross and slain for the sins of the world.

34 அவர் கொலை செய்யப்பட்ட பின்பு, ஆட்டுக்குட்டியானவரின் அப்போஸ்தலர்களுக்கு எதிராகச் சண்டையிட, பூமியின் திரளானோர் கூட்டப்பட்டிருப்பதைக் கண்டேன்; ஏனெனில், கர்த்தரின் தூதனால் இவ்விதமாய்ப் பன்னிரண்டு பேரும் அழைக்கப்பட்டார்கள்.

And after he was slain I saw the multitudes of the earth, that they were gathered together to fight against the apostles of the Lamb; for thus were the twelve called by the angel of the Lord.

35 பூமியின் திரளானோர் ஒன்றாகக் கூட்டப்பட்டார்கள்; என் தகப்பன் கண்ட கட்டிடத்தைப்போலவே, ஒரு பெரிய விசாலமான கட்டிடத்தில் அவர்கள் இருப்பதைக் கண்டேன்; மேலும் கர்த்தரின் தூதன் மறுபடியும் என்னிடம்: உலகத்தையும் அதிலுள்ள ஞானத்தையும் பார்; ஆம், ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலரையும் எதிர்த்துச் சண்டையிட இஸ்ரவேல் வீட்டார் ஒன்றாகக் கூடியிருப்பதையும் பார், என்றான்.

And the multitude of the earth was gathered together; and I beheld that they were in a large and spacious building, like unto the building which my father saw. And the angel of the Lord spake unto me again, saying: Behold the world and the wisdom thereof; yea, behold the house of Israel hath gathered together to fight against the twelve apostles of the Lamb.

36 நான் பார்த்து சாட்சி பகர்வது என்னவென்றால், அந்த பெரிய, விசாலமான கட்டிடம் உலகத்தின் கர்வமாக இருந்தது; அது விழுந்தது, அதனுடைய வீழ்ச்சி மகா பயங்கரமானதாயிருந்தது. கர்த்தருடைய தூதன் மறுபடியும் என்னிடம்: ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலருக்கு எதிராய்ச் சண்டையிடுகிற சகல ஜனங்கள், தேசத்தார், இனத்தார், பாஷைக்காரரின் அழிவு இப்படிப்பட்டதாயிருக்கும் என்றான்.

And it came to pass that I saw and bear record, that the great and spacious building was the pride of the world; and it fell, and the fall thereof was exceedingly great. And the angel of the Lord spake unto me again, saying: Thus shall be the destruction of all nations, kindreds, tongues, and people, that shall fight against the twelve apostles of the Lamb.

## 1 நேபி 12

1 தூதன் என்னை நோக்கி: உன் சந்ததியையும், உன் சகோதரரின் சந்ததியையும் பார், என்றான். நான் வாக்குத்தத்தத்தின் தேசத்தைப் பார்த்தேன்; ஆம், எண்ணிக்கையிலே சமுத்திரத்தின் மணலத்தனையாய் உள்ள திரளான ஜனங்களைக் கண்டேன்.

2 அந்த திரளானோர் ஒருவருக்கொருவர் விரோதமாய் யுத்தம் செய்ய ஒன்றாகக் கூடியிருப்பதையும் நான் கண்டேன், நான் யுத்தங்களையும், யுத்தங்களின் வதந்திகளையும், என் ஜனத்தின் மத்தியில் அநேகர் பட்டயத்தால் கொலை செய்யப்படுவதையும், கண்டேன்.

3 தேசத்திலே யுத்தத்தினாலும் பிணக்குகளினாலும் அநேக தலைமுறைகள் கடந்து போவதைக் கண்டேன்; ஆம், நான் என்னால் கணக்கிடமுடியாத பல பட்டணங்களைக் கண்டேன்.

4 வாக்குத்தத்தத்தின் தேசத்தின் மேற்பரப்பில் ஒரு இருண்ட மூடுபனியை நான் கண்டேன்; மின்னல்களைக் கண்டேன், நான் இடிமுழக்கங்களையும், பூமியதிர்ச்சிகளையும், எல்லாவிதமான இரைச்சல்களையும் கேட்டேன்; பூமியும் பாறைகளும் வெடிப்பதைக் கண்டேன்; மலைகள் துகள்களாய் உருண்டு போவதையும் கண்டேன்; பூமியின் சமவெளிகள் பிளப்பதையும் கண்டேன்; மேலும் அநேக பட்டணங்கள் மூழ்கடிக்கப்படுவதையும் நான் கண்டேன்; பல நெருப்பால் எரிக்கப்படுவதையும் கண்டேன்; பூமியின் நடுக்கத்தால் பலர் உருளுவதையும் கண்டேன்.

5 இந்தக் காரியங்களை நான் பார்த்தபின்பு, இருண்ட புகை பூமியின் பரப்பின் மேலிருந்து கடப்பதைக் கண்டேன்; இதோ, கர்த்தரின் பெரிதும், பயங்கரமுமான நியாயத்தீர்ப்புகளால் விழுந்துபோகாத திரளானோரையும் கண்டேன்.

6 நான் வானங்கள் திறப்பதையும், பரலோகத்திலிருந்து தேவ ஆட்டுக்குட்டி இறங்குவதையும் கண்டேன்; மேலும் அவர் கீழே இறங்கிவந்து தம்மை அவர்களுக்குக் காண்பித்தார்.

7 பிற பன்னிரண்டு பேரின் மீதும் பரிசுத்த ஆவியானவர் இறங்குவதை நான் கண்டதை சாட்சி பகருகிறேன்; மேலும் அவர்கள் தேவனால் நியமிக்கப்பட்டு, தெரிந்துகொள்ளப்பட்டார்கள்.

8 அந்த தூதன் என்னிடம்: இதோ, உன்னுடைய சந்ததிக்கு ஊழியம் செய்யத் தெரிந்து கொள்ளப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியின் பன்னிரண்டு சீஷர்கள் என்றான்.

## 1 Nephi 12

And it came to pass that the angel said unto me: Look, and behold thy seed, and also the seed of thy brethren. And I looked and beheld the land of promise; and I beheld multitudes of people, yea, even as it were in number as many as the sand of the sea.

And it came to pass that I beheld multitudes gathered together to battle, one against the other; and I beheld wars, and rumors of wars, and great slaughters with the sword among my people.

And it came to pass that I beheld many generations pass away, after the manner of wars and contentions in the land; and I beheld many cities, yea, even that I did not number them.

And it came to pass that I saw a mist of darkness on the face of the land of promise; and I saw lightnings, and I heard thunderings, and earthquakes, and all manner of tumultuous noises; and I saw the earth and the rocks, that they rent; and I saw mountains tumbling into pieces; and I saw the plains of the earth, that they were broken up; and I saw many cities that they were sunk; and I saw many that they were burned with fire; and I saw many that did tumble to the earth, because of the quaking thereof.

And it came to pass after I saw these things, I saw the vapor of darkness, that it passed from off the face of the earth; and behold, I saw multitudes who had not fallen because of the great and terrible judgments of the Lord.

And I saw the heavens open, and the Lamb of God descending out of heaven; and he came down and showed himself unto them.

And I also saw and bear record that the Holy Ghost fell upon twelve others; and they were ordained of God, and chosen.

And the angel spake unto me, saying: Behold the twelve disciples of the Lamb, who are chosen to minister unto thy seed.

9 அவன் என்னை நோக்கி: ஆட்டுக்குட்டியானவ-
ரின் பன்னிரண்டு அப்போஸ்தலரை நினைவில்
வைத்திருக்கிறாயா? இதோ, இஸ்ரவேலின் பன்னி-
ரண்டு கோத்திரத்தாரையும் நியாயந்தீர்ப்பவர்கள்
இவர்களே என்றான்; நீங்கள் இஸ்ரவேலின் வீட்டா-
ராய் இருப்பதால், உனது சந்ததியின் பன்னிரண்டு
ஊழியக்காரர்கள் இவர்களால் நியாயந்தீர்க்கப்ப-
டுவார்கள்.

And he said unto me: Thou rememberest the twelve apostles of the Lamb? Behold they are they who shall judge the twelve tribes of Israel; wherefore, the twelve ministers of thy seed shall be judged of them; for ye are of the house of Israel.

10 நீ காண்கிற இந்தப் பன்னிரண்டு ஊழியக்காரர்-
கள் உன்னுடைய சந்ததியை நியாயந்தீர்ப்பார்கள்.
இதோ, அவர்கள் என்றென்றும் நீதிமான்களாயி-
ருப்பார்கள்; ஏனெனில் தேவ ஆட்டுக்குட்டியானவ-
ரில் அவர்களின் விசுவாசத்தினிமித்தம் அவர்க-
ளின் வஸ்திரங்கள், அவரின் இரத்தத்தால் வெண்-
மையாக்கப்படுகின்றன என்றான்.

And these twelve ministers whom thou beholdest shall judge thy seed. And, behold, they are righteous forever; for because of their faith in the Lamb of God their garments are made white in his blood.

11 தூதன் என்னை நோக்கி: பார்! என்றான். நான்
பார்த்து மூன்று தலைமுறைகள் நீதியிலே கடந்து
சென்றதைக் கண்டேன்; அவர்களின் வஸ்திரங்கள்
தேவ ஆட்டுக்குட்டியானவரைப் போலவே வெண்-
மையாயிருந்தன. மேலும் தூதன் என்னை நோக்கி:
அவரில் அவர்களின் விசுவாசத்தினிமித்தம்,
அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தி-
னால் வெண்மையாக்கப்பட்டார்கள் என்றான்.

And the angel said unto me: Look! And I looked, and beheld three generations pass away in righteousness; and their garments were white even like unto the Lamb of God. And the angel said unto me: These are made white in the blood of the Lamb, because of their faith in him.

12 நேபியாகிய நான், நான்காவது தலைமுறையில்
அநேகர் நீதியிலே கடந்து செல்வதைக் கண்டேன்.

And I, Nephi, also saw many of the fourth generation who passed away in righteousness.

13 பூமியிலுள்ள திரளானோர் ஒன்றாகக் கூடுவதை
நான் கண்டேன்.

And it came to pass that I saw the multitudes of the earth gathered together.

14 தூதன் என்னை நோக்கி: இதோ உன் சந்ததியை-
யும், உன்னுடைய சகோதரரின் சந்ததியையும் பார்
என்றான்.

And the angel said unto me: Behold thy seed, and also the seed of thy brethren.

15 நான் என் சந்ததியின் ஜனங்கள், என் சகோதரர்க-
ளின் சந்ததியை எதிர்த்து, திரளாய் ஒன்றாகக் கூடி-
யிருப்பதையும் கண்டேன், அவர்கள் போரிடுவதற்-
காக, ஒன்றாகக் கூடியிருந்தார்கள்.

And it came to pass that I looked and beheld the people of my seed gathered together in multitudes against the seed of my brethren; and they were gathered together to battle.

16 தூதன் என்னிடம்: உன் தகப்பன் சொன்ன நதி-
யான, ஆம், அவன் கண்ட அசுசியான தண்ணீ-
ருள்ள நீரூற்றைப் பார்; அதன் ஆழங்களோ, நரகத்-
தின் ஆழங்கள் என்றான்.

And the angel spake unto me, saying: Behold the fountain of filthy water which thy father saw; yea, even the river of which he spake; and the depths thereof are the depths of hell.

17 அந்த இருண்ட மூடுபனி மனுபுத்திரரின் கண்க-
ளைக் குருடாக்கி, இருதயங்களைக் கடினமாக்கி,
அவர்கள் அழியவும், வழிதப்பிபோகவும், அகலப்
பாதைகளிலே போகச் செய்யும் பிசாசின் சோதனை-
களாகும்.

And the mists of darkness are the temptations of the devil, which blindeth the eyes, and hardeneth the hearts of the children of men, and leadeth them away into broad roads, that they perish and are lost.

18 உன் தகப்பன் கண்ட அந்தப் பெரிய, விசாலமான
கட்டிடம் மனுபுத்திரரின் வீணான கட்டளைகளும்,
கர்வமுமாயிருக்கிறது. உலக ஆரம்ப முதல், இக்கா-
லம்வரைக்கும், இக்காலமுதல் என்றென்றுமாய்,
ஆம், நித்திய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியானவர்
தாமே சாட்சி பகர்கிற, மேசியாவான, தேவ ஆட்டுக்-
குட்டியானவரின், நீதியின் வார்த்தையாகிய, ஒரு
பெரிய பயங்கரமான, பெரும் பிளப்பு அவர்களைப்
பிரிக்கும்.

And the large and spacious building, which thy father saw, is vain imaginations and the pride of the children of men. And a great and a terrible gulf divideth them; yea, even the word of the justice of the Eternal God, and the Messiah who is the Lamb of God, of whom the Holy Ghost beareth record, from the beginning of the world until this time, and from this time henceforth and forever.

19 தூதன் இந்த வார்த்தைகளைப் பேசியபோது, தூ-
தனின் வார்த்தையின்படியே என் சகோதரரின் சந்-
ததி, என் சந்ததியை எதிர்த்துப் போராடுவதைக்
கண்டேன்; என் சந்ததியின் கர்வத்தாலும், பிசாசின்
சோதனைகளாலும் என் சகோதரரின் சந்ததியார்
என் சந்ததியை மேற்கொள்வதைக் கண்டேன்.

And while the angel spake these words, I beheld and saw that the seed of my brethren did contend against my seed, according to the word of the angel; and because of the pride of my seed, and the temptations of the devil, I beheld that the seed of my brethren did overpower the people of my seed.

20 நான் பார்த்தபொழுது என் சகோதரரின் சந்ததி-
யின் ஜனங்கள் என் சந்ததியை மேற்கொள்வதைக்
கண்டேன்; அவர்கள் பூமியின் மேற்பரப்பின் மீது
திரளாகச் சென்றனர்.

And it came to pass that I beheld, and saw the people of the seed of my brethren that they had overcome my seed; and they went forth in multitudes upon the face of the land.

21 அவர்கள் திரளாய் ஒன்றாகக் கூடியிருப்பதைக்
கண்டேன்; மேலும் நான் அவர்கள் மத்தியில் யுத்-
தங்களையும், யுத்த வதந்திகளையும் கண்டேன்;
யுத்தங்களிலும், யுத்த வதந்திகளிலும் பல தலைமு-
றைகள் கடந்து செல்வதைக் கண்டேன்.

And I saw them gathered together in multitudes; and I saw wars and rumors of wars among them; and in wars and rumors of wars I saw many generations pass away.

22 தூதன் என்னை நோக்கி: இதோ, இவர்கள் அவிசு-
வாசத்தில் படிப்படியாக நலிவார்கள் என்றான்.

And the angel said unto me: Behold these shall dwindle in unbelief.

23 அவர்கள் அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்த
பின்பு அவர்கள் கருமை மற்றும் அருக்களிப்புள்-
ளவர்களாகவும், எல்லாவிதமான அருவருப்பான-
வைகளையும் முழுச்சோம்பலையும் கொண்ட, ஒரு
அசுசியான ஜனமாக மாறினார்கள் எனக் கண்-
டேன்.

And it came to pass that I beheld, after they had dwindled in unbelief they became a dark, and loathsome, and a filthy people, full of idleness and all manner of abominations.

# 1 நேபி 13

# 1 Nephi 13

1 தூதன் என்னிடத்தில், பார் என்றான். நான் பார்த்தபொழுது அநேக தேசங்களையும் ராஜ்யங்களையும் கண்டேன்.

And it came to pass that the angel spake unto me, saying: Look! And I looked and beheld many nations and kingdoms.

2 தூதன் என்னை நோக்கி: நீ என்ன காண்கிறாய்? என்றான். நான்: அநேக தேசங்களையும் ராஜ்யங்களையும் காண்கிறேன் என்றேன்.

And the angel said unto me: What beholdest thou? And I said: I behold many nations and kingdoms.

3 அவன் என்னை நோக்கி: இவை புறஜாதியாரின் தேசங்களும் ராஜ்யங்களுமாகும் என்றான்.

And he said unto me: These are the nations and kingdoms of the Gentiles.

4 புறஜாதியாரின் தேசங்களின் மத்தியிலே ஒரு பெரிய சபை உண்டாவதைக் கண்டேன்.

And it came to pass that I saw among the nations of the Gentiles the formation of a great church.

5 தூதன் என்னை நோக்கி: இதோ, மற்ற எல்லா சபைகளையும் விட, மிக அருவருப்பான ஒரு சபை உண்டாவதையும், அது தேவனின் பரிசுத்தவான்களைக் கொலை செய்து, ஆம், அவர்களை வதைத்து, அவர்களைக் கட்டி, இரும்பாலான நுகத்தில் அவர்களை நுகம்பூட்டி, அவர்களை சிறைத்தனத்திற்குள் கொண்டுவருவதையும் பார் என்றான்.

And the angel said unto me: Behold the formation of a church which is most abominable above all other churches, which slayeth the saints of God, yea, and tortureth them and bindeth them down, and yoketh them with a yoke of iron, and bringeth them down into captivity.

6 நான் இந்தப் பெரிதும் அருவருப்புமான சபையைக் கண்டேன்; மேலும் அதை ஸ்தாபித்த பிசாசையும் நான் கண்டேன்.

And it came to pass that I beheld this great and abominable church; and I saw the devil that he was the founder of it.

7 நான் பொன்னையும், வெள்ளியையும், பட்டாடைகளையும், சிவப்பாடைகளையும் மற்றும் நேர்த்தியாக முறுக்கப்பட்ட பஞ்சு நூலையும் மற்றும் எல்லா விதமான விலையுயர்ந்த வஸ்திரங்களையும் கண்டேன்; நான் அநேக வேசிகளையும் கண்டேன்.

And I also saw gold, and silver, and silks, and scarlets, and fine-twined linen, and all manner of precious clothing; and I saw many harlots.

8 தூதன் என்னிடம்: இதோ, இந்தப் பொன்னும், வெள்ளியும், பட்டாடையும், சிவப்பாடையும், நேர்த்தியாக முறுக்கப்பட்ட பஞ்சு நூலும் மற்றும் விலையுயர்ந்த வஸ்திரங்களும், வேசிகளும் அந்தப் பெரிதும் அருவருப்புமான சபையின் வாஞ்சைகளாய் உள்ளன என்றான்.

And the angel spake unto me, saying: Behold the gold, and the silver, and the silks, and the scarlets, and the fine-twined linen, and the precious clothing, and the harlots, are the desires of this great and abominable church.

9 மேலும் உலகப்பிரகாரமான புகழுக்காக அவர்கள் தேவனுடைய பரிசுத்தவான்களை அழித்து, அவர்களைச் சிறையிருப்புக்குள்ளாகக் கொண்டுவருகிறார்கள்.

And also for the praise of the world do they destroy the saints of God, and bring them down into captivity.

10 நான் பார்த்தபொழுது, திரளான தண்ணீர்களைக் கண்டேன்; அவைகள் என்னுடைய சகோதரர்களின் சந்ததியிலிருந்து புறஜாதியாரைப் பிரித்தன.

And it came to pass that I looked and beheld many waters; and they divided the Gentiles from the seed of my brethren.

11 அந்த தூதன் என்னை நோக்கி: இதோ, தேவனுடைய உக்கிரம் உன் சகோதரரின் சந்ததியின் மேல் உள்ளது என்றான்.

And it came to pass that the angel said unto me: Behold the wrath of God is upon the seed of thy brethren.

12 நான் பார்த்தபொழுது, புறஜாதியாரின் நடுவே, தி-
ரளான தண்ணீர்களால் என் சகோதரரின் சந்ததி-
யாரிடமிருந்து பிரிக்கப்பட்ட ஒரு மனுஷனைக்
கண்டேன்; மேலும் தேவனுடைய ஆவி, கீழே வந்து
அந்த மனுஷனின்மீது கிரியை செய்வதையும்
நான் கண்டேன்; அவன் திரளான தண்ணீர்களின்-
மீது பயணம் செய்து, வாக்குத்தத்தத்தின் தேசத்தி-
லே இருந்த என் சகோதரரின் சந்ததியாரிடம் செல்வ-
தைக் கண்டேன்.

And I looked and beheld a man among the Gentiles, who was separated from the seed of my brethren by the many waters; and I beheld the Spirit of God, that it came down and wrought upon the man; and he went forth upon the many waters, even unto the seed of my brethren, who were in the promised land.

13 தேவனுடைய ஆவி, மற்ற புறஜாதியார் மீது கிரி-
யை செய்வதை நான் கண்டேன்; அவர்கள் சிறை-
யிருப்பிலிருந்து விடுபட்டு, திரளான தண்ணீர்கள்
மீது சென்றார்கள்.

And it came to pass that I beheld the Spirit of God, that it wrought upon other Gentiles; and they went forth out of captivity, upon the many waters.

14 வாக்குத்தத்தத்தின் தேசத்தின்மீது, அநேக திர-
ளான புறஜாதியாரைக் கண்டேன்; என் சகோதரர்க-
ளின் சந்ததியின் மீது தேவனுடைய உக்கிரம் இருந்-
ததையும் கண்டேன்; அவர்கள் புறஜாதியாருக்கு
முன்பாக சிதறடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டார்கள்.

And it came to pass that I beheld many multitudes of the Gentiles upon the land of promise; and I beheld the wrath of God, that it was upon the seed of my brethren; and they were scattered before the Gentiles and were smitten.

15 கர்த்தருடைய ஆவி புறஜாதியார் மீது இருப்ப-
தையும், அவர்கள் செழித்து, சுதந்தரிப்பதற்காக தே-
சத்தைப் பெற்றுக்கொள்வதையும், நான் கண்-
டேன்; என் ஜனம் கொல்லப்படாததற்கு முன்பு
இருந்ததைப்போலவே, அவர்கள் வெண்மையாக-
வும், மிகுந்த சவுந்தரியமும், அழகும் உடையவர்க-
ளாயிருந்ததையும் நான் கண்டேன்.

And I beheld the Spirit of the Lord, that it was upon the Gentiles, and they did prosper and obtain the land for their inheritance; and I beheld that they were white, and exceedingly fair and beautiful, like unto my people before they were slain.

16 நேபியாகிய நான், சிறைத்தனத்திலிருந்து வெளி-
யே போன புறஜாதியார், கர்த்தருக்கு முன்பாக தங்க-
ளையே தாழ்த்துவதைக் கண்டேன்; கர்த்தருடைய
வல்லமை அவர்களோடிருந்தது.

And it came to pass that I, Nephi, beheld that the Gentiles who had gone forth out of captivity did humble themselves before the Lord; and the power of the Lord was with them.

17 அவர்களுக்கு எதிராய்ப் போரிட, அவர்களின்
பூர்வ தேச புறஜாதியார் தண்ணீர்கள் மீதும், பூமி-
யின் மீதும், ஒன்றாகக் கூடியிருப்பதை நான் கண்-
டேன்.

And I beheld that their mother Gentiles were gathered together upon the waters, and upon the land also, to battle against them.

18 தேவனுடைய வல்லமை அவர்களிடத்திலிருப்ப-
தையும், அவர்களுக்கு எதிராகப் போரிட ஒன்றாகக்
கூடின அனைவர் மீதும், தேவனுடைய உக்கிரம்
இருப்பதையும், நான் கண்டேன்.

And I beheld that the power of God was with them, and also that the wrath of God was upon all those that were gathered together against them to battle.

19 நேபியாகிய நான், சிறைத்தனத்திலிருந்து வெளி-
யே போன புறஜாதியார் தேவனுடைய வல்லமையி-
னால் மற்ற எல்லா தேசங்களின் கைகளிலிருந்தும்
தப்புவிக்கப்பட்டதையும் கண்டேன்.

And I, Nephi, beheld that the Gentiles that had gone out of captivity were delivered by the power of God out of the hands of all other nations.

20 நேபியாகிய நான், அவர்கள் தேசத்திலே செழிப்ப-
டைவதைக் கண்டேன்; மேலும் ஒரு புஸ்தகத்தைக்
கண்டேன். அது அவர்களோடு கொண்டு செல்லப்-
பட்டதையும் கண்டேன்.

And it came to pass that I, Nephi, beheld that they did prosper in the land; and I beheld a book, and it was carried forth among them.

21 தூதன் என்னை நோக்கி: இந்தப் புஸ்தகத்தின்
பொருளை நீ அறிவாயா? என்றான்.

And the angel said unto me: Knowest thou the meaning of the book?

22 நான் அவனை நோக்கி: நான் அறியேன் என்-
றேன்.

And I said unto him: I know not.

23 அவன் சொன்னதாவது: அது ஒரு யூதனுடைய வாயிலிருந்து வருவதைப் பார். நேபியாகிய நான் அதைக் கண்டேன், மேலும் அவன் என்னை நோக்கி: நீ காண்கிற இந்தப் புஸ்தகம் இஸ்ரவேலின் வீட்டாருடன் கர்த்தர் செய்த அவருடைய உடன்படிக்கைகளைக் கொண்ட யூதர்களின் - பதிவேட்டைக் கொண்டிருக்கிறது என்றும், மேலும் அது பரிசுத்த தீர்க்கதரிசிகளின் பல தீர்க்கதரிசனங்களையும் கொண்டிருக்கிறது என்றும், பித்தளைத் தகடுகளின்மீது பொறிக்கப்பட்டவைகளைப்போலவே அதுவும் ஒரு பதிவேடு என்றும், ஆனால் அவை அதிகமானவை அல்ல என்றும், எனினும், கர்த்தர் இஸ்ரவேலின் வீட்டாருடன் செய்த உடன்படிக்கைகளை அவைகள் கொண்டிருக்கின்றன; ஆகவே அவைகள் புறஜாதியாருக்கு பெருமதிப்பு உடையதாயிருக்கிறது என்றும் சொன்னான்.

And he said: Behold it proceedeth out of the mouth of a Jew. And I, Nephi, beheld it; and he said unto me: The book that thou beholdest is a record of the Jews, which contains the covenants of the Lord, which he hath made unto the house of Israel; and it also containeth many of the prophecies of the holy prophets; and it is a record like unto the engravings which are upon the plates of brass, save there are not so many; nevertheless, they contain the covenants of the Lord, which he hath made unto the house of Israel; wherefore, they are of great worth unto the Gentiles.

24 கர்த்தரின் தூதன் என்னை நோக்கி: ஒரு யூதனுடைய வாயிலிருந்து புஸ்தகம் வெளிவந்ததை நீ கண்டாய். மேலும் யூதனுடைய வாயிலிருந்து வெளிவந்தபோது பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் சாட்சி பகர்கிற கர்த்தரின் சுவிசேஷத்தின் முழுமையை அது கொண்டிருந்தது. அவர்கள் தேவ ஆட்டுக்குட்டியானவரில் உள்ள சத்தியத்தின்படியே சாட்சி சொல்கின்றனர் என்றான்.

And the angel of the Lord said unto me: Thou hast beheld that the book proceeded forth from the mouth of a Jew; and when it proceeded forth from the mouth of a Jew it contained the fulness of the gospel of the Lord, of whom the twelve apostles bear record; and they bear record according to the truth which is in the Lamb of God.

25 ஆகையால், தேவனில் இருக்கிற சத்தியத்தின்படியே இந்தக் காரியங்கள் யூதர்களிடத்திலிருந்து தூய்மையாக புறஜாதியாருக்குச் செல்லுகிறது.

Wherefore, these things go forth from the Jews in purity unto the Gentiles, according to the truth which is in God.

26 யூதர்களிடத்திலிருந்து புறஜாதியாருக்கு தேவ ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் கரத்தின் மூலமாக அவைகள் சென்ற பின்பு, மற்ற எல்லா சபைகளையும் விட மிகவும் அருவருப்பான, அந்தப் பெரிதும் அருவருப்புமான சபை ஸ்தாபிக்கப்படுகிறதை நீ காண்கிறாய்; ஏனெனில் இதோ, அவர்கள் தேவ ஆட்டுக்குட்டியானவரின் சுவிசேஷத்திலிருந்து தெளிவானதும் விலையேறப்பெற்றதுமான அநேக பகுதிகளை எடுத்துவிட்டனர்; கர்த்தருடைய அநேக உடன்படிக்கைகளையும் அவர்கள் எடுத்து விட்டார்கள்.

And after they go forth by the hand of the twelve apostles of the Lamb, from the Jews unto the Gentiles, thou seest the formation of that great and abominable church, which is most abominable above all other churches; for behold, they have taken away from the gospel of the Lamb many parts which are plain and most precious; and also many covenants of the Lord have they taken away.

27 அவர்கள் மனுபுத்திரரின் கண்களைக் குருடாக்கவும், இருதயங்களைக் கடினப்படுத்தும் பொருட்டும், அவர்கள் கர்த்தரின் செம்மையான வழிகளை புரட்டிப்போடும்படிக்கு இவை அனைத்தையும் செய்தார்கள்.

And all this have they done that they might pervert the right ways of the Lord, that they might blind the eyes and harden the hearts of the children of men.

28 ஆகையால், இந்தப் புஸ்தகம் பெரிதும் அருவருப்புமுள்ள சபையின் கரங்கள் வழியாகச் சென்ற பின்பு, தேவ ஆட்டுக்குட்டியானவரின் புஸ்தகமாகிய அந்தப் புஸ்தகத்திலிருந்து, அநேக தெளிவான விலையேறப்பெற்ற காரியங்கள் எடுக்கப்பட்டதை, நீ காண்கிறாய்.

Wherefore, thou seest that after the book hath gone forth through the hands of the great and abominable church, that there are many plain and precious things taken away from the book, which is the book of the Lamb of God.

29 இந்தத் தெளிவானதும் விலையேறப்பெற்றது-
மான காரியங்கள் எடுக்கப்பட்ட பின்னர், அது எல்-
லா புறஜாதியாரின் தேசங்களுக்கும் சென்றது;
பின்னர் அது எல்லா புறஜாதியாரின் தேசங்களுக்-
கும், நீ கண்ட சிறையிருப்பிலிருந்து வெளியாகிச்
சென்ற புறஜாதியாரிடத்திற்கும், திரளான தண்-
ணீர்களைக் கடந்தும் சென்றது; மனுபுத்திரர் வி-
ளங்கிக்கொள்ள தெளிவானதும், தேவ ஆட்டுக்-
குட்டியானவரில் உள்ள தெளிவின்படியேயும்
உள்ள, அநேக தெளிவானதும் விலையேறப்பெற்ற-
துமான காரியங்கள் இந்தப் புஸ்தகத்திலிருந்து
எடுத்துவிடப்பட்டபடியினாலும், ஆட்டுக்குட்டியா-
னவரின் சுவிசேஷத்திலிருந்து இந்தக் காரியங்கள்
எடுத்துவிடப்பட்டபடியினாலும், ஆம், சாத்தான்
அவர்கள் மீது பெரும் வல்லமையைப் பெறும்
அளவிற்கு, மிகவும் அதிகமானோர் இடறினார்கள்.

30 இருந்தபோதிலும், மற்ற எல்லா தேசங்களைக்
காட்டிலும் விரும்பத்தக்க இந்த தேசத்தின் மேற்ப-
ரப்பின் மீது, மற்ற எல்லா தேசங்களையும்விட தே-
வனுடைய வல்லமையினால் மேலே உயர்த்தப்பட்-
டிருக்கிறவர்களும், சிறைத்தனத்திலிருந்து வெளி-
யே போனவர்களுமாகிய புறஜாதியாரை நீ காண்கி-
றாய். அந்த தேசமானது, கர்த்தராகிய தேவன் உன்-
னுடைய தகப்பனிடம், அவனது சந்ததி தங்களின்
சுதந்திர தேசமாகக் கொள்ளவேண்டும் என்று
உடன்படிக்கை செய்ததாகும். ஆகையால் உன்
சகோதரருடன் கலந்திருக்கும், உன்னுடைய கலப்பு
சந்ததியை, முழுவதுமாக புறஜாதியார் அழிக்க,
கர்த்தராகிய தேவன் விடமாட்டார்.

31 புறஜாதியார் உன் சகோதரரின் சந்ததியை அழிக்-
கும்படியும் அவர் விடமாட்டார்.

32 ஆட்டுக்குட்டியானவருடைய சுவிசேஷத்தின்
தெளிவும், மிக்க விலைமதிப்பற்றதுமான பாகங்-
கள் அந்த அருவருப்புள்ள சபையால் எடுக்கப்பட்-
டிருப்பதினால், புறஜாதியார் அந்த பயங்கரமான
குருட்டு நிலையிலே இருக்கிறதை நீ காண்கிறபடி-
யே, அதிலே அவர்கள் என்றென்றைக்கும் இருக்-
கும்படி கர்த்தராகிய தேவன் விடவுமாட்டார், அதன்
ஸ்தாபிதத்தை நீ கண்டிருக்கிறாய்.

33 ஆதலால் தேவ ஆட்டுக்குட்டியானவர் சொல்வ-
தாவது: இஸ்ரவேல் வீட்டாரில் மீதியானவர்க-
ளைக், கண்டிப்பான நியாயத்தீர்ப்பில் விசாரிக்-
கும்போது, நான் புறஜாதியாரிடத்தில் இரக்கமாயி-
ருப்பேன்.

And after these plain and precious things were taken away it goeth forth unto all the nations of the Gentiles; and after it goeth forth unto all the nations of the Gentiles, yea, even across the many waters which thou hast seen with the Gentiles which have gone forth out of captivity, thou seest—because of the many plain and precious things which have been taken out of the book, which were plain unto the understanding of the children of men, according to the plainness which is in the Lamb of God—because of these things which are taken away out of the gospel of the Lamb, an exceedingly great many do stumble, yea, insomuch that Satan hath great power over them.

Nevertheless, thou beholdest that the Gentiles who have gone forth out of captivity, and have been lifted up by the power of God above all other nations, upon the face of the land which is choice above all other lands, which is the land that the Lord God hath covenanted with thy father that his seed should have for the land of their inheritance; wherefore, thou seest that the Lord God will not suffer that the Gentiles will utterly destroy the mixture of thy seed, which are among thy brethren.

Neither will he suffer that the Gentiles shall destroy the seed of thy brethren.

Neither will the Lord God suffer that the Gentiles shall forever remain in that awful state of blindness, which thou beholdest they are in, because of the plain and most precious parts of the gospel of the Lamb which have been kept back by that abominable church, whose formation thou hast seen.

Wherefore saith the Lamb of God: I will be merciful unto the Gentiles, unto the visiting of the remnant of the house of Israel in great judgment.

34 கர்த்தரின் தூதன் என்னிடம் சொன்னதாவது:
தேவ ஆட்டுக்குட்டியானவர் சொல்லுகிறார், இதோ,
இஸ்ரவேல் வீட்டாரின் மீதியானவர்களை நான் வி-
சாரித்த பின்பு, நான் அவர்களை நியாயத்தீர்ப்பி-
லே விசாரித்து, புறஜாதியார் கையினாலே அவர்க-
ளை அடித்தபின்பும், ஆட்டுக்குட்டியானவருடைய
சுவிசேஷத்தின் மிகத் தெளிவும், விலையேறப்-
பெற்றதுமான பாகங்கள், வேசிகளின் தாயாகிய,
அருவருப்புள்ள சபையால் எடுக்கப்பட்டிருப்பதி-
னால், புறஜாதியார் வெகுவாய் இடறுகிற, அந்நா-
ளில் தெளிவானதும், விலையேறப்பெற்றதுமாயி-
ருக்கும் என் சுவிசேஷத்தில், அதிகமானவற்றை,
என் சகல வல்லமையினாலே அவர்களிடம்
கொண்டுவருமளவிற்கு நான் புறஜாதியார்களிடத்-
தில் இரக்கமுள்ளவராயிருப்பேன். நான் பேசுகிற
இந்த மீதியானவர்கள் உன் தகப்பனின் சந்ததியே
என்று ஆட்டுக்குட்டியானவர் சொல்லுகிறார்.

And it came to pass that the angel of the Lord spake unto me, saying: Behold, saith the Lamb of God, after I have visited the remnant of the house of Israel—and this remnant of whom I speak is the seed of thy father—wherefore, after I have visited them in judgment, and smitten them by the hand of the Gentiles, and after the Gentiles do stumble exceedingly, because of the most plain and precious parts of the gospel of the Lamb which have been kept back by that abominable church, which is the mother of harlots, saith the Lamb—I will be merciful unto the Gentiles in that day, insomuch that I will bring forth unto them, in mine own power, much of my gospel, which shall be plain and precious, saith the Lamb.

35 ஏனெனில், இதோ, ஆட்டுக்குட்டியானவர் சொல்-
லுகிறார்: நான் செய்யப்போகும் தெளிவும் விலைம-
திப்பற்றதுமான ஊழியத்தைக் குறித்து, அவர்கள்
அநேக காரியங்களை எழுதும்படிக்கு உன் சந்ததி-
யாருக்கு என்னை வெளிப்படுத்துவேன்; உன் சந்த-
தியும், உன் சகோதரரின் சந்ததியும் அழிக்கப்பட்டு,
அவிசுவாசத்தில் நலிந்துபோன பின்பு, இதோ ஆட்-
டுக்குட்டியானவரின் வரத்தினாலும், வல்லமையி-
னாலும், புறஜாதியாருக்கு வெளிப்படும்படியாக,
இவைகள் மறைத்து வைக்கப்படும்.

For, behold, saith the Lamb: I will manifest myself unto thy seed, that they shall write many things which I shall minister unto them, which shall be plain and precious; and after thy seed shall be destroyed, and dwindle in unbelief, and also the seed of thy brethren, behold, these things shall be hid up, to come forth unto the Gentiles, by the gift and power of the Lamb.

36 அவைகளில் என் சுவிசேஷம் எழுதப்படும் என்-
று, என் கன்மலையும், இரட்சிப்புமாகிய ஆட்டுக்-
குட்டியானவர் சொல்லுகிறார்.

And in them shall be written my gospel, saith the Lamb, and my rock and my salvation.

37 அந்த நாளில் என் சீயோனை ஸ்தாபிக்க வகை-
தேடுகிறவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில்
அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும்
வல்லமையையும் பெறுவார்கள்; அவர்கள் முடிவு-
பரியந்தம் நிலைத்திருப்பார்களெனில் அவர்கள்
கடைசி நாளிலே உயர்த்தப்பட்டு, தேவ ஆட்டுக்குட்-
டியானவரின் நித்திய ராஜ்யத்தில் மீட்கப்படுவார்-
கள்; ஆம், சமாதானத்தையும், மிகுந்த சந்தோஷத்-
தின் சுவிசேஷத்தையும் அறிவிக்கும் அவர்கள்,
மலைகளின்மேல் எவ்வளவு அழகாக இருப்பார்-
கள்.

And blessed are they who shall seek to bring forth my Zion at that day, for they shall have the gift and the power of the Holy Ghost; and if they endure unto the end they shall be lifted up at the last day, and shall be saved in the everlasting kingdom of the Lamb; and whoso shall publish peace, yea, tidings of great joy, how beautiful upon the mountains shall they be.

38 என்னுடைய சகோதரர்களின் சந்ததியின் மீதியா-
னவர்களையும், புறஜாதியாரிடமிருந்து என் சகோ-
தரரின் சந்ததியாரின் மீதியானவர்களிடத்தில்
வரும்படிக்கு, யூதனின் வாயிலிருந்து வெளிவந்த,
தேவ ஆட்டுக்குட்டியானவரின் புஸ்தகத்தையும்
கண்டேன்,

And it came to pass that I beheld the remnant of the seed of my brethren, and also the book of the Lamb of God, which had proceeded forth from the mouth of the Jew, that it came forth from the Gentiles unto the remnant of the seed of my brethren.

39 அது அவர்களிடத்தில் வந்த பின்பு, அவர்களுக்-
கு புறஜாதியாரிடமிருந்து தேவ ஆட்டுக்குட்டியான-
வரின் வல்லமையினால் வந்த, மற்ற புஸ்தகங்க-
ளையும் நான் கண்டேன். அவைகள் தேவ ஆட்டுக்-
குட்டியானவரின் தீர்க்கதரிசிகள் மற்றும் பன்னி-
ரண்டு அப்போஸ்தலர்களின் பதிவுகள் உண்மை-
யானவை என்று, புறஜாதியாரும் என் சகோதரரின்
சந்ததியின் மீதியானவர்களும் பூமியின் பரப்பின்
மேலெல்லாம் சிதறடிக்கப்பட்ட யூதர்களும், ஏற்றுக்-
கொள்ளத்தக்கதாக உள்ளன.
40 தூதன் என்னிடம் சொன்னதாவது: நீ புறஜாதியா-
ரின் மத்தியிலே கண்ட இந்தக் கடைசி பதிவேடுகள்,
ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்-
தலர்களால் எழுதப்பட்ட முந்தினவையின் சத்தி-
யத்தை நிலைநிறுத்தி, அவைகளிடமிருந்து எடுத்-
துக்கொள்ளப்பட்ட தெளிவான, விலைமதிப்பற்ற-
துமான காரியங்களைத் தெரியப்படுத்தும்; எல்லா
இனத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனங்க-
ளுக்கும், தேவ ஆட்டுக்குட்டியானவர் நித்திய பிதா-
வின் குமாரனென்றும், உலகத்தின் இரட்சகர் என்-
றும், எல்லா மனுஷரும் அவரிடம் வரவேண்டும்,
இல்லாவிடில், இரட்சிக்கப்படமாட்டார்கள் என்றும்
தெரியப்படுத்தும்.
41 ஆட்டுக்குட்டியானவரின் வாயினால் உறுதிப்ப-
டுத்தப்படும் வார்த்தைகளின்படியே, அவைகள்
வருதல் வேண்டும்; தேவ ஆட்டுக்குட்டியானவரின்
பன்னிரண்டு அப்போஸ்தலர்களின் பதிவேடுக-
ளில் மட்டுமல்லாமல், உன்னுடைய சந்ததியின்
பதிவேடுகளிலும் ஆட்டுக்குட்டியானவரின் வார்த்-
தைகள் தெரியப்படுத்தப்படும்; ஆகையால் அவை-
கள் இரண்டும் ஒன்றாக உறுதிப்படுத்தப்படும்,
ஏனெனில் பூமி முழுவதற்கும் ஒரே தேவனும், ஒரே
மேய்ப்பருமேயுள்ளனர்.
42 அவர் தன்னையே எல்லா தேசங்களுக்கும், யூத-
ருக்கும், புறஜாதியாருக்கும் வெளிப்படுத்தும் கா-
லம் வரும்; அவர் தன்னையே புறஜாதியாருக்கும்
யூதர்களுக்கும் வெளிப்படுத்தின பின்பு, அவர்
தன்னையே புறஜாதியாருக்கும், யூதர்களுக்கும்
வெளிப்படுத்துவார். அப்பொழுது பிந்தினோர்
முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும்
இருப்பார்கள்.

And after it had come forth unto them I beheld other books, which came forth by the power of the Lamb, from the Gentiles unto them, unto the convincing of the Gentiles and the remnant of the seed of my brethren, and also the Jews who were scattered upon all the face of the earth, that the records of the prophets and of the twelve apostles of the Lamb are true.

And the angel spake unto me, saying: These last records, which thou hast seen among the Gentiles, shall establish the truth of the first, which are of the twelve apostles of the Lamb, and shall make known the plain and precious things which have been taken away from them; and shall make known to all kindreds, tongues, and people, that the Lamb of God is the Son of the Eternal Father, and the Savior of the world; and that all men must come unto him, or they cannot be saved.

And they must come according to the words which shall be established by the mouth of the Lamb; and the words of the Lamb shall be made known in the records of thy seed, as well as in the records of the twelve apostles of the Lamb; wherefore they both shall be established in one; for there is one God and one Shepherd over all the earth.

And the time cometh that he shall manifest himself unto all nations, both unto the Jews and also unto the Gentiles; and after he has manifested himself unto the Jews and also unto the Gentiles, then he shall manifest himself unto the Gentiles and also unto the Jews, and the last shall be first, and the first shall be last.

# 1 நேபி 14

1 அந்த நாளிலே தேவ ஆட்டுக்குட்டியானவருக்கு பு-
றஜாதியார் செவிகொடுப்பார்களெனில், அவர்க-
ளுக்கு வார்த்தையிலும், வல்லமையிலும், செயலி-
லும்கூட, அவர்களின் இடறுதற்கேதுவானவைக-
ளை எடுத்துப்போடும்படிக்கு, அவர் தன்னையே
வெளிப்படுத்துவார்.

2 தேவ ஆட்டுக்குட்டியானவருக்கு விரோதமாய்த்
தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாவிடில்,
அவர்கள் உன் தகப்பனின் சந்ததியோடு எண்ணப்-
படுவார்கள்; ஆம், இஸ்ரவேலின் வீட்டாரோடும்
அவர்கள் எண்ணப்படுவார்கள்; வாக்குத்தத்தத்-
தின் தேசத்திலே என்றென்றைக்கும் அவர்கள்
ஆசீர்வதிக்கப்பட்ட ஜனமாய் இருப்பார்கள்; அவர்-
கள் சிறையிருப்பின் கீழ் இனி ஒருபோதும் கொண்-
டுவரப்படுவதில்லை; இஸ்ரவேல் வம்சத்தார் இனி
ஒருபோதும் தாறுமாறாக்கப்படமாட்டார்கள்.

3 அந்தப் பெரிய படுகுழி, மனுஷர்களின் ஆத்துமா-
வை நரகத்திற்கு நடத்திச் செல்ல, அந்தப் பெரிதும்
அருவருப்புமான சபையினரால் அவர்களுக்காக
தோண்டப்பட்டது. அவன் மனுஷரின் ஆத்துமாக்-
களை நரகத்துக்கு வழிநடத்தும்படியாக, பிசாசா-
லும் அவனது பிள்ளைகளாலும் தோற்றுவிக்கப்-
பட்டது, ஆம், மனுஷர்களின் அழிவுக்காக தோண்-
டப்பட்ட அந்தப் பெரிய படுகுழி, அதைத் தோண்டி-
யவர்களினாலேயே நிரப்பப்பட்டு, அவர்களின் மு-
முஅழிவுக்குக் காரணமாயிருக்கும், என்று தேவ
ஆட்டுக்குட்டியானவர் சொல்லுகிறார்; ஆத்துமா
முடிவில்லாத நரகத்திற்குள் தள்ளப்படுமே ஒழிய
அது நிர்மூலமாக்கப்படமாட்டாது.

4 ஏனெனில் இதோ, இது அவருக்கு முன்பாகத்
துன்மார்க்கம் மற்றும் அருவருப்பானவைகளைச்
செய்கிற எல்லார் மீதும், பிசாசின் சிறைத்தனத்-
தின்படியும், தேவனுடைய நியாயத்தின்படியேயும்
இருக்கிறது.

5 அந்தப்படியே, தூதன் நேபியாகிய என்னிடத்தில்
சொன்னதாவது: புறஜாதியார் மனந்திரும்பினால்
அது அவர்களுக்கு நலமாயிருக்கும் என்பதை நீ
கண்டாய்; இஸ்ரவேலின் வீட்டாருடன் கர்த்தரின்
உடன்படிக்கைகளைக் குறித்தும் நீ அறிந்திருக்கி-
றாய்; மனந்திரும்பாதவன் அழியவேண்டும் என்-
றும் நீ கேள்விப்பட்டிருக்கிறாய்.

6 ஆகையால் தேவ ஆட்டுக்குட்டியானவருக்கு வி-
ரோதமாய் தங்கள் இருதயங்களை புறஜாதியார் கடி-
னப்படுத்தினால், அவர்களுக்கு ஐயோ.

# 1 Nephi 14

And it shall come to pass, that if the Gentiles shall hearken unto the Lamb of God in that day that he shall manifest himself unto them in word, and also in power, in very deed, unto the taking away of their stumbling blocks—

And harden not their hearts against the Lamb of God, they shall be numbered among the seed of thy father; yea, they shall be numbered among the house of Israel; and they shall be a blessed people upon the promised land forever; they shall be no more brought down into captivity; and the house of Israel shall no more be confounded.

And that great pit, which hath been digged for them by that great and abominable church, which was founded by the devil and his children, that he might lead away the souls of men down to hell—yea, that great pit which hath been digged for the destruction of men shall be filled by those who digged it, unto their utter destruction, saith the Lamb of God; not the destruction of the soul, save it be the casting of it into that hell which hath no end.

For behold, this is according to the captivity of the devil, and also according to the justice of God, upon all those who will work wickedness and abomination before him.

And it came to pass that the angel spake unto me, Nephi, saying: Thou hast beheld that if the Gentiles repent it shall be well with them; and thou also knowest concerning the covenants of the Lord unto the house of Israel; and thou also hast heard that whoso repenteth not must perish.

Therefore, wo be unto the Gentiles if it so be that they harden their hearts against the Lamb of God.

7 ஏனெனில், மனுபுத்திரரின் மத்தியில் நான் பெரிதும் அற்புதமுமான கிரியைகளைச் செய்யும் காலம் வருகிறது; சமாதானத்தையும், நித்திய ஜீவனையும் அவர்களுக்கு உணர்த்துவதற்கோ, அல்லது நான் பேசிய பிசாசின் சிறைத்தனத்தின்படி, அவர்களைச் சரீரப் பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும், சிறையிருப்புக்குள்ளாக்கும்படிக்கும், அழிக்கும்படிக்கும், அவர்களை அவர்களுடைய இருதயக் கடினத்திற்கும், மனதின் குருட்டுத்தனத்திற்கும், அவர்களுடைய விடுதலைக்காக, என்றுமுள்ள ஒரு கிரியையை, ஒரு விதத்திலோ அல்லது வேறு விதத்திலோ செய்வேன், என்று தேவ ஆட்டுக்குட்டியானவர் சொல்லுகிறார்.

For the time cometh, saith the Lamb of God, that I will work a great and a marvelous work among the children of men; a work which shall be everlasting, either on the one hand or on the other—either to the convincing of them unto peace and life eternal, or unto the deliverance of them to the hardness of their hearts and the blindness of their minds unto their being brought down into captivity, and also into destruction, both temporally and spiritually, according to the captivity of the devil, of which I have spoken.

8 அந்தப்படியே, தூதன் இந்த வார்த்தைகளைப் பேசியபொழுது, அவன் என்னை நோக்கி: இஸ்ரவேல் வீட்டாருடன் பிதாவினுடைய உடன்படிக்கைகளை நீ நினைவில் வைத்திருக்கிறாயா? என்றான். நான் அவனை நோக்கி, ஆம், என்றேன்.

And it came to pass that when the angel had spoken these words, he said unto me: Rememberest thou the covenants of the Father unto the house of Israel? I said unto him, Yea.

9 அந்தப்படியே, அவன் என்னை நோக்கி: இதோ, பிசாசு ஸ்தாபகனாக இருக்கிற, அருவருப்பானவைகளின் தாயாகவும் இருக்கும், அந்தப் பெரிதும் அருவருப்புமான சபையைப் பார், என்றான்.

And it came to pass that he said unto me: Look, and behold that great and abominable church, which is the mother of abominations, whose founder is the devil.

10 அவன் என்னை நோக்கி: இதோ, இரண்டு சபைகள் மாத்திரமே உள்ளன; ஒன்று தேவ ஆட்டுக்குட்டியானவரின் சபை. மற்றொன்று பிசாசின் சபை; ஆதலால் தேவ ஆட்டுக்குட்டியானவரின் சபையைச் சார்ந்திராதவன் எவனும், எல்லா அருவருப்புகளுக்கும் தாயான, அந்தப் பெரிய சபையைச் சார்ந்தவனாயிருக்கிறான்; மேலும் அவள் பூமியனைத்திற்கும் வேசியாயிருக்கிறாள், என்றான்.

And he said unto me: Behold there are save two churches only; the one is the church of the Lamb of God, and the other is the church of the devil; wherefore, whoso belongeth not to the church of the Lamb of God belongeth to that great church, which is the mother of abominations; and she is the whore of all the earth.

11 அந்தப்படியே நான் பார்த்தபொழுது, பூமியனைத்திற்கும் வேசியான அவள் திரளான தண்ணீர்களின்மேல் அமர்ந்திருப்பதைக் கண்டேன்; அவள் பூமியனைத்தின் மேலும், எல்லா தேசங்கள், வம்சங்கள், பாஷைக்காரர் மற்றும் ஜனங்களின் மத்தியிலும் ஆளுகை செய்பவளாயிருந்தாள்.

And it came to pass that I looked and beheld the whore of all the earth, and she sat upon many waters; and she had dominion over all the earth, among all nations, kindreds, tongues, and people.

12 அந்தப்படியே, நான் தேவ ஆட்டுக்குட்டியானவரின் சபையையும், திரளான தண்ணீர்களின்மேல் அமர்ந்திருந்த, வேசியின் துன்மார்க்கம் மற்றும் அருவருப்புகளினிமித்தம், அதனுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதையும் கண்டேன்; இருந்தபோதிலும் தேவனுடைய பரிசுத்தவான்கள் அடங்கிய, ஆட்டுக்குட்டியானவரின் சபை, பூமியின் பரப்பின் மேலெல்லாம் இருப்பதை நான் கண்டேன்; நான் கண்ட பெரும் வேசியின் துன்மார்க்கத்தால், பூமியின் பரப்பின்மீது அவர்களின் ஆளுகை சிறியதாயிருந்தது.

And it came to pass that I beheld the church of the Lamb of God, and its numbers were few, because of the wickedness and abominations of the whore who sat upon many waters; nevertheless, I beheld that the church of the Lamb, who were the saints of God, were also upon all the face of the earth; and their dominions upon the face of the earth were small, because of the wickedness of the great whore whom I saw.

13 அந்தப்படியே, அருவருப்புகளின் பெரும் தாய், தேவ ஆட்டுக்குட்டியானவருக்கு எதிராய்ச் சண்டையிட, புறஜாதியாரின் எல்லா தேசங்களிலிருந்தும், பூமியின் முழு மேற்பரப்பின் மீதும், திரளானோரை ஒன்றாகக் கூட்டியதை நான் கண்டேன்.

And it came to pass that I beheld that the great mother of abominations did gather together multitudes upon the face of all the earth, among all the nations of the Gentiles, to fight against the Lamb of God.

14 அந்தப்படியே, நேபியாகிய நான், ஆட்டுக்குட்டியானவரின் சபையின் பரிசுத்தவான்கள் மீதும், பூமியின் பரப்பின் மீதும், சிதறடிக்கப்பட்டிருந்த கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனத்தின் மீதும் தேவ ஆட்டுக்குட்டியானவரின் வல்லமை, இறங்கக் கண்டேன்; அவர்கள் நீதியினாலும் மகா மகிமையிலிருக்கிற தேவனுடைய வல்லமையினாலும் ஆயுதந்தரித்திருந்தார்கள்.

And it came to pass that I, Nephi, beheld the power of the Lamb of God, that it descended upon the saints of the church of the Lamb, and upon the covenant people of the Lord, who were scattered upon all the face of the earth; and they were armed with righteousness and with the power of God in great glory.

15 அந்தப்படியே, தேவனுடைய உக்கிரம், பெரிதும் அருவருப்புமான சபையின்மேல் ஊற்றப்பட்டபடியால், சகல தேசத்தார் மற்றும் பூமியின் கோத்திரத்தார் மத்தியிலும், யுத்தங்கள் மற்றும் யுத்தங்களின் வதந்திகளும் இருப்பதைக் கண்டேன்.

And it came to pass that I beheld that the wrath of God was poured out upon that great and abominable church, insomuch that there were wars and rumors of wars among all the nations and kindreds of the earth.

16 அருவருப்புகளின் தாய்க்குச் சொந்தமான சகல தேசங்களுக்குள்ளே, யுத்தங்களும் மற்றும் யுத்தங்களின் வதந்திகளும், தொடங்குகையில் தூதன் என்னை நோக்கி: இதோ, தேவனுடைய உக்கிரம் வேசிகளின் தாயானவளின் மீது இருக்கிறது, இதோ, இந்தக் காரியங்கள் அனைத்தையும் நீ காண்கிறாய் என்றான்.

And as there began to be wars and rumors of wars among all the nations which belonged to the mother of abominations, the angel spake unto me, saying: Behold, the wrath of God is upon the mother of harlots; and behold, thou seest all these things—

17 அந்த நாள் வரும்போது பிசாசு, ஸ்தாபகனாக இருக்கின்ற, பூமியில் எங்கும் இருக்கிறதுமான, அந்தப் பெரிதும் அருவருப்புமான சபையாகிய, வேசிகளின் தாயின் மீது தேவனுடைய உக்கிரம் ஊற்றப்படும். அப்பொழுது, அந்நாளில், இஸ்ரவேலின் வீட்டாராகிய, தன் ஜனத்துடன் தான் செய்த, தன்னுடைய உடன்படிக்கைகளை நிறைவேற்ற, ஒரு வழியை ஆயத்தப்படுத்துகிற பிதாவினுடைய கிரியை துவங்கும்.

And when the day cometh that the wrath of God is poured out upon the mother of harlots, which is the great and abominable church of all the earth, whose founder is the devil, then, at that day, the work of the Father shall commence, in preparing the way for the fulfilling of his covenants, which he hath made to his people who are of the house of Israel.

18 அந்தப்படியே, தூதன் என்னுடன் பேசி, பார் என்றான்.

And it came to pass that the angel spake unto me, saying: Look!

19 நான் பார்த்தபொழுது ஒரு மனுஷனைக் கண்டேன், அவன் வெள்ளை அங்கியைத் தரித்திருந்தான்.

And I looked and beheld a man, and he was dressed in a white robe.

20 தூதன் என்னை நோக்கி: இதோ ஆட்டுக்குட்டியானவரின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் ஒருவன், என்றான்.

And the angel said unto me: Behold one of the twelve apostles of the Lamb.

21 இதோ, இந்தக் காரியங்களின் மீதியானவைகளையும்; ஆம், நடந்த, அநேக காரியங்களையும் அவன் பார்க்கவும், எழுதவும் செய்வான்.

Behold, he shall see and write the remainder of these things; yea, and also many things which have been.

22 அவன் உலகத்தின் முடிவைக் குறித்தும் எழுதுவான்.

And he shall also write concerning the end of the world.

23 ஆனபடியால், அவன் எழுதப்போகும் காரியங்-
கள் நியாயமும், சத்தியமுமானவை; இதோ, நீ கண்ட
யூதனுடைய வாயிலிருந்து வெளிப்பட்ட, புஸ்தகத்-
தில் அவை எழுதப்பட்டுள்ளன, அவை யூதனு-
டைய வாயிலிருந்து வெளிப்பட்டபோது, அல்லது
யூதனுடைய வாயிலிருந்து அந்தப் புஸ்தகம் வெ-
ளிப்பட்டபொழுது, எழுதப்பட்ட காரியங்கள் தெளி-
வாகவும், தூய்மையாகவும் மிகுந்த விலைமதிப்-
பற்றதும், எல்லா மனுஷரும் எளிதில் அறிந்து-
கொள்ளக்கூடியதாகவும் இருந்தது.

Wherefore, the things which he shall write are just and true; and behold they are written in the book which thou beheld proceeding out of the mouth of the Jew; and at the time they proceeded out of the mouth of the Jew, or, at the time the book proceeded out of the mouth of the Jew, the things which were written were plain and pure, and most precious and easy to the understanding of all men.

24 இதோ, தேவஆட்டுக்குட்டியானவரின் இந்த அப்-
போஸ்தலன் எழுதும் காரியங்களில், நீ கண்ட
அநேக காரியங்கள் இருக்கின்றன; இதோ மீதியான-
வற்றை நீ காண்பாய்.

And behold, the things which this apostle of the Lamb shall write are many things which thou hast seen; and behold, the remainder shalt thou see.

25 ஆனால் இனிமேல் நீ காண்கிற காரியங்களை நீ
எழுதாமல் இருப்பாயாக; ஏனெனில் தேவனாகிய
கர்த்தர், அவைகளை எழுதும்படி, தேவ ஆட்டுக்-
குட்டியானவரின் அப்போஸ்தலனை நியமித்திருக்-
கிறார்.

But the things which thou shalt see hereafter thou shalt not write; for the Lord God hath ordained the apostle of the Lamb of God that he should write them.

26 அதற்கு முன் இருந்தவர்களுக்கும் அவர் எல்லாக்
காரியங்களையும் காட்டினார், அவர்கள் அவைக-
ளை எழுதினார்கள்; இஸ்ரவேல் வீட்டாருக்கு, கர்த்-
தருடைய சொந்த ஏற்ற காலத்தின்படி ஆட்டுக்குட்-
டியானவரில் இருக்கிற சத்தியத்தின்படியே, அவை-
களின் தூய்மையிலே வரும்படியாய் அவைகள்
முத்திரிக்கப்பட்டுள்ளன.

And also others who have been, to them hath he shown all things, and they have written them; and they are sealed up to come forth in their purity, according to the truth which is in the Lamb, in the own due time of the Lord, unto the house of Israel.

27 தூதனுடைய வார்த்தையின்படியே, அந்த ஆட்-
டுக்குட்டியானவரின் அப்போஸ்தலனின் பெயர்
யோவான் என்பதை, நேபியாகிய நான் கேட்டு சாட்-
சி கொடுக்கிறேன்.

And I, Nephi, heard and bear record, that the name of the apostle of the Lamb was John, according to the word of the angel.

28 இதோ, நேபியாகிய நான், கண்ட மற்றும் கேட்ட மீ-
தியான காரியங்களை எழுதுவதற்குத் தடை செய்-
யப்பட்டிருக்கிறேன்; ஆதலால் நான் எழுதிய காரி-
யங்கள் எனக்குப் போதுமானவையாய் இருக்கின்-
றன; நான் கண்ட காரியங்களில் சிறிய பகுதியை
மாத்திரமே நான் எழுதியிருக்கிறேன்.

And behold, I, Nephi, am forbidden that I should write the remainder of the things which I saw and heard; wherefore the things which I have written sufficeth me; and I have written but a small part of the things which I saw.

29 என் தகப்பன் கண்ட காரியங்களை நானும் கண்-
டிருக்கிறேன் எனவும், கர்த்தரின் தூதன் எனக்கு
அவைகளைத் தெரியப்படுத்தினான் எனவும்,
நான் சாட்சி கொடுக்கிறேன்.

And I bear record that I saw the things which my father saw, and the angel of the Lord did make them known unto me.

30 நான் ஆவியிலே எடுத்துக் கொள்ளப்பட்டபோது,
நான் கண்ட காரியங்களைக் குறித்துப் பேசுவதை
முடிக்கிறேன்; மேலும் நான் கண்ட எல்லாக் காரி-
யங்களும் எழுதப்பட்டிராவிடினும், நான் எழுதி-
யுள்ள காரியங்கள் சத்தியமானவை. இது இப்படி-
யாக இருக்கிறது. ஆமென்.

And now I make an end of speaking concerning the things which I saw while I was carried away in the Spirit; and if all the things which I saw are not written, the things which I have written are true. And thus it is. Amen.

# 1 நேபி 15

1 அந்தப்படியே, நேபியாகிய நான், ஆவிக்குள்ளாக
எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்தக் காரியங்களை
எல்லாம் கண்டபின்பு, என் தகப்பனின் கூடாரத்-
திற்கு நான் திரும்பினேன்.
2 அந்தப்படியே, நான் என் சகோதரரைக் கண்டேன்,
அவர்களிடத்தில் என் தகப்பன் பேசிய காரியங்க-
ளைக் குறித்து, அவர்கள் ஒருவரோடு ஒருவர் வி-
வாதம் செய்து கொண்டிருந்தார்கள்.
3 ஏனெனில் அவர் உண்மையாகவே அவர்களிடத்-
தில் அநேக மாபெரும் காரியங்களைப் பேசியிருக்-
கிறார், அவைகளை ஒரு மனுஷன் கர்த்தரிடத்தில்
கேட்டாலொழிய, அறிவதற்குக் கடினமாய் இருப்ப-
வை; அவர்கள் தங்கள் இருதயங்களிலே கடின-
முள்ளவர்களாய் இருந்தபடியால், அவர்கள் செய்-
யவேண்டிய பிரகாரமாய், அவர்கள் கர்த்தரை
நோக்கிப் பார்க்கவில்லை.
4 இப்பொழுதும், நேபியாகிய நான், அவர்களின்
இருதயங்களின் கடினத்தின் நிமித்தமும், நான்
கண்ட காரியங்களின் நிமித்தமும், மனுபுத்திரரின்
பெரும் துன்மார்க்கத்தால், அவைகள் தவிர்க்கப்ப-
டாமல் சம்பவிக்குமென அறிந்து சஞ்சலப்பட்டேன்.
5 அந்தப்படியே, நான் என் உபத்திரவங்களினிமித்-
தம் மேற்கொள்ளப்பட்டேன், ஏனெனில் நான்
அவர்கள் வீழ்ச்சியைக் குறித்துக் கண்டிருந்தபடி-
யால், என் ஜனங்களின் அழிவின் நிமித்தம், என்
உபத்திரவங்கள் எல்லாவற்றிற்கும் மேலாக இருந்த-
து என நான் கருதினேன்.
6 அந்தப்படியே, நான் பெலனைப் பெற்ற பின்பு,
என் சகோதரர்களிடத்தில், அவர்களது விவாதத்-
தின் காரணத்தை அறிய ஆசைப்பட்டவனாய்,
நான் அவர்களிடத்தில் பேசினேன்.
7 அப்பொழுது அவர்கள், இதோ, புறஜாதியாரைக்
குறித்தும், ஒலிவமரத்தின் சுபாவக் கிளைகளைக்
குறித்தும், நம் தகப்பன் பேசிய வார்த்தைகளை
நாங்கள் புரிந்து கொள்ளமுடியவில்லை என்றார்-
கள்.
8 நான் அவர்களை நோக்கி: நீங்கள் கர்த்தரிடத்தில்
கேட்டீர்களா? என்று கேட்டேன்.
9 அவர்கள் என்னை நோக்கி: நாங்கள் கேட்கவில்-
லை, ஏனென்றால் கர்த்தர் எங்களுக்கு அவ்வகை-
யான காரியத்தை தெரியப்படுத்துவதில்லை என்-
றார்கள்.
10 இதோ, நான் அவர்களை நோக்கி: நீங்கள் ஏன்
கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொள்வதில்-
லை? உங்கள் இருதயக் கடினத்தினிமித்தம், நீங்கள்
ஏன் அழிந்துபோகிறீர்கள்? என்றேன்.

# 1 Nephi 15

And it came to pass that after I, Nephi, had been carried away in the Spirit, and seen all these things, I returned to the tent of my father.

And it came to pass that I beheld my brethren, and they were disputing one with another concerning the things which my father had spoken unto them.

For he truly spake many great things unto them, which were hard to be understood, save a man should inquire of the Lord; and they being hard in their hearts, therefore they did not look unto the Lord as they ought.

And now I, Nephi, was grieved because of the hardness of their hearts, and also, because of the things which I had seen, and knew they must unavoidably come to pass because of the great wickedness of the children of men.

And it came to pass that I was overcome because of my afflictions, for I considered that mine afflictions were great above all, because of the destruction of my people, for I had beheld their fall.

And it came to pass that after I had received strength I spake unto my brethren, desiring to know of them the cause of their disputations.

And they said: Behold, we cannot understand the words which our father hath spoken concerning the natural branches of the olive tree, and also concerning the Gentiles.

And I said unto them: Have ye inquired of the Lord?

And they said unto me: We have not; for the Lord maketh no such thing known unto us.

Behold, I said unto them: How is it that ye do not keep the commandments of the Lord? How is it that ye will perish, because of the hardness of your hearts?

11 நீங்கள் கர்த்தர் சொன்ன காரியங்களை நினைவுகூரவில்லையா? உங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்தாமல், என்னுடைய கட்டளைகளை கருத்தாய் கைக்கொண்டு, நீங்கள் பெறுவீர்கள் என நம்பி, விசுவாசத்திலே என்னிடம் கேட்டால், மெய்யாகவே இந்தக் காரியங்கள் உங்களுக்குத் தெரிவிக்கப்படும்.

Do ye not remember the things which the Lord hath said?—If ye will not harden your hearts, and ask me in faith, believing that ye shall receive, with diligence in keeping my commandments, surely these things shall be made known unto you.

12 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நம் தகப்பனுக்குள் இருந்த கர்த்தரின் ஆவியின் மூலம், இஸ்ரவேல் வீட்டார் ஒரு ஒலிவ விருட்சத்திற்கு ஒப்பிடப்பட்டனர்; நாம் இஸ்ரவேல் வீட்டாரிடமிருந்து பிரிந்துபோனவர்களல்லவா, நாம் இஸ்ரவேல் வீட்டாரின் ஒரு கிளையல்லவா?

Behold, I say unto you, that the house of Israel was compared unto an olive tree, by the Spirit of the Lord which was in our father; and behold are we not broken off from the house of Israel, and are we not a branch of the house of Israel?

13 இப்பொழுதும், புறஜாதிகளின் முழுமையின் மூலமாக, சுபாவக் கிளைகள் ஒட்ட வைக்கப்படுவதைக் குறித்து, நம் தகப்பன் சொன்ன காரியம் என்னவென்றால், பிற்காலங்களில் நம் சந்ததியார், ஆம், அநேக வருஷங்கள் அவிசுவாசத்தில் நலிந்துபோன பின்னரும், மனுபுத்திரருக்கு மேசியா தம்மைச் சரீரத்தில் வெளிப்படுத்திய பல வருஷங்களுக்குப் பின்னரும், பல தலைமுறைகளுக்குப் பின்னரும், மேசியாவின் சுவிசேஷத்தின் முழுமை, புறஜாதியாரிடத்தில் வரும். புறஜாதியாரிடமிருந்து நம் சந்ததியாரின் மீதியானவர்களிடத்தில் வரும்.

And now, the thing which our father meaneth concerning the grafting in of the natural branches through the fulness of the Gentiles, is, that in the latter days, when our seed shall have dwindled in unbelief, yea, for the space of many years, and many generations after the Messiah shall be manifested in body unto the children of men, then shall the fulness of the gospel of the Messiah come unto the Gentiles, and from the Gentiles unto the remnant of our seed—

14 நம் சந்ததியாரில் மீதியானவர்கள், தாங்கள் இஸ்ரவேல் வீட்டார் எனவும், அவர்கள் கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனங்கள் என்பதையும் அறிந்துகொள்ளும் நாளிலே, தங்கள் முற்பிதாக்களைப்பற்றி அறிந்து அவரால் தங்கள் பிதாக்களுக்குப் போதிக்கப்பட்ட, தங்கள் மீட்பரின் சுவிசேஷத்தைப்பற்றிய ஞானத்திற்கும் வருவார்கள். ஆகவே அவர்கள் அவரிடம் வந்து எப்படி இரட்சிக்கப்படுவதென அறிந்துகொள்ளும்படியாக தங்கள் மீட்பர் மற்றும் அவரது கோட்பாடுகளின் முக்கியத்துவத்தைப்பற்றிய ஞானத்திற்கும் வந்தடைவார்கள்.

And at that day shall the remnant of our seed know that they are of the house of Israel, and that they are the covenant people of the Lord; and then shall they know and come to the knowledge of their forefathers, and also to the knowledge of the gospel of their Redeemer, which was ministered unto their fathers by him; wherefore, they shall come to the knowledge of their Redeemer and the very points of his doctrine, that they may know how to come unto him and be saved.

15 அந்நாளில் அவர்கள் களிகூர்ந்து, தங்கள் கன்மலையும், இரட்சிப்புமான, நித்திய தேவனுக்கு துதி செலுத்தமாட்டார்களா? ஆம், அந்நாளில், மெய்யான திராட்சைக் கொடியிலிருந்து தங்கள் பெலனையும், போஷாக்கையும் பெறமாட்டார்களா? ஆம், அவர்கள் தேவனுடைய மெய்யான மந்தைக்கு வரமாட்டார்களா?

And then at that day will they not rejoice and give praise unto their everlasting God, their rock and their salvation? Yea, at that day, will they not receive the strength and nourishment from the true vine? Yea, will they not come unto the true fold of God?

16 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆம்; அவர்கள் மறுபடியும் இஸ்ரவேலின் வீட்டாரின் மத்தியில் நினைவுகூரப்படுவார்கள்; ஒலிவ மரத்தின் சுபாவ கிளைகளாயுள்ள அவர்கள், மெய்யான ஒலிவ விருட்சத்தோடு ஒட்டப்படுவார்கள்.

Behold, I say unto you, Yea; they shall be remembered again among the house of Israel; they shall be grafted in, being a natural branch of the olive tree, into the true olive tree.

17 இதைத்தான் நம் தகப்பனும் கருதுகிறார்; புறஜாதிகளால் அவர்கள் சிதறடிக்கப்படும்வரை, இவை சம்பவிக்காது என்றும், அவர் கருதுகிறார்; இஸ்ரவேல் வீட்டார் அல்லது யூதர்களால் அவர் வெறுக்கப்படுவார் என்ற ஒரே காரணத்திற்காக, புறஜாதிகளிடத்தில் தன் வல்லமையைக் கர்த்தர் காண்பிப்பதற்குத்தான், புறஜாதிகளின் வழியாக அது வர வேண்டும் என்று அவர் கருதுகிறார்.

And this is what our father meaneth; and he meaneth that it will not come to pass until after they are scattered by the Gentiles; and he meaneth that it shall come by way of the Gentiles, that the Lord may show his power unto the Gentiles, for the very cause that he shall be rejected of the Jews, or of the house of Israel.

18 ஆகையால், நம் தகப்பன், நம்முடைய சந்ததியாரைக் குறித்து மட்டும் பேசாமல், பிற்காலங்களில் நிறைவேற்றப்பட வேண்டிய உடன்படிக்கைகளைச் சுட்டிக்காட்டி, எல்லா இஸ்ரவேலின் வீட்டாரைக் குறித்தும் பேசியிருக்கிறார்; கர்த்தர் நம் பிதாவாகிய ஆபிரகாமோடு அந்த உடன்படிக்கையைச் செய்து சொன்னதாவது: உன் சந்ததியினால் பூமியிலுள்ள சகல சந்ததிகளும் ஆசீர்வதிக்கப்படும்.

Wherefore, our father hath not spoken of our seed alone, but also of all the house of Israel, pointing to the covenant which should be fulfilled in the latter days; which covenant the Lord made to our father Abraham, saying: In thy seed shall all the kindreds of the earth be blessed.

19 அந்தப்படியே, நேபியாகிய நான், இந்தக் காரியங்களைக் குறித்து அவர்களிடத்தில் அதிகம் பேசினேன்; ஆம், பிற்காலங்களில் யூதர்களின் சீர்படுதல் குறித்து அவர்களிடத்தில் பேசினேன்.

And it came to pass that I, Nephi, spake much unto them concerning these things; yea, I spake unto them concerning the restoration of the Jews in the latter days.

20 இஸ்ரவேலின் வீட்டாரை அல்லது யூதர்களின் சீர்படுதலைக் குறித்துப் பேசப்பட்டிருக்கிற, ஏசாயாவின் வார்த்தைகளை அவர்களிடத்தில் திரும்பவும் விவரித்தோம்; அவர்கள் சீர்படுத்தப்பட்ட பின்பு, அவர்கள் இனி ஒருபோதும் தாறுமாறாக்கப்படவோ அல்லது மறுபடியும் சிதறடிக்கப்படவோ கூடாது. அந்தப்படியே, அவர்கள் சாந்தமுள்ளவர்களாய், கர்த்தருக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தும்படிக்கு, நான் இன்னும் அநேக வார்த்தைகளை என்னுடைய சகோதரர்களிடம் பேசினேன்.

And I did rehearse unto them the words of Isaiah, who spake concerning the restoration of the Jews, or of the house of Israel; and after they were restored they should no more be confounded, neither should they be scattered again. And it came to pass that I did speak many words unto my brethren, that they were pacified and did humble themselves before the Lord.

21 அந்தப்படியே, அவர்கள் மறுபடியும் என்னிடம்: நம் தகப்பன் சொப்பனத்தில் கண்ட இந்தக் காரியத்தின் அர்த்தம் என்ன? அவர் கண்ட விருட்சத்தின் அர்த்தம் என்ன? என்றார்கள்.

And it came to pass that they did speak unto me again, saying: What meaneth this thing which our father saw in a dream? What meaneth the tree which he saw?

22 நான் அவர்களை நோக்கி: அது ஜீவவிருட்சத்திற்கு ஒரு உவமை என்றேன்.

And I said unto them: It was a representation of the tree of life.

23 அவர்கள் என்னை நோக்கி: விருட்சத்திற்கு நடத்திச் சென்ற, நம் தகப்பன் கண்ட இருப்புக்கோலின் அர்த்தம் என்ன? என்றார்கள்.

And they said unto me: What meaneth the rod of iron which our father saw, that led to the tree?

24 நான் அவர்களை நோக்கி: அது தேவனுடைய வார்த்தை என்றும், தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து, அதை உறுதியாய்ப் பிடித்துக் கொள்கிறவர்கள், ஒருக்காலும் அழிவதில்லை என்றும், அவர்களை அழிவுக்குள் நடத்திச்சென்று குருடாக்க, சோதனைகளும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களும், அவர்களை மேற்கொள்ளமுடியாது, என்றேன்.

And I said unto them that it was the word of God; and whoso would hearken unto the word of God, and would hold fast unto it, they would never perish; neither could the temptations and the fiery darts of the adversary overpower them unto blindness, to lead them away to destruction.

25 ஆகையால், நேபியாகிய நான் கர்த்தரின் வார்த்தைக்கு அவர்கள் செவி கொடுக்கவேண்டும் என்று புத்தி சொன்னேன்; ஆம், அவர்கள் சகல காரியங்களிலும், எப்பொழுதும், அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள நினைவுகூரவும், தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவும், நான் பெற்றிருந்த சகல திறமைகளாலும், என் ஆத்துமாவின் முழுஊக்கத்தோடும், அவர்களுக்கு நான் புத்திசொன்னேன்.

Wherefore, I, Nephi, did exhort them to give heed unto the word of the Lord; yea, I did exhort them with all the energies of my soul, and with all the faculty which I possessed, that they would give heed to the word of God and remember to keep his commandments always in all things.

26 அவர்கள் என்னை நோக்கி: நம் தகப்பன் கண்ட தண்ணீருள்ள நதியின் அர்த்தம் என்ன? என்றார்கள்.

And they said unto me: What meaneth the river of water which our father saw?

27 நான் அவர்களிடத்தில், என் தகப்பன் கண்ட தண்ணீர் அசுசி என்றும், அவருடைய மனமோ மற்ற காரியங்களில் வெகுவாய் மூழ்கியிருந்ததால், தண்ணீரின் அசுசியை அவர் காணவில்லை என்றும் சொன்னேன்.

And I said unto them that the water which my father saw was filthiness; and so much was his mind swallowed up in other things that he beheld not the filthiness of the water.

28 நான் அவர்களை நோக்கி, அது ஜீவவிருட்சத்தினின்றும், தேவனுடைய பரிசுத்தவான்களினின்றும், துன்மார்க்கரைப் பிரிக்கும் பயங்கர பிளவு என்றேன்.

And I said unto them that it was an awful gulf, which separated the wicked from the tree of life, and also from the saints of God.

29 அது துன்மார்க்கருக்காக ஆயத்தம்பண்ணப்பட்டதென்று தூதன் என்னிடம் சொன்ன அந்த பயங்கர நரகத்திற்கு அது ஒப்புமையாக இருந்தது என்று நான் அவர்களிடம் சொன்னேன்.

And I said unto them that it was a representation of that awful hell, which the angel said unto me was prepared for the wicked.

30 தேவனுடைய நியாயம் நீதிமான்களிடமிருந்து துன்மார்க்கரைப் பிரித்ததை, நம் தகப்பன் கண்டார் எனவும், மேலும் அதிலிருந்த பிரகாசமோ தேவனை நோக்கி, என்றென்றைக்கும் முடிவில்லாமல் எழும்புகிற அக்கினி ஜுவாலையின் பிரகாசத்தைப்போல இருந்தது எனவும் நான் அவர்களிடத்தில் சொன்னேன்.

And I said unto them that our father also saw that the justice of God did also divide the wicked from the righteous; and the brightness thereof was like unto the brightness of a flaming fire, which ascendeth up unto God forever and ever, and hath no end.

31 அவர்கள் என்னை நோக்கி: இந்தக் காரியம் சோதனைக் காலங்களில் சரீரத்தின் வேதனையைக் குறிக்கிறதா, அல்லது இம்மைக்குரிய சரீரத்தின் மரணத்துக்குப் பின்னர் ஆத்துமாவின் இறுதி நிலையைக் குறிக்கிறதா அல்லது இம்மைக்குரிய காரியங்களைப்பற்றிப் பேசுகிறதா என்றார்கள்.

And they said unto me: Doth this thing mean the torment of the body in the days of probation, or doth it mean the final state of the soul after the death of the temporal body, or doth it speak of the things which are temporal?

32 அந்தப்படியே, நான் அவர்களை நோக்கி, இது இம்மைக்குரிய மற்றும் ஆவிக்குரிய இரண்டு காரியங்களின் அடையாளமாயிருக்கிறது; ஏனெனில் அவர்களது கிரியைகளின்படி அவர்கள் நியாயந்தீர்க்கப்படும்படியான நாள் வரும், ஆம், சோதனைக் காலத்தில் இம்மைக்குரிய சரீரத்தில் நடப்பித்த கிரியைகளின்படியும் நியாயந்தீர்க்கப்படும்படியான நாள் வரும் என்றேன்.

And it came to pass that I said unto them that it was a representation of things both temporal and spiritual; for the day should come that they must be judged of their works, yea, even the works which were done by the temporal body in their days of probation.

33 ஆதலால், அவர்கள் தங்கள் துன்மார்க்கத்தில் மரிப்பார்களெனில், அவர்கள் நீதி சம்மந்தமான, ஆவிக்குரிய காரியங்களிலிருந்து தள்ளப்பட வேண்டும்; ஆதலால் அவர்கள் கிரியைகளின்படி நியாயந்தீர்க்கப்படத்தக்கதாக, தேவனுக்கு முன்பாக நிற்கும்படி கொண்டுவரப்பட வேண்டும்; அவர்கள் கிரியைகள் அசுத்தமானதாய் இருந்தால் அவர்களும் அசுத்தமாயிருக்க வேண்டும்; அவர்கள் அசுத்தமாயிருப்பின், தேவனுடைய ராஜ்யத்தில் அவர்கள் வாசமாயிருக்கமுடியாது; அப்படியிருந்தால் தேவனுடைய ராஜ்ஜியமும் அசுத்தமாயிருக்க வேண்டும்.

Wherefore, if they should die in their wickedness they must be cast off also, as to the things which are spiritual, which are pertaining to righteousness; wherefore, they must be brought to stand before God, to be judged of their works; and if their works have been filthiness they must needs be filthy; and if they be filthy it must needs be that they cannot dwell in the kingdom of God; if so, the kingdom of God must be filthy also.

34 ஆனால் இதோ, நான் உங்களிடத்தில் சொல்லுகிறேன், தேவனுடைய ராஜ்யம் அசுசி இல்லாதது, மேலும் எந்த அசுசியான பொருளும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியாது; ஆகையால் அசுசியாக இருப்பவைகளுக்கென்று அசுசியான இடமும் ஆயத்தப்படுத்தப்பட வேண்டியது அவசியமாயுள்ளது.

But behold, I say unto you, the kingdom of God is not filthy, and there cannot any unclean thing enter into the kingdom of God; wherefore there must needs be a place of filthiness prepared for that which is filthy.

35 நான் சொன்ன, பயங்கர நரகமான ஒரு இடம், அங்கே ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது, பிசாசு அதை ஆயத்தப்படுத்துகிறவனாய் இருக்கிறான்; ஆதலால் தேவனுடைய ராஜ்யத்தில் ஜீவித்தல் அல்லது நான் சொன்ன நியாயத்தின்படி தள்ளப்படுதல், மனுஷருடைய ஆத்துமாக்களின் முடிவான நிலைமையாயிருக்கிறது.

And there is a place prepared, yea, even that awful hell of which I have spoken, and the devil is the preparator of it; wherefore the final state of the souls of men is to dwell in the kingdom of God, or to be cast out because of that justice of which I have spoken.

36 ஆகவே, துன்மார்க்கர் நீதிமான்களிடமிருந்தும், ஆம், எல்லாக் கனிகளைக் காட்டிலும் மிகவும் விலைமதிப்பில்லாததும், தேவனுடைய வரங்கள் எல்லாவற்றிற்கும் மேலானதும், மிகவும் விரும்பப்படத்தக்கதுமான கனியை உடையதாயிருக்கிற, ஜீவவிருட்சத்தினின்றும் விலக்கிவிடப்படுவார்கள். இவ்வாறு நான் என் சகோதரரோடு பேசினேன். ஆமென்.

Wherefore, the wicked are rejected from the righteous, and also from that tree of life, whose fruit is most precious and most desirable above all other fruits; yea, and it is the greatest of all the gifts of God. And thus I spake unto my brethren. Amen.

# 1 நேபி 16

1 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியாகிய நான்
என் சகோதரர்களிடம் பேசி முடித்தபின்பு, இதோ,
அவர்கள் என்னை நோக்கி: எங்களால் தாங்கிக்-
கொள்வதற்கும் அதிகமான கடினமுள்ள காரியங்-
களை நீ எங்களுக்கு அறிவித்திருக்கிறாய் என்-
றார்கள்.
2 அந்தப்படியே, நான் அவர்களை நோக்கி, சத்தி-
யத்தின்படியே துன்மார்க்கருக்கு எதிராகக் கடின-
மான காரியங்களைச் சொன்னேன், நான் நீதிமான்-
களை நியாயவான்களாக்கி, அவர்கள் கடைசி நா-
ளில் உயர்த்தப்படுவார்கள் என்பதற்கு சாட்சியும்
கொடுத்திருக்கிறேன்; ஆகையால் குற்றமுள்ளவர்-
கள் சத்தியத்தைக் கடினமாய் கருதுகிறார்கள்,
ஏனெனில் அது அவர்களை ஊடுருவிச் செல்வதா-
யிருக்கிறது என நான் அறிவேன் என்று சொன்-
னேன்.
3 இப்பொழுதும் என் சகோதரரே, நீங்கள் நீதியுள்ள-
வர்களாய் சத்தியத்தைக் கேட்க மனதாயிருந்து,
நீங்கள் தேவனுக்கு முன்பாக நிமிர்ந்து நடக்கும்-
பொருட்டு, அதற்குச் செவிகொடுத்தால், பின்னர்
நீங்கள் சத்தியத்தின் நிமித்தம் முறுமுறுத்து, நீ எங்-
களுக்கு எதிராகக் கடினமான காரியங்களைப் பே-
சுகிறாய், என்று சொல்லாமல் இருப்பீர்கள் என்-
றான்.
4 அந்தப்படியே, நேபியாகிய நான், அவர்கள் கர்த்த-
ருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி,
என் சகோதரருக்கு முழுக்கருத்துடன் புத்தி சொன்-
னேன்.
5 அந்தப்படியே, நான் அவர்கள் நீதியின் பாதைக-
ளில் நடப்பார்களென்று மகிழ்ச்சியும், பெரு நம்பிக்-
கையும் பெறுமளவிற்கு, அவர்கள் தங்களைக்
கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்தினார்கள்.
6 இப்பொழுது இந்தக் காரியங்கள் எல்லாம், என்
தகப்பன் லெமுவேல் என்றழைத்த பள்ளத்தாக்கி-
லிருந்த கூடாரத்தில், அவர் வாசமாயிருந்தபோது
சொல்லப்பட்டவையும், செய்யப்பட்டவையுமாய்
இருந்தன.
7 அந்தப்படியே, நேபியாகிய நான் இஸ்மவேலின்
குமாரத்திகளில் ஒருத்தியை மனைவியாகக்
கொண்டேன்; என் சகோதரர்களும் இஸ்மவேலின்
குமாரத்திகளைத் தங்களுக்கு மனைவிகளாகக்
கொண்டார்கள்; இஸ்மவேலின் மூத்த குமாரத்தி-
யை சோரம் தனக்கு மனைவியாகக் கொண்டான்.
8 இவ்வாறாக என் தகப்பன், கர்த்தரால் தமக்குக்
கொடுக்கப்பட்டிருந்த கட்டளைகள் அனைத்தை-
யும் நிறைவேற்றினார். மேலும் நேபியாகிய நானும்
கர்த்தரால் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருந்தேன்.

# 1 Nephi 16

And now it came to pass that after I, Nephi, had made an end of speaking to my brethren, behold they said unto me: Thou hast declared unto us hard things, more than we are able to bear.

And it came to pass that I said unto them that I knew that I had spoken hard things against the wicked, according to the truth; and the righteous have I justified, and testified that they should be lifted up at the last day; wherefore, the guilty taketh the truth to be hard, for it cutteth them to the very center.

And now my brethren, if ye were righteous and were willing to hearken to the truth, and give heed unto it, that ye might walk uprightly before God, then ye would not murmur because of the truth, and say: Thou speakest hard things against us.

And it came to pass that I, Nephi, did exhort my brethren, with all diligence, to keep the commandments of the Lord.

And it came to pass that they did humble themselves before the Lord; insomuch that I had joy and great hopes of them, that they would walk in the paths of righteousness.

Now, all these things were said and done as my father dwelt in a tent in the valley which he called Lemuel.

And it came to pass that I, Nephi, took one of the daughters of Ishmael to wife; and also, my brethren took of the daughters of Ishmael to wife; and also Zoram took the eldest daughter of Ishmael to wife.

And thus my father had fulfilled all the commandments of the Lord which had been given unto him. And also, I, Nephi, had been blessed of the Lord exceedingly.

9 அந்தப்படியே, அந்த இரவிலே கர்த்தருடைய சத்-
தம் என் தகப்பனோடு பேசி, மறுதினத்திலே அவர்
வனாந்தரத்திலே தன் பயணத்தை மேற்கொள்ள-
வேண்டுமென அவருக்குக் கட்டளையிட்டது.

And it came to pass that the voice of the Lord spake unto my father by night, and commanded him that on the morrow he should take his journey into the wilderness.

10 அந்தப்படியே, என் தகப்பன் காலையில் எழுந்தி-
ருந்து கூடாரத்தின் வாசலண்டையில் சென்றபொ-
ழுது அவர் மிகுதியாய் அதிசயப்படும்படியாக, வி-
சித்திரவேலைப்பாடமைந்த ஒரு உருண்டையான
பந்து, தரையிலிருப்பதைக் கண்டார்; அது சுத்த
பித்தளையாயிருந்தது. அந்த உருண்டையினுள்
இரண்டு முட்களிருந்தன; அவைகளில் ஒன்று
நாங்கள் வனாந்தரத்தில் போகவேண்டிய வழி-
யைக் காண்பித்தது.

And it came to pass that as my father arose in the morning, and went forth to the tent door, to his great astonishment he beheld upon the ground a round ball of curious workmanship; and it was of fine brass. And within the ball were two spindles; and the one pointed the way whither we should go into the wilderness.

11 அந்தப்படியே, நாங்கள் வனாந்தரத்தில் எங்க-
ளால் எடுத்துச் செல்லமுடிந்த பொருட்களையும்,
கர்த்தர் எங்களுக்குக் கொடுத்தருளிய எல்லா மீத-
மான எங்களின் உணவுப் பண்டங்களையும், ஒன்-
றாகச் சேகரித்தோம்; மேலும் நாங்கள் வனாந்தரத்-
தில் எடுத்துச் செல்லும்படியாக ஒவ்வொரு வித வி-
தைகளையும் எடுத்துக்கொண்டோம்.

And it came to pass that we did gather together whatsoever things we should carry into the wilderness, and all the remainder of our provisions which the Lord had given unto us; and we did take seed of every kind that we might carry into the wilderness.

12 அந்தப்படியே, நாங்கள் எங்கள் கூடாரங்களை
எடுத்துக்கொண்டு, லாமான் நதியைக் கடந்து
வனாந்தரத்தினுள் புறப்பட்டுச் சென்றோம்.

And it came to pass that we did take our tents and depart into the wilderness, across the river Laman.

13 அந்தப்படியே, நாங்கள் நான்கு நாட்களளவும்
தெற்கு தென்கிழக்கு மார்க்கமாய்ப் பயணம் செய்-
து, மறுபடியும் பாளயமிறங்கினோம்; நாங்கள் அந்த
இடத்தை சாசேர் என்று அழைத்தோம்.

And it came to pass that we traveled for the space of four days, nearly a south-southeast direction, and we did pitch our tents again; and we did call the name of the place Shazer.

14 அந்தப்படியே, நாங்கள் எங்கள் விற்களையும்,
அம்புகளையும் எடுத்துக்கொண்டு எங்கள் குடும்-
பத்தாரின் உணவிற்காக வனாந்தரத்தில் வேட்டை-
யாடச் சென்றோம்; நாங்கள் எங்கள் குடும்பத்தா-
ருக்கு உணவை வேட்டையாடின பின்பு, மறுபடியும்
எங்கள் குடும்பத்தாரிடம் வனாந்தரத்திலுள்ள சா-
சேருக்குத் திரும்பிச் சென்றோம். நாங்கள் மறுபடி-
யும் அதே மார்க்கத்தைப் பின்பற்றி சிவந்த சமுத்தி-
ரத்தின் எல்லையோரங்களுக்கு அருகாமையிலி-
ருந்த வனாந்தரத்தின் மிகவும் வளமான பகுதியின்
பக்கமாக வனாந்தரத்தினுள் சென்றோம்.

And it came to pass that we did take our bows and our arrows, and go forth into the wilderness to slay food for our families; and after we had slain food for our families we did return again to our families in the wilderness, to the place of Shazer. And we did go forth again in the wilderness, following the same direction, keeping in the most fertile parts of the wilderness, which were in the borders near the Red Sea.

15 அந்தப்படியே, எங்கள் விற்களாலும், அம்புகளா-
லும், கற்களாலும், கவண்களினாலும், வழியிலே
எங்கள் உணவை வேட்டையாடி நாங்கள் அநேக
நாட்கள் பிரயாணம் செய்தோம்.

And it came to pass that we did travel for the space of many days, slaying food by the way, with our bows and our arrows and our stones and our slings.

16 அந்த வனாந்தரத்தின் மிக வளமான பகுதிகளில்
எங்களை நடத்திச் சென்ற, அந்த உருண்டையின்
வழிகாட்டுதலையே நாங்கள் பின்பற்றிச் சென்-
றோம்.

And we did follow the directions of the ball, which led us in the more fertile parts of the wilderness.

17 நாங்கள் அநேக நாட்கள் பிரயாணம் செய்த பின்-
பு, மறுபடியும் நாங்கள் இளைப்பாறுவதற்கும், எங்-
கள் குடும்பத்தாருக்கு ஆகாரம் பெறுவதற்கும் நாங்-
கள் சில நாட்கள் பாளயமிறங்கினோம்.

And after we had traveled for the space of many days, we did pitch our tents for the space of a time, that we might again rest ourselves and obtain food for our families.

18 அந்தப்படியே, நேபியாகிய நான் உணவை வேட்டையாடச் சென்றபொழுது, இதோ, சுத்த உருக்கால் செய்யப்பட்டிருந்த என் வில்லை முறித்துப்போட்டேன், நான் என் வில்லை முறித்த பின்பு, நான் வில்லை இழந்ததினிமித்தம் என் சகோதரர் என்மேல் கோபமடைந்தார்கள், ஏனெனில் நாங்கள் எந்த உணவையும் பெறமுடியவில்லை.

And it came to pass that as I, Nephi, went forth to slay food, behold, I did break my bow, which was made of fine steel; and after I did break my bow, behold, my brethren were angry with me because of the loss of my bow, for we did obtain no food.

19 அந்தப்படியே, நாங்கள் எங்கள் குடும்பத்தாருக்கு உணவு இல்லாமல் திரும்பினோம், அவர்கள் தங்கள் பிரயாணத்தினால் மிகவும் களைத்துப்போனவர்களாய், உணவுத் தேவையினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

And it came to pass that we did return without food to our families, and being much fatigued, because of their journeying, they did suffer much for the want of food.

20 அந்தப்படியே, லாமானும், லெமுவேலும், இஸ்மவேலின் குமாரர்களும், வனாந்தரத்தில் அவர்களுடைய பாடுகளினிமித்தமும், உபத்திரவங்களினிமித்தமும், மிகவும் முறுமுறுக்கத் தொடங்கினார்கள்; என் தகப்பனும் தன் கர்த்தராகிய தேவனுக்கு எதிராக முறுமுறுக்கத் தொடங்கினார்; ஆம், மேலும் அவர்கள் எல்லோரும் மிகவும் துக்கமடைந்தவர்களாய், கர்த்தருக்கு எதிராகக் கூட முறுமுறுத்தார்கள்.

And it came to pass that Laman and Lemuel and the sons of Ishmael did begin to murmur exceedingly, because of their sufferings and afflictions in the wilderness; and also my father began to murmur against the Lord his God; yea, and they were all exceedingly sorrowful, even that they did murmur against the Lord.

21 இப்பொழுது, அந்தப்படியே, நேபியாகிய நான், என் வில்லை இழந்ததினிமித்தமும் என் சகோதரர்களுடைய விற்களின் விறைப்புத் தன்மையை இழந்ததினிமித்தமும், நான் என் சகோதரர்களுடன் மிகவும் உபத்திரவப்பட்டேன், அது நாங்கள் உணவைப்பெற முடியாத அளவிற்கு, ஆம், மிகவும் சிரமமாயிருக்கத் தொடங்கியது.

Now it came to pass that I, Nephi, having been afflicted with my brethren because of the loss of my bow, and their bows having lost their springs, it began to be exceedingly difficult, yea, insomuch that we could obtain no food.

22 அந்தப்படியே, அவர்கள் தங்களுடைய கர்த்தராகிய தேவனுக்கு எதிராக முறையிடும்படி, தங்கள் இருதயங்களை மறுபடியும் கடினப்படுத்தினதினிமித்தம் நேபியாகிய நான் என் சகோதரருடன் அதிகம் பேசினேன்.

And it came to pass that I, Nephi, did speak much unto my brethren, because they had hardened their hearts again, even unto complaining against the Lord their God.

23 அந்தப்படியே, நேபியாகிய நான் மரத்தால் ஒரு வில்லையும், ஒரு நேரான கோலால் அம்பையும் உண்டுபண்ணினேன்; ஆகையால் நான் வில்லாலும், அம்பாலும் கவண்களினாலும், கற்களினாலும் ஆயுதந்தரித்துக்கொண்டேன். நான் என் தகப்பனை நோக்கி: நான் உணவைப் பெறும்படி எங்கே செல்லவேண்டும்? என்று கேட்டேன்.

And it came to pass that I, Nephi, did make out of wood a bow, and out of a straight stick, an arrow; wherefore, I did arm myself with a bow and an arrow, with a sling and with stones. And I said unto my father: Whither shall I go to obtain food?

24 அந்தப்படியே, என் வார்த்தைகளினிமித்தம் அவர்கள் தங்களைத் தாழ்த்தினபடியால், அவர் கர்த்தரிடம் விசாரித்தார்; என் ஆத்தும ஊக்கத்தின்படியே நான் அவர்களிடம் அநேக காரியங்களைச் சொன்னேன்.

And it came to pass that he did inquire of the Lord, for they had humbled themselves because of my words; for I did say many things unto them in the energy of my soul.

25 அந்தப்படியே, கர்த்தருடைய சத்தம் என் தகப்பனுக்கு உண்டாயிற்று; கர்த்தருக்கு விரோதமாய் அவர் முறுமுறுத்ததினிமித்தம் ஆழ்ந்த துக்கத்திலே அவரைக்கொண்டுசெல்லும் அளவிற்கு மெய்யாகவே சிட்சிக்கப்பட்டார்.

And it came to pass that the voice of the Lord came unto my father; and he was truly chastened because of his murmuring against the Lord, insomuch that he was brought down into the depths of sorrow.

26 அந்தப்படியே, கர்த்தருடைய சத்தம் அவரிடம்:
உருண்டையின் மேல் உன் பார்வையைச் செலுத்தி
அதன்மேல் எழுதியிருக்கும் காரியங்களைப் பார்
என்றது.

And it came to pass that the voice of the Lord said unto him: Look upon the ball, and behold the things which are written.

27 அந்தப்படியே, உருண்டையின்மேல் எழுதப்பட்டி-
ருக்கும் காரியங்களை என் தகப்பன் கண்டபொழு-
து அவரும், என் சகோதரர்களும், இஸ்மவேலின் கு-
மாரர்களும், எங்கள் மனைவியரும் பயந்து மிகவும்
நடுங்கினார்கள்.

And it came to pass that when my father beheld the things which were written upon the ball, he did fear and tremble exceedingly, and also my brethren and the sons of Ishmael and our wives.

28 அந்தப்படியே, நேபியாகிய நான் அந்த உருண்-
டையினுள்ளிருந்த முட்களைப் பார்த்தேன், நாங்-
கள் அவைகளிடத்தில் காட்டும் விசுவாசம், ஊக்-
கம் மற்றும் கவனம் ஆகியவைகளுக்கு ஏற்ப
அவைகள் வேலை செய்தன.

And it came to pass that I, Nephi, beheld the pointers which were in the ball, that they did work according to the faith and diligence and heed which we did give unto them.

29 அவைகளின்மேல் புதிய எழுத்துக்கள் எழுதப்-
பட்டிருந்தன, அவைகள் வாசிப்பதற்கு எளிதாயி-
ருந்தன, கர்த்தருடைய வழிகளைக் குறித்த புரிந்து-
கொள்ளுதலை எங்களுக்குக் கொடுத்தன; நாங்-
கள் அதினிடத்தில் காட்டும் விசுவாசம் மற்றும்
ஊக்கம் ஆகியவற்றிற்கேற்ப அவைகள் அவ்வப்-
போது எழுதப்பட்டுக்கொண்டும் மாறிக்கொண்டு-
மிருந்தன. மேலும், இவ்வாறாக சிறிய காரியங்க-
ளால் கர்த்தர் பெரிய காரியங்களைக் கொண்டுவர-
முடியும் என்பதை நாம் காண்கிறோம்.

And there was also written upon them a new writing, which was plain to be read, which did give us understanding concerning the ways of the Lord; and it was written and changed from time to time, according to the faith and diligence which we gave unto it. And thus we see that by small means the Lord can bring about great things.

30 அந்தப்படியே, நேபியாகிய நான், அந்த உருண்-
டையில் கொடுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலின்ப-
டியே மலையின் உச்சிக்குப் போனேன்.

And it came to pass that I, Nephi, did go forth up into the top of the mountain, according to the directions which were given upon the ball.

31 அந்தப்படியே, எங்கள் குடும்பத்தாருக்கு வேண்-
டிய உணவைப்பெறுமளவிற்கு, நான் காட்டுவிலங்-
குகளை வேட்டையாடினேன்.

And it came to pass that I did slay wild beasts, insomuch that I did obtain food for our families.

32 அந்தப்படியே, நான் கொன்ற விலங்குகளைச் சு-
மந்துகொண்டு எங்கள் கூடாரங்களுக்குத் திரும்பி-
னேன், மேலும் இப்பொழுது நான் உணவைக்
கொண்டுவந்தேன் என்று அவர்கள் கண்டபொழு-
து அவர்களுடைய சந்தோஷம் எவ்வளவு பெரிதா-
யிருந்தது, அந்தப்படியே, அவர்கள் தங்களைக்
கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்தி அவருக்கு நன்றி-
செலுத்தினார்கள்.

And it came to pass that I did return to our tents, bearing the beasts which I had slain; and now when they beheld that I had obtained food, how great was their joy! And it came to pass that they did humble themselves before the Lord, and did give thanks unto him.

33 அந்தப்படியே, நாங்கள் மறுபடியும் எங்கள் பய-
ணத்தை மேற்கொண்டு, ஏறக்குறைய தொடக்கத்தி-
லிருந்த மார்க்கத்தின்படியே பயணம் செய்தோம்;
நாங்கள் அநேக நாட்கள் அளவும் பயணம் செய்த-
பின்பு, சிறிது காலம் தங்கியிருக்கும்படியாக மறுப-
டியும் பாளயமிறங்கினோம்.

And it came to pass that we did again take our journey, traveling nearly the same course as in the beginning; and after we had traveled for the space of many days we did pitch our tents again, that we might tarry for the space of a time.

34 அந்தப்படியே, இஸ்மவேல் மரித்து நாகோம் என்-
னும் இடத்திலே அடக்கம் பண்ணப்பட்டான்.

And it came to pass that Ishmael died, and was buried in the place which was called Nahom.

35 அந்தப்படியே, இஸ்மவேலின் குமாரத்திகள், தங்-
களுடைய தகப்பனை இழந்ததின் நிமித்தமும்,
வனாந்தரத்தில் அவர்களுடைய உபத்திரவங்க-
ளின் நிமித்தமும் மிகவும் துக்கப்பட்டார்கள்; எருச-
லேம் தேசத்திலிருந்து அவர்களை அவர் அழைத்-
துக்கொண்டு வந்ததினிமித்தம் அவர்கள் என்
தகப்பனுக்கு எதிராக முறுமுறுத்து அவரை நோக்-
கி: எங்கள் தகப்பன் மரித்துப்போனார்; ஆம், நாங்-
கள் வனாந்தரத்தில் அதிகம் அலைந்து மிகுந்த
உபத்திரவத்தையும், பசியையும், தாகத்தையும்,
களைப்பையும் சகித்தோம்; இந்த எல்லாப் பாடுக-
ளுக்கும் பின்பு, நாங்கள் இந்த வனாந்தரத்தில் பசி-
யால் அழியவேண்டும் என்றார்கள்.

And it came to pass that the daughters of Ishmael did mourn exceedingly, because of the loss of their father, and because of their afflictions in the wilderness; and they did murmur against my father, because he had brought them out of the land of Jerusalem, saying: Our father is dead; yea, and we have wandered much in the wilderness, and we have suffered much affliction, hunger, thirst, and fatigue; and after all these sufferings we must perish in the wilderness with hunger.

36 இவ்வாறாக அவர்கள் என் தகப்பனுக்கு எதிராக-
வும், எனக்கெதிராகவும் முறுமுறுத்தார்கள்; அவர்-
கள் எருசலேமுக்கு மீண்டும் திரும்பிப்போகும்படி
வாஞ்சித்தார்கள்.

And thus they did murmur against my father, and also against me; and they were desirous to return again to Jerusalem.

37 லாமான், லெமுவேலையும் இஸ்மவேலின் குமார-
ரையும் நோக்கி: இதோ, நம் தகப்பனையும், தன்னு-
டைய மூத்த சகோதரராகிய நம்மை ஆளுகிறவனா-
யும், ஆசிரியனாயும் இருக்கும்படி பொறுப்பெடுத்-
துக்கொண்ட, நம் சகோதரனாகிய நேபியையும்
நாம் கொலை செய்வோம் என்றான்.

And Laman said unto Lemuel and also unto the sons of Ishmael: Behold, let us slay our father, and also our brother Nephi, who has taken it upon him to be our ruler and our teacher, who are his elder brethren.

38 இப்பொழுதும், கர்த்தர் அவனோடு பேசினார்
என்றும், தூதர்கள் அவனுக்கு ஊழியம் செய்தார்-
கள் என்றும் சொல்லுகிறான். ஆனாலும் இதோ,
அவன் நம்மிடத்தில் பொய்யுரைத்தான் என நாம்
அறிவோம்; அவன் இந்தக் காரியங்களைச் சொல்-
லி, தன்னுடைய தந்திரங்களைக்கொண்டு, நம்மு-
டைய கண்களை ஏமாற்றி, ஒருவேளை நம்மை
ஒரு அந்நியமான வனாந்தரத்திற்கு அழைத்துச்
செல்லலாம் என்று எண்ணுகிறான்; நம்மை வழிந-
டத்திச் சென்றபின்பு, அவனுடைய சித்தத்தின்படி-
யும், விருப்பத்தின்படியும் தன்னை நம்மேல் ராஜா-
வாகவும், ஆளுகிறவனாகவும் ஏற்படுத்திக்கொள்-
ளலாம் என அவன் நினைத்திருக்கிறான். இவ்வ-
கையாக லாமான் அவர்கள் இருதயத்தில் கோபமூ-
ளும்படி தூண்டினான்.

Now, he says that the Lord has talked with him, and also that angels have ministered unto him. But behold, we know that he lies unto us; and he tells us these things, and he worketh many things by his cunning arts, that he may deceive our eyes, thinking, perhaps, that he may lead us away into some strange wilderness; and after he has led us away, he has thought to make himself a king and a ruler over us, that he may do with us according to his will and pleasure. And after this manner did my brother Laman stir up their hearts to anger.

39 அந்தப்படியே, கர்த்தர் எங்களோடிருந்தார், ஆம்,
கர்த்தருடைய சத்தம் உண்டாகி, அநேக வார்த்தை-
கள் அவர்களிடத்தில் பேசி அவர்களை மிகவும்
சிட்சித்தது, கர்த்தருடைய வார்த்தையினால் அவர்-
கள் சிட்சிக்கப்பட்ட பின்பு, நாங்கள் அழிந்து போ-
காதபடிக்கு மீண்டும் எங்களைப் போஷித்து இவ்வ-
ளவாய்க் கர்த்தர் எங்களை ஆசீர்வதிக்கும் அள-
வுக்கு அவர்கள் தங்கள் கோபத்தைவிட்டு, தங்கள்
பாவங்களிலிருந்து மனந்திரும்பினார்கள்.

And it came to pass that the Lord was with us, yea, even the voice of the Lord came and did speak many words unto them, and did chasten them exceedingly; and after they were chastened by the voice of the Lord they did turn away their anger, and did repent of their sins, insomuch that the Lord did bless us again with food, that we did not perish.

# 1 நேபி 17

1 அந்தப்படியே, நாங்கள் வனாந்தரத்தில் மறுபடியும்
எங்கள் பயணத்தை மேற்கொண்டோம், அந்தச் சம-
யம் முதல் நாங்கள் அநேகமாக கிழக்கு நோக்கிப்
பயணம் செய்தோம். நாங்கள் வனாந்தரத்தில் மி-
குந்த உபத்திரவங்களினூடாக கடந்துபோனோம்;
மேலும் எங்கள் ஸ்திரீகள் வனாந்தரத்தில் பிள்-
ளைகளைப் பெற்றார்கள்.
2 நாங்கள் வனாந்தரத்தில் பச்சை மாமிசத்தை பு-
சித்து ஜீவித்தபொழுதும், எங்கள் ஸ்திரீகள் தங்கள்
பிள்ளைகளுக்கு தாய்ப்பாலை நிறையக் கொடுத்-
தும், ஆண்களைப்போல பெலமுள்ளவர்களாக-
வும் இருக்குமளவாய்க் கர்த்தருடைய ஆசீர்வாதம்
எங்கள்மேல் மிகவும் பெரிதாயிருந்தது; அவர்கள்
தங்கள் பயணத்தை முறுமுறுப்பில்லாமல் சகிக்கத்
தொடங்கினார்கள்.
3 இவ்வாறு தேவனுடைய கட்டளைகள் நிறை-
வேற்றப்பட வேண்டும் என்பதை நாம் பார்க்கி-
றோம். மேலும் மனுபுத்திரர் தேவனுடைய கட்ட-
ளைகளைக் கைக்கொள்வார்களெனில், அவர்
அவர்களைப் போஷித்து, பெலப்படுத்தி, தாம்
அவர்களுக்குக் கட்டளையிட்ட காரியத்தை அவர்-
கள் நிறைவேற்றும்படியான வழியை அவர்களுக்-
கு அளிப்பார்; ஆகையால் நாங்கள் வனாந்தரத்தில்
தங்கி வாசமாயிருந்தபொழுது அவர் எங்களுக்கு
வழிவகைகளை அளித்தார்.
4 நாங்கள் அநேக வருஷகாலம், ஆம், எட்டு வரு-
ஷம் வனாந்தரத்திலே தங்கியிருந்தோம்.
5 நாங்கள் வந்தடைந்த இடத்தை, அதனின் அதிக-
மான கனிகள் மற்றும் காட்டுத்தேனின் நிமித்தம்
நாங்கள் அதை உதாரத்துவஸ்தலம் என்று
அழைத்தோம்; மேலும் நாங்கள் அழிந்துபோகாதப-
டிக்கு அந்தக் காரியங்கள் எல்லாம் கர்த்தரால்
ஆயத்தப்படுத்தப்பட்டிருந்தன. நாங்கள் ஒரு சமுத்-
திரத்தைக் கண்டு அதை இரியாந்தூம் என்று
அழைத்தோம். அதற்கு திரளான தண்ணீர்கள் என்-
று அர்த்தமாம்.
6 அந்தப்படியே, நாங்கள் கடற்கரையோரமாகப் பா-
ளயமிறங்கினோம்; இருப்பினும் எங்களால் எழுத-
முடியாத அளவிற்கு அநேக உபத்திரவங்களையும்
கஷ்டங்களையும் நாங்கள் அனுபவித்தபோதிலும்,
ஆம், கடற்கரையருகே வந்தபொழுது நாங்கள் மிகு-
தியாய் களிகூர்ந்தோம்; மேலும் அங்கிருந்த அதிக-
மான கனிகளின் நிமித்தம் அந்த இடத்தை உதாரத்-
துவஸ்தலம் என்று அழைத்தோம்.

# 1 Nephi 17

And it came to pass that we did again take our journey in the wilderness; and we did travel nearly eastward from that time forth. And we did travel and wade through much affliction in the wilderness; and our women did bear children in the wilderness.

And so great were the blessings of the Lord upon us, that while we did live upon raw meat in the wilderness, our women did give plenty of suck for their children, and were strong, yea, even like unto the men; and they began to bear their journeyings without murmurings.

And thus we see that the commandments of God must be fulfilled. And if it so be that the children of men keep the commandments of God he doth nourish them, and strengthen them, and provide means whereby they can accomplish the thing which he has commanded them; wherefore, he did provide means for us while we did sojourn in the wilderness.

And we did sojourn for the space of many years, yea, even eight years in the wilderness.

And we did come to the land which we called Bountiful, because of its much fruit and also wild honey; and all these things were prepared of the Lord that we might not perish. And we beheld the sea, which we called Irreantum, which, being interpreted, is many waters.

And it came to pass that we did pitch our tents by the seashore; and notwithstanding we had suffered many afflictions and much difficulty, yea, even so much that we cannot write them all, we were exceedingly rejoiced when we came to the seashore; and we called the place Bountiful, because of its much fruit.

7 அந்தப்படியே, நேபியாகிய நான் உதாரத்துவஸ்தலத்தில் அநேக நாட்களளவுமிருந்த பின்பு, கர்த்தருடைய சத்தம் எனக்குண்டாகி: எழுந்திருந்து மலைக்குப் போ என்றது. அந்தப்படியே, நான் எழுந்திருந்து மலையின்மேலே போய், கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டேன்.

And it came to pass that after I, Nephi, had been in the land of Bountiful for the space of many days, the voice of the Lord came unto me, saying: Arise, and get thee into the mountain. And it came to pass that I arose and went up into the mountain, and cried unto the Lord.

8 அந்தப்படியே, கர்த்தர் என்னிடம் பேசி: நான் உன் ஜனத்தை இந்தத் தண்ணீர்களைக் கடந்து கொண்டு செல்லும்படி, நான் உனக்குக் காண்பிக்கும் விதமாக நீ ஒரு கப்பலைக் கட்டவேண்டும் என்றார்.

And it came to pass that the Lord spake unto me, saying: Thou shalt construct a ship, after the manner which I shall show thee, that I may carry thy people across these waters.

9 நான் அவரை நோக்கி: கர்த்தாவே, நீர் எனக்குக் காண்பித்த பிரகாரம், கப்பலைக் கட்டுவதற்கான கருவிகளை நான் செய்வதற்கு உருக்கக்கூடிய கனிமங்களைக் கண்டுபிடிக்க நான் எங்கே செல்ல வேண்டும், என்றேன்.

And I said: Lord, whither shall I go that I may find ore to molten, that I may make tools to construct the ship after the manner which thou hast shown unto me?

10 அந்தப்படியே, கருவிகளைச் செய்யும்படிக்கு, உலோகக் கனிமங்களை நான் கண்டுபிடிக்க எங்கே செல்லவேண்டுமென, கர்த்தர் எனக்குச் சொன்னார்.

And it came to pass that the Lord told me whither I should go to find ore, that I might make tools.

11 அந்தப்படியே, நேபியாகிய நான் நெருப்பை ஊதும்படியாக, மிருகங்களின் தோல்களினால் ஒரு துருத்தியை உண்டுபண்ணினேன்; நான் துருத்தியை உண்டுபண்ணின பின்பு, ஊதுவதற்கு நெருப்பை உண்டுபண்ணும்படியாக, இரண்டு கற்களை ஒன்றாய் அடித்தேன்.

And it came to pass that I, Nephi, did make a bellows wherewith to blow the fire, of the skins of beasts; and after I had made a bellows, that I might have wherewith to blow the fire, I did smite two stones together that I might make fire.

12 நாங்கள் வனாந்தரத்தில் பயணம் செய்யும்போது, நெருப்பை உண்டாக்கும்படி கர்த்தர் இதுவரை எங்களை விடவில்லை; ஏனெனில் அவர், நீங்கள் சமைக்கவேண்டியிராதபடி உங்கள் உணவை மதுரமாக்குவேன் என்றார்.

For the Lord had not hitherto suffered that we should make much fire, as we journeyed in the wilderness; for he said: I will make thy food become sweet, that ye cook it not;

13 நான் வனாந்தரத்தில் உங்களுக்கு ஒளியாயிருப்பேன்; நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொள்வீர்களெனில், நான் உங்களுக்கு முன்பாக வழியை ஆயத்தப்படுத்துவேன்; ஆகையால், என் கட்டளைகளைக் கைக்கொள்ளும் அளவில், நீங்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி நடத்திச் செல்லப்படுவீர்கள்; மேலும் என்னால் நடத்திச் செல்லப்படுகிறீர்கள் என்பதை அறிந்து கொள்வீர்கள் என்றார்.

And I will also be your light in the wilderness; and I will prepare the way before you, if it so be that ye shall keep my commandments; wherefore, inasmuch as ye shall keep my commandments ye shall be led towards the promised land; and ye shall know that it is by me that ye are led.

14 ஆம், நீங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை வந்தடைந்தபின்பு, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்பதையும்; கர்த்தராகிய நான், அழிவிலிருந்து உங்களைத் தப்புவித்தேன், ஆம், எருசலேம் தேசத்திலிருந்து உங்களைக்கொண்டு வந்தவர் நான் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள் என்றும் கர்த்தர் சொன்னார்.

Yea, and the Lord said also that: After ye have arrived in the promised land, ye shall know that I, the Lord, am God; and that I, the Lord, did deliver you from destruction; yea, that I did bring you out of the land of Jerusalem.

15 ஆகையால், நேபியாகிய நான் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி முயன்றேன், மேலும் விசுவாசத்தோடும் கருத்தோடும் இருக்கும்படி என் சகோதரருக்குப் புத்தி சொன்னேன்.

Wherefore, I, Nephi, did strive to keep the commandments of the Lord, and I did exhort my brethren to faithfulness and diligence.

16 அந்தப்படியே, கல்லிலிருந்து உருக்கிய உலோகத்
தாதுவிலிருந்து நான் கருவிகளைச் செய்தேன்.

And it came to pass that I did make tools of the ore which I did molten out of the rock.

17 நான் கப்பலைக் கட்டப்போகிறேன் என்பதை
என் சகோதரர் கண்டபொழுது, அவர்கள் எனக்கெ-
திராக முறுமுறுக்கத் தொடங்கி: எங்கள் சகோதரன்
மதியீனன், ஏனெனில் தான் ஒரு கப்பலைக் கட்ட-
லாம் என நினைக்கிறான்; ஆம், இந்தப் பெரிதான
தண்ணீர்களைக் கடந்து செல்லலாம் எனவும்
எண்ணுகிறான் என்றும் சொன்னார்கள்.

And when my brethren saw that I was about to build a ship, they began to murmur against me, saying: Our brother is a fool, for he thinketh that he can build a ship; yea, and he also thinketh that he can cross these great waters.

18 இவ்வாறாக என் சகோதரர் எனக்கெதிராக முறை-
யிட்டு, நான் கப்பலைக் கட்டுவேன் என்பதை
அவர்கள் விசுவாசியாதலால், அவர்கள் வேலை
செய்யாதிருக்க விரும்பினார்கள்; நான் கர்த்தரால்
அறிவுறுத்தப்பட்டிருக்கிறேன் என்பதையும் அவர்-
கள் நம்பவில்லை.

And thus my brethren did complain against me, and were desirous that they might not labor, for they did not believe that I could build a ship; neither would they believe that I was instructed of the Lord.

19 இப்பொழுதும் அந்தப்படியே, நேபியாகிய நான்,
அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் மிகு-
தியாய் துக்கமடைந்தேன்; நான் துக்கமடையத்
தொடங்கினேன் என்பதை அவர்கள் கண்டபொழு-
து அவர்கள் தங்கள் இருதயங்களில் மகிழ்ந்து, என்
நிமித்தமாகக் களிகூர்ந்து: நீ கப்பலைக் கட்டமுடி-
யாது என்பதை நாங்கள் அறிவோம், ஏனெனில் நீ
நிதானிப்பதில் குறைவுள்ளவனாயிருக்கிறாய்
என்பதை அறிவோம்; ஆகையால் இப்படிப்பட்ட
பெரிதான ஒரு காரியத்தை உன்னால் சாதிக்க முடி-
யாது என்று சொன்னார்கள்.

And now it came to pass that I, Nephi, was exceedingly sorrowful because of the hardness of their hearts; and now when they saw that I began to be sorrowful they were glad in their hearts, insomuch that they did rejoice over me, saying: We knew that ye could not construct a ship, for we knew that ye were lacking in judgment; wherefore, thou canst not accomplish so great a work.

20 தன் இருதயத்தின் மதியீன கற்பனைகளினால்
நடத்திச் செல்லப்பட்ட, நம் தகப்பனைப்போல நீ
இருக்கிறாய்; ஆம், அவர் நம்மை எருசலேம் தேசத்-
தைவிட்டு வழிநடத்தி வந்தார்; அநேக வருஷ கால-
மும் நாம் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தோம்;
நம் ஸ்திரீகள் நிறைகர்ப்பிணிகளாய் பாடுபட்டார்-
கள்; அவர்கள் வனாந்தரத்தில் பிள்ளைகளைப்
பெற்று, மரணத்தைத் தவிர சகல காரியங்களிலும்
துன்பம் அனுபவித்தார்கள்; அவர்கள் இந்த உபத்-
திரவங்களை அனுபவிப்பதைக்காட்டிலும், எருச-
லேமைவிட்டு வருவதற்கு முன்னமே மரித்துப்போ-
யிருப்பார்களானால், அது அவர்களுக்கு நலமாயி-
ருந்திருக்கும்.

And thou art like unto our father, led away by the foolish imaginations of his heart; yea, he hath led us out of the land of Jerusalem, and we have wandered in the wilderness for these many years; and our women have toiled, being big with child; and they have borne children in the wilderness and suffered all things, save it were death; and it would have been better that they had died before they came out of Jerusalem than to have suffered these afflictions.

21 இதோ, இந்த அநேக வருஷகாலம் நாங்கள்
வனாந்தரத்தில் பாடனுபவித்தோம், இந்தக் காலத்-
தில் நாங்கள் எங்கள் சுதந்திர தேசத்தையும் எங்க-
ளுக்குரியவைகளையும் அனுபவித்திருப்போம்;
ஆம், நாங்கள் மகிழ்ச்சியாயிருந்திருப்போம்.

Behold, these many years we have suffered in the wilderness, which time we might have enjoyed our possessions and the land of our inheritance; yea, and we might have been happy.

22 எருசலேம் தேசத்திலே இருந்த ஜனங்கள் நீதிமான்கள் என நாங்கள் அறிவோம்; ஏனெனில் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே அவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களையும், தீர்மானங்களையும் அவருடைய எல்லா கட்டளைகளையும் கைக்கொண்டார்கள்; ஆகையால் அவர்கள் நீதியுள்ள ஜனங்கள் என்று நாங்கள் அறிவோம், நம்முடைய தகப்பன் அவர்களுக்கு நியாயம்செய்து, நாம் அவர் வார்த்தைக்குச் செவிகொடுப்போம் என்பதால், நம்மை வழி விலக்கி நடத்தி வந்தார்; ஆம், நம் சகோதரனும் அவரைப்போலவே இருக்கிறான். மேலும் இந்த விதமான வார்த்தைகளாலே என் சகோதரர்கள் முறுமுறுத்து எங்களுக்கெதிராக முறையிட்டார்கள்.

And we know that the people who were in the land of Jerusalem were a righteous people; for they kept the statutes and judgments of the Lord, and all his commandments, according to the law of Moses; wherefore, we know that they are a righteous people; and our father hath judged them, and hath led us away because we would hearken unto his words; yea, and our brother is like unto him. And after this manner of language did my brethren murmur and complain against us.

23 அந்தப்படியே, நேபியாகிய நான் அவர்களிடம் பேசி: இஸ்ரவேல் புத்திரராகிய நம் பிதாக்கள், கர்த்தருடைய வார்த்தைக்குச் செவிகொடாமல் இருந்திருந்தால், அவர்கள் எகிப்தியர்களின் கைகளிலிருந்து வெளியே நடத்திவரப்பட்டிருப்பார்கள் என்பதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? என்றேன்.

And it came to pass that I, Nephi, spake unto them, saying: Do ye believe that our fathers, who were the children of Israel, would have been led away out of the hands of the Egyptians if they had not hearkened unto the words of the Lord?

24 ஆம், அவர்களை அடிமைத்தனத்திலிருந்து வெளியே வழிநடத்திச் செல்லவேண்டும் என்பதை மோசேக்குக்குக் கர்த்தர் கட்டளையிடாதிருந்திருந்தால், அவர்கள் அடிமைத்தனத்திலிருந்து வழிநடத்திச் செல்லப்பட்டிருப்பார்கள் என எண்ணுகிறீர்களா?

Yea, do ye suppose that they would have been led out of bondage, if the Lord had not commanded Moses that he should lead them out of bondage?

25 இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரர் அடிமைத்தனத்தில் இருந்தார்கள் என நீங்கள் அறிவீர்கள்; அவர்கள் செய்வதற்கு கடினமான வேலைகளால் சுமத்தப்பட்டிருந்தார்கள் எனவும் அறிவீர்கள்; ஆகையால் அவர்கள் அடிமைத்தனத்திற்கு வெளியே கொண்டுவரப்படவேண்டும் என்பது அவர்களுக்கு நன்மையான காரியமாக இருக்க வேண்டும் என்று நீங்கள் அறிவீர்கள்.

Now ye know that the children of Israel were in bondage; and ye know that they were laden with tasks, which were grievous to be borne; wherefore, ye know that it must needs be a good thing for them, that they should be brought out of bondage.

26 இப்பொழுதும் அந்தப் பெரிதான காரியத்தைச் செய்யும்படி மோசே கர்த்தரால் கட்டளையிடப்பட்டிருந்தான் என்றும் நீங்கள் அறிவீர்கள்; அவனுடைய வார்த்தையினால் சிவந்த சமுத்திரம் இங்கேயும் அங்கேயுமாய்ப் பிரிக்கப்பட்டு அவர்கள் வெட்டாந்தரையின் வழியாகக் கடந்து போனார்கள் என்றும் நீங்கள் அறிவீர்கள்.

Now ye know that Moses was commanded of the Lord to do that great work; and ye know that by his word the waters of the Red Sea were divided hither and thither, and they passed through on dry ground.

27 ஆனால் பார்வோனின் சேனைகளாகிய எகிப்தியர் சிவந்த சமுத்திரத்தில் அமிழ்ந்து போனார்கள் என்றும் நீங்கள் அறிவீர்கள்.

But ye know that the Egyptians were drowned in the Red Sea, who were the armies of Pharaoh.

28 அவர்கள் வனாந்தரத்தில் மன்னாவினால் போஷிக்கப்பட்டார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

And ye also know that they were fed with manna in the wilderness.

29 ஆம், மோசே தன்னுள்ளிருந்த தேவனின் வல்லமையின்படியே தன் வார்த்தையினால் கன்மலையை அடித்த பொழுது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தாகத்தைத் தணிக்கும்படி, அங்கிருந்து தண்ணீர் வந்ததையும் நீங்கள் அறிவீர்கள்.

Yea, and ye also know that Moses, by his word according to the power of God which was in him, smote the rock, and there came forth water, that the children of Israel might quench their thirst.

30 அவர்களின் தேவனாகிய கர்த்தரும், மீட்பருமா-
னவர் அவர்களுக்கு முன் சென்று, பகலிலே வழிந-
டத்தியும், இரவிலே ஒளியைத் தந்தும், மனுஷன்
பெற்றுக்கொள்ளத் தகுதியான எல்லாக் காரியங்க-
ளையும் அவர்களுக்குச் செய்தும், வழிநடத்தப்பட்-
டும் இருந்தபோதிலும், அவர்கள் தங்கள் இருதயங்-
களைக் கடினப்படுத்தி மனங்களைக் குருடாக்கி,
மோசேக்குக்கும், மெய்யான ஜீவனுள்ள தேவனுக்-
கும் எதிராகவும் நிந்தனை செய்தார்கள்.

And notwithstanding they being led, the Lord their God, their Redeemer, going before them, leading them by day and giving light unto them by night, and doing all things for them which were expedient for man to receive, they hardened their hearts and blinded their minds, and reviled against Moses and against the true and living God.

31 அந்தப்படியே, தம்முடைய வார்த்தையின்படியே
அவர் அவர்களைச் சங்கரித்தார்; தம்முடைய
வார்த்தையின்படியே அவர் அவர்களை வழிநடத்-
திச் சென்றார்; தம்முடைய வார்த்தையின்படியே
அவர் அவர்களுக்கு சகல காரியங்களையும் செய்-
தார்; அவருடைய வார்த்தையினாலேயல்லாமல்
வேறு அங்கே ஒன்றும் செய்யப்படவில்லை.

And it came to pass that according to his word he did destroy them; and according to his word he did lead them; and according to his word he did do all things for them; and there was not any thing done save it were by his word.

32 யோர்தான் நதியைக் கடந்தபின்பு, அவர்கள் தே-
சத்தின் புத்திரரை வெளியே துரத்தும்படிக்கும்,
ஆம், அழிவுக்கேதுவாக அவர்களை சிதறடிக்கும்ப-
டிக்கும், அவர்களை வல்லமையுடையவர்கள் ஆக்-
கினார்.

And after they had crossed the river Jordan he did make them mighty unto the driving out of the children of the land, yea, unto the scattering them to destruction.

33 இப்பொழுதும், வாக்குத்தத்தத்தின் தேசத்தில்
இருந்த, நம் பிதாக்களால் துரத்தியடிக்கப்பட்ட தே-
சத்தின் புத்திரராகிய இவர்கள், நீதிமான்கள் என்று
நீங்கள் எண்ணுகிறீர்களா? இதோ, இல்லை என்று
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And now, do ye suppose that the children of this land, who were in the land of promise, who were driven out by our fathers, do ye suppose that they were righteous? Behold, I say unto you, Nay.

34 அவர்கள் நீதிமான்களாயிருந்திருந்தால் நம் பி-
தாக்கள் அவர்களைப் பார்க்கிலும் தெரிந்துகொள்-
ளப்படத்தக்கவர்களாக இருந்திருப்பார்கள் என
நீங்கள் எண்ணுகிறீர்களா? இல்லை என்று நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Do ye suppose that our fathers would have been more choice than they if they had been righteous? I say unto you, Nay.

35 இதோ, கர்த்தர் மாம்சமான யாவரையும் ஒன்றாக
எண்ணுகிறார்; நீதிமான் எவனும் தேவனால் ஆத-
ரிக்கப்படுவான். ஆனாலும் இதோ, இந்த ஜனங்கள்
தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் தள்-
ளி, அக்கிரமத்தில் பழுத்திருக்கிறார்கள்; தேவனு-
டைய உக்கிரத்தின் நிறைவு அவர்கள் மேலிருந்து,
கர்த்தர் தேசத்தை அவர்களுக்கு எதிராக சபித்து,
நம்முடைய பிதாக்களுக்கு அதை ஆசீர்வதித்தார்;
ஆம், அவர்கள் அழிவிற்கேதுவாக அதைச் சபித்-
தார், மேலும் நம்முடைய பிதாக்கள் அதன்மேல்
வல்லமை பெற்றுக்கொள்ளும்படியாக அதை
ஆசீர்வதித்தார்.

Behold, the Lord esteemeth all flesh in one; he that is righteous is favored of God. But behold, this people had rejected every word of God, and they were ripe in iniquity; and the fulness of the wrath of God was upon them; and the Lord did curse the land against them, and bless it unto our fathers; yea, he did curse it against them unto their destruction, and he did bless it unto our fathers unto their obtaining power over it.

36 இதோ, வாசமாயிருக்கும்படியாக பூமியைக் கர்த்-
தர் சிருஷ்டித்தார்; தம்முடைய பிள்ளைகள்
அதைச் சொந்தமாக்கிக் கொள்ளும்படி அவர்
அதைப் படைத்தார்.

Behold, the Lord hath created the earth that it should be inhabited; and he hath created his children that they should possess it.

37 அவர் நீதியுள்ள தேசத்தை உயர்த்துகிறார், துன்-
மார்க்கரின் தேசங்களை அழித்துப் போடுகிறார்.

And he raiseth up a righteous nation, and destroyeth the nations of the wicked.

38 அவர் நீதிமான்களை செழிப்பான தேசங்களுக்கு
வழிநடத்துகிறார், ஆனால் துன்மார்க்கரையோ
அவர் அழித்து, அவர்கள் நிமித்தமாக, அவர்களு-
டைய தேசத்தைச் சபிக்கிறார்.

And he leadeth away the righteous into precious lands, and the wicked he destroyeth, and curseth the land unto them for their sakes.

39 அவர் வானங்களின் உன்னதத்தில் ஆளுகை
செய்கிறார், ஏனெனில் அது அவருடைய சிங்கா-
சனமாயிருக்கிறது, இந்தப் பூமி அவருடைய பாதப-
டியாயிருக்கிறது.

He ruleth high in the heavens, for it is his throne, and this earth is his footstool.

40 தம்மை அவர்களுடைய தேவனாகக் கொண்ட-
வர்களை அவர் நேசிக்கிறார். இதோ, அவர் நம்மு-
டைய பிதாக்களை நேசித்து, ஆம், ஆபிரகாம்,
ஈசாக்கு, யாக்கோபு ஆகியவர்களுடன் கூட உடன்ப-
டிக்கை செய்தார்; அவர் தாம் செய்த உடன்படிக்கை-
களை நினைவுகூர்ந்தார்; ஆகையால் அவர்களை
எகிப்து தேசத்திலிருந்து வெளியே கொண்டுவந்-
தார்.

And he loveth those who will have him to be their God. Behold, he loved our fathers, and he covenanted with them, yea, even Abraham, Isaac, and Jacob; and he remembered the covenants which he had made; wherefore, he did bring them out of the land of Egypt.

41 அவர் வனாந்தரத்தில் தம்முடைய கோலினால்
அவர்களை நெருக்கினார்; ஏனெனில் உங்களைப்-
போலவே அவர்களும் தங்கள் இருதயங்களைக்
கடினப்படுத்தினார்கள்; அவர்களுடைய அக்கிர-
மத்தினிமித்தம் கர்த்தர் அவர்களை நெருக்கினார்.
பறக்கும் கொள்ளிவாய் சர்ப்பங்களை அவர்கள்
மத்தியில் அவர் அனுப்பினார், அவைகள் அவர்க-
ளைக் கடித்த பின்பு அவர்கள் சுகமடையும்படி
வழியையும் ஆயத்தப்படுத்தினார்; நோக்கிப்பார்ப்-
பது மட்டுமே அவர்கள் செய்யவேண்டிய வேலை-
யாயிருந்தது; இந்த வழியின் எளிமையினிமித்தம்
அல்லது இலகுவின் நிமித்தமும் அநேகர் அங்கே
அழிந்துபோனார்கள்.

And he did straiten them in the wilderness with his rod; for they hardened their hearts, even as ye have; and the Lord straitened them because of their iniquity. He sent fiery flying serpents among them; and after they were bitten he prepared a way that they might be healed; and the labor which they had to perform was to look; and because of the simpleness of the way, or the easiness of it, there were many who perished.

42 அவர்கள் அவ்வப்போது தங்கள் இருதயங்க-
ளைக் கடினப்படுத்தி, மோசேக்குக்கு எதிராகவும்
தேவனுக்கு எதிராகவும் நிந்தனை செய்தார்கள்;
இருந்தபோதிலும் அவருடைய இணையற்ற வல்ல-
மையினால், வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குள்-
ளாக வழிநடத்திச் செல்லப்பட்டார்கள் என்று நீங்-
கள் அறிவீர்கள்.

And they did harden their hearts from time to time, and they did revile against Moses, and also against God; nevertheless, ye know that they were led forth by his matchless power into the land of promise.

43 இப்பொழுதும், இந்தக் காரியங்களுக்குப் பின்பும்,
கிட்டத்தட்ட பழுக்கக்கூடிய அளவில் துன்மார்க்கர்
ஆகிற நேரம் வந்திருக்கிறது; இந்த நாளிலேயும்
அவர்கள் அழியவிருப்பதைத் தவிர எதையும்
நான் அறியேன், ஏனெனில் சிறையிருப்புக்குள்-
ளாக வழிநடத்திச் செல்லப்படவிருக்கிற சிலரைத்
தவிர மற்றவர்கள் எல்லோரும் அழிக்கப்படும் நாள்
நிச்சயம் வரும் என்பதை நான் அறிவேன்.

And now, after all these things, the time has come that they have become wicked, yea, nearly unto ripeness; and I know not but they are at this day about to be destroyed; for I know that the day must surely come that they must be destroyed, save a few only, who shall be led away into captivity.

44 ஆகையால், வனாந்தரத்தினுள் புறப்பட்டுப்போ-
கவேண்டுமென என் தகப்பனுக்குக் கர்த்தர் கட்ட-
ளையிட்டார்; மேலும் யூதர்கள் அவருடைய ஜீ-
வனை வாங்கத் தேடினார்கள்; ஆம், நீங்களும்
அவருடைய ஜீவனை வாங்கத் தேடினீர்கள்;
ஆகையால் நீங்கள் உங்கள் இருதயங்களில் அவர்-
களைப்போலவே கொலைபாதகராயிருக்கிறீர்கள்.

Wherefore, the Lord commanded my father that he should depart into the wilderness; and the Jews also sought to take away his life; yea, and ye also have sought to take away his life; wherefore, ye are murderers in your hearts and ye are like unto them.

45 நீங்கள் அக்கிரமம் செய்ய தீவிரமுள்ளவர்களா-
யும், தேவனாகிய உங்களுடைய கர்த்தரை நினை-
வுகூர தாமதமுள்ளவர்களாயும் இருக்கிறீர்கள். ஒரு
தூதனை நீங்கள் கண்டிருக்கிறீர்கள், அவன் உங்க-
ளோடு பேசினான்; ஆம், அவருடைய சத்தத்தை
அவ்வப்போது நீங்கள் கேட்டுமிருக்கிறீர்கள்; மே-
லும் அவர் அமர்ந்த, மெல்லிய சத்தத்தில் உங்களோ-
டு பேசினார், ஆனால் நீங்கள் அவருடைய வார்த்-
தைகளை உணராதபடிக்கு உணர்வில்லாதவர்க-
ளானீர்கள்; ஆகையால் அவர் இடிமுழக்கத்தின்
சத்தத்தைப்போல உங்களிடம் பேசினார், அது பூமி
இரண்டாகப் பிளந்துபோவதைப்போல அதைக் கு-
லுக்கிற்று.

Ye are swift to do iniquity but slow to remember the Lord your God. Ye have seen an angel, and he spake unto you; yea, ye have heard his voice from time to time; and he hath spoken unto you in a still small voice, but ye were past feeling, that ye could not feel his words; wherefore, he has spoken unto you like unto the voice of thunder, which did cause the earth to shake as if it were to divide asunder.

46 அவர் தம்முடைய சர்வவல்லமையுள்ள வார்த்-
தையின் மூலமாக, பூமியைக் கடந்து போகும்படிச்
செய்யலாம் என்பதை நீங்கள் அறிவீர்கள்; ஆம்,
அவர் தமது வார்த்தையினால் கடினமான இடங்க-
ளை மிருதுவாகவும், மிருதுவான இடங்களைப் பி-
ளந்து போகும்படியும் செய்வாரெனவும் அறிவீர்-
கள். அப்படியானால், நீங்கள் ஏன் உங்கள் இருத-
யங்களில் இவ்வளவு கடினமுள்ளவர்களாயிருக்-
கிறீர்கள்?

And ye also know that by the power of his almighty word he can cause the earth that it shall pass away; yea, and ye know that by his word he can cause the rough places to be made smooth, and smooth places shall be broken up. O, then, why is it, that ye can be so hard in your hearts?

47 இதோ, உங்கள் நிமித்தம் வியாகுலத்தினால் என்
ஆத்துமா கிழிந்து போயிருக்கிறது, என் இருதயம்
வேதனைப்பட்டிருக்கிறது; நீங்கள் என்றென்றைக்-
குமாய் தள்ளப்பட்டுப் போவீர்களோ என நான்
அஞ்சுகிறேன். இதோ, என் சரீரம் பெலனற்றுப் போ-
கத்தக்கதாய், நான் தேவனுடைய ஆவியினால் நி-
றைந்திருக்கிறேன்.

Behold, my soul is rent with anguish because of you, and my heart is pained; I fear lest ye shall be cast off forever. Behold, I am full of the Spirit of God, insomuch that my frame has no strength.

48 இப்பொழுதும் அந்தப்படியே, நான் இந்த வார்த்-
தைகளைப் பேசியபோது, அவர்கள் என்மேல் கோ-
பமடைந்தவர்களாய் என்னை சமுத்திரத்தின்
ஆழங்களில் எறிந்துபோட விருப்பமுடையவர்க-
ளாயிருந்தார்கள்; அவர்கள் என்மேல் தங்கள் கை-
களைப்போட வந்தபொழுது நான் அவர்களை
நோக்கி: சர்வ வல்லமையுள்ள தேவனின் நாமத்தி-
னால் நீங்கள் என்னைத் தொடாதிருங்கள் என்று
கட்டளையிடுகிறேன், ஏனெனில் என் மாம்சம்
எரிந்து போகத்தக்கதாய் நான் தேவனுடைய வல்ல-
மையினால் நிறைக்கப்பட்டிருக்கிறேன்; என்மேல்
தன் கைகளைப்போடுகிறவன் உலர்ந்த நாண-
லைப்போல மடிந்து போவான்; அவன் தேவனு-
டைய வல்லமையின் முன்பாக ஒன்றுமில்லாமற்
போவான், ஏனெனில் தேவன் அவனை அடிப்பார்
என்றேன்.

And now it came to pass that when I had spoken these words they were angry with me, and were desirous to throw me into the depths of the sea; and as they came forth to lay their hands upon me I spake unto them, saying: In the name of the Almighty God, I command you that ye touch me not, for I am filled with the power of God, even unto the consuming of my flesh; and whoso shall lay his hands upon me shall wither even as a dried reed; and he shall be as naught before the power of God, for God shall smite him.

49 அந்தப்படியே, நேபியாகிய நான், அவர்களை
நோக்கி, அவர்கள் இனி ஒருபோதும் என் தகப்-
பனுக்கு எதிராக முறுமுறுக்கக்கூடாது எனவும்;
நான் ஒரு கப்பலைக் கட்டவேண்டும் என்றும் தே-
வன் கட்டளையிட்டதினால், அவர்கள் தங்கள்
உழைப்பை நிறுத்தக்கூடாது எனவும் சொன்னேன்.

And it came to pass that I, Nephi, said unto them that they should murmur no more against their father; neither should they withhold their labor from me, for God had commanded me that I should build a ship.

50 நான் அவர்களை நோக்கி: சகல காரியங்களையும் செய்யும்படி தேவன் எனக்குக் கட்டளையிட்டிருப்பாரெனில் என்னால் அவைகளைச் செய்யக்கூடும். பூமியாகக்கடவாய் என்று இந்தத் தண்ணீரைப் பார்த்து சொல்லும்படி அவர் எனக்குக் கட்டளையிடுவாரெனில், அது பூமியாகும்; நான் அதைச் சொல்வேனெனில் அது அப்படியே செய்யப்படும் என்றேன்.

And I said unto them: If God had commanded me to do all things I could do them. If he should command me that I should say unto this water, be thou earth, it should be earth; and if I should say it, it would be done.

51 இப்பொழுதும் கர்த்தர் அவ்வளவு பெரிதான வல்லமையுடையவராய், மனுபுத்திரர் மத்தியில் அநேக அற்புதங்களை நடப்பித்திருப்பாரெனில், ஒரு கப்பலை நான் கட்டும்படி, அவர் எனக்கு அறிவுறுத்தக் கூடாமலிருப்பதெப்படி?

And now, if the Lord has such great power, and has wrought so many miracles among the children of men, how is it that he cannot instruct me, that I should build a ship?

52 அந்தப்படியே, நேபியாகிய நான், அநேக காரியங்களை என் சகோதரருக்குச் சொன்னதினால், அவர்கள் தாறுமாறாக்கப்பட்டு, என்னை எதிர்த்துப் போராட முடியாமற் போனார்கள்; அநேக நாட்களளவும் அவர்கள் என்மேல் தங்கள் கைகளைப் போடவோ, விரலினால் தொடவோ இல்லை. இப்பொழுதும் தேவனுடைய ஆவி மிக வல்லமையாய் இருந்தபடியால், அவர்கள் எனக்கு முன்பாக மடிந்து போகாதபடி, பயந்து இதை அவர்கள் செய்யவில்லை. மேலும் அது இவ்விதமாய் அவர்கள்மீது வாசம்கொண்டது.

And it came to pass that I, Nephi, said many things unto my brethren, insomuch that they were confounded and could not contend against me; neither durst they lay their hands upon me nor touch me with their fingers, even for the space of many days. Now they durst not do this lest they should wither before me, so powerful was the Spirit of God; and thus it had wrought upon them.

53 அந்தப்படியே, கர்த்தர் என்னை நோக்கி: மீண்டும் உன் கையை உன் சகோதரரை நோக்கி நீட்டு, அவர்கள் உன் முன்னால் மடிந்து போவதில்லை, ஆனால் அவர்களுக்கு நான் அதிர்ச்சியூட்டுவேன், நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும்படி நான் இதைச் செய்வேன், என்றார்.

And it came to pass that the Lord said unto me: Stretch forth thine hand again unto thy brethren, and they shall not wither before thee, but I will shock them, saith the Lord, and this will I do, that they may know that I am the Lord their God.

54 அந்தப்படியே, நான் என் சகோதரரை நோக்கி என் கையை நீட்டினேன், அவர்கள் என் முன்னால் மடிந்து போகவில்லை; ஆனால் கர்த்தர் தாம் பேசிய அவருடைய வார்த்தையின்படியே அவர்களைக் குலுக்கினார்.

And it came to pass that I stretched forth my hand unto my brethren, and they did not wither before me; but the Lord did shake them, even according to the word which he had spoken.

55 இப்பொழுதும் அவர்கள்: கர்த்தர் உன்னோடிருக்கிறார் என்பதை நாங்கள் நிச்சயமாய் அறிகிறோம், ஏனெனில் எங்களைக் குலுங்கச் செய்தது, கர்த்தருடைய வல்லமை என்பதை நாங்கள் அறிவோம், என்றார்கள். மேலும் அவர்கள் என் முன் விழுந்தார்கள், என்னைத் தொழுதுகொள்ளவிருந்தார்கள், ஆனால் நான் அவர்களை அப்படிச் செய்யவிடாமல், அவர்களை நோக்கி, நான் உங்கள் சகோதரன், ஆம், உங்களுடைய இளைய சகோதரனாயிருக்கிறேன்; ஆகையால் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கும் தேசத்திலே உங்கள் வாழ்நாட்கள் நீடித்திருப்பதற்கு, உங்கள் தேவனாகிய கர்த்தரைத் தொழுதுகொண்டு, உங்கள் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவீர்களாக என்றேன்.

And now, they said: We know of a surety that the Lord is with thee, for we know that it is the power of the Lord that has shaken us. And they fell down before me, and were about to worship me, but I would not suffer them, saying: I am thy brother, yea, even thy younger brother; wherefore, worship the Lord thy God, and honor thy father and thy mother, that thy days may be long in the land which the Lord thy God shall give thee.

## 1 நேபி 18

1 அந்தப்படியே, அவர்கள் கர்த்தரைத் தொழுது-
கொண்டு என்னோடுகூட வந்தார்கள்; நாங்கள்
மரங்களில் விசித்திர கைவேலைப்பாடுகளைச்
செய்தோம். நான் கப்பலின் மரக்கட்டைகளை இன்-
னவிதத்தில் செய்யவேண்டும் என்பதைக் கர்த்தர்
அவ்வப்போது எனக்குக் காட்டினார்.

2 இப்பொழுது நேபியாகிய நான், மனுஷர்கள் கற்-
றறிந்தபடி மரவேலைகளைச் செய்யவில்லை, மனு-
ஷர் செய்யும் விதத்திலும் நான் கப்பலைக் கட்ட-
வில்லை; ஆனால் கர்த்தர் எனக்குக் காட்டிய மாதி-
ரியின்படியே நான் அதைக் கட்டினேன்; ஆகை-
யால் அது மனுஷர் கட்டும் விதமாக இருக்கவில்-
லை.

3 நேபியாகிய நான் பலமுறை மலைக்குப் போய்,
கர்த்தரிடம் அநேகந்தரம் ஜெபித்தேன்; ஆகையால்
கர்த்தர் பெரிய காரியங்களை எனக்குக் காண்பித்-
தார்.

4 அந்தப்படியே, கர்த்தருடைய வார்த்தையின்படி-
யே, நான் கப்பலைக் கட்டிமுடித்த பின்னர், அது
நல்லதென்றும், அதிலிருந்த வேலைப்பாடு மிகவும்
நேர்த்தியாயிருக்கிறதென்பதையும் என் சகோதரர்
கண்டார்கள். ஆகையால், அவர்கள் கர்த்தருக்கு
முன்பாக மறுபடியும் தங்களைத் தாழ்த்தினார்கள்.

5 அந்தப்படியே, நாங்கள் எழுந்திருந்து கப்பலுக்-
குள் போகவேண்டுமென்று கர்த்தருடைய சத்தம்
என் தகப்பனுக்கு உண்டாயிற்று.

6 அந்தப்படியே, மறுதினத்திலே நாங்கள் வனாந்த-
ரத்திலிருந்து நிறைய கனிகளையும் காட்டிலிருந்து
மாம்சத்தையும், நிறையத் தேனையும், கர்த்தர் எங்-
களுக்குக் கட்டளையிட்டதின்படியே உணவுப்பொ-
ருட்களையும், எல்லாக் காரியங்களையும் ஆயத்-
தம் செய்தபின்பு, நாங்கள் சுமைகளோடும், விதை-
களோடும் எந்த ஒரு பொருளையும் எங்களுடன்,
அவரவர் வயதிற்குத்தக்கதாய்ச் சுமந்துகொண்டு-
வந்த பொருட்களோடு, கப்பலினுள் பிரவேசித்-
தோம், ஆகவே எங்கள் மனைவிகளோடும், பிள்-
ளைகளோடும் கப்பலினுள் பிரவேசித்தோம்.

7 இப்பொழுதும் என் தகப்பன் வனாந்தரத்தில்
இரண்டு குமாரர்களைப் பெற்றார்; மூத்தவன் யாக்-
கோபு எனவும், இளையவன் யோசேப்பு எனவும்
அழைக்கப்பட்டார்கள்.

8 அந்தப்படியே, எங்களுக்குக் கட்டளையிடப்பட்ட
உணவுப் பொருட்களையும், மற்ற பொருட்களை-
யும், எங்களுடன் எடுத்துக்கொண்டு கப்பலினுள்
சென்ற பின்பு, நாங்கள் சமுத்திரத்தினுள், காற்றி-
னால் தள்ளப்பட்டு வாக்குத்தத்தத்தின் தேசத்தை
நோக்கிச் செலுத்தப்பட்டோம்.

## 1 Nephi 18

And it came to pass that they did worship the Lord, and did go forth with me; and we did work timbers of curious workmanship. And the Lord did show me from time to time after what manner I should work the timbers of the ship.

Now I, Nephi, did not work the timbers after the manner which was learned by men, neither did I build the ship after the manner of men; but I did build it after the manner which the Lord had shown unto me; wherefore, it was not after the manner of men.

And I, Nephi, did go into the mount oft, and I did pray oft unto the Lord; wherefore the Lord showed unto me great things.

And it came to pass that after I had finished the ship, according to the word of the Lord, my brethren beheld that it was good, and that the workmanship thereof was exceedingly fine; wherefore, they did humble themselves again before the Lord.

And it came to pass that the voice of the Lord came unto my father, that we should arise and go down into the ship.

And it came to pass that on the morrow, after we had prepared all things, much fruits and meat from the wilderness, and honey in abundance, and provisions according to that which the Lord had commanded us, we did go down into the ship, with all our loading and our seeds, and whatsoever thing we had brought with us, every one according to his age; wherefore, we did all go down into the ship, with our wives and our children.

And now, my father had begat two sons in the wilderness; the elder was called Jacob and the younger Joseph.

And it came to pass after we had all gone down into the ship, and had taken with us our provisions and things which had been commanded us, we did put forth into the sea and were driven forth before the wind towards the promised land.

9 நாங்கள் காற்றின் முகமாய்ப் பலநாட்களாய் போ-
னபின்பு, இதோ, என் சகோதரரும் இஸ்மவேலின் கு-
மாரரும், அவர்களுடைய மனைவிமார்களும், களி-
கூரத் தொடங்கி நடனம் ஆடவும், பாடவும், மிகவும்
மூர்க்கமாய்ப் பேசும் அளவிற்கு களிகூரத்தொடங்-
கினார்கள், ஆம், அவர்கள் எந்த வல்லமையினால்
இங்கே கொண்டுவரப்பட்டார்கள் என்பதையும்
மறந்துவிட்டார்கள்; ஆம், அவர்கள் அதிகமாய்
மூர்க்கத்தனத்தில் உயர்த்தப்பட்டார்கள்.

And after we had been driven forth before the wind for the space of many days, behold, my brethren and the sons of Ishmael and also their wives began to make themselves merry, insomuch that they began to dance, and to sing, and to speak with much rudeness, yea, even that they did forget by what power they had been brought thither; yea, they were lifted up unto exceeding rudeness.

10 நேபியாகிய நான், எங்கள் அக்கிரமத்தினிமித்தம்,
கர்த்தர் எங்கள் மீது கோபங்கொண்டு அடித்தால்,
சமுத்திரத்தின் ஆழங்களில் விழுங்கப்பட்டுப் போ-
வோமே என்று மிகுதியாய்ப் பயப்பட்டேன்; ஆகை-
யால் மிகுந்த தெளிந்த புத்தியுடன் நேபியாகிய
நான் அவர்களுடன் பேசினேன்; ஆனாலும் இதோ
அவர்கள் என்மேல் கோபங்கொண்டு, எங்கள்
இளைய சகோதரன் எங்களை ஆளுகிறவனாய்
இருக்க விரும்பமாட்டோம் என்றார்கள்.

And I, Nephi, began to fear exceedingly lest the Lord should be angry with us, and smite us because of our iniquity, that we should be swallowed up in the depths of the sea; wherefore, I, Nephi, began to speak to them with much soberness; but behold they were angry with me, saying: We will not that our younger brother shall be a ruler over us.

11 அந்தப்படியே, லாமானும் லெமுவேலும் என்-
னைப் பிடித்து, கயிறுகளினால் என்னைக் கட்டி,
மிகவும் கொடூரமாய் என்னை நடத்தினார்கள்;
இருந்தபோதிலும் துன்மார்க்கரைக் குறித்து அவர்
பேசிய வார்த்தைகளை நிறைவேற்றி தம்முடைய
வல்லமையைக் காட்டும்படியாக கர்த்தர் இதை
அனுமதித்தார்.

And it came to pass that Laman and Lemuel did take me and bind me with cords, and they did treat me with much harshness; nevertheless, the Lord did suffer it that he might show forth his power, unto the fulfilling of his word which he had spoken concerning the wicked.

12 அந்தப்படியே, நான் அசையக்கூடாதபடி அவர்-
கள் என்னைக் கட்டிய பின்பு, கர்த்தரால் ஆயத்தம்-
பண்ணப்பட்ட திசைகாட்டி வேலை செய்வதிலி-
ருந்து நின்றுவிட்டது.

And it came to pass that after they had bound me insomuch that I could not move, the compass, which had been prepared of the Lord, did cease to work.

13 ஆகையால், எந்தப் பக்கம் கப்பலைச் செலுத்த-
வேண்டும் என்பதை அவர்கள் அறியாதபடிக்கு,
அங்கே பெரும்புயல், ஆம், பெரிதும் பயங்கரமு-
மான சூறாவளி எழும்பியது. நாங்கள் மூன்று நாள-
ளவும் தண்ணீர்களின் மீது பின் நோக்கி தள்ளப்-
பட்டோம்; அவர்கள் சமுத்திரத்தில் மூழ்கடிக்கப்பட்-
டுப்போவோம் என்று மிகவும் பயப்படத் தொடங்-
கிய போதிலும் என்னை அவிழ்த்து விடவில்லை.

Wherefore, they knew not whither they should steer the ship, insomuch that there arose a great storm, yea, a great and terrible tempest, and we were driven back upon the waters for the space of three days; and they began to be frightened exceedingly lest they should be drowned in the sea; nevertheless they did not loose me.

14 நாங்கள் பின்னாக தள்ளப்பட்ட நாலாவது நாளி-
லே, சூறாவளி மிகவும் கொடியதாகத் தொடங்கிய-
து.

And on the fourth day, which we had been driven back, the tempest began to be exceedingly sore.

15 அந்தப்படியே, நாங்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் விழுங்கப்பட்டுப்போகவிருந்தோம். நாங்கள் நான்கு நாட்களளவும் தண்ணீர்களின் மேல் பின்னாகத் தள்ளப்பட்ட பின்பு, என் சகோதரர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அவர்கள்மேல் இருப்பதையும், அவர்கள் தங்களுடைய அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பினாலொழிய தாங்கள் அழிந்துபோவார்கள் என்பதையும் காணத்துவங்கினார்கள்; ஆகையால் அவர்கள் என்னிடம் வந்து, என் மணிக்கட்டின் மேலிருந்த கட்டுக்களை அவிழ்த்துவிட்டார்கள்; இதோ, அவைகள் மிகவும் வீங்கிப்போயிருந்தன, மேலும் என் கணுக்கால்களும் மிகவும் வீங்கியதாகவும், அவைகளின் ரணம் மிகவும் பெரியதாகவும் இருந்தது.

And it came to pass that we were about to be swallowed up in the depths of the sea. And after we had been driven back upon the waters for the space of four days, my brethren began to see that the judgments of God were upon them, and that they must perish save that they should repent of their iniquities; wherefore, they came unto me, and loosed the bands which were upon my wrists, and behold they had swollen exceedingly; and also mine ankles were much swollen, and great was the soreness thereof.

16 இருந்தபோதிலும், நான் என் தேவனை நோக்கிப்பார்த்து, நாள் முழுவதும் அவரைத் துதித்தேன்; என்னுடைய உபத்திரவங்களினிமித்தம் நான் கர்த்தருக்கு எதிராக முறுமுறுக்கவில்லை.

Nevertheless, I did look unto my God, and I did praise him all the day long; and I did not murmur against the Lord because of mine afflictions.

17 இப்பொழுதும் என் தகப்பனாகிய லேகி, அவர்களிடமும், இஸ்மவேலின் குமாரர்களிடமும் அநேகக் காரியங்களைச் சொன்னார்; ஆனாலும், இதோ, எனக்காகப் பேசுகிறவர்களுக்கு எதிராக அவர்கள் அநேக பயமுறுத்தல்களைக் கொடுத்தார்கள்; என் பெற்றோர்கள் வயதுசென்றவர்களாயும், பிள்ளைகளால் அதிக துக்கத்தை அனுபவித்தவர்களாயும் இருந்ததினிமித்தம், நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார்கள்.

Now my father, Lehi, had said many things unto them, and also unto the sons of Ishmael; but, behold, they did breathe out much threatenings against anyone that should speak for me; and my parents being stricken in years, and having suffered much grief because of their children, they were brought down, yea, even upon their sick-beds.

18 அவர்கள் துயரத்தினாலும், அதிக துக்கத்தினாலும், என் சகோதரருடைய அக்கிரமங்களினாலும் அவர்களுடைய தேவனை சந்திக்கும் அளவுக்கு, அவரருகிலே கொண்டுவரப்பட்டார்கள்; ஆம், அவர்களுடைய நரை மயிர் புழுதியிலே கீழாக கிடக்கப்பண்ணக் கொண்டுவரப்பட இருக்கிறது; அவர்கள் வருத்தத்தோடு தண்ணீர் கல்லறையில் போடப்படும் நிலைமைக்குக் கிட்டிச் சேர்ந்தார்கள்.

Because of their grief and much sorrow, and the iniquity of my brethren, they were brought near even to be carried out of this time to meet their God; yea, their grey hairs were about to be brought down to lie low in the dust; yea, even they were near to be cast with sorrow into a watery grave.

19 யாக்கோபுவும், யோசேப்பும் மிகவும் இளையவர்களாய், அதிக போஷாக்கு வேண்டியவர்களாயிருந்து தங்களுடைய தாய் அனுபவிக்கும் உபத்திரவங்களினிமித்தம் துக்கப்பட்டார்கள்; மேலும் என் மனைவி மக்களின் கண்ணீரும், ஜெபமும்கூட என்னை அவிழ்த்துவிடும்படி என் சகோதரரின் இருதயங்களை இளக்கவில்லை.

And Jacob and Joseph also, being young, having need of much nourishment, were grieved because of the afflictions of their mother; and also my wife with her tears and prayers, and also my children, did not soften the hearts of my brethren that they would loose me.

20 அவர்களை அழிக்கும்படியாய் அச்சுறுத்திய தேவனுடைய வல்லமையைத் தவிர, வேறெதுவும் அவர்களுடைய இருதயங்களை இளக்கமுடியவில்லை; ஆகையால் அவர்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் விழுங்கப்பட்டுப்போவோம் என்பதைக் கண்டபொழுது தாங்கள் செய்த காரியங்களிலிருந்து மனந்திரும்பி என்னை அவிழ்த்துவிட்டார்கள்.

And there was nothing save it were the power of God, which threatened them with destruction, could soften their hearts; wherefore, when they saw that they were about to be swallowed up in the depths of the sea they repented of the thing which they had done, insomuch that they loosed me.

21 அந்தப்படியே, அவர்கள் என்னை அவிழ்த்து-
விட்ட பின்பு, இதோ, நான் திசைக்காட்டியை எடுத்-
தேன், அது நான் விரும்பியபடியே வேலை செய்த-
து. அந்தப்படியே, நான் கர்த்தரை நோக்கி ஜெபம்-
பண்ணினேன்; நான் ஜெபம்பண்ணினபின்பு
காற்றும் நின்றது, புயலும் அடங்கியது, அங்கே பெ-
ரிய அமைதி உண்டாயிற்று.

And it came to pass after they had loosed me, behold, I took the compass, and it did work whither I desired it. And it came to pass that I prayed unto the Lord; and after I had prayed the winds did cease, and the storm did cease, and there was a great calm.

22 அந்தப்படியே, நேபியாகிய நான், வாக்குத்தத்தத்-
தின் தேசத்தை நோக்கிச் செல்லும்படி, கப்பலை
வழிநடத்தினேன்.

And it came to pass that I, Nephi, did guide the ship, that we sailed again towards the promised land.

23 அந்தப்படியே, பலநாட்கள் அளவும் கடற் பய-
ணம் செய்தபின்பு, நாங்கள் வாக்குத்தத்தத்தின் தே-
சத்தை வந்தடைந்தோம்; நாங்கள் நிலத்தின்மீது
சென்று பாளயமிறங்கினோம்; நாங்கள் அதை
வாக்குத்தத்தத்தின் தேசம் என அழைத்தோம்.

And it came to pass that after we had sailed for the space of many days we did arrive at the promised land; and we went forth upon the land, and did pitch our tents; and we did call it the promised land.

24 அந்தப்படியே, நாங்கள் நிலத்தை உழத்தொடங்கி-
னோம், விதைகளை விதைக்கத் தொடங்கினோம்;
ஆம், நாங்கள் எருசலேம் தேசத்திலிருந்து கொண்-
டுவந்த சகல விதைகளையும் நிலத்தில் விதைத்-
தோம். அந்தப்படியே, அவைகள் அதிகமாய்
வளர்ந்தன; ஆகையால் நாங்கள் தாராளமாய்
ஆசீர்வதிக்கப்பட்டோம்.

And it came to pass that we did begin to till the earth, and we began to plant seeds; yea, we did put all our seeds into the earth, which we had brought from the land of Jerusalem. And it came to pass that they did grow exceedingly; wherefore, we were blessed in abundance.

25 அந்தப்படியே, நாங்கள் வனாந்தரத்தில் பயணம்
செய்தபொழுது அங்கே ஒவ்வொரு இனமான காட்-
டுவிலங்குகளையும், பசுக்களையும் எருதுகளை-
யும், கழுதைகளையும், குதிரைகளையும், ஆடுக-
ளையும், காட்டாடுகளையும் மனுஷருக்குத் தே-
வையாயிருக்கக்கூடிய சகல காட்டுவிலங்குகளை-
யும், வாக்குத்தத்தத்தின் தேசத்திலே நாங்கள் கண்-
டோம். நாங்கள் தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய
சகல விதமான கனிமங்களையும் கண்டோம்.

And it came to pass that we did find upon the land of promise, as we journeyed in the wilderness, that there were beasts in the forests of every kind, both the cow and the ox, and the ass and the horse, and the goat and the wild goat, and all manner of wild animals, which were for the use of men. And we did find all manner of ore, both of gold, and of silver, and of copper.

# 1 நேபி 19

1 அந்தப்படியே, கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டபடி-
யால், நான் என் ஜனங்களின் வரலாற்றைத் தாதுக்-
களால் செய்யப்பட்ட தகடுகளின்மீது பதிக்கும்ப-
டிக்கு அவைகளை நான் செய்தேன். நான் செய்த
அந்த தகடுகளின்மீது என்னுடைய தகப்பனின்
பதிவையும், வனாந்தரத்தில் எங்களின் பயணங்க-
ளையும் என் தகப்பனின் தீர்க்கதரிசனங்களையும்
நான் பொறித்தேன்; மேலும் என்னுடைய அநேக
சொந்த தீர்க்கதரிசனங்களையும் அதன்மீது பொ-
றித்திருக்கிறேன்.

2 நான் இவைகளைச் செய்யும் சமயத்தில், நான்
இந்தத் தகடுகளைச் செய்ய கர்த்தரால் கட்டளையி-
டப்படுவேன் என்று நான் அறியாமலிருந்தேன்;
ஆகையால் என் தகப்பனின் பதிவுகளும், அவரது
பிதாக்களின் வம்சவரலாறும், வனாந்தரத்தில் எங்-
களுடைய நடவடிக்கைகளின் பெரும் பகுதிகளும்
என்னால் பேசப்பட்டுள்ள அந்த முதற் தகடுகளின்-
மீது பொறிக்கப்பட்டுள்ளன; ஆகையால் நான் இந்-
தத் தகடுகளைச் செய்யும் முன்பு சம்பவித்த காரி-
யங்களும், மெய்யாகவே அந்த முதற்தகடுகள் மீது
மிக விசேஷமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

3 நேபியாகிய நான், கட்டளையின் பிரகாரம் இந்தத்
தகடுகளைச் செய்த பின்பு, ஊழியம் மற்றும் தீர்க்க-
தரிசனங்கள் ஆகியவற்றின் மிகத் தெளிவான வி-
லையேறப்பெற்ற பாகங்கள், இந்தத் தகடுகளின்மீ-
து எழுதப்படுதல் வேண்டுமென்ற கட்டளையை-
யும் பெற்றேன்; மேலும் எழுதப்பட்ட இந்தக் காரியங்-
கள் இந்த தேசத்தை சொந்தமாக்க வேண்டிய என்
ஜனங்களின் போதனைக்காகவும், கர்த்தரால் அறி-
யப்பட்டிருந்த இதர ஞானமான நோக்கங்களுக்கா-
கவும் பாதுகாக்கப்பட வேண்டியதாயிருந்தது.

4 ஆகையால், நேபியாகிய நான், விவரத்தைக் கொ-
டுக்கிற அல்லது என் ஜனத்தின் அழிவுகள், பிணக்-
குகள் மற்றும் யுத்தங்கள் ஆகியவற்றின் மிகுதி-
யான விவரத்தைத் தருகின்ற, மற்ற தகடுகள்மீது
பதிவேட்டைச் செய்துள்ளேன். நான் செய்தவை-
கள் இவைகளே மற்றும் நான் போன பின்பு என்
ஜனங்கள் என்ன செய்யவேண்டுமென்றும், கர்த்த-
ரிடத்திலிருந்து வேறு கட்டளைகள் வரும்வரைக்-
கும், இந்தத் தகடுகள் ஒரு தலைமுறையிலிருந்து
மற்றொன்றுக்கும் அல்லது ஒரு தீர்க்கதரிசியிலி-
ருந்து மற்றவருக்கும் அப்படியே ஒப்படைக்கப்பட
வேண்டுமென்றும் அவர்களுக்கு நான் கட்டளை-
யிட்டேன்.

5 நான் செய்த இந்தத் தகடுகளின் விவரம் இனி
கொடுக்கப்படும். இதோ, நான் பேசியவைகளின்ப-
டியே தொடர்கிறேன்; மேலும் மிகவும் பரிசுத்தமான
காரியங்களை என் ஜனம் அறிந்து கொள்ளும்படி
இதை நான் செய்கிறேன்.

# 1 Nephi 19

And it came to pass that the Lord commanded me, wherefore I did make plates of ore that I might engraven upon them the record of my people. And upon the plates which I made I did engraven the record of my father, and also our journeyings in the wilderness, and the prophecies of my father; and also many of mine own prophecies have I engraven upon them.

And I knew not at the time when I made them that I should be commanded of the Lord to make these plates; wherefore, the record of my father, and the genealogy of his fathers, and the more part of all our proceedings in the wilderness are engraven upon those first plates of which I have spoken; wherefore, the things which transpired before I made these plates are, of a truth, more particularly made mention upon the first plates.

And after I had made these plates by way of commandment, I, Nephi, received a commandment that the ministry and the prophecies, the more plain and precious parts of them, should be written upon these plates; and that the things which were written should be kept for the instruction of my people, who should possess the land, and also for other wise purposes, which purposes are known unto the Lord.

Wherefore, I, Nephi, did make a record upon the other plates, which gives an account, or which gives a greater account of the wars and contentions and destructions of my people. And this have I done, and commanded my people what they should do after I was gone; and that these plates should be handed down from one generation to another, or from one prophet to another, until further commandments of the Lord.

And an account of my making these plates shall be given hereafter; and then, behold, I proceed according to that which I have spoken; and this I do that the more sacred things may be kept for the knowledge of my people.

6 இருந்தபோதிலும் பரிசுத்தமானவை என்று நான் நினைக்கிறவைகளைத் தவிர, வேறெதையும் இந்தத் தகடுகளின்மீது நான் எழுதுவதில்லை. மேலும், பழைய காலத்தினவரும் பிழைகளைச் செய்ததைப்போல, நானும் பிழைகளைச் செய்யலாம்; மற்ற மனுஷர்களைக் காரணங்காட்டி நான் என்னுடைய குற்றத்தை நீக்குவதற்காக அல்ல, ஆனால் மாம்சத்தின்பிரகாரமாய் எனக்குள்ளிருக்கும் பெலவீனத்தால் என்னையே நான் விலக்கிக்கொள்கிறேன்.

Nevertheless, I do not write anything upon plates save it be that I think it be sacred. And now, if I do err, even did they err of old; not that I would excuse myself because of other men, but because of the weakness which is in me, according to the flesh, I would excuse myself.

7 சரீரம், ஆத்துமா ஆகிய இரண்டும் பெருமதிப்புடையது என்று சில மனுஷரால் எண்ணப்படும் காரியங்களை, மற்றவர்கள் அற்பமாய் எண்ணி, தங்கள் பாதங்களால் அதை மிதிக்கிறார்கள். ஆம், மெய்யான இஸ்ரவேலின் தேவனைக்கூட மனுஷர் தம் பாதங்களால் மிதிக்கிறார்கள்; பாதங்களால் மிதிக்கிறார்கள் என நான் சொல்கிறேன், மற்ற வார்த்தைகளில் நான் சொன்னால், அவர்கள் அவரை அற்பமாய் எண்ணி, அவருடைய ஆலோசனைகளின் சத்தத்திற்குச் செவிகொடுப்பதில்லை.

For the things which some men esteem to be of great worth, both to the body and soul, others set at naught and trample under their feet. Yea, even the very God of Israel do men trample under their feet; I say, trample under their feet but I would speak in other words—they set him at naught, and hearken not to the voice of his counsels.

8 இதோ, தூதனுடைய வார்த்தைகளின்படியே, என் தகப்பன் எருசலேமைவிட்டுச் சென்ற காலத்திலிருந்து, அறுநூறு ஆண்டுகளுக்குப் பின்பு அவர் வருகிறார்.

And behold he cometh, according to the words of the angel, in six hundred years from the time my father left Jerusalem.

9 இந்த உலகம் அவர்களின் அக்கிரமத்தினிமித்தம் அவரை ஒரு அற்பமான பொருளென நியாயந்தீர்க்கும்; ஆகையால் அவரை வாரினால் அடிக்கிறார்கள், அவர் அதை பாடனுபவிக்கிறார்; அவரை அடிக்கிறார்கள், அவர் அதை பாடனுபவிக்கிறார். ஆம், அவர் மேல் அவர்கள் துப்புகிறார்கள், அவர் மனுபுத்திரர் மேலுள்ள அன்பான தயவின் நிமித்தமும், நீடிய பொறுமையினிமித்தமும், அவர் அவைகளின் பாடனுபவிக்கிறார்.

And the world, because of their iniquity, shall judge him to be a thing of naught; wherefore they scourge him, and he suffereth it; and they smite him, and he suffereth it. Yea, they spit upon him, and he suffereth it, because of his loving kindness and his long-suffering towards the children of men.

10 எகிப்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் புறம்பே வழிநடத்தப்பட்ட, வனாந்தரத்தில் அவரால் பாதுகாக்கப்பட்ட, நமது பிதாக்களின் தேவன், ஆம், சீனாக்கின் வார்த்தைகளின்படி உயர்த்தப்படவும், நெயூமின் வார்த்தைகளின்படி சிலுவையிலறையப்படவும், சமுத்திரத்தின் தீவுகளை சுதந்தரிக்கவிருப்பவர்களாகிய, அதிக விசேஷமாக இஸ்ரவேல் வீட்டாருக்கு, அவரது மரணத்தின் அடையாளமாக கொடுக்கப்படவிருக்கிற, இருளின் மூன்று நாட்கள் குறித்து பேசிய, சீனஸின் வார்த்தைகளின்படி, கல்லறையிலே அடக்கம்பண்ணப்படவிருக்கிற, ஆபிரகாம் மற்றும் ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமானவர், தூதர்களின் வார்த்தைகளின்படியே துன்மார்க்கரின் கரங்களில் தன்னை மனுஷனாக ஒப்புக்கொடுக்கிறார்.

And the God of our fathers, who were led out of Egypt, out of bondage, and also were preserved in the wilderness by him, yea, the God of Abraham, and of Isaac, and the God of Jacob, yieldeth himself, according to the words of the angel, as a man, into the hands of wicked men, to be lifted up, according to the words of Zenock, and to be crucified, according to the words of Neum, and to be buried in a sepulchre, according to the words of Zenos, which he spake concerning the three days of darkness, which should be a sign given of his death unto those who should inhabit the isles of the sea, more especially given unto those who are of the house of Israel.

11 இவ்வாறு தீர்க்கதரிசி பேசினான்: சிலரை அவர்க-
ளின் நீதியினிமித்தம், அவர்கள் மிகுந்த சந்தோ-
ஷத்தையும், இரட்சிப்பையும்பெற தம்முடைய சத்-
தத்தாலும், மற்றோரைத் தம் வல்லமையின் இடிமு-
ழக்கத்தாலும், மின்னல்களாலும், புயலாலும், நெ-
ருப்பாலும், புகையினாலும், இருளின் மூடுபனியா-
லும், பூமியின் பிளப்புகளினாலும், உயர்த்தப்பட-
விருக்கிற மலைகளினாலும், மெய்யாகவே எல்லா
இஸ்ரவேல் வீட்டாரையும் அந்த நாளிலே கர்த்தரா-
கிய தேவன் சந்திப்பார்.

For thus spake the prophet: The Lord God surely shall visit all the house of Israel at that day, some with his voice, because of their righteousness, unto their great joy and salvation, and others with the thunderings and the lightnings of his power, by tempest, by fire, and by smoke, and vapor of darkness, and by the opening of the earth, and by mountains which shall be carried up.

12 இந்த எல்லாக் காரியங்களும் மெய்யாகவே வரு-
மென்று, சீனஸ் தீர்க்கதரிசி சொல்லுகிறான். மேலும்
இயற்கையின் தேவன் பாடனுபவிக்கிறார் என்று
ஓலமிட, பூமியிலுள்ள பாறைகள் பிளக்க வேண்-
டும்; மேலும் பூமியின் குமுறுதலால் சமுத்திரத்தின்
தீவுகளின் அநேக ராஜாக்கள், தேவனின் ஆவியால்
வசப்படுத்தப்பட வேண்டும்.

And all these things must surely come, saith the prophet Zenos. And the rocks of the earth must rend; and because of the groanings of the earth, many of the kings of the isles of the sea shall be wrought upon by the Spirit of God, to exclaim: The God of nature suffers.

13 இஸ்ரவேலின் தேவனை சிலுவையிலறைவதா-
லும், தம் இருதயங்களை ஒரு பக்கமாய் ஒதுக்கின-
படியாலும், இஸ்ரவேலின் தேவனின் மகிமையை-
யும் வல்லமையையும், அற்புதங்களையும், அடை-
யாளங்களையும், தள்ளிவிட்டதின் நிமித்தமாக
எருசலேமிலுள்ளவர்கள், எல்லா ஜனங்களாலும்
வாரினால் அடிக்கப்படுவார்கள் என்று தீர்க்கதரிசி
கூறுகிறான்.

And as for those who are at Jerusalem, saith the prophet, they shall be scourged by all people, because they crucify the God of Israel, and turn their hearts aside, rejecting signs and wonders, and the power and glory of the God of Israel.

14 தம் இருதயங்களை ஒதுக்கினதாலும், இஸ்ரவே-
லின் பரிசுத்தரை நிந்தித்ததாலும், அவர்கள் மாம்-
சத்திலே அலைந்து, அழிந்து, எல்லா தேசத்தாரா-
லும் இகழப்பட்டு, பரிகாசம் பண்ணப்பட்டு, எல்லா
தேசத்தாருக்குள்ளும் வெறுக்கப்படுவார்கள் என்-
று தீர்க்கதரிசி சொல்லுகிறான்.

And because they turn their hearts aside, saith the prophet, and have despised the Holy One of Israel, they shall wander in the flesh, and perish, and become a hiss and a byword, and be hated among all nations.

15 இருந்தபோதிலும், அந்த நாள்வரும்போது, அவர்-
கள் தங்கள் இருதயங்களை இஸ்ரவேலின் பரிசுத்-
தருக்கு எதிராய் ஒருபோதும் விலக்கமாட்டார்கள்.
அதன்பின்பு அவர் அவர்களுடைய பிதாக்களுக்-
குச் செய்த உடன்படிக்கைகளை நினைவுகூருவா-
ரென தீர்க்கதரிசி சொல்லுகிறான்.

Nevertheless, when that day cometh, saith the prophet, that they no more turn aside their hearts against the Holy One of Israel, then will he remember the covenants which he made to their fathers.

16 ஆம், பின்பு அவர் சமுத்திரத்தின் தீவுகளை நி-
னைவுகூருவார்; ஆம், தீர்க்கதரிசி சீனஸின் வார்த்-
தைகளின்படியே, பூமியின் நான்கு திசைகளிலி-
ருந்தும் இஸ்ரவேல் வீட்டாரான எல்லா ஜனங்க-
ளையும் நான் கூட்டிச்சேர்ப்பேன் என்று கர்த்தர்
சொல்லுகிறார்.

Yea, then will he remember the isles of the sea; yea, and all the people who are of the house of Israel, will I gather in, saith the Lord, according to the words of the prophet Zenos, from the four quarters of the earth.

17 ஆம், பூமிமுழுவதும் கர்த்தரின் இரட்சிப்பைக் கா-
ணும் என்று தீர்க்கதரிசி சொல்லுகிறான்; ஒவ்வொ-
ரு தேசத்தாரும், இனத்தாரும், பாஷைக்காரரும்,
ஜனமும் ஆசீர்வதிக்கப்படும்.

Yea, and all the earth shall see the salvation of the Lord, saith the prophet; every nation, kindred, tongue and people shall be blessed.

18 நேபியாகிய நான், மீட்பராகிய, அவர்களின் கர்த்-
தரை, அவர்கள் நினைவுகூரும்படி, ஒருவேளை
நான் உணர்த்தலாம் என்று இந்தக் காரியங்களை
என் ஜனத்திற்கு எழுதியுள்ளேன்.

And I, Nephi, have written these things unto my people, that perhaps I might persuade them that they would remember the Lord their Redeemer.

19 ஆகையால் இந்தக் காரியங்களை அவர்கள் பெ-
றவேண்டுமென்பதால், நான் எல்லா இஸ்ரவேல்
வீட்டாருடனும் பேசுகிறேன்.

Wherefore, I speak unto all the house of Israel, if it so be that they should obtain these things.

20 ஏனெனில் இதோ, எருசலேமிலிருப்பவர்களுக்-
காக நான் ஆவியால் கிரியைகள் நடப்பித்ததால்,
என்னுடைய எல்லா மூட்டுகளும் தளர்ச்சியடை-
யும்படிக்கு, என்னை ஆயாசப்படுத்துகிறது; பூர்வ-
கால தீர்க்கதரிசிகளுக்கு அவர் செய்ததுபோல,
அவர்களைக் குறித்து எனக்குக் காட்ட, கர்த்தர்
இரக்கமுள்ளவராயில்லாதிருந்தால், நானும் அழிந்-
திருப்பேன்.

For behold, I have workings in the spirit, which doth weary me even that all my joints are weak, for those who are at Jerusalem; for had not the Lord been merciful, to show unto me concerning them, even as he had prophets of old, I should have perished also.

21 அவர்களைக் குறித்து எல்லாக் காரியங்களை-
யும், அவர் மெய்யாகவே, பூர்வகாலத் தீர்க்கதரிசிக-
ளுக்குக் காட்டினார்; மேலும் நம்மைக் குறித்தும்
அநேகருக்கு அவர் காட்டினார்; ஆதலால் அவை-
கள் பித்தளைத் தகடுகளின்மீது எழுதப்பட்டிருப்ப-
தால், நாம் அவைகளைக் குறித்து அறிவது தேவை-
யாயிருக்கிறது.

And he surely did show unto the prophets of old all things concerning them; and also he did show unto many concerning us; wherefore, it must needs be that we know concerning them for they are written upon the plates of brass.

22 இப்பொழுது, அந்தப்படியே, நேபியாகிய நான்,
என் சகோதரருக்கு இந்தக் காரியங்களைப் போதித்-
தேன்; அந்தப்படியே, பூர்வகால ஜனங்களுக்குள்-
ளே, மற்ற தேசங்களிலும், கர்த்தருடைய கிரியைக-
ளைக் குறித்து, அவர்கள் அறியவேண்டுமென பித்-
தளைத் தகடுகள்மீது பதிக்கப்பட்ட அநேகக் காரி-
யங்களை அவர்களுக்கு வாசித்தேன்.

Now it came to pass that I, Nephi, did teach my brethren these things; and it came to pass that I did read many things to them, which were engraven upon the plates of brass, that they might know concerning the doings of the Lord in other lands, among people of old.

23 நான் மோசேயின் புஸ்தகங்களில் எழுதியிருந்த
அநேகக் காரியங்களை அவர்களுக்கு வாசித்தேன்;
ஆனால் கர்த்தராகிய அவர்களின் மீட்பரில் அவர்-
கள் விசுவாசிக்க இன்னும் முழுமையாய் இசையச்-
செய்ய, தீர்க்கதரிசி ஏசாயா எழுதியவைகளை
அவர்களுக்கு நான் படித்தேன்; ஏனென்றால் எங்க-
ளுடைய ஆதாயத்திற்காகவும், கற்றுக்கொள்வதற்-
காகவும் அவைகள் இருக்கவேண்டுமென, நான்
எல்லா வசனங்களையும் எங்கள் செயல்களுக்கு
ஒப்பிட்டேன்.

And I did read many things unto them which were written in the books of Moses; but that I might more fully persuade them to believe in the Lord their Redeemer I did read unto them that which was written by the prophet Isaiah; for I did liken all scriptures unto us, that it might be for our profit and learning.

24 ஆகையால் நான் அவர்களை நோக்கிச் சொன்ன-
தாவது, முறிக்கப்பட்ட கிளையாயிருக்கிறவர்க-
ளாகிய, இஸ்ரவேல் வீட்டாரின் மீதியானவர்களா-
கிய நீங்கள், இஸ்ரவேல் வீட்டார் எல்லாருக்கும்
எழுதப்பட்ட, தீர்க்கதரிசியின் வார்த்தைகளுக்குச்
செவிகொடுங்கள். மேலும் நீங்களும், முறிக்கப்பட்ட
உங்களுடைய சகோதரரும் கூட, நம்பிக்கை பெறும்-
படிக்கு, அவற்றை உங்களோடு ஒப்பிடுங்கள்.
ஏனெனில் தீர்க்கதரிசி இவ்விதமாகவே எழுதியுள்-
ளான்.

Wherefore I spake unto them, saying: Hear ye the words of the prophet, ye who are a remnant of the house of Israel, a branch who have been broken off; hear ye the words of the prophet, which were written unto all the house of Israel, and liken them unto yourselves, that ye may have hope as well as your brethren from whom ye have been broken off; for after this manner has the prophet written.

# 1 நேபி 20

1 இஸ்ரவேலின் நாமத்தினால் அழைக்கப்படுபவர்க-
ளும், யூதாவின் தண்ணீர்களிலிருந்து அல்லது
ஞானஸ்நானத் தண்ணீர்களிலிருந்து வெளிவரு-
பவர்களும், கர்த்தரின் நாமத்தினால் ஆணையிடு-
பவர்களும், இஸ்ரவேலின் தேவனைக் குறிப்பிடுப-
வர்களும், ஆகிய யாக்கோபின் வீட்டாரே, இதற்குச்
செவிகொடுத்துக் கேளுங்கள், ஆனாலும் அவர்கள்
சத்தியத்திலோ நீதியிலோ ஆணையிடுவதில்லை.
2 இருந்தபோதிலும், அவர்கள் தங்களைப் பரிசுத்-
தப் பட்டணத்தார் என அழைத்துக்கொள்கிறார்-
கள், ஆனால் அவர்கள் சேனைகளின் கர்த்தராகிய
இஸ்ரவேலின் தேவனை சார்ந்திருக்கவில்லை;
ஆம், சேனைகளின் கர்த்தர் என்பது அவரின் நா-
மம்.
3 இதோ, முந்திய காரியங்களை நான் ஆதிமுதல்
அறிவித்தேன்; அவைகள் என் வாயிலிருந்து போ-
யின, நான் அவர்களுக்குக் காட்டினேன். நான்
அவர்களுக்கு திடீரென காட்டினேன்.
4 நீங்கள் முரடர்கள் என்றும், உங்களுடைய கழுத்-
து இரும்புபோல் வளையாததென்றும், உங்களு-
டைய நெற்றி பித்தளை என்றும் நான் அறிந்திருந்-
தபடியால், நான் இதைச் செய்தேன்.
5 நான் ஆதிமுதற்கொண்டு உங்களுக்கு அறிவித்-
தேன்; அந்தப்படியே, அவைகள் நடக்கும் முன்பே
அவைகளை உங்களுக்கு நான் காட்டினேன்;
அவர்களை என்னுடைய விக்கிரகம் செய்ததென்-
றும், என்னுடைய சொரூபம் மற்றும் வார்ப்பிக்கப்-
பட்ட விக்கிரகம் அவர்களுக்குக் கட்டளையிட்ட-
தென்றும், நீங்கள் சொல்லாதபடிக்கு அச்சத்தால்
நான் அவைகளைக் காண்பித்தேன்.
6 அவைகள் எல்லாவற்றையும் நீங்கள் கண்டும்
கேட்டுமிருக்கிறீர்கள்; அவைகளை நீங்கள் அறி-
விக்கமாட்டீர்களோ? மேலும் இது முதல் புதிய காரி-
யங்களையும், மறைந்துள்ள காரியங்களையும்-
கூட நான் உங்களுக்குக் காண்பித்திருக்கிறேன்,
நீங்கள் அவைகளை அறிந்திருக்கவில்லை.
7 ஆதியிலிருந்தே அல்ல, அவைகள் இப்பொழுது
சிருஷ்டிக்கப்பட்டவை, இதோ, நான் அவைகளை
அறிவேன் என்று நீங்கள் சொல்லாதபடிக்கு, நீங்-
கள் கேளாத நாளுக்கு முன்பே அவை உங்களுக்கு
அறிவிக்கப்பட்டிருக்கின்றன.
8 ஆம், நீங்கள் கேட்கவில்லை; ஆம், நீங்கள் அறிந்-
திருக்கவில்லை; ஆம், அந்தக் காலம் முதல் உங்கள்
செவி திறக்கப்படவில்லை; நீங்கள் மிகவும் துரோ-
கமாய் செயல்புரிவீர்களென்றும், கர்ப்பந்தொடங்கி
மீறினவர்கள் என்றே நீங்கள் அழைக்கப்பட்டீர்கள்
என்றும் அறிந்திருக்கிறேன்.

# 1 Nephi 20

Hearken and hear this, O house of Jacob, who are called by the name of Israel, and are come forth out of the waters of Judah, or out of the waters of baptism, who swear by the name of the Lord, and make mention of the God of Israel, yet they swear not in truth nor in righteousness.

Nevertheless, they call themselves of the holy city, but they do not stay themselves upon the God of Israel, who is the Lord of Hosts; yea, the Lord of Hosts is his name.

Behold, I have declared the former things from the beginning; and they went forth out of my mouth, and I showed them. I did show them suddenly.

And I did it because I knew that thou art obstinate, and thy neck is an iron sinew, and thy brow brass;

And I have even from the beginning declared to thee; before it came to pass I showed them thee; and I showed them for fear lest thou shouldst say—Mine idol hath done them, and my graven image, and my molten image hath commanded them.

Thou hast seen and heard all this; and will ye not declare them? And that I have showed thee new things from this time, even hidden things, and thou didst not know them.

They are created now, and not from the beginning, even before the day when thou heardest them not they were declared unto thee, lest thou shouldst say—Behold I knew them.

Yea, and thou heardest not; yea, thou knewest not; yea, from that time thine ear was not opened; for I knew that thou wouldst deal very treacherously, and wast called a transgressor from the womb.

9 ஆயினும், என் நாமத்தினிமித்தம் என் கோபத்தை தாமதம் செய்து மேலும் உங்களைச் சங்கரிக்காதபடிக்கு, நான் என் துதிகளுக்காக, உங்களிடமிருந்து விலகியிருப்பேன்.

Nevertheless, for my name's sake will I defer mine anger, and for my praise will I refrain from thee, that I cut thee not off.

10 ஏனெனில், இதோ, நான் உங்களைப் புடமிட்டு, உபத்திரவத்தின் சூளையிலிருந்து நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்.

For, behold, I have refined thee, I have chosen thee in the furnace of affliction.

11 என்னிமித்தமே, ஆம், என்னிமித்தமே இதை நான் செய்வேன், ஏனெனில் என்னுடைய நாமம் தீட்டுப்பட நான் விடமாட்டேன், மேலும் என் மகிமையை நான் வேறொருவருக்கும் கொடுப்பதில்லை.

For mine own sake, yea, for mine own sake will I do this, for I will not suffer my name to be polluted, and I will not give my glory unto another.

12 யாக்கோபே, நான் அழைத்திருக்கிற இஸ்ரவேலே, எனக்குச் செவிகொடு; ஏனெனில் நானே அவர், நானே முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கிறேன்.

Hearken unto me, O Jacob, and Israel my called, for I am he; I am the first, and I am also the last.

13 என்னுடைய கரம் பூமியின் அஸ்திபாரத்தைப் போட்டது, மேலும் என்னுடைய வலது கரம் வானங்களை அளந்தது. நான் அவைகளை அழைக்க, அவைகள் ஒன்றாக நிற்கும்.

Mine hand hath also laid the foundation of the earth, and my right hand hath spanned the heavens. I call unto them and they stand up together.

14 நீங்கள் எல்லோரும் கூடிவந்து கேளுங்கள்; இந்தக் காரியங்களை அவர்களுக்கு அறிவித்தவன் யார்? கர்த்தர் அவனை நேசித்து இருக்கிறார்; ஆம், அவர்கள் மூலமாக அவர் அறிவித்த அவரின் வார்த்தையை அவர் நிறைவேற்றுவார். மேலும் அவர் அவருடைய விருப்பத்தை பாபிலோனில் செய்வார், கல்தேயர்மீது அவரின் கரம் வரும்.

All ye, assemble yourselves, and hear; who among them hath declared these things unto them? The Lord hath loved him; yea, and he will fulfil his word which he hath declared by them; and he will do his pleasure on Babylon, and his arm shall come upon the Chaldeans.

15 கர்த்தர் சொல்வதாவது; ஆம், கர்த்தராகிய நான் பேசியுள்ளேன்; ஆம், அறிவிக்கும்படி அவனை அழைத்தேன்; அவனை நான் கொண்டுவந்தேன்; அவன் தன்னுடைய வழியைச் செழிப்படையச் செய்வான்.

Also, saith the Lord; I the Lord, yea, I have spoken; yea, I have called him to declare, I have brought him, and he shall make his way prosperous.

16 நீங்கள் எனக்குச் சமீபமாய் வாருங்கள்; நான் அந்தரங்கத்தில் பேசவில்லை; ஆதிமுதல் அது அறிவிக்கப்பட்ட காலம் முதலே நான் பேசினேன்; மேலும் கர்த்தராகிய தேவனும், அவரின் ஆவியும் என்னை அனுப்பியிருக்கிறார்கள்.

Come ye near unto me; I have not spoken in secret; from the beginning, from the time that it was declared have I spoken; and the Lord God, and his Spirit, hath sent me.

17 இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிற, உன் மீட்பராகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; நான் அவனை அனுப்பினேன், பிரயோஜனமாயிருக்கிறதை உனக்குப் போதித்து நீ நடக்கவேண்டிய வழியிலே உன்னை நடத்துகிற உன் தேவனாகிய கர்த்தரே அதைச் செய்திருக்கிறார்.

And thus saith the Lord, thy Redeemer, the Holy One of Israel; I have sent him, the Lord thy God who teacheth thee to profit, who leadeth thee by the way thou shouldst go, hath done it.

18 நீ என் கட்டளைகளுக்குச் செவிசாய்த்து இருந்திருப்பாயாகில், உன் சமாதானம் நதியைப்போலவும் உன் நீதி, சமுத்திரத்தின் அலைகளைப்போலவும் இருந்திருக்கும்.

O that thou hadst hearkened to my commandments—then had thy peace been as a river, and thy righteousness as the waves of the sea.

19 உன் சந்ததி மணலத்தனையாயும், உன் வயிற்றின் பிள்ளைகள் அதிலுள்ள கற்களைப்போலவும் இருந்திருப்பார்கள்; அவனது நாமம் என் முன்னிருந்து, அறுப்புண்டுபோகாமலும், அழிக்கப்படாமலுமிருந்திருக்கும்.

Thy seed also had been as the sand; the offspring of thy bowels like the gravel thereof; his name should not have been cut off nor destroyed from before me.

20 பாபிலோனிலிருந்து வெளியேறுங்கள்; கல்தேய-
ரிடத்திலிருந்தும் தப்பியோடுங்கள்; கர்த்தர் தன் தா-
சனாகிய யாக்கோபை மீட்டுக்கொண்டாரென்று
சங்கீத சத்தத்தோடு பிரசித்தப்படுத்துங்கள். பூமி-
யின் கடையாந்தரமட்டும் உச்சரியுங்கள்.

Go ye forth of Babylon, flee ye from the Chaldeans, with a voice of singing declare ye, tell this, utter to the end of the earth; say ye: The Lord hath redeemed his servant Jacob.

21 அவர்கள் தாகமடையவில்லை, அவர் அவர்க-
ளைப் பாலைவனத்தின் வழியே நடத்திச் சென்-
றார், அவர்களுக்காகத் தண்ணீர்களைப் பாறையி-
லிருந்து வழிந்தோடப்பண்ணினார்; அவர் பாறை-
யைப் பிளந்தார், தண்ணீர்கள் பீறிட்டது.

And they thirsted not; he led them through the deserts; he caused the waters to flow out of the rock for them; he clave the rock also and the waters gushed out.

22 இவைகளைச் செய்ததோடு, இன்னும் பெரியவை-
களையும் அவர் செய்திருந்தபோதிலும், அங்கே
சமாதானம் இல்லை என்று துன்மார்க்கருக்கு கர்த்-
தர் சொல்லுகிறார்.

And notwithstanding he hath done all this, and greater also, there is no peace, saith the Lord, unto the wicked.

# 1 நேபி 21

1 என் ஜனத்தின் போதகர்களின் துன்மார்க்கத்தால்
முறிக்கப்பட்டு, துரத்தப்பட்ட இஸ்ரவேல் வீட்டாரே,
ஆம், முறிக்கப்பட்டு, மற்ற தேசங்களில் சிதறடிக்கப்-
பட்ட என் ஜனமாகிய இஸ்ரவேல் வீட்டாரே கேளுங்-
கள், தீவுகளே, மேலும் தூரத்திலிருக்கிற என் ஜன-
மே கேள், கர்த்தர் கர்ப்பத்திலிருந்தே என்னை
அழைத்திருக்கிறார், என் தாயின் வயிற்றிலிருந்தே
அவர் என் நாமத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்.

2 அவர் என் வாயை, ஒரு கூர்மையான பட்டயம்
போலச் செய்துள்ளார்; அவர் என்னைத் தன் கைக-
ளின் நிழலிலே மறைத்து துலக்கப்பட்ட ஒரு அம்-
பைப்போல என்னைச் செய்துள்ளார்; அவரின்
அம்புறாத் துணியில் என்னை அவர் மறைத்திருக்-
கிறார்.

3 என்னை நோக்கி: நீ என் தாசன். இஸ்ரவேலே,
நான் உன்னில் மகிமைப்படுவேன் என்றார்.

4 பின்பு நான், நான் வீணிலே உழைத்திருக்கிறேன்,
என்னுடைய பெலத்தை அற்பமாயும், வீணாயும்
கழித்திருக்கிறேன்; நிச்சயமாக என்னுடைய நியா-
யத்தீர்ப்பு கர்த்தரிடத்திலும், என்னுடைய கிரியை
தேவனிடத்திலுமுள்ளது என்றேன்.

5 இப்பொழுதும் கர்த்தர், யாக்கோபைத் தம்மிடத்-
தில் திரும்பவும் கொண்டுவரும்படி, நான் தாயின்
கர்ப்பத்திலிருந்தது முதல் கர்த்தர் தமக்கு தாசனாக
என்னை உருவாக்கினார்; இஸ்ரவேல் கூட்டிச்சேர்க்-
கப்படாவிட்டாலும் கர்த்தருடைய கண்களிலே
நான் மகிமைப்பட்டிருப்பேன், என் தேவன் எனக்-
குப் பெலனாயுமிருப்பார், என்று கர்த்தர் சொல்லு-
கிறார்.

6 அவர், நீ எனக்குத் தாசனாயிருந்து யாக்கோபின்
கோத்திரங்களை எழுப்பவும், இஸ்ரவேலில் காக்-
கப்பட்டவர்களை திருப்பிக்கொண்டுவருவதும்
அற்பகாரியமாயிருக்கிறது; நீ பூமியின் கடைசிபரி-
யந்தம் என் இரட்சிப்பாயிருக்கும்படி, உன்னை புற-
ஜாதியாருக்கு ஒளியாய்க் கொடுத்தேன் என்றார்.

7 இஸ்ரவேலின் மீட்பரும், அதின் பரிசுத்தருமாகிய
கர்த்தர் மனுஷரால் அசட்டை பண்ணப்பட்டவரும்,
ஜாதியாரால் அருவருக்கப்பட்டவரும் அதிகாரிக-
ளுக்கு ஊழியக்காரனுமாயிருக்கிறவரை நோக்கி,
உண்மையுள்ள கர்த்தர் நிமித்தம் ராஜாக்கள் கண்-
டு எழுந்திருந்து பிரபுக்கள் பணிந்துகொள்வார்-
கள், என்று சொல்லுகிறார்.

# 1 Nephi 21

And again: Hearken, O ye house of Israel, all ye that are broken off and are driven out because of the wickedness of the pastors of my people; yea, all ye that are broken off, that are scattered abroad, who are of my people, O house of Israel. Listen, O isles, unto me, and hearken ye people from far; the Lord hath called me from the womb; from the bowels of my mother hath he made mention of my name.

And he hath made my mouth like a sharp sword; in the shadow of his hand hath he hid me, and made me a polished shaft; in his quiver hath he hid me;

And said unto me: Thou art my servant, O Israel, in whom I will be glorified.

Then I said, I have labored in vain, I have spent my strength for naught and in vain; surely my judgment is with the Lord, and my work with my God.

And now, saith the Lord—that formed me from the womb that I should be his servant, to bring Jacob again to him—though Israel be not gathered, yet shall I be glorious in the eyes of the Lord, and my God shall be my strength.

And he said: It is a light thing that thou shouldst be my servant to raise up the tribes of Jacob, and to restore the preserved of Israel. I will also give thee for a light to the Gentiles, that thou mayest be my salvation unto the ends of the earth.

Thus saith the Lord, the Redeemer of Israel, his Holy One, to him whom man despiseth, to him whom the nations abhorreth, to servant of rulers: Kings shall see and arise, princes also shall worship, because of the Lord that is faithful.

8 சமுத்திரத்தின் தீவுகளே, அநுக்கிரக காலத்தில், நான் உங்களுக்குச் செவிகொடுத்தும், இரட்சணிய நாளிலே உனக்கு நான் உதவியுமுள்ளேன்; பாழான சுதந்திரத்தை சுதந்தரிப்பதினிமித்தம், பூமியை ஸ்தாபித்து, உனக்கு என் தாசனை, ஜனத்தின் உடன்படிக்கையாகக் கொடுத்து, உன்னை நான் பாதுகாப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

Thus saith the Lord: In an acceptable time have I heard thee, O isles of the sea, and in a day of salvation have I helped thee; and I will preserve thee, and give thee my servant for a covenant of the people, to establish the earth, to cause to inherit the desolate heritages;

9 அதன்மூலமாக சிறைப்பட்டவர்களை நோக்கி: இருளில் அமர்ந்திருக்கிறவர்களிடத்தில் போய் உங்களைக் காண்பியுங்கள் என்று சொல். அவர்கள் வழிகளிலே புசிப்பார்கள். மேலும் அவர்களின் புல்லுள்ள இடங்கள் எல்லா உயர்ந்த இடங்களிலுமிருக்கும்.

That thou mayest say to the prisoners: Go forth; to them that sit in darkness: Show yourselves. They shall feed in the ways, and their pastures shall be in all high places.

10 அவர்கள் பசியாயிருப்பதுமில்லை, தாகமாயிருப்பதுமில்லை. வெப்பமாகிலும், வெயிலாகிலும் அவர்கள்மேல் படுவதுமில்லை; ஏனெனில் அவர்கள்மேல் இரக்கமுள்ளவர் அவர்களை நடத்தி, தண்ணீரின் நீரூற்றுகளின் பக்கத்தில் வழிநடத்துவார்.

They shall not hunger nor thirst, neither shall the heat nor the sun smite them; for he that hath mercy on them shall lead them, even by the springs of water shall he guide them.

11 நான் என் மலைகளை எல்லாம் வழியாக்குவேன். என்னுடைய பெரும் பாதைகள் உயர்த்தப்படும்.

And I will make all my mountains a way, and my highways shall be exalted.

12 அப்பொழுது இஸ்ரவேலின் வீட்டாரே, இதோ, இவர்கள் தூரத்திலிருந்தும், வடக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வருவார்கள்; மேலும் சீனீம் தேசத்திலிருந்தும் வருவார்கள்.

And then, O house of Israel, behold, these shall come from far; and lo, these from the north and from the west; and these from the land of Sinim.

13 வானங்களே பாடுங்கள். பூமியே களிகூரு; கிழக்கிலுள்ளவர்களின் பாதங்கள் நிலைப்படுத்தப்படும். பர்வதங்களே கெம்பீரமாய் முழங்குங்கள்; ஏனெனில் அவர்கள் இனி ஒருபோதும் முறியடிக்கப்படுவதில்லை; ஏனெனில் கர்த்தர் தம்முடைய ஜனத்தைத் தேற்றியிருக்கிறார்; சிறுமைப்பட்டிருக்கிற தம்முடையவர்கள்மேல் இரக்கமாயிருப்பார்.

Sing, O heavens; and be joyful, O earth; for the feet of those who are in the east shall be established; and break forth into singing, O mountains; for they shall be smitten no more; for the Lord hath comforted his people, and will have mercy upon his afflicted.

14 ஆனால், இதோ சீயோன் சொன்னதாவது: கர்த்தர் என்னைக் கைவிட்டார், கர்த்தர் என்னை மறந்தார், ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை என்பதைக் காண்பிப்பார்.

But, behold, Zion hath said: The Lord hath forsaken me, and my Lord hath forgotten me—but he will show that he hath not.

15 ஒரு ஸ்திரீ தன் பாலகனை மறப்பாளோ? அவள் தன் கர்ப்பத்தின் மகனின் மீது இரக்கம் கொள்ளாளோ. ஆம், அவர்கள் மறந்து போனாலும், இஸ்ரவேலின் வீட்டாரே உன்னை நான் மறப்பதில்லை.

For can a woman forget her sucking child, that she should not have compassion on the son of her womb? Yea, they may forget, yet will I not forget thee, O house of Israel.

16 இதோ, என் உள்ளங்கையிலே உன்னை வரைந்திருக்கிறேன்; உன்னுடைய மதில்கள் எனக்கு முன்பாகத் தொடர்ந்திருக்கிறது.

Behold, I have graven thee upon the palms of my hands; thy walls are continually before me.

17 உன் பிள்ளைகள் உன்னை அழிப்பவர்களுக்கு எதிராகத் துரிதப்படுவார்கள்; மேலும் உன்னை நிர்மூலமாக்கினவர்கள் உனக்குப் புறம்பே செல்வார்கள்.

Thy children shall make haste against thy destroyers; and they that made thee waste shall go forth of thee.

18 உன் கண்களைச் சுற்றிலும் ஏறெடுத்துப்பார்;
இவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி, உன்னிடம் வரு-
வார்கள். அவர்களை எல்லாம் நான் வாழ்வதைப்-
போல மெய்யாகவே, ஒரு ஆபரணம்போல், மணம-
கள் அவைகளை அணிவதைப்போல, நீயும் உடுத்-
துவாய் என்று சொல்லுகிறேன் என்று கர்த்தர்
உரைக்கிறார்.

Lift up thine eyes round about and behold; all these gather themselves together, and they shall come to thee. And as I live, saith the Lord, thou shalt surely clothe thee with them all, as with an ornament, and bind them on even as a bride.

19 உன்னுடைய பாழான, நிர்மூலமாக்கப்பட்ட
இடங்களும், உன் அழிவின் தேசங்களும், இப்பொ-
ழுது அதை சுதந்தரிப்பவர்களின் நிமித்தம் நெருக்-
கமாயிருக்கும்; உன்னை விழுங்கியவர்கள் தூரமா-
யிருப்பார்கள்.

For thy waste and thy desolate places, and the land of thy destruction, shall even now be too narrow by reason of the inhabitants; and they that swallowed thee up shall be far away.

20 முதற் பிள்ளைகளைத் தவறவிட்டபின்பு, நீ பெ-
றப்போகும் பிள்ளைகள் உன்னுடைய செவிகளில்
மறுபடியும், இந்த இடம் எனக்கு நெருக்கமாக இருக்-
கிறது. நான் வாசம்பண்ண எனக்கு இடத்தைத் தா-
ரும் என்பார்கள்.

The children whom thou shalt have, after thou hast lost the first, shall again in thine ears say: The place is too strait for me; give place to me that I may dwell.

21 அப்பொழுது நீ, நான் என் பிள்ளைகளைத் தவ-
றவிட்டதையும், தனித்தவன் மற்றும் சிறைப்பட்ட-
வனாய், அங்கேயும் இங்கேயுமாய் அலைகிறவன்
என்று பார்த்து இவைகளை எனக்கு பிறப்பித்த-
வன் யார்? இவர்களை எனக்கு வளர்த்தவன் யார்?
இதோ, நான் தனியாய் விடப்பட்டிருந்தேனே, இவர்-
கள் எங்கேயிருந்தார்கள், என்று உன் இருதயத்தில்
சொல்லுவாய்.

Then shalt thou say in thine heart: Who hath begotten me these, seeing I have lost my children, and am desolate, a captive, and removing to and fro? And who hath brought up these? Behold, I was left alone; these, where have they been?

22 இதோ, புறஜாதிகளுக்கு நேராக என் கரத்தை
உயர்த்தி, ஜனங்களுக்கு நேராக என் கொடியை ஏற்-
றுவேன்; அப்பொழுது உன் குமாரரைக் கைகளில்
ஏந்திக்கொண்டு வருவார்கள்; உன் குமாரத்திகள்
அவர்கள் தோளின்மேல் எடுத்துக்கொண்டு வரப்ப-
டுவார்கள் என்று கர்த்தராகிய தேவன் சொல்லுகி-
றார்.

Thus saith the Lord God: Behold, I will lift up mine hand to the Gentiles, and set up my standard to the people; and they shall bring thy sons in their arms, and thy daughters shall be carried upon their shoulders.

23 ராஜாக்கள் உன்னை போஷிக்கும் தகப்பன்களா-
கவும், அவர்களின் இராணிகள் உன்னைத் தாபரிக்-
கிற தாய்மார்களாகவும் இருப்பார்கள்; அவர்கள்
தரையில் முகங்குப்புற விழுந்து, உன்னைப்
பணிந்து, உன் பாதங்களிலிருந்து தூசியை நக்கு-
வார்கள்; நான் கர்த்தர் என்றும், எனக்காகக் காத்தி-
ருக்கிறவர்கள் வெட்கப்பட்டுப்போவதில்லை என்-
றும் நீ அறிவாய்.

And kings shall be thy nursing fathers, and their queens thy nursing mothers; they shall bow down to thee with their face towards the earth, and lick up the dust of thy feet; and thou shalt know that I am the Lord; for they shall not be ashamed that wait for me.

24 ஏனெனில், பராக்கிரமன் கையிலிருந்து கொள்-
ளைப்பொருளைப் பறிக்கக்கூடுமோ? அல்லது நீ-
தியாய்ச் சிறைப்பட்டுப்போனவர்களை விடுவிக்-
கக்கூடுமோ?

For shall the prey be taken from the mighty, or the lawful captives delivered?

25 என்றாலும், இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்-
தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள்; பல-
வந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலை-
யாக்கப்படும், உன்னோடு வழக்காடுகிறவர்களோ-
டே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்-
துக் கொள்ளுவேன்.

But thus saith the Lord, even the captives of the mighty shall be taken away, and the prey of the terrible shall be delivered; for I will contend with him that contendeth with thee, and I will save thy children.

26 உன்னை ஒடுக்கினவர்களுடைய சொந்த மாம்-
சத்தை அவர்களுக்கே ஊட்டுவேன்; அவர்கள் மது-
ரமான மதுவைப்போல தங்கள் சொந்த இரத்தத்-
தைக் குடித்து வெறிப்பார்கள். கர்த்தரும் யாக்கோ-
பின் வல்லவருமாகிய நான் உன் இரட்சகரும் உன்
மீட்பருமாயிருக்கிறதை, மாம்சமான யாவரும்
அறிந்துகொள்வார்களென்று கர்த்தர் சொல்லுகி-
றார்.

And I will feed them that oppress thee with their own flesh; they shall be drunken with their own blood as with sweet wine; and all flesh shall know that I, the Lord, am thy Savior and thy Redeemer, the Mighty One of Jacob.

# 1 நேபி 22

1 அந்தப்படியே, நேபியாகிய நான், பித்தளைத் தகடு-
கள்மீது பதிக்கப்பட்ட இந்தக் காரியங்களைப்
படித்த பின்பு, என் சகோதரர் என்னிடம் வந்து என்-
னை நோக்கி: நீ படித்த இந்தக் காரியங்களின் அர்த்-
தமென்ன? இதோ, மாம்சத்திற்கல்லாத ஆவியின்ப-
டியே, வரப்போகிற ஆவியின் காரியங்களின்படியே
அவைகளை அறிந்துகொள்ள வேண்டுமா என்-
றார்கள்.
2 நேபியாகிய நான் அவர்களை நோக்கி: இதோ,
அவைகள் தீர்க்கதரிசிக்கு ஆவியின் சத்தத்தின் மூ-
லம் வெளிப்படுத்தப்பட்டன; ஏனெனில் மாம்சத்-
தின் பிரகாரமாய் மனுபுத்திரர்மீது வரப்போகிற
எல்லா காரியங்களும் ஆவியால் தீர்க்கதரிசிகளுக்-
கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்றேன்.
3 ஆகையால், நான் படித்த காரியங்கள், இம்மைக்-
குரிய மற்றும் ஆவிக்குரிய இரண்டிற்கும் சார்ந்த கா-
ரியங்களாகும்; ஏனெனில், சீக்கிரத்திலாவது அல்-
லது தாமதமாகவாவது இஸ்ரவேல் வீட்டார் பூமி-
யின் பரப்பின்மீதெங்கும், எல்லா தேசத்திற்குள்-
ளும் சிதறடிக்கப்படுவார்கள் எனத் தோன்றுகிறது.
4 இதோ, இப்பொழுதே அநேகர் எருசலேமில் இருந்த-
வர்களின் ஞாபகத்திலிருந்து தொலைந்துவிட்-
டனர். ஆம், எல்லாக் கோத்திரத்திலும், அதிகமா-
னோர் தூர நடத்திச் செல்லப்பட்டனர்; மேலும்
அவர்கள் சமுத்திரத்தின் தீவுகளின் மீது அங்கும்
இங்கும் சிதறடிக்கப்பட்டுள்ளார்கள்; அவர்கள் பு-
றம்பே நடத்தப்பட்டவர்களைத் தவிர அவர்கள்
எங்கே என்று எங்களில் ஒருவருக்கும் தெரியாது.
5 அவர்கள் தூர நடத்திச் செல்லப்பட்டபடியால்,
இஸ்ரவேலின் பரிசுத்தரின் நிமித்தமாக அவர்க-
ளைக் குறித்தும், இதற்குப்பின் சிதறடிக்கப்பட்டு,
தாறுமாறாக்கப்பட இருப்பவர்களைக் குறித்தும்,
இந்தக் காரியங்கள் தீர்க்கதரிசனமாக உரைக்கப்-
பட்டுள்ளன; ஆகவே அவருக்கு எதிராக அவர்கள்
தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துவார்கள்;
ஆதலால் அவர்கள் எல்லா தேசங்களின் மத்தியி-
லும் சிதறடிக்கப்பட்டு, எல்லா மனுஷராலும் வெ-
றுக்கப்படுவார்கள்.
6 ஆயினும், அவர்கள் புறஜாதிகளால் தாபரிக்கப்-
பட்ட பின்பு, தம் கரத்தை புறஜாதியார்மீது உயர்த்தி,
அவர்களைக் கொடியாக ஏற்படுத்தினார். அப்பொ-
ழுது அவர்களுடைய பிள்ளைகளை, அவர்களின்
கரங்களால் ஏந்தி, அவர்களின் குமாரத்திகள்
அவர்களின் தோள்களின் மீதும் சுமக்கப்பட்டார்-
கள்; இதோ, பேசப்பட்ட இந்தக் காரியங்கள் இம்-
மைக்குரியவை; ஏனெனில் நம்முடைய பிதாக்க-
ளுடனுள்ள கர்த்தரின் உடன்படிக்கை அப்படியா-
யிருக்கிறது; அவை வரப்போகும் நாட்களில், நமக்-
கும், இஸ்ரவேல் வீட்டாராகிய நம் சகோதரர் அனை-
வருக்கும் பொருந்துவனவாயிருக்கின்றன.

# 1 Nephi 22

And now it came to pass that after I, Nephi, had read these things which were engraven upon the plates of brass, my brethren came unto me and said unto me: What meaneth these things which ye have read? Behold, are they to be understood according to things which are spiritual, which shall come to pass according to the spirit and not the flesh?

And I, Nephi, said unto them: Behold they were manifest unto the prophet by the voice of the Spirit; for by the Spirit are all things made known unto the prophets, which shall come upon the children of men according to the flesh.

Wherefore, the things of which I have read are things pertaining to things both temporal and spiritual; for it appears that the house of Israel, sooner or later, will be scattered upon all the face of the earth, and also among all nations.

And behold, there are many who are already lost from the knowledge of those who are at Jerusalem. Yea, the more part of all the tribes have been led away; and they are scattered to and fro upon the isles of the sea; and whither they are none of us knoweth, save that we know that they have been led away.

And since they have been led away, these things have been prophesied concerning them, and also concerning all those who shall hereafter be scattered and be confounded, because of the Holy One of Israel; for against him will they harden their hearts; wherefore, they shall be scattered among all nations and shall be hated of all men.

Nevertheless, after they shall be nursed by the Gentiles, and the Lord has lifted up his hand upon the Gentiles and set them up for a standard, and their children have been carried in their arms, and their daughters have been carried upon their shoulders, behold these things of which are spoken are temporal; for thus are the covenants of the Lord with our fathers; and it meaneth us in the days to come, and also all our brethren who are of the house of Israel.

7 அது எல்லா இஸ்ரவேல் வீட்டாரும் சிதறடிக்கப்பட்டு தாறுமாறாக்கப்பட்ட பின்பு, இந்த நிலத்தின்மீது புறஜாதியார் மத்தியில் ஒரு வல்லமையான தேசத்தை, கர்த்தராகிய தேவன் வரப்போகிற காலங்களில் எழுப்புவார் என்று அர்த்தமாகிறது; அவைகளாலே நம் சந்ததி சிதறடிக்கப்படும்.

And it meaneth that the time cometh that after all the house of Israel have been scattered and confounded, that the Lord God will raise up a mighty nation among the Gentiles, yea, even upon the face of this land; and by them shall our seed be scattered.

8 நம் சந்ததி சிதறடிக்கப்பட்ட பின்பு, கர்த்தராகிய தேவன் புறஜாதியார் மத்தியிலே, நம் சந்ததியினருக்கு மிகுந்த மேன்மையான ஒரு பெரும் மகத்துவமுள்ள கிரியை செய்யத் துவங்குவார்; ஆகையால் அவர்கள் புறஜாதியாரால் போஷிக்கப்பட்டும், அவர்களின் கரங்களிலும், அவர்கள் தோள்களின் மேலும் சுமக்கப்பட்டும், செல்வதற்கு ஒப்பாயிருக்கும்.

And after our seed is scattered the Lord God will proceed to do a marvelous work among the Gentiles, which shall be of great worth unto our seed; wherefore, it is likened unto their being nourished by the Gentiles and being carried in their arms and upon their shoulders.

9 அது புறஜாதியாருக்கும் தகுதியாக இருக்கும்; உன் சந்ததியினாலே பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும் என்று ஆபிரகாமுக்குச் சொன்ன பரலோக பிதாவின் உடன்படிக்கைகளை அறியச் செய்வதனாலே, அது புறஜாதியாருக்கு மட்டுமல்ல இஸ்ரவேல் வீட்டாருக்கும் தகுதியாயிருக்கும்.

And it shall also be of worth unto the Gentiles; and not only unto the Gentiles but unto all the house of Israel, unto the making known of the covenants of the Father of heaven unto Abraham, saying: In thy seed shall all the kindreds of the earth be blessed.

10 என் சகோதரரே, எல்லா தேசத்தாரின் கண்களுக்கு முன்பாகவும், அவர் தம்முடைய புயத்தை வெறுமையாக்கினாலொழிய, பூமியின் எல்லா இனங்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருக்கமுடியாதென்று நீங்களும் அறியவேண்டுமென ஆசைப்படுகிறேன்.

And I would, my brethren, that ye should know that all the kindreds of the earth cannot be blessed unless he shall make bare his arm in the eyes of the nations.

11 ஆகையால், இஸ்ரவேலின் வீட்டாராகியவர்களுக்கு தம் சுவிசேஷத்தையும், தம் உடன்படிக்கைகளையும் கொண்டுவர, கர்த்தராகிய தேவன் எல்லா தேசங்களின் கண்களுக்கு முன்பாகவும் அவர் தம்முடைய புயத்தை வெளிப்படுத்துவார்.

Wherefore, the Lord God will proceed to make bare his arm in the eyes of all the nations, in bringing about his covenants and his gospel unto those who are of the house of Israel.

12 ஆதலால், அவர் அவர்களை மறுபடியும் சிறையிருப்பிலிருந்து வெளியே கொண்டுவந்து, அவர்கள் அவர்களுடைய சுதந்திர தேசங்களிலே ஒன்று சேர்க்கப்படுவார்கள்; அவர்கள் இருளிலிருந்தும், அந்தகாரத்திலிருந்தும் வெளியே கொண்டுவரப்படுவார்கள்; அவர்கள், கர்த்தர் அவர்களுடைய இரட்சகர் எனவும், மீட்பரெனவும், இஸ்ரவேலின் வல்லவரென்றும் அறிவார்கள்.

Wherefore, he will bring them again out of captivity, and they shall be gathered together to the lands of their inheritance; and they shall be brought out of obscurity and out of darkness; and they shall know that the Lord is their Savior and their Redeemer, the Mighty One of Israel.

13 பூமியனைத்திற்கும் வேசியான அந்தப் பெரிதும் அருவருப்புமான சபையின் இரத்தம், அவர்களின் சொந்தத் தலைகளின் மீது திரும்பும்; அவர்கள் தங்களுக்குள் யுத்தம்செய்து, அவர்களின் சொந்தக் கைகளின் பட்டயம் அவர்களின் சொந்தத் தலைகள்மீது விழுந்து, அவர்களின் சொந்த இரத்தத்தைக் குடித்து வெறித்தவர்களாயிருப்பார்கள்.

And the blood of that great and abominable church, which is the whore of all the earth, shall turn upon their own heads; for they shall war among themselves, and the sword of their own hands shall fall upon their own heads, and they shall be drunken with their own blood.

14 இஸ்ரவேலின் வீட்டாரே, உங்களுக்கு எதிராய் யுத்தம் செய்யும் ஒவ்வொரு தேசமும், ஒருவருக்கொருவர் எதிராய்த் திரும்புவார்கள்; கர்த்தருடைய ஜனத்தை கண்ணியிலகப்படுத்த அவர்கள் தோண்டிய துரவிலே அவர்கள் விழுவார்கள். மேலும் சீயோனுக்கு எதிராய்ச் சண்டையிடுகிறவர்கள் எல்லாம் அழிக்கப்பட்டு, கர்த்தரின் செம்மையான வழிகளைப் புரட்டிபோட்ட, ஆம், அந்த வேசியான பெரிதும் அருவருப்புமான சபை புழுதிக்குள்ளாக இடறும், அதனுடைய வீழ்ச்சி பெரிதாயிருக்கும்.

And every nation which shall war against thee, O house of Israel, shall be turned one against another, and they shall fall into the pit which they digged to ensnare the people of the Lord. And all that fight against Zion shall be destroyed, and that great whore, who hath perverted the right ways of the Lord, yea, that great and abominable church, shall tumble to the dust and great shall be the fall of it.

15 ஏனெனில் இதோ, மனுபுத்திரரின் இருதயங்களின் மீது எந்த ஒரு வல்லமையும், சாத்தானுக்கு இராதபடியான காலம் சீக்கிரமாய் வருகிறதென்றும், பெருமையாய் இருக்கிறவர் மற்றும் துன்மார்க்கம் செய்கிறவர் எல்லோரும் துரும்பைப்போல ஆகும் காலம் சீக்கிரமாய் வருகிறதென்றும், அவர்கள் சுட்டெரிக்கப்படும் காலம் வருகிறதென்றும், தீர்க்கதரிசி சொல்லுகிறான்.

For behold, saith the prophet, the time cometh speedily that Satan shall have no more power over the hearts of the children of men; for the day soon cometh that all the proud and they who do wickedly shall be as stubble; and the day cometh that they must be burned.

16 எல்லா மனுபுத்திரர்மீதும், தேவனுடைய கோபாக்கினையின் முழுமை ஊற்றப்படும் காலம் சீக்கிரமாய் வருகிறது; ஏனெனில் நீதிமான்களை துன்மார்க்கர் அழிக்க அவர் விடமாட்டார்.

For the time soon cometh that the fulness of the wrath of God shall be poured out upon all the children of men; for he will not suffer that the wicked shall destroy the righteous.

17 ஆதலால், அவருடைய கோபாக்கினையின் நிறைவு வரவேண்டியதிருந்தாலும், அவர் நீதிமான்களைத் தமது வல்லமையினால் பாதுகாப்பார், அவர்களுடைய பகைவர்கள் அக்கினியால் அழிக்கப்பட்டாவது, நீதிமான்கள் காக்கப்படுவார்கள். ஆதலால் நீதிமான்கள் பயப்படவேண்டியதில்லை; அது அப்படியிருந்தாலும் அக்கினியாலாவது அவர்கள் மீட்கப்படுவார்கள் என்று தீர்க்கதரிசி சொல்லுகிறான்.

Wherefore, he will preserve the righteous by his power, even if it so be that the fulness of his wrath must come, and the righteous be preserved, even unto the destruction of their enemies by fire. Wherefore, the righteous need not fear; for thus saith the prophet, they shall be saved, even if it so be as by fire.

18 இதோ, என் சகோதரரே, இந்தக் காரியங்கள் சீக்கிரத்தில் வர வேண்டும்; ஆம், இரத்தம், அக்கினி, புகையின் நீராவி ஆகியவைகளும் வரவேண்டும்; மேலும் அவைகள் இந்தப் பூமியின் மேற்பரப்பில் இருப்பது தேவையாயிருக்கிறது; அப்படியானால், அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோதமாகத் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்துவார்களெனில், மாம்சத்தின்பிரகாரமாய் அது மனுஷரிடத்தில் வரும் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Behold, my brethren, I say unto you, that these things must shortly come; yea, even blood, and fire, and vapor of smoke must come; and it must needs be upon the face of this earth; and it cometh unto men according to the flesh if it so be that they will harden their hearts against the Holy One of Israel.

19 ஏனெனில், இதோ, நீதிமான்கள் அழியமாட்டார்கள்; சீயோனுக்கு எதிராய்ச் சண்டையிடுகிறவர்கள் எல்லோரும் பிரிக்கப்படும் காலம் சீக்கிரமாய் வருதல் வேண்டும்.

For behold, the righteous shall not perish; for the time surely must come that all they who fight against Zion shall be cut off.

20 என்னைப் போன்ற ஒரு தீர்க்கதரிசியை, உங்கள்
தேவனாகிய கர்த்தர் உங்களுக்காக எழுப்புவார்.
உங்களுக்கு அவன் சொல்லவிருக்கும் எல்லா காரி-
யங்களுக்கும் நீங்கள் செவிகொடுப்பீர்கள். அந்த
தீர்க்கதரிசிக்கு செவிகொடாத அனைவரும் ஜனங்-
கள் மத்தியிலிருந்து அறுப்புண்டு போவார்கள்,
என்று பேசிய மோசேயின் வார்த்தைகள் நிறைவே-
றித்தீருமளவும் தன் ஜனத்துக்கு நிச்சயமாக கர்த்தர்
ஒரு வழியை ஆயத்தம் பண்ணுவார்.

And the Lord will surely prepare a way for his people, unto the fulfilling of the words of Moses, which he spake, saying: A prophet shall the Lord your God raise up unto you, like unto me; him shall ye hear in all things whatsoever he shall say unto you. And it shall come to pass that all those who will not hear that prophet shall be cut off from among the people.

21 இப்பொழுது நேபியாகிய நான், மோசே பேசிய இந்-
தத் தீர்க்கதரிசி இஸ்ரவேலின் பரிசுத்தர் என்பதை
உங்களுக்கு அறிவிக்கிறேன்; ஆகையால் அவர் நீ-
தியிலே நியாயந்தீர்ப்பார்.

And now I, Nephi, declare unto you, that this prophet of whom Moses spake was the Holy One of Israel; wherefore, he shall execute judgment in righteousness.

22 நீதிமான்கள் பயப்பட வேண்டியதில்லை, ஏனெ-
னில் அவர்களே தாறுமாறாக்கப்படாமலிருக்கப்
போகிறவர்கள். ஆனால் மனுபுத்திரர் மத்தியில் பி-
சாசின் ராஜ்யம் கட்டப்படும். அந்த ராஜ்யமானது
மாம்சத்திலிருப்பவர்கள் மத்தியில் ஸ்தாபிக்கப்ப-
டுகிறது.

And the righteous need not fear, for they are those who shall not be confounded. But it is the kingdom of the devil, which shall be built up among the children of men, which kingdom is established among them which are in the flesh—

23 ஆதாயத்திற்காகக் கட்டப்பட்டிருப்பவைகள்
அனைத்தும், மாம்சத்தின்மேல் வல்லமையடைவ-
தற்காகக் கட்டப்பட்டிருப்பவைகள் அனைத்தும்,
உலகத்தின் கண்களில் புகழ்ச்சியடைவதற்காகக்
கட்டப்பட்டிருப்பவைகளுமாகிய எல்லா சபைக-
ளும் மாம்சத்தின் இச்சையின்படியும், உலகப்பிரகா-
ரமாயும் எல்லா அக்கிரமங்களையும் செய்யத் தேடு-
கிறவர்களும், ஆம், முடிவாகப் பிசாசையும் அவன்
ராஜ்யத்தையும், சேர்ந்தவர்கள் எல்லோரும் பயப்ப-
டவும், நடுங்கவும், குலுங்கவும் வேண்டும் என்கிற
காலம் சீக்கிரமாய் வரும். புழுதிக்குள்ளே கொண்டு-
வரப்பட வேண்டியவர்கள் அவர்களே, துரும்பைப்-
போல சுட்டெரிக்கப்பட வேண்டியவர்கள் அவர்க-
ளே. இது தீர்க்கதரிசியின் வார்த்தையின்படியே
இருக்கிறது.

For the time speedily shall come that all churches which are built up to get gain, and all those who are built up to get power over the flesh, and those who are built up to become popular in the eyes of the world, and those who seek the lusts of the flesh and the things of the world, and to do all manner of iniquity; yea, in fine, all those who belong to the kingdom of the devil are they who need fear, and tremble, and quake; they are those who must be brought low in the dust; they are those who must be consumed as stubble; and this is according to the words of the prophet.

24 தொழுவத்திலுள்ள கன்றுகள்போல, நீதியுள்ள-
வர்கள் நடத்தப்பட்டு, மகா மகிமையிலும், வல்ல-
மையிலும், பெலத்திலும், இஸ்ரவேலின் பரிசுத்தர்
அதிகாரத்தோடு ஆளுகை செய்யும் காலம் விரை-
வாக வருகிறது.

And the time cometh speedily that the righteous must be led up as calves of the stall, and the Holy One of Israel must reign in dominion, and might, and power, and great glory.

25 அவர் தம்முடைய பிள்ளைகளை பூமியின் நான்-
கு திசைகளிலிருந்தும் சேர்ப்பார்; அவர் தம்மு-
டைய ஆடுகளை இலக்கமிடுவார், அவைகள் அவ-
ரை அறியும்; அங்கே ஒரே மந்தையும், ஒரே மேய்ப்-
பனும் உண்டு; அவர் தம் ஆடுகளைப் போஷிப்-
பார், அவர்கள் அவரில் தங்களின் மேய்ச்சலைக்
கண்டடைவார்கள்.

And he gathereth his children from the four quarters of the earth; and he numbereth his sheep, and they know him; and there shall be one fold and one shepherd; and he shall feed his sheep, and in him they shall find pasture.

26 தன் ஜனங்களின் நீதியினிமித்தம், சாத்தானுக்கு
வல்லமையில்லை; ஆதலால் அநேக வருஷ காலம்
அவன் கட்டவிழ்க்கப்பட முடியாது; ஜனங்கள் நீதி-
யில் வாசமாயிருப்பதாலும், இஸ்ரவேலின் பரிசுத்-
தர் ஆளுகை செய்வதாலும் அவர்களின் இருதயங்-
களின்மேல் அவனுக்கு வல்லமையில்லை.

And because of the righteousness of his people, Satan has no power; wherefore, he cannot be loosed for the space of many years; for he hath no power over the hearts of the people, for they dwell in righteousness, and the Holy One of Israel reigneth.

27 இப்பொழுதும் இதோ, நேபியாகிய நான், உங்க-
ளை நோக்கி, இந்தக் காரியங்கள் எல்லாம் மாம்சத்-
தின்பிரகாரமாய் வரவேண்டுமென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

And now behold, I, Nephi, say unto you that all these things must come according to the flesh.

28 ஆனாலும் இதோ, எல்லா தேசத்தாரும், இனத்தா-
ரும், பாஷைக்காரரும், ஜனங்களும் மனந்திரும்பு-
வார்களெனில், அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்த-
ரில் பாதுகாப்பாய் வாசம்செய்வார்கள்.

But, behold, all nations, kindreds, tongues, and people shall dwell safely in the Holy One of Israel if it so be that they will repent.

29 இப்பொழுதும் நேபியாகிய நான் முடிக்கிறேன்;
ஏனெனில் இந்தக் காரியங்களைக் குறித்து நான்
இன்னும் அதிகம் பேசத் துணியவில்லை.

And now I, Nephi, make an end; for I durst not speak further as yet concerning these things.

30 ஆகையால் என் சகோதரரே, இந்தப் பித்தளைத்
தகடுகள்மீது எழுதப்பட்ட காரியங்கள் மெய்யான-
தா என்று நீங்கள் ஆராயவேண்டும் என்று வாஞ்-
சிக்கிறேன். மேலும் அவைகள் ஒரு மனுஷன் தே-
வனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவேண்டு-
மென சாட்சியளிக்கின்றன.

Wherefore, my brethren, I would that ye should consider that the things which have been written upon the plates of brass are true; and they testify that a man must be obedient to the commandments of God.

31 ஆகையால் நானும், என் தகப்பனும் மாத்திரம்
இவைகளைப்பற்றி சாட்சி பகர்ந்து, போதிக்கி-
றோம் என்று நீங்கள் நினைத்துவிடவேண்டாம்.
ஆதலால் நீங்கள் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து,
இறுதிபரியந்தம் நிலைப்பீர்களானால், கடைசி நா-
ளிலே மீட்கப்படுவீர்கள். மேலும் இது இப்படியாக
இருக்கிறது. ஆமென்.

Wherefore, ye need not suppose that I and my father are the only ones that have testified, and also taught them. Wherefore, if ye shall be obedient to the commandments, and endure to the end, ye shall be saved at the last day. And thus it is. Amen.

# நேபியின் இரண்டாம் புஸ்தகம்

# The Second Book of Nephi

*லேகியின் மரணத்தைப்பற்றிய ஒரு விவரம்; நேபியின் சகோதரர் அவனுக்கெதிராகக் கலகஞ் செய்தல். வனாந்தரத்திற்குள் புறப்பட்டுச் செல்லும்படி நேபியைக் கர்த்தர் எச்சரித்தல், வனாந்தரத்தில் அவனுடைய பயணங்கள், மற்றும் பிற காரியங்கள்.*

*An account of the death of Lehi. Nephi's brethren rebel against him. The Lord warns Nephi to depart into the wilderness. His journeyings in the wilderness, and so forth.*

## 2 நேபி 1

## 2 Nephi 1

1 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியாகிய நான், என் சகோதரருக்குப் போதித்த பிறகு, எங்கள் தகப்பன் லேகியும், அவர்களிடத்தில் பல காரியங்களைப் பேசி, எருசலேம் தேசத்திலிருந்து அவர்களை வெளியே கொண்டுவருவதில், அவர்களுக்குக் கர்த்தர் எவ்வளவு மகத்தான காரியங்களைச் செய்திருக்கிறார் என்பதைக் குறித்து, அவர்களுக்கு விவரித்தார்.

And now it came to pass that after I, Nephi, had made an end of teaching my brethren, our father, Lehi, also spake many things unto them, and rehearsed unto them, how great things the Lord had done for them in bringing them out of the land of Jerusalem.

2 அவர், தண்ணீர்களின் மேல் அவர்களுடைய கலகங்களைக் குறித்தும், அவர்கள் சமுத்திரத்தால் விழுங்கப்பட்டுப் போகாதபடி, அவர்கள் ஜீவனைத் தப்புவித்த தேவனுடைய இரக்கங்களைக் குறித்தும் பேசினார்.

And he spake unto them concerning their rebellions upon the waters, and the mercies of God in sparing their lives, that they were not swallowed up in the sea.

3 அவர்கள் அடைந்த, வாக்குத்தத்தத்தின் தேசத்தைக் குறித்தும், நாங்கள் எருசலேம் தேசத்தைவிட்டு ஓடிப்போக வேண்டும், என்று எச்சரித்த கர்த்தர் எவ்வளவு இரக்கமுடையவராயிருந்தார் என்பதைப்பற்றியும் அவர் அவர்களுக்குச் சொன்னார்.

And he also spake unto them concerning the land of promise, which they had obtained—how merciful the Lord had been in warning us that we should flee out of the land of Jerusalem.

4 ஏனெனில் இதோ, எருசலேம் அழிக்கப்பட்டுப் போயிற்று என்பதை நான் கண்ட தரிசனத்தால் அறிவேன், நாம் எருசலேமில் இருந்திருப்போமெனில், நாமும் அழிந்து போயிருப்போம், என்று அவர் சொன்னார்.

For, behold, said he, I have seen a vision, in which I know that Jerusalem is destroyed; and had we remained in Jerusalem we should also have perished.

5 ஆனால், அவர் சொன்னதாவது: நமது உபத்திரவங்கள் மத்தியிலும், என் சந்ததியால் சுதந்தரிக்கப்படும் தேசமாய் இருக்கும், என்று தேவனாகிய கர்த்தர் என்னோடு வாக்குத்தத்தம் பண்ணின தேசமாயும், மற்ற எல்லா தேசங்களைக்காட்டிலும், தெரிந்து கொள்ளப்படத்தக்கதுமான, வாக்குத்தத்தத்தின் தேசத்தைப் பெற்றுக் கொண்டோம். ஆம், கர்த்தர் இந்த தேசத்தை எனக்கும், என்றென்றைக்குமாய் என் பிள்ளைகளுக்கும், கர்த்தருடைய கரத்தால் மற்ற தேசங்களிலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டவர்களுக்கும், இருக்கும்படிக்கு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார்.

But, said he, notwithstanding our afflictions, we have obtained a land of promise, a land which is choice above all other lands; a land which the Lord God hath covenanted with me should be a land for the inheritance of my seed. Yea, the Lord hath covenanted this land unto me, and to my children forever, and also all those who should be led out of other countries by the hand of the Lord.

6 ஆகையால், கர்த்தருடைய கரத்தால் கொண்டுவ-
ரப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த தேசத்திற்குள்
பிரவேசிப்பதில்லை, என்று லேகியாகிய நான்,
எனக்குள்ளே இருக்கிற கர்த்தருடைய ஆவி கிரி-
யை செய்கிறபடியே, தீர்க்கதரிசனம் உரைக்கிறேன்.

Wherefore, I, Lehi, prophesy according to the workings of the Spirit which is in me, that there shall none come into this land save they shall be brought by the hand of the Lord.

7 ஆதலால், அவர் கொண்டுவரப்போகிறவர்களுக்-
காக இந்தத் தேசம் அர்ப்பணிக்கப்பட்டிருக்கிறது;
அப்படியானால், அவர் கொடுத்துள்ள கட்டளைக-
ளின்படியே அவர்கள் அவருக்கு ஊழியம் செய்-
வார்களெனில், இது அவர்களுக்கு சுதந்திர தேசமா-
யிருக்கும்; ஆகையால், அவர்கள் ஒருபோதும் சி-
றையிருப்பிற்குள்ளாகக் கொண்டுபோகப்படமாட்-
டார்கள்; அப்படியாகுமெனில், அது அவர்கள் அக்-
கிரமத்தினிமித்தமாகவே ஏற்படும்; அப்படி அக்கிர-
மம் பெருகுமெனில், அவர்கள் நிமித்தம் இந்தத் தே-
சம் சபிக்கப்பட்டதாயிருக்கும்; ஆனால் நீதிமான்க-
ளுக்கோ இது என்றென்றைக்குமாய் ஆசீர்வதிக்கப்-
பட்டதாயிருக்கும்.

Wherefore, this land is consecrated unto him whom he shall bring. And if it so be that they shall serve him according to the commandments which he hath given, it shall be a land of liberty unto them; wherefore, they shall never be brought down into captivity; if so, it shall be because of iniquity; for if iniquity shall abound cursed shall be the land for their sakes, but unto the righteous it shall be blessed forever.

8 இதோ, மற்ற தேசங்கள் அறியாதபடிக்கு, இந்த நி-
லத்தைக் காப்பது ஞானமாயிருக்கிறது; ஏனெனில்
இதோ, சுதந்தரிப்பதற்கு இடம் இல்லாமற்போகுமட்-
டும், அநேக தேசங்கள் நிலத்தை ஆக்கிரமிக்கும்.

And behold, it is wisdom that this land should be kept as yet from the knowledge of other nations; for behold, many nations would overrun the land, that there would be no place for an inheritance.

9 ஆகையால், தேவனாகிய கர்த்தரால் எருசலேம்
தேசத்திலிருந்து அழைத்துவரப்படுபவர்கள், அவ-
ருடைய கட்டளைகளை கைக்கொள்கிற அளவில்,
இந்தத் தேசத்தின் மேல் விருத்தியடைவார்கள் என்-
றும் இந்தத் தேசத்தை அவர்கள் சொந்தமாக்கிக்
கொள்ளும்படி சகல தேசங்களிலிருந்தும், விலக்-
கிக் காத்துக்கொள்ளப்படுவார்களென்றும், ஒரு
வாக்குத்தத்தத்தை லேகியாகிய நான், பெற்றுக்-
கொண்டேன். அப்படி அவருடைய கட்டளைக-
ளைக் கைக்கொள்வார்களெனில் அவர்கள் இந்த
தேசத்தின் மேல் ஆசீர்வதிக்கப்படுவார்கள்; அவர்-
களுக்கு இடையூறு செய்யவோ, அவர்கள் சுதந்த-
ரித்த தேசத்தை எடுத்துக்கொள்ளவோ, அங்கே யா-
ரும் இருக்க மாட்டார்கள்; அவர்கள் என்றென்-
றைக்கும் பாதுகாப்பாய் வாசம்பண்ணுவார்கள்.

Wherefore, I, Lehi, have obtained a promise, that inasmuch as those whom the Lord God shall bring out of the land of Jerusalem shall keep his commandments, they shall prosper upon the face of this land; and they shall be kept from all other nations, that they may possess this land unto themselves. And if it so be that they shall keep his commandments they shall be blessed upon the face of this land, and there shall be none to molest them, nor to take away the land of their inheritance; and they shall dwell safely forever.

10 ஆனால், இதோ, சகல மனுஷரும், பூமியும் சிருஷ்-
டிக்கப்பட்டதைக் குறித்த அறிவையும், உலக சி-
ருஷ்டி முதல் கர்த்தருடைய பெரிதும், அதிசயமு-
மான கிரியைகளை அறிந்துகொள்ளக்கூடிய
அநேக மகா மேன்மையான ஆசீர்வாதங்களை
கர்த்தருடைய கரத்திலிருந்து அவர்கள் பெற்ற பிற-
கும், சகலவற்றையும் விசுவாசத்தினால் செய்ய
அவர்களுக்கு வல்லமை கொடுக்கப்பட்டிருந்தும்,
ஆதிமுதல் எல்லா கட்டளைகளையும் பெற்றவர்க-
ளாயிருந்தும், அவரின் எல்லையில்லா நன்மையி-
னால் இந்த விலையேறப்பெற்ற வாக்குத்தத்தத்தின்
தேசத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டிருந்தும்,
அவர்கள் அவிசுவாசத்தில் படிப்படியாக நலியும்
காலம் வரும். இதோ, அவர்கள் இஸ்ரவேலின் பரி-
சுத்தரும், மெய்யான மேசியாவும், தங்களின் மீட்ப-
ரும், தேவனுமானவரை புறக்கணிக்கும் நாள் வரு-
மேயானால் இதோ, நீதிபரரின் நியாயத்தீர்ப்புக்கள்
அவர்கள் மேல் வரும்.

But behold, when the time cometh that they shall dwindle in unbelief, after they have received so great blessings from the hand of the Lord—having a knowledge of the creation of the earth, and all men, knowing the great and marvelous works of the Lord from the creation of the world; having power given them to do all things by faith; having all the commandments from the beginning, and having been brought by his infinite goodness into this precious land of promise—behold, I say, if the day shall come that they will reject the Holy One of Israel, the true Messiah, their Redeemer and their God, behold, the judgments of him that is just shall rest upon them.

11 ஆம், அவர் மற்ற தேசங்களை அவர்களிடத்திற்-
குக் கொண்டுவருவார்; அவர் அவர்களுக்கு வல்ல-
மையைக் கொடுத்து, அவர்களுக்குச் சொந்தமா-
யுள்ள நிலங்களை அவர் எடுத்துப்போடுவார்;
அவர்கள் சிதறடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டுப் போ-
கும்படிச் செய்வார்.

Yea, he will bring other nations unto them, and he will give unto them power, and he will take away from them the lands of their possessions, and he will cause them to be scattered and smitten.

12 ஆம், ஒரு தலைமுறை, மற்றொரு தலைமுறைக்கு
கடந்து செல்லும்போது, அங்கே இரத்தஞ்சிந்துத-
லும், மகா விசாரிப்புகளும் அவர்கள் மத்தியில் சம்-
பவிக்கும்; ஆகையால், என் குமாரரே, நீங்கள்
இவைகளை நினைவுகூர வேண்டுமென்று நான்
விரும்புகிறேன்; ஆம், நீங்கள் என் வார்த்தைக்குச்
செவிகொடுக்க வேண்டுமென்று நான் விரும்புகி-
றேன்.

Yea, as one generation passeth to another there shall be bloodsheds, and great visitations among them; wherefore, my sons, I would that ye would remember; yea, I would that ye would hearken unto my words.

13 விழித்தெழுங்கள்; கன நித்திரையிலிருந்தும், பா-
தாளத்தின் நித்திரையிலிருந்தும் விழித்தெழுங்-
கள்; நீங்கள் கட்டப்பட்டிருக்கிற பயங்கரமான சங்-
கிலிகளை உதறித்தள்ளுங்கள்; அவைகள் மனு-
புத்திரரை, துன்பம், வேதனை ஆகியவைகளின்
நித்திய பிளவுக்கு சிறைபிடித்துக்கொண்டு செல்-
லும்படிக்கு, அவர்களை கட்டக்கூடிய சங்கிலிக-
ளாய் இருக்கின்றன.

O that ye would awake; awake from a deep sleep, yea, even from the sleep of hell, and shake off the awful chains by which ye are bound, which are the chains which bind the children of men, that they are carried away captive down to the eternal gulf of misery and woe.

14 விழித்தெழுங்கள்! புழுதியிலிருந்து எழும்புங்-
கள், எந்தப் பிரயாணியும் திரும்பி வரக்கூடாத, வி-
றைப்பும், அமைதியுமான கல்லறையினுள் விரை-
வில் நீங்கள் இந்த கைகால்களை வைக்கவிருக்-
கிற, நடுக்கங்கொண்டுள்ள, உங்களைப் பெற்ற-
வனின் வார்த்தைகளைக் கேளுங்கள்; இன்னும்
சில நாட்களில் நான் பூலோகத்தார் எல்லாரும் போ-
கிற வழியே போகிறேன்.

Awake! and arise from the dust, and hear the words of a trembling parent, whose limbs ye must soon lay down in the cold and silent grave, from whence no traveler can return; a few more days and I go the way of all the earth.

15 ஆனாலும் இதோ, கர்த்தர் பாதாளத்திலிருந்து
என் ஆத்துமாவை மீட்டிருக்கிறார்; நான் அவரின்
மகிமையைக் கண்டிருக்கிறேன்; அவருடைய
அன்பின் கரங்களால் நான் எப்பொழுதும் நித்திய-
மாய் தழுவப்பட்டிருக்கிறேன்.

16 நீங்கள் கர்த்தருடைய நியமங்களையும், நியாயத்-
தீர்ப்புகளையும் கைக்கொள்ள நினைவுகூர
வேண்டும், என்று நான் விரும்புகிறேன். இதோ,
ஆதிமுதல் இதுவே என் ஆத்துமாவின் தவிப்பாயி-
ருக்கிறது.

17 உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் தேவனாகிய
கர்த்தர் தம் தீர்க்கமான கோபாக்கினையோடு உங்-
கள்மேல் வருவாராகில், நீங்கள் அறுப்புண்டு என்-
றென்றைக்குமாய் அதம்பண்ணப்படுவீர்களோ
என்று நான் பயப்படுவதினால்,

18 அல்லது, ஒரு சாபம் உங்கள்மேல் பல தலைமு-
றைகளுக்கு வரும்படிக்கும்; பட்டயமும், பஞ்சமும்
உங்கள்மேல் வரும்படிக்கும். நீங்கள் வெறுக்கப்பட்-
டு, பிசாசின் சித்தம் மற்றும் சிறைத்தனத்தின்படியே
நடத்திச்செல்லப்படுவீர்கள், என்று என் இருதயம்
துக்கத்தினால் அவ்வப்போது பாரப்பட்டிருக்கிறது.

19 என் குமாரர்களே, இந்தக் காரியங்கள் உங்கள்-
மேல் வரக்கூடாதபடிக்கு, நீங்கள் கர்த்தரால் தெரிந்-
துகொள்ளப்பட்டு, தயவுபெற்ற ஜனங்களாய்
இருக்கவேண்டும். ஆனாலும், இதோ, அவரது சித்-
தத்தின்படியே ஆகக்கடவது. ஏனெனில், அவரு-
டைய வழிகள் என்றென்றைக்கும் நீதியுள்ளவை-
களாயிருக்கின்றன.

20 அவர் சொல்லியிருப்பதாவது: என் கட்டளைக-
ளைக் கைக்கொள்கிற அளவில், நீங்கள் தேசத்தில்
விருத்தியடைவீர்கள்; ஆனால் நீங்கள் என் கட்ட-
ளைகளைக் கைக்கொள்ளாமற் போகிற அளவில்,
என் சமுகத்திலிருந்து அறுப்புண்டு போவீர்கள்.

21 இப்பொழுதும், உங்களிலே என் ஆத்துமா மகிழ்ந்-
திருக்கும்படிக்கும், உங்களினிமித்தம் என் இருத-
யம் ஆனந்தத்துடனே இவ்வுலகத்தைக் கடந்து-
செல்லும்படிக்கும், நான் கல்லறைக்குச் சஞ்சலத்-
தோடும், துக்கத்தோடும் எடுத்துச்செல்லப்படாதப-
டிக்கும், புழுதியிலிருந்து எழுந்திருங்கள், என் கு-
மாரரே, மனுஷராயிருங்கள், நீங்கள் அடிமைத்-
தனத்திற்குள்ளாகப் போகாதபடிக்கும்,

22 கொடிய சாபத்தால் சபிக்கப்படாதபடிக்கும்,
அழிக்கப்படாதபடிக்கும், உங்கள் மீது நீதியின் தே-
வனின் துக்கத்தை, ஆம், ஆத்துமா மற்றும் சரீரத்-
தின் நித்திய அழிவிற்கேதுவானதை வருஷிக்கப்-
பண்ணாமல், ஏக சிந்தனையிலும், ஏக உள்ளத்தி-
லும் உறுதியாய் சகலவற்றிலும் ஐக்கியப்பட்டிருங்-
கள்.

But behold, the Lord hath redeemed my soul from hell; I have beheld his glory, and I am encircled about eternally in the arms of his love.

And I desire that ye should remember to observe the statutes and the judgments of the Lord; behold, this hath been the anxiety of my soul from the beginning.

My heart hath been weighed down with sorrow from time to time, for I have feared, lest for the hardness of your hearts the Lord your God should come out in the fulness of his wrath upon you, that ye be cut off and destroyed forever;

Or, that a cursing should come upon you for the space of many generations; and ye are visited by sword, and by famine, and are hated, and are led according to the will and captivity of the devil.

O my sons, that these things might not come upon you, but that ye might be a choice and a favored people of the Lord. But behold, his will be done; for his ways are righteousness forever.

And he hath said that: Inasmuch as ye shall keep my commandments ye shall prosper in the land; but inasmuch as ye will not keep my commandments ye shall be cut off from my presence.

And now that my soul might have joy in you, and that my heart might leave this world with gladness because of you, that I might not be brought down with grief and sorrow to the grave, arise from the dust, my sons, and be men, and be determined in one mind and in one heart, united in all things, that ye may not come down into captivity;

That ye may not be cursed with a sore cursing; and also, that ye may not incur the displeasure of a just God upon you, unto the destruction, yea, the eternal destruction of both soul and body.

23 என் குமாரரே, விழித்தெழுங்கள்; நீதியின் கவசத்தைத் தரித்துக்கொள்ளுங்கள்; நீங்கள் பிணைக்கப்பட்டிருக்கிற சங்கிலிகளை உதறித்தள்ளி அந்தகாரத்திலிருந்து வெளிவாருங்கள்; புழுதியிலிருந்து எழும்புங்கள்.

Awake, my sons; put on the armor of righteousness. Shake off the chains with which ye are bound, and come forth out of obscurity, and arise from the dust.

24 மகிமையான நோக்கங்கள் உடையவனாயும், நாம் எருசலேமை விட்டுப் புறப்பட்ட காலத்திலிருந்து கட்டளைகளைக் கைக்கொண்டவனுமாயிருக்கிற, உங்கள் சகோதரனுக்கு எதிராகக் கலகஞ்செய்யாதிருங்கள்; அவன் நம்மை வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குக் கொண்டுவரும்படியாய், தேவனுடைய கரங்களில் ஒரு கருவியாயிருந்திருக்கிறான்; அவன் இல்லாதிருந்தால் நாம் வனாந்தரத்தில் பட்டினியால் அழிந்து போயிருப்போம்; இப்படி இருப்பினும், நீங்கள் அவன் ஜீவனை வாங்கத் தேடினீர்கள்; ஆம், உங்களினிமித்தம் அவன் அதிக துன்பத்தை அனுபவித்திருக்கிறான்.

Rebel no more against your brother, whose views have been glorious, and who hath kept the commandments from the time that we left Jerusalem; and who hath been an instrument in the hands of God, in bringing us forth into the land of promise; for were it not for him, we must have perished with hunger in the wilderness; nevertheless, ye sought to take away his life; yea, and he hath suffered much sorrow because of you.

25 அவன் உங்களினிமித்தம் மறுபடியும் பாடனுவிப்பானோவென்று, நான் மிகவும் பயந்து, நடுக்கமடைகிறேன். ஏனெனில், இதோ, அவன் உங்கள்மேல் பலத்தையும், அதிகாரத்தையும் செலுத்த வகை தேடுகிறான் என்று நீங்கள் அவன் மேல் குற்றஞ்சாட்டினீர்கள்; ஆனால் அவன் உங்கள் மேல் பலத்தையோ அதிகாரத்தையோ செலுத்த முனையவில்லை, ஆனால் உங்கள் நித்திய சுகவாழ்வையும், தேவனுடைய மகிமையையுமே அவன் நாடினான் என்று அறிவேன்.

And I exceedingly fear and tremble because of you, lest he shall suffer again; for behold, ye have accused him that he sought power and authority over you; but I know that he hath not sought for power nor authority over you, but he hath sought the glory of God, and your own eternal welfare.

26 அவன் உங்களிடத்தில் வெளிப்படையாய் நடந்துகொண்டதினிமித்தம் நீங்கள் முறுமுறுத்தீர்கள்; அவன் உங்களிடத்தில் கடூரத்தை உபயோகித்தான் என்கிறீர்கள்; அவன் உங்கள் மேல் கோபமடைந்தான் என்றும் சொல்கிறீர்கள்; ஆனாலும், இதோ, அந்தக் கண்டிப்பு அவனுள்ளிருந்த தேவனுடைய வார்த்தையினுடைய வல்லமையின் கூர்மையாயிருக்கிறது; நீங்கள் கோபமென்று அழைப்பது, உங்கள் அக்கிரமங்களைக் குறித்து தைரியமாய் வெளிப்படுத்தவேண்டியதும், அவனால் அடக்கிக்கொள்ள முடியாததுமான தேவனிடத்தில் உள்ள சத்தியமாயிருக்கிறது.

And ye have murmured because he hath been plain unto you. Ye say that he hath used sharpness; ye say that he hath been angry with you; but behold, his sharpness was the sharpness of the power of the word of God, which was in him; and that which ye call anger was the truth, according to that which is in God, which he could not restrain, manifesting boldly concerning your iniquities.

27 நீங்கள் கீழ்ப்படிய வேண்டுமென்று அவன் கட்டளை பிறப்பிப்பதற்கும், தேவ வல்லமை அவனுக்குள்ளிருப்பது அவசியமாயிருக்கிறது; அதனால் இதோ, அவன் நிறுத்திக்கொள்ள முடியாமற்போகுமளவுக்குப் பேசும்படி அவன் வாயைத் திறந்தது அவனல்ல, அவனுக்குள்ளிருந்த கர்த்தருடைய ஆவியானவரே.

And it must needs be that the power of God must be with him, even unto his commanding you that ye must obey. But behold, it was not he, but it was the Spirit of the Lord which was in him, which opened his mouth to utterance that he could not shut it.

28 இப்பொழுதும் என் குமாரர்களாகிய லாமான்,
லெமுவேல், சாம் மற்றும், இஸ்மவேலின் குமாரர்க-
ளாகிய என் குமாரர்களுமானவர்களே, இதோ, நேபி-
யின் வார்த்தைகளுக்குச் செவி கொடுத்தால் நீங்-
கள் அழிந்து போகமாட்டீர்கள்; அப்படி அவனுக்-
குச் செவி கொடுப்பீர்களெனில், என் ஆசீர்வாதமா-
கிய, ஆம், என் முதல் ஆசீர்வாதத்தை நான் உங்க-
ளுக்கு வைத்துப்போகிறேன்.

And now my son, Laman, and also Lemuel and Sam, and also my sons who are the sons of Ishmael, behold, if ye will hearken unto the voice of Nephi ye shall not perish. And if ye will hearken unto him I leave unto you a blessing, yea, even my first blessing.

29 ஆனால் அப்படி நீங்கள் அவனுக்குச் செவி கொ-
டாவிடில், என் ஆசீர்வாதமாகிய முதல் ஆசீர்வாதத்-
தை நான் எடுத்துப்போடுவேன்; அது அவன் மேல்
தங்கும்.

But if ye will not hearken unto him I take away my first blessing, yea, even my blessing, and it shall rest upon him.

30 இப்பொழுதும் சோரமே, நான் உன்னுடன் பேசுகி-
றேன்; இதோ, நீ லாபானுடைய வேலைக்காரனாயி-
ருக்கிறாய்; இருப்பினும், நீ எருசலேம் தேசத்தை-
விட்டு அழைத்துக்கொண்டுவரப்பட்டாய்; நீ என்
குமாரனாகிய நேபிக்கு என்றென்றும் உண்மை-
யான சினேகிதனாய் இருக்கிறாய் என்பதை நான்
அறிவேன்.

And now, Zoram, I speak unto you: Behold, thou art the servant of Laban; nevertheless, thou hast been brought out of the land of Jerusalem, and I know that thou art a true friend unto my son, Nephi, forever.

31 ஆதலால் நீ உண்மையுள்ளவனாய் இருந்ததினி-
மித்தம், உன் சந்ததியும் அவன் சந்ததியோடே, இத்-
தேசத்திலே செழிப்படைந்து அநேகங்காலம் வாசம்
பண்ணுமாறு ஆசீர்வதிக்கப்படுவார்கள்; அவர்க-
ளின் அக்கிரமத்தைத் தவிர, வேறெதுவும் இத்தேசத்-
திலே அவர்கள் என்றென்றைக்கும், செழிப்படைவ-
தற்கு, இடையூறாகவோ, தடையாகவோ அமையா-
து.

Wherefore, because thou hast been faithful thy seed shall be blessed with his seed, that they dwell in prosperity long upon the face of this land; and nothing, save it shall be iniquity among them, shall harm or disturb their prosperity upon the face of this land forever.

32 ஆதலால் நீ கர்த்தருடைய கட்டளைகளைக்
கைக்கொள்வாயெனில், கர்த்தர் இந்த நிலத்தை,
என் குமாரனுடைய சந்ததியோடு, உன் சந்ததிக்கும்
பாதுகாப்பாய் இருக்கும்படி அர்ப்பணித்திருக்கி-
றார்.

Wherefore, if ye shall keep the commandments of the Lord, the Lord hath consecrated this land for the security of thy seed with the seed of my son.

## 2 நேபி 2

1 இப்பொழுதும், யாக்கோபே, நான் உன்னிடம் பேசு-
கிறேன். நீயே வனாந்தரத்தில் என் உபத்திரவங்க-
ளின் காலங்களிலே எனக்கு முதற்பிறந்தவனாய்
இருக்கிறாய். இதோ, உன் சகோதரரின் மூர்க்கத்-
தனத்தினாலே, உன் இளம்பிராயத்திலே உபத்திர-
வங்களாலும், அநேக துன்பங்களாலும் பாடுபட்டி-
ருக்கிறாய்.
2 ஆயினும், வனாந்தரத்திலே எனக்கு முதற்பிறந்த-
வனாகிய யாக்கோபே, நீ தேவனுடைய மேன்மை-
யை அறிந்திருக்கிறாய், அவர் உன் உபத்திரவங்க-
ளை, உனது ஆதாயத்திற்கென மாற்றுவார்.
3 ஆகையால், உனது ஆத்துமா ஆசீர்வதிக்கப்பட்-
டிருக்கும், நீ உன் சகோதரனாகிய நேபியோடே பாது-
காப்பாய் ஜீவிப்பாய். உன் நாட்கள் உனது தேவனு-
டைய ஊழியத்திலே செலவிடப்படும். ஆகவே, மீட்-
பருடைய நீதியினிமித்தம் மீட்கப்பட்டிருக்கிறாய்,
என நான் அறிவேன். ஏனெனில் மனுஷருக்குள்-
ளே இரட்சிப்பைக்கொண்டுவர, காலங்களின் நி-
றைவிலே, உனது மீட்பர் வருவார் என்று, நீ கண்டி-
ருக்கிறாய்.
4 உன் வாலிபப்பிராயத்திலேயே அவருடைய மகி-
மையைக் கண்டிருக்கிறாய். மாம்சத்திலே அவர்
ஊழியம் செய்யவிருப்பவர்கள் போலவே, நீயும்
ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாய். ஏனெனில், ஆவி-
யானவர் நேற்றும், இன்றும், என்றென்றும் மாறாத-
வர். மனுஷனுடைய வீழ்ச்சி முதற்கொண்டே வழி
ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளது, இரட்சிப்பும் இலவ-
சம்.
5 மனுஷர் தீமையினின்று, நன்மையை அறியும்
பொருட்டுப் போதுமான அளவு உபதேசிக்கப்பட்டி-
ருக்கிறார்கள். நியாயப்பிரமாணமும் மனுஷருக்-
குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு மாம்சமும்
நியாயப்பிரமாணத்தினாலே நியாயவானாக்கப்ப-
டுவதுமில்லை, அல்லது நியாயப்பிரமாணத்தினா-
லே மனுஷர் அறுப்புண்டு போவதுமில்லை. ஆம்,
உலகத்தின் நியாயப்பிரமாணத்தினாலே அவர்கள்
அறுப்புண்டு போனார்கள். ஆவிக்குரிய நியாயப்-
பிரமாணத்தினாலே அவர்கள் நன்மையினின்று
கெட்டுப்போய் என்றென்றுமாய், பரிதபிக்கப்படத்
தக்கவர்களானார்கள்.
6 ஆகையால், மீட்பு பரிசுத்த மேசியாவிலும், அவர்
மூலமுமே வருகிறது. ஏனெனில் அவர் கிருபையி-
லும், சத்தியத்திலும் நிறைந்திருக்கிறார்.
7 இதோ, நொறுங்குண்ட இருதயமும், நருங்குண்ட
ஆவியுமுள்ள யாவருக்குமாய், நியாயப்பிரமா-
ணத்தினுடைய நிறைவேறுதல்களுக்குப் பதில-
ளிக்க, அவர் தம்மைத்தாமே பாவத்திற்குரிய பலி-
யாக ஒப்புக்கொடுக்கிறார். மற்ற எதனாலும் நியா-
யப்பிரமாணத்தின் நிறைவேறுதலுக்குப் பதில-
ளிக்க இயலாது.

## 2 Nephi 2

And now, Jacob, I speak unto you: Thou art my firstborn in the days of my tribulation in the wilderness. And behold, in thy childhood thou hast suffered afflictions and much sorrow, because of the rudeness of thy brethren.

Nevertheless, Jacob, my firstborn in the wilderness, thou knowest the greatness of God; and he shall consecrate thine afflictions for thy gain.

Wherefore, thy soul shall be blessed, and thou shalt dwell safely with thy brother, Nephi; and thy days shall be spent in the service of thy God. Wherefore, I know that thou art redeemed, because of the righteousness of thy Redeemer; for thou hast beheld that in the fulness of time he cometh to bring salvation unto men.

And thou hast beheld in thy youth his glory; wherefore, thou art blessed even as they unto whom he shall minister in the flesh; for the Spirit is the same, yesterday, today, and forever. And the way is prepared from the fall of man, and salvation is free.

And men are instructed sufficiently that they know good from evil. And the law is given unto men. And by the law no flesh is justified; or, by the law men are cut off. Yea, by the temporal law they were cut off; and also, by the spiritual law they perish from that which is good, and become miserable forever.

Wherefore, redemption cometh in and through the Holy Messiah; for he is full of grace and truth.

Behold, he offereth himself a sacrifice for sin, to answer the ends of the law, unto all those who have a broken heart and a contrite spirit; and unto none else can the ends of the law be answered.

8 எழும்புவோரில் முதலானவராய், மரித்தோரின் உயிர்த்தெழுதலை சம்பவிக்கப்பண்ணும்படி, மாம்சத்தின்பிரகாரமாய் தனது ஜீவனை ஒப்புக்கொடுத்து, அதை ஆவியின் வல்லமையினாலே மறுபடியுமாய் பெற்றுக்கொண்ட, பரிசுத்த மேசியாவின் நற்கிரியைகள், இரக்கம், கிருபை ஆகியவைகளின் மூலமேயன்றி, தேவனுடைய பிரசன்னத்திலே எந்த ஒரு மாம்சமும் வாசமாயிருக்கலாகாது, என்று பூமியின் குடிகள் அறியும்படிக்கு, இவைகளை அவர்களுக்கு அறிவிப்பதின் முக்கியத்துவம் எவ்வளவு மேன்மையானதாயிருக்கிறது.

9 ஆகையால், அவர் மனுபுத்திரர் யாவருக்குமாய் பரிந்துபேசவிருப்பதாலே, தேவனுக்கு முதற்பலனானார். அவரில் விசுவாசிக்கிறவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

10 அனைவருக்காகவும் பரிந்துபேசுகிறதினிமித்தம், மனுஷர் யாவரும் தேவனிடத்திலே வருகிறார்கள். ஆதலால், அவரில் இருக்கிற சத்தியம் மற்றும் பரிசுத்தத்தின்படியேயும் நியாயம் விசாரிக்கப்படும் பொருட்டு, அவரது பிரசன்னத்திலே நிற்கிறார்கள். ஆதலால், பரிசுத்தர் நியாயப்பிரமாணத்தின் முடிவுகளைக் கொடுத்திருக்கிறார். அந்த நியாயப்பிரமாணமோ அதனைச் சார்ந்த தண்டனையைச் சுமத்துகிறது. அந்த தண்டனையோ, பாவநிவர்த்தியின் முடிவுகளுக்குப் பதிலளிக்க நியாயப்பிரமாணத்தைச் சார்ந்த மகிழ்ச்சிக்கு எதிராக இருக்கிறது.

11 எல்லாவற்றிலும் எதிர்ப்பு இருப்பது அவசியமாயிருக்கிறது. அப்படியில்லையெனில் வனாந்தரத்தில் எனக்கு முதற் பிறந்தவனே, நீதியோ, துன்மார்க்கமோ, பரிசுத்தமோ, துர்ப்பாக்கியமோ, நன்மையோ, தீமையோ செய்யக்கூடாமற்போயிருக்கும். ஆகையால் சகலமும் ஒரு கூட்டாய் இருக்க வேண்டும். அவை ஒன்றாய் இருக்குமேயானால், ஜீவனோ, மரணமோ, அழிவோ, அழியாமையோ, மகிழ்ச்சியோ, துர்ப்பாக்கியமோ, உணர்வோ, உணர்வில்லாமையோ இல்லாமல் உயிரற்றவைகளாயிருக்கும்.

12 ஆகவே, அது பயனில்லாமல் படைக்கப்பட்டதாயிருக்க வேண்டுமே. இப்படியாய் அதன் சிருஷ்டிப்பின் முடிவிலே யாதொரு நோக்கமும் இருந்திருக்காது. இதனிமித்தம், தேவனுடைய ஞானமும், நித்திய தீர்மானங்களும் மட்டுமல்லாமல், தேவனுடைய வல்லமையும், இரக்கமும் நியாயமும் அழிய வேண்டியிருக்கும்.

Wherefore, how great the importance to make these things known unto the inhabitants of the earth, that they may know that there is no flesh that can dwell in the presence of God, save it be through the merits, and mercy, and grace of the Holy Messiah, who layeth down his life according to the flesh, and taketh it again by the power of the Spirit, that he may bring to pass the resurrection of the dead, being the first that should rise.

Wherefore, he is the firstfruits unto God, inasmuch as he shall make intercession for all the children of men; and they that believe in him shall be saved.

And because of the intercession for all, all men come unto God; wherefore, they stand in the presence of him, to be judged of him according to the truth and holiness which is in him. Wherefore, the ends of the law which the Holy One hath given, unto the inflicting of the punishment which is affixed, which punishment that is affixed is in opposition to that of the happiness which is affixed, to answer the ends of the atonement—

For it must needs be, that there is an opposition in all things. If not so, my firstborn in the wilderness, righteousness could not be brought to pass, neither wickedness, neither holiness nor misery, neither good nor bad. Wherefore, all things must needs be a compound in one; wherefore, if it should be one body it must needs remain as dead, having no life neither death, nor corruption nor incorruption, happiness nor misery, neither sense nor insensibility.

Wherefore, it must needs have been created for a thing of naught; wherefore there would have been no purpose in the end of its creation. Wherefore, this thing must needs destroy the wisdom of God and his eternal purposes, and also the power, and the mercy, and the justice of God.

13 நியாயப்பிரமாணம் இல்லை என்பீர்களானால், யாதொரு பாவமும் இல்லை என்றும் சொல்வீர்கள். பாவம் இல்லை என்பீர்களானால், நீதி இல்லை என்றும் சொல்வீர்கள். நீதியில்லையானால் மகிழ்ச்சியிராதே. நீதியோ, மகிழ்ச்சியோ இல்லையெனில், தண்டனையும் துர்ப்பாக்கியமும் இராது. இவைகளனைத்தும், இல்லாமற்போனால், தேவனுமில்லை. தேவன் இல்லையெனில் நாமோ, பூமியோ இல்லை. செயல்படவோ, செயல்படுத்தப்படவோ, சிருஷ்டிப்பும் இருந்திருக்காதே. ஆகையால் சகலமும் மறைந்தே போயிருக்கும்.

And if ye shall say there is no law, ye shall also say there is no sin. If ye shall say there is no sin, ye shall also say there is no righteousness. And if there be no righteousness there be no happiness. And if there be no righteousness nor happiness there be no punishment nor misery. And if these things are not there is no God. And if there is no God we are not, neither the earth; for there could have been no creation of things, neither to act nor to be acted upon; wherefore, all things must have vanished away.

14 இப்பொழுதும், என் குமாரரே, நீங்கள் பிரயோஜனப்படவும், கற்றுக்கொள்ளவுமே இவைகளைப் பேசுகிறேன். தேவன் ஒருவர் இருப்பதாலே, அவரே எல்லாவற்றையும், வானத்தையும், பூமியையும், அதிலே செயல்படவும், செயல்படுத்தப்படும்படியாகவும், அதிலுள்ள அனைத்தையும் சிருஷ்டித்தார்.

And now, my sons, I speak unto you these things for your profit and learning; for there is a God, and he hath created all things, both the heavens and the earth, and all things that in them are, both things to act and things to be acted upon.

15 அவர் நம்முடைய முதற் பெற்றோரையும், வெளியின் மிருகஜீவன்களையும், ஆகாயத்தின் பட்சிகளையும், கடைசியில் சகலத்தையும் சிருஷ்டித்த பின்பு, மனுஷனுடைய அந்தியத்திலே தம்முடைய நித்திய தீர்மானங்களைக் கொண்டுவரத்தக்கதாக, அங்கே மாறுபாடான ஒன்று இருக்கவேண்டியதாயிற்று. அதுவே ஜீவவிருட்சத்துக்கு மாறான கசப்பான தவிர்க்கப்பட்ட கனி, ஒன்று இனிப்பானது, மற்றொன்று கசப்பானது.

And to bring about his eternal purposes in the end of man, after he had created our first parents, and the beasts of the field and the fowls of the air, and in fine, all things which are created, it must needs be that there was an opposition; even the forbidden fruit in opposition to the tree of life; the one being sweet and the other bitter.

16 ஆகையால், கர்த்தராகிய தேவன், மனுஷன் தானாகவே செயல்படும்படிக்கு அருளினார். அதனிமித்தம், மனுஷன் ஒன்றாலோ, மற்றொன்றாலோ தூண்டப்பட்டாலொழிய அவன் தானாக செயல்பட முடியாது.

Wherefore, the Lord God gave unto man that he should act for himself. Wherefore, man could not act for himself save it should be that he was enticed by the one or the other.

17 லேகியாகிய நான், வாசித்திருப்பவைகளின்படி, எழுதப்பட்டிருக்கிறபடியே ஒரு தேவதூதன், பரலோகத்திலிருந்து வீழ்ந்தான், என நம்பவேண்டும், ஆகவே தேவனுக்கு முன்பாகத் தீமையை தேடி, அவன் பிசாசானான்.

And I, Lehi, according to the things which I have read, must needs suppose that an angel of God, according to that which is written, had fallen from heaven; wherefore, he became a devil, having sought that which was evil before God.

18 அவன் பரலோகத்திலிருந்து வீழ்ந்து என்றென்றைக்குமாய் துர்ப்பாக்கியவனாய்ப் போனதினிமித்தம், மனுக்குலம் யாவும் துர்ப்பாக்கியமடைய வகைதேடினான். ஆகையால், பொய்களின் பிதாவும், ஆதி சர்ப்பமுமான அந்தப் பிசாசு, ஏவாளை நோக்கி, சொன்னான்: தவிர்க்கப்பட்ட கனியை நீ புசி, நீ சாகமாட்டாய், ஆனால் நன்மையையும், தீமையையும் அறிகிற தேவனைப்போலாவாய்.

And because he had fallen from heaven, and had become miserable forever, he sought also the misery of all mankind. Wherefore, he said unto Eve, yea, even that old serpent, who is the devil, who is the father of all lies, wherefore he said: Partake of the forbidden fruit, and ye shall not die, but ye shall be as God, knowing good and evil.

19 ஆதாமும், ஏவாளும் தவிர்க்கப்பட்ட கனியைப் புசித்த பின்பு, பூமியைப் பண்படுத்தும்படி, ஏதேன் தோட்டத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள்.

And after Adam and Eve had partaken of the forbidden fruit they were driven out of the garden of Eden, to till the earth.

20 அவர்கள் பூமியனைத்திலுமுள்ள குடிகளாகிய பிள்ளைகளைப் பெற்றார்கள்.

And they have brought forth children; yea, even the family of all the earth.

21 மனுஷர் மாம்சத்திலிருக்கும்போதே மனந்திரும்-
பும்பொருட்டு தேவனுடைய சித்தத்திற்கேற்ப, மனு-
புத்திரர்களின் ஜீவகாலம் நீடிக்கப்பட்டது. ஆத-
லால் அவர்களுடைய நிலை சோதிக்கப்பெறும்
ஒரு நிலையாக்கப்பட்டது. கர்த்தராகிய தேவன்
மனுபுத்திரருக்குக் கொடுத்த கட்டளைகளின்படி-
யே, அவர்களுடைய காலமும் நீடிக்கப்பட்டது.
ஏனெனில், சகலமானோரும் மனந்திரும்பவேண்டு-
மென்ற ஒரு கட்டளையை அவர் கொடுத்தார்.
ஏனெனில் மனுஷர் யாவரும் தங்களின் பெற்றோ-
ரின் மீறுதலினிமித்தம் வீழ்ந்துபோனார்கள், என்று
அவர்களுக்குக் காண்பித்தார்.

And the days of the children of men were prolonged, according to the will of God, that they might repent while in the flesh; wherefore, their state became a state of probation, and their time was lengthened, according to the commandments which the Lord God gave unto the children of men. For he gave commandment that all men must repent; for he showed unto all men that they were lost, because of the transgression of their parents.

22 இப்பொழுதும், இதோ, ஆதாம் மீறுதலுக்கு உட்ப-
டாமல் இருந்திருப்பானேயானால், அவன் வீழ்ச்சி-
யடையாமல், ஏதேன் தோட்டத்திலே இருந்திருப்-
பான். படைக்கப்பட்ட யாவும், படைக்கப்பட்ட
பின்பு இருந்த நிலையிலேயே இருந்திருக்கும்.
அவைகள் முடிவற்றவையாய், என்றென்றைக்கும்
நிலைத்திருந்திருக்கும்.

And now, behold, if Adam had not transgressed he would not have fallen, but he would have remained in the garden of Eden. And all things which were created must have remained in the same state in which they were after they were created; and they must have remained forever, and had no end.

23 அவர்கள் பிள்ளைகளையும் பெறாமலிருந்தி-
ருப்பார்கள்; ஆகையால் துர்ப்பாக்கியத்தை அறி-
யாததினிமித்தம் சந்தோஷமும் இல்லாமல், பாவத்-
தை அறியாததினிமித்தம், நன்மையானதைச் செய்-
யாமலும், அறியாமையின் நிலையிலேயே இருந்தி-
ருப்பார்கள்.

And they would have had no children; wherefore they would have remained in a state of innocence, having no joy, for they knew no misery; doing no good, for they knew no sin.

24 ஆனால் இதோ, சர்வத்தையும் அறிந்திருக்கிறவ-
ரின் ஞானத்தின்படியே சகலமும் நடப்பிக்கப்பட்ட-
து.

But behold, all things have been done in the wisdom of him who knoweth all things.

25 மனுஷன் பிழைத்திருப்பதற்காகவே ஆதாம்
வீழ்ந்துபோனான்; சந்தோஷமாயிருக்கவே மனு-
ஷன் இருக்கிறான்.

Adam fell that men might be; and men are, that they might have joy.

26 காலங்களின் நிறைவிலே மேசியா மனுபுத்திரரை
வீழ்ச்சியிலிருந்து மீட்கும்பொருட்டு வருகிறார். மே-
லும் அவர்கள் வீழ்ச்சியிலிருந்து மீட்கப்பட்டதினி-
மித்தம், தீமையிலிருந்து நன்மையை அறிகிற சு-
தந்திரவாளிகளாய் என்றென்றும் இருந்து. தங்க-
ளுக்குத் தாங்களே செயல்படவும், தேவனால் கொ-
டுக்கப்பட்ட கட்டளைகளின்படியே அந்தப் பெரி-
தும், கடைசியுமான நாளிலே, நியாயப்பிரமாணத்-
தின் தண்டனைகளைத்தவிர, வேறொன்றாலும்
அவர்கள் செயல்பட வைக்கப்படமாட்டார்கள்.

And the Messiah cometh in the fulness of time, that he may redeem the children of men from the fall. And because that they are redeemed from the fall they have become free forever, knowing good from evil; to act for themselves and not to be acted upon, save it be by the punishment of the law at the great and last day, according to the commandments which God hath given.

27 ஆதலால் மாம்சத்தின்பிரகாரமாய், மனுஷர் சுதந்-
திரவாளிகளாய் இருக்கிறார்கள். மனுஷனுக்குத்
தேவையான யாவும் அவர்களுக்குக் கொடுக்கப்ப-
டுகின்றன. மனுஷர் யாவருக்கும், மகத்துவமுள்ள
மத்தியஸ்தரானவரின் மூலம் சுதந்திரத்தையும்,
நித்திய ஜீவனையும் தேர்ந்தெடுக்க, அந்தப் பிசா-
சின் சிறைத்தனத்தினாலும், வல்லமையாலும்,
அடிமைத்தனத்தையும்; மரணத்தையும் தேர்ந்தெ-
டுக்கவும் அவர்கள் சுதந்திரவாளிகளாய் இருக்கி-
றார்கள். ஏனெனில் எல்லா மனுஷரும் தன்னைப்
போலவே துர்பாக்கியவான்களாக இருக்கும்படிக்-
கு, அவன் வகைதேடுகிறான்.

Wherefore, men are free according to the flesh; and all things are given them which are expedient unto man. And they are free to choose liberty and eternal life, through the great Mediator of all men, or to choose captivity and death, according to the captivity and power of the devil; for he seeketh that all men might be miserable like unto himself.

28 இப்பொழுதும், என் குமாரரே, நீங்கள் அந்த மகத்-
துவமுள்ள மத்தியஸ்தரை ஏறெடுத்துப்பார்த்து,
அவருடைய மகா கட்டளைகளுக்குச் செவிகொ-
டுக்க வேண்டுமென்று விரும்புகிறேன், அவரின்
பரிசுத்த ஆவியின் சித்தத்தின்படியே அவருடைய
வார்த்தைகளுக்கு உண்மையுள்ளவர்களாயிருந்-
து, நித்திய ஜீவனைத் தேர்ந்தெடுங்கள்.

And now, my sons, I would that ye should look to the great Mediator, and hearken unto his great commandments; and be faithful unto his words, and choose eternal life, according to the will of his Holy Spirit;

29 தன் சொந்த ராஜ்யத்திலே உங்களை ஆளுகை
செய்யும்படிக்கு, உங்களை நரகத்திலே தள்ள, உங்க-
ளை அடிமைகளாக்க, பிசாசின் ஆவிக்கு வல்ல-
மையைக் கொடுக்கிற மாம்சத்தின் சித்தத்தினா-
லும், அதன் பொல்லாப்பின்படியேயும், நித்திய மர-
ணத்தைத் தேர்ந்தெடுக்காமல் இருக்க வேண்டு-
மென விரும்புகிறேன்.

And not choose eternal death, according to the will of the flesh and the evil which is therein, which giveth the spirit of the devil power to captivate, to bring you down to hell, that he may reign over you in his own kingdom.

30 என் குமாரரே, என்னுடைய சோதனைக்காலத்-
தின் கடைசி நாட்களிலே இந்தச் சில வார்த்தைக-
ளை உங்களனைவருக்கும் பேசினேன். தீர்க்கதரிசி-
களின் வார்த்தைகளின்படியே, நான் நல்ல பங்-
கைத் தெரிந்து கொண்டேன். என் நோக்கம் யாவும்
உங்கள் ஆத்துமாவின் நீடித்த நலனே தவிர வே-
றொன்றுமில்லை. ஆமென்.

I have spoken these few words unto you all, my sons, in the last days of my probation; and I have chosen the good part, according to the words of the prophet. And I have none other object save it be the everlasting welfare of your souls. Amen.

## 2 நேபி 3

1 எனக்குக் கடைசியாய்ப் பிறந்த யோசேப்பே, இப்-
பொழுது நான் உன்னிடம் பேசுகிறேன். நீ வனாந்த-
ரத்திலே என் உபத்திரவக்காலத்தில் பிறந்தாய்;
ஆம், என் பெரும் வருத்தத்தின் நாட்களிலே உன்
தாய் உன்னைப் பெற்றெடுத்தாள்.
2 இஸ்ரவேலின் பரிசுத்தரின் கட்டளைகளை நீ
கைக்கொள்ளுவாயாகில், நீ சுதந்தரிப்பதற்காக-
வும் உனக்கு என்றென்றைக்கும் பாதுகாப்பாய்
இருக்கும்படி, உன் சந்ததியோடே, உனது சகோதர-
ரின் சந்ததியும் சுதந்தரிக்கும்படி, மிகவும் விலையே-
றப்பெற்ற தேசமாகிய, இத்தேசத்தை உனக்குக் கர்த்-
தர் அருளுவாராக.
3 இப்பொழுதும், எனக்குக் கடைசியாய்ப் பிறந்த-
வனும், நான் என் உபத்திரவத்தில் வனாந்தரத்திலி-
ருந்து வெளியே கொண்டுவந்தவனுமாகிய யோ-
சேப்பே, உன் சந்ததி முழுவதுமாய் சங்கரிக்கப்பட்-
டுப்போகாதபடி, கர்த்தர் உன்னை என்றென்றைக்-
குமாய் ஆசீர்வதிப்பாராக.
4 இதோ, நீ என் சந்ததியாய் இருக்கிறாய்; நான்
எகிப்திற்குச் சிறைத்தனத்திற்குள்ளாக எடுத்துச்
செல்லப்பட்ட யோசேப்பின் சந்ததியாய் இருக்கி-
றேன். கர்த்தர், யோசேப்புடனே செய்த உடன்படிக்-
கைகள் மகத்துவமானவைகளாய் இருந்தன.
5 ஆதலால், மெய்யாகவே யோசேப்பு நம்முடைய
காலத்தைக் கண்டான். இஸ்ரவேல் வீட்டாருக்கு நீ-
தியுள்ள ஒரு கிளையை கர்த்தராகிய தேவன்,
அவன் சந்ததியிலிருந்து எழும்பப்பண்ணுவார்
என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை அவன்
பெற்றுக்கொண்டான். மேசியா அல்ல, ஆனால்
அந்தரங்க அந்தகாரத்திலிருந்தும், சிறைத்தனத்தி-
லிருந்தும், சுதந்திரத்திற்கு, இருளிலிருந்து வெளிச்-
சத்திற்கு, வெளிக்கொண்டுவர, வல்லமையின்
ஆவியினாலே, ஆம், பிற்காலங்களிலே, இஸ்ரவே-
லின் வீட்டாருக்கு மேசியா வெளியரங்கப்படுத்தப்-
பட வேண்டும், என்ற கர்த்தருடைய உடன்படிக்-
கைகளை அவர்கள் நினைவுகூரும்பொருட்டு,
ஒரு கிளை முறிக்கப்பட வேண்டியதாயிற்று.
6 ஏனெனில், என் சந்ததிக்கென்று தெரிந்துகொள்-
ளப்படத்தக்க ஒரு ஞானதிருஷ்டிக்காரனை கர்த்த-
ராகிய என் தேவன் எழும்பப் பண்ணுவார், என்று
யோசேப்பு மெய்யாகவே சாட்சி கொடுத்தான்.

## 2 Nephi 3

And now I speak unto you, Joseph, my last-born. Thou wast born in the wilderness of mine afflictions; yea, in the days of my greatest sorrow did thy mother bear thee.

And may the Lord consecrate also unto thee this land, which is a most precious land, for thine inheritance and the inheritance of thy seed with thy brethren, for thy security forever, if it so be that ye shall keep the commandments of the Holy One of Israel.

And now, Joseph, my last-born, whom I have brought out of the wilderness of mine afflictions, may the Lord bless thee forever, for thy seed shall not utterly be destroyed.

For behold, thou art the fruit of my loins; and I am a descendant of Joseph who was carried captive into Egypt. And great were the covenants of the Lord which he made unto Joseph.

Wherefore, Joseph truly saw our day. And he obtained a promise of the Lord, that out of the fruit of his loins the Lord God would raise up a righteous branch unto the house of Israel; not the Messiah, but a branch which was to be broken off, nevertheless, to be remembered in the covenants of the Lord that the Messiah should be made manifest unto them in the latter days, in the spirit of power, unto the bringing of them out of darkness unto light—yea, out of hidden darkness and out of captivity unto freedom.

For Joseph truly testified, saying: A seer shall the Lord my God raise up, who shall be a choice seer unto the fruit of my loins.

7 ஆம், யோசேப்பு மெய்யாகவே சொன்னதாவது: கர்த்தர் என்னை நோக்கி, உன் சந்ததியிலிருந்து ஒரு தெரிந்துகொள்ளப்படத்தக்க ஞானதிருஷ்டிக்காரனை நான் எழும்பப் பண்ணுவேன். அவன் உன் சந்ததிக்குள்ளே உயர்வாக எண்ணப்படுவான். அவனுடைய சகோதரர்களாகிய உன் சந்ததிக்கு ஒரு பணியைச் செய்ய நான் அவனுக்கு ஒரு கட்டளையைக் கொடுப்பேன். அந்தப்பணி, உனது பிதாக்களோடு நான் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் ஞானத்திற்கு அவர்களை கொண்டுவருகிறதினிமித்தம், பெருமதிப்புள்ளதாயிருக்கும்.

Yea, Joseph truly said: Thus saith the Lord unto me: A choice seer will I raise up out of the fruit of thy loins; and he shall be esteemed highly among the fruit of thy loins. And unto him will I give commandment that he shall do a work for the fruit of thy loins, his brethren, which shall be of great worth unto them, even to the bringing of them to the knowledge of the covenants which I have made with thy fathers.

8 நான் அவனுக்குக் கட்டளையிடுகிற பணியைத்தவிர மற்ற எந்த வேலையையும் செய்யக்கூடாதென்று, ஒரு கட்டளையை அவனுக்குக் கொடுப்பேன். அவன் என் பணியைச் செய்யப்போகிறதினாலே, என் பார்வையிலே அவனை, பெரியவனாக்குவேன்.

And I will give unto him a commandment that he shall do none other work, save the work which I shall command him. And I will make him great in mine eyes; for he shall do my work.

9 இஸ்ரவேலின் வீட்டாரே, என் ஜனத்தை விடுதலையாக்க, உங்களுக்குள்ளே நான் எழும்பப்பண்ணுவேன் என்று சொன்னவன், மோசேயைப்போலவே மகத்தானவனாயிருப்பான்.

And he shall be great like unto Moses, whom I have said I would raise up unto you, to deliver my people, O house of Israel.

10 எகிப்து தேசத்திலிருந்து உனது ஜனத்தை விடுதலையாக்க, மோசேயை எழும்பச்செய்வேன்.

And Moses will I raise up, to deliver thy people out of the land of Egypt.

11 ஒரு ஞானதிருஷ்டிக்காரனை, உன் சந்ததியிலிருந்து எழும்பப்பண்ணுவேன். உன் சந்ததிக்கு என் வார்த்தையைக் கொண்டுசெல்லும்படியாகவும், என்னுடைய வார்த்தைகளை எடுத்துச்செல்லும்படியாக மாத்திரம் அல்ல, அவர்களுக்குள் ஏற்கனவே போன வசனங்களைக்குறித்து, அவர்களிடத்தில் என் வார்த்தையை உணர்த்தும்படியாகவும், அவனுக்கு வல்லமையைக் கொடுப்பேன் என கர்த்தர் சொல்லுகிறார்.

But a seer will I raise up out of the fruit of thy loins; and unto him will I give power to bring forth my word unto the seed of thy loins—and not to the bringing forth my word only, saith the Lord, but to the convincing them of my word, which shall have already gone forth among them.

12 ஆகையால் உன் சந்ததியும் எழுதும்; யூதாவின் சந்ததியும் எழுதும்; உன் சந்ததியால் எழுதப்படுபவைகளும், யூதாவின் சந்ததியால் எழுதப்படுபவைகளும், கள்ள உபதேசங்களைத் தாறுமாறாக்கி, பிணக்குகளை ஒழியப்பண்ணி, உன் சந்ததிக்குள்ளே சமாதானத்தை நிலைவரப்பண்ணி, பிற்காலத்திலே அவர்களைத் தங்களின் பிதாக்களின் ஞானத்திற்கும், என்னுடைய உடன்படிக்கைகளின் ஞானத்திற்கும் கொண்டுவந்து சேர்ந்து வளரும், என்று கர்த்தர் உரைக்கிறார்.

Wherefore, the fruit of thy loins shall write; and the fruit of the loins of Judah shall write; and that which shall be written by the fruit of thy loins, and also that which shall be written by the fruit of the loins of Judah, shall grow together, unto the confounding of false doctrines and laying down of contentions, and establishing peace among the fruit of thy loins, and bringing them to the knowledge of their fathers in the latter days, and also to the knowledge of my covenants, saith the Lord.

13 இஸ்ரவேலின் வீட்டாரே, உங்களை மறுபடியும் சீர்படுத்தும்படி, என் கிரியையை என்னுடைய சகல ஜனங்களுக்குள்ளும் துவங்குகிற அந்நாளிலே, அவன் பலவீனத்திலிருந்து பராக்கிரமசாலியாக்கப்படுவான், என்று கர்த்தர் உரைக்கிறார்.

And out of weakness he shall be made strong, in that day when my work shall commence among all my people, unto the restoring thee, O house of Israel, saith the Lord.

14 யோசேப்பு தீர்க்கதரிசனமாய் உரைத்ததாவது:
இதோ, அந்த ஞானதிருஷ்டிக்காரனை கர்த்தர்
ஆசீர்வதிப்பார். அவனை அழிக்க வகை தேடுகிற-
வர்கள் தாறுமாறாக்கப்படுவார்கள். ஏனெனில்,
என் சந்ததியைக் குறித்து கர்த்தரிடத்திலிருந்து
நான் பெற்றுக்கொண்ட இந்த வாக்குத்தத்தம் நி-
றைவேறும். இதோ, இந்த வாக்குத்தத்தம் நிறைவே-
றுமென்று நான் உறுதியாயிருக்கிறேன்.

And thus prophesied Joseph, saying: Behold, that seer will the Lord bless; and they that seek to destroy him shall be confounded; for this promise, which I have obtained of the Lord, of the fruit of my loins, shall be fulfilled. Behold, I am sure of the fulfilling of this promise;

15 அவன் நாமம் என் நாமத்தின்படியே அழைக்கப்-
படும். அது அவனுடைய தகப்பனின் நாமத்தின்ப-
டியே இருக்கும். அவன் என்னைப்போலவே இருப்-
பான். கர்த்தர் அவனுடைய கரத்தைக்கொண்டு
நடப்பிக்கிற காரியம், கர்த்தருடைய வல்லமையி-
னாலே என் ஜனத்தை இரட்சிப்புக்கு கொண்டுவ-
ரும்.

And his name shall be called after me; and it shall be after the name of his father. And he shall be like unto me; for the thing, which the Lord shall bring forth by his hand, by the power of the Lord shall bring my people unto salvation.

16 ஆம், யோசேப்பு தீர்க்கதரிசனமுரைத்ததாவது:
மோசேயின் வாக்குத்தத்தத்தை நான் நிச்சயமாய்
நம்புகிறதுபோல, இந்தக் காரியங்களின் நிச்சயத்-
தையும் அறிவேன். ஏனெனில் கர்த்தர் என்னிடத்-
தில்: நான் உன் சந்ததியை என்றென்றைக்குமாய்
பாதுகாப்பேன் என்று சொல்லியிருக்கிறாரே.

Yea, thus prophesied Joseph: I am sure of this thing, even as I am sure of the promise of Moses; for the Lord hath said unto me, I will preserve thy seed forever.

17 கர்த்தர்: நான் மோசேயை எழும்பப்பண்ணுவேன்.
அவனுக்கு வல்லமையை ஒரு கோலில் வைத்துத்-
தருவேன். எழுத்தினாலே அவனுக்கு நியாயத்தீர்ப்-
புகளைக் கொடுப்பேன். எனினும் அவன் அதிக-
மாய்ப் பேசாதபடிக்கும் அவன் பேச்சிலே சிறந்த-
வனாய் விளங்காதபடிக்கும், அவன் நாவைக் கட்ட-
விழ்க்கமாட்டேன். ஆனால் என் சொந்தக் கையின்
விரலினாலே, என்னுடைய நியாயப்பிரமாணத்தை
அவனுக்கு எழுதுவேன். அவனுக்கு பிரதிவாசகன்
ஒருவனை ஏற்படுத்துவேன் என்று சொன்னார்.

And the Lord hath said: I will raise up a Moses; and I will give power unto him in a rod; and I will give judgment unto him in writing. Yet I will not loose his tongue, that he shall speak much, for I will not make him mighty in speaking. But I will write unto him my law, by the finger of mine own hand; and I will make a spokesman for him.

18 கர்த்தர் மேலும் என்னை நோக்கி, உன் சந்ததியா-
ருக்குள்ளே எழும்பப்பண்ணி, அவனுக்கு பிரதிவா-
சகன் ஒருவனை ஏற்படுத்துவேன். இதோ, அவன்
உன் சந்ததியாருக்கு, உன் சந்ததியாரின் எழுத்துக்க-
ளை எழுதும்பொருட்டு, அவனுக்குக் கொடுப்-
பேன். உன் பிரதிவாசகன் அவைகளை அறிவிப்-
பான்.

And the Lord said unto me also: I will raise up unto the fruit of thy loins; and I will make for him a spokesman. And I, behold, I will give unto him that he shall write the writing of the fruit of thy loins, unto the fruit of thy loins; and the spokesman of thy loins shall declare it.

19 அவன் எழுதப்போகும் வார்த்தைகள், உன் சந்த-
திக்குள்ளே செல்லவேண்டுமென்பது, என் ஞானத்-
தின்படி அவசியமாய் இருக்கிறது. அது உன் சந்ததி
புழுதியிலிருந்து அவர்களை நோக்கி கூக்குரலிட்ட-
து போலிருக்கும்; ஏனெனில் நான் அவர்களின் வி-
சுவாசத்தை அறிந்திருக்கிறேன்.

And the words which he shall write shall be the words which are expedient in my wisdom should go forth unto the fruit of thy loins. And it shall be as if the fruit of thy loins had cried unto them from the dust; for I know their faith.

20 அநேக தலைமுறைகள் கடந்து சென்றபோதிலும்,
அவர்கள் தங்கள் சகோதரர்களிடம், மனந்திரும்-
பும்படி புழுதியிலிருந்து கூக்குரலிடுவார்கள். மே-
லும், அவர்களது கூக்குரல், அவர்களின் வார்த்-
தைகளுடைய எளிமைக்குத்தக்கதாய்ப் போகும்.

And they shall cry from the dust; yea, even repentance unto their brethren, even after many generations have gone by them. And it shall come to pass that their cry shall go, even according to the simpleness of their words.

21 அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம், அவர்க-
ளின் வார்த்தைகள் என் வாயிலிருந்து புறப்பட்டு
உனது சந்ததியினராகிய அவர்களின் சகோதரருக்-
குப் போகும். நான் உனது பிதாக்களுக்குச் செய்த
உடன்படிக்கையை நினைவுகூரும்படிக்கு, அவர்க-
ளின் விசுவாசத்திலே திடனற்ற அவர்களின்
வார்த்தைகளைத் திடனாக்குவேன்.

Because of their faith their words shall proceed forth out of my mouth unto their brethren who are the fruit of thy loins; and the weakness of their words will I make strong in their faith, unto the remembering of my covenant which I made unto thy fathers.

22 இப்பொழுது, இதோ, என் குமாரனாகிய யோசேப்-
பே, பூர்வகாலத்தாராகிய என் தகப்பன் இவ்வித-
மாய்த் தீர்க்கதரிசனமுரைத்தார்.

And now, behold, my son Joseph, after this manner did my father of old prophesy.

23 ஆகையால், இந்த உடன்படிக்கையினிமித்தம் நீ
ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாய். இந்தப் புஸ்தகத்தி-
னுடைய வார்த்தைகளுக்கு, அவர்கள் செவிகொ-
டுக்கப்போவதினால், உன் சந்ததி அழிக்கப்பட-
மாட்டாது.

Wherefore, because of this covenant thou art blessed; for thy seed shall not be destroyed, for they shall hearken unto the words of the book.

24 வார்த்தையிலும், செயலிலும் அநேக நற்கிரியை-
கள் புரிகிற வல்லமையானவன் தேவனுடைய
கரங்களில் ஒரு கருவியாக இருந்து, மிகுந்த விசு-
வாசத்தைக், கொண்டவனாய், பராக்கிரமமான
அற்புதங்களைச் செய்ய, தேவனின் பார்வையில்
மகத்தானவைகளை நடப்பிக்க, இஸ்ரவேல் வீட்டா-
ருக்கும், உனது சகோதரரின் சந்ததிக்கும், அநேகத்-
தை சீர்ப்படுத்த. அவர்களுக்குள்ளிருந்து ஒருவன்
எழும்புவான்.

And there shall rise up one mighty among them, who shall do much good, both in word and in deed, being an instrument in the hands of God, with exceeding faith, to work mighty wonders, and do that thing which is great in the sight of God, unto the bringing to pass much restoration unto the house of Israel, and unto the seed of thy brethren.

25 இப்பொழுது, யோசேப்பே நீ ஆசீர்வதிக்கப்பட்ட-
வன். இதோ, நீ சிறியவனாய் இருக்கிறபடியாலே
உன் சகோதரனாகிய நேபியின் வார்த்தைகளுக்குச்
செவி கொடு. நான் பேசின வார்த்தைகளுக்குத் தக்-
கதாய் உனக்குச் செய்யப்படும். மரித்துக்கொண்டி-
ருக்கிற உன் தகப்பனின் வார்த்தைகளை நினை-
வில் கொள். ஆமென்.

And now, blessed art thou, Joseph. Behold, thou art little; wherefore hearken unto the words of thy brother, Nephi, and it shall be done unto thee even according to the words which I have spoken. Remember the words of thy dying father. Amen.

## 2 நேபி 4

1 இப்பொழுது, நேபியாகிய நான், எகிப்துக்குக்
கொண்டுசெல்லப்பட்ட யோசேப்பைப்பற்றி என்
தகப்பன் கூறிய தீர்க்கதரிசனங்களைக் குறித்துப்
பேசுகிறேன்.
2 ஏனெனில் இதோ, தமது சந்ததியார் எல்லோரைக்-
குறித்தும் அவர் மெய்யாகவே தீர்க்கதரிசனம்
உரைத்தார்; மேலும் அவர் எழுதிய தீர்க்கதரிசனங்க-
ளைவிட அங்கே அதிக முக்கியம் வாய்ந்தவைகள்
இல்லை; மேலும் அவர் எங்களையும் எங்கள் எதிர்-
காலத் தலைமுறைகளைக் குறித்தும் தீர்க்கதரி-
சனம் உரைத்தார்; அவைகள் பித்தளைத்தகடுகள்
மேல் எழுதப்பட்டிருக்கின்றன.
3 ஆகையால், யோசேப்பின் தீர்க்கதரிசனங்களைக்
குறித்தவற்றை, என் தகப்பன் பேசி முடித்தபின்பு,
அவர் லாமானுடைய பிள்ளைகளாகிய, அவனது
குமாரர்களையும், அவனது குமாரத்திகளையும்
அழைத்து, அவர்களை நோக்கி: இதோ, என் முதற்-
பேறானவனின் குமாரரும், குமாரத்திகளுமாயிருக்-
கிற என் குமாரரும், குமாரத்திகளுமானவர்களே,
நீங்கள் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்க
வேண்டுமென நான் விரும்புகிறேன்.
4 ஏனெனில் கர்த்தராகிய தேவன், என் கட்டளைக-
ளைக் கைக்கொள்கிற அளவில், நீங்கள் தேசத்தி-
லே விருத்தியடைவீர்கள்; நீங்கள் என் கட்டளைக-
ளைக் கைக்கொள்ளாமற் போகிற அளவில், என்
சமுகத்திலிருந்து அறுப்புண்டு போவீர்கள், என்று
சொல்லியிருக்கிறார்.
5 ஆனாலும் இதோ, என் குமாரரும், குமாரத்திகளு-
மானவர்களே, உங்கள்மேல் ஒரு ஆசீர்வாதத்தை
விட்டுச்செல்லாமல், நான் என் கல்லறைக்குள் போ-
வது கூடாத காரியமாயிருக்கிறது; ஏனெனில்
இதோ, நீங்கள் போகவேண்டிய வழியிலே வளர்க்-
கப்பட்டிருந்தால், நீங்கள் அதை விட்டு விலகாதி-
ருப்பீர்கள், என்பதை நான் அறிவேன்.
6 ஆகையால், நீங்கள் சபிக்கப்பட்டால், அந்தச் சா-
பம் உங்களிலிருந்து எடுக்கப்பட்டு, அது உங்கள்
பெற்றோர்களின் தலைகளின் மேல் சுமரும்படி-
யாக, இதோ, என் ஆசீர்வாதத்தை உங்கள் மேல்
வைக்கிறேன்.
7 ஆதலால், என் ஆசீர்வாதத்தின் நிமித்தமாக நீங்-
கள் அழிந்து போகும்படி, கர்த்தராகிய தேவன் உங்-
களை விடமாட்டார்; ஆகையால் அவர் உங்கள் மே-
லும், உங்கள் சந்ததியார் மேலும் என்றென்றைக்கு-
மாய் இரக்கமுள்ளவராய் இருப்பார்.
8 அந்தப்படியே, என் தகப்பன் லாமானுடைய கு-
மாரரோடும், குமாரத்திகளோடும் பேசிமுடித்த பின்-
பு, லெமுவேலின் குமாரரும், குமாரத்திகளும் தமக்கு
முன்பாகக் கொண்டுவரப்படும்படிச் செய்தார்.

## 2 Nephi 4

And now, I, Nephi, speak concerning the prophecies of which my father hath spoken, concerning Joseph, who was carried into Egypt.

For behold, he truly prophesied concerning all his seed. And the prophecies which he wrote, there are not many greater. And he prophesied concerning us, and our future generations; and they are written upon the plates of brass.

Wherefore, after my father had made an end of speaking concerning the prophecies of Joseph, he called the children of Laman, his sons, and his daughters, and said unto them: Behold, my sons, and my daughters, who are the sons and the daughters of my firstborn, I would that ye should give ear unto my words.

For the Lord God hath said that: Inasmuch as ye shall keep my commandments ye shall prosper in the land; and inasmuch as ye will not keep my commandments ye shall be cut off from my presence.

But behold, my sons and my daughters, I cannot go down to my grave save I should leave a blessing upon you; for behold, I know that if ye are brought up in the way ye should go ye will not depart from it.

Wherefore, if ye are cursed, behold, I leave my blessing upon you, that the cursing may be taken from you and be answered upon the heads of your parents.

Wherefore, because of my blessing the Lord God will not suffer that ye shall perish; wherefore, he will be merciful unto you and unto your seed forever.

And it came to pass that after my father had made an end of speaking to the sons and daughters of Laman, he caused the sons and daughters of Lemuel to be brought before him.

9 அவர் அவர்களோடு பேசிச் சொன்னதாவது: இதோ, என் இரண்டாவது குமாரனின் குமாரரும், குமாரத்திகளுமாயிருக்கிற என் குமாரர், குமாரத்திகளே, இதோ, லாமானுடைய குமாரருக்கும், குமாரத்திகளுக்கும் கொடுத்த அதே ஆசீர்வாதத்தையே உங்களுக்கும் நான் கொடுக்கிறேன்; ஆகையால், நீங்கள் முழுவதுமாக அழிக்கப்பட்டுப் போவதில்லை; ஆனால் முடிவிலே உங்கள் சந்ததி ஆசீர்வதிக்கப்படும்.

And he spake unto them, saying: Behold, my sons and my daughters, who are the sons and the daughters of my second son; behold I leave unto you the same blessing which I left unto the sons and daughters of Laman; wherefore, thou shalt not utterly be destroyed; but in the end thy seed shall be blessed.

10 அந்தப்படியே, இதோ, என் தந்தை அவர்களிடம் பேசி முடித்தபொழுது, அவர் இஸ்மவேலின் குமாரர்களிடமும், ஆம், அவனுடைய சகல குடும்பத்தாரோடும் பேசினார்.

And it came to pass that when my father had made an end of speaking unto them, behold, he spake unto the sons of Ishmael, yea, and even all his household.

11 அவர் அவர்களிடம் பேசி முடித்த பின்பு, சாமிடம் சொன்னதாவது; நீயும் உன் சந்ததியும் பாக்கியவான்கள், ஏனெனில் உன் சகோதரனாகிய நேபியைப் போல, நீயும் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்வாய்; மேலும் உன் சந்ததி, அவன் சந்ததியோடு சேர்த்து எண்ணப்படும்; நீ உன் சகோதரனைப் போலவே இருப்பாய்; உன் சந்ததி, அவன் சந்ததியைப் போலவே இருக்கும்; நீ உன் சகல நாட்களிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.

And after he had made an end of speaking unto them, he spake unto Sam, saying: Blessed art thou, and thy seed; for thou shalt inherit the land like unto thy brother Nephi. And thy seed shall be numbered with his seed; and thou shalt be even like unto thy brother, and thy seed like unto his seed; and thou shalt be blessed in all thy days.

12 அந்தப்படியே, என் தந்தையாகிய லேகி, தமது இருதயத்தின் உணர்ச்சிகளின்படியும், அவருள் இருந்த கர்த்தருடைய ஆவியின்படியும், தம்முடைய குடும்பத்தார் எல்லோருடனும் பேசின பிறகு, முதுமையடைந்தார். அந்தப்படியே, அவர் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டார்.

And it came to pass after my father, Lehi, had spoken unto all his household, according to the feelings of his heart and the Spirit of the Lord which was in him, he waxed old. And it came to pass that he died, and was buried.

13 அந்தப்படியே, அவர் மரித்து, சில நாட்களுக்குள்ளாகவே, கர்த்தருடைய புத்திமதிகளினிமித்தம், லாமானும், லெமுவேலும், இஸ்மவேலின் குமாரர்களும், என்மேல் கோபமடைந்தார்கள்.

And it came to pass that not many days after his death, Laman and Lemuel and the sons of Ishmael were angry with me because of the admonitions of the Lord.

14 ஏனெனில் நேபியாகிய நான், அவருடைய வார்த்தையின்படியே, அவர்களிடம் பேசும்படி நெருக்கி ஏவப்பட்டேன்; ஏனெனில் நான் அநேக காரியங்களை அவர்களிடத்தில் பேசினேன்; என் தகப்பனும் தம் மரணத்திற்கு முன் அவ்வாறே செய்தார். சொல்லப்பட்டவைகளின் அநேகம், என்னுடைய மற்ற தகடுகளில் எழுதப்பட்டுள்ளன; ஏனெனில், அநேக வரலாற்றுப் பகுதிகள் என்னுடைய மற்ற தகடுகளில் எழுதப்பட்டிருக்கின்றன.

For I, Nephi, was constrained to speak unto them, according to his word; for I had spoken many things unto them, and also my father, before his death; many of which sayings are written upon mine other plates; for a more history part are written upon mine other plates.

15 இவைகளின் மேல் நான் என் ஆத்துமத்துக்குரிய காரியங்களையும், பித்தளைத் தகடுகளின் மேல் பதிக்கப்பட்டிருக்கிற அநேக வேதவாக்கியங்களையும் எழுதுகிறேன்; ஏனெனில் என் ஆத்துமா வேதவாக்கியங்களில் களிகூருகிறது; என் உள்ளம் அவைகளைத் தியானித்து, என் பிள்ளைகள் கற்றுக்கொள்வதற்கும், அவர்கள் பிரயோஜனத்திற்குமாய் அவைகளை எழுதுகிறது.

And upon these I write the things of my soul, and many of the scriptures which are engraven upon the plates of brass. For my soul delighteth in the scriptures, and my heart pondereth them, and writeth them for the learning and the profit of my children.

16 இதோ, கர்த்தருக்குரியவைகளில் என் ஆத்துமா களிகூருகிறது; நான் கண்டும், கேட்டுமிருக்கிற-வைகளைக் குறித்து என் இருதயம் எப்பொழுதும் தியானமாயிருக்கிறது.

Behold, my soul delighteth in the things of the Lord; and my heart pondereth continually upon the things which I have seen and heard.

17 அதுமட்டுமல்லாமல் அவருடைய பெரிதும், மகத்-துவமுமான கிரியைகளை எனக்குக் காண்பிப்ப-தில், கர்த்தருடைய மகா நன்மை இருப்பினும், நிர்ப்பந்தமான மனுஷனாக இருக்கிறேனே, என்று என் இருதயம் ஓலமிடுகிறது. ஆம், என் மாம்சத்தி-னிமித்தம் என் இருதயம் வருத்தமடைகிறது; என் அக்கிரமங்களினிமித்தம் என் ஆத்துமா துக்கம-டைகிறது.

Nevertheless, notwithstanding the great goodness of the Lord, in showing me his great and marvelous works, my heart exclaimeth: O wretched man that I am! Yea, my heart sorroweth because of my flesh; my soul grieveth because of mine iniquities.

18 என்னை எளிதாக வேதனைக்குள்ளாக்கக்கூடிய சோதனைகளினிமித்தமும், பாவங்களினிமித்த-மும் நான் சூழப்பட்டிருக்கிறேன்.

I am encompassed about, because of the temptations and the sins which do so easily beset me.

19 நான் களிகூர விரும்புகையில், என் பாவங்களி-னிமித்தம், என் இருதயம் புலம்புகிறது; ஆயினும் நான் விசுவாசித்தவர் இன்னார் என்று அறிவேன்.

And when I desire to rejoice, my heart groaneth because of my sins; nevertheless, I know in whom I have trusted.

20 என் தேவன் எனக்கு ஆதரவாய் இருந்திருக்கி-றார்; அவர் வனாந்தரத்தில் என் உபத்திரவங்களி-னூடாக என்னை வழிநடத்தினார்; அவர் மகா ஆழத்தின் தண்ணீர்களின் மேல் என்னைப் பாது-காத்தார்.

My God hath been my support; he hath led me through mine afflictions in the wilderness; and he hath preserved me upon the waters of the great deep.

21 என் மாம்சம் அழிந்து போகுமளவும், அவர் என்-னைத் தம்முடைய அன்பினால் நிரப்பினார்.

He hath filled me with his love, even unto the consuming of my flesh.

22 என் சத்துருக்கள் எனக்கு முன் நடுங்கும்படிச்-செய்து, அவர்களைத் தாறுமாறாக்கினார்.

He hath confounded mine enemies, unto the causing of them to quake before me.

23 இதோ, பகலிலே அவர் என் கூக்குரலைக் கேட்-டார்; இராக்காலத்தில் அவருடைய தரிசனங்கள் மூ-லம், எனக்கு ஞானத்தைத் தந்தருளினார்.

Behold, he hath heard my cry by day, and he hath given me knowledge by visions in the night-time.

24 நான், பகலிலே வல்லமையான ஜெபத்தினால் அவருக்குமுன் தைரியமாய்த் தரித்திருந்தேன். ஆம், நான் என் சத்தத்தை உயர அனுப்பினேன்; தூ-தர்கள் இறங்கிவந்து எனக்குப் பணிவிடை செய்-தார்கள்.

And by day have I waxed bold in mighty prayer before him; yea, my voice have I sent up on high; and angels came down and ministered unto me.

25 அவருடைய ஆவியானவரின் சிறகுகளின் மேல், என் சரீரம் மிகவும் உயர்ந்த மலைகளின் மேலே கொண்டு செல்லப்பட்டது; மேலும் மனுஷருக்கு மி-கவும் மகத்துவமுள்ளவைகளான, மகத்துவமான காரியங்களை என் கண்கள் கண்டன; ஆதலால் நான் அவைகளை எழுதக் கூடாதென்று தடை செய்யப்பட்டேன்.

And upon the wings of his Spirit hath my body been carried away upon exceedingly high mountains. And mine eyes have beheld great things, yea, even too great for man; therefore I was bidden that I should not write them.

26 பின்பு, அப்படியானால், நான் அநேக மகத்துவ-மான காரியங்களைக் கண்டிருப்பினும், கர்த்தர் மனுபுத்திரரிடத்தில் சித்தமிறங்கி மனுஷரை மிக இரக்கத்தோடு சந்தித்தாரெனில், ஏன் என் உபத்திர-வங்களினிமித்தம், என் இருதயம் அழுது என் ஆத்-துமா வருத்தத்தின் பள்ளத்தாக்கில் தங்கி வாசமா-யிருந்து, என் மாம்சம் அழிந்துபோய், என் பெலன் குறைந்து போகவேண்டும்?

O then, if I have seen so great things, if the Lord in his condescension unto the children of men hath visited men in so much mercy, why should my heart weep and my soul linger in the valley of sorrow, and my flesh waste away, and my strength slacken, because of mine afflictions?

27 என் மாம்சத்தினிமித்தம் நான் ஏன் பாவத்திற்கு
உட்படவேண்டும்? ஆம், சமாதானத்தை அழித்து,
என் ஆத்துமாவைத் துன்புறுத்தும்படி, பொல்லாத-
வனுக்கு என் இருதயத்தில் இடம் கொடுக்கும்படிக்-
கு, ஏன் நான் சோதனைக்கு வழிகொடுக்க வேண்-
டும்? என் சத்துருவினிமித்தம் நான் ஏன் கோபப்ப-
டுகிறேன்?

And why should I yield to sin, because of my flesh? Yea, why should I give way to temptations, that the evil one have place in my heart to destroy my peace and afflict my soul? Why am I angry because of mine enemy?

28 என் ஆத்துமாவே, விழித்தெழு! பாவத்தில் இனி-
மேலும் தளர்ந்திராதே; என் இருதயமே, களிகூரு.
என் ஆத்துமாவின் சத்துருவுக்கு இனிமேலும்
இடங்கொடாதே.

Awake, my soul! No longer droop in sin. Rejoice, O my heart, and give place no more for the enemy of my soul.

29 என் சத்துருக்களினிமித்தம் மறுபடியும் கோபங்-
கொள்ளாதே; என் உபத்திரவங்களினிமித்தம் என்
பெலனைக் குன்றிப்போகச் செய்யாதே.

Do not anger again because of mine enemies. Do not slacken my strength because of mine afflictions.

30 என் இருதயமே, களிகூரு; உன் கர்த்தரை நோக்-
கிக் கூக்குரலிட்டு, கர்த்தாவே, நான் உம்மை என்-
றென்றைக்கும் துதிப்பேன்; ஆம், என் தேவனும்
என் இரட்சிப்பின் கன்மலையுமானவரே, என் ஆத்-
துமா உம்மில் களிகூரும், என்று சொல்.

Rejoice, O my heart, and cry unto the Lord, and say: O Lord, I will praise thee forever; yea, my soul will rejoice in thee, my God, and the rock of my salvation.

31 கர்த்தாவே, என் ஆத்துமாவை நீர் மீட்டுக் கொள்-
வீரா? என் சத்துருக்களின் கைகளிலிருந்து என்-
னை நீர் விடுவித்தருளுவீரா? பாவத்தின் தோற்றத்-
திலேயே, நான் நடுங்கும்படி என்னை நீர் செய்தரு-
ளுவீரா?

O Lord, wilt thou redeem my soul? Wilt thou deliver me out of the hands of mine enemies? Wilt thou make me that I may shake at the appearance of sin?

32 என் இருதயம் நொறுங்குண்டதாயும், என் ஆவி
நருங்குண்டதாயும் இருப்பதினிமித்தம், பாதாளத்-
தின் வாசல்கள் எப்பொழுதும் எனக்கு முன்பாக மூ-
டியிருப்பதாக! கர்த்தாவே, நான் தாழ்வான பள்ளத்-
தாக்கின் பாதைகளில் நடக்கும்படியாகவும், நான்
சமமான வழிகளிலே இருக்கும்படியாகவும், எனக்கு
முன்பாக நீதியின் வாசல்களை மூடாதிருப்பீரா!

May the gates of hell be shut continually before me, because that my heart is broken and my spirit is contrite! O Lord, wilt thou not shut the gates of thy righteousness before me, that I may walk in the path of the low valley, that I may be strict in the plain road!

33 கர்த்தாவே, உம்முடைய நீதியின் அங்கியால் என்-
னைப்போர்த்துவீரா! என் சத்துருக்களுக்கு முன்-
பாக நான் தப்புவதற்கு ஒரு வழியை ஆயத்தப்ப-
டுத்துவீரா! என் பாதைகளை எனக்கு முன்பாக
நேர்ப்படுத்துவீரா; என் வழியில் இடறுவதற்கேது-
வான தடையை வைக்காமல் இருப்பீரா! ஆனால்
எனக்கு முன்பாக வழியைத் தடைபண்ணாதபடிக்-
கு, என் வழிகளை அடைக்காமல், என் சத்துருக்க-
ளின் வழிகளை அடைத்துப் போடும்.

O Lord, wilt thou encircle me around in the robe of thy righteousness! O Lord, wilt thou make a way for mine escape before mine enemies! Wilt thou make my path straight before me! Wilt thou not place a stumbling block in my way—but that thou wouldst clear my way before me, and hedge not up my way, but the ways of mine enemy.

34 கர்த்தாவே, நான் உம்மை நம்பியிருக்கிறேன்;
நான் உம்மில் என்றென்றைக்கும் நம்பிக்கையாயி-
ருப்பேன்; நான் மாம்ச புயத்தில் என் நம்பிக்கை-
யை வைக்கமாட்டேன்; ஏனெனில், மாம்ச புயத்தின்
மேல் நம்பிக்கையை வைப்பவன் சபிக்கப்பட்ட-
வன் என்பதை நான் அறிவேன்; ஆம், மனுஷன் மீ-
து நம்பிக்கை வைத்தவனோ அல்லது மாம்சமான-
தைத் தன் புயபலமாக்கிக் கொள்கிறவனோ, சபிக்-
கப்பட்டவன்.

O Lord, I have trusted in thee, and I will trust in thee forever. I will not put my trust in the arm of flesh; for I know that cursed is he that putteth his trust in the arm of flesh. Yea, cursed is he that putteth his trust in man or maketh flesh his arm.

35 ஆம், தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்குத் தேவன் தாராளமாய்க் கொடுப்பார் என்பதை நான் அறிவேன். ஆம், நான் தவறாய்க் கேட்காமலிருந்தால் என் தேவன் எனக்குக் கொடுப்பார்; ஆகையால் நான் என் சத்தத்தை உம்மைநோக்கி உயர்த்துகிறேன்; ஆம், என் தேவனும், நீதியின் கன்மலையுமானவரே, நான் உம்மிடத்தில் கூக்குரலிடுவேன்; இதோ, என் கன்மலையும், என்றுமுள்ள தேவனுமானவரே, என் சத்தம் என்றென்றைக்கும் உம்மை நோக்கி எழும்பும். ஆமென்.

Yea, I know that God will give liberally to him that asketh. Yea, my God will give me, if I ask not amiss; therefore I will lift up my voice unto thee; yea, I will cry unto thee, my God, the rock of my righteousness. Behold, my voice shall forever ascend up unto thee, my rock and mine everlasting God. Amen.

## 2 நேபி 5

1 இதோ, அந்தப்படியே, நேபியாகிய நான், என் சகோ-
தரர்களுடைய கோபத்தினிமித்தம், என் கர்த்தரா-
கிய தேவனை நோக்கி அதிகம் கூக்குரலிட்டேன்.
2 ஆனாலும் இதோ, அவர்கள் என் ஜீவனை வாங்-
கத்தேடுமளவிற்கு, எனக்கெதிராக அவர்களது கோ-
பம் என்மேல் அதிகரித்தது.
3 ஆம், அவர்கள் எனக்கெதிராக முறுமுறுத்து, நம்
இளைய சகோதரன் நம்மீது ஆளுகை செய்ய நி-
னைக்கிறான்; அவன் நிமித்தம் நாம் அநேக பாடுக-
ளை அனுபவித்தோம்; ஆகையால் அவனது
வார்த்தைகளினிமித்தம், நாம் அதிக உபத்திரவம்
அடையாதபடிக்கு, நாம் இப்பொழுது அவனைக்
கொன்று போடுவோம். ஏனெனில் இதோ, அவன்
நமக்கு அதிகாரியாய் இருக்க அனுமதியோம்; நாம்
மூத்த சகோதரர்களாய் இருப்பதால், இந்த ஜனங்க-
ளை ஆளுகை செய்வது நமக்குரியதாய் இருக்கிற-
து.
4 இப்பொழுதும், அவர்கள் எனக்கெதிராக முறுமு-
றுத்துச் சொன்ன வார்த்தைகள் அனைத்தையும்
நான் இந்தத் தகடுகளின் மேல் எழுதவில்லை;
அவர்கள் என் ஜீவனை வாங்கத் தேடினார்கள்,
என்று மாத்திரம் சொல்வது எனக்குப் போதுமான-
தாயிருக்கிறது.
5 அந்தப்படியே, நேபியாகிய நானும், என்னுடன்
கூட வருகிறவர்கள் அனைவரும், அவர்களிடமி-
ருந்து வனாந்தரத்தினுள் ஓடிப்போக வேண்டுமெ-
னக் கர்த்தர் என்னை எச்சரித்தார்.
6 ஆனபடியால் நேபியாகிய நான், என் குடும்பத்தா-
ரையும், சோரமையும், அவனுடைய குடும்பத்தா-
ரையும், என் மூத்த சகோதரனாகிய சாமையும்,
அவனுடைய குடும்பத்தாரையும், யாக்கோபு, யோ-
சேப்பு ஆகிய என் இளைய சகோதரர்களையும், என்
சகோதரிகளையும், என்னுடன் வருபவர்கள் அத்-
தனை பேரையும் அழைத்துச் சென்றேன். என்னு-
டன் வரும் அத்தனை பேரும் தேவனுடைய எச்ச-
ரிக்கைகளையும், வெளிப்படுத்தல்களையும் விசு-
வாசித்தவர்களாய் இருந்தார்கள்; ஆகையால்
அவர்கள் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்-
தார்கள்.
7 நாங்கள் எங்கள் கூடாரங்களையும், எங்களால்
எடுத்துச் செல்ல முடிந்த பொருட்களையும் எடுத்-
துக்கொண்டு, வனாந்தரத்தில் அநேக நாட்கள் பய-
ணம் செய்தோம்; நாங்கள் அநேக நாட்களவும் பய-
ணம் செய்தபிறகு, பாளயமிறங்கினோம்.
8 என் ஜனங்கள் அந்த இடத்தை நேபி என்றழைக்க
வேண்டுமென விரும்பினார்கள்; ஆகையால் நாங்-
கள் அதை நேபி என்றழைத்தோம்.

## 2 Nephi 5

Behold, it came to pass that I, Nephi, did cry much unto the Lord my God, because of the anger of my brethren.

But behold, their anger did increase against me, insomuch that they did seek to take away my life.

Yea, they did murmur against me, saying: Our younger brother thinks to rule over us; and we have had much trial because of him; wherefore, now let us slay him, that we may not be afflicted more because of his words. For behold, we will not have him to be our ruler; for it belongs unto us, who are the elder brethren, to rule over this people.

Now I do not write upon these plates all the words which they murmured against me. But it sufficeth me to say, that they did seek to take away my life.

And it came to pass that the Lord did warn me, that I, Nephi, should depart from them and flee into the wilderness, and all those who would go with me.

Wherefore, it came to pass that I, Nephi, did take my family, and also Zoram and his family, and Sam, mine elder brother and his family, and Jacob and Joseph, my younger brethren, and also my sisters, and all those who would go with me. And all those who would go with me were those who believed in the warnings and the revelations of God; wherefore, they did hearken unto my words.

And we did take our tents and whatsoever things were possible for us, and did journey in the wilderness for the space of many days. And after we had journeyed for the space of many days we did pitch our tents.

And my people would that we should call the name of the place Nephi; wherefore, we did call it Nephi.

9 என்னுடன் இருந்தவர்கள் அத்தனை பேரும் தங்-
களை நேபியின் ஜனங்கள் என்றழைக்க முடிவு
செய்தார்கள்.

And all those who were with me did take upon them to call themselves the people of Nephi.

10 நாங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி-
யே, எல்லாவற்றிலும் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு-
களையும், நியமங்களையும் கட்டளைகளையும்
கைக்கொண்டு ஆசரித்தோம்.

And we did observe to keep the judgments, and the statutes, and the commandments of the Lord in all things, according to the law of Moses.

11 கர்த்தர் எங்களோடிருந்தார்; நாங்கள் மிகவும் வி-
ருத்தியடைந்தோம்; ஏனெனில் நாங்கள் விதைக-
ளை நட்டு, ஏராளமாய் அறுவடை செய்தோம்; மே-
லும் நாங்கள் ஆட்டுமந்தைகளையும், கால்நடைக்
கூட்டங்களையும், எல்லா இன விலங்குகளையும்
வளர்க்கத் தொடங்கினோம்.

And the Lord was with us; and we did prosper exceedingly; for we did sow seed, and we did reap again in abundance. And we began to raise flocks, and herds, and animals of every kind.

12 நேபியாகிய நான், பித்தளைத்தகடுகளின் மேல்
பதிக்கப்பட்டிருந்த பதிவேடுகளையும், எழுதப்பட்-
டிருக்கிறவைகளின்படியே, கர்த்தருடைய கரத்தி-
னால் என் தகப்பனுக்காக ஆயத்தம் பண்ணப்பட்ட
உருண்டை அல்லது திசைகாட்டியையும் கொண்-
டுவந்தேன்.

And I, Nephi, had also brought the records which were engraven upon the plates of brass; and also the ball, or compass, which was prepared for my father by the hand of the Lord, according to that which is written.

13 அந்தப்படியே, நாங்கள் மிகவும் விருத்தியடைந்-
து தேசத்தின் மேல் பெருகத் தொடங்கினோம்.

And it came to pass that we began to prosper exceedingly, and to multiply in the land.

14 இப்பொழுது, லாமானியர்கள் என்றழைக்கப்படு-
கிற அந்த ஜனம், எந்த விதத்திலாவது எங்கள் மீது
வருவார்களெனில், எங்களை அழித்துப்போடாத-
படிக்கு, நேபியாகிய நான், லாபானுடைய பட்டயத்-
தை எடுத்து, அந்த மாதிரியின்படியே அநேக பட்ட-
யங்களைச் செய்தேன்; ஏனெனில் என் மீதும், என்
பிள்ளைகள் மீதும், என் ஜனங்கள் என்றழைக்கப்-
பட்டவர்கள் மீதும், அவர்களுக்கிருந்த வெறுப்பை
நான் அறிவேன்.

And I, Nephi, did take the sword of Laban, and after the manner of it did make many swords, lest by any means the people who were now called Lamanites should come upon us and destroy us; for I knew their hatred towards me and my children and those who were called my people.

15 நான் என் ஜனங்களுக்குக் கட்டிடங்களைக் கட்ட-
வும், எல்லா வகையான மரங்களிலும், இரும்பிலும்,
செம்பிலும், பித்தளையிலும், உருக்கிலும், தங்கத்தி-
லும், வெள்ளியிலும், மிகவும் ஏராளமாயிருந்த வி-
லையேறப்பெற்ற கனிமப் பொருட்களிலும், வே-
லைகளைச் செய்யக் கற்றுக் கொடுத்தேன்.

And I did teach my people to build buildings, and to work in all manner of wood, and of iron, and of copper, and of brass, and of steel, and of gold, and of silver, and of precious ores, which were in great abundance.

16 நேபியாகிய நான், ஒரு ஆலயத்தை எழுப்பி-
னேன். அது அநேக விலையேறப்பெற்ற பொருட்க-
ளால் கட்டப்படவில்லையே தவிர, அதை சாலொ-
மோன் ஆலயப் பிரகாரமாய்க் கட்டினேன். ஏனெ-
னில் விலையுயர்ந்த பொருட்கள் இத்தேசத்திலே
காணப்படாததினிமித்தம், சாலொமோன் ஆலயம்
போல கட்டப்பட முடியவில்லை. ஆனால் சாலொ-
மோனுடைய ஆலயத்தைப்போலவே, இதன் கட்டிட
அமைப்பு இருந்தது; அதனுடைய வேலைப்பாடு
மிகவும் நேர்த்தியாயிருந்தது.

And I, Nephi, did build a temple; and I did construct it after the manner of the temple of Solomon save it were not built of so many precious things; for they were not to be found upon the land, wherefore, it could not be built like unto Solomon's temple. But the manner of the construction was like unto the temple of Solomon; and the workmanship thereof was exceedingly fine.

17 அந்தப்படியே, நேபியாகிய நான், என் ஜனங்கள்
காரியசமர்த்தர்களாயும், தங்கள் கைகளினால் பிர-
யாசப்படும்படியும் செய்தேன்.

And it came to pass that I, Nephi, did cause my people to be industrious, and to labor with their hands.

18 அந்தப்படியே, நான் அவர்களுடைய ராஜாவாயி-
ருக்கும்படி அவர்கள் விரும்பினார்கள்; ஆனால்
நேபியாகிய நான், அவர்களுக்கு ராஜாவாக ஒரு-
வனும் இருக்கக்கூடாதென வாஞ்சித்தேன்; ஆயி-
னும் என்னிலிருந்த பெலத்தின்படியே நான் அவர்-
களுக்குச் செய்தேன்.

And it came to pass that they would that I should be their king. But I, Nephi, was desirous that they should have no king; nevertheless, I did for them according to that which was in my power.

19 இதோ, நான் அவர்களை ஆளுகிறவனாயும்,
ஆசிரியனாயும் இருக்கவேண்டும், என்று அவர்க-
ளைக் குறித்துப் பேசப்பட்ட, கர்த்தருடைய வார்த்-
தைகள் என் சகோதரரிடத்தில் நிறைவேறிற்று;
ஆகையால், அவர்கள் என் ஜீவனை வாங்கத்தே-
டும் சமயமளவும், கர்த்தருடைய கட்டளைகளின்ப-
டியே நான் அவர்களை ஆளுகிறவனாயும், ஆசிரி-
யனாயும் இருந்தேன்.

And behold, the words of the Lord had been fulfilled unto my brethren, which he spake concerning them, that I should be their ruler and their teacher. Wherefore, I had been their ruler and their teacher, according to the commandments of the Lord, until the time they sought to take away my life.

20 ஆகையால், உன் வார்த்தைகளுக்கு அவர்கள்
செவிகொடாமல் போகும் அளவில் அவர்கள் கர்த்-
தரின் பிரசன்னத்திலிருந்து அறுப்புண்டு போவார்-
கள் என்று என்னிடம் சொன்ன, கர்த்தருடைய
வார்த்தைகள் நிறைவேறிற்று; இதோ, அவர்கள்
அவருடைய பிரசன்னத்திலிருந்து அறுப்புண்டு
போனார்கள்.

Wherefore, the word of the Lord was fulfilled which he spake unto me, saying that: Inasmuch as they will not hearken unto thy words they shall be cut off from the presence of the Lord. And behold, they were cut off from his presence.

21 அவர்களின் அக்கிரமத்தினிமித்தம், அவர்கள் மீ-
து ஒரு கொடிய சாபமாகிய, சாபத்தை அவர் வரப்-
பண்ணினார். ஏனெனில், இதோ, அவர்கள், தங்கள்
இருதயங்களை அவருக்கு விரோதமாய்க் கடின-
மாக்கியதால், அவர்கள் ஒரு கன்மலையைப் போ-
லானார்கள்; ஆதலால், அவர்கள் வெண்மையாக-
வும், மிகவும் சவுந்தரியமுள்ளவர்களாகவும் விரும்-
பத்தக்கவர்களாகவும் இருந்தபடியால், அவர்கள்
என் ஜனத்திற்கு வசீகரமாய் இல்லாதபடிக்கு, கர்த்த-
ராகிய தேவன் அவர்கள் மீது கருமையான சருமத்-
தை வரப்பண்ணினார்.

And he had caused the cursing to come upon them, yea, even a sore cursing, because of their iniquity. For behold, they had hardened their hearts against him, that they had become like unto a flint; wherefore, as they were white, and exceedingly fair and delightsome, that they might not be enticing unto my people the Lord God did cause a skin of blackness to come upon them.

22 கர்த்தராகிய தேவன் சொல்வதாவது: அவர்கள்
தங்கள் அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பினா-
லொழிய நான், என் ஜனத்திற்கு அவர்களை அருக்-
களிப்புள்ளவர்களாய் இருக்கச் செய்வேன்.

And thus saith the Lord God: I will cause that they shall be loathsome unto thy people, save they shall repent of their iniquities.

23 அவர்கள் சந்ததியோடு தன் சந்ததியை சேர்த்துக்-
கொள்ளுகிறவன் சபிக்கப்படுவான். அவர்களும்
அதே சாபத்தால் சபிக்கப்படுவார்கள். இதைக் கர்த்-
தர் பேசினார். அது அப்படியே நடந்தது.

And cursed shall be the seed of him that mixeth with their seed; for they shall be cursed even with the same cursing. And the Lord spake it, and it was done.

24 அவர்கள் மீது இருந்த சாபத்தினிமித்தம் அவர்-
கள் ஒரு சோம்பலுள்ள ஜனமாகவும், தீங்கு மற்றும்
சூழ்ச்சி நிறைந்தவர்களாகவும் மாறினார்கள்.
இரையாகும் விலங்குகளை வனாந்தரத்தில் தேடி-
னார்கள்.

And because of their cursing which was upon them they did become an idle people, full of mischief and subtlety, and did seek in the wilderness for beasts of prey.

25 கர்த்தராகிய தேவன் என்னிடத்தில் சொன்னதா-
வது: என்னை நினைவுகூரும்படியாய்த் தூண்டு-
வதற்கு அவர்கள் உன் சந்ததிக்குச் சவுக்காய் இருப்-
பார்கள், அவர்கள் என்னை நினைவுகூராமலும்,
என் வார்த்தைகளுக்குச் செவிகொடாமலும் போ-
கிற அளவில் அவர்களை அழிக்குமட்டும் இவர்கள்
சவுக்காலடிப்பார்கள்.

And the Lord God said unto me: They shall be a scourge unto thy seed, to stir them up in remembrance of me; and inasmuch as they will not remember me, and hearken unto my words, they shall scourge them even unto destruction.

26 அந்தப்படியே, நேபியாகிய நான், யாக்கோபை-
யும், யோசேப்பையும் என் ஜனத்தின் மீது ஆசாரி-
யர்களாயும், ஆசிரியர்களாயும் இருக்கும்படி பிர-
திஷ்டை பண்ணினேன்.

And it came to pass that I, Nephi, did consecrate Jacob and Joseph, that they should be priests and teachers over the land of my people.

27 அந்தப்படியே, நாங்கள் மகிழ்ச்சியாய் வாழ்ந்து-
வந்தோம்.

And it came to pass that we lived after the manner of happiness.

28 நாங்கள் எருசலேமை விட்டு வந்த காலத்திலிருந்-
து முப்பது வருஷங்கள் கழிந்தன.

And thirty years had passed away from the time we left Jerusalem.

29 நேபியாகிய நான், இதுவரை என் ஜனத்தைப்பற்-
றிச் செய்த பதிவுகளை, நான் செய்த தகடுகளின் மீ-
து எழுதினேன்.

And I, Nephi, had kept the records upon my plates, which I had made, of my people thus far.

30 அந்தப்படியே, கர்த்தராகிய தேவன், மற்ற தகடுக-
ளை செய்து, அதன்மீது, உன் ஜனத்தின் பிரயோ-
ஜனத்திற்காக, என் பார்வைக்கு நல்லதாய்ப்படுகிற
அநேக காரியங்களை அவைகள் மீது நீ பொறிப்-
பாயாக, என்று என்னிடம் உரைத்தார்.

And it came to pass that the Lord God said unto me: Make other plates; and thou shalt engraven many things upon them which are good in my sight, for the profit of thy people.

31 ஆகையால், நேபியாகிய நான் கர்த்தருடைய கட்-
டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கும்படிக்கு, போய் நான்
இந்தக் காரியங்களைப் பொறித்த இந்த தகடுக-
ளைச் செய்தேன்.

Wherefore, I, Nephi, to be obedient to the commandments of the Lord, went and made these plates upon which I have engraven these things.

32 தேவனுக்குப் பிரியமானவற்றை நான் பொறித்-
தேன். மேலும், என் ஜனம் தேவனுடைய காரியங்க-
ளிலும் பிரியமாய் இருப்பார்களெனில், அவர்கள்
இந்தத் தகடுகள் மீது நான் பொறித்தவைகளையும்
விரும்புவார்கள்.

And I engraved that which is pleasing unto God. And if my people are pleased with the things of God they will be pleased with mine engravings which are upon these plates.

33 என் ஜனத்தின் வரலாற்றின் அதிக விசேஷித்த
பாகத்தை, அறியவேண்டுமென்று என் ஜனம் வி-
ரும்பினால், அவர்கள் என் மற்ற தகடுகளை
ஆராய வேண்டும்.

And if my people desire to know the more particular part of the history of my people they must search mine other plates.

34 நாற்பது வருஷம் கழிந்தது எனவும், இதற்குள்-
ளாகவே எங்கள் சகோதரரிடம், நாங்கள் யுத்தங்கள்
மற்றும் பிணக்குகளை ஏற்கனவே செய்தோம், என்-
றும் சொல்லுவது எனக்குப் போதுமானதாய் இருக்-
கிறது.

And it sufficeth me to say that forty years had passed away, and we had already had wars and contentions with our brethren.

## 2 நேபி 6

1 நேபியின் சகோதரனாகிய யாக்கோபு, நேபியின்
ஜனங்களிடத்தில் பேசிய வார்த்தைகளாவன:

2 இதோ, என் பிரியமான சகோதரரே, தேவனால்
அழைக்கப்பட்டவனாயும், அவரின் பரிசுத்த மு-
றைமையின் பிரகாரமாய் நியமிக்கப்பட்டவனா-
யும், நீங்கள் ராஜாவாகவும், காவலனாகவும் பார்க்-
கிற, பாதுகாப்புக்கு நீங்கள் சார்ந்திருக்கிற, என்
சகோதரனாகிய நேபியால் பிரதிஷ்டை பண்ணப்-
பட்டவனாயுமிருக்கிற, யாக்கோபாகிய நான், உங்க-
ளிடத்தில் மிகுதியான பல காரியங்களைப் பேசியி-
ருக்கிறேன் என்று நீங்கள் அறிவீர்கள்.

3 ஆயினும், நான் உங்களுடைய ஆத்தும நலனை
வாஞ்சிப்பதினிமித்தம், மறுபடியும் உங்களிடத்தில்
பேசுகிறேன். ஆம், உங்களினிமித்தம் என் கவலை
பெரிதாயுள்ளது; அது என்றைக்கும் இவ்வண்ண-
மாகவே இருந்திருக்கிறது என்பதை நீங்களே அறி-
வீர்கள். ஏனெனில் நான் மிகவும் கருத்தாய் உங்க-
ளுக்குப் புத்திசொன்னேன்; நான் உங்களுக்கு என்
தகப்பனின் வார்த்தைகளைக் கற்பித்தேன்; உலக
சிருஷ்டி முதல் எழுதப்பட்டிருக்கிற எல்லாக் காரி-
யங்களையும் குறித்து, உங்களிடத்தில் பேசியிருக்-
கிறேன்.

4 இப்பொழுதும், இதோ, நடப்பவைகளையும் மற்-
றும் வரப்போகிற காரியங்களையும் குறித்து நான்
உங்களிடத்தில் பேசுவேன்; ஆகையால், ஏசாயா-
வின் வார்த்தைகளை உங்களுக்கு வாசிப்பேன்.
மேலும் நான், உங்களிடத்தில் பேசவேண்டுமென்று
என் சகோதரன் வாஞ்சித்த வார்த்தைகள் அவைக-
ளே. மேலும் நீங்கள் தேவனுடைய நாமத்தை அறிந்-
து, மகிமைப்படுத்தல் வேண்டும் என்று, உங்கள்
நன்மையினிமித்தம் உங்களிடம் பேசுகிறேன்.

5 இப்பொழுது, நான் வாசிக்கப்போகும் வார்த்தை-
கள், ஏசாயா இஸ்ரவேல் வீட்டார் அனைவரையும்
குறித்துப் பேசியவை; ஆதலால், நீங்களும் இஸ்ர-
வேல் வீட்டாராயிருப்பதால், அவைகளை உங்க-
ளுக்கும் ஒப்பிடலாம். மேலும் நீங்களும், இஸ்ரவேல்
வீட்டாராயிருப்பதால், ஏசாயாவால் பேசப்பட்டிருக்-
கின்ற அநேக காரியங்களை உங்களுக்கும் ஒப்பிட-
லாம்.

6 இப்பொழுதும், இவைகளே அந்த வார்த்தைகள்:
இதோ, நான் என் புயத்தை புறஜாதியாருக்கு நேராக
உயர்த்துவேன். ஜனத்துக்கு என் கொடியை ஏற்ப-
டுத்துவேன், அவர்கள் உன் குமாரர்களைத் தங்கள்
கரங்களில் ஏந்துவார்கள். உன் குமாரத்திகளை,
தங்கள் தோள்களின்மீது சுமந்துகொண்டு வரு-
வார்கள், என்று கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்.

## 2 Nephi 6

The words of Jacob, the brother of Nephi, which he spake unto the people of Nephi:

Behold, my beloved brethren, I, Jacob, having been called of God, and ordained after the manner of his holy order, and having been consecrated by my brother Nephi, unto whom ye look as a king or a protector, and on whom ye depend for safety, behold ye know that I have spoken unto you exceedingly many things.

Nevertheless, I speak unto you again; for I am desirous for the welfare of your souls. Yea, mine anxiety is great for you; and ye yourselves know that it ever has been. For I have exhorted you with all diligence; and I have taught you the words of my father; and I have spoken unto you concerning all things which are written, from the creation of the world.

And now, behold, I would speak unto you concerning things which are, and which are to come; wherefore, I will read you the words of Isaiah. And they are the words which my brother has desired that I should speak unto you. And I speak unto you for your sakes, that ye may learn and glorify the name of your God.

And now, the words which I shall read are they which Isaiah spake concerning all the house of Israel; wherefore, they may be likened unto you, for ye are of the house of Israel. And there are many things which have been spoken by Isaiah which may be likened unto you, because ye are of the house of Israel.

And now, these are the words: Thus saith the Lord God: Behold, I will lift up mine hand to the Gentiles, and set up my standard to the people; and they shall bring thy sons in their arms, and thy daughters shall be carried upon their shoulders.

7 ராஜாக்கள் உன்னை போஷிக்கும் தகப்பன்களா-
கவும், அவர்களுடைய இராணிகள், தாபரிக்கும்
தாய்மார்களாகவும் இருப்பார்கள்; அவர்கள் தரை-
யில் முகம்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து,
உனது கால்களின் தூசியை நக்குவார்கள்; நானே
கர்த்தர் என்று அறிவாய், ஏனெனில், எனக்காக
காத்திருப்பவர்கள் வெட்கப்பட்டுப் போகமாட்டார்-
கள்.

And kings shall be thy nursing fathers, and their queens thy nursing mothers; they shall bow down to thee with their faces towards the earth, and lick up the dust of thy feet; and thou shalt know that I am the Lord; for they shall not be ashamed that wait for me.

8 இப்பொழுது யாக்கோபாகிய நான், இந்த வாரத்-
தைகளைக் குறித்து சற்று பேசுகிறேன். ஏனெனில்,
இதோ, நாங்கள் எவ்விடத்திலிருந்து வந்தோமோ,
அந்த எருசலேமில் இருந்தவர்கள், கொலை செய்-
யப்பட்டு, சிறைத்தனத்திற்கு கொண்டு செல்லப்-
பட்டனர் என்று கர்த்தர் எனக்குக் காண்பித்திருக்கி-
றார்.

And now I, Jacob, would speak somewhat concerning these words. For behold, the Lord has shown me that those who were at Jerusalem, from whence we came, have been slain and carried away captive.

9 ஆயினும், அவர்கள் மறுபடியும் திரும்பிவருவார்-
கள் என்று கர்த்தர் எனக்குக் காண்பித்திருக்கிறார்.
மேலும் இஸ்ரவேலின் பரிசுத்தராகிய, கர்த்தராகிய
தேவன், தம்மையே அவர்களுக்கு மாம்சத்தில் வெ-
ளிப்படுத்துவார் என்றும், அவர் எனக்குக் காண்-
பித்திருக்கிறார்; இவைகளை என்னிடம் பேசிய தூ-
தனின் வார்த்தைகளின்படியே, அவர் தம்மையே
வெளிப்படுத்திய பின்பு, அவர்கள் அவரைச் சவுக்-
கினால் அடித்து, சிலுவையில் அறைய வேண்டும்.

Nevertheless, the Lord has shown unto me that they should return again. And he also has shown unto me that the Lord God, the Holy One of Israel, should manifest himself unto them in the flesh; and after he should manifest himself they should scourge him and crucify him, according to the words of the angel who spake it unto me.

10 அவர்கள் இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு விரோத-
மாய்த் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி,
தங்கள் கழுத்துக்களை கடினப்படுத்திய பிறகு,
இதோ, இஸ்ரவேலின் பரிசுத்தருடைய நியாயத்-
தீர்ப்புகள் அவர்கள் மீது வரும். அவர்கள் அடிக்-
கப்பட்டு, உபத்திரவப்படும் காலமும் வரும்.

And after they have hardened their hearts and stiffened their necks against the Holy One of Israel, behold, the judgments of the Holy One of Israel shall come upon them. And the day cometh that they shall be smitten and afflicted.

11 ஆகையால், அவர்கள் அங்கேயும் இங்கேயுமாக
விரட்டப்பட்டு, அநேகர் மாம்சத்தில் உபத்திரவப்-
பட்டுப் போனபின்பு, விசுவாசிகளின் ஜெபத்தினி-
மித்தம் அழிவிற்குட்படுத்தப்படமாட்டார்கள்;
அவர்கள் சிதறடிக்கப்பட்டு, அடிக்கப்பட்டு, வெ-
றுக்கப்படுவார்கள்; இருப்பினும் தங்கள் மீட்பரின்
ஞானத்திற்கு அவர்கள் வரும்போது, தங்கள் சுதந்-
திர தேசங்களுக்கு மறுபடியும் அவர்கள் ஒன்றாய்க்
கூட்டிச்சேர்க்கப்படும்படிக்குக் கர்த்தர் அவர்களுக்-
கு இரக்கமுள்ளவராய் இருப்பாரென்று, தூதன்
சொன்னான்.

Wherefore, after they are driven to and fro, for thus saith the angel, many shall be afflicted in the flesh, and shall not be suffered to perish, because of the prayers of the faithful; they shall be scattered, and smitten, and hated; nevertheless, the Lord will be merciful unto them, that when they shall come to the knowledge of their Redeemer, they shall be gathered together again to the lands of their inheritance.

12 இந்தத் தீர்க்கதரிசி குறிப்பிட்டு எழுதிய அந்த புற-
ஜாதியார் பாக்கியவான்கள்; ஏனெனில் இதோ,
அவர்கள் மனந்திரும்பி சீயோனுக்கு விரோதமாய்ச்
சண்டையிடாமல், அந்தப் பெரிதும், அருவருப்பு-
மான சபையில் தங்களைச் சேர்த்துக்கொள்ளாமல்
இருந்தார்களெனில், அவர்கள் இரட்சிக்கப்படு-
வார்கள்; கர்த்தராகிய தேவன், தன் பிள்ளைகளுக்-
குத் தான் செய்த, தன் உடன்படிக்கைகளை நிறை-
வேற்றுவார். இந்தக் காரணத்திற்காக இவற்றை
தீர்க்கதரிசி எழுதினான்.

And blessed are the Gentiles, they of whom the prophet has written; for behold, if it so be that they shall repent and fight not against Zion, and do not unite themselves to that great and abominable church, they shall be saved; for the Lord God will fulfil his covenants which he has made unto his children; and for this cause the prophet has written these things.

13 ஆகையால் சீயோனுக்கும், கர்த்தரின் உடன்படிக்-
கையின் ஜனத்திற்கும் விரோதமாய்ச் சண்டையிடு-
கிறவர்கள் அவர்களின் பாதங்களின் தூசியை நக்-
குவார்கள்; கர்த்தருடைய ஜனம் வெட்கப்பட்டுப்
போகமாட்டார்கள். ஏனெனில் அவருக்காகக் காத்-
திருப்பவர்களே கர்த்தருடைய ஜனம்; ஏனெனில்,
அவர்கள் மேசியாவின் வருகைக்காக இன்னும்
காத்திருக்கிறார்கள்

Wherefore, they that fight against Zion and the covenant people of the Lord shall lick up the dust of their feet; and the people of the Lord shall not be ashamed. For the people of the Lord are they who wait for him; for they still wait for the coming of the Messiah.

14 இதோ, தீர்க்கதரிசியின் வார்த்தைகளின்படியே,
மேசியா அவர்களை திரும்பக்கொண்டு வரும்படி
மறுபடியும் இரண்டாம் விசை துவங்குவார்; ஆத-
லால் அவர்கள் அவரிலே விசுவாசிக்கும் அந்த
நாள் வருகையிலே, அவர்கள் சத்துருக்களின்
அழிவிற்கேதுவாய் வல்லமையிலும் மகா மகிமை-
யிலும் தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்துவார்;
மேலும் தம்மில் விசுவாசிக்கிற ஒருவரையும் அவர்
அழிப்பதில்லை.

And behold, according to the words of the prophet, the Messiah will set himself again the second time to recover them; wherefore, he will manifest himself unto them in power and great glory, unto the destruction of their enemies, when that day cometh when they shall believe in him; and none will he destroy that believe in him.

15 அவரை விசுவாசிக்காதவர்கள், நெருப்பாலும், பு-
யலாலும், பூமியதிர்ச்சியாலும், இரத்தம் சிந்துதல்க-
ளாலும், கொள்ளை நோய்களாலும், பஞ்சத்தாலும்
அழிக்கப்படுவார்கள். அவர்கள் கர்த்தரே இஸ்ரவே-
லின் பரிசுத்தராகிய தேவன், என்பதை அறிவார்-
கள்.

And they that believe not in him shall be destroyed, both by fire, and by tempest, and by earthquakes, and by bloodsheds, and by pestilence, and by famine. And they shall know that the Lord is God, the Holy One of Israel.

16 பராக்கிரமசாலியிடமிருந்து கொள்ளைப்பொரு-
ளை எடுக்க முடியுமோ அல்லது சட்டப்படியாக சி-
றைபிடிக்கப்பட்டவனை தப்புவிக்கக்கூடுமோ?

For shall the prey be taken from the mighty, or the lawful captive delivered?

17 ஆனாலும் கர்த்தர் உரைப்பதாவது: பராக்கிரமசா-
லிகளின் சிறைத்தனத்திலுள்ளோர் கூட வெளியே
கொண்டு செல்லப்படுவர், பயங்கரமானவர்களின்
கொள்ளைப்பொருள் கூட தப்புவிக்கப்படும்,
ஏனெனில் வல்லமையான தேவன், தம் உடன்படிக்-
கையின் ஜனத்தைத் தப்புவிப்பார், ஏனெனில்
கர்த்தர் சொல்லுகிறார்: உன்னோடுகூடப் போராடு-
கிறவனுடன் நானும் போராடுவேன்.

But thus saith the Lord: Even the captives of the mighty shall be taken away, and the prey of the terrible shall be delivered; for the Mighty God shall deliver his covenant people. For thus saith the Lord: I will contend with them that contendeth with thee—

18 உன்னை ஒடுக்குகிறவர்களை அவர்களின்
சொந்த மாம்சத்தால் போஷிப்பேன்; அவர்கள் சு-
வையுள்ள திராட்சை இரசத்தைப்போல தங்கள்
சொந்த இரத்தத்தைக் குடிப்பார்கள்; மாம்சமான
யாவரும், யாக்கோபின் வல்லவரும், உங்களின்
மீட்பரும், உங்களின் இரட்சகருமாகிய நானே கர்த்-
தர் என்பதை அறிவார்கள்.

And I will feed them that oppress thee, with their own flesh; and they shall be drunken with their own blood as with sweet wine; and all flesh shall know that I the Lord am thy Savior and thy Redeemer, the Mighty One of Jacob.

# 2 நேபி 7

1 ஆம், ஏனெனில் கர்த்தர் உரைப்பதாவது: நான்
உன்னை விலக்கினேனோ அல்லது, உன்னை
நான் என்றென்றைக்குமாய் அனுப்பினேனோ?
ஏனெனில் கர்த்தர் உரைப்பதாவது: உன் தாயின்
தள்ளுச்சீட்டு எங்கே? நான் யாருக்கு உன்னை வி-
லக்கிவைத்தேன்? எனக்குக் கடன்கொடுத்த
எவனுக்கு உன்னை விற்றேன்? ஆம், யாரிடத்தில்
உன்னை நான் விற்றேன்? இதோ உங்கள் அக்கிர-
மங்களினிமித்தம் உங்களை நீங்களே விற்றீர்கள்,
உங்கள் மீறுதல்களினால் உங்களுடைய தாய் வி-
லக்கப்பட்டாள்.
2 ஆதலால், நான் வந்தபோது, அங்கே ஒருவனும்
இல்லை; நான் அழைத்தபோது, அங்கே பதிலளிப்-
பதற்கு ஒருவரும் இல்லை; இஸ்ரவேலின் வீட்டாரே!
மீட்கக்கூடாதபடிக்கு என் கரம் குறுகிற்றோ! அல்ல-
து விடுவிப்பதற்கு என்னிடம் வல்லமையில்லா-
மற்போயிற்றோ? இதோ, என் அதட்டலினாலே நான்
சமுத்திரத்தை வற்றப்பண்ணி, அவைகளின் நதிக-
ளை வெட்டாந்தரையாக்கிப் போடுகிறேன், தண்-
ணீர் வற்றி, அவைகளின் மீன்கள் தாகத்தால் இறப்-
பதினால், அவைகளை நாறப்பண்ணுவேன்.
3 நான் வானங்களுக்குக் காரிருளை உடுத்தி, இரட்-
டை அவற்றின் போர்வையாக்குகிறேன்.
4 இஸ்ரவேல் வீட்டாரே! உனக்குச் சமயத்திற்கேற்ற-
படி, வார்த்தையை எப்படிப் பேசவேண்டும் என்று
நான் அறிவதற்காக, கர்த்தராகிய தேவன் எனக்குக்
கல்விமானின் நாவைக் கொடுத்திருக்கிறார். நீ
களைப்பாய் இருக்கும்போது, அவர் காலைதோறும்
எழுப்புவார். கற்றவர்களைப்போல நான் கேட்கும்-
படி அவர் என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்.
5 கர்த்தராகிய தேவன் என் செவியைத் திறந்தார்.
நான் கலகம் செய்கிறவனாகவும் இல்லை, பின்-
வாங்கவும் இல்லை.
6 நான் அடிக்கிறவனுக்கு என் முதுகையும், முடி-
யைப் பிடுங்குகிறவர்களுக்கு என் கன்னத்தையும்
ஒப்புக்கொடுத்தேன். என் முகத்தை அவமானத்திற்-
கும், உமிழ்நீருக்கும் மறைக்கவில்லை.
7 ஏனெனில் கர்த்தராகிய தேவன் எனக்குச் சகாயம்
பண்ணுவார். ஆகையால் நான் தாறுமாறாக்கப்-
பட்டேன். ஆதலால் நான் என் முகத்தை ஒரு கன்ம-
லையைப்போல ஆக்கினேன். நான் வெட்கப்பட்-
டுப்போவதில்லை என நான் அறிந்திருக்கிறேன்.
8 கர்த்தர் சமீபமாயிருக்கிறார். அவர் என்னை நி-
யாயவானாக்குகிறார். என்னோடு கூடப்போராடுகி-
றவன் யார்? ஒருமித்து நிற்போமாக. எனக்குச் சத்து-
ருவானவன் யார்? அவன் என் அருகாமைக்கு
வரட்டும். என் வாயின் பெலத்தால் அவனை நான்
அடிப்பேன்.

# 2 Nephi 7

Yea, for thus saith the Lord: Have I put thee away, or have I cast thee off forever? For thus saith the Lord: Where is the bill of your mother's divorcement? To whom have I put thee away, or to which of my creditors have I sold you? Yea, to whom have I sold you? Behold, for your iniquities have ye sold yourselves, and for your transgressions is your mother put away.

Wherefore, when I came, there was no man; when I called, yea, there was none to answer. O house of Israel, is my hand shortened at all that it cannot redeem, or have I no power to deliver? Behold, at my rebuke I dry up the sea, I make their rivers a wilderness and their fish to stink because the waters are dried up, and they die because of thirst.

I clothe the heavens with blackness, and I make sackcloth their covering.

The Lord God hath given me the tongue of the learned, that I should know how to speak a word in season unto thee, O house of Israel. When ye are weary he waketh morning by morning. He waketh mine ear to hear as the learned.

The Lord God hath opened mine ear, and I was not rebellious, neither turned away back.

I gave my back to the smiter, and my cheeks to them that plucked off the hair. I hid not my face from shame and spitting.

For the Lord God will help me, therefore shall I not be confounded. Therefore have I set my face like a flint, and I know that I shall not be ashamed.

And the Lord is near, and he justifieth me. Who will contend with me? Let us stand together. Who is mine adversary? Let him come near me, and I will smite him with the strength of my mouth.

9 ஏனெனில், கர்த்தராகிய தேவன் எனக்குத் து-
ணை நிற்பார். என்னை ஆக்கினைக்குள்ளாகத்
தீர்க்கிறவர்கள் எல்லோரும், இதோ அவர்கள்
அனைவரும் வஸ்திரம் போல் பழசாவார்கள்;
பொட்டுப்பூச்சி அவர்களை அரிக்கும்.

For the Lord God will help me. And all they who shall condemn me, behold, all they shall wax old as a garment, and the moth shall eat them up.

10 உங்களில், கர்த்தருக்குப் பயந்து அவரின் ஊழி-
யக்காரனின் சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, ஒளியற்று,
இருளில் நடக்கிறவன் யார்?

Who is among you that feareth the Lord, that obeyeth the voice of his servant, that walketh in darkness and hath no light?

11 இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப் பொ-
றிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும்,
உங்கள் அக்கினி தீபத்தாலும், நீங்கள் மூட்டின
அக்கினிப் பொறிகளிலும் நடவுங்கள். வேதனை-
யில் கிடப்பீர்கள்; என் கரத்தினால் இது உங்களுக்கு
உண்டாகும்.

Behold all ye that kindle fire, that compass yourselves about with sparks, walk in the light of your fire and in the sparks which ye have kindled. This shall ye have of mine hand—ye shall lie down in sorrow.

## 2 நேபி 8

1 நீதியைப் பின்பற்றுகிறவர்களே, நீங்கள் எனக்குச்
செவிகொடுங்கள். நீங்கள் வெட்டியெடுக்கப்பட்ட
பாறையையும், உங்களைத் தோண்டியெடுக்கப்-
பட்ட துரவின் குழியையும் நோக்கிப் பாருங்கள்.

2 உங்கள் தகப்பனாகிய ஆபிரகாமையும், உங்க-
ளைப் பெற்றெடுத்தவளாகிய சாராளையும் நோக்-
கிப்பாருங்கள்; ஏனெனில் அவனைத் தனியே
அழைத்து, அவனை ஆசீர்வதித்தேன்.

3 கர்த்தர் சீயோனைத் தேற்றி, அவளின் பாழான
ஸ்தலங்கள் யாவையும் தேறுதல் அடையச் செய்து,
அவளின் எல்லா வனாந்தரத்தையும் ஏதேனைப்
போலவும், அவளின் பாலைவனத்தைக் கர்த்தரின்
தோட்டத்தைப் போலவும் செய்வார். அதிலே சந்தோ-
ஷமும் மகிழ்ச்சியும், நன்றி செலுத்துதலும், கீதசத்த-
மும் காணப்படும்.

4 என் ஜனமே, எனக்குச் செவிகொடு. என் தேசமே
என் வாக்கைக் கவனி; ஏனெனில் ஒரு நியாயப்பிர-
மாணம் என்னிலிருந்து புறப்படும், என் நியாயத்-
தீர்ப்பு என்னுடைய ஜனத்திற்கு ஒளியாக நிலைக்-
கும்படிச் செய்வேன்.

5 என் நீதி சமீபமாயிருக்கிறது; என் இரட்சிப்பு பு-
றப்பட்டது; என் புயம் ஜனத்தை நியாயந்தீர்க்கும்.
தீவுகள் எனக்காகக் காத்திருந்து, என் புயத்தின் மீ-
து நம்பிக்கை வைத்திருக்கும்.

6 வானத்திற்கு நேராக உங்கள் கண்களை ஏறெ-
டுங்கள்; கீழே பூமியை நோக்கிப்பாருங்கள்; ஏனெ-
னில் வானங்கள் புகையைப்போல மறையும், பூமி
வஸ்திரத்தைப்போல பழசாய்ப்போம், அதில் வாச-
மாயிருப்பவர்களும் அதே விதமாய் மரிப்பார்கள்.
ஆனால் என் இரட்சிப்பு என்றென்றைக்கும் இருக்-
கும். என் நீதி அற்றுப்போவதில்லை.

7 என்னுடைய நியாயப்பிரமாணத்தை இருதயத்தி-
லே நான் எழுதிய ஜனமாயும், நீதியை அறிந்தவர்க-
ளுமானவர்களே, எனக்குச் செவி கொடுங்கள். நீங்-
கள் மனுஷனுடைய நிந்தனைக்குப் பயப்படாம-
லும், அவர்களின் தூஷணத்திற்குக் கலங்காமலும்
இருங்கள்.

8 பொட்டுப் பூச்சி அவர்களை வஸ்திரத்தைப்-
போல அரிக்கும். புழு அவர்களை ஆட்டு மயிரைப்-
போல் தின்னும். ஆனால் என் நீதியோ என்றென்-
றைக்கும் நிலைக்கும். என் இரட்சிப்பு தலைமுறை,
தலைமுறை தோறும் இருக்கும்.

9 விழித்தெழும்பு, விழித்தெழும்பு! கர்த்தரின் புய-
மே, பூர்வ காலத்தில் இருந்ததைப்போல விழித்தெ-
ழுந்து, பெலனைத் தரித்துக்கொள். இராகாபைத்
துண்டித்ததும், வலுசர்ப்பத்தை வதைத்ததும் நீதா-
னல்லவோ?

## 2 Nephi 8

Hearken unto me, ye that follow after righteousness. Look unto the rock from whence ye are hewn, and to the hole of the pit from whence ye are digged.

Look unto Abraham, your father, and unto Sarah, she that bare you; for I called him alone, and blessed him.

For the Lord shall comfort Zion, he will comfort all her waste places; and he will make her wilderness like Eden, and her desert like the garden of the Lord. Joy and gladness shall be found therein, thanksgiving and the voice of melody.

Hearken unto me, my people; and give ear unto me, O my nation; for a law shall proceed from me, and I will make my judgment to rest for a light for the people.

My righteousness is near; my salvation is gone forth, and mine arm shall judge the people. The isles shall wait upon me, and on mine arm shall they trust.

Lift up your eyes to the heavens, and look upon the earth beneath; for the heavens shall vanish away like smoke, and the earth shall wax old like a garment; and they that dwell therein shall die in like manner. But my salvation shall be forever, and my righteousness shall not be abolished.

Hearken unto me, ye that know righteousness, the people in whose heart I have written my law, fear ye not the reproach of men, neither be ye afraid of their revilings.

For the moth shall eat them up like a garment, and the worm shall eat them like wool. But my righteousness shall be forever, and my salvation from generation to generation.

Awake, awake! Put on strength, O arm of the Lord; awake as in the ancient days. Art thou not he that hath cut Rahab, and wounded the dragon?

10 மகா ஆழத்தின் தண்ணீர்களாகிய, சமுத்திரத்தை வற்றப்பண்ணினதும், மீட்கப்பட்டவர்கள் கடக்க சமுத்திரத்தின் ஆழங்களை, வழியாகச் செய்தவரும் நீர்தானல்லவோ?

Art thou not he who hath dried the sea, the waters of the great deep; that hath made the depths of the sea a way for the ransomed to pass over?

11 அப்படியே, கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் பாடிக்கொண்டே சீயோனுக்குத் திரும்பிவருவார்கள்; நித்திய களிப்பும், பரிசுத்தமும் அவர்கள் சிரசின்மீது இருக்கும்; அவர்கள் மகிழ்ச்சியையும், களிப்பையும் பெறுவார்கள்; சஞ்சலமும், தவிப்பும் ஓடிப்போம்.

Therefore, the redeemed of the Lord shall return, and come with singing unto Zion; and everlasting joy and holiness shall be upon their heads; and they shall obtain gladness and joy; sorrow and mourning shall flee away.

12 நானே அவர்; ஆம், உங்களைத் தேற்றுகிறவராய் இருக்கிறேன். இதோ, மரிக்கிற மனுஷனுக்கும், புல்லைப்போல செய்யப்பட்ட மனுபுத்திரனுக்கும் பயப்படுகிறவனாகிய நீ யார்?

I am he; yea, I am he that comforteth you. Behold, who art thou, that thou shouldst be afraid of man, who shall die, and of the son of man, who shall be made like unto grass?

13 பூமிக்கு அஸ்திபாரமிட்டவரும், பரலோகங்களை விரித்தவருமாகிய உன் சிருஷ்டிகராகிய கர்த்தரை மறந்து விட்டீரோ? ஒடுக்குகிறவன் அழிக்க ஆயத்தப்படுவதுபோல அவனின் மூர்க்கத்தினிமித்தம், ஒவ்வொரு நாளும் தொடர்ந்து பயப்பட்டீர்களோ? ஒடுக்குகிறவனின் மூர்க்கம் எங்கே?

And forgettest the Lord thy maker, that hath stretched forth the heavens, and laid the foundations of the earth, and hast feared continually every day, because of the fury of the oppressor, as if he were ready to destroy? And where is the fury of the oppressor?

14 புறம்பே அகற்றப்பட்ட சிறைப்பிடிக்கப்பட்டவன் துரவிலே சாகாதபடிக்கும், தன்னுடைய ஆகாரம் குறைந்து போகாமலிருக்கவும், தான் விடுதலையாகும்படி துரிதப்படுகிறான்.

The captive exile hasteneth, that he may be loosed, and that he should not die in the pit, nor that his bread should fail.

15 அலைகளைக் கொந்தளிக்கச் செய்கிற கர்த்தராகிய தேவன் நானே; சேனைகளின் கர்த்தர் என்பது என் நாமம்.

But I am the Lord thy God, whose waves roared; the Lord of Hosts is my name.

16 பூமியை அஸ்திபாரப்படுத்தவும், பரலோகங்களை நட்டவும், சீயோனை நோக்கி இதோ, நீ என் ஜனம் என்று சொல்லவுமே, உன் வாயிலே நான் என் வார்த்தைகளைப் போட்டு, என் புயத்தின் நிழலினால் உன்னை நான் மறைத்தேன். சீயோனை நோக்கி சொல்கிறேன், நீ என் ஜனம்.

And I have put my words in thy mouth, and have covered thee in the shadow of mine hand, that I may plant the heavens and lay the foundations of the earth, and say unto Zion: Behold, thou art my people.

17 விழித்தெழு, விழித்தெழு, கர்த்தரின் கரத்திலிருந்து அவரின் மூர்க்கத்தின் பாத்திரத்தைக் குடித்த எருசலேமே, எழுந்து நில், நடுங்கச் செய்கிற, பாத்திரத்தின் பிழிந்தெடுத்த வண்டல்களை நீ குடித்து வெறித்தாய்.

Awake, awake, stand up, O Jerusalem, which hast drunk at the hand of the Lord the cup of his fury—thou hast drunken the dregs of the cup of trembling wrung out—

18 அவள் பெற்றெடுத்த எல்லா குமாரரிலும், அவளை வழிநடத்தவும், அவள் வளர்த்த எல்லா குமாரரில் அவளைக் கைக்கொடுத்து அழைப்பார் ஒருவருமில்லை.

And none to guide her among all the sons she hath brought forth; neither that taketh her by the hand, of all the sons she hath brought up.

19 உனக்குச் சம்பவித்த பாழ்க்கடிப்புக்கும், சங்காரத்துக்கும், பஞ்சத்துக்கும், பட்டயத்துக்கும், உனக்காகப் பரிதபிக்கிற, இந்த இரண்டு குமாரர்கள் உன்னிடம் வந்திருக்கின்றனர். யாரைக்கொண்டு உன்னை நான் தேற்றுவேன்?

These two sons are come unto thee, who shall be sorry for thee—thy desolation and destruction, and the famine and the sword—and by whom shall I comfort thee?

20 இவர்கள் இருவரைத்தவிர, உன் குமாரர்கள் மூர்ச்-
சித்து விழுந்தார்கள்; அவர்கள் எல்லா வீதிகளின்
முனையிலும் கிடக்கிறார்கள்; வலையில் அகப்-
பட்ட காட்டு மாட்டைப்போல அவர்கள் கர்த்தரின்
மூர்க்கத்தாலும், உன் தேவனின் அதட்டலாலும் நி-
ரம்பியிருக்கிறார்கள்.

Thy sons have fainted, save these two; they lie at the head of all the streets; as a wild bull in a net, they are full of the fury of the Lord, the rebuke of thy God.

21 ஆனபடியாலும், உபத்திரப்பட்டவளே, திராட்சை-
ரசம் அல்லாமல், குடித்து வெறித்தவளே இப்பொழு-
து இதைக் கேள்:

Therefore hear now this, thou afflicted, and drunken, and not with wine:

22 கர்த்தராகிய உன் ஆண்டவரும், தம்முடைய
ஜனத்திற்காக வழக்காடுகிற உன் தேவனுமானவர்
சொல்லுகிறதாவது: இதோ, என் மூர்க்கத்தின் பாத்-
திரத்தினுடைய வண்டல்களாகிய நடுங்கச்செய்-
கிற, பாத்திரத்தை உன் கரத்திலிருந்து நீக்கிப்போட்-
டேன்; இனி நீ அதை ஒருபோதும் குடிப்பதில்லை.

Thus saith thy Lord, the Lord and thy God pleadeth the cause of his people; behold, I have taken out of thine hand the cup of trembling, the dregs of the cup of my fury; thou shalt no more drink it again.

23 ஆனால் உன் ஆத்துமாவை நோக்கி, நாங்கள்
ஏறிச்செல்லும்படி குனியென்று சொல்லி, ஏறிப்-
போகிறவர்களுக்கு உன் சரீரத்தைத் தரையும், வீதி-
யுமாக்கும்படி, உன்னை உபத்திரவப்படுத்தினவர்-
களின் கையிலே அதைக் கொடுப்பேன், என்றார்.

But I will put it into the hand of them that afflict thee; who have said to thy soul: Bow down, that we may go over—and thou hast laid thy body as the ground and as the street to them that went over.

24 விழித்தெழும்பு, விழித்தெழும்பு, சீயோனே உன்
பெலனைத் தரித்துக்கொள்; பரிசுத்த நகரமாகிய
எருசலேமே, உன் அழகான வஸ்திரங்களை உடுத்-
திக்கொள்; அதனிமித்தம் விருத்த சேதனமில்லாத-
வனும், அசுத்தமானவனும் இனி உன்னிடத்தில்
வரான்.

Awake, awake, put on thy strength, O Zion; put on thy beautiful garments, O Jerusalem, the holy city; for henceforth there shall no more come into thee the uncircumcised and the unclean.

25 தூசியை உன்னிலிருந்து உதறிவிடு; எருசலேமே
எழுந்து கீழே வீற்றிரு; சிறைப்பிடிக்கப்பட்டுப்-
போன, சீயோன் குமாரத்தியே உன் கழுத்தின் கட்-
டுக்களிலிருந்து உன்னையே அவிழ்த்துக்கொள்.

Shake thyself from the dust; arise, sit down, O Jerusalem; loose thyself from the bands of thy neck, O captive daughter of Zion.

## 2 நேபி 9

1 இப்பொழுதும், என் பிரியமான சகோதரரே, கர்த்தர் இஸ்ரவேல் வீட்டார் யாவரோடும் உடன்படிக்கை செய்தார் எனவும்,

2 அவர்கள் மெய்யான திருச்சபையினிடத்திற்கும், தேவனுடைய மந்தையினிடத்திற்கும் திரும்பக் கொண்டுவரப்படும் காலம் வரும்வரைக்கும், அவர் ஆதி முதற்கொண்டு தலைமுறை தலைமுறை தோறும், தமது பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாயினால் யூதர்களிடம் பேசினார் என்றும், அவர்கள் எப்பொழுது தாங்கள் சுதந்தரித்துக் கொண்ட தேசமாகிய வீட்டில் கூட்டிச் சேர்க்கப்பட்டு, அவர்கள் வாக்குத்தத்தத்தின் தேசங்களனைத்திலும் ஸ்தாபிக்கப்படுவார்கள், என்ற அவருடைய உடன்படிக்கைகளை நீங்கள் அறியும்படிக்கு இவைகளை வாசித்தேன்.

3 இதோ, என் பிரியமான சகோதரரே, நீங்கள் களிகூரும்படிக்கும், உங்கள் பிள்ளைகள் மேல் தேவனாகிய கர்த்தர் வருஷிக்கப்பண்ணும் ஆசீர்வாதங்களின் நிமித்தம், நீங்கள் என்றென்றைக்குமாய் உங்கள் தலைகளை உயர்த்தும்படிக்கும் நான் இவைகளை உங்களிடம் பேசுகிறேன்.

4 ஏனெனில், வரவிருப்பவைகளை அறிந்துகொள்ள வேண்டுமென்று, உங்களில் அநேகர், வாஞ்சித்துத் தேடினீர்கள் என்பதை நான் அறிவேன்; ஆகையால் நம்முடைய மாம்சம் அழிந்து, மரித்துப்போம் என்பதை நீங்கள் அறிவீர்கள், என்பதையும் நான் அறிவேன்; இருப்பினும் நம்முடைய சரீரங்களில் இருந்துகொண்டு தேவனைக் காண்போம்.

5 ஆம், நாம் விட்டுவந்த இடமாகிய எருசலேமில் உள்ளவர்களுக்கு, அவர் சரீரத்தில் தம்மைக் காண்பிப்பார் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள், என்பதை நான் அறிவேன்; ஏனெனில், இது அவர்கள் மத்தியில் சம்பவிக்கவேண்டியதாயிருக்கிறது. அந்த மகா சிருஷ்டிகர், தனக்கு மனுஷர் யாவரும் கீழ்ப்படிந்திருக்கும் பொருட்டு, மாம்சத்திலே மனுஷனுக்குக் கீழ்ப்பட்டிருந்து, பாடனுபவித்து சகல மனுஷருக்காகவும் மரிக்க வேண்டியதாயிருக்கிறது.

6 மரணம் எல்லா மனுஷர் மீதும் கடந்து சென்றிருக்கிறபடியால், மாபெரும் சிருஷ்டிகரின் இரக்கத்தின் திட்டத்தை நிறைவேற்ற, உயிர்த்தெழுதலின் வல்லமை தேவையாயிருக்கிறது; வீழ்ச்சியின் நிமித்தமாக மனுஷருக்கு இந்த உயிர்த்தெழுதல் வரவேண்டியது அவசியமாயிருக்கிறது; மீறுதலின் நிமித்தமாக வீழ்ச்சி வந்தது; மனுஷன் வீழ்ச்சியடைந்ததின் காரணமாக, அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து அறுப்புண்டு போனார்கள்.

## 2 Nephi 9

And now, my beloved brethren, I have read these things that ye might know concerning the covenants of the Lord that he has covenanted with all the house of Israel—

That he has spoken unto the Jews, by the mouth of his holy prophets, even from the beginning down, from generation to generation, until the time comes that they shall be restored to the true church and fold of God; when they shall be gathered home to the lands of their inheritance, and shall be established in all their lands of promise.

Behold, my beloved brethren, I speak unto you these things that ye may rejoice, and lift up your heads forever, because of the blessings which the Lord God shall bestow upon your children.

For I know that ye have searched much, many of you, to know of things to come; wherefore I know that ye know that our flesh must waste away and die; nevertheless, in our bodies we shall see God.

Yea, I know that ye know that in the body he shall show himself unto those at Jerusalem, from whence we came; for it is expedient that it should be among them; for it behooveth the great Creator that he suffereth himself to become subject unto man in the flesh, and die for all men, that all men might become subject unto him.

For as death hath passed upon all men, to fulfil the merciful plan of the great Creator, there must needs be a power of resurrection, and the resurrection must needs come unto man by reason of the fall; and the fall came by reason of transgression; and because man became fallen they were cut off from the presence of the Lord.

7 ஆகையால் ஒரு முடிவற்ற பாவநிவர்த்தி தேவையாயிருக்கிறது, முடிவற்ற பிராயச்சித்தமாய் இது இல்லாதிருக்குமெனில், அழிவுள்ளது அழியாமையைத் தரித்துக் கொள்ள முடியாது; ஆகையால் மனுஷன்மேல் வந்த முதல் நியாயத்தீர்ப்பு நித்தியத்திற்கும் நிலைத்திருக்குமே; அது அப்படியாயின் இந்த மாம்சமானது இனி ஒரு போதும் எழுந்திருக்கக்கூடாதபடி, அழுகிப்போய் சிதைந்து போகும்படி, அதன் தாய் பூமியில் வைக்கப்பட வேண்டியதாயிருக்கும்.

Wherefore, it must needs be an infinite atonement—save it should be an infinite atonement this corruption could not put on incorruption. Wherefore, the first judgment which came upon man must needs have remained to an endless duration. And if so, this flesh must have laid down to rot and to crumble to its mother earth, to rise no more.

8 தேவனுடைய ஞானம், இரக்கம், கிருபை எவ்வளவு பெரிதானது! ஏனெனில் இதோ, மாம்சம் ஒரு போதும் எழுந்திருக்காவிடில் இனி எழுந்திருக்கக்கூடாதபடிக்கு, நித்திய தேவனுடைய பிரசன்னத்திலிருந்து வெளியே விழுந்த, பிசாசாக மாறின, அந்த தூதனுக்கு நம் ஆவிகள் கீழ்ப்பட்டிருக்குமே.

O the wisdom of God, his mercy and grace! For behold, if the flesh should rise no more our spirits must become subject to that angel who fell from before the presence of the Eternal God, and became the devil, to rise no more.

9 நம்முடைய ஆவிகள் அவனைப் போன்றதாகி, நாம் பிசாசுகளாய், பிசாசின் தூதர்களாயும் மாறி, நம்முடைய தேவனுடைய பிரசன்னத்தினின்று தடுக்கப்பட்டு, ஆம் நம்முடைய ஆதி பெற்றோர்களை வஞ்சித்தவனும், ஒளியின் தூதனுக்கு நிகராகத் தன்னை உருமாற்றி, கொலையும், மற்ற சகலவிதமான அந்தகார இரகசியக் கிரியைகளையும் செய்கிற, இரகசிய சங்கங்களை மனுபுத்திரர் உருவாக்கும்படி, அவர்களைத் தூண்டுகிற பொய்களின் பிதாவைப்போல, நாமும் துர்ப்பாக்கியத்திலே நிலைத்திருக்க வேண்டியதாகுமே.

And our spirits must have become like unto him, and we become devils, angels to a devil, to be shut out from the presence of our God, and to remain with the father of lies, in misery, like unto himself; yea, to that being who beguiled our first parents, who transformeth himself nigh unto an angel of light, and stirreth up the children of men unto secret combinations of murder and all manner of secret works of darkness.

10 இந்த அஞ்சத்தக்க கொடியவனின் பிடியிலிருந்து, நாம் தப்பித்துக் கொள்ளும் வழியை ஆயத்தம் செய்த தேவனுடைய நன்மை எவ்வளவு மகத்தானதாயிருக்கின்றது; ஆம், மரணமும், பாதாளமும் ஆகிய, கொடியவனை, நான் சரீர மரணம் என்றும், ஆவியின் மரணம் என்றும் அழைக்கிறேன்.

O how great the goodness of our God, who prepareth a way for our escape from the grasp of this awful monster; yea, that monster, death and hell, which I call the death of the body, and also the death of the spirit.

11 இஸ்ரவேலின் பரிசுத்தராகிய நம் தேவனின், விடுதலையாக்கும் வழியின் நிமித்தமாக, நான் சொன்ன இம்மைக்குரியதான, கல்லறையாயிருக்கிற, இந்த மரணம், தன்னிடத்திலுள்ள மரித்தவர்களை விடுதலையாக்கும்.

And because of the way of deliverance of our God, the Holy One of Israel, this death, of which I have spoken, which is the temporal, shall deliver up its dead; which death is the grave.

12 நான் சொன்ன ஆவிக்குரிய மரணமாயிருக்கிற இந்த மரணமும், தன் மரித்தோரை ஒப்புவிக்கும்; இந்த ஆவிக்குரிய மரணம் பாதாளமாயிருக்கிறது; ஆகையால் மரணமும், பாதாளமும் தங்கள் மரித்தோரை ஒப்படைக்க வேண்டும்; பாதாளம் தான் சிறைப்படுத்தின ஆவிகளை ஒப்புவிக்க வேண்டும்; கல்லறைகள் தாங்கள் சிறைப்படுத்தின சரீரங்களை ஒப்புவிக்க வேண்டும்; மனுஷருடைய சரீரங்களும், ஆவிகளும் ஒன்றோடொன்று திரும்பவும் இணைக்கப்படும்; அது இஸ்ரவேலின் பரிசுத்தருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால் சம்பவிக்கும்.

And this death of which I have spoken, which is the spiritual death, shall deliver up its dead; which spiritual death is hell; wherefore, death and hell must deliver up their dead, and hell must deliver up its captive spirits, and the grave must deliver up its captive bodies, and the bodies and the spirits of men will be restored one to the other; and it is by the power of the resurrection of the Holy One of Israel.

13 நம் தேவனின் திட்டம் எவ்வளவு மகத்தானது! மாறாக, தேவனின் பரதீசு, நீதிமான்களுடைய ஆவிகளை ஒப்படைக்க வேண்டும், கல்லறை நீதிமானின் சரீரத்தை ஒப்படைக்க வேண்டும்; ஆவியும், சரீரமும் மறுபடியும் தன்னில் ஒன்றாய் இணைக்கப்படும், மனுஷர் யாவரும் சாவாமையும், அழியாமையும் உடையவர்களாய், நாம் மாம்சத்திலே சம்பூரண ஞானத்தைக் கொண்டிருந்தபடியே, நமது அறிவு பூரணப்பட்டிருக்கும்படிக்கு, அவர்களும் ஜீவிக்கிற, ஆத்துமாக்களாய் இருப்பார்கள்.

O how great the plan of our God! For on the other hand, the paradise of God must deliver up the spirits of the righteous, and the grave deliver up the body of the righteous; and the spirit and the body is restored to itself again, and all men become incorruptible, and immortal, and they are living souls, having a perfect knowledge like unto us in the flesh, save it be that our knowledge shall be perfect.

14 ஆகையால் நாம், நம்முடைய எல்லாக் குற்றங்களையும், நம்முடைய அசுத்தங்களையும், நம்முடைய நிர்வாணத்தையும் குறித்துப் பூரண அறிவுடையவர்களாயிருப்போம்; நீதிமான்கள் பரிசுத்தத்தினாலும், நீதியின் வஸ்திரத்தோடே, உடுத்தப்பட்டு தங்கள் சந்தோஷத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும் பூரண அறிவுடையவர்களாயிருப்பார்கள்.

Wherefore, we shall have a perfect knowledge of all our guilt, and our uncleanness, and our nakedness; and the righteous shall have a perfect knowledge of their enjoyment, and their righteousness, being clothed with purity, yea, even with the robe of righteousness.

15 ஆனபடியால், எல்லா மனுஷர்களும் இந்த முதலாம் மரணத்தைக் கடந்து ஜீவனுக்குள்ளாக வருகிறபொழுது, அவர்கள் அழியாமை உள்ளவர்களாயிருக்கிற அளவில், இஸ்ரவேலின் பரிசுத்தரின் நியாயாசனத்திற்கு முன்பாக அவர்கள் தோன்றவேண்டும்; நியாயத்தீர்ப்பு அதன் பின்னர் வருகிறது. அதன் பின்னர் அவர்கள் தேவனுடைய பரிசுத்த நியாயத்தீர்ப்பின்படியே நியாயம் விசாரிக்கப்பட வேண்டும்.

And it shall come to pass that when all men shall have passed from this first death unto life, insomuch as they have become immortal, they must appear before the judgment-seat of the Holy One of Israel; and then cometh the judgment, and then must they be judged according to the holy judgment of God.

16 நீதிமான்கள் இன்னும் நீதிமான்களாயும், அசுசியாய் உள்ளவர்கள் இன்னும் அசுசி உள்ளவர்களாயும் இருப்பார்கள் என்பது ஒருபோதும் ஒழிந்துபோகாத அவருடைய என்றுமுள்ள வார்த்தையாய் இருக்கிறது. நிச்சயமாகவே கர்த்தர் ஜீவிக்கிறபடியாலே, கர்த்தராகிய தேவன் அதைச் சொல்லியிருக்கிறார். ஆதலால், அசுசியாய் உள்ளவர்கள் பிசாசும் அவன் தூதர்களுமே; அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்ட நித்திய அக்கினிக்குள் அவர்கள் போவார்கள்; அவர்களின் வேதனை, நெருப்பும், கந்தகமும் எரிகிற ஏரியைப்போல இருக்கும், அதனுடைய ஜூவாலைகள் முடிவில்லாமல் என்றென்றைக்குமாய் எழும்பிக் கொண்டிருக்கிறது.

And assuredly, as the Lord liveth, for the Lord God hath spoken it, and it is his eternal word, which cannot pass away, that they who are righteous shall be righteous still, and they who are filthy shall be filthy still; wherefore, they who are filthy are the devil and his angels; and they shall go away into everlasting fire, prepared for them; and their torment is as a lake of fire and brimstone, whose flame ascendeth up forever and ever and has no end.

17 நம்முடைய தேவனின் மகத்துவமும், நியாயமும், எப்படிப்பட்டவையாயிருக்கின்றன; ஏனெனில் அவர் தம்முடைய வார்த்தைகள் அனைத்தையும் நிறைவேற்றுகிறார்; அவைகள் அவருடைய வாயிலிருந்து புறப்பட்டன; அவருடைய நியாயப்பிரமாணங்கள் நிறைவேற்றப்படவேண்டும்.

O the greatness and the justice of our God! For he executeth all his words, and they have gone forth out of his mouth, and his law must be fulfilled.

18 ஆனாலும் இதோ, இஸ்ரவேலின் பரிசுத்தரின் நீதிமான்களும், பரிசுத்தவான்களும், இஸ்ரவேலின் பரிசுத்தரில் விசுவாசித்தவர்களும், உலகத்தின் சிலுவைகளைச் சகித்தவர்களும், அதன் அவமானத்தைப் பொறுத்தவர்களும், அவர்களுக்காக உலக அஸ்திபாரம் முதல் ஆயத்தம்பண்ணப்பட்ட தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பார்கள். அவர்களின் சந்தோஷம் என்றென்றும் பூரணமானதாயிருக்கும்.

But, behold, the righteous, the saints of the Holy One of Israel, they who have believed in the Holy One of Israel, they who have endured the crosses of the world, and despised the shame of it, they shall inherit the kingdom of God, which was prepared for them from the foundation of the world, and their joy shall be full forever.

19 இஸ்ரவேலின் பரிசுத்தராகிய நம் தேவனுடைய இரக்கம், எவ்வளவு மகத்துவம் பொருந்தியதாயிருக்கிறது. அவர் தம்முடைய பரிசுத்தவான்களை அஞ்சத்தக்க கொடியவனாகிய பிசாசிடமிருந்தும், மரணத்திலிருந்தும், பாதாளத்திலிருந்தும், முடிவில்லாத வேதனையாகிய அக்கினியும், கந்தகமும் எரிகிற ஏரியிலிருந்தும் விடுவிக்கிறார்.

O the greatness of the mercy of our God, the Holy One of Israel! For he delivereth his saints from that awful monster the devil, and death, and hell, and that lake of fire and brimstone, which is endless torment.

20 நம்முடைய தேவனின் பரிசுத்தம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது; ஏனெனில் அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார்; அவர் அறிந்திராத காரியம் எதுவுமில்லை.

O how great the holiness of our God! For he knoweth all things, and there is not anything save he knows it.

21 மனுஷர் யாவரும் தம்முடைய சத்தத்திற்குச் செவி கொடுப்பார்களெனில், அவர்களை இரட்சிக்கும்படியாகவே அவர் உலகத்திற்கு வருகிறார்; இதோ, அவர் எல்லா மனுஷருடைய வேதனைகளையும், ஆம் ஆதாமின் குடும்பத்தைச் சேர்ந்த ஒவ்வொரு ஜீவராசியின் வேதனைகளையும், புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகளுமான அனைவருடைய வேதனைகளையும் தாங்கியிருக்கிறார்.

And he cometh into the world that he may save all men if they will hearken unto his voice; for behold, he suffereth the pains of all men, yea, the pains of every living creature, both men, women, and children, who belong to the family of Adam.

22 எல்லா மனுஷரும் உயிர்த்தெழுதலை அடையவும், பெரிதான அந்த நியாயத்தீர்ப்பின் நாளிலே யாவரும் அவருக்கு முன்பாக நிற்கும்படியாகவும், அவர் இந்தப் பாடனுபவிக்கிறார்.

And he suffereth this that the resurrection might pass upon all men, that all might stand before him at the great and judgment day.

23 எல்லா மனுஷரும் மனந்திரும்பி, இஸ்ரவேலின் பரிசுத்தரின் மேல் பூரணவிசுவாசம் உடையவர்களாய், அவர் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இரட்சிக்கப்பட முடியாது என்றும், அவர் கட்டளை பிறப்பிக்கிறார்.

And he commandeth all men that they must repent, and be baptized in his name, having perfect faith in the Holy One of Israel, or they cannot be saved in the kingdom of God.

24 அவர்கள் மனந்திரும்பாமல், அவருடைய நாமத்தை விசுவாசியாமல், அவருடைய நாமத்தினால் ஞானஸ்நானம் பெறாமல், முடிவு பரியந்தயம் நிலை நிற்காவிடில், அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்; ஏனெனில் இஸ்ரவேலின் பரிசுத்தரான, கர்த்தராகிய தேவன், இதை உரைத்திருக்கிறார்.

And if they will not repent and believe in his name, and be baptized in his name, and endure to the end, they must be damned; for the Lord God, the Holy One of Israel, has spoken it.

25 ஆகையால் அவர் ஒரு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்திருக்கிறார்; எங்கே நியாயப்பிரமாணம் கொடுக்கப்படவில்லையோ அங்கே தண்டனையில்லை; தண்டனை எங்கில்லையோ அங்கே ஆக்கினைத் தீர்ப்பில்லை; ஆக்கினைத்தீர்ப்பு எங்கில்லையோ, அங்கே பாவநிவர்த்தியினிமித்தம், இஸ்ரவேலின் பரிசுத்தரின் இரக்கங்கள் அவர்கள் மேல் உரிமை பெறுகின்றன; ஏனெனில் அவர்கள், அவருடைய வல்லமையினால் விடுவிக்கப்படுகிறார்கள்.

Wherefore, he has given a law; and where there is no law given there is no punishment; and where there is no punishment there is no condemnation; and where there is no condemnation the mercies of the Holy One of Israel have claim upon them, because of the atonement; for they are delivered by the power of him.

26 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாத யாவர்மீதும், அவருடைய நீதியின் கோரிக்கைகளை பாவநிவர்த்தி பூர்த்தியாக்கி, அவர்களை மரணமும் பாதாளமுமாகிய கொடியவனிடத்திலிருந்தும், பிசாசினிடத்திலிருந்தும், நித்திய வேதனையாகிய அக்கினியும், கந்தகக்கடலிலுமிருந்தும் தப்புவிக்கிறது. அவர்கள் தங்களுக்குப் பிராணனைக் கொடுத்த தேவனாகிய, இஸ்ரவேலின் பரிசுத்தரிடத்தில் திருப்பிச் சேர்க்கப்படுவார்கள்.

For the atonement satisfieth the demands of his justice upon all those who have not the law given to them, that they are delivered from that awful monster, death and hell, and the devil, and the lake of fire and brimstone, which is endless torment; and they are restored to that God who gave them breath, which is the Holy One of Israel.

27 ஆனாலும் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டு, நம்மைப்போல தேவனுடைய கட்டளைகள் எல்லாவற்றையும் உடையவனாய் இருந்தும், அவைகளை மீறி, தன் சோதனைக் காலத்தை வீணாக்கிப் போடுகிறவனுக்கு ஐயோ! அவனுடைய நிலைமை பயங்கரமானதாயிருக்கும்.

But wo unto him that has the law given, yea, that has all the commandments of God, like unto us, and that transgresseth them, and that wasteth the days of his probation, for awful is his state!

28 அதுவே அந்தத் தீயவனுடைய வஞ்சனையான திட்டம்! மனுஷனுடைய வீணான, பெலனற்ற, மதியீனம்! மனுஷர் கல்விமான்களாய் இருக்கும்போது, தங்களை ஞானமுள்ளவர்கள் என எண்ணி, தாங்களே எல்லாவற்றையும் அறிந்தவர்கள் என நினைத்து, தேவனுடைய ஆலோசனைக்குச் செவி கொடாமல், அதைப் புறம்பே தள்ளி வைக்கிறார்கள்; ஆகையால் அவர்கள் ஞானம் மதியீனமாயிருக்கிறது; அது அவர்களுக்குப் பிரயோஜனமாயிராது; அவர்கள் கெட்டுப் போவார்கள்.

O that cunning plan of the evil one! O the vainness, and the frailties, and the foolishness of men! When they are learned they think they are wise, and they hearken not unto the counsel of God, for they set it aside, supposing they know of themselves, wherefore, their wisdom is foolishness and it profiteth them not. And they shall perish.

29 ஆனாலும் அவர்கள் தேவனுடைய ஆலோசனைகளுக்குச் செவி கொடுப்பார்களெனில் அவர்கள் கற்றது நன்மை பயக்கும்.

But to be learned is good if they hearken unto the counsels of God.

30 ஆனாலும் உலகப் பிரகாரமாய்ச் செல்வமுடையவர்களாயிருக்கிற, ஐஸ்வரியவான்களுக்கு ஐயோ! ஏனெனில் அவர்கள் ஐஸ்வரியவான்களாயிருப்பதின் நிமித்தம், தரித்திரரை அலட்சியம் பண்ணி, சாந்தகுணமுள்ளவர்களை துன்பப்படுத்துகிறார்கள்; அவர்கள் இருதயம் அவர்கள் பொக்கிஷங்களின் மேலிருக்கிறது; ஆகையால் அவர்களது பொக்கிஷம் அவர்களின் தேவனாயிருக்கிறது; இதோ, அவர்களது பொக்கிஷம் அவர்களோடேகூட அழியும்.

But wo unto the rich, who are rich as to the things of the world. For because they are rich they despise the poor, and they persecute the meek, and their hearts are upon their treasures; wherefore, their treasure is their god. And behold, their treasure shall perish with them also.

31 கேட்கக்கூடாத செவிடர்களுக்கு ஐயோ! ஏனெனில் அவர்கள் அழிந்துபோவார்கள்.

And wo unto the deaf that will not hear; for they shall perish.

32 பார்க்கக்கூடாத குருடர்களுக்கு ஐயோ! ஏனெனில் அவர்களும் அழிவார்கள்.

33 இருதயத்தில் விருத்தசேதனம் இல்லாதவர்களுக்கு ஐயோ! ஏனெனில் அவர்களின் அநீதியைப்பற்றிய அறிவு அவர்களை கடைசி நாளில் அடிக்கும்.

34 பொய்யனுக்கு ஐயோ! ஏனெனில் அவன் நரகத்திற்குள்ளாகத் தள்ளப்படுவான்.

35 வேண்டுமென்றே கொலை செய்கிற கொலைபாதகனுக்கு ஐயோ! அவன் மரிப்பான்.

36 வேசித்தனங்களைச் செய்கிறவர்களுக்கு ஐயோ! ஏனெனில் அவர்கள் நரகத்தினுள்ளாகத் தள்ளப்படுவார்கள்.

37 ஆம், விக்கிரகங்களை ஆராதிப்பவர்களுக்கு ஐயோ! எல்லா பிசாசுகளின் பிசாசானவன் அவர்கள் மீது மகிழ்ச்சி கொள்கிறான்.

38 இறுதியாக, தங்கள் பாவங்களில் மரிப்பவர்கள் அனைவருக்கும் ஐயோ! ஏனெனில் அவர்கள் தேவனிடத்திற்குத் திரும்பி, அவருடைய முகத்தைக் கண்டு, தங்கள் பாவங்களில் நிலைத்திருப்பார்கள்.

39 என் பிரியமான சகோதரரே, பரிசுத்த தேவனுக்கு விரோதமாய் மீறுதலின் பயங்கரத்தையும், அந்த வஞ்சிக்கிறவனுடைய நயப்படுத்தல்களுக்கு இணங்குவதினுடைய பயங்கரத்தையும் நினைவுகூருங்கள். மாம்ச சிந்தை மரணம் என்பதையும் ஆவியின் சிந்தை நித்திய ஜீவன் என்பதையும் நினைவு கூருங்கள்.

40 என் பிரியமான சகோதரரே, என் வார்த்தைகளுக்குச் செவி கொடுங்கள். இஸ்ரவேலின் பரிசுத்தரின் மகத்துவத்தை நினைவு கூருங்கள். நான் உங்களுக்கு எதிராகக் கடினமான வார்த்தைகளைப் பேசினேன் என்று சொல்லாதிருங்கள்; அப்படிச் செய்தால் நீங்கள் சத்தியத்திற்கு எதிராக நிந்தனை செய்வீர்கள்; ஏனெனில் நான் உங்கள் சிருஷ்டிகரின் வார்த்தைகளைப் பேசினேன். சத்தியத்தின் வார்த்தைகள் அசுத்தமான அனைத்துக்கும் எதிராகக் கடினமாயிருக்கிறதென்பதை நான் அறிவேன்; ஆனால் நீதிமான்கள் அவைகளுக்குப் பயப்படுவதில்லை; ஏனெனில் அவர்கள் சத்தியத்தை நேசித்து, அசைக்கப்படாமல் இருக்கிறார்கள்.

Wo unto the blind that will not see; for they shall perish also.

Wo unto the uncircumcised of heart, for a knowledge of their iniquities shall smite them at the last day.

Wo unto the liar, for he shall be thrust down to hell.

Wo unto the murderer who deliberately killeth, for he shall die.

Wo unto them who commit whoredoms, for they shall be thrust down to hell.

Yea, wo unto those that worship idols, for the devil of all devils delighteth in them.

And, in fine, wo unto all those who die in their sins; for they shall return to God, and behold his face, and remain in their sins.

O, my beloved brethren, remember the awfulness in transgressing against that Holy God, and also the awfulness of yielding to the enticings of that cunning one. Remember, to be carnally-minded is death, and to be spiritually-minded is life eternal.

O, my beloved brethren, give ear to my words. Remember the greatness of the Holy One of Israel. Do not say that I have spoken hard things against you; for if ye do, ye will revile against the truth; for I have spoken the words of your Maker. I know that the words of truth are hard against all uncleanness; but the righteous fear them not, for they love the truth and are not shaken.

41 இன்னும் என் பிரியமான சகோதரரே, பரிசுத்தராகிய கர்த்தரிடம் வாருங்கள்; அவருடைய பாதைகள் நீதியுள்ளவைகளாயிருக்கின்றன என்பதை நினைவு கூருங்கள்; இதோ, மனுஷருக்கான வழியோ இடுக்கமாயிருக்கிறது; ஆனால் அது அவருக்கு முன்பாக நேரான மார்க்கமாயிருக்கிறது; அதின் வாசல் காவல்காரர் இஸ்ரவேலின் பரிசுத்தராயிருக்கிறார்; அவர் எந்த வேலைக்காரனையும் அங்கு வேலைக்கு வைப்பதில்லை; இந்த வாசலைத் தவிர அங்கே வேறெந்த வழியுமில்லை; அவர் ஏமாற்றப்பட முடியாது; ஏனெனில் தேவனாகிய கர்த்தர் என்பது அவருடைய நாமமாயிருக்கிறது.

O then, my beloved brethren, come unto the Lord, the Holy One. Remember that his paths are righteous. Behold, the way for man is narrow, but it lieth in a straight course before him, and the keeper of the gate is the Holy One of Israel; and he employeth no servant there; and there is none other way save it be by the gate; for he cannot be deceived, for the Lord God is his name.

42 தட்டுகிறவன் எவனுக்கும் அவர் திறக்கிறார்; ஆம், தங்கள் கல்வியினிமித்தமும், தங்கள் ஞானத்தினிமித்தமும், தங்கள் செல்வங்களினிமித்தமும் இறுமாப்பாயிருக்கும் ஞானிகளையும், கல்விமான்களையும், செல்வந்தர்களையுமே அவர் தவிர்க்கிறார்; அவர்கள் இவைகளை எறிந்து போட்டு, தேவனுக்கு முன்பாகத் தங்களை மதியீனரென்று எண்ணி, தாழ்மையின் ஆழங்களில் வந்தாலொழிய, அவர்களுக்கு அவர் திறக்கமாட்டார்.

And whoso knocketh, to him will he open; and the wise, and the learned, and they that are rich, who are puffed up because of their learning, and their wisdom, and their riches—yea, they are they whom he despiseth; and save they shall cast these things away, and consider themselves fools before God, and come down in the depths of humility, he will not open unto them.

43 ஆனால் பரிசுத்தவான்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டுள்ள மகிழ்ச்சி, ஆம், ஞானவான்கள் மற்றும் விவேகிகளுக்குரியவைகளான அவை, அவர்களிடமிருந்து என்றென்றைக்குமாய் மறைக்கப்படும்.

But the things of the wise and the prudent shall be hid from them forever—yea, that happiness which is prepared for the saints.

44 என் பிரியமான சகோதரரே, என் வார்த்தைகளை நினைவுகூருங்கள், இதோ, நான் என் வஸ்திரங்களைக் களைந்து, அவைகளை உங்களுக்கு முன்பாக உதறிப்போடுகிறேன்; அவர் தம்முடைய சகலத்தையும் ஆராய்ந்து பார்க்கும் கண்ணினால் அவர் என்னைப் பார்வையிடும்படி என் இரட்சிப்பின் தேவனை வேண்டிக்கொள்கிறேன்; ஆகையால் கடைசி நாளில், மனுஷருடைய கிரியைகளின்படி அவர்களை நியாயந்தீர்க்கும்பொழுது, உங்களுடைய அக்கிரமங்களை என்னுடைய ஆத்துமாவிலிருந்து உதறிப் போட்டேன் என்பதற்கு இஸ்ரவேலின் தேவன் சாட்சி கொடுப்பார் என்றும், உங்கள் இரத்தத்திற்கு விலகினவனாய் நான் அவர் முன்பாக பிரகாசத்தோடு நிற்பேன் என்றும் நீங்கள் அறிவீர்கள்.

O, my beloved brethren, remember my words. Behold, I take off my garments, and I shake them before you; I pray the God of my salvation that he view me with his all-searching eye; wherefore, ye shall know at the last day, when all men shall be judged of their works, that the God of Israel did witness that I shook your iniquities from my soul, and that I stand with brightness before him, and am rid of your blood.

45 என் பிரியமான சகோதரரே, உங்கள் பாவங்களிலிருந்து திரும்புங்கள்; உங்களை இறுக்கமாய்க் கட்டிப்போடுகிறவனுடைய சங்கிலிகளை உதறித் தள்ளுங்கள்; உங்கள் இரட்சிப்பின் கன்மலையாயிருக்கிற தேவனிடத்திற்கு வாருங்கள்.

O, my beloved brethren, turn away from your sins; shake off the chains of him that would bind you fast; come unto that God who is the rock of your salvation.

46 நீதிமான்களுக்கு நியாயம் வழங்கப்படும் அந்த மகிமையான நாளாகிய, நியாய விசாரிப்பின் நாளிலே, கடும் பயத்தினாலே நீங்கள் பின்வாங்காதபடிக்கும், உங்களுடைய குற்றங்களை பூரணமாய் நினைவு கூராமலும், சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரே, உம்முடைய நியாயத் தீர்ப்புகள் பரிசுத்தமானவைகள், பரிசுத்தமானவைகள்; நான் என் குற்றத்தை அறிவேன்; உம்முடைய நியாயப் பிரமாணத்தை நான் மீறினேன்; மீறுதல்கள் என்னுடையவைகளே; பிசாசு, அவனுடைய பயங்கரமான துர்ப்பாக்கியத்திற்கு நான் இரையாகும்படி என்னைப் பிடித்துக்கொண்டான், என்று ஓலமிட்டு நெருக்கப்படாதபடிக்கும், உங்கள் ஆத்துமாக்களை ஆயத்தமாக்குங்கள்.

Prepare your souls for that glorious day when justice shall be administered unto the righteous, even the day of judgment, that ye may not shrink with awful fear; that ye may not remember your awful guilt in perfectness, and be constrained to exclaim: Holy, holy are thy judgments, O Lord God Almighty—but I know my guilt; I transgressed thy law, and my transgressions are mine; and the devil hath obtained me, that I am a prey to his awful misery.

47 ஆனாலும் இதோ, என் சகோதரரே, இவைகளின் பயங்கரமான நிஜ நிலைக்கு உங்களை நான் விழித்தெழும்பச் செய்ய வேண்டியது அவசியமாயிருக்கிறதா? உங்கள் மனங்கள் பரிசுத்தமாயிருந்தால் நான் உங்கள் ஆத்துமாக்களை துன்பப்படுத்துவேனோ? நீங்கள் பாவத்தினின்று விடுவிக்கப்பட்டிருந்தால், சத்தியத்தின் தெளிவின்படியே நான் உங்களிடம் தெளிவாய் இருப்பேனோ?

But behold, my brethren, is it expedient that I should awake you to an awful reality of these things? Would I harrow up your souls if your minds were pure? Would I be plain unto you according to the plainness of the truth if ye were freed from sin?

48 இதோ, நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தால் நான் உங்களிடம் பரிசுத்தத்தைக் குறித்துப் பேசுவேன்; ஆனால் நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாயில்லாமல் என்னை ஒரு ஆசிரியனாகப் பார்க்கிறபடியால், பாவத்தின் விளைவுகளைக் குறித்தும் உங்களுக்கு நான் போதிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

Behold, if ye were holy I would speak unto you of holiness; but as ye are not holy, and ye look upon me as a teacher, it must needs be expedient that I teach you the consequences of sin.

49 இதோ, என் ஆத்துமா பாவத்தை வெறுக்கிறது, என் இருதயம் நீதியில் களிகூருகிறது; என் தேவனின் பரிசுத்த நாமத்தைத் துதிப்பேன்.

Behold, my soul abhorreth sin, and my heart delighteth in righteousness; and I will praise the holy name of my God.

50 என் சகோதரரே, தாகமாயிருக்கிற யாவரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவனே, நீ வந்து வாங்கிச் சாப்பிடு; ஆம், நீ வந்து பணமுமின்றி, விலையுமின்றித் திராட்சைரசமும், பாலும் வாங்கிக்கொள்.

Come, my brethren, every one that thirsteth, come ye to the waters; and he that hath no money, come buy and eat; yea, come buy wine and milk without money and without price.

51 ஆகையால் நீங்கள் மதிப்பற்றதிற்காக உங்கள் பணத்தையும், திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும், செலவழிக்க வேண்டாம்; நீங்கள் எனக்குக் கருத்தாய்ச் செவி கொடுத்து, நான் சொன்ன வார்த்தைகளை நினைவு கூருங்கள்; நீங்கள் இஸ்ரவேலின் பரிசுத்தரிடம் வந்து, கெட்டுப் போகாததும் அழிக்கமுடியாததுமானதை ருசித்துப் பாருங்கள்; உங்கள் ஆத்துமா கொழுப்பானதில் களிகூர்வதாக.

Wherefore, do not spend money for that which is of no worth, nor your labor for that which cannot satisfy. Hearken diligently unto me, and remember the words which I have spoken; and come unto the Holy One of Israel, and feast upon that which perisheth not, neither can be corrupted, and let your soul delight in fatness.

52 இதோ, என் பிரியமான சகோதரரே, உங்கள் தே-
வனின் வார்த்தைகளை நினைவுகூருங்கள்; பக-
லிலே அவரிடத்தில் இடைவிடாமல் ஜெபியுங்கள்;
இரவிலே அவருடைய பரிசுத்த நாமத்திற்கு நன்றி
செலுத்துங்கள்; உங்கள் உள்ளங்கள் களிகூர்வ-
தாக.

Behold, my beloved brethren, remember the words of your God; pray unto him continually by day, and give thanks unto his holy name by night. Let your hearts rejoice.

53 இதோ, கர்த்தருடைய உடன்படிக்கைகள் எவ்வ-
ளவு மகத்துவமானது; மனுபுத்திரரிடம் அவரு-
டைய இரக்கங்கள் - எவ்வளவு மகத்துவமானது;
அவருடைய மகத்துவம், கிருபை மற்றும் இரக்கங்-
களின் நிமித்தம், நம்முடைய சந்ததி, மாம்சத்தின்பி-
ரகாரமாய் முழுவதுமாக அழிக்கப்படாது என்றும்,
அவர்களைக் காப்பாற்றுவார் என்றும், வரும்
தலைமுறைகளில் அவர்கள் இஸ்ரவேல் வீட்டா-
ருக்கு ஒரு நீதியுள்ள கிளையாவார்கள் என்றும்,
வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

And behold how great the covenants of the Lord, and how great his condescensions unto the children of men; and because of his greatness, and his grace and mercy, he has promised unto us that our seed shall not utterly be destroyed, according to the flesh, but that he would preserve them; and in future generations they shall become a righteous branch unto the house of Israel.

54 இப்பொழுதும் என் சகோதரரே, நான் உங்களிடம்
மேலும் அதிகம் பேசுவேன்; ஆனால் நாளைய தி-
னத்திலே என்னுடைய வார்த்தைகளில் மீதியான-
வற்றை அறிவிப்பேன். ஆமென்.

And now, my brethren, I would speak unto you more; but on the morrow I will declare unto you the remainder of my words. Amen.

## 2 நேபி 10

1 இப்பொழுது, என் பிரியமான சகோதரரே, யாக்கோ-
பாகிய நான் பேசின இந்த நீதியுள்ள கிளையைக்
குறித்து மறுபடியும் பேசுகிறேன்.

2 ஏனெனில் இதோ, நாம் பெற்ற வாக்குத்தத்தங்கள்,
மாம்சத்தின்பிரகாரமாய் நமக்குச் செய்யப்பட்ட
வாக்குத்தத்தங்களாய் இருக்கின்றன; ஆதலால்,
அவிசுவாசத்தின் நிமித்தம், நம்முடைய அநேக
பிள்ளைகள் மாம்சத்திலே அழிவார்கள் என்பது
எனக்குக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், தே-
வன் அநேகருக்கு இரக்கமுள்ளவராய் இருப்பார்;
நம்முடைய பிள்ளைகள் தங்களின் மீட்பரைப்பற்-
றிய மெய்யான ஞானத்தைக் கொடுக்கிற அதனு-
டன் திருப்பச் சேர்க்கப்படுவார்கள்.

3 ஆகவே, இது அவருடைய நாமமாக இருக்க
வேண்டும் என தூதன் நேற்று இரவு என்னிடத்தில்
பேசினபடியால், கிறிஸ்து, யூதர்களுக்குள்ளே, உல-
கத்தின் அதிக துன்மார்க்கமான பகுதியாக இருக்கி-
றவர்கள் மத்தியில் வர வேண்டும், அவர்கள் அவ-
ரை சிலுவையிலறைவார்கள், ஏனெனில் இது நம-
து தேவனுக்கு நீதியாயிருப்பதால், தங்கள் தே-
வனையே சிலுவையிலறைகிற, பூமியின் வேறு
எந்த தேசமும் இல்லை என நான் உங்களுக்குச்
சொன்னது போலவே, இது அவசியமாயிருக்கிறது.

4 வல்லமையான அற்புதங்கள் மற்ற தேசத்தார் மத்-
தியில் நடக்குமெனில், அவர்கள் மனந்திரும்பி
அவரே தங்களின் தேவன் என்று அறிந்திருப்பார்-
கள்.

5 ஆனால், ஆசாரியவஞ்சகத்தாலும், அக்கிரமங்க-
ளினாலும் எருசலேமில் உள்ளவர்கள், அவர் சிலு-
வையில் அறையப்படும்படிக்கு, அவருக்கு விரோ-
தமாய்த் தங்களின் கழுத்துக்களைக் கடினமாக்கி-
னார்கள்.

6 ஆதலால், அவர்களின் அக்கிரமங்களினிமித்தம்,
அழிவுகள், பஞ்சங்கள், கொடிய நோய்கள், இரத்-
தஞ்சிந்துதல் ஆகியவை அவர்கள் மீது வரும்;
அழிக்கப்படாதவர்கள் எல்லா தேசங்களுக்கும் சித-
றடிக்கப்படுவார்கள்.

7 ஆனால் இதோ, கர்த்தராகிய தேவன் சொல்வதா-
வது; நான் கிறிஸ்து என்று அவர்கள் என்னில் வி-
சுவாசிக்கும் நாள் வரும்போது, பூமியின் மீதுள்ள,
அவர்கள் சுதந்தரித்த தேசங்களிலே மாம்சத்தில்
அவர்கள் திரும்பச் சேர்க்கப்படுவார்கள் என்று,
அவர்களின் பிதாக்களுடன் நான் உடன்படிக்கை
செய்தேன்.

## 2 Nephi 10

And now I, Jacob, speak unto you again, my beloved brethren, concerning this righteous branch of which I have spoken.

For behold, the promises which we have obtained are promises unto us according to the flesh; wherefore, as it has been shown unto me that many of our children shall perish in the flesh because of unbelief, nevertheless, God will be merciful unto many; and our children shall be restored, that they may come to that which will give them the true knowledge of their Redeemer.

Wherefore, as I said unto you, it must needs be expedient that Christ—for in the last night the angel spake unto me that this should be his name—should come among the Jews, among those who are the more wicked part of the world; and they shall crucify him—for thus it behooveth our God, and there is none other nation on earth that would crucify their God.

For should the mighty miracles be wrought among other nations they would repent, and know that he be their God.

But because of priestcrafts and iniquities, they at Jerusalem will stiffen their necks against him, that he be crucified.

Wherefore, because of their iniquities, destructions, famines, pestilences, and bloodshed shall come upon them; and they who shall not be destroyed shall be scattered among all nations.

But behold, thus saith the Lord God: When the day cometh that they shall believe in me, that I am Christ, then have I covenanted with their fathers that they shall be restored in the flesh, upon the earth, unto the lands of their inheritance.

8 நீண்ட சிதறலிலிருந்தும், சமுத்திரத்தின் தீவுகளிலிருந்தும், பூமியின் நான்கு பகுதிகளிலிருந்தும் அவர்கள் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்; அவர்களைத் தங்களின் சுதந்திர தேசங்களுக்குக் கொண்டு செல்லுவதில், புறஜாதியாரின் தேசங்கள் என்னுடைய கண்களில் மகத்துவம் பொருந்தியவைகளாக இருக்கும், என்று தேவன் சொல்கிறார்.

And it shall come to pass that they shall be gathered in from their long dispersion, from the isles of the sea, and from the four parts of the earth; and the nations of the Gentiles shall be great in the eyes of me, saith God, in carrying them forth to the lands of their inheritance.

9 ஆம், புறஜாதியாரின் ராஜாக்கள், அவர்களை போஷிக்கும் தகப்பன்களாகவும், அவர்களின் இராணிகள், தாபரிக்கிற தாய்மார்களாகவும் இருப்பார்கள். ஆதலால் புறஜாதியாருக்குக் கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் மகத்துவமானதாய் இருக்கிறது. ஏனெனில் அவர் சொல்கிறதை, யார் தர்க்கம் பண்ணமுடியும்?

Yea, the kings of the Gentiles shall be nursing fathers unto them, and their queens shall become nursing mothers; wherefore, the promises of the Lord are great unto the Gentiles, for he hath spoken it, and who can dispute?

10 ஆனால், இதோ, இந்த தேசம் உங்களின் சுதந்திர தேசமாகவும், புறஜாதியார் இந்த தேசத்தின் மீது ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயும் இருப்பார்கள் என்று தேவன் சொன்னார்.

But behold, this land, said God, shall be a land of thine inheritance, and the Gentiles shall be blessed upon the land.

11 இந்த தேசம் புறஜாதியாருக்கு சுதந்திரத்தின் தேசமாக இருக்கும். மேலும், இந்த தேசத்தின் மேல் புறஜாதியாரை மேற்கொள்ள, ராஜாக்களே இருக்கமாட்டார்கள்.

And this land shall be a land of liberty unto the Gentiles, and there shall be no kings upon the land, who shall raise up unto the Gentiles.

12 மற்ற எல்லா தேசங்களுக்கும் விரோதமாய் இந்த தேசத்தை நான் பலப்படுத்துவேன்.

And I will fortify this land against all other nations.

13 சீயோனுக்கு விரோதமாய் யுத்தம் செய்கிறவன் அழிவான், என்று தேவன் சொல்கிறார்.

And he that fighteth against Zion shall perish, saith God.

14 ஏனெனில் எனக்கு விரோதமாய் ஒரு ராஜாவை எழுப்புகிறவன் அழிவான். ஏனெனில் பரலோகங்களின் ராஜாவாகிய, கர்த்தராகிய நானே, அவர்களின் ராஜாவாக இருப்பேன். என்னுடைய வார்த்தைகளைக் கேட்கிறவர்களுக்கு, நான் என்றென்றைக்கும் ஒளியாய் இருப்பேன்.

For he that raiseth up a king against me shall perish, for I, the Lord, the king of heaven, will be their king, and I will be a light unto them forever, that hear my words.

15 ஆதலால், இந்தக் காரணத்தினிமித்தம் அவர்கள் மாம்சத்தில் இருக்கும்போதே, மனுபுத்திரரிடத்தில் நான் செய்த என்னுடைய உடன்படிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, நான் அந்தகார இரகசியக் கிரியைகளையும், கொலைகளையும், அருவருப்புக்களையும் அழிக்க வேண்டியதாய் இருக்கிறது.

Wherefore, for this cause, that my covenants may be fulfilled which I have made unto the children of men, that I will do unto them while they are in the flesh, I must needs destroy the secret works of darkness, and of murders, and of abominations.

16 ஆதலால் சீயோனுக்கு விரோதமாய் யுத்தம் செய்கிற யூதனும், புறஜாதியானும், சிறைப்பட்டவனும், சுதந்திரவாளியும், ஆணும், பெண்ணும் அழிவார்கள். ஏனெனில் அவர்களே பூமியனைத்திற்கும் வேசியாய் இருக்கிறார்கள்; ஏனெனில் என்னிலிராதவன் எனக்கு விரோதியாய் இருக்கிறான், என்று தேவன் சொல்கிறார்.

Wherefore, he that fighteth against Zion, both Jew and Gentile, both bond and free, both male and female, shall perish; for they are they who are the whore of all the earth; for they who are not for me are against me, saith our God.

17 ஏனெனில், அவர்கள் மாம்சத்தில் இருக்கும்போதே அவர்களிடத்தில் கிரியை செய்வேன், என்று மனுபுத்திரரிடத்தில் நான் செய்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவேன்.

For I will fulfil my promises which I have made unto the children of men, that I will do unto them while they are in the flesh—

18 ஆதலால், என் பிரியமான சகோதரரே, தேவன் சொல்வதாவது: நான் உன் சந்ததியை புறஜாதியாரின் கையினால் உபத்திரவப்படுத்துவேன்; ஆயினும் அவர்கள், அவர்களுக்கு ஒரு தகப்பனைப்போல இருக்கும்படி புறஜாதியாரின் இருதயங்களை நான் இளகவைப்பேன்; ஆதலால் புறஜாதியார் ஆசீர்வதிக்கப்பட்டு இஸ்ரவேல் வீட்டாருடன் எண்ணப்படுவர்.

Wherefore, my beloved brethren, thus saith our God: I will afflict thy seed by the hand of the Gentiles; nevertheless, I will soften the hearts of the Gentiles, that they shall be like unto a father to them; wherefore, the Gentiles shall be blessed and numbered among the house of Israel.

19 ஆதலால், உன் சந்ததிக்கும், உன் சந்ததியுடன் எண்ணப்படுபவர்களுக்கும், என்றென்றைக்குமாய் அவர்களின் சுதந்திரதேசமாய் இந்த தேசம் இருக்கும்படி, நான் அர்ப்பணம் பண்ணுவேன். ஏனெனில் இது மற்ற எல்லா தேசங்களைக் காட்டிலும் தெரிந்து கொள்ளப்பட்ட தேசமாக இருக்கிறது என்று தேவன் சொல்லுகிறார், ஆதலால், அதில் வாசம்செய்யும் அனைவரும், என்னை ஆராதிக்கும்படி செய்வேன், என்று தேவன் சொல்லுகிறார்.

Wherefore, I will consecrate this land unto thy seed, and them who shall be numbered among thy seed, forever, for the land of their inheritance; for it is a choice land, saith God unto me, above all other lands, wherefore I will have all men that dwell thereon that they shall worship me, saith God.

20 இப்பொழுதும், என் பிரியமான சகோதரரே, நம் இரக்கமுள்ள தேவன் நமக்கு இந்தக் காரியங்களைக் குறித்து, இவ்வளவு மகத்துவமான ஞானத்தைக் கொடுக்கிறதைக் காண்கிறபடியால், அவரை நாம் நினைவுகூர்வோமாக. நம் பாவங்களை ஒதுக்கி வைப்போமாக. நாம் தூர தள்ளிவிடப்படாததினிமித்தம், நம்முடைய தலைகளைத் தொங்கவிடாமலிருப்போமாக. இருப்பினும் நம்முடைய சுதந்திர தேசத்திலிருந்து துரத்திவிடப்பட்டிருக்கிறோம். ஆனாலும் நாம் ஒரு மேன்மையான நிலத்திற்கே நடத்தப்பட்டோம், கர்த்தர் சமுத்திரத்தை நம் பாதையாக்கினார். நாம் சமுத்திரத்தின் தீவின்மீது இருக்கிறோம்.

And now, my beloved brethren, seeing that our merciful God has given us so great knowledge concerning these things, let us remember him, and lay aside our sins, and not hang down our heads, for we are not cast off; nevertheless, we have been driven out of the land of our inheritance; but we have been led to a better land, for the Lord has made the sea our path, and we are upon an isle of the sea.

21 ஆனால் சமுத்திரத்தின் தீவுகளில் இருப்பவர்களுக்கு கர்த்தரின் வாக்குத்தத்தங்கள் மகத்துவமானதாய் இருக்கின்றன. ஆதலால் அது தீவுகள் என்று சொல்லுவதாலே, இதைவிட அதிகமான தீவுகள் இருக்க வேண்டும்; அவைகளும் நம் சகோதரர்களால் வாசம் பண்ணப்பட்டுள்ளன.

But great are the promises of the Lord unto them who are upon the isles of the sea; wherefore as it says isles, there must needs be more than this, and they are inhabited also by our brethren.

22 ஏனெனில் இதோ, கர்த்தராகிய தேவன் தன் சித்தம் மற்றும் பிரியத்தின்படியே இஸ்ரவேலின் வீட்டாரை அவ்வப்போது வழிநடத்தியிருக்கிறார். இப்பொழுதும் இதோ, முறிக்கப்பட்டுப் போனவர்கள், அனைவரையும் கர்த்தர் நினைவுகூர்வதால், அவர் நம்மையும் நினைவுகூர்கிறார்.

For behold, the Lord God has led away from time to time from the house of Israel, according to his will and pleasure. And now behold, the Lord remembereth all them who have been broken off, wherefore he remembereth us also.

23 ஆதலால், உங்கள் இருதயங்களில் திடன் கொள்ளுங்கள். நீங்கள் என்றுமுள்ள மரணத்தின் வழி அல்லது நித்திய ஜீவனின் வழியைத் தேர்ந்தெடுக்க நீங்களே செயல்பட, நீங்கள் சுதந்திரவாளிகளாய் இருக்கிறீர்கள் என்பதை நினைவுகூருங்கள்.

Therefore, cheer up your hearts, and remember that ye are free to act for yourselves—to choose the way of everlasting death or the way of eternal life.

24 ஆதலால், என் பிரியமான சகோதரரே, மாம்சம்
மற்றும் பிசாசின் சித்தத்திற்கு அல்ல, தேவனுடைய
சித்தத்திற்கே உங்களை ஒப்புரவாக்குங்கள். நீங்-
கள் தேவனுடன் ஒப்புரவாகிய பின்னர், தேவனின்
கிருபையினாலேயே, அதன் மூலம் மாத்திரமே, மீட்-
கப்படுவீர்கள் என்பதை நினைவுகூருங்கள்.
25 ஆதலால் தேவனுடைய என்றுமுள்ள ராஜ்யத்-
திற்குள் ஏற்றுக்கொள்ளப்படவும், தெய்வீக கிரு-
பையினால் அவரை நீங்கள் துதிக்கவும், பாவநி-
வர்த்தியின் வல்லமையால் நித்திய சாவிலிருந்தும்,
உயிர்த்தெழுதலின் வல்லமையால், மரணத்திலி-
ருந்தும் தேவன் உங்களை எழுப்புவாராக. ஆமென்.

Wherefore, my beloved brethren, reconcile yourselves to the will of God, and not to the will of the devil and the flesh; and remember, after ye are reconciled unto God, that it is only in and through the grace of God that ye are saved.

Wherefore, may God raise you from death by the power of the resurrection, and also from everlasting death by the power of the atonement, that ye may be received into the eternal kingdom of God, that ye may praise him through grace divine. Amen.

# 2 நேபி 11

1 இப்பொழுதும், யாக்கோபு என் ஜனத்திற்கு, அந்தச்
சமயத்தில், அநேக பல காரியங்களைப் பேசினான்.
ஆயினும் நான் எழுதிய காரியங்களே எனக்குப்
போதுமானதாய்த் தோன்றியபடியால், இவைகளை
மாத்திரம் நான் எழுதினேன்.
2 இப்பொழுது நேபியாகிய நான், ஏசாயாவின்
அநேக வார்த்தைகளை எழுதுகிறேன். ஏனெனில்
என் ஆத்துமா அவனது வார்த்தைகளில் களிகூரு-
கிறது. ஆதலால், நான் அவனது வார்த்தைகளை
என் ஜனத்திற்கு ஒப்பிட்டு, அவைகளை என் பிள்-
ளைகளெல்லோருக்கும் அனுப்புவேன். ஏனெனில்
நான் அவரைக் கண்டது போலவே, அவனும் மெய்-
யாகவே என் மீட்பரைக் கண்டான்.
3 நான் அவரைக் கண்டது போலவே என் சகோத-
ரன் யாக்கோபும், அவரைக் கண்டிருக்கிறான்;
ஆகையால் என் வார்த்தைகளை மெய்யென நிரூ-
பிக்க, என் பிள்ளைகளுக்கு அவர்களின் வார்த்-
தைகளை அனுப்புவேன். ஆதலால் மூவரின்
வார்த்தைகளால், நான் என் வார்த்தையை நிலை-
நிறுத்துவேன், என்று தேவன் சொல்லியிருக்கிறார்.
ஆயினும் தேவன் அநேக சாட்சிகளை அனுப்பி,
தமது வார்த்தைகள் யாவையும் நிரூபிக்கிறார்.
4 இதோ, கிறிஸ்துவின் வருகையின் உண்மையை
என் ஜனத்திற்கு நிரூபிப்பதில் என் ஆத்துமா களி-
கூருகிறது. ஏனெனில், இந்தக் காரணத்திற்காகவே
மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டி-
ருக்கிறது. உலகத்தின் தொடக்கத்திலிருந்தே, தே-
வனால் மனுஷனுக்குக் கொடுக்கப்பட்ட எல்லா
காரியங்களும், அவரை மனுஷனுக்கு மாதிரியாக்-
குவதாகவே இருக்கிறது.
5 எங்கள் பிதாக்களுடன் கர்த்தர் செய்த அவரின்
உடன்படிக்கைகளில் என் ஆத்துமா களிகூருகிற-
து. ஆம், மரணத்திலிருந்து விடுவிக்கக்கூடிய சிறப்-
பான, நித்திய திட்டத்தில் உள்ள அவரது கிருபை-
யிலும், அவரின் நியாயத்திலும், வல்லமையிலும்,
இரக்கத்திலும் என் ஆத்துமா களிகூருகிறது.
6 கிறிஸ்து வந்தாலொழிய, எல்லா மனுஷரும்
அழிய வேண்டும், என்று என் ஜனத்திற்கு நிரூபிப்-
பதில் என் ஆத்துமா களிகூருகிறது.
7 ஏனெனில், கிறிஸ்து இல்லையெனில் தேவன்
இல்லை; தேவன் இல்லையெனில் நாமோ, சிருஷ்-
டிப்போ இல்லாமல் இருந்திருக்கும். ஆனால் தே-
வன் ஒருவர் இருக்கிறார். அவர்தான் கிறிஸ்து,
அவர் தன் சொந்த காலத்தின் நிறைவில் வருவார்.

# 2 Nephi 11

And now, Jacob spake many more things to my people at that time; nevertheless only these things have I caused to be written, for the things which I have written sufficeth me.

And now I, Nephi, write more of the words of Isaiah, for my soul delighteth in his words. For I will liken his words unto my people, and I will send them forth unto all my children, for he verily saw my Redeemer, even as I have seen him.

And my brother, Jacob, also has seen him as I have seen him; wherefore, I will send their words forth unto my children to prove unto them that my words are true. Wherefore, by the words of three, God hath said, I will establish my word. Nevertheless, God sendeth more witnesses, and he proveth all his words.

Behold, my soul delighteth in proving unto my people the truth of the coming of Christ; for, for this end hath the law of Moses been given; and all things which have been given of God from the beginning of the world, unto man, are the typifying of him.

And also my soul delighteth in the covenants of the Lord which he hath made to our fathers; yea, my soul delighteth in his grace, and in his justice, and power, and mercy in the great and eternal plan of deliverance from death.

And my soul delighteth in proving unto my people that save Christ should come all men must perish.

For if there be no Christ there be no God; and if there be no God we are not, for there could have been no creation. But there is a God, and he is Christ, and he cometh in the fulness of his own time.

8 இந்த வார்த்தைகளைப் பார்க்கிற என் ஜனம், தங்கள் இருதயங்களை உயர்த்தி, எல்லா மனுஷருக்காகவும் களிகூரத்தக்கதாக, ஏசாயாவின் சில வார்த்தைகளை நான் இப்பொழுது எழுதுகிறேன். இப்பொழுது அந்த வார்த்தைகள் இவைகளே. நீங்கள் அதை உங்களுக்கும் எல்லா மனுஷருக்கும் ஒப்பிடலாம்.

And now I write some of the words of Isaiah, that whoso of my people shall see these words may lift up their hearts and rejoice for all men. Now these are the words, and ye may liken them unto you and unto all men.

# 2 நேபி 12

1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா, யூதா மற்றும்
எருசலேமைக் குறித்துக் கண்ட தரிசனம்.

2 கடைசி நாட்களில், பர்வதங்களின் கொடுமுடியி-
லே, கர்த்தருடைய பர்வதத்தின் ஆலயம் ஸ்தாபிக்-
கப்பட்டு, மலைகளுக்கு மேலாக உயர்த்தப்படும்-
பொழுது எல்லா தேசங்களும் அதற்குள் ஓடி வரு-
வார்கள்.

3 நாம் கர்த்தருடைய பர்வதத்திற்கும், யாக்கோபின்
தேவனுடைய ஆலயத்திற்கும் செல்வோம், வாருங்-
கள். அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்.
நாம் அவருடைய பாதைகளிலே நடப்போம் என்று
அநேக ஜனங்கள் போய்ச் சொல்லுவார்கள்; ஏனெ-
னில் சீயோனிலிருந்து நியாயப்பிரமாணமும், எரு-
சலேமிருந்து கர்த்தருடைய வார்த்தையும் வெளிப்-
படும்.

4 அவர் தேசங்களுக்குள்ளும் நியாயந்தீர்த்து,
அநேக ஜனங்களைக் கடிந்து கொள்வார். அவர்கள்
தங்கள் பட்டயங்களைக் கொழுக்களாகவும், தங்-
கள் ஈட்டிகளை கிளைநறுக்கிகளாகவும் அடிப்-
பார்கள்; தேசத்துக்கு விரோதமாய் தேசம், பட்டயங்-
களை உயர்த்துவதுமில்லை. அவர்கள் இனி யுத்-
தத்தைக் கற்பதும் இல்லை.

5 யாக்கோபின் வீட்டாரே, கர்த்தருடைய ஒளியில்
நடப்போம் வாருங்கள். ஏனெனில் நீங்கள் வழிதப்-
பி, அவனவன் தன்தன் துன்மார்க்க வழிகளிலே
போனீர்கள். எனவே வாருங்கள்.

6 ஆதலால், அவர்கள் கீழ்திசையாரின் போதகத்-
தால் நிரப்பப்பட்டவர்களாயும், பெலிஸ்தர்களைப்-
போல, குறிசொல்லுவோருக்குச் செவிகொடுத்தும்,
அவர்கள் அன்னிய பிள்ளைகளில் பிரியங்கொள்-
கிறவர்களாயும் இருப்பதினிமித்தம், கர்த்தாவே,
யாக்கோபின் வீட்டாராகிய உமது ஜனத்தை நீர் கை-
விட்டீர்.

7 அவர்களின் தேசத்திலே வெள்ளியும், பொன்னும்
நிரம்பியிருக்கிறது. அவர்களின் பொக்கிஷங்க-
ளுக்கோ அங்கே முடிவில்லை; அவர்கள் தேசத்தி-
லே குதிரைகள் நிறைந்துள்ளது. அவர்களின் இர-
தங்களுக்கோ அங்கே முடிவில்லை.

8 அவர்களின் தேசத்தில், விக்கிரகங்களோ நிரம்பி-
யுள்ளது; தங்கள் கைகளின் கிரியையையும், தங்-
கள் விரல்கள் உண்டுபண்ணினதையும் பணிந்து
கொள்கிறார்கள்.

9 கீழ்மையானவன் கீழே குனிவதுமில்லை; பெரிய-
வன் தன்னேயே தாழ்த்துவதுமில்லை. ஆதலால்
அவனை மன்னிக்க வேண்டாம்.

10 துன்மார்க்கனே, பாறையினுள் புகுந்து, புழுதி-
யில் உன்னை மறைத்துக்கொள். ஏனெனில் கர்த்த-
ருடைய பயமும், அவரது மகத்துவத்தின் மகிமை-
யும் உன்னை அடிக்கும்.

# 2 Nephi 12

The word that Isaiah, the son of Amoz, saw concerning Judah and Jerusalem:

And it shall come to pass in the last days, when the mountain of the Lord's house shall be established in the top of the mountains, and shall be exalted above the hills, and all nations shall flow unto it.

And many people shall go and say, Come ye, and let us go up to the mountain of the Lord, to the house of the God of Jacob; and he will teach us of his ways, and we will walk in his paths; for out of Zion shall go forth the law, and the word of the Lord from Jerusalem.

And he shall judge among the nations, and shall rebuke many people: and they shall beat their swords into plow-shares, and their spears into pruning-hooks—nation shall not lift up sword against nation, neither shall they learn war any more.

O house of Jacob, come ye and let us walk in the light of the Lord; yea, come, for ye have all gone astray, every one to his wicked ways.

Therefore, O Lord, thou hast forsaken thy people, the house of Jacob, because they be replenished from the east, and hearken unto soothsayers like the Philistines, and they please themselves in the children of strangers.

Their land also is full of silver and gold, neither is there any end of their treasures; their land is also full of horses, neither is there any end of their chariots.

Their land is also full of idols; they worship the work of their own hands, that which their own fingers have made.

And the mean man boweth not down, and the great man humbleth himself not, therefore, forgive him not.

O ye wicked ones, enter into the rock, and hide thee in the dust, for the fear of the Lord and the glory of his majesty shall smite thee.

11 மனுஷனின் மேட்டிமையான கண்கள் தாழ்த்தப்-
படும், மனுஷர்களின் வீராப்பு அடக்கப்படும். அந்த
நாளில் கர்த்தர் ஒருவரே உயர்த்தப்படுவார்.

And it shall come to pass that the lofty looks of man shall be humbled, and the haughtiness of men shall be bowed down, and the Lord alone shall be exalted in that day.

12 ஏனெனில் எல்லா தேசங்கள் மீதும், ஆம், பெரு-
மையானவர்கள், மேட்டிமையானவர்கள் மற்றும்
உயர்த்தப்பட்டிருக்கிற ஒவ்வொருவரும் அடக்கப்-
படும் பொருட்டு சேனைகளின் கர்த்தருடைய நாள்
அவர்கள் மீது சீக்கிரமாய் வரும்.

For the day of the Lord of Hosts soon cometh upon all nations, yea, upon every one; yea, upon the proud and lofty, and upon every one who is lifted up, and he shall be brought low.

13 ஆம், கர்த்தருடைய நாள் லீபனோனின் கேதுருக்-
கள் ஓங்கி உயர்த்தப்பட்டிருப்பதால், அவைக-
ளெல்லாவற்றின் மீதும், பாசானின் எல்லா கரு-
வேல மரங்களின் மீதும்;

Yea, and the day of the Lord shall come upon all the cedars of Lebanon, for they are high and lifted up; and upon all the oaks of Bashan;

14 எல்லா உயர்ந்த பர்வதங்களின் மீதும், எல்லா
மலைகளின் மீதும், உயர்த்தப்பட்டிருக்கிற எல்லா
தேசங்களின் மீதும், ஒவ்வொரு ஜனத்தின் மீதும்,

And upon all the high mountains, and upon all the hills, and upon all the nations which are lifted up, and upon every people;

15 ஒவ்வொரு உயர்ந்த கோபுரத்தின் மீதும், ஒவ்வொ-
ரு வேலியடைத்த மதில்களின் மீதும்,

And upon every high tower, and upon every fenced wall;

16 சமுத்திரத்தின் எல்லாக் கப்பல்களின் மீதும், தர்-
ஷீசின் கப்பல்கள் யாவின் மீதும், எல்லா விதமான
சித்திரப்படங்களின் மீதும் வரும்.

And upon all the ships of the sea, and upon all the ships of Tarshish, and upon all pleasant pictures.

17 மனுஷனின் மேட்டிமை அடக்கப்படும்; மனுஷர்-
களின் இறுமாப்பு தாழ்த்தப்படும்; அந்நாளிலே
கர்த்தர் ஒருவரே உயர்த்தப்படுவார்.

And the loftiness of man shall be bowed down, and the haughtiness of men shall be made low; and the Lord alone shall be exalted in that day.

18 அவர் விக்கிரகங்களை முழுவதும் அழித்துப்-
போடுவார்.

And the idols he shall utterly abolish.

19 அவர் பூமியை பயங்கரமாய் தத்தளிக்கப்பண்ண
எழும்பும்போது, அவர்கள் பாறைகளின் துவாரங்-
களிலும், பூமியின் குகைகளிலும் புகுந்து கொள்-
வார்கள். ஏனெனில் கர்த்தரைப்பற்றிய பயம்
அவர்கள் மேல் வரும். மேலும் அவருடைய மகி-
மைப் பிரதாபம் அவர்களை அடிக்கும்.

And they shall go into the holes of the rocks, and into the caves of the earth, for the fear of the Lord shall come upon them and the glory of his majesty shall smite them, when he ariseth to shake terribly the earth.

20 அந்நாளிலே மனுஷன் ஆராதிப்பதற்குத் தனக்கு
உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களை-
யும், தன் பொன் விக்கிரகங்களையும், அகலெலிக்-
கும், துரிஞ்சில்களுக்கும் எறிவான்.

In that day a man shall cast his idols of silver, and his idols of gold, which he hath made for himself to worship, to the moles and to the bats;

21 பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்-
பும்போது, அவருடைய பயம் அவர்கள் மேல் வரு-
வதாலும், அவருடைய மகிமைப்பிரதாபம் அவர்க-
ளை அடிப்பதாலும், அவர்கள் பாறைகளின் வெ-
டிப்புகளினுள்ளும், பீறலான பாறைகளின் கொடு-
முடியினுள்ளும், புகுந்து கொள்வார்கள்.

To go into the clefts of the rocks, and into the tops of the ragged rocks, for the fear of the Lord shall come upon them and the majesty of his glory shall smite them, when he ariseth to shake terribly the earth.

22 நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதை
விட்டு விடுங்கள், ஏனெனில் அவன் எண்ணப்படு-
வதற்கு எம்மாத்திரம்?

Cease ye from man, whose breath is in his nostrils; for wherein is he to be accounted of?

# 2 நேபி 13

1 இதோ, கர்த்தர், சேனைகளின் கர்த்தர், எருசலேமிலி-
ருந்தும், யூதாவிலிருந்தும், ஊன்றுகோலையும்,
பற்றுக்கோலையும், ஆகாரமென்கிற முழு ஊன்று-
கோலையும், தண்ணீரென்கிற பற்றுக்கோலையும்

2 பராக்கிரமசாலியையும், யுத்த மனுஷரையும், நி-
யாயாதிபதியையும், தீர்க்கதரிசியையும், சாஸ்திரி-
யையும், மூப்பனையும்,

3 ஐம்பதுபேருக்கு அதிபதியையும், கனம் பொருந்-
தினவனையும், ஆலோசகரையும், சாமர்த்திய நிபு-
ணனையும், சாதுரியப் பிரசங்கியையும் விலக்கு-
வார்.

4 நான் அவர்களுக்குப் பிள்ளைகளை அதிபதிக-
ளாகத் தருவேன்; பாலகர்கள் அவர்களை அரசா-
ளுவார்கள்.

5 ஒருவன் மற்றொருவனினாலும், ஒருவன் தன்
அயலானாலுமாக, ஜனங்கள் ஒடுக்கப்படுவார்கள்.
பெருமையுடன் மூப்பனுக்கு விரோதமாகக் குழந்-
தையும், கனம் பொருந்தியவனுக்கு விரோதமாகக்
கீழ்மகனும் இறுமாப்பாக நடந்து கொள்வார்கள்.

6 அப்பொழுது ஒருவன் தன் தந்தை வீட்டானாகிய
தன் சகோதரனைப் பிடித்து, உனக்கு வஸ்திரம்
இருக்கிறது, எங்களுக்கு அதிபதியாயிரு; இந்தக்
கேடு உன் கையின் கீழாக வராமலிருப்பதாக, என்-
று சொல்லுவான்.

7 அந்த நாளிலே அவன் சபதம்பண்ணி நான் சுகப்-
படுத்துபவனாக இருக்கமாட்டேன். ஏனெனில் என்
வீட்டில் ஆகாரமும் இல்லை, வஸ்திரமும் இல்லை.
ஜனத்தின் அதிபதியாக என்னை வைக்க வேண்-
டாம், என்பான்.

8 ஏனெனில் அவரின் மகிமையின் கண்களை
கோபமூட்டும்படி அவர்களின் நாவுகளும், அவர்க-
ளின் செய்கைகளும் கர்த்தருக்கு விரோதமாய்
இருந்ததின் நிமித்தம் எருசலேம் அழிக்கப்பட்டும்,
யூதா விழுந்தும் போனது.

9 அவர்கள் முகப்பார்வை அவர்களுக்கு விரோத-
மாய்ச் சாட்சியிடும். அவர்கள் தங்கள் பாவத்தை
மறைக்காமல், சோதோம் ஊராரைப்போல வெளிப்-
படுத்துகிறார்கள்; அவர்கள் ஆத்துமாவுக்கு ஐயோ!
ஏனென்றால் அவர்கள் தங்களுக்கே தீமையை
வருவித்துக்கொள்ளுகிறார்கள்.

10 உங்களுக்கு நன்மையாய் இருக்கும் என்று நீதி-
மான்களுக்குச் சொல்லுங்கள்; ஏனெனில் அவர்க-
ளின் கிரியைகளின் கனியைப் புசிப்பார்கள்.

11 துன்மார்க்கருக்கோ ஐயோ, அவர்கள் அழிந்து-
போவார்கள். அவர்கள் தங்கள் கைகளின் பெ-
லனை அனுபவிப்பார்கள்.

# 2 Nephi 13

For behold, the Lord, the Lord of Hosts, doth take away from Jerusalem, and from Judah, the stay and the staff, the whole staff of bread, and the whole stay of water—

The mighty man, and the man of war, the judge, and the prophet, and the prudent, and the ancient;

The captain of fifty, and the honorable man, and the counselor, and the cunning artificer, and the eloquent orator.

And I will give children unto them to be their princes, and babes shall rule over them.

And the people shall be oppressed, every one by another, and every one by his neighbor; the child shall behave himself proudly against the ancient, and the base against the honorable.

When a man shall take hold of his brother of the house of his father, and shall say: Thou hast clothing, be thou our ruler, and let not this ruin come under thy hand—

In that day shall he swear, saying: I will not be a healer; for in my house there is neither bread nor clothing; make me not a ruler of the people.

For Jerusalem is ruined, and Judah is fallen, because their tongues and their doings have been against the Lord, to provoke the eyes of his glory.

The show of their countenance doth witness against them, and doth declare their sin to be even as Sodom, and they cannot hide it. Wo unto their souls, for they have rewarded evil unto themselves!

Say unto the righteous that it is well with them; for they shall eat the fruit of their doings.

Wo unto the wicked, for they shall perish; for the reward of their hands shall be upon them!

12 என் ஜனமே, பிள்ளைகள் அவர்களை ஒடுக்குகி-
றவர்களாகவும், அவர்கள் மீது ஸ்திரீகள் ஆளுகை
செய்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். என் ஜன-
மே, உன்னை நடத்தியவர்களே உன்னை மோசம்
போகப்பண்ணி, உன் பாதைகளின் வழிகளை
அழித்தார்கள்.

And my people, children are their oppressors, and women rule over them. O my people, they who lead thee cause thee to err and destroy the way of thy paths.

13 கர்த்தர் வழக்காட எழுந்திருந்து, ஜனங்களை நி-
யாயந்தீர்க்க நிற்கிறார்.

The Lord standeth up to plead, and standeth to judge the people.

14 கர்த்தர் தன் ஜனத்தின் மூப்பருடனும், அதன் பிர-
புக்களுடனும் நியாயத்தீர்ப்புக்குள் பிரவேசிப்பார்;
ஏனெனில் நீங்கள் இந்தத் திராட்சைத் தோட்டத்-
தைப் பட்சித்து போட்டீர்கள்; சிறுமையானவர்களி-
டம் கொள்ளையிட்ட பொருள் உங்கள் வீடுகளில்
இருக்கிறது.

The Lord will enter into judgment with the ancients of his people and the princes thereof; for ye have eaten up the vineyard and the spoil of the poor in your houses.

15 நீங்கள் சொல்வதென்ன? நீங்கள் என் ஜனத்தை
நொறுக்கும்படி அடிக்கிறீர்கள். சிறுமையானவர்க-
ளின் முகங்களை நெரிக்கிறீர்கள் என்று சேனைக-
ளின் கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்.

What mean ye? Ye beat my people to pieces, and grind the faces of the poor, saith the Lord God of Hosts.

16 பின்னும் கர்த்தர் சொல்லுகிறதாவது: சீயோன் கு-
மாரத்திகள் அகந்தையாயிருந்து, கழுத்தை நீட்டி
நடந்து, கண்களால் மருட்டிப்பார்த்து, போகும்போ-
து ஒய்யாரமாய் நடந்து தங்கள் கால்களால் ஒலிக்-
கச் செய்கிறார்கள்.

Moreover, the Lord saith: Because the daughters of Zion are haughty, and walk with stretched-forth necks and wanton eyes, walking and mincing as they go, and making a tinkling with their feet—

17 ஆதலால், கர்த்தர் சீயோனின் குமாரத்திகளின்
உச்சந்தலையை மொட்டையாகச் சபிப்பார். கர்த்தர்
அவர்களின் இரகசிய பாகங்களையும் வெளியாக்-
குவார்.

Therefore the Lord will smite with a scab the crown of the head of the daughters of Zion, and the Lord will discover their secret parts.

18 அந்த நாளிலே, கர்த்தர் அவர்களின் ஒலிக்கிற
ஆபரணங்களின் திடனையும், சுட்டிகளையும், சந்-
திரனைப்போல வளைந்த ஆரத்தையும்,

In that day the Lord will take away the bravery of their tinkling ornaments, and cauls, and round tires like the moon;

19 சரடுகளையும், அஸ்திகடகங்களையும், தலை-
முக்காடுகளையும்,

The chains and the bracelets, and the mufflers;

20 சிரபூஷணங்களையும், பாதசரங்களையும்,
தலைக்கச்சைகளையும், குப்பிகளையும், கடுக்-
கன்களையும்,

The bonnets, and the ornaments of the legs, and the headbands, and the tablets, and the ear-rings;

21 மோதிரங்களையும், மூக்கு அணிகலன்களையும்,

The rings, and nose jewels;

22 மாறக்கூடிய புடவைச் சோடுகளாகிய ஆடைக-
ளையும், சால்வைகளையும், முக்காடுகளையும்,
மயிர்சுருட்டுங் கருவிகளையும்;

The changeable suits of apparel, and the mantles, and the wimples, and the crisping-pins;

23 கண்ணாடிகளையும், நேர்த்தியான பஞ்சுநூல்க-
ளையும், சால்வைகளையும், திரைகளையும், உரித்-
துப்போடுவார்.

The glasses, and the fine linen, and hoods, and the veils.

24 சுகந்த வாசனைக்குப் பதிலாக அங்கே துர்நாற்ற-
மும், அரைக்கட்டுக்குப் பதிலாக ஒரு கயிறும், நன்-
றாக ஒழுங்குபடுத்தின மயிர்ச்சுருளுக்குப் பதிலாக
மொட்டையும், இரவுக்கைச் சலாகைக்குப் பதிலாக
இரட்டுக்கச்சும், அழகுக்குப் பதிலாக எரிச்சலும்
இருக்கும்.

And it shall come to pass, instead of sweet smell there shall be stink; and instead of a girdle, a rent; and instead of well set hair, baldness; and instead of a stomacher, a girding of sackcloth; burning instead of beauty.

25 உன் புருஷர் பட்டயத்தாலும், உன் பலசாலிகள்
யுத்தத்திலும் விழுவார்கள்.

Thy men shall fall by the sword and thy mighty in the war.

26 அவளுடைய வாசல்களோ, துக்கித்துப் புலம்பும். அவள் வெறுமையாயிருந்து தரையின் மீது உட்காருவாள், என்கிறார்.

And her gates shall lament and mourn; and she shall be desolate, and shall sit upon the ground.

## 2 நேபி 14

1 அந்த நாளிலே, ஏழு ஸ்திரீகள் ஒரு மனுஷனைப் பிடித்து: நாம் நம்முடைய சொந்த ஆகாரத்தைப் புசித்து நம்முடைய சொந்த ஆடையை அணிவோம். எங்களுடைய நிந்தை நீங்கும்படிக்கு உன்னுடைய நாமத்தில் மாத்திரம் நாங்கள் அழைக்கப்படுவோமாக, என்பார்கள்.

2 அந்த நாளிலே கர்த்தருடைய கிளையோ, அழகாகவும், மகிமையுமாயிருக்கும். இஸ்ரவேலரில் தப்பினவர்களுக்குப் பூமியின் கனி நேர்த்தியாகவும், ஏற்றதாயும் இருக்கும்.

3 கர்த்தர் சீயோன் குமாரத்திகளின் அழுக்கைக் கழுவி, எருசலேமின் இரத்தப்பழியை, அதனுடைய நடுவிலிருந்து, நியாயத்தீர்ப்பின் ஆவியாலும், சுட்டெரிக்கிற ஆவியாலும் பவித்திரமாக்கும்போது,

4 சீயோனில் விடப்பட்டவர்களும், எருசலேமில் மீதியாயிருப்பவர்களும், எருசலேமில் ஜீவிப்பவர்களுடன் கணக்கிடப்பட்டிருக்கிற ஒவ்வொருவனும், பரிசுத்தனென்று அழைக்கப்படுவான்.

5 கர்த்தர், சீயோன் பர்வதத்தின் ஒவ்வொரு வாசஸ்தலத்தின் மீதும், அவளுடைய ஜனத்திரளின் மீதும், பகலிலே மேகத்தையும், புகையையும், இரவிலே கொழுந்துவிட்டு எரியும் அக்கினிப் பிரகாசத்தையும் உண்டாக்குவார்; சீயோனின் மகிமையானவைகளின் மேலெல்லாம் காவல் உண்டாயிருக்கும்.

6 பகலிலே வெயிலுக்கு நிழலாகவும், பெருங்காற்றுக்கும், மழைக்கும் அடைக்கலமாகவும், ஒதுக்கிடமாகவும் ஒரு வாசஸ்தலம் உண்டாயிருக்கும்.

## 2 Nephi 14

And in that day, seven women shall take hold of one man, saying: We will eat our own bread, and wear our own apparel; only let us be called by thy name to take away our reproach.

In that day shall the branch of the Lord be beautiful and glorious; the fruit of the earth excellent and comely to them that are escaped of Israel.

And it shall come to pass, they that are left in Zion and remain in Jerusalem shall be called holy, every one that is written among the living in Jerusalem—

When the Lord shall have washed away the filth of the daughters of Zion, and shall have purged the blood of Jerusalem from the midst thereof by the spirit of judgment and by the spirit of burning.

And the Lord will create upon every dwelling-place of mount Zion, and upon her assemblies, a cloud and smoke by day and the shining of a flaming fire by night; for upon all the glory of Zion shall be a defence.

And there shall be a tabernacle for a shadow in the daytime from the heat, and for a place of refuge, and a covert from storm and from rain.

## 2 நேபி 15

1 இப்பொழுது, நான் என் நேசரிடத்தில் அவருடைய
திராட்சைத் தோட்டத்தைக் குறித்து, என் நேசருக்-
கேற்ற ஒரு பாட்டைப் பாடுவேன். என் நேசருக்கு
மகா செழிப்பான மேட்டிலே ஒரு திராட்சைத் தோட்-
டம் உண்டு.
2 அவர் அதை வேலியடைத்து, அதிலுள்ள கற்க-
ளைப் பொறுக்கி, அதிலே சிறந்த திராட்சை செடிக-
ளை நட்டு, அதன் நடுவிலே ஒரு கோபுரத்தைக் கட்-
டி, அதில் ஆலையையும் உண்டுபண்ணி, அது
நல்ல திராட்சைப் பழங்களைத் தருமென்று காத்தி-
ருந்தார், அதுவோ கசப்பான திராட்சைப் பழங்க-
ளைத் தந்தது.
3 இப்பொழுது, எருசலேமின் குடிகளே, யூதாவின்
மனுஷரே, எனக்கும் என் திராட்சைத் தோட்டத்திற்-
குமிடையே நியாயந்தீருங்கள், என உங்களை
வேண்டுகிறேன்.
4 என் திராட்சைத் தோட்டத்தில் நான் செய்யாத
எந்த வேலையை அதற்கு செய்திருக்கலாம்?
ஆகையால் அது திராட்சைப் பழங்களைக் கொ-
டுக்கும், என நான் பார்த்திருக்கும்போது, அது கசப்-
பான திராட்சைப் பழங்களைத் தந்தது.
5 அங்கு சென்று என் திராட்சைத் தோட்டத்திற்கு
என்ன செய்யப்போகிறேன், என்று உங்களுக்குச்
சொல்வதைக் கேளுங்கள். அதன் வேலியை எடுத்-
துப்போடுவேன். அது மேய்ந்து போடப்படும், அதன்
அடைப்பைத் தகர்ப்பேன். அது மிதியுண்டுபோம்.
6 அதை நான் பாழாக்குவேன் அது கிளை நறுக்கப்-
படாமலும், களைகொத்தி எடுக்கப்படாமலுமிருக்-
கும். அதனால் முட்செடியும் நெரிஞ்சிலும் முளைக்-
கும், நான் அதன்மேல் மழைபெய்யாதபடிக்கு மே-
கங்களுக்குக் கட்டளையிடுவேன்.
7 சேனைகளின் கர்த்தருடைய திராட்சைத் தோட்-
டம் இஸ்ரவேலின் வீட்டாரே, அவருடைய மனம-
கிழ்ச்சியின் நாற்று யூதாவின் மனுஷரே, அவர் நி-
யாயத்திற்குக் காத்திருந்தார். இதோ கொடுமை; நீ-
திக்குக் காத்திருந்தார், ஆனால் இதோ முறைப்பாடு.
8 பூமியின் நடுவே அவர்கள் மாத்திரம் வாசமாயி-
ருக்கும்படி ஒரு இடமும் இல்லாமற்போகுமளவும்,
வீட்டை வீட்டோடு சேர்க்கிறவர்களுக்கு ஐயோ!
9 என் செவிகளில் சேனைகளின் கர்த்தர் சொன்ன-
தாவது, மெய்யாகவே அநேக வீடுகள் பாழாகும்,
பெரிய மற்றும் சவுந்தரியமுள்ள நகரங்களும் குடி-
யில்லாமற் போகும்.
10 ஆம், திராட்சைத் தோட்டத்தின் பத்தேர், ஒரு படி-
தேரும்; ஒரு கல விதை ஒரு குறுணி விளையும்.
11 மதுபானத்தை நாடி அதிகாலமே எழுந்து இரவுவ-
ரைக்கும் தொடர்ந்து தங்களைத் திராட்சைரசம் சூ-
டாக்கும்படி குடித்துக்கொண்டிருப்பவர்களுக்கு
ஐயோ!

## 2 Nephi 15

And then will I sing to my well-beloved a song of my beloved, touching his vineyard. My well-beloved hath a vineyard in a very fruitful hill.

And he fenced it, and gathered out the stones thereof, and planted it with the choicest vine, and built a tower in the midst of it, and also made a winepress therein; and he looked that it should bring forth grapes, and it brought forth wild grapes.

And now, O inhabitants of Jerusalem, and men of Judah, judge, I pray you, betwixt me and my vineyard.

What could have been done more to my vineyard that I have not done in it? Wherefore, when I looked that it should bring forth grapes it brought forth wild grapes.

And now go to; I will tell you what I will do to my vineyard—I will take away the hedge thereof, and it shall be eaten up; and I will break down the wall thereof, and it shall be trodden down;

And I will lay it waste; it shall not be pruned nor digged; but there shall come up briers and thorns; I will also command the clouds that they rain no rain upon it.

For the vineyard of the Lord of Hosts is the house of Israel, and the men of Judah his pleasant plant; and he looked for judgment, and behold, oppression; for righteousness, but behold, a cry.

Wo unto them that join house to house, till there can be no place, that they may be placed alone in the midst of the earth!

In mine ears, said the Lord of Hosts, of a truth many houses shall be desolate, and great and fair cities without inhabitant.

Yea, ten acres of vineyard shall yield one bath, and the seed of a homer shall yield an ephah.

Wo unto them that rise up early in the morning, that they may follow strong drink, that continue until night, and wine inflame them!

12 சுரமண்டலமும், தம்புராவும், மேளமும், நாகசுர-
மும், மதுபானமும் வைத்து விருந்து கொண்டாடு-
கிறார்கள். ஆனாலும் அவர்கள் கர்த்தரின் கிரியை-
யை நோக்குகிறதுமில்லை, அவர் கரத்தின் செய்-
கையை சிந்திக்கிறதுமில்லை.

And the harp, and the viol, the tabret, and pipe, and wine are in their feasts; but they regard not the work of the Lord, neither consider the operation of his hands.

13 ஆகையால், என் ஜனங்கள் அறிவில்லாமையி-
னால் சிறைப்பட்டுப் போகிறார்கள். அவர்களில்
கனமுள்ளவர்கள் பட்டினியால் தொய்ந்துபோகி-
றார்கள். அவர்களின் திரளான கூட்டத்தார் தாகத்-
தால் நாவறண்டு போகிறார்கள்.

Therefore, my people are gone into captivity, because they have no knowledge; and their honorable men are famished, and their multitude dried up with thirst.

14 ஆகையால் பாதாளம் தன்னை விரிவாக்கி, தன்
வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது. அவர்-
கள் மகிமையும், அவர்கள் திரள்கூட்டமும், அவர்-
கள் ஆடம்பரமும், அவர்களில் களிகூருகிறவனும்
அதற்குள் இறங்கிப் போவார்கள்.

Therefore, hell hath enlarged herself, and opened her mouth without measure; and their glory, and their multitude, and their pomp, and he that rejoiceth, shall descend into it.

15 கீழ்மையானவன் தாழ்த்தப்படுவான். பராக்கிரம-
சாலி தாழ்ச்சியடைவான். மேட்டிமையானவர்க-
ளின் கண்கள் தாழ்ந்துபோம்.

And the mean man shall be brought down, and the mighty man shall be humbled, and the eyes of the lofty shall be humbled.

16 ஆனால் சேனைகளின் கர்த்தர் நியாயந்தீர்ப்பி-
னால் உயர்த்தப்படுவார். பரிசுத்தமுள்ள தேவன் நீ-
தியினால் பரிசுத்தமாக்கப்படுவார்.

But the Lord of Hosts shall be exalted in judgment, and God that is holy shall be sanctified in righteousness.

17 அப்பொழுது ஆட்டுக்குட்டிகள் கண்டவிடமெல்-
லாம் மேயும், கொழுத்தவர்களுடையதாயிருந்து
பாழாய்ப்போன நிலங்களைப் பரதேசிகள் அனுப-
விப்பார்கள்.

Then shall the lambs feed after their manner, and the waste places of the fat ones shall strangers eat.

18 மாயைக் கயிறுகளால் அக்கிரமத்தையும், வண்-
டியின் வடங்களால் பாவத்தையும், இழுத்துக்-
கொண்டுவந்து,

Wo unto them that draw iniquity with cords of vanity, and sin as it were with a cart rope;

19 நாம் பார்க்கும்படி, அவர் தீவிரித்துத் தமது கிரி-
யைகளைச் சீக்கிரமாய் நடப்பிக்கட்டுமென்றும்,
இஸ்ரவேலின் பரிசுத்தருடைய ஆலோசனையை
நாம் அறியும்படி அது சமீபித்து வரட்டுமென்றும்,
சொல்லுகிறவர்களுக்கு ஐயோ

That say: Let him make speed, hasten his work, that we may see it; and let the counsel of the Holy One of Israel draw nigh and come, that we may know it.

20 தீமையை நன்மையென்றும், நன்மையை தீமை-
யென்றும் அழைப்பவர்களுக்கும், வெளிச்சத்திற்கு
இருளையும், இருளுக்கு வெளிச்சத்தையும் பாவிப்-
பவர்களுக்கும், தித்திப்புக்கு கசப்பையும், கசப்புக்-
கு தித்திப்பையும் வைக்கிறவர்களுக்கும், ஐயோ!

Wo unto them that call evil good, and good evil, that put darkness for light, and light for darkness, that put bitter for sweet, and sweet for bitter!

21 தங்கள் சொந்தக் கண்களில் ஞானியாயும், தங்-
கள் சொந்தப் பார்வையில் புத்திமானாயும் இருக்கி-
றவர்களுக்கு ஐயோ!

Wo unto the wise in their own eyes and prudent in their own sight!

22 திராட்சை ரசத்தைக் குடிக்க பராக்கிரமசாலியும்,
மதுபானத்தைக் கலக்க பெலமுள்ள மனுஷராயி-
ருந்து,

Wo unto the mighty to drink wine, and men of strength to mingle strong drink;

23 பரிதானத்திற்காகத் துன்மார்க்கனை நியாயவா-
னாக்கி, நீதிமானுடைய நீதியை அவனிடத்திலி-
ருந்து எடுக்கிறவர்களுக்கோ, ஐயோ!

Who justify the wicked for reward, and take away the righteousness of the righteous from him!

24 அவர்கள் சேனைகளின் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைத் தள்ளினதாலும், மற்றும் இஸ்ரவேலின் பரிசுத்தரின் வார்த்தையை நிந்தித்தனிமித்தமும், அக்கினி அரிதாளைப் பட்சிப்பதைப்போலவும், அக்கினி ஜூவாலை பதரை விழுங்கிப்போவதைப் போலவும், அவர்களின் வேர் அழுகிப்போவதைப்போலவும், அவர்களின் மலர்கள் தூசியைப்போலவே மேலே எழும்பும்.

Therefore, as the fire devoureth the stubble, and the flame consumeth the chaff, their root shall be rottenness, and their blossoms shall go up as dust; because they have cast away the law of the Lord of Hosts, and despised the word of the Holy One of Israel.

25 ஆகையால் கர்த்தருடைய கோபம் தமது ஜனங்களுக்கு விரோதமாய் மூண்டது, அவர்களுக்கு விரோதமாய் அவர் தன் புயத்தை நீட்டி, அவர்களை அடித்தார். பர்வதங்கள் அதிர்ந்தன. அவர்களின் பிணங்கள் வீதிகளின் நடுவே கிழிக்கப்பட்டன. இருப்பினும் அவர் கோபம் ஆறாமல், அவர் புயம் இன்னும் நீட்டினபடியே இருக்கிறது.

Therefore, is the anger of the Lord kindled against his people, and he hath stretched forth his hand against them, and hath smitten them; and the hills did tremble, and their carcasses were torn in the midst of the streets. For all this his anger is not turned away, but his hand is stretched out still.

26 அவர் தூரத்திலுள்ள தேசத்தாருக்கு ஒரு கொடியை ஏற்றி, அவர்களைப் பூமியின் கடையாந்தரங்களிலிருந்து பயில்காட்டி அழைப்பார். அப்பொழுது அவர்கள் தீவிரமும் வேகமுமாய் வருவார்கள். அவர்களுக்குள் ஒருவனும் சோர்வடைவதுமில்லை, இடறலடைவதுமில்லை.

And he will lift up an ensign to the nations from far, and will hiss unto them from the end of the earth; and behold, they shall come with speed swiftly; none shall be weary nor stumble among them.

27 ஒருவனும் தூங்குகிறதுமில்லை. உறங்குகிறதுமில்லை. அவர்களின் அரைக்கச்சைகள் அவிழ்வதுமில்லை. அவர்களின் பாதரட்சைகளின் வார் அறுந்துபோவதுமில்லை.

None shall slumber nor sleep; neither shall the girdle of their loins be loosed, nor the latchet of their shoes be broken;

28 அவர்களின் அம்புகளோ கூர்மையாகவும், அவர்களின் எல்லா வில்லுகளும் நாணேற்றினவைகளாகவும், அவர்களின் குதிரைகளின் குளம்புகள் கன்மலையாக எண்ணப்பட்டவைகளாகவும், அவர்களின் சக்கரங்கள் சுழல்காற்றைப்போலவும், சிங்கத்தின் கெர்ச்சிப்பைப் போலவுமிருக்கும்.

Whose arrows shall be sharp, and all their bows bent, and their horses' hoofs shall be counted like flint, and their wheels like a whirlwind, their roaring like a lion.

29 அவர்கள் பால சிங்கத்தைப்போல கெர்ச்சிப்பார்கள்; ஆம் அவர்கள் கெர்ச்சித்து இரையைப் பிடித்து பத்திரமாய் எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள். எவரும் விடுவிப்பதில்லை.

They shall roar like young lions; yea, they shall roar, and lay hold of the prey, and shall carry away safe, and none shall deliver.

30 அந்நாளில் சமுத்திரம் இரைவதுபோல் அவர்களுக்கு விரோதமாய் இவர்கள் இரைவார்கள். அவர்கள் பூமியைப் பார்த்தால், இதோ, அந்தகாரமும், வியாகுலமும்தான். அதன் வானத்தின் வெளிச்சம் இருண்டிருக்கிறது.

And in that day they shall roar against them like the roaring of the sea; and if they look unto the land, behold, darkness and sorrow, and the light is darkened in the heavens thereof.

# 2 நேபி 16

1 உசியா ராஜா மரணமடைந்த வருஷத்தில், ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கக் கண்டேன், அவருடைய வஸ்திரத்தொங்கலால் ஆலயம் நிறைந்திருந்தது.

2 அதன்மேலே சேராபீன்கள் நின்றார்கள். ஒவ்வொருவனுக்கும் ஆறு செட்டைகளிருந்தன; அவன் தன் இரண்டு செட்டைகளால் தன் முகத்தை மூடி, தன் இரண்டு செட்டைகளால் பாதங்களை மூடி, இரண்டு செட்டைகளால் பறந்து,

3 ஒருவன் மற்றொருவனை நோக்கி: சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்றான்.

4 கூப்பிடுகிறவனின் சத்தத்தால், கதவுகளின் நிலைகள் நகர்ந்து ஆலயம் புகையினால் நிரம்பிற்று.

5 அப்பொழுது நான் சொன்னதாவது: நான் அதமானேன், நான் அசுத்த உதடுகளுள்ள மனுஷனாயிருப்பதின் நிமித்தம், எனக்கு ஐயோ. நான் அசுத்த உதடுளுள்ள ஜனங்கள் மத்தியில் வாசமாயிருக்கிறேன். என் கண்கள் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைக் கண்டன, என்றேன்.

6 அப்பொழுது சேராபீன்களில் ஒருவன், பலிபீடத்திலிருந்து குறட்டால் அவன் எடுத்த ஒரு நெருப்புத் தழலை, தன் கையிலே வைத்து என்னிடம் பறந்து வந்து,

7 அதை என் வாயின்மீது வைத்து, இதோ, இது உன் உதடுகளைத் தொட்டது. உன் அக்கிரமம் எடுக்கப்பட்டது. உன் பாவம் சுத்திகரிக்கப்பட்டது என்றான்.

8 நான் யாரை அனுப்புவேன், நமக்காகப் போகிறவன் யார்? என்று கர்த்தருடைய சத்தத்தை நான் கேட்டேன். பின்பு நான், இதோ அடியேன் இருக்கிறேன், என்னை அனுப்பும், என்றேன்.

9 அவர், நீ போய் இந்த ஜனங்களை நோக்கி: நீங்கள் மெய்யாகவே கேட்டீர்கள். ஆனால் புரிந்து கொள்ளவில்லை; நீங்கள் மெய்யாகவே கண்டீர்கள். ஆனால் அவர்கள் அறியாமலிருக்கிறார்கள், என்று சொல், என்றார்.

10 இந்த ஜனங்கள் தங்கள் கண்களினால் காணாமலும், தங்கள் காதுகளால் கேளாமலும், தங்கள் இருதயத்தால் அறியாமலும், மனமாறி சுகப்படாமலும் இருக்கும்பொருட்டு, இவர்களின் இருதயங்களைக் கொழுத்ததாக்கி, அவர்களின் காதுகளை மந்தமாக்கி, அவர்களின் கண்களை மூடிப்போடு, என்றார்.

11 அப்பொழுது நான், ஆண்டவரே எதுவரைக்கும், என்று கேட்டேன். அதற்கு அவர், பட்டணங்கள் குடியில்லாமலும், வீடுகள் மனுஷ சஞ்சாரமில்லாமலும், பாழாகி பூமி அவாந்தர வெளியாகி,

# 2 Nephi 16

In the year that king Uzziah died, I saw also the Lord sitting upon a throne, high and lifted up, and his train filled the temple.

Above it stood the seraphim; each one had six wings; with twain he covered his face, and with twain he covered his feet, and with twain he did fly.

And one cried unto another, and said: Holy, holy, holy, is the Lord of Hosts; the whole earth is full of his glory.

And the posts of the door moved at the voice of him that cried, and the house was filled with smoke.

Then said I: Wo is unto me! for I am undone; because I am a man of unclean lips; and I dwell in the midst of a people of unclean lips; for mine eyes have seen the King, the Lord of Hosts.

Then flew one of the seraphim unto me, having a live coal in his hand, which he had taken with the tongs from off the altar;

And he laid it upon my mouth, and said: Lo, this has touched thy lips; and thine iniquity is taken away, and thy sin purged.

Also I heard the voice of the Lord, saying: Whom shall I send, and who will go for us? Then I said: Here am I; send me.

And he said: Go and tell this people—Hear ye indeed, but they understood not; and see ye indeed, but they perceived not.

Make the heart of this people fat, and make their ears heavy, and shut their eyes—lest they see with their eyes, and hear with their ears, and understand with their heart, and be converted and be healed.

Then said I: Lord, how long? And he said: Until the cities be wasted without inhabitant, and the houses without man, and the land be utterly desolate;

12 கர்த்தர் மனுஷரைத் தூரமாக விலக்குவதினால்,
தேசத்தின் நடுமையம் முற்றிலும் வெறுமையாக்-
கப்படும் வரைக்குமே.

And the Lord have removed men far away, for there shall be a great forsaking in the midst of the land.

13 ஆகிலும் பத்தில் ஒரு பாகம் இருப்பார்கள். அவர்-
கள் திரும்புவார்கள். பட்சிக்கப்படுவார்கள். கர்வா-
லி மரமும், அரச மரமும், தங்கள் இலைகளை
உதிர்த்த பின்னரும் அவைகளின் அடிமரம் இருப்-
பதுபோல, பரிசுத்த சந்ததியார் அதன் அடிமரமாய்
இருப்பார்கள், என்றார்.

But yet there shall be a tenth, and they shall return, and shall be eaten, as a teil tree, and as an oak whose substance is in them when they cast their leaves; so the holy seed shall be the substance thereof.

# 2 நேபி 17

1 அந்தப்படியே, உசியாவினுடைய குமாரனாகிய, யோதாமின் குமாரன் ஆகாஸ் என்னும் யூதா தேசத்து ராஜாவின் நாட்களிலே, ரேத்சீன் என்னும் சீரியாவின் ராஜாவும், ரெமலியாவின் குமாரனாகிய பெக்கா என்னும் இஸ்ரவேலின் ராஜாவும், எருசலேமின்மேல் யுத்தம்பண்ணவந்தார்கள், ஆனால் அவர்களால் அதைப் பிடிக்கக்கூடாமற்போயிற்று.

2 சீரியா எப்பிராயீமைச் சார்ந்திருக்கிறது, என்று தாவீதின் வீட்டாருக்குச் சொல்லப்பட்டது. அவன் இருதயமும், அவன் ஜனத்தின் இருதயமும், காட்டிலுள்ள மரங்கள் காற்றினால் அசைகிறதுபோல அசைந்தன.

3 அப்பொழுது கர்த்தர் ஏசாயாவை நோக்கி, நீயும் உன் மகன் சேயார்யாசூபுமாக, வண்ணார் வெளியின் நெடுஞ்சாலையிலுமுள்ள, மேற்குளத்து மதகின் கடைசிமட்டும், ஆகாஸூக்கு எதிர்கொண்டுபோய்,

4 அவனை நோக்கி ஜாக்கிரதையாயும், அமைதியாயும் இரு. இந்தப் புகைகிற கொள்ளிக்கட்டைகளின் இரண்டு வால்களான, சீரியரோடு வந்த ரேத்சீனும், ரெமலியா மகனும், கொண்ட உக்கிர கோபத்தின் நிமித்தம் பயப்படவும்வேண்டாம். இருதயம் துவளவும் வேண்டாம், என்று சொல்.

5 ஏனென்றால் சீரியாவும், எப்பிராயீம் மற்றும் ரெமலியாவின் குமாரனும் உனக்கு விரோதமாய் துர் ஆலோசனைபண்ணி,

6 நாம் யூதாவுக்கு விரோதமாய்ப்போய் அதை கிலேசப்படுத்தி நமக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு, ஆம் தபேயாலின் குமாரனை அதன் நடுவே ராஜாவாக ஏற்படுத்துவோம் என்றனர், என்றார்.

7 கர்த்தராகிய தேவன், அது நிலைத்து நிற்பதுமில்லை, அது சம்பவிக்கப் போவதுமில்லை, என்று உரைக்கிறார்.

8 ஏனெனில் சீரியாவின் தலை தமஸ்கு, தமஸ்குவின் தலை ரேத்சீன், இன்னும் அறுபந்தைந்து வருஷங்களிலே எப்பிராயீம் ஒரு ஜனமாயிராதபடிக்கு நொறுங்குண்டுபோம்.

9 எப்பிராயீமின் தலை சமாரியா. சமாரியாவின் தலை ரெமலியாவின் குமாரன். நீங்கள் விசுவாசிக்காவிட்டால், மெய்யாகவே நீங்கள் நிலைபெறமாட்டீர்கள்.

10 பின்னும் கர்த்தர் ஆகாஸை நோக்கி:

11 நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அறிகுறியை வேண்டிக்கொள்; அதை ஆழத்திலிருந்தாகிலும், உன்னதத்திலிருந்தாகிலும் உண்டாகக் கேட்டுக்கொள், என்று சொன்னார்.

# 2 Nephi 17

And it came to pass in the days of Ahaz the son of Jotham, the son of Uzziah, king of Judah, that Rezin, king of Syria, and Pekah the son of Remaliah, king of Israel, went up toward Jerusalem to war against it, but could not prevail against it.

And it was told the house of David, saying: Syria is confederate with Ephraim. And his heart was moved, and the heart of his people, as the trees of the wood are moved with the wind.

Then said the Lord unto Isaiah: Go forth now to meet Ahaz, thou and Shearjashub thy son, at the end of the conduit of the upper pool in the highway of the fuller's field;

And say unto him: Take heed, and be quiet; fear not, neither be faint-hearted for the two tails of these smoking firebrands, for the fierce anger of Rezin with Syria, and of the son of Remaliah.

Because Syria, Ephraim, and the son of Remaliah, have taken evil counsel against thee, saying:

Let us go up against Judah and vex it, and let us make a breach therein for us, and set a king in the midst of it, yea, the son of Tabeal.

Thus saith the Lord God: It shall not stand, neither shall it come to pass.

For the head of Syria is Damascus, and the head of Damascus, Rezin; and within threescore and five years shall Ephraim be broken that it be not a people.

And the head of Ephraim is Samaria, and the head of Samaria is Remaliah's son. If ye will not believe surely ye shall not be established.

Moreover, the Lord spake again unto Ahaz, saying:

Ask thee a sign of the Lord thy God; ask it either in the depths, or in the heights above.

12 ஆகாஸோ நான் கேட்கமாட்டேன். நான் கர்த்த-
ரைப் பரீட்சை செய்யமாட்டேன், என்றான்.

But Ahaz said: I will not ask, neither will I tempt the Lord.

13 அவன் சொன்னான், தாவீதின் வம்சத்தாரே கே-
ளுங்கள், நீங்கள் மனுஷரை விசனப்படுத்துகிறது
போதாதென்று, என் தேவனையும் விசனப்படுத்தப்
பார்க்கிறது எளிதான காரியமோ?

And he said: Hear ye now, O house of David; is it a small thing for you to weary men, but will ye weary my God also?

14 ஆதலால், ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அறி-
குறியைக் கொடுப்பார், இதோ ஒரு கன்னிகை கர்ப்-
பவதியாகி, ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்-
கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்.

Therefore, the Lord himself shall give you a sign—Behold, a virgin shall conceive, and shall bear a son, and shall call his name Immanuel.

15 தீமையை வெறுத்து, நன்மையைத் தெரிந்து-
கொள்ள, அறியும் வயது மட்டும், அவர் வெண்-
ணையையும் தேனையும் சாப்பிடுவார்.

Butter and honey shall he eat, that he may know to refuse the evil and to choose the good.

16 அந்தப் பிள்ளை தீமையை வெறுக்கவும், நன்-
மையைத் தெரிந்துகொள்ளவும் அறிகிறதற்கு
முன்னே, நீ அருவருக்கிற நிலம் அதின் இரண்டு ரா-
ஜாக்களாலும் விட்டுவிடப்படும்.

For before the child shall know to refuse the evil and choose the good, the land that thou abhorrest shall be forsaken of both her kings.

17 எப்பிராயீம் யூதாவைவிட்டுப் பிரிந்த நாள் முதல்,
வராத நாட்களைக் கர்த்தர் உன் மேலும், உன் ஜனத்-
தின் மேலும், உன் பிதாவுடைய வம்சத்தின் மேலும்
அசீரியாவின் ராஜாவினாலே வரப்பண்ணுவார்.

The Lord shall bring upon thee, and upon thy people, and upon thy father's house, days that have not come from the day that Ephraim departed from Judah, the king of Assyria.

18 அந்நாட்களில் கர்த்தர் எகிப்தின் கடையாந்தரத்-
திலுள்ள ஈயையும், அசீரியா தேசத்திலிருந்து தேனீ-
யையும் பயில்காட்டி அழைப்பார்.

And it shall come to pass in that day that the Lord shall hiss for the fly that is in the uttermost part of Egypt, and for the bee that is in the land of Assyria.

19 அவைகள் வந்து, அவைகள் அனைத்தும் பா-
ழான பள்ளத்தாக்குகளிலும், பாறையின் வெடிப்பு-
களிலும், எல்லா முட்செடிகளின் மீதும், எல்லா செ-
டிகளின் மீதும் தங்கும்.

And they shall come, and shall rest all of them in the desolate valleys, and in the holes of the rocks, and upon all thorns, and upon all bushes.

20 அதே நாளில் கர்த்தர் வாடகைக்கு வாங்கிய சவர-
கன் கத்தியால், நதியின் அக்கரையிலுள்ள அசீரீ-
யா ராஜாவினால் தலைமயிரையும், கால்மயிரை-
யும் சிரைப்பிப்பார், அது தாடியையும் வாங்கிப்-
போடும்.

In the same day shall the Lord shave with a razor that is hired, by them beyond the river, by the king of Assyria, the head, and the hair of the feet; and it shall also consume the beard.

21 அந்நாளில் ஒருவன் ஒரு இளம் பசுவையும்,
இரண்டு ஆடுகளையும் பராமரிப்பான்.

And it shall come to pass in that day, a man shall nourish a young cow and two sheep;

22 அவைகள் பூரணமாய் பால் கறக்கிறபடியினால்,
வெண்ணையைச் சாப்பிடுவான், தேசத்தில் மீதி-
யாயிருப்பவனெவனும், வெண்ணையையும், தே-
னையும் சாப்பிடுவான்.

And it shall come to pass, for the abundance of milk they shall give he shall eat butter; for butter and honey shall every one eat that is left in the land.

23 அந்நாளிலே ஆயிரம் வெள்ளிக்காசு பெறும்,
ஆயிரம் திராட்சைச் செடியிருந்த நிலமெல்லாம்,
முட்செடியும் நெரிஞ்சிலுமாகும்.

And it shall come to pass in that day, every place shall be, where there were a thousand vines at a thousand silverlings, which shall be for briers and thorns.

24 தேசமெங்கும் முட்செடியும் நெரிஞ்சிலும் உண்டா-
யிருப்பதால், மனுஷர் அங்கே அம்புகளுடனும்,
வில்லுகளுடனும் வருவார்கள்.

With arrows and with bows shall men come thither, because all the land shall become briers and thorns.

25 மண்வெட்டியால் கொத்தப்படுகிற மலைகளில், முட்செடிகளும் நெரிஞ்சில்களும் வருமோவென்ற பயமில்லை. ஆனால் அது மாடுகளை ஓட்டிவிடுவதற்கும், ஆடுகள் மிதிப்பதற்குமான இடமாயிருக்கும்.

And all hills that shall be digged with the mattock, there shall not come thither the fear of briers and thorns; but it shall be for the sending forth of oxen, and the treading of lesser cattle.

## 2 நேபி 18

1 பின்னும் கர்த்தருடைய வார்த்தை என்னை நோக்-
கி: நீ ஒரு பத்திரத்தை எடுத்து, மனுஷனின் எழுத்-
தாணியால், அதிலே மகேர்-சாலால்-அஷ்-
பாஸ்ஸைக் குறித்து எழுது என்றார்.
2 அப்பொழுது நான் உண்மையுள்ள சாட்சிக்கார-
ராகிய, ஆசாரியனான உரியாவையும், யெபெரெகி-
யாவின் குமாரனான சகரியாவையும் அதற்குச்
சாட்சிகளாக வைத்துக்கொண்டேன்.
3 நான் தீர்க்கதரிசியானவளைச் சேர்ந்தபோது,
அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்றாள்.
அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: மகேர்-
சாலால்-அஷ்-பாஸ் என்னும் பேரை அவனுக்கு
இடு.
4 ஏனெனில் இதோ, இந்தப் பாலகன், அப்பா, அம்-
மா என்று கூப்பிட அறியுமுன்னே, தமஸ்குவின்
ஆஸ்தியும், சமாரியாவின் கொள்ளையும், அசீரி-
யாவின் ராஜாவுக்கு முன்பாகக்கொண்டு போகப்ப-
டுமென்றார்.
5 பின்னும் கர்த்தர் என்னை நோக்கிச் சொன்னதா-
வது:
6 இந்த ஜனம் மெதுவாய் ஓடுகிற சீலோவாவின்
தண்ணீர்களை அசட்டைபண்ணி, ரேத்சீனையும்,
ரெமலியாவின் குமாரனையும் சார்ந்து சந்தோஷிக்-
கிறபடியினால்;
7 இப்பொழுது, இதோ, கர்த்தர் வல்லமையுள்ள திர-
ளான ஆற்றுநீரைப்போல, அசீரியாவின் ராஜாவும்,
அவனுடைய சகல ஆடம்பரத்தையும், அவர்கள்மீ-
து புரளப்பண்ணுவார், அது அவனுடைய ஓடைக-
ளெல்லாவற்றின் மீதும் போய், அவனுடைய எல்-
லா கரைகள் மேலும் புரண்டு,
8 யூதாவுக்குள் புகுந்து கழுத்துமட்டும் அது தளும்-
பிப்போகும். இம்மானுவேலே, அவன் செட்டைக-
ளின் விரிவு, உமது தேசத்தின் விசாலத்தை மூடும்.
9 ஜனங்களே நீங்கள் கூட்டங்கூடுங்கள். நீங்கள்
துண்டுகளாக நொறுக்கப்படுவீர்கள், தூரதேசத்தா-
ராகிய நீங்கள் எல்லாரும் செவிகொடுங்கள்,
இடைக்கட்டிக் கொள்ளுங்கள். நீங்கள் துண்டுக-
ளாக நொறுக்கப்படுவீர்கள், இடைக் கட்டிக்கொள்-
ளுங்கள். நீங்கள் துண்டுகளாக நொறுக்கப்படுவீர்-
கள்.
10 ஆலோசனை செய்யுங்கள். அது அபத்தமாகும்,
வார்த்தையை வசனியுங்கள். அது நிற்காது, ஏனெ-
னில் தேவன் எங்களோடே இருக்கிறார்.
11 கனமான கரத்தால் கர்த்தர் என்னுடனே இவ்வித-
மாய்ப் பேசி, நான் இந்த ஜனத்தின் வழியிலே நடக்-
கக்கூடாது, என்று எனக்குப் படிப்பித்து விளம்பி-
னதாவது:

## 2 Nephi 18

Moreover, the word of the Lord said unto me: Take thee a great roll, and write in it with a man’s pen, concerning Maher-shalal-hash-baz.

And I took unto me faithful witnesses to record, Uriah the priest, and Zechariah the son of Jeberechiah.

And I went unto the prophetess; and she conceived and bare a son. Then said the Lord to me: Call his name, Maher-shalal-hash-baz.

For behold, the child shall not have knowledge to cry, My father, and my mother, before the riches of Damascus and the spoil of Samaria shall be taken away before the king of Assyria.

The Lord spake also unto me again, saying:

Forasmuch as this people refuseth the waters of Shiloah that go softly, and rejoice in Rezin and Remaliah’s son;

Now therefore, behold, the Lord bringeth up upon them the waters of the river, strong and many, even the king of Assyria and all his glory; and he shall come up over all his channels, and go over all his banks.

And he shall pass through Judah; he shall overflow and go over, he shall reach even to the neck; and the stretching out of his wings shall fill the breadth of thy land, O Immanuel.

Associate yourselves, O ye people, and ye shall be broken in pieces; and give ear all ye of far countries; gird yourselves, and ye shall be broken in pieces; gird yourselves, and ye shall be broken in pieces.

Take counsel together, and it shall come to naught; speak the word, and it shall not stand; for God is with us.

For the Lord spake thus to me with a strong hand, and instructed me that I should not walk in the way of this people, saying:

12 இந்த ஜனங்கள் கட்டுப்பாடென்று சொல்லுகிறதையெல்லாம் நீங்கள் கட்டுப்பாடென்று சொல்லாமலும், அவர்கள் பயப்படுகிற பயத்தின்படி நீங்கள் பயப்படாமலும், கலங்காமலுமிருங்கள்.

Say ye not, A confederacy, to all to whom this people shall say, A confederacy; neither fear ye their fear, nor be afraid.

13 சேனைகளின் கர்த்தரையே பரிசுத்தம் பண்ணுங்கள், அவரே உங்கள் பயமாயிருப்பாராக, அவரே உங்கள் அச்சமுமாயிருப்பாராக.

Sanctify the Lord of Hosts himself, and let him be your fear, and let him be your dread.

14 அவர் உங்களுக்குப் பரிசுத்த ஸ்தலமாயிருப்பார்; ஆகிலும் இஸ்ரவேலின் இரண்டு வீட்டாருக்கும் தடைக் கல்லும், இடறுதலின் கன்மலையும், எருசலேமின் குடிகளுக்குச் சுருக்குக் கண்ணியுமாயிருப்பார்.

And he shall be for a sanctuary; but for a stone of stumbling, and for a rock of offense to both the houses of Israel, for a gin and a snare to the inhabitants of Jerusalem.

15 அவர்களில் அநேகர் இடறிவிழுந்து, நொறுங்கிச் சிக்குண்டு பிடிபடுவார்கள்.

And many among them shall stumble and fall, and be broken, and be snared, and be taken.

16 சாட்சியத்தின் ஆகமத்தைக் காட்டி, என் சீஷருக்குள்ளே நியாயப்பிரமாணத்தை முத்திரையிடு, என்றார்.

Bind up the testimony, seal the law among my disciples.

17 யாக்கோபின் வீட்டாருக்குத் தமது முகத்தை மறைக்கிற, கர்த்தருக்காகக் காத்திருந்து, அவருக்கு எதிர்பார்த்திருப்பேன்.

And I will wait upon the Lord, that hideth his face from the house of Jacob, and I will look for him.

18 இதோ, நானும் கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும், சீயோன் மலையில் வாசமாயிருக்கிற, சேனைகளின் கர்த்தராலே, இஸ்ரவேலில் அறிகுறிகளாகவும், அற்புதங்களாகவும் இருக்கிறோம்.

Behold, I and the children whom the Lord hath given me are for signs and for wonders in Israel from the Lord of Hosts, which dwelleth in Mount Zion.

19 அவர்கள் உங்களை நோக்கி, அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும், விசாரியுங்களென்று சொல்லும்போது, ஜீவனுள்ளோர் மரித்தோரிலிருந்து கேட்க, ஜனம் தங்கள் தேவனிடத்தில் விசாரிக்கக் கூடாதோ?

And when they shall say unto you: Seek unto them that have familiar spirits, and unto wizards that peep and mutter—should not a people seek unto their God for the living to hear from the dead?

20 நியாயப்பிரமாணத்தையும் சாட்சியத்தின் ஆகமத்தையும் கவனிக்கவேண்டும், அவர்கள் இந்த வார்த்தையின்படி பேசவில்லையெனில், அது அவர்களுக்குள் ஒளியில்லாமையினால் இருக்கும்.

To the law and to the testimony; and if they speak not according to this word, it is because there is no light in them.

21 அவர்கள் பலப்படாமலும், பசியாலும் அதைக் கடந்துபோவார்கள். ஆனபடியால், அவர்கள் பட்டினியாயிருக்கும்போது மூர்க்க வெறிகொண்டு தங்கள் ராஜாவையும் தங்கள் தேவனையும் தூஷித்து அண்ணாந்து பார்ப்பார்கள்.

And they shall pass through it hardly bestead and hungry; and it shall come to pass that when they shall be hungry, they shall fret themselves, and curse their king and their God, and look upward.

22 அவர்கள் பூமியை நோக்கிப் பார்ப்பார்கள், இக்கட்டும், அந்தகாரமும், வியாகுலத்தின் புகைச்சலையும், காண்பார்கள். அந்தகாரத்திலே தள்ளப்படுவார்கள்.

And they shall look unto the earth and behold trouble, and darkness, dimness of anguish, and shall be driven to darkness.

# 2 நேபி 19

1 ஆகிலும், அவன் முன்னர் செபுலோன் தேசத்தையும், நப்தலி தேசத்தையும் அதிகமாய் இடுக்கப்படுத்தாதபோதும், பின்னர் தேசத்தாரிருந்த கலிலேயாவில் யோர்தானுக்கு அப்பால் சிவந்த சமுத்திரத்தின் வழியே, மிகவும் கொடிய முறையில் இடுக்கப்படுத்தினபோதும், இருந்த அவளுடைய இழிவைப்போல அது இருண்டிருப்பதில்லை.

2 இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின் மேல், வெளிச்சம் பிரகாசித்தது.

3 அந்த தேசத்தைத் திரளாக்கி, அதற்கு மகிழ்ச்சியைப் பெருகப்பண்ணினீர். அறுப்பில் மனுஷர்கள் மகிழ்கிறது போலவும், கொள்ளையைப் பங்கிட்டுக்கொள்ளுகையில் களிகூருவது போலவும், உமக்கு முன்பாக மகிழ்கிறார்கள்.

4 அவர்கள் சுமந்த நுகத்தடியையும், அவர்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், அவர்களை ஒடுக்கிறவனின் கோலையும், முறித்துப்போட்டீர்.

5 யுத்தம்புரிகிற, வீரருடைய ஒவ்வொரு யுத்தமும் அமளியாய் இருக்கிறது, இரத்தத்தில் புரண்ட வஸ்திரங்கள் அக்கினிக்கு இரையாகச் சுட்டெரிக்கப்படும்.

6 நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு எனப்படும்.

7 தன் ராஜ்யத்தைத் திடப்படுத்தி, அதை இது முதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தீர்ப்பினாலும், நியாயத்தினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, தாவீதின் சிங்காசனத்தின்மீது அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்திற்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை. சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்.

8 கர்த்தர் தன் வார்த்தையை யாக்கோபுக்கு அனுப்பினார், அது இஸ்ரவேலின் மீது இறங்கிற்று.

9 அகந்தையும் மனப்பெருமையுமாய்ச் சொல்லுகிற எப்பிராயீமரும், சமாரியாவின் குடிகளுமாகிய, எல்லா ஜனத்திற்கும் அது தெரியவரும்.

10 செங்கல் கட்டு இடிந்துபோயிற்று. பொளிந்த கல்லாலே திரும்பக் கட்டுவோம்; காட்டத்தி மரங்கள் வெட்டிப்போடப்பட்டது. அவைகளுக்குப் பதிலாகக் கேதுரு மரங்களை வைப்போம்.

11 ஆதலால் கர்த்தர் ரேத்சீனுடைய சத்துருக்களை அவனுக்கு விரோதமாய் உயர்த்தி, அவனுடைய சத்துருக்களை ஒன்றாய்ச் சேர்ப்பார்.

# 2 Nephi 19

Nevertheless, the dimness shall not be such as was in her vexation, when at first he lightly afflicted the land of Zebulun, and the land of Naphtali, and afterwards did more grievously afflict by the way of the Red Sea beyond Jordan in Galilee of the nations.

The people that walked in darkness have seen a great light; they that dwell in the land of the shadow of death, upon them hath the light shined.

Thou hast multiplied the nation, and increased the joy—they joy before thee according to the joy in harvest, and as men rejoice when they divide the spoil.

For thou hast broken the yoke of his burden, and the staff of his shoulder, the rod of his oppressor.

For every battle of the warrior is with confused noise, and garments rolled in blood; but this shall be with burning and fuel of fire.

For unto us a child is born, unto us a son is given; and the government shall be upon his shoulder; and his name shall be called, Wonderful, Counselor, The Mighty God, The Everlasting Father, The Prince of Peace.

Of the increase of government and peace there is no end, upon the throne of David, and upon his kingdom to order it, and to establish it with judgment and with justice from henceforth, even forever. The zeal of the Lord of Hosts will perform this.

The Lord sent his word unto Jacob and it hath lighted upon Israel.

And all the people shall know, even Ephraim and the inhabitants of Samaria, that say in the pride and stoutness of heart:

The bricks are fallen down, but we will build with hewn stones; the sycamores are cut down, but we will change them into cedars.

Therefore the Lord shall set up the adversaries of Rezin against him, and join his enemies together;

12 முற்புறத்தில் சீரியரும், பிற்புறத்தில் பெலிஸ்தரும் வந்து, இஸ்ரவேலைத் திறந்த வாயால் பட்சிப்பார்கள்; இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டினபடியே இருக்கிறது.

The Syrians before and the Philistines behind; and they shall devour Israel with open mouth. For all this his anger is not turned away, but his hand is stretched out still.

13 ஜனங்கள் தங்களை அடிக்கிறவரிடத்தில் திரும்பாமலும், சேனைகளின் கர்த்தரைத் தேடாமலும் இருக்கிறார்கள்.

For the people turneth not unto him that smiteth them, neither do they seek the Lord of Hosts.

14 ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலிடமிருந்து தலையையும் வாலையும் கிளையையும் நாணலையும் ஒரே நாளில் வெட்டிப்போடுவார்.

Therefore will the Lord cut off from Israel head and tail, branch and rush in one day.

15 மூப்பனே தலை; பொய்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால்.

The ancient, he is the head; and the prophet that teacheth lies, he is the tail.

16 இந்த ஜனத்தின் தலைவர்களே அவர்கள் தப்பு செய்யக் காரணமாயிருந்தார்கள். அவர்களால் வழிநடத்தப்பட்டவர்கள் அழிக்கப்பட்டனர்.

For the leaders of this people cause them to err; and they that are led of them are destroyed.

17 ஆதலால் ஆண்டவர் அவர்கள் வாலிபர்மேல் பிரியமாயிருப்பதில்லை. அவர்களிலிருக்கிற திக்கற்ற பிள்ளைகள் மேலும், விதவைகள் மேலும் இரங்குவதுமில்லை. அவர்கள் அனைவரும் மாயக்காரரும், பொல்லாதவர்களுமாயிருக்கிறார்கள், எல்லா வாயும் ஆகாமியம் பேசும். இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், கை நீட்டியே இருக்கிறது.

Therefore the Lord shall have no joy in their young men, neither shall have mercy on their fatherless and widows; for every one of them is a hypocrite and an evildoer, and every mouth speaketh folly. For all this his anger is not turned away, but his hand is stretched out still.

18 துன்மார்க்கம் அக்கினியைப்போல எரிகிறது, அது முட்செடியையும், நெருஞ்சிலையும் பட்சிக்கும். அது நெருங்கிய காட்டைக் கொளுத்தும். புகை திரண்டு எழும்பும்.

For wickedness burneth as the fire; it shall devour the briers and thorns, and shall kindle in the thickets of the forests, and they shall mount up like the lifting up of smoke.

19 சேனைகளின் கர்த்தருடைய சினத்தால் தேசம் அந்தகாரப்பட்டு, ஜனங்கள் அக்கினிக்கு இரையாவார்கள், ஒருவனும் தன் சகோதரனைத் தப்பவிடான்.

Through the wrath of the Lord of Hosts is the land darkened, and the people shall be as the fuel of the fire; no man shall spare his brother.

20 வலதுபுறத்தில் பட்சித்தாலும் பசித்திருப்பார்கள், இடது புறத்தில் தின்றாலும் திருப்தியடையார்கள், அவனவன் தன்தன் புயத்தின் மாம்சத்தைத் தின்பான்.

And he shall snatch on the right hand and be hungry; and he shall eat on the left hand and they shall not be satisfied; they shall eat every man the flesh of his own arm—

21 மனாசே எப்பிராயீம், எப்பிராயீம் மனாசே, இவர்கள் ஏகமாய் யூதாவுக்கு விரோதமாயிருப்பார்கள். இவையெல்லாவற்றிலும் அவருடைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை நீட்டனபடியே இருக்கிறது.

Manasseh, Ephraim; and Ephraim, Manasseh; they together shall be against Judah. For all this his anger is not turned away, but his hand is stretched out still.

# 2 நேபி 20

1 ஏழைகளை வழக்கிலே தோற்கப்பண்ணவும், என்
ஜனத்தின் சிறுமையானவர்களின் நியாயத்தைப்
புரட்டவும், விதவைகளைச் சூறையாடவும், திக்-
கற்ற பிள்ளைகளைக் கொள்ளையிடவும்,
2 அநியாயமான தாக்கீதுகளை கட்டளையிடுகிற-
வர்களுக்கும், கொடுமையான கட்டளைகளை
எழுதுகிறவர்களுக்கும், ஐயோ!
3 விசாரிப்பின் நாளிலும், தூரத்திலிருந்து வரும்
பாழ்க்கடிப்பின் நாளிலும், நீங்கள் என்ன செய்வீர்-
கள்? சகாயத்தை நாடி யாரிடத்தில் ஓடுவீர்கள்?
உங்கள் மகிமையை எங்கே வைப்பீர்கள்?
4 நான் இல்லாமல், அவர்கள் கட்டுண்டவர்களின்
கீழ் முடங்கி, கொலை செய்யப்பட்டவர்களின் கீழ்
விழுவார்கள். இவையெல்லாவற்றிலும் அவரு-
டைய கோபம் ஆறாமல், இன்னும் அவருடைய கை
நீட்டினபடியே இருக்கிறது.
5 என் கோபத்தின் கோலாகிய அசீரியனே, அவர்-
கள் கையிலிருக்கிற தடி, அவர்களின் சினம்.
6 அவபக்தியான தேசங்களுக்கு விரோதமாய் நான்
அவனை அனுப்பி, என் கோபத்திற்குள்ளான
ஜனத்தைக் கொள்ளையிடவும், சூறையாடவும்,
அவர்களை வீதிகளின் சேற்றைப்போல மிதித்துப்-
போடவும், அவனுக்கு கட்டளை கொடுப்பேன்.
7 அவனோ அப்படி எண்ணுகிறதுமில்லை. அவன்
இருதயம் அப்படிப்பட்டதை நினைக்கிறதுமில்-
லை, கொஞ்சமல்ல, அநேக தேசங்களை அழிக்க-
வும், சங்கரிக்கவுமே தன் மனதிலே நினைவுகொள்-
ளுகிறான்.
8 அவன்: என் பிரபுக்கள் அனைவரும் ராஜாக்க-
ளல்லவோ?
9 கல்னோ பட்டணம் கர்கேமிசைப் போலானதில்-
லையோ? ஆமாத், அர்பாத்தைப் போலானதில்லை-
யோ? சமாரியா, தமஸ்குவைப் போலானதில்லை-
யோ?
10 என் புயம் விக்கிரகங்களின் ராஜ்யங்களை உண்-
டாக்க, அதன் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்கள்
எருசலேம் மற்றும் சமாரியாவில் உள்ளவைகளை-
யும் மிஞ்சுவதாயிருந்தது.
11 நான் சமாரியாவுக்கும், அதின் விக்கிரகங்களுக்-
கும் செய்ததுபோல, எருசலேமுக்கும் அதின் விக்கிர-
கங்களுக்கும் செய்யாமலிருப்பேனோ, என்று
சொல்லுகிறான்.

# 2 Nephi 20

Wo unto them that decree unrighteous decrees, and that write grievousness which they have prescribed;

To turn away the needy from judgment, and to take away the right from the poor of my people, that widows may be their prey, and that they may rob the fatherless!

And what will ye do in the day of visitation, and in the desolation which shall come from far? to whom will ye flee for help? and where will ye leave your glory?

Without me they shall bow down under the prisoners, and they shall fall under the slain. For all this his anger is not turned away, but his hand is stretched out still.

O Assyrian, the rod of mine anger, and the staff in their hand is their indignation.

I will send him against a hypocritical nation, and against the people of my wrath will I give him a charge to take the spoil, and to take the prey, and to tread them down like the mire of the streets.

Howbeit he meaneth not so, neither doth his heart think so; but in his heart it is to destroy and cut off nations not a few.

For he saith: Are not my princes altogether kings?

Is not Calno as Carchemish? Is not Hamath as Arpad? Is not Samaria as Damascus?

As my hand hath founded the kingdoms of the idols, and whose graven images did excel them of Jerusalem and of Samaria;

Shall I not, as I have done unto Samaria and her idols, so do to Jerusalem and to her idols?

12 ஆதலால் கர்த்தர் சீயோன் மலையிலும், எருசலேமிலும், தமது செயலையெல்லாம் முடித்திருக்கும்போது, அசீரிய ராஜாவினுடைய பெருமையான இருதயத்தின் பலனையும், அவன் மேட்டிமையான பார்வைகளின் மகிமையையும், நான் தண்டிப்பேன்.

Wherefore it shall come to pass that when the Lord hath performed his whole work upon Mount Zion and upon Jerusalem, I will punish the fruit of the stout heart of the king of Assyria, and the glory of his high looks.

13 அதற்கு அவன், என் கையின் பெலத்தினாலும் என் ஞானத்தினாலும் இதைச் செய்தேன், நான் புத்திமான். நான் ஜனங்களின் எல்லைகளை மாற்றி, அவர்கள் ஐஸ்வரியங்களைக் கொள்ளையிட்டு, வல்லவனைப்போல் குடிகளைத் தாழ்த்தினேன்.

For he saith: By the strength of my hand and by my wisdom I have done these things; for I am prudent; and I have moved the borders of the people, and have robbed their treasures, and I have put down the inhabitants like a valiant man;

14 ஒரு குருவிக்கூண்டைக் கண்டுபிடிக்கிறதுபோல் என் கை ஜனங்களின் ஆஸ்தியைக் கண்டு பிடித்து, விட்டுப்போன முட்டைகளை வாரிக்கொள்வதுபோல் பூமியையெல்லாம் நான் வாரிக்கொண்டேன். ஒருவனும் செட்டையை அசைத்ததுமில்லை, வாயைத் திறந்ததுமில்லை எட்டிப்பார்த்ததுமில்லை என்று சொல்லுகிறான்.

And my hand hath found as a nest the riches of the people; and as one gathereth eggs that are left have I gathered all the earth; and there was none that moved the wing, or opened the mouth, or peeped.

15 கோடரியானது, தன்னைக்கொண்டு வெட்டுகிறவனுக்கு விரோதமாய் மேன்மைபாராட்டலாமோ? வாளானது தன்னைக் கையாடுகிறவனுக்கு விரோதமாய் பெருமை பாராட்டலாமோ? தடியானது தன்னை எடுக்கிறவர்களுக்கு விரோதமாய் அசைவது போலவும், அது மரக்கட்டையல்லவென்று கோலானது எழும்பினாற் போலவும் இருக்குமே!

Shall the ax boast itself against him that heweth therewith? Shall the saw magnify itself against him that shaketh it? As if the rod should shake itself against them that lift it up, or as if the staff should lift up itself as if it were no wood!

16 ஆகையால் சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர், அவனைச் சேர்ந்த கொழுத்தவர்களுக்குள்ளே, இளைப்பை அனுப்புவார், பட்சிக்கும் அக்கினியைப்போலும் ஒரு அக்கினியை அவன் மகிமையின் கீழ் கொளுத்துவார்.

Therefore shall the Lord, the Lord of Hosts, send among his fat ones, leanness; and under his glory he shall kindle a burning like the burning of a fire.

17 இஸ்ரவேலின் ஒளியானவர் அக்கினியும், அதின் பரிசுத்தர் அக்கினி ஜூவாலையுமாகி, ஒரே நாளிலே அவனுடைய முட்செடிகளையும், நெரிஞ்சில்களையும் தகித்துப் பட்சித்து,

And the light of Israel shall be for a fire, and his Holy One for a flame, and shall burn and shall devour his thorns and his briers in one day;

18 அவனுடைய வனத்தின் மகிமையையும், அவனுடைய பயிர் நிலத்தின் மகிமையையும், ஆத்துமாவிலும், சரீரத்திலும், அழியப்பண்ணுவார். அவர்கள், கொடிபிடிப்பவன் மயங்குவதைப்போல இருப்பார்கள்.

And shall consume the glory of his forest, and of his fruitful field, both soul and body; and they shall be as when a standard-bearer fainteth.

19 அவன் காட்டின் மீதியான மரங்கள் கொஞ்சமாயிருக்கும். ஒரு சிறுபிள்ளை அவைகளை எண்ணி எழுதலாம்.

And the rest of the trees of his forest shall be few, that a child may write them.

20 அந்நாளிலே, இஸ்ரவேலின் மீதியானவர்களும், யாக்கோபின் வம்சத்தில் தப்பினவர்களும், பின்னொருபோதும் தங்களை அடித்தவனைச் சார்ந்துகொள்ளாமல், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கர்த்தரை உண்மையாய்ச் சார்ந்துகொள்வார்கள்.

And it shall come to pass in that day, that the remnant of Israel, and such as are escaped of the house of Jacob, shall no more again stay upon him that smote them, but shall stay upon the Lord, the Holy One of Israel, in truth.

21 மீதியாயிருப்பவர்கள், ஆம் யாக்கோபில் மீதியாயிருப்பவர்களே, வல்லமையுள்ள தேவனிடத்தில் திரும்புவார்கள்.

The remnant shall return, yea, even the remnant of Jacob, unto the mighty God.

22 உன் ஜனமாகிய இஸ்ரவேல், சமுத்திரத்தின் மண-
லத்தனையாயிருந்தாலும், அவர்களில் மீதியாயி-
ருப்பவர்கள் மாத்திரம் திரும்புவார்கள். தீர்மானிக்-
கப்பட்ட அழிவு நிறைந்த நீதியோடே புரண்டுவரும்.

For though thy people Israel be as the sand of the sea, yet a remnant of them shall return; the consumption decreed shall overflow with righteousness.

23 சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர், தேசத்துக்-
குள்ளெங்கும் தீர்மானிக்கப்பட்ட அழிவை வரச்-
செய்வார்.

For the Lord God of Hosts shall make a consumption, even determined in all the land.

24 ஆகையால் சேனைகளின் கர்த்தராகிய ஆண்ட-
வர், சீயோனில் வாசமாயிருக்கிற ஜனமே, அசீரி-
யனுக்குப் பயப்படாதே, அவன் உன்னை தடியால்
அடித்து, எகிப்தியரைப்போல தன் தண்டாயுதத்தை
உன்மேல் ஓங்குவான்.

Therefore, thus saith the Lord God of Hosts: O my people that dwellest in Zion, be not afraid of the Assyrian; he shall smite thee with a rod, and shall lift up his staff against thee, after the manner of Egypt.

25 இன்னும் கொஞ்ச காலத்துக்கு, என் உக்கிரம்
அவர்களைச் சங்கரிக்கப்போகிறதினால், என் கோ-
பமும் தீர்ந்துபோம், என்று சொல்லுகிறார்.

For yet a very little while, and the indignation shall cease, and mine anger in their destruction.

26 ஓரேப் கன்மலையண்டையிலே மீதியான் வெட்-
டுண்டதுபோல் சேனைகளின் கர்த்தர், அவன் மேல்
ஒரு சவுக்கை எழும்பிவரப்பண்ணி, எகிப்திலே தம-
து கோலை சமுத்திரத்தின் மேல் ஓங்கினதுபோல்,
அதை அவன் மேல் ஓங்குவார்.

And the Lord of Hosts shall stir up a scourge for him according to the slaughter of Midian at the rock of Oreb; and as his rod was upon the sea so shall he lift it up after the manner of Egypt.

27 அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும்
உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும்,
அபிஷேகத்தினிமித்தம் நுகம் முறிந்துபோம்.

And it shall come to pass in that day that his burden shall be taken away from off thy shoulder, and his yoke from off thy neck, and the yoke shall be destroyed because of the anointing.

28 அவன் ஆயாத்துக்கு வந்து, மிக்ரோனைக் கடந்து,
மிக்மாஷிலே தன் ரஸ்துக்களை வைத்திருக்கி-
றான்.

He is come to Aiath, he is passed to Migron; at Michmash he hath laid up his carriages.

29 கணவாயைத் தாண்டி, அவர்கள் கேபாவிலே பா-
ளயமிறங்குகிறார்கள். ராமாத் திகைத்துப்போகிற-
து. சவுலின் கிபியா ஓடிப்போயிற்று.

They are gone over the passage; they have taken up their lodging at Geba; Ramath is afraid; Gibeah of Saul is fled.

30 காலீம் குமாரத்தியே உரத்த சத்தமாய்க் கூப்பிடு.
ஒடுக்கப்பட்ட ஆனதோத்தே, அதை லாயீஷூக்குக்
கேட்கும்படியாய்ச் செய்.

Lift up the voice, O daughter of Gallim; cause it to be heard unto Laish, O poor Anathoth.

31 மத்மேனா நீக்கப்பட்டது. கேபிமின் குடிகள் தப்பி
ஓடக் கூட்டங்கூடுகிறார்கள்.

Madmenah is removed; the inhabitants of Gebim gather themselves to flee.

32 ஆனாலும் அந்நாளிலே அவன் நோபிலே தங்கி,
எருசலேமின் மேடாகிய சீயோன் குமாரத்தியின் பர்-
வதத்திற்கு விரோதமாய் தன் கையைக் குலுக்கு-
வான்.

As yet shall he remain at Nob that day; he shall shake his hand against the mount of the daughter of Zion, the hill of Jerusalem.

33 இதோ, சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவர், கி-
ளைகளை பயங்கரமாய் வெட்டுவார், அமைப்பில்
ஓங்கி வளர்ந்தவைகள் வெட்டுண்டு, மேட்டிமை-
யானவைகள் தாழ்த்தப்படும்.

Behold, the Lord, the Lord of Hosts shall lop the bough with terror; and the high ones of stature shall be hewn down; and the haughty shall be humbled.

34 அவர் காடுகளின் அடர்த்தியை இரும்பினாலே
வெட்டிப்போடுவார், வல்லவராலே, லீபனோன் வி-
ழுந்துபோம்.

And he shall cut down the thickets of the forests with iron, and Lebanon shall fall by a mighty one.

# 2 நேபி 21

1 ஈசாயின் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி
அதன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செ-
ழிக்கும்.
2 ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி-
யும், ஆலோசனையையும் பெலனையும் அருளும்
ஆவியும், அறிவையும் கர்த்தரிடம் பயத்தையும்
அருளும் ஆவியுமாகிய, கர்த்தருடைய ஆவியான-
வர் அவர் மேல் தங்கியிருப்பார்.
3 அவரைக் கர்த்தருக்கு பயப்படுதலில் விரைவாய்
உணர்பவராக்கும், அவர் தமது கண் கண்டபடி நி-
யாயம் தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தண்டி-
யாமலும்,
4 நீதியின்படி அவர் ஏழைகளை நியாயம் விசாரித்-
து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள எளிமையான-
வர்களுக்கு தீர்ப்புச் செய்து, பூமியைத் தமது வாக்-
கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால்
துன்மார்க்கரைச் சங்கரிப்பார்.
5 நீதி அவருக்கு அரைக் கட்டும், விசுவாசம் அவ-
ருக்கு இடைக் கச்சையுமாயிருக்கும்.
6 ஓநாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், சிறுத்தைப்-
புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்-
ளும், கன்றுக்குட்டியும் பாலசிங்கமும் காளையும்
ஒருமித்திருக்கும், ஒரு சிறுபிள்ளை அவைகளை
நடத்துவான்.
7 பசுவும் கரடியும் கூடிமேயும்; அவைகளின் குட்டி-
கள் ஒருமித்துப் படுத்துக்கொள்ளும்; சிங்கம் மாட்-
டைப்போல் வைக்கோல் தின்னும்.
8 பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளை-
யின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை, கட்-
டுவிரியன் புற்றிலே தன் கையை வைப்பான்.
9 என் பரிசுத்த பர்வதமெங்கும் அழிப்பாருமில்லை.
கேடு செய்வாருமில்லை, சமுத்திரம் ஜலத்தினால்
மூடப்பட்டிருப்பதுபோல, பூமி கர்த்தரின் ஞானத்-
தால் நிறைந்திருக்கும்.
10 அந்நாளிலே ஜனங்களுக்குக் கொடியாக நிற்கும்
ஈசாயின் வேருக்காக புறஜாதியார் தேடுவார்கள்.
அவரின் தாபரஸ்தலம் மகிமையாயிருக்கும்.
11 அந்நாளிலே விட்டுப்போன தன் ஜனத்தின் மீதி-
யானவர்களை அசீரியாவிலும் எகிப்திலிருந்தும்,
பத்ரோஸ்ஸிலிருந்தும், கூஷ்ஷிலிருந்தும் ஏலாமி-
லிருந்தும், சிநேயாரிலிருந்தும், ஆமாத்திலிருந்தும்,
சமுத்திரத் தீவுகளிலிருந்தும் மீட்டுக்கொள்ள
இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டிடுவார்.

# 2 Nephi 21

And there shall come forth a rod out of the stem of Jesse, and a branch shall grow out of his roots.

And the Spirit of the Lord shall rest upon him, the spirit of wisdom and understanding, the spirit of counsel and might, the spirit of knowledge and of the fear of the Lord;

And shall make him of quick understanding in the fear of the Lord; and he shall not judge after the sight of his eyes, neither reprove after the hearing of his ears.

But with righteousness shall he judge the poor, and reprove with equity for the meek of the earth; and he shall smite the earth with the rod of his mouth, and with the breath of his lips shall he slay the wicked.

And righteousness shall be the girdle of his loins, and faithfulness the girdle of his reins.

The wolf also shall dwell with the lamb, and the leopard shall lie down with the kid, and the calf and the young lion and fatling together; and a little child shall lead them.

And the cow and the bear shall feed; their young ones shall lie down together; and the lion shall eat straw like the ox.

And the sucking child shall play on the hole of the asp, and the weaned child shall put his hand on the cockatrice's den.

They shall not hurt nor destroy in all my holy mountain, for the earth shall be full of the knowledge of the Lord, as the waters cover the sea.

And in that day there shall be a root of Jesse, which shall stand for an ensign of the people; to it shall the Gentiles seek; and his rest shall be glorious.

And it shall come to pass in that day that the Lord shall set his hand again the second time to recover the remnant of his people which shall be left, from Assyria, and from Egypt, and from Pathros, and from Cush, and from Elam, and from Shinar, and from Hamath, and from the islands of the sea.

12 தேசங்களுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவே-
லில் துரத்துண்டவர்களைச் சேர்த்து யூதாவில் சித-
றடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளி-
லுமிருந்தும் கூட்டிச்சேர்ப்பார்.

And he shall set up an ensign for the nations, and shall assemble the outcasts of Israel, and gather together the dispersed of Judah from the four corners of the earth.

13 எப்பிராயீமின் பொறாமை நீங்கும். யூதாவின் சத்-
துருக்கள் சங்கரிக்கப்படுவார்கள். எப்பிராயீம் யூ-
தாவின் மேல் பொறாமை கொள்ளான். யூதா எப்பி-
ராயீமை கோபப்படுத்தான்.

The envy of Ephraim also shall depart, and the adversaries of Judah shall be cut off; Ephraim shall not envy Judah, and Judah shall not vex Ephraim.

14 அவர்கள் மேற்குப்புறமாக பெலிஸ்தருடைய
தோள்களின்மீது பறப்பார்கள், அவர்கள் கிழக்கில்
உள்ளவர்களை ஒட்டுமொத்தமாகக் கொள்ளைய-
டிப்பார்கள், அவர்கள் தங்கள் கையை ஏதோம் மற்-
றும் மோவாபின் மேலும் போடுவார்கள். அம்மோன்
புத்திரர் அவர்களுக்குக் கீழ்ப்படிவார்கள்.

But they shall fly upon the shoulders of the Philistines towards the west; they shall spoil them of the east together; they shall lay their hand upon Edom and Moab; and the children of Ammon shall obey them.

15 எகிப்தின் சமுத்திரமுனையை கர்த்தர் முற்றிலும்
அழித்து, தம்முடைய காற்றின் வலிமையினால்
நதியின்மேல் தன் கையை நீட்டி, ஏழாறுகளாப் பி-
ரித்து, ஜனங்கள் கால் நனையாமல் நடந்து போ-
கும்படிபண்ணுவார்.

And the Lord shall utterly destroy the tongue of the Egyptian sea; and with his mighty wind he shall shake his hand over the river, and shall smite it in the seven streams, and make men go over dry shod.

16 எகிப்து தேசத்தின் வெளியே அவன் வந்த அந்த
நாளிலே, இஸ்ரவேலுக்கு இருந்ததைப்போல அசீரி-
யாவிலிருந்து மீதியானவர்களுக்காக அங்கே ஒரு
பெரும் பாதையிருக்கும்.

And there shall be a highway for the remnant of his people which shall be left, from Assyria, like as it was to Israel in the day that he came up out of the land of Egypt.

# 2 நேபி 22

1 அந்நாளிலே நீ சொல்வது: கர்த்தாவே நான் உம்-
மைத் துதிப்பேன்; நீர் என்மேல் கோபமாயிருந்த-
போதிலும், உம்முடைய கோபம் நீங்கிற்று. நீர் என்-
னைத் தேற்றுகிறீர்.
2 இதோ, தேவனே என் இரட்சிப்பு; நான் பயப்படா-
மல் நம்பிக்கையாயிருப்பேன்; கர்த்தராகிய யேகோ-
வா என் பெலனும் என் கீதமுமானவர்; அவரே
எனக்கு இரட்சிப்புமானவர்.
3 ஆதலால், இரட்சிப்பின் ஊற்றுக்களிலிருந்து
மகிழ்ச்சியோடே தண்ணீர் எடுப்பீர்கள்.
4 அக்காலத்திலே நீங்கள் சொல்வது, கர்த்தரைத் து-
தியுங்கள்; அவர் நாமத்தைத் தொழுதுகொள்ளுங்-
கள்; அவருடைய செய்கைகளை ஜனங்களுக்குள்-
ளே அறிவியுங்கள்; அவருடைய நாமம் உயர்ந்த-
தென்று பிரஸ்தாபம் பண்ணுங்கள்.
5 கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்; அவர் மகத்-
துவமான கிரியைகளைச் செய்தார். இது பூமியெங்-
கும் அறியப்பட்டிருக்கிறது.
6 சீயோனில் வாசம்பண்ணுகிறவனே, சத்தமிட்டுக்
கெம்பீரி; ஏனெனில் இஸ்ரவேலின் பரிசுத்தர் உன்
நடுவில் பெரியவராயிருக்கிறார்.

# 2 Nephi 22

And in that day thou shalt say: O Lord, I will praise thee; though thou wast angry with me thine anger is turned away, and thou comfortedst me.

Behold, God is my salvation; I will trust, and not be afraid; for the Lord Jehovah is my strength and my song; he also has become my salvation.

Therefore, with joy shall ye draw water out of the wells of salvation.

And in that day shall ye say: Praise the Lord, call upon his name, declare his doings among the people, make mention that his name is exalted.

Sing unto the Lord; for he hath done excellent things; this is known in all the earth.

Cry out and shout, thou inhabitant of Zion; for great is the Holy One of Israel in the midst of thee.

# 2 நேபி 23

1 ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா, பாபிலோன்-
மேல் வரக்கண்ட பாரம்.
2 உயர்ந்த பர்வதத்தின்மேல் கொடியேற்றுங்கள்,
அவர்களுக்கு உரத்த சத்தமிடுங்கள். பிரபுக்களின்
வாசல்களுக்குள் அவர்கள் பிரவேசிப்பதற்குச் சை-
கை காட்டுங்கள்.
3 என் பரிசுத்தமானவர்களை நான் கட்டளையிட்-
டேன். என் பராக்கிரமசாலிகளை அழைத்தும்
இருக்கிறேன். ஏனெனில் என் மகத்துவத்திலே களி-
கூருகிறவர்கள் மீது எனது கோபமிராது.
4 பர்வதங்களிலுள்ள திரளான ஜனங்களின் சத்-
தம், வெகு கூட்டம் மற்றும் ஒன்றாய்க் கூட்டப்பட்ட
தேசங்களின் ராஜ்யங்கள் செய்யும் அமளியான
இரைச்சல்போல இருக்கிறது. சேனைகளின் கர்த்தர்
யுத்தத்தின் சேனைகளைக் கூட்டுகிறார்.
5 வானத்தின் கடையாந்திரத்திலிருந்தும், தூர தே-
சத்திலிருந்தும், ஆம் முழு தேசத்தையும் அழிக்கக்
கர்த்தரும், அவரின் கோபாக்கினையின் ஆயுதங்க-
ளும் வருகிறது.
6 அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது.
அது சர்வவல்லவரிடத்திலிருந்து சங்காரமாய்
வரும்.
7 ஆதலால் எல்லாக் கைகளும் நெகிழ்ந்து, எல்லா
மனுஷரின் இருதயமும் கரைந்துபோம்.
8 அவர்கள் திகிலடைவார்கள்; வேதனைகளும்
வாதைகளும் அவர்களைப் பிடிக்கும்; ஒருவரை-
யொருவர் பிரமித்துப் பார்ப்பார்கள், அவர்களு-
டைய முகங்கள் நெருப்பான முகங்களாயிருக்கும்.
9 இதோ, தேசத்தைப் பாழாக்குவதற்காக கர்த்தரு-
டைய நாள் கடூரத்தையும், மூர்க்கத்தையும், உக்கிர-
கோபத்தையும் கொண்டதாய் வருகிறது. மேலும்
அதிலுள்ள பாவிகளையும் அவர் அழிப்பார்.
10 வானத்தின் நட்சத்திரங்களும், அதிலுள்ள ராசிக-
ளும், அவைகளின் ஒளியைக் கொடாதிருக்கும்.
தன் போக்கில் சூரியன் இருண்டுபோம். மேலும் சந்-
திரன் ஒளியைப் பிரகாசிக்கப்பண்ணாதிருக்கும்.
11 பாவத்தினிமித்தம் உலகத்தையும் அக்கிரமத்தி-
னிமித்தம் துன்மார்க்கரையும் நான் தண்டித்து,
அகங்காரரின் பெருமையை ஒழியப்பண்ணி, கொ-
டியரின் கர்வத்தைத் தாழ்த்துவேன்.
12 நான் ஒப்பீரின் தங்க ஆப்பைக் காட்டிலும் மனு-
ஷனை அபூர்வமடையவும், பசும்பொன்னைக்-
காட்டிலும் மனுஷனை விலைமிக்கவனுமாக்கு-
வேன்.
13 ஆதலால், சேனைகளின் கர்த்தருடைய உக்கிரத்-
தினால், அவருடைய கடுங்கோபத்தின் நாளிலே,
நான் பரலோகங்களை அதிரப்பண்ணுவேன். பூமி
அவள் இடத்தைவிட்டு நகர்ந்துபோம்.

# 2 Nephi 23

The burden of Babylon, which Isaiah the son of Amoz did see.

Lift ye up a banner upon the high mountain, exalt the voice unto them, shake the hand, that they may go into the gates of the nobles.

I have commanded my sanctified ones, I have also called my mighty ones, for mine anger is not upon them that rejoice in my highness.

The noise of the multitude in the mountains like as of a great people, a tumultuous noise of the kingdoms of nations gathered together, the Lord of Hosts mustereth the hosts of the battle.

They come from a far country, from the end of heaven, yea, the Lord, and the weapons of his indignation, to destroy the whole land.

Howl ye, for the day of the Lord is at hand; it shall come as a destruction from the Almighty.

Therefore shall all hands be faint, every man's heart shall melt;

And they shall be afraid; pangs and sorrows shall take hold of them; they shall be amazed one at another; their faces shall be as flames.

Behold, the day of the Lord cometh, cruel both with wrath and fierce anger, to lay the land desolate; and he shall destroy the sinners thereof out of it.

For the stars of heaven and the constellations thereof shall not give their light; the sun shall be darkened in his going forth, and the moon shall not cause her light to shine.

And I will punish the world for evil, and the wicked for their iniquity; I will cause the arrogancy of the proud to cease, and will lay down the haughtiness of the terrible.

I will make a man more precious than fine gold; even a man than the golden wedge of Ophir.

Therefore, I will shake the heavens, and the earth shall remove out of her place, in the wrath of the Lord of Hosts, and in the day of his fierce anger.

14 துரத்தப்பட்ட வெளிமானைப் போலும் இருக்கும்,
யாரும் சேர்க்காத ஆட்டைப்போலுமிருக்கும், அவர-
வர் தங்கள் ஜனத்தண்டைக்குப்போகத் திரும்பி
அவரவர் தங்கள் தேசத்துக்கு ஓடிப்போவார்கள்.

And it shall be as the chased roe, and as a sheep that no man taketh up; and they shall every man turn to his own people, and flee every one into his own land.

15 பெருமையாய் இருப்பவனெவனும் குத்துண்டு,
ஆம், துன்மார்க்கருடன் சேர்ந்திருப்பவனெவனும்
பட்டயத்தால் விழுவான்.

Every one that is proud shall be thrust through; yea, and every one that is joined to the wicked shall fall by the sword.

16 அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு
முன்பாக மோதியடிக்கப்படும், அவர்கள் வீடுகள்
கொள்ளையிடப்படும், அவர்கள் மனைவிகள்
அவமானப்படுவார்கள்.

Their children also shall be dashed to pieces before their eyes; their houses shall be spoiled and their wives ravished.

17 இதோ, நான் அவர்களுக்கு விரோதமாய் மேதிய-
ரை எழுப்புவேன், அவர்கள் வெள்ளியையும்,
பொன்னையும் மதியாமல், அதில் களிகூராமலுமி-
ருப்பார்கள்.

Behold, I will stir up the Medes against them, which shall not regard silver and gold, nor shall they delight in it.

18 அவர்களின் வில்லுகள், இளைஞரைச் சிதைத்-
துவிடும். கர்ப்பக்கனியின்மேல் அவர்கள் இரங்கு-
வதில்லை. அவர்களின் கண்கள் பிள்ளைகளைத்
தப்பவிடுவதில்லை.

Their bows shall also dash the young men to pieces; and they shall have no pity on the fruit of the womb; their eyes shall not spare children.

19 ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயரு-
டைய பிரதான மகிமையுமாகிய, பாபிலோனானது,
தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்-
பட்டதுபோல கவிழ்க்கப்படும்.

And Babylon, the glory of kingdoms, the beauty of the Chaldees' excellency, shall be as when God overthrew Sodom and Gomorrah.

20 இனி ஒருபோதும் அதில் ஒருவரும் குடியேறுவது-
மில்லை. தலைமுறைதோறும் அதில் ஒருவரும்
தங்கித் தரிப்பதுமில்லை; அங்கே அரபியன் கூடா-
ரம் போடுவதுமில்லை, அங்கே மேய்ப்பர் ஆட்டுகி-
டையைச் செய்வதுமில்லை.

It shall never be inhabited, neither shall it be dwelt in from generation to generation: neither shall the Arabian pitch tent there; neither shall the shepherds make their fold there.

21 காட்டு மிருகங்கள் அங்கே படுத்துக்கொள்ளும்,
ஊளையிடும் பிராணிகள் அவர்கள் வீடுகளை நி-
ரப்பும், கோட்டான்கள் அங்கே குடிகொள்ளும்,
காட்டாடு அங்கே துள்ளும்.

But wild beasts of the desert shall lie there; and their houses shall be full of doleful creatures; and owls shall dwell there, and satyrs shall dance there.

22 அவர்களுடைய பாழான மாளிகைகளில், தீவுக-
ளின் வனவிலங்குகளும், வலுசர்ப்பங்கள் செல்-
விக்கையான அரண்மனைகளிலும் ஓலமிடும்.
அவள் காலம் சீக்கிரமாய் வரும். அவளது காலம் நீ-
டித்திராது. ஏனெனில் நான் சீக்கிரமாய் அவளை
அழிப்பேன். ஆம், ஏனென்றால், என் ஜனத்திற்கு
நான் இரங்கி, துன்மார்க்கரை அழிப்பேன் என்கி-
றார்.

And the wild beasts of the islands shall cry in their desolate houses, and dragons in their pleasant palaces; and her time is near to come, and her day shall not be prolonged. For I will destroy her speedily; yea, for I will be merciful unto my people, but the wicked shall perish.

# 2 நேபி 24

1 கர்த்தர் யாக்கோபுக்கு இரங்கி, பின்னும் இஸ்ரவேலைத் தெரிந்துகொண்டு, அவர்களை அவர்கள் தேசத்திலே குடியேற்றுவார்; அந்நியரும் அவர்களோடு சேர்க்கையாகி, யாக்கோபின் வம்சத்தோடு கூடிக்கொள்வார்கள்.

2 ஜனங்கள் அவர்களை அழைத்துக்கொண்டு, ஆம், பூமியின் கடையாந்திர தூரங்களிலிருந்தும் அவர்களை அவர்களின் ஸ்தானங்களில் விடுவார்கள். அவர்கள் தங்கள் வாக்குத்தத்தத்தின் தேசங்களுக்குத் திரும்புவார்கள். இஸ்ரவேல் வீட்டார் அவைகளைத் தன்வசம் செய்துகொள்வார்கள். கர்த்தருடைய தேசம் வேலைக்காரருக்கும், வேலைக்காரிகளுக்குமிருக்கும், எவரிடத்தில் இவர்கள் சிறைப்பட்டவர்களாய் இருந்தார்களோ, அவர்களை சிறைத்தனத்தவர்களாக்கி, தங்களை ஒடுக்கினவர்களை ஆளுவார்கள்.

3 அந்த நாளிலே, உன் துக்கத்திலிருந்தும் உன் பயத்திலிருந்தும் எதிலே நீ சேவிக்கும்படி உட்படுத்தப்பட்டாயோ, அந்தக் கடின அடிமைத்தனத்திலிருந்தும், கர்த்தர் உனக்கு இளைப்பாறுதல் கொடுப்பார்.

4 அந்த நாளிலே நீ பாபிலோன் ராஜாவுக்கு விரோதமாய் சொல்லவேண்டியது, ஒடுக்கினவன் ஒழிந்துபோனானே, பொன்னான நகரம் ஒழிந்துபோயிற்றே!

5 கர்த்தர் துஷ்டரின் கோலையும், அரசர்களின் செங்கோலையும் முறித்துப்போட்டார்.

6 உக்கிரங்கொண்டு, ஓயாத அடியாய் ஜனங்களை அடித்து, கோபமாய் தேசங்களை அரசாண்டவன் தடுப்பாரில்லாமல் துன்பப்படுத்தப்படுகிறான்.

7 பூமி முழுவதும் இளைப்பாறி, அமைதியாயிருக்கிறது; அவர்கள் கெம்பீரமாய்ப் பாடத் தொடங்குகிறார்கள்.

8 ஆம், தேவதாரு மரங்களும், லீபனோனின் கேதுருக்களும், உன்னிமித்தம் சந்தோஷப்பட்டு, நீ விழுந்து கிடந்தது முதற்கொண்டு, எங்களை வெட்டவருவார் ஒருவருமில்லை, என்று சொல்லுகிறது.

9 கீழேயிருக்கிற பாதாளம் உன்னிமித்தம் அதிர்ந்து, உன் வருகைக்கு எதிர்கொண்டு அது மரித்தோரையும், பூமியிலுள்ள அதிபதிகள் எல்லோரையும் உனக்காகக் கூட ஏவுகிறது. தேசங்களுடைய எல்லா ராஜாக்களையும், அவர்களுடைய சிங்காசனங்களிலிருந்து எழுந்திருக்கப்பண்ணுகிறது.

10 அவர்களெல்லாரும் உன்னை நோக்கி: நீயும் எங்களைப்போல பலவீனமானாயோ, நீயும் எங்களைப் போலானாயோ?

# 2 Nephi 24

For the Lord will have mercy on Jacob, and will yet choose Israel, and set them in their own land; and the strangers shall be joined with them, and they shall cleave to the house of Jacob.

And the people shall take them and bring them to their place; yea, from far unto the ends of the earth; and they shall return to their lands of promise. And the house of Israel shall possess them, and the land of the Lord shall be for servants and handmaids; and they shall take them captives unto whom they were captives; and they shall rule over their oppressors.

And it shall come to pass in that day that the Lord shall give thee rest, from thy sorrow, and from thy fear, and from the hard bondage wherein thou wast made to serve.

And it shall come to pass in that day, that thou shalt take up this proverb against the king of Babylon, and say: How hath the oppressor ceased, the golden city ceased!

The Lord hath broken the staff of the wicked, the scepters of the rulers.

He who smote the people in wrath with a continual stroke, he that ruled the nations in anger, is persecuted, and none hindereth.

The whole earth is at rest, and is quiet; they break forth into singing.

Yea, the fir trees rejoice at thee, and also the cedars of Lebanon, saying: Since thou art laid down no feller is come up against us.

Hell from beneath is moved for thee to meet thee at thy coming; it stirreth up the dead for thee, even all the chief ones of the earth; it hath raised up from their thrones all the kings of the nations.

All they shall speak and say unto thee: Art thou also become weak as we? Art thou become like unto us?

11 உன் ஆடம்பரமும் கல்லறைக்குக் கொண்டுபோகப்படுகிறது; உன் வாத்தியங்களின் சத்தங்களும் கேட்கப்படுவதில்லை; உனக்குக் கீழே புழு படர்ந்திருக்கிறது, உன்னைப் புழுக்கள் மூடியிருக்கிறது.

Thy pomp is brought down to the grave; the noise of thy viols is not heard; the worm is spread under thee, and the worms cover thee.

12 லூசிபரே, விடியற்காலையின் மகனே, நீ வானத்திலே இருந்து விழுந்தாயே! தேசங்களை ஈனப்படுத்தினவனே, நீ தரையில் விழவெட்டப்பட்டாயே!

How art thou fallen from heaven, O Lucifer, son of the morning! Art thou cut down to the ground, which did weaken the nations!

13 நான் வானத்திற்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், வடபுறங்களிலுள்ள ஆராதனை கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்,

For thou hast said in thy heart: I will ascend into heaven, I will exalt my throne above the stars of God; I will sit also upon the mount of the congregation, in the sides of the north;

14 நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன் என்றும் நான் உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும், உன் இருதயத்திலே சொன்னாய்.

I will ascend above the heights of the clouds; I will be like the Most High.

15 ஆனாலும் நீ துரவின் பக்கங்களாகிய பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.

Yet thou shalt be brought down to hell, to the sides of the pit.

16 உன்னைக் காண்கிறவர்கள் உன்னை உற்றுப்பார்த்து, உன்னைக் குறித்து சிந்தித்து, இவன்தானா பூமியை நடுங்கவும், ராஜ்யங்களை அதிரவும் செய்து,

They that see thee shall narrowly look upon thee, and shall consider thee, and shall say: Is this the man that made the earth to tremble, that did shake kingdoms?

17 உலகத்தை வனாந்தரமாக்கி அதின் நகரங்களை அழித்து, சிறைப்பட்டவர்களின் வீடுகளை திறக்காமலிருந்தவன் என்பார்கள்.

And made the world as a wilderness, and destroyed the cities thereof, and opened not the house of his prisoners?

18 தேசங்களுடைய சகல ராஜாக்களும், ஆம், அவர்களின் அனைவரும், அவரவர் தங்கள் அறையிலே மகிமையோடே கிடக்கிறார்கள்.

All the kings of the nations, yea, all of them, lie in glory, every one of them in his own house.

19 ஆனால் நீயோ, அழுகிப்போன கிளையைப்போலவும், பட்டயத்தால் குத்தப்பட்டு, கொலையுண்டவர்களின் மீதியானவர்கள் துரவின் கற்களுக்கு கீழே போகிறவர்களைப்போலவும், காலால் மிதிக்கப்பட்ட பிணத்தைப்போலவும், உன் கல்லறைக்குப் புறம்பே எறிந்துவிடப்பட்டாய்.

But thou art cast out of thy grave like an abominable branch, and the remnant of those that are slain, thrust through with a sword, that go down to the stones of the pit; as a carcass trodden under feet.

20 அடக்கம்பண்ணப்படுவதில் நீ அவர்களோடே சேர்ந்திருக்கமாட்டாய். ஏனெனில் நீ உன் தேசத்தை அழித்தாய். உன் ஜனத்தைக் கொன்றுபோட்டாய், தீமை செய்கிறவர்களுடைய சந்ததி ஒருபோதும் பேர்பெறுவதில்லை.

Thou shalt not be joined with them in burial, because thou hast destroyed thy land and slain thy people; the seed of evil-doers shall never be renowned.

21 அவன் புத்திரர் எழும்பித் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, உலகத்தின் மேற்பரப்பைப் பட்டணங்களால் நிரப்பாதபடிக்கு, அவர்களுடைய பிதாக்களுடைய அக்கிரமத்தினிமித்தம், அவர்களைக் கொலைசெய்ய ஆயத்தம்பண்ணுங்கள்.

Prepare slaughter for his children for the iniquities of their fathers, that they do not rise, nor possess the land, nor fill the face of the world with cities.

22 ஏனெனில், நான் அவர்களுக்கு விரோதமாய் எழும்புவேன், என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பாபிலோனுடைய பேரையும், அதில் மீந்திருக்கிறதையும், புத்திரனையும், பௌத்திரனையும், சங்கரிப்போம் என்று கர்த்தர் சொல்லுகிறார்.

For I will rise up against them, saith the Lord of Hosts, and cut off from Babylon the name, and remnant, and son, and nephew, saith the Lord.

23 அதை முள்ளம்பன்றிகள் ஆட்கொள்ளும் இட-
மாயும், தண்ணீர் நிற்கும் பள்ளங்களுமாக்கி,
அதை சங்காரமென்ற துடைப்பத்தினால் பெருக்கி-
விடுவேன், என்று சேனைகளின் கர்த்தர் சொல்கி-
றார்.

I will also make it a possession for the bittern, and pools of water; and I will sweep it with the besom of destruction, saith the Lord of Hosts.

24 சேனைகளின் கர்த்தர் ஆணையிட்டுச் சொன்ன-
தாவது: நான் நினைத்திருக்கிறபடியே நடக்கும்,
நான் நிர்ணயித்தபடியே நிலை நிற்கும்.

The Lord of Hosts hath sworn, saying: Surely as I have thought, so shall it come to pass; and as I have purposed, so shall it stand—

25 நான் என் தேசத்திலே அசீரியனைக் கொண்டு-
வந்து, என் மலைகளின் மீது காலுக்குக் கீழே மிதித்-
துப்போடுவேன்; அப்பொழுது அவன் நுகம் அவர்-
கள் மேலிருந்து விலகி, அவன் சுமை அவர்களின்
தோளிலிருந்து நீங்கும்.

That I will bring the Assyrian in my land, and upon my mountains tread him under foot; then shall his yoke depart from off them, and his burden depart from off their shoulders.

26 பூமியனைத்தின் மேலும் நிர்ணயிக்கப்பட்ட யோ-
சனை இதுவே; சகல தேசங்கள் மேலும் நீட்டப்பட்டி-
ருக்கிற கையுமிதுவே, என்றார்.

This is the purpose that is purposed upon the whole earth; and this is the hand that is stretched out upon all nations.

27 சேனைகளின் கர்த்தர் இப்படி நிர்ணயித்திருக்கி-
றார். யார் அதை வியத்தமாக்குவான்? அவருடைய
கை நீட்டப்பட்டிருக்கிறது. யார் அதை திருப்பு-
வான்?

For the Lord of Hosts hath purposed, and who shall disannul? And his hand is stretched out, and who shall turn it back?

28 ஆகாஸ் ராஜா மரணமடைந்த வருஷத்திலே
உண்டான பாரம் என்னவென்றால்,

In the year that king Ahaz died was this burden.

29 முழு பெலிஸ்தியாவே, உன்னை அடித்த அவனு-
டைய கோல் முறிந்ததென்று களிப்பாயிராதே;
ஏனெனில் சர்ப்பத்தின் வேரிலிருந்து கட்டுவிரியன்
வரும், அவனுடைய கனி பறக்கிற அக்கினி சர்ப்ப-
மாயிருக்கும்.

Rejoice not thou, whole Palestina, because the rod of him that smote thee is broken; for out of the serpent's root shall come forth a cockatrice, and his fruit shall be a fiery flying serpent.

30 சிறுமையானவர்களின் தலைப்பிள்ளைகள் தி-
ருப்தியாய்ப் புசித்து, எளியவர்கள் சுகமாய்ப் படுத்-
திருப்பார்கள்; உன் வேரைப் பஞ்சத்தினாலே சா-
கப்பண்ணுவேன். உன்னில் மீதியானவர்களை
அவன் கொன்றுபோடுவான்.

And the firstborn of the poor shall feed, and the needy shall lie down in safety; and I will kill thy root with famine, and he shall slay thy remnant.

31 வாசலே அலறு; நகரமே கதறு; பெலிஸ்தியாவே நீ
முழுவதும் கரைந்து போகிறாய். ஏனென்றால்
வடக்கேயிருந்து புகைக்காடு வருகிறது. அவரு-
டைய நிர்ணயித்த நேரங்களில் ஒருவரும் தனித்தி-
ருப்பதில்லை.

Howl, O gate; cry, O city; thou, whole Palestina, art dissolved; for there shall come from the north a smoke, and none shall be alone in his appointed times.

32 அப்பொழுது இந்த தேசங்களில் தூதுவர்களுக்கு
என்ன மறு உத்தரவு சொல்லப்படும்? சீயோனை
கர்த்தர் ஸ்தாபித்தார். அதிலே அவருடைய ஜனத்-
தில் சிறுமையானவர்கள் திடன்கொள்வார்கள்.

What shall then answer the messengers of the nations? That the Lord hath founded Zion, and the poor of his people shall trust in it.

# 2 நேபி 25

1 இப்பொழுது நேபியாகிய நான், ஏசாயாவின் வாயால் பேசப்பட்டதும், நான் எழுதின வார்த்தைகளுமானவற்றைக் குறித்துச் சற்று பேசுகிறேன். ஏனெனில் என் ஜனத்தின் அநேகர், யூதர்கள் மத்தியில் தீர்க்கதரிசனமுரைத்தலின் தன்மையைக் குறித்து அறியாததனாலே, இதோ, ஏசாயா பேசிய பல காரியங்களை, அவர்கள் புரிந்துகொள்வது கடினமானதாயிருந்தது.

2 நேபியாகிய நான், யூதர்களின் பழக்க வழக்கங்களைக் குறித்த அநேகக் காரியங்களை அவர்களுக்குப் போதிக்கவில்லை; ஏனெனில் அவர்களின் கிரியைகள் இருளின் கிரியைகளாகவும், அவர்களின் நடப்பித்தல்கள், அருவருப்பானவைகளாகவுமிருந்தன.

3 ஆகையால், தேவன் பேசிய வார்த்தையின்படியே, எல்லா தேசங்களின் மீதும் வரவிருக்கிற, அவருடைய நியாயத்தீர்ப்புகளை என் ஜனத்தாரும், நான் எழுதுகிற இந்தக் காரியங்களைப் பெறவிருக்கிற சகலமானோரும், அறியும்படிக்கே எழுதுகிறேன்.

4 ஆதலால், இஸ்ரவேலின் வீட்டாராகிய என் ஜனமே கேளுங்கள். என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள். ஏனெனில் ஏசாயாவின் வார்த்தைகள் உங்களுக்குத் தெளிவற்றதாய் இருந்தாலும், தீர்க்கதரிசன ஆவியால் நிரப்பப்பட்ட அனைவருக்கும் அவை தெளிவானதாயிருக்கிறது. ஆனால், எனக்குள்ளிருக்கும் ஆவியின்படியே நான் உங்களுக்கு ஒரு தீர்க்கதரிசனம் கொடுக்கிறேன். ஆதலால் என் தகப்பனுடன் நான் எருசலேமிலிருந்து வெளியே வந்த சமயம் முதற்கொண்டு, என்னுடனிருந்து கொண்டிருக்கிற தெளிவின்படியே நான் தீர்க்கதரிசனமுரைக்கிறேன். ஏனெனில் இதோ, என் ஜனம் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்களுக்குத் தெளிவாய்ப் பேசுவதில் என் ஆத்துமா களிகூருகிறது.

5 ஆம், ஏசாயாவின் வார்த்தைகளில் என் ஆத்துமா களிகூருகிறது, ஏனெனில் நான் எருசலேமிலிருந்து வந்தேன், யூதர்களின் காரியங்களை என் கண்கள் கண்டிருக்கின்றன, மேலும் தீர்க்கதரிசிகளுடைய வார்த்தையை யூதர்கள் அறிந்திருக்கிறார்கள், என்பதை நான் அறிவேன். மேலும் யூதருக்குள்ளே பேசப்பட்ட வார்த்தைகளை, அவர்களே அல்லாமல் மற்ற எந்த ஜனமும், யூதர்களுடைய தன்மையின்படி போதிக்கப்பட்டிருந்தாலொழிய, புரிந்துகொள்வது கூடாத காரியமாயிருக்கிறது.

# 2 Nephi 25

Now I, Nephi, do speak somewhat concerning the words which I have written, which have been spoken by the mouth of Isaiah. For behold, Isaiah spake many things which were hard for many of my people to understand; for they know not concerning the manner of prophesying among the Jews.

For I, Nephi, have not taught them many things concerning the manner of the Jews; for their works were works of darkness, and their doings were doings of abominations.

Wherefore, I write unto my people, unto all those that shall receive hereafter these things which I write, that they may know the judgments of God, that they come upon all nations, according to the word which he hath spoken.

Wherefore, hearken, O my people, which are of the house of Israel, and give ear unto my words; for because the words of Isaiah are not plain unto you, nevertheless they are plain unto all those that are filled with the spirit of prophecy. But I give unto you a prophecy, according to the spirit which is in me; wherefore I shall prophesy according to the plainness which hath been with me from the time that I came out from Jerusalem with my father; for behold, my soul delighteth in plainness unto my people, that they may learn.

Yea, and my soul delighteth in the words of Isaiah, for I came out from Jerusalem, and mine eyes hath beheld the things of the Jews, and I know that the Jews do understand the things of the prophets, and there is none other people that understand the things which were spoken unto the Jews like unto them, save it be that they are taught after the manner of the things of the Jews.

6 ஆனால் இதோ, நேபியாகிய நான் யூதர்களுடைய முறையின்படி என் பிள்ளைகளுக்கு போதிக்கவில்லை, நான் எருசலேமில் வாசம் செய்திருக்கிறபடியால் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை நான் அறிவேன். மேலும் ஏசாயா பேசின சகலமானவற்றின்படி, யூதர்கள் மத்தியில் சம்பவித்த தேவனுடைய நியாயத்தீர்ப்பை என் பிள்ளைகளுக்குக் குறிப்பிட்டிருக்கிறேன். அவைகளை நான் எழுதுவதில்லை.

But behold, I, Nephi, have not taught my children after the manner of the Jews; but behold, I, of myself, have dwelt at Jerusalem, wherefore I know concerning the regions round about; and I have made mention unto my children concerning the judgments of God, which hath come to pass among the Jews, unto my children, according to all that which Isaiah hath spoken, and I do not write them.

7 ஆனால் இதோ, என்னுடைய தெளிவின்படியே என் சொந்த தீர்க்கதரிசனத்தை நான் தொடர்கிறேன்; அதிலே எந்த மனுஷனும் தவறு செய்யமுடியாது என அறிவேன்; ஆயினும், அவைகள் சம்பவிக்கும் காலத்தின் நிச்சயத்தை, ஏசாயாவின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேற்றப்படும் நாட்களில் மனுஷர் அறிவார்கள்.

But behold, I proceed with mine own prophecy, according to my plainness; in the which I know that no man can err; nevertheless, in the days that the prophecies of Isaiah shall be fulfilled men shall know of a surety, at the times when they shall come to pass.

8 ஆதலால், மனுபுத்திரருக்கு அவை மேன்மையுள்ளவையாக இருக்கும். அவை அப்படியல்ல, என்று கருதுபவர்களுக்குக் குறிப்பாய்ப் பேசி வார்த்தைகளை என் சொந்த ஜனத்திற்கு மட்டும் வரையறுப்பேன். ஏனெனில், கடைசி காலங்களில் அவை அவர்களுக்கு அதிக மதிப்புள்ளவையாயிருக்கும், என நான் அறிவேன். அந்த நாளிலே அதை அவர்கள் உணர்ந்துகொள்வார்கள், ஆதலால் அவர்களின் நலனுக்காக நான் அவைகளை எழுதியுள்ளேன்.

Wherefore, they are of worth unto the children of men, and he that supposeth that they are not, unto them will I speak particularly, and confine the words unto mine own people; for I know that they shall be of great worth unto them in the last days; for in that day shall they understand them; wherefore, for their good have I written them.

9 அக்கிரமத்தினிமித்தம் யூதர்கள் மத்தியில் ஒருதலைமுறை அழிக்கப்பட்டது போலவே, அவர்களின் அக்கிரமங்களுக்குத் தக்கதாக தலைமுறை தலைமுறைதோறும் அழிக்கப்பட்டனர். கர்த்தருடைய தீர்க்கதரிசிகளால் முன்னுரைக்கப்படாமல், அவர்களில் யாதொருவனும் அழிக்கப்படவில்லை.

And as one generation hath been destroyed among the Jews because of iniquity, even so have they been destroyed from generation to generation according to their iniquities; and never hath any of them been destroyed save it were foretold them by the prophets of the Lord.

10 ஆதலால், எருசலேமை என் தகப்பன் விட்டுச்சென்ற உடனே, அவர்கள்மீது வரப்போகிற அழிவைக்குறித்து அவர்கள் சொல்லப்பட்டிருந்தனர். ஆயினும், அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தினர். என் தீர்க்கதரிசனத்தின்படியே பாபிலோனுக்குள் சிறைபிடிக்கப்பட்டு, கொண்டு செல்லப்பட்டவர்களைத் தவிர, மற்றவர்கள் அழிக்கப்பட்டனர்.

Wherefore, it hath been told them concerning the destruction which should come upon them, immediately after my father left Jerusalem; nevertheless, they hardened their hearts; and according to my prophecy they have been destroyed, save it be those which are carried away captive into Babylon.

11 இப்பொழுது எனக்குள்ளிருக்கும் ஆவியினிமித்தம் இதை நான் பேசுகிறேன். மேலும் அவர்கள் தூக்கிச் செல்லப்பட்டவராயிருப்பினும் அவர்கள் மறுபடியும் திரும்பி, எருசலேம் தேசத்தில் வாசம் செய்வார்கள்; ஆதலால் அவர்களின் சுதந்திர தேசத்திலே மீண்டும் சேர்க்கப்படுவார்கள்.

And now this I speak because of the spirit which is in me. And notwithstanding they have been carried away they shall return again, and possess the land of Jerusalem; wherefore, they shall be restored again to the land of their inheritance.

12 ஆனால் இதோ, அவர்களிடத்தில் யுத்தங்களும் யுத்தங்களின் வதந்திகளும் இருக்கும். வானம் மற்றும் பூமியின் பிதாவாகிய, பிதாவின் ஒரேபேறானவர் வந்து, தன்னையே மாம்சத்தில் அவர்களுக்கு வெளிப்படுத்தும் நாளிலே, இதோ, அவர்களின் அக்கிரமங்களினிமித்தமும், அவர்களின் இருதயங்களின் கடினத்தாலும், அவர்களின் கழுத்துக்களின் இறுக்கத்தாலும், அவரை நிராகரிப்பார்கள்.

But, behold, they shall have wars, and rumors of wars; and when the day cometh that the Only Begotten of the Father, yea, even the Father of heaven and of earth, shall manifest himself unto them in the flesh, behold, they will reject him, because of their iniquities, and the hardness of their hearts, and the stiffness of their necks.

13 இதோ, அவர்கள் அவரைச் சிலுவையிலறைவார்கள்; அவர் மூன்று நாட்களளவும் கல்லறையில் வைக்கப்பட்ட பின்பு, அவர் தன் செட்டைகளில் குணமாக்குதலுடனே, மரித்தோரிலிருந்து எழும்புவார்; அவரின் நாமத்தில் விசுவாசிக்கிற யாவரும் தேவனுடைய ராஜ்யத்தில் இரட்சிக்கப்படுவார்கள். ஆதலால் நான் அவருடைய நாளைக் கண்டிருப்பதாலும், அவருடைய பரிசுத்த நாமத்தை என் உள்ளம் துதிக்கிறதாலும், என் ஆத்துமா அவரைக் குறித்து தீர்க்கதரிசனமுரைப்பதில் களிகூருகிறது.

Behold, they will crucify him; and after he is laid in a sepulchre for the space of three days he shall rise from the dead, with healing in his wings; and all those who shall believe on his name shall be saved in the kingdom of God. Wherefore, my soul delighteth to prophesy concerning him, for I have seen his day, and my heart doth magnify his holy name.

14 மரித்தோரிலிருந்து மசியா உயிர்த்தெழுந்து, தன் நாமத்தில் விசுவாசிக்கிற யாவருக்கும் தன்னுடைய ஜனத்திற்குத் தன்னையே வெளிப்படுத்திய பின்பு, இதோ எருசலேம் மறுபடியும் அழிக்கப்படும். தேவனுக்கும் அவருடைய சபையின் ஜனத்திற்கும் விரோதமாய் சண்டையிடுகிறவர்களுக்கு, ஐயோ.

And behold it shall come to pass that after the Messiah hath risen from the dead, and hath manifested himself unto his people, unto as many as will believe on his name, behold, Jerusalem shall be destroyed again; for wo unto them that fight against God and the people of his church.

15 ஆதலால், எல்லா தேசங்களுக்கும், யூதர்கள் சிதறடிக்கப்படுவார்கள்; ஆம், பாபிலோனும் அழிக்கப்படும்; ஆதலால் மற்ற தேசங்களால் யூதர்கள் சிதறடிக்கப்படுவார்கள்.

Wherefore, the Jews shall be scattered among all nations; yea, and also Babylon shall be destroyed; wherefore, the Jews shall be scattered by other nations.

16 அவர்கள் சிதறடிக்கப்பட்டு, மனுஷகுலம் யாவருக்குமான முடிவற்ற பாவநிவர்த்தியிலும், தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவிலும் விசுவாசிக்கும்படி உணர்த்தப்படும்வரைக்கும், தலைமுறை தலைமுறையாக, ஆம் அநேக தலைமுறைகளுக்குக் கர்த்தராகிய தேவன் பிற தேசத்தார் மூலம் அவர்களைச் சவுக்கால் அடித்திருக்கிறார். அந்த நாள் வரும்போது, அவர்கள் கிறிஸ்துவில் விசுவாசிப்பார்கள். அப்பொழுது இந்தக் காரியங்களை அவர்கள் விசுவாசிக்கவேண்டியது அவசியமாயிருக்கும்படிக்கு, மற்றொரு மேசியாவிற்காக இனி எதிர்நோக்காமல் தூய இருதயங்களோடும், சுத்த கரங்களோடும், அவருடைய நாமத்திலே பிதாவைத் தொழுதுகொள்வார்கள்.

And after they have been scattered, and the Lord God hath scourged them by other nations for the space of many generations, yea, even down from generation to generation until they shall be persuaded to believe in Christ, the Son of God, and the atonement, which is infinite for all mankind—and when that day shall come that they shall believe in Christ, and worship the Father in his name, with pure hearts and clean hands, and look not forward any more for another Messiah, then, at that time, the day will come that it must needs be expedient that they should believe these things.

17 கர்த்தர் மறுபடியும் இரண்டாவது விசை தன் ஜனத்தைத் தொலைந்த மற்றும் வீழ்ந்த நிலையில் இருந்து திரும்பச் சேர்க்கும்படி, தன் கரத்தை நீட்டுவார். ஆதலால் மனுபுத்திரர் மத்தியில், அவர் ஒரு அற்புதமும் ஆச்சரியமுமான கிரியை செய்யப் புறப்படுவார்.

And the Lord will set his hand again the second time to restore his people from their lost and fallen state. Wherefore, he will proceed to do a marvelous work and a wonder among the children of men.

18 ஆதலால், அவர்களைக் கடைசிக் காலத்தில் நியாயம் விசாரிக்கிற வார்த்தைகளான, தம் வார்த்தைகளை அவர்களுக்குள்ளே கொண்டுவருவார். அவர்களால் புறக்கணிக்கப்பட்டவராகிய மெய்யான மேசியாவைப்பற்றி அவர்களுக்கு உணர்த்தும் நோக்கத்திற்காகவும் மேசியா வருவதற்கு இனியும் நோக்கிப்பார்க்கத் தேவையில்லை என்பதை உணர்த்தும்பொருட்டாகவும், அவர்களுக்கு அவை கொடுக்கப்படும். ஏனெனில் மக்களை வஞ்சிக்கும் கள்ள மேசியாவைத் தவிர அங்கே ஒருவனும் வரான். ஒரே ஒரு மேசியாவைப்பற்றித்தான் தீர்க்கதரிசிகளால் பேசப்பட்டிருக்கிறது. அந்த மேசியா யூதர்களால் புறக்கணிக்கப்பட வேண்டும்.

Wherefore, he shall bring forth his words unto them, which words shall judge them at the last day, for they shall be given them for the purpose of convincing them of the true Messiah, who was rejected by them; and unto the convincing of them that they need not look forward any more for a Messiah to come, for there should not any come, save it should be a false Messiah which should deceive the people; for there is save one Messiah spoken of by the prophets, and that Messiah is he who should be rejected of the Jews.

19 தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்குத்தக்கதாக, எருசலேமைவிட்டு என் தகப்பன் வந்த காலத்திலிருந்து அறுநூறாவது வருஷத்திலே மேசியா வருவார். தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் மற்றும் தேவனுடைய தூதனின் வார்த்தைகளின்படி, அவர் நாமம் தேவனுடைய குமாரனாகிய, இயேசு கிறிஸ்து என்பதாகும்.

For according to the words of the prophets, the Messiah cometh in six hundred years from the time that my father left Jerusalem; and according to the words of the prophets, and also the word of the angel of God, his name shall be Jesus Christ, the Son of God.

20 இப்பொழுதும் என் சகோதரரே, நீங்கள் தவறு செய்யக்கூடாதென்பதற்காக நான் தெளிவாகப் பேசியுள்ளேன். மேலும் எகிப்து தேசத்திலிருந்து வெளியே இஸ்ரவேலைக் கொண்டுவந்தவரும், விஷ சர்ப்பங்களால் தேசத்தார்கள் கடிக்கப்பட்டபோது அவர்கள் முன்பு மோசே தூக்கின சர்ப்பத்தை அவர்கள் தங்கள் கண்களால் நோக்கினால் மாத்திரமே, அவர்களைச் சொஸ்தமாக்க, அவனுக்கு வல்லமையைக்கொடுத்து, அவன் கன்மலையை அடிக்க தண்ணீர் புறப்பட்டு வரும்படியாக அவனுக்கு வல்லமையைக் கொடுத்தவருமாகிய ஆம், இதோ, இந்தக் காரியங்கள் உண்மையானவை என நான் உனக்குச் சொல்லுகிறேன், கர்த்தராகிய தேவன் ஜீவிக்குமளவும், என்னால் பேசப்பட்ட இந்த இயேசு கிறிஸ்து என்ற நாமத்தைத் தவிர, மனுஷன் இரட்சிக்கப்படுவதற்கு வேறு எந்த நாமமும் பரலோகத்தின் கீழ் கொடுக்கப்படவில்லை.

And now, my brethren, I have spoken plainly that ye cannot err. And as the Lord God liveth that brought Israel up out of the land of Egypt, and gave unto Moses power that he should heal the nations after they had been bitten by the poisonous serpents, if they would cast their eyes unto the serpent which he did raise up before them, and also gave him power that he should smite the rock and the water should come forth; yea, behold I say unto you, that as these things are true, and as the Lord God liveth, there is none other name given under heaven save it be this Jesus Christ, of which I have spoken, whereby man can be saved.

21 ஆதலால் பூமி நிலைக்கும் காலம் வரை, அவனுடைய சந்ததி அழியாது என யோசேப்புக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக, நான் எழுதிய இந்தக் காரியங்கள் வைக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு, என் சந்ததிக்கு தலைமுறை தலைமுறைக்கும் கொடுக்கப்படும், என்ற வாக்குத்தத்தத்தை இந்த நோக்கத்திற்காகவே கர்த்தராகிய தேவன் எனக்கு வாக்களித்தார்.

Wherefore, for this cause hath the Lord God promised unto me that these things which I write shall be kept and preserved, and handed down unto my seed, from generation to generation, that the promise may be fulfilled unto Joseph, that his seed should never perish as long as the earth should stand.

22 ஆதலால், உலகம் எவ்வளவு காலம் நிலைத்திருக்குமோ, அவ்வளவு காலமும் தலைமுறை தலைமுறைக்கும் இந்தக் காரியங்கள் செல்லும்; அவைகள் தேவனின் சித்தம் மற்றும் பிரியத்தின்படியே செல்லும், அவைகளை வைத்திருக்கும் தேசங்கள், அவைகளாலே எழுதப்பட்டிருக்கிற வார்த்தைகளின்படியே நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

Wherefore, these things shall go from generation to generation as long as the earth shall stand; and they shall go according to the will and pleasure of God; and the nations who shall possess them shall be judged of them according to the words which are written.

23 ஏனெனில் எங்கள் பிள்ளைகளும், எங்கள் சகோ-
தரரும், கிறிஸ்துவில் விசுவாசிக்கவும், தேவனோடு-
கூட ஒப்புரவாகவும் வேண்டுமென்று, அவர்களுக்-
கு உணர்த்துவதற்கு எழுதவே நாங்கள் கருத்துடன்
பிரயாசப்படுகிறோம்; ஏனென்றால் நம்மால் முடிந்த
எல்லாவற்றையும் செய்த பின்பு, நாம் கிருபையா-
லேயே இரட்சிக்கப்படுகிறோம், என்பதை நாங்கள்
அறிவோம்.

For we labor diligently to write, to persuade our children, and also our brethren, to believe in Christ, and to be reconciled to God; for we know that it is by grace that we are saved, after all we can do.

24 நாங்கள் கிறிஸ்துவிலே விசுவாசித்தாலும், மோ-
சேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு,
நியாயப்பிரமாணம் நிறைவேறுமட்டும் கிறிஸ்து-
வை திடநம்பிக்கையாய் எதிர்பார்க்கிறோம்.

And, notwithstanding we believe in Christ, we keep the law of Moses, and look forward with steadfastness unto Christ, until the law shall be fulfilled.

25 ஏனெனில், இந்த நோக்கத்திற்காகவே நியாயப்பி-
ரமாணம் கொடுக்கப்பட்டது. ஆகவே நமக்கு நியா-
யப்பிரமாணம் மரித்து, நம்முடைய விசுவாசத்தினி-
மித்தம், கிறிஸ்துவிலே உயிர்ப்பிக்கப் பெற்றுள்-
ளோம். இருப்பினும் நாம் கட்டளைகளினிமித்தம்
நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்கிறோம்.

For, for this end was the law given; wherefore the law hath become dead unto us, and we are made alive in Christ because of our faith; yet we keep the law because of the commandments.

26 எங்கள் பிள்ளைகள் தங்களுடைய பாவங்க-
ளின் மன்னிப்புக்காக, எதனைக் கண்நோக்க-
வேண்டுமென்று அறியும்பொருட்டாக, நாங்கள் கி-
றிஸ்துவைப்பற்றிப் பேசுகிறோம். கிறிஸ்துவில்
களிகூருகிறோம், கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கிக்-
கிறோம், கிறிஸ்துவைக் குறித்து தீர்க்கதரிசனமு-
ரைக்கிறோம். எங்கள் தீர்க்கதரிசனங்களின்படியே
நாங்கள் எழுதுகிறோம்.

And we talk of Christ, we rejoice in Christ, we preach of Christ, we prophesy of Christ, and we write according to our prophecies, that our children may know to what source they may look for a remission of their sins.

27 ஆதலால், எங்கள் பிள்ளைகள் உயிரற்ற நியா-
யப்பிரமாணத்தைக் குறித்து அறியும்படிக்கு, நியா-
யப்பிரமாணத்தைக் குறித்து நாங்கள் பேசுகிறோம்.
நியாயப்பிரமாணத்தின் உயிரற்ற தன்மையை
அறிவதின்மூலமாய், கிறிஸ்துவிலிருக்கும் அந்த
ஜீவனை அவர்கள் எதிர்நோக்கிப் பார்க்கலாம்.
என்ன நோக்கத்திற்காக நியாயப்பிரமாணம் கொ-
டுக்கப்பட்டதென்பதை அறிந்துகொள்ளலாம். கி-
றிஸ்துவிலே நியாயப்பிரமாணம் நிறைவேறிய
பின்பு அதாவது நியாயப்பிரமாணம் முற்றுப்-
பெற்ற பின்பு, அவருக்கு விரோதமாய்த் தங்கள்
இருதயங்களை அவர்கள் கடினப்படுத்தத் தேவை-
யில்லை.

Wherefore, we speak concerning the law that our children may know the deadness of the law; and they, by knowing the deadness of the law, may look forward unto that life which is in Christ, and know for what end the law was given. And after the law is fulfilled in Christ, that they need not harden their hearts against him when the law ought to be done away.

28 இப்பொழுது, இதோ, என் ஜனமே, நீங்கள் வணங்-
காக்கழுத்துள்ள ஜனமாக இருப்பதினிமித்தம், நீங்-
கள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது, என்பதற்-
காக நான் தெளிவாக உங்களிடம் பேசினேன். மே-
லும் நான் பேசின வார்த்தைகள், உங்களுக்கு வி-
ரோதமாகச் சாட்சியாய் நிற்கும். ஏனெனில் எந்த
மனுஷனுக்கும் உத்தம மார்க்கத்தைப் போதிக்க
அவை போதுமானதாயிருக்கிறது, ஏனெனில் கி-
றிஸ்துவில் விசுவாசித்து அவரை மறுதலியாமலி-
ருப்பதே உத்தம மார்க்கம். அவரை மறுதலிப்பதி-
னித்தம் தீர்க்கதரிசிகளையும், நியாயப்பிரமாணத்-
தையும் மறுதலிக்கிறீர்கள்.

And now behold, my people, ye are a stiffnecked people; wherefore, I have spoken plainly unto you, that ye cannot misunderstand. And the words which I have spoken shall stand as a testimony against you; for they are sufficient to teach any man the right way; for the right way is to believe in Christ and deny him not; for by denying him ye also deny the prophets and the law.

29 இப்பொழுது இதோ, கிறிஸ்துவில் விசுவாசித்து, அவரை மறுதலியாமலிருப்பதே உத்தம மார்க்கமென நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; கிறிஸ்துவே இஸ்ரவேலின் பரிசுத்தர், ஆகையால் அவர் முன்பாக குனிந்து வணங்கி உங்களின் சகல ஊக்கத்தோடும், மனதோடும், பெலத்தோடும், உங்களின் முழு ஆத்துமாவோடும், அவரைத் தொழுதுகொள்ளுங்கள். மேலும் இதைச் செய்வீர்களெனில், நீங்கள் எவ்விதத்திலும் புறம்பே தள்ளப்படமாட்டீர்கள்.

And now behold, I say unto you that the right way is to believe in Christ, and deny him not; and Christ is the Holy One of Israel; wherefore ye must bow down before him, and worship him with all your might, mind, and strength, and your whole soul; and if ye do this ye shall in nowise be cast out.

30 எவ்வளவு அவசியமானதாயிருக்குமோ அவ்வளவாய், மோசேக்குக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணம் நிறைவேறும்வரைக்கும், தேவனுடைய காரியங்களையும், நியமங்களையும் நீங்கள் கைக்கொள்ளவேண்டும்.

And, inasmuch as it shall be expedient, ye must keep the performances and ordinances of God until the law shall be fulfilled which was given unto Moses.

# 2 நேபி 26

1 என் பிள்ளைகளும், என் அன்புச் சகோதரருமானவர்களே, கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழும்பின பின்பு, அவர் தன்னை உங்களுக்குக் காண்பிப்பார். அவர் உங்களிடத்தில் பேசுகிற வார்த்தைகள், நீங்கள் கைக்கொள்ளவேண்டிய நியாயப்பிரமாணமாயிருக்கும்.

2 ஏனெனில் இதோ, அநேக தலைமுறைகள் கடந்து போவதையும், என் ஜனத்தின் மத்தியிலே மகா யுத்தங்களும், பிணக்குகளும் சம்பவிப்பதையும் நான் கண்டேன், என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

3 மேசியா வந்த பின்பு என் ஜனத்திற்கு அவரின் பிறப்பு, அவரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைப்பற்றிய அறிகுறிகள் கொடுக்கப்படும்; துன்மார்க்கருக்குப் பெரிதும், பயங்கரமுமாய் அந்நாளிருக்கும். ஏனெனில் அவர்கள் நிர்மூலமாவார்கள். அவர்கள் தீர்க்கதரிசிகளையும், பரிசுத்தவான்களையும், புறம்பே தள்ளி, அவர்களைக் கொலை செய்ததினிமித்தம் அவர்கள் நிர்மூலமாவார்கள். ஆதலால் அவர்களுக்கு விரோதமாய், பரிசுத்தவான்களின் இரத்தத்தினுடைய கூக்குரல் தேவனிடத்தில் சேரும்படியாய், பூமியிலிருந்து மேலெழும்பும்.

4 ஆதலால், வரப்போகிற அந்நாள் செருக்காயுள்ள யாவரையும், பொல்லாப்பானதை செய்கிறவர்களையும் சுட்டெரிக்கும், என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார். அவர்கள் தாளடிகளைப் போலிருப்பார்கள்.

5 தீர்க்கதரிசிகளையும், பரிசுத்தவான்களையும், கொலை செய்கிறவர்களையும், பூமியின் ஆழங்கள் விழுங்கும், என சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்; பர்வதங்கள் அவர்களை மூடும்; சுழல் காற்று அவர்களைத் தூக்கிச்செல்லும்; கட்டடங்கள் அவர்கள்மீது விழுந்து, அவர்களைத் துண்டுதுண்டாக நொறுக்கிப் பொடியாகுமட்டும், தூளாக அரைக்கும்.

6 கர்த்தருடைய கோபாக்கினையின் அக்கினி அவர்களுக்கு எதிராகக் கொளுத்திவிடப்பட்டிருப்பதால், அவர்கள் இடிமுழக்கத்தாலும், மின்னல்களாலும் பூமியதிர்ச்சிகளாலும், எல்லா வகையான அழிவுகளாலும் விசாரிக்கப்படுவார்கள். அவர்கள் தாளடி போலாவார்கள்; வரப்போகிற நாள் அவர்களைப் பட்சித்துப்போடும், என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

7 என் ஜனத்தின் கொலையுண்டவர்களின் இழப்பால் என் ஆத்துமா வேதனையடைந்து வியாகுலப்படுகிறது. நேபியாகிய நான், அதைக் கண்டபடியால் அது கிட்டத்தட்ட கர்த்தரின் சமுகம் முன்பாக, என்னைப் பட்சிக்கிறது. ஆயினும், உமது வழிகள் நியாயமானவை, என நான் தேவனை நோக்கிக் கூக்குரலிடவேண்டும்.

# 2 Nephi 26

And after Christ shall have risen from the dead he shall show himself unto you, my children, and my beloved brethren; and the words which he shall speak unto you shall be the law which ye shall do.

For behold, I say unto you that I have beheld that many generations shall pass away, and there shall be great wars and contentions among my people.

And after the Messiah shall come there shall be signs given unto my people of his birth, and also of his death and resurrection; and great and terrible shall that day be unto the wicked, for they shall perish; and they perish because they cast out the prophets, and the saints, and stone them, and slay them; wherefore the cry of the blood of the saints shall ascend up to God from the ground against them.

Wherefore, all those who are proud, and that do wickedly, the day that cometh shall burn them up, saith the Lord of Hosts, for they shall be as stubble.

And they that kill the prophets, and the saints, the depths of the earth shall swallow them up, saith the Lord of Hosts; and mountains shall cover them, and whirlwinds shall carry them away, and buildings shall fall upon them and crush them to pieces and grind them to powder.

And they shall be visited with thunderings, and lightnings, and earthquakes, and all manner of destructions, for the fire of the anger of the Lord shall be kindled against them, and they shall be as stubble, and the day that cometh shall consume them, saith the Lord of Hosts.

O the pain, and the anguish of my soul for the loss of the slain of my people! For I, Nephi, have seen it, and it well nigh consumeth me before the presence of the Lord; but I must cry unto my God: Thy ways are just.

8 ஆனால் இதோ, தீர்க்கதரிசிகளின் வார்த்தைக-
ளைக் கேட்டு அவர்களை அழிக்காமல், எல்லாத்
துன்பங்களையும் பொருட்படுத்தாமல், கொடுக்-
கப்பட்ட அறிகுறிகளுக்காகத் திடமனதோடு, கி-
றிஸ்துவை நோக்கிப்பார்க்கிற நீதிமான்களே, நிர்-
மூலமாகாதவர்கள்.

But behold, the righteous that hearken unto the words of the prophets, and destroy them not, but look forward unto Christ with steadfastness for the signs which are given, notwithstanding all persecution—behold, they are they which shall not perish.

9 நீதியின் குமாரன் அவர்களிடத்தில் தோன்றுவார்;
மூன்று தலைமுறைகள் கடந்து செல்லும்வரைக்-
கும், அவர் அவர்களைச் சுகமாக்குவார். அவர்கள்
அவர்களுடன் சமாதானமாயிருப்பார்கள். நான்கா-
வது தலைமுறையில் அநேகர் நீதியிலே கடந்து
செல்வார்கள்.

But the Son of Righteousness shall appear unto them; and he shall heal them, and they shall have peace with him, until three generations shall have passed away, and many of the fourth generation shall have passed away in righteousness.

10 இவை கடந்து போன பின்பு, என் ஜனத்திற்கு
அழிவு சீக்கிரமாய் வரும். ஏனெனில் என் ஆத்துமா-
வின் வேதனையைப் பொருட்படுத்தாமல், அதை
நான் கண்டிருக்கிறேன்; ஆகையால் அது இவ்வாறு
சம்பவிக்கும், என நான் அறிவேன். ஒன்றுமில்லாத-
வைக்கு அவர்கள் தங்களையே விற்பார்கள்,
அவர்களின் அகந்தைக்கும், மதியீனத்திற்கும்
பலனாக அழிவை அறுவடை செய்வார்கள். பிசா-
சுக்குத் தாங்கள் இணங்கினதாலும், வெளிச்சத்திற்-
குப் பதிலாக இருளின் கிரியைகளைத் தேர்ந்தெ-
டுத்ததாலும், அவர்கள் பாதாளத்திற்குச் செல்ல-
வேண்டும்.

And when these things have passed away a speedy destruction cometh unto my people; for, notwithstanding the pains of my soul, I have seen it; wherefore, I know that it shall come to pass; and they sell themselves for naught; for, for the reward of their pride and their foolishness they shall reap destruction; for because they yield unto the devil and choose works of darkness rather than light, therefore they must go down to hell.

11 ஏனெனில், கர்த்தருடைய ஆவியானவர் எப்பொ-
ழுதும் மனுஷருடன் கிரியை செய்வதில்லை. ஆவி-
யானவர் மனுஷருடன் கிரியை செய்வதிலிருந்து
நின்றால், அழிவு சீக்கிரமாய் வரும். இது என் ஆத்-
துமாவை சஞ்சலப்படுத்துகிறது.

For the Spirit of the Lord will not always strive with man. And when the Spirit ceaseth to strive with man then cometh speedy destruction, and this grieveth my soul.

12 இயேசுதான் மெய்யான கிறிஸ்து, என்று யூதர்க-
ளுக்கு உணர்த்தியதைக் குறித்து நான் பேசினதா-
லே, புறஜாதியாரும், இயேசுதான் நித்திய தேவனா-
கிய கிறிஸ்துவென்று உணர்ந்துகொள்ளவேண்-
டும்

And as I spake concerning the convincing of the Jews, that Jesus is the very Christ, it must needs be that the Gentiles be convinced also that Jesus is the Christ, the Eternal God;

13 அவர் பரிசுத்த ஆவியானரின் வல்லமையினால்,
தன்னில் விசுவாசிக்கிற அனைவருக்கும் தன்னை-
யே வெளிப்படுத்தி, ஆம், ஒவ்வொரு தேசத்துக்கும்,
இனத்திற்கும், பாஷைக்கும், ஜனத்திற்கும், மனுபுத்-
திரர் மத்தியில் அவர்களின் விசுவாசத்தின்படியே
பலத்த அற்புதங்களையும், அடையாளங்களை-
யும், அதிசயங்களையும் செய்கிறார்.

And that he manifesteth himself unto all those who believe in him, by the power of the Holy Ghost; yea, unto every nation, kindred, tongue, and people, working mighty miracles, signs, and wonders, among the children of men according to their faith.

14 ஆனாலும் இதோ, கர்த்தராகிய தேவன் இந்தக் கா-
ரியங்களை மனுபுத்திரருக்கு கொண்டுவருகிற கா-
லங்களாகிய, கடைசிக் காலத்தைக் குறித்து நான்
உங்களுக்கு தீர்க்கதரிசனமுரைக்கிறேன்.

But behold, I prophesy unto you concerning the last days; concerning the days when the Lord God shall bring these things forth unto the children of men.

15 என் சந்ததியாரும் என் சகோதரரின் சந்ததியாரும் அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்து புறஜாதியாரால் அடிக்கப்பட்டப் பின்னரும், ஆம் அவர்களுக்கு விரோதமாய்க் கர்த்தராகிய தேவன் சுற்றிலும் பாசறையிட்டு, அவர்களுக்கு விரோதமாய் மலைகளால் முற்றுகைபோட்டு, அவர்களுக்கு விரோதமாய் கொத்தளங்களை எழுப்பிய பின்னரும், அவர்கள் இல்லாமற் போகுமளவும் தூசிக்கு சமானமாய் தாழ்வாக்கப்பட்ட பின்னரும், நீதிமானின் வார்த்தைகள் எழுதப்படும். விசுவாசமுள்ளவர்களின் ஜெபங்கள் கேட்கப்படும். மேலும் அவிசுவாசத்திலே படிப்படியாக நலிந்தவர்களெல்லோரும் மறக்கப்பட்டுப்போவதில்லை.

After my seed and the seed of my brethren shall have dwindled in unbelief, and shall have been smitten by the Gentiles; yea, after the Lord God shall have camped against them round about, and shall have laid siege against them with a mount, and raised forts against them; and after they shall have been brought down low in the dust, even that they are not, yet the words of the righteous shall be written, and the prayers of the faithful shall be heard, and all those who have dwindled in unbelief shall not be forgotten.

16 அழிக்கப்படவிருப்பவர்கள் தரையிலிருந்து அவர்களிடத்தில் பேசுவார்கள். அவர்களின் பேச்சு புழுதியிலிருந்து பணிவானதாயும், தெரிந்த ஆவியின் சத்தம் போலவும் இருக்கும், அவன் அவர்களைக் குறித்து தரையிலிருந்து முணுமுணுப்பதைப்போல, உரைக்கக் கர்த்தராகிய தேவன், அவனுக்கு வல்லமையைக் கொடுப்பார். அவர்களின் பேச்சு புழுதியிலிருந்து முனகும்.

For those who shall be destroyed shall speak unto them out of the ground, and their speech shall be low out of the dust, and their voice shall be as one that hath a familiar spirit; for the Lord God will give unto him power, that he may whisper concerning them, even as it were out of the ground; and their speech shall whisper out of the dust.

17 இவ்விதமாக கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்: தங்கள் மத்தியில் செய்யப்படுபவைகளை அவர்கள் எழுதுவார்கள். அவைகள் எழுதப்பட்டு, ஒரு புஸ்தகத்திலே முத்திரையிடப்படும், அவிசுவாசத்திலே படிப்படியாக நலிந்தவர்கள் அவற்றைப் பெறமாட்டார்கள். அவர்கள் தேவனுடைய காரியங்களை அழிக்க வகைதேடுகிறார்கள்.

For thus saith the Lord God: They shall write the things which shall be done among them, and they shall be written and sealed up in a book, and those who have dwindled in unbelief shall not have them, for they seek to destroy the things of God.

18 ஆகையால், அழிக்கப்பட்டுப் போனவர்கள் துரிதமாய் அழிக்கப்பட்டார்கள். பயங்கரமானவர்களின் திரள் பறக்கும் பதர்களத்தனையாக இருக்கும். ஆம், அது திடீரென்று சடிதியாய்ச் சம்பவிக்கும், என்று கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்.

Wherefore, as those who have been destroyed have been destroyed speedily; and the multitude of their terrible ones shall be as chaff that passeth away—yea, thus saith the Lord God: It shall be at an instant, suddenly—

19 அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்தவர்கள், புறஜாதியாரின் கையினால் அடிக்கப்படுவார்கள்.

And it shall come to pass, that those who have dwindled in unbelief shall be smitten by the hand of the Gentiles.

20 தங்கள் கண்களின் செருக்கால் புறஜாதியார் உயர்த்தப்படுகிறதாலும், பெரும் தடைக்கல்லினிமித்தம் இடறியதாலும், அவர்கள் அநேக சபைகளைக் கட்டியுள்ளார்கள்; இருப்பினும் தாங்கள் ஆதாயத்தைப் பெறவும், சிறுமையானவர்களின் முகத்தை நெரிக்கவுமே, தங்கள் சொந்த கல்வியையும், தங்கள் ஞானத்தையும், தங்களுக்குள்ளே பிரசங்கித்து, தேவனுடைய அற்புதங்களையும், வல்லமையையும் இகழ்கிறார்கள்.

And the Gentiles are lifted up in the pride of their eyes, and have stumbled, because of the greatness of their stumbling block, that they have built up many churches; nevertheless, they put down the power and miracles of God, and preach up unto themselves their own wisdom and their own learning, that they may get gain and grind upon the face of the poor.

21 பொறாமைகளையும் வாக்குவாதங்களையும், துர்க்குணத்தையும் விளைவிக்கிற அநேக சபைகள் கட்டப்பட்டுள்ளன.

And there are many churches built up which cause envyings, and strifes, and malice.

22 அங்கே பூர்வகாலத்தில் இருந்ததைப் போலவே, பிசாசின் கூட்டத்தாரைப் போன்ற இரகசிய சங்கங்கள் இருந்தன. ஆம், அவன்தான் இவைகள் அனைத்தையும் தோற்றுவித்தவன். ஆம், கொலையையும், இருளின் கிரியைகளையும், தோற்றுவித்தவன், தம் வலிய கயிற்றால் என்றென்றைக்கும் அவர்களை அவன் கட்டிப்போடும்வரைக்கும், அவர்களது கழுத்தை சணல் கயிற்றால் கட்டி நடத்துகிறான்.

And there are also secret combinations, even as in times of old, according to the combinations of the devil, for he is the founder of all these things; yea, the founder of murder, and works of darkness; yea, and he leadeth them by the neck with a flaxen cord, until he bindeth them with his strong cords forever.

23 ஏனெனில் இதோ, என் அன்புச் சகோதரரே, கர்த்தராகிய தேவன் அந்தகாரத்தில் கிரியை செய்வதில்லையென, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

For behold, my beloved brethren, I say unto you that the Lord God worketh not in darkness.

24 அவர் உலகத்தின் நன்மைக்கு ஏதுவானவையே அல்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யார்; எல்லா மனுஷரையும் தம்மிடம் அழைத்துக்கொள்ள தன் சொந்த ஜீவனைக் கொடுக்குமளவிற்கு அவர் இந்த உலகத்தை நேசித்தார். ஆதலால், தன் இரட்சிப்பில் பங்கு பெறக்கூடாது, என ஒருவருக்கும் அவர் கட்டளையிடுவதில்லை.

He doeth not anything save it be for the benefit of the world; for he loveth the world, even that he layeth down his own life that he may draw all men unto him. Wherefore, he commandeth none that they shall not partake of his salvation.

25 இதோ, என்னைவிட்டுப் போ, என்று யாரிடத்திலாவது அவர் கூக்குரலிடுகிறாரா? இதோ அப்படியல்லவே, என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆனால் அவரோ: பூமியின் கடையாந்தரத்தில் இருப்போரே, எல்லோரும் என்னிடத்தில் வந்து, பாலையும், தேனையும் பணமுமின்றி, விலையுமின்றி பெற்றுக்கொள்ளுங்கள், என்கிறார்.

Behold, doth he cry unto any, saying: Depart from me? Behold, I say unto you, Nay; but he saith: Come unto me all ye ends of the earth, buy milk and honey, without money and without price.

26 இதோ, அவர் யாரையாகிலும் ஜெபஆலயங்களிலிருந்து அல்லது வழிபாட்டு ஸ்தலங்களிலிருந்து வெளியே போ, என்று கட்டளையிட்டிருக்கிறாரா? இதோ உங்களை நோக்கி அப்படியல்லவே என்கிறேன்.

Behold, hath he commanded any that they should depart out of the synagogues, or out of the houses of worship? Behold, I say unto you, Nay.

27 அவரின் இரட்சிப்பைப் புசிக்கக்கூடாது, என்று அவர் யாரையாகிலும் கட்டளையிட்டிருக்கிறாரா? இதோ நான் உங்களை நோக்கி அப்படியல்ல, என்கிறேன். ஆனால் அதை எல்லா மனுஷருக்கும் அவர் இலவசமாய்க் கொடுத்தார்; எல்லா மனுஷரையும் மனந்திரும்புதலுக்கு இணங்கச்செய்ய வேண்டும், என்று அவர் தன் ஜனத்திற்குக் கட்டளையிட்டார்.

Hath he commanded any that they should not partake of his salvation? Behold I say unto you, Nay; but he hath given it free for all men; and he hath commanded his people that they should persuade all men to repentance.

28 இதோ தன் நன்மையைப் புசிக்கக்கூடாது, என யாரையாகிலும் கர்த்தர் கட்டளையிட்டிருக்கிறாரா? இதோ உங்களை நோக்கி அப்படியல்ல, என்கிறேன், ஆனால் ஒருவனைப்போல மற்றொருவனுமாக, மனுஷர் யாவரும் சிலாக்கியம் பெற்றவர்களே. ஒருவனும் விலக்கப்பட்டவனல்ல.

Behold, hath the Lord commanded any that they should not partake of his goodness? Behold I say unto you, Nay; but all men are privileged the one like unto the other, and none are forbidden.

29 ஆசாரிய வஞ்சகங்கள் இருக்கக்கூடாது, என அவர் கட்டளையிடுகிறார். ஏனெனில் இதோ மனுஷர் சீயோனின் சுகவிருத்தியை நாடாமல், உலகத்தின் பலனையும், கீர்த்தியையும் பெறவே, அவர்கள் போதித்து, உலகத்திற்குத் தங்களையே ஒளியாக உயர்த்துவதே ஆசாரியவஞ்சகம்.

He commandeth that there shall be no priestcrafts; for, behold, priestcrafts are that men preach and set themselves up for a light unto the world, that they may get gain and praise of the world; but they seek not the welfare of Zion.

30 இதோ, கர்த்தர் இந்தக் காரியத்தைச் செய்யத்தகாததென்று தடைபண்ணினார்; ஆதலால் கர்த்தராகிய தேவன் எல்லா மனுஷரிடத்திலும் தயாளம் இருத்தல் வேண்டுமென ஒரு கட்டளையைக் கொடுத்துள்ளார். அந்த தயாளத்துவமென்பது அன்பு. அவர்களில் தயாளத்துவம் இல்லையெனில் அவர்கள் ஒன்றுமில்லை. ஆதலால், அவர்களில் தயாளத்துவம் இருக்குமாயின் அவர்கள் சீயோனில் பிரயாசப்படுபவனை அழிந்து போகும்படி விடமாட்டார்கள்.

Behold, the Lord hath forbidden this thing; wherefore, the Lord God hath given a commandment that all men should have charity, which charity is love. And except they should have charity they were nothing. Wherefore, if they should have charity they would not suffer the laborer in Zion to perish.

31 ஆனால் சீயோனின் ஊழியக்காரன், சீயோனுக்காகப் பிரயாசப்படுவான்; ஏனெனில் அவர்கள் பணத்திற்காகப் பிரயாசப்படுவார்களெனில் சங்கரிக்கப்படுவார்கள்.

But the laborer in Zion shall labor for Zion; for if they labor for money they shall perish.

32 மறுபடியும், கர்த்தராகிய தேவன் மனுஷர் கொலைசெய்யக்கூடாதென்றும், அவர்கள் பொய் உரைக்கக்கூடாதென்றும், அவர்கள் திருடக்கூடாதென்றும், அவர்கள் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கக்கூடாதென்றும், அவர்கள் பொறாமை கொள்ளக்கூடாதென்றும், அவர்கள் துர்க்குணம் கொள்ளக்கூடாதென்றும், அவர்கள் ஒருவரோடு ஒருவர் வாக்குவாதம் செய்யக்கூடாதென்றும், அவர்கள் வேசித்தனம் செய்யக்கூடாதென்றும், அவர்கள் இந்தக் காரியங்களில் ஒன்றும் செய்யக்கூடாதென்றும், கட்டளையிட்டிருக்கிறார். அவைகளைச் செய்கிறவர்கள் அழிவார்கள்.

And again, the Lord God hath commanded that men should not murder; that they should not lie; that they should not steal; that they should not take the name of the Lord their God in vain; that they should not envy; that they should not have malice; that they should not contend one with another; that they should not commit whoredoms; and that they should do none of these things; for whoso doeth them shall perish.

33 இந்த அக்கிரமங்களில் ஒன்றும் கர்த்தரால் வருபவை அல்ல. மனுபுத்திரர் மத்தியில் நன்மையானவற்றையே அவர் செய்கிறார். அவர் மனுபுத்திரரிடத்தில் தெளிவானதாய் இருப்பதைத் தவிர வேறெதையும் செய்வதில்லை. அவர்கள் அனைவரும் தம்மிடத்தில் வரும்படியாகவும், தன் நன்மையைப் புசிக்கும்படியாகவும் அழைக்கிறார். தம்மிடம் வரும் ஒருவரையும் வெள்ளையனாகிலும், கருப்பனாகிலும் அடிமையாகிலும், சுதந்திரவாளியாகிலும், ஆணாகிலும், பெண்ணாகிலும் அவர் மறுப்பதில்லை. அவர் புற ஜாதியானையும் நினைவுகூருகிறார். யூதனாகிலும், புறஜாதியானாகிலும் அனைவரும் தேவனுக்குச் சமமானவர்களே.

For none of these iniquities come of the Lord; for he doeth that which is good among the children of men; and he doeth nothing save it be plain unto the children of men; and he inviteth them all to come unto him and partake of his goodness; and he denieth none that come unto him, black and white, bond and free, male and female; and he remembereth the heathen; and all are alike unto God, both Jew and Gentile.

# 2 நேபி 27

1 ஆகிலும் இதோ, கடைசி நாட்களில், அல்லது புற-
ஜாதியாரின் நாட்களிலே, புறஜாதியாரின் தேசங்க-
ளனைத்தும் யூதர்களும், இந்த நிலத்தின்மீது வரு-
பவர்களும், இதர நிலங்களிலிருப்போருமான,
ஆம், பூமியின் நிலங்களிலிருக்கும் யாவரும் இதோ,
அக்கிரமத்தாலும், பற்பல அருவருப்புகளாலும் கு-
டித்து வெறிப்பார்கள்.

2 அந்த நாள் வரும்போது, அவர்களைச் சேனைக-
ளின் கர்த்தராகிய தேவன், இடிமுழக்கத்தாலும், பூமி
அதிர்ச்சியாலும், பெருத்த சத்தத்தாலும், புயலா-
லும், சூறைக்காற்றாலும், பட்சிக்கிற நெருப்பின்
அக்கினி ஜூவாலையினாலும் சந்திப்பார்.
3 சீயோனுக்கு விரோதமாய் யுத்தம் செய்கிறவர்க-
ளும் இடுக்கண் புரிகிற அனைத்து தேசங்களும்,
இராக்கால தரிசனத்தின் சொப்பனத்துக்கு ஒப்பா-
யிருப்பார்கள்; ஆம், அது அவர்களிடத்தில் பசியா-
யிருக்கிறவன் இதோ, தான் புசிக்கிறதாய் சொப்-
பனம்கண்டு விழிக்கும்போது, அவன் ஆத்துமா
வெறுமையாயிருக்கிறது போலவும், தாகமாயிருக்-
கிறவன், இதோ, தான் குடிக்கிறதாகச் சொப்பனம்
கண்டும் விழிக்கும்போது, விடாய்த்துள்ள ஆத்து-
மா பசியாறாமல் மயக்கமாயிருப்பதுபோலவும், சீ-
யோன் பர்வதத்திற்கு விரோதமாய் யுத்தம் செய்கிற
சகல தேசங்களின் திரளானோரும் அப்படியே
இருப்பார்கள்.
4 ஏனெனில், இதோ அக்கிரமம் செய்கிற அனைவ-
ரும், தரித்து நின்று திகையுங்கள். நீங்கள் சத்தமிட்-
டு அழுவீர்கள்; ஆம் நீங்கள் குடித்து வெறிப்பீர்கள்,
ஆனால் திராட்சை ரசத்தால் அல்ல. நீங்கள் தள்-
ளாடுவீர்கள். ஆனால் மதுபானத்தால் அல்ல.
5 ஏனெனில் இதோ, கனநித்திரையின் ஆவியைக்
கர்த்தர் உங்கள்மீது ஊற்றினார். ஏனெனில் இதோ,
நீங்கள் உங்கள் கண்களை மூடினீர்கள். தீர்க்கதரி-
சிகளையும் தள்ளினீர்கள், உங்கள் அக்கிரமத்தி-
னிமித்தம் அவர் உங்கள் அதிகாரிகளையும், ஞான-
திருஷ்டிக்காரர்களையும் மறைத்தார்.
6 கர்த்தராகிய தேவன் உங்களிடத்தில் ஒரு புஸ்த-
கத்தின் வார்த்தைகளைக் கொண்டுவருவார்.
அவைகள் நித்திரையடைந்தவர்களின் வார்த்தை-
களாயிருக்கும்.
7 இதோ, அந்தப் புஸ்தகம் முத்திரையிடப்படும்;
புஸ்தகத்திலே உலகத்தோற்ற முதல் அதன் முடிவு-
வரைக்குமாக, தேவனிடத்திலிருந்து ஒரு வெளிப்-
படுத்தல் இருக்கும்.

# 2 Nephi 27

But, behold, in the last days, or in the days of the Gentiles—yea, behold all the nations of the Gentiles and also the Jews, both those who shall come upon this land and those who shall be upon other lands, yea, even upon all the lands of the earth, behold, they will be drunken with iniquity and all manner of abominations—

And when that day shall come they shall be visited of the Lord of Hosts, with thunder and with earthquake, and with a great noise, and with storm, and with tempest, and with the flame of devouring fire.

And all the nations that fight against Zion, and that distress her, shall be as a dream of a night vision; yea, it shall be unto them, even as unto a hungry man which dreameth, and behold he eateth but he awaketh and his soul is empty; or like unto a thirsty man which dreameth, and behold he drinketh but he awaketh and behold he is faint, and his soul hath appetite; yea, even so shall the multitude of all the nations be that fight against Mount Zion.

For behold, all ye that doeth iniquity, stay yourselves and wonder, for ye shall cry out, and cry; yea, ye shall be drunken but not with wine, ye shall stagger but not with strong drink.

For behold, the Lord hath poured out upon you the spirit of deep sleep. For behold, ye have closed your eyes, and ye have rejected the prophets; and your rulers, and the seers hath he covered because of your iniquity.

And it shall come to pass that the Lord God shall bring forth unto you the words of a book, and they shall be the words of them which have slumbered.

And behold the book shall be sealed; and in the book shall be a revelation from God, from the beginning of the world to the ending thereof.

8 ஆகையால், முத்திரையிடப்பட்ட காரியங்களி-
னிமித்தம், ஜனத்தின் துன்மார்க்கம், மற்றும் அருவ-
ருப்புகளின் நாளிலே, முத்திரையிடப்பட்ட காரி-
யங்கள் கொடுக்கப்படமாட்டாது. ஆதலால் அவர்க-
ளிடத்திலிருந்து அந்தப் புஸ்தகம் மறைத்து வைக்-
கப்படும்.

Wherefore, because of the things which are sealed up, the things which are sealed shall not be delivered in the day of the wickedness and abominations of the people. Wherefore the book shall be kept from them.

9 ஆனால் அந்தப் புஸ்தகம் ஒரு மனுஷனிடத்தில்
கொடுக்கப்படும். புழுதியிலே நித்திரையடைந்த-
வர்களின் வார்த்தைகளான, அந்தப் புஸ்தகத்தின்
வார்த்தைகளை, அவன் வெளியே கொண்டுவரு-
வான். அவன் அந்த வார்த்தைகளை மற்றொரு-
வனிடத்தில் ஒப்படைப்பான்.

But the book shall be delivered unto a man, and he shall deliver the words of the book, which are the words of those who have slumbered in the dust, and he shall deliver these words unto another;

10 ஆனால் முத்திரையிடப்பட்டிருக்கிற வார்த்தைக-
ளையோ, புஸ்தகத்தையோ அவன் வெளியிடான்.
ஏனெனில் புஸ்தகம் தேவனுடைய வல்லமையி-
னால் முத்திரையிடப்படும். இதோ முத்திரையிடப்-
பட்ட வெளிப்படுத்தல், உலகத்தின் ஆதிமுதல்
அதன் முடிவுவரைக்குமான எல்லா காரியங்களை-
யும், அவைகள் வெளிப்படுத்துவதாய் இருக்கிறப-
டியால், அவைகள் கர்த்தருடைய சொந்த ஏற்ற கா-
லத்தில் வெளியே வரும்வரைக்கும் புஸ்தகத்திலே-
யே வைக்கப்படும்.

But the words which are sealed he shall not deliver, neither shall he deliver the book. For the book shall be sealed by the power of God, and the revelation which was sealed shall be kept in the book until the own due time of the Lord, that they may come forth; for behold, they reveal all things from the foundation of the world unto the end thereof.

11 முத்திரையிடப்பட்ட புஸ்தகத்தின் வார்த்தைகள்,
கூரைகளின்மேல் வாசிக்கப்படும் காலம் வரும்;
அவைகள் கிறிஸ்துவின் வல்லமையினால் வா-
சிக்கப்படும்; உலக முடிவுபரியந்தம் இருக்கப்போகி-
றதும் மனுபுத்திரர் மத்தியிலிருக்கிறதுமான சகல
காரியங்களும், மனுபுத்திரருக்கு வெளிப்படுத்தப்-
படும்.

And the day cometh that the words of the book which were sealed shall be read upon the house tops; and they shall be read by the power of Christ; and all things shall be revealed unto the children of men which ever have been among the children of men, and which ever will be even unto the end of the earth.

12 ஆதலால், நான் யாரைக்குறித்துப் பேசினேனோ,
அந்த மனுஷனிடத்தில் இப்புஸ்தகம் ஒப்படைக்-
கப்படுகிற நாளிலே, தேவனுடைய வல்லமையி-
னால், மூன்று சாட்சிகள் மற்றும் இப்புஸ்தகம் ஒப்ப-
டைக்கப்படுபவர் காண்பதைத் தவிர, வேறொருவ-
ருடைய கண்களும் அதைக் காணாதபடிக்கு, உல-
கத்தினுடைய கண்களிலிருந்து அந்தப் புஸ்தகம்
மறைக்கப்படும்; அவர்கள் இந்தப் புஸ்தகத்தையும்,
அதிலுள்ளவைகளின் உண்மையையும் குறித்து
சாட்சி கொடுப்பார்கள்.

Wherefore, at that day when the book shall be delivered unto the man of whom I have spoken, the book shall be hid from the eyes of the world, that the eyes of none shall behold it save it be that three witnesses shall behold it, by the power of God, besides him to whom the book shall be delivered; and they shall testify to the truth of the book and the things therein.

13 தேவனுடைய சித்தத்தின்படியே, மனுபுத்திரருக்கு
அவரின் வார்த்தையை சாட்சி பகர, சிலரைத் தவிர
வேறொருவரும் அதைக் காணமாட்டார்கள்; மரித்-
தோர் பேசுவதைப்போல விசுவாசமுள்ளவர்களின்
வார்த்தைகள் பேசவேண்டும், என்று கர்த்தராகிய
தேவன் சொல்லியிருக்கிறாரே.

And there is none other which shall view it, save it be a few according to the will of God, to bear testimony of his word unto the children of men; for the Lord God hath said that the words of the faithful should speak as if it were from the dead.

14 ஆனபடியால், கர்த்தராகிய தேவன் புஸ்தகத்தி-
னுடைய வார்த்தைகளை வெளியே கொண்டுவ-
ரும்படி புறப்படுவார். அவருக்கு நன்மையாய்ப்ப-
டுகிறபடியே அநேக சாட்சிகளின் வாயினாலே
அவர் தம் வார்த்தையை ஸ்தாபிப்பார்; தேவனு-
டைய வார்த்தையைப் புறக்கணிக்கிறவனுக்கு
ஐயோ!

Wherefore, the Lord God will proceed to bring forth the words of the book; and in the mouth of as many witnesses as seemeth him good will he establish his word; and wo be unto him that rejecteth the word of God!

15 இதோ, ஒருவனிடத்தில் இந்தப் புஸ்தகத்தை ஒப்-
புவித்து, அவனை நோக்கி: முத்திரையிடப்படாத
வார்த்தைகளை எடுத்துக்கொண்டுபோய் மற்றொ-
ருவனிடத்தில் ஒப்படைத்துவிடு. அவன் அதை
கல்விமானிடத்தில் காண்பித்து, இதை வாசிக்கும்-
படி உம்மை வேண்டுகிறேன், என்பான். அதற்குக்
கல்விமான்: புஸ்தகத்தை இங்கே கொண்டுவாரும்,
வாசிக்கிறேன், என்பான்.

But behold, it shall come to pass that the Lord God shall say unto him to whom he shall deliver the book: Take these words which are not sealed and deliver them to another, that he may show them unto the learned, saying: Read this, I pray thee. And the learned shall say: Bring hither the book, and I will read them.

16 இப்பொழுது, தேவனுடைய மகிமைக்காக அல்-
லாமல் உலகப் புகழுக்காகவும், ஆதாயம் அடைய-
வுமே இதை அவர்கள் சொல்லுவார்கள்.

And now, because of the glory of the world and to get gain will they say this, and not for the glory of God.

17 அப்பொழுது அந்த மனுஷன்: அது முத்திரையி-
டப்பட்டுள்ளதால், அந்தப் புஸ்தகத்தை நான்
கொண்டுவர முடியாது, என்பான்.

And the man shall say: I cannot bring the book, for it is sealed.

18 பின்பு கல்விமான்: நான் அதைப் படிக்கமுடியாது
என்பான்.

Then shall the learned say: I cannot read it.

19 ஆனபடியால், கர்த்தராகிய தேவன் மறுபடியும்
புஸ்தகத்தையும், அதிலுள்ள வார்த்தைகளையும்,
கல்லாதவனிடத்தில் ஒப்புவிப்பார். அதற்குக் கல்-
லாதவன்: நான் கல்விமான் அல்லவே, என்பான்.

Wherefore it shall come to pass, that the Lord God will deliver again the book and the words thereof to him that is not learned; and the man that is not learned shall say: I am not learned.

20 பின்பு கர்த்தராகிய தேவன் அவனிடத்தில்: கல்-
விமான்கள் அவைகளைப் புறக்கணித்ததினிமித்-
தம், அவைகளை அவர்கள் வாசிக்க கூடாது. நான்
என் சொந்த கிரியையை செய்யக்கூடும்; ஆதலால்
நான் உனக்குக் கொடுக்கும் வார்த்தைகளை நீ வா-
சிப்பாயாக என்றார்.

Then shall the Lord God say unto him: The learned shall not read them, for they have rejected them, and I am able to do mine own work; wherefore thou shalt read the words which I shall give unto thee.

21 முத்திரையிடப்பட்டவைகளை தொடாதே, ஏனெ-
னில் அவற்றை என்னுடைய சொந்த ஏற்ற காலத்-
திலே கொண்டுவருவேன், ஆதலால், என் சுயகிரி-
யையை நான் செய்ய எனக்கு வல்லமையுண்-
டென்று நான் மனுபுத்திரருக்கு காண்பிப்பேன்.

Touch not the things which are sealed, for I will bring them forth in mine own due time; for I will show unto the children of men that I am able to do mine own work.

22 ஆதலால், நான் உனக்குக் கட்டளையிட்ட வார்த்-
தைகளை நீ படித்து, உனக்கு நான் வாக்குத்தத்தம்-
பண்ணின சாட்சிகளைப் பெற்ற பின்பு, மனுபுத்தி-
ரருக்கு அனைத்துக் காரியங்களையும் வெளிப்ப-
டுத்த, என் சொந்த ஞானத்தில் ஏற்றதாய் இருக்கிற-
தா, என நான் காணும்வரைக்கும், நீ வாசிக்காத
வார்த்தைகளை நான் பாதுகாக்க, நீ மறுபடியும்
புஸ்தகத்தை முத்திரையிட்டு, எனக்குள் மறைத்து
வைப்பாயாக.

Wherefore, when thou hast read the words which I have commanded thee, and obtained the witnesses which I have promised unto thee, then shalt thou seal up the book again, and hide it up unto me, that I may preserve the words which thou hast not read, until I shall see fit in mine own wisdom to reveal all things unto the children of men.

23 இதோ, நானே தேவன்; நான் அற்புதங்களின் தே-
வன். நான் நேற்றும், இன்றும், என்றென்றைக்கும்,
மாறாதவர் என்பதை உலகத்திற்குக் காண்பிப்-
பேன். மனுபுத்திரரின் விசுவாசத்தினாலேயல்லா-
மல் அவர்களுக்குள்ளே நான் கிரியை செய்வதில்-
லை, என்பார்.

For behold, I am God; and I am a God of miracles; and I will show unto the world that I am the same yesterday, today, and forever; and I work not among the children of men save it be according to their faith.

24 மீண்டும், கர்த்தர், தனக்கு ஒப்படைக்கப்பட்ட
வார்த்தைகளை வாசிக்கிறவனை நோக்கி:

And again it shall come to pass that the Lord shall say unto him that shall read the words that shall be delivered him:

25 இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்-
தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக்
கனம் பண்ணுகிறார்கள். அவர்கள் இருதயமோ
எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது, அவர்கள்
எனக்குப் பயப்படுகிற பயம், மனுஷராலே போதிக்-
கப்பட்ட கட்டளையாயிருக்கிறது.

Forasmuch as this people draw near unto me with their mouth, and with their lips do honor me, but have removed their hearts far from me, and their fear towards me is taught by the precepts of men—

26 ஆதலால், நான் இந்த மக்களுக்குள்ளே ஒரு மகத்-
துவமுள்ள கிரியை செய்யப் புறப்படுவேன். ஆம்
அது ஒரு அற்புதமும் மகத்துவமுமுள்ள கிரியை.
ஏனெனில், ஞானிகளின் ஞானமும், கல்விமான்க-
ளின் ஞானமும் கெட்டுப்போகும். விவேகிகளின்
விவேகம் மறைக்கப்படும்.

Therefore, I will proceed to do a marvelous work among this people, yea, a marvelous work and a wonder, for the wisdom of their wise and learned shall perish, and the understanding of their prudent shall be hid.

27 தங்கள் ஆலோசனையைக் கர்த்தரிடத்திலிருந்து
மறைக்கத் தீவிரமாய் தேடுகிறவர்களுக்கு ஐயோ!
மேலும் அவர்கள் கிரியைகள் அந்தகாரத்திலிருக்-
கின்றன. நம்மைக் காண்கிறவர் யார், நம்மை
அறிந்தவர் யார் என்றும் சொல்லுகிறார்கள். மே-
லும் அவர்கள் மெய்யாகவே, காரியங்களைத்
தலைகீழாக நீங்கள் திருப்புவது, குயவனின் களி-
மண்ணைப்போல மதிக்கப்படும் என்றும் சொல்லு-
கிறார்கள். ஆனால் இதோ நான் அவர்களின் எல்-
லாக் கிரியைகளையும் அறிந்திருக்கிறேன் என்ப-
தை அவர்களுக்குக் காண்பிப்பேன் என சேனைக-
ளின் கர்த்தர் உரைக்கிறார். உண்டாக்கப்பட்டது,
தன்னை உண்டாக்கினவரைக் குறித்து, அவர் என்-
னை உண்டாக்கினதில்லை என்றும், உருவாக்கப்-
பட்டது தன்னை உருவாக்கினவரைக் குறித்து,
அவருக்குப் புத்தியில்லையென்றும் சொல்லுமோ,
என்பார்.

And wo unto them that seek deep to hide their counsel from the Lord! And their works are in the dark; and they say: Who seeth us, and who knoweth us? And they also say: Surely, your turning of things upside down shall be esteemed as the potter's clay. But behold, I will show unto them, saith the Lord of Hosts, that I know all their works. For shall the work say of him that made it, he made me not? Or shall the thing framed say of him that framed it, he had no understanding?

28 இதோ, சேனைகளின் கர்த்தர், சொல்வது என்ன-
வெனில்: லீபனோன் செழிப்பான வயல்வெளியாக
மாறுவதற்கு இன்னும் கொஞ்சக் காலமேயுள்ளது
என மனுபுத்திரருக்கு நான் காண்பிப்பேன். செழிப்-
புள்ள வயல்வெளி, காட்டுக்கு சமமாய் மதிக்கப்ப-
டும் என்கிறார்.

But behold, saith the Lord of Hosts: I will show unto the children of men that it is yet a very little while and Lebanon shall be turned into a fruitful field; and the fruitful field shall be esteemed as a forest.

29 அந்நாளிலே செவிடர் அந்தப் புஸ்தகத்தின்
வார்த்தைகளைக் கேட்பார்கள், குருடரின் கண்கள்
இருளுக்கும் அந்தகாரத்திற்கும் நீங்கலாகப் பார்-
வையடையும்.

And in that day shall the deaf hear the words of the book, and the eyes of the blind shall see out of obscurity and out of darkness.

30 சாந்த குணமுள்ளவர்கள் விருத்தியடைந்து,
அவர்கள் சந்தோஷம் கர்த்தருக்குள்ளாக இருக்கும்.
மனுஷருக்குள் எளிமையானோர் இஸ்ரவேலின்
பரிசுத்தருக்குள் களிகூருவார்கள்.

And the meek also shall increase, and their joy shall be in the Lord, and the poor among men shall rejoice in the Holy One of Israel.

31 நிச்சயமாக கர்த்தர் ஜீவிக்குமளவும், கொடியவன்
அதமாக்கப்பட்டு, பரியாசக்காரன் நிர்மூலமாக்கப்-
பட்டு, அக்கிரமத்திற்காகக் காத்திருந்தவர்கள்
அனைவரும் தள்ளப்பட்டுப் போவதை, அவர்கள்
காண்பார்கள்

For assuredly as the Lord liveth they shall see that the terrible one is brought to naught, and the scorner is consumed, and all that watch for iniquity are cut off;

32 ஒரு வார்த்தையினிமித்தம், ஒரு மனுஷனைக்
குற்றவாளியாக்கி, நியாயவாசலில் கடிந்துகொள்-
கிறவனுக்கு ஒரு கண்ணியை வைத்து, பயனற்ற
பொருளைப்போல, நியாயவானைத் தள்ளுகிற-
வர்கள் சங்கரிக்கப்படுவார்கள்.

And they that make a man an offender for a word, and lay a snare for him that reproveth in the gate, and turn aside the just for a thing of naught.

33 ஆதலால், ஆபிரகாமை மீட்ட கர்த்தர் யாக்கோ-
பின் வீட்டாரைக் குறித்துச் சொல்லுகிறதாவது:
இனி யாக்கோபு வெட்கப்படுவதுமில்லை, அவன்
முகம் வெளிருவதுமில்லை.

Therefore, thus saith the Lord, who redeemed Abraham, concerning the house of Jacob: Jacob shall not now be ashamed, neither shall his face now wax pale.

34 ஆனால் அவன் என் கரங்களின் கிரியையாகிய,
தன் பிள்ளைகளைத், தன் நடுவிலே காணும்போ-
து, என் நாமத்தைப் பரிசுத்தப்படுத்துவார்கள்,
யாக்கோபின் பரிசுத்தரை அவர்கள் பரிசுத்தப்ப-
டுத்தி, இஸ்ரவேலின் தேவனுக்குப் பயப்படுவார்-
கள்.

But when he seeth his children, the work of my hands, in the midst of him, they shall sanctify my name, and sanctify the Holy One of Jacob, and shall fear the God of Israel.

35 ஆவியிலே தவறு செய்தவர்கள், புரிந்து கொள்-
வார்கள். முறுமுறுத்தவர்களும் உபதேசத்தைக் கற்-
பார்கள்.

They also that erred in spirit shall come to understanding, and they that murmured shall learn doctrine.

## 2 நேபி 28

1 இப்பொழுது, இதோ, என் சகோதரரே, என்னை நெருக்கி ஏவிய ஆவியானவரின்படியே, நான் உங்களிடத்தில் பேசினேன். ஆதலால் அவைகள் மெய்யாகவே சம்பவிக்கும், என நான் அறிவேன்.

2 இந்தப் புஸ்தகத்தைக்கொண்டு, எழுதப்படுகிற காரியங்கள், மனுபுத்திரருக்குள்ளே, மிகவும் குறிப்பாக இஸ்ரவேலின் வீட்டாரின் மீதியானவர்களாகிய, நம் சந்ததியாருக்கும் மிக மதிப்புடையதாக இருக்கும்.

3 ஏனெனில் அந்நாளிலே கர்த்தருக்குள்ளாக அல்லாமல், கட்டப்பட்ட சபைகளில் ஒன்று மற்றவையினிடத்தில், இதோ, நானே கர்த்தருடையதென்று சொல்லும்; மற்றவைகள் நானே கர்த்தருடையது, என்றும் சொல்லும். கர்த்தருக்காக அல்லாமல், கட்டப்பட்ட சபைகள் யாவரும் இப்படியே சொல்லுவார்கள்.

4 அவர்கள் ஒருவருக்கொருவர் விவாதம் செய்வார்கள்; அவர்களின் போதகர்கள் ஒருவருக்கொருவர் விவாதம் செய்வார்கள். அவர்கள் தங்களின் கல்வியை வைத்துப் போதித்து, வார்த்தையைக் கொடுக்கிற பரிசுத்தாவியானவரை நிராகரிப்பார்கள்.

5 அவர்கள், இஸ்ரவேலின் பரிசுத்தராகிய தேவனுடைய வல்லமையை நிராகரித்து, ஜனங்களை நோக்கி: எங்களுக்குச் செவிகொடுங்கள். எங்களின் அறிவுரையைக் கேளுங்கள். ஏனெனில், இதோ, கர்த்தராகிய மீட்பர் தன் கிரியையை முடித்து தன் வல்லமையை மனுஷருக்கு அவர் கொடுத்திருக்கிறபடியால், தேவன் இன்று இல்லை என்றும்,

6 இதோ, என் அறிவுரைக்குச் செவிகொடுங்கள். கர்த்தருடைய கரத்தினால் அங்கே ஒரு அற்புதம் நிகழ்த்தப்பட்டது, என்று அவர்கள் சொல்வார்களெனில், அதை நம்பவேண்டாம். ஏனெனில் இத்தினத்திலே, அவர் அற்புதங்களின் தேவன் அல்ல; அவர் தன் கிரியையை செய்து முடித்தாரென்றும்,

7 ஆம், நாளை நாம் மரித்துப்போவோமென்பதால், புசித்து, குடித்து, பூரிப்பாயிரு, அது நமக்கு நலமாயிருக்குமென்று, அநேகர் சொல்லுவார்கள்.

8 புசித்து, குடித்து, பூரிப்பாயிரு; ஆயினும் தேவனுக்குப் பயப்படு. சிறிய பாவம் செய்வதை அவர் நியாயமெனத் தீர்ப்பார்; கொஞ்சம் பொய் சொல். ஒருவனுடைய வார்த்தைகளைக்கொண்டு, அதை சாதகமாக்கிக்கொள். உன் அயலானுக்கு ஒரு துரவை வெட்டு. அதனாலே எந்தக் கேடும் வராது. நாம் நாளை மரித்துப்போகிறதினிமித்தம், இந்தக் காரியங்களனைத்தையும் செய். நாம் குற்றவாளிகளாயிருந்தாலும், தேவன் நம்மைக் கொஞ்சம் அடித்து, இறுதியிலே தேவனுடைய ராஜ்யத்திலே இரட்சிக்கப்படுவோமென்றும், அநேகர் சொல்லுவார்கள்.

## 2 Nephi 28

And now, behold, my brethren, I have spoken unto you, according as the Spirit hath constrained me; wherefore, I know that they must surely come to pass.

And the things which shall be written out of the book shall be of great worth unto the children of men, and especially unto our seed, which is a remnant of the house of Israel.

For it shall come to pass in that day that the churches which are built up, and not unto the Lord, when the one shall say unto the other: Behold, I, I am the Lord's; and the others shall say: I, I am the Lord's; and thus shall every one say that hath built up churches, and not unto the Lord—

And they shall contend one with another; and their priests shall contend one with another, and they shall teach with their learning, and deny the Holy Ghost, which giveth utterance.

And they deny the power of God, the Holy One of Israel; and they say unto the people: Hearken unto us, and hear ye our precept; for behold there is no God today, for the Lord and the Redeemer hath done his work, and he hath given his power unto men;

Behold, hearken ye unto my precept; if they shall say there is a miracle wrought by the hand of the Lord, believe it not; for this day he is not a God of miracles; he hath done his work.

Yea, and there shall be many which shall say: Eat, drink, and be merry, for tomorrow we die; and it shall be well with us.

And there shall also be many which shall say: Eat, drink, and be merry; nevertheless, fear God—he will justify in committing a little sin; yea, lie a little, take the advantage of one because of his words, dig a pit for thy neighbor; there is no harm in this; and do all these things, for tomorrow we die; and if it so be that we are guilty, God will beat us with a few stripes, and at last we shall be saved in the kingdom of God.

9 ஆம், தங்கள் ஆலோசனைகளைக் கர்த்தரிடத்தி-
லிருந்து மறைக்கத் தீவிரமாய் தேடுகிறவர்கள், தங்-
கள் இருதயங்களிலே பெருமைகொண்டு, தவறான,
வீணான, மதியீன உபதேசங்களுக்குத்தக்கதாய்
போதிக்கிறவர்கள் அநேகர் இருப்பார்கள். மேலும்
அவர்களுடைய கிரியைகள் அந்தகாரத்திலிருக்-
கும்.

Yea, and there shall be many which shall teach after this manner, false and vain and foolish doctrines, and shall be puffed up in their hearts, and shall seek deep to hide their counsels from the Lord; and their works shall be in the dark.

10 பரிசுத்தவான்களின் இரத்தம் பூமியிலிருந்து
அவர்களுக்கு விரோதமாய் கதறும்.

And the blood of the saints shall cry from the ground against them.

11 ஆம், அவர்கள் அனைவரும் வழிதப்பிப்போ-
னார்கள்; அவர்கள் கெட்டுப்போனார்கள்.

Yea, they have all gone out of the way; they have become corrupted.

12 அகந்தை கொண்டதினாலும், கள்ள ஆசிரியர்க-
ளாலும் மற்றும் கள்ள உபதேசங்களினாலும்,
அவர்களுடைய சபைகள் சீர்குலைந்து, அவர்க-
ளின் சபைகளில் செருக்குண்டானது; பெருமையி-
னிமித்தம் அவர்கள் வீம்புள்ளவர்களானார்கள்.

Because of pride, and because of false teachers, and false doctrine, their churches have become corrupted, and their churches are lifted up; because of pride they are puffed up.

13 அவர்கள் சிறுமையானவர்களை, தங்களின்
அருமையான ஆராதிக்குமிடங்களினிமித்தம் வஞ்-
சிக்கிறார்கள். சிறுமையானவர்களை தங்களின்
அருமையான வஸ்திரத்தினிமித்தம் வஞ்சிக்கிறார்-
கள். அவர்கள் பெருமையிலே வீம்புகொண்டதினி-
மித்தம், சாந்தகுணமுள்ளோரையும், இருதயத்திலே
எளிமையுள்ளோரையும் துன்பப்படுத்துகிறார்-
கள்.

They rob the poor because of their fine sanctuaries; they rob the poor because of their fine clothing; and they persecute the meek and the poor in heart, because in their pride they are puffed up.

14 அவர்கள் வணங்காக் கழுத்துக்களையும், பெரு-
மையுடைய தலைகளையும் கொண்டிருக்கிறார்-
கள்; ஆம், கிறிஸ்துவினுடைய தாழ்மையான சில-
ரைத்தவிர, பெருமையாலும், துன்மார்க்கத்தாலும்,
அருவருப்புகளினாலும், வேசித்தனத்தாலும் மற்ற
அனைவரும் வழிதப்பிப்போனார்கள். அவர்கள்
வழிநடத்தப்பட்டபோதிலும், மனுஷரின் அறிவு-
ரைகளால் போதிக்கப்பட்டதினிமித்தம், பலதட-
வைகளில் தவறுசெய்கிறார்கள்.

They wear stiff necks and high heads; yea, and because of pride, and wickedness, and abominations, and whoredoms, they have all gone astray save it be a few, who are the humble followers of Christ; nevertheless, they are led, that in many instances they do err because they are taught by the precepts of men.

15 கல்விமான்களுக்கும், செல்வந்தர்களுக்கும், தங்-
களின் இருதயங்களின் கர்வத்தினால், வீம்பு-
கொண்டிருக்கிற ஞானிகளுக்கும், கள்ள உபதே-
சங்களைப் பிரசங்கிக்கிற யாவருக்கும், வேசித்-
தனங்களைச் செய்கிற எல்லோருக்கும், கர்த்தரு-
டைய செம்மையான வழிகளைப் புரட்டுகிறவர்க-
ளுக்கும், ஐயோ, ஐயோ, ஐயோ, என்று சர்வவல்ல-
மையுள்ள கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்.
ஏனெனில் அவர்கள் பாதாளத்திலே தள்ளப்படு-
வார்கள்.

O the wise, and the learned, and the rich, that are puffed up in the pride of their hearts, and all those who preach false doctrines, and all those who commit whoredoms, and pervert the right way of the Lord, wo, wo, wo be unto them, saith the Lord God Almighty, for they shall be thrust down to hell!

16 பயனற்ற பொருளைப்போல நியாயமுள்ளவர்க-
ளைத் தள்ளுகிறவர்களுக்கும், நல்லவர்களுக்கு
விரோதமாய்த் தூஷித்து, அது மதிப்பற்றதென்று
சொல்லுகிறவர்களுக்கும் ஐயோ! கர்த்தராகிய தே-
வன் பூமியின் குடிகளை சீக்கிரமாய் சந்திக்கும்
நாள் வரும். அந்நாளிலே, அக்கிரமத்திலே முழுவ-
துமாய் பழுத்திருக்கிறவர்கள் அழிந்துபோவார்-
கள்.

Wo unto them that turn aside the just for a thing of naught and revile against that which is good, and say that it is of no worth! For the day shall come that the Lord God will speedily visit the inhabitants of the earth; and in that day that they are fully ripe in iniquity they shall perish.

17 ஆனால் இதோ, பூமியின் குடிகள் தங்கள் அக்கிரமத்திலிருந்தும், அருவருப்புகளிலிருந்தும், மனந்திரும்பினால் அழிக்கப்படமாட்டார்கள், என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

But behold, if the inhabitants of the earth shall repent of their wickedness and abominations they shall not be destroyed, saith the Lord of Hosts.

18 ஆனால் இதோ பூமியனைத்தின் வேசியான, அந்தப் பெரிதும் அருவருப்புமான சபை, பூமியில் விழுந்து நொறுங்கும். அதன் வீழ்ச்சி பயங்கரமானதாயிருக்கும்.

But behold, that great and abominable church, the whore of all the earth, must tumble to the earth, and great must be the fall thereof.

19 பிசாசின் ராஜ்யம் குலுங்கும். அதைச் சார்ந்திருப்போர் மனந்திரும்புதலுக்கு ஏவப்படவேண்டும். இல்லாவிடில் பிசாசு தன் நித்திய சங்கிலிகளால் அவர்களைப் பற்றிப்பிடிப்பான். அவர்கள் கோபத்திற்கு ஏவப்பட்டு, அழிந்துபோவார்கள்.

For the kingdom of the devil must shake, and they which belong to it must needs be stirred up unto repentance, or the devil will grasp them with his everlasting chains, and they be stirred up to anger, and perish;

20 ஏனெனில் இதோ, அந்நாளில் அவன் மனுபுத்திரர் இருதயங்களில் சினம் கொள்ளச்செய்து, அவர்களை நன்மைக்கு விரோதமாய் கோபமடைய ஏவுவான்.

For behold, at that day shall he rage in the hearts of the children of men, and stir them up to anger against that which is good.

21 மற்றவர்களை அவன் சாந்தப்படுத்தி, ஆற்றி, சீயோனில் அனைத்தும் நலமே; ஆம், சீயோன் விருத்தியடைகிறது, யாவும் நலமே, என்று சொல்லும்படியாக மாம்ச பாதுகாப்பிற்குள் போகவைப்பான். இவ்வாறாகப் பிசாசு அவர்களின் ஆத்துமாக்களை ஏமாற்றி, பத்திரமாகப் பாதாளத்திற்குள் அவர்களை நடத்திச் செல்வான்.

And others will he pacify, and lull them away into carnal security, that they will say: All is well in Zion; yea, Zion prospereth, all is well—and thus the devil cheateth their souls, and leadeth them away carefully down to hell.

22 இதோ, மற்றவர்களிடம் இச்சகமாய்ப் பேசி பாதாளம் இல்லையென்று சொல்லுகிறான். அவன் அவர்களை நோக்கி: நான் ஒன்றும் பிசாசு அல்ல, அப்படி யாரும் இல்லை, என்று சொல்லி தப்பித்துப்போக முடியாதபடி, தன்னுடைய பயங்கரமான சங்கிலிகளால் பற்றிப் பிடிக்கும்வரை, அவன் இவ்விதமாய் அவர்களின் காதுகளிலே முணுமுணுத்துப் பேசுகிறான்.

And behold, others he flattereth away, and telleth them there is no hell; and he saith unto them: I am no devil, for there is none—and thus he whispereth in their ears, until he grasps them with his awful chains, from whence there is no deliverance.

23 ஆம், அவர்கள் மரணத்தாலும் பாதாளத்தாலும் பிடிக்கப்பட்டனர். மரணமும், பாதாளமும், பிசாசும் அதனுடன் ஆக்கிரமிக்கப்பட்ட யாவரும், தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக நின்று, தங்களின் கிரியைக்குத் தக்கதாய் நியாயந்தீர்க்கப்பட்டு, அவ்விடத்திலிருந்து அவர்களுக்காய் ஆயத்தம்பண்ணப்பட்ட முடிவற்ற வேதனையாகிய, அக்கினியும் கந்தகக் கடலுமான இடத்திற்குள் அவர்கள் போகவேண்டும்.

Yea, they are grasped with death, and hell; and death, and hell, and the devil, and all that have been seized therewith must stand before the throne of God, and be judged according to their works, from whence they must go into the place prepared for them, even a lake of fire and brimstone, which is endless torment.

24 ஆதலால், சீயோனிலே சுகவாழ்வாய் ஜீவிக்கிறவனுக்கு ஐயோ!

Therefore, wo be unto him that is at ease in Zion!

25 யாவும் நலமே, என்று ஓலமிடுபவனுக்கு, ஐயோ!

Wo be unto him that crieth: All is well!

26 ஆம், மனுஷரின் அறிவுரைகளுக்குச் செவிகொடுத்து, தேவனுடைய வல்லமையையும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும் மறுக்கிறவனுக்கு, ஐயோ!

Yea, wo be unto him that hearkeneth unto the precepts of men, and denieth the power of God, and the gift of the Holy Ghost!

27 ஆம், நாங்கள் பெற்றுக்கொண்டோம். இன்னமும் எங்களுக்குத் தேவையில்லை, என்று சொல்பவனுக்கு, ஐயோ!

Yea, wo be unto him that saith: We have received, and we need no more!

28 முடிவாக, தேவனுடைய சத்தியத்தினிமித்தம் கோபம்கொள்கிற, நடுங்குகிற அனைவருக்கும், ஐயோ! இதோ பாறையின்மீது கட்டப்பட்டவன் அதை மனமகிழ்ச்சியோடே பெற்றுக்கொள்கிறான், மணலான அஸ்திபாரத்தின் மீது கட்டப்பட்டவன் விழுந்துவிடுவோமோ, என்று நடுக்கம் கொள்கிறான்.

And in fine, wo unto all those who tremble, and are angry because of the truth of God! For behold, he that is built upon the rock receiveth it with gladness; and he that is built upon a sandy foundation trembleth lest he shall fall.

29 நாங்கள் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டோம். நாங்கள் நிறைவாய் வைத்திருப்பதனாலே, இன்னமும் எங்களுக்குத் தேவனுடைய வார்த்தை தேவையில்லை, என்று சொல்லுபவர்களுக்கு, ஐயோ!

Wo be unto him that shall say: We have received the word of God, and we need no more of the word of God, for we have enough!

30 இதோ வரிவரியாயும், கட்டளை கட்டளையாயும், இங்கே கொஞ்சம், அங்கே கொஞ்சமாக, மனுபுத்திரருக்கு நான் கொடுப்பேன்; என் அறிவுரைக்குச் செவிகொடுத்து, என் ஆலோசனைக்குக் காது கொடுப்பவர்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் அவர்கள் ஞானத்தைக் கற்றுக்கொள்வார்கள். ஏற்றுக்கொள்ளுகிறவனுக்கு நான் அதிகமாய்க் கொடுப்பேன். நாங்கள் நிறைவாய் வைத்திருக்கிறோம் என்று சொல்லுபவர்களிடத்திலிருந்து அவர்கள் வைத்திருப்பதும் எடுத்துக்கொள்ளப்படும், என்று கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்.

For behold, thus saith the Lord God: I will give unto the children of men line upon line, precept upon precept, here a little and there a little; and blessed are those who hearken unto my precepts, and lend an ear unto my counsel, for they shall learn wisdom; for unto him that receiveth I will give more; and from them that shall say, We have enough, from them shall be taken away even that which they have.

31 மனுஷரில் நம்பிக்கை வைத்து, மாம்சத்தைத் தன் புயபலமாகக்கொண்டு, மனுஷருடைய அறிவுரைகளுக்குச் செவிகொடுத்து, அவர்களின் கட்டளைகள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் கொடுக்கப்பட்டதாய் இல்லாவிடில், அவன் சபிக்கப்படுவான்.

Cursed is he that putteth his trust in man, or maketh flesh his arm, or shall hearken unto the precepts of men, save their precepts shall be given by the power of the Holy Ghost.

32 புறஜாதியாருக்கு ஐயோ, என்று சேனைகளின் கர்த்தராகிய தேவன் உரைக்கிறார். ஏனெனில் நான் ஒவ்வொரு நாளும் என் புயத்தை அவர்களுக்கு நீட்டினாலும், அவர்கள் என்னை நிராகரிப்பார்கள். ஆயினும் அவர்கள் மனந்திரும்பி, என்னிடத்தில் வருவார்களெனில் நான் அவர்களுக்கு இரக்கமுள்ளவராயிருப்பேன், என்று கர்த்தராகிய தேவன் உரைக்கிறார். என் புயம் நாள் முழுவதும் நீண்டுள்ளது, என்று சேனைகளின் கர்த்தராகிய தேவன் உரைக்கிறார்.

Wo be unto the Gentiles, saith the Lord God of Hosts! For notwithstanding I shall lengthen out mine arm unto them from day to day, they will deny me; nevertheless, I will be merciful unto them, saith the Lord God, if they will repent and come unto me; for mine arm is lengthened out all the day long, saith the Lord God of Hosts.

# 2 நேபி 29

1 ஆனால் இதோ, அங்கே அநேகரிருப்பார்கள், அவர்-
களிடையே அற்புதமான கிரியையை செய்ய நான்
தொடங்கும் நாளிலே, மனுபுத்திரரிடத்திலே நான்
செய்துகொண்ட உடன்படிக்கைகளை நான் நி-
னைவுகூரவும், இஸ்ரவேலின் வீட்டாராகிய என்
ஜனத்தை மறுபடியும் இரண்டாம் விசை மீட்கவும்;

2 உன் சந்ததியை நினைவுகூருவேன் என்றும், உன்
சந்ததியைக் குறித்த வார்த்தைகள், என் வாயிலி-
ருந்து உன் சந்ததிக்குப் புறப்பட்டுப்போகும் என்-
றும், நேபியாகிய உன்னிடத்திலும், உன் தகப்பனி-
டத்திலும் நான் செய்த வாக்குத்தத்தங்களை நி-
னைவுகூரவும், என் வார்த்தைகள் உன் சந்ததிக்கு
என் வாயிலிருந்து புறப்பட்டுப் போகும். இஸ்ரவேல்
வீட்டாரான என் ஜனத்திற்குள்ளே ஒரு கொடியாயி-
ருக்க பூமியின் கடையாந்திரம் வரைக்கும் என்
வார்த்தைகள் பயில்காட்டி அழிக்கும்.

3 என் வார்த்தைகள் இரைச்சலிடுவதினால் அநேக
புறஜாதிகள், வேதாகமம்! வேதாகமம்! எங்களிடத்-
தில் ஒரு வேதாகமம் இருக்கிறது, இதற்கு மேலும்
எந்த வேதாகமும் இருக்கமுடியாது, என்பார்கள்.

4 ஆனாலும் தேவனாகிய கர்த்தர் உரைப்பதாவது:
மதியீனரே, எனது பூர்வ உடன்படிக்கையின் ஜனங்-
களான யூதர்களிடத்திலிருந்து வந்த ஒரு வேதாக-
மத்தை வைத்திருப்பார்கள். யூதர்களிடமிருந்து
பெற்றுக்கொண்ட வேதாகமத்திற்காக, அவர்களுக்-
கு எந்த வழிகளில் நன்றி செலுத்துகிறார்கள்: ஆம்,
புறஜாதியார் என்றால் என்ன, புறஜாதியாருக்குள்-
ளே இரட்சிப்பைக் கொண்டுவருவதில் யூதர்கள்
பட்ட கஷ்டங்களையும், பிரயாசங்களையும், வே-
தனைகளையும், என்னிடம் கருத்தாய் நடந்து-
கொண்டதையும் நினைவுகூருகிறார்களா?

5 புறஜாதிகளே, என் பூர்வ உடன்படிக்கையின்
ஜனங்களாகிய யூதர்களை நீங்கள் நினைவுகூர்ந்-
தீர்களா? இல்லையே, நீங்கள் அவர்களைச் சபித்து,
அவர்களை வெறுத்தீர்கள், அவர்களை மீட்டுக்-
கொள்ளும்படி முயற்சிக்கவில்லை. ஆனால் இதோ,
இந்தக் காரியங்கள் அனைத்தையும் உங்கள் தலை-
யின்மேல் சரிக்கட்டுவேன்; ஏனெனில் கர்த்தராகிய
நான் என் ஜனத்தை மறக்கவில்லை.

6 ஒரு வேதாகமம், ஒரு வேதாகமத்தை வைத்திருக்-
கிறோம். மேலும் எங்களுக்கு வேறு எந்த வேதாகமும்
தேவையில்லை, என்று சொல்லும் மதியீனனே, யூ-
தர் இடத்திலிருந்தல்லாமல் வேறு எங்கிருந்து வே-
தாகமத்தைப் பெற்றுக்கொண்டாய்?

# 2 Nephi 29

But behold, there shall be many—at that day when I shall proceed to do a marvelous work among them, that I may remember my covenants which I have made unto the children of men, that I may set my hand again the second time to recover my people, which are of the house of Israel;

And also, that I may remember the promises which I have made unto thee, Nephi, and also unto thy father, that I would remember your seed; and that the words of your seed should proceed forth out of my mouth unto your seed; and my words shall hiss forth unto the ends of the earth, for a standard unto my people, which are of the house of Israel;

And because my words shall hiss forth—many of the Gentiles shall say: A Bible! A Bible! We have got a Bible, and there cannot be any more Bible.

But thus saith the Lord God: O fools, they shall have a Bible; and it shall proceed forth from the Jews, mine ancient covenant people. And what thank they the Jews for the Bible which they receive from them? Yea, what do the Gentiles mean? Do they remember the travails, and the labors, and the pains of the Jews, and their diligence unto me, in bringing forth salvation unto the Gentiles?

O ye Gentiles, have ye remembered the Jews, mine ancient covenant people? Nay; but ye have cursed them, and have hated them, and have not sought to recover them. But behold, I will return all these things upon your own heads; for I the Lord have not forgotten my people.

Thou fool, that shall say: A Bible, we have got a Bible, and we need no more Bible. Have ye obtained a Bible save it were by the Jews?

7 ஒன்றைக் காட்டிலும் அதிகமான தேசங்களிருக்கிறதென்பதை நீங்கள் அறியீர்களா? உங்கள் தேவனாகிய கர்த்தராகிய, நான் சகல மனுஷரையும் சிருஷ்டித்திருக்கிறேன் என்றும், சமுத்திரத்தின் தீவுகளிலிருப்பவர்களையும் நினைவுகூருகிறேன் என்றும், நான் மேலே வானங்களிலும், கீழே பூமியிலும், ராஜரீகம்பண்ணுகிறேன் என்றும், பூமியின் எல்லா தேசங்களுக்குள்ளும் இருக்கிற, ஆம், மனுபுத்திரருக்கும் என் வார்த்தைகளைக்கொண்டு வருகிறேன், என்பதையும் நீங்கள் அறிந்திருக்கவில்லையா?

Know ye not that there are more nations than one? Know ye not that I, the Lord your God, have created all men, and that I remember those who are upon the isles of the sea; and that I rule in the heavens above and in the earth beneath; and I bring forth my word unto the children of men, yea, even upon all the nations of the earth?

8 அதிகமான என் வார்த்தைகளைப் பெறுவதினிமித்தம் நீங்கள் முறுமுறுக்கிறதென்ன? இரண்டு தேசங்களின் சாட்சி, நானே தேவன் என்பதற்கும், நான் ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தைப்போலவே எண்ணுகிறேன் என்பதற்கும், - சாட்சியாயுள்ளது என்று அறியீர்களா? ஆகையால் ஒரு தேசத்தாரிடத்தில் பேசுகிற அதே வார்த்தைகளையே மற்றவரிடமும் பேசுகிறேன். மேலும் ஒரே காலத்தில் இரண்டு தேசத்தார் ஒன்றாய் இருக்கும்போது, இரண்டு தேசத்தாரின் சாட்சியமும் அப்படியேயிருக்கும்.

Wherefore murmur ye, because that ye shall receive more of my word? Know ye not that the testimony of two nations is a witness unto you that I am God, that I remember one nation like unto another? Wherefore, I speak the same words unto one nation like unto another. And when the two nations shall run together the testimony of the two nations shall run together also.

9 நான் நேற்றும், இன்றும், என்றென்றும் மாறாதவராயிருக்கிறேன் என்பதை அநேகருக்கு நிரூபிக்கும்படி இப்படிச் செய்கிறேன், என் சுயவிருப்பத்தின்படியே நான் என் வார்த்தைகளைப் பேசுகிறேன். நான் ஒரு வார்த்தையைப் பேசினதினிமித்தம், நான் மற்றெதையும் பேசமாட்டேன், என்று நீங்கள் எண்ணிக்கொள்ளவேண்டாம். ஏனெனில் என் கிரியை இன்னும் முற்றுப்பெறவில்லை. அது மனுஷனின் முடிவுவரை மட்டும் அல்ல. அந்த நாள் முதல் என்றென்றைக்கும் முற்றுப்பெறாது.

And I do this that I may prove unto many that I am the same yesterday, today, and forever; and that I speak forth my words according to mine own pleasure. And because that I have spoken one word ye need not suppose that I cannot speak another; for my work is not yet finished; neither shall it be until the end of man, neither from that time henceforth and forever.

10 ஆகையால், உங்களிடம் வேதாகமம் இருப்பதினிமித்தம் அது என்னுடைய எல்லா வார்த்தைகளையும் கொண்டிருக்கிறது, என்று நீங்கள் எண்ணிக்கொள்ளாமலும், அதிகமாய் எழுதப்படுவதற்கு நான் ஏதுவாயிரேன், என்று எண்ணிக்கொள்ளாமலுமிருங்கள்.

Wherefore, because that ye have a Bible ye need not suppose that it contains all my words; neither need ye suppose that I have not caused more to be written.

11 கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும், தெற்கிலும், சமுத்திரத்தின் தீவுகளிலும் இருக்கிற சகல மனுஷரும் நான் அவர்களிடம் பேசுகிற வார்த்தைகளை எழுதவேண்டுமெனக் கட்டளையிடுகிறேன். ஏனெனில் உலகத்தை, எழுதப்படவிருக்கும் புஸ்தகங்களைக் கொண்டும், மனுஷர் ஒவ்வொருவரையும் எழுதப்பட்டிருக்கிறவற்றின்படியும், அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாயும் நியாயந்தீர்ப்பேன்.

For I command all men, both in the east and in the west, and in the north, and in the south, and in the islands of the sea, that they shall write the words which I speak unto them; for out of the books which shall be written I will judge the world, every man according to their works, according to that which is written.

12 இதோ, நான் யூதரிடத்தில் பேசுவேன், அவர்கள்
அதை எழுதுவார்கள்; நான் நேபியரிடத்திலும் பே-
சுவேன், அவர்கள் அதை எழுதுவார்கள், நான் பு-
றம்பே நடத்திக்கொண்டுபோன இஸ்ரவேல் வம்சத்-
தாராகிய மற்ற கோத்திரத்தாரிடமும் பேசுவேன்.
அவர்கள் அதை எழுதுவார்கள், மேலும் பூமியின்
சகல தேசத்தாரிடமும் பேசுவேன், அவர்கள் அதை
எழுதுவார்கள்.

For behold, I shall speak unto the Jews and they shall write it; and I shall also speak unto the Nephites and they shall write it; and I shall also speak unto the other tribes of the house of Israel, which I have led away, and they shall write it; and I shall also speak unto all nations of the earth and they shall write it.

13 யூதர்கள் நேபியரின் வார்த்தைகளை வைத்தி-
ருப்பார்கள், மேலும் நேபியர்கள், யூதரின் வார்த்-
தைகளை வைத்திருப்பார்கள். நேபியரும் யூதரும்,
தொலைந்துபோன இஸ்ரவேல் கோத்திரத்தாரின்
வார்த்தைகளை வைத்திருப்பார்கள். தொலைந்து-
போன இஸ்ரவேல் கோத்திரத்தார் நேபியரின் வார்த்-
தைகளையும், யூதர்களின் வார்த்தைகளையும்
வைத்திருப்பார்கள்.

And it shall come to pass that the Jews shall have the words of the Nephites, and the Nephites shall have the words of the Jews; and the Nephites and the Jews shall have the words of the lost tribes of Israel; and the lost tribes of Israel shall have the words of the Nephites and the Jews.

14 இஸ்ரவேல் வீட்டாராகிய என் ஜனங்கள் காணி-
யாட்சியான தங்கள் தேசங்களில் கூட்டிச் சேர்க்கப்-
படுவார்கள். என்னுடைய வார்த்தைகளும் ஒன்றா-
கக் கூட்டிச்சேர்க்கப்படும். மேலும் என்னுடைய
வார்த்தைகளுக்கு விரோதமாயும், இஸ்ரவேல் வீட்-
டாராகிய என் ஜனங்களுக்கு விரோதமாயும் யுத்தம்
செய்கிறவர்களுக்கு, நான் தேவனென்றும், நான்
ஆபிரகாமோடே உடன்படிக்கை செய்திருக்கிறேன்
என்றும், அவனுடைய சந்ததியை என்றென்றைக்-
குமாய் நினைவுகூருவேன், என்றும் காட்டுவேன்.

And it shall come to pass that my people, which are of the house of Israel, shall be gathered home unto the lands of their possessions; and my word also shall be gathered in one. And I will show unto them that fight against my word and against my people, who are of the house of Israel, that I am God, and that I covenanted with Abraham that I would remember his seed forever.

# 2 நேபி 30

1 இப்பொழுது, என் பிரியமான சகோதரரே, நான் உங்-
களிடத்தில் பேசுவேன். ஏனெனில், புறஜாதியா-
ரைக் காட்டிலும் நீங்கள் அதிக நீதியுள்ளவர்கள்
என்று நீங்கள் எண்ணிக்கொள்ள, நேபியாகிய
நான், அனுமதியேன். ஏனெனில் இதோ, நீங்கள் தே-
வனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாவி-
டில், நீங்கள் அனைவரும் அவ்விதமாகவே அழிந்-
துபோவீர்கள். பேசிய வார்த்தைகளின் நிமித்தம், பு-
றஜாதியார் முழுவதும் அழிக்கப்பட்டனர், என நீங்-
கள் எண்ணிவிடவேண்டாம்.
2 ஏனெனில் இதோ, மனந்திரும்புகிற புறஜாதியார்
அனைவரும் கர்த்தருடைய உடன்படிக்கையின்
ஜனமாக இருப்பார்கள், என நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். மனந்திரும்பாமலிருக்கும் யூதர்-
கள் அனைவரும் புறம்பே தள்ளப்படுவார்கள்.
மனந்திரும்பி இஸ்ரவேலின் பரிசுத்தராகிய, அவ-
ரின் குமாரனில் விசுவாசிக்கிறவர்களைத் தவிர
வேறொருவருடனும் கர்த்தர் உடன்படிக்கை செய்-
வதில்லை.
3 இப்பொழுது, நான் சற்று அதிகமாக புறஜாதியா-
ரையும், யூதர்களையும் குறித்துத் தீர்க்கதரிசனம்
உரைக்கிறேன். ஏனெனில் நான் பேசிய புஸ்தகம்
வெளிவந்து, புறஜாதியாருக்கு எழுதப்பட்டதாயி-
ருந்து, கர்த்தருக்குள் மறுபடியும் முத்திரை செய்-
யப்பட்ட பின்னர், எழுதப்பட்ட வார்த்தைகளை
அநேகர் விசுவாசிப்பார்கள். அவைகளை அவர்-
கள் எங்கள் சந்ததியின் மீதியானவர்களுக்குக்
கொண்டு செல்வார்கள்.
4 அப்பொழுதுதான், எங்கள் சந்ததியின் மீதியான-
வர்கள் எங்களைக் குறித்தும், நாங்கள் எருசலேமி-
லிருந்து எப்படி வந்தோம் என்பதையும், அவர்கள்
யூதர்களின் வழிவந்தவர்கள் என்பதையும் அறி-
வார்கள்.
5 அவர்கள் மத்தியில் இயேசு கிறிஸ்துவின் சுவிசே-
ஷம் அறிவிக்கப்படும். இதினிமித்தம் அவர்கள்
தங்கள் பிதாக்களைப்பற்றிய அறிவிற்கும், தங்க-
ளுடைய பிதாக்கள் அறிந்திருந்த, இயேசு கிறிஸ்து-
வைப்பற்றிய ஞானத்திற்கும், திரும்பச் சேர்க்கப்ப-
டுவார்கள்.
6 அப்பொழுது அவர்கள் களிகூருவார்கள். ஏனெ-
னில் தேவனுடைய கரத்திலிருந்து அவர்களுக்கு
அது ஒரு ஆசீர்வாதம், என்பதை அறிந்துகொள்-
வார்கள். அவர்கள் கண்களிலிருந்து இருளின் செ-
தில்கள் விழத்துவங்கும். பல தலைமுறைகள் கடந்-
துபோகும் வரைக்கும் அவர்கள் குற்றமற்றவர்க-
ளாயும் மகிழ்ச்சி நிறைந்த ஜனமாயுமில்லாவிட்-
டால், அவர்கள் மத்தியிலிருந்து அநேக தலைமு-
றைகள் கடந்து போகாது.

# 2 Nephi 30

And now behold, my beloved brethren, I would speak unto you; for I, Nephi, would not suffer that ye should suppose that ye are more righteous than the Gentiles shall be. For behold, except ye shall keep the commandments of God ye shall all likewise perish; and because of the words which have been spoken ye need not suppose that the Gentiles are utterly destroyed.

For behold, I say unto you that as many of the Gentiles as will repent are the covenant people of the Lord; and as many of the Jews as will not repent shall be cast off; for the Lord covenanteth with none save it be with them that repent and believe in his Son, who is the Holy One of Israel.

And now, I would prophesy somewhat more concerning the Jews and the Gentiles. For after the book of which I have spoken shall come forth, and be written unto the Gentiles, and sealed up again unto the Lord, there shall be many which shall believe the words which are written; and they shall carry them forth unto the remnant of our seed.

And then shall the remnant of our seed know concerning us, how that we came out from Jerusalem, and that they are descendants of the Jews.

And the gospel of Jesus Christ shall be declared among them; wherefore, they shall be restored unto the knowledge of their fathers, and also to the knowledge of Jesus Christ, which was had among their fathers.

And then shall they rejoice; for they shall know that it is a blessing unto them from the hand of God; and their scales of darkness shall begin to fall from their eyes; and many generations shall not pass away among them, save they shall be a pure and a delightsome people.

7 சிதறடிக்கப்பட்டிருக்கிற யூதர்களும் கிறிஸ்து-
வில் விசுவாசிக்கத் துவங்குவார்கள்; அவர்கள் தே-
சத்தின் பரப்பின் மீது கூடத்தொடங்குவார்கள். கி-
றிஸ்துவிலே விசுவாசிக்கும் அநேகரும் மகிழ்ச்சி நி-
றைந்த ஜனமாவார்கள்.

And it shall come to pass that the Jews which are scattered also shall begin to believe in Christ; and they shall begin to gather in upon the face of the land; and as many as shall believe in Christ shall also become a delightsome people.

8 கர்த்தராகிய தேவன் பூமியின்மீது தன் ஜனத்-
தைத் திரும்பச் சேர்ப்பதற்கு எல்லா தேசங்கள்,
இனங்கள், பாஷைகள் மற்றும் ஜனத்திற்குள்ளும்,
தன் கிரியையைத் தொடங்குவார்.

And it shall come to pass that the Lord God shall commence his work among all nations, kindreds, tongues, and people, to bring about the restoration of his people upon the earth.

9 கர்த்தராகிய தேவன் நீதியினால் எளிமையா-
னோரை நியாந்தீர்த்து, பூமியின் சாந்தகுணமுள்ள-
வர்களை நடுநிலையோடு கடிந்துகொள்வார். மே-
லும் தன் வாயின் கோலால் பூமியை அடித்து, தன்
உதடுகளின் சுவாசத்தால் துன்மார்க்கரைக் கொன்-
றுபோடுவார்.

And with righteousness shall the Lord God judge the poor, and reprove with equity for the meek of the earth. And he shall smite the earth with the rod of his mouth; and with the breath of his lips shall he slay the wicked.

10 ஏனெனில் கர்த்தராகிய தேவன், தன் ஜனத்திற்-
குள் ஒரு பெரிய பிரிவை வரப்பண்ணி, துன்மார்க்-
கரை அவர் அழிக்கும் காலம் விரைவில் வருகிறது.
அவர் துன்மார்க்கரை நெருப்பால் அழித்தாலும்
அவர் தன் ஜனத்தைத் தப்பவைப்பார்.

For the time speedily cometh that the Lord God shall cause a great division among the people, and the wicked will he destroy; and he will spare his people, yea, even if it so be that he must destroy the wicked by fire.

11 நீதி அவரின் அரைக் கச்சையாகவும், சத்தியம்
அவரின் இடைக் கச்சையாகவுமிருக்கும்.

And righteousness shall be the girdle of his loins, and faithfulness the girdle of his reins.

12 ஓநாய் செம்மறியாட்டுக்குட்டியுடன் வாசம் செய்-
யும். சிறுத்தைப்புலி வெள்ளாட்டுக்குட்டியுடனும்,
கன்றும், பாலசிங்கமும் கொழுத்தக் கன்றும், ஒரு-
மித்துப் படுத்துக்கொள்ளும். ஒரு சிறுபிள்ளை
அவைகளை நடத்திச் செல்லுவான்.

And then shall the wolf dwell with the lamb; and the leopard shall lie down with the kid, and the calf, and the young lion, and the fatling, together; and a little child shall lead them.

13 பசுவும் கரடியும் மேயும். அவைகளின் குட்டிகள்
ஒருமித்துப் படுத்திருக்கும், சிங்கம் எருதுவைப்-
போல வைக்கோல் தின்னும்.

And the cow and the bear shall feed; their young ones shall lie down together; and the lion shall eat straw like the ox.

14 பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளை-
யின்மேல் விளையாடும். பால் மறந்த பிள்ளை கட்-
டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்.

And the sucking child shall play on the hole of the asp, and the weaned child shall put his hand on the cockatrice’s den.

15 என் பரிசுத்த பர்வதமெங்கும் அவைகள் தீங்கு-
செய்வதுமில்லை. கேடு செய்வதுமில்லை. ஏனெ-
னில் ஜலம் சமுத்திரத்தை மூடியிருப்பதைப்போல,
பூமி கர்த்தரின் அறிவினால் நிரம்பியிருக்கும்.

They shall not hurt nor destroy in all my holy mountain; for the earth shall be full of the knowledge of the Lord as the waters cover the sea.

16 ஆனபடியால், எல்லா தேசங்களின் காரியங்க-
ளும் தெரியப்படுத்தப்படும்; ஆம் அனைத்து காரி-
யங்களும் மனுபுத்திரருக்குத் தெரியப்படுத்தப்ப-
டும்.

Wherefore, the things of all nations shall be made known; yea, all things shall be made known unto the children of men.

17 வெளிப்படுத்தப்படாத ஒன்றும் அங்கே இரகசிய-
மாக வைத்திருக்கப்படமாட்டாது. ஒளியிலே வெ-
ளியரங்கமாகாத அந்தகாரக் கிரியை அங்கே ஒன்-
றுமில்லை. பூமியின்மீது முத்திரையிடப்பட்டு கட்-
டவிழ்க்கப்படாது ஒன்றுமிவில்லை.

There is nothing which is secret save it shall be revealed; there is no work of darkness save it shall be made manifest in the light; and there is nothing which is sealed upon the earth save it shall be loosed.

18 ஆகையால் மனுபுத்திரருக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்த, எல்லாக் காரியங்களும் அந்த நாளிலே வெளிப்படுத்தப்படும். இனி ஒருபோதும் மனுபுத்திரர் இருதயங்களின்மீது சாத்தான், நீடிய காலத்திற்கு வல்லமை கொள்ளமாட்டான். இப்பொழுது, என் பிரியமான சகோதரரே, நான் என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

Wherefore, all things which have been revealed unto the children of men shall at that day be revealed; and Satan shall have power over the hearts of the children of men no more, for a long time. And now, my beloved brethren, I make an end of my sayings.

# 2 நேபி 31

1 என் பிரியமான சகோதரரே, இப்பொழுது நேபியா-
கிய நான், உங்களிடத்தில் சொல்லும் என் தீர்க்கதரி-
சனங்களை முடித்துக்கொள்கிறேன். நிச்சயமாக
வரப்போகிறவைகள் என அறிந்த சிலவற்றைத்
தவிர, மற்றவைகளை நான் எழுத முடியாது; என்
சகோதரனாகிய யாக்கோபின் வார்த்தைகளிலும் சி-
லவற்றைத் தவிர எல்லாவற்றையும் எழுத இயலா-
து.

2 ஆகையால், கிறிஸ்துவின் உபதேசங்களைக் கு-
றித்தும் சில வார்த்தைகளைப் பேசுவதைத் தவிர,
நான் எழுதிய காரியங்கள் எனக்குப் போதுமான-
வைகளாக இருக்கின்றன. ஆதலால், என் தீர்க்கத-
ரிசனங்களின் தெளிவின்படியே, நான் உங்களிடம்
தெளிவாகப் பேசுவேன்.

3 ஏனெனில், என் ஆத்துமா தெளிவானவைகளில்
களிகூர்கிறது, இப்படியே கர்த்தராகிய தேவன்,
மனுபுத்திரர் மத்தியில் கிரியை செய்கிறார். ஏனெ-
னில் கர்த்தராகிய தேவன் புரிந்து கொள்ளுவதற்கு-
ரிய ஒளியைத் தருகிறார். அவர் மனுஷனுடைய
பாஷையின்படியே அவர்கள் புரிந்துகொள்ளுவ-
தற்காக பேசுகிறார்.

4 ஆகையால், உலகத்தின் பாவங்களை நீக்குகிற-
வராகிய தேவ ஆட்டுக்குட்டிக்கு, ஞானஸ்நானம்
கொடுக்க இருக்கிற, கர்த்தர் எனக்குக் காட்டிய தீர்க்-
கதரிசியைக் குறித்து உங்களிடத்தில் பேசினேன்
என்பதை நீங்கள் நினைவுகூரவேண்டும், என வி-
ரும்புகிறேன்.

5 இப்பொழுதும், தேவாட்டுக்குட்டியானவர் பரிசுத்-
தமாயிருந்தும், எல்லா நீதியையும் நிறைவேற்றும்-
படி, தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது, அவசி-
யமாயிருக்குமெனில், பரிசுத்தமற்றவர்களாயிருக்-
கிற நாம், தண்ணீரில் ஞானஸ்நானம் பெறுவது
எவ்வளவு அவசியமானதாயிருக்கும்.

6 இப்பொழுதும், என் பிரியமான சகோதரரே, தே-
வாட்டுக்குட்டியானவர் தண்ணீரினால் ஞானஸ்-
நானம் பெற்றதினால், எல்லா நீதியையும் நிறை-
வேற்றினாரா? என்று நான் உங்களைக் கேட்கி-
றேன்.

7 அவர் பரிசுத்தர் என்று நீங்கள் அறிந்திருக்கவில்-
லையா? அவர் பரிசுத்தராயிருந்த போதிலும், மாம்-
சத்தின்பிரகாரமாய் பிதாவுக்கு முன்பாகத் தம்-
மைத் தாழ்த்தினார் என்பதை மனுபுத்திரருக்குக்
காண்பித்து, பிதாவினுடைய கட்டளைகளைக்
கைக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படிகிறார் என்-
றும், அவருக்குச் சாட்சி கொடுக்கிறார்.

8 ஆகையால் அவர் தண்ணீரில் ஞானஸ்நானம்
பெற்ற பின்பு, பரிசுத்த ஆவியானவர் புறாவின்
வடிவத்திலே அவர் மேல் இறங்கினார்.

# 2 Nephi 31

And now I, Nephi, make an end of my prophesying unto you, my beloved brethren. And I cannot write but a few things, which I know must surely come to pass; neither can I write but a few of the words of my brother Jacob.

Wherefore, the things which I have written sufficeth me, save it be a few words which I must speak concerning the doctrine of Christ; wherefore, I shall speak unto you plainly, according to the plainness of my prophesying.

For my soul delighteth in plainness; for after this manner doth the Lord God work among the children of men. For the Lord God giveth light unto the understanding; for he speaketh unto men according to their language, unto their understanding.

Wherefore, I would that ye should remember that I have spoken unto you concerning that prophet which the Lord showed unto me, that should baptize the Lamb of God, which should take away the sins of the world.

And now, if the Lamb of God, he being holy, should have need to be baptized by water, to fulfil all righteousness, O then, how much more need have we, being unholy, to be baptized, yea, even by water!

And now, I would ask of you, my beloved brethren, wherein the Lamb of God did fulfil all righteousness in being baptized by water?

Know ye not that he was holy? But notwithstanding he being holy, he showeth unto the children of men that, according to the flesh he humbleth himself before the Father, and witnesseth unto the Father that he would be obedient unto him in keeping his commandments.

Wherefore, after he was baptized with water the Holy Ghost descended upon him in the form of a dove.

9 இது அவர்கள் பிரவேசிக்கவேண்டுமென்று,
அவர்கள் முன்பாக அவர் எடுத்துக்காட்டாக வி-
ளங்குகிற, வழியின் இடுக்கத்தையும், வாசலின் நெ-
ருக்கத்தையும் மனுபுத்திரருக்கு மறுபடியும் காண்-
பிக்கிறது.

And again, it showeth unto the children of men the straitness of the path, and the narrowness of the gate, by which they should enter, he having set the example before them.

10 அவர் மனுபுத்திரரை நோக்கி: என்னைப் பின்பற்-
றுங்கள் என்றார். ஆகையால் என் பிரியமான
சகோதரரே, பிதாவின் கட்டளைகளைக் கைக்-
கொள்ள சித்தமுடையவர்களாயிராமல், நாம் இயே-
சுவைப் பின்பற்ற முடியுமா?

And he said unto the children of men: Follow thou me. Wherefore, my beloved brethren, can we follow Jesus save we shall be willing to keep the commandments of the Father?

11 பிதா சொன்னதாவது: மனந்திரும்புங்கள், மனந்-
திரும்புங்கள், என் நேசகுமாரனின் நாமத்தினாலே
ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

And the Father said: Repent ye, repent ye, and be baptized in the name of my Beloved Son.

12 குமாரனின் சத்தம் எனக்கு உண்டாகிச் சொன்ன-
தாவது: என் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்-
றுக்கொள்பவன் எவனோ, அவனுக்கும் என்னைப்
போலவே பிதா பரிசுத்த ஆவியானவரை அளிப்-
பார். ஆகையால் என்னைப் பின்பற்றி, நான் செய்-
ததாக நீங்கள் கண்ட காரியங்களைச் செய்யுங்கள்.

And also, the voice of the Son came unto me, saying: He that is baptized in my name, to him will the Father give the Holy Ghost, like unto me; wherefore, follow me, and do the things which ye have seen me do.

13 ஆகையால், என் பிரியமான சகோதரரே, உங்களு-
டைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, உங்க-
ளின் கர்த்தரும் இரட்சகருமானவரின் வார்த்தைக-
ளின்படியே அவரைப் பின்பற்றி, தண்ணீருக்குள்
மூழ்கிப்பெறும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்து-
வினுடைய நாமத்தை, தங்கள்மீது எடுத்துக்-
கொள்ள மனதுள்ளவர்களாயிருக்கிறீர்கள், என
பிதாவுக்குச் சாட்சியளித்து, தேவசமுகத்தில், உள்-
ளத்தின் முழுநோக்கத்தோடும், மாய்மாலம் புரியாம-
லும், வஞ்சிக்காமலும், போலியற்ற விருப்பத்தோ-
டும் இருந்து, குமாரனைப் பின்பற்றுவீர்களானால்,
இதோ, பரிசுத்த ஆவியானவரைப் பெறுவீர்கள்
என்று அறிந்திருக்கிறேன். அதன் பின்பு அக்கினி-
யாலும், பரிசுத்த ஆவியானவராலும் ஞானஸ்நா-
னம் வரும். பிறகு நீங்கள் தூதர்களின் பாஷைக-
ளைப் பேசி, இஸ்ரவேலின் பரிசுத்தருக்கு துதிக-
ளை எழுப்ப முடியும்.

Wherefore, my beloved brethren, I know that if ye shall follow the Son, with full purpose of heart, acting no hypocrisy and no deception before God, but with real intent, repenting of your sins, witnessing unto the Father that ye are willing to take upon you the name of Christ, by baptism—yea, by following your Lord and your Savior down into the water, according to his word, behold, then shall ye receive the Holy Ghost; yea, then cometh the baptism of fire and of the Holy Ghost; and then can ye speak with the tongue of angels, and shout praises unto the Holy One of Israel.

14 ஆனாலும் இதோ, என் பிரியமான சகோதரரே, கு-
மாரனுடைய வார்த்தை இவ்விதமாய் எனக்கு உண்-
டாகிச் சொன்னதாவது: உங்கள் பாவங்களிலிருந்-
து மனந்திரும்பி, தண்ணீரில் ஞானஸ்நானம் மூல-
மாக என்னுடைய கட்டளைகளைக் கைக்கொள்-
ளச் சித்தமாயிருக்கிறீர்கள் என்று பிதாவுக்குச் சாட்-
சிகொடுத்து, பரிசுத்த ஆவியானவராலும், அக்கி-
னியாலும் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டு,
தூதர்களின் பாஷையாகிய, புதிய பாஷையினால்
பேச முடிந்த பின்பு, என்னை மறுதலிப்பீர்களா-
னால், நீங்கள் என்னை அறியாமலிருந்திருப்பதே
உங்களுக்கு நலமாயிருந்திருக்கும்.

But, behold, my beloved brethren, thus came the voice of the Son unto me, saying: After ye have repented of your sins, and witnessed unto the Father that ye are willing to keep my commandments, by the baptism of water, and have received the baptism of fire and of the Holy Ghost, and can speak with a new tongue, yea, even with the tongue of angels, and after this should deny me, it would have been better for you that ye had not known me.

15 பிதாவிடமிருந்து நான் கேட்ட சத்தம் சொன்னதா-
வது: ஆம், எனக்குப் பிரியமானவரின் வார்த்தை-
கள் சத்தியமும் உண்மையுமானவை. முடிவுபரியந்-
தமும் நிலை நிற்பவனே, இரட்சிக்கப்படுவான்.

And I heard a voice from the Father, saying: Yea, the words of my Beloved are true and faithful. He that endureth to the end, the same shall be saved.

16 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, ஒருவன் முடிவுபரியந்தமும், ஜீவனுள்ள தேவ குமாரனின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி நிலைத்திராவிட்டால், அவன் இரட்சிக்கப்படமுடியாது என்பதை இதனால் அறிவேன்.

And now, my beloved brethren, I know by this that unless a man shall endure to the end, in following the example of the Son of the living God, he cannot be saved.

17 ஆகையால் உங்களுடைய கர்த்தரும், மீட்பருமானவர் செய்யப்போகிறவைகளாக நான் கண்டு உங்களுக்குச் சொன்ன காரியங்களையே செய்யுங்கள். நீங்கள் எந்த வாசலின் வழியாகப் பிரவேசிக்கவேண்டும் என்பதை நீங்கள் அறிந்துகொள்ளும்படிக்கே, இவைகள் எனக்குக் காட்டப்பட்டுள்ளன. நீங்கள் பிரவேசிக்கவேண்டிய வாசல் மனந்திரும்புதலும், தண்ணீரினால் பெறுகிற ஞானஸ்நானமுமாயிருக்கிறது. அதன் பின்னர் உங்கள் பாவமன்னிப்பு அக்கினியினாலும், பரிசுத்த ஆவியானவராலும் வருவதாயிருக்கிறது.

Wherefore, do the things which I have told you I have seen that your Lord and your Redeemer should do; for, for this cause have they been shown unto me, that ye might know the gate by which ye should enter. For the gate by which ye should enter is repentance and baptism by water; and then cometh a remission of your sins by fire and by the Holy Ghost.

18 பின்பு நீங்கள் நித்திய ஜீவனுக்கு அழைத்துச் செல்லும் நெருக்கமும் இடுக்கமுமான வழியிலிருப்பீர்கள். ஆம், நீங்கள் இந்த வாசலின் வழியாக உட்பிரவேசித்திருக்கிறீர்கள். பிதா, குமாரன் ஆகியோரின் கட்டளைகளின்படியே நீங்கள் செய்திருக்கிறீர்கள், நீங்கள் பெறப்போகிற வழியின் மூலமாகப் பிரவேசிப்பீர்களானால், பெற்றுக்கொள்வீர்களென்று அவர் செய்த வாக்குத்தத்தம் நிறைவேறும்படியாக, பிதாவையும் குமாரனையும் சாட்சி கொடுக்கிற, பரிசுத்த ஆவியானவரையும் நீங்கள் பெற்றுக்கொண்டீர்கள்.

And then are ye in this strait and narrow path which leads to eternal life; yea, ye have entered in by the gate; ye have done according to the commandments of the Father and the Son; and ye have received the Holy Ghost, which witnesses of the Father and the Son, unto the fulfilling of the promise which he hath made, that if ye entered in by the way ye should receive.

19 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, நீங்கள் நெருக்கமும் இடுக்கமுமான வழியை அடைந்த பின்பு, எல்லாம் முற்றுப்பெற்றதா என்று உங்களைக் கேட்கிறேன். இதோ, அப்படியல்ல என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் கிறிஸ்துவின் வார்த்தையினாலே அவரிலே உண்டான அசைக்கமுடியாத விசுவாசத்தினாலும், இரட்சிக்க வல்லமையுடையவருடைய நற்குணங்களில் முழுமையாய் சார்ந்திருந்ததனாலுமேயன்றி, நீங்கள் இதுவரைக்கும் வராமல் போயிருப்பீர்கள்.

And now, my beloved brethren, after ye have gotten into this strait and narrow path, I would ask if all is done? Behold, I say unto you, Nay; for ye have not come thus far save it were by the word of Christ with unshaken faith in him, relying wholly upon the merits of him who is mighty to save.

20 ஆகையால், கிறிஸ்துவில் திடநம்பிக்கையாய், பூரணமான நம்பிக்கையின் பிரகாசத்தோடும், தேவனிடத்திலும், எல்லா மனுஷரிடத்திலும் அன்போடும் நீங்கள் முன்னேறிச்செல்லவேண்டும். அதனால் நீங்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளை ருசித்து, முடிவுபரியந்தம் நிலைநின்று முன்னேறிச் செல்வீர்களானால், இதோ நீங்கள் நித்திய ஜீவனைப் பெறுவீர்கள், என பிதா உரைக்கிறார்.

Wherefore, ye must press forward with a steadfastness in Christ, having a perfect brightness of hope, and a love of God and of all men. Wherefore, if ye shall press forward, feasting upon the word of Christ, and endure to the end, behold, thus saith the Father: Ye shall have eternal life.

21 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, இது-
வே வழி, இதைத் தவிர வானத்தின்கீழே, தேவனு-
டைய ராஜ்யத்தில் மனுஷன் இரட்சிக்கப்படும்படிக்-
கு வேறெந்த வழியோ, நாமமோ கொடுக்கப்படவில்-
லை. இதோ இப்பொழும், இதுவே கிறிஸ்துவின் உப-
தேசமாயும், சதாகாலங்களிலும் என்றென்றுமாயி-
ருக்கிற ஒரே தேவனான, பிதா, குமாரன், பரிசுத்த
ஆவியானவர் ஆகியோருடைய, ஒரே சத்தியமான
உபதேசமுமாயிருக்கிறது. ஆமென்.

And now, behold, my beloved brethren, this is the way; and there is none other way nor name given under heaven whereby man can be saved in the kingdom of God. And now, behold, this is the doctrine of Christ, and the only and true doctrine of the Father, and of the Son, and of the Holy Ghost, which is one God, without end. Amen.

# 2 நேபி 32

1 இதோ, இப்பொழுதும் பிரியமான சகோதரரே, இந்த
வழியாய் உட்பிரவேசித்த பின்பு, என்ன செய்ய-
வேண்டும் என்பதைக் குறித்து, உங்கள் இருதயங்க-
ளில் சற்று சிந்திக்கிறீர்கள், என நான் எண்ணுகி-
றேன். ஆனாலும் இதோ, ஏன் இந்தக் காரியங்களை
உங்கள் இருதயங்களில் சிந்திக்கிறீர்கள்?
2 பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்ட
பின்பு, நீங்கள் தூதர்களின் பாஷையில் பேசக்கூ-
டுமென்று நான் உங்களுக்குச் சொன்னதை நீங்கள்
நினைவுகூரவில்லையா? இப்பொழுதும், பரிசுத்த
ஆவியானவரால் அல்லாமல், நீங்கள் தூதர்களின்
பாஷையை எப்படிப் பேசக்கூடும்?
3 தூதர்கள் பரிசுத்த ஆவியானவர் வல்லமையி-
னால் பேசுகிறார்கள்; ஆகையால் அவர்கள் கிறிஸ்-
துவின் வார்த்தைகளைப் பேசுகிறார்கள். ஆகிலும்
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; கிறிஸ்துவின்
வார்த்தைகளை ருசித்துப் பாருங்கள்; ஏனெனில்
இதோ, நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள்
அனைத்தையும், கிறிஸ்துவின் வார்த்தைகள் உங்-
களுக்குச் சொல்லும்.
4 ஆகையால் இப்பொழுதும், நான் இந்த வார்த்தை-
களைப் பேசிய பின்பும், அவைகளை நீங்கள்
உணர்ந்துகொள்ள முடியவில்லையெனில், அது
நீங்கள் கேட்காமலும், நீங்கள் தட்டாமலுமிருப்பதி-
னிமித்தமே; ஆகையால் நீங்கள் வெளிச்சத்திற்குக்
கொண்டுவரப்படவில்லையானால், இருளிலேயே
அழிய வேண்டும்.
5 ஏனெனில் இதோ, நீங்கள் இந்த வழியாய் உட்பிர-
வேசித்து, பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்-
கொண்டால், அது நீங்கள் செய்யவேண்டிய சகல
காரியங்களையும் உங்களுக்குக் காண்பிக்குமென்-
று, மறுபடியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
6 இதோ, இதுவே கிறிஸ்துவின் உபதேசமாயிருக்கி-
றது, அவர் தம்மை மாம்சத்தில் உங்களுக்கு வெ-
ளிப்படுத்துமளவும், வேறெந்த உபதேசமும் கொ-
டுக்கப்படமாட்டாது. அவர் தம்மை மாம்சத்தில் உங்-
களுக்கு வெளிக்காட்டும்பொழுது, அவர் உங்க-
ளுக்குச் சொல்லும் காரியங்களை நீங்கள் ஆசரிப்-
பீர்களாக.
7 இப்பொழுதும், நேபியாகிய நான், இதற்கு மேலும்
சொல்லமுடியாது, என் உச்சரிப்பை ஆவியானவர்
தடுக்கிறார்; நான் மனுஷர்களுடைய அவிசுவாசம்,
துன்மார்க்கம், அறியாமை, வணங்காக்கழுத்து
ஆகியவைகளினிமித்தம் துக்கிக்கும்படி விடப்பட்-
டிருக்கிறேன்; ஏனெனில், முடிந்தவாறு வார்த்தை
தெளிவாயிருக்கும்படி, அது அவர்களுக்குத் தெளி-
வாகக் கொடுக்கப்பட்டபோதும், அவர்கள் அறி-
வைத் தேடமாட்டார்கள், அவர்கள் சிறந்த அறிவை
உணர்ந்துகொள்ள மாட்டார்கள்.

# 2 Nephi 32

And now, behold, my beloved brethren, I suppose that ye ponder somewhat in your hearts concerning that which ye should do after ye have entered in by the way. But, behold, why do ye ponder these things in your hearts?

Do ye not remember that I said unto you that after ye had received the Holy Ghost ye could speak with the tongue of angels? And now, how could ye speak with the tongue of angels save it were by the Holy Ghost?

Angels speak by the power of the Holy Ghost; wherefore, they speak the words of Christ. Wherefore, I said unto you, feast upon the words of Christ; for behold, the words of Christ will tell you all things what ye should do.

Wherefore, now after I have spoken these words, if ye cannot understand them it will be because ye ask not, neither do ye knock; wherefore, ye are not brought into the light, but must perish in the dark.

For behold, again I say unto you that if ye will enter in by the way, and receive the Holy Ghost, it will show unto you all things what ye should do.

Behold, this is the doctrine of Christ, and there will be no more doctrine given until after he shall manifest himself unto you in the flesh. And when he shall manifest himself unto you in the flesh, the things which he shall say unto you shall ye observe to do.

And now I, Nephi, cannot say more; the Spirit stoppeth mine utterance, and I am left to mourn because of the unbelief, and the wickedness, and the ignorance, and the stiffneckedness of men; for they will not search knowledge, nor understand great knowledge, when it is given unto them in plainness, even as plain as word can be.

8 இப்பொழுதும், என் பிரியமான சகோதரரே, நீங்கள் உங்கள் இருதயங்களில் இன்னும் சிந்திக்கிறீர்களென்பதை நான் உணர்கிறேன், நான் இந்தக் காரியத்தைக் குறித்துப் பேச சஞ்சலப்படுகிறேன். ஜெபிக்கும்படி மனுஷனுக்குப் போதிக்கும் ஆவியானவருக்கு நீங்கள் செவிகொடுப்பீர்களெனில், நீங்கள் ஜெபிக்கவேண்டுமென்பதைத் தெரிந்துகொள்வீர்கள். ஏனெனில் அசுத்த ஆவி ஜெபிக்கும்படி மனுஷனுக்குப் போதிப்பதில்லை, ஆனால் அவன் ஜெபிக்கக்கூடாதெனப் போதிக்கிறது.

And now, my beloved brethren, I perceive that ye ponder still in your hearts; and it grieveth me that I must speak concerning this thing. For if ye would hearken unto the Spirit which teacheth a man to pray, ye would know that ye must pray; for the evil spirit teacheth not a man to pray, but teacheth him that he must not pray.

9 ஆனால் இதோ, நீங்கள் சோர்ந்துபோகாமல் எப்பொழுதும் ஜெபிக்கவேண்டுமென்றும், நீங்கள் செய்வதை அவர் பரிசுத்தமாக்கும்படிக்கும், உங்களின் கிரியை உங்கள் ஆத்தும நலனுக்கேதுவாக இருக்கும்படிக்கும், கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவினிடத்தில் நீங்கள் முதற்கண் ஜெபித்தாலொழிய கர்த்தருக்கு எந்தக் காரியத்தையும் செய்யக்கூடாதென்றும் உங்களுக்கு நான் சொல்லுகிறேன்.

But behold, I say unto you that ye must pray always, and not faint; that ye must not perform any thing unto the Lord save in the first place ye shall pray unto the Father in the name of Christ, that he will consecrate thy performance unto thee, that thy performance may be for the welfare of thy soul.

# 2 நேபி 33

1 இப்பொழுதும் நேபியாகிய நான், என் ஜனங்கள்
மத்தியில் போதிக்கப்பட்ட எல்லாக் காரியங்களை-
யும் எழுத முடியாது; பேசுவதைப்போல எழுதுவ-
தில் நான் வல்லமைபடைத்தவனுமல்ல; ஏனெ-
னில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால்
ஒருவன் பேசும்பொழுது, பரிசுத்த ஆவியானவரின்
வல்லமை, அதை மனுபுத்திரரின் இருதயங்களுக்-
குள் கொண்டு செல்லுகிறது.
2 ஆனாலும் இதோ, பரிசுத்த ஆவிக்கு இடமில்லா-
மற்போகுமட்டும், அதற்கு எதிராகத் தங்கள் இருத-
யங்களைக் கடினப்படுத்துகிற அநேகர் இருக்கி-
றார்கள். ஆகையால் எழுதப்பட்டிருக்கிற அநேக
காரியங்களை அவர்கள் புறம்பே தள்ளி அவைக-
ளை பிரயோஜனமற்றவைகளாய் எண்ணுகிறார்-
கள்.
3 ஆனால், எழுதியவைகள், நேபியாகிய என்னால்
எழுதப்பட்டவையே. நான் அதைக் குறிப்பாக என்
ஜனங்களுக்கு மிகவும் மதிப்பு வாய்ந்தவைகளெ-
னக் கருதுகிறேன்; ஏனென்றால், நான் அவர்களுக்-
காக நித்தமும் பகலில் ஜெபித்து, அவர்கள் நிமித்-
தம், என் கண்ணீர் இரவு நேரத்தில் என் தலைய-
ணையை நனைக்கிறது; நான் விசுவாசத்தோடு
என் பிதாவை நோக்கிக் கூக்குரலிடுகிறேன். அவர்
என் கூக்குரலைக் கேட்பார், என நான் அறிந்திருக்-
கிறேன்.
4 கர்த்தராகிய தேவன், என் ஜெபங்களை என்
ஜனங்களின் பிரயோஜனத்திற்காக பரிசுத்தப்படுத்-
துவார் என நான் அறிந்திருக்கிறேன்; நான் பெலவீ-
னத்தில் எழுதிய காரியங்கள், அவர்களுக்காகப்
பெலனுடையவைகளாக்கப்படும்; ஏனெனில் அது
அவர்களை நன்மை செய்யும்படி தூண்டுகிறது,
அது அவர்கள் பிதாக்களைக் குறித்து அவர்களுக்-
குத் தெரிவிக்கிறது. அது இயேசுவைக் குறித்துப் பே-
சி, அவரில் விசுவாசமாயிருக்க உணர்த்தி, முடிவுப-
ரியந்தம் நிலைத்து நிற்க வற்புறுத்துகிறது; இதுவே
நித்திய ஜீவன்.
5 அது சத்தியத்தின் தெளிவின்படியே, பாவத்திற்கு
எதிராகக் கடினமாய்ப் பேசுகிறது; ஆகையால் ஒரு-
வன் பிசாசின் ஆவியுடையவனாய் இருந்தாலொ-
ழிய, நான் எழுதிய வார்த்தைகளைக் குறித்துக்
கோபம் கொள்ளான்.
6 நான் தெளிவானவைகளில் மகிமை பாராட்டுகி-
றேன்; நான் சத்தியத்தில் மகிமை பாராட்டுகிறேன்;
என் இயேசு பாதாளத்திலிருந்து என் ஆத்துமாவை
மீட்டுக்கொண்டதினிமித்தம் அவரில் மகிமைப்
படுகிறேன்.

# 2 Nephi 33

And now I, Nephi, cannot write all the things which were taught among my people; neither am I mighty in writing, like unto speaking; for when a man speaketh by the power of the Holy Ghost the power of the Holy Ghost carrieth it unto the hearts of the children of men.

But behold, there are many that harden their hearts against the Holy Spirit, that it hath no place in them; wherefore, they cast many things away which are written and esteem them as things of naught.

But I, Nephi, have written what I have written, and I esteem it as of great worth, and especially unto my people. For I pray continually for them by day, and mine eyes water my pillow by night, because of them; and I cry unto my God in faith, and I know that he will hear my cry.

And I know that the Lord God will consecrate my prayers for the gain of my people. And the words which I have written in weakness will be made strong unto them; for it persuadeth them to do good; it maketh known unto them of their fathers; and it speaketh of Jesus, and persuadeth them to believe in him, and to endure to the end, which is life eternal.

And it speaketh harshly against sin, according to the plainness of the truth; wherefore, no man will be angry at the words which I have written save he shall be of the spirit of the devil.

I glory in plainness; I glory in truth; I glory in my Jesus, for he hath redeemed my soul from hell.

7 நான் என் ஜனங்களிடத்தில் தயாளத்துவம் கொண்டவனாயிருக்கிறேன்; அவருடைய நியாயாசனத்தின் முன்பு, அநேக ஆத்துமாக்களைக் கறையற்றவர்களாகச் சந்திப்பேன், என கிறிஸ்துவில் மிகுந்த நம்பிக்கையுடையவனாயிருக்கிறேன்.

I have charity for my people, and great faith in Christ that I shall meet many souls spotless at his judgment-seat.

8 நான் யூதரிடத்திலும் தயாளத்துவம் கொண்டவனாயிருக்கிறேன், அவர்களிலிருந்து நான் வந்தேன், என நான் பொருள்கொள்வதினிமித்தம், யூதன் என்கிறேன்.

I have charity for the Jew—I say Jew, because I mean them from whence I came.

9 புறஜாதிகளிடத்திலும் நான் தயாளத்துவமுடையவனாயிருக்கிறேன். ஆனாலும் இதோ, அவர்கள் கிறிஸ்துவோடு ஒப்புரவாகி, இடுக்கமான வாசல் வழியாய்ப் பிரவேசித்து, ஜீவனைப் பெறும்படியாய் அழைத்துச் செல்லுகிற நெருக்கமான வழியிலே நடந்து, சோதனையின் காலம் முடியுமளவும் அந்த வழியிலே தொடர்ந்து நடந்தாலொழிய, இவர்கள் ஒருவர்மீதும் நான் நம்பிக்கை கொள்ள முடியாது.

I also have charity for the Gentiles. But behold, for none of these can I hope except they shall be reconciled unto Christ, and enter into the narrow gate, and walk in the strait path which leads to life, and continue in the path until the end of the day of probation.

10 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, யூதர்களே, பூமியின் கடையாந்திரங்களிலும் இருப்பவர்களே, இந்த வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, கிறிஸ்துவை விசுவாசியுங்கள்; நீங்கள் இந்த வார்த்தைகளை விசுவாசியாவிட்டாலும் கிறிஸ்துவை விசுவாசியுங்கள், மேலும் நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்தால், இந்த வார்த்தைகளை விசுவாசிப்பீர்கள்; ஏனெனில் அவைகள் கிறிஸ்துவின் வார்த்தைகளாயிருக்கின்றன. அவர் அவைகளை எனக்குத் தந்தார். நன்மையானவைகளைச் செய்யவேண்டுமென அவைகள் மனுஷர் யாவருக்கும் போதிக்கின்றன.

And now, my beloved brethren, and also Jew, and all ye ends of the earth, hearken unto these words and believe in Christ; and if ye believe not in these words believe in Christ. And if ye shall believe in Christ ye will believe in these words, for they are the words of Christ, and he hath given them unto me; and they teach all men that they should do good.

11 அவைகள் கிறிஸ்துவின் வார்த்தைகளாயிராவிட்டால், நீங்களே நிதானித்துப் பாருங்கள். ஏனெனில் கடைசி நாளிலே, அவைகள் தம்முடைய வார்த்தைகளென, கிறிஸ்து வல்லமையோடும், மகத்துவமான மகிமையோடும் உங்களுக்குக் காண்பிப்பார். அவருடைய நியாயவிசாரணைக்கூண்டுக்கு முன்பாக, நீங்களும் நானும் முகமுகமாய் நிற்போம்; என்னிடம் பெலவீனங்களிருப்பினும், நான் இவைகளை எழுதும்படி அவரால் கட்டளையிடப்பட்டிருந்தேன், என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

And if they are not the words of Christ, judge ye—for Christ will show unto you, with power and great glory, that they are his words, at the last day; and you and I shall stand face to face before his bar; and ye shall know that I have been commanded of him to write these things, notwithstanding my weakness.

12 எல்லோரும் இல்லாவிட்டாலும், நம்மில் அநேகர், பெரிதும், கடைசியுமான அந்த நாளிலே, அவருடைய ராஜ்யத்தில் இரட்சிக்கப்படவேண்டும், என நான் பிதாவை, கிறிஸ்துவின் நாமத்தினாலே வேண்டிக்கொள்கிறேன்.

And I pray the Father in the name of Christ that many of us, if not all, may be saved in his kingdom at that great and last day.

13 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, இஸ்ரவேல் வம்சத்தாரே, பூமியின் கடையாந்திரங்களே, தூசிலிருந்து கூக்குரலிடுகிறவனின் சத்தத்தைப்போல, நான் உங்களுடனே பேசுகிறேன். பெரிதான அந்த நாள் வரும்வரைக்கும் விடைபெற்றுக்கொள்கிறேன்.

And now, my beloved brethren, all those who are of the house of Israel, and all ye ends of the earth, I speak unto you as the voice of one crying from the dust: Farewell until that great day shall come.

14 இதோ, தேவனுடைய இந்த நன்மையில் பங்கு-
கொள்ளாமலும், யூதர்களின் வார்த்தைகளையும்,
என்னுடைய வார்த்தைகளையும், தேவாட்டுக்குட்-
டியின் வாயிலிருந்து புறப்படும் வார்த்தைகளை-
யும், மதியாமலிருக்கிறவர்களிடமிருந்து நித்திய-
மாய் விடைபெற்றுக்கொள்கிறேன். ஏனெனில்
இந்த வார்த்தைகள், உங்களைக் கடைசி நாளிலே
குற்றவாளிகளெனத் தீர்க்கும்.
15 ஏனெனில், நான் பூமியில் முத்திரையிடுகிறவை-
கள் எவைகளோ, அவைகள் உங்களுக்கு எதிராக,
நியாயத்தீர்ப்பின் கூண்டிலே கொண்டுவரப்படும்.
ஏனெனில் கர்த்தர் எனக்கு இவ்விதமாய்க் கட்ட-
ளையிட்டிருக்கிறார். நான் கீழ்ப்படியவேண்டும்.
ஆமென்.

And you that will not partake of the goodness of God, and respect the words of the Jews, and also my words, and the words which shall proceed forth out of the mouth of the Lamb of God, behold, I bid you an everlasting farewell, for these words shall condemn you at the last day.

For what I seal on earth, shall be brought against you at the judgment bar; for thus hath the Lord commanded me, and I must obey. Amen.

# நேபியின் சகோதரனான, யாக்கோபுவின் புஸ்தகம்

*தன் சகோதரர்களுக்கு அவன் பிரசங்கித்த வார்த்தைகள். அவன் கிறிஸ்துவின் உபதேசத்தை சீரழிக்க வகை தேடின மனுஷனை தாறுமாறாக்குதல். நேபியின் ஜனங்களுடைய வரலாற்றைக் குறித்து சில வார்த்தைகள்.*

## யாக்கோபு 1

1 இதோ, அந்தப்படியே, எருசலேமைவிட்டு லேகி வந்த
காலத்திலிருந்து ஐம்பத்தைந்து வருஷங்கள் கழிந்-
தாகிவிட்டது. ஆகையால், இந்தக் காரியங்கள் பொ-
றிக்கப்பட்டிருக்கின்ற சிறிய தகடுகளைக் குறித்த
ஒரு கட்டளையை, யாக்கோபாகிய எனக்கு நேபி
கொடுத்தான்.

2 மிகவும் விலைமதிப்பற்றவை என நான் கருதிய
காரியங்களில் சிலவற்றை இந்தத் தகடுகளின்மீது
நான் எழுதவேண்டுமென்றும், நேபியின் ஜனமென்-
று அழைக்கப்படுகிற இந்த ஜனத்தைப்பற்றிய வர-
லாற்றை அதிகமாக எழுதக்கூடாது என்றும், ஒரு
கட்டளையை அவன் யாக்கோபாகிய எனக்குக்
கொடுத்தான்.

3 ஏனெனில் தன் ஜனத்தின் வரலாறு தன்னுடைய
மற்ற தகடுகளின்மீது பொறிக்கப்படவேண்டு-
மென்றும், நான் இந்தத் தகடுகளைப் பாதுகாத்து,
தலைமுறை தலைமுறைதோறும் என் சந்ததிக்கு
அவைகளை ஒப்படைக்கவேண்டுமென்றும்
சொன்னான்.

4 பரிசுத்தமான பிரசங்கங்களோ, சிறப்பான வெ-
ளிப்படுத்தல்களோ, தீர்க்கதரிசனங்களோ இருந்த-
தேயானால், நான் இந்தத் தகடுகளின்மீது அவைக-
ளின் முக்கியமானவைகளை பதிக்கவும், கிறிஸ்து-
வுக்காகவும், என் ஜனத்துக்காகவும், அவைகளை
இயன்ற அளவில் எழுதவும் வேண்டும், என்றும்
சொன்னான்.

5 விசுவாசத்தினாலும் மிகுந்த ஆவலின் நிமித்த-
மும், எங்கள் ஜனங்களைக் குறித்து, அவர்களுக்-
குள்ளே என்னென்ன காரியங்கள் சம்பவிக்கு-
மென்று, எங்களுக்கு மெய்யாகவே வெளிப்படுத்-
தப்பட்டிருந்தது.

6 அநேக வெளிப்படுத்தல்களையும், அதிக தீர்க்க-
தரிசனத்தின் ஆவியையும் நாங்கள் பெற்றிருந்-
தோம். ஆகவே கிறிஸ்துவைப்பற்றியும், வரப்போ-
கிற அவருடைய ராஜ்யத்தைப்பற்றியும் நாங்கள்
அறிந்திருந்தோம்.

# The Book of Jacob the Brother of Nephi

*The words of his preaching unto his brethren. He confoundeth a man who seeketh to overthrow the doctrine of Christ. A few words concerning the history of the people of Nephi.*

## Jacob 1

For behold, it came to pass that fifty and five years had passed away from the time that Lehi left Jerusalem; wherefore, Nephi gave me, Jacob, a commandment concerning the small plates, upon which these things are engraven.

And he gave me, Jacob, a commandment that I should write upon these plates a few of the things which I considered to be most precious; that I should not touch, save it were lightly, concerning the history of this people which are called the people of Nephi.

For he said that the history of his people should be engraven upon his other plates, and that I should preserve these plates and hand them down unto my seed, from generation to generation.

And if there were preaching which was sacred, or revelation which was great, or prophesying, that I should engraven the heads of them upon these plates, and touch upon them as much as it were possible, for Christ's sake, and for the sake of our people.

For because of faith and great anxiety, it truly had been made manifest unto us concerning our people, what things should happen unto them.

And we also had many revelations, and the spirit of much prophecy; wherefore, we knew of Christ and his kingdom, which should come.

7 ஆகையால் கிறிஸ்துவண்டையில் வந்து, தே-
வனுடைய நன்மையைப் புசிக்கத்தக்கதாக எங்கள்
ஜனங்களை இணங்கச் செய்யவும், அவர்கள் அவ-
ருடைய இளைப்பாறுதலினுள் பிரவேசிக்கவும்,
சோதனை நாட்களில் வனாந்தரத்தில் இஸ்ரவே-
லின் பிள்ளைகள் இருந்தபோது, கோபமூட்டினது-
போல, இவர்களையும், பிரவேசிக்கக் கூடாது என்று
எந்த வகையிலும் தம் உக்கிரத்திலே அவர் ஆணை-
யிடாதபடிக்கு, அவர்கள் மத்தியில் கருத்தாய் பிர-
யாசப்பட்டோம்.

Wherefore we labored diligently among our people, that we might persuade them to come unto Christ, and partake of the goodness of God, that they might enter into his rest, lest by any means he should swear in his wrath they should not enter in, as in the provocation in the days of temptation while the children of Israel were in the wilderness.

8 ஆகையால், தேவனுக்கு எதிராய்க் கலகம் செய்-
யாமல், அவரை கோபமூட்டாமல், ஆனால், கிறிஸ்-
துவிலே விசுவாசித்து, அவரின் மரணத்தை எண்-
ணி, அவரின் சிலுவையின் பாடனுபவித்து, உல-
கத்தினுடைய தூஷிப்பைச் சகித்திருக்கவேண்டு-
மென்று, எல்லா மனுஷரையும் நாங்கள் இணங்கச்-
செய்ய இயலும்பொருட்டு தேவனிடத்தில் வேண்-
டிக்கொள்ளுகிறோம். ஆகையால், யாக்கோபாகிய
நான், என் சகோதரனாகிய நேபியின் கட்டளையை
நிறைவேற்ற அதை என்மீது எடுத்துக்கொள்கி-
றேன்.

Wherefore, we would to God that we could persuade all men not to rebel against God, to provoke him to anger, but that all men would believe in Christ, and view his death, and suffer his cross and bear the shame of the world; wherefore, I, Jacob, take it upon me to fulfil the commandment of my brother Nephi.

9 நேபி பூரண வயதடைந்து, தான் சீக்கிரம் மரிக்க
நேரிடுமெனக் கண்டான். ஆகையால் அவன் ரா-
ஜாக்களின் ஆளுகைகளின்படியே, இப்பொழுது
தன் ஜனத்தின்மீது ஒரு மனுஷனை, ராஜாவாகவும்
அதிகாரியாகவும், அபிஷேகம் பண்ணினான்.

Now Nephi began to be old, and he saw that he must soon die; wherefore, he anointed a man to be a king and a ruler over his people now, according to the reigns of the kings.

10 நேபி ஜனங்களுக்குச் சிறந்த காவலனாய் இருந்த-
படியாலும், அவர்களின் பாதுகாப்பிற்காக, லாபா-
னின் பட்டயத்தை சுழற்றியதாலும், அவர்களின்
நலனுக்காக தன் எல்லா நாட்களிலும் உழைத்ததா-
லும், அவர்கள் அவனை மிகவும் நேசித்தார்கள்.

The people having loved Nephi exceedingly, he having been a great protector for them, having wielded the sword of Laban in their defence, and having labored in all his days for their welfare—

11 ஆதலால், அவன் பெயரை நினைவுகூர்தலுக்-
காக வைத்துக்கொள்ள ஜனங்கள் வாஞ்சையுள்-
ளவர்களாயிருந்தார்கள். ராஜாக்களின் ஆளுகை-
யின்படி, அவன் ஸ்தானத்திலே ஆளுகை செய்கிற
எவரும் ஜனங்களால் இரண்டாம் நேபி, மூன்றாம்
நேபி என்றபடி அழைக்கப்பட்டார்கள். அவர்க-
ளின் பெயர் என்னவாயிருந்தாலும், அவ்வாறே
ஜனங்களால் அழைக்கப்பட்டார்கள்.

Wherefore, the people were desirous to retain in remembrance his name. And whoso should reign in his stead were called by the people, second Nephi, third Nephi, and so forth, according to the reigns of the kings; and thus they were called by the people, let them be of whatever name they would.

12 அந்தப்படியே, நேபி மரித்தான்.

And it came to pass that Nephi died.

13 இப்பொழுது லாமானியர் அல்லாத ஜனங்கள் நே-
பியர்களாயிருந்தார்கள். ஆயினும் அவர்கள் நேபி-
யர்கள், யாக்கோபினர், யோசேப்பினர், சோரமியர்,
லாமானியர், லெமுவேலர் மற்றும் இஸ்மவேலர்
என்றழைக்கப்பட்டனர்.

Now the people which were not Lamanites were Nephites; nevertheless, they were called Nephites, Jacobites, Josephites, Zoramites, Lamanites, Lemuelites, and Ishmaelites.

14 ஆனாலும் யாக்கோபாகிய நான், இனிமேல் அவர்-
களை இந்த நாமங்களினாலே வேறுபடுத்தாமல்,
நேபியின் ஜனத்தை அழிக்க வகை தேடுகிறவர்க-
ளை லாமானியர்கள் என்றும், நேபியினிடத்தில்
நட்பாயிருப்பவர்களை, நேபியர்கள் அல்லது நேபி-
யின் ஜனம் என்றும், நான் ராஜாக்களின் ஆளு-
கைக்குத்தக்கதாக அழைப்பேன்.

But I, Jacob, shall not hereafter distinguish them by these names, but I shall call them Lamanites that seek to destroy the people of Nephi, and those who are friendly to Nephi I shall call Nephites, or the people of Nephi, according to the reigns of the kings.

15 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியின் ஜனங்-
கள், இரண்டாம் ராஜாவின் ஆளுகையின்கீழ், தங்-
கள் இருதயங்களைக் கடினமாக்கத் தொடங்கி,
பழங்காலத்து தாவீதைப்போலவும், அவன் குமா-
ரனாகிய சாலொமோனைப்போலவும், அநேக
மனைவிகளையும், மறுமனையாட்டிகளையும் வி-
ரும்பி, துன்மார்க்கமான பழக்கங்களிலே சற்றே
தங்களை உட்படுத்தினார்கள்.

And now it came to pass that the people of Nephi, under the reign of the second king, began to grow hard in their hearts, and indulge themselves somewhat in wicked practices, such as like unto David of old desiring many wives and concubines, and also Solomon, his son.

16 ஆம், அவர்கள் அதிக பொன்னையும், வெள்ளி-
யையும், தேட ஆரம்பித்து, பெருமையினாலும் தங்-
களை சற்றே உயர்த்தத் தொடங்கினார்கள்.

Yea, and they also began to search much gold and silver, and began to be lifted up somewhat in pride.

17 ஆகவே, யாக்கோபாகிய நான், தேவனிடத்திலி-
ருந்து என்னுடைய அழைப்பை முதலில் பெற்ற-
பின்பு, அவர்களுக்கு ஆலயத்தில் போதித்தபோது,
இந்த வார்த்தைகளை அவர்களுக்கு அறிவித்தேன்.

Wherefore I, Jacob, gave unto them these words as I taught them in the temple, having first obtained mine errand from the Lord.

18 ஏனெனில், யாக்கோபாகிய நானும், யோசேப்பா-
கிய என் சகோதரனும், நேபியின் கரத்தால், இந்த
ஜனத்தின் ஆசிரியர்களாயும், ஆசாரியர்களாயும்
பிரதிஷ்டை பண்ணப்பட்டோம்.

For I, Jacob, and my brother Joseph had been consecrated priests and teachers of this people, by the hand of Nephi.

19 சகல கருத்தோடும், தேவனுடைய வார்த்தையை
ஜனங்களுக்குப் போதிக்கவில்லையெனில், ஜனங்-
களின் பாவங்களை எங்களின் சொந்த சிரசுக-
ளின்மீது சுமப்பவர்களாகவும், நாங்களே பொறுப்-
பாளிகளாயிருந்து, தேவனிடத்தில் எங்கள் பணி-
யை நிறைவேற்றினோம். ஆதலால் சகல ஊக்கத்-
தோடு, ஊழியம் செய்வதினிமித்தம் அவர்களின்
இரத்தம் எங்கள் வஸ்திரம் மீது படியாது, இல்லை-
யேல் எங்களது வஸ்திரங்கள் மீது அவர்களது
இரத்தம் இருக்கும், நாங்கள் கடைசி நாளிலே கறை-
யற்றவர்களாகக் காணப்படமாட்டோம்.

And we did magnify our office unto the Lord, taking upon us the responsibility, answering the sins of the people upon our own heads if we did not teach them the word of God with all diligence; wherefore, by laboring with our might their blood might not come upon our garments; otherwise their blood would come upon our garments, and we would not be found spotless at the last day.

# யாக்கோபு 2

1 நேபியின் மரணத்திற்குப் பின்பு, நேபியின் ஜனங்களுக்கு, நேபியின் சகோதரனாகிய யாக்கோபு பேசிய வார்த்தைகளாவன:

2 இப்பொழுதும், என் அன்பான சகோதரரே, யாக்கோபாகிய நான், தேவனுக்காக எனக்குள்ள பொறுப்பின்படியே, தெளிந்த புத்தியுடன் என் பணியை நிறைவேற்றவும், உங்கள் பாவங்களை என் வஸ்திரத்திலிருந்து உதறிப்போடவும், இந்நாளில் நான் உங்களிடத்தில் தேவனுடைய வார்த்தையை அறிவிக்கவுமே, ஆலயத்திற்குள் வருகிறேன்.

3 நான் இது காலம்வரைக்கும் என் அழைப்பின் பணியிலே, கருத்துள்ளவனாய் இருந்திருக்கிறேன், என்பதை நீங்களே அறிவீர்கள். ஆனால் நான் இதுகாலம் இருந்ததைவிட, உங்கள் ஆத்துமாக்களின் நல்வாழ்வுக்காக, அதிக ஆவலோடும், அக்கறையோடும், இந்நாளிலே பாரப்படுகிறேன்.

4 ஏனெனில் இதோ, இதுவரைக்கும், நான் உங்களுக்குக் கொடுத்த, கர்த்தருடைய வார்த்தைக்கு நீங்கள் கீழ்ப்படிந்திருக்கிறீர்கள்.

5 ஆனால் இதோ, நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள். வானம் மற்றும் பூமியின் சர்வவல்ல சிருஷ்டிகரின் உதவியினால் உங்களின் சிந்தனைகளைக் குறித்தும், ஆம், தேவனுக்கும், எனக்கும் அருவருப்பாய் தென்படுகிற பாவத்தில், நீங்கள் எவ்விதமாய் பிரயாசப்படத் தொடங்குகிறீர்கள், என்பதைக் குறித்தும் நான் உங்களுக்குச் சொல்ல முடியும், என்பதை அறியுங்கள்.

6 உங்களின் இருதயங்களின் துன்மார்க்கத்தைக் குறித்து, உங்களுக்கு நான் சாட்சி பகரவேண்டியதிருப்பதால், ஆம், அது என் ஆத்துமாவை சஞ்சலப்படுத்தி, என்னை உண்டாக்கினவரின் சமுகத்தின் முன்பாக என்னை அவமானத்தால் ஒடுங்கச் செய்கிறது.

7 உங்கள் மனைவிகள் மற்றும் பிள்ளைகளுக்கு முன்பாக உங்களைக் குறித்துச் சொல்வதில் அதிக தைரியத்தை உபயோகிப்பது அவசியமானதால், அது என்னை சஞ்சலப்படுத்துகிறது. அவர்களின் அநேகரின் உணர்ச்சிகள் மிகவும் இளகியதும், கற்புள்ளதும் தேவனுக்கு முன்பாக மிருதுவானதுமாயுமிருக்கிறது. இந்தக் காரியம் தேவனுக்கு பிரியமானதாயிருக்கிறது.

8 காயப்பட்ட ஆத்துமாவை சுகப்படுத்துகிற வார்த்தையான, ஆம், பிரியமான தேவனுடைய வார்த்தையைக் கேட்க, அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள், என நான் எண்ணுகிறேன்.

# Jacob 2

The words which Jacob, the brother of Nephi, spake unto the people of Nephi, after the death of Nephi:

Now, my beloved brethren, I, Jacob, according to the responsibility which I am under to God, to magnify mine office with soberness, and that I might rid my garments of your sins, I come up into the temple this day that I might declare unto you the word of God.

And ye yourselves know that I have hitherto been diligent in the office of my calling; but I this day am weighed down with much more desire and anxiety for the welfare of your souls than I have hitherto been.

For behold, as yet, ye have been obedient unto the word of the Lord, which I have given unto you.

But behold, hearken ye unto me, and know that by the help of the all-powerful Creator of heaven and earth I can tell you concerning your thoughts, how that ye are beginning to labor in sin, which sin appeareth very abominable unto me, yea, and abominable unto God.

Yea, it grieveth my soul and causeth me to shrink with shame before the presence of my Maker, that I must testify unto you concerning the wickedness of your hearts.

And also it grieveth me that I must use so much boldness of speech concerning you, before your wives and your children, many of whose feelings are exceedingly tender and chaste and delicate before God, which thing is pleasing unto God;

And it supposeth me that they have come up hither to hear the pleasing word of God, yea, the word which healeth the wounded soul.

9 ஆதலால் அவர்களின் காயங்களை ஆற்றாமலும், சுகப்படுத்தாமலும், ஏற்கனவே காயப்பட்டவர்களின் காயங்களைப் பெரிதுபடுத்துகிற, உங்களின் குற்றங்களின்படியே உங்களுக்குப் புத்தி சொல்லும்படியாய், தேவனிடத்திலிருந்து நான் பெற்ற கண்டிப்பான கட்டளையினிமித்தம் நெருக்கி ஏவப்பட வேண்டும் என்பதாலும், காயப்படாதவர்கள், தேவனுடைய பிரியமான வார்த்தைகளை ருசிப்பதற்குப் பதிலாக பட்டயங்கள் அவர்களின் ஆத்துமாக்களை ஊடுருவவும், அவர்களின் மிருதுவான மனங்களை காயப்படுத்தவும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதினாலும், என் ஆத்துமாவைப் பாரப்படுத்துகிறது.

Wherefore, it burdeneth my soul that I should be constrained, because of the strict commandment which I have received from God, to admonish you according to your crimes, to enlarge the wounds of those who are already wounded, instead of consoling and healing their wounds; and those who have not been wounded, instead of feasting upon the pleasing word of God have daggers placed to pierce their souls and wound their delicate minds.

10 ஆனாலும், இந்த வேலை பெரிதானதாயிருப்பினும், நான் தேவனுடைய கண்டிப்பான கட்டளையின்படியே செய்யவேண்டியதிருப்பதாலும், நொறுங்குண்ட இருதயத்தாருக்கும், இருதயத்தில் சுத்தமுள்ளவர்களுக்கும் முன்பாக, சர்வவல்ல தேவனுடைய ஊடுருவுகிற கண்ணின் பார்வையிலும், உங்களின் துன்மார்க்கம் மற்றும் அருவருப்புகளைக் குறித்து உங்களுக்குச் சொல்லுகிறேன்.

But, notwithstanding the greatness of the task, I must do according to the strict commands of God, and tell you concerning your wickedness and abominations, in the presence of the pure in heart, and the broken heart, and under the glance of the piercing eye of the Almighty God.

11 ஆகையால், உங்களுக்கு நான் தேவனுடைய வார்த்தையின் தெளிவின்படி சத்தியத்தைச் சொல்லவேண்டும். ஏனெனில் இதோ, நான் கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, இவ்வாறாக வார்த்தை என்னிடத்தில் வந்து, யாக்கோபே, நாளை நீ ஆலயத்தினுள் சென்று, நான் உனக்குக் கொடுக்கிற வார்த்தைகளை இந்த ஜனங்களுக்கு அறிவிப்பாயாக, என்றது.

Wherefore, I must tell you the truth according to the plainness of the word of God. For behold, as I inquired of the Lord, thus came the word unto me, saying: Jacob, get thou up into the temple on the morrow, and declare the word which I shall give thee unto this people.

12 இப்பொழுது இதோ, என் சகோதரரே, நான் உங்களிடம் அறிவிக்கிற வார்த்தை என்னவெனில், தங்களுக்கும் தங்கள் சந்ததியாருக்கும் வாக்குத்தத்தத்தின் தேசமாயிருக்கிற இந்த தேசத்திலே மிகுதியாய் இருக்கிற பொன்னையும், வெள்ளியையும் மற்றும் சகலவித விலை உயர்ந்த தாதுக்களையும் தேட, உங்களில் அநேகர் ஆரம்பித்திருக்கிறீர்கள்.

And now behold, my brethren, this is the word which I declare unto you, that many of you have begun to search for gold, and for silver, and for all manner of precious ores, in the which this land, which is a land of promise unto you and to your seed, doth abound most plentifully.

13 நீங்கள் அநேக ஐஸ்வரியங்களைப் பெறும்படிக்கு பராமரிப்பின் புயங்கள் மிகவும் பிரியமாய் உங்கள்மீது புன்னகைத்தது, உங்களில் சிலர் தங்கள் சகோதரர்களைப் பார்க்கிலும் மிகுதியாய்ப் பெற்றதின் நிமித்தம் இருதயங்களில் பெருமைகொண்டும், உங்களின் விலையேறப்பெற்ற வஸ்திரங்களினிமித்தம், வணங்காக்கழுத்தையும், மேட்டிமையான சிரசையும் கொண்டு, உங்கள் சகோதரரைப் பார்க்கிலும் சிறப்பாயிருக்கிறீர்கள், என்று நீங்கள் நினைப்பதாலும், அவர்களைத் துன்பப்படுத்துகிறீர்கள்.

And the hand of providence hath smiled upon you most pleasingly, that you have obtained many riches; and because some of you have obtained more abundantly than that of your brethren ye are lifted up in the pride of your hearts, and wear stiff necks and high heads because of the costliness of your apparel, and persecute your brethren because ye suppose that ye are better than they.

14 இப்பொழுது, என் சகோதரரே இந்தக் காரியத்தில்
தேவன் உங்களை நீதிமான்களாக்குகிறார், என்று
எண்ணுகிறீர்களா? இதோ, அப்படியல்ல என உங்க-
ளிடம் நான் சொல்லுகிறேன். ஆனால் அவரோ, உங்-
களைக் குற்றவாளிகளெனத் தீர்க்கிறார். இதிலே நி-
லைத்திருப்பீர்களெனில் அவரின் நியாயத்தீர்ப்பு-
கள் சீக்கிரமாய் உங்கள் மேல் வரும்.

And now, my brethren, do ye suppose that God justifieth you in this thing? Behold, I say unto you, Nay. But he condemneth you, and if ye persist in these things his judgments must speedily come unto you.

15 உங்களை ஊடுருவி, தன் கண்ணினுடைய ஒரு
பார்வையால், நீங்கள் புழுதியாகும்படிக்கு அடிக்க
இயலுமென்று அவர் உங்களுக்குக் காண்பிப்பா-
ராக.

O that he would show you that he can pierce you, and with one glance of his eye he can smite you to the dust!

16 உங்களை இந்த அக்கிரமத்திலிருந்தும் அருவ-
ருப்புகளிலிருந்தும் அவர் தப்புவிப்பாராக. மேலும்
உங்களின் இருதயத்தின் பெருமை, உங்கள் ஆத்து-
மாக்களை அழிக்காதபடிக்கு அவரது கட்டளைக-
ளின் வார்த்தைக்கு நீங்கள் செவிகொடுப்பீர்க-
ளாக!

O that he would rid you from this iniquity and abomination. And, O that ye would listen unto the word of his commands, and let not this pride of your hearts destroy your souls!

17 உங்களைப்போலவே உங்கள் சகோதரர்களையும்
நினைவுகூருங்கள். அனைவரோடும் ஒப்புரவாகி,
உங்களைப்போலவே அவர்களும் ஐஸ்வரியவான்-
களாகும்படிக்கு உங்கள் பொருட்களை தாராளமா-
கக் கொடுங்கள்.

Think of your brethren like unto yourselves, and be familiar with all and free with your substance, that they may be rich like unto you.

18 ஆனால் ஐஸ்வரியத்தைத் தேடுவதற்கு முன்பாக,
தேவனுடைய ராஜ்யத்தைத் தேடுங்கள்.

But before ye seek for riches, seek ye for the kingdom of God.

19 கிறிஸ்துவிலே நம்பிக்கை பெற்ற பின்பு ஐஸ்வரி-
யங்களைத் தேடுவீர்களானால், அவைகளை நீங்-
கள் பெறுவீர்கள். வஸ்திரமில்லாதவனுக்கு வஸ்தி-
ரம் உடுத்தவும், பசியாயிருப்பவனுக்கு போஜனம-
ளிக்கவும், சிறைப்பட்டவனை விடுதலையாக்க-
வும், வியாதியஸ்தருக்கும் துன்பப்பட்டவர்களுக்-
கும், ஒத்தாசை புரியும் எண்ணத்துடனே, நன்மை
செய்ய அவைகளை நீங்கள் தேடுவீர்கள்.

And after ye have obtained a hope in Christ ye shall obtain riches, if ye seek them; and ye will seek them for the intent to do good—to clothe the naked, and to feed the hungry, and to liberate the captive, and administer relief to the sick and the afflicted.

20 இப்பொழுது, என் சகோதரரே பெருமையைக்கு-
றித்து நான் உங்களிடத்தில் பேசினேன். தேவன் தங்-
களுக்குக் கொடுத்த பொருட்களைக்கொண்டு, தங்-
கள் இருதயங்களில் அகந்தையாயிருந்து அயலா-
னை உபத்திரவப்படுத்தி, துன்பப்படுத்தினோரே,
அதைக்குறித்து என்ன சொல்கிறீர்கள்?

And now, my brethren, I have spoken unto you concerning pride; and those of you which have afflicted your neighbor, and persecuted him because ye were proud in your hearts, of the things which God hath given you, what say ye of it?

21 அந்தக் காரியங்கள், சகல மாம்சத்தையும் சிருஷ்-
டித்தவருக்கு அருவருப்பானவை என நீங்கள்
எண்ணவில்லையா? அவர் பார்வையில் ஒரு ஜீ-
வன் மற்றொன்றைப்போலவே விலையேறப்பெற்-
றதாயுள்ளது. சகல மாம்சமும் மண்ணினாலானதே.
தன் கட்டளைகளைக் கைக்கொண்டு, தன்னை
என்றென்றைக்கும் மகிமைப்படுத்தவேண்டு-
மென்ற, அந்த ஒரே நோக்கத்திற்காகவே அவர்க-
ளைச் சிருஷ்டித்தார்.

Do ye not suppose that such things are abominable unto him who created all flesh? And the one being is as precious in his sight as the other. And all flesh is of the dust; and for the selfsame end hath he created them, that they should keep his commandments and glorify him forever.

22 இப்பொழுது இந்தப் பெருமையைக் குறித்து உங்-
களிடம் பேசுவதை முடிக்கிறேன். பெரும் குற்றத்-
தைக் குறித்து உங்களிடம் நான் பேசவேண்டியதி-
ராவிட்டால், உங்களின் நிமித்தம் என் இருதயம் மிக-
வும் மகிழ்ந்திருக்கும்.

And now I make an end of speaking unto you concerning this pride. And were it not that I must speak unto you concerning a grosser crime, my heart would rejoice exceedingly because of you.

23 ஆனால் உங்களின் பெருங்குற்றங்களின் நிமித்-
தம் தேவனுடைய வார்த்தை என்னைப் பாரப்ப-
டுத்துகிறது. ஏனெனில் இதோ, கர்த்தர் உரைப்பதா-
வது: இந்த ஜனங்கள் அக்கிரமத்திலே பெருக ஆரம்-
பிக்கிறார்கள். தாவீது மற்றும் அவனுடைய குமா-
ரன் சாலொமோனைக் குறித்து எழுதப்பட்டிருக்கிற,
காரியங்களினிமித்தம் வேசித்தனங்களைச் செய்-
வதில் தங்களையே மன்னிக்க வகைதேடி, வேத
வாக்கியங்களைப் புரியாமலிருக்கிறார்கள்.

But the word of God burdens me because of your grosser crimes. For behold, thus saith the Lord: This people begin to wax in iniquity; they understand not the scriptures, for they seek to excuse themselves in committing whoredoms, because of the things which were written concerning David, and Solomon his son.

24 இதோ, தாவீதும் சாலொமோனும் மெய்யாகவே
அநேக மனையாட்டிகளையும், மறுமனையாட்டிக-
ளையும் வைத்திருந்தார்கள். அந்தக் காரியம்
எனக்கு முன்பாக அருவருப்பானதாய் இருந்தது,
என்று கர்த்தர் சொல்லுகிறார்.

Behold, David and Solomon truly had many wives and concubines, which thing was abominable before me, saith the Lord.

25 ஆதலால், யோசேப்பின் சந்ததிகளிலிருந்து
எனக்கு ஒரு நீதியுள்ள கிளையை எழுப்பும்பொ-
ருட்டு, என் புயத்தின் வல்லமையினால், எருசலேம்
தேசத்திலிருந்து வெளியே இந்த ஜனத்தை நடத்தி
வந்திருக்கிறேன், என்று கர்த்தர் சொல்லுகிறார்.

Wherefore, thus saith the Lord, I have led this people forth out of the land of Jerusalem, by the power of mine arm, that I might raise up unto me a righteous branch from the fruit of the loins of Joseph.

26 ஆதலால், நான், கர்த்தராகிய தேவன், பழங்கா-
லத்தினரைப்போலவே, இந்த ஜனமும் செய்ய அனு-
மதியேன்.

Wherefore, I the Lord God will not suffer that this people shall do like unto them of old.

27 ஆகையால், என் சகோதரரே, எனக்குச் செவிகொ-
டுத்து, கர்த்தரின் வார்த்தையைக் கேளுங்கள்,
ஏனெனில் உங்களில் எந்த ஒரு மனுஷனும் ஒரு
மனையாட்டியைத் தவிர அதிகம் வைத்திருக்கக்
கூடாது, அவன் மறுமனையாட்டிகள் ஒருவரையும்
வைத்திருக்கக் கூடாது.

Wherefore, my brethren, hear me, and hearken to the word of the Lord: For there shall not any man among you have save it be one wife; and concubines he shall have none;

28 ஏனெனில் நான் கர்த்தராகிய தேவன், பெண்க-
ளின் கற்பொழுக்கத்திலே களிகூருகிறேன். வேசித்-
தனங்கள் என் முன் அருவருப்பானவை, என்று
சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

For I, the Lord God, delight in the chastity of women. And whoredoms are an abomination before me; thus saith the Lord of Hosts.

29 ஆகையால், இந்த ஜனங்கள் என் கட்டளைக-
ளைக் கைக்கொள்ளுவார்கள். இல்லாவிடில்
அவர்கள் நிமித்தமாக இத்தேசம் சபிக்கப்படும், என்-
று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.

Wherefore, this people shall keep my commandments, saith the Lord of Hosts, or cursed be the land for their sakes.

30 ஏனெனில், எனக்கு ஒரு சந்ததியை நான் எழும்-
பப்பண்ணினால், என் ஜனத்தைக் கட்டளையிடு-
வேன். இல்லாவிடில் இந்தக் காரியங்களுக்கு அவர்-
கள் செவிசாய்க்கவேண்டும், என்று சேனைகளின்
கர்த்தர் உரைக்கிறார்.

For if I will, saith the Lord of Hosts, raise up seed unto me, I will command my people; otherwise they shall hearken unto these things.

31 ஏனெனில் இதோ, கர்த்தராகிய நான், என் ஜனங்-
களின் சகல தேசங்களிலும், ஆம், எருசலேம் தேசத்-
திலும் தங்களின் புருஷர்களின் துன்மார்க்கத்தா-
லும் அருவருப்புகளின் நிமித்தமும், என் ஜனங்க-
ளின் குமாரத்திகளின் துக்கத்தைக் கண்டும், புலம்-
பலைக் கேட்டுமிருக்கிறேன்.
32 சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், எருசலேம்
தேசத்திலிருந்து நான் வெளியே நடத்திவந்த, இந்த
ஜனங்களின் அழகான குமாரத்திகளின் கூக்குரல்,
என் ஜனங்களின் புருஷர்களுக்கு விரோதமாய்,
என்னிடம் வர நான் அனுமதிக்கமாட்டேன், என்று
சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.
33 அவர்கள் அழியும்பொருட்டு ஒரு கொடிய சாபத்-
தால் நான் தண்டித்தாலொழிய, என் ஜனங்களின்
குமாரத்திகளின் மென்மையினிமித்தம் சிறைபி-
டித்து நடத்திச் செல்லமாட்டார்கள். ஏனெனில்
அவர்கள் பழங்காலத்தவர்களைப்போல விபச்சா-
ரம் பண்ணாமல் இருப்பார்களாக, என சேனைக-
ளின் கர்த்தர் சொல்லுகிறார்.
34 இப்பொழுது என் சகோதரரே, இந்தக் கட்டளைகள்
நம் தந்தையாகிய லேகிக்குக் கொடுக்கப்பட்டவை
என்பதை நீங்கள் அறிவீர்கள்; ஆகையால் நீங்கள்
முன்னமே இவைகளை அறிந்திருக்கிறீர்கள். நீங்-
கள் செய்யக்கூடாதவைகளை செய்ததினிமித்தம்,
பெரிய ஆக்கினைக்குள்ளாக வந்திருக்கிறீர்கள்.
35 இதோ, நம் சகோதரர்களாகிய லாமானியர்களை-
விட நீங்கள் பெரிய அக்கிரமங்களை செய்திருக்கி-
றீர்கள். உங்கள் மென்மையான மனையாட்டிக-
ளின் இருதயங்களை நீங்கள் உடைத்தீர்கள், அவர்-
களுக்கு முன் உங்கள் கெட்ட உதாரணங்களினி-
மித்தம், உங்கள் பிள்ளைகளின் நம்பிக்கையை
இழந்தீர்கள். ஏனென்றால், உங்களுக்கு விரோத-
மாய் அவர்களின் இருதயங்களின் அழுகை தே-
வனிடம் செல்கிறது. தேவனுடைய வார்த்தையின்
கண்டிப்பின் நிமித்தம், ஆழமான காயங்களால்
ஊடுருவிக்குத்தப்பட்டு அநேக இருதயங்கள் இறந்-
துபோயின.

For behold, I, the Lord, have seen the sorrow, and heard the mourning of the daughters of my people in the land of Jerusalem, yea, and in all the lands of my people, because of the wickedness and abominations of their husbands.

And I will not suffer, saith the Lord of Hosts, that the cries of the fair daughters of this people, which I have led out of the land of Jerusalem, shall come up unto me against the men of my people, saith the Lord of Hosts.

For they shall not lead away captive the daughters of my people because of their tenderness, save I shall visit them with a sore curse, even unto destruction; for they shall not commit whoredoms, like unto them of old, saith the Lord of Hosts.

And now behold, my brethren, ye know that these commandments were given to our father, Lehi; wherefore, ye have known them before; and ye have come unto great condemnation; for ye have done these things which ye ought not to have done.

Behold, ye have done greater iniquities than the Lamanites, our brethren. Ye have broken the hearts of your tender wives, and lost the confidence of your children, because of your bad examples before them; and the sobbings of their hearts ascend up to God against you. And because of the strictness of the word of God, which cometh down against you, many hearts died, pierced with deep wounds.

## யாக்கோபு 3

1 ஆனால் இதோ, யாக்கோபாகிய நான் உங்களில்
இருதயத்திலே சுத்தமுள்ளவர்களிடத்தில் பேசுகி-
றேன். மனஉறுதியுடனேகூட தேவனை நோக்கிப்பா-
ருங்கள். அதிக விசுவாசத்துடனே அவரிடம் ஜெபம்
செய்யுங்கள். உங்கள் உபத்திரவத்திலே உங்களை
அவர் தேற்றுவார். உங்களுக்காக அவர் பரிந்துபே-
சுகிறவராய் இருந்து உங்கள் அழிவைத் தேடுபவர்-
களின் மீது நியாயத்தை அனுப்புவார்.
2 இருதயத்திலே சுத்தமுள்ளவர்களே, நீங்கள் எல்-
லோரும், உங்கள் மனம் திடமனதாய் என்றென்-
றைக்கும் இருக்குமேயானால், உங்கள் தலைகளை
உயர்த்தி தேவனுடைய பிரியமான வார்த்தையைப்
பெற்றுக்கொள்ளுங்கள். அவரின் அன்பை ருசித்-
துப் பாருங்கள்.
3 ஆனால் இந்நாளிலே தேவனுக்கு முன்பாக அசுத்-
தமாயிருக்கிற, இருதயத்தில் சுத்தமில்லாதவர்களா-
கிய, உங்களுக்கு ஐயோ; நீங்கள் மனந்திரும்பாவிட்-
டால் உங்களினிமித்தம் தேசம் சபிக்கப்பட்டிருக்-
கும். உங்களைப்போல அசுத்தமாய் அல்லாத லா-
மானியர்கள், தாங்கள் ஒரு கொடிய சாபத்தால்
சபிக்கப்பட்டிருந்தும் கூட, நீங்கள் அழிந்துபோகும்-
பொருட்டு சவுக்கால் அடிப்பார்கள்.
4 நீங்கள் மனந்திரும்பாவிட்டால், உங்கள் சுதந்திர
தேசத்தை அவர்கள் ஆட்கொள்ளும் காலம் சீக்கிர-
மாய் வருகிறது. கர்த்தராகிய தேவன் உங்களிலி-
ருந்து நீதிமான்களை வெளியே நடத்திச் செல்வார்.
5 இதோ, அவர்களின் அசுசித் தன்மையாலும்,
அவர்களது சருமத்தின் மீது வந்திருக்கிற சாபத்தி-
னாலும், உங்களால் வெறுக்கப்படுகிற உங்கள்
சகோதரராகிய லாமானியர்கள், உங்களைவிட
அதிக நீதியுள்ளவர்களாய் இருக்கிறார்கள், ஏனெ-
னில் ஒரு மனையாட்டியை வைத்திருக்க வேண்டு-
மென்றும், மறுமனையாட்டிகள் ஒருவரையும்
அவர்கள் வைத்திருக்கக்கூடாதென்றும், அவர்கள்
மத்தியில் விபச்சாரங்கள் நடக்கக்கூடாதென்றும்,
நம் தகப்பனுக்குக் கொடுக்கப்பட்ட கர்த்தரின் கட்-
டளையை அவர்கள் மறந்துபோகவில்லை.
6 இப்பொழுது இந்தக் கட்டளையை கைக்கொண்-
டு ஆசரித்தார்கள்; ஆகையால் இந்தக் கட்டளை-
யை ஆசரிப்பதனிமித்தம், தேவனாகிய கர்த்தர்
அவர்களை அழிக்காமல், அவர்களிடத்தில் இரக்க-
மாயிருப்பார். ஒரு நாளிலே அவர்கள் ஆசீர்வதிக்-
கப்பட்ட ஜனமாவார்கள்.

## Jacob 3

But behold, I, Jacob, would speak unto you that are pure in heart. Look unto God with firmness of mind, and pray unto him with exceeding faith, and he will console you in your afflictions, and he will plead your cause, and send down justice upon those who seek your destruction.

O all ye that are pure in heart, lift up your heads and receive the pleasing word of God, and feast upon his love; for ye may, if your minds are firm, forever.

But, wo, wo, unto you that are not pure in heart, that are filthy this day before God; for except ye repent the land is cursed for your sakes; and the Lamanites, which are not filthy like unto you, nevertheless they are cursed with a sore cursing, shall scourge you even unto destruction.

And the time speedily cometh, that except ye repent they shall possess the land of your inheritance, and the Lord God will lead away the righteous out from among you.

Behold, the Lamanites your brethren, whom ye hate because of their filthiness and the cursing which hath come upon their skins, are more righteous than you; for they have not forgotten the commandment of the Lord, which was given unto our father—that they should have save it were one wife, and concubines they should have none, and there should not be whoredoms committed among them.

And now, this commandment they observe to keep; wherefore, because of this observance, in keeping this commandment, the Lord God will not destroy them, but will be merciful unto them; and one day they shall become a blessed people.

7 இதோ, அவர்களின் புருஷர்கள் தங்கள் மனைவி-
களை நேசிக்கிறார்கள். அவர்களின் மனைவிகள்
தங்கள் புருஷர்களை நேசிக்கிறார்கள். அவர்க-
ளின் புருஷர்களும், அவர்களின் மனைவிகளும்
தங்கள் பிள்ளைகளை நேசிக்கிறார்கள். உங்கள் மீ-
து அவர்களுடைய அவநம்பிக்கையும், வெறுப்பும்,
அவர்களது பிதாக்களின் அக்கிரமத்தின் நிமித்த-
மே. ஆதலால் உங்களின் மகா சிருஷ்டிகரின் பார்-
வையில், அவர்களைக் காட்டிலும் நீங்கள் எவ்வள-
வு சிறந்தவர்களாயிருக்கிறீர்கள்?

Behold, their husbands love their wives, and their wives love their husbands; and their husbands and their wives love their children; and their unbelief and their hatred towards you is because of the iniquity of their fathers; wherefore, how much better are you than they, in the sight of your great Creator?

8 என் சகோதரரே, உங்கள் பாவங்களிலிருந்து நீங்-
கள் மனந்திரும்பாவிட்டால், தேவனுடைய சிங்கா-
சனத்திற்கு முன்பாக அவர்களோடு நீங்களும்
கொண்டுவரப்படுகையில், அவர்களுடைய சரு-
மம் உங்களுடையவைகளை விட வெண்மையாக
இருக்குமே, என்று அஞ்சுகிறேன்.

O my brethren, I fear that unless ye shall repent of your sins that their skins will be whiter than yours, when ye shall be brought with them before the throne of God.

9 ஆதலால், அவர்களுடைய சருமங்களின் கரு-
மையான தன்மையின் நிமித்தமும், அவர்களு-
டைய அசுசியினிமித்தமும், அவர்களுக்கு விரோத-
மாய் இனி ஒருபோதும் நீங்கள் இகழாமல், இருப்பீர்-
களாக, என்று தேவனுடைய வார்த்தையான, இந்-
தக் கட்டளையை உங்களுக்கு நான் கொடுக்கி-
றேன். உங்களுடைய சுய அசுசியை நினைவுகூர்ந்-
து, அவர்களின் அசுசி, அவர்களின் பிதாக்களின்
நிமித்தம் வந்தது, என நினைவுகூருங்கள்.

Wherefore, a commandment I give unto you, which is the word of God, that ye revile no more against them because of the darkness of their skins; neither shall ye revile against them because of their filthiness; but ye shall remember your own filthiness, and remember that their filthiness came because of their fathers.

10 ஆகையால் உங்கள் பிள்ளைகளுக்கு முன்பாக
நீங்கள் ஏற்படுத்தின முன்மாதிரியின் நிமித்தம்,
அவர்களுடைய இருதயங்களை எவ்வளவாய் துக்-
கப்படுத்தினீர்கள் என்பதை நினைவுகூருங்கள்.
மேலும் உங்கள் அசுசியின் நிமித்தம், உங்கள் பிள்-
ளைகளை அழிவிற்குள்ளாக நீங்கள் கொண்டுவ-
ரக்கூடும் என்றும், கடைசி நாளிலே உங்கள் சிரசு-
கள் மீது அவர்களின் பாவங்கள் குவிக்கப்படும்,
என்பதையும் நினைவுகூருங்கள்.

Wherefore, ye shall remember your children, how that ye have grieved their hearts because of the example that ye have set before them; and also, remember that ye may, because of your filthiness, bring your children unto destruction, and their sins be heaped upon your heads at the last day.

11 என் சகோதரரே, என் வார்த்தைகளைக் கேளுங்-
கள்; உங்கள் ஆத்துமாக்களின் புலன்களை எழுப்-
புங்கள். மரணத்தின் நித்திரையிலிருந்து விழிக்-
கும்படியாய் குலுங்கி, இரண்டாவது மரணமான
கந்தகக் கடலும், அக்கினியுமான ஏரியில் தள்ளப்-
படுவதற்கு, நீங்கள் பிசாசின் தூதர்களாகாமல், பா-
தாளத்தின் வேதனைகளிலிருந்து உங்களை விடு-
தலையாக்குங்கள்.

O my brethren, hearken unto my words; arouse the faculties of your souls; shake yourselves that ye may awake from the slumber of death; and loose yourselves from the pains of hell that ye may not become angels to the devil, to be cast into that lake of fire and brimstone which is the second death.

12 இப்பொழுது, யாக்கோபாகிய நான், நேபியின்
ஜனங்களை வேசித்தனம், காமவிகாரம் மற்றும்
ஒவ்வொரு வகையான பாவத்திற்கு விரோதமாய்
எச்சரித்து, அவைகளின் பயங்கரமான விளைவுக-
ளை அவர்களுக்குச் சொல்லி, அநேகக் காரியங்க-
ளைப் பேசினேன்.

And now I, Jacob, spake many more things unto the people of Nephi, warning them against fornication and lasciviousness, and every kind of sin, telling them the awful consequences of them.

13 இந்த ஜனங்களுடைய எண்ணிறைந்ததாகத்
தொடங்கிய நடவடிக்கைகளின், நூற்றில் ஒரு பங்-
கைக்கூட இந்தத் தகடுகளின்மீது எழுத இயலாதி-
ருப்பினும், அவர்களின் அநேக நடவடிக்கைகளும்,
யுத்தங்களும், பிணக்குகளும் அவர்களுடைய ரா-
ஜாக்களின் ஆளுகைகளும் பெரிய தகடுகள் மீது
எழுதப்பட்டிருக்கிறது.
14 இந்தத் தகடுகள் யாக்கோபின் தகடுகள் என
அழைக்கப்படுகின்றன. அவைகள் நேபியின் கரத்-
தால் செய்யப்பட்டவை. நான் இந்த வார்த்தைக-
ளைப் பேசுவதை முடிக்கிறேன்.

And a hundredth part of the proceedings of this people, which now began to be numerous, cannot be written upon these plates; but many of their proceedings are written upon the larger plates, and their wars, and their contentions, and the reigns of their kings.

These plates are called the plates of Jacob, and they were made by the hand of Nephi. And I make an end of speaking these words.

# யாக்கோபு 4

1 இப்பொழுது இதோ, அந்தப்படியே, யாக்கோபாகிய
நான், என் ஜனங்களுக்கு வார்த்தையைக்கொண்-
டு அதிகமாய் ஊழியம் செய்தேன். (தகடுகள்மீது
எங்கள் வார்த்தைகளைப் பொறிப்பதிலுள்ள சிர-
மங்களினிமித்தம் என்னுடைய வார்த்தைகளில் சி-
லவற்றை நான் எழுதுகிறேன்.) நாங்கள் தகடுகள்-
மீது எழுதும் காரியங்கள் நிலைத்திருக்க வேண்டு-
மென அறிகிறோம்.
2 ஆனால் எந்தக் காரியமானாலும் தகடுகளைத்
தவிர, வேறு எவற்றின் மீது நாங்கள் எழுதினாலும்,
அது அழிந்து மறைந்துபோம். ஆனால் எங்கள்
பிள்ளைகளுக்கும், எங்கள் பிரியமான சகோதரர்க-
ளுக்கும், எங்களைக் குறித்த அல்லது அவர்களு-
டைய பிதாக்களைக் குறித்த செய்தியினை, சிறித-
ளவு கொடுக்கக்கூடிய, சில வார்த்தைகளை தகடு-
கள்மீது நாங்கள் எழுதமுடியும்.
3 இப்பொழுது இந்தக் காரியத்தில் நாங்கள் களிகூ-
ருகிறோம். எங்களுடைய பிரியமான சகோதரரும்,
எங்களுடைய பிள்ளைகளும், நன்றியுள்ள இருத-
யங்களுடன் அவைகளைப் பெற்றுக்கொண்டு,
துக்கமில்லாமலும், வெறுப்பில்லாமலும், மகிழ்ச்சி-
யுடனே, தங்களின் முதற்பெற்றோர்களைக் குறித்து
அறியும்படியாய், அவைகளை நோக்குவார்கள்,
என நம்பியே தகடுகள்மீது இந்த வார்த்தைகளை
பொறிக்க கருத்தாய்ப் பிரயாசப்படுகிறோம்.
4 ஏனெனில், கிறிஸ்துவை அறிந்திருந்தோம் என்-
றும், அவர் வருகைக்கு அநேக வருஷங்களுக்கு
முன்னமே அவரின் மகிமையில் நம்பிக்கை வைத்-
திருந்தோம் என்றும், நாங்கள் மாத்திரம் அல்ல, எங்-
களுக்கு முன்னமே இருந்த எல்லா பரிசுத்த தீர்க்கத-
ரிசிகளும் அவரின் மகிமையிலே நம்பிக்கை வைத்-
திருந்தார்கள் என்றும், அவர்கள் அறிவதற்காகவே
இந்தக் காரியங்களை நாங்கள் எழுதியிருக்கிறோம்.
5 இதோ, கிறிஸ்துவிலே அவர்கள் விசுவாசித்து, பி-
தாவை அவருடைய நாமத்திலே தொழுதுகொண்-
டார்கள், நாங்களும் பிதாவை அவருடைய நாமத்-
தில் தொழுகிறோம். இந்த நோக்கத்துக்காகவே, எங்-
கள் ஆத்துமாக்களை அவரிடத்தில் வழிநடத்து-
கிற, மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்-
கொள்கிறோம். தேவனுக்கும் அவருடைய ஒரேபே-
றான குமாரனுக்கும் மாதிரியாக, தன் குமாரனாகிய
ஈசாக்கை, வனாந்தரத்தில் ஆபிரகாம் தேவனு-
டைய கட்டளைக்கேற்ப, பலியாக தந்தது நீதியென்-
று எண்ணப்பட்டதுபோல, இக்காரணத்துக்காகவே
நீதியென்று எங்களுக்கும் எண்ணப்பட்டது.

# Jacob 4

Now behold, it came to pass that I, Jacob, having ministered much unto my people in word, (and I cannot write but a little of my words, because of the difficulty of engraving our words upon plates) and we know that the things which we write upon plates must remain;

But whatsoever things we write upon anything save it be upon plates must perish and vanish away; but we can write a few words upon plates, which will give our children, and also our beloved brethren, a small degree of knowledge concerning us, or concerning their fathers—

Now in this thing we do rejoice; and we labor diligently to engraven these words upon plates, hoping that our beloved brethren and our children will receive them with thankful hearts, and look upon them that they may learn with joy and not with sorrow, neither with contempt, concerning their first parents.

For, for this intent have we written these things, that they may know that we knew of Christ, and we had a hope of his glory many hundred years before his coming; and not only we ourselves had a hope of his glory, but also all the holy prophets which were before us.

Behold, they believed in Christ and worshiped the Father in his name, and also we worship the Father in his name. And for this intent we keep the law of Moses, it pointing our souls to him; and for this cause it is sanctified unto us for righteousness, even as it was accounted unto Abraham in the wilderness to be obedient unto the commands of God in offering up his son Isaac, which is a similitude of God and his Only Begotten Son.

6 ஆகையால் தீர்க்கதரிசிகளை நாங்கள் ஆராய்ந்து பார்க்கிறோம். நாங்கள் அநேக வெளிப்படுத்தல்களையும், தீர்க்கதரிசன ஆவியையும் பெற்றிருக்கிறோம். இந்த எல்லா சாட்சிகளையும், பெற்றிருப்பதால், நாங்கள் நம்பிக்கையைப் பெறுகிறோம். நாங்கள் மெய்யாகவே இயேசுவின் நாமத்தினால் கட்டளையிட்டால் மலைகளும், சமுத்திரத்தின் அலைகளும், மரங்களும் எங்களுக்கு கீழ்ப்படியுமளவிற்கு எங்களின் விசுவாசம் அசைக்கப்பட முடியாததாயிருக்கிறது.

Wherefore, we search the prophets, and we have many revelations and the spirit of prophecy; and having all these witnesses we obtain a hope, and our faith becometh unshaken, insomuch that we truly can command in the name of Jesus and the very trees obey us, or the mountains, or the waves of the sea.

7 ஆயினும், அவருடைய கிருபையினாலும், மனுபுத்திரரிடத்தில் அவர் பலமுறை சித்தமிரங்கினதினாலும், இந்தக் காரியங்களைச் செய்ய நமக்கு வல்லமையிருக்கிறதென்று, நாம் அறியும்படிக்கு நம்முடைய பெலவீனங்களை, கர்த்தராகிய தேவன் நமக்குக் காண்பிக்கிறார்.

Nevertheless, the Lord God showeth us our weakness that we may know that it is by his grace, and his great condescensions unto the children of men, that we have power to do these things.

8 இதோ, கர்த்தருடைய கிரியைகள் பெரிதும், மகத்துவமுமானவை. அவருடைய இரகசியங்களின் ஆழங்கள் எவ்வளவு அறியக்கூடாததாயிருக்கிறது, அவரின் வழிகள் அனைத்தையும் மனுஷன் அறிவது கூடாத காரியமாயிருக்கிறது. அவைகள் வெளிப்படுத்தப்பட்டாலொழிய ஒருவனும் அவருடைய வழிகளை அறியான். ஆகவே சகோதரரே, தேவனுடைய வெளிப்படுத்தல்களை இகழாதிருங்கள்.

Behold, great and marvelous are the works of the Lord. How unsearchable are the depths of the mysteries of him; and it is impossible that man should find out all his ways. And no man knoweth of his ways save it be revealed unto him; wherefore, brethren, despise not the revelations of God.

9 இதோ, பூமியின் பரப்பின் மீது, மனுஷன் அவரின் வார்த்தையின் வல்லமையினால் உண்டாக்கப்பட்டான். இந்தப் பூமி அவரின் வார்த்தையின் வல்லமையினால் சிருஷ்டிக்கப்பட்டது. ஆதலால் தேவன் பேசினால், உலகம் உண்டானதேயென்றால், அவர் பேசி மனுஷன் சிருஷ்டிக்கப்பட்டானென்றால், ஏன் அவர் தன் சித்தத்திற்கும், விருப்பதிற்கும் ஏற்ப, அதின் மீது உள்ள தன் கைகளின் வேலைப்பாடுகளையோ, பூமியையோ கட்டளையிடக்கூடாமற்போகிறது?

For behold, by the power of his word man came upon the face of the earth, which earth was created by the power of his word. Wherefore, if God being able to speak and the world was, and to speak and man was created, O then, why not able to command the earth, or the workmanship of his hands upon the face of it, according to his will and pleasure?

10 ஆதலால் சகோதரரே, கர்த்தருக்கு ஆலோசனைகூற நாடாமல், அவரின் கரத்திலிருந்து ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளத் தேடுங்கள். ஏனெனில் இதோ, தம் எல்லா கிரியைகளைப்பற்றியும், அவர் ஞானத்திலும், நீதியிலும் மகா இரக்கத்தோடு ஆலோசனை கொடுக்கிறார், என்பதை நீங்களே அறிந்திருக்கிறீர்கள்.

Wherefore, brethren, seek not to counsel the Lord, but to take counsel from his hand. For behold, ye yourselves know that he counseleth in wisdom, and in justice, and in great mercy, over all his works.

11 ஆதலால், பிரியமான சகோதரரே, அவரின் ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்துவினுடைய பாவநிவர்த்தியின் மூலம் அவரில் ஒப்புரவாகுங்கள். அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவிலே இருக்கிற உயிர்த்தெழுதலின் வல்லமையின்படியே உயிர்த்தெழுதலைப் பெறலாம். நீங்கள் விசுவாசத்தைப் பெற்றிருப்பதால், மாம்சத்திலே தன்னையே அவர் வெளிப்படுத்துவதற்கு முன்னமே அவரில் இருக்கிற மகிமையின் நன்மையான நம்பிக்கையைப் பெற்று, தேவனுக்குக் கிறிஸ்துவின் முதற் கனிகளாக அர்ப்பணிக்கப்படுவீர்களாக.

Wherefore, beloved brethren, be reconciled unto him through the atonement of Christ, his Only Begotten Son, and ye may obtain a resurrection, according to the power of the resurrection which is in Christ, and be presented as the first-fruits of Christ unto God, having faith, and obtained a good hope of glory in him before he manifesteth himself in the flesh.

12 இப்பொழுது, அன்பானவர்களே, இந்தக் காரியங்களை உங்களுக்குச் சொல்லுகிறேனே என வியக்காதீர்கள்; ஏனெனில் வரவிருக்கிற உலகம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்து, ஞானத்தைப் பெற்றுக்கொள்ளும்படிக்கு, அவரைப்பற்றிய சம்பூரண அறிவைப்பெற, கிறிஸ்துவின் பாவநிவர்த்தியைக் குறித்து நாம் ஏன் பிரசங்கிக்கக் கூடாது?

And now, beloved, marvel not that I tell you these things; for why not speak of the atonement of Christ, and attain to a perfect knowledge of him, as to attain to the knowledge of a resurrection and the world to come?

13 இதோ, என் சகோதரரே, தீர்க்கதரிசனம் உரைப்பவன், மனுஷர் புரிந்துகொள்ளும்படியே தீர்க்கதரிசனம் உரைப்பானாக. ஏனெனில் ஆவியானவர் பொய்யுரைக்காமல் உண்மையையே பேசுகிறார். ஆதலால் உண்மையாகவே இருக்கிறதும், உண்மையாகவே இருக்கப்போகிறதுமான காரியங்களைக் குறித்துச் சொல்கிறார். அதினிமித்தம், எங்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காக, தெளிவாக இந்தக் காரியங்கள் எங்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன; ஆனாலும் இதோ, பூர்வகாலத்து தீர்க்கதரிசிகளிடத்திலும் தேவன் பேசியிருப்பதால், இந்தக் காரியங்களுக்கு நாங்கள் மாத்திரம் சாட்சிகளல்ல.

Behold, my brethren, he that prophesieth, let him prophesy to the understanding of men; for the Spirit speaketh the truth and lieth not. Wherefore, it speaketh of things as they really are, and of things as they really will be; wherefore, these things are manifested unto us plainly, for the salvation of our souls. But behold, we are not witnesses alone in these things; for God also spake them unto prophets of old.

14 ஆனால் இதோ, யூதர்கள் வணங்காக் கழுத்துள்ள ஜனமாக இருந்தார்கள். அவர்கள் தெளிவான வார்த்தைகளை அசட்டைபண்ணி, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, தாங்கள் புரிந்துகொள்ளமுடியாத காரியங்களையே நாடினார்கள். ஆகையால் அவர்களின் குருட்டுத் தன்மையின் நிமித்தம், அந்தக் குருட்டுத்தன்மை இலக்கைத் தாண்டி பார்த்ததினிமித்தம் வந்ததாலும், அவர்களின் வீழ்ச்சி அவசியமானதாயிருக்கிறது. ஆதலால் அவர்களிடத்திலிருந்து தன்னுடைய தெளிவானவைகளைத் தேவன் எடுத்துவிட்டு, அவர்கள் விரும்பினபடியே, அவர்கள் புரிந்துகொள்ளமுடியாத அநேகக் காரியங்களை அவர்களுக்கு அளித்தார். அவர்கள் விரும்பினதினிமித்தம், கர்த்தர் அப்படிச் செய்து, அவர்களை இடறப்பண்ணினார்.

But behold, the Jews were a stiffnecked people; and they despised the words of plainness, and killed the prophets, and sought for things that they could not understand. Wherefore, because of their blindness, which blindness came by looking beyond the mark, they must needs fall; for God hath taken away his plainness from them, and delivered unto them many things which they cannot understand, because they desired it. And because they desired it God hath done it, that they may stumble.

15 இப்பொழுது யாக்கோபாகிய நான், தீர்க்கதரிசன-
முரைப்பதற்கு ஆவியால் வழிநடத்தப்பட்டு, யூதர்-
களின் இடறுதலினிமித்தம், அவர்கள் எந்தக் கல்-
லின் மீது கட்டி பாதுகாப்பான அஸ்திபாரம்
அமைக்க முடியுமோ, அதையே அவர்கள் புறக்க-
ணிப்பார்கள் என எனக்குள்ளிருக்கும் ஆவியின்
கிரியையினாலே உணருகிறேன்.

And now I, Jacob, am led on by the Spirit unto prophesying; for I perceive by the workings of the Spirit which is in me, that by the stumbling of the Jews they will reject the stone upon which they might build and have safe foundation.

16 ஆனால், இதோ, வேதவாக்கியங்களின்படி, யூதர்-
கள் அதன் மீது கட்டக்கூடிய, இந்தக் கல், பெரிதும்
இறுதியுமான, ஒரே உறுதியான அஸ்திபாரமாகும்.

But behold, according to the scriptures, this stone shall become the great, and the last, and the only sure foundation, upon which the Jews can build.

17 இப்போது, எனக்கன்பானவர்களே, அவர்கள்
உறுதியான அஸ்திபாரத்தைப் புறக்கணித்த பின்-
பு, அவர்களின் மூலைக்குத் தலைக்கல்லாகும்ப-
டிக்கு, அதன்மீது கட்டுவது, எப்படி சாத்தியமாகும்?

And now, my beloved, how is it possible that these, after having rejected the sure foundation, can ever build upon it, that it may become the head of their corner?

18 இதோ, என் அன்புச் சகோதரரே, எந்த விதத்திலா-
வது, ஆவியிலே இருக்கும் என் உறுதியிலிருந்து
நான் நடுக்கங்கொள்ளாமலும், உங்களின் மீது
நான் சஞ்சலப்பட்டு தடுமாறாமலும் இருந்தேனே-
யாகில், இந்த இரகசியத்தை உங்களுக்கு நான் வெ-
ளியாக்குவேன்.

Behold, my beloved brethren, I will unfold this mystery unto you; if I do not, by any means, get shaken from my firmness in the Spirit, and stumble because of my over anxiety for you.

# யாக்கோபு 5

1 இதோ என் சகோதரரே, இஸ்ரவேலின் வீட்டாருக்கு,
தீர்க்கதரிசி சீனஸ் பேசிய வார்த்தைகளை வாசித்த-
தை, நீங்கள் நினைவில்கொள்ளவில்லையா.
அவன் சொன்னதாவது:

2 இஸ்ரவேலின் வீட்டாரே செவிகொடுங்கள். கர்த்த-
ருடைய தீர்க்கதரிசியான, என்னுடைய வார்த்தை-
களைக் கேளுங்கள்.

3 இதோ, கர்த்தர் சொல்லுகிறதாவது: ஓ இஸ்ரவே-
லின் வீட்டாரே, ஒரு மனுஷன் தன் திராட்சைத்
தோட்டத்திலே போஷித்த ஒரு தோட்டத்து ஒலிவ
மரத்திற்கு உன்னை நான் ஒப்பிடுவேன். அது
வளர்ந்து முதுமையடைந்து, அழுகத்தொடங்கிய-
து.

4 அந்தப்படியே, அந்தத் திராட்சைத் தோட்டத்தின்
எஜமான் வந்து, தம் ஒலிவ மரம் அழுகத் தொடங்கி-
யிருப்பதை கண்டான். அது அழிந்து போகாதபடிக்-
கும், இளம் மெல்லிய கிளைகள் தளைக்கும்படிக்-
கும், அதை நறுக்கி, அதைச் சுற்றி வெட்டி, அதைப்-
போஷிப்பேன், என்று அவன் சொன்னான்.

5 அந்தப்படியே, தன் வார்த்தையின்படியே அவன்
அதை நறுக்கி, அதைச் சுற்றி வெட்டி, அதைப் போ-
ஷித்தான்.

6 அந்தப்படியே, பல நாட்கள் கழித்து அது சில சி-
றிய, இளம் மெல்லிய கிளைகளைத் தளைத்தது.
ஆனால் இதோ, அதனுடைய முக்கிய மேற்பாகம்
அழுக ஆரம்பித்தது.

7 அந்தப்படியே, திராட்சைத் தோட்டதின் எஜமான்
அதைக் கண்டு, தன் ஊழியக்காரனை நோக்கி:
இந்த விருட்சத்தை நான் இழந்துவிடுவேனோ என்-
று சஞ்சலப்படுகிறேன். ஆதலால், போய் ஒரு காட்டு
ஒலிவ மரத்திலிருந்து கிளைகளை வெட்டி அவை-
களை என்னிடம் இங்கே கொண்டுவா. உதிர இருக்-
கிற அந்த முக்கியமான கிளைகளை நான் பிடுங்கி
அதை சுட்டெரிக்கும்படி அவைகளை நாம் அக்கி-
னிக்குள் வீசுவோம், என்றான்.

8 இதோ, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் சொன்-
னதாவது: நான் இந்த இளம் மற்றும் மெல்லிய கி-
ளைகளில் அநேகத்தை எடுத்து, என் விருப்பத்-
தின்படியே எந்த விருட்சத்திலேயானாலும் ஒட்ட-
வைப்பேன். இந்த விருட்சத்தின் வேர் அழிந்தாலும்,
அதைப் பொருட்படுத்தாமல் அதனுடைய கனியை
எனக்கென்று நான் பாதுகாப்பேன், ஆகையால்
நான் இந்த மெல்லிய கிளைகளை எடுத்து என் வி-
ருப்பத்திற்கேற்ப அவைகளை நான் ஒட்டுவேன்.

# Jacob 5

Behold, my brethren, do ye not remember to have read the words of the prophet Zenos, which he spake unto the house of Israel, saying:

Hearken, O ye house of Israel, and hear the words of me, a prophet of the Lord.

For behold, thus saith the Lord, I will liken thee, O house of Israel, like unto a tame olive tree, which a man took and nourished in his vineyard; and it grew, and waxed old, and began to decay.

And it came to pass that the master of the vineyard went forth, and he saw that his olive tree began to decay; and he said: I will prune it, and dig about it, and nourish it, that perhaps it may shoot forth young and tender branches, and it perish not.

And it came to pass that he pruned it, and digged about it, and nourished it according to his word.

And it came to pass that after many days it began to put forth somewhat a little, young and tender branches; but behold, the main top thereof began to perish.

And it came to pass that the master of the vineyard saw it, and he said unto his servant: It grieveth me that I should lose this tree; wherefore, go and pluck the branches from a wild olive tree, and bring them hither unto me; and we will pluck off those main branches which are beginning to wither away, and we will cast them into the fire that they may be burned.

And behold, saith the Lord of the vineyard, I take away many of these young and tender branches, and I will graft them whithersoever I will; and it mattereth not that if it so be that the root of this tree will perish, I may preserve the fruit thereof unto myself; wherefore, I will take these young and tender branches, and I will graft them whithersoever I will.

9 அதனுடைய இடத்திலே நீ காட்டு ஒலிவ விருட்-
சத்தின் கிளைகளை எடுத்து ஒட்டுவாயாக. மேலும்
நான் பிடுங்கிய இவைகள், என் திராட்சைத் தோட்-
டத்தின் பூமியிலே படராதபடிக்கு, அவைகளை
அக்கினிக்குள் எறிந்து, சுட்டெரிப்பேன், என்றான்.

Take thou the branches of the wild olive tree, and graft them in, in the stead thereof; and these which I have plucked off I will cast into the fire and burn them, that they may not cumber the ground of my vineyard.

10 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமா-
னுடைய ஊழியக்காரன், திராட்சைத் தோட்டத்தி-
னுடைய எஜமானின் வார்த்தைக்கேற்ப, காட்டு
ஒலிவ விருட்சங்களின் கிளைகளை ஒட்டினான்.

And it came to pass that the servant of the Lord of the vineyard did according to the word of the Lord of the vineyard, and grafted in the branches of the wild olive tree.

11 திராட்சைத் தோட்டத்தின் எஜமான் அது சுற்றி-
லும் கொத்திவிடப்படவும், கிளை நறுக்கப்படவும்,
போஷிக்கப்படவும் செய்து, தன் ஊழியக்காரனை
நோக்கி: இந்த விருட்சத்தை நான் இழந்துவிடுவே-
னோ, என்று நான் சஞ்சலப்படுகிறபடியால், அதனு-
டைய வேர்கள் அழியக்கூடாதென்று, அதை எனக்-
காக பாதுகாக்கவே, நான் இந்தக் காரியத்தைச்
செய்தேன், என்றான்.

And the Lord of the vineyard caused that it should be digged about, and pruned, and nourished, saying unto his servant: It grieveth me that I should lose this tree; wherefore, that perhaps I might preserve the roots thereof that they perish not, that I might preserve them unto myself, I have done this thing.

12 ஆதலால், நீ போய், விருட்சத்தைக் காத்து, என்
வார்த்தைகளுக்கேற்ப, அதைப் போஷிப்பாயாக.

Wherefore, go thy way; watch the tree, and nourish it, according to my words.

13 இவைகளை என் திராட்சைத்தோட்டத்தின் தூ-
ரப்பகுதியிலே, என் விருப்பத்தின்படியே எங்கு
வேண்டுமானாலும் நாட்டுவேன். அது உனக்கு
அவசியமற்றதாய் இருக்கிறது. இந்த விருட்சத்தை-
யும் அதனுடைய கனியையும் இழந்துவிடுவேனோ
என்று நான் சஞ்சலப்படுகிறபடியாலே, எதிர் காலம்
வரும் முன்பே அதனுடைய கனியை எனக்காகச்
சேர்த்து வைக்கவும், விருட்சத்தின் சொந்தக் கிளை-
களை எனக்காக பாதுகாக்கவுமே, இப்படிச் செய்கி-
றேன், என்றான்.

And these will I place in the nethermost part of my vineyard, whithersoever I will, it mattereth not unto thee; and I do it that I may preserve unto myself the natural branches of the tree; and also, that I may lay up fruit thereof against the season, unto myself; for it grieveth me that I should lose this tree and the fruit thereof.

14 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜ-
மான் போய் திராட்சைத் தோட்டத்தின் தூரப் பகுதி-
களிலே, தோட்டத்து ஒலிவ மரங்களினுடைய சுபா-
வக் கிளைகளில் சிலவற்றை ஓரிடத்திலும், சில-
வற்றை வேறிடத்திலும், தன் விருப்பத்தின்படியே-
யும், மகிழ்ச்சியின்படியேயும் மறைத்து வைத்தான்.

And it came to pass that the Lord of the vineyard went his way, and hid the natural branches of the tame olive tree in the nethermost parts of the vineyard, some in one and some in another, according to his will and pleasure.

15 அந்தப்படியே, நீண்ட காலம் கழிந்தது. அப்பொ-
ழுது திராட்சைத் தோட்டத்தின் எஜமான் தன் ஊழி-
யக்காரனை நோக்கி: நாம் திராட்சைத் தோட்டத்தில்
பணிபுரிய, திராட்சைத் தோட்டத்தினுள் போவோம்
வா, என்றான்.

And it came to pass that a long time passed away, and the Lord of the vineyard said unto his servant: Come, let us go down into the vineyard, that we may labor in the vineyard.

16 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமா-
னும், ஊழியக்காரனும், திராட்சைத் தோட்டத்தி-
னுள் பணிபுரியப் போனார்கள். மேலும் அந்தப்படி-
யே, ஊழியக்காரன் தன் எஜமானை நோக்கி: இதோ,
இங்கே பாரும், இதோ அந்த விருட்சம், என்றான்.

And it came to pass that the Lord of the vineyard, and also the servant, went down into the vineyard to labor. And it came to pass that the servant said unto his master: Behold, look here; behold the tree.

17 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் பார்த்தபோது, அவன் காட்டு ஒலிவக் கிளைகள் ஒட்டப்பட்டிருந்த அந்த விருட்சத்தைக் கண்டான், அது துளிர்விட்டு கனி கொடுக்க ஆரம்பித்திருந்தது. அவன் அது நல்லதெனக் கண்டான். அதனுடைய கனி சுபாவக்கனியைப் போலவே இருந்தது.

And it came to pass that the Lord of the vineyard looked and beheld the tree in the which the wild olive branches had been grafted; and it had sprung forth and begun to bear fruit. And he beheld that it was good; and the fruit thereof was like unto the natural fruit.

18 அவன் ஊழியக்காரனை நோக்கி: இதோ, காட்டு விருட்சத்தின் கிளைகள் அவைகளுடைய வேரின் ஈரத்தை எடுத்துக்கொண்டமையால், அவைகளுடைய வேர் அதிக பெலத்தைக் கொண்டுள்ளது. வேரின் அதிக பெலத்தால், காட்டுக்கிளைகள் நாட்டுக் கனியைக்கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுதும் நாம் இக்கிளைகளை ஒட்டாமல் இருந்திருப்போமாகில், அந்த விருட்சம் அழிந்திருக்கும். இப்பொழுது இதோ அவைகளுடைய விருட்சம் கொடுத்துள்ள அதிகக் கனியை நான் சேகரிப்பேன். அதனுடைய கனியையோ எதிர் காலம் வரும் முன்னே எனக்கென்று சேகரித்து வைப்பேன், என்று சொன்னான்.

And he said unto the servant: Behold, the branches of the wild tree have taken hold of the moisture of the root thereof, that the root thereof hath brought forth much strength; and because of the much strength of the root thereof the wild branches have brought forth tame fruit. Now, if we had not grafted in these branches, the tree thereof would have perished. And now, behold, I shall lay up much fruit, which the tree thereof hath brought forth; and the fruit thereof I shall lay up against the season, unto mine own self.

19 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் ஊழியக்காரனை நோக்கி: நான் திராட்சைத் தோட்டத்தின் தூரப்பகுதிக்குச் சென்று, எதிர் காலம் வரும் முன்பே, விருட்சத்தின் சுபாவக் கிளைகளின் கனியை நான் சேகரிக்கும் பொருட்டு, அவைகளும் அதிகக் கனி கொடுக்கவில்லையா, எனக் கண்டுவரலாம், வா, என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said unto the servant: Come, let us go to the nethermost part of the vineyard, and behold if the natural branches of the tree have not brought forth much fruit also, that I may lay up of the fruit thereof against the season, unto mine own self.

20 அந்தப்படியே, அவர்கள் விருட்சத்தின் சுபாவக் கிளைகளை எஜமான் மறைத்து வைத்த இடத்திற்குச் சென்றார்கள். அவன் ஊழியக்காரனை நோக்கி: இதோ அவைகள் என்றான். பின்பு அவன் முதலானது அதிகக் கனிகளைக் கொடுத்திருந்ததைக் கண்டான். அது நல்லதெனவும் அவன் கண்டான். மேலும் அவன் ஊழியக்காரனை நோக்கி: எதிர் காலம் வரும் முன்பே அதன் கனியை நான் எனக்காகச் சேகரிக்கும்படி, அதை எடுத்துவை, என்றான். ஏனெனில் அவன் இதோ, இவ்வளவு காலம் நான் அதைப் போஷித்திருக்கிறேன். அது அதிகக் கனியைக் கொடுத்துள்ளது, என்று சொன்னான்.

And it came to pass that they went forth whither the master had hid the natural branches of the tree, and he said unto the servant: Behold these; and he beheld the first that it had brought forth much fruit; and he beheld also that it was good. And he said unto the servant: Take of the fruit thereof, and lay it up against the season, that I may preserve it unto mine own self; for behold, said he, this long time have I nourished it, and it hath brought forth much fruit.

21 அந்தப்படியே, ஊழியக்காரன் தன் எஜமானை நோக்கி: இந்த விருட்சத்தையோ, விருட்சத்தின் கிளையையோ, நீர் இங்கே வந்து நாட்டியது ஏன், ஏனெனில் இதோ, உம்முடைய திராட்சைத் தோட்டத்தில் இருக்கும் எல்லா இடத்தைக் காட்டிலும் செழுமையற்ற இடம் இது, என்றான்.

And it came to pass that the servant said unto his master: How comest thou hither to plant this tree, or this branch of the tree? For behold, it was the poorest spot in all the land of thy vineyard.

22 திராட்சைத் தோட்டத்தின் எஜமான் அவனை நோக்கி: எனக்கு ஆலோசனை சொல்லவேண்டாம். அது நிலத்தின் ஒரு செழுமையற்ற பகுதி என்பதை நான் அறிந்திருக்கிறேன். ஆகையால், இவ்வளவு நீண்ட காலம் வரைக்கும் அதைப் போஷித்திருக்கிறேன், அது அதிகக் கனியைக் கொடுத்துள்ளதை நீ காண்கிறாய், என்று நான் உன்னிடம் சொன்னேன், என்றான்.

And the Lord of the vineyard said unto him: Counsel me not; I knew that it was a poor spot of ground; wherefore, I said unto thee, I have nourished it this long time, and thou beholdest that it hath brought forth much fruit.

23 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் தன் ஊழியக்காரனை நோக்கி: இங்கே பார், இதோ விருட்சத்தின் மற்றொரு கிளையையும் நாட்டியுள்ளேன். இந்த பகுதி, முந்தினதைக் காட்டிலும் செழுமையற்றதாயிருந்தது, என நீ அறிவாய், ஆனால் இதோ அந்த விருட்சம், நான் அதை இவ்வளவு நீண்ட காலமாய் போஷித்துள்ளேன். அது அதிகக் கனியைக் கொடுத்துள்ளது. ஆதலால் அதைச் சேர்த்து வை. எதிர் காலம் வரும் முன்பே அதை எனக்கென்று நான் பாதுகாப்பேன், என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said unto his servant: Look hither; behold I have planted another branch of the tree also; and thou knowest that this spot of ground was poorer than the first. But, behold the tree. I have nourished it this long time, and it hath brought forth much fruit; therefore, gather it, and lay it up against the season, that I may preserve it unto mine own self.

24 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் மறுபடியும் தன் ஊழியக்காரனை நோக்கி: இங்கே பார், இதோ நான் நட்டுள்ள மற்றொரு கிளை இதோ, நான் அதையும் போஷித்துள்ளேன். அது கனியைக் கொடுத்துள்ளது, என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said again unto his servant: Look hither, and behold another branch also, which I have planted; behold that I have nourished it also, and it hath brought forth fruit.

25 அவர் ஊழியக்காரனை நோக்கி: இங்கே பார். இதோ கடைசி விருட்சத்தைப் பார். இதோ, நிலத்தின் நல்ல பகுதியிலே இதை நாட்டியுள்ளேன். இவ்வளவு நீண்ட காலம் வரைக்கும் இதை போஷித்துள்ளேன். விருட்சத்தின் ஒரு பகுதி மட்டும் நாட்டுக் கனியைக் கொடுத்தது. விருட்சத்தின் மற்றொரு பகுதி காட்டுக் கனியைக்கொடுத்தது. இதோ, மற்றவைகளைப் போலவே இந்த விருட்சத்தையும் நான் போஷித்துள்ளேன், என்றான்.

And he said unto the servant: Look hither and behold the last. Behold, this have I planted in a good spot of ground; and I have nourished it this long time, and only a part of the tree hath brought forth tame fruit, and the other part of the tree hath brought forth wild fruit; behold, I have nourished this tree like unto the others.

26 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் தன் ஊழியக்காரனை நோக்கி: நல்ல கனி கொடாத கிளைகளை வெட்டி அக்கினியிலே போடு, என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said unto the servant: Pluck off the branches that have not brought forth good fruit, and cast them into the fire.

27 ஆனால் இதோ, ஊழியக்காரனோ அவனை நோக்கி: எதிர் காலம் வரும் முன்பே நீர் சேகரிக்கும்படிக்கு, அது உமக்கு நல்ல கனியைக் கொடுக்கும் பொருட்டு, இன்னும் கொஞ்சக்காலம் அதைக் கிளை நறுக்கி, அதைச் சுற்றித்தோண்டிவிட்டு, அதைப் போஷிப்போம் வாரும், என்றான்.

But behold, the servant said unto him: Let us prune it, and dig about it, and nourish it a little longer, that perhaps it may bring forth good fruit unto thee, that thou canst lay it up against the season.

28 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமானும், திராட்சைத் தோட்டத்தின் எஜமானின் ஊழியக்காரனும், திராட்சைத் தோட்டத்தின் எல்லாக் கனிகளையும் போஷித்தார்கள்.

And it came to pass that the Lord of the vineyard and the servant of the Lord of the vineyard did nourish all the fruit of the vineyard.

29 அந்தப்படியே, அதிகக் காலம் கடந்துசென்ற பின்-
பு, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் தன் ஊழி-
யக்காரனை நோக்கி: இதோ காலம் சமீபமாயிருப்ப-
தாலும், முடிவு சீக்கிரமாய் வரவிருப்பதாலும், எதிர்
காலம் வரும் முன்பே எனக்கென்று கனியைச் சேக-
ரிக்கும்படி, திராட்சைத் தோட்டத்தில் மறுபடியும்
பணிபுரிய, திராட்சைத் தோட்டத்தினுள் செல்லு-
வோம் வா, என்றான்.

And it came to pass that a long time had passed away, and the Lord of the vineyard said unto his servant: Come, let us go down into the vineyard, that we may labor again in the vineyard. For behold, the time draweth near, and the end soon cometh; wherefore, I must lay up fruit against the season, unto mine own self.

30 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமா-
னும் ஊழியக்காரனும் திராட்சைத் தோட்டத்தினுள்
சென்று சுபாவக்கிளைகள் முறிக்கப்பட்டு காட்டுக்-
கிளைகள் ஒட்டப்பட்ட விருட்சத்தினிடம் வந்தார்-
கள். இதோ எல்லா வகையான கனியும் விருட்சத்-
தை மூடியிருந்தது.

And it came to pass that the Lord of the vineyard and the servant went down into the vineyard; and they came to the tree whose natural branches had been broken off, and the wild branches had been grafted in; and behold all sorts of fruit did cumber the tree.

31 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜ-
மான், கனியை அதனுடைய தொகைக்குத் தக்க-
தாய், ஒவ்வொரு வகையைச் சார்ந்ததையும் ருசி
பார்த்தான். திராட்சைத் தோட்டத்தின் எஜமான்,
இதோ, இவ்வளவு நீண்ட காலம் இந்த விருட்சத்தை
நாம் போஷித்துள்ளோம். அந்தக் கனியை நான்
எனக்கென்று எதிர் காலத்துக்காக சேகரித்துள்-
ளேன், என்றான்.

And it came to pass that the Lord of the vineyard did taste of the fruit, every sort according to its number. And the Lord of the vineyard said: Behold, this long time have we nourished this tree, and I have laid up unto myself against the season much fruit.

32 ஆனால் இதோ, இந்த முறை இது அதிகக் கனி-
யைக் கொடுத்துள்ளது. அதில் ஒன்றுகூட நல்ல-
தில்லை. இதோ, அங்கே எல்லா விதமான கெட்ட
கனியும் இருக்கிறது, நாம் அதிகமாய்ப் பிரயாசப்-
பட்டிருப்பினும், அது எனக்கு பயனற்றதாயிருக்கி-
றது. இப்பொழுது இவ்விருட்சத்தை நான் இழக்க
நேரிடுமோ, என்று நான் சஞ்சலப்படுகிறேன், என்-
றான்.

But behold, this time it hath brought forth much fruit, and there is none of it which is good. And behold, there are all kinds of bad fruit; and it profiteth me nothing, notwithstanding all our labor; and now it grieveth me that I should lose this tree.

33 திராட்சைத் தோட்டத்தின் எஜமான் ஊழியக்கா-
ரனை நோக்கி: நான் எனக்கென்று மறுபடியும் நல்ல
கனியைப் பாதுகாக்கும்படி அந்த விருட்சத்திற்கு
என்ன செய்யக்கூடுமென்றான்.

And the Lord of the vineyard said unto the servant: What shall we do unto the tree, that I may preserve again good fruit thereof unto mine own self?

34 ஊழியக்காரன் தன் எஜமானை நோக்கி: இதோ நீர்
காட்டு ஒலிவ விருட்சத்தின் கிளைகளை ஒட்ட-
வைத்ததின் நிமித்தம் அவைகள் வேர்களைப் போ-
ஷித்துள்ளன. ஆகையால் அழிந்துபோகாமல்
அவைகள் உயிரோடிருக்கின்றன. அதன் நிமித்தமே
இன்னும் அவைகள் நன்றாயிருப்பதை நீர் காண்-
கிறீர், என்றான்.

And the servant said unto his master: Behold, because thou didst graft in the branches of the wild olive tree they have nourished the roots, that they are alive and they have not perished; wherefore thou beholdest that they are yet good.

35 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜ-
மான் ஊழியக்காரனை நோக்கி, இந்த விருட்சம்
எனக்குப் பயனற்றதாயிருக்கிறது. இது எவ்வளவு
காலம் கெட்ட கனியைக்கொடுக்குமோ, அவ்வளவு
காலம் இதன் வேர்கள் எனக்குப் பயன்தரக்கூடிய-
தாயிராது, என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said unto his servant: The tree profiteth me nothing, and the roots thereof profit me nothing so long as it shall bring forth evil fruit.

36 ஆயினும், வேர்கள் நல்லவையென நான் அறி-
வேன். அவைகளை என் சொந்த நோக்கத்திற்காக-
வே பாதுகாத்துள்ளேன். அவைகளின் அதிக பெ-
லத்தின் நிமித்தம், அவைகள் இதுவரையும் காட்-
டுக்கிளைகளிலிருந்து, நல்ல கனியைக் கொடுத்-
துள்ளன.

Nevertheless, I know that the roots are good, and for mine own purpose I have preserved them; and because of their much strength they have hitherto brought forth, from the wild branches, good fruit.

37 ஆனாலும் இதோ, காட்டுக் கிளைகள் வளர்ந்து
அதனுடைய வேர்களைக் காட்டிலும் மிஞ்சியுள்-
ளன. காட்டுக்கிளைகள் அதனுடைய வேர்களைக்
காட்டிலும் படர்ந்துள்ளபடியால், அது அதிகக்
கெட்ட கனியைக் கொடுத்துள்ளது. அது இவ்வள-
வு அதிகமான கெட்ட கனியைக் கொடுத்துள்ளபடி-
யாலே, அது அழிந்துபோகத் துவங்கியுள்ளதை, நீ
காண்கிறாய். அதைப் பாதுகாக்க நாம் எதையாகி-
லும் அதற்காகச் செய்யாவிடில், அது சீக்கிரமாய் மு-
திர்ந்து அக்கினிக்குள் போடப்படும், என்றான்.

But behold, the wild branches have grown and have overrun the roots thereof; and because that the wild branches have overcome the roots thereof it hath brought forth much evil fruit; and because that it hath brought forth so much evil fruit thou beholdest that it beginneth to perish; and it will soon become ripened, that it may be cast into the fire, except we should do something for it to preserve it.

38 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜ-
மான் தன் ஊழியக்காரனை நோக்கி: சுபாவக் கி-
ளைகளும் கெட்ட கனியைக் கொடுத்திருக்கிறதா,
எனக் காண திராட்சைத் தோட்டத்தின் கடையாந்த-
ரப் பகுதிகளுக்குப் போவோம், என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said unto his servant: Let us go down into the nethermost parts of the vineyard, and behold if the natural branches have also brought forth evil fruit.

39 அந்தப்படியே, அவர்கள் திராட்சைத் தோட்டத்-
தின் கடையாந்தரப் பகுதிகளுக்குப் போனார்கள்.
அந்தப்படியே, சுபாவக் கிளைகளின் கனியும் கெட்-
டுப்போயிருப்பதை அவர்கள் கண்டார்கள். ஆம்,
முதலாவதும், இரண்டாவதும், கடைசியானதுமாக,
அவைகள் எல்லாம் கெட்டுப்போயிருந்தன.

And it came to pass that they went down into the nethermost parts of the vineyard. And it came to pass that they beheld that the fruit of the natural branches had become corrupt also; yea, the first and the second and also the last; and they had all become corrupt.

40 நல்ல கனியைக் கொடுத்த, அந்தக் கிளை உதிர்ந்-
து சாகும் அளவிற்கு, அவ்விருட்சத்தினுடைய பகு-
தியைக் கடைசிக் கிளையின் காட்டுக் கனி மேற்-
கொண்டது.

And the wild fruit of the last had overcome that part of the tree which brought forth good fruit, even that the branch had withered away and died.

41 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜ-
மான் அழுது ஊழியக்காரனை நோக்கி: என் திராட்-
சைத் தோட்டத்திற்கு இன்னும் அதிகமாய் நான்
என்ன செய்திருக்கக்கூடும்?

And it came to pass that the Lord of the vineyard wept, and said unto the servant: What could I have done more for my vineyard?

42 இதோ, இவைகளைத் தவிர, இத்திராட்சைத் தோட்-
டத்தின் அனைத்து கனிகளும் கெட்டுப்போயிருந்-
தன, என்பதை அறிந்திருக்கிறேன். இப்பொழுது
முன்பு நல்ல கனியைக் கொடுத்துவந்த இவைக-
ளும் கெட்டுப்போயின. இப்பொழுது என் திராட்-
சைத் தோட்டத்தின் அனைத்து விருட்சங்களும்
வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவதைத்
தவிர, ஒன்றுக்கும் பயன்படாததாயிருக்கின்றது.

Behold, I knew that all the fruit of the vineyard, save it were these, had become corrupted. And now these which have once brought forth good fruit have also become corrupted; and now all the trees of my vineyard are good for nothing save it be to be hewn down and cast into the fire.

43 இதோ, கிளை உலர்ந்துபோன இந்தக் கடைசி வி-
ருட்சத்தை, என் திராட்சைத் தோட்டத்தின் பூமியி-
லிருக்கும் மற்ற எல்லா பகுதிகளைக் காட்டிலும்,
எனக்கு விரும்பத்தக்கதாய் இருக்கிற நிலத்தின்,
நல்ல இடத்திலே நாட்டினேன்.

And behold this last, whose branch hath withered away, I did plant in a good spot of ground; yea, even that which was choice unto me above all other parts of the land of my vineyard.

44 நிலத்தின் இந்த இடத்திலே படர்ந்துள்ளவைகளுக்குப் பதிலாக, இந்த விருட்சத்தை நாட்ட, அவைகளை நான் வெட்டிப்போட்டதையும் கண்டாய்.

And thou beheldest that I also cut down that which cumbered this spot of ground, that I might plant this tree in the stead thereof.

45 இதோ, அதனுடைய ஒரு பகுதி நல்ல கனியையும் மற்றொரு பகுதி காட்டுக் கனியையும் கொடுத்திருப்பதை நீ கண்டாய், அவைகளின் கிளைகளை நான் முறித்து அக்கினியிலே போடாததினிமித்தம், இதோ, அவைகளின் நல்ல கிளை உலர்ந்து போகுமளவிற்கு அதை மேற்கொண்டன.

And thou beheldest that a part thereof brought forth good fruit, and a part thereof brought forth wild fruit; and because I plucked not the branches thereof and cast them into the fire, behold, they have overcome the good branch that it hath withered away.

46 இப்பொழுது, இதோ என் திராட்சைத் தோட்டத்தை நாம் நன்றாகப் பராமரித்தபோதிலும், நல்ல கனியைக் கொடாதபடி அதனுடைய விருட்சங்கள் கெட்டுப்போயின. எதிர் காலம் வரும் முன்பே, இதன் கனிகளை எனக்காகச் சேகரிக்கவே எண்ணியிருந்தேன். ஆனால் இதோ அவைகள் காட்டு ஒலிவ விருட்சம் போலாகியுள்ளன. வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவதைத் தவிர அவைகளால் எந்தப் பயனும் இல்லை. நான் அவைகளை இழந்துவிடுவேனே, என்று சஞ்சலப்படுகிறேன்.

And now, behold, notwithstanding all the care which we have taken of my vineyard, the trees thereof have become corrupted, that they bring forth no good fruit; and these I had hoped to preserve, to have laid up fruit thereof against the season, unto mine own self. But, behold, they have become like unto the wild olive tree, and they are of no worth but to be hewn down and cast into the fire; and it grieveth me that I should lose them.

47 என் திராட்சைத் தோட்டத்திலே இன்னும் அதிகமாய் நான் என்ன செய்திருக்கக்கூடும்? அதைப் போஷிக்காதபடி என் கரத்தைத் தாமதித்தேனோ? அப்படியல்லவே, அதைப் போஷித்து அதைச் சுற்றியும் கொத்திவிட்டு, அதன் கிளை நறுக்கி அதற்கு உரமிட்டுள்ளேன். கிட்டத்தட்ட நாள் முழுவதும் என் கரத்தை நீட்டியிருக்கிறேன். முடிவு சீக்கிரமாய் வரவிருக்கிறது. நான் என் திராட்சைத் தோட்டத்திலிருக்கும் எல்லா விருட்சங்களையும் வெட்டி, அவைகள் எரிக்கப்படும்படி, அவைகளை அக்கினிக்குள் போடவேண்டுமே, என்று சஞ்சலப்படுகிறேன். என் திராட்சைத் தோட்டத்தை கெடச்செய்தது யார்? என்றான்.

But what could I have done more in my vineyard? Have I slackened mine hand, that I have not nourished it? Nay, I have nourished it, and I have digged about it, and I have pruned it, and I have dunged it; and I have stretched forth mine hand almost all the day long, and the end draweth nigh. And it grieveth me that I should hew down all the trees of my vineyard, and cast them into the fire that they should be burned. Who is it that has corrupted my vineyard?

48 அந்தப்படியே, ஊழியக்காரன் தன் எஜமானை நோக்கி: உம்முடைய திராட்சைத் தோட்டத்தின் அபார வளர்ச்சியினாலல்லவா? கிளைகள் நல்ல வேர்களை மேற்கொண்டதினாலல்லவா? கிளைகள் அவைகளுடைய வேர்களை மேற்கொண்டு, இதோ, தங்களுக்கென்று பெலத்தை எடுத்துக் கொண்டமையால், வேர்களின் பெலத்தைக் காட்டிலும் வேகமாய் அவைகள் வளர்ந்தன. இதோ, உம்முடைய திராட்சைத் தோட்டத்தின் விருட்சங்கள் கெடக் காரணம் இதுவல்லவா, என்று நான் சொல்கிறேன், என்றான்.

And it came to pass that the servant said unto his master: Is it not the loftiness of thy vineyard—have not the branches thereof overcome the roots which are good? And because the branches have overcome the roots thereof, behold they grew faster than the strength of the roots, taking strength unto themselves. Behold, I say, is not this the cause that the trees of thy vineyard have become corrupted?

49 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜ-
மான் தன் ஊழியக்காரனை நோக்கி: நான் எல்லா-
வற்றையும் செய்தபடியாலே, என் திராட்சைத்
தோட்டத்தின் நிலத்தில், திராட்சைத் தோட்டத்தி-
லுள்ள விருட்சங்கள் படராமலிருக்கும் பொருட்டு,
நாம் போய், அவைகளை வெட்டி அக்கினிக்குள்
போடுவோம் வா. என் திராட்சைத் தோட்டத்திற்காக
இன்னும் அதிகமாய் நான் என்ன செய்திருக்கக்கூ-
டும்? என்றான்.

And it came to pass that the Lord of the vineyard said unto the servant: Let us go to and hew down the trees of the vineyard and cast them into the fire, that they shall not cumber the ground of my vineyard, for I have done all. What could I have done more for my vineyard?

50 ஆனால் இதோ ஊழியக்காரன் திராட்சைத் தோட்-
டத்தின் எஜமானை நோக்கி: இன்னும் சிறிது காலம்
அதைவிட்டு வையும், என்றான்.

But, behold, the servant said unto the Lord of the vineyard: Spare it a little longer.

51 எஜமான்: ஆம், என் திராட்சைத் தோட்டத்தின் வி-
ருட்சங்களை இழந்துபோவேன், என்று நான் சஞ்ச-
லப்படுகிறபடியால், அதை இன்னும் சிறிது காலம்
விட்டு வைப்பேன் என்றான்.

And the Lord said: Yea, I will spare it a little longer, for it grieveth me that I should lose the trees of my vineyard.

52 ஆகையால், என் திராட்சைத் தோட்டத்தின் கடை-
யாந்தரப் பகுதிகளிலே நான் நட்டிருக்கிற இந்தக் கி-
ளைகளை எடுத்து, அவைகளை அவைகள்
இருந்த விருட்சத்திலேயே ஒட்டுவோம்; மேலும் மி-
குந்த கசப்பான கனியையுடைய கிளைகளை, வி-
ருட்சத்திலிருந்து முறித்து, அதற்குப் பதிலாக வி-
ருட்சத்தின் சுபாவக் கிளைகளை ஒட்டுவோம்.

Wherefore, let us take of the branches of these which I have planted in the nethermost parts of my vineyard, and let us graft them into the tree from whence they came; and let us pluck from the tree those branches whose fruit is most bitter, and graft in the natural branches of the tree in the stead thereof.

53 விருட்சம் அழியக்கூடாது என்பதற்காகவும், ஒரு-
வேளை என் சொந்த நோக்கத்திற்காக, அதனுடைய
வேர்களை நானே பாதுகாக்கும்படிக்கும், இப்படிச்
செய்வேன்.

And this will I do that the tree may not perish, that, perhaps, I may preserve unto myself the roots thereof for mine own purpose.

54 இதோ, என் சித்தத்திற்கேற்ப எவ்விடத்திலேயும்
நான் நட்ட, விருட்சத்தின் சுபாவக் கிளைகளின்
வேர்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றன. ஆகை-
யால், என் சொந்த நோக்கத்திற்காக, அதையும் பா-
துகாப்பதற்காக இவ்விருட்சத்தின் கிளைகளை
எடுத்து, அவைகளுடன் இவைகளை ஒட்டவைப்-
பேன். ஆம், அவைகளின் தாய் விருட்சத்தின் கி-
ளைகளை அவைகளுடன் ஒட்டுவதின் மூலம்
எனக்கென்று வேர்களைப் பாதுகாப்பேன். அவை-
கள் போதுமான பெலத்தைப் பெறுகிறபோது
எனக்கு அவைகள் நல்ல கனியைக் கொடுக்கலாம்.
என் திராட்சைத் தோட்டத்தின் கனியினுடைய மகி-
மையை அப்பொழுதாவது நான் பெற்றிருப்பேன்,
என்றான்.

And, behold, the roots of the natural branches of the tree which I planted whithersoever I would are yet alive; wherefore, that I may preserve them also for mine own purpose, I will take of the branches of this tree, and I will graft them in unto them. Yea, I will graft in unto them the branches of their mother tree, that I may preserve the roots also unto mine own self, that when they shall be sufficiently strong perhaps they may bring forth good fruit unto me, and I may yet have glory in the fruit of my vineyard.

55 அந்தப்படியே, அவர்கள் காட்டு விருட்சமாக மா-
றியிருந்த சுபாவ விருட்சத்திலிருந்து எடுத்து, காட்-
டு விருட்சமாய் மாறின சுபாவ விருட்சங்களுடன்
ஒட்டவைத்தார்கள்.

And it came to pass that they took from the natural tree which had become wild, and grafted in unto the natural trees, which also had become wild.

56 காட்டு விருட்சமாக மாறிய சுபாவ விருட்சங்களி-
லிருந்து எடுத்து, அவைகளின் தாய் விருட்சத்தினு-
டன் ஒட்டவைத்தார்கள்.

And they also took of the natural trees which had become wild, and grafted into their mother tree.

57 திராட்சைத் தோட்டத்தின் எஜமான் ஊழியக்காரனை நோக்கி: மிகவும் கசப்பான கனியையுடையதாயிருந்தாலொழிய, விருட்சங்களிலிருந்து காட்டுக் கிளைகளை முறித்துப்போடாமல், அவைகளுடன் நான் சொன்னவற்றின் பிரகாரமே ஒட்டவைப்பாயாக.

And the Lord of the vineyard said unto the servant: Pluck not the wild branches from the trees, save it be those which are most bitter; and in them ye shall graft according to that which I have said.

58 திராட்சைத் தோட்டத்தின் விருட்சங்களை நாம் மறுபடியும் போஷித்து, அவற்றின் கிளைகளைச் சீர்ப்படுத்துவோம். விருட்சங்களிலிருந்து முற்றிப்போய் அழிந்துபோகும் கிளைகளை எடுத்து, அக்கினிக்குள் போடுவோம்.

And we will nourish again the trees of the vineyard, and we will trim up the branches thereof; and we will pluck from the trees those branches which are ripened, that must perish, and cast them into the fire.

59 அவைகளின் வேர்கள் தங்களின் நன்மையினிமித்தம் பெலன் கொள்ளவும் கிளைகளின் மாற்றத்தால், தீமையை நன்மை வெல்லட்டும் என்பதற்குமே, இதைச் செய்கிறேன்.

And this I do that, perhaps, the roots thereof may take strength because of their goodness; and because of the change of the branches, that the good may overcome the evil.

60 சுபாவக் கிளைகளையும், அதனுடைய வேர்களையும் நான் பாதுகாத்ததின் நிமித்தமும், அவைகளின் தாய் விருட்சத்தினுடன் மீண்டும் சுபாவக் கிளைகளை ஒட்டவைத்ததின் நிமித்தமும், அவைகளின் தாய் விருட்சங்களின் வேர்களைப் பாதுகாத்ததின் நிமித்தமும், ஒருவேளை, என் திராட்சைத் தோட்டத்தின் விருட்சங்கள் மறுபடியும் நன்மையான கனியைக் கொடுக்கக்கூடும். அதனால் என் திராட்சைத் தோட்டத்தின் கனியிலே நான் மறுபடியும் மகிழ்ந்து முதற்கனியினுடைய வேர்களையும் கிளைகளையும் பாதுகாத்தேன், என்று நான் மிகவும் களிகூருவேன்.

And because that I have preserved the natural branches and the roots thereof, and that I have grafted in the natural branches again into their mother tree, and have preserved the roots of their mother tree, that, perhaps, the trees of my vineyard may bring forth again good fruit; and that I may have joy again in the fruit of my vineyard, and, perhaps, that I may rejoice exceedingly that I have preserved the roots and the branches of the first fruit—

61 ஆகையால், மற்ற எல்லா கனியையும் விட, மிகவும் விலைமதிப்பற்றதும், நல்லதுமான சுபாவக் கனியை மறுபடியும் கொடுக்கும்படிக்கு, நாம் வழியை ஆயத்தப்படுத்தவும், திராட்சைத் தோட்டத்திலே நாம் ஊக்கத்தோடு கருத்தாய்ப் பணிபுரியவும், போய் வேலையாட்களை அழைத்து வா.

Wherefore, go to, and call servants, that we may labor diligently with our might in the vineyard, that we may prepare the way, that I may bring forth again the natural fruit, which natural fruit is good and the most precious above all other fruit.

62 ஆகையால் இதோ, முடிவு சமீபமாயிருப்பதால், நாம் சென்று இந்தக் கடைசி முறையாக நம்முடைய ஊக்கத்தோடு கருத்தாய்ப் பணிசெய்வோம். என் திராட்சைத் தோட்டத்தை, நான் கிளை நறுக்குவது இதுவே கடைசி முறை.

Wherefore, let us go to and labor with our might this last time, for behold the end draweth nigh, and this is for the last time that I shall prune my vineyard.

63 கிளைகளை ஒட்டுங்கள், பிந்தினவைகள் முந்தினவைகளாகவும், முந்தினவைகள் பிந்தினவைகளாகவும் இருக்க, பிந்தினவைகளிலிருந்து ஆரம்பியுங்கள், முதிர்ந்ததையும் மற்றும் இளசானதையும், முந்தினவையையும், பிந்தினவையையும், அவைகளையெல்லாம் மறுபடியும் கடைசி முறையாக போஷிக்கப்படும்படிக்கு சுற்றிக் கொத்திவிடுங்கள்.

Graft in the branches; begin at the last that they may be first, and that the first may be last, and dig about the trees, both old and young, the first and the last; and the last and the first, that all may be nourished once again for the last time.

64 ஆகையால், முடிவு சமீபமானதாலே, இறுதியாக ஒரு முறை, அவைகளைச் சுற்றிக் கொத்திவிட்டு, கிளை நறுக்கி அவைகளுக்கு எரு இடுவாயாக. கடைசியாய் ஒட்டவைத்த கிளைகள் வளர்ந்து, சுபாவக் கனியைக் கொடுக்குமேயானால், அவைகள் வளரும்படி, வழியை ஆயத்தப்படுத்துவாயாக.

Wherefore, dig about them, and prune them, and dung them once more, for the last time, for the end draweth nigh. And if it be so that these last grafts shall grow, and bring forth the natural fruit, then shall ye prepare the way for them, that they may grow.

65 அவைகள் வளரத் துவங்கும்போது, கசப்பான கனியைக் கொண்டுவருகிற கிளைகளின் நல்ல பெலம் மற்றும் அளவையும் பொறுத்தவாறு நீக்கிப்போடுவாயாக. அவைகளிலுள்ள கெட்ட கிளைகளை ஒரேசமயத்தில் நீக்கிப்போடவேண்டாம். அப்படிச் செய்தால் அவைகளுடைய வேர்கள் ஒட்டுதலுக்குக் கடினமானதாய் இருந்து, அவைகளுடைய ஒட்டுதல் அழிந்துபோய், என் திராட்சைத் தோட்டத்தை நான் இழந்துபோவேன்.

And as they begin to grow ye shall clear away the branches which bring forth bitter fruit, according to the strength of the good and the size thereof; and ye shall not clear away the bad thereof all at once, lest the roots thereof should be too strong for the graft, and the graft thereof shall perish, and I lose the trees of my vineyard.

66 என் திராட்சைத் தோட்டத்திலுள்ள விருட்சங்களை இழந்துவிடுவேனோ, என்று சஞ்சலப்படுகிறேன்; நல்ல விருட்சம் கெட்ட விருட்சத்தை மேற்கொள்ளும்வரைக்கும், நல்ல விருட்சத்தின் வேரும், மேற்பகுதியும் ஒரே பெலனாயிருக்கும்படி, அவைகள் வளர வளரவே, கெட்ட விருட்சங்களை நீக்கிப்போட்டு, இனியும் என் திராட்சைத் தோட்டத்தின் நிலத்திலே அவைகள் படராதபடிக்கு வெட்டி அக்கினிக்குள் போடுவாயாக; இவ்விதமாய் கெட்ட விருட்சத்தை என் திராட்சைத் தோட்டத்திலிருந்து அழித்துப்போடுவேன்.

For it grieveth me that I should lose the trees of my vineyard; wherefore ye shall clear away the bad according as the good shall grow, that the root and the top may be equal in strength, until the good shall overcome the bad, and the bad be hewn down and cast into the fire, that they cumber not the ground of my vineyard; and thus will I sweep away the bad out of my vineyard.

67 சுபாவ விருட்சத்தின் கிளைகளை மீண்டும் சுபாவ விருட்சத்திலே ஒட்டுவேன்;

And the branches of the natural tree will I graft in again into the natural tree;

68 நான் சுபாவ விருட்சத்தின் கிளைகளை விருட்சத்தின் சுபாவ கிளைகளுடன் ஒட்டுவேன். இப்படியாக அவைகள் சுபாவக் கனியைக் கொண்டுவரும்படிக்கும், அவை ஒன்றாய் இருக்கும்பொருட்டும், அவைகளை மறுபடியும் சேர்த்து வைப்பேன்.

And the branches of the natural tree will I graft into the natural branches of the tree; and thus will I bring them together again, that they shall bring forth the natural fruit, and they shall be one.

69 இதோ என் திராட்சைத் தோட்டத்தை இந்த முறை மாத்திரமே கிளை நறுக்குவதால், ஆம், கெட்ட கனிகள் என் திராட்சைத் தோட்டத்தின் எல்லா நிலத்திலிருந்தும் வெளியே தூர எறியப்படும், என்றான்.

And the bad shall be cast away, yea, even out of all the land of my vineyard; for behold, only this once will I prune my vineyard.

70 அந்தப்படியே, திராட்சைத் தோட்டத்தின் எஜமான் தன் ஊழியக்காரனை அனுப்பினான்; ஊழியக்காரன் போய், எஜமான் தனக்குக் கட்டளையிட்டபடியே மற்ற ஊழியக்காரர்களை அழைத்து வந்தான்; அவர்களோ கொஞ்சம் பேராய் இருந்தார்கள்.

And it came to pass that the Lord of the vineyard sent his servant; and the servant went and did as the Lord had commanded him, and brought other servants; and they were few.

71 திராட்சைத் தோட்டத்தின் எஜமான் அவர்களை
நோக்கி: போய், திராட்சைத் தோட்டத்திலே உங்கள்
பலத்துடன் பணிபுரியுங்கள். இதோ முடிவு சமீபமா-
யிருப்பதாலும், காலம் சீக்கிரமாய் வரவிருப்பதா-
லும், என் திராட்சைத் தோட்டத்தைப் போஷிப்பது
இதுவே கடைசிமுறை என்பதினாலும், என்னோடு-
கூட சேர்ந்து நீங்களும் ஊக்கமாய் பணிபுரிந்தால்,
வரவிருக்கிற காலத்திற்குள்ளாக, எனக்காகச் சேக-
ரிக்கும் கனியினிமித்தம் மகிழ்ச்சி கொள்வீர்கள்,
என்றான்.

And the Lord of the vineyard said unto them: Go to, and labor in the vineyard, with your might. For behold, this is the last time that I shall nourish my vineyard; for the end is nigh at hand, and the season speedily cometh; and if ye labor with your might with me ye shall have joy in the fruit which I shall lay up unto myself against the time which will soon come.

72 அந்தப்படியே, ஊழியக்காரர்கள் சென்று, தங்கள்
பலத்தோடு பணிபுரிந்தார்கள். திராட்சைத் தோட்-
டத்தின் எஜமானும் அவர்களுடனே சேர்ந்து பணி-
புரிந்தான். அவர்கள் சகலவற்றிலும் திராட்சைத்
தோட்டத்தின் எஜமானுடைய கட்டளைகளுக்குக்
கீழ்ப்படிந்தார்கள்.

And it came to pass that the servants did go and labor with their mights; and the Lord of the vineyard labored also with them; and they did obey the commandments of the Lord of the vineyard in all things.

73 திராட்சைத் தோட்டத்திலே மீண்டும் சுபாவக்கனி
வந்தது; மேலும் சுபாவக்கிளைகள் வளர்ந்து அதி-
கமாய் விருத்தியடையத் துவங்கின; காட்டுக்கி-
ளைகள் பிடுங்கப்பட்டு எறியப்படலாயின; அவர்-
கள் அதனுடைய வேரும், மேற்பகுதியும் அதன் பெ-
லனுக்குத் தக்கதாய் இருக்கும்படி செய்தார்கள்.

And there began to be the natural fruit again in the vineyard; and the natural branches began to grow and thrive exceedingly; and the wild branches began to be plucked off and to be cast away; and they did keep the root and the top thereof equal, according to the strength thereof.

74 இவ்விதமாய் திராட்சைத் தோட்டத்தைவிட்டு
கெட்டவை எறியப்படும் வரைக்கும், திராட்சைத்
தோட்டத்தின் எஜமானுடைய கட்டளைகளின்படி-
யே சகல கருத்தோடும் அவர்கள் பணிபுரிந்தார்கள்.
மறுபடியும் சுபாவக் கனியாகும்படிக்கு விருட்சங்க-
ளைத் தனக்கென்று எஜமான் பாதுகாத்துக்-
கொண்டான்; அவைகள் ஒரே சரீரம் போலானது;
கனிகள் ஒரே மாதிரியாயிருந்தன; ஆதியிலிருந்தே
தனக்கு விலையேறப்பெற்றதாயிருந்த சுபாவக்
கனியைத், தனக்கென்று திராட்சைத் தோட்டத்தின்
எஜமான் பாதுகாத்துக் கொண்டான்.

And thus they labored, with all diligence, according to the commandments of the Lord of the vineyard, even until the bad had been cast away out of the vineyard, and the Lord had preserved unto himself that the trees had become again the natural fruit; and they became like unto one body; and the fruits were equal; and the Lord of the vineyard had preserved unto himself the natural fruit, which was most precious unto him from the beginning.

75 அந்தப்படியே, தன் கனி நல்லதென்றும், தன் திராட்சைத் தோட்டம் இனி கெட்டதாய் இருக்கவில்லையெனவும், திராட்சைத் தோட்டத்தின் எஜமான் கண்டபோது, அவன் தன் ஊழியக்காரர்களை அழைத்து அவர்களிடத்திலே: இதோ, இந்தக் கடைசிமுறையாக என் திராட்சைத் தோட்டத்தை நாம் போஷித்தோம். நான் என் சித்தத்திற்கேற்ப செய்துள்ளேன், என நீங்கள் காண்கிறீர்கள். முதலிலிருந்ததைப்போலவே நல்ல சுபாவக் கனியைப் பாதுகாத்து வந்தேன், என் திராட்சைத் தோட்டத்தில் என்னோடுகூட கருத்தாய்ப் பணிபுரிந்து, என் கட்டளைகளைக் கைக்கொண்டு என் திராட்சைத் தோட்டம் கெட்டுப்போகாதபடி எனக்காக மறுபடியும் சுபாவக் கனியைக் கொண்டுவந்ததினிமித்தம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருக்கின்றீர்கள். கெட்டவை தூர எறியப்பட்டது. இதோ, என் திராட்சைத் தோட்டத்திலுள்ள கனியின் நிமித்தம் என்னோடுகூட மகிழ்ச்சியாய் இருப்பீர்களாக, என்றான்.

And it came to pass that when the Lord of the vineyard saw that his fruit was good, and that his vineyard was no more corrupt, he called up his servants, and said unto them: Behold, for this last time have we nourished my vineyard; and thou beholdest that I have done according to my will; and I have preserved the natural fruit, that it is good, even like as it was in the beginning. And blessed art thou; for because ye have been diligent in laboring with me in my vineyard, and have kept my commandments, and have brought unto me again the natural fruit, that my vineyard is no more corrupted, and the bad is cast away, behold ye shall have joy with me because of the fruit of my vineyard.

76 ஏனெனில் இதோ, சீக்கிரமாய் வரவிருக்கிற எதிர் காலத்திற்குள்ளாக, திராட்சைத் தோட்டத்தின் கனியை எனக்கென்று நெடு நாட்களுக்காய் சேர்த்துவைப்பேன். கடைசி முறையாக என் திராட்சைத் தோட்டத்தைப் போஷித்து, கிளை நறுக்கி, அதைச் சுற்றி கொத்தி, அதற்கு உரமிட்டேன். ஆகையால் நான் உரைத்தபடியே, நெடுநாட்களாய் எனக்கென்று கனியைச் சேர்த்துவைப்பேன்.

For behold, for a long time will I lay up of the fruit of my vineyard unto mine own self against the season, which speedily cometh; and for the last time have I nourished my vineyard, and pruned it, and dug about it, and dunged it; wherefore I will lay up unto mine own self of the fruit, for a long time, according to that which I have spoken.

77 என் திராட்சைத் தோட்டத்தினுள் மறுபடியும் கெட்ட கனி வரும் காலம் வருகையில், நல்லவைகளையும் கெட்டவைகளையும் ஒன்றாய்ச் சேர்க்கப்படும்படி செய்வேன். நல்லவைகளை எனக்கென்று பாதுகாத்து, கெட்டவைகளை அவைகளின் இடத்திற்கே தூர எறிவேன். பின்பு காலமும் முடிவும் வரும். நான் என் திராட்சைத் தோட்டம் அக்கினியால் எரிக்கப்படும்படிச் செய்வேன்.

And when the time cometh that evil fruit shall again come into my vineyard, then will I cause the good and the bad to be gathered; and the good will I preserve unto myself, and the bad will I cast away into its own place. And then cometh the season and the end; and my vineyard will I cause to be burned with fire.

## யாக்கோபு 6

1 இப்பொழுது, இதோ, என் சகோதரரே, நான் தீர்க்கத-
ரிசனமுரைப்பேன், என்று உங்களுக்குச் சொன்ன-
படியே, தீர்க்கதரிசியாகிய சீனஸ் இஸ்ரவேலின்
வீட்டாரைக் குறித்து, அவர்களை ஒரு தோட்டத்து
ஒலிவ விருட்சத்திற்கு உவமையாக்கிப் பேசியவை-
கள், நிச்சயமாய் சம்பவிக்கும், என்பதே என் தீர்க்க-
தரிசனமாய் இருக்கிறது.
2 எந்த நாளில் அவர் ஜனத்தை மீட்டுக்கொள்ள தம்
கரத்தை மீண்டும் இரண்டாம் விசை நீட்டுகிறாரோ
அந்த நாள் தான், ஆம், கர்த்தருடைய வேலையாட்-
கள் அவருடைய வல்லமையில் அவரின் திராட்-
சைத் தோட்டத்தை போஷித்து கிளை நறுக்கப்
போகும் கடைசி காலமாய் இருக்கும், அதற்குப் பின்-
பு முடிவு சீக்கிரமாய் வரும்.
3 அவருடைய திராட்சைத் தோட்டத்திலே கருத்-
தாய்ப் பணிபுரிந்தவர்கள், எவ்வளவு பாக்கிய-
வான்களாயிருக்கிறார்கள்; தங்களின் சொந்த
இடத்திற்குள் தள்ளப்படுபவர்கள், எவ்வளவு
சபிக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள்! உலகம் அக்-
கினியால் சுட்டெரிக்கப்படும்.
4 நம்முடைய தேவன், வேரும் கிளைகளுமான,
இஸ்ரவேல் வீட்டாரை நினைவுகூர்வதினிமித்தம்,
நம்மிடத்தில் எவ்வளவு இரக்கமுள்ளவராய் இருக்-
கிறார். அவர் தன் கரங்களை நாள் முழுவதும்
அவர்களுக்கு நீட்டுகிறார், அவர்கள் வணங்காக்
கழுத்துடைய, தர்க்கம்பண்ணுகிற ஜனங்களாயி-
ருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய இருதயங்க-
ளை கடினப்படுத்தாத யாவரும் தேவனுடைய ராஜ்-
யத்தில் இரட்சிக்கப்படுவார்கள்.
5 ஆகையால் என் அன்புச் சகோதரரே, நீங்கள்
மனந்திரும்பி இருதயத்தின் முழுநோக்கத்தோடு
வந்து, தேவன் உங்களிடத்தில் இசைவாயிருப்ப-
தைப்போல, அவரிடத்தில் இசைந்திருங்கள், என்று
தெளிந்த புத்தியின் வார்த்தைகளினால் உங்களுக்-
கு புத்திசொல்லுகிறேன். பகலின் வெளிச்சத்திலே
அவருடைய இரக்கத்தின் கரம் உங்களை நோக்கி
நீட்டியிருக்கையில், உங்கள் இருதயங்களைக் கடி-
னப்படுத்தாதேயுங்கள்.
6 ஆம், இன்றைக்கு அவருடைய சத்தத்தை நீங்கள்
கேட்பீர்களாகில், உங்கள் இருதயங்களைக் கடினப்-
படுத்தாதேயுங்கள், ஏனெனில், நீங்கள் ஏன் மரித்-
துப்போகவேண்டும்
7 இதோ, நாள் முழுவதும் தேவனுடைய நல்ல
வார்த்தையால் நீங்கள் போஷிக்கப்பட்ட பின்ன-
ரும், வெட்டப்பட்டு அக்கினியிலே எறியப்படும்படி-
யாக நீங்கள் கெட்டகனியைக் கொடுப்பீர்களா?

## Jacob 6

And now, behold, my brethren, as I said unto you that I would prophesy, behold, this is my prophecy—that the things which this prophet Zenos spake, concerning the house of Israel, in the which he likened them unto a tame olive tree, must surely come to pass.

And the day that he shall set his hand again the second time to recover his people, is the day, yea, even the last time, that the servants of the Lord shall go forth in his power, to nourish and prune his vineyard; and after that the end soon cometh.

And how blessed are they who have labored diligently in his vineyard; and how cursed are they who shall be cast out into their own place! And the world shall be burned with fire.

And how merciful is our God unto us, for he remembereth the house of Israel, both roots and branches; and he stretches forth his hands unto them all the day long; and they are a stiffnecked and a gainsaying people; but as many as will not harden their hearts shall be saved in the kingdom of God.

Wherefore, my beloved brethren, I beseech of you in words of soberness that ye would repent, and come with full purpose of heart, and cleave unto God as he cleaveth unto you. And while his arm of mercy is extended towards you in the light of the day, harden not your hearts.

Yea, today, if ye will hear his voice, harden not your hearts; for why will ye die?

For behold, after ye have been nourished by the good word of God all the day long, will ye bring forth evil fruit, that ye must be hewn down and cast into the fire?

8 இதோ, இந்த வார்த்தைகளை புறக்கணிப்பீர்களோ? தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை புறக்கணிப்பீர்களோ? கிறிஸ்துவைக் குறித்து அநேகர் பேசின பின்பும் அனைத்து வார்த்தைகளையும் நீங்கள் புறக்கணித்து, கிறிஸ்துவின் நல்ல வார்த்தையையும், தேவனுடைய வல்லமையையும் பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும் மறுத்து, பரிசுத்த ஆவியை அவித்துப் போட்டு, உங்களுக்காக இடப்பட்ட மீட்பின் மகத்துவமான திட்டத்தை நிந்திப்பீர்களோ?

9 இந்தக் காரியங்களை நீங்கள் செய்வீர்களானால், கிறிஸ்துவில் இருக்கின்ற, மீட்பு மற்றும் உயிர்த்தெழுதலின் வல்லமை, உங்களை தேவனுடைய நியாயவிசாரணைக்கூண்டுக்கு முன்பாக, வெட்கத்தோடும் பயங்கரமான பாவ உணர்ச்சியோடும் கொண்டுவரும், என்பதை அறியீர்களா?

10 நீதி மறுக்கப்பட முடியாததின் நிமித்தம், நீதியின் வல்லமையின்படியே, நீங்கள் அந்த அக்கினியும் கந்தகமுமான கடலினுள் செல்லவேண்டியதாயிருக்கும். அதன் ஜூவாலை அவிக்க முடியாததாயும், அவைகளுடைய புகை மேலே என்றென்றைக்குமாய் எழுகிறதாயும் இருக்கிறது. அந்த அக்கினியும் கந்தகமுமான கடல்தான் முடிவற்ற வேதனை.

11 அப்படியென்றால், என் அன்பான சகோதரரே, மனந்திரும்பி இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசித்து, நீங்கள் நித்திய ஜீவனை பெறும்வரைக்கும், இடுக்கமான வழியிலே தொடருங்கள்.

12 ஞானமுள்ளவராயிருங்கள். இதற்கு அதிகமாக நான் என்ன சொல்ல முடியும்?

13 இறுதியாக, தேவனுடைய இன்பமான நியாய விசாரணைக் கூண்டுக்கு முன்பாக உங்களை நான் சந்திக்கும்வரை, உங்களிடத்திலிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன். அந்த நியாய விசாரணைக்கூண்டானது துன்மார்க்கரை அஞ்சத்தக்க திகிலாலும், பயத்தாலும் அடிக்கும். ஆமென்.

Behold, will ye reject these words? Will ye reject the words of the prophets; and will ye reject all the words which have been spoken concerning Christ, after so many have spoken concerning him; and deny the good word of Christ, and the power of God, and the gift of the Holy Ghost, and quench the Holy Spirit, and make a mock of the great plan of redemption, which hath been laid for you?

Know ye not that if ye will do these things, that the power of the redemption and the resurrection, which is in Christ, will bring you to stand with shame and awful guilt before the bar of God?

And according to the power of justice, for justice cannot be denied, ye must go away into that lake of fire and brimstone, whose flames are unquenchable, and whose smoke ascendeth up forever and ever, which lake of fire and brimstone is endless torment.

O then, my beloved brethren, repent ye, and enter in at the strait gate, and continue in the way which is narrow, until ye shall obtain eternal life.

O be wise; what can I say more?

Finally, I bid you farewell, until I shall meet you before the pleasing bar of God, which bar striketh the wicked with awful dread and fear. Amen.

# யாக்கோபு 7

1 இப்பொழுதும், அந்தப்படியே, சில வருஷங்கள்
கடந்துபோன பின்பு, சேரெம் என்ற பெயருடைய
ஒரு மனுஷன் நேபியின் ஜனங்கள் மத்தியில் வந்-
தான்.

2 அந்தப்படியே, அவன் ஜனங்கள் மத்தியில் பிர-
சங்கிக்கத் தொடங்கி, கிறிஸ்து என்று எவரும்
இருக்க முடியாது என்று அவர்களிடத்தில் அறிவிக்-
கலானான். ஜனங்களிடத்தில் இச்சகமான அநேக
காரியங்களை அவன் பிரசங்கித்தான். கிறிஸ்து-
வின் உபதேசங்களைக் கவிழ்த்துப்போடவே
அவன் அப்படிச் செய்தான்.

3 அவன், ஜனங்களின் இருதயங்களைப் புறம்பாய்
வழிநடத்திப்போகும்படிக்கு, கருத்தாய் பணிபுரிந்த-
தினிமித்தம், பல இருதயங்களை வழிநடத்திக்
கொண்டுபோனான். வரப்போகிற கிறிஸ்துவிலே,
யாக்கோபாகிய நான் விசுவாசம் வைத்திருந்தேன்,
என்பதை அவன் அறிந்து, என்னிடம் வர பல
வாய்ப்புகளை நாடினான்.

4 அவன் கல்விமானாயிருந்தபடியாலே, ஜனங்க-
ளுடைய மொழியை பூரணமாய் அறிந்திருந்தான்;
ஆதலால் பிசாசின் வல்லமையினால் அவன்
அதிக இச்சகச் சொற்களையும், பேச்சிலே மிக்க ஆற்-
றலையும் அவனால் பிரயோகிக்க முடிந்தது.

5 நான் மெய்யாகவே தூதர்களை கண்டிருக்கிறப-
டியாலும், அவர்கள் எனக்குப் பணிவிடை செய்தி-
ருக்கிறபடியாலும், அநேக வெளிப்படுத்தல்கள்
மட்டுமின்றி, இந்தக் காரியங்களைக் குறித்து,
அநேக காரியங்களையும் நான் கண்டிருந்தாலும்,
விசுவாசத்திலிருந்து என்னை அசைத்துப்போட
அவன் நம்பிக்கை கொண்டிருந்தான். அவ்வப்போ-
து கர்த்தருடைய சத்தம் என்னுடன் வார்த்தையி-
னாலே பேசியிருப்பதையும் கேட்டிருக்கிறேன்.
ஆகையால் என்னை அசைக்க முடியவில்லை.

6 அந்தப்படியே, அவன் என்னிடத்தில் வந்து இந்-
தப் பிரகாரமாய்ப் பேசினான்: சகோதரன் யாக்கோ-
பே, சுவிசேஷம் என்று உங்களால் அழைக்கப்படு-
கிற கிறிஸ்துவின் உபதேசத்தைக் குறித்து நீ அதிக-
மாய்ப் பிரயாணம் செய்து, பிரசங்கிக்கிறாய் என்று,
நான் கேட்டும், அறிந்துமிருக்கிறபடியால், உன்னி-
டத்தில் நான் பேச அதிக வாய்ப்புகளை நாடியிருக்-
கிறேன்.

# Jacob 7

And now it came to pass after some years had passed away, there came a man among the people of Nephi, whose name was Sherem.

And it came to pass that he began to preach among the people, and to declare unto them that there should be no Christ. And he preached many things which were flattering unto the people; and this he did that he might overthrow the doctrine of Christ.

And he labored diligently that he might lead away the hearts of the people, insomuch that he did lead away many hearts; and he knowing that I, Jacob, had faith in Christ who should come, he sought much opportunity that he might come unto me.

And he was learned, that he had a perfect knowledge of the language of the people; wherefore, he could use much flattery, and much power of speech, according to the power of the devil.

And he had hope to shake me from the faith, notwithstanding the many revelations and the many things which I had seen concerning these things; for I truly had seen angels, and they had ministered unto me. And also, I had heard the voice of the Lord speaking unto me in very word, from time to time; wherefore, I could not be shaken.

And it came to pass that he came unto me, and on this wise did he speak unto me, saying: Brother Jacob, I have sought much opportunity that I might speak unto you; for I have heard and also know that thou goest about much, preaching that which ye call the gospel, or the doctrine of Christ.

7 இந்த ஜனத்தில் அநேகரை நீ கொண்டு சென்ற-
தால், தேவனுடைய சரியான வழியைமாற்றி, செம்-
மையான வழியாகிய மோசேயின் நியாயப்பிரமா-
ணத்தைக் கைக்கொள்ளாமலும், பல நூற்றுக்க-
ணக்கான வருஷங்களுக்குப் பின்பு வருகிறா-
ரென்று, நீ சொன்ன ஒருவரை தொழுதுகொள்வ-
தின் மூலம் மோசேயின் நியாயப்பிரமாணத்தையும்
மாற்றியிருக்கிறாய். இப்பொழுது இதோ, சேரெமா-
கிய நான் இதைத் தேவதூஷணம் என்று அறிக்கை-
யிடுகிறேன். ஏனெனில் எந்த ஒரு மனுஷனும் அம்-
மாதிரியான காரியங்களை அறியான். ஆகையால்
வரப்போகும் காரியங்களை அவனால் சொல்லமு-
டியாது. சேரெம் இவ்விதமாய் என்னிடத்தில் விவா-
தித்தான்.

And ye have led away much of this people that they pervert the right way of God, and keep not the law of Moses which is the right way; and convert the law of Moses into the worship of a being which ye say shall come many hundred years hence. And now behold, I, Sherem, declare unto you that this is blasphemy; for no man knoweth of such things; for he cannot tell of things to come. And after this manner did Sherem contend against me.

8 ஆனால் இதோ, அவனுடைய எல்லா வார்த்தைக-
ளிலும் நான் அவனை தாறுமாறாக்கும் அளவிற்கு,
கர்த்தராகிய தேவன், தம் ஆவியை அதிகமாய் என்
ஆத்துமாவில் ஊற்றினார்.

But behold, the Lord God poured in his Spirit into my soul, insomuch that I did confound him in all his words.

9 நான் அவனை நோக்கி: வரப்போகிற கிறிஸ்து-
வை நீ மறுதலிக்கிறாயா என்றேன். அவன், கிறிஸ்-
து என்று ஒருவரிருந்தால், அவரை நான் மறுதலிக்-
கமாட்டேன்; ஆனால் கிறிஸ்து என்று எவருமில்-
லை, இருந்ததுமில்லை, என்றைக்கும் இருக்கப்-
போவதுமில்லை, என்று நான் அறிவேன், என்-
றான்.

And I said unto him: Deniest thou the Christ who shall come? And he said: If there should be a Christ, I would not deny him; but I know that there is no Christ, neither has been, nor ever will be.

10 நான் அவனை நோக்கி: வேதங்களை விசுவாசிக்-
கிறாயா? என்றேன். அவன் ஆம் என்றான்.

And I said unto him: Believest thou the scriptures? And he said, Yea.

11 நான் அவனை நோக்கி: அப்படியெனில் நீ
அவைகளை அறியவில்லை; ஏனெனில் அவை
மெய்யாகவே கிறிஸ்துவைக் குறித்து சாட்சி பகர்-
கின்றன. இதோ, தீர்க்கதரிசிகளில் எவரும் இந்தக்
கிறிஸ்துவைக் குறித்துப் பேசாமல், எழுதவுமில்-
லை. தீர்க்கதரிசனம் உரைக்கவுமில்லை, என்று
உன்னிடத்தில் சொல்லுகிறேன்.

And I said unto him: Then ye do not understand them; for they truly testify of Christ. Behold, I say unto you that none of the prophets have written, nor prophesied, save they have spoken concerning this Christ.

12 இதுமட்டுமல்ல. நான் அதைக் கேட்டும் கண்டுமி-
ருக்கிறபடியால் அதைக் குறித்து நான் வெளிப்ப-
டுத்தப்பட்டேன்; பரிசுத்த ஆவியானவரின் வல்ல-
மையினாலே, அது எனக்கு வெளிப்படுத்தப்பட்ட-
து; ஆகையால் பாவநிவர்த்தி செய்யப்படவில்லை-
யெனில், அனைத்து மனுக்குலமும் தொலைந்து-
போக வேண்டும், என்று அறிந்திருக்கிறேன் என்-
றேன்.

And this is not all—it has been made manifest unto me, for I have heard and seen; and it also has been made manifest unto me by the power of the Holy Ghost; wherefore, I know if there should be no atonement made all mankind must be lost.

13 அந்தப்படியே, அவன் என்னை நோக்கி: நீ அதிக-
மாய் அறிந்திருக்கிற இந்தப் பரிசுத்த ஆவியானவ-
ரின் வல்லமையினால், எனக்கு ஒரு அடையாளத்-
தைக் காண்பி, என்றான்.

And it came to pass that he said unto me: Show me a sign by this power of the Holy Ghost, in the which ye know so much.

14 நான் அவனை நோக்கி: நீ உண்மையென அறிந்-
திருக்கும் இந்தக் காரியத்தில், உனக்கு ஒரு அடை-
யாளம் காட்ட தேவனை சோதிக்க நான் யார்? நீ பி-
சாசினுடையவனாய் இருப்பதினிமித்தம், அதை-
யும் நீ மறுதலிப்பாய். அன்றியும் என்னுடைய சித்-
தம் செய்யப்படாமலிருப்பதாக; தேவன் உன்னை
வதைத்தால், அதுவே அவருக்கு வானத்திலும் பூமி-
யிலும் வல்லமையிருக்கிறதென்றும், கிறிஸ்து
வருவாரென்றும், உனக்கு அறிகுறியாக இருப்ப-
தாக. என்னுடையதல்லாமல் கர்த்தாவே உம்மு-
டைய சித்தமே செய்யப்படுவதாக, என்றேன்.

And I said unto him: What am I that I should tempt God to show unto thee a sign in the thing which thou knowest to be true? Yet thou wilt deny it, because thou art of the devil. Nevertheless, not my will be done; but if God shall smite thee, let that be a sign unto thee that he has power, both in heaven and in earth; and also, that Christ shall come. And thy will, O Lord, be done, and not mine.

15 அந்தப்படியே, யாக்கோபாகிய நான், இந்த வார்த்-
தைகளைப் பேசியபோது, அவன் பூமியிலே விழும்
அளவிற்கு அவன்மீது கர்த்தருடைய வல்லமை
அதிகமாக இறங்கியது. மேலும் அந்தப்படியே,
அநேக நாட்களளவும் அவன் போஷிக்கப்பட்டான்.

And it came to pass that when I, Jacob, had spoken these words, the power of the Lord came upon him, insomuch that he fell to the earth. And it came to pass that he was nourished for the space of many days.

16 அந்தப்படியே, அவன் ஜனங்களை நோக்கி: நான்
மரணமடையப்போவதினிமித்தம் நாளைக்கு ஒன்-
றாகக் கூடுங்கள். ஏனெனில் நான் மரிப்பதற்கு
முன்பு, ஜனங்களிடத்தில் பேச வாஞ்சிக்கிறேன்,
என்றான்.

And it came to pass that he said unto the people: Gather together on the morrow, for I shall die; wherefore, I desire to speak unto the people before I shall die.

17 அந்தப்படியே, மறுதினத்தில் திரளானோர் ஒன்-
றாகக் கூடியிருந்தார்கள். அவன் அவர்களிடத்தில்
தெளிவாகப்பேசி, அவர்களிடம் தான் போதித்த கா-
ரியங்களை எல்லாம் மறுத்து, கிறிஸ்துவையும்,
பரிசுத்த ஆவியின் வல்லைமையையும், தூதர்க-
ளின் பணிவிடையையும், அறிக்கையிட்டான்.

And it came to pass that on the morrow the multitude were gathered together; and he spake plainly unto them and denied the things which he had taught them, and confessed the Christ, and the power of the Holy Ghost, and the ministering of angels.

18 அவன் பிசாசின் வல்லமையினால் வஞ்சிக்கப்-
பட்டிருந்தான், என்று தெளிவாக அவர்களிடத்தில்
பேசினான். அவன் பாதாளத்தையும் நித்தியத்தை-
யும், நித்திய தண்டனையையும் குறித்துப் பேசி-
னான்.

And he spake plainly unto them, that he had been deceived by the power of the devil. And he spake of hell, and of eternity, and of eternal punishment.

19 அவன், தேவனிடத்தில் பொய்யுரைத்ததினிமித்-
தம், மன்னிக்கப்படமுடியாத, பாவத்தைச் செய்து-
விட்டேனோ, என்று நான் அஞ்சுகிறேன். கிறிஸ்து-
வை மறுதலித்தேன், வேதவாக்கியங்களை நான்
விசுவாசிக்கிறேன் என்று சொன்னேன். அவைகள்
மெய்யாகவே அவரைப்பற்றி சாட்சி பகர்கின்றன.
நான் இவ்வாறாக பொய்யுரைத்ததினிமித்தம், என்
நிலைமை பயங்கரமாக இருக்குமோ, என நான் மிக-
வும் அஞ்சுகிறேன், ஆனாலும் தேவனிடத்தில்
அறிக்கையிடுகிறேன், என்றான்.

And he said: I fear lest I have committed the unpardonable sin, for I have lied unto God; for I denied the Christ, and said that I believed the scriptures; and they truly testify of him. And because I have thus lied unto God I greatly fear lest my case shall be awful; but I confess unto God.

20 அந்தப்படியே, இந்த வார்த்தைகளைக் கூறின-
போது, அவன் மேலும் ஒன்றும் சொல்லமுடியாத-
வனாய், ஜீவனைவிட்டான்.

And it came to pass that when he had said these words he could say no more, and he gave up the ghost.

21 ஜீவனை விடவிருந்தபோது, அவன் இந்தக் காரியங்களைப் பேசியதை திரளானோர் கண்டபோது, மிகவும் வியப்புக்குள்ளானார்கள், அவர்கள் மேற்கொள்ளப்பட்டு, அவர்கள் கீழே விழும்படியாய், தேவனுடைய வல்லமை கீழிறங்கியது.

And when the multitude had witnessed that he spake these things as he was about to give up the ghost, they were astonished exceedingly; insomuch that the power of God came down upon them, and they were overcome that they fell to the earth.

22 இப்பொழுது, இந்தக் காரியம் யாக்கோபாகிய எனக்கு மகிழ்ச்சியாயிருந்தது, ஏனெனில் பரலோகத்தில் இருந்த என் பிதாவினிடத்தில் நான் வேண்டினபடியே, அவர் என் கூக்குரலைக் கேட்டு, என்னுடைய ஜெபத்திற்குப் பதிலளித்தார்.

Now, this thing was pleasing unto me, Jacob, for I had requested it of my Father who was in heaven; for he had heard my cry and answered my prayer.

23 அந்தப்படியே, தேவனுடைய சமாதானமும், அன்பும் மறுபடியும் ஜனங்களின் மத்தியிலே நிலைவரப்பட்டன. அவர்கள் இந்தத் துன்மார்க்க மனுஷன் வார்த்தைகளுக்கு ஒருபோதும் செவிசாய்க்காமல் வேதங்களை ஆராய்ந்தார்கள்.

And it came to pass that peace and the love of God was restored again among the people; and they searched the scriptures, and hearkened no more to the words of this wicked man.

24 அந்தப்படியே, சத்தியத்தின் அறிவிற்கு லாமானியர்களைத் திருப்பிக்கொண்டு வரவும், நிலைவரப்படுத்தவும் அநேக வழிகள் திட்டமிடப்பட்டன. ஆனால் அவர்களோ யுத்தத்திலும், இரத்தம் சிந்துதலிலும் மகிழ்ச்சிகொண்டு, தங்கள் சகோதரர்களாகிய எங்களுக்கு விரோதமாய் நித்திய வெறுப்பைக் கொண்டிருந்தபடியால், அவைகளெல்லாம் விருதாவாயின. மேலும் அவர்களின் புயங்களின் வல்லமையினால், எங்களை அழிக்கத் தொடர்ந்து வகை தேடினார்கள்.

And it came to pass that many means were devised to reclaim and restore the Lamanites to the knowledge of the truth; but it all was vain, for they delighted in wars and bloodshed, and they had an eternal hatred against us, their brethren. And they sought by the power of their arms to destroy us continually.

25 ஆகையால் நேபியின் ஜனங்கள் தங்களின் ஆயுதங்களாலும், தங்களின் எல்லா ஊக்கத்தாலும் அவர்களுக்கு விரோதமாய்ப் பலப்படுத்தி, தேவனும் அவர்களின் இரட்சிப்பின் கன்மலையுமானவரின் மீது நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆகையால் தங்கள் விரோதிகளை மேற்கொள்ளக்கூடியவர்களாய் ஆனார்கள்.

Wherefore, the people of Nephi did fortify against them with their arms, and with all their might, trusting in the God and rock of their salvation; wherefore, they became as yet, conquerors of their enemies.

26 அந்தப்படியே, யாக்கோபாகிய நான் முதுமையடையலானேன்; இந்த ஜனங்களின் வரலாறு நேபியின் மற்ற தகடுகளில் வைக்கப்பட்டமையால், என்னுடைய சிறந்த அறிவின்படியே நான் எழுதியிருக்கிறேன், என்று அறிவித்து, எங்களுடனே காலம் கழிந்தது என்றும், எங்களுக்கு ஒரு சொப்பனத்தைப்போல எங்களின் வாழ்க்கையும் கடந்துசென்றது என்றும், நாங்கள் ஏகாந்தமான, பவித்திரமான ஜனங்களாயும், எருசலேமிலிருந்து துரத்தப்பட்ட பரதேசிகளுமாய், ஒரு வனாந்தரத்திலே உபத்திரவத்திலே பிறந்தவர்களாயும், சகோதரர்களால் வெறுக்கப்பட்டு, யுத்தங்களும் பிணக்குகளும் ஏற்பட்டமையால், எங்களின் நாட்கள் முழுவதும் துக்கித்தோம் என்றும், சொல்லி இந்தப் பதிவேட்டினை முடிக்கிறேன்.

And it came to pass that I, Jacob, began to be old; and the record of this people being kept on the other plates of Nephi, wherefore, I conclude this record, declaring that I have written according to the best of my knowledge, by saying that the time passed away with us, and also our lives passed away like as it were unto us a dream, we being a lonesome and a solemn people, wanderers, cast out from Jerusalem, born in tribulation, in a wilderness, and hated of our brethren, which caused wars and contentions; wherefore, we did mourn out our days.

27 யாக்கோபாகிய நான் என்னுடைய பிரதேக் குழிக்-
குள் சீக்கிரம் செல்லவேண்டியவனாய் இருக்கிறேன்
எனக்கண்டேன். ஆகையால் என் குமாரனாகிய
ஏனோஸை நோக்கி, இந்தத் தகடுகளை எடுத்துக்-
கொள், என்றேன். என் சகோதரனாகிய நேபி, எனக்-
குக் கட்டளையிட்ட காரியங்களை அவனுக்குச்
சொன்னேன். அந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படி-
வதாக அவன் வாக்களித்தான். இந்தத் தகடுகளின்-
மீது என்னுடைய எழுத்துக்களை முடிக்கிறேன்.
எழுதியவைகளோ கொஞ்சமாக இருக்கின்றன.
என்னுடைய சகோதரர்களில் அநேகர் வாசிப்பார்-
கள் என்று எண்ணி, வாசிப்பவரிடத்திலிருந்து
நான் விடைபெற்றுக்கொள்கிறேன். சகோதரரே, தே-
வன் உங்களோடுகூட இருப்பாராக.

And I, Jacob, saw that I must soon go down to my grave; wherefore, I said unto my son Enos: Take these plates. And I told him the things which my brother Nephi had commanded me, and he promised obedience unto the commands. And I make an end of my writing upon these plates, which writing has been small; and to the reader I bid farewell, hoping that many of my brethren may read my words. Brethren, adieu.

# ஏனோஸின் புஸ்தகம்

1 இதோ அந்தப்படியே, என் தகப்பன் ஒரு நியாயவா-
னென்று ஏனோஸாகிய நான் அறிவேன். ஏனெ-
னில் அவர் தன் பாஷையில், கர்த்தருடைய போ-
ஷிப்பிலும், புத்திமதியிலும் எனக்குப் போதித்தார்.
அதனிமித்தம் என் தேவனின் நாமத்திற்கு ஸ்தோத்-
திரமுண்டாவதாக.
2 நான் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறுவ-
தற்கு முன்பு, தேவனுக்கு முன்பாக எனது போராட்-
டத்தைப்பற்றி, உங்களுக்கு நான் சொல்லுகிறேன்.
3 இதோ, நான் காடுகளில் விலங்குகளை வேட்டை-
யாடச் சென்றேன்; நித்திய ஜீவனையும், பரிசுத்த-
வான்களின் சந்தோஷத்தைப்பற்றியும், என் தகப்-
பன் பேசி, நான் அடிக்கடிக் கேட்ட வார்த்தைகள்
என் இருதயத்திலே ஆழமாய்ப் பதிந்தன.
4 என் ஆத்துமா பசியுற்றது; என்னை உண்டாக்கி-
னவருக்கு முன்பாக முழங்காற்படியிட்டு என்னு-
டைய சொந்த ஆத்துமாவிற்காக அவரிடத்தில்
ஊக்கமான ஜெபத்திலும் வேண்டுதலிலும் கூக்குர-
லிட்டேன்; நாள் முழுவதும் அவரிடத்தில் கூக்குர-
லிட்டேன்; ஆம், இரவு வந்தபோது வானங்களை
எட்டும்படியாய், என் சத்தத்தை இன்னும் அதிக-
மாய் உயர்த்தினேன்.
5 அங்கே ஒரு சத்தம் எனக்கு உண்டாகி: ஏனோஸே,
உன்னுடைய பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்-
டன. நீ ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், என்றது.
6 தேவன் பொய்யுரைக்கமாட்டார், என ஏனோஸா-
கிய நான், அறிவேன்; ஆகையால், என் குற்ற
உணர்ச்சி என்னிலிருந்து துடைக்கப்பட்டது.
7 நான்: கர்த்தாவே, அது எப்படி நடந்தது? என்-
றேன்,
8 அவர் என்னை நோக்கி: நீ முன்னே கேட்டும் கண்-
டுமிராத, கிறிஸ்துவிலே விசுவாசித்ததினிமித்தமே.
அவர் மாம்சத்திலே தன்னை வெளிப்படுத்துவதற்-
கு முன்பு அநேக வருஷங்கள் கடந்து செல்லும்;
ஆகையால் போ, உன் விசுவாசம் உன்னை இரட்சித்-
தது, என்றார்.
9 இப்பொழுது, அந்தப்படியே, இந்த வார்த்தைக-
ளை நான் கேட்டபோது, நேபியர்களாகிய என்
சகோதரர்களின் நலனுக்கேதுவான ஒரு வாஞ்சை-
யை உணர ஆரம்பித்தேன்; ஆகையால் அவர்க-
ளுக்காகத் தேவனிடத்தில் என் முழு ஆத்துமாவை
ஊற்றினேன்.

# The Book of Enos

Behold, it came to pass that I, Enos, knowing my father that he was a just man—for he taught me in his language, and also in the nurture and admonition of the Lord—and blessed be the name of my God for it—

And I will tell you of the wrestle which I had before God, before I received a remission of my sins.

Behold, I went to hunt beasts in the forests; and the words which I had often heard my father speak concerning eternal life, and the joy of the saints, sunk deep into my heart.

And my soul hungered; and I kneeled down before my Maker, and I cried unto him in mighty prayer and supplication for mine own soul; and all the day long did I cry unto him; yea, and when the night came I did still raise my voice high that it reached the heavens.

And there came a voice unto me, saying: Enos, thy sins are forgiven thee, and thou shalt be blessed.

And I, Enos, knew that God could not lie; wherefore, my guilt was swept away.

And I said: Lord, how is it done?

And he said unto me: Because of thy faith in Christ, whom thou hast never before heard nor seen. And many years pass away before he shall manifest himself in the flesh; wherefore, go to, thy faith hath made thee whole.

Now, it came to pass that when I had heard these words I began to feel a desire for the welfare of my brethren, the Nephites; wherefore, I did pour out my whole soul unto God for them.

10 நான் ஆவியிலே இவ்வாறாக போராடிக்கொண்டிருந்தபோது, இதோ, கர்த்தரின் சத்தம் மறுபடியும் என் மனதிலே வந்து, என்னுடைய கட்டளைகளை உன் சகோதரர்கள் கருத்தாய் கைக்கொள்ளுகிறதற்குத்தக்கதாக நான் அவர்களை விசாரிப்பேன்; நான் அவர்களுக்கு இந்த தேசத்தைக் கொடுத்திருக்கிறேன். அது பரிசுத்த தேசம்; அக்கிரமத்திற்காகவேயன்றி, வேறு எதற்காகவும் நான் அதை சபிக்கமாட்டேன்; ஆகையால் நான் சொன்னபடியே உன் சகோதரர்களை விசாரிப்பேன்; அவர்களின் மீறுதல்களை வேதனையுடன் கூட அவர்களின் சொந்த சிரசுகளின்மீது கொண்டுவருவேன், என்றார்.

And while I was thus struggling in the spirit, behold, the voice of the Lord came into my mind again, saying: I will visit thy brethren according to their diligence in keeping my commandments. I have given unto them this land, and it is a holy land; and I curse it not save it be for the cause of iniquity; wherefore, I will visit thy brethren according as I have said; and their transgressions will I bring down with sorrow upon their own heads.

11 ஏனோஸாகிய நான் இந்த வார்த்தைகளைக் கேட்டபின்பு, கர்த்தரிலே என் விசுவாசம் அசைக்கமுடியாததானது; மேலும் என் சகோதரர்களாகிய லாமானியர்களுக்காக, அதிக நீடிய போராட்டங்களுடன் அவரிடத்தில் ஜெபித்தேன்.

And after I, Enos, had heard these words, my faith began to be unshaken in the Lord; and I prayed unto him with many long strugglings for my brethren, the Lamanites.

12 அந்தப்படியே, அதிகக் கருத்தோடு நான் ஜெபித்து பிரயாசப்பட்ட பின்னர், கர்த்தர் என்னை நோக்கி: உன் விசுவாசத்தினிமித்தம், உன் விருப்பங்களின்படியே உனக்கு நான் அருளுவேன், என்றார்.

And it came to pass that after I had prayed and labored with all diligence, the Lord said unto me: I will grant unto thee according to thy desires, because of thy faith.

13 இப்பொழுது, இதோ என் ஜனமாகிய நேபியர்கள் மீறுதலினுள் விழுந்து, எந்த வகையினாலாவது அழிக்கப்பட்டாலும், லாமானியர்கள் அழிக்கப்படக் கூடாதென்றும், என் ஜனமாகிய நேபியர்களின் பதிவேட்டைக் கர்த்தராகிய தேவன், அவருடைய பரிசுத்த புயத்தின் வல்லமையினால், பாதுகாப்பாரென்றும், அவர்களை இரட்சிப்புக்குள்ளாகக் கொண்டு செல்லும்படிக்கு, லாமானியர்களிடத்தில் சில காலத்திற்குப் பின்பு அது கொண்டுவரப்பட வேண்டும், என்பதே அவரிடத்தில் நான் விரும்பியதாகும்.

And now behold, this was the desire which I desired of him—that if it should so be, that my people, the Nephites, should fall into transgression, and by any means be destroyed, and the Lamanites should not be destroyed, that the Lord God would preserve a record of my people, the Nephites; even if it so be by the power of his holy arm, that it might be brought forth at some future day unto the Lamanites, that, perhaps, they might be brought unto salvation—

14 ஏனெனில் இச்சமயத்திலே அவர்களை மெய்யான விசுவாசத்திற்குள்ளே கொண்டுவர எங்களின் முயற்சிகள் விருதாவாய்ப்போயின. அவர்களோ, எங்களையும், எங்களின் பதிவேடுகளையும், எங்கள் பிதாக்களின் அனைத்து பாரம்பரியங்களையும், முடியுமானால் அழித்திடுவோம், என்று தங்கள் கோபத்திலே ஆணையிட்டார்கள்.

For at the present our strugglings were vain in restoring them to the true faith. And they swore in their wrath that, if it were possible, they would destroy our records and us, and also all the traditions of our fathers.

15 ஆகையால், எங்களின் பதிவேடுகளைப் பாதுகாக்க கர்த்தராகிய தேவனால் இயலுமென்று, நான் அறிந்தவனாய் அவரிடத்தில் தொடர்ந்து கூக்குரலிட்டேன். ஏனெனில் அவர் என்னிடம், கிறிஸ்துவின் நாமத்திலே நீ பெற்றுக்கொள்வாய், என்று நம்பி, விசுவாசத்தில் நீ எதைக் கேட்டாலும், நீ பெற்றுக் கொள்வாய், என்று சொல்லியிருந்தார்.

Wherefore, I knowing that the Lord God was able to preserve our records, I cried unto him continually, for he had said unto me: Whatsoever thing ye shall ask in faith, believing that ye shall receive in the name of Christ, ye shall receive it.

16 நான் விசுவாசித்து, தேவன் பதிவேடுகளைப் பா-
துகாக்கவேண்டும் என்று அவரிடத்திலே கூக்குர-
லிட்டேன். அதை லாமானியர்களிடத்தில் தன்
சொந்த, ஏற்ற காலத்திலே கொண்டுவருவார், என்-
று என்னிடம் உடன்படிக்கை செய்தார்.

And I had faith, and I did cry unto God that he would preserve the records; and he covenanted with me that he would bring them forth unto the Lamanites in his own due time.

17 ஏனோஸாகிய நான் அவர் செய்த உடன்படிக்கை-
யின்படியே அது நிறைவேறுமென்று அறிந்திருந்-
தேன். அதினிமித்தம் என் ஆத்துமா இளைப்பாறிய-
து.

And I, Enos, knew it would be according to the covenant which he had made; wherefore my soul did rest.

18 கர்த்தர் என்னை நோக்கி: உன் பிதாக்களும் இந்-
தக் காரியத்தை என்னிடம் வேண்டியிருந்தார்கள்,
அவர்களின் விசுவாசத்திற்குத்தக்கதாய் அது
அவர்களுக்குச் செய்யப்படும்; ஏனெனில் அவர்க-
ளின் விசுவாசமும் உன்னுடையதுபோலவே இருந்-
தது, என்றார்.

And the Lord said unto me: Thy fathers have also required of me this thing; and it shall be done unto them according to their faith; for their faith was like unto thine.

19 இப்பொழுதும் அந்தப்படியே, ஏனோஸாகிய
நான், நேபியின் ஜனங்கள் மத்தியில் சென்று, வரப்-
போகிற காரியங்களைக்குறித்து தீர்க்கதரிசனமு-
ரைத்து, நான் கேட்டும் கண்டுமிருந்தவைகளைக்
குறித்து சாட்சியளித்தேன்.

And now it came to pass that I, Enos, went about among the people of Nephi, prophesying of things to come, and testifying of the things which I had heard and seen.

20 தேவனில் மெய்யான விசுவாசத்திலே லாமானி-
யர்களைத் திரும்பவும் சேர்க்கும்படியாய் நேபியின்
ஜனங்கள் கருத்தாய் பிரயாசப்பட்டார்கள், என்று
நான் சாட்சி பகருகிறேன். ஆனாலும் எங்களின் பி-
ரயாசங்கள் விருதாவாய்ப்போயின; அவர்களின்
வெறுப்பு நிலையானதாயிருந்தது. தங்களின் கே-
டான சுபாவத்தால் நடத்தப்பட்டமையால், துஷ்டர்-
களாய், கொடியவர்களாய், இரத்த தாகம் கொண்ட
ஜனங்களாய், விக்கிரக ஆராதனையும், அசுசியும்
நிறைந்தவர்களாய், வேட்டையாடும் விலங்குக-
ளை உண்பவர்களாய், கூடாரங்களில் வாசம்செய்-
து, தங்களின் அரைகளிலே சிறிய தோல் கச்சை-
யைக் கட்டி, தங்கள் தலைகளை சிரைத்தவர்க-
ளாய், வனாந்தரத்திலே அலைந்தார்கள்; அவர்க-
ளின் ஆற்றலோ, விற்களிலும் உடைப்பட்டயங்க-
ளிலும், கோடாரிகளிலும் இருந்தது. அவர்களில்
அநேகர் பச்சையிறைச்சியைத் தவிர வேறெதையும்
உண்ணவில்லை; எங்களை அழிக்க அவர்கள்
தொடர்ந்து வகைதேடினார்கள்.

And I bear record that the people of Nephi did seek diligently to restore the Lamanites unto the true faith in God. But our labors were vain; their hatred was fixed, and they were led by their evil nature that they became wild, and ferocious, and a blood-thirsty people, full of idolatry and filthiness; feeding upon beasts of prey; dwelling in tents, and wandering about in the wilderness with a short skin girdle about their loins and their heads shaven; and their skill was in the bow, and in the cimeter, and the ax. And many of them did eat nothing save it was raw meat; and they were continually seeking to destroy us.

21 அந்தப்படியே, நேபியின் ஜனங்கள் பூமியைப்
பண்படுத்தி, எல்லா வகையான தானியங்களை-
யும், பழங்களையும், மந்தைகளையும், ஒவ்வொரு
விதமான கால்நடை ஜீவன்களைக் கொண்ட மந்-
தைகளையும், ஆடுகளையும், காட்டு ஆடுகளை-
யும், அநேக குதிரைகளையும் வளர்த்தார்கள்.

And it came to pass that the people of Nephi did till the land, and raise all manner of grain, and of fruit, and flocks of herds, and flocks of all manner of cattle of every kind, and goats, and wild goats, and also many horses.

22 எங்கள் மத்தியிலே மிகுதியாக அநேக தீர்க்கதரிசி-
களிருந்தார்கள். ஜனங்கள் வணங்காக் கழுத்-
துள்ள ஜனமாயும், புரியாதவர்களுமாயிருந்தார்-
கள்.

And there were exceedingly many prophets among us. And the people were a stiffnecked people, hard to understand.

23 அங்கே உக்கிரம், யுத்தங்கள், பிணக்குகள், அழிவுகளைப்பற்றிய பிரசங்கங்களும், தீர்க்கதரிசனங்களும், நித்தியத்தின் கால அளவு, மரணம், நியாயத்தீர்ப்புகள், தேவனுடைய வல்லமை, ஆகிய இந்தக் காரியங்களெல்லாவற்றாலும் தொடர்ந்து அவர்கள் நினைவூட்டப்பட்டு கர்த்தரிடம் பயத்திலே வைத்திருக்கப்படுவது தவிர அங்கே ஒன்றுமில்லை. சீக்கிரமாய் அவர்கள் அழிவிற்குள் செல்லாதபடி, காத்துக்கொள்ள, அங்கே இவைகள் ஒன்றும் குறைவுபடாமல் மிகவும் தெளிவாகப் பேசப்பட்டது, என்று நான் சொல்லுகிறேன். இந்த விதத்திலேயே நான் அவர்களைக் குறித்து எழுதுகிறேன்.

And there was nothing save it was exceeding harshness, preaching and prophesying of wars, and contentions, and destructions, and continually reminding them of death, and the duration of eternity, and the judgments and the power of God, and all these things—stirring them up continually to keep them in the fear of the Lord. I say there was nothing short of these things, and exceedingly great plainness of speech, would keep them from going down speedily to destruction. And after this manner do I write concerning them.

24 என் நாட்களில் நேபியர்களுக்கும் லாமானியர்களுக்குமிடையேயான யுத்தங்களைக் கண்டேன்.

And I saw wars between the Nephites and Lamanites in the course of my days.

25 அந்தப்படியே, நான் முதிர்ச்சியடையத் தொடங்கினேன். எருசலேமை விட்டு எங்கள் தகப்பனாகிய லேகி வந்த காலத்திலிருந்து நூற்றி எழுபத்தி ஒன்பது வருஷங்கள் கழிந்துவிட்டன.

And it came to pass that I began to be old, and an hundred and seventy and nine years had passed away from the time that our father Lehi left Jerusalem.

26 தேவனுடைய வல்லமையால் ஆட்கொள்ளப்பட்டு, நான் இந்த ஜனங்களுக்கு பிரசங்கிக்கவும், தீர்க்கதரிசனமுரைக்கவும், கிறிஸ்துவிலேயிருக்கிற சத்தியத்தின்படியே வார்த்தையை அறிவித்த பின்பு, என் கல்லறைக்குள்ளே சீக்கிரம் செல்லவேண்டும் என்பதைக் கண்டேன். அதை நான் என் வாழ்நாட்கள் முழுவதும் அறிவித்து, உலகத்திலுள்ளவைகளுக்கும் மேலாக அதிலே நான் களிகூர்ந்தேன்.

And I saw that I must soon go down to my grave, having been wrought upon by the power of God that I must preach and prophesy unto this people, and declare the word according to the truth which is in Christ. And I have declared it in all my days, and have rejoiced in it above that of the world.

27 என் மீட்பரிடமிருக்கிற என் இளைப்பாறுதலின் இடத்திற்கு சீக்கிரமாய் நான் போகிறேன்; ஏனெனில் அவரில் நான் இளைப்பாறுவேன், என அறிந்திருக்கிறேன். மேலும் அழிவுள்ள நான் அழியாமையைத் தரிக்கும் நாளிலே களிகூர்ந்து, அவரின்முன் நிற்பேன். பின்பு நான் அவர் முகத்தை மகிழ்ச்சியுடன் காண்பேன். அவர் என்னை நோக்கி, ஆசீர்வதிக்கப்பட்டவனே, என்னிடம் வா. என் பிதாவினுடைய வாசஸ்தலங்களிலே உனக்கு ஒரு இடம் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிறது, என்பார். ஆமென்.

And I soon go to the place of my rest, which is with my Redeemer; for I know that in him I shall rest. And I rejoice in the day when my mortal shall put on immortality, and shall stand before him; then shall I see his face with pleasure, and he will say unto me: Come unto me, ye blessed, there is a place prepared for you in the mansions of my Father. Amen.

# யாரோமின் புஸ்தகம்

1 இப்பொழுது இதோ, யாரோமாகிய நான், எங்களின்
வம்சவரலாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற,
என் தகப்பனாகிய, ஏனோஸின் கட்டளையின்படி-
யே சில வார்த்தைகளை எழுதுகிறேன்.

2 இந்தத் தகடுகள் சிறியனவாய் இருப்பதாலும்,
எங்களின் சகோதரர்களாகிய லாமானியர்களினு-
டைய நலனை நோக்கத்திற்கொண்டே இவை எழு-
தப்படுவதினாலும், சிலவற்றையே நான் எழுத-
வேண்டியது அவசியமானதாயிருக்கிறது. ஆனால்
என் தீர்க்கதரிசனங்களையோ என்னுடைய வெ-
ளிப்படுத்தல்களைப்பற்றிய காரியங்களையோ
நான் எழுதப்போவதில்லை. ஏனென்றால் என் பி-
தாக்கள் எழுதியவற்றைக்காட்டிலும் அதிகமாய்
நான் எதை எழுதக்கூடும்? ஏன் அவர்கள் இரட்சிப்-
பின் திட்டத்தை வெளிப்படுத்தவில்லையா? ஆம்,
இதுவே எனக்குப் போதுமானதாயிருக்கிறது, என்-
று உங்களுக்கு நான் சொல்லுகிறேன்.

3 இதோ, இவர்களின் இருதயங்களின் கடினத்தன்-
மையினிமித்தமும், காதுகளின் கேளாத்தன்மையி-
னிமித்தமும், மனதின் குருட்டுத்தன்மையினிமித்த-
மும், வணங்காக் கழுத்தினிமித்தமும், இந்த ஜனங்-
களின் மத்தியில் அதிகமானவை செய்யப்பட-
வேண்டும், என்பது அவசியமாயிருக்கிறது. இருப்-
பினும் தேவன் அவர்களிடத்தில் மிகவும் இரக்கமா-
யிருக்கிறார், இன்னும் அவர்களை பூமியின் மீதி-
ருந்து வாரிக்கொண்டு போகவில்லை.

4 அநேக வெளிப்படுத்தல்களைப் பெற்ற பலர் எங்-
கள் மத்தியிலேயிருக்கிறார்கள். ஏனெனில் அவர்-
கள் எல்லாம் வணங்காக் கழுத்துடையவர்களாயி-
ருக்கவில்லை. எவரெவர் வணங்காக் கழுத்துடை-
யவர்களல்லாமல், விசுவாசத்தோடிருக்கிறார்க-
ளோ, அவர்களின் விசுவாசத்தின்படியே, மனுபுத்-
திரருக்கு வெளிப்படுத்துகிற பரிசுத்த ஆவியுடன்
ஐக்கியப்பட்டிருக்கிறார்கள்.

5 இப்பொழுதும், இதோ, இருநூறு வருஷங்கள்
கழிந்து சென்றன. நேபியுடைய ஜனங்கள், தேசத்தி-
லே விருத்தியடைந்தார்கள். அவர்கள் மோசேயின்
நியாயப்பிரமாணங்களைக் கைக்கொண்டு, ஓய்வு-
நாளைப் பரிசுத்தமாய் ஆசரித்தார்கள். பரிசுத்த கு-
லைச்சலாய் இல்லை, தேவதூஷணம் பேசவும் இல்-
லை, தேசத்தின் நியாயப்பிரமாணங்களோ மிகவும்
கண்டிப்பாயிருந்தன.

6 அவர்களும் லாமானியர்களும் தேசத்தின் மேற்ப-
ரப்பின் மீது அதிகமாய் சிதறடிக்கப்பட்டிருந்தார்-
கள். அவர்கள் எண்ணிக்கையிலே நேபியர்க-
ளைக்காட்டிலும் மிகவும் அதிகமாயிருந்தார்கள்.
அவர்கள் கொலையை நேசித்து, மிருகங்களின்
இரத்தத்தைக் குடித்தார்கள்.

# The Book of Jarom

Now behold, I, Jarom, write a few words according to the commandment of my father, Enos, that our genealogy may be kept.

And as these plates are small, and as these things are written for the intent of the benefit of our brethren the Lamanites, wherefore, it must needs be that I write a little; but I shall not write the things of my prophesying, nor of my revelations. For what could I write more than my fathers have written? For have not they revealed the plan of salvation? I say unto you, Yea; and this sufficeth me.

Behold, it is expedient that much should be done among this people, because of the hardness of their hearts, and the deafness of their ears, and the blindness of their minds, and the stiffness of their necks; nevertheless, God is exceedingly merciful unto them, and has not as yet swept them off from the face of the land.

And there are many among us who have many revelations, for they are not all stiffnecked. And as many as are not stiffnecked and have faith, have communion with the Holy Spirit, which maketh manifest unto the children of men, according to their faith.

And now, behold, two hundred years had passed away, and the people of Nephi had waxed strong in the land. They observed to keep the law of Moses and the sabbath day holy unto the Lord. And they profaned not; neither did they blaspheme. And the laws of the land were exceedingly strict.

And they were scattered upon much of the face of the land, and the Lamanites also. And they were exceedingly more numerous than were they of the Nephites; and they loved murder and would drink the blood of beasts.

7 அந்தப்படியே, அவர்கள் சண்டையிட, நேபியர்களாகிய எங்களுக்கு விரோதமாய் அநேகம்முறை வந்தார்கள். ஆனால் எங்களின் ராஜாக்களும், தலைவர்களும் கர்த்தருடைய விசுவாசத்திலே பலவான்களாயிருந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய வழிகளை ஜனங்களுக்குப் போதித்தார்கள். ஆதலால், லாமானியர்களை நாங்கள் எதிர்த்து நின்று, எங்கள் தேசங்களிலிருந்து துரத்தினோம். எங்கள் பட்டணங்களோ, எங்களது சுதந்தரமான எந்த ஒரு இடமாயினும் அரணிப்புகளைப் பலப்படுத்த ஆரம்பித்தோம்.

And it came to pass that they came many times against us, the Nephites, to battle. But our kings and our leaders were mighty men in the faith of the Lord; and they taught the people the ways of the Lord; wherefore, we withstood the Lamanites and swept them away out of our lands, and began to fortify our cities, or whatsoever place of our inheritance.

8 நாங்கள் மிகவும் பெருகி, தேசத்தின் மேற்பரப்பில் பெருகினோம். பொன்னிலும் வெள்ளியிலும், விலைமதிப்பற்ற பொருட்களிலும், மரத்தின் அழகிய வேலைப்பாடுகளிலும், கட்டிடங்களிலும், இயந்திரங்களிலும், இரும்பிலும், தாமிரத்திலும், பித்தளையிலும், எஃகிலும், மிகவும் ஐஸ்வரியவான்களாகி, பூமியைப் பண்படுத்த ஒவ்வொரு வகையிலான எல்லாவிதமான கருவிகளையும், யுத்தக் கருவிகளையும், ஆம் முனைகூர்மையான அம்பையும், அம்புறாத்துணியையும், எறிபடையையும், ஈட்டியையும் யுத்தத்திற்கான எல்லா ஆயத்தங்களையும் செய்தோம்.

And we multiplied exceedingly, and spread upon the face of the land, and became exceedingly rich in gold, and in silver, and in precious things, and in fine workmanship of wood, in buildings, and in machinery, and also in iron and copper, and brass and steel, making all manner of tools of every kind to till the ground, and weapons of war—yea, the sharp pointed arrow, and the quiver, and the dart, and the javelin, and all preparations for war.

9 இவ்வாறாக நாங்கள் லாமானியர்களைச் சந்திக்க ஆயத்தப்பட்டிருந்தபோது, அவர்கள் எங்களுக்கு எதிராய் முன்னேறவில்லை. ஆனால், என்னுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற அளவில், தேசத்திலே விருத்தியடைவீர்கள், என்று கர்த்தர், எங்கள் பிதாக்களிடம் பேசிய அவருடைய வார்த்தை மெய்ப்பிக்கப்பட்டது.

And thus being prepared to meet the Lamanites, they did not prosper against us. But the word of the Lord was verified, which he spake unto our fathers, saying that: Inasmuch as ye will keep my commandments ye shall prosper in the land.

10 அந்தப்படியே, கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், மீறுதலினுள் விழுவார்களாகில், அவர்கள் தேசத்தின் மேற்பரப்பிலிருந்து அழிக்கப்படுவார்கள், என்ற தேவனுடைய வார்த்தையின்படியே, நேபியின் ஜனங்களை கர்த்தருடைய தீர்க்கதரிசிகள் எச்சரித்தார்கள்.

And it came to pass that the prophets of the Lord did threaten the people of Nephi, according to the word of God, that if they did not keep the commandments, but should fall into transgression, they should be destroyed from off the face of the land.

11 ஆகையால், தீர்க்கதரிசிகளும், ஆசாரியர்களும், ஆசிரியர்களும் கருத்தாய்ப் பணிபுரிந்து, மோசேயின் நியாயப்பிரமாணத்தையும், அது கொடுக்கப்பட்டதின் நோக்கத்தையும் போதித்து, மேசியாவை எதிர்நோக்கி, அவர் ஏற்கனவே வந்ததைப்போல அவரில் விசுவாசிக்கவேண்டுமென்றும், கருத்தாயிருக்கும்படியும் ஜனங்களுக்கு சகல நீடிய பொறுமையோடு புத்தி சொன்னார்கள். இந்த பிரகாரமாய் அவர்களுக்குப் போதித்தனர்.

Wherefore, the prophets, and the priests, and the teachers, did labor diligently, exhorting with all long-suffering the people to diligence; teaching the law of Moses, and the intent for which it was given; persuading them to look forward unto the Messiah, and believe in him to come as though he already was. And after this manner did they teach them.

12 அந்தப்படியே, அப்படிச் செய்வதின்மூலமாக அவர்களின் இருதயங்கள் வார்த்தையால் குத்தப்பட்டு, மனந்திரும்பும்படி தொடர்ந்து உணர்த்தப்பட்டபடியால், நிலத்தின் மேற்பரப்பில் அழிக்கப்படுவதிலிருந்து காக்கப்பட்டார்கள்.

And it came to pass that by so doing they kept them from being destroyed upon the face of the land; for they did prick their hearts with the word, continually stirring them up unto repentance.

13 அந்தப்படியே, அதிக காலத்துக்கு, யுத்தங்களும், பிணக்குகளும் வேற்றுமைகளும் ஏற்பட்டபடியே, இருநூற்றி முப்பத்தெட்டு வருஷங்கள் கழிந்துசென்றன.

14 யாரோமாகிய நான், தகடுகள் சிறியனவாய் இருப்பதினிமித்தம் அதிகமாய் எழுதுவதில்லை. ஆனால் இதோ, என் சகோதரரே, நீங்கள் நேபியின் மற்ற தகடுகளைப் பார்க்கலாம், ஏனெனில் இதோ, ராஜாக்கள் எழுதியவாறோ, அல்லது எழுதும்படி அவர்களால் சொல்லப்பட்டவர்கள் எழுதியபடியோ, அவைகளின்மீது எங்களின் யுத்தங்களின் வரலாறுகள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

15 என் பிதாக்களின் கட்டளைகளின்படியே, இத்தகடுகள் பாதுகாக்கப்பட்டிருக்கும்பொருட்டு, இவைகளை என் குமாரனாகிய, ஓம்னியின் கரங்களில் ஒப்படைக்கிறேன்.

And it came to pass that two hundred and thirty and eight years had passed away—after the manner of wars, and contentions, and dissensions, for the space of much of the time.

And I, Jarom, do not write more, for the plates are small. But behold, my brethren, ye can go to the other plates of Nephi; for behold, upon them the records of our wars are engraven, according to the writings of the kings, or those which they caused to be written.

And I deliver these plates into the hands of my son Omni, that they may be kept according to the commandments of my fathers.

# ஓம்னியின் புஸ்தகம்

1 இதோ, அந்தப்படியே, ஓம்னியாகிய நான், எங்க-
ளின் வம்சவரலாற்றைப் பாதுகாக்க, இந்தத் தகடு-
களின்மீது நான் சிறிதாகிலும் எழுதவேண்டுமென்-
று, என் தகப்பன் யாரோமால் கட்டளையிடப்பட்டி-
ருக்கிறேன்.
2 ஆகையால் என்னுடைய நாட்களில் என் ஜனமா-
கிய நேபியர்களை, தங்களின் விரோதிகளாகிய
லாமானியர்களின் கரங்களுக்குள் விழாமல் பாது-
காக்க, நான் அதிகமாய் பட்டயத்தினால் சண்டை-
யிட்டேன், என்று நீங்கள் அறியவேண்டுமென வி-
ரும்புகிறேன். ஆனால் இதோ, நானே ஒரு துன்-
மார்க்கன், நான் கைக்கொண்டிருக்கவேண்டியபடி,
கர்த்தருடைய விதிகளையும், கட்டளைகளையும்
கைக்கொள்ளவில்லை.
3 அந்தப்படியே, இருநூற்று எழுபத்தாறு வருஷங்-
கள் கழிந்துசென்றன. அநேக சமாதானமான கா-
லங்களும் இருந்தன கொடிய யுத்தங்களும் இரத்தம்
சிந்துதலுமிருந்த அநேக காலங்களுமிருந்தன.
ஆம், இறுதியாக இருநூற்று எண்பத்திரண்டு வரு-
ஷங்கள் கழிந்து சென்றன. என் பிதாக்களின் கட்ட-
ளைகளின்படியே இந்தத் தகடுகளை நான் வைத்-
திருந்தேன். நான் அவைகளை என் குமாரனாகிய
அமரோனிடத்தில் ஒப்படைத்தேன். நான் இத்துடன்
முடிக்கிறேன்.
4 இப்பொழுது அமரோனாகிய நான், கொஞ்சமாய்
எழுதுகிற யாதொரு காரியத்தையும் என் தகப்-
பனின் புஸ்தகத்திலே எழுதுகிறேன்.
5 இதோ, அந்தப்படியே, முன்னூற்று இருபது வரு-
ஷங்கள் கழிந்துசென்றன, நேபியர்களின் பெரும்-
பகுதி துன்மார்க்கர்கள் அழிக்கப்பட்டார்கள்.
6 அவர்களை எருசலேமின் தேசத்திலிருந்து வெ-
ளியே வழிநடத்தி, தங்களின் விரோதிகளின் கரங்க-
ளுக்குள் விழுவதிலிருந்து விலக்கிப் பாதுகாத்த
பின்னர், நீங்கள் என் கட்டளைகளைக் கைக்-
கொள்ளாமல் இருக்கிற அளவில் தேசத்திலே வி-
ருத்தியடையமாட்டீர்கள், என்று கர்த்தர் எங்கள் பி-
தாக்களிடம் பேசிய வார்த்தைகள் மெய்ப்பிக்கப்ப-
டாமல் விடார்.
7 ஆகையால் கர்த்தர் அவர்களைப் பெரிய நியா-
யத்தீர்ப்பிலே விசாரித்தார்; ஆயினும் அவர், நீதி-
மான்கள் அழிந்துபோகாதபடி அவர்களைக் காத்-
துக்கொண்டார், ஆனால், அவர்களின் விரோதிக-
ளின் கரங்களிலிருந்து அவர்களைத் தப்புவித்தார்.
8 அந்தப்படியே, என் சகோதரனாகிய கெமீஸிடம்
இத்தகடுகளை ஒப்படைத்தேன்.

# The Book of Omni

Behold, it came to pass that I, Omni, being commanded by my father, Jarom, that I should write somewhat upon these plates, to preserve our genealogy—

Wherefore, in my days, I would that ye should know that I fought much with the sword to preserve my people, the Nephites, from falling into the hands of their enemies, the Lamanites. But behold, I of myself am a wicked man, and I have not kept the statutes and the commandments of the Lord as I ought to have done.

And it came to pass that two hundred and seventy and six years had passed away, and we had many seasons of peace; and we had many seasons of serious war and bloodshed. Yea, and in fine, two hundred and eighty and two years had passed away, and I had kept these plates according to the commandments of my fathers; and I conferred them upon my son Amaron. And I make an end.

And now I, Amaron, write the things whatsoever I write, which are few, in the book of my father.

Behold, it came to pass that three hundred and twenty years had passed away, and the more wicked part of the Nephites were destroyed.

For the Lord would not suffer, after he had led them out of the land of Jerusalem and kept and preserved them from falling into the hands of their enemies, yea, he would not suffer that the words should not be verified, which he spake unto our fathers, saying that: Inasmuch as ye will not keep my commandments ye shall not prosper in the land.

Wherefore, the Lord did visit them in great judgment; nevertheless, he did spare the righteous that they should not perish, but did deliver them out of the hands of their enemies.

And it came to pass that I did deliver the plates unto my brother Chemish.

9 இப்பொழுது கெமீஸாகிய நான் என் சகோதரன்
எழுதிய அதே புஸ்தகத்தில் நான் எழுத நினைத்த
சில காரியங்களை எழுதுகிறேன்; ஏனெனில் இதோ,
அவன் கடைசியாய் எழுதியதை நான் கண்டேன்;
அதை அவன் தன் சொந்த கரத்தினால் எழுதி-
னான். அவைகளை என்னிடம் அவன் ஒப்ப-
டைத்த நாளிலே அதை அவன் எழுதினான். இந்த
விதமாக நாங்கள் பதிவேடுகளை வைத்திருந்-
தோம், ஏனெனில் அது எங்கள் பிதாக்களின் கட்ட-
ளைகளுக்கேற்றபடி அமைந்தது. இத்துடன் நான்
முடிக்கிறேன்.

Now I, Chemish, write what few things I write, in the same book with my brother; for behold, I saw the last which he wrote, that he wrote it with his own hand; and he wrote it in the day that he delivered them unto me. And after this manner we keep the records, for it is according to the commandments of our fathers. And I make an end.

10 இதோ, நான் கெமீஸின் குமாரனாகிய ஆபிநா-
தோம். இதோ, அந்தப்படியே, என் ஜனமாகிய நேபி-
யர்களுக்கும், லாமானியர்களுக்குமிடையே அதிக-
மான யுத்தத்தையும், பிணக்கையும் கண்டேன். என்
சகோதரர்களைப் பாதுகாப்பதற்காக, அநேக லா-
மானியர்களின் ஜீவனை என் சொந்தப் பட்டயத்-
தால் வாங்கிப்போட்டேன்.

Behold, I, Abinadom, am the son of Chemish. Behold, it came to pass that I saw much war and contention between my people, the Nephites, and the Lamanites; and I, with my own sword, have taken the lives of many of the Lamanites in the defence of my brethren.

11 இதோ, தலைமுறைகளுக்கேற்ப இந்த ஜனங்க-
ளைப்பற்றிய பதிவு ராஜாக்கள் வைத்திருந்த தகடு-
கள் மீது பதிக்கப்பட்டிருந்தது; எழுதப்பட்டிருக்கும்
வெளிப்படுத்தல்களையும் தீர்க்கதரிசனங்களை-
யும் தவிர, வேறெதையும் நான் அறியேன். ஆகை-
யால் போதுமானது எழுதப்பட்டிருக்கிறது. நான்
இத்துடன் முடிக்கிறேன்.

And behold, the record of this people is engraven upon plates which is had by the kings, according to the generations; and I know of no revelation save that which has been written, neither prophecy; wherefore, that which is sufficient is written. And I make an end.

12 இதோ, நான் ஆபிநாதோமின் குமாரனாகிய அம-
லேக்கி. இதோ, சாரகெம்லா தேசத்தின்மீது ராஜா-
வாக்கப்பட்ட மோசியாவைக் குறித்துச் சற்றே உங்க-
ளிடத்தில் நான் பேசுவேன்; ஏனெனில் இதோ,
அவன் நேபியின் தேசத்திலிருந்து வெளியேற-
வேண்டுமெனவும், எவ்வளவுபேர் கர்த்தரின் சத்-
தத்திற்குச் செவிகொடுக்கிறார்களோ அவர்க-
ளனைவரும், அவனுடன்கூட தேசத்திலிருந்து வெ-
ளியேறி, வனாந்தரத்திற்குள் செல்லவேண்டுமென-
வும் கர்த்தரால் அவன் எச்சரிக்கப்பட்டான்.

Behold, I am Amaleki, the son of Abinadom. Behold, I will speak unto you somewhat concerning Mosiah, who was made king over the land of Zarahemla; for behold, he being warned of the Lord that he should flee out of the land of Nephi, and as many as would hearken unto the voice of the Lord should also depart out of the land with him, into the wilderness—

13 அந்தப்படியே, கர்த்தர் அவனிடம் கட்டளையிட்-
டிருந்தபடியே, அவன் செய்தான். கர்த்தருடைய சத்-
தத்திற்குச் செவிகொடுத்த யாவரும் தேசத்திலிருந்-
து வெளியேறி வனாந்தரத்திற்குள் புகுந்தார்கள்.
அவர்கள் அநேக பிரசங்கங்களாலும், தீர்க்கதரி-
சனங்களாலும் வழிநடத்தப்பட்டார்கள். அவர்கள்
தொடர்ந்து தேவனுடைய வார்த்தையால் அறிவு-
றுத்தப்பட்டார்கள், அவர்கள் சாரகெம்லா தேச-
மென்று அழைக்கப்படுகிற தேசத்திற்குள் வரும்வ-
ரைக்கும், வனாந்தரத்தின் வழியே அவரின் புயத்-
தின் வல்லமையால் வழிநடத்தப்பட்டார்கள்.

And it came to pass that he did according as the Lord had commanded him. And they departed out of the land into the wilderness, as many as would hearken unto the voice of the Lord; and they were led by many preachings and prophesyings. And they were admonished continually by the word of God; and they were led by the power of his arm, through the wilderness until they came down into the land which is called the land of Zarahemla.

14 சாரகெம்லாவின் ஜனங்கள் என்றழைக்கப்பட்ட
ஒரு ஜனத்தை அவர்கள் கண்டுபிடித்தார்கள். இப்-
பொழுது சாரகெம்லாவின் ஜனங்கள் மத்தியிலே
பெரும் ஆர்ப்பரித்தல் இருந்தது. ஏனெனில், யூதர்க-
ளின் வரலாறு அடங்கிய பித்தளைத் தகடுகளுடன்
மோசியாவின் ஜனங்களைக் கர்த்தர் அனுப்பினதி-
னிமித்தம், சாரகெம்லா மிகவும் ஆர்ப்பரித்தான்.

And they discovered a people, who were called the people of Zarahemla. Now, there was great rejoicing among the people of Zarahemla; and also Zarahemla did rejoice exceedingly, because the Lord had sent the people of Mosiah with the plates of brass which contained the record of the Jews.

15 இதோ, அந்தப்படியே, யூதாவின் ராஜாவாகிய சி-
தேக்கியா பாபிலோனுக்கு சிறைபிடிக்கப்பட்டுக்
கொண்டு செல்லப்பட்ட காலத்தின்போது, எருசலே-
மிலிருந்து சாரகெம்லாவின் ஜனங்கள் வெளியே
வந்தார்கள் என்று மோசியா கண்டுபிடித்தான்.

Behold, it came to pass that Mosiah discovered that the people of Zarahemla came out from Jerusalem at the time that Zedekiah, king of Judah, was carried away captive into Babylon.

16 அவர்கள் வனாந்தரத்தில் பயணம் செய்து, மோ-
சியா அவர்களைக் கண்டுபிடித்த தேசத்திற்குள்,
கர்த்தருடைய கரத்தால் பெரிய தண்ணீர்களைக்
கடந்து கொண்டுவரப்பட்டார்கள், அதுமுதற்-
கொண்டு அங்கேயே அவர்கள் வாசம் செய்தார்கள்.

And they journeyed in the wilderness, and were brought by the hand of the Lord across the great waters, into the land where Mosiah discovered them; and they had dwelt there from that time forth.

17 மோசியா அவர்களைக் கண்டுபிடித்த சமயம்
அவர்கள் எண்ணிறைந்தவர்களாய் இருந்தனர்.
ஆயினும் அவர்கள் அநேக யுத்தங்களையும், கொ-
டிய பிணக்குகளையும் பெற்றிருந்து, அவ்வப்போ-
து பட்டயத்தால் விழுந்தும் போயிருந்தார்கள்.
அவர்களின் பாஷை சீர்குலைந்து போயிருந்தது;
அவர்கள் தங்களுடன் எந்த ஒரு பதிவேட்டையும்
கொண்டுவரவில்லை. தங்களைப் படைத்த சி-
ருஷ்டிகர் ஒருவர் இருப்பதை அவர்கள் மறுத்தார்-
கள். மோசியாவினாலோ, மோசியாவின் ஜனங்க-
ளாலோ அவர்களைப் புரிந்துகொள்ள முடியவில்-
லை.

And at the time that Mosiah discovered them, they had become exceedingly numerous. Nevertheless, they had had many wars and serious contentions, and had fallen by the sword from time to time; and their language had become corrupted; and they had brought no records with them; and they denied the being of their Creator; and Mosiah, nor the people of Mosiah, could understand them.

18 ஆனால், அந்தப்படியே, மோசியா தன் பாஷையி-
லே அவர்கள் போதிக்கப்படும்படி செய்தான். அந்-
தப்படியே, மோசியாவின் பாஷையிலே அவர்கள்
போதிக்கப்பட்ட பின்னர், சாரகெம்லா தன் நினை-
விலுள்ளபடியே, தன் பிதாக்களின் வம்சவரலாற்-
றையும் கொடுத்தான். அவைகள் எழுதப்படுகின்-
றன; ஆனால் இந்த தகடுகளிலல்ல.

But it came to pass that Mosiah caused that they should be taught in his language. And it came to pass that after they were taught in the language of Mosiah, Zarahemla gave a genealogy of his fathers, according to his memory; and they are written, but not in these plates.

19 அந்தப்படியே, சாரகெம்லா ஜனங்களும், மோசி-
யாவின் ஜனங்களும் ஒன்றாய் இணைந்தார்கள்;
அவர்களின் ராஜாவாக மோசியா நியமிக்கப்பட்-
டான்.

And it came to pass that the people of Zarahemla, and of Mosiah, did unite together; and Mosiah was appointed to be their king.

20 அந்தப்படியே, மோசியாவின் காலங்களிலே, பொ-
றிக்கப்பட்டவைளைக்கொண்ட ஒரு பெரிய கல்
அவனிடத்தில் கொண்டுவரப்பட்டது; அவன் தே-
வனுடைய வரத்தினாலும் வல்லமையினாலும்,
பொறிக்கப்பட்டவைகளை வியாக்கியானம் பண்-
ணினான்.

And it came to pass in the days of Mosiah, there was a large stone brought unto him with engravings on it; and he did interpret the engravings by the gift and power of God.

21 கொரியாந்தமர் என்பவனைக்குறித்தும், அவன்
ஜனத்தார் கொலையுண்டதைக்குறித்தும் ஒரு விவ-
ரத்தை அவை கொடுத்தன. கொரியாந்தமர், சார-
கெம்லாவின் ஜனங்களால் கண்டுபிடிக்கப்பட்-
டான். ஒன்பது திங்கள் வரைக்கும் அவர்களுடன்
தங்கியிருந்தான்.

And they gave an account of one Coriantumr, and the slain of his people. And Coriantumr was discovered by the people of Zarahemla; and he dwelt with them for the space of nine moons.

22 அது அவனுடைய பிதாக்களைக்குறித்த சில
வார்த்தைகளைத் தெரிவித்தது. ஜனத்தினுடைய
பாஷையைக் கர்த்தர் தாறுமாறாக்கிய சமயத்தின்-
போது அவனுடைய முதற்பெற்றோர்கள் கோபுரத்-
திலிருந்து வந்தார்கள்; கர்த்தருடைய நியாயத்
தீர்ப்புகளின்படியே அவர்கள்மீது கர்த்தரின் கொ-
டிய ஆக்கினை விழுந்தது, அவை நியாயமான-
வை. அவர்களின் எலும்புகள் வடக்கேயுள்ள தே-
சத்திலே சிதறிக்கிடந்தன.

It also spake a few words concerning his fathers. And his first parents came out from the tower, at the time the Lord confounded the language of the people; and the severity of the Lord fell upon them according to his judgments, which are just; and their bones lay scattered in the land northward.

23 இதோ, மோசியாவின் காலங்களிலே, அமலேக்கி-
யாகிய நான் பிறந்தேன்; அவன் மரணத்தைக்கா-
ணும் வரைக்குமாக நான் வாழ்ந்திருக்கிறேன்;
அவனுக்குப் பதிலாக அவன் குமாரனாகிய பென்-
யமீன் அரசாளுகிறான்.

Behold, I, Amaleki, was born in the days of Mosiah; and I have lived to see his death; and Benjamin, his son, reigneth in his stead.

24 இதோ பென்யமீன் ராஜாவின் காலத்திலே நேபி-
யர்களுக்கும் லாமானியர்களுக்குமிடையே கொ-
டிய யுத்தத்தையும் மற்றும் இரத்தம் சிந்துதலையும்
கண்டிருக்கிறேன். ஆனால் இதோ, சாரகெம்லாவின்
தேசத்தைவிட்டு பென்யமீன் ராஜா அவர்களை
வெளியே துரத்துமளவுக்கு, அவர்கள்மீது நேபியர்-
கள் அதிக பெலன் பெற்றிருந்தார்கள்.

And behold, I have seen, in the days of king Benjamin, a serious war and much bloodshed between the Nephites and the Lamanites. But behold, the Nephites did obtain much advantage over them; yea, insomuch that king Benjamin did drive them out of the land of Zarahemla.

25 அந்தப்படியே, நான் முதிர்வயதடையலானேன்.
எனக்கு சந்ததியார் இல்லாமற்போனதினாலும்,
கர்த்தருக்கு முன்பாக நியாயவானாய் பென்யமீன்
ராஜா இருக்கிறானென்று அறிந்தபடியாலும்,
அவனிடத்தில் இந்தத் தகடுகளை ஒப்படைத்து,
தீர்க்கதரிசனமுரைப்பதிலும், வெளிப்படுத்தல்க-
ளிலும், தூதர்களின் பணிவிடைகளிலும், பாஷை-
களைப் பேசும் வரத்திலும், பாஷைகளை வியாக்-
கியானம்பண்ணும் வரத்திலும், நல்லதான எல்லா
காரியத்திலும் விசுவாசித்து, இஸ்ரவேலின் பரிசுத்-
தராகிய தேவனிடத்தில் எல்லா மனுஷரும் வர-
வேண்டுமென்று புத்திசொல்லுகிறேன். ஏனெனில்
கர்த்தரிடத்திலிருந்து வருவதைத் தவிர வேறு எது-
வும் நல்லதல்ல. கேடானவைகள் பிசாசினிடத்திலி-
ருந்து வருகிறது.

And it came to pass that I began to be old; and, having no seed, and knowing king Benjamin to be a just man before the Lord, wherefore, I shall deliver up these plates unto him, exhorting all men to come unto God, the Holy One of Israel, and believe in prophesying, and in revelations, and in the ministering of angels, and in the gift of speaking with tongues, and in the gift of interpreting languages, and in all things which are good; for there is nothing which is good save it comes from the Lord: and that which is evil cometh from the devil.

26 இப்பொழுது, என் அன்புச் சகோதரரே, நீங்கள்
இஸ்ரவேலின் பரிசுத்தராகிய கிறிஸ்துவினிடத்தில்
வந்து, அவரின் இரட்சிப்பிலும், அவரின் மீட்பின்
வல்லமையிலும் பங்கேற்கவேண்டுமென்று நான்
விரும்புகிறேன். ஆம் அவரிடத்தில் வந்து, உங்கள்
முழுஆத்துமாக்களை அவருக்குக் காணிக்கை-
யாக அளித்து, உபவாசத்திலும் ஜெபத்திலும் தொ-
டர்ந்திருந்து முடிவுபரியந்தம் நிலைநிற்பீர்களாக;
கர்த்தர் ஜீவிக்கிறபடியால் நீங்கள் இரட்சிக்கப்படு-
வீர்கள்.

And now, my beloved brethren, I would that ye should come unto Christ, who is the Holy One of Israel, and partake of his salvation, and the power of his redemption. Yea, come unto him, and offer your whole souls as an offering unto him, and continue in fasting and praying, and endure to the end; and as the Lord liveth ye will be saved.

27 இப்பொழுது, நேபியின் தேசத்திற்கு திரும்பிப்-
போக வனாந்தரத்திற்குள் போன சிலரைக்குறித்-
துச் சற்றே பேசுகிறேன்; ஏனெனில், தங்கள் சுதந்திர
தேசத்தை அடைய அநேகர் ஆவலாயிருந்தனர்.

And now I would speak somewhat concerning a certain number who went up into the wilderness to return to the land of Nephi; for there was a large number who were desirous to possess the land of their inheritance.

28 ஆகையால், அவர்கள் வனாந்தரத்தினுள் போ-
னார்கள். அவர்களின் தலைவன் பலசாலியாயும்,
பராக்கிரமனாயும், வணங்காக் கழுத்துடையவனா-
யும் இருந்தபடியால் அவர்கள் மத்தியில் ஒரு பி-
ணக்கு ஏற்படச் செய்தான்; ஐம்பது பேரைத் தவிர
மற்றனைவரும் வனாந்தரத்திலே கொலையுண்-
டார்கள், அவர்கள் மறுபடியும் சாரகெம்லாவிற்குத்
திரும்பினார்கள்.

Wherefore, they went up into the wilderness. And their leader being a strong and mighty man, and a stiffnecked man, wherefore he caused a contention among them; and they were all slain, save fifty, in the wilderness, and they returned again to the land of Zarahemla.

29 அந்தப்படியே, அவர்கள் இன்னும் குறிப்பிடத்-
தக்க வகையில் அநேகரைக் கூட்டிக்கொண்டு,
மீண்டும் தங்கள் பயணத்தை வனாந்தரத்திற்குள்
மேற்கொண்டார்கள்.

And it came to pass that they also took others to a considerable number, and took their journey again into the wilderness.

30 அமலேக்கியான எனக்கு, அவர்களுடனே போன
ஒரு சகோதரனுமிருந்தான். அவர்களைக் குறித்து
அக்காலமுதல் இன்னும் நான் அறியவில்லை.
நான் என் கல்லறையிலே படுக்கவிருக்கிறேன். இந்-
தத் தகடுகள் முழுமையாயிற்று. நான் பேசுவதை
முடித்துக்கொள்கிறேன்.

And I, Amaleki, had a brother, who also went with them; and I have not since known concerning them. And I am about to lie down in my grave; and these plates are full. And I make an end of my speaking.

# மார்மனின் வார்த்தைகள்

1 இப்பொழுது, மார்மனாகிய நான் எழுதிக்கொண்டி-
ருந்த பதிவேட்டை என் குமாரனாகிய, மரோனியின்
கரங்களில் ஒப்படைக்க இருக்கும்போது, இதோ, நே-
பியர்களாகிய என் ஜனங்கள், ஏறக்குறைய முழுவ-
துமாய் அழிந்துபோவதை நான் கண்டிருக்கிறேன்.

2 கிறிஸ்துவினுடைய வருகையின் நூற்றுக்க-
ணக்கான ஆண்டுகளுக்குப்பின், இந்தப் பதிவேடு-
களை என் குமாரனின் கைகளில் ஒப்புவிக்கிறேன்;
அவன் என் ஜனத்தின் முழு அழிவையும் காண்-
பான் என்று அனுமானிக்கிறேன். அவன் அவர்க-
ளுக்குப்பின் பிழைத்திருந்து, சற்றே அவர்களைக்
குறித்தும், கிறிஸ்துவைக் குறித்தும் எழுதும்படியா-
யும், என்றாவது அது அவர்களுக்குப் பிரயோஜன-
மாயிருக்கும்படிக்கு தேவன் அருளுவாராக.

3 இப்பொழுது, நான் எழுதியவற்றைக் குறித்து சற்-
றே பேசுகிறேன்; ஏனெனில் அமலேக்கியினால் பே-
சப்பட்ட இந்தப் பென்யமீன் ராஜாவினுடைய
ஆளுகைவரைக்கும், நேபியின் தகடுகளிலிருந்து
ஒரு சுருக்கத்தை நான் செய்துமுடித்த பின்னர், என்
கரங்களிலே ஒப்படைக்கப்பட்ட பதிவேடுகளை
ஆராய்ந்து, யாக்கோபுவிலிருந்து இந்த பென்யமீன்
ராஜாவின் ஆளுகை வரைக்கும் இருந்த தீர்க்கதரி-
சிகளைப்பற்றிய ஒரு சிறிய விவரத்தையும், நேபி-
யின் அநேக வார்த்தைகளையும் கொண்டிருக்கிற
இந்தத் தகடுகளைக் கண்டேன்.

4 இந்தத் தகடுகளின் மீது இருக்கிற காரியங்கள் கி-
றிஸ்துவினுடைய வருகையைக் குறித்த தீர்க்கதரி-
சனங்களாதலால் எனக்குப் பிரியமானவையாய்
இருக்கின்றன, அவைகளில் அநேகம் நிறைவேறி-
யது, என்று என் பிதாக்கள் அறிந்திருந்தார்கள்.
ஆம், இந்த நாள்வரைக்கும் எங்களைக் குறித்து
தீர்க்கதரிசனமாய் உரைத்த அநேகக் காரியங்கள் நி-
றைவேறின என்றும், இந்த நாளுக்குப் பின்னர்
உரைக்கப்படும் அநேகமும், மெய்யாகவே சம்பவிக்-
கும் என்றும், நானும் அறிந்திருக்கிறேன்.

5 ஆகையால் என் பதிவேட்டினை இந்தக் காரியங்-
களுடன் முடிக்க இவைகளைத் தேர்ந்தெடுத்தேன்.
என் பதிவேடுகளில் மீதியானவற்றை நேபியின்
தகடுகளிலிருந்து எடுப்பேன்; என் ஜனத்தினு-
டைய காரியங்களில் நூற்றில் ஒரு பங்கைக் கூட
என்னால் எழுதமுடியவில்லை.

6 ஆனால் இதோ, இந்தத் தகடுகளில் அடங்கியிருக்-
கிற இந்தத் தீர்க்கதரிசனங்களும், வெளிப்படுத்தல்-
களும் எனக்கு சிறப்பாய் இருக்கிறபடியாலே,
அவைகளை எடுத்து, என் பதிவேட்டின் மீதியான-
வற்றுடன் சேர்ப்பேன். அவைகள் என் சகோதரருக்-
கும் சிறப்பாய் இருக்குமென அறிந்திருக்கிறேன்.

# The Words of Mormon

And now I, Mormon, being about to deliver up the record which I have been making into the hands of my son Moroni, behold I have witnessed almost all the destruction of my people, the Nephites.

And it is many hundred years after the coming of Christ that I deliver these records into the hands of my son; and it supposeth me that he will witness the entire destruction of my people. But may God grant that he may survive them, that he may write somewhat concerning them, and somewhat concerning Christ, that perhaps some day it may profit them.

And now, I speak somewhat concerning that which I have written; for after I had made an abridgment from the plates of Nephi, down to the reign of this king Benjamin, of whom Amaleki spake, I searched among the records which had been delivered into my hands, and I found these plates, which contained this small account of the prophets, from Jacob down to the reign of this king Benjamin, and also many of the words of Nephi.

And the things which are upon these plates pleasing me, because of the prophecies of the coming of Christ; and my fathers knowing that many of them have been fulfilled; yea, and I also know that as many things as have been prophesied concerning us down to this day have been fulfilled, and as many as go beyond this day must surely come to pass—

Wherefore, I chose these things, to finish my record upon them, which remainder of my record I shall take from the plates of Nephi; and I cannot write the hundredth part of the things of my people.

But behold, I shall take these plates, which contain these prophesyings and revelations, and put them with the remainder of my record, for they are choice unto me; and I know they will be choice unto my brethren.

7 ஒரு ஞானமான நோக்கத்திற்காக இதைச் செய்கி-
றேன், ஏனெனில், எனக்குள் இருக்கிற கர்த்தரு-
டைய ஆவியானவரின் கிரியைகளின்படியே, இவ்-
வாறாக என்னிடம் மெல்லிய குரலில் உரைக்கிறது.
இப்பொழுது, நான் அனைத்துக் காரியங்களையும்
அறியேன். ஆனால் வரப்போகிற அனைத்துக் காரி-
யங்களையும் கர்த்தர் அறிந்திருக்கிறார்; ஆகை-
யால் தன் சித்தத்தின்படியே செய்ய, எனக்குள்
அவர் கிரியை செய்கிறார்.

And I do this for a wise purpose; for thus it whispereth me, according to the workings of the Spirit of the Lord which is in me. And now, I do not know all things; but the Lord knoweth all things which are to come; wherefore, he worketh in me to do according to his will.

8 என் சகோதரர்கள் மீண்டும் விரும்பத்தக்க ஜன-
மாயிருந்து, தேவனுடைய அறிவிற்கும், ஆம், கி-
றிஸ்துவினுடைய மீட்புக்கும், மீண்டும் அவர்கள்
வரவேண்டுமென்பதே தேவனிடத்தில் அவர்க-
ளைக் குறித்த என் ஜெபமாயிருக்கிறது.

And my prayer to God is concerning my brethren, that they may once again come to the knowledge of God, yea, the redemption of Christ; that they may once again be a delightsome people.

9 இப்பொழுது மார்மனாகிய நான், நேபியின் தகடு-
களிலிருந்து எடுக்கிற என் பதிவேட்டை முடிக்கப்
போகிறேன். தேவனால் எனக்குக் கொடுக்கப்பட்ட
ஞானத்தினாலும், விவேகத்தின்படியேயும் அதைச்
செய்கிறேன்.

And now I, Mormon, proceed to finish out my record, which I take from the plates of Nephi; and I make it according to the knowledge and the understanding which God has given me.

10 ஆனபடியால், பென்யமீன் ராஜாவின் கரங்களுக்-
குள் அமலேக்கி இந்தப் பதிவேடுகளை ஒப்ப-
டைத்த பின்னர், பென்யமீன் ராஜாவின் காலம்
வரைக்கும், தலைமுறை தலைமுறையாக ராஜாக்-
களால் கொடுக்கப்பட்ட, பதிவேடுகளைக்
கொண்ட, மற்ற தகடுகளுடன், அவன் அதை எடுத்-
துச் சேர்த்தான்.

Wherefore, it came to pass that after Amaleki had delivered up these plates into the hands of king Benjamin, he took them and put them with the other plates, which contained records which had been handed down by the kings, from generation to generation until the days of king Benjamin.

11 என் கரங்களுக்குள் அவை வரும்வரைக்கும்,
தலைமுறை தலைமுறையாக, பென்யமீன் ராஜா-
விடமிருந்து அவைகள் கொடுக்கப்பட்டன. மார்-
மனாகிய நான், இந்தக் காலம் முதற்கொண்டு,
அவை பாதுகாக்கப்படவேண்டும், என்று தேவனி-
டத்தில் ஜெபிக்கிறேன். அவை பாதுகாக்கப்படு-
மென நான் அறிவேன்; ஏனெனில் அவைகளில்
எழுதப்பட்டிருக்கிற மகத்துவமான காரியங்களிலி-
ருந்து, என் ஜனமும் அவர்களின் சகோதரர்களும்,
எழுதப்பட்டிருக்கிற தேவனுடைய வார்த்தையின்-
படியே, அந்த பெரிதும் இறுதியுமான நாளிலே நியா-
யந்தீர்க்கப்படுவார்கள்.

And they were handed down from king Benjamin, from generation to generation until they have fallen into my hands. And I, Mormon, pray to God that they may be preserved from this time henceforth. And I know that they will be preserved; for there are great things written upon them, out of which my people and their brethren shall be judged at the great and last day, according to the word of God which is written.

12 இப்பொழுது இந்த பென்யமீன் ராஜாவைக்குறித்-
து, அவன் சொந்த ஜனத்தின் மத்தியிலே பிணக்கு-
கள் சற்றே இருந்துவந்தன.

And now, concerning this king Benjamin—he had somewhat of contentions among his own people.

13 அந்தப்படியே, அவன் ஜனத்திற்கு விரோதமாய்ப்
போரிட நேபியின் தேசத்திலிருந்து, லாமானியர்க-
ளின் சேனைகள் வந்தன. ஆனால் இதோ, பென்ய-
மீன் ராஜா தன் சேனைகளை ஒன்றாய்த் திரட்டி,
அவர்களை எதிர்த்து நின்றான். தன் சொந்த புயத்-
தின் ஆற்றலோடு, லாபானுடைய பட்டயத்தைக்
கொண்டு சண்டையிட்டான்.

And it came to pass also that the armies of the Lamanites came down out of the land of Nephi, to battle against his people. But behold, king Benjamin gathered together his armies, and he did stand against them; and he did fight with the strength of his own arm, with the sword of Laban.

14 ஆயிரக்கணக்கான லாமானியர்களை அவர்கள்
கொன்றுபோடும்வரைக்கும் தங்களின் விரோதிக-
ளுக்கு எதிராய், கர்த்தருடைய பெலத்தில் போராடி-
னார்கள். அந்தப்படியே, தங்களின் எல்லா சுதந்தர
தேசங்களிலிருந்தும் லாமானியர்களைத் துரத்தும்-
வரைக்கும் அவர்களுக்கு விரோதமாய்ப் போராடி-
னார்கள்.

And in the strength of the Lord they did contend against their enemies, until they had slain many thousands of the Lamanites. And it came to pass that they did contend against the Lamanites until they had driven them out of all the lands of their inheritance.

15 அந்தப்படியே, கள்ளக் கிறிஸ்துக்கள் இருந்து,
அவர்களின் வாய்கள் அடைக்கப்பட்டு, அவர்க-
ளின் குற்றங்களுக்குத் தக்கதாக தண்டிக்கப்பட்ட
பின்னரும்,

And it came to pass that after there had been false Christs, and their mouths had been shut, and they punished according to their crimes;

16 ஜனங்கள் மத்தியிலே கள்ளத் தீர்க்கதரிசிகள்,
கள்ளப் பிரசங்கிகள், மற்றும் ஆசிரியர்களிருந்து,
அவர்கள் அனைவரும் தங்களின் குற்றங்களின்ப-
டியே தண்டிக்கப்பட்ட பின்னரும், லாமானியர்களி-
டம், அதிக அளவிலே பிணக்கும், பிரிவினையுமி-
ருந்தும், அதிகமானோர் பிரிந்த பின்பு, இதோ, அந்-
தப்படியே, பென்யமீன் ராஜா தன் ஜனங்கள் மத்தி-
யிலிருந்த பரிசுத்த தீர்க்கதரிசிகளின் உதவியுடன்,

And after there had been false prophets, and false preachers and teachers among the people, and all these having been punished according to their crimes; and after there having been much contention and many dissensions away unto the Lamanites, behold, it came to pass that king Benjamin, with the assistance of the holy prophets who were among his people—

17 இதோ, பென்யமீன் ராஜா ஒரு பரிசுத்த மனுஷனா-
யிருந்தான். அவன் தன் ஜனங்களை நீதியிலே ராஜ-
ரீகம் பண்ணினான். அந்தத் தேசத்திலே அநேக பரி-
சுத்தவான்கள் இருந்தார்கள், அவர்கள் தேவனு-
டைய வார்த்தையை வல்லமையோடும் அதிகாரத்-
தோடும் பேசினார்கள். ஜனத்தினுடைய வணங்-
காக்கழுத்தின் நிமித்தம் அதிகக் கடுமையை உப-
யோகித்தார்கள்.

For behold, king Benjamin was a holy man, and he did reign over his people in righteousness; and there were many holy men in the land, and they did speak the word of God with power and with authority; and they did use much sharpness because of the stiffneckedness of the people—

18 ஆகவே, இவர்களது உதவியுடன், தன் சரீரத்தின்
சகல ஊக்கத்தோடும், தன் முழு ஆத்துமாவின் தி-
றத்தாலும், பென்யமீன் ராஜாவும், தீர்க்கதரிசிகளும்
பாடுபட்டு, மீண்டும் தேசத்திலே சமாதானத்தை ஸ்-
தாபித்தார்கள்.

Wherefore, with the help of these, king Benjamin, by laboring with all the might of his body and the faculty of his whole soul, and also the prophets, did once more establish peace in the land.

# மோசியாவின் புஸ்தகம்

## மோசியா 1

1 இப்பொழுதும் சாரகெம்லா தேசமனைத்திலும்,
பென்யமீன் ராஜாவைச் சார்ந்த ஜனங்களுக்குள்
எந்த ஒரு பிணக்குமில்லாமல் இருந்தது. ஆதலால்
பென்யமீன் ராஜா தன் மீதி நாட்கள் முழுவதிலும்
தொடர்ந்து சமாதானமாயிருந்தான்.
2 அந்தப்படியே, அவனுக்கு மூன்று குமாரர்களி-
ருந்தார்கள். அவர்களை மோசியா, ஏலோரம், ஏல-
மன் என்ற பெயர்களால் அழைத்தான். கர்த்தரு-
டைய கரத்தால் தங்கள் பிதாக்களுக்கு ஒப்படைக்-
கப்பட்டு, அவர்களின் நாவுகளினால் பேசப்பட்ட
தீர்க்கதரிசனங்களைக் குறித்து இவர்கள் அறியும்-
படிக்கும், புரிந்துகொள்ளுதலையுடைய மனுஷர்-
களாகும்படிக்கும், தன் பிதாக்களின் சகல பாஷை-
களிலும் அவர்கள் போதிக்கப்படும்படிச் செய்தான்.
3 அவன் பித்தளைத் தகடுகளின்மீது பதிக்கப்பட்-
டிருக்கிற பதிவுகளைக் குறித்து அவர்களுக்குப்
போதித்து சொன்னதாவது: என் குமாரரே, இந்தப்
பதிவுகளும், கட்டளைகளும் அடங்கியிருக்கிற
இத்தகடுகள் இல்லையெனில் இச்சமயத்தில் கூட
நாம் அறியாமையிலே தவித்து, தேவனுடைய இரக-
சியங்களை அறியாதிருப்போம், என்பதை நீங்கள்
நினைவுகூரவேண்டுமென, நான் விரும்புகிறேன்.
4 இந்தத் தகடுகளின் உதவியிராமல் இருந்திருக்கு-
மேயானால், நம் தகப்பனாகிய லேகி தன் பிள்ளை-
களுக்கு இந்தக் காரியங்கள் அனைத்தையும் நி-
னைவில்கொண்டு, போதிக்கக் கூடாமற் போயிருக்-
கும்; அவர் எகிப்தியரின் பாஷையிலே போதிக்கப்-
பட்டமையால், பொறிக்கப்பட்ட இவைகளை வா-
சித்து, தன் பிள்ளைகளுக்கு அவைகளை போதித்-
து, அதன்படி அவர்கள் தங்களுடைய பிள்ளைக-
ளுக்கும் போதித்து இப்படியாய் இச்சமயம்வரைக்-
கும் தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றி-
னார்.
5 என் குமாரரே, நாம் வாசிக்கவும் அவருடைய இர-
கசியங்களை அறியவும், அவருடைய கட்டளைக-
ளை நித்தமும் நம்முடைய கண்களுக்கு முன்பாக
நிறுத்தவும், தேவனுடைய கரத்தால் பாதுகாத்து
வைக்கப்பட்ட இந்த காரியங்கள் இல்லையெனில்,
நம் பிதாக்களும் அவிசுவாசத்திலே படிப்படியாக
நலிந்து போயிருப்பார்கள். இந்தக் காரியங்களைக்
குறித்து ஒன்றும் அறியாதவர்களும், அவைக-
ளைக் குறித்து போதிக்கப்படுகிறபோதும், தங்க-
ளின் பிதாக்களின் தவறான பாரம்பரியங்களினி-
மித்தம், அவைகளை விசுவாசியாத நம்முடைய
சகோதரர்களாகிய லாமானியர்களைப்போல, நா-
மும் இருந்திருப்போமென்று உங்களுக்குச் சொல்-
லுகிறேன்.

# The Book of Mosiah

## Mosiah 1

And now there was no more contention in all the land of Zarahemla, among all the people who belonged to king Benjamin, so that king Benjamin had continual peace all the remainder of his days.

And it came to pass that he had three sons; and he called their names Mosiah, and Helorum, and Helaman. And he caused that they should be taught in all the language of his fathers, that thereby they might become men of understanding; and that they might know concerning the prophecies which had been spoken by the mouths of their fathers, which were delivered them by the hand of the Lord.

And he also taught them concerning the records which were engraven on the plates of brass, saying: My sons, I would that ye should remember that were it not for these plates, which contain these records and these commandments, we must have suffered in ignorance, even at this present time, not knowing the mysteries of God.

For it were not possible that our father, Lehi, could have remembered all these things, to have taught them to his children, except it were for the help of these plates; for he having been taught in the language of the Egyptians therefore he could read these engravings, and teach them to his children, that thereby they could teach them to their children, and so fulfilling the commandments of God, even down to this present time.

I say unto you, my sons, were it not for these things, which have been kept and preserved by the hand of God, that we might read and understand of his mysteries, and have his commandments always before our eyes, that even our fathers would have dwindled in unbelief, and we should have been like unto our brethren, the Lamanites, who know nothing concerning these things, or even do not believe them when they are taught them, because of the traditions of their fathers, which are not correct.

6 என் குமாரரே, சொல்லப்பட்ட இவை உண்மையானவை என்றும், இந்தப் பதிவேடுகளும் உண்மையானவை என்றும், நீங்கள் நினைவில் கொள்ளவேண்டுமென நான் வாஞ்சிக்கிறேன். இதோ, நம் பிதாக்கள் எருசலேமிலிருந்து வந்த காலம் தொடங்கி இந்நாள் வரைக்கும், நம் பிதாக்களின் குறிப்புக்களும், அவர்கள் சொன்னவையும் அடங்கியிருக்கிற நேபியின் தகடுகள் உண்மையானவை; நம் கண்களுக்கு முன்பாக அவைகள் இருக்கிறபடியாலே அவைகளின் நிச்சயத்தையும் நாம் அறியலாம்.

O my sons, I would that ye should remember that these sayings are true, and also that these records are true. And behold, also the plates of Nephi, which contain the records and the sayings of our fathers from the time they left Jerusalem until now, and they are true; and we can know of their surety because we have them before our eyes.

7 இப்பொழுதும் என் குமாரரே, நீங்கள் பிரயோஜனப்பட, அவைகளை கருத்தாய் தேட வேண்டுமென நான் விரும்புகிறேன். நம் பிதாக்களுக்கு கர்த்தர் செய்த வாக்குத்தத்தங்களின்படியே, தேசத்திலே நீங்கள் விருத்தியடையும்படிக்கு, தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளவேண்டுமென, நான் விரும்புகிறேன்.

And now, my sons, I would that ye should remember to search them diligently, that ye may profit thereby; and I would that ye should keep the commandments of God, that ye may prosper in the land according to the promises which the Lord made unto our fathers.

8 இப்புஸ்தகத்தில் எழுதப்பட்டிராத இன்னும் அநேக காரியங்களை பென்யமீன் ராஜா தன் குமாரர்களுக்குப் போதித்தான்.

And many more things did king Benjamin teach his sons, which are not written in this book.

9 அந்தப்படியே, பென்யமீன் ராஜா தன் குமாரர்களுக்கு போதித்து முடித்த பின்பு, அவன் பூரண வயதாகி, பூமியின் அனைவரும் சென்ற வழியே தானும் சீக்கிரமாய் செல்லவேண்டுமெனக் கண்டான்; அதனால் ராஜ்யபாரத்தை தன் குமாரர்களில் ஒருவன் மீது சூட்டுவது அவசியமென்று எண்ணினான்.

And it came to pass that after king Benjamin had made an end of teaching his sons, that he waxed old, and he saw that he must very soon go the way of all the earth; therefore, he thought it expedient that he should confer the kingdom upon one of his sons.

10 ஆகையால் மோசியா தனக்கு முன்பாக அழைத்து வரப்பட்ட பின்னர், அவனை நோக்கி இவன் பேசிய வார்த்தைகள் இவைகளே: என் குமாரனே, இந்த தேவனாகிய நம் கர்த்தர் நமக்குக் கொடுத்த என் ஜனத்திற்கு, நீயே ராஜாவாகவும், அதிகாரியாகவும் இருப்பாயென்று, என்னுடைய சொந்த நாவினால் இந்த ஜனத்திற்கு நாளை நான் அறிவிக்க, சாரகெம்லாவின் ஜனமாகிய இந்த ஜனமும், இந்த தேசத்திலே வாசமாயிருக்கிற மோசியாவின் ஜனமும் ஒன்றாய்க்கூடும்படிக்கு, இந்த தேசம் முழுவதிலும் நீ ஒரு பிரகடனத்தை அனுப்புவாயாக.

Therefore, he had Mosiah brought before him; and these are the words which he spake unto him, saying: My son, I would that ye should make a proclamation throughout all this land among all this people, or the people of Zarahemla, and the people of Mosiah who dwell in the land, that thereby they may be gathered together; for on the morrow I shall proclaim unto this my people out of mine own mouth that thou art a king and a ruler over this people, whom the Lord our God hath given us.

11 மேலும் எருசலேம் தேசத்திலிருந்து தேவனாகிய கர்த்தர் கொண்டுவந்த எல்லா ஜனங்களிலும் இந்த ஜனம் வேறுபட்டிருக்க, இவர்களுக்கு ஒரு நாமத்தைத் தரிப்பேன்; கர்த்தருடைய கட்டளைகளை கைக்கொள்வதில் ஒரு கருத்துள்ள ஜனமாய் அவர்கள் இருந்ததினிமித்தம் இப்படிச் செய்வேன்.

And moreover, I shall give this people a name, that thereby they may be distinguished above all the people which the Lord God hath brought out of the land of Jerusalem; and this I do because they have been a diligent people in keeping the commandments of the Lord.

12 அவர்களின் மீறுதல்களினாலே அல்லாமல், எப்பொழுதும் நீங்கப்பெறாத ஒரு நாமத்தை அவர்களுக்குக் கொடுப்பேன்.

And I give unto them a name that never shall be blotted out, except it be through transgression.

13 ஆம், கர்த்தருக்கு மிகவும் பிரியமான இந்த ஜனம்
மீறுதலில் விழுந்து, துன்மார்க்கராயும் விபச்சார-
முள்ள ஜனமாயுமானார்களெனில், அவர்களு-
டைய சகோதரர்களைப்போல அவர்களும் மெலிந்-
துபோகும்படிக்கு, கர்த்தர் அவர்களை ஒப்புவிப்-
பார், நம்முடைய பிதாக்களை அவர் இதுகாலம்
வரைக்கும் பாதுகாத்துள்ளது போல, இனி ஒருபோ-
தும் இவர்களை தம்முடைய நிகரற்ற மகத்துவ-
மான வல்லமையால் காத்துக்கொள்ள மாட்டா-
ரென்றும் உனக்கு மேலும் சொல்லுகிறேன்.
14 ஏனெனில் அவர் நமது பிதாக்களைக் காக்க தம்
புயத்தை நீட்டாமலிருந்திருப்பாரெனில், அவர்கள்
லாமானியர்களின் கரங்களுக்குள் விழுந்து, அவர்-
களின் வெறுப்புக்கு ஆளாகியிருப்பார்கள், என்று
உனக்குச் சொல்லுகிறேன்.
15 அந்தப்படியே, பென்யமீன் ராஜா தன் குமாரனி-
டம் இந்த வார்த்தைகளைப் பேசி முடித்த பின்பு, ரா-
ஜ்யத்தின் சகல விவகாரங்களைக் குறித்த பொறுப்-
பை அவனிடம் கொடுத்தான்.
16 மேலும் பித்தளைத் தகடுகளின்மீதும் நேபியின்
தகடுகளின் மீதும் கூட பொறிக்கப்பட்டிருந்த பதி-
வுகள், லாபானின் பட்டயம் மற்றும் வனாந்தரத்தி-
னுள் எங்கள் பிதாக்களை வழிநடத்திச் சென்றதும்,
அவர்கள் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு செவி-
சாய்த்து, கருத்தாயிருப்பதற்கேற்ப அவர்கள் வழி-
நடத்தப்படவும், அவருடைய கரத்தால் ஆயத்தம்-
பண்ணப்பட்டதுமான, அந்த உருண்டை அல்லது
வழிகாட்டியினுடைய பொறுப்பையும், அவனிடத்-
தில் கொடுத்தான்.
17 ஆதலால் அவர்கள் அவிசுவாசிகளானபோது,
அவர்கள் விருத்தியடையாமலும் தங்கள் பிரயா-
ணத்தில் முன்னேறாமலும் பின்னோக்கித் துரத்தப்-
பட்டு, தங்கள் மீது தேவனுடைய கோபாக்கினை-
யை வரவழைத்தார்கள். ஆதலால் தங்களின் கட-
மையைக்குறித்து அவர்கள் எண்ணிப்பார்க்கும்ப-
டி பஞ்சத்தாலும், கொடிய உபத்திரவங்களினாலும்
அடிக்கப்பட்டார்கள்.
18 இப்பொழுதும், அந்தப்படியே, மோசியா போய்,
தன் தகப்பன் தனக்குக் கட்டளையிட்டிருந்தபடியே
செய்து, சாரகெம்லா தேசத்திலே இருந்த சகல ஜன-
மும் தங்களுக்குள்ளே ஒன்றாய்க்கூடி, தன் தகப்-
பன் அவர்களுக்கு பேசவிருக்கிற வார்த்தைக-
ளைக் கேட்கும்பொருட்டு, ஆலயத்திற்கு போகும்ப-
டி அவர்களுக்கு அறிவித்தான்.

Yea, and moreover I say unto you, that if this highly favored people of the Lord should fall into transgression, and become a wicked and an adulterous people, that the Lord will deliver them up, that thereby they become weak like unto their brethren; and he will no more preserve them by his matchless and marvelous power, as he has hitherto preserved our fathers.

For I say unto you, that if he had not extended his arm in the preservation of our fathers they must have fallen into the hands of the Lamanites, and become victims to their hatred.

And it came to pass that after king Benjamin had made an end of these sayings to his son, that he gave him charge concerning all the affairs of the kingdom.

And moreover, he also gave him charge concerning the records which were engraven on the plates of brass; and also the plates of Nephi; and also, the sword of Laban, and the ball or director, which led our fathers through the wilderness, which was prepared by the hand of the Lord that thereby they might be led, every one according to the heed and diligence which they gave unto him.

Therefore, as they were unfaithful they did not prosper nor progress in their journey, but were driven back, and incurred the displeasure of God upon them; and therefore they were smitten with famine and sore afflictions, to stir them up in remembrance of their duty.

And now, it came to pass that Mosiah went and did as his father had commanded him, and proclaimed unto all the people who were in the land of Zarahemla that thereby they might gather themselves together, to go up to the temple to hear the words which his father should speak unto them.

# மோசியா 2

1 அந்தப்படியே, மோசியா தன் தகப்பன் தனக்கு கட்ட-
ளையிட்டிருந்தபடி செய்து, தேசமெங்கிலுமுள்ள
ஜனங்கள் ஆலயத்திற்குப் போய் தங்களுக்கு பென்-
யமீன் ராஜா பேசவிருக்கிற வார்த்தைகளைக் கேட்-
கும்படி ஏகமாய் கூடும்படிக்கு தேசமுழுவதிலும்
அறிவித்தான்.

2 அவர்கள் அதிகமாய் பெருகி தேசத்திலே மிகுதி-
யாய் பலுகியிருந்ததால், அதிக எண்ணிக்கையில்
இருந்தபடியாலே அவர்களை எண்ணக்கூடாமற்
போயிற்று.

3 மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படியே பலிக-
ளையும் தகனபலிகளையும் செலுத்தும்படிக்கும்;

4 அவர்கள் களிகூர்ந்து தேவனிடத்திலும் எல்லா
மனுஷரிடத்திலும் அன்பால் நிறைக்கப்பட்டிருக்-
கும்பொருட்டு, தேவனுடைய கட்டளைகளை
அவர்கள் கைக்கொள்ளும்படி போதித்தவரும் சார-
கெம்லா தேசத்தில் அமைதியை நிலவச் செய்தவரு-
மான, ஒரு நியாயவானை அவர்களின் ராஜாவாக
நியமித்தவரும், அவர்களை எருசலேம் தேசத்திலி-
ருந்து நடத்திக்கொண்டு வந்தவரும், அவர்களின்
சத்துருக்களின் கைகளுக்கு அவர்களைத் தப்பு-
வித்தவரும், நியாயவான்களை அவர்களின் ஆசி-
ரியர்களாகவும் நியமித்தவரான கர்த்தராகிய தங்க-
ளின் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுக்கவும், தங்-
கள் மந்தைகளிலே முதற்பலன்களையும் எடுத்துச்
சென்றார்கள்.

5 அந்தப்படியே, அவர்கள் ஆலயத்திற்கு வந்தபோ-
து, ஒவ்வொரு மனுஷனும், தன் தன் மனைவி, மூத்-
தவர் தொடங்கி இளையவர் வரைக்குமான தன்
தன் குமாரர்கள், குமாரத்திகள் மற்றும் அவர்களின்
குமாரர்கள் குமாரத்திகள் அடங்கிய, தன் தன் கு-
டும்பத்திற்குத் தக்கதாக மற்ற குடும்பத்திலிருந்து
ஒவ்வொரு குடும்பமும் தனித்திருக்கும்படி, தங்க-
ளின் கூடாரங்களைச் சுற்றிலும் போட்டார்கள்.

6 அவர்கள் கூடாரங்களிலே இருந்துகொண்டே
பென்யமீன் ராஜா பேசவிருக்கிற வார்த்தைகளைக்
கேட்கும்பொருட்டு, ஒவ்வொரு மனுஷனும் தன்
தன் கூடாரத்தின் வாசல், ஆலயத்தை நோக்கியி-
ருக்கும்படி, ஆலயத்தைச் சுற்றிலும் தங்களின் கூ-
டாரங்களைப் போட்டார்கள்.

7 திரள்கூட்டம் அதிகமாய் இருந்ததாலே பென்ய-
மீன் ராஜாவால் ஆலயத்தின் மதில்களின் உட்புறத்-
திலிருந்து அவர்கள் அனைவருக்கும் போதிக்க மு-
டியாமற்போயிற்று, ஆகவே தன் ஜனம் தான் அவர்-
களிடம் பேசவிருக்கும் வார்த்தைகளைக் கேட்கும்-
படி ஒரு கோபுரத்தைக் கட்டச்செய்வித்தான்.

# Mosiah 2

And it came to pass that after Mosiah had done as his father had commanded him, and had made a proclamation throughout all the land, that the people gathered themselves together throughout all the land, that they might go up to the temple to hear the words which king Benjamin should speak unto them.

And there were a great number, even so many that they did not number them; for they had multiplied exceedingly and waxed great in the land.

And they also took of the firstlings of their flocks, that they might offer sacrifice and burnt offerings according to the law of Moses;

And also that they might give thanks to the Lord their God, who had brought them out of the land of Jerusalem, and who had delivered them out of the hands of their enemies, and had appointed just men to be their teachers, and also a just man to be their king, who had established peace in the land of Zarahemla, and who had taught them to keep the commandments of God, that they might rejoice and be filled with love towards God and all men.

And it came to pass that when they came up to the temple, they pitched their tents round about, every man according to his family, consisting of his wife, and his sons, and his daughters, and their sons, and their daughters, from the eldest down to the youngest, every family being separate one from another.

And they pitched their tents round about the temple, every man having his tent with the door thereof towards the temple, that thereby they might remain in their tents and hear the words which king Benjamin should speak unto them;

For the multitude being so great that king Benjamin could not teach them all within the walls of the temple, therefore he caused a tower to be erected, that thereby his people might hear the words which he should speak unto them.

8 அந்தப்படியே, அவன் கோபுரத்திலிருந்து தன்
ஜனங்களுடன் பேச ஆரம்பித்தான்; திரள்கூட்டம்
அதிகமாய் இருந்ததினாலே அவர்கள் அனைவரும்
அவனுடைய வார்த்தைகளை கேட்க முடியாமற்-
போயிற்று; ஆதலால் அவன் தன் சத்தம் எட்டாத-
வர்கள் எல்லோரும் தன் வார்த்தைகளைப் பெறும்-
படிக்கு, அவன் தான் பேசும் வார்த்தைகள் எழுதப்-
படவும் அவர்களுக்குள்ளே அனுப்பப்படவும் செய்-
தான்.

And it came to pass that he began to speak to his people from the tower; and they could not all hear his words because of the greatness of the multitude; therefore he caused that the words which he spake should be written and sent forth among those that were not under the sound of his voice, that they might also receive his words.

9 அவன் பேசி எழுதும்படிச் செய்த வார்த்தைகள்
இவைகளே: என் சகோதரரே, நான் இத்தினத்திலே
உங்களுக்கு பேசவிருக்கும் வார்த்தைகளைக்
கேட்க ஏகமாய் கூடியிருக்கும் நீங்களெல்லோரும்,
நான் பேசப்போகும் வார்த்தைகளை அற்பமாய்
எண்ண இங்கே கூட கட்டளையிடாமல், நீங்கள்
எனக்கு செவிகொடுத்து கேட்கும்படி உங்கள் செவி-
களையும், புரிந்துகொள்ளும்படி உங்கள் இருதயங்-
களையும், உங்கள் பார்வைக்கு தேவனுடைய இரக-
சியங்கள் வெளிப்படுத்தப்படும்படிக்கு உங்கள்
மனங்களையும் திறந்து வைக்கக் கட்டளையிடுகி-
றேன்.

And these are the words which he spake and caused to be written, saying: My brethren, all ye that have assembled yourselves together, you that can hear my words which I shall speak unto you this day; for I have not commanded you to come up hither to trifle with the words which I shall speak, but that you should hearken unto me, and open your ears that ye may hear, and your hearts that ye may understand, and your minds that the mysteries of God may be unfolded to your view.

10 எனக்கு நீங்கள் அஞ்சவோ, மரிக்கும் அநித்திய
மனுஷனிலும் என்னை மேன்மையானவன், என்-
று எண்ணவோ இங்கே வரவேண்டுமென்று, நான்
உங்களுக்கு கட்டளையிடவில்லை.

I have not commanded you to come up hither that ye should fear me, or that ye should think that I of myself am more than a mortal man.

11 நானும் உங்களைப்போல சரீரத்திலும், மனதிலும்
சகல வித பெலவீனங்களுக்கும் உட்பட்டவனாய்
இருந்தும், இந்த ஜனத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு
என் தகப்பனால் அபிஷேகம்பண்ணப்பட்டு, இந்த
ஜனத்தின்மீது ராஜாவாகவும், அதிகாரியாகவும்
இருக்கும்படி கர்த்தரின் கரத்தால் அனுமதிக்கப்பட்-
டுள்ளேன். எனக்குக் கர்த்தர் அருளிய சகல ஊக்-
கத்தோடும், மனதோடும் பெலத்தோடும் உங்களுக்கு
சேவை செய்ய அவருடைய இணையற்ற வல்ல-
மையினால் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கிறேன்.

But I am like as yourselves, subject to all manner of infirmities in body and mind; yet I have been chosen by this people, and consecrated by my father, and was suffered by the hand of the Lord that I should be a ruler and a king over this people; and have been kept and preserved by his matchless power, to serve you with all the might, mind and strength which the Lord hath granted unto me.

12 நான் உங்களுக்குச் சொல்வது என்னவெனில்,
இச்சமயம்வரைக்கும் உங்களுடைய சேவையிலே
நாட்களைக் கழிக்க நான் அனுமதிக்கப்பட்டேன்;
உங்களின் எவ்விதமான சம்பத்துக்களையோ,
பொன்னையோ, வெள்ளியையோ நான் நாடவில்-
லை.

I say unto you that as I have been suffered to spend my days in your service, even up to this time, and have not sought gold nor silver nor any manner of riches of you;

13 நீங்கள் காவற்கிடங்கியிலே அடைபடும்படியோ,
ஒருவரையொருவர் அடிமைகளாக கொண்டிருக்க-
வோ, நீங்கள் கொலை, அபகரிப்பு, திருட்டு, விபச்-
சாரம் புரியவோ உங்களை நான் அனுமதிக்கவில்-
லை; நீங்கள் எவ்விதமான துன்மார்க்கத்தைச்
செய்யவும் நான் அனுமதிக்கவில்லை; சகல காரி-
யங்களிலும் கர்த்தர் உங்களுக்கு கட்டளையிட்ட,
அவரது கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டு-
மென போதித்தேன்.

Neither have I suffered that ye should be confined in dungeons, nor that ye should make slaves one of another, nor that ye should murder, or plunder, or steal, or commit adultery; nor even have I suffered that ye should commit any manner of wickedness, and have taught you that ye should keep the commandments of the Lord, in all things which he hath commanded you—

14 நீங்கள் வரிகளால் சுமத்தப்படக்கூடாதென்றும், சகிப்பதற்கு கடுமையானதொன்றும் உங்களின்மீது வராதபடிக்கும் நான் உங்களுக்குச் சேவை செய்யும் பொருட்டு என் சொந்த கரங்களாலே பிரயாசப்பட்டேன், நான் பேசின இந்த எல்லாக் காரியங்களுக்கும் நீங்களே இந்நாளிலே சாட்சிகளாக இருக்கிறீர்கள்.

And even I, myself, have labored with mine own hands that I might serve you, and that ye should not be laden with taxes, and that there should nothing come upon you which was grievous to be borne—and of all these things which I have spoken, ye yourselves are witnesses this day.

15 ஆயினும் என் சகோதரரே, நான் மேன்மை பாராட்டும்படிக்கு இந்தக் காரியங்களைச் செய்யவில்லை; நான் இந்தக் காரியங்களைச் சொல்வதின் மூலமாக உங்களைக் குற்றப்படுத்தவும் இவற்றைச் சொல்லவில்லை; ஆனால் இந்நாளிலே, தேவனுக்கு முன்பாக தெளிந்த மனசாட்சியோடு பதிலளிக்க என்னால் இயலுமென்று, நீங்கள் அறியும்படிக்கே இந்தக் காரியங்களை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Yet, my brethren, I have not done these things that I might boast, neither do I tell these things that thereby I might accuse you; but I tell you these things that ye may know that I can answer a clear conscience before God this day.

16 இதோ, உங்களுக்குச் சேவை செய்வதில் என் நாட்களைக் கழித்தேன் என்று உங்களுக்குச் சொன்னதினிமித்தம் நான் மேன்மை பாராட்ட விரும்பவில்லை; ஏனெனில் நான் தேவனுடைய சேவையில் மாத்திரமே இருந்திருக்கிறேன், என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Behold, I say unto you that because I said unto you that I had spent my days in your service, I do not desire to boast, for I have only been in the service of God.

17 இதோ, நீங்கள் ஞானத்தைக் கற்கவும், உங்கள் சகமனுஷருக்கு நீங்கள் சேவை செய்யும்போது, தேவனுக்கே சேவை செய்கிறீர்களென்று நீங்கள் கற்றுக்கொள்ளவுமே, இந்தக் காரியங்களை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And behold, I tell you these things that ye may learn wisdom; that ye may learn that when ye are in the service of your fellow beings ye are only in the service of your God.

18 இதோ, என்னை உங்களுடைய ராஜா என்று அழைத்தீர்கள்; உங்கள் ராஜா என்று நீங்கள் அழைக்கிற நான், உங்களுக்குச் சேவை செய்ய பிரயாசப்படுகிறேன் என்றால், நீங்கள் ஒருவருக்கொருவர் சேவை செய்ய பிரயாசப்படக்கூடாதா?

Behold, ye have called me your king; and if I, whom ye call your king, do labor to serve you, then ought not ye to labor to serve one another?

19 இதோ, நீங்கள் ராஜா என்று அழைக்கிற நான், உங்கள் சேவையிலே என் நாட்களைக் கழித்திருந்தும், தேவனுடைய சேவையிலே இருப்பதால், உங்களின் நன்றிக்கு உரித்தானவனாயிருக்கிறேன், நீங்கள் உங்கள் பரலோக ராஜாவிற்கு எவ்வளவாய் நன்றி செலுத்த வேண்டும்!

And behold also, if I, whom ye call your king, who has spent his days in your service, and yet has been in the service of God, do merit any thanks from you, O how you ought to thank your heavenly King!

20 என் சகோதரரே, உங்களுக்கு நான் சொல்வது என்னவெனில், உங்களை சிருஷ்டித்து, உங்களைக் கவனித்து, பாதுகாத்து, நீங்கள் களிகூரும்படிச் செய்து, நீங்கள் ஒருவரிலொருவர் சமாதானமாய் வாழ அருளிய, அந்த தேவனுக்கு உங்கள் முழு ஆத்துமா பெற்றிருக்கக் கூடிய வல்லமையாலே சகல நன்றியையும், துதியையும் செலுத்தினாலும்,

I say unto you, my brethren, that if you should render all the thanks and praise which your whole soul has power to possess, to that God who has created you, and has kept and preserved you, and has caused that ye should rejoice, and has granted that ye should live in peace one with another—

21 நான் உங்களுக்குச் சொல்வது என்னவென்றால், பூர்வத்திலே உங்களைச் சிருஷ்டித்து, நீங்கள் ஜீவித்து இயங்கி உங்களின் சுயசிந்தனையின் பிரகாரமாய் நீங்கள் நடக்க உங்களுக்குப் பிராணனைக் கடனாய் அளித்து ஒவ்வொரு கணமும், அவ்வப்போது உங்களை ஆதரிக்கிறவரை, உங்களுடைய முழு ஆத்துமாக்களோடு நீங்கள் சேவித்தாலும், நீங்கள் பிரயோஜனமற்ற ஊழியர்களாகவே இருப்பீர்கள் என்று நான் சொல்கிறேன்

I say unto you that if ye should serve him who has created you from the beginning, and is preserving you from day to day, by lending you breath, that ye may live and move and do according to your own will, and even supporting you from one moment to another—I say, if ye should serve him with all your whole souls yet ye would be unprofitable servants.

22 இதோ, அவர் உங்களிடத்தில் எதிர்பார்ப்பதெல்லாம் தம்முடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவேண்டுமென்பதே; அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வீர்களெனில் நீங்கள் தேசத்திலே விருத்தியடைவீர்கள், என்று உங்களிடத்தில் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார்; தாம் சொன்னதிலிருந்து அவர் என்றும் மாறாதவர்; ஆதலால் அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்வீர்களெனில் அவர் உங்களை ஆசீர்வதித்து விருத்தியடையச் செய்கிறார்.

And behold, all that he requires of you is to keep his commandments; and he has promised you that if ye would keep his commandments ye should prosper in the land; and he never doth vary from that which he hath said; therefore, if ye do keep his commandments he doth bless you and prosper you.

23 இப்பொழுதும் முதலாவதாக, அவர் உங்களைச் சிருஷ்டித்து, உங்களுக்கு உங்கள் பிராணனை அருளினார், அதற்காக அவருக்கு நீங்கள் கடன்பட்டவர்களாயிருக்கிறீர்கள்.

And now, in the first place, he hath created you, and granted unto you your lives, for which ye are indebted unto him.

24 இரண்டாவதாக, அவர் உங்களுக்கு தாம் கட்டளையிட்டபடியே நீங்கள் செய்யவேண்டுமென விரும்புகிறார்; அப்படிச் செய்வீர்களெனில் உடனுக்குடன் உங்களை ஆசீர்வதிக்கிறார், ஆகவே உங்களுக்கு கொடுத்திருக்கிறார். இதினிமித்தம் நீங்கள் அவருக்கு இப்பொழுதும் இனி என்றென்றுமாயும் கடன்பட்டவர்களாயிருக்கிறீர்கள்; ஆதலால், எதைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டுவீர்கள்?

And secondly, he doth require that ye should do as he hath commanded you; for which if ye do, he doth immediately bless you; and therefore he hath paid you. And ye are still indebted unto him, and are, and will be, forever and ever; therefore, of what have ye to boast?

25 இப்பொழுதும் உங்களைக் குறித்து நீங்கள் ஏதேனும் சொல்லக்கூடுமா என்று கேட்கிறேன். இல்லை, என்று உங்களுக்குப் பதிலளிக்கிறேன். நீங்கள் பூமியின் தூசியால் சிருஷ்டிக்கப்பட்டிருந்தும், பூமியினுடைய தூசிக்கு ஒப்பானவர்கள் என்று நீங்கள் சொல்லக்கூடாமற் போகிறது. ஆனால் இதோ, அதுவும் உங்களைச் சிருஷ்டித்தவருக்கு சொந்தமானதே.

And now I ask, can ye say aught of yourselves? I answer you, Nay. Ye cannot say that ye are even as much as the dust of the earth; yet ye were created of the dust of the earth; but behold, it belongeth to him who created you.

26 உங்களின் ராஜாவென்று அழைக்கப்படுகிற நானும் உங்களிலும் மேன்மையானவனல்ல. ஏனெனில் நானும் தூசியினாலானவனே. இதோ நான் முதிர்வயதானவன் என்றும், இந்த நித்தியமற்ற சரீரத்தை அதன் தாய் பூமிக்கு அர்ப்பணிக்கவிருக்கிறேன் என்றும், நீங்கள் காண்கிறீர்கள்.

And I, even I, whom ye call your king, am no better than ye yourselves are; for I am also of the dust. And ye behold that I am old, and am about to yield up this mortal frame to its mother earth.

27 ஆதலால் நான் உங்களுக்குச் சேவை செய்தேன்
என்று உங்களுக்குச் சொன்னதுபோல, தேவனுக்கு
முன்பாக தெளிந்த மனசாட்சியோடு நடந்து,
அதனாலே அவரால் நியாயம் விசாரிக்க நிற்கும்-
போது, உங்களைப்பற்றி தேவன் எனக்குக் கட்ட-
ளையிட்ட காரியங்களைக்குறித்து, நான் குற்றமற்-
றவனாய் காணப்படவும் உங்களின் இரத்தப்பழி
என்மீது சுமத்தப்படக்கூடாது என்பதற்காகவும் இச்-
சமயத்திலே, நீங்கள் ஏகமாய்க் கூடும்படிச் செய்-
தேன்.

Therefore, as I said unto you that I had served you, walking with a clear conscience before God, even so I at this time have caused that ye should assemble yourselves together, that I might be found blameless, and that your blood should not come upon me, when I shall stand to be judged of God of the things whereof he hath commanded me concerning you.

28 நான் உங்களுக்குச் சொல்வது என்னவெனில்,
என் கல்லறைக்கு போகவிருக்கிற இச்சமயத்திலே,
நான் சமாதானமாய் போகவும், நியாயமுள்ள தே-
வனை உன்னதத்தில் துதித்துப்பாடுகிற கீர்த்-
தனைக்காரரோடே என் நித்திய ஆவி சென்று சேர-
வும், என் வஸ்திரத்தில் இருந்து உங்களுடைய
இரத்தத்தை நீக்கிப்போடவுமே, நீங்கள் ஏகமாய்க்
கூடும்படிச் செய்தேன்.

I say unto you that I have caused that ye should assemble yourselves together that I might rid my garments of your blood, at this period of time when I am about to go down to my grave, that I might go down in peace, and my immortal spirit may join the choirs above in singing the praises of a just God.

29 அன்றியும் நான் இனிமேலும் உங்களின் ஆசிரிய-
ராகவும், ராஜாவாகவும் இருக்க இயலாது என்று
உங்களுக்கு அறிவிக்கவே நீங்கள் ஏகமாய்க்கூடும்-
படிச் செய்தேன், என்று உங்களுக்குச் சொல்லுகி-
றேன்.

And moreover, I say unto you that I have caused that ye should assemble yourselves together, that I might declare unto you that I can no longer be your teacher, nor your king;

30 இச்சமயத்திலும், நான் உங்களிடத்தில் பேச முயற்-
சிக்கையில் என் சரீரம் வெகுவாய் நடுங்குகிறது;
ஆனாலும் கர்த்தராகிய தேவன் எனக்கு உறுது-
ணையாயிருந்து, உங்களை நோக்கி என் குமாரனா-
கிய மோசியா உங்களின் ராஜாவாகவும், அதிகாரி-
யாகவும் இருக்கிறான் என்று, இத்தினத்திலே உங்க-
ளுக்கு அறிவிக்க எனக்கு கட்டளையிட்டு, நான்
உங்களிடம் பேசும்படி செய்தார்.

For even at this time, my whole frame doth tremble exceedingly while attempting to speak unto you; but the Lord God doth support me, and hath suffered me that I should speak unto you, and hath commanded me that I should declare unto you this day, that my son Mosiah is a king and a ruler over you.

31 இப்பொழுதும் என் சகோதரரே, இதுவரைக்கும்
நீங்கள் செய்துவந்ததுபோல, செய்யவேண்டுமென
நான் விரும்புகிறேன். என் கட்டளைகளையும் என்-
னுடைய தகப்பனின் கட்டளைகளையும் கைக்-
கொண்டதினிமித்தம் நீங்கள் விருத்தியடைந்து,
உங்களின் சத்துருக்களின் கைகளுக்குள் விழா-
மல் தப்புவிக்கப்பட்டதுபோல, என் குமாரனின் கட்-
டளைகளையோ, அல்லது உங்களுக்கு அவன் மூ-
லமாய்க் கொடுக்கப்படும் தேவனுடைய கட்டளை-
களையோ, நீங்கள் கைக்கொண்டால் தேசத்திலே
விருத்தியடைவீர்கள்; உங்கள் சத்துருக்கள் உங்க-
ளின் மீது வல்லமை கொள்ளாதிருப்பார்கள்.

And now, my brethren, I would that ye should do as ye have hitherto done. As ye have kept my commandments, and also the commandments of my father, and have prospered, and have been kept from falling into the hands of your enemies, even so if ye shall keep the commandments of my son, or the commandments of God which shall be delivered unto you by him, ye shall prosper in the land, and your enemies shall have no power over you.

32 ஆனால், என் ஜனமே, உங்களுக்குள்ளே பிணக்-
குகள் எழாமலும், என் தகப்பனாகிய மோசியாவால்
பேசப்பட்ட, அந்த அசுத்த ஆவிக்கு நீங்கள் கீழ்ப்ப-
டியாதபடிக்கும் ஜாக்கிரதையாயிருங்கள்.

But, O my people, beware lest there shall arise contentions among you, and ye list to obey the evil spirit, which was spoken of by my father Mosiah.

33 இதோ, தன் இஷ்டப்படியே அந்த ஆவிக்கு கீழ்ப்படிகிறவனுக்கு மகா தண்டனை அறிவிக்கப்பட்டிருக்கிறது; அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்து, தன் பாவங்களிலே நிலைத்திருந்து மரிப்பானெனில், அவன் தன் சொந்த ஆத்துமாவிற்கு ஆக்கினையைத் தேடிக்கொள்ளுகிறான். தன் சொந்த புத்திக்கு விரோதமாய், தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறினதினாலே, தன் சம்பளமாய் நித்திய தண்டனையைப் பெறுவான்.

For behold, there is a wo pronounced upon him who listeth to obey that spirit; for if he listeth to obey him, and remaineth and dieth in his sins, the same drinketh damnation to his own soul; for he receiveth for his wages an everlasting punishment, having transgressed the law of God contrary to his own knowledge.

34 நான் உங்களுக்குச் சொல்வது என்னவெனில், உங்கள் சிறுபிள்ளைகளைத் தவிர, இந்தக் காரியங்களைக் குறித்துப் போதிக்கப்படாதவர்கள் உங்களில் யாருமில்லை; உங்கள் பரலோக பிதாவிற்கு நீங்கள் நித்தியமாய்க் கடன்பட்டு, உங்களையும், நீங்கள் வைத்திருக்கிற எல்லாவற்றையும் அவருக்குக் கொடுக்கவேண்டுமென்று எதை அறிகிறீர்கள்; நம் தகப்பனாகிய லேகி எருசலேமை விட்டு வந்த காலத்திலிருந்து பரிசுத்த தீர்க்கதரிசிகளால் பேசப்பட்ட தீர்க்கதரிசனங்களைக் கொண்டிருக்கிற பதிவேடுகளைக் குறித்தும்;

I say unto you, that there are not any among you, except it be your little children that have not been taught concerning these things, but what knoweth that ye are eternally indebted to your heavenly Father, to render to him all that you have and are; and also have been taught concerning the records which contain the prophecies which have been spoken by the holy prophets, even down to the time our father, Lehi, left Jerusalem;

35 இதுவரைக்கும் நம் பிதாக்கள் பேசின எல்லாவற்றையும் குறித்தும் போதிக்கப்பட்டீர்கள். இதோ, அவர்கள் கர்த்தரால் தங்களுக்கு கட்டளையிடப்பட்டவைகளையும் சொன்னார்கள். ஆகவே அவை நியாயமும், சத்தியமுமானவைகள்.

And also, all that has been spoken by our fathers until now. And behold, also, they spake that which was commanded them of the Lord; therefore, they are just and true.

36 இப்பொழுதும் என் சகோதரரே, நான் உங்களிடத்தில் சொல்வது என்னவெனில், நீங்கள் இந்த சகல காரியங்களைக் குறித்து போதிக்கப்பட்டு, அறிந்த பின்னரும் பேசப்பட்டவைகளுக்கு விரோதமாய்ப்போய், அக்கிரமத்தைச் செய்வீர்களெனில், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு, விருத்தியடைந்து, பாதுகாக்கப்படும்படி ஞானத்தின் பாதைகளிலே உங்களை நடத்துவதற்கு, கர்த்தருடைய ஆவியானவர் உங்களுக்குள்ளே வாசம் கொள்ளாதபடி நீங்கள் அவரிடமிருந்து விலகிப்போகிறீர்கள்.

And now, I say unto you, my brethren, that after ye have known and have been taught all these things, if ye should transgress and go contrary to that which has been spoken, that ye do withdraw yourselves from the Spirit of the Lord, that it may have no place in you to guide you in wisdom's paths that ye may be blessed, prospered, and preserved—

37 நான் உங்களிடத்தில் சொல்வது என்னவெனில், இப்படிச் செய்கிற மனுஷன் தேவனுக்கு விரோதமாய் வெளிப்படையாய் கலகத்தினுள் இறங்குகிறான்; ஆகையால் அவன் அசுத்த ஆவிக்கு கீழ்ப்படிகிறவன், நீதியான யாவற்றுக்கும் சத்துருவாகிறான். ஆகையால் அசுத்த ஆலயங்களிலே வாசம் கொள்ளாததினிமித்தம், அவனுக்குள் கர்த்தர் தரித்திருப்பதில்லை.

I say unto you, that the man that doeth this, the same cometh out in open rebellion against God; therefore he listeth to obey the evil spirit, and becometh an enemy to all righteousness; therefore, the Lord has no place in him, for he dwelleth not in unholy temples.

38 ஆகையால், அந்த மனுஷன் மனந்திரும்பாமலி-
ருந்து தேவனுக்கு பகையாளியாயிருந்து மரிப்பா-
னெனில், தெய்வீக நீதியின் தேவைகள் தன்னு-
டைய சொந்த குற்றத்தின் தெளிந்த உணர்ச்சிக்கு
அவனுடைய அழியாத ஆத்துமாவை எழுப்புகிற-
து; அது கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து
அவனை விலகச்செய்து, என்றென்றைக்குமாய்
எழும்புகிற ஜூவாலைகளைக்கொண்ட அவியாத
அக்கினியைப்போன்ற, குற்றமும், வேதனையும்,
வியாகுலமும் அவன் மார்பை நிறைக்கிறது.

Therefore if that man repenteth not, and remaineth and dieth an enemy to God, the demands of divine justice do awaken his immortal soul to a lively sense of his own guilt, which doth cause him to shrink from the presence of the Lord, and doth fill his breast with guilt, and pain, and anguish, which is like an unquenchable fire, whose flame ascendeth up forever and ever.

39 இப்பொழுதும் நான் உங்களுக்குச் சொல்வது
என்னவெனில், அந்த மனுஷனுக்கு இரக்கத்தின்
உரிமையில்லை. ஆகவே முடிவற்ற வேதனையைச்
சகிப்பதே அவனுடைய கடைசி அழிவாயிருக்கும்.

And now I say unto you, that mercy hath no claim on that man; therefore his final doom is to endure a never-ending torment.

40 என் வார்த்தைகளைப் புரிந்து கொள்ளக்கூடிய
முதியோரே, வாலிபரே, சிறுபிள்ளைகளே, நீங்கள்
புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக உங்களி-
டத்தில் தெளிவாய்ப் பேசியுள்ளேன். மீறுதலில் வி-
ழுந்தவர்களின் அஞ்சத்தக்க நிலைமையை நி-
னைவுகூர நீங்கள் விழித்தெழ ஜெபிக்கிறேன்.

O, all ye old men, and also ye young men, and you little children who can understand my words, for I have spoken plainly unto you that ye might understand, I pray that ye should awake to a remembrance of the awful situation of those that have fallen into transgression.

41 மேலும் தன் தேவனுடைய கட்டளைகளைக்
கைக்கொள்ளுபவர்களின் ஆசீர்வாதமானதும்,
மகிழ்ச்சியானதுமான நிலையை நீங்கள் சிந்தித்-
துப் பார்க்கவேண்டுமென நான் விரும்புகிறேன்.
ஏனெனில் இதோ, ஆவிக்குரியதும் லௌகீகமான-
துமான சகல காரியங்களிலும் அவர்கள் ஆசீர்வ-
திக்கப்பட்டவர்கள்; அவர்கள் முடிவுபரியந்தமும்
உண்மையுள்ளவர்களாய் நிலைத்திருப்பார்களெ-
னில் முடிவற்ற மகிழ்ச்சியுள்ள நிலையிலே தே-
வனோடு வாசம் செய்யும்படி பரலோகத்திற்குள்
எடுத்துக்கொள்ளப்படுவார்கள். கர்த்தராகிய தே-
வன் இதைப் பேசியிருப்பதாலே, இந்தக் காரியங்-
கள் சத்தியமானவை என்று நினைவுகூருங்கள், நி-
னைவுகூருங்கள்.

And moreover, I would desire that ye should consider on the blessed and happy state of those that keep the commandments of God. For behold, they are blessed in all things, both temporal and spiritual; and if they hold out faithful to the end they are received into heaven, that thereby they may dwell with God in a state of never-ending happiness. O remember, remember that these things are true; for the Lord God hath spoken it.

# மோசியா 3

1 என் சகோதரரே, உங்களிடத்தில் இன்னும் சற்றே
அதிகமாக பேச வேண்டியிருப்பதினாலே உங்கள்
கவனத்தை செலுத்துமாறு அழைக்கிறேன். ஏனெ-
னில் இதோ, வரப்போகிற காரியங்களைக் குறித்து
நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதிருக்கிறது.
2 உங்களிடத்தில் நான் சொல்லவிருக்கும் காரியங்-
கள் தேவனிடத்திலிருந்து வந்த ஒரு தூதனால்
எனக்கு அறிவிக்கப்பட்டன. அவன் என்னை
நோக்கி விழித்தெழு என்றான்; நான் விழித்தெழுந்-
தேன். இதோ அவன் என் முன்பாக நின்றான்.
3 அவன் என்னை நோக்கி: விழித்தெழு. நான்
சொல்லவிருக்கிற வார்த்தைகளைக் கேள்; ஏனெ-
னில் இதோ, மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்குகிற
நற்செய்தியை உனக்கு அறிவிக்கவே வந்திருக்கி-
றேன், என்றான்.
4 ஏனெனில் கர்த்தர் உனது விண்ணப்பங்களைக்
கேட்டு, உனது நீதியைப்பற்றி தீர்மானித்து, நீ களி-
கூர்ந்திருக்கும்படி உனக்கு அறிவிக்கவும்; உனது
ஜனமும் சந்தோஷத்தினால் நிறையும்படி அவர்க-
ளுக்கு நீ அறிவிக்கவும், என்னை அனுப்பினார்.
5 ஏனெனில் இதோ அநாதியாய் என்றென்றைக்கும்
இருக்கிறவரும், இருந்தவரும், ராஜரீகம்பண்ணுகி-
றவருமான, சர்வவல்ல கர்த்தர் வல்லமையோடு
பரலோகத்திலிருந்து மனுபுத்திரர்களிடையே
இறங்கிவந்து, களிமண்ணிலான கூடாரத்திலே வா-
சம்பண்ணி, மனுஷருக்குள்ளே சென்று, வியாதி-
யஸ்தர்களை சொஸ்தப்படுத்தி, மரித்தோரை
எழும்பப்பண்ணி, சப்பாணிகளை நடக்கச்செய்து,
குருடர்களை பார்வையடையும்படிச் செய்து, செ-
விடரைக் கேட்கச்செய்து, சகல நோய்களையும் சு-
கப்படுத்தி, பலத்த அற்புதங்களையும், நடப்பிக்கும்
காலம் தூரமாயல்லாமல் சமீபமாயிருக்கிறது.
6 அவர் மனுபுத்திரரின் இருதயங்களிலே வாசமா-
யிருக்கிற அசுத்த ஆவிகளான பிசாசுகளைத் துரத்-
துவார்.
7 இதோ, மரணத்தைத் தவிர, மனுஷன் படக்கூடிய
துன்பங்களைக் காட்டிலும், அதிகமாய் அவர் சோ-
தனைகளாலும், சரீர வேதனைகளாலும், பசியா-
லும், தாகத்தாலும், சோர்வினாலும் பாடனுவிப்பார்,
ஏனெனில் இதோ, ஒவ்வொரு துவாரத்திலிருந்தும்
இரத்தம் வெளிவரும், தன் ஜனத்தினுடைய துன்-
மார்க்கம் மற்றும், அருவருப்புக்காகவும், அவர்
படும் வியாகுலம் மிகவும் அதிகமாயிருக்கும்.
8 அவர் இயேசு கிறிஸ்துவென்றும், தேவனுடைய
குமாரனென்றும், வானம் மற்றும் பூமியின் பிதா-
வென்றும், ஆதியிலிருந்தே சகல காரியங்களின் சி-
ருஷ்டிகரென்றும், அழைக்கப்படுவார்; அவரு-
டைய தாய் மரியாள் என்று அழைக்கப்படுவாள்.

# Mosiah 3

And again my brethren, I would call your attention, for I have somewhat more to speak unto you; for behold, I have things to tell you concerning that which is to come.

And the things which I shall tell you are made known unto me by an angel from God. And he said unto me: Awake; and I awoke, and behold he stood before me.

And he said unto me: Awake, and hear the words which I shall tell thee; for behold, I am come to declare unto you the glad tidings of great joy.

For the Lord hath heard thy prayers, and hath judged of thy righteousness, and hath sent me to declare unto thee that thou mayest rejoice; and that thou mayest declare unto thy people, that they may also be filled with joy.

For behold, the time cometh, and is not far distant, that with power, the Lord Omnipotent who reigneth, who was, and is from all eternity to all eternity, shall come down from heaven among the children of men, and shall dwell in a tabernacle of clay, and shall go forth amongst men, working mighty miracles, such as healing the sick, raising the dead, causing the lame to walk, the blind to receive their sight, and the deaf to hear, and curing all manner of diseases.

And he shall cast out devils, or the evil spirits which dwell in the hearts of the children of men.

And lo, he shall suffer temptations, and pain of body, hunger, thirst, and fatigue, even more than man can suffer, except it be unto death; for behold, blood cometh from every pore, so great shall be his anguish for the wickedness and the abominations of his people.

And he shall be called Jesus Christ, the Son of God, the Father of heaven and earth, the Creator of all things from the beginning; and his mother shall be called Mary.

9 இதோ அவருடைய நாமத்தின் மீதான விசுவாசத்தின் மூலம், மனுபுத்திரர்களுக்கு இரட்சிப்பு வரும்பொருட்டு தம்முடைய சொந்தமானோருக்குள்ளே வருகிறார். இவ்வனைத்திற்கும் பின்பும், அவர்கள் அவரை மனுஷனென்று எண்ணி, பிசாசு பிடித்தவன் என்று சொல்லி, சவுக்கால் அடித்து, அவரை சிலுவையிலறைவார்கள்.

And lo, he cometh unto his own, that salvation might come unto the children of men even through faith on his name; and even after all this they shall consider him a man, and say that he hath a devil, and shall scourge him, and shall crucify him.

10 அவர் மரித்தோரிலிருந்து மூன்றாம் நாளிலே எழும்புவார்; இதோ, உலகத்தை நியாயம் விசாரிக்க அவர் நிற்கிறார்; இதோ, மனுபுத்திரர் மேல் ஒரு நீதியுள்ள விசாரணை வரும்படிக்கே இந்தக் காரியங்கள் யாவும் செய்யப்படுகின்றன.

And he shall rise the third day from the dead; and behold, he standeth to judge the world; and behold, all these things are done that a righteous judgment might come upon the children of men.

11 இதோ, ஆதாமின் மீறுதலினாலே வீழ்ந்தவர்களுடைய பாவங்களுக்காகவும், தங்களைக் குறித்த தேவனுடைய சித்தத்தை அறியாமல் மரித்தோருடைய பாவங்களையும், அல்லது அறியாமையினால் பாவம் செய்தோருடைய பாவங்களையும், அவருடைய இரத்தம் நிவர்த்தியாக்குகிறது.

For behold, and also his blood atoneth for the sins of those who have fallen by the transgression of Adam, who have died not knowing the will of God concerning them, or who have ignorantly sinned.

12 ஆனால், அறிந்தே, தேவனுக்கு விரோதமாய் கலகம் பண்ணுகிறவனுக்கு ஐயோ! ஏனெனில் அப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீது வைக்கிற விசுவாசம் மற்றும் மனந்திரும்புதலினாலேயன்றி இரட்சிப்பு வராது.

But wo, wo unto him who knoweth that he rebelleth against God! For salvation cometh to none such except it be through repentance and faith on the Lord Jesus Christ.

13 கிறிஸ்து வருவாரென்று விசுவாசிப்பவர்கள் எவரோ அவர்களே தங்களின் பாவங்களுக்காக மன்னிப்பை பெற்று, அவர் தங்களுக்குள்ளே அப்போதே வந்திருந்ததைப்போல மிகுந்த சந்தோஷத்தினால் களிகூரத்தக்கதாக, இந்தக் காரியங்களை சகல இனத்திற்கும், தேசத்திற்கும், பாஷைக்காரருக்கும் அறிவிக்க மனுபுத்திரர் யாவருக்குள்ளும் கர்த்தராகிய தேவன் தம் பரிசுத்த தீர்க்கதரிசிகளை அனுப்பியிருக்கிறார்;

And the Lord God hath sent his holy prophets among all the children of men, to declare these things to every kindred, nation, and tongue, that thereby whosoever should believe that Christ should come, the same might receive remission of their sins, and rejoice with exceedingly great joy, even as though he had already come among them.

14 இருப்பினும் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனம் ஒரு வணங்காக்கழுத்துள்ள ஜனம் எனக்கண்டு அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தை, மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஏற்படுத்தினார்.

Yet the Lord God saw that his people were a stiffnecked people, and he appointed unto them a law, even the law of Moses.

15 தம் வருகையைக்குறித்து அவர்களுக்குள்ளே அநேக அறிகுறிகளையும், அற்புதங்களையும், முன்னடையாளங்களையும், நிழலாட்டங்களையும் காண்பித்தார்; அவருடைய வருகையைக்குறித்து பரிசுத்த தீர்க்கதரிசிகளும் அவர்களுடனே பேசினார்கள்; ஆகிலும் தங்கள் இருதயங்களை அவர்கள் கடினப்படுத்தினார்கள்; அவருடைய இரத்தத்தின் பாவநிவர்த்தியின் மூலமேயன்றி மோசேயின் நியாயப்பிரமாணம் ஒன்றுக்கும் உதவாது, என்று அறியாதிருந்தார்கள்.

And many signs, and wonders, and types, and shadows showed he unto them, concerning his coming; and also holy prophets spake unto them concerning his coming; and yet they hardened their hearts, and understood not that the law of Moses availeth nothing except it were through the atonement of his blood.

16 சிறுபிள்ளைகளும் பாவம் செய்யக்கூடுமேயா-
னால் அவர்கள் இரட்சிக்கப்படக்கூடாமற்போம்;
ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
அவர்கள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்;
ஏனெனில் இதோ, ஆதாமிலோ அல்லது சுபாவத்தி-
னாலோ அவர்கள் வீழ்ந்தாலும், கிறிஸ்துவினு-
டைய இரத்தம் அவர்களின் பாவங்களை நிவர்த்தி-
யாக்குகிறது.

And even if it were possible that little children could sin they could not be saved; but I say unto you they are blessed; for behold, as in Adam, or by nature, they fall, even so the blood of Christ atoneth for their sins.

17 அன்றியும் சர்வவல்ல கர்த்தராகிய கிறிஸ்துவின்
நாமத்தினாலும் அவர் மூலமுமேயன்றி மனுபுத்திர-
ருள் இரட்சிப்பு வர மற்ற எந்த நாமமோ, வழியோ,
மார்க்கமோ கொடுக்கப்படவில்லை, என்று உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன்.

And moreover, I say unto you, that there shall be no other name given nor any other way nor means whereby salvation can come unto the children of men, only in and through the name of Christ, the Lord Omnipotent.

18 ஏனெனில் இதோ அவர் நியாயம் விசாரிக்கிறார்;
அவருடைய தீர்ப்பு நியாயமானது; தன் பாலியத்தி-
லே மரிக்கிற குழந்தை அழிந்துபோவதில்லை;
ஆனால் மனுஷர் தங்களையே தாழ்த்தி, சிறுபிள்-
ளைகளைப் போலாகி, சர்வவல்ல கர்த்தராகிய கி-
றிஸ்துவினுடைய பாவநிவர்த்தியாக்கும் இரத்தத்-
தினாலும், அதன் மூலமும் இரட்சிப்பு உண்டாயி-
ருந்ததென்றும், உண்டாயிருக்கிறதென்றும், உண்-
டாயிருக்குமென்றும் விசுவாசியாமற் போவார்க-
ளெனில் தங்கள் சொந்த ஆத்துமாவிற்கென ஆக்-
கினையை பானம் பண்ணுவார்கள்.

For behold he judgeth, and his judgment is just; and the infant perisheth not that dieth in his infancy; but men drink damnation to their own souls except they humble themselves and become as little children, and believe that salvation was, and is, and is to come, in and through the atoning blood of Christ, the Lord Omnipotent.

19 ஏனெனில் பரிசுத்த ஆவியின் தூண்டுதல்களுக்-
கு இடங்கொடுத்து, சுபாவ மனுஷனை அகற்றி,
கர்த்தராகிய கிறிஸ்துவின் பாவநிவர்த்தி மூலம்
பரிசுத்தவானாகி, சிறுபிள்ளையைப்போலாகி,
கீழ்ப்படிந்து, சாந்தமாயும், தாழ்மையாயும், பொறு-
மையாயும், அன்பால் நிறைந்து, ஒரு பிள்ளை தன்
தகப்பனுக்கு கீழ்ப்படிவதுபோல, அவன் மீது சு-
மத்த தகுதியானது என கர்த்தர் காண்கிற அனைத்-
திலும் கீழ்ப்படிய சித்தமாயிராவிட்டால், ஆதாமின்
வீழ்ச்சி தொடங்கி இருந்திருக்கிறவாறே, சுபாவ
மனுஷன் தேவனுக்கு சத்துருவாக இருக்கிறான்,
என்றென்றைக்கும் இருப்பான்.

For the natural man is an enemy to God, and has been from the fall of Adam, and will be, forever and ever, unless he yields to the enticings of the Holy Spirit, and putteth off the natural man and becometh a saint through the atonement of Christ the Lord, and becometh as a child, submissive, meek, humble, patient, full of love, willing to submit to all things which the Lord seeth fit to inflict upon him, even as a child doth submit to his father.

20 மேலும், எல்லா தேசத்திற்கும், இனத்திற்கும், பா-
ஷைக்காரருக்கும் மற்றும் ஜனத்திற்கும் இரட்சக-
ரைக் குறித்த ஞானம் பிரசித்திபெறும் காலம் வரு-
மென்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And moreover, I say unto you, that the time shall come when the knowledge of a Savior shall spread throughout every nation, kindred, tongue, and people.

21 இதோ, அச்சமயம் வரும்போது, சிறுபிள்ளைக-
ளைத் தவிர சர்வவல்ல தேவனாகிய கர்த்தரின் நா-
மத்தின்மேல் விசுவாசித்து மனந்திரும்பினவர்க-
ளேயன்றி, வேறொருவரும் தேவனுக்கு முன்பாக
குற்றமற்றவர்களாய் காணப்படமாட்டார்கள்.

And behold, when that time cometh, none shall be found blameless before God, except it be little children, only through repentance and faith on the name of the Lord God Omnipotent.

22 இச்சமயத்திலேயும் தேவனாகிய உன் கர்த்தர்
உனக்கு கட்டளையிட்ட காரியங்களை நீ உன்
ஜனத்திற்குப் போதித்த பின்பு, நான் உன்னிடத்தில்
பேசின வார்த்தைகளின்படி மாத்திரமே, அவர்கள்
இனியும் தேவனுடைய பார்வையில் குற்றமற்றவர்-
களாய் காணப்படுவதில்லை.

And even at this time, when thou shalt have taught thy people the things which the Lord thy God hath commanded thee, even then are they found no more blameless in the sight of God, only according to the words which I have spoken unto thee.

23 இப்பொழுதும் தேவனாகிய கர்த்தர் எனக்கு கட்டளையிட்ட வார்த்தைகளையே பேசினேன்.

And now I have spoken the words which the Lord God hath commanded me.

24 கர்த்தர் சொல்வது என்னவெனில்: அவைகள் நியாயத்தீர்ப்பின் நாளிலே இந்த ஜனத்திற்கு விரோதமாய் பிரகாசமான சாட்சியமாய் நிற்கும்; அவைகளின்படி, ஒவ்வொரு மனுஷனும் அவனுடைய நன்மையான அல்லது தீமையான கிரியைகளுக்குத் தக்கதாக நியாயம் விசாரிக்கப்படுவான்.

And thus saith the Lord: They shall stand as a bright testimony against this people, at the judgment day; whereof they shall be judged, every man according to his works, whether they be good, or whether they be evil.

25 அவைகள் பொல்லாதவைகளாய் இருக்குமெனில், அவர்கள் தங்கள் குற்றவுணர்ச்சியையும், அருவருப்புகளையும் எண்ணிப்பார்த்து அஞ்சும்படிக்கு ஒப்படைக்கப்படுவார்கள்; அது அவர்களைக் கர்த்தருடைய பிரசன்னத்தினின்று நீங்கலாக்கி, துர்பாக்கியமும் நித்திய வேதனையைக் கொண்டதும், மீளக்கூடாததுமான நிலைக்குப் பின்வாங்கச் செய்கிறது, அதினிமித்தம் அவர்கள் தங்கள் சொந்த ஆத்துமாக்களுக்கு ஆக்கினையை பானம் பண்ணியிருக்கிறார்கள்.

And if they be evil they are consigned to an awful view of their own guilt and abominations, which doth cause them to shrink from the presence of the Lord into a state of misery and endless torment, from whence they can no more return; therefore they have drunk damnation to their own souls.

26 ஆதலால், தேவ உக்கிரத்தின் பாத்திரத்தில் அவர்கள் பானம் பண்ணியிருக்கிறார்கள், தவிர்க்கப்பட்ட கனியை ஆதாம் புசித்ததினாலே அவன் வீழ்ந்துபோவதை மறுக்க முடியாதது போல, அந்த நீதி அவர்களுக்கும் மறுக்கப்பட முடியாது. ஆதலால் என்றென்றைக்கும் இரக்கம் அவர்கள் மேல் ஒருபோதும் உரிமை பாராட்ட முடியாது.

Therefore, they have drunk out of the cup of the wrath of God, which justice could no more deny unto them than it could deny that Adam should fall because of his partaking of the forbidden fruit; therefore, mercy could have claim on them no more forever.

27 அவர்களின் வேதனை அக்கினியும், கந்தகமுமான கடலைப்போலவும் இருக்கும். அதன் ஜூவாலைகள் அவியாததாயும் அதன் புகை என்றென்றைக்குமாய் எழும்புகிறதாயுமிருக்கும். இவைகளையே கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார். ஆமென்.

And their torment is as a lake of fire and brimstone, whose flames are unquenchable, and whose smoke ascendeth up forever and ever. Thus hath the Lord commanded me. Amen.

# மோசியா 4

# Mosiah 4

1 இப்பொழுதும், அந்தப்படியே, கர்த்தருடைய தூதன் தனக்குக் கொடுத்த வார்த்தைகளை பென்யமீன் ராஜா பேசி முடித்த பின்பு அவன் திரளானோரை சுற்றிலும் தன் கண்களை ஏறெடுத்தான்; இதோ அவர்கள் மேல் கர்த்தரின் பயம் வந்ததினாலே, பூமியிலே விழுந்து கிடந்தார்கள்.

And now, it came to pass that when king Benjamin had made an end of speaking the words which had been delivered unto him by the angel of the Lord, that he cast his eyes round about on the multitude, and behold they had fallen to the earth, for the fear of the Lord had come upon them.

2 அவர்கள் தங்களின் சொந்த மாம்சமான நிலையை பூமியின் தூசியைக் காட்டிலும் மோசமானதெனவும் கண்டார்கள். அவர்கள் அனைவரும் ஒரே சத்தமாய் கூக்குரலிட்டு, இரக்கமாயிரும்; நாங்கள் எங்கள் பாவங்களுக்கென்று மன்னிப்பைப் பெற்று, எங்களுடைய இருதயம் சுத்திகரிக்கப்படும் பொருட்டு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியாக்கும் இரத்தத்தை பூசும். ஏனெனில் வானத்தையும் பூமியையும் சகலவற்றையும் சிருஷ்டித்தவரும், மனுபுத்திரர் நடுவில் இறங்கிவரப்போகிறவரும், தேவகுமாரனுமாகிய இயேசு கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையாயிருக்கிறோம், என்றார்கள்.

And they had viewed themselves in their own carnal state, even less than the dust of the earth. And they all cried aloud with one voice, saying: O have mercy, and apply the atoning blood of Christ that we may receive forgiveness of our sins, and our hearts may be purified; for we believe in Jesus Christ, the Son of God, who created heaven and earth, and all things; who shall come down among the children of men.

3 அந்தப்படியே, இந்த வார்த்தைகளை அவர்கள் பேசின பின்பு, கர்த்தருடைய ஆவியானவர் அவர்கள்மீது இறங்கினார்; பென்யமீன் ராஜா அவர்களுக்கு பேசின வார்த்தைகளின்படியே, வரவிருக்கிற இயேசு கிறிஸ்துவின்மேல் அவர்கள் மிகுதியாய் விசுவாசம் வைத்ததினிமித்தம், தங்கள் பாவங்களுக்காக மன்னிப்பையும் மன சமாதானத்தையும், பெற்று சந்தோஷத்தால் நிரப்பப்பட்டார்கள்.

And it came to pass that after they had spoken these words the Spirit of the Lord came upon them, and they were filled with joy, having received a remission of their sins, and having peace of conscience, because of the exceeding faith which they had in Jesus Christ who should come, according to the words which king Benjamin had spoken unto them.

4 மறுபடியுமாய் பென்யமீன் ராஜா தன் வாயைத் திறந்து, அவர்களிடத்தில் பேசத் துவங்கிச் சொன்னதாவது: என் சிநேகிதர்களும், என் சகோதரர்களுமானவர்களே, என் கோத்திரத்தாரும், என் ஜனமுமானவர்களே, நான் உங்களிடத்தில் பேசவிருக்கிற, என் வார்த்தைகளின் மீதியானவற்றை நீங்கள் கேட்டு உணரும்படிக்கு, உங்கள் கவனத்தைச் செலுத்துமாறு மறுபடியும் அழைக்கிறேன்.

And king Benjamin again opened his mouth and began to speak unto them, saying: My friends and my brethren, my kindred and my people, I would again call your attention, that ye may hear and understand the remainder of my words which I shall speak unto you.

5 ஏனெனில் இதோ, இச்சமயத்தில் தேவனுடைய நன்மையைப்பற்றிய அறிவு உங்களை ஒன்றுமில்லாதவர்கள் என்ற உணர்ச்சிக்கும், உங்களின் தகுதியற்றதும், வீழ்ந்ததுமான நிலையைப்பற்றி, உங்களை விழித்தெழும்பச் செய்துள்ளதென்றால்,

For behold, if the knowledge of the goodness of God at this time has awakened you to a sense of your nothingness, and your worthless and fallen state—

6 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், மனுபுத்திரர்-
கள் மேல் தேவனுடைய நன்மை, அவரின் இணை-
யற்ற வல்லமை, அவரின் ஞானம், அவரின் பொறு-
மை, அவரின் நீடிய சாந்தம், மற்றும் உலகத்தின்
அஸ்திபாரத்திலிருந்தே ஆயத்தம் செய்யப்பட்டி-
ருக்கிற பாவநிவர்த்தி, கர்த்தரிடத்தில் தன் விசுவா-
சத்தை வைத்து கட்டளைகளைக் கைக்கொள்வ-
தில், கருத்தாயிருந்து நித்தியமற்ற சரீரமாகிய தன்
ஜீவனின் முடிவுபரியந்தமும் விசுவாசத்திலே தரித்-
திருக்கிறவனிடத்திலே இரட்சிப்பு வரும், என்ற ஞா-
னத்தைப் பெற்றால்,

7 ஆதாமின் வீழ்ச்சியிலிருந்து, ஜீவிக்கிற, உலக மு-
டிவுபரியந்தமும் ஜீவிக்கவிருக்கிற சகல மனுக்கு-
லத்திற்கும் உலகத்தின் அஸ்திபாரத்திலிருந்தே
ஆயத்தம் பண்ணப்பட்ட பாவநிவர்த்தியின் மூலம்
இரட்சிப்பை இம்மனுஷனே பெறுகிறான் என்று
நான் சொல்லுகிறேன்.

8 இரட்சிப்பு வருவதற்கு இதுவே வழியாயிருக்கிற-
து. பேசப்பட்ட இதைத் தவிர வேறெந்த இரட்சிப்பு-
மில்லை. நான் உங்களுக்குச் சொன்ன நிபந்தனை-
களைத் தவிர மனுஷன் இரட்சிக்கப்படுவதற்கு வே-
றெந்த நிபந்தனைகளுமில்லை.

9 தேவனிலே விசுவாசியுங்கள்; அவர் இருக்கிறார்
என்றும், அவரே பரலோகத்திலும் பூலோகத்திலும்
சகல காரியங்களையும் சிருஷ்டித்தார் என்றும் வி-
சுவாசியுங்கள்; பரலோகத்திலும் பூலோகத்திலும்
அவருக்கு சகல ஞானமும், சகல வல்லமையுமிருக்-
கிறதென்று விசுவாசியுங்கள்; கர்த்தரால் புரிந்து-
கொள்ளக்கூடிய காரியங்கள் யாவையும் மனு-
ஷனால் புரிந்துகொள்ள இயலாது, என்று விசுவா-
சியுங்கள்.

10 மறுபடியும், உங்கள் பாவங்களிலிருந்து மனந்தி-
ரும்பி அவைகளை விட்டுவிட்டு, தேவனுக்கு முன்-
பாக உங்களையே தாழ்த்தவேண்டுமென விசுவாசி-
யுங்கள்; உண்மையான இருதயத்தோடு அவர் உங்-
களை மன்னிக்கும்படி கேளுங்கள்; இப்பொழுதும்,
இவைகள் யாவையும் நீங்கள் விசுவாசிப்பீர்களெ-
னில் அவைகளை செயலாக்கவும் பார்த்துக்-
கொள்ளுங்கள்.

I say unto you, if ye have come to a knowledge of the goodness of God, and his matchless power, and his wisdom, and his patience, and his long-suffering towards the children of men; and also, the atonement which has been prepared from the foundation of the world, that thereby salvation might come to him that should put his trust in the Lord, and should be diligent in keeping his commandments, and continue in the faith even unto the end of his life, I mean the life of the mortal body—

I say, that this is the man who receiveth salvation, through the atonement which was prepared from the foundation of the world for all mankind, which ever were since the fall of Adam, or who are, or who ever shall be, even unto the end of the world.

And this is the means whereby salvation cometh. And there is none other salvation save this which hath been spoken of; neither are there any conditions whereby man can be saved except the conditions which I have told you.

Believe in God; believe that he is, and that he created all things, both in heaven and in earth; believe that he has all wisdom, and all power, both in heaven and in earth; believe that man doth not comprehend all the things which the Lord can comprehend.

And again, believe that ye must repent of your sins and forsake them, and humble yourselves before God; and ask in sincerity of heart that he would forgive you; and now, if you believe all these things see that ye do them.

11 நான் உங்களுக்கு முன்பு சொன்னது போலவே மறுபடியும் சொல்வது என்னவென்றால், தேவனுடைய மகிமையைப்பற்றிய ஞானத்திற்கு நீங்கள் வந்து, அவருடைய நன்மையை அறிந்து, அவருடைய அன்பை ருசிபார்த்து, உங்களின் பாவங்களுக்காக மன்னிப்பைப் பெறுவீர்களெனில், அது உங்கள் ஆத்துமாக்களிலே மிகவும் அதிகமாய் சந்தோஷத்தை ஏற்படச்செய்து, அதினிமித்தம் தேவனுடைய மகத்துவத்தையும் உங்களின் சொந்த வெறுமைத்தன்மையையும் தகுதியற்ற சிருஷ்டிகளாகிய உங்களின்மீது அவர் வைத்திருக்கிற நன்மையையும் நீடிய பொறுமையையும், எப்போதும் நினைவில் வைத்து, அனுதினமும் கர்த்தருடைய நாமத்தைக் கூப்பிட்டு, தாழ்மையின் ஆழங்களிலே நீங்கள் தாழ்ந்திருக்கும்படி நினைவுகூரவும், வரப்போகிறவைகள் என்று தூதன் நாவினால் பேசினவைகளில் விசுவாசமாயும், திடமனதாயிருக்கவும், விரும்புகிறேன்.

And again I say unto you as I have said before, that as ye have come to the knowledge of the glory of God, or if ye have known of his goodness and have tasted of his love, and have received a remission of your sins, which causeth such exceedingly great joy in your souls, even so I would that ye should remember, and always retain in remembrance, the greatness of God, and your own nothingness, and his goodness and long-suffering towards you, unworthy creatures, and humble yourselves even in the depths of humility, calling on the name of the Lord daily, and standing steadfastly in the faith of that which is to come, which was spoken by the mouth of the angel.

12 இதோ, நான் உங்களுக்குச் சொல்வதென்னவெனில், இதை நீங்கள் செய்வீர்களானால், நீங்கள் எப்பொழுதும் களிகூர்ந்து தேவனுடைய அன்பினால் நிரப்பப்பட்டு, உங்களின் பாவங்களின் மன்னிப்பை எப்பொழுதும் பெற்றிருப்பீர்கள், உங்களை சிருஷ்டித்தவரின் மகிமையைப்பற்றிய அறிவிலும், அல்லது நியாயமும், சத்தியமுமான அறிவிலும் வளருவீர்கள்.

And behold, I say unto you that if ye do this ye shall always rejoice, and be filled with the love of God, and always retain a remission of your sins; and ye shall grow in the knowledge of the glory of him that created you, or in the knowledge of that which is just and true.

13 ஒருவருக்கொருவர் காயப்படுத்திக்கொள்ள மனமில்லாதவர்களாய், ஆனால் சமாதானமாய் ஜீவித்து, ஒவ்வொரு மனுஷனுக்கும் அவனுக்குரியதைக் கொடுப்பீர்களாக.

And ye will not have a mind to injure one another, but to live peaceably, and to render to every man according to that which is his due.

14 உங்கள் பிள்ளைகள் பட்டினியாய் செல்லவும் வஸ்திரமில்லாதவர்களாயிருக்கவும் நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள்; தேவனுடைய நியாயப்பிரமாணங்களை அவர்கள் மீறி ஒருவரோடொருவர் சண்டையிட்டு, கலகம் செய்து, பாவத்தின் எஜமானும், சகல நீதிக்கும் விரோதியாயிருப்பவனும், நம் பிதாக்களால் பேசப்பட்ட அசுத்த ஆவியுமான அந்த பிசாசை சேவிக்கவும் நீங்கள் அனுமதிக்கமாட்டீர்கள்.

And ye will not suffer your children that they go hungry, or naked; neither will ye suffer that they transgress the laws of God, and fight and quarrel one with another, and serve the devil, who is the master of sin, or who is the evil spirit which hath been spoken of by our fathers, he being an enemy to all righteousness.

15 ஆனால் சத்தியமும் தெளிந்த புத்தியுமான பாதைகளிலே அவர்களுக்கு நடக்க போதிப்பீர்கள்; ஒருவரோடொருவர் அன்புகூரவும், ஒருவருக்கொருவர் சேவை செய்யவும் போதிப்பீர்கள்.

But ye will teach them to walk in the ways of truth and soberness; ye will teach them to love one another, and to serve one another.

16 மேலும் உங்களின் உதவியை நாடி நிற்போருக்கு நீங்களே உதவிசெய்வீர்கள்; தேவைப்படுபவனுக்கு உங்களின் பொருட்களை கொடுப்பீர்கள்; தரித்திரன் உங்களிடத்தில் வீணாய் வேண்டாமலும், அவன் அழிந்து போகாதபடிக்கும் பார்த்துக்கொள்வீர்கள்.

And also, ye yourselves will succor those that stand in need of your succor; ye will administer of your substance unto him that standeth in need; and ye will not suffer that the beggar putteth up his petition to you in vain, and turn him out to perish.

17 அந்த மனுஷன் துர்பாக்கியத்தை தன்மீது தானே
வரப்பண்ணினான்; ஆகையால் அவனுடைய
தண்டனைகள் நியாயமானதாயிருக்கிறபடியாலே
நான் கரத்தை நீட்டாமல், என் ஆகாரத்தை
அவனுக்கு கொடாமலும், அவன் துன்பப்படும்ப-
டிக்கு என் பொருளை அவனுக்கு அளிக்காமலும்
இருப்பேன், என்று ஒருவேளை நீ சொல்லலாம்.

Perhaps thou shalt say: The man has brought upon himself his misery; therefore I will stay my hand, and will not give unto him of my food, nor impart unto him of my substance that he may not suffer, for his punishments are just—

18 ஆனால், மனுஷனே, இதைச் செய்கிற எவராயி-
ருப்பினும் மனந்திரும்புவது மிகவும் அவசியமான-
து; தான் செய்தவற்றிலிருந்து மனந்திரும்பாமல்
போவானேயானால், என்றென்றுமாய் அழிந்து
போவான், மற்றும் தேவ ராஜ்யத்தில் அவனுக்குப்
பங்கில்லை, என்று நான் உங்களுக்குச் சொல்கி-
றேன்.

But I say unto you, O man, whosoever doeth this the same hath great cause to repent; and except he repenteth of that which he hath done he perisheth forever, and hath no interest in the kingdom of God.

19 ஏனெனில் இதோ, நாம் அனைவரும் யாசகர்கள்
அல்லவா? நாம் வைத்திருக்கும் எல்லா பொருட்க-
ளுக்காகவும், ஆகாரத்துக்காகவும், வஸ்திரங்க-
ளுக்காகவும், பொன்னுக்காகவும், வெள்ளிக்காக-
வும், நாம் வைத்திருக்கும் சகலவிதமான ஐஸ்வரி-
யங்களுக்காகவும், நாம் யாவரும் தேவனாகிய அவ-
ரை சார்ந்திருக்கிறோம் அல்லவா?

For behold, are we not all beggars? Do we not all depend upon the same Being, even God, for all the substance which we have, for both food and raiment, and for gold, and for silver, and for all the riches which we have of every kind?

20 இதோ, இந்த சமயத்திலேயும் அவர் நாமத்தை
அழைத்து, உங்களின் பாவங்களுக்காக மன்னிப்-
பை யாசிக்கிறீர்கள். நீங்கள் வீணாய் யாசிக்கும்ப-
டிக்கு அவர் உங்களை விட்டுவிட்டாரோ? இல்லை-
யே. அவர் தன் ஆவியை உங்கள்மீது ஊற்றி, உங்-
கள் இருதயங்களை சந்தோஷத்தினால் நிரப்பி,
உங்களின் சந்தோஷம் மிகவும் அதிகமானதாயி-
ருந்தபடியாலே, நீங்கள் பேசமுடியாதபடிக்கு உங்-
கள் நாவுகளை அவர் அடைக்கப்பண்ணினார்.

And behold, even at this time, ye have been calling on his name, and begging for a remission of your sins. And has he suffered that ye have begged in vain? Nay; he has poured out his Spirit upon you, and has caused that your hearts should be filled with joy, and has caused that your mouths should be stopped that ye could not find utterance, so exceedingly great was your joy.

21 இப்பொழுதும் உங்களைச் சிருஷ்டித்தவரும், நீங்-
கள் வைத்திருக்கிற சகலவற்றிற்காகவும், நீங்கள்
சார்ந்திருக்கிற அந்த தேவனிடத்தில் பெறுவோம்
என்று நம்பி, விசுவாசத்தோடு நியாயமான யா-
தொன்றையும் நீங்கள் கேட்கையில் தேவன் உங்க-
ளுக்கு அருளினால், நீங்கள் வைத்திருக்கிற பொ-
ருளை ஒருவருக்கொருவர் கொடுப்பது எவ்வளவு
அவசியமானதாயிருக்கிறது.

And now, if God, who has created you, on whom you are dependent for your lives and for all that ye have and are, doth grant unto you whatsoever ye ask that is right, in faith, believing that ye shall receive, O then, how ye ought to impart of the substance that ye have one to another.

22 தான் அழிந்துபோகாதபடி உங்களுடைய பொரு-
ளை வேண்டிக்கேட்கிற மனுஷனை நீங்கள் கடிந்-
துகொண்டு, அவனை நிதானிப்பீர்களெனில், உங்-
கள் ஜீவனுக்கு சொந்தக்காரராயிருக்கிற தேவனுக்-
கே சொந்தமானதும், உங்களுக்கு சொந்தமில்லாத-
துமான அப்பொருளை, நீங்கள் பகிர்ந்துகொள்-
ளாததினிமித்தம், உங்களின் ஆக்கினைத்தீர்ப்பு
எவ்வளவு நியாயமுள்ளதாயிருக்கும்; இருப்பினும்
நீங்கள் விண்ணப்பம் செய்யாமலும், நீங்கள் செய்-
தவற்றிற்காக மனந்திரும்பாமலும் இருக்கிறீர்கள்.

And if ye judge the man who putteth up his petition to you for your substance that he perish not, and condemn him, how much more just will be your condemnation for withholding your substance, which doth not belong to you but to God, to whom also your life belongeth; and yet ye put up no petition, nor repent of the thing which thou hast done.

23 அந்த மனுஷனுக்கு ஐயோ, ஏனெனில் அவனு-
டைய பொருள் அவனுடனே அழிந்துபோகுமே
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; இப்போதும்
உலகத்திற்கேதுவானவைகளில் ஐஸ்வரியவான்க-
ளாய் இருப்பவர்களுக்கு இந்த காரியங்களை
சொல்லுகிறேன்.

I say unto you, wo be unto that man, for his substance shall perish with him; and now, I say these things unto those who are rich as pertaining to the things of this world.

24 மேலும் எளியோருக்கு நான் சொல்லுகிறேன், உங்-
களிடத்தில் இல்லை, இருப்பினும் அன்றாடமும் ஜீ-
விப்பதற்கு போதுமான அளவு பெற்றிருக்கிறீர்கள்.
எளியோரும் தங்களிடத்தில் இல்லாததினிமித்தம்
தரித்திரரை மறுத்தவர்கள் என நான் எண்ணிய
நீங்கள் எல்லோரும், உங்களிடத்தில் இல்லாததினி-
மித்தம் நீங்கள் கொடுக்கவில்லை. என்னிடத்தில்
இல்லாததால் கொடுக்கவில்லை, ஆனால் என்னி-
டத்தில் இருந்திருந்தால் நான் கொடுத்திருப்பேன்,
என்று உங்கள் இருதயங்களிலே சொல்வீர்கள் என,
நான் விரும்புகிறேன்.

And again, I say unto the poor, ye who have not and yet have sufficient, that ye remain from day to day; I mean all you who deny the beggar, because ye have not; I would that ye say in your hearts that: I give not because I have not, but if I had I would give.

25 இப்பொழுதும் இதை உங்களின் இருதயங்களிலே
சொல்லிக்கொள்வீர்களெனில், நீங்கள் குற்றமற்ற-
வர்களாயிருப்பீர்கள், இல்லையெனில் ஆக்கி-
னைக்குள்ளாகத் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் பெ-
றாதவைகளை இச்சிப்பதினிமித்தம், உங்களின்
ஆக்கினைத்தீர்ப்பு நியாயமானதாயிருக்கும்.

And now, if ye say this in your hearts ye remain guiltless, otherwise ye are condemned; and your condemnation is just for ye covet that which ye have not received.

26 இப்பொழுதும் நான் பேசின இந்தக் காரியங்களி-
னிமித்தம், அதாவது தேவனுக்கு முன்பாக குற்ற-
மற்றவர்களாய் நடக்கும்பொருட்டு, அனுதினமும்
உங்களின் பாவங்களின் மன்னிப்பைப் பெற்றி-
ருக்க, ஒவ்வொரு மனுஷனும் தன்னிடத்தில்
வைத்திருப்பதற்கேற்ப, பசியுள்ளோருக்கு போ-
ஜனமளிக்கவும், வஸ்திரமில்லாதோருக்கு வஸ்திர-
முடுத்தவும், வியாதியஸ்தரை சந்தித்து, அவர்க-
ளின் தேவைகளுக்குத் தக்கதாய் ஆவிக்குரிய வித-
மாகவும் உலகப் பிரகாரமாகவும், அவர்களின் நி-
வாரணத்துக்காக பணிவிடை செய்து, எளியோ-
ருக்கு தங்களின் பொருளைப் பங்கிட வேண்டு-
மென நான் விரும்புகிறேன்.

And now, for the sake of these things which I have spoken unto you—that is, for the sake of retaining a remission of your sins from day to day, that ye may walk guiltless before God—I would that ye should impart of your substance to the poor, every man according to that which he hath, such as feeding the hungry, clothing the naked, visiting the sick and administering to their relief, both spiritually and temporally, according to their wants.

27 இந்தக் காரியங்கள் யாவும் ஞானத்திலும், ஒழுங்-
கிலும் செய்யப்படுகிறதா எனப் பார்த்துக்கொள்-
ளுங்கள்; ஏனெனில் ஒரு மனுஷன் தன் பெலத்-
தைக் காட்டிலும் அதிவேகமாய் ஓட வேண்டுமென்-
பது தேவையற்றதாயிருக்கிறது. அவன் வெகுமதி-
யை பெறும்படிக்கு கருத்துள்ளவனாயிருப்பது
அவசியமானதாயிருக்கிறது; ஆகையால் சகல கா-
ரியங்களும் ஒழுங்காய் செய்யப்படவேண்டும்.

And see that all these things are done in wisdom and order; for it is not requisite that a man should run faster than he has strength. And again, it is expedient that he should be diligent, that thereby he might win the prize; therefore, all things must be done in order.

28 நீங்கள் நினைவில் கொள்ளவேண்டியது என்ன-
வெனில், உங்களில் எவனாகிலும் தன் அயலானி-
டத்திலிருந்து ஒரு பொருளை கடனாய்ப் பெறுவா-
னேயாகில், அவன் தான் ஒப்புக்கொள்கிறபடியே
அதைத் திருப்பிக் கொடுக்கவேண்டும். இல்லாவி-
டில் நீ பாவம் செய்வாய்; ஒருவேளை உனது அய-
லானையும்கூட பாவம் செய்யும்படிச் செய்வாய்.

And I would that ye should remember, that whosoever among you borroweth of his neighbor should return the thing that he borroweth, according as he doth agree, or else thou shalt commit sin; and perhaps thou shalt cause thy neighbor to commit sin also.

29 முடிவாக, நீங்கள் பாவம் செய்யக்கூடிய யாவையும் குறித்து உங்களுக்கு நான் சொல்ல இயலாது; ஏனெனில் நான் அவைகளை எண்ணக்கூடாத அளவிற்கு பல வழிகளும் வகைகளுமிருக்கின்றன.

And finally, I cannot tell you all the things whereby ye may commit sin; for there are divers ways and means, even so many that I cannot number them.

30 உங்களின் வாழ்வின் முடிவுபரியந்தமும், நீங்கள் கேள்விப்பட்ட, நம்முடைய கர்த்தரின் வருகையைக் குறித்து விசுவாசமாய்த் தரித்திருந்து, தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, உங்கள் எண்ணங்களையும், உங்கள் வார்த்தைகளையும், நடவடிக்கைகளையும், உங்களையும் நீங்கள் காத்துக்கொள்ளாவிடில், அழிந்துபோவீர்கள் என்றுமட்டும் உங்களுக்கு நான் சொல்லக்கூடும். இப்பொழுதும் மனுஷனே, நினைவில் கொண்டிரு. அழிந்துபோகாதே.

But this much I can tell you, that if ye do not watch yourselves, and your thoughts, and your words, and your deeds, and observe the commandments of God, and continue in the faith of what ye have heard concerning the coming of our Lord, even unto the end of your lives, ye must perish. And now, O man, remember, and perish not.

# மோசியா 5

1 இப்பொழுதும், அந்தப்படியே, தன் ஜனத்திடம் இவ்-
வாறு பேசின பின்பு, பென்யமீன் ராஜா, தான் பே-
சின வார்த்தைகளை தன் ஜனத்தார் விசுவாசித்-
தார்களா என்றறிய விரும்பி, அவர்களுக்கு மத்தி-
யிலே ஆள் அனுப்பினான்.
2 அவர்கள் எல்லோரும் ஏகமாய்ச் சத்தமிட்டு
சொன்னதாவது: ஆம், நீர் எங்களுக்குப் பேசிய
சகல வார்த்தைகளையும் விசுவாசிக்கிறோம்;
பொல்லாப்பை இனிச் செய்ய மனமில்லாதவர்க-
ளாய், நன்மையையே தொடர்ந்து செய்யும்படிக்கு,
எங்கள் இருதயங்களிலேயும், எங்களுக்குள்ளேயும்,
பலத்த மாற்றத்தைச் செய்வித்த சர்வவல்ல கர்த்த-
ருடைய ஆவியானவரினிமித்தம், அவைகளின்
உண்மையையும் சத்தியத்தையும் அறிவோம்.
3 நாங்களே, தேவனுடைய எல்லையற்ற நன்மையி-
னாலும், அவருடைய ஆவியானவருடைய வெ-
ளிப்படுத்தல்களாலும், வரவிருக்கிற மகத்தான
அறிவைப் பெற்றிருக்கிறோம்; அவசியமானதாய்
இருக்குமேயானால், எல்லாவற்றையும் குறித்து
நாங்கள் தீர்க்கதரிசனமுரைக்க முடியும்.
4 எங்கள் ராஜா எங்களிடத்திலே பேசியவைகளிலே
நாங்கள் வைத்த விசுவாசமே, இந்த மகா ஞானத்-
திற்கு எங்களைக்கொண்டு வந்திருக்கிறது. அதி-
னிமித்தம் மிகுந்த சந்தோஷத்தினால் களிகூருகி-
றோம்.
5 தேவனுடைய கோபாக்கினையின் பாத்திரத்திலி-
ருந்து நாங்கள் பானம் பண்ணக்கூடாதென தூதன்
பேசினதின்படியே, ஒருக்காலும் முடியாத வே-
தனையை எங்களின் மீது நாங்களே வரவழைக்கக்
கூடாதபடி, எங்களுடைய மீதி நாட்கள் யாவிலும்,
தேவன் எங்களுக்கு எல்லாவற்றிலும் கட்டளை-
யிட்டுக் கொடுக்கும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தி-
ருக்கவும், அவருடைய சித்தத்திற்கேற்ப நடக்கவும்,
அவரோடு ஒரு உடன்படிக்கையினுள் பிரவேசிக்க
மனமுள்ளவர்களாயிருக்கிறோம்.
6 இப்பொழுதும் பென்யமீன் ராஜா அவர்களிடத்தி-
லிருந்து விரும்பிய வார்த்தைகள் இவைகளே;
ஆதலால் அவன் அவர்களை நோக்கி, நான் வாஞ்-
சித்த வார்த்தைகளை பேசியுள்ளீர்கள்; நீங்கள்
செய்த உடன்படிக்கை, ஒரு நீதியான உடன்படிக்-
கை.

# Mosiah 5

And now, it came to pass that when king Benjamin had thus spoken to his people, he sent among them, desiring to know of his people if they believed the words which he had spoken unto them.

And they all cried with one voice, saying: Yea, we believe all the words which thou hast spoken unto us; and also, we know of their surety and truth, because of the Spirit of the Lord Omnipotent, which has wrought a mighty change in us, or in our hearts, that we have no more disposition to do evil, but to do good continually.

And we, ourselves, also, through the infinite goodness of God, and the manifestations of his Spirit, have great views of that which is to come; and were it expedient, we could prophesy of all things.

And it is the faith which we have had on the things which our king has spoken unto us that has brought us to this great knowledge, whereby we do rejoice with such exceedingly great joy.

And we are willing to enter into a covenant with our God to do his will, and to be obedient to his commandments in all things that he shall command us, all the remainder of our days, that we may not bring upon ourselves a never-ending torment, as has been spoken by the angel, that we may not drink out of the cup of the wrath of God.

And now, these are the words which king Benjamin desired of them; and therefore he said unto them: Ye have spoken the words that I desired; and the covenant which ye have made is a righteous covenant.

7 இப்பொழுதும் நீங்கள் செய்திருக்கும் உடன்படிக்கையினிமித்தம் கிறிஸ்துவின் புத்திரரும் புத்திரிகளுமான, அவரது பிள்ளைகள் என அழைக்கப்படுவீர்கள்; ஏனெனில் இதோ, அவருடைய நாமத்தின் மீதான விசுவாசத்தினால் உங்களின் இருதயங்கள் மாற்றப்பட்டன, என்று நீங்கள் சொன்னதிற்கேற்ப இந்நாளிலே உங்களை அவர் ஆவிக்குரிய பிரகாரமாக ஜென்மித்தார்; ஆதலால் அவராலே நீங்கள் ஜென்மித்து, அவருடைய புத்திரரும் புத்திரிகளுமானீர்கள்.

And now, because of the covenant which ye have made ye shall be called the children of Christ, his sons, and his daughters; for behold, this day he hath spiritually begotten you; for ye say that your hearts are changed through faith on his name; therefore, ye are born of him and have become his sons and his daughters.

8 நீங்கள் இந்த நாமத்தின் அடிப்படையில் விடுதலையாக்கப்பட்டீர்கள், வேறு எந்த நாமத்தினாலும் நீங்கள் விடுதலையாக்கப்பட முடியாது; இரட்சிப்பு வரும்படி வேறெந்த நாமமும் கொடுக்கப்படவில்லை; ஆதலால் உங்கள் வாழ்வின் முடிவுபரியந்தமும் கீழ்ப்படிந்திருப்பீர்கள், என்று தேவனுடனே கூட உடன்படிக்கையினுள் பிரவேசித்த நீங்கள் யாவரும், கிறிஸ்துவினுடைய நாமத்தை உங்கள் மீது எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

And under this head ye are made free, and there is no other head whereby ye can be made free. There is no other name given whereby salvation cometh; therefore, I would that ye should take upon you the name of Christ, all you that have entered into the covenant with God that ye should be obedient unto the end of your lives.

9 இதைச் செய்கிற எவனும் தேவனுடைய வலது பாரிசத்திலே காணப்படுவான். ஏனெனில் தான் எந்த நாமத்தினாலே அழைக்கப்படுவான் என்று அவன் அறிவான். ஏனெனில் அவன் கிறிஸ்துவினுடைய நாமத்தினாலே அழைக்கப்படுவான்.

And it shall come to pass that whosoever doeth this shall be found at the right hand of God, for he shall know the name by which he is called; for he shall be called by the name of Christ.

10 இப்பொழுதும் கிறிஸ்துவினுடைய நாமத்தை தன்மீது எடுத்துக்கொள்ளாத எவனும் வேறெதாவது நாமத்தினால் அழைக்கப்படவேண்டும்; ஆதலால் அவன், தன்னை தேவனின் இடது பாரிசத்திலே காண்பான்.

And now it shall come to pass, that whosoever shall not take upon him the name of Christ must be called by some other name; therefore, he findeth himself on the left hand of God.

11 மீறுதலினாலேயல்லாமல் ஒருக்காலும் அழிக்கப்பட்டுப்போகாத நாமத்தை உங்களுக்குத் தருவேன், என்று நான் சொன்ன நாமம் இதுவே, என்று நீங்கள் நினைவு கூரவேண்டும், என விரும்புகிறேன்; ஆதலால் உங்கள் இருதயங்களிலிருந்து அந்த நாமம் அழிக்கப்பட்டு போகாதபடிக்கு, மீறுதல் செய்யாமலிருக்கும்படிக்கு, கவனமாயிருங்கள்.

And I would that ye should remember also, that this is the name that I said I should give unto you that never should be blotted out, except it be through transgression; therefore, take heed that ye do not transgress, that the name be not blotted out of your hearts.

12 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் தேவனுடைய இடது பாரிசத்திலே காணப்படாதபடிக்கு, உங்கள் இருதயங்களிலே எப்பொழுதும் எழுதப்பட்டிருக்கிற நாமத்தைத் தரித்துக்கொள்ள, நினைவில் வைக்கவேண்டுமென விரும்புகிறேன். ஆனால் நீங்கள் அழைக்கப்படுகிற சத்தத்தையும், அவர் உங்களை அழைக்கிற நாமத்தையும் செவிமடுத்து, அறிந்துகொள்ளுங்கள்.

I say unto you, I would that ye should remember to retain the name written always in your hearts, that ye are not found on the left hand of God, but that ye hear and know the voice by which ye shall be called, and also, the name by which he shall call you.

13 ஏனெனில் தான் சேவித்திராத, தனக்கு அன்னியனும் தன் உள்ளத்தின் எண்ணங்களிலும், நோக்கங்களிலிருந்தும், தூரமாயிருக்கிற எஜமானை ஒரு மனுஷன் எப்படி அறிவான்?

For how knoweth a man the master whom he has not served, and who is a stranger unto him, and is far from the thoughts and intents of his heart?

14 மறுபடியும் ஒரு மனுஷன் தன் அயலானுக்கு சொந்தமான கழுதையை பிடித்து வைத்துக்கொள்வானோ? இல்லை என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் மந்தையுடன் அதை புசிக்கவிடாமல், வெளியே துரத்தி, புறம்பே துரத்துவான். நீங்கள் அழைக்கப்படுகிற நாமத்தை அறியாமல் போவீர்களானால், அவ்வண்ணமே உங்களுக்கும் சம்பவிக்கும்.

15 ஆகிலும் சர்வவல்லமையுடைய தேவனும் கர்த்தருமாகிய கிறிஸ்து உங்களைத் தம்முடையவர்கள் என்று முத்திரை பதித்து, நீங்கள் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வானத்திலும் பூமியிலும் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவரும் சகலமானோருக்கும் மேன்மையான அந்த தேவனுடைய ஞானம், வல்லமை, நீதி மற்றும் இரக்கத்தினாலே நித்திய ஜீவனையும், முடிவில்லா இரட்சிப்பையும் என்றென்றைக்குமாய் பெற்றுக்கொள்ளும்படிக்கு, நீங்கள் எப்பொழுதும் நற்கிரியைகளை மிகுதியாய்ச் செய்து, உறுதியுள்ளவர்களாயும், அசைக்கமுடியாதவர்களாயும் இருக்கவேண்டுமென விரும்புகிறேன். ஆமென்.

And again, doth a man take an ass which belongeth to his neighbor, and keep him? I say unto you, Nay; he will not even suffer that he shall feed among his flocks, but will drive him away, and cast him out. I say unto you, that even so shall it be among you if ye know not the name by which ye are called.

Therefore, I would that ye should be steadfast and immovable, always abounding in good works, that Christ, the Lord God Omnipotent, may seal you his, that you may be brought to heaven, that ye may have everlasting salvation and eternal life, through the wisdom, and power, and justice, and mercy of him who created all things, in heaven and in earth, who is God above all. Amen.

# மோசியா 6

1 இப்பொழுதும் ஜனங்களிடம் பேசி முடித்த பின்பு
பென்யமீன் ராஜா, தேவனுடைய கட்டளைகளைக்
கைக்கொள்ளும்படி தேவனோடுகூட ஒரு உடன்ப-
டிக்கையினுள் பிரவேசித்த, அனைவருடைய பெ-
யர்களையும் குறித்துக்கொள்ளுவது அவசிய-
மென்று எண்ணினான்.
2 அந்தப்படியே, சிறு பிள்ளைகளைத் தவிர அங்கி-
ருந்த ஒரு ஆத்துமாவும் உடன்படிக்கையினுள் பிர-
வேசித்து கிறிஸ்துவினுடைய நாமத்தை தங்கள் மீ-
து தரித்துக்கொள்ளாமலிருக்கவில்லை.
3 மீண்டும் அந்தப்படியே, பென்யமீன் ராஜா இவை-
கள் எல்லாவற்றையும் முடித்து, தன் ஜனத்திற்கு
தன்னுடைய குமாரனாகிய மோசியாவை அதிகாரி-
யாகவும், ராஜாவாகவும் அபிஷேகம்பண்ணி, ராஜ்-
யத்தின் சகல பொறுப்புகளையும் அவனிடத்திலே
ஒப்படைத்து, ஜனங்கள் தேவனுடைய கட்டளைக-
ளைக் கேட்டு அறியவும், அவர்கள் செய்துகொண்ட
அந்த உறுதிமொழியை நினைக்கும்படி உணர்த்தப்-
படவும் போதிக்கப்படவும் ஆசாரியர்களை நியமித்-
தபின் கூட்டத்தாரை அனுப்பிவைத்தான். அனை-
வரும் தங்களின் வீட்டாரோடே கூட தங்கள் சொந்த
வீடுகளுக்குத் திரும்பினார்கள்.
4 மோசியா தன் தகப்பனின் ஸ்தானத்திலே அரசா-
ளத் தொடங்கினான். எருசலேமை லேகி விட்டு
வந்த காலத்திலிருந்து மொத்தமாக நானூற்று எழு-
பத்தாறு வருஷங்களில் அவன் தனது முப்பதாவது
வயதிலே அரசாளத் துவங்கினான்.
5 பின்பு பென்யமீன் ராஜா மூன்றாண்டுகள் ஜீவித்-
து மரித்துப்போனான்.
6 அந்தப்படியே, மோசியா ராஜா கர்த்தருடைய பா-
தைகளிலே நடந்து, அவருடைய நியாயத்தையும்,
அவருடைய நியமங்களையும் கைக்கொண்டு,
அவர் தனக்குக் கட்டளையிட்ட எல்லாவற்றிலும்
அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டான்.
7 மோசியா ராஜா தன் ஜனத்தாரை பூமியை பண்ப-
டுத்தச் செய்வித்தான். தன் ஜனத்தாருக்கு தான் பா-
ரமாயிராதபடிக்கு, சகல காரியங்களிலும் தன் தகப்-
பன் செய்திருந்தபடியே தானும் செய்யும்படி, தானே
பூமியை பண்படுத்தினான். மூன்று வருஷமளவும்
அவன் ஜனத்தார் யாவருக்குள்ளும் கலகம் ஒன்று-
மில்லாதிருந்தது.

# Mosiah 6

And now, king Benjamin thought it was expedient, after having finished speaking to the people, that he should take the names of all those who had entered into a covenant with God to keep his commandments.

And it came to pass that there was not one soul, except it were little children, but who had entered into the covenant and had taken upon them the name of Christ.

And again, it came to pass that when king Benjamin had made an end of all these things, and had consecrated his son Mosiah to be a ruler and a king over his people, and had given him all the charges concerning the kingdom, and also had appointed priests to teach the people, that thereby they might hear and know the commandments of God, and to stir them up in remembrance of the oath which they had made, he dismissed the multitude, and they returned, every one, according to their families, to their own houses.

And Mosiah began to reign in his father's stead. And he began to reign in the thirtieth year of his age, making in the whole, about four hundred and seventy-six years from the time that Lehi left Jerusalem.

And king Benjamin lived three years and he died.

And it came to pass that king Mosiah did walk in the ways of the Lord, and did observe his judgments and his statutes, and did keep his commandments in all things whatsoever he commanded him.

And king Mosiah did cause his people that they should till the earth. And he also, himself, did till the earth, that thereby he might not become burdensome to his people, that he might do according to that which his father had done in all things. And there was no contention among all his people for the space of three years.

# மோசியா 7

1 இப்பொழுதும் அந்தப்படியே, மூன்று வருஷகாலமளவும் மோசியா ராஜா தொடர்ந்து சமாதானமாயிருந்த பின்பு, லேகி-நேபி பட்டணத்திற்கோ அல்லது லேகி-நேபி தேசத்திலோ வாசம் செய்யச் சென்ற ஜனங்களைக் குறித்தறிய ஆவலாயிருந்தான். ஏனெனில் சாரகெம்லா தேசத்தைவிட்டு அவர்கள் சென்ற காலம் முதல் அவன் ஜனத்தார் அவர்களைக் குறித்து ஒன்றும் கேள்விப்படாமல் இருந்ததால், அவர்கள் தொந்தரவுபடுத்தி அவனுக்குத் தொல்லை கொடுத்தனர்.

2 அந்தப்படியே, தங்களின் சகோதரர்களைக் குறித்து விசாரிக்க, அவர்களில் பராக்கிரமசாலிகள் பதினாறு பேரை லேகி-நேபி தேசத்திற்கு அனுப்ப மோசியா ராஜா அனுமதித்தான்.

3 அந்தப்படியே, சாரகெம்லாவின் சந்ததியும், பராக்கிரமசாலியும், பெலவானுமான அம்மோன் எனப்பட்டவன் அவர்களுள் ஒருவனாக, மறுநாள் அவர்கள் புறப்பட்டுப்போனார்கள். அவன் அவர்களின் தலைவனாயுமிருந்தான்

4 இப்பொழுது லேகி-நேபி தேசத்திற்குச் செல்ல அவர்கள் வனாந்தரத்தினுள் பிரயாணம் செய்ய வேண்டிய மார்க்கத்தை அறியாது, அநேக நாட்கள் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தார்கள்; நாற்பது நாட்களளவும் அவர்கள் அலைந்தார்கள்.

5 நாற்பது நாட்கள் அலைந்து திரிந்த பின்னர், சீலோம் தேசத்திற்கு வடக்கேயிருந்த மலையை அடைந்து அங்கே பாளையமிறங்கினார்கள்.

6 அமலேக்கி, ஏலேம், ஏம் என்று பெயர்கள் கொண்ட தன் சகோதரர்கள் மூவரை அம்மோன் கூட்டிச்சென்றான். அவர்கள் நேபியின் தேசத்திற்குச் சென்றார்கள்.

7 இதோ அவர்கள் நேபியின் தேசத்திலும், சீலோம் தேசத்திலும் இருந்த ஜனங்களுடைய ராஜாவைச் சந்தித்தார்கள்; அவர்கள் ராஜாவினுடைய காவற்காரர்களால் சூழப்பட்டு, பிடிக்கப்பட்டு, கட்டப்பட்டு, சிறைக்குள் போடப்பட்டார்கள்.

8 அந்தப்படியே, அவர்கள் சிறையினுள் இரண்டு நாட்கள் இருந்த பின்னர், ராஜ சமுகத்தில் மறுபடியும் கொண்டு வரப்பட்டார்கள், அவர்களின் கட்டுக்கள் அவிழ்க்கப்பட்டன; அவர்கள் ராஜாவின் முன் நின்றார்கள். அவர் கேட்கும் கேள்விகளுக்கு அவர்கள் பிரதியுத்தரமளிக்க வேண்டுமென அனுமதிக்கப்பட்டார்கள் அல்லது கட்டளையிடப்பட்டார்கள்.

# Mosiah 7

And now, it came to pass that after king Mosiah had had continual peace for the space of three years, he was desirous to know concerning the people who went up to dwell in the land of Lehi-Nephi, or in the city of Lehi-Nephi; for his people had heard nothing from them from the time they left the land of Zarahemla; therefore, they wearied him with their teasings.

And it came to pass that king Mosiah granted that sixteen of their strong men might go up to the land of Lehi-Nephi, to inquire concerning their brethren.

And it came to pass that on the morrow they started to go up, having with them one Ammon, he being a strong and mighty man, and a descendant of Zarahemla; and he was also their leader.

And now, they knew not the course they should travel in the wilderness to go up to the land of Lehi-Nephi; therefore they wandered many days in the wilderness, even forty days did they wander.

And when they had wandered forty days they came to a hill, which is north of the land of Shilom, and there they pitched their tents.

And Ammon took three of his brethren, and their names were Amaleki, Helem, and Hem, and they went down into the land of Nephi.

And behold, they met the king of the people who were in the land of Nephi, and in the land of Shilom; and they were surrounded by the king's guard, and were taken, and were bound, and were committed to prison.

And it came to pass when they had been in prison two days they were again brought before the king, and their bands were loosed; and they stood before the king, and were permitted, or rather commanded, that they should answer the questions which he should ask them.

9 அவன் அவர்களை நோக்கி சொன்னான்: இதோ, சாரகெம்லாவின் தேசத்திலிருந்து, தங்களின் பிதாக்களின் தேசமாகிய இந்த தேசத்தை சுதந்தரிக்க வந்தவரும், ஜனங்களின் ஆதரவுடனே ராஜாவாக்கப்பட்டவருமான, சீநிப்பின் குமாரனாகிய, நோவாவின் குமாரனாகிய லிம்கி நானே.

And he said unto them: Behold, I am Limhi, the son of Noah, who was the son of Zeniff, who came up out of the land of Zarahemla to inherit this land, which was the land of their fathers, who was made a king by the voice of the people.

10 இப்பொழுதும் வாசல்களுக்கு வெளியே நானே என் காவற்காரருடன் இருக்கும்போது, நீங்கள் எக்காரணத்தால் தைரியமாக பட்டணத்தின் மதில்களருகே வந்தீர்கள், என நான் அறிய ஆவலாய் உள்ளேன்.

And now, I desire to know the cause whereby ye were so bold as to come near the walls of the city, when I, myself, was with my guards without the gate?

11 இப்பொழுது, இக்காரணத்திற்காகவே, நான் உங்களை விசாரிக்கும்படிக்கு, நீங்கள் பாதுகாக்கப்படும்படி அனுமதித்தேன். இல்லாவிடில் என் காவற்காரர் உங்களை கொன்றுபோடும்படி செய்திருப்பேன். நீங்கள் இப்பொழுது பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள், என்றான்.

And now, for this cause have I suffered that ye should be preserved, that I might inquire of you, or else I should have caused that my guards should have put you to death. Ye are permitted to speak.

12 இப்பொழுது தான் பேச அனுமதிக்கப்பட்டதை அம்மோன் கண்டபோது அவன் சென்று, ராஜாவை பணிந்துகொண்ட பின்னர், மறுபடியும் எழுந்து, ராஜாவே நான் இன்னும் ஜீவித்திருந்து பேச அனுமதிக்கப்பட்டதற்கு தேவனுக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்; நான் தைரியமாய் பேச முயற்சிக்கிறேன்.

And now, when Ammon saw that he was permitted to speak, he went forth and bowed himself before the king; and rising again he said: O king, I am very thankful before God this day that I am yet alive, and am permitted to speak; and I will endeavor to speak with boldness;

13 என்னை நீர் அறிந்திருந்தீரேயானால் இந்தக் கட்டுகளால் நான் கட்டப்பட அனுமதித்திருக்க மாட்டீர் என்று நன்கு அறிவேன். ஏனெனில் சாரகெம்லாவின் சந்ததியானான அம்மோன் என்னப்படுகிற நான், சாரகெம்லாவைவிட்டு சீநிப் நடத்திவந்த எங்களின் சகோதரர்களைக்குறித்து விசாரிக்கவே அத்தேசத்தைவிட்டு வந்திருக்கிறேன், என்றான்.

For I am assured that if ye had known me ye would not have suffered that I should have worn these bands. For I am Ammon, and am a descendant of Zarahemla, and have come up out of the land of Zarahemla to inquire concerning our brethren, whom Zeniff brought up out of that land.

14 இப்பொழுதும், அந்தப்படியே, லிம்கி, அம்மோனுடைய வார்த்தைகளைக் கேட்டபோது, அவன் மிகவும் சந்தோஷப்பட்டு, சாரகெம்லாவிலே இருந்த என் சகோதரர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள், என்று இப்பொழுது மெய்யாகவே அறிவேன். இப்பொழுது நான் களிகூருவேன், நாளை என் ஜனத்தாரும் களிகூரும்படிச் செய்வேன்.

And now, it came to pass that after Limhi had heard the words of Ammon, he was exceedingly glad, and said: Now, I know of a surety that my brethren who were in the land of Zarahemla are yet alive. And now, I will rejoice; and on the morrow I will cause that my people shall rejoice also.

15 ஏனெனில் இதோ, லாமானியர்களுக்கு அடிமைகளாக இருக்கிற நாங்கள் கொடுமையான வரிகள் விதிக்கப்படுகிறோம். இப்பொழுதும் இதோ, நம்முடைய சகோதரர்கள் நம்மை அடிமைத்தனத்திலிருந்தும், லாமானியர்களின் கைகளிலிருந்தும் தப்புவிப்பார்கள், நாம் அவர்களுக்கு அடிமைகளாய் இருப்போம். ஏனெனில் லாமானியர்களின் ராஜாவிற்கு வரி செலுத்துவதைக் காட்டிலும், நேபியர்களுக்கு அடிமைகளாயிருப்பதே நலம், என்றான்.

For behold, we are in bondage to the Lamanites, and are taxed with a tax which is grievous to be borne. And now, behold, our brethren will deliver us out of our bondage, or out of the hands of the Lamanites, and we will be their slaves; for it is better that we be slaves to the Nephites than to pay tribute to the king of the Lamanites.

16 இப்பொழுது லிம்கி ராஜா அம்மோனையும் அவன் சகோதரரையும் கட்டக்கூடாதென்று தன் காவற்காரருக்கு கட்டளையிட்டான். ஆனால் அவர்கள் சீலோமுக்கு வடக்கேயுள்ள மலைக்குச் சென்று, அவர்களுடைய சகோதரர்கள் பலபாடுகள் அனுபவித்து, பசியாலும் தாகத்தினாலும், களைப்பினாலும், வாடிப்போனதினிமித்தம், அவர்கள் பிரயாணத்தின் பாரத்திலிருந்து ஓய்வெடுத்து, புசித்து பானம்பண்ணும்படி, பட்டணத்திற்குள்ளே கூட்டிக்கொண்டு வரும்படி செய்தான்.

And now, king Limhi commanded his guards that they should no more bind Ammon nor his brethren, but caused that they should go to the hill which was north of Shilom, and bring their brethren into the city, that thereby they might eat, and drink, and rest themselves from the labors of their journey; for they had suffered many things; they had suffered hunger, thirst, and fatigue.

17 இப்பொழுதும் அந்தப்படியே, மறுதினம் லிம்கி ராஜா தன்னுடைய ஜனங்கள் யாவரும், தான் அவர்களுக்கு பேசவிருக்கும் வார்த்தைகளை கேட்க ஆலயத்திலே ஏகமாய்க்கூட வேண்டுமென்று, ஒரு அறிக்கையை அவர்களுக்குள்ளே அனுப்பினான்.

And now, it came to pass on the morrow that king Limhi sent a proclamation among all his people, that thereby they might gather themselves together to the temple, to hear the words which he should speak unto them.

18 அந்தப்படியே, அவர்கள் யாவரும் ஏகமாய்க் கூடினபோது அவன் அவர்களிடம் இவ்வண்ணம் சொன்னான்: என் ஜனமே, உங்கள் சிரசுகளை உயர்த்தி, ஆறுதலடையுங்கள். இதோ நம்முடைய அநேக போராட்டங்கள் அவமாய்ப் போயிருப்பினும், நம்முடைய சத்துருக்களுக்கு இனி ஒருபோதும் அடிமைகளாயிராத காலம் தூரமாய் அல்லாமல் சமீபமாய் இருக்கிறது; ஆகிலும் திறமையான போராட்டத்தை போராடுவது அவசியம், என நான் நம்புகிறேன்.

And it came to pass that when they had gathered themselves together that he spake unto them in this wise, saying: O ye, my people, lift up your heads and be comforted; for behold, the time is at hand, or is not far distant, when we shall no longer be in subjection to our enemies, notwithstanding our many strugglings, which have been in vain; yet I trust there remaineth an effectual struggle to be made.

19 ஆகையால் உங்கள் தலைகளை உயர்த்தி களிகூர்ந்து, ஆபிரகாம், ஈசாக்கு, மற்றும் யாக்கோபின்,தேவனாகிய அந்த தேவனும் இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து நடத்தினவரும், சிவந்த சமுத்திரத்தினூடாக வெட்டாந்தரையிலே நடக்கும்படிச் செய்து, வனாந்தரத்திலே அழிந்துபோகாதபடி மன்னாவால் போஷித்தவரும், இன்னும் அநேகவற்றை அவர்களுக்குச் செய்தவருமான அந்த தேவனிடத்தில் நம்பிக்கையாயிருங்கள்.

Therefore, lift up your heads, and rejoice, and put your trust in God, in that God who was the God of Abraham, and Isaac, and Jacob; and also, that God who brought the children of Israel out of the land of Egypt, and caused that they should walk through the Red Sea on dry ground, and fed them with manna that they might not perish in the wilderness; and many more things did he do for them.

20 மேலும், நம்முடைய பிதாக்களை எருசலேம் தேசத்திலிருந்து நடத்திவந்து, இதுவரைக்கும் பத்திரமாக பாதுகாத்து வந்த தேவன், அவரே இதோ, நம்முடைய அக்கிரமங்களினிமித்தமும், அருவருப்புகளினிமித்தமே நம்மை அடிமைத்தனத்தினுள் கொண்டு வந்துள்ளார்.

And again, that same God has brought our fathers out of the land of Jerusalem, and has kept and preserved his people even until now; and behold, it is because of our iniquities and abominations that he has brought us into bondage.

21 இந்த ஜனத்திற்கு ராஜாவாக ஏற்படுத்தப்பட்ட சீ-
நிப், தன் பிதாக்களின் தேசத்தை சுதந்தரிக்க மி-
குந்த வைராக்கியம் கொண்டான்; ஆகவே ராஜா-
வாகிய சீநிப்புடன் ஒரு ஒப்பந்தத்தினுள் பிரவே-
சித்து, லேகி-நேபி பட்டணத்தோடு கூடிய தேசத்தின்
ஒரு பகுதியின் உரிமையையும், சீலோம் தேசத்தை-
யும், சுற்றிலுமுள்ள நிலத்தையும், அவனுடைய
கைகளுக்கு ஒப்புவித்த லாமான் ராஜாவினுடைய
தந்திரத்தாலும், சூதினாலும் அவன் வஞ்சிக்கப்பட்-
டான் என்பதற்கு, இத்தினத்திலே நீங்களே சாட்சிக-
ளாயிருக்கிறீர்கள்.

And ye all are witnesses this day, that Zeniff, who was made king over this people, he being over-zealous to inherit the land of his fathers, therefore being deceived by the cunning and craftiness of king Laman, who having entered into a treaty with king Zeniff, and having yielded up into his hands the possessions of a part of the land, or even the city of Lehi-Nephi, and the city of Shilom; and the land round about—

22 அவன் இந்த ஜனத்தாரை கட்டுப்பாட்டுக்குள்
அல்லது அடிமைத்தனத்திற்குள் கொண்டுவர-
வேண்டும், என்ற ஒரே நோக்கத்திற்காகவே இவை-
யனைத்தையும் செய்தான். இதோ, நாங்கள் இச்சம-
யத்தில் எங்களுடைய சோளம், வாற்கோதுமை மற்-
றும் எல்லா விதமான தானியம் யாவிலும் அரைப்-
பங்கையும், மற்றும் எங்கள் மந்தைகள் மற்றும்
கால்நடைகளின் குட்டிகளின் அரை பங்கையும்,
லாமானியர்களின் ராஜாவுக்கு இச்சமயம் வரி கொ-
டுக்கிறோம். நாங்கள் பெற்றுள்ள அல்லது வைத்-
துள்ள எல்லாவற்றின் பாதியை அவன் பிடுங்கிக்
கொள்கிறான். இல்லையெனில் எங்களின் ஜீ-
வனை வாங்கிப்போடுவான்.

And all this he did, for the sole purpose of bringing this people into subjection or into bondage. And behold, we at this time do pay tribute to the king of the Lamanites, to the amount of one half of our corn, and our barley, and even all our grain of every kind, and one half of the increase of our flocks and our herds; and even one half of all we have or possess the king of the Lamanites doth exact of us, or our lives.

23 இப்பொழுது, இதனைத் தாங்கிக்கொள்ளுவது
கடினமல்லவோ? எங்களுடைய இந்த உபத்திரவம்
கொடியதல்லவோ? இதோ, நாங்கள் துக்கப்பட எவ்-
வளவு பெரிய காரணமிருக்கிறது.

And now, is not this grievous to be borne? And is not this, our affliction, great? Now behold, how great reason we have to mourn.

24 ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நாங்-
கள் துக்கப்படுவதற்கு பெரிய காரணங்கள் உண்டு.
இதோ, அக்கிரமத்தினாலே, எங்களுடைய சகோத-
ரர்கள் எத்தனை பேர் கொல்லப்பட்டு, அவர்களின்
இரத்தம் வீணாய் சிந்தப்பட்டது.

Yea, I say unto you, great are the reasons which we have to mourn; for behold how many of our brethren have been slain, and their blood has been spilt in vain, and all because of iniquity.

25 இந்த ஜனத்தார் மீறுதலினுள் விழாமல் இருந்தி-
ருப்பார்களெனில் இந்த மகா பொல்லாப்பு அவர்-
கள் மீது வர கர்த்தர் அனுமதித்திருக்கமாட்டார்.
ஆனால் இதோ, அவருடைய வார்த்தைகளுக்குச்
செவிகொடாமல் போனார்கள். தங்களுக்குள்ளே
அதிகமாய் இரத்தம் சிந்துமளவிற்கு அவர்கள் மத்-
தியில் பிணக்குகள் எழுந்தன.

For if this people had not fallen into transgression the Lord would not have suffered that this great evil should come upon them. But behold, they would not hearken unto his words; but there arose contentions among them, even so much that they did shed blood among themselves.

26 தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவனும்,
அவர்களின் துன்மார்க்கத்தையும், அருவருப்புக-
ளையும் உரைத்தவனும், கிறிஸ்துவினுடைய வரு-
கை உள்பட, இன்னும் வரவிருக்கிற அநேகத்தைக்
குறித்து, தீர்க்கதரிசனமுரைத்தவனுமாகிய கர்த்த-
ருடைய ஒரு தீர்க்கதரிசியைக் கொன்றுபோட்டார்-
கள்.

And a prophet of the Lord have they slain; yea, a chosen man of God, who told them of their wickedness and abominations, and prophesied of many things which are to come, yea, even the coming of Christ.

27 அவன் அவர்களை நோக்கி, சகல காரியங்களுக்-
கும் பிதாவான கிறிஸ்துவே தேவனென்றும், ஆதி-
யிலே மனுஷன் சிருஷ்டிக்கப்பட்ட சாயலின்படி
மனுஷ சாயலை தம்மீது அவர் எடுத்துக்கொள்வார்
என்றான்; அல்லது, வேறு வார்த்தைகளிலெனில்,
மனுஷன் தேவ சாயலின் பிரகாரமாய் சிருஷ்டிக்-
கப்பட்டானென்றும், தேவன் மனுபுத்திரருக்குள்-
ளே வந்து தம்மீது மாம்சம் மற்றும், இரத்த சரீரத்தோ-
டு, பூமியின் பரப்பின் மீதெங்கும் செல்வார் என்றும்
சொன்னான்.

And because he said unto them that Christ was the God, the Father of all things, and said that he should take upon him the image of man, and it should be the image after which man was created in the beginning; or in other words, he said that man was created after the image of God, and that God should come down among the children of men, and take upon him flesh and blood, and go forth upon the face of the earth—

28 இப்பொழுது, இதை அவன் சொன்னதினிமித்தம்
அவனைக் கொன்று போட்டார்கள்; இன்னும் அநே-
கக் காரியங்களைச் செய்து தேவனுடைய கோபாக்-
கினையை தங்கள்மீது வரவழைத்தார்கள். ஆத-
லால், அவர்கள் அடிமைத்தனத்திலே, கொடிய
உபத்திரவங்களினாலே நிந்திக்கப்படுகிறார்கள்
என்று யார் ஆச்சரியப்படுகிறார்கள்?

And now, because he said this, they did put him to death; and many more things did they do which brought down the wrath of God upon them. Therefore, who wondereth that they are in bondage, and that they are smitten with sore afflictions?

29 ஏனெனில் இதோ, கர்த்தர் சொன்னார்: என் ஜனத்-
தின் மீறுதலின் நாளில் நான் அவர்களுக்கு ஆதர-
வாயிராமல் அவர்கள் விருத்தியடையாமலிருக்க
அவர்களின் பாதைகளை அடைப்பேன்; அவர்க-
ளின் கிரியைகள் அவர்களுக்கு முன்பு இடறுத-
லாய் இருக்கும்.

For behold, the Lord hath said: I will not succor my people in the day of their transgression; but I will hedge up their ways that they prosper not; and their doings shall be as a stumbling block before them.

30 மறுபடியும் அவர் சொல்கிறார்: என் ஜனத்தார்
அசுசியை விதைப்பார்களெனில், அதன் பதரை சு-
ழல்காற்றில் அறுவடை செய்வார்கள். அதனுடைய
விளைவோ விஷமாயிருக்கிறது.

And again, he saith: If my people shall sow filthiness they shall reap the chaff thereof in the whirlwind; and the effect thereof is poison.

31 மறுபடியும் அவர் என் ஜனம் அசுசியை விதைத்-
தால், சடிதியாய் அழிவைக் கொண்டுவருகிற கீழ்க்-
காற்றை அறுவடை செய்வார்கள் என்றார்.

And again he saith: If my people shall sow filthiness they shall reap the east wind, which bringeth immediate destruction.

32 இப்பொழுதும் இதோ, கர்த்தருடைய வாக்குத்தத்-
தம் நிறைவேறுகிறது. நீங்கள் அடிக்கப்பட்டு, துன்-
புறுத்தப்பட்டீர்கள்.

And now, behold, the promise of the Lord is fulfilled, and ye are smitten and afflicted.

33 ஆனாலும், நீங்கள் உள்ளத்தின் முழு நோக்கத்-
தோடு கர்த்தரிடத்திலே திரும்பி, அவரில் நம்பிக்-
கை வைத்து, மனதின் எல்லா கருத்தோடும் அவ-
ரைச் சேவித்தால், ஆம், அப்படிச் செய்தால் அவர்
தமது சொந்த சித்தம் மற்றும் விருப்பத்திற்கேற்ப,
உங்களை அடிமைத்தனத்திலிருந்து தப்புவிப்பார்.

But if ye will turn to the Lord with full purpose of heart, and put your trust in him, and serve him with all diligence of mind, if ye do this, he will, according to his own will and pleasure, deliver you out of bondage.

# மோசியா 8

1 அந்தப்படியே, லிம்கி ராஜா தன் உரையை முடித்துக் கொண்டான், தன் ஜனங்களிடம் அநேக காரியங்களைப் பேசினபடியால், அவைகளில் சிலவற்றையே இந்த புஸ்தகத்திலே எழுதியிருக்கிறேன், அவன் தன் ஜனத்திற்கு சாரகெம்லா தேசத்திலே இருந்த தங்களின் சகோதரர்களைக் குறித்து எல்லாவற்றையும் சொன்னான்.

2 அம்மோன் எழுந்து திரள் கூட்டத்தாருக்கு முன்பு நின்று, சீநிப் தேசத்தைவிட்டு வெளியேறிய காலம் முதற்கொண்டு, அவன் தேசத்தைவிட்டு வந்த காலம் வரைக்கும், தங்களின் சகோதரர்களுக்கு சம்பவித்த யாவையும் சொல்லச் செய்தான்.

3 பென்யமீன் ராஜா தங்களுக்குப் பேசின கடைசி வார்த்தைகளை, லிம்கி ராஜாவினுடைய ஜனங்களுக்கு அவன் மறுபடியும் அவர்கள் புரிந்து கொள்ளும்படி, அவைகளை அவர்களுக்கு விளக்கினான்.

4 அந்தப்படியே, இதையெல்லாம் அவன் செய்த பின்னர், லிம்கி ராஜா திரள்கூட்டத்தாரை அனுப்பி அவர்களில் ஒவ்வொருவனும் தன் சொந்த வீட்டுக்கு போகும்படிச் செய்தான்.

5 அந்தப்படியே, சாரகெம்லா தேசத்தைவிட்டு வந்த காலம் முதற்கொண்டு தன் ஜனத்தினுடைய வரலாற்றைக் கொண்டிருக்கிற தகடுகளை, அம்மோன் வாசிக்கும்பொருட்டு அவன் முன்னே கொண்டுவரப்படும்படிச் செய்தான்.

6 இப்பொழுதும் அம்மோன் பதிவேடுகளை வாசித்த உடனே, அவனால் பாஷைகளை மொழிபெயர்க்கக்கூடுமோ என்று ராஜா அறிந்துகொள்ள அவனை விசாரித்தான், தன்னால் இயலாது, என அம்மோன் அவனுக்குச் சொன்னான்.

7 ராஜா அவனை நோக்கி சொன்னான்: என் ஜனத்தினுடைய உபத்திரவங்களால் சஞ்சலப்பட்டு, என் ஜனத்திலிருந்து நாற்பத்தி மூன்றுபேரை வனாந்தரத்திலே பிரயாணம் செய்து, சாரகெம்லா தேசத்தைக் கண்டுபிடித்து, எங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்குமாறு, எங்களுடைய சகோதரர்களிடத்தில் நாங்கள் விண்ணப்பமிடும்படி செய்தேன்.

# Mosiah 8

And it came to pass that after king Limhi had made an end of speaking to his people, for he spake many things unto them and only a few of them have I written in this book, he told his people all the things concerning their brethren who were in the land of Zarahemla.

And he caused that Ammon should stand up before the multitude, and rehearse unto them all that had happened unto their brethren from the time that Zeniff went up out of the land even until the time that he himself came up out of the land.

And he also rehearsed unto them the last words which king Benjamin had taught them, and explained them to the people of king Limhi, so that they might understand all the words which he spake.

And it came to pass that after he had done all this, that king Limhi dismissed the multitude, and caused that they should return every one unto his own house.

And it came to pass that he caused that the plates which contained the record of his people from the time that they left the land of Zarahemla, should be brought before Ammon, that he might read them.

Now, as soon as Ammon had read the record, the king inquired of him to know if he could interpret languages, and Ammon told him that he could not.

And the king said unto him: Being grieved for the afflictions of my people, I caused that forty and three of my people should take a journey into the wilderness, that thereby they might find the land of Zarahemla, that we might appeal unto our brethren to deliver us out of bondage.

8 அவர்கள் அநேக நாட்கள் வனாந்தரத்தில் வழி
தப்பிப்போனாலும், கருத்துள்ளவர்களாய் இருந்-
தார்கள். சாரகெம்லா தேசத்தைக் கண்டடையாமல்,
அநேக தண்ணீர்களைக் கொண்ட தேசத்திலே பிர-
யாணம்பண்ணி, மனுஷ, மற்றும் மிருக எலும்புக-
ளினாலே மூடப்பட்டும், எல்லா வகையான அழிந்-
துபோன கட்டடங்களினாலும் மூடப்பட்டும், இஸ்ர-
வேலின் திரளானோரைப்போல ஏராளமான
ஜனங்களைக் கொண்டிருந்த ஒரு தேசத்தைக் கண்-
டுபிடித்த பின்னர் இத்தேசத்திற்குத் திரும்பினார்-
கள்.
9 தாங்கள் சொன்னவை உண்மையானவை என்-
பதற்கு சாட்சியமாக, முழுவதுமாய் பொறிக்கப்பட்-
டதும், பசும்பொன்னாலானதுமான இருபத்தி
நான்கு தகடுகளைக் கொண்டு வந்தார்கள்.
10 இதோ, தாமிரத்தாலும், பித்தளையாலும் செய்யப்-
பட்டதும், பழுதற்றதும், பெரிதுமான மார்புக் கவ-
சங்களையும் கொண்டு வந்திருந்தார்கள்.
11 மேலும், துருப்பிடித்த கைப்பிடிகளை உடைய
பட்டயங்களைக்கொண்டு வந்தார்கள்; அதன்
கருக்குகளோ துருப்பிடித்து அழிந்து போயிருந்-
தன; தகடுகளிலே இருந்த பாஷையை அல்லது
பொறிக்கப்பட்டிருந்ததை மொழிபெயர்க்க, தேசத்-
திலே எவராலும் கூடாமற்போயிற்று. ஆகவேதான்
நான் உன்னை நோக்கி: மொழிபெயர்க்க இயலுமா
என்றேன்.
12 உன்னை மறுபடியும் கேட்கிறேன், மொழிபெயர்க்-
கக்கூடிய எவரையாகிலும் நீ அறிவாயா? ஏனெ-
னில் எங்களுடைய பாஷைக்கு இந்தப் பதிவேடுக-
ளை மொழிபெயர்க்கவேண்டும் என்று, நான் வி-
ருப்பம் கொண்டிருக்கிறேன். ஏனெனில் இந்தப்
பதிவேடுகள் சங்கரிக்கப்பட்ட ஜனத்தின் மீதியான-
வர்களைப்பற்றிய அறிவையும், இப்பதிவேடுகள்
எங்கிருந்து வந்தன என்றும், நமக்கு தெரிவிக்க-
லாம். இல்லாவிடில் ஒருவேளை சங்கரிக்கப்பட்ட
அதே ஜனத்தைப்பற்றிய அறிவை நமக்குத் தெரி-
விக்கலாம். ஏனெனில் நான் அவர்களது அழிவின்
காரணத்தை அறிந்து கொள்ள வாஞ்சையுள்ள-
வனாயிருக்கிறேன்.

And they were lost in the wilderness for the space of many days, yet they were diligent, and found not the land of Zarahemla but returned to this land, having traveled in a land among many waters, having discovered a land which was covered with bones of men, and of beasts, and was also covered with ruins of buildings of every kind, having discovered a land which had been peopled with a people who were as numerous as the hosts of Israel.

And for a testimony that the things that they had said are true they have brought twenty-four plates which are filled with engravings, and they are of pure gold.

And behold, also, they have brought breastplates, which are large, and they are of brass and of copper, and are perfectly sound.

And again, they have brought swords, the hilts thereof have perished, and the blades thereof were cankered with rust; and there is no one in the land that is able to interpret the language or the engravings that are on the plates. Therefore I said unto thee: Canst thou translate?

And I say unto thee again: Knowest thou of any one that can translate? For I am desirous that these records should be translated into our language; for, perhaps, they will give us a knowledge of a remnant of the people who have been destroyed, from whence these records came; or, perhaps, they will give us a knowledge of this very people who have been destroyed; and I am desirous to know the cause of their destruction.

13 இப்பொழுது அம்மோன் அவனை நோக்கி: ராஜா-
வே, பதிவேடுகளை மொழிபெயர்க்கக்கூடிய ஒரு-
வனைக்குறித்து திட்டவட்டமாய் உமக்குச் சொல்-
லக்கூடும்; தான் வைத்திருக்கிறவைகளைப் பார்த்-
து, பூர்வகால பதிவேடுகள் அனைத்தையும்
அவனால் மொழிபெயர்க்கக்கூடும்; அது தேவனி-
டத்திலிருந்து வந்த வரமாயிருக்கிறது. அவைகள்
மொழிபெயர்ப்பான்கள் என்று அழைக்கப்படு-
கின்றன. கட்டளையிடப்பட்டாலொழிய ஒருவனும்
அவைகளை காணக்கூடாது. அப்படியே பார்க்கக்-
கூடாதவன் பார்ப்பானேயாகில், அவன் சாகவேண்-
டும். அவைகளைப் பார்க்கும்படி எவன் கட்டளை-
யிடப்பட்டிருக்கிறானோ அவனே ஞானதிருஷ்டிக்-
காரன் என்றழைக்கப்படுகிறான்.

Now Ammon said unto him: I can assuredly tell thee, O king, of a man that can translate the records; for he has wherewith that he can look, and translate all records that are of ancient date; and it is a gift from God. And the things are called interpreters, and no man can look in them except he be commanded, lest he should look for that he ought not and he should perish. And whosoever is commanded to look in them, the same is called seer.

14 இதோ, சாரகெம்லா தேசத்தின் ஜனங்களின் ராஜா-
வாயிருக்கிற அந்த மனுஷனே இவைகளைச் செய்-
யும்படி கட்டளையிடப்பட்டும், தேவனிடத்திலிருந்-
து இந்த உன்னத வரத்தைப் பெற்றவனுமாயிருக்கி-
றான்.

And behold, the king of the people who are in the land of Zarahemla is the man that is commanded to do these things, and who has this high gift from God.

15 ஞானதிருஷ்டிக்காரன், தீர்க்கதரிசியைக் காட்டி-
லும் மேன்மை பொருந்தியவன் என்று ராஜா
சொன்னான்.

And the king said that a seer is greater than a prophet.

16 அம்மோன் சொன்னது என்னவெனில், ஞானதி-
ருஷ்டிக்காரன் வெளிப்படுத்துபவனாயும், தீர்க்கத-
ரிசியாயுமிருக்கிறான்; ஒருவனும் பெறக்கூடாத
தேவ வல்லமையை அவன் பெற்றிருந்தாலொழிய
அதைக் காட்டிலும் மேலான வரத்தை ஒருவனும்
பெற்றிருக்க முடியாது. இருப்பினும் ஒருவன் தே-
வனிடத்திலிருந்து தனக்குக் கொடுக்கப்பட்ட மி-
குந்த வல்லமையைப் பெற்றிருக்கக் கூடும்.

And Ammon said that a seer is a revelator and a prophet also; and a gift which is greater can no man have, except he should possess the power of God, which no man can; yet a man may have great power given him from God.

17 கடந்து போனவைகளையும், இனி வரவிருக்கிற-
வைகளையும் குறித்து ஒரு ஞானதிருஷ்டிக்காரன்
அறிந்துகொள்ளக் கூடும். அவர்கள் மூலமாய் காரி-
யங்கள் யாவும் வெளிப்படுத்தப்படும். அல்லது இர-
கசியமானவைகளும் வெளியரங்கமாக்கப்படும்.
மறைபொருட்களும் வெளிச்சத்திற்கு வரும். அறி-
யப்படாதவைகள் அவர்கள் மூலமாய் அறியப்ப-
டுத்தப்படும். மற்ற எவ்விதத்திலும், அறியப்பட மு-
டியாத காரியங்கள் அவர்களினால் அறியப்படுத்-
தப்படும்.

But a seer can know of things which are past, and also of things which are to come, and by them shall all things be revealed, or, rather, shall secret things be made manifest, and hidden things shall come to light, and things which are not known shall be made known by them, and also things shall be made known by them which otherwise could not be known.

18 ஆகையால் மனுஷன் தன் சகமனுஷருக்கு மி-
குந்த பிரயோஜனமாயிருக்கும் பொருட்டு, அவன்
விசுவாசத்தினாலே பலத்த அற்புதங்களைப் புரிய
தேவன் வழியை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்,
என்றான்.

Thus God has provided a means that man, through faith, might work mighty miracles; therefore he becometh a great benefit to his fellow beings.

19 இப்பொழுது அம்மோன் இவ்வார்த்தைகளை பே-
சி முடித்தபின்பு ராஜா மிகவும் களிகூர்ந்து தே-
வனுக்கு நன்றிகளைச் செலுத்தி, எவ்வித சந்தேக-
முமின்றி இத்தகடுகள் மகா இரகசியங்களைக்
கொண்டிருக்கின்றன என்றும், மனுபுத்திரருக்கு
இவ்விதமான எல்லா இரகசியங்களையும் வெளிப்-
படுத்தும்படிக்கே இம்மொழிபெயர்க்கும் கருவிகள்
சந்தேகமின்றி ஆயத்தம் பண்ணப்பட்டன.

And now, when Ammon had made an end of speaking these words the king rejoiced exceedingly, and gave thanks to God, saying: Doubtless a great mystery is contained within these plates, and these interpreters were doubtless prepared for the purpose of unfolding all such mysteries to the children of men.

20 கர்த்தருடைய கிரியைகள் எவ்வளவு அற்புதமா-
னவை. தன் ஜனங்களிடத்தில் எவ்வளவு காலம் நீ-
டிய சாந்தமாயிருக்கிறார்; மனுபுத்திரர்களின் புத்தி
எவ்வளவு குருடாயும், துளைக்க முடியாததுமாயி-
ருக்கிறது. ஏனெனில் அவர்கள் ஞானத்தைத் தேடு-
வதுமில்லை. அவள் தங்கள் மீது ராஜரீகம் பண்ண
அவர்கள் விரும்புவதுமில்லை.

O how marvelous are the works of the Lord, and how long doth he suffer with his people; yea, and how blind and impenetrable are the understandings of the children of men; for they will not seek wisdom, neither do they desire that she should rule over them!

21 ஆம், அவர்கள் மேய்ப்பனிடமிருந்து ஓடி, சிதறி,
துரத்தப்பட்டு, கானகத்து மிருகங்களினால் பட்சிக்-
கப்படுகிற காட்டு மந்தையைப்போல இருக்கிறார்-
கள், என்றான்.

Yea, they are as a wild flock which fleeth from the shepherd, and scattereth, and are driven, and are devoured by the beasts of the forest.

*சீநிப்புடைய பதிவேடு* – அவன் ஜனத்தார் சாரகெம்-
லா தேசத்தைவிட்டு வந்தக் காலத்திலிருந்து, லாமா-
னியர்களின் கைகளுக்குத் தப்புவிக்கப்பட்ட காலம்
வரைக்குமான விவரம்.

*The Record of Zeniff—An account of his people, from the time they left the land of Zarahemla until the time that they were delivered out of the hands of the Lamanites.*

## மோசியா 9

1 சீநிப்பாகிய நான், நேபியர்களுடைய பாஷை முழு-
வதையும் கற்பிக்கப்பட்டவனாயும், எங்கள் பிதாக்-
கள் முதற் சுதந்தரித்த தேசமான நேபி தேசத்தைப்-
பற்றி அறிந்தவனாயும், லாமானியர்களின் சேனை-
களை வேவு பார்த்து, எங்களின் சேனை அவர்க-
ளை மேற்கொண்டு, அழித்துப்போட அவர்களுக்-
குள்ளே வேவுகாரனாக அனுப்பப்பட்டவனுமாயி-
ருந்தேன்; ஆனால் அவர்களுக்குள்ளே நன்மையா-
னதைக் கண்டபோது, அவர்கள் அழிக்கப்படக்கூ-
டாது என வாஞ்சித்தேன்.

2 ஆதலால் அவர்களுடன் எங்களின் அதிகாரி ஒரு
ஒப்பந்தம் செய்யவேண்டுமென்று, நான் என் சகோ-
தரரோடு வனாந்தரத்திலே வாக்குவாதம் செய்தேன்;
ஆனால் அவனோ கடினமானவனும் இரத்ததாகம்
கொண்டவனாயும் இருந்தபடியால், நான் கொலை
செய்யப்பட உத்தரவிட்டான்; அதிக இரத்தம் சிந்தப்-
பட்டு நான் காப்பாற்றப்பட்டேன், ஆனால் வனாந்-
தரத்திலே எங்களுடைய சேனையின் அதிகமா-
னோர் அழிந்துபோகும்வரை, தகப்பனுக்கு விரோத-
மாய் தகப்பனும், சகோதரனுக்கு விரோதமாய் சகோ-
தரனும் சண்டையிட்டார்கள்; தப்பவிடப்பட்ட நாங்-
கள், அவர்களின் மனைவிகளுக்கும், பிள்ளைக-
ளுக்கும் நடந்த கதையைச் சொல்ல சாரகெம்லா தே-
சத்திற்குத் திரும்பினோம்.

3 ஆகிலும் நான் எங்களுடைய பிதாக்களின் தே-
சத்தை சுதந்தரிக்க அதிக வாஞ்சையுள்ளவனாய்,
தேசத்தை சுதந்தரிக்க விரும்பின அநேகரைக் கூட்-
டிச் சேர்த்து, தேசத்திற்குச் செல்ல வனாந்தரத்தி-
னுள் மறுபடியும் எங்கள் பயணத்தை மேற்கொண்-
டோம். நாங்கள் தேவனாகிய எங்கள் கர்த்தரை நி-
னைவுகூர மந்தமுள்ளவர்களாய் இருந்ததினிமித்-
தம், பட்டினியாலும் கொடிய உபத்திரவங்களினா-
லும் வாதிக்கப்பட்டோம்.

4 ஆயினும் வனாந்தரத்திலே அதிக நாட்கள்
அலைந்து திரிந்த பின்பு, எங்களுடைய பிதாக்க-
ளின் தேசத்திற்கு அருகாமையிலே இருக்கிற, எங்-
கள் சகோதரர்கள் கொலை செய்யப்பட்ட இடத்திலே
பாளயமிறங்கினோம்.

5 அந்தப்படியே, ராஜாவினுடைய சுபாவ குணத்-
தை அறியவும், நான் என் ஜனத்தாரோடு சென்று
சமாதானமாய் என் ஜனத்தோடு அத்தேசத்தைச் சு-
தந்தரிக்கக்கூடுமா, என அறியவும் ராஜாவைச் சந்-
திக்க, என் மனுஷருள் நான்கு பேரோடு மறுபடியும்
பட்டணத்தினுள் சென்றேன்.

## Mosiah 9

I, Zeniff, having been taught in all the language of the Nephites, and having had a knowledge of the land of Nephi, or of the land of our fathers' first inheritance, and having been sent as a spy among the Lamanites that I might spy out their forces, that our army might come upon them and destroy them—but when I saw that which was good among them I was desirous that they should not be destroyed.

Therefore, I contended with my brethren in the wilderness, for I would that our ruler should make a treaty with them; but he being an austere and a blood-thirsty man commanded that I should be slain; but I was rescued by the shedding of much blood; for father fought against father, and brother against brother, until the greater number of our army was destroyed in the wilderness; and we returned, those of us that were spared, to the land of Zarahemla, to relate that tale to their wives and their children.

And yet, I being over-zealous to inherit the land of our fathers, collected as many as were desirous to go up to possess the land, and started again on our journey into the wilderness to go up to the land; but we were smitten with famine and sore afflictions; for we were slow to remember the Lord our God.

Nevertheless, after many days' wandering in the wilderness we pitched our tents in the place where our brethren were slain, which was near to the land of our fathers.

And it came to pass that I went again with four of my men into the city, in unto the king, that I might know of the disposition of the king, and that I might know if I might go in with my people and possess the land in peace.

6 நான் ராஜாவிடம் சென்றேன். லேகி-நேபி தேசத்-
தையும், சீலோம் தேசத்தையும் நான் சுதந்தரித்துக்-
கொள்ள என்னுடனே உடன்படிக்கை செய்து-
கொண்டான்.

And I went in unto the king, and he covenanted with me that I might possess the land of Lehi-Nephi, and the land of Shilom.

7 தன்னுடைய ஜனத்தார் அந்த தேசத்திலிருந்து
வெளியேற வேண்டுமென்றும் அவன் கட்டளை-
யிட்டான். நானும் என்னுடைய ஜனமும் அத்தேசத்-
தைச் சுதந்தரிக்கும்படி அதனுள் பிரவேசித்தோம்.

And he also commanded that his people should depart out of the land, and I and my people went into the land that we might possess it.

8 கட்டடங்களைக் கட்டவும், பட்டணத்தின் மதில்க-
ளைப் புதுப்பிக்கவும் துவங்கினோம். ஆம் லேகி-
நேபி பட்டணத்தின் மதில்களையும் சீலோம் பட்ட-
ணத்தின் மதில்களையும் புதுப்பித்தோம்.

And we began to build buildings, and to repair the walls of the city, yea, even the walls of the city of Lehi-Nephi, and the city of Shilom.

9 நாங்கள் பூமியைப் பண்படுத்தத் தொடங்கி-
னோம், சகல விதமான விதைகளையும், மற்றும்
சோளம், கோதுமை, வாற்கோதுமை, நீஸ், சும் ஆகி-
யவைகளின் விதைகளையும் எல்லாவிதமான
கனிகளின் விதைகளையும், பூமியில் பயிரிடத் து-
வங்கினோம்; நாங்கள் பலுகிப் பெருகி தேசத்திலே
விருத்தியடைந்தோம்.

And we began to till the ground, yea, even with all manner of seeds, with seeds of corn, and of wheat, and of barley, and with neas, and with sheum, and with seeds of all manner of fruits; and we did begin to multiply and prosper in the land.

10 இப்பொழுதும் லாமான் ராஜா என்னுடைய
ஜனத்தை அடிமைத்தனத்திற்குள்ளாக கொண்டு-
வரும்படிக்கே, நாங்கள் அத்தேசத்தைச் சுதந்தரிக்-
கக் கொடுத்தான். அது அவனுடைய தந்திரமும்
வஞ்சனையுமாயிருக்கிறது.

Now it was the cunning and the craftiness of king Laman, to bring my people into bondage, that he yielded up the land that we might possess it.

11 ஆனபடியால், பன்னிரண்டு வருஷமளவும்,
நாங்கள் அத்தேசத்திலே வாசம்பண்ணின பின்பு,
அவர்கள் என் ஜனத்தின்மீது அதிகாரம் செலுத்த
முடியாமலும், அவர்களை அடிமைத்தனத்திற்குள்
கொண்டுவரக்கூடாதபடி தேசத்திலே எவ்விதத்தி-
லும் என் ஜனம் பெலன் பெற்றுவிடுமோ என்று, லா-
மான் ராஜா மனங்கலங்கினான்.

Therefore it came to pass, that after we had dwelt in the land for the space of twelve years that king Laman began to grow uneasy, lest by any means my people should wax strong in the land, and that they could not overpower them and bring them into bondage.

12 இப்பொழுதும், அவர்கள் சோம்பேறிகளும், விக்-
கிரக ஆராதனை செய்யும் ஜனங்களாயும் இருந்-
தார்கள்; ஆதலால் எங்களுடைய கரங்களின் பிர-
யாசங்களால் புசித்து, எங்கள் வயல்வெளியின்
மந்தைகளை புசித்துக் களிப்பதற்காக அடிமைத்-
தனத்திற்குள் எங்களைக் கொண்டு வர விரும்பி-
னார்கள்.

Now they were a lazy and an idolatrous people; therefore they were desirous to bring us into bondage, that they might glut themselves with the labors of our hands; yea, that they might feast themselves upon the flocks of our fields.

13 ஆனபடியால், லாமான் ராஜா தன் ஜனம் என்னு-
டைய ஜனத்தோடு கலகம் செய்ய வேண்டுமென்று
தூண்டிவிட்டான்; ஆதலால் தேசத்திலே யுத்தங்க-
ளும் பிணக்குகளும் நடக்கத் தொடங்கின.

Therefore it came to pass that king Laman began to stir up his people that they should contend with my people; therefore there began to be wars and contentions in the land.

14 நான் நேபியின் தேசத்தை ஆண்ட பதிமூன்றாம்
வருஷத்திலே சீலோம் தேசத்திலிருந்து தெற்கு தி-
சையிலே, என்னுடைய ஜனத்தார் தங்களின் மந்-
தைகளுக்கு தண்ணீர் காட்டி, மேய்த்துக்கொண்-
டும், தங்கள் நிலங்களை பண்படுத்திக்கொண்டுமி-
ருக்கும்போது, அவர்களின் மந்தைகளையும், வெ-
ளியின் தானியங்களையும் எடுத்துச் செல்லும்படி
லாமானியர்களின் ஏராளமான சேனைகள் அவர்-
கள் மேல் விழுந்து, அவர்களை வெட்டிப்போடத் து-
வங்கினார்கள்.

For, in the thirteenth year of my reign in the land of Nephi, away on the south of the land of Shilom, when my people were watering and feeding their flocks, and tilling their lands, a numerous host of Lamanites came upon them and began to slay them, and to take off their flocks, and the corn of their fields.

15 ஆம், அந்தப்படியே, மேற்கொள்ளப்படாதவர்க-
ளெல்லாம் நேபியர்களின் பட்டணத்திற்குள்ளே
ஓடி, பாதுகாப்பிற்காக என்னை அழைத்தார்கள்.

Yea, and it came to pass that they fled, all that were not overtaken, even into the city of Nephi, and did call upon me for protection.

16 அந்தப்படியே, அவர்களை நான் விற்களாலும்,
அம்புகளாலும், பட்டயங்களாலும், உடைவாள்க-
ளாலும், தண்டாயுதங்களினாலும், கவண்களா-
லும், எங்களால் செய்யமுடிந்த சகல விதமான ஆயு-
தங்களாலும் ஆயுதந்தரித்து, லாமானியர்களுக்கு
விரோதமாய் யுத்தம்பண்ண நானும் என் ஜனமும்
போனோம்.

And it came to pass that I did arm them with bows, and with arrows, with swords, and with cimeters, and with clubs, and with slings, and with all manner of weapons which we could invent, and I and my people did go forth against the Lamanites to battle.

17 ஆம், கர்த்தருடைய பெலத்தாலே லாமானியர்க-
ளுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப் போனோம்.
ஏனெனில் எங்கள் பிதாக்கள் தப்புவிக்கப்பட்ட-
தை நினைவுகூரும்படி விழித்தெழுந்தவர்களாய்,
எங்களுடைய சத்துருக்களின் கைகளுக்கு எங்க-
ளைத் தப்புவிக்கும்படி நானும் என் ஜனமும் அவரி-
டத்திலே உருக்கமாய் கூக்குரலிட்டோம்.

Yea, in the strength of the Lord did we go forth to battle against the Lamanites; for I and my people did cry mightily to the Lord that he would deliver us out of the hands of our enemies, for we were awakened to a remembrance of the deliverance of our fathers.

18 எங்களின் கூக்குரலைக் கேட்டு, தேவன் பதில-
ளித்தார். அவருடைய பெலத்திலே சென்றோம். லா-
மானியர்களுக்கு விரோதமாய்ப் போய், ஒரு இரவு
மற்றும் பகலுக்குள் மூவாயிரத்து நாற்பத்தி மூன்று-
பேரை சங்கரித்தோம்; எங்களின் தேசத்தைவிட்டு
அவர்களை நாங்கள் துரத்தும் மட்டிலுமாய் சங்க-
ரித்தோம்.

And God did hear our cries and did answer our prayers; and we did go forth in his might; yea, we did go forth against the Lamanites, and in one day and a night we did slay three thousand and forty-three; we did slay them even until we had driven them out of our land.

19 அவர்களில் மரித்தோரை என் சொந்தக் கைக-
ளால் அடக்கம்பண்ண உதவினேன். இதோ நாங்-
கள் மிகவும் துக்கித்துப் புலம்பும்படிக்கு, எங்கள்
சகோதரர்களில் இருநூற்று எழுபத்தி ஒன்பது பேர்
மரித்துப்போனார்கள்.

And I, myself, with mine own hands, did help to bury their dead. And behold, to our great sorrow and lamentation, two hundred and seventy-nine of our brethren were slain.

# மோசியா 10

1 அந்தப்படியே, மறுபடியும் நாங்கள் ராஜ்யத்தை ஸ்தாபிக்கத் துவங்கி, சமாதானமாய் தேசத்திலே வாசமாயிருந்தோம். என் ஜனத்திற்கு விரோதமாய் லாமானியர்கள் மறுபடியும் யுத்தத்திற்கு வரும் காலத்திலே, என் ஜனத்திற்கு ஆயுதமிருக்கும் பொருட்டு, சகலவிதமான போர்க்கருவிகளையும் தயாரிக்கப்படும்படிச் செய்தேன்.

2 லாமானியர்கள் மறுபடியும் எதிர்பாராதபோது வந்து எங்களைச் சங்கரிக்காதபடிக்கு தேசத்தைச் சுற்றிலும் காவல் வைத்தேன்; இவ்விதமாய் என் ஜனங்களையும், மந்தைகளையும் என்னுடைய சத்துருக்களின் கைகளில் விழாதபடி காத்துக்கொண்டேன்.

3 அந்தப்படியே, அநேக வருஷங்கள் எங்கள் பிதாக்களின் தேசத்தைச் சுதந்தரித்துக்கொண்டோம். ஆம், இருபத்தி இரண்டு வருஷமளவும்.

4 புருஷர் நிலத்தைப் பண்படுத்தி, சகல விதமான தானியங்களையும், சகல விதமான கனிகளையும் பயிரிடப்பண்ணினேன்.

5 நாங்கள் வஸ்திரம் தரித்திருக்க, ஸ்திரீகள் நூல் நூற்று உழைத்து, வேலை செய்து சகலவிதமான மென்மையான பட்டுடைகளையும், ஆம் சகலவிதமான வஸ்திரங்களையும் நெய்யும்படிச் செய்தேன். இவ்விதமாய் தேசத்திலே நாங்கள் விருத்தியடைந்து, இருபத்திரண்டு வருஷங்களளவும் தேசத்திலே தொடர்ந்து சமாதானத்தைப் பெற்றிருந்தோம்.

6 அந்தப்படியே, லாமான் ராஜா மரித்துப்போனான். அவன் ஸ்தானத்திலே அவனுடைய குமாரன் அரசாளத் துவங்கினான். என் ஜனத்திற்கு விரோதமாய் கலகம் செய்யவேண்டுமென்று தன் ஜனத்தைத் தூண்டிவிட்டான்; ஆதலால் அவர்கள் என் ஜனத்திற்கு விரோதமாய் வந்து சண்டையிட யுத்தத்திற்காக ஆயத்தப்பட்டார்கள்.

7 அவர்களின் ஆயத்தங்களை அறிந்து கொள்ளும்படிக்கு, அவர்கள் என் ஜனத்தின்மீது வந்து அழித்துப் போடாதபடிக்கு, அவர்களுக்கு விரோதமாய் நான் காவல் வைக்கும்படிக்கும், சேம்லோன் தேசத்தைச் சுற்றிலும் நான் வேவுகாரரை அனுப்பினேன்.

8 அந்தப்படியே, அவர்கள் விற்களாலும், அம்புகளாலும், பட்டயங்களாலும், உடைவாள்களாலும், கற்களாலும், கவண்களாலும், ஆயுதம் தரித்த புருஷர்களைக் கொண்ட, ஏராளமான சேனைகளோடு சீலோம் தேசத்தின் வடதிசைக்கு வந்தார்கள்; மொட்டைத் தலையாயிருக்கும்படிக்கு, அவர்கள் தங்கள் சிரசுகளின் மயிரை சிரைத்திருந்தார்கள்; அவர்கள் தோலால் செய்யப்பட்ட ஒரு கச்சையைத் தங்கள் அரைகளிலே உடுத்தியிருந்தார்கள்.

# Mosiah 10

And it came to pass that we again began to establish the kingdom and we again began to possess the land in peace. And I caused that there should be weapons of war made of every kind, that thereby I might have weapons for my people against the time the Lamanites should come up again to war against my people.

And I set guards round about the land, that the Lamanites might not come upon us again unawares and destroy us; and thus I did guard my people and my flocks, and keep them from falling into the hands of our enemies.

And it came to pass that we did inherit the land of our fathers for many years, yea, for the space of twenty and two years.

And I did cause that the men should till the ground, and raise all manner of grain and all manner of fruit of every kind.

And I did cause that the women should spin, and toil, and work, and work all manner of fine linen, yea, and cloth of every kind, that we might clothe our nakedness; and thus we did prosper in the land—thus we did have continual peace in the land for the space of twenty and two years.

And it came to pass that king Laman died, and his son began to reign in his stead. And he began to stir his people up in rebellion against my people; therefore they began to prepare for war, and to come up to battle against my people.

But I had sent my spies out round about the land of Shemlon, that I might discover their preparations, that I might guard against them, that they might not come upon my people and destroy them.

And it came to pass that they came up upon the north of the land of Shilom, with their numerous hosts, men armed with bows, and with arrows, and with swords, and with cimeters, and with stones, and with slings; and they had their heads shaved that they were naked; and they were girded with a leathern girdle about their loins.

9 அந்தப்படியே, என் ஜனத்தாரிலிருக்கிற ஸ்திரீக-
ளும் பிள்ளைகளும் வனாந்தரத்திலே மறைத்து
வைக்கப்படும்படிச் செய்தேன். ஆயுதம் தரிக்கக்கூ-
டிய எனது சகல வயதான புருஷர்களையும், ஆயு-
தம் தரிக்கக்கூடிய எனது சகல வாலிபர்களையும்,
லாமானியர்களுக்கு விரோதமாக யுத்தத்திற்குச்
செல்ல ஏகமாய்க் கூடும்படிச் செய்தேன்; அவர்க-
ளின் வயதுக்குத் தக்கதாய் ஒவ்வொரு மனு-
ஷனையும் தன் தன் அணியிலே நிற்க வைத்தேன்.

And it came to pass that I caused that the women and children of my people should be hid in the wilderness; and I also caused that all my old men that could bear arms, and also all my young men that were able to bear arms, should gather themselves together to go to battle against the Lamanites; and I did place them in their ranks, every man according to his age.

10 அந்தப்படியே, லாமானியர்களுக்கு விரோதமாய்
நாங்கள் யுத்தம் புரியச் சென்றோம். நான் என்னு-
டைய வயதான காலத்திலும் லாமானியர்களுக்கு
விரோதமாய் யுத்தத்திற்குச் சென்றேன். அந்தப்படி-
யே, நாங்கள் கர்த்தருடைய பெலத்திலே யுத்தத்திற்-
குச் சென்றோம்.

And it came to pass that we did go up to battle against the Lamanites; and I, even I, in my old age, did go up to battle against the Lamanites. And it came to pass that we did go up in the strength of the Lord to battle.

11 இப்பொழுது லாமானியர்கள் கர்த்தரையோ, கர்த்-
தருடைய பெலத்தைப்பற்றியோ ஒன்றும் அறியா-
மலிருந்தார்கள். ஆதலால் அவர்கள் தங்கள்
சொந்த பெலத்தையே சார்ந்திருந்தார்கள். ஆகிலும்
மனுஷருடைய பெலத்தின்படி பராக்கிரமசாலிக-
ளாயிருந்தார்கள்.

Now, the Lamanites knew nothing concerning the Lord, nor the strength of the Lord, therefore they depended upon their own strength. Yet they were a strong people, as to the strength of men.

12 அவர்கள் மூர்க்கத்தனமுள்ளவர்களாகவும்,
பொல்லாதவர்களாகவும், இரத்ததாகம் கொண்ட
ஜனங்களாகவுமிருந்து, தங்கள் பிதாக்களின் அக்-
கிரமங்களினாலே எருசலேம் தேசத்தைவிட்டு துரத்-
தப்பட்டார்கள் எனவும், தங்கள் சகோதரர்களால்
வனாந்தரத்தில் அநியாயஞ் செய்யப்பட்டார்களெ-
னவும், சமுத்திரத்தைக் கடக்கும்போதும் அநியா-
யஞ் செய்யப்பட்டார்களெனவும்,

They were a wild, and ferocious, and a bloodthirsty people, believing in the tradition of their fathers, which is this—Believing that they were driven out of the land of Jerusalem because of the iniquities of their fathers, and that they were wronged in the wilderness by their brethren, and they were also wronged while crossing the sea;

13 அவர்கள் சமுத்திரத்தைக் கடந்த பின்னரும் தங்-
கள் முதற் சுதந்தர பூமியிலும் அநியாயஞ்செய்யப்-
பட்டார்கள் என்றும், இவைகளெல்லாம் நேபி கர்த்-
தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதில்
அதிக விசுவாசமாயிருந்ததாலே சம்பவித்தது என்-
றும், ஆகையால் கர்த்தர் அவனது விண்ணப்பங்க-
ளைக் கேட்டு அவைகளுக்குப் பதிலளித்ததால்,
கர்த்தரிடத்திலிருந்து தயைபெற்று, வனாந்தரத்தி-
லே அவர்களின் பயணங்களை அவன் முன்னின்-
று நடத்தினான், என்பதான தங்கள் பிதாக்களின்
பாரம்பரியத்திலே விசுவாசித்தார்கள்.

And again, that they were wronged while in the land of their first inheritance, after they had crossed the sea, and all this because that Nephi was more faithful in keeping the commandments of the Lord—therefore he was favored of the Lord, for the Lord heard his prayers and answered them, and he took the lead of their journey in the wilderness.

14 கர்த்தருடைய நடவடிக்கைகளை அறியாததினி-
மித்தம் அவனது சகோதரர்கள் அவன் மேல் உக்கி-
ரம் கொண்டார்கள்; கர்த்தருக்கு விரோதமாய் தங்-
கள் இருதயங்களைக் கடினப்படுத்தினதாலே,
தண்ணீர்கள் மீதிருக்கும்போதும் அவனோடு உக்கி-
ரம் கொண்டார்கள்.

And his brethren were wroth with him because they understood not the dealings of the Lord; they were also wroth with him upon the waters because they hardened their hearts against the Lord.

15 வாக்குத்தத்தின் தேசத்தை அவர்கள் அடைந்த
பின்னும் அவன்மேல் உக்கிரம் கொண்டார்கள்,
ஏனெனில் தங்கள் கைகளிலிருந்து ஜனத்தை அர-
சாளுவதை அபகரித்துக் கொண்டான் என்று
சொன்னார்கள். அவனைக் கொலை செய்யவும்
வகைதேடினார்கள்.

And again, they were wroth with him when they had arrived in the promised land, because they said that he had taken the ruling of the people out of their hands; and they sought to kill him.

16 மேலும் கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே,
பித்தளைத் தகடுகளின்மீது பொறிக்கப்பட்டிருந்த
பதிவேடுகளை எடுத்துக்கொண்டு, அவன் வனாந்-
தரத்தினுள் புறப்பட்டுப்போனதினிமித்தம், அவன்
மேல் உக்கிரம்கொண்டார்கள். ஏனெனில் அவைக-
ளை அவன் களவாடினான், என்றார்கள்.

And again, they were wroth with him because he departed into the wilderness as the Lord had commanded him, and took the records which were engraven on the plates of brass, for they said that he robbed them.

17 இவ்விதமாய் அவர்களை வெறுக்கவும் அவர்க-
ளைக் கொலை செய்யவும், அவர்களை களவாடி
சூறையாடவும், அவர்களை அழிக்க எல்லாவற்-
றையும் செய்யவும், அவர்கள் தங்கள் பிள்ளைக-
ளுக்குப் போதித்திருக்கிறார்கள்; ஆதலால் அவர்-
கள் நேபியின் பிள்ளைகளிடம் ஒரு தணியா வெ-
றுப்பை உடையவர்களாயிருக்கிறார்கள்.

And thus they have taught their children that they should hate them, and that they should murder them, and that they should rob and plunder them, and do all they could to destroy them; therefore they have an eternal hatred towards the children of Nephi.

18 இந்தக் காரணத்துக்காகவே லாமான் ராஜா தன்
தந்திரத்தாலும், வஞ்சிக்கிறதிற்கேதுவான சூதா-
லும், சரியான தனது வாக்குத்தத்தங்களாலும் என்-
னை வஞ்சித்து, என் ஜனத்தை அழித்துப் போடும்-
படிக்கே தேசத்திற்குள் கொண்டுவரப்பண்ணி-
னான்; ஆம், இத்தேசத்தில் இதுகாலம் வரைக்கும்
துன்பங்களை அனுபவித்திருக்கிறோம்.

For this very cause has king Laman, by his cunning, and lying craftiness, and his fair promises, deceived me, that I have brought this my people up into this land, that they may destroy them; yea, and we have suffered these many years in the land.

19 இப்பொழுதும் சீநிப்பாகிய நான், லாமானியர்க-
ளைக் குறித்து இக்காரியங்கள் அனைத்தையும்
என் ஜனத்திற்கு சொன்ன பின்பு, கர்த்தரில் தங்கள்
நம்பிக்கையை வைத்து, தங்களின் ஊக்கத்தோடு
யுத்தத்திற்கு செல்லும்படி உற்சாகமளித்தேன்; ஆத-
லால் முகமுகமாய் அவர்களுடன் யுத்தம் புரிந்-
தோம்.

And now I, Zeniff, after having told all these things unto my people concerning the Lamanites, I did stimulate them to go to battle with their might, putting their trust in the Lord; therefore, we did contend with them, face to face.

20 அந்தப்படியே, எங்கள் தேசத்தைவிட்டு மறுபடி-
யும் அவர்களைத் துரத்தினோம்; பெரும் சங்காரத்-
திலே அவர்களைக் கொன்றுபோட்டதினாலே,
எண்ணக்கூடாத அளவுக்கு அதிகமாக இருந்தது.

And it came to pass that we did drive them again out of our land; and we slew them with a great slaughter, even so many that we did not number them.

21 அந்தப்படியே, மறுபடியும் எங்கள் சொந்த தேசத்-
திற்கு திரும்பினோம். என்னுடைய ஜனங்கள் மறு-
படியும் தங்களின் மந்தைகளை மேய்க்கவும், நிலத்-
தைப் பண்படுத்தவும் துவங்கினார்கள்.

And it came to pass that we returned again to our own land, and my people again began to tend their flocks, and to till their ground.

22 இப்பொழுதும் நான் வயது முதிர்ந்த போது என்
குமாரரில் ஒருவனிடத்திலே என் ராஜ்யபாரத்தைக்
கொடுத்தேன்; எனவே நான் இனி எதுவும் சொல்லு-
வதில்லை. கர்த்தர் என் ஜனத்தை ஆசீர்வதிப்பா-
ராக. ஆமென்.

And now I, being old, did confer the kingdom upon one of my sons; therefore, I say no more. And may the Lord bless my people. Amen.

## மோசியா 11

1 இப்பொழுது, அந்தப்படியே, சீநிப் தன் குமாரர்க-
ளில் ஒருவனான நோவாவின்மீது ராஜ்யபாரத்தை
அருளினான். ஆதலால் அவனுடைய ஸ்தானத்தி-
லே நோவா ஆட்சி செய்தான். அவன் தன்னுடைய
தகப்பனின் வழிகளில் நடக்கவில்லை.
2 ஏனெனில் இதோ, அவன் தேவனுடைய கட்ட-
ளைகளைக் கைக்கொள்ளாமல், தன் சொந்த இரு-
தயத்தின் விருப்பங்களின்படியே நடந்தான்.
அவனுக்கு அநேக மனையாட்டிகளும், மறுமனை-
யாட்டிகளும் இருந்தார்கள். அவன் தன் ஜனத்தை,
பாவத்தையும் கர்த்தருடைய பார்வைக்கு அருவ-
ருப்பானவற்றையும், நடப்பிக்கும்படிச் செய்தான்.
ஆம், அவர்கள் வேசித்தனங்களையும், சகலவித-
மான அக்கிரமங்களையும் செய்தார்கள்.
3 அவர்கள் அவர்களின் பொன்னிலும் அவர்க-
ளின் வெள்ளியிலும் ஐந்தில் ஒரு பங்கையும்,
அவர்களின் சிப்பிலும், அவர்களின் தாமிரத்திலும்,
அவர்களின் பித்தளையிலும், இரும்பிலும் ஐந்தில்
ஒரு பங்கையும், அவர்களின் நிணமுள்ளவைக-
ளில் ஐந்தில் ஒரு பங்கையும், அவர்களின் எல்லா
தானியங்களிலும் ஐந்தில் ஒரு பங்கையும், மேலும்
அவர்கள் வைத்திருந்த சகலவற்றிலும் ஐந்தில் ஒரு
பங்கை வரியாய் விதித்தான்.
4 அவன் தன்னையும், தன் மனையாட்டிகளையும்,
மறுமனையாட்டிகளையும், தன் ஆசாரியர்களை-
யும், அவர்களின் மனையாட்டிகளையும், மறு-
மனையாட்டிகளையும் ஆதரிக்க, இவைகளெல்-
லாவற்றையும் செய்தான்; இப்படியாக அவன் ரா-
ஜ்ய விவகாரங்களை மாற்றிப்போட்டான்.
5 அவன் தன் தகப்பனால் நியமிக்கப்பட்ட ஆசாரி-
யர்களை நீக்கிப்போட்டு, தங்கள் இருதயங்களிலே
இறுமாப்புகொண்டவர்களை அவர்களுக்குப் பதி-
லாய் நியமனம் பண்ணினான்.
6 ஆம், அவர்கள் சோம்பேறிகளாயும், விக்கிரக
ஆராதனைக்காரராயும், வேசித்தனங்களைச் செய்-
கிறவர்களாயுமிருக்க, நோவா ராஜா தன் ஜனத்-
தின்மீது விதித்த வரியின் மூலம் ஆதரிக்கப்பட்-
டார்கள். இப்படியாக அக்கிரமத்தை ஆதரிக்கவே
ஜனங்கள் மிகவும் பிரயாசப்பட்டார்கள்.
7 ஆம், அவர்கள் ராஜாவாலும் ஆசாரியர்களாலும்
வீணான இச்சக வார்த்தைகளால் வஞ்சிக்கப்பட்ட-
தினால், விக்கிரக ஆராதனைக்காரர்களானார்கள்;
ஏனெனில் அவர்களிடத்திலே இச்சகமானவைக-
ளைப் பேசினார்கள்.

## Mosiah 11

And now it came to pass that Zeniff conferred the kingdom upon Noah, one of his sons; therefore Noah began to reign in his stead; and he did not walk in the ways of his father.

For behold, he did not keep the commandments of God, but he did walk after the desires of his own heart. And he had many wives and concubines. And he did cause his people to commit sin, and do that which was abominable in the sight of the Lord. Yea, and they did commit whoredoms and all manner of wickedness.

And he laid a tax of one fifth part of all they possessed, a fifth part of their gold and of their silver, and a fifth part of their ziff, and of their copper, and of their brass and their iron; and a fifth part of their fatlings; and also a fifth part of all their grain.

And all this did he take to support himself, and his wives and his concubines; and also his priests, and their wives and their concubines; thus he had changed the affairs of the kingdom.

For he put down all the priests that had been consecrated by his father, and consecrated new ones in their stead, such as were lifted up in the pride of their hearts.

Yea, and thus they were supported in their laziness, and in their idolatry, and in their whoredoms, by the taxes which king Noah had put upon his people; thus did the people labor exceedingly to support iniquity.

Yea, and they also became idolatrous, because they were deceived by the vain and flattering words of the king and priests; for they did speak flattering things unto them.

8 அந்தப்படியே, நோவா ராஜா அலங்காரமும் விசா-
லமுமான அநேக கட்டிடங்களைக் கட்டினான்;
அவைகளைச் சிறந்த மரவேலைகளாலும், சகல
விதமான விலையுயர்ந்த பொருட்களாலும்,
பொன்னாலும், வெள்ளியாலும், இரும்பாலும், பித்-
தளையாலும், சிப்பினாலும், செம்பாலுமான, வி-
லையுயர்ந்த பொருட்களாலும் அலங்கரித்தான்.

And it came to pass that king Noah built many elegant and spacious buildings; and he ornamented them with fine work of wood, and of all manner of precious things, of gold, and of silver, and of iron, and of brass, and of ziff, and of copper;

9 அவன் தனக்கென்று ஒரு விசாலமான அரண்-
மனையையும், அதன் நடுவே சிறந்த மரத்தாலும்,
பொன்னாலும், வெள்ளியாலும், விலையுயர்ந்த
பொருட்களாலும் அலங்கரிக்கப்பட்டதுமான சிங்-
காசனத்தையும் கட்டினான்.

And he also built him a spacious palace, and a throne in the midst thereof, all of which was of fine wood and was ornamented with gold and silver and with precious things.

10 அவன் தன்னுடைய வேலையாட்கள் ஆலயத்-
தின் மதில்களின் உட்புறத்திலே மரத்தாலும், தாமி-
ரத்தாலும், பித்தளையாலும் சகல விதமான அரு-
மையான வேலைகளைச் செய்யும்படிச் செய்தான்.

And he also caused that his workmen should work all manner of fine work within the walls of the temple, of fine wood, and of copper, and of brass.

11 பிரதான ஆசாரியர்களுக்கென ஒதுக்கப்பட்ட
இருக்கைகள், மற்ற எல்லா இருக்கைகளைக் காட்-
டிலும் உயர்ந்திருந்தன, அவைகளை பசும்பொன்-
னால் அலங்கரித்தான்; அவர்கள் தங்கள் ஜனங்க-
ளுக்கு பொய்யும் வீணானதுமான வார்த்தைக-
ளைப் பேசும்போது, அவர்களது சரீரங்களும் கரங்-
களும் ஓய்வாய் சாயும்பொருட்டு, அவைகளுக்கு
சாய்வுகள் செய்யப்படும்படிச் செய்தான்.

And the seats which were set apart for the high priests, which were above all the other seats, he did ornament with pure gold; and he caused a breastwork to be built before them, that they might rest their bodies and their arms upon while they should speak lying and vain words to his people.

12 அந்தப்படியே, அவன் ஆலயத்திற்கு அருகாமை-
யிலே ஒரு கோபுரத்தைக் கட்டினான்; ஆம், அந்த
உயரமான கோபுரத்தின் உச்சியிலே அவன் நின்று-
கொண்டு, சீலோம் தேசத்தையும், லாமானியர்க-
ளால் சுதந்தரிக்கப்பட்ட சேம்லோன் தேசத்தையும்,
சுற்றியுமுள்ள தேசம் முழுவதையும், காணும் அள-
விற்கு அது மிக உயரமானதாயிருந்தது.

And it came to pass that he built a tower near the temple; yea, a very high tower, even so high that he could stand upon the top thereof and overlook the land of Shilom, and also the land of Shemlon, which was possessed by the Lamanites; and he could even look over all the land round about.

13 அந்தப்படியே, சீலோம் தேசத்திலே அநேக கட்டி-
டங்களைக் கட்டும்படிச் செய்தான்; நேபியின் பிள்-
ளைகள், தேசத்தை விட்டோடும் காலங்களில்,
அவர்களுக்கு அரணான சீலோம் தேசத்தின் வடக்-
கேயிருந்த மலையிலே பெரிய கோபுரம் ஒன்றைக்
கட்டும்படிச் செய்தான்; தன் ஜனங்களிடமிருந்து
வரியாய் பெற்ற ஐஸ்வரியங்களைக் கொண்டு இப்-
படியாய் செலவழித்தான்.

And it came to pass that he caused many buildings to be built in the land Shilom; and he caused a great tower to be built on the hill north of the land Shilom, which had been a resort for the children of Nephi at the time they fled out of the land; and thus he did do with the riches which he obtained by the taxation of his people.

14 அந்தப்படியே, அவன் தன்னுடைய இருதயத்தை
தன் ஐஸ்வரியங்களின் மீது வைத்தான். அவன் நே-
ரத்தை தன் மனைவிகளோடும், தன் மறுமனை-
யாட்டிகளோடும் கட்டுக்கடங்காத விதமாக கழித்-
தான்; அவ்வாறே அவனுடைய ஆசாரியர்களும்
வேசிகளோடே தங்கள் நேரத்தைக் கழித்தார்கள்.

And it came to pass that he placed his heart upon his riches, and he spent his time in riotous living with his wives and his concubines; and so did also his priests spend their time with harlots.

15 அந்தப்படியே, அவன் தேசத்தைச் சுற்றிலும் தி-
ராட்சை தோட்டத்தை நாட்டினான்; அவன் திராட்-
சை ஆலைகளைக் கட்டி, அளவிற்கதிகமாய் தி-
ராட்சைரசத்தைத் தயாரித்தான். அதினிமித்தம்
அவனும் அவனுடைய ஜனமும் மதுபானப் பிரிய-
ரானார்கள்.

And it came to pass that he planted vineyards round about in the land; and he built wine-presses, and made wine in abundance; and therefore he became a wine-bibber, and also his people.

16 அந்தப்படியே, லாமானியர்கள், இவன் ஜனத்தில் சிலர் மீது விழுந்து, தங்கள் வயல்களிலே, மந்தைகளைப் பேணிக் காக்கும்போது கொன்றுபோட்டார்கள்.

And it came to pass that the Lamanites began to come in upon his people, upon small numbers, and to slay them in their fields, and while they were tending their flocks.

17 நோவா ராஜா அவர்கள் பிரவேசியாமலிருக்க தேசத்தைச் சுற்றிலும் காவற்காரர்களை அனுப்பினான்; ஆனால் அவன் போதுமானோரை அனுப்பாததினிமித்தம், லாமானியர்கள் அவர்கள் மேல் விழுந்து அவர்களைக் கொன்று, அவர்களின் திரளான மந்தைகளை தேசத்திற்கு வெளியே நடத்திச் சென்றார்கள். இவ்விதமாக லாமானியர்கள் அவர்களை அழித்து, அவர்களின் மீதிருந்த தங்களின் வெறுப்பை செயலாக்கத் துவங்கினார்கள்.

And king Noah sent guards round about the land to keep them off; but he did not send a sufficient number, and the Lamanites came upon them and killed them, and drove many of their flocks out of the land; thus the Lamanites began to destroy them, and to exercise their hatred upon them.

18 அந்தப்படியே, ராஜாவாகிய நோவா, தன் சேனைகளை அவர்களுக்கெதிராக அனுப்பினான்; அவர்கள் துரத்தியனுப்பப்பட்டார்கள். சிறிது காலம் வரைக்கும், அவர்கள் துரத்தப்பட்டிருந்தார்கள். ஆதலால் அவர்கள் தங்களின் கொள்ளைப்பொருளில் களிகூர்ந்து திரும்பினார்கள்.

And it came to pass that king Noah sent his armies against them, and they were driven back, or they drove them back for a time; therefore, they returned rejoicing in their spoil.

19 இப்பொழுது இந்த மகா ஜெயத்தினிமித்தம், அவர்கள் தங்கள் இருதயங்களிலே பெருமையில் உயர்த்தப்பட்டார்கள்; தங்களின் ஐம்பதுபேர் ஆயிரக்கணக்கான லாமானியர்களுக்கு விரோதமாய் நிற்கமுடியும் என்று சொல்லி, தங்களின் சொந்த பெலத்திலே பெருமை பாராட்டினார்கள்; இவ்விதமாய் அவர்கள் தற்பெருமை பாராட்டி இரத்தத்திலும், தங்கள் சகோதரரின் இரத்தத்தை சிந்துதலிலும் களிகூர்ந்தார்கள். தங்களின் ராஜா மற்றும் ஆசாரியர்களின் துன்மார்க்கத்தினிமித்தமே இப்படிச் செய்தார்கள்.

And now, because of this great victory they were lifted up in the pride of their hearts; they did boast in their own strength, saying that their fifty could stand against thousands of the Lamanites; and thus they did boast, and did delight in blood, and the shedding of the blood of their brethren, and this because of the wickedness of their king and priests.

20 அந்தப்படியே, அவர்கள் மத்தியிலே அபிநாதி என்று பெயர் கொண்ட மனுஷன் இருந்தான்; அவன் அவர்கள் மத்தியிலே சென்று தீர்க்கதரிசனமுரைக்கத் துவங்கி; இதோ, கர்த்தர் உரைப்பது என்னவெனில், அவர் எனக்குக் கட்டளையிட்டு கர்த்தர் உரைப்பது என்னவெனில், நீ இந்த ஜனத்திற்குள்ளேபோய், இதோ இந்த ஜனத்திற்கு ஐயோ. ஏனெனில் நான் அவர்களின் அருவருப்பையும், அவர்களின் துன்மார்க்கத்தையும், அவர்களின் வேசித்தனங்களையும் கண்டேன். அவர்கள் மனந்திரும்பாவிடில், என்னுடைய கோபாக்கினையிலே அவர்களை விசாரிப்பேன்.

And it came to pass that there was a man among them whose name was Abinadi; and he went forth among them, and began to prophesy, saying: Behold, thus saith the Lord, and thus hath he commanded me, saying, Go forth, and say unto this people, thus saith the Lord—Wo be unto this people, for I have seen their abominations, and their wickedness, and their whoredoms; and except they repent I will visit them in mine anger.

21 அவர்கள் மனந்திரும்பி, கர்த்தராகிய தங்கள் தேவனிடத்தில் திரும்பாமலிருப்பார்களெனில், இதோ, அவர்களை தங்கள் விரோதிகளின் கைகளில் ஒப்புவிப்பேன்; ஆம், அவர்கள் அடிமைத்தனத்திற்குள்ளே கொண்டுபோகப்பட்டு, தங்களின் சத்துருக்களின் கரங்களாலே துன்புறுத்தப்படுவார்கள்.

And except they repent and turn to the Lord their God, behold, I will deliver them into the hands of their enemies; yea, and they shall be brought into bondage; and they shall be afflicted by the hand of their enemies.

22 நானே அவர்களின் தேவனாகிய கர்த்தரென்றும், என் ஜனத்தினுடைய அக்கிரமங்களை விசாரிக்கிற, பொறாமையுள்ள தேவனென்றும் அறிவார்கள்.

And it shall come to pass that they shall know that I am the Lord their God, and am a jealous God, visiting the iniquities of my people.

23 இந்த ஜனத்தார் மனந்திரும்பி கர்த்தராகிய தங்கள் தேவனிடத்தில் திரும்பாமலிருப்பார்களெனில், அவர்கள் சிறைத்தனத்திற்குள்ளே கொண்டுபோகப்படுவார்கள், கர்த்தராகிய சர்வவல்ல தேவனேயல்லாமல் வேறொருவரும் அவர்களைத் தப்புவிப்பதில்லை.

And it shall come to pass that except this people repent and turn unto the Lord their God, they shall be brought into bondage; and none shall deliver them, except it be the Lord the Almighty God.

24 ஆம், என்னை நோக்கி அவர்கள் கூக்குரலிடும்போது அவர்களின் விண்ணப்பத்தைக் கேட்க தாமதிப்பேன். ஆம், மேலும் அவர்களின் சத்துருக்களால் அவர்கள் அடிக்கப்பட இடங்கொடுப்பேன்.

Yea, and it shall come to pass that when they shall cry unto me I will be slow to hear their cries; yea, and I will suffer them that they be smitten by their enemies.

25 இரட்டுடுத்தி, சாம்பலைப் போட்டுக்கொண்டு, மனந்திரும்பி, தேவனாகிய தங்கள் கர்த்தரிடத்திலே ஊக்கமாய் கூக்குரலிட்டாலொழிய, அவர்களின் விண்ணப்பங்களுக்கு செவிகொடேன். அவர்களின் உபத்திரவங்களிலிருந்து அவர்களை தப்புவிக்கவும் மாட்டேன் என்று சொல்லுவாயாக என்று, இவைகளின் பிரகாரமே அவர் எனக்குக் கட்டளையிட்டார், என்றான்.

And except they repent in sackcloth and ashes, and cry mightily to the Lord their God, I will not hear their prayers, neither will I deliver them out of their afflictions; and thus saith the Lord, and thus hath he commanded me.

26 இப்பொழுது, அந்தப்படியே, இந்த வார்த்தைகளை அபிநாதி அவர்களிடத்தில் பேசியபோது, அவன்மீது அவர்கள் குரோதம் கொண்டு, அவன் ஜீவனை வாங்கிப்போட வகை தேடினார்கள்; ஆனால் அவர்களின் கைகளிலிருந்து கர்த்தர் அவனைத் தப்புவித்தார்.

Now it came to pass that when Abinadi had spoken these words unto them they were wroth with him, and sought to take away his life; but the Lord delivered him out of their hands.

27 இப்பொழுது ஜனத்திற்கு அபிநாதி பேசிய வார்த்தைகளை நோவா ராஜா கேள்விப்பட்டபோது அவனும் கோபம்கொண்டு, யார் அபிநாதி, நானும் என் ஜனமும் அவனால் தீர்க்கப்படுவதென்ன? என் ஜனத்தின்மீது இத்தகைய மகா உபத்திரவங்களைக்கொண்டு வருகிற, அந்த கர்த்தர் தான் யார்? என்று சொன்னான்.

Now when king Noah had heard of the words which Abinadi had spoken unto the people, he was also wroth; and he said: Who is Abinadi, that I and my people should be judged of him, or who is the Lord, that shall bring upon my people such great affliction?

28 நான் அபிநாதியை கொன்று போடும்படி, இங்கே கொண்டுவரும்படி உங்களுக்குக் கட்டளையிடுகிறேன். ஏனெனில் என் ஜனத்தைத் தூண்டி, ஒருவரோடொருவர் குரோதம் கொண்டிருக்கவும், என் ஜனங்களுக்குள்ளே பிணக்குகள் எழ வேண்டுமென்பதற்காகவே, இவைகளைச் சொல்லியிருக்கிறான். ஆகவே நான் அவனைக் கொன்றுபோடுவேன்.

I command you to bring Abinadi hither, that I may slay him, for he has said these things that he might stir up my people to anger one with another, and to raise contentions among my people; therefore I will slay him.

29 இப்பொழுது ஜனங்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது, ஆகையால் அபிநாதியின் வார்த்தைகளுக்கு விரோதமாய் தங்கள் இருதயங்களைக் கடினமாக்கி, அச்சமயம் முதற்கொண்டு அவனைப் பிடிக்கும்படி வகை தேடினார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாய் நோவா ராஜா தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, தன்னுடைய பொல்லாத செயல்களுக்காக மனந்திரும்பாமலிருந்தான்.

Now the eyes of the people were blinded; therefore they hardened their hearts against the words of Abinadi, and they sought from that time forward to take him. And king Noah hardened his heart against the word of the Lord, and he did not repent of his evil doings.

# மோசியா 12

1 அந்தப்படியே, அபிநாதி இரண்டு வருஷத்திற்குப்
பின்பு, அவர்கள் யாரும் தன்னை அறியாதிருக்-
கும்படி மாறுவேஷத்திலே அவர்களுக்குள்ளே வந்-
து, அவர்கள் மத்தியில் தீர்க்கதரிசனமுரைக்கத் து-
வங்கி சொன்னான், கர்த்தர் எனக்குக் கட்டளை-
யிட்டுச் சொன்னது என்னவெனில், அபிநாதியே,
என் ஜனம் தங்கள் இருதயங்களை என் வார்த்தை-
களுக்கு விரோதமாய் கடினப்படுத்தினதாலே,
அவர்களுக்குள்ளே போய் தீர்க்கதரிசனமுரைப்பா-
யாக. அவர்கள் தங்களின் பொல்லாத செய்கைக-
ளிலிருந்து மனந்திரும்பாததினிமித்தம், என்னு-
டைய கோபாக்கினையால் அவர்களை விசாரிப்-
பேன். ஆம் அவர்களின் அக்கிரமங்களையும், அரு-
வருப்புகளையும், என்னுடைய கொடிய கோபாக்-
கினையால் விசாரிப்பேன், என்றார்.
2 ஆம், இந்தத் தலைமுறைக்கு ஐயோ! கர்த்தர் என்-
னை நோக்கி சொன்னார், உன் கரத்தை நீட்டி. தீர்க்-
கதரிசனமுரைத்து சொல்லவேண்டியதாவது: கர்த்-
தர் சொல்வது என்னவென்றால், இந்த தலைமுறை
தங்களின் அக்கிரமங்களினிமித்தம் அடிமைத்-
தனத்திற்குள்ளே கொண்டுவரப்பட்டு கன்னத்தி-
லே அடிக்கப்படுவார்கள்; ஆம், மனுஷர்களால் து-
ரத்தப்பட்டு, கொலை செய்யப்படுவார்கள்; ஆகா-
யத்தின் கழுகுகளும், நாய்களும், ஆம், துஷ்டமிருக
ஜீவன்களும், அவர்களின் மாம்சத்தை பட்சித்துப்-
போடும்.
3 எரிகிற அடுப்பிலே இருக்கிற வஸ்திரத்தைப்
போல நோவா ராஜாவினுடைய ஜீவனும் எண்ணப்-
படும்; அப்போது நானே கர்த்தர் என்று அறிந்து-
கொள்வான்.
4 மகா உபத்திரவங்களினால் இந்த ஜனத்தைச்
சபிப்பேன், ஆம், பஞ்சத்தாலும் கொள்ளை நோயி-
னாலும். நாள் முழுவதும் நான் அவர்களைப் புலம்-
பச் செய்வேன்.
5 ஆம், அவர்களின் முதுகுகளிலே சுமைகளை ஏற்-
றும்படிச் செய்வேன். ஒரு பேசாத கழுதையைப்-
போல அவர்கள் முன்னடத்தப்படுவார்கள்.
6 நான் அவர்களுக்குள்ளே கல்மழையை அனுப்பு-
வேன். அது அவர்களை அடிக்கும். கீழ்காற்றினா-
லும் அடிக்கப்படுவார்கள்; பூச்சிகள் அவர்களின்
தேசத்திலே பெருகி, அவர்களுடைய தானியங்க-
ளைப் பட்சிக்கும்.
7 ஒரு பெரும் வாதையினாலே அவர்கள் வாதிக்-
கப்படுவார்கள்; அவர்களின் அக்கிரமங்களினி-
மித்தமும், அருவருப்புகளினிமித்தமும், இதைச்
செய்வேன்.

# Mosiah 12

And it came to pass that after the space of two years that Abinadi came among them in disguise, that they knew him not, and began to prophesy among them, saying: Thus has the Lord commanded me, saying —Abinadi, go and prophesy unto this my people, for they have hardened their hearts against my words; they have repented not of their evil doings; therefore, I will visit them in my anger, yea, in my fierce anger will I visit them in their iniquities and abominations.

Yea, wo be unto this generation! And the Lord said unto me: Stretch forth thy hand and prophesy, saying: Thus saith the Lord, it shall come to pass that this generation, because of their iniquities, shall be brought into bondage, and shall be smitten on the cheek; yea, and shall be driven by men, and shall be slain; and the vultures of the air, and the dogs, yea, and the wild beasts, shall devour their flesh.

And it shall come to pass that the life of king Noah shall be valued even as a garment in a hot furnace; for he shall know that I am the Lord.

And it shall come to pass that I will smite this my people with sore afflictions, yea, with famine and with pestilence; and I will cause that they shall howl all the day long.

Yea, and I will cause that they shall have burdens lashed upon their backs; and they shall be driven before like a dumb ass.

And it shall come to pass that I will send forth hail among them, and it shall smite them; and they shall also be smitten with the east wind; and insects shall pester their land also, and devour their grain.

And they shall be smitten with a great pestilence—and all this will I do because of their iniquities and abominations.

8 அவர்கள் மனந்திரும்பாவிடில் பூமியின் பரப்-
பின் மீதிலிருந்து அவர்களை முழுமையாக அழிப்-
பேன்; ஆயினும் தங்களுக்குப் பின்பு ஒரு பதிவேட்-
டினை விட்டுச்செல்வார்கள். இந்நிலத்தை சுதந்த-
ரிக்கும் மற்ற ஜாதிகளுக்காக அவைகளை பாது-
காப்பேன். ஆம், இந்த ஜனத்தினுடைய அக்கிரமங்-
களை மற்ற தேசங்களுக்கு அம்பலப்படுத்துவற்கா-
கவே இதைச் செய்வேன். மேலும் அபிநாதி இந்த
ஜனத்திற்கு எதிராக அநேகமானவற்றை தீர்க்கதரி-
சனமாக உரைத்தான்.

And it shall come to pass that except they repent I will utterly destroy them from off the face of the earth; yet they shall leave a record behind them, and I will preserve them for other nations which shall possess the land; yea, even this will I do that I may discover the abominations of this people to other nations. And many things did Abinadi prophesy against this people.

9 அந்தப்படியே, அவர்கள் அவன்மேல் கோபம்
கொண்டு, அவனைப் பிடித்து, ராஜாவிற்கு முன்பு
கட்டியெடுத்துச் சென்று, ராஜாவை நோக்கி சொன்-
னார்கள்: இதோ உமது ஜனத்தைக்குறித்து பொல்-
லாப்பை தீர்க்கதரிசனமாய் உரைத்து, தேவன்
அவர்களை அழிப்பார் என்று சொல்கிற, மனு-
ஷனை உமக்கு முன்னே கொண்டு வந்திருக்கி-
றோம்.

And it came to pass that they were angry with him; and they took him and carried him bound before the king, and said unto the king: Behold, we have brought a man before thee who has prophesied evil concerning thy people, and saith that God will destroy them.

10 உமது ஜீவனைக் குறித்தும் பொல்லாதவைகளை
தீர்க்கதரிசனமாய் உரைத்து, உமது ஜீவன் அக்கினி
சூளையிலிருக்கிற வஸ்திரத்தைப் போலிருக்கும்
என்றும், சொல்கிறான்.

And he also prophesieth evil concerning thy life, and saith that thy life shall be as a garment in a furnace of fire.

11 மேலும் நீர் தண்டைப்போல் இருப்பீரென்றும் மி-
ருகஜீவன்களால் அழிக்கப்படுகிறதும், காலால் மி-
திக்கப்படுகிறதுமான வெளியின் காய்ந்துபோன
தண்டைப்போலுமிருப்பீர் என்றும், சொல்கிறான்.

And again, he saith that thou shalt be as a stalk, even as a dry stalk of the field, which is run over by the beasts and trodden under foot.

12 முழுவதுமாய் பழுத்திருந்து, காற்றடித்தவுடன் பூ-
மியின்மீதெங்கும் பறந்துபோகிற முட்செடியின்
புஷ்பங்களைப்போல இருப்பீர், என்றும் சொல்கி-
றான். கர்த்தர் இதை பேசியதுபோல பாவனை செய்-
கிறான். நீர் மனந்திரும்பாவிடில், உமது அக்கிரமங்-
களினிமித்தம் இவைகள் அனைத்தும் உம் மீது
வருமென்கிறான்.

And again, he saith thou shalt be as the blossoms of a thistle, which, when it is fully ripe, if the wind bloweth, it is driven forth upon the face of the land. And he pretendeth the Lord hath spoken it. And he saith all this shall come upon thee except thou repent, and this because of thine iniquities.

13 இப்பொழுதும், ராஜாவே. தேவனால் ஆக்கினைக்-
குள்ளாகத் தீர்க்கப்படுவதற்கும், இந்த மனுஷனால்
நியாயம் தீர்க்கப்படுவதற்கும் நீர் என்ன மகா
பொல்லாப்பைச் செய்தீர்? உமது ஜனம் அப்படி
என்ன மகா பாவங்களைப் புரிந்தார்கள்?

And now, O king, what great evil hast thou done, or what great sins have thy people committed, that we should be condemned of God or judged of this man?

14 இப்பொழுதும் ராஜாவே, நாம் குற்றமற்றவர்களா-
யிருக்கிறோம். ராஜாவே நீர் பாவம் செய்யாதவராயி-
ருக்கிறீர்; ஆதலால் இந்த மனுஷன் உம்மைக்குறித்-
து பொய்யுரைத்து வீணிலே தீர்க்கதரிசனமுரைத்-
தான்.

And now, O king, behold, we are guiltless, and thou, O king, hast not sinned; therefore, this man has lied concerning you, and he has prophesied in vain.

15 இதோ, நாம் பராக்கிரமசாலிகள். நாம் அடிமைத்-
தனத்திற்குள்ளாகப் போவதுமில்லை, அல்லது
நம்முடைய சத்துருக்களால் சிறைப்பிடிக்கப்பட்-
டுப் போவதுமில்லை; ஆம் இத்தேசத்திலே நீர் வி-
ருத்தியடைந்திருக்கிறீர். இன்னும் விருத்தியடை-
வீர்.

And behold, we are strong, we shall not come into bondage, or be taken captive by our enemies; yea, and thou hast prospered in the land, and thou shalt also prosper.

16 இதோ, அந்த மனுஷன், உம்முடைய கைகளிலே அவனை ஒப்படைக்கிறோம்; உமக்கு நன்மையாய்ப்படுகிறபடியே அவனுக்குச் செய்வீராக, என்றார்கள்.

Behold, here is the man, we deliver him into thy hands; thou mayest do with him as seemeth thee good.

17 அந்தப்படியே, நோவா ராஜா, அபிநாதியைச் சிறையில்போடும்படிச் செய்து, அவனைக்குறித்து தான் என்ன செய்யவேண்டுமென, ஆசாரியர்களுடன் ஆலோசனையை நடத்தும்பொருட்டு, அவர்களெல்லோரும் ஏகமாய்க்கூடும்படி கட்டளையிட்டான்.

And it came to pass that king Noah caused that Abinadi should be cast into prison; and he commanded that the priests should gather themselves together that he might hold a council with them what he should do with him.

18 அந்தப்படியே, அவர்கள் ராஜாவை நோக்கி: நாங்கள் அவனைக் கேள்வி கேட்கும்படி இங்கே அவனை அழைத்துவாரும் என்றார்கள்; அவர்களுக்கு முன்னே அவன் கொண்டுவரப்படும்படி ராஜா கட்டளையிட்டான்.

And it came to pass that they said unto the king: Bring him hither that we may question him; and the king commanded that he should be brought before them.

19 அவனை குறுக்கு விசாரணை செய்து, குற்றம் சாட்டும் நோக்கத்தோடு அவனைக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள்; ஆனால் அவன் அவர்கள் ஆச்சரியப்படும்படிக்கு அவர்களுடைய சகல கேள்விகளையும் எதிர்த்து, தைரியமாய்ப் பதிலளித்தான். அவர்கள் கேள்விகள் அனைத்தையும் அவன் எதிர்த்து, அவர்களின் அனைத்து வார்த்தைகளிலும் அவர்களைத் தாறுமாறாக்கினான்.

And they began to question him, that they might cross him, that thereby they might have wherewith to accuse him; but he answered them boldly, and withstood all their questions, yea, to their astonishment; for he did withstand them in all their questions, and did confound them in all their words.

20 அந்தப்படியே, அவர்களில் ஒருவன் அவனை நோக்கி: எழுதப்பட்டிருக்கிறதும், நம்முடைய பிதாக்களால் போதிக்கப்பட்ட வார்த்தைகளுமான:

And it came to pass that one of them said unto him: What meaneth the words which are written, and which have been taught by our fathers, saying:

21 நற்செய்தியைக் கொண்டுவந்து, சமாதானத்தை பிரஸ்தாபமாக்கி, நன்மையான செய்தியை அறிவித்து, இரட்சிப்பை பிரசங்கித்து, சீயோனை நோக்கி, உனது தேவன் ராஜரீகம்பண்ணுகிறார், என்று சொல்லுகிறவனின் பாதங்கள் பர்வதங்களின் மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன.

How beautiful upon the mountains are the feet of him that bringeth good tidings; that publisheth peace; that bringeth good tidings of good; that publisheth salvation; that saith unto Zion, Thy God reigneth;

22 உன் காவற்காரன் சத்தத்தை உயர்த்துவான்; அவர்களெல்லோரும் ஒரே சத்தமாய்க் கீர்த்தனம் பண்ணுவார்கள்; கர்த்தர் மறுபடியும் சீயோனைக் கொண்டுவருகிறதை கண்ணாரக் காண்பார்கள்.

Thy watchmen shall lift up the voice; with the voice together shall they sing; for they shall see eye to eye when the Lord shall bring again Zion;

23 சந்தோஷத்தோடே புறப்படுங்கள்; எருசலேமின் பாழான இடங்களே ஏகமாய் ஆர்ப்பரியுங்கள்; ஏனெனில் கர்த்தர் தன் ஜனத்தைத் தேற்றி, எருசலேமை மீட்டுக்கொண்டார்;

Break forth into joy; sing together ye waste places of Jerusalem; for the Lord hath comforted his people, he hath redeemed Jerusalem;

24 சகல தேசங்களின் கண்களுக்கு முன்பாக கர்த்தர் தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்தியுள்ளார். நம்முடைய தேவனின் இரட்சிப்பை பூமியின் கடையாந்திரங்கள் யாவும் காணும், என்கிற இவைகளின் அர்த்தம் என்ன? என்றான்.

The Lord hath made bare his holy arm in the eyes of all the nations, and all the ends of the earth shall see the salvation of our God?

25 அபிநாதி அவர்களை நோக்கி சொன்னான்: இந்த ஜனத்துக்குப் போதிப்பது போலவும், தீர்க்கதரிசனத்தின் ஆவியை அறிந்துகொள்வது போலவும் நடித்து, இக்காரியங்களின் அர்த்தத்தை இன்னும் என் மூலமாய் அறிய விரும்பும் நீங்கள் ஆசாரியர்களா?

And now Abinadi said unto them: Are you priests, and pretend to teach this people, and to understand the spirit of prophesying, and yet desire to know of me what these things mean?

26 கர்த்தருடைய வழிகளைப் புரட்டுகிறதினால் உங்களுக்கு ஐயோ! ஏனெனில் நீங்கள் இவைகளை அறிவதால், இவைகளை நீங்கள் போதிக்கவில்லை. ஆதலால் கர்த்தருடைய வழியை நீங்கள் புரட்டிப் போட்டீர்கள்.

I say unto you, wo be unto you for perverting the ways of the Lord! For if ye understand these things ye have not taught them; therefore, ye have perverted the ways of the Lord.

27 நீங்கள் உங்கள் இருதயங்களிலே புரிந்துகொள்ளாததினிமித்தம், புத்திமான்களாய் இருக்கவில்லை. ஆகையால் இந்த ஜனத்திற்கு எதை போதிக்கிறீர்கள் என்றான்.

Ye have not applied your hearts to understanding; therefore, ye have not been wise. Therefore, what teach ye this people?

28 அதற்கு அவர்கள் நாங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை போதிக்கிறோம், என்றார்கள்.

And they said: We teach the law of Moses.

29 அவன் மறுபடியும் அவர்களை நோக்கி: நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைப் போதிப்பீர்களெனில், ஏன் அதைக் கைக்கொள்ளுவதில்லை? ஏன் உங்கள் மனதை ஐஸ்வரியத்தின்மீது வைக்கிறீர்கள்? ஆம், மகா பொல்லாப்பை, இந்த ஜனத்திற்கு விரோதமாய், தீர்க்கதரிசனமுரைக்க இந்த ஜனத்திற்குள்ளே கர்த்தர் என்னை அனுப்பி வைக்கும்படிக்கு, ஏன் வேசித்தனங்களைச் செய்து, வேசிகளோடு உங்கள் பெலத்தை வீணாக்கி, இந்த ஜனமும் பாவம் செய்ய வழிவகுக்கிறீர்கள்?

And again he said unto them: If ye teach the law of Moses why do ye not keep it? Why do ye set your hearts upon riches? Why do ye commit whoredoms and spend your strength with harlots, yea, and cause this people to commit sin, that the Lord has cause to send me to prophesy against this people, yea, even a great evil against this people?

30 நான் சத்தியத்தையே பேசுகிறேன் என்று நீங்கள் அறியவில்லையா? ஆம், நான் சத்தியத்தையே பேசுகிறேன் என்று நீங்கள் அறிவீர்கள்; தேவனுக்கு முன்பாக நீங்கள் நடுக்கம் கொள்ளவேண்டும்.

Know ye not that I speak the truth? Yea, ye know that I speak the truth; and you ought to tremble before God.

31 நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை போதிக்கிறோம் என்று சொன்னதினிமித்தம், உங்களின் அக்கிரமங்களுக்காக நீங்கள் அடிக்கப்படுவீர்கள். மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறித்து நீங்கள் எதை அறிவீர்கள்? இரட்சிப்பு மோசேயின் நியாயப்பிரமாணத்தினால் வருகிறதா? நீங்கள் என்ன சொல்கிறீர்கள், என்றான்.

And it shall come to pass that ye shall be smitten for your iniquities, for ye have said that ye teach the law of Moses. And what know ye concerning the law of Moses? Doth salvation come by the law of Moses? What say ye?

32 அவர்கள் பிரதியுத்திரமாய், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே இரட்சிப்பு வந்தது, என்றார்கள்.

And they answered and said that salvation did come by the law of Moses.

33 இப்பொழுதும் அபிநாதி அவர்களை நோக்கி: நீங்கள் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவீர்களெனில் இரட்சிக்கப்படுவீர்கள்; என நான் அறிவேன். ஆம், சீனாய் மலையிலே மோசேயிடம் கர்த்தர் கட்டளைகளைக் கொடுத்துச் சொன்னதாவது:

But now Abinadi said unto them: I know if ye keep the commandments of God ye shall be saved; yea, if ye keep the commandments which the Lord delivered unto Moses in the mount of Sinai, saying:

34 எகிப்தின் தேசத்திலிருந்தும், அடிமைத்தனத்தின் வீட்டிலிருந்தும் உன்னைக் கொண்டுவந்த, உன் தேவனாகிய உன் கர்த்தர் நானே.

I am the Lord thy God, who hath brought thee out of the land of Egypt, out of the house of bondage.

35 என்னையன்றி வேறெந்த தேவனும் உங்களுக்கு உண்டாயிருக்கவேண்டாம்.

Thou shalt have no other God before me.

36 மேலே வானத்திலும், கீழே பூமியிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான யாதொரு வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையாகிலும் உங்களுக்கு உண்டாக்கவேண்டாம்.

Thou shalt not make unto thee any graven image, or any likeness of any thing in heaven above, or things which are in the earth beneath.

37 இப்பொழுதும் அபிநாதி அவர்களை நோக்கி:
இவையனைத்தையும் நீங்கள் செய்திருக்கிறீர்க-
ளா? இல்லை, நீங்கள் செய்யவில்லை, என்று உங்க-
ளுக்குச் சொல்கிறேன். இந்தக் காரியங்கள்
அனைத்தையும் இந்த ஜனங்கள் செய்யவேண்டு-
மென்று அவர்களுக்குப் போதித்துள்ளீர்களா? இல்-
லை. நீங்கள் செய்யவில்லை, என்று உங்களுக்குச்
சொல்கிறேன்.

Now Abinadi said unto them, Have ye done all this? I say unto you, Nay, ye have not. And have ye taught this people that they should do all these things? I say unto you, Nay, ye have not.

# மோசியா 13

# Mosiah 13

1 இப்பொழுதும் இந்த வார்த்தைகளை ராஜா கேட்ட-
போது, அவன் தன் ஆசாரியர்களை நோக்கி:
இவனைக்கொண்டு சென்று கொன்றுபோடுங்கள்.
இவன் பைத்தியக்காரனாயிருப்பதினால்
இவனோடு நமக்கு என்ன சகவாசம், என்றான்.

And now when the king had heard these words, he said unto his priests: Away with this fellow, and slay him; for what have we to do with him, for he is mad.

2 அவர்கள் எழுந்து தங்கள் கைகளை அவன்மீது
போட முற்பட்டார்கள்; அவனோ அவர்களை
எதிர்த்து:

And they stood forth and attempted to lay their hands on him; but he withstood them, and said unto them:

3 என்னைத் தொடாதீர். உங்கள் கைகளை என்மீது
போடுவீர்களெனில், தேவன் உங்களை அடிப்பார்.
ஏனெனில், கர்த்தர் என்னை அனுப்பி, அறிவிக்கச்
சொன்ன செய்தியை நான் அறிவிக்கவில்லை;
நான் சொல்லவேண்டுமென்று நீங்கள் வேண்டிய-
வற்றையும், நான் இன்னும் சொல்லவில்லை. ஆத-
லால் இச்சமயத்திலே நான் கொல்லப்பட்டுப்போ-
கும்படி தேவன் இடங்கொடார்.

Touch me not, for God shall smite you if ye lay your hands upon me, for I have not delivered the message which the Lord sent me to deliver; neither have I told you that which ye requested that I should tell; therefore, God will not suffer that I shall be destroyed at this time.

4 ஆனால் தேவன் எனக்குக் கட்டளையிட்ட கட்ட-
ளைகளை நிறைவேற்ற வேண்டும். நான் உங்க-
ளுக்கு சத்தியத்தைச் சொன்னதினிமித்தம் என்னி-
டம் நீங்கள் குரோதம் கொண்டீர்கள். மறுபடியும்
நான் தேவனுடைய வார்த்தையைப் பேசினதாலே,
நான் பைத்தியக்காரன் என்று என்னை தீர்மானித்-
துக்கொண்டீர்கள், என்றான்.

But I must fulfil the commandments wherewith God has commanded me; and because I have told you the truth ye are angry with me. And again, because I have spoken the word of God ye have judged me that I am mad.

5 இப்பொழுது, அந்தப்படியே, அபிநாதி இந்த
வார்த்தைகளைப் பேசின பின்பு, கர்த்தருடைய
ஆவியானவர் அவன் மீது இருந்ததினால், நோவா
ராஜாவின் ஜனங்கள் அவன் மீது தங்கள் கைக-
ளைப்போடத் துணியவில்லை; சீனாய் மலையில்,
கர்த்தருடன் பேசுகையில் மோசேயின் முகம் மாறி-
யிருந்ததைப்போலவே, அவனுடைய முகமும் மிக-
வும் அதிகமாய்ப் பிரகாசித்தது.

Now it came to pass after Abinadi had spoken these words that the people of king Noah durst not lay their hands on him, for the Spirit of the Lord was upon him; and his face shone with exceeding luster, even as Moses' did while in the mount of Sinai, while speaking with the Lord.

6 அவன் தேவனிடத்திலிருந்து பெற்ற வல்லமை-
யோடும், அதிகாரத்தோடும் பேசினான். அவன் தன்
வார்த்தைகளைத் தொடர்ந்து:

And he spake with power and authority from God; and he continued his words, saying:

7 என்னைக் கொன்றுபோட உங்களுக்கு வல்ல-
மையில்லை என்பதைக் காண்கிறீர்கள். ஆகவே
என் செய்தியை நான் முடிக்கிறேன். ஆம், உங்கள்
அக்கிரமங்களைக் குறித்த உண்மையை நான் உங்-
களிடம் சொல்வதால், அது உங்கள் இருதயங்களை
ஊடுருவிச் செல்கிறது, என நான் எண்ணுகிறேன்.

Ye see that ye have not power to slay me, therefore I finish my message. Yea, and I perceive that it cuts you to your hearts because I tell you the truth concerning your iniquities.

8 ஆம், என் வார்த்தைகள் உங்களை ஆச்சரியத்தா-
லும், வியப்பாலும், கோபத்தாலும் நிறைக்கின்றன-
வே.

Yea, and my words fill you with wonder and amazement, and with anger.

9 ஆனால் என் செய்தியை முடித்துக் கொள்கிறேன்.
அதன் பின்பும் பிழைத்திருப்பேனேயெனில், நான்
செல்லுமிடம் முக்கியமானதில்லை.

But I finish my message; and then it matters not whither I go, if it so be that I am saved.

10 அன்றியும் நான் உங்களுக்கு இவ்வளவாய்ச்
சொல்லுகிறேன். இதற்கு பின்பு, என்னை என்ன
செய்கிறீர்களோ அது, வரப்போகிறவைகளுக்கு
முன்னடையாளமாகவும் நிழலாட்டமாகவுமிருக்-
கும்.

But this much I tell you, what you do with me, after this, shall be as a type and a shadow of things which are to come.

11 இப்பொழுதும் தேவனுடைய கட்டளைகளில் மீ-
தியானவைகள் உங்களின் இருதயங்களிலே எழு-
தப்படாததை நான் அறிந்ததாலே, அவைகளை
உங்களுக்கு வாசிக்கிறேன். நீங்கள் உங்கள் வாழ்க்-
கையின் பெரும் பகுதியை அக்கிரமத்தைக் கற்பதி-
லும், போதிப்பதிலும் செலவிட்டீர்கள், என நான்
எண்ணுகிறேன்.

And now I read unto you the remainder of the commandments of God, for I perceive that they are not written in your hearts; I perceive that ye have studied and taught iniquity the most part of your lives.

12 இப்பொழுது, நான் உங்களுக்குச் சொன்னவைக-
ளை நினைவில் கொள்ளுங்கள்: மேலே வானத்தி-
லும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும்,
உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பானதையும்,
யாதொரு வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையாகி-
லும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.

And now, ye remember that I said unto you: Thou shalt not make unto thee any graven image, or any likeness of things which are in heaven above, or which are in the earth beneath, or which are in the water under the earth.

13 மேலும் நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்க-
வும் வேண்டாம்; ஏனெனில் உன் தேவனாகிய கர்த்-
தராகிய நான் பொறாமையுள்ள தேவனாயிருந்து,
என்னைப் பகைக்கிற பிதாக்களுடைய அக்கிரமத்-
தை, பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம்
தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.

And again: Thou shalt not bow down thyself unto them, nor serve them; for I the Lord thy God am a jealous God, visiting the iniquities of the fathers upon the children, unto the third and fourth generations of them that hate me;

14 அவர்களில் என்னிடத்தில் அன்புகூர்ந்து, என்
கட்டளைகளைக் கைக்கொள்ளும் ஆயிரக்கணக்-
கானோருக்கு இரக்கம் செய்கிறவராயிருக்கிறேன்.

And showing mercy unto thousands of them that love me and keep my commandments.

15 உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணி-
லே வழங்காதிருப்பாயாக; ஏனெனில் கர்த்தர் தம்-
முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவர்களைத்
தண்டியாமல் விடார்.

Thou shalt not take the name of the Lord thy God in vain; for the Lord will not hold him guiltless that taketh his name in vain.

16 ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசாரிக்க நினைப்-
பாயாக.

Remember the sabbath day, to keep it holy.

17 ஆறு நாளும் நீ வேலை செய்து உன் கிரியைக-
ளையெல்லாம் நடப்பிப்பாயாக.

Six days shalt thou labor, and do all thy work;

18 ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய
ஓய்வுநாள். நீயானாலும், உன் குமாரனானாலும்,
உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனா-
னாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக
ஜீவனானாலும், உன் வாசல்களிலிருக்கிற அந்நி-
யனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்-
டாம்.

But the seventh day, the sabbath of the Lord thy God, thou shalt not do any work, thou, nor thy son, nor thy daughter, thy man-servant, nor thy maid-servant, nor thy cattle, nor thy stranger that is within thy gates;

19 கர்த்தர் ஆறு நாளிலே வானத்தையும் பூமியை-
யும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லா-
வற்றையும் உண்டாக்கினார்; ஆகையால் கர்த்தர்
ஓய்வுநாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கி-
னார்.

For in six days the Lord made heaven and earth, and the sea, and all that in them is; wherefore the Lord blessed the sabbath day, and hallowed it.

20 உன் கர்த்தராகிய தேவன் உனக்குக் கொடுக்கும்
தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருக்க, உன் தகப்-
பனையும், தாயையும் கனம்பண்ணுவாயாக.

Honor thy father and thy mother, that thy days may be long upon the land which the Lord thy God giveth thee.

21 கொலை செய்யாதிருப்பாயாக.

Thou shalt not kill.

22 விபசாரம் செய்யாதிருப்பாயாக, களவு செய்யாதி-
ருப்பாயாக.

Thou shalt not commit adultery. Thou shalt not steal.

23 உனது அயலானுக்கு விரோதமாய் பொய் சாட்சி
சொல்லாதிருப்பாயாக.

Thou shalt not bear false witness against thy neighbor.

24 உன் அயலானுடைய இல்லத்தை இச்சியாதிருப்-
பாயாக. உன் அயலானுடைய மனைவியையும்,
அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய
வேலைக்காரியையும், அவனுடைய எருதையும்,
அவனுடைய கழுதையையும், பின்னும் உன் அயா-
லானுடைய யாதொன்றையும் இச்சியாதிருப்பா-
யாக.

Thou shalt not covet thy neighbor's house, thou shalt not covet thy neighbor's wife, nor his man-servant, nor his maid-servant, nor his ox, nor his ass, nor anything that is thy neighbor's.

25 அந்தப்படியே, அபிநாதி இந்த வார்த்தைகளைப்
பேசி முடித்த பின்பு, அவன் அவர்களை நோக்கி,
இந்தக் கட்டளைகளை இந்த ஜனங்கள் கைக்-
கொள்ளும்படி, இந்தக் காரியங்கள் அனைத்தை-
யும் அவர்கள் கருத்தாய் செய்யவேண்டுமென போ-
தித்தீர்களா?

And it came to pass that after Abinadi had made an end of these sayings that he said unto them: Have ye taught this people that they should observe to do all these things for to keep these commandments?

26 நான் உங்களை நோக்கி, அப்படியல்ல என்கி-
றேன், அப்படி செய்திருப்பீர்களானால், இந்த ஜனத்-
தைக் குறித்து பொல்லாப்பை தீர்க்கதரிசனமாய்
உரைக்க கர்த்தர் என்னை இங்கே வரும்படிச் செய்-
திருக்கமாட்டார்.

I say unto you, Nay; for if ye had, the Lord would not have caused me to come forth and to prophesy evil concerning this people.

27 இப்பொழுதும் நீங்கள் மோசேயின் நியாயப்பிர-
மாணத்தினால் இரட்சிப்பு வருகிறது என்றீர்கள்.
மோசேயின் நியாயப்பிரமாணத்தை முன்பு போல-
வே கைக்கொள்ளுவது அவசியமாயிருக்கிறது,
என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால்
மோசேயின் நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வ-
து அவசியமற்றுப் போகும் காலமும் வருமென்று,
உங்களுக்குச் சொல்கிறேன்.

And now ye have said that salvation cometh by the law of Moses. I say unto you that it is expedient that ye should keep the law of Moses as yet; but I say unto you, that the time shall come when it shall no more be expedient to keep the law of Moses.

28 மேலும், நியாயப்பிரமாணத்தினால் மட்டுமே
இரட்சிப்பு வருவதில்லை. மோசேயின் நியாயப்பிர-
மாணம் இருப்பினும், தேவன் தாமே தன் ஜனத்தி-
னுடைய பாவங்களுக்காவும், அக்கிரமங்களுக்கா-
கவும் செய்யவிருக்கிற பாவநிவர்த்தி சம்பவியா-
மல் போகுமேயானால், அவர்கள் தவிர்க்க முடியா-
மல் அழிந்துபோவார்கள்.

And moreover, I say unto you, that salvation doth not come by the law alone; and were it not for the atonement, which God himself shall make for the sins and iniquities of his people, that they must unavoidably perish, notwithstanding the law of Moses.

29 இப்பொழுதும் இஸ்ரவேலின் பிள்ளைகள்,
வணங்காக் கழுத்துள்ளவர்களாயும், அக்கிரமத்-
தைச் சடுதியாய் செய்கிறவர்களாயும், கர்த்தராகிய
தங்கள் தேவனை நினைவுகூர தாமதிக்கிற ஜனங்-
களாயும் இருப்பதினாலே, அவர்களுக்கு ஒரு நியா-
யப்பிரமாணம் கொடுக்கப்பட வேண்டிய அவசிய-
முள்ளது; ஆம் கடுமையான ஒரு நியாயப்பிரமா-
ணம், என்று நான் இப்பொழுது உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

And now I say unto you that it was expedient that there should be a law given to the children of Israel, yea, even a very strict law; for they were a stiffnecked people, quick to do iniquity, and slow to remember the Lord their God;

30 ஆதலால் அவர்கள் தேவனை நினைவுகூரும்ப-
டிக்கும் அவருக்கு தங்களின் கடமைகளைச் செய்-
யவும், ஒவ்வொரு நாளும் சற்றும் மாறாமல் கைக்-
கொள்ளவும், சடங்குகளும், நியமங்களுமான நி-
யாயப்பிரமாணம் ஒன்று, அவர்களுக்குக் கொடுக்-
கப்பட்டது.

Therefore there was a law given them, yea, a law of performances and of ordinances, a law which they were to observe strictly from day to day, to keep them in remembrance of God and their duty towards him.

31 இதோ, வரவிருக்கிற காரியங்களுக்கு இவைகள்
முன்மாதிரிகளாய் இருக்கின்றன, என்று நான் உங்-
களுக்குச் சொல்லுகிறேன்.

But behold, I say unto you, that all these things were types of things to come.

32 இப்பொழுதும் அவர்கள் நியாயப்பிரமாணத்தை
அறிந்துகொண்டார்களா? இல்லை. அவர்களில்
அனைவரும் நியாயப்பிரமாணத்தை அறிந்திருக்-
கவில்லை, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
இது அவர்களின் இருதயத்தின் கடினத்தினிமித்த-
மே. ஏனெனில் தேவனின் மீட்பின் மூலம் மாத்திரமே
அல்லாமல் ஒரு மனுஷனும் இரட்சிக்கப்படமுடியா-
து, என்று அவர்கள் அறிந்திருக்கவில்லை.

And now, did they understand the law? I say unto you, Nay, they did not all understand the law; and this because of the hardness of their hearts; for they understood not that there could not any man be saved except it were through the redemption of God.

33 ஏனெனில் இதோ, அந்த மேசியாவின் வருகை-
யைக் குறித்தும், தேவன் தம் ஜனத்தை மீட்க வேண்-
டும் என்றும், அவர்களுக்கு மோசே தீர்க்கதரிசனமு-
ரைக்கவில்லையா? ஆம், உலகம் துவங்கினது மு-
தல் தீர்க்கதரிசனமுரைத்த தீர்க்கதரிசிகளெல்லோ-
ரும், ஏறக்குறைய இந்தக் காரியங்களைக்குறித்து
பேசியிருக்கவில்லையா?

For behold, did not Moses prophesy unto them concerning the coming of the Messiah, and that God should redeem his people? Yea, and even all the prophets who have prophesied ever since the world began—have they not spoken more or less concerning these things?

34 தேவன் தாமே மனுபுத்திரர் மத்தியிலே வந்து மனு-
ஷனின் சாயலைத் தரித்து, பூமியின் பரப்பின் மீ-
தெங்கும், பலத்த வல்லமையோடு செல்லுவார்,
என்று அவர்கள் சொல்லவில்லையா?

Have they not said that God himself should come down among the children of men, and take upon him the form of man, and go forth in mighty power upon the face of the earth?

35 அவர் நொறுக்கப்பட்டு, உபத்திரவப்பட்டு, மரித்-
தோரின் உயிர்த்தெழுதலை சம்பவிக்கப்பண்ணு-
வார், என்று அவர்கள் சொல்லவில்லையா?

Yea, and have they not said also that he should bring to pass the resurrection of the dead, and that he, himself, should be oppressed and afflicted?

# மோசியா 14

1 ஆம், ஏசாயா சொல்லவில்லையா: நம்முடைய
செய்தியை விசாரித்தவன் யார்? கர்த்தருடைய பு-
யம் யாருக்கு வெளிப்பட்டது?
2 ஏனெனில் அவருக்கு முன்பாக ஒரு இளம் செடி-
யைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து வெளி-
வரும் வேரைப்போலவும் எழும்புவார். அவருக்கு
ரூபமில்லை, சவுந்தரியமுமில்லை. அவரை நாம்
காணும்போது, நாம் அவரை விரும்பும்படியான
அழகு இல்லாமலுமிருக்கிறது.
3 அவர் மனுஷரால் தூஷிக்கப்பட்டவராயும்,
ஒதுக்கப்பட்டவராயும், சஞ்சலமுள்ளவராயும், துக்-
கம் நிறைந்தவராயும் இருக்கிறார். அவரைவிட்டு
நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம்;
அவர் அசட்டை செய்யப்பட்டார். அவரை மதியா-
மற்போனோம்.
4 மெய்யாகவே அவர் நம் சஞ்சலங்களை ஏற்றுக்-
கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்;
ஆயினும் அவர் தேவனால் அடிக்கப்பட்டு, வாதிக்-
கப்பட்டு, உபத்திரவப்பட்டார் என எண்ணினோம்.
5 ஆனால் அவர் நம்முடைய மீறுதல்களினிமித்தம்
காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம்
நொறுக்கப்பட்டார்; நம்முடைய பாவத்தின் சிட்சை
அவர் மீதிருந்தது. அவருடைய தழும்புகளினாலே
நாம் குணமாகிறோம்.
6 ஆடுகளைப்போல நாமெல்லோரும் வழிதவறிப்-
போய், அனைவரும் தன் தன் சொந்த வழிகளுக்குத்
திரும்பினோம். கர்த்தரே நம் எல்லோருடைய அக்கி-
ரமங்களையும் அவர்மீது விழப்பண்ணினார்.
7 அவர் ஒடுக்கப்பட்டு, உபத்திரவப்பட்டபோதும்
தன் வாயைத் திறவாமல் இருந்தார். அடிக்கப்படுவ-
தற்கு எடுத்துச் செல்லப்படுகிற ஆட்டுக்குட்டி-
யைப்போலவும், தன்னை மயிர்க் கத்திரிக்கிற-
வனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்-
போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாமலி-
ருந்தார்.
8 சிறையிலிருந்தும், நியாய விசாரிப்பிலிருந்தும்
அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவருடைய
வம்சத்தை யார் அறிவிக்கக்கூடும்? ஏனெனில்
அவர் ஜீவனுள்ளோர் தேசத்திலிருந்து அறுப்புண்-
டுபோனார்; என் ஜனத்தின் மீறுதல்களினிமித்தம்
அவர் வாதிக்கப்பட்டார்.
9 துன்மார்க்கரோடு தம்முடைய கல்லறையை நிய-
மித்து, தம் மரணத்திலே ஐஸ்வரியவான்களோடு
இருந்தார்; அவர் பொல்லாப்பைச் செய்ததுமில்-
லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

# Mosiah 14

Yea, even doth not Isaiah say: Who hath believed our report, and to whom is the arm of the Lord revealed?

For he shall grow up before him as a tender plant, and as a root out of dry ground; he hath no form nor comeliness; and when we shall see him there is no beauty that we should desire him.

He is despised and rejected of men; a man of sorrows, and acquainted with grief; and we hid as it were our faces from him; he was despised, and we esteemed him not.

Surely he has borne our griefs, and carried our sorrows; yet we did esteem him stricken, smitten of God, and afflicted.

But he was wounded for our transgressions, he was bruised for our iniquities; the chastisement of our peace was upon him; and with his stripes we are healed.

All we, like sheep, have gone astray; we have turned every one to his own way; and the Lord hath laid on him the iniquities of us all.

He was oppressed, and he was afflicted, yet he opened not his mouth; he is brought as a lamb to the slaughter, and as a sheep before her shearers is dumb so he opened not his mouth.

He was taken from prison and from judgment; and who shall declare his generation? For he was cut off out of the land of the living; for the transgressions of my people was he stricken.

And he made his grave with the wicked, and with the rich in his death; because he had done no evil, neither was any deceit in his mouth.

10 ஆயினும் அவரை நொறுக்குவது கர்த்தருக்கு சித்தமாகி, அவரைச் சஞ்சலப்படுத்தினார்; அவருடைய ஆத்துமாவை நீ பாவகாணிக்கையாய், செலுத்தும்போது, அவன் தமது சந்ததியைக் கண்டு, தன் நாட்களை நீடித்துப்போடுவான். கர்த்தருடைய சித்தமானது அவன் கையிலே விருத்தியடையும்.

Yet it pleased the Lord to bruise him; he hath put him to grief; when thou shalt make his soul an offering for sin he shall see his seed, he shall prolong his days, and the pleasure of the Lord shall prosper in his hand.

11 அவர் தமது ஆத்துமாவின் வருத்தத்தைக் கண்டு திருப்தியடைவார்; அவருடைய ஞானத்தினால் என் சன்மார்க்க தாசன் அநேகரை நியாயவான்களாக்குவார்; ஏனெனில் அவர்களுடைய அக்கிரமங்களைச் சுமந்துகொள்ளுவார்.

He shall see the travail of his soul, and shall be satisfied; by his knowledge shall my righteous servant justify many; for he shall bear their iniquities.

12 ஆகையால் நான் மகத்துவமுள்ளவர்களின் நடுவே அவருக்கு ஒரு பங்கைக் கொடுப்பேன். அவர் தமது ஆத்துமாவை மரணத்திற்கேதுவாக ஊற்றினதினிமித்தம், பராக்கிரமசாலிகளுடன் கொள்ளைப்பொருளைப் பகிர்ந்தளிப்பார்; அக்கிரமக்காரரோடு அவர் எண்ணப்பட்டு அநேகருடைய பாவங்களைச் சுமந்து அக்கிரமக்காரர்களுக்காக பரிந்துபேசினார்.

Therefore will I divide him a portion with the great, and he shall divide the spoil with the strong; because he hath poured out his soul unto death; and he was numbered with the transgressors; and he bore the sins of many, and made intercession for the transgressors.

# மோசியா 15

1 இப்பொழுதும், அபிநாதி அவர்களை நோக்கி: தே-
வன் தாமே மனுபுத்திரர் மத்தியிலே வந்து, தம்
ஜனத்தை மீட்பார் என்று, நீங்கள் அறிந்துகொள்ள
வேண்டுமென விரும்புகிறேன் என்றான்.

2 பிதாவினுடைய சித்தத்திற்கேற்ப மாம்சத்திலே
கீழ்ப்படிந்தவராய் இருப்பதாலும், அவரே பிதாவா-
கவும் குமாரனுமாய் இருப்பதாலும், அவர் மாம்சத்-
திலே வாசமாயிருக்கிறபடியாலும், தேவகுமாரன்
என்று அழைக்கப்படுவார்.

3 தேவனுடைய வல்லமையால் அவர் ஜெனிப்பிக்-
கப்பட்டதினிமித்தம் பிதாவெனவும், மாம்சத்தின்
நிமித்தம் குமாரனெனவும், இப்படியாக பிதாவும், கு-
மாரனுமாயிருக்கிறார்.

4 வானம் பூமியின் நித்திய பிதாவாகிய ஒரே தே-
வனாய் அவர்கள் இருக்கிறார்கள்.

5 ஆகவே இவ்விதமாய் மாம்சமானது ஆவிக்கு
கீழ்ப்பட்டதாய், அல்லது குமாரனானவர் பிதாவிற்-
கு கீழ்ப்பட்டவராய், ஒரே தேவனாயிருந்து, சோ-
தனையைச் சகித்து, ஆனாலும் சோதனையிலே வி-
ழாமல் தாம் நிந்திக்கப்படவும், அடிக்கப்படவும்,
வெளியே தள்ளப்படவும், தம் சொந்த ஜனத்தாரா-
லே ஒதுக்கப்படவும், தம்மை ஒப்புக்கொடுக்கிறார்.

6 இவை அனைத்திற்கும் பின்பு, மனுபுத்திரருக்-
குள்ளே அநேக வல்லமையான அற்புதங்களைச்
செய்த பின்பும், அவர் கொண்டுபோகப்படுவார்.
ஆம், ஏசாயா சொன்னதுபோல மயிர்க்கத்திரிக்கிற-
வன் முன்பு சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போல,
தம் வாயைத் திறவாமலிருந்தார்.

7 ஆம், அவர் இவ்விதமாய் வழிநடத்தப்பட்டு, சிலு-
வையிலறையப்பட்டு, கொல்லப்பட்டு, மரணத்திற்-
கு மாம்சம் கீழ்ப்படுவதுபோல, குமாரனுடைய சித்-
தம் பிதாவினுடைய சித்தத்தினால் விழுங்கப்பட்டி-
ருக்கிறது.

8 இப்படியாக தேவன் மரணத்தின் மீது ஜெயம்
கொண்டவராய் மரணக்கட்டுக்களை அறுத்துப்-
போடுகிறார்; மனுபுத்திரருக்காக பரிந்துபேச குமா-
ரனுக்கு வல்லமையைக் கொடுக்கிறார்.

9 இரக்க உள்ளம் பெற்றவராய் பரலோகத்தினுள்
ஏறிச்சென்று, மனுபுத்திரரின் மீது மனதுருக்கம் நி-
றைந்தவராய், அவர்களுக்கும் நியாயத்திற்கும் நடு-
வே நின்று, மரணத்தின் கட்டுக்களை அறுத்து,
அவர்களின் அக்கிரமத்தையும், மீறுதல்களையும்
தம்மீது எடுத்துக்கொண்டு, அவர்களை மீட்டு, நி-
யாயத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றுகிறார்.

# Mosiah 15

And now Abinadi said unto them: I would that ye should understand that God himself shall come down among the children of men, and shall redeem his people.

And because he dwelleth in flesh he shall be called the Son of God, and having subjected the flesh to the will of the Father, being the Father and the Son—

The Father, because he was conceived by the power of God; and the Son, because of the flesh; thus becoming the Father and Son—

And they are one God, yea, the very Eternal Father of heaven and of earth.

And thus the flesh becoming subject to the Spirit, or the Son to the Father, being one God, suffereth temptation, and yieldeth not to the temptation, but suffereth himself to be mocked, and scourged, and cast out, and disowned by his people.

And after all this, after working many mighty miracles among the children of men, he shall be led, yea, even as Isaiah said, as a sheep before the shearer is dumb, so he opened not his mouth.

Yea, even so he shall be led, crucified, and slain, the flesh becoming subject even unto death, the will of the Son being swallowed up in the will of the Father.

And thus God breaketh the bands of death, having gained the victory over death; giving the Son power to make intercession for the children of men—

Having ascended into heaven, having the bowels of mercy; being filled with compassion towards the children of men; standing betwixt them and justice; having broken the bands of death, taken upon himself their iniquity and their transgressions, having redeemed them, and satisfied the demands of justice.

10 இப்பொழுதும் அவருடைய தலைமுறையை
அறிவிப்பவன் யார், என்று உங்களைக் கேட்கி-
றேன். இதோ, தம் ஆத்துமா பாவத்திற்கென்று கா-
ணிக்கையாக்கப்பட்டிருக்கும்போது, அவர் தம் சந்-
ததியைக் காண்பார், என்று உங்களுக்குச் சொல்லு-
கிறேன். இப்பொழுது நீங்கள் என்ன சொல்லுகிறீர்-
கள், அவருடைய சந்ததியாக யார் இருப்பார்கள்?

And now I say unto you, who shall declare his generation? Behold, I say unto you, that when his soul has been made an offering for sin he shall see his seed. And now what say ye? And who shall be his seed?

11 இதோ நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கர்த்த-
ருடைய வருகையைக்குறித்து தீர்க்கதரிசனமு-
ரைத்த சகல பரிசுத்த தீர்க்கதரிசிகளாகிய, தீர்க்கத-
ரிசிகளின் வார்த்தைகளைக் கேட்டு, அவர்களின்
வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, தம்முடைய
ஜனத்தைக் கர்த்தர் மீட்டுக்கொள்வார் என்று விசு-
வாசித்து, தங்களின் பாவங்களின் மன்னிப்புக்காக
அந்த நாளை எதிர்நோக்கியிருக்கிற அனைவரும்
அவருடைய சந்ததியாயும், அல்லது தேவனுடைய
ராஜ்யத்தின் சுதந்தரவாளிகளுமாயிருக்கிறார்கள்,
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Behold I say unto you, that whosoever has heard the words of the prophets, yea, all the holy prophets who have prophesied concerning the coming of the Lord—I say unto you, that all those who have hearkened unto their words, and believed that the Lord would redeem his people, and have looked forward to that day for a remission of their sins, I say unto you, that these are his seed, or they are the heirs of the kingdom of God.

12 இவர்களின் பாவங்களையே அவர் சுமந்தார்.
இவர்களுடைய மீறுதல்களிலிருந்து மீட்பதற்காக-
வே அவர் மரித்தார். இப்பொழுதும், இவர்களே அவ-
ருடைய சந்ததியல்லவா?

For these are they whose sins he has borne; these are they for whom he has died, to redeem them from their transgressions. And now, are they not his seed?

13 ஆம், தீர்க்கதரிசனமுரைக்க நாவைத் திறந்த ஒவ்-
வொருவரும், மீறுதலினுள் விழாதவர்களுமான
தீர்க்கதரிசிகள், அதாவது உலகம் துவங்கினது முத-
லிருந்த பரிசுத்த தீர்க்கதரிசிகள் யாவரும் அவரு-
டைய சந்ததியே, என்று உங்களுக்குச் சொல்லுகி-
றேன்.

Yea, and are not the prophets, every one that has opened his mouth to prophesy, that has not fallen into transgression, I mean all the holy prophets ever since the world began? I say unto you that they are his seed.

14 இவர்களே சமாதானத்தைப் பிரஸ்தாபமாக்கி,
நன்மையான நற்செய்தியைக்கொண்டு வந்து,
இரட்சிப்பை அறிவித்து சீயோனை நோக்கி: உனது
தேவன் ராஜரீகம்பண்ணுகிறார், என்றவர்கள்.

And these are they who have published peace, who have brought good tidings of good, who have published salvation; and said unto Zion: Thy God reigneth!

15 பர்வதங்களின் மீது அவர்களுடைய பாதங்கள்
எவ்வளவு அழகாயிருக்கின்றன!

And O how beautiful upon the mountains were their feet!

16 மறுபடியும் சமாதானத்தை இன்னும் பிரஸ்தாப-
மாக்குகிறவர்கள் பாதங்கள் பர்வதங்களின் மேலே
எவ்வளவு அழகாயிருக்கின்றன!

And again, how beautiful upon the mountains are the feet of those that are still publishing peace!

17 இச்சமயம் முதற்கொண்டு இனி என்றென்றும்
சமாதானத்தை பிரஸ்தாபமாக்குகிறவர்களின் பா-
தங்கள், பர்வதங்களின் மீது எவ்வளவு அழகாயி-
ருக்கின்றன!

And again, how beautiful upon the mountains are the feet of those who shall hereafter publish peace, yea, from this time henceforth and forever!

18 இதோ, இது மாத்திரமல்ல என்று நான் உங்களுக்-
குச் சொல்லுகிறேன். நற்செய்தியை அறிவிக்கிறவ-
ரும், சமாதானத்தின் காரணரும், தமது ஜனத்தை
மீட்டுக்கொண்டவரும், ஆம், தம் ஜனத்திற்கு இரட்-
சிப்பை வழங்கியவருமான, கர்த்தருடைய பாதங்-
கள் பர்வதங்களின் மீது எவ்வளவு அழகாயிருக்-
கின்றன, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And behold, I say unto you, this is not all. For O how beautiful upon the mountains are the feet of him that bringeth good tidings, that is the founder of peace, yea, even the Lord, who has redeemed his people; yea, him who has granted salvation unto his people;

19 தம் ஜனத்திற்காக அவர் செய்ததும், உலகம் அஸ்-
திபாரமிடப்பட்டதிலிருந்து ஆயத்தம் பண்ணப்பட்-
டதுமான மீட்பு இல்லாமலிருந்திருந்தால், மனுக்கு-
லம் அனைத்தும் கெட்டுப்போயிருக்குமே.

For were it not for the redemption which he hath made for his people, which was prepared from the foundation of the world, I say unto you, were it not for this, all mankind must have perished.

20 ஆனால் இதோ, மரணக்கட்டுக்கள் அறுக்கப்ப-
டும். குமாரன் ராஜரீகம்பண்ணுகிறார், மரணத்தின்
மீது வல்லமை பெற்றிருக்கிறார், மரித்தோரின்
உயிர்த்தெழுதலை சம்பவிக்கப்பண்ணுகிறார்.

But behold, the bands of death shall be broken, and the Son reigneth, and hath power over the dead; therefore, he bringeth to pass the resurrection of the dead.

21 அப்போது முதலாம் உயிர்த்தெழுதலாகிய உயிர்த்-
தெழுதல் வருகிறது, ஆம், இருந்தவர்கள், இருப்ப-
வர்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்வரை,
இருக்கப்போகிறவர்களின் உயிர்த்தெழுதல் வருகி-
றது, ஏனெனில் அவர் அப்படியே அழைக்கப்படு-
வார்.

And there cometh a resurrection, even a first resurrection; yea, even a resurrection of those that have been, and who are, and who shall be, even until the resurrection of Christ—for so shall he be called.

22 இப்பொழுதும் முதலாம் உயிர்த்தெழுதலில் சகல
தீர்க்கதரிசிகளும், அவருடைய வார்த்தைகளில்
விசுவாசித்தவர்களும், அல்லது தேவனுடைய கட்-
டளைகளைக் கைக்கொண்ட சகலமானோரும்
உயிர்த்தெழுவார்கள். ஆதலால் அவர்களே முத-
லாம் உயிர்த்தெழுதல் ஆவார்கள்.

And now, the resurrection of all the prophets, and all those that have believed in their words, or all those that have kept the commandments of God, shall come forth in the first resurrection; therefore, they are the first resurrection.

23 தங்களை மீட்டுக் கொண்ட தேவனோடு கூட வா-
சம் செய்ய அவர்கள் எழுப்பப்படுகிறார்கள். ஆக-
வே மரணக்கட்டுக்களை அறுத்த கிறிஸ்துவினா-
லே நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

They are raised to dwell with God who has redeemed them; thus they have eternal life through Christ, who has broken the bands of death.

24 இவர்களே முதலாம் உயிர்த்தெழுதலிலே பங்கா-
ளிகளாய் இருக்கிறார்கள். இவர்களே கிறிஸ்து
வருவதற்கு முன்பு, தங்களுக்கு இரட்சிப்பு அறிவிக்-
கப்படாமல், தங்களின் அறியாமையிலேயே மரித்த-
வர்கள். இந்தப்படியே கர்த்தர் இவர்களை மீண்டும்
கொண்டு வருவார்; அவர்கள் முதலாம் உயிர்த்தெ-
ழுதலில் பங்காளிகளாயிருக்கிறார்கள், அல்லது
கர்த்தரால் மீட்கப்பட்டு, நித்திய ஜீவனைப் பெறு-
வார்கள்.

And these are those who have part in the first resurrection; and these are they that have died before Christ came, in their ignorance, not having salvation declared unto them. And thus the Lord bringeth about the restoration of these; and they have a part in the first resurrection, or have eternal life, being redeemed by the Lord.

25 சிறுபிள்ளைகளும் நித்திய ஜீவனைப் பெறுகி-
றார்கள்.

And little children also have eternal life.

26 ஆனால் இதோ, தேவனுக்கு முன்பாக நடுக்கங்-
கொள்வது அவசியமாதலால், பயத்துடனே நடுக்-
கங்கொள்ளுங்கள். ஏனெனில் தமக்கு விரோதமாய்
கலகம்செய்து, தங்களின் பாவங்களிலே மரிக்கிற-
வர்களில் ஒருவரையும் கர்த்தர் மீட்பதில்லை. ஆம்,
உலகத் தொடக்க முதல், தேவனுடைய கட்டளைக-
ளை அறிந்திருந்தும், அவைகளைக் கைக்கொள்-
ளாமல், தேவனுக்கு விரோதமாய் அறிந்தே கலகம்
செய்து, பாவங்களினால் கெட்டுப்போன அனைவ-
ரையும் அவர் மீட்டுக்கொள்வதில்லை. இவர்கள்
முதலாம் உயிர்த்தெழுதலில் பங்கு இல்லாதவர்கள்.

But behold, and fear, and tremble before God, for ye ought to tremble; for the Lord redeemeth none such that rebel against him and die in their sins; yea, even all those that have perished in their sins ever since the world began, that have wilfully rebelled against God, that have known the commandments of God, and would not keep them; these are they that have no part in the first resurrection.

27 ஆதலால் நீங்கள் நடுக்கங்கொள்ளாமலிருக்க-
லாகுமோ? அப்படிப்பட்டவர்களை கர்த்தர் மீட்காத-
தினிமித்தம், அவர்களுக்கு இரட்சிப்பு வருவதில்-
லை. ஆம் அப்படிப்பட்டவர்களைக் கர்த்தர் மீட்க-
வும் இயலாது; ஏனெனில் நியாயம் உரிமை பாராட்-
டும்போது அதை அவர் மறுதலிக்க முடியாதென்ப-
தால், கர்த்தர் தம்மையே மறுதலியார்.

Therefore ought ye not to tremble? For salvation cometh to none such; for the Lord hath redeemed none such; yea, neither can the Lord redeem such; for he cannot deny himself; for he cannot deny justice when it has its claim.

28 ஒவ்வொரு தேசத்திற்கும், இனத்திற்கும், பா-
ஷைக்காரருக்கும், ஜனத்திற்கும், கர்த்தருடைய
இரட்சிப்பை அறிவிக்க வேண்டிய காலம் வரு-
மென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And now I say unto you that the time shall come that the salvation of the Lord shall be declared to every nation, kindred, tongue, and people.

29 ஆம், கர்த்தாவே உமது காவற்காரர்கள் தங்கள்
சத்தத்தை உயர்த்தி ஏகமாய்ப் பாடுவார்கள்; ஏனெ-
னில் கர்த்தர் சீயோனை மறுபடியுமாய் ஸ்தாபிக்கும்
போது அதை அவர்கள் கண்ணாரக் காண்பார்கள்.

Yea, Lord, thy watchmen shall lift up their voice; with the voice together shall they sing; for they shall see eye to eye, when the Lord shall bring again Zion.

30 கர்த்தர் தன் ஜனத்தை தேற்றி, எருசலேமை மீட்-
டுக்கொண்டதாலே, எருசலேமின் பாழான இடங்க-
ளே, சந்தோஷத்தால் பூரித்தெழுந்து, ஏகமாய்ப் பா-
டுங்கள்.

Break forth into joy, sing together, ye waste places of Jerusalem; for the Lord hath comforted his people, he hath redeemed Jerusalem.

31 கர்த்தர் தம் புயத்தை சகல தேசங்களின் கண்க-
ளுக்கு முன்பாக வெளிப்படுத்தியுள்ளார். பூமியின்
சகல கடையாந்திரங்களும் தேவனுடைய இரட்சிப்-
பைக் காணும்.

The Lord hath made bare his holy arm in the eyes of all the nations; and all the ends of the earth shall see the salvation of our God.

# மோசியா 16

1 இப்பொழுதும், அந்தப்படியே, அபிநாதி இந்த
வார்த்தைகளைப் பேசி முடித்த பின்பு, அவன் தன்
கையை நீட்டி, அனைவருக்கும் கர்த்தருடைய
இரட்சிப்பைக் காணும் காலம் வரும்; அப்போது
சகல தேசமும், இனமும், பாஷைக்காரரும், ஜனமும்,
முகமுகமாய் தேவனைக் கண்டு, அவருடைய தீர்ப்-
பு நியாயமுள்ளது, என்று அவருடைய சமுகத்திலே
அறிக்கையிடுவார்கள்.
2 அப்போது துன்மார்க்கர் வெளியே துரத்தப்படு-
வார்கள். அவர்கள் அலறி, அழுது, புலம்பி, பற்க-
டிக்க முகாந்தரம் உண்டாயிருக்கும். இது அவர்கள்
கர்த்தருடைய சத்தத்திற்கு செவி கொடாததினிமித்-
தம் உண்டாயிருக்கும்; ஆதலால் கர்த்தர் அவர்க-
ளை மீட்டுக்கொள்வதில்லை.
3 அவர்கள் மாம்சப்பிரகாரமானவர்களும், பிசா-
சுத்தன்மை கொண்டவர்களாகவும் இருக்கிறார்-
கள். பிசாசு அவர்களின் மீது வல்லமை கொண்டி-
ருக்கிறான்; அந்த பூர்வ சர்ப்பம் நமது முதற் பெற்-
றோரை வஞ்சித்து, அவர்களின் வீழ்ச்சிக்கும் கார-
ணனாயிருக்கிறான்; அதுவே, சகல மனுக்குலமும்
மாம்சப்பிரகாரமாயும. உணர்ச்சிக்கு அடிமைப்பட்-
டவராயும், பிசாசுத்தன்மை கொண்டவராயும், நன்-
மையிலிருந்து தீமையை அறிந்தவராயும், பிசாசுக்-
குத் தங்களை கீழ்ப்படுத்திக்கொள்பவராயும் மா-
றக்காரணமாயிருந்தது.
4 இப்படியாக சகல மனுக்குலமும் கெட்டுப்போன-
து; இதோ, தேவன் தமது ஜனத்தை அவர்களின்
வீழ்ந்த, மற்றும் தொலைந்த நிலையிலிருந்து மீட்டி-
ராவிட்டால், அவர்கள் யாவரும் நித்தியமாய் கெட்-
டுப்போயிருப்பார்கள்.
5 தன்னுடைய சொந்த மாம்ச சுபாவத்தை விடா-
மல், தேவனுக்கு விரோதமாய் கலகம்பண்ணி பா-
வத்தின் வழிகளிலே போகிற மனுஷன், தன் வீழ்ந்த
நிலையிலேயே நிலைத்திருக்கிறான் என்றும், பிசா-
சு அவன் மீது சகல வல்லமையும் கொண்டிருக்கி-
றான் என்றும், நினைவில் கொள்ளுங்கள். ஆத-
லால் அவன் மீட்பு இல்லாததைப்போல, தேவனுக்கு
விரோதியாயிருக்கிறான்; பிசாசும் தேவனுக்கு வி-
ரோதியாயிருக்கிறான்.
6 இப்பொழுதும் சம்பவிக்கப்போவதை, ஏற்கனவே
சம்பவித்தது போல பேசி, கிறிஸ்து இவ்வுலகத்திற்-
கு வரவில்லையெனில், மீட்பு இல்லாதிருந்திருக்-
கும்.
7 கல்லறை ஜெயம் பெறாதபடிக்கு, மரணத்தின்
வேதனை இல்லாதபடிக்கு, கிறிஸ்து மரணக்கட்டுக்-
களை அறுக்காமல், அல்லது மரித்தோரிலிருந்து
உயிர்த்தெழாதிருந்தால், உயிர்த்தெழுதலும் இல்லா-
மற் போயிருக்கும்.

# Mosiah 16

And now, it came to pass that after Abinadi had spoken these words he stretched forth his hand and said: The time shall come when all shall see the salvation of the Lord; when every nation, kindred, tongue, and people shall see eye to eye and shall confess before God that his judgments are just.

And then shall the wicked be cast out, and they shall have cause to howl, and weep, and wail, and gnash their teeth; and this because they would not hearken unto the voice of the Lord; therefore the Lord redeemeth them not.

For they are carnal and devilish, and the devil has power over them; yea, even that old serpent that did beguile our first parents, which was the cause of their fall; which was the cause of all mankind becoming carnal, sensual, devilish, knowing evil from good, subjecting themselves to the devil.

Thus all mankind were lost; and behold, they would have been endlessly lost were it not that God redeemed his people from their lost and fallen state.

But remember that he that persists in his own carnal nature, and goes on in the ways of sin and rebellion against God, remaineth in his fallen state and the devil hath all power over him. Therefore he is as though there was no redemption made, being an enemy to God; and also is the devil an enemy to God.

And now if Christ had not come into the world, speaking of things to come as though they had already come, there could have been no redemption.

And if Christ had not risen from the dead, or have broken the bands of death that the grave should have no victory, and that death should have no sting, there could have been no resurrection.

8 ஆனால் உயிர்த்தெழுதல் இருப்பதால், கல்லறை ஜெயம் கொள்ளுகிறதில்லை. மரணத்தின் வேதனை கிறிஸ்துவிலே விழுங்கப்பட்டிருக்கிறது.

But there is a resurrection, therefore the grave hath no victory, and the sting of death is swallowed up in Christ.

9 அவரே உலகத்தின் ஒளியாயும், ஜீவனுமாயிருக்கிறார்; ஆம், அந்த ஒளி நித்தியமானதாயும், ஒருபோதும் அந்தகாரமடையாததாயும் இருக்கிறது, ஆம், இனிமேலும் மரணமே இல்லாதபடிக்கு முடிவற்ற ஜீவனுமாயிருக்கிறார்.

He is the light and the life of the world; yea, a light that is endless, that can never be darkened; yea, and also a life which is endless, that there can be no more death.

10 அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொண்டு, அவர்களுடைய நன்மையான அல்லது தீமையான கிரியைகளுக்குத்தக்கதாய், தேவனால் நியாயந்தீர்க்கப்படும்படி அவருடைய நியாயவிசாரணைக் கூண்டுக்கு முன்பாக நிற்கும்படி கொண்டுவரப்படுவார்கள்.

Even this mortal shall put on immortality, and this corruption shall put on incorruption, and shall be brought to stand before the bar of God, to be judged of him according to their works whether they be good or whether they be evil—

11 அவைகள் நன்மையாக இருப்பின், முடிவற்ற ஜீவன் மற்றும் சந்தோஷத்தின் உயிர்த்தெழுதலையும், அவைகள் தீமையாக இருப்பின், ஆக்கினையாகிய, அவர்களைக் கீழ்ப்படுத்திய, பிசாசினிடத்தில் ஒப்படைக்கப்பட்டு, முடிவற்ற ஆக்கினையின் உயிர்த்தெழுதலையும் அடைவார்கள்.

If they be good, to the resurrection of endless life and happiness; and if they be evil, to the resurrection of endless damnation, being delivered up to the devil, who hath subjected them, which is damnation—

12 ஏனெனில் அவர்கள், தங்களின் சொந்த மாம்ச சிந்தைகளின்படியேயும் விருப்பங்களின்படியேயும் நடந்து, தங்களுக்கு நேராய் இரக்கத்தின் கரங்கள் நீட்டப்பட்டிருந்தபோதும், கர்த்தரை ஒருபோதும் கூப்பிடாமலிருந்தார்கள். ஏனெனில் இரக்கத்தின் கரங்கள் அவர்களுக்கு நேராய் நீட்டப்பட்டிருந்தது. அவர்களோ கூப்பிடவில்லை; அவர்கள் தங்களின் அக்கிரமங்களைக்குறித்து எச்சரிக்கப்பட்டும் அவைகளிலிருந்து விலகாமலும், அவர்கள் மனந்திரும்புமாறு கட்டளையிடப்பட்டும் மனந்திரும்பாமலும் இருந்தார்கள்.

Having gone according to their own carnal wills and desires; having never called upon the Lord while the arms of mercy were extended towards them; for the arms of mercy were extended towards them, and they would not; they being warned of their iniquities and yet they would not depart from them; and they were commanded to repent and yet they would not repent.

13 இப்பொழுதும், நீங்கள் நடுக்கங்கொண்டு, உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவாலும், அவர் மூலமும் மாத்திரமே இரட்சிக்கப்படுவீர்கள், என்று நினைவில் கொள்ள வேண்டாமா?

And now, ought ye not to tremble and repent of your sins, and remember that only in and through Christ ye can be saved?

14 ஆதலால் நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தை போதிப்பீர்களெனில், அவைகள் வரவிருக்கிறவைகளின் நிழலாட்டமாய் இருக்கிறதென்றும், போதியுங்கள்.

Therefore, if ye teach the law of Moses, also teach that it is a shadow of those things which are to come—

15 ஒரே நித்திய பிதாவும், கர்த்தருமாகிய கிறிஸ்துவின் மூலமே மீட்பு வருகிறது என்று அவர்களுக்கு உபதேசியுங்கள். ஆமென்.

Teach them that redemption cometh through Christ the Lord, who is the very Eternal Father. Amen.

# மோசியா 17

1 இப்பொழுதும், அந்தப்படியே, அபிநாதி இவைக-
ளைப் பேசி முடித்த பின்பு, ஆசாரியர்கள்
அவனைப் பிடித்து, கொலைசெய்ய வேண்டுமென்-
று, ராஜா கட்டளையிட்டான்.

2 அவர்களுக்குள்ளே நேபியின் சந்ததியான, ஆல்-
மா என்ற பெயருடைய ஒருவனிருந்தான். அவன்
ஒரு வாலிபனாயிருந்தான். அபிநாதியினுடைய
வார்த்தைகளை விசுவாசித்தான். ஏனெனில் அபி-
நாதி அவர்களுக்கு விரோதமாய் சாட்சி கொடுத்த,
அவர்களின் அக்கிரமங்களைக்குறித்து அவன்
அறிவான். ஆதலால் ராஜா அபிநாதி மேல் கோபம்
கொள்ளாமல், அவனை சமாதானத்துடனே போக-
விடும்படிக் கெஞ்சினான்.

3 இதனால் ராஜா அதிகமாய் கோபமடைந்து, ஆல்-
மா அவர்கள் மத்தியிலிருந்து புறம்பே தள்ளப்ப-
டும்படிக்கும், அவனைக் கொன்றுபோடும்படிக்கும்,
தன்னுடைய வேலையாட்களை அவன் பின்னே
அனுப்பினான்.

4 அவர்கள் முன்பிருந்து அவன் ஓடிப்போய், அவர்-
கள் காணக்கூடாதபடி ஒளிந்துகொண்டான்.
அவன் அநேக நாட்கள் மறைவிலிருந்து அபிநாதி
பேசிய எல்லா வார்த்தைகளையும் எழுதினான்.

5 அந்தப்படியே, ராஜா தன் காவற்காரர்கள் அபிநா-
தியைச் சூழ்ந்து பிடிக்கும்படிக்கு கட்டளையிட்-
டான். அவர்களும் அவனைக் கட்டி, சிறையிலே
அடைத்தார்கள்.

6 மூன்று நாட்கள் தன் ஆசாரியர்களுடன் ஆலோ-
சித்து, அவனை மறுபடியும் தனக்கு முன்பாகக்
கொண்டு வரும்படிச் செய்தான்.

7 அவன் அவனை நோக்கி: அபிநாதியே, உனக்கு
விரோதமாய் ஒரு குற்றச்சாட்டை நாங்கள் கண்-
டோம். நீ மரணத்திற்கு பாத்திரவானாயிருக்கிறாய்.

8 ஏனெனில் தேவன் தாமே மனுபுத்திரர் மத்தியிலே
வருவாரென்று நீ சொல்லியிருக்கிறாய்; இப்பொழு-
தும் இந்த காரணத்திற்காக, நீ என்னையும் என்
ஜனத்தையும் குறித்து, பொல்லாப்பாய்ப் பேசின
சகல வார்த்தைகளையும், நீ மறுத்தாலொழிய, நீ
மரணத்திற்குள்ளாவாய்.

9 இப்பொழுது அபிநாதி அவனை நோக்கி, நான்
இந்த ஜனத்தைக் குறித்துச் சொன்ன வார்த்தைகள்
உண்மையாதலால், அவைகளை மறுக்கமாட்-
டேன். நீ அவைகளின் சத்தியத்தை அறிந்து கொள்-
ளும்பொருட்டு, உன்னுடைய கைகளுக்குள் சிக்-
கும்படிக்கு, என்னையே ஒப்புக்கொடுத்திருக்கி-
றேன்.

# Mosiah 17

And now it came to pass that when Abinadi had finished these sayings, that the king commanded that the priests should take him and cause that he should be put to death.

But there was one among them whose name was Alma, he also being a descendant of Nephi. And he was a young man, and he believed the words which Abinadi had spoken, for he knew concerning the iniquity which Abinadi had testified against them; therefore he began to plead with the king that he would not be angry with Abinadi, but suffer that he might depart in peace.

But the king was more wroth, and caused that Alma should be cast out from among them, and sent his servants after him that they might slay him.

But he fled from before them and hid himself that they found him not. And he being concealed for many days did write all the words which Abinadi had spoken.

And it came to pass that the king caused that his guards should surround Abinadi and take him; and they bound him and cast him into prison.

And after three days, having counseled with his priests, he caused that he should again be brought before him.

And he said unto him: Abinadi, we have found an accusation against thee, and thou art worthy of death.

For thou hast said that God himself should come down among the children of men; and now, for this cause thou shalt be put to death unless thou wilt recall all the words which thou hast spoken evil concerning me and my people.

Now Abinadi said unto him: I say unto you, I will not recall the words which I have spoken unto you concerning this people, for they are true; and that ye may know of their surety I have suffered myself that I have fallen into your hands.

10 ஆம், நான் மரணத்தையும் சகித்திருப்பேன். என் வார்த்தைகளை மறுக்கமாட்டேன். அவைகள் உனக்கு விரோதமாய் ஒரு சாட்சியமாய் நிற்கும். என்னைக் கொலை செய்வீர்களானால், குற்றமற்ற இரத்தத்தைச் சிந்துவீர்கள். இதுவும் கடைசி நாளிலே உங்களுக்கு விரோதமாய் சாட்சியமாய் நிற்கும் என்றான்.

Yea, and I will suffer even until death, and I will not recall my words, and they shall stand as a testimony against you. And if ye slay me ye will shed innocent blood, and this shall also stand as a testimony against you at the last day.

11 இப்பொழுதும் நோவா ராஜா, அவனது வார்த்தையினிமித்தம், திகிலடைந்து, தன்மீது தேவனுடைய நியாயத்தீர்ப்புக்கள் வருமென்று பயந்து, அவனை விடுவிக்க இருந்தான்.

And now king Noah was about to release him, for he feared his word; for he feared that the judgments of God would come upon him.

12 ஆனால் ஆசாரியர்கள் அவனுக்கு விரோதமாய் தங்கள் சத்தங்களை உயர்த்தி, அவனைக் குற்றம் சாட்டத் துவங்கி, அவன் ராஜாவை நிந்தித்தான், என்றார்கள். ஆதலால் ராஜா அவனுக்கு விரோதமாய் கோபமடையத் தூண்டப்பட்டு, அவன் கொலை செய்யப்படும்படிக்கு, அவனை ஒப்புக்கொடுத்தான்.

But the priests lifted up their voices against him, and began to accuse him, saying: He has reviled the king. Therefore the king was stirred up in anger against him, and he delivered him up that he might be slain.

13 அந்தப்படியே, அவர்கள் அவனைப் பிடித்துக் கட்டி, அவன் சாகுமட்டும் சுள்ளிக்கட்டினால் அவனுடைய மேனியை அடித்தார்கள்.

And it came to pass that they took him and bound him, and scourged his skin with faggots, yea, even unto death.

14 இப்பொழுதும் அக்கினி ஜூவாலைகள் அவனைத் தகிக்கும்போது, அவன் அவர்களை நோக்கி கூக்குரலிட்டு:

And now when the flames began to scorch him, he cried unto them, saying:

15 இதோ, நான் துன்பப்படும்படி எனக்கு நீங்கள் செய்தது போலவே, உங்கள் சந்ததியாரும், அநேகரை நான் இப்பொழுது அனுபவிக்கும் வேதனைகளால், அதுவும் அக்கினியாலான மரணத்தின் வேதனைகளை அனுபவிக்கச் செய்யும் காலம் வரும்; அவர்கள் கர்த்தராகிய தங்களின் தேவனின் இரட்சிப்பை விசுவாசிப்பதினிமித்தம் இப்படிச் செய்வார்கள்.

Behold, even as ye have done unto me, so shall it come to pass that thy seed shall cause that many shall suffer the pains that I do suffer, even the pains of death by fire; and this because they believe in the salvation of the Lord their God.

16 உங்கள் அக்கிரமங்களினிமித்தம் சகல விதமான நோய்களால் வாதிக்கப்படுவீர்கள்.

And it will come to pass that ye shall be afflicted with all manner of diseases because of your iniquities.

17 ஆம், நீங்கள் எல்லா பக்கங்களிலிருந்தும் அடிக்கப்படுவீர்கள். காட்டின் கொடிய மிருகங்களால் அலைக்கழிக்கப்படுகிற, காட்டு மந்தையைப்போல, அங்கேயும் இங்கேயும் நீங்கள் அலைக்கழிக்கப்பட்டு, சிதறடிக்கப்படுவீர்கள்.

Yea, and ye shall be smitten on every hand, and shall be driven and scattered to and fro, even as a wild flock is driven by wild and ferocious beasts.

18 அந்நாளிலே நீங்கள் வேட்டையாடப்பட்டு, உங்களுடைய சத்துருக்களின் கைகளிலே அகப்பட்டு, நான் துன்பப்படுகிற அக்கினியாலான மரணத்தின் வேதனைகளால் நீங்களும் துன்பப்படுவீர்கள்.

And in that day ye shall be hunted, and ye shall be taken by the hand of your enemies, and then ye shall suffer, as I suffer, the pains of death by fire.

19 இவ்விதமாய் தேவன் தம் ஜனத்தை அழிக்கிறவர்களின் மீது நீதியை சரிக்கட்டுகிறார். தேவனே, என் ஆத்துமாவை ஏற்றுக்கொள்ளும், என்றான்.

Thus God executeth vengeance upon those that destroy his people. O God, receive my soul.

20 இப்பொழுதும் அபிநாதி இந்த வார்த்தைகளைச் சொன்னபின்பு, அவன் அக்கினியாலான மரணத்தினால் மரித்தான்; ஆம், அவன் தன் வார்த்தைகளின் சத்தியத்தை தன்னுடைய மரணத்தினாலே முத்திரையிட்டு, தேவனுடைய கட்டளைகளை மறுக்காததினிமித்தம், கொலை செய்யப்பட்டான்.

And now, when Abinadi had said these words, he fell, having suffered death by fire; yea, having been put to death because he would not deny the commandments of God, having sealed the truth of his words by his death.

## மோசியா 18

1 இப்பொழுதும், அந்தப்படியே, நோவா ராஜாவினு-
டைய வேலைக்காரரிடமிருந்து ஓடிப்போன ஆல்-
மா, தன் பாவங்களிலிருந்தும் அக்கிரமங்களிலி-
ருந்தும் மனந்திரும்பி, ஜனங்களுக்குள்ளே இரகசி-
யமாய்ச் சென்று, அபிநாதியின் வார்த்தைகளைப்
போதிக்கத் தொடங்கினான்.
2 ஆம், வரவிருக்கிறவைகளைக் குறித்தும், மரித்-
தோருடைய உயிர்த்தெழுதலையும், கிறிஸ்துவினு-
டைய வல்லமையாலும், பாடுகளாலும் மரணத்தி-
னாலும் சம்பவிக்க இருக்கிற, ஜனத்தின் மீட்பை-
யும், அவருடைய உயிர்த்தெழுதலையும் மற்றும் பர-
லோகத்திற்கு ஏறிச்சென்றதைப்பற்றியுமாகும்.
3 அவன் தன் வார்த்தைகளைக் கேட்ட அநேகருக்-
கும் போதித்தான். ராஜா அறியாமலிருக்க அவர்க-
ளுக்கு இரகசியமாய் போதித்தான். அநேகர் இவனு-
டைய வார்த்தைகளை விசுவாசித்தார்கள்.
4 அந்தப்படியே, அவனை விசுவாசித்த அனைவ-
ரும், சில சமயங்களிலோ அல்லது பருவங்களிலோ,
காட்டுமிருகங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட, தேசத்-
தின் எல்லைப்பகுதிகளிலே இருந்த, ராஜாவினிட-
மிருந்து பெற்ற பெயரைக் கொண்ட, மார்மன் என்-
றழைக்கப்பட்ட இடத்திற்குச் சென்றார்கள்.
5 இப்பொழுதும் மார்மனிலே தெளிந்த தண்ணீ-
ரைக்கொண்ட ஒரு நீரூற்று இருந்தது. பகலிலே ரா-
ஜாவினுடைய தேடுதல்களிலிருந்து தன்னை
மறைத்துக்கொண்ட, அந்த தண்ணீர்களண்டையி-
லிருந்த புதர்களிலே ஆல்மா புகுந்தான்.
6 அந்தப்படியே, அவனை விசுவாசித்த அனைவ-
ரும், அவனுடைய வார்த்தைகளைக் கேட்க அங்கே
சென்றார்கள்.
7 அந்தப்படியே, அநேக நாட்கள் கழிந்த பின்பு,
மார்மன் என்ற இடத்திலே ஆல்மாவினுடைய
வார்த்தைகளைக் கேட்க அதிகமானோர் ஏகமாய்க்
கூடியிருந்தார்கள். ஆம், அவனுடைய வார்த்தைக-
ளை விசுவாசித்த யாவரும் அவனுடைய வார்த்-
தைகளைக் கேட்க ஏகமாய்க் கூடியிருந்தார்கள்.
அவன் அவர்களுக்குப் போதித்து, மனந்திரும்புத-
லையும் மீட்பையும், கர்த்தர்மீது விசுவாசத்தையும்
அவர்களுக்கு உபதேசித்தான்.
8 அந்தப்படியே, அவன் அவர்களை நோக்கி: இதோ
மார்மன் தண்ணீர்கள், (அவைகள் அப்படி
அழைக்கப்பட்டன) நீங்கள் இப்போது, தேவனு-
டைய மந்தையினுள் வந்து, அவருடைய ஜன-
மென்று அழைக்கப்பட விருப்பம்கொண்டவர்க-
ளாயும், ஒருவருக்கொருவர் பாரங்களைச் சுமந்து,
லகுவாக்க மனமுடையவர்களாகவும் இருக்கிறீர்-
கள்;

## Mosiah 18

And now, it came to pass that Alma, who had fled from the servants of king Noah, repented of his sins and iniquities, and went about privately among the people, and began to teach the words of Abinadi—

Yea, concerning that which was to come, and also concerning the resurrection of the dead, and the redemption of the people, which was to be brought to pass through the power, and sufferings, and death of Christ, and his resurrection and ascension into heaven.

And as many as would hear his word he did teach. And he taught them privately, that it might not come to the knowledge of the king. And many did believe his words.

And it came to pass that as many as did believe him did go forth to a place which was called Mormon, having received its name from the king, being in the borders of the land having been infested, by times or at seasons, by wild beasts.

Now, there was in Mormon a fountain of pure water, and Alma resorted thither, there being near the water a thicket of small trees, where he did hide himself in the daytime from the searches of the king.

And it came to pass that as many as believed him went thither to hear his words.

And it came to pass after many days there were a goodly number gathered together at the place of Mormon, to hear the words of Alma. Yea, all were gathered together that believed on his word, to hear him. And he did teach them, and did preach unto them repentance, and redemption, and faith on the Lord.

And it came to pass that he said unto them: Behold, here are the waters of Mormon (for thus were they called) and now, as ye are desirous to come into the fold of God, and to be called his people, and are willing to bear one another's burdens, that they may be light;

9 ஆம், துக்கப்படுவோரோடு கூட துக்கப்படவும்,
ஆறுதல் தேவைப்படுவோருக்கு ஆறுதலளிக்கவும்,
நித்திய ஜீவனைப் பெறும்படிக்கு, தேவனால் மீட்-
கப்பட்டு, முதலில் உயிர்த்தெழுவோரோடு கூட
எண்ணப்படும்படிக்கும், மரணம் சம்பவிக்குமட்-
டும், சதாகாலங்களிலும் எல்லாவற்றிலும், எல்லா
இடங்களிலும் தேவனுக்கு சாட்சிகளாய் நிற்கவும்
சித்தமாயிருக்கிறீர்கள்.

Yea, and are willing to mourn with those that mourn; yea, and comfort those that stand in need of comfort, and to stand as witnesses of God at all times and in all things, and in all places that ye may be in, even until death, that ye may be redeemed of God, and be numbered with those of the first resurrection, that ye may have eternal life—

10 இப்பொழுதும் இதுவே உங்களுடைய உள்ளங்க-
ளின் விருப்பமெனில், கர்த்தர் தம் ஆவியை உங்-
கள் மீது நிறைவாய் ஊற்றும்படிக்கு, அவரைச் சே-
வித்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்-
ளுவீர்கள், என்று அவரோடு கூட உடன்படிக்கையி-
னுள் பிரவேசித்ததாக, அவருக்கு முன்பாய் சாட்சி
சொல்லும் பொருட்டு, கர்த்தருடைய நாமத்தினால்
ஞானஸ்நானம் பெற என்ன தடையிருக்கிறது?
என்று உங்களைக் கேட்கிறேன், என்றான்.

Now I say unto you, if this be the desire of your hearts, what have you against being baptized in the name of the Lord, as a witness before him that ye have entered into a covenant with him, that ye will serve him and keep his commandments, that he may pour out his Spirit more abundantly upon you?

11 இப்பொழுதும் ஜனங்கள் இந்த வார்த்தைகளைக்
கேட்டபோது, அவர்கள் மகிழ்ச்சியால் கைகளைத்
தட்டி, இதுவே எங்களுடைய இருதயங்களின் வி-
ருப்பமாயிருக்கிறது, என்றார்கள்.

And now when the people had heard these words, they clapped their hands for joy, and exclaimed: This is the desire of our hearts.

12 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா, முதலாவ-
தாயிருந்த ஏலாமைக் கூட்டிக்கொண்டு தண்ணீரி-
லே நின்று, கர்த்தாவே, உமது தாசன் இந்த கிரியை-
யை பரிசுத்த உள்ளத்தோடு செய்யும்படிக்கு, அவன்
மீது உம்முடைய ஆவியானவரை ஊற்றும், என்-
றான்.

And now it came to pass that Alma took Helam, he being one of the first, and went and stood forth in the water, and cried, saying: O Lord, pour out thy Spirit upon thy servant, that he may do this work with holiness of heart.

13 இந்த வார்த்தைகளை அவன் உச்சரித்தவுடனே,
கர்த்தருடைய ஆவி அவன்மீது இறங்கிற்று. அவன்
ஏலாமே, அழிவிற்கேதுவான சரீரத்தினுடைய மர-
ணம் மட்டும் அவரைச் சேவிக்க ஒரு உடன்படிக்-
கையினுள் பிரவேசித்தாய் என்று, சாட்சியமாயி-
ருக்க சர்வவல்ல தேவனிடத்திலிருந்து பெற்ற அதி-
காரத்தினாலே, உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கி-
றேன். கர்த்தருடைய ஆவி உன்மீது ஊற்றப்பட்டு,
உலக அஸ்திபாரம் முதல் அவர் ஆயத்தப்படுத்தின
கிறிஸ்துவினுடைய மீட்பின் மூலம், நித்திய ஜீ-
வனை உனக்கு அருளுவாராக, என்றான்.

And when he had said these words, the Spirit of the Lord was upon him, and he said: Helam, I baptize thee, having authority from the Almighty God, as a testimony that ye have entered into a covenant to serve him until you are dead as to the mortal body; and may the Spirit of the Lord be poured out upon you; and may he grant unto you eternal life, through the redemption of Christ, whom he has prepared from the foundation of the world.

14 இந்த வார்த்தைகளை ஆல்மா சொன்ன பின்பு,
ஆல்மாவும் ஏலாமும் ஜலத்திலே மூழ்கி, எழுந்து
ஆவியினாலே நிரப்பப்பட்டவர்களாய் களிகூர்ந்-
து, ஜலத்திலிருந்து வெளியேறினார்கள்.

And after Alma had said these words, both Alma and Helam were buried in the water; and they arose and came forth out of the water rejoicing, being filled with the Spirit.

15 மறுபடியும், ஆல்மா மற்றொருவனைக் கூட்டிக்-
கொண்டு, இரண்டாந்தரம் ஜலத்தினுள் சென்று,
தான் மட்டும் ஜலத்தினுள் மூழ்காமல், முதலாம-
வனைப் போலவே, இவனுக்கும் ஞானஸ்நானம்
கொடுத்தான்.

And again, Alma took another, and went forth a second time into the water, and baptized him according to the first, only he did not bury himself again in the water.

16 இவ்விதமாய், மார்மன் என்ற இடத்திற்குப்போன
ஒவ்வொருவருக்கும் ஞானஸ்நானம் கொடுத்தான்.
அவர்கள் எண்ணிக்கையில் இருநூற்று நான்கு
ஆத்துமாக்களாய் இருந்தார்கள். ஆம், அவர்களுக்-
கு மார்மன் தண்ணீர்களிலே ஞானஸ்நானம் கொ-
டுக்கப்பட்டு, தேவனுடைய கிருபையாலே நிரப்பப்-
பட்டார்கள்.

And after this manner he did baptize every one that went forth to the place of Mormon; and they were in number about two hundred and four souls; yea, and they were baptized in the waters of Mormon, and were filled with the grace of God.

17 அந்தச் சமயம் முதற்கொண்டு அவர்கள் தேவனு-
டைய சபை என்றும், கிறிஸ்துவினுடைய சபை
என்றும் வழங்கலாயினர். அந்தப்படியே, தேவனு-
டைய வல்லமையாலும், அதிகாரத்தாலும் ஞா-
னஸ்நானம் கொடுக்கப்பெற்ற யாவரும் சபையிலே
சேர்க்கப்பட்டார்கள்.

And they were called the church of God, or the church of Christ, from that time forward. And it came to pass that whosoever was baptized by the power and authority of God was added to his church.

18 அந்தப்படியே, ஆல்மா தேவனிடத்திலிருந்து
அதிகாரத்தைப்பெற்று ஆசாரியர்களை நியமனம்
செய்தான்; அவர்களுக்கு பிரசங்கிக்கவும், தேவனு-
டைய ராஜ்யத்திற்கு ஏதுவானவைகளைக் குறித்து
அவர்களுக்கு உபதேசம்பண்ணவும், ஐம்பதுபே-
ருக்கு ஒரு ஆசாரியனை நியமனம் செய்தான்.

And it came to pass that Alma, having authority from God, ordained priests; even one priest to every fifty of their number did he ordain to preach unto them, and to teach them concerning the things pertaining to the kingdom of God.

19 அவன் தான் போதித்தவைகளையும், பரிசுத்த
தீர்க்கதரிசிகளின் நாவினால் பேசப்பட்டவைக-
ளையும் தவிர, அவர்கள் வேறெந்த காரியத்தைக்
குறித்தும் போதிக்கக்கூடாது, என்று கட்டளையிட்-
டான்.

And he commanded them that they should teach nothing save it were the things which he had taught, and which had been spoken by the mouth of the holy prophets.

20 தம் ஜனத்தை மீட்டுக்கொண்டவரான, கர்த்தர் பே-
ரில் விசுவாசம் மற்றும் மனந்திரும்புதலைத் தவிர,
வேறொன்றும் அவர்கள் பிரசங்கிக்கக் கூடாதென்-
று கட்டளையிட்டான்.

Yea, even he commanded them that they should preach nothing save it were repentance and faith on the Lord, who had redeemed his people.

21 ஒருவரோடொருவர் பிணக்கு பண்ணாமலும்,
ஆனால் அன்னியோனியத்திலே அவர்களுடைய
இருதயங்கள் ஒன்றாய் பின்னப்பட்டு, ஒருவருக்-
கொருவர் அன்பாயிருந்து, ஒரே விசுவாசத்தையும்,
ஞானஸ்நானத்தையும் உடையவர்களாய், ஒரு-
மனப்பட்டவர்களாய் எதிர் நோக்கி இருக்கவேண்டு-
மெனக் கட்டளையிட்டான்.

And he commanded them that there should be no contention one with another, but that they should look forward with one eye, having one faith and one baptism, having their hearts knit together in unity and in love one towards another.

22 அந்தப்படியே அவர்கள் பிரசங்கிக்க வேண்டு-
மென்று கட்டளையிட்டான். இப்படியாக அவர்கள்
தேவனுடைய பிள்ளைகளானார்கள்.

And thus he commanded them to preach. And thus they became the children of God.

23 அவர்கள் ஓய்வுநாளை ஆசரித்து, பரிசுத்தமாய்
கைக்கொண்டு, தேவனாகிய தங்களின் கர்த்தருக்-
கு நாள்தோறும் நன்றிகளை ஏறெடுக்கவேண்டு-
மென, கட்டளையிட்டான்.

And he commanded them that they should observe the sabbath day, and keep it holy, and also every day they should give thanks to the Lord their God.

24 தான் நியமனம் செய்த ஆசாரியர்கள் தங்களைத்
தாங்களே ஆதரித்துக்கொள்ள, தங்களுடைய
சொந்தக் கைகளினாலே வேலைகளைச் செய்ய-
வேண்டுமென்றும் கட்டளையிட்டான்.

And he also commanded them that the priests whom he had ordained should labor with their own hands for their support.

25 அவர்கள் ஏகமாய்க்கூடி, ஜனங்களுக்குப் போதிக்கவும், கர்த்தராகிய தங்கள் தேவனைத் தொழுதுகொள்ளவும், தங்கள் திராணிக்கேற்றபடி ஒன்றாய் அடிக்கடி கூடவும், வாரத்திலே ஒரு நாள் ஒதுக்கப்பட்டது.

And there was one day in every week that was set apart that they should gather themselves together to teach the people, and to worship the Lord their God, and also, as often as it was in their power, to assemble themselves together.

26 ஆசாரியர்கள் தங்களை ஆதரித்துக்கொள்ள ஜனங்களைச் சார்ந்திருக்கக் கூடாது, ஆனால் தங்கள் பிரயாசங்களுக்காக, ஆவியிலே பெலவான்களாகி, தேவ ஞானத்தைக்கொண்டு, தேவனிடத்திலிருந்து பெற்ற அதிகாரத்தினாலும் வல்லமையினாலும் போதித்து, தேவனுடைய கிருபையைப் பெற வேண்டும்,

And the priests were not to depend upon the people for their support; but for their labor they were to receive the grace of God, that they might wax strong in the Spirit, having the knowledge of God, that they might teach with power and authority from God.

27 மேலும் சபை மக்கள் ஒவ்வொருவரும் தான் வைத்திருப்பதற்கேற்ப, அதிகமாய் பெற்றிருப்பவன் அதிகமாகவும், கொஞ்சமாய் பெற்றிருப்பவன் கொஞ்சமாகவும், இல்லாதவனுக்குக் கொடுக்க, தங்களின் பொருளைக் கொடுக்கவேண்டுமென ஆல்மா கட்டளையிட்டான்.

And again Alma commanded that the people of the church should impart of their substance, every one according to that which he had; if he have more abundantly he should impart more abundantly; and of him that had but little, but little should be required; and to him that had not should be given.

28 இவ்விதமாய், அவர்கள் தங்கள் பொருட்களை, தங்கள் சுய சித்தத்தின்படியும், தேவனிடத்தில் வைத்திருக்கிற நல் வாஞ்சைகளின்படியேயும், தேவையிலிருக்கும் ஆசாரியர்களுக்கும், தேவையிலிருக்கிற, வஸ்திரமில்லாத ஒவ்வொருவருக்கும் கொடுக்கவேண்டும்.

And thus they should impart of their substance of their own free will and good desires towards God, and to those priests that stood in need, yea, and to every needy, naked soul.

29 தேவனால் அவன் கட்டளையிடப்பட்டதினால் இதை அவர்களுக்குச் சொன்னான். அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்குத் தக்கதாய், ஆவிக்குரியவைகளிலும், உலகப் பிரகாரமானவைகளிலும் ஒருவருக்கொருவர் அளித்து, தேவனுக்கு முன்பாய் தலைநிமிர்ந்து நடந்தார்கள்.

And this he said unto them, having been commanded of God; and they did walk uprightly before God, imparting to one another both temporally and spiritually according to their needs and their wants.

30 இப்பொழுதும், அந்தப்படியே, மார்மன் தண்ணீர்கள் அருகேயிருந்த வனாந்தரத்தில், மார்மன் தண்ணீர்களண்டையில், மார்மன் என்னும் இடத்தில், இவை யாவும் சம்பவித்தன; ஆம், அங்கே தங்கள் மீட்பரைப்பற்றிய ஞானத்திற்கு வந்தவர்களுடைய கண்களுக்கு, மார்மன் என்கிற இடமும், மார்மன் தண்ணீர்களும், மார்மன் வனாந்தரமும் எவ்வளவு அழகாயிருக்கின்றன; ஆம், அவர்கள் அவரை என்றென்றைக்குமாய் துதித்து கீர்த்தனம் பண்ணுவதினிமித்தம், அவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்.

And now it came to pass that all this was done in Mormon, yea, by the waters of Mormon, in the forest that was near the waters of Mormon; yea, the place of Mormon, the waters of Mormon, the forest of Mormon, how beautiful are they to the eyes of them who there came to the knowledge of their Redeemer; yea, and how blessed are they, for they shall sing to his praise forever.

31 ராஜாவுக்கு இது தெரியாத வண்ணம், இந்தக் காரியங்கள் தேசத்தின் எல்லைகளிலே நடத்தப்பட்டன.

And these things were done in the borders of the land, that they might not come to the knowledge of the king.

32 ஆனால் இதோ, அந்தப்படியே, ராஜா, ஜனங்கள்
மத்தியிலே ஒரு சலசலப்பைக்கண்டு அவர்களைக்
கண்காணிக்கும்படி தன்னுடைய காவற்காரர்க-
ளை அனுப்பினான். இப்படியாக கர்த்தருடைய
வார்த்தையைக் கேட்க, அவர்கள் ஏகமாய்க் கூடின
நாளிலே ராஜாவினால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

33 இப்பொழுதும் தனக்கு விரோதமாய் எழும்ப,
ஜனங்களை ஆல்மா தூண்டிவிடுகிறான் என்று ரா-
ஜா கூறி, அவர்களை அழித்துப்போட தன் சேனை-
யை அனுப்பினான்.

34 அந்தப்படியே, ஆல்மாவும், கர்த்தருடைய ஜன-
மும் ராஜாவினுடைய சேனையின் வருகையைக்
குறித்து தெரிவிக்கப்பட்டார்கள்; ஆதலால் அவர்-
கள் தங்கள் கூடாரங்களுடன், தங்கள் குடும்பங்க-
ளையும் கூட்டிக்கொண்டு வனாந்தரத்தினுள் பு-
றப்பட்டுப் போனார்கள்.

35 அவர்கள் எண்ணிக்கையிலே நானூற்றி ஐம்பது
ஆத்துமாக்களாயிருந்தார்கள்.

But behold, it came to pass that the king, having discovered a movement among the people, sent his servants to watch them. Therefore on the day that they were assembling themselves together to hear the word of the Lord they were discovered unto the king.

And now the king said that Alma was stirring up the people to rebellion against him; therefore he sent his army to destroy them.

And it came to pass that Alma and the people of the Lord were apprised of the coming of the king's army; therefore they took their tents and their families and departed into the wilderness.

And they were in number about four hundred and fifty souls.

# மோசியா 19

1 அந்தப்படியே, ராஜாவினுடைய சேனை, கர்த்தரு-
டைய ஜனத்தை விருதாவாய்த் தேடிய பின்னர் தி-
ரும்பியது.

2 இப்பொழுதும் இதோ, ராஜாவின் சேனைகள் கு-
றைக்கப்பட்டமையால் சிறியதாயிருந்தது, ஜனங்க-
ளின் மீதியானவர்களுக்குள்ளே பிரிவினைகள்
ஏற்படத் துவங்கின.

3 சிலர் ராஜாவிற்கு விரோதமாய் பயமுறுத்தத் து-
வங்கினார்கள். அவர்களுக்குள்ளே பயங்கர பி-
ணக்குகள் ஏற்படத் துவங்கின.

4 இப்பொழுதும் அவர்களுக்குள்ளே கிதியோன்
என்று பெயர்கொண்ட ஒருவனிருந்தான். அவன்
பெலவானாயும், ராஜாவிற்கு விரோதமாயுமிருந்தப-
டியால், தன் பட்டயத்தை உருவி, தான் ராஜாவைக்
கொலை செய்வதாக தன் உக்கிரத்திலே ஆணை-
யிட்டான்.

5 அந்தப்படியே, அவன் ராஜாவுடன் சண்டையிட்-
டான்; தன்னை அவன் வெல்லப்போகிறான் என்று
ராஜா கண்டபோது, அவன் ஓடிப்போய் ஆலயத்திற்-
கு அருகாமையிலிருந்த கோபுரத்திலே ஏறினான்.

6 கிதியோன் அவனைப் பின்தொடர்ந்து ஓடி, ராஜா-
வை வெட்டிப்போட கோபுரத்தின் மேல் ஏற இருக்-
கையில், சேம்லோன் தேசத்தைச் சுற்றி ராஜா தன்
கண்களை ஏறெடுத்தான். இதோ லாமானியர்க-
ளின் சேனை தேசத்தின் எல்லைகளினுள்ளிருந்-
தார்கள்.

7 இப்பொழுதும் ராஜா தன் உள்ளத்தின் சஞ்சலத்-
தால், கதறி, கிதியோனே, என்னை விட்டுவிடு,
ஏனெனில் லாமானியர்கள் எங்களை நோக்கி வரு-
கிறார்கள், எங்களை சங்கரித்துப் போடுவார்கள்.
ஆம், என் ஜனத்தைச் சங்கரித்துப்போடுவார்கள்,
என்றான்.

8 இப்பொழுதும் ராஜா தன் சொந்த ஜீவனைக்கு-
றித்து கவலைப்படுவதுபோலவே தன் ஜனத்தைக்-
குறித்து அதிகம் கவலைப்படவில்லை; ஆயினும்
கிதியோன் அவன் ஜீவனைத் தப்புவித்தான்.

9 ராஜா லாமானியர்களுக்கு முன்பிருந்து அவர்-
கள் ஓடவேண்டும் என்று தன் ஜனங்களுக்குக் கட்-
டளையிட்டு, தானும் அவர்களுக்கு முன்பாக ஓடிப்-
போனான். அவர்கள் தங்கள் ஸ்திரீகளோடும், தங்-
கள் பிள்ளைகளோடும் வனாந்தரத்தினுள் ஓடிப்-
போனார்கள்.

10 அந்தப்படியே, லாமானியர் அவர்களைப் பின்-
தொடர்ந்து, அவர்களுக்கு முந்திச் சென்று, அவர்க-
ளைக் கொன்றுபோடத் தொடங்கினார்கள்.

# Mosiah 19

And it came to pass that the army of the king returned, having searched in vain for the people of the Lord.

And now behold, the forces of the king were small, having been reduced, and there began to be a division among the remainder of the people.

And the lesser part began to breathe out threatenings against the king, and there began to be a great contention among them.

And now there was a man among them whose name was Gideon, and he being a strong man and an enemy to the king, therefore he drew his sword, and swore in his wrath that he would slay the king.

And it came to pass that he fought with the king; and when the king saw that he was about to overpower him, he fled and ran and got upon the tower which was near the temple.

And Gideon pursued after him and was about to get upon the tower to slay the king, and the king cast his eyes round about towards the land of Shemlon, and behold, the army of the Lamanites were within the borders of the land.

And now the king cried out in the anguish of his soul, saying: Gideon, spare me, for the Lamanites are upon us, and they will destroy us; yea, they will destroy my people.

And now the king was not so much concerned about his people as he was about his own life; nevertheless, Gideon did spare his life.

And the king commanded the people that they should flee before the Lamanites, and he himself did go before them, and they did flee into the wilderness, with their women and their children.

And it came to pass that the Lamanites did pursue them, and did overtake them, and began to slay them.

11 இப்பொழுது, அந்தப்படியே, சகல புருஷர்களும் தங்கள் மனைவிகளையும், பிள்ளைகளையும், விட்டுவிட்டு லாமானியர்களுக்கு முன்பாய் ஓட வேண்டுமென்று ராஜா கட்டளையிட்டான்.

Now it came to pass that the king commanded them that all the men should leave their wives and their children, and flee before the Lamanites.

12 இப்பொழுதும் அநேகர் அவர்களை விட்டுப்போகாமல், அவர்களுடனே தங்கி, அழிந்து போக விரும்பினார்கள். மீதியானோர் தங்கள் மனைவிகளையும், தங்கள் பிள்ளைகளையும் விட்டு விட்டு ஓடிப்போனார்கள்.

Now there were many that would not leave them, but had rather stay and perish with them. And the rest left their wives and their children and fled.

13 அந்தப்படியே, தங்கள் மனைவிகளோடும் பிள்ளைகளோடும் தரித்திருந்தவர்கள், லாமானியர்கள் தங்களை கொன்றுபோடாதபடி, தங்களுடைய அழகான குமாரத்திகளை அவர்களுக்கு முன்பு நின்று கெஞ்சும்படிச் செய்தார்கள்.

And it came to pass that those who tarried with their wives and their children caused that their fair daughters should stand forth and plead with the Lamanites that they would not slay them.

14 அந்தப்படியே, லாமானியர் அவர்களுடைய ஸ்திரீகளின் அழகால் மயங்கியதால், அவர்கள் மீது இரக்கம் கொண்டார்கள்.

And it came to pass that the Lamanites had compassion on them, for they were charmed with the beauty of their women.

15 ஆதலால் லாமானியர்கள் அவர்களுடைய ஜீவனை வாங்கிப்போடாமல், மறுபடியும் சிறைக்கைதிகளாக அவர்களை நேபியின் தேசத்திற்குக் கொண்டு சென்றார்கள், நோவா ராஜாவை லாமானியர்களின் கைகளிலே ஒப்படைக்கவும், தாங்கள் வைத்திருக்கிற பொன்னில் அரைப்பங்கையும் வெள்ளியிலும், விலையேறப்பெற்ற பொருட்கள் யாவிலும் தாங்கள் பெற்றிருந்த சகலவற்றிலும் அரைப்பங்காக, தங்களின் ஆஸ்திகளை ஒப்படைத்து, இப்படியாக லாமானியர்களின் ராஜாவிற்கு வருஷா வருஷம் அவர்கள் வரியை செலுத்த வேண்டுமென்ற நிபந்தனைகளின்பேரில், தேசத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

Therefore the Lamanites did spare their lives, and took them captives and carried them back to the land of Nephi, and granted unto them that they might possess the land, under the conditions that they would deliver up king Noah into the hands of the Lamanites, and deliver up their property, even one half of all they possessed, one half of their gold, and their silver, and all their precious things, and thus they should pay tribute to the king of the Lamanites from year to year.

16 இப்பொழுதும் லிம்கி எனப் பெயர் கொண்ட ராஜாவினுடைய குமாரர்களில் ஒருவன், பிணைக்கைதிகளாய் எடுத்துச் செல்லப்பட்டவர்களுள் இருந்தான்.

And now there was one of the sons of the king among those that were taken captive, whose name was Limhi.

17 இப்பொழுது, லிம்கி தன் தகப்பன் சங்கரிக்கப்படக் கூடாதென்று விரும்பினான். லிம்கி நியாயவானாய் இருப்பினும், தன் தகப்பனுடைய அக்கிரமங்களை அவன் அறியாமலிருக்கவில்லை.

And now Limhi was desirous that his father should not be destroyed; nevertheless, Limhi was not ignorant of the iniquities of his father, he himself being a just man.

18 அந்தப்படியே, ராஜாவையும் அவனோடிருந்தவர்களையும் தேட, வனாந்தரத்தினுள் இரகசியமாக ஆட்களை கிதியோன் அனுப்பினான். அந்தப்படியே, அவர்கள் ராஜாவையும் அவனுடைய ஆசாரியர்களையும் தவிர, சகல ஜனங்களையும் வனாந்தரத்தில் சந்தித்தார்கள்.

And it came to pass that Gideon sent men into the wilderness secretly, to search for the king and those that were with him. And it came to pass that they met the people in the wilderness, all save the king and his priests.

19 இப்பொழுது அவர்கள் நேபியின் தேசத்திற்குத் திரும்பிப்போய், தங்களின் மனைவிகளும், தங்களின் பிள்ளைகளும், அவர்களோடு இருந்தவர்களும், கொலை செய்யப்பட்டிருப்பார்களெனில், பழிவாங்க வகைதேடி, அவர்களோடு செத்துப்போவோம், என்று தங்கள் இருதயங்களிலே ஆணையிட்டுக் கொண்டார்கள்.

Now they had sworn in their hearts that they would return to the land of Nephi, and if their wives and their children were slain, and also those that had tarried with them, that they would seek revenge, and also perish with them.

20 அவர்கள் திரும்பிப் போகக்கூடாது, என்று ராஜா கட்டளையிட்டான். அவர்கள் ராஜாவின்மீது கோபம்கொண்டு அவனை, அக்கினியால் மரணமடையும்படிச் செய்தார்கள்.

And the king commanded them that they should not return; and they were angry with the king, and caused that he should suffer, even unto death by fire.

21 அவர்கள் ஆசாரியர்களையும் பிடித்து, கொலைசெய்யவிருக்கையில், அவர்களுக்கு முன்பாக அவர்கள் ஓடிப்போனார்கள்.

And they were about to take the priests also and put them to death, and they fled before them.

22 அந்தப்படியே, அவர்கள் நேபியின் தேசத்திற்குத் திரும்பிப்போகையில் கிதியோனின் மனுஷர்களைச் சந்தித்தார்கள். கிதியோனின் மனுஷர்கள் அவர்களின் மனைவிகளுக்கும், அவர்களின் பிள்ளைகளுக்கும் சம்பவித்த எல்லாவற்றையும், அவர்கள் வைத்திருந்த எல்லாவற்றிலும் அரைப் பகுதியை வரியாய் செலுத்தி தேசத்தைப் பெற்றுக்கொள்ளும்படி, லாமானியர்களுக்கு சொன்னதையும் சொன்னார்கள்.

And it came to pass that they were about to return to the land of Nephi, and they met the men of Gideon. And the men of Gideon told them of all that had happened to their wives and their children; and that the Lamanites had granted unto them that they might possess the land by paying a tribute to the Lamanites of one half of all they possessed.

23 ஜனங்கள், கிதியோனின் மனுஷர்களிடத்தில் அவர்கள் ராஜாவைக் கொன்றுபோட்டார்கள் எனவும், அவனுடைய ஆசாரியர்கள் அவர்களிடமிருந்து தூரமாய் வனாந்தரத்தினுள் ஓடிப்போனார்கள், என்றும் சொன்னார்கள்.

And the people told the men of Gideon that they had slain the king, and his priests had fled from them farther into the wilderness.

24 அந்தப்படியே, அவர்கள் சடங்குகளை முடித்த பின்னர், தங்கள் மனைவிகளும் தங்கள் பிள்ளைகளும் கொல்லப்படாததினிமித்தம் களிகூர்ந்து, நேபியின் தேசத்திற்கு திரும்பினார்கள். அவர்கள் ராஜாவுக்குச் செய்ததைக்குறித்து கிதியோனிடத்திலே சொன்னார்கள்.

And it came to pass that after they had ended the ceremony, that they returned to the land of Nephi, rejoicing, because their wives and their children were not slain; and they told Gideon what they had done to the king.

25 அந்தப்படியே, லாமானியர்களின் ராஜா, தன்னுடைய ஜனம் அவர்களைக் கொன்று போடக்கூடாதென்று அவர்களுக்கு ஆணையிட்டான்.

And it came to pass that the king of the Lamanites made an oath unto them, that his people should not slay them.

26 ராஜாவினுடைய குமாரனும், ஜனங்களால் ராஜ்யபாரம் சூட்டப்பட்டவனுமாகிய லிம்கி, தன் ஜனம் பெற்றிருக்கிற எல்லாவற்றிலும் பாதியை அவனுக்கு வரியாய் செலுத்துவார்கள், என்று லாமானியர்களின் ராஜாவினிடத்தில் ஆணையிட்டான்.

And also Limhi, being the son of the king, having the kingdom conferred upon him by the people, made oath unto the king of the Lamanites that his people should pay tribute unto him, even one half of all they possessed.

27 அந்தப்படியே, லிம்கி ராஜ்யத்தையும், தன் ஜனத்திற்குள்ளே சமாதானத்தையும் ஸ்தாபிக்கத் தொடங்கினான்.

And it came to pass that Limhi began to establish the kingdom and to establish peace among his people.

28 லாமானியர்களின் ராஜா தேசத்தைச் சுற்றியும், காவற்காரர்களை நிறுத்தி, லிம்கியின் ஜனம் வனாந்தரத்தினுள் போகாதபடி, தேசத்திலே இருக்கும்படிச் செய்தான்; நேபியர்களிடமிருந்து தான் பெற்ற வரியால், தன் காவற்காரர்களை ஆதரித்தான்.

29 இப்பொழுதும் லாமானியர்கள் அவர்களுக்கு தீங்கு செய்யாமலும், அழிக்க வகைதேடாமலும் இருப்பதால், லிம்கி ராஜா தொடர்ந்து இரண்டு வருஷமளவும் தன் ராஜ்யத்திலே சமாதானம் பெற்றிருந்தான்.

And the king of the Lamanites set guards round about the land, that he might keep the people of Limhi in the land, that they might not depart into the wilderness; and he did support his guards out of the tribute which he did receive from the Nephites.

And now king Limhi did have continual peace in his kingdom for the space of two years, that the Lamanites did not molest them nor seek to destroy them.

## மோசியா 20

1 இப்பொழுதும் லாமானியர்களின் குமாரத்திகள்
சேம்லோன் என்ற இடத்திலே பாடி, ஆடி மகிழ்ச்சியா-
யிருக்க ஒன்றுகூடியிருந்தார்கள்.

2 அந்தப்படியே, ஒருநாள் அவர்களில் சிலர் ஆட-
வும், பாடவும் ஒன்றாய்க் கூடியிருந்தார்கள்.

3 இப்பொழுதும் நோவா ராஜாவின் ஆசாரியர்கள்,
நேபியின் பட்டணத்திற்குள் பிரவேசிக்க வெட்கப்-
பட்டு, ஜனங்கள் தங்களை வெட்டிப்போடுவார்கள்
என்று பயந்தவர்களாயும், தங்களின் மனைவிகளி-
டத்திலும், பிள்ளைகளிடத்திலும் திரும்பாமலிருந்-
தார்கள்.

4 வனாந்தரத்திலே தங்கியிருந்ததால், லாமானியர்-
களின் குமாரத்திகளை கண்டவுடன், அவர்கள்
பதுங்கி அவர்களை நோட்டமிட்டார்கள்.

5 அவர்களில் சிலர் ஆட ஒன்றாய் கூடியிருந்தபோ-
து, அவர்கள் தங்கள் மறைவிடங்களிலிருந்து வெ-
ளியே வந்து, அவர்களை வனாந்தரத்தினுள் தூக்-
கிச் சென்றார்கள்; ஆம், லாமானியர்களின் இருபத்-
தி நான்கு குமாரத்திகளை வனாந்தரத்தினுள் தூக்-
கிச் சென்றார்கள்.

6 அந்தப்படியே, லாமானியர்கள் தங்கள் குமாரத்தி-
கள் தொலைந்துபோனதைக் கண்டவுடன், அவர்-
கள் அது லிம்கியின் ஜனமாயிருக்கும் என்று நி-
னைத்ததால், லிம்கி ஜனத்தின்மீது கோபம்கொண்-
டார்கள்.

7 ஆதலால் அவர்கள் தங்கள் சேனைகளை
அனுப்பினார்கள். ஆம், ராஜாவே தன் ஜனத்திற்கு
முன்சென்றான். லிம்கி ஜனத்தை அழிக்க நேபியின்
தேசத்திற்குப் போனார்கள்.

8 லிம்கி கோபுரத்திலிருந்து அவர்களைக் கண்டு,
அவர்களுடைய போர் ஆயத்தங்களை அறிந்து-
கொண்டான். ஆதலால் அவன் தன் ஜனத்தை ஒன்-
றாய்க் கூட்டி வயல்களிலும், கானகங்களிலும்
அவர்களுக்காக பதுங்கியிருந்தான்.

9 அந்தப்படியே, லாமானியர்கள் வந்தபோது, லிம்-
கியின் ஜனத்தார் தங்கள் மறைவிடங்களிலிருந்து
வந்து, அவர்கள்மீது விழுந்து, அவர்களைக் கொ-
லை செய்யத் துவங்கினார்கள்.

10 அந்தப்படியே, யுத்தம் மிகவும் கொடியதாகி,
அவர்கள் இரைக்காக சண்டையிடுகிற சிங்கங்க-
ளைப்போல சண்டையிட்டார்கள்.

## Mosiah 20

Now there was a place in Shemlon where the daughters of the Lamanites did gather themselves together to sing, and to dance, and to make themselves merry.

And it came to pass that there was one day a small number of them gathered together to sing and to dance.

And now the priests of king Noah, being ashamed to return to the city of Nephi, yea, and also fearing that the people would slay them, therefore they durst not return to their wives and their children.

And having tarried in the wilderness, and having discovered the daughters of the Lamanites, they laid and watched them;

And when there were but few of them gathered together to dance, they came forth out of their secret places and took them and carried them into the wilderness; yea, twenty and four of the daughters of the Lamanites they carried into the wilderness.

And it came to pass that when the Lamanites found that their daughters had been missing, they were angry with the people of Limhi, for they thought it was the people of Limhi.

Therefore they sent their armies forth; yea, even the king himself went before his people; and they went up to the land of Nephi to destroy the people of Limhi.

And now Limhi had discovered them from the tower, even all their preparations for war did he discover; therefore he gathered his people together, and laid wait for them in the fields and in the forests.

And it came to pass that when the Lamanites had come up, that the people of Limhi began to fall upon them from their waiting places, and began to slay them.

And it came to pass that the battle became exceedingly sore, for they fought like lions for their prey.

11 அந்தப்படியே, லிம்கியின் ஜனங்கள் லாமானியர்-
களுடைய எண்ணிக்கையிலே பாதியளவு இல்லா-
மற்போனாலும் கூட, லாமானியர்களை தங்கள்
முன்பிருந்து விரட்டத் தொடங்கினார்கள். ஆனால்
அவர்கள் தங்கள் ஜீவன்களுக்காகவும், மனைவிக-
ளுக்காகவும் தங்கள் பிள்ளைகளுக்காகவும் சண்-
டையிட்டார்கள்; ஆதலால் முழுமூச்சாய் முயன்று
வலுசர்ப்பங்களைப் போல சண்டையிட்டார்கள்.
12 அந்தப்படியே, அவர்கள் லாமானியர்களுடைய
ராஜாவை அவர்களுடைய மரித்தோரிடையே கண்-
டார்கள்; ஆயினும் அவன் மரித்துப்போகவில்லை.
காயத்துடனேயிருந்ததாலும் தரையின் மீது விட்டு-
விடப்படும் அளவுக்கு அவனது ஜனத்தின் ஓட்டம்
அதிவேகமாய் இருந்தது.
13 அவர்கள் அவனைத் தூக்கி, அவன் காயங்க-
ளைக் கட்டி, லிம்கியின் முன்பு கொண்டுவந்து,
இதோ லாமானியர்களின் ராஜா, அவன் காயமுற்று,
அவர்களுடைய மரித்தோரிடையே விழுந்து கிடந்-
தான். அவர்கள் அவனை விட்டுச்சென்றார்கள்.
இதோ அவனை உம் முன்னே கொண்டு வந்திருக்கி-
றோம். நாம் இவனை இப்பொழுதே கொன்று போடு-
வோமென்றார்கள்.
14 ஆனால் லிம்கியோ அவர்களை நோக்கி:
அவனைக் கொன்றுபோடாமல், அவனை நான் கா-
ணும்படி இங்கே கொண்டு வாருங்களென்றான்.
அவர்கள் அவனைக் கொண்டு வந்தார்கள். லிம்கி
அவனை நோக்கி: என் ஜனத்திற்கு விரோதமாய்
யுத்தம்புரிய நீர் வந்த காரணம் என்ன? இதோ நான்
உம்மிடம் செய்த ஆணையை என் ஜனம் முறித்துப்-
போடவில்லையே. ஆயினும் நீர் என்னுடைய
ஜனத்திடம் செய்த ஆணையை ஏன் முறித்துப்போ-
டவேண்டும் என்றான்.
15 இப்பொழுதும் ராஜா, என் ஜனத்தாருடைய குமா-
ரத்திகளை உம்முடைய ஜனத்தார் தூக்கிச் சென்ற-
தினாலே நான் ஆணையை முறித்துப்போட்டேன்;
ஆதலால் என்னுடைய உக்கிரத்திலே என் ஜனத்தா-
ரை உம் ஜனத்திற்கு விரோதமாய் யுத்தம் புரிய
வைத்தேன், என்றான்.
16 இப்பொழுதும் லிம்கி இந்தச் சங்கதியைக் குறித்து
ஒன்றும் கேள்விப்படவில்லை; ஆதலால் அவன்:
நான் என் ஜனத்திற்குள்ளே தேடுவேன். இந்தக் கா-
ரியத்தை எவன் செய்தானோ அவன் அழிவான்.
அதினிமித்தம் தன் ஜனத்திற்குள்ளே தேடும்படிச்
செய்தான்.
17 இப்பொழுது இந்தக் காரியங்களை கிதியோன்
கேள்விப்பட்டபோது, ராஜாவினுடைய சேனாதிப-
தியாய் இருப்பதினிமித்தம் அவன் போய், ராஜாவி-
னிடத்திலே நீர் பொறுமையாயிருக்கும்படியும்,
இந்த ஜனத்தைத் தேடாமலும், அவர்களைக் குற்றம்
சாட்டாமலும் இருப்பீராக, என்று உம்மை வேண்டு-
கிறேன்.

And it came to pass that the people of Limhi began to drive the Lamanites before them; yet they were not half so numerous as the Lamanites. But they fought for their lives, and for their wives, and for their children; therefore they exerted themselves and like dragons did they fight.

And it came to pass that they found the king of the Lamanites among the number of their dead; yet he was not dead, having been wounded and left upon the ground, so speedy was the flight of his people.

And they took him and bound up his wounds, and brought him before Limhi, and said: Behold, here is the king of the Lamanites; he having received a wound has fallen among their dead, and they have left him; and behold, we have brought him before you; and now let us slay him.

But Limhi said unto them: Ye shall not slay him, but bring him hither that I may see him. And they brought him. And Limhi said unto him: What cause have ye to come up to war against my people? Behold, my people have not broken the oath that I made unto you; therefore, why should ye break the oath which ye made unto my people?

And now the king said: I have broken the oath because thy people did carry away the daughters of my people; therefore, in my anger I did cause my people to come up to war against thy people.

And now Limhi had heard nothing concerning this matter; therefore he said: I will search among my people and whosoever has done this thing shall perish. Therefore he caused a search to be made among his people.

Now when Gideon had heard these things, he being the king's captain, he went forth and said unto the king: I pray thee forbear, and do not search this people, and lay not this thing to their charge.

18 ஏனெனில் இந்த ஜனம் அதம் பண்ண வகை தே-
டின, உமது தகப்பனுடைய ஆசாரியர்களை நீர் நி-
னைவுகூரவில்லையா? அவர்கள் வனாந்தரத்தில்
இல்லையா? லாமானியர்களின் குமாரத்திகளை தி-
ருடிச் சென்றவர்கள் அவர்களல்லவா?

For do ye not remember the priests of thy father, whom this people sought to destroy? And are they not in the wilderness? And are not they the ones who have stolen the daughters of the Lamanites?

19 இப்பொழுதும் இதோ, இந்தக் காரியங்களை ராஜா-
வினிடத்திலே சொல்வீர்களானால் அவன் தன்
ஜனத்திற்கு அவைகளைச் சொல்லி அவர்கள் நம்-
முடனே சமாதானமாவார்கள். இதோ அவர்கள்
நமக்கு விரோதமாய் எழும்ப ஆயத்தமாயிருக்கி-
றார்கள்; இதோ, நம்மிடத்திலே கொஞ்சம்பேர் மாத்-
திரமே இருக்கிறார்கள்.

And now, behold, and tell the king of these things, that he may tell his people that they may be pacified towards us; for behold they are already preparing to come against us; and behold also there are but few of us.

20 இதோ அவர்கள் திரளான சேனைகளோடு வருகி-
றார்கள்; அவர்களை ராஜா சமாதானம் பண்ண-
வில்லையெனில் நாம் சங்கரிக்கப்படுவோம்.

And behold, they come with their numerous hosts; and except the king doth pacify them towards us we must perish.

21 ஏனெனில் நமக்கு எதிராக தீர்க்கதரினமுரைத்த
அபிநாதியின் வார்த்தைகள் இவ்விதமாய் நிறை-
வேறவில்லையா. கர்த்தருடைய வார்த்தைகளுக்கு
செவிகொடாமலும், நம்முடைய அக்கிரமங்களிலி-
ருந்து மனந்திரும்பாமலும் இருந்ததினிமித்தமே,
இவைகளனைத்தும் சம்பவித்தன.

For are not the words of Abinadi fulfilled, which he prophesied against us—and all this because we would not hearken unto the words of the Lord, and turn from our iniquities?

22 இப்பொழுது ராஜாவை நாம் சமாதானப்படுத்தி
அவனிடத்திலே நாம் செய்த ஆணையை நிறை-
வேற்றுவோம்; நம்முடைய ஜீவனை விடுவதைக்
காட்டிலும், அடிமைத்தனத்திலே இருப்பதே நலம்;
ஆதலால் அதிகமாய் இரத்தம் சிந்தாமல் தடுப்போம்,
என்றான்.

And now let us pacify the king, and we fulfil the oath which we have made unto him; for it is better that we should be in bondage than that we should lose our lives; therefore, let us put a stop to the shedding of so much blood.

23 இப்பொழுதும் லிம்கி தன் தகப்பனைக் குறித்தும்,
வனாந்தரத்தினுள் ஓடிப்போன ஆசாரியர்களைக்
குறித்தும், சகலகாரியங்களையும் ராஜாவினிடத்தி-
லே கூறி, அவர்களின் குமாரத்திகள் தூக்கிச் செல்-
லப்பட்டதை அவர்கள் மீது சாட்டினான்.

And now Limhi told the king all the things concerning his father, and the priests that had fled into the wilderness, and attributed the carrying away of their daughters to them.

24 அந்தப்படியே, அவனுடைய ஜனத்தாரோடு ராஜா
சமாதானமானான். அவன் அவர்களை நோக்கி:
ஆயுதந்தரிக்காமல் என்னுடைய ஜனத்தை சந்திக்-
கப்போவோம், வாருங்கள். என் ஜனம், உம்முடைய
ஜனத்தை வெட்டிப்போடமாட்டார்களென்று, ஒரு
ஆணையோடு கூடிய சத்தியத்தைச் செய்கிறேன்,
என்றான்.

And it came to pass that the king was pacified towards his people; and he said unto them: Let us go forth to meet my people, without arms; and I swear unto you with an oath that my people shall not slay thy people.

25 அந்தப்படியே, அவர்கள் ராஜாவைப் பின்தொ-
டர்ந்து, ஆயுதமில்லாமல் லாமானியர்களைச் சந்-
திக்கப் புறப்பட்டார்கள். அந்தப்படியே, அவர்கள்
லாமானியர்களைச் சந்தித்தார்கள். லாமானியர்க-
ளுடைய ராஜா அவர்களின் முன்பாக வணங்கி,
லிம்கியினுடைய ஜனத்தாருக்காக அவர்களிடத்தி-
லே மன்றாடினான்.

And it came to pass that they followed the king, and went forth without arms to meet the Lamanites. And it came to pass that they did meet the Lamanites; and the king of the Lamanites did bow himself down before them, and did plead in behalf of the people of Limhi.

26 லாமானியர்கள் ஆயுதமில்லாத லிம்கியினுடைய ஜனத்தைக் கண்டபோது, அவர்கள்மீது இரக்கம்கொண்டு, அவர்களோடு சமாதானமடைந்தார்கள். தங்களுடைய ராஜாவோடு கூட சேர்ந்து, சமாதானத்துடன் தங்களின் சொந்த தேசத்திற்குத் திரும்பினார்கள்.

And when the Lamanites saw the people of Limhi, that they were without arms, they had compassion on them and were pacified towards them, and returned with their king in peace to their own land.

## மோசியா 21

1 அந்தப்படியே, லிம்கியும் அவனுடைய ஜனமும், நேபியின் பட்டணத்திற்குத் திரும்பிப் போய், தேசத்திலே திரும்பவும் சமாதானமாய் வாசம்பண்ணத் தொடங்கினார்கள்.

2 அந்தப்படியே, அநேக நாட்களுக்குப் பின்னர் லாமானியர்கள் திரும்பவும், நேபியர்களுக்கு விரோதமாய் கோபத்திலே தூண்டப்பட்டு, அவர்கள் சுற்றியுள்ள தேசத்தின் எல்லைகளுக்குள்ளே வரத்தொடங்கினார்கள்.

3 இப்பொழுது லிம்கியினிடத்தில், அவர்களின் ராஜா செய்த ஆணையினிமித்தம் அவர்களைக் கொலை செய்யத் துணியாமல், அவர்களின் கன்னத்திலே அடித்து அவர்களின் மீது அதிகாரத்தைச் செலுத்தினார்கள். அவர்களுடைய முதுகுகளிலே பாரமான சுமைகளை ஏற்றி செவிட்டு கழுதையைத் துரத்துவதுபோல் அவர்களைத் துரத்தத் தொடங்கினார்கள்.

4 ஆம், கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும் பொருட்டு இவையெல்லாம் சம்பவித்தன.

5 இப்பொழுதும் நேபியர்கள் படும் உபத்திரவம் அதிகமாயிருந்தது. லாமானியர்கள் அவர்களை சகல பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டதினாலே, அவர்களுடைய கைகளிலிருந்து தங்களைத் தப்புவித்துக்கொள்ள, ஒரு வழியுமில்லாதிருந்தது.

6 அந்தப்படியே, அவர்களின் உபத்திரவங்களினிமித்தம் ராஜாவினிடத்திலே ஜனங்கள் முணுமுணுக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்குச் செல்ல விருப்பம் கொள்ளத் துவங்கினார்கள். அவர்கள் தங்களின் முறையீடுகளாலே ராஜாவை மிகவும் உபத்திரவப்படுத்தினார்கள்; ஆதலால் அவர்களுடைய விருப்பங்களுக்கேற்ப செய்யும்படி அவர்களுக்கு அனுமதியளித்தான்.

7 அவர்கள் மறுபடியும் ஏகமாய்க்கூடி தங்கள் கவசங்களை தரித்து, லாமானியர்களை தங்கள் தேசத்திலிருந்து துரத்த அவர்களுக்கு விரோதமாய்ப் போனார்கள்.

8 அந்தப்படியே, லாமானியர்கள் அவர்களை அடித்து, அவர்களைத் துரத்தி, அவர்களில் அநேகரைக் கொன்றுபோட்டார்கள்.

9 இப்பொழுதும் லிம்கி ஜனத்தாரிடையே மகா துக்கமும், புலம்பலும் இருந்தது, விதவை தன் புருஷனுக்காகவும், குமாரனும் குமாரத்தியும் தங்கள் தகப்பனுக்காகவும், சகோதரர்கள் தங்களின் சகோதரர்களுக்காகவும், துக்கித்தார்கள்.

10 இப்பொழுதும் தேசத்திலே, அநேக விதவைகள் இருந்தார்கள். லாமானியர்களைப்பற்றிய திகில், அவர்களை ஆட்கொண்டதினிமித்தம், நாள்தோறும் அவர்கள் மிகவும் கூக்குரலிட்டார்கள்.

## Mosiah 21

And it came to pass that Limhi and his people returned to the city of Nephi, and began to dwell in the land again in peace.

And it came to pass that after many days the Lamanites began again to be stirred up in anger against the Nephites, and they began to come into the borders of the land round about.

Now they durst not slay them, because of the oath which their king had made unto Limhi; but they would smite them on their cheeks, and exercise authority over them; and began to put heavy burdens upon their backs, and drive them as they would a dumb ass—

Yea, all this was done that the word of the Lord might be fulfilled.

And now the afflictions of the Nephites were great, and there was no way that they could deliver themselves out of their hands, for the Lamanites had surrounded them on every side.

And it came to pass that the people began to murmur with the king because of their afflictions; and they began to be desirous to go against them to battle. And they did afflict the king sorely with their complaints; therefore he granted unto them that they should do according to their desires.

And they gathered themselves together again, and put on their armor, and went forth against the Lamanites to drive them out of their land.

And it came to pass that the Lamanites did beat them, and drove them back, and slew many of them.

And now there was a great mourning and lamentation among the people of Limhi, the widow mourning for her husband, the son and the daughter mourning for their father, and the brothers for their brethren.

Now there were a great many widows in the land, and they did cry mightily from day to day, for a great fear of the Lamanites had come upon them.

11 அந்தப்படியே, அவர்கள் தொடர்ந்து கூக்குரலிட்-
டது, லிம்கியினுடைய ஜனத்தின் மீதியானோரை-
யும் லாமானியர்களுக்கு விரோதமாய் கோபமடை-
யத் தூண்டியது, அவர்கள் மறுபடியும் யுத்தத்திற்-
குச் சென்றார்கள். ஆனால் பேரிழப்புடன் திரும்ப-
வும் துரத்தியடிக்கப்பட்டார்கள்.

And it came to pass that their continual cries did stir up the remainder of the people of Limhi to anger against the Lamanites; and they went again to battle, but they were driven back again, suffering much loss.

12 ஆம், மூன்றாம் தடவையும் சென்று அவ்வண்ண-
மே பாடுபட்டார்கள். கொல்லப்படாதவர்கள் நேபி-
யினுடைய பட்டணத்திற்கு மறுபடியும் திரும்பி-
னார்கள்.

Yea, they went again even the third time, and suffered in the like manner; and those that were not slain returned again to the city of Nephi.

13 அவர்கள் அடிமைத்தனத்தின் நுகத்தடிக்கு தங்க-
ளை ஒப்புவித்து, அடிக்கப்படுவதற்கும், அங்கேயும்
இங்கேயும் அலைக்கழிக்கப்படுவதற்கும், தங்க-
ளின் சத்துருக்களின் விருப்பத்தின்படி சுமை சு-
மத்தப்படுவதற்கும், தங்களை தூசுக்கு சமானமாய்
தாழ்த்தினார்கள்.

And they did humble themselves even to the dust, subjecting themselves to the yoke of bondage, submitting themselves to be smitten, and to be driven to and fro, and burdened, according to the desires of their enemies.

14 தாழ்மையின் ஆழங்களிலே தங்களைத் தாழ்த்தி
தேவனிடத்தில் ஊக்கமாய் கூக்குரலிட்டார்கள்;
ஆம், தங்களுடைய தேவன், தங்கள் உபத்திரவங்க-
ளிலிருந்து தங்களை விடுவிக்கும்படி, அவரிடத்தி-
லே நாள் முழுவதும் கூக்குரலிட்டார்கள்.

And they did humble themselves even in the depths of humility; and they did cry mightily to God; yea, even all the day long did they cry unto their God that he would deliver them out of their afflictions.

15 இப்பொழுதும் கர்த்தர் அவர்களின் அக்கிரமங்க-
ளினிமித்தம் அவர்களுடைய கூக்குரலைக் கேட்க
தாமதித்தார்; இருப்பினும் கர்த்தர் அவர்களுடைய
கூக்குரலைக் கேட்டு, அவர்களின் பாரங்களை
லகுவாக்கும்படி லாமானியர்களுடைய இருதயங்க-
ளை மென்மையாக்கத் தொடங்கினார். ஆயினும்
தேவன் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து வி-
டுவிப்பது ஏற்றதல்ல, எனக் கண்டார்.

And now the Lord was slow to hear their cry because of their iniquities; nevertheless the Lord did hear their cries, and began to soften the hearts of the Lamanites that they began to ease their burdens; yet the Lord did not see fit to deliver them out of bondage.

16 அந்தப்படியே, அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய்
தேசத்திலே விருத்தியடையத் தொடங்கினார்கள்.
அவர்கள் பட்டினியால் வாடாதபடி, தானியங்க-
ளையும், மந்தைகளையும், ஆடுகளையும் மிகவும்
அதிகமாக வளர்க்கத் தொடங்கினார்கள்.

And it came to pass that they began to prosper by degrees in the land, and began to raise grain more abundantly, and flocks, and herds, that they did not suffer with hunger.

17 இப்பொழுது புருஷரைக் காட்டிலும் ஸ்திரீகள்
எண்ணிக்கையிலே அதிகமாயிருந்ததாலே, ராஜா-
வாகிய லிம்கி, விதவைகளும், அவர்களின் பிள்-
ளைகளும், பட்டினியால் அழிந்துபோகாதபடி ஒவ்-
வொரு புருஷனும் ஆதரவு கொடுக்குமாறு கட்ட-
ளையிட்டான். அவர்களில் அதிகமானோர் கொ-
லை செய்யப்பட்டதினிமித்தம் இப்படிச் செய்தார்-
கள்.

Now there was a great number of women, more than there was of men; therefore king Limhi commanded that every man should impart to the support of the widows and their children, that they might not perish with hunger; and this they did because of the greatness of their number that had been slain.

18 இப்பொழுது லிம்கியினுடைய ஜனம் கூடிய அள-
விற்கு ஒன்றாக இருந்துகொண்டு, தங்களின் தானி-
யங்களையும், மந்தைகளையும் காத்தார்கள்.

Now the people of Limhi kept together in a body as much as it was possible, and secured their grain and their flocks;

19 பட்டணத்தின் அலங்கத்துக்கு வெளியே, தன்னு-
டன் காவற்காரர்களை அழைத்துச் செல்லாமல்
போனால், லாமானியர்களின் கைகளுக்குள் எப்ப-
டியாவது விழுந்துவிடுவோமோ என்று பயந்து, ரா-
ஜா தன்னையே நம்பாமலிருந்தான்.

And the king himself did not trust his person without the walls of the city, unless he took his guards with him, fearing that he might by some means fall into the hands of the Lamanites.

20 வனாந்தரத்திற்குள் ஓடிப்போனவர்களும், லாமானியர்களின் குமாரத்திகளை அபகரித்துக்கொண்டு, மகா அழிவு தங்கள்மீது வரக்காரணமான, அந்த ஆசாரியர்களைப் பிடிக்க, தன் ஜனத்தை சுற்றும் முற்றும் கண்காணிக்கச் செய்வித்தான்.

And he caused that his people should watch the land round about, that by some means they might take those priests that fled into the wilderness, who had stolen the daughters of the Lamanites, and that had caused such a great destruction to come upon them.

21 அவர்களைப் பிடித்து தண்டிக்கும்படி இவர்களும் ஆவலாயிருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் இரவிலே நேபியின் தேசத்தினுள் புகுந்து, அவர்களுடைய தானியங்களையும், அநேக விலையுயர்ந்த பொருட்களையும் தூக்கிச் சென்றார்கள்; ஆதலால் அவர்களுக்காகப் பதுங்கிக் காத்திருந்தார்கள்.

For they were desirous to take them that they might punish them; for they had come into the land of Nephi by night, and carried off their grain and many of their precious things; therefore they laid wait for them.

22 அந்தப்படியே, அம்மோனும் அவனுடைய சகோதரர்களும் தேசத்தினுள் வரும் காலமளவும், லாமானியர்களுக்கும் லிம்கியினுடைய ஜனங்களுக்கும் இடையே எந்த ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லை.

And it came to pass that there was no more disturbance between the Lamanites and the people of Limhi, even until the time that Ammon and his brethren came into the land.

23 தன் காவற்காரரோடு ராஜா பட்டணத்தின் வாசல்களுக்கு வெளியே போனபோது, அம்மோனையும் அவனுடைய சகோதரர்களையும் கண்டு, அவர்களை நோவாவினுடைய ஆசாரியர்கள் என்று எண்ணி, அவர்களைப் பிடித்து, கட்டி, சிறையினுள் போடும்படிச் செய்வித்தான். அவர்கள் நோவாவின் ஆசாரியர்களாய் இருந்திருந்தால், அவர்களைக் கொன்று போடச் செய்திருப்பான்.

And the king having been without the gates of the city with his guard, discovered Ammon and his brethren; and supposing them to be priests of Noah therefore he caused that they should be taken, and bound, and cast into prison. And had they been the priests of Noah he would have caused that they should be put to death.

24 ஆனால் இவர்கள் அவர்களல்ல என்றும், சாரகெம்லாவிலிருந்து வந்த தன் சகோதரர்கள் என்றும் அவன் கண்டபோது, மிகுந்த சந்தோஷத்தாலே நிரப்பப்பட்டான்.

But when he found that they were not, but that they were his brethren, and had come from the land of Zarahemla, he was filled with exceedingly great joy.

25 இப்பொழுதும், லிம்கி ராஜா அம்மோன் வருகைக்கு முன்னரே சாரகெம்லா தேசத்தைத் தேடிப்போகும்படி சில மனுஷரை அனுப்பியிருந்தான். ஆனால் அதைக் கண்டுபிடிக்க இயலாமல், வனாந்தரத்திலே அவர்கள் தொலைந்து போனார்கள்.

Now king Limhi had sent, previous to the coming of Ammon, a small number of men to search for the land of Zarahemla; but they could not find it, and they were lost in the wilderness.

26 இருப்பினும் ஜனங்கள் முன்பு வாசமாயிருந்த ஒரு தேசத்தை கண்டார்கள்; அப்பூமி காய்ந்த எலும்புகளால் நிறைந்திருந்தது; ஆம், ஜனம் வாசமாயிருந்து அழிந்துபோன தேசம் அது; அவர்கள் அதை சாரகெம்லா என எண்ணி, நேபி தேசத்திற்குத் திரும்பி, அம்மோன் வருவதற்கு சில நாட்களுக்கு முன்னர்தான், அத்தேசத்தின் எல்லைகளை அடைந்திருந்தார்கள்.

Nevertheless, they did find a land which had been peopled; yea, a land which was covered with dry bones; yea, a land which had been peopled and which had been destroyed; and they, having supposed it to be the land of Zarahemla, returned to the land of Nephi, having arrived in the borders of the land not many days before the coming of Ammon.

27 அவர்கள் தங்களோடு ஒரு பதிவேட்டினைக் கொண்டு வந்தார்கள். அது அவர்கள் எலும்புகளைக் கண்டு பிடித்த, அந்த ஜனத்தினுடைய பதிவேடாயிருந்தது. அது தாதுக்களாலான தகடுகளில் பொறிக்கப்பட்டிருந்தது.

And they brought a record with them, even a record of the people whose bones they had found; and it was engraven on plates of ore.

28 இப்பொழுதும் ராஜாவாகிய மோசியா அப்படிப்-
பட்ட பொறித்தல்களை வியாக்கியானம்பண்ண
தேவனிடத்திலிருந்து வரத்தைப் பெற்றிருக்கி-
றான், என்று அம்மோன் வாயாலறிந்து லிம்கி மறு-
படியும் சந்தோஷத்தால் நிரப்பப்பட்டான்; ஆம்,
அம்மோனும் களிகூர்ந்தான்.

And now Limhi was again filled with joy on learning from the mouth of Ammon that king Mosiah had a gift from God, whereby he could interpret such engravings; yea, and Ammon also did rejoice.

29 இருப்பினும் அம்மோனும் அவனுடைய சகோத-
ரர்களும் துக்கத்தால் நிரப்பப்பட்டார்கள். ஏனெ-
னில் அவர்களுடைய சகோதரர்களில் அநேகர்
கொல்லப்பட்டிருந்தார்கள்.

Yet Ammon and his brethren were filled with sorrow because so many of their brethren had been slain;

30 நோவா ராஜாவும் அவனுடைய ஆசாரியர்களும்,
ஜனங்களை தேவனுக்கு விரோதமாய் அநேக பா-
வங்களையும் அக்கிரமங்களையும் செய்ய வைத்-
திருந்தார்கள். அபிநாதியின் மரணத்தினிமித்த-
மும், தேவனுடைய வல்லமையாலும் பெலத்தா-
லும், தேவனுடைய சபையை ஸ்தாபித்தவர்களும்,
அபிநாதி பேசிய வார்த்தைகளை விசுவாசித்தவர்-
களுமாகிய, ஆல்மாவும் அவனோடேகூட போன
ஜனமும், புறப்பட்டுச் சென்றதினிமித்தமும் அவர்-
கள் துக்கித்தார்கள்.

And also that king Noah and his priests had caused the people to commit so many sins and iniquities against God; and they also did mourn for the death of Abinadi; and also for the departure of Alma and the people that went with him, who had formed a church of God through the strength and power of God, and faith on the words which had been spoken by Abinadi.

31 ஆம், அவர்கள் எங்கே போனார்கள் என்று அறி-
யாததினிமித்தமும், அவர்கள் விட்டுச் சென்றதினி-
மித்தம் அவர்கள் துக்கித்தார்கள். தேவனைச் சே-
வித்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்-
ளுவோம் என்று, அவருடன் ஒரு உடன்படிக்கையி-
னுள் இப்பொழுது பிரவேசித்ததினிமித்தம், இவர்க-
ளும் அவர்களோடே கூட மகிழ்ச்சியாய் சேர்ந்திருப்-
பார்கள்.

Yea, they did mourn for their departure, for they knew not whither they had fled. Now they would have gladly joined with them, for they themselves had entered into a covenant with God to serve him and keep his commandments.

32 இப்பொழுதும் அம்மோனுடைய வரவிற்குப் பின்-
பு, லிம்கி ராஜாவும், அவன் ஜனத்தாரில் அநேகரும்
தேவனைச் சேவித்து, அவருடைய கட்டளைக-
ளைக் கைக்கொள்ளுவோம் என்று, அவருடனே
ஒரு உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

And now since the coming of Ammon, king Limhi had also entered into a covenant with God, and also many of his people, to serve him and keep his commandments.

33 அந்தப்படியே, லிம்கி ராஜாவும், அவனுடைய
ஜனத்தாரிலே அநேகரும் ஞானஸ்நானம் பெற்றுக்-
கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள்;
ஆனால் அத்தேசத்திலே தேவனிடத்திலிருந்து அதி-
காரம் பெற்றவர்கள் எவருமில்லை. அம்மோன்
தன்னை தகுதியற்ற ஊழியக்காரன் என்று கருதி
இந்தக் காரியத்தைச் செய்ய மறுத்தான்.

And it came to pass that king Limhi and many of his people were desirous to be baptized; but there was none in the land that had authority from God. And Ammon declined doing this thing, considering himself an unworthy servant.

34 ஆதலால் அச்சமயத்திலே அவர்கள் தாங்களே
ஒரு சபையை அமைக்காமல், கர்த்தருடைய ஆவி-
யானவருக்காக காத்திருந்தார்கள். இப்பொழுதும்
வனாந்தரத்தினுள் ஓடிப்போன ஆல்மாவையும்
அவனுடைய சகோதரர்களையும் போலவே இவர்க-
ளும் ஆகும்படி விரும்பினார்கள்.

Therefore they did not at that time form themselves into a church, waiting upon the Spirit of the Lord. Now they were desirous to become even as Alma and his brethren, who had fled into the wilderness.

35 அவர்கள் தேவனை தங்களுடைய முழு உள்ளத்-
தோடும் சேவிக்க மனமுள்ளவர்களாயிருக்கிறோம்
என்று, சாட்சியாயும் சாட்சியமாயும் இருக்கும்பொ-
ருட்டு, ஞானஸ்நானம் பெற விரும்பினார்கள்.
ஆயினும் அவர்கள் காலதாமதம் செய்தார்கள்.
அவர்களுடைய ஞானஸ்நானத்தின் விவரம் இதற்-
குப் பின்பு கொடுக்கப்படும்.
36 இப்பொழுதும் லாமானியர்களின் கைகளிலிருந்-
தும் அடிமைத்தனத்திலிருந்தும் நீங்கி, தங்களை-
யே தப்புவித்துக்கொள்வதுபற்றியே அம்மோனும்,
அவனுடைய ஜனமும், லிம்கி ராஜாவும் அவனு-
டைய ஜனமும், ஆழ்ந்து சிந்தித்தார்கள்.

They were desirous to be baptized as a witness and a testimony that they were willing to serve God with all their hearts; nevertheless they did prolong the time; and an account of their baptism shall be given hereafter.

And now all the study of Ammon and his people, and king Limhi and his people, was to deliver themselves out of the hands of the Lamanites and from bondage.

# மோசியா 22

1 இப்பொழுதும், அந்தப்படியே, அம்மோனும், லிம்கி
ராஜாவும் அடிமைத்தனத்திலிருந்து, தங்களை வி-
டுவிப்பதெப்படி என்று ஜனங்களோடே ஆலோசிக்-
கலானார்கள்; எல்லா ஜனமும் ஏகமாய்க்கூடும்படி-
யும் செய்தார்கள்; இந்தக் காரியத்தைக் குறித்து
ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அறிந்து-
கொள்ளவே இப்படிச் செய்தார்கள்.

2 அந்தப்படியே, தங்களின் ஸ்திரீகளையும், பிள்-
ளைகளையும், தங்களின் மந்தைகளையும், தங்க-
ளின் ஆடுகளையும், தங்களின் கூடாரங்களையும்
எடுத்துக்கொண்டு வனாந்தரத்திற்குள் தப்பியோ-
டுவதைத் தவிர அடிமைத்தனத்திலிருந்து தங்க-
ளை விடுவித்துக்கொள்ள ஒரு வழியையும் அறி-
யாமலிருந்தார்கள்; லாமானியர்கள் அதிகமாய்
இருந்தபடியாலே, லிம்கியினுடைய ஜனங்கள், தங்-
களை அடிமைத்தனத்திலிருந்து பட்டயத்தினால்
மீட்டுக்கொள்ளும் பொருட்டு, அவர்களுக்கு விரோ-
தமாய் சண்டையிடுவது கூடாத காரியமாயிருந்த-
து.

3 இப்பொழுது, அந்தப்படியே, கிதியோன் போய், ரா-
ஜாவின் முன்னின்று, இப்பொழுதும் ராஜாவே, நம்-
முடைய சகோதரர்களாகிய லாமானியர்களிடம்
நாம் சண்டையிட்ட போதெல்லாம், இம்மட்டுமாய்
அநேகந்தரம் என்னுடைய வார்த்தைகளுக்குச் செ-
விகொடுத்திருக்கிறீர்.

4 இப்பொழுதும் ராஜாவே, நான் தகுதியற்ற ஊழி-
யனாக நீர் காணாவிட்டால், அல்லது என் வார்த்-
தைகளை சிறிதளவாகிலும் கேட்டிருந்தால், அது
உமக்கு சேவை செய்யத்தான். அவ்வாறே இச்சமயத்-
திலும் என் வார்த்தைகளை நீர் கேட்கும்படி விரும்-
புகிறேன். நான் உம்முடைய ஊழியனாயிருந்து,
இந்த ஜனத்தை அடிமைத்தனத்திலிருந்து விடு-
விப்பேன், என்றான்.

5 அவன் பேசும்படிக்கு ராஜா அனுமதி வழங்கி-
னான். கிதியோன் அவனை நோக்கி:

6 இதோ பட்டணத்தின் பின்புறத்திலேயுள்ள பின்
அலங்கித்தினூடே வழியிருக்கிறது. லாமானியர்-
கள் அல்லது லாமானியர்களின் காவற்காரர்கள்
இரவிலே குடித்து வெறித்திருப்பார்கள்; ஆதலால்
நம் ஜனமெல்லாரும் தங்களின் மந்தைகளையும்,
ஆடுகளையும் ஏகமாய்ச் சேர்த்து, அவைகளை
அவர்கள் இரவிலே வனாந்தரத்திற்குள்ளே நடத்-
திப்போகும்படி, இந்த ஜனமெல்லாருக்குள்ளும்
ஒரு அறிக்கையை அனுப்புவோம்.

# Mosiah 22

And now it came to pass that Ammon and king Limhi began to consult with the people how they should deliver themselves out of bondage; and even they did cause that all the people should gather themselves together; and this they did that they might have the voice of the people concerning the matter.

And it came to pass that they could find no way to deliver themselves out of bondage, except it were to take their women and children, and their flocks, and their herds, and their tents, and depart into the wilderness; for the Lamanites being so numerous, it was impossible for the people of Limhi to contend with them, thinking to deliver themselves out of bondage by the sword.

Now it came to pass that Gideon went forth and stood before the king, and said unto him: Now O king, thou hast hitherto hearkened unto my words many times when we have been contending with our brethren, the Lamanites.

And now O king, if thou hast not found me to be an unprofitable servant, or if thou hast hitherto listened to my words in any degree, and they have been of service to thee, even so I desire that thou wouldst listen to my words at this time, and I will be thy servant and deliver this people out of bondage.

And the king granted unto him that he might speak. And Gideon said unto him:

Behold the back pass, through the back wall, on the back side of the city. The Lamanites, or the guards of the Lamanites, by night are drunken; therefore let us send a proclamation among all this people that they gather together their flocks and herds, that they may drive them into the wilderness by night.

7 உம்முடைய கட்டளையின்படி நான் சென்று லா-
மானியர்களுக்கு இறுதி மதுவரியைச் செலுத்து-
வேன், அவர்கள் குடித்து வெறித்திருப்பார்கள்;
அவர்கள் குடித்து வெறித்து நித்திரையிலிருக்கும்-
போது நாம் அவர்களுடைய முகாமிற்கு இடது புறத்-
திலே இருக்கிற இரகசிய வழியாய் கடந்துபோ-
வோம்.

And I will go according to thy command and pay the last tribute of wine to the Lamanites, and they will be drunken; and we will pass through the secret pass on the left of their camp when they are drunken and asleep.

8 இவ்விதமாய் நம்முடைய ஸ்திரீகளோடும், நம்மு-
டைய பிள்ளைகளோடும், நம்முடைய மந்தைக-
ளோடும், நம்முடைய ஆடுகளோடும், வனாந்தரத்தி-
னுள் புறப்பட்டுப்போவோம். நாம் சீலோம் தேசத்-
தைச் சுற்றி பிரயாணம் பண்ணுவோம் என்றான்.

Thus we will depart with our women and our children, our flocks, and our herds into the wilderness; and we will travel around the land of Shilom.

9 அந்தப்படியே, ராஜா கிதியோனுடைய வார்த்தை-
களுக்குச் செவிகொடுத்தான்.

And it came to pass that the king hearkened unto the words of Gideon.

10 லிம்கி ராஜா தன்னுடைய ஜனத்தார் தங்களு-
டைய மந்தைகளை ஏகமாய்க் கூட்டும்படிச் செய்-
தான்; அவன் லாமானியர்களுக்கு வரியாய் மது-
வை அனுப்பினான். அதிக மதுவை அவர்களுக்கு
வெகுமானமாக அனுப்பி வைத்தான்; அவர்கள்
லிம்கி ராஜா தங்களுக்கு அனுப்பிய மதுவை மிகு-
தியாய் பானம்பண்ணினார்கள்.

And king Limhi caused that his people should gather their flocks together; and he sent the tribute of wine to the Lamanites; and he also sent more wine, as a present unto them; and they did drink freely of the wine which king Limhi did send unto them.

11 அந்தப்படியே, லிம்கி ராஜாவினுடைய ஜனங்கள்
தங்கள் மந்தைகளோடும், தங்களின் ஆடுகளோ-
டும், இரவிலே வனாந்தரத்திற்குள்ளே புறப்பட்டுப்-
போய், அம்மோனாலும் அவனுடைய சகோதரர்க-
ளாலும் நடத்தப்பட்டு, வனாந்தரத்திலே சீலோம் தே-
சத்தைச் சுற்றிச் சென்று, சாரகெம்லா தேசத்திற்கு
நேராக தங்களின் மார்க்கத்தைத் திருப்பினார்கள்.

And it came to pass that the people of king Limhi did depart by night into the wilderness with their flocks and their herds, and they went round about the land of Shilom in the wilderness, and bent their course towards the land of Zarahemla, being led by Ammon and his brethren.

12 அவர்கள் தங்களால் தூக்கமுடிந்த தங்களுடைய
எல்லா பொன்னையும் வெள்ளியையும், தங்களு-
டைய விலையுயர்ந்த பொருட்களையும், தங்களு-
டைய ஆகாரங்களையும் அவர்களுடன் வனாந்த-
ரத்தினுள் எடுத்துச்சென்று, தங்கள் பிரயாணத்-
தைத் தொடர்ந்தார்கள்.

And they had taken all their gold, and silver, and their precious things, which they could carry, and also their provisions with them, into the wilderness; and they pursued their journey.

13 அவர்கள் வனாந்தரத்திலே அநேக நாட்கள்
இருந்த பின்னர் சாரகெம்லாவின் தேசத்தைய-
டைந்து, மோசியாவின் ஜனங்களுடன் சேர்ந்து,
அவனுடைய குடிகளானார்கள்.

And after being many days in the wilderness they arrived in the land of Zarahemla, and joined Mosiah's people, and became his subjects.

14 அந்தப்படியே, மோசியா அவர்களை மகிழ்ச்சியு-
டனே ஏற்றுக்கொண்டான்; அவன் அவர்களின்
பதிவேடுகளையும், லிம்கி ஜனத்தால் கண்டெடுக்-
கப்பட்ட பதிவேடுகளையும், பெற்றுக்கொண்டான்.

And it came to pass that Mosiah received them with joy; and he also received their records, and also the records which had been found by the people of Limhi.

15 இப்பொழுதும், அந்தப்படியே, இரவிலே லிம்கியி-
னுடைய ஜனத்தார் தேசத்தை விட்டோடியதை லா-
மானியர்கள் கண்டபோது, அவர்களை பின்தொட-
ரும்படி, வனாந்தரத்தினுள் ஒரு சேனையை
அனுப்பினார்கள்.

And now it came to pass when the Lamanites had found that the people of Limhi had departed out of the land by night, that they sent an army into the wilderness to pursue them;

16 இரண்டு நாட்கள் அவர்களைப் பின்தொடர்ந்துபோன பின்பு, அவர்களால் அவர்களுடைய வழித்தடங்களை காணமுடியாமற்போனது. ஆதலால் அவர்கள் வனாந்தரத்திலே தொலைந்துபோனார்கள்.

And after they had pursued them two days, they could no longer follow their tracks; therefore they were lost in the wilderness.

*நோவா ராஜாவின் ஜனத்தாரால் வனாந்தரத்தினுள் துரத்தப்பட்ட ஆல்மா மற்றும் கர்த்தருடைய ஜனத்தாரின் ஒரு விவரம்.*

## மோசியா 23

1 இப்பொழுதும் ஆல்மா, ராஜாவாகிய நோவாவினு-
டைய சேனைகள் அவர்கள் மீது வருவார்களென்-
று கர்த்தரால் எச்சரிக்கப்பட்டு, இதைத் தன் ஜனங்க-
ளுக்கு தெரிவிக்கச் செய்து, அவர்கள் ஏகமாய் தங்-
கள் மந்தைகளைக் கூட்டி, தங்களின் தானியங்க-
ளை எடுத்துக்கொண்டு, ராஜாவாகிய நோவாவின்
சேனைகளுக்கு முன்பாக வனாந்தரத்தினுள் புறப்-
பட்டுப்போனார்கள்.
2 நோவா ராஜாவினுடைய ஜனங்கள் அவர்களை
மேற்கொண்டு அவர்களை அழிக்காதபடி கர்த்தர்
அவர்களைப் பெலப்படுத்தினார்.
3 வனாந்தரத்தினுள் எட்டு நாட்கள் பிரயாண-
மாய்ப் போனார்கள்.
4 மிகவும் அழகானதும், இன்பமானதும், சுத்தமான
நீரைக்கொண்டதுமான ஒரு தேசத்துக்கு அவர்கள்
வந்தார்கள்.
5 அவர்கள் கூடாரங்களைப்போட்டு, நிலத்தைப்
பண்படுத்தி கட்டிடங்களைக் கட்டத்துவங்கினார்-
கள்; ஆம், அவர்கள் உழைப்பாளிகளாயிருந்து,
அதிகமாய்ப் பிரயாசப்பட்டார்கள்.
6 தம் ஜனத்தால் மிகவும் நேசிக்கப்பட்டவனாய்
ஆல்மா இருந்ததாலே, அவனே தங்களின் ராஜாவா-
யிருக்க வேண்டுமென ஜனங்கள் விரும்பினார்-
கள்.
7 ஆனால் அவன் அவர்களை நோக்கி: இதோ நமக்-
கு ஒரு ராஜா இருக்கவேண்டுமென்பது அவசியமற்-
றதாயிருக்கிறது. ஏனெனில் கர்த்தர் சொல்லுவதா-
வது, ஒரு மாம்சத்துக்குக்கு மேலாக மற்றொன்றை
எண்ணாதே என்றும், ஒருவன் தன்னை மற்றொரு-
வனைக்காட்டிலும் மேலானவனாகவும் எண்ணக்-
கூடாது, என்றான். ஆதலால் நீங்கள் ஒரு ராஜாவை
பெற்றிருப்பது, அவசியமற்றதாயிருக்கிறது என்று
நான் சொல்கிறேன்.
8 ஆயினும், நியாயமானவர்கள் உங்களின் ராஜாக்-
களாக இருக்கக் கூடுமானால், ஒரு ராஜா உங்களுக்-
கிருப்பது நலமாயிருக்கும்.
9 ஆனால் ராஜாவாகிய நோவா மற்றும் அவனு-
டைய ஆசாரியர்களின் அக்கிரமத்தை நினைத்-
துப்பாருங்கள்; நானும் கண்ணியிலே அகப்பட்டு,
கர்த்தருடைய பார்வைக்கு அருவருப்பான அநே-
கக் காரியங்களைச் செய்ததினிமித்தம், கடினமாய்
மனந்திரும்பும்படியாயிற்று.

*An account of Alma and the people of the Lord, who were driven into the wilderness by the people of King Noah.*

## Mosiah 23

Now Alma, having been warned of the Lord that the armies of king Noah would come upon them, and having made it known to his people, therefore they gathered together their flocks, and took of their grain, and departed into the wilderness before the armies of king Noah.

And the Lord did strengthen them, that the people of king Noah could not overtake them to destroy them.

And they fled eight days' journey into the wilderness.

And they came to a land, yea, even a very beautiful and pleasant land, a land of pure water.

And they pitched their tents, and began to till the ground, and began to build buildings; yea, they were industrious, and did labor exceedingly.

And the people were desirous that Alma should be their king, for he was beloved by his people.

But he said unto them: Behold, it is not expedient that we should have a king; for thus saith the Lord: Ye shall not esteem one flesh above another, or one man shall not think himself above another; therefore I say unto you it is not expedient that ye should have a king.

Nevertheless, if it were possible that ye could always have just men to be your kings it would be well for you to have a king.

But remember the iniquity of king Noah and his priests; and I myself was caught in a snare, and did many things which were abominable in the sight of the Lord, which caused me sore repentance;

10 இருப்பினும் அதிக பாடுகளுக்குப் பின்னர், கர்த்தர் என் கூக்குரலுக்குச் செவிகொடுத்து, என்னுடைய விண்ணப்பங்களுக்குப் பதிலளித்து, உங்களில் அநேகரை அவருடைய சத்தியத்தின் அறிவிற்குக்கொண்டு வருவதில், என்னை தம் கரங்களிலே ஒரு கருவியாய் ஆக்கினார்.

Nevertheless, after much tribulation, the Lord did hear my cries, and did answer my prayers, and has made me an instrument in his hands in bringing so many of you to a knowledge of his truth.

11 ஆயினும், நான் என்னைக்குறித்து மேன்மை பாராட்ட தகுதியற்றவனாயிருப்பதால், இதில் நான் மகிமை கொள்வதில்லை.

Nevertheless, in this I do not glory, for I am unworthy to glory of myself.

12 இப்பொழுதும் நீங்கள் நோவா ராஜாவினால் ஒடுக்கப்பட்டு, அவனுக்கும் அவனுடைய ஆசாரியர்களுக்கும் அடிமைகளாகவிருந்து, அவர்களினாலே துன்மார்க்கத்திற்குள் கொண்டுவரப்பட்டுள்ளீர்கள்; ஆதலால் நீங்கள் அக்கிரமத்தின் கட்டுக்களினாலே கட்டப்பட்டிருந்தீர்கள், என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And now I say unto you, ye have been oppressed by king Noah, and have been in bondage to him and his priests, and have been brought into iniquity by them; therefore ye were bound with the bands of iniquity.

13 இப்பொழுதும் இந்தக் கட்டுக்களிலிருந்தும், ஆம், நோவா ராஜா மற்றும் அவனுடைய ஜனங்களின் கைகளிலிருந்தும், அக்கிரமத்தின் கட்டுக்களிலிருந்தும் தேவனுடைய வல்லமையால் தப்புவிக்கப்பட்டமையால், நீங்கள் சுதந்தரமாக்கப்பட்ட இந்த சுதந்திரத்திலே நிலைத்திருந்து, ஒருவனையும் உங்களுக்கு ராஜாவாயிருக்க நம்பிக்கை வைக்காமலிருக்க வேண்டுமென விரும்புகிறேன்.

And now as ye have been delivered by the power of God out of these bonds; yea, even out of the hands of king Noah and his people, and also from the bonds of iniquity, even so I desire that ye should stand fast in this liberty wherewith ye have been made free, and that ye trust no man to be a king over you.

14 தேவனுடைய வழிகளிலே நடந்து, அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற தேவனுடைய மனுஷனைத் தவிர, வேறொருவனையும் உங்களின் ஆசிரியராகவும், ஊழியக்காரராகவும் இருக்க நம்பாதிருங்கள்.

And also trust no one to be your teacher nor your minister, except he be a man of God, walking in his ways and keeping his commandments.

15 இவ்விதமாய் ஜனங்களுக்குள்ளே பிணக்குகள் இல்லாமலிருக்க ஒவ்வொருவனும் தன்னைப்போல, தன் அயலானை நேசிக்கவேண்டுமென்று, ஆல்மா அவர்களுக்குக் கற்பித்தான்.

Thus did Alma teach his people, that every man should love his neighbor as himself, that there should be no contention among them.

16 இப்பொழுதும், அவர்களுடைய சபையைத் தோற்றுவித்தவனாய் இருந்தபடியால், ஆல்மா அவர்களின் பிரதான ஆசாரியனாயிருந்தான்.

And now, Alma was their high priest, he being the founder of their church.

17 அந்தப்படியே, தேவனிடத்திலிருந்து அதிகாரம் பெற்றவன் மூலமாக அல்லாமல் ஒருவனும் போதிப்பதற்கோ, பிரசங்கிப்பதற்கோ அதிகாரத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆதலால் அவன் அவர்களுடைய சகல ஆசாரியர்களையும், சகல ஆசிரியர்களையும் நியமித்தான். நியாயவான்களைத் தவிர வேறொருவரும் நியமிக்கப்படவில்லை.

And it came to pass that none received authority to preach or to teach except it were by him from God. Therefore he consecrated all their priests and all their teachers; and none were consecrated except they were just men.

18 ஆதலால் அவர்கள் தங்கள் ஜனத்தைக் கண்காணித்து, நீதிக்குரிய காரியங்களால் அவர்களைப் போஷித்தார்கள்.

Therefore they did watch over their people, and did nourish them with things pertaining to righteousness.

19 அந்தப்படியே, அவர்கள் தேசத்திலே மிகவும் விருத்தியடையத் தொடங்கினார்கள்; அவர்கள் அத்தேசத்தை ஏலாம் என்றழைத்தார்கள்.

And it came to pass that they began to prosper exceedingly in the land; and they called the land Helam.

20 அந்தப்படியே, அவர்கள் ஏலாம் தேசத்திலே பலு-
கிப்பெருகி, மிகவும் விருத்தியடைந்தார்கள்; அவர்-
கள் ஒரு பட்டணத்தைக் கட்டி, அதை ஏலாம் பட்ட-
ணம் என்றழைத்தார்கள்.

And it came to pass that they did multiply and prosper exceedingly in the land of Helam; and they built a city, which they called the city of Helam.

21 இருப்பினும் தம்முடைய ஜனத்தைக் கடிந்து
கொள்வது ஏற்றதெனக் கர்த்தர் காண்கிறார்; ஆம்,
அவர்களுடைய பொறுமையையும் விசுவாசத்தை-
யும் அவர் சோதிக்கிறார்.

Nevertheless the Lord seeth fit to chasten his people; yea, he trieth their patience and their faith.

22 ஆயினும், எவன் அவர் மீது தன் நம்பிக்கையை
வைக்கிறானோ, அவனே கடைசி நாளிலே உயர்த்-
தப்படுவான். ஆம், இந்த ஜனத்திற்கும் அது அவ்-
வாறே இருந்தது.

Nevertheless—whosoever putteth his trust in him the same shall be lifted up at the last day. Yea, and thus it was with this people.

23 ஏனெனில் இதோ, அவர்கள் அடிமைத்தனத்திற்-
குள்ளே கொண்டுபோகப்பட்டு, ஆபிரகாம், ஈசாக்கு,
மற்றும் யாக்கோபின் தேவனானவரும், கர்த்தரா-
கிய அவர்களுடைய தேவனேயல்லாமல் வேறொ-
ருவரும் அவர்களைத் தப்புவிக்க முடியவில்லை,
என்பதை உங்களுக்குக் காண்பிப்பேன்.

For behold, I will show unto you that they were brought into bondage, and none could deliver them but the Lord their God, yea, even the God of Abraham and Isaac and of Jacob.

24 அந்தப்படியே, அவர் அவர்களைத் தப்புவிக்கப்-
பண்ணி, தம்முடைய பலத்த வல்லமைகளைக்
காண்பித்தார். அவர்களின் களிகூர்தல் அதிகமா-
யிருந்தது.

And it came to pass that he did deliver them, and he did show forth his mighty power unto them, and great were their rejoicings.

25 இதோ, அந்தப்படியே, ஏலாம் தேசத்திலுள்ள
ஏலாம் பட்டணத்திலே, அவர்கள் சுற்றியுமுள்ள நி-
லத்தைப் பண்படுத்திக்கொண்டிருந்தபோது, தே-
சத்தின் எல்லைகளிலே லாமானியர்களுடைய ஒரு
சேனை வருவதைக் கண்டார்கள்.

For behold, it came to pass that while they were in the land of Helam, yea, in the city of Helam, while tilling the land round about, behold an army of the Lamanites was in the borders of the land.

26 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மாவின் சகோத-
ரர்கள் தங்கள் வயல்களிலிருந்து ஓடி, ஏலாம் பட்ட-
ணத்திலே ஏகமாய்க் கூடினார்கள்; லாமானியர்கள்
வந்ததினிமித்தம் அதிகமாய் திகிலடைந்தார்கள்.

Now it came to pass that the brethren of Alma fled from their fields, and gathered themselves together in the city of Helam; and they were much frightened because of the appearance of the Lamanites.

27 ஆனால் ஆல்மா போய் அவர்கள் மத்தியிலே
நின்று, அவர்கள் பயப்படக்கூடாதென்றும் கர்த்த-
ராகிய தங்கள் தேவனை நினைவுகூரவேண்டும்
என்றும், அவர் அவர்களைத் தப்புவிக்கப்பண்ணு-
வார் என்றும், புத்தி சொன்னான்.

But Alma went forth and stood among them, and exhorted them that they should not be frightened, but that they should remember the Lord their God and he would deliver them.

28 ஆதலால் அவர்கள் தங்கள் பயத்தை அடக்கி,
லாமானியர்களின் இருதயங்களை மிருதுவாக்க
வேண்டுமெனவும், தங்களையும், தங்கள் மனைவி-
களையும், பிள்ளைகளையும், அவர்கள் தப்பவி-
டும்படி கர்த்தரிடத்திலே கூக்குரலிட்டார்கள்.

Therefore they hushed their fears, and began to cry unto the Lord that he would soften the hearts of the Lamanites, that they would spare them, and their wives, and their children.

29 அந்தப்படியே, கர்த்தர் லாமானியர்களின் இருத-
யங்களை மிருதுவாக்கினார். ஆல்மாவும் அவனு-
டைய சகோதரரும் போய் அவர்களுடைய கைக-
ளுக்குள்ளே தங்களை ஒப்புவித்தார்கள்; லாமானி-
யர்கள் ஏலாம் தேசத்தை ஆக்கிரமித்துக்கொண்-
டார்கள்.

And it came to pass that the Lord did soften the hearts of the Lamanites. And Alma and his brethren went forth and delivered themselves up into their hands; and the Lamanites took possession of the land of Helam.

30 இப்பொழுது லிம்கி ராஜாவினுடைய ஜனத்தைப்
பின் தொடர்ந்துபோன லாமானியர்களின் சேனை-
கள், அநேக நாட்களாய் வனாந்தரத்திலே தொ-
லைந்து போனார்கள்.

Now the armies of the Lamanites, which had followed after the people of king Limhi, had been lost in the wilderness for many days.

31 இதோ, அவர்கள் அந்த நோவா ராஜாவினுடைய ஆசாரியர்களை, அமுலோன் என்று அவர்கள் அழைத்த ஒரு இடத்திலே கண்டார்கள்; அவர்கள் அமுலோன் தேசத்தைச் சுதந்தரித்து, நிலத்தைப் பண்படுத்தத் துவங்கியிருந்தார்கள்.

And behold, they had found those priests of king Noah, in a place which they called Amulon; and they had begun to possess the land of Amulon and had begun to till the ground.

32 இப்பொழுது அந்த ஆசாரியர்களின் தலைவனுடைய பெயர் அமுலோன் என்பதாகும்.

Now the name of the leader of those priests was Amulon.

33 அந்தப்படியே, அமுலோன் லாமானியர்களிடம் கெஞ்சினான்; அவன், லாமானியர்களின் குமாரத்திகளான தங்கள் மனைவிகள், தங்களுடைய புருஷர்களை தங்கள் சகோதரர்கள் சங்கரிக்கக்கூடாதென்று, அவர்களிடம் கெஞ்சும்படி அனுப்பினான்.

And it came to pass that Amulon did plead with the Lamanites; and he also sent forth their wives, who were the daughters of the Lamanites, to plead with their brethren, that they should not destroy their husbands.

34 அவர்களுடைய மனைவிகளினிமித்தம் லாமாமானியர்கள், அமுலோன் மீதும், அவனுடைய சகோதரர் மீதும் இரக்கம்கொண்டு, அவர்களைச் சங்கரிக்கவில்லை.

And the Lamanites had compassion on Amulon and his brethren, and did not destroy them, because of their wives.

35 அமுலோனும் அவன் சகோதரர்களும் லாமானியரோடு சேர்ந்து, நேபியின் தேசத்தைத் தேடி வனாந்தரத்திலே போகும்போது, ஆல்மாவும் அவன் சகோதரரும் சுதந்தரித்த, ஏலாம் தேசத்தைக் கண்டார்கள்.

And Amulon and his brethren did join the Lamanites, and they were traveling in the wilderness in search of the land of Nephi when they discovered the land of Helam, which was possessed by Alma and his brethren.

36 அந்தப்படியே, ஆல்மாவும், அவன் சகோதரர்களும், நேபியின் தேசத்திற்குப் போகும் வழியை தங்களுக்கு காண்பிப்பார்களெனில், அவர்கள் ஜீவனையும் சுதந்தரத்தையும் கொடுப்போமென்று லாமானியர்கள் வாக்குத்தத்தம் கொடுத்தார்கள்.

And it came to pass that the Lamanites promised unto Alma and his brethren, that if they would show them the way which led to the land of Nephi that they would grant unto them their lives and their liberty.

37 ஆனால் ஆல்மா நேபியின் தேசத்திற்கு செல்லும் வழியை அவர்களுக்குக் காண்பித்த பின்பு, லாமானியர்கள் தங்களின் வாக்கை நிறைவேற்றாமல், ஆல்மாவின் மீதும் அவன் சகோதரர் மீதும், ஏலாம் தேசத்தைச் சுற்றியும், காவல் வைத்தார்கள்.

But after Alma had shown them the way that led to the land of Nephi the Lamanites would not keep their promise; but they set guards round about the land of Helam, over Alma and his brethren.

38 அவர்களில் மீதியானோர் நேபியின் தேசத்திற்குச் சென்றார்கள். அவர்களுடைய ஒரு பகுதியினர் ஏலாம் தேசத்திற்குத் திரும்பி, தங்களுடன் தேசத்திலே விடப்பட்ட காவற்காரர்களின் மனைவிகளையும், பிள்ளைகளையும் கூட்டி வந்தார்கள்.

And the remainder of them went to the land of Nephi; and a part of them returned to the land of Helam, and also brought with them the wives and the children of the guards who had been left in the land.

39 லாமானியர்களின் ராஜா, ஏலாம் தேசத்திலே இருந்த தன் ஜனங்களின் மீது, அமுலோன் ராஜாவாகவும், அதிகாரியாகவும் இருக்க அனுமதித்தான். இருப்பினும் அவன் லாமானியர்களின் ராஜாவினுடைய சித்தத்திற்கு விரோதமாய் ஒன்றையும் செய்ய அதிகாரம் இல்லாதிருப்பான்.

And the king of the Lamanites had granted unto Amulon that he should be a king and a ruler over his people, who were in the land of Helam; nevertheless he should have no power to do anything contrary to the will of the king of the Lamanites.

# மோசியா 24

1 அந்தப்படியே, அமுலோன் லாமானியர்களின் ராஜாவினுடைய கண்களிலே தயவுபெற்றான்; ஆதலால் சேம்லோன் தேசத்திலும், சீலோம் தேசத்திலும், அமுலோன் தேசத்திலுமிருந்த தன் சகல ஜனத்திற்கும் அவனும் அவன் சகோதரர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்படும்படி, லாமானியர்களின் ராஜா அனுமதித்தான்.

2 லாமானியர்கள் இந்த தேசத்தையெல்லாம் சுதந்தரித்ததினாலே, இந்த சகல தேசங்கள்மீதும் லாமானியர்களின் ராஜா, ராஜாக்களை நியமித்தான்.

3 இப்பொழுதும் லாமானியர்களின் ராஜாவினுடைய பெயர், தன் தகப்பனுடைய பெயரின் படியே லாமான் என்றழைக்கப்பட்டான். எனவே அவன் லாமான் ராஜா என்றழைக்கப்பட்டான். அவன் அதிகமான ஜனங்களுக்கு ராஜாவாயிருந்தான்.

4 அவன் தன்னுடைய ஜனத்தால் சுதந்தரிக்கப்பட்ட ஒவ்வொரு தேசத்திலும் அமுலோனின் சகோதரர்களை ஆசிரியர்களாக நியமித்தான்; இவ்வாறாக, நேபியின் பாஷை, சகல லாமானியர்களுக்குள்ளும் போதிக்கப்பட்டது.

5 அவர்கள் ஒருவரோடொருவர் நட்பாய் பழகுகிற ஜனமாயிருந்தார்கள்; இருப்பினும் தேவனை அவர்கள் அறியவில்லை, அவர்களுக்கு அமுலோனுடைய சகோதரர்களும் கர்த்தரைக்குறித்தோ, மோசேயின் நியாயப்பிரமாணத்தையோ, அபிநாதியின் வார்த்தைகளையோ, போதிக்கவில்லை.

6 அவர்கள் ஒருவருக்கொருவர் எழுதும்பொருட்டு, தங்களின் பதிவேட்டை எழுதும்படிக்கு போதித்தார்கள்.

7 லாமானியர்கள் ஐஸ்வர்யத்திலே விருத்தியடைந்து, ஒருவரோடொருவர் வணிகம் செய்யத் துவங்கி பெலமடைந்தார்கள், உலகத்தினுடைய ஞானத்திற்கேற்ப, புத்தியும் தந்திரமும் புத்தியுமுள்ளவர்களாயிருக்கத் தொடங்கினார்கள். ஆம், அவர்கள் தங்களின் சொந்த சகோதரர்கள்தவிர, பிறரிடத்தில் எல்லாவிதமான துன்மார்க்கத்திலேயும், கொள்ளையடிப்பதிலும் களிகூர்ந்து, மிகவும் வஞ்சனையுள்ள ஜனமாயிருந்தார்கள்.

8 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மாவின் மீதும் அவன் சகோதரர்களின் மீதும், அமுலோன் அதிகாரத்தைச் செலுத்தவும் துன்புறுத்தவும் தொடங்கி, அவர்களுடைய பிள்ளைகளை தன் பிள்ளைகள் துன்புறுத்தும்படியும் செய்யத் துவங்கினான்.

# Mosiah 24

And it came to pass that Amulon did gain favor in the eyes of the king of the Lamanites; therefore, the king of the Lamanites granted unto him and his brethren that they should be appointed teachers over his people, yea, even over the people who were in the land of Shemlon, and in the land of Shilom, and in the land of Amulon.

For the Lamanites had taken possession of all these lands; therefore, the king of the Lamanites had appointed kings over all these lands.

And now the name of the king of the Lamanites was Laman, being called after the name of his father; and therefore he was called king Laman. And he was king over a numerous people.

And he appointed teachers of the brethren of Amulon in every land which was possessed by his people; and thus the language of Nephi began to be taught among all the people of the Lamanites.

And they were a people friendly one with another; nevertheless they knew not God; neither did the brethren of Amulon teach them anything concerning the Lord their God, neither the law of Moses; nor did they teach them the words of Abinadi;

But they taught them that they should keep their record, and that they might write one to another.

And thus the Lamanites began to increase in riches, and began to trade one with another and wax great, and began to be a cunning and a wise people, as to the wisdom of the world, yea, a very cunning people, delighting in all manner of wickedness and plunder, except it were among their own brethren.

And now it came to pass that Amulon began to exercise authority over Alma and his brethren, and began to persecute him, and cause that his children should persecute their children.

9 ராஜாவினுடைய ஆசாரியர்களில் ஒருவனாயி-
ருந்தானென்றும், அவன் அபிநாதியின் வார்த்தை-
களை விசுவாசித்து ராஜாவுக்கு முன்பாக துரத்தப்-
பட்டானென்றும், அமுலோன் ஆல்மாவை அறிந்தி-
ருந்ததினாலே, அவனோடு குரோதம் கொண்டான்.
ஆதலால் அவன் லாமான் ராஜாவிற்குக் கீழ்ப்படிந்-
திருந்தும், அவன் அவர்கள்மீது அதிகாரத்தைச்
செலுத்தி, வேலைகளைச் சுமத்தி, அவர்கள் மீது வி-
சாரணைக்காரர்களைப் போட்டான்.

10 அந்தப்படியே, அவர்களுடைய உபத்திரவங்கள்
மிகவும் அதிகரித்தபடியால், அவர்கள் தேவனிடத்-
திலே ஊக்கமாய் கூக்குரலிடத் தொடங்கினார்கள்.

11 அவர்கள் தங்களின் கூக்குரல்களை நிறுத்த-
வேண்டுமென்று அமுலோன் கட்டளையிட்டான்;
அவர்களில், தேவனை அழைக்கிறவர்களை கொ-
லை செய்யும்படி, அவர்களைக் கண்காணிக்க கா-
வற்காரர்களை நியமித்தான்.

12 ஆல்மாவும் அவனுடைய ஜனமும் கர்த்தராகிய
தங்கள் தேவனிடத்தில் தங்களுடைய சத்தங்களை
உயர்த்தாமல், தங்கள் இருதயங்களை அவரிடத்-
தில் ஊற்றினார்கள்; அவர் அவர்களுடைய எண்-
ணங்களை அறிந்திருந்தார்.

13 அந்தப்படியே, அவர்களுடைய உபத்திரவங்களி-
லே கர்த்தருடைய சத்தம் அவர்களுக்கு உண்டாகி,
என்னிடத்திலே நீங்கள் செய்த உடன்படிக்கையை
நான் அறிந்திருக்கிறபடியால், உங்கள் சிரசுகளை
உயர்த்தி, நன்கு ஆறுதலடையுங்கள்; நான் என்
ஜனத்தோடு உடன்படிக்கை செய்து, அவர்களை
அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பேன்.

14 நீங்கள் அடிமைத்தனத்தில் இருக்கும்போதே, உங்-
களின் தோள்களிலே சுமத்தப்படுகிற சுமைகளை
நீங்கள் உணராமலிருக்குமளவிற்கு அவைகளை
லகுவாக்குவேன். இந்நாள் முதற்கொண்டு நீங்கள்
எனக்கு சாட்சிகளாயிருக்கும்பொருட்டும், தன்
ஜனத்தை அவர்களுடைய உபத்திரவங்களிலே சந்-
திக்கிற கர்த்தராகிய தேவன் நானே என்று அதினி-
மித்தம் நிச்சமாய் அறிந்துகொள்வீர்களென்றும்,
இவைகளைச் செய்வேன்.

15 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மாவின் மீதும்,
அவனுடைய சகோதரர்களின் மீதும் சுமத்தப்பட்ட
சுமைகள் லகுவாக்கப்பட்டன; ஆம், அவர்கள் நிர்-
விசாரமாய் தங்களுடைய பாரங்களைச் சுமக்க
கர்த்தர் பெலப்படுத்தினார், அவர்களும் கர்த்தரு-
டைய சித்தத்திற்கு மகிழ்ச்சியோடும் பொறுமையா-
யும் கீழ்ப்படிந்தார்கள்.

16 அந்தப்படியே, அவர்களின் விசுவாசமும், பொறு-
மையும் மிகுதியாய் இருந்தபடியாலே, கர்த்தரு-
டைய சத்தம் மறுபடியும் அவர்களுக்கு உண்டாகி,
நாளை உங்களை அடிமைத்தனத்திலிருந்து நான்
தப்புவிக்கப்போவதால் நன்கு ஆறுதலடையுங்கள்,
என்றது.

For Amulon knew Alma, that he had been one of the king's priests, and that it was he that believed the words of Abinadi and was driven out before the king, and therefore he was wroth with him; for he was subject to king Laman, yet he exercised authority over them, and put tasks upon them, and put taskmasters over them.

And it came to pass that so great were their afflictions that they began to cry mightily to God.

And Amulon commanded them that they should stop their cries; and he put guards over them to watch them, that whosoever should be found calling upon God should be put to death.

And Alma and his people did not raise their voices to the Lord their God, but did pour out their hearts to him; and he did know the thoughts of their hearts.

And it came to pass that the voice of the Lord came to them in their afflictions, saying: Lift up your heads and be of good comfort, for I know of the covenant which ye have made unto me; and I will covenant with my people and deliver them out of bondage.

And I will also ease the burdens which are put upon your shoulders, that even you cannot feel them upon your backs, even while you are in bondage; and this will I do that ye may stand as witnesses for me hereafter, and that ye may know of a surety that I, the Lord God, do visit my people in their afflictions.

And now it came to pass that the burdens which were laid upon Alma and his brethren were made light; yea, the Lord did strengthen them that they could bear up their burdens with ease, and they did submit cheerfully and with patience to all the will of the Lord.

And it came to pass that so great was their faith and their patience that the voice of the Lord came unto them again, saying: Be of good comfort, for on the morrow I will deliver you out of bondage.

17 அவர் ஆல்மாவை நோக்கி: நீ இந்த ஜனத்தை வழிநடத்துவாயாக, நான் உன்னுடனே வந்து, இந்த ஜனத்தை அடிமைத்தனத்திலிருந்து தப்புவிக்கப்பண்ணுவேன், என்றார்.

And he said unto Alma: Thou shalt go before this people, and I will go with thee and deliver this people out of bondage.

18 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மாவும், அவனுடைய ஜனமும், இரவிலே தங்களுடைய மந்தைகளையும், தானியங்களையும் ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்தார்கள்: ஆம், இராமுழுவதும் அவர்கள் தங்கள் மந்தைகளை ஏகமாய்க்கூட்டிச் சேர்த்துக்கொண்டிருந்தார்கள்.

Now it came to pass that Alma and his people in the night-time gathered their flocks together, and also of their grain; yea, even all the night-time were they gathering their flocks together.

19 கர்த்தர் விடியற்காலத்திலே லாமனியர்களின்மீது ஆழ்ந்த நித்திரையை வரப்பண்ணினார். ஆம், அவர்களுடைய விசாரணைக்காரர் அனைவரும் ஆழ்ந்த நித்திரையிலே இருந்தார்கள்.

And in the morning the Lord caused a deep sleep to come upon the Lamanites, yea, and all their task-masters were in a profound sleep.

20 ஆல்மாவும் அவனுடய ஜனமும் வனாந்தரத்தினுள்ளே புறப்பட்டுச் சென்றார்கள்; அவர்கள் நாள் முழுவதும் பயணம் பண்ணின பின்பு, ஒரு பள்ளத்தாக்கிலே பாளையமிறங்கினார்கள். ஆல்மா அவர்களை வனாந்தரத்திலே வழி நடத்தினதாலே, அந்த பள்ளத்தாக்கை ஆல்மா என்றழைத்தார்கள்.

And Alma and his people departed into the wilderness; and when they had traveled all day they pitched their tents in a valley, and they called the valley Alma, because he led their way in the wilderness.

21 ஆம், தேவன் தங்களுக்கு இரக்கமாயிருந்து, தங்களுடைய சுமைகளை லகுவாக்கி, அடிமைத்தனத்திலிருந்து தங்களை மீட்டபடியினாலே, அவருக்கு நன்றிகளை அந்த ஆல்மா பள்ளத்தாக்கிலே ஏறெடுத்தார்கள். ஏனெனில், அவர்கள் அடிமைத்தனத்திலிருந்தபோது, கர்த்தராகிய அவர்களுடைய தேவனைத் தவிர வேறொருவராலும் அவர்களை விடுவிக்க முடியவில்லை.

Yea, and in the valley of Alma they poured out their thanks to God because he had been merciful unto them, and eased their burdens, and had delivered them out of bondage; for they were in bondage, and none could deliver them except it were the Lord their God.

22 அவர்களின் சகல புருஷரும், ஸ்திரீகளும், பேசத்தெரிந்த அவர்களுடைய பிள்ளைகள் யாவரும் தங்களுடைய தேவனைத் துதித்து, தங்களின் சத்தத்தை உயர்த்தி, தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

And they gave thanks to God, yea, all their men and all their women and all their children that could speak lifted their voices in the praises of their God.

23 இப்பொழுதும் கர்த்தர் ஆல்மாவை நோக்கி: லாமானியர்கள் விழித்தெழும்பி, உங்களைப் பின்தொடர்ந்து வருகிறார்கள். ஆதலால் இந்த தேசத்தைவிட்டு சீக்கிரமாய் விரைந்தோடுங்கள்; இந்த தேசத்தை விட்டு வெளியேறுங்கள். இந்த ஜனத்தை லாமானியர்கள் இன்னும் தொடர்ந்து வராதபடி, இந்த பள்ளத்தாக்கிலேயே நான் அவர்களைத் தடுத்து நிறுத்துவேன், என்றார்.

And now the Lord said unto Alma: Haste thee and get thou and this people out of this land, for the Lamanites have awakened and do pursue thee; therefore get thee out of this land, and I will stop the Lamanites in this valley that they come no further in pursuit of this people.

24 அந்தப்படியே, அவர்கள் பள்ளத்தாக்கிலிருந்து புறப்பட்டுப்போய், வனாந்தரத்தினுள் தங்களுடைய பயணத்தைத் தொடர்ந்தார்கள்.

And it came to pass that they departed out of the valley, and took their journey into the wilderness.

25 அவர்கள் வனாந்தரத்திலே பன்னிரண்டு நாட்களிருந்த பின்னர், சாரகெம்லா தேசத்தை அடைந்தார்கள்; மோசியா ராஜாவும் அவர்களை மகிழ்ச்சியோடே ஏற்றுக்கொண்டான்.

And after they had been in the wilderness twelve days they arrived in the land of Zarahemla; and king Mosiah did also receive them with joy.

## மோசியா 25

1 இப்பொழுது மோசியா ராஜா ஜனங்கள் அனைவ-
ரும் ஏகமாய்க் கூடும்படிச் செய்தான்.

2 மூலெக்கின் சந்ததியும், அவனோடுகூட வனாந்த-
ரத்திலே வந்தவர்களுமான சாரகெம்லாவின் ஜனத்-
தாரைப்போல நேபியின் பிள்ளைகளோ அல்லது
நேபியின் சந்ததியினரோ, அதிகமாக இருக்கவில்-
லை.

3 நேபியின் ஜனங்களும், சாரகெம்லாவின் ஜனங்க-
ளும் லாமானியர்களைப் போல, அதிகமாயிருக்க-
வில்லை. ஆம், அவர்களுடைய எண்ணிக்கையி-
லே பாதியளவும் கூட இவர்கள் இருக்கவில்லை.

4 இப்பொழுதும் நேபியினுடைய ஜனத்தார் அனை-
வரும், சாரகெம்லாவின் சகல ஜனமும் ஒன்றாய்க்
கூடினார்கள், அவர்கள் இரண்டு கூட்டத்தினராய்
ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டார்கள்.

5 அந்தப்படியே, மோசியா தன் ஜனத்தாருக்கு சீநிப்-
பின் பதிவேடுகளை தாமே வாசித்தான், வாசிக்கப்-
படவும் செய்தான். ஆம், அவர்கள் சாரகெம்லா தே-
சத்தை விட்டுச்சென்ற காலத்திலிருந்து, மறுபடியும்
திரும்பினது வரைக்குமாக உள்ள சீநிப்பின் ஜனத்-
தினுடைய பதிவேடுகளை வாசித்தான்.

6 ஆல்மாவும் அவனுடைய சகோதரர்களும் சார-
கெம்லா தேசத்தைவிட்டுச் சென்று, மறுபடியும் தி-
ரும்பிய காலம் வரைக்குமாக உள்ள, அவர்களு-
டைய விவரத்தையும், அவர்களது அனைத்து
உபத்திரவங்களைப்பற்றியும் வாசித்தான்.

7 இப்பொழுதும் மோசியா பதிவேடுகளை வாசித்து
முடித்த பின்பு, அத்தேசத்திலே தங்கியிருந்த
அவனுடைய ஜனங்கள் ஆச்சரியமும், திகைப்பும்
அடைந்தார்கள்.

8 ஏனெனில் என்ன நினைப்பதென்று அவர்கள்
அறியவில்லை. ஏனெனில் அடிமைத்தனத்திலி-
ருந்து மீட்கப்பட்டிருந்தவர்களை அவர்கள் கண்ட-
போது, அவர்கள் மிகுந்த சந்தோஷத்தினால் நிரப்-
பப்பட்டனர்.

9 மறுபடியும், லாமானியர்களால் கொலை செய்-
யப்பட்டிருந்த தங்களுடைய சகோதரர்களை அவர்-
கள் நினைத்தபோது, துக்கத்தால் நிரப்பப்பட்டு,
வேதனையால் அதிகமாக கண்ணீர் சிந்தினார்கள்.

10 மறுபடியும் தேவனுடைய உடனடியான நற்கு-
ணத்தையும், லாமானியர்களின் கைகளுக்கும்,
அடிமைத்தனத்திலிருந்தும், ஆல்மாவையும்
அவனுடைய சகோதரரையும் விடுவித்ததினா-
லான அவருடைய வல்லமையையும் நினைத்துப்
பார்த்தபோது, அவர்கள் தங்கள் சத்தங்களை
உயர்த்தி, தேவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

## Mosiah 25

And now king Mosiah caused that all the people should be gathered together.

Now there were not so many of the children of Nephi, or so many of those who were descendants of Nephi, as there were of the people of Zarahemla, who was a descendant of Mulek, and those who came with him into the wilderness.

And there were not so many of the people of Nephi and of the people of Zarahemla as there were of the Lamanites; yea, they were not half so numerous.

And now all the people of Nephi were assembled together, and also all the people of Zarahemla, and they were gathered together in two bodies.

And it came to pass that Mosiah did read, and caused to be read, the records of Zeniff to his people; yea, he read the records of the people of Zeniff, from the time they left the land of Zarahemla until they returned again.

And he also read the account of Alma and his brethren, and all their afflictions, from the time they left the land of Zarahemla until the time they returned again.

And now, when Mosiah had made an end of reading the records, his people who tarried in the land were struck with wonder and amazement.

For they knew not what to think; for when they beheld those that had been delivered out of bondage they were filled with exceedingly great joy.

And again, when they thought of their brethren who had been slain by the Lamanites they were filled with sorrow, and even shed many tears of sorrow.

And again, when they thought of the immediate goodness of God, and his power in delivering Alma and his brethren out of the hands of the Lamanites and of bondage, they did raise their voices and give thanks to God.

11 மறுபடியும், தங்களுடைய சகோதரர்களாகிய லா-
மானியர்களுடைய பாவமும், அசுசியுமான நிலை-
யை நினைத்தபோது, அவர்களுடைய ஆத்துமாக்-
களின் நலனுக்காக, துக்கத்தாலும், வியாகுலத்தா-
லும் நிரப்பப்பட்டார்கள்.

And again, when they thought upon the Lamanites, who were their brethren, of their sinful and polluted state, they were filled with pain and anguish for the welfare of their souls.

12 அந்தப்படியே, லாமானியர்களின் குமாரத்திக-
ளை மனைவிகளாக்கிக் கொண்ட அமுலோன் மற்-
றும் அவனுடைய சகோதரர்களுடைய பிள்ளை-
கள், தங்களுடைய தகப்பன்களின் நடத்தைகளி-
னாலே, விசனப்பட்டதினால், இனிமேலும் தங்களு-
டைய தகப்பன்களின் நாமங்களினாலே அழைக்-
கப்படாமல், நேபியின் பிள்ளைகளென்று அழைக்-
கப்படும்படிக்கும், நேபியர்களென்று அழைக்கப்-
பட்டவர்களோடு கூட எண்ணப்படவும், நேபியின்
நாமத்தை தங்கள் மீது தரித்துக்கொண்டார்கள்.

And it came to pass that those who were the children of Amulon and his brethren, who had taken to wife the daughters of the Lamanites, were displeased with the conduct of their fathers, and they would no longer be called by the names of their fathers, therefore they took upon themselves the name of Nephi, that they might be called the children of Nephi and be numbered among those who were called Nephites.

13 இப்பொழுதும் ராஜ்யம் வேறொருவருக்குமல்லா-
மல், நேபியினுடைய சந்ததிக்கு மாத்திரம் சூட்டப்ப-
டுவதினாலே, சாரகெம்லாவின் சகல ஜனங்களும்
நேபியர்களோடு எண்ணப்பட்டார்கள்.

And now all the people of Zarahemla were numbered with the Nephites, and this because the kingdom had been conferred upon none but those who were descendants of Nephi.

14 இப்பொழுதும், அந்தப்படியே, மோசியா தன்
ஜனங்களிடத்தில் பேசுவதையும் வாசிப்பதையும்
முடித்த பின்பு, ஜனங்களிடத்திலே ஆல்மாவும் பேச
வேண்டுமென விரும்பினான்.

And now it came to pass that when Mosiah had made an end of speaking and reading to the people, he desired that Alma should also speak to the people.

15 அவர்கள் திரளான கூட்டங்களாய் கூடியிருந்த-
போது ஆல்மா அவர்களிடம் பேசினான். அவன்
ஒரு கூட்டத்தாரிடமிருந்து மற்றொன்றிற்குச் சென்-
று ஜனத்திற்கு மனந்திரும்புதலையும், கர்த்தர்மீது
விசுவாசித்தலையும் பிரசங்கித்தான்.

And Alma did speak unto them, when they were assembled together in large bodies, and he went from one body to another, preaching unto the people repentance and faith on the Lord.

16 அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட யா-
வருமான லிம்கியினுடைய ஜனத்தினிடமும்,
அவன் சகோதரர்களிடமும், அவர்களை விடுவித்த-
து கர்த்தரே என்று அவர்கள் நினைவுகூரும்படி,
புத்தி சொன்னான்.

And he did exhort the people of Limhi and his brethren, all those that had been delivered out of bondage, that they should remember that it was the Lord that did deliver them.

17 அந்தப்படியே, ஆல்மா அநேக காரியங்களை
ஜனங்களுக்குப் போதித்து, தன் பேச்சை முடித்த-
பின்பு, ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று லிம்-
கி ராஜா விருப்பமுள்ளவனாயிருந்தான்; அவனு-
டைய சகல ஜனமும் ஞானஸ்நானம் பெறவேண்டு-
மென விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள்.

And it came to pass that after Alma had taught the people many things, and had made an end of speaking to them, that king Limhi was desirous that he might be baptized; and all his people were desirous that they might be baptized also.

18 ஆதலால், ஆல்மா தண்ணீரினுள் சென்று அவர்-
களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். ஆம், தன்
சகோதரர்களுக்கு மார்மன் தண்ணீர்களிலே ஞா-
னஸ்நானம் கொடுத்ததுபோல அவர்களுக்கும் ஞா-
னஸ்நானம் கொடுத்தான். ஆம், அவன் ஞானஸ்-
நானம் கொடுத்த யாவரும் தேவனுடைய சபைக்கு
சொந்தமானார்கள். இது அவர்கள் ஆல்மாவின்
வார்த்தைகளிலே விசுவாசித்ததினிமித்தமே.

Therefore, Alma did go forth into the water and did baptize them; yea, he did baptize them after the manner he did his brethren in the waters of Mormon; yea, and as many as he did baptize did belong to the church of God; and this because of their belief on the words of Alma.

19 அந்தப்படியே, சாரகெம்லா தேசமுழுவதிலும், சபைகளை ஸ்தாபிக்கும்பொருட்டு மோசியா ராஜா ஆல்மாவிற்கு அனுமதியளித்தான்; ஒவ்வொரு சபையிலும் ஆசாரியர்களையும் ஆசிரியர்களையும் நியமனம் பண்ண அவனுக்கு அதிகாரம் கொடுத்தான்.
20 இப்பொழுது ஒரே ஆசிரியனால் அவர்களனைவரும் நிர்வாகம் செய்ய முடியாதபடி அங்கே அநேகர் இருந்ததாலும், அவர்கள் அனைவரும் ஒரே கூட்டமாய்க் குழுமியிருந்து தேவனுடைய வார்த்தையைக் கேட்கமுடியாததாலும், இப்படிச் செய்யப்பட்டது.
21 ஆதலால் அவர்கள் சபைகள் என்றழைக்கப்பட்டு பல குழுக்களாகக் கூடினார்கள். ஒவ்வொரு சபையும் தங்கள் ஆசாரியர்களையும் தங்கள் ஆசிரியர்களையும் பெற்றிருந்து, ஒவ்வொரு ஆசாரியனும் தனக்கு ஆல்மாவின் வாயினால் சொல்லப்பட்டவைகளின்படியே பிரசங்கித்தான்.
22 இவ்வாறாக அங்கே பல சபைகள் இருந்தபோதிலும், அவைகளனைத்தும், ஆம், தேவனுடைய சபையாகிய ஒரே சபையாயிருந்தது; சபைகள் யாவிலும் மனந்திரும்புதலும், தேவனில் விசுவாசித்தலும் தவிர, வேறொன்றும் பிரசங்கிக்கப்படவில்லை.
23 இப்பொழுதும், சாரகெம்லாவிலே ஏழு சபைகளிருந்தன. அந்தப்படியே, கிறிஸ்துவினுடைய நாமத்தையோ, தேவனுடைய நாமத்தையோ, தங்கள்மீது தரித்துக்கொள்ள விருப்பம்கொண்ட எவரும், தேவனுடைய சபைகளிலே சேர்ந்தார்கள்.
24 தேவனுடைய ஜனம் என்று அவர்கள் அழைக்கப்பட்டார்கள். கர்த்தர் தம்முடைய ஆவியை அவர்கள்மீது ஊற்றினார். அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருந்து, தேசத்திலே விருத்தியடைந்தார்கள்.

And it came to pass that king Mosiah granted unto Alma that he might establish churches throughout all the land of Zarahemla; and gave him power to ordain priests and teachers over every church.

Now this was done because there were so many people that they could not all be governed by one teacher; neither could they all hear the word of God in one assembly;

Therefore they did assemble themselves together in different bodies, being called churches; every church having their priests and their teachers, and every priest preaching the word according as it was delivered to him by the mouth of Alma.

And thus, notwithstanding there being many churches they were all one church, yea, even the church of God; for there was nothing preached in all the churches except it were repentance and faith in God.

And now there were seven churches in the land of Zarahemla. And it came to pass that whosoever were desirous to take upon them the name of Christ, or of God, they did join the churches of God;

And they were called the people of God. And the Lord did pour out his Spirit upon them, and they were blessed, and prospered in the land.

## மோசியா 26

1 இப்பொழுது, அந்தப்படியே, பென்யமீன் ராஜா தன்-
னுடைய ஜனங்களிடத்தில் பேசியபோது வளர்ந்து
கொண்டிருந்த தலைமுறை, சிறுபிள்ளைகளாயி-
ருந்தபடியாலே, அவனுடைய வார்த்தைகளை
அவர்களால் புரிந்து கொள்ளக்கூடாமற் போயிற்-
று; அவர்கள் தங்களுடைய பிதாக்களின் பாரம்பரி-
யங்களிலே விசுவாசிக்கவில்லை.
2 மரித்தோரின் உயிர்த்தெழுதலைக்குறித்து சொல்-
லப்பட்டிருந்தவைகளையும் அவர்கள் விசுவாசிக்-
கவில்லை. கிறிஸ்துவினுடைய வருகையைக்கு-
றித்தும் அவர்கள் விசுவாசிக்கவில்லை.
3 இப்பொழுதும் அவர்களின் அவிசுவாசத்தினி-
மித்தம் தேவனுடைய வார்த்தையை அவர்களால்
புரிந்துகொள்ள முடியவில்லை. அவர்கள் இருத-
யங்கள் கடினமாயின.
4 ஞானஸ்நானம் பெறவோ, சபையிலே சேர்ந்து-
கொள்ளவோ அவர்கள் விரும்பவில்லை. அவர்-
கள் தங்கள் விசுவாசத்தின்படியே தனிப்பட்ட ஜன-
மாயிருந்து, அதன்பின்பு எப்பொழுதும் கர்த்தரா-
கிய தங்கள் தேவனை கூப்பிடாததினிமித்தம், மாம்-
சப்பிரகாரமான பாவநிலையிலே நிலைத்திருந்-
தார்கள்.
5 இப்பொழுதும் மோசியாவின் ஆட்சியிலே, அவர்-
கள் எண்ணிக்கையிலே தேவனுடைய ஜனத்திலே
பாதி தொகையினராயும் இருக்கவில்லை; ஆனால்
சகோதரர்கள் மத்தியிலே இருந்த வாக்குவாதங்களி-
னிமித்தம் அதிக எண்ணிக்கை உள்ளவர்களா-
னார்கள்.
6 அந்தப்படியே, தங்களுடைய இச்சகமான வார்த்-
தையினாலே சபையிலிருந்த அநேகரை வஞ்சித்து,
அவர்களை அநேக பாவங்களைச் செய்யவைத்-
தார்கள்; ஆதலால் சபையைச் சார்ந்திருந்து, பாவம்
செய்தவரெல்லாம் சபையினால் புத்தி சொல்லப்-
பட வேண்டியது அவசியமாயிற்று.
7 அந்தப்படியே, அவர்கள் ஆசாரியர்களின் முன்
கொண்டுவரப்பட்டு ஆசிரியர்களால் ஆசாரியர்க-
ளிடம் ஒப்படைக்கப்பட்டார்கள்; ஆசாரியர்கள்
அவர்களை பிரதான ஆசாரியனான ஆல்மாவிடம்
கொண்டுவந்தார்கள்.
8 இப்பொழுது மோசியா ராஜா சபையின் மீதான
அதிகாரத்தை ஆல்மாவினிடத்திலே கொடுத்திருந்-
தான்.
9 அந்தப்படியே, ஆல்மா அவர்களைக் குறித்து
ஒன்றும் அறிந்திருக்கவில்லை. ஆனாலும் அவர்க-
ளுக்கு விரோதமாய் அநேக சாட்சிகளிருந்தார்கள்;
ஆம், அவர்களுடைய அக்கிரமங்களைக் குறித்து
ஜனங்கள் எழுந்து, மிகுதியாய் சாட்சியளித்தார்-
கள்.

## Mosiah 26

Now it came to pass that there were many of the rising generation that could not understand the words of king Benjamin, being little children at the time he spake unto his people; and they did not believe the tradition of their fathers.

They did not believe what had been said concerning the resurrection of the dead, neither did they believe concerning the coming of Christ.

And now because of their unbelief they could not understand the word of God; and their hearts were hardened.

And they would not be baptized; neither would they join the church. And they were a separate people as to their faith, and remained so ever after, even in their carnal and sinful state; for they would not call upon the Lord their God.

And now in the reign of Mosiah they were not half so numerous as the people of God; but because of the dissensions among the brethren they became more numerous.

For it came to pass that they did deceive many with their flattering words, who were in the church, and did cause them to commit many sins; therefore it became expedient that those who committed sin, that were in the church, should be admonished by the church.

And it came to pass that they were brought before the priests, and delivered up unto the priests by the teachers; and the priests brought them before Alma, who was the high priest.

Now king Mosiah had given Alma the authority over the church.

And it came to pass that Alma did not know concerning them; but there were many witnesses against them; yea, the people stood and testified of their iniquity in abundance.

10 அப்படிப்பட்ட எந்தவொரு சம்பவமும் சபையிலே
முன்பு நடந்ததில்லை; ஆதலால் ஆல்மா ஆவியிலே
கலக்கமுற்று, அவர்கள் ராஜாவின் முன்பு கொண்-
டு செல்லப்படும்படி செய்தான்.

Now there had not any such thing happened before in the church; therefore Alma was troubled in his spirit, and he caused that they should be brought before the king.

11 அவன் ராஜாவை நோக்கி: இதோ, தங்களுடைய
சகோதரர்களாலே குற்றம் சாட்டப்பட்ட, அநேகரை
உனக்கு முன்பாக கொண்டுவந்திருக்கிறோம். ஆம்,
அவர்கள் பலவிதமான அக்கிரமங்கள் செய்தபோ-
து பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களு-
டைய அக்கிரமங்களுக்காக மனந்திரும்பவில்லை.
அதன் நிமித்தம் அவர்களுடைய குற்றங்களுக்குத்
தக்கவாறு நீர் அவர்களை நியாயம் விசாரிக்கும்ப-
டி, உமக்கு முன்பாக அவர்களைக் கொண்டு வந்தி-
ருக்கிறேன், என்றான்.

And he said unto the king: Behold, here are many whom we have brought before thee, who are accused of their brethren; yea, and they have been taken in divers iniquities. And they do not repent of their iniquities; therefore we have brought them before thee, that thou mayest judge them according to their crimes.

12 ஆனால் மோசியா ராஜாவோ ஆல்மாவை நோக்கி:
இதோ, நான் அவர்களை நியாயம் விசாரிக்கப்போ-
வதில்லை; ஆதலால் அவர்கள் நியாயம் விசாரிக்-
கப்படும்படி அவர்களை உமது கைகளிலே ஒப்ப-
டைக்கிறேன், என்றான்.

But king Mosiah said unto Alma: Behold, I judge them not; therefore I deliver them into thy hands to be judged.

13 இப்பொழுதும் ஆல்மாவின் ஆவி மறுபடியும்
கலக்கமுற்றது; தேவனுடய பார்வையிலே குற்றம்
செய்துவிடுவோமோ என்ற பயத்தினால், இந்தக் கா-
ரியத்தைக் குறித்து தான் என்ன செய்யவேண்டு-
மென அவன் சென்று கர்த்தரிடத்திலே வேண்டுதல்
செய்தான்.

And now the spirit of Alma was again troubled; and he went and inquired of the Lord what he should do concerning this matter, for he feared that he should do wrong in the sight of God.

14 அந்தப்படியே, அவன் தன் முழு ஆத்துமாவையும்
தேவனிடத்திலே ஊற்றிய பின்னர், கர்த்தருடைய
சத்தம் அவனுக்கு உண்டாகி, சொன்னது:

And it came to pass that after he had poured out his whole soul to God, the voice of the Lord came to him, saying:

15 ஆல்மாவே, நீ பாக்கியவான், மார்மன் தண்ணீர்க-
ளிலே ஞானஸ்நானம் பெற்றவர்களும் பாக்கிய-
வான்கள். என் தாசனாகிய அபிநாதியின் வார்த்-
தைகளில் மாத்திரம், உனது மிகுந்த விசுவாசத்தி-
னிமித்தம் நீ பாக்கியவான்.

Blessed art thou, Alma, and blessed are they who were baptized in the waters of Mormon. Thou art blessed because of thy exceeding faith in the words alone of my servant Abinadi.

16 அவர்களுக்கு நீ பேசிய வார்த்தைகளில் மாத்தி-
ரம், அவர்களுடைய மிகுந்த விசுவாசத்தினிமித்தம்
அவர்கள் பாக்கியவான்கள்.

And blessed are they because of their exceeding faith in the words alone which thou hast spoken unto them.

17 இந்த ஜனத்திற்குள்ளே ஒரு சபையை ஸ்தாபித்த-
தினிமித்தம் நீ பாக்கியவான்; அவர்கள் ஸ்திரப்ப-
டுத்தப்படுவார்கள், என் ஜனமாயுமிருப்பார்கள்.

And blessed art thou because thou hast established a church among this people; and they shall be established, and they shall be my people.

18 ஆம், என் நாமத்தைத் தாங்க சித்தமாயிருக்கும்
இந்த ஜனங்கள் பாக்கியவான்கள்; ஏனெனில்
அவர்கள் என் நாமத்தினாலே அழைக்கப்படுவார்-
கள்; அவர்கள் என்னுடையவர்கள்.

Yea, blessed is this people who are willing to bear my name; for in my name shall they be called; and they are mine.

19 மீறுகிறவனைக் குறித்து என்னிடம் விசாரித்ததி-
னிமித்தம் நீ பாக்கியவான்.

And because thou hast inquired of me concerning the transgressor, thou art blessed.

20 நீ என்னுடைய தாசன்; நீ நித்திய ஜீவனைப் பெ-
றுவாய் என்று நான் உன்னுடனே உடன்படிக்கை
பண்ணுகிறேன். நீ என்னைச் சேவித்து, என் நாமத்-
திலே போய், என் ஆடுகளை ஒன்றாய்ச் சேர்ப்பா-
யாக.

Thou art my servant; and I covenant with thee that thou shalt have eternal life; and thou shalt serve me and go forth in my name, and shalt gather together my sheep.

21 என் சத்தத்தைக் கேட்கிறவனே என்னுடைய
ஆடாயிருப்பான்; அவனை நீங்கள் சபையிலே ஏற்-
றுக்கொள்ளுங்கள். நானும் அவனை ஏற்றுக்-
கொள்வேன்.

And he that will hear my voice shall be my sheep; and him shall ye receive into the church, and him will I also receive.

22 ஏனெனில் இதோ, இது என்னுடைய சபையாயி-
ருக்கிறது; ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் மனந்-
திரும்புதலுக்கேதுவாக ஞானஸ்நானம் பெறுவார்-
கள். நீங்கள் ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் என் நா-
மத்திலே விசுவாசிப்பார்கள்; அவனை நான் தாரா-
ளமாய் மன்னிப்பேன்.

For behold, this is my church; whosoever is baptized shall be baptized unto repentance. And whomsoever ye receive shall believe in my name; and him will I freely forgive.

23 ஏனெனில் உலகத்தின் பாவங்களை நான் என் மீ-
து சுமந்துகொண்டேன்; ஏனெனில் நானே அவர்க-
ளை சிருஷ்டித்தேன்; முடிவுபரியந்தமும் விசுவா-
சிக்கிறவனுக்கு நானே எனது வலதுபாரிசத்திலே
ஒரு இடத்தைக் கொடுக்கிறேன்.

For it is I that taketh upon me the sins of the world; for it is I that hath created them; and it is I that granteth unto him that believeth unto the end a place at my right hand.

24 ஏனெனில் இதோ, என்னுடைய நாமத்தினாலே
அவர்கள் அழைக்கப்படுகிறார்கள்; என்னை
அவர்கள் அறிவார்களெனில், அவர்கள் வந்து,
என்னுடைய வலது பாரிசத்திலே ஒரு இடத்தை நித்-
தியமாய் பெற்றுக்கொள்வார்கள்.

For behold, in my name are they called; and if they know me they shall come forth, and shall have a place eternally at my right hand.

25 இரண்டாம் எக்காளம் சத்தமிடுகிறபோது, என்-
னை அறியாதவர்கள் வந்து, என் முன்பாக நிற்-
பார்கள்.

And it shall come to pass that when the second trump shall sound then shall they that never knew me come forth and shall stand before me.

26 கர்த்தராகிய தங்கள் தேவன் நானே என்றும், தங்-
களின் மீட்பரும் நானே என்றும், அறிந்துகொள்-
வார்கள்; ஆனாலும் அவர்கள் மீட்கப்படமாட்டார்-
கள்.

And then shall they know that I am the Lord their God, that I am their Redeemer; but they would not be redeemed.

27 அப்பொழுது அவர்களை நான் ஒருபோதும் அறி-
யேன் என்று அவர்களிடம் அறிக்கையிடுவேன்; பி-
சாசுக்கும் அவனுடைய தூதர்களுக்கும் ஆயத்தம்
பண்ணப்பட்ட என்றுமுள்ள அக்கினிக்குள்ளே
அவர்கள் பிரவேசிப்பார்கள்.

And then I will confess unto them that I never knew them; and they shall depart into everlasting fire prepared for the devil and his angels.

28 ஆகையால் உங்களுக்கு நான் சொல்வது என்ன-
வெனில், என் சத்தத்திற்கு செவிகொடாதவன்
எவனோ, அவனை என் சபையினுள் ஏற்றுக்-
கொள்ளாமலிருப்பீர்களாக. நானும் அவனை
கடைசி நாளிலே ஏற்றுக்கொள்ளாமலிருப்பேன்.

Therefore I say unto you, that he that will not hear my voice, the same shall ye not receive into my church, for him I will not receive at the last day.

29 ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன், போ,
எனக்கு விரோதமாய் எவன் மீறுதல் செய்கிறானோ,
அவன் செய்த பாவங்களின் படியே, அவனை நி-
யாய விசாரணை செய்வாயாக; அவன் தன் பாவங்-
களை உனக்கும் எனக்கும் முன்பு அறிக்கையிட்டு,
தன் இருதயத்தின் உத்தமத்திலே மனந்திரும்புவா-
னேயாகில், அவனை மன்னித்து விடுவாயாக. நா-
னும் அவனை மன்னிப்பேன்.

Therefore I say unto you, Go; and whosoever transgresseth against me, him shall ye judge according to the sins which he has committed; and if he confess his sins before thee and me, and repenteth in the sincerity of his heart, him shall ye forgive, and I will forgive him also.

30 ஆம், எவ்வெப்போது என் ஜனங்கள் மனந்திரும்-
புவார்களோ, அவ்வளவாய் எனக்கு விரோதமான
அவர்களது மீறுதல்களை நான் மன்னிப்பேன்.

Yea, and as often as my people repent will I forgive them their trespasses against me.

31 நீங்களும் ஒருவருக்கொருவர் உங்கள் மீறுதல்க-
ளை மன்னியுங்கள். ஒருவன் தான் மனந்திரும்பு-
கிறேன் என்று சொல்லியும், தன் அயலானின் மீறு-
தலை மன்னியாமலிருப்பவன், தன்மீது ஆக்கி-
னையை வரவழைத்துக்கொண்டான், என்று மெய்-
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And ye shall also forgive one another your trespasses; for verily I say unto you, he that forgiveth not his neighbor's trespasses when he says that he repents, the same hath brought himself under condemnation.

32 இப்பொழுது நான் உனக்குச் சொல்கிறேன், போ.
தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பாமலிருப்ப-
வன் எவனோ அவன் என் ஜனத்திற்குள்ளே எண்-
ணப்படமாட்டான்; இந்தச் சமயம் முதற்கொண்டு
இது அனுசரிக்கப்படும்.

Now I say unto you, Go; and whosoever will not repent of his sins the same shall not be numbered among my people; and this shall be observed from this time forward.

33 அந்தப்படியே, ஆல்மா இந்த வார்த்தைகளைக்
கேட்டபோது, தான் அவைகளை வைத்திருக்கவும்,
தேவனுடைய கட்டளைகளுக்கேற்ப அந்த சபை-
யின் ஜனத்தை விசாரிக்கும்படிக்கும் அவைகளை
எழுதிக்கொண்டான்.

And it came to pass when Alma had heard these words he wrote them down that he might have them, and that he might judge the people of that church according to the commandments of God.

34 அந்தப்படியே, ஆல்மா போய் கர்த்தருடைய
வார்த்தையின்படியே அக்கிரமங்களில் இருப்பவர்-
களை நியாயம் விசாரித்தான்.

And it came to pass that Alma went and judged those that had been taken in iniquity, according to the word of the Lord.

35 அவன் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்-
பி, அவைகளை அறிக்கையிட்டவர்களை, சபை-
யின் ஜனத்தோடே எண்ணினான்.

And whosoever repented of their sins and did confess them, them he did number among the people of the church;

36 தங்களின் பாவங்களை அறிக்கையிடாமலும்,
தங்களின் மீறுதலிலிருந்து மனந்திரும்பாமலும்
இருந்தவர்கள், சபையின் ஜனத்தோடே எண்ணப்-
படாமல் அவர்களுடைய நாமங்கள் நீக்கப்பட்டன.

And those that would not confess their sins and repent of their iniquity, the same were not numbered among the people of the church, and their names were blotted out.

37 அந்தப்படியே, ஆல்மா சபையினுள் எல்லாக் கா-
ரியங்களையும் ஒழுங்குபடுத்தினான்; அவர்கள்
சபையின் காரியங்களிலே அதிகமாய் விருத்திய-
டைந்து, மறுபடியும் சமாதானத்தை அடைய ஆரம்-
பித்தார்கள். அவர்கள் தேவனுக்கு முன்பாக ஜாக்கி-
ரதையாய் நடந்து, அநேகரை ஏற்றுக்கொண்டு,
அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள்.

And it came to pass that Alma did regulate all the affairs of the church; and they began again to have peace and to prosper exceedingly in the affairs of the church, walking circumspectly before God, receiving many, and baptizing many.

38 இப்பொழுது சபையின் பொறுப்பாளிகளாக
இருந்த ஆல்மாவும், அவனுடைய உடன் ஊழியக்-
காரர்களும் இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும்
செய்தார்கள்; சகல கருத்தோடும் நடந்து, சகல காரி-
யங்களிலேயும், தேவனுடைய வார்த்தையைப் போ-
தித்து, எல்லா விதமான உபத்திரவங்களையும்
அனுபவித்து தேவசபையைச் சாராதவர் எல்லோ-
ராலும் துன்புறுத்தப்பட்டார்கள்.

And now all these things did Alma and his fellow laborers do who were over the church, walking in all diligence, teaching the word of God in all things, suffering all manner of afflictions, being persecuted by all those who did not belong to the church of God.

39 அவர்கள் தங்கள் சகோதரருக்கு புத்தி சென்னார்-
கள்; அவர்களில் ஒவ்வொருவனும், தன் பாவத்-
தின்படியேயும், அல்லது அவன் செய்த பாவங்க-
ளுக்குத் தக்கதாயும் தேவனுடைய வார்த்தையால்
புத்தி சொல்லப்பட்டும், இடைவிடாமல் ஜெபிக்கும்-
படிக்கும், எல்லா காரியங்களிலும் நன்றி செலுத்-
தும்படிக்கும் தேவனால் கட்டளையிடப்பட்டார்-
கள்.

And they did admonish their brethren; and they were also admonished, every one by the word of God, according to his sins, or to the sins which he had committed, being commanded of God to pray without ceasing, and to give thanks in all things.

# மோசியா 27

# Mosiah 27

1 இப்பொழுதும், அந்தப்படியே, அவிசுவாசிகளினால், சபையின்மீது இழைக்கப்பட்ட துன்புறுத்துதல்கள் மிகவும் அதிகமானபடியாலே, சபையார் முணுமுணுத்து, இந்தக் காரியத்தைக்குறித்து அவர்களுடைய தலைவர்களிடத்திலே முறையிடத் துவங்கினார்கள்; அவர்கள் ஆல்மாவினிடத்தில் முறையிட்டார்கள். ஆல்மா அவர்களுடைய ராஜாவாகிய மோசியாவின் முன்பு வழக்கை வைத்தான். மோசியா தன் ஆசாரியர்களுடன் ஆலோசித்தான்.

And now it came to pass that the persecutions which were inflicted on the church by the unbelievers became so great that the church began to murmur, and complain to their leaders concerning the matter; and they did complain to Alma. And Alma laid the case before their king, Mosiah. And Mosiah consulted with his priests.

2 அந்தப்படியே, எந்த ஒரு அவிசுவாசியும், தேவனுடைய, சபையைச் சார்ந்த எவரொருவரையும் துன்புறுத்தக்கூடாதென்று, மோசியா ராஜா தேசமுழுவதிலும் அறிக்கையை அனுப்பினான்.

And it came to pass that king Mosiah sent a proclamation throughout the land round about that there should not any unbeliever persecute any of those who belonged to the church of God.

3 அவர்களுக்குள்ளே எல்லா சபைகளிலும் எந்த துன்புறுத்தலுமில்லாமல், எல்லா மனுஷருக்குள்ளும் சமத்துவம் இருக்கவேண்டுமெனவும் ஒரு கடுமையான கட்டளையிருந்தது.

And there was a strict command throughout all the churches that there should be no persecutions among them, that there should be an equality among all men;

4 கர்வமோ, மேட்டிமையோ, அவர்களுடைய சமாதானத்தை சீர்குலைக்க விடாதபடிக்கும், ஒவ்வொரு மனுஷனும் தன்னைப்போல தன் அயலானையும் மதித்து, தங்களை தாங்குவதற்கு சொந்த கைகளினாலே உழைக்கும்படிக்கும்,

That they should let no pride nor haughtiness disturb their peace; that every man should esteem his neighbor as himself, laboring with their own hands for their support.

5 ஆம், அவர்களுடைய எல்லா ஆசாரியர்களும், ஆசிரியர்களும், வியாதியாயும், அல்லது திக்கற்றவராயும் இருக்கும் சமயங்களைத் தவிர எல்லா நேரங்களிலும் தங்களின் சொந்த கைகளினாலே தங்கள் நலனுக்காக பிரயாசப்பட வேண்டும்; அவர்கள் இந்தக் காரியங்களைச் செய்து, தேவனின் கிருபையை அதிகமாய்ப் பெற்றார்கள்.

Yea, and all their priests and teachers should labor with their own hands for their support, in all cases save it were in sickness, or in much want; and doing these things, they did abound in the grace of God.

6 தேசத்திலே மறுபடியும் அதிக சமாதானம் நிலவியது; ஜனங்கள் பலுகிப்பெருகி, வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலும், மேற்கிலும் பரந்த நகரங்களையும், கிராமங்களையும் தேசத்தின் எல்லா திசைகளிலும் எழுப்பி, பூமியின் பரப்பின் மீதெங்கும் பரவினார்கள்.

And there began to be much peace again in the land; and the people began to be very numerous, and began to scatter abroad upon the face of the earth, yea, on the north and on the south, on the east and on the west, building large cities and villages in all quarters of the land.

7 கர்த்தர் அவர்களை விசாரித்து, விருத்தியடையப் பண்ணினார். அவர்கள் பலுகிப்பெருகி செல்வந்தர்களானார்கள்.

And the Lord did visit them and prosper them, and they became a large and wealthy people.

8 இப்பொழுது மோசியாவின் குமாரர்கள் அவிசு-
வாசிகளுக்குள்ளே எண்ணப்பட்டார்கள்; ஆல்மா-
வின் குமாரர்களுள் ஒருவனும், தன் தகப்பனு-
டைய நாமத்தின்படியே அழைக்கப்பட்டவனுமா-
கிய ஆல்மா என்பவனும் அவர்களுக்குள் எண்-
ணப்பட்டான்; ஆனால் அவன் மிகவும் துன்மார்க்-
கனாயும், விக்கிரக ஆராதனைக்காரனாயுமா-
னான். அவன் அநேக வார்த்தைகளைப் பேசுப-
வனாயும் இருந்தான். ஜனங்களிடம் அதிகமான
இச்சகமானதைப் பேசினான்; ஆதலால் அநேக
ஜனங்களை தன்னுடைய அக்கிரமங்களின் பிரகா-
ரமாய் செய்யும்படி வழிநடத்தினான்.

Now the sons of Mosiah were numbered among the unbelievers; and also one of the sons of Alma was numbered among them, he being called Alma, after his father; nevertheless, he became a very wicked and an idolatrous man. And he was a man of many words, and did speak much flattery to the people; therefore he led many of the people to do after the manner of his iniquities.

9 அவன் ஜனங்களின் உள்ளத்தைக் கொள்ளை-
கொண்டு, ஜனங்களுக்குள்ளே அநேக வாக்குவா-
தங்களை ஏற்படுத்தி, அவர்கள் மீது தேவனுடைய
சத்துருவானவன் தன் வல்லமையைச் செலுத்த
வழிவகுத்து, தேவனுடைய சபை விருத்தியடைவ-
தற்கு பெரிய தடையாய் மாறினான்.

And he became a great hinderment to the prosperity of the church of God; stealing away the hearts of the people; causing much dissension among the people; giving a chance for the enemy of God to exercise his power over them.

10 இப்பொழுதும், அந்தப்படியே, தேவனுடைய அல்-
லது ராஜாவினுடைய கட்டளைகளுக்கு விரோத-
மாய், அவன் தேவசபையை அழிப்பதற்கும், அவன்
சபையை அழிப்பதற்கு வகைதேடுகிறவனாய் மோ-
சியாவின் குமாரர்களோடு இரகசியமாய் சுற்றித்தி-
ரிந்தும், கர்த்தருடைய ஜனங்களை தவறான வழி-
யில் நடத்துவதற்கும் போய்க்கொண்டிருந்தபொழு-
து,

And now it came to pass that while he was going about to destroy the church of God, for he did go about secretly with the sons of Mosiah seeking to destroy the church, and to lead astray the people of the Lord, contrary to the commandments of God, or even the king—

11 நான் உங்களுக்குச் சொன்னதுபோல, தேவனுக்கு
விரோதமாய் கலகம் செய்துகொண்டு அவர்கள்
சென்றபோது, இதோ, கர்த்தருடைய தூதன் அவர்க-
ளுக்குத் தோன்றினான்; அவன் மேகத்திலிருந்து
இறங்குவது போல கீழே இறங்கினான்; அவன் இடி-
முழக்கத்தைப்போலப் பேசினான். அது அவர்கள்
நின்றுகொண்டிருந்த பூமியை அதிரச் செய்தது.

And as I said unto you, as they were going about rebelling against God, behold, the angel of the Lord appeared unto them; and he descended as it were in a cloud; and he spake as it were with a voice of thunder, which caused the earth to shake upon which they stood;

12 அவர்கள் மிகவும் அதிர்ச்சியடைந்து, நிலத்திலே
விழுந்து, அவர்களிடம் அவன் பேசிய வார்த்தைக-
ளை அறியாமலிருந்தார்கள்.

And so great was their astonishment, that they fell to the earth, and understood not the words which he spake unto them.

13 இருப்பினும், அவன் மறுபடியும் கூக்குரலிட்டு,
சொன்னதாவது: ஆல்மாவே எழுந்து நில். நீ ஏன்
தேவனுடைய சபையைத் துன்புறுத்துகிறாய்?
கர்த்தர் சொன்னது என்னவெனில்: இது என்னு-
டைய சபை. நான் இதை ஸ்தாபிப்பேன்; என் ஜனத்-
தின் மீறுதலேயல்லாமல் வேறொன்றும் இதை
அழிக்காது.

Nevertheless he cried again, saying: Alma, arise and stand forth, for why persecutest thou the church of God? For the Lord hath said: This is my church, and I will establish it; and nothing shall overthrow it, save it is the transgression of my people.

14 மறுபடியும் அந்த தூதன் சொன்னான்: இதோ,
கர்த்தர் தம் ஜனங்களின் விண்ணப்பங்களையும்,
தம் தாசனும், உன் தகப்பனுமாகிய ஆல்மாவின்
விண்ணப்பங்களையும் கேட்டிருக்கிறார்; ஏனெ-
னில் நீ சத்தியத்தின் ஞானத்திற்கு கொண்டுவரப்ப-
டவேண்டும் என்று, உன்னைக்குறித்து மிகுந்த விசு-
வாசத்தோடே ஜெபித்திருக்கிறார்; ஆதலால் இந்த
நோக்கத்திற்காகவே தேவனுடைய வல்லமையை-
யும், அதிகாரத்தையும் உனக்கு உணர்த்தவும், அதி-
னிமித்தம் அவருடைய ஊழியக்காரர்களின் ஜெ-
பங்கள், அவர்களுடைய விசுவாசத்தின்படியே
பதிலளிக்கப்படவுமே நான் வந்திருக்கிறேன்.

And again, the angel said: Behold, the Lord hath heard the prayers of his people, and also the prayers of his servant, Alma, who is thy father; for he has prayed with much faith concerning thee that thou mightest be brought to the knowledge of the truth; therefore, for this purpose have I come to convince thee of the power and authority of God, that the prayers of his servants might be answered according to their faith.

15 இப்பொழுதும் தேவ வல்லமையை உன்னால் சந்-
தேகிக்க இயலுமா? ஏனெனில் இதோ, என்னுடைய
வார்த்தை பூமியை அதிரச் செய்கிறதில்லையா?
உனக்கு முன்பாக நானிருப்பதை உன்னால் காண-
வும் இயலாதோ? நான் தேவனிடத்திலிருந்து
அனுப்பப்பட்டிருக்கிறேன்.

And now behold, can ye dispute the power of God? For behold, doth not my voice shake the earth? And can ye not also behold me before you? And I am sent from God.

16 இப்பொழுது நான் உனக்குச் சொல்வது என்ன-
வெனில்: நீ போய் ஏலாம் தேசத்திலும், நேபியின் தே-
சத்திலும், இருந்த உன் பிதாக்களின் சிறையிருப்-
பை நினைவுகூருவாயாக; அவர் அவர்களுக்கு
எவ்வளவு மகத்துவமான காரியங்களைச் செய்தி-
ருக்கிறார் என்பதை நினைவுகூருவாயாக. ஏனெ-
னில் அவர்கள் சிறைத்தனத்திலிருந்தார்கள். அவர்
அவர்களை விடுவித்திருக்கிறார். இப்பொழுதும்
நான் உனக்குச் சொல்லுகிறேன், ஆல்மா நீ உன்-
னையே தள்ளப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தாலும்,
அவர்களின் விண்ணப்பங்கள் பதிலளிக்கப்படும்
பொருட்டு, சபையை இனி ஒருபோதும் அழிக்க நா-
டாமல், உன் வழியே செல்வாயாக, என்றான்.

Now I say unto thee: Go, and remember the captivity of thy fathers in the land of Helam, and in the land of Nephi; and remember how great things he has done for them; for they were in bondage, and he has delivered them. And now I say unto thee, Alma, go thy way, and seek to destroy the church no more, that their prayers may be answered, and this even if thou wilt of thyself be cast off.

17 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மாவினிடத்தி-
லே தூதன் பேசிய கடைசி வார்த்தைகள் இவைக-
ளே. பின்பு அவன் சென்றான்.

And now it came to pass that these were the last words which the angel spake unto Alma, and he departed.

18 இப்பொழுதும் ஆல்மாவும் அவனோடு கூட இருந்-
தவர்களும் தங்களின் மிகுதியான ஆச்சரியத்தி-
னாலே பூமியிலே மறுபடியும் விழுந்தார்கள்; ஏனெ-
னில் தங்களுடைய சொந்தக் கண்களாலே கர்த்த-
ருடைய தூதனைக் கண்டார்கள். அவனது சத்தம்
இடிமுழக்கத்தைப்போல பூமியை அதிரச் செய்தது;
தேவனுடைய வல்லமையே அல்லாமல் வேறொன்-
றாலும் பூமியை அசைத்து, அதைப் பிளப்பதைப்-
போல நடுங்கச் செய்ய முடியாதென அறிந்தார்கள்.

And now Alma and those that were with him fell again to the earth, for great was their astonishment; for with their own eyes they had beheld an angel of the Lord; and his voice was as thunder, which shook the earth; and they knew that there was nothing save the power of God that could shake the earth and cause it to tremble as though it would part asunder.

19 இப்பொழுதும் ஆல்மா மிகுதியாய் ஆச்சரியம-
டைந்ததாலே அவன் தன்னுடைய வாயைத் திறக்க
முடியாதபடி ஊமையானான்; ஆம், அவன் பெலவீ-
னமடைந்து, தன் கைகளை அசைக்க முடியாதி-
ருந்தான்; ஆதலால் அவனோடுகூட இருந்தவர்க-
ளால் தூக்கிவிடப்பட்டு, திக்கற்றவனாய் தூக்கிச்
செல்லப்பட்டு அவனது தகப்பனுக்கு முன்பாகக் கி-
டத்தப்பட்டான்.

And now the astonishment of Alma was so great that he became dumb, that he could not open his mouth; yea, and he became weak, even that he could not move his hands; therefore he was taken by those that were with him, and carried helpless, even until he was laid before his father.

20 அவர்களுக்கு நேர்ந்தது எல்லாவற்றையும் அவர்கள் அவனுடைய தகப்பனிடம் சொன்னார்கள்; அது தேவனுடைய வல்லமையே என்றறிந்து, அவனது தகப்பன் களிகூர்ந்தான்.

And they rehearsed unto his father all that had happened unto them; and his father rejoiced, for he knew that it was the power of God.

21 அவன் தன் குமாரனுக்கும், அவனோடு இருந்தவர்களுக்கும், கர்த்தர் செய்ததை காணும்படிக்கு ஒரு திரள்கூட்டத்தை ஏகமாய்க் கூடிவரும்படி செய்தான்.

And he caused that a multitude should be gathered together that they might witness what the Lord had done for his son, and also for those that were with him.

22 ஆசாரியர்கள் தங்களை ஏகமாய் ஒன்றுகூட்டும்படிச் செய்தான்; அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தர், ஆல்மா பேசும்படி அவனுடைய நாவைத் திறக்கவும் அவனுடைய கை, கால்கள் பெலத்தைப் பெறவும், தேவனுடைய நன்மையையும், மகிமையையும் ஜனங்கள் பார்க்கும்படிக்கு அவர்களது கண்கள் திறக்கப்படவும், அவரிடத்திலே உபவாசமிருந்து, ஜெபிக்கலானார்கள்.

And he caused that the priests should assemble themselves together; and they began to fast, and to pray to the Lord their God that he would open the mouth of Alma, that he might speak, and also that his limbs might receive their strength—that the eyes of the people might be opened to see and know of the goodness and glory of God.

23 அந்தப்படியே, அவர்கள் இரண்டு பகல்களும், இரண்டு இரவுகளும் உபவாசமிருந்து ஜெபித்தபோது, ஆல்மாவின் கை கால்கள் பெலனைப் பெற்று, அவன் எழுந்திருந்து அவர்களைத் தேற்றும்படியான வார்த்தைகளைப் பேசலானான்.

And it came to pass after they had fasted and prayed for the space of two days and two nights, the limbs of Alma received their strength, and he stood up and began to speak unto them, bidding them to be of good comfort:

24 நான் என் பாவங்களுக்காக மனந்திரும்பியதால், கர்த்தரால் மீட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறேன்; இதோ, நான் ஆவியாலே ஜெனிப்பிக்கப்பட்டுள்ளேன், என்றான்.

For, said he, I have repented of my sins, and have been redeemed of the Lord; behold I am born of the Spirit.

25 கர்த்தர் என்னை நோக்கி: ஆம், புருஷரும் ஸ்திரீகளுமான சகல மனுக்குலமும், எல்லா தேசத்தாரும், இனத்தாரும், பாஷைக்காரரும் ஜனங்களும் மறுபடியும் ஜெனிக்கவேண்டும் என்பதால் திகையாதே; ஆம், அவர்கள் தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டு, தங்களுடைய மாம்சமான வீழ்ந்த நிலையிலிருந்து தேவனால் மீட்கப்பட்டு, நீதியின் நிலைக்கு மாற்றப்பட்டு, அவருடைய குமாரரும் குமாரத்திகளுமாவார்கள்.

And the Lord said unto me: Marvel not that all mankind, yea, men and women, all nations, kindreds, tongues and people, must be born again; yea, born of God, changed from their carnal and fallen state, to a state of righteousness, being redeemed of God, becoming his sons and daughters;

26 இவ்விதமாய் அவர்கள் புது சிருஷ்டியாகிறார்கள்; இதைச் செய்யாவிடில், அவர்கள் ஒருபோதும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமுடியாது.

And thus they become new creatures; and unless they do this, they can in nowise inherit the kingdom of God.

27 இப்படிச் செய்யாவிடில் அவர்கள் புறம்பே தள்ளப்படுவார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நானும் புறம்பே தள்ளப்பட இருந்ததினாலே, இதை அறிவேன்.

I say unto you, unless this be the case, they must be cast off; and this I know, because I was like to be cast off.

28 இருப்பினும் அதிக உபத்திரவங்களிலே தடுமாறி, மரணத்திற்கு அருகில் சென்று மனந்திரும்பின பின்பு, கர்த்தர் தம் இரக்கத்தினாலே அவியாத அக்கினியிலிருந்து என்னை நீக்கிப்போடுவது நலம் என்று கண்டார். தேவனால் நான் ஜெனிப்பிக்கப்பட்டுள்ளேன்.

Nevertheless, after wading through much tribulation, repenting nigh unto death, the Lord in mercy hath seen fit to snatch me out of an everlasting burning, and I am born of God.

29 என்னுடைய ஆத்துமா கசப்பான பிச்சிலிருந்தும், அக்கிரமத்தின் கட்டுக்களிலிருந்தும் மீட்கப்பட்டது. நான் காரிருளிலிருந்தேன்; ஆனால் இப்பொழுதோ தேவனுடைய அற்புதமான ஒளியைக் காண்கிறேன், என் ஆத்துமா நித்திய வேதனையிலே கட்டப்பட்டிருந்தது. ஆனாலும் நான் காப்பாற்றப்பட்டேன். இனி ஒருபோதும் என் ஆத்துமா துன்பமடையாது.

My soul hath been redeemed from the gall of bitterness and bonds of iniquity. I was in the darkest abyss; but now I behold the marvelous light of God. My soul was racked with eternal torment; but I am snatched, and my soul is pained no more.

30 நான் என் மீட்பரைத் தள்ளி, நம் பிதாக்களால் பேசப்பட்டவைகளை மறுத்தேன்; ஆனால் இப்பொழுது தன்னால் சிருஷ்டிக்கப்பட்ட ஒவ்வொரு சிருஷ்டியையும் அவர் நினைவுகூருகிறாரென்றும், அவர் வருவார் என்றும் அவர்கள் எதிர்பார்க்கலாம், அவர் தம்மையே சகலமானோருக்கும் வெளிப்படுத்துவார்.

I rejected my Redeemer, and denied that which had been spoken of by our fathers; but now that they may foresee that he will come, and that he remembereth every creature of his creating, he will make himself manifest unto all.

31 ஆம், ஒவ்வொரு முழங்காலும் முடங்கும். ஒவ்வொரு நாவும் அவருக்கு முன்பாக அறிக்கையிடும். ஆம், கடைசி நாளிலே அவரால் நியாயம் விசாரிக்கப்படும்படி சகல மனுஷரும் நிற்கும்போது, அவரே தேவனென்று அறிக்கையிடுவார்கள். பின்பு உலகத்திலே தேவனை அறியாமல் ஜீவிக்கிறவர்கள் தங்கள் மீது கொடுக்கப்பட்ட என்றுமுள்ள தண்டனையின் நியாயத்தீர்ப்பு, நியாயமானதென்று அறிக்கையிடுவார்கள்; அவர்கள் அதிர்ந்து, நடுங்கி, சகலத்தையும் காணவல்ல அவர் கண்களின் பார்வைக்குக் கீழே சுருங்கிக்கொள்வார்கள்.

Yea, every knee shall bow, and every tongue confess before him. Yea, even at the last day, when all men shall stand to be judged of him, then shall they confess that he is God; then shall they confess, who live without God in the world, that the judgment of an everlasting punishment is just upon them; and they shall quake, and tremble, and shrink beneath the glance of his all-searching eye.

32 இப்பொழுதும், அந்தப்படியே, இந்த சமயம் முதற்கொண்டு ஆல்மாவும் ஜனங்களுக்கு போதிக்கத்துவங்கி தூதன் தோன்றியபோது அவனோடு கூட இருந்தவர்களும் தேசம் முழுவதையும் சுற்றித் தாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிற காரியங்களை சகல ஜனங்களுக்கும் அறிவித்து, அவிசுவாசிகளால் பெரிதும் துன்பப்படுத்தப்பட்டும், அவர்களில் அநேகரால் அடிக்கப்பட்டும், அதிக உபத்திரவங்களின் மத்தியிலும் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கத் துவங்கினார்கள்.

And now it came to pass that Alma began from this time forward to teach the people, and those who were with Alma at the time the angel appeared unto them, traveling round about through all the land, publishing to all the people the things which they had heard and seen, and preaching the word of God in much tribulation, being greatly persecuted by those who were unbelievers, being smitten by many of them.

33 இவை எல்லாவற்றையும் பொருட்படுத்தாமல், ஆறுதலையும் தங்கள் விசுவாசத்தின் உறுதியையும் சபைக்கு அளித்து, அவர்கள் நீடிய சாந்தத்தோடும், வேதனையிலும் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுமாறு புத்தி சொன்னார்கள்.

But notwithstanding all this, they did impart much consolation to the church, confirming their faith, and exhorting them with long-suffering and much travail to keep the commandments of God.

34 அவர்களுள் நால்வர் மோசியாவின் குமாரர்களாயிருந்தார்கள்; அம்மோன், ஆரோன், ஓம்னர், ஈம்னி என்பது அவர்களுடைய பெயர்கள்; இவைகள் மோசியாவின் குமாரர்களின் பெயர்கள்.

And four of them were the sons of Mosiah; and their names were Ammon, and Aaron, and Omner, and Himni; these were the names of the sons of Mosiah.

35 அவர்கள் சாரகெம்லா தேசம் முழுவதிலும், மோசி-
யா ராஜாவின் ஆட்சிக்குக் கீழிருந்த எல்லா ஜனங்-
களுக்குள்ளும் பிரயாணம்பண்ணி, சபைக்குத்
தாங்கள் செய்திருந்த சகல குறைகளையும் ஊக்-
கத்தோடே நிவர்த்தி செய்து, தங்களின் சகல பாவங்-
களையும் அறிக்கையிட்டு. தாங்கள் கண்ட சகல
காரியங்களையும் பிரஸ்தாபம்பண்ணி, அவற்றுக்-
கு செவிகொடுக்க விரும்பின எல்லோருக்கும் தீர்க்-
கதரிசனங்களையும் வேதங்களையும் விவரித்தார்-
கள்.
36 இப்படியாக அவர்கள் அநேகரை சத்தியத்தின்
ஞானத்திற்கும், ஆம், தங்களின் மீட்பருடைய ஞா-
னத்திற்கும் கொண்டுவருவதில், தேவனுடைய
கரங்களிலே கருவிகளாயிருந்தார்கள்.
37 அவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்! ஏனெ-
னில் அவர்கள் சமாதானத்தை பிரஸ்தாபப்படுத்தி-
னார்கள்; நன்மையான நற்செய்திகளை பிரஸ்தா-
பப்படுத்தினார்கள்; கர்த்தர் ராஜரீகம் பண்ணுகி-
றாரென்று ஜனங்களுக்கு அறிவித்தார்கள்.

And they traveled throughout all the land of Zarahemla, and among all the people who were under the reign of king Mosiah, zealously striving to repair all the injuries which they had done to the church, confessing all their sins, and publishing all the things which they had seen, and explaining the prophecies and the scriptures to all who desired to hear them.

And thus they were instruments in the hands of God in bringing many to the knowledge of the truth, yea, to the knowledge of their Redeemer.

And how blessed are they! For they did publish peace; they did publish good tidings of good; and they did declare unto the people that the Lord reigneth.

## மோசியா 28

1 இப்பொழுது, அந்தப்படியே, இந்தக் காரியங்கள் அனைத்தையும் மோசியாவின் குமாரர்கள் செய்த பின்பு, அவர்கள் தங்களோடு சிலரை கூட்டிக்கொண்டு தங்கள் தகப்பனாகிய ராஜாவினிடத்திலே திரும்பிப்போய், தாங்கள் தெரிந்துகொண்ட சிலரோடு லாமானியர்களாகிய தங்கள் சகோதரர்களுக்கு தாங்கள் கேட்ட காரியங்களைப் பிரசங்கித்து, தேவவசனத்தை அவர்களுக்கு பகிர்ந்தளிக்க, நேபியின் தேசத்திற்குச் செல்வதற்கு தங்களை அவன் அனுமதிக்க வேண்டுமென விரும்பினார்கள்.

2 அது ஒருவேளை நேபியர்களிடம் கொண்டிருந்த அவர்களின் பகையை நீக்கிப்போட்டு, அவர்கள் தேவனாகிய தங்கள் கர்த்தரிலே களிகூர்ந்து, அவர்கள் ஒருவரோடொருவர் நேசமாயிருந்து, அவர்களுக்கு தேவனாகிய தங்கள் கர்த்தர் கொடுத்த தேசத்தில், எந்த ஒரு பிணக்குமில்லாதிருக்கும்படிக்கு, அவர்களை தேவனாகிய தங்கள் கர்த்தருடைய ஞானத்திற்குக் கொண்டுவரவும், அவர்களுடைய பிதாக்களின் அக்கிரமங்களை அவர்களுக்கு உணர்த்தவும் சித்தமாயிருந்தார்கள்.

3 இப்பொழுதும் அவர்களால் எந்த ஒரு மனுஷ ஆத்துமாவும் அழிந்துபோவதை தாங்கிக்கொள்ளமுடியாததால், எல்லா சிருஷ்டிக்கும் இரட்சிப்பு அறிவிக்கப்படவேண்டும் என்று வாஞ்சித்தார்கள்; ஆம், எந்த ஆத்துமாவும் நித்திய வேதனையை சகிக்கவேண்டும், என்ற எண்ணம் கூட அவர்களை நடுங்கவும் திகிலடையவும் செய்தது.

4 அவர்கள் பாவிகளிலே கொடிய பாவிகளாயிருந்ததினால் கர்த்தருடைய ஆவி அவர்கள்மீது இவ்விதமாக கிரியை செய்தது. கர்த்தர் தம்முடைய எல்லையற்ற இரக்கத்தினாலே அவர்களைத் தப்பவிடுவது ஏற்றதெனக் கண்டார். இருப்பினும் அவர்களின் அக்கிரமங்களினிமித்தம், அவர்கள் என்றென்றுமாய் புறம்பே தள்ளிவிடப்படுவார்கள் என்று பயந்து, அதிகமாய் துன்பப்பட்டு, ஆத்துமாவின் வியாகுலத்தால் கஷ்டப்பட்டார்கள்.

5 அந்தப்படியே, நேபியின் தேசத்திற்கு அவர்கள் போகும்படி தங்களுடைய தகப்பனிடத்திலே அநேக நாட்களாய் கெஞ்சினார்கள்.

6 மோசியா ராஜா தன் குமாரர்கள் லாமானியர்களுக்குள்ளே சென்று வார்த்தையைப் பிரசங்கிக்க தான் அனுப்பவேண்டுமா, என்று, கர்த்தரிடத்திலே வினவினான்.

## Mosiah 28

Now it came to pass that after the sons of Mosiah had done all these things, they took a small number with them and returned to their father, the king, and desired of him that he would grant unto them that they might, with these whom they had selected, go up to the land of Nephi that they might preach the things which they had heard, and that they might impart the word of God to their brethren, the Lamanites—

That perhaps they might bring them to the knowledge of the Lord their God, and convince them of the iniquity of their fathers; and that perhaps they might cure them of their hatred towards the Nephites, that they might also be brought to rejoice in the Lord their God, that they might become friendly to one another, and that there should be no more contentions in all the land which the Lord their God had given them.

Now they were desirous that salvation should be declared to every creature, for they could not bear that any human soul should perish; yea, even the very thoughts that any soul should endure endless torment did cause them to quake and tremble.

And thus did the Spirit of the Lord work upon them, for they were the very vilest of sinners. And the Lord saw fit in his infinite mercy to spare them; nevertheless they suffered much anguish of soul because of their iniquities, suffering much and fearing that they should be cast off forever.

And it came to pass that they did plead with their father many days that they might go up to the land of Nephi.

And king Mosiah went and inquired of the Lord if he should let his sons go up among the Lamanites to preach the word.

7 கர்த்தர் மோசியாவை நோக்கி: அவர்களுடைய வார்த்தைகளை அநேகர் விசுவாசிக்கப்போவதால், அவர்கள் செல்வார்களாக; அவர்கள் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்; நான் உன் குமாரர்களை லாமானியர்களின் கைகளுக்கு விலக்கிக் காப்பேன், என்றார்.

And the Lord said unto Mosiah: Let them go up, for many shall believe on their words, and they shall have eternal life; and I will deliver thy sons out of the hands of the Lamanites.

8 அந்தப்படியே, அவர்கள் சென்று, தாங்கள் வேண்டிக்கொண்டதின்படியே செய்யும்படி, மோசியா அனுமதித்தான்.

And it came to pass that Mosiah granted that they might go and do according to their request.

9 லாமானியர்களுக்குள் வார்த்தையைப் பிரசங்கிக்க வனாந்தரத்திற்குள்ளே அவர்கள் தங்கள் பிரயாணத்தை மேற்கொண்டார்கள்; இனி அவர்களின் நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு விவரத்தை நான் கொடுக்கிறேன்.

And they took their journey into the wilderness to go up to preach the word among the Lamanites; and I shall give an account of their proceedings hereafter.

10 இப்பொழுதும் மோசியா ராஜாவின் குமாரருக்குள் எவரும் ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, அதனால் ராஜ்யபாரத்தை ஏற்க எவருமில்லாமலிருந்தார்கள்

Now king Mosiah had no one to confer the kingdom upon, for there was not any of his sons who would accept of the kingdom.

11 ஆதலால் அவன் பித்தளைத் தகடுகளின்மீது பதிக்கப்பட்டிருந்த பதிவேடுகளையும், நேபியின் தகடுகளையும், லிம்கி ஜனத்தால் கண்டெடுக்கப்பட்டு, லிம்கியின் கரத்தால் இவனுக்குக் கொடுக்கப்பட்ட தங்கத் தகடுகளையும் மொழிபெயர்த்து, எழுதப்படச் செய்து, தேவனுடைய கட்டளைக்கு ஏற்ப பாதுகாத்து வைத்த எல்லாவற்றையும் எடுத்தான்.

Therefore he took the records which were engraven on the plates of brass, and also the plates of Nephi, and all the things which he had kept and preserved according to the commandments of God, after having translated and caused to be written the records which were on the plates of gold which had been found by the people of Limhi, which were delivered to him by the hand of Limhi;

12 தன் ஜனத்தின் பேராவலினிமித்தம் இதைச் செய்தான். ஏனெனில் அழிக்கப்பட்ட ஜனங்களைக் குறித்து அறிய அவர்கள் அளவிற்கதிகமாய் வாஞ்சையுடையவர்களாயிருந்தார்கள்.

And this he did because of the great anxiety of his people; for they were desirous beyond measure to know concerning those people who had been destroyed.

13 இப்பொழுதும் ஒரு வில்லின் இரண்டு முனைகளிலும் கட்டப்பட்டிருந்த, அந்த இரண்டு கற்களைக்கொண்டு அவைகளை மொழிபெயர்த்தான்.

And now he translated them by the means of those two stones which were fastened into the two rims of a bow.

14 இப்பொழுது இந்தக் காரியங்கள் ஆதியிலிருந்தே ஆயத்தம் பண்ணப்பட்டு, மொழிபெயர்க்கும் நோக்கத்தோடு தலைமுறை தலைமுறைகளாய் கைமாற்றப்பட்டு வந்தன

Now these things were prepared from the beginning, and were handed down from generation to generation, for the purpose of interpreting languages;

15 இந்த தேசத்தை சுதந்தரிக்கும் ஒவ்வொரு சிருஷ்டிக்கும், தம் ஜனங்களினுடைய அக்கிரமங்களையும், அருவருப்புகளையும் கர்த்தர் தெரிவிக்கும்படி, அவருடைய கரத்தால் இவை வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டன.

And they have been kept and preserved by the hand of the Lord, that he should discover to every creature who should possess the land the iniquities and abominations of his people;

16 பூர்வ காலங்களைப்போலவே, இவைகளை வைத்திருக்கிறவர்கள் ஞானதிருஷ்டிக்காரர் என்று அழைக்கப்படுகிறார்கள்.

And whosoever has these things is called seer, after the manner of old times.

17 இப்பதிவேடுகளை மோசியா மொழிபெயர்த்து மு-
டித்த பின்பு, இதோ, அவை அழிக்கப்பட்டுப்போன,
ஒரு ஜனத்தாருடைய வரலாற்றைக் கொடுத்தது.
அவர்கள் நிர்மூலமாக்கப்பட்ட சமயமுதல், அதற்கு
அதிமுன்னமே சம்பவித்ததான ஆதாமின் சிருஷ்டி
துவங்கி கர்த்தர் ஜனங்களுடைய பாஷையைத் தா-
றுமாறாக்கி, அவர்களை பூமியின் மீதெங்கும் சிதற-
டிக்கப்பண்ணின காலமாகிய, இதோ, அழிக்கப்பட்-
டுப்போன, ஜனத்தாருடைய வரலாற்றைக் கொடுத்-
தது. அவர்கள் நிர்மூலமாக்கப்பட்ட சமயமுதல்,
அதற்கு அதிமுன்னமே சம்பவித்ததான ஆதாமின்
சிருஷ்டி துவங்கி கர்த்தர் ஜனங்களுடைய பாஷை-
யைத் தாறுமாறாக்கி, அவர்களால் கோபுரம் கட்டப்-
பெற்ற காலவரைக்குமான ஒரு விவரத்தைக் கொ-
டுத்தது.

Now after Mosiah had finished translating these records, behold, it gave an account of the people who were destroyed, from the time that they were destroyed back to the building of the great tower, at the time the Lord confounded the language of the people and they were scattered abroad upon the face of all the earth, yea, and even from that time back until the creation of Adam.

18 இப்பொழுது இந்த விவரம் மோசியாவின் ஜனத்-
தை மிகவும் துக்கப்படச் செய்தது. ஆம், அவர்கள்
துக்கத்தால் நிரப்பப்பட்டார்கள்; இருப்பினும் அது
அவர்களுக்கு அதிக ஞானத்தை கொடுத்தது, அதி-
னிமித்தம் அவர்கள் களிகூர்ந்தார்கள்.

Now this account did cause the people of Mosiah to mourn exceedingly, yea, they were filled with sorrow; nevertheless it gave them much knowledge, in the which they did rejoice.

19 இந்த விவரம் இனி எழுதப்படும்; ஏனெனில்
இதோ, இந்த விவரத்திலே எழுதப்படுகிற காரியங்-
கள் எல்லாவற்றையும் குறித்து, சகல ஜனங்களும்
தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாயிருக்கி-
றது.

And this account shall be written hereafter; for behold, it is expedient that all people should know the things which are written in this account.

20 இப்பொழுதும், நான் உங்களுக்குச் சொன்னது-
போல, மோசியா ராஜா இவைகளைச் செய்த பின்பு,
அவன் பித்தளைத் தகடுகளையும், தான் வைத்தி-
ருந்த எல்லாவற்றையும் எடுத்து, ஆல்மாவின் கு-
மாரனாகிய ஆல்மாவினுடைய பொறுப்பிலே ஒப்-
படைத்தான்; ஆம், சகல பதிவேடுகளையும், வி-
யாக்கியான கருவிகளையும் அவனிடம் கொடுத்து
அவைகளை அவன் பாதுகாத்து வைத்திருக்க-
வேண்டுமென்றும், ஜனத்தினுடைய குறிப்புகளை
எழுதி வைத்துக்கொண்டு, எருசலேமைவிட்டு லே-
கி சென்ற காலத்திலிருந்து தலைமுறை தலைமு-
றை தோறும் கொடுக்கப்பட்டு வந்ததுபோல, இவை-
களையும் அவன் வழிவழியாய் கொடுக்கவேண்டு-
மென்றும் கட்டளையிட்டான்.

And now, as I said unto you, that after king Mosiah had done these things, he took the plates of brass, and all the things which he had kept, and conferred them upon Alma, who was the son of Alma; yea, all the records, and also the interpreters, and conferred them upon him, and commanded him that he should keep and preserve them, and also keep a record of the people, handing them down from one generation to another, even as they had been handed down from the time that Lehi left Jerusalem.

## மோசியா 29

1 இப்பொழுது இதை மோசியா செய்த பின்பு, தேசம்
முழுவதும் எல்லா ஜனங்களுக்குள்ளும், ராஜா-
வாக யார் இருக்கவேண்டுமென்ற அவர்களுடைய
விருப்பத்தை அறிய ஆவலுள்ளவனாய் அறிக்-
கையை அனுப்பினான்.
2 அந்தப்படியே, ஜனங்கள் தங்கள் விருப்பத்தை
தெரிவித்து, உமது குமாரனாகிய ஆரோன் எங்களு-
டைய ராஜாவாகவும் அதிகாரியாகவும் இருக்க வி-
ரும்புகிறோம், என்று ஜனங்களின் குரல் வந்தது.
3 இப்பொழுது ஆரோன் நேபியர்களின் தேசத்திற்கு
போயிருந்தமையால், ராஜா அவன்மீது ராஜ்யபா-
ரத்தை சூட்டமுடியவில்லை; ஆரோனும் தன் மீது
ராஜ்யபாரத்தை எடுத்துக்கொள்ள விரும்பவில்-
லை; மோசியாவின் குமாரர்களிலே எவரும் தங்கள்
மீது ராஜ்யபாரத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாத-
வர்களாயிருந்தார்கள்.
4 ஆதலால் மோசியா ராஜா ஜனங்களுக்குள்ளே
மறுபடியும் அனுப்பினான்; ஆம், ஒரு எழுதப்பட்ட
செய்தியை ஜனங்களுக்குள்ளே அனுப்பினான்.
எழுதப்பட்ட வார்த்தைகள் இவைகளே.
5 இதோ, என் ஜனமே, நான் உங்களை என் சகோத-
ரர்களாக எண்ணுகிறேன். ராஜா ஒருவர் இருக்க-
வேண்டுமென்று விரும்புவதால், அதைக்குறித்து
சிந்திக்கவும் எண்ணவும் வேண்டுமென வாஞ்சிக்-
கிறேன்.
6 இப்பொழுது நான் உங்களுக்கு அறிவிப்பது என்-
னவெனில், ராஜ்யம் எவனுக்கு நியாயப்படி சொந்-
தமானதாயிருக்கிறதோ, அவன், தன் மீது ராஜ்யபா-
ரத்தை ஏற்றுக்கொள்ளாமல் மறுத்திருக்கிறான்.
7 இப்பொழுது அவனுக்குப் பதிலாக வேறொரு-
வன் நியமிக்கப்பட்டால், இதோ, உங்களுக்குள்ளே
பிணக்குகள் ஏற்படுமென்று நான் அஞ்சுகிறேன்.
யாருக்குத் தெரியும். தனக்கு இந்த ராஜ்யம் சொந்த-
மானதென்று என் குமாரன் உக்கிரம்கொண்டு, இந்த
ஜனங்களில் சிலரை தனக்குப் பின்னே அழைத்துச்
சென்று, அதிகமாய் இரத்தம் சிந்துதலுக்கும், கர்த்த-
ருடைய வழியைப் புரட்டுதலுக்கும் காரணமாயி-
ருந்து, அநேக ஜனங்களுடைய ஆத்துமாக்களை
அழிக்கலாம் அல்லவா.
8 இப்பொழுதும் ஞானமாக இந்தக் காரியங்களை
சிந்தித்துப் பார்ப்போம் என்று நான் உங்களுக்குச்
சொல்கிறேன், ஏனெனில் என் குமாரனை அழிக்க
நமக்கு எந்த உரிமையுமில்லை. அதேபோல மற்-
றொருவன் இவனுடைய ஸ்தானத்திலே நியமிக்கப்-
பட்டால், அவனையும் அழித்துப்போட நமக்கு எந்த
உரிமையும் இருக்கக்கூடாது.

## Mosiah 29

Now when Mosiah had done this he sent out throughout all the land, among all the people, desiring to know their will concerning who should be their king.

And it came to pass that the voice of the people came, saying: We are desirous that Aaron thy son should be our king and our ruler.

Now Aaron had gone up to the land of Nephi, therefore the king could not confer the kingdom upon him; neither would Aaron take upon him the kingdom; neither were any of the sons of Mosiah willing to take upon them the kingdom.

Therefore king Mosiah sent again among the people; yea, even a written word sent he among the people. And these were the words that were written, saying:

Behold, O ye my people, or my brethren, for I esteem you as such, I desire that ye should consider the cause which ye are called to consider—for ye are desirous to have a king.

Now I declare unto you that he to whom the kingdom doth rightly belong has declined, and will not take upon him the kingdom.

And now if there should be another appointed in his stead, behold I fear there would rise contentions among you. And who knoweth but what my son, to whom the kingdom doth belong, should turn to be angry and draw away a part of this people after him, which would cause wars and contentions among you, which would be the cause of shedding much blood and perverting the way of the Lord, yea, and destroy the souls of many people.

Now I say unto you let us be wise and consider these things, for we have no right to destroy my son, neither should we have any right to destroy another if he should be appointed in his stead.

9 என் குமாரன் மறுபடியும் தனது மேட்டிமைக்கும், வீணான காரியங்களுக்கும் திரும்புவானேயாகில், தான் சொன்ன காரியங்களிலிருந்து மாறுபட்டு, ராஜ்யத்தை உரிமை பாராட்டுவான். அது அவனையும் இந்த ஜனத்தையும் அதிக பாவங்களைச் செய்யச் செய்யும்.

And if my son should turn again to his pride and vain things he would recall the things which he had said, and claim his right to the kingdom, which would cause him and also this people to commit much sin.

10 இப்பொழுது நாம் ஞானமாயிருந்து, இந்தக் காரியங்களை எதிர்நோக்கி இந்த ஜனத்திற்கு சமாதானத்தை உண்டுபண்ணுகிறவைகளையே செய்வோமாக.

And now let us be wise and look forward to these things, and do that which will make for the peace of this people.

11 ஆதலால் என் மீதி நாட்கள் முழுவதிலும் நானே உங்கள் ராஜாவாயிருப்பேன்; இருப்பினும் நம்முடைய சட்டத்தின்படி இந்த ஜனத்தை நியாயம் விசாரிக்க நியாயாதிபதிகளை ஏற்படுத்துவோம்; நாம் இந்த ஜனத்தினுடைய கட்டுப்பாடுகளை சீர்திருத்துவோம். ஏனெனில் தேவனுடைய கட்டளைகளுக்கேற்ப இந்த ஜனத்தாரை நியாயம் விசாரிக்கும் ஞானவான்களை நாம் நியாயாதிபதிகளாய் நியமிப்போம்.

Therefore I will be your king the remainder of my days; nevertheless, let us appoint judges, to judge this people according to our law; and we will newly arrange the affairs of this people, for we will appoint wise men to be judges, that will judge this people according to the commandments of God.

12 இப்பொழுது, ஒருவன் மனுஷனால் நியாயம் விசாரிக்கப்படுவதைக்காட்டிலும் தேவனால் நியாயம் விசாரிக்கப்படுவதே மேல். ஏனெனில் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் எப்பொழுதும் நியாயமுள்ளதாயிருக்கும். ஆனால் மனுஷனுடைய தீர்ப்புகளோ எப்பொழுதும் நியாயமுள்ளதாயிருக்காது.

Now it is better that a man should be judged of God than of man, for the judgments of God are always just, but the judgments of man are not always just.

13 ஆதலால், உங்களுடைய ராஜாக்கள் நியாயவான்களாயிருந்து தேவனுடைய நியாயப்பிரமாணங்களை ஸ்தாபிக்கப்பண்ணி, அவருடைய கட்டளைகளுக்கேற்ப இந்த ஜனத்தை நியாயம் விசாரிப்பவர்களாயும், இந்த ஜனத்திற்காக என் தகப்பன் பென்யமீன் செய்ததைப்போல உங்களின் ராஜாக்களாயிருக்கப் போகிறவர்கள் செய்தால், அப்படியே ஆட்சி செய்வதற்கு ராஜாக்கள் எப்போதும் நீங்கள் பெற்றிருப்பது அவசியம் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Therefore, if it were possible that you could have just men to be your kings, who would establish the laws of God, and judge this people according to his commandments, yea, if ye could have men for your kings who would do even as my father Benjamin did for this people—I say unto you, if this could always be the case then it would be expedient that ye should always have kings to rule over you.

14 நான்தானே உங்களுக்கு தேவனுடைய கட்டளைகளைப் போதித்து, எந்த ஒரு யுத்தமோ, வாக்குவாதமோ, திருட்டோ, களவோ, கொள்ளையோ, கொலையோ மற்ற எந்தவித அக்கிரமும் இல்லாமலிருக்க, தேசமுழுவதிலும் சமாதானத்தை ஸ்தாபிக்கும்படி சகல வல்லமையோடும், நான் பெற்றிருக்கிற திறமைகளோடும் முயற்சித்திருக்கிறேன்.

And even I myself have labored with all the power and faculties which I have possessed, to teach you the commandments of God, and to establish peace throughout the land, that there should be no wars nor contentions, no stealing, nor plundering, nor murdering, nor any manner of iniquity;

15 அக்கிரமத்தை எவன் செய்திருந்தாலும் அவன் செய்த குற்றத்திற்குத் தக்கதாய், நம்முடைய பிதாக்களால் நமக்குக் கொடுக்கப்பட்ட சட்டத்தின்படி அவனைத் தண்டித்தேன்.

And whosoever has committed iniquity, him have I punished according to the crime which he has committed, according to the law which has been given to us by our fathers.

16 இப்பொழுதும், எல்லா மனுஷரும் நியாயவான்களாயில்லாததினிமித்தம், உங்களை ஆட்சி செய்வதற்கு ஒரு ராஜாவோ அல்லது ராஜாக்களோ அவசியமில்லை, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Now I say unto you, that because all men are not just it is not expedient that ye should have a king or kings to rule over you.

17 ஏனெனில் இதோ, ஒரு துன்மார்க்கனான ராஜா எவ்வளவு அதிக அக்கிரமங்களைச் செய்யத் தூண்டுகிறான், ஆம் அது எவ்வளவு பெரிய அழிவாயிருக்கிறது!

For behold, how much iniquity doth one wicked king cause to be committed, yea, and what great destruction!

18 நோவா ராஜாவையும், அவன் அக்கிரமங்களையும், அவன் அருவருப்புகளையும், அவன் ஜனங்களுடைய அக்கிரமங்களையும் அருவருப்புகளையும் எண்ணிப்பாருங்கள். இதோ எவ்வளவு பெரிய அழிவு அவர்களின் மேல் வந்தது. அவர்களின் அக்கிரமங்களினிமித்தம் அவர்கள் அடிமைத்தனத்திற்குள்ளாக கொண்டுவரப்பட்டார்கள்.

Yea, remember king Noah, his wickedness and his abominations, and also the wickedness and abominations of his people. Behold what great destruction did come upon them; and also because of their iniquities they were brought into bondage.

19 அவர்களின் சர்வஞானசிருஷ்டி மத்தியஸ்தம் இல்லாமலும், அவர்களுடைய உருக்கமான மனந்திரும்புதல் நிமித்தமும் இல்லாமல் இருக்குமேயானால் அவர்கள் இதுவரைக்கும் தவிர்க்க இயலாமல் அடிமைத்தனத்திலேயே இருக்க வேண்டும்.

And were it not for the interposition of their all-wise Creator, and this because of their sincere repentance, they must unavoidably remain in bondage until now.

20 ஆனால் இதோ, அவருக்கு முன்பாக அவர்கள் தங்களை தாழ்த்தியதினாலேயே அவர் அவர்களை விடுவித்தார்; அவர்கள் அவரிடத்திலே ஊக்கமாய்க் கூக்குரலிட்டதினிமித்தம் அடிமைத்தனத்திலிருந்து அவர் அவர்களை விடுவித்தார்; இவ்விதமாய் கர்த்தர் தன் மீது தங்கள் நம்பிக்கையை வைக்கிறவர்களுக்கு நேராக இரக்கத்தின் கரத்தை நீட்டி, தம்முடைய வல்லமையாலே மனுபுத்திரருக்குள்ளே எல்லா சூழ்நிலைகளிலும் கிரியை செய்கிறார்.

But behold, he did deliver them because they did humble themselves before him; and because they cried mightily unto him he did deliver them out of bondage; and thus doth the Lord work with his power in all cases among the children of men, extending the arm of mercy towards them that put their trust in him.

21 இதோ, ஒரு அக்கிரமமான ராஜாவை அதிக வாக்குவாதங்களாலும், அதிக இரத்தம் சிந்துதலினாலுமேயன்றி, அவனை ஆட்சியிலிருந்து உங்களால் நீக்கமுடியாது, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And behold, now I say unto you, ye cannot dethrone an iniquitous king save it be through much contention, and the shedding of much blood.

22 ஏனெனில் இதோ, அவனது சிநேகிதர்களும் அக்கிரமத்திலே இருக்கிறார்கள். அவனைச் சுற்றிலும் தன் காவலாளிகளை வைத்திருக்கிறான்; தனக்கு முன்பு நீதியிலே ஆட்சி செய்தவர்களின் சட்டங்களைக் கிழித்துப் போடுகிறான்; அவன் தேவனுடைய கட்டளைகளைத் தன் காலால் மிதித்துப் போடுகிறான்.

For behold, he has his friends in iniquity, and he keepeth his guards about him; and he teareth up the laws of those who have reigned in righteousness before him; and he trampleth under his feet the commandments of God;

23 தன் சொந்த துன்மார்க்கத்தின்படியே சட்டங்களை அமலாக்குகிறான். அவைகளைத் தன் ஜனங்களுக்குள்ளே அனுப்புகிறான்; ஆம், தன் சட்டத்துக்குக் கீழ்ப்படியாதவனை சங்கரிக்கப்படும்படி செய்வான். தனக்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்களுக்கு எதிராக தன் சேனையை யுத்தத்திற்கு அனுப்பி, தன்னால் இயலுமானால் அவர்களை அழித்துப்போடுவான்; இவ்விதமாய் அநீதியுள்ள ராஜா எல்லா நீதியான வழிகளையும் புரட்டிப்போடுகிறான்.

And he enacteth laws, and sendeth them forth among his people, yea, laws after the manner of his own wickedness; and whosoever doth not obey his laws he causeth to be destroyed; and whosoever doth rebel against him he will send his armies against them to war, and if he can he will destroy them; and thus an unrighteous king doth pervert the ways of all righteousness.

24 இப்பொழுதும் இதோ, அம்மாதிரியான அருவருப்புகள் உங்கள் மீது வருவது அவசியமற்றதாயிருக்கிறது, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And now behold I say unto you, it is not expedient that such abominations should come upon you.

25 ஆதலால் கர்த்தருடைய கரத்தால் நம்முடைய பிதாக்களுக்குக் கொடுக்கப்பட்டு, அவர்களால் உங்களுக்கு கொடுக்கப்பட்டதுமான சரியான சட்டங்களின்படியே நீங்கள் நியாயம் விசாரிக்கப்படுவதற்கு, இந்த ஜனத்தின் குரலால் நியாயாதிபதிகளைத் தேர்ந்தெடுங்கள்.

26 இப்பொழுது நீதிக்கு புறம்பான எந்த ஒரு காரியத்தையும் ஜனங்கள் விரும்புவது அசாதாரணமே. ஆனால் ஜனங்களில் சிலர் நீதிக்கு புறம்பானவைகளை வாஞ்சிப்பது பொதுவானதே; ஆதலால் ஜனங்களுடைய குரலால் உங்கள் வேலைகளைச் செய்ய இதை நீங்கள் கைக்கொண்டு உங்களுடைய சட்டமாக்குங்கள்.

27 ஜனங்களுடைய குரல், அக்கிரமத்தை தேர்ந்தெடுக்கும் காலம் வருமானால், தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் உங்கள்மீது வருவதற்கு இதுவே சமயமாயிருக்கிறது. ஆம், இதுவரை அவர் இந்த தேசத்திலே கொண்டுவந்ததைப்போல மகா அழிவினால் உங்களை சந்திக்கும், சமயம் இதுவே.

28 இப்பொழுது உங்களுக்கு நியாயாதிபதிகள் இருந்து, அவர்கள் உங்களுக்கு கொடுக்கப்பட்ட சட்டத்தின்படி நியாயம் விசாரிக்காமல் போவார்களானால், ஒரு உயர் நியாயாதிபதியால் அவர்கள் விசாரிக்கப்படும்படி நீங்கள் செய்யலாம்.

29 உங்களுடைய உயர் நியாயாதிபதிகள் நீதிக்கடுத்த நியாயவிசாரணைகளைச் செய்யாமல் போவார்களானால், உங்களில் கீழான நியாயாதிபதிகளில் சிறிய எண்ணிக்கையிலானோர் ஒன்றாய்க்கூடும்படி செய்வீர்களாக. அப்பொழுது அவர்கள் ஜனத்தினுடைய குரலுக்கேற்ப உங்களுடைய உயர் நியாயாதிபதிகளை நியாயம் விசாரிப்பார்களாக.

30 இந்தக் காரியங்களைக் கர்த்தரிடத்திலுள்ள பயத்திலே செய்யும்படி உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; உங்களுக்கு ராஜா இராமலிருக்கவும், நீங்கள் இந்தக் காரியங்களைச் செய்யும்படிக்கும் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்; இந்த ஜனங்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் செய்வார்களெனில், அவைகள் அவர்களின் தலைகள் மேல் சுமரும்.

31 ஏனெனில் இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அநேக ஜனங்களினுடைய பாவங்கள் அவர்களின் ராஜாக்களின் அக்கிரமங்களினால் செய்யப்பட்டவை; ஆதலால் அவர்களின் அக்கிரமங்கள் அவர்களுடைய ராஜாக்களின் சிரசுகளின் மேல் சுமரும்.

Therefore, choose you by the voice of this people, judges, that ye may be judged according to the laws which have been given you by our fathers, which are correct, and which were given them by the hand of the Lord.

Now it is not common that the voice of the people desireth anything contrary to that which is right; but it is common for the lesser part of the people to desire that which is not right; therefore this shall ye observe and make it your law—to do your business by the voice of the people.

And if the time comes that the voice of the people doth choose iniquity, then is the time that the judgments of God will come upon you; yea, then is the time he will visit you with great destruction even as he has hitherto visited this land.

And now if ye have judges, and they do not judge you according to the law which has been given, ye can cause that they may be judged of a higher judge.

If your higher judges do not judge righteous judgments, ye shall cause that a small number of your lower judges should be gathered together, and they shall judge your higher judges, according to the voice of the people.

And I command you to do these things in the fear of the Lord; and I command you to do these things, and that ye have no king; that if these people commit sins and iniquities they shall be answered upon their own heads.

For behold I say unto you, the sins of many people have been caused by the iniquities of their kings; therefore their iniquities are answered upon the heads of their kings.

32 இப்பொழுதும் இந்த சமத்துவமற்ற நிலை இனி-
மேலும் இந்த தேசத்திலே, குறிப்பாக என் ஜனத்திற்-
குள்ளே இருக்கக்கூடாது என விரும்புகிறேன்;
ஆனால் இந்த தேசம் சுதந்தர தேசமாயிருக்கவும்,
இந்த தேசத்திலே நாம் எவ்வளவு காலம் ஜீவித்து, சு-
தந்தரித்திருக்க தேவன் ஏற்றதென்று காண்கிறா-
ரோ, அவ்வளவு காலமளவும், இத்தேசத்தின் மீது
நம்முடைய சந்ததிகள் நிலைக்கும் வரையிலும்,
ஒவ்வொரு மனுஷனும் தன் உரிமைகளையும், சி-
லாக்கியங்களையும் ஒன்றுபோல் அனுபவிக்க
வேண்டுமென்று விரும்புகிறேன்.

And now I desire that this inequality should be no more in this land, especially among this my people; but I desire that this land be a land of liberty, and every man may enjoy his rights and privileges alike, so long as the Lord sees fit that we may live and inherit the land, yea, even as long as any of our posterity remains upon the face of the land.

33 நீதியுள்ள ராஜாவினுடைய சகல துன்பங்களை-
யும் கஷ்டங்களையும், ஆம், அவர்களின் ஜனங்க-
ளுக்காக சகல ஆத்தும வேதனைகளையும், ஜனங்-
களின் எல்லா முணுமுணுப்புகளையும் ராஜாவுக்-
கு தெரிவித்து, இன்னும் அநேக காரியங்களை மோ-
சியா ராஜா அவர்களுக்கு எழுதினான், அவை-
யனைத்தையும் அவர்களுக்கு விளக்கினான்.

And many more things did king Mosiah write unto them, unfolding unto them all the trials and troubles of a righteous king, yea, all the travails of soul for their people, and also all the murmurings of the people to their king; and he explained it all unto them.

34 இந்தக் காரியங்கள் இனி இல்லாமற் போகவேண்-
டுமென்றும், அந்த சுமை எல்லா ஜனங்களின் மீதும்
வந்து, அவனவன் தன் பங்கை சுமக்கவேண்டும்
என்றும், அவர்களுக்குச் சொன்னான்.

And he told them that these things ought not to be; but that the burden should come upon all the people, that every man might bear his part.

35 அவர்களின் மீது ஒரு அநீதியுள்ள ராஜா ஆட்சி
செய்தால் அவர்கள் அடைகிற கஷ்டங்களின் பாத-
கங்களையும் அவர்களுக்குத் தெரிவித்தான்;

And he also unfolded unto them all the disadvantages they labored under, by having an unrighteous king to rule over them;

36 ஆம், அவனுடைய சகல அக்கிரமங்களையும்
அருவருப்புகளையும், யுத்தங்களையும், வாக்கு-
வாதங்களையும், இரத்தம் சிந்துதலையும், திருட்-
டுத்தனங்களையும், கொள்ளைகளையும், வேசித்-
தனங்களையும், விவரிக்கமுடியாத சகலவிதமான
அக்கிரமங்களையும் அவர்களுக்கு எடுத்துரைத்-
தான்; இந்தக் காரியங்கள் தேவனுடைய கட்டளை-
களுக்கு ஒவ்வாதவைகளானதால் இவைகளை
செய்யக்கூடாதென்று அவர்களுக்குச் சொன்னான்.

Yea, all his iniquities and abominations, and all the wars, and contentions, and bloodshed, and the stealing, and the plundering, and the committing of whoredoms, and all manner of iniquities which cannot be enumerated—telling them that these things ought not to be, that they were expressly repugnant to the commandments of God.

37 இப்பொழுதும், அந்தப்படியே, இந்த காரியங்க-
ளை ஜனங்களுக்குள்ளே மோசியா ராஜா அனுப்-
பிய பிறகு, அவனுடைய வார்த்தைகளின் சத்தியத்-
திலே திருப்தியானார்கள்.

And now it came to pass, after king Mosiah had sent these things forth among the people they were convinced of the truth of his words.

38 ஆதலால் ஒரு ராஜா வேண்டுமென்ற தங்களின்
விருப்பங்களை விட்டுவிட்டு, தேசமுழுவதிலும்
இருக்கிற ஒவ்வொரு மனுஷனும், சமமான வாய்ப்-
பை, சமமாக பெற்றிருக்க அதிக ஆவலுள்ளவர்க-
ளானார்கள். ஆம், ஒவ்வொரு மனுஷனும் தன்
சொந்த பாவங்களுக்காக பதிலளிக்க மனமுள்ள-
வனாயிருப்பதை தெரிவித்தான்.

Therefore they relinquished their desires for a king, and became exceedingly anxious that every man should have an equal chance throughout all the land; yea, and every man expressed a willingness to answer for his own sins.

39 ஆதலால், அந்தப்படியே, தங்களுக்குக் கொடுக்-
கப்பட்ட நியாயப்பிரமாணத்தின்படியே தங்களை
நியாயந்தீர்க்கும்படி, நியாயாதிபதிகளைத் தேர்ந்-
தெடுக்க, தங்கள் வாக்குகளைப் போட, அவர்கள்
தேசமுழுவதிலும் ஒன்றாய்க் கூடினார்கள்; தங்க-
ளுக்கு கொடுக்கப்பட்ட சுதந்தரத்தினிமித்தம் மிக-
வும் களிகூர்ந்தார்கள்.

Therefore, it came to pass that they assembled themselves together in bodies throughout the land, to cast in their voices concerning who should be their judges, to judge them according to the law which had been given them; and they were exceedingly rejoiced because of the liberty which had been granted unto them.

40 அவர்கள் மோசியாவின் மீதான அன்பிலே பெ-
லப்பட்டார்கள்; ஆம், மற்ற எந்த மனுஷனைக் காட்-
டிலும் அவனை அதிகமாய் மதித்தார்கள். அவர்க-
ளிடமிருந்து ஐஸ்வரியங்களை பிடுங்காமலும்
இரத்தம் சிந்துதலிலே களிகூராமலும் ஆத்துமாவை
மாசுபடுத்துகிற பொருளின் ஆதாயத்திற்காக எதிர்
நோக்குகிற ஒரு கொடுங்கோலனாயிராமல் தேசத்தி-
லே சமாதானத்தை ஸ்தாபித்து ஜனங்களை சகல
விதமான அடிமைத்தனங்களிலிருந்தும் விடுவிக்-
கும்படிச் செய்ததினிமித்தம் அளவிற்கதிகமாய்
அவனை மதித்தார்கள்.

And they did wax strong in love towards Mosiah; yea, they did esteem him more than any other man; for they did not look upon him as a tyrant who was seeking for gain, yea, for that lucre which doth corrupt the soul; for he had not exacted riches of them, neither had he delighted in the shedding of blood; but he had established peace in the land, and he had granted unto his people that they should be delivered from all manner of bondage; therefore they did esteem him, yea, exceedingly, beyond measure.

41 அந்தப்படியே, அவர்கள்மீது ஆட்சி செய்யவும்,
அல்லது சட்டத்தின்படி அவர்களை நியாயம் விசா-
ரிக்கவும், நியாயாதிபதிகளை நியமித்தார்கள்; தே-
சம் முழுவதிலும் அப்படியே செய்தார்கள்.

And it came to pass that they did appoint judges to rule over them, or to judge them according to the law; and this they did throughout all the land.

42 அந்தப்படியே, தன் தகப்பன், தன் மீது பொறுப்-
பை அளித்து, சபையின் சகல நடவடிக்கைகளைக்
குறித்து பொறுப்பைத் தனக்குக் கொடுத்து, தான்
பிரதான ஆசாரியனாயும் இருந்ததினால், ஆல்மா
முதலாம் தலைமை நியாயாதிபதிபாய் இருக்கும்ப-
டி நியமிக்கப்பட்டான்.

And it came to pass that Alma was appointed to be the first chief judge, he being also the high priest, his father having conferred the office upon him, and having given him the charge concerning all the affairs of the church.

43 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா கர்த்தரு-
டைய வழிகளிலே நடந்து அவருடைய கட்டளைக-
ளைக் கைக்கொண்டு, நீதியுடன் நியாயம் விசாரித்-
தான். தேசம் முழுவதிலும் சமாதானம் தொடர்ந்து
நிலவியது.

And now it came to pass that Alma did walk in the ways of the Lord, and he did keep his commandments, and he did judge righteous judgments; and there was continual peace through the land.

44 இப்படியாக, நேபியர்கள் என்று அழைக்கப்பட்ட
சகல ஜனங்களுக்குள்ளேயும், சாரகெம்லா தேசம்
முழுவதிலும் நியாயாதிபதிகளின் ஆட்சி துவங்கி-
யது; ஆல்மா முதல் தலைமை நியாயாதிபதியாய்
இருந்தான்.

And thus commenced the reign of the judges throughout all the land of Zarahemla, among all the people who were called the Nephites; and Alma was the first and chief judge.

45 இப்பொழுதும், அந்தப்படியே, அவனது தகப்பன்
தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றும்படி
ஜீவித்து, தன்னுடைய எண்பத்திரண்டாவது வய-
தில் மரித்துப்போனான்.

And now it came to pass that his father died, being eighty and two years old, having lived to fulfil the commandments of God.

46 அந்தப்படியே, மோசியாவும் தன் ஆளுகையின்
முப்பத்து மூன்றாம் வருஷத்திலே, அறுபத்தி மூன்-
று வயதாயிருந்து மரித்தான்; மொத்தத்திலே லேகி
எருசலேமைவிட்டு வந்த காலத்திலிருந்து ஐநூற்று
ஒன்பது வருஷங்களாயின.

And it came to pass that Mosiah died also, in the thirty and third year of his reign, being sixty and three years old; making in the whole, five hundred and nine years from the time Lehi left Jerusalem.

47 இவ்விதமாய் நேபியின் ஜனங்கள்மீது ராஜாக்க-
ளின் ஆளுகை முடிவுற்றது. சபையின் ஸ்தாப-
கனான ஆல்மாவின் நாட்களும் இவ்விதமாய் முடி-
வடைந்தது.

And thus ended the reign of the kings over the people of Nephi; and thus ended the days of Alma, who was the founder of their church.

# ஆல்மாவின் குமாரனாகிய ஆல்மாவின் புஸ்தகம்

*நேபியினுடைய ஜனங்களின் மீது முதற் தலைமை நியாயாதிபதியாயும், சபையின் பிரதான ஆசாரியனாயுமிருந்த ஆல்மாவின் குமாரனாகிய ஆல்மா எழுதிய விவரம். நியாயாதிபதிகளின் ஆளுகை, ஜனங்களுக்குள்ளே நடந்த யுத்தங்கள், மற்றும் பிணக்குகளைப்பற்றிய விவரம். அதுமட்டுமன்றி, லாமானியர்களுக்கும் நேபியர்களுக்கும் இடையே நடந்த ஒரு யுத்தத்தைப்பற்றி முதற் தலைமை நியாயாதிபதியாகிய ஆல்மாவின் பதிவேட்டின்படியான ஒரு விவரம்.*

## ஆல்மா 1

1 இப்பொழுது, அந்தப்படியே, இப்போதிலிருந்து, நே-
பியின் ஜனத்தின்மீது நியாயாதிபதிகளினுடைய
முதலாம் வருஷ ஆட்சியில், மோசியா ராஜா நல்ல-
தொரு போராட்டத்தைப் போராடி, தேவனுக்கு முன்-
பாய் சன்மார்க்கனாய் நடந்து, தனக்கு பதிலாக ரா-
ஜரீகம்பண்ண யாரையும் விட்டுச் செல்லாமல், பூ-
லோகத்தார் எல்லோரும் போகும் வழியே போனா-
லும், அவன் சட்டங்களை ஏற்படுத்தியிருந்தான்.
அவைகளும் ஜனங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்-
டன. ஆதலால், அவன் ஏற்படுத்தின சட்டங்களின்-
படி தரித்திருக்க அவர்கள் கடமைப்பட்டவர்களா-
னார்கள்.
2 அந்தப்படியே, நியாயாசனத்திலிருந்து ஆல்மா-
வினுடைய முதல் வருஷ ஆளுகையின்போது,
அவன் சமுகத்திலே பருத்த உடல்வாகும், தன்னு-
டைய மிகுந்த வலிமையினிமித்தம் பிரசித்தம் பெற்-
றவனுமாகிய, ஒருவன் நியாயம் விசாரிக்கப்படும்
பொருட்டு கொண்டுவரப்பட்டான்.
3 அவன் ஜனங்களுக்குள்ளே போய், தேவ வார்த்-
தை என்று அவன் சொல்லிக்கொண்டவற்றை
அவர்களுக்குப் பிரசங்கித்து, சபைக்கு விரோத-
மாய்ப் பேசி, எல்லா ஆசாரியரும், ஆசிரியரும் பிர-
சித்தம்பெற்று விளங்கவேண்டுமென்றும், அவர்-
கள் தங்கள் கைகளினாலே பிரயாசப்படாமல்,
ஜனங்களாலே ஆதரிக்கப்படவேண்டியவர்கள்
என்றும் ஜனங்களிளிடத்திலே அறிவித்தான்.
4 அவன் ஜனங்களிடம், மனுஷர் யாவரையும் கர்த்-
தர் சிருஷ்டித்து, சகல மனுஷரையும் மீட்டுக்-
கொண்டபடியாலே, முடிவிலே மனுஷர் யாவரும்
நித்திய ஜீவனைப்பெறுவார்கள் என்றும், கடைசி
நாளின்போது மனுக்குலம் யாவரும் இரட்சிக்கப்பட
வேண்டும், ஆதலால் அவர்கள் பயமோ நடுக்கமோ
கொள்ளாமல், தங்கள் சிரசுகளை உயர்த்தி, களி-
கூர்ந்திருக்கலாம் என்றும் சாட்சி கொடுத்தான்.

# The Book of Alma the Son of Alma

*The account of Alma, who was the son of Alma, the first and chief judge over the people of Nephi, and also the high priest over the Church. An account of the reign of the judges, and the wars and contentions among the people. And also an account of a war between the Nephites and the Lamanites, according to the record of Alma, the first and chief judge.*

## Alma 1

Now it came to pass that in the first year of the reign of the judges over the people of Nephi, from this time forward, king Mosiah having gone the way of all the earth, having warred a good warfare, walking uprightly before God, leaving none to reign in his stead; nevertheless he had established laws, and they were acknowledged by the people; therefore they were obliged to abide by the laws which he had made.

And it came to pass that in the first year of the reign of Alma in the judgment-seat, there was a man brought before him to be judged, a man who was large, and was noted for his much strength.

And he had gone about among the people, preaching to them that which he termed to be the word of God, bearing down against the church; declaring unto the people that every priest and teacher ought to become popular; and they ought not to labor with their hands, but that they ought to be supported by the people.

And he also testified unto the people that all mankind should be saved at the last day, and that they need not fear nor tremble, but that they might lift up their heads and rejoice; for the Lord had created all men, and had also redeemed all men; and, in the end, all men should have eternal life.

5 அந்தப்படியே, அவன் இவைகளைக்குறித்து
அதிகமாய் போதித்ததினாலே, அநேகர் அவனது
வார்த்தைகளை விசுவாசித்தார்கள். அநேகர்
அவனை ஆதரித்து பணம் கொடுக்கவும் தொடங்-
கினர்.

And it came to pass that he did teach these things so much that many did believe on his words, even so many that they began to support him and give him money.

6 அவன் தன் இருதயத்திலே மேட்டிமையாய், வி-
லையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்தத் தொடங்கி-
னான், தன் உபதேசங்களின்படியே சபை ஒன்றை-
யும் ஸ்தாபிக்க ஆரம்பித்தான்.

And he began to be lifted up in the pride of his heart, and to wear very costly apparel, yea, and even began to establish a church after the manner of his preaching.

7 அந்தப்படியே, அவன் தன் வார்த்தையை விசு-
வாசித்தவர்களுக்கு பிரசங்கிக்கப் போனபோது, தே-
வனுடைய சபையைச் சார்ந்த அவர்களின் ஆசிரி-
யர்களில் ஒருவனைச் சந்தித்தான். சபையைச்
சார்ந்த ஜனங்களை தான் புறம்பே வழிநடத்திச்
செல்லும்படிக்கு அவனோடு கடுமையாய் விவா-
தித்தான். ஆனால் அந்த மனுஷன் தேவனுடைய
வசனங்களைக் கொண்டு புத்திசொல்லி அவனை
எதிர்த்து நின்றான்.

And it came to pass as he was going, to preach to those who believed on his word, he met a man who belonged to the church of God, yea, even one of their teachers; and he began to contend with him sharply, that he might lead away the people of the church; but the man withstood him, admonishing him with the words of God.

8 அந்த மனுஷனுடைய நாமம் கிதியோன் என்பதா-
கும்; அவன் லிம்கியின் ஜனங்களைச் சிறைத்-
தனத்திலிருந்து விடுவிப்பதில் தேவனுடைய கரங்-
களிலே ஒரு கருவியாய் விளங்கியவன்.

Now the name of the man was Gideon; and it was he who was an instrument in the hands of God in delivering the people of Limhi out of bondage.

9 இப்பொழுது, கிதியோன் தேவனுடைய வசனங்க-
ளால் அவனை எதிர்த்து நின்றபடியால், அவன் கி-
தியோன் மேல் உக்கிரம்கொண்டு, தன் பட்டயத்தை
உருவி அவனை வெட்டத் தொடங்கினான். கிதி-
யோன் வயது முதிர்ந்தவனானதால், அவனுடைய
வெட்டுக்களைத் தடுக்க இயலாமல் பட்டயத்தாலே
கொல்லப்பட்டான்.

Now, because Gideon withstood him with the words of God he was wroth with Gideon, and drew his sword and began to smite him. Now Gideon being stricken with many years, therefore he was not able to withstand his blows, therefore he was slain by the sword.

10 அவனைக் கொலை செய்தவன், சபையின்
ஜனங்களால் பிடிக்கப்பட்டு, அவன் செய்த குற்றங்-
களுக்குத்தக்கதாய் நியாயம் விசாரிக்கப்படும் பொ-
ருட்டு ஆல்மாவின் முன்னே கொண்டுவரப்பட்-
டான்.

And the man who slew him was taken by the people of the church, and was brought before Alma, to be judged according to the crimes which he had committed.

11 அந்தப்படியே, அவன் ஆல்மாவின் முன்நின்று,
தனக்காக தைரியத்தோடு வழக்காடினான்.

And it came to pass that he stood before Alma and pled for himself with much boldness.

12 அன்றியும் ஆல்மா அவனை நோக்கி: இதோ இந்த
ஜனங்களுக்குள்ளே ஆசாரிய வஞ்சகம் தோற்று-
விக்கப்பட்டது இதுவே முதல் முறை. இதோ நீ ஆசா-
ரிய வஞ்சகத்தினால் மாத்திரமல்ல, அதை பட்டயத்-
தினாலே நிறைவேற்ற பிரயத்தம் பண்ணினதினி-
மித்தமும் குற்றம் புரிந்திருக்கிறாய். ஆசாரிய வஞ்ச-
கம் இந்த ஜனங்களுக்குள்ளே கட்டாயப்படுத்தப்-
பட்டால், அது அவர்களை முழுவதுமாய் அழித்-
துப்போடும்.

But Alma said unto him: Behold, this is the first time that priestcraft has been introduced among this people. And behold, thou art not only guilty of priestcraft, but hast endeavored to enforce it by the sword; and were priestcraft to be enforced among this people it would prove their entire destruction.

13 ஆம், இந்த ஜனத்திற்குள்ளே அதிக நற்கிரியைக-
ளை புரிந்த நீதிமானுடைய இரத்தத்தைச் சிந்தி-
னாய், உன்னைத் தப்பவிட்டோமாயின், அவன்
இரத்தம் பழிவாங்கும்படியாக எங்கள்மீது வரும்.

And thou hast shed the blood of a righteous man, yea, a man who has done much good among this people; and were we to spare thee his blood would come upon us for vengeance.

14 ஆகையால் எங்களுடைய கடைசி ராஜாவாகிய மோசியாவினால் கொடுக்கப்பட்ட சட்டத்தின்படி, நீ மரணத்திற்கேதுவாய் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறாய்; அது இந்த ஜனங்களாலே ஏற்றுக்கொள்ளப்பட்டாயிற்று; அதினிமித்தம் இந்த ஜனங்கள் சட்டத்தைக் கைக்கொள்ளவேண்டும், என்றான்.

Therefore thou art condemned to die, according to the law which has been given us by Mosiah, our last king; and it has been acknowledged by this people; therefore this people must abide by the law.

15 அந்தப்படியே, அவனை அவர்கள் பிடித்தார்கள், அவன் நாமம் நிகோர் என்பதாகும்; அவர்கள் அவனைப் மேன்தி என்ற மலையின் உச்சிக்கு தூக்கிச் சென்றார்கள். அங்கே அவன், தான் ஜனங்களுக்குப் போதித்தது, தேவனுடைய வசனத்திற்கு விரோதமானதே என்று பூமிக்கும், வானத்திற்கும் நடுவே ஒப்புக்கொண்டான், அல்லது ஒப்புக் கொள்ளச் செய்யப்பட்டான்; அங்கே இழிவான முறையில் செத்து மடிந்தான்.

And it came to pass that they took him; and his name was Nehor; and they carried him upon the top of the hill Manti, and there he was caused, or rather did acknowledge, between the heavens and the earth, that what he had taught to the people was contrary to the word of God; and there he suffered an ignominious death.

16 இருப்பினும், தேசமெங்கிலும் ஆசாரிய வஞ்சகம் பரவுவதை இது முடிக்கவில்லை. ஏனெனில் உலகத்தின் வீணானவைகளை விரும்புகிற அநேகர் அங்கே இருந்தார்கள். அவர்கள் கள்ள உபதேசங்களைப் போதித்தார்கள்; கனமடையவும், ஐஸ்வரியத்தைப் பெறவுமே அப்படிச் செய்தார்கள்.

Nevertheless, this did not put an end to the spreading of priestcraft through the land; for there were many who loved the vain things of the world, and they went forth preaching false doctrines; and this they did for the sake of riches and honor.

17 இருப்பினும் தெரிந்துவிட்டால், பொய்யர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்று அவர்கள் சட்டத்திற்கு பயந்ததால் பொய்யுரைக்கவில்லை. ஆகவே தங்களுடைய நம்பிக்கையின்படியே உபதேசிப்பவர்களாக பாவனை செய்தார்கள்; அவனுடைய நம்பிக்கையினிமித்தம் எந்த ஒரு மனுஷன் மீதும் சட்டத்திற்கு அதிகாரமில்லாதிருந்தது.

Nevertheless, they durst not lie, if it were known, for fear of the law, for liars were punished; therefore they pretended to preach according to their belief; and now the law could have no power on any man for his belief.

18 திருடுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று அவர்கள் சட்டத்திற்கு அஞ்சி திருடவில்லை. கொலை செய்தவன் மரண தண்டனைக்குள்ளாக்கப்பட்டான் என்பதால், அவர்கள் கொள்ளையடிக்கவும், கொலை செய்யவும் இல்லை.

And they durst not steal, for fear of the law, for such were punished; neither durst they rob, nor murder, for he that murdered was punished unto death.

19 ஆனால், அந்தப்படியே, தேவனுடைய சபையைச் சார்ந்திருந்து, கிறிஸ்துவினுடைய நாமத்தை தங்கள்மீது தரித்துக்கொண்டவர்களை தேவனுடைய சபையைச் சாராதவர்கள் துன்பப்படுத்தத் தொடங்கினார்கள்.

But it came to pass that whosoever did not belong to the church of God began to persecute those that did belong to the church of God, and had taken upon them the name of Christ.

20 ஆம், அவர்களது தாழ்மையினிமித்தமும், தங்களுடைய பார்வையிலே மேட்டிமையாயில்லாததாலும், தேவ வசனத்தை பணமும், விலையுமின்றி ஒருவரோடொருவர் பகிர்ந்துகொண்டதினிமித்தமும், அவர்களை சகல விதமான வார்த்தைகளாலும் துன்புறுத்தி, உபத்திரவப்படுத்தினார்கள்.

Yea, they did persecute them, and afflict them with all manner of words, and this because of their humility; because they were not proud in their own eyes, and because they did impart the word of God, one with another, without money and without price.

21 சபையைச் சார்ந்திருந்த எவரும், எழும்பி சபையைச் சார்ந்திராதவர்களை துன்பப்படுத்தக் கூடாதென்றும், தங்களுக்குள்ளே துன்புறுத்தல் விளைவிக்கக் கூடாதென்றும், சபையின் ஜனங்களுக்குள்ளே ஒரு கண்டிப்பான சட்டமிருந்தது.

Now there was a strict law among the people of the church, that there should not any man, belonging to the church, arise and persecute those that did not belong to the church, and that there should be no persecution among themselves.

22 ஆயினும் அவர்களுக்குள்ளே அநேகர் மேட்டிமையாயிருக்கத் தொடங்கி தங்கள் சத்துருக்களுடன் அடிதடி விளைவிக்கும் வரைக்குமாய், கொடூரமாக தர்க்கித்துப் பேச ஆரம்பித்தார்கள்; அவர்கள், ஆம், ஒருவருக்கொருவர் முஷ்டிகளால் அடித்துக்கொண்டார்கள்.

Nevertheless, there were many among them who began to be proud, and began to contend warmly with their adversaries, even unto blows; yea, they would smite one another with their fists.

23 ஆல்மாவின் ஆளுகையின் இரண்டாம் வருஷத்திலே சபைக்கு விரோதமாய் அநேக துன்புறுத்தலின் காரணமாக அது இருந்தது. ஆம் அது சபையின் பாடுகளுக்குக் காரணமாயிருந்தது.

Now this was in the second year of the reign of Alma, and it was a cause of much affliction to the church; yea, it was the cause of much trial with the church.

24 அநேகருடைய இருதயங்கள் கடினப்பட்டுப் போனபடியாலும், அவர்களுடைய பெயர்கள் நீக்கப்பட்டதாலும், தேவ ஜனத்திற்குள்ளே அவர்கள் நினைவுகூரப்படாமல் போனார்கள். அநேகர் அவர்களிடமிருந்து விலகிப்போனார்கள்.

For the hearts of many were hardened, and their names were blotted out, that they were remembered no more among the people of God. And also many withdrew themselves from among them.

25 இது விசுவாசத்திலே உறுதியாய் நின்றிருந்தவர்களுக்கு அதிக சோதனையாய் அமைந்தாலும், அவர்கள் தேவ கட்டளையைக் கைக்கொள்ளுவதில் அசைக்கமுடியாதவர்களாயும், நிலைநிற்பவர்களுமாயிருந்து, தங்கள்மீது சுமத்தப்பட்ட துன்பங்களை பொறுமையோடே சகித்திருந்தார்கள்.

Now this was a great trial to those that did stand fast in the faith; nevertheless, they were steadfast and immovable in keeping the commandments of God, and they bore with patience the persecution which was heaped upon them.

26 ஆசாரியர்கள் தங்கள் வேலைகளைவிட்டு தேவனுடைய வசனத்தை ஜனங்களுக்கு போதிக்கச் சென்றபோது ஜனங்களும் தங்களுடைய பணிகளைவிட்டு, தேவனுடைய வசனத்தை கேட்கப்போனார்கள். ஆசாரியர் அவர்களுக்கு தேவ வசனத்தைப் பிரசங்கித்த பின்பு, தங்கள் பணிகளுக்கு கருத்தாய்த் திரும்பினார்கள். ஆசாரியன் தனக்கு செவி கொடுப்பவர்களிலும் மேலாக தன்னை எண்ணிக் கொள்ளாதிருந்தான். ஏனெனில் பிரசங்கி, கேட்பவனிலும் பெரியவனுமல்ல, ஆசிரியன் கற்பவனிலும் மேன்மையானவனுமல்ல. அவ்விதம் அவர்கள் அனைவரும் சமமானவர்களே. ஒவ்வொரு மனுஷனும் தன்தன் பலத்திற்கேற்ப பிரயாசப்பட்டான்.

And when the priests left their labor to impart the word of God unto the people, the people also left their labors to hear the word of God. And when the priest had imparted unto them the word of God they all returned again diligently unto their labors; and the priest, not esteeming himself above his hearers, for the preacher was no better than the hearer, neither was the teacher any better than the learner; and thus they were all equal, and they did all labor, every man according to his strength.

27 ஒவ்வொரு மனுஷனும் தான் வைத்திருந்தவற்றிற்கேற்ப தங்கள் பொருட்களை எளியோருக்கும், திக்கற்றோருக்கும், வியாதியஸ்தருக்கும், உபத்திரவப்படுவோருக்கும் கொடுத்தார்கள்; அவர்கள் விலையுயர்ந்த வஸ்திரங்களைத் தரிக்காதபோதும், நேர்த்தியாயும், சௌந்தரியமுள்ளவர்களாயும் இருந்தார்கள்.

And they did impart of their substance, every man according to that which he had, to the poor, and the needy, and the sick, and the afflicted; and they did not wear costly apparel, yet they were neat and comely.

28 இவ்விதமாய் சபையின் விவகாரங்களை அமைத்தார்கள்; தங்களுக்கு சகல துன்புறுத்தல்கள் இருந்தபோதிலும், மறுபடியும் தொடர்ந்து சமாதானத்தை நிலைவரப்பண்ணினார்கள்.

And thus they did establish the affairs of the church; and thus they began to have continual peace again, notwithstanding all their persecutions.

29 சபையின் ஸ்திரத்தன்மையினிமித்தம் அவர்கள் தங்களுக்குத் தேவையான அனைத்தையும் மிகுதியாய் பெற்று, ஐஸ்வரியவான்களானார்கள், அவர்கள் ஆடுகளையும், மாடுகளையும் விதவிதமான கொழுத்தவைகளையும் மிகுதியாயும், தானியங்களையும், பொன்னையும் வெள்ளியையும், விலையேறப்பெற்றவைகளையும் மிகுதியாயும், பட்டையும் பஞ்சுநூலினால் செய்யப்பட்ட சீலைகளையும், விதவிதமான சாதா துணிகளையும் மிகுதியாய் பெற்றிருந்தார்கள்.

And now, because of the steadiness of the church they began to be exceedingly rich, having abundance of all things whatsoever they stood in need—an abundance of flocks and herds, and fatlings of every kind, and also abundance of grain, and of gold, and of silver, and of precious things, and abundance of silk and fine-twined linen, and all manner of good homely cloth.

30 ஆகையால், தங்களுடைய விருத்தியடைந்த நிலையிலும் வஸ்திரமில்லாதவனையும், பட்டினியாயிருப்போனையும், விடாய்த்திருப்போனையும், வியாதியஸ்தனையும், போஷிக்கப்பட்டிராதவனையும் திருப்பி அனுப்பவில்லை; ஐஸ்வரியத்தின் மீது தங்கள் இருதயத்தை வைக்கவில்லை; அதனால் முதியோருக்கும், வாலிபருக்கும், அடிமைக்கும், சுயாதீனனுக்கும், புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் சபையைச் சேர்ந்த மற்றும் சேராதவர்களுக்குமாய் அனைவருக்கும் பட்சபாதமின்றி தேவையிலிருந்தவர்களுக்கு உதாரத்துவமாய் கொடுத்தார்கள்.

And thus, in their prosperous circumstances, they did not send away any who were naked, or that were hungry, or that were athirst, or that were sick, or that had not been nourished; and they did not set their hearts upon riches; therefore they were liberal to all, both old and young, both bond and free, both male and female, whether out of the church or in the church, having no respect to persons as to those who stood in need.

31 இப்படியாய் அவர்கள் விருத்தியடைந்து, தங்கள் சபையைச் சாராதவர்களைக் காட்டிலும் ஐஸ்வரியவான்களானார்கள்.

And thus they did prosper and become far more wealthy than those who did not belong to their church.

32 ஏனெனில் அவர்களுடைய சபையைச் சாராதவர்கள் குறிசொல்வதிலும், விக்கிரக ஆராதனை, அல்லது சோம்பேறித்தனத்திலும் வீண் பேச்சிலும், பொறாமையிலும், பிணக்கிலும், ஈடுபட்டு, விலையுயர்ந்த வஸ்திரங்களை தரிப்போராய்த், தங்களைத் தாங்களே மேட்டிமையாய் எண்ணிக்கொண்டார்கள்; துன்புறுத்தல்களிலும், பொய்யுரைப்பதிலும், திருடுவதிலும், கொள்ளையிடுவதிலும், வேசித்தனங்களிலும், கொலைசெய்வதிலுமான சகலவித அக்கிரமங்களிலும், தங்களை உட்படுத்தி, பெருமையாய் பிணக்கு விளைவிப்போராய் இருந்தார்கள், இருப்பினும் சட்டத்தை மீறுகிறவர்கள் மீது கூடியமட்டும் சட்டம் அதிகாரத்திலிருந்தது.

For those who did not belong to their church did indulge themselves in sorceries, and in idolatry or idleness, and in babblings, and in envyings and strife; wearing costly apparel; being lifted up in the pride of their own eyes; persecuting, lying, thieving, robbing, committing whoredoms, and murdering, and all manner of wickedness; nevertheless, the law was put in force upon all those who did transgress it, inasmuch as it was possible.

33 அந்தப்படியே, இவ்விதமாய் சட்டத்தை அவர்கள்மீது பிரயோகப்படுத்தினதினிமித்தமும், அவனவன் தான் செய்தவற்றுக்கேற்ப துன்பமனுபவித்தபடியாலும், அவர்கள் அமைதலானார்கள், தெரியவருமோ என்று பயந்து துன்மார்க்கத்தை செய்யாதிருந்தார்கள். எனவே நேபியின் ஜனங்களுக்குள்ளே நியாயதிபதிகளின் ஐந்தாம் வருஷ ஆளுகைவரைக்கும் அதிக சமாதானம் நிலைவரப்படுத்தப்பட்டது.

And it came to pass that by thus exercising the law upon them, every man suffering according to that which he had done, they became more still, and durst not commit any wickedness if it were known; therefore, there was much peace among the people of Nephi until the fifth year of the reign of the judges.

# ஆல்மா 2

1 அந்தப்படியே, கிதியோனைப் பட்டயத்தினாலே
கொன்றவனும், சட்டப்படி கொல்லப்பட்டவனுமா-
கிய அந்த மனுஷனின் முறைமையின்படியே, தந்-
திரமுள்ளவனாயும், உலகத்தினுடைய விவேகத்-
திற்கேற்ப ஞானவானாயும் அம்லிசி என்ற பெயர்-
கொண்ட மனுஷனாலே, அவர்களின் ஆளுகை-
யின் ஐந்தாம் வருஷத்தின் துவக்கத்திலே ஜனங்க-
ளுக்குள்ளே பிணக்குகள் உண்டானது.

2 இப்பொழுது, இந்த அம்லிசி தன்னுடைய தந்திரத்-
தினாலே தன்னைப் பின்பற்றும்படி அநேக ஜனங்-
களை இழுத்துக்கொண்டபடியாலே, அவர்கள்
அதிக வல்லமை மிக்கவர்களாய் விளங்கினார்-
கள்; அம்லிசியை ஜனங்கள்மீது ராஜாவாய் ஏற்ப-
டுத்த அவர்கள் பிரயத்தனம் பண்ணினார்கள்.

3 இப்பொழுது இது சபையின் ஜனத்திற்கும், அம்லி-
சியின் ஏவுதலினிமித்தம் இழுபட்டுப் போகாத யா-
வருக்கும் திகைப்பூட்டியது; ஏனெனில் அவர்களு-
டைய சட்டத்தின்படி அப்படிப்பட்டவைகள் ஜனங்-
களின் குரலால் ஏற்படுத்தப்படவேண்டுமென
அவர்கள் அறிந்திருந்தார்கள்.

4 ஆகவே அம்லிசி துன்மார்க்கனானபடியால்,
ஜனங்களின் சம்மதத்தை ஆதாயப்படுத்தக்கூடு-
மாயின் அவர்களிடத்திலிருந்து சபையின் உரிமை-
களையும் சிலாக்கியங்களையும் நீக்கிப்போடு-
வான்; ஏனெனில் தேவனுடைய சபையை அழிப்ப-
தே அவனுடைய நோக்கமாயிருந்தது.

5 அந்தப்படியே, ஜனங்கள் தேசமெங்கிலும் ஏகமாய்
அவனவன் தன்தன் மனதிற்கேற்றபடி அம்லிசி-
யைச் சார்ந்தோ, எதிர்த்தோ தனிக்குழுக்களாய் கூடி
வெகுவாய்த் தர்க்கம்பண்ணி ஒருவரோடொருவர்
வியக்கத்தக்க வகையில் விவாதித்தார்கள்.

6 இப்படியாக அந்தக் காரியத்தைக் குறித்த தங்கள்
கருத்தைத் தெரிவிக்கும்படி அவர்கள் ஏகமாய்க் கூ-
டிவந்தார்கள்; அவை நியாயாதிபதிகளுக்கு முன்-
பாக வைக்கப்பட்டன.

7 அந்தப்படியே, அம்லிசியை எதிர்த்து, ஜனங்கள்
கருத்து தெரிவித்ததினிமித்தம் அவன் ஜனங்க-
ளுக்கு ராஜாவாக்கப்படவில்லை.

8 இப்பொழுது இது அவனுக்கு விரோதமானவர்க-
ளின் இருதயங்களை பூரிக்கச்செய்தது. ஆனால்
அம்லிசி தனக்கு சாதகமாயிருப்போரை, தனக்கு சா-
தகமில்லாதோருக்கு விரோதமாய், கோபம் கொள்-
ளும்படி ஏவிவிட்டான்.

9 அந்தப்படியே, அவர்கள் ஏகமாய்க்கூடி அம்லிசி-
யை தங்கள் ராஜாவாக நியமித்தார்கள்.

# Alma 2

And it came to pass in the commencement of the fifth year of their reign there began to be a contention among the people; for a certain man, being called Amlici, he being a very cunning man, yea, a wise man as to the wisdom of the world, he being after the order of the man that slew Gideon by the sword, who was executed according to the law—

Now this Amlici had, by his cunning, drawn away much people after him; even so much that they began to be very powerful; and they began to endeavor to establish Amlici to be a king over the people.

Now this was alarming to the people of the church, and also to all those who had not been drawn away after the persuasions of Amlici; for they knew that according to their law that such things must be established by the voice of the people.

Therefore, if it were possible that Amlici should gain the voice of the people, he, being a wicked man, would deprive them of their rights and privileges of the church; for it was his intent to destroy the church of God.

And it came to pass that the people assembled themselves together throughout all the land, every man according to his mind, whether it were for or against Amlici, in separate bodies, having much dispute and wonderful contentions one with another.

And thus they did assemble themselves together to cast in their voices concerning the matter; and they were laid before the judges.

And it came to pass that the voice of the people came against Amlici, that he was not made king over the people.

Now this did cause much joy in the hearts of those who were against him; but Amlici did stir up those who were in his favor to anger against those who were not in his favor.

And it came to pass that they gathered themselves together, and did consecrate Amlici to be their king.

10 இப்பொழுது அம்லிசி, அவர்கள் மீது ராஜாவாக்-
கப்பட்டபோது, அவர்கள் தங்களின் சகோதரருக்கு
விரோதமாய் ஆயுதங்களை எடுக்கவேண்டுமென
கட்டளையிட்டான்; அவர்களை தனக்கு கீழ்ப்ப-
டுத்தும்படிக்கே இப்படிச் செய்தான்.

Now when Amlici was made king over them he commanded them that they should take up arms against their brethren; and this he did that he might subject them to him.

11 இப்போது அம்லிசியின் ஜனங்கள் அம்லிசியர்
என்று, அம்லிசியின் பெயராலே அழைக்கப்பட்-
டார்கள்; மீதியானவர்கள் நேபியர், அல்லது தே-
வனுடைய ஜனம் என்று அழைக்கப்பட்டார்கள்.

Now the people of Amlici were distinguished by the name of Amlici, being called Amlicites; and the remainder were called Nephites, or the people of God.

12 நேபிய ஜனம் அம்லிசியரின் நோக்கங்களை
அறிந்திருந்தபடியாலே, அவர்களைச் சந்திக்க
ஆயத்தமானார்கள்; ஆம், அவர்கள் தங்களை பட்-
டயங்களாலும், ஈட்டிகளாலும், விற்களாலும், அம்-
புகளாலும், கற்களாலும், கவண்களாலும் மற்றும்
சகலவிதமான யுத்த ஆயுதங்களாலும் ஆயுதம்
தரித்துக்கொண்டார்கள்.

Therefore the people of the Nephites were aware of the intent of the Amlicites, and therefore they did prepare to meet them; yea, they did arm themselves with swords, and with cimeters, and with bows, and with arrows, and with stones, and with slings, and with all manner of weapons of war, of every kind.

13 இவ்விதமாய், அம்லிசியரை அவர்கள் வரும்போ-
து சந்திக்க ஆயத்தமாயிருந்தார்கள். அவர்களு-
டைய எண்ணிக்கைக்கு ஏற்றபடி சேனாதிபதிக-
ளையும், உயர் சேனாதிபதிகளையும், பிரதானிக-
ளையும் நியமித்தார்கள்.

And thus they were prepared to meet the Amlicites at the time of their coming. And there were appointed captains, and higher captains, and chief captains, according to their numbers.

14 அந்தப்படியே, ஒவ்வொரு வகையிலுமாக சகல-
வித யுத்த ஆயுதங்களால் அம்லிசி தன் மனுஷருக்-
கு ஆயுதம் தரித்தான்; அவன் தங்கள் சகோதரருக்கு
விரோதமாய் தன் ஜனங்களை யுத்தத்திற்கு வழிந-
டத்தும்படியாய், அவர்கள்மீது அதிகாரிகளையும்,
தலைவர்களையும் நியமித்தான்.

And it came to pass that Amlici did arm his men with all manner of weapons of war of every kind; and he also appointed rulers and leaders over his people, to lead them to war against their brethren.

15 அந்தப்படியே, சாரகெம்லாவின் தேசமருகே ஓடின
சீதோன் நதிக்கு கிழக்கேயுள்ள அம்னிகூ மலை-
யின் மேல் அம்லிசியர் வந்தடைந்தார்கள். அங்கே
நேபியருடனே போர் தொடுக்க ஆரம்பித்தார்கள்.

And it came to pass that the Amlicites came upon the hill Amnihu, which was east of the river Sidon, which ran by the land of Zarahemla, and there they began to make war with the Nephites.

16 பின்னும் நேபியின் ஜனங்களுடைய பிரதான நி-
யாயாதிபதியாயும், அதிபதியாயுமிருந்த ஆல்மா
தன்னுடைய ஜனங்களோடும், சேனாதிபதிகளோ-
டும், பிரதான சேனாதிபதிகளோடும், தன் சேனைக்-
கு தலைவனாக அம்லிசியருக்கு விரோதமாய் எதிர்-
கொண்டு போனான்.

Now Alma, being the chief judge and the governor of the people of Nephi, therefore he went up with his people, yea, with his captains, and chief captains, yea, at the head of his armies, against the Amlicites to battle.

17 அவர்கள் சீதோனிற்கு கிழக்கே உள்ள மலையின்
மீது அம்லிசியரைக் கொன்று போடத் தொடங்கி-
னார்கள். அம்லிசியரும் நேபியரோடு அதிக பெலத்-
தோடு சண்டையிட்டதினாலே அநேக நேபியர், அம்-
லிசியர் முன்பாக வீழ்ந்தார்கள்.

And they began to slay the Amlicites upon the hill east of Sidon. And the Amlicites did contend with the Nephites with great strength, insomuch that many of the Nephites did fall before the Amlicites.

18 இருப்பினும், கர்த்தர் நேபியரின் கரத்தை பெலப்-
படுத்தினதாலே, அவர்கள் அம்லிசியரை வெகு-
வாய் சங்கரித்தார்கள். இவர்கள் அவர்களின் சமு-
கத்தினின்று முறிந்தோடத் தொடங்கினார்கள்.

Nevertheless the Lord did strengthen the hand of the Nephites, that they slew the Amlicites with great slaughter, that they began to flee before them.

19 அந்தப்படியே, நேபியர், அம்லிசியரை அந்த நாள் முழுவதும் தொடர்ந்து, அவர்களில் பன்னிரண்டு ஆயிரத்து ஐநூற்று முப்பத்திரண்டு ஆத்துமாக்களைக் கொன்றுபோடும் மட்டும் அவர்களை சங்கரித்துப்போட்டார்கள். நேபியர்களுக்குள்ளே கொலை செய்யப்பட்டவர்கள் ஆறாயிரத்து ஐநூற்று அறுபத்திரண்டு ஆத்துமாக்கள்.

And it came to pass that the Nephites did pursue the Amlicites all that day, and did slay them with much slaughter, insomuch that there were slain of the Amlicites twelve thousand five hundred thirty and two souls; and there were slain of the Nephites six thousand five hundred sixty and two souls.

20 அந்தப்படியே, அம்லிசியரை இனியும் ஆல்மா தொடர்ந்தோடக்கூடாமற் போனபோது, அவன் தன் ஜனங்கள், கிதியோன் பள்ளத்தாக்கிலே தங்கள் கூடாரங்களைப் போடும்படி கட்டளையிட்டான். அந்தப் பள்ளத்தாக்கு நிகோர் தன் கரத்திலிருந்த பட்டயத்தினால் கொன்றுபோட்ட, கிதியோன் என்பவனின் பெயரால் அழைக்கப்பட்டது; இந்தப் பள்ளத்தாக்கிலே நேபியர்கள் இராத்தங்கும்படி பாளயமிறங்கினார்கள்.

And it came to pass that when Alma could pursue the Amlicites no longer he caused that his people should pitch their tents in the valley of Gideon, the valley being called after that Gideon who was slain by the hand of Nehor with the sword; and in this valley the Nephites did pitch their tents for the night.

21 பின்னும் அம்லிசியரில் மீதியானாரை ஆல்மா பின்பற்றிச்சென்று அவர்களின் திட்டங்களையும், துர்யோசனைகளையும் அறிந்து அதினிமித்தம் தன்னை அவர்களிடமிருந்து காத்துக்கொள்ளவும், தன் ஜனங்கள் அழிக்கப்பட்டுப்போகாதபடிக்கு பாதுகாக்கப்படவும் வேவுகாரரை அனுப்பினான்.

And Alma sent spies to follow the remnant of the Amlicites, that he might know of their plans and their plots, whereby he might guard himself against them, that he might preserve his people from being destroyed.

22 அம்லிசியரின் பாளயத்தை வேவுபார்க்க அனுப்பப்பட்டவர்களின் பெயர்கள், சீராம், அம்நோர், மேன்தி, லிம்யர் என்பன; இவர்கள் தங்கள் மனுஷருடனே அம்லிசியரின் பாளயத்தை வேவுபார்க்கச் சென்றவர்கள்.

Now those whom he had sent out to watch the camp of the Amlicites were called Zeram, and Amnor, and Manti, and Limher; these were they who went out with their men to watch the camp of the Amlicites.

23 அந்தப்படியே, மறுதினத்திலே அவர்கள் அதிர்ச்சியோடும், மிகுந்த பயத்துடனும் தீவிரித்துக்கொண்டு நேபியரின் பாளயத்திற்குத் திரும்பி:

And it came to pass that on the morrow they returned into the camp of the Nephites in great haste, being greatly astonished, and struck with much fear, saying:

24 இதோ, நாங்கள் அம்லிசியரின் கூட்டத்தைப் பின்தொடர்ந்தோம்; நாங்கள் அதிர்ச்சியடையும்படிக்கு நேபியின் தேசத்திற்குப் போகும் வழியிலே சாரகெம்லாவின் தேசத்திற்கு மேலேயுள்ள மினோன் தேசத்திலே எண்ணிறைந்த லாமானியரின் சேனையைக் கண்டோம்; இதோ, அம்லிசியர் அவர்களோடு சேர்ந்துகொண்டார்கள்;

Behold, we followed the camp of the Amlicites, and to our great astonishment, in the land of Minon, above the land of Zarahemla, in the course of the land of Nephi, we saw a numerous host of the Lamanites; and behold, the Amlicites have joined them;

25 அந்த தேசத்திலுள்ள நமது சகோதரர்கள் மேல் படையெடுத்து வருகிறார்கள்; அவர்களுக்கு முன்பாக தங்கள் மந்தைகளோடும் மனைவிகளோடும், பிள்ளைகளோடும் நம்முடைய பட்டணத்தை நோக்கி தப்பி ஓடிக்கொண்டிருக்கிறார்கள்; நாம் தீவிரித்துப் போகாவிடில், அவர்கள் நம்முடைய பட்டணத்தையும் அபகரித்து, நம்முடைய தகப்பன்மார்களையும், பிள்ளைகளையும் மனைவிகளையும் கொன்றுபோடுவார்கள்.

And they are upon our brethren in that land; and they are fleeing before them with their flocks, and their wives, and their children, towards our city; and except we make haste they obtain possession of our city, and our fathers, and our wives, and our children be slain.

26 அந்தப்படியே, நேபியின் ஜனங்கள் தங்கள் கூடா-
ரங்களைப் பெயர்த்து, கிதியோன் பள்ளத்தாக்கை-
விட்டு தங்களுடைய பட்டணமாகிய சாரகெம்லா-
வை நோக்கிப் புறப்பட்டார்கள்.

And it came to pass that the people of Nephi took their tents, and departed out of the valley of Gideon towards their city, which was the city of Zarahemla.

27 பின்னும் இதோ, அவர்கள் சீதோன் நதியைக்
கடந்துபோகையில், ஏறக்குறைய சமுத்திரத்தின்
மணலத்தனையாய் எண்ணிறைந்த லாமானியர்க-
ளும், அம்லிசியரும் அவர்களை நிர்மூலமாக்கிப்-
போட வந்தார்கள்.

And behold, as they were crossing the river Sidon, the Lamanites and the Amlicites, being as numerous almost, as it were, as the sands of the sea, came upon them to destroy them.

28 இருப்பினும் கர்த்தருடைய கரத்தினாலே அவர்-
கள் பெலனடைந்ததினிமித்தமும், தங்களுடைய
சத்துருக்களின் கைகளுக்குத் தங்களைத் தப்பு-
விக்கும்படி நேபியர் கர்த்தரிடத்திலே ஊக்கமாய்
ஜெபித்ததினிமித்தமும், கர்த்தர் அவர்களுடைய
கூக்குரலைக் கேட்டு அவர்களைப் பெலப்படுத்தி-
னார், லாமானியரும் அம்லிசியரும் அவர்களுக்கு
முன்பாக வீழ்ந்துபோனார்கள்.

Nevertheless, the Nephites being strengthened by the hand of the Lord, having prayed mightily to him that he would deliver them out of the hands of their enemies, therefore the Lord did hear their cries, and did strengthen them, and the Lamanites and the Amlicites did fall before them.

29 அந்தப்படியே, முகமுகமாய் ஆல்மாவும் அம்லிசி-
யும் தங்கள் பட்டயங்களைக் கொண்டு சண்டை-
யிட்டார்கள்; ஒருவரோடொருவர் பயங்கரமாய்ப்
போராடினார்கள்.

And it came to pass that Alma fought with Amlici with the sword, face to face; and they did contend mightily, one with another.

30 அந்தப்படியே, தேவனுடைய மனுஷனாகிய ஆல்-
மா மிகுந்த விசுவாசத்தைப் பிரயோகப்படுத்தி,
கர்த்தாவே இந்த ஜனம் இரட்சிக்கப்படவும், பாது-
காக்கப்படவும், நான் உம்முடைய கரங்களிலே ஒரு
கருவியாய் இருக்கும்பொருட்டு, எனக்கு இரங்கி,
என் ஜீவனைக் காத்துக்கொள்ளும், என்று கூக்குர-
லிட்டான்.

And it came to pass that Alma, being a man of God, being exercised with much faith, cried, saying: O Lord, have mercy and spare my life, that I may be an instrument in thy hands to save and preserve this people.

31 இப்பொழுதும் ஆல்மா இந்த வார்த்தைகளை
சொல்லிய பிறகும், மீண்டும் அம்லிசியுடனே போ-
ராடினான்; அம்லிசியை பட்டயத்தினாலே கொன்-
றுபோடுமளவிற்கு அவன் பெலப்படுத்தப்பட்டான்.

Now when Alma had said these words he contended again with Amlici; and he was strengthened, insomuch that he slew Amlici with the sword.

32 பின்னும் அவன் லாமானியரின் ராஜாவுடனே
கூட போராடினான்; ஆனால் லாமானியரின் ராஜா-
வோ ஆல்மாவின் சமுகத்தினின்று பின்வாங்கி,
ஆல்மாவுடன் சண்டையிட தன் காவற்காரர்களை
அனுப்பினான்.

And he also contended with the king of the Lamanites; but the king of the Lamanites fled back from before Alma and sent his guards to contend with Alma.

33 ஆனாலும் ஆல்மா, தன்னுடைய காவற்காரர்க-
ளோடு சேர்ந்து, லாமானியரின் காவற்காரர்களை
வெட்டி துரத்துமட்டும் அவர்களுடனே சண்டை-
யிட்டான்.

But Alma, with his guards, contended with the guards of the king of the Lamanites until he slew and drove them back.

34 சீதோன் நதிக்கு மேற்புறத்திலிருந்த லாமானியரு-
டனும் அம்லிசியருடனும் சண்டையிடவும், தன்
ஜனம் கடக்க விசாலமாய் இருக்கும்பொருட்டு, லா-
மானியரில் மடிந்துபோன சடலங்களை சீதோன்
நதியினுள் வீசி, சீதோன் நதியின் மேற்குப் புறத்-
தண்டையில் அமைந்த நிலத்தை சுத்தம் செய்தான்.

And thus he cleared the ground, or rather the bank, which was on the west of the river Sidon, throwing the bodies of the Lamanites who had been slain into the waters of Sidon, that thereby his people might have room to cross and contend with the Lamanites and the Amlicites on the west side of the river Sidon.

35 அந்தப்படியே, அவர்கள் யாவரும் சீதோன் நதி-
யைக் கடந்த பின்னர், லாமானியரும் அம்லிசிய-
ரும் எண்ண முடியாதளவிற்கு, எண்ணிறைந்தவர்-
களாய் இருப்பினும் அவர்களுக்கு முன்பாக தப்பி-
யோடினார்கள்.
36 அவர்கள் நேபியரின் சமுகத்தினின்று எல்லைக-
ளுக்கு அப்பால், மேற்கிலும் வடக்கிலுமுள்ள
வனாந்தரத்திற்கு நேராய் தப்பியோடினார்கள்;
ஊக்கமாய் நேபியர் பின்தொடர்ந்து அவர்களைக்
கொன்றுபோட்டார்கள்.
37 அவர்கள் எல்லாப் பக்கங்களிலிருந்தும் எதிர்க்-
கப்பட்டு, வெட்டப்பட்டு, எர்மவுன்ட்ஸ் என்று
அழைக்கப்பட்ட வனாந்தரத்தை அவர்கள் அடை-
யும் மட்டுமாய் மேற்கிலும், வடக்கிலுமாய் துரத்தப்-
பட்டு சிதறடிக்கப்பட்டார்கள்; வனாந்தரத்தின் அப்-
பகுதி துஷ்ட, பட்சிக்கிற காட்டு மிருகங்களினாலே
நிறைந்திருந்தது.
38 அந்தப்படியே, அநேகர் காயங்களினிமித்தம்
வனாந்தரத்திலே மரித்துப்போனார்கள். அந்த வி-
லங்குகளாலும், ஆகாயத்தின் பருந்துகளாலும் பட்-
சிக்கப்பட்டார்கள்; அவர்களுடைய எலும்புகள்
கண்டெடுக்கப்பட்டு பூமியின் மீது குவிக்கப்பட்டி-
ருக்கிறது.

And it came to pass that when they had all crossed the river Sidon that the Lamanites and the Amlicites began to flee before them, notwithstanding they were so numerous that they could not be numbered.

And they fled before the Nephites towards the wilderness which was west and north, away beyond the borders of the land; and the Nephites did pursue them with their might, and did slay them.

Yea, they were met on every hand, and slain and driven, until they were scattered on the west, and on the north, until they had reached the wilderness, which was called Hermounts; and it was that part of the wilderness which was infested by wild and ravenous beasts.

And it came to pass that many died in the wilderness of their wounds, and were devoured by those beasts and also the vultures of the air; and their bones have been found, and have been heaped up on the earth.

# ஆல்மா 3

1 அந்தப்படியே, போர்க்கருவிகளால் மாய்க்கப்படாத நேபியர்கள் கொலையுண்டவர்களை அடக்கம்பண்ணின பின்பு, தங்கள் தேசங்களுக்கும், தங்கள் வீடுகளுக்கும், தங்கள் மனைவிகளிடத்திலும், பிள்ளைகளிடத்திலும் திரும்பினார்கள், அதிகமானோர் மாய்ந்துபோனபடியாலே அவர்களை எண்ணக்கூடாமற்போயிற்று.

2 அநேக ஸ்திரீகளும், பிள்ளைகளும், பட்டயத்தினாலே கொலையுண்டார்கள். அவர்களுடைய ஆடுகளும் மந்தைகளும் பட்டயத்தினாலே கொல்லப்பட்டன; மனுஷ சேனையால் மிதிபட்டு, அவர்களுடைய வயல்களின் மிகுதியான தானியங்கள் அழிக்கப்பட்டன.

3 சீதோன் நதிக்கரையண்டையிலே கொலையுண்ட லாமானியரும் அம்லிசியரும் சீதோன் தண்ணீர்களிலே எறியப்பட்டார்கள்; இதோ அவர்களுடைய ஏராளமான எலும்புகள் சமுத்திரத்தின் ஆழங்களிலே கிடக்கின்றன.

4 லாமானியரைப்போலவே தங்கள் நெற்றியிலே சிவப்பு வர்ணத்தால் அடையாளமிட்டதால் அம்லிசியர் நேபியரிடமிருந்து வேறுபடுத்தப்பட்டனர். ஆனாலும் அவர்கள் லாமானியர்களைப்போல தலைமயிரை சவரம்பண்ணிக் கொள்ளவில்லை.

5 லாமனியரின் தலைகளோ மொட்டையடிக்கப்பட்டிருந்தன, தங்கள் இடைக்கச்சைக்கு தோலையும், அரையைச் சுற்றி தங்கள் கவசத்தையும், வில்லையும் அம்புகளையும், கற்களையும் கவண்களையும், அவைகளைப் போன்றவைகளையும் தரித்திருந்ததைத் தவிர நிர்வாணிகளாயிருந்தனர்.

6 லாமானியருடைய தகப்பன்மார்கள், நீதிபரரும், பரிசுத்த மனுஷருமான தங்கள் சகோதரர்களாகிய நேபி, யாக்கோபு, யோசேப்பு, சாமிற்கு விரோதமாய் மீறி கலகம் செய்ததாலே, அவர்களின் தகப்பன்மார்களின் மீது வைக்கப்பட்ட அடையாளத்தின்படி அவர்கள் மீது வந்த சாபத்தீட்டினால் இவர்களின் சருமமும் கருமையாயிருந்தது.

7 அவர்களுடைய சகோதரர் அவர்களை அழிக்க வகைதேடியதாலே அவர்கள் சபிக்கப்பட்டார்கள், இதினிமித்தம் தேவனாகிய கர்த்தர், ஆம், லாமான், லெமுவேல் மீதும், இஸ்மவேலின் குமாரரின் மீதும், இஸ்மவேலரின் ஸ்திரீகள்மீதும் அடையாளத்தை ஏற்படுத்தினார்.

# Alma 3

And it came to pass that the Nephites who were not slain by the weapons of war, after having buried those who had been slain—now the number of the slain were not numbered, because of the greatness of their number—after they had finished burying their dead they all returned to their lands, and to their houses, and their wives, and their children.

Now many women and children had been slain with the sword, and also many of their flocks and their herds; and also many of their fields of grain were destroyed, for they were trodden down by the hosts of men.

And now as many of the Lamanites and the Amlicites who had been slain upon the bank of the river Sidon were cast into the waters of Sidon; and behold their bones are in the depths of the sea, and they are many.

And the Amlicites were distinguished from the Nephites, for they had marked themselves with red in their foreheads after the manner of the Lamanites; nevertheless they had not shorn their heads like unto the Lamanites.

Now the heads of the Lamanites were shorn; and they were naked, save it were skin which was girded about their loins, and also their armor, which was girded about them, and their bows, and their arrows, and their stones, and their slings, and so forth.

And the skins of the Lamanites were dark, according to the mark which was set upon their fathers, which was a curse upon them because of their transgression and their rebellion against their brethren, who consisted of Nephi, Jacob, and Joseph, and Sam, who were just and holy men.

And their brethren sought to destroy them, therefore they were cursed; and the Lord God set a mark upon them, yea, upon Laman and Lemuel, and also the sons of Ishmael, and Ishmaelitish women.

8 அவர்களுடைய சந்ததி, அவர்களின் சகோதர-
ரின் சந்ததியிடமிருந்து வேறுபட்டிருக்கவும், இதி-
னிமித்தம் அவர்கள் கலந்து விடாமலும், தங்களு-
டைய அழிவை உறுதி செய்யக்கூடிய, தவறான பா-
ரம்பரியங்களிலே நம்பிக்கை வைக்காமலும், தே-
வனாகிய கர்த்தர் தன் ஜனத்தை காத்துக்கொள்-
ளும்படியாக இப்படிச் செய்யப்பட்டது.

And this was done that their seed might be distinguished from the seed of their brethren, that thereby the Lord God might preserve his people, that they might not mix and believe in incorrect traditions which would prove their destruction.

9 அந்தப்படியே, லாமானிய சந்ததியோடு தன் சந்த-
தியைக் கலப்பவன் எவனும் அதே சாபத்தை தன்
சந்ததியின்மீதும் வரவழைத்துக்கொண்டான்.

And it came to pass that whosoever did mingle his seed with that of the Lamanites did bring the same curse upon his seed.

10 லாமானியராலே வழிநடத்தப்பட தன் இஷ்டமாய்
போகிறவன் எவனும் அதே நாமத்தினாலே
அழைக்கப்படுவான். ஒரு அடையாளம் அவன் மீ-
து வைக்கப்பட்டது.

Therefore, whosoever suffered himself to be led away by the Lamanites was called under that head, and there was a mark set upon him.

11 அந்தப்படியே, லாமானியரின் பாரம்பரியத்திலே
விசுவாசியாமல், தேவனுடைய கட்டளைகளை வி-
சுவாசித்து, அவைகளைக் கைக்கொண்ட, தங்கள்
பிதாக்களுடைய சரியான பாரம்பரியத்திலும், எரு-
சலேம் தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பதிவே-
டுகளிலும் விசுவாசித்தவர்கள், அந்நாள் முதற்-
கொண்டு நேபியர் அல்லது நேபியின் ஜனமென்று
அழைக்கப்பட்டார்கள்.

And it came to pass that whosoever would not believe in the tradition of the Lamanites, but believed those records which were brought out of the land of Jerusalem, and also in the tradition of their fathers, which were correct, who believed in the commandments of God and kept them, were called the Nephites, or the people of Nephi, from that time forth—

12 அப்படிப்பட்டவர்களே தங்கள் ஜனங்களைக் கு-
றித்தும், லாமானிய ஜனங்களைக் குறித்த உண்-
மைகளையும் கொண்ட பதிவேடுகளை வைத்தி-
ருந்தார்கள்.

And it is they who have kept the records which are true of their people, and also of the people of the Lamanites.

13 இப்பொழுது நாம் அம்லிசியரைக் குறித்துப்
பார்ப்போம். அவர்களும் தங்கள் மீது ஒரு அடை-
யாளம் இட்டுக்கொண்டார்கள்; ஆம் நெற்றியிலே
சிவப்பு அடையாளத்தை தங்கள்மீது நெற்றியிலே
அடையாளமாக வைத்துக்கொண்டார்கள்.

Now we will return again to the Amlicites, for they also had a mark set upon them; yea, they set the mark upon themselves, yea, even a mark of red upon their foreheads.

14 இப்படியாக, கர்த்தருடைய வார்த்தை நிறைவே-
றியது. அவர் நேபியோடே சொன்ன வார்த்தைகள்
இவைகளே: இதோ, லாமானியரை சபித்தேன். தங்-
கள் துன்மார்க்கத்திலிருந்து அவர்கள் மனந்திரும்-
பி, அவர்கள் மீது நான் மனமிரங்கும் பொருட்டாக,
என்னிடத்தில் திரும்பினாலொழிய இந்நாள் முதற்-
கொண்டு என்றென்றைக்குமாய் உன்னிலும், உன்
சந்ததியிலுமிருந்து அவர்கள் சந்ததியும் விலகியி-
ருக்க அவர்கள்மீது ஓர் அடையாளம் இடுவேன்.

Thus the word of God is fulfilled, for these are the words which he said to Nephi: Behold, the Lamanites have I cursed, and I will set a mark on them that they and their seed may be separated from thee and thy seed, from this time henceforth and forever, except they repent of their wickedness and turn to me that I may have mercy upon them.

15 பின்னும் உன் சகோதரருடன் தன் சந்ததியை
கலப்பவனும், சபிக்கப்பட்டிருக்கும் பொருட்டு,
அவன் மீதும் ஓர் அடையாளம் இடுவேன்.

And again: I will set a mark upon him that mingleth his seed with thy brethren, that they may be cursed also.

16 பின்னும் உன்னோடும் உன் சந்ததியோடும் சண்-
டையிடுகிறவர்களின் மீதும் ஓர் அடையாளம் இடு-
வேன்.

And again: I will set a mark upon him that fighteth against thee and thy seed.

17 உன்னிடத்திலிருந்து விலகிப்போகிறவன் உன் சந்ததியான் என்று அழைக்கப்படுவதில்லை; நான் உன்னையும், உன் சந்ததியார் என்று அழைக்கப்படுகிற யாவரையும், இந்நாள் முதற்கொண்டு என்றென்றைக்குமாய் ஆசீர்வதிப்பேன்; நேபிக்கும் அவனுடைய சந்ததிக்கும் கர்த்தரால் உண்டான வாக்குத்தத்தங்கள் இவைகளே.

And again, I say he that departeth from thee shall no more be called thy seed; and I will bless thee, and whomsoever shall be called thy seed, henceforth and forever; and these were the promises of the Lord unto Nephi and to his seed.

18 அம்லிசியர் தங்கள் நெற்றிகளில் அடையாளம் இடத்தொடங்கியபோது, தாங்கள் தேவனுடைய வார்த்தைகளை நிறைவேற்றுகிறோம் என்று அறியாதிருந்தார்கள்; ஆகிலும் அவர்கள் தேவனுக்கு எதிராக வெளியரங்கமாய் கலகம் செய்தார்கள்; எனவே சாபம் அவர்கள்மீது வருவது அவசியமாயிற்று.

Now the Amlicites knew not that they were fulfilling the words of God when they began to mark themselves in their foreheads; nevertheless they had come out in open rebellion against God; therefore it was expedient that the curse should fall upon them.

19 அவர்கள் சாபத்தை தங்கள்மீது வரவழைத்துக்கொண்டதை நீங்கள் காணவேண்டுமென மனதாயிருக்கிறேன்; அப்படியே சபிக்கப்பட்டவன் எவனும், தன் மீது தானே ஆக்கினைத் தீர்ப்பை வரவழைத்துக் கொள்கிறான்.

Now I would that ye should see that they brought upon themselves the curse; and even so doth every man that is cursed bring upon himself his own condemnation.

20 இப்பொழுது, அந்தப்படியே, அம்லிசியரும், லாமானியரும், சாரகெம்லா, தேசத்திலே சண்டையிட்ட சில நாட்களுக்குள்ளாகவே, முதற் சேனை அம்லிசியரை சந்தித்த அதே இடத்தில், லாமானியரின் மற்றுமொரு சேனை, நேபியின் ஜனங்கள் மீது போர் தொடுத்தது.

Now it came to pass that not many days after the battle which was fought in the land of Zarahemla, by the Lamanites and the Amlicites, that there was another army of the Lamanites came in upon the people of Nephi, in the same place where the first army met the Amlicites.

21 அந்தப்படியே, அவர்களைத் தங்கள் தேசத்திலிருந்து துரத்த ஒரு சேனை அனுப்பப்பட்டது.

And it came to pass that there was an army sent to drive them out of their land.

22 ஆல்மா காயத்தால் உபத்திரவப்பட்டுக் கொண்டிருந்தமையாலே, இவ்விசை லாமானியருக்கு விரோதமாய் நடந்த யுத்தத்திற்கு அவன் போகவில்லை;

Now Alma himself being afflicted with a wound did not go up to battle at this time against the Lamanites;

23 எனினும் அவர்களுக்கு விரோதமாய் எண்ணிறைந்த சேனையை அனுப்பினான்; அவர்கள் போய், லாமானியரில் அநேகரைக் கொன்றுபோட்டு, மீதியானோரை தங்கள் தேசத்து எல்லைகளை விட்டுத் துரத்தினார்கள்.

But he sent up a numerous army against them; and they went up and slew many of the Lamanites, and drove the remainder of them out of the borders of their land.

24 அவர்கள் திரும்பிவந்து தேசத்திலே சமாதானத்தை நிலைவரப்பண்ணினார்கள், கொஞ்சகாலமளவும் தங்கள் சத்துருக்களால் எந்த இடையூறும் இல்லாமல் இருந்தார்கள்.

And then they returned again and began to establish peace in the land, being troubled no more for a time with their enemies.

25 இந்த யுத்தங்கள், தர்க்கங்கள் யாவும் நியாயாதிபதிகளின் ஐந்தாம் வருஷ ஆளுகையிலே துவங்கி முடிவும் பெற்றன.

Now all these things were done, yea, all these wars and contentions were commenced and ended in the fifth year of the reign of the judges.

26 ஒரு வருஷத்திலே ஆயிரம் பதினாயிரக்கணக்கான ஆத்துமாக்கள், தங்களுடைய நன்மையான அல்லது தீமையான கிரியைகளுக்குத் தக்கதாக பலன்களை அறுக்கும்படிக்கு, தாங்கள் தெரிந்துகொண்ட நல்ல ஆவிக்கோ அல்லது தீய ஆவிக்கோ கீழ்ப்படிய, நித்திய மகிழ்ச்சியையோ அல்லது நித்திய துர்பாக்கியத்தையோ பெறும்படிக்கு, அவர்கள் நித்திய உலகத்திற்கு அனுப்பப்பட்டார்கள்.

And in one year were thousands and tens of thousands of souls sent to the eternal world, that they might reap their rewards according to their works, whether they were good or whether they were bad, to reap eternal happiness or eternal misery, according to the spirit which they listed to obey, whether it be a good spirit or a bad one.

27 ஒவ்வொருவனும், தான் கீழ்ப்படிய தெரிந்து-
கொண்டவனின் கூலியைப் பெற்றுக்கொள்ளுகி-
றான். இது தீர்க்கதரிசன ஆவியால் உண்டான
வார்த்தையின் படியே; ஆகவே அது சத்தியத்திற்-
கேற்றபடியே ஆகக்கடவது. இப்படியாய் நியாயாதி-
பதிகளின் ஆளுகையினுடைய ஐந்தாம் வருஷ-
மும் நிறைவுற்றது.

For every man receiveth wages of him whom he listeth to obey, and this according to the words of the spirit of prophecy; therefore let it be according to the truth. And thus endeth the fifth year of the reign of the judges.

# ஆல்மா 4

1 இப்பொழுது, அந்தப்படியே, நேபியின் ஜனங்களின்
மேல் நியாயாதிபதிகளின் ஆறாம் வருஷ ஆளு-
கையிலே, சாரகெம்லா தேசத்திலே வாக்குவாதங்க-
ளோ, யுத்தங்களோ உண்டாயிருக்கவில்லை;
2 ஆனால் ஜனங்கள் உபத்திரவப்பட்டார்கள், ஆம்,
ஜனங்கள் தங்களுடைய சகோதரரை இழந்தமை-
யாலும், தங்களுடைய ஆடுகளையும், மந்தைக-
ளையும் இழந்தமையாலும், லாமானியரின் காலால்
மிதியுண்டு அழிக்கப்பட்ட தங்களுடைய வயல்
வெளிகளின் தானியங்களை இழந்தமையாலும்,
பெரிதும் உபத்திரவப்பட்டார்கள்.
3 அனைத்து ஆத்துமாக்களும் துக்கிக்கும்படியாக
அவர்களுடைய உபத்திரவம் கொடியதாயிருந்தது;
இந்த நியாயத்தீர்ப்பு தங்களுடைய துன்மார்க்கத்தி-
னாலும், அருவருப்பானவைகளாலும், தேவனிடத்-
திலிருந்து வந்ததென்று நம்பினார்கள். ஆகவே
அவர்களுடைய கடமையைக் குறித்து நினைவூட்-
டப்பட்டார்கள்.
4 அவர்கள் பூரணமாய் சபையை ஸ்தாபிக்க ஆரம்-
பித்தார்கள்; ஆம், அநேகர் சீதோன் தண்ணீர்களி-
லே ஞானஸ்நானம் பெற்று, தேவனுடைய சபையி-
லே சேர்ந்து கொண்டார்கள்; ஆம், தன் தகப்பனா-
கிய ஆல்மாவினால், சபையின் ஜனத்தாரின் மீது
பிரதான ஆசாரியனாக நியமிக்கப்பட்ட ஆல்மாவி-
னுடைய கரத்தால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.
5 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் ஏழாம் வருஷத்திலே, ஏறக்குறைய மூவாயிரத்-
து ஐநூறு ஆத்துமாக்கள் தேவனுடைய சபையிலே
தங்களை ஐக்கியப்படுத்திக்கொண்டு, ஞானஸ்நா-
னம் பெற்றார்கள். இவ்விதமாய் நேபியின் ஜனத்-
தின்மீது நியாயாதிபதிகளின் ஆளுகையினுடைய
ஏழாவது வருஷமும் முடிவுற்றது; அக்காலம் முழு-
வதிலும் சமாதானம் நிலவியது.
6 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் எட்டாம் வருஷத்திலே, தங்களுடைய உழைப்-
பினிமித்தமும், தாங்கள் அடைந்த மிகுந்த ஐஸ்வரி-
யத்தினாலும், மென்மையான பட்டினாலும், பஞ்சு
நூலினாலும், அநேக ஆடுகளையும், மந்தைகளை-
யும், பொன்னையும் வெள்ளியையும் மற்றும் பல-
விதமான விலையுயர்ந்த பொருட்களைப் பெற்ற-
தினாலும், சபையின் மக்கள் பெருமை கொள்ளத்
துவங்கினார்கள், இவையெல்லாவற்றினிமித்த-
மும் தங்களுடைய கண்களின் மேட்டிமையில், வி-
லையுயர்ந்த வஸ்திரங்களை உடுத்தத் தொடங்கி-
னார்கள்.

# Alma 4

Now it came to pass in the sixth year of the reign of the judges over the people of Nephi, there were no contentions nor wars in the land of Zarahemla;

But the people were afflicted, yea, greatly afflicted for the loss of their brethren, and also for the loss of their flocks and herds, and also for the loss of their fields of grain, which were trodden under foot and destroyed by the Lamanites.

And so great were their afflictions that every soul had cause to mourn; and they believed that it was the judgments of God sent upon them because of their wickedness and their abominations; therefore they were awakened to a remembrance of their duty.

And they began to establish the church more fully; yea, and many were baptized in the waters of Sidon and were joined to the church of God; yea, they were baptized by the hand of Alma, who had been consecrated the high priest over the people of the church, by the hand of his father Alma.

And it came to pass in the seventh year of the reign of the judges there were about three thousand five hundred souls that united themselves to the church of God and were baptized. And thus ended the seventh year of the reign of the judges over the people of Nephi; and there was continual peace in all that time.

And it came to pass in the eighth year of the reign of the judges, that the people of the church began to wax proud, because of their exceeding riches, and their fine silks, and their fine-twined linen, and because of their many flocks and herds, and their gold and their silver, and all manner of precious things, which they had obtained by their industry; and in all these things were they lifted up in the pride of their eyes, for they began to wear very costly apparel.

7 இதுவே ஆல்மாவும், ஆல்மாவினால் சபையின் ஆசிரியர்களாயும், ஆசாரியர்களாயும், மூப்பர்களாயும் நியமிக்கப்பட்டவர்களில் அநேகரும் உபத்திரவம் அடையக் காரணமாயிற்று; ஆம், அவர்களில் அநேகர் ஜனங்கள் மத்தியிலே, துன்மார்க்கம் தொடங்குவதை தாங்கள் கண்டதினிமித்தம் மிகவும் வேதனையடைந்தார்கள்.

Now this was the cause of much affliction to Alma, yea, and to many of the people whom Alma had consecrated to be teachers, and priests, and elders over the church; yea, many of them were sorely grieved for the wickedness which they saw had begun to be among their people.

8 சபையின் ஜனங்கள் தங்கள் கண்களின் மேட்டிமையால் உயர்த்தப்பட்டு, இருதயங்களை ஐஸ்வரியங்கள் மீதும், உலகத்தின் வீணானவைகளின் மீதும் வைத்து, ஒருவரையொருவர் இகழ்ந்து தங்களுடைய இஷ்டப்படியும், விருப்பத்தின்படியும், நம்பாதவர்களை துன்புறுத்த தொடங்குவதையும் அவர்கள் மிகுந்த வேதனையோடே கண்டார்கள்.

For they saw and beheld with great sorrow that the people of the church began to be lifted up in the pride of their eyes, and to set their hearts upon riches and upon the vain things of the world, that they began to be scornful, one towards another, and they began to persecute those that did not believe according to their own will and pleasure.

9 இப்படியாய் நியாயாதிபதிகளின் ஆளுகையின் எட்டாம் வருஷத்திலே சபையின் ஜனங்களுக்குள்ளே மிகுந்த பிணக்குகள் உண்டானது; ஆம், அவர்களுக்குள்ளே உண்டான பொறாமையும், தர்க்கமும், துர்க்குணமும், துன்புறுத்தல்களும், பெருமையும், தேவனுடைய சபையைச் சேராதோரிலே உண்டான பெருமையையும் மிஞ்சுவதாய் இருந்தது.

And thus, in this eighth year of the reign of the judges, there began to be great contentions among the people of the church; yea, there were envyings, and strife, and malice, and persecutions, and pride, even to exceed the pride of those who did not belong to the church of God.

10 இப்படியாக நியாயாதிபதிகளுடைய ஆளுகையின் எட்டாம் வருஷமும் முடிவுற்றது; சபையில் உண்டான துன்மார்க்கம், சபையைச் சார்ந்திராதோருக்கு பெரிய தடைக்கல்லாயிற்று; ஆகவே சபையின் வளர்ச்சி குறையத் தொடங்கியது.

And thus ended the eighth year of the reign of the judges; and the wickedness of the church was a great stumbling-block to those who did not belong to the church; and thus the church began to fail in its progress.

11 அந்தப்படியே, ஒன்பதாம் வருஷ தொடக்கத்திலே ஆல்மா சபையிலே உண்டான துன்மார்க்கத்தைக் கண்டான். சபையின் உதாரணம், அவிசுவாசிகளை அக்கிரமத்தை ஒவ்வொன்றாய் செய்யத்தூண்டி, ஜனத்தின் அழிவை வருஷிக்கப்பண்ணுவதையும் கண்டான்.

And it came to pass in the commencement of the ninth year, Alma saw the wickedness of the church, and he saw also that the example of the church began to lead those who were unbelievers on from one piece of iniquity to another, thus bringing on the destruction of the people.

12 ஆம், சிலர் பெருமையால் தங்களை உயர்த்தி, பிறரை தூஷிப்பதையும், சிறுமையானவர்களையும், வஸ்திரமில்லாதவர்களையும், பட்டினியாயிருப்போரையும் விடாய்த்திருப்போரையும், வியாதியஸ்தரையும், உபத்திரவப்படுவோரையும், முதுகைக்காட்டி புறக்கணிக்கிற மிகுதியான பட்சபாதங்களையும் ஜனங்களுக்குள்ளே கண்டான்.

Yea, he saw great inequality among the people, some lifting themselves up with their pride, despising others, turning their backs upon the needy and the naked and those who were hungry, and those who were athirst, and those who were sick and afflicted.

13 ஜனங்களுக்குள்ளே மிகுந்த புலம்பல் உண்டாக இதுவே காரணமாயிற்று, மற்ற சிலர் தங்களைத் தாழ்த்திக்கொண்டு, தரித்திரருக்கும் சிறுமையானோருக்கும், தங்களுடைய பொருளையளித்தும், பட்டினியானோரை போஷித்தும், தங்களுடைய உதவியை நாடி நின்ற சிறுமையானோருக்கு உதவிசெய்து, தீர்க்கதரிசன ஆவியின்படியே வரவிருக்கிற கிறிஸ்துவின் நிமித்தம் சகலவிதமான உபத்திரவங்களையும் சகித்து;

Now this was a great cause for lamentations among the people, while others were abasing themselves, succoring those who stood in need of their succor, such as imparting their substance to the poor and the needy, feeding the hungry, and suffering all manner of afflictions, for Christ's sake, who should come according to the spirit of prophecy;

14 இயேசு கிறிஸ்துவின் சித்தம், வல்லமை மற்றும்
மரணக்கட்டுக்களிலிருந்து விடுதலை ஆகியவற்-
றின்படி, மரித்தோரின் உயிர்த்தெழுதலினிமித்தம்,
மிகுந்த சந்தோஷத்தினாலே நிரப்பப்பட்டு பாவ-
மன்னிப்பை தக்கவைக்கும்படிக்கு அந்நாளை
எதிர்நோக்கினார்கள்.
15 இப்பொழுதும், அந்தப்படியே, தேவனை தாழ்மை-
யாய் பின்பற்றுகிறவர்களுடைய உபத்திரவங்க-
ளையும், மீதியான ஜனங்கள் அவர்கள் மீது துன்பு-
றுத்தல்களைக் குவிப்பதையும், பட்சபாதமாய்
இருப்பதையும், ஆல்மா கண்டு மிகவும் துக்கித்-
தான்; இருப்பினும் கர்த்தருடைய ஆவியானவர்
அவனைவிட்டு நீங்கவில்லை.
16 அவன் சபையின் மூப்பர்களுக்குள்ளே புத்தி-
மான் ஒருவனை தெரிந்துகொண்டு, ஜனங்களு-
டைய ஒப்புதலின்படியே கொடுக்கப்பட்டுள்ள சட்-
டங்களின்படி, சட்டங்களை அமல்படுத்தும்படிக்கு
அதிகாரம் பெற்றிருக்கும்படிக்கு, ஜனங்களுடைய
துன்மார்க்கத்திற்கு தக்கதாயும், குற்றங்களுக்கேற்-
றபடியும், சட்டங்களை அமல்படுத்த அதிகாரத்-
தைக் கொடுத்தான்.
17 இந்த மனுஷனுடைய பெயர் நேபிகா என்பதா-
கும். அவன் பிரதான நியாயாதிபதியாக நியமிக்கப்-
பட்டான்; அவன் நியாயம் விசாரிக்கவும், ஜனங்க-
ளை ஆளவும், நியாயாசனத்திலே வீற்றிருந்தான்.
18 சபையின் பிரதான ஆசாரிய ஸ்தானத்தை
அவனுக்குக் கொடாமல், ஆல்மா பிரதான ஆசாரிய
அலுவலை தானே வைத்துக்கொண்டான்; நியா-
யாசனத்தையோ நேபிகாவிற்கு கொடுத்தான்.
19 அவன் தன் ஜனம் அல்லது நேபியின் ஜனத்திற்-
குள்ளே போய், அவர்களது கடமையைக் குறித்து
அவர்களுக்கு நினைவூட்ட ஏவும்படியாக, தே-
வனின் வார்த்தையை போதிக்கவும் அவர்களுக்கு
விரோதமாய் தெளிவான சாட்சியமைக் கொண்டு
மாத்திரம் அவர்களை அடக்கவல்லது எனக்கண்-
டு, தேவனுடைய வார்த்தையாலே அவர்களுக்குள்-
ளே உண்டாயிருந்த சகல மேட்டிமையையும், தந்தி-
ரங்களையும், பிணக்குகளையும் நீக்கிப்போடும்ப-
டிக்கே அப்படிச் செய்தான்.
20 நேபியினுடைய ஜனங்களின் மேல் நியாயாதிப-
திகளின் ஆளுகையின் ஒன்பதாம் வருஷ துவக்-
கத்திலே, ஆல்மா நேபிகாவிற்கு நியாயாசனத்தை
ஒப்புவித்துவிட்டு, அவன் வெளிப்படுத்தல் மற்றும்
தீர்க்கதரிசன ஆவிக்கேற்றபடி, வசனத்திற்கு சாட்சி-
யமாயிருக்கவும், தேவனுடைய பரிசுத்த முறைமை-
யிலான பிரதான ஆசாரியத்துவத்திற்கு தன்னை
முழுவதுமாய் அர்ப்பணித்தான்.

Looking forward to that day, thus retaining a remission of their sins; being filled with great joy because of the resurrection of the dead, according to the will and power and deliverance of Jesus Christ from the bands of death.

And now it came to pass that Alma, having seen the afflictions of the humble followers of God, and the persecutions which were heaped upon them by the remainder of his people, and seeing all their inequality, began to be very sorrowful; nevertheless the Spirit of the Lord did not fail him.

And he selected a wise man who was among the elders of the church, and gave him power according to the voice of the people, that he might have power to enact laws according to the laws which had been given, and to put them in force according to the wickedness and the crimes of the people.

Now this man's name was Nephihah, and he was appointed chief judge; and he sat in the judgment-seat to judge and to govern the people.

Now Alma did not grant unto him the office of being high priest over the church, but he retained the office of high priest unto himself; but he delivered the judgment-seat unto Nephihah.

And this he did that he himself might go forth among his people, or among the people of Nephi, that he might preach the word of God unto them, to stir them up in remembrance of their duty, and that he might pull down, by the word of God, all the pride and craftiness and all the contentions which were among his people, seeing no way that he might reclaim them save it were in bearing down in pure testimony against them.

And thus in the commencement of the ninth year of the reign of the judges over the people of Nephi, Alma delivered up the judgment-seat to Nephihah, and confined himself wholly to the high priesthood of the holy order of God, to the testimony of the word, according to the spirit of revelation and prophecy.

*தேவனுடைய பரிசுத்த முறைமைக்கேற்ப பிரதான ஆசாரியனான ஆல்மா, ஜனங்களுக்கு தேசமுழுவதிலுமுள்ள அவர்களது பட்டணங்களிலும், கிராமங்களிலும் அறிவித்த வார்த்தைகள்.*

## ஆல்மா 5

1 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மா முதலாவதாய்
சாரகெம்லா தேசத்திலும் பின்பு எல்லா தேசங்களி-
லும் தேவனுடைய வசனங்களை ஜனங்களுக்கு
அறிவிக்கலானான்.
2 அவனுடைய சொந்த பதிவேட்டின்படி, சாரகெம்-
லா தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சபையிலே ஜனங்-
களுக்கு அவன் போதித்த வார்த்தைகளாவன:
3 ஆல்மாவாகிய நான் இவற்றைச் செய்ய தேவனி-
டத்திலிருந்து வல்லமையையும், அதிகாரத்தையும்
பெற்றிருந்த, என் தகப்பனாகிய ஆல்மாவினால்
தேவசபைக்கு பிரதான ஆசாரியனாக நியமிக்கப்-
பட்டேன். அவர் நேபி என்கிற தேசத்தின் எல்லைக-
ளில் உள்ள, ஆம், மார்மன் என்று அழைக்கப்பட்ட
தேசத்திலே சபையை ஸ்தாபிக்கத் தொடங்கினார்,
ஆம், மார்மன் தண்ணீர்களிலே தன் சகோதரருக்கு
ஞானஸ்நானம் கொடுத்தார், என்றும் நான் உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன்.
4 இதோ, அவர்களின் ராஜாவாகிய நோவாவின்
ஜனத்தினுடைய கரங்களிலிருந்து தேவனுடைய
இரக்கத்தினாலும், வல்லமையினாலும் தப்புவிக்-
கப்பட்டார்கள் என்றும், உங்களுக்குச் சொல்லுகி-
றேன்.
5 இதோ, அதன் பின்னர், அவர்கள் வனாந்தரத்தி-
லே லாமானியரின் கைகளால் அடிமைத்தனத்துக்-
கு கொண்டுவரப்பட்டார்கள்; ஆம், அவர்கள் சி-
றைத்தனத்திலிருந்தார்கள், கர்த்தர் மறுபடியுமாய்
தன் வார்த்தையின் வல்லமையினாலே அவர்க-
ளை அடிமைத்தனத்திலிருந்து தப்புவித்தார்; இந்த
தேசத்திற்குள்ளாக நாங்கள் கொண்டுவரப்பட்-
டோம். இங்கே, இந்த தேசத்திலும் முழுவதும் தே-
வனுடைய சபையை ஸ்தாபிக்கத் துவங்கினோம்,
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
6 இதோ, இந்த சபையைச் சார்ந்த என் சகோதரரே,
நீங்கள் உங்களுடைய பிதாக்கள் சிறைப்பட்டதை
இன்னும் போதுமானபடி நினைவிற்கொண்டிருக்-
கிறீர்களா? ஆம், அவர்களின் மீதிருந்த அவரு-
டைய இரக்கத்தையும், நீடிய சாந்தத்தையும் போது-
மானபடி இன்னும் நினைவிற்கொண்டிருக்கிறீர்க-
ளா? அன்றியும் பாதாளத்திலிருந்து அவர்களு-
டைய ஆத்துமாக்களை அவர் விடுவித்ததையும்
நீங்கள் இன்னும் நினைவிற்கொண்டிருக்கிறீர்க-
ளா?

*The words which Alma, the High Priest according to the holy order of God, delivered to the people in their cities and villages throughout the land.*

## Alma 5

Now it came to pass that Alma began to deliver the word of God unto the people, first in the land of Zarahemla, and from thence throughout all the land.

And these are the words which he spake to the people in the church which was established in the city of Zarahemla, according to his own record, saying:

I, Alma, having been consecrated by my father, Alma, to be a high priest over the church of God, he having power and authority from God to do these things, behold, I say unto you that he began to establish a church in the land which was in the borders of Nephi; yea, the land which was called the land of Mormon; yea, and he did baptize his brethren in the waters of Mormon.

And behold, I say unto you, they were delivered out of the hands of the people of king Noah, by the mercy and power of God.

And behold, after that, they were brought into bondage by the hands of the Lamanites in the wilderness; yea, I say unto you, they were in captivity, and again the Lord did deliver them out of bondage by the power of his word; and we were brought into this land, and here we began to establish the church of God throughout this land also.

And now behold, I say unto you, my brethren, you that belong to this church, have you sufficiently retained in remembrance the captivity of your fathers? Yea, and have you sufficiently retained in remembrance his mercy and long-suffering towards them? And moreover, have ye sufficiently retained in remembrance that he has delivered their souls from hell?

7 இதோ, அவர்களுடைய இருதயத்தை அவர் மாற்றிப்போட்டார்; அவர்களை கனநித்திரையிலிருந்து எழப்பண்ணினார். அவர்களும் தேவனை அறிந்து விழித்தெழுந்தார்கள். இதோ, அவர்கள் காரிருளின் நடுவே இருந்தாலும், அவர்களுடைய ஆத்துமாக்கள் நித்திய வார்த்தையின் வெளிச்சத்தால் ஒளிபெற்றன; ஆம், அவர்கள் மரணக்கட்டுகளாலும், பாதாளத்தின் சங்கிலிகளாலும் சூழப்பட்டிருக்கிறார்கள். நித்திய அழிவு அவர்களுக்காகக் காத்திருக்கிறது.

Behold, he changed their hearts; yea, he awakened them out of a deep sleep, and they awoke unto God. Behold, they were in the midst of darkness; nevertheless, their souls were illuminated by the light of the everlasting word; yea, they were encircled about by the bands of death, and the chains of hell, and an everlasting destruction did await them.

8 பின்னும் என் சகோதரரே, அவர்கள் நிர்மூலமாக்கப்பட்டார்களா, என்று உங்களைக் கேட்கிறேன். இதோ, அல்லவே. அவர்கள் நிர்மூலமாக்கப்படவில்லை, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And now I ask of you, my brethren, were they destroyed? Behold, I say unto you, Nay, they were not.

9 மரணத்தின் கட்டுகள் அறுக்கப்பட்டு, அவர்களைச் சூழ்ந்திருந்த பாதாளத்தின் சங்கிலிகள் அவிழ்க்கப்பட்டதா? என்று மறுபடியும் உங்களைக் கேட்கிறேன். உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆம். அவர்கள் கட்டவிழ்க்கப்பட்டார்கள். அவர்களுடைய ஆத்துமாக்கள் விசாலமடைந்தது. அவர்கள் மீட்பின் அன்பைக் குறித்துப் பாடினார்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள், என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And again I ask, were the bands of death broken, and the chains of hell which encircled them about, were they loosed? I say unto you, Yea, they were loosed, and their souls did expand, and they did sing redeeming love. And I say unto you that they are saved.

10 அவர்கள் எந்த நிபந்தனைகளினிமித்தம் மீட்கப்பட்டார்கள்? ஆம், அவர்கள் இரட்சிப்பை எதிர்நோக்கக் காரணமென்ன? அவர்கள் மரணத்தின் கட்டுக்களிலிருந்தும், பாதாளத்தின் சங்கிலிகளிலிருந்தும் அவிழ்க்கப்பட்ட காரணமென்ன? என்று உங்களைக் கேட்கிறேன்.

And now I ask of you on what conditions are they saved? Yea, what grounds had they to hope for salvation? What is the cause of their being loosed from the bands of death, yea, and also the chains of hell?

11 இதோ, உங்களுக்கு நான் பதிலளிக்கக்கூடும், அபிநாதியின் நாவால் பேசப்பட்ட வார்த்தைகளை என் தகப்பன் ஆல்மா விசுவாசிக்கவில்லையா? அவன் ஒரு பரிசுத்த தீர்க்கதரிசியல்லவா? அவன் தேவ வசனத்தைப் பேசவில்லையா, என் தகப்பனாகிய ஆல்மா அவைகளை விசுவாசிக்கவில்லையா?

Behold, I can tell you—did not my father Alma believe in the words which were delivered by the mouth of Abinadi? And was he not a holy prophet? Did he not speak the words of God, and my father Alma believe them?

12 அவருடைய விசுவாசத்திற்கேற்ப அவரின் இருதயத்திலே ஒரு பெரிய மாற்றம் உண்டாயிற்று. இதோ, இவைகளெல்லாம் உண்மையே, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And according to his faith there was a mighty change wrought in his heart. Behold I say unto you that this is all true.

13 இதோ, அவர் உங்களுடைய பிதாக்களுக்கும் வசனத்தைப் பிரசங்கித்தார். அவர்களுடைய இருதயத்திலும் ஒரு பெரும் மாற்றம் உண்டாகி, தங்களைத் தாழ்த்தி மெய்யான ஜீவனுள்ள தேவனை நம்பினார்கள். இதோ முடிவுபரியந்தமும் அவர்கள் உண்மையுள்ளவர்களாய் விளங்கினதினிமித்தம் இரட்சிக்கப்பட்டார்கள்.

And behold, he preached the word unto your fathers, and a mighty change was also wrought in their hearts, and they humbled themselves and put their trust in the true and living God. And behold, they were faithful until the end; therefore they were saved.

14 இப்பொழுதும் சபையாராகிய என்னுடைய சகோ-
தரரே, நீங்கள் தேவனில் ஆவிக்குரிய பிரகாரம்
ஜென்மித்தீர்களா? உங்களுடைய முகரூபத்தில்
அவரின் சாயலைப் பெற்றீர்களா? இந்த பெரும்
மாற்றத்தை உங்கள் இருதயங்களிலே பெற்ற அனு-
பவமுண்டா?

And now behold, I ask of you, my brethren of the church, have ye spiritually been born of God? Have ye received his image in your countenances? Have ye experienced this mighty change in your hearts?

15 நீங்கள் உங்களை சிருஷ்டித்தவரின் மீட்பிலே வி-
சுவாசம் கொண்டிருக்கிறீர்களா? நீங்கள் விசுவா-
சக்கண்ணால் முன்நோக்கி சாவுக்கேதுவான சரீரத்-
திலே செய்யப்பட்ட கிரியைகளுக்குத் தக்கதாக, நி-
யாயந்தீர்க்கப்படும் பொருட்டு தேவனுக்கு முன்-
பாக நிற்கும்படி, இந்த சாவுக்கேதுவான சரீரம் சா-
வாமையில் எழுவதையும், இந்த அழிவிற்கேதுவா-
னது அழியாமையில் எழுவதையும், பார்க்கிறீர்க-
ளா?

Do ye exercise faith in the redemption of him who created you? Do you look forward with an eye of faith, and view this mortal body raised in immortality, and this corruption raised in incorruption, to stand before God to be judged according to the deeds which have been done in the mortal body?

16 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அந்நாளிலே,
ஆசீர்வதிக்கப்பட்டவர்களே என்னிடம் வாருங்கள்.
இதோ இந்த பூமியின் பரப்பின்மீது செய்யப்பட்ட
உங்கள் கிரியைகள் நீதியுள்ளவை என்கிற தே-
வனின் சத்தத்தை நீங்கள் கேட்பதை, உங்களால் நி-
னைத்துப் பார்க்க முடிகிறதா?

I say unto you, can you imagine to yourselves that ye hear the voice of the Lord, saying unto you, in that day: Come unto me ye blessed, for behold, your works have been the works of righteousness upon the face of the earth?

17 அல்லது, அந்நாளிலே கர்த்தாவே பூமியின் பரப்-
பின்மேல் எங்கள் கிரியைகள், நீதியான கிரியைக-
ளே, என்று கர்த்தரை நோக்கி பொய்யுரைக்கலாம்,
அவர் உங்களை இரட்சிப்பார் என்று உங்களுக்குள்-
ளே எண்ணிக்கொள்ளுகிறீர்களோ?

Or do ye imagine to yourselves that ye can lie unto the Lord in that day, and say—Lord, our works have been righteous works upon the face of the earth—and that he will save you?

18 அல்லது நீங்கள் தேவனுடைய கட்டளைகளை
மறுதலித்ததை நினைத்துப்பார்த்து, உங்களுடைய
துன்மார்க்கம் யாவையும் சீராய் எண்ணிப்பார்க்-
கும்படியாக, ஆம், உங்கள் குற்றங்கள் சகலத்தை-
யும் நினைவிற்கொண்டு, அதினிமித்தம் உங்கள்
ஆத்துமாக்கள் குற்றவுணர்ச்சியாலும் துக்கத்தா-
லும் நிரப்பப்பட்டு, தேவனுடைய நியாயாசனத்துக்-
கு முன்பாக கொண்டுவரப்படுவதை உங்களால்
எண்ணிபார்க்கக்கூடுமா? என்று உங்களைக் கேட்-
கிறேன்.

Or otherwise, can ye imagine yourselves brought before the tribunal of God with your souls filled with guilt and remorse, having a remembrance of all your guilt, yea, a perfect remembrance of all your wickedness, yea, a remembrance that ye have set at defiance the commandments of God?

19 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அந்நாளிலே
நீங்கள் சுத்த இருதயத்தோடும் மாசற்ற கைகளோ-
டும் தேவனைக் காணக்கூடுமா? தேவனுடைய சா-
யலை உங்களின் முகரூபங்களில் கொண்டு நீங்-
கள் காணக்கூடுமா? என்று உங்களைக் கேட்கி-
றேன்.

I say unto you, can ye look up to God at that day with a pure heart and clean hands? I say unto you, can you look up, having the image of God engraven upon your countenances?

20 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிசாசிற்கு
கீழ்ப்பட்டவர்களாகும்படிக்கு உங்களையே நீங்கள்
கொடுத்த பின்னும், நீங்கள் இரட்சிக்கப்படக்கூடும்
என்று எண்ணுகிறீர்களா?

I say unto you, can ye think of being saved when you have yielded yourselves to become subjects to the devil?

21 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் இரட்-
சிக்கப்பட முடியாது என்பதை அந்நாளிலே அறி-
வீர்கள், ஏனெனில் தன்னுடைய வஸ்திரம் வெண்-
மையாக கழுவப்படாத எந்த மனுஷனும் இரட்சிக்-
கப்படான். ஆம், தன் ஜனத்தை அவர்களுடைய
பாவங்களிலிருந்து மீட்க வருவாரென்று நம் பி-
தாக்களால் பேசப்பட்டவருடைய இரத்தத்தினாலே
வஸ்திரங்கள் சுத்திகரிக்கப்பட்டு சகல கறைகளி-
லிருந்தும் கழுவப்பட வேண்டும்.

I say unto you, ye will know at that day that ye cannot be saved; for there can no man be saved except his garments are washed white; yea, his garments must be purified until they are cleansed from all stain, through the blood of him of whom it has been spoken by our fathers, who should come to redeem his people from their sins.

22 என் சகோதரரே, இப்போது உங்களைக் கேட்கி-
றேன், தேவனுடைய நியாயவிசாரணைக்கூண்டி-
லே நீங்கள் நிற்கையில் உங்களுடைய வஸ்திரங்-
கள் இரத்தத்தினாலும், எல்லாவிதமான அசுசிக-
ளாலும் கறைபடிந்திருக்குமேயானால் உங்களு-
டைய உணர்ச்சிகள் எப்படிப்பட்டதாயிருக்கும்?
இதோ இவைகள் உங்களுக்கு விரோதமாய் என்ன-
வற்றை சாட்சியாய் கொடுக்கும்?

And now I ask of you, my brethren, how will any of you feel, if ye shall stand before the bar of God, having your garments stained with blood and all manner of filthiness? Behold, what will these things testify against you?

23 இதோ, அவைகள் நீங்கள் கொலைபாதகரென்-
றும், எல்லாவிதமான துன்மார்க்கங்களிலும் குற்ற-
வாளிகளாக இருக்கிறீர்கள் என்றும் சாட்சி கொ-
டுக்காதோ?

Behold will they not testify that ye are murderers, yea, and also that ye are guilty of all manner of wickedness?

24 இதோ என் சகோதரரே, அப்படிப்பட்ட ஒருவன் தே-
வனுடைய ராஜ்யத்திலே, சுத்திகரிக்கப்பட்டதும்
கறையற்ற, சுத்தமான, வெண்மையான வஸ்திரங்-
களைத் தரித்த ஆபிரகாமோடும், ஈசாக்கோடும்,
யாக்கோபோடும், மற்ற பரிசுத்த தீர்க்கதரிசிகள் யா-
வரோடும் இடம் பெற முடியும், என்று எண்ணுகிறீர்-
களா?

Behold, my brethren, do ye suppose that such an one can have a place to sit down in the kingdom of God, with Abraham, with Isaac, and with Jacob, and also all the holy prophets, whose garments are cleansed and are spotless, pure and white?

25 அல்லவே, நீ அப்படிச் சொல்வாயானால், நம்மு-
டைய சிருஷ்டிகரை ஆதியிலிருந்து பொய்யராக்கி,
அல்லது ஆதியிலிருந்து அவர் பொய்யரென்றும்
எண்ணிலாலொழிய அப்படிப்பட்டவர்களுக்கு பர-
லோக ராஜ்யத்தில் இடமுண்டு, என்று நீ எண்ண மு-
டியாது. ஆனால் அவர்கள் பிசாசின் ராஜ்யத்தின்
பிள்ளைகளாய் இருப்பதினிமித்தம் புறம்பே தள்-
ளப்படுவார்கள், என்று நான் உங்களுக்குச் சொல்-
லுகிறேன்.

I say unto you, Nay; except ye make our Creator a liar from the beginning, or suppose that he is a liar from the beginning, ye cannot suppose that such can have place in the kingdom of heaven; but they shall be cast out for they are the children of the kingdom of the devil.

26 என் சகோதரரே, இதோ நான் உங்களிடத்தில்
சொல்லுகிறேன், மனமாற்றத்தை அனுபவித்து,
மீட்பின் அன்பைப்பற்றியதான பாடலை நீங்கள்
பாட உணருவீர்களெனில், அவ்வாறே இப்பொழுது
நீங்கள் உணரக்கூடுமா, என்று நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

And now behold, I say unto you, my brethren, if ye have experienced a change of heart, and if ye have felt to sing the song of redeeming love, I would ask, can ye feel so now?

27 தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாய் நடந்-
தீர்களா? இச்சமயத்திலே நீங்கள் மரிக்க அழைப்-
பைப் பெற்றால், உங்களுக்குள்ளே போதுமான
அளவுக்கு தாழ்மையாயிருந்தீர்களா, தம்முடைய
ஜனத்தை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்-
கும்பொருட்டு வரவிருக்கிற கிறிஸ்துவின் இரத்தத்-
தினாலே, உங்களுடைய வஸ்திரங்கள் சுத்திகரிக்-
கப்பட்டு, வெண்மையாக்கப்பட்டதென்றும் நீங்கள்
சொல்லக்கூடுமோ?

Have ye walked, keeping yourselves blameless before God? Could ye say, if ye were called to die at this time, within yourselves, that ye have been sufficiently humble? That your garments have been cleansed and made white through the blood of Christ, who will come to redeem his people from their sins?

28 இதோ, உங்களிடத்திலிருந்த பெருமையைக் களைந்தீர்களா? அப்படிச் செய்யவில்லையெனில், நீங்கள் தேவனைச் சந்திக்க ஆயத்தப்படவில்லை, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இதோ நீங்கள் துரிதமாய் ஆயத்தப்படவேண்டும். பரலோக ராஜ்யம் சமீபித்திருப்பதாலே அப்படிப்பட்டவன் நித்திய ஜீவனை பெறுவதில்லை என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

Behold, are ye stripped of pride? I say unto you, if ye are not ye are not prepared to meet God. Behold ye must prepare quickly; for the kingdom of heaven is soon at hand, and such an one hath not eternal life.

29 இதோ நான் சொல்கிறேன், உங்களில் எவனாகிலும் பொறாமையைக் களையாமல் இருக்கிறானா? அப்படிப்பட்டவன் ஆயத்தப்படாதவனே, என்று உங்களுக்குச் சொல்லுகிறேன், அவன் துரிதமாய் ஆயத்தப்படவேண்டும் என்று மனதாயிருக்கிறேன். ஏனெனில் நாழிகை சமீபமாயிருக்கிறது, காலம் எப்போதுவரும், என்று அவன் அறியாதிருக்கிறான், ஏனெனில் அப்படிப்பட்டவன் குற்றமற்றவனாய் காணப்பட மாட்டான்.

Behold, I say, is there one among you who is not stripped of envy? I say unto you that such an one is not prepared; and I would that he should prepare quickly, for the hour is close at hand, and he knoweth not when the time shall come; for such an one is not found guiltless.

30 மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களில் எவனாகிலும் தன் சகோதரனை பரிகாசம் பண்ணுகிறானா, அல்லது அவன்மீது துன்புறுத்தல்களைக் குவிக்கிறானா?

And again I say unto you, is there one among you that doth make a mock of his brother, or that heapeth upon him persecutions?

31 அப்படிப்பட்டவன் ஆயத்தப்படாதிருப்பதினாலே அவனுக்கு ஐயோ. அவன் மனந்திரும்பும் காலம் சமீபித்திருக்கிறது, அல்லது அவன் இரட்சிக்கப்பட முடியாது.

Wo unto such an one, for he is not prepared, and the time is at hand that he must repent or he cannot be saved!

32 ஆம், அக்கிரமக்காரர் யாவருக்கும் ஐயோ! மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள், ஏனெனில் தேவனாகிய கர்த்தர் இப்படி உரைத்திருக்கிறார்!

Yea, even wo unto all ye workers of iniquity; repent, repent, for the Lord God hath spoken it!

33 இதோ சகல மனுஷரையும் அவர் அழைக்கிறார், ஏனெனில் அவர்களுக்கு நேராக இரக்கத்தின் கரங்கள் நீட்டப்பட்டுள்ளன. அவர் சொல்கிறார் மனந்திரும்புங்கள், உங்களை நான் ஏற்றுக்கொள்வேன்.

Behold, he sendeth an invitation unto all men, for the arms of mercy are extended towards them, and he saith: Repent, and I will receive you.

34 ஆம், அவர் சொல்கிறார், நீங்கள் என்னிடத்தில் வாருங்கள், நீங்கள் ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிப்பீர்கள்; ஆம், நீங்கள் ஜீவ அப்பத்தையும் தண்ணீரையும் இலவசமாய்ப் புசித்துக் குடிப்பீர்கள்.

Yea, he saith: Come unto me and ye shall partake of the fruit of the tree of life; yea, ye shall eat and drink of the bread and the waters of life freely;

35 ஆம், என்னிடத்திலே வாருங்கள். நீதியின் கிரியைகளை நடப்பியுங்கள். நீங்கள் வெட்டப்பட்டு அக்கினியிலே போடப்படமாட்டீர்கள்.

Yea, come unto me and bring forth works of righteousness, and ye shall not be hewn down and cast into the fire—

36 ஏனெனில், இதோ காலம் சமீபமாய் இருக்கிறது, நற்கனியைக் கொடாதவனும் நீதியின் கிரியைகளைச் செய்யாதவனும், அழுது துக்கிக்க வேண்டியிருக்கும்.

For behold, the time is at hand that whosoever bringeth forth not good fruit, or whosoever doeth not the works of righteousness, the same have cause to wail and mourn.

37 அக்கிரமக்காரரே, உலகத்தின் வீணான காரியங்களில் பெருமை கொண்டிருப்பவரே, நீதியின் வழிகளை அறிந்திருக்கிறோம், என்று நீங்கள் சொல்லியும், மேய்ப்பனற்ற ஆடுகளைப்போல, வழிதப்பிப்போனீர்கள். மேய்ப்பர் ஒருவர் உங்களை அழைத்தும், இன்னும் அழைத்துக் கொண்டேயிருந்தாலும் அவருடைய சத்தத்திற்குச் செவிகொடுக்கவில்லை.

O ye workers of iniquity; ye that are puffed up in the vain things of the world, ye that have professed to have known the ways of righteousness nevertheless have gone astray, as sheep having no shepherd, notwithstanding a shepherd hath called after you and is still calling after you, but ye will not hearken unto his voice!

38 இதோ நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நல்ல
மேய்ப்பன் உங்களை அழைக்கிறார் என்று; ஆம்,
கிறிஸ்து என்ற தம்முடைய சொந்த நாமத்தின்படி-
யே உங்களை அவர் அழைக்கிறார்; நீங்கள்
அழைக்கப்படுகிற நாமத்தின்படியே உங்களை
அழைக்கிற அந்த நல்மேய்ப்பனின் சத்தத்திற்குச்
செவிகொடாமற் போவீர்களெனில், இதோ, நீங்கள்
நல்மேய்ப்பரின் ஆடுகள் இல்லை.
39 இப்போதும் நீங்கள் நல்மேய்ப்பரின் ஆடுகள்
அல்லவெனில், நீங்கள் எந்த மந்தையைச் சார்ந்த-
வர்கள்? இதோ, பிசாசு உங்களுக்கு மேய்ப்பனாயும்,
நீங்கள் அவனுடைய மந்தையைச் சார்ந்தோராயும்
இருக்கிறீர்கள், என்று உங்களுக்குச் சொல்லுகி-
றேன். இதை மறுதலிக்க எவனால் கூடும்? இதோ
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இதை மறுத-
லிக்கிறவன் பொய்யனும் பிசாசின் பிள்ளையுமா-
யிருக்கிறான்.
40 இதோ நன்மையானதெதுவும் தேவனிடத்திலி-
ருந்து வருகிறதென்றும், தீமையானதெதுவும் பிசா-
சினிடத்திலிருந்து வருகிறதென்றும் உங்களுக்குச்
சொல்லுகிறேன்.
41 ஆதலால் ஒருவன் நற்கிரியைகளைச் செய்கிறா-
னெனில், அவன் நல்மேய்ப்பரின் சத்ததிற்குச் செ-
விகொடுப்பவனும், அவரைப் பின்பற்றுகிறவனு-
மாய் இருக்கிறான். ஆனால் பொல்லாங்கைச் செய்-
கிறவன் பிசாசின் சத்தத்திற்குச் செவிகொடுப்பதி-
னாலே அவனுடைய பிள்ளையாயும் அவனைப்
பின்பற்றுகிறவனுமாயிருப்பான்.
42 இதைச் செய்கிறவனெவனும் தன் சம்பளத்தைப்
பெறவேண்டும்; நீதிக்கடுத்த காரியங்களைப் பொ-
றுத்தவரை, அவன் அனைத்து நற்கிரியைகளுக்-
கும் மரித்தவனாய், தன் சம்பளமாக மரணத்தைப்
பெறுகிறான்.
43 இப்படியிருக்க என் சகோதரரே, நான் என்னு-
டைய ஆத்துமபலத்தோடு பேசுகிறபடியாலே, நீங்-
கள் எனக்குச் செவிகொடுக்கவேண்டுமென்று
வாஞ்சிக்கிறேன்; ஏனெனில் இதோ, நீங்கள் தப்பி-
தம்பண்ணக்கூடாதபடிக்கு நான் உங்களிடத்திலே
தெளிவாய், அல்லது தேவனுடைய கட்டளைக-
ளின்படி பேசினேன்.
44 ஏனெனில் கிறிஸ்து இயேசுவிலே உண்டாயிருக்-
கிற தேவனுடைய பரிசுத்த முறைமையின்படியே,
இவ்விதமாய் பேசும்படி நான் அழைக்கப்பட்டிருக்-
கிறேன்; ஆம், வரப்போகிறவைகளைக்குறித்து நம்-
முடைய பிதாக்கள் பேசிய காரியங்களை இந்த
ஜனத்திற்கு நான் எழுந்து நின்று சாட்சிகொடுக்க
வேண்டுமென்று, கட்டளையிடப்பட்டேன்.

Behold, I say unto you, that the good shepherd doth call you; yea, and in his own name he doth call you, which is the name of Christ; and if ye will not hearken unto the voice of the good shepherd, to the name by which ye are called, behold, ye are not the sheep of the good shepherd.

And now if ye are not the sheep of the good shepherd, of what fold are ye? Behold, I say unto you, that the devil is your shepherd, and ye are of his fold; and now, who can deny this? Behold, I say unto you, whosoever denieth this is a liar and a child of the devil.

For I say unto you that whatsoever is good cometh from God, and whatsoever is evil cometh from the devil.

Therefore, if a man bringeth forth good works he hearkeneth unto the voice of the good shepherd, and he doth follow him; but whosoever bringeth forth evil works, the same becometh a child of the devil, for he hearkeneth unto his voice, and doth follow him.

And whosoever doeth this must receive his wages of him; therefore, for his wages he receiveth death, as to things pertaining unto righteousness, being dead unto all good works.

And now, my brethren, I would that ye should hear me, for I speak in the energy of my soul; for behold, I have spoken unto you plainly that ye cannot err, or have spoken according to the commandments of God.

For I am called to speak after this manner, according to the holy order of God, which is in Christ Jesus; yea, I am commanded to stand and testify unto this people the things which have been spoken by our fathers concerning the things which are to come.

45 இவைகள் மட்டுமல்ல. இவைகளைக் குறித்து
நான் அறிந்திருக்கிறேன் என்று எண்ணவில்லை-
யா? இதோ நான் பேசியவை சத்தியமானவை என
அறிந்திருக்கிறேன், என்று உங்களுக்குச் சாட்சி
கொடுக்கிறேன். நான் அவைகளின் நிச்சயத்தை
அறிந்ததைப்பற்றி எப்படி நினைக்கிறீர்கள்?

And this is not all. Do ye not suppose that I know of these things myself? Behold, I testify unto you that I do know that these things whereof I have spoken are true. And how do ye suppose that I know of their surety?

46 இதோ, தேவனுடைய பரிசுத்த ஆவியினாலே
அவை எனக்குத் தெரிவிக்கப்பட்டன, என்று உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன். இதோ, இவைகளை நான்
அறிந்து கொள்ளும்படிக்கு அநேக நாட்கள் உபவா-
சித்து ஜெபித்தேன். தேவனாகிய கர்த்தர் தம்மு-
டைய பரிசுத்த ஆவியினாலே அவைகளை எனக்-
குத் தெரிவித்தபடியாலே, இப்பொழுது அவைகள்
மெய்யானவை என்று அறிந்திருக்கிறேன்; இதுவே
எனக்குள் உண்டாயிருக்கிற வெளிப்படுத்தலின்
ஆவி.

Behold, I say unto you they are made known unto me by the Holy Spirit of God. Behold, I have fasted and prayed many days that I might know these things of myself. And now I do know of myself that they are true; for the Lord God hath made them manifest unto me by his Holy Spirit; and this is the spirit of revelation which is in me.

47 மேலும் நம்முடைய பிதாக்களால் பேசப்பட்ட-
வைகள் சத்தியமானவை என்றும், எனக்குள்ளி-
ருக்கிற தீர்க்கதரிசன ஆவியின்படியே எனக்கு வெ-
ளிப்படுத்தப்பட்டதென்றும், இதுவும் தேவாவியா-
னவருடைய வெளிப்படுத்தலாயிருக்கிறது என்-
றும், இது எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது,
என்றும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And moreover, I say unto you that it has thus been revealed unto me, that the words which have been spoken by our fathers are true, even so according to the spirit of prophecy which is in me, which is also by the manifestation of the Spirit of God.

48 வரப்போகிறதைக் குறித்து உங்களுக்கு நான்
சொல்லும் யாவும் மெய்யானதே, என்று நான்
அறிந்திருக்கிறேன், என்று உங்களுக்குச் சொல்லு-
கிறேன்; பிதாவின் ஒரேபேறானவரான குமாரனா-
கிய, கிருபையிலும் இரக்கத்திலும், சத்தியத்திலும்
பூரணப்பட்டவராகிய, இயேசு கிறிஸ்து வருவார்,
என்பதை நான் அறிந்திருக்கிறேன், என்று உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன். இதோ, தம் நாமத்திலே
உறுதியாய் விசுவாசிக்கிற சகல மனுஷரின் பாவங்-
களையும், ஆம், உலகத்தினுடைய பாவங்களை
எடுத்துப்போட வருகிறவர் அவரே.

I say unto you, that I know of myself that whatsoever I shall say unto you, concerning that which is to come, is true; and I say unto you, that I know that Jesus Christ shall come, yea, the Son, the Only Begotten of the Father, full of grace, and mercy, and truth. And behold, it is he that cometh to take away the sins of the world, yea, the sins of every man who steadfastly believeth on his name.

49 இப்போதும் இந்த முறைமையின்படியே, ஆம்,
எனக்குப் பிரியமான சகோதரருக்கும், ஆம், தேசத்தி-
லிருக்கிற சகலமானோருக்கும், ஆம், முதியோருக்-
கும், இளைஞருக்கும், அடிமையாயிருப்போருக்-
கும், சுயாதீனருக்கும், ஆம், வயோதிபருக்கும், நடு-
வயதினருக்கும், எழும்புகிற தலைமுறையினருக்-
கும் ஆம், அவர்கள் மனந்திரும்பி மறுபடியும் பிறக்-
கவேண்டுமென்று நான் கூக்குரலிடவே, நான்
அழைக்கப்பட்டிருக்கிறேன், என்று உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

And now I say unto you that this is the order after which I am called, yea, to preach unto my beloved brethren, yea, and every one that dwelleth in the land; yea, to preach unto all, both old and young, both bond and free; yea, I say unto you the aged, and also the middle aged, and the rising generation; yea, to cry unto them that they must repent and be born again.

50 ஆம், ஆவியானவர் சொல்வதாவது, பூமியின்
கடையாந்திரங்களே மனந்திரும்புங்கள், ஏனெ-
னில் பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது. தேவகு-
மாரன் தன் மகிமையிலும், தன் பலத்திலும், பராக்-
கிரமத்திலும், வல்லமையிலும், அதிகாரத்தோடும்
வருகிறார். ஆம், என் பிரியமான சகோதரரே, ஆவி-
யானவர் சொல்வதை உங்களுக்குச் சொல்லுகி-
றேன், இதோ பூமியனைத்திற்கும் ராஜாவானவரின்
மகிமையைப் பாருங்கள், பரலோக ராஜா வெகு சீக்-
கிரமாய் மனுபுத்திரர் யாவரின் மத்தியில் பிரகாசிப்-
பார்.

Yea, thus saith the Spirit: Repent, all ye ends of the earth, for the kingdom of heaven is soon at hand; yea, the Son of God cometh in his glory, in his might, majesty, power, and dominion. Yea, my beloved brethren, I say unto you, that the Spirit saith: Behold the glory of the King of all the earth; and also the King of heaven shall very soon shine forth among all the children of men.

51 மேலும் ஆவியானவர் எனக்குச் சொல்கிறார்,
ஆம், பலத்த சத்தமாய் கூக்குரலிட்டு சொல்வதாவ-
து, ஏனெனில் நீங்கள் மனந்திரும்பாவிடில் பர-
லோக ராஜ்யத்தை எந்த வகையிலும் நீங்கள் சுதந்-
தரிப்பதில்லை, இந்த ஜனங்களுக்குள்ளே போய்,
மனந்திரும்புங்கள், என்று சொல்.

And also the Spirit saith unto me, yea, crieth unto me with a mighty voice, saying: Go forth and say unto this people—Repent, for except ye repent ye can in nowise inherit the kingdom of heaven.

52 நான் மறுபடியும் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
ஆவியானவர் சொல்கிறார், இதோ, மரத்தின் வே-
ரண்டையிலே கோடாரி வைக்கப்பட்டிருக்கிறது.
ஆகையால் நல்ல கனியைக் கொடாத எந்த மரமும்
வெட்டப்பட்டு, ஆம், அழிக்கப்பட முடியாததும்,
அவியாததுமான அக்கினியிலே போடப்படும்.
இதோ, பரிசுத்தர் இதை உரைத்தார். நினைவில்
கொள்ளுங்கள்.

And again I say unto you, the Spirit saith: Behold, the ax is laid at the root of the tree; therefore every tree that bringeth not forth good fruit shall be hewn down and cast into the fire, yea, a fire which cannot be consumed, even an unquenchable fire. Behold, and remember, the Holy One hath spoken it.

53 இப்பொழுதும் என் அன்பு சகோதரரே, சொல்லப்-
பட்ட இவைகளை உங்களால் எதிர்க்க முடியுமா,
ஆம், அவைகளைப் புறக்கணித்து, பரிசுத்தரை
உங்கள் பாதங்களால் மிதித்துப் போடுவீர்களோ?
ஆம், உங்களுடைய இருதயத்திலே பெருமை
கொள்வீர்களோ? ஆம், நீங்கள் விலை உயர்ந்த
வஸ்திரங்களை தரிப்பதிலும் உலகத்தின் வீணா-
னவைகளான உங்களுடைய சம்பத்துகளிலே இரு-
தயங்களை வைத்து இன்னும் நிலை நிற்பீர்களோ?

And now my beloved brethren, I say unto you, can ye withstand these sayings; yea, can ye lay aside these things, and trample the Holy One under your feet; yea, can ye be puffed up in the pride of your hearts; yea, will ye still persist in the wearing of costly apparel and setting your hearts upon the vain things of the world, upon your riches?

54 ஆம், நீங்கள் மற்றவர்களைக் காட்டிலும் மேன்-
மையானவர்கள் என்று இன்னும் நினைப்பீர்க-
ளோ? தங்களையே தாழ்த்தி, தேவனுடைய பரிசுத்த
முறைமையின்படி நடப்பதினிமித்தம், இச்சபையி-
னுள் வரவழைக்கப்பட்டு பரிசுத்த ஆவியால் சுத்தி-
கரிக்கப்பட்டு மனந்திரும்புதலுக்கேதுவாய் கிரி-
யைகளைச் செய்கிற உங்கள் சகோதரரை இன்னும்
துன்புறுத்துவீர்களோ?

Yea, will ye persist in supposing that ye are better one than another; yea, will ye persist in the persecution of your brethren, who humble themselves and do walk after the holy order of God, wherewith they have been brought into this church, having been sanctified by the Holy Spirit, and they do bring forth works which are meet for repentance—

55 ஆம், தரித்திரக்கும், திக்கற்றோருக்கும் முதுகைத்
திருப்புவதில் தொடர்ந்து, அவர்களுக்கு உங்கள்
பொருளை ஈயாமலிருப்பதில் நிலைத்திருப்பீரோ?

Yea, and will you persist in turning your backs upon the poor, and the needy, and in withholding your substance from them?

56 முடிவாய் துன்மார்க்கத்திலே தரித்திருக்கிற யாவ-
ருக்கும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், துரித-
மாய் மனந்திரும்பாவிடில், வெட்டப்பட்டு அக்கினி-
யிலே போடப்படுவார்கள்.

And finally, all ye that will persist in your wickedness, I say unto you that these are they who shall be hewn down and cast into the fire except they speedily repent.

57 இப்பொழுதும், நான் உங்களிடத்தில் சொல்லுகிறேன், நல்மேய்ப்பனின் சத்தத்தைப் பின்பற்றிச் செல்ல வாஞ்சிக்கிற யாவரும், துன்மார்க்கரிடமிருந்து பிரிந்து விலகிவந்து, அவர்களுடைய அசுத்தமானவைகளைத் தொடாதிருங்கள்; இதோ, துன்மார்க்கரின் பெயர்கள், என் ஜனத்தினுடைய பெயர்களோடு இணைந்திராது, என்ற தேவ வசனம் நிறைவேற துன்மார்க்கரின் பெயர்கள் நீதிமான்களின் பெயர்களோடு எண்ணப்படாதபடிக்கு அவர்களுடைய பெயர்கள் அழிக்கப்படும்.

And now I say unto you, all you that are desirous to follow the voice of the good shepherd, come ye out from the wicked, and be ye separate, and touch not their unclean things; and behold, their names shall be blotted out, that the names of the wicked shall not be numbered among the names of the righteous, that the word of God may be fulfilled, which saith: The names of the wicked shall not be mingled with the names of my people;

58 நீதிமான்களுடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும். அவர்களுக்கு என்னுடைய வலது பாரிசத்திலே ஒரு சுதந்தரத்தை அருளுவேன். இப்பொழுதும் என் சகோதரரே, இதற்கு விரோதமாய் நீங்கள் சொல்ல ஏதாகிலும் உண்டா? நான் உங்களிடத்தில் சொல்லுகிறேன், நீங்கள் இதற்கு விரோதமாய் பேசினால், அது அபத்தமாய்ப் போகும். ஏனெனில் தேவ வசனம் நிறைவேற வேண்டும்.

For the names of the righteous shall be written in the book of life, and unto them will I grant an inheritance at my right hand. And now, my brethren, what have ye to say against this? I say unto you, if ye speak against it, it matters not, for the word of God must be fulfilled.

59 அநேக ஆடுகள் இருந்தும், ஓநாய்கள் பிரவேசித்து மந்தையைப் பட்சித்துப் போடாதவாறு, அவைகளை கவனிக்காத, மேய்ப்பன் உங்களில் உண்டா? இதோ தன் மந்தையினுள் ஓநாய் நுழைந்தால் அதை துரத்தாமலிருப்பானோ? ஆம், அவரால் முடியுமானால் இறுதியில் அதை அவன் கொன்று போடுவானே.

For what shepherd is there among you having many sheep doth not watch over them, that the wolves enter not and devour his flock? And behold, if a wolf enter his flock doth he not drive him out? Yea, and at the last, if he can, he will destroy him.

60 இப்போதும், நல்மேய்ப்பன் உங்களை அழைக்கிறார் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்? நீங்கள் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுப்பீர்களெனில், அவர் உங்களைத் தம் மந்தையில் சேர்த்துக்கொள்வார். நீங்கள் அவருடைய ஆடுகளாயிருப்பீர்கள்; நீங்கள் நிர்மூலமாகாதபடிக்கு, தங்களுக்குள்ளே பட்சிக்கிற ஓநாய்களை பிரவேசிக்கவொட்டாதிருக்க வேண்டுமென்று, அவர் கட்டளையிடுகிறார்.

And now I say unto you that the good shepherd doth call after you; and if you will hearken unto his voice he will bring you into his fold, and ye are his sheep; and he commandeth you that ye suffer no ravenous wolf to enter among you, that ye may not be destroyed.

61 இப்பொழுதும் ஆல்மாவாகிய நான், உங்களிடத்தில் பேசிய வார்த்தைகளை ஆசரிக்கவேண்டுமென்று, எனக்குக் கட்டளையிட்டவருடைய வார்த்தைகளைக் கொண்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.

And now I, Alma, do command you in the language of him who hath commanded me, that ye observe to do the words which I have spoken unto you.

62 சபையைச் சார்ந்தோருக்கு கட்டளையின் வாயிலாகவும், சபையைச் சார்ந்திராதோருக்கு ஜீவ விருட்சத்தின் கனியைப் புசிக்கிறவர்களாகும்படி, மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானத்தைப் பெற, வரவேண்டுமென்று அழைப்பினாலும் பேசுகிறேன்.

I speak by way of command unto you that belong to the church; and unto those who do not belong to the church I speak by way of invitation, saying: Come and be baptized unto repentance, that ye also may be partakers of the fruit of the tree of life.

# ஆல்மா 6

1 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா சாரகெம்லா-
விலே ஸ்தாபிக்கப்பட்ட சபையைச் சார்ந்த ஜனங்க-
ளிடம் பேசி முடித்த பின்பு சபை நடத்தப்படவும்,
கண்காணிக்கப்படவும், ஆசாரியர்களையும் மூப்-
பர்களையும் அவன் தேவனுடைய முறைமைக்-
கேற்ப தன் கைகளை வைத்து நியமித்தான்.

2 அந்தப்படியே, சபையைச் சாராத யாராயிருந்தா-
லும், தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி-
னால், மனந்திரும்புதலிற்கேதுவான ஞானஸ்நா-
னம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, சபையினுள்
ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள்.

3 தங்கள் அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பா-
மல் தேவனுக்கு முன்பாக தங்களைத் தாழ்த்திக்-
கொள்ளாமல் அதாவது தங்கள் இருதயங்களிலே
மேட்டிமையாயிருக்கிற சபையைச் சார்ந்த யாராயி-
ருந்தாலும் நிராகரிக்கப்பட்டு, அவர்களுடைய பெ-
யர்கள் நீதிமான்களோடு எண்ணப்படாதபடிக்கு
நீக்கப்பட்டன.

4 இப்படியாக அவர்கள் சாரகெம்லா பட்டணத்தி-
லுள்ள சபையின் முறைமையை ஸ்தாபிக்கத் தொ-
டங்கினார்கள்.

5 தேவ வசனம் யாவருக்கும் தாராளமாய் கொடுக்-
கப்படவேண்டுமென்பதையும், தேவ வசனத்தைக்
கேட்க ஏகமாய் கூடுகிற சிலாக்கியத்தை ஒருவரி-
டத்திலிருந்தும் பறித்துப்போடவில்லையென்ப-
தையும், நீங்கள் அறிந்துகொள்ளவேண்டுமென்று
மனதாயிருக்கிறேன்.

6 அன்றியும் தேவ பிள்ளைகள், தேவனை அறியா-
தவர்களுடைய ஆத்துமாக்களின் நலத்திற்கென
அடிக்கடி ஏகமாய்க்கூடி உபவாசத்திலும், ஊக்க-
மான ஜெபத்திலும் தரித்திருக்கவேண்டுமென்று
கட்டளையிடப்பட்டார்கள்.

7 இப்பொழுதும், அந்தப்படியே, இந்த ஒழுங்குக-
ளை ஆல்மா செய்த பின்பு, அவன் சாரகெம்லா பட்-
டணத்திலிருந்த சபையைவிட்டுப் புறப்பட்டு, சீ-
தோன் நதிக்குக் கிழக்கு திசையாய் கிதியோன் பள்-
ளத்தாக்கினூடாக கட்டப்பட்ட பட்டணமாகிய, பட்-
டயத்தினால் நிகோர் கொன்றுபோட்ட மனுஷனு-
டைய பெயரால் வழங்கப்பட்ட கிதியோன் எனப்-
பட்ட பட்டணத்தினுள் பிரவேசித்தான்.

# Alma 6

And now it came to pass that after Alma had made an end of speaking unto the people of the church, which was established in the city of Zarahemla, he ordained priests and elders, by laying on his hands according to the order of God, to preside and watch over the church.

And it came to pass that whosoever did not belong to the church who repented of their sins were baptized unto repentance, and were received into the church.

And it also came to pass that whosoever did belong to the church that did not repent of their wickedness and humble themselves before God—I mean those who were lifted up in the pride of their hearts—the same were rejected, and their names were blotted out, that their names were not numbered among those of the righteous.

And thus they began to establish the order of the church in the city of Zarahemla.

Now I would that ye should understand that the word of God was liberal unto all, that none were deprived of the privilege of assembling themselves together to hear the word of God.

Nevertheless the children of God were commanded that they should gather themselves together oft, and join in fasting and mighty prayer in behalf of the welfare of the souls of those who knew not God.

And now it came to pass that when Alma had made these regulations he departed from them, yea, from the church which was in the city of Zarahemla, and went over upon the east of the river Sidon, into the valley of Gideon, there having been a city built, which was called the city of Gideon, which was in the valley that was called Gideon, being called after the man who was slain by the hand of Nehor with the sword.

8 ஆல்மா போய், தன் பிதாக்களால் பேசப்பட்ட
வார்த்தையின் சத்தியத்தைப்பற்றிய வெளிப்படுத்-
தலின்படியேயும், தன்னிலிருந்த தீர்க்கதரிசன
ஆவியின் படியேயும், தம் ஜனத்தை அவர்களு-
டைய பாவங்களிலிருந்து மீட்க வருகிற தேவகுமா-
ரனாகிய, இயேசு கிறிஸ்துவினுடைய சாட்சியமத்-
தின்படியேயும், தான் அழைக்கப்பட்ட பரிசுத்த மு-
றைமையின்படியேயும், தேவ வசனத்தை கிதி-
யோன் பள்ளத்தாக்கிலே ஸ்தாபிக்கப்பட்ட சபையி-
லே அறிவிக்கலானான். இது இப்படியாக எழுதப்-
பட்டிருக்கிறது. ஆமென்.

And Alma went and began to declare the word of God unto the church which was established in the valley of Gideon, according to the revelation of the truth of the word which had been spoken by his fathers, and according to the spirit of prophecy which was in him, according to the testimony of Jesus Christ, the Son of God, who should come to redeem his people from their sins, and the holy order by which he was called. And thus it is written. Amen.

*தன்னுடைய சொந்த பதிவேட்டின் பிரகாரமாய் கிதி-
யோனிலிருக்கும் ஜனங்களுக்கு ஆல்மா பேசிய
வார்த்தைகள்.*

## ஆல்மா 7

1 இதோ என் பிரிமான சகோதரரே, நான் உங்களிடம்
வர அனுமதிக்கப்பட்டதால், என் பாஷையிலும்
என் சொந்த வாயினாலும், என் வாயின் வார்த்தை-
களால் முதல் முறையாக பேசியிருக்கிறேன் என்ப-
தாலும், உங்களிடத்தில் பேச முயற்சிக்கிறேன். நான்
முழுவதுமாய் நியாயாசனத்தில் இருந்ததால், அதிக
வேலையினிமித்தம் உங்களிடம் வரக்கூடாமல்
போனது.
2 எனக்குப் பதிலாய், ஆளுகை செய்ய மற்றொரு-
வனிடத்தில் நியாயாசனம் கொடுக்கப்படாமலிருந்-
திருந்தால் இச்சமயமும் நான் உங்களிடத்தில் வரக்-
கூடாமற்போயிருக்கும். நான் உங்களிடத்திலே
வரும்படி கர்த்தர் மிகுந்த இரக்கத்தினாலே அருளச்
செய்தார்.
3 இதோ, நீங்கள் தேவனுக்கு முன்பாக தாழ்ந்திருந்-
து அவருடைய கிருபையை இடைவிடாமல்
வேண்டிக்கொள்பவர்களாக நான் உங்களைக்
காண்பேன் என்றும், அவருக்கு முன்பாக குற்றமற்-
றவர்களாக நீங்கள் இருப்பதைக் காண்பேன் என்-
றும், சாரகெம்லாவிலே, கொடுமையான சூழ்நிலை-
யிலிருந்த நமது சகோதரர்களைப் போலல்லாதவர்-
களாக உங்களைக் காண்பேன் என்றும், பெரும்
நம்பிக்கையோடும் மிகுந்த வாஞ்சையோடும் வந்தி-
ருக்கிறேன்.
4 தம்முடைய நீதியான வழிகளிலே அவர்கள் மறு-
படியும் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறார்களென்று
எனக்குத் தெரியப்பண்ணிய, மிகுந்த சந்தோஷத்-
தை எனக்கு தந்தருளிய, தேவனுடைய நாமம் ஸ்-
தோத்தரிக்கப்படுவதாக.
5 உங்களைக் குறித்து, நான் மகிழ்ச்சியடைவேன்
என்று எனக்குள் இருக்கிற தேவ ஆவியின்படியே
நம்புகிறேன்; அன்றியும் உங்களைக்குறித்த என்
மகிழ்ச்சி சாரகெம்லாவிலே இருக்கிற சகோதரர் கு-
றித்து நான் பட்ட அதிக உபத்திரவங்கள் மற்றும்
வேதனை வாயிலாக வருகிறதை நான் வாஞ்சிக்கி-
றதில்லை. ஏனெனில் இதோ, அவர்களைக் குறித்த
என் மகிழ்ச்சி மிகுந்த உபத்திரவத்தையும், வே-
தனையையும் அனுபவித்த பிறகு உண்டாயிருக்கி-
றது.

*The words of Alma which he delivered to the people in Gideon, according to his own record.*

## Alma 7

Behold my beloved brethren, seeing that I have been permitted to come unto you, therefore I attempt to address you in my language; yea, by my own mouth, seeing that it is the first time that I have spoken unto you by the words of my mouth, I having been wholly confined to the judgment-seat, having had much business that I could not come unto you.

And even I could not have come now at this time were it not that the judgment-seat hath been given to another, to reign in my stead; and the Lord in much mercy hath granted that I should come unto you.

And behold, I have come having great hopes and much desire that I should find that ye had humbled yourselves before God, and that ye had continued in the supplicating of his grace, that I should find that ye were blameless before him, that I should find that ye were not in the awful dilemma that our brethren were in at Zarahemla.

But blessed be the name of God, that he hath given me to know, yea, hath given unto me the exceedingly great joy of knowing that they are established again in the way of his righteousness.

And I trust, according to the Spirit of God which is in me, that I shall also have joy over you; nevertheless I do not desire that my joy over you should come by the cause of so much afflictions and sorrow which I have had for the brethren at Zarahemla, for behold, my joy cometh over them after wading through much affliction and sorrow.

6 ஆனால் இதோ, உங்களுடைய நிலை உங்களின் சகோதரர் இருந்த மிகுந்த அவிசுவாசமான நிலையைப் போன்றதன்று, என நம்புகிறேன்; உங்களுடைய இருதயங்களிலே பெருமை கொள்ளாதிருக்கிறீர்களென்றும் நம்புகிறேன்; ஐஸ்வரியங்களிலும், உலகத்தினுடைய வீணான காரியங்களிலும் உங்களுடைய இருதயத்தை வைக்காமலிருக்கிறீர்கள், என்றும் நம்புகிறேன்; நீங்கள் விக்கிரகங்களை வணங்காமல், உண்மையானவரும் ஜீவிக்கிறவருமான தேவனைத் தொழுதுகொண்டு, வரவிருக்கிற உங்களுடைய பாவமன்னிப்பை மாறாத விசுவாசத்தோடு எதிர்நோக்கியிருக்கிறீர்கள், என்றும் நம்புகிறேன்.

But behold, I trust that ye are not in a state of so much unbelief as were your brethren; I trust that ye are not lifted up in the pride of your hearts; yea, I trust that ye have not set your hearts upon riches and the vain things of the world; yea, I trust that you do not worship idols, but that ye do worship the true and the living God, and that ye look forward for the remission of your sins, with an everlasting faith, which is to come.

7 இதோ நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், வரப்போகிறவைகள் பல உண்டு; இதோ, அவை அனைத்திற்கும் முக்கியமான காரியம் ஒன்று உண்டு, ஏனெனில் இதோ மீட்பர் தம் ஜனத்தின் மத்தியிலே வந்து ஜீவிக்கிற காலம் தூரமாயில்லை.

For behold, I say unto you there be many things to come; and behold, there is one thing which is of more importance than they all—for behold, the time is not far distant that the Redeemer liveth and cometh among his people.

8 இதோ, அவர் தம் அநித்திய வாசஸ்தலத்திலே குடியிருக்கும் சமயத்தில் நம் மத்தியிலே வருவார் என்று நான் சொல்லவில்லை; ஏனெனில் இதோ, அப்படியிருக்குமென்று ஆவியானவர் என்னிடத்தில் சொல்லவில்லை. இந்தக் காரியத்தைக்குறித்து நான் அறியேன்; ஆனால் தம் வார்த்தையின்படியே எல்லா காரியங்களையும் செய்ய தேவனாகிய கர்த்தருக்கு வல்லமையுண்டு என்பதை மட்டும் அறிந்திருக்கிறேன்.

Behold, I do not say that he will come among us at the time of his dwelling in his mortal tabernacle; for behold, the Spirit hath not said unto me that this should be the case. Now as to this thing I do not know; but this much I do know, that the Lord God hath power to do all things which are according to his word.

9 ஆனால் இதோ, ஆவியானவர் என்னை நோக்கிச் சொன்னது என்னவென்றால்: நீ இந்த ஜனங்களிடம் கூக்குரலிட்டு சொல்லவேண்டியதாவது, நீங்கள் மனந்திரும்பி, கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்தி, அவருடைய நேரான பாதைகளிலே நடவுங்கள்; ஏனெனில் இதோ, பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறது. தேவ குமாரன் பூமியின் மீது வருகிறார்.

But behold, the Spirit hath said this much unto me, saying: Cry unto this people, saying—Repent ye, and prepare the way of the Lord, and walk in his paths, which are straight; for behold, the kingdom of heaven is at hand, and the Son of God cometh upon the face of the earth.

10 இதோ, அவர் நம்முடைய முற்பிதாக்களின் தேசமாகிய எருசலேமில் மரியாள் என்பவளிடத்தில் பிறப்பார். கன்னிகையும், அருமையானவளும், தெரிந்துகொள்ளப்பட்ட பாத்திரமுமான, அவள் பரிசுத்த ஆவியானவரின் பலத்தால் நிழலிடப்பட்டு, கர்ப்பவதியாகி குமாரனை, ஆம், தேவகுமாரனைப் பெறுவாள்.

And behold, he shall be born of Mary, at Jerusalem which is the land of our forefathers, she being a virgin, a precious and chosen vessel, who shall be overshadowed and conceive by the power of the Holy Ghost, and bring forth a son, yea, even the Son of God.

11 அவர் ஜனங்களுடைய வேதனைகளையும், நோய்களையும் தம் மேல் ஏற்றுக்கொள்வார் என்ற வார்த்தை நிறைவேறும்படியாய் அவர் போய் சகலவித துன்பங்களையும், உபத்திரவங்களையும், சோதனைகளையும் அனுபவிப்பார்.

And he shall go forth, suffering pains and afflictions and temptations of every kind; and this that the word might be fulfilled which saith he will take upon him the pains and the sicknesses of his people.

12 தம்முடைய ஜனத்தைக் கட்டியிருக்கிற மரணக்கட்டுக்களை அவிழ்க்கும்பொருட்டு அவர் மரணத்தை தம்மீது ஏற்றுக்கொள்வார்; தம் ஜனத்தினுடைய பெலவீனங்களுக்குத் தக்கதாய், அவர்களுக்கு மாம்சத்தின் பிரகாரமாய், ஒத்தாசை புரிவதெப்படி என்று தாம் அறிந்துகொள்ளும்படிக்கும் மாம்சத்தின்படி தாம் உருக்கமான இரக்கத்தினால் நிறைக்கப்படும்படிக்கும், அவர்களுடைய பெலவீனங்களைத் தம்மேல் ஏற்றுக்கொள்வார்.

And he will take upon him death, that he may loose the bands of death which bind his people; and he will take upon him their infirmities, that his bowels may be filled with mercy, according to the flesh, that he may know according to the flesh how to succor his people according to their infirmities.

13 ஆவியானவர் சகலவற்றையும் அறிகிறார், இருப்பினும் தேவ குமாரன் தம் ஜனத்தினுடைய பாவங்களை தம்மேல் ஏற்றுக்கொள்ளும்படிக்கும், தமது விடுதலையாக்கும் வல்லமையால் அவர்களுடைய மீறுதல்களை நீக்கும்படிக்கும், மாம்சத்தின் பிரகாரமாய் பாடனுபவிக்கிறார், இதோ, இதுவே எனக்குள்ளிருக்கிற சாட்சியம்.

Now the Spirit knoweth all things; nevertheless the Son of God suffereth according to the flesh that he might take upon him the sins of his people, that he might blot out their transgressions according to the power of his deliverance; and now behold, this is the testimony which is in me.

14 நீங்கள் மனந்திரும்பி, மறுபடியும் பிறக்கவேண்டுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் நீங்கள் மறுபடியும் பிறவாவிட்டால், பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது என்று ஆவியானவர் சொல்கிறார். ஆதலால் உங்களுடைய பாவங்களிலிருந்து நீங்கள் கழுவப்படவும், உலகத்தினுடைய பாவங்களை எடுத்துப் போடுகிறவரும், சகல அநீதியிலிருந்து இரட்சிக்கவும், சுத்திகரிக்கவும், வல்லமையுடையவராகிய தேவாட்டுக்குட்டியானவர் மேல் விசுவாசத்தை வைக்கவும், மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொள்ளவும் வாருங்கள்.

Now I say unto you that ye must repent, and be born again; for the Spirit saith if ye are not born again ye cannot inherit the kingdom of heaven; therefore come and be baptized unto repentance, that ye may be washed from your sins, that ye may have faith on the Lamb of God, who taketh away the sins of the world, who is mighty to save and to cleanse from all unrighteousness.

15 ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், வந்து பயப்படாதிருங்கள், எளிதாய் உங்களை மேற்கொண்டு அழிவுக்கேதுவாக உங்களைக் கட்டிப்போடுகிற சகல பாவத்தையும் ஒதுக்கித் தள்ளுங்கள். ஆம், வந்து செல்லுங்கள், உங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவும், தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளவும், அவருடனேகூட ஒரு உடன்படிக்கை செய்யவும், அதற்கு சாட்சியாய் ஞானஸ்நான தண்ணீருக்குள்ளே போக மனதாயிருக்கிறீர்களென்று, உங்கள் தேவனுக்கு காண்பியுங்கள்.

Yea, I say unto you come and fear not, and lay aside every sin, which easily doth beset you, which doth bind you down to destruction, yea, come and go forth, and show unto your God that ye are willing to repent of your sins and enter into a covenant with him to keep his commandments, and witness it unto him this day by going into the waters of baptism.

16 இதைச் செய்து, அது முதற்கொண்டு தேவ கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன், நான் ஏற்கனவே சொன்னதும், சொல்லுகிறதுமான, எனக்கு சாட்சி கொடுத்த பரிசுத்த ஆவியின் சாட்சியமத்தின்படியே, நித்திய ஜீவனைப் பெறுவான், என்பதை நினைவுகூருவான்.

And whosoever doeth this, and keepeth the commandments of God from thenceforth, the same will remember that I say unto him, yea, he will remember that I have said unto him, he shall have eternal life, according to the testimony of the Holy Spirit, which testifieth in me.

17 இப்பொழுதும் எனக்கு பிரியமான சகோதரரே, இவைகளை விசுவாசிக்கிறீர்களா? இதோ, அவைகளை நீங்கள் விசுவாசிக்கிறதை நான் அறிந்திருக்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். அவைகளை நீங்கள் விசுவாசிக்கிறீர்களென்று, எனக்குள் இருக்கிற ஆவியானவரின் வெளிப்படுத்துதலின் வாயிலாக அறிந்திருக்கிறேன். நான் பேசிய காரியங்களான இவைகளைக்குறித்து, உங்களுடைய பலத்த விசுவாசத்தினிமித்தம் எனக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது.

And now my beloved brethren, do you believe these things? Behold, I say unto you, yea, I know that ye believe them; and the way that I know that ye believe them is by the manifestation of the Spirit which is in me. And now because your faith is strong concerning that, yea, concerning the things which I have spoken, great is my joy.

18 ஏனெனில் உங்கள் சகோதரரைப்போல நீங்கள் பதட்ட நிலையில் இருக்கக்கூடாது என்று வாஞ்சித்திருக்கிறேன் என்பதை தொடக்கத்திலிருந்தே உங்களுக்குச் சொன்னேன். அந்தப்படியே என் வாஞ்சைகள் நிறைவேறின.

For as I said unto you from the beginning, that I had much desire that ye were not in the state of dilemma like your brethren, even so I have found that my desires have been gratified.

19 நீங்கள் நீதியின் பாதைகளிலே இருப்பதை உணருகிறேன்; நீங்கள் தேவனுடைய ராஜ்யத்திற்கு நடத்திச் செல்கிற பாதையிலிருக்கிறீர்கள் என்று உணருகிறேன்; ஆம், அவருடைய பாதைகளைச் செவ்வைப்படுத்துகிறீர்களென்பதையும் உணருகிறேன்.

For I perceive that ye are in the paths of righteousness; I perceive that ye are in the path which leads to the kingdom of God; yea, I perceive that ye are making his paths straight.

20 அவர் மாறுபாடான பாதைகளில் நடப்பதுமில்லை, தாம் சொன்னவைகளிலிருந்து மாறிப்போவதுமில்லை; வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கத்துக்கும், சரியானதிலிருந்து தவறுக்கும் திரும்புவது சிறிதேனும் அவரில் இல்லை, என்பவைகளை அவருடைய வார்த்தையால் உண்டான சாட்சியமத்தின் மூலம் உங்களுக்கு அறிவிக்கப்பட்டதென்று உணருகிறேன்; ஆகவே அவருடைய மார்க்கம் ஒரு நித்திய சுற்று.

I perceive that it has been made known unto you, by the testimony of his word, that he cannot walk in crooked paths; neither doth he vary from that which he hath said; neither hath he a shadow of turning from the right to the left, or from that which is right to that which is wrong; therefore, his course is one eternal round.

21 அவர் அசுத்த ஆலயங்களில் வாசம் பண்ணுவதுமில்லை; அசுசியானதும், சுத்தமற்றதுமான எதுவும் தேவனுடைய ராஜ்யத்தினுள் ஏற்றுக்கொள்ளப்படுவதுமில்லை; ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், காலம் வரும், ஆம், அந்தக் கடைசி நாளின்போது அசுசியானவன் தன் அசுசியிலேயே தரித்திருப்பான்.

And he doth not dwell in unholy temples; neither can filthiness or anything which is unclean be received into the kingdom of God; therefore I say unto you the time shall come, yea, and it shall be at the last day, that he who is filthy shall remain in his filthiness.

22 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாய் நடக்கவும், நீங்கள் பெற்றுக்கொண்ட அந்த தேவ பரிசுத்த முறைமையின்படியே நடக்கவும், தேவனுக்கு செய்யவேண்டிய கடமைகளின் நினைவுக்கு உங்களை விழித்தெழுப்பவே இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

And now my beloved brethren, I have said these things unto you that I might awaken you to a sense of your duty to God, that ye may walk blameless before him, that ye may walk after the holy order of God, after which ye have been received.

23 இப்பொழுதும், நீங்கள் தாழ்மையாயும், கீழ்ப்படி-
தலுள்ளவர்களாயும், மென்மையானவர்களாயும்,
போதிக்கப்படக்கூடியவர்களாயும், பூரண பொறு-
மையும், நீடிய சாந்தமும், சகலத்திலும் இச்சையடக்-
கமாயுமிருந்து, தேவ கட்டளைகளைக் கைக்-
கொள்வதில் சதாகாலங்களிலும் கருத்துள்ளவர்க-
ளாயும், தங்களுக்குத் தேவையாயிருக்கிற ஆவிக்-
குரியதும், இம்மைக்குரியதுமான சகல காரியங்க-
ளுக்கும் விண்ணப்பம் செய்து, நீங்கள் பெற்றுக்-
கொண்டவைகள் எதுவாகிலும், அதற்காய் எப்-
போதும் தேவனுக்கு நன்றியை ஏறெடுப்பவர்களா-
யும், இருக்கவேண்டுமென மனதாயிருக்கிறேன்.
24 உங்களிடத்தில் விசுவாசமும், நம்பிக்கையும்,
தயாளத்துவமும் உண்டாயிருக்கும்படி பார்த்துக்-
கொள்ளுங்கள், அப்பொழுது நற்கிரியைகளிலே
நீங்கள் பெருகுகிறவர்களாயிருப்பீர்கள்.
25 முடிவாய் நீங்கள் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும்,
யாக்கோபோடும், உலகம் துவங்கினது முதலிருந்த
பரிசுத்த தீர்க்கதரிசிகளோடும் உட்கார அழைத்து
வரப்படும் பொருட்டு, அவர்களுடைய கறையற்ற
வஸ்திரங்கள் போல் உங்கள் வஸ்திரங்களும்
கறையற்றதாக இருக்கப் பெற்று, நீங்கள் இனி ஒரு-
போதும், பரலோக ராஜ்யத்திலிருந்து வெளியேற்-
றப்படாதவர்களாய் இருக்கும்படிக்கும், கர்த்தர் தா-
மே உங்களை ஆசீர்வதிப்பாராக.
26 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, எனக்-
குள் சாட்சி கொடுக்கிற ஆவிக்கேற்றபடியே நான்
இவ்வார்த்தைகளை பேசினேன்; இவ்வார்த்தைக-
ளுக்கு நீங்கள் மிகுந்த கருத்தோடு செவிகொடுத்த-
தினிமித்தம் என் ஆத்துமா களிகூர்கிறது.
27 இப்பொழுதும் உங்களுடைய விசுவாசத்திற்கும்,
நற்கிரியைகளுக்கும் தக்கதாக தேவ சமாதானம்
உங்கள் மேலும் உங்கள் வீடுகள் மேலும், நிலங்கள்
மேலும், உங்கள் ஆடு மாடுகள் மேலும், நீங்கள் சு-
தந்தரித்திருக்கிற யாவின் மேலும், உங்கள் ஸ்திரீ-
கள் மேலும், உங்கள் பிள்ளைகள் மேலும், இச்சம-
யம் முதற்கொண்டு என்றென்றும் நிலைத்திருப்ப-
தாக. நான் சொன்னது இதுவே. ஆமென்.

And now I would that ye should be humble, and be submissive and gentle; easy to be entreated; full of patience and long-suffering; being temperate in all things; being diligent in keeping the commandments of God at all times; asking for whatsoever things ye stand in need, both spiritual and temporal; always returning thanks unto God for whatsoever things ye do receive.

And see that ye have faith, hope, and charity, and then ye will always abound in good works.

And may the Lord bless you, and keep your garments spotless, that ye may at last be brought to sit down with Abraham, Isaac, and Jacob, and the holy prophets who have been ever since the world began, having your garments spotless even as their garments are spotless, in the kingdom of heaven to go no more out.

And now my beloved brethren, I have spoken these words unto you according to the Spirit which testifieth in me; and my soul doth exceedingly rejoice, because of the exceeding diligence and heed which ye have given unto my word.

And now, may the peace of God rest upon you, and upon your houses and lands, and upon your flocks and herds, and all that you possess, your women and your children, according to your faith and good works, from this time forth and forever. And thus I have spoken. Amen.

## ஆல்மா 8

1 இப்பொழுதும், அந்தப்படியே, எழுதமுடியாத அநேக
காரியங்களை கிதியோன் ஜனங்களுக்கு ஆல்மா
போதித்து, தான் முன்பு சாரகெம்லா தேசத்தில் செய்-
ததுபோலவே, சபையின் முறைமையை ஸ்தாபித்த
பின்பு, அவன் கிதியோன் தேசத்திலிருந்து திரும்பி-
னான். ஆம், அவன் செய்து முடித்த பிரயாசங்களி-
லிருந்து ஓய்வெடுக்க சாரகெம்லாவிலிருந்த தன்
சொந்த வீட்டிற்குத் திரும்பினான்.
2 இப்படியாக, நேபியின் ஜனங்கள் மீது நியாயாதி-
பதிகளினுடைய ஆளுகையின் ஒன்பதாம் வரு-
ஷம் முடிவுற்றது.
3 அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மீது நியா-
யாதிபதிகளின் பத்தாம் வருஷ ஆளுகையின் து-
வக்கத்திலே, ஆல்மா அவ்விடத்திலிருந்து புறப்பட்-
டு வனாந்தர எல்லைகளுக்கு மேற்காயும், சீதோன்
நதிக்கு மேற்காயும் இருக்கிற, மீலேக்கின் தேசத்தி-
னுள்ளே பிரயாணம் பண்ணினான்.
4 அவன், தான் அழைக்கப்பட்ட தேவனுடைய பரி-
சுத்த முறைமையின் பிரகாரமாய் மீலேக் தேசத்தி-
லுள்ள ஜனங்களுக்குப் போதிக்கத் தொடங்கி-
னான். அவன் மீலேக் தேசமெங்கிலுமுள்ள ஜனங்க-
ளுக்கு போதிக்கத் தொடங்கினான்.
5 அந்தப்படியே, வனாந்தரத்தின் எல்லையோரங்க-
ளிலே அமைந்த தேசங்களிலிருந்து ஜனங்கள்
அவனிடத்தில் வந்தார்கள். அவர்களுக்கு தேச-
மெங்கிலும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது.
6 இப்படியாக, அவன் மீலேக்கிலே தன் வேலையை
முடித்த பின்னர், அவ்விடம் விட்டுப் புறப்பட்டு மீ-
லேக் தேசத்தின் வடக்கிலே மூன்று நாளளவும் பிர-
யாணம் பண்ணினான். அவன் அம்மோனிகா என்-
று அழைக்கப்பட்ட பட்டணத்திற்கு வந்தான்.
7 தங்களுடைய தேசங்களையும், தங்களின் பட்ட-
ணங்களையும், தங்களின் கிராமங்களையும், தங்-
களின் குக்கிராமங்கள் யாவையும், அவைகளை
முதற் சுதந்தரித்தவனின் பெயராலே வழங்குவது
நேபியின் ஜனங்களுடைய வழக்கமாயிருந்தது.
அம்மோனிகா தேசம் என்ற பெயர் வரக்காரணமும்
அதுவே.
8 அந்தப்படியே, அம்மோனிகா பட்டணத்திற்கு
ஆல்மா வந்தவுடன், அவன் தேவ வசனத்தை
அவர்களுக்கு பிரசங்கிக்கலானான்.
9 இப்பொழுது அம்மோனிகா பட்டணத்தாரின் இரு-
தயங்களை சாத்தான் பற்றிப் பிடித்துக் கொண்ட-
மையால், அவர்கள் ஆல்மாவினுடைய வார்த்தை-
களுக்குச் செவிகொடுக்கவில்லை.

## Alma 8

And now it came to pass that Alma returned from the land of Gideon, after having taught the people of Gideon many things which cannot be written, having established the order of the church, according as he had before done in the land of Zarahemla, yea, he returned to his own house at Zarahemla to rest himself from the labors which he had performed.

And thus ended the ninth year of the reign of the judges over the people of Nephi.

And it came to pass in the commencement of the tenth year of the reign of the judges over the people of Nephi, that Alma departed from thence and took his journey over into the land of Melek, on the west of the river Sidon, on the west by the borders of the wilderness.

And he began to teach the people in the land of Melek according to the holy order of God, by which he had been called; and he began to teach the people throughout all the land of Melek.

And it came to pass that the people came to him throughout all the borders of the land which was by the wilderness side. And they were baptized throughout all the land;

So that when he had finished his work at Melek he departed thence, and traveled three days' journey on the north of the land of Melek; and he came to a city which was called Ammonihah.

Now it was the custom of the people of Nephi to call their lands, and their cities, and their villages, yea, even all their small villages, after the name of him who first possessed them; and thus it was with the land of Ammonihah.

And it came to pass that when Alma had come to the city of Ammonihah he began to preach the word of God unto them.

Now Satan had gotten great hold upon the hearts of the people of the city of Ammonihah; therefore they would not hearken unto the words of Alma.

10 அன்றியும் ஆல்மா அதிகமாய் ஆவியினாலே பிரயாசப்பட்டு, பட்டணத்திலிருந்த ஜனங்களின் மீது தேவன் தாமே தமது ஆவியை ஊற்றும்படியாயும், அவர்களுக்கு அவன் மனந்திரும்புதலுக்கேதுவாய் ஞானஸ்நானம் கொடுக்க அருளும்படிக்கும், அவரோடுகூட வல்லமையான ஜெபத்தில் போராடினான்.

Nevertheless Alma labored much in the spirit, wrestling with God in mighty prayer, that he would pour out his Spirit upon the people who were in the city; that he would also grant that he might baptize them unto repentance.

11 அன்றியும் அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி அவனை நோக்கி: இதோ, நீரே ஆல்மா என்று நாங்கள் அறிந்திருக்கிறோம்; தேசத்தின் அநேக பகுதிகளில் உம்முடைய பாரம்பரியத்தின்படி, நீர் ஸ்தாபித்த சபைகளுக்கு நீரே பிரதான ஆசாரியன் என்றும் அறிந்திருக்கிறோம். நாங்கள் உம்முடைய சபையார் அல்ல. அப்படிப்பட்ட புத்தியீன பாரம்பரியங்களிலே நாங்கள் விசுவாசம் கொள்வதில்லை.

Nevertheless, they hardened their hearts, saying unto him: Behold, we know that thou art Alma; and we know that thou art high priest over the church which thou hast established in many parts of the land, according to your tradition; and we are not of thy church, and we do not believe in such foolish traditions.

12 நாங்கள் உம்முடைய சபையாரல்லாததால் எங்கள் மேல் உமக்கு எந்த அதிகாரமுமில்லை என்று இப்பொழுது அறிவோம்; நீர் நியாயாசனத்தை நேபிகாவிற்கு ஒப்புவித்ததாலே, நீர் எங்களுக்கு பிரதான நியாயாதிபதியும் அல்ல, என்றார்கள்.

And now we know that because we are not of thy church we know that thou hast no power over us; and thou hast delivered up the judgment-seat unto Nephihah; therefore thou art not the chief judge over us.

13 ஜனங்கள் இப்படிச் சொல்லி, அவனுடைய வார்த்தைகள் யாவையும் எதிர்த்து, அவனை தூஷித்து, அவன் மீது உமிழ்ந்து, அவனை அவர்களுடைய பட்டணத்திலிருந்து துரத்தப் பண்ணினர். அவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு ஆரோன் என்றழைக்கப்பட்ட பட்டணத்திற்கு நேராய் பிரயாணம் பண்ணினான்.

Now when the people had said this, and withstood all his words, and reviled him, and spit upon him, and caused that he should be cast out of their city, he departed thence and took his journey towards the city which was called Aaron.

14 அந்தப்படியே, அவன் பிரயாணம் பண்ணுகையில் அம்மோனிகா பட்டணத்தாரின் துன்மார்க்கத்தினிமித்தம், மிகுந்த வருத்தத்தினாலும், ஆத்தும வியாகுலத்தினாலும் போராடி துக்கத்தாலே பாரப்பட்டு அமிழ்ந்து போனான். அந்தப்படியே, ஆல்மா துக்கத்தினாலே பாரப்பட்டு அமிழ்ந்து போகையில், இதோ கர்த்தருடைய தூதன் ஒருவன் அவனுக்குத் தரிசனமாகி:

And it came to pass that while he was journeying thither, being weighed down with sorrow, wading through much tribulation and anguish of soul, because of the wickedness of the people who were in the city of Ammonihah, it came to pass while Alma was thus weighed down with sorrow, behold an angel of the Lord appeared unto him, saying:

15 ஆல்மாவே, நீ ஆசீர்வதிக்கப்பட்டவன்; ஆதலால், உன் தலையை உயர்த்தி, மகிழ்ச்சிகொள்; நீ களிகூர்ந்திருக்க வேண்டிய காரணமுண்டு. தேவனிடத்திலிருந்து நீ முதற்செய்தி பெற்ற சமயம் முதற்கொண்டு அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதில் உண்மையுள்ளவனாய் இருக்கிறாய். இதோ, நானே அதை உனக்குக் கொடுத்தேன்.

Blessed art thou, Alma; therefore, lift up thy head and rejoice, for thou hast great cause to rejoice; for thou hast been faithful in keeping the commandments of God from the time which thou receivedst thy first message from him. Behold, I am he that delivered it unto you.

16 இதோ, நீ அம்மோனிகா பட்டணத்திற்குத் திரும்பிப்போய் அந்தப் பட்டணத்திலுள்ள ஜனங்களுக்கு மறுபடியும் பிரசங்கிக்கவேண்டும் என்று உனக்குக் கட்டளையிடவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்; ஆம், அவர்களிடத்திலே பிரசங்கி, அவர்கள் மனந்திரும்பாவிடில் தேவனாகிய கர்த்தர் அவர்களை அதம்பண்ணுவார், என்று அவர்களுக்குச் சொல்லுவாயாக.

And behold, I am sent to command thee that thou return to the city of Ammonihah, and preach again unto the people of the city; yea, preach unto them. Yea, say unto them, except they repent the Lord God will destroy them.

17 இதோ, உன் ஜனத்தினுடைய சுதந்தரத்தை அவர்கள் அழித்துப்போட இச்சமயத்தில் ஆலோசித்து வருகிறார்கள். (ஏனெனில் கர்த்தர் அப்படிச் சொல்லுகிறார்) அது கர்த்தர் தமது ஜனத்திற்கு கொடுத்திருக்கிற கட்டளைகளுக்கும், நியாயத்தீர்ப்புகளுக்கும், கட்டளைகளுக்கும் விரோதமானதாகும் என்றான்.

For behold, they do study at this time that they may destroy the liberty of thy people, (for thus saith the Lord) which is contrary to the statutes, and judgments, and commandments which he has given unto his people.

18 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மா கர்த்தருடைய தூதனிடத்திலிருந்து தன் செய்தியைப் பெற்றுக்கொண்ட பின்பு, அவன் அம்மோனிகா தேசத்திற்குத் துரிதமாய் திரும்பிப் போனான். அவன் பட்டணத்தினுள் வேறுவழியாக, அம்மோனிகா பட்டணத்திற்கு தெற்கேயுள்ள வழியாய் பிரவேசித்தான்.

Now it came to pass that after Alma had received his message from the angel of the Lord he returned speedily to the land of Ammonihah. And he entered the city by another way, yea, by the way which is on the south of the city of Ammonihah.

19 அவன் பட்டணத்தினுள் பிரவேசித்தபோது, பசித்தவனாய், ஒரு மனுஷனை நோக்கி: தேவனுடைய தாழ்மையான ஊழியக்காரனாகிய அடியேனுக்குப் புசிக்க ஏதாகிலும் கொடுப்பாயா? என்று ஒரு மனுஷனிடம் சொன்னான்.

And as he entered the city he was an hungered, and he said to a man: Will ye give to an humble servant of God something to eat?

20 அதற்கு அந்த மனுஷன், நான் ஒரு நேபியன். தரிசனத்திலே, நீ ஏற்றுக்கொள்ள வேண்டும், என்று தூதன் எனக்குச் சொன்ன மனுஷன் நீர்தான். நீரே தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசி, என்று அறிவேன். ஆகையால் என்னோடுகூட என் வீட்டுக்கு வாரும். என் ஆகாரத்தை உமக்குப் பகிர்ந்தளிப்பேன். நீர் எனக்கும் என் வீட்டுக்கும் ஆசீர்வாதமானவராய் இருப்பீர், என்று அறிந்திருக்கிறேன், என்றான்.

And the man said unto him: I am a Nephite, and I know that thou art a holy prophet of God, for thou art the man whom an angel said in a vision: Thou shalt receive. Therefore, go with me into my house and I will impart unto thee of my food; and I know that thou wilt be a blessing unto me and my house.

21 அந்தப்படியே, அந்த மனுஷன் அவனை தன் வீட்டுக்குள் ஏற்றுக்கொண்டான்; அந்த மனுஷன் அமுலேக் என்று அழைக்கப்பட்டான்; அவன் அப்பத்தையும் இறைச்சியையும் கொண்டுவந்து ஆல்மாவிற்கு அளித்தான்.

And it came to pass that the man received him into his house; and the man was called Amulek; and he brought forth bread and meat and set before Alma.

22 அந்தப்படியே, ஆல்மா அப்பத்தை புசித்து நிரப்பப்பட்டான்; அவன் அமுலேக்கையும் அவனுடைய வீட்டாரையும் ஆசீர்வதித்தான். அவன் தேவனுக்கு நன்றி தெரிவித்தான்.

And it came to pass that Alma ate bread and was filled; and he blessed Amulek and his house, and he gave thanks unto God.

23 அவன் புசித்து, நிரப்பப்பட்ட பின்பு, அமுலேக்கை நோக்கி: தேசமெங்கிலுமுள்ள தேவ சபைக்கு, பிரதான ஆசாரியனாகிய ஆல்மா என்பவன் நானே.

And after he had eaten and was filled he said unto Amulek: I am Alma, and am the high priest over the church of God throughout the land.

24 இதோ, நான் தேவ வசனத்தை இந்த சகல ஜனங்களுக்கும் வெளிப்படுத்தல் மற்றும் தீர்க்கதரிசன ஆவியோடு பிரசங்கிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறேன்; நான் இந்த தேசத்திலிருந்தபோது அவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளாமல் துரத்தினார்கள். நான் இத்தேசத்தை பின்னிட்டு என்றென்றுமாய் முகம் பாராமலிருக்க எண்ணினேன்.

And behold, I have been called to preach the word of God among all this people, according to the spirit of revelation and prophecy; and I was in this land and they would not receive me, but they cast me out and I was about to set my back towards this land forever.

25 இதோ, நான் மறுபடியும் திரும்பி, இந்த ஜனத்திற்கு மீண்டும் தீர்க்கதரிசனமுரைத்து, அவர்கள் அக்கிரமங்களைக் குறித்து அவர்களுக்கு விரோதமாய் சாட்சிகொடுக்க கட்டளையிடப்பட்டுள்ளேன்.

But behold, I have been commanded that I should turn again and prophesy unto this people, yea, and to testify against them concerning their iniquities.

26 இப்பொழுதும் அமுலேக்கே, நீ என்னை போஷித்-
து, என்னை ஏற்றுக்கொண்டபடியினாலே நீ ஆசீர்-
வதிக்கப்படுவாய். ஏனெனில் நான் அநேக நாட்கள்
உபவாசமிருந்ததால், பசியாயிருந்தேன்.

And now, Amulek, because thou hast fed me and taken me in, thou art blessed; for I was an hungered, for I had fasted many days.

27 பின்னும் ஆல்மா ஜனங்களுக்கு உபதேசிக்கச்
செல்லும் முன்பு, அநேக நாட்கள் அமுலேக்குடன்
தங்கியிருந்தான்.

And Alma tarried many days with Amulek before he began to preach unto the people.

28 அந்தப்படியே, ஜனங்கள் அதிகமாய் அக்கிரமங்க-
ளைச் செய்வதில் பலப்பட்டார்கள்.

And it came to pass that the people did wax more gross in their iniquities.

29 பின்னும் வார்த்தை ஆல்மாவுக்கு உண்டாகி:
போ; என் தாசனாகிய அமுலேக்கிடம் போ, இந்த
ஜனங்களுக்குள்ளே போய், தீர்க்கதரிசனமாய், கர்த்-
தர் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் மனந்-
திரும்புங்கள், நீங்கள் மனந்திரும்பாவிடில், நான்
இந்த ஜனத்தை எனது உக்கிரத்தில் விசாரித்து, என்
உக்கிரக கோபத்தை திரும்பவொட்டேன், என்று
கர்த்தர் சொல்லுகிறாரென்று, சொல்லிற்று.

And the word came to Alma, saying: Go; and also say unto my servant Amulek, go forth and prophesy unto this people, saying—Repent ye, for thus saith the Lord, except ye repent I will visit this people in mine anger; yea, and I will not turn my fierce anger away.

30 ஆல்மாவும் அமுலேக்கும் ஜனங்களுக்குள்ளே
தேவ வசனத்தை அறிவிக்க போனார்கள்; அவர்-
கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்.

And Alma went forth, and also Amulek, among the people, to declare the words of God unto them; and they were filled with the Holy Ghost.

31 அவர்கள் காவற்கிடங்கில் அடைத்து வைக்கப்ப-
டவோ, எந்த மனுஷனும் அவர்களைக் கொலை
செய்யவோ கூடாதளவிற்கு, அவர்களுக்கு வல்ல-
மை கொடுக்கப்பட்டது; இருப்பினும் அவர்கள் கட்-
டுக்களால் கட்டப்பட்டு, சிறைகளிலே தள்ளப்ப-
டும்வரை தங்கள் வல்லமையைப் பிரயோகிக்க-
வில்லை. இப்போதும் கர்த்தர் தம் வல்லமையை
அவர்களில் வெளிப்படுத்தும்படிக்கே இப்படி நடந்-
தது.

And they had power given unto them, insomuch that they could not be confined in dungeons; neither was it possible that any man could slay them; nevertheless they did not exercise their power until they were bound in bands and cast into prison. Now, this was done that the Lord might show forth his power in them.

32 அந்தப்படியே, அவர்கள் போய் தாங்களுக்குக்
கர்த்தர் கொடுத்த ஆவி மற்றும் வல்லமையின்படி-
யே ஜனங்களுக்கு தீர்க்கதரிசனமுரைத்து, பிரசங்-
கித்து வந்தார்கள்.

And it came to pass that they went forth and began to preach and to prophesy unto the people, according to the spirit and power which the Lord had given them.

*அம்மோனிகா தேசத்திலிருந்த ஜனங்களுக்கு ஆல்மாவும் அமுலேக்கும் அறிவித்த வார்த்தைகள். அவர்கள் சிறையிலே அடைக்கப்படுதலும், ஆல்மாவின் பதிவேட்டின்படியே, அவர்களுக்குள்ளிருந்த தேவனுடைய அற்புதமான வல்லமையினாலே விடுவிக்கப்படுதலும்.*

## ஆல்மா 9

1 பின்னும் ஆல்மாவாகிய நான், அமுலேக்கைக்கூட
கூட்டிக்கொண்டு அம்மோனிகா பட்டணத்தாரா-
கிய, இந்த ஜனத்திற்கு மறுபடியும் பிரசங்கிக்க
வேண்டுமென்று தேவனாலே கட்டளையிடப்பட்ட-
வனாய், அந்தப்படியே, அவர்களுக்கு நான் பிரசங்-
கிக்கத் துவங்குகையில், அவர்கள் என்னோடு தர்க்-
கித்துச் சொன்னதாவது:
2 நீர் யார்? இந்த உலகம் ஒழிந்துபோம் என்று ஒரு-
வன் பிரசங்கித்தால், நாங்கள் அவனுடைய சாட்சி-
யமத்தை விசுவாசிப்போம் என்று எண்ணுகிறீரோ?
என்றார்கள்.
3 அவர்கள் பேசிய வார்த்தைகளை அவர்கள் பு-
ரிந்துகொள்ளாதிருந்தார்கள்; ஏனெனில் உலகம்
ஒழிந்துபோம் என்று அவர்கள் அறியாதிருந்தார்-
கள்.
4 பின்னும் அவர்கள், இந்த மாநகரம் ஒரே நாளில்
அதம்பண்ணப்படுமென்று நீர் தீர்க்கதரிசனமாய்
உரைத்தாலும், உம்முடைய வார்த்தைகளை விசு-
வாசிக்கமாட்டோம், என்றும் சொன்னார்கள்.
5 அவர்கள் கடின இருதயமும், வணங்காக்கழுத்-
துள்ள ஜனமாயும் இருந்ததினிமித்தம், தேவன் அப்-
படிப்பட்ட அதிசயமுள்ள கிரியைகளைச் செய்ய
முடியும், என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.
6 அவர்கள், அப்படிப்பட்ட பெரிதும் அற்புதமான-
வைகளைக் குறித்த சத்தியத்தை இந்த ஜனங்க-
ளுக்கு அறிவிக்க, அவர்களுக்குள்ளே அதிகாரம்-
கொண்ட ஒரு மனுஷனையன்றி வேறு யாரையும்
அனுப்பாத அந்த தேவன் யார்? என்றார்கள்.
7 அவர்கள் தங்கள் கைகளை என்மீது போடும்படி
முன்னே வந்தார்கள். ஆனால் இதோ, அப்படிச்
செய்யவில்லை. நான் அவர்களுக்கு அறிவிக்க,
தைரியமாய் நின்று அவர்களுக்கு சாட்சி கொடுத்த-
தாவது:
8 இதோ, துன்மார்க்கமும், மாறுபாடுமுள்ள தலை-
முறையே, உங்களுடைய பிதாக்களுடைய பாரம்ப-
ரியங்களை மறந்து போனதென்ன, ஆம், தேவனு-
டைய கட்டளைகளை எவ்வளவு சீக்கிரமாய் மறந்-
துபோனீர்கள்?

*The words of Alma, and also the words of Amulek, which were declared unto the people who were in the land of Ammonihah. And also they are cast into prison, and delivered by the miraculous power of God which was in them, according to the record of Alma.*

## Alma 9

And again, I, Alma, having been commanded of God that I should take Amulek and go forth and preach again unto this people, or the people who were in the city of Ammonihah, it came to pass as I began to preach unto them, they began to contend with me, saying:

Who art thou? Suppose ye that we shall believe the testimony of one man, although he should preach unto us that the earth should pass away?

Now they understood not the words which they spake; for they knew not that the earth should pass away.

And they said also: We will not believe thy words if thou shouldst prophesy that this great city should be destroyed in one day.

Now they knew not that God could do such marvelous works, for they were a hard-hearted and a stiffnecked people.

And they said: Who is God, that sendeth no more authority than one man among this people, to declare unto them the truth of such great and marvelous things?

And they stood forth to lay their hands on me; but behold, they did not. And I stood with boldness to declare unto them, yea, I did boldly testify unto them, saying:

Behold, O ye wicked and perverse generation, how have ye forgotten the tradition of your fathers; yea, how soon ye have forgotten the commandments of God.

9 நம்முடைய பிதாவாகிய லேகி எருசலேமைவிட்டு தேவனுடைய கரத்தினால் வழிநடத்தப்பட்டதை நீங்கள் நினைவுகூர்வதில்லையா? அவர்கள் யாவரும் அவராலே வனாந்தரத்திலே நடத்தப்பட்டார்கள் என்பதையும் நீங்கள் நினைவுகூர்வதில்லையா?

Do ye not remember that our father, Lehi, was brought out of Jerusalem by the hand of God? Do ye not remember that they were all led by him through the wilderness?

10 நம்முடைய தகப்பன்மார்களை எவ்வளவு விசை அவர்களுடைய விரோதிகளின் கைகளுக்கு விலக்கிக்காத்தார் என்பதையும், அவர்கள் அழிக்கப்பட்டுப் போவதிலிருந்தும், அவர்களுடைய சொந்த சகோதரரின் கைகளிலிருந்தும் அழிக்கப்பட்டுப் போவதிலிருந்தும் கூட, அவர்களை விலக்கிக் காத்தார் என்பதை இவ்வளவு விரைவில் மறந்து போனீர்களா?

And have ye forgotten so soon how many times he delivered our fathers out of the hands of their enemies, and preserved them from being destroyed, even by the hands of their own brethren?

11 அவருடைய இணையற்ற வல்லமையும், நம்பேரிலான அவருடைய இரக்கமும், நீடிய சாந்தமும் இல்லாதே போயிருக்குமானால், இந்தக் காலகட்டத்திற்கு அதிக முன்னமே, பூமியின் பரப்பின் மீதிருந்து, தப்பமுடியாதளவிற்கு அறுப்புண்டு போயிருப்போம். ஒருவேளை முடிவற்ற புலம்பலும் துக்கமுமுள்ள நிலைக்கே ஒப்புக்கொடுக்கப்பட்டிருப்போம்.

Yea, and if it had not been for his matchless power, and his mercy, and his long-suffering towards us, we should unavoidably have been cut off from the face of the earth long before this period of time, and perhaps been consigned to a state of endless misery and woe.

12 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் உங்களை மனந்திரும்பும்படி கட்டளையிடுகிறார்; நீங்கள் மனந்திரும்பாவிடில் தேவனுடைய ராஜ்யத்தை எந்த வகையிலும் சுதந்தரிக்கமுடியாது, ஆனால் இதோ இதுமட்டுமல்ல, நீங்கள் மனந்திரும்பும்படி கட்டளையிட்டிருக்கிறார், அல்லது உங்களை பூமியின் பரப்பின் மீதிருந்து முழுவதுமாக அழித்துப்போடுவார்; ஆம், அவர் தன் உக்கிரத்தில் உங்களை விசாரிப்பார்; அவர் தம் கோபாக்கினையிலிருந்து உங்களைத் தப்பவொட்டார்.

Behold, now I say unto you that he commandeth you to repent; and except ye repent, ye can in nowise inherit the kingdom of God. But behold, this is not all—he has commanded you to repent, or he will utterly destroy you from off the face of the earth; yea, he will visit you in his anger, and in his fierce anger he will not turn away.

13 இதோ, நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொள்ளும் அளவிற்கு அவ்வளவாய் தேசத்திலே விருத்தியடைவீர்கள், என்று அவர் லேகிக்குச் சொன்ன வார்த்தைகளை நீங்கள் நினைவில் கொள்ளவில்லையா? என் கட்டளைகளைக் கைக்கொள்ளாமல் போகிற அளவிற்கு அவ்வளவாய் கர்த்தருடைய பிரசன்னத்தினின்று அறுப்புண்டு போவீர்கள், என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே.

Behold, do ye not remember the words which he spake unto Lehi, saying that: Inasmuch as ye shall keep my commandments, ye shall prosper in the land? And again it is said that: Inasmuch as ye will not keep my commandments ye shall be cut off from the presence of the Lord.

14 தேவனுடைய கட்டளைகளை லாமானியர்கள் கைக்கொள்ளாததினிமித்தம் அவர்கள் கர்த்தருடைய பிரசன்னத்தினின்று அறுப்புண்டு போனார்கள், என்பதை நீங்கள் நினைவுகூரவேண்டுமென்று விரும்புகிறேன். லாமானியர்கள் தேசத்திலே மீறுதல்களை செய்த மாத்திரத்திலேயே அவருடைய சமுகத்தினின்று அறுப்புண்டு போனார்கள். இதினிமித்தம் கர்த்தருடைய வசனம் மெய்ப்பிக்கப்பட்டதை நாம் காண்கிறோம்.

Now I would that ye should remember, that inasmuch as the Lamanites have not kept the commandments of God, they have been cut off from the presence of the Lord. Now we see that the word of the Lord has been verified in this thing, and the Lamanites have been cut off from his presence, from the beginning of their transgressions in the land.

15 இருப்பினும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள், உங்கள் பாவங்களிலேயே தரித்திருப்பீர்களெனில், நியாயத்தீர்ப்பின் நாளில் உங்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும் அவர்களுக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும். நீங்கள் மனந்திரும்பாவிடில் உங்களுக்கு இந்த வாழ்க்கையில் நேரிடுவதைப் பார்க்கிலும் அவர்களுக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்.

Nevertheless I say unto you, that it shall be more tolerable for them in the day of judgment than for you, if ye remain in your sins, yea, and even more tolerable for them in this life than for you, except ye repent.

16 ஏனெனில் லாமானியர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன. தங்களுடைய தகப்பன்மார்களின் பாரம்பரியத்தினிமித்தம் அறியாமையின் நிலையில் தரித்திருந்தார்கள். அதினிமித்தம். கர்த்தரும் அவர்களுக்கு இரங்கி அவர்கள் தேசத்திலே நீடித்து வாழும்படிச் செய்வார்.

For there are many promises which are extended to the Lamanites; for it is because of the traditions of their fathers that caused them to remain in their state of ignorance; therefore the Lord will be merciful unto them and prolong their existence in the land.

17 ஒரு காலகட்டத்திலே, அவர்கள் அவருடைய வார்த்தையை விசுவாசித்து, தங்களுடைய தகப்பன்மார்களுடைய பாரம்பரியத்தின் தப்பிதங்களை அறிய வருவார்கள்; அவர்களில் பலர் இரட்சிக்கப்படுவார்கள். ஏனெனில் கர்த்தர் தம் நாமத்தால் அழைக்கும் யாவர்மீதும் இரக்கமாயிருப்பார்.

And at some period of time they will be brought to believe in his word, and to know of the incorrectness of the traditions of their fathers; and many of them will be saved, for the Lord will be merciful unto all who call on his name.

18 ஆனால், இதோ நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் உங்கள் துன்மார்க்கத்தில் நிலைகொண்டிருப்பீர்களெனில், தேசத்திலே உங்கள் ஆயுட்காலம் நீடித்திருக்கக்கூடாதபடிக்கு, லாமானியர்கள் உங்கள்மேல் அனுப்பப்படுவார்கள்; நீங்கள் மனந்திரும்பாவிடில், நீங்கள் அறியாதிருக்கிற சமயம் அவர்கள் வருவார்கள், நீங்கள் பூரண அழிவால் விசாரிக்கப்படுவீர்கள்; கர்த்தருடைய கொடிய கோபத்திற்குத் தக்கதாக இப்படிச் சம்பவிக்கும்.

But behold, I say unto you that if ye persist in your wickedness that your days shall not be prolonged in the land, for the Lamanites shall be sent upon you; and if ye repent not they shall come in a time when you know not, and ye shall be visited with utter destruction; and it shall be according to the fierce anger of the Lord.

19 இவருடைய ஜனத்தை அழித்துப்போடும் பொருட்டு, நீங்கள் உங்கள் அக்கிரமங்களில் ஜீவித்திருக்க அவர் உங்களை அனுமதியார். அப்படியல்ல, என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நேபியின் ஜனம் என்று அழைக்கப்படுகிற தம்முடைய ஜனம், தேவனாகிய தங்கள் கர்த்தரிடமிருந்து பெரிய வெளிச்சத்தையும், மிகுந்த ஞானத்தையும் பெற்ற பின்னரும், அவர்கள் பாவங்களிலும், மீறுதல்களிலும் விழுவது சாத்தியமெனில் அவர் லாமானியரைக் கொண்டு அவர்களை நிர்மூலமாக்கும்படிச் செய்வார்.

For he will not suffer you that ye shall live in your iniquities, to destroy his people. I say unto you, Nay; he would rather suffer that the Lamanites might destroy all his people who are called the people of Nephi, if it were possible that they could fall into sins and transgressions, after having had so much light and so much knowledge given unto them of the Lord their God;

20 ஆம், கர்த்தருக்கு மிகவும் பிரியமான ஜனமாய் இருந்து, ஆம், மற்ற சகல தேசங்களிலும், இனங்களிலும், பாஷைக்காரர்களிலும், ஜனங்களிலும் பிரியமானவர்களாயும், தங்களுடைய வாஞ்சைகளுக்கும், தங்களுடைய விசுவாசத்திற்கும், ஜெபத்திற்கும் ஏற்ப, இருந்தும் இருக்கிறதும், வரப்போகிறவைகளுமான சகல காரியங்களும், அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டு;

Yea, after having been such a highly favored people of the Lord; yea, after having been favored above every other nation, kindred, tongue, or people; after having had all things made known unto them, according to their desires, and their faith, and prayers, of that which has been, and which is, and which is to come;

21 தேவனுடைய ஆவியால் சந்திக்கப்பட்டு, தூதர்களோடு சம்பாஷித்து, கர்த்தருடைய சத்தத்தால் பேசப்பட்டு, தீர்க்கதரிசன ஆவியையும் வெளிப்படுத்தலின் ஆவியையும், இன்னும் பல வரங்களான அன்னிய பாஷை பேசுகிற வரத்தையும், பிரசங்கிக்கிற வரத்தையும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தையும், மொழிபெயர்க்கும் வரத்தையும் அவர்கள் பெற்று;

Having been visited by the Spirit of God; having conversed with angels, and having been spoken unto by the voice of the Lord; and having the spirit of prophecy, and the spirit of revelation, and also many gifts, the gift of speaking with tongues, and the gift of preaching, and the gift of the Holy Ghost, and the gift of translation;

22 அவர்கள் கர்த்தருடைய கரத்தாலும், தேவனாலும் எருசலேம் தேசத்திலிருந்து வெளியே வழிநடத்தப்பட்டு பஞ்சத்திலிருந்தும், நோய்களிலிருந்தும், சகல வியாதிகளிலிருந்தும் காப்பாற்றப்பட்டு, யுத்தங்களிலே அழிக்கப்பட்டுப் போகாதபடி பலவான்களாக்கப்பட்டு, அவ்வப்போது அடிமைத்தனத்திலிருந்து தப்புவிக்கப்பட்டு, இதுவரைக்கும் பாதுகாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு, சகல காரியங்களிலும் ஐஸ்வர்யவான்களாகும்படி விருத்தியாக்கப்பட்ட பின்னரும்,

Yea, and after having been delivered of God out of the land of Jerusalem, by the hand of the Lord; having been saved from famine, and from sickness, and all manner of diseases of every kind; and they having waxed strong in battle, that they might not be destroyed; having been brought out of bondage time after time, and having been kept and preserved until now; and they have been prospered until they are rich in all manner of things—

23 இப்பொழுது நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்த ஜனங்கள் கர்த்தருடைய கரத்திலிருந்து இப்படிப்பட்ட அநேக ஆசீர்வாதங்களைப் பெற்று, தாங்கள் பெற்றிருக்கிற வெளிச்சத்திற்கும், ஞானத்திற்கும் விரோதமாய் மீறி, அதனுள் விழுவார்களெனில், அவர்களுக்கு நேரிடப் போவதைப் பார்க்கிலும், லாமானியருக்கு நேரிடுவது இலகுவாயிருக்கும்.

And now behold I say unto you, that if this people, who have received so many blessings from the hand of the Lord, should transgress contrary to the light and knowledge which they do have, I say unto you that if this be the case, that if they should fall into transgression, it would be far more tolerable for the Lamanites than for them.

24 ஏனெனில், இதோ லாமானியருக்கு கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்பட்டன. ஆனால் நீங்கள் அவைகளை மீறுவீர்களெனில், உங்களுக்கு அவை தரப்படமாட்டாது. ஏனெனில் தமக்கு விரோதமாய் கலகம் செய்பவரை பூமியின் பரப்பின் மீதிருந்து நிர்மூலமாக்கிப்போடுவேன், என்று கர்த்தர் திட்டவட்டமான வாக்குத்தத்தத்தையும், உறுதியான தீர்ப்பையும் அளித்தார் அல்லவா?

For behold, the promises of the Lord are extended to the Lamanites, but they are not unto you if ye transgress; for has not the Lord expressly promised and firmly decreed, that if ye will rebel against him that ye shall utterly be destroyed from off the face of the earth?

25 இப்போதும் நீங்கள் அழிந்து போகக் கூடாதென்பதற்காகவே, கர்த்தர் தம் ஜனங்களில் அநேகரை சந்திக்க தன் தூதரை அனுப்பி, அவர்கள் போய் இந்த ஜனங்களிடத்தில், மனந்திரும்புங்கள், ஏனெனில், பரலோக ராஜ்யம் சமீபமாயிருக்கிறதென்று, சத்தமாய் கூக்குரலிட்டு அறிவிக்கும்பொருட்டு சொல்கிறார்.

And now for this cause, that ye may not be destroyed, the Lord has sent his angel to visit many of his people, declaring unto them that they must go forth and cry mightily unto this people, saying: Repent ye, for the kingdom of heaven is nigh at hand;

26 இப்போதிலிருந்து கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே தேவ குமாரன் தம் மகிமையில் வருவார்; பிதாவினுடைய ஒரேபேறானவருக்குரிய மகிமையே, பூரண கிருபையும், நேர்மையும், சத்தியமும், பூரண பொறுமையும், இரக்கமும், நீடிய சாந்தமும், அவரில் உண்டாயிருந்து, தமது ஜனத்தின் கூக்குரலுக்கு சீக்கிரமாய் செவிசாய்த்து அவர்களுடைய ஜெபங்களுக்கு பதில் கொடுக்கிற, அவருடைய மகிமையாகும்.

And not many days hence the Son of God shall come in his glory; and his glory shall be the glory of the Only Begotten of the Father, full of grace, equity, and truth, full of patience, mercy, and long-suffering, quick to hear the cries of his people and to answer their prayers.

27 இதோ, தம் நாமத்தின்மேல் வைத்த விசுவாசத்தின் மூலம் மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானத்தைப் பெறுகிறவர்களை அவர் மீட்டுக்கொள்ளவே வருகிறார்.

And behold, he cometh to redeem those who will be baptized unto repentance, through faith on his name.

28 ஆதலால், தங்கள் கிரியைகளை நடப்பித்ததிற்கேற்ப, சகல மனுஷரும் அவைகளுக்குரிய பலனை அறுக்கிற காலம் சமீபமாயிருப்பதினாலே கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவர்கள் நீதியுள்ளவர்களாய் இருந்திருந்தால், அவர்கள் இயேசு கிறிஸ்துவின் வல்லமையினாலும், விடுதலையின்படியேயும், தங்களுடைய ஆத்துமாக்களின் இரட்சிப்பை அறுப்பார்கள்; அவர்கள் பொல்லாதவர்களாய் இருப்பார்களாயின் பிசாசின் வல்லமையினாலும் அடிமைத்தனத்தின்படியேயும் தங்களுடைய ஆத்துமாக்களின் ஆக்கினையை அறுப்பார்கள்.

Therefore, prepare ye the way of the Lord, for the time is at hand that all men shall reap a reward of their works, according to that which they have been—if they have been righteous they shall reap the salvation of their souls, according to the power and deliverance of Jesus Christ; and if they have been evil they shall reap the damnation of their souls, according to the power and captivation of the devil.

29 இதோ, ஜனங்களிடம் கூக்குரலிடுகிற தூதனுடைய சத்தம் இதுவே.

Now behold, this is the voice of the angel, crying unto the people.

30 இப்பொழுது, என் பிரியமான சகோதரரே, நீங்கள் என் சகோதரராயிருப்பதாலே எனக்கு பிரியமானவர்களாயும், இருக்க வேண்டும். நீங்கள் தொலைந்த வீழ்ந்துபோன ஜனமாயிருப்பதினிமித்தமும், உங்களுடைய இருதயங்கள் தேவனுடைய வசனத்திற்கு விரோதமாய், வெகுவாய் கடினப்பட்டிருப்பதாலும், மனந்திரும்புதலுக்கேதுவான கிரியைகளை நீங்கள் நடப்பிக்க வேண்டும்.

And now, my beloved brethren, for ye are my brethren, and ye ought to be beloved, and ye ought to bring forth works which are meet for repentance, seeing that your hearts have been grossly hardened against the word of God, and seeing that ye are a lost and a fallen people.

31 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மாவாகிய நான் இந்த வார்த்தைகளை சொன்னதினிமித்தம், இதோ, இந்த ஜனங்களை, நீங்கள் கடின இருதயமும், வணங்காக் கழுத்துமுள்ள ஜனம் என்று சொன்னதினிமித்தம், அவர்கள் என்மேல் கோபித்தார்கள்.

Now it came to pass that when I, Alma, had spoken these words, behold, the people were wroth with me because I said unto them that they were a hard-hearted and a stiffnecked people.

32 அவர்கள் தொலைந்த மற்றும் வீழ்ந்துபோன ஜனம் என்று நான் அவர்களிடம் சொன்னதினிமித்தம், அவர்கள் என்மீது கோபம் கொண்டு என்னை சிறையிலே போடும்படிக்கு, என்மேல் தங்கள் கைகளைப் போடப்பார்த்தார்கள்.

And also because I said unto them that they were a lost and a fallen people they were angry with me, and sought to lay their hands upon me, that they might cast me into prison.

33 ஆனால், அந்தப்படியே, அச்சமயத்திலே அவர்கள் என்னைப் பிடித்து சிறையில்போட, கர்த்தர் அவர்களை அனுமதிக்கவில்லை.

But it came to pass that the Lord did not suffer them that they should take me at that time and cast me into prison.

34 அந்தப்படியே, அமுலேக்கும் போய் அவர்களுக்கு பிரசங்கிக்க ஆரம்பித்தான். அமுலேக்கின் வார்த்தைகள் அனைத்தும் எழுதப்படவில்லையென்றாலும் அவன் வார்த்தைகளில் ஒரு பகுதி இப்புஸ்தகத்திலே எழுதப்பட்டிருக்கிறது.

And it came to pass that Amulek went and stood forth, and began to preach unto them also. And now the words of Amulek are not all written, nevertheless a part of his words are written in this book.

# ஆல்மா 10

1 இப்பொழுது அம்மோனிகா தேசத்திலிருந்த ஜனங்களுக்கு அமுலேக் பிரசங்கித்த வார்த்தைகளாவன:

2 அமிநாதியின் சந்ததியான, இஸ்மவேலின் குமாரனாகிய, கித்தியோன்னா என்பவனின் குமாரனாகிய, அமுலேக் என்பவன் நானே, அதே அமிநாதி ஆலயத்தின் சுவரில் தேவனுடைய விரலால் எழுதப்பட்டவைகளின் அர்த்தத்தை மொழிபெயர்த்தவன்.

3 தன் சகோதரரால் எகிப்து தேசத்தினுள் விற்கப்பட்ட, யோசேப்பு என்பவனுடைய குமாரனாகிய, மனாசேயின் சந்ததியானும், எருசலேம் தேசத்திலிருந்து வெளிவந்தவனுமாகிய, லேகியினுடைய குமாரனாகிய, நேபியின் சந்ததியானே அமிநாதி.

4 இதோ, என்னை அறிந்தவர் மத்தியிலே நான் நன்மதிப்பை பெற்றிருக்கிறேன்; ஆம், இதோ, எனக்கு அநேக உறவினர்களும், சிநேகிதர்களும் உண்டு. என் கரங்களின் கடின உழைப்பினிமித்தம் அதிக ஐஸ்வரியத்தைப் பெற்றிருக்கிறேன்.

5 இவை அனைத்துமிருந்தும், நான் கர்த்தருடைய அதிக வழிகளையும், இரகசியங்களையும், அதிசயமான வல்லமையையும் நான் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. இவைகளைக்குறித்து நான் அதிகமாய் அறியவில்லை என்று சொன்னேன். ஆனால் இதோ, நான் பிழை செய்தேன். ஏனெனில் நான் அதிகமான அவரது இரகசியங்களையும், அவரது அதிசயமான வல்லமையையும் கண்டிருக்கிறேன். ஆம், இந்த ஜனத்தின் வாழ்க்கையை பாதுகாத்ததிலும் கூட.

6 நான் பலமுறை அழைக்கப்பட்டிருப்பினும், கேட்காதவனாய் என் இருதயத்தைக் கடினப்படுத்தினேன்; ஆதலால் இவைகளைப்பற்றி நான் அறிந்திருந்தாலும், அவைகளை அறியமாட்டேன். என் இருதயத்தின் துன்மார்க்கத்திலே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் பத்தாம் வருஷத்தில், ஏழாவது மாதத்தின் நான்காம் நாள் வரைக்கும் தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்து வந்தேன்.

# Alma 10

Now these are the words which Amulek preached unto the people who were in the land of Ammonihah, saying:

I am Amulek; I am the son of Giddonah, who was the son of Ishmael, who was a descendant of Aminadi; and it was that same Aminadi who interpreted the writing which was upon the wall of the temple, which was written by the finger of God.

And Aminadi was a descendant of Nephi, who was the son of Lehi, who came out of the land of Jerusalem, who was a descendant of Manasseh, who was the son of Joseph who was sold into Egypt by the hands of his brethren.

And behold, I am also a man of no small reputation among all those who know me; yea, and behold, I have many kindreds and friends, and I have also acquired much riches by the hand of my industry.

Nevertheless, after all this, I never have known much of the ways of the Lord, and his mysteries and marvelous power. I said I never had known much of these things; but behold, I mistake, for I have seen much of his mysteries and his marvelous power; yea, even in the preservation of the lives of this people.

Nevertheless, I did harden my heart, for I was called many times and I would not hear; therefore I knew concerning these things, yet I would not know; therefore I went on rebelling against God, in the wickedness of my heart, even until the fourth day of this seventh month, which is in the tenth year of the reign of the judges.

7 நான் மிக நெருங்கிய ஓர் உறவினரைப் பார்க்க பிரயாணம் பண்ணுகையில், கர்த்தருடைய தூதன் என்னிடத்தில் தோன்றி, அமுலேக்கே நீ கர்த்தருடைய தீர்க்கதரிசியொருவரை போஷிக்கவேண்டியதிருப்பதால் உன் சொந்த வீட்டிற்கு திரும்பிப்போ, ஆம், அவன் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட ஓர் பரிசுத்த மனுஷன்; அவன் இந்த ஜனங்களின் பாவங்களுக்காய் அநேக நாட்கள் உபவாசமிருந்ததால், அவன் பசியாயிருக்கிறான். நீ உன் வீட்டிலே அவனை ஏற்றுக்கொண்டு போஷிப்பாயாக. அவன் உன்னையும், உன் வீட்டாரையும் ஆசீர்வதிப்பான். கர்த்தருடைய ஆசீர்வாதம் உன் மேலும், உன் வீட்டார் மேலும் தங்கும், என்றான்.

As I was journeying to see a very near kindred, behold an angel of the Lord appeared unto me and said: Amulek, return to thine own house, for thou shalt feed a prophet of the Lord; yea, a holy man, who is a chosen man of God; for he has fasted many days because of the sins of this people, and he is an hungered, and thou shalt receive him into thy house and feed him, and he shall bless thee and thy house; and the blessing of the Lord shall rest upon thee and thy house.

8 அந்தப்படியே, நான் தூதனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, என் வீட்டுக்குத் திரும்பினேன். நான் அப்படி போய்கொண்டிருக்கும்போது, உன் வீட்டினுள் ஏற்றுக்கொள்வாயாக, இதோ உன்னிடத்தில் தேவனுடைய காரியங்களைப் பேசினவன் அவனே, என்று தூதன் சொன்ன மனுஷனைக் கண்டேன்.

And it came to pass that I obeyed the voice of the angel, and returned towards my house. And as I was going thither I found the man whom the angel said unto me: Thou shalt receive into thy house—and behold it was this same man who has been speaking unto you concerning the things of God.

9 தூதன் என்னை நோக்கி, அவன் பரிசுத்தவான் என்றான்; தேவனுடைய தூதன் அப்படிச் சொன்னதினிமித்தம் அவன் பரிசுத்தவான் என்று அறிவேன்.

And the angel said unto me he is a holy man; wherefore I know he is a holy man because it was said by an angel of God.

10 பின்னும் அவன் சாட்சி கொடுத்த அனைத்தும் சத்தியமானவை, என்று அறிந்திருக்கிறேன்; அவர் தம் தூதனை அனுப்பி எனக்கு இவைகளை வெளிப்படுத்தியதும் உண்மை, என்று கர்த்தர் ஜீவிப்பதால் உங்களிடத்தில் சொல்லுகிறேன்; இந்த ஆல்மா என் வீட்டிலே வாசம்பண்ணினபோது இவைகளை அவன் செய்தான்.

And again, I know that the things whereof he hath testified are true; for behold I say unto you, that as the Lord liveth, even so has he sent his angel to make these things manifest unto me; and this he has done while this Alma hath dwelt at my house.

11 இதோ, அவன் என் வீட்டையும், என்னையும், என் ஸ்திரீகளையும், என் பிள்ளைகளையும், என் தகப்பனையும், என் உறவினர்களையும், ஆம், எனது உற்றார் அனைவரையும் ஆசீர்வதித்தான். அவன் பேசின வார்த்தைகளின்படியே கர்த்தருடைய ஆசீர்வாதம் எங்கள் மீது தங்கிற்று.

For behold, he hath blessed mine house, he hath blessed me, and my women, and my children, and my father and my kinsfolk; yea, even all my kindred hath he blessed, and the blessing of the Lord hath rested upon us according to the words which he spake.

12 இப்பொழுதும் அமுலேக் இந்த வார்த்தைகளை பேசியபோது, ஜனங்களைக் குற்றவாளிகளெனத் தீர்த்த காரியங்களையும், அவர்களுக்குள் இருக்கிற தீர்க்கதரிசன ஆவியின்படியே வரப்போகிறவைகளையும் குறித்து சாட்சி கொடுக்க, ஒன்றுக்கும் அதிகமான சாட்சிகள் இருப்பதைக் கண்டு, அவர்கள் அதிர்ச்சியடைந்தார்கள்.

And now, when Amulek had spoken these words the people began to be astonished, seeing there was more than one witness who testified of the things whereof they were accused, and also of the things which were to come, according to the spirit of prophecy which was in them.

13 இருப்பினும் அவர்களில் சிலர் தங்களுடைய தந்-
திர உபாயங்களைக்கொண்டு அவர்களை அவர்க-
ளின் வார்த்தைகளாலே பிடித்து, அவர்களுக்கு வி-
ரோதமாய் சாட்சிகளை கண்டுபிடிக்கும்படிக்கும்,
சட்டத்திற்கேற்ப தங்களுடைய நியாயாதிபதிகள்
அவர்களை நியாயந்தீர்க்கும்படி ஒப்படைக்கவும்,
அவர்களுக்கு விரோதமாய் தோன்றி அல்லது சாட்-
சி சொல்ல, அவர்கள் கொல்லப்படவோ சிறையில்
தள்ளப்படவோ வேண்டி, அவர்களை வினவ நி-
னைத்தார்கள்.

Nevertheless, there were some among them who thought to question them, that by their cunning devices they might catch them in their words, that they might find witness against them, that they might deliver them to their judges that they might be judged according to the law, and that they might be slain or cast into prison, according to the crime which they could make appear or witness against them.

14 விசாரணை சமயங்களிலேயும், நியாயாதிபதிக-
ளுக்கு முன்பாக ஜனங்களின் குற்றங்களுக்குத் தக்-
கதாக விசாரணை நடைபெறும்போதும், சட்டத்தை
நிலை நிறுத்த ஜனங்களாலே அமர்த்தப்பட்டவர்-
கள், அல்லது நியமனம் செய்யப்பட்டவர்களுமா-
கிய நியாயசாஸ்திரிகளே அவர்களை நிர்மூல-
மாக்க வகைதேடியவர்கள்.

Now it was those men who sought to destroy them, who were lawyers, who were hired or appointed by the people to administer the law at their times of trials, or at the trials of the crimes of the people before the judges.

15 இந்த நியாயசாஸ்திரிகள் தங்களுடைய பணியி-
லே திறமையானோராய் விளங்க சாத்தியமாக்க,
மனுஷனுடைய திறமைகளையும், தந்திரங்களை-
யும் அறிந்திருந்தார்கள்.

Now these lawyers were learned in all the arts and cunning of the people; and this was to enable them that they might be skilful in their profession.

16 அந்தப்படியே, அமுலேக்கை அவன் பேசவிருக்-
கிற வார்த்தைகளுக்கு முரண்பாடாய் அல்லது
மாற்றி ஏதேனும் சொல்லவைக்க, அவனிடம் வின-
வத் தொடங்கினார்கள்.

And it came to pass that they began to question Amulek, that thereby they might make him cross his words, or contradict the words which he should speak.

17 தங்களுடைய உபாயங்களை அமுலேக் அறிந்தி-
ருந்தான், என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.
ஆனால், அந்தப்படியே, அவர்கள் அவனை வின-
வத் தொடங்கியபோது, அவர்களுடைய எண்ணங்-
களை அவன் உணர்ந்தவனாய் அவர்களை நோக்-
கி: துன்மார்க்கரும் மாறுபாடுமுள்ள தலைமுறை-
யே, நியாயசாஸ்திரிகளே, மாய்மாலக்காரரே, நீங்-
கள் பிசாசின் அஸ்திபாரத்தைப் போடுகிறீர்கள்.
ஏனெனில் தேவனுடைய பரிசுத்தவான்களை பி-
டிக்க கண்ணிகளையும், வலைகளையும் விரிக்கி-
றீர்கள்.

Now they knew not that Amulek could know of their designs. But it came to pass as they began to question him, he perceived their thoughts, and he said unto them: O ye wicked and perverse generation, ye lawyers and hypocrites, for ye are laying the foundations of the devil; for ye are laying traps and snares to catch the holy ones of God.

18 நீங்கள் நீதிமானின் வழிகளை மாறுபாடுள்ள-
தாக்கி இந்த ஜனம் முழுவதுமாய் அழிந்து போகும்-
படிக்கு உங்கள் சிரசுகளிலே தேவனுடைய உக்கிரத்-
தை வருவிக்க திட்டம் தீட்டுகிறீர்கள்.

Ye are laying plans to pervert the ways of the righteous, and to bring down the wrath of God upon your heads, even to the utter destruction of this people.

19 நம்முடைய கடைசி ராஜாவாகிய மோசியா தனது
ராஜ்யத்தை ஒப்புவிக்க இருந்தபோது தன் ராஜ்யத்-
தை ஒப்புவிக்க எவரும் இல்லாமையினால் ஜனங்-
கள் அவர்களுடைய விருப்பத்திற்கேற்ப ஆளப்ப-
டவேண்டுமென்று, ஆம், அவர் சரியாய் சொன்னார்.
ஆம், அந்த ஜனங்களின் குரல் தங்கள் அக்கிரமத்-
தைத் தெரிந்துகொள்ளும் சமயம் வருமானால்,
அதாவது இந்த ஜனம் மீறுதலுக்குள்விழும் நேரம்
வருமானால், அவர்கள் அழிவிற்கு ஏற்றவர்களாய்
இருப்பார்கள், என்று அவன் சரியாய் சொல்லியி-
ருக்கிறானே.

Yea, well did Mosiah say, who was our last king, when he was about to deliver up the kingdom, having no one to confer it upon, causing that this people should be governed by their own voices—yea, well did he say that if the time should come that the voice of this people should choose iniquity, that is, if the time should come that this people should fall into transgression, they would be ripe for destruction.

20 இப்பொழுதும், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கர்த்தர் உங்கள் அக்கிரமங்களை நன்றாகவே நியாயந்தீர்க்கிறார். அவர் தம்முடைய தூதர்களின் சத்தத்தினாலே, இந்த ஜனங்களுக்கு மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபத்திலிருக்கிறது, என்று நன்றாகவே கூக்குரலிடுகிறார்.

And now I say unto you that well doth the Lord judge of your iniquities; well doth he cry unto this people, by the voice of his angels: Repent ye, repent, for the kingdom of heaven is at hand.

21 ஆம், அவர் தமது தூதர்களின் சத்தத்தினாலே: நான் என் ஜனத்திற்குள்ளே நேர்மையையும், நியாயத்தையும் என் கைகளில்கொண்டு வருவேன், என்று அவர் நன்றாகவே கூக்குரலிடுகிறார்.

Yea, well doth he cry, by the voice of his angels that: I will come down among my people, with equity and justice in my hands.

22 ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இத்தேசத்திலே இப்பொழுது ஜீவிக்கிற நீதிமான்களின் ஜெபங்கள் இல்லையெனில், நோவாவின் காலத்திலே ஜனங்களை அழித்துப்போட்ட அந்த பிரளயம் போல் அல்லாமல், ஆனால் நீங்கள் பஞ்சத்தாலும் கொள்ளை நோயினாலும், பட்டயத்தாலும் வரும் பூரண அழிவினால் விசாரிக்கப்படுவீர்கள்.

Yea, and I say unto you that if it were not for the prayers of the righteous, who are now in the land, that ye would even now be visited with utter destruction; yet it would not be by flood, as were the people in the days of Noah, but it would be by famine, and by pestilence, and the sword.

23 ஆனால் நீதிமான்களுடைய ஜெபங்களாலே நீங்கள் தப்புவிக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஆகையால் நீங்கள் உங்கள் மத்தியிலிருந்து நீதிமான்களை புறம்பே தள்ளுவீர்களெனில், பின்னும் கர்த்தர் தம் புயத்தை நீட்டாமலிரார்; ஆனால் அவர் தம்முடைய உக்கிர கோபத்தோடு உங்களுக்கு விரோதமாய் வருவார்; நீங்கள் மனந்திரும்பாவிடில் பஞ்சத்தினாலும், கொள்ளைநோய்களாலும், பட்டயத்தினாலும், அடிக்கப்படும் காலம் சமீபத்திலிருக்கிறது.

But it is by the prayers of the righteous that ye are spared; now therefore, if ye will cast out the righteous from among you then will not the Lord stay his hand; but in his fierce anger he will come out against you; then ye shall be smitten by famine, and by pestilence, and by the sword; and the time is soon at hand except ye repent.

24 இப்பொழுதும், அந்தப்படியே, ஜனங்கள் அமுலேக்கின்மேல் கோபம்கொண்டு, இந்த மனுஷன் நம்முடைய நியாயமான சட்டங்களையும் நாம் தெரிந்துகொண்ட ஞானமிக்க நியாயசாஸ்திரிகளையும் தூஷிக்கிறான், என்று கூக்குரலிட்டார்கள்.

And now it came to pass that the people were more angry with Amulek, and they cried out, saying: This man doth revile against our laws which are just, and our wise lawyers whom we have selected.

25 ஆனால் அமுலேக் தன் கரத்தை நீட்டி அவர்களை நோக்கி, அதி சத்தமாய்: துன்மார்க்கமும், மாறுபாடுமுள்ள தலைமுறையே, உங்களுடைய இருதயங்களை சாத்தான் ஏன் இறுகப்பிடித்துக்கொண்டான்? பேசப்பட்ட வசனங்களின் சத்தியத்தை நீங்கள் அறியாதிருக்கும்படி அவன் உங்கள் மேல் அதிகாரம்கொண்டு, உங்கள் கண்களை குருடாக்கும்படி ஏன் உங்களை அவனுக்கு உடன்படுத்துகிறீர்கள்?

But Amulek stretched forth his hand, and cried the mightier unto them, saying: O ye wicked and perverse generation, why hath Satan got such great hold upon your hearts? Why will ye yield yourselves unto him that he may have power over you, to blind your eyes, that ye will not understand the words which are spoken, according to their truth?

26 இதோ, நான் உங்களுடைய சட்டத்திற்கு விரோதமாகவா சாட்சி பகர்ந்தேன்? நீங்கள் புரிந்துகொள்ளவில்லை, நான் உங்களுடைய சட்டத்திற்கு எதிராய் பேசினேன், என்கிறீர்கள். நான் உங்கள் சட்டத்தை எதிர்த்துப் பேசாமல், உங்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற உங்களுடைய சட்டத்தை மேன்மை பாராட்டியே பேசினேன்;

For behold, have I testified against your law? Ye do not understand; ye say that I have spoken against your law; but I have not, but I have spoken in favor of your law, to your condemnation.

27 இப்பொழுது இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்களுடைய நியாயசாஸ்திரிகள் மற்றும் நியாயாதிபதிகளுடைய அநீதியாலே இந்த ஜனங்களின் அழிவுக்குரிய அஸ்திபாரம் போடப்பட்டு வருகிறது.

And now behold, I say unto you, that the foundation of the destruction of this people is beginning to be laid by the unrighteousness of your lawyers and your judges.

28 இப்பொழுதும், அந்தப்படியே, அமுலேக் இவ்-
வார்த்தைகளை பேசியபோது ஜனங்கள் அவனுக்-
கு விரோதமாய் கூக்குரலிட்டு, இப்பொழுது இவன்
பிசாசின் பிள்ளை என்று அறிவோம். ஏனெனில்
நம்மிடம் பொய்யுரைத்திருக்கிறான். ஏனெனில்
நம்முடைய சட்டத்திற்கு விரோதமாய் பேசியிருக்கி-
றான். இப்போது அதற்கு எதிராய் பேசவில்லை-
யென்று சொல்லுகிறான்.

And now it came to pass that when Amulek had spoken these words the people cried out against him, saying: Now we know that this man is a child of the devil, for he hath lied unto us; for he hath spoken against our law. And now he says that he has not spoken against it.

29 பின்னும் இவன் நம்முடைய நியாயசாஸ்திரிக-
ளையும் நியாயாதிபதிகளையும் தூஷித்தான்.

And again, he has reviled against our lawyers, and our judges.

30 அந்தப்படியே, அவனுக்கு விரோதமாக இந்தக் கா-
ரியங்களை அவர்கள் நினைவில் கொள்ள வேண்-
டுமென்று, நியாயசாஸ்திரிகள் அவர்களுடைய
இருதயத்தில் வைத்தார்கள்.

And it came to pass that the lawyers put it into their hearts that they should remember these things against him.

31 அவர்களுள் சீஸ்ரம் என்று பெயர்கொண்ட ஒரு-
வனும் இருந்தான். இவன் அவர்களில் மிகவும் திற-
மைசாலியாயும், ஜனங்களுக்குள்ளே அதிக காரி-
யங்களை புரிபவனான, இவனே அமுலேக்கையும்
ஆல்மாவையும் குற்றம் சாட்டுவதில் முதலாவதாய்
இருந்தவன்.

And there was one among them whose name was Zeezrom. Now he was the foremost to accuse Amulek and Alma, he being one of the most expert among them, having much business to do among the people.

32 ஆதாயம் பெறுவதே இந்த நியாயசாஸ்திரிகளின்
குறிக்கோள்; தங்களுடைய வேலைகளுக்குத் தக்க-
தாக இவர்கள் ஆதாயம் பெற்றுக்கொண்டார்கள்.

Now the object of these lawyers was to get gain; and they got gain according to their employ.

# ஆல்மா 11

1 சட்டத்தின் நியாயாதிபதியான ஒவ்வொருவரும்,
நியாயாதிபதியாய் நியமிக்கப்பட்டவர்களும், தங்க-
ளுக்கு முன்பாக நியாயந்தீர்க்கப்படும்படி கொண்-
டுவரப்பட்டவர்களை நியாயந்தீர்க்க தாங்கள் பிர-
யாசப்பட்ட காலளவிற்குத் தக்கதாக, ஊதியத்தை
பெற்றுக்கொள்ளவேண்டுமென்று மோசியாவின்
சட்டத்திலே இருந்தது.
2 ஒருவன் பிறனுக்கு கடன்பட்டிருந்து, தான் கடன்-
பட்ட தொகையை செலுத்தாமற் போவானேயாகில்,
அவன் நியாயாதிபதியிடம் குற்றம் சாட்டப்படு-
வான்; நியாயாதிபதி அதிகாரத்தை பிரயோகித்து,
அந்த மனுஷனை தன் முன்பு அழைத்து வரும்ப-
டிக்கு அதிகாரிகளை அனுப்புவான்; அவன் அம்-
மனுஷனை சட்டத்தின்படியேயும், அவனுக்கு வி-
ரோதமாய் வந்த சாட்சிகளுக்குத் தக்கதாகவும் நியா-
யம் விசாரிப்பான். இப்படியாய் அந்த மனுஷன்
தான் கடன்பட்டிருந்த தொகையை செலுத்தும்படி-
யாக கட்டாயப்படுத்தப்பட்டான். இல்லாவிடில்
அவனிடத்தில் உள்ளவைகளும் எடுத்துக்கொள்-
ளப்பட்டு அவன் திருடனைப்போலவும் கள்-
ளனைப்போலவும், ஜனங்கள் மத்தியிலிருந்து து-
ரத்தப்படுவான்.
3 நியாயாதிபதி தான் வேலை செய்த காலளவு ஒரு
நாளாயிருக்குமானால், பொன் சினயீனோ, அல்ல-
து ஒரு பொன் சினயீனுக்கு சமமான வெள்ளி சி-
னூமையோ, தன் ஊதியமாக பெற்றுக்கொண்-
டான்; இதுவும் கொடுக்கப்பட்ட சட்டத்தின்படியே
ஆகும்.
4 இவைகள் பொன்னாலும், வெள்ளியினாலும்
ஆன அவர்களுடைய நாணயங்களின் மதிப்பிற்-
கேற்றபடி கொடுக்கப்பட்ட பெயர்கள். இந்தப் பெ-
யர்கள் நேபியர்கள் வைத்தவை, ஏனெனில் எருச-
லேமிலிருந்த யூதர்களைப்போல எண்ணாமல்,
அவர்களைப்போல அளக்காமல், மோசியா ராஜா
ஏற்படுத்தின நியாயாதிபதிகளினுடைய ஆளுகை
மட்டும், ஜனங்களுடைய எண்ணங்களுக்கும் சூழ்-
நிலைகளுக்கும் ஏற்றபடி, ஒவ்வொரு தலைமுறை-
யிலும் தங்களுடைய எண்ணல், அளத்தல் முறைக-
ளை மாற்றிப்போட்டார்கள்.
5 அவர்களுடைய நாணய மதிப்புகளாவன,
பொன் சீனயீன், பொன் சியான், பொன் சும், பொன்
லிம்நா,
6 வெள்ளி சினூம், வெள்ளி அம்நோர், வெள்ளி
எசிரோம், வெள்ளி ஒன்டீ.
7 ஒரு வெள்ளி சினூம், ஒரு பொன் சீனயீனுக்கும்,
வாற்கோதுமை மற்றும், தானியங்களின் கொள்ள-
ளவிற்கும் சமமான மதிப்பைப் பெற்றிருந்தது.
8 பொன் சியான், சீனயீனைக் காட்டிலும் இரட்டிப்பு
பெறுமானமுள்ளது.

# Alma 11

Now it was in the law of Mosiah that every man who was a judge of the law, or those who were appointed to be judges, should receive wages according to the time which they labored to judge those who were brought before them to be judged.

Now if a man owed another, and he would not pay that which he did owe, he was complained of to the judge; and the judge executed authority, and sent forth officers that the man should be brought before him; and he judged the man according to the law and the evidences which were brought against him, and thus the man was compelled to pay that which he owed, or be stripped, or be cast out from among the people as a thief and a robber.

And the judge received for his wages according to his time—a senine of gold for a day, or a senum of silver, which is equal to a senine of gold; and this is according to the law which was given.

Now these are the names of the different pieces of their gold, and of their silver, according to their value. And the names are given by the Nephites, for they did not reckon after the manner of the Jews who were at Jerusalem; neither did they measure after the manner of the Jews; but they altered their reckoning and their measure, according to the minds and the circumstances of the people, in every generation, until the reign of the judges, they having been established by king Mosiah.

Now the reckoning is thus—a senine of gold, a seon of gold, a shum of gold, and a limnah of gold.

A senum of silver, an amnor of silver, an ezrom of silver, and an onti of silver.

A senum of silver was equal to a senine of gold, and either for a measure of barley, and also for a measure of every kind of grain.

Now the amount of a seon of gold was twice the value of a senine.

9 பொன் சும்மின் மதிப்பு சியான் மதிப்பில் இரண்டத்தனை.

And a shum of gold was twice the value of a seon.

10 பொன் லிம்நா, அவைகளனைத்தின் கூட்டு மதிப்பைப் பெற்றிருந்தது.

And a limnah of gold was the value of them all.

11 வெள்ளி அம்நோர், இரு சினூமின் மதிப்பைப் பெற்றிருந்தது.

And an amnor of silver was as great as two senums.

12 வெள்ளி எசிரோம், நான்கு சினூமின் மதிப்பைப் பெற்றிருந்தது.

And an ezrom of silver was as great as four senums.

13 ஒன்டீ அவைகளனைத்தின் கூட்டு மதிப்பைப் பெற்றிருந்தது.

And an onti was as great as them all.

14 அவர்களுடைய நாணயமுறையிலே குறைந்த மதிப்பை பெற்றிருந்த நாணயங்களாவன.

Now this is the value of the lesser numbers of their reckoning—

15 சிப்லோன், சினூமின் மதிப்பில் பாதியைப் பெற்றிருந்தது. ஆகவே சிப்லோம், வாற்கோதுமையின் அரைக்கொள்ளவிற்கு சமம்.

A shiblon is half of a senum; therefore, a shiblon for half a measure of barley.

16 அரை சிப்லோன், சிப்லத்திற்கு சமம்.

And a shiblum is a half of a shiblon.

17 அரை சிப்லம் ஒரு லேயாவிற்குச் சமம்.

And a leah is the half of a shiblum.

18 இவைகளே அவர்களுடைய நாணய முறையின் நாணயங்களின் மதிப்பு.

Now this is their number, according to their reckoning.

19 பொன் அந்தியோன் மூன்று சிப்லோன்களுக்குச் சமம்.

Now an antion of gold is equal to three shiblons.

20 அவர்கள் தங்களுடைய வேலைகளுக்குத் தக்கதாய் ஊதியத்தைப் பெற்று வந்ததினிமித்தம் ஆதாயம் பெற ஜனங்களை கலகம் செய்ய ஏவிவிட்டார்கள். அவர்கள் தங்களுக்கு முன்பாக தொடரப்பட்ட விசாரணைக்குத் தக்கதாக பணம் சம்பாதிக்கும்படிக்கும், ஜனங்களை கலகங்களிலும், குழப்பங்களிலும், துன்மார்க்கங்களிலும், ஈடுபட ஏவிவிட்டார்கள். ஆனபடியாலேதான் அவர்கள் ஆல்மாவிற்கும், அமுலேக்கிற்கும் விரோதமாய் இந்த ஜனங்களை ஏவி விட்டார்கள்.

Now, it was for the sole purpose to get gain, because they received their wages according to their employ, therefore, they did stir up the people to riotings, and all manner of disturbances and wickedness, that they might have more employ, that they might get money according to the suits which were brought before them; therefore they did stir up the people against Alma and Amulek.

21 பின்னும் சீஸ்ரம், அமுலேக்கை நோக்கி: நான் உன்னிடம் கேட்கும் சில கேள்விகளுக்கு பதிலளிப்பாயா என்று கேட்கத் தொடங்கினான். இந்த சீஸ்ரம் எனப்பட்ட மனுஷன் நன்மையானவற்றை நிர்மூலமாக்கிப் போடும்படிக்கு பிசாசின் தந்திரங்களிலே திறமையானவன். ஆகவேதான் அவன் அமுலேக்கை நோக்கி: நான் உன்னிடம் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிப்பாயா என்றான்.

And this Zeezrom began to question Amulek, saying: Will ye answer me a few questions which I shall ask you? Now Zeezrom was a man who was expert in the devices of the devil, that he might destroy that which was good; therefore, he said unto Amulek: Will ye answer the questions which I shall put unto you?

22 அதற்கு அமுலேக் அவனை நோக்கி: ஆம், அது எனக்குள்ளிருக்கிற கர்த்தருடைய ஆவியானவரின்படியிருந்தால் மாத்திரமே, ஏனெனில் கர்த்தருடைய ஆவியானவருக்கு முரணாய் நான் எதையும் சொல்லேன், என்றான். பின்னும் சீஸ்ரம் அவனை நோக்கி: இதோ வெள்ளியிலான ஆறு ஒன்டீ நாணயங்கள் இங்கே இருக்கின்றன. நீ உன்னதமானவர் ஜீவிப்பதை மறுதலித்தால், இவைகள் அனைத்தையும் உனக்குத் தருவேன்.

And Amulek said unto him: Yea, if it be according to the Spirit of the Lord, which is in me; for I shall say nothing which is contrary to the Spirit of the Lord. And Zeezrom said unto him: Behold, here are six onties of silver, and all these will I give thee if thou wilt deny the existence of a Supreme Being.

23 அதற்கு அமுலேக், நரகத்தின் பிள்ளையே, ஏன்
என்னை சோதிக்கிறாய்? நீதிமான்கள் இப்படிப்-
பட்ட சோதனைகளுக்கு உடன்படுவதில்லை என்-
று அறியாயோ என்றான்.

Now Amulek said: O thou child of hell, why tempt ye me? Knowest thou that the righteous yieldeth to no such temptations?

24 தேவனில்லை என்று விசுவாசிக்கிறாயோ? நான்
உனக்குச் சொல்லுகிறேன், அப்படியல்ல. தேவன்
ஒருவர் உண்டென்று நீ அறிகிறாய், ஆனால் அவரி-
லும் ஐஸ்வரியத்தை நீ மிகவும் நேசிக்கிறாய்.

Believest thou that there is no God? I say unto you, Nay, thou knowest that there is a God, but thou lovest that lucre more than him.

25 நீ தேவனுக்கு முன்பாக என்னிடத்தில் பொய்யு-
ரைத்தாய். நீ என்னை நோக்கி, இதோ, என்னிடத்தி-
லிருக்கிற இந்த அதிக மதிப்புடைய ஆறு ஒன்டீக-
ளை உனக்கு தருகிறேன் என்றாய், ஆனாலும்
அதை எனக்குத் தராமல் தானே வைத்துக்கொள்ள-
வேண்டுமென்பதே உன் இருதயத்தின் சிந்தனை-
யாய் இருக்கிறது. என்னை நீ அழித்துப்போடும்படி
உனக்கு ஒரு முகாந்திரத்தை ஏற்படுத்தவே நான்
மெய்யான ஜீவனுள்ள தேவனை மறுதலிக்க
வேண்டுமென்று வாஞ்சிக்கிறாய். இப்போதும்
இதோ, இந்த மகா பொல்லாப்பினிமித்தம், நீ உன்
பலனைப் பெறுவாய் என்றான்.

And now thou hast lied before God unto me. Thou saidst unto me—Behold these six onties, which are of great worth, I will give unto thee—when thou hadst it in thy heart to retain them from me; and it was only thy desire that I should deny the true and living God, that thou mightest have cause to destroy me. And now behold, for this great evil thou shalt have thy reward.

26 சீஸ்ரம் அவனை நோக்கி: மெய்யான ஜீவிக்கிற
தேவன் உண்டென்று சொல்லுகிறாயா? என்றான்.

And Zeezrom said unto him: Thou sayest there is a true and living God?

27 அதற்கு அமுலேக்: மெய்யான ஜீவிக்கிற தேவன்
ஒருவர் உண்டென்றான்.

And Amulek said: Yea, there is a true and living God.

28 இப்பொழுது சீஸ்ரம் ஒரு தேவனிலும் அதிகமா-
னோர் உண்டா என்றான்.

Now Zeezrom said: Is there more than one God?

29 அதற்கு அவன், இல்லை, என்றான்.

And he answered, No.

30 பின்னும் சீஸ்ரம் அவனை நோக்கி: இக்காரியங்க-
ளை நீ எப்படி அறிந்துகொண்டாய் என்றான்.

Now Zeezrom said unto him again: How knowest thou these things?

31 அதற்கு அவன்: ஒரு தூதன் எனக்கு இவைகளை
வெளிப்படுத்தினான், என்றான்.

And he said: An angel hath made them known unto me.

32 பின்னும் சீஸ்ரம் வரவிருக்கிறவர் யார்? தேவகு-
மாரனா என்று கேட்டான்.

And Zeezrom said again: Who is he that shall come? Is it the Son of God?

33 அதற்கு அவன், ஆம் என்றான்.

And he said unto him, Yea.

34 பின்னும் சீஸ்ரம், அவர் தம் ஜனங்களை அவர்-
கள் பாவங்களிலிருந்தபடியே இரட்சிப்பாரா என்று
கேட்டான். அமுலேக் பிரதியுத்தரமாக: அவர் அப்ப-
டிச் செய்யார். அவர் தமது வார்த்தையை மறுதலிப்-
பது அவருக்கு கூடாத காரியம், என்று உனக்குச்
சொல்லுகிறேன், என்றான்.

And Zeezrom said again: Shall he save his people in their sins? And Amulek answered and said unto him: I say unto you he shall not, for it is impossible for him to deny his word.

35 இப்பொழுது சீஸ்ரம், ஜனங்களை நோக்கி: இவை-
களை நீங்கள் நினைவில் கொள்ளுங்கள்; தேவன்
ஒருவரே என்கிறான்; ஆகிலும் தேவகுமாரன் வரு-
வார் என்றும், அவர் தமது ஜனத்தை இரட்சியார்,
என்றும் அவன் தேவனுக்குக் கட்டளையிட அதிகா-
ரம் பெற்றிருப்பதுபோல, சொல்லுகிறான், என்-
றான்.

Now Zeezrom said unto the people: See that ye remember these things; for he said there is but one God; yet he saith that the Son of God shall come, but he shall not save his people—as though he had authority to command God.

36 இப்பொழுது அமுலேக் அவனை நோக்கி: இதோ,
அவர் தம்முடைய ஜனத்தை அவர்களுடைய பா-
வங்களிலே இரட்சியார், என்று நான் சொன்னதினி-
மித்தம், தேவனை கட்டளையிட அதிகாரத்தைப்
பெற்றிருப்பதைப்போல பேசினேன், என்று நீ
பொய்யுரைத்தாய்.

Now Amulek saith again unto him: Behold thou hast lied, for thou sayest that I spake as though I had authority to command God because I said he shall not save his people in their sins.

37 நான் உனக்குச் சொல்லுகிறேன், அவர் அவர்க-
ளை அவர்களுடைய பாவங்களிலே இரட்சிக்க மு-
டியாது; பரலோக ராஜ்யத்தை தீட்டான எப்பொரு-
ளும் சுதந்தரிக்கலாகாது, என்று அவர் சொன்ன
வார்த்தையை, நான் மறுதலிக்கக்கூடாது; ஆகவே
நீங்கள் பரலோக ராஜ்யத்தை சுதந்தரியாமல், இரட்-
சிக்கப்படுவதெப்படி? எனவே நீங்கள் உங்களு-
டைய பாவங்களிலே இரட்சிக்கப்படமுடியாது, என்-
றான்.

And I say unto you again that he cannot save them in their sins; for I cannot deny his word, and he hath said that no unclean thing can inherit the kingdom of heaven; therefore, how can ye be saved, except ye inherit the kingdom of heaven? Therefore, ye cannot be saved in your sins.

38 பின்னும் சீஸ்ரம் அவனை நோக்கி: தேவகுமாரன்-
தான் நித்திய பிதாவானவரா என்று கேட்டான்.

Now Zeezrom saith again unto him: Is the Son of God the very Eternal Father?

39 அமுலேக் அவனை நோக்கி: ஆம், அவரே வானத்-
தையும் பூமியையும் அவைகளிலிருக்கிற யாவை-
யும் உண்டாக்கிய நித்திய பிதா; அவரே, ஆதியும்
அந்தமும், முந்தினவரும், பிந்தினவருமாயிருக்கி-
றார்.

And Amulek said unto him: Yea, he is the very Eternal Father of heaven and of earth, and all things which in them are; he is the beginning and the end, the first and the last;

40 அவர் தமது ஜனத்தை மீட்க உலகத்திற்கு வரு-
வார்; தம்முடைய நாமத்தை விசுவாசிக்கிறவர்க-
ளின் மீறுதல்களை அவர் தம்மீது எடுத்துக்கொள்-
வார்; இவர்களே நித்திய ஜீவனைப் பெறுவார்கள்,
வேறொருவருக்கும் இரட்சிப்பு வருவதில்லை.

And he shall come into the world to redeem his people; and he shall take upon him the transgressions of those who believe on his name; and these are they that shall have eternal life, and salvation cometh to none else.

41 துன்மார்க்கர் மரணக்கட்டுகளிலிருந்து அவிழ்க்-
கப்படுவது அன்றி மீட்பு சம்பவியாததுபோல
இருப்பார்கள்; ஏனெனில் இதோ, சகலமானோரும்
அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியா-
யந்தீர்க்கப்படும்படி, மரித்தோரிலிருந்து எழுந்து
தேவனுக்கு முன்பாக நிற்கும் நாளானது வருகிறது.

Therefore the wicked remain as though there had been no redemption made, except it be the loosing of the bands of death; for behold, the day cometh that all shall rise from the dead and stand before God, and be judged according to their works.

42 இப்பொழுது இம்மைக்குரிய மரணம் என்றொரு
மரணமுண்டு; அனைவரும் இந்த இம்மைக்குரிய
மரணத்திலிருந்து எழும்பொருட்டு இந்த இம்மைக்-
குரிய மரணத்தின் கட்டுக்களை கிறிஸ்துவினு-
டைய மரணம் அவிழ்த்துப்போடும்.

Now, there is a death which is called a temporal death; and the death of Christ shall loose the bands of this temporal death, that all shall be raised from this temporal death.

43 ஆவியும் சரீரமும், அவைகளுடைய பரிபூரண
அமைப்பிலே மறுபடியும் சேர்க்கப்படும். இப்பொழு-
து நாம் இருப்பதுபோன்று அவயவமும், கணுக்க-
ளும், அவைகளுடைய பரிபூரண வடிவத்திலே
மறுபடியும் சேர்க்கப்படும்; நாம் தேவனுடைய சமு-
கத்திலே நிற்கும்படியாய் கொண்டுவரப்படும்போ-
து, இப்பொழுது நாம் அறிந்திருக்கிறதைப்போல-
வே, அப்பொழுதும் நம்முடைய சகல குற்றங்களை-
யும் தெள்ளத்தெளிவாய் நினைவுகூருவோம்.

The spirit and the body shall be reunited again in its perfect form; both limb and joint shall be restored to its proper frame, even as we now are at this time; and we shall be brought to stand before God, knowing even as we know now, and have a bright recollection of all our guilt.

44 இப்பொழுது இந்த சீர்பொருந்துதல் முதியோருக்கும் வாலிபருக்கும், அடிமைகளுக்கும், சுயாதீனருக்கும், புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், துன்மார்க்கருக்கும், நீதிமான்களுக்குமாக யாவருக்கும் ஏற்படும்; அவர்களின் சிரசிலிருந்து ஒரு முடிகூட தொலைந்துபோகாது. இப்பொழுது இருப்பதைப்போலவே பூரண அமைப்பாகிய சரீரத்திலே அனைத்தும் திரும்பியும் இணைக்கப்படும். தங்களுடைய நன்மையான மற்றும் தீமையான அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும்படி குமாரானாகிய கிறிஸ்துவும், பிதாவாகிய தேவனும், பரிசுத்தாவியுமான நித்திய தேவனுடைய நியாயவிசாரணைக் கூண்டுக்கு முன்பாக கணக்கொப்புவிக்கும்படி நிற்க வைக்கப்படுவார்கள்.

Now, this restoration shall come to all, both old and young, both bond and free, both male and female, both the wicked and the righteous; and even there shall not so much as a hair of their heads be lost; but every thing shall be restored to its perfect frame, as it is now, or in the body, and shall be brought and be arraigned before the bar of Christ the Son, and God the Father, and the Holy Spirit, which is one Eternal God, to be judged according to their works, whether they be good or whether they be evil.

45 இதோ நான் சாவுக்கேதுவான சரீரத்தின் மரணத்தைப்பற்றியும், சாவுக்கேதுவான சரீரத்தின் உயிர்த்தெழுதலைக் குறித்தும் பேசியிருக்கிறேன். முதல் மரணத்திலிருந்து ஜீவனுக்கு, அதாவது மரணத்திலிருந்து இந்த சாவுக்கேதுவான சரீரம் இனி செத்துப்போகாமல், சாவாமையின் சரீரத்திலே எழும்போதும் என்றென்றும் பிரியாதபடிக்கு, அவைகளுடைய ஆவிகள் தங்கள் சரீரங்களோடு சேர்ந்துகொள்ளும். இப்படியாய் சரீரம் இனி அழிவைக் காணாமல் ஆவிக்குரியதும் அழியாமைக்குரியதுமாகும்.

Now, behold, I have spoken unto you concerning the death of the mortal body, and also concerning the resurrection of the mortal body. I say unto you that this mortal body is raised to an immortal body, that is from death, even from the first death unto life, that they can die no more; their spirits uniting with their bodies, never to be divided; thus the whole becoming spiritual and immortal, that they can no more see corruption.

46 இப்பொழுது இவ்வார்த்தைகளை அமுலேக் பேசி முடித்த பின்பு, ஜனங்கள் திரும்பவும் திகைத்துப்போனார்கள். சீஸ்ரம் நடுக்கம்கொள்ளத் துவங்கினான். அமுலேக் பேசிய வார்த்தைகள் முடிவு பெற்றன. அல்லது நான் எழுதியவைகள் இவைகளே.

Now, when Amulek had finished these words the people began again to be astonished, and also Zeezrom began to tremble. And thus ended the words of Amulek, or this is all that I have written.

# ஆல்மா 12

1 இப்பொழுதும் அமுலேக்கின் வார்த்தைகள் சீஸ்ர-
மை அமைதியாக்கியதை ஆல்மா கண்டு,
அவனை அழிக்கும்படியான அவனுடைய பொய்-
யிலும் வஞ்சகத்திலும் அவனை அமுலேக் பிடித்த-
தை அவன் கண்டபடியால், தன்னுடைய குற்றவு-
ணர்வினிமித்தம் அவன் நடுக்கமடையத் துவங்கு-
வதையும் கண்டு, அவன் தன் வாயைத் திறந்து
அவனிடம் பேசத்தொடங்கி, அமுலேக்கின் வார்த்-
தைகளை உறுதிப்படுத்தவும், அமுலேக் செய்த-
தைக்காட்டிலும் மேலாக காரியங்களை விவரிக்க-
வும் அல்லது வேதங்களை விளக்கவும் துவங்கி-
னான்.
2 சீஸ்ரமிடம் ஆல்மா பேசிய வார்த்தைகள், சுற்றி-
லுமிருந்த ஜனங்களாலும் கேட்கப்பட்டது. பெருந்-
திரள்கூட்டமாக இருந்தபடியால், அவன் இவ்வித-
மாக பேசினான்,
3 சீஸ்ரமே நீ உனது பொய்யிலும், தந்திரத்திலும் பி-
டிபட்டுப் போனதைக் கண்டு. நீ மனுஷரிடத்தில்
மாத்திரமல்ல, தேவனிடத்திலும் பொய்யுரைத்தபடி-
யால், இதோ அவர் உன்னுடைய எண்ணங்களை
எல்லாம் அறிந்திருக்கிறார். அவருடைய ஆவியா-
னவராலே உன்னுடைய எண்ணங்கள் எங்களுக்கு
தெரியப்படுத்தப்பட்டதையும் காண்கிறாய்.
4 பின்னும் இந்த ஜனங்களை எங்களுக்கு விரோத-
மாய் எழும்பப்பண்ணி எங்களை தூஷிக்கவும், பு-
றம்பே தள்ளிப்போடவும், இவர்களிடத்தில் பொய்-
யுரைத்து, வஞ்சிக்கிறதற்கு தக்கதான பிசாசின் சூ-
துகளின்படியே, உன்னால் உண்டான திட்டமும் சூ-
துள்ளது, என்று நாங்கள் அறிந்திருக்கிறோம் என்-
பதையும் நீ காண்கிறாய்.
5 இத்திட்டம் உன்னுடைய சத்துருவின் திட்டம்.
அவன் உன்மேல் தன் அதிகாரத்தைச் செலுத்தி-
னான். உன்னிடம் சொல்லுகிறவைகளைத்தான்,
நான் அனைவருக்கும் சொல்லுகிறேன், என்று நீ நி-
னைவில்கொள்ளவேண்டுமென்று விரும்புகி-
றேன்.
6 இதோ, சத்துருவானவன் இந்த ஜனங்களைப் பி-
டித்து, அதன் மூலம் உங்களைத் தனக்கு அடிமை-
யாக்கி, தன்னில் உண்டான அடிமையாக்குகிற
அதிகாரத்தினாலே உங்களை என்றென்றுமாய்
அழித்துப் போடத்தக்கதாய், தன்னுடைய சங்கிலி-
களாலே உங்களைப் பிணைத்து கட்டுவதற்காக-
வே, இவைகளெல்லாம் அவனாலான கண்ணி-
யாய் இருக்கிறது, என்று நான் உங்கள் எல்லோருக்-
கும் சொல்கிறேன்.

# Alma 12

Now Alma, seeing that the words of Amulek had silenced Zeezrom, for he beheld that Amulek had caught him in his lying and deceiving to destroy him, and seeing that he began to tremble under a consciousness of his guilt, he opened his mouth and began to speak unto him, and to establish the words of Amulek, and to explain things beyond, or to unfold the scriptures beyond that which Amulek had done.

Now the words that Alma spake unto Zeezrom were heard by the people round about; for the multitude was great, and he spake on this wise:

Now Zeezrom, seeing that thou hast been taken in thy lying and craftiness, for thou hast not lied unto men only but thou hast lied unto God; for behold, he knows all thy thoughts, and thou seest that thy thoughts are made known unto us by his Spirit;

And thou seest that we know that thy plan was a very subtle plan, as to the subtlety of the devil, for to lie and to deceive this people that thou mightest set them against us, to revile us and to cast us out—

Now this was a plan of thine adversary, and he hath exercised his power in thee. Now I would that ye should remember that what I say unto thee I say unto all.

And behold I say unto you all that this was a snare of the adversary, which he has laid to catch this people, that he might bring you into subjection unto him, that he might encircle you about with his chains, that he might chain you down to everlasting destruction, according to the power of his captivity.

7 ஆல்மா இவ்வார்த்தைகளைப் பேசின பின்பு, சீஸ்ரம் தேவனுடைய வல்லமையை இன்னும் அதிகமாய் விசுவாசித்து மிகுந்த நடுக்கங் கொண்டான். ஆல்மாவும், அமுலேக்கும், தன் இருதயத்தின் எண்ணங்களையும், சிந்தனைகளையும் அறிந்திருக்கிறார்கள் என்று, அவன் உணர்ந்ததாலே தன்னைப்பற்றி அவர்கள் அறிந்திருக்கிறார்கள், என்று உணர்த்தப்பட்டான்; ஏனெனில் தீர்க்கதரிசன ஆவியின்படியே இவைகளை அவர்கள் அறிந்துகொள்ள அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது.

Now when Alma had spoken these words, Zeezrom began to tremble more exceedingly, for he was convinced more and more of the power of God; and he was also convinced that Alma and Amulek had a knowledge of him, for he was convinced that they knew the thoughts and intents of his heart; for power was given unto them that they might know of these things according to the spirit of prophecy.

8 தேவனுடைய ராஜ்யத்தைப்பற்றி இன்னும் அதிகமாய் அறிந்துகொள்ள, சீஸ்ரம் அவர்களிடத்தில், கருத்துடனேகூட வினாவத் தொடங்கினான். அவன் ஆல்மாவை நோக்கி: நீதிமானும், அநீதியானவனுமான, யாவரும் மரித்தோரிலிருந்து எழுந்து தேவனுக்கு முன்பாக தங்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாந்தீர்க்கப்படும்படி கொண்டு வரப்பட, அமுலேக் கூறியவற்றின் அர்த்தமென்னவென்று, கேட்டான்.

And Zeezrom began to inquire of them diligently, that he might know more concerning the kingdom of God. And he said unto Alma: What does this mean which Amulek hath spoken concerning the resurrection of the dead, that all shall rise from the dead, both the just and the unjust, and are brought to stand before God to be judged according to their works?

9 ஆல்மா அவைகளைக் குறித்து விவரித்துச் சொன்னதாவது: அநேகர் தேவனுடைய இரகசியங்களை அறியும்படிக்கு அருளப்பட்டிருக்கிறார்கள்; எனினும் மனுபுத்திரர் தமக்கு கருத்துடனே செவிகொடுப்பதற்கும் கருத்துடைமைக்கும் ஏற்ப, அவர்களுக்கு தாம் அருளுகிற தம்முடைய வார்த்தையின் ஒரு பங்குக்கு மாத்திரமே கற்பிக்கக்கூடாதென்று அவர்களுக்குக் கண்டிப்பான கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

And now Alma began to expound these things unto him, saying: It is given unto many to know the mysteries of God; nevertheless they are laid under a strict command that they shall not impart only according to the portion of his word which he doth grant unto the children of men, according to the heed and diligence which they give unto him.

10 ஆகையினாலே, தன் இருதயத்தை கடினப்படுத்துகிறவன் எவனோ அவன் வார்த்தையின் சிறிய பங்கைப் பெறுவான். தன் இருதயத்தை கடினப்படுத்தாதவன் எவனோ அவனுக்கு வார்த்தையின் பெரும்பங்கு தேவ இரகசியங்களை அறிந்துகொள்ள அவனுக்கு அளிக்கப்படும்வரைக்கும், அவன் அவற்றை முழுமையாக அறியும்வரைக்கும் அளிக்கப்படுகிறது.

And therefore, he that will harden his heart, the same receiveth the lesser portion of the word; and he that will not harden his heart, to him is given the greater portion of the word, until it is given unto him to know the mysteries of God until he know them in full.

11 தங்கள் இருதயங்களை கடினப்படுத்துபவர்களுக்கு, அவருடைய இரகசியங்களைக் குறித்து அவர்கள் ஒன்றும் அறியாது போகும் மட்டும், வார்த்தையின் சிறிய பங்கு கொடுக்கப்படும்; பின்பு அவர்கள் பிசாசினால் அடிமையாக்கப்பட்டு, அவன் சித்தத்தின்படி அழிவிற்குள்ளாக வழிநடத்தப்படுகிறார்கள். இப்பொழுது நரகத்தின் சங்கிலிகள் என்பதின் பொருள் இதுவே.

And they that will harden their hearts, to them is given the lesser portion of the word until they know nothing concerning his mysteries; and then they are taken captive by the devil, and led by his will down to destruction. Now this is what is meant by the chains of hell.

12 அமுலேக் சாவைக்குறித்தும், சாவிலிருந்து, சாவாமைக்கு எழும் நிலை குறித்தும், நம்முடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும்படி, தேவனுடைய நியாயவிசாரணைக் கூண்டுக்கு முன்பாக கொண்டுவரப்படுதல் குறித்தும், தெளிவாய் பேசியிருக்கிறான்.

And Amulek hath spoken plainly concerning death, and being raised from this mortality to a state of immortality, and being brought before the bar of God, to be judged according to our works.

13 பின்பு நம்முடைய இருதயங்கள் கடினப்படுத்தப்-
பட்டால், ஆம், வார்த்தைக்கு விரோதமாய் இருத-
யங்களை கடினப்படுத்துவோமாயின், நம்மிலே
அது காணப்படாதபடிக்கு, அஞ்சத்தக்க நிலையி-
லிருப்போம், ஏனெனில் பின்பு நாம் ஆக்கினைக்-
குள்ளாகத் தீர்க்கப்படுவோம்.

Then if our hearts have been hardened, yea, if we have hardened our hearts against the word, insomuch that it has not been found in us, then will our state be awful, for then we shall be condemned.

14 ஏனெனில் நம்முடைய வார்த்தைகள் நம்மை
ஆக்கினைக்குள்ளாக்கும், ஆம், நம் கிரியைக-
ளனைத்தும் நம்மை ஆக்கினைக்குள்ளாகத்தீர்க்-
கும். நாம் கறையற்றவர்களாக காணப்பட்டோம்;
நம்முடைய எண்ணங்களும், நம்மை ஆக்கினைக்-
குள்ளாகத் தீர்க்கும், நாமிருக்கும் அந்த பயங்கர-
மான நிலையிலே தேவனைப் பார்க்க தைரியமில்-
லாதவர்களாய் இருப்போம்; மலைகளும் கற்பா-
றைகளும், அவர் பிரசன்னத்திலிருந்து நம்மை
மறைத்துப்போடும்படிக்கு நம்மேல் விழ நாம் கட்ட-
ளையிட இயல்வது, நமக்கு மிகவும் மகிழ்ச்சிதரும்.

For our words will condemn us, yea, all our works will condemn us; we shall not be found spotless; and our thoughts will also condemn us; and in this awful state we shall not dare to look up to our God; and we would fain be glad if we could command the rocks and the mountains to fall upon us to hide us from his presence.

15 அப்படிச் செய்வது கூடாத காரியம்; ஏனெனில்
நாம் வந்து, அவருடைய மகிமையிலும், வல்லமை-
யிலும், பலத்திலும் மகத்துவத்திலும், துரைத்தனத்-
திலும், அவர் சமுகத்தில் நின்று, அவருடைய நியா-
யத்தீர்ப்புகள் நியாயமானதென்றும், நம்மிடத்திலே
என்றென்றுமாய் உண்டான அவமானத்திலே, தன்-
னுடைய சகல கிரியைகளிலும் அவர் நியாயமான-
வர் என்றும், மனுபுத்திரரிடத்தில் அவர் இரக்கமாய்
இருக்கிறார் என்றும், அவருடைய நாமத்தில் விசு-
வாசித்து மனந்திரும்புதலுக்கேதுவான கனியைக்-
கொண்டுவருகிற அனைவரையும் இரட்சிக்க அவ-
ரிடத்திலே வல்லமை உண்டென்றும் அறிக்கையிட-
வேண்டும்.

But this cannot be; we must come forth and stand before him in his glory, and in his power, and in his might, majesty, and dominion, and acknowledge to our everlasting shame that all his judgments are just; that he is just in all his works, and that he is merciful unto the children of men, and that he has all power to save every man that believeth on his name and bringeth forth fruit meet for repentance.

16 இதோ, நான் உனக்குச் சொல்லுகிறேன்; அப்பொ-
ழுது இரண்டாம் மரணம் என்கிற மரணம் சம்பவிக்-
கும். அது ஆவிக்குரிய மரணமாகும். அச்சமயத்தில்-
தானே இம்மைக்குரிய மரணத்திற்கேதுவாய் தன்
பாவங்களில் செத்துப்போகிறவன் ஆவிக்குரிய மர-
ணத்திற்கேதுவாயும் மரித்துப்போவான், ஆம், நீ-
திக்கேற்றவைகளின்படியும் மரித்துப்போவான்.

And now behold, I say unto you then cometh a death, even a second death, which is a spiritual death; then is a time that whosoever dieth in his sins, as to a temporal death, shall also die a spiritual death; yea, he shall die as to things pertaining unto righteousness.

17 அப்பொழுது அவர்களுடைய வேதனைகள் கந்-
தகமும், அக்கினியிலான கடலைப்போல இருக்கும்.
அதன் ஜூவாலைகளோ என்றென்றும் மேல் எழும்-
பும். அச்சமயத்தில் சாத்தான் அவர்களை தன் சித்-
தத்திற்கு அடிமைப்படுத்தியிருப்பதினிமித்தம்
அவனுடைய அதிகாரத்தினாலும், சிறைத்தனத்தி-
னாலும் அவர்கள் என்றென்றுமாய் அழிந்துபோக
சங்கிலிகளால் கட்டப்படுவார்கள்.

Then is the time when their torments shall be as a lake of fire and brimstone, whose flame ascendeth up forever and ever; and then is the time that they shall be chained down to an everlasting destruction, according to the power and captivity of Satan, he having subjected them according to his will.

18 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பின்னர், மீட்-
பு நிறைவேறாததைப்போல, அவர்களிருப்பார்கள்;
ஏனெனில் அவர்கள் தேவனுடைய நீதியின்படியே
மீட்கப்பட முடியாது; இனிமேலும் அழிவில்லை என
அறிந்து, அவர்கள் மரிக்க முடியாது.

Then, I say unto you, they shall be as though there had been no redemption made; for they cannot be redeemed according to God's justice; and they cannot die, seeing there is no more corruption.

19 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மா இவ்வார்த்-
தைகளை பேசிய பின்பு, ஜனங்கள் மிகவும் ஆச்சரி-
யப்பட்டுப் போனார்கள்.

Now it came to pass that when Alma had made an end of speaking these words, the people began to be more astonished;

20 ஆனாலும் அவர்களுக்கு பிரதான ஆசாரியனா-
யிருந்த அந்தியோனா என்பவன் முன்னே வந்து
அவனை நோக்கி: மனுஷன் மரணத்திலிருந்து
எழுந்து, ஆத்துமா ஒருபோதும் அழிந்துபோகாதப-
டிக்கு, அழிவுக்கேதுவான நிலையிலிருந்து, அழி-
வற்ற நிலைக்கு மாறுவான், என்றும் நீ சொன்ன-
தென்ன?

But there was one Antionah, who was a chief ruler among them, came forth and said unto him: What is this that thou hast said, that man should rise from the dead and be changed from this mortal to an immortal state, that the soul can never die?

21 நம்முடைய முதற்பெற்றோர் பிரவேசித்து, ஜீவ வி-
ருட்சத்தின் கனியைப் புசித்து, என்றென்றுமாய் ஜீ-
வித்திருக்கக்கூடாதபடிக்கு, தேவன் ஏதேன் தோட்-
டத்தின் கிழக்குத் திசையிலே கேருபீன்களையும், சு-
டரொளி பட்டயத்தையும் வைத்தார், என்று வேதம்
சொல்லுகிறதன் அர்த்தமென்ன? இதனால் அவர்-
கள் என்றென்றுமாய் ஜீவிக்க வாய்ப்பில்லாமல்
போனதை நாம் காண்கிறோம், என்றான்.

What does the scripture mean, which saith that God placed cherubim and a flaming sword on the east of the garden of Eden, lest our first parents should enter and partake of the fruit of the tree of life, and live forever? And thus we see that there was no possible chance that they should live forever.

22 இப்பொழுது ஆல்மா, அவனை நோக்கி: நான் வி-
ளக்க வந்ததும் இதுவே. தேவனுடைய வசனத்தின்-
படி, ஆதாம் அந்த தவிர்க்கப்பட்ட கனியைப் புசித்-
ததினாலே வீழ்ந்து போனான், என்று நாம் காண்கி-
றோம்; அவனுடைய வீழ்ச்சியினிமித்தம் மனுக்குல-
மனைத்தும் வீழ்ந்துபோய், தொலைந்த ஜனமா-
னோம், என்றான்.

Now Alma said unto him: This is the thing which I was about to explain. Now we see that Adam did fall by the partaking of the forbidden fruit, according to the word of God; and thus we see, that by his fall, all mankind became a lost and fallen people.

23 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அச்ச-
மயத்தில் ஆதாம் அந்த ஜீவவிருட்சத்தின் கனி-
யைப் புசித்திருக்கக் கூடுமேயானால், மரணமே
இராமல், வார்த்தை வெறுமையாய் போய், தே-
வனை பொய்யராக்கியிருக்கும்; ஏனெனில், அவர்
நீ புசிப்பாயாகில் நீ சாகவே சாவாய், என்றார்.

And now behold, I say unto you that if it had been possible for Adam to have partaken of the fruit of the tree of life at that time, there would have been no death, and the word would have been void, making God a liar, for he said: If thou eat thou shalt surely die.

24 அமுலேக்கினால் பேசப்பட்ட அந்த இம்மைக்கு-
ரிய மரணமாகிய, சாவு மனுக்குலம் மேல் வருகிற-
தை நாம் காண்கிறோம்; ஆயினும் மனுஷன் மனந்-
திரும்பும்படிக்கு அவனுக்கு ஓர் காலம் கொடுக்கப்-
பட்டிருக்கிறது; அதினிமித்தம் இவ்வாழ்க்கை சோ-
திக்கப்படும் நிலையாகவும், தேவனை சந்திக்க
ஆயத்தப்படும் காலமாகவும், நாங்கள் சொன்ன,
மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு வருகிற,
நித்திய நிலைக்கு ஆயத்தப்பட வேண்டிய காலமா-
கும்.

And we see that death comes upon mankind, yea, the death which has been spoken of by Amulek, which is the temporal death; nevertheless there was a space granted unto man in which he might repent; therefore this life became a probationary state; a time to prepare to meet God; a time to prepare for that endless state which has been spoken of by us, which is after the resurrection of the dead.

25 இப்பொழுதும் உலக அஸ்திபார முதற்கொண்டு
திட்டமிடப்பட்ட, இந்த மீட்பின் திட்டம் இல்லையெ-
னில், மரித்தோரின் உயிர்த்தெழுதல் இல்லாமற்போ-
யிருக்கும்; அப்படியல்லாமல் ஏற்கனவே பேசப்-
பட்ட, மரித்தோரின் உயிர்த்தெழுதலை சம்பவிக்கப்-
பண்ணுகிற, மீட்பின் திட்டம் திட்டமிடப்பட்டிருக்-
கிறது.

Now, if it had not been for the plan of redemption, which was laid from the foundation of the world, there could have been no resurrection of the dead; but there was a plan of redemption laid, which shall bring to pass the resurrection of the dead, of which has been spoken.

26 இப்படியிருக்க இதோ, நம்முடைய முதற் பெற்-
றோர்கள் சென்று, ஜீவ விருட்சத்தின் கனியைப் பு-
சித்திருக்கக் கூடுமேயானால், ஆயத்தப்படுகிற நி-
லையில்லாமல் என்றென்றுமாய் பரிதபிக்கப் படத்-
தக்கவர்களாயிருந்திருப்பார்கள்; இப்படியாக மீட்-
பின் திட்டம் வெறுமையாக்கப்பட்டு, தேவனுடைய
வார்த்தை எத்தகைய விளைவுமில்லாமல், அவ-
மாக்கப்பட்டிருக்கும்.

And now behold, if it were possible that our first parents could have gone forth and partaken of the tree of life they would have been forever miserable, having no preparatory state; and thus the plan of redemption would have been frustrated, and the word of God would have been void, taking none effect.

27 ஆனால் இதோ, அப்படியில்லை, ஆனால் மனு-
ஷர் மரித்துப்போகும்படிக்கு விதிக்கப்பட்டிருந்தது;
மரித்துப்போன பின்பும், முடிவு என்று நாங்கள்
சொன்ன அதே நியாயத்தீர்ப்புக்கு, நியாயந்தீர்க்கப்-
படும்படி வர வேண்டும்.

But behold, it was not so; but it was appointed unto men that they must die; and after death, they must come to judgment, even that same judgment of which we have spoken, which is the end.

28 மனுஷனுக்கு சம்பவிக்கவேண்டியவைகளை
தேவன் நியமித்த பின்பு, இதோ, தாம் அவர்களுக்கு
நியமித்தவைகளை மனுஷன் அறிந்துகொள்வது
அவசியம் எனக் கண்டார்;

And after God had appointed that these things should come unto man, behold, then he saw that it was expedient that man should know concerning the things whereof he had appointed unto them;

29 அதனால் மனுஷரோடு சம்பாஷிக்க தூதர்களை
அனுப்பினார். அவர்கள் அவருடைய மகிமை-
யைக் காணச் செய்தார்கள்.

Therefore he sent angels to converse with them, who caused men to behold of his glory.

30 அச்சமயம் முதற்கொண்டு அவர்கள் அவருடைய
நாமத்தைத் தொழுது கொள்ளலானார்கள்; ஆனப-
டியால் தேவன் மனுஷரோடு சம்பாஷித்து, உலகத்-
தின் அஸ்திபாரம் முதற்கொண்டு இடப்பட்ட மீட்-
பின் திட்டத்தை அவர்களுக்கு அறிவித்தார்; இதை
அவர்களுடைய விசுவாசம், மனந்திரும்புதல், மற்-
றும் பரிசுத்த கிரியைகளுக்குத் தக்கதாக வெளிப்ப-
டுத்தினார்.

And they began from that time forth to call on his name; therefore God conversed with men, and made known unto them the plan of redemption, which had been prepared from the foundation of the world; and this he made known unto them according to their faith and repentance and their holy works.

31 ஆகவே, அவர்கள் இம்மைக்குரியவைகளான மு-
தற் கட்டளைகளை மீறினவர்களில் முதலானவர்-
களாதலால், தேவர்களைப்போலாகி, தீமையிலி-
ருந்து நன்மையை அறிந்து, தீமை செய்வதா அல்-
லது நன்மை செய்வதா என்று, தங்களுடைய சித்-
தத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ப நடக்கும் நிலை-
யில் வைக்கப்பட்டு அல்லது, செயல்படும் நிலை-
யில் தங்களை வைத்ததால், அவர் மனுஷருக்கு
கட்டளைகளைக் கொடுத்தார்.

Wherefore, he gave commandments unto men, they having first transgressed the first commandments as to things which were temporal, and becoming as gods, knowing good from evil, placing themselves in a state to act, or being placed in a state to act according to their wills and pleasures, whether to do evil or to do good—

32 தேவன் அவர்களுக்கு மீட்பின் திட்டத்தை வெ-
ளிப்படுத்திய பின்பு, அவர்கள் தீமையைச் செய்-
யக்கூடாதென்றும், அப்படிச் செய்வார்களெனில் நீ-
தியின் காரியங்களுக்கேற்ப நித்தியமாய் மரித்துப்-
போகிற, இரண்டாம் மரணத்திற்குள்ளாவார்க-
ளென்றும், அவர்களுக்குக் கட்டளைகளைக் கொ-
டுத்தார். ஏனெனில் அப்படிப்பட்டவர்கள் மீது, மீட்-
பின் திட்டம் வல்லமையைச் செலுத்தமுடியாது.
ஏனெனில் தேவனுடைய உச்சித நன்மையின்படி
நியாயத்தின் கிரியைகள் அழிக்கப்படமுடியாது.

Therefore God gave unto them commandments, after having made known unto them the plan of redemption, that they should not do evil, the penalty thereof being a second death, which was an everlasting death as to things pertaining unto righteousness; for on such the plan of redemption could have no power, for the works of justice could not be destroyed, according to the supreme goodness of God.

33 (கொடுக்கப்பட்ட மீட்பின் திட்டமாயிருப்பதால்),
தேவன் தம்முடைய குமாரனின் நாமத்தினாலே
மனுஷரை அழைத்து சொன்னதாவது, நீங்கள்
மனந்திரும்பி உங்கள் இருதயங்களை கடினப்ப-
டுத்தாமலிருப்பீர்களெனில், பின்னர் நான் என்னு-
டைய ஒரேபேறான குமாரன்மூலம் உங்கள் மீது
இரக்கமாயிருப்பேன்.

But God did call on men, in the name of his Son, (this being the plan of redemption which was laid) saying: If ye will repent, and harden not your hearts, then will I have mercy upon you, through mine Only Begotten Son;

34 ஆகையால், மனந்திரும்பி, தன் இருதயத்தை
எவன் கடினமாக்காமலிருக்கிறானோ, அவனே பா-
வமன்னிப்புக்கு ஏதுவாய், என்னுடைய ஒரேபே-
றான குமாரனின் மூலம் இரக்கத்தைப் பெற்றுக்-
கொள்வான். இவர்களே என்னுடைய இளைப்பா-
றுதலினுள்ளே பிரவேசிப்பார்கள்.

Therefore, whosoever repenteth, and hardeneth not his heart, he shall have claim on mercy through mine Only Begotten Son, unto a remission of his sins; and these shall enter into my rest.

35 தன் இருதயத்தை கடினப்படுத்தி எவன் அக்கிர-
மத்தைச் செய்கிறானோ, இதோ, அவன் என்
இளைப்பாறுதலில் பிரவேசிக்கக் கூடாதென்று
என் உக்கிரத்திலே ஆணையிடுகிறேன்.

And whosoever will harden his heart and will do iniquity, behold, I swear in my wrath that he shall not enter into my rest.

36 இப்பொழுது என் சகோதரரே, இதோ நான் உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் உங்கள் இருதயங்-
களை கடினப்படுத்துவீர்களெனில், நீங்கள் கர்த்த-
ருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதில்லை.
ஆதலால் உங்களுடைய அக்கிரமம் அவரை கோப-
மூட்டினபடியால் முதலில் கோபமூட்டியது போல,
ஆம், இந்தக் கடைசி கோபமூட்டுதலிலும், முதலாவ-
து போல தம்முடைய வார்த்தையின்படியே உங்கள்
ஆத்துமாக்கள் நித்தியமாய் அழிந்துபோகும்படிக்-
கு, இறுதி மரணம் மற்றும் முதல் மரணம் போல, தம்-
முடைய வார்த்தையின்படியே, தம்முடைய உக்கி-
ரத்தை அனுப்புகிறார்.

And now, my brethren, behold I say unto you, that if ye will harden your hearts ye shall not enter into the rest of the Lord; therefore your iniquity provoketh him that he sendeth down his wrath upon you as in the first provocation, yea, according to his word in the last provocation as well as the first, to the everlasting destruction of your souls; therefore, according to his word, unto the last death, as well as the first.

37 ஆகையினாலே என் சகோதரரே, இவைகளை
நாம் அறிந்திருக்கிறதினாலும், இவைகள் மெய்யா-
னவையானதாலும், நாம் மனந்திரும்பி, நம்மு-
டைய இருதயங்களைக் கடினப்படுத்தாமல், நம் தே-
வனாகிய கர்த்தர் கொடுத்த இந்த இரண்டாம் கட்ட-
ளைகளினாலே அவருடைய உக்கிரத்தை நம் மீது
வரவழையாமலும், அவரை கோபமூட்டாமலும்,
அவருடைய வார்த்தையின்படியே ஆயத்தப்படுத்-
தப்பட்டிருக்கிற தேவனுடைய இளைப்பாறுதலிலே
பிரவேசிப்போமாக.

And now, my brethren, seeing we know these things, and they are true, let us repent, and harden not our hearts, that we provoke not the Lord our God to pull down his wrath upon us in these his second commandments which he has given unto us; but let us enter into the rest of God, which is prepared according to his word.

# ஆல்மா 13

1 பின்னும் என் சகோதரரே, கர்த்தர் தம் பிள்ளைக-
ளுக்கு இந்த கட்டளைகளைக் கொடுத்த காலத்தை
உங்களுக்கு நினைவூட்ட வாஞ்சிக்கிறேன். இக்கா-
ரியங்களை ஜனங்களுக்குப் போதிக்கவேண்டு-
மென்று, தேவனாகிய கர்த்தர் தம்முடைய குமா-
ரனின் முறைமையாகிய, தமது பரிசுத்த முறைமை-
யின்படி, ஆசாரியர்களை நியமித்ததை நீங்கள் நி-
னைவில் கொள்ளவேண்டுமென்று விரும்புகி-
றேன்.
2 ஜனங்கள் மீட்படைவதற்காக அவருடைய குமா-
ரனை எவ்விதமாய் எதிர் நோக்குவது என்று, அவர்-
கள் அறியும்பொருட்டாக, அந்த ஆசாரியர்கள்
அவருடைய குமாரனின் முறைமையின்படியே நி-
யமனம் செய்யப்பட்டார்கள்.
3 அவர்கள் நியமனம் செய்யப்பட்ட விதமாவது,
அவர்களின் மிகுந்த விசுவாசம் மற்றும், நற்கிரி-
யைகளினிமித்தம், உலக அஸ்திபாரம் முதற்-
கொண்டு, தேவனுடைய முன்னறிவிற்குத்தக்கதாக
அழைக்கப்பட்டு ஆயத்தப்படுத்தப்பட்டார்கள்;
அவர்கள் முதலாவதாய் நன்மையையோ, தீமை-
யையோ தெரிந்துகொள்ளும்படி விடப்பட்டபோது,
அவர்கள் நன்மையைத் தெரிந்துகொண்டு மிகுந்த
விசுவாசத்தைப் பிரயோகப்படுத்தினதினிமித்தம்,
அப்படிப்பட்டோருக்கான ஆயத்த மீட்பின்படியே-
யும், பரிசுத்த அழைப்பினாலும் ஆம், ஆயத்தப்ப-
டுத்தப்பட்ட பரிசுத்த அழைப்பினாலும் அழைக்-
கப்பட்டிருக்கிறார்கள்.
4 இப்படியாக, மற்றவர்களோ தங்களுடைய இருத-
யக் கடினத்தினிமித்தமும், தங்களுடைய மனதின்
குருட்டுத் தன்மையினிமித்தமும், தேவ ஆவியை
நிராகரித்தபோது, இப்படி அவர்கள் செய்யாதிருந்-
தார்களெனில் தங்களுடைய சகோதரரைப்போல-
வே அவர்களும் மிகுந்த சிலாக்கியத்தைப் பெற்றி-
ருக்கலாம் என்றாலும், அவர்களுடைய விசுவாசத்-
தினிமித்தம் இந்த பரிசுத்த அழைப்பிற்கு அழைக்-
கப்பட்டிருக்கிறார்கள்.
5 அல்லது இறுதியாக, அவர்கள் முதற்கண் தங்கள்
சகோதரர்கள் போலவே இருந்தார்கள்; ஆயத்தம்-
பண்ணப்பட்டவராகிய ஒரேபேறான குமாரனின்
பாவநிவர்த்தியின் மூலமும், மாத்திரமுமே, அந்த
பரிசுத்த அழைப்பு தங்கள் இருதயங்களை கடினப்-
படுத்தாதவர்களுக்கென்று, இவ்விதமாக உலக
அஸ்திபார முதல் ஆயத்தம்பண்ணப்பட்டது.
6 இவ்விதமாய், இந்த பரிசுத்த முறைமையினால்
அழைக்கப்பட்டு, அவர்கள் அவருடைய இளைப்-
பாறுதலினுள் பிரவேசிக்கும்படி, மனுபுத்திரருக்கு
தேவ கட்டளைகளைப் போதிக்க அவருடைய பரி-
சுத்த முறைமையான, பிரதான ஆசாரியத்துவத்-
துக்கு நியமிக்கப்பட்டார்கள்.

# Alma 13

And again, my brethren, I would cite your minds forward to the time when the Lord God gave these commandments unto his children; and I would that ye should remember that the Lord God ordained priests, after his holy order, which was after the order of his Son, to teach these things unto the people.

And those priests were ordained after the order of his Son, in a manner that thereby the people might know in what manner to look forward to his Son for redemption.

And this is the manner after which they were ordained—being called and prepared from the foundation of the world according to the foreknowledge of God, on account of their exceeding faith and good works; in the first place being left to choose good or evil; therefore they having chosen good, and exercising exceedingly great faith, are called with a holy calling, yea, with that holy calling which was prepared with, and according to, a preparatory redemption for such.

And thus they have been called to this holy calling on account of their faith, while others would reject the Spirit of God on account of the hardness of their hearts and blindness of their minds, while, if it had not been for this they might have had as great privilege as their brethren.

Or in fine, in the first place they were on the same standing with their brethren; thus this holy calling being prepared from the foundation of the world for such as would not harden their hearts, being in and through the atonement of the Only Begotten Son, who was prepared—

And thus being called by this holy calling, and ordained unto the high priesthood of the holy order of God, to teach his commandments unto the children of men, that they also might enter into his rest—

7 இந்தப் பிரதான ஆசாரியத்துவம் உலக அஸ்திபாரம் முதலிலிருந்த முறைமையாகிய, அவருடைய குமாரனின் முறைமையிலானது; வேறு வார்த்தைகளிலெனில், இந்த முறைமை சகலத்தையும்பற்றிய அவருடைய முன்னறிவின்படியே, நாட்களின் தொடக்கமும், வருஷங்களின் முடிவுமில்லாமல், சதாகாலங்களுக்குமாக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது.

This high priesthood being after the order of his Son, which order was from the foundation of the world; or in other words, being without beginning of days or end of years, being prepared from eternity to all eternity, according to his foreknowledge of all things—

8 அவர்கள் ஏற்படுத்தப்பட்ட முறையாவது, அவர்கள் பரிசுத்த அழைப்பினாலே அழைக்கப்பட்டு, பரிசுத்த நியமத்தால் நியமிக்கப்பட்டு, தங்கள் மீது பரிசுத்த முறையிலான பிரதான ஆசாரியத்துவத்தை எடுத்துக்கொண்ட, அந்த அழைப்பும், நியமமும், பிரதான ஆசாரியத்துவமும் ஆதியும் அந்தமுமற்றவை.

Now they were ordained after this manner—being called with a holy calling, and ordained with a holy ordinance, and taking upon them the high priesthood of the holy order, which calling, and ordinance, and high priesthood, is without beginning or end—

9 இப்படியாக கிருபையிலும், நீதியிலும், சத்தியத்திலும், சம்பூரணமானவரும், நாட்களின் தொடக்கமும், வருஷங்களின் முடிவும் இல்லாதவருமான, பிதாவினுடைய ஒரேபேறானவராகிய, குமாரனின் முறைமையின்படியே, என்றென்றைக்குமாய் பிரதான ஆசாரியர்களானார்கள். இது இப்படியாக இருக்கிறது. ஆமென்.

Thus they become high priests forever, after the order of the Son, the Only Begotten of the Father, who is without beginning of days or end of years, who is full of grace, equity, and truth. And thus it is. Amen.

10 நான் இந்த பரிசுத்த முறைமையைக் குறித்தும் பிரதான ஆசாரியத்துவத்தைக் குறித்தும் சொன்னதுபோல, அநேகர் நியமிக்கப்பட்டு, தேவனுடைய பிரதான ஆசாரியர்களானார்கள்; அது அவர்களுடைய மிகுந்த விசுவாசத்தினாலும், மனந்திரும்புதலினாலும், கெட்டுப்போகாமல் நீதியானவைகளை கிரியை செய்வதையும், மனந்திரும்புதலையும் தெரிந்துகொண்டு, தேவனுக்கு முன்பாக நீதிமான்களாய் இருந்ததாலுமேயாகும்.

Now, as I said concerning the holy order, or this high priesthood, there were many who were ordained and became high priests of God; and it was on account of their exceeding faith and repentance, and their righteousness before God, they choosing to repent and work righteousness rather than to perish;

11 ஆகவே அவர்கள் இந்த பரிசுத்த முறைமையின்படி அழைக்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டார்கள். அவர்களுடைய வஸ்திரங்கள் தேவாட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் வெண்மையாய் கழுவப்பட்டன.

Therefore they were called after this holy order, and were sanctified, and their garments were washed white through the blood of the Lamb.

12 அவர்கள் பரிசுத்தாவியானவரால் சுத்திகரிக்கப்பட்டு, அவர்களுடைய வஸ்திரங்கள் வெண்மையாக்கப்பட்டு, தேவனுக்கு முன்பாய் சுத்தமுள்ளவர்களாயும், கறையற்றவர்களுமாய் ஆன பின்பு, வெறுப்போடேயன்றி பாவத்தைப்பார்க்க முடியாது; இப்படியாய் அநேகர், மிகவும் அநேகமானோர் சுத்திகரிக்கப்பட்டு, தேவனாகிய தங்கள் கர்த்தருடைய இளைப்பாறுதலினுள் பிரவேசித்தார்கள்.

Now they, after being sanctified by the Holy Ghost, having their garments made white, being pure and spotless before God, could not look upon sin save it were with abhorrence; and there were many, exceedingly great many, who were made pure and entered into the rest of the Lord their God.

13 இப்பொழுதும், என் சகோதரரே, நீங்களும் அந்த இளைப்பாறுதலினுள் பிரவேசிக்கும்படி, தேவனுக்கு முன்பாக உங்களைத் தாழ்த்தி, மனந்திரும்புதலுக்கேதுவான கனியைக் கொண்டுவர வேண்டுமென, நான் மனதாயிருக்கிறேன்.

And now, my brethren, I would that ye should humble yourselves before God, and bring forth fruit meet for repentance, that ye may also enter into that rest.

14 ஆம், நான் எதைக் குறித்து பேசினேனோ, அதே
முறைமையின்படியே பிரதான ஆசாரியனாயும்,
தன்மீது என்றென்றுமாய் பிரதான ஆசாரியத்து-
வத்தை ஏற்றுக்கொண்டவனுமாகிய, மெல்கிசே-
தேக்குவின் காலத்தில் இருந்த ஜனங்களைப்போல
நீங்கள் உங்களைத் தாழ்த்துங்கள்.

Yea, humble yourselves even as the people in the days of Melchizedek, who was also a high priest after this same order which I have spoken, who also took upon him the high priesthood forever.

15 இந்த மெல்கிசேதேக்கிற்கே ஆபிரகாம் தசம பாகங்-
களை செலுத்தினான்; ஆம் நம்முடைய தகப்பனா-
கிய ஆபிரகாமும் தான் வைத்திருந்த எல்லாவற்றி-
லும் பத்தில் ஒரு பங்கு தசமபாகங்களைச் செலுத்-
தினான்.

And it was this same Melchizedek to whom Abraham paid tithes; yea, even our father Abraham paid tithes of one-tenth part of all he possessed.

16 தேவகுமாரனை ஜனங்கள் எதிர்நோக்கியிருக்க-
வே அவருடைய முறைமையின் மாதிரியாகவும்,
அல்லது அவருடைய முறைமையாகவும், இந்த நி-
யமங்கள் கொடுக்கப்பட்டன. இது அவர்கள் தங்-
கள் பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெற்று,
கர்த்தருடைய இளைப்பாறுதலிலே பிரவேசிக்க
அவரை எதிர்நோக்கியிருக்கவே ஆகும்.

Now these ordinances were given after this manner, that thereby the people might look forward on the Son of God, it being a type of his order, or it being his order, and this that they might look forward to him for a remission of their sins, that they might enter into the rest of the Lord.

17 இந்த மெல்கிசேதேக்கு, சாலேம் தேசத்தின் ராஜா-
வாயிருந்தான்; அவனுடைய ஜனங்கள் அக்கிரமத்-
திலும், அருவருப்பிலும் தளைத்திருந்து, ஆம்,
அவர்கள் யாவரும் வழிதப்பிப்போனார்கள்; அவர்-
கள் எல்லாவிதமான துன்மார்க்கங்களும் நிறைந்-
திருந்தார்கள்.

Now this Melchizedek was a king over the land of Salem; and his people had waxed strong in iniquity and abomination; yea, they had all gone astray; they were full of all manner of wickedness;

18 ஆனால் மெல்கிசேதேக்கு மிகுந்த விசுவாசத்தை
பிரயோகித்து, தேவனுடைய பரிசுத்த முறைமைக்-
கேற்றபடி பிரதான ஆசாரியத்துவத்தின் ஸ்தானத்-
தைப் பெற்றுக்கொண்டு, தன் ஜனங்களுக்கு மனந்-
திரும்புதலை பிரசங்கித்தான். அவர்களும் மனந்தி-
ரும்பினார்கள்; மெல்கிசேதேக்கு தன் நாட்களில்
சமாதானத்தை நிலைவரப்பண்ணினபடியாலும்,
அவன் சாலேமுக்கு ராஜாவானபடியாலும், சமாதா-
னப்பிரபு, என்று அழைக்கப்பட்டான்; அவன் தன்
தகப்பனுக்கு கீழ்ப்பட்டவனாயிருந்து ராஜரீகம்
பண்ணினான்.

But Melchizedek having exercised mighty faith, and received the office of the high priesthood according to the holy order of God, did preach repentance unto his people. And behold, they did repent; and Melchizedek did establish peace in the land in his days; therefore he was called the prince of peace, for he was the king of Salem; and he did reign under his father.

19 அவனுக்கு முன்பும் அநேகர் இருந்தனர், பின்பும்
அநேகர் இருந்தனர், ஆனால் அவனிலும் பெரிய-
வன் யாருமில்லை; அதனால்தான் அவனைக்கு-
றித்து அதிகமாய் குறிப்பிட்டார்கள்.

Now, there were many before him, and also there were many afterwards, but none were greater; therefore, of him they have more particularly made mention.

20 நான் சொன்னது போதுமானதாதலால், நான்
அதைத் திரும்பச்சொல்வது அவசியமற்றதாயிருக்-
கிறது. இதோ, வேதங்கள் உங்களுக்கு முன்னே
இருக்கின்றன; அவற்றுக்கு எதிராக போரிட்டால்,
அது உங்களின் அழிவுக்கேதுவாய் அமையும்.

Now I need not rehearse the matter; what I have said may suffice. Behold, the scriptures are before you; if ye will wrest them it shall be to your own destruction.

21 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா இவ்வார்த்-
தைகளை அவர்களுக்குச் சொன்னபோது, தன்
கரத்தை நீட்டி, உரத்த சத்தமாய் கதறியதாவது:
இரட்சிப்பின் நாள் சமீபமாய் வருவதாலே மனந்தி-
ரும்பும் காலமிதுவே.

And now it came to pass that when Alma had said these words unto them, he stretched forth his hand unto them and cried with a mighty voice, saying: Now is the time to repent, for the day of salvation draweth nigh;

22 ஆம், சகல தேசங்களுக்கும் மிகுந்த சந்தோஷத்-
தை உண்டாக்கும் நற்செய்திகளை அறிவிக்கும்படி,
அவைகளை தூதர்களின் வாயினால், அவர்க-
ளுக்கு கர்த்தருடைய சத்தம் அறிவித்தது: ஆம்,
அவர் தம்முடைய சகல ஜனங்களுக்கும், பூமியின்
பரப்பின் மீதெங்கும் சிதறிப்போனவர்களுக்கும்,
இந்த நற்செய்திகளை தொனிக்கப்பண்ணுகிறார்;
ஆகவே அவை நம்மிடத்தில் வந்திருக்கின்றன.

Yea, and the voice of the Lord, by the mouth of angels, doth declare it unto all nations; yea, doth declare it, that they may have glad tidings of great joy; yea, and he doth sound these glad tidings among all his people, yea, even to them that are scattered abroad upon the face of the earth; wherefore they have come unto us.

23 நாம் அறிந்துகொள்ளும்படிக்கும், நாம் தவறு
செய்யாதபடிக்கும், அவைகள் நமக்கு தெளிவாய்
அறியப்படுத்தப்பட்டிருக்கின்றன; இது நாம் அந்-
நிய தேசத்திலே பரதேசிகளாய் இருப்பதினிமித்த-
மே, ஆகிலும் நம்முடைய திராட்சைத் தோட்டமெங்-
கிலும் நமக்காய் இந்த நற்செய்திகள் அறிவிக்கப்-
பட்டிருப்பதாலே, நாம் மிகவும் தயை பெற்றிருக்கி-
றோம்.

And they are made known unto us in plain terms, that we may understand, that we cannot err; and this because of our being wanderers in a strange land; therefore, we are thus highly favored, for we have these glad tidings declared unto us in all parts of our vineyard.

24 ஏனெனில், இதோ, நம் தேசத்தில் இக்காலத்திலும்
அநேகருக்கு தூதர்கள் அவைகளை அறிவிக்கி-
றார்கள்; அவர் தமது மகிமையிலே வரும்போது,
அவருடைய வசனத்தை மனுபுத்திரர் பெறவேண்-
டுமென்று, இருதயங்கள் ஆயத்தம்பண்ணப்பட
வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே ஆகும்.

For behold, angels are declaring it unto many at this time in our land; and this is for the purpose of preparing the hearts of the children of men to receive his word at the time of his coming in his glory.

25 இப்பொழுது, அவருடைய வருகையைப்பற்றி
தூதர்களின் வாயால் சந்தோஷ செய்தி எங்களுக்கு
அறிவிக்கப்படவே காத்திருக்கிறோம். காலம் சமீ-
பத்திலிருக்கிறது. அது எவ்வளவு சீக்கிரத்தில் என்-
று அறியோம். என் நாட்களிலே அது சம்பவிக்க-
வேண்டுமென்று தேவனிடத்தில் வேண்டுகிறேன்;
அது சீக்கிரமாயோ, தாமதமாயோ, சம்பவித்தாலும்
அதிலே நான் களிகூருவேன்.

And now we only wait to hear the joyful news declared unto us by the mouth of angels, of his coming; for the time cometh, we know not how soon. Would to God that it might be in my day; but let it be sooner or later, in it I will rejoice.

26 தங்களுக்குள்ளே இருந்த தீர்க்கதரிசன ஆவி-
யின்படியே அவரைக்குறித்து பேசினவற்றின்படி,
நம்முடைய பிதாக்களின் வார்த்தைகள் நிறைவே-
றும் பொருட்டு, அவருடைய வருகையின்போது,
தூதர்களுடைய வாயால் நியாயவான்களுக்கும்,
பரிசுத்தவான்களுக்கும் அறிவிக்கப்படும்.

And it shall be made known unto just and holy men, by the mouth of angels, at the time of his coming, that the words of our fathers may be fulfilled, according to that which they have spoken concerning him, which was according to the spirit of prophecy which was in them.

27 ஆகவே என் சகோதரரே, என் உள்ளத்தின் ஆழத்-
திலிருந்து, வேதனைக்குள்ளாகும் அளவுக்கு வி-
யாகுலத்தோடும், நீங்கள் என் வார்த்தைகளுக்கு
செவிகொடுத்து, உங்கள் பாவங்களை விட்டு உங்க-
ளுடைய மனந்திரும்புதலின் நாளை தள்ளிப்போ-
டக்கூடாது, என விரும்புகிறேன்;

And now, my brethren, I wish from the inmost part of my heart, yea, with great anxiety even unto pain, that ye would hearken unto my words, and cast off your sins, and not procrastinate the day of your repentance;

28 ஆனால் கர்த்தருடைய சமுகத்தில் உங்களையே
தாழ்த்தும்படிக்கும், அவருடைய பரிசுத்த நாமத்-
தை தொழுது, உங்கள் திராணிக்கு அதிகமாய் நீங்-
கள் சோதிக்கப்படக்கூடாதபடிக்கு, விழித்திருந்து
இடைவிடாமல் ஜெபித்து பரிசுத்த ஆவியாலே வழி-
நடத்தப்பட்டு, இப்படியாய் தாழ்மையாயும், சாந்த-
மாயும், கீழ்ப்படிதலாயும், பொறுமையாயும், அன்பி-
லே நிறைந்து, நீடிய சாந்தமாயிருங்கள்;

But that ye would humble yourselves before the Lord, and call on his holy name, and watch and pray continually, that ye may not be tempted above that which ye can bear, and thus be led by the Holy Spirit, becoming humble, meek, submissive, patient, full of love and all long-suffering;

29 கர்த்தர்மேல் விசுவாசம் வைத்து, நித்திய ஜீ-
வனைப் பெறுவீர்கள் என்ற நம்பிக்கையைக்-
கொண்டு, கடைசி காலத்தில் உயர்த்தப்பட்டு, அவ-
ருடைய இளைப்பாறுதலினுள்ளே பிரவேசிக்கும்ப-
டிக்கு, உங்கள் இருதயங்களில் தேவ அன்பு நித்த-
மும் நிலைத்திருக்கவேண்டுமென்று நான் விரும்பு-
கிறேன்.

Having faith on the Lord; having a hope that ye shall receive eternal life; having the love of God always in your hearts, that ye may be lifted up at the last day and enter into his rest.

30 நீங்கள் அவருடைய உக்கிரத்தை உங்கள்மேல்
வரப்பண்ணாமலும், நீங்கள் இரண்டாம் மரணத்-
தை அனுபவிக்காதபடி, நீங்கள் பாதாளத்தின் சங்-
கிலிகளாலே கட்டப்படாதபடிக்கும் உங்களுக்கு
மனந்திரும்புதலை கர்த்தர் தாமே அருளுவாராக.

And may the Lord grant unto you repentance, that ye may not bring down his wrath upon you, that ye may not be bound down by the chains of hell, that ye may not suffer the second death.

31 இந்த புஸ்தகத்திலே எழுதப்படாத இன்னும்
அநேக வார்த்தைகளை ஆல்மா ஜனங்களிடத்தில்
பேசினான்.

And Alma spake many more words unto the people, which are not written in this book.

# ஆல்மா 14

1 அந்தப்படியே, அவன் ஜனங்களிடம் பேசுவதை மு-
டித்த பின்பு, அநேகர் அவனுடைய வார்த்தையை
விசுவாசித்து, மனந்திரும்பி வேதங்களை ஆராய்ந்-
து பார்க்கத் தொடங்கினார்கள்.

2 ஆகிலும் அவர்களில் அதிகமானோர் ஆல்மா-
வையும், அமுலேக்கையும் அழித்துப்போட வாஞ்-
சித்தார்கள்; ஆல்மா தெளிவாய் வார்த்தைகளை
பிரயோகித்து சீஸ்ரமிடத்தில் பேசினதாலே, அவன்-
மேல் கோபம்கொண்டார்கள். அமுலேக்கும் தங்க-
ளிடத்தில் பொய்யுரைத்து தங்களுடைய சட்டங்க-
ளுக்கும், நியாயசாஸ்திரிகளுக்கும் நியாயாதிபதிக-
ளுக்கும் விரோதமாய் தூஷித்தான், என்றார்கள்.

3 ஆல்மாவும் அமுலேக்கும் தங்களுடைய துன்-
மார்க்கத்தை எதிர்த்து வெளியரங்கமாய் சாட்சி
கொடுத்ததினால், அவர்கள் மேல் கோபம்கொண்டு
அவர்களை இரகசியமாய் கொல்ல வகை தேடி-
னார்கள்.

4 ஆனால், அந்தப்படியே, அப்படிச் செய்யாமல்
அவர்களைப் பிடித்து பலத்த கயிறுகளால் கட்டி,
தேசத்தின் பிரதான நியாயாதிபதியின் முன்பு நி-
றுத்தினார்கள்.

5 அவர்கள் தேசத்தின் சட்டத்துக்கும், தங்கள் நியா-
யசாஸ்திரிகளுக்கும், நியாயாதிபதிகளுக்கும், எல்-
லா ஜனங்களுக்கும் விரோதமாய் தூஷித்ததாகவும்
சாட்சி சொல்லி, ஒரே தேவன் உண்டென்றும், அவர்
தம் குமாரனை அனுப்புவார் என்றும், ஆனால்
அவர் தங்களை இரட்சியார் என்றும் சொன்னதாக,
அவர்களுக்கு விரோதமாய் சாட்சி கொடுத்தார்கள்,
ஜனங்கள் இன்னும் அநேக காரியங்களை ஆல்மா-
விற்கும் அமுலேக்கிற்கும் விரோதமாய் சாட்சி கொ-
டுத்தார்கள். இவை தேசத்தின் பிரதான நியாயாதிப-
தியின் முன்பு நடந்தது.

6 அந்தப்படியே, பேசப்பட்ட வார்த்தைகளைக் கு-
றித்து சீஸ்ரம் திகைத்துப்போய், தன்னுடைய
பொய்யான வார்த்தைகளினால் தான் ஜனங்களு-
டைய மனங்களை குருடாக்கிப்போட்டதை அவன்
அறிந்திருந்தான்; அதனால் தன்னுடைய குற்றத்தி-
னிமித்தம், அவன் மனச்சாட்சி அவன் ஆத்துமா-
வை குத்திற்று; ஆம், பாதாளத்தின் வேதனைகளி-
னால் முற்றிலும் சூழப்பட்டான்.

# Alma 14

And it came to pass after he had made an end of speaking unto the people many of them did believe on his words, and began to repent, and to search the scriptures.

But the more part of them were desirous that they might destroy Alma and Amulek; for they were angry with Alma, because of the plainness of his words unto Zeezrom; and they also said that Amulek had lied unto them, and had reviled against their law and also against their lawyers and judges.

And they were also angry with Alma and Amulek; and because they had testified so plainly against their wickedness, they sought to put them away privily.

But it came to pass that they did not; but they took them and bound them with strong cords, and took them before the chief judge of the land.

And the people went forth and witnessed against them—testifying that they had reviled against the law, and their lawyers and judges of the land, and also of all the people that were in the land; and also testified that there was but one God, and that he should send his Son among the people, but he should not save them; and many such things did the people testify against Alma and Amulek. Now this was done before the chief judge of the land.

And it came to pass that Zeezrom was astonished at the words which had been spoken; and he also knew concerning the blindness of the minds, which he had caused among the people by his lying words; and his soul began to be harrowed up under a consciousness of his own guilt; yea, he began to be encircled about by the pains of hell.

7 அந்தப்படியே, அவன் ஜனங்களை நோக்கி: இதோ நான் குற்றவாளி, இவர்களோ தேவனுக்கு முன்பாக கறையற்றவர்கள் என்று கூக்குரலிட்டான் அதுமுதற்கொண்டு அவன் அவர்களுக்காய் பரிந்து பேசினான். ஆனால் அவர்கள் அவனை தூஷித்து, நீயும் பிசாசினாலே பிடிக்கப்பட்டிருக்கிறாயா என்று சொல்லி, அவன் மேல் உமிழ்ந்து, அவனையும், ஆல்மா மற்றும் அமுலேக்கின் வார்த்தைகளை விசுவாசித்தவர்களையும், தங்களுக்குள்ளிருந்து துரத்தினார்கள்; இப்படியாய் அவர்களை புறம்பே துரத்தி, அவர்கள் மீது கற்களை வீசும்படி ஆட்களை அனுப்பினார்கள்.

And it came to pass that he began to cry unto the people, saying: Behold, I am guilty, and these men are spotless before God. And he began to plead for them from that time forth; but they reviled him, saying: Art thou also possessed with the devil? And they spit upon him, and cast him out from among them, and also all those who believed in the words which had been spoken by Alma and Amulek; and they cast them out, and sent men to cast stones at them.

8 அவர்கள் அவர்களுடைய மனைவிகளையும் பிள்ளைகளையும் ஏகமாய்க் கூட்டிவந்து, அவர்களில் தேவ வசனத்தை விசுவாசிக்க போதிக்கப்பட்டவர்களையும், விசுவாசித்தவர்களையும் அக்கினியிலே போடும்படிச் செய்தார்கள்; பரிசுத்த வேதங்கள் அடங்கிய பதிவேடுகள் அக்கினியிலே எரிந்து அழியும்பொருட்டு அவைகளையும் கொண்டுவந்து அக்கினியிலே போட்டார்கள்.

And they brought their wives and children together, and whosoever believed or had been taught to believe in the word of God they caused that they should be cast into the fire; and they also brought forth their records which contained the holy scriptures, and cast them into the fire also, that they might be burned and destroyed by fire.

9 அந்தப்படியே, அவர்கள் ஆல்மாவையும் அமுலேக்கையும் பிடித்து, அக்கினியால் பட்சிக்கப்பட்டு, அழிந்து போகிறவர்களை அவர்கள் காணும்படிக்கே கொலைக்களத்துக்கு, கொண்டுபோனார்கள்.

And it came to pass that they took Alma and Amulek, and carried them forth to the place of martyrdom, that they might witness the destruction of those who were consumed by fire.

10 அக்கினியிலே பட்சிக்கப்படுகிற ஸ்திரீகளும், பிள்ளைகளும் படுகிற வேதனைகளை அமுலேக் கண்டபோது, அவனும் வேதனைக்குள்ளாகி, ஆல்மாவை நோக்கி, இப்படிப்பட்ட கொடிய நிகழ்ச்சியை நாம் எப்படிப் பார்க்க முடியும்? ஆகவே நாம் நம்முடைய கரங்களை நீட்டி நமக்குள்ளிருக்கிற தேவ வல்லமையைப் பிரயோகித்து, அவர்களை அக்கினியிலிருந்து தப்புவிப்போமாக, என்றான்.

And when Amulek saw the pains of the women and children who were consuming in the fire, he also was pained; and he said unto Alma: How can we witness this awful scene? Therefore let us stretch forth our hands, and exercise the power of God which is in us, and save them from the flames.

11 அதற்கு ஆல்மா அவனை நோக்கி: நான் என் கையை நீட்டவேண்டாமென்று, ஆவியானவர் என்னை நெருக்குகிறார்; ஏனெனில் இதோ கர்த்தர் அவர்களை தம்முடைய மகிமையில் ஏற்றுக்கொள்கிறார்; ஜனங்கள் மீது தமது உக்கிரத்தோடு அனுப்பும் நியாயத்தீர்ப்புகள் நியாயமுள்ளதாயிருக்கும்படிக்கும், குற்றமில்லாதவர்களுடைய இரத்தம், அவர்களுக்கு விரோதமாய் சாட்சியாயிருந்து, ஆம், கடைசிநாளின்போது அவர்களுக்கு விரோதமாக உரக்க சத்தமாய் கூக்குரலிடும்படிக்கும், அவர்கள் பாடனுபவிக்கும்படிக்கு, அல்லது இப்படிப்பட்ட பாடுகளை அவர்களுக்கு இவர்கள் தங்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் செய்யும்பொருட்டு, அவர் அனுமதிக்கிறார்.

But Alma said unto him: The Spirit constraineth me that I must not stretch forth mine hand; for behold the Lord receiveth them up unto himself, in glory; and he doth suffer that they may do this thing, or that the people may do this thing unto them, according to the hardness of their hearts, that the judgments which he shall exercise upon them in his wrath may be just; and the blood of the innocent shall stand as a witness against them, yea, and cry mightily against them at the last day.

12 இப்பொழுது அமுலேக் ஆல்மாவை நோக்கி: இதோ அவர்கள் நம்மையும் எரித்துப் போடக்கூடுமே, என்றான்.

Now Amulek said unto Alma: Behold, perhaps they will burn us also.

13 அதற்கு ஆல்மா: கர்த்தருடைய சித்தத்தின்படியே
நடக்கட்டும். ஆனால், இதோ, நம்முடைய வேலை
முடிவு பெறவில்லை; எனவே நம்மை அவர்கள்
எரித்துப் போடமாட்டார்கள், என்றான்.

And Alma said: Be it according to the will of the Lord. But, behold, our work is not finished; therefore they burn us not.

14 இப்பொழுது, அந்தப்படியே, அக்கினிக்குள்ளே
போடப்பட்டவர்களின் சரீரங்களும், அவர்களு-
டனே போடப்பட்ட பதிவேடுகளும் பட்சிக்கப்பட்ட
பின்பு, கட்டப்பட்டிருந்த நிலையிலிருந்த ஆல்மா
மற்றும் அமுலேக்கின் முன்பு, அத்தேசத்தின் பிர-
தான நியாயாதிபதி வந்து நின்று, அவர்களுடைய
கன்னங்களில் தன் கையால் அறைந்து, அவர்க-
ளை நோக்கி: இவைகளை நீங்கள் பார்த்த பிறகும்
இந்த ஜனங்கள் அக்கினியும், கந்தகமுமான கடலி-
லே தள்ளுண்டு போகும்படிக்கு, அவர்களுக்கு மறு-
படியும் நீங்கள் போதிப்பீர்களா என்றான்.

Now it came to pass that when the bodies of those who had been cast into the fire were consumed, and also the records which were cast in with them, the chief judge of the land came and stood before Alma and Amulek, as they were bound; and he smote them with his hand upon their cheeks, and said unto them: After what ye have seen, will ye preach again unto this people, that they shall be cast into a lake of fire and brimstone?

15 இதோ, அக்கினியினுள்ளே போடப்பட்டவர்கள்
உங்களுடைய விசுவாசத்தைச் சார்ந்தவராய் இருப்-
பினும், அவர்களைத் தப்புவிக்க உங்களுக்கு வல்-
லமையில்லாமல் போயிற்றென்றும், தேவனும்
அவர்களை இரட்சிக்கவில்லை, என்றும் கண்டீர்-
கள். நியாயாதிபதி அவர்களுடைய கன்னங்களில்
மறுபடியும் அடித்து, உங்களுக்குள்ளே என்ன
சொல்லுகிறீர்கள்? என்று கேட்டான்.

Behold, ye see that ye had not power to save those who had been cast into the fire; neither has God saved them because they were of thy faith. And the judge smote them again upon their cheeks, and asked: What say ye for yourselves?

16 இப்போது இந்த நியாயாதிபதி, கிதியோனைக்
கொன்ற நிகோருடைய விசுவாசத்தையும் முறை-
மையையும் பின்பற்றுகிறவனாயிருந்தான்.

Now this judge was after the order and faith of Nehor, who slew Gideon.

17 அந்தப்படியே, ஆல்மாவும் அமுலேக்கும்,
அவனுக்கு பிரதியுத்தரம் ஒன்றும் சொல்லாமலி-
ருந்தார்கள்; பின்னும் அவன் அவர்களை அடித்து,
சிறையினுள் போடும்படி அவர்களை அதிகாரிக-
ளிடம் ஒப்படைத்தான்.

And it came to pass that Alma and Amulek answered him nothing; and he smote them again, and delivered them to the officers to be cast into prison.

18 அவர்கள் மூன்று நாட்கள் சிறையில் அடைக்கப்-
படிருந்தபோது, நிகோரின் மார்க்கத்தாராகிய
அநேக நியாயசாஸ்திரிகளும், நியாயாதிபதிகளும்,
ஆசாரியர்களும், ஆசிரியர்களும் அங்கே வந்தார்-
கள்; அவர்கள் சிறையில் அவர்களைப் பார்க்க
வந்து, அநேக வார்த்தைகளைக் குறித்து அவர்க-
ளை வினவினார்கள்; அவர்களோ எந்த பதிலும்
அளிக்காமலிருந்தார்கள்.

And when they had been cast into prison three days, there came many lawyers, and judges, and priests, and teachers, who were of the profession of Nehor; and they came in unto the prison to see them, and they questioned them about many words; but they answered them nothing.

19 அந்தப்படியே, நியாயாதிபதி அவர்கள் முன் நின்-
று, இந்த ஜனங்களின் வார்த்தைகளுக்கு நீங்கள்
ஏன் பிரதியுத்தரமளிப்பதில்லை? உங்களை அக்கி-
னியில் போட எனக்கு அதிகாரமுண்டென்று அறி-
யீர்களா என்றான். அவர்களைப் பேசும்படி அவன்
கட்டளையிட்டான்; அவர்களோ பதில் எதுவும்
சொல்லவில்லை.

And it came to pass that the judge stood before them, and said: Why do ye not answer the words of this people? Know ye not that I have power to deliver you up unto the flames? And he commanded them to speak; but they answered nothing.

20 அந்தப்படியே, அவர்கள் அவ்விடத்தைவிட்டு தங்கள் வழிகளிலே போனார்கள். பின்னும் மறுதினம் வந்தார்கள்; நியாயாதிபதி அவர்களுடைய கன்னங்களில் மறுபடியும் அடித்தான். அநேகரும் அங்கே வந்து, அவர்களை அடித்து, மறுபடியும் நீங்கள் எழுந்து இந்த ஜனத்தை நியாயந்தீர்த்து எங்கள் சட்டத்தை குற்றப்படுத்துவீர்களோ? உங்களுக்கு அப்படிப்பட்ட அதிக வல்லமை இருக்குமாயின், ஏன் உங்களையே நீங்கள் விடுவித்துக் கொள்ளக் கூடாது? என்றார்கள்.

And it came to pass that they departed and went their ways, but came again on the morrow; and the judge also smote them again on their cheeks. And many came forth also, and smote them, saying: Will ye stand again and judge this people, and condemn our law? If ye have such great power why do ye not deliver yourselves?

21 அவர்களிடத்தில் இவ்விதமாய் அநேகவற்றைச் சொல்லி, அவர்களைப் பார்த்து பற்கடித்து, அவர்கள்மீது உமிழ்ந்து, நாங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும்போது எப்படிக் காணப்படுவோம் என்றார்கள்.

And many such things did they say unto them, gnashing their teeth upon them, and spitting upon them, and saying: How shall we look when we are damned?

22 இப்படியாக அநேக காரியங்களை அவ்விதமாய் அவர்களிடத்தில் பேசினார்கள்; இப்படியாய் அவர்களை பல நாட்கள் பரியாசம் பண்ணினார்கள். பசித்திருக்கும்படி ஆகாரத்தையும், விடாய்த்திருக்கும்படி தண்ணீரையும் அவர்களுக்கு கொடாதிருந்தார்கள்; அவர்கள் நிர்வாணமாய் இருக்கும்படிக்கு, வஸ்திரங்களைப் பிடுங்கிக் கொண்டார்கள்; இப்படிப்பட்ட நிலையில் கடினமான கயிறுகளால் கட்டப்பட்டவர்களாய் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

And many such things, yea, all manner of such things did they say unto them; and thus they did mock them for many days. And they did withhold food from them that they might hunger, and water that they might thirst; and they also did take from them their clothes that they were naked; and thus they were bound with strong cords, and confined in prison.

23 அந்தப்படியே, இப்படியாய் அவர்கள் அநேக நாட்கள் பாடுகளை அனுபவித்த பின்பு, (நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையினுடைய பத்தாம் வருஷத்தில், பத்தாம் மாதத்தின், பன்னிரண்டாவது நாளிலே) அம்மோனிகா தேசத்து பிரதான நியாயாதிபதியும், அவர்களுடைய ஆசிரியர்களிலும் நியாயசாஸ்திரிகளிலும் அநேகர், ஆல்மாவும் அமுலேக்கும் கயிறுகளாலே கட்டிவைக்கப்பட்டிருந்த சிறையினுள் போனார்கள்.

And it came to pass after they had thus suffered for many days, (and it was on the twelfth day, in the tenth month, in the tenth year of the reign of the judges over the people of Nephi) that the chief judge over the land of Ammonihah and many of their teachers and their lawyers went in unto the prison where Alma and Amulek were bound with cords.

24 பிரதான நியாயாதிபதி அவர்கள் முன்னே நின்று, அவர்களை மறுபடியும் அடித்து, அவர்களை நோக்கி: தேவ வல்லமை உங்களில் இருக்குமேயானால், இந்தக் கட்டுகளிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்களுடைய வார்த்தைக்குத் தக்கதாக, கர்த்தர் இந்த ஜனங்களை அழித்துப்போடுவார், என்று நாங்கள் விசுவாசிப்போம், என்றார்கள்.

And the chief judge stood before them, and smote them again, and said unto them: If ye have the power of God deliver yourselves from these bands, and then we will believe that the Lord will destroy this people according to your words.

25 அந்தப்படியே, அவர்களில் கடைசி மனுஷன் வரை, அவர்களிடம் போய், அநேக வார்த்தைகளைச் சொல்லி, அடித்தார்கள்: கடைசி மனுஷனும் அவர்களிடத்தில் பேசி முடித்த பின்பு, தேவ வல்லமை ஆல்மா மற்றும் அமுலேக்கின் மேல் இறங்கிற்று, உடனே அவர்கள் எழுந்து தங்கள் கால்களை ஊன்றி நின்றார்கள்.

And it came to pass that they all went forth and smote them, saying the same words, even until the last; and when the last had spoken unto them the power of God was upon Alma and Amulek, and they rose and stood upon their feet.

26 ஆல்மா உரத்த சத்தமாய்: கர்த்தாவே இன்னும் எவ்வளவு காலம் இப்பாடுகளை சகித்திருப்போம்? கர்த்தாவே நாங்கள் விடுவிக்கப்படும்படியாக, கிறிஸ்துவின் மேலிருக்கும் எங்களின் விசுவாசத்திற்கேற்ற பெலத்தை எங்களுக்குத் தாரும், என்றான். அவர்கள் தாங்கள் கட்டப்பட்டிருந்த கயிறுகளை அறுத்துப்போட்டார்கள்; ஜனங்கள் இதைக் கண்டதும் அழிவின் திகில் அவர்கள் மேல் வந்ததால், ஓடினார்கள்.

And Alma cried, saying: How long shall we suffer these great afflictions, O Lord? O Lord, give us strength according to our faith which is in Christ, even unto deliverance. And they broke the cords with which they were bound; and when the people saw this, they began to flee, for the fear of destruction had come upon them.

27 அந்தப்படியே, திகில் அவர்களை ஆட்கொண்டிருந்தபடியால், அவர்கள் பூமியில் விழுந்தார்கள். அதனாலே அவர்கள் சிறையினுடைய வெளி வாசலுக்குப் போகமுடியவில்லை; பூமி பயங்கரமாய் நடுங்கினது. சிறைச்சாலையின் மதில்கள் இரண்டாய்ப் பிளந்து பூமியில் விழுந்தன; அவைகள் விழுந்ததினால் ஆல்மாவையும், அமுலேக்கையும் அடித்த பிரதான நியாயாதிபதிகளும், நியாயசாஸ்திரிகளும், ஆசாரியர்களும், ஆசிரியர்களும் அவை விழுந்ததால் கொல்லப்பட்டார்கள்.

And it came to pass that so great was their fear that they fell to the earth, and did not obtain the outer door of the prison; and the earth shook mightily, and the walls of the prison were rent in twain, so that they fell to the earth; and the chief judge, and the lawyers, and priests, and teachers, who smote upon Alma and Amulek, were slain by the fall thereof.

28 ஆல்மாவும், அமுலேக்கும், சிறையிலிருந்து வெளியே வந்தார்கள். அவர்கள் சேதப்படாதிருந்தார்கள், கிறிஸ்துவிலே அவர்கள் வைத்த விசுவாசத்திற்குத்தக்கதாக, வல்லமை அவர்கள் மேலிருக்கும்படி கர்த்தர் அருளினார். அவர்கள் உடனே சிறையிலிருந்து வெளியேறினார்கள். அவர்கள் கட்டுக்களிலிருந்து அவிழ்க்கப்பட்டார்கள்; சிறைச்சாலை தரைமட்டமானபடியால், ஆல்மாவையும் அமுலேக்கையும் தவிர அதன் சுவரினுள்ளே இருந்த சகல ஆத்துமாக்களும் அழிந்துபோயின. உடனே அவர்கள் பட்டணத்திற்குப் போனார்கள்.

And Alma and Amulek came forth out of the prison, and they were not hurt; for the Lord had granted unto them power, according to their faith which was in Christ. And they straightway came forth out of the prison; and they were loosed from their bands; and the prison had fallen to the earth, and every soul within the walls thereof, save it were Alma and Amulek, was slain; and they straightway came forth into the city.

29 பெரும் சத்தத்தைக் கேட்ட ஜனங்கள் அது ஏற்பட்ட காரணத்தை அறிய திரள்கூட்டமாய் விரைந்தோடி வந்தார்கள்; சிறைச்சாலையிலிருந்து ஆல்மாவும் அமுலேக்கும் வெளிவருவதையும், அதன் மதில்கள் தரைமட்டமானதையும் கண்டு திகிலடைந்து, இரண்டு சிங்கங்களிடத்திலிருந்து, தன் குட்டிகளுடனே ஓடும் ஆட்டைப்போல அவர்கள் ஆல்மா மற்றும் அமுலேக்கின் சமுகத்தினின்று ஓடினார்கள். இவ்விதமாய் அவர்கள் ஆல்மா மற்றும் அமுலேக்கின் சமுகத்தினின்று ஓடிப்போனார்கள்.

Now the people having heard a great noise came running together by multitudes to know the cause of it; and when they saw Alma and Amulek coming forth out of the prison, and the walls thereof had fallen to the earth, they were struck with great fear, and fled from the presence of Alma and Amulek even as a goat fleeth with her young from two lions; and thus they did flee from the presence of Alma and Amulek.

# ஆல்மா 15

1 அந்தப்படியே, ஆல்மாவும், அமுலேக்கும், அப்பட்ட-
ணத்தை விட்டுப்போகும்படி கட்டளையிடப்பட்-
டார்கள். ஆகவே அவர்கள் புறப்பட்டு சீதோம் தே-
சத்தினுள் பிரவேசித்தார்கள்; இதோ, ஆல்மாவின்
வார்த்தைகளை விசுவாசித்ததினால் கல்லெறியப்-
பட்டு அம்மோனிகா தேசத்தைவிட்டு வெளியேற்-
றப்பட்ட எல்லா ஜனங்களையும், அங்கே அவர்கள்
கண்டார்கள்.
2 அவர்கள் தங்கள் மனைவிகளுக்கும், பிள்ளைக-
ளுக்கும், தங்களுக்கும் நேர்ந்தவைகளையும்,
அவர்கள் விடுவிக்கப்பட்ட வல்லமையைக் குறித்-
தும், அவர்களுக்குச் சொன்னார்கள்.
3 சீதோமில் சீஸ்ரம், தன் துன்மார்க்கத்தினிமித்தம்
தன்னுடைய மனதில் அதிக வேதனைகளால் ஏற்-
பட்ட கடுமையான காய்ச்சலால் வியாதிப்பட்டுக் கி-
டந்தான். ஏனெனில் ஆல்மாவும், அமுலேக்கும்
மரித்துப் போனார்கள் என்றும், தன்னுடைய அக்-
கிரமத்தினிமித்தமே அவர்கள் கொல்லப்பட்டார்-
கள் என்றும், எண்ணினான். இந்த மகா பாவமும்,
மற்ற அநேக பாவங்களும் அவன் மனதை வாதித்-
து அதிலிருந்து அவன் மீளக்கூடாதபடிக்கு வியா-
திக்குள்ளாக்கின; அதனாலே அவன் கடுமையான
காய்ச்சலினால் அவதிப்பட்டான்.
4 பின்னும் அவன் ஆல்மாவும், அமுலேக்கும், சீ-
தோம் தேசத்தில் இருக்கிறார்கள் என்று கேள்விப்-
பட்டு, இருதயத்தில் தைரியமடைந்தான்; அவர்கள்
தன்னிடத்தில் வரவேண்டி, அவர்களுக்கு உடனே
ஒரு செய்தி அனுப்பினான்.
5 அந்தப்படியே, அவர்கள் அவன் தங்களுக்கு
அனுப்பின செய்திக்கு உடன்பட்டு, உடனே சீஸ்ர-
மின் வீட்டினுள் பிரவேசித்தார்கள்; அவன் கடுமை-
யான காய்ச்சலினால் வியாதிப்பட்டு, பெலவீ-
னனாய் கட்டிலின் மீது கிடக்கக் கண்டார்கள்;
அவன் மனதும் அவனுடைய அக்கிரமங்களினி-
மித்தம் வேதனைக்குள்ளாகியிருந்தது; அவன்
அவர்களைக் கண்டபோது தன் கைகளை நீட்டி,
தன்னை அவர்கள் சுகப்படுத்தும்படி வேண்டி-
னான்.
6 அந்தப்படியே, ஆல்மா அவன் கையைப் பிடித்து,
அவனை நோக்கி, இரட்சிப்புக்கேதுவான கிறிஸ்து-
வினுடைய வல்லமையை விசுவாசிக்கிறாயா என்-
று கேட்டான்.
7 அவன் பிரதியுத்தரமாக: நீர் போதித்த வார்த்தைக-
ளனைத்தையும் விசுவாசிக்கிறேன், என்றான்.
8 அதற்கு ஆல்மா: நீ கிறிஸ்துவின் மீட்பை விசுவா-
சித்தால் சுகமாவாய், என்றான்.
9 அவன்: நான் உம் வார்த்தைகளின்படியே விசு-
வாசிக்கிறேன், என்றான்.

# Alma 15

And it came to pass that Alma and Amulek were commanded to depart out of that city; and they departed, and came out even into the land of Sidom; and behold, there they found all the people who had departed out of the land of Ammonihah, who had been cast out and stoned, because they believed in the words of Alma.

And they related unto them all that had happened unto their wives and children, and also concerning themselves, and of their power of deliverance.

And also Zeezrom lay sick at Sidom, with a burning fever, which was caused by the great tribulations of his mind on account of his wickedness, for he supposed that Alma and Amulek were no more; and he supposed that they had been slain because of his iniquity. And this great sin, and his many other sins, did harrow up his mind until it did become exceedingly sore, having no deliverance; therefore he began to be scorched with a burning heat.

Now, when he heard that Alma and Amulek were in the land of Sidom, his heart began to take courage; and he sent a message immediately unto them, desiring them to come unto him.

And it came to pass that they went immediately, obeying the message which he had sent unto them; and they went in unto the house unto Zeezrom; and they found him upon his bed, sick, being very low with a burning fever; and his mind also was exceedingly sore because of his iniquities; and when he saw them he stretched forth his hand, and besought them that they would heal him.

And it came to pass that Alma said unto him, taking him by the hand: Believest thou in the power of Christ unto salvation?

And he answered and said: Yea, I believe all the words that thou hast taught.

And Alma said: If thou believest in the redemption of Christ thou canst be healed.

And he said: Yea, I believe according to thy words.

10 ஆல்மா கர்த்தரை நோக்கி கூக்குரலிட்டு: தேவனா-
கிய எங்கள் கர்த்தாவே, இந்த மனுஷன்மேல் இரக்க-
மாயிரும், கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கிற,
அவனுடைய விசுவாசத்தின்படியே அவனை சுகப்-
படுத்துவீராக, என்றான்.

And then Alma cried unto the Lord, saying: O Lord our God, have mercy on this man, and heal him according to his faith which is in Christ.

11 ஆல்மா இவ்வார்த்தைகளை உச்சரித்தபோது,
சீஸ்ரம் தன் பாதங்களை ஊன்றி குதித்தெழுந்து
நடக்கலானான்; அனைத்து ஜனங்களும் ஆச்சரி-
யப்படும்படிக்கு அது செய்யப்பட்டது; இச்செய்தி சீ-
தோம் தேசமெங்கிலும் பரவிற்று.

And when Alma had said these words, Zeezrom leaped upon his feet, and began to walk; and this was done to the great astonishment of all the people; and the knowledge of this went forth throughout all the land of Sidom.

12 சீஸ்ரமிற்கு ஆல்மா கர்த்தருக்குள் ஞானஸ்நா-
னம் கொடுத்தான். அவன் அது முதற்கொண்டு
ஜனங்களுக்குள்ளே பிரசங்கிக்கலானான்.

And Alma baptized Zeezrom unto the Lord; and he began from that time forth to preach unto the people.

13 ஆல்மா சீதோம் தேசத்திலே சபையை ஸ்தாபித்-
தான். அவன் ஞானஸ்நானம் பெற வாஞ்சிப்போ-
ருக்கு கர்த்தருக்குள் ஞானஸ்நானம் கொடுக்க தே-
சத்தில் ஆசாரியர்களையும், ஆசிரியர்களையும் நி-
யமனம் பண்ணினான்.

And Alma established a church in the land of Sidom, and consecrated priests and teachers in the land, to baptize unto the Lord whosoever were desirous to be baptized.

14 அந்தப்படியே, சீதோமைச் சுற்றிலுமிருந்து அநே-
கர் வந்து, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள்.

And it came to pass that they were many; for they did flock in from all the region round about Sidom, and were baptized.

15 ஆனால் அம்மோனிகா தேசத்து ஜனங்களோ,
இன்னும் கடின இருதயமுள்ளவர்களாயும், வணங்-
காக் கழுத்துள்ள ஜனமாயுமிருந்தார்கள். அவர்கள்
தங்களுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பா-
மல் இருந்தார்கள். அவர்கள் நிகோரின் விசுவாசத்-
தைச் சார்ந்தவர்களாதலால், தங்களின் பாவங்க-
ளிலிருந்து மனந்திரும்புவதை நம்பாமல், ஆல்மா
மற்றும் அமுலேக்கு வல்லமையைப் பிசாசினாலே
பெற்றிருந்தார்களென்று எண்ணினார்கள்.

But as to the people that were in the land of Ammonihah, they yet remained a hard-hearted and a stiffnecked people; and they repented not of their sins, ascribing all the power of Alma and Amulek to the devil; for they were of the profession of Nehor, and did not believe in the repentance of their sins.

16 அந்தப்படியே, ஆல்மா மற்றும் அமுலேக்கைப்
பொறுத்தவரை, அமுலேக்கு தேவ வசனத்தினிமித்-
தம், அம்மோனிகா தேசத்திலிருந்த தன் சகல
பொன்னையும், வெள்ளியையும் விலையுயர்ந்த
பொருட்களையும் வெறுத்து ஒதுக்கினான். தேவ
வார்த்தையினிமித்தம், அவன் தனது முந்தைய
நண்பர்களாலும், தன் தகப்பனாலும், உற்றாராலும்
மறுக்கப்பட்டான்.

And it came to pass that Alma and Amulek, Amulek having forsaken all his gold, and silver, and his precious things, which were in the land of Ammonihah, for the word of God, he being rejected by those who were once his friends and also by his father and his kindred;

17 ஆகவே ஆல்மா, சீதோமில் சபையை நிறுவின
பின்பு, ஒரு மாற்றத்தைக் கண்டு, ஜனங்கள் சாத்தா-
னிடமிருந்தும், மரணத்திலிருந்தும், அழிவிலிருந்-
தும் விடுவிக்கப்படும்பொருட்டு, அவர்கள் தே-
வனுக்கு முன்பாக தாழ்மையாயிருந்து, தங்கள் பரி-
சுத்த ஸ்தலங்களில் பலிபீடத்திற்கு முன்பாக தே-
வனை தொழுதுகொள்ள, ஏகமாய்கூடி இடைவிடா-
மல் ஜெபித்து, தரித்திருந்து தங்கள் இருதயங்களில்
பெருமை கொள்ளாதவர்களாய் இருப்பதையும்,
ஆல்மா கண்டான்.

Therefore, after Alma having established the church at Sidom, seeing a great check, yea, seeing that the people were checked as to the pride of their hearts, and began to humble themselves before God, and began to assemble themselves together at their sanctuaries to worship God before the altar, watching and praying continually, that they might be delivered from Satan, and from death, and from destruction—

18 நான் சொன்னதுபோல, ஆல்மா இவைகள் யா-
வையும் கண்ட பிறகு, அவன் அமுலேக்கைக் கூட்-
டிக்கொண்டு சாரகெம்லா தேசத்திற்கு வந்தான்.
தன் சொந்த வீட்டினுள்ளே அவனை அழைத்துக்-
கொண்டுபோய், அவன் உபத்திரவங்களிலிருந்து
அவனுக்கு ஆறுதலளித்து, கர்த்தரிலே அவனைப்
பெலப்படுத்தினான்.

Now as I said, Alma having seen all these things, therefore he took Amulek and came over to the land of Zarahemla, and took him to his own house, and did administer unto him in his tribulations, and strengthened him in the Lord.

19 இப்படியாய் நேபியின் ஜனங்கள்மேல் நியாயாதி-
பதிகளினுடைய ஆளுகையின் பத்தாம் வருஷம்
முடிவுற்றது.

And thus ended the tenth year of the reign of the judges over the people of Nephi.

# ஆல்மா 16

1 அந்தப்படியே, நேபியின் ஜனங்கள்மீது, நியாயாதி-
பதிகளின் ஆளுகையின் பதினோறாம் வருஷத்-
தின், இரண்டாம் மாதம் ஐந்தாம் நாள் வரைக்கும்,
சாரகெம்லா தேசத்தில் சில வருஷங்களாய் யுத்தங்-
களும், பிணக்குகளுமில்லாமல் சமாதானம் நிலை-
பெற்றிருந்தது. அந்த பதினோறாம் வருஷத்தின்
இரண்டாம் மாதத்தின் ஐந்தாம் நாளிலே தேசமெங்-
கிலும் யுத்த முழக்கம் கேட்கப்பட்டது.

2 ஏனெனில் இதோ, லாமானியரின் சேனைகள்
வனாந்தரத்தின் பக்கமாய் தேசங்களின் எல்லைக-
ளுக்குள் புகுந்தார்கள். அம்மோனிகா பட்டணத்தி-
னுள் பிரவேசித்து, ஜனங்களைக் கொன்று, பட்ட-
ணத்தை அழித்துப்போடத் தொடங்கினார்கள்.

3 இப்பொழுதும், அந்தப்படியே, அவர்களை தேசத்-
தைவிட்டுத் துரத்த நேபியர்கள் போதுமானவர்க-
ளைக் கொண்ட சேனையைத் திரட்டுமுன், அவர்-
கள் அம்மோனிகா பட்டணத்தினுள்ள ஜனங்க-
ளையும் நோவா பட்டணத்தின் எல்லைகளிலுள்ள
சிலரையும் நிர்மூலமாக்கி, மற்றும் பலரை வனாந்-
தரத்தினுள் சிறைபிடித்துச் சென்றார்கள்.

4 இப்பொழுது, அந்தப்படியே, வனாந்தரத்தினுள்
சிறைபிடிக்கப்பட்டுப் போனோரை மீட்க நேபியர்-
கள் வாஞ்சித்திருந்தார்கள்.

5 ஆகவே நேபியர்களின் சேனைகளுக்கு சேனாதி-
பதியாய் நியமிக்கப்பட்டிருந்தவன், (அவனது பெ-
யர் சோரம். லேகி, ஆகா என்ற இரண்டு குமாரர்கள்
அவனுக்குண்டு) ஆல்மா சபையின் பிரதான ஆசா-
ரியனென்றும், தீர்க்கதரிசன ஆவியை அவன்
பெற்றிருந்தான் என்றும் சோரமும், அவனுடைய
இரண்டு குமாரர்களும் அறிந்தவர்களாய், அவர்-
கள் அவனிடம்போய், லாமானியர்களால் சிறைபி-
டிக்கப்பட்டுப்போன, தங்கள் சகோதரரைத் தேடி,
தாங்கள் வனாந்தரத்தினுள் போவது கர்த்தரு-
டைய சித்தந்தானா, என்று அவனிடமிருந்து அறிந்-
துகொள்ள விரும்பினார்கள்.

6 அந்தப்படியே, இதைக்குறித்து ஆல்மா கர்த்தரி-
டத்தில் விசாரித்தான். பின்னும் ஆல்மா திரும்பி-
வந்து அவர்களை நோக்கி: இதோ லாமானியர்
மேன்தி தேசத்தின் எல்லைகளுக்கு புறம்பே, தென்
வனாந்தரத்திலுள்ள சீதோன் நதியை கடந்துபோ-
வார்கள். இதோ, அவர்களை நீங்கள் அங்கே சீ-
தோன் நதியின் கிழக்கே சந்திப்பீர்கள். அங்கே லா-
மானியர்களால் சிறைப்பிடிக்கப்பட்டுப்போன உம்-
முடைய சகோதரரை கர்த்தர் உங்களிடத்தில் ஒப்ப-
டைப்பார், என்றான்.

# Alma 16

And it came to pass in the eleventh year of the reign of the judges over the people of Nephi, on the fifth day of the second month, there having been much peace in the land of Zarahemla, there having been no wars nor contentions for a certain number of years, even until the fifth day of the second month in the eleventh year, there was a cry of war heard throughout the land.

For behold, the armies of the Lamanites had come in upon the wilderness side, into the borders of the land, even into the city of Ammonihah, and began to slay the people and destroy the city.

And now it came to pass, before the Nephites could raise a sufficient army to drive them out of the land, they had destroyed the people who were in the city of Ammonihah, and also some around the borders of Noah, and taken others captive into the wilderness.

Now it came to pass that the Nephites were desirous to obtain those who had been carried away captive into the wilderness.

Therefore, he that had been appointed chief captain over the armies of the Nephites, (and his name was Zoram, and he had two sons, Lehi and Aha)—now Zoram and his two sons, knowing that Alma was high priest over the church, and having heard that he had the spirit of prophecy, therefore they went unto him and desired of him to know whither the Lord would that they should go into the wilderness in search of their brethren, who had been taken captive by the Lamanites.

And it came to pass that Alma inquired of the Lord concerning the matter. And Alma returned and said unto them: Behold, the Lamanites will cross the river Sidon in the south wilderness, away up beyond the borders of the land of Manti. And behold there shall ye meet them, on the east of the river Sidon, and there the Lord will deliver unto thee thy brethren who have been taken captive by the Lamanites.

7 அந்தப்படியே, சோரமும் அவனுடைய குமாரர்க-
ளும், சீதோன் நதியை தங்கள் சேனைகளுடனே
கடந்து, மேன்தி பட்டணத்தின் எல்லைகளுக்கு
அப்பால், சீதோன் நதியின் கிழக்கு திசையிலுள்ள
தென் வனாந்தரத்தினுள் அணிவகுத்துச் சென்-
றனர்.

And it came to pass that Zoram and his sons crossed over the river Sidon, with their armies, and marched away beyond the borders of Manti into the south wilderness, which was on the east side of the river Sidon.

8 அவர்கள் லாமானியர்களின் சேனைமேல் விழுந்-
தார்கள், லாமானியர்கள் சிதறடிக்கப்பட்டு வனாந்-
தரத்தினுள் துரத்தப்பட்டார்கள்; லாமானியர்க-
ளால் சிறைபிடிக்கப்பட்ட தங்கள் சகோதரரை மீட்-
டார்கள். சிறைபிடிக்கப்பட்டுப்போன அவர்களில்
யாதொருவனும் கொல்லப்படவில்லை. தங்களு-
டைய சொந்த தேசங்களை சுதந்தரிக்கும்படி தங்க-
ளுடைய சகோதரர்களால் கொண்டு வரப்பட்டார்-
கள்.

And they came upon the armies of the Lamanites, and the Lamanites were scattered and driven into the wilderness; and they took their brethren who had been taken captive by the Lamanites, and there was not one soul of them had been lost that were taken captive. And they were brought by their brethren to possess their own lands.

9 லாமானியர்கள் தேசத்திலிருந்து விரட்டியடிக்கப்-
பட்டும், அம்மோனிகா ஜனங்கள் அழிக்கப்பட்டும்,
நியாயாதிபதிகளின் பதினோறாம் வருஷம் முடி-
வுற்றது. ஆம், அம்மோனிகாவில் ஜீவித்திருந்த
சகல ஆத்துமாக்களும், மகத்துவம் பொருந்திய
தங்கள் பட்டணத்தை தேவனால் அழிக்கமுடியா-
தென்று, அவர்கள் சொன்ன அந்த மகா நகரமும்
அழிக்கப்பட்டது.

And thus ended the eleventh year of the judges, the Lamanites having been driven out of the land, and the people of Ammonihah were destroyed; yea, every living soul of the Ammonihahites was destroyed, and also their great city, which they said God could not destroy, because of its greatness.

10 இப்படியாக இதோ, ஒரே நாளில் அது பாழாக்கப்-
பட்டது; பிணங்கள் நாய்களாலும், வனாந்தரத்தின்
மிருகங்களாலும் சின்னாபின்னமாக்கப்பட்டன.

But behold, in one day it was left desolate; and the carcasses were mangled by dogs and wild beasts of the wilderness.

11 இருப்பினும், அநேக நாட்களுக்குப் பின்பு அவர்-
களுடைய சடலங்கள் பூமியின் பரப்பின் மேலே கு-
விக்கப்பட்டன. அவைகள் சிறிது மண்ணால் மூ-
டப்பட்டன. அவைகளின் துர்நாற்றத்தினாலே
ஜனங்கள் அம்மோனிகா தேசத்தை சுதந்தரிக்க
அநேக வருஷமளவும் போகாதிருந்தார்கள். கொல்-
லப்பட்டுப்போனவர்கள் நிகோர் விசுவாசத்தைச்
சார்ந்திருந்தபடியாலும், அவர்களுடைய தேசங்கள்
பாழாய்க் கிடந்ததினிமித்தமும், அது நிகோரின்
பாழ்க்கடிப்பு என்று வழங்கப்பட்டது.

Nevertheless, after many days their dead bodies were heaped up upon the face of the earth, and they were covered with a shallow covering. And now so great was the scent thereof that the people did not go in to possess the land of Ammonihah for many years. And it was called Desolation of Nehors; for they were of the profession of Nehor, who were slain; and their lands remained desolate.

12 நேபியின் ஜனங்கள்மேல் நியாயாதிபதிகளினு-
டைய ஆளுகையின் பதினான்காம் வருஷமள-
வும், நேபியருக்கு விரோதமாய் யுத்தம் செய்ய லாமா-
னியர் வரவில்லை. இப்படியாக மூன்று வருஷமள-
வும் நேபியின் ஜனங்கள் தேசமெங்கிலும் தொடர்ந்-
து சமாதானத்தைப் பெற்றிருந்தார்கள்.

And the Lamanites did not come again to war against the Nephites until the fourteenth year of the reign of the judges over the people of Nephi. And thus for three years did the people of Nephi have continual peace in all the land.

13 ஆல்மாவும் அமுலேக்கும், ஜனங்களுக்கு அவர்க-
ளுடைய ஆலயங்களிலேயும், பரிசுத்த ஸ்தலங்க-
ளிலேயும், யூதர்களைப்போலவே இவர்கள் கட்டின
ஜெபவீடுகளிலும் மனந்திரும்புதலைப் பிரசங்கித்-
தார்கள்.

And Alma and Amulek went forth preaching repentance to the people in their temples, and in their sanctuaries, and also in their synagogues, which were built after the manner of the Jews.

14 இப்படியாய் தங்களுடைய வார்த்தைகளை எத்-
தனைபேர் கேட்பார்களோ, அத்தனைபேருக்கும்
பட்சபாதமின்றி,தொடர்ந்து தேவனுடைய வார்த்-
தையை போதித்து வந்தார்கள்.

And as many as would hear their words, unto them they did impart the word of God, without any respect of persons, continually.

15 இவ்விதமாய் ஆல்மாவும் அமுலேக்கும், ஊழியம் செய்யும்படி தெரிந்துகொண்ட அநேகரும், தேசமெங்கிலும் வசனத்தை பிரசங்கிக்கப் போனார்கள். சபையானது தேசமெங்கிலும், சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் நேபியர்களுக்குள்ளேயும் ஸ்தாபிக்கப்படுவது பரவியது.

And thus did Alma and Amulek go forth, and also many more who had been chosen for the work, to preach the word throughout all the land. And the establishment of the church became general throughout the land, in all the region round about, among all the people of the Nephites.

16 அவர்களுக்குள்ளே ஏற்றத்தாழ்வுகள் இல்லை; மனுபுத்திரரின் சிந்தனைகளை ஆயத்தப்படுத்த, அல்லது தம் வருகையின் காலத்தில் அவர்களுக்குள்ளே போதிக்கப்படும் வார்த்தையை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படியாகவும், மனுபுத்திரரின் மனங்களை ஆயத்தப்படுத்தும் பொருட்டாகவும், கர்த்தர் தேசமெங்கும் தம் ஆவியை ஊற்றினார்.

And there was no inequality among them; the Lord did pour out his Spirit on all the face of the land to prepare the minds of the children of men, or to prepare their hearts to receive the word which should be taught among them at the time of his coming—

17 எனவே வசனத்திற்கு விரோதமாய் அவர்கள் கடினப்பட்டுப்போகாமலும், அவர்கள் அவிசுவாசிகளாயிருந்து அழிக்கப்படாமல், வசனத்தை மகிழ்ச்சியுடனே பெற்றுக்கொண்டு, தேவனாகிய தங்கள் கர்த்தருடைய இளைப்பாறுதலினுள் பிரவேசிக்கவும் மெய்யான திராட்சைக்கொடியில் ஒட்டப்பட்ட கிளை போலிருக்கவும், தேசமெங்கும் தம் ஆவியை ஊற்றினார்.

That they might not be hardened against the word, that they might not be unbelieving, and go on to destruction, but that they might receive the word with joy, and as a branch be grafted into the true vine, that they might enter into the rest of the Lord their God.

18 ஜனங்களுக்குள்ளே போன அந்த ஆசாரியர்கள் சகல பொய்யுரைகளுக்கும், சூதுகளுக்கும், பொறாமைகளுக்கும், தர்க்கங்களுக்கும், துர்க்குணங்களுக்கும், தூஷணங்களுக்கும், திருடுகளுக்கும், கொள்ளைகளுக்கும், சூறையாடலுக்கும், கொலைக்கும், விபசாரம்பண்ணுதலுக்கும், சகல காமவிகாரத்திற்கும் விரோதமாய் பிரசங்கித்து, இவைகளை நடப்பிக்கக்கூடாதென்றும் கூக்குரலிட்டுச் சொன்னார்கள்.

Now those priests who did go forth among the people did preach against all lyings, and deceivings, and envyings, and strifes, and malice, and revilings, and stealing, robbing, plundering, murdering, committing adultery, and all manner of lasciviousness, crying that these things ought not so to be—

19 தேவகுமாரனின் வருகையைக் குறித்தும், அவருடைய பாடுகளையும் மரணத்தையும் குறித்தும், மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்தும் சீக்கிரமாய் வரவிருக்கிறவைகளைக் குறித்தும் அறிவித்தார்கள்.

Holding forth things which must shortly come; yea, holding forth the coming of the Son of God, his sufferings and death, and also the resurrection of the dead.

20 ஜனங்களில் அநேகர் தேவகுமாரன் வரப்போகிற இடத்தைக் குறித்து விசாரித்தார்கள்; அவர் தமது உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர்களுக்கு தரிசனமாவார் என்று போதிக்கப்பட்டார்கள்; இதை ஜனங்கள் மிகுந்த சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் கேட்டார்கள்.

And many of the people did inquire concerning the place where the Son of God should come; and they were taught that he would appear unto them after his resurrection; and this the people did hear with great joy and gladness.

21 தேசமெங்கிலும் சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு, பிசாசுக்கு விரோதமாய் ஜெயம்கொண்டு, தேவ வசனம் அதனுடைய தூயதன்மையில் தேசமெங்கிலும் அறிவிக்கப்பட்டது. கர்த்தர் தம் ஆசீர்வாதங்களை ஜனங்கள்மீது ஊற்றினார். இப்படியாய் நேபியின் ஜனங்கள்மேல் நியாயாதிபதிகளினுடைய ஆளுகையின் பதினான்காம் வருஷமும் முடிவுற்றது.

And now after the church had been established throughout all the land—having got the victory over the devil, and the word of God being preached in its purity in all the land, and the Lord pouring out his blessings upon the people—thus ended the fourteenth year of the reign of the judges over the people of Nephi.

*தேவ வசனத்துக்காக மோசியாவின் குமாரர்கள் ராஜ்யங்களுக்குரிய தங்கள் உரிமைகளைப் புறக்கணித்து, லாமானியரிடம் பிரசங்கிக்க நேபியின் தேசத்திற்குப் போனார்கள், அவர்கள் பட்ட கஷ்டங்களும் விடுவிப்பும் – ஆல்மாவின் பதிவேட்டின் படியானது.*

## ஆல்மா 17

1 இப்பொழுதும், அந்தப்படியே, கிதியோன் தேசத்திலிருந்து தெற்கு நோக்கியும், மேன்தி தேசத்திலிருந்து தூரமாயும் ஆல்மா பிரயாணம் பண்ணுகையில், இதோ, அவன் ஆச்சரியம் அடையத்தக்கதாக சாரகெம்லா தேசத்தை நோக்கி பிரயாணம் பண்ணிக்கொண்டிருந்த மோசியாவின் குமாரர்களைச் சந்தித்தான்.

2 ஆல்மாவுக்கு முதலாந்தரம் தூதன் தரிசனமானபோது, அவனுடனே மோசியாவின் குமாரர்களாகிய இவர்களும் இருந்தார்கள்; ஆகவே தன் சகோதரர்களைப் பார்த்து மிகவும் மகிழ்ந்தான்; அவர்கள் கர்த்தரில் இன்னும் தன் சகோதரர்களாயிருப்பது, அவனது ஆனந்தத்தை பெருகப்பண்ணிற்று. அவர்கள் மிகுந்த விவேகிகளாயும், தேவனுடைய வசனத்தை அறியும்பொருட்டு, வேதங்களை கருத்தாய் ஆராய்ந்தவர்களாயும் இருந்ததினிமித்தம், அவர்கள் சத்தியத்தின் ஞானத்தில் பெலன்கொண்டிருந்தார்கள்.

3 இது மாத்திரமல்ல; அவர்கள் அதிகமாய் ஜெபித்து உபவாசித்தார்கள்; ஆகவே அவர்கள் தீர்க்கதரிசன ஆவியையும் வெளிப்படுத்துதலின் ஆவியையும் பெற்றிருந்தார்கள். அவர்கள் போதித்தபோது, தேவனுடைய வல்லமையோடும் அதிகாரத்தோடும் போதித்தார்கள்.

4 அவர்கள் லாமானியருக்குள்ளே பதினான்கு வருஷமளவும் தேவ வசனத்தைப் போதித்து, அதிகமானோரை சத்திய ஞானத்திற்குள் கொண்டு வருவதில் ஜெயம்கொண்டார்கள்; ஆம், அவர்களுடைய வார்த்தைகளின் வல்லமையால், அநேகர் தேவனுடைய நாமத்தைத் தொழுதுகொள்ளவும், அவருக்கு முன்பாக தங்கள் பாவங்களை அறிக்கைபண்ணவும், அவருடைய பீடத்திற்கு முன்பாக கொண்டு வரப்பட்டார்கள்.

5 அவர்களுடைய பிரயாணங்களில் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் நிலவியது. அவர்கள் பட்டினியாலும், விடாய்த்தும், சோர்ந்துபோயுமிருந்து, சரீரத்திலும் மனதிலும் அதிகமாய் பாடனுபவித்து, உபத்திரவப்பட்டார்கள், அவர்கள் ஆவியிலும் மிகுந்த பிரயாசப்பட்டார்கள்.

*An account of the sons of Mosiah, who rejected their rights to the kingdom for the word of God, and went up to the land of Nephi to preach to the Lamanites; their sufferings and deliverance—according to the record of Alma.*

## Alma 17

And now it came to pass that as Alma was journeying from the land of Gideon southward, away to the land of Manti, behold, to his astonishment, he met with the sons of Mosiah journeying towards the land of Zarahemla.

Now these sons of Mosiah were with Alma at the time the angel first appeared unto him; therefore Alma did rejoice exceedingly to see his brethren; and what added more to his joy, they were still his brethren in the Lord; yea, and they had waxed strong in the knowledge of the truth; for they were men of a sound understanding and they had searched the scriptures diligently, that they might know the word of God.

But this is not all; they had given themselves to much prayer, and fasting; therefore they had the spirit of prophecy, and the spirit of revelation, and when they taught, they taught with power and authority of God.

And they had been teaching the word of God for the space of fourteen years among the Lamanites, having had much success in bringing many to the knowledge of the truth; yea, by the power of their words many were brought before the altar of God, to call on his name and confess their sins before him.

Now these are the circumstances which attended them in their journeyings, for they had many afflictions; they did suffer much, both in body and in mind, such as hunger, thirst and fatigue, and also much labor in the spirit.

6 அவர்களுடைய பிரயாணங்களாவன: தங்களு-
டைய தகப்பனாகிய மோசியாவை விட்டுப் பிரிந்து,
நியாயாதிபதிகளின் முதலாம் வருஷத்தில் தங்க-
ளுடைய தகப்பன் தங்கள்மீது சூட்ட விரும்பின ரா-
ஜ்யபாரத்தை புறக்கணித்தார்கள், இதுவே ஜனங்க-
ளுடைய விருப்பமாயும் இருந்தது.

Now these were their journeyings: Having taken leave of their father, Mosiah, in the first year of the judges; having refused the kingdom which their father was desirous to confer upon them, and also this was the minds of the people;

7 ஆயினும் வனாந்தரத்தில் சஞ்சரிக்கும்போது, தங்-
களுடைய உணவைச் சேகரிக்க தங்களுடைய பட்-
டயங்களையும், ஈட்டிகளையும் விற்களையும், அம்-
புகளையும், கவண்களையும் எடுத்துக்கொண்டு
சாரகெம்லா தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப்போ-
னார்கள்.

Nevertheless they departed out of the land of Zarahemla, and took their swords, and their spears, and their bows, and their arrows, and their slings; and this they did that they might provide food for themselves while in the wilderness.

8 இப்படியாய் நேபியின் தேசத்திற்குப் போய், லாமா-
னியருக்கு தேவ வார்த்தையைப் பிரசங்கிக்க தாங்-
கள் தெரிந்துகொண்டவர்களுடனே, வனாந்தரத்தி-
னுள்ளே புறப்பட்டுப்போனார்கள்.

And thus they departed into the wilderness with their numbers which they had selected, to go up to the land of Nephi, to preach the word of God unto the Lamanites.

9 அந்தப்படியே, அவர்கள் அநேக நாட்கள் வனாந்-
தரத்தில் பிரயாணம் பண்ணினார்கள். அவர்கள்
தங்கள் சகோதரர்களாகிய லாமானியருக்கு, அவர்-
களுடைய தகப்பன்மார்களின் பாரம்பரியம் மு-
றையற்றதும் துன்மார்க்கமுமானது என்று
உணர்த்தவும், சத்தியஞானத்திற்கு அவர்களைக்
கொண்டுவரக்கூடுமேயானால், தாங்கள் தேவனு-
டைய கரங்களில் ஒரு கருவியாய் விளங்க, கர்த்தர்
தம் ஆவியானவரின் ஓர் பங்கை தங்களுக்கு அரு-
ளி, தங்களிடம் அதை தரித்திருக்கச்செய்யும்படி
அதிகமாய் உபவாசித்து ஜெபித்தார்கள்.

And it came to pass that they journeyed many days in the wilderness, and they fasted much and prayed much that the Lord would grant unto them a portion of his Spirit to go with them, and abide with them, that they might be an instrument in the hands of God to bring, if it were possible, their brethren, the Lamanites, to the knowledge of the truth, to the knowledge of the baseness of the traditions of their fathers, which were not correct.

10 அந்தப்படியே, கர்த்தர் தம் ஆவியானவராலே
அவர்களை அணுகி அவர்களை நோக்கி: திடன்-
கொள்ளுங்கள், என்றார். அவர்களும் ஆறுதல-
டைந்தார்கள்.

And it came to pass that the Lord did visit them with his Spirit, and said unto them: Be comforted. And they were comforted.

11 பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: உங்கள்
சகோதரராகிய லாமானியரிடத்தில் போய், என்
வார்த்தையை நிலைவரப்படுத்துங்கள்; நீங்கள்
என்னில் உதாரணங்களாக, அவர்களுக்கு இருக்-
கும்பொருட்டு, நீடிய சாந்தமாயும், உபத்திரவத்தில்
பொறுமையாயும் இருங்கள். அநேக ஆத்துமாக்கள்
இரட்சிப்புக்குள்ளாக வர, என் கரங்களில் உங்க-
ளை ஒரு கருவியாக்குவேன், என்றார்.

And the Lord said unto them also: Go forth among the Lamanites, thy brethren, and establish my word; yet ye shall be patient in long-suffering and afflictions, that ye may show forth good examples unto them in me, and I will make an instrument of thee in my hands unto the salvation of many souls.

12 அந்தப்படியே, மோசியாவின் குமாரர் மற்றும்
அவர்களுடனே இருந்தவர்களின் இருதயங்களும்,
தேவ வசனத்தை லாமானியருக்கு அறிவிக்க
அவர்களுக்குள்ளே போக திடன்கொண்டன.

And it came to pass that the hearts of the sons of Mosiah, and also those who were with them, took courage to go forth unto the Lamanites to declare unto them the word of God.

13 அந்தப்படியே, லாமானிய தேசத்தின் எல்லைக-
ளை வந்தடைந்தபோது அவர்கள் ஒருவரிடமிருந்-
து ஒருவர் பிரிந்து சென்று, தங்கள் அறுவடைக-
ளுக்குப் பின்பு மறுபடியும் சந்திப்போம் என்று கர்த்-
தரில் நம்பிக்கை வைத்தார்கள்; ஏனெனில் அவர்-
கள் தாங்கள் மேற்கொள்ளும் வேலை மகத்தானது
என்று கருதினார்கள்.

And it came to pass when they had arrived in the borders of the land of the Lamanites, that they separated themselves and departed one from another, trusting in the Lord that they should meet again at the close of their harvest; for they supposed that great was the work which they had undertaken.

14 மூர்க்கமாயும், கடினமாயும், கொடிய ஜனங்களுமாயிருந்து, நேபியர்களைக் கொலைசெய்வதிலும், களவாடுவதிலும், சூறையாடுவதிலும், களிகூர்ந்து, தங்கள் இருதயங்களை ஐஸ்வரியங்கள்மேல், குறிப்பாக பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் ஆகியவைகள் மேல் வைத்து, அவைகளைப் பெற தங்கள் கைகளினால் பிரயாசப்படாமல், கொலை செய்வதினாலும், சூறையாடுவதினாலும் அவைகளைப் பெற்றுக்கொள்ள வகை தேடுகிற ஜனங்களுக்கு தேவ வசனத்தை பிரசங்கிக்க அவர்கள் மேற்கொண்ட முயற்சி, உண்மையாகவே பெரியதேயாகும்.

And assuredly it was great, for they had undertaken to preach the word of God to a wild and a hardened and a ferocious people; a people who delighted in murdering the Nephites, and robbing and plundering them; and their hearts were set upon riches, or upon gold and silver, and precious stones; yet they sought to obtain these things by murdering and plundering, that they might not labor for them with their own hands.

15 இப்படியாக அவர்கள் சோம்பேறித்தனமுள்ள ஜனமாயும், அவர்களில் அநேகர் விக்கிரகங்களை வணங்குபவர்களாயுமிருந்தார்கள். அவர்களுடைய பிதாக்களின் பாரம்பரியங்களினிமித்தம் தேவனுடைய சாபம் அவர்கள்மீது விழுந்தது; இருப்பினும் அவர்கள் மனந்திரும்புதலின் நிபந்தனைகளுக்கேற்ப கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் அவர்களுக்குத் தரப்பட்டது.

Thus they were a very indolent people, many of whom did worship idols, and the curse of God had fallen upon them because of the traditions of their fathers; notwithstanding the promises of the Lord were extended unto them on the conditions of repentance.

16 ஆகவே, அவர்களை ஒருவேளை மனந்திரும்புதலுக்குள்ளாகவும், மீட்பின் திட்டத்தை அறியவும் கொண்டுவரும் நோக்கத்திற்காகவே, மோசியாவின் குமாரர்கள் அந்த வேலையை மேற்கொண்டார்கள்.

Therefore, this was the cause for which the sons of Mosiah had undertaken the work, that perhaps they might bring them unto repentance; that perhaps they might bring them to know of the plan of redemption.

17 ஆதலால் அவர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் பிரிந்து, அவனவன் தனக்கு கொடுக்கப்பட்டிருந்த தேவ வசனம் மற்றும் வல்லமையின்படியே, ஒவ்வொருவனும் தனித்தனியே, அவர்களுக்குள்ளே போனார்கள்.

Therefore they separated themselves one from another, and went forth among them, every man alone, according to the word and power of God which was given unto him.

18 அம்மோன் அவர்களுக்கு தலைவனாய் இருந்து, அல்லது பணிவிடை செய்து, அவர்களுக்கு தேவ வசனத்தை கற்பித்து, அல்லது அவர்களுடைய தகுதிக்குத் தக்கதாய் அவர்களை ஆசீர்வதித்த பின்பு, அவன் அவர்களிடமிருந்து புறப்பட்டுச் சென்றான்; அவர்கள் இவ்விதமாக தேசமெங்கிலும் பற்பல பிரயாணங்களை மேற்கொண்டனர்.

Now Ammon being the chief among them, or rather he did administer unto them, and he departed from them, after having blessed them according to their several stations, having imparted the word of God unto them, or administered unto them before his departure; and thus they took their several journeys throughout the land.

19 லாமானியர்களாய் மாறிப்போன, இஸ்மவேலின் புத்திரர்களுடையதாக அழைக்கப்பட்ட, இஸ்மவேலின் தேசத்திற்கு அம்மோன் போனான்.

And Ammon went to the land of Ishmael, the land being called after the sons of Ishmael, who also became Lamanites.

20 அம்மோன் இஸ்மவேலின் தேசத்தில் பிரவேசித்தபோது, லாமானியர் அவனைப் பிடித்து கட்டிப் போட்டார்கள். ஏனெனில் தங்கள் கைகளினுள் அகப்படும் நேபியர் எல்லோரையும் கட்டி ராஜ சமுகத்திற்கு அழைத்துக்கொண்டு போவது அவர்களின் வழக்கமாய் இருந்தது. இப்படியாக அவர்களைக் கொலை செய்வதும், சிறைத்தனத்தில் வைப்பதும், சிறையினுள்ளே போடுவதும், அல்லது ராஜாவினுடைய சித்தம் மற்றும் விருப்பத்தின்படி தேசத்திற்கு வெளியே துரத்தப்பட்டனர்.

And as Ammon entered the land of Ishmael, the Lamanites took him and bound him, as was their custom to bind all the Nephites who fell into their hands, and carry them before the king; and thus it was left to the pleasure of the king to slay them, or to retain them in captivity, or to cast them into prison, or to cast them out of his land, according to his will and pleasure.

21 இவ்விதமாக அம்மோன், இஸ்மவேல் தேசத்தின்
ராஜாவிற்கு முன்னே தூக்கிக்கொண்டு போகப்பட்-
டான்; அவன் பெயர் லாமோனி என்பதாகும்;
அவன் இஸ்மவேலின் சந்ததியாய் இருந்தான்.

And thus Ammon was carried before the king who was over the land of Ishmael; and his name was Lamoni; and he was a descendant of Ishmael.

22 தேசத்தில் லாமானியர்களிடையே, அல்லது தன்
ஜனத்திடையே வாசம் செய்வது அம்மோனுக்கு
இஷ்டமா, என்று ராஜா விசாரித்தான்.

And the king inquired of Ammon if it were his desire to dwell in the land among the Lamanites, or among his people.

23 அம்மோன் அவனை நோக்கி: ஆம், நான் சாகும்
நாள் வரைக்கும், இந்த ஜனத்திற்குள்ளே வாசமாயி-
ருக்க வாஞ்சையாயிருக்கிறேன், என்றான்.

And Ammon said unto him: Yea, I desire to dwell among this people for a time; yea, and perhaps until the day I die.

24 அந்தப்படியே, லாமோனி ராஜாவிற்கு அம்மோன்
மீது பிரியமுண்டாகி, அவன் கட்டுக்கள் அவிழ்க்-
கப்படும்படிச் செய்தான்; அவன் தன் குமாரத்திக-
ளில் ஒருத்தியை அம்மோன் மனைவியாகக்
கொள்ள வேண்டுமென்று விருப்பப்பட்டான்.

And it came to pass that king Lamoni was much pleased with Ammon, and caused that his bands should be loosed; and he would that Ammon should take one of his daughters to wife.

25 ஆனால் அம்மோன் அவனை நோக்கி: இல்லை,
ஆனால் நான் உமது ஊழியக்காரனாய் இருப்பேன்,
என்றான். லாமோனி ராஜாவிற்கு அம்மோன், வே-
லைக்காரனானான். அந்தப்படியே, அவன் லாமா-
னியரின் வழக்கப்படி லாமோனியின் மந்தைக-
ளைக் காக்கும்படி மற்ற வேலையாட்களுடனே
அமர்த்தப்பட்டான்.

But Ammon said unto him: Nay, but I will be thy servant. Therefore Ammon became a servant to king Lamoni. And it came to pass that he was set among other servants to watch the flocks of Lamoni, according to the custom of the Lamanites.

26 அவன் ராஜாவின் சேவையில் மூன்று நாட்கள்
இருந்த பின்னர், சிபஸ் தண்ணீர் என்று அழைக்-
கப்பட்ட தண்ணீர்களண்டைக்கு தங்கள் மந்தைக-
ளை நடத்திச் சென்ற லாமானிய வேலையாட்களு-
டன் அவனும் இருந்தான். லாமானியர் அனைவ-
ரும் தங்கள் மந்தைகள் தண்ணீர் குடிக்கும்படி
அவைகளை அங்கே நடத்திச் சென்றார்கள்.

And after he had been in the service of the king three days, as he was with the Lamanitish servants going forth with their flocks to the place of water, which was called the water of Sebus, and all the Lamanites drive their flocks hither, that they may have water—

27 ஆகவே, அம்மோனும் ராஜாவின் வேலையாட்க-
ளும் இந்த தண்ணீர்களண்டைக்கு தங்கள் மந்தை-
களை நடத்திக் கொண்டு போகும்போது, இதோ,
தண்ணீரண்டை தங்கள் மந்தைகளுடன் வந்த லா-
மானியரில் சிலர், அம்மோனின் மந்தையையும், ரா-
ஜாவினுடைய வேலையாட்களின் மந்தைகளை-
யும் சிதறடித்துப்போட்டார்கள். அவர்கள் அவைக-
ளை பல வழியாய் ஓடும்படி சிதறடித்தார்கள்.

Therefore, as Ammon and the servants of the king were driving forth their flocks to this place of water, behold, a certain number of the Lamanites, who had been with their flocks to water, stood and scattered the flocks of Ammon and the servants of the king, and they scattered them insomuch that they fled many ways.

28 ராஜாவின் வேலையாட்கள் முணுமுணுத்துச்
சொன்னதாவது: இந்த மனுஷர்களின் பொல்லாப்-
பினாலே நமது சகோதரருடைய மந்தைகள் சிதற-
டிக்கப்பட்டுப்போய், அதினிமித்தம் அவர்களை ரா-
ஜா கொன்றுபோட்டதைப்போல, இப்போது நம்மை-
யும் கொன்றுபோடுவார். அவர்கள் மிகுதியாய்
அழுது சொன்னதாவது: இதோ, நம்முடைய மந்தை-
கள் சிதறடிக்கப்பட்டுப்போயின.

Now the servants of the king began to murmur, saying: Now the king will slay us, as he has our brethren because their flocks were scattered by the wickedness of these men. And they began to weep exceedingly, saying: Behold, our flocks are scattered already.

29 தாங்கள் கொல்லப்படுவோமோ என்ற பயத்தினால் அவர்கள் அழுதார்கள். இப்போது அம்மோன் இதைக் கண்டபோது அவன் இருதயம் அவனுள் சந்தோஷத்தினால் பூரித்தது; ஏனெனில் அவன் சொன்னான், நான் ராஜாவிற்கென்று திரும்பவும் இந்த மந்தைகளைச் சேர்ப்பதில் என்னுள்ளே இருக்கிற வல்லமையை, அல்லது என் வல்லமையை, என் உடன்வேலையாட்களுக்கு தெரியப்பண்ணி, அவர்களுடைய உள்ளங்களை ஆதாயப்படுத்தி, என் வார்த்தைகளை விசுவாசிக்க அவர்களை வழிநடத்துவேன்.

Now they wept because of the fear of being slain. Now when Ammon saw this his heart was swollen within him with joy; for, said he, I will show forth my power unto these my fellow-servants, or the power which is in me, in restoring these flocks unto the king, that I may win the hearts of these my fellow-servants, that I may lead them to believe in my words.

30 இப்பொழுது அம்மோன் தன் சகோதரர் என்று சொன்னவர்களுடைய உபத்திரவங்களைக் கண்டபோது, இவைகளே அவனுடைய சிந்தனையாயிருந்தது.

And now, these were the thoughts of Ammon, when he saw the afflictions of those whom he termed to be his brethren.

31 அந்தப்படியே, அவன் தன் வார்த்தைகளாலே அவர்களை இச்சகப்படுத்திச் சொன்னதாவது: என் சகோதரரே திடன் கொள்ளுங்கள், நாம் மந்தைகளைத் தேடிப்போய் அவைகளை ஒன்றாய்க்கூட்டி, திரும்பவும் அவைகளை தண்ணீருள்ள ஸ்தலத்திற்குக் கொண்டு வருவோம்; இப்படியாய் ராஜாவிற்கென்று மந்தைகளைப் பாதுகாத்துக்கொள்வோம். அவர் நம்மைக் கொன்று போடுவதில்லை, என்றான்.

And it came to pass that he flattered them by his words, saying: My brethren, be of good cheer and let us go in search of the flocks, and we will gather them together and bring them back unto the place of water; and thus we will preserve the flocks unto the king and he will not slay us.

32 அந்தப்படியே, அவர்கள் மந்தைகளைத் தேடிப்போனார்கள். அவர்கள் அம்மோனைப் பின்பற்றி அதிக துரிதமாய்ப் போய், ராஜாவின் மந்தைகளுக்கு முன்னிட்டுப்போய் திரும்பவும் அவைகளை தண்ணீருள்ள ஸ்தலத்திற்குக் கொண்டுவரும்படி ஒன்றாய் திரட்டினார்கள்.

And it came to pass that they went in search of the flocks, and they did follow Ammon, and they rushed forth with much swiftness and did head the flocks of the king, and did gather them together again to the place of water.

33 அந்த மனுஷர் மீண்டும் அவர்களுடைய மந்தைகளைச் சிதறடிக்க நின்றார்கள். ஆனால் அம்மோன் தன் சகோதரரை நோக்கி: மந்தைகள் சிதறி ஓடாதபடிக்கு அதைச் சுற்றியும் நில்லுங்கள், நான் போய் நம்முடைய மந்தைகளை சிதறடிக்கிற அந்த மனுஷருடன் சண்டையிட்டு வருகிறேன், என்றான்.

And those men again stood to scatter their flocks; but Ammon said unto his brethren: Encircle the flocks round about that they flee not; and I go and contend with these men who do scatter our flocks.

34 ஆதலால் அவர்கள் அம்மோன் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். அவன் போய் சிபஸ் தண்ணீர்களண்டையில் நின்றவர்களோடே சண்டைபோட நின்றான்; அவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்கள் இல்லை.

Therefore, they did as Ammon commanded them, and he went forth and stood to contend with those who stood by the waters of Sebus; and they were in number not a few.

35 ஆகவே, அவர்கள் அம்மோனுக்குப் பயப்படா-
மல், தங்கள் மனுஷரில் ஒருவன் அவனைத் தங்-
கள் விருப்பத்தின்படியே கொன்றுபோடக்கூடும்,
என்று எண்ணியிருந்தார்கள். அவர்களோ, கர்த்தர்
மோசியாவினிடத்தில் பண்ணின வாக்குத்தத்த-
மான, அவர்களுடைய கைகளுக்கு உன் புத்திர-
ரைத் தப்புவிப்பேன், என்பதை அறியாதிருந்தார்-
கள்; கர்த்தரைப்பற்றியும் அவர்கள் எதையும்
அறிந்திருக்கவில்லை; ஆகவே அவர்கள் தங்கள்
சகோதரரின் சங்காரத்தில் களித்திருந்தார்கள்;
இந்த நோக்கத்திற்காகவே அவர்கள் ராஜாவின் மந்-
தைகளை சிதறடிக்க நின்று கொண்டிருந்தார்கள்.

Therefore they did not fear Ammon, for they supposed that one of their men could slay him according to their pleasure, for they knew not that the Lord had promised Mosiah that he would deliver his sons out of their hands; neither did they know anything concerning the Lord; therefore they delighted in the destruction of their brethren; and for this cause they stood to scatter the flocks of the king.

36 அம்மோன் நின்றுகொண்டு அவர்கள்மீது தன்
கவணைக்கொண்டு கற்களை எறிந்தான்; ஆம்,
பலத்த வல்லமையுடனே அவர்கள் மீது கற்களை
எறிந்தான்; இப்படியாக அவன் அவர்களில் சிலரை
கொன்றுபோட்டான். அவர்கள் இவன் வல்லமை-
யைக் கண்டு திகைத்துப் போனார்கள். ஆயினும்,
அவர்கள் தங்கள் சகோதரர் கொன்று போடப்பட்ட-
தால் கோபமடைந்து அவன் மடிந்து போகவேண்டு-
மென தீர்மானித்தார்கள்; ஆகவே, அவனைத் தங்-
கள் கற்களால் அடிக்க முடியாது, என்று அறிந்து,
அவனைக் கொன்றுபோட தடிகளோடு வந்தார்கள்.

But Ammon stood forth and began to cast stones at them with his sling; yea, with mighty power he did sling stones amongst them; and thus he slew a certain number of them insomuch that they began to be astonished at his power; nevertheless they were angry because of the slain of their brethren, and they were determined that he should fall; therefore, seeing that they could not hit him with their stones, they came forth with clubs to slay him.

37 இதோ அம்மோனை மடங்கடிக்க தன் தடியை
உயர்த்திய, ஒவ்வொருவனுடைய கையையும்,
அவன் தன் பட்டயத்தினால் வெட்டிப் போட்டான்;
அவன் அவர்களுடைய கைகளை தன் பட்டயத்-
தின் கருக்கினால் வெட்டிப்போட்டு அவர்களின்
அடிகளை எதிர்த்து நின்றான். அவர்கள் திகைத்-
துப்போய் அவனுக்கு முன்பிருந்து ஓட ஆரம்பித்-
தார்கள். ஆம், அவர்கள் எண்ணிக்கையில் குறை-
வானவர்களில்லை, இவன் தன் புயத்தின் வல்ல-
மையால் அவர்களை ஓடப்பண்ணினான்.

But behold, every man that lifted his club to smite Ammon, he smote off their arms with his sword; for he did withstand their blows by smiting their arms with the edge of his sword, insomuch that they began to be astonished, and began to flee before him; yea, and they were not few in number; and he caused them to flee by the strength of his arm.

38 அவர்களில் ஆறுபேர் கவணினால் மடிந்து போ-
னார்கள். அவன் அவர்களுடைய தலைவனையே-
யன்றி வேறொருவரையும் தன் பட்டயத்தினால்
கொன்று போடவில்லை; அவன் தனக்கு விரோத-
மாய் உயர்த்தப்பட்ட அவர்களுடைய கைக-
ளனைத்தையும் வெட்டிப்போட்டான். அவர்கள் கு-
றைவானவர்கள் இல்லை.

Now six of them had fallen by the sling, but he slew none save it were their leader with his sword; and he smote off as many of their arms as were lifted against him, and they were not a few.

39 அவன் அவர்களைத் தூரமாய்த் துரத்திவிட்ட
பின்பு திரும்பினான். அவர்கள் தங்களுடைய மந்-
தைகளுக்கு தண்ணீர் காட்டி ராஜாவின் புல்வெ-
ளிக்கு அவைகளைத் திரும்பக் கொண்டு போ-
னார்கள். சிலர் அம்மோனைக் கொன்றுபோட
வகைதேடின, அவனால் வெட்டப்பட்ட அவர்களு-
டைய கைகளை தூக்கிக் கொண்டு ராஜாவினிடத்-
தில் போனார்கள். அவர்கள் செய்த காரியங்களுக்-
கு சாட்சியமாக அவைகளை ராஜாவினிடத்தில்
காண்பித்தார்கள்.

And when he had driven them afar off, he returned and they watered their flocks and returned them to the pasture of the king, and then went in unto the king, bearing the arms which had been smitten off by the sword of Ammon, of those who sought to slay him; and they were carried in unto the king for a testimony of the things which they had done.

# ஆல்மா 18

1 அந்தப்படியே, லாமோனி ராஜா தன் வேலையாட்கள் எழுந்து நின்று, அச்சம்பவத்தைக் குறித்து தாங்கள் கண்டவைகளை சாட்சி கொடுக்கும்படி கட்டளையிட்டான்.

2 அவர்கள் தாங்கள் கண்ட காரியங்களை சாட்சியாகச் சொன்னபோது, தன் மந்தையைக் காப்பதில் அம்மோனின் விசுவாசத்தையும், அவனைக் கொன்றுபோட வகை தேடினவர்களுக்கு விரோதமாய் போராடிய அவனின் மிகுந்த வல்லமையைக் குறித்தும், இவன் அறிந்து, மிகவும் ஆச்சரியப்பட்டு, மெய்யாகவே இவன் மனுஷரிலும் மேலானவன். இதோ, அவர்கள் செய்த கொலைகளினிமித்தம், இந்த ஜனங்கள் மீது இப்படிப்பட்ட பயங்கரமான தண்டனைகளை அனுப்பும் மகா அரூபி இவன்தானோ என்றான்.

3 அவர்கள் ராஜாவிற்குப் பிரதியுத்தரமாக: அவன் மகா அரூபியா, அல்லது மனுஷனா என்று நாங்கள் அறியோம்; அவன் ராஜாவினுடைய சத்துருக்களால் கொல்லப்பட முடியாதென்றும், அவன் எங்களோடு இருக்கும்போது அவனுடைய திறமையினிமித்தமும், மிகுந்த பெலத்தினிமித்தமும், ராஜாவின் மந்தைகளை சிதறடிக்க முடியாதென்றும் அறிந்திருக்கிறோம்; ஆதலால், அவன் ராஜாவிற்கு சிநேகிதன் என்று அறிகிறோம். இப்போதும் ராஜாவே, ஒரு மனுஷனுக்கு அவ்வளவு வல்லமை இருக்கக்கூடும் என்று நாங்கள் நம்பவில்லை. ஏனெனில், அவனைக் கொன்றுபோட முடியாது என்று அறிந்திருக்கிறோம், என்றார்கள்.

4 இப்பொழுதும் ராஜா இவ்வார்த்தைகளைக் கேட்டபோது, அவன் அவர்களை நோக்கி: இதுவே அந்த மகா அரூபி என்று இப்போது அறிவேன். நான் உங்கள் சகோதரரைக் கொன்று போட்டது போல, உங்களைக் கொன்று போடாதபடிக்கு உங்கள் ஜீவனைக் காத்துக்கொள்வதற்காக இத்தருணத்தில் இவன் வந்திருக்கிறான். அதுவே நம் பிதாக்களால் பேசப்பட்ட அந்த மகா அரூபி என்றான்.

5 மகா அரூபி ஒன்று உண்டென்பது, லாமோனி தன் தகப்பனிடமிருந்து பெற்ற பாரம்பரியம். அந்த மகா அரூபியை அவர்கள் விசுவாசித்தபோதிலும், தாங்கள் செய்கிற யாவும் சரியானது என்று நம்பினார்கள்; ஆயினும் லாமோனி, தன் வேலையாட்களை கொன்றுபோட்டதினிமித்தம் தான் தவறு செய்தோமோ என்று மிகவும் பயப்படத் தொடங்கினான்.

6 அவர்களில் அநேகரை அவன் கொன்றுபோட்டிருந்தான். ஏனெனில் அவர்களுடைய சகோதரர்கள் தண்ணீர் இருக்குமிடத்தில் அவர்களின் மந்தைகளை சிதறடித்துப் போட்டார்கள்; இவ்வாறாக, அவர்கள் தங்கள் மந்தைகளைச் சிதறடிக்க விட்டதினால் கொல்லப்பட்டார்கள்.

# Alma 18

And it came to pass that king Lamoni caused that his servants should stand forth and testify to all the things which they had seen concerning the matter.

And when they had all testified to the things which they had seen, and he had learned of the faithfulness of Ammon in preserving his flocks, and also of his great power in contending against those who sought to slay him, he was astonished exceedingly, and said: Surely, this is more than a man. Behold, is not this the Great Spirit who doth send such great punishments upon this people, because of their murders?

And they answered the king, and said: Whether he be the Great Spirit or a man, we know not; but this much we do know, that he cannot be slain by the enemies of the king; neither can they scatter the king's flocks when he is with us, because of his expertness and great strength; therefore, we know that he is a friend to the king. And now, O king, we do not believe that a man has such great power, for we know he cannot be slain.

And now, when the king heard these words, he said unto them: Now I know that it is the Great Spirit; and he has come down at this time to preserve your lives, that I might not slay you as I did your brethren. Now this is the Great Spirit of whom our fathers have spoken.

Now this was the tradition of Lamoni, which he had received from his father, that there was a Great Spirit. Notwithstanding they believed in a Great Spirit, they supposed that whatsoever they did was right; nevertheless, Lamoni began to fear exceedingly, with fear lest he had done wrong in slaying his servants;

For he had slain many of them because their brethren had scattered their flocks at the place of water; and thus, because they had had their flocks scattered they were slain.

7 சிபஸ் தண்ணீர்களண்டையில் லாமானியர் நின்-
று ஜனங்களுடைய மந்தைகளைச் சிதறடிப்பது
அவர்களுடைய வழக்கமாயிருந்தது. அதினிமித்-
தம் அவர்கள் சிதறடிக்கப்பட்டுப் போனவைகளை
தங்கள் தேசங்களுக்கு ஓட்டிச் செல்வது, அவர்க-
ளின் வழக்கமாயிருந்தது.
8 அந்தப்படியே, லாமோனி ராஜா தன் வேலையாட்-
களிடத்தில் விசாரித்து அத்தகையான மகத்துவ-
மான வல்லமையை உடைய மனுஷன் எங்கே?
என்று கேட்டான்.
9 அவர்கள் அவனை நோக்கி: இதோ அவன் உமது
குதிரைகளுக்குத் தீவனம் கொடுத்துக் கொண்டி-
ருக்கிறான், என்றார்கள். வேலையாட்கள் தங்கள்
மந்தைகளுக்கு தண்ணீர் காட்டும் சமயத்திற்கு
முன்பாக, அவர்கள் தன் குதிரைகளையும், இரதங்-
களையும் ஆயத்தப்படுத்தி, நேபியின் தேசத்திற்கு
தன்னை கூட்டிச் செல்ல வேண்டுமென்று, ராஜா
கட்டளையிட்டிருந்தான். ஏனெனில் தேசமனைத்-
திற்கும் ராஜாவாகிய, லாமோனியின் தகப்பன், நே-
பியின் தேசத்தில் ஒரு பெரும் விருந்தை ஆயத்தப்-
படுத்தியிருந்தான்.
10 இப்பொழுது அம்மோன் தன் குதிரைகளையும்,
தன் இரதங்களையும் ஆயத்தப்படுத்திக் கொண்டி-
ருக்கிறான் என்று, லாமோனிய ராஜா கேள்விப்பட்-
டு, அம்மோனின் விசுவாசத்தினிமித்தம், ஆச்சரி-
யப்பட்டுப் போய், மெய்யாகவே என் வேலையாட்-
கள் எல்லோரிலும், இந்த மனுஷனைப்போல விசு-
வாசமுள்ள வேலைக்காரன் எவனுமில்லை; என்
எல்லா கட்டளைகளையும் நிறைவேற்ற அவைக-
ளை நினைவில் கொண்டிருக்கிறான்.
11 இப்பொழுது மெய்யாகவே இது அந்த மகா அரூபி
என்று அறிவேன். அவன் என்னிடத்தில் வரவேண்-
டுமென்று வாஞ்சிக்கிறேன், ஆனால் அஞ்சுகிறேன்,
என்றான்.
12 அந்தப்படியே, அம்மோன் குதிரைகளையும், இர-
தங்களையும் ராஜாவிற்கென்றும், அவனது வே-
லையாட்களுக்கென்றும் ஆயத்தப்படுத்திய பின்பு,
அவன் ராஜாவினிடம் போனான். ராஜாவினுடைய
முகரூபம் மாறியிருப்பதைக் கண்டான்; ஆகவே
அவன் அவனது சமுகத்திலிருந்து திரும்பிச் செல்-
லவிருந்தான்.
13 ராஜாவின் வேலையாட்களில் ஒருவன் அவனை
நோக்கி, ரபானா, என்றான். அதற்கு வல்லமை-
யுள்ள மாபெரும் ராஜாவே என்று அர்த்தமாம்.
அவர்கள் தங்கள் ராஜாக்களை வல்லமை பொருந்-
தியவர்களாகவே கருதினார்கள். அதனால் அவன்
அவனை நோக்கி: ரபானா, நீர் தங்கவேண்டுமென்-
று ராஜா சித்தமாயிருக்கிறார், என்றான்.

Now it was the practice of these Lamanites to stand by the waters of Sebus to scatter the flocks of the people, that thereby they might drive away many that were scattered unto their own land, it being a practice of plunder among them.

And it came to pass that king Lamoni inquired of his servants, saying: Where is this man that has such great power?

And they said unto him: Behold, he is feeding thy horses. Now the king had commanded his servants, previous to the time of the watering of their flocks, that they should prepare his horses and chariots, and conduct him forth to the land of Nephi; for there had been a great feast appointed at the land of Nephi, by the father of Lamoni, who was king over all the land.

Now when king Lamoni heard that Ammon was preparing his horses and his chariots he was more astonished, because of the faithfulness of Ammon, saying: Surely there has not been any servant among all my servants that has been so faithful as this man; for even he doth remember all my commandments to execute them.

Now I surely know that this is the Great Spirit, and I would desire him that he come in unto me, but I durst not.

And it came to pass that when Ammon had made ready the horses and the chariots for the king and his servants, he went in unto the king, and he saw that the countenance of the king was changed; therefore he was about to return out of his presence.

And one of the king's servants said unto him, Rabbanah, which is, being interpreted, powerful or great king, considering their kings to be powerful; and thus he said unto him: Rabbanah, the king desireth thee to stay.

14 ஆதலால் அம்மோன், ராஜாவிடம் திரும்பி, அவனை நோக்கி: ராஜா நான் உமக்கு என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்றான். ராஜா அவனிடத்தில் தான் சொல்வதறியாது, அவர்களின் காலக்கணக்கின்படி, ஒரு மணிநேரம் பிரதியுத்தரமளிக்காமல் இருந்தான்.

Therefore Ammon turned himself unto the king, and said unto him: What wilt thou that I should do for thee, O king? And the king answered him not for the space of an hour, according to their time, for he knew not what he should say unto him.

15 அந்தப்படியே, அம்மோன் மறுபடியும் அவனை நோக்கி: என்னிடமிருந்து நீர் வேண்டுவதென்ன என்று கேட்டான். ராஜா அவனுக்கு மறுமொழி கொடாதிருந்தான்.

And it came to pass that Ammon said unto him again: What desirest thou of me? But the king answered him not.

16 அந்தப்படியே, அம்மோன் தேவ ஆவியால் நிறைந்தவனாய் ராஜாவினுடைய எண்ணங்களை அறிந்தான். அவன் அவனை நோக்கி: நான் உமது வேலையாட்களையும் மந்தைகளையும் காப்பாற்றினேன் என்றும், உமது மந்தைகளையும், உமது வேலையாட்களையும் காப்பாற்றும் பொருட்டு அவர்களுடைய சகோதரரில் ஏழுபேரை கவணாலும், பட்டயத்தாலும் கொன்று போட்டு, மீதியிருப்போரின் கரங்களை வெட்டிப் போட்டேன் என்று நீர் கேள்விப்பட்டிருக்கிறீர். இதோ, அது நீர் மலைத்துப்போகச் செய்திருக்கிறது.

And it came to pass that Ammon, being filled with the Spirit of God, therefore he perceived the thoughts of the king. And he said unto him: Is it because thou hast heard that I defended thy servants and thy flocks, and slew seven of their brethren with the sling and with the sword, and smote off the arms of others, in order to defend thy flocks and thy servants; behold, is it this that causeth thy marvelings?

17 உம்மை மிகவும் ஆச்சரியத்திற்குள்ளாக்கும் அந்த காரியம் என்ன என்று உம்மைக் கேட்கிறேன். இதோ, நான் ஒரு மனுஷனும், உம்முடைய வேலைக்காரனுமாவேன்; ஆகவே, உமக்கு நன்மை என்று படுகிறதெதுவோ, அதை நான் செய்வேன், என்றான்.

I say unto you, what is it, that thy marvelings are so great? Behold, I am a man, and am thy servant; therefore, whatsoever thou desirest which is right, that will I do.

18 இவ்வார்த்தைகளை ராஜா கேட்டபோது, அம்மோன் தன் எண்ணங்களையும் அறிந்திருக்கிறான் என்று மீண்டும் ஆச்சரியப்பட்டுப் போனான்; ஆயினும் லாமோனி ராஜா தன் வாயைத் திறந்து, அவனை நோக்கி: நீர் யார்? சகலவற்றையும் அறிந்திருக்கிற அந்த மகா அரூபி நீர்தானா என்றான்.

Now when the king had heard these words, he marveled again, for he beheld that Ammon could discern his thoughts; but notwithstanding this, king Lamoni did open his mouth, and said unto him: Who art thou? Art thou that Great Spirit, who knows all things?

19 அதற்கு அம்மோன் பிரதியுத்தரமாக: நான் அல்ல, என்றான்.

Ammon answered and said unto him: I am not.

20 பின்னும் ராஜா நீர் என் இருதயத்தின் எண்ணங்களை அறிந்திருக்கிறதெப்படி? நீர் தைரியமாய்ப் பேசி இக்காரியங்களைக் குறித்து எனக்குச் சொல்லும்; என் மந்தைகளைச் சிதறடித்த, என் சகோதரரை எந்த வல்லமையைக் கொண்டு கொன்று, அவர்களுடைய கரத்தை வெட்டிப்போட்டீர் என்பதை, எனக்குச் சொல்வீராக.

And the king said: How knowest thou the thoughts of my heart? Thou mayest speak boldly, and tell me concerning these things; and also tell me by what power ye slew and smote off the arms of my brethren that scattered my flocks—

21 இக்காரியங்களைக் குறித்து எனக்கு நீர் சொல்வீராகில், நீர் விரும்புகிற எதையும் உமக்குத் தருவேன்; வேண்டுமானால் உம்மை என் சேனைகளை வைத்து பாதுகாப்பேன்; ஆனாலும் நீர் அவர்களெல்லாரிலும் வல்லவர் என்று, நான் அறிந்திருக்கிறேன்; இருப்பினும் நீர் என்னிடத்தில் விரும்புகிற எதையும் உமக்குத் தருவேன், என்றான்.

And now, if thou wilt tell me concerning these things, whatsoever thou desirest I will give unto thee; and if it were needed, I would guard thee with my armies; but I know that thou art more powerful than all they; nevertheless, whatsoever thou desirest of me I will grant it unto thee.

22 அம்மோன் ஞானமுள்ளவனாய், ஆயினும் தீமை-
யற்றவனாய் லாமோனியை நோக்கி: நான் எந்த
வல்லமையினால் இவைகளைச் செய்கிறேன், என்-
று உமக்குச் சொன்னால் நீர் என்னுடைய வார்த்-
தைகளுக்குச் செவிகொடுப்பீரோ? நான் உம்மிடத்-
தில் வாஞ்சிக்கும் காரியமும் இதுவே, என்றான்.

Now Ammon being wise, yet harmless, he said unto Lamoni: Wilt thou hearken unto my words, if I tell thee by what power I do these things? And this is the thing that I desire of thee.

23 ராஜா பிரதியுத்தரமாக: ஆம், உம்முடைய வார்த்-
தைகளனைத்தையும் விசுவாசிக்கிறேன் என்றான்.
இப்படியாக அவன் உபாயத்தினால் கவரப்பட்-
டான்.

And the king answered him, and said: Yea, I will believe all thy words. And thus he was caught with guile.

24 அம்மோன் தைரியங்கொண்டு அவனை நோக்கி
பேசத் தொடங்கி: தேவன் ஒருவர் உண்டென்று விசு-
வாசிக்கிறீரா என்று கேட்டான்.

And Ammon began to speak unto him with boldness, and said unto him: Believest thou that there is a God?

25 அவன் அதற்கு பிரதியுத்தரமாக: அது என்ன-
வென்று எனக்கு விளங்கவில்லை, என்றான்.

And he answered, and said unto him: I do not know what that meaneth.

26 அம்மோன், நீர் மகா அரூபி ஒன்று உண்டென்று
விசுவாசிக்கிறீரா என்று கேட்டான்

And then Ammon said: Believest thou that there is a Great Spirit?

27 அவன் ஆம், என்றான்.

And he said, Yea.

28 அம்மோன், இதுதான் தேவன் என்றான். மறுபடி-
யும் அம்மோன் அவனை நோக்கி: தேவனாகிய இந்த
மகா அரூபி, பரலோகத்திலும், பூமியிலும் உள்ள
அனைத்தையும் சிருஷ்டித்தார், என்று விசுவாசிக்-
கிறீரா? என்று கேட்டான்.

And Ammon said: This is God. And Ammon said unto him again: Believest thou that this Great Spirit, who is God, created all things which are in heaven and in the earth?

29 அதற்கு அவன்: ஆம், பூமியிலுள்ள யாவையும்
அவர் படைத்தார் என்று விசுவாசிக்கிறேன்;
ஆனால் பரலோகத்தைப்பற்றி எனக்குத் தெரியாது,
என்றான்

And he said: Yea, I believe that he created all things which are in the earth; but I do not know the heavens.

30 அம்மோன் அவனை நோக்கி: தேவனும், அவரு-
டைய சர்வ பரிசுத்த தூதர்களும் வாசம் செய்யும் ஸ்-
தலமே பரலோகம் என்றான்.

And Ammon said unto him: The heavens is a place where God dwells and all his holy angels.

31 லாமோனி ராஜா: அது பூமிக்கு மேலே உள்ளதா
என்று கேட்டான்.

And king Lamoni said: Is it above the earth?

32 அம்மோன்: ஆம், அவர் மனுப்புத்திரர் யாவரை-
யும் பார்க்கிறார். ஆதியிலிருந்து சகலமும் அவரு-
டைய கையினால் சிருஷ்டிக்கப்பட்டதால், அவர்
இருதயத்தின் சகல எண்ணங்களையும் நோக்கங்க-
ளையும் அறிந்திருக்கிறார், என்றான்.

And Ammon said: Yea, and he looketh down upon all the children of men; and he knows all the thoughts and intents of the heart; for by his hand were they all created from the beginning.

33 பின்னும் லாமோனி ராஜா: நீர் பேசின இந்த சகல
காரியங்களையும் விசுவாசிக்கிறேன். நீர் தேவனிட-
மிருந்து அனுப்பப்பட்டவரா என்று கேட்டான்.

And king Lamoni said: I believe all these things which thou hast spoken. Art thou sent from God?

34 அம்மோன் அவனை நோக்கி: நானோ மனுஷன்;
ஆதியிலே மனுஷன் தேவ சாயலின்படியே சிருஷ்-
டிக்கப்பட்டான். ஜனங்கள் நியாயமும், சத்தியமு-
மான ஞானத்திற்குக் கொண்டுவரப்பட, இவைக-
ளை அவர்களுக்குப் போதிக்கும்படி, பரிசுத்த ஆவி-
யாலே அழைக்கப்பட்டிருக்கிறேன்.

Ammon said unto him: I am a man; and man in the beginning was created after the image of God, and I am called by his Holy Spirit to teach these things unto this people, that they may be brought to a knowledge of that which is just and true;

35 அந்த ஆவியின் ஒரு பாகம் என்னில் வாசமாயிருக்கிறது. அதுவே என்னுடைய விசுவாசத்தின்படியேயும், தேவனிலிருக்கிற விருப்பத்தின்படியேயும், எனக்கு ஞானத்தையும் வல்லமையையும் கொடுக்கிறது.

And a portion of that Spirit dwelleth in me, which giveth me knowledge, and also power according to my faith and desires which are in God.

36 அம்மோன் இவைகளைச் சொன்ன பின்பு, அவன் உலக சிருஷ்டிப்பு தொடங்கி ஆதாமின் படைப்பைப்பற்றியும், மனுஷனின் வீழ்ச்சி பற்றிய, சகல காரியங்களையும் சொல்லி, அவர்களுடைய தகப்பனாகிய லேகி எருசலேமை விட்டுப்போகும் வரைக்கும், தீர்க்கதரிசிகளால் பேசப்பட்ட, பரிசுத்த வேதங்களையும் சொல்லி, ஜனங்களுடைய பதிவேடுகளையும் அவனுக்கு முன் வைத்தான்.

Now when Ammon had said these words, he began at the creation of the world, and also the creation of Adam, and told him all the things concerning the fall of man, and rehearsed and laid before him the records and the holy scriptures of the people, which had been spoken by the prophets, even down to the time that their father, Lehi, left Jerusalem.

37 அவன் (ராஜாவிற்கும், அவனுடைய வேலையாட்களுக்கும்) தங்கள் பிதாக்கள் வனாந்தரத்தில் மேற்கொண்ட சகல பிரயாணங்களையும், பட்டினியாயும், விடாய்த்தும்போய் அவர்கள் பட்ட கஷ்டங்களையும், உபத்திரவங்களையும், இன்னும் மற்ற காரியங்களையும், அவர்களுக்குச் சொன்னான்.

And he also rehearsed unto them (for it was unto the king and to his servants) all the journeyings of their fathers in the wilderness, and all their sufferings with hunger and thirst, and their travail, and so forth.

38 அவன் அவர்களுக்கு லாமான், லெமுவேல் மற்றும் இஸ்மவேல் குமாரர்கள் ஏற்படுத்திய கலகங்களைக் குறித்தும், ஆம், அவர்களுடைய சகல கலகங்களையும் சொன்னான். லேகி எருசலேமைவிட்டுச் சென்ற காலம் முதல், அச்சமயம் வரைக்குமான சகல பதிவேடுகளையும், வேதங்களைக் குறித்தும் வியாக்கியானம் பண்ணினான்.

And he also rehearsed unto them concerning the rebellions of Laman and Lemuel, and the sons of Ishmael, yea, all their rebellions did he relate unto them; and he expounded unto them all the records and scriptures from the time that Lehi left Jerusalem down to the present time.

39 இது மாத்திரமல்ல, அவன் அவர்களுக்கு, உலக அஸ்திபாரமுதல் ஆயத்தப்படுத்தப்பட்ட மீட்பின் திட்டத்தை அவர்களுக்கு விளக்கினான்; அவர்களுக்கு கிறிஸ்துவின் வருகையைக்குறித்து அவன் தெரியப்பண்ணினான். கர்த்தருடைய சகல கிரியைகளையும் அவர்களுக்குத் தெரியப்பண்ணினான்.

But this is not all; for he expounded unto them the plan of redemption, which was prepared from the foundation of the world; and he also made known unto them concerning the coming of Christ, and all the works of the Lord did he make known unto them.

40 அந்தப்படியே, இவைகள் யாவையும் அவன் சொல்லி ராஜாவுக்கு அவைகளை விளக்கின பின்பு, ராஜா அவனது வார்த்தைகள் யாவையும் விசுவாசித்தான்.

And it came to pass that after he had said all these things, and expounded them to the king, that the king believed all his words.

41 அவன் கர்த்தரை நோக்கி கூக்குரலிட்டு: கர்த்தாவே, நேபியின் ஜனத்தின்மீது நீர் வைத்த உம்முடைய ஏராளமான இரக்கத்தைப்போல என் மீதும் என் ஜனத்தின்மீதும் இரக்கமாயிரும், என்றான்.

And he began to cry unto the Lord, saying: O Lord, have mercy; according to thy abundant mercy which thou hast had upon the people of Nephi, have upon me, and my people.

42 இப்பொழுது அவன் இதைச் சொன்னவுடனே, மரித்தவனைப்போல, பூமியில் விழுந்தான்.

And now, when he had said this, he fell unto the earth, as if he were dead.

43 அந்தப்படியே, அவன் வேலையாட்கள் அவனைத் தூக்கி, அவன் மனைவியிடத்தில் கொண்டு சென்று, மஞ்சத்தின் மீது படுக்க வைத்தார்கள். இரண்டு இராப்பகலாக அவன் மரித்தவன் போலக் கிடந்தான். அவன் மனைவியும், குமாரர்களும், குமாரத்திகளும், அவனது இழப்பினிமித்தம், லாமானியரின் சம்பிரதாயப்படி, மிகவும் புலம்பி துக்கம் கொண்டாடினார்கள்.

And it came to pass that his servants took him and carried him in unto his wife, and laid him upon a bed; and he lay as if he were dead for the space of two days and two nights; and his wife, and his sons, and his daughters mourned over him, after the manner of the Lamanites, greatly lamenting his loss.

## ஆல்மா 19

1 அந்தப்படியே, இரண்டு இராப்பகலுக்குப் பின்னர், அவர்கள் அவனுடைய சரீரத்தைக் கொண்டுபோய் தங்களுடைய மரித்தோரை அடக்கம்பண்ண தாங்கள் வெட்டிய கல்லறையில், அடக்கம்பண்ண இருந்தார்கள்.

2 இப்பொழுது அம்மோனுக்கு உண்டான கீர்த்தியை ராஜஸ்திரீ கேள்விப்பட்டதால், அவனைத் தன்னிடத்தே அழைத்துவர விரும்பி ஆட்களை அனுப்பினாள்.

3 அந்தப்படியே, அம்மோன் தனக்கு கட்டளையிடப்பட்டபடியே ராஜஸ்திரீயிடத்தே போய் தான் செய்யவேண்டுமென அவள் விரும்புவதை அறிய வாஞ்சித்தான்.

4 அதற்கு அவள் அவனை நோக்கி: நீர் பரிசுத்த தேவனுடைய தீர்க்கதரிசி என்றும், அவருடைய நாமத்தில் அநேக பராக்கிரமமான கிரியைகளைச் செய்ய உமக்கு வல்லமையுண்டு என்றும், என் புருஷனின் வேலையாட்கள் எனக்குத் தெரியப் பண்ணினார்கள்.

5 ஆகையால், இப்படியிருக்குமாயின் நீர் போய் என் புருஷனைப் பார்க்க வேண்டுமென மனதாயிருக்கிறேன். ஏனெனில் அவர் இரண்டு இராப்பகலாய் படுத்த படுக்கையாயிருக்கிறார். சிலர் அவர் மரித்துப்போகவில்லை என்றும், மற்ற சிலர் அவர் மரித்துப்போனார் என்றும், அவர் உடல் நாற்றமெடுக்கிறதென்றும், கல்லறையிலே அடக்கம் பண்ணவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்; ஆனால் என்னைப் பொறுத்தமட்டில் அவர் நாறவில்லை, என்றாள்.

6 இப்பொழுது, அம்மோன் வாஞ்சித்திருந்ததுவும் இதுவே. ஏனெனில், தேவனுடைய வல்லமையால் லாமோனி ராஜா ஆட்கொள்ளப்பட்டிருந்தான், என அறிந்தான்; அவனுடைய மனதிலிருந்த அவிசுவாசமாகிய கருந்திரை நீக்கப்பட்டுக்கொண்டிருந்ததென்றும், தேவனுடைய கடாட்சியத்தைப்பற்றிய அற்புதமான மகிமையின் ஒளியாகிய, தேவ மகிமையின் ஒளியும், அவனுடைய மனதை வெளிச்சமடையச் செய்கிறது என்றும் அறிந்தான். ஆம், இந்த வெளிச்சம் அவனுடைய ஆத்துமாவில் மிகுந்த சந்தோஷத்தை ஊற்றெடுக்கப்பண்ணி, காரிருள் அகற்றப்பட்டு, அவனுடைய ஆத்துமாவில் நித்திய ஜீவ ஒளி ஏற்றப்பட்டது. ஆம், இதுவே அவனுடைய சரீரத்தை மேற்கொண்டிருக்கிறது, தேவனால் ஆட்கொள்ளப்பட்டான், என்று அறிந்திருந்தான்.

## Alma 19

And it came to pass that after two days and two nights they were about to take his body and lay it in a sepulchre, which they had made for the purpose of burying their dead.

Now the queen having heard of the fame of Ammon, therefore she sent and desired that he should come in unto her.

And it came to pass that Ammon did as he was commanded, and went in unto the queen, and desired to know what she would that he should do.

And she said unto him: The servants of my husband have made it known unto me that thou art a prophet of a holy God, and that thou hast power to do many mighty works in his name;

Therefore, if this is the case, I would that ye should go in and see my husband, for he has been laid upon his bed for the space of two days and two nights; and some say that he is not dead, but others say that he is dead and that he stinketh, and that he ought to be placed in the sepulchre; but as for myself, to me he doth not stink.

Now, this was what Ammon desired, for he knew that king Lamoni was under the power of God; he knew that the dark veil of unbelief was being cast away from his mind, and the light which did light up his mind, which was the light of the glory of God, which was a marvelous light of his goodness—yea, this light had infused such joy into his soul, the cloud of darkness having been dispelled, and that the light of everlasting life was lit up in his soul, yea, he knew that this had overcome his natural frame, and he was carried away in God—

7 ஆகவே, ராஜஸ்திரீ தன்னிடத்தில் வாஞ்சித்ததே, அவனுடைய வாஞ்சையாயும் இருந்தது. ஆகவே ராஜஸ்திரீ தன்னிடம் வேண்டிக்கொண்டபடியே, அவன் ராஜாவைப் பார்க்கப் போனான்; அவன் ராஜாவைப் பார்த்தான். அவன் மரித்துப் போகவில்லை, என்று அறிந்து கொண்டான்.

Therefore, what the queen desired of him was his only desire. Therefore, he went in to see the king according as the queen had desired him; and he saw the king, and he knew that he was not dead.

8 அவன் ராஜஸ்திரீயை நோக்கி: அவர் மரித்துப் போகவில்லை. தேவனில் உறங்குகிறார். அவர் மறுபடியும் நாளை எழுந்திருப்பார்; ஆகவே அவரைப் புதைக்க வேண்டாம், என்றான்.

And he said unto the queen: He is not dead, but he sleepeth in God, and on the morrow he shall rise again; therefore bury him not.

9 பின்னும் அம்மோன் அவளை நோக்கி: இதை நீர் விசுவாசிக்கிறீரா? என்று கேட்டான். அதற்கு அவள் அவனை நோக்கி: உம்முடைய வார்த்தையும், நம் வேலையாட்களின் வார்த்தையுமேயல்லாமல் வேறொரு சாட்சியும் என்னிடத்தில் இல்லை; ஆகிலும் நீர் சொன்னபடியே நடக்கும் என்று, நான் விசுவாசிக்கிறேன், என்றாள்.

And Ammon said unto her: Believest thou this? And she said unto him: I have had no witness save thy word, and the word of our servants; nevertheless I believe that it shall be according as thou hast said.

10 அதற்கு அம்மோன் அவளை நோக்கி: உம் மிகுந்த விசுவாசத்தினிமித்தம் நீர் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறீர்; ஸ்திரீயே, நான் உம்மிடத்தில் சொல்லுகிறேன், நேபிய ஜனங்கள் யாவருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசம் இருந்ததில்லை, என்றான்.

And Ammon said unto her: Blessed art thou because of thy exceeding faith; I say unto thee, woman, there has not been such great faith among all the people of the Nephites.

11 அந்தப்படியே, அவள் அதுமுதற்கொண்டு, மறுநாள் அவன் எழுவான் என்று, அம்மோன் குறித்துச் சொன்ன சமயம் மட்டும், தன் புருஷனின் படுக்கையையே கண்காணித்துக் கொண்டிருந்தாள்.

And it came to pass that she watched over the bed of her husband, from that time even until that time on the morrow which Ammon had appointed that he should rise.

12 அந்தப்படியே, அம்மோனின் வார்த்தைகளின்படியே அவன் எழுந்தான்; அவன் எழும்போதே தன் கரங்களை அந்த ஸ்திரீக்கு நேராய் நீட்டிச் சொன்னதாவது: தேவனுடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக, நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்.

And it came to pass that he arose, according to the words of Ammon; and as he arose, he stretched forth his hand unto the woman, and said: Blessed be the name of God, and blessed art thou.

13 மெய்யாகவே நீ ஜீவித்திருப்பதுபோலவே, நான் என் மீட்பரைக் கண்டேன்; அவர் வந்து ஒரு ஸ்திரீயினிடத்தில் பிறந்து, தம் நாமத்தை விசுவாசிக்கிற மனுக்குலம் முழுவதையும் மீட்டுக்கொள்வார். இவ்வார்த்தைகளை அவன் சொன்ன போது, அவனது இருதயம் அவனுள்ளே பூரிப்படைந்து சந்தோஷத்தால் விழுந்தான்; ராஜஸ்திரீயும், ஆவியானவரால் மேற்கொள்ளப்பட்டு கீழே விழுந்தாள்.

For as sure as thou livest, behold, I have seen my Redeemer; and he shall come forth, and be born of a woman, and he shall redeem all mankind who believe on his name. Now, when he had said these words, his heart was swollen within him, and he sunk again with joy; and the queen also sunk down, being overpowered by the Spirit.

14 தங்கள் அக்கிரமங்களாலும், தங்கள் பாரம்பரியத்தினாலும் நேபியர்களுக்குள்ளும், அல்லது சகல தேவ ஜனத்திற்குள்ளும் துக்கம் ஏற்பட காரணமாய் அமைந்த தன் சகோதரராகிய லாமானியர்கள்மேல், தன் ஜெபத்திற்குத் தக்கதாய் கர்த்தருடைய ஆவி ஊற்றப்பட்டதை அம்மோன் கண்டபோது, அவன் தன் முழங்காலில் விழுந்து, தன் சகோதரருக்கு தேவன் செய்தவற்றிற்காக அவரிடத்தில் தன் ஆத்துமாவை ஜெபத்திலும், நன்றிகளோடும் ஊற்றினான்; அவன் சந்தோஷத்தால் மேற்கொள்ளப்பட்டான்; இப்படியாய் அவர்கள் மூவரும் பூமியிலே விழுந்தார்கள்.

Now Ammon seeing the Spirit of the Lord poured out according to his prayers upon the Lamanites, his brethren, who had been the cause of so much mourning among the Nephites, or among all the people of God because of their iniquities and their traditions, he fell upon his knees, and began to pour out his soul in prayer and thanksgiving to God for what he had done for his brethren; and he was also overpowered with joy; and thus they all three had sunk to the earth.

15 அவர்கள் விழுந்து போவதை ராஜாவின் வேலையாட்கள் கண்டபோது, கர்த்தருடைய பயம் அவர்கள் மீதும் வந்ததால், அவர்களும் தேவனிடத்தில் கூக்குரலிடத் துவங்கினார்கள். ஏனெனில், அவர்கள்தான் இராஜ சமுகத்தில் நின்று, அம்மோனுடைய மகா வல்லமையைக் குறித்து, சாட்சி கொடுத்தவர்கள்.

Now, when the servants of the king had seen that they had fallen, they also began to cry unto God, for the fear of the Lord had come upon them also, for it was they who had stood before the king and testified unto him concerning the great power of Ammon.

16 அந்தப்படியே, அவர்கள் பூமியிலே விழுந்து போகும் மட்டும், கர்த்தருடைய நாமத்தை தங்கள் பலத்தோடு தொழுதார்கள். ஒரே ஒரு லாமானிய ஸ்திரீ மட்டும் விழாதிருந்தாள். ஆபிஷ் என்று பெயர்கொண்ட அந்த ஸ்திரீ, தன் தகப்பன் கண்ட ஒரு விசேஷமான தரிசனத்தினிமித்தம், அநேக வருஷங்களாய் கர்த்தருக்குள்ளே மனமாறியவளாய் இருந்து வந்தாள்.

And it came to pass that they did call on the name of the Lord, in their might, even until they had all fallen to the earth, save it were one of the Lamanitish women, whose name was Abish, she having been converted unto the Lord for many years, on account of a remarkable vision of her father—

17 இவ்விதமாய் கர்த்தருக்குளே மனமாறிய அவள், அதை யாருக்கும் அறிவியாதிருந்தாள். இப்பொழுது அவள், லாமோனின் வேலையாட்களும், தன் எஜமானியான ராஜஸ்திரீயும், ராஜாவும் பூமியிலே விழுந்து கிடப்பதையும், அம்மோன் சாஷ்டாங்கமாய் பூமியிலே விழுந்து கிடப்பதையும் கண்டபோது, இது தேவனின் வல்லமையினால் என்று தெரிந்துகொண்டாள்; நடந்ததென்ன என்று ஜனங்களுக்குச் சொல்லி அவர்கள் அந்த காட்சியைக் காண்பார்களெனில், அது அவர்களில் தேவ வல்லமையை விசுவாசிக்கச் செய்யும் தருணம் இதுவே என்று எண்ணி, அவள் வீடுதோறும் ஓடி அதை ஜனங்களுக்கு அறிவித்தாள்.

Thus, having been converted to the Lord, and never having made it known, therefore, when she saw that all the servants of Lamoni had fallen to the earth, and also her mistress, the queen, and the king, and Ammon lay prostrate upon the earth, she knew that it was the power of God; and supposing that this opportunity, by making known unto the people what had happened among them, that by beholding this scene it would cause them to believe in the power of God, therefore she ran forth from house to house, making it known unto the people.

18 ராஜாவின் வீட்டிலே அவர்கள் கூட ஆரம்பித்தார்கள். அங்கே திரள்கூட்டம் கூடி, ராஜாவும், ராஜஸ்திரீயும், அவர்களுடைய வேலையாட்களும், பூமியிலே சாஷ்டாங்கமாயும் மரித்தோரைப்போல கிடப்பதையும் கண்டு திகைத்துப்போனார்கள்; அவர்கள் அம்மோனையும் கண்டார்கள். இதோ, அவன் ஒரு நேபியன்.

And they began to assemble themselves together unto the house of the king. And there came a multitude, and to their astonishment, they beheld the king, and the queen, and their servants prostrate upon the earth, and they all lay there as though they were dead; and they also saw Ammon, and behold, he was a Nephite.

19 ஜனங்கள் தங்களுக்குள்ளே முறுமுறுக்கத் துவங்கினார்கள்; அவர்களில் சிலர் ராஜா தேசத்தில் அந்த நேபியனை இருக்கச் செய்ததினிமித்தம், இந்த மகா பொல்லாப்பு அவர்கள் மீது, அல்லது ராஜா மற்றும் அவன் வீட்டாரின் மீது வந்ததென்று சொன்னார்கள்.

And now the people began to murmur among themselves; some saying that it was a great evil that had come upon them, or upon the king and his house, because he had suffered that the Nephite should remain in the land.

20 மற்றவர்கள் அவர்களைக் கடிந்துகொண்டு, ராஜா சிபஸ் தண்ணீரண்டையில், தங்கள் மந்தைகளை சிதறடிக்கப்பண்ணின வேலையாட்களை வெட்டிப்போட்டதினிமித்தமே, இந்த பொல்லாப்பை தன் வீட்டார் மீது வரவழைத்துக்கொண்டான், என்று சொன்னார்கள்.

But others rebuked them, saying: The king hath brought this evil upon his house, because he slew his servants who had had their flocks scattered at the waters of Sebus.

21 சிபஸ் தண்ணீரண்டையில் நின்று, ராஜாவின்
மந்தைகளை சிதறடித்துப்போட்ட மனுஷரால்
அவர்கள் தூஷிக்கப்பட்டனர். ஏனெனில் அம்-
மோன் ராஜாவின் மந்தைகளைக் காக்கும்போது, சி-
பஸ் தண்ணீரண்டையில் அவர்களுடைய சகோத-
ரர் அநேகரைக் கொன்று போட்டதினிமித்தம்,
அவன் மேல் கோபம் கொண்டார்கள்.

And they were also rebuked by those men who had stood at the waters of Sebus and scattered the flocks which belonged to the king, for they were angry with Ammon because of the number which he had slain of their brethren at the waters of Sebus, while defending the flocks of the king.

22 இப்போது, அவர்களில் ஒருவனுடைய சகோத-
ரனை அம்மோன் பட்டயத்தினால் கொன்றுபோட்-
டிருந்தபடியால், அவன் அம்மோன் மேல் மிகவும்
ஆத்திரமடைந்து, தன் பட்டயத்தை உருவி அதை
அம்மோன்மீது போட்டு, கொல்லச் சென்றான்;
அவன் அடிக்க பட்டயத்தை உயர்த்தியபோது, கீழே
விழுந்து மடிந்து போனான்.

Now, one of them, whose brother had been slain with the sword of Ammon, being exceedingly angry with Ammon, drew his sword and went forth that he might let it fall upon Ammon, to slay him; and as he lifted the sword to smite him, behold, he fell dead.

23 அம்மோனைக் கொன்றுபோடுவது முடியாத காரி-
யம் என்று நாம் பார்க்கிறோம். ஏனெனில், கர்த்தர்
அவன் தகப்பனாகிய மோசியாவை நோக்கி: உன்
விசுவாசத்தினிமித்தம், நான் அவனைத் தப்புவிப்-
பேன் என்றதினாலே, மோசியா அவனை கர்த்தருக்-
கு ஒப்படைத்தான்.

Now we see that Ammon could not be slain, for the Lord had said unto Mosiah, his father: I will spare him, and it shall be unto him according to thy faith—therefore, Mosiah trusted him unto the Lord.

24 அந்தப்படியே, அம்மோனைக் கொல்ல பட்டயத்-
தை உயர்த்திய மனுஷன் கீழே விழுந்து மடிந்து
போனதைக் கூட்டம் கண்டபோது, அவர்கள் யாவ-
ரும் பயந்து, அவன் மீதும், அங்கே விழுந்து கிடந்த
ஒருவர் மீதும் தங்கள் கைகளைப் போட பயந்தார்-
கள்; அவர்கள் யாவரும் இக்காரியங்களை நடப்-
பித்த அந்த மகா வல்லமையையும், அவை எதைக்
குறிக்கின்றன என்றும், தங்களுக்குள்ளே மறுபடி-
யும் ஆச்சரியப்படத் தொடங்கினார்கள்.

And it came to pass that when the multitude beheld that the man had fallen dead, who lifted the sword to slay Ammon, fear came upon them all, and they durst not put forth their hands to touch him or any of those who had fallen; and they began to marvel again among themselves what could be the cause of this great power, or what all these things could mean.

25 அந்தப்படியே, அவர்களுள் அநேகர், அம்மோன்
அந்த மகா அரூபி என்றும், வேறு சிலர் அவன்
அந்த பெரிய ஆவியால் அனுப்பப்பட்டவன் என்-
றும், சொன்னார்கள்.

And it came to pass that there were many among them who said that Ammon was the Great Spirit, and others said he was sent by the Great Spirit;

26 மற்றவர்கள் இவர்களெல்லோரையும் தூஷித்து,
நம்மைத் துன்பப்படுத்த நேபியரிடமிருந்து அனுப்-
பப்பட்ட வேதாளம் என்றார்கள்.

But others rebuked them all, saying that he was a monster, who had been sent from the Nephites to torment them.

27 சிலர் அந்த அம்மோன் அவர்களுடைய அக்கிர-
மங்களினிமித்தம் அவர்களைத் துன்புறுத்த அந்த
மகா அரூபியாலே அனுப்பப்பட்டவனென்றும், நே-
பியர்களுடனே நித்தமும் அந்த மகா அரூபி து-
ணையிருந்து, அவர்களை எப்பொழுதும் இவர்க-
ளுடைய கைகளுக்குத் தப்புவித்ததென்றும், லா-
மானியரான அவர்களுடைய சகோதரரில் அநேகர்
இந்த பெரிய ஆவியாலே சங்கரிக்கப்பட்டனர் என்-
றும் சொன்னார்கள்.

And there were some who said that Ammon was sent by the Great Spirit to afflict them because of their iniquities; and that it was the Great Spirit that had always attended the Nephites, who had ever delivered them out of their hands; and they said that it was this Great Spirit who had destroyed so many of their brethren, the Lamanites.

28 இதைப்பற்றி அவர்களுக்குள்ளே மிகுந்த பிணக்-
கு மூண்டது. அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருக்-
கையில், திரளான கூட்டம் கூட காரணமாய் இருந்த
அந்த வேலைக்கார ஸ்திரீ அங்கே வந்தாள். அவள்
திரளானோருக்குள்ளே நடந்த பிணக்கைக் கண்ட-
போது மிகவும் விசனமடைந்து கண்ணீர் விட்டாள்.

And thus the contention began to be exceedingly sharp among them. And while they were thus contending, the woman servant who had caused the multitude to be gathered together came, and when she saw the contention which was among the multitude she was exceedingly sorrowful, even unto tears.

29 அந்தப்படியே, அவள் போய் ராஜஸ்திரீயை பூமி-
யிலிருந்து எழச் செய்ய, கைலாகு கொடுக்கப் போ-
னாள்; அவள் அவளுடைய கையைத் தொட்ட-
மாத்திரமே, அவள் காலூன்றி நின்று உரத்த சத்த-
மாய்ச் சொன்னதாவது: என்னை அந்த பயங்கர-
மான பாதாளத்திலிருந்து மீட்ட இயேசுவே ஸ்தோத்-
திரம். ஸ்தோத்திரிக்கப்படத்தக்க தேவனே, இந்த
ஜனத்தின் மேல் இரக்கமாயிரும்.

And it came to pass that she went and took the queen by the hand, that perhaps she might raise her from the ground; and as soon as she touched her hand she arose and stood upon her feet, and cried with a loud voice, saying: O blessed Jesus, who has saved me from an awful hell! O blessed God, have mercy on this people!

30 அவள் இதைச் சொன்னபோது, தன் கைகளைக்
கூப்பி, சந்தோஷத்தால் நிரப்பப்பட்டு, புரிந்து-
கொள்ள முடியாத அநேக வார்த்தைகளைப் பேசி-
னாள். இப்படிச் செய்த பின்பு, அவள் ராஜாவாகிய
லாமோனிக்கு கைலாகு கொடுத்தாள். இதோ,
அவன் எழுந்து காலூன்றி நின்றான்.

And when she had said this, she clasped her hands, being filled with joy, speaking many words which were not understood; and when she had done this, she took the king, Lamoni, by the hand, and behold he arose and stood upon his feet.

31 அவன் தன் ஜனத்திற்குள்ளே பிணக்கைக் கண்ட
உடனே, அவர்களைக் கடிந்துகொண்டு, அம்மோன்
வாயிலிருந்து தான் கேட்ட வார்த்தைகளை அவர்-
களிடம் பேசத் துவங்கினான்; அவனுடைய வார்த்-
தைகளைக் கேட்ட யாவரும் விசுவாசித்து, கர்த்த-
ருக்குள்ளாக மனம் மாறினார்கள்.

And he, immediately, seeing the contention among his people, went forth and began to rebuke them, and to teach them the words which he had heard from the mouth of Ammon; and as many as heard his words believed, and were converted unto the Lord.

32 அவர்களில் அநேகர் அவனுடைய வார்த்தைக-
ளைக் கேட்கவில்லை; அவர்கள் தங்கள் வழியே
போனார்கள்.

But there were many among them who would not hear his words; therefore they went their way.

33 அந்தப்படியே, அம்மோன் எழுந்தபோது,
அவனும், லாமோனியின் வேலையாட்கள் யாவ-
ரும் அவர்களுக்கு பணிவிடை செய்தார்கள். அவர்-
கள் அனைவரும் அதே காரியங்களை ஜனங்க-
ளுக்கு அறிவித்தார்கள். அவர்களுடைய இருதயங்-
கள் மாற்றம் பெற்றன; பொல்லாப்பை இனியும்
செய்ய வாஞ்சையில்லாதவர்களாயிருந்தார்கள்.

And it came to pass that when Ammon arose he also administered unto them, and also did all the servants of Lamoni; and they did all declare unto the people the selfsame thing—that their hearts had been changed; that they had no more desire to do evil.

34 இதோ, அநேகர் தாங்கள் தூதர்களைக் கண்டதா-
கவும், அவர்களுடனே சம்பாஷித்ததாகவும், ஜனங்-
களிடம் சொன்னார்கள்; இப்படியாய் அவர்கள் தே-
வனைப்பற்றிய காரியங்களையும், அவருடைய நீ-
தியையும் அவர்களுக்குச் சொன்னார்கள்.

And behold, many did declare unto the people that they had seen angels and had conversed with them; and thus they had told them things of God, and of his righteousness.

35 அந்தப்படியே, அநேகர் அவர்களுடைய வார்த்-
தைகளை விசுவாசித்தார்கள். விசுவாசித்தவரெல்-
லோருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது;
அவர்கள் நீதியுள்ள ஜனமானார்கள், அவர்கள்
தங்கள் மத்தியில் ஒரு சபையை ஸ்தாபித்தார்கள்.

And it came to pass that there were many that did believe in their words; and as many as did believe were baptized; and they became a righteous people, and they did establish a church among them.

36 இப்படியாய் கர்த்தருடைய கிரியை லாமானிய-
ருக்குள்ளே துவங்கியது; இவ்விதமாய் கர்த்தர் தம-
து ஆவியை அவர்கள் மீது ஊற்றத் துவங்கினார்;
மனந்திரும்பி அவருடைய நாமத்தை விசுவாசிக்-
கிற யாவர் மீதும் அவர் கரம் நீட்டப்பட்டிருக்கிறதை
நாம் காண்கிறோம்.

And thus the work of the Lord did commence among the Lamanites; thus the Lord did begin to pour out his Spirit upon them; and we see that his arm is extended to all people who will repent and believe on his name.

# ஆல்மா 20

1 அந்தப்படியே, அவர்கள் அத்தேசத்தில் சபையை
ஸ்தாபித்த பின்பு, லாமோனி ராஜா அம்மோனை
தன் தகப்பனுக்கு காண்பிக்கும்படி, அம்மோனும்
தன்னுடனே நேபியின் தேசத்திற்கு வரவேண்டு-
மென்று வாஞ்சித்தான்.
2 கர்த்தருடைய சத்தம் அம்மோனுக்கு உண்டாகி: நீ
நேபியின் தேசத்திற்கு போகாதிருப்பாயாக. ஏனெ-
னில் ராஜா உன் பிராணனை வாங்கத் தேடுவான்;
ஆனால் நீ மித்தோனிக்குப் போவாயாக; ஏனெனில்
இதோ உன் சகோதரராகிய ஆரோனும், மூலொக்கி-
யும், ஆம்மாவும் சிறையிலிருக்கிறார்கள் என்றார்.
3 இப்பொழுது, அந்தப்படியே, அம்மோன் இதைக்
கேட்டபோது அவன் லாமோனியை நோக்கி: இதோ
என் சகோதரனும், உடன் ஊழியரும் மித்தோனியில்
சிறையிலிருப்பதாலே நான் அவர்களை விடுவிக்-
கப் போகிறேன் என்றான்.
4 இப்பொழுது லாமோனி, அம்மோனை நோக்கி: நீர்
கர்த்தருடைய பெலத்தால் சகலத்தையும் செய்யக்-
கூடுமென, நான் அறிந்திருக்கிறேன். எனினும்
இதோ, நான் உம்மோடு கூட மித்தோனிக்கு வருகி-
றேன்: ஏனெனில் அந்தியோம்னோ என்று பெயர்-
கொண்ட மித்தோனி தேசத்து ராஜா என் சிநேகிதன்,
ஆதலால் நான் மித்தோனி தேசத்திற்குப் போய்
அந்த தேசத்து ராஜாவினிடத்தில் இச்சகமாய்ப் பேசு-
கிறேன். அவனும் உம் சகோதரரை சிறையிலிருந்து
வெளியேற்றுவான், என்றான். இப்பொழுது லா-
மோனி அவனை நோக்கி: உம் சகோதரர் சிறையிலி-
ருக்கிறார்கள் என்று உமக்குச் சொன்னது யார்,
என்று கேட்டான்.
5 அதற்கு அம்மோன் அவனை நோக்கி: தேவனே-
யன்றி ஒருவரும் எனக்குச் சொல்லவில்லை. அவர்
என்னிடத்தில், நீ போய் மித்தோனி தேசத்தில் சி-
றைப்பட்டிருக்கிற உன் சகோதரரை விடுவிப்பா-
யாக என்றார், என்றான்.
6 லாமோனி இவைகளைக் கேட்டபோது, தன் வே-
லையாட்கள், தன்னுடைய குதிரைகளையும், இர-
தங்களையும் ஆயத்தப்படுத்த வேண்டுமென்று,
கட்டளை பிறப்பித்தான்.
7 பின்னும் அவன் அம்மோனை நோக்கி: வாரும்,
நானும் உம்முடனே கூட மித்தோனி தேசத்திற்கு
வருகிறேன். ராஜா உம் சகோதரரை சிறையிலிருந்து
வெளியேற்றும்படிக்கு, அங்கே ராஜாவினிடத்திலே
பரிந்து பேசுகிறேன், என்றான்.
8 அந்தப்படியே, அம்மோனும் லாமோனியும் அங்கே
பிரயாணம் பண்ணுகையில், தேசம் யாவின் மீதும்
ராஜாவான லாமோனியின் தகப்பனை சந்தித்தார்-
கள்.

# Alma 20

And it came to pass that when they had established a church in that land, that king Lamoni desired that Ammon should go with him to the land of Nephi, that he might show him unto his father.

And the voice of the Lord came to Ammon, saying: Thou shalt not go up to the land of Nephi, for behold, the king will seek thy life; but thou shalt go to the land of Middoni; for behold, thy brother Aaron, and also Muloki and Ammah are in prison.

Now it came to pass that when Ammon had heard this, he said unto Lamoni: Behold, my brother and brethren are in prison at Middoni, and I go that I may deliver them.

Now Lamoni said unto Ammon: I know, in the strength of the Lord thou canst do all things. But behold, I will go with thee to the land of Middoni; for the king of the land of Middoni, whose name is Antiomno, is a friend unto me; therefore I go to the land of Middoni, that I may flatter the king of the land, and he will cast thy brethren out of prison. Now Lamoni said unto him: Who told thee that thy brethren were in prison?

And Ammon said unto him: No one hath told me, save it be God; and he said unto me—Go and deliver thy brethren, for they are in prison in the land of Middoni.

Now when Lamoni had heard this he caused that his servants should make ready his horses and his chariots.

And he said unto Ammon: Come, I will go with thee down to the land of Middoni, and there I will plead with the king that he will cast thy brethren out of prison.

And it came to pass that as Ammon and Lamoni were journeying thither, they met the father of Lamoni, who was king over all the land.

9 இதோ, லாமோனியின் தகப்பன் அவனை நோக்-
கி: நான் என் குமாரருக்கும், என் ஜனங்களுக்கும்
விருந்து படைத்த அந்த நன்நாளில் நீ ஏன் வரவில்-
லை என்றார்.

And behold, the father of Lamoni said unto him: Why did ye not come to the feast on that great day when I made a feast unto my sons, and unto my people?

10 அவர் பொய்யனின் பிள்ளைகளில் ஒருவனா-
கிய, இந்த நேபியனுடனே நீ எங்கே போய்க்கொண்-
டிருக்கிறாய் என்றும் கேட்டார்.

And he also said: Whither art thou going with this Nephite, who is one of the children of a liar?

11 அந்தப்படியே, லாமோனி அவனை கோபமடை-
யச் செய்ய பயந்து, தான் சென்றுகொண்டிருப்ப-
தெங்கே, என்று சொன்னான்.

And it came to pass that Lamoni rehearsed unto him whither he was going, for he feared to offend him.

12 அவன் ஆயத்தப்படுத்தியிருந்த விருந்திற்கு,
வராமல் தன் சொந்த ராஜ்யத்திலேயே தங்கிவிட்ட-
தின் காரணத்தையும், அவன் தன் தகப்பனிடம்
சொன்னான்.

And he also told him all the cause of his tarrying in his own kingdom, that he did not go unto his father to the feast which he had prepared.

13 லாமோனி இவைகள் யாவையும் அவனிடத்தில்
சொன்ன பின்பு, இதோ அவன் திகைத்துப்போகும்-
படியாய், அவன் தகப்பன் அவனிடத்தில் கோபம-
டைந்து, லாமோனி, பொய்யனின் குமாரராகிய
இந்த நேபியர்களை நீ விடுவிக்கப் போகிறாய்.
இதோ, அவன் நம் பிதாக்களை கொள்ளையடித்-
தான். இப்பொழுது அவனுடைய பிள்ளைகள் தங்-
களுடைய சூழ்ச்சிகளாலும் பொய்யுரைகளாலும்,
நம்மை வஞ்சித்து, நம்முடைய சம்பத்துக்களை
நம்மிடமிருந்து கொள்ளையடித்துப் போகவே,
நமக்குள்ளே வந்திருக்கிறார்கள், என்றான்.

And now when Lamoni had rehearsed unto him all these things, behold, to his astonishment, his father was angry with him, and said: Lamoni, thou art going to deliver these Nephites, who are sons of a liar. Behold, he robbed our fathers; and now his children are also come amongst us that they may, by their cunning and their lyings, deceive us, that they again may rob us of our property.

14 இப்பொழுது லாமோனியின் தகப்பன், அவன்
பட்டயத்தால் அம்மோனைக் கொன்று போட-
வேண்டுமென்று அவனுக்கு கட்டளையிட்டான்.
அவன் மித்தோனி தேசத்திற்குப் போகாமல், தன்னு-
டனே இஸ்மவேலின் தேசத்திற்குத் திரும்ப வேண்டு-
மென்றும், கட்டளையிட்டான்.

Now the father of Lamoni commanded him that he should slay Ammon with the sword. And he also commanded him that he should not go to the land of Middoni, but that he should return with him to the land of Ishmael.

15 லாமோனி அவனை நோக்கி: நான் அம்மோனைக்
கொல்லவும் மாட்டேன். இஸ்மவேலின் தேசத்திற்கு
திரும்பவும்மாட்டேன். ஆனால், அம்மோனின்
சகோதரர் நியாயமுள்ள மனுஷரென்றும், உண்-
மையுள்ள தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசிக-
ளென்றும், நான் அறிந்திருக்கிறபடியாலே, அவர்க-
ளை விடுவிக்கும்படி நான் மித்தோனி தேசத்திற்குப்
போகிறேன், என்றான்.

But Lamoni said unto him: I will not slay Ammon, neither will I return to the land of Ishmael, but I go to the land of Middoni that I may release the brethren of Ammon, for I know that they are just men and holy prophets of the true God.

16 இவ்வார்த்தைகளை அவன் தகப்பன் கேட்டபோ-
து அவனுடன் கோபம்கொண்டு, அவனை பூமியி-
லே அடித்துப் போடும்படிக்கு தன் பட்டயத்தை உரு-
வினான்.

Now when his father had heard these words, he was angry with him, and he drew his sword that he might smite him to the earth.

17 அம்மோன் முன்னால் வந்து அவனை நோக்கி:
இதோ, உம்முடைய குமாரனை கொலை செய்யாதி-
ருப்பீராக; ஆனாலும், இதோ, அவர் தன்னுடைய
பாவங்களிலிருந்து மனந்திரும்பியிருப்பதால்,
உம்மைவிட, அவர் மரிப்பதே நலம். நீர் இச்சமயத்-
தில் உம்முடைய கோபத்தில் மரித்துப் போவீராகில்,
உம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படக் கூடாமற்-
போகும்.

But Ammon stood forth and said unto him: Behold, thou shalt not slay thy son; nevertheless, it were better that he should fall than thee, for behold, he has repented of his sins; but if thou shouldst fall at this time, in thine anger, thy soul could not be saved.

18 பின்னும் நீர் பொறுமையாயிருப்பது அவசியம்; ஏனெனில் நீர் உம்முடைய குமாரனை கொலை செய்தால், அவர் கபடற்றவராயிருப்பதாலே அவருடைய இரத்தம் தேவனாகிய தன் கர்த்தரிடத்தில், பழி உம்மீது சுமரும்படியாய் பூமியிலிருந்து கதறும்; ஒருவேளை நீர் உம் ஆத்துமாவை இழக்க நேரிடும், என்றான்.

And again, it is expedient that thou shouldst forbear; for if thou shouldst slay thy son, he being an innocent man, his blood would cry from the ground to the Lord his God, for vengeance to come upon thee; and perhaps thou wouldst lose thy soul.

19 அம்மோன் இவ்வார்த்தைகளை அவனிடம் சொன்னபோது, அவன் பிரதியுத்தரமாக: நான் என் குமாரனை கொலை செய்தால், கபடற்றவனின் இரத்தத்தை சிந்துகிறேன், என்று அறிந்திருக்கிறேன்; ஏனெனில், நீயே அவனை அழித்துப்போட வகை தேடுகிறாய், என்றான்.

Now when Ammon had said these words unto him, he answered him, saying: I know that if I should slay my son, that I should shed innocent blood; for it is thou that hast sought to destroy him.

20 அவன் அம்மோனை வெட்டிப்போடும்படி தன் கையை நீட்டினான். ஆனால் அம்மோன் அவனுடைய குத்துக்களைத் தாங்கிக்கொண்டு, அவன் கையைப் பிரயோகிக்கக் கூடாதபடி, அடித்தான்.

And he stretched forth his hand to slay Ammon. But Ammon withstood his blows, and also smote his arm that he could not use it.

21 ராஜா அம்மோன் தன்னை கொலை செய்யக்கூடும் என்று கண்டபோது, தன் ஜீவனை தப்புவிக்கும்படி அம்மோனிடத்தில் மன்றாடினான்.

Now when the king saw that Ammon could slay him, he began to plead with Ammon that he would spare his life.

22 அம்மோன் தன் பட்டயத்தை உயர்த்தி அவனை நோக்கி: இதோ, என் சகோதரர் சிறையிலிருந்து வெளியேற்றப்பட, நீர் எனக்கு அனுமதி கொடாதிருந்தால், உம்மை அடிப்பேன் என்றான்.

But Ammon raised his sword, and said unto him: Behold, I will smite thee except thou wilt grant unto me that my brethren may be cast out of prison.

23 இப்போது, ராஜா தன் ஜீவனை இழக்க நேரிடும் என பயந்து: நீ என்னை தப்பவிட்டால், நீ கேட்கிற எதுவாயினும், என் ராஜ்யத்தின் பாதியையும்கூட, உனக்குக் கொடுப்பேன், என்றான்.

Now the king, fearing he should lose his life, said: If thou wilt spare me I will grant unto thee whatsoever thou wilt ask, even to half of the kingdom.

24 அம்மோன் தன் வாஞ்சைக்குத் தக்கதாக அந்த வயதான ராஜாவை வழிப்படுத்தியாயிற்று, என கண்டபோது, அவனை நோக்கி: நீர் என் சகோதரர் சிறையிலிருந்து வெளியேறவும், லாமோனி தன் ராஜ்யத்தை தானே வைத்துக்கொள்ளவும், நீர் அவரிடம் அதிருப்தி கொள்ளாமல், அவர் வாஞ்சிக்கிற யாதொரு காரியத்தையும் தானே தன் வாஞ்சைக்கேற்றபடி நிறைவேற்ற அனுமதியளித்தீரானால், உம்மைத் தப்புவிப்பேன்; இல்லாவிடில் நீர் பூமியிலே விழுந்து போகும்படி அடிப்பேன், என்றான்.

Now when Ammon saw that he had wrought upon the old king according to his desire, he said unto him: If thou wilt grant that my brethren may be cast out of prison, and also that Lamoni may retain his kingdom, and that ye be not displeased with him, but grant that he may do according to his own desires in whatsoever thing he thinketh, then will I spare thee; otherwise I will smite thee to the earth.

25 அம்மோன் இந்த வார்த்தைகளைச் சொன்னபோது, ராஜா தன் ஜீவனினிமித்தம் களிகூர்ந்தான்.

Now when Ammon had said these words, the king began to rejoice because of his life.

26 அவன் அம்மோன் தன்னை அழித்துப்போட மன-
தில்லாதிருந்ததையும், தன் குமாரனாகிய லாமோ-
னிமீது அவன் வைத்திருந்த அந்த மிகுதியான
அன்பையும் கண்டபோது, அவன் மிகவும் ஆச்சரி-
யப்பட்டு, நான் உன் சகோதரரை விடுதலை செய்ய-
வும், என் குமாரனாகிய லாமோனி தன் ராஜ்யத்தை
வைத்துக்கொள்ளவும் வேண்டுமென்பதே, உன்
வாஞ்சையாயிருப்பதால், இதோ, இச்சமயம் முதற்-
கொண்டு இனி என்றென்றுமாயும் என் குமாரன்
தன் ராஜ்யத்தை வைத்துக்கொள்வான் என நான்
உனக்கு உறுதியளிக்கிறேன்; நான் அவனை இனி
அதிகாரம் செய்வதில்லை.
27 உன் சகோதரரை சிறையிலிருந்து வெளியேற்-
றும்படியும், நீயும் உன் சகோதரரும் என் ராஜ்யத்தி-
னுள் வரவும், உனக்கு அனுமதியளிக்கிறேன். நான்
உன்னைக் காண மனதாயிருக்கிறேன் என்றான்;
ஏனெனில் அவன் பேசிய வார்த்தைகளினாலும்,
தன் குமாரனாகிய லாமோனி பேசிய வார்த்தைக-
ளாலும் ராஜா மிகுந்த ஆச்சரியமடைந்து, அவைக-
ளை அறிந்துகொள்ள வாஞ்சித்தான்.
28 அந்தப்படியே, அம்மோனும் லாமோனியும் தங்-
கள் பிரயாணத்தை மித்தோனி தேசத்தை நோக்கித்
துவங்கினார்கள். லாமோனிக்கு அந்த தேசத்தின்
ராஜாவினுடைய பார்வையில் தயவு கிடைத்ததி-
னிமித்தம், அம்மோனின் சகோதரர்கள் சிறையிலி-
ருந்து வெளிக்கொண்டுவரப்பட்டார்கள்.
29 அம்மோன் அவர்களைச் சந்தித்தபோது, மிகவும்
வேதனைப்பட்டான். ஏனெனில் அவர்கள் நிர்வா-
ணிகளாக, பலத்த கயிறுகளாலே அவர்கள் கட்டப்-
பட்டிருந்ததாலே, அவர்கள் சருமங்கள் காய்ப்பு
காய்த்திருந்தது. அவர்கள் பசியாலும், தாகத்தா-
லும், பலவிதமான உபத்திரவங்களாலும் கஷ்டப்-
பட்டார்கள்; ஆயினும் தங்கள் பாடுகள் மத்தியிலும்
பொறுமையாயிருந்தார்கள்.
30 அவர்கள், மிகுந்த கடினமுள்ளவர்களும்,
வணங்காக்கழுத்துள்ளவர்களாயும் இருக்கிற
ஜனங்களின் கைகளுக்குள் விழவேண்டியதாயிற்-
று; ஆகவே, அவர்கள் இவர்களுடைய வார்த்தைக-
ளுக்குச் செவிகொடுக்காமல், அவர்கள் மித்தோனி
தேசத்தை அடையும்வரைக்கும் தள்ளப்பட்டும்,
அடிக்கப்பட்டும், வீடுதோறும், இடந்தோறும், துரத்-
தப்பட்டும் வந்தனர்; அங்கே அவர்கள் பிடிக்கப்பட்-
டு, சிறையிலே அடைக்கப்பட்டு, பலத்த கயிறுகளா-
லே கட்டப்பட்டு, அநேக நாட்களாய், சிறையிலே
வைக்கப்பட்டிருந்தார்கள். பின்பு லாமோனியா-
லும் அம்மோனாலும் விடுவிக்கப்பட்டனர்.

And when he saw that Ammon had no desire to destroy him, and when he also saw the great love he had for his son Lamoni, he was astonished exceedingly, and said: Because this is all that thou hast desired, that I would release thy brethren, and suffer that my son Lamoni should retain his kingdom, behold, I will grant unto you that my son may retain his kingdom from this time and forever; and I will govern him no more—

And I will also grant unto thee that thy brethren may be cast out of prison, and thou and thy brethren may come unto me, in my kingdom; for I shall greatly desire to see thee. For the king was greatly astonished at the words which he had spoken, and also at the words which had been spoken by his son Lamoni, therefore he was desirous to learn them.

And it came to pass that Ammon and Lamoni proceeded on their journey towards the land of Middoni. And Lamoni found favor in the eyes of the king of the land; therefore the brethren of Ammon were brought forth out of prison.

And when Ammon did meet them he was exceedingly sorrowful, for behold they were naked, and their skins were worn exceedingly because of being bound with strong cords. And they also had suffered hunger, thirst, and all kinds of afflictions; nevertheless they were patient in all their sufferings.

And, as it happened, it was their lot to have fallen into the hands of a more hardened and a more stiffnecked people; therefore they would not hearken unto their words, and they had cast them out, and had smitten them, and had driven them from house to house, and from place to place, even until they had arrived in the land of Middoni; and there they were taken and cast into prison, and bound with strong cords, and kept in prison for many days, and were delivered by Lamoni and Ammon.

*ஆரோன், மூலொக்கி மற்றும் அவர்களுடைய சகோ-
தரர் லாமானியருக்கு பிரசங்கித்தலைப்பற்றிய விவ-
ரம்.*

## ஆல்மா 21

1 லாமானியரின் தேச எல்லையிலே அம்மோனும்
அவன் சகோதரரும் பிரிந்துசென்ற பின்பு, இதோ,
ஆரோன் தன் பிரயாணத்தை எருசலேம் என்று, லா-
மானியரால் அழைக்கப்பட்ட தேசத்தை நோக்கி
மேற்கொண்டான், அதை அவர்கள் தங்கள் தகப்-
பன்மார்களின் பூர்வீகதேசத்தின்படியே அழைத்-
தார்கள். அது மார்மனின் எல்லைகளை இணைத்-
து, தூரமாய் இருந்தது.
2 லாமானியரும் அமலேக்கியரும், அமுலோன்
ஜனத்தாரும், எருசலேம் என்று அழைக்கப்பட்ட
பெரிய பட்டணத்தைக் கட்டினார்கள்.
3 லாமானியர் தாங்களே போதுமானபடி கடினப்-
பட்டவர்களாயும், அமலேக்கியரும் அமுலோனிய-
ரும் மிகவும் கடினப்பட்டவர்களாயும் இருந்தார்-
கள். ஆகவே அவர்கள் லாமானியர்களின் இருத-
யங்களைக் கடினப்படுத்தி, அவர்களை துன்-
மார்க்கத்திலும் அருவருப்புகளிலும் பெலப்படச்
செய்தார்கள்.
4 அந்தப்படியே, ஆரோன் எருசலேம் பட்டணத்திற்-
கு வந்து, முதலாவதாய் அமலேக்கியருக்கு பிரசங்-
கிக்க ஆரம்பித்தான். அவன் அவர்களுடைய ஜெப
ஆலயங்களிலே அவர்களுக்குப் போதித்தான்.
ஏனெனில் அவர்கள் நிகோரின் முறைமையின்படி
ஜெப ஆலயங்களைக் கட்டினார்கள்; ஏனெனில்
அமலேக்கியரிலும், அமுலோனியரிலும் அநேகர் நி-
கோரின் முறைமையின்படியானவர்கள்.
5 ஆதலால், ஜனங்களுக்கு பிரசங்கிக்க ஆரோன்
அவர்களுடைய ஜெப ஆலயங்களில் பிரவேசித்து,
அவர்களிடத்தில் பேசிக்கொண்டிருக்கையில்,
இதோ, அங்கே ஒரு அமலேக்கியன் எழுந்து, அவனு-
டனே தர்க்கம்பண்ணி, நீ சாட்சி கொடுத்தது என்ன?
நீ தூதனைக் கண்டிருக்கிறாயோ? தூதர்கள் ஏன்
எங்களுக்கு தரிசனமாவதில்லை? இதோ, இந்த ஜன-
மும் உன் ஜனத்தாரைப்போல நல்லவர்கள் இல்-
லையா? என்றான்.
6 நாங்கள் மனந்திரும்பவில்லையெனில் அழிந்து-
போவோம், என்று நீ சொல்லுகிறாய். நீ எங்களு-
டைய எண்ணத்தையும் எங்கள் இருதயத்தையும்
அறிந்ததெப்படி? மனந்திரும்ப எங்களுக்கு கார-
ணம் இருந்ததென எப்படி அறிவாய்? நாங்கள் நீதி-
யுள்ள ஜனம் இல்லை என்று எப்படி அறிவாய்?
இதோ நாங்கள் பரிசுத்த ஸ்தலத்தைக் கட்டினோம்.
தேவனைத் தொழுதுகொள்ள ஏகமாய்க் கூடுகி-
றோம். தேவன் மனுஷர் யாவரையும் இரட்சிப்பா-
ரென்று விசுவாசிக்கிறோமென்று சொன்னான்.

*An account of the preaching of Aaron, and Muloki, and their brethren, to the Lamanites.*

## Alma 21

Now when Ammon and his brethren separated themselves in the borders of the land of the Lamanites, behold Aaron took his journey towards the land which was called by the Lamanites, Jerusalem, calling it after the land of their fathers' nativity; and it was away joining the borders of Mormon.

Now the Lamanites and the Amalekites and the people of Amulon had built a great city, which was called Jerusalem.

Now the Lamanites of themselves were sufficiently hardened, but the Amalekites and the Amulonites were still harder; therefore they did cause the Lamanites that they should harden their hearts, that they should wax strong in wickedness and their abominations.

And it came to pass that Aaron came to the city of Jerusalem, and first began to preach to the Amalekites. And he began to preach to them in their synagogues, for they had built synagogues after the order of the Nehors; for many of the Amalekites and the Amulonites were after the order of the Nehors.

Therefore, as Aaron entered into one of their synagogues to preach unto the people, and as he was speaking unto them, behold there arose an Amalekite and began to contend with him, saying: What is that thou hast testified? Hast thou seen an angel? Why do not angels appear unto us? Behold are not this people as good as thy people?

Thou also sayest, except we repent we shall perish. How knowest thou the thought and intent of our hearts? How knowest thou that we have cause to repent? How knowest thou that we are not a righteous people? Behold, we have built sanctuaries, and we do assemble ourselves together to worship God. We do believe that God will save all men.

7 ஆரோன் அவனை நோக்கி: தேவகுமாரன் மனுக்-
குலத்தை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்-
டுக்கொள்ள வருவாரென்று விசுவாசிக்கிறாயா
என்று கேட்டான்.

Now Aaron said unto him: Believest thou that the Son of God shall come to redeem mankind from their sins?

8 அதற்கு அந்த மனுஷன் அவனை நோக்கி: நீ அப்-
பட்டிப்பட்ட ஒரு காரியத்தை அறிந்திருக்கிறாய்
என்று நாங்கள் நம்பவில்லை. அப்படிப்பட்ட புத்தி-
யீன பாரம்பரியங்களிலே நாங்கள் விசுவாசிக்கிற-
தில்லை. வரவிருக்கிறவைகளைக் குறித்து நீ அறி-
வாய் எனவோ, உன் பிதாக்களும், எங்கள் பிதாக்க-
ளும் அவர்கள் பேசியவைபற்றி அறிந்திருந்தார்-
கள் என்றும், நாங்கள் விசுவாசிக்கிறதில்லை, என்-
று சொன்னான்.

And the man said unto him: We do not believe that thou knowest any such thing. We do not believe in these foolish traditions. We do not believe that thou knowest of things to come, neither do we believe that thy fathers and also that our fathers did know concerning the things which they spake, of that which is to come.

9 இப்பொழுது ஆரோன், கிறிஸ்துவினுடைய வரு-
கையைப்பற்றியும், மரித்தோரின் உயிர்த்தெழுத-
லைப்பற்றியும், கிறிஸ்துவினுடைய மரணமும், பா-
டுகளினாலுமேயன்றி, மனுக்குலத்திற்கு மீட்பில்-
லை என்றும், அவருடைய இரத்தத்தின் பாவநி-
வர்த்தியைக் குறித்த வேத வாக்கியங்களை அவர்-
களுக்கு விவரிக்கத் துவங்கினான்.

Now Aaron began to open the scriptures unto them concerning the coming of Christ, and also concerning the resurrection of the dead, and that there could be no redemption for mankind save it were through the death and sufferings of Christ, and the atonement of his blood.

10 அந்தப்படியே, இவைகளைக் குறித்து அவர்க-
ளுக்கு வியாக்கியானம் பண்ணுகையில், அவர்-
கள் இவன்மேல் கோபம்கொண்டு, அவனைப் பரி-
யாசம் பண்ணினார்கள்; அவன் பேசின வார்த்தை-
களைக் கேட்க அவர்கள் வாஞ்சிக்கவில்லை.

And it came to pass as he began to expound these things unto them they were angry with him, and began to mock him; and they would not hear the words which he spake.

11 ஆதலால் அவன் தன் வார்த்தைகளை அவர்கள்
கேட்க மாட்டார்கள் என்று கண்டு, அவர்களுடைய
ஜெப ஆலயங்களைவிட்டு புறப்பட்டு, அனி-அந்தி
என்று அழைக்கப்பட்ட ஒரு கிராமத்திற்கு வந்-
தான். அங்கே அவர்களுக்கு மூலொக்கியும், ஆம்-
மாவும், அவன் சகோதரரும் வார்த்தையைப் பிரசங்-
கிப்பதைக் கண்டான். அவர்கள் வார்த்தையைப்-
பற்றி அநேகருடன் தர்க்கம் பண்ணினார்கள்.

Therefore, when he saw that they would not hear his words, he departed out of their synagogue, and came over to a village which was called Ani-Anti, and there he found Muloki preaching the word unto them; and also Ammah and his brethren. And they contended with many about the word.

12 அந்தப்படியே, ஜனங்கள் தங்கள் இருதயங்களை
கடினப்படுத்துவார்கள், என அவர்கள் கண்டதால்,
அவர்கள் புறப்பட்டு மித்தோனி தேசத்திற்கு வந்-
தார்கள். அவர்கள் அநேகருக்கு வார்த்தையைப் பி-
ரசங்கித்தார்கள். அவர்கள் போதித்த வார்த்தைக-
ளை சிலர் விசுவாசித்தார்கள்.

And it came to pass that they saw that the people would harden their hearts, therefore they departed and came over into the land of Middoni. And they did preach the word unto many, and few believed on the words which they taught.

13 இருப்பினும், ஆரோனும் அவன் சகோதரரில் சில-
ரும் பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.
மீந்திருந்தவர்கள் மித்தோனி தேசத்தைவிட்டு ஓடி
சுற்றுப்புறமுள்ள பகுதிகளுக்கு ஓடிப்போனார்கள்.

Nevertheless, Aaron and a certain number of his brethren were taken and cast into prison, and the remainder of them fled out of the land of Middoni unto the regions round about.

14 சிறையில் தள்ளப்பட்டவர்கள் அநேக பாடுகள்
பட்டார்கள். அவர்கள் லாமோனி மற்றும் அம்மோ-
னின் கரத்தால் தப்புவிக்கப்பட்டு, போஷிக்கப்பட்-
டு, வஸ்திரம் உடுத்தப்பட்டார்கள்.

And those who were cast into prison suffered many things, and they were delivered by the hand of Lamoni and Ammon, and they were fed and clothed.

15 மறுபடியும் அவர்கள் வசனத்தை அறிவிக்கப்போனார்கள். இவ்விதமாய் முதல் முறையாய் அவர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். இவ்விதமாய் அவர்கள் பாடுகளையும் அனுபவித்திருந்தார்கள்.

And they went forth again to declare the word, and thus they were delivered for the first time out of prison; and thus they had suffered.

16 அவர்கள் கர்த்தரின் ஆவியால் நடத்தப்பட்டு எவ்விடத்திற்கும்போய், தாங்கள் அனுமதிக்கப்பட்ட அமுலேக்கியரின் எல்லா ஜெப ஆலயங்களிலும், அல்லது லாமானியரின் சகல ஆலயங்களிலும் தேவ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.

And they went forth whithersoever they were led by the Spirit of the Lord, preaching the word of God in every synagogue of the Amalekites, or in every assembly of the Lamanites where they could be admitted.

17 அந்தப்படியே, சத்தியத்தைப்பற்றிய ஞானத்திற்கு அநேகரைக் கொண்டுவருமளவிற்கு, கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கத் துவங்கினார்; ஆம், அநேகரை அவர்கள் பாவங்களைக் குறித்தும், அவர்களுடைய தகப்பன்மார்களின் தவறான பாரம்பரியத்தைக் குறித்தும், அவர்கள் உணரப்பண்ணினார்கள்.

And it came to pass that the Lord began to bless them, insomuch that they brought many to the knowledge of the truth; yea, they did convince many of their sins, and of the traditions of their fathers, which were not correct.

18 அந்தப்படியே, அம்மோனும், லாமோனியும், மித்தோனி தேசத்தை விட்டு, தங்களுடைய சுதந்தர தேசமாகிய இஸ்மவேலின் தேசத்திற்குத் திரும்பினார்கள்.

And it came to pass that Ammon and Lamoni returned from the land of Middoni to the land of Ishmael, which was the land of their inheritance.

19 லாமோனி ராஜா, அம்மோன் தனக்கு ஊழியக்காரனாய் இருக்கவோ, அல்லது தனக்கு பணிவிடை செய்யவோ அனுமதிக்கவில்லை.

And king Lamoni would not suffer that Ammon should serve him, or be his servant.

20 அவன் இஸ்மவேல் தேசத்திலே ஜெப வீடுகள் கட்டப்படும்படி செய்தான்; அவன் தன் ஜனம், அல்லது தன் ஆளுகையின் கீழ் இருந்த ஜனத்தை ஏகமாய்க் கூடிவரச்செய்தான்.

But he caused that there should be synagogues built in the land of Ishmael; and he caused that his people, or the people who were under his reign, should assemble themselves together.

21 அவன் அவர்களைக் குறித்து களிகூர்ந்து, அவர்களுக்கு அநேக காரியங்களைப் போதித்தான். அவன் அவர்களிடத்தில், அவர்கள் தனக்கு கீழ்ப்பட்ட ஜனமென்றும், அவர்கள் சுயாதீனர்களென்றும், இஸ்மவேலின் தேசத்திலும், அதைச் சுற்றியுள்ள தேசமனைத்திலுமுள்ள ஜனங்கள்மீது, தான் ராஜரீகம்பண்ணும்படி ராஜாவாகிய தன் தகப்பன் தனக்கு அருளியதாலே, தன் தகப்பனின் ஒடுக்கத்திற்கு ஆளாகாமல், சுயாதீனர்களாயிருக்கிறார்களென்று அறிவித்தான்.

And he did rejoice over them, and he did teach them many things. And he did also declare unto them that they were a people who were under him, and that they were a free people, that they were free from the oppressions of the king, his father; for that his father had granted unto him that he might reign over the people who were in the land of Ishmael, and in all the land round about.

22 அவர்கள் லாமோனி ராஜா ஆளுகை செய்யும் தேசத்திலுள்ள எவ்விடத்திலும், தங்களுடைய விருப்பதிற்கேற்ப தேவனாகிய, தங்கள் கர்த்தரைத் தொழுதுகொள்ள சுதந்திரம் அவர்களுக்கு உண்டாயிருக்கிறதென்றும், அவர்களுக்கு அறிவித்தான்.

And he also declared unto them that they might have the liberty of worshiping the Lord their God according to their desires, in whatsoever place they were in, if it were in the land which was under the reign of king Lamoni.

23 லாமோனி ராஜாவினுடைய ஜனத்திற்கு அம்மோன் பிரசங்கித்தான், அந்தப்படியே, அவன் நீதிக்கேற்ற சகல காரியங்களையும் அவர்களுக்குப் போதித்தான். அவன் சகல கருத்துடனே அவர்களுக்கு அனுதினமும் புத்தி சென்னான். அவர்கள் அவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்தார்கள். அவர்கள் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார்கள்.

And Ammon did preach unto the people of king Lamoni; and it came to pass that he did teach them all things concerning things pertaining to righteousness. And he did exhort them daily, with all diligence; and they gave heed unto his word, and they were zealous for keeping the commandments of God.

# ஆல்மா 22

1 இப்படியாக அம்மோன் லாமோனியின் ஜனங்க-
ளுக்கு இடைவிடாமல் போதித்துக் கொண்டிருந்-
தான்; இப்பொழுது நாம் ஆரோனையும் அவனு-
டைய சகோதரரையும் பற்றிய விவரத்துக்குத் தி-
ரும்புவோமாக. அவன் மித்தோனி தேசத்திலிருந்து
புறப்பட்ட பின்பு, அவன் நேபியின் தேசத்திற்குள்-
ளாக, இஸ்மவேல் தேசத்தைத் தவிர, எல்லா தேசத்-
திற்கும் ராஜாவான, லாமோனியின் தகப்பனுடைய
வீட்டினுள் ஆவியானவராலே வழிநடத்தப்பட்-
டான்.
2 அந்தப்படியே, அவன் தன்னுடைய சகோதரரு-
டன், ராஜாவினுடைய அரண்மனையினுள் பிரவே-
சித்து, ராஜாவிற்கு முன்பாகப் பணிந்து அவனை
நோக்கி: இதோ, ராஜாவே, நாங்கள், நீர் சிறையிலி-
ருந்து விடுவித்த அம்மோனின் சகோதரர், என்-
றான்.
3 இப்பொழுதும் ராஜாவே, நீர் எங்களுடைய ஜீவன்-
களைத் தப்புவித்தால், நாங்கள் உம்முடைய வே-
லைக்காரராயிருப்போம் என்றார்கள். ராஜா அவர்-
களை நோக்கி: எழுந்திருங்கள், நான் உங்களுக்கு
ஜீவனளிப்பேன். நீங்கள் என் வேலைக்காரராயி-
ருக்க அனுமதியேன்; அதனால் எனக்கு நீங்கள் உத-
விசெய்ய வேண்டுமென வேண்டுகிறேன் ஏனெ-
னில் உங்களுடைய சகோதரனாகிய அம்மோனின்
தயாளத்துவத்தினாலும், அவனது வார்த்தையின்
மகத்துவத்தினிமித்தமும், என் மனம் எப்படியோ
கலங்கிப்போனது. அவன் மித்தோனியிலிருந்து
உங்களுடனே கூட வராததின் காரணத்தை அறிய,
நான் வாஞ்சிக்கிறேன், என்றான்.
4 ஆரோன் ராஜாவை நோக்கி: இதோ, கர்த்தருடைய
ஆவியானவர் அவனை மற்றொரு மார்க்கமாய்
அழைத்துப் போனார்; அவன் லாமோனியின்
ஜனங்களுக்குப் போதிக்கும்படி இஸ்மவேல் தேசத்-
திற்குப் போயிருக்கிறான், என்றான்.
5 அதற்கு ராஜா அவனை நோக்கி: கர்த்தருடைய
ஆவியானவரைக் குறித்து நீர் சொன்னதென்ன?
இதோ, இக்காரியமே என்னைக் கலக்கமடையச்
செய்கிறது, என்றான்.
6 நீர் மனந்திரும்பினால் இரட்சிக்கப்படுவீர், நீர்
மனந்திரும்பாமற்போனால் கடைசி நாளிலே தள்-
ளுண்டு போவீர், என்று அம்மோன் சொன்னதன்
அர்த்தமென்ன? என்று கேட்டான்.

# Alma 22

Now, as Ammon was thus teaching the people of Lamoni continually, we will return to the account of Aaron and his brethren; for after he departed from the land of Middoni he was led by the Spirit to the land of Nephi, even to the house of the king which was over all the land save it were the land of Ishmael; and he was the father of Lamoni.

And it came to pass that he went in unto him into the king's palace, with his brethren, and bowed himself before the king, and said unto him: Behold, O king, we are the brethren of Ammon, whom thou hast delivered out of prison.

And now, O king, if thou wilt spare our lives, we will be thy servants. And the king said unto them: Arise, for I will grant unto you your lives, and I will not suffer that ye shall be my servants; but I will insist that ye shall administer unto me; for I have been somewhat troubled in mind because of the generosity and the greatness of the words of thy brother Ammon; and I desire to know the cause why he has not come up out of Middoni with thee.

And Aaron said unto the king: Behold, the Spirit of the Lord has called him another way; he has gone to the land of Ishmael, to teach the people of Lamoni.

Now the king said unto them: What is this that ye have said concerning the Spirit of the Lord? Behold, this is the thing which doth trouble me.

And also, what is this that Ammon said—If ye will repent ye shall be saved, and if ye will not repent, ye shall be cast off at the last day?

7 ஆரோன் அவனை நோக்கி, அவனுக்குப் பிரதி-
யுத்தரமாக: நீர் தேவன் ஒருவர் உண்டென்று விசு-
வாசிக்கிறீரா? அதற்கு ராஜா, தேவன் உண்டென்று
அமலேக்கியர் சொல்லியிருப்பதை நான் அறி-
வேன். அவர்கள் ஏகமாய்க் கூடி, அவரைத் தொழுது
கொள்ளும்படிக்கு, அவர்கள் பரிசுத்த ஸ்தலங்க-
ளைக் கட்ட நான் அவர்களுக்கு அனுமதி வழங்கி-
னேன். இப்பொழுது தேவன் உண்டென்று நீ சொல்-
லுவாயானால், இதோ நான் விசுவாசிப்பேன், என்-
றான்.

And Aaron answered him and said unto him: Believest thou that there is a God? And the king said: I know that the Amalekites say that there is a God, and I have granted unto them that they should build sanctuaries, that they may assemble themselves together to worship him. And if now thou sayest there is a God, behold I will believe.

8 இப்பொழுது ஆரோன் இதைக் கேட்டபோது,
அவன் இருதயம் களிகூரத்துவங்கி, அவன் சொன்-
னதாவது: இதோ ராஜாவே, நிச்சயமாகவே நீர் ஜீவிக்-
கிறதைப்போல, தேவன் ஒருவர் உண்டு, என்றான்.

And now when Aaron heard this, his heart began to rejoice, and he said: Behold, assuredly as thou livest, O king, there is a God.

9 அதற்கு ராஜா, எருசலேம் தேசத்திலிருந்து நம்மு-
டைய தகப்பன்மார்களை வழிநடத்தி வந்த அந்த
மகா அரூபிதான் தேவனா? என்று கேட்டான்.

And the king said: Is God that Great Spirit that brought our fathers out of the land of Jerusalem?

10 பின்பு ஆரோன் அவனை நோக்கி: ஆம், அவரே
அந்த மகா அரூபி. அவர் வானத்திலும் பூமியிலும்,
சகலத்தையும் சிருஷ்டித்தார். இதை நீர் விசுவாசிக்-
கிறீரா என்றான்.

And Aaron said unto him: Yea, he is that Great Spirit, and he created all things both in heaven and in earth. Believest thou this?

11 அதற்கு அவன்: ஆம், அந்த மகா அரூபிதான் யா-
வையும் படைத்தார், என்று நான் விசுவாசிக்கி-
றேன். இவை எல்லாவற்றையும் குறித்தும் நீ எனக்-
கு சொல்லவேண்டுமென்று மனதாயிருக்கிறேன்.
நான் உன் வார்த்தைகளை விசுவாசிப்பேன், என்-
றான்.

And he said: Yea, I believe that the Great Spirit created all things, and I desire that ye should tell me concerning all these things, and I will believe thy words.

12 அந்தப்படியே, ராஜா தன் வார்த்தைகளை விசு-
வாசிக்க மனதாயிருக்கிறான், என்று ஆரோன்
கண்டபோது, அவன் ஆதாம் சிருஷ்டிப்பு தொடங்-
கி, தேவன் எப்படி மனுஷனைத் தம்முடைய
சொந்த சாயலில் படைத்தார் என்றும், தேவன்
அவனுக்கு கட்டளைகளைக் கொடுத்தார் என்றும்,
மீறுதலினிமித்தம் மனுஷன் வீழ்ந்துபோனான்
என்கிற, வேத வாக்கியங்களை வாசித்தான்.

And it came to pass that when Aaron saw that the king would believe his words, he began from the creation of Adam, reading the scriptures unto the king—how God created man after his own image, and that God gave him commandments, and that because of transgression, man had fallen.

13 ஆரோன் அவனிடத்தில் ஆதாமின் சிருஷ்டிப்பு
முதலான வேத வாக்கியங்களை விவரித்துக்
காண்பித்து, மனுஷனுடைய வீழ்ச்சியையும்,
அவர்களின் மாம்சமான நிலைமையையும், கி-
றிஸ்துவின் நாமத்தை விசுவாசிக்கிற யாவருக்கா-
வும், உலக அஸ்திபாரம் முதலாய், அவர் மூலமாக
ஆயத்தப்படுத்தப்பட்ட மீட்பின் திட்டத்தைக் குறித்-
தும், சொன்னான்.

And Aaron did expound unto him the scriptures from the creation of Adam, laying the fall of man before him, and their carnal state and also the plan of redemption, which was prepared from the foundation of the world, through Christ, for all whosoever would believe on his name.

14 மனுஷன் வீழ்ந்துபோனதினிமித்தம் அவன் தனக்கென்று எதையுமே ஆதாயப்படுத்த முடியவில்லை, ஆனால் அவர்களுடைய பாவங்களுக்காக கிறிஸ்துவினுடைய பாடுகளும், மரணமும், விசுவாசம், மனந்திரும்புதல் முதலியவைகளின் மூலமாய் பாவநிவர்த்தி செய்கிறது என்றும், கல்லறை ஜெயம் கொள்ளாமலும், மகிமையின் நம்பிக்கைகளில் அவர் மரணத்தின் வேதனை விழுங்கப்பட்டுப்போகும்படியும், மரணத்தின் கட்டுக்களை அறுத்துப் போடுகிறார் என்றும், ஆரோன் இக்காரியங்கள் யாவையும் ராஜாவுக்கு விளக்கமாய் சொன்னான்.

And since man had fallen he could not merit anything of himself; but the sufferings and death of Christ atone for their sins, through faith and repentance, and so forth; and that he breaketh the bands of death, that the grave shall have no victory, and that the sting of death should be swallowed up in the hopes of glory; and Aaron did expound all these things unto the king.

15 அந்தப்படியே, ஆரோன் இக்காரியங்களை அவனுக்கு விவரித்துச் சொன்ன பின்பு, ராஜா சொன்னதாவது: நீர் பேசின இந்த நித்திய ஜீவனை நான் பெறும்படிக்கு நான் செய்யவேண்டியதென்ன? ஆம், நான் கடைசி நாளின்போது, புறம்பே தள்ளப்பட்டுப் போகாதபடிக்கும், சந்தோஷத்தால் நிறைக்கப்படும்பொருட்டும், நான் தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டு, இந்த பொல்லாத ஆவி என் மார்பிலிருந்து வேரோடே பிடுங்கப்பட்டு, அவருடைய ஆவியைப் பெற நான் செய்யவேண்டியதென்ன? அவன் இதோ, நான் இந்த மிகுந்த சந்தோஷத்தைப் பெற்றுக்கொள்ள நான் வைத்திருக்கிற யாவையும் விட்டு விடுகிறேன். ஆம், என் ராஜ்யத்தையும் துறப்பேன் என்றான்.

And it came to pass that after Aaron had expounded these things unto him, the king said: What shall I do that I may have this eternal life of which thou hast spoken? Yea, what shall I do that I may be born of God, having this wicked spirit rooted out of my breast, and receive his Spirit, that I may be filled with joy, that I may not be cast off at the last day? Behold, said he, I will give up all that I possess, yea, I will forsake my kingdom, that I may receive this great joy.

16 ஆரோன் அவனை நோக்கி: நீர் இக்காரியத்தை வாஞ்சிக்கிறதுண்டானால், நீர் தேவனுக்கு முன்பாக பணிந்துகொண்டால், ஆம், உம் பாவங்கள் அனைத்திலுமிருந்து மனந்திரும்பி நீர் பெற்றுக்கொள்வீர் என்று நம்பி, தேவனுக்கு முன்பாகப் பணிந்து, விசுவாசத்தோடு அவருடைய நாமத்தில் வேண்டிக்கொள்வீரானால், நீர் விரும்புகிற நம்பிக்கையை பெற்றுக்கொள்வீர், என்றான்.

But Aaron said unto him: If thou desirest this thing, if thou wilt bow down before God, yea, if thou wilt repent of all thy sins, and will bow down before God, and call on his name in faith, believing that ye shall receive, then shalt thou receive the hope which thou desirest.

17 அந்தப்படியே, ஆரோன் இவ்வார்த்தைகளைச் சொன்னபோது, ராஜா முழங்கால்படியிட்டு கர்த்தருக்கு முன்பாகப் பணிந்துகொண்டான். ஆம், அவன் பூமியில் சாஷ்டாங்கமாய் விழுந்து உரத்த சத்தமாய்:

And it came to pass that when Aaron had said these words, the king did bow down before the Lord, upon his knees; yea, even he did prostrate himself upon the earth, and cried mightily, saying:

18 தேவனே, ஆரோன், தேவன் ஒருவர் உண்டென்று என்னிடத்தில் சொன்னான்; தேவன் என்று ஒருவர் உண்டென்றால், நீரே தேவனாய் இருந்தால், நீர் உம்மை எனக்குத் தெரியப்பண்ணுவீரா. நான் உம்மை அறிந்து அதினிமித்தம் மரித்தோரிலிருந்து எழுந்து, கடைசி நாளில் இரட்சிக்கப்பட என் பாவங்கள் அனைத்தையும் நான் விட்டுவிடுவேன் என்றான். இப்பொழுது ராஜா இவ்வார்த்தைகளைச் சொன்னபோது, அவன் அடிக்கப்பட்டு, மரித்தவனைப் போலானான்.

O God, Aaron hath told me that there is a God; and if there is a God, and if thou art God, wilt thou make thyself known unto me, and I will give away all my sins to know thee, and that I may be raised from the dead, and be saved at the last day. And now when the king had said these words, he was struck as if he were dead.

19 அந்தப்படியே, அவன் வேலையாட்கள் ஓடிப்-
போய், ராஜாவிற்கு சம்பவித்த அனைத்தையும் ரா-
ஜஸ்திரீயினிடத்தில் சொன்னார்கள். அவள் ராஜா-
வின் அருகே வந்து, அவன் மரித்தவன்போல் கிடப்-
பதையும், தாங்களே அவன் விழுந்து கிடப்பதற்கு
காரணமானோர் போல ஆரோனும் அவன் சகோதர-
ரும் நிற்பதைக் கண்டு, அவர்களிடத்தில் கோபம்-
கொண்டு அவர்களைப் பிடித்துக் கொன்றுபோட-
டும்படி, தன் வேலையாட்களிடத்தில் அல்லது ரா-
ஜாவின் வேலையாட்களிடம் கட்டளையிட்டாள்.

And it came to pass that his servants ran and told the queen all that had happened unto the king. And she came in unto the king; and when she saw him lay as if he were dead, and also Aaron and his brethren standing as though they had been the cause of his fall, she was angry with them, and commanded that her servants, or the servants of the king, should take them and slay them.

20 இப்பொழுதும் ராஜா விழுந்து போனதன் முகாந்-
திரத்தை வேலையாட்கள் கண்டதினிமித்தம்
அவர்கள் ஆரோன் மேலும், அவனுடைய சகோதர-
ரின் மேலும், தங்கள் கைகளைப் போடாமல் ரா-
ஜஸ்திரீயினிடத்தில்: இதோ, அவர்களில் ஒருவன்
எங்கள் எல்லோரிலும் பலவானாயிருக்கக் கண்-
டும், நாங்கள் இம்மனுஷரைக் கொன்றுபோட ஏன்
கட்டளையிடுகிறீர்? ஆகவே நாங்கள் அவர்கள்
முன் வீழ்ந்து போவோம், என்றார்கள்.

Now the servants had seen the cause of the king's fall, therefore they durst not lay their hands on Aaron and his brethren; and they pled with the queen saying: Why commandest thou that we should slay these men, when behold one of them is mightier than us all? Therefore we shall fall before them.

21 ராஜஸ்திரீ, வேலையாட்கள் பயப்படுகிறதைக்
கண்டபோது, தனக்கு பொல்லாப்பு நேரிடுமோ என்-
று அவளும் மிகுதியாய்ப் பயந்தாள். ஆரோனையும்
அவன் சகோதரரையும் கொன்றுபோட, போய்
ஜனங்களை அழைத்துவரும்படி தன் வேலையாட்-
களுக்குக் கட்டளையிட்டாள்.

Now when the queen saw the fear of the servants she also began to fear exceedingly, lest there should some evil come upon her. And she commanded her servants that they should go and call the people, that they might slay Aaron and his brethren.

22 இப்பொழுது ராஜஸ்திரீயின் உறுதியான தீர்மா-
னத்தைக் கண்டபோது, ஆரோன் ஜனங்களுடைய
இருதயங்களின் கடினத்தை அறிந்தவனாய், திர-
ளானோர் ஏகமாய்க் கூடினால், அவர்களுக்குள்ளே
பிணக்கும், குழப்பமும் ஏற்படும் எனப்பயந்து, தன்
கையை நீட்டி, தரையிலிருந்து ராஜாவை தூக்கி-
விட்டு, அவனை நோக்கி: எழுந்திரும், என்றான்.
அவன் தன் பெலத்தைப் பெற்று காலூன்றி நின்-
றான்.

Now when Aaron saw the determination of the queen, he, also knowing the hardness of the hearts of the people, feared lest that a multitude should assemble themselves together, and there should be a great contention and a disturbance among them; therefore he put forth his hand and raised the king from the earth, and said unto him: Stand. And he stood upon his feet, receiving his strength.

23 இப்பொழுது இது ராஜஸ்திரீ மற்றும் அநேக வே-
லையாட்கள் முன்னிலையில் நடத்தப்பட்டது.
அவர்கள் இதைக் கண்டபோது வெகுவாய் ஆச்சரி-
யப்பட்டு பயப்படத் தொடங்கினார்கள். ராஜாவோ
எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்யத்
துவங்கினான். அவன் வீட்டார் அனைவரும் கர்த்-
தருக்குள்ளாக மனம் மாறும்படிக்கு, அவன் அவர்-
களுக்கு ஊழியம் செய்தான்.

Now this was done in the presence of the queen and many of the servants. And when they saw it they greatly marveled, and began to fear. And the king stood forth, and began to minister unto them. And he did minister unto them, insomuch that his whole household were converted unto the Lord.

24 ராஜஸ்திரீயின் கட்டளையினிமித்தம் அங்கே திர-
ளானோர் ஏகமாய்க் கூடிவந்தார்கள். அவர்களுக்-
குள்ளே ஆரோன் மற்றும் அவனுடைய சகோதரன்
நிமித்தம் மிகுந்த முறுமுறுத்தல்கள் உண்டாகத் து-
வங்கின.

Now there was a multitude gathered together because of the commandment of the queen, and there began to be great murmurings among them because of Aaron and his brethren.

25 ஆனால் ராஜா அவர்கள் மத்தியில் நின்று அவர்-
களுக்கு பணிவிடை செய்தான். அவர்கள் ஆரோ-
னிடத்திலும், அவனோடுகூட இருந்தவர்களிடத்தி-
லும் சமாதானமானார்கள்.

But the king stood forth among them and administered unto them. And they were pacified towards Aaron and those who were with him.

26 அந்தப்படியே, ஜனங்கள் அமைதலானதை ராஜா
கண்டபோது, ஆரோனும், அவன் சகோதரரும் அந்த
திரளான கூட்டத்தின் நடுவே நின்று, அவர்களுக்கு
வசனத்தை பிரசங்கிக்கச் செய்தான்.

And it came to pass that when the king saw that the people were pacified, he caused that Aaron and his brethren should stand forth in the midst of the multitude, and that they should preach the word unto them.

27 அந்தப்படியே, ராஜா தேசமுழுவதும், கிழக்கிலும்
மேற்கிலும் சமுத்திரத்தின் எல்லைகளாகக் கொண்-
டிருந்த தன்னுடைய தேசமனைத்துக்கும், சுற்றுப்பு-
றங்களில் அமைந்த பகுதிகள் எல்லாவற்றிலுமி-
ருந்த, கிழக்கு சமுத்திரத்திற்கும், மேற்கு சமுத்திரத்-
திற்குமாய் நீண்டிருந்ததும், கடற்கரையோரமாய்
சுற்றிலும் குறுகிய ஓர் வனாந்தரத்தினால், சார-
கெம்லா தேசத்திலிருந்து பகுக்கப்பட்டிருந்த,
அவன் தேசத்துக்குக், கிழக்கிலிருந்து மேற்கு
வரைக்குமாய் ஓடிய, சீதோன் நதியினுடைய ஊற்-
றுக்கண் ஓரமாய், மேன்தி எல்லைகளினூடே
அமைந்திருந்த, வனாந்தரத்தின் நீண்ட எல்லை-
கள் உடைய, சாரகெம்லா தேசத்திற்கு வடக்கே
அமைந்திருந்த, இப்படியாக லாமானியரும், நேபிய-
ரும் அந்தக் குறுகிய வனாந்தரத்தினால் பிரிக்கப்-
பட்டிருந்த, சகல ஜனங்களுக்கும் ஒரு ஆணையை
அனுப்பினான்.

And it came to pass that the king sent a proclamation throughout all the land, amongst all his people who were in all his land, who were in all the regions round about, which was bordering even to the sea, on the east and on the west, and which was divided from the land of Zarahemla by a narrow strip of wilderness, which ran from the sea east even to the sea west, and round about on the borders of the seashore, and the borders of the wilderness which was on the north by the land of Zarahemla, through the borders of Manti, by the head of the river Sidon, running from the east towards the west—and thus were the Lamanites and the Nephites divided.

28 லாமானியரில் அதிக சோம்பேறிகள் வனாந்தரத்-
தில் குடிகொண்டு, கூடாரங்களில் வாசம் பண்ணி-
னார்கள், அவர்கள் நேபியின் தேசத்தின் வனாந்த-
ரத்தின் மேற்கேமுழுவதும் பரவியிருந்தார்கள்.
ஆம், கடற்கரையோரமாய் தங்கள் பிதாகளின் மு-
தற் சுதந்தர பூமியாகிய, நேபியின் தேசத்திற்கு மேற்-
கேயிருந்த கடற்கரையோரமாய், சாரகெம்லா தேசத்-
தின் மேற்கில் இருந்தார்கள்.

Now, the more idle part of the Lamanites lived in the wilderness, and dwelt in tents; and they were spread through the wilderness on the west, in the land of Nephi; yea, and also on the west of the land of Zarahemla, in the borders by the seashore, and on the west in the land of Nephi, in the place of their fathers' first inheritance, and thus bordering along by the seashore.

29 நேபியர் லாமானியரைத் துரத்திவிட்ட, கடற்கரை-
யின் கீழ்த்திசையில் அநேக லாமானியர் இருந்தார்-
கள். இப்படியாக நேபியர் லாமானியரால் ஏறக்கு-
றைய சூழப்பட்டிருந்தார்கள்; இருப்பினும் வனாந்-
தரத்தைச் சுற்றி, கிழக்கிலிருந்து மேற்குவரை, சீ-
தோன் நதியின் ஊற்றண்டையில், வனாந்தரத்தின்
எல்லையிலுள்ள வடக்கு பகுதிகள் அனைத்தை-
யும், வடக்கில் தாங்கள் உதாரத்துவஸ்தலம் என்று
அழைத்த, தேசம் மட்டும், நேபியர் சொந்தமாக்கிக்
கொண்டார்கள்.

And also there were many Lamanites on the east by the seashore, whither the Nephites had driven them. And thus the Nephites were nearly surrounded by the Lamanites; nevertheless the Nephites had taken possession of all the northern parts of the land bordering on the wilderness, at the head of the river Sidon, from the east to the west, round about on the wilderness side; on the north, even until they came to the land which they called Bountiful.

30 சாரகெம்லாவின் ஜனங்களால் கண்டுபிடிக்கப்-
பட்ட, அவர்கள் கரைசேர்ந்த முதலிடமான, இந்த
ஜனங்களினுடைய எலும்புகளைக் குறித்து நாம்
சொன்ன, ஜனங்கள் வாழ்ந்து அழிக்கப்பட்டுப்-
போன, வடக்கே தூரமாய் தள்ளியிருந்த தேசம்
வரை வந்ததால், அது பாழ்க்கடிப்பு என்றழைக்கப்-
பட்ட தேசத்தின் எல்லையாக இருந்தது.

And it bordered upon the land which they called Desolation, it being so far northward that it came into the land which had been peopled and been destroyed, of whose bones we have spoken, which was discovered by the people of Zarahemla, it being the place of their first landing.

31 அவர்கள் அங்கிருந்து தென் வானாந்தரத்திற்கு வந்தார்கள். இப்படியாக தேசத்தின் வடபகுதி பாழ்க்கடிப்பென்றும், தென்பகுதி உதாரத்துவ ஸ்தலமென்றும் அழைக்கப்பட்டன. சகலவிதமான வனவிலங்குகளால் நிறைக்கப்பட்டிருந்த வனாந்தரமாயிருந்தால், அவைகளில் ஒரு பகுதி தேசத்தின் வடபகுதியிலிருந்து இரைக்காக வந்திருந்தன.

32 ஒரு நேபியனுக்கு கிழக்கிலிருந்து, மேற்கு சமுத்திரத்திற்கு, உதாரத்துவஸ்தலம் மற்றும் பாழ்க்கடிப்பு தேசம், ஒன்றரை நாள் மட்டுமே பயணம் செய்கிற தூரமாயிருந்தது. நேபியின் தேசமும், சாரகெம்லா தேசமும் தண்ணீரால் ஏறக்குறைய சூழப்பட்டு, வட தேசத்திற்கும், தென் தேசத்திற்கும் இடையே ஒரு குறுகிய நிலம் மாத்திரமே இருந்தது.

33 அந்தப்படியே, நேபியர் கிழக்கிலிருந்து மேற்கு சமுத்திரம் வரைக்குமாய் பரந்திருந்த உதாரத்துவஸ்தலத்தில் வாசம் பண்ணினார்கள். இப்படியாக நேபியர் ஞானமாய் தங்கள் காவற்காரர்களைக் கொண்டும், தங்கள் சேனைகளைக் கொண்டும் லாமானியரைத் தெற்கே இருக்கப்பண்ணி, அவர்கள் வடதேசத்தை ஆக்கிரமிக்காதபடியும், வடக்கே எதையும் சுதந்தரிக்காதபடியும், தெற்கில் லாமானியரை ஓரங்கட்டினர்.

34 நேபியின் தேசத்திலும், அதைச் சுற்றியிருந்த வனாந்தரத்திலும் மட்டும், லாமானியர் எதையும் அடைய முடியவில்லை. இது நேபியர் ஞானமாய் செய்த காரியம். ஏனெனில் லாமானியர் அவர்களுக்கு விரோதிகளாயிருந்ததாலும், அவர்களுடைய உபத்திரவங்களை எல்லா பக்கங்களிலிருந்தும் சகிக்க வேண்டியிராமலும், தங்களுடைய வாஞ்சைகளுக்கேற்ப பறந்தோட ஒரு தேசமிருக்கும்படிக்கே இப்படிச் செய்தார்கள்.

35 இப்போது நான், இவைகளை சொல்லி முடித்து, மறுபடியும் அம்மோன், ஆரோன், ஓம்னர், ஈம்னி மற்றும் அவர்களுடைய சகோதரர்களைப் பற்றிய விவரத்திற்குத் திரும்புகிறேன்.

And they came from there up into the south wilderness. Thus the land on the northward was called Desolation, and the land on the southward was called Bountiful, it being the wilderness which is filled with all manner of wild animals of every kind, a part of which had come from the land northward for food.

And now, it was only the distance of a day and a half's journey for a Nephite, on the line Bountiful and the land Desolation, from the east to the west sea; and thus the land of Nephi and the land of Zarahemla were nearly surrounded by water, there being a small neck of land between the land northward and the land southward.

And it came to pass that the Nephites had inhabited the land Bountiful, even from the east unto the west sea, and thus the Nephites in their wisdom, with their guards and their armies, had hemmed in the Lamanites on the south, that thereby they should have no more possession on the north, that they might not overrun the land northward.

Therefore the Lamanites could have no more possessions only in the land of Nephi, and the wilderness round about. Now this was wisdom in the Nephites—as the Lamanites were an enemy to them, they would not suffer their afflictions on every hand, and also that they might have a country whither they might flee, according to their desires.

And now I, after having said this, return again to the account of Ammon and Aaron, Omner and Himni, and their brethren.

# ஆல்மா 23

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, தேவ வசனத்-
தைப் பிரசங்கிக்கச் செல்லுகிற அம்மோனும்,
ஆரோனும் ஓம்னரும், ஈம்னியும் அவர்களுடைய
சகோதரரும் தேசத்தின் எப்பகுதியிலும், எவ்விடத்-
திலிருந்தாலும், அவர்கள் மீது தங்கள் கைகளைப்
போடக்கூடாதென்று, லாமானியரின் ராஜா தன்
ஜனத்திற்குள்ளே ஒரு பிரகடனத்தை அனுப்பி-
னான்.

2 அவர்கள் இவர்களைக் கட்டிப்போடும்படியாகத்
தங்கள் கைகளைப்போடவும், இவர்களைச் சிறை-
யினுள் தள்ளவும், இவர்கள் மீது உமிழவும், அடிக்க-
வும், தங்கள் ஜெப ஆலயங்களிலிருந்து இவர்க-
ளைத் துரத்தவும், சவுக்கால் அடிக்கவும், இவர்கள்
மீது கல்லெறியவும் கூடாதென்றும், தங்களுடைய
வீடுகளுக்குள்ளும், ஆலயங்களுக்குள்ளும், பரி-
சுத்த ஸ்தலங்களுக்குள்ளும் சுதந்திரமாகச் செல்ல-
லாம், என்ற தாக்கீதை அவர்களுக்குள்ளே அவன்
அனுப்பினான்.

3 ராஜாவும், அவன் வீட்டாரும் கர்த்தருக்குள்ளாக
மனம்மாற்றப்பட்டதினால், அவர்கள் போய் தங்-
கள் வாஞ்சைகளின்படியே வசனத்தைப் பிரசங்-
கிக்க வேண்டுமென்றும், தேவ வசனம் தடையின்றி
தேசமெங்கும் போகவும், தன் ஜனங்கள் தங்களு-
டைய தகப்பன்மார்களின் பாரம்பரியங்கள் துன்-
மார்க்கமானவை என்று உணரவும், தாங்கள் யாவ-
ரும் சகோதரர் என்று அறியவும், கொலையோ,
கொள்ளையோ செய்யாமலும் திருடாமலும், விப-
சாரம் பண்ணாமலும், எவ்வித துன்மார்க்கத்தைப்
புரியாமலும் இருக்கவேண்டி அவன் இந்தப் பிரக-
டனத்தை தன் ஜனங்களுக்காக தேசமுழுவதும்
அனுப்பினான்.

4 இப்பொழுதும், அந்தப்படியே, இப்பிரகடனத்தை
ராஜா அனுப்பிய போது, ஆரோனும் அவன் சகோத-
ரரும் நகரம் விட்டு நகரம் போய், ஒரு தொழுகை ஸ்-
தலத்தைவிட்டு மற்றொன்றுக்குப் போய், சபைக-
ளை ஸ்தாபித்து, லாமானியருக்குள்ளே தேவ
வசனத்தைப் பிரசங்கிக்கவும், போதிக்கவும் அவர்-
கள் மத்தியில் தேசமுழுவதிலுமாய் ஆசாரியர்க-
ளையும், ஆசிரியர்களையும் நியமனம் பண்ணி-
னார்கள்; இப்படியாக அவர்கள் மகா ஜெயத்தைப்
பெறத் துவங்கினார்கள்.

5 கர்த்தருடைய ஞானத்திற்கு ஆயிரக்கணக்கா-
னோர் கொண்டு வரப்பட்டார்கள். ஆம், ஆயிரக்க-
ணக்கானோர் நேபியரின் பாரம்பரியத்தில் விசுவா-
சிக்கும்படியாக கொண்டுவரப்பட்டார்கள்; இக்கா-
லம் வரைக்குமாய், கைமாறிவந்த பதிவேடுக-
ளைப்பற்றியும், தீர்க்கதரிசனங்களைப்பற்றியும்
போதிக்கப்பட்டார்கள்.

# Alma 23

Behold, now it came to pass that the king of the Lamanites sent a proclamation among all his people, that they should not lay their hands on Ammon, or Aaron, or Omner, or Himni, nor either of their brethren who should go forth preaching the word of God, in whatsoever place they should be, in any part of their land.

Yea, he sent a decree among them, that they should not lay their hands on them to bind them, or to cast them into prison; neither should they spit upon them, nor smite them, nor cast them out of their synagogues, nor scourge them; neither should they cast stones at them, but that they should have free access to their houses, and also their temples, and their sanctuaries.

And thus they might go forth and preach the word according to their desires, for the king had been converted unto the Lord, and all his household; therefore he sent his proclamation throughout the land unto his people, that the word of God might have no obstruction, but that it might go forth throughout all the land, that his people might be convinced concerning the wicked traditions of their fathers, and that they might be convinced that they were all brethren, and that they ought not to murder, nor to plunder, nor to steal, nor to commit adultery, nor to commit any manner of wickedness.

And now it came to pass that when the king had sent forth this proclamation, that Aaron and his brethren went forth from city to city, and from one house of worship to another, establishing churches, and consecrating priests and teachers throughout the land among the Lamanites, to preach and to teach the word of God among them; and thus they began to have great success.

And thousands were brought to the knowledge of the Lord, yea, thousands were brought to believe in the traditions of the Nephites; and they were taught the records and prophecies which were handed down even to the present time.

6 கர்த்தர் ஜீவிக்கிறது எவ்வளவு உண்மையோ அதுபோல, தங்களுக்குள் அற்புதத்தைக் கிரியை செய்யும் தேவ வல்லமையினாலும், வெளிப்படுத்தல் மற்றும் தீர்க்கதரிசன ஆவியோடும், அம்மோனும் அவன் சகோதரரும் பிரசங்கம் பண்ணுவதின் மூலமாய், அநேகர் சத்திய ஞானத்திற்கு கொண்டு வரப்பட்டார்கள். ஆம், அவர்களுடைய உபதேசங்களை விசுவாசித்த லாமானியர் அநேகரும், கர்த்தருக்குள்ளே மனம்மாறி பின்வாங்கிப் போகாதிருந்தார்கள் என்று, கர்த்தர் ஜீவிக்கிறபடியே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And as sure as the Lord liveth, so sure as many as believed, or as many as were brought to the knowledge of the truth, through the preaching of Ammon and his brethren, according to the spirit of revelation and of prophecy, and the power of God working miracles in them—yea, I say unto you, as the Lord liveth, as many of the Lamanites as believed in their preaching, and were converted unto the Lord, never did fall away.

7 அவர்கள் நீதியுள்ள ஜனமாக மாறி, தங்கள் கலக ஆயுதங்களைக் கீழே போட்டார்கள்; அதற்குப் பின்பு அவர்கள் தேவனுக்கு விரோதமாயும், தங்கள் சகோதரருக்கு விரோதமாயும் யுத்தம் பண்ணவில்லை.

For they became a righteous people; they did lay down the weapons of their rebellion, that they did not fight against God any more, neither against any of their brethren.

8 இப்பொழுது கர்த்தருக்குள்ளாக மனம் மாறியவர்கள் இவர்களே.

Now, these are they who were converted unto the Lord:

9 இஸ்மவேலின் தேசத்திலிருந்த லாமானிய ஜனங்களும்;

The people of the Lamanites who were in the land of Ishmael;

10 மித்தோனி தேசத்திலிருந்த லாமானிய ஜனங்களும்;

And also of the people of the Lamanites who were in the land of Middoni;

11 நேபியின் பட்டணத்திலிருந்த லாமானிய ஜனங்களும்;

And also of the people of the Lamanites who were in the city of Nephi;

12 சீலோம் தேசத்திலும், செம்லோன் தேசத்திலும், லெமுவேல் பட்டணத்திலும், சிம்னிலாம் பட்டணத்திலுமிருந்த லாமானிய ஜனங்களுமாவார்கள்.

And also of the people of the Lamanites who were in the land of Shilom, and who were in the land of Shemlon, and in the city of Lemuel, and in the city of Shimnilom.

13 இவைகளே கர்த்தருக்குள்ளாக மனம்மாறின லாமானிய பட்டணங்களின் பெயர்கள். இவர்களே தங்கள் கலக ஆயுதங்களையும், ஆம், தங்களுடைய சகல யுத்த ஆயுதங்களையும் விட்டுவிட்டவர்கள்; அவர்கள் அனைவரும் லாமானியர்கள்.

And these are the names of the cities of the Lamanites which were converted unto the Lord; and these are they that laid down the weapons of their rebellion, yea, all their weapons of war; and they were all Lamanites.

14 அமலேக்கியரில் ஒருவனைத் தவிர யாரும் மனம்மாறவில்லை; அமுலோனியரில் எவருமே மனம் மாறவில்லை. ஆனால் அவர்கள் தங்கள் இருதயங்களையும், ஆம், அந்த தேசத்திலுள்ள தங்கள் கிராமங்களிலும், தங்கள் பட்டணங்களிலும் குடியிருந்த லாமானியரின் இருதயங்களையும் கடினப்படுத்தினார்கள்.

And the Amalekites were not converted, save only one; neither were any of the Amulonites; but they did harden their hearts, and also the hearts of the Lamanites in that part of the land wheresoever they dwelt, yea, and all their villages and all their cities.

15 ஆகவே, மனந்திரும்பி சத்திய ஞானத்திற்கு வந்து, மனம்மாறிய லாமானியரின் பட்டணங்களை நாங்கள் குறிப்பிட்டிருக்கிறோம்.

Therefore, we have named all the cities of the Lamanites in which they did repent and come to the knowledge of the truth, and were converted.

16 இப்பொழுதும், அந்தப்படியே, ராஜாவும் மனம்மா-
றினவர்களும், தாங்கள் தங்களின் சகோதரரிடமி-
ருந்து வேறுபட்டிருக்க ஒரு பெயரைத் தங்கள்மேல்
தரித்துக் கொள்ளவேண்டுமென்று வாஞ்சையாயி-
ருந்தார்கள். ஆதலால் அவர்கள் வேறுபடுத்தப்ப-
டும்படிக்கு, ராஜா ஆரோனுடனும், அவர்களுடைய
ஆசாரியர்களில் அநேகருடனும், தங்கள் மீது
என்ன பெயரை வைத்துக் கொள்ளவேண்டுமென்-
று ஆலோசித்தான்.

And now it came to pass that the king and those who were converted were desirous that they might have a name, that thereby they might be distinguished from their brethren; therefore the king consulted with Aaron and many of their priests, concerning the name that they should take upon them, that they might be distinguished.

17 அந்தப்படியே, அவர்கள் தங்கள் பெயர்களை
அந்தி-நேபி-லேகியர் என்று அழைக்கலாயினர்;
அவர்கள் இந்த நாமத்தினால் அழைக்கப்பட்டனர்.
அதன்பின்பு அவர்கள் லாமானியர் என்று
அழைக்கப்படவேயில்லை.

And it came to pass that they called their names Anti-Nephi-Lehies; and they were called by this name and were no more called Lamanites.

18 அவர்கள் மிகவும் பிரயாசப்படுகின்ற ஜனமாய்
இருக்கத் துவங்கினார்கள். ஆம், அவர்கள் நேபிய-
ருடனே நட்பாயிருந்தார்கள்; ஆதலால் அவர்களு-
டன் தொடர்பு கொண்டார்கள், தேவ சாபம் அவர்க-
ளை இனிமேலும் தொடரவில்லை.

And they began to be a very industrious people; yea, and they were friendly with the Nephites; therefore, they did open a correspondence with them, and the curse of God did no more follow them.

# ஆல்மா 24

1 அந்தப்படியே, அமுலோன் தேசம், ஏலாம் தேசம் மற்-
றும் எருசலேம் தேசத்திலுமாகச், சுற்றிலுமுள்ள தே-
சமனைத்திலிருந்தவர்களும், முடிவாக, மனம்மா-
றாத மற்றும் அந்தி-நேபி-லேகி என்ற பெயரை தங்-
கள்மீது தரித்துக்கொள்ளாதவர்களுமாகிய, அம-
லேக்கியரும், அமுலோனியரும், லாமானியரும்
தங்கள் சகோதரருக்கு விரோதமாய்க் கோபமடை-
யும்படிக்கு, அமலேக்கியராலும் அமுலோனியரா-
லும் தூண்டப்பட்டார்கள்.

2 அவர்கள் தங்கள் ராஜாவிற்கு விரோதமாய் கல-
கம் பண்ணும் அளவுக்கும், அவன் தங்கள் ராஜா-
வாக இருக்கக்கூடாது என்ற அளவிற்கும், அவர்க-
ளுக்கு எதிராய் அவர்களின் வெறுப்பு மிகவும் அதி-
கரித்தது; ஆதலால் அவர்கள் அந்தி-நேபி-லேகி
ஜனத்திற்கு விரோதமாய் ஆயுதம் ஏந்தினார்கள்.

3 இப்பொழுது ராஜா ராஜ்யபாரத்தை தன் குமா-
ரனுக்குக் கொடுத்து, அவனை அந்தி-நேபி-லேகி
என்ற பெயரில் அழைத்தான்.

4 லாமானியர், தேவ ஜனத்திற்கு விரோதமாய் சண்-
டையிட ஆயத்தம் பண்ணத் தொடங்கிய அதே வரு-
ஷத்தில் ராஜா மரித்துப்போனான்.

5 லாமானியர் தங்கள் சகோதரரை அழித்துப்போட
செய்கிற ஆயத்தங்களை அம்மோனும் அவன்
சகோதரரும், அவனோடு வந்த யாவரும் கண்டு,
அவர்கள் மீதியான் தேசத்திற்கு போனார்கள். அங்-
கே அம்மோன் தன் சகோதரர் யாவரையும் சந்தித்-
தான்; லாமானியரிடத்திலிருந்து தங்களைக் காத்-
துக்கொள்ள, லாமோனியோடும், அந்தி–நேபி-லேகி
என்ற அவன் சகோதரனோடும், ஆலோசனை நடத்-
தும்படி அவர்கள் அங்கிருந்து இஸ்மவேலின் தே-
சத்திற்கு வந்தார்கள்.

6 இப்பொழுது கர்த்தருக்குள் மனம்மாறிய ஜனங்க-
ளுள், தங்கள் சகோதரருக்கு விரோதமாய் ஆயுதமெ-
டுக்க ஒரு ஆத்துமாவாகிலும் இல்லை; இல்லை,
அவர்கள் யுத்தத்திற்கான ஆயத்தங்களொன்றை-
யும் செய்யமாட்டார்கள். ஆம், அவர்கள் செய்யக்கூ-
டாதென்று அவர்களுடைய ராஜாவும் கட்டளை பி-
றப்பித்தான்.

7 இப்போதும், இக்காரியத்தைக் குறித்து அவன்
ஜனங்களுக்குச் சொன்ன வார்த்தைகள் இவைக-
ளே: எனக்குப் பிரியமான ஜனமே, நமக்குப் போதிக்-
கவும், நம்முடைய துன்மார்க்கப் பிதாக்களின் பா-
ரம்பரியங்களைக் குறித்து நமக்கு உணர்த்தவும்,
நம்முடைய சகோதரராகிய இந்த நேபியரை நமக்கு,
தன் காருண்யத்தால் அனுப்பிய, நம்முடைய மகத்-
துவமுள்ள தேவனாகிய, என் தேவனுக்கு நன்றிக-
ளைச் செலுத்துகிறேன்.

# Alma 24

And it came to pass that the Amalekites and the Amulonites and the Lamanites who were in the land of Amulon, and also in the land of Helam, and who were in the land of Jerusalem, and in fine, in all the land round about, who had not been converted and had not taken upon them the name of Anti-Nephi-Lehi, were stirred up by the Amalekites and by the Amulonites to anger against their brethren.

And their hatred became exceedingly sore against them, even insomuch that they began to rebel against their king, insomuch that they would not that he should be their king; therefore, they took up arms against the people of Anti-Nephi-Lehi.

Now the king conferred the kingdom upon his son, and he called his name Anti-Nephi-Lehi.

And the king died in that selfsame year that the Lamanites began to make preparations for war against the people of God.

Now when Ammon and his brethren and all those who had come up with him saw the preparations of the Lamanites to destroy their brethren, they came forth to the land of Midian, and there Ammon met all his brethren; and from thence they came to the land of Ishmael that they might hold a council with Lamoni and also with his brother Anti-Nephi-Lehi, what they should do to defend themselves against the Lamanites.

Now there was not one soul among all the people who had been converted unto the Lord that would take up arms against their brethren; nay, they would not even make any preparations for war; yea, and also their king commanded them that they should not.

Now, these are the words which he said unto the people concerning the matter: I thank my God, my beloved people, that our great God has in goodness sent these our brethren, the Nephites, unto us to preach unto us, and to convince us of the traditions of our wicked fathers.

8 இதோ, நம்முடைய இருதயங்களை மென்மை-
யாக்க அவர் தம்முடைய ஆவியில் ஓர் பாகத்தை
அளித்ததினிமித்தமும், இந்த நம்முடைய சகோதர-
ராகிய நேபியருடன் நாம் தொடர்பு கொள்ளத் தொ-
டங்கியதினிமித்தமும், என் மகத்துவமுள்ள தே-
வனுக்கு நன்றிகளைச் செலுத்துகிறேன்.

And behold, I thank my great God that he has given us a portion of his Spirit to soften our hearts, that we have opened a correspondence with these brethren, the Nephites.

9 இதோ, இந்த தொடர்பைத் தொடங்கியதினிமித்-
தம், நம்முடைய பாவங்களைக் குறித்தும், நாம்
செய்த அநேக கொலைகளைக் குறித்தும் உணர்த்-
தப்பட்டதற்காகவும், என் தேவனுக்கு நன்றி செலுத்-
துகிறேன்.

And behold, I also thank my God, that by opening this correspondence we have been convinced of our sins, and of the many murders which we have committed.

10 ஆம், என் தேவன், என் மகத்துவமுள்ள தேவன்,
நாம் இவைகளிலிருந்து மனந்திரும்பும்படிக்கு
அருளி, நாம் செய்த அந்த அநேக பாவங்களிலிருந்-
தும், கொலைகளிலிருந்தும் நம்மை மன்னித்ததி-
னிமித்தமும், நம்முடைய இருதயங்களிலிருக்கும்
குற்றவுணர்வை, தம்முடைய குமாரனின் நற்கிரி-
யையினால் நீக்கிப்போட்டதினிமித்தமும், என் தே-
வனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

And I also thank my God, yea, my great God, that he hath granted unto us that we might repent of these things, and also that he hath forgiven us of those our many sins and murders which we have committed, and taken away the guilt from our hearts, through the merits of his Son.

11 இப்பொழுதும் இதோ, என் சகோதரரே, (மனுஷகு-
லம் யாவிலும் மிகவும் வீழ்ந்து போனவர்கள் நாமா-
தலால்) நாம் செய்யவேண்டியதெல்லாம் நாம்
செய்த அனைத்து பாவங்களிலிருந்தும், கொலை-
களிலிருந்தும், மனந்திரும்பி, நம்முடைய இருத-
யங்களிலிருந்து அவைகளைத் தேவன் நீக்கும்ப-
டிக்கு, நம்முடைய கறையை தேவன் நீக்கும்படி-
யாக, அவர் சமுகத்தில் போதுமான அளவு மனந்தி-
ரும்புவதே, நாம் செய்யவேண்டிய காரியமாயிருக்-
கிறது.

And now behold, my brethren, since it has been all that we could do (as we were the most lost of all mankind) to repent of all our sins and the many murders which we have committed, and to get God to take them away from our hearts, for it was all we could do to repent sufficiently before God that he would take away our stain—

12 இப்பொழுதும் எனக்கு மிகவும் அருமையான
சகோதரரே, தேவன் நம்முடைய கறைகளை நீக்கிப்-
போட்டதாலும், நம் பட்டயங்கள் பிரகாசமடைந்த-
தாலும், இனிமேல் நம்முடைய பட்டயங்களை நமது
சகோதரருடைய இரத்தத்தால் கறைபடாது வைத்தி-
ருப்போமாக.

Now, my best beloved brethren, since God hath taken away our stains, and our swords have become bright, then let us stain our swords no more with the blood of our brethren.

13 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அப்ப-
டியல்ல. நம்முடைய பட்டயங்கள் நம்முடைய சகோ-
தரரின் இரத்தத்தால் கறைபடியாது வைத்திருப்-
போமாக; ஏனெனில், ஒருவேளை மறுபடியும் நம்மு-
டைய பட்டயங்களை கறைபடுத்துவோமாயின்,
நம்முடைய பாவங்களின் நிவர்த்திக்கென்று சிந்-
தப்படவிருக்கிற, நமது மகத்துவமுள்ள தேவனு-
டைய குமாரனின் இரத்தத்தினால், இனி ஒருபோ-
தும் அவைகள் பிரகாசமடையும்படி கழுவப்பட மு-
டியாது.

Behold, I say unto you, Nay, let us retain our swords that they be not stained with the blood of our brethren; for perhaps, if we should stain our swords again they can no more be washed bright through the blood of the Son of our great God, which shall be shed for the atonement of our sins.

14 அந்த மகத்துவமுள்ள தேவன் நம் மீது இரக்கம்-
கொண்டு, நாம் அழிந்துபோகக்கூடாதென்று
இவைகளை நமக்குத் தெரியப்பண்ணினார்; ஆம்,
அவர் நம்முடைய பிள்ளைகளை நேசிப்பதைப்-
போலவே, நம்முடைய ஆத்துமாக்களை நேசிப்பதி-
னால் இவைகளை நமக்கு முன்னதாகவே தெரியப்-
பண்ணினார்; ஆதலால் இரட்சிப்பின் திட்டத்தை
நமக்கும், பின் தலைமுறைகளுக்கும் தெரியப்பண்-
ணும்படிக்கு, அவர் தம்முடைய இரக்கத்தால் தம்
தூதர்கள் மூலம் நம்மைச் சந்திக்கிறார்.

And the great God has had mercy on us, and made these things known unto us that we might not perish; yea, and he has made these things known unto us beforehand, because he loveth our souls as well as he loveth our children; therefore, in his mercy he doth visit us by his angels, that the plan of salvation might be made known unto us as well as unto future generations.

15 நமது தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவர்! நம்மு-
டைய கறைகள் நம்மிடத்திலிருந்து நீக்கப்படவும்,
நம்முடைய பட்டயங்களை பிரகாசமடையச் செய்-
யவும், நம்மால் இயன்றதைச் செய்யவேண்டியிருப்-
பதால், அவருடைய வார்த்தை நமக்கு கொடுக்கப்-
பட்டது முதல், அதினிமித்தம் நம்மை சுத்திகரித்ததி-
னால், நாம் நம்முடைய சகோதரரின் இரத்தத்தி-
னால் நமது பட்டயங்களை கறைப்படுத்தவில்லை-
யென்றும், கடைசி நாளிலோ, அல்லது அவருக்கு
முன்பாக நியாயந்தீர்க்கப்பட நிற்கும்படிகொண்டு
வரப்படும் அந்நாளிலோ, பட்டயங்கள் பிரகாசமா-
யிருக்கும்படிக்கும், நம்முடைய தேவனுக்குச் சாட்சி-
யமாயிருக்கும் பொருட்டும், அவைகளை மறைத்து
வைப்போமாக.

Oh, how merciful is our God! And now behold, since it has been as much as we could do to get our stains taken away from us, and our swords are made bright, let us hide them away that they may be kept bright, as a testimony to our God at the last day, or at the day that we shall be brought to stand before him to be judged, that we have not stained our swords in the blood of our brethren since he imparted his word unto us and has made us clean thereby.

16 இப்பொழுதும் என் சகோதரரே, நம்முடைய சகோ-
தரர் நம்மை அழிக்க வகை தேடினால், இதோ, நாம்
நம்முடைய பட்டயங்களை மறைத்து வைப்போ-
மாக, ஆம், அவைகள் பிரகாசமாயிருக்கும்படிக்-
கும், அவைகளை நாம் பயன்படுத்தவேயில்லை
என்று, கடைசி நாளின்போது சாட்சியமாய் இருக்-
கும்படிக்கும், அவைகளை பூமியில் ஆழமாகப் பு-
தைப்போம்; நம்முடைய சகோதரர் நம்மை அழித்-
துப்போட்டால், இதோ, நாம் நம்முடைய தேவனிடத்-
திற்குப் போய் இரட்சிக்கப்படுவோம்.

And now, my brethren, if our brethren seek to destroy us, behold, we will hide away our swords, yea, even we will bury them deep in the earth, that they may be kept bright, as a testimony that we have never used them, at the last day; and if our brethren destroy us, behold, we shall go to our God and shall be saved.

17 இப்பொழுதும், அந்தப்படியே, ராஜா இவைக-
ளைச் சொல்லிமுடித்தபோது, ஜனங்கள் யாவரும்
ஒன்றாய்க் கூட்டப்பட்டு, தங்கள் பட்டயங்களை-
யும், மனுஷனின் இரத்தத்தைச் சிந்தப் பயன்படுத்-
தப்பட்ட சகல ஆயுதங்களையும் எடுத்து, பூமியின்
ஆழத்திலே புதைத்தார்கள்.

And now it came to pass that when the king had made an end of these sayings, and all the people were assembled together, they took their swords, and all the weapons which were used for the shedding of man’s blood, and they did bury them up deep in the earth.

18 மனுஷனுடைய இரத்தத்தைச் சிந்த இனி ஒருபோதும் ஆயுதங்களை தாங்கள் பயன்படுத்துவதில்லையென்று, அவர்களுடைய பார்வையில் தேவனுக்கும் மனுஷனுக்கும் சாட்சியமாக இதை அவர்கள் செய்தார்கள்; அவர்கள் தங்கள் சகோதரருடைய இரத்தத்தை சிந்துவதை விட, தங்களின் சொந்த ஜீவனைக் கொடுப்போம் என்றும், ஒரு சகோதரனிடமிருந்து பிடுங்குவதை விட, தாங்கள் அவர்களுக்குக் கொடுப்போம் எனவும், தங்கள் நாட்களைச் சோம்பலாய் இருந்து கழிப்பதை விட, தங்களின் கைகளினால் மிகுதியாய்ப் பிரயாசப்படுவோம் என்றும், தேவனிடத்தில் உடன்படிக்கை பண்ணவும், உறுதி செய்யவுமே, இதைச் செய்தார்கள்.

And this they did, it being in their view a testimony to God, and also to men, that they never would use weapons again for the shedding of man's blood; and this they did, vouching and covenanting with God, that rather than shed the blood of their brethren they would give up their own lives; and rather than take away from a brother they would give unto him; and rather than spend their days in idleness they would labor abundantly with their hands.

19 இப்படியாக இந்த லாமானியர் விசுவாசிக்கவும், சத்தியத்தை அறியவும் கொண்டு வரப்பட்டபோது, அவர்கள் உறுதியாய் இருந்து, பாவத்தைச் செய்வதைப் பார்க்கிலும், மரணத்தைக்கூட சகிப்பார்கள் என நாம் காண்கிறோம்; இவ்விதமாக அவர்கள் சமாதான ஆயுதங்களைப் புதைத்தார்கள், அல்லது, அவர்கள் சமாதானத்திற்காக யுத்த ஆயுதங்களைப் புதைத்தார்கள், என நாம் பார்க்கிறோம்.

And thus we see that, when these Lamanites were brought to believe and to know the truth, they were firm, and would suffer even unto death rather than commit sin; and thus we see that they buried their weapons of peace, or they buried the weapons of war, for peace.

20 அந்தப்படியே, அவர்களுடைய சகோதரரான லாமானியர், யுத்தத்திற்கென ஆயத்தங்களை மேற்கொண்டு, ராஜாவை அழிக்கவும், அவனுக்குப் பதிலாய் மற்றொருவனை நியமிக்கவும், தேசத்திலிருந்து அந்தி-நேபி-லேகி ஜனத்தாரை அழிக்கும் நோக்கத்துடனே நேபியின் தேசம் வரைக்கும் வந்தார்கள்.

And it came to pass that their brethren, the Lamanites, made preparations for war, and came up to the land of Nephi for the purpose of destroying the king, and to place another in his stead, and also of destroying the people of Anti-Nephi-Lehi out of the land.

21 இப்பொழுது அவர்கள் தங்களுக்கு விரோதமாய் வருவதை, ஜனங்கள் கண்டபோது, அவர்கள் அவர்களைச் சந்திக்கப்போய், அவர்களுக்கு முன்பு, பூமியில் சாஷ்டாங்கமாய் விழுந்து, கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளத் துவங்கினார்கள்; இப்படியாக அவர்கள் அந்த நிலையிலிருந்தபோது லாமானியர் அவர்கள்மீது விழுந்து, அவர்களை பட்டயத்தினால் கொன்றுபோடத் துவங்கினார்கள்.

Now when the people saw that they were coming against them they went out to meet them, and prostrated themselves before them to the earth, and began to call on the name of the Lord; and thus they were in this attitude when the Lamanites began to fall upon them, and began to slay them with the sword.

22 இப்படியாக எந்த எதிர்ப்பையும் சந்திக்காமல், அவர்கள் ஆயிரத்து ஐந்து பேரைக் கொன்று போட்டார்கள்; அவர்கள் தங்கள் தேவனோடு வாசம் பண்ணப் போனதினாலே அவர்கள் பாக்கியவான்களென்று நாம் அறிவோம்.

And thus without meeting any resistance, they did slay a thousand and five of them; and we know that they are blessed, for they have gone to dwell with their God.

23 இப்பொழுது தங்கள் சகோதரர் பட்டயத்திற்குப் பயந்தோடவோ, வலது புறமோ, இடது புறமோ திரும்பாமல், ஆனால் கீழே விழுந்து, மரித்து, பட்டயத்தினால் மரிக்கும் தருவாயிலும், தேவனைத் துதிப்பதை லாமானியர் கண்டபோது,

Now when the Lamanites saw that their brethren would not flee from the sword, neither would they turn aside to the right hand or to the left, but that they would lie down and perish, and praised God even in the very act of perishing under the sword—

24 இப்பொழுது லாமானியர் இதைக் கண்டபோது, அவர்கள் அவர்களைக் கொன்று போடுவதை நிறுத்தினார்கள்; பட்டயத்தினால் விழுந்துபோன தங்கள் சகோதரருக்காக அநேகரின் இருதயங்கள் பொங்கின. ஏனெனில் தாங்கள் செய்தவற்றிற்காக மனந்திரும்பினார்கள்.

Now when the Lamanites saw this they did forbear from slaying them; and there were many whose hearts had swollen in them for those of their brethren who had fallen under the sword, for they repented of the things which they had done.

25 அந்தப்படியே, அவர்கள் தாங்கள் செய்த கொலைகளுக்காக மனஸ்தாபப்பட்டமையால், தங்கள் யுத்த ஆயுதங்களை கீழே போட்டு, அவைகளை மறுபடியும் எடுக்கமாட்டார்கள். அவர்களோ தங்களைக் கொல்ல கரங்களை உயர்த்துகிற மனுஷனுடைய இரக்கங்களைச் சார்ந்திருக்கிற அவர்களுடைய சகோதரரைப்போல சாஷ்டாங்கமாய் விழுந்தார்கள்.

And it came to pass that they threw down their weapons of war, and they would not take them again, for they were stung for the murders which they had committed; and they came down even as their brethren, relying upon the mercies of those whose arms were lifted to slay them.

26 அந்தப்படியே, அந்நாளில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், தேவ ஜனத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் மிகுதியாய் இருந்தார்கள்; கொல்லப்பட்டுப்போனவர்கள் நீதிமான்களாய் இருந்தபடியாலே, அவர்கள் இரட்சிக்கப்பட்டார்களே அன்றி, சந்தேகப்பட நம்மிடத்தில் எந்த ஒரு காரணமுமில்லை.

And it came to pass that the people of God were joined that day by more than the number who had been slain; and those who had been slain were righteous people, therefore we have no reason to doubt but what they were saved.

27 அவர்களில் துன்மார்க்கன் ஒருவனாகிலும் மடிந்து போகவில்லை; ஆனால் சத்திய ஞானத்திற்கோ, ஆயிரத்திற்கு அதிகமானோர் கொண்டுவரப்பட்டார்கள்; இப்படியாய் கர்த்தர் தமது ஜனத்தின் இரட்சிப்பிற்காக, அநேக வழிகளில் கிரியை செய்வதைக் காண்கிறோம்.

And there was not a wicked man slain among them; but there were more than a thousand brought to the knowledge of the truth; thus we see that the Lord worketh in many ways to the salvation of his people.

28 தங்கள் சகோதரரில் அநேகரைக் கொன்றுபோட்ட லாமானியரில் அதிகம்பேர் அமலேக்கியரும் அமுலோனியருமாக இருந்தார்கள். அவர்களில் அதிகமானோர் நிகோரின் முறைமையைச் சார்ந்தோராய் இருந்தார்கள்.

Now the greatest number of those of the Lamanites who slew so many of their brethren were Amalekites and Amulonites, the greatest number of whom were after the order of the Nehors.

29 இப்பொழுது, கர்த்தருடைய ஜனத்தோடு சேர்ந்துகொண்டவர்களில், அமலேக்கியரோ, அமுலோனியரோ, நிகோரின் முறைமையைச் சார்ந்தவர்களோ இல்லை. ஆனால் அவர்கள் லாமான் மற்றும் லெமுவேல் ஆகியோரின் நிஜ சந்ததியினரே.

Now, among those who joined the people of the Lord, there were none who were Amalekites or Amulonites, or who were of the order of Nehor, but they were actual descendants of Laman and Lemuel.

30 இப்படியாக ஜனங்கள் தேவ ஆவியால் ஒருதரம் தெளிவுபடுத்தப்பட்டு, நீதியானவைகளுக்கடுத்த காரியங்களைக் குறித்து அதிக ஞானத்தைப்பெற்று, பின்னர் பாவத்திலும் மீறுதலினுள்ளும் விழுவார்களெனில், அவர்கள் மிகவும் கடினமானவர்களாகிப் போய், இப்படியாக அவர்களின் நிலை, இக்காரியங்களை அவர்கள் அறியாதிருந்த நிலையைக் காட்டிலும் கேடுள்ளதாகிறது, என்பதை தெளிவாய்ப் பகுத்தறியலாம்.

And thus we can plainly discern, that after a people have been once enlightened by the Spirit of God, and have had great knowledge of things pertaining to righteousness, and then have fallen away into sin and transgression, they become more hardened, and thus their state becomes worse than though they had never known these things.

# ஆல்மா 25

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, அவர்கள் தங்-
கள் சகோதரரை கொன்று போட்டதினால், மிகுந்த
கோபமடைந்த லாமானியர், நேபியர் மீது பழி தீர்க்-
கவேண்டுமென்று சூளுரைத்தார்கள்; அச்சமயத்-
தில் அவர்கள் அந்தி-நேபி-லேகியின் ஜனத்தைக்
கொல்ல முற்படவில்லை.

2 ஆனால் அவர்களோ, தங்கள் படைகளைக் கூட்-
டிக்கொண்டு, சாரகெம்லா தேசத்து எல்லைகளுக்-
குள் போய், அம்மோனிகா தேசத்திலிருந்த ஜனங்-
கள்மேல் விழுந்து, அவர்களை நிர்மூலமாக்கினார்-
கள்.

3 அதற்குப் பின்பு அவர்கள் நேபியருடன் அநேக
யுத்தங்கள் செய்து, அதிலே துரத்தப்பட்டு கொல்-
லப்பட்டார்கள்.

4 லாமானியரில் கொல்லப்பட்ட பெரும்பாலோர்,
நோவாவின் ஆசாரியர்களான, அமுலோன் மற்றும்
அவனுடைய சகோதரருடைய சந்ததியினருமே.
அவர்கள் நேபியரின் கரங்களினால் கொல்லப்பட்-
டார்கள்.

5 மீதியானோர், கீழ் வனாந்தரத்தினுள் ஓடி, லாமா-
னியர் மீது வல்லமையையும் அதிகாரத்தையும்
பெற்று, லாமானியரில் அநேகர் அவர்களுடைய
நம்பிக்கையினிமித்தம் அக்கினியால் அழிக்கப்ப-
டப் பண்ணினார்கள்.

6 அவர்களில் அநேகர் அதிக இழப்பையும் மிகுந்த
உபத்திரவங்களையும் அனுபவித்த பின்பு, தங்கள்
தேசத்திலே, தங்களுக்கு ஆரோனும், அவனுடைய
சகோதரரும் பிரசங்கித்த வார்த்தைகளை நினைவு-
கூர்ந்து, கலக்கமடையத் துவங்கினார்கள். ஆத-
லால், அவர்கள் தங்கள் தகப்பன்மார்களுடைய
பாரம்பரியங்களிலே அவிசுவாசம்கொண்டு கர்த்-
தர் மேலும், அவர் நேபியருக்கு மிகுந்த வல்லமை-
யைக் கொடுத்தார் என்றும் விசுவாசிக்கத் துவங்கி-
னார்கள். இப்படியாக வனாந்தரத்தில் அவர்களில்
அநேகர் மனமாறினார்கள்.

7 அந்தப்படியே, இக்காரியங்களை விசுவாசித்த
யாவரையும், ஆம், அமுலோன் குமாரர்களில் மீதி-
யானவர்களான அந்த அதிகாரிகள் மரணத்திற்-
குள்ளாக்கினார்கள்.

8 இந்த இரத்த சாட்சியின் மரணம் அவர்களுடைய
சகோதரரில் அநேகரை கோபமடையச் செய்தது;
வனாந்தரத்தில் பிணக்குகள் ஏற்படத் துவங்கின;
லாமானியர் அமுலோன் மற்றும் அவனுடைய
சகோதரர்களின் சந்ததியாரையும் வேட்டையாடி
அவர்களைக் கொன்றுபோடத் துவங்கினார்கள்;
அவர்கள் கிழக்கு வனாந்தரத்திற்குள் பறந்தோடி-
னார்கள்.

# Alma 25

And behold, now it came to pass that those Lamanites were more angry because they had slain their brethren; therefore they swore vengeance upon the Nephites; and they did no more attempt to slay the people of Anti-Nephi-Lehi at that time.

But they took their armies and went over into the borders of the land of Zarahemla, and fell upon the people who were in the land of Ammonihah and destroyed them.

And after that, they had many battles with the Nephites, in the which they were driven and slain.

And among the Lamanites who were slain were almost all the seed of Amulon and his brethren, who were the priests of Noah, and they were slain by the hands of the Nephites;

And the remainder, having fled into the east wilderness, and having usurped the power and authority over the Lamanites, caused that many of the Lamanites should perish by fire because of their belief—

For many of them, after having suffered much loss and so many afflictions, began to be stirred up in remembrance of the words which Aaron and his brethren had preached to them in their land; therefore they began to disbelieve the traditions of their fathers, and to believe in the Lord, and that he gave great power unto the Nephites; and thus there were many of them converted in the wilderness.

And it came to pass that those rulers who were the remnant of the children of Amulon caused that they should be put to death, yea, all those that believed in these things.

Now this martyrdom caused that many of their brethren should be stirred up to anger; and there began to be contention in the wilderness; and the Lamanites began to hunt the seed of Amulon and his brethren and began to slay them; and they fled into the east wilderness.

9 இதோ இன்றும் அவர்கள் லாமானியர்களால் தே-
டப்பட்டு வருகிறார்கள். தன்னை அக்கினியால்
மரணமடையச் செய்த ஆசாரியரின் சந்ததியின-
ரைக் குறித்து, அபிநாதி சொன்ன வார்த்தைகள் நி-
றைவேற்றப்பட்டன.

And behold they are hunted at this day by the Lamanites. Thus the words of Abinadi were brought to pass, which he said concerning the seed of the priests who caused that he should suffer death by fire.

10 ஏனெனில் அவன் அவர்களை நோக்கி: நீங்கள்
எனக்கு எதைச் செய்கிறீர்களோ அது, வரப்போகிற-
வைகளுக்கு முன் மாதிரியாக இருக்கும், என்றான்.

For he said unto them: What ye shall do unto me shall be a type of things to come.

11 இப்பொழுது அபிநாதி தேவனில் தன் விசுவாசத்-
தினிமித்தம், அக்கினியால் மரணத்தை அனுபவித்-
தவர்களுள் முதலாமவன். தான் அனுபவித்ததைப்
போலவே அநேகரும் அக்கினியால் மரணத்தை
அனுபவிப்பார்கள் என்பதே அவன் சொன்ன காரி-
யமாகும்.

And now Abinadi was the first that suffered death by fire because of his belief in God; now this is what he meant, that many should suffer death by fire, according as he had suffered.

12 அவன் நோவாவின் ஆசாரியர்களை நோக்கி,
அவன் எப்படி மரிக்கிறேனோ அப்படியே அவர்க-
ளுடைய சந்ததியாரும் அநேகரை மரணமடையச்
செய்வார்களென்றும், மேய்ப்பனற்ற ஆடுகள் துஷ்-
டமிருகங்களால் விரட்டப்பட்டுக் கொல்லப்படுவ-
தைப் போலவே, அவர்களும் தூரமாய் சிதறடிக்கப்-
பட்டுக் கொல்லப்படுவார்கள், என்றான். இப்பொ-
ழுது இதோ, அவர்கள் லாமானியரால் விரட்டப்பட்-
டு, வேட்டையாடப்பட்டு, கொல்லப்பட்டதினிமித்-
தம், இந்த வார்த்தைகள் மெய்ப்பிக்கப்பட்டன.

And he said unto the priests of Noah that their seed should cause many to be put to death, in the like manner as he was, and that they should be scattered abroad and slain, even as a sheep having no shepherd is driven and slain by wild beasts; and now behold, these words were verified, for they were driven by the Lamanites, and they were hunted, and they were smitten.

13 அந்தப்படியே, தாங்கள் நேபியரை மேற்கொள்ள
முடியாதென்று லாமானியர் கண்டபோது, தங்கள்
சொந்த தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்;
அவர்களில் அநேகர் இஸ்மவேல் தேசத்திலும், நேபி-
யரின் தேசத்திலும் வாசம் செய்ய வந்து, தேவ ஜன-
மான அந்தி-நேபி-லேகி ஜனத்துடன் தங்களை
இணைத்துக் கொண்டார்கள்.

And it came to pass that when the Lamanites saw that they could not overpower the Nephites they returned again to their own land; and many of them came over to dwell in the land of Ishmael and the land of Nephi, and did join themselves to the people of God, who were the people of Anti-Nephi-Lehi.

14 அவர்களும் தங்கள் சகோதரர் செய்ததைப்போல,
தங்களுடைய யுத்த ஆயுதங்களைப் புதைத்தார்-
கள். அவர்கள் நீதியுள்ள ஜனமாகத் துவங்கினார்-
கள், அவர்கள் கர்த்தருடைய வழிகளில் நடந்து
அவருடைய கட்டளைகளையும் சட்டங்களையும்
கைக்கொண்டு ஆசரித்தார்கள்.

And they did also bury their weapons of war, according as their brethren had, and they began to be a righteous people; and they did walk in the ways of the Lord, and did observe to keep his commandments and his statutes.

15 ஆம், அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்-
தைக் கைக்கொண்டார்கள். ஏனெனில் மோசேயின்
நியாயப்பிரமாணம் அனைத்தும் இன்னும் நிறை-
வேறாததால் அவர்கள் அதைக் கைக்கொள்ள
வேண்டியது அவசியமாயிற்று. மோசேயின் நியா-
யப்பிரமாணம் மட்டுமன்றி, கிறிஸ்துவின் வருகை-
யை எதிர்பார்த்து, மோசேயின் நியாயப்பிரமாணம்
அவருடைய வருகைக்கொரு முன்னடையாள-
மென்று கருதி, அவர் தங்களுக்கு வெளிப்படும் கா-
லம்வரைக்கும், அந்த வெளியரங்கமான ஆசரிப்பு-
களைக் கைக்கொள்ள வேண்டுமென்று நம்பி-
னார்கள்.

Yea, and they did keep the law of Moses; for it was expedient that they should keep the law of Moses as yet, for it was not all fulfilled. But notwithstanding the law of Moses, they did look forward to the coming of Christ, considering that the law of Moses was a type of his coming, and believing that they must keep those outward performances until the time that he should be revealed unto them.

16 இரட்சிப்பு மோசேயின் நியாயப்பிரமாணத்தி-
னால் வருகிறதென்று அவர்கள் எண்ணவில்லை;
ஆனால் மோசேயின் நியாயப்பிரமாணம் கிறிஸ்து-
வில் அவர்களுடைய விசுவாசத்தை பெலப்படுத்த
உதவியது; இப்படியாக அவர்கள் நித்திய ஜீ-
வனைப் பெறுவோமென்ற விசுவாசத்தின் மூலம்,
நம்பிக்கையை நிலைநிறுத்தி, வரப்போகிறவைக-
ளைச் சொன்ன தீர்க்கதரிசன ஆவியைச் சார்ந்தி-
ருந்தார்கள்.

Now they did not suppose that salvation came by the law of Moses; but the law of Moses did serve to strengthen their faith in Christ; and thus they did retain a hope through faith, unto eternal salvation, relying upon the spirit of prophecy, which spake of those things to come.

17 இதோ, தங்கள் ஜெபத்திற்குத் தக்கதாக தங்களுக்-
குக் கர்த்தர் அளித்ததைக் கண்டும், ஒவ்வொரு கா-
ரியத்திலும் அவர் தங்களுக்குத் தம்முடைய வார்த்-
தையை மெய்ப்பித்ததினிமித்தமும், லாமானியருக்-
குள்ளே, தாங்கள் பெற்ற ஜெயத்தினிமித்தமும்,
அம்மோனும் ஆரோனும், ஓம்னரும், ஈம்னியும்,
அவர்களுடைய சகோதரரும் மிகுதியாய்க் களி-
கூர்ந்தார்கள்.

And now behold, Ammon, and Aaron, and Omner, and Himni, and their brethren did rejoice exceedingly, for the success which they had had among the Lamanites, seeing that the Lord had granted unto them according to their prayers, and that he had also verified his word unto them in every particular.

# ஆல்மா 26

1 இப்பொழுது அம்மோன் தன் சகோதரருக்குச்
சொன்ன வார்த்தைகளாவன: என் உடன்பிறப்புக-
ளே, என் சகோதரரே, இதோ, நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். நாம் களிகூர்ந்திருக்க எவ்வளவு
பெரிய காரணமுண்டு; ஏனெனில் நாம் சாரகெம்லா
தேசத்தை விட்டுப் புறப்பட்டபோது, தேவன் நமக்கு
இப்படிப்பட்ட மேன்மையான ஆசீர்வாதங்களை
அருளுவார் என்று எண்ணிப்பார்த்திருக்கக்கூடு-
மா?
2 இப்பொழுது நான் கேட்கிறேன். அவர் நம்மீது எப்-
பேர்ப்பட்ட மகத்தான ஆசீர்வாதங்களை அருளியி-
ருக்கிறார்? நீங்கள் சொல்லக்கூடுமா?
3 இதோ, உங்களுக்காக நான் பிரதியுத்தரமளிக்கி-
றேன்; ஏனெனில் நம்முடைய சகோதரரான லாமா-
னியர் காரிருளிலே, ஆம், காரிருளான துரவிலே
இருந்தார்கள். ஆனால் இதோ, அவர்களில் எத்-
தனை பேர் தேவனுடைய அற்புதமான ஒளியைக்
காணும்படியாய் கொண்டுவரப்பட்டிருக்கிறார்-
கள்! இந்த மகத்தான பணியை நிறைவேற்ற நாம்
தேவனுடைய கரங்களில் கருவிகளாக்கப்பட்டதே
நம் மேல் அருளப்பட்ட ஆசீர்வாதமாயிருக்கிறது.
4 இதோ, அவர்களில் ஆயிரமாயிரமானோர் களிகூ-
ருகிறார்கள். அவர்கள் தேவனுடைய மந்தைக்குள்-
ளாக கொண்டுவரப்பட்டிருக்கிறார்கள்.
5 இதோ, வயல் முதிர்ந்திருந்தது. நீங்கள் அரிவா-
ளை நீட்டி, உங்கள் பெலத்தோடு அறுத்து, ஆம்,
நாள் முழுவதும் பிரயாசப்பட்டதினிமித்தம் நீங்கள்
பாக்கியவான்கள். உங்கள் அரிக்கட்டுக்களின்
எண்ணிக்கையைக் காணுங்கள்! அவைகள் வீ-
ணாய்ப்போகாதபடி களஞ்சியங்களில் சேர்க்கப்ப-
டும்.
6 ஆம், அவைகள் கடைசி நாளின்போது, புயலி-
னால் உதிர்க்கப்படுவதுமில்லை; சுழல் காற்றி-
னால் அவைகள் சீரழிக்கப்படுவதுமில்லை; புயல்
வரும்போதோ, அவைகள் அவைகளுடைய ஸ்த-
லங்களில் சேர்க்கப்படும். அதினிமித்தம் புயல்
அவைகளை ஊடுருவவும் முடியாது; ஆம், சத்துரு
அவைகளை எடுத்துச் செல்லவிரும்புகிற எவ்விட-
மானாலும் கொடிய காற்றினால் அவைகள் அடிக்-
கப்பட்டுப் போவதுமில்லை.
7 ஆனால் இதோ, அறுவடையின் கர்த்தருடைய
கரங்களில் அவைகள் இருக்கின்றன. அவைகள்
அவருடையவைகள். அவர் அவைகளைக் கடைசி
நாளின்போது எழும்பப்பண்ணுவார்.
8 நம்முடைய தேவனின் நாமம் ஸ்தோத்தரிக்கப்ப-
டுவதாக; நாம் அவரைப் பாடித் துதிப்போமாக.
ஆம், அவருடைய பரிசுத்த நாமத்திற்கென்று நன்-
றிகளை ஏறெடுப்போமாக, ஏனெனில் அவர் என்-
றென்றும் நீதியை நடப்பித்திருக்கிறாரே.

# Alma 26

And now, these are the words of Ammon to his brethren, which say thus: My brothers and my brethren, behold I say unto you, how great reason have we to rejoice; for could we have supposed when we started from the land of Zarahemla that God would have granted unto us such great blessings?

And now, I ask, what great blessings has he bestowed upon us? Can ye tell?

Behold, I answer for you; for our brethren, the Lamanites, were in darkness, yea, even in the darkest abyss, but behold, how many of them are brought to behold the marvelous light of God! And this is the blessing which hath been bestowed upon us, that we have been made instruments in the hands of God to bring about this great work.

Behold, thousands of them do rejoice, and have been brought into the fold of God.

Behold, the field was ripe, and blessed are ye, for ye did thrust in the sickle, and did reap with your might, yea, all the day long did ye labor; and behold the number of your sheaves! And they shall be gathered into the garners, that they are not wasted.

Yea, they shall not be beaten down by the storm at the last day; yea, neither shall they be harrowed up by the whirlwinds; but when the storm cometh they shall be gathered together in their place, that the storm cannot penetrate to them; yea, neither shall they be driven with fierce winds whithersoever the enemy listeth to carry them.

But behold, they are in the hands of the Lord of the harvest, and they are his; and he will raise them up at the last day.

Blessed be the name of our God; let us sing to his praise, yea, let us give thanks to his holy name, for he doth work righteousness forever.

9 ஏனெனில் நாம் சாரகெம்லா தேசத்தைவிட்டு
வராமலிருந்திருப்போமானால், நம்மை மிகவும் நே-
சிக்கிற இந்த பிரியமான சகோதரர்கள், நமக்கு வி-
ரோதமாய் இப்பொழுதும் குரோதம்கொண்டு, அதி-
னாலே வதைக்கப்பட்டும், தேவனுக்கு அந்நியர்க-
ளாயுமிருந்திருப்பார்கள்.

For if we had not come up out of the land of Zarahemla, these our dearly beloved brethren, who have so dearly beloved us, would still have been racked with hatred against us, yea, and they would also have been strangers to God.

10 அந்தப்படியே, அம்மோன் இந்த வார்த்தைகளைச்
சொன்னபோது, அவன் சகோதரனாகிய ஆரோன்
அவனைக் கடிந்து, அம்மோனே உனது சந்தோஷம்
உன்னை மேன்மை பாராட்டும்படியாக நடப்பிக்கி-
றதோ, என்று அஞ்சுகிறேன், என்றான்.

And it came to pass that when Ammon had said these words, his brother Aaron rebuked him, saying: Ammon, I fear that thy joy doth carry thee away unto boasting.

11 ஆனால் அம்மோன் அவனை நோக்கி சொன்-
னான்: நான் என் சுயபலத்திலும், என் சுயஞானத்-
திலும் மேன்மை பாராட்டுகிறதில்லை; ஆம், என்
சந்தோஷம் பூரணமாயிருக்கிறது. என் இருதயம்
சந்தோஷத்தால் விளிம்புமட்டும் நிரம்பியிருக்கிற-
து. நான் என் தேவனில் களிகூருவேன்.

But Ammon said unto him: I do not boast in my own strength, nor in my own wisdom; but behold, my joy is full, yea, my heart is brim with joy, and I will rejoice in my God.

12 ஆம், நான் ஒன்றுமில்லை. என் பெலத்தைப்
பொறுத்தமட்டில் நான் பெலவீனன் என்று அறிந்தி-
ருக்கிறேன்; ஆகையால் நான் என்னைக் குறித்து
மேன்மை பாராட்டாமல், தேவனைப்பற்றியே மேன்-
மை பாராட்டுவேன். ஏனெனில், அவருடைய பெ-
லத்தினால், நான் சகலத்தையும் செய்யக்கூடும்;
ஆம், இதோ, இத்தேசத்தில் நாம் அநேக பலத்த அற்பு-
தங்களை நடத்தியிருப்பதால், அதனிமித்தம் அவ-
ருடைய நாமத்தை என்றென்றும் துதித்திருப்போம்.

Yea, I know that I am nothing; as to my strength I am weak; therefore I will not boast of myself, but I will boast of my God, for in his strength I can do all things; yea, behold, many mighty miracles we have wrought in this land, for which we will praise his name forever.

13 இதோ, எத்தனை ஆயிரமாயிரமான நம்முடைய
சகோதரரை அவர் பாதாளத்தின் வேதனைகளிலி-
ருந்து விடுவித்தார். அவர்கள் மீட்கும் அன்பைப்-
பற்றிப் பாட அழைத்து வரப்பட்டிருக்கிறார்கள்.
இது நம்முள் இருக்கும் அவருடைய வார்த்தையின்
வல்லமையினால்தான். ஆதலால் நாம் களிகூர்ந்-
திருக்க உன்னதமான காரணம் உண்டல்லவா?

Behold, how many thousands of our brethren has he loosed from the pains of hell; and they are brought to sing redeeming love, and this because of the power of his word which is in us, therefore have we not great reason to rejoice?

14 ஆம், அவரே அதி உன்னதமான தேவன் என்பதி-
னாலும், நம்முடைய சகோதரரை பாதாளத்தின் சங்-
கிலிகளிலிருந்து அவிழ்த்து விட்டதினாலும், அவ-
ரை என்றென்றுமாய்த் துதிக்க நமக்கு காரணம்
இருக்கிறது.

Yea, we have reason to praise him forever, for he is the Most High God, and has loosed our brethren from the chains of hell.

15 ஆம், அவர்கள் என்றுமுள்ள அந்தகாரத்தினா-
லும், அழிவினாலும் சூழப்பட்டிருந்தார்கள்;
ஆனால் இதோ, அவரோ, அவர்களை என்றுமுள்ள
இரட்சிப்பாகிய தம் நித்திய வெளிச்சத்தினுள்
கொண்டுவந்தார்; அவர்கள் இணையற்ற அவரு-
டைய அன்பின் பெருக்கத்தால் சூழப்பட்டிருக்கி-
றார்கள்; ஆம், இந்தப் பெரிதும், மகத்துவமுமுள்ள
கிரியையைச் செய்ய அவருடைய கரங்களில் நாம்
கருவிகளாய் இருந்திருக்கிறோம்.

Yea, they were encircled about with everlasting darkness and destruction; but behold, he has brought them into his everlasting light, yea, into everlasting salvation; and they are encircled about with the matchless bounty of his love; yea, and we have been instruments in his hands of doing this great and marvelous work.

16 ஆதலால், நாம் களிகூர்வோமாக. ஆம், கர்த்தரில்
களிகூர்வோமாக. ஆம், நம்முடைய சந்தோஷம் பூர-
ணப்பட்டிருப்பதாலே, நாம் களிகூருவோமாக. ஆம்,
நம்முடைய தேவனை என்றென்றுமாய்த் துதிப்-
போமாக. இதோ மிகுதியாய்க் கர்த்தரில் மகிமைப்-
பட யாரால் கூடும்? ஆம், மனுபுத்திரரின் மீது இருக்-
கும் அவருடைய மிகுந்த வல்லமையையும், அவரு-
டைய இரக்கத்தையும், அவருடைய நீடிய சாந்தத்-
தையும் மிகுதியாய்ச் சொல்ல யாரால் கூடும்? இதோ,
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் உணரு-
கிறதில் சிறிதளவாகிலும் சொல்ல என்னால் கூடா-
து.

Therefore, let us glory, yea, we will glory in the Lord; yea, we will rejoice, for our joy is full; yea, we will praise our God forever. Behold, who can glory too much in the Lord? Yea, who can say too much of his great power, and of his mercy, and of his long-suffering towards the children of men? Behold, I say unto you, I cannot say the smallest part which I feel.

17 நம்மை நம்முடைய அஞ்சத்தக்கதும், பாவமான-
தும், அசுசியானதுமான நிலையிலிருந்து இழுத்துக்
கொள்ளும்படியாக, நம்முடைய தேவன் இரக்கம்
கொள்வார் என்று யார் எண்ணியிருக்கக்கூடும்?

Who could have supposed that our God would have been so merciful as to have snatched us from our awful, sinful, and polluted state?

18 இதோ, நாம் அவருடைய சபையை அதம் பண்-
ணுவோமென்று பயமுறுத்தி கோபத்தோடு, சென்-
றோம்.

Behold, we went forth even in wrath, with mighty threatenings to destroy his church.

19 அவர் அப்போதே, நம்மை அஞ்சத்தக்க அழிவிற்-
குள்ளாக ஒப்படைக்காததேன்? ஆம், தம்முடைய நீ-
தியின் பட்டயத்தை நம்மீது விழச்செய்து, நம்மை
நித்திய மனமுறிவிற்குள்ளாகத் தீர்க்காததேன்?

Oh then, why did he not consign us to an awful destruction, yea, why did he not let the sword of his justice fall upon us, and doom us to eternal despair?

20 இதை நினைக்கையில், என் ஆத்துமா அநேக-
மாய் விலகி ஓடுவது போலிருக்கிறது. இதோ, அவர்
தமது நீதியை நம்மேல் செலுத்தாமல், தம்முடைய
மிகுந்த இரக்கத்தினால், நம்மை மரணமும், துர்ப்-
பாக்கியமுமான அந்த என்றுமுள்ள துரவைக்
கடக்கச் செய்து, நம்முடைய ஆத்துமாக்களின்
இரட்சிப்பு மட்டும் அழைத்து வந்திருக்கிறார்.

Oh, my soul, almost as it were, fleeth at the thought. Behold, he did not exercise his justice upon us, but in his great mercy hath brought us over that everlasting gulf of death and misery, even to the salvation of our souls.

21 இப்பொழுதும், இதோ, என் சகோதரரே, இவைக-
ளை அறிகிற சுபாவ மனுஷன் எவராகிலும் உண்-
டா? நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். மனஸ்தா-
பப்படுகிறவர்களேயல்லாமல் வேறொருவரும்
இவைகளை அறியார்.

And now behold, my brethren, what natural man is there that knoweth these things? I say unto you, there is none that knoweth these things, save it be the penitent.

22 ஆம், எவன் மனந்திரும்பி, விசுவாசத்தைப் பிர-
யோகித்து, நற்கிரியைகளை நடப்பித்து, இடைவி-
டாமல் தொடர்ந்து ஜெபிக்கிறானோ, அவனுக்குத்-
தான் தேவ இரகசியங்களை அறியும்படியாக அரு-
ளப்பட்டிருக்கிறது. ஆம், அவனுக்குத்தான் என்று-
மே வெளிப்படாத காரியங்கள் வெளிப்படுத்தப்ப-
டும். நம்முடைய இந்தச் சகோதரரை மனந்திருப்புத-
லுக்குள் கொண்டு வரும்படியாய் நமக்கு அருளப்-
பட்டதைப்போலவே, மனந்திரும்புதலுக்குள்ளாக
ஆயிரமாயிரம் ஆத்துமாக்களைக் கொண்டு வரும்-
படியாக அவனுக்கும் அருளப்படும்.

Yea, he that repenteth and exerciseth faith, and bringeth forth good works, and prayeth continually without ceasing—unto such it is given to know the mysteries of God; yea, unto such it shall be given to reveal things which never have been revealed; yea, and it shall be given unto such to bring thousands of souls to repentance, even as it has been given unto us to bring these our brethren to repentance.

23 என் சகோதரரே, நாம் சாரகெம்லா தேசத்திலிருக்-
கும் நம்முடைய சகோதரரை நோக்கி, நாங்கள் நம்-
முடைய சகோதரராகிய லாமானியருக்குப் பிரசங்-
கிக்க, நேபியின் தேசத்திற்குப் போகிறோம் என்று
சொன்னபோது, அவர்கள் இகழ்ந்து நகைத்ததை
நினைவில் கொண்டிருக்கிறீர்களா?

Now do ye remember, my brethren, that we said unto our brethren in the land of Zarahemla, we go up to the land of Nephi, to preach unto our brethren, the Lamanites, and they laughed us to scorn?

24 ஏனெனில் அவர்கள் நம்மை நோக்கி: நீங்கள் லா-
மானியரை சத்திய ஞானத்திற்குள் கொண்டுவரக்-
கூடும் என்று எண்ணுகிறீர்களா? இரத்தம் சிந்துத-
லில் மனம் மகிழ்பவர்களாயும், மிகக் கொடிய அக்-
கிரமத்தைச் செய்வதில் தங்கள் நாட்களைக் கழிப்-
பவராயும், அக்கிரமக்காரனின் வழியைப்போல-
வே, ஆதியிலிருந்து தங்கள் வழிகளிலுமிருக்கிற,
அந்த வணங்காக் கழுத்துள்ள ஜனமாகிய லாமா-
னியருக்கு, அவர்களுடைய பிதாக்களின் பாரம்ப-
ரியங்கள் தவறானவை என்று உணர்த்த உங்க-
ளால் கூடுமென்று எண்ணுகிறீர்களா என்றார்கள்.
இப்பொழுது என் சகோதரரே, இப்படியே பேசினார்-
கள் என்பதை நீங்களும் நினைவில் கொண்டிருக்-
கிறீர்களா.

For they said unto us: Do ye suppose that ye can bring the Lamanites to the knowledge of the truth? Do ye suppose that ye can convince the Lamanites of the incorrectness of the traditions of their fathers, as stiffnecked a people as they are; whose hearts delight in the shedding of blood; whose days have been spent in the grossest iniquity; whose ways have been the ways of a transgressor from the beginning? Now my brethren, ye remember that this was their language.

25 அவர்கள்: நம்மை மேற்கொண்டு நம்மை அழித்-
துப் போடாதபடிக்கு நாம் அவர்களையும், அவர்க-
ளுடைய அக்கிரமத்தையும் தேசத்திலிருந்து அழிக்-
கும் பொருட்டாக, அவர்களுக்கு விரோமாய் ஆயு-
தங்களை எடுப்போம், என்றார்கள்.

And moreover they did say: Let us take up arms against them, that we destroy them and their iniquity out of the land, lest they overrun us and destroy us.

26 ஆனால் இதோ, என் பிரியமான சகோதரரே, நாம்
நம்முடைய சகோதரரை அழித்துப்போடும் நோக்-
கத்தோடு அல்லாமல், அவர்களின் ஆத்துமாக்கள்
சிலவற்றையாகிலும் மீட்கும் நோக்கத்தோடே நாம்
வனாந்தரத்தினுள் வந்தோம்.

But behold, my beloved brethren, we came into the wilderness not with the intent to destroy our brethren, but with the intent that perhaps we might save some few of their souls.

27 நம்முடைய உள்ளங்கள் சோர்ந்து, நாம் திரும்பிப்
போகலாம் என்று இருக்கையில், இதோ, கர்த்தர் நம்-
மைத் தேற்றி, உங்கள் சகோதரராகிய லாமானியர்
மத்தியில் போய், உங்களுடைய உபத்திரவங்க-
ளைப் பொறுமையோடே சகித்திருங்கள். நான் உங்-
களுக்கு ஜெயத்தைக் கொடுப்பேன், என்றார்.

Now when our hearts were depressed, and we were about to turn back, behold, the Lord comforted us, and said: Go amongst thy brethren, the Lamanites, and bear with patience thine afflictions, and I will give unto you success.

28 இப்போதும் இதோ, நாம் வந்து அவர்களுக்குள்-
ளே போனோம், நம்முடைய துன்பங்களை பொறு-
மையோடு சகித்திருந்தோம். நாம் வறுமையை
சகித்தோம்; நாம் உலகத்தின் இரக்கங்களில் சார்ந்தி-
ருந்து, ஆம், நாம் உலகத்தின் இரக்கங்களில் மாத்தி-
ரம் சார்ந்திராமல், தேவ இரக்கங்களிலும் சார்ந்து
வீட்டுக்கு வீடு சென்றோம்.

And now behold, we have come, and been forth amongst them; and we have been patient in our sufferings, and we have suffered every privation; yea, we have traveled from house to house, relying upon the mercies of the world—not upon the mercies of the world alone but upon the mercies of God.

29 நாம் அவர்களுடைய வீடுகளினுள் பிரவேசித்து
அவர்களுக்குப் போதித்தோம். நாம் அவர்களுக்கு
அவர்களுடைய வீதிகளிலும் போதித்தோம்; நாம்
அவர்களுக்கு அவர்களுடைய மலைகளின் மே-
லும் போதித்தோம்; நாம் அவர்களுடைய ஆலயங்க-
ளிலும், அவர்களுடைய ஜெப ஆலயங்களிலும் பி-
ரவேசித்து அவர்களுக்குப் போதித்தோம்; நாம் தள்-
ளப்பட்டோம், பரியாசம்பண்ணப்பட்டோம், உமி-
ழப்பட்டோம், நாம் தாடைகளில் அடிக்கப்பட்டோம்;
நாம் கல்லெறியப்பட்டோம். பிடிக்கப்பட்டு வலிய
கயிறுகளால் கட்டப்பட்டு சிறையினுள் தள்ளப்-
பட்டோம்; தேவனுடைய வல்லமையினாலும், ஞா-
னத்தினாலும் மறுபடியும் விடுவிக்கப்பட்டோம்.

And we have entered into their houses and taught them, and we have taught them in their streets; yea, and we have taught them upon their hills; and we have also entered into their temples and their synagogues and taught them; and we have been cast out, and mocked, and spit upon, and smote upon our cheeks; and we have been stoned, and taken and bound with strong cords, and cast into prison; and through the power and wisdom of God we have been delivered again.

30 ஒருவேளை நாம் சில ஆத்துமாக்களையாகிலும்
மீட்கும் கருவியாக இருக்கும் பொருட்டு, சகல உபத்-
திரவங்களையும் சகித்திருந்து, இவை யாவையும்
செய்தோம்; ஒருவேளை நாம் சிலரையாகிலும் மீட்-
கும் கருவியாக இருக்கக் கூடுமேயானால் நமது சந்-
தோஷம் பூரணப்படுமென்று எண்ணியிருந்தோம்.

And we have suffered all manner of afflictions, and all this, that perhaps we might be the means of saving some soul; and we supposed that our joy would be full if perhaps we could be the means of saving some.

31 இப்பொழுதும் இதோ, நாம் எதிர்பார்த்து நம்மு-
டைய பிரயாசங்களின் கனிகளைக் காணமுடியும்;
அவைகள் கொஞ்சம்தானா? இல்லை, அவை அதி-
கமாய் உள்ளன, என்று நான் உங்களுக்குச் சொல்-
லுகிறேன்; அவர்கள் தங்களுடைய சகோதரரின் மீ-
தும், நம் மீதும் வைத்திருக்கிற அன்பினிமித்தம்,
அவர்களுடைய உத்தமத்தைக் குறித்து நாம் சாட்சி
பகரமுடியும்.

Now behold, we can look forth and see the fruits of our labors; and are they few? I say unto you, Nay, they are many; yea, and we can witness of their sincerity, because of their love towards their brethren and also towards us.

32 ஏனெனில் இதோ, அவர்கள் தங்கள் பகைவரின்
ஜீவனை வாங்கிப் போடுவதைக் காட்டிலும் தங்-
கள் ஜீவனைப் பலியாய்க் கொடுப்பார்கள்; அவர்-
கள் தங்கள் சகோதரர்பால் வைத்திருக்கிற தங்க-
ளின் அன்பினிமித்தம், தங்கள் யுத்த ஆயுதங்களை
ஆழமாய்ப் பூமியில் புதைத்துப்போட்டார்கள்.

For behold, they had rather sacrifice their lives than even to take the life of their enemy; and they have buried their weapons of war deep in the earth, because of their love towards their brethren.

33 இப்பொழுது இதோ, நான் உங்களுக்குச் சொல்லு-
கிறேன், தேசம் முழுவதிலும் இப்படிப்பட்ட மேன்-
மையான அன்பு உண்டாயிருந்ததா? இதோ, இல்-
லை, நேபியருக்குள்ளும் உண்டாயிருக்கவில்லை,
என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And now behold I say unto you, has there been so great love in all the land? Behold, I say unto you, Nay, there has not, even among the Nephites.

34 ஏனெனில் இதோ, இவர்கள் தங்கள் சகோதரருக்கு
விரோதமாய் ஆயுதங்களை உயர்த்துவார்கள்;
தாங்கள் கொல்லப்பட தங்களை அனுமதிக்கமாட்-
டார்கள். ஆனால் இதோ, அவர்களில் எவ்வளவு
பேர் தங்கள் ஜீவனை விட்டார்கள். அவர்களுடைய
அன்பினாலும், பாவத்தின் மேலிருந்த அவர்களு-
டைய வெறுப்பினிமித்தமும் அவர்கள் தங்களு-
டைய தேவனிடத்திற்குப் போனார்கள், என்று நாம்
அறிவோம்.

For behold, they would take up arms against their brethren; they would not suffer themselves to be slain. But behold how many of these have laid down their lives; and we know that they have gone to their God, because of their love and of their hatred to sin.

35 இப்போது நாம் களிகூர்ந்திருக்க நமக்குக் காரண-
மில்லையா? ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன். களிகூர்ந்திருக்க நமக்கு உண்டான காரணத்-
தைப்போல், உலக ஆரம்ப முதல், வேறே எந்த மனு-
ஷருக்கும் உண்டாயிருக்கவில்லை; என் சந்தோ-
ஷம் என் தேவனில் மேன்மைபாராட்டும்படியாகப்
பெருகுகிறது; ஏனெனில் அவர் சகல வல்லமை-
யையும், சகல ஞானத்தையும், சகல அறிவையும்
பெற்றிருக்கிறார். அவர் சகலத்தையும் அறிகிறார்.
மனந்திரும்பி, தம்முடைய நாமத்தை விசுவாசிக்கி-
றவர்களுக்கு இரட்சிப்புக்கேதுவாய் அவர் இரக்க-
முள்ளவராயிருக்கிறார்.

Now have we not reason to rejoice? Yea, I say unto you, there never were men that had so great reason to rejoice as we, since the world began; yea, and my joy is carried away, even unto boasting in my God; for he has all power, all wisdom, and all understanding; he comprehendeth all things, and he is a merciful Being, even unto salvation, to those who will repent and believe on his name.

36 இது மேன்மை பாராட்டலாய் இருந்தால், நான்
இன்னும் மேன்மை பாராட்டுவேன்; ஏனெனில் இது-
வே என் ஜீவனும், என் வெளிச்சமும், என் சந்தோஷ-
மும், என் இரட்சிப்பும் என்றுமுள்ள அழிவிலிருந்து
என்னை மீட்பதுமாய் இருக்கிறது. ஆம், அந்நிய தே-
சத்தில் தன் அடிமரத்திலிருந்து உடைந்துபோன,
இஸ்ரவேல் விருட்சத்தின் கிளையாகிய இந்த
ஜனத்தின் மீது, கரிசனையுள்ள என் தேவனின் நா-
மம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக, என்று சொல்லுகி-
றேன். ஆம், அந்நிய தேசத்தில் அலைந்து திரிந்த-
வர்கள் மேல், கரிசனையுள்ள என் தேவனின் நா-
மம் ஸ்தோத்தரிக்கப்படுவதாக.

Now if this is boasting, even so will I boast; for this is my life and my light, my joy and my salvation, and my redemption from everlasting wo. Yea, blessed is the name of my God, who has been mindful of this people, who are a branch of the tree of Israel, and has been lost from its body in a strange land; yea, I say, blessed be the name of my God, who has been mindful of us, wanderers in a strange land.

37 இப்பொழுதும் என் சகோதரரே, ஒவ்வொரு ஜன-
மும், எத்தேசத்தில் இருந்தாலும், அவர்களைக் கு-
றித்து தேவன் கரிசனமாயிருக்கிறார் என்று நாம்
பார்க்கிறோம்; ஆம், அவர் தம் ஜனத்தைக் கணக்கி-
டுகிறார், அவருடைய மனதின் இரக்கம் பூமி முழு-
வதும் இருக்கிறது. இப்பொழுது, இதுவே என் சந்-
தோஷமும், என் நன்றியறிதலுமாயிருக்கிறது. நான்
என் தேவனுக்கு என்றென்றும் நன்றி செலுத்து-
வேன். ஆமென்.

Now my brethren, we see that God is mindful of every people, whatsoever land they may be in; yea, he numbereth his people, and his bowels of mercy are over all the earth. Now this is my joy, and my great thanksgiving; yea, and I will give thanks unto my God forever. Amen.

# ஆல்மா 27

1 இப்பொழுது, அந்தப்படியே, நேபியர்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்குப்போய் அவர்களை அழித்துப்போட அநேக போராட்டங்களை மேற்கொண்ட பின்னர், அவர்களுடைய அழிவை நாடுவது பிரயோஜனமற்றது என்று லாமானியர் கண்டபோது, அவர்கள் நேபியின் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

2 அந்தப்படியே, அமலேக்கியர், தங்களுடைய இழப்பினிமித்தம் மிகவும் கோபமாயிருந்தார்கள். தாங்கள் நேபியரைப் பழிதீர்க்க முடியாதெனக் கண்டபோது, அவர்கள் ஜனங்களை அவர்களுடைய சகோதரர்களான அந்தி-நேபி-லேகி ஜனத்துக்கு விரோதமாய் கோபம் கொள்ளும்படி தூண்டிவிட்டார்கள்; ஆதலால் அவர்களை மறுபடியும் அழிக்கத் துவங்கினார்கள்.

3 இப்பொழுது, இந்த ஜனங்களோ தங்கள் ஆயுதங்களை மறுபடியும் எடுக்க மறுத்து, தங்களுடைய சத்துருக்களின் விருப்பத்தின்படியே தாங்கள் மடிந்துபோக முன்வந்தார்கள்.

4 இப்பொழுது அம்மோனும் அவன் சகோதரரும் தாங்கள் மிகவும் அன்பாய் நேசித்த பிரியமானவர்களுக்குள்ளேயும், அவர்களை மிகவும் பிரியமாய் நேசித்தவர்களுக்குள்ளேயும், அழிவின் கிரியையைக் கண்டபோது, ஏனெனில் தங்களை நித்திய அழிவிலிருந்து காத்துக்கொள்ள, தேவனிடத்திலிருந்து அனுப்பப்பட்ட தூதர்களைப்போல அவர்கள் பாவிக்கப்பட்டார்கள், ஆகவே அம்மோனும் அவன் சகோதரரும் அந்த பயங்கர சங்கரிப்பின் கிரியைகளைக் கண்டபோது, அவர்கள் மேல் மனதுருகி, ராஜாவை நோக்கி:

5 கர்த்தருடைய ஜனமாகிய இவர்களை ஏகமாய்க் கூடிவரச்செய்து, நம்முடைய சகோதரராகிய நேபியர் இருக்கும் சாரகெம்லா தேசத்திற்குப்போய், நாம் நிர்மூலமாகாதபடிக்கு நம் சத்துருக்களின் கைகளுக்கு தப்பியோடுவோமாக, என்றார்கள்.

6 ஆனால் ராஜா அவர்களை நோக்கி: இதோ, நாம் நேபியருக்கு விரோதமாய்ச் செய்த அநேக கொலைகள், மற்றும் பாவங்களினிமித்தம் அவர்கள் நம்மை அழித்துப்போடுவார்கள், என்று சொன்னான்.

7 அதற்கு அம்மோன்: நான் போய் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறேன். அவர் நம்மை நம்முடைய சகோதரரிடத்திற்கு கீழிறங்கிப் போகச் சொன்னால், நீங்கள் போவீர்களோ என்று கேட்டான்.

8 ராஜா அவனை நோக்கி: ஆம், கர்த்தர் போகச் சொன்னால், நாம் நம்முடைய சகோதரரிடத்திற்கு கீழிறங்கிப் போய், அவர்களுக்கு விரோதமாய் நாம் செய்த அநேக கொலைகளையும் பாவங்களையும் சரிசெய்யுமளவும் அவர்களுக்கு அடிமைகளாய் இருப்போம், என்றான்.

# Alma 27

Now it came to pass that when those Lamanites who had gone to war against the Nephites had found, after their many struggles to destroy them, that it was in vain to seek their destruction, they returned again to the land of Nephi.

And it came to pass that the Amalekites, because of their loss, were exceedingly angry. And when they saw that they could not seek revenge from the Nephites, they began to stir up the people in anger against their brethren, the people of Anti-Nephi-Lehi; therefore they began again to destroy them.

Now this people again refused to take their arms, and they suffered themselves to be slain according to the desires of their enemies.

Now when Ammon and his brethren saw this work of destruction among those whom they so dearly beloved, and among those who had so dearly beloved them—for they were treated as though they were angels sent from God to save them from everlasting destruction—therefore, when Ammon and his brethren saw this great work of destruction, they were moved with compassion, and they said unto the king:

Let us gather together this people of the Lord, and let us go down to the land of Zarahemla to our brethren the Nephites, and flee out of the hands of our enemies, that we be not destroyed.

But the king said unto them: Behold, the Nephites will destroy us, because of the many murders and sins we have committed against them.

And Ammon said: I will go and inquire of the Lord, and if he say unto us, go down unto our brethren, will ye go?

And the king said unto him: Yea, if the Lord saith unto us go, we will go down unto our brethren, and we will be their slaves until we repair unto them the many murders and sins which we have committed against them.

9 ஆனால் அம்மோன் அவனை நோக்கி: அவர்க-
ளுக்குள்ளே அடிமைகள் இருக்கக்கூடாது என,
என் தகப்பனால் ஏற்படுத்தப்பட்ட நம்முடைய
சகோதரரின் சட்டத்திற்கு விரோதமாயிருக்கிறது;
ஆதலால் நாம் கீழிறங்கிப்போய் நம்முடைய சகோ-
தரரின் இரக்கங்களை சார்ந்திருப்போமாக, என்று
சொன்னான்.

But Ammon said unto him: It is against the law of our brethren, which was established by my father, that there should be any slaves among them; therefore let us go down and rely upon the mercies of our brethren.

10 ஆனால் ராஜா அவனை நோக்கி: கர்த்தரிடத்தில்
விசாரி, அவர் நம்மைப் போகச் சொன்னால் போ-
வோம், இல்லாவிடில் தேசத்திலே அழிந்து போ-
வோம், என்றான்.

But the king said unto him: Inquire of the Lord, and if he saith unto us go, we will go; otherwise we will perish in the land.

11 அந்தப்படியே, அம்மோன் போய் கர்த்தரிடத்தில்
விசாரித்தான், கர்த்தர் அவனை நோக்கி:

And it came to pass that Ammon went and inquired of the Lord, and the Lord said unto him:

12 இந்த ஜனம் அழிந்து போகாதபடிக்கு அவர்களை
இந்த தேசத்திலிருந்து வழிநடத்திக்கொண்டுபோ;
ஏனெனில் அமலேக்கியரின் இருதயங்களை சாத்-
தான் வசமாக்கிக் கொண்டான். அவர்கள் லாமா-
னியரைக் கோபமடையச் செய்து, அவர்களுடைய
சகோதரரைக் கொன்றுபோடும்படி ஏவி விடுகிறார்-
கள்; ஆதலால் இவர்களை இத்தேசத்திலிருந்து
வழிநடத்திப் போ; இந்த தலைமுறையில் இந்த
ஜனம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள், ஏனெனில் நான்
அவர்களைப் பாதுகாப்பேன், என்றார்.

Get this people out of this land, that they perish not; for Satan has great hold on the hearts of the Amalekites, who do stir up the Lamanites to anger against their brethren to slay them; therefore get thee out of this land; and blessed are this people in this generation, for I will preserve them.

13 இப்பொழுது, அந்தப்படியே, அம்மோன் போய்
கர்த்தர் தனக்கு அறிவித்த வார்த்தைகள் யாவை-
யும் ராஜாவினிடத்தில் சொன்னான்.

And now it came to pass that Ammon went and told the king all the words which the Lord had said unto him.

14 அவர்கள் கர்த்தருடைய ஜனமாகிய, தங்களு-
டைய சகல ஜனங்களையும் ஏகமாய்க் கூட்டினார்-
கள். அவர்கள் தங்களுடைய ஆடுகளையும், மந்-
தைகளையும் கூடிவரப்பண்ணி, தேசத்தைவிட்டுப்
புறப்பட்டு, சாரகெம்லா தேசத்தை, நேபி தேசத்திலி-
ருந்து பிரிக்கும் வனாந்தரத்தித்தினுள் தேசத்தின்
எல்லைகள் ஓரமாய் வந்தடைந்தார்கள்.

And they gathered together all their people, yea, all the people of the Lord, and did gather together all their flocks and herds, and departed out of the land, and came into the wilderness which divided the land of Nephi from the land of Zarahemla, and came over near the borders of the land.

15 அந்தப்படியே, அம்மோன் அவர்களை நோக்கி:
இதோ, நானும் என் சகோதரரும் சாரகெம்லா தேசத்-
தினுள் போவோம், நாங்கள் திரும்பும்மட்டும் நீங்-
கள் இங்கே தரித்திருங்கள், நம்முடைய சகோதரர்
அவர்களுடைய தேசத்திற்குள், நீங்கள் வர சித்த-
மாயிருக்கிறார்களா என்று அவர்களின் இருதயத்-
தை சோதித்தறிவோம், என்றான்.

And it came to pass that Ammon said unto them: Behold, I and my brethren will go forth into the land of Zarahemla, and ye shall remain here until we return; and we will try the hearts of our brethren, whether they will that ye shall come into their land.

16 அந்தப்படியே, அம்மோன் தேசத்திற்குள்ளே
போய்க் கொண்டிருக்கையில், அவனும் அவன்
சகோதரரும் ஏற்கனவே சொல்லப்பட்ட அந்த இடத்-
தில் ஆல்மாவை சந்தித்தார்கள், இதோ, இது ஒரு
சந்தோஷம் நிறைந்த சந்திப்பாய் இருந்தது.

And it came to pass that as Ammon was going forth into the land, that he and his brethren met Alma, over in the place of which has been spoken; and behold, this was a joyful meeting.

17
அம்மோன் பூரணமாய் சந்தோஷத்தினால் நி-
றைக்கப்பட்டிருக்கும்படிக்கு அவன் சந்தோஷம் மி-
குதியாயிருந்தது; ஆம், அவன் பெலன் தளர்ந்து
போகுமட்டுமாய், அவனுடைய தேவனில் அவன்
கொண்டிருந்த சந்தோஷத்தினால் விழுங்கப்பட்-
டுப் போனான்; அவன் மறுபடியும் பூமியில் விழுந்-
தான்.

Now the joy of Ammon was so great even that he was full; yea, he was swallowed up in the joy of his God, even to the exhausting of his strength; and he fell again to the earth.

18
இப்பொழுது இது மிகுந்த சந்தோஷம் இல்லையா?
இதோ, உண்மையாகவே மனஸ்தாபப்பட்டு, மகிழ்ச்-
சியை தாழ்மையாகத் தேடுகிறவர்களே அல்லாமல்,
வேறொருவரும் இந்த சந்தோஷத்தைப் பெற்றுக்
கொள்வதில்லை.

Now was not this exceeding joy? Behold, this is joy which none receiveth save it be the truly penitent and humble seeker of happiness.

19
இப்பொழுது ஆல்மாவுக்கு தன் சகோதரரைச் சந்-
தித்ததில் உண்டான சந்தோஷம் மெய்யாகவே மிகு-
தியாயிருந்தது. அப்படியே ஆரோனும், ஓம்னரும்,
ஈம்னியும் பெற்ற சந்தோஷமும் மிகுதியாயிருந்தது.
ஆனால் இதோ, அவர்களுடைய பெலத்தை மிஞ்சு-
மளவிற்கு அவர்களுக்கு சந்தோஷம் உண்டாயி-
ருக்கவில்லை.

Now the joy of Alma in meeting his brethren was truly great, and also the joy of Aaron, of Omner, and Himni; but behold their joy was not that to exceed their strength.

20
இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா தன் சகோ-
தரரை சாரகெம்லா தேசத்திலிருக்கும் தன்னுடைய
சொந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றான்; அவர்கள்
போய் நேபியின் தேசத்தில் தங்கள் சகோதரராகிய
லாமானியருக்குள்ளே தங்களுக்கு ஏற்பட்ட சகல
காரியங்களையும் பிரதான நியாயாதிபதியிடம்
சொன்னார்கள்.

And now it came to pass that Alma conducted his brethren back to the land of Zarahemla; even to his own house. And they went and told the chief judge all the things that had happened unto them in the land of Nephi, among their brethren, the Lamanites.

21
அந்தப்படியே, தங்கள் சகோதரராகிய, அந்தி-
நேபி-லேகி ஜனத்தாரை அனுமதிப்பதைப்பற்றி
ஜனங்களுடைய விருப்பத்தை அறிய ஆவலாய்
தேசம் முழுவதிலும் பிரதான நியாயாதிபதி ஒரு பிர-
கடனத்தை அனுப்பினான்.

And it came to pass that the chief judge sent a proclamation throughout all the land, desiring the voice of the people concerning the admitting their brethren, who were the people of Anti-Nephi-Lehi.

22
அந்தப்படியே, ஜனங்கள் விருப்பம் தெரிவித்ததா-
வது: இதோ, உதாரத்துவஸ்தலத்தை இணைக்கிற,
சமுத்திரத்திற்கு கிழக்கேயும், உதாரத்துவஸ்தலத்-
திற்கு தெற்கேயுமுள்ள எருசோன் தேசத்தை நாம்
கொடுத்து விடுவோம்; நமது சகோதரர் சுதந்தரித்-
துக் கொள்ளும் பொருட்டு நாங்கள் கொடுக்கும் தே-
சம் இந்த எருசோன் தேசமே.

And it came to pass that the voice of the people came, saying: Behold, we will give up the land of Jershon, which is on the east by the sea, which joins the land Bountiful, which is on the south of the land Bountiful; and this land Jershon is the land which we will give unto our brethren for an inheritance.

23
இதோ, எருசோன் தேசத்திலிருக்கும் நம்முடைய
சகோதரரை காக்கும்படிக்கு, எருசோன் தேசத்திற்-
கும் நேபி தேசத்திற்குமிடையே, நம்முடைய சேனை-
களை நிறுத்துவோம். தங்களுடைய சகோதரருக்கு
விரோதமாய்ப் படைக்கலன்களை எடுத்தால் பா-
வம் செய்வோமே, என்று நம்முடைய சகோதரர்
அஞ்சுவதினிமித்தம் அவர்களுக்காக இப்படிச்
செய்கிறோம்; அவர்களுடைய பொல்லாத துன்-
மார்க்கத்தினாலும், அநேக கொலைகளைப் புரிந்த-
தினிமித்தமும், அவர்களில் உண்டான உருக்கமான
மனந்திரும்புதலின் காரணமாகவே, இந்த மிகுந்த
பயம் அவர்கள் மேல் வந்தது.

And behold, we will set our armies between the land Jershon and the land Nephi, that we may protect our brethren in the land Jershon; and this we do for our brethren, on account of their fear to take up arms against their brethren lest they should commit sin; and this their great fear came because of their sore repentance which they had, on account of their many murders and their awful wickedness.

24 இப்பொழுதும் இதோ, நம்முடைய சகோதரர் எரு-
சோன் தேசத்தை சுதந்தரிக்கும் பொருட்டே நாம்
இதைச் செய்வோம்; நாம் நம்முடைய சேனைகளை
பராமரிக்கும்படிக்கு, அவர்கள் தங்கள் பொருட்க-
ளில் ஒரு பங்கைக் கொடுக்கவேண்டுமென்ற நிபந்-
தனையோடு, அவர்களை அவர்களுடைய விரோ-
திகளிடமிருந்து நமது சேனைகளைக்கொண்டு
காப்பாற்றுவோம்.

And now behold, this will we do unto our brethren, that they may inherit the land Jershon; and we will guard them from their enemies with our armies, on condition that they will give us a portion of their substance to assist us that we may maintain our armies.

25 இப்பொழுது, அந்தப்படியே, அம்மோன் இதைக்
கேட்டபோது, அவனும் ஆல்மாவும், அந்தி-நேபி-
லேகி ஜனத்தார் பாளயமிறங்கின வனாந்தரத்தி-
னுள் போய், அவர்களுக்கு இந்தக் காரியங்கள் யா-
வையும் அறிவித்தார்கள். அம்மோனுடனும்,
ஆரோனுடனும், மற்றும் தன் சகோதரரோடும், ஆல்-
மா தான் மனமாறியதை அவர்களுக்கு விவரித்-
தான்.

Now, it came to pass that when Ammon had heard this, he returned to the people of Anti-Nephi-Lehi, and also Alma with him, into the wilderness, where they had pitched their tents, and made known unto them all these things. And Alma also related unto them his conversion, with Ammon and Aaron, and his brethren.

26 அந்தப்படியே, அது அவர்களுக்குள்ளே மிகுந்த
சந்தோஷத்தை உண்டாக்கினது. அவர்கள் எரு-
சோன் தேசத்திற்குப் போய் எருசோன் தேசத்தில் கு-
டியேறினார்கள்; அவர்கள் நேபியரால் அம்மோன்
ஜனம் என்று அழைக்கப்பட்டனர்; ஆதலால் அச்ச-
மயம் முதல் என்றென்றுமாய், அவர்கள் அப்பெய-
ரால் வேறுபடுத்தப்பட்டனர்.

And it came to pass that it did cause great joy among them. And they went down into the land of Jershon, and took possession of the land of Jershon; and they were called by the Nephites the people of Ammon; therefore they were distinguished by that name ever after.

27 அவர்கள் நேபி ஜனத்திற்குள்ளும், தேவ சபையா-
ருக்குள்ளும் எண்ணப்பட்டார்கள். அவர்கள் சக-
லத்திலும் பூரண உத்தமர்களாயும், சன்மார்க்கர்க-
ளாயுமிருந்து முடிவுபரியந்தமும், கிறிஸ்துவின் மீ-
திருந்த விசுவாசத்தில் உறுதியாயிருந்ததாலும், தே-
வனிடத்திலும், மனுஷரிடத்திலும் அவர்கள்
கொண்டிருந்த வைராக்கியத்தினிமித்தமும் தனித்-
துவம் பெற்றார்கள்.

And they were among the people of Nephi, and also numbered among the people who were of the church of God. And they were also distinguished for their zeal towards God, and also towards men; for they were perfectly honest and upright in all things; and they were firm in the faith of Christ, even unto the end.

28 அவர்கள் தங்களுடைய சகோதரரின் இரத்தத்-
தைச் சிந்துதலை மிகுந்த அருவருப்பானதென்று
கருதினார்கள்; அவர்களுடைய சகோதரருக்கு வி-
ரோதமாய் அவர்களை ஆயுதம் தரிக்கச் செய்வது
கூடாத காரியமாயிருந்தது; அவர்களுடைய நம்-
பிக்கையும், எண்ணங்களும் கிறிஸ்துவைப்பற்றி-
யும், உயிர்த்தெழுதலைப்பற்றியும் இருக்கிறதாலே
அவர்கள் மரணத்தை சிறிதளவும் பயங்கரமாகக்
கருதவில்லை. ஆதலால் அவர்களைப் பொறுத்த-
மட்டிலும் மரணம், கிறிஸ்து அதன்மீது கொண்ட
ஜெயத்தால் விழுங்கப்பட்டுப் போயிற்று.

And they did look upon shedding the blood of their brethren with the greatest abhorrence; and they never could be prevailed upon to take up arms against their brethren; and they never did look upon death with any degree of terror, for their hope and views of Christ and the resurrection; therefore, death was swallowed up to them by the victory of Christ over it.

29 ஆதலால், அவர்களை அடிக்க பட்டயத்தையோ
அல்லது உடைவாளையோ எடுப்பதைவிட, தங்-
கள் சகோதரர்களால் திணிக்கப்படுகிற மிகவும்
கொடூரமான, வேதனைமிக்க மரணத்தை அவர்கள்
ஏற்றுக் கொள்வார்கள்.

Therefore, they would suffer death in the most aggravating and distressing manner which could be inflicted by their brethren, before they would take the sword or cimeter to smite them.

30 இப்படியாக, அவர்கள் ஆர்வமுள்ளவர்களாயும்,
நேசிக்கப்படத்தக்க ஜனமாயும், கர்த்தருக்கு மிகுந்த
பிரியமான ஜனமாயுமிருந்தார்கள்.

And thus they were a zealous and beloved people, a highly favored people of the Lord.

# ஆல்மா 28

1 இப்பொழுதும், அந்தப்படியே, அம்மோன் ஜனம்
எருசோன் தேசத்தில் ஸ்திரப்பட்டு, எருசோன் தேசத்-
தில் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டு, எருசோன் தேசத்-
தைச் சுற்றிலும், ஆம், சாரகெம்லா தேசத்தைச் சுற்-
றிலும் எல்லையோரங்களில் நேபியரின் சேனை-
கள் நிறுத்தப்பட்டன. இதோ லாமானியரின் சே-
னைகள் தங்களுடைய சகோதரரை வனாந்தரத்தி-
னுள் பின் தொடர்ந்தது.

2 அங்கே கொடிய யுத்தமொன்று நடைபெற்றது;
ஆம், அப்படிப்பட்ட ஒன்றை தேசத்திலிருக்கும்
ஜனங்கள் யாவரும், லேகி எருசலேமை விட்டுவந்த
காலமுதல் அறிந்திருக்கவில்லை; ஆம், லாமானிய-
ரில் பதினாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும்,
தூரமாய் சிதறடிக்கப்பட்டும் போயினர்.
3 ஆம், நேபி ஜனத்திற்குள்ளும் கொடிய சங்காரம்
உண்டாயிருந்தது; ஆயினும் லாமானியர் துரத்தப்-
பட்டும், சிதறடிக்கப்பட்டும் போயினர். நேபி ஜனம்
தங்களுடைய தேசத்திற்கு மறுபடியும் திரும்பினார்-
கள்.
4 இவ்வேளையிலே, தேசமுழுவதிலும், நேபியின்
ஜனங்களுக்குள்ளும் மிகுந்த துக்கமும், புலம்பலும்
கேட்கப்பட்டது.

5 ஆம், விதவைகள் தங்கள் புருஷர்களுக்காகவும்,
தகப்பன்மார்கள் தங்கள் குமாரர்களுக்காகவும்,
மகள் தன் சகோதரனுக்காகவும், சகோதரன் தன்
தகப்பனுக்காகவும் அழுது புலம்பும் சத்தம் கேட்கப்-
பட்டது. இப்படியாக கொல்லப்பட்டுப்போன தங்க-
ளுடைய உறவினர்களுக்காக அவர்கள் யாவரும்
அழுது புலம்பும் கூக்குரல் கேட்கப்பட்டது.
6 இது உண்மையாகவே ஒரு துக்க நாளாயிருந்தது;
ஆம், அது இக்கட்டானதும், உபவாசமிருந்து ஜெபம்
பண்ணுகிற காலமாயுமிருந்தது.

7 இப்படியாக நேபியின் ஜனத்தின்மேல் நியாயாதி-
பதிகளின் பதினைந்தாம் வருஷ ஆளுகையும் மு-
டிவுற்றது;
8 இது அம்மோனும், அவனுடைய சகோதரரைப்
பற்றியும், அவர்கள் நேபியின் தேசத்தில் மேற்-
கொண்ட பிரயாணங்களைப் பற்றியும், அவர்கள்
தேசத்தில் அனுபவித்த துன்பங்களையும், துக்கங்-
களையும், உபத்திரவங்களையும், அவர்கள்
அடைந்த விவரிக்க முடியாத சந்தோஷத்தையும்,
எருசோன் தேசத்திலே சகோதரர் ஏற்றுக் கொள்ளப்-
பட்டு பாதுகாப்பாயிருத்தலைப் பற்றியதான ஓர்
விவரம். இப்பொழுதும் சகல மனுஷரின் மீட்பராயி-
ருக்கிற கர்த்தர், அவர்களுடைய ஆத்துமாக்களை
என்றென்றும் ஆசீர்வதிப்பாராக.

# Alma 28

And now it came to pass that after the people of Ammon were established in the land of Jershon, and a church also established in the land of Jershon, and the armies of the Nephites were set round about the land of Jershon, yea, in all the borders round about the land of Zarahemla; behold the armies of the Lamanites had followed their brethren into the wilderness.

And thus there was a tremendous battle; yea, even such an one as never had been known among all the people in the land from the time Lehi left Jerusalem; yea, and tens of thousands of the Lamanites were slain and scattered abroad.

Yea, and also there was a tremendous slaughter among the people of Nephi; nevertheless, the Lamanites were driven and scattered, and the people of Nephi returned again to their land.

And now this was a time that there was a great mourning and lamentation heard throughout all the land, among all the people of Nephi—

Yea, the cry of widows mourning for their husbands, and also of fathers mourning for their sons, and the daughter for the brother, yea, the brother for the father; and thus the cry of mourning was heard among all of them, mourning for their kindred who had been slain.

And now surely this was a sorrowful day; yea, a time of solemnity, and a time of much fasting and prayer.

And thus endeth the fifteenth year of the reign of the judges over the people of Nephi;

And this is the account of Ammon and his brethren, their journeyings in the land of Nephi, their sufferings in the land, their sorrows, and their afflictions, and their incomprehensible joy, and the reception and safety of the brethren in the land of Jershon. And now may the Lord, the Redeemer of all men, bless their souls forever.

9 இது நேபியருக்குள்ளே நடந்த யுத்தங்களையும்,
பிணக்கையும், நேபியருக்கும், லாமானியருக்கும்
இடையே நடந்த யுத்தங்களையும்பற்றிய ஒரு விவ-
ரம். நியாயாதிபதிகளின் பதினைந்தாம் வருஷ
ஆளுகையும் முடிவுற்றது.
10 முதலாம் வருஷம் முதல் பதினைந்தாம் வருஷம்-
வரை, அநேகமாயிர ஜீவன்கள் அழிக்கப்பட்டன;
ஆம், இரத்தம் சிந்துதலின் அஞ்சத்தக்க ஒரு நிலை-
யை உண்டாக்கியது.
11 அநேக ஆயிரமானோரின் சடலங்கள் பூமியில் பு-
தைக்கப்பட்டும், அநேக ஆயிரமானோரின் சடலங்-
கள் பூமியின் பரப்பின் மீது குவிக்கப்பட்டும், அழு-
கிப் போகின்றன. தங்கள் உறவினரின் இழப்பினி-
மித்தம் அநேக ஆயிரமானோர் துக்கப்படுகின்-
றனர். அவர்கள் நித்திய உபத்திரவத்தை அனுப-
விக்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்,
என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின்படி அவர்-
கள் பயப்பட காரணமிருக்கிறது.
12 மற்ற அநேக ஆயிரமானோர் உண்மையாகவே,
தங்கள் உறவினர்களின் இழப்பினிமித்தம் துக்க-
மாயிருந்தாலும், அவர்கள் தேவனுடைய வலதுபா-
ரிசத்திலே, என்றும் முடிவுபெறாத மகிழ்ச்சியான நி-
லையில் வாசமாயிருக்க எழுப்பப்படுகிறார்கள்
என்ற கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை அறிந்த-
வர்களாக அதில் நம்பிக்கை வைத்துக் களிகூர்ந்து
ஆர்ப்பரித்தார்கள்.
13 பாவத்தினாலும், மீறுதலினாலும், மனுஷரு-
டைய இருதயங்களைப் பிடிக்க பிசாசானவன்
வரையறுத்த தந்திரமான திட்டங்களால் வருகிற
அவனுடைய வல்லமையினாலும் மனுஷனின்
பாரபட்சம் எவ்வளவு பெரிதானது என நாம் காண்-
கிறோம்.
14 இப்படியாக, கர்த்தருடைய திராட்சைத் தோட்டங்-
களில் மனுஷர் கருத்தாய் பிரயாசப்பட வேண்டு-
மென்ற, அந்த பெரும் அழைப்பை நாம் காண்கி-
றோம்; இவ்விதமாக துக்கமாயிருப்பதற்கான பெ-
ரிய காரணமும் சந்தோஷத்திற்கான காரணமும்
உண்டாயிருப்பதை நாம் காண்கிறோம், மனுஷ-
ருக்குள்ளே மரணத்தினாலும் அழிவினாலும் துக்-
கமும், ஜீவனுக்கேதுவான கிறிஸ்துவினுடைய
ஒளியினிமித்தம் சந்தோஷமும் உண்டாயிருக்கிற-
து.

And this is the account of the wars and contentions among the Nephites, and also the wars between the Nephites and the Lamanites; and the fifteenth year of the reign of the judges is ended.

And from the first year to the fifteenth has brought to pass the destruction of many thousand lives; yea, it has brought to pass an awful scene of bloodshed.

And the bodies of many thousands are laid low in the earth, while the bodies of many thousands are moldering in heaps upon the face of the earth; yea, and many thousands are mourning for the loss of their kindred, because they have reason to fear, according to the promises of the Lord, that they are consigned to a state of endless wo.

While many thousands of others truly mourn for the loss of their kindred, yet they rejoice and exult in the hope, and even know, according to the promises of the Lord, that they are raised to dwell at the right hand of God, in a state of never-ending happiness.

And thus we see how great the inequality of man is because of sin and transgression, and the power of the devil, which comes by the cunning plans which he hath devised to ensnare the hearts of men.

And thus we see the great call of diligence of men to labor in the vineyards of the Lord; and thus we see the great reason of sorrow, and also of rejoicing—sorrow because of death and destruction among men, and joy because of the light of Christ unto life.

# ஆல்மா 29

1 நான் தூதனாயிருந்தால், என் இருதயத்தின் வாஞ்-
சையின்படியே, போய் தேவ எக்காளத்தோடு, பூமி-
யை அதிரப்பண்ணுகிற சத்தத்தால் பேசி, மனந்தி-
ரும்புதலை எல்லா ஜனங்களுக்கும் கூக்குரலிட்டி-
ருக்க வேண்டும்.

2 ஆம், பூமியின் பரப்பின் மேலெங்கும் இன்னும்
அதிக துக்கம் இராதபடிக்கு, ஒவ்வொரு ஆத்துமா-
வும் மனந்திரும்பி, தேவனிடத்தில் வரும்படியாக
அவைகளிடத்தில் மனந்திரும்புதலையும் மீட்பின்
திட்டத்தையும், இடிமுழக்கத்தின் சத்தம்போல அறி-
விப்பேன்.

3 ஆனால் இதோ, நான் ஒரு மனுஷன், நான் விரும்-
பியே பாவம் செய்கிறேன்; ஏனெனில் கர்த்தர் எனக்-
கு அருளிய காரியங்களில் நான் திருப்தியாயிருக்-
கவேண்டும்.

4 என் வாஞ்சைகளினிமித்தம் நியாயமான தே-
வனின் உறுதியான கட்டளையை நான் குலையப்-
பண்ணக்கூடாது. ஏனெனில் மனுஷருடைய
வாஞ்சைப்படி மரணமோ அல்லது ஜீவனோ, அவர்
அவர்களுக்கு அருளுவார் என்று நான் அறிந்தி-
ருக்கிறேன்; ஆம், மனுஷருடைய சித்தங்களின்படி,
இரட்சிப்பாயிருந்தாலும் அல்லது அழிவாயிருந்தா-
லும், அவர் அவர்களுக்கு அருளுகிறார், ஆம், மாற்-
றக்கூடாத கட்டளைகளை அவர்களுக்கு விதிக்கி-
றார், என்று நான் அறிந்திருக்கிறேன்;

5 ஆம், நன்மையும், தீமையும் சகல ஜனங்களுக்கும்
வந்திருக்கிறது என்று அறிந்திருக்கிறேன்; தீமையி-
னின்று நன்மையை அறியாதவன் குற்றமற்ற-
வனாயிருக்கிறான்; ஆனால் தீமையையும் நன்-
மையையும் அறிகிறவனுக்கோ, அவன் வாஞ்சிக்கி-
றதெதுவோ, நன்மையோ, அல்லது தீமையோ, ஜீ-
வனோ, அல்லது மரணமோ, சந்தோஷமோ, அல்லது
மனச்சாட்சியின் குற்றவுணர்வோ அது அவனுக்கு
அருளப்படும்.

6 இப்பொழுது, இவைகளை நான் அறிந்திருக்கி-
றேன் என்று கண்டும், அழைக்கப்பட்ட வேலையி-
லும் அதிகமாய்ச் செய்ய நான் ஏன் வாஞ்சிக்க
வேண்டும்?

7 நான் பூமியின் சகல கடையாந்தரங்களுக்கும் பே-
சும்படி, ஒரு தூதனாயிருக்கவேண்டுமென, நான்
ஏன் வாஞ்சிக்கவேண்டும்?

8 ஏனெனில், இதோ, கர்த்தர் சகல தேசங்களுக்கும்,
அவரது வார்த்தையைப் போதிக்க, ஆம், தேவை-
யென்று தாம் பொருத்தமாய் காண்கிற யாவையும்,
அவர்களுடைய சொந்த தேசம் மற்றும், பாஷை-
யின்படியே, ஞானமாய் அருளுகிறார்; ஆதலால்
கர்த்தர் நியாயம் மற்றும் சத்தியத்தின்படியே ஞான-
மாய் ஆலோசனை வழங்குகிறதை நாம் பார்க்கி-
றோம்.

# Alma 29

O that I were an angel, and could have the wish of mine heart, that I might go forth and speak with the trump of God, with a voice to shake the earth, and cry repentance unto every people!

Yea, I would declare unto every soul, as with the voice of thunder, repentance and the plan of redemption, that they should repent and come unto our God, that there might not be more sorrow upon all the face of the earth.

But behold, I am a man, and do sin in my wish; for I ought to be content with the things which the Lord hath allotted unto me.

I ought not to harrow up in my desires the firm decree of a just God, for I know that he granteth unto men according to their desire, whether it be unto death or unto life; yea, I know that he allotteth unto men, yea, decreeth unto them decrees which are unalterable, according to their wills, whether they be unto salvation or unto destruction.

Yea, and I know that good and evil have come before all men; he that knoweth not good from evil is blameless; but he that knoweth good and evil, to him it is given according to his desires, whether he desireth good or evil, life or death, joy or remorse of conscience.

Now, seeing that I know these things, why should I desire more than to perform the work to which I have been called?

Why should I desire that I were an angel, that I could speak unto all the ends of the earth?

For behold, the Lord doth grant unto all nations, of their own nation and tongue, to teach his word, yea, in wisdom, all that he seeth fit that they should have; therefore we see that the Lord doth counsel in wisdom, according to that which is just and true.

9 கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டதை அறிந்திருக்கிறேன். நான் அதில் மேன்மை பாராட்டுகிறேன். நான் என்னில் அல்ல, எனக்கு கர்த்தர் கட்டளையிட்டவைகளிலேயே மேன்மை பாராட்டுகிறேன், ஆம், நான் சில ஆத்துமாக்களை மனந்திரும்புதலுக்குள்ளாகக் கொண்டுவருகிற ஒரு கருவியாய் கர்த்தரின் கரங்களில் இருக்கக்கூடும், என்பதில் மேன்மைபாராட்டுகிறேன்; இதுவே என் மகிழ்ச்சியாயிருக்கிறது.

I know that which the Lord hath commanded me, and I glory in it. I do not glory of myself, but I glory in that which the Lord hath commanded me; yea, and this is my glory, that perhaps I may be an instrument in the hands of God to bring some soul to repentance; and this is my joy.

10 இதோ, என் சகோதரரில் அநேகர் மனத்தாழ்ச்சியாய் கர்த்தராகிய தங்கள் தேவனிடத்தில் வருகிறதை நான் காணும்போது, என் ஆத்துமா சந்தோஷத்தால் நிரம்புகிறது; அப்போது கர்த்தர் எனக்கு செய்தவற்றையும், ஆம், என் ஜெபத்தைக் கேட்டார் என்பதையும் நினைவு கூருகிறேன்; ஆம், எனக்கு நேராய் அவர் நீட்டிய அவருடைய இரக்கமுள்ள புயத்தை நினைவுகூருகிறேன்.

And behold, when I see many of my brethren truly penitent, and coming to the Lord their God, then is my soul filled with joy; then do I remember what the Lord has done for me, yea, even that he hath heard my prayer; yea, then do I remember his merciful arm which he extended towards me.

11 ஆம், என் பிதாக்களின் சிறைத்தனத்தையும் நினைவு கூருகிறேன்; ஏனெனில் கர்த்தர் அவர்களுடைய சிறைத்தனத்திலிருந்து விடுவித்து, அதனால் தமது சபையை ஸ்தாபித்தார், என்பதை நான் மெய்யாகவே அறிந்திருக்கிறேன். ஆம், ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமாகிய கர்த்தராகிய தேவனே அவர்களை அடிமைத்தனத்திலிருந்து தப்புவித்தார்.

Yea, and I also remember the captivity of my fathers; for I surely do know that the Lord did deliver them out of bondage, and by this did establish his church; yea, the Lord God, the God of Abraham, the God of Isaac, and the God of Jacob, did deliver them out of bondage.

12 ஆம், என் பிதாக்களின் சிறைத்தனத்தை எப்பொழுதும் நினைவில் வைத்திருக்கிறேன்; அவர்களை எகிப்தியரின் கைகளுக்குத் தப்புவித்த அதே தேவன், அவர்களை அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்தார்.

Yea, I have always remembered the captivity of my fathers; and that same God who delivered them out of the hands of the Egyptians did deliver them out of bondage.

13 ஆம், அதே தேவன் தமது சபையை அவர்களுக்குள்ளே ஸ்தாபித்தார்; ஆம், நான் இந்த ஜனங்களுக்கு வசனத்தைப் பிரசங்கிக்க, அதே தேவன் என்னை ஒரு பரிசுத்த அழைப்பினால் அழைத்து எனக்கு அதிக ஜெயத்தைக் கொடுத்தார். அதினிமித்தம் என் சந்தோஷம் பூரணப்பட்டிருக்கிறது.

Yea, and that same God did establish his church among them; yea, and that same God hath called me by a holy calling, to preach the word unto this people, and hath given me much success, in the which my joy is full.

14 ஆனால் என் ஜெயத்திற்காக மாத்திரம் நான் சந்தோஷமடைவதில்லை, என் சந்தோஷம் நேபியரின் தேசத்திற்கு போன, என் சகோதரரின் ஜெயத்தினிமித்தம் அதிக பூரணப்பட்டிருக்கிறது.

But I do not joy in my own success alone, but my joy is more full because of the success of my brethren, who have been up to the land of Nephi.

15 இதோ, அவர்கள் மிகுதியாய் பிரயாசப்பட்டு, அதிகக் கனியைக் கொண்டு வந்திருக்கிறார்கள்; அவர்களுடைய பலன் எவ்வளவு பெரிதாயிருக்கும்!

Behold, they have labored exceedingly, and have brought forth much fruit; and how great shall be their reward!

16 இப்பொழுது, இந்த சகோதரரின் ஜெயத்தை எண்ணும்போது, என் ஆத்துமா சரீரத்திலிருந்து பிரிந்து போகும் மட்டுமாய் எடுத்துச் செல்லப்படுவதுபோல், என் சந்தோஷம் மிகுதியாயிருக்கிறது.

Now, when I think of the success of these my brethren my soul is carried away, even to the separation of it from the body, as it were, so great is my joy.

17 இப்பொழுதும், என் சகோதரராகிய இவர்களும் அவர்களுடைய பிரயாசங்களின் கனியாயிருப்போர் யாவரும், இனி புறம்பே போகாமல், ஆனால் தேவனை என்றென்றுமாய் துதிக்கும்படி தேவ ராஜ்யத்தில் அமர அவர் அருளுவாராக. நான் பேசின பிரகாரமாய், என் வார்த்தையின்படியே அது நடக்க தேவன் அருளுவாராக. ஆமென்.

And now may God grant unto these, my brethren, that they may sit down in the kingdom of God; yea, and also all those who are the fruit of their labors that they may go no more out, but that they may praise him forever. And may God grant that it may be done according to my words, even as I have spoken. Amen.

# ஆல்மா 30

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, எருசோன் தேசத்தில் அம்மோன் ஜனங்கள் நிலைப்படுத்தப்பட்ட பின்பும், ஆம், தேசங்களிலிருந்து லாமானியர் துரத்தப்பட்ட பின்பும், அவர்களது மரித்தோர் அந்த தேசத்திலுள்ள ஜனங்களால் அடக்கம் பண்ணப்பட்டனர்.

2 இப்பொழுது, அதிகமானோர் மரித்ததினிமித்தம் அவர்களது மரித்தோர் எண்ணப்படவில்லை. நேபியரின் மரித்தோரும் எண்ணப்படவில்லை. ஆனால் அந்தப்படியே, அவர்களது மரித்தோர் அடக்கம் பண்ணப்பட்ட பின்பு, உபவாசம், துக்கம் மற்றும் ஜெப நாட்கள் கழிந்த பின்பும் (நேபியின் ஜனங்களின்மீது நியாயாதிபதிகளின் பதினாறாம் வருஷ ஆளுகையின்போது) அங்கே தேசமுழுவதும் தொடர்ந்து சமாதானம் நிலவத் தொடங்கியது.

3 ஆம், ஜனங்கள் கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு ஆசரித்தார்கள்; அவர்கள் தேவ நியமங்களை மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கேற்ப ஆசரிப்பதில் உறுதியாயிருந்தார்கள். ஏனெனில் மோசேயின் நியாயப்பிரமாணம் நிறைவேறும்வரைக்கும் அதைக் கைக்கொள்ளும்படி அவர்கள் போதிக்கப்பட்டிருந்தார்கள்.

4 நேபியின் ஜனங்களின் மீது, நியாயாதிபதிகளின் ஆளுகையின் பதினாறாம் வருஷ முழுவதிலும் ஜனங்களுக்கு எந்த தொந்தரவும் ஏற்படவில்லை.

5 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் பதினேழாம் வருஷ துவக்கத்திலும் அங்கே தொடர்ந்து சமாதானம் நிலவியது.

6 ஆனால், அந்தப்படியே, பதினேழாம் வருஷத்தின் பிற்பகுதியில், சாரகெம்லா தேசத்தினுள் ஒருவன் வந்தான். அவன் அந்திக் கிறிஸ்துவாயிருந்தான். ஏனெனில் கிறிஸ்துவின் வருகையைக் குறித்து தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்டிருந்த தீர்க்கதரிசனங்களுக்கு விரோதமாய் ஜனங்களிடத்தில் அவன் போதிக்கலானான்.

7 மனுஷனுடைய நம்பிக்கைக்கு விரோதமாய் எந்த நியாயப்பிரமாணமுமில்லை; ஏனெனில் மனுஷரை பட்சபாதமான நிலைக்குக் கொண்டு செல்கிற நியாயப்பிரமாணம் இருப்பது தேவனின் கட்டளைகளுக்கு முற்றிலும் முரணானது.

8 ஏனெனில் வேதம் இப்படிச் சொல்லுகிறது: நீங்கள் யாரைச் சேவிப்பீர்களென்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்.

# Alma 30

Behold, now it came to pass that after the people of Ammon were established in the land of Jershon, yea, and also after the Lamanites were driven out of the land, and their dead were buried by the people of the land—

Now their dead were not numbered because of the greatness of their numbers; neither were the dead of the Nephites numbered—but it came to pass after they had buried their dead, and also after the days of fasting, and mourning, and prayer, (and it was in the sixteenth year of the reign of the judges over the people of Nephi) there began to be continual peace throughout all the land.

Yea, and the people did observe to keep the commandments of the Lord; and they were strict in observing the ordinances of God, according to the law of Moses; for they were taught to keep the law of Moses until it should be fulfilled.

And thus the people did have no disturbance in all the sixteenth year of the reign of the judges over the people of Nephi.

And it came to pass that in the commencement of the seventeenth year of the reign of the judges, there was continual peace.

But it came to pass in the latter end of the seventeenth year, there came a man into the land of Zarahemla, and he was Anti-Christ, for he began to preach unto the people against the prophecies which had been spoken by the prophets, concerning the coming of Christ.

Now there was no law against a man's belief; for it was strictly contrary to the commands of God that there should be a law which should bring men on to unequal grounds.

For thus saith the scripture: Choose ye this day, whom ye will serve.

9 இப்பொழுது தேவனைச் சேவிக்க ஒரு மனுஷன் விரும்பினால் அது அவனுடைய சிலாக்கியம்; அல்லது அவன் தேவனில் விசுவாசித்தால் அது அவரை சேவிக்கும்படியேயான அவனுடைய சிலாக்கியமாயிருக்கிறது; ஆனால் அவன் அவரில் விசுவாசியாமற்போனால் அவனைத் தண்டிக்க எந்த நியாயப்பிரமாணமுமில்லை.

Now if a man desired to serve God, it was his privilege; or rather, if he believed in God it was his privilege to serve him; but if he did not believe in him there was no law to punish him.

10 ஆனால் அவன் கொலை செய்தால் அவன் மரணத்திற்கேதுவாய் தண்டிக்கப்பட்டான்; அவன் திருடினாலும் தண்டிக்கப்பட்டான்; அவன் களவு செய்தாலும் தண்டிக்கப்பட்டான்; அவன் விபசாரம் புரிந்தாலும் தண்டிக்கப்பட்டான்; ஆம், இந்த எல்லா துன்மார்க்கத்திற்காகவும் அவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

But if he murdered he was punished unto death; and if he robbed he was also punished; and if he stole he was also punished; and if he committed adultery he was also punished; yea, for all this wickedness they were punished.

11 ஏனெனில், மனுஷர் தங்களுடைய குற்றங்களுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்பட வேண்டுமென்ற ஒரு நியாயப்பிரமாணம் அங்கே இருந்தது. இருப்பினும் ஒரு மனுஷனுடைய நம்பிக்கையை எதிர்த்து ஒரு சட்டமும் அங்கே இல்லை; எனவே ஒருவன் தான் செய்த குற்றத்திற்காக மாத்திரமே தண்டிக்கப்பட்டான், ஆகவே மனுஷர் யாவரும் சமமான நிலையில் இருந்தார்கள்.

For there was a law that men should be judged according to their crimes. Nevertheless, there was no law against a man's belief; therefore, a man was punished only for the crimes which he had done; therefore all men were on equal grounds.

12 கோரிகோர் என்று பெயர்கொண்ட இந்த அந்தி கிறிஸ்து (நியாயப்பிரமாணம் இவன் மீது அதிகாரத்தைச் செலுத்த முடியவில்லை) கிறிஸ்து இருக்க முடியாதென்று மக்களிடத்தில் பிரசங்கிக்கலானான். அவன் பிரசங்கித்துச் சொன்னவிதமாவது:

And this Anti-Christ, whose name was Korihor, (and the law could have no hold upon him) began to preach unto the people that there should be no Christ. And after this manner did he preach, saying:

13 பைத்தியமும், வீணானதுமான நம்பிக்கையின் கீழ் கட்டப்பட்டிருப்போரே, நீங்கள் ஏன் அப்படிப்பட்ட பைத்தியமானவைகளைக் கொண்டு உங்களை நீங்களே பிணைத்துக் கொள்ளுகிறீர்கள்? நீங்கள் ஏன் கிறிஸ்துவை எதிர்பார்க்கிறீர்கள்? ஏனெனில் வரப்போகிற எதைக் குறித்தும் ஒருவனாலும் அறியக்கூடாதே.

O ye that are bound down under a foolish and a vain hope, why do ye yoke yourselves with such foolish things? Why do ye look for a Christ? For no man can know of anything which is to come.

14 இதோ, பரிசுத்த தீர்க்கதரிசிகளால் கொடுக்கப்பட்டது, என்று நீங்கள் சொல்லுகிற, தீர்க்கதரிசனங்கள் என்று நீங்கள் அழைக்கிற இக்காரியங்கள், இதோ, உங்கள் பிதாக்களினுடைய பைத்தியமான பாரம்பரியங்களே.

Behold, these things which ye call prophecies, which ye say are handed down by holy prophets, behold, they are foolish traditions of your fathers.

15 அவைகளினுடைய நிச்சயத்தை நீங்கள் எப்படி அறிவீர்கள்? இதோ, நீங்கள் காணாதவைகளைக் குறித்து அறியக்கூடாதே; ஆதலால் கிறிஸ்து என்று ஒருவர் உண்டென்று உங்களால் அறிய முடியாது.

How do ye know of their surety? Behold, ye cannot know of things which ye do not see; therefore ye cannot know that there shall be a Christ.

16 நீங்கள் எதிர்பார்த்து, பாவமன்னிப்பைக் காண்பதாகச் சொல்லுகிறீர்கள். ஆனால் இதோ, அது கிறுக்கு பிடித்த மனத்தினால் உண்டான பாதிப்பாகும். மெய்யற்ற காரியங்களில் விசுவாசிக்க உங்களை நடத்திச் செல்லும் உங்களின் பிதாக்களுடைய பாரம்பரியத்தினிமித்தமே உங்களுக்கு இந்த மனப்பிரமை உண்டாகிறது.

Ye look forward and say that ye see a remission of your sins. But behold, it is the effect of a frenzied mind; and this derangement of your minds comes because of the traditions of your fathers, which lead you away into a belief of things which are not so.

17 இப்படிப்பட்ட இன்னும் அநேகத்தை அவர்களுக்-
குச் சொன்னான். அவன், அவர்களிடத்தில் மனுஷ-
ருடைய பாவங்களுக்காக, பாவநிவர்த்தி பண்-
ணப்பட முடியாதென்றும், ஆனால் ஒவ்வொரு
மனுஷனும் தன்னை நடத்திக்கொள்கிற விதத்தில்,
இந்த ஜீவியத்தில் கொடுக்கப்படுகிறான். ஆகவே
அவனவன் தன் திறமைக்குத்தக்கதாக விருத்திய-
டைகிறான், அவனவன் தன் பலத்திற்குத்தக்கதாக
ஜெயம்கொள்கிறான், ஒரு மனுஷன் எதைச் செய்-
தாலும் அது குற்றமில்லை.

And many more such things did he say unto them, telling them that there could be no atonement made for the sins of men, but every man fared in this life according to the management of the creature; therefore every man prospered according to his genius, and that every man conquered according to his strength; and whatsoever a man did was no crime.

18 இப்படியாய் அவன் அவர்களுக்குப் பிரசங்கித்து,
ஒருவன் மரித்துப்போனால், அதுவே அவனுடைய
முடிவு என்று அவர்களுக்குச் சொல்லி, அநேகரின்
இருதயங்களை வழிநடத்தி, அவர்களுடைய துன்-
மார்க்கத்திலே அவர்கள் தங்கள் சிரசுகளை உயர்த்-
தும்படி செய்து, ஆம், அநேக ஸ்திரீகளையும், புரு-
ஷரையும் வேசித்தனம் பண்ணும்படியாக நடத்திச்
சென்றான்.

And thus he did preach unto them, leading away the hearts of many, causing them to lift up their heads in their wickedness, yea, leading away many women, and also men, to commit whoredoms—telling them that when a man was dead, that was the end thereof.

19 இப்பொழுது இந்த மனுஷன், முன்னே லாமானிய
ஜனமாயிருந்த, அம்மோன் ஜனத்திற்குள்ளே இக்-
காரியங்களைப் பிரசங்கிக்கும்படி, எருசோன் தே-
சத்திற்கும் போனான்.

Now this man went over to the land of Jershon also, to preach these things among the people of Ammon, who were once the people of the Lamanites.

20 ஆனால் இதோ அவர்கள் அநேக நேபியர்களைக்
காட்டிலும் ஞானமுள்ளவர்களாய் இருந்தார்கள்;
ஏனெனில் அவர்கள் அவனைப் பிடித்து, கட்டி,
அந்த ஜனத்தின் பிரதான ஆசாரியனாயிருந்த அம்-
மோனிடத்தில் தூக்கிச் சென்றார்கள்.

But behold they were more wise than many of the Nephites; for they took him, and bound him, and carried him before Ammon, who was a high priest over that people.

21 அந்தப்படியே, அவன் அவனை தேசத்தைவிட்டு
வெளியே கொண்டு போகும்படியாகக் கட்டளை-
யிட்டான். அவன் கிதியோன் தேசத்திற்கு வந்து,
அவர்களுக்கும் பிரசங்கம் பண்ணலானான்;
இவன் இங்கே அதிகம் ஜெயம் பெறவில்லை, ஏனெ-
னில் அவன் பிடிபட்டு, கட்டுண்டு தேசத்தின் பிர-
தான ஆசாரியன் முன்பும், பிரதான நியாயாதிபதி-
யின் முன்பும் தூக்கிவரப்பட்டான்.

And it came to pass that he caused that he should be carried out of the land. And he came over into the land of Gideon, and began to preach unto them also; and here he did not have much success, for he was taken and bound and carried before the high priest, and also the chief judge over the land.

22 அந்தப்படியே, பிரதான ஆசாரியன் அவனை
நோக்கி: கர்த்தருடைய வழிகளைப் புரட்டிப்போட
நீ ஏன் சுற்றித்திரிகிறாய்? இந்த ஜனங்களினுடைய
களிகூருதலைத் தடுக்கும்படியாக, நீ ஏன் இவர்க-
ளுக்கு கிறிஸ்து என்று ஒருவர் இருக்கமாட்டார்,
என்று போதிக்கிறாய்? பரிசுத்த தீர்க்கதரிசிகளின்
சகல தீர்க்கதரிசனங்களுக்கும் விரோதமாய் ஏன்
பேசுகிறாய் என்று கேட்டான்.

And it came to pass that the high priest said unto him: Why do ye go about perverting the ways of the Lord? Why do ye teach this people that there shall be no Christ, to interrupt their rejoicings? Why do ye speak against all the prophecies of the holy prophets?

23 இப்பொழுது, இந்தப் பிரதான ஆசாரியனின் பெ-
யர் கித்தியோன்னா என்பதாகும். கோரிகோர்
அவனை நோக்கி: நான் உங்கள் பிதாக்களின் மூட-
பாரம்பரியங்களைப் போதிப்பதில்லையாதலால்,
அவர்கள்மீது பலத்தையும், அதிகாரத்தையும் செ-
லுத்தவும், அறியாமையில் இருக்கச்செய்யவும்,
அவர்கள் தங்கள் சிரசுகளை உயரப்பண்ணாதப-
டிக்கு, ஆனால், உமது வார்த்தைகளின்படியே இந்த
ஜனங்களை சிறுமைப்படுத்தவும், பூர்வகால ஆசா-
ரியர்களால் ஏற்படுத்தப்பட்ட மூட நியமங்கள் கீ-
ழும், சடங்குகள் கீழும் தாங்களே கட்டுண்டு இருக்க
இவர்களுக்கு நான் போதிப்பதில்லையே என்றான்.

Now the high priest's name was Giddonah. And Korihor said unto him: Because I do not teach the foolish traditions of your fathers, and because I do not teach this people to bind themselves down under the foolish ordinances and performances which are laid down by ancient priests, to usurp power and authority over them, to keep them in ignorance, that they may not lift up their heads, but be brought down according to thy words.

24 இந்த ஜனம் சுயாதீனமுள்ள ஜனமென்று நீங்கள்
சொல்லுகிறீர்கள். இதோ, இவர்கள் அடிமைத்தனத்-
திலிருக்கிறார்கள், என்று நான் சொல்லுகிறேன்.
அந்த பூர்வகாலத்து தீர்க்கதரிசனங்கள் உண்மை-
யென்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இதோ, அவை-
கள் உண்மையென்று நீங்கள் அறியவில்லை, என்-
று நான் சொல்லுகிறேன்.

Ye say that this people is a free people. Behold, I say they are in bondage. Ye say that those ancient prophecies are true. Behold, I say that ye do not know that they are true.

25 பெற்றோரின் மீறுதலினிமித்தம் இந்த ஜனம் குற்-
றமுள்ள வீழ்ந்துபோன ஜனமென்று நீங்கள் சொல்-
லுகிறீர்கள். இதோ, ஒரு பிள்ளை தன் பெற்றோரி-
னிமித்தம் குற்றமுடையதாகாது, என்று நான்
சொல்லுகிறேன்.

Ye say that this people is a guilty and a fallen people, because of the transgression of a parent. Behold, I say that a child is not guilty because of its parents.

26 கிறிஸ்து வருவாரென்று நீங்கள் சொல்லுகிறீர்-
கள். ஆனால் இதோ, கிறிஸ்து உண்டென்று நீங்கள்
அறியவில்லை, என்று நான் சொல்லுகிறேன்.
அவர் உலகத்தின் பாவங்களுக்காக கொல்லப்படு-
வார் என்றும் நீங்கள் சொல்கிறீர்கள்,

And ye also say that Christ shall come. But behold, I say that ye do not know that there shall be a Christ. And ye say also that he shall be slain for the sins of the world—

27 இப்படியாக இந்த ஜனத்தை உங்களுடைய பிதாக்-
களுடைய மூடபாரம்பரியத்தின் பிரகாரமாயும்,
உங்களுடைய விருப்பத்தின் படியேயும் நடத்துகி-
றீர்கள், அவர்களுடைய கைகளின் பிரயாசங்க-
ளால் நீங்கள் ஆடம்பரமாய் ஜீவிக்கவும், அவர்கள்
தைரியமாய் ஏறிட்டுப் பார்க்காதபடிக்கும், அவர்-
கள் தங்கள் உரிமைகளையும் பாக்கியங்களையும்
அனுபவிக்காமலிருக்கும்படிக்கும், அவர்கள் அடி-
மைத்தனத்திலே இருப்பதைப்போல, அவர்களைக்
கீழ்ப்படுத்துகிறீர்கள்.

And thus ye lead away this people after the foolish traditions of your fathers, and according to your own desires; and ye keep them down, even as it were in bondage, that ye may glut yourselves with the labors of their hands, that they durst not look up with boldness, and that they durst not enjoy their rights and privileges.

28 ஆம், அவர்கள் தங்களுடைய ஆசாரியர்களை
கோபப்படுத்தாதபடிக்கு, தங்களின் உடைமைக-
ளைப் பயன்படுத்தவில்லை. அந்த ஆசாரியர்க-
ளோ தங்கள் பாரம்பரியத்தின்படியும், தங்கள்
சொப்பனங்களின்படியும், தங்கள் தரிசனங்களின்-
படியும், போலியான அதிசயங்களின்படியும், அவர்-
கள் நடக்கவேண்டுமென்று, தங்கள் வாஞ்சையின்-
படியே பிணைத்து, அவர்களை நம்ப வைக்கிறார்-
கள். அவர்கள் தங்கள் வார்த்தைகளின்படி செய்ய-
வில்லையெனில் ஒருபோதும் காணப்படாததும்
அறியப்படாததும், ஒருபோதும் இருந்திராததும்,
இருக்கப் போகாததும், தேவன் என்று இவர்கள்
சொல்லுகிற, ஏதோ ஒரு அறியாத ஜீவியை கோபப்-
படுத்துகிறார்கள், என்கிறார்கள்.

Yea, they durst not make use of that which is their own lest they should offend their priests, who do yoke them according to their desires, and have brought them to believe, by their traditions and their dreams and their whims and their visions and their pretended mysteries, that they should, if they did not do according to their words, offend some unknown being, who they say is God—a being who never has been seen or known, who never was nor ever will be.

29 இப்பொழுது பிரதான ஆசாரியனும், தலைமை நி-
யாயாதிபதியும் அவனுடைய இருதயக் கடினத்-
தைக் கண்டு, ஆம், தேவனுக்கு விரோதமாயும்
அவன் கலகம் செய்வான் என்று அவர்கள் கண்ட-
போது, அவனுடைய வார்த்தைகளுக்கு அவர்கள்
பிரதியுத்தரம் அளிக்கவில்லை. அவன் கட்டப்ப-
டும்படிச் செய்தார்கள். அதிகாரிகளின் கைகளில்
அவனை ஒப்புவித்து, ஆல்மா முன்பாகவும், தேச-
மனைத்தின் மேலும் ஆளுனராய் விளங்கிய தலை-
மை நியாயாதிபதி முன்பும் கொண்டு வரும்படிக்கு,
அவனை சாரகெம்லா தேசத்திற்கு அனுப்பினார்-
கள்.

Now when the high priest and the chief judge saw the hardness of his heart, yea, when they saw that he would revile even against God, they would not make any reply to his words; but they caused that he should be bound; and they delivered him up into the hands of the officers, and sent him to the land of Zarahemla, that he might be brought before Alma, and the chief judge who was governor over all the land.

30 அந்தப்படியே, ஆல்மா மற்றும் தலைமை நியாயா-
திபதி முன்பு அவன் கொண்டுவரப்பட்டபோது,
அவன் கிதியோன் தேசத்தில் செய்தது போலவே
செய்தான்; ஆம், அவன் தேவனைத் தூஷித்துக்
கொண்டேயிருந்தான்.

And it came to pass that when he was brought before Alma and the chief judge, he did go on in the same manner as he did in the land of Gideon; yea, he went on to blaspheme.

31 அவன் ஆல்மாவின் முன்னே உரக்கப் பேசி,
ஜனங்களினுடைய பிரயாசத்தை தங்களுடைய சு-
கபோக ஜீவியத்திற்கென்று எடுத்துக் கொள்ளும்ப-
டிக்கு, ஜனங்களை தங்களுடைய பிதாக்களின்
அற்ப பாரம்பரியங்களுக்கேற்ப நடத்துவதாக
ஆசாரியர்களையும், ஆசிரியர்களையும் குற்றம்-
சாட்டி, அவர்களுக்கு விரோதமாய்க் கலகம்பண்-
ணினான்.

And he did rise up in great swelling words before Alma, and did revile against the priests and teachers, accusing them of leading away the people after the silly traditions of their fathers, for the sake of glutting on the labors of the people.

32 இப்பொழுதும் ஆல்மா அவனை நோக்கி: இந்த
ஜனங்களுடைய பிரயாசத்தை எங்களுடைய சுக-
போக ஜீவியத்திற்கென்று நாங்கள் எடுத்துக்
கொள்வதில்லை, என்று நீ அறிந்திருக்கிறாய்;
ஏனெனில் இதோ, என் ஜனங்களுக்கு தேவ வசனத்-
தை அறிவிக்க தேசமுழுவதிலும் நான் மேற்கொள்-
ளும் என்னுடைய பிரயாணங்களைப் பொருட்ப-
டுத்தாமல், நியாயாதிபதிகளின் ஆளுகை தொ-
டக்க முதல் இதுவரைக்குமாய், என்னுடைய ஆதர-
வுக்கென்று என் சொந்த கைகளினால் பிரயாசப்-
பட்டிருக்கிறேன்.

Now Alma said unto him: Thou knowest that we do not glut ourselves upon the labors of this people; for behold I have labored even from the commencement of the reign of the judges until now, with mine own hands for my support, notwithstanding my many travels round about the land to declare the word of God unto my people.

33 நான் சபையிலே அநேக பிரயாசங்களைச் செய்தி-
ருப்பினும், என் பிரயாசத்திற்கென்று ஒரு சினயீ-
னையாகிலும் பெற்றதேயில்லை; நியாயாசனத்தி-
லிருந்தவர்களைத் தவிர, என் சகோதரரில் ஒருவர்
கூட அப்படிப் பெற்றதில்லை. எங்களுடைய கா-
லத்தின் சட்டத்திற்கேற்ப நாங்கள் பெற்றுக்கொண்-
டோம்.

And notwithstanding the many labors which I have performed in the church, I have never received so much as even one senine for my labor; neither has any of my brethren, save it were in the judgment-seat; and then we have received only according to law for our time.

34 இப்பொழுதும், சபையில் எங்களுடைய பிரயா-
சங்களுக்காக நாங்கள் எதையும் பெறவில்லையா-
னால், எங்களுடைய சகோதரரின் சந்தோஷத்தில்
நாங்களும் களிகூரும்படி, சத்தியத்தை அறிவிப்ப-
தேயல்லாமல், சபையில் நாங்கள் பிரயாசப்படுகிற-
தினால் எங்களுக்கு உண்டான ஆதாயம் என்ன?

And now, if we do not receive anything for our labors in the church, what doth it profit us to labor in the church save it were to declare the truth, that we may have rejoicings in the joy of our brethren?

35 நாங்கள் ஆதாயம் பெறுவதில்லை, என்று நீ
அறிந்திருந்தும், ஆதாயம் பெறவேண்டியே இந்த
ஜனங்களுக்கு நாங்கள் பிரசங்கிக்கிறோம் என்று நீ
ஏன் சொல்லுகிறாய்? இப்பொழுதும், இந்த ஜனங்க-
ளினுடைய இருதயங்களில் இப்படிப்பட்ட சந்தோ-
ஷத்தை உண்டாக்குகிற, நாங்கள் இவர்களை வஞ்-
சிக்கிறோம் என்று நீ நம்புகிறாயா என்று கேட்டான்.

Then why sayest thou that we preach unto this people to get gain, when thou, of thyself, knowest that we receive no gain? And now, believest thou that we deceive this people, that causes such joy in their hearts?

36 அதற்கு கோரிகோர் பிரதியுத்தரமாக, ஆம், என்-
றான்.

And Korihor answered him, Yea.

37 பின்னும் ஆல்மா அவனை நோக்கி: தேவன் ஒரு-
வர் உண்டென்று நீ விசுவாசிக்கிறாயா என்று கேட்-
டான்.

And then Alma said unto him: Believest thou that there is a God?

38 அதற்கு அவன், இல்லை, என்றான்.

And he answered, Nay.

39 இப்பொழுது ஆல்மா அவனை நோக்கி: நீ தேவன்
இருப்பதையும், கிறிஸ்து உண்டென்பதையும் மறு-
படியும் மறுப்பாயோ? இதோ நான் உனக்குச் சொல்-
லுகிறேன், தேவன் ஒருவர் உண்டென்றும், கிறிஸ்து
வருவாரென்றும், நான் அறிவேன்.

Now Alma said unto him: Will ye deny again that there is a God, and also deny the Christ? For behold, I say unto you, I know there is a God, and also that Christ shall come.

40 இப்பொழுது, தேவனில்லை என்பதற்கும், கிறிஸ்-
து வருவதில்லை என்பதற்கும், உன்னிடத்தில்
என்ன சாட்சியிருக்கிறது? உன் வார்த்தையே அல்-
லாமல் உன்னிடத்தில் வேறு எதுவுமில்லை, என்று
நான் உனக்குச் சொல்லுகிறேன்.

And now what evidence have ye that there is no God, or that Christ cometh not? I say unto you that ye have none, save it be your word only.

41 ஆனால் இதோ, இக்காரியங்கள் உண்மையென்ப-
தற்கு என்னிடத்தில் சகலமும் சாட்சியமாக இருக்கி-
றது; அவைகள் உண்மையென்பதற்கு உன்னிடத்-
திலும் சகலமும் சாட்சியமாக இருக்கிறது; அவைக-
ளை நீ மறுப்பாயோ? இக்காரியங்கள் உண்மை-
யென்று நீ விசுவாசிக்கிறாயா?

But, behold, I have all things as a testimony that these things are true; and ye also have all things as a testimony unto you that they are true; and will ye deny them? Believest thou that these things are true?

42 இதோ, நீ நம்புகிறாய், என்று நான் அறிவேன்,
ஆனாலும் பொய்யுரைக்கும் ஆவியால் நீ பீடிக்கப்-
பட்டிருக்கிறாய். உன்னில் இடம் கொள்ளாதபடிக்கு
தேவ ஆவியை விலக்கினாய்; ஆனால் பிசாசு உன்-
மேல் வல்லமை கொண்டிருக்கிறான். அவன் தேவ
பிள்ளைகளை அழிக்கும்படிக்குத் திட்டங்களை
வகுத்து உன்னை ஆட்கொண்டிருக்கிறான்.

Behold, I know that thou believest, but thou art possessed with a lying spirit, and ye have put off the Spirit of God that it may have no place in you; but the devil has power over you, and he doth carry you about, working devices that he may destroy the children of God.

43 இப்பொழுது கோரிகோர் ஆல்மாவை நோக்கி: தே-
வன் ஒருவர் உண்டென்று நான் உணரும்படிக்கு
ஒரு அறிகுறியை எனக்குக் காண்பித்தால், ஆம்,
அவருக்கு வல்லமையுண்டு என்பதை எனக்குக்
காண்பிப்பாயானால், உனது வார்த்தைகளின் சத்-
தியத்தை நான் நம்புவேன், என்றான்.

And now Korihor said unto Alma: If thou wilt show me a sign, that I may be convinced that there is a God, yea, show unto me that he hath power, and then will I be convinced of the truth of thy words.

44 ஆனால் ஆல்மா அவனை நோக்கிச் சொன்-
னான்: நீ போதிய அறிகுறிகளைப் பெற்றாய்; நீ உன்
தேவனை சோதனைக்குட்படுத்துவாயோ? உனது
சகோதரர்களாகிய இவர்களின் சாட்சியமத்தையும்,
சகல பரிசுத்த தீர்க்கதரிசிகளின் சாட்சியமத்தையும்
நீ பெற்றிருக்கும்போது, எனக்கு ஒரு அறிகுறியைக்
காண்பியும் என்று சொல்லுவாயோ? வேதங்கள்
உனக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆம்,
அனைத்துக் காரியங்களும் தேவன் ஒருவர் உண்-
டென்று புலப்படுத்துகிறது, ஆம், பூமியும் அதன் மீ-
திருக்கிற சகல காரியங்களும், அதனுடைய இயக்க-
மும், தங்களுடைய நிர்ணயித்த பாதைகளில்
இயங்குகிற சகல கிரகங்களும், ஒரு உன்னதமான
சிருஷ்டிகர் உண்டென்று சாட்சி கொடுக்கின்றன.

But Alma said unto him: Thou hast had signs enough; will ye tempt your God? Will ye say, Show unto me a sign, when ye have the testimony of all these thy brethren, and also all the holy prophets? The scriptures are laid before thee, yea, and all things denote there is a God; yea, even the earth, and all things that are upon the face of it, yea, and its motion, yea, and also all the planets which move in their regular form do witness that there is a Supreme Creator.

45 இருப்பினும் நீ தேவனில்லை என்று இந்த ஜனத்-
திற்கு சாட்சி கொடுத்து, அவர்களுடைய இருதயங்-
களை புறம்பே வழிநடத்த நீ திரிகிறதென்ன? இன்-
னும் நீ இந்த சகல சாட்சிகளையும் மறுப்பாயோ
என்று கேட்டான். அதற்கு அவன்: ஆம், நீ எனக்கு
ஒரு அறிகுறியைக் காண்பிக்காவிடில் நான் மறுப்-
பேன், என்றான்.

And yet do ye go about, leading away the hearts of this people, testifying unto them there is no God? And yet will ye deny against all these witnesses? And he said: Yea, I will deny, except ye shall show me a sign.

46 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா அவனை
நோக்கி: இதோ உன் இருதயக் கடினத்தினிமித்தமும்,
உனது ஆத்துமா அழிந்து போகும்படியாய், ஆம்,
சத்திய ஆவியை எதிர்த்து நிற்கிறதினிமித்தமும்,
நான் துக்கப்படுகிறேன்.

And now it came to pass that Alma said unto him: Behold, I am grieved because of the hardness of your heart, yea, that ye will still resist the spirit of the truth, that thy soul may be destroyed.

47 ஆனால் இதோ, உனது பொய்யான இச்சகமான
வார்த்தைகளால் அநேக ஆத்துமாக்களை அழி-
விற்குள்ளாகக் கொண்டு வருவதைப் பார்க்கிலும்,
உன்னுடைய ஆத்துமா தொலைந்து போவது நல-
மாயிருக்கும்; ஆதலால் நீ மறுபடியும் மறுதலித்-
தால், இதோ, நீ இந்த ஜனத்தை இனி ஒருபோதும்
வஞ்சியாதிருக்கும்படிக்கு, இனி நீ உனது வாயைத்
திறக்க முடியாது, ஊமையாயிருக்கும்படி தேவன்
உன்னை அடிப்பார்.

But behold, it is better that thy soul should be lost than that thou shouldst be the means of bringing many souls down to destruction, by thy lying and by thy flattering words; therefore if thou shalt deny again, behold God shall smite thee, that thou shalt become dumb, that thou shalt never open thy mouth any more, that thou shalt not deceive this people any more.

48 இப்பொழுது கோரிகோர் அவனை நோக்கி: தே-
வன் இருப்பதை நான் மறுப்பதில்லை. ஆனால் தே-
வன் என்று ஒருவர் இருக்கிறார் என நான் விசுவா-
சிப்பதுதானில்லை; நான் மேலும் சொல்லுகிறேன்,
தேவன் ஒருவர் உண்டென்று நீங்கள் அறியவில்-
லை; நீங்கள் எனக்கு ஒரு அறிகுறியைக் காண்பிக்-
கவில்லையெனில், நான் விசுவாசிக்கமாட்டேன்,
என்றான்.

Now Korihor said unto him: I do not deny the existence of a God, but I do not believe that there is a God; and I say also, that ye do not know that there is a God; and except ye show me a sign, I will not believe.

49 பின்னும் ஆல்மா அவனை நோக்கி: என் வார்த்-
தைகளின்படி, நீ ஊமையாகவேண்டுமென்பதே
நான் உனக்குக் கொடுக்கும் அறிகுறி; நான் சொல்-
லுகிறேன், நீ இனி பேசவே முடியாதபடிக்கு, தே-
வனின் நாமத்திலே ஊமையாக்கப்படுவாய், என்-
றான்.

Now Alma said unto him: This will I give unto thee for a sign, that thou shalt be struck dumb, according to my words; and I say, that in the name of God, ye shall be struck dumb, that ye shall no more have utterance.

50 இப்பொழுது ஆல்மா இந்த வார்த்தைகளைச்
சொன்னபோது, ஆல்மாவின் வார்த்தைகளின்படி,
கோரிகோர் பேச முடியாதபடிக்கு ஊமையாக்கப்பட்-
டான்.

Now when Alma had said these words, Korihor was struck dumb, that he could not have utterance, according to the words of Alma.

51 இப்பொழுது தலைமை நியாயாதிபதி இதைக்
கண்டபோது, அவன் தன் கையை நீட்டி கோரிகோ-
ருக்கு எழுதியதாவது: நீ தேவ வல்லமையைப்பற்றி
உணர்ந்து கொண்டாயா? ஆல்மா தன் அறிகுறியை
எவரிடத்தில் காண்பிக்கவேண்டுமென நீ விரும்பி-
னாய்? இதோ, அவன் உனக்கு ஓர் அறிகுறியைக்
காண்பிக்கும்படி அவன் மற்றவர்களை வருத்த
வேண்டுமென நீ விரும்பினாயா? இதோ அவன்
உனக்கு ஓர் அறிகுறியைக் காண்பித்திருக்கிறான்:
இதற்கு மேலும் நீ தர்க்கம் செய்வாயோ என்றான்.

And now when the chief judge saw this, he put forth his hand and wrote unto Korihor, saying: Art thou convinced of the power of God? In whom did ye desire that Alma should show forth his sign? Would ye that he should afflict others, to show unto thee a sign? Behold, he has showed unto you a sign; and now will ye dispute more?

52 கோரிகோர் தன் கையை நீட்டி எழுதியதாவது:
நான் பேச முடியாததினிமித்தம், நான் ஊமை என்-
று அறிவேன்; தேவ வல்லமையேயல்லாமல் இதை
என் மீது வேறெதுவும் கொண்டு வந்திருக்க முடியா-
து, என்றும் அறிவேன்; ஆம், தேவன் ஒருவர் உண்-
டென்று நான் எப்போதும் அறிந்திருக்கிறேன்.

And Korihor put forth his hand and wrote, saying: I know that I am dumb, for I cannot speak; and I know that nothing save it were the power of God could bring this upon me; yea, and I always knew that there was a God.

53 ஆனால் இதோ, பிசாசு என்னை வஞ்சித்திருக்கி-
றான்; ஏனெனில் அவன் என்னிடத்தில் தூதனைப்
போலத் தோன்றி, என்னை நோக்கி, இந்த ஜனங்கள்
யாவரும் ஒரு அந்நிய தேவன் பின்னால் வழிதப்-
பிப் போயிருக்கிறார்கள். நீ போய் அவர்களைச்
சரிப்படுத்து, என்றான். அவன் என்னை நோக்கி,
தேவன் இல்லை, என்றான். ஆம், நான் சொல்ல-
வேண்டியவைகளை அவன் எனக்குப் போதித்-
தான்; நான் அவன் வார்த்தைகளைப் போதித்-
தேன்; அவைகள் மாம்ச சிந்தைக்கு பிரியமான-
வைகளாயிருப்பதினிமித்தம் நான் அவைகளைப்
போதித்தேன்; நான் அதிக ஜெயம் பெறும் வரைக்கு-
மாய் அவைகளைப் போதித்து, அவைகள் மெய்-
யென்றே விசுவாசித்தேன்; இதினிமித்தமாகவே
நான் இந்த மகா சாபத்தை என்மீது வரவழைக்கும்
மட்டுமாய், சத்தியத்தை எதிர்த்து நின்றேன், என்-
றான்.

But behold, the devil hath deceived me; for he appeared unto me in the form of an angel, and said unto me: Go and reclaim this people, for they have all gone astray after an unknown God. And he said unto me: There is no God; yea, and he taught me that which I should say. And I have taught his words; and I taught them because they were pleasing unto the carnal mind; and I taught them, even until I had much success, insomuch that I verily believed that they were true; and for this cause I withstood the truth, even until I have brought this great curse upon me.

54 இப்பொழுது அவன் இதைச் சொல்லி தன்னிடத்-
திலிருந்து சாபத்தை எடுத்துக் கொள்ளும்படி, தே-
வனிடத்தில் ஆல்மா ஜெபிக்க வேண்டுமென,
வேண்டிக்கொண்டான்.

Now when he had said this, he besought that Alma should pray unto God, that the curse might be taken from him.

55 ஆனால் ஆல்மா அவனை நோக்கி: இந்த சாபம் உன்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுமேயானால், நீ இந்த ஜனத்தின் இருதயத்தை மறுபடியும் வழிதப்பிப்போகச் செய்வாய்; ஆதலால் கர்த்தருடைய சித்தத்தின்படியே, உனக்கு சம்பவிப்பதாக என்றான்.

But Alma said unto him: If this curse should be taken from thee thou wouldst again lead away the hearts of this people; therefore, it shall be unto thee even as the Lord will.

56 அந்தப்படியே, அந்த சாபம் கோரிகோரிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படவில்லை; அவன் புறம்பே தள்ளப்பட்டு, தன் உணவுக்காக வீடு வீடாய் பிச்சை எடுத்துத் திரிந்தான்.

And it came to pass that the curse was not taken off of Korihor; but he was cast out, and went about from house to house begging for his food.

57 இப்பொழுது, கோரிகோருக்கு சம்பவித்த செய்தி உடனடியாக தேசமுழுவதிலும் அறிவிக்கப்பட்டது; ஆம், கோரிகோரின் வார்த்தைகளை விசுவாசித்தவர்கள் சீக்கிரமாய் மனந்திரும்ப வேண்டுமென்றும், இல்லாவிடில் அதே தீர்ப்புகள் அவர்களுக்கும் சம்பவிக்கும் என்றும், அவர்களுக்கு அறிவித்து, தேசத்திலுள்ள ஜனங்கள் யாவருக்கும் பிரதான நியாயாதிபதியால் ஒரு பிரகடனம் அனுப்பப்பட்டது.

Now the knowledge of what had happened unto Korihor was immediately published throughout all the land; yea, the proclamation was sent forth by the chief judge to all the people in the land, declaring unto those who had believed in the words of Korihor that they must speedily repent, lest the same judgments would come unto them.

58 அந்தப்படியே, அவர்கள் யாவரும் கோரிகோரின் துன்மார்க்கத்தைப்பற்றிப் புரிந்து கொண்டார்கள்; ஆதலால் அவர்கள் யாவரும் மறுபடியும் கர்த்தருக்குள்ளாக மனமாறினார்கள்; இது கோரிகோரின் வழக்கமான துன்மார்க்கத்திற்கு முடிவு கட்டியது. கோரிகோர் தன்னை பராமரிக்க வீடு வீடாய்த் திரிந்து பிச்சை எடுத்தான்.

And it came to pass that they were all convinced of the wickedness of Korihor; therefore they were all converted again unto the Lord; and this put an end to the iniquity after the manner of Korihor. And Korihor did go about from house to house, begging food for his support.

59 அந்தப்படியே, நேபியர்களிலிருந்து பிரிந்து சோரம் என்ற பெயர் கொண்ட ஒரு மனுஷனால் வழிநடத்தப்பட்டமையால், தங்களை சோரமியர் என்று அழைத்துக்கொண்ட ஜனங்களுக்குள்ளே அவன் போனபோது, இதோ அவன் மரித்துப் போகுமட்டுமாய் கீழே தள்ளப்பட்டு மிதிக்கப்பட்டான்.

And it came to pass that as he went forth among the people, yea, among a people who had separated themselves from the Nephites and called themselves Zoramites, being led by a man whose name was Zoram—and as he went forth amongst them, behold, he was run upon and trodden down, even until he was dead.

60 இப்படியாய் கர்த்தருடைய வழிகளைப் புரட்டிப் போடுகிறவனுடைய முடிவை நாம் பார்க்கிறோம். பிசாசு கடைசி நாளில் தன் பிள்ளைகளை ஆதரியாமல், அவர்களைப் பாதாளத்திற்குத் துரிதமாய் இழுத்துச் செல்லுவதையும் நாம் காண்கிறோம்.

And thus we see the end of him who perverteth the ways of the Lord; and thus we see that the devil will not support his children at the last day, but doth speedily drag them down to hell.

# ஆல்மா 31

1 இப்பொழுது, அந்தப்படியே, கோரிகோரின் முடிவிற்குப் பின்னர், சோரமியர் கர்த்தருடைய வழிகளைப் புரட்டிப் போடுகிறார்களென்றும், அவர்களுடைய தலைவனான சோரம், வாய் பேசாத விக்கிரகங்களை நமஸ்கரிக்க ஜனங்களினுடைய இருதயங்களை நடத்துகிறான் என்ற செய்தியை ஆல்மா கேள்விப்பட்டபோது, ஜனங்களினுடைய அக்கிரமத்தினிமித்தம் அவன் உள்ளம் திரும்பவும் துக்கமடையத் துவங்கியது.

2 ஏனெனில் தன் ஜனத்திற்குள்ளே இருக்கும் அக்கிரமத்தைப்பற்றி ஆல்மா அறிந்தது, மிகவும் துக்கிக்கக் காரணமாயிற்று; ஆதலால் நேபியரிடமிருந்து சோரமியர் பிரிந்து போனதினிமித்தம், அவன் உள்ளம் மிகவும் துக்கித்தது.

3 சோரமியர், சாரகெம்லா தேசத்திற்குக் கிழக்காயும், கிட்டத்தட்ட கடற்கரைக்கு எல்லையாயிருந்த, எருசோன் தேசத்திற்குத் தெற்காயும், லாமானியரால் நிறைந்திருந்த தென் வனாந்தரத்தையும் எல்லைகளாகக் கொண்டு, அந்தியோனம் என்று அவர்களால் அழைக்கப்பட்ட ஒரு தேசத்தில் அவர்கள் ஒன்றாய்க் கூடியிருந்தார்கள்.

4 இப்போது சோரமியர், லாமானியருடனே தொடர்பு வைத்துக் கொள்ளுவார்கள் என்று நேபியர் பயந்தார்கள். அது நேபியருக்கு பெரும் இழப்பை ஏற்படுத்தும்.

5 இப்போதும் நியாயமானதைச் செய்யும்படி ஜனங்களை வழிநடத்துகிற மகத்தான தன்மை, வார்த்தையை பிரசங்கிப்பதில் இருந்ததாலும், ஆம், பட்டயம் அல்லது, ஜனங்களுக்கு ஏற்பட்ட யாதொன்றைக் காட்டிலும், அது ஜனங்களின் மனதில் ஒரு வல்லமையான தாக்கத்தை உண்டாக்குவதினாலும் தேவ வார்த்தையின் நன்மையை அவர்கள் பரீட்சிக்க வேண்டியது அவசியமென ஆல்மா நினைத்தான்.

6 ஆகவே அவன் அம்மோனையும், ஆரோனையும், ஓம்னரையும் கூட்டிக்கொண்டு, ஈம்னியை சாரகெம்லாவிலிருந்த சபையில் விட்டுச் சென்றான்; ஆனால் முன்னே குறிப்பிட்ட மூன்று பேரையும், மீலேக்கில் உள்ள அமுலேக்கையும், சீஸ்ரமையும், அவன் தன்னுடைய இரண்டு குமாரரையும் தன்னுடனே கூட்டிக்கொண்டு போனான்.

# Alma 31

Now it came to pass that after the end of Korihor, Alma having received tidings that the Zoramites were perverting the ways of the Lord, and that Zoram, who was their leader, was leading the hearts of the people to bow down to dumb idols, his heart again began to sicken because of the iniquity of the people.

For it was the cause of great sorrow to Alma to know of iniquity among his people; therefore his heart was exceedingly sorrowful because of the separation of the Zoramites from the Nephites.

Now the Zoramites had gathered themselves together in a land which they called Antionum, which was east of the land of Zarahemla, which lay nearly bordering upon the seashore, which was south of the land of Jershon, which also bordered upon the wilderness south, which wilderness was full of the Lamanites.

Now the Nephites greatly feared that the Zoramites would enter into a correspondence with the Lamanites, and that it would be the means of great loss on the part of the Nephites.

And now, as the preaching of the word had a great tendency to lead the people to do that which was just—yea, it had had more powerful effect upon the minds of the people than the sword, or anything else, which had happened unto them—therefore Alma thought it was expedient that they should try the virtue of the word of God.

Therefore he took Ammon, and Aaron, and Omner; and Himni he did leave in the church in Zarahemla; but the former three he took with him, and also Amulek and Zeezrom, who were at Melek; and he also took two of his sons.

7 அவன் தன் குமாரர்களில் மூத்தவனை தன்னோ-
டு கூட்டிச் செல்லவில்லை. அவனுடைய பெயர்
ஏலமன் என்பதாகும்; அவன் தன்னோடு கூட கூட்-
டிச் சென்றவர்களின் பெயர்கள் சிப்லோன் மற்றும்
கொரியாந்தன் என்பவைகளாகும். இவைகளே
அவனோடு கூட சோரமியர் மத்தியிலே வசனத்-
தைப் பிரசங்கிக்கச் சென்றவர்களினுடைய பெயர்-
கள்.

Now the eldest of his sons he took not with him, and his name was Helaman; but the names of those whom he took with him were Shiblon and Corianton; and these are the names of those who went with him among the Zoramites, to preach unto them the word.

8 சோரமியர் நேபியரிலிருந்து பிரிந்து போனவர்-
கள்; ஆகவே அவர்களுக்கு தேவ வசனம் பிரசங்-
கிக்கப்பட்டிருந்தது.

Now the Zoramites were dissenters from the Nephites; therefore they had had the word of God preached unto them.

9 ஆனால் அவர்கள் மோசேயின் நியாயப்பிரமா-
ணத்தின்படி தேவனுடைய கட்டளைகளையும்,
அவருடைய ஒழுங்குகளையும் ஆசரியாததினிமித்-
தம், பெரும் தவறுக்குள் வீழ்ந்தார்கள்.

But they had fallen into great errors, for they would not observe to keep the commandments of God, and his statutes, according to the law of Moses.

10 தாங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு சபையினு-
டைய ஆசரிப்புகளாகிய ஜெபத்திலும், தேவனிடத்-
தில் தினசரி மன்றாட்டுகளிலும் தரித்திராமல்
அவைகளைக் கைக்கொள்ளாதே போனார்கள்.

Neither would they observe the performances of the church, to continue in prayer and supplication to God daily, that they might not enter into temptation.

11 ஆம், சுருங்கச் சொன்னால் அவர்கள் அநேக தட-
வைகளில் கர்த்தருடைய வழிகளைப் புரட்டினார்-
கள்; இதினிமித்தம் ஆல்மாவும், அவன் சகோதரரும்
அவர்களுக்கு வசனத்தைப் பிரசங்கிக்கும் பொருட்-
டு தேசத்தினுள் போனார்கள்.

Yea, in fine, they did pervert the ways of the Lord in very many instances; therefore, for this cause, Alma and his brethren went into the land to preach the word unto them.

12 இப்பொழுது அவர்கள் தேசத்திற்குள் வந்தபோது,
இதோ, அவர்கள் ஆச்சரியப்பட்டுப் போகும்படியாய்
சோரமியர் ஜெப ஆலயங்களைக் கட்டியிருப்பதை-
யும், வாரத்தின் ஒரு நாளை அவர்கள் கர்த்தரு-
டைய நாளென்று அழைத்து, அந்த நாளின்போது
ஒன்றாய் கூடுகிறதையும் கண்டார்கள்; ஆல்மாவும்
அவன் சகோதரரும் இதற்கு முன்னே காணாத மு-
றையிலே அவர்கள் தொழுது கொண்டார்கள்.

Now, when they had come into the land, behold, to their astonishment they found that the Zoramites had built synagogues, and that they did gather themselves together on one day of the week, which day they did call the day of the Lord; and they did worship after a manner which Alma and his brethren had never beheld;

13 அவர்கள் தங்கள் ஜெப ஆலயங்களின் நடுவே,
நிற்பதற்காக ஒரு இடத்தை தலையின் உயரத்திற்கு
மேலாக, கட்டியிருந்தார்கள்; அதன் உச்சியில் ஒரு-
வன் மாத்திரம் நிற்க முடியும்.

For they had a place built up in the center of their synagogue, a place for standing, which was high above the head; and the top thereof would only admit one person.

14 ஆதலால், தொழுதுகொள்ள வாஞ்சையுடைய-
வனெவனும் அதன் உச்சிக்குப்போய், தன் கைக-
ளை வானத்திற்கு நேராய் நீட்டி, உரத்த சத்தமாய்:

Therefore, whosoever desired to worship must go forth and stand upon the top thereof, and stretch forth his hands towards heaven, and cry with a loud voice, saying:

15 பரிசுத்தர், பரிசுத்த தேவன்; நீரே தேவனென்று வி-
சுவாசிக்கிறோம்; நீரே பரிசுத்தரென்றும், நீர் ஆவி-
யாய் இருந்தீரென்றும், ஆவியாயிருக்கிறீரென்றும்,
இனி என்றென்றைக்குமாயும் ஆவியாய் இருப்பீ-
ரென்றும் விசுவாசிக்கிறோம்.

Holy, holy God; we believe that thou art God, and we believe that thou art holy, and that thou wast a spirit, and that thou art a spirit, and that thou wilt be a spirit forever.

16 பரிசுத்த தேவனே, நீர் எங்களை எங்களுடைய
சகோதரரிடமிருந்து பிரித்தீரென்றும் விசுவாசிக்கி-
றோம்; தங்களுடைய பிதாக்களின் குழந்தைத்-
தனத்தினால், எங்கள் சகோதரருக்கு கையளிக்கப்-
பட்ட அவர்களுடைய பாரம்பரியத்தை நாங்கள்
விசுவாசிப்பதில்லை; ஆனால் நீரே எங்களை உம்-
முடைய பரிசுத்தமுள்ள பிள்ளைகளாகத் தெரிந்து-
கொண்டீரென்றும், கிறிஸ்து என்றொருவர் இருக்-
கமாட்டாரென்று, நீர் எங்களுக்குத் தெரியப்பண்-
ணினீரென்றும், நாங்கள் விசுவாசிக்கிறோம்.

Holy God, we believe that thou hast separated us from our brethren; and we do not believe in the tradition of our brethren, which was handed down to them by the childishness of their fathers; but we believe that thou hast elected us to be thy holy children; and also thou hast made it known unto us that there shall be no Christ.

17 ஆனால் நீரே நேற்றும், இன்றும், என்றென்றும் மா-
றாதவராயிருக்கிறீர்; எங்களைச் சுற்றியுள்ள யாவ-
ரையும் நீர் உமது கோபாக்கினையால் பாதாளத்தில்
தள்ளும்படி தெரிந்துகொண்டிருக்க, நீர் எங்களை
இரட்சிக்கும்படி தெரிந்து கொண்டிருப்பதற்காய்,
பரிசுத்தமுள்ள தேவனே உமக்கு நன்றி செலுத்துகி-
றோம்; எங்களுடைய சகோதரரை கிறிஸ்துவின்
நம்பிக்கையினால் பிணைத்து, தேவனே உம்மை-
விட்டு அவர்களுடைய இருதயங்களை தூர விலக்-
கிக்கொண்டு போகிற அவர்களின் மூடபாரம்பரி-
யங்களினால் நாங்களும் வழிநடத்தப்படாதபடிக்-
கு, நீர் எங்களைத் தெரிந்துகொண்டதற்காகவும்,
உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

But thou art the same yesterday, today, and forever; and thou hast elected us that we shall be saved, whilst all around us are elected to be cast by thy wrath down to hell; for the which holiness, O God, we thank thee; and we also thank thee that thou hast elected us, that we may not be led away after the foolish traditions of our brethren, which doth bind them down to a belief of Christ, which doth lead their hearts to wander far from thee, our God.

18 தேவனே, நாங்கள் தெரிந்துகொள்ளப்பட்ட, பரி-
சுத்த ஜனமாயிருப்பதற்காகவும், உமக்கு மறுபடியும்
நன்றிகளை ஏறெடுக்கிறோம், ஆமென்.

And again we thank thee, O God, that we are a chosen and a holy people. Amen.

19 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மாவும், அவனு-
டைய சகோதரரும், அவனுடைய குமாரர்களும்,
இந்த ஜெபங்களைக் கேட்டபோது, அவர்கள் அள-
விலா அதிர்ச்சியடைந்தார்கள்.

Now it came to pass that after Alma and his brethren and his sons had heard these prayers, they were astonished beyond all measure.

20 ஏனெனில் இதோ, இப்படியாக ஒவ்வொருவனும்
போய், இந்த ஜெபங்களையே ஏறெடுத்தான்.

For behold, every man did go forth and offer up these same prayers.

21 இப்போது அந்த இடம் அவர்களால் ராமியம்தோம்
என்று அழைக்கப்பட்டது. அதற்கு பரிசுத்த மேடை
என்று அர்த்தமாம்.

Now the place was called by them Rameumptom, which, being interpreted, is the holy stand.

22 அவர்கள் ஒவ்வொருவரும் அந்த மேடையிலி-
ருந்து, அதே ஜெபத்தை தேவனுக்கு ஏறெடுத்து,
தாங்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டதற்கா-
கவும், தங்களுடைய சகோதரரின் பாரம்பரியத்தின்-
படியே தங்களையும் அவர் நடத்தாதற்காகவும்,
வரப்போகிறவைகளாகிய, தாங்கள் ஒன்றும் அறி-
யாத காரியங்களைத் தங்கள் இருதயங்கள் விசுவா-
சிக்கும்படியாக வஞ்சிக்கப்படாததினிமித்தமும்,
தங்கள் தேவனுக்கு நன்றிகளை ஏறெடுத்தார்கள்.

Now, from this stand they did offer up, every man, the selfsame prayer unto God, thanking their God that they were chosen of him, and that he did not lead them away after the tradition of their brethren, and that their hearts were not stolen away to believe in things to come, which they knew nothing about.

23 ஜனங்கள் யாவரும் இந்த முறையில், நன்றிக-
ளைச் செலுத்திய பின்பு, அவர்கள் தங்களுடைய
வீடுகளுக்குத் திரும்பினார்கள். அவர்கள் தங்க-
ளின் முறையின்படி நன்றிகளைச் செலுத்த திரும்-
பவும் அந்த பரிசுத்த மேடைக்கு வரும்படி ஏகமாய்க்
கூடும்வரைக்கும், தங்களின் தேவனைப்பற்றி மறு-
படியும் பேசுவதேயில்லை.

Now, after the people had all offered up thanks after this manner, they returned to their homes, never speaking of their God again until they had assembled themselves together again to the holy stand, to offer up thanks after their manner.

24 இப்பொழுது ஆல்மா இதைக் கண்டபோது, அவன் இருதயம் துக்கித்தது; ஏனெனில் அவன் அவர்கள் துன்மார்க்கரும், மாறுபாடுள்ள ஜனமெனவும் கண்டான்; ஆம், அவர்களின் இருதயங்கள் பொன்னிலும், வெள்ளியிலும், சகலவிதமான மேன்மையான பொருட்களிலும் வாஞ்சித்தன.

Now when Alma saw this his heart was grieved; for he saw that they were a wicked and a perverse people; yea, he saw that their hearts were set upon gold, and upon silver, and upon all manner of fine goods.

25 ஆம், அவர்களுடைய பெருமையினிமித்தம், அவர்களின் உள்ளம் மேன்மை பாராட்டும்படியாய் உயர்த்தப்பட்டிருந்ததையும், அவன் கண்டான்.

Yea, and he also saw that their hearts were lifted up unto great boasting, in their pride.

26 அவன் தன் சத்தத்தை வானத்திற்கு உயர்த்தி, கூக்குரலிட்டுச் சொன்னதாவது, கர்த்தாவே, இங்கே கீழே மாம்சத்தில் வாசமாயிருந்து, மனுபுத்திரருக்குள்ளே இப்படிப்பட்ட கொடிய துன்மார்க்கத்தை எதுவரைக்கும் உம்முடைய ஊழியக்காரர் காணும்படி அனுமதிப்பீர்?

And he lifted up his voice to heaven, and cried, saying: O, how long, O Lord, wilt thou suffer that thy servants shall dwell here below in the flesh, to behold such gross wickedness among the children of men?

27 இதோ தேவனே, அவர்கள் உம்மை நோக்கி கூக்குரலிடுகிறார்கள். இருப்பினும் அவர்களுடைய இருதயங்கள் அவர்களின் பெருமையினால் விழுங்கப்பட்டிருக்கிறது. இதோ, தேவனே, உலகத்தின் வீணான காரியங்களால் மிகுந்த மேட்டிமையாயிருந்து, அவர்கள் தங்கள் வாயினாலே உம்மை நோக்கிக் கூக்குரலிடுகிறார்கள்.

Behold, O God, they cry unto thee, and yet their hearts are swallowed up in their pride. Behold, O God, they cry unto thee with their mouths, while they are puffed up, even to greatness, with the vain things of the world.

28 தேவனே, அவர்களுடைய விலையுயர்ந்த வஸ்திரத்தையும், அவர்களின் சிறு மோதிரங்களையும், அஸ்தகடகங்களையும், அவர்களின் பொன்னாபரணங்களையும், அவர்கள் தங்களுடைய விலையுயர்ந்த பொருட்களால் அலங்கரிக்கப்பட்டிருப்பதையும் பாரும். இதோ, அவர்களுடைய இருதயங்களோ அவைகள் மீது இருக்கின்றன. இருப்பினும் அவர்கள் உம்மை நோக்கி கூக்குரலிட்டு, தேவனே மற்றவர்கள் கெட்டுப் போகிறார்கள், நாங்கள் உமக்கென்று தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாயிருக்கிறதற்காக, உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறோம், என்கிறார்கள்.

Behold, O my God, their costly apparel, and their ringlets, and their bracelets, and their ornaments of gold, and all their precious things which they are ornamented with; and behold, their hearts are set upon them, and yet they cry unto thee and say—We thank thee, O God, for we are a chosen people unto thee, while others shall perish.

29 ஆம், நீர் அவர்களுக்குக் கிறிஸ்து இல்லை, என்று தெரியப்படுத்தியதாகவும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

Yea, and they say that thou hast made it known unto them that there shall be no Christ.

30 தேவனாகிய கர்த்தாவே, எதுவரைக்கும் இந்த ஜனத்திற்குள்ளே துன்மார்க்கமும், அவிசுவாசமும் இருக்க நீர் பொறுத்திருப்பீர்? கர்த்தாவே, நான் என் பெலவீனங்களை சகித்திருக்க, நீர் எனக்குப் பெலனைக் கொடுப்பீரா. நானோ பெலவீனன். இந்த ஜனத்திற்குள் இருக்கிற இப்படிப்பட்ட துன்மார்க்கம் என் ஆத்துமாவை வேதனைப்படுத்துகிறது.

O Lord God, how long wilt thou suffer that such wickedness and infidelity shall be among this people? O Lord, wilt thou give me strength, that I may bear with mine infirmities. For I am infirm, and such wickedness among this people doth pain my soul.

31 கர்த்தாவே என் இருதயம் மிகவும் துக்கிக்கிறது; நீர் என் ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள் தேற்றுவீரா. நான் என் பெலனைப் பெறவும், இந்த ஜனத்தினுடைய அக்கிரமத்தினிமித்தம் என்மீது வருகிற இந்த உபத்திரவங்களை நான் பொறுமையாய் சகித்திருக்கவும், கர்த்தாவே, நீர் எனக்கு அருளுவீரா.

O Lord, my heart is exceedingly sorrowful; wilt thou comfort my soul in Christ. O Lord, wilt thou grant unto me that I may have strength, that I may suffer with patience these afflictions which shall come upon me, because of the iniquity of this people.

32 கர்த்தாவே நீர் என் ஆத்துமாவைத் தேற்றி எனக்-
கும் என்னோடிருக்கிற என் உடன் ஊழியர்களாகிய
அம்மோனுக்கும், ஆரோனுக்கும், ஓம்னருக்கும்,
அமலேக்கிக்கும், சீஸ்ரமுக்கும், என் இரு குமாரருக்-
கும் ஜெயத்தை அருளுவீரா, ஆம் கர்த்தாவே இவர்-
கள் எல்லோரையும் நீர் தேற்றுவீரா. ஆம், நீர் அவர்-
களின் ஆத்துமாக்களை கிறிஸ்துவுக்குள் தேற்று-
வீரா.

O Lord, wilt thou comfort my soul, and give unto me success, and also my fellow laborers who are with me—yea, Ammon, and Aaron, and Omner, and also Amulek and Zeezrom, and also my two sons—yea, even all these wilt thou comfort, O Lord. Yea, wilt thou comfort their souls in Christ.

33 அவர்கள் பெலனைப் பெறவும், இந்த ஜனத்தின்
அக்கிரமங்களினிமித்தம் அவர்கள் மீது வரவிருக்-
கிற அவர்களுடைய உபத்திரவங்களை அவர்கள்
சகித்திருக்க, அவர்களுக்கு அருளுவீரா.

Wilt thou grant unto them that they may have strength, that they may bear their afflictions which shall come upon them because of the iniquities of this people.

34 கர்த்தாவே மீண்டும் உம்மிடத்திலே அவர்களைக்
கிறிஸ்துவுக்குள் சேர்ப்பதில், நாங்கள் ஜெயம் பெ-
றும்படியாய் நீர் எங்களுக்கு அருளுவீரா.

O Lord, wilt thou grant unto us that we may have success in bringing them again unto thee in Christ.

35 கர்த்தாவே, இதோ, அவர்களுடைய ஆத்துமாக்-
கள் விலையேறப்பெற்றவை. அவர்களில் பலர்
எங்களுடைய சகோதரர்கள். ஆதலால் கர்த்தாவே,
நாங்கள் எங்கள் சகோதரர்களைத் திரும்பவும் உம்-
மிடத்தில் கொண்டு வரும்படியாய், நீர் எங்களுக்கு
வல்லமையையும் ஞானத்தையும் தாரும்.

Behold, O Lord, their souls are precious, and many of them are our brethren; therefore, give unto us, O Lord, power and wisdom that we may bring these, our brethren, again unto thee.

36 இப்பொழுது, அந்தப்படியே, ஆல்மா இவ்வார்த்-
தைகளைச் சொல்லியபின்பு, அவன் தன் கைக-
ளைத் தன்னோடிருந்தவர்கள் மேல் வைத்தான்.
இதோ, அவர்கள் மீது அவன் தன் கைகளை வைத்-
தபோது, அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்-
டார்கள்.

Now it came to pass that when Alma had said these words, that he clapped his hands upon all them who were with him. And behold, as he clapped his hands upon them, they were filled with the Holy Spirit.

37 அதற்கு பின்னர் அவர்கள் என்னத்தை உண்-
போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை
உடுப்போம், என்று தங்களுக்காகக் கவலைப்படா-
மல் ஒருவருக்கொருவர் பிரிந்து சென்றார்கள்.

And after that they did separate themselves one from another, taking no thought for themselves what they should eat, or what they should drink, or what they should put on.

38 அவர்கள் பசியாயும், விடாய்த்தும் இருக்காதபடி
கர்த்தர் அவர்களைப் போஷித்தார்; கிறிஸ்து-
வைப்பற்றிய சந்தோஷத்தினால் விழுங்கப்பட்டுப்
போவதைத் தவிர, மற்ற எந்த உபத்திரவங்களாலும்
அவர்கள் கஷ்டப்படக்கூடாதென்று அவர் அவர்க-
ளுக்குப் பெலன் கொடுத்தார். இப்பொழுது ஆல்மா-
வின் ஜெபத்தின்படியே இது நடந்தது; இது அவன்
விசுவாசமாய் ஜெபித்ததினிமித்தமே.

And the Lord provided for them that they should hunger not, neither should they thirst; yea, and he also gave them strength, that they should suffer no manner of afflictions, save it were swallowed up in the joy of Christ. Now this was according to the prayer of Alma; and this because he prayed in faith.

# ஆல்மா 32

1 அந்தப்படியே, அவர்கள் போய் ஜனங்களுக்கு
அவர்களுடைய ஜெப ஆலயங்களிலும், அவர்களு-
டைய வீடுகளிலும் பிரவேசித்து, தேவ வசனத்தைப்
பிரசங்கிக்க ஆரம்பித்தார்கள்; ஆம், அவர்கள்
அவர்களுடைய வீதிகளிலும் வார்த்தையைப் பிர-
சங்கித்தார்கள்.
2 அந்தப்படியே, அவர்கள் மிகவும் பிரயாசப்பட்ட
பின்பு ஏழ்மையான ஜனங்களுக்குள்ளே ஜெயம்
பெறத்துவங்கினார்கள்; இதோ, ஜெப ஆலயங்களி-
லிருந்து அவர்கள் தங்களுடைய உரப்பான வஸ்தி-
ரத்தினிமித்தம் தள்ளப்பட்டார்கள்.
3 அவர்கள் அசுசியானவர்கள் என்று எண்ணப்-
பட்டு அவர்களுடைய ஜெப ஆலயங்களிலே பிர-
வேசித்து தேவனைத் தொழுதுகொள்ள அனுமதிக்-
கப்படாதிருந்தனர்; ஆகவே அவர்கள் எளியோரா-
யிருந்தார்கள்; ஆம், அவர்கள் தங்களுடைய சகோ-
தரரால் களிம்பு என்று எண்ணப்பட்டனர்; அவர்-
கள் உலகத்திற்கேற்ற காரியங்களில் எளியோராயி-
ருந்தார்கள்; அவர்கள் இருதயத்திலும் எளிமையா-
யிருந்தார்கள்.
4 ஓனிடா மலையின்மீது ஜனங்களுக்கு ஆல்மா
போதித்தும், அவர்களிடத்தில் பேசிக்கொண்டுமி-
ருந்தபோது, உலகத்திற்கேற்ற காரியங்களில் தங்க-
ளின் வறுமையினிமித்தம், இருதயத்தில் எளிமை-
யானோர் என்று நாங்கள் சொன்ன, அவர்களைச்
சார்ந்த பெரும் கூட்டத்தினர் அவனிடத்தில் வந்-
தார்கள்.
5 அவர்கள் ஆல்மாவிடம் வந்தார்கள்; அவர்களின்
தலைவன் அவனை நோக்கி: இதோ, என் சகோதரர்
தங்கள் வறுமையினிமித்தம், சகல மனுஷராலும்,
குறிப்பாக ஆசாரியர்களால் மிகவும் அலட்சியம்
பண்ணப்பட்டதினால் என்ன செய்வார்கள். எங்க-
ளுடைய சொந்த கைகளினால் நாங்கள் மிகுதி-
யாய் பிரயாசப்பட்டு கட்டியெழுப்பின எங்களின்
ஜெப ஆலயங்களிலிருந்து எங்களைத் தள்ளினார்-
கள்; எங்களுடைய மிகுந்த வறுமையினிமித்தமே
எங்களை அவர்கள் புறம்பே தள்ளினார்கள். எங்-
கள் தேவனை வழிபட எங்களுக்கு இடமில்லை;
இதோ, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றான்.
6 இப்பொழுது ஆல்மா இதைக் கேட்டபோது,
அவனிடத்தில் திரும்பி, தன் முகத்தை அவனுக்கு
நேராய் ஏறெடுத்து, அதிக சந்தோஷத்துடன் பார்த்-
தான்; அவர்களுடைய உபத்திரவங்கள் அவர்க-
ளை மெய்யாகவே தாழ்த்தியதையும், வசனத்தைக்
கேட்க அவர்கள் ஆயத்தமாயிருப்பதையும், அவன்
கண்டான்.

# Alma 32

And it came to pass that they did go forth, and began to preach the word of God unto the people, entering into their synagogues, and into their houses; yea, and even they did preach the word in their streets.

And it came to pass that after much labor among them, they began to have success among the poor class of people; for behold, they were cast out of the synagogues because of the coarseness of their apparel—

Therefore they were not permitted to enter into their synagogues to worship God, being esteemed as filthiness; therefore they were poor; yea, they were esteemed by their brethren as dross; therefore they were poor as to things of the world; and also they were poor in heart.

Now, as Alma was teaching and speaking unto the people upon the hill Onidah, there came a great multitude unto him, who were those of whom we have been speaking, of whom were poor in heart, because of their poverty as to the things of the world.

And they came unto Alma; and the one who was the foremost among them said unto him: Behold, what shall these my brethren do, for they are despised of all men because of their poverty, yea, and more especially by our priests; for they have cast us out of our synagogues which we have labored abundantly to build with our own hands; and they have cast us out because of our exceeding poverty; and we have no place to worship our God; and behold, what shall we do?

And now when Alma heard this, he turned him about, his face immediately towards him, and he beheld with great joy; for he beheld that their afflictions had truly humbled them, and that they were in a preparation to hear the word.

7 ஆதலால், அவன் மற்ற கூட்டத்திற்கு ஒன்றும் சொல்லாதவனாய், தன் கரத்தை நீட்டி, மெய்யாகவே மனஸ்தாபமுள்ளவர்கள் எனக் கண்டவர்களிடத்தில் கூக்குரலிட்டு, அவர்களுக்குச் சொன்னதாவது:

Therefore he did say no more to the other multitude; but he stretched forth his hand, and cried unto those whom he beheld, who were truly penitent, and said unto them:

8 நீங்கள் இருதயத்தில் தாழ்மையுள்ளவர்கள் என நான் காண்கிறேன்; அப்படியானால் நீங்கள் பாக்கியவான்கள்.

I behold that ye are lowly in heart; and if so, blessed are ye.

9 இதோ, உங்கள் சகோதரன், நாங்கள் எங்கள் தேவனைத் தொழுது கொள்ளாதபடிக்கு, எங்களின் ஜெப ஆலயங்களிலிருந்து புறம்பே தள்ளப்பட்டோமே, நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டான்.

Behold thy brother hath said, What shall we do?—for we are cast out of our synagogues, that we cannot worship our God.

10 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களுடைய ஜெப ஆலயங்களிலேயல்லாமல் வேறெங்கும் தேவனைத் தொழுது கொள்ளக்கூடாதென எண்ணுகிறீர்களா?

Behold I say unto you, do ye suppose that ye cannot worship God save it be in your synagogues only?

11 மேலும் வாரத்திற்கு ஒரு முறை மாத்திரமே தேவனைத் தொழவேண்டுமென, நீங்கள் எண்ணுகிறீர்களா என்றும் உங்களைக் கேட்கிறேன்.

And moreover, I would ask, do ye suppose that ye must not worship God only once in a week?

12 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் தாழ்மையாயிருக்கும்படிக்கும், ஞானத்தைக் கற்கும்படிக்கும், உங்கள் ஜெப ஆலயங்களிலிருந்து தள்ளப்பட்டது நல்லது; நீங்கள் ஞானத்தைக் கற்பது அவசியமே; நீங்கள் புறம்பே தள்ளப்பட்டதாலும், உங்களுடைய மிகுந்த வறுமையினிமித்தம் உங்களின் சகோதரரால் நீங்கள் அலட்சியம் பண்ணப்பட்டதாலும், நீங்கள் இருதயத் தாழ்ச்சிக்குள்ளாக கொண்டுவரப்பட்டீர்கள்; ஏனெனில் நீங்கள் தாழ்மையாக்கப்பட வேண்டியது அவசியம்.

I say unto you, it is well that ye are cast out of your synagogues, that ye may be humble, and that ye may learn wisdom; for it is necessary that ye should learn wisdom; for it is because that ye are cast out, that ye are despised of your brethren because of your exceeding poverty, that ye are brought to a lowliness of heart; for ye are necessarily brought to be humble.

13 இப்பொழுது, நீங்கள் தாழ்மையாய் இருக்க கட்டாயப்படுத்தப்பட்டதினிமித்தம் நீங்கள் பாக்கியவான்கள்; ஏனெனில் சிலசமயங்களில் மனுஷன் தாழ்மையாயிருக்கக் கட்டாயப்படுத்தப்படும்போது, அவன் மனந்திரும்புதலைத் தேடுகிறான்; இப்போதும் மெய்யாகவே மனந்திரும்புகிற எவனும் இரக்கத்தைக் கண்டடைவான், இரக்கத்தைக் கண்டடைகிறவனும், இறுதிபரியந்தமும் நிலைத்து நிற்கிறவனுமே இரட்சிக்கப்படுவான்.

And now, because ye are compelled to be humble blessed are ye; for a man sometimes, if he is compelled to be humble, seeketh repentance; and now surely, whosoever repenteth shall find mercy; and he that findeth mercy and endureth to the end the same shall be saved.

14 இப்பொழுதும், நான் உங்களுக்குச் சொன்னதுபோல, நீங்கள் தாழ்மையாயிருக்க கட்டாயப்படுத்தப்பட்டதினிமித்தம், ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். வசனத்தினிமித்தம் மெய்யாகவே தங்களைத் தாழ்த்தியவர்கள் அதிகமாய் ஆசீர்வதிக்கப்பட்டவர்களென்று நீங்கள் எண்ணவில்லையா?

And now, as I said unto you, that because ye were compelled to be humble ye were blessed, do ye not suppose that they are more blessed who truly humble themselves because of the word?

15 ஆம், தன்னையே மெய்யாகத் தாழ்த்தி, தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, முடிவுபரியந்தமும், நிலை நிற்கிறவன் எவனோ, அவனே ஆசீர்வதிக்கப்படுவான், ஆம் தங்களின் மிகுந்த வறுமையினிமித்தம் தாழ்மையாயிருக்கக் கட்டாயப்படுத்தப்பட்டவர்களைக் காட்டிலும், அவன் இன்னும் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

Yea, he that truly humbleth himself, and repenteth of his sins, and endureth to the end, the same shall be blessed—yea, much more blessed than they who are compelled to be humble because of their exceeding poverty.

16 ஆதலால், தாழ்மையாயிருக்கும்படி கட்டாயப்ப-
டுத்தப்படாமலேயே, தாழ்மையாயிருப்பவர்கள்
பாக்கியவான்கள்; அதாவது, ஆம், அவர்கள் விசு-
வாசிப்பதற்கு முன்னமே, வசனத்தை அறியும்படி
கொண்டுவரப்படாமல், அல்லது அவர்கள் அறிந்-
து கொள்ளத்தக்கதாக, பலவந்தப்படுத்தப்படாம-
லேயே, தேவ வசனத்தை விசுவாசித்து, இதய மு-
ரண்டில்லாமல் ஞானஸ்நானம் பெறுபவர்கள்
பாக்கியவான்கள்.

Therefore, blessed are they who humble themselves without being compelled to be humble; or rather, in other words, blessed is he that believeth in the word of God, and is baptized without stubbornness of heart, yea, without being brought to know the word, or even compelled to know, before they will believe.

17 ஆம், அநேகர் எங்களுக்கு வானத்திலிருந்து ஒரு
அறிகுறியை காண்பித்தால், நாங்கள் நிச்சயமாய்
அறிந்துகொண்டு, பின்பு நம்புகிறோம், என்கிறார்-
கள்.

Yea, there are many who do say: If thou wilt show unto us a sign from heaven, then we shall know of a surety; then we shall believe.

18 இதுதான் விசுவாசமா, என்று நான் கேட்கிறேன்.
இதோ அப்படி அல்ல, என்று நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்; ஒருவன் ஒரு காரியத்தை அறிந்-
திருந்தானேயானால் அவன் விசுவாசிக்க காரண-
மேதுமில்லையே. ஏனெனில் அவன்தான் அதை
அறிந்திருக்கிறானே.

Now I ask, is this faith? Behold, I say unto you, Nay; for if a man knoweth a thing he hath no cause to believe, for he knoweth it.

19 இப்பொழுது தேவனுடைய சித்தத்தை அறிந்து
அதைச் செய்யாமல் போகிறவன், வெறுமனே விசு-
வாசித்தோ, அல்லது விசுவாசிக்கக் காரணம் மட்-
டும் உண்டாயிருந்து, மீறுதலினுள் விழுகிற-
வனைக் காட்டிலும் எவ்வளவாய் சபிக்கப்பட்ட-
வனாயிருக்கிறான்.

And now, how much more cursed is he that knoweth the will of God and doeth it not, than he that only believeth, or only hath cause to believe, and falleth into transgression?

20 இப்போது இக்காரியத்தைக் குறித்து நீங்கள் நிதா-
னியுங்கள். இதோ நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன், ஒன்று எப்படியோ, அப்படியே தான் மற்றதும்.
அது அவனவன் கிரியைகளுக்குத் தக்கதாய் இருக்-
கும்.

Now of this thing ye must judge. Behold, I say unto you, that it is on the one hand even as it is on the other; and it shall be unto every man according to his work.

21 நான் விசுவாசத்தைக் குறித்து ஏற்கனவே சொன்-
னதுபோல, காரியங்களைக் குறித்து பூரண ஞா-
னத்தைப் பெற்றிருப்பது விசுவாசமல்ல; ஆதலால்,
உங்களிடத்தில் விசுவாசம் இருந்தால் காணப்ப-
டாத மெய்யானவைகளை நீங்கள் நம்புகிறவர்க-
ளாயிருக்கிறீர்கள்.

And now as I said concerning faith—faith is not to have a perfect knowledge of things; therefore if ye have faith ye hope for things which are not seen, which are true.

22 இதோ, தம்முடைய நாமத்தை விசுவாசிக்கிற யா-
வர் மேலும், தேவன் இரக்கமாயிருக்கிறார் என்று,
நீங்கள் நினைவுகூரவேண்டுமென்று உங்களுக்குச்
சொல்லுகிறேன். அதனால் தான் முதலாவது நீங்-
கள் தம்முடைய வார்த்தையை விசுவாசிக்க வேண்-
டுமென்று அவர் விரும்புகிறார்.

And now, behold, I say unto you, and I would that ye should remember, that God is merciful unto all who believe on his name; therefore he desireth, in the first place, that ye should believe, yea, even on his word.

23 அவர் தம்முடைய வசனத்தை தூதர்கள் மூலமாக
புருஷருக்கும், ஆம், புருஷருக்கு மாத்திரமல்ல ஸ்-
திரீகளுக்கும் அருளுகிறார். இது மாத்திரமல்ல,
அநேகந்தரம் ஞானிகளையும், கற்றோரையும் தாறு-
மாறாக்குகிற வசனங்கள், சிறுபிள்ளைகளுக்கும்,
அருளப்படுகின்றன.

And now, he imparteth his word by angels unto men, yea, not only men but women also. Now this is not all; little children do have words given unto them many times, which confound the wise and the learned.

24 இப்பொழுது என் பிரியமான சகோதரரே, நீங்கள்
உபத்திரவப்பட்டு, தள்ளப்பட்டுப் போனதினிமித்-
தம் நீங்கள் என்ன செய்யவேண்டுமென என்னிடத்-
திலிருந்து அறிந்துகொள்ள வாஞ்சித்ததால், மெய்-
யானவைகளுக்கேற்ப மாத்திரம், நான் உங்களை
நிதானிப்பவனாக நீங்கள் எண்ணவேண்டுமென,
நான் வாஞ்சிப்பதில்லை.

And now, my beloved brethren, as ye have desired to know of me what ye shall do because ye are afflicted and cast out—now I do not desire that ye should suppose that I mean to judge you only according to that which is true—

25 நீங்கள் அனைவரும் தாழ்மையாயிருக்கும்படி
கட்டாயப்படுத்தப்பட்டவர்கள், என்று நான் சொல்-
லவில்லை; ஏனெனில் எந்தச் சூழ்நிலையில் இருந்-
தாலும், தங்களைத் தாங்களே தாழ்த்துகிறவர்க-
ளாய், உங்களுக்குள்ளும் சிலர் இருக்கிறார்கள்,
என்று மெய்யாகவே நான் விசுவாசிக்கிறேன்.

For I do not mean that ye all of you have been compelled to humble yourselves; for I verily believe that there are some among you who would humble themselves, let them be in whatsoever circumstances they might.

26 நான் விசுவாசத்தைக் குறித்து ஏற்கனவே சொன்-
னதுபோல, அது பூரண அறிவாக இருந்ததில்லை.
என் வார்த்தைகளும் அப்படியே. விசுவாசம் பூரண
அறிவு என்பதைத் தவிர, அதுபோல அவைகளினு-
டைய நிச்சயத்தையும், நீங்கள் பரிபூரணமாய் முத-
லிலேயே அறிந்துகொள்ள முடியாது.

Now, as I said concerning faith—that it was not a perfect knowledge—even so it is with my words. Ye cannot know of their surety at first, unto perfection, any more than faith is a perfect knowledge.

27 இதோ, என் வார்த்தைகளைக் குறித்து ஒரு சோ-
தனையைச் செய்யும்வகையில், உங்கள் புலன்க-
ளை எழுப்பி, உணர்ச்சி கொள்ளச் செய்து, கொஞ்ச
விசுவாசத்தைப் பிரயோகியுங்கள். ஆம், ஒருவே-
ளை விசுவாசிக்க வாஞ்சிப்பதைக் காட்டிலும்,
அதிகமாய் உங்களால் ஏதும் செய்யக்கூடாமற்போ-
னால், என் வார்த்தைகளில் ஒரு பகுதிக்கு நீங்கள்
இடம் கொடுக்கும்படியாய், நீங்கள் நம்புமளவும்
இந்த வாஞ்சை உங்களுக்குள் கிரியை செய்வதாக.

But behold, if ye will awake and arouse your faculties, even to an experiment upon my words, and exercise a particle of faith, yea, even if ye can no more than desire to believe, let this desire work in you, even until ye believe in a manner that ye can give place for a portion of my words.

28 இப்பொழுது நாம் வார்த்தையை ஒரு விதைக்கு
ஒப்பிடுவோம். உங்கள் இருதயத்தில் ஒரு விதை வி-
தைக்கப்படும்படிக்கு நீங்கள் இடம்கொடுத்தால்,
இதோ, அது உண்மையான விதையாக அல்லது
நல்ல விதையாக இருந்தால், அதை உங்கள் அவிசு-
வாசத்தினால் அகற்றாமலும், நீங்கள் கர்த்தரு-
டைய ஆவியை எதிர்க்காமலும் இருந்தால், இதோ,
அது உங்கள் மார்புகளினுள் விரிவடையும்; இந்த
விரிவடைகிற அசைவுகளை நீங்கள் உணரும்போ-
து, நீங்கள் உங்களுக்குள்ளாகவே இது நல்ல வி-
தையாகத்தான் இருக்கவேண்டும், இந்த வார்த்தை
நன்மையானது. ஏனெனில், அது என் ஆத்துமா-
வை விசாலமடையச் செய்யத் தொடங்குகிறது,
ஆம், அது என் அறிவை விரிவாக்கத் தொடங்குகி-
றது, ஆம், அது எனக்கு சுவையானதாய் இருக்கத்
தொடங்குகிறது, என்று சொல்லத் தொடங்குவீர்-
கள்.

Now, we will compare the word unto a seed. Now, if ye give place, that a seed may be planted in your heart, behold, if it be a true seed, or a good seed, if ye do not cast it out by your unbelief, that ye will resist the Spirit of the Lord, behold, it will begin to swell within your breasts; and when you feel these swelling motions, ye will begin to say within yourselves—It must needs be that this is a good seed, or that the word is good, for it beginneth to enlarge my soul; yea, it beginneth to enlighten my understanding, yea, it beginneth to be delicious to me.

29 இதோ, இது உங்களுடைய விசுவாசத்தை அதிக-
ரிக்காதோ? உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆம்;
ஆனாலும் அது பூரண ஞானத்திற்குள்ளாக வளர-
வில்லை.

Now behold, would not this increase your faith? I say unto you, Yea; nevertheless it hath not grown up to a perfect knowledge.

30 ஆனால் இதோ விதையானது விரிவடைந்து, முளைவிட்டு வளரத் தொடங்கும்போது, நீங்கள் அந்த விதை நல்லது என்று சொல்லவேண்டும்; ஏனெனில் இதோ, அது விரிவடைந்து, முளைவிட்டு வளரத் துவங்குகிறது. இப்பொழுது இதோ, இது உங்களுடைய விசுவாசத்தை பெலப்படுத்தாதா? ஆம், உங்களுடைய விசுவாசத்தை அது பெலப்படுத்தும்: ஏனெனில் அது நல்ல விதை என்று நான் அறிவேனென்று, நீங்கள் சொல்லுவீர்கள். ஏனெனில் இதோ, அது முளைவிட்டு வளரத் துவங்குகிறது.

But behold, as the seed swelleth, and sprouteth, and beginneth to grow, then you must needs say that the seed is good; for behold it swelleth, and sprouteth, and beginneth to grow. And now, behold, will not this strengthen your faith? Yea, it will strengthen your faith: for ye will say I know that this is a good seed; for behold it sprouteth and beginneth to grow.

31 இப்போதும் இதோ, இது நல்ல விதையென்று நிச்சயமாய் நீங்கள் அறிவீர்களா? நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆம், ஏனெனில் ஒவ்வொரு விதையும் தன் சொந்த சாயலைப்போலவே பிறப்பிக்கிறது.

And now, behold, are ye sure that this is a good seed? I say unto you, Yea; for every seed bringeth forth unto its own likeness.

32 ஆதலால் விதை முளைத்தால் அது நல்லது. அது முளைக்காவிடில், இதோ, அது நல்லதல்ல. ஆகவே அது எறியப்படுகிறது.

Therefore, if a seed groweth it is good, but if it groweth not, behold it is not good, therefore it is cast away.

33 இப்பொழுது இதோ, நீங்கள் சோதனையைச் செய்து, விதையை நட்டீர்கள். அதுவோ விரிவடைந்து, முளைத்து வளரத் துவங்கியதால், அந்த விதை நல்லது, என்று நீங்கள் அறிவது அவசியமே.

And now, behold, because ye have tried the experiment, and planted the seed, and it swelleth and sprouteth, and beginneth to grow, ye must needs know that the seed is good.

34 இப்பொழுது உங்களுடைய ஞானம் பூரணமானதா? ஆம், அந்தக் காரியத்தில் உங்கள் ஞானம் பூரணப்பட்டிருக்கிறது. உங்கள் விசுவாசமோ செயலற்றிருக்கிறது. இது நீங்கள் அறிந்திருப்பதினிமித்தமே, உங்கள் அறிவு தெளிவடையத் தொடங்குவதாலும், உங்கள் மனம் விசாலமடையத் தொடங்குவதாலும், வார்த்தை உங்கள் ஆத்துமாக்களில் விரிவடைந்திருக்கிறது என நீங்கள் அறிந்திருக்கிறதால், அது முளைவிட்டிருக்கிறது என்றும் அறிகிறீர்கள்.

And now, behold, is your knowledge perfect? Yea, your knowledge is perfect in that thing, and your faith is dormant; and this because you know, for ye know that the word hath swelled your souls, and ye also know that it hath sprouted up, that your understanding doth begin to be enlightened, and your mind doth begin to expand.

35 அப்படியென்றால், இது நிஜமன்றோ? நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆம் அது ஒளியாயிருப்பதினிமித்தமே; ஒளியாயிருக்கிற எதுவும் பகுத்தறியக்கூடியதாய் இருப்பதால், நல்லதாயிருக்கிறது. ஆதலால் அது நல்லதென்று நீங்கள் அறிந்துகொள்வது அவசியம்; இதோ, இந்த ஒளியை நீங்கள் ருசி பார்த்த பின்பு, உங்கள் ஞானம் பூரணப்பட்டதாயிருக்குமா?

O then, is not this real? I say unto you, Yea, because it is light; and whatsoever is light, is good, because it is discernible, therefore ye must know that it is good; and now behold, after ye have tasted this light is your knowledge perfect?

36 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அப்படியல்ல, சோதனையைச் செய்து விதை நல்லதா என்று அறியும்படிக்கு, முயற்சி செய்ய, விதையை ஊன்ற நீங்கள் உங்கள் விசுவாசத்தை மட்டுமே பிரயோகித்ததினிமித்தம், உங்கள் விசுவாசத்தை நீங்கள் ஒதுக்கிவிடக்கூடாது.

Behold I say unto you, Nay; neither must ye lay aside your faith, for ye have only exercised your faith to plant the seed that ye might try the experiment to know if the seed was good.

37 இதோ, விருட்சம் வளரத் துவங்கும்போது, நீங்கள்
சொல்வீர்கள், அது வேர் விட்டு, வளர்ந்து, நமக்குக்
கனியைக் கொடுக்கும்படி, அதை அதிக ஜாக்கிர-
தையாய்ப் போஷிப்போமாக. இப்போதும் இதோ,
நீங்கள் மிகுந்த ஜாக்கிரதையாய்ப் போஷிப்பதால்,
அது வேர் விட்டுவளர்ந்து, கனி கொடுக்கும்.
38 நீங்கள் அந்த விருட்சத்தை உதாசீனப்படுத்தி-
னால், அதனுடைய போஷிப்பைக் குறித்துக் கவ-
லைப்படாமற் போனால், இதோ அது எந்த வேரும்
விடாது; சூரியனின் வெப்பம் வரும்போது, அதைச்
சுட்டெரிக்கும். வேரில்லாததினால் அது காய்ந்து
போகும், நீங்கள் அதைப் பிடுங்கி, வெளியே எறி-
வீர்கள்.
39 இப்போதும் இந்த விதை நல்லதல்ல என்பதினா-
லோ, அல்லது அதனுடைய கனி விரும்பத்தக்கதாக
இல்லை என்பதினாலோ அல்ல. இது ஏனென்றால்
உங்கள் நிலம் வெறுமையாயிருப்பதினாலும், வி-
ருட்சத்தை நீங்கள் போஷிக்காததினாலுமே. ஆத-
லால் கனியை நீங்கள் பெறமுடியாது.
40 இப்படியாக, அதனுடைய கனியை விசுவாசக்-
கண்ணால் எதிர்பார்த்து, வார்த்தையைப் போஷி-
யாமலிருந்தால், ஜீவ விருட்சத்தின் கனியை நீங்-
கள் ஒருபோதும் பறிக்கவே முடியாது.
41 வார்த்தையைப் போஷிப்பீர்களெனில், ஆம், வி-
ருட்சம் வளரத் தொடங்கும்போது, அதிக கருத்தோ-
டும், பொறுமையோடும், உங்கள் விசுவாசத்தினால்,
அதைப் போஷித்து, அதனுடைய கனியை எதிர்-
பார்த்திருப்பீர்களெனில், அது வேர் விடும்; இதோ,
அது நித்திய ஜீவன் வரை வளர்கிற விருட்சமாயி-
ருக்கும்.
42 வார்த்தை உங்களில் வேர் விடும்படிக்கு, நீங்கள்
அதைப் போஷிப்பதில் எடுத்துக்கொண்ட உங்க-
ளுடைய கருத்தினிமித்தமும், விசுவாசத்தினிமித்த-
மும், பொறுமையினிமித்தமும், இதோ, விலையே-
றப்பெற்றதும், தித்திப்பானவைகளைக் காட்டிலும்
தித்திப்பானதும், வெண்மையானவைகளைக்
காட்டிலும் வெண்மையாகவும், ஆம், சுத்தமுள்ள-
வைகளைக் காட்டிலும் சுத்தமுள்ளதாகவும் இருக்-
கிற, அதனுடைய கனியை நீங்கள் பறிப்பீர்கள்;
நீங்கள் நிறைக்கப்பட்டு, இனி பசித்தும், விடாய்த்-
தும் போகாதவரை, இக்கனியை ருசிப்பீர்கள்.
43 அப்படியானால் என் சகோதரரே, இவ்விருட்சம்
உங்களுக்குக் கனியை கொடுக்கக் காத்திருந்து,
உங்கள் விசுவாசம், உங்கள் கருத்து, பொறுமை,
மற்றும், நீடிய சாந்தத்தினிமித்தம், பலனை அறுவ-
டை செய்வீர்கள்.

And behold, as the tree beginneth to grow, ye will say: Let us nourish it with great care, that it may get root, that it may grow up, and bring forth fruit unto us. And now behold, if ye nourish it with much care it will get root, and grow up, and bring forth fruit.

But if ye neglect the tree, and take no thought for its nourishment, behold it will not get any root; and when the heat of the sun cometh and scorcheth it, because it hath no root it withers away, and ye pluck it up and cast it out.

Now, this is not because the seed was not good, neither is it because the fruit thereof would not be desirable; but it is because your ground is barren, and ye will not nourish the tree, therefore ye cannot have the fruit thereof.

And thus, if ye will not nourish the word, looking forward with an eye of faith to the fruit thereof, ye can never pluck of the fruit of the tree of life.

But if ye will nourish the word, yea, nourish the tree as it beginneth to grow, by your faith with great diligence, and with patience, looking forward to the fruit thereof, it shall take root; and behold it shall be a tree springing up unto everlasting life.

And because of your diligence and your faith and your patience with the word in nourishing it, that it may take root in you, behold, by and by ye shall pluck the fruit thereof, which is most precious, which is sweet above all that is sweet, and which is white above all that is white, yea, and pure above all that is pure; and ye shall feast upon this fruit even until ye are filled, that ye hunger not, neither shall ye thirst.

Then, my brethren, ye shall reap the rewards of your faith, and your diligence, and patience, and long-suffering, waiting for the tree to bring forth fruit unto you.

# ஆல்மா 33

1 இப்போது ஆல்மா இவ்வார்த்தைகளைப் பேசிய
பின்னர், தங்கள் இருதயங்களில் விதைக்கப்பட
வேண்டுமென அவன் சொன்ன, கனியைப் பெறு-
வதற்கு தாங்கள் ஒரே தேவனில் விசுவாசிக்க-
வேண்டுமா என்றும், அல்லது சொல்லப்பட்ட வி-
தையை அல்லது வார்த்தையை தங்கள் இருதயங்-
களில் எப்படி விதைப்பது என்றும், அல்லது விசு-
வாசத்தை தாங்கள் பிரயோகிக்கத் துவங்குவதெப்-
படி, என்றும் அறிய வாஞ்சித்தவர்களாய், அவனி-
டம் செய்தி அனுப்பினார்கள்.
2 ஆல்மா அவர்களை நோக்கி: இதோ, நீங்கள் உங்க-
ளுடைய ஜெப ஆலயங்களிலிருந்து தள்ளப்பட்-
டுப் போனதினிமித்தம், உங்கள் தேவனைத் தொழு-
துகொள்ளமுடியவில்லை என்றீர்கள். இதோ, நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் தேவனைத்
தொழுது கொள்ள முடியவில்லையாதலால், நீங்-
கள் பெரும் தவறு செய்கிறீர்கள் என்று எண்ணு-
வீர்களாகில், நீங்கள் வேத வாக்கியங்களைத் தேட-
வேண்டும். அவை உங்களுக்கு இதையே போதித்-
தன என்று எண்ணுவீர்களாகில், அவைகளை நீங்-
கள் அறிந்திருக்கவில்லை.
3 பழங்காலத்து தீர்க்கதரிசியான சீனஸ், ஜெபத்-
தைக் குறித்தோ, அல்லது தொழுதுகொள்வதைக்
குறித்தோ, சொன்னவைகளை வாசித்ததாக உங்க-
ளுக்கு நினைவிருக்கிறதா?
4 அவன் சொன்னதாவது: தேவனே நீர் இரக்கமுள்-
ளவராயிருக்கிறீர். ஏனெனில் நான் வனாந்தரத்தில்
இருந்தபோதும், நீர் என் ஜெபத்தைக் கேட்டீர்; ஆம்,
நான் என் சத்துருக்களாய் இருந்தவர்களைக் கு-
றித்து ஜெபித்தபோதும், நீர் இரக்கமுள்ளவராய்
இருந்து, அவர்களை என் பட்சமாக்கினீர்.
5 ஆம், தேவனே, நான் என் வயலிலிருந்து உமக்குக்
கூக்குரலிட்டபோதும் நீர் எனக்கு இரக்கமாயிருந்தீர்;
நான் என் ஜெபத்தில் உம்மிடம் கூக்குரலிட்டபோ-
தும் நீர் எனக்குச் செவிகொடுத்தீர்.
6 மறுபடியும், தேவனே, நான் என் வீட்டுக்குத் திரும்-
பின போதும் நீர் என் ஜெபத்தைக் கேட்டீர்.
7 கர்த்தாவே, நான் அறைவீட்டுக்குள் பிரவேசித்து,
உம்மிடத்தில் ஜெபித்தபோதும், நீர் எனக்குச் செவி-
கொடுத்தீர்.
8 ஆம், மனுஷர் கேட்கும்படியாய் அல்ல, நீர் கேட்-
கும்படியாக உம்மை நோக்கி கூக்குரலிடுகிற உம்மு-
டைய பிள்ளைகளுக்கு, நீர் இரக்கமாயிருந்து,
அவர்களுக்குச் செவிகொடுப்பீர்.
9 ஆம், தேவனே, நீர் எனக்கு இரக்கமுள்ளவராயி-
ருந்து, உம்முடைய ஜனக்கூட்டங்களுக்கு நடுவே-
யும், என் கூக்குரல்களைக் கேட்டீர்.

# Alma 33

Now after Alma had spoken these words, they sent forth unto him desiring to know whether they should believe in one God, that they might obtain this fruit of which he had spoken, or how they should plant the seed, or the word of which he had spoken, which he said must be planted in their hearts; or in what manner they should begin to exercise their faith.

And Alma said unto them: Behold, ye have said that ye could not worship your God because ye are cast out of your synagogues. But behold, I say unto you, if ye suppose that ye cannot worship God, ye do greatly err, and ye ought to search the scriptures; if ye suppose that they have taught you this, ye do not understand them.

Do ye remember to have read what Zenos, the prophet of old, has said concerning prayer or worship?

For he said: Thou art merciful, O God, for thou hast heard my prayer, even when I was in the wilderness; yea, thou wast merciful when I prayed concerning those who were mine enemies, and thou didst turn them to me.

Yea, O God, and thou wast merciful unto me when I did cry unto thee in my field; when I did cry unto thee in my prayer, and thou didst hear me.

And again, O God, when I did turn to my house thou didst hear me in my prayer.

And when I did turn unto my closet, O Lord, and prayed unto thee, thou didst hear me.

Yea, thou art merciful unto thy children when they cry unto thee, to be heard of thee and not of men, and thou wilt hear them.

Yea, O God, thou hast been merciful unto me, and heard my cries in the midst of thy congregations.

10 ஆம், நான் தள்ளப்பட்டு, என் பகைவரால் தூஷிக்கப்பட்டபோதும், நீர் எனக்குச் செவிகொடுத்தீர்; ஆம், நீர் என் கூக்குரல்களைக் கேட்டு என் பகைவரிடம் கோபம் கொண்டு, துரிதமான அழிவோடுகூட உம்முடைய உக்கிரத்தினால் அவர்களை விசாரித்தீர்.

Yea, and thou hast also heard me when I have been cast out and have been despised by mine enemies; yea, thou didst hear my cries, and wast angry with mine enemies, and thou didst visit them in thine anger with speedy destruction.

11 என் உபத்திரவங்களினிமித்தமும், என் நேர்மையினிமித்தமும், நீர் எனக்குச் செவிகொடுத்தீர்; உம்முடைய குமாரனினிமித்தம் இப்படியாய் நீர் என்னிடம் இரக்கமாயிருந்தீர்; ஆகையால் என் எல்லா உபத்திரவங்களிலேயும் உம்மை நோக்கி கூக்குரலிடுவேன். ஏனெனில் என் சந்தோஷம் உம்மிலிருக்கிறது; உம்முடைய குமாரனினிமித்தம் நீர் உமது தீர்ப்பை என்னிடத்திலிருந்து மாற்றினீர்.

And thou didst hear me because of mine afflictions and my sincerity; and it is because of thy Son that thou hast been thus merciful unto me, therefore I will cry unto thee in all mine afflictions, for in thee is my joy; for thou hast turned thy judgments away from me, because of thy Son.

12 இப்பொழுது ஆல்மா அவர்களை நோக்கி சொன்னான்: பூர்வகாலத்தோரால் எழுதப்பட்ட அந்த வேதங்களை விசுவாசிக்கிறீர்களா?

And now Alma said unto them: Do ye believe those scriptures which have been written by them of old?

13 இதோ, அப்படியானால் சீனஸ் சொன்னவற்றில் நீங்கள் விசுவாசிக்கவேண்டும்; ஏனெனில், இதோ அவன் சொன்னதாவது: உம்முடைய குமாரனினிமித்தம் நீர் உமது தீர்ப்புகளை மாற்றினீர், என்றான்.

Behold, if ye do, ye must believe what Zenos said; for, behold he said: Thou hast turned away thy judgments because of thy Son.

14 இப்பொழுதும் இதோ, என் சகோதரரே, நீங்கள் வேதங்களை வாசித்தீர்களா? என்று கேட்பேன். வாசித்ததுண்டானால், நீங்கள் தேவ குமாரனில் அவநம்பிக்கை கொண்டிருக்கலாமா?

Now behold, my brethren, I would ask if ye have read the scriptures? If ye have, how can ye disbelieve on the Son of God?

15 ஏனெனில் இவைகளைக் குறித்து சீனஸ் மாத்திரம் பேசியிருக்கிறான், என்று எழுதப்படவில்லை. ஆனால் இவைகளைக் குறித்து சீனாக்கும் பேசியிருக்கிறான்.

For it is not written that Zenos alone spake of these things, but Zenock also spake of these things—

16 ஏனெனில் இதோ, அவன் சொன்னதாவது: கர்த்தாவே, நீர் உம்முடைய குமாரனினிமித்தம் இந்த ஜனங்கள் மீது, நீர் அருளிய உமது இரக்கங்களை இவர்கள் அறியாததினிமித்தம், இவர்கள் மேல் கோபமாயிருக்கிறீர்.

For behold, he said: Thou art angry, O Lord, with this people, because they will not understand thy mercies which thou hast bestowed upon them because of thy Son.

17 இப்பொழுதும் என் சகோதரரே பூர்வகாலத்தானான, இரண்டாவது தீர்க்கதரிசி ஒருவனும் தேவகுமாரனைப்பற்றி சாட்சி கொடுத்திருக்கிறான், என்று நீங்கள் பார்க்கிறீர்கள். அவனுடைய வார்த்தையை ஜனங்கள் அறியாததினிமித்தம், அவர்கள் அவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

And now, my brethren, ye see that a second prophet of old has testified of the Son of God, and because the people would not understand his words they stoned him to death.

18 ஆனால் இதோ, இது மாத்திரமல்ல; தேவ குமாரனைப்பற்றிப் பேசியவர்கள் இவர்கள் மாத்திரமல்ல.

But behold, this is not all; these are not the only ones who have spoken concerning the Son of God.

19 இதோ, அவர் மோசேயினாலும் பேசப்பட்டிருக்கிறார்; ஆம், இதோ, காண்கிற யாவரும் பிழைக்கும்படியாக வனாந்தரத்தில் ஒரு மாதிரி உயர்த்தப்பட்டது. அநேகர் பார்த்துப் பிழைத்தார்கள்.

Behold, he was spoken of by Moses; yea, and behold a type was raised up in the wilderness, that whosoever would look upon it might live. And many did look and live.

20 ஆனால் சிலரே அக்காரியங்களின் அர்த்தங்க-
ளைப் புரிந்து கொண்டார்கள். இது அவர்களு-
டைய கடின இருதயத்தினிமித்தமே. அங்கே அநேகர்
பார்க்காதபடி, கடினப்பட்டவர்களாய் இருந்ததினி-
மித்தமே, அவர்கள் அழிந்து போனார்கள். அவர்-
கள் பார்க்காததின் காரணமென்னவெனில், அது
அவர்களைச் சுகமாக்கும் என்று அவர்கள் விசுவா-
சிக்காததே.
21 என் சகோதரரே, நீங்கள் உங்கள் கண்களை ஏறெ-
டுப்பதினாலேயே சுகப்படலாமெனில், சுகப்படும்ப-
டியாக நீங்கள் துரிதமாய் ஏறெடுக்க மாட்டீர்களா,
அல்லது, அவிசுவாசத்திலே உங்கள் இருதயங்க-
ளை கடினமாக்கி, அழிந்து போகும்படியாய் உங்-
கள் கண்களை ஏறெடுப்பதற்கும் சோம்பலாயிருப்-
பீர்களோ?
22 அப்படியிருந்தால், உங்களுக்கு துக்கம் ஏற்படும்,
அப்படியில்லையானால், உங்கள் கண்களை ஏறெ-
டுத்து, தம் ஜனத்தை மீட்க தேவகுமாரன் வருவா-
ரென்றும், அவர்களுடைய பாவங்களை நிவர்த்தி-
யாக்க அவர் பாடுபட்டு மரிப்பாரென்றும், அவர்
மரித்தோரிலிருந்து மீண்டும் உயிர்த்தெழுவாரென்-
றும், அதினிமித்தம் அவர்களுடைய கிரியைக-
ளின்படி கடைசியும், நியாயத்தீர்ப்புமான நாளிலே
நியாயந்தீர்க்கப்படும்படி, அவருக்கு முன்பு சகல
மனுஷரும் நிற்கும்பொருட்டு, உயிர்த்தெழுதல் சம்-
பவிக்கும், என்றும் விசுவாசியுங்கள்.
23 இப்பொழுதும் என் சகோதரரே, இந்த வார்த்தை-
யை உங்கள் இருதயங்களில் வைக்க வேண்டு-
மென்று வாஞ்சிக்கிறேன். அது விரிவடையத் து-
வங்கும்போது, உங்கள் விசுவாசத்தால் அதைப்
போஷியுங்கள். இதோ, அது நித்திய ஜீவனாய் வள-
ருகின்ற விருட்சமாகும். தேவன் தம்முடைய குமா-
ரனால் உண்டான சந்தோஷத்தின் மூலம் உங்கள் சு-
மைகள் இலகுவாகும்படி அருளுவாராக. நீங்கள்
முயன்றால், இதை எல்லாம் நீங்கள் செய்ய முடியும்.
ஆமென்.

But few understood the meaning of those things, and this because of the hardness of their hearts. But there were many who were so hardened that they would not look, therefore they perished. Now the reason they would not look is because they did not believe that it would heal them.

O my brethren, if ye could be healed by merely casting about your eyes that ye might be healed, would ye not behold quickly, or would ye rather harden your hearts in unbelief, and be slothful, that ye would not cast about your eyes, that ye might perish?

If so, wo shall come upon you; but if not so, then cast about your eyes and begin to believe in the Son of God, that he will come to redeem his people, and that he shall suffer and die to atone for their sins; and that he shall rise again from the dead, which shall bring to pass the resurrection, that all men shall stand before him, to be judged at the last and judgment day, according to their works.

And now, my brethren, I desire that ye shall plant this word in your hearts, and as it beginneth to swell even so nourish it by your faith. And behold, it will become a tree, springing up in you unto everlasting life. And then may God grant unto you that your burdens may be light, through the joy of his Son. And even all this can ye do if ye will. Amen.

# ஆல்மா 34

1 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா இவ்வார்த்தைகளை அவர்களுக்குப் பேசி முடித்த பின்பு, அவன் தரையில் அமர்ந்தான். அமுலேக் எழுந்து அவர்களுக்குப் போதிக்கத் தொடங்கிச் சொன்னதாவது:

2 என் சகோதரரே, தேவகுமாரன் என்று நாங்கள் போதிக்கிற, கிறிஸ்துவின் வருகையைக் குறித்து சொல்லப்பட்டிருக்கிற காரியங்களை நீங்கள் அறியாதிருப்பது கூடாத காரியம், என நான் நினைக்கிறேன். ஆம், நீங்கள் எங்களுக்குள்ளிருந்து பிரிந்து போகாததற்கு முன்னமேயே, இவைகளைக் குறித்து அதிகமாய்ப் போதிக்கப்பட்டிருக்கிறீர்கள், என்று நான் அறிவேன்.

3 நீங்கள் என் அருமை சகோதரனிடம், உங்கள் உபத்திரவங்களினிமித்தம், நீங்கள் செய்யவேண்டியதை அவன் தெரிவிக்க வேண்டும் என வாஞ்சித்தீர்கள்; அவன் உங்கள் மனங்களை ஆயத்தப்படுத்த, உங்களிடம் சிலவற்றைப் பேசினான். உங்களுக்கு விசுவாசமாயிருக்கும்படியும், பொறுமையாயிருக்கும்படியும் புத்தி சொன்னான்.

4 ஆம், வார்த்தையை உங்கள் இருதயங்களில் வைத்து, அதன் நன்மையைச் சோதித்தறியும்படியான விசுவாசத்தை நீங்கள் பெற்றிருக்கும்படிக்கும் புத்தி சொன்னான்.

5 வார்த்தை தேவகுமாரனில் இருக்கிறதா, அல்லது கிறிஸ்து இருக்கமாட்டாரா என்ற, உங்கள் மனங்களில் இருக்கிற, அந்தப் பெரிய கேள்வியை நாங்கள் கண்டிருக்கிறோம்.

6 இரட்சிப்பை உண்டாக்குகிற வார்த்தை கிறிஸ்துவில் இருக்கிறதென்று, என் சகோதரன் அநேக தடவைகள் உங்களுக்கு நிரூபித்ததையும் பார்த்திருக்கிறீர்கள்.

7 என் சகோதரன், தேவகுமாரன் மூலமாய் மீட்பு வரும் என்ற சீனஸின் வார்த்தைகளையும், சீனாக்கின் வார்த்தைகளையும் குறிப்பிட்டிருக்கிறான்; இக்காரியங்கள் உண்மையே என்று நிரூபிக்க மோசேயையும் குறிப்பிட்டிருக்கிறான்.

8 இப்பொழுதும், இதோ, என்னைப் பொறுத்தமட்டில் இவைகள் உண்மை என்று உங்களுக்குச் சாட்சி கொடுக்கிறேன். இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தேவனாகிய கர்த்தர் பேசியிருக்கிறபடியே, கிறிஸ்து தம்முடைய ஜனத்தின் மீறுதல்களை தம்மேல் எடுத்துக்கொள்வதற்காக மனுபுத்திரருக்குள்ளே வருவாரென்றும், உலகத்தினுடைய பாவங்களுக்காக அவர் பாவநிவர்த்திபண்ணுவார், என்றும் நான் அறிவேன், ஏனெனில் கர்த்தராகிய தேவன் இதைச் சொன்னார்.

# Alma 34

And now it came to pass that after Alma had spoken these words unto them he sat down upon the ground, and Amulek arose and began to teach them, saying:

My brethren, I think that it is impossible that ye should be ignorant of the things which have been spoken concerning the coming of Christ, who is taught by us to be the Son of God; yea, I know that these things were taught unto you bountifully before your dissension from among us.

And as ye have desired of my beloved brother that he should make known unto you what ye should do, because of your afflictions; and he hath spoken somewhat unto you to prepare your minds; yea, and he hath exhorted you unto faith and to patience—

Yea, even that ye would have so much faith as even to plant the word in your hearts, that ye may try the experiment of its goodness.

And we have beheld that the great question which is in your minds is whether the word be in the Son of God, or whether there shall be no Christ.

And ye also beheld that my brother has proved unto you, in many instances, that the word is in Christ unto salvation.

My brother has called upon the words of Zenos, that redemption cometh through the Son of God, and also upon the words of Zenock; and also he has appealed unto Moses, to prove that these things are true.

And now, behold, I will testify unto you of myself that these things are true. Behold, I say unto you, that I do know that Christ shall come among the children of men, to take upon him the transgressions of his people, and that he shall atone for the sins of the world; for the Lord God hath spoken it.

9 ஏனெனில் பாவநிவர்த்தி செய்யப்படவேண்டிய-
து அவசியமாகும். ஏனெனில் நித்திய தேவனுடைய
மாபெரும் திட்டத்தின்படி பாவநிவர்த்தி செய்யப்ப-
டவேண்டும். இல்லாவிடில் மனுஷகுலம் யாவும்
தவிர்க்க முடியாமல் அழிய வேண்டும்; ஆம், எல்-
லோரும் கடினப்பட்டு வீழ்ந்து, தொலைந்து போ-
னார்கள். அவசியமாய் பண்ணப்படவேண்டிய பா-
வநிவர்த்தி மூலமேயன்றி சகலமும் அழிந்துபோக-
வேண்டும்.

For it is expedient that an atonement should be made; for according to the great plan of the Eternal God there must be an atonement made, or else all mankind must unavoidably perish; yea, all are hardened; yea, all are fallen and are lost, and must perish except it be through the atonement which it is expedient should be made.

10 ஏனெனில் பெரிதும், கடைசியுமான பலி அவசிய-
மாயிருக்கிறது; ஆம், அது மனுஷ பலியோ, விலங்-
கு பலியோ, எந்த விதமான பட்சி பலியோ அல்ல;
ஏனெனில் அது மனுஷ பலியாக இருக்காது;
ஆனால் அது அநாதியும், நித்தியமுமான பலியாயி-
ருக்கவேண்டும்.

For it is expedient that there should be a great and last sacrifice; yea, not a sacrifice of man, neither of beast, neither of any manner of fowl; for it shall not be a human sacrifice; but it must be an infinite and eternal sacrifice.

11 இப்போது மற்றொருவனுடைய பாவங்களை நி-
வர்த்தியாக்க, தன் இரத்தத்தை பலியாகக் கொடுக்-
கக்கூடிய எந்த மனுஷனுமில்லை. இப்பொழுது
ஒரு மனுஷன் கொலை செய்தால், இதோ நியாய-
மான நம்முடைய சட்டம் அவன் சகோதரனுடைய
ஜீவனை வாங்குமா? நான் உங்களுக்குச் சொல்லு-
கிறேன். அப்படியல்ல.

Now there is not any man that can sacrifice his own blood which will atone for the sins of another. Now, if a man murdereth, behold will our law, which is just, take the life of his brother? I say unto you, Nay.

12 நியாயப்பிரமாணமோ கொலை செய்தவனுடைய
ஜீவனைக் கேட்கிறது. ஆகையால் உலகத்தினு-
டைய பாவங்களுக்கு ஈடான முடிவற்ற பாவநி-
வர்த்தியைத் தவிர வேறெதுவும் இருக்கமுடியாது.

But the law requireth the life of him who hath murdered; therefore there can be nothing which is short of an infinite atonement which will suffice for the sins of the world.

13 ஒரு பெரியதும், கடைசியுமான பலி அவசியம்.
அப்போதுதான் இரத்தம் சிந்துதல் முற்றுப்பெறும்.
அப்படி முற்றுப்பெறுவது அவசியம்; அப்பொழுது
மோசேயின் நியாயப்பிரமாணம் நிறைவேறும்;
ஆம், எல்லாம் நிறைவேற்றப்படும், ஒரு சிறு எழுத்-
தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும், எதுவும்
ஒழிந்து போயிருக்காது.

Therefore, it is expedient that there should be a great and last sacrifice, and then shall there be, or it is expedient there should be, a stop to the shedding of blood; then shall the law of Moses be fulfilled; yea, it shall be all fulfilled, every jot and tittle, and none shall have passed away.

14 இதோ, இதுவே நியாயப்பிரமாணத்தின் முழு
அர்த்தம். சகலமும் அந்தப் பெரிதும், கடைசியுமான
பலியைக் குறிக்கின்றன. அநாதியானவரும், நித்தி-
யமானவருமான தேவ குமாரனே, அந்தப் பெரிதும்,
கடைசியுமான பலியாயிருப்பார்.

And behold, this is the whole meaning of the law, every whit pointing to that great and last sacrifice; and that great and last sacrifice will be the Son of God, yea, infinite and eternal.

15 இவ்விதமாக அவர் தம்முடைய நாமத்தில் விசு-
வாசிக்கிற யாவர் மீதும் இரட்சிப்பைக் கொண்டு
வருவார்; நியாயத்தை ஜெயிக்கிற இரக்கத்தைக்
கொண்டு வருவதும், மனுஷர் மனந்திரும்பும்படி-
யான விசுவாசத்தைப் பெற வழியை ஏற்படுத்துவ-
துமே, இந்தக் கடைசி பலியின் நோக்கமாயிருக்கிற-
து.

And thus he shall bring salvation to all those who shall believe on his name; this being the intent of this last sacrifice, to bring about the bowels of mercy, which overpowereth justice, and bringeth about means unto men that they may have faith unto repentance.

16 இப்படியாக இரக்கம் நியாயத்தின் தேவைகளை
நிவர்த்தியாக்கி, அவர்களை பாதுகாப்பெனும்
கரங்களால் அரவணைக்கிறது. மனந்திரும்புத-
லுக்குள்ளான விசுவாசத்தை பிரயோகிக்காத-
வனோ, நீதியின் தேவைகளின் முழு நியாயப்பிர-
மாணத்திற்கும் வெளியரங்கப்படுத்தப்படுகிறான்;
ஆகவே மனந்திரும்புதலுக்கான விசுவாசத்தைப்
பெற்றிருப்பவனுக்கே பெரிதும், நித்தியமுமான
மீட்பின் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

And thus mercy can satisfy the demands of justice, and encircles them in the arms of safety, while he that exercises no faith unto repentance is exposed to the whole law of the demands of justice; therefore only unto him that has faith unto repentance is brought about the great and eternal plan of redemption.

17 ஆகவே என் சகோதரரே, அவர் உங்கள் மீது இரக்-
கம் கொள்ள, அவருடைய பரிசுத்த நாமத்தில் ஜெ-
பிக்கத் தொடங்க, நீங்கள் உங்கள் விசுவாசத்தை
மனந்திரும்புதலுக்குள்ளாக பிரயோகப்படுத்தத்
தொடங்கும்படியாக, தேவன் உங்களுக்கு அருளு-
வாராக.

Therefore may God grant unto you, my brethren, that ye may begin to exercise your faith unto repentance, that ye begin to call upon his holy name, that he would have mercy upon you;

18 ஆம், இரக்கத்திற்காக கூக்குரலிடுங்கள்; ஏனெ-
னில் அவர் இரட்சிக்க வல்லவர்.

Yea, cry unto him for mercy; for he is mighty to save.

19 ஆம், உங்களைத் தாழ்த்தி, அவரிடத்தில் தொ-
டர்ந்து ஜெபியுங்கள்.

Yea, humble yourselves, and continue in prayer unto him.

20 நீங்கள் உங்கள் வயல்களில் இருக்கும்போதும்,
உங்கள் சகல மந்தைகளுக்காகவும் அவரிடத்தில்
கூக்குரலிடுங்கள்.

Cry unto him when ye are in your fields, yea, over all your flocks.

21 காலையும், மதியமும், மாலையும், உங்கள் வீட்-
டார் யாவருக்காகவும், உங்கள் வீடுகளிலிருந்தவா-
றே, அவரிடத்தில் கூக்குரலிடுங்கள்.

Cry unto him in your houses, yea, over all your household, both morning, mid-day, and evening.

22 ஆம், உங்கள் சத்துருக்களின் வல்லமைக்கெதி-
ராய் அவரிடத்தில் கூக்குரலிடுங்கள்.

Yea, cry unto him against the power of your enemies.

23 ஆம், சகல நீதிக்கும் சத்துருவான பிசாசுக்குக்கெ-
திராய் அவரிடத்தில் கூக்குரலிடுங்கள்.

Yea, cry unto him against the devil, who is an enemy to all righteousness.

24 அவைகளினிமித்தம் நீங்கள் செழிக்க, உங்கள்
வயல்களின் பயிர்களுக்காக, அவரிடத்தில் கூக்கு-
ரலிடுங்கள்.

Cry unto him over the crops of your fields, that ye may prosper in them.

25 உங்கள் வயல்களின் மந்தைகள் பெருகும்படி-
யாக, கூக்குரலிடுங்கள்.

Cry over the flocks of your fields, that they may increase.

26 இது மாத்திரமல்ல; நீங்கள் உங்கள் அறைவீடுக-
ளிலும், அந்தரங்க இடங்களிலும், வனாந்தரங்களி-
லும் உங்கள் ஆத்துமாக்களை ஊற்ற வேண்டும்.

But this is not all; ye must pour out your souls in your closets, and your secret places, and in your wilderness.

27 ஆம், நீங்கள் கர்த்தரிடத்தில் கூக்குரலிடாதபோது,
உங்களுடைய இருதயம், உங்கள் நலனுக்காகவும்,
உங்களைச் சுற்றியிருப்போர் நலனுக்காகவும், தொ-
டர்ந்து ஜெபத்தில் ஆழ்ந்து நிரம்பியிருப்பதாக.

Yea, and when you do not cry unto the Lord, let your hearts be full, drawn out in prayer unto him continually for your welfare, and also for the welfare of those who are around you.

28 இப்பொழுதும் இதோ, என் பிரியமான சகோதரரே,
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்வளவு-
தான் என்று நினைத்துக்கொள்ளாதீர்கள். இவை-
கள் அனைத்தையும் நீங்கள் செய்த பின்பு, தேவை-
யிலிருப்போரையும் வஸ்திரமில்லாதோரையும் தி-
ருப்பி அனுப்பி, வியாதியஸ்தரையும், உபத்திரவப்-
படுவோரையும் விசாரிக்காமல், உங்களிடத்தில்
பொருள் இருக்குமானால், அதை தேவைப்படுவோ-
ருக்குக் கொடாமல் இருந்தால், நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன், இவைகளில் யாதொன்றையும்
செய்யாமற்போனால், இதோ, உங்கள் ஜெபம் வீ-
ணாய்ப்போகும். யாதொரு பலனையும் ஈயாது. நீங்-
கள் விசுவாசத்தை மறுதலிக்கிற மாயக்காரருக்கு
ஒப்பாவீர்கள்.

And now behold, my beloved brethren, I say unto you, do not suppose that this is all; for after ye have done all these things, if ye turn away the needy, and the naked, and visit not the sick and afflicted, and impart of your substance, if ye have, to those who stand in need—I say unto you, if ye do not any of these things, behold, your prayer is vain, and availeth you nothing, and ye are as hypocrites who do deny the faith.

29 ஆகையால் நீங்கள் தயாளமுள்ளோராயிருக்க
மறந்தால், புடமிடுகிறவனால் தள்ளப்படுகிறதும்,
மனுஷரால் மிதிக்கப்படுகிறதுமான (பிரயோஜன-
மற்ற) களிம்பிற்கு ஒப்பாவீர்கள்.

Therefore, if ye do not remember to be charitable, ye are as dross, which the refiners do cast out, (it being of no worth) and is trodden under foot of men.

30 இப்பொழுதும், என் சகோதரரே, அநேக சாட்சிக-
ளைப் பெற்று, இவைகளைக் குறித்து பரிசுத்த வே-
தங்களும் சாட்சி கொடுக்கிறதையும் கண்ட பின்-
னர், நீங்கள் வந்து மனந்திரும்புதலுக்கான கனி-
யைக் கொடுக்கும்படி விரும்புகிறேன்.

And now, my brethren, I would that, after ye have received so many witnesses, seeing that the holy scriptures testify of these things, ye come forth and bring fruit unto repentance.

31 ஆம், நீங்கள் இனிமேலும் உங்கள் இருதயங்களை
கடினப்படுத்தாமல், வரும்படி விரும்புகிறேன்;
ஏனெனில் இதோ, இதுவே உங்களின் இரட்சிப்பின்
காலமும், நாளுமாயிருக்கிறது; ஆகையால், நீங்கள்
மனந்திரும்பி, உங்கள் இருதயங்களை கடினப்ப-
டுத்தாமல் இருந்தால், உடனே அந்தப் பெரிய மீட்-
பின் திட்டம் உங்களில் நிறைவேற்றப்படும்.

Yea, I would that ye would come forth and harden not your hearts any longer; for behold, now is the time and the day of your salvation; and therefore, if ye will repent and harden not your hearts, immediately shall the great plan of redemption be brought about unto you.

32 ஏனெனில் இதோ, இந்த ஜீவியம் மனுஷருக்குத்
தேவனைச் சந்திக்க ஆயத்தப்படும் ஒரு காலமாயி-
ருக்கிறது; ஆம், இதோ, இந்த ஜீவியத்தின் நாள்,
மனுஷர் தங்கள் பிரயாசங்களைச் செய்யும் நாளா-
யிருக்கிறது.

For behold, this life is the time for men to prepare to meet God; yea, behold the day of this life is the day for men to perform their labors.

33 இப்பொழுதும், நான் முன்னே உங்களுக்குச்
சொன்னது போலவே, நீங்கள் அநேக சாட்சிகளைப்
பெற்றிருப்பதால், முடிவுவரைக்கும், உங்கள் மனந்-
திரும்பும் நாளைத் தள்ளிப்போட வேண்டாமென்-
று உங்களிடம் மன்றாடுகிறேன்; இதோ, இந்த ஜீவி-
யத்தில் நம்முடைய காலத்தை மேம்படுத்தாமல்
போனால், நித்தியத்திற்காக ஆயத்தம் பண்ணும்ப-
டி நமக்கு கொடுக்கப்பட்ட இந்த ஜீவிய காலத்திற்-
குப் பின்பு, எந்த பிரயாசமும் செய்ய முடியாத காரி-
ருளான இராக்காலம் வரும்.

And now, as I said unto you before, as ye have had so many witnesses, therefore, I beseech of you that ye do not procrastinate the day of your repentance until the end; for after this day of life, which is given us to prepare for eternity, behold, if we do not improve our time while in this life, then cometh the night of darkness wherein there can be no labor performed.

34 அந்த பயங்கரமான கஷ்டகாலத்திற்குக் கொண்-
டு போகப்பட்ட பின்பு, நான் என் தேவனிடத்தில் தி-
ரும்பி வரும்படி மனந்திரும்புவேன் என்று உங்க-
ளால் சொல்ல முடியாது. நீங்கள் இதைச் சொல்ல
முடியாது, ஏனெனில் இந்த ஜீவியத்திலிருந்து நீங்-
கள் போகும்பொழுது, அதே ஆவி உங்கள் சரீரங்க-
ளை ஆட்கொண்டிருப்பதால், நித்திய உலகத்திலும்
உங்கள் சரீரங்களை ஆட்கொள்ள அதே ஆவிக்கு
வல்லமை உண்டாயிருக்கும்.

Ye cannot say, when ye are brought to that awful crisis, that I will repent, that I will return to my God. Nay, ye cannot say this; for that same spirit which doth possess your bodies at the time that ye go out of this life, that same spirit will have power to possess your body in that eternal world.

35 ஏனெனில் இதோ, நீங்கள் மரணம் மட்டுமாய் உங்-
கள் மனந்திரும்பும் நாளைத் தள்ளிப் போடுவீர்க-
ளெனில், இதோ, நீங்கள் பிசாசின் ஆவிக்கு கீழ்ப்-
பட்டுப்போய், அவன் உங்களைத் தன்னுடையவர்-
கள் என்று முத்திரையிட்டுக் கொள்வான். ஆத-
லால் கர்த்தருடைய ஆவி உங்களிலிருந்து நீங்கி,
உங்களில் இடம்கொள்ளாமல் போகும். பிசாசு உங்-
கள் மேல் சகல அதிகாரத்தையும் செலுத்துவான்;
இதுவே துன்மார்க்கரின் இறுதி நிலை.

For behold, if ye have procrastinated the day of your repentance even until death, behold, ye have become subjected to the spirit of the devil, and he doth seal you his; therefore, the Spirit of the Lord hath withdrawn from you, and hath no place in you, and the devil hath all power over you; and this is the final state of the wicked.

36 அவர் அசுத்த ஆலயங்களில் வாசம்பண்ணாமல்,
நீதிமான்களின் இருதயங்களில் வாசம் பண்ணுகி-
றார் என்று கர்த்தர் சொன்னதினிமித்தம், இதை
நான் அறிவேன்; ஆம், நீதிமான்கள் இனி ஒருபோ-
தும் வெளியே போகாதபடிக்கு, அவருடைய ராஜ்-
யத்திலே வீற்றிருப்பார்கள் என்றும், ஆனால்
அவர்களுடைய வஸ்திரம் ஆட்டுக்குட்டியின் இரத்-
தத்தால் வெண்மையாக்கப்பட்டிருக்கவேண்டும்
என்றும், அவர் சொன்னார்.

And this I know, because the Lord hath said he dwelleth not in unholy temples, but in the hearts of the righteous doth he dwell; yea, and he has also said that the righteous shall sit down in his kingdom, to go no more out; but their garments should be made white through the blood of the Lamb.

37 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, நீங்கள்
இவைகளை நினைவில் கொண்டு, தேவனுக்கு
முன்பாகப் பயத்தோடு உங்கள் இரட்சிப்புக்காக பிர-
யாசப்படவேண்டுமென்றும், இனிமேலும் கிறிஸ்து-
வின் வருகையை மறுக்கக்கூடாதென்றும்,

And now, my beloved brethren, I desire that ye should remember these things, and that ye should work out your salvation with fear before God, and that ye should no more deny the coming of Christ;

38 பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாய் பிணக்-
கு பண்ணாதபடிக்கு, ஆனால் அதை ஏற்றுக்
கொள்ளும்படிக்கும், கிறிஸ்துவின் நாமத்தை உங்-
கள்மீது தரித்துக் கொள்ளும்படிக்கும், தூசிக்கு ஒப்-
பாய் உங்களையே தாழ்த்தி, நீங்கள் இருக்குமிடம்
எவ்விடமானாலும், ஆவியோடும், சத்தியத்தோடும்
தேவனைத் தொழுது கொள்ளும்படிக்கும், உங்கள்-
மீது அவர் அருளுகிற அநேக இரக்கங்களுக்காக-
வும், ஆசீர்வாதங்களுக்காகவும் தினமும் நன்றிக-
ளை ஏறெடுப்பவர்களாய் ஜீவிக்க வேண்டுமென்-
றும், நான் வாஞ்சிக்கிறேன்.

That ye contend no more against the Holy Ghost, but that ye receive it, and take upon you the name of Christ; that ye humble yourselves even to the dust, and worship God, in whatsoever place ye may be in, in spirit and in truth; and that ye live in thanksgiving daily, for the many mercies and blessings which he doth bestow upon you.

39 ஆம், என் சகோதரரே, நீங்கள் பிசாசின் சோதனை-
களால் நடத்தப்படாதபடிக்கும், அவன் உங்கள் மீது
ஆதிக்கம் செலுத்தாதபடிக்கும், கடைசி நாளின்-
போது, நீங்கள் அவனுடைய பிரஜைகள் ஆகாதப-
டிக்கும், நீங்கள் தொடர்ந்து ஜெபத்தில் விழித்தி-
ருக்க வேண்டுமென்று, உங்களுக்கு புத்தி சொல்லு-
கிறேன். ஏனெனில் இதோ, அவன் எந்த நல்ல காரி-
யத்தையும் உங்களுக்குப் பிரதிபலனாய் அளிப்ப-
தில்லை.

Yea, and I also exhort you, my brethren, that ye be watchful unto prayer continually, that ye may not be led away by the temptations of the devil, that he may not overpower you, that ye may not become his subjects at the last day; for behold, he rewardeth you no good thing.

40 இப்பொழுது என் பிரியமான சகோதரரே, சகலவி-
தமான உபத்திரவங்களையும் சகிக்கும்படிக்கும்,
உங்களுடைய மிகுந்த வறுமையினிமித்தம், உங்க-
ளை புறம்பே தள்ளுகிறவர்களுக்கு விரோதமாய்
நீங்கள் தூஷிக்காமல், நீங்களும் அவர்களைப்
போல பாவிகளாகாதபடிக்கு, நீங்கள் பொறுமை-
யாய் இருக்கவேண்டுமென்றும்,
41 ஆனால், ஒருநாள் உங்கள் உபத்திரவங்களிலி-
ருந்து இளைப்பாறுவீர்கள் என்ற திடநம்பிக்கை-
யோடு, அந்த உபத்திரவங்களை பொறுமையாய்
சகித்திருக்கும்படிக்கும், உங்களுக்குப் புத்தி சொல்-
லுகிறேன்.

And now my beloved brethren, I would exhort you to have patience, and that ye bear with all manner of afflictions; that ye do not revile against those who do cast you out because of your exceeding poverty, lest ye become sinners like unto them;

But that ye have patience, and bear with those afflictions, with a firm hope that ye shall one day rest from all your afflictions.

# ஆல்மா 35

1 இப்பொழுது, அந்தப்படியே, அமுலேக் இவ்வார்த்-
தைகளைப் பேசி முடித்த பின்பு, அவர்கள் கூட்டத்-
திலிருந்து பிரிந்து, எருசோன் தேசத்திற்கு வந்தார்-
கள்.

2 ஆம், சோரமியருக்கு அவர்கள் வார்த்தையைப்
பிரசங்கித்த பின்பு, மீதமுள்ள சகோதரரும் எரு-
சோன் தேசத்திற்கு வந்தார்கள்.

3 அந்தப்படியே, சோரமியரில் பிரபலமானவர்கள்
தங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட வார்த்தைகளைக்
குறித்து ஏகமாய்க் கூடி ஆலோசித்தார்கள். வார்த்-
தை அவர்களுடைய சூதை நிர்மூலமாக்கிப் போடு-
வதனிமித்தம் கோபமாயிருந்தார்கள்; ஆதலால்,
அவர்கள் வார்த்தைகளுக்கு செவிகொடாமற் போ-
னார்கள்.

4 அவர்கள் செய்தி அனுப்பி, தேசம் முழுவதிலும்
ஜனங்கள் யாவரையும், ஏகமாய்க் கூடச்செய்து, பே-
சப்பட்ட வார்த்தைகளைக் குறித்து அவர்களுடனே
ஆலோசித்தார்கள்.

5 அவர்களுடைய அதிகாரிகளும், ஆசாரியர்க-
ளும், ஆசிரியர்களும் தங்களுடைய விருப்பங்க-
ளை ஜனங்களுக்குத் தெரிவிக்கவில்லை; ஆத-
லால் அவர்கள் எல்லா ஜனங்களுடைய எண்ணங்-
களையும் இரகசியமாய் அறிந்தார்கள்.

6 அந்தப்படியே, அவர்கள் சகல ஜனங்களின் எண்-
ணங்களை அறிந்த பின்பு, ஆல்மாவினாலும்,
அவன் சகோதரராலும் பேசப்பட்ட வார்த்தைகளுக்-
கு ஆதரவானோர் தேசத்திலிருந்து துரத்தப்பட்டார்-
கள்; அவர்கள் அநேகராயிருந்தார்கள்; அவர்களும்
எருசோன் தேசத்திற்கு வந்தார்கள்.

7 அந்தப்படியே, ஆல்மாவும் அவன் சகோதரரும்
அவர்களுக்கு ஊழியம் செய்தார்கள்.

8 சோரமியர் என்கிற ஜனங்கள் எருசோனிலிருக்-
கிற அம்மோனின் ஜனங்களிடத்தில் கோபமாயி-
ருந்தார்கள். சோரமியரின் பிரதான அதிகாரி,
பொல்லாதவனாயிருந்தபடியினால், அம்மோன்
ஜனங்களிடத்திடம், தங்கள் தேசத்திலிருந்து,
அவர்கள் தேசத்திற்குள் பிரவேசித்த யாவரையும்,
அவர்கள் புறம்பே தள்ள வேண்டுமென்ற, விருப்-
பம் கொண்டு, ஆள் அனுப்பினான்.

# Alma 35

Now it came to pass that after Amulek had made an end of these words, they withdrew themselves from the multitude and came over into the land of Jershon.

Yea, and the rest of the brethren, after they had preached the word unto the Zoramites, also came over into the land of Jershon.

And it came to pass that after the more popular part of the Zoramites had consulted together concerning the words which had been preached unto them, they were angry because of the word, for it did destroy their craft; therefore they would not hearken unto the words.

And they sent and gathered together throughout all the land all the people, and consulted with them concerning the words which had been spoken.

Now their rulers and their priests and their teachers did not let the people know concerning their desires; therefore they found out privily the minds of all the people.

And it came to pass that after they had found out the minds of all the people, those who were in favor of the words which had been spoken by Alma and his brethren were cast out of the land; and they were many; and they came over also into the land of Jershon.

And it came to pass that Alma and his brethren did minister unto them.

Now the people of the Zoramites were angry with the people of Ammon who were in Jershon, and the chief ruler of the Zoramites, being a very wicked man, sent over unto the people of Ammon desiring them that they should cast out of their land all those who came over from them into their land.

9 அவன் அவர்களுக்கு எதிராக அநேக பயமுறுத்-
தல்களைச் சொன்னான். இப்பொழுது அம்மோ-
னின் ஜனங்கள் அவர்களுடைய வார்த்தைகளி-
னால் பயந்து போகவில்லை; ஆகவே அவர்கள்
அவர்களை வெளியே துரத்தாமல், தங்களிடத்தில்
வந்த ஏழை சோரமியர் அனைவரையும் ஏற்றுக்
கொண்டார்கள். அவர்கள் அவர்களைப் போஷித்-
து, வஸ்திரம் கொடுத்து அவர்கள் சுதந்தரிக்கும்படி
நிலங்களை அளித்தார்கள்; அவர்கள் அவர்களு-
டைய தேவைக்கேற்ப உதவி செய்தார்கள்.

And he breathed out many threatenings against them. And now the people of Ammon did not fear their words; therefore they did not cast them out, but they did receive all the poor of the Zoramites that came over unto them; and they did nourish them, and did clothe them, and did give unto them lands for their inheritance; and they did administer unto them according to their wants.

10 இது சோரமியர், அம்மோன் ஜனங்களுக்கு விரோ-
தமாய் கோபம் கொள்ளும்படி ஏவினது. அவர்கள்
லாமானியரோடு கலந்து, அவர்களையும் அவர்க-
ளுக்கு விரோதமாய்க் கோபம் கொள்ள ஏவத் தொ-
டங்கினார்கள்.

Now this did stir up the Zoramites to anger against the people of Ammon, and they began to mix with the Lamanites and to stir them up also to anger against them.

11 இப்படியாக, சோரமியரும், லாமானியரும் அம்-
மோன் ஜனங்களுக்கு விரோதமாகவும், நேபியர்க-
ளுக்கு விரோதமாகவும் யுத்தம் பண்ண ஆயத்தங்க-
ளை மேற்கொள்ளத் தொடங்கினார்கள்.

And thus the Zoramites and the Lamanites began to make preparations for war against the people of Ammon, and also against the Nephites.

12 இப்படியாக நேபியரின் ஜனங்களின் மீது நியா-
யாதிபதிகளின் ஆளுகையின் பதினேழாம் வரு-
ஷம் நிறைவுற்றது.

And thus ended the seventeenth year of the reign of the judges over the people of Nephi.

13 லாமானியர் சேனைகளுக்கும், சோரமிய சேனை-
களுக்கும் விரோதமாய் போர் புரிய, நேபியரின் சே-
னைகளுக்கு எருசோன் தேசத்திலே அதிக இடம்
உண்டாகும் பொருட்டு, அம்மோன் ஜனங்கள் எரு-
சோன் தேசத்திலிருந்து வெளியேறி மீலேக் தேசத்-
திற்கு வந்தார்கள். இப்படியாக நியாயாதிபதிகளின்
ஆளுகையின் பதினெட்டாம் வருஷத்திலே, லாமா-
னியருக்கும், நேபியருக்குமிடையே யுத்தம் மூண்ட-
து; அவர்களுடைய யுத்தங்களைப்பற்றிய விவரம்
இதற்குப்பின் கொடுக்கப்படும்.

And the people of Ammon departed out of the land of Jershon, and came over into the land of Melek, and gave place in the land of Jershon for the armies of the Nephites, that they might contend with the armies of the Lamanites and the armies of the Zoramites; and thus commenced a war betwixt the Lamanites and the Nephites, in the eighteenth year of the reign of the judges; and an account shall be given of their wars hereafter.

14 சோரமியரில் அநேகரை மனந்திரும்புதலுக்குள்
கொண்டுவரும்படியாக, தேவனுடைய கரங்களில்
கருவிகளாக இருந்த பிறகு, ஆல்மாவும், அம்மோ-
னும், அவர்கள் சகோதரரும், ஆல்மாவின் இரண்டு
குமாரரும், சாரகெம்லா தேசத்திற்குத் திரும்பினார்-
கள்; மனந்திரும்பின யாவரும் அவர்களுடைய தே-
சத்திலிருந்து துரத்தப்பட்டார்கள்; ஆனால் எரு-
சோன் தேசத்தில் அவர்கள் சுதந்தரித்துக் கொள்-
ளும்படியாக பூமி இருந்தது. அவர்கள் தங்களை-
யும், தங்கள் மனைவிகளையும், பிள்ளைகளை-
யும், தங்கள் நிலங்களையும் காக்க ஆயுதங்களை
எடுத்தார்கள்.

And Alma, and Ammon, and their brethren, and also the two sons of Alma returned to the land of Zarahemla, after having been instruments in the hands of God of bringing many of the Zoramites to repentance; and as many as were brought to repentance were driven out of their land; but they have lands for their inheritance in the land of Jershon, and they have taken up arms to defend themselves, and their wives, and children, and their lands.

15 இப்போது ஆல்மா, தன் ஜனத்தாருக்குள்ளிருந்த அக்கிரமத்தினாலும், ஆம், யுத்தங்களினாலும், இரத்தம் சிந்துதலினாலும், அவர்களுக்குள்ளிருந்த பிணக்குகளாலும், மனம் சஞ்சலப்பட்டு, ஒவ்வொரு பட்டணத்திலுமுள்ள சகல ஜனங்களுக்கும் வார்த்தையை அறிவிக்கச் சென்று, ஆட்களை அனுப்பி, ஜனங்களுடைய இருதயங்கள் கடினப்படத் தொடங்குவதை கண்டவனாய், வார்த்தையின் கண்டிப்பினிமித்தம் அவர்கள் புண்பட்டதால், அவனது இருதயம் மிகவும் துக்கித்தது.

Now Alma, being grieved for the iniquity of his people, yea for the wars, and the bloodsheds, and the contentions which were among them; and having been to declare the word, or sent to declare the word, among all the people in every city; and seeing that the hearts of the people began to wax hard, and that they began to be offended because of the strictness of the word, his heart was exceedingly sorrowful.

16 ஆதலால் அவன் தன் குமாரர் ஒவ்வொருவனுக்கும், தனித்தனியே, நீதிக்கேற்ற காரியங்களைக் குறித்த, தன் பொறுப்பைக் கொடுக்க, அவர்கள் ஏகமாய் கூடும்படி செய்தான். அவனது சொந்த பதிவேட்டின்படியே, அவன் அவர்களுக்குக் கொடுத்த அவனுடைய கட்டளைகளின் விவரம் நம்மிடத்தில் இருக்கிறது.

Therefore, he caused that his sons should be gathered together, that he might give unto them every one his charge, separately, concerning the things pertaining unto righteousness. And we have an account of his commandments, which he gave unto them according to his own record.

*ஆல்மா தன் குமாரனாகிய ஏலமனுக்குக் கொடுத்த கட்டளைகள்.*

*The commandments of Alma to his son Helaman.*

## ஆல்மா 36

## Alma 36

1 என் குமாரனே, என் வார்த்தைகளுக்குச் செவிகொடு; நீ தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்கிற அளவில், நீ தேசத்திலே விருத்தியடைவாய் என்று, உன்னிடத்தில் நான் வாக்குறுதியளிக்கிறேன்.

My son, give ear to my words; for I swear unto you, that inasmuch as ye shall keep the commandments of God ye shall prosper in the land.

2 நம்முடைய பிதாக்கள் அடிமைத்தனத்திலிருந்ததை நினைவுகூர்ந்து, நான் செய்ததைப்போலவே நீயும் செய்யவேண்டுமென நான் விரும்புகிறேன்; ஏனெனில் அவர்கள் அடிமைத்தனத்திலிருந்தார்கள். ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமானவரால் மாத்திரமேயொழிய, வேறொருவராலும் அவர்களை விடுவிக்க முடியவில்லை. அவர் மெய்யாகவே அவர்களை அவர்களுடைய உபத்திரவங்களிலிருந்து விடுவித்தார்.

I would that ye should do as I have done, in remembering the captivity of our fathers; for they were in bondage, and none could deliver them except it was the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob; and he surely did deliver them in their afflictions.

3 இப்பொழுதும், என் குமாரனாகிய ஏலமனே, இதோ, நீ உன் வாலிபப் பிராயத்தில் இருக்கிறாய். ஆதலால் நீ என் வார்த்தைகளைக் கேட்டு, என்னிடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டுமென்று உன்னைக் கெஞ்சுகிறேன். ஏனெனில் தேவனில் தன் நம்பிக்கையை வைக்கிற எவரும் அவர்களுடைய சோதனைகளிலும், அவர்களுடைய பிரச்சினைகளிலும், அவர்களுடைய உபத்திரவங்களிலும் ஆதரிக்கப்பட்டு, கடைசி நாளின்போது உயர்த்தப்படுவார்கள் என நான் அறிவேன்.

And now, O my son Helaman, behold, thou art in thy youth, and therefore, I beseech of thee that thou wilt hear my words and learn of me; for I do know that whosoever shall put their trust in God shall be supported in their trials, and their troubles, and their afflictions, and shall be lifted up at the last day.

4 நானாகவே அறிந்துகொண்டேன் என்று நீ எண்ணிக்கொள்ளவேண்டும், என நான் விரும்பவில்லை, உலகப்பிரகாரமானவைகளால் அல்ல, ஆவிக்குரியவைகளால், மாம்ச சிந்தனையினாலல்ல, தேவனாலேயே.

And I would not that ye think that I know of myself—not of the temporal but of the spiritual, not of the carnal mind but of God.

5 இப்பொழுதும் இதோ, நான் உனக்குச் சொல்லுகிறேன், நான் தேவனால் பிறப்பிக்கப்படாமல் போயிருப்பேனேயானால் இந்தக் காரியங்களை அறியாதிருந்திருப்பேன்; ஆனால் தேவன், தமது பரிசுத்த தூதனின் வாயின் மூலமாய் இவைகளை எனக்கு அறிவித்திருப்பது, எனக்கு எந்த தகுதியினாலும் அல்ல.

Now, behold, I say unto you, if I had not been born of God I should not have known these things; but God has, by the mouth of his holy angel, made these things known unto me, not of any worthiness of myself;

6 ஏனெனில் மோசியாவின் குமாரரோடு தேவ சபையை நிர்மூலமாக்க சுற்றித் திரிந்தேன்; ஆனால் இதோ, தேவனோ எங்களை வழியிலே தடுத்து நிறுத்த தமது பரிசுத்த தூதனை அனுப்பினார்.

For I went about with the sons of Mosiah, seeking to destroy the church of God; but behold, God sent his holy angel to stop us by the way.

7 இதோ, இடிமுழக்கத்தைப் போல அவன் எங்களிடத்தில் பேசினான், பூமி அனைத்தும் எங்கள் பாதங்களுக்குக் கீழ் நடுங்கினது; கர்த்தருடைய பயம் எங்கள் மீது வந்ததினாலே, நாங்கள் எல்லோரும் பூமியில் விழுந்தோம்.

And behold, he spake unto us, as it were the voice of thunder, and the whole earth did tremble beneath our feet; and we all fell to the earth, for the fear of the Lord came upon us.

8 ஆனால் இதோ, சத்தம் என்னை நோக்கி: எழுந்தி-
ரு, என்றது. நான் எழுந்து நின்று, ஒரு தூதனைக்
கண்டேன்.

But behold, the voice said unto me: Arise. And I arose and stood up, and beheld the angel.

9 அவன் என்னை நோக்கி: உன்னை நீயே அழித்-
துப்போட்டாலும், இனி ஒருபோதும் தேவ சபையை
அழிக்க வகை தேடாதே, என்றான்.

And he said unto me: If thou wilt of thyself be destroyed, seek no more to destroy the church of God.

10 அந்தப்படியே, நான் பூமியில் விழுந்தேன்; மூன்று
பகலும் இராத்திரியுமாய் என் வாயைத் திறக்கவும்,
என் கைகால்களை பயன்படுத்தவும் முடிவில்லை.

And it came to pass that I fell to the earth; and it was for the space of three days and three nights that I could not open my mouth, neither had I the use of my limbs.

11 தூதன் இன்னும் அநேக காரியங்களைப் பேசி-
னான், அவைகள் என் சகோதரர்களால் கேட்கப்-
பட்டன, ஆனால் நானோ கேட்கவில்லை; உன்னை
நீயே அழித்துக்கொண்டாலும் இனி ஒருபோதும் தே-
வசபையை அழிக்கவகைதேடாதே, என்ற வார்த்-
தைகளை நான் கேட்டபோது, நான் அழிந்துபோய்
விடுவேனோ, என்ற மிகுந்த பயத்தினாலும், அதிர்ச்-
சியாலும் ஆட்கொள்ளப்பட்டு, பூமியில் விழுந்-
தேன். அதற்குப் பின்பு நான் எதையும் கேட்கவில்-
லை.

And the angel spake more things unto me, which were heard by my brethren, but I did not hear them; for when I heard the words—If thou wilt be destroyed of thyself, seek no more to destroy the church of God—I was struck with such great fear and amazement lest perhaps I should be destroyed, that I fell to the earth and I did hear no more.

12 ஆனால் நான் நித்திய வேதனையில் அலைக்க-
ழிக்கப்பட்டேன். ஏனெனில் என் ஆத்துமா பெரும-
ளவும் நொந்துபோய், என் பாவங்கள் அனைத்தி-
னாலும் அலைக்கழிக்கப்பட்டது.

But I was racked with eternal torment, for my soul was harrowed up to the greatest degree and racked with all my sins.

13 நான் என் சகல பாவங்களையும், அக்கிரமங்க-
ளையும் நினைவு கூர்ந்தேன்; அதற்காக நான் பா-
தாள வேதனையுடன் சித்திரவதைக்குள்ளாக்கப்-
பட்டேன்; ஆம், நான் தேவனுக்கு விரோதமாய்க் கல-
கம் செய்ததையும், அவருடைய பரிசுத்த கட்டளை-
களைக் கைக்கொள்ளாததையும் கண்டுகொண்-
டேன்.

Yea, I did remember all my sins and iniquities, for which I was tormented with the pains of hell; yea, I saw that I had rebelled against my God, and that I had not kept his holy commandments.

14 ஆம், நான் அவருடைய பிள்ளைகளில் அநேக-
ரைக் கொலை செய்தேன்; அல்லது அநேகரை அழி-
வுக்குள்ளாக வழிநடத்திச் சென்றேன்; ஆம், முடி-
வாக என் அக்கிரமங்கள் அநேகமாய் இருந்தபடி-
யால், தேவசமுகத்தில் பிரவேசிக்கவேண்டுமென்ற
அந்த எண்ணமே, என் ஆத்துமாவை சொல்லமுடி-
யாத திகிலால் அலைக்கழித்தது.

Yea, and I had murdered many of his children, or rather led them away unto destruction; yea, and in fine so great had been my iniquities, that the very thought of coming into the presence of my God did rack my soul with inexpressible horror.

15 என் கிரியைகளைக் குறித்து நியாயந்தீர்க்கப்ப-
டும்படிக்கு, நான் தேவ சமுகத்தில் நிற்க கொண்டு-
வரப்படுவதைக் காட்டிலும், நான் நாடு கடத்தப்பட்-
டு, என் ஆத்துமாவும், சரீரமும் இல்லாமற் போயி-
ருக்கலாம், என எண்ணினேன்.

Oh, thought I, that I could be banished and become extinct both soul and body, that I might not be brought to stand in the presence of my God, to be judged of my deeds.

16 இப்போதும், மூன்று பகலும், மூன்று இராத்திரியு-
மாக, நான் ஆக்கினைக்குட்பட்ட ஆத்துமா படுகிற
வேதனையால், அலைக்களிக்கப்பட்டேன்.

And now, for three days and for three nights was I racked, even with the pains of a damned soul.

17 அந்தப்படியே, நான் வேதனையால் அலைக்க-
ளிக்கப்பட்டு, என் அநேக பாவங்களின் நினை-
வால் மனஸ்தாபப்பட்டபோது, இதோ, உலகத்தின்
பாவங்களை நிவர்த்தியாக்க, தேவ குமாரனாகிய
இயேசு கிறிஸ்து என்பவருடைய வரவைக் குறித்து,
ஜனங்களுக்கு என் தகப்பன் தீர்க்கதரிசனம்
சொன்னதைக் கேட்டதை நினைவுகூர்ந்தேன்.

And it came to pass that as I was thus racked with torment, while I was harrowed up by the memory of my many sins, behold, I remembered also to have heard my father prophesy unto the people concerning the coming of one Jesus Christ, a Son of God, to atone for the sins of the world.

18 இப்பொழுது என் மனம் இந்த நினைவில் சிக்கிக்-
கொண்டபோது, நான் இருதயத்தினுள்ளே அழுது,
தேவ குமாரனாகிய இயேசுவே, கசப்பான பிச்சிலி-
ருந்து, மரணத்தின் நித்திய சங்கிலிகளால் சூழப்-
பட்டிருக்கிற என் மேல் இரக்கமாயிரும், என்றேன்.

Now, as my mind caught hold upon this thought, I cried within my heart: O Jesus, thou Son of God, have mercy on me, who am in the gall of bitterness, and am encircled about by the everlasting chains of death.

19 இதோ, இதை நான் எண்ணினபோதோ, என் வே-
தனைகளை அதற்குமேல் நினைவுகூரவே இல்-
லை; ஆம், அதற்குப் பின்பு நான் பாவங்களின் நி-
னைவால் அலைக்கழிக்கப்படவேயில்லை.

And now, behold, when I thought this, I could remember my pains no more; yea, I was harrowed up by the memory of my sins no more.

20 என்ன சந்தோஷம், என்ன மகத்துவமான ஒளி-
யை நான் கண்டுகொண்டேன்; ஆம், கஷ்டத்தின்
மிகுதியைப்போலவே, சந்தோஷத்தின் மிகுதியால்
என் ஆத்துமா நிரப்பப்பட்டது!

And oh, what joy, and what marvelous light I did behold; yea, my soul was filled with joy as exceeding as was my pain!

21 ஆம், என் குமாரனே, நான் உனக்குச் சொல்லுகி-
றேன், என் வேதனையைப்போல மிகக் கொடிய,
கசப்பான, வேறெதுவும் இருக்கமுடியாது. ஆம், என்
குமாரனே மறுபடியும் உனக்கு நான் சொல்லுகி-
றேன், மாறாக, என் சந்தோஷத்தைப்போல மிக அற்-
புதமான, இனிமையான வேறெதுவும் இருக்கமுடி-
யாது.

Yea, I say unto you, my son, that there could be nothing so exquisite and so bitter as were my pains. Yea, and again I say unto you, my son, that on the other hand, there can be nothing so exquisite and sweet as was my joy.

22 ஆம், தேவன் தமது சிங்காசனத்தில் வீற்றிருப்ப-
தையும், அவரைச் சுற்றி எண்ணிறைந்த தூதர்க-
ளின் சேனைகள் தங்களுடைய தேவனைப் பாடு-
வதும், துதிப்பதுமாக இருக்கக் கண்ட, நம்முடைய
தகப்பனாகிய லேகியைப்போலவே எனக்கும்
தோன்றியது. ஆம், அங்கே இருக்கவேண்டுமென
என் ஆத்துமா வாஞ்சித்தது.

Yea, methought I saw, even as our father Lehi saw, God sitting upon his throne, surrounded with numberless concourses of angels, in the attitude of singing and praising their God; yea, and my soul did long to be there.

23 இதோ, என் கைகால்கள் மறுபடியும் தங்கள் பெ-
லனைப் பெற்றன. நான் காலூன்றி நின்று, நான்
தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டேன், என்று ஜனங்க-
ளுக்குத் தெரிவித்தேன்.

But behold, my limbs did receive their strength again, and I stood upon my feet, and did manifest unto the people that I had been born of God.

24 ஆம், நான் ஆத்துமாக்களை மனந்திரும்புதலுக்-
குள் கொண்டுவரவும், அவர்களும் நான் ருசித்துப்
பார்த்த அந்த மிகுந்த சந்தோஷத்தை ருசிக்கவும்,
தேவனால் ஜெனிப்பிக்கப்படவும், பரிசுத்த ஆவி-
யானவரால் நிரப்பப்படவும், அப்போது முதல் இப்-
போது வரைக்கும் இடைவிடாமல் பிரயாசப்பட்டி-
ருக்கிறேன்.

Yea, and from that time even until now, I have labored without ceasing, that I might bring souls unto repentance; that I might bring them to taste of the exceeding joy of which I did taste; that they might also be born of God, and be filled with the Holy Ghost.

25 ஆம், என் குமாரனே, இதோ, கர்த்தர் என் பிரயா-
சங்களின் பலனாக மிகுந்த சந்தோஷத்தை அருளு-
கிறார்.

Yea, and now behold, O my son, the Lord doth give me exceedingly great joy in the fruit of my labors;

26 அவர் எனக்கு அளித்த வார்த்தையினிமித்தம்,
இதோ அநேகர் தேவனால் ஜெனிப்பிக்கப்பட்டு,
நான் ருசித்ததைப் போலவே ருசித்தும், நான் கண்-
ணாரக்கண்டது போலவே கண்டுமிருக்கிறார்கள்;
ஆதலால் நான் பேசின இவைகளை நான் அறிகிற-
து போலவே அவர்களும் அறிகிறார்கள்; நான்
பெற்ற அறிவோ, தேவனால் உண்டானது.

For because of the word which he has imparted unto me, behold, many have been born of God, and have tasted as I have tasted, and have seen eye to eye as I have seen; therefore they do know of these things of which I have spoken, as I do know; and the knowledge which I have is of God.

27 நான் சகலவிதமான சோதனைகளிலும், சங்கடங்-
களிலும், பலமாதிரியான உபத்திரவங்களிலும்
ஆதரிக்கப்பட்டிருக்கிறேன், ஆம், தேவன் என்-
னைச் சிறையிலிருந்தும், கட்டுக்களிலிருந்தும்,
மரணத்திலிருந்தும் விடுவித்திருக்கிறார்; ஆம்,
நான் அவரில் என் நம்பிக்கையை வைக்கிறேன்.
அவர் என்னைத் தொடர்ந்து விடுவிப்பார்.

And I have been supported under trials and troubles of every kind, yea, and in all manner of afflictions; yea, God has delivered me from prison, and from bonds, and from death; yea, and I do put my trust in him, and he will still deliver me.

28 கடைசி நாளின்போது, அவரோடு கூட மகிமை-
யில் நான் வாசமாயிருக்கும்படி என்னை எழும்பப்
பண்ணுவார் என்று நான் அறிவேன்; ஆம், அவர்
எகிப்தியரைச் சிவந்த சமுத்திரத்தில் விழுங்கிப்
போட்டதினாலும், நம்முடைய பிதாக்களை எகிப்-
திலிருந்து கூட்டிவந்து, அவர்களைத் தமது வல்ல-
மையினால் வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குள் வழி-
நடத்தினதாலும், அவர்களை அவ்வப்போது அடி-
மைத்தனத்திலிருந்தும், சிறைத்தனத்திலிருந்தும்
விடுவித்ததினிமித்தமும், அவரை நான் என்றென்-
றுமாய் துதிப்பேன்.

And I know that he will raise me up at the last day, to dwell with him in glory; yea, and I will praise him forever, for he has brought our fathers out of Egypt, and he has swallowed up the Egyptians in the Red Sea; and he led them by his power into the promised land; yea, and he has delivered them out of bondage and captivity from time to time.

29 ஆம், அவர் நம்முடைய பிதாக்களை எருசலேம்
தேசத்திலிருந்து கூட்டிவந்தார்; அவர் தம்முடைய
அநாதி வல்லமையினாலே, அவர்களைச் சிறைத்-
தனத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும்,
அவ்வப்போது, இந்நாள் வரைக்குமாக விடுவித்தி-
ருக்கிறார்; ஆம், அவர்களுடைய சிறைத்தனத்தை
நான் நினைவில் வைத்திருப்பதைப்போலவே, நீ-
யும் வைத்திருக்க வேண்டும்.

Yea, and he has also brought our fathers out of the land of Jerusalem; and he has also, by his everlasting power, delivered them out of bondage and captivity, from time to time even down to the present day; and I have always retained in remembrance their captivity; yea, and ye also ought to retain in remembrance, as I have done, their captivity.

30 ஆனால் இதோ, என் குமாரனே, இவை அனைத்து-
மல்ல; நீ தேவ கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற
அளவில் தேசத்தில் விருத்தியடைவாய் என்று,
நான் அறிந்திருக்கிறதைப் போலவே நீயும் அறிந்தி-
ருக்கவேண்டும். நீ தேவ கட்டளைகளைக் கைக்-
கொள்ளாமற்போகிற அளவில், நீ அவருடைய சமு-
கத்திலிருந்து தள்ளுண்டு போவாய் என்றும், நீ
அறியவேண்டும்; இது அவருடைய வார்த்தையின்-
படியானது.

But behold, my son, this is not all; for ye ought to know as I do know, that inasmuch as ye shall keep the commandments of God ye shall prosper in the land; and ye ought to know also, that inasmuch as ye will not keep the commandments of God ye shall be cut off from his presence. Now this is according to his word.

# ஆல்மா 37

1 இப்பொழுதும், என் குமாரனாகிய ஏலமனே, என்-
னிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பதிவேடுகளை, நீ
எடுத்துக் கொள்ளவேண்டுமென உனக்குக் கட்ட-
ளையிடுகிறேன்;

2 நான் செய்ததைப் போலவே, நீயும் இந்த ஜனத்தி-
னுடைய பதிவேட்டை நேபியின் தகடுகளில் எழுத-
வேண்டுமெனவும், உனக்குக் கட்டளையிடுகிறேன்.
நான் வைத்திருக்கிற இவற்றை நான் வைத்திருந்-
ததைப்போலவே நீயும் பரிசுத்தமாக வைத்திரு;
ஏனெனில் இவைகள் ஒரு ஞானமான நோக்கத்திற்-
காகவே பாதுகாக்கப்படுகின்றன.

3 இந்தப் பித்தளைத் தகடுகளும் இந்த எழுத்துக்க-
ளும், பரிசுத்த வேத பதிவுகளையும், ஆதியிலிருந்-
து நம்முடைய முற்பிதாக்களின் வம்சவரலாற்றை-
யும் கொண்டிருக்கின்றன.

4 இதோ, அவை பாதுகாக்கப்பட்டு, ஒரு தலைமு-
றையிலிருந்து மற்றொன்றுக்கு கையளிக்கப்பட-
வேண்டுமென்றும், அவை சகல தேசத்திற்கும்,
இனத்திற்கும் பாஷைக்கும், ஜனத்திற்கும் போய்,
அவர்கள் அதில் அடங்கியிருக்கிற இரகசியங்க-
ளை அறியும்வரைக்கும் கர்த்தருடைய கரங்களால்
வைக்கப்பட்டு, பாதுகாக்கப்படுமென்று நமது பி-
தாக்களால் தீர்க்கதரிசனமுரைக்கப்பட்டிருக்கிறது.

5 இப்பொழுது இதோ, அவை பாதுகாக்கப்பட-
வேண்டுமெனில் அவை தங்கள் பிரகாசத்தை தக்க
வைக்கவேண்டும்; ஆம், அவை பிரகாசத்தை தக்க-
வைக்கும்; ஆம், பரிசுத்த எழுத்துக்களைக் கொண்-
டிருக்கிற சகல தகடுகளும் அப்படியே பிரகாசமாக-
வே இருக்கும்.

6 இப்பொழுதும், இது என் மதியீனம் என்று நீ எண்-
ணலாம்; ஆனால் இதோ நான் உனக்குச் சொல்லுகி-
றேன், அற்பமும் சொற்பமுமானவைகளைக்
கொண்டுதான் பெரிய காரியங்கள் செய்யப்படு-
கின்றன; அற்பமானவைகளே அநேக சமயங்களில்
ஞானவான்களைத் தாழ்மைப்படுத்தும்.

7 தேவனாகிய கர்த்தர், தம்முடைய பெரிதும் நித்தி-
யமுமான நோக்கங்களை நிறைவேற்ற அற்பமான-
வைகளைக் கையாளுகிறார்; மிக அற்பமானவை-
களால் கர்த்தர் ஞானவான்களைத் தாறுமாறாக்கி,
அநேக ஆத்துமாக்களுக்கு இரட்சிப்பைக் கொண்-
டுவருகிறார்.

8 இப்பொழுது, இக்காரியங்கள் பாதுகாக்கப்பட்டி-
ருக்க வேண்டுமென்பது தேவ ஞானமாயிருக்கிற-
து; ஏனெனில் இதோ, அவை இந்த ஜனத்தினுடைய
நினைவை விசாலமாக்கி, அவர்களுடைய வழிக-
ளின் தப்பிதத்தை அநேகருக்கு உணர்த்தி, அவர்க-
ளுடைய ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கேதுவாக,
தங்கள் தேவனின் ஞானத்திற்கு அவர்களைக்
கொண்டு வந்திருக்கிறது.

# Alma 37

And now, my son Helaman, I command you that ye take the records which have been entrusted with me;

And I also command you that ye keep a record of this people, according as I have done, upon the plates of Nephi, and keep all these things sacred which I have kept, even as I have kept them; for it is for a wise purpose that they are kept.

And these plates of brass, which contain these engravings, which have the records of the holy scriptures upon them, which have the genealogy of our forefathers, even from the beginning—

Behold, it has been prophesied by our fathers, that they should be kept and handed down from one generation to another, and be kept and preserved by the hand of the Lord until they should go forth unto every nation, kindred, tongue, and people, that they shall know of the mysteries contained thereon.

And now behold, if they are kept they must retain their brightness; yea, and they will retain their brightness; yea, and also shall all the plates which do contain that which is holy writ.

Now ye may suppose that this is foolishness in me; but behold I say unto you, that by small and simple things are great things brought to pass; and small means in many instances doth confound the wise.

And the Lord God doth work by means to bring about his great and eternal purposes; and by very small means the Lord doth confound the wise and bringeth about the salvation of many souls.

And now, it has hitherto been wisdom in God that these things should be preserved; for behold, they have enlarged the memory of this people, yea, and convinced many of the error of their ways, and brought them to the knowledge of their God unto the salvation of their souls.

9 ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்தத்
தகடுகளின் மேலிருக்கிற அந்த பதிவேடுகளில்
அடங்கியுள்ள இவைகள் இல்லையெனில், அம்-
மோனும் அவன் சகோதரரும், அநேக ஆயிரக்கணக்-
கான லாமானியருக்கு, அவர்களுடைய பிதாக்க-
ளுடைய தவறான பாரம்பரியத்தைக் குறித்து
உணர்த்தியிருக்கமுடியாது; ஆம், இந்தப் பதிவேடு-
களும், அவர்களுடைய வார்த்தைகளும், அவர்க-
ளை மனந்திரும்புதலுக்குள்ளாகக் கொண்டுவந்-
தன; அதாவது அவைகள் அவர்களைக் கர்த்தரா-
கிய அவர்களின் தேவ ஞானத்திற்கும், அவர்களின்
மீட்பராகிய இயேசு கிறிஸ்துவிலே களிகூரவும்
கொண்டுவந்தன.

Yea, I say unto you, were it not for these things that these records do contain, which are on these plates, Ammon and his brethren could not have convinced so many thousands of the Lamanites of the incorrect tradition of their fathers; yea, these records and their words brought them unto repentance; that is, they brought them to the knowledge of the Lord their God, and to rejoice in Jesus Christ their Redeemer.

10 அவை அவர்களில் அநேக ஆயிரக்கணக்கானோ-
ரையும், பாவத்திலும் அக்கிரமத்திலும் தங்கள் இரு-
தயங்களைக் கடினமாக்கிக் கொண்டிருக்கிற, நம்-
முடைய வணங்காக்கழுத்துள்ள சகோதரராகிய நே-
பியரிலும், அநேக ஆயிரக்கணக்கானோரையும்,
அவர்களுடைய மீட்பரின் ஞானத்திற்குக் கொண்-
டுவர கருவியாய் அமையும், என்று யார் அறிவார்?

And who knoweth but what they will be the means of bringing many thousands of them, yea, and also many thousands of our stiffnecked brethren, the Nephites, who are now hardening their hearts in sin and iniquities, to the knowledge of their Redeemer?

11 இப்போது இந்த இரகசியங்கள் எனக்குப் பரிபூர-
ணமாக தெரிவிக்கப்படவில்லை; ஆகையால் நான்
நிறுத்திக் கொள்ளுகிறேன்.

Now these mysteries are not yet fully made known unto me; therefore I shall forbear.

12 அவை ஒரு ஞானமான நோக்கத்திற்காக பாது-
காக்கப்பட்டிருக்கின்றன, என்று நான் சொன்னா-
லே போதுமானதாயிருக்கிறது. அந்த நோக்கத்தை
தேவன் அறிவார்; அவர் தம் கிரியைகள் யாவையும்
ஞானமாய் ஆலோசிக்கிறார். அவருடைய பாதை-
கள் நேராயும், அவருடைய மார்க்கம் ஒரு நித்தியச்
சுற்றாயுமிருக்கிறது.

And it may suffice if I only say they are preserved for a wise purpose, which purpose is known unto God; for he doth counsel in wisdom over all his works, and his paths are straight, and his course is one eternal round.

13 என் குமாரனாகிய ஏலமனே நினைவுகூர். தே-
வனுடைய கட்டளைகள் எவ்வளவு கண்டிப்பான-
வை என்று நினைவுகூர். அவர் சொன்னதாவது:
நீங்கள் என் கட்டளைகளைக் கைக்கொண்டால்,
தேசத்தில் விருத்தியடைவீர்கள். ஆனால் அவரு-
டைய கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளாமற்
போனால், நீங்கள் அவருடைய சமுகத்தினின்று
அறுப்புண்டு போவீர்கள்.

O remember, remember, my son Helaman, how strict are the commandments of God. And he said: If ye will keep my commandments ye shall prosper in the land—but if ye keep not his commandments ye shall be cut off from his presence.

14 இப்பொழுதும் என் குமாரனே, பரிசுத்தமான
இவைகளைத் தேவன் உன்னிடத்தில் ஒப்படைத்-
தார் என்று நினைவில்கொள். அவர் அவைகளை
பரிசுத்தமாய் பாதுகாத்திருந்தார். அவர் தம்முடைய
வல்லமையை வருங்காலத் தலைமுறையினருக்கு
காண்பிக்க வேண்டுமென்ற, அவரில் இருக்கிற ஞா-
னமான நோக்கத்திற்காக, இனிமேலும் அவைக-
ளை வைத்துப் பாதுகாப்பார்.

And now remember, my son, that God has entrusted you with these things, which are sacred, which he has kept sacred, and also which he will keep and preserve for a wise purpose in him, that he may show forth his power unto future generations.

15 இப்பொழுதும் இதோ, நீங்கள் தேவனுடைய கட்ட-
ளைகளை மீறினால், இதோ, பரிசுத்தமான இவை-
கள் உங்களிடத்திலிருந்து தேவ வல்லமையினால்
எடுத்துக்கொள்ளப்படும் என்றும், நீங்கள் சாத்தா-
னால், காற்றுக்கு முன் பதரைப் புடைப்பதைப்-
போல புடைக்கப்படுவதற்கு, அவனிடத்தில் ஒப்ப-
டைக்கப்படுவீர்கள் என்றும், உங்களுக்கு தீர்க்கத-
ரிசன ஆவியினால் சொல்லுகிறேன்.

And now behold, I tell you by the spirit of prophecy, that if ye transgress the commandments of God, behold, these things which are sacred shall be taken away from you by the power of God, and ye shall be delivered up unto Satan, that he may sift you as chaff before the wind.

16 நீங்கள் தேவனுடைய கட்டளைகளைக் கைக்-
கொண்டு, கர்த்தர் உங்களுக்குக் கட்டளையிடுகிற-
வைகளுக்குக்கேற்ப பரிசுத்தமான இவைகளி-
னால் காரியங்களை நடப்பிப்பீர்களெனில்,
(அவைகளினால் நீங்கள் செய்கிற எக்காரியத்திற்-
கும், கர்த்தரிடத்தில் வேண்டுதல் செய்யவேண்டும்)
இதோ, பூமியிலோ அல்லது பாதாளத்திலோ உள்ள
எந்த ஒரு வல்லமையும் அவைகளை உங்களிடத்-
திலிருந்து எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில்
தேவன் தமது வார்த்தைகள் அனைத்தையும் நி-
றைவேற்ற வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

But if ye keep the commandments of God, and do with these things which are sacred according to that which the Lord doth command you, (for you must appeal unto the Lord for all things whatsoever ye must do with them) behold, no power of earth or hell can take them from you, for God is powerful to the fulfilling of all his words.

17 ஏனெனில் அவர் நம்முடைய பிதாக்களிடம்
செய்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியதால்,
அவர் உங்களிடத்தில் செய்யும் வாக்குத்தத்தங்க-
ளையும் நிறைவேற்றுவார்.

For he will fulfil all his promises which he shall make unto you, for he has fulfilled his promises which he has made unto our fathers.

18 ஏனெனில் அவர் தம்முடைய வல்லமையை
வருங்காலத் தலைமுறையினருக்குக் காண்பிக்க
வேண்டுமென்ற அவரிலுள்ள ஞானமான நோக்-
கத்தினிமித்தம், அவர் இவைகளைப் பாதுகாப்-
பார், என்று அவரே அவர்களிடம் வாக்குத்தத்தம்
பண்ணியிருக்கிறார்.

For he promised unto them that he would preserve these things for a wise purpose in him, that he might show forth his power unto future generations.

19 இப்பொழுதும் இதோ, லாமானியரில் அநேக ஆயி-
ரமானோரைச் சத்திய ஞானத்திற்குத் திரும்பச்
சேர்க்கவேண்டுமென்ற நோக்கத்தை அவர் நிறை-
வேற்றியிருக்கிறார். அவர் அவற்றில் தமது வல்ல-
மையைக் காண்பித்திருக்கிறார். அவர் இனிமேலும்
வருங்காலத் தலைமுறையினருக்கு அவற்றி-
லுள்ள தமது வல்லமையைக் காண்பிப்பார். ஆத-
லால் அவை பாதுகாக்கப்படும்.

And now behold, one purpose hath he fulfilled, even to the restoration of many thousands of the Lamanites to the knowledge of the truth; and he hath shown forth his power in them, and he will also still show forth his power in them unto future generations; therefore they shall be preserved.

20 ஆகவே என் குமாரனாகிய ஏலமனே, நீ என்
வார்த்தைகள் அனைத்தையும் நிறைவேற்றக்
கருத்துள்ளவனாயும், எழுதப்பட்டிருக்கிறபடியே
தேவ கட்டளைகளைக் கைக்கொள்ள கருத்துள்ள-
வனாயும் இருக்க வேண்டுமென, உனக்குக் கட்ட-
ளையிடுகிறேன்.

Therefore I command you, my son Helaman, that ye be diligent in fulfilling all my words, and that ye be diligent in keeping the commandments of God as they are written.

21 இப்பொழுதும் அழிந்துபோன அந்த ஜனங்களு-
டைய இரகசியங்களும், அந்தகாரக் கிரியைகளும்,
அவர்களுடைய இரகசியக் கிரியைகளும், இந்த
ஜனத்திற்கு வெளியரங்கமாக்கப்படும்படிக்கு, ஆம்,
அவர்களுடைய சகல கொலைகளும், கொள்ளை-
களும், சூறையாடுதல்களும், அவர்களுடைய சகல
துன்மார்க்கமும், அருவருப்புகளும் இந்த ஜனத்-
திற்கு வெளியரங்கமாக்கப்படும்: ஆம், அதற்காக
இந்த மொழிபெயர்க்கும் சாதனங்களைப் பாதுகாத்-
துக் கொள்ளும்படிக்கும், நீங்கள் பாதுகாத்த, அந்த
இருபத்தி நான்கு தகடுகளைக் குறித்து உங்களுக்-
குச் சொல்லுவேன்.

And now, I will speak unto you concerning those twenty-four plates, that ye keep them, that the mysteries and the works of darkness, and their secret works, or the secret works of those people who have been destroyed, may be made manifest unto this people; yea, all their murders, and robbings, and their plunderings, and all their wickedness and abominations, may be made manifest unto this people; yea, and that ye preserve these interpreters.

22 ஏனெனில் இதோ, கர்த்தர் தம்முடைய ஜனம் அந்-
தகாரத்திலே கிரியை செய்வதையும், ஆம், இரகசிய-
மாக கொலைகளையும், அருவருப்புகளையும் புரி-
வதையும் கண்டார்: ஆதலால், அவர்கள் மனந்தி-
ரும்பாவிடில், பூமியின் பரப்பின் மீதிருந்து நிர்மூல-
மாக்கப்படுவார்களென்று, கர்த்தர் சொன்னார்.

For behold, the Lord saw that his people began to work in darkness, yea, work secret murders and abominations; therefore the Lord said, if they did not repent they should be destroyed from off the face of the earth.

23 கர்த்தர் சொன்னதாவது: என்னை சேவிக்கிற என்
ஜனத்திற்கு அவர்களுடைய சகோதரரின் கிரியை-
களான, ஆம், அவர்களின் இரகசியக் கிரியைக-
ளையும், அவர்களின் அந்தகாரக் கிரியைகளை-
யும். அவர்களின் துன்மார்க்கத்தையும், அருவருப்-
புகளையும், நான் வெளியரங்கமாக்கும்படி, இருளி-
லிருந்து வெளிச்சமாக்க, பிரகாசிக்கும் ஒரு கல்லை
என் தாசனாகிய காசலேமிற்காக ஆயத்தம் பண்-
ணுவேன்.

And the Lord said: I will prepare unto my servant Gazelem, a stone, which shall shine forth in darkness unto light, that I may discover unto my people who serve me, that I may discover unto them the works of their brethren, yea, their secret works, their works of darkness, and their wickedness and abominations.

24 இப்பொழுதும் என் குமாரனே, தேவனுடைய
வார்த்தை நிறைவேறும்படியாகவே, இந்த மொழி-
பெயர்ப்புச் சாதனங்கள் ஆயத்தம் பண்ணப்பட்-
டன. அவர் சொன்னதாவது:

And now, my son, these interpreters were prepared that the word of God might be fulfilled, which he spake, saying:

25 நான் அவர்களுடைய சகல இரகசியக் கிரியைக-
ளையும், அவர்களுடைய அருவருப்புகளையும்,
அந்தகாரத்தினின்று வெளிச்சத்திற்குக் கொண்டு-
வருவேன்; அவர்கள் மனந்திரும்பாவிடில், நான்
அவர்களை பூமியின் பரப்பின் மீதிருந்து சங்கரிப்-
பேன்; அவர்களுடைய சகல இரகசியங்களையும்,
அருவருப்புகளையும், இந்த நிலத்தை இனி சுதந்த-
ரிக்கும் எல்லா தேசத்தாரும் அறியும்படியாக, வெ-
ளிச்சத்திற்குக் கொண்டு வருவேன்.

I will bring forth out of darkness unto light all their secret works and their abominations; and except they repent I will destroy them from off the face of the earth; and I will bring to light all their secrets and abominations, unto every nation that shall hereafter possess the land.

26 இப்பொழுது என் குமாரனே, அவர்கள் மனந்தி-
ரும்பவில்லை என்று பார்க்கிறோம்; ஆதலால்
அவர்கள் அழிக்கப்பட்டார்கள். இதுவரைக்கும்
தேவ வார்த்தை இவ்வாறாக நிறைவேறியிருக்கிற-
து; ஆம், அவர்களுடைய இரகசிய அருவருப்புகள்
அந்தகாரத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, நமக்கு
தெரிவிக்கப்பட்டன.

And now, my son, we see that they did not repent; therefore they have been destroyed, and thus far the word of God has been fulfilled; yea, their secret abominations have been brought out of darkness and made known unto us.

27 இப்பொழுது என் குமாரனே, நீ அவர்களுடைய
இரகசிய அருவருப்புகளில், அவர்களின் ஆணை-
களையும், அவர்களின் உடன்படிக்கைகளையும்,
அவர்களின் ஒப்பந்தங்களையும் வைத்திருக்க-
வேண்டுமென்று, உனக்குக் கட்டளையிடுகிறேன்;
ஆம், ஒருவேளை இவர்களும் அந்தகாரத்தினுள்
விழுந்து அழிந்து விடாதபடிக்கு, நீ அவர்களுடைய
சகல அறிகுறிகளையும், தந்திரங்களையும் இந்த
ஜனங்கள் அறியாத வண்ணம் அவைகளை இவர்-
களிடமிருந்து நீங்கலாக்கி வை.

And now, my son, I command you that ye retain all their oaths, and their covenants, and their agreements in their secret abominations; yea, and all their signs and their wonders ye shall keep from this people, that they know them not, lest peradventure they should fall into darkness also and be destroyed.

28 ஏனெனில் இதோ, அந்தகாரத்தில் கிரியை செய்-
வோர் அக்கிரமத்தில் பழுக்கும்போது, தேவ வல்ல-
மையின்படியே அவர்கள் மீது அழிவு வரும்படிக்கு,
சாபம் இந்த தேசத்தின் மீதுண்டு; ஆகவே இந்த
ஜனம் அழியக்கூடாதென்று விரும்புகிறேன்.

For behold, there is a curse upon all this land, that destruction shall come upon all those workers of darkness, according to the power of God, when they are fully ripe; therefore I desire that this people might not be destroyed.

29 அவர்களுடைய ஆணைகளின், இரகசிய திட்டங்-
களையும், அவர்களின் உடன்படிக்கைகளையும்,
இந்த ஜனங்களிடமிருந்து நீ மறைத்து, அவர்களின்
துன்மார்க்கத்தையும், அவர்களின் கொலைகளை-
யும், அவர்களின் அருவருப்புகளையும், மாத்திரம்
அவர்களுக்குத் தெரிவிப்பாயாக; அப்படிப்பட்ட
துன்மார்க்கத்தையும், அருவருப்புகளையும் கொ-
லைகளையும் அவர்கள் வெறுத்தொதுக்கவேண்-
டுமென்று போதிப்பாயாக; இந்த ஜனங்கள் தங்க-
ளின் துன்மார்க்கம், அருவருப்புகள், தங்களின்
கொலைகள் ஆகியவைகளினிமித்தமாக அழிக்-
கப்பட்டார்களென்றும் அவர்களுக்குப் போதிப்பா-
யாக.

Therefore ye shall keep these secret plans of their oaths and their covenants from this people, and only their wickedness and their murders and their abominations shall ye make known unto them; and ye shall teach them to abhor such wickedness and abominations and murders; and ye shall also teach them that these people were destroyed on account of their wickedness and abominations and their murders.

30 இதோ, அவர்களின் அக்கிரமங்களைக் குறித்து
அறிவிக்க, அவர்களுக்குள் வந்த கர்த்தருடைய
தீர்க்கதரிசிகள் யாவரையும் அவர்கள் கொலை
செய்தார்கள்; அவர்களைக் கொலை செய்தவர்க-
ளினுடைய இரத்தம், தங்களைக் கொலை செய்த-
வர்கள் மீது பழிதீர்க்கவேண்டுமென்று, கர்த்தரா-
கிய தங்கள் தேவனிடத்தில் கூக்குரலிட்டது; இப்ப-
டியாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு, இந்த அந்தகா-
ரக் கிரியைக்காரர்கள்மீதும், இரகசியச் சங்கங்க-
ளின்மீதும் வந்தது.

For behold, they murdered all the prophets of the Lord who came among them to declare unto them concerning their iniquities; and the blood of those whom they murdered did cry unto the Lord their God for vengeance upon those who were their murderers; and thus the judgments of God did come upon these workers of darkness and secret combinations.

31 ஆம், அந்தகாரம் மற்றும் இரகசிய சங்கங்களின்
கிரியைக்காரார்கள் அக்கிரமத்தில் பழுக்குமுன்-
னே மனந்திரும்பாவிடில், இந்த தேசம் என்றென்று-
மாய் சபிக்கப்பட்டதாய், அழிவிற்குள்ளாகும்.

Yea, and cursed be the land forever and ever unto those workers of darkness and secret combinations, even unto destruction, except they repent before they are fully ripe.

32 இப்பொழுதும் என் குமாரனே, நான் உன்னிடத்-
தில் பேசிய வார்த்தைகளை நினைவில் கொள்.
இந்த ஜனங்களுக்கு அந்த இரகசியத் திட்டங்க-
ளைத் தெரிவிக்காதே. ஆனால் பாவத்திற்கும் அக்-
கிரமத்திற்கும் விரோதமான என்றுமுள்ள ஒரு வெ-
றுப்பை அவர்களுக்குப் போதிப்பாயாக.

And now, my son, remember the words which I have spoken unto you; trust not those secret plans unto this people, but teach them an everlasting hatred against sin and iniquity.

33 அவர்களுக்கு மனந்திரும்புதலையும், கர்த்தரா-
கிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தையும் பிரசங்-
கி; அவர்கள் தாழ்மையாயும், சாந்தகுணமுள்ளவர்-
களாயும், மனத்தாழ்மையுள்ளவர்களாயும் இருக்-
கும்படி போதி. அவர்கள் பிசாசின் சகல சோதனை-
களையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மீ-
துள்ள அவர்களின் விசுவாசத்தைக் கொண்டு
எதிர்த்து நிற்கும்படி போதி.

Preach unto them repentance, and faith on the Lord Jesus Christ; teach them to humble themselves and to be meek and lowly in heart; teach them to withstand every temptation of the devil, with their faith on the Lord Jesus Christ.

34 அவர்கள் நற்கிரியைகள் செய்வதில் சோம்பலா-
யிராமல், சாந்த குணமுள்ளவர்களாயும், மனத்-
தாழ்மையுள்ளவர்களாயும் இருக்கவேண்டுமென
போதி; ஏனெனில் அவர்களே தங்களின் ஆத்து-
மாக்களுக்கு இளைப்பாறுதலைக் கண்டடைவார்-
கள்.

Teach them to never be weary of good works, but to be meek and lowly in heart; for such shall find rest to their souls.

35 என் குமாரனே, உன் வாலிபப்பிராயத்தில் ஞா-
னத்தைக் கற்றுக்கொள்ள நினைவுகொள்; ஆம்,
உன் வாலிபப்பிராயத்தில் தேவனுடைய கட்டளை-
களைக் கைக்கொள்ளக் கற்றுக்கொள்.

O, remember, my son, and learn wisdom in thy youth; yea, learn in thy youth to keep the commandments of God.

36 ஆம், உன் எல்லா ஆதரவிற்காகவும் தேவனிடத்-
தில் கூக்குரலிடு; ஆம், உன் எல்லா செயல்களும்
கர்த்தருக்காகவே இருப்பதாக. நீ எங்கு போனாலும்
அது கர்த்தருக்காகவே இருப்பதாக. ஆம், உன் சகல
சிந்தைகளும் கர்த்தருக்கு நேராய் வழிநடத்தப்படு-
வதாக. ஆம், உன் இருதயத்தின் பற்றுதல் என்-
றென்றும் கர்த்தர் மீதே வைக்கப்படுவதாக.

Yea, and cry unto God for all thy support; yea, let all thy doings be unto the Lord, and whithersoever thou goest let it be in the Lord; yea, let all thy thoughts be directed unto the Lord; yea, let the affections of thy heart be placed upon the Lord forever.

37 உன் எல்லா செயல்களிலும் கர்த்தரிடத்தில்
ஆலோசி. அவர் உன்னை நன்மையாக நடத்துவார்.
ஆம், நீ இரவு படுக்கும்போது, கர்த்தர் உன்னை உன்
உறக்கத்திலே காத்துக்கொள்ளும்படியாக, கர்த்தரி-
டத்தில் ஜெபித்துறங்கு; நீ காலையில் எழும்போது,
தேவனுக்கென்று உன் உள்ளம் நன்றிகளால் நி-
றைந்திருக்குமாக, இவைகளை நீ செய்தால், கடை-
சி நாளின்போது, உயர்த்தப்படுவாய்.

Counsel with the Lord in all thy doings, and he will direct thee for good; yea, when thou liest down at night lie down unto the Lord, that he may watch over you in your sleep; and when thou risest in the morning let thy heart be full of thanks unto God; and if ye do these things, ye shall be lifted up at the last day.

38 இப்பொழுதும் என் குமாரனே, நம்முடைய பிதாக்-
கள் பந்து அல்லது திசைகாட்டி என்றழைத்த, அந்-
தப் பொருளைக் குறித்து நான் சிறிது சொல்ல
வேண்டியுள்ளது, அல்லது நம்முடைய பிதாக்கள்
அதை லியஹோனா என்று அழைத்தார்கள், அதற்-
கு திசைமானி என்று அர்த்தமாம்; கர்த்தர் அதை
ஆயத்தம் பண்ணினார்.

And now, my son, I have somewhat to say concerning the thing which our fathers call a ball, or director—or our fathers called it Liahona, which is, being interpreted, a compass; and the Lord prepared it.

39 இதோ, அதைப்போல வேலைப்பாடுள்ள எதை-
யும் மனுஷன் செய்யக்கூடாததாயிருந்தது. இதோ
நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் எந்த மார்க்-
கத்தில் பயணம் செய்யவேண்டுமென்று காண்பிப்-
பதற்காக அது ஆயத்தம் பண்ணப்பட்டது.

And behold, there cannot any man work after the manner of so curious a workmanship. And behold, it was prepared to show unto our fathers the course which they should travel in the wilderness.

40 தேவனில் அவர்கள் வைத்த விசுவாசத்தின்படியே அது அவர்களுக்கு வேலை செய்தது; ஆதலால் தாங்கள் செல்லவேண்டிய வழியை அந்த முட்கள் குறிக்கும்படியாகச் செய்ய தேவனால் கூடுமென்று நம்ப, அவர்கள் விசுவாசித்தால் அது அப்படியே நடைபெற்றது; ஆதலால் இந்த அற்புதமும், மற்ற அநேக அற்புதங்களும், நாளுக்கு நாள் தேவ வல்லமையினால் செய்யப்பட்டன.

And it did work for them according to their faith in God; therefore, if they had faith to believe that God could cause that those spindles should point the way they should go, behold, it was done; therefore they had this miracle, and also many other miracles wrought by the power of God, day by day.

41 ஆயினும் அந்த அற்புதங்கள் எளிய வகையில் செய்யப்பட்டதாயினும், அது அவர்களுக்கு மகத்துவமான கிரியைகளைக் காண்பித்தது. அவர்கள் சோம்பலாகி தங்கள் விசுவாசத்தையும், கருத்தாய் இருப்பதையும் பிரயோகிக்காமல் மறந்து போன போதோ, அந்த மகத்துவ கிரியைகள் ஓய்ந்தன; அவர்கள் தங்கள் பிரயாணங்களில் முன்னேறவில்லை.

Nevertheless, because those miracles were worked by small means it did show unto them marvelous works. They were slothful, and forgot to exercise their faith and diligence and then those marvelous works ceased, and they did not progress in their journey;

42 ஆதலால், அவர்கள் வனாந்தரத்திலேயே தங்கினார்கள். அல்லது நேரானதோர் மார்க்கத்திலே பிரயாணம் பண்ணவில்லை. அவர்களுடைய மீறுதல்களினிமித்தம் அவர்கள் பசியாலும், தாகத்தினாலும் உபத்திரவப்பட்டார்கள்.

Therefore, they tarried in the wilderness, or did not travel a direct course, and were afflicted with hunger and thirst, because of their transgressions.

43 இப்பொழுதும், என் குமாரனே, இந்தக் காரியங்களுக்கு நிழலாட்டம் இல்லாமல் இல்லை, என்பதை நீ அறிய வேண்டுமென விரும்புகிறேன்; நம்முடைய பிதாக்கள் இந்தத் திசைமானி காட்டியபடி செல்லாததினிமித்தம் (இக்காரியங்கள் இப்போது உலகப்பிரகாரமானவை) அவர்கள் விருத்தியடையவில்லை. ஆவிக்குரிய காரியங்களுக்கும் அப்படியே நடக்கும்.

And now, my son, I would that ye should understand that these things are not without a shadow; for as our fathers were slothful to give heed to this compass (now these things were temporal) they did not prosper; even so it is with things which are spiritual.

44 ஏனெனில் இதோ, நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கான நேரான மார்க்கத்தைக் காட்டுகிற, இந்தத் திசைமானிக்குக் கீழ்ப்படிவது எப்படி சுலபமாயிருந்ததோ, அப்படியே உங்களுக்கு நித்திய சந்தோஷத்திற்கான நேரான மார்க்கத்தைக் காட்டுகிற, கிறிஸ்துவின் வார்த்தைக்குச் செவிகொடுப்பது சுலபமாயிருக்கும்.

For behold, it is as easy to give heed to the word of Christ, which will point to you a straight course to eternal bliss, as it was for our fathers to give heed to this compass, which would point unto them a straight course to the promised land.

45 இப்போது இக்காரியத்தில் ஒரு மாதிரி இல்லையா, என்று கேட்கிறேன். நம்முடைய பிதாக்கள் இந்த திசைகாட்டியின் மார்க்கத்தைப் பின்பற்றியபோது, அது அவர்களை வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குக் கொண்டு வந்தது போலவே, அப்படியே கிறிஸ்துவின் வார்த்தைகளின் மார்க்கத்தை நாம் பின்பற்றினால், அவை நம்மை இந்த சோகத்தின் பள்ளத்தாக்கிற்கும் அப்பாற்பட்ட, ஒரு மேன்மையான வாக்குத்தத்தத்தின் தேசத்திற்குக் கொண்டு செல்லும் என்பது, அதிக நிச்சயமே.

And now I say, is there not a type in this thing? For just as surely as this director did bring our fathers, by following its course, to the promised land, shall the words of Christ, if we follow their course, carry us beyond this vale of sorrow into a far better land of promise.

46 என் குமாரனே, இந்த வழியினுடைய இலகுவினி-
மித்தம், நாம் சோம்பல் அற்றவர்களாயிருப்போ-
மாக; அவர்கள் பார்த்தால், ஜீவிக்கும்படியாக அது
அவர்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த-
தால், நம்முடைய பிதாக்களுக்கும் இப்படியேதான்
சம்பவித்தது. நமக்கும் அப்படியேதான். வழி ஆயத்-
தம் பண்ணப்பட்டிருக்கிறது. நாமும் பார்த்தால்
நாம் என்றென்றுமாய் ஜீவிப்போம்.
47 இப்பொழுதும் என் குமாரனே, இந்தப் பரிசுத்தக்
காரியங்களைப் பராமரிக்கும்படி பார்த்துக்கொள்.
ஆம், நீ தேவனைப் பார்த்துப் பிழைத்திருக்கப்
பார்த்துக்கொள். இந்த ஜனங்களிடத்தில் போய்
வார்த்தையை அறிவித்து, தெளிந்த மனமுள்ள-
வனாயிரு. என் குமாரனே, போய் வா.

O my son, do not let us be slothful because of the easiness of the way; for so was it with our fathers; for so was it prepared for them, that if they would look they might live; even so it is with us. The way is prepared, and if we will look we may live forever.

And now, my son, see that ye take care of these sacred things, yea, see that ye look to God and live. Go unto this people and declare the word, and be sober. My son, farewell.

*ஆல்மா தன் குமாரனாகிய சிப்லோனுக்குக் கொ-
டுத்த கட்டளைகள்.*

# ஆல்மா 38

1 என் குமாரனே, என் வார்த்தைகளுக்குச் செவிகொ-
டு. நீ தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்-
கிற அளவில் தேசத்தில் விருத்தியடைவாய். நீ தே-
வனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமற்
போகிற அளவில், நீ அவருடைய சமுகத்திலிருந்து
அறுப்புண்டு போவாய், என்று நான் ஏலமனுக்குச்
சொன்னது போலவே உனக்கும் சொல்லுகிறேன்.

2 இப்பொழுதும் என் குமாரனே, தேவனில் நீ
கொண்டிருக்கிற உறுதி மற்றும் விசுவாசம் ஆகிய-
வைகளினிமித்தம், உன்னில் நான் அதிக சந்தோ-
ஷப்படுவேன், என்று நம்புகிறேன்; ஏனெனில், நீ
உன் வாலிபப்பிராயத்திலே தேவனாகிய உன் கர்த்-
தரை நோக்கிப் பார்க்க ஆரம்பித்திருக்கிறாய்; அப்-
படியே நீ அவருடைய கட்டளைகளைத் தொடர்ந்து
கைக்கொள்ளுவாய் என்றும் நம்புகிறேன்; முடிவுப-
ரியந்தமும் நிலைத்திருக்கிறவனே பாக்கியவான்.

3 என் குமாரனே, நான் உனக்குச் சொல்லுகிறேன்.
சோரமிய ஜனங்களுக்குள்ளே நீ விசுவாசமாயும்,
கருத்துள்ளவனாயும், பொறுமையாயும், நீடிய சாந்-
தமாயும் இருந்ததினிமித்தம், ஏற்கனவே உன்னில்
நான் சந்தோஷமடைந்தேன்.

4 நீ கட்டுண்டிருந்ததை நான் அறிவேன்; ஆம்,
வார்த்தையினிமித்தம் நீ கல்லெறியப்பட்டாய் என்-
றும் நான் அறிவேன்; கர்த்தர் உன்னோடு இருந்ததி-
னாலே இந்தக் காரியங்கள் யாவையும் பொறுமை-
யாய் சகித்திருந்தாய்; இப்பொழுது கர்த்தர் உன்-
னை விடுவித்ததையும் நீ அறிவாய்.

5 இப்பொழுதும், என் குமாரனாகிய சிப்லோனே, நீ
தேவனில் உன் நம்பிக்கையை வைக்கிற அளவில்
நீ உன் சோதனைகளிலும், உன் பிரச்சினைகளி-
லும், உன் உபத்திரவங்களிலுமிருந்தும் விடுவிக்-
கப்பட்டு, கடைசி நாளில் உயர்த்தப்படுவாய், என்று
நினைவுகூர வேண்டுமென, விரும்புகிறேன்.

6 என் குமாரனே, நான் இவைகளை நானாகவே
அறிந்து கொண்டேன், என்று நீ எண்ண வேண்டு-
மென்று நான் விரும்பவில்லை. ஆனால் எனக்-
குள்ளே இருக்கிற தேவ ஆவியானவரே இவைக-
ளை எனக்குத் தெரியப்பண்ணுகிறார்; ஏனெனில்
நான் தேவனில் ஜெனிக்கவில்லையெனில், இவை-
களைக் குறித்து நான் அறியாதிருந்திருப்பேன்.

*The commandments of Alma to his son Shiblon.*

# Alma 38

My son, give ear to my words, for I say unto you, even as I said unto Helaman, that inasmuch as ye shall keep the commandments of God ye shall prosper in the land; and inasmuch as ye will not keep the commandments of God ye shall be cut off from his presence.

And now, my son, I trust that I shall have great joy in you, because of your steadiness and your faithfulness unto God; for as you have commenced in your youth to look to the Lord your God, even so I hope that you will continue in keeping his commandments; for blessed is he that endureth to the end.

I say unto you, my son, that I have had great joy in thee already, because of thy faithfulness and thy diligence, and thy patience and thy long-suffering among the people of the Zoramites.

For I know that thou wast in bonds; yea, and I also know that thou wast stoned for the word's sake; and thou didst bear all these things with patience because the Lord was with thee; and now thou knowest that the Lord did deliver thee.

And now my son, Shiblon, I would that ye should remember, that as much as ye shall put your trust in God even so much ye shall be delivered out of your trials, and your troubles, and your afflictions, and ye shall be lifted up at the last day.

Now, my son, I would not that ye should think that I know these things of myself, but it is the Spirit of God which is in me which maketh these things known unto me; for if I had not been born of God I should not have known these things.

7 ஆனால் இதோ, நான் அவருடைய ஜனங்களுக்-
குள்ளே சங்காரக் கிரியையை நிறுத்தவேண்டு-
மென எனக்கு அறிவிக்கும்பொருட்டு, கர்த்தர் தம்-
முடைய மகா இரக்கத்தினிமித்தம் தமது தூதனை
அனுப்பினார்; ஆம், நான் முகமுகமாய் ஒரு தூ-
தனைப் பார்த்தேன். அவன் என்னுடனே பேசி-
னான். அவனுடைய சத்தம் இடிமுழக்கத்தைப் போ-
லிருந்தது. அது பூமியனைத்தையும் குலுக்கியது.

But behold, the Lord in his great mercy sent his angel to declare unto me that I must stop the work of destruction among his people; yea, and I have seen an angel face to face, and he spake with me, and his voice was as thunder, and it shook the whole earth.

8 அந்தப்படியே, மூன்று பகலும் மூன்று இரவுமாக,
நான் கொடிய வேதனையிலும், ஆத்தும வியாகு-
லத்திலும் இருந்தேன்; நான் கர்த்தராகிய இயேசு கி-
றிஸ்துவிடம் இரக்கத்திற்காக மன்றாடும்வரை என்
பாவங்களிலிருந்து மன்னிப்பைப் பெறவில்லை.
ஆனால் இதோ, நான் அவரிடத்தில் கூக்குரலிட்-
டேன். என் ஆத்தும சமாதானத்தைக் கண்டேன்.

And it came to pass that I was three days and three nights in the most bitter pain and anguish of soul; and never, until I did cry out unto the Lord Jesus Christ for mercy, did I receive a remission of my sins. But behold, I did cry unto him and I did find peace to my soul.

9 இப்பொழுதும் என் குமாரனே, நீ ஞானத்தைக் கற்-
கவும், மனுஷன் கிறிஸ்துவிலும், அவர் மூலமுமே-
யன்றி வேறெந்த வழியினாலும், முறையினாலும்
இரட்சிக்கப்படமுடியாதென்று நீ என்னிடமிருந்து
கற்க வேண்டுமென்பதற்காகவே, இதை உனக்குச்
சொன்னேன். இதோ, அவரே உலகத்தின் ஜீவனும்
ஒளியுமானவர். இதோ, அவரே சத்தியம் மற்றும் நீதி-
யின் வார்த்தையானவர்.

And now, my son, I have told you this that ye may learn wisdom, that ye may learn of me that there is no other way or means whereby man can be saved, only in and through Christ. Behold, he is the life and the light of the world. Behold, he is the word of truth and righteousness.

10 இப்போதும், நீ வசனத்தை போதிக்க ஆரம்பித்தி-
ருக்கிறதினால், நீ தொடர்ந்து போதிக்க வேண்டு-
மென்று நான் விரும்புகிறேன். நீ சகலத்திலும் கருத்-
தாயும், சுய கட்டுப்பாட்டோடும் இருக்கவேண்டு-
மென்று, நான் வாஞ்சிக்கிறேன்.

And now, as ye have begun to teach the word even so I would that ye should continue to teach; and I would that ye would be diligent and temperate in all things.

11 நீ பெருமையாயிராதபடி பார்த்துக்கொள். ஆம்,
உன்னுடைய ஞானத்திலோ அல்லது உன்னுடைய
அதிக பெலத்திலோ மேன்மை பாராட்டாதபடி
பார்த்துக்கொள்.

See that ye are not lifted up unto pride; yea, see that ye do not boast in your own wisdom, nor of your much strength.

12 தைரியத்தைப் பிரயோகி; ஆனால் அதிகப் பிர-
சங்கியாயிராதே, நீ அன்பால் நிறைக்கப்படும் பொ-
ருட்டு, உன் ஆசாபாசங்களை எல்லாம் கடிவாளமி-
டப் பார்த்துக்கொள்; நீ சோம்பலிலிருந்து விலகப்
பார்த்துக்கொள்.

Use boldness, but not overbearance; and also see that ye bridle all your passions, that ye may be filled with love; see that ye refrain from idleness.

13 சோரமியர் ஜெபிப்பதைப்போல ஜெபிக்காதே.
ஏனெனில் அவர்கள் மனுஷரால் கேட்கப்படும்
பொருட்டும், தங்களின் ஞானத்திற்காகப் புகழப்ப-
டும்படிக்கும் ஜெபிப்பதை நீ பார்த்திருக்கிறாய்.

Do not pray as the Zoramites do, for ye have seen that they pray to be heard of men, and to be praised for their wisdom.

14 தேவனே, நாங்கள் எங்களின் சகோதரரைப் பார்க்-
கிலும் உயர்வாய் இருப்பதற்காக, உமக்கு நான் நன்-
றி செலுத்துகிறேன் என்று சொல்லாமல், கர்த்தாவே,
என் அபாத்திரத் தன்மையை மன்னியும். என்
சகோதரரை இரக்கமாய் நினைவுகூர்ந்தருளும்,
என்று சொல். ஆம், தேவனுக்கு முன்பாக எப்பொ-
ழுதும் உன் அபாத்திரத் தன்மையை ஏற்றுக்கொள்.

Do not say: O God, I thank thee that we are better than our brethren; but rather say: O Lord, forgive my unworthiness, and remember my brethren in mercy—yea, acknowledge your unworthiness before God at all times.

15 கர்த்தர் உன் ஆத்துமாவை ஆசீர்வதித்து, நீ சமாதானமாய் அமரும் பொருட்டு, கடைசி நாளில் அவருடைய ராஜ்யத்தினுள் உன்னை ஏற்றுக்கொள்வாராக. என் குமாரனே, நீ போய் இந்த ஜனங்களுக்கு வசனத்தைப் போதி. தெளிந்த மனமுள்ளவனாயிரு. என் குமாரனே, போய்வா.

And may the Lord bless your soul, and receive you at the last day into his kingdom, to sit down in peace. Now go, my son, and teach the word unto this people. Be sober. My son, farewell.

*தன் குமாரனாகிய கொரியாந்தனுக்கு ஆல்மா கொடுத்த கட்டளைகள்.*

*The commandments of Alma to his son Corianton.*

## ஆல்மா 39

## Alma 39

1 இப்பொழுதும் என் குமாரனே, நான் உன் சகோதரனுக்குச் சொன்னதைக் காட்டிலும் உன்னிடம் சற்று அதிகமாய் சொல்ல வேண்டியுள்ளது; ஏனெனில் இதோ, உன் சகோதரன் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதில், விசுவாசமாயும், கருத்தாயும் இருப்பதில் உறுதியாயிருந்தை நீ கவனிக்கவில்லையா? இதோ அவன் உனக்கு நல் உதாரணமாய் இருக்கவில்லையா?

And now, my son, I have somewhat more to say unto thee than what I said unto thy brother; for behold, have ye not observed the steadiness of thy brother, his faithfulness, and his diligence in keeping the commandments of God? Behold, has he not set a good example for thee?

2 ஏனெனில், சோரமியருக்கு மத்தியிலே, உன் சகோதரன் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்ததைப் போல், நீ செவிகொடுக்கவில்லையே. இப்போது உனக்கு விரோதமாய் நினைக்க ஒரு காரியம் உண்டு, நீ உன் பெலத்திலும், உன் ஞானத்திலும் மேன்மை பாராட்டிக் கொண்டிருந்தாய்.

For thou didst not give so much heed unto my words as did thy brother, among the people of the Zoramites. Now this is what I have against thee; thou didst go on unto boasting in thy strength and thy wisdom.

3 என் குமாரனே, இது மாத்திரமல்ல, எனக்கு சஞ்சலம் ஏற்படுத்தும்படியான காரியத்தையும் செய்தாய்; நீ ஊழியத்தை விட்டுவிட்டு, இசபெல் என்ற வேசியைத் தேடி லாமானியரின் எல்லைகளில் அமைந்துள்ள சீரோன் தேசத்தினுள் போனாய்.

And this is not all, my son. Thou didst do that which was grievous unto me; for thou didst forsake the ministry, and did go over into the land of Siron among the borders of the Lamanites, after the harlot Isabel.

4 ஆம், அவள் அநேகருடைய உள்ளங்களை தன் வசப்படுத்தினாள்; ஆனால் என் குமாரனே, போக்குச் சொல்ல உனக்கு இடமில்லை. உன்னிடத்தில் பொறுப்பளிக்கப்பட்ட ஊழியத்தில் நீ பணியாற்றியிருக்கவேண்டும்.

Yea, she did steal away the hearts of many; but this was no excuse for thee, my son. Thou shouldst have tended to the ministry wherewith thou wast entrusted.

5 என் குமாரனே, இக்காரியங்கள் தேவனுடைய பார்வைக்கு அருவருப்பானவை என்று நீ அறிந்திருக்கவில்லையா; ஆம், இது குற்றமில்லாத இரத்தத்தைச் சிந்துதல், மற்றும் பரிசுத்த ஆவியை மறுதலித்தல் தவிர, பிற எல்லா பாவங்களையும் விட மிக அருவருப்பானது.

Know ye not, my son, that these things are an abomination in the sight of the Lord; yea, most abominable above all sins save it be the shedding of innocent blood or denying the Holy Ghost?

6 ஏனெனில் இதோ, உன்னிடம் ஒரு முறை பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்த பின்பு, நீ தெரிந்தே அதை மறுதலித்தால், இதோ, இது மன்னிக்கப்படமுடியாத பாவமாகும்; ஆம், தேவனுடைய ஒளிக்கும், ஞானத்திற்கும் விரோதமாய் கொலை செய்கிறவன் மன்னிப்பைப் பெறுவது சுலபமான காரியமல்ல; ஆம், என் குமாரனே, நான் உனக்குச் சொல்லுகிறேன், அவன் சுலபமாய் மன்னிப்பைப் பெறவே முடியாது.

For behold, if ye deny the Holy Ghost when it once has had place in you, and ye know that ye deny it, behold, this is a sin which is unpardonable; yea, and whosoever murdereth against the light and knowledge of God, it is not easy for him to obtain forgiveness; yea, I say unto you, my son, that it is not easy for him to obtain a forgiveness.

7 இப்பொழுது என் குமாரனே, அப்பேர்ப்பட்ட குற்றவாளியாக இருக்கக் கூடாதென்று நான் தேவனிடம் ஜெபிப்பேன். உன் நன்மைக்கேதுவாய் இராவிட்டால், உன் ஆத்துமா வேதனைப்படும்படியாக, உன் குற்றங்களைக் குறித்தே சொல்லிக் கொண்டிருக்க மாட்டேன்.

And now, my son, I would to God that ye had not been guilty of so great a crime. I would not dwell upon your crimes, to harrow up your soul, if it were not for your good.

8 ஆனால் இதோ, நீ உன் குற்றங்களை தேவனிடத்-
திலிருந்து மறைக்க முடியாது; நீ மனந்திரும்பாமற்
போனால், அவை கடைசி நாளில் உனக்கு விரோத-
மாய் சாட்சியமாய் நிற்கும்.

But behold, ye cannot hide your crimes from God; and except ye repent they will stand as a testimony against you at the last day.

9 இப்பொழுதும் என் குமாரனே, நீ மனந்திரும்பி,
உன் பாவங்களை விட்டுவிட்டு, உன் கண்களின்
இச்சைகளின் பின்னே இனி ஒருபோதும் போகா-
மல், அப்பேர்ப்பட்ட எல்லா காரியங்களையும் நீ
கட்டுப்படுத்த வேண்டும் என்று நான் வாஞ்சிக்கி-
றேன்; இதைச் செய்யவில்லையெனில், நீ தேவ ராஜ்-
யத்தை சுதந்தரிக்கவே முடியாது. நினைவுகூர். இந்-
தக் காரியங்களை நீ கட்டுப்படுத்தி இதை ஏற்றுக்-
கொள்.

Now my son, I would that ye should repent and forsake your sins, and go no more after the lusts of your eyes, but cross yourself in all these things; for except ye do this ye can in nowise inherit the kingdom of God. Oh, remember, and take it upon you, and cross yourself in these things.

10 நீ மேற்கொள்ளும் காரியங்களைக் குறித்து உன்
மூத்த சகோதரர்களிடம் ஆலோசிக்கும் எண்ணம்
கொள்ளவேண்டுமென்று, உனக்குக் கட்டளையிடு-
கிறேன். ஏனெனில் இதோ, நீ உன் வாலிபப்பிராயத்-
தில் இருக்கிறாய். நீ உன் சகோதரர்களால் போஷிக்-
கப்பட வேண்டியவனாய் இருக்கிறாய். அவர்களு-
டைய ஆலோசனைக்குச் செவிகொடு.

And I command you to take it upon you to counsel with your elder brothers in your undertakings; for behold, thou art in thy youth, and ye stand in need to be nourished by your brothers. And give heed to their counsel.

11 வீணானதும், புத்தியீனமுமான காரியம் எதுவா-
கிலும், அதனால் வழிநடத்தப்பட அனுமதியாதே.
அந்த துன்மார்க்க வேசிகளுக்குப் பின்னே உன்
இருதயம் பிசாசினால் மறுபடியும் வழிநடத்தப்ப-
டும்படிக்கு அவனுக்கு இடங்கொடாதே. இதோ, என்
குமாரனே சோரமியர் மேல் எவ்வளவு கொடிய அக்-
கிரமத்தை வரவழைத்தாய்; அவர்கள் உன் நடவ-
டிக்கையைப் பார்த்து, என் வார்த்தைகளை விசு-
வாசியாமற் போனார்கள்.

Suffer not yourself to be led away by any vain or foolish thing; suffer not the devil to lead away your heart again after those wicked harlots. Behold, O my son, how great iniquity ye brought upon the Zoramites; for when they saw your conduct they would not believe in my words.

12 உன் பிள்ளைகள், அநேக ஜனங்களினுடைய
இருதயங்களை அழிவிற்குள்ளாக வழிநடத்தாதப-
டி அவர்கள் நன்மையைச் செய்யக் கட்டளையிடு,
என்று கர்த்தருடைய ஆவி என்னிடம் சொல்கிறது.
ஆகவே, என் குமாரனே நீ உன் அக்கிரமங்களை
விட்டுவிட வேண்டுமென்று தேவ பயத்தோடுகூட
உனக்குக் கட்டளையிடுகிறேன்;

And now the Spirit of the Lord doth say unto me: Command thy children to do good, lest they lead away the hearts of many people to destruction; therefore I command you, my son, in the fear of God, that ye refrain from your iniquities;

13 உன் முழுமனதோடும், ஊக்கத்தோடும், பெலத்-
தோடும் கர்த்தரிடத்தில் திரும்பவேண்டுமென்றும்,
இனி யாருடைய இருதயத்தையும் துன்மார்க்கம்
செய்யும்படி வழிநடத்தாமல், அதற்குப் பதிலாக
அவர்களிடத்தில் திரும்பிப்போய், நீ செய்த தப்பி-
தங்களையும், தவறுகளையும் ஒப்புக் கொள்ள
வேண்டுமென்றும், உனக்குக் கட்டளையிடுகிறேன்.

That ye turn to the Lord with all your mind, might, and strength; that ye lead away the hearts of no more to do wickedly; but rather return unto them, and acknowledge your faults and that wrong which ye have done.

14 இவ்வுலகத்தினுடைய ஐஸ்வரியத்தையோ, வீ-
ணானவைகளையோ தேடிப்போகாதே; ஏனெனில்
இதோ அவைகளை உன்னோடுகூட நீ எடுத்துக்
கொண்டு போக முடியாது.

Seek not after riches nor the vain things of this world; for behold, you cannot carry them with you.

15 இப்பொழுதும், என் குமாரனே, கிறிஸ்துவினு-
டைய வரவைக் குறித்து உன்னிடத்தில் சிலவற்-
றைச் சொல்ல வாஞ்சிக்கிறேன். இதோ, நான் உனக்-
குச் சொல்லுகிறேன். மெய்யாகவே உலகத்தினு-
டைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படி வருகிற-
வர் அவரே; ஆம், அவர் தம்முடைய ஜனத்திற்கு
இரட்சிப்பைப் பற்றிய நற்செய்திகளை அறிவிக்க
வருகிறார்.

And now, my son, I would say somewhat unto you concerning the coming of Christ. Behold, I say unto you, that it is he that surely shall come to take away the sins of the world; yea, he cometh to declare glad tidings of salvation unto his people.

16 இப்பொழுதும் என் குமாரனே, இந்த ஜனங்களுக்-
கு இந்த நற்செய்தியை அறிவிக்கவும், அவர்களு-
டைய மனங்களை ஆயத்தப்படுத்த, அழைக்கப்-
பட்ட ஊழியம் இதுவே. அல்லது அவருடைய வரு-
கையின்போது, அவர்கள் இரட்சிக்கப்படவும்,
வார்த்தையைக் கேட்கும்படியாக தங்கள் பிள்ளை-
களின் மனங்களை ஆயத்தப்படுத்தவுமே.

And now, my son, this was the ministry unto which ye were called, to declare these glad tidings unto this people, to prepare their minds; or rather that salvation might come unto them, that they may prepare the minds of their children to hear the word at the time of his coming.

17 இப்பொழுது இதைக் குறித்து உன் மனதை சற்று
இலகுவாக்குவேன். இதோ, இவைகள் ஏன் அதிக
முன்னமே அறியப்படுத்தப்பட வேண்டுமென்று நீ
ஆச்சரியப்படுகிறாய்; இதோ, நான் உனக்குச் சொல்-
லுகிறேன், அவருடைய வருகையின்போது இருக்-
கும் ஆத்துமா போலவே இக்காலத்திலிருக்கும் ஒரு
ஆத்துமாவும் தேவனுக்கு விலையேறப்பெற்றது
அல்லவா?

And now I will ease your mind somewhat on this subject. Behold, you marvel why these things should be known so long beforehand. Behold, I say unto you, is not a soul at this time as precious unto God as a soul will be at the time of his coming?

18 இந்த ஜனங்களுக்கும், அவர்களுடைய பிள்ளை-
களுக்கும், இந்த மீட்பின் திட்டம் அறிவிக்கப்படுவ-
து அவசியமன்றோ?

Is it not as necessary that the plan of redemption should be made known unto this people as well as unto their children?

19 இந்த நற்செய்தியை நமது பிள்ளைகளைப்-
போல, நமக்கும் அறிவிக்க, கர்த்தர் தமது தூதனை
இச்சமயத்தில் அனுப்புவது சுலபமா, அல்லது அவ-
ருடைய வருகையின் பின்புள்ள சமயத்திலா?

Is it not as easy at this time for the Lord to send his angel to declare these glad tidings unto us as unto our children, or as after the time of his coming?

# ஆல்மா 40

1 இப்பொழுதும் என் குமாரனே, உன் மனம் மரித்தோ-
ரின் உயிர்த்தெழுதலைக் குறித்து சஞ்சலப்பட்டி-
ருப்பதை நான் உணர்ந்ததால், உனக்கு அதிகமாக
நான் சொல்ல விரும்புகிறவைகள் இவைகளே.
2 இதோ, நான் உனக்குச் சொல்லுகிறேன், கிறிஸ்து-
வின் வருகை வரை உயிர்த்தெழுதல் இல்லை, அல்-
லது வேறு வார்த்தைகளிலெனில் எனில் அழிவுக்-
கேதுவானது அழியாமையை தரிப்பதில்லை, சா-
வானது சாவாமையை தரிப்பதில்லை.
3 இதோ, அவர் மரித்தோரின் உயிர்த்தெழுதலை சம்-
பவிக்கப்பண்ணுகிறார். ஆனால் இதோ, என் குமா-
ரனே உயிர்த்தெழுதல் இன்னும் சம்பவிக்கவில்லை.
இப்பொழுது நான் உனக்கொரு இரகசியத்தை வெ-
ளியாக்குகிறேன்; ஆயினும் பாதுகாக்கப்பட்ட
அநேக இரகசியங்களுண்டு. அவைகளை தேவனே-
யல்லாமல், வேறொருவரும் அறியார். நான் அறி-
யும்படிக்கு தேவனிடத்தில் கருத்தாய் நான் கேட்ட,
உயிர்த்தெழுதலைக் குறித்த, அந்தக் காரியத்தை
உனக்குக் காண்பிக்கிறேன்.
4 இதோ, மரித்தோரிலிருந்து யாவரும் எழும்பும்படி-
யாக ஒரு காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்-
பொழுது இக்காலம் எப்போது வருமென்று ஒருவ-
ரும் அறியார்; ஆனால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற
காலத்தை தேவன் அறிவார்.
5 மனுஷர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவது மு-
தல் முறையிலா அல்லது இரண்டாவது முறையி-
லா, அல்லது மூன்றாவது முறையிலா என்பது முக்-
கியமல்ல; ஏனெனில் தேவன் இக்காரியங்கள் யா-
வையும் அறிந்திருக்கிறார்; மரித்தோரிலிருந்து யா-
வரும் உயிர்த்தெழும்படியாக ஒரு காலம் நிர்ணயிக்-
கப்பட்டிருக்கிறது, என்று நான் அறிவதே எனக்குப்
போதுமானதாயிருக்கிறது.
6 மரிக்கும் காலத்திற்கும் உயிர்த்தெழும் காலத்திற்-
கும் ஓர் இடைவெளி அவசியமே.
7 இப்பொழுதும் மரணகாலத்திலிருந்து, உயிர்த்-
தெழ நிர்ணயிக்கப்பட்டிருக்கும் காலம் வரைக்கும்,
மனுஷ ஆத்துமாக்களுக்கு சம்பவிப்பது என்ன,
என்று கேட்கிறேன்.
8 இப்பொழுது மனுஷர் உயிர்த்தெழ ஒன்றுக்கும்
மேற்பட்ட காலங்கள் உள்ளதா என்பது முக்கிய-
மல்ல; ஏனெனில் அனைவரும் ஒரே சமயத்தில்
மரிப்பதில்லையே. இதுவும் முக்கியமல்ல, அனைத்-
தும் தேவனுக்கு ஒரு நாளைப் போலிருக்கிறது.
மனுஷருக்கு மாத்திரம் காலம் அளக்கப்படுகிறது.

# Alma 40

Now my son, here is somewhat more I would say unto thee; for I perceive that thy mind is worried concerning the resurrection of the dead.

Behold, I say unto you, that there is no resurrection—or, I would say, in other words, that this mortal does not put on immortality, this corruption does not put on incorruption—until after the coming of Christ.

Behold, he bringeth to pass the resurrection of the dead. But behold, my son, the resurrection is not yet. Now, I unfold unto you a mystery; nevertheless, there are many mysteries which are kept, that no one knoweth them save God himself. But I show unto you one thing which I have inquired diligently of God that I might know—that is concerning the resurrection.

Behold, there is a time appointed that all shall come forth from the dead. Now when this time cometh no one knows; but God knoweth the time which is appointed.

Now, whether there shall be one time, or a second time, or a third time, that men shall come forth from the dead, it mattereth not; for God knoweth all these things; and it sufficeth me to know that this is the case—that there is a time appointed that all shall rise from the dead.

Now there must needs be a space betwixt the time of death and the time of the resurrection.

And now I would inquire what becometh of the souls of men from this time of death to the time appointed for the resurrection?

Now whether there is more than one time appointed for men to rise it mattereth not; for all do not die at once, and this mattereth not; all is as one day with God, and time only is measured unto men.

9 ஆதலால் மரணத்திலிருந்து எழும்பும்படியாக
மனுஷருக்கு ஓர் காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற-
து; மரணகாலத்திற்கும், உயிர்த்தெழும் காலத்திற்கு-
மிடையே இடைவெளி உண்டு. இப்பொழுது இந்த
இடைவெளி நேரத்தில் மனுஷருடைய ஆத்துமாக்-
களுக்கு சம்பவிப்பதென்ன என்பதே, நான் அறிய
கர்த்தரிடத்தில் கருத்தாய் விசாரித்த காரியமாயி-
ருக்கிறது; நான் அறிந்த காரியம் இதுவே.

Therefore, there is a time appointed unto men that they shall rise from the dead; and there is a space between the time of death and the resurrection. And now, concerning this space of time, what becometh of the souls of men is the thing which I have inquired diligently of the Lord to know; and this is the thing of which I do know.

10 சகலமானோரும் உயிர்த்தெழும் காலம் வரும்போ-
து, மனுஷனுக்கென்று நிர்ணயிக்கப்பட்ட காலங்-
கள் யாவையும் தேவன் அறிகிறார் என்று, அவர்-
கள் அறிந்து கொள்வார்கள்.

And when the time cometh when all shall rise, then shall they know that God knoweth all the times which are appointed unto man.

11 இதோ மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும்
இடையே ஆத்துமாவின் நிலையென்ன என்பதைக்
குறித்து, இதோ, ஒரு தூதனால் எனக்குத் தெரிவிக்-
கப்பட்டிருக்கிறது. சகல மனுஷருடைய ஆவிக-
ளும் இந்த அழிவுக்கேதுவான சரீரத்திலிருந்து வெ-
ளியே போனவுடனே, ஆம், நல்லவர்களோ, தீயவர்-
களோ சகல மனுஷருடைய ஆவிகளும் அவர்க-
ளுக்கு ஜீவன் தந்த தேவனிடத்துக்கு எடுத்துக்
கொள்ளப்படும்.

Now, concerning the state of the soul between death and the resurrection—Behold, it has been made known unto me by an angel, that the spirits of all men, as soon as they are departed from this mortal body, yea, the spirits of all men, whether they be good or evil, are taken home to that God who gave them life.

12 நீதிமான்களின் ஆவிகள் பரதீசு என்றும்,
இளைப்பாறும் நிலையென்றும், சமாதான நிலை-
யென்றும் அழைக்கப்படுகிற மகிழ்ச்சி நிலையி-
னுள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். அங்கே
அவர்கள் தங்களின் சகல பிரச்சினைகளிலிருந்-
தும், சகல தேவைகளிலிருந்தும், துன்பங்களிலி-
ருந்தும் இளைப்பாறுவார்கள்.

And then shall it come to pass, that the spirits of those who are righteous are received into a state of happiness, which is called paradise, a state of rest, a state of peace, where they shall rest from all their troubles and from all care, and sorrow.

13 இதோ நன்மையல்லாமல் தீய கிரியைகளைத்
தெரிந்து கொண்ட பொல்லாதவர்களாகிய, ஆம்,
துன்மார்க்கரின் ஆவிகள், கர்த்தருடைய ஆவி-
யின் ஓர் பங்கையோ அல்லது பகுதியையோ
கொண்டிருப்பதில்லை. ஏனெனில் இதோ, நன்மை-
யை விட தீமையை தெரிந்துகொள்கிறார்கள். ஆத-
லால் இதோ பிசாசின் ஆவி அவர்களுக்குள் புகுந்-
து, அவர்களுடைய வீடுகளை ஆக்கிரமித்தன.
இவர்கள் புறம்பான இருளினுள்ளே தள்ளப்படு-
வார்கள்; அங்கே அழுகையும், புலம்பலும் பற்கடிப்-
பும் உண்டாயிருக்கும். இது பிசாசினுடைய சித்தத்-
தினால் சிறைபிடித்துக் கொண்டுபோகப்பட்ட,
அவர்களுடைய சொந்த அக்கிரமத்தினாலேயே.

And then shall it come to pass, that the spirits of the wicked, yea, who are evil—for behold, they have no part nor portion of the Spirit of the Lord; for behold, they chose evil works rather than good; therefore the spirit of the devil did enter into them, and take possession of their house—and these shall be cast out into outer darkness; there shall be weeping, and wailing, and gnashing of teeth, and this because of their own iniquity, being led captive by the will of the devil.

14 காரிருளிலும், அஞ்சத்தக்க நிலையிலுமிருந்து,
தங்கள்மீது தேவனுடைய கோபாக்கினையை
பயத்தோடு எதிர்நோக்குகிற துன்மார்க்க ஆத்து-
மாக்களின் நிலை இதுவே; தங்கள் உயிர்த்தெழுத-
லின் காலம் வரைக்கும் இவர்கள் இந்த நிலையி-
லும், நீதிமான்கள் பரதீசிலுமிருப்பார்கள்.

Now this is the state of the souls of the wicked, yea, in darkness, and a state of awful, fearful looking for the fiery indignation of the wrath of God upon them; thus they remain in this state, as well as the righteous in paradise, until the time of their resurrection.

15 இப்பொழுதும் உயிர்த்தெழுதலுக்கு முன்பு ஆத்துமா இருக்கிற இந்த மகிழ்ச்சியின் நிலையையும், துர்பாக்கிய நிலையையும், முதலாம் உயிர்த்தெழுதல் என்று சிலர் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆம், ஆவியோ, ஆத்துமாவோ எழுவதும், பேசப்பட்ட வார்த்தைகளின்படி அவைகள் மகிழ்ச்சிக்கோ, துர்பாக்கியத்திற்கோ அனுப்பப்படுதலும் உயிர்த்தெழுதல் என்று அழைக்கப்பெறலாம், என்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

Now, there are some that have understood that this state of happiness and this state of misery of the soul, before the resurrection, was a first resurrection. Yea, I admit it may be termed a resurrection, the raising of the spirit or the soul and their consignation to happiness or misery, according to the words which have been spoken.

16 இதோ, இருந்தவர்களும், இருக்கிறவர்களும், மரித்தோரிலிருந்து கிறிஸ்து உயிர்த்தெழும்போது, இருக்கப்போகிறவர்களுமாகிய யாவருடைய உயிர்த்தெழுதலும் முதலாம் உயிர்த்தெழுதல் என்று மறுபடியும் இது சொல்லப்பட்டிருக்கிறது.

And behold, again it hath been spoken, that there is a first resurrection, a resurrection of all those who have been, or who are, or who shall be, down to the resurrection of Christ from the dead.

17 இவ்விதமாய்ச் சொல்லப்பட்ட இந்த முதலாம் உயிர்த்தெழுதல், ஆத்துமாக்களின் உயிர்த்தெழுதலும், அவைகளின் மகிழ்ச்சிக்கும் துர்பாக்கியத்திற்கும் ஒப்படைப்பதாய் இருக்கமுடியும், என்று நாம் எண்ணுவதில்லை. நீயும் இதுதான் அதன் பொருள் என்று எண்ண முடியாது.

Now, we do not suppose that this first resurrection, which is spoken of in this manner, can be the resurrection of the souls and their consignation to happiness or misery. Ye cannot suppose that this is what it meaneth.

18 இதோ, அப்படியல்ல என்று நான் உனக்குச் சொல்லுகிறேன்; ஆனால் ஆதாமின் நாட்கள் துவங்கி கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரைக்குமாய் இருந்தோருடைய, ஆத்துமா சரீரத்தோடு மறுபடியும் சேருதலே அதன் அர்த்தமாகும்.

Behold, I say unto you, Nay; but it meaneth the reuniting of the soul with the body, of those from the days of Adam down to the resurrection of Christ.

19 துன்மார்க்கரும், நீதிமான்களுமான சொல்லப்பட்ட யாவருடைய ஆத்துமாக்களும், சரீரங்களும் ஒரே சமயத்தில் மறுபடியும் சேரும், என்று நான் சொல்லவில்லை; அவர்களில் சகலமானோரும் எழுவார்கள். அல்லது வேறு வார்த்தைகளிலெனில் அவர்களுடைய உயிர்த்தெழுதல், கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, மரிப்போருடைய உயிர்த்தெழுதலின் முன்னே சம்பவிக்குமென்று, நான் சொல்லுவதே போதுமானதாயிருக்கிறது.

Now, whether the souls and the bodies of those of whom has been spoken shall all be reunited at once, the wicked as well as the righteous, I do not say; let it suffice, that I say that they all come forth; or in other words, their resurrection cometh to pass before the resurrection of those who die after the resurrection of Christ.

20 இப்பொழுதும், என் குமாரனே, அவர்களுடைய உயிர்த்தெழுதல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின்போது வருமென்று நான் சொல்லவில்லை. ஆனால் இதோ, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின்போதும், அவர் பரத்திற்கேறும்போதும், நீதிமான்களுடைய ஆத்துமாக்களும், சரீரங்களும் மறுபடியும் ஒன்றாய்ச் சேரும், என்ற என் கருத்தைச் சொல்லுகிறேன்.

Now, my son, I do not say that their resurrection cometh at the resurrection of Christ; but behold, I give it as my opinion, that the souls and the bodies are reunited, of the righteous, at the resurrection of Christ, and his ascension into heaven.

21 அது அவரின் உயிர்த்தெழுதலின்போது சம்பவிக்குமா அல்லது அதற்குப் பின்பாவென்று நான் சொல்லவில்லை; ஆனாலும் மரித்தோர் எழுந்து வந்து, சரீரமும் ஆத்துமாவுமாக இரண்டும் மறுபடியும் இணைக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக நிற்கும்படி கொண்டுவரப்பட்டு, அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும், தேவனால் நிர்ணயிக்கப்பட்ட காலம்வரைக்கும், மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும், இடையே ஒரு இடைவெளியும், சந்தோஷத்தில் அல்லது துர்பாக்கியத்தில் ஆத்துமாவின் ஒரு நிலையுமிருக்கும் என்று மாத்திரம் சொல்லுகிறேன்.

But whether it be at his resurrection or after, I do not say; but this much I say, that there is a space between death and the resurrection of the body, and a state of the soul in happiness or in misery until the time which is appointed of God that the dead shall come forth, and be reunited, both soul and body, and be brought to stand before God, and be judged according to their works.

22 ஆம், இது தீர்க்கதரிசிகளின் வாயால் சொல்லப்பட்ட அந்தக் காரியங்களை மறுபடியும் கொண்டுவருகிறது.

Yea, this bringeth about the restoration of those things of which has been spoken by the mouths of the prophets.

23 ஆத்துமா சரீரத்தோடும், சரீரம் ஆத்துமாவோடும் திரும்பிச் சேர்க்கப்படும்; ஆம், சகல கை, கால்களும், மூட்டுகளும், தங்களுடைய சரீரங்களுடன் திரும்பவும் சேர்க்கப்படும்; ஆம், தலைமயிரில் ஒன்றாகிலும் தொலைந்து போகாது; ஆனால் சகலமும் அவைகளினுடைய ஒழுங்கான பரிபூரண அமைப்பிலே திரும்பச் சேர்க்கப்படும்.

The soul shall be restored to the body, and the body to the soul; yea, and every limb and joint shall be restored to its body; yea, even a hair of the head shall not be lost; but all things shall be restored to their proper and perfect frame.

24 இப்பொழுதும், என் குமாரனே, திரும்பச் சேர்க்கப்படும் என்று தீர்க்கதரிசிகளின் வாயால் சொல்லப்பட்ட காரியம் இதுவே.

And now, my son, this is the restoration of which has been spoken by the mouths of the prophets—

25 நீதிமான்கள் தேவ இராஜ்ஜியத்தில் அதன் பின்பு பிரகாசிப்பார்கள்.

And then shall the righteous shine forth in the kingdom of God.

26 ஆனால் இதோ, துன்மார்க்கர் மீது பயங்கர மரணமொன்று வருகிறது; ஏனெனில் அவர்கள் நீதிக்கேதுவானவைகளைக் குறித்த காரியங்களுக்கு மரித்துப் போகிறார்கள்; ஏனெனில் அவர்கள் அசுத்தமுள்ளவர்களாய் இருக்கிறார்கள். அசுத்தமுள்ள எதுவும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது; ஆனால் அவர்கள் தள்ளப்பட்டு, பொல்லாதவைகளான தங்களுடைய பிரயாசங்கள் அல்லது தங்களுடைய கிரியைகளின் கனிகளைப் புசிக்கும்படி ஒப்புவிக்கப்படுகிறார்கள்; அவர்கள் கசப்பான பாத்திரத்தின் வண்டல்களைக் குடிக்கிறார்கள்.

But behold, an awful death cometh upon the wicked; for they die as to things pertaining to things of righteousness; for they are unclean, and no unclean thing can inherit the kingdom of God; but they are cast out, and consigned to partake of the fruits of their labors or their works, which have been evil; and they drink the dregs of a bitter cup.

# ஆல்மா 41

1 இப்பொழுதும், என் குமாரனே, பேசப்பட்டுள்ள தி-
ரும்பச் சேர்த்தலைக் குறித்து நான் சொல்லவேண்-
டியது உண்டு; இதோ, சிலர் வேத வாக்கியங்களைப்
புரட்டி, இதினிமித்தம் வழிதப்பிப்போனார்கள்.
இதைக் குறித்தும் உன் மனது வருத்தப்படுகிற-
தென்று நான் உணர்கிறேன். ஆனால் இதோ, அதை
நான் உனக்கு விளக்கிச் சொல்வேன்.
2 என் குமாரனே, நான் உனக்குச் சொல்லுகிறேன்.
தேவ நியாயத்துக்கு திரும்பச் சேர்க்கும் திட்டம்
அவசியமாயிருக்கிறது; இதோ, சகலமும் தங்களு-
டைய முறையான ஒழுங்கிற்குச் சேர்க்கப்படுவது
அவசியமே. இதோ கிறிஸ்துவினுடைய வல்ல-
மைக்கும் உயிர்த்தெழுதலுக்கும் தக்கதாக, மனு-
ஷனுடைய ஆத்துமா தன்னுடைய சரீரத்துடன் தி-
ரும்பச் சேர்க்கப்படுவதும், சரீரத்தின் ஒவ்வொரு
அங்கமும் தன்னிடத்தே திரும்பச் சேர்க்கப்படுவ-
தும் அவசியமும் நியாயமுமாயிருக்கிறது.
3 மனுஷர் தங்களுடைய கிரியைகளின்படி நியா-
யந்தீர்க்கப்படவேண்டியது தேவனுடைய நியாயத்-
தின் பிரகாரம் அவசியமானதே; அவர்களுடைய கி-
ரியைகள் இவ்வாழ்க்கையில் நல்லதாயும், அவர்க-
ளுடைய இருதயங்களின் வாஞ்சைகள் நன்மையு-
மாயிருந்தால், அவர்களும் கடைசி நாளின்போது
நன்மையானதற்குத் திரும்பச் சேர்க்கப்படவேண்-
டும்.
4 அவர்களுடைய கிரியைகள் பொல்லாதவைக-
ளாயிருக்குமானால், அவர்களும் பொல்லாதவை-
களோடு திரும்பச் சேர்க்கப்படுவார்கள். ஆதலால்
அனைத்தும் தங்களுடைய முறையான ஒழுங்கிற்-
கும், ஒவ்வொன்றும் தன்னுடைய சுபாவ வடிவத்-
திற்குமாய் திரும்பச் சேர்க்கப்படும். சாவுக்கேதுவா-
னது சாவாமைக்கும், அழிவுக்கேதுவானது அழியா-
மைக்கும் எழுப்பப்படும். ஒன்று ஒருபுறத்திலும்
மற்றொன்று மறுபுறத்திலுமாக, முடிவற்ற சந்தோ-
ஷத்தைப் பெறும்படி தேவ ராஜ்ஜியத்தை சுதந்த-
ரிக்கவோ அல்லது முடிவற்ற தவிப்பைப் பெறும்ப-
டி பிசாசின் ராஜ்யத்தைச் சுதந்தரிக்கவோ எழுப்பப்-
படுவார்கள்.
5 ஒருவன் தன்னுடைய மகிழ்ச்சியான வாஞ்சைக-
ளின்படி மகிழ்ச்சிக்கும் அல்லது தன்னுடைய நன்-
மையான வாஞ்சைகளின்படி நன்மைக்கும் எழுப்-
பப்படுவான்; மற்றொருவன் தன்னுடைய துன்-
மார்க்க வாஞ்சைகளின்படி துன்மார்க்கத்திற்கும்
எழுப்பப்படுவான்; அவன் நாள் முழுவதும் பொல்-
லாப்பைச் செய்ய விரும்பினதெப்படியோ, அப்படி-
யே இரவு வரும்போது அவன் தன் பொல்லாப்பின்
பலனைப் பெறுவான்.

# Alma 41

And now, my son, I have somewhat to say concerning the restoration of which has been spoken; for behold, some have wrested the scriptures, and have gone far astray because of this thing. And I perceive that thy mind has been worried also concerning this thing. But behold, I will explain it unto thee.

I say unto thee, my son, that the plan of restoration is requisite with the justice of God; for it is requisite that all things should be restored to their proper order. Behold, it is requisite and just, according to the power and resurrection of Christ, that the soul of man should be restored to its body, and that every part of the body should be restored to itself.

And it is requisite with the justice of God that men should be judged according to their works; and if their works were good in this life, and the desires of their hearts were good, that they should also, at the last day, be restored unto that which is good.

And if their works are evil they shall be restored unto them for evil. Therefore, all things shall be restored to their proper order, every thing to its natural frame—mortality raised to immortality, corruption to incorruption—raised to endless happiness to inherit the kingdom of God, or to endless misery to inherit the kingdom of the devil, the one on one hand, the other on the other—

The one raised to happiness according to his desires of happiness, or good according to his desires of good; and the other to evil according to his desires of evil; for as he has desired to do evil all the day long even so shall he have his reward of evil when the night cometh.

6 ஆகவே இது அதற்கு மாறாக இருக்கிறது. அவன் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தன் நாட்கள் முடியும் மட்டும் நீதியை வாஞ்சித்திருந்தால் அவன் நீதிக்கடுத்த பிரதிபலனைப் பெறுவான்.

And so it is on the other hand. If he hath repented of his sins, and desired righteousness until the end of his days, even so he shall be rewarded unto righteousness.

7 இவர்களே கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள்; ஆம், இவர்களே காரிருளான அந்த முடிவற்ற இரவிலிருந்து வெளிக்கொண்டுவரப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்கள்; இப்படியாக அவர்கள் நிற்கிறார்கள், அல்லது விழுகிறார்கள். இதோ, நன்மை செய்வதற்கும், அல்லது தீமை செய்வதற்கும், அவரவர் தங்களுக்குத் தாங்களே நியாயாதிபதிகளாய் இருக்கிறார்கள்.

These are they that are redeemed of the Lord; yea, these are they that are taken out, that are delivered from that endless night of darkness; and thus they stand or fall; for behold, they are their own judges, whether to do good or do evil.

8 இப்போது, தேவனுடைய கட்டளைகள் மாறாதவை; ஆகவே வழி ஆயத்தமாக்கப்பட்டிருப்பதால், அவ்வழியே நடப்பவர்கள் இரட்சிக்கப்படுவார்கள்.

Now, the decrees of God are unalterable; therefore, the way is prepared that whosoever will may walk therein and be saved.

9 இப்பொழுதும் இதோ, என் குமாரனே, இந்நாள் மட்டும் துணிந்து பாவம் செய்ததைப்போல, கோட்பாட்டின் அக்கொள்கைகளை இன்னொரு முறை மீறாமல், உன் தேவனுக்கு விரோதமாய் தவறு செய்யாமலும் இரு.

And now behold, my son, do not risk one more offense against your God upon those points of doctrine, which ye have hitherto risked to commit sin.

10 திரும்பச் சேர்தலைக் குறித்து பேசப்பட்டிருப்பதாலே, நீயும் பாவத்திலிருந்து மகிழ்ச்சிக்கு திரும்பச் சேர்க்கப்படுவாயென்று எண்ணிவிடாதே. இதோ, நான் உனக்குச் சொல்லுகிறேன், துன்மார்க்கமானது எப்போதும் மகிழ்ச்சியாயிருந்ததில்லை.

Do not suppose, because it has been spoken concerning restoration, that ye shall be restored from sin to happiness. Behold, I say unto you, wickedness never was happiness.

11 இப்பொழுதும், என் குமாரனே, சுபாவ நிலையிலோ அல்லது மாம்ச நிலையிலோ இருக்கிற சகல மனுஷரும், கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் இருக்கிறார்கள், என்பேன். அவர்கள் உலகத்தில் தேவனில்லாதிருக்கிறார்கள். அவர்கள் தேவ சுபாவத்திற்கு மாறாக நடந்து கொண்டார்கள்; ஆதலால், அவர்கள் மகிழ்ச்சியான நிலைக்கு மாறான ஓர் நிலையிலிருக்கிறார்கள்.

And now, my son, all men that are in a state of nature, or I would say, in a carnal state, are in the gall of bitterness and in the bonds of iniquity; they are without God in the world, and they have gone contrary to the nature of God; therefore, they are in a state contrary to the nature of happiness.

12 இப்பொழுதும் இதோ, திரும்பச் சேர்க்கப்படுதல் என்பதற்கு ஒன்றை சுபாவ நிலையிலிருந்து எடுத்து, சுபாவமற்ற நிலையில் வைப்பது அல்லது அதனுடைய சுபாவத்திற்கு முரணான நிலையில் வைப்பது என்றா அர்த்தம்?

And now behold, is the meaning of the word restoration to take a thing of a natural state and place it in an unnatural state, or to place it in a state opposite to its nature?

13 என் குமாரனே, அது அப்படியல்ல; திரும்பச் சேர்க்கப்படுதல் என்ற வார்த்தைக்கு அர்த்தமென்னவெனில், பொல்லாப்புக்கு பொல்லாப்பையும், மாம்ச சிந்தனைக்கு மாம்ச சிந்தனையையும், பேய்த்தனத்திற்கு பேய்த்தனத்தையும், நன்மைக்கு நன்மையையும், நேர்மையுள்ளதற்கு நேர்மையானதையும், நீதியுள்ளதற்கு நீதியானதையும், இரக்கமுள்ளதற்கு இரக்கமானதையும் திரும்பிக்கொண்டு வருதலே ஆகும்.

O, my son, this is not the case; but the meaning of the word restoration is to bring back again evil for evil, or carnal for carnal, or devilish for devilish—good for that which is good; righteous for that which is righteous; just for that which is just; merciful for that which is merciful.

14 ஆதலால் என் குமாரனே, உன் சகோதரரிடத்தில் நீ இரக்கமாயிருக்கப் பார்த்துக்கொள்; நியாயமாயிரு, நீதியாய் நியாயந்தீர்த்து, இடைவிடாமல் நன்மை செய்துகொண்டு இரு; இவை அனைத்தையும் நீ செய்வாயாகில், உன் பலனைப் பெற்றுக் கொள்வாய்; ஆம், உன்னிடத்தில் இரக்கம் மறுபடியும் வந்து சேரும்; உன்னிடத்தில் நியாயம் மறுபடியும் வந்து சேரும்; உன்னிடத்தில் மறுபடியும் நீதியான நியாயத்தீர்ப்பு வந்து சேரும்; நீ நன்மையால் மறுபடியும் பலனளிக்கப்படுவாய்.

Therefore, my son, see that you are merciful unto your brethren; deal justly, judge righteously, and do good continually; and if ye do all these things then shall ye receive your reward; yea, ye shall have mercy restored unto you again; ye shall have justice restored unto you again; ye shall have a righteous judgment restored unto you again; and ye shall have good rewarded unto you again.

15 ஏனெனில் நீ அனுப்புகிறதெதுவோ அதுவே உன்னிடத்தில் மறுபடியும் திரும்ப வந்து சேரும்; ஆதலால், திரும்பச் சேர்த்தல் என்ற வார்த்தை பாவியை நியாயவானெனத் தீர்க்காமல் அவனை அதிகமாய் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது.

For that which ye do send out shall return unto you again, and be restored; therefore, the word restoration more fully condemneth the sinner, and justifieth him not at all.

# ஆல்மா 42

1 இப்பொழுதும் என் குமாரனே, நீ புரிந்து கொள்ளமுடியாத சில காரியங்கள் உன் மனதை சஞ்சலப்படுத்துகின்றன, என உணர்கிறேன். அது பாவியை தண்டிக்கிற தேவனுடைய நியாயத்தைப்பற்றிய காரியமாயிருக்கிறது; ஏனெனில் பாவியை பரிதாப நிலைக்குத் தள்ளுவது அநியாயம், என்று நீ எண்ண முற்படுகிறாய்.

2 இப்பொழுதும் இதோ, என் குமாரனே, இந்தக் காரியத்தை உனக்கு விளங்கச் செய்கிறேன். இதோ, தேவனாகிய கர்த்தர் நம்முடைய முதற் பெற்றோரை அவர்கள் உண்டாக்கப்பட்ட அதே நிலத்தைப் பண்படுத்தும்படியாக, ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்ட பின்பு, ஆம், அவர் மனுஷனைத் துரத்திவிட்ட பின்னர், ஜீவ விருட்சத்தைக் காக்கவும், அதற்குப் போகிற ஒவ்வொரு வழியையும் அடைக்கும் பொருட்டும், அவர் ஏதேன் தோட்டத்தின் கிழக்கு முனையிலே கேருபீன்களையும், சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.

3 இப்பொழுது மனுஷன் நன்மை தீமை அறிந்து தேவனாக ஆகியிருக்கிறான், என்று பார்க்கிறோம்; அவன் தன் கையை நீட்டி, ஜீவ விருட்சத்தினுடையதையும் பறித்து, புசித்து என்றென்றும் ஜீவிக்கக்கூடாதபடிக்கு, அக்கனியை அவன் புசிக்கக் கூடாதபடிக்கு, தேவனாகிய கர்த்தர் கேருபீன்களையும், சுடரொளிப் பட்டயத்தையும் வைத்தார்.

4 இப்படி மனந்திரும்பும்படியாக மனுஷனுக்கு ஓர் காலம் அளிக்கப்பட்டிருப்பதைப் காண்கிறோம், ஆம், மனந்திரும்பி, தேவனுக்கு சேவை செய்யும் காலமாகிய, சோதனைக் காலம்.

5 ஏனெனில் இதோ, ஆதாம் தன் கையை உடனே நீட்டி, ஜீவ விருட்சத்தினுடையதைப் புசித்திருப்பானேயானால், மனந்திரும்புவதற்கு ஓர் காலமிராமல், அவன் தேவ வார்த்தையின்படி, என்றென்றுமாய் ஜீவித்திருப்பான்; ஆம், இதினிமித்தம் தேவனுடைய வார்த்தை வீணாய்ப் போயிருக்கும். அந்த மகா இரட்சிப்பின் திட்டம் அவமாக்கப்பட்டிருக்குமே.

6 ஆனால் இதோ மனுஷன் சாகும்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, ஆதலால் அவர்கள் ஜீவ விருட்சத்தினின்று அறுப்புண்டு போனபடியினால், அவர்கள் பூமியின் பரப்பின் மீதிருந்து அறுப்புண்டு போகவேண்டும், மனுஷன் என்றென்றும் தொலைந்தவனானான், ஆம், வீழ்ந்தவனாயுமானான்.

7 இப்பொழுதும், நம்முடைய முதற் பெற்றோர் கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து உலகப்பிரகாரமாகவும், ஆவிக்குரியபிரகாரமாகவும், அறுப்புண்டு போனார்களென்று நீ, இதன் மூலம் காண்கிறாய்; இப்படியாக அவர்கள் தங்கள் சுய விருப்பத்தின்படி நடக்க வேண்டியவர்களானார்கள்.

# Alma 42

And now, my son, I perceive there is somewhat more which doth worry your mind, which ye cannot understand—which is concerning the justice of God in the punishment of the sinner; for ye do try to suppose that it is injustice that the sinner should be consigned to a state of misery.

Now behold, my son, I will explain this thing unto thee. For behold, after the Lord God sent our first parents forth from the garden of Eden, to till the ground, from whence they were taken—yea, he drew out the man, and he placed at the east end of the garden of Eden, cherubim, and a flaming sword which turned every way, to keep the tree of life—

Now, we see that the man had become as God, knowing good and evil; and lest he should put forth his hand, and take also of the tree of life, and eat and live forever, the Lord God placed cherubim and the flaming sword, that he should not partake of the fruit—

And thus we see, that there was a time granted unto man to repent, yea, a probationary time, a time to repent and serve God.

For behold, if Adam had put forth his hand immediately, and partaken of the tree of life, he would have lived forever, according to the word of God, having no space for repentance; yea, and also the word of God would have been void, and the great plan of salvation would have been frustrated.

But behold, it was appointed unto man to die—therefore, as they were cut off from the tree of life they should be cut off from the face of the earth—and man became lost forever, yea, they became fallen man.

And now, ye see by this that our first parents were cut off both temporally and spiritually from the presence of the Lord; and thus we see they became subjects to follow after their own will.

8 இப்பொழுது இதோ, இந்த உலகப்பிரகார மரணத்-
திலிருந்து மனுஷனை விடுவிப்பது அவசியமற்ற-
தாய் இருக்கிறது. ஏனெனில் அது அந்த மகா
மகிழ்ச்சியின் திட்டத்தை அழித்துப் போடும்.

Now behold, it was not expedient that man should be reclaimed from this temporal death, for that would destroy the great plan of happiness.

9 ஆகையால், ஆத்துமா என்றும் அழிய முடியா-
தென்பதாலும், வீழ்ச்சி மனுஷகுலம் யாவின் மே-
லும், ஆவிக்குரிய மற்றும் இம்மைக்குரிய மரணத்-
தைக் கொண்டுவந்ததாலும், அதாவது அவர்கள்
கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து அறுப்புண்டு
போனார்கள் என்பதாலும், இந்த ஆவிக்குரிய மர-
ணத்திலிருந்து மனிதகுலம் விடுவிக்கப்படுவது
அவசியமாயிற்று.

Therefore, as the soul could never die, and the fall had brought upon all mankind a spiritual death as well as a temporal, that is, they were cut off from the presence of the Lord, it was expedient that mankind should be reclaimed from this spiritual death.

10 ஆகவே அவர்கள் இயற்கையாகவே மாம்ச சிந்-
தையுடையோராயும், ஜென்ம சுபாவத்தாராயும்,
பேய்க்குணம் படைத்தவர்களானதாலும் இந்த சோ-
தனைக் காலம் அவர்கள் ஆயத்தப்படுகிற ஒரு கா-
லமாயிற்று; இது ஆயத்தமாகிற காலமாயிற்று.

Therefore, as they had become carnal, sensual, and devilish, by nature, this probationary state became a state for them to prepare; it became a preparatory state.

11 இப்பொழுதும் என் குமாரனே நினைவில்கொள்.
இந்த மீட்பின் திட்டம் இல்லாதிருக்குமெனில்
(அதை ஒதுக்கி வைத்துவிட்டு) அவர்கள் மரித்தவு-
டனே, கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து அறுப்-
புண்டு போய், அவர்களுடைய ஆத்துமாக்கள் துர்-
பாக்கியமாயின.

And now remember, my son, if it were not for the plan of redemption, (laying it aside) as soon as they were dead their souls were miserable, being cut off from the presence of the Lord.

12 இப்பொழுதும், இப்படியாக மனுஷன் தன்னு-
டைய சுய கீழ்ப்படியாமையினிமித்தம், தன் மீது
வரவழைத்துக்கொண்ட இந்த வீழ்ந்த நிலையிலி-
ருந்து, அவனை விடுவிக்க ஒரு வழியுமில்லாமலி-
ருந்தது.

And now, there was no means to reclaim men from this fallen state, which man had brought upon himself because of his own disobedience;

13 ஆதலால் ஆயத்தப்படுகிற நிலையென்கிற, இந்த
சோதனைக் காலத்தில், நியாயத்தின்படியே மனு-
ஷனுடைய மனந்திரும்புதலை மாத்திரம் நிபந்-
தனையாகக் கொண்டு மீட்பின் திட்டம் நிறைவேற்-
றப்பட முடியாது; இந்த நிபந்தனைகள் இல்லாமற்-
போனால், நியாயத்தின் கிரியைகளை அழிப்ப-
தைத் தவிர, இரக்கம் பயனற்றதாக இருக்கும். இப்-
பொழுது நீதியின் கிரியையோ அழிக்கப்படமுடியா-
து; அப்படியெனில் தேவன் தேவனாயிரார்.

Therefore, according to justice, the plan of redemption could not be brought about, only on conditions of repentance of men in this probationary state, yea, this preparatory state; for except it were for these conditions, mercy could not take effect except it should destroy the work of justice. Now the work of justice could not be destroyed; if so, God would cease to be God.

14 இப்படியாக, மனுஷகுலம் யாவும் வீழ்ந்து, நியா-
யத்தின் பிடியிலிருந்தார்கள்; ஆம், தேவ நியாயமே
அவர்களை அவருடைய சமுகத்தினின்று என்-
றென்றுமாய் அறுப்புண்டு போக ஒப்புக்கொடுத்த-
து என்பதை நாம் காண்கிறோம்.

And thus we see that all mankind were fallen, and they were in the grasp of justice; yea, the justice of God, which consigned them forever to be cut off from his presence.

15 இப்போது ஒரு பாவநிவர்த்தி செய்யப்படாமல்
இரக்கத்தின் திட்டம் நிறைவேற்றப்பட முடியாது;
ஆகவே தேவன் சம்பூரணராகவும், நியாயமுள்ள
தேவனாகவும், இரக்கமுள்ள தேவனாகவும் இருப்ப-
தால், இரக்கத்தின் திட்டத்தை நிறைவேற்றவும், நி-
யாயத்தின் நிபந்தனைகளை நிவர்த்தியாக்கவும்,
தேவன் தாமே இவ்வுலகத்தின் பாவங்களுக்காக
பாவநிவர்த்தி செய்கிறார்.

And now, the plan of mercy could not be brought about except an atonement should be made; therefore God himself atoneth for the sins of the world, to bring about the plan of mercy, to appease the demands of justice, that God might be a perfect, just God, and a merciful God also.

16 இப்பொழுது, மகிழ்ச்சியின் திட்டத்திற்கு எதிராக
தண்டனை இல்லாவிடில் மனுஷருக்கு மனந்தி-
ரும்புதல் வர முடியாது. அந்த தண்டனையோ, மனு-
ஷனின் ஆவியைப்போல நித்தியமானதாயிருக்க-
வேண்டும். அப்படியே மகிழ்ச்சியும் ஆவியின் ஜீ-
வனைப்போல நித்தியமுள்ளது.

Now, repentance could not come unto men except there were a punishment, which also was eternal as the life of the soul should be, affixed opposite to the plan of happiness, which was as eternal also as the life of the soul.

17 இப்பொழுதும் ஒருவன் பாவஞ்செய்யாமல் எப்ப-
டி மனந்திரும்ப முடியும்? நியாயப்பிரமாணமில்லா-
மல் அவன் பாவஞ்செய்வதெப்படி? தண்டனை-
யில்லாமல் அங்கே நியாயப்பிரமாணம் எப்படி
இருக்க முடியும்?

Now, how could a man repent except he should sin? How could he sin if there was no law? How could there be a law save there was a punishment?

18 இப்பொழுது தண்டனை நிர்ணயிக்கப்பட்டிருந்-
தது, நியாயமான நியாயப்பிரமாணமும் கொடுக்-
கப்பட்டது. அது மனுஷருக்கு குற்ற உணர்ச்சியைக்
கொண்டுவந்தது.

Now, there was a punishment affixed, and a just law given, which brought remorse of conscience unto man.

19 ஒருவன் கொலை செய்தால் அவன் மரிக்க-
வேண்டுமென்று ஒரு நியாயப்பிரமாணம் கொடுக்-
கப்படாதிருந்தால், கொலை செய்தால் மரிப்பான்
என்று பயப்படுவானா?

Now, if there was no law given—if a man murdered he should die—would he be afraid he would die if he should murder?

20 மேலும் பாவத்திற்கு விரோதமாய் ஒரு நியாயப்பி-
ரமாணமும் கொடுக்கப்படாதிருந்தால், மனுஷர்
பாவஞ் செய்வதற்கு பயப்படார்.

And also, if there was no law given against sin men would not be afraid to sin.

21 நியாயப்பிரமாணம் கொடுக்கப்படாதிருந்தால்,
மனுஷர் பாவம் செய்தால் நியாயமோ, இரக்கமோ
என்ன செய்யமுடியும்? ஏனெனில் அந்த ஜீவனின்
மீது அவைகள் எந்த உரிமையும் பெற்றிருக்காது.

And if there was no law given, if men sinned what could justice do, or mercy either, for they would have no claim upon the creature?

22 ஆனால் ஒரு நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்-
டிருக்கிறது. தண்டனை நிர்ணயிக்கப்பட்டுள்ளது,
மனந்திரும்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த
மனந்திரும்புதலை இரக்கம் உரிமை கோருகிறது,
இல்லாவிடில் நியாயமோ அந்த ஜீவனுக்கு உரிமை-
கோரி, நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறது.
நியாயப்பிரமாணமோ தண்டனையைச் சுமத்துகி-
றது; அப்படியில்லையென்றால் நியாயத்தின் கிரி-
யைகள் அழிக்கப்படும். தேவனும் தேவனாய்
இருப்பதில்லை.

But there is a law given, and a punishment affixed, and a repentance granted; which repentance, mercy claimeth; otherwise, justice claimeth the creature and executeth the law, and the law inflicteth the punishment; if not so, the works of justice would be destroyed, and God would cease to be God.

23 ஆனால் தேவன் தேவனாய் இருப்பதிலிருந்து
நீங்குவதுமில்லை. இரக்கம் மனஸ்தாபமுள்ள-
வனை உரிமைகோருகிறது. பாவநிவர்த்தியினி-
மித்தமே இரக்கம் வருகிறது; பாவநிவர்த்தி மரித்-
தோரின் உயிர்த்தெழுதலை சம்பவிக்கப்பண்ணுகி-
றது; மரித்தோரின் உயிர்த்தெழுதல் தேவசமுகத்திற்-
கு மறுபடியும் மனுஷரைக் கொண்டுசெல்கிறது;
இப்படியாக அவர்கள் யாவரும், நியாயப்பிரமா-
ணத்தின்படியும், நியாயத்தின் பிரகாரமும் அவர்க-
ளுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்-
கப்படும்படி அவருடைய பிரசன்னத்திற்குள் தி-
ரும்பச் சேர்க்கப்படுகிறார்கள்.

But God ceaseth not to be God, and mercy claimeth the penitent, and mercy cometh because of the atonement; and the atonement bringeth to pass the resurrection of the dead; and the resurrection of the dead bringeth back men into the presence of God; and thus they are restored into his presence, to be judged according to their works, according to the law and justice.

24 இதோ, நியாயம் தன் எல்லா நிபந்தனைகளையும் நிறைவேற்றுகிறது. இரக்கமும் தன்னுடையவைகள் எல்லாவற்றுக்கும் உரிமை கோருகிறது. இப்படியாக உண்மையில் மனஸ்தாபமுள்ளவர்களைத் தவிர வேறொருவரும் இரட்சிக்கப்படுவதில்லை.

For behold, justice exerciseth all his demands, and also mercy claimeth all which is her own; and thus, none but the truly penitent are saved.

25 இரக்கம் நியாயத்தைக் களவாட முடியும் என்று நினைக்கிறாயா? ஒரு துளியாகிலும் இல்லை என்று, உனக்கு நான் சொல்லுகிறேன். அப்படியிருந்தால் தேவன் தேவனாயிருப்பதில்லை.

What, do ye suppose that mercy can rob justice? I say unto you, Nay; not one whit. If so, God would cease to be God.

26 இப்படியாக தேவன், உலக அஸ்திபாரம் முதற்கொண்டு ஆயத்தப்படுத்தப்பட்ட, தமது பெரிய நித்திய திட்டங்களை நிறைவேறப்பண்ணுகிறார். இப்படியாக மனுஷருடைய இரட்சிப்பும் மீட்பும், அவர்களுடைய அழிவும், துர்பாக்கியமும் வருகிறது.

And thus God bringeth about his great and eternal purposes, which were prepared from the foundation of the world. And thus cometh about the salvation and the redemption of men, and also their destruction and misery.

27 ஆகவே என் குமாரனே, விரும்புகிற எவரும் வந்து, ஜீவத்தண்ணீரை இலவசமாய்ப் பருகலாம்; வராத எவரும் வரும்படி கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள்; ஆனால் கடைசி நாளின்போது அவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாக அவனுக்கு அது திரும்பச் சேர்க்கப்படும்.

Therefore, O my son, whosoever will come may come and partake of the waters of life freely; and whosoever will not come the same is not compelled to come; but in the last day it shall be restored unto him according to his deeds.

28 அவன் பொல்லாப்பானதைச் செய்ய விரும்பி தன் நாட்களில் மனந்திரும்பாமலிருந்தானேயானால், இதோ தேவனுடைய திரும்பச் சேர்த்தலின்படி, அவனுக்குப் பொல்லாப்பு செய்யப்படும்.

If he has desired to do evil, and has not repented in his days, behold, evil shall be done unto him, according to the restoration of God.

29 இப்பொழுதும் என் குமாரனே, இக்காரியங்கள் இனி ஒருபோதும் உன்னைச் சஞ்சலப்படுத்தக்கூடாதென்று விரும்புகிறேன். உன் பாவங்கள் மாத்திரம் உன்னை சஞ்சலப்படுத்துவதாக. அந்தச் சஞ்சலத்தினிமித்தம் நீ மனந்திரும்புதலுக்குள் கொண்டுவரப்படுவாய்.

And now, my son, I desire that ye should let these things trouble you no more, and only let your sins trouble you, with that trouble which shall bring you down unto repentance.

30 என் குமாரனே, இனி ஒருபோதும் நீ தேவ நியாயத்தை மறுதலிக்ககூடாதென்று நான் வாஞ்சிக்கிறேன். தேவ நியாயத்தை மறுதலித்து, அதினிமித்தம் உன் பாவங்களிலிருந்து ஒரு துளியாகிலும் மன்னிப்பைப் பெற முற்படாதே; தேவ நியாயமும் அவருடைய இரக்கமும், அவருடைய நீடியபொறுமையும், உன் இருதயத்தில் பூரணமாய் நிலைக்கும்படி அவைகளை அனுமதி; அது உன்னைத் தூசி மட்டும் தாழ்மையாக்க அனுமதி.

O my son, I desire that ye should deny the justice of God no more. Do not endeavor to excuse yourself in the least point because of your sins, by denying the justice of God; but do you let the justice of God, and his mercy, and his long-suffering have full sway in your heart; and let it bring you down to the dust in humility.

31 இப்போதும் என் குமாரனே, இந்த ஜனங்களுக்கு வார்த்தையைப் பிரசங்கிக்க நீ தேவனால் அழைக்கப்பட்டிருக்கிறாய், என் குமாரனே ஆத்துமாக்களை மனந்திரும்புதலுக்குள்ளே கொண்டுவரவும், அந்த இரக்கத்தின் மகாதிட்டம் அவர்கள் மீது உரிமை பாராட்டும்படிக்கும், நீ போய் வார்த்தையை உண்மையோடும், தெளிந்த மனதுடனும் அறிவி. தேவன் உனக்கு என் வார்த்தையின்படியே அருளுவாராக. ஆமென்.

And now, O my son, ye are called of God to preach the word unto this people. And now, my son, go thy way, declare the word with truth and soberness, that thou mayest bring souls unto repentance, that the great plan of mercy may have claim upon them. And may God grant unto you even according to my words. Amen.

# ஆல்மா 43

1 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மாவின் குமாரர்-
கள் ஜனங்களுக்கு வார்த்தையைப் பிரசங்கிக்க
அவர்களுக்குள்ளே போனார்கள். ஆல்மாவும் ஓய்-
வெடுக்கக்கூடாமல் போனான்.

2 அவர்கள் தீர்க்கதரிசன மற்றும் வெளிப்படுத்த-
லின் ஆவியின்படியே, வசனத்தையும் சத்தியத்-
தையும் பிரசங்கித்தார்கள் என்பதைத் தவிர நாங்-
கள் அவர்களுடைய பிரசங்கத்தைக் குறித்து இனி-
மேலும் சொல்லுவதில்லை. அவர்கள் தாங்கள்
அழைக்கப்பட்டிருந்த தேவனுடைய பரிசுத்த மு-
றைமையின் பிரகாரம் பிரசங்கம் பண்ணினார்கள்.

3 இப்பொழுதும், நியாயாதிபதிகளின் பதினெட்-
டாம் வருஷ ஆளுகையின்போது, நேபியருக்கும்
லாமானியருக்கும் இடையேயான யுத்தங்களின் வி-
வரத்திற்குத் திரும்புகிறேன்.

4 இதோ, அந்தப்படியே, சோரமியர்கள் லாமானியர்-
களானார்கள்; ஆதலால், பதினெட்டாம் வருஷ து-
வக்கத்திலே, லாமானியர் தங்கள்மேல் வருகிறதை
நேபிய ஜனங்கள் கண்டார்கள்; அதனால் யுத்தத்-
திற்கான ஆயத்தங்களைச் செய்தார்கள், ஆம்,
அவர்கள் தங்கள் சேனைகளை எருசோன் தேசத்-
தில் ஏகமாய்க் கூடிவரச்செய்தார்கள்.

5 அந்தப்படியே, லாமானியர் ஆயிரக்கணக்கில் தி-
ரண்டு வந்தார்கள்; அவர்கள் சோரமியரின் தேசமா-
கிய அந்தியோனம் தேசத்தினுள் வந்தார்கள்; சேரா-
கெம்னா என்ற பெயர்கொண்ட மனுஷனே அவர்க-
ளின் தலைவனாய் இருந்தான்.

6 இப்பொழுதும் அமலேக்கியர் லாமானியரைக்
காட்டிலும் அதிக துன்மார்க்கராயும், கொலை செய்-
கிற குணம் படைத்தவர்களாயுமிருந்தபடியால், சே-
ராகெம்னா லாமானியர் மீது சேனாதிபதிகளை நி-
யமித்தான், அவர்கள் யாவரும் அமலேக்கியரும்
சோரமியருமாய் இருந்தார்கள்.

7 இப்போது அவர்கள் நேபியரின் மேல் கொண்டி-
ருந்த வெறுப்பைக் காத்து, அதினிமித்தம் தன்
சூழ்ச்சியை நிறைவேறப்பண்ண, அவர்களைக்
கீழ்ப்படுத்தும்படியாக அவன் இதைச் செய்தான்.

8 ஏனெனில் இதோ, லாமானியரை நேபியருக்கு வி-
ரோதமாய்க் கோபமூளச் செய்வதே அவனுடைய
தந்திரங்களாயிருந்தன; அவர்கள் மேல் மிகுந்த
அதிகாரத்தைச் செலுத்தவும், நேபியரைச் சிறைத்-
தனத்திற்குள் கொண்டுவருவதின் மூலம் அவர்-
கள் மேல் அதிகாரம் பெறவுமே, அவன் இதைச்
செய்தான்.

# Alma 43

And now it came to pass that the sons of Alma did go forth among the people, to declare the word unto them. And Alma, also, himself, could not rest, and he also went forth.

Now we shall say no more concerning their preaching, except that they preached the word, and the truth, according to the spirit of prophecy and revelation; and they preached after the holy order of God by which they were called.

And now I return to an account of the wars between the Nephites and the Lamanites, in the eighteenth year of the reign of the judges.

For behold, it came to pass that the Zoramites became Lamanites; therefore, in the commencement of the eighteenth year the people of the Nephites saw that the Lamanites were coming upon them; therefore they made preparations for war; yea, they gathered together their armies in the land of Jershon.

And it came to pass that the Lamanites came with their thousands; and they came into the land of Antionum, which is the land of the Zoramites; and a man by the name of Zerahemnah was their leader.

And now, as the Amalekites were of a more wicked and murderous disposition than the Lamanites were, in and of themselves, therefore, Zerahemnah appointed chief captains over the Lamanites, and they were all Amalekites and Zoramites.

Now this he did that he might preserve their hatred towards the Nephites, that he might bring them into subjection to the accomplishment of his designs.

For behold, his designs were to stir up the Lamanites to anger against the Nephites; this he did that he might usurp great power over them, and also that he might gain power over the Nephites by bringing them into bondage.

9 நேபியர்கள் தங்களுடைய தேசங்களையும், தங்கள் வீடுகளையும், தங்கள் மனைவிகளையும், தங்கள் பிள்ளைகளையும் ஆதரிக்கவும், தங்கள் விரோதிகளின் கைகளிலிருந்து அவர்களைப் பாதுகாத்து, தேவனைத் தங்களுடைய வாஞ்சைகளுக்கேற்ப தொழுதுகொள்ளும்படிக்கும், அவர்களுடைய உரிமைகளையும் சிலாக்கியங்களையும், ஆம், அவர்களது சுதந்திரத்தையும் பாதுகாப்பதே அவர்களுடைய நோக்கமாயிருந்தது.

And now the design of the Nephites was to support their lands, and their houses, and their wives, and their children, that they might preserve them from the hands of their enemies; and also that they might preserve their rights and their privileges, yea, and also their liberty, that they might worship God according to their desires.

10 ஏனெனில், தாங்கள் லாமானியரின் கைகளுக்குள் விழுவோமெனில், உண்மையானவரும் ஜீவிக்கிறவருமாகிய ஆண்டவராகிய தேவனை, ஆவியிலும், சத்தியத்திலும் தொழுது கொள்ளுகிற எவரையும் லாமானியர் சங்காரம் பண்ணுவார்கள், என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.

For they knew that if they should fall into the hands of the Lamanites, that whosoever should worship God in spirit and in truth, the true and the living God, the Lamanites would destroy.

11 ஆம், ஆயுதம் தரிக்க மாட்டோமென்று ஒரு உடன்படிக்கையைச் செய்துகொண்டு, அதை உடைக்காதவர்களாகிய அம்மோனின் ஜனமென்று அழைக்கப்பட்ட, அந்தி-நேபி-லேகி ஜனமாகிய தங்கள் சகோதரருக்கு விரோதமாய் லாமானியருக்கு இருந்த மிகுந்த வெறுப்பையும் அவர்கள் லாமானியரின் கைகளுக்குள் விழுவார்களெனில், அழிக்கப்பட்டுப் போவார்களென்றும் அவர்கள் அறிந்திருந்தார்கள்.

Yea, and they also knew the extreme hatred of the Lamanites towards their brethren, who were the people of Anti-Nephi-Lehi, who were called the people of Ammon—and they would not take up arms, yea, they had entered into a covenant and they would not break it—therefore, if they should fall into the hands of the Lamanites they would be destroyed.

12 அவர்கள் அழிக்கப்படவேண்டும் என்பதை நேபியர்கள் அனுமதிக்கமாட்டார்கள்; ஆதலால், அவர்கள் சுதந்தரிக்க, நிலங்களைக் கொடுத்தார்கள்.

And the Nephites would not suffer that they should be destroyed; therefore they gave them lands for their inheritance.

13 அம்மோனின் ஜனங்கள், நேபியர்களுக்கு அவர்களுடைய சேனைகளை ஆதரிக்கும்படியாய்த் தங்கள் பொருட்களில் பெரும் பங்கைத் தந்தார்கள். இப்படியாக நேபியர்கள், லாமானியர்களான லாமான், லெமுவேல், இஸ்மவேலின் குமாரர்கள், நேபியர்களிலிருந்து பிரிந்துபோன யாவருமாகிய அமலேக்கியர், சோரமியர், நோவாவின் ஆசாரியர்களுடைய சந்ததி ஆகியோரின் கலப்பினத்துக்கு எதிராக நிற்கும்படிக்கு கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

And the people of Ammon did give unto the Nephites a large portion of their substance to support their armies; and thus the Nephites were compelled, alone, to withstand against the Lamanites, who were a compound of Laman and Lemuel, and the sons of Ishmael, and all those who had dissented from the Nephites, who were Amalekites and Zoramites, and the descendants of the priests of Noah.

14 இப்பொழுதும், அந்த சந்ததி ஏறக்குறைய நேபியர்களைப் போலவே அதிக எண்ணிக்கையாயிருந்தார்கள்; இப்படியாக நேபியர்கள் தங்கள் சகோதரரோடு, இரத்தம் சிந்துமளவும் போராட வேண்டியதாயிற்று.

Now those descendants were as numerous, nearly, as were the Nephites; and thus the Nephites were obliged to contend with their brethren, even unto bloodshed.

15 அந்தப்படியே, லாமானியரின் சேனைகள் அந்தியோனம் தேசத்தில் ஏகமாய்த் திரண்டிருந்தபோது, இதோ, நேபியரின் சேனைகள் அவர்களை எருசோன் தேசத்தில் சந்திக்கும்படியாக ஆயத்தமாயிருந்தார்கள்.

And it came to pass as the armies of the Lamanites had gathered together in the land of Antionum, behold, the armies of the Nephites were prepared to meet them in the land of Jershon.

16 நேபியரின் தலைவன் அல்லது, நேபியரின்மீது
சேனாதிபதியாய் நியமிக்கப்பட்டிருந்த மனுஷன்,
இப்பொழுது நேபியரின் சகல சேனைகளின் மே-
லும் சேனாதிபதி பொறுப்பேற்றான், அவனது பெ-
யர் மரோனி.

Now, the leader of the Nephites, or the man who had been appointed to be the chief captain over the Nephites—now the chief captain took the command of all the armies of the Nephites—and his name was Moroni;

17 மரோனி அதிகாரத்தையும், யுத்தங்களை நடத்து-
கிற பொறுப்பையும் எடுத்துக்கொண்டான். அவன்
நேபியருடைய சேனைகளின்மேல் சேனாதிபதி-
யாக நியமிக்கப்பட்ட போது, இருபத்தைந்து வய-
தாய் மட்டுமே இருந்தான்.

And Moroni took all the command, and the government of their wars. And he was only twenty and five years old when he was appointed chief captain over the armies of the Nephites.

18 அந்தப்படியே, அவன் லாமானியரை எருசோன்
எல்லைகளில் சந்தித்தான், அவனுடைய ஜனங்க-
ளோ பட்டயங்களாலும், ஈட்டிகளாலும் மற்றும் சக-
லவிதமான யுத்த ஆயுதங்களாலும் ஆயுதந்தரிக்-
கப்பட்டிருந்தார்கள்.

And it came to pass that he met the Lamanites in the borders of Jershon, and his people were armed with swords, and with cimeters, and all manner of weapons of war.

19 நேபியின் ஜனம், அல்லது அந்த மரோனி, தன்
ஜனத்தை மார்புக் கவசங்களாலும், புய கவசங்க-
ளாலும், அவர்களுடைய தலைகளைக் காப்பதற்-
கான கவசங்களாலும் ஆயத்தப்படுத்தியிருந்ததை-
யும், அவர்கள் உரப்பான துணியை அணிந்திருந்த-
தையும் லாமானியரின் சேனைகள் கண்டபோது,

And when the armies of the Lamanites saw that the people of Nephi, or that Moroni, had prepared his people with breastplates and with arm-shields, yea, and also shields to defend their heads, and also they were dressed with thick clothing—

20 இப்பொழுது சேராகெம்னாவின் சேனை அப்ப-
டிப்பட்ட எந்த ஒரு பொருளாலும் ஆயத்தப்படாதி-
ருந்தது. அவர்கள் தங்கள் பட்டயங்களையும், தங்-
கள் ஈட்டிகளையும், தங்கள் வில்லுகளையும், அம்-
புகளையும், தங்கள் கூழாங்கற்களையும், தங்கள்
கவண்களையும் மாத்திரம் வைத்திருந்தார்கள்;
அவர்கள் தங்கள் அரைகளில் கட்டப்பட்டிருந்த
வார்க்கச்சையைத் தவிர மற்றபடி நிர்வாணமாயி-
ருந்தார்கள்; ஆம், சோரமியர், மற்றும் அமலேக்கிய-
ரைத் தவிர மற்ற அனைவரும் நிர்வாணமாயிருந்-
தார்கள்

Now the army of Zerahemnah was not prepared with any such thing; they had only their swords and their cimeters, their bows and their arrows, their stones and their slings; and they were naked, save it were a skin which was girded about their loins; yea, all were naked, save it were the Zoramites and the Amalekites;

21 அவர்கள் மார்புக்கவசங்களாலும், கேடகங்களா-
லும் ஆயுதந்தரிக்கப்பட்டிருக்கவில்லை, ஆதலால்
நேபியரைக் காட்டிலும் எண்ணிக்கையில் மிகுதி-
யாய் இருந்தாலும் அவர்கள் நேபியரின் சர்வாயுத-
வர்க்கத்தினிமித்தம் அவர்களின் சேனைகளுக்கு
மிகவும் பயந்திருந்தார்கள்.

But they were not armed with breastplates, nor shields—therefore, they were exceedingly afraid of the armies of the Nephites because of their armor, notwithstanding their number being so much greater than the Nephites.

22 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, எருசோனின்
எல்லைகளில் நேபியர்களுக்கு விரோதமாய் வர
அவர்கள் துணியவில்லை; ஆதலால் அவர்கள்
அந்தியோனம் தேசத்திலிருந்து வனாந்தரத்தினுள்
புறப்பட்டு, மேன்தி தேசத்தை அடைந்து, அத்தேசத்-
தை தங்கள் வசமாக்கிக்கொள்ளும்படி, அவர்கள்
சீதோன் நதியின் தோற்றுவாய்க்குத் தொலைவாய்,
வனாந்தரத்தில் சுற்றிலும் பயணத்தை மேற்-
கொண்டார்கள்; ஏனெனில் தாங்கள் எங்கே போகி-
றோம் என்று, மரோனியின் சேனைகள் அறிந்திருக்-
கிறார்கள், என்று அவர்கள் எண்ணவில்லை.

Behold, now it came to pass that they durst not come against the Nephites in the borders of Jershon; therefore they departed out of the land of Antionum into the wilderness, and took their journey round about in the wilderness, away by the head of the river Sidon, that they might come into the land of Manti and take possession of the land; for they did not suppose that the armies of Moroni would know whither they had gone.

23 ஆனால், அந்தப்படியே, அவர்கள் வனாந்தரத்தி-
னுள் புறப்பட்டவுடனே அவர்களுடைய பாளயத்-
தைக் கவனிக்க மரோனி வனாந்தரத்தினுள் வேவு-
காரர்களை அனுப்பினான்; மரோனி, ஆல்மாவின்
தீர்க்கதரிசனங்களையும் அறிந்தவனாய், லாமானி-
யரிடத்திலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள, நே-
பியர்களின் சேனைகள் எவ்விடம் செல்லவேண்டு-
மென்று, அவன் கர்த்தரிடத்தில் விசாரிக்க வேண்டு-
மென்று விரும்பி, அவனிடத்தில் சில மனுஷரை
அனுப்பினான்.

But it came to pass, as soon as they had departed into the wilderness Moroni sent spies into the wilderness to watch their camp; and Moroni, also, knowing of the prophecies of Alma, sent certain men unto him, desiring him that he should inquire of the Lord whither the armies of the Nephites should go to defend themselves against the Lamanites.

24 அந்தப்படியே, கர்த்தருடைய வார்த்தை ஆல்மா-
வுக்கு உண்டாயிற்று. மேன்தி தேசத்தினுள் வந்து,
வலிமையற்ற ஜனங்கள் மீது விழும்படிக்கு,
வனாந்தரத்தைச் சுற்றி லாமானிய சேனைகள்
நடந்து வருகின்றன என்று, ஆல்மா மரோனியின்
தூதுவர்களிடம் தெரியப்படுத்தினான். அந்தத் தூ-
துவர்கள் போய் மரோனியினிடத்தில் செய்தியைத்
தெரியப்படுத்தினார்கள்.

And it came to pass that the word of the Lord came unto Alma, and Alma informed the messengers of Moroni, that the armies of the Lamanites were marching round about in the wilderness, that they might come over into the land of Manti, that they might commence an attack upon the weaker part of the people. And those messengers went and delivered the message unto Moroni.

25 இப்பொழுது எந்த விதத்திலும் லாமானியர்க-
ளின் ஒரு பகுதியினர் எருசோன் தேசத்தினுள் வந்-
து, அந்த பட்டணத்தை வசமாக்கக்கூடாதென்று,
மரோனி அத்தேசத்தில் தன் சேனையின் ஒரு பகுதி-
யினரை விட்டுவிட்டு, தன் சேனையில் மீதியானோ-
ரைக் கூட்டிக்கொண்டு மேன்தி தேசத்திற்குப் போ-
னான்.

Now Moroni, leaving a part of his army in the land of Jershon, lest by any means a part of the Lamanites should come into that land and take possession of the city, took the remaining part of his army and marched over into the land of Manti.

26 அவன் தங்கள் தேசங்களையும், தங்கள் நாட்டை-
யும், உரிமைகளையும், தங்கள் சுதந்திரங்களையும்
காக்கும்பொருட்டு அப்பகுதியில் இருக்கும் சகல
ஜனங்களும் ஏகமாய்க்கூடி லாமானியருக்கு விரோ-
தமாய் யுத்தம் பண்ணும்படிச் செய்தான். ஆகவே
லாமானியரின் வருகையின்போது எதிர்கொள்ள
அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள்.

And he caused that all the people in that quarter of the land should gather themselves together to battle against the Lamanites, to defend their lands and their country, their rights and their liberties; therefore they were prepared against the time of the coming of the Lamanites.

27 அந்தப்படியே, வனாந்தரத்திலுள்ள சீதோன் ஆற்-
றங்கரைக்கு அருகாமையிலும், சீதோன் ஆற்றங்க-
ரையின் மேற்குப் புறத்திலும் இருக்கிற பள்ளத்-
தாக்கிலே மரோனி தன் சேனையை ஒளிந்திருக்-
கும்படிச் செய்தான்.

And it came to pass that Moroni caused that his army should be secreted in the valley which was near the bank of the river Sidon, which was on the west of the river Sidon in the wilderness.

28 லாமானியரின் சேனை வருவதெப்பொழுது என்-
று அறிந்துகொள்ள, மரோனி நாலாபுறத்திலும் வே-
வுகாரரை நிறுத்தினான்.

And Moroni placed spies round about, that he might know when the camp of the Lamanites should come.

29 இப்போதும், தங்கள் சகோதரரை அழித்தோ, அல்-
லது அவர்களைக் கீழ்ப்படுத்தி, அடிமைத்தனத்-
திற்குள் கொண்டுவந்தோ, தேசமெங்கும் ஓர் ராஜ்-
யத்தை தாங்கள் அமைப்பது, என்ற லாமானிய-
ரின் உள்நோக்கத்தை மரோனி அறிந்திருந்தான்;

And now, as Moroni knew the intention of the Lamanites, that it was their intention to destroy their brethren, or to subject them and bring them into bondage that they might establish a kingdom unto themselves over all the land;

30 தங்கள் தேசங்களையும், தங்கள் சுதந்திரத்தை-
யும், தங்கள் சபையையும் காப்பாற்றுவதே நேபிய-
ரின் ஒரே விருப்பம் என்பதையும் மரோனி அறிந்த-
வனாய், அவர்களை உபாயத்தின் மூலம் காப்பாற்-
றுவது பாவமல்ல என்று எண்ணினான்; ஆகவே
லாமானியர் மேற்கொள்ளவிருக்கும் வழியைத் தன்
வேவுகாரர் மூலம் அறிந்து கொண்டான்.
31 ஆதலால் அவன், தன் சேனையைப் பிரித்து, ஒரு
பகுதியினரை பள்ளத்தாக்கிற்குக் கொண்டுவந்து,
அவர்களை ரிப்லா என்ற மலைக்குக் கிழக்கிலும்,
தெற்கிலுமாய் மறைத்து வைத்தான்.
32 அவன் மீதியானோரை சீதோன் ஆற்றுக்கு மேற்-
குப் புறத்திலுள்ள மேற்குப் பள்ளத்தாக்கிலும், அப்-
படியே மேன்தி தேச எல்லைகளோரமாயும் மறைத்-
து நிறுத்தினான்.
33 இப்படியாக அவன் தன் விருப்பத்திற்கேற்ப தன்
சேனையை நிற்க வைத்த பின்பு, அவர்களை சந்-
திக்க ஆயத்தமாயிருந்தான்.
34 அந்தப்படியே, லாமானியர்கள் மலையின் வடக்-
கு பக்கமாய் வந்தார்கள். அங்கே மரோனியின் சே-
னையின் ஒரு பகுதி மறைந்திருந்தது.
35 லாமானியர் ரிப்லா மலையைக் கடந்து, பள்ளத்-
தாக்கிற்கு வந்து, சீதோன் ஆற்றைக் கடக்கத் துவங்-
குகையில், லேகி என்ற பெயர் கொண்ட ஒரு-
வனால் வழிநடத்தப்பட்டு, மலையில் தென்புறத்-
தில் ஒளிந்திருந்த சேனை வந்து லாமானியரைக்
கிழக்கிலிருந்து அவர்களுக்குப் பின்னால் சூழ்ந்து-
கொண்டது.
36 அந்தப்படியே, லாமானியர் தங்களுக்குப் பின்னே
நேபியர் வருகிறதைக் கண்டபோது, அவர்கள் பின்-
திரும்பி, லேகியின் சேனையோடு யுத்தம் பண்ணத்
துவங்கினார்கள்.
37 மரணக்கிரியை இருபுறத்திலும் துவங்கியது.
ஆனால் அது லாமானியருக்குள்ளே அதிபயங்கர-
மாயிருந்தது. ஏனெனில் அவர்களுடைய நிர்-
வாண சரீரங்கள் மேல் நேபியர் தங்கள் பட்டயங்க-
ளாலும் தங்கள் உடைவாட்களாலும் விடும் பலத்த
அடிகள், ஒவ்வொரு வீச்சிலும் மரணத்தை உண்-
டாக்கியது.
38 மற்றொரு புறம், அவர்களுடைய பட்டயங்களா-
லும், இரத்த இழப்பினாலும் நேபியருக்குள்ளே எப்-
பொழுதாவது ஒரு மனுஷன் விழுந்தான். இவர்க-
ளோ, சரீரத்தின் மிக முக்கிய பகுதிகளுக்கு கவசம்
தரித்திருந்தார்கள். அல்லது லாமானியரின் அடிக-
ளிலிருந்து சரீரத்தின் முக்கிய பகுதிகள், அவர்களு-
டைய மார்க்கவசங்களாலும், அவர்களுடைய புய-
கவசங்களாலும், அவர்களுடைய தலைக்கவசங்க-
ளாலும் பாதுகாக்கப்பட்டன. இப்படியாக நேபியர்
லாமானியருக்குள்ளே மரணக்கிரியை செய்தார்-
கள்.

And he also knowing that it was the only desire of the Nephites to preserve their lands, and their liberty, and their church, therefore he thought it no sin that he should defend them by stratagem; therefore, he found by his spies which course the Lamanites were to take.

Therefore, he divided his army and brought a part over into the valley, and concealed them on the east, and on the south of the hill Riplah;

And the remainder he concealed in the west valley, on the west of the river Sidon, and so down into the borders of the land Manti.

And thus having placed his army according to his desire, he was prepared to meet them.

And it came to pass that the Lamanites came up on the north of the hill, where a part of the army of Moroni was concealed.

And as the Lamanites had passed the hill Riplah, and came into the valley, and began to cross the river Sidon, the army which was concealed on the south of the hill, which was led by a man whose name was Lehi, and he led his army forth and encircled the Lamanites about on the east in their rear.

And it came to pass that the Lamanites, when they saw the Nephites coming upon them in their rear, turned them about and began to contend with the army of Lehi.

And the work of death commenced on both sides, but it was more dreadful on the part of the Lamanites, for their nakedness was exposed to the heavy blows of the Nephites with their swords and their cimeters, which brought death almost at every stroke.

While on the other hand, there was now and then a man fell among the Nephites, by their swords and the loss of blood, they being shielded from the more vital parts of the body, or the more vital parts of the body being shielded from the strokes of the Lamanites, by their breastplates, and their armshields, and their head-plates; and thus the Nephites did carry on the work of death among the Lamanites.

39 அந்தப்படியே, தங்களுக்குள்ளே சம்பவித்த மி-
குந்த அழிவினிமித்தம், லாமானியர் சீதோன் நதி-
யை நோக்கி பறந்தோடத் தொடங்கு மட்டுமாய்
பயந்திருந்தார்கள்.

And it came to pass that the Lamanites became frightened, because of the great destruction among them, even until they began to flee towards the river Sidon.

40 அவர்கள் லேகியாலும், அவனுடைய மனுஷரா-
லும் பின் தொடரப்பட்டார்கள். அவர்கள் லேகி-
யால், சீதோனின் தண்ணீருக்குள், துரத்தப்பட்டு, சீ-
தோன் தண்ணீர்களைக் கடந்தார்கள். அவர்கள்
கடக்காதபடி, லேகி தன் சேனைகளை சீதோன் ஆற்-
றங்கரையிலே நிறுத்தினான்.

And they were pursued by Lehi and his men; and they were driven by Lehi into the waters of Sidon, and they crossed the waters of Sidon. And Lehi retained his armies upon the bank of the river Sidon that they should not cross.

41 அந்தப்படியே, மரோனியும் அவன் சேனையும் சீ-
தோன் நதியில் மறுபுறத்திலுள்ள பள்ளத்தாக்கிலே
லாமானியரை எதிர்கொண்டு, அவர்கள்மீது வி-
ழுந்து அவர்களைக் கொல்லத் துவங்கினார்கள்.

And it came to pass that Moroni and his army met the Lamanites in the valley, on the other side of the river Sidon, and began to fall upon them and to slay them.

42 லாமானியர் மேன்தி தேசத்திற்கு நேராக அவர்க-
ளுக்கு முன்பாகப் பறந்தோடினார்கள்; அங்கே மறு-
படியும் மரோனியின் சேனைகளால் சந்திக்கப்பட்-
டார்கள்.

And the Lamanites did flee again before them, towards the land of Manti; and they were met again by the armies of Moroni.

43 இந்தக் கட்டத்தில் லாமானியர் மகா தீர்க்கமாய்
யுத்தம் பண்ணினார்கள்; ஆம், ஆதியிலிருந்து கூட
லாமானியர் இப்படிப்பட்ட மகாபெரிய பெலத்தோ-
டும், திடநம்பிக்கையோடும் யுத்தம் பண்ணியதாக
ஒருபோதும் தெரியவில்லை.

Now in this case the Lamanites did fight exceedingly; yea, never had the Lamanites been known to fight with such exceedingly great strength and courage, no, not even from the beginning.

44 அவர்கள் தங்களுடைய சேனாதிபதிகளாயும்,
தலைவர்களாயுமிருந்த சோரமியராலும், அமலேக்-
கியராலும், தங்களுடைய சேனாதிபதியும் அல்லது
பிரதான தலைவனும், தளபதியுமான சேராகெம்-
னாவினாலும் ஏவிவிடப்பட்டார்கள்; ஆம், அவர்-
கள் வலுசர்ப்பங்களைப்போல சண்டையிட்டு, தங்-
கள் கைகளினாலே அநேக நேபியரைக் கொன்றார்-
கள், ஆம், அவர்களுடைய தலைக்கவசங்கள்
அநேகவற்றை இரண்டாகப் பிளந்தும், அவர்க-
ளின் மார்ப்புக் கவசங்கள் அநேகவற்றை ஊடுரு-
வியும், அவர்களின் பலருடைய கைகளையும்
வெட்டியும் போட்டார்கள். இப்படியாக லாமானியர்
தங்கள் கொடூரமான கோபத்தினால் கொன்றார்-
கள்.

And they were inspired by the Zoramites and the Amalekites, who were their chief captains and leaders, and by Zerahemnah, who was their chief captain, or their chief leader and commander; yea, they did fight like dragons, and many of the Nephites were slain by their hands, yea, for they did smite in two many of their head-plates, and they did pierce many of their breastplates, and they did smite off many of their arms; and thus the Lamanites did smite in their fierce anger.

45 ஆயினும் நேபியர்களோ, மேன்மையான ஓர்
நோக்கத்திற்காகவே ஏவப்பட்டார்கள். ஏனெனில்
அவர்கள் ஏகாதிபத்தியத்திற்காகவோ, அதிகாரத்-
திற்காகவோ யுத்தம் பண்ணாமல், தங்கள் வீடுக-
ளுக்காவும், தங்கள் சுதந்திரங்களுக்காவும், தங்கள்
மனைவிகளுக்காவும், தங்கள் பிள்ளைகளுக்கா-
வும், தங்களுக்கு உண்டான யாவற்றிற்காகவும்,
ஆம், தங்களின் வழிபாட்டு சடங்குகளுக்காகவும்
தங்கள் சபைக்காகவும் யுத்தம் பண்ணினார்கள்.

Nevertheless, the Nephites were inspired by a better cause, for they were not fighting for monarchy nor power but they were fighting for their homes and their liberties, their wives and their children, and their all, yea, for their rites of worship and their church.

46 அவர்கள் தங்கள் தேவனுக்குத் தாங்கள் கடன்-
பட்ட கடமை என்று அறிந்து செய்து கொண்டிருந்-
தார்கள்; ஏனெனில் கர்த்தர் அவர்களையும் அவர்-
களின் பிதாக்களையும் நோக்கி, நீங்கள் முதல் அல்-
லது இரண்டாவது குற்றத்திற்கு ஆளாகவில்லை-
யெனில், நீங்கள் உங்கள் விரோதிகளின் கைகளி-
னால் சங்கரிக்கப்பட விடமாட்டீர்கள் எனச் சொல்-
லியிருந்தார்.

And they were doing that which they felt was the duty which they owed to their God; for the Lord had said unto them, and also unto their fathers, that: Inasmuch as ye are not guilty of the first offense, neither the second, ye shall not suffer yourselves to be slain by the hands of your enemies.

47 மறுபடியும், கர்த்தர் சொன்னதாவது: நீங்கள்
இரத்தம் சிந்துமளவும் கூட உங்கள் குடும்பங்க-
ளைக் காக்கக்கடவீர்கள். ஆகவே தங்களையும்
தங்கள் குடும்பங்களையும், தங்கள் தேசத்தையும்
தங்கள் நாட்டையும், தங்கள் உரிமைகளையும், தங்-
கள் மார்க்கத்தையும் காக்கவேண்டுமென்ற நோக்-
கத்திற்காகவே, நேபியர்கள் லாமானியரோடு யுத்தம்
பண்ணினார்கள்.

And again, the Lord has said that: Ye shall defend your families even unto bloodshed. Therefore for this cause were the Nephites contending with the Lamanites, to defend themselves, and their families, and their lands, their country, and their rights, and their religion.

48 அந்தப்படியே, மரோனியின் மனுஷர் லாமானிய-
ரின் கொடூரத்தையும், கோபத்தையும் கண்டபோது,
அவர்கள் பின்வாங்கி அவர்களிடமிருந்து ஓடவி-
ருந்தார்கள். மரோனி அவர்களின் எண்ணத்தை
உணர்ந்தவனாய், ஆட்களை அனுப்பி அவர்களு-
டைய இருதயங்களை, தங்களுடைய தேசங்களின்
மற்றும் தங்களின் உரிமையின், ஆம், அடிமைத்-
தனத்திலிருந்து தங்கள் சுதந்திரத்தின் எண்ணங்-
கள் ஆகிய இந்த எண்ணங்களால் ஏவிவிட்டான்.

And it came to pass that when the men of Moroni saw the fierceness and the anger of the Lamanites, they were about to shrink and flee from them. And Moroni, perceiving their intent, sent forth and inspired their hearts with these thoughts—yea, the thoughts of their lands, their liberty, yea, their freedom from bondage.

49 அந்தப்படியே, அவர்கள் லாமானியர் மேல் திரும்-
பி, தங்களுடைய சுதந்திரத்திற்காகவும், உரிமைக்-
காகவும், அடிமைத்தனத்திலிருந்து தங்களின் விடு-
தலைக்காகவும், தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்-
தில் ஏகமாய் கூக்குரலிட்டார்கள்.

And it came to pass that they turned upon the Lamanites, and they cried with one voice unto the Lord their God, for their liberty and their freedom from bondage.

50 அவர்கள் வல்லமையோடு லாமானியருக்கு வி-
ரோதமாய் நிற்கத் துவங்கினார்கள்; அவர்கள் தங்-
கள் விடுதலைக்காகக் கர்த்தரிடத்தில் சத்தமிட்ட
அதே நாழிகையில் லாமானியர் அவர்களுக்கு
முன்பாகப் பறந்தோடத் துவங்கினார்கள். சீதோ-
னின் தண்ணீர்கள் வரை அவர்கள் பறந்தோடி-
னார்கள்.

And they began to stand against the Lamanites with power; and in that selfsame hour that they cried unto the Lord for their freedom, the Lamanites began to flee before them; and they fled even to the waters of Sidon.

51 இப்பொழுதும் லாமானியர் அதிகமானோராய்,
ஆம், நேபியரைவிட இரண்டத்தனைக்கும் மேலாய்
இருந்தார்கள். ஆயினும் அவர்கள் சீதோன் ஆற்-
றின் கரையின் மீதான பள்ளத்தாக்கிலே, ஏகமாய்
ஒரு திரளிலே கூடும்படி அதிகமாய் துரத்தப்பட்-
டார்கள்.

Now, the Lamanites were more numerous, yea, by more than double the number of the Nephites; nevertheless, they were driven insomuch that they were gathered together in one body in the valley, upon the bank by the river Sidon.

52 ஆதலால் மரோனியின் சேனைகள் நதியின் இரு-
புறத்திலுமிருந்து அவர்களைச் சூழ்ந்தார்கள்.
ஏனெனில் இதோ, லேகியின் மனுஷர் கிழக்கே
இருந்தார்கள்.

Therefore the armies of Moroni encircled them about, yea, even on both sides of the river, for behold, on the east were the men of Lehi.

53 ஆதலால் லேகியின் மனுஷர், சீதோன் நதிக்கு கி-
ழக்கே இருப்பதையும், மரோனியின் சேனைகள், சீ-
தோன் நதிக்கு மேற்கே இருப்பதையும், நேபியர்க-
ளால் தாங்கள் சுற்றிலும் சூழப்பட்டிருப்பதையும்
சேராகெம்னா கண்டபோது, அவர்கள் பயங்கரத்-
தால் அதிர்ச்சியடைந்தார்கள்.
54 இப்பொழுது மரோனி, அவர்களுடைய அதிர்ச்சி-
யைக் கண்டபோது, தன் மனுஷர் அவர்களுடைய
இரத்தத்தைச் சிந்துவதை நிறுத்தவேண்டுமென,
அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

Therefore when Zerahemnah saw the men of Lehi on the east of the river Sidon, and the armies of Moroni on the west of the river Sidon, that they were encircled about by the Nephites, they were struck with terror.

Now Moroni, when he saw their terror, commanded his men that they should stop shedding their blood.

# ஆல்மா 44

1 அந்தப்படியே, அவர்கள் நின்று அவர்களிடமிருந்து ஒரு அடி பின்வாங்கினார்கள், மரோனி சேராகெம்னாவை நோக்கி: இதோ, சேராகெம்னாவே, நாங்கள் இரத்த பிரியர்களான மனுஷராயிருக்க வாஞ்சிப்பதில்லை. எங்கள் கைகளில் நீங்கள் அகப்பட்டிருப்பதை நீ அறிவாய். இருப்பினும் உங்களைக் கொன்றுபோட எங்களுக்கு மனதில்லை.

2 இதோ, அதிகாரத்திற்காகவோ, உங்கள் இரத்தத்தை சிந்தவேண்டுமென்பதற்காகவோ உங்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ண வரவில்லை. உங்களில் ஒருவரையும் அடிமைத்தனத்தின் நுகத்துக்கு கொண்டுவரவேண்டுமென்றும் நாங்கள் வாஞ்சிப்பதில்லை. ஆனால் நீங்களோ இம்முகாந்திரத்தினிமித்தமே எங்களுக்கு விரோதமாய் வந்திருக்கிறீர்கள்; ஆம், எங்கள் மார்க்கத்தினிமித்தம் எங்கள்மேல் கோபம் கொண்டிருக்கிறீர்கள்.

3 ஆனால் இப்பொழுது, கர்த்தர் எங்களோடுகூட இருக்கிறதை நீங்கள் காண்கிறீர்கள். அவர் உங்களை எங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார் என்றும் பார்க்கிறீர்கள். இது எங்கள் மார்க்கத்தினிமித்தமும், கிறிஸ்துவிலுள்ள எங்கள் விசுவாசத்தினிமித்தமும் இது எங்களுக்கு சம்பவித்தது என்று, நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். இப்பொழுதும் எங்களின் இந்த விசுவாசத்தை நீங்கள் அழிக்க முடியாது என்றும் காண்கிறீர்கள்.

4 இப்பொழுதும் இதுவே தேவன் மேலிருக்கும் மெய்யான விசுவாசம் என்று நீங்கள் காண்கிறீர்கள்; ஆம், நாங்கள் அவருக்கும் எங்களுடைய விசுவாசத்திற்கும், எங்களுடைய மார்க்கத்திற்கும் உண்மையுள்ளவர்களாய் இருக்கும்வரைக்கும் தேவன் எங்களை ஆதரித்து, பாதுகாத்து உயிரோடு வைப்பார். நாங்கள் மீறுதலினுள் விழுந்து, எங்களுடைய விசுவாசத்தை மறுதலித்தாலொழிய கர்த்தர் நாங்கள் அழிக்கப்பட விடார்.

# Alma 44

And it came to pass that they did stop and withdrew a pace from them. And Moroni said unto Zerahemnah: Behold, Zerahemnah, that we do not desire to be men of blood. Ye know that ye are in our hands, yet we do not desire to slay you.

Behold, we have not come out to battle against you that we might shed your blood for power; neither do we desire to bring any one to the yoke of bondage. But this is the very cause for which ye have come against us; yea, and ye are angry with us because of our religion.

But now, ye behold that the Lord is with us; and ye behold that he has delivered you into our hands. And now I would that ye should understand that this is done unto us because of our religion and our faith in Christ. And now ye see that ye cannot destroy this our faith.

Now ye see that this is the true faith of God; yea, ye see that God will support, and keep, and preserve us, so long as we are faithful unto him, and unto our faith, and our religion; and never will the Lord suffer that we shall be destroyed except we should fall into transgression and deny our faith.

5 இப்பொழுதும் சேராகெம்னாவே, எங்கள் விசுவா-
சத்தினிமித்தமும், எங்கள் மார்க்கத்தினிமித்தமும்,
எங்கள் வழிபாட்டின் சடங்குகளினிமித்தமும், எங்-
கள் சபையினிமித்தமும், எங்கள் மனைவிகளுக்-
கும் பிள்ளைகளுக்கும் நாங்கள் கடமைப்பட்டிருக்-
கிற அந்த பரிசுத்த ஆதரிப்பினிமித்தமும், எங்கள்
தேசங்களோடும், எங்கள் நாட்டோடும், எங்களை
இணையப்பண்ணுகிற அந்த சுதந்திரத்தினிமித்த-
மும், ஆம், எங்கள் சகல மகிழ்ச்சிக்கும் நாங்கள் கட-
மைப்பட்டிருக்கிற பரிசுத்த தேவ வார்த்தையை
நாங்கள் பாதுகாப்பதனிமித்தமும், எங்களுக்கு மி-
கவும் பிரியமான எல்லாவற்றினாலுமே, உங்கள்-
மேல் நாங்கள் அதிகாரத்தைப் பெற, எங்கள் கைக-
ளைப் பெலப்படுத்திய, அந்த சர்வ வல்ல தேவனு-
டைய நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகி-
றேன்

And now, Zerahemnah, I command you, in the name of that all-powerful God, who has strengthened our arms that we have gained power over you, by our faith, by our religion, and by our rites of worship, and by our church, and by the sacred support which we owe to our wives and our children, by that liberty which binds us to our lands and our country; yea, and also by the maintenance of the sacred word of God, to which we owe all our happiness; and by all that is most dear unto us—

6 ஆம், இது மாத்திரமல்ல, ஜீவன் மேல் நீ கொண்டி-
ருக்கும் சகல பற்றினிமித்தம், எங்களிடம் உன் யுத்த
ஆயுதங்களை ஒப்படைத்து விடவேண்டுமென
உனக்குக் கட்டளையிடுகிறேன். நீ உன் வழியே
போய், எங்களுக்கு விரோதமாய் மறுபடியும் யுத்தத்-
திற்கு வராதிருப்பாயானால், நாங்கள் உன் இரத்தத்-
தை நாடாமல், உன் ஜீவனைத் தப்புவிப்போம்.

Yea, and this is not all; I command you by all the desires which ye have for life, that ye deliver up your weapons of war unto us, and we will seek not your blood, but we will spare your lives, if ye will go your way and come not again to war against us.

7 இப்பொழுதும் இதோ, நீ எங்கள் கைகளில் அகப்-
பட்டிருக்கிறாய். நீ இதைச் செய்யவில்லையெனில்
என் மனுஷர் உங்கள் மேல் விழுந்து நீங்கள் நிர்மூ-
லமாகும்படி உங்கள் சரீரங்களில் மரணக் காயங்க-
ளை ஏற்படுத்த கட்டளையிடுவேன். பிறகு இந்த
ஜனத்தின் மேல் யார் வல்லமை கொண்டிருக்கிறார்-
கள் என்று பார்ப்போம்; ஆம், பின்பு யார் அடிமைத்-
தனத்திற்குள்ளாக கொண்டுவரப்படுவார்கள் என்-
று காண்போம்.

And now, if ye do not this, behold, ye are in our hands, and I will command my men that they shall fall upon you, and inflict the wounds of death in your bodies, that ye may become extinct; and then we will see who shall have power over this people; yea, we will see who shall be brought into bondage.

8 இப்பொழுதும், அந்தப்படியே, சேராகெம்னா இந்த
வார்த்தைகளைக் கேட்டபோது, அவன் முன் வந்து,
தன் பட்டயத்தையும், தன் உடைவாளையும், தன்
வில்லையும் மரோனியின் கைகளில் ஒப்படைத்து,
அவனை நோக்கி: இதோ, எங்கள் யுத்த ஆயுதங்கள்;
நாங்கள் அவைகளை உங்களிடத்தில் ஒப்படைக்-
கிறோம். ஆனால் உங்களிடத்தில் நாங்கள் ஒரு
வாக்குறுதி செய்து கொள்வதில்லை, ஏனெனில்
நாங்களும், எங்கள் பிள்ளைகளும் அதை முறித்-
துப்போடுவோம் என்று அறிந்திருக்கிறோம்; ஆத-
லால் எங்கள் யுத்த ஆயுதங்களை எடுத்துக்கொண்-
டு, நாங்கள் வனாந்தரத்தினுள் போக எங்களை
அனுமதியும்; இல்லாவிடில் நாங்கள் பட்டயங்க-
ளை திரும்பவும் எடுத்துக்கொண்டு அழிவோம்,
அல்லது ஜெயிப்போம்.

And now it came to pass that when Zerahemnah had heard these sayings he came forth and delivered up his sword and his cimeter, and his bow into the hands of Moroni, and said unto him: Behold, here are our weapons of war; we will deliver them up unto you, but we will not suffer ourselves to take an oath unto you, which we know that we shall break, and also our children; but take our weapons of war, and suffer that we may depart into the wilderness; otherwise we will retain our swords, and we will perish or conquer.

9 இதோ, நாங்கள் உங்கள் விசுவாசத்தைச் சார்ந்த-
வர்களல்ல; தேவனே எங்களை உங்கள் கைகளுக்-
குள் ஒப்புக்கொடுத்தார், என்று நாங்கள் விசுவா-
சிப்பதில்லை; ஆனால் உங்களுடைய தந்திரமே
எங்கள் பட்டயத்திலிருந்து உங்களைக் காப்பாற்றி-
யது, என்று நம்புகிறோம். இதோ, உங்களுடைய
மார்புக்கவசங்களும், உங்களுடைய கேடயங்களு-
மே உங்களைக் காப்பாற்றின என்றான்.

Behold, we are not of your faith; we do not believe that it is God that has delivered us into your hands; but we believe that it is your cunning that has preserved you from our swords. Behold, it is your breastplates and your shields that have preserved you.

10 இப்பொழுது சேராகெம்னா இவ்வார்த்தைக-
ளைப் பேசி முடித்த பின்பு, மரோனி தான் வாங்கியி-
ருந்த பட்டயத்தையும், யுத்த ஆயுதங்களையும் சே-
ராகெம்னாவிடம் திரும்பக் கொடுத்து, இதோ, நாம்
இந்தப் பிரச்சினையை முடித்துக் கொள்வோம்.

And now when Zerahemnah had made an end of speaking these words, Moroni returned the sword and the weapons of war, which he had received, unto Zerahemnah, saying: Behold, we will end the conflict.

11 இப்பொழுது நான் பேசின வார்த்தைகளை, மறு-
படியும் என்னால் திரும்பப் பெறமுடியாது. ஆத-
லால் நீங்கள் மறுபடியும் எங்களுக்கு விரோதமாக
யுத்தத்திற்கு வருவதில்லை என்ற வாக்குறுதியோ-
டு கூட நீங்கள் புறப்படவில்லையெனில் கர்த்தர் ஜீ-
விக்குமளவும் நீங்கள் புறப்பட்டுப்போவதில்லை.
இப்பொழுது நீங்கள் எங்களுடைய கைகளில்
அகப்பட்டிருப்பதினாலே, நாங்கள் உங்கள் இரத்-
தத்தை பூமியில் சிந்தப்பண்ணுவோம், அல்லது
நான் முன் வைத்த கட்டுப்பாடுகளுக்கு நீங்கள்
கீழ்ப்பட்டிருப்பீர்கள், என்றான்.

Now I cannot recall the words which I have spoken, therefore as the Lord liveth, ye shall not depart except ye depart with an oath that ye will not return again against us to war. Now as ye are in our hands we will spill your blood upon the ground, or ye shall submit to the conditions which I have proposed.

12 இப்பொழுதும் மரோனி இவ்வார்த்தைகளைப்
பேசினபோது சேராகெம்னா தன் பட்டயத்தை எடுத்-
துக் கொண்டான்; அவன் மரோனியின்மீது கோபம்-
கொண்டு, மரோனியைக் கொன்றுபோடும்படி
முன்னே ஓடினான். ஆனால் அவன் தன் பட்டயத்-
தை உயர்த்தியபோதோ, இதோ, மரோனியின் போர்ச்
சேவகரில் ஒருவன் அதைத் தரை மட்டுமாய் அடித்-
தான். அதன் கைப்பிடி உடைந்து போயிற்று.
அவன் சேராகெம்னாவின் உச்சந்தலையை தரை-
யில் விழப்பண்ணும்படியாய் அவனை வெட்டி-
னான். சேராகெம்னா அவர்களிடமிருந்து பின்-
வாங்கி, தன் போர்ச் சேவர்களுக்குள்ளே ஓடினான்.

And now when Moroni had said these words, Zerahemnah retained his sword, and he was angry with Moroni, and he rushed forward that he might slay Moroni; but as he raised his sword, behold, one of Moroni's soldiers smote it even to the earth, and it broke by the hilt; and he also smote Zerahemnah that he took off his scalp and it fell to the earth. And Zerahemnah withdrew from before them into the midst of his soldiers.

13 அந்தப்படியே, அங்கே நின்று சேராகெம்னாவின்
உச்சந்தலையை வெட்டிப்போட்ட போர்ச்சேவகன்,
தரையிலிருந்து முடியைப்பிடித்து அந்த உச்சந்த-
லையை எடுத்து, அதைத் தன் பட்டயத்தின் நுனி-
யின் மேல் வைத்து, அதை அவர்களுக்கு முன்னே
நீட்டி உரத்த சத்தமாய்:

And it came to pass that the soldier who stood by, who smote off the scalp of Zerahemnah, took up the scalp from off the ground by the hair, and laid it upon the point of his sword, and stretched it forth unto them, saying unto them with a loud voice:

14 நீங்கள் உங்கள் யுத்த ஆயுதங்களை ஒப்படைத்-
துவிட்டு, சமாதான உடன்படிக்கையோடு புறப்படா-
விடில், உங்கள் தலைவனுடைய உச்சந்தலை பூமி-
யில் விழுந்ததைப்போலவே, நீங்களும் பூமியில் வி-
ழுந்து போவீர்கள், என்றான்.

Even as this scalp has fallen to the earth, which is the scalp of your chief, so shall ye fall to the earth except ye will deliver up your weapons of war and depart with a covenant of peace.

15 அங்கே அநேகர் இந்த வார்த்தைகளைக் கேட்டும்
பட்டயத்தின்மேல் உச்சந்தலை இருப்பதைக் கண்-
டும் திகிலடைந்தார்கள்; அநேகர் வந்து மரோனி-
யின் காலடியில் தங்கள் யுத்த ஆயுதங்களைப்
போட்டு சமாதான உடன்படிக்கையினுள் பிரவே-
சித்தார்கள். உடன்படிக்கையினுள் பிரவேசித்த யா-
வரையும் வனாந்தரத்தினுள் புறப்பட்டுப்போகும்ப-
டி அனுமதித்தார்கள்.

Now there were many, when they heard these words and saw the scalp which was upon the sword, that were struck with fear; and many came forth and threw down their weapons of war at the feet of Moroni, and entered into a covenant of peace. And as many as entered into a covenant they suffered to depart into the wilderness.

16 இப்பொழுது, அந்தப்படியே, சேராகெம்னா மிக-
வும் கோபம்கொண்டு, தன் போர்ச்சேவகரில் மீதியா-
னோரை கோபத்திற்குள்ளாகவும், நேபியருக்கு வி-
ரோதமாய் அதிக பெலத்தோடு சண்டை போடவும்
தூண்டினான்.

Now it came to pass that Zerahemnah was exceedingly wroth, and he did stir up the remainder of his soldiers to anger, to contend more powerfully against the Nephites.

17 இப்பொழுதும் மரோனி லாமானியரின் பிடிவா-
தத்தினால் கோபம்கொண்டான்; அதனால் அவன்
தன் ஜனம் அவர்கள்மேல் விழுந்து அவர்களைக்
கொல்ல வேண்டுமென, அவர்களுக்குக் கட்டளை-
யிட்டான். அந்தப்படியே, அவர்கள் அவர்களைக்
கொல்லத் துவங்கினார்கள்; ஆம், லாமானியர் தங்-
கள் பட்டயங்களினாலும், தங்களின் பெலத்தோ-
டும் சண்டையிட்டார்கள்.

And now Moroni was angry, because of the stubbornness of the Lamanites; therefore he commanded his people that they should fall upon them and slay them. And it came to pass that they began to slay them; yea, and the Lamanites did contend with their swords and their might.

18 ஆனால் இதோ, நேபியரின் கருக்கான பட்டயங்-
கள் அவர்களுடைய நிர்வாண சருமங்களையும்,
வெற்றுத் தலைகளையும் பதம் பார்த்தன, ஆம்,
இதோ, அவர்கள் குத்தப்பட்டார்கள், மற்றும் வெட்-
டப்பட்டார்கள்; அவர்கள் நேபியரின் பட்டயங்க-
ளுக்கு முன்பாக மிகச் சீக்கிரமாய் விழுந்தார்கள்;
மரோனியின் போர்ச்சேவகன் தீர்க்கதரிசனமுரைத்-
திருந்ததைப் போலவே அவர்கள் விழத் துவங்கி-
னார்கள்.

But behold, their naked skins and their bare heads were exposed to the sharp swords of the Nephites; yea, behold they were pierced and smitten, yea, and did fall exceedingly fast before the swords of the Nephites; and they began to be swept down, even as the soldier of Moroni had prophesied.

19 இப்பொழுது தாங்கள் யாவரும் அழிக்கப்பட்டுப்
போகவிருப்பதை சேராகெம்னா கண்டபோது,
அவன் மரோனியை நோக்கி, அவர்கள் தங்களில்
மீந்திருக்கிறவர்களை தப்புவித்தால், அவர்களுக்-
கு விரோதமாய் இனி மறுபடியும் யுத்தத்திற்கு வரு-
வதில்லையென்று, தானும் தன்னுடைய ஜனமும்
அவர்களோடு உடன்படிக்கை செய்வதாக வாக்குத்-
தத்தம் செய்து, உரக்க கூக்குரலிட்டான்.

Now Zerahemnah, when he saw that they were all about to be destroyed, cried mightily unto Moroni, promising that he would covenant and also his people with them, if they would spare the remainder of their lives, that they never would come to war again against them.

20 அந்தப்படியே, மரோனி மரணக் கிரியை ஜனங்க-
ளுக்குள்ளே மறுபடியும் நின்றுபோகும்படிச் செய்-
தான். பின்பு அவன் லாமானியரிடமிருந்து யுத்த
ஆயுதங்களை எடுத்துக் கொண்டான்; அவனோடு
அவர்கள் சமாதான உடன்படிக்கையினுள் பிரவே-
சித்த பின்பு, அவர்கள் வனாந்தரத்தினுள் புறப்பட்-
டுச் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

And it came to pass that Moroni caused that the work of death should cease again among the people. And he took the weapons of war from the Lamanites; and after they had entered into a covenant with him of peace they were suffered to depart into the wilderness.

21 இப்பொழுது அவர்களின் மரித்தோரின் இலக்கம்
மிகுதியாயிருந்தபடியால் இலக்கம் எண்ணப்பட-
வில்லை; ஆம், நேபியரிலும், லாமானியரிலும்
மரித்தோரின் எண்ணிக்கை மிகவும் அதிகமாயி-
ருந்தது.

Now the number of their dead was not numbered because of the greatness of the number; yea, the number of their dead was exceedingly great, both on the Nephites and on the Lamanites.

22 அந்தப்படியே, அவர்கள் தங்கள் மரித்தோரை சீ-
தோன் தண்ணீர்களிலே போட்டார்கள், அவர்கள்
அப்படியே போய் சமுத்திரத்தின் ஆழங்களிலே பு-
தையுண்டிருக்கிறார்கள்.

And it came to pass that they did cast their dead into the waters of Sidon, and they have gone forth and are buried in the depths of the sea.

23 மரோனியின் அல்லது நேபியரின் சேனைகள்
தங்களுடைய வீடுகளுக்கும் தங்களுடைய தேசங்-
களுக்கும் திரும்பி வந்தார்கள்.

And the armies of the Nephites, or of Moroni, returned and came to their houses and their lands.

24 இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல் நியாயா-
திபதிகளின் பதினெட்டாம் வருஷ ஆளுகையும்
முடிவுற்றது. நேபியின் தகடுகளின் மேல் எழுதப்-
பட்ட ஆல்மாவின் பதிவும் இப்படியாக முடிவுற்றது.

And thus ended the eighteenth year of the reign of the judges over the people of Nephi. And thus ended the record of Alma, which was written upon the plates of Nephi.

*ஏலமன் தன் நாட்களில் வைத்திருந்த பதிவேட்டின்படியே, அவன் நாட்களிலிருந்த நேபியின் ஜனங்களைப்பற்றிய விவரம், அவர்களது யுத்தங்களையும், பிரிவினைகளையும்பற்றியதான ஓர் விவரம்.*

## ஆல்மா 45

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, கர்த்தர் அவர்களைத் தங்களின் சத்துருக்களின் கைகளிலிருந்து மறுபடியும் விடுவித்தபடியால், நேபியின் ஜனங்கள் மிகவும் களிகூர்ந்தார்கள். ஆதலால் அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுத்தார்கள்; ஆம், அவர்கள் அதிகமாய் உபவாசித்தும், அதிகமாய் ஜெபித்தும் மிகுந்த மகிழ்ச்சியுடனே தேவனைத் தொழுது கொண்டார்கள்.

2 அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் பத்தொன்பதாம் வருஷத்தில், ஆல்மா தன் குமாரனாகிய ஏலமனிடத்தில் வந்து அவனை நோக்கி: காக்கப்பட்டு வருகிற அப்பதிவேடுகளைக் குறித்து உன்னிடம் நான் பேசின வார்த்தைகளை விசுவாசிக்கிறாயா? என்றான்.

3 அதற்கு ஏலமன் அவனை நோக்கி: ஆம், நான் விசுவாசிக்கிறேன், என்றான்.

4 ஆல்மா மறுபடியும், வரவிருக்கிற இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசிக்கிறாயா என்று கேட்டான்.

5 அதற்கு அவன் பிரதியுத்தரமாக: ஆம், நீர் பேசின சகல வார்த்தைகளையும் நான் விசுவாசிக்கிறேன், என்றான்.

6 ஆல்மா மறுபடியும் அவனை நோக்கி: நீ என் கட்டளைகளைக் கைக்கொள்ளுவாயா என்றான்.

7 அதற்கு அவன்: ஆம், நான் உமது கட்டளைகளை என் முழு இருதயத்தோடும் கைக்கொள்ளுவேன், என்றான்.

8 பின்பு ஆல்மா அவனை நோக்கி: நீ பாக்கியவான், கர்த்தர் உன்னை இத்தேசத்தில் விருத்தியடையச் செய்வார், என்றான்.

9 ஆனால் இதோ, நான் உன்னிடத்தில் தீர்க்கதரிசனமுரைக்கச் சில காரியங்கள் உள்ளன; ஆனால் நான் உனக்கு தீர்க்கதரிசனமுரைப்பதை நீ தெரிவிக்கவேண்டாம்; ஆம், நான் உரைக்கும் தீர்க்கதரிசனம் நிறைவேறும் மட்டும் அத்தீர்க்கதரிசனங்கள் தெரிவிக்கப்படக் கூடாது. ஆகவே நான் சொல்லும் வார்த்தைகளை எழுதிக்கொள்.

10 இவை அவ்வார்த்தைகள், இதோ, எனக்குள் இருக்கிற வெளிப்படுத்தலின் ஆவியின்படி நேபியர்களாகிய இந்த ஜனங்களுக்குள்ளே இயேசு கிறிஸ்து தம்மை வெளிப்படுத்தும் காலம் துவங்கி, நானூறு வருஷங்களில் இவர்கள் அவிசுவாசத்தில் நலிந்து போவார்கள், என்று உணர்கிறேன்.

*The account of the people of Nephi, and their wars and dissensions, in the days of Helaman, according to the record of Helaman, which he kept in his days.*

## Alma 45

Behold, now it came to pass that the people of Nephi were exceedingly rejoiced, because the Lord had again delivered them out of the hands of their enemies; therefore they gave thanks unto the Lord their God; yea, and they did fast much and pray much, and they did worship God with exceedingly great joy.

And it came to pass in the nineteenth year of the reign of the judges over the people of Nephi, that Alma came unto his son Helaman and said unto him: Believest thou the words which I spake unto thee concerning those records which have been kept?

And Helaman said unto him: Yea, I believe.

And Alma said again: Believest thou in Jesus Christ, who shall come?

And he said: Yea, I believe all the words which thou hast spoken.

And Alma said unto him again: Will ye keep my commandments?

And he said: Yea, I will keep thy commandments with all my heart.

Then Alma said unto him: Blessed art thou; and the Lord shall prosper thee in this land.

But behold, I have somewhat to prophesy unto thee; but what I prophesy unto thee ye shall not make known; yea, what I prophesy unto thee shall not be made known, even until the prophecy is fulfilled; therefore write the words which I shall say.

And these are the words: Behold, I perceive that this very people, the Nephites, according to the spirit of revelation which is in me, in four hundred years from the time that Jesus Christ shall manifest himself unto them, shall dwindle in unbelief.

11 ஆம், நேபியின் ஜனங்கள் அழிந்துபோகும்
வரைக்குமாய், யுத்தங்களையும் வாதைகளையும்,
ஆம், பஞ்சங்களையும், இரத்தம் சிந்துதலையும்
அப்பொழுது அவர்கள் காண்பார்கள்.

Yea, and then shall they see wars and pestilences, yea, famines and bloodshed, even until the people of Nephi shall become extinct—

12 ஆம், அவர்கள் அவிசுவாசத்தில் படிப்படியாக
நலிவதினாலும், காரிருளின் கிரியைகளிலும், கா-
மவிகாரத்திலும், சகலவிதமான அக்கிரமங்களி-
லும் விழுவதினாலுமே, இது சம்பவிக்கும்; ஆம்,
நான் உனக்குச் சொல்லுகிறேன், அவர்கள் மகா
வெளிச்சத்திற்கும், ஞானத்திற்கும் விரோதமாய் பா-
வம் செய்யப்போவதினால், ஆம், நான் உனக்குச்
சொல்லுகிறேன், அந்நாள் முதற்கொண்டு, இந்தப்
பெரும் அக்கிரமம் வரும் முன்பு, நாலாம் தலைமு-
றை கூட கடந்து போவதில்லை.

Yea, and this because they shall dwindle in unbelief and fall into the works of darkness, and lasciviousness, and all manner of iniquities; yea, I say unto you, that because they shall sin against so great light and knowledge, yea, I say unto you, that from that day, even the fourth generation shall not all pass away before this great iniquity shall come.

13 அந்த பெரிதான நாள் வரும்போது, இதோ, இப்-
பொழுது இருக்கிறவர்கள் அல்லது, நேபியின்
ஜனங்களோடு இப்பொழுது எண்ணப்பட்டு வருகி-
றவர்களின் சந்ததியார், இனி ஒருபோதும் நேபியின்
ஜனங்களோடு எண்ணப்படாத காலம் அதிசீக்கிர-
மாய் வருகிறது.

And when that great day cometh, behold, the time very soon cometh that those who are now, or the seed of those who are now numbered among the people of Nephi, shall no more be numbered among the people of Nephi.

14 ஆனால் கர்த்தருடைய சீஷர்கள் என்று அழைக்-
கப்படுகிற சிலரைத் தவிர, அந்தப் பெரிதும் பயங்க-
ரமுமான நாளிலே நிலைத்திருந்து அழிக்கப்பட்டுப்
போகாதவர்கள், லாமானியருக்குள்ளே எண்ணப்-
பட்டு, அவர்களைப் போலாவார்கள்; அவர்களை
இராதபடி செய்யும் வரைக்கும் லாமானியர் துரத்து-
வார்கள். இப்பொழுதும் அக்கிரமத்தினிமித்தம்
இந்த தீர்க்கதரிசனம் நிறைவேற்றப்படும்.

But whosoever remaineth, and is not destroyed in that great and dreadful day, shall be numbered among the Lamanites, and shall become like unto them, all, save it be a few who shall be called the disciples of the Lord; and them shall the Lamanites pursue even until they shall become extinct. And now, because of iniquity, this prophecy shall be fulfilled.

15 இப்பொழுதும், அந்தப்படியே, ஆல்மா இந்தக் கா-
ரியங்களை ஏலமனிடம் சொன்ன பின்பு, அவனை-
யும், தன்னுடைய பிற குமாரர்களையும் ஆசீர்வதித்-
தான். அவன் பூமியையும் நீதிமான்களினிமித்தம்
ஆசீர்வதித்தான்.

And now it came to pass that after Alma had said these things to Helaman, he blessed him, and also his other sons; and he also blessed the earth for the righteous' sake.

16 பின்பு அவன்: தேவனாகிய கர்த்தர் சொல்லுகிற-
தாவது, இந்நிலம் சபிக்கப்பட்டதாயிருக்கும். ஆம்,
இந்நிலம் துன்மார்க்கம் செய்வதில் பழுத்திருக்கிற
ஒவ்வொரு தேசத்திற்கும், இனத்திற்கும், பாஷைக்-
கும். ஜனத்திற்கும் அழிவுக்கேதுவாய் சபிக்கப்பட்ட-
தாயிருக்கும்; நான் சொன்னதைப் போலவே சம்ப-
விக்கும்; ஏனெனில் கர்த்தர் பாவத்தை ஒரு துளி-
யாகிலும் ஏற்றுக் கொள்ளாதவராதலால், இதுவே
தேசத்தின் மேல், தேவனுடைய சாபமும், ஆசீர்வாத-
முமாயிருக்கிறது என்றான்.

And he said: Thus saith the Lord God—Cursed shall be the land, yea, this land, unto every nation, kindred, tongue, and people, unto destruction, which do wickedly, when they are fully ripe; and as I have said so shall it be; for this is the cursing and the blessing of God upon the land, for the Lord cannot look upon sin with the least degree of allowance.

17 இப்பொழுதும் ஆல்மா இவ்வார்த்தைகளைச்
சொன்ன போது, ஆம், அன்று முதல் விசுவாசத்தில்
திடனாய் நிற்கும் யாவருமாகிய, சபையை அவன்
ஆசீர்வதித்தான்.

And now, when Alma had said these words he blessed the church, yea, all those who should stand fast in the faith from that time henceforth.

18 ஆல்மா இதைச் செய்த பின்பு அவன் சாரகெம்லா தேசத்தை விட்டு மீலேக்கின் தேசத்திற்குப் போவதைப் போல புறப்பட்டான். அதற்குப் பின்பு அவனைக் குறித்து கேள்விப்படவேயில்லை. அந்தப்படியே, அவன் மரணத்தைக் குறித்தோ அல்லது அடக்கம் பண்ணப்பட்டதைக் குறித்தோ எங்களுக்குத் தெரியாது.

And when Alma had done this he departed out of the land of Zarahemla, as if to go into the land of Melek. And it came to pass that he was never heard of more; as to his death or burial we know not of.

19 இதோ, அவன் நீதியுள்ள மனுஷனாயிருந்தான் என்று நாங்கள் அறிவோம்; அவன் மோசேயைப்போல ஆவியானவராலே எடுத்துக் கொள்ளப்பட்டானென்றும், அல்லது கர்த்தருடைய கரத்தினால் அடக்கம் பண்ணப்பட்டானென்றும், செய்தி சபைக்குள்ளே பரவிற்று. ஆனால் இதோ, கர்த்தர் மோசேயைத் தன்னிடத்தில் எடுத்துக்கொண்டார் என்று வேதவாக்கியங்கள் சொல்லுகின்றன; அவர் ஆல்மாவையும் ஆவியிலே தம்மிடத்தே எடுத்துக் கொண்டார், என்று நாங்கள் எண்ணுகிறோம். ஏனெனில் இதினிமித்தம் அவனுடைய மரணத்தைக் குறித்தோ, அடக்கம் பண்ணப்பட்டதைக் குறித்தோ எங்களுக்கு ஏதும் தெரியாது.

Behold, this we know, that he was a righteous man; and the saying went abroad in the church that he was taken up by the Spirit, or buried by the hand of the Lord, even as Moses. But behold, the scriptures saith the Lord took Moses unto himself; and we suppose that he has also received Alma in the spirit, unto himself; therefore, for this cause we know nothing concerning his death and burial.

20 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளினுடைய ஆளுகையின் பத்தொன்பதாவது வருஷ துவக்கத்திலே, ஏலமன் வசனத்தைப் பிரசங்கிக்க ஜனங்களுக்குள்ளே போனான்.

And now it came to pass in the commencement of the nineteenth year of the reign of the judges over the people of Nephi, that Helaman went forth among the people to declare the word unto them.

21 ஏனெனில் இதோ, லாமானியருடன் அவர்களது யுத்தங்களாலும், அநேக சிறு கலகங்களாலும், ஜனங்களுக்குள்ளே இருந்த குழப்பங்களாலும், அவர்களுக்குள்ளே தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்படுவதும், ஆம், சபை முழுவதிலும் ஓர் ஒழுங்கு கொண்டு வரப்படுவதும் அவசியமாயிற்று.

For behold, because of their wars with the Lamanites and the many little dissensions and disturbances which had been among the people, it became expedient that the word of God should be declared among them, yea, and that a regulation should be made throughout the church.

22 ஆதலால், நேபியின் ஜனங்களால் சுதந்தரிக்கப்பட்ட தேசம் முழுவதிலும் உள்ள ஒவ்வொரு நகரமாய், ஆம் தேசம் அனைத்திலுமாக, ஏலமனும் அவன் சகோதரரும் சபையை மறுபடியும் ஸ்தாபிக்கும்படியாகப் போனார்கள். அந்தப்படியே, அவர்கள் தேச முழுவதிலும், சகல சபைகளுக்கும், ஆசாரியர்களையும், ஆசிரியர்களையும் நியமித்தார்கள்.

Therefore, Helaman and his brethren went forth to establish the church again in all the land, yea, in every city throughout all the land which was possessed by the people of Nephi. And it came to pass that they did appoint priests and teachers throughout all the land, over all the churches.

23 இப்பொழுதும், அந்தப்படியே, ஏலமனும் அவன் சகோதரரும் சபைக்கு ஆசாரியர்களையும், ஆசிரியர்களையும் நியமித்த பின், அவர்களுக்குள்ளே கருத்து வேறுபாடு உண்டாயிற்று. அவர்கள் ஏலமன் மற்றும் அவனுடைய சகோதரர்களின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை.

And now it came to pass that after Helaman and his brethren had appointed priests and teachers over the churches that there arose a dissension among them, and they would not give heed to the words of Helaman and his brethren;

24 ஆனால் அவர்கள் தங்களின் மிகுந்த சம்பத்துகளினிமித்தம், தங்கள் இருதயங்களில் மேட்டிமையாயிருந்து, பெருமையடைந்தார்கள்; ஆகையால் அவர்கள் தங்கள் சொந்த பார்வையில் ஐஸ்வர்யவான்களாகி, தேவனுக்கு முன்பாக தலைநிமிர்ந்து நடக்கும்படி சொன்ன, அவர்களுடைய வார்த்தைகளுக்குச் செவிசாய்க்கவில்லை.

But they grew proud, being lifted up in their hearts, because of their exceedingly great riches; therefore they grew rich in their own eyes, and would not give heed to their words, to walk uprightly before God.

# ஆல்மா 46

1 அந்தப்படியே, ஏலமன் மற்றும் அவனுடைய சகோதரருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடாத யாவரும் தங்கள் சகோதரருக்கு விரோதமாய்க் கூட்டப்பட்டார்கள்.

2 இப்பொழுதும் இதோ, அவர்கள் மிகவும் கோபமூண்டவர்களாய் அவர்களைக் கொன்றுபோடத் தீர்மானத்துடனிருந்தார்கள்.

3 இப்பொழுதும் தங்கள் சகோதரருக்கு விரோதமாய்க் கோபம் கொண்டவர்களின் தலைவன் பருத்த பராக்கிரமசாலியாயிருந்தான்; அவனுடைய பெயர் அமலேக்கியா என்பதாகும்.

4 ராஜாவாக வேண்டுமென அமலேக்கியா வாஞ்சையுள்ளவனாயிருந்தான். கோபம்கொண்டிருந்த ஜனங்களும், அவன் தங்கள் ராஜாவாக இருக்கவேண்டுமென விரும்பினார்கள். அவர்களில் அதிகமானோர் அத்தேசத்து கீழ்நிலை நியாயாதிபதிகளாய் இருந்தார்கள். அவர்கள் அதிகாரத்தை நாடினார்கள்.

5 அவர்கள் தன்னை ஆதரித்து, தங்களின் ராஜாவாக தன்னை ஏற்படுத்தினால், தான் அவர்களை ஜனங்களின்மேல் அதிகாரிகளாக்குவேன் என்ற அமலேக்கியாவின் இச்சகத்தினால் அவர்கள் நடத்தப்பட்டார்கள்.

6 ஏலமன் மற்றும் அவனுடைய சகோதரர் சபையின் பிரதான ஆசாரியர்களாய் இருந்து, சபைக்காக எடுத்துக்கொண்ட பெரும் பிரயாசத்தை பொருட்படுத்தாமலும், அவர்களுடைய பிரசங்கத்தையும் பொருட்படுத்தாமலும், அவர்கள் இப்படியாக அமலேக்கியாவினால் கலகம் பண்ணும்படி வழிநடத்தப்பட்டார்கள்.

7 சபையில் அமலேக்கியாவின் இச்சகமான வார்த்தைகளை விசுவாசித்த அநேகர் இருந்தார்கள். எனவே அவர்கள் சபையிலிருந்தும் பிரிந்து போனார்கள். இப்படியாக அவர்கள் லாமானியர் மத்தியில் பெற்றிருந்த பெரும் ஜெயத்தையும், கர்த்தருடைய கரத்தினால் விடுவிக்கப்பட்டதினிமித்தம் கொண்ட மிகுந்த களிகூருதல்களையும் பெற்றிருந்தாலும், நேபியின் ஜனங்களுடைய வர்த்தமானங்கள் மிகவும் நிலையற்றனவாயும், ஆபத்தானதாயும் இருந்தன.

8 இப்படியாக கர்த்தராகிய தங்கள் தேவனை, மனுபுத்திரர் எவ்வளவு சீக்கிரமாய் மறந்து போகிறார்களென்றும், ஆம், எவ்வளவு சீக்கிரமாய் அக்கிரமம் செய்து, பொல்லாதவனாலே வழிநடத்தப்படுகிறார்களென்றும் பார்க்கிறோம்.

9 ஆம், மனுபுத்திரர் மத்தியில் பெரும் துன்மார்க்கத்தை, ஒரு பயங்கர துன்மார்க்கன் விளைவிக்க முடியும், என்றும் பார்க்கிறோம்.

# Alma 46

And it came to pass that as many as would not hearken to the words of Helaman and his brethren were gathered together against their brethren.

And now behold, they were exceedingly wroth, insomuch that they were determined to slay them.

Now the leader of those who were wroth against their brethren was a large and a strong man; and his name was Amalickiah.

And Amalickiah was desirous to be a king; and those people who were wroth were also desirous that he should be their king; and they were the greater part of them the lower judges of the land, and they were seeking for power.

And they had been led by the flatteries of Amalickiah, that if they would support him and establish him to be their king that he would make them rulers over the people.

Thus they were led away by Amalickiah to dissensions, notwithstanding the preaching of Helaman and his brethren, yea, notwithstanding their exceedingly great care over the church, for they were high priests over the church.

And there were many in the church who believed in the flattering words of Amalickiah, therefore they dissented even from the church; and thus were the affairs of the people of Nephi exceedingly precarious and dangerous, notwithstanding their great victory which they had had over the Lamanites, and their great rejoicings which they had had because of their deliverance by the hand of the Lord.

Thus we see how quick the children of men do forget the Lord their God, yea, how quick to do iniquity, and to be led away by the evil one.

Yea, and we also see the great wickedness one very wicked man can cause to take place among the children of men.

10 ஆம், அமலேக்கியா தந்திரமான மனுஷனாயும்
அநேக இச்சக வார்த்தைகளைப் பேசுகிறவனாயும்
இருந்தபடியாலே, தேவனுடைய சபையை அழிக்க-
வும், தேவன் தங்களுக்கு அளித்திருந்த, அல்லது
அத்தேசத்தின் மேல் நீதிமான்களினிமித்தம் தேவன்
அனுப்பியிருந்த ஆசீர்வாதமான சுதந்திரத்தின்
அஸ்திபாரத்தை அதமாக்கவும் வகைதேடும் பொ-
ருட்டு, அநேக ஜனங்களின் உள்ளங்களை, துன்-
மார்க்கம் புரியும்படி நடத்திச் சென்றான்.

Yea, we see that Amalickiah, because he was a man of cunning device and a man of many flattering words, that he led away the hearts of many people to do wickedly; yea, and to seek to destroy the church of God, and to destroy the foundation of liberty which God had granted unto them, or which blessing God had sent upon the face of the land for the righteous' sake.

11 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியரின் சேனை-
களுடைய சேனாதிபதியாயிருந்த மரோனி இந்த
கலகங்களைக் குறித்துக் கேள்விப்பட்டபோது,
அவன் அமலேக்கியாவின் மேல் கோபப்பட்டான்.

And now it came to pass that when Moroni, who was the chief commander of the armies of the Nephites, had heard of these dissensions, he was angry with Amalickiah.

12 அந்தப்படியே, அவன் தன் மேல் அங்கியைக் கி-
ழித்து அதிலிருந்து ஒரு பாகத்தை எடுத்து, அதின்-
மேல், எங்கள் தேவன், எங்கள் மார்க்கம், சுதந்திரம்,
எங்கள் சமாதானம், எங்கள் மனைவிகள், எங்கள்
பிள்ளைகள் நினைவாக, என்று எழுதி அதை ஒரு
கம்பின் நுனியிலே கட்டினான்.

And it came to pass that he rent his coat; and he took a piece thereof, and wrote upon it—In memory of our God, our religion, and freedom, and our peace, our wives, and our children—and he fastened it upon the end of a pole.

13 அவன் தன் தலைக்கவசத்தையும், தன் மார்புக்க-
வசத்தையும், தன் கேடயங்களையும் அணிந்து,
தனது அரைக்கச்சையைக் கட்டினான்; நுனியிலே
அவனுடைய கிழிக்கப்பட்ட மேல் சட்டையிருந்த
அந்த கம்பை எடுத்துக்கொண்டான்; (அதை
அவன் சுதந்திரக் கொடி என்றழைத்தான்) அவன்
தரைமட்டும் குனிந்து, தேசத்தைச் சுதந்தரிக்க ஒரு
கிறிஸ்தவக் கூட்டம் நிலைத்திருக்குமட்டும், தனது
சகோதரர் மீது சுதந்திரத்தின் ஆசீர்வாதங்கள் தங்-
கும்படியாக, தன் தேவனிடத்தில் ஊக்கமாய் ஜெ-
பித்தான்.

And he fastened on his head-plate, and his breastplate, and his shields, and girded on his armor about his loins; and he took the pole, which had on the end thereof his rent coat, (and he called it the title of liberty) and he bowed himself to the earth, and he prayed mightily unto his God for the blessings of liberty to rest upon his brethren, so long as there should a band of Christians remain to possess the land—

14 ஏனெனில், தேவ சபையைச் சார்ந்த கிறிஸ்து-
வின் மெய்யான விசுவாசிகள் யாவரும், சபை-
யைச் சார்ந்திராதவர்களால் இப்படியாக அழைக்-
கப்பட்டார்கள்.

For thus were all the true believers of Christ, who belonged to the church of God, called by those who did not belong to the church.

15 சபையைச் சார்ந்தவர்கள் உண்மையுள்ளவர்க-
ளாயிருந்தார்கள்; ஆம், கிறிஸ்துவில் மெய்யான
விசுவாசிகளாயிருந்த யாவரும் சந்தோஷத்தோடே,
கிறிஸ்துவின் நாமத்தையும் அல்லது வரவிருக்கிற
கிறிஸ்துவில் தங்கள் நம்பிக்கையின் நிமித்தம் கி-
றிஸ்தவர்கள் என்று தாங்கள் அழைக்கப்பட்டி-
ருந்த நாமத்தையும் தங்கள் மேல் தரித்துக் கொண்-
டார்கள்.

And those who did belong to the church were faithful; yea, all those who were true believers in Christ took upon them, gladly, the name of Christ, or Christians as they were called, because of their belief in Christ who should come.

16 ஆதலால் இச்சமயத்திலே, கிறிஸ்தவர்களினு-
டைய நோக்கமும், தேசத்தின் சுதந்திரமும் காக்கப்-
பட வேண்டுமென்று, மரோனி ஜெபித்தான்.

And therefore, at this time, Moroni prayed that the cause of the Christians, and the freedom of the land might be favored.

17 அந்தப்படியே, அவன் தன் ஆத்துமாவை தேவனி-
டத்தில் ஊற்றினபோது, அவன் பாழ்க்கடிப்பு தே-
சத்திற்குத் தெற்கே உள்ள தேச முழுவதிற்கும், ஆம்,
முடிவாக, வடக்கேயும், தெற்கேயுமான தேசமனைத்-
துக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தேசமென்றும், சு-
தந்திரத்தின் தேசமென்றும், பெயர் சூட்டினான்.

And it came to pass that when he had poured out his soul to God, he named all the land which was south of the land Desolation, yea, and in fine, all the land, both on the north and on the south—A chosen land, and the land of liberty.

18 அவன்: மெய்யாகவே தேவன், கிறிஸ்துவினு-
டைய நாமத்தை நம்மீது எடுத்துக்கொள்வதினி-
மித்தம், நிந்திக்கப்படுகிற நாம், நம்முடைய சுய மீ-
றுதல்களினால் அதை நம்மேல் கொண்டுவந்தா-
லொழிய, மிதிபட்டு அழிந்துபோக அனுமதியார்,
என்றான்.

And he said: Surely God shall not suffer that we, who are despised because we take upon us the name of Christ, shall be trodden down and destroyed, until we bring it upon us by our own transgressions.

19 மரோனி இவ்வார்த்தைகளைச் சொன்னபின்பு,
அவன் ஜனங்கள் மத்தியில் சென்று, தன் வஸ்திரத்-
திலிருந்து கிழித்த பகுதியில், தான் எழுதின எழுத்-
துக்களை யாவரும் காணும்படியாய், கிழித்த பகு-
தியைக் காற்றிலே அசைத்து, உரத்த சத்தமாய்:

And when Moroni had said these words, he went forth among the people, waving the rent part of his garment in the air, that all might see the writing which he had written upon the rent part, and crying with a loud voice, saying:

20 இதோ, இந்தக் கொடியை இத்தேசத்தின்மீது காக்-
கிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களைத் தே-
வனாகிய கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி, அவர்கள்
கர்த்தருடைய பெலத்திலே முன்னே வந்து, தங்கள்
உரிமைகளையும், தங்கள் மார்க்கத்தையும் காக்-
கும்படியான ஓர் உடன்படிக்கையினுள் பிரவேசிப்-
பார்களாக, என்றான்.

Behold, whosoever will maintain this title upon the land, let them come forth in the strength of the Lord, and enter into a covenant that they will maintain their rights, and their religion, that the Lord God may bless them.

21 அந்தப்படியே, மரோனி இவ்வார்த்தைகளைப் பி-
ரகடனப்படுத்தினபோது, இதோ, ஜனங்கள் தங்கள்
அரைகளில் கட்டியிருந்த போர்க் கவசங்களோடே
ஓடிவந்து, தாங்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை
கைவிடமாட்டோமென்பதற்கு ஓர் உடன்படிக்கை-
யாக அல்லது ஓர் அடையாளமாக தங்கள் வஸ்தி-
ரங்களைக் கிழித்தார்கள்; வேறு வார்த்தைகளிலெ-
னில், அவர்கள் தேவனுடைய கட்டளைகளை மீறி-
னாலோ அல்லது மீறுதலினுள் விழுந்து கிறிஸ்து-
வின் நாமத்தைத் தங்கள் மீது தரித்துக் கொள்ள
வெட்கப்பட்டாலோ, அவர்கள் தங்கள் வஸ்திரங்க-
ளைக் கிழித்துப்போட்டது போல, கர்த்தர் அவர்க-
ளைக் கிழித்துப் போடுவார்.

And it came to pass that when Moroni had proclaimed these words, behold, the people came running together with their armor girded about their loins, rending their garments in token, or as a covenant, that they would not forsake the Lord their God; or, in other words, if they should transgress the commandments of God, or fall into transgression, and be ashamed to take upon them the name of Christ, the Lord should rend them even as they had rent their garments.

22 இப்பொழுதும் இதுவே அவர்கள் செய்துகொண்ட
உடன்படிக்கையாய் இருந்தது; அவர்கள் தங்கள்
வஸ்திரங்களை மரோனியின் காலடியிலே போட்டு
சொன்னதாவது: நாங்கள் மீறுதலினுள் விழுவோ-
மெனில், வடக்கேயுள்ள தேசத்திலிருந்த எங்கள்
சகோதரர் அழிக்கப்பட்டுப் போனதெப்படியோ,
அப்படியே நாங்களும் அழிக்கப்பட்டுப்போவோம்
என்று, எங்கள் தேவனோடு ஓர் உடன்படிக்கை-
யைச் செய்து கொள்கிறோம். ஆம், நாங்கள் மீறுத-
லினுள் விழுவோமெனில், பாதத்தினால் மிதிக்கப்-
படும் பொருட்டு, உமது பாதத்திலே எங்களுடைய
வஸ்திரங்களை நாங்கள் போட்டதுபோல, அவர்
எங்களை, எங்களுடைய சத்துருக்களின் பாதத்-
தில் விழப்பண்ணுவாராக.

Now this was the covenant which they made, and they cast their garments at the feet of Moroni, saying: We covenant with our God, that we shall be destroyed, even as our brethren in the land northward, if we shall fall into transgression; yea, he may cast us at the feet of our enemies, even as we have cast our garments at thy feet to be trodden under foot, if we shall fall into transgression.

23 மரோனி அவர்களை நோக்கி: இதோ, நாம் யாக்-
கோபின் சந்ததியினுடைய மீதியானோராய் இருக்-
கிறோம்; ஆம், நாம் யோசேப்பின் சந்ததியின் மீதி-
யானோராயும் இருக்கிறோம்; அவனுடைய மேலங்-
கி அவன் சகோதரர்களால் பல துண்டுகளாகக் கி-
ழிக்கப்பட்டது; ஆம், இப்பொழுதும் இதோ, நாம் தே-
வனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள நி-
னைவுகூருவோமாக. இல்லாவிடில் நம்முடைய
வஸ்திரங்கள் நம்முடைய சகோதரர்களால் கிழிக்-
கப்பட்டு, நாமும் சிறையில் போடப்பட்டோ, விற்கப்-
பட்டோ, கொல்லப்பட்டோ போவோம்.

Moroni said unto them: Behold, we are a remnant of the seed of Jacob; yea, we are a remnant of the seed of Joseph, whose coat was rent by his brethren into many pieces; yea, and now behold, let us remember to keep the commandments of God, or our garments shall be rent by our brethren, and we be cast into prison, or be sold, or be slain.

24 ஆம், யோசேப்பின் சந்ததியாரில் மீதியானோராக
நாமும் நம்முடைய சுதந்திரத்தைக் காத்துக் கொள்-
வோமாக; ஆம், தன் மரணத்திற்கு முன்பாக யாக்-
கோபு சொன்ன வார்த்தைகளை நினைவு கூரு-
வோமாக. ஏனெனில் இதோ, அவன் யோசேப்பின்
வஸ்திரத்தில் மீதமானதின் ஒரு பகுதி அழிந்து போ-
காமல் காக்கப்பட்டதெனக் கண்டான். அவன்
சொன்னதாவது, என் குமாரனுடைய இந்த அங்கி-
யின் மிஞ்சிய பாகம் காக்கப்பட்டதைப்போல, தே-
வனுடைய கரத்தினால் என் குமாரனுடைய சந்ததி-
யாரில் ஓர் பகுதியினரும் காக்கப்பட்டு, அவரிடம்
அவர்கள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.
ஆனால் யோசேப்பினுடைய சந்ததியாரில் மற்ற மீ-
தியானோரோ, அவனுடைய வஸ்திரத்தின் மிஞ்சி-
யது அழிந்ததுபோல அழிந்து போவார்கள்.

Yea, let us preserve our liberty as a remnant of Joseph; yea, let us remember the words of Jacob, before his death, for behold, he saw that a part of the remnant of the coat of Joseph was preserved and had not decayed. And he said—Even as this remnant of garment of my son hath been preserved, so shall a remnant of the seed of my son be preserved by the hand of God, and be taken unto himself, while the remainder of the seed of Joseph shall perish, even as the remnant of his garment.

25 இப்பொழுதும் இதோ, இது என் ஆத்துமாவுக்கு
துக்கம் கொடுக்கிறது; ஆயினும் என் குமாரனு-
டைய சந்ததியின் அந்த பாகமானது தேவனுக்-
கென்று எடுத்துக் கொள்ளப்படுவதால், என் ஆத்-
துமா அவனில் சந்தோஷப்படுகிறது.

Now behold, this giveth my soul sorrow; nevertheless, my soul hath joy in my son, because of that part of his seed which shall be taken unto God.

26 இப்பொழுதும் இதோ, இதுவே யாக்கோபின் கூற்-
றாயிருந்தது.

Now behold, this was the language of Jacob.

27 இப்பொழுதும் யாரறிவார்கள். யோசேப்பினு-
டைய சந்ததியாரில் மீதியானவர்கள், அவனுடைய
வஸ்திரத்தைப்போல அழிந்து போவார்கள் என்ப-
து, நம்மிலிருந்து பிரிந்து போனவர்களாயுமிருக்க-
லாம் அல்லவா? ஆம், நாமும் கிறிஸ்துவின் விசு-
வாசத்தில் நிலையாய் நில்லாமற் போனால் அது
நாமாகவுமிருக்கலாம், என்றான்.

And now who knoweth but what the remnant of the seed of Joseph, which shall perish as his garment, are those who have dissented from us? Yea, and even it shall be ourselves if we do not stand fast in the faith of Christ.

28 இப்பொழுதும், அந்தப்படியே, மரோனி இவ்வார்த்-
தைகளைச் சொன்னபோது, அவன் போய் கலகங்-
கள் நடந்த தேசத்தின் எல்லா பகுதிகளுக்கும் ஆள்
அனுப்பி அமலேக்கியாவிற்கும், அமலேக்கியர்
என்றழைக்கப்பட்ட கலகம் செய்தவர்களுக்கும் வி-
ரோதமாக நின்று, தங்கள் சுதந்திரத்தைக் காத்துக்-
கொள்ள வாஞ்சையாயிருக்கும் சகல ஜனங்களை-
யும் ஏகமாய்க் கூடிவரச் செய்தான்.

And now it came to pass that when Moroni had said these words he went forth, and also sent forth in all the parts of the land where there were dissensions, and gathered together all the people who were desirous to maintain their liberty, to stand against Amalickiah and those who had dissented, who were called Amalickiahites.

29 அந்தப்படியே, மரோனியின் ஜனங்கள் அமலேக்-
கியரைக் காட்டிலும் மிகவும் அதிகமானோராய்
இருந்ததைக் கண்டும், தாங்கள் எடுத்திருந்த செ-
யல் நியாயமானதோ என்று தன் ஜனங்கள் சந்தே-
கப்பட்டிருந்ததையும் கண்டபோது, அமலேக்கியா
தன் நோக்கம் பலனளிக்காது என்று பயந்து, தன்
ஜனங்களில் தன்னோடு வரவிரும்புகிறவர்களைக்
கூட்டிக்கொண்டு நேபியின் தேசத்திற்குள்ளே புறப்-
பட்டுப் போனான்.

And it came to pass that when Amalickiah saw that the people of Moroni were more numerous than the Amalickiahites—and he also saw that his people were doubtful concerning the justice of the cause in which they had undertaken—therefore, fearing that he should not gain the point, he took those of his people who would and departed into the land of Nephi.

30 இப்பொழுது லாமானியர் இதற்கும் அதிகமாய்
பெலத்தைப் பெற்றிருக்க அவசியமில்லை, என
மரோனி கருதினான்; ஆதலால் அவன் அமலேக்கி-
யாவின் ஜனங்களைத் தள்ளிவிடவோ, அவர்க-
ளைப் பிடித்துத் திரும்பக் கொண்டுவந்து, அம-
லேக்கியாவை மரணத்திற்குள்ளாக்கவோ, நி-
னைத்தான்; ஆம், ஏனெனில் அவன் லாமானிய-
ரைத் தங்களுக்கு விரோதமாய் கோபமூளத் தூண்-
டி, தங்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்கு வரும்படி
செய்வான், என்று அவன் அறிந்திருந்தான்; அம-
லேக்கியா தனது நோக்கங்களை நிறைவேறப்பண்-
ணும்படி இதைச் செய்வான் என்றும், அறிந்திருந்-
தான்.

Now Moroni thought it was not expedient that the Lamanites should have any more strength; therefore he thought to cut off the people of Amalickiah, or to take them and bring them back, and put Amalickiah to death; yea, for he knew that he would stir up the Lamanites to anger against them, and cause them to come to battle against them; and this he knew that Amalickiah would do that he might obtain his purposes.

31 ஆதலால் மரோனி, படைக்கவசம் அணிந்தவர்க-
ளும், சமாதானத்தைக் கைக்கொள்ளும்படி ஓர்
உடன்படிக்கையினுள் பிரவேசித்தவர்களும், ஏக-
மாய்க் கூடியிருந்தவர்களுமாகிய தன் சேனைக-
ளை நடத்திச் செல்வது அவசியமெனக் கண்டான்.
அந்தப்படியே, வனாந்தரத்தில் அமலேக்கியாவின்
மார்க்கத்தை மாற்றிப்போட அவன் தன் சேனைக-
ளைக் கூட்டிக்கொண்டு, தன் கூடாரங்களை எடுத்-
துக்கொண்டு வெளியேறி வனாந்தரத்தினுள்
அணிவகுத்தான்.

Therefore Moroni thought it was expedient that he should take his armies, who had gathered themselves together, and armed themselves, and entered into a covenant to keep the peace—and it came to pass that he took his army and marched out with his tents into the wilderness, to cut off the course of Amalickiah in the wilderness.

32 அந்தப்படியே, அவன் தன் விருப்பங்களுக்கேற்ப
செய்து, வனாந்தரத்தினுள் அணிவகுத்துப்போய்,
அமலேக்கியாவின் சேனைகளை தடுத்து நிறுத்தி-
னான்.

And it came to pass that he did according to his desires, and marched forth into the wilderness, and headed the armies of Amalickiah.

33 அந்தப்படியே, அமலேக்கியா தனது மனுஷர் சில-
ருடன் ஓடிப்போனான். மீதியானோர் மரோனியின்
கைகளுக்குள் ஒப்படைக்கப்பட்டு, அவர்கள் சார-
கெம்லா தேசத்திற்குள்ளாக மறுபடியும் எடுத்துச்
செல்லப்பட்டார்கள்.

And it came to pass that Amalickiah fled with a small number of his men, and the remainder were delivered up into the hands of Moroni and were taken back into the land of Zarahemla.

34 மரோனி, பிரதான நியாயதிபதிகளாலும், ஜனங்க-
ளினுடைய விருப்பத்தின்படியேயும் நியமிக்கப்-
பட்ட மனுஷனாயிருந்தபடியினால், நேபியரின் சே-
னைகள் மேல் தன் விருப்பத்தின்படியே அதிகாரத்-
தை நிலைநாட்டவும், பிரயோகிக்கவும், அவர்களு-
டைய சேனையைத் தன் விருப்பத்தின்படி நடத்த-
வும், அவனுக்கு அதிகாரம் இருந்தது.

Now, Moroni being a man who was appointed by the chief judges and the voice of the people, therefore he had power according to his will with the armies of the Nephites, to establish and to exercise authority over them.

35 அந்தப்படியே, அவர்கள் ஓர் சுதந்திர ராஜாங்கத்-
தைப் பாதுகாக்கும்படி, சுதந்தர நோக்கத்தை ஆத-
ரிக்கத்தக்கதாக, ஒரு உடன்படிக்கையினுள் பிரவே-
சிக்காத அமலேக்கியர் எவரையும், அவன் மரணத்-
திற்குள்ளாகச் செய்தான்; அங்கு சிலர் மாத்திரம் சு-
தந்திர உடன்படிக்கைகளை மறுத்தார்கள்.

And it came to pass that whomsoever of the Amalickiahites that would not enter into a covenant to support the cause of freedom, that they might maintain a free government, he caused to be put to death; and there were but few who denied the covenant of freedom.

36 மேலும், அந்தப்படியே, நேபியர்களினால் சுதந்த-
ரிக்கப்பட்ட தேசமனைத்திலும் இருந்த கோபுரம்
ஒவ்வொன்றின் மேலும் அவன் சுதந்திரக்கொடி
ஏற்றப்படும்படிச் செய்தான். இப்படியாக மரோனி
நேபியர் மத்தியில் சுதந்திரக் கொடியை நாட்டி-
னான்.

And it came to pass also, that he caused the title of liberty to be hoisted upon every tower which was in all the land, which was possessed by the Nephites; and thus Moroni planted the standard of liberty among the Nephites.

37 அவர்கள் மறுபடியும் தேசத்திலே சமாதானத்-
தைப் பெறலானார்கள்; இப்படியாக நியாயாதிபதி-
களின் ஆளுகையின் ஏறக்குறைய பத்தொன்ப-
தாம் வருஷ முடிவு வரைக்கும் தேசத்திலே சமாதா-
னத்தைக் காத்தார்கள்.

And they began to have peace again in the land; and thus they did maintain peace in the land until nearly the end of the nineteenth year of the reign of the judges.

38 ஏலமனும், பிரதான ஆசாரியர்களும் சபையிலே
ஒழுங்கைக் காத்தார்கள். ஆம், நான்கு வருஷ கால-
மளவும் அவர்கள் சபையிலே மிகுந்த சமாதானத்-
தையும், களிகூருதலையும் பெற்றார்கள்.

And Helaman and the high priests did also maintain order in the church; yea, even for the space of four years did they have much peace and rejoicing in the church.

39 அந்தப்படியே, தங்கள் ஆத்துமாக்கள் கர்த்தரா-
கிய இயேசு கிறிஸ்துவினால் மீட்கப்பட்டதென்று
உறுதியாய் நம்பி, மரித்தவர்கள் அநேகர் இருந்தார்-
கள்; இப்படியாக அவர்கள் மகிழ்ச்சியோடே உலகத்-
தை விட்டுப் போனார்கள்.

And it came to pass that there were many who died, firmly believing that their souls were redeemed by the Lord Jesus Christ; thus they went out of the world rejoicing.

40 அத்தேசத்தில், வருஷத்தின் சில காலங்களில்
அடிக்கடி வந்த ஜுரத்தினால் சிலர் மரித்துப் போ-
னார்கள். ஆனாலும் சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப
மனுஷனுக்கு ஏற்படுகிற வியாதிகளை நீக்க தே-
வன் ஆயத்தப்படுத்தியிருந்த, சிறந்த குணத்தன்-
மைகளைக் கொண்ட அநேக செடிகளும், வேர்க-
ளும், இருந்தபடியால் அதிகமானோர் ஜுரத்தினால்
மரித்துப் போகவில்லை.

And there were some who died with fevers, which at some seasons of the year were very frequent in the land—but not so much so with fevers, because of the excellent qualities of the many plants and roots which God had prepared to remove the cause of diseases, to which men were subject by the nature of the climate—

41 ஆனால் அங்கே அதிகமானோர் முதிர்வயதடைந்-
து மரித்துப் போனார்கள்; கிறிஸ்துவின் விசுவாசத்-
தில் மரித்தோர், நாமும் நினைக்க வேண்டியது போ-
லவே, அவரில் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள்.

But there were many who died with old age; and those who died in the faith of Christ are happy in him, as we must needs suppose.

# ஆல்மா 47

1 இப்பொழுதும் நாம் அமலேக்கியாவைப்பற்றியும்,
அவனோடுகூட வனாந்தரத்தினுள் ஓடிப்போன-
வர்களைப் பற்றியுமான நம் விவரத்திற்குத் திரும்-
புவோம்; ஏனெனில் இதோ, அவன் தன்னோடு
சென்றவர்களைக் கூட்டிக்கொண்டு, நேபியின் தே-
சத்திலிருந்த லாமானியருக்குள்ளே போய், லாமா-
னியர்களின் ராஜா, தன் ஜனங்கள் யாவரும் நேபி-
யர்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்குப் போக மறுப-
டியும் ஏகமாய்த் திரளும்படியான ஓர் பிரகடனத்தை
அவர்களுக்குள்ளே தன் தேசம் முழுவதுமாய்
அனுப்புமளவிற்கு, லாமானியரை நேபியின்
ஜனங்களுக்கு விரோதமாய் கோபம் கொள்ளும்படி
தூண்டிவிட்டான்.

2 அந்தப்படியே, இந்தப் பிரகடனம் அவர்களுக்-
குள்ளே போனபோது அவர்கள் மிகவும் பயந்தார்-
கள். ஆம், அவர்கள் ராஜாவுக்கு வெறுப்புண்டாக்-
கப் பயந்தார்கள். அவர்கள் நேபியருக்கு விரோத-
மாய் யுத்தத்திற்குப் போய், தங்களுடைய ஜீவன்க-
ளை இழந்து போவோமோ, என்று பயந்தார்கள்.
அந்தப்படியே, அவர்கள் அல்லது அவர்களில்
அநேகர் ராஜாவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய
விரும்பவில்லை.

3 இப்பொழுதும், அந்தப்படியே, ராஜா அவர்களு-
டைய கீழ்ப்படியாமையினிமித்தம் கோபம் கொண்-
டான்; ஆதலால் அவன் தன் கட்டளைகளுக்குக்
கீழ்ப்படிந்த தன் சேனையின் அந்தப் பகுதியின்
அதிகாரத்தை அமலேக்கியாவிற்கு கொடுத்து,
அவன் போய் அவர்களை யுத்தத்திற்கு வரும்படி-
யாக கட்டாயப்படுத்தவேண்டுமென்று, அவனுக்-
குக் கட்டளையிட்டான்.

4 இப்பொழுதும் இதோ, இதுவே அமலேக்கியாவின்
விருப்பமாயிருந்தது; அவன் பொல்லாப்பைச்
செய்வதில் மிகவும் தந்திரக்காரனாய் இருந்தபடி-
யாலே, அவன் லாமானியரின் ராஜாவை சிங்கா-
சனத்தைவிட்டு அகற்ற தன் இருதயத்திலே திட்டம்
வகுத்தான்.

5 இப்பொழுதும் ராஜாவுக்கு ஆதரவாயிருந்த லா-
மானியக் குழுக்களின் மேலான அதிகாரத்தை
அவன் பெற்றிருந்தான்; கீழ்ப்படியாதிருந்தவர்க-
ளின் ஆதரவையும் பெறும்படிக்கு வகை தேடி-
னான். ஆதலால் சகல லாமானியர்களும் பறந்தோ-
டின இடமான ஓனிடா என்றழைக்கப்பட்ட இடத்-
திற்கு அவன் போனான்; அவர்கள் சேனை வருவ-
தைக் கண்டதால், தங்களை அழிக்க வந்து கொண்-
டிருக்கிறார்கள் என்று எண்ணி, யுத்தக் கருவிகளி-
ருந்த இடமான ஓனிடாவிற்கு ஓடினார்கள்.

# Alma 47

Now we will return in our record to Amalickiah and those who had fled with him into the wilderness; for, behold, he had taken those who went with him, and went up in the land of Nephi among the Lamanites, and did stir up the Lamanites to anger against the people of Nephi, insomuch that the king of the Lamanites sent a proclamation throughout all his land, among all his people, that they should gather themselves together again to go to battle against the Nephites.

And it came to pass that when the proclamation had gone forth among them they were exceedingly afraid; yea, they feared to displease the king, and they also feared to go to battle against the Nephites lest they should lose their lives. And it came to pass that they would not, or the more part of them would not, obey the commandments of the king.

And now it came to pass that the king was wroth because of their disobedience; therefore he gave Amalickiah the command of that part of his army which was obedient unto his commands, and commanded him that he should go forth and compel them to arms.

Now behold, this was the desire of Amalickiah; for he being a very subtle man to do evil therefore he laid the plan in his heart to dethrone the king of the Lamanites.

And now he had got the command of those parts of the Lamanites who were in favor of the king; and he sought to gain favor of those who were not obedient; therefore he went forward to the place which was called Onidah, for thither had all the Lamanites fled; for they discovered the army coming, and, supposing that they were coming to destroy them, therefore they fled to Onidah, to the place of arms.

6 தாங்கள் நேபியர்களுக்கு விரோதமாய்ப் போக
வைக்கப்படுவதில்லை, என்ற உறுதியான முடி-
வோடு தங்கள் மனதில் தீர்மானமாயிருந்து, அவர்-
கள் தங்கள்மேல் ஒரு மனுஷனை ராஜாவாகவும்
தலைவனாகவும் நியமித்தார்கள்.

And they had appointed a man to be a king and a leader over them, being fixed in their minds with a determined resolution that they would not be subjected to go against the Nephites.

7 அந்தப்படியே, அவர்கள் யுத்தத்திற்கு ஆயத்தமா-
கும்படிக்கு, அந்திப்பா என்றழைக்கப்பட்ட மலை-
யின் உச்சியின்மேல் ஏகமாய்க் கூடியிருந்தார்கள்.

And it came to pass that they had gathered themselves together upon the top of the mount which was called Antipas, in preparation to battle.

8 இப்பொழுதும் ராஜாவின் கட்டளைகளின்படி,
அவர்கள்மேல் போர் தொடுப்பது அமலேக்கியா-
வின் எண்ணமல்ல. ஆனால் இதோ, லாமானியர்க-
ளுடைய சேனைகளின் ஆதரவைப் பெற்று, தன்-
னை அவர்களின் தலைமையாக வைத்து, ராஜா-
வை சிங்காசனத்திலிருந்து நீக்கி, ராஜ்யத்தை
அடைவதே இவனுடைய நோக்கமாயிருந்தது.

Now it was not Amalickiah's intention to give them battle according to the commandments of the king; but behold, it was his intention to gain favor with the armies of the Lamanites, that he might place himself at their head and dethrone the king and take possession of the kingdom.

9 இதோ, அந்தப்படியே, அவன் தன் சேனை அந்திப்-
பா மலையருகே உள்ள பள்ளத்தாக்கிலே பாளயமி-
றங்கும்படிக்குச் செய்தான்.

And behold, it came to pass that he caused his army to pitch their tents in the valley which was near the mount Antipas.

10 அந்தப்படியே, இரவு வந்தபோது இவன் அந்திப்-
பா மலையில்மேல் உள்ளவர்களின் தலைவனா-
கிய, லேகோன்தி என்ற நாமம் தரித்தவனிடம் பேச
வாஞ்சித்தவனாய், அவனை மலையின் அடிவா-
ரத்திற்கு வரும்படிக்கு இரகசிய தூதுவர்களை
அனுப்பினான்.

And it came to pass that when it was night he sent a secret embassy into the mount Antipas, desiring that the leader of those who were upon the mount, whose name was Lehonti, that he should come down to the foot of the mount, for he desired to speak with him.

11 அந்தப்படியே, லேகோன்தி இந்தச் செய்தியைப்
பெற்றபோது அவன் மலையின் அடிவாரத்திற்குப்
போக பயந்தான். அந்தப்படியே, அவன் கீழே வரும்-
படி விரும்பி, மறுபடியுமாக இரண்டாம் விசையும்
அமலேக்கியா ஆள் அனுப்பினான். அந்தப்படியே,
லேகோன்தி வரவில்லை. மூன்றாம் விசையாய்
அவன் மறுபடியும் ஆள் அனுப்பினான்.

And it came to pass that when Lehonti received the message he durst not go down to the foot of the mount. And it came to pass that Amalickiah sent again the second time, desiring him to come down. And it came to pass that Lehonti would not; and he sent again the third time.

12 அந்தப்படியே, லேகோன்தியை மலையைவிட்டு
கீழே வரவைக்க முடியாதென்று அமலேக்கியா
கண்டபோது, அவன் மலையின்மேல் ஏறி, லே-
கோன்தியின் கூடாரம் மட்டுமாய்ப் போனான்,
இவன் லேகோன்தி கீழே வரவேண்டுமென்றும்,
அவனுடனே அவனுடைய காவற்காரரைக்கூட்டி
வரலாம் என்றும் விரும்பி, தன் செய்தியை மறுபடி-
யும் நான்காவது விசையாய் அவனுக்கு அனுப்பி-
னான்.

And it came to pass that when Amalickiah found that he could not get Lehonti to come down off from the mount, he went up into the mount, nearly to Lehonti's camp; and he sent again the fourth time his message unto Lehonti, desiring that he would come down, and that he would bring his guards with him.

13 அந்தப்படியே, லேகோன்தி தன் காவலாளிகளு-
டன் அமலேக்கியாவினிடத்தில் கீழே வந்தபோது,
அவன் தன் சேனையோடு இரவு வேளையில் கீழே
வந்து, தனக்கு ராஜா கொடுத்திருந்த அதிகாரத்திற்-
குட்பட்ட அந்த மனுஷரை அவர்களுடைய முகாம்-
களில் முற்றுகைபோட வேண்டுமென அமலேக்கி-
யா விரும்பி, தன்னை லேகோன்தி முழு சேனைக்-
கும் இரண்டாம் தலைவனாக்கினால், அவர்களை
அவன் கைகளுக்குள் ஒப்படைப்பதாகச் சொன்-
னான்.

And it came to pass that when Lehonti had come down with his guards to Amalickiah, that Amalickiah desired him to come down with his army in the night-time, and surround those men in their camps over whom the king had given him command, and that he would deliver them up into Lehonti's hands, if he would make him (Amalickiah) a second leader over the whole army.

14 அந்தப்படியே, லேகோன்தி தன் மனுஷருடனே கீ-
ழே வந்து, அமலேக்கியாவின் மனுஷரைச் சூழ்ந்து
கொண்டான், அதினாலே அவர்கள் விடியற்கா-
லையிலே எழும்பும் முன்பே லேகோன்தியின் சே-
னைகளால் சூழப்பட்டிருந்தார்கள்.

And it came to pass that Lehonti came down with his men and surrounded the men of Amalickiah, so that before they awoke at the dawn of day they were surrounded by the armies of Lehonti.

15 அந்தப்படியே, தாங்கள் சூழப்பட்டதை அவர்கள்
கண்டபோது, தாங்கள் அழிக்கப்பட்டுப் போகாதப-
டிக்கு தங்கள் சகோதரரிடத்தில் தாங்களும் சேரும்-
பொருட்டு, அமலேக்கியாவினிடத்தில் கெஞ்சி-
னார்கள். இப்பொழுதும், அமலேக்கியா விரும்பிய
காரியமும் இதுவேதான்.

And it came to pass that when they saw that they were surrounded, they pled with Amalickiah that he would suffer them to fall in with their brethren, that they might not be destroyed. Now this was the very thing which Amalickiah desired.

16 அந்தப்படியே, அவன் ராஜாவின் கட்டளைக-
ளுக்கு நேர்மாறாக தன் மனுஷரை ஒப்படைத்தான்.
இப்பொழுதும் அமலேக்கியா, ராஜாவை சிங்கா-
சனத்தைவிட்டு கீழிறக்க வேண்டுமென்ற தனது
திட்டங்களை தான் நிறைவேற்றும்படி, அவன் வி-
ரும்பின காரியமும் இதுவே.

And it came to pass that he delivered his men, contrary to the commands of the king. Now this was the thing that Amalickiah desired, that he might accomplish his designs in dethroning the king.

17 தங்களுடைய முதல் தலைவன் கொல்லப்பட்டுப்
போனால், இரண்டாம் தலைவனைத் தங்களின் மு-
தல் தலைவனாயிருக்கும்படி நியமிப்பது, இப்பொ-
ழுது லாமானியருக்குள்ளே வழக்கமாயிருந்தது.

Now it was the custom among the Lamanites, if their chief leader was killed, to appoint the second leader to be their chief leader.

18 அந்தப்படியே, அமலேக்கியா தன் வேலையாட்க-
ளில் ஒருவன் லேகோன்திக்குக் கொஞ்சம் கொஞ்ச-
மாய் விஷத்தைக் கொடுக்கும்படிச் செய்தான்,
அதனால் அவன் மரித்துப் போனான்.

And it came to pass that Amalickiah caused that one of his servants should administer poison by degrees to Lehonti, that he died.

19 இப்பொழுதும் லேகோன்தி செத்த பின்பு, லாமா-
னியர் அமலேக்கியாவை தங்களின் தலைவனாக-
வும், தங்களின் சேனாதிபதியாகவும், நியமித்துக்
கொண்டார்கள்.

Now, when Lehonti was dead, the Lamanites appointed Amalickiah to be their leader and their chief commander.

20 அந்தப்படியே, அமலேக்கியா தன் படைகளுடன்
(தன் வாஞ்சையின்படியே ஆதாயப்படுத்திக்
கொண்டபடியினாலே) நேபியின் தேசத்திலுள்ள பி-
ரதான நகரமான நேபியின் நகரத்திற்கு அணிவகுத்-
துச் சென்றான்.

And it came to pass that Amalickiah marched with his armies (for he had gained his desires) to the land of Nephi, to the city of Nephi, which was the chief city.

21 அமலேக்கியா தன் கட்டளைகளை நிறைவேற்றி-
னான் என்றும், நேபியர்களுக்கு விரோதமாய் யுத்-
தம்பண்ண இவ்வளவு பெரிய சேனையை அம-
லேக்கியா ஏகமாய்க் கூட்டியிருக்கிறான் என்றும்,
ராஜா எண்ணியதால், அவனைச் சந்திக்க தன் கா-
வற்காரருடன் வெளியே வந்தான்.

And the king came out to meet him with his guards, for he supposed that Amalickiah had fulfilled his commands, and that Amalickiah had gathered together so great an army to go against the Nephites to battle.

22 ஆனால் இதோ, ராஜா அவனைச் சந்திக்க வெளி-
யே வந்தபோது, அமலேக்கியா ராஜாவை சந்திக்-
கும்படி தன்னுடைய வேலைக்காரர்கள் முன்னே
போகும்படி செய்தான். அவர்கள் போய் ராஜாவின்
மகத்துவத்தினிமித்தம் அவனுக்கு மரியாதை செ-
லுத்துவதைப் போல, அவன் முன்பு வணங்கி நின்-
றார்கள்.

But behold, as the king came out to meet him Amalickiah caused that his servants should go forth to meet the king. And they went and bowed themselves before the king, as if to reverence him because of his greatness.

23 அந்தப்படியே, ராஜா அவர்களை எழுப்பும்படிக்-
கு, சமாதானத்திற்கு அடையாளமாக நேபியரிடமி-
ருந்து கற்ற, லாமானியரிடம் இருந்த வழக்கத்தின்ப-
டியே தன் கையை நீட்டினான்.

And it came to pass that the king put forth his hand to raise them, as was the custom with the Lamanites, as a token of peace, which custom they had taken from the Nephites.

24 அந்தப்படியே, அவன் முதலாவது மனுஷனை
தரையிலிருந்து உயர்த்தியபோது, இதோ அவன் ரா-
ஜாவை இருதயம் வரைக்குமாய் குத்தினான்;
அவன் பூமியில் விழுந்தான்.

And it came to pass that when he had raised the first from the ground, behold he stabbed the king to the heart; and he fell to the earth.

25 இப்பொழுது ராஜாவின் வேலையாட்கள் ஓடி-
னார்கள்; அமலேக்கியாவின் வேலையாட்கள்
உரத்த சத்தமாய்:

Now the servants of the king fled; and the servants of Amalickiah raised a cry, saying:

26 இதோ, ராஜாவின் வேலையாட்கள் அவரை இருத-
யத்தில் குத்திவிட்டார்கள், அவர் விழுந்து போ-
னார், அவர்களோ ஓடிப்போய்விட்டார்கள்; இதோ,
வந்து பாருங்கள் என்றார்கள்.

Behold, the servants of the king have stabbed him to the heart, and he has fallen and they have fled; behold, come and see.

27 அந்தப்படியே, தன் படைகள் முன்னே அணிவ-
குத்துப்போய், ராஜாவிற்கு என்னவாயிற்றென்று
காணவேண்டுமென்று, அமலேக்கியா கட்டளை-
யிட்டான்; அவர்கள் அவ்விடத்திற்கு வந்து, ராஜா
தன் இரத்தத்தில் கிடக்கிறதைக் கண்டபோது, அம-
லேக்கியா கோபம் கொண்டவனைப்போல நடித்து,
ராஜாவை நேசித்த எவனும் அவருடைய வேலை-
யாட்கள் கொல்லப்படும்படி, போவானாக என்-
றான்.

And it came to pass that Amalickiah commanded that his armies should march forth and see what had happened to the king; and when they had come to the spot, and found the king lying in his gore, Amalickiah pretended to be wroth, and said: Whosoever loved the king, let him go forth, and pursue his servants that they may be slain.

28 அந்தப்படியே, ராஜாவை நேசித்த யாவரும் இவ்-
வார்த்தைகளைக் கேட்டபோது, முன்வந்து ராஜா-
வின் வேலையாட்களைப் பின் தொடர்ந்தார்கள்.

And it came to pass that all they who loved the king, when they heard these words, came forth and pursued after the servants of the king.

29 இப்பொழுதும் ராஜாவின் வேலையாட்கள் தங்க-
ளை ஒரு சேனை பின் தொடர்ந்து வருவதைக்
கண்டு, மறுபடியும் பயந்து வனாந்தரத்தினுள்
ஓடிப்போய், சாரகெம்லா தேசத்தினுள் புகுந்து அம்-
மோனின் ஜனங்களோடு சேர்ந்து கொண்டார்கள்.

Now when the servants of the king saw an army pursuing after them, they were frightened again, and fled into the wilderness, and came over into the land of Zarahemla and joined the people of Ammon.

30 அவர்களைப் பின் தொடர்ந்த சேனை, விருதா-
வாய் அவர்களைப் பின்தொடர்ந்து திரும்பினார்-
கள்; அமலேக்கியா இப்படியாய் தனது வஞ்சகத்தி-
னால், ஜனங்களின் மனதை ஆதாயப்படுத்திக்
கொண்டான்.

And the army which pursued after them returned, having pursued after them in vain; and thus Amalickiah, by his fraud, gained the hearts of the people.

31 அந்தப்படியே, மறுநாள் அவன் தன் சேனைக-
ளோடு நேபியின் பட்டணத்தினுள் பிரவேசித்து,
பட்டணத்தை தன் வசமாக்கினான்.

And it came to pass on the morrow he entered the city Nephi with his armies, and took possession of the city.

32 இப்பொழுதும், அந்தப்படியே, ராஜா கொல்லப்-
பட்டதை இராஜ ஸ்திரீ கேள்விப்பட்டபோது, ராஜா
தன் வேலையாட்களால் கொல்லப்பட்டான் என்-
றும், தான் அவர்களைத் தன் சேனையோடு துரத்தி-
னதாகவும், அது வீணாய்ப் போயிற்றென்றும்,
அவர்கள் தப்பித்துப் போனார்கள் என்றும் ராஜஸ்-
திரீயினடத்தில் அறிவிக்கத்தக்கதாக, அமலேக்கி-
யா தூதுவர்களை அனுப்பியிருந்தான்.

And now it came to pass that the queen, when she had heard that the king was slain—for Amalickiah had sent an embassy to the queen informing her that the king had been slain by his servants, that he had pursued them with his army, but it was in vain, and they had made their escape—

33 எனவே ராஜஸ்திரீ இந்த செய்தியைப் பெற்றபோது, நகரத்தின் ஜனங்களை அமலேக்கியா காக்க வேண்டுமென்றும், அவன் தன்னிடம் வரவேண்டுமெனவும் தன் விருப்பம் அடங்கிய செய்தியை அவனுக்கு அனுப்பினாள். அவன் ராஜாவின் மரணத்தைக் குறித்து சாட்சி கொடுக்க தன்னோடு சாட்சிகளைக் கூட்டிக்கொண்டு வரவேண்டுமெனவும் விரும்பினாள்.

Therefore, when the queen had received this message she sent unto Amalickiah, desiring him that he would spare the people of the city; and she also desired him that he should come in unto her; and she also desired him that he should bring witnesses with him to testify concerning the death of the king.

34 அந்தப்படியே, அமலேக்கியா ராஜாவைக் கொன்ற அதே வேலைக்காரனையும், அவனோடு இருந்த அனைவரையும் கூட்டிக்கொண்டு, ராஜஸ்திரீ அமர்ந்திருந்த இடத்திற்குப் போனான். அவர்கள் அனைவரும் ராஜா தன்னுடைய சொந்த வேலைக்காரரால் கொல்லப்பட்டார், என்று அவளுக்குச் சாட்சி கொடுத்தார்கள்; அவர்கள் யாவரும் ஓடிப்போனார்கள். இது அவர்களுக்கு விரோதமாய் சாட்சி கூறவில்லையா என்று சொன்னார்கள். இப்படியாக அவர்கள் ராஜாவின் மரணத்தைக் குறித்து ராஜஸ்திரீயை திருப்தியடையச் செய்தார்கள்.

And it came to pass that Amalickiah took the same servant that slew the king, and all them who were with him, and went in unto the queen, unto the place where she sat; and they all testified unto her that the king was slain by his own servants; and they said also: They have fled; does not this testify against them? And thus they satisfied the queen concerning the death of the king.

35 அந்தப்படியே, அமலேக்கியா ராஜஸ்திரீயின் ஆதரவை நாடி, அவளைத் தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். இப்படியாக அவன் தன் வஞ்சகத்தினிமித்தமும், தன் தந்திரமான வேலையாட்களின் உதவியின் மூலமும், ராஜ்யத்தை அடைந்து கொண்டான். ஆம், அவன் தேசம் முழுவதிலும், லாமானியர், லெமுவேலர், இஸ்மவேலர், மற்றும் நேபியின் ஆளுகை துவங்கி, இக்காலம் வரைக்குமாய் நேபியர்களிலிருந்து பிரிந்து போன அனைத்து கலகக்காரருமாகிய, சகல லாமானியர்களின் ஜனங்களுக்குள்ளும் ராஜாவாக அங்கீகரிக்கப்பட்டான்.

And it came to pass that Amalickiah sought the favor of the queen, and took her unto him to wife; and thus by his fraud, and by the assistance of his cunning servants, he obtained the kingdom; yea, he was acknowledged king throughout all the land, among all the people of the Lamanites, who were composed of the Lamanites and the Lemuelites and the Ishmaelites, and all the dissenters of the Nephites, from the reign of Nephi down to the present time.

36 இப்பொழுதும் இந்தக் கலகக்காரர்கள், நேபியர்களின் அதே அறிவுரைகளையும், அதே போதனைகளையும் பெற்றிருந்தும், ஆம், கர்த்தருடைய அதே அறிவில் அறிவுறுத்தப்பட்டிருந்தும், ஒப்பிடுவதற்கு வினோதமாக, அவர்களுடைய கலகங்களுக்கு பின்பு சில காலத்திற்குள்ளாகவே அவர்கள் அதிக கடினமுள்ளவர்களாயும், மனந்திரும்பாதோராயும், லாமானியரை மிஞ்சின பொல்லாதோராயும், துன்மார்க்கராயும், ஆக்கிரோஷமுள்ளவராயும், லாமானிய பாரம்பரியங்களில் பானம்பண்ணி, சோம்பலுக்கும் எல்லாவித காமவிகாரத்திற்கும் இடம் கொடுத்தார்கள்; ஆம், தேவனாகிய தங்கள் கர்த்தரை, முற்றிலும் மறந்தே போனார்கள்.

Now these dissenters, having the same instruction and the same information of the Nephites, yea, having been instructed in the same knowledge of the Lord, nevertheless, it is strange to relate, not long after their dissensions they became more hardened and impenitent, and more wild, wicked and ferocious than the Lamanites—drinking in with the traditions of the Lamanites; giving way to indolence, and all manner of lasciviousness; yea, entirely forgetting the Lord their God.

# ஆல்மா 48

1 இப்பொழுதும், அந்தப்படியே, அமலேக்கியா ராஜ்-
யத்தைப் பெற்றுக்கொண்ட உடனே, அவன் நேபி-
யின் ஜனங்களுக்கு விரோதமாய் லாமானியரின்
இருதயங்களைத் தூண்டத் துவங்கினான்; ஆம்
தங்கள் கோபுரங்களிலிருந்து நேபியருக்கு விரோத-
மாய் லாமானியரிடத்தில் பேச அவன் ஆட்களை நி-
யமித்தான்.
2 தனது திட்டங்களை இதுவரைக்கும் நிறைவேற்-
றி, ஆம், லாமானியர் மேல் ராஜாவாக்கப்படும்படிக்-
கு, நியாயாதிபதிகளின் பத்தொன்பதாம் வருஷ
ஆளுகையின் பிற்பகுதியிலே, இப்படியாக அவன்
நேபியர்களுக்கு விரோதமாய் அவர்களின் இருத-
யங்களைத் தூண்டி விட்டு, தேசம் முழுவதையும்,
ஆம், தேசத்திலிருக்கும் சகல ஜனங்களான நேபியர்
மேலும், லாமானியர் மேலும், ஆளுகை செய்ய-
வேண்டுமெனவும் வகை தேடினான்.
3 ஆகவே அவன் நேபியருக்கு விரோதமாய் யுத்தத்-
திற்கு போக, லாமானியரில் ஓர் எண்ணிறைந்த சே-
னையை ஏகமாய் கூடச் செய்யுமளவும், அவன்
அவர்களின் இருதயங்களைக் கடினமாக்கி, அவர்-
களின் மனதைக் குருடாக்கி, அவர்களைக் கோபம்
மூளச் செய்து, தனது திட்டத்தை நிறைவேற்றி-
னான்.
4 அவன் தனது ஜனத்தின் எண்ணிக்கையின் மிகு-
தியினிமித்தம், நேபியர்களை மேற்கொண்டு,
அவர்களை அடிமைத்தனத்திற்குள்ளாகக்
கொண்டுவரத் தீர்மானமாயிருந்தான்.
5 இப்படியாக நேபியர்களின் பெலத்தையும், அவர்-
களின் மறைவிடங்களையும், அவர்களுடைய பட்-
டணங்களின் பெலவீனமான பகுதிகளையும் நன்-
கு அறிந்தவர்களான, சோரமியர்களைப் பிரதான
சேனாதிபதிகளாக நியமித்தான். ஆகவே, அவன்
அவர்களைத் தன் சேனைகளின் மீது பிரதான சே-
னாதிபதிகளாக நியமித்தான்.
6 அந்தப்படியே, அவர்கள் தங்கள் பாளயத்தோடு,
வனாந்தரத்தினுள் சாரகெம்லா தேசத்தை நோக்கிப்
போனார்கள்.
7 இப்பொழுது, அந்தப்படியே, அமலேக்கியா இப்ப-
டியாக தனது வஞ்சகத்தினாலும் தந்திரத்தினாலும்,
வல்லமையைப் பெற்றுக்கொண்டிருக்கையில், மா-
றாக மரோனி, ஜனங்கள் தங்களுடைய தேவனா-
கிய கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் இருக்க-
வேண்டுமென, அவர்களின் மனங்களை ஆயத்தப்-
படுத்திக் கொண்டிருந்தான்.

# Alma 48

And now it came to pass that, as soon as Amalickiah had obtained the kingdom he began to inspire the hearts of the Lamanites against the people of Nephi; yea, he did appoint men to speak unto the Lamanites from their towers, against the Nephites.

And thus he did inspire their hearts against the Nephites, insomuch that in the latter end of the nineteenth year of the reign of the judges, he having accomplished his designs thus far, yea, having been made king over the Lamanites, he sought also to reign over all the land, yea, and all the people who were in the land, the Nephites as well as the Lamanites.

Therefore he had accomplished his design, for he had hardened the hearts of the Lamanites and blinded their minds, and stirred them up to anger, insomuch that he had gathered together a numerous host to go to battle against the Nephites.

For he was determined, because of the greatness of the number of his people, to overpower the Nephites and to bring them into bondage.

And thus he did appoint chief captains of the Zoramites, they being the most acquainted with the strength of the Nephites, and their places of resort, and the weakest parts of their cities; therefore he appointed them to be chief captains over his armies.

And it came to pass that they took their camp, and moved forth toward the land of Zarahemla in the wilderness.

Now it came to pass that while Amalickiah had thus been obtaining power by fraud and deceit, Moroni, on the other hand, had been preparing the minds of the people to be faithful unto the Lord their God.

8 ஆம், அவன் நேபியர்களின் சேனைகளைப் பெலப்படுத்தி, சிறு அரண்களை அல்லது பாதுகாப்பு ஸ்தலங்களைக் கட்டினான்; தன் சேனைகளைச் சூழ, சுற்றியும் மண்குவியல்களை ஏற்படுத்தி, அவர்களைச் சூழ தேசம் முழுவதிலும், தங்களின் எல்லா பட்டணங்களைச் சுற்றியும், ஆம், தங்களின் தேச எல்லைகளைச் சுற்றியும் கற்களாலான மதில்களையும் கட்டினான்.

Yea, he had been strengthening the armies of the Nephites, and erecting small forts, or places of resort; throwing up banks of earth round about to enclose his armies, and also building walls of stone to encircle them about, round about their cities and the borders of their lands; yea, all round about the land.

9 அவர்களுடைய பெலவீனமான அரண்களில் அவன் அதிக எண்ணிக்கையிலான மனுஷரை நிறுத்தினான்; இப்படியாக அவன் நேபியர்களால் சுதந்தரிக்கப்பட்ட தேசத்தை அரண்களை ஏற்படுத்தி பெலப்படுத்தினான்.

And in their weakest fortifications he did place the greater number of men; and thus he did fortify and strengthen the land which was possessed by the Nephites.

10 தங்களுடைய தேவனாகிய கர்த்தருக்காக அவர்கள் ஜீவிக்கும்படியும், கிறிஸ்தவர்களின் நோக்கம் என்று அவர்களின் சத்துருக்களால் அழைக்கப்படுகிறதை அவர்கள் காக்கும்படியும், அவன் அவர்களின் சுதந்திரத்தையும், அவர்களின் தேசங்களையும், அவர்களின் மனைவிகளையும், அவர்களின் பிள்ளைகளையும், அவர்களின் சமாதானத்தையும் காத்துக்கொள்ள இப்படியாக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான்.

And thus he was preparing to support their liberty, their lands, their wives, and their children, and their peace, and that they might live unto the Lord their God, and that they might maintain that which was called by their enemies the cause of Christians.

11 மரோனி பெலமுள்ளவனும் பராக்கிரமசாலியுமாயிருந்தான்; அவன் பூரண விவேகமுள்ளவனாயிருந்தான்; ஆம், அவன் இரத்தம் சிந்துதலில் களிகூராத மனிதனாயிருந்தான்; அவன் ஆத்துமா தன் தேசத்தின் விடுதலையிலும், சுதந்திரத்திலும் தன் சகோதரர் சிறைத்தனத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும், விடுபடுவதிலும் சந்தோஷமடைந்தது.

And Moroni was a strong and a mighty man; he was a man of a perfect understanding; yea, a man that did not delight in bloodshed; a man whose soul did joy in the liberty and the freedom of his country, and his brethren from bondage and slavery;

12 ஆம், தன் ஜனத்தின் மேல், தன் தேவன் அருளிய அநேக சிலாக்கியங்களுக்காவும், ஆசீர்வாதங்களுக்காகவும், நன்றி செலுத்துவதில் தன்னுடைய இருதயம் பூரித்திருந்த மனுஷனாயிருந்தான்; தன் ஜனத்தின் நலனுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் மிகவும் பிரயாசப்பட்ட மனுஷன்.

Yea, a man whose heart did swell with thanksgiving to his God, for the many privileges and blessings which he bestowed upon his people; a man who did labor exceedingly for the welfare and safety of his people.

13 ஆம், அவன் கிறிஸ்துவின் விசுவாசத்தில் உறுதியாயிருந்த மனுஷன். அவன் தன் இரத்தத்தை சிந்துமளவிற்கும் கூட, தன் ஜனத்தையும், தன் உரிமைகளையும், தன் தேசத்தையும், தன் மார்க்கத்தையும் காக்க, ஆணையிட்டு சத்தியம் செய்திருந்தான்.

Yea, and he was a man who was firm in the faith of Christ, and he had sworn with an oath to defend his people, his rights, and his country, and his religion, even to the loss of his blood.

14 இப்பொழுதும் தேவைப்பட்டால், தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாகத் இரத்தம் சிந்துமளவுக்கு தங்களைத் தற்காத்துக் கொள்ளும்படி, நேபியர் போதிக்கப்பட்டிருந்தனர்; ஆம், ஒருக்காலும் எவருக்கும் கேடு உண்டாக்கக் கூடாதென்றும், ஆம், தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாய் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக அல்லாமல், வேறெதற்காகவும் பட்டயத்தை உயர்த்தக் கூடாதென்றும், போதிக்கப்பட்டிருந்தார்கள்.

Now the Nephites were taught to defend themselves against their enemies, even to the shedding of blood if it were necessary; yea, and they were also taught never to give an offense, yea, and never to raise the sword except it were against an enemy, except it were to preserve their lives.

15 அப்படிச் செய்வதின் மூலம் தேசத்தில் தங்களை
தேவன் விருத்தியடையப் பண்ணுவார் என்பதும்,
அல்லது வேறு வார்த்தைகளிலெனில், தேவனு-
டைய கட்டளைகளைக் கைக்கொள்ளுவதில்
அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்தால்,
அவர் தங்களை தேசத்தில் விருத்தியடையப் பண்-
ணுவார் என்பதும், ஆம், அவர்களின் ஆபத்தைப்
பொறுத்து அவர் அவர்களைப் பறந்தோடவோ,
அல்லது யுத்தத்திற்காக ஆயத்தப்படவோ, எச்சரிப்-
பார் என்பதும் அவர்களது விசுவாசமாயிருந்தது;
16 மேலும் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாய்
அவர்கள் போய் தங்களை தற்காத்துக் கொள்ள-
வேண்டுமா, என்று தேவன் தங்களுக்குத் தெரியப்-
பண்ணி, அப்படிச் செய்வதின் மூலம் கர்த்தர் தங்க-
ளை விடுவிக்கப் பண்ணுவார் என்பதுமே, மரோ-
னியின் விசுவாசமாயிருந்தது. அவன் இருதயம்
இதிலே களிகூர்ந்தது. இரத்தம் சிந்துதலில் அல்லா-
மல் நன்மை செய்வதிலும், தன் ஜனத்தைக் காப்ப-
திலும், ஆம், தேவனுடைய கட்டளைகளைக் கைக்-
கொள்ளுவதிலும், ஆம், அக்கிரமத்தை எதிர்ப்பதி-
லுமே.
17 ஆம், மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்-
குச் சொல்லுகிறேன். எல்லா மனுஷரும் மரோனி-
யைப் போல இருந்திருந்தால், இருப்பதால், எப்போ-
தாவது இருப்பார்களெனில், இதோ, நரகத்தின் வல்-
லமைகள் அனைத்தும் என்றென்றைக்குமாய்
தகர்க்கப்படிருக்கும்; ஆம், பிசாசு மனுபுத்திரரின்
இருதயங்களின்மீது ஒருபோதும் வல்லமை கொள்-
ளமாட்டான்.
18 இதோ, அவன் மோசியாவின் குமாரனாகிய அம்-
மோனைப் போலவும், ஆம், மோசியாவின் மற்ற கு-
மாரரைப் போலவும், ஆம், ஆல்மாவைப் போலவும்,
அவனுடைய குமாரரைப் போலவும் இருந்தான்;
ஏனெனில் அவர்கள் யாவரும் தேவனுடைய மனு-
ஷராய் இருந்தார்கள்.
19 இப்பொழுதும் இதோ, ஏலமனும், அவன் சகோதர-
ரும், ஜனத்திற்கு செய்த சேவை, மரோனி ஜனத்திற்-
கு செய்ததிலும் குறைந்ததல்ல. ஏனெனில் அவர்-
கள் தேவ வார்த்தையைப் பிரசங்கித்து, தங்கள்
வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கிற சகல மனுஷ-
ருக்கும் மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நா-
னம் கொடுத்தார்கள்.
20 இப்படியாக அவர்கள் இருந்தார்கள். அவர்களின்
வார்த்தைகளின் நிமித்தம், ஜனங்கள் கர்த்தருக்கு
மிகவும் பிரியமானவர்களாகுமளவும் தங்களையே
தாழ்த்தினார்கள். இப்படியாக அவர்கள் தங்களுக்-
குள்ளே யுத்தங்களிலிருந்தும், பிணக்குகளிலிருந்-
தும், ஆம், நான்கு வருஷமளவும் விலகியிருந்தார்-
கள்.

And this was their faith, that by so doing God would prosper them in the land, or in other words, if they were faithful in keeping the commandments of God that he would prosper them in the land; yea, warn them to flee, or to prepare for war, according to their danger;

And also, that God would make it known unto them whither they should go to defend themselves against their enemies, and by so doing, the Lord would deliver them; and this was the faith of Moroni, and his heart did glory in it; not in the shedding of blood but in doing good, in preserving his people, yea, in keeping the commandments of God, yea, and resisting iniquity.

Yea, verily, verily I say unto you, if all men had been, and were, and ever would be, like unto Moroni, behold, the very powers of hell would have been shaken forever; yea, the devil would never have power over the hearts of the children of men.

Behold, he was a man like unto Ammon, the son of Mosiah, yea, and even the other sons of Mosiah, yea, and also Alma and his sons, for they were all men of God.

Now behold, Helaman and his brethren were no less serviceable unto the people than was Moroni; for they did preach the word of God, and they did baptize unto repentance all men whosoever would hearken unto their words.

And thus they went forth, and the people did humble themselves because of their words, insomuch that they were highly favored of the Lord, and thus they were free from wars and contentions among themselves, yea, even for the space of four years.

21 ஆனால், நான் சொன்னதுபோல பத்தொன்பதாம் வருஷத்தின் பிற்பகுதியில், ஆம், அவர்கள் தங்களுக்குள்ளிருந்த தங்கள் சமாதானத்தையும் பொருட்படுத்தாமல், தங்கள் சகோதரராகிய லாமானியரோடு தயக்கமுடன் யுத்தம்பண்ண கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

But, as I have said, in the latter end of the nineteenth year, yea, notwithstanding their peace amongst themselves, they were compelled reluctantly to contend with their brethren, the Lamanites.

22 ஆம், முடிவாக, அவர்கள் அதிக தயக்கமுடனிருந்தாலும், லாமானியரோடு போராடிய யுத்தங்கள் அநேக வருஷங்கள் வரைக்கும் ஓய்ந்து போகவில்லை.

Yea, and in fine, their wars never did cease for the space of many years with the Lamanites, notwithstanding their much reluctance.

23 இப்பொழுதும் அவர்கள் இரத்தம் சிந்துதலில் ஆனந்தம் கொள்ளாததால், அவர்கள் லாமானியருக்கு விரோதமாய் யுத்தக் கருவிகளை எடுப்பதற்கு மனம் வருந்தினார்கள்; ஆம், இது மாத்திரம் அல்ல, அவர்கள் தங்கள் சகோதரரில் அநேகரை, தங்கள் தேவனை சந்திக்க ஆயத்தமற்றவர்களாய், இந்த உலகைவிட்டு ஒரு நித்திய உலகத்திற்கு அனுப்பினதற்குக் கருவியாய் இருந்தமைக்கும் வருத்தப்பட்டார்கள்.

Now, they were sorry to take up arms against the Lamanites, because they did not delight in the shedding of blood; yea, and this was not all—they were sorry to be the means of sending so many of their brethren out of this world into an eternal world, unprepared to meet their God.

24 இருப்பினும், ஒரு காலத்தில் தங்கள் சகோதரராயிருந்தவர்களும், ஆம், தங்கள் சபையிலிருந்து பிரிந்து, கலகம் விளைவித்து, தங்களை விட்டுப்போய் லாமானியருடன் சேர்ந்துகொண்டு தங்களை அழிக்கப்போன, காட்டுமிராண்டித்தனமான கொடுமையினால் தங்கள் மனைவிகளும் தங்கள் பிள்ளைகளும் படுகொலை செய்யப்படும்படியாக அவர்கள் தங்கள் ஜீவனைக் கொடுக்க விரும்பவில்லை.

Nevertheless, they could not suffer to lay down their lives, that their wives and their children should be massacred by the barbarous cruelty of those who were once their brethren, yea, and had dissented from their church, and had left them and had gone to destroy them by joining the Lamanites.

25 ஆம், அங்கே தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிற யாரேனும் இருக்கும் மட்டும், நேபியர்களின் இரத்தத்தினிமித்தம், தங்களின் சகோதரர் களிகூர்ந்திருப்பதை அவர்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் அவர்கள் தம்முடைய கட்டளைகளைக் கைக்கொண்டால், அவர்கள் தேசத்தில் விருத்தியடைவார்கள், என்பதே கர்த்தரின் வாக்குத்தத்தமாய் இருந்தது.

Yea, they could not bear that their brethren should rejoice over the blood of the Nephites, so long as there were any who should keep the commandments of God, for the promise of the Lord was, if they should keep his commandments they should prosper in the land.

# ஆல்மா 49

1 இப்பொழுதும், அந்தப்படியே, பத்தொன்பதாவது
வருஷத்தின், பதினோராவது மாதத்தின், பத்தாவ-
து நாளன்று, லாமானியரின் படைகள் அம்மோனி-
கா தேசத்தை நோக்கி நெருங்குவது காணப்பட்டது.

2 இதோ, அப்பட்டணம் மறுபடியும் கட்டப்பட்டிருந்-
தது. பட்டணத்தின் எல்லைகளில் ஒரு சேனையை
மரோனி நிறுத்தியிருந்தான். லாமானியர் கற்களா-
லும், அம்புகளாலும் சண்டையிட்டபடியால், இதோ,
அவர்களுடைய அம்புகளிலிருந்தும், கற்களிலி-
ருந்தும் தங்களைக் காத்துக்கொள்ள, அவர்கள்
சுற்றிலும் மண் சுவர்கள் எழுப்பியிருந்தார்கள்.
3 இதோ, அம்மோனிகா பட்டணம் மறுபடியும் கட்-
டப்பட்டிருந்ததென்று சொன்னேன். ஆம், அதில்
ஒரு பகுதி மறுபடியும் கட்டப்பட்டிருந்தது என்று
உங்களுக்குச் சொல்லுகிறேன்; லாமானியர் அதை
ஜனங்களின் அக்கிரமத்தினிமித்தம், ஒரு விசை
ஏற்கனவே அழித்துப் போட்டிருந்ததால், அது தங்க-
ளுக்கு மறுபடியும் சுலபமாக இரையாகிவிடும், என்-
று எண்ணினார்கள்.
4 ஆனால் இதோ, அவர்களுடைய ஏமாற்றம் எவ்வ-
ளவு பெரிதாயிருந்தது; ஏனெனில் இதோ, நேபியர்-
கள் பூமியைத் தோண்டி தங்களைச் சுற்றி ஒரு
மண்வரம்பு அமைத்திருந்தார்கள். அது மிகவும்
உயரமாய் இருந்ததாலே, லாமானியர் தாக்கும்படி
அவர்கள் மேல் தங்கள் கற்களையும், தங்கள் அம்-
புகளையும் எறியவும், அவர்கள் நுழைவாயில்
அல்லாமல், வேறெந்த வழியிலும், அவர்கள் மேல்
விழவும் கூடாமற்போயிற்று.
5 இப்பொழுது, பாதுகாப்பிடங்களை ஆயத்தப்ப-
டுத்துவதிலான நேபியரின் ஞானத்தினிமித்தம்,
லாமானியர்களின் சேனாதிபதிகள் மிகவும்
அதிர்ந்து போனார்கள்.

6 தங்கள் எண்ணிக்கையின் மிகுதியினிமித்தம்,
இது காலம் வரை தாங்கள் செய்ததுபோல, அவர்-
கள் மேல் விழ வந்திருப்பது தங்களின் பாக்கியம்
என்று லாமானியர்களின் தலைவர்கள் இப்பொழு-
து எண்ணினார்கள்; ஆம், அவர்கள் தங்களை கே-
டயங்களாலும், மார்புக் கவசங்களாலும், ஆயத்தப்-
படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தங்களை
தோல் வஸ்திரங்களாலும் ஆம், தங்கள் நிர்வாணத்-
தை மறைக்கும்படியாக மிகவும் கெட்டியான வஸ்-
திரங்களாலும் தயார்படுத்தியிருந்தார்கள்.
7 இப்படியாக ஆயத்தப்படுத்தியிருந்ததாலே, அவர்-
கள் தங்கள் விருப்பத்தின்படி, தங்களின் சகோதர-
ரை எளிதாக மேற்கொண்டு, அவர்களை அடி-
மைத்தனத்தின் நுகத்தடிக்கு கீழ்ப்படுத்தவோ, அல்-
லது கொன்று சங்கரிக்கவோ எண்ணினார்கள்.

# Alma 49

And now it came to pass in the eleventh month of the nineteenth year, on the tenth day of the month, the armies of the Lamanites were seen approaching towards the land of Ammonihah.

And behold, the city had been rebuilt, and Moroni had stationed an army by the borders of the city, and they had cast up dirt round about to shield them from the arrows and the stones of the Lamanites; for behold, they fought with stones and with arrows.

Behold, I said that the city of Ammonihah had been rebuilt. I say unto you, yea, that it was in part rebuilt; and because the Lamanites had destroyed it once because of the iniquity of the people, they supposed that it would again become an easy prey for them.

But behold, how great was their disappointment; for behold, the Nephites had dug up a ridge of earth round about them, which was so high that the Lamanites could not cast their stones and their arrows at them that they might take effect, neither could they come upon them save it was by their place of entrance.

Now at this time the chief captains of the Lamanites were astonished exceedingly, because of the wisdom of the Nephites in preparing their places of security.

Now the leaders of the Lamanites had supposed, because of the greatness of their numbers, yea, they supposed that they should be privileged to come upon them as they had hitherto done; yea, and they had also prepared themselves with shields, and with breastplates; and they had also prepared themselves with garments of skins, yea, very thick garments to cover their nakedness.

And being thus prepared they supposed that they should easily overpower and subject their brethren to the yoke of bondage, or slay and massacre them according to their pleasure.

8 ஆனால் இதோ, அவர்கள் மிகவும் ஆச்சரியப்ப-
டும்படியாக, லேகியின் பிள்ளைகளுக்குள்ளே
என்றும் அறியப்பட்டிராத வண்ணம், அவர்களுக்-
காக, ஆயத்தப்பட்டிருந்தார்கள். இப்பொழுது
அவர்கள் மரோனியின் போதனைகளின்படியே
லாமானியரோடு யுத்தம் பண்ண ஆயத்தப்பட்டி-
ருந்தார்கள்.

But behold, to their uttermost astonishment, they were prepared for them, in a manner which never had been known among the children of Lehi. Now they were prepared for the Lamanites, to battle after the manner of the instructions of Moroni.

9 அந்தப்படியே, அவர்களினுடைய யுத்த ஆயத்த
விதங்களினால் லாமானியரும், அமலேக்கியரும்
மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

And it came to pass that the Lamanites, or the Amalickiahites, were exceedingly astonished at their manner of preparation for war.

10 இப்பொழுதும், அமலேக்கியா ராஜா, தன் சேனை-
யின் தலைமையேற்று நேபியின் தேசத்தை விட்டு
வந்திருப்பானாகில், ஒருவேளை அவன் நேபிய-
ரை அம்மோனிகா பட்டணத்தில் லாமானியர் தாக்-
கச் செய்திருக்கக்கூடும்; ஏனெனில் இதோ, அவன்
தன் ஜனத்தின் இரத்தத்திற்காக கவலைப்பட்டதில்-
லை.

Now, if king Amalickiah had come down out of the land of Nephi, at the head of his army, perhaps he would have caused the Lamanites to have attacked the Nephites at the city of Ammonihah; for behold, he did care not for the blood of his people.

11 ஆனால், இதோ, அமலேக்கியா தானே யுத்தம் பு-
ரிய வரவில்லை. இதோ, அவனுடைய சேனாதிபதி-
கள் நேபியரை அம்மோனிகா பட்டணத்தில் தாக்க
தைரியம் கொள்ளவில்லை. ஏனெனில் லாமானி-
யர் அவர்களுடைய மறைவிடங்களைக் கண்டு
ஏமாந்துபோய், அவர்கள் மேல் விழக்கூடாத அள-
விற்கு நேபியருக்குள்ளே விவகார நிர்வாகத்தை
மரோனி மாற்றியிருந்தான்.

But behold, Amalickiah did not come down himself to battle. And behold, his chief captains durst not attack the Nephites at the city of Ammonihah, for Moroni had altered the management of affairs among the Nephites, insomuch that the Lamanites were disappointed in their places of retreat and they could not come upon them.

12 ஆதலால், அவர்கள் வனாந்தரத்தினுள் திரும்-
பிப் போய், நேபியர்களுக்கு விரோதமாய் தாங்கள்
வருவதற்கு, அடுத்த சிறந்த இடம் நோவாவின் தே-
சம் என்று கருதி, தங்கள் பாளயத்தோடு அதை
நோக்கி சென்றார்கள்.

Therefore they retreated into the wilderness, and took their camp and marched towards the land of Noah, supposing that to be the next best place for them to come against the Nephites.

13 மரோனி சுற்றிலுமுள்ள தேசமனைத்திலும்
அமைந்திருக்கும் ஒவ்வொரு பட்டணத்தையும்
பலப்படுத்தியிருந்ததை அல்லது பாதுகாப்பு
அரண்களைக் கட்டியிருந்ததை அவர்கள் அறியா-
திருந்தனர்; ஆதலால் அவர்கள் ஒரு நிலையான
தீர்மானத்தோடு, நோவா தேசத்திற்கு நேராய் அணி-
வகுத்து முன் சென்றார்கள். ஆம், அவர்களுடைய
சேனாதிபதிகள் முன் வந்து அந்நகரத்தின் ஜனங்க-
ளை அழிக்கப் போவதாக ஒரு சபதம் எடுத்துக்
கொண்டார்கள்.

For they knew not that Moroni had fortified, or had built forts of security, for every city in all the land round about; therefore, they marched forward to the land of Noah with a firm determination; yea, their chief captains came forward and took an oath that they would destroy the people of that city.

14 ஆனால் இதோ, இதுவரைக்கும் ஒரு பெலனற்ற
இடமாக இருந்த நோவா பட்டணம், அவர்கள் ஆச்ச-
ரியப்படும்படியாய், மரோனியின் செயல்களினால்
இப்பொழுது பெலனடைந்து, ஆம், அம்மோனிகா
பட்டணத்தின் பலத்தையும் மிஞ்சுவதாயிருந்தது.

But behold, to their astonishment, the city of Noah, which had hitherto been a weak place, had now, by the means of Moroni, become strong, yea, even to exceed the strength of the city Ammonihah.

15 இப்பொழுதும், இதோ, இது மரோனியின் ஞானமாயிருந்தது. ஏனெனில் அவர்கள் அம்மோனிகா பட்டணத்தைக் கண்டு பயந்து போவார்கள் என்றும், தேசத்திலே மிகவும் பெலனற்ற பகுதியாக நோவா பட்டணம் இதுகாலம்வரை இருந்தபடியால், அவர்கள் யுத்தம் பண்ணுவதற்கு அங்கே அணிவகுத்து வருவார்கள் என்றும் அவன் எண்ணியிருந்தான்; இப்படியாக அது அவனது வாஞ்சையின்படியே சம்பவித்தது.

And now, behold, this was wisdom in Moroni; for he had supposed that they would be frightened at the city Ammonihah; and as the city of Noah had hitherto been the weakest part of the land, therefore they would march thither to battle; and thus it was according to his desires.

16 இதோ, அப்பட்டணத்தின் மனுஷர் மேல் லேகியை சேனாதிபதியாக மரோனி நியமித்திருந்தான்; இவன் சீதோன் நதியின் கிழக்கேயுள்ள பள்ளத்தாக்கிலே லாமானியரோடு போராடின அதே லேகிதான்.

And behold, Moroni had appointed Lehi to be chief captain over the men of that city; and it was that same Lehi who fought with the Lamanites in the valley on the east of the river Sidon.

17 இப்பொழுதும் இதோ, அந்தப்படியே, அப்பட்டணத்தை லேகி ஆளுகிறான் என்று லாமானியர் கண்டறிந்தபோது, அவர்கள் மறுபடியுமாய் ஏமாந்து போனார்கள். ஏனெனில் அவர்கள் லேகிக்கு மிகவும் பயந்தார்கள்; ஆயினும் அவர்களுடைய சேனாதிபதிகள் அப்பட்டணத்தை தாக்க ஒரு சபதம் செய்திருந்தார்கள். ஆகவே அவர்கள் தங்கள் சேனைகளைக் கொண்டு வந்தார்கள்.

And now behold it came to pass, that when the Lamanites had found that Lehi commanded the city they were again disappointed, for they feared Lehi exceedingly; nevertheless their chief captains had sworn with an oath to attack the city; therefore, they brought up their armies.

18 இப்பொழுதும் இதோ, கட்டப்பட்டிருந்த கரையின் அதி உயரத்தினிமித்தமும், சுற்றிலும் தோண்டப்பட்டிருந்த துரவின் அதி ஆழத்தினிமித்தமும், லாமானியர் அவர்களின் பாதுகாப்பு அரண்களுக்குள் நுழைவாயிலைத் தவிர, வேறெந்த வழியிலும் பிரவேசிக்க இயலவில்லை.

Now behold, the Lamanites could not get into their forts of security by any other way save by the entrance, because of the highness of the bank which had been thrown up, and the depth of the ditch which had been dug round about, save it were by the entrance.

19 மற்ற எந்த வழியிலாகிலும் அரணுக்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் யாவரையும், கற்களையும், அம்புகளையும் அவர்கள் மீது எறிந்து அழித்துப்போட, இப்படியாக நேபியர்கள் ஆயத்தமாயிருந்தார்கள்.

And thus were the Nephites prepared to destroy all such as should attempt to climb up to enter the fort by any other way, by casting over stones and arrows at them.

20 தங்களது பாதுகாப்பு ஸ்தலத்திற்குள் நுழைவாயில் வழியே வருவதற்கு முயற்சிக்கும் அனைவரையும் அடித்துப்போடும்படி, பட்டயங்களையும் கவண்களையும் உடைய, தங்களின் பராக்கிரமசாலிகளின் குழுவை நிறுத்தி வைத்து, அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள்; இப்படியாக தங்களை லாமானியரிடமிருந்து காத்துக் கொள்ள அவர்கள் ஆயத்தமாயிருந்தார்கள்.

Thus they were prepared, yea, a body of their strongest men, with their swords and their slings, to smite down all who should attempt to come into their place of security by the place of entrance; and thus were they prepared to defend themselves against the Lamanites.

21 அந்தப்படியே, லாமானியர்களின் சேனாதிபதிகள் தங்கள் சேனைகளை நுழைவாயிலின் இடத்தின் முன்னே கூடிவரச் செய்து, நேபியருடைய பாதுகாப்பு ஸ்தலத்தினுள் பிரவேசிக்க, அவர்களுடன் போராடத் துவங்கினார்கள்; ஆனால் இதோ, அவர்கள் ஒவ்வொரு முறையும் பின்னாகத் துரத்தப்பட்டதினிமித்தம், அவர்கள் மிகுதியான சங்காரத்தாலே கொல்லப்பட்டனர்.

And it came to pass that the captains of the Lamanites brought up their armies before the place of entrance, and began to contend with the Nephites, to get into their place of security; but behold, they were driven back from time to time, insomuch that they were slain with an immense slaughter.

22 இப்பொழுதும் அவர்கள் நுழைவாயில் வழியாக
நேபியரின் மீது வல்லமை பெறமுடியாததைக் கண்-
டபோது, தங்கள் சேனைகள் செல்லும்படி ஒரு வழி-
யுண்டாக்கவும், அதன்மூலம் சண்டையிடுவதற்கு
ஒரு சமமான சந்தர்ப்பம் அவர்களுக்கு கிடைக்கும்-
படிக்கும், அவர்கள் மண்ணினாலான மதில்களை
இடித்துப்போட ஆரம்பித்தார்கள்; ஆனால் இதோ,
இந்த முயற்சிகளிலே அவர்கள் தங்கள் மீது எறியப்-
பட்ட கற்களாலும், அம்புகளாலும் அழிக்கப்பட்டுப்
போனார்கள்; அவர்கள் துரவுகளை மண்ணினா-
லான மதில்களை இடித்துத் தள்ளி மூடுவதற்குப்
பதிலாக, அவை அவர்களுடைய மரித்தோர் மற்-
றும் காயமடைந்தவர்களின் உடல்களால் ஓரளவுக்-
கு நிரப்பப்பட்டன.

Now when they found that they could not obtain power over the Nephites by the pass, they began to dig down their banks of earth that they might obtain a pass to their armies, that they might have an equal chance to fight; but behold, in these attempts they were swept off by the stones and arrows which were thrown at them; and instead of filling up their ditches by pulling down the banks of earth, they were filled up in a measure with their dead and wounded bodies.

23 இப்படியாக நேபியர் தங்கள் விரோதிகளின்மேல்
சகல வல்லமையையும் கொண்டிருந்தார்கள்; இப்-
படியாக லாமானியர் தங்கள் சேனாதிபதிகள்
அனைவரும் கொல்லப்பட்டுப் போகுமட்டும், நேபி-
யரை அழிக்க முயற்சித்தார்கள்; ஆம், லாமானிய-
ரில் ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொல்லப்பட்-
டார்கள்; அதற்கு மாறாக நேபியரில் ஒரு ஆத்துமா-
வாகிலும் கொல்லப்படவில்லை.

Thus the Nephites had all power over their enemies; and thus the Lamanites did attempt to destroy the Nephites until their chief captains were all slain; yea, and more than a thousand of the Lamanites were slain; while, on the other hand, there was not a single soul of the Nephites which was slain.

24 நுழைவாயிலினூடாக வந்த லாமானியரின் அம்-
புகளுக்கு பாதுகாக்கப்படாத ஐம்பது பேர் வரை
காயம் அடைந்திருந்தார்கள். ஆனால் அவர்கள்
தங்கள் கேடயங்களினாலும், தங்கள் மார்புக் கவ-
சங்களினாலும், தங்கள் தலைக் கவசங்களினா-
லும் மறைக்கப்பட்டதால், அவர்களது காயங்கள்
அவர்களுடைய கால்களிலே காணப்பட்டன, அக்-
காயங்களில் அநேகம் மிகவும் கடுமையாயிருந்-
தன.

There were about fifty who were wounded, who had been exposed to the arrows of the Lamanites through the pass, but they were shielded by their shields, and their breastplates, and their head-plates, insomuch that their wounds were upon their legs, many of which were very severe.

25 அந்தப்படியே, லாமானியர் தங்கள் சேனாதிபதி-
கள் யாவரும் கொல்லப்பட்டதைக் கண்டபோது,
அவர்கள் வனாந்தரத்தினுள் ஓடிப்போனார்கள்.
அந்தப்படியே, பிறப்பிலே நேபியனாயிருந்த தங்-
கள் ராஜாவாகிய அமலேக்கியாவிற்கு, தங்களின்
மகா இழப்பைக் குறித்து அறிவிக்க, அவர்கள் நேபி-
யின் தேசத்திற்குத் திரும்பினார்கள்.

And it came to pass, that when the Lamanites saw that their chief captains were all slain they fled into the wilderness. And it came to pass that they returned to the land of Nephi, to inform their king, Amalickiah, who was a Nephite by birth, concerning their great loss.

26 அந்தப்படியே, நேபியரிடத்தில் தன் விருப்பத்தை
அடையவில்லை, அவன் அவர்களை அடிமைத்-
தன நுகத்தடிக்குக் கீழ்ப்படுத்தவில்லை என்பதற்-
காக, அவன் தன் ஜனத்தின் மேல் மிகுந்த கோபம்-
கொண்டான்;

And it came to pass that he was exceedingly angry with his people, because he had not obtained his desire over the Nephites; he had not subjected them to the yoke of bondage.

27 ஆம், அவன் மிகவும் கோபம்கொண்டு தே-
வனைச் சபித்து, மரோனியையும் சபித்து, அவனு-
டைய இரத்தத்தைக் குடிப்பேன் என்று ஒரு சபதத்-
தோடு ஆணையிட்டான்; மரோனி தன் ஜனத்தினு-
டைய பாதுகாப்பிற்காக ஆயத்தம் பண்ணுவதில்,
தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டதி-
னிமித்தமே இப்படிச் செய்தான்.

Yea, he was exceedingly wroth, and he did curse God, and also Moroni, swearing with an oath that he would drink his blood; and this because Moroni had kept the commandments of God in preparing for the safety of his people.

28 அந்தப்படியே, மாறாக, தங்களைத் தங்கள் விரோ-
திகளின் கைகளுக்குத் தப்புவிக்கப்பண்ணின,
தங்கள் தேவனாகிய கர்த்தரின் இணையற்ற வல்ல-
மைக்காக, அவருக்கு நேபியின் ஜனங்கள் நன்றி
தெரிவித்தார்கள்.

And it came to pass, that on the other hand, the people of Nephi did thank the Lord their God, because of his matchless power in delivering them from the hands of their enemies.

29 இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல், நியா-
யாதிபதிகளின் பத்தொன்பதாம் வருஷ ஆளுகை-
யும் முடிவுற்றது.

And thus ended the nineteenth year of the reign of the judges over the people of Nephi.

30 ஏலமனாலும், சிப்லோனாலும். கொரியாந்தனா-
லும், அம்மோனாலும், அவன் சகோதரர்களாலும்,
மற்றும் மனந்திரும்புதலுக்கேதுவாய் ஞானஸ்நா-
னத்தைப் பெற்று, ஜனங்களுக்குள்ளே பிரசங்கிக்க
அனுப்பப்பட்டு, தேவனுடைய பரிசுத்த முறைமை-
யினால் நியமிக்கப்பட்ட அனைவராலும், தங்க-
ளுக்கு அறிவிக்கப்பட்ட தேவ வார்த்தைக்கு அவர்-
கள் செவிகொடுத்து கருத்தாய் இருந்ததினிமித்தம்,
அவர்களுக்குள்ளே தொடர்ந்து சமாதானமும் நில-
வியது. சபையும் மிகவும் விருத்தியடைந்தது.

Yea, and there was continual peace among them, and exceedingly great prosperity in the church because of their heed and diligence which they gave unto the word of God, which was declared unto them by Helaman, and Shiblon, and Corianton, and Ammon and his brethren, yea, and by all those who had been ordained by the holy order of God, being baptized unto repentance, and sent forth to preach among the people.

# ஆல்மா 50

1 இப்பொழுது, அந்தப்படியே, மரோனி யுத்தத்திற்-
கான ஆயத்தங்களையோ, லாமானியருக்கு விரோ-
தமாய்த் தன் ஜனத்தை தற்காத்துக்கொள்வதை-
யோ, நிறுத்தி விடவில்லை; ஏனெனில் நியாயாதிப-
திகளின் ஆளுகையின் இருபதாவது வருஷத்தின்
துவக்கத்திலே, நேபியரின் வசமிருந்த தேசமனைத்-
திலும், சகல பட்டணங்களைச் சுற்றிலும் மண்-
ணைத் தோண்டி குவிக்கும் வேலையின் தொடக்-
கத்தைத் தன் சேனைகள் தொடங்கும்படிச் செய்-
தான்.

2 இம்மண் குவியல்களின் உச்சிவிளிம்பிலே மரத்த-
டுப்புகள் இருக்கும்படியும், ஆம், பட்டணங்களைச்
சுற்றியும் ஆள் உயரத்திற்கு மரத்தடுப்புகள் எழுப்-
பும்படி செய்தான்.

3 அந்த மரத்தடுப்பின் மேல் சுற்றிலும் முளைக்
கால்கள் வைக்கப்படும்படி செய்தான்; அவைகள்
பலமுடையனவாயும் உயரமாயுமிருந்தன.

4 அவன் அந்த முளைக்கால்களின் உயரத்திற்கு
மேலாக கோபுரங்கள் எழுப்பும்படிச் செய்தான்;
அவன் லாமானியருடைய கற்களும், அம்புகளும்,
அவர்களைக் காயப்படுத்த முடியாதபடிக்கு, அக்-
கோபுரங்களின் மேல் பாதுகாப்பு ஸ்தலங்களைக்
கட்டும்படிச் செய்தான்.

5 அதன் மேலிருந்து தங்களுடைய சௌகரியத்துக்-
கும், தங்களுடைய பெலத்திற்குமேற்ப, பட்டணத்-
துச் சுவர்களை நெருங்க முயற்சிக்கும் எவனையும்,
கற்களை எறிந்து கொல்ல அவர்கள் ஆயத்தமாயி-
ருந்தார்கள்.

6 இப்படியாக தேசமுழுவதிலும் உள்ள ஒவ்வொரு
பட்டணத்தைச் சுற்றியும், மரோனி தங்கள் விரோதி-
களின் வருகையை எதிர்க்க அலங்கங்களை
ஆயத்தப்படுத்தினான்.

7 அந்தப்படியே, மரோனி தன் சேனைகள் கிழக்கு
வனாந்தரத்தினுள் போகவேண்டுமென கட்டளை-
யிட்டான்; ஆம், அவர்கள் போய் கிழக்கு வனாந்த-
ரத்திலிருந்த லாமானியர் அனைவரையும், சார-
கெம்லா தேசத்திற்குத் தெற்கே இருந்த அவர்களு-
டைய சொந்த தேசத்திற்குள் துரத்தினார்கள்.

8 நேபியின் தேசம் கிழக்கு சமுத்திரம் தொடங்கி, நேர்
மார்க்கமாய் மேற்கு சமுத்திரம் வரைக்கும் நீண்டி-
ருந்தது.

9 அந்தப்படியே, மரோனி தங்கள் வசமிருந்த தேசங்-
களுக்கு வடக்கே உள்ள, கிழக்கு வனாந்தரத்திலி-
ருந்து சகல லாமானியரையும் துரத்தி, சாரகெம்லா
தேசத்திலும் அதைச் சுற்றியுள்ள தேசத்திலும்
இருந்த குடிகளை, கடற்கரையின் எல்லைவரை, கி-
ழக்கு வனாந்தரத்தினுள் சென்று, தேசத்தைச் சுதந்-
தரித்துக் கொள்ளும்படிச் செய்தான்.

# Alma 50

And now it came to pass that Moroni did not stop making preparations for war, or to defend his people against the Lamanites; for he caused that his armies should commence in the commencement of the twentieth year of the reign of the judges, that they should commence in digging up heaps of earth round about all the cities, throughout all the land which was possessed by the Nephites.

And upon the top of these ridges of earth he caused that there should be timbers, yea, works of timbers built up to the height of a man, round about the cities.

And he caused that upon those works of timbers there should be a frame of pickets built upon the timbers round about; and they were strong and high.

And he caused towers to be erected that overlooked those works of pickets, and he caused places of security to be built upon those towers, that the stones and the arrows of the Lamanites could not hurt them.

And they were prepared that they could cast stones from the top thereof, according to their pleasure and their strength, and slay him who should attempt to approach near the walls of the city.

Thus Moroni did prepare strongholds against the coming of their enemies, round about every city in all the land.

And it came to pass that Moroni caused that his armies should go forth into the east wilderness; yea, and they went forth and drove all the Lamanites who were in the east wilderness into their own lands, which were south of the land of Zarahemla.

And the land of Nephi did run in a straight course from the east sea to the west.

And it came to pass that when Moroni had driven all the Lamanites out of the east wilderness, which was north of the lands of their own possessions, he caused that the inhabitants who were in the land of Zarahemla and in the land round about should go forth into the east wilderness, even to the borders by the seashore, and possess the land.

10 அவன் சேனைகளைத் தெற்கில் தங்கள் வசமி-
ருந்தவைகளின் எல்லைகளில் நிறுத்தி, தங்கள்
விரோதிகளின் கைகளிலிருந்து தங்களுடைய சே-
னைகளையும், தங்களுடைய ஜனத்தையும் பாது-
காக்கும்படி கொத்தளங்களை அவர்கள் கட்டும்படி
செய்தான்.

And he also placed armies on the south, in the borders of their possessions, and caused them to erect fortifications that they might secure their armies and their people from the hands of their enemies.

11 இப்படியாக அவன் கிழக்கு வனாந்தரத்திலும்
மேற்கு வனாந்தரத்திலுமாக இருந்த லாமானியரின்
கொத்தளங்களை அகற்றி, ஆம், சாரகெம்லா தேசத்-
திற்கும் நேபியரின் தேசத்திற்குமிடையே, மேற்கு
சமுத்திரம் தொடங்கி சீதோன் நதியின் ஊற்று வரை
நீண்ட, நேபியருக்கும் லாமானியருக்கும் இடையே-
யான எல்லைகளில் அரண்களை எழுப்பினான்.
நேபியர்கள் வடக்கேயுள்ள சகல தேசத்தையும்,
ஆம், தங்கள் இஷ்டப்படியே உதாரத்துவஸ்தலத்-
தின் வடக்கேயுள்ள தேசம் முழுவதையும் தங்கள்
வசமாக்கிக் கொண்டார்கள்.

And thus he cut off all the strongholds of the Lamanites in the east wilderness, yea, and also on the west, fortifying the line between the Nephites and the Lamanites, between the land of Zarahemla and the land of Nephi, from the west sea, running by the head of the river Sidon—the Nephites possessing all the land northward, yea, even all the land which was northward of the land Bountiful, according to their pleasure.

12 இப்படியாக மரோனி, தன் கிரியைகளினாலே
தனது சேனைகளுக்குக் கொடுத்த பாதுகாப்பின்
நிச்சயத்தினிமித்தம், அனுதினமும் வளர்ந்துவந்த
அவர்களைக்கொண்டு, தங்கள் வசமிருந்த தேசங்-
களின்மேல், லாமானியருக்கு எந்த அதிகாரமும்
இராதபடிக்கு, அவர்களுடைய வசமிருக்கிற தேசங்-
களிலிருந்து அவர்களின் பெலத்தையும், அதிகா-
ரத்தையும் எடுத்துப் போடும்படி வகைதேடினான்.

Thus Moroni, with his armies, which did increase daily because of the assurance of protection which his works did bring forth unto them, did seek to cut off the strength and the power of the Lamanites from off the lands of their possessions, that they should have no power upon the lands of their possession.

13 அந்தப்படியே, நேபியர் ஒரு பட்டணத்திற்கு அஸ்-
திபாரம் போடத் துவங்கினார்கள். அந்தப் பட்ட-
ணத்தை மரோனி என்று அழைத்தார்கள்; அது கி-
ழக்கு சமுத்திரம் பக்கமாய் இருந்தது; அது தெற்கே
லாமானியர் வசமிருந்தவைகளின் எல்லைக்கோட்-
டுக்கு அருகாமையிலிருந்தது.

And it came to pass that the Nephites began the foundation of a city, and they called the name of the city Moroni; and it was by the east sea; and it was on the south by the line of the possessions of the Lamanites.

14 அவர்கள் மரோனி பட்டணத்திற்கும் ஆரோன்
பட்டணத்திற்கும் இடையே, அவைகளின் எல்லை-
களை இணைத்து ஒரு பட்டணத்திற்கான அஸ்தி-
பாரத்தையும் போடத்துவங்கினார்கள்; அப்பட்ட-
ணத்தை அல்லது அந்த தேசத்தை நேபிகா என்ற-
ழைத்தார்கள்.

And they also began a foundation for a city between the city of Moroni and the city of Aaron, joining the borders of Aaron and Moroni; and they called the name of the city, or the land, Nephihah.

15 அதே வருஷத்தில் அவர்கள் வடக்கே அநேக பட்-
டணங்களைக் கட்டத் துவங்கினார்கள், கடற்கரை-
யோரங்களில் வடக்கே, லேகி என்று அவர்கள்
அழைத்த ஒரு பட்டணத்தை விசேஷித்த விதமாக
கட்டினார்கள்.

And they also began in that same year to build many cities on the north, one in a particular manner which they called Lehi, which was in the north by the borders of the seashore.

16 இப்படியாக இருபதாவது வருஷமும் முடிவுற்றது.

And thus ended the twentieth year.

17 நேபியின் ஜனங்களின் மீதான நியாயாதிபதிக-
ளின் ஆளுகையின் இருபத்தொன்றாவது வரு-
ஷத்தின் துவக்கத்தில், நேபியின் ஜனங்கள் இச்செ-
ழுமையான சூழ்நிலைகளில் இருந்தார்கள்.

And in these prosperous circumstances were the people of Nephi in the commencement of the twenty and first year of the reign of the judges over the people of Nephi.

18 அவர்கள் மிகவும் விருத்தியடைந்து, அவர்கள்
மிகவும் ஐஸ்வர்யவான்களானார்கள்; ஆம், அவர்-
கள் பெருகி, தேசத்திலே பெலப்பட்டார்கள்.

And they did prosper exceedingly, and they became exceedingly rich; yea, and they did multiply and wax strong in the land.

19 இப்படியாக கர்த்தர் மனுபுத்திரரிடத்தில் தம்மு-
டைய வார்த்தைகள் யாவும் நிறைவேறும்படிக்கு,
அவருடைய கிரியைகள் அனைத்தும் எவ்வளவு
இரக்கமும் நியாயமும் உள்ளவையாயிருக்கின்றன,
என்று நாம் காண்கிறோம்; ஆம், இந்த நேரத்திலும்
கூட அவர் லேகியிடம் சொன்ன அவருடைய
வார்த்தைகள் நிரூபிக்கப்பட்டதை நாம் பார்க்கி-
றோம்:

And thus we see how merciful and just are all the dealings of the Lord, to the fulfilling of all his words unto the children of men; yea, we can behold that his words are verified, even at this time, which he spake unto Lehi, saying:

20 நீயும் உன் பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்பட்ட-
வர்கள்; அவர்கள் என் கட்டளைகளைக் கைக்-
கொள்கிற அளவில், தேசத்தில் விருத்தியடைந்து
ஆசீர்வதிக்கப்படுவார்கள். ஆனால் அவர்கள் என்
கட்டளைகளைக் கைக்கொள்ளாமற் போகிற அள-
வில், அவர்கள் கர்த்தரின் பிரசன்னத்தினின்று
அறுப்புண்டு போவார்கள்.

Blessed art thou and thy children; and they shall be blessed, inasmuch as they shall keep my commandments they shall prosper in the land. But remember, inasmuch as they will not keep my commandments they shall be cut off from the presence of the Lord.

21 இந்த வாக்குத்தத்தங்கள் நேபியின் ஜனங்களுக்கு
நிரூபிக்கப்பட்டன என்று நாம் பார்க்கிறோம்;
ஏனெனில் அவர்களுக்குள்ளிருந்த அவர்களு-
டைய சண்டைகள், அவர்களுடைய பிணக்குகள்,
ஆம், அவர்களுடைய கொலைபாதகங்கள், அவர்-
களுடைய கொள்ளை, அவர்களுடைய விக்கிரக
ஆராதனை, அவர்களுடைய வேசித்தனம், அவர்க-
ளுடைய அருவருப்புகள், ஆகியவைகளே அவர்-
கள் மேல் அவர்களின் யுத்தங்களையும் அவர்க-
ளின் அழிவுகளையும் கொண்டு வந்தன.

And we see that these promises have been verified to the people of Nephi; for it has been their quarrelings and their contentions, yea, their murderings, and their plunderings, their idolatry, their whoredoms, and their abominations, which were among themselves, which brought upon them their wars and their destructions.

22 கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்வ-
திலே உண்மையாயிருந்தவர்கள் எல்லா நேரங்களி-
லும் விடுவிக்கப்பட்டனர், ஆனால் அவர்களு-
டைய ஆயிரக்கணக்கான துன்மார்க்க சகோதரர்
அடிமைத்தனத்திற்கோ, பட்டயத்தினால் அழிக்கப்-
படவோ, அல்லது அவிசுவாசத்தில் படிப்படியாக
நலிந்து லாமானியரோடு கலந்துபோகவோ விடப்-
பட்டனர்.

And those who were faithful in keeping the commandments of the Lord were delivered at all times, whilst thousands of their wicked brethren have been consigned to bondage, or to perish by the sword, or to dwindle in unbelief, and mingle with the Lamanites.

23 ஆனால் இதோ நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் இருபத்தோராம் வருஷமாகிய இக்காலத்தில்,
மரோனியின் நாட்களைக் காட்டிலும் ஒரு அதிக
மகிழ்ச்சியான காலம், நேபியின் ஜனங்களுக்குள்-
ளே நேபியின் நாட்கள் முதற்கொண்டு, ஒருபோதும்
இருந்ததில்லை.

But behold there never was a happier time among the people of Nephi, since the days of Nephi, than in the days of Moroni, yea, even at this time, in the twenty and first year of the reign of the judges.

24 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் இருபத்திரண்டாம் வருஷமும் சமாதானமாய்
முடிவுற்றது. ஆம் அப்படியே இருபத்தி மூன்றாம்
வருஷமும் முடிவுற்றது.

And it came to pass that the twenty and second year of the reign of the judges also ended in peace; yea, and also the twenty and third year.

25 அந்தப்படியே, அத்தேசங்கள் இரண்டும் கடற்க-
ரையோரமாய் அமைந்திருந்த, லேகியின் தேசத்-
தைக் குறித்தும், லேகியின் எல்லைகளுக்கு அடுத்-
ததாயிருந்த மோரியாந்தன் தேசத்தைக் குறித்தும்,
நேபியருக்குள்ளே நடந்த பிணக்கு இல்லாதிருந்தி-
ருக்குமேயானால், அவர்களினிடையே நியாயாதிப-
திகளின் ஆளுகையின் இருபத்தி நான்காம் வரு-
ஷத்தின் துவக்கத்திலேயும் சமாதானம் நிலவியி-
ருந்திருக்கும்.

And it came to pass that in the commencement of the twenty and fourth year of the reign of the judges, there would also have been peace among the people of Nephi had it not been for a contention which took place among them concerning the land of Lehi, and the land of Morianton, which joined upon the borders of Lehi; both of which were on the borders by the seashore.

26 ஏனெனில் இதோ, மோரியாந்தன் தேசத்தைச் சு-
தந்தரித்த ஜனங்கள் லேகியின் தேசத்தில் ஒரு பகு-
தியைக் கோரினார்கள்; ஆதலால் மோரியாந்தன்
ஜனங்கள், தங்கள் சகோதரருக்கு விரோதமாய் ஆயு-
தங்களை எடுத்து அவர்களைப் பட்டயத்தினால்
மடியப்பண்ண உறுதியாயிருக்குமளவிற்கு, அவர்-
களுக்குள்ளே சூடான பிணக்கு துவங்கியது.

For behold, the people who possessed the land of Morianton did claim a part of the land of Lehi; therefore there began to be a warm contention between them, insomuch that the people of Morianton took up arms against their brethren, and they were determined by the sword to slay them.

27 ஆனால் இதோ, லேகியின் தேசத்தைச் சுதந்தரித்-
தோர் மரோனியின் பாளயத்திற்கு ஓடிப்போய், உத-
விக்காக அவனிடம் விண்ணப்பம் செய்தார்கள்;
ஏனெனில் இதோ, அவர்களிடத்தில் எந்தத் தவறும்
காணப்படவில்லை.

But behold, the people who possessed the land of Lehi fled to the camp of Moroni, and appealed unto him for assistance; for behold they were not in the wrong.

28 அந்தப்படியே, லேகியின் ஜனங்கள் மரோனியின்
பாளையத்திற்கு பறந்தோடினார்கள் என்று, மோரி-
யாந்தன் என்ற நாமம் கொண்ட மனுஷனால் வழி-
நடத்தப்பட்ட மோரியாந்தன் ஜனங்கள், கண்டபோ-
து, மரோனியின் சேனை தங்கள் மேல் விழுந்து, தங்-
களை அழித்துவிடுமோ என்று மிகவும் பயந்தார்-
கள்.

And it came to pass that when the people of Morianton, who were led by a man whose name was Morianton, found that the people of Lehi had fled to the camp of Moroni, they were exceedingly fearful lest the army of Moroni should come upon them and destroy them.

29 ஆதலால், மோரியாந்தன் அவர்களை வடக்கே
பரந்த தண்ணீர் நிலைகளால் சூழப்பட்டிருந்த தே-
சத்திற்குப் பறந்தோடி, அந்த வடதேசத்தை வச-
மாக்க, அவர்கள் இருதயங்களை ஏவினான்.

Therefore, Morianton put it into their hearts that they should flee to the land which was northward, which was covered with large bodies of water, and take possession of the land which was northward.

30 இதோ, அவர்கள் இத்திட்டத்தை நிறைவேற்றியி-
ருப்பார்கள். (அது புலம்பலுக்கு ஏதுவாயிருந்தி-
ருக்கும்) ஆனால் இதோ, மோரியாந்தன் அதிக
உணர்ச்சிக்கு ஆட்பட்ட மனுஷனாயிருந்தபடியால்,
அவன் தன் வேலைக்காரிகளில் ஒருத்தி மேல் கோ-
பம்கொண்டு அவளை உதைத்து, அவளை மிகவும்
அடித்தான்.

And behold, they would have carried this plan into effect, (which would have been a cause to have been lamented) but behold, Morianton being a man of much passion, therefore he was angry with one of his maid servants, and he fell upon her and beat her much.

31 அந்தப்படியே, அவள் மரோனியின் பாளயத்திற்-
கு ஓடிவந்து, அதைக் குறித்து சகல காரியங்களை-
யும், வடக்கேயுள்ள தேசத்திற்குப் பறந்து போக-
வேண்டுமென்ற, அவர்களின் உத்தேசங்களைப்-
பற்றியும் மரோனியிடம் சொன்னாள்.

And it came to pass that she fled, and came over to the camp of Moroni, and told Moroni all things concerning the matter, and also concerning their intentions to flee into the land northward.

32 இப்பொழுதும் இதோ, மரோனி உதாரத்துவஸ்தல
தேசத்து ஜனங்களைக் குறித்து பயப்பட்டான்.
அதாவது அவர்கள் மோரியாந்தனின் வார்த்தைக-
ளுக்குச் செவிகொடுத்து, அவன் ஜனத்தோடு சேர்ந்-
துகொண்டு இப்படியாக அவன் தேசத்தில் அப்பகு-
தியைப் பெற்றுவிட்டால், அது நேபியருக்குள்ளே
தகாத விளைவுகளுக்கு அஸ்திபாரம் அமைப்பது
மாத்திரம் அல்ல. அந்த விளைவுகளினால் அவர்க-
ளது சுதந்திரத்தை பறித்துவிடுமோ, என்று பயந்-
தான்.

Now behold, the people who were in the land Bountiful, or rather Moroni, feared that they would hearken to the words of Morianton and unite with his people, and thus he would obtain possession of those parts of the land, which would lay a foundation for serious consequences among the people of Nephi, yea, which consequences would lead to the overthrow of their liberty.

33 ஆதலால் மோரியாந்தன் ஜனங்களுடைய வடதே-
சத்து பயணத்தைக் குறிக்கிட்டு நிறுத்தும்படி,
மரோனி சேனையை அவர்களுடைய யுத்தக் கரு-
விகளோடு அனுப்பி வைத்தான்.

Therefore Moroni sent an army, with their camp, to head the people of Morianton, to stop their flight into the land northward.

34 அந்தப்படியே, அவர்கள் பாழ்க்கடிப்பு என்ற தேசத்தின் எல்லைகளுக்கு வரும்வரைக்கும், அவர்களைக் குறுக்கிடவில்லை. மேற்கிலும், கிழக்கிலும் சமுத்திர வழியாய் வடதேசத்திற்கு நடத்திச் செல்லுகிற, இடுக்கான கணவாய் அருகே அவர்கள் குறுக்கிட்டார்கள்.

And it came to pass that they did not head them until they had come to the borders of the land Desolation; and there they did head them, by the narrow pass which led by the sea into the land northward, yea, by the sea, on the west and on the east.

35 அந்தப்படியே, தியான்கும் என்ற நாமம்கொண்ட மனுஷனால் நடத்திச் செல்லப்பட்ட, மரோனியினால் அனுப்பப்பட்ட சேனை, மோரியாந்தனின் ஜனத்தை எதிர்கொண்டது. மோரியாந்தனின் ஜனங்கள் (அவனுடைய துன்மார்க்கத்தினாலும் இச்சகமான வார்த்தைகளினாலும் ஏவப்பட்டிருந்து) மிகவும் அடங்காதவர்களாயிருந்தபடியால், அவர்களுக்குள்ளே ஓர் போர் மூண்டு, அதிலே தியான்கும், மோரியாந்தனைக் கொன்று, அவன் சேனையை வீழ்த்தி, அவர்களைச் சிறைக் கைதிகளாக்கி, மரோனியின் பாளையத்திற்குத் திரும்பினான். இப்படியாக நேபியின் ஜனத்தின் மீதான நியாயாதிபதிகளின் இருபத்தி நான்காம் வருஷ ஆளுகையும் முடிவுற்றது.

And it came to pass that the army which was sent by Moroni, which was led by a man whose name was Teancum, did meet the people of Morianton; and so stubborn were the people of Morianton, (being inspired by his wickedness and his flattering words) that a battle commenced between them, in the which Teancum did slay Morianton and defeat his army, and took them prisoners, and returned to the camp of Moroni. And thus ended the twenty and fourth year of the reign of the judges over the people of Nephi.

36 இப்படியாக மோரியாந்தனின் ஜனங்கள் திரும்பக் கொண்டு வரப்பட்டார்கள். சமாதானத்தைக் கைக்கொள்ளுவோம் என்ற அவர்களின் உடன்படிக்கையின் பேரில், அவர்கள் மோரியாந்தன் பட்டணத்திற்குத் திரும்பக் கொண்டு சேர்க்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களுக்கும் லேகியின் ஜனத்திற்கும் ஓர் ஒற்றுமை உண்டானது; அவர்களும் அவர்களுடைய தேசத்திற்குத் திரும்பக் கொண்டு சேர்க்கப்பட்டார்கள்.

And thus were the people of Morianton brought back. And upon their covenanting to keep the peace they were restored to the land of Morianton, and a union took place between them and the people of Lehi; and they were also restored to their lands.

37 அந்தப்படியே, அதே வருஷத்தில் நேபியின் ஜனங்களுக்குச் சமாதானம் மறுபடியும் நிலைவரப்பட்டது, இரண்டாம் பிரதான நியாயாதிபதியாகிய நேபிகா, தேவனுக்கு முன்பு பூரண சன்மார்க்கத்துடன் நியாயாசனத்தில் அமர்ந்து மரித்தான்.

And it came to pass that in the same year that the people of Nephi had peace restored unto them, that Nephihah, the second chief judge, died, having filled the judgment-seat with perfect uprightness before God.

38 இருப்பினும், ஆல்மாவினாலும், அவன் பிதாக்களாலும் மிகவும் பரிசுத்தமானதென்று கருதப்பட்ட பதிவேடுகளையும் பொருட்களையும் பெற்றுக்கொள், என்ற ஆல்மாவின் வேண்டுகோளை மறுத்திருந்தான்; ஆதலால் ஆல்மா அவைகளைத் தன் குமாரானாகிய ஏலமனிடத்தில் ஒப்படைத்தான்.

Nevertheless, he had refused Alma to take possession of those records and those things which were esteemed by Alma and his fathers to be most sacred; therefore Alma had conferred them upon his son, Helaman.

39 இதோ, அந்தப்படியே, நேபிகாவின் குமாரன் தன்
தகப்பனுடைய ஸ்தானத்திலே நியாயாசனத்தில்
அமரும்படி நியமிக்கப்பட்டான்; ஆம், அவன் நீதி-
யாய் நியாயம் விசாரிக்கவும், ஜனங்களுடைய சமா-
தானத்தையும், சுதந்திரத்தையும் நிலைநிறுத்தவும்,
தேவனாகிய தங்கள் கர்த்தரைத் தொழுதுகொள்-
ளுகிற அவர்களுடைய பரிசுத்த பாக்கியங்களை
அவர்களுக்கு கொடுக்கவும், தன் வாழ்நாள் முழுவ-
தும் தேவனுடைய நியதிகளை ஆதரித்து காக்க-
வும், துன்மார்க்கரை அவர்களுடைய குற்றத்திற்-
கேற்ப நியாயத்திற்குள் கொண்டுவரவும், ஜனங்க-
ளின்மேல் பிரதான நியாயாதிபதியாயும், ஆளுன-
ராகவும், ஆணையினாலும் பரிசுத்த நியமத்தினா-
லும், நியமிக்கப்பட்டான்.

Behold, it came to pass that the son of Nephihah was appointed to fill the judgment-seat, in the stead of his father; yea, he was appointed chief judge and governor over the people, with an oath and sacred ordinance to judge righteously, and to keep the peace and the freedom of the people, and to grant unto them their sacred privileges to worship the Lord their God, yea, to support and maintain the cause of God all his days, and to bring the wicked to justice according to their crime.

40 இப்பொழுது இதோ, அவன் நாமம் பகோரன் என்-
பதாகும். பகோரன் தன் தகப்பனின் ஆசனத்தில்
அமர்ந்தான், நேபியின் ஜனங்களின் மேல் இருபத்தி
நான்காவது வருஷ முடிவிலே தன் ஆளுகையைத்
துவங்கினான்.

Now behold, his name was Pahoran. And Pahoran did fill the seat of his father, and did commence his reign in the end of the twenty and fourth year, over the people of Nephi.

# ஆல்மா 51

1 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியின் ஜனங்க-
ளின் மேல் நியாயாதிபதிகளின் இருபத்தைந்தாம்
வருஷ ஆளுகையின் துவக்கத்திலே, இவர்கள் லே-
கியின் ஜனத்திற்கும், மோரியாந்தனின் ஜனத்திற்-
கும் இடையே, அவர்களுடைய தேசங்களைக் கு-
றித்த சமாதானத்தை நிலைவரப்பண்ணி, இருபத்-
தைந்தாவது வருஷத்தை சமாதானத்தில் துவங்கி-
னார்கள்.
2 இருப்பினும், அவர்கள் தேசத்தில் முழு சமாதா-
னத்தை அதிக நாள் நிலைக்கச் செய்யவில்லை.
ஏனெனில் பிரதான நியாயாதிபதியாகிய பகோ-
ரனைக் குறித்து ஜனங்களுக்குள்ளே ஒரு பிணக்கு
உண்டாகத் துவங்கியது; ஏனெனில் இதோ, சட்டத்-
தின் சில குறிப்பிட்ட பிரிவுகள் மாற்றப்படவேண்-
டுமென்று ஜனத்தின் ஒரு சாரார் வாஞ்சித்தார்கள்.
3 ஆனால் இதோ, பகோரன் சட்டத்தை மாற்றவோ,
மாற்றப்பட அனுமதிக்கவோ இல்லை; ஆதலால்
சட்டத்தை மாற்றுவதைக் குறித்த தங்கள் விண்-
ணப்பத்தோடு தங்கள் குரல்களை அனுப்பியவர்க-
ளுக்கு அவன் செவிகொடுக்கவில்லை.
4 ஆதலால், சட்டம் மாற்றப்படவேண்டுமென
வாஞ்சித்தவர்கள் அவன் மேல் கோபம்கொண்டு,
இனிமேலும் அவன் தேசத்தின் மீது பிரதான நியா-
யாதிபதியாக இருக்கக்கூடாது, என்று விரும்பி-
னார்கள்; ஆதலால் இந்தக் காரியத்தைக் குறித்து
அங்கே சூடான தர்க்கம் உண்டானது, ஆனால் இரத்-
தம் சிந்தும் அளவிற்கல்ல.
5 அந்தப்படியே, பகோரன் நியாயாசனத்திலிருந்து
கீழிறக்கப்படவேண்டுமென்று விரும்பினோர், ராஜ-
மனுஷர் என்று அழைக்கப்பட்டனர். ஏனெனில்
அவர்கள் சுதந்திர அரசை கவிழ்க்கவும், தேசத்தின்-
மேல் ஓர் ராஜாவை நியமிக்கத்தக்கதாயும், சட்டம்
மாற்றப்படவேண்டுமென வாஞ்சித்தார்கள்.

6 பகோரன் தேசத்தின்மேல் பிரதான நியாயாதிபதி-
யாய் நிலைத்திருக்க வேண்டுமென விரும்பினோர்,
தங்கள் மேல் சுதந்திர மனுஷர் என்ற நாமத்தைத்
தரித்துக் கொண்டார்கள்; இப்படியாக அவர்களுக்-
குள்ளே பிரிவினை இருந்தது. ஏனெனில் சுதந்திர
மனுஷர் தங்கள் உரிமைகளையும் தங்கள் மார்க்-
கத்தின் சிலாக்கியங்களையும், ஓர் சுதந்திர அர-
சைக்கொண்டு காக்கும்படி, ஆணையிட்டார்கள்
அல்லது உடன்படிக்கை செய்துகொண்டார்கள்.

# Alma 51

And now it came to pass in the commencement of the twenty and fifth year of the reign of the judges over the people of Nephi, they having established peace between the people of Lehi and the people of Morianton concerning their lands, and having commenced the twenty and fifth year in peace;

Nevertheless, they did not long maintain an entire peace in the land, for there began to be a contention among the people concerning the chief judge Pahoran; for behold, there were a part of the people who desired that a few particular points of the law should be altered.

But behold, Pahoran would not alter nor suffer the law to be altered; therefore, he did not hearken to those who had sent in their voices with their petitions concerning the altering of the law.

Therefore, those who were desirous that the law should be altered were angry with him, and desired that he should no longer be chief judge over the land; therefore there arose a warm dispute concerning the matter, but not unto bloodshed.

And it came to pass that those who were desirous that Pahoran should be dethroned from the judgment-seat were called king-men, for they were desirous that the law should be altered in a manner to overthrow the free government and to establish a king over the land.

And those who were desirous that Pahoran should remain chief judge over the land took upon them the name of freemen; and thus was the division among them, for the freemen had sworn or covenanted to maintain their rights and the privileges of their religion by a free government.

7 அந்தப்படியே, அவர்களின் பிணக்குக்குரிய இக்காரியம் ஜனங்களின் விருப்பத்தினால் அமைதலாக்கப்பட்டது. அந்தப்படியே, ஜனங்களின் வாக்கு சுதந்திர மனுஷரை ஆதரித்து வந்தது. பகோரன் நியாயாசனத்தை தக்க வைத்துக்கொண்டான். இது பகோரனின் சகோதரர்களுக்குள்ளும், சுதந்திர நோக்கத்தை எதிர்க்கத் துணியாமல், அதைக் காக்க கட்டாயப்படுத்தப்பட்ட, ராஜ மனுஷரை அமைதி பண்ணின, சுதந்திர ஜனங்கள் அநேகருக்குள்ளும் மிகுந்த களிகூருதலை ஏற்படுத்தியது.

And it came to pass that this matter of their contention was settled by the voice of the people. And it came to pass that the voice of the people came in favor of the freemen, and Pahoran retained the judgment-seat, which caused much rejoicing among the brethren of Pahoran and also many of the people of liberty, who also put the king-men to silence, that they durst not oppose but were obliged to maintain the cause of freedom.

8 இப்பொழுது ராஜாக்கள் வேண்டுமென ஆதரித்தோர் உயர் பிறப்பினராயிருந்தார்கள், அவர்கள் ராஜாக்களாகும்படி வகை தேடினார்கள்; அவர்கள் ஜனங்களின்மேல் அதிகாரமும் வல்லமையும் தேடினவர்களால் ஆதரிக்கப்பட்டார்கள்.

Now those who were in favor of kings were those of high birth, and they sought to be kings; and they were supported by those who sought power and authority over the people.

9 ஆனால் இதோ, நேபியின் ஜனங்களுக்குள்ளே இப்படிப்பட்ட பிணக்குகள் இருக்கும்படியாக, இது இக்கட்டான நேரமாயிருந்தது. ஏனெனில் இதோ, அமலேக்கியா, லாமானிய ஜனங்களின் உள்ளங்களை நேபியரின் ஜனங்களுக்கு விரோதமாய் திரும்பவும் ஏவிவிட்டான். அவன் தன் தேசத்தின் எல்லா பகுதிகளிலிருந்தும் போர்ச் சேவகர்களை ஏகமாய்க்கூட்டி, அவர்களுக்கு ஆயுதந்தரிப்பித்து, எல்லாக் கருத்தோடும் யுத்தத்திற்காக ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தான்; ஏனெனில் அவன் மரோனியின் இரத்தத்தைக் குடிக்க சத்தியம் செய்திருந்தான்.

But behold, this was a critical time for such contentions to be among the people of Nephi; for behold, Amalickiah had again stirred up the hearts of the people of the Lamanites against the people of the Nephites, and he was gathering together soldiers from all parts of his land, and arming them, and preparing for war with all diligence; for he had sworn to drink the blood of Moroni.

10 ஆனால் இதோ, அவன் செய்துகொண்ட அவனுடைய வாக்குத்தத்தம் மூடத்தனமானது, என்று பார்க்கிறோம்; இருப்பினும் அவன் தன்னையும் தன் சேனைகளையும் நேபியர்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்கு வரும்படி ஆயத்தப்படுத்தினான்.

But behold, we shall see that his promise which he made was rash; nevertheless, he did prepare himself and his armies to come to battle against the Nephites.

11 இப்பொழுது, நேபியர்களின் கரத்தினால் அநேக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதினிமித்தம் அவனுடைய சேனைகள் இதுவரை இருந்து வந்ததைப்போல பெரியதாயிருக்கவில்லை; ஆனாலும் தங்களுடைய அதிக இழப்பினைப் பொருட்படுத்தாமல், சாரகெம்லா தேசத்திற்கு வருவதற்கு பயப்படாத அளவில், ஒரு ஆச்சரியமான பெரிய சேனையை அமலேக்கியா ஏகமாய் திரட்டியிருந்தான்.

Now his armies were not so great as they had hitherto been, because of the many thousands who had been slain by the hand of the Nephites; but notwithstanding their great loss, Amalickiah had gathered together a wonderfully great army, insomuch that he feared not to come down to the land of Zarahemla.

12 ஆம், அமலேக்கியாவே லாமானியருக்கு தலைமையேற்று வந்தான். அது நியாயாதிபதிகளின் ஆளுகையின் இருபத்தைந்தாம் வருஷமாயிருந்தது. அதே சமயத்தில்தானே பிரதான நியாயாதிபதியாகிய பகோரனைக் குறித்த பிணக்குக்குரிய விவகாரங்களை அவர்கள் அமைதலாக்கத் துவங்கியிருந்தார்கள்.

Yea, even Amalickiah did himself come down, at the head of the Lamanites. And it was in the twenty and fifth year of the reign of the judges; and it was at the same time that they had begun to settle the affairs of their contentions concerning the chief judge, Pahoran.

13 அந்தப்படியே, ராஜ மனுஷர் என்று அழைக்கப்-
பட்ட மனுஷர், தங்களுக்கு விரோதமாய் லாமானி-
யர் யுத்தம்பண்ண வந்துகொண்டிருக்கிறார்கள்
என்று கேள்விப்பட்டபோது, தங்கள் இருதயங்களி-
லே பூரிப்படைந்தார்கள்; அவர்கள் ஆயுதங்களைத்
தாங்க மறுத்தார்கள், ஏனெனில் அவர்கள் பிரதான
நியாயாதிபதியோடும் சுதந்திர ஜனங்களோடும் மி-
குந்த குரோதம் கொண்டிருந்ததால், அவர்கள் தங்-
கள் தேசத்தை தற்காத்துக் கொள்ளத்தக்கதாக
ஆயுதங்களை எடுக்க மாட்டார்கள்.

And it came to pass that when the men who were called king-men had heard that the Lamanites were coming down to battle against them, they were glad in their hearts; and they refused to take up arms, for they were so wroth with the chief judge, and also with the people of liberty, that they would not take up arms to defend their country.

14 அந்தப்படியே, இதையும், தேசத்தின் எல்லைக-
ளுக்குள்ளே லாமானியர் வந்து கொண்டிருந்ததை-
யும், மரோனி கண்டபோது, காக்கவேண்டுமென்று
மிகவும் கருத்தாய், தான் பிரயாசப்பட்ட ஜனங்களி-
னுடைய பிடிவாதத்தினிமித்தம், அவன் அதிகம்
கோபம் கொண்டான்; ஆம், அவன் மிகவும் கோபம்
கொண்டான்; அவன் ஆத்துமா அவர்களுக்கு வி-
ரோதமாய் கோபத்தினால் நிறைந்தது.

And it came to pass that when Moroni saw this, and also saw that the Lamanites were coming into the borders of the land, he was exceedingly wroth because of the stubbornness of those people whom he had labored with so much diligence to preserve; yea, he was exceedingly wroth; his soul was filled with anger against them.

15 அந்தப்படியே, அவன் ஜனத்தின் ஏகமனதோடு
ஒரு மனுவை அத்தேசத்தின் அதிபதிக்கு அனுப்பி,
அதை அவன் வாசிக்கவும், அந்த கலகக்காரரை
தங்கள் தேசத்தைத் தற்காக்கும்படி கட்டாயப்படுத்-
தவோ, அல்லது அவர்கள் மரணத்திற்குள்ளாக்கப்-
படவோ, தனக்கு (மரோனி) அதிகாரம் வழங்கவும்
வாஞ்சித்தான்.

And it came to pass that he sent a petition, with the voice of the people, unto the governor of the land, desiring that he should read it, and give him (Moroni) power to compel those dissenters to defend their country or to put them to death.

16 ஏனெனில் ஜனங்களுக்குள்ளிருந்த இப்படிப்-
பட்ட பிணக்குகளுக்கும், மறுப்புகளுக்கும், ஓர் முடி-
வு கட்டுவதே அவனுடைய முதல் வேலையாயிருந்-
தது; ஏனெனில் இதோ, இது அவர்களின் சகல அழி-
வுகளுக்கும், இதுகாலம்வரை காரணமாயிருந்தது.
அந்தப்படியே, அது ஜனங்களின் விருப்பத்திற்-
கேற்ப வழங்கப்பட்டது.

For it was his first care to put an end to such contentions and dissensions among the people; for behold, this had been hitherto a cause of all their destruction. And it came to pass that it was granted according to the voice of the people.

17 அந்தப்படியே, தன் சேனை அந்த ராஜமனுஷருக்-
கு விரோதமாய்ப் போய், அவர்களின் பெருமை-
யையும், அவர்களின் கர்வத்தையும் அழித்து,
அவர்களை பூமிக்கு சமானமாய்ப்பண்ண வேண்-
டும், அல்லது அவர்கள் ஆயுதங்களை எடுத்து, சு-
தந்திர நோக்கத்தை ஆதரிக்க வேண்டுமென்று,
மரோனி கட்டளையிட்டான்.

And it came to pass that Moroni commanded that his army should go against those king-men, to pull down their pride and their nobility and level them with the earth, or they should take up arms and support the cause of liberty.

18 அந்தப்படியே, சேனைகள் அவர்களுக்கு விரோத-
மாய்ப் போயின; அவர்களோ மரோனியின் மனுஷ-
ரை எதிர்த்து சண்டைபோட யுத்தக் கருவிகளை
உயர்த்தியபோது, அவர்கள் வெட்டப்பட்டு பூமிக்கு
சமானமாக்கப்படுமளவுக்கு அவர்களுடைய பெரு-
மையையும் கனத்தையும் அழித்தார்கள்.

And it came to pass that the armies did march forth against them; and they did pull down their pride and their nobility, insomuch that as they did lift their weapons of war to fight against the men of Moroni they were hewn down and leveled to the earth.

19 அந்தப்படியே, அந்தக் கலகக்காரரில் பட்டயத்-
தால் வெட்டுப்பட்டவர்கள் நாலாயிரம் பேராயிருந்-
தார்கள்; சண்டையில் கொல்லப்படாத அவர்க-
ளின் தலைவர்கள் பிடிக்கப்பட்டு, இத்தருணத்தில்
அவர்களை நியாயம் விசாரிக்க நேரம் இல்லாத-
தால், சிறையினுள் போடப்பட்டார்கள்.

And it came to pass that there were four thousand of those dissenters who were hewn down by the sword; and those of their leaders who were not slain in battle were taken and cast into prison, for there was no time for their trials at this period.

20 அந்தக் கலகக்காரரில் மீதியானோர், பட்டயத்தினால் பூமியில் வீழ்த்தப்பட்டுப் போவதைப் பார்க்கிலும், சுதந்திரக் கொடிக்கு பணிந்தார்கள். சுதந்திரக் கொடியைத் தங்களின் கோபுரங்கள் மேலும், தங்கள் பட்டணங்களிலும் ஏற்றவும், தங்கள் தேசத்தின் பாதுகாப்புக்கென்று ஆயுதங்களை எடுக்கவும் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

And the remainder of those dissenters, rather than be smitten down to the earth by the sword, yielded to the standard of liberty, and were compelled to hoist the title of liberty upon their towers, and in their cities, and to take up arms in defence of their country.

21 இப்படியாக மரோனி அங்கே ராஜமனுஷர் என்ற நாமத்தினாலே அறியப்பட்ட ஒருவனும் இல்லாதபடி, அந்த ராஜமனுஷருக்கு ஒரு முடிவு கட்டினான்; இவ்வண்ணம் கர்வத்திற்குரிய இரத்தத்தைப் பெற்றிருக்கிறோம், என்று அறிக்கையிட்ட ஜனங்களின் இறுமாப்புக்கும், பெருமைக்கும், அவன் ஒரு முடிவு கட்டினான்; ஆனால், அவர்கள் தங்கள் சகோதரரைப்போலத் தங்களைத் தாழ்த்தும்படிக்கும், அடிமைத்தனத்திலிருந்து தங்களுடைய சுதந்திரத்திற்காக கடுமையாய்ப் போராடும்படிக்கும் கொண்டுவரப்பட்டார்கள்.

And thus Moroni put an end to those king-men, that there were not any known by the appellation of king-men; and thus he put an end to the stubbornness and the pride of those people who professed the blood of nobility; but they were brought down to humble themselves like unto their brethren, and to fight valiantly for their freedom from bondage.

22 இதோ, அந்தப்படியே, மரோனி இப்படியாகத் தன் சொந்த ஜனங்களுக்குள்ளே யுத்தங்களையும் பிணக்குகளையும் உடைத்து, அவர்களை சமாதானத்திற்கும், நாகரீகத்திற்கும் உட்படுத்தி, லாமானியருக்கு விரோதமாய் யுத்தத்திற்கான ஆயத்த ஒழுங்குகளைச் செய்து கொண்டிருக்கும்போது, இதோ, கடற்கரையோரமாய் இருந்த மரோனி தேசத்திற்குள்ளே லாமானியர் வந்திருந்தார்கள்.

Behold, it came to pass that while Moroni was thus breaking down the wars and contentions among his own people, and subjecting them to peace and civilization, and making regulations to prepare for war against the Lamanites, behold, the Lamanites had come into the land of Moroni, which was in the borders by the seashore.

23 அந்தப்படியே, மரோனி பட்டணத்தில் போதுமான அளவு நேபியரின் பெலன் இல்லாதிருந்தது. ஆதலால் அமலேக்கியா அவர்களைத் துரத்தி அநேகரை சங்கரித்தான். அந்தப்படியே, அமலேக்கியா பட்டணத்தை வசப்படுத்தி, ஆம், அவர்களுடைய சகல அரண்களையும் வசப்படுத்திக் கொண்டான்.

And it came to pass that the Nephites were not sufficiently strong in the city of Moroni; therefore Amalickiah did drive them, slaying many. And it came to pass that Amalickiah took possession of the city, yea, possession of all their fortifications.

24 மரோனி பட்டணத்தை விட்டோடினவர்கள் நேபிகா பட்டணத்திற்கு வந்தார்கள்; லேகி பட்டணத்து ஜனங்களும் ஏகமாய்க் கூடி ஆயத்தங்களை மேற்கொண்டு, யுத்தத்திற்காக லாமானியரை எதிர்கொள்ளத் தயாராயிருந்தார்கள்.

And those who fled out of the city of Moroni came to the city of Nephihah; and also the people of the city of Lehi gathered themselves together, and made preparations and were ready to receive the Lamanites to battle.

25 ஆனால், அந்தப்படியே, லாமானியரை நேபிகா பட்டணத்திற்கு விரோதமாய் யுத்தத்திற்குப் போக அமலேக்கியா அனுமதியாமல், ஒவ்வொரு நகரத்தையும் பராமரித்து, காத்துக்கொண்டிருக்க மனுஷரை நிறுத்தி, கடற்கரையோரமாய் அவர்களை விட்டுவைத்திருந்தான்.

But it came to pass that Amalickiah would not suffer the Lamanites to go against the city of Nephihah to battle, but kept them down by the seashore, leaving men in every city to maintain and defend it.

26 இப்படியாக அவன் போய், கடற்கரையோரமாய் அமைந்த கிழக்கு எல்லைகளிலிருந்த நேபிகா பட்டணம், லேகி பட்டணம், மோரியாந்தன் பட்டணம், ஓம்னர் பட்டணம், கித் பட்டணம், மூலெக் பட்டணங்களாகிய, அநேக பட்டணங்களை வசப்படுத்திக் கொண்டான்.

And thus he went on, taking possession of many cities, the city of Nephihah, and the city of Lehi, and the city of Morianton, and the city of Omner, and the city of Gid, and the city of Mulek, all of which were on the east borders by the seashore.

27 இப்படியாக அமலேக்கியாவின் தந்திரத்தினாலே, லாமானியர் தங்கள் எண்ணிறைந்த சேனைகளினால் அநேக பட்டணங்களைக் கைப்பற்றினார்கள். அவைகள் யாவும் மரோனியின் அரணமைக்கின்ற விதத்தினாலே பெலமாய்க் கட்டப்பட்டிருந்தன; அவைகள் யாவும் லாமானியருக்குக் கொத்தளங்களாய் திகழ்ந்தன.

And thus had the Lamanites obtained, by the cunning of Amalickiah, so many cities, by their numberless hosts, all of which were strongly fortified after the manner of the fortifications of Moroni; all of which afforded strongholds for the Lamanites.

28 அந்தப்படியே, அவர்கள் உதாரத்துவஸ்தலத்தின் எல்லைகளுக்கு அணிவகுத்துப் போய், தங்களுக்கு முன்பாக நேபியர்களைத் துரத்தி, அநேகரைக் கொன்றுபோட்டார்கள்.

And it came to pass that they marched to the borders of the land Bountiful, driving the Nephites before them and slaying many.

29 ஆனால், அந்தப்படியே, மோரியாந்தனைக் கொன்றவனும், அவனுடைய பயணத்தில் அவன் ஜனத்தை தடுத்து நிறுத்தியவனுமாகிய, தியான்குமினால் அவர்கள் எதிர்கொள்ளப்பட்டார்கள்.

But it came to pass that they were met by Teancum, who had slain Morianton and had headed his people in his flight.

30 அந்தப்படியே, தன் எண்ணிறைந்த சேனைகளோடு உதாரத்துவஸ்தலத்தையும், வடக்கேயுள்ள தேசத்தையும், வசப்படுத்த அணிவகுத்துப் போய்க்கொண்டிருக்கும்போது, அமலேக்கியாவையும் அவன் தடுத்து நிறுத்தினான்.

And it came to pass that he headed Amalickiah also, as he was marching forth with his numerous army that he might take possession of the land Bountiful, and also the land northward.

31 இதோ, தியான்குமினாலும், அவனுடைய மனுஷராலும் திரும்பியடிக்கப்பட்டதால் அவன் மனமுறிந்தான், ஏனெனில் அவர்கள் பலத்த போர்வீரராயிருந்தார்கள்; தியான்குமின் சகல மனுஷரும், லாமானியர் மேல் ஆதிக்கம் செலுத்துமளவிற்கு அவர்கள் லாமானியரை தங்கள் பெலத்திலும், தங்கள் யுத்தத் திறமைகளிலும் மிஞ்சினார்கள்.

But behold he met with a disappointment by being repulsed by Teancum and his men, for they were great warriors; for every man of Teancum did exceed the Lamanites in their strength and in their skill of war, insomuch that they did gain advantage over the Lamanites.

32 அந்தப்படியே, அவர்கள் இருள் சாயும்வரை, அவர்களைக் கொன்றுபோடுமளவும் தாக்கினார்கள். அந்தப்படியே, தியான்குமும், அவன் மனுஷரும், உதாரத்துவஸ்தலத்தின் எல்லைகளில் தங்கள் கூடாரங்களைப் போட்டார்கள். அமலேக்கியாவோ கடற்கரையோரங்களில் அமைந்த மணற்பரப்பான எல்லைகளில் தனது கூடாரங்களைப் போட்டான். இவ்விதமாக அவர்கள் துரத்தியடிக்கப்பட்டார்கள்.

And it came to pass that they did harass them, insomuch that they did slay them even until it was dark. And it came to pass that Teancum and his men did pitch their tents in the borders of the land Bountiful; and Amalickiah did pitch his tents in the borders on the beach by the seashore, and after this manner were they driven.

33 அந்தப்படியே, இரவு வந்தபோது தியான்குமும் அவன் வேலைக்காரனும் திருட்டுத்தனமாய், இரவில் வெளியே வந்து, அமலேக்கியாவின் பாளையத்திற்குள் போனார்கள்; இதோ உழைப்பினாலும், பகலின் வெப்பத்தாலும், ஏற்பட்ட மிகுந்த களைப்பினிமித்தம் நித்திரை மயக்கம் அவர்களை ஆட்கொண்டிருந்தது.

And it came to pass that when the night had come, Teancum and his servant stole forth and went out by night, and went into the camp of Amalickiah; and behold, sleep had overpowered them because of their much fatigue, which was caused by the labors and heat of the day.

34 அந்தப்படியே, தியான்கும் தனியாய் ராஜாவின் கூடாரத்திற்குள் நுழைந்து அவன் இருதயத்தை ஒரு ஈட்டியால் குத்தினான்; ராஜா வெகுவிரைவாய் மரணத்திற்குள்ளானபடியால், அவன் தன்னுடைய வேலையாட்களை எழுப்பிவிடவில்லை.

And it came to pass that Teancum stole privily into the tent of the king, and put a javelin to his heart; and he did cause the death of the king immediately that he did not awake his servants.

35 அவன் தனியே தன்னுடைய சொந்த பாளையத்-
திற்கு மறுபடியும் திரும்பினான். இதோ, அவனு-
டைய மனுஷர் உறங்கிக் கொண்டிருந்தார்கள்,
அவன் அவர்களை எழுப்பி, தான் செய்த எல்லா
காரியங்களையும் அவர்களுக்குச் சொன்னான்.

And he returned again privily to his own camp, and behold, his men were asleep, and he awoke them and told them all the things that he had done.

36 லாமானியர் எழுந்து, தங்கள் மீது வராதபடி, தன்
சேனைகள் தயாராயிருக்கும்படி, அவன் கட்டளை-
யிட்டான்.

And he caused that his armies should stand in readiness, lest the Lamanites had awakened and should come upon them.

37 இப்படியாக நேபியின் ஜனங்களின் மீதான நியா-
யாதிபதிகளின் ஆளுகையின் இருபத்தைந்தாம்
வருஷமும் முடிவுறுகிறது; அப்படியே அமலேக்கி-
யாவின் நாட்களும் முடிவுறுகிறது.

And thus endeth the twenty and fifth year of the reign of the judges over the people of Nephi; and thus endeth the days of Amalickiah.

# ஆல்மா 52

1 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியின் ஜனங்க-
ளின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின்
இருபத்தி ஆறாம் வருஷத்தில், இதோ, லாமானியர்
முதல் மாதத்தின் முதலாம் விடியலில் எழுந்தபோது,
இதோ, அமலேக்கியா தன் சொந்த கூடாரத்தில் செத்-
துக் கிடந்ததையும் அவர்கள் கண்டார்கள். அந்த
நாளிலே தியான்கும் தங்கள் மேல் போர் தொடுக்க
ஆயத்தமாயிருந்ததையும் கண்டார்கள்.
2 இப்பொழுது, லாமானியர் இதைக் கண்டபோது
அவர்கள் பயந்து போனார்கள்; அவர்கள் வடதே-
சத்திற்கு படையெடுத்துப் போகவிருந்த தங்கள்
திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, தங்களின் சகல சே-
னையோடு கூட மூலெக்கின் பட்டணத்திற்குள்
தஞ்சம் புகுந்து அவைகளின் அரண்களில் பாது-
காப்பை நாடினார்கள்.
3 அந்தப்படியே, அமலேக்கியாவின் சகோதரன்
ஜனங்களின் மீது ராஜாவாக நியமிக்கப்பட்டான்;
அவனுடைய நாமம் அம்மோரோன் என்பதாகும்.
இப்படியாக அமலேக்கியா ராஜாவினுடைய ஸ்தா-
னத்தில் ஆளும்படி அவனுடைய சகோதரனாகிய
அம்மோரோன் ராஜா நியமிக்கப்பட்டான்.
4 அந்தப்படியே, இரத்தம் சிந்துதலினாலே தாங்கள்
கைப்பற்றிய, அந்தப் பட்டணங்களைத் தன் ஜனம்
காக்கவேண்டுமென, அவன் கட்டளையிட்டான்.
ஏனெனில் அதிக இரத்தம் சிந்தாமல், எந்த ஒரு பட்-
டணத்தையும் அவர்கள் கைப்பற்றவில்லை.
5 இப்பொழுது, லாமானியர் தாங்கள் கைப்பற்றின
பட்டணங்களையும், தாங்கள் ஆக்கிரமித்துக்-
கொண்ட தேசத்திலுள்ள பகுதிகளையும் காக்க,
உறுதி கொண்டிருக்கிறார்கள் என்று தியான்கும்
கண்டான்; அவர்கள் எண்ணிக்கையில் மிகுதியா-
யிருக்கிறார்கள் என்றும் கண்டு, அவர்களை
அவர்களுடைய அரண்களில் தாக்குவது தேவை-
யற்றது என்றும், தியான்கும் நினைத்தான்.
6 ஆனால் யுத்தத்திற்கான ஆயத்தங்களை மேற்-
கொள்வதைப் போல, அவன் தன் மனுஷரை சுற்றி-
லும் நிறுத்தினான்; ஆம், உண்மையாகவே அவன்
சுற்றிலும் சுவர் எழுப்பியும், பாதுகாப்பு ஸ்தலங்க-
ளைக் கட்டியும், அவர்களுக்கு விரோதமாய்த் தன்-
னை தற்காத்துக்கொள்ள ஆயத்தப்படுத்திக்
கொண்டிருந்தான்.
7 அந்தப்படியே, தன் சேனையைப் பெலப்படுத்-
தும்படியாக, அதிக எண்ணிக்கையில் மனுஷரை
மரோனி அனுப்பும்வரைக்குமாக, அவன் யுத்தத்-
திற்கென அப்படியாக ஆயத்தப்பட்டுக் கொண்டி-
ருந்தான்.

# Alma 52

And now, it came to pass in the twenty and sixth year of the reign of the judges over the people of Nephi, behold, when the Lamanites awoke on the first morning of the first month, behold, they found Amalickiah was dead in his own tent; and they also saw that Teancum was ready to give them battle on that day.

And now, when the Lamanites saw this they were affrighted; and they abandoned their design in marching into the land northward, and retreated with all their army into the city of Mulek, and sought protection in their fortifications.

And it came to pass that the brother of Amalickiah was appointed king over the people; and his name was Ammoron; thus king Ammoron, the brother of king Amalickiah, was appointed to reign in his stead.

And it came to pass that he did command that his people should maintain those cities, which they had taken by the shedding of blood; for they had not taken any cities save they had lost much blood.

And now, Teancum saw that the Lamanites were determined to maintain those cities which they had taken, and those parts of the land which they had obtained possession of; and also seeing the enormity of their number, Teancum thought it was not expedient that he should attempt to attack them in their forts.

But he kept his men round about, as if making preparations for war; yea, and truly he was preparing to defend himself against them, by casting up walls round about and preparing places of resort.

And it came to pass that he kept thus preparing for war until Moroni had sent a large number of men to strengthen his army.

8 அவன் கரங்களில் சிக்கிய அனைத்து கைதிக-
ளையும் வைத்துக்கொள்ள வேண்டுமென்று மரோ-
னி கட்டளைகளையும் அனுப்பினான்; லாமானி-
யர் அநேக கைதிகளைப் பிடித்து வைத்திருப்பதா-
லே, லாமானியரால் பிடிக்கப்பட்டோருக்குப் பி-
ணையாட்களாக அவன் லாமானியரின் அனைத்-
து கைதிகளையும் வைத்திருக்கவேண்டும்.
9 அவன் உதாரத்துவஸ்தலத்தில் அரண்களை
எழுப்பவேண்டுமென்றும், எல்லா புறங்களிலுமி-
ருந்தும் தங்களை நெருக்குவார்கள் என்பதினால்,
ஒருவேளை வடக்கு தேசத்திற்குப் போகிற குறுகிய
வழியையும், லாமானியர் பெற்றுவிடாதபடிக்கு,
அவ்விடத்தைப் பாதுகாக்கவும் ஆணைகளை
அனுப்பினான்.
10 அந்த தேசத்தின் அந்த குறிப்பிட்ட பகுதியை பா-
துகாப்பதில் உண்மையுள்ளவனாய் இருக்க
வேண்டுமென்றும், அந்த பகுதியிலுள்ள லாமானி-
யரைத் தன் சக்திக்குட்பட்டமட்டும் அடிக்கும்படி,
எல்லா சந்தர்ப்பங்களையும் நாடவேண்டுமென்-
றும், அதினிமித்தம் ஒருவேளை தங்கள் கைகளிலி-
ருந்து கைப்பற்றப்பட்ட அந்தப் பட்டணங்களை
தந்திரத்திலாவது, அல்லது மற்ற எந்த வழியிலாவ-
து கைப்பற்றவும், லாமானியர் கைகளுக்குள் வி-
ழாத சுற்றியுமுள்ள பட்டணங்களையும், அவன்
அரண்களை எழுப்பி பலப்படுத்தும்படியாக வி-
ரும்பி, மரோனி அவனுக்கு செய்தி அனுப்பினான்.
11 அவன் அவனை நோக்கி, நான் உன்னிடம் வரு-
வேன். ஆனால் இதோ, லாமானியர் மேற்கு சமுத்தி-
ரம் அருகே அமைந்த தேசத்தின் எல்லைகளில் நம்-
மேல் வந்திருக்கிறார்கள். இதோ, நான் அவர்களுக்-
கு எதிர்கொண்டு போகிறேன். ஆதலால் நான் உன்-
னிடத்தில் வரமுடியாதென்றான்.
12 இப்பொழுதும் ராஜா (அம்மோரோன்) சாரகெம்லா
தேசத்திலிருந்து வெளியே புறப்படுப்போய், தன்
சகோதரனின் மரணத்தைக் குறித்து, ராஜஸ்திரீக்கு
தெரியப்படுத்தி, அநேக மனுஷரை திரளாய் ஒன்று-
கூட்டி, மேற்கு சமுத்திரம் அருகே அமைந்த எல்லை-
களில் நேபியர்களுக்கு விரோதமாய்ப் படையெடுத்-
தான்.
13 இப்படியாக அவன் நேபியர்களை நெருக்கவும்,
அந்த தேசத்தின் அந்த பகுதிக்குத் தங்கள் படைக-
ளின் ஒரு பகுதியை நடத்திச் செல்லவும் முயற்சித்-
துக் கொண்டிருந்தான். மறுபுறத்திலே, கிழக்கு
சமுத்திரம் அருகே அமைந்த எல்லைகளில் இருந்த
நேபியர்களைத் தாக்கி, தங்கள் சக்திக்கேற்ப, அவர்-
களின் தேசங்களை தங்களின் சேனைகளின் சக்-
திக்குத்தக்கதாக கைப்பற்றவேண்டுமென்று,
அவன் தான் கைப்பற்றின பட்டணங்களை ஆக்கி-
ரமிக்கும்படி விட்டிருந்தவர்களுக்கு கட்டளை கொ-
டுத்தான்.

And Moroni also sent orders unto him that he should retain all the prisoners who fell into his hands; for as the Lamanites had taken many prisoners, that he should retain all the prisoners of the Lamanites as a ransom for those whom the Lamanites had taken.

And he also sent orders unto him that he should fortify the land Bountiful, and secure the narrow pass which led into the land northward, lest the Lamanites should obtain that point and should have power to harass them on every side.

And Moroni also sent unto him, desiring him that he would be faithful in maintaining that quarter of the land, and that he would seek every opportunity to scourge the Lamanites in that quarter, as much as was in his power, that perhaps he might take again by stratagem or some other way those cities which had been taken out of their hands; and that he also would fortify and strengthen the cities round about, which had not fallen into the hands of the Lamanites.

And he also said unto him, I would come unto you, but behold, the Lamanites are upon us in the borders of the land by the west sea; and behold, I go against them, therefore I cannot come unto you.

Now, the king (Ammoron) had departed out of the land of Zarahemla, and had made known unto the queen concerning the death of his brother, and had gathered together a large number of men, and had marched forth against the Nephites on the borders by the west sea.

And thus he was endeavoring to harass the Nephites, and to draw away a part of their forces to that part of the land, while he had commanded those whom he had left to possess the cities which he had taken, that they should also harass the Nephites on the borders by the east sea, and should take possession of their lands as much as it was in their power, according to the power of their armies.

14 இப்படியாக, நேபியின் ஜனங்களின்மேல், நியாயாதிபதிகளின் ஆளுகையின் இருபத்தி ஆறாம் வருஷ முடிவிலே, நேபியர் இத்தகைய ஆபத்தான சூழ்நிலைகளிலிருந்தார்கள்.

And thus were the Nephites in those dangerous circumstances in the ending of the twenty and sixth year of the reign of the judges over the people of Nephi.

15 ஆனால் இதோ, அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் இருபத்தி ஏழாம் வருஷத்திலே, மரோனியின் கட்டளையின்படி, அந்த தேசத்தின் தெற்கு மற்றும் மேற்கு எல்லைகளைக் காக்க, தியான்கும் சேனைகளை நிறுத்தியிருந்தான், தாங்கள் இழந்த பட்டணங்களை மறுபடியும் கைப்பற்ற, தன் மனுஷரோடு தியான்குமிற்கு உதவிபுரியும்படிக்கு, உதாரத்துவஸ்தலத்தை நோக்கி தன் அணிவகுப்பைத் துவங்கியிருந்தான்.

But behold, it came to pass in the twenty and seventh year of the reign of the judges, that Teancum, by the command of Moroni—who had established armies to protect the south and the west borders of the land, and had begun his march towards the land Bountiful, that he might assist Teancum with his men in retaking the cities which they had lost—

16 அந்தப்படியே, மூலெக் பட்டணத்தின் மேல் தாக்குதல் ஏற்படுத்தும்படிக்கும், கூடுமானால் அதைத் திரும்பக் கைப்பற்றும்படிக்கும் தியான்கும் கட்டளைகளைப் பெற்றிருந்தான்.

And it came to pass that Teancum had received orders to make an attack upon the city of Mulek, and retake it if it were possible.

17 அந்தப்படியே, மூலெக்கின் பட்டணத்தின் மேல் தாக்குதல் தொடுக்கும்படி தியான்கும் ஆயத்தங்களை மேற்கொண்டு தன் சேனையோடு லாமானியருக்கு விரோதமாய்ப் போனான்; ஆனால் அவர்கள் தங்கள் அரண்களிலிருக்கும்போது, தான் அவர்களை மேற்கொள்வது கூடாத காரியம், எனக் கண்டான்; ஆதலால் அவன் தன் திட்டங்களை கைவிட்டுவிட்டு, மரோனி வந்து தன் சேனையை பலப்படுத்தும்வரை காத்திருக்க உதாரத்துவஸ்தலத்திற்குத் திரும்பிப்போனான்.

And it came to pass that Teancum made preparations to make an attack upon the city of Mulek, and march forth with his army against the Lamanites; but he saw that it was impossible that he could overpower them while they were in their fortifications; therefore he abandoned his designs and returned again to the city Bountiful, to wait for the coming of Moroni, that he might receive strength to his army.

18 அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மீதான நியாயாதிபதிகளின் இருபத்தி ஏழாம் வருஷ ஆளுகையின் பிற்பகுதியில், மரோனி தன் சேனையோடு கூட உதாரத்துவஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தான்.

And it came to pass that Moroni did arrive with his army at the land of Bountiful, in the latter end of the twenty and seventh year of the reign of the judges over the people of Nephi.

19 இருபத்து எட்டாம் வருஷ துவக்கத்திலே, மரோனியும் தியான்குமும் மற்றும் பிரதான சேனாதிபதிகளில் அநேகரும், லாமானியர் மேல் அனுகூலம்கொண்டு, மூலெக்கின் பட்டணத்தை மறுபடியும் எடுக்கும்படிக்கு, அவர்களைத் தங்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்கு வரச் செய்வதற்கு தாங்கள் என்ன செய்யவேண்டுமென்றும், அல்லது அவர்களுடைய கொத்தளங்களிலிருந்து அவர்களை வெளியேற்ற என்னென்ன உத்திகளைக் கையாளவேண்டுமென்றும், விவாதிக்க ஓர் யுத்த ஆலோசனைக் கூட்டத்தைக் கூட்டினார்கள்.

And in the commencement of the twenty and eighth year, Moroni and Teancum and many of the chief captains held a council of war—what they should do to cause the Lamanites to come out against them to battle; or that they might by some means flatter them out of their strongholds, that they might gain advantage over them and take again the city of Mulek.

20 அந்தப்படியே, இரண்டு பட்டணங்களுக்கு இடையே உள்ள சமதள பூமியில், தன் சேனைகளோடு தங்களைச் சந்திக்க வரவேண்டுமென வாஞ்சித்து, மூலெக்கின் பட்டணத்தைப் பாதுகாத்த, லாமானிய சேனையின் யாக்கோபு என்ற நாமம் கொண்ட, அவர்களின் தலைவனிடம் தூதுவர்களை அனுப்பினார்கள். ஆனால் இதோ, சோரமியனாயிருந்த யாக்கோபு, தன் சேனையோடு வந்து அவர்களைச் சமதள பூமியில் சந்திக்கவில்லை.

And it came to pass they sent embassies to the army of the Lamanites, which protected the city of Mulek, to their leader, whose name was Jacob, desiring him that he would come out with his armies to meet them upon the plains between the two cities. But behold, Jacob, who was a Zoramite, would not come out with his army to meet them upon the plains.

21 அந்தப்படியே, மரோனி, அவர்களை நியாயமான
முறையில் சந்திக்க நம்பிக்கையற்றவனாய், தான்
லாமானியரை அவர்களுடைய கொத்தளங்களை
விட்டு வெளியே கொண்டுவர அவன் ஒரு திட்டம்
தீட்டினான்.

And it came to pass that Moroni, having no hopes of meeting them upon fair grounds, therefore, he resolved upon a plan that he might decoy the Lamanites out of their strongholds.

22 ஆதலால் அவன், தியான்கும் கொஞ்ச எண்ணிக்-
கையுள்ள மனுஷரைக் கூட்டிக்கொண்டு கடற்க-
ரைக்கு அருகாமையில் அணிவகுத்துப் போகும்ப-
டிச் செய்தான்; மரோனியும் அவன் சேனையும் இரவு
நேரத்தில் மூலெக் பட்டணத்தின் மேற்கேயிருந்த
வனாந்தரத்தினுள் அணிவகுத்துப் போனார்கள்;
இப்படியாக, மறுநாளிலே தியான்குமை லாமானிய-
ரின் காவற்காரர் கண்டவுடன் ஓடிவந்து தங்கள்
தலைவனாகிய யாக்கோபுவினிடத்தில் சொன்-
னார்கள்.

Therefore he caused that Teancum should take a small number of men and march down near the seashore; and Moroni and his army, by night, marched in the wilderness, on the west of the city Mulek; and thus, on the morrow, when the guards of the Lamanites had discovered Teancum, they ran and told it unto Jacob, their leader.

23 அந்தப்படியே, தியான்குமின் கொஞ்ச எண்ணிக்-
கையினிமித்தம், தங்களின் எண்ணிக்கையை
மனதில்கொண்டு, அவனை மேற்கொண்டுவிட-
லாம் என்று எண்ணி, தியான்குமிற்கு விரோதமாய்
லாமானியரின் சேனைகள் படையெடுத்துப் போ-
னார்கள். தியான்கும் லாமானியரின் சேனைகள்
தனக்கு விரோதமாய் வருவதைக் கண்டபோது,
அவன் வடக்கே கடற்கரையோரமாய் பின்வாங்க
ஆரம்பித்தான்.

And it came to pass that the armies of the Lamanites did march forth against Teancum, supposing by their numbers to overpower Teancum because of the smallness of his numbers. And as Teancum saw the armies of the Lamanites coming out against him he began to retreat down by the seashore, northward.

24 அந்தப்படியே, அவன் தப்பியோடத் துவங்குவ-
தை லாமானியர் கண்டபோது, அவர்கள் தைரியம்
கொண்டு, பெலத்துடனே அவர்களைப் பின்தொ-
டர்ந்தார்கள். தியான்கும், இப்படியாகத் தங்களை
வீணிலே பின்தொடர்ந்த லாமானியரை நடத்திக்-
கொண்டிருக்கையில், இதோ, மரோனி தன்னோடி-
ருந்த தன் சேனையில் ஒரு பகுதி பட்டணத்திற்குள்
அணிவகுத்துப்போய் அதை ஆக்கிரமிக்கும்படி
கட்டளையிட்டான்.

And it came to pass that when the Lamanites saw that he began to flee, they took courage and pursued them with vigor. And while Teancum was thus leading away the Lamanites who were pursuing them in vain, behold, Moroni commanded that a part of his army who were with him should march forth into the city, and take possession of it.

25 இப்படியாக, அவர்கள் செய்து பட்டணத்தைக்
காக்கும்படி விடப்பட்டிருந்த யாவரையும், ஆம்,
யுத்த ஆயுதங்களைக் கைவிடாத அனைவரையும்
கொன்று போட்டார்கள்.

And thus they did, and slew all those who had been left to protect the city, yea, all those who would not yield up their weapons of war.

26 இப்படியாக மரோனி தன் சேனையின் ஒரு பகுதி-
யைக்கொண்டு மூலெக் பட்டணத்தை ஆக்கிரமித்-
தான். மறுபுறத்தில் தியான்குமை பிடிக்கப்போன
லாமானியர் திரும்பிவரும்போது, அவர்களைச் சந்-
திக்க மீதியானோருடன் அணிவகுத்துப் போனான்.

And thus Moroni had obtained possession of the city Mulek with a part of his army, while he marched with the remainder to meet the Lamanites when they should return from the pursuit of Teancum.

27 அந்தப்படியே, தாங்கள் உதாரத்துவஸ்தலம் அரு-
கில் வரும்வரைக்குமாய் லாமானியர் தியான்கு-
மைப் பின்தொடர்ந்தார்கள், பின்னர் அவர்கள் லே-
கியினாலும், உதாரத்துவஸ்தலத்தைக் காக்கும்படி
விடப்பட்டிருந்த ஓர் சிறு சேனையினாலும் சந்திக்-
கப்பட்டார்கள்.

And it came to pass that the Lamanites did pursue Teancum until they came near the city Bountiful, and then they were met by Lehi and a small army, which had been left to protect the city Bountiful.

28 இப்பொழுது இதோ, லேகி தன்னுடைய சேனை-
யோடு தங்களுக்கு விரோதமாய் வருவதை லாமா-
னியரின் பிரதான சேர்வைக்காரர் கண்டபோது,
ஒருவேளை தாங்கள் மூலெக்கின் பட்டணத்தை
அடைவதற்கு முன், லேகி அதை மேற்கொண்டுவி-
டுவானோவென்று பயந்து அதிக குழப்பத்திலே
பறந்தோடினார்கள். ஏனெனில் அவர்கள் தங்க-
ளின் படையெடுப்பினிமித்தம் களைப்பாயிருந்-
தார்கள். லேகியின் மனுஷரோ தெளிவாய் இருந்-
தார்கள்.

And now behold, when the chief captains of the Lamanites had beheld Lehi with his army coming against them, they fled in much confusion, lest perhaps they should not obtain the city Mulek before Lehi should overtake them; for they were wearied because of their march, and the men of Lehi were fresh.

29 இப்பொழுது லாமானியர், மரோனி தன் சேனை-
யோடு தங்களுக்குப் பின்னால் இருந்திருக்கிறான்,
என்று அறியவில்லை; அவர்கள் யாவரும் லேகிக்-
கும் அவன் மனுஷருக்குமே பயந்தார்கள்.

Now the Lamanites did not know that Moroni had been in their rear with his army; and all they feared was Lehi and his men.

30 இப்பொழுது மரோனியையும், அவனுடைய சே-
னையையும், அவர்கள் சந்திக்கும்வரை, அவர்க-
ளை மேற்கொள்ள லேகி விருப்பமில்லாதவனாயி-
ருந்தான்.

Now Lehi was not desirous to overtake them till they should meet Moroni and his army.

31 அந்தப்படியே, லாமானியர் தூரமாய் பின்வாங்-
கும் முன்பே நேபியரால் சூழப்பட்டார்கள். ஒருபுறத்-
தில் மரோனியின் மனுஷராலும், மறுபுறத்தில் லே-
கியின் மனுஷராலும் சூழப்பட்டார்கள்; அவர்கள்
யாவரும் தெளிவாகவும், பூரண பெலனுடையவர்-
களுமாயிருந்தார்கள்; லாமானியரோ தங்களின்
நீண்ட பயணத்தினிமித்தம் களைத்துப் போயிருந்-
தார்கள்.

And it came to pass that before the Lamanites had retreated far they were surrounded by the Nephites, by the men of Moroni on one hand, and the men of Lehi on the other, all of whom were fresh and full of strength; but the Lamanites were wearied because of their long march.

32 அவர்கள் தங்கள் யுத்தக் கருவிகளை விட்டுவிடு-
மட்டும், தாங்கள் அவர்கள் மேல் விழவேண்டு-
மென, மரோனி தன் மனுஷருக்குக் கட்டளையிட்-
டான்.

And Moroni commanded his men that they should fall upon them until they had given up their weapons of war.

33 அந்தப்படியே, லாமானியரின் தலைவனாயும்,
சோரமியனாயும், அடக்க முடியாத ஆர்வம் படைத்-
தவனாயுமிருந்த யாக்கோபு, மரோனிக்கு விரோத-
மாய் மிகுந்த ஆக்ரோஷத்துடனே போரிடும்படி லா-
மானியரை நடத்திச் சென்றான்.

And it came to pass that Jacob, being their leader, being also a Zoramite, and having an unconquerable spirit, he led the Lamanites forth to battle with exceeding fury against Moroni.

34 மரோனி அவர்களின் படையெடுப்பு மார்க்கத்தி-
லிருந்ததால், யாக்கோபு அவர்களைச் சங்கரிக்கத்
தீர்மானித்தவனாய், மூலெக்கின் பட்டணத்தினூ-
டாக தன் வழியைக் குறுக்கினான். ஆனால் இதோ,
மரோனியும் அவன் மனுஷரும் மிகவும் வல்லமை-
யுள்ளோராய் இருந்தார்கள்; ஆதலால் அவர்கள்
லாமானியருக்கு வழிவிடவில்லை.

Moroni being in their course of march, therefore Jacob was determined to slay them and cut his way through to the city of Mulek. But behold, Moroni and his men were more powerful; therefore they did not give way before the Lamanites.

35 அந்தப்படியே, அவர்கள் மிகுந்த கோபத்தோடு-
கூட இரு புறங்களிலும் சண்டையிட்டார்கள்; இரு
புறத்திலும் அநேகர் கொல்லப்பட்டனர், ஆம், மரோ-
னி காயமடைந்தான், யாக்கோபு கொல்லப்பட்-
டான்.

And it came to pass that they fought on both hands with exceeding fury; and there were many slain on both sides; yea, and Moroni was wounded and Jacob was killed.

36 இவ்வாறான ஆக்ரோஷத்துடன், லேகி தன் பராக்-
கிரமசாலிகளைக்கொண்டு அவர்களின் பின்னே
தாக்கினதாலே, பின்னாக இருந்த லாமானியர் தங்-
கள் யுத்தக் கருவிகளை ஒப்படைத்தார்கள்; அவர்-
களில் மீதியானோர் போவதா, அல்லது அடிப்பதா
என்று தெரியாமல் குழம்பிப் போயிருந்தார்கள்.

And Lehi pressed upon their rear with such fury with his strong men, that the Lamanites in the rear delivered up their weapons of war; and the remainder of them, being much confused, knew not whither to go or to strike.

37 இப்பொழுது மரோனி அவர்களின் குழப்பத்தைக்
கண்டு, அவர்களை நோக்கி: நீங்கள் உங்கள் யுத்தக்
கருவிகளைக் கொண்டுவந்து ஒப்படைப்பீர்களா-
னால், இதோ, நாங்கள் உங்கள் இரத்தத்தைச் சிந்து-
வதைத் தவிர்ப்போம், என்றான்.

Now Moroni seeing their confusion, he said unto them: If ye will bring forth your weapons of war and deliver them up, behold we will forbear shedding your blood.

38 அந்தப்படியே, லாமானியர் இவ்வார்த்தைகளைக்
கேட்டபோது, கொல்லப்பட்டுப் போகாத, அவர்க-
ளின் பிரதான சேர்வைக்காரர் வந்து, மரோனியின்
காலடியிலே தங்கள் யுத்தக் கருவிகளைப் போட்டு,
தங்கள் மனுஷரும் அப்படியே செய்யும்படிக்குக்
கட்டளையிட்டார்கள்.

And it came to pass that when the Lamanites had heard these words, their chief captains, all those who were not slain, came forth and threw down their weapons of war at the feet of Moroni, and also commanded their men that they should do the same.

39 ஆனால் இதோ, அநேகர் அப்படிச் செய்யவில்லை;
தங்களின் பட்டயங்களை ஒப்படைக்காதவர்கள்
பிடிக்கப்பட்டு, கட்டப்பட்டு, அவர்களின் யுத்தக்
கருவிகள் அவர்களிடமிருந்து பிடுங்கப்பட்டு, தங்-
கள் சகோதரரோடு உதாரத்துவஸ்தலத்திற்கு போ-
கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

But behold, there were many that would not; and those who would not deliver up their swords were taken and bound, and their weapons of war were taken from them, and they were compelled to march with their brethren forth into the land Bountiful.

40 இப்பொழுது கொல்லப்பட்டுப் போன, ஆம், இரு-
புறத்திலும் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்-
கையிலும், பிடிக்கப்பட்ட கைதிகளின் எண்ணிக்-
கை மிஞ்சிற்று.

And now the number of prisoners who were taken exceeded more than the number of those who had been slain, yea, more than those who had been slain on both sides.

# ஆல்மா 53

1 அந்தப்படியே, அவர்கள் லாமானிய கைதிகளுக்கு
காவற்காரரை நிறுத்தி, அவர்கள் போய் தங்களின்
மரித்தோரையும், ஆம், நேபியர்களில் கொல்லப்பட்-
டு மரணத்திற்குள்ளானோரையும் அடக்கம்பண்-
ணும்படி வற்புறுத்தினார்கள்; அவர்கள் தங்கள்
வேலைகளைச் செய்யும்போது அவர்களைக் கா-
வற்காக்கும்படி மரோனி ஆட்களை நிறுத்தினான்.

2 லேகியுடன் மூலெக் பட்டணத்திற்கு மரோனி
போய், பட்டணத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றி
அதை லேகிக்குக் கொடுத்தான். இப்பொழுதும்
இதோ, இந்த லேகி என்பவன் மரோனியின் பல யுத்-
தங்களில் அவனோடு கூட இருந்தவன்; அவன்
மரோனியைப் போன்ற ஒரு மனுஷனாயிருந்தான்.
அவர்கள் ஒருவருக்கொருவர் மற்றொருவரின் பா-
துகாப்பில் களிகூர்ந்திருந்தனர்; ஆம், ஒருவருக்-
கொருவர் மிகவும் பிரியமாகவும், நேபியின் ஜனங்-
கள் யாவருக்கும் பிரியமானோராயும் இருந்தார்கள்.

3 அந்தப்படியே, லாமானியர் தங்களில் மரித்தோ-
ரையும், நேபியரில் மரித்தோரையும், புதைத்த பின்-
பு, அவர்கள் உதாரத்துவஸ்தலத்திற்குள் திரும்பிக்
கூட்டிக்கொண்டு போகப்பட்டார்கள்; மரோனியின்
ஆணைகளின்படி அவர்கள் உதாரத்துவஸ்தலமா-
கிய இடத்தை அல்லது பட்டணத்தைச் சுற்றிலும் கு-
ழியைத் தோண்டும் வேலையைத் தொடங்க தி-
யான்கும் கட்டளையிட்டான்.

4 அவன் குழியின் உட்கரையிலே மரத்தினாலான
தடுப்பை அவர்கள் கட்டும்படி கட்டளையிட்டான்;
அவர்கள் அக்குழியின் மண்ணை, மரத்தடுப்பை
தாங்கும்படி போட்டார்கள். அவ்விதமாக, மரத்தா-
லும் மண்ணாலுமான பெலமான சுவரை உதாரத்-
துவஸ்தல பட்டணத்தைச் சுற்றிலும் எழுப்பி, தாங்-
கள் சூழ்ந்துகொள்ளும்படியாக லாமானியரை
அவர்கள் பிரயாசப்படச் செய்தார்கள்.

5 அதன் பின்பு இப்பட்டணம் மிகவும் பெலமுள்ள
கொத்தளமாய் என்றென்றுமாய் விளங்கிற்று; இப்-
பட்டணத்திலே அவர்கள் லாமானியர்களின் கை-
திகளைக் காவல் காத்தார்கள்; ஆம், அவர்கள்
சொந்த கைகளினாலே அவர்கள் எழும்பச் செய்தி-
ருந்த சுவற்றினுள்ளாகவே அவர்களை காவல்
வைத்தார்கள். லாமானியர் வேலையிலிருக்கும்-
போது அவர்களைக் காவல் காப்பது சுலபமாயி-
ருந்தபடியினாலே, அவர்களை வேலை செய்ய கட்-
டளையிடும்படி இப்பொழுது மரோனி கட்டாயப்ப-
டுத்தப்பட்டான்; அவன் தான் லாமானியர் மேல்
தாக்குதல் நடத்தும்போது, தன்னுடைய சேனைகள்
அனைத்தும் இருக்கும்படி வாஞ்சித்தான்.

# Alma 53

And it came to pass that they did set guards over the prisoners of the Lamanites, and did compel them to go forth and bury their dead, yea, and also the dead of the Nephites who were slain; and Moroni placed men over them to guard them while they should perform their labors.

And Moroni went to the city of Mulek with Lehi, and took command of the city and gave it unto Lehi. Now behold, this Lehi was a man who had been with Moroni in the more part of all his battles; and he was a man like unto Moroni, and they rejoiced in each other's safety; yea, they were beloved by each other, and also beloved by all the people of Nephi.

And it came to pass that after the Lamanites had finished burying their dead and also the dead of the Nephites, they were marched back into the land Bountiful; and Teancum, by the orders of Moroni, caused that they should commence laboring in digging a ditch round about the land, or the city, Bountiful.

And he caused that they should build a breastwork of timbers upon the inner bank of the ditch; and they cast up dirt out of the ditch against the breastwork of timbers; and thus they did cause the Lamanites to labor until they had encircled the city of Bountiful round about with a strong wall of timbers and earth, to an exceeding height.

And this city became an exceeding stronghold ever after; and in this city they did guard the prisoners of the Lamanites; yea, even within a wall which they had caused them to build with their own hands. Now Moroni was compelled to cause the Lamanites to labor, because it was easy to guard them while at their labor; and he desired all his forces when he should make an attack upon the Lamanites.

6 அந்தப்படியே, மரோனி இப்படியாக லாமானிய சேனைகளின் பெரிதான ஒன்றின் மேல் ஜெயம்கொண்டு, நேபியின் தேசத்திலிருந்த லாமானியரின் பெரிய கொத்தளங்களில் ஒன்றான மூலெக் பட்டணத்தையும் கைப்பற்றினான்; இப்படியாக அவன் தன்னுடைய கைதிகளை காவல் காக்க ஒரு கொத்தளத்தையும் எழுப்பியிருந்தான்.

7 அந்தப்படியே, அவன் லாமானியருடன் அந்த வருஷத்திலே போர் புரிய இனிமேலும் முற்படாமல், தன் மனுஷரை யுத்தத்திற்காக தாங்கள் ஆயத்தப்படுத்துவதிலும், ஆம், லாமானியரிடத்திலிருந்து காத்துக்கொள்ள அரண்களை எழுப்புவதிலும், ஆம், தங்கள் ஸ்திரீகளையும், சிறுபிள்ளைகளையும் பஞ்சத்திலிருந்தும் உபத்திரவத்திலிருந்தும் விடுவித்து, அவர்களின் சேனைகளுக்கு உணவு வழங்குவதிலும் ஈடுபடுத்தி வந்தான்.

8 இப்பொழுதும், அந்தப்படியே, லாமானியர்களின் சேனைகள் மரோனி இல்லாதபோது, நேபியர்கள் மத்தியிலே பிரிவினைகளை ஏற்படுத்திய சூழ்ச்சிகளினிமித்தம், மேற்கு சமுத்திரத்தின் தெற்கிலே, அப்பகுதியிலுள்ள அவர்களின் பட்டணங்கள் அநேகவற்றை வசப்படுத்திக்கொள்ளுமட்டும், நேபியர்களின் அந்த பகுதி மேல் அவர்கள் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்கள்.

9 இப்படியாக தங்கள் மத்தியிலிருந்த அக்கிரமத்தினிமித்தமும், ஆம், தங்கள் மத்தியிலிருந்த பிரிவினைகள் மற்றும் சதியினிமித்தமும், அவர்கள் மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளில் வைக்கப்பட்டார்கள்.

10 இப்பொழுதும் இதோ, ஆதியிலே லாமானியர்களாயிருந்த அம்மோனின் ஜனத்தைக் குறித்துச் சொல்ல எனக்கு சில காரியங்கள் உள்ளன. ஆனால் அம்மோனாலும், அவன் சகோதரராலும், அல்லது, தேவனுடைய வல்லமையினாலும், வார்த்தையினாலும் கர்த்தருக்குள்ளாக மனம் மாற்றப்பட்டார்கள். அவர்கள் சாரகெம்லா தேசத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டு அச்சமயமுதல் நேபியரால் காக்கப்பட்டார்கள்.

11 அவர்களுடைய வாக்குறுதியினிமித்தம் அவர்கள் தங்களுடைய சகோதரருக்கு விரோதமாக யுத்தக் கருவிகளை எடுப்பதிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தார்கள்; ஏனெனில் தாங்கள் இனி ஒருபோதும் இரத்தம் சிந்தப்பண்ணுவதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள்; அவர்கள் சத்தியம் செய்ததன்படி, அவர்கள் அழிக்கப்பட்டுப் போயிருப்பார்கள்; ஆம், அம்மோனும் அவன் சகோதரரும், அவர்கள் மேல் வைத்திருந்த இரக்கமும், மிகுந்த அன்பும் இல்லாமற்போயிருந்தால், அவர்கள் தங்கள் சகோதரரின் கைகளுக்குள் விழத் தங்களையே கொடுத்திருப்பார்கள்.

And it came to pass that Moroni had thus gained a victory over one of the greatest of the armies of the Lamanites, and had obtained possession of the city of Mulek, which was one of the strongest holds of the Lamanites in the land of Nephi; and thus he had also built a stronghold to retain his prisoners.

And it came to pass that he did no more attempt a battle with the Lamanites in that year, but he did employ his men in preparing for war, yea, and in making fortifications to guard against the Lamanites, yea, and also delivering their women and their children from famine and affliction, and providing food for their armies.

And now it came to pass that the armies of the Lamanites, on the west sea, south, while in the absence of Moroni on account of some intrigue amongst the Nephites, which caused dissensions amongst them, had gained some ground over the Nephites, yea, insomuch that they had obtained possession of a number of their cities in that part of the land.

And thus because of iniquity amongst themselves, yea, because of dissensions and intrigue among themselves they were placed in the most dangerous circumstances.

And now behold, I have somewhat to say concerning the people of Ammon, who, in the beginning, were Lamanites; but by Ammon and his brethren, or rather by the power and word of God, they had been converted unto the Lord; and they had been brought down into the land of Zarahemla, and had ever since been protected by the Nephites.

And because of their oath they had been kept from taking up arms against their brethren; for they had taken an oath that they never would shed blood more; and according to their oath they would have perished; yea, they would have suffered themselves to have fallen into the hands of their brethren, had it not been for the pity and the exceeding love which Ammon and his brethren had had for them.

12 இக்காரணத்திற்காக அவர்கள் சாரகெம்லா தேசத்திற்குள் கொண்டு வரப்பட்டார்கள்; அவர்கள் நேபியர்களால் எப்போதும் காக்கப்பட்டு வந்திருக்கிறார்கள்.

And for this cause they were brought down into the land of Zarahemla; and they ever had been protected by the Nephites.

13 ஆனால், அந்தப்படியே, அவர்கள் நேபியர்கள் தங்களுக்காக அனுபவித்த ஆபத்துக்களையும், அநேக உபத்திரவங்களையும், துன்பங்களையும் கண்டபோது, அவர்கள் மனதுருக்கத்தினால் நெகிழ்ந்து, தங்கள் தேசத்தை தற்காப்பதற்கென்று யுத்தக் கருவிகளை எடுக்க வாஞ்சித்தார்கள்.

But it came to pass that when they saw the danger, and the many afflictions and tribulations which the Nephites bore for them, they were moved with compassion and were desirous to take up arms in the defence of their country.

14 ஆனால் இதோ, அவர்கள் தாங்கள் செய்த சத்தியத்தை உடைத்துப் போடவிருந்ததினால், தங்களின் யுத்தக் கருவிகளை எடுக்கவிருக்கும்போது அவர்கள் ஏலமன் மற்றும் அவனது சகோதரரின் வற்புறுத்தலினால் மேற்கொள்ளப்பட்டார்கள்.

But behold, as they were about to take their weapons of war, they were overpowered by the persuasions of Helaman and his brethren, for they were about to break the oath which they had made.

15 அவர்கள் அப்படிச் செய்வதினால் தங்கள் ஆத்துமாக்களை இழந்து விடுவார்களோ என்று ஏலமன் பயந்தான்; ஆதலால் இந்த உடன்படிக்கையினுள் பிரவேசித்த யாவரும், தங்கள் சகோதரர் இச்சமயம் ஆபத்தான சூழ்நிலையில் தத்தளித்த அவர்களின் உபத்திரவங்களைக் காணும்படியாக கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

And Helaman feared lest by so doing they should lose their souls; therefore all those who had entered into this covenant were compelled to behold their brethren wade through their afflictions, in their dangerous circumstances at this time.

16 ஆனால், இதோ, அந்தப்படியே, அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாய்த் தங்களைத் தற்காத்துக் கொள்ள, தாங்கள் யுத்தக் கருவிகளை எடுக்கமாட்டோம் என்று, உடன்படிக்கையினுள் பிரவேசிக்காத, அநேக குமாரர்கள் அவர்களுக்குள் இருந்தார்கள். ஆதலால் யுத்தக் கருவிகளை எடுக்க முடிந்த அனைவரும் இச்சமயத்தில் ஏகமாய்க்கூடி தங்களை நேபியர்கள் என்று அழைத்துக் கொண்டார்கள்.

But behold, it came to pass they had many sons, who had not entered into a covenant that they would not take their weapons of war to defend themselves against their enemies; therefore they did assemble themselves together at this time, as many as were able to take up arms, and they called themselves Nephites.

17 அவர்கள் நேபியர்களின் சுதந்திரத்திற்காகவும், ஆம், தேசத்தைக் காப்பதற்காகவும் தங்கள் ஜீவனை விடும்மட்டுமாய் போராடுவோம் என்ற, உடன்படிக்கையினுள் பிரவேசித்தார்கள்; ஆம், தங்கள் சுதந்திரத்தை எப்பொழுதும் விடாமல், எல்லா சூழ்நிலையிலும் நேபியர்களையும், தங்களையும், அடிமைத்தனத்திலிருந்து காக்கப் போராடுவோம், என்று உடன்படிக்கை பண்ணினார்கள்.

And they entered into a covenant to fight for the liberty of the Nephites, yea, to protect the land unto the laying down of their lives; yea, even they covenanted that they never would give up their liberty, but they would fight in all cases to protect the Nephites and themselves from bondage.

18 இப்பொழுதும் இதோ, இந்த உடன்படிக்கையினுள் பிரவேசித்து, தங்கள் தேசத்தைத் தற்காக்க யுத்தக் கருவிகளை எடுத்த அந்த வாலிபர், ஈராயிரம் பேராயிருந்தார்கள்.

Now behold, there were two thousand of those young men, who entered into this covenant and took their weapons of war to defend their country.

19 இப்பொழுதும் இதோ, அவர்கள் இதுகாலம்வரை நேபியருக்கு இடையூறாய் இருந்ததில்லை. இச்சமயத்தில் அவர்கள் மிகவும் ஆதரவாயிருந்தார்கள். ஏனெனில் அவர்கள் தங்கள் யுத்தக் கருவிகளை எடுத்ததினால், ஏலமன் தங்களின் தலைவனாக இருக்கவேண்டுமென வாஞ்சித்தார்கள்.

And now behold, as they never had hitherto been a disadvantage to the Nephites, they became now at this period of time also a great support; for they took their weapons of war, and they would that Helaman should be their leader.

20 அவர்கள் யாவரும் வாலிபராயிருந்து, தைரியத்-
திலும் பெலத்திலும் செயலிலும் மிகுந்த பராக்கிரம-
முள்ளவர்களாயிருந்தார்கள். ஆனால் இதோ, இது
மாத்திரமல்ல, எல்லா நேரத்திலும் தங்களிடத்தில்
ஒப்படைக்கப்பட்ட எக்காரியத்திலும் உண்மை-
யுள்ள மனுஷர்களாயிருந்தார்கள்.

And they were all young men, and they were exceedingly valiant for courage, and also for strength and activity; but behold, this was not all—they were men who were true at all times in whatsoever thing they were entrusted.

21 ஆம், அவர்கள் தேவனுடைய கட்டளைகளைக்
கைக்கொள்ளும்படிக்கும், அவருக்கு முன்பாக
தலைநிமிர்ந்து நடக்கவும் போதிக்கப்பட்டிருந்த-
தால், அவர்கள் சத்தியமும் தெளிவுமுள்ள மனுஷ-
ராயிருந்தார்கள்.

Yea, they were men of truth and soberness, for they had been taught to keep the commandments of God and to walk uprightly before him.

22 இப்பொழுதும், அந்தப்படியே, தெற்கே மேற்கு
சமுத்திரமோரமாய் அமைந்த தேசத்தின் எல்லைக-
ளிலுள்ள ஜனங்களுக்கு ஆதரவு கொடுக்கும்படிக்-
கு, ஏலமன் தனது ஈராயிரம் இளம் போர்வீரர்களை
முன்னின்று நடத்தி அணிவகுத்துப் போனான்.

And now it came to pass that Helaman did march at the head of his two thousand stripling soldiers, to the support of the people in the borders of the land on the south by the west sea.

23 இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல் நியாயா-
திபதிகளின் ஆளுகையின் இருபத்தி எட்டாம் வரு-
ஷமும் நிறைவுற்றது.

And thus ended the twenty and eighth year of the reign of the judges over the people of Nephi.

# ஆல்மா 54

1 இப்பொழுதும், அந்தப்படியே, நியாயாதிபதிகளின்
இருபத்தி ஒன்பதாவது வருஷத்தின் துவக்கத்தி-
லே, தான் கைதிகளை பரிமாற்றம் செய்ய விரும்பு-
வதாக அம்மோரோன், மரோனியிடம், செய்தி
அனுப்பினான்.

2 அந்தப்படியே, இந்த வேண்டுகோளினிமித்தம்
மரோனி மிகவும் களிகூர்ந்தான். ஏனெனில், லாமா-
னிய கைதிகளின் ஆதரவுக்கென்று கொடுக்கப்-
பட்ட ஆகாரத்தை தன் சொந்த ஜனத்தின் ஆதரவுக்-
கென்று கொடுக்க அவன் விரும்பினான்; அவன்
தன் சொந்த ஜனம் தன் சேனையைப் பெலப்படுத்த
வாஞ்சித்தான்.

3 இப்பொழுது லாமானியர் அநேக ஸ்திரீகளையும்,
சிறுபிள்ளைகளையும் பிடித்துப் போயிருந்தார்-
கள். ஆனால் மரோனியின் எல்லா கைதிகளிலும்
அல்லது மரோனி பிடித்திருந்த எல்லா கைதிகளுக்-
குள்ளும் ஒரு ஸ்திரீயாகிலும், சிறுபிள்ளையாகி-
லும் இருக்கவில்லை. ஆதலால் மரோனி தான் லா-
மானியரிடமிருந்து எவ்வளவு நேபியக் கைதிக-
ளைப் பெறமுடியுமோ, அவ்வளவு பெறுவதற்கு
ஒரு உபாயத்தை தீர்மானித்தான்.

4 ஆதலால், தனக்கு ஒரு நிருபத்தைக் கொடுக்க
வந்த, அம்மோரோனின் பணிவிடைக்காரனிடமே,
மரோனி ஒரு நிருபத்தை எழுதிக் கொடுத்தனுப்பி-
னான். இப்பொழுது அவன் அம்மோரோனுக்கு எழு-
திய வார்த்தைகளாவன:

5 இதோ, அம்மோரோனே, என் ஜனங்களுக்கு விரோ-
தமாய் நீ நடத்தின அந்த யுத்தத்தைக் குறித்து, அல்-
லது குறிப்பாக உன் சகோதரன் அவர்களுக்கு வி-
ரோதமாய் நடத்தினதைப்பற்றியும், அவன் மரணத்-
திற்குப் பின்பும் அதைத் தொடர நீ இன்னும் உறுதி-
யாயிருக்கிற சிலவற்றையும் குறித்து உனக்கு எழு-
தியுள்ளேன்.

6 இதோ, தேவனுடைய நியாயத்தைக் குறித்தும், நீ
மனந்திரும்பி, நேபியின் தேசமாகிய உன் சுதந்திர
பூமிக்குள்ளே அல்லது உன் சொந்த தேசங்களுக்-
குள்ளே உன் சேனையைப் பின்வாங்கிக் கொள்-
ளாவிடில், உன் மீது தொங்கிக்கொண்டிருக்கிற
அவருடைய சர்வ வல்ல உக்கிரத்தின் பட்டயத்-
தைக் குறித்தும், சிலவற்றை நான் உனக்குச் சொல்-
லுவேன்.

7 ஆம், அவைகளுக்குச் செவிகொடுக்க உன்னால்
கூடுமானால், இக்காரியங்களை உனக்கு நான்
சொல்லுவேன்; ஆம், நீ மனந்திரும்பி உன் கொ-
லைக்கேதுவான திட்டங்களிலிருந்து நீங்கி, உன்
சொந்த பூமிகளுக்கு உன் சேனைகளோடு கூட தி-
ரும்பாவிடில், உன்னையும் உனது சகோதரனையும்
போன்ற, கொலைபாதகரை ஏற்றுக்கொள்ள காத்-
திருக்கும், அந்த பயங்கரமான நரகத்தைக் குறித்து
நான் உனக்குச் சொல்லுவேன்.

# Alma 54

And now it came to pass in the commencement of the twenty and ninth year of the judges, that Ammoron sent unto Moroni desiring that he would exchange prisoners.

And it came to pass that Moroni felt to rejoice exceedingly at this request, for he desired the provisions which were imparted for the support of the Lamanite prisoners for the support of his own people; and he also desired his own people for the strengthening of his army.

Now the Lamanites had taken many women and children, and there was not a woman nor a child among all the prisoners of Moroni, or the prisoners whom Moroni had taken; therefore Moroni resolved upon a stratagem to obtain as many prisoners of the Nephites from the Lamanites as it were possible.

Therefore he wrote an epistle, and sent it by the servant of Ammoron, the same who had brought an epistle to Moroni. Now these are the words which he wrote unto Ammoron, saying:

Behold, Ammoron, I have written unto you somewhat concerning this war which ye have waged against my people, or rather which thy brother hath waged against them, and which ye are still determined to carry on after his death.

Behold, I would tell you somewhat concerning the justice of God, and the sword of his almighty wrath, which doth hang over you except ye repent and withdraw your armies into your own lands, or the land of your possessions, which is the land of Nephi.

Yea, I would tell you these things if ye were capable of hearkening unto them; yea, I would tell you concerning that awful hell that awaits to receive such murderers as thou and thy brother have been, except ye repent and withdraw your murderous purposes, and return with your armies to your own lands.

8 ஆனால் நீங்கள் ஒரு முறை இக்காரியங்களை நி-
ராகரித்து, கர்த்தருடைய ஜனங்களுக்கு விரோத-
மாய்ப் போராடியிருப்பதால், நீங்கள் மறுபடியும்
அப்படிச் செய்வீர்கள், என்று எதிர்பார்க்கிறேன்.

But as ye have once rejected these things, and have fought against the people of the Lord, even so I may expect you will do it again.

9 இப்பொழுதும் இதோ, நாங்கள் உங்களை சந்திக்க
ஆயத்தமாயிருக்கிறோம்; ஆம், நீங்கள் உங்கள்
நோக்கங்களை விலக்காவிடில், இதோ, நீ மறுத-
லித்த அந்த தேவனுடைய கோபம் உன்னை முற்றி-
லும் நிர்மூலமாக்கும் வரைக்குமாய் அதை உன்-
மேல் விழப்பண்ணுவாய்.

And now behold, we are prepared to receive you; yea, and except you withdraw your purposes, behold, ye will pull down the wrath of that God whom you have rejected upon you, even to your utter destruction.

10 ஆனால், நீ பின்வாங்காமல் இருந்தால், கர்த்தர் ஜீ-
விப்பதால், எங்கள் சேனைகள் உங்கள் மேல் வந்து,
நீங்கள் சீக்கிரமாய் மரணத்தினால் சந்திக்கப்படு-
வீர்கள். ஏனெனில் நாங்கள் எங்கள் பட்டணங்க-
ளையும் எங்கள் தேசங்களையும் கைப்பற்றி, ஆம்,
எங்கள் மார்க்கத்தையும், எங்கள் தேவனுடைய
நோக்கத்தையும் காத்துக் கொள்வோம்.

But, as the Lord liveth, our armies shall come upon you except ye withdraw, and ye shall soon be visited with death, for we will retain our cities and our lands; yea, and we will maintain our religion and the cause of our God.

11 ஆனால் இதோ, நான் இக்காரியங்களைக் குறித்து
வீணாய் உன்னிடத்தில் பேசுகிறேன், என்று தோன்-
றுகிறது; அல்லது நீ பாதாளத்தின் பிள்ளையோ
என்று எனக்குத் தோன்றுகிறது; ஆதலால் ஒரு கை-
திக்குப் பதிலாக, நீ ஒரு புருஷனையும் அவன்
மனைவியையும், அவன் பிள்ளைகளையும் ஒப்ப-
டைப்பாய் என்ற நிபந்தனைகளில்லாமல், நான்
கைதிகளை பரிமாற்றம் செய்யமாட்டேன், நீ இதைச்
செய்வாயானால் நான் பரிமாற்றம் செய்வேன், என்-
று உனக்குச் சொல்லி என் நிருபத்தை முடிக்கிறேன்.

But behold, it supposeth me that I talk to you concerning these things in vain; or it supposeth me that thou art a child of hell; therefore I will close my epistle by telling you that I will not exchange prisoners, save it be on conditions that ye will deliver up a man and his wife and his children, for one prisoner; if this be the case that ye will do it, I will exchange.

12 இதோ, நீ இதைச் செய்யவில்லையெனில், நான்
உனக்கு விரோதமாய் என் சேனைகளோடு வரு-
வேன்; ஆம், என் ஸ்திரீகளையும், என் பிள்ளைக-
ளையும் கூட போர்க்கவசம் தரிக்கச் செய்து, உனக்-
கு விரோதமாய் வருவேன். எங்கள் முதற் சுதந்திர பூ-
மியாகிய உன் சொந்த தேசத்திற்குள்ளாகவே உன்-
னைப் பின் தொடர்ந்து வருவேன்; ஆம், அது இரத்-
தத்திற்கு இரத்தமாகவும், ஜீவனுக்கு ஜீவனுமாகவு-
மிருக்கும்; நீங்கள் பூமியின் பரப்பின் மேலிருந்து
அழிந்து போகுமட்டும் உங்களோடு போர் தொடுப்-
பேன்.

And behold, if ye do not this, I will come against you with my armies; yea, even I will arm my women and my children, and I will come against you, and I will follow you even into your own land, which is the land of our first inheritance; yea, and it shall be blood for blood, yea, life for life; and I will give you battle even until you are destroyed from off the face of the earth.

13 இதோ, நானும் என் ஜனமும் கோபமாயிருக்கி-
றோம்; நீங்கள் எங்களைக் கொலை செய்ய வகை
தேடினீர்கள். நாங்களோ எங்களைத் தற்காத்துக்
கொள்ளவே நாடினோம். ஆனால் இதோ, நீங்கள்
எங்களை இன்னமும் அழிக்க வகை தேடினால்,
நாங்கள் உங்களை அழிக்க நாடுவோம். ஆம், எங்க-
ளுடைய முதற் சுதந்திர பூமியாகிய, எங்கள் தேசத்-
தை நாடுவோம்.

Behold, I am in my anger, and also my people; ye have sought to murder us, and we have only sought to defend ourselves. But behold, if ye seek to destroy us more we will seek to destroy you; yea, and we will seek our land, the land of our first inheritance.

14 இப்பொழுது நான் என் நிருபத்தை முடிக்கிறேன்.
நானே மரோனி; நான் நேபியர் ஜனத்தின் தலை-
வன்.

Now I close my epistle. I am Moroni; I am a leader of the people of the Nephites.

15 இப்பொழுது, அந்தப்படியே, அம்மோரோன் இந்த
நிருபத்தைப் பெற்றபோது, அவன் கோபப்பட்-
டான்; அவன் மற்றொரு நிருபத்தை மரோனிக்கு
எழுதினான். அவன் எழுதின வார்த்தைகளாவன:

Now it came to pass that Ammoron, when he had received this epistle, was angry; and he wrote another epistle unto Moroni, and these are the words which he wrote, saying:

16 இதோ, லாமானியரின் ராஜாவாகிய அம்மோ-
ரோன் நானே; நீ கொன்றுபோட்ட அமலேக்கியா-
வின் சகோதரன் நான். இதோ, நான் அவனுடைய
இரத்தப் பழியை உன் மேல் சரிக்கட்டுவேன். ஆம்,
நான் உன்னுடைய பயமுறுத்தல்களுக்கு பயப்படா-
ததால், என் சேனைகளோடு உனக்கு எதிராக வரு-
வேன்.

I am Ammoron, the king of the Lamanites; I am the brother of Amalickiah whom ye have murdered. Behold, I will avenge his blood upon you, yea, and I will come upon you with my armies for I fear not your threatenings.

17 ஏனெனில் இதோ, உன் தகப்பன்மார்கள் தங்க-
ளின் சகோதரர்களுக்கு மோசம் பண்ணினார்கள்,
சட்டப்படி அரசாட்சி அவர்களுக்கு சொந்தமாயி-
ருக்க, அதின் உரிமையை அவர்களிடமிருந்து கள-
வாடுமளவும் அவர்களை மோசம் பண்ணினார்-
கள்.

For behold, your fathers did wrong their brethren, insomuch that they did rob them of their right to the government when it rightly belonged unto them.

18 இப்பொழுதும் இதோ, உங்கள் போர் ஆயுதங்க-
ளைக் கீழே போட்டு, அரசாட்சி நியாயமாக யாருக்கு
உரிமையாயிருக்கிறதோ, அவர்களால் ஆளப்பட
கீழ்ப்பட்டிருப்பீர்களெனில், அப்பொழுது நான்
என் ஜனம் தங்களின் ஆயுதங்களை கீழே போடப்-
பண்ணுவேன்; அவர்கள் இனி ஒருபோதும் யுத்தம்
பண்ணுவதில்லை.

And now behold, if ye will lay down your arms, and subject yourselves to be governed by those to whom the government doth rightly belong, then will I cause that my people shall lay down their weapons and shall be at war no more.

19 இதோ, நீங்கள் எனக்கும் என் ஜனத்திற்கும் விரோ-
தமாய் அநேக பயமுறுத்தல்களைக் கொடுத்தீர்கள்;
ஆனால், இதோ, நாங்கள் உன் பயமுறுத்தல்களுக்-
குப் பயப்படுவதில்லை.

Behold, ye have breathed out many threatenings against me and my people; but behold, we fear not your threatenings.

20 இருப்பினும் நான் என் யுத்த மனுஷருக்காக
உணவைச் சேமிக்கும்படி, உன் வேண்டுகோளின்ப-
டியே கைதிகளை பரிமாற்றம் செய்ய சந்தோஷமாய்
அனுமதிப்பேன்; நேபியர்களை எங்கள் அதிகாரத்-
திற்குக் கீழ்ப்படுத்தவோ, அல்லது அவர்களை நித்-
திய நிர்மூலமாக்கவோ, முடிவற்ற ஒரு யுத்தத்தை
நடத்துவோம்.

Nevertheless, I will grant to exchange prisoners according to your request, gladly, that I may preserve my food for my men of war; and we will wage a war which shall be eternal, either to the subjecting the Nephites to our authority or to their eternal extinction.

21 நாங்கள் மறுதலித்தோம், என்று நீ சொன்ன அந்த
தேவனைக் குறித்துச் சொல்லவேண்டுமெனில்,
இதோ, அப்படி இருப்பவரை நாங்கள் அறியோம்.
நீங்களும் அறியீர்கள். ஆனாலும் அப்படி இருப்ப-
வர் உண்டெனில், அவர் எங்களையும் உங்களைப்-
போல் சிருஷ்டித்திருப்பார், என நாங்கள் அறிய-
வில்லை.

And as concerning that God whom ye say we have rejected, behold, we know not such a being; neither do ye; but if it so be that there is such a being, we know not but that he hath made us as well as you.

22 பிசாசு மற்றும் நரகம் என்று ஒன்று இருக்குமெ-
னில், இதோ, உன்னால் கொலை செய்யப்பட்ட என்
சகோதரன் அப்படிப்பட்ட இடத்திற்குப் போயிருப்-
பான் என்று, நீ யூகிக்கிற அவ்விடத்திற்கு,
அவனோடு கூட நீயும் வாசமாயிருக்க அவர் உன்-
னையும் அனுப்பாமல் இருப்பாரோ? ஆனால்
இதோ, இக்காரியங்கள் அவசியமற்றவை.

And if it so be that there is a devil and a hell, behold will he not send you there to dwell with my brother whom ye have murdered, whom ye have hinted that he hath gone to such a place? But behold these things matter not.

23 நான் அம்மோரோன், நான் உன் தகப்பன்மார்க-
ளால் கட்டாயப்படுத்தப்பட்டு, எருசலேமிலிருந்து
கொண்டு வரப்பட்டவனாகிய சோரமின் சந்ததி.

24 இதோ, இப்பொழுது நான் வைராக்கியமுள்ள லா-
மானியன்; இதோ, அவர்களுக்குச் செய்யப்பட்ட
தவறுகளைச் சரிக்கட்டவும், அரசாட்சிக்கு அவர்க-
ளின் உரிமைகளைக் கைப்பற்றி காக்கவுமே, இந்த
யுத்தம் நடத்தப்பட்டிருக்கிறது. நான் மரோனிக்கு
எனது நிருபத்தை முடிக்கிறேன்.

I am Ammoron, and a descendant of Zoram, whom your fathers pressed and brought out of Jerusalem.

And behold now, I am a bold Lamanite; behold, this war hath been waged to avenge their wrongs, and to maintain and to obtain their rights to the government; and I close my epistle to Moroni.

# ஆல்மா 55

1 இப்பொழுது, அந்தப்படியே, மரோனி இந்த நிருபத்-
தைப் பெற்றபோது, அவன் அதிகக் கோபமடைந்-
தான். ஏனெனில் அம்மோரோன் தன்னுடைய கப-
டத்தைப்பற்றி முழுமையாய் அறிந்திருந்தான்,
என்று அவன் அறிவான்; ஆம், நேபியின் ஜனத்திற்-
கு விரோதமாய் யுத்தம் பண்ணும்படி, தன்னை
ஏவின காரணம் நியாயமானதல்ல என்று, அம்மோ-
ரோன் அறிந்திருந்தான், என்று அவன் அறிவான்.
2 அவன்: இதோ, நான் என் நிருபத்தில் குறிப்பிட்ட-
தைப்போல, அம்மோரோன் தன் திட்டத்தைக் கை-
விடவில்லையெனில், நான் அவனோடு கைதிக-
ளைப் பரிமாற்றம் செய்வதில்லை; ஏனெனில் நான்
அவன் பெற்றிருக்கிற வலிமையிலும் அதிகமாய்
பெறும்படி அவனை அனுமதிப்பதில்லை, என்-
றான்.
3 இதோ, லாமானியரால் கைதிகளாகப் பிடிக்கப்-
பட்டுப்போன என் ஜனம், அவர்களால் காவல்
வைக்கப்பட்டிருக்கிற இடத்தை நான் அறிவேன்;
அம்மோரோன் என் நிருபத்திற்கு சம்மதிக்கவில்-
லையென்பதினால், இதோ, என் வார்த்தைகளின்-
படியே நான் அவனுக்குச் செய்வேன்; ஆம், அவர்-
கள் சமாதானம் வேண்டி கெஞ்சும் வரைக்குமாய்
அவர்களுக்குள்ளே மரணத்தை நாடுவேன்.
4 இப்பொழுதும், அந்தப்படியே, மரோனி இவ்வார்த்-
தைகளைச் சொன்ன பின்பு, அவன் தன் ஜனங்க-
ளுக்குள்ளே, லாமான் சந்ததியில் ஒரு மனு-
ஷனைக் கண்டுபிடிக்கும்படிக்கு அவர்களுக்குள்-
ளே தேடச் செய்தான்.
5 அந்தப்படியே, அவர்கள் லாமான் என்ற பெயரு-
டைய ஒருவனைக் கண்டார்கள்; அவன் அமலேக்-
கியாவால் கொலை செய்யப்பட்ட ராஜாவின் வே-
லையாட்களில் ஒருவன்.
6 இப்பொழுது மரோனி, நேபியர்களைக் காவல்
காத்து வந்த காவற்காரரிடம், லாமானும் அவனு-
டைய மனுஷரில் சிலரும் போகும்படிச் செய்தான்.
7 இப்பொழுது கித் பட்டணத்தில் நேபியர் காக்கப்-
பட்டு வந்தனர்; ஆதலால் மரோனி லாமானை நிய-
மித்து, அவனோடு சில மனுஷரும் போகும்படிக்
கட்டளையிட்டான்.
8 சாயங்காலமானபோது நேபியரைக் காவல் காத்-
திருந்த காவற்காரரிடம் லாமான் போனான். இதோ,
அவர்கள் அவன் வருவதைக் கண்டு அவனை
வாழ்த்தினார்கள்; ஆனால் அவன் அவர்களை
நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, நான் ஒரு லா-
மானியன். இதோ, நாங்கள் நேபியரிடமிருந்து தப்பி
வந்துள்ளோம். அவர்களோ உறங்கிக்கொண்டிருக்-
கிறார்கள்; இதோ, நாங்கள் அவர்களுடைய திராட்-
சை ரசத்தை, எங்களோடே கொண்டு வந்திருக்கி-
றோம், என்றான்.

# Alma 55

Now it came to pass that when Moroni had received this epistle he was more angry, because he knew that Ammoron had a perfect knowledge of his fraud; yea, he knew that Ammoron knew that it was not a just cause that had caused him to wage a war against the people of Nephi.

And he said: Behold, I will not exchange prisoners with Ammoron save he will withdraw his purpose, as I have stated in my epistle; for I will not grant unto him that he shall have any more power than what he hath got.

Behold, I know the place where the Lamanites do guard my people whom they have taken prisoners; and as Ammoron would not grant unto me mine epistle, behold, I will give unto him according to my words; yea, I will seek death among them until they shall sue for peace.

And now it came to pass that when Moroni had said these words, he caused that a search should be made among his men, that perhaps he might find a man who was a descendant of Laman among them.

And it came to pass that they found one, whose name was Laman; and he was one of the servants of the king who was murdered by Amalickiah.

Now Moroni caused that Laman and a small number of his men should go forth unto the guards who were over the Nephites.

Now the Nephites were guarded in the city of Gid; therefore Moroni appointed Laman and caused that a small number of men should go with him.

And when it was evening Laman went to the guards who were over the Nephites, and behold, they saw him coming and they hailed him; but he saith unto them: Fear not; behold, I am a Lamanite. Behold, we have escaped from the Nephites, and they sleep; and behold we have taken of their wine and brought with us.

9 இப்பொழுது லாமானியர் இவ்வார்த்தைகளைக்
கேட்டபோது, அவர்கள் அவனை சந்தோஷமாய்
ஏற்றுக் கொண்டார்கள்; அவர்கள் அவனை நோக்-
கி: நாங்கள் பருகும்படி உங்கள் திராட்சை ரசத்தை
எங்களுக்குக் கொடுங்கள்; நாங்கள் களைத்துப்
போயிருப்பதால், நீங்கள் திராட்சை ரசத்தை இப்ப-
டியாக எடுத்து வந்தது எங்களுக்கு மகிழ்ச்சியாயி-
ருக்கிறது, என்றார்கள்.

Now when the Lamanites heard these words they received him with joy; and they said unto him: Give us of your wine, that we may drink; we are glad that ye have thus taken wine with you for we are weary.

10 லாமான் அவர்களை நோக்கி: நாம் நேபியர்க-
ளுக்கு விரோதமாய் யுத்தத்திற்கு போகும்வரைக்-
கும் நம்முடைய திராட்சை ரசத்தை வைத்திருப்-
போம், என்றான். ஆனால் இவ்வார்த்தை மட்டுமே
திராட்சை ரசத்தைக் குடிக்க வேண்டுமென்ற அவர்-
களின் ஆசையை அதிகமாய் தூண்டிற்று.

But Laman said unto them: Let us keep of our wine till we go against the Nephites to battle. But this saying only made them more desirous to drink of the wine;

11 ஏனெனில் அவர்களோ: நாங்கள் களைப்பாயி-
ருக்கிறோம், ஆதலால் நாம் திராட்சை ரசத்தைப்
பருகுவோம், நம்முடைய பங்குக்குத் தக்கதாக தி-
ராட்சை ரசத்தை நாம் அவ்வப்போது பெறுவோம்,
நேபியர்களுக்கு விரோதமாய்ப்போக, அது நம்மை
பெலப்படுத்தும், என்றார்கள்.

For, said they: We are weary, therefore let us take of the wine, and by and by we shall receive wine for our rations, which will strengthen us to go against the Nephites.

12 லாமான் அவர்களை நோக்கி: நீங்கள் உங்களு-
டைய விருப்பங்களின்படியே செய்யலாம், என்-
றான்.

And Laman said unto them: You may do according to your desires.

13 அந்தப்படியே, அவர்கள் திராட்சை ரசத்தை தாரா-
ளமாய்ப் பருகினார்கள். அது அவர்களின் சு-
வைக்கு இதமாயிருந்தபடியால் இன்னும் தாராள-
மாய் அதை அவர்கள் பருகினார்கள். அது அதனு-
டைய வீரியத்தின்படி தயாரிக்கப்பட்டிருந்ததால்,
அது வீரியமாயிருந்தது.

And it came to pass that they did take of the wine freely; and it was pleasant to their taste, therefore they took of it more freely; and it was strong, having been prepared in its strength.

14 அந்தப்படியே, அவர்கள் குடித்துக் களித்தார்கள்.
விரைவிலே அவர்கள் யாவரும் வெறித்திருந்தார்-
கள்.

And it came to pass they did drink and were merry, and by and by they were all drunken.

15 இப்பொழுது அவர்கள் யாவரும் வெறித்து,
அயர்ந்த நித்திரையிலிருப்பதை லாமானும்
அவனது மனுஷரும் கண்டபோது, மரோனியிடத்-
திற்குத் திரும்பி நடந்த எல்லாவற்றையும் அவனுக்-
குச் சொன்னார்கள்.

And now when Laman and his men saw that they were all drunken, and were in a deep sleep, they returned to Moroni and told him all the things that had happened.

16 இப்பொழுது இது மரோனியின் திட்டத்தின்படியே
நடந்தேறியது. மரோனி தன் மனுஷருக்கு யுத்தக்
கருவிகளைக் கொடுத்து, அவர்களை ஆயத்தப்ப-
டுத்தியிருந்தான்; லாமானியர் நித்திரையில்
அயர்ந்து வெறித்திருக்கையில், அவன் கித் பட்ட-
ணத்திற்குப்போய், கைதிகள் யாவரும் எவ்வள-
வாய் போர்க்கவசம் தரிக்க முடியமோ, அவ்வள-
வாய் யுத்தக் கருவிகளைக் கொடுத்தான்.

And now this was according to the design of Moroni. And Moroni had prepared his men with weapons of war; and he went to the city Gid, while the Lamanites were in a deep sleep and drunken, and cast in weapons of war unto the prisoners, insomuch that they were all armed;

17 ஆம், மரோனி அந்தக் கைதிகள் யாவரையும்
போர்க்கவசம் தரிக்கச் செய்தபோது, அவன் அவர்க-
ளின் ஸ்திரீகளுக்கும், யுத்தக் கருவிகளைப் பயன்-
படுத்தக்கூடிய எல்லா பிள்ளைகளுக்கும், யுத்தக்
கருவிகளைக் கொடுத்தான்; இவை யாவும் ஆழ்ந்த
நிசப்தத்திலே நடப்பிக்கப்பட்டன.

Yea, even to their women, and all those of their children, as many as were able to use a weapon of war, when Moroni had armed all those prisoners; and all those things were done in a profound silence.

18 அவர்கள் லாமானியரை விழிக்கச் செய்திருந்-
தார்களானால், இதோ, அவர்கள் வெறித்திருந்தப-
டியால், நேபியர் அவர்களைக் கொன்று போட்டி-
ருக்கக்கூடும்.

But had they awakened the Lamanites, behold they were drunken and the Nephites could have slain them.

19 ஆனால் இதோ, இது மரோனியின் விருப்பம்
அல்ல; அவன் கொலை செய்வதிலோ அல்லது
இரத்தம் சிந்துவதிலோ களிகூரவில்லை, ஆனால்
அவன் அழிவிலிருந்து தன் ஜனத்தைக் காப்பதில்
களிகூர்ந்தான்; தான் அநீதியைத் தன் மீது வரவ-
ழைத்துக் கொள்ளக்கூடாதென்பதினால், அவன்
லாமானியர் மேல் விழுந்து, அவர்களை அவர்களு-
டைய குடிமயக்கத்திலே அழிக்கவில்லை.

But behold, this was not the desire of Moroni; he did not delight in murder or bloodshed, but he delighted in the saving of his people from destruction; and for this cause he might not bring upon him injustice, he would not fall upon the Lamanites and destroy them in their drunkenness.

20 ஆனால் அவன் தன் விருப்பங்களை நிறைவேற்-
றினான்; ஏனெனில் பட்டணத்தின் மதிலினுள்ளே
இருந்த நேபியர்களின் கைதிகளை அவன் ஆயுதந்-
தரிக்கச் செய்து, அவர்கள் மதில்களினுள்ளே
இருந்த அப்பகுதிகளைக் கைப்பற்றும்படி அவர்க-
ளுக்கு பெலன் கொடுத்தான்.

But he had obtained his desires; for he had armed those prisoners of the Nephites who were within the wall of the city, and had given them power to gain possession of those parts which were within the walls.

21 பின்பு அவன் தன்னோடு இருந்த மனுஷரை
அவர்களிடமிருந்து சற்று பின்னே நிற்கச் செய்து,
லாமானியர்களின் சேனைகளைச் சூழச் செய்தான்.

And then he caused the men who were with him to withdraw a pace from them, and surround the armies of the Lamanites.

22 இப்பொழுது இதோ, இது இராக்காலத்தில் செய்-
யப்பட்டதால், லாமானியர் காலையில் எழுந்தபோ-
து, வெளியே நேபியர்களால் தாங்கள் சூழப்பட்டி-
ருப்பதையும், உள்ளே தங்கள் கைதிகள் ஆயுதந்த-
ரித்திருப்பதையும் கண்டார்கள்.

Now behold this was done in the night-time, so that when the Lamanites awoke in the morning they beheld that they were surrounded by the Nephites without, and that their prisoners were armed within.

23 இப்படியாக அவர்கள் நேபியர், தங்கள் மேல் வல்-
லமை கொண்டிருப்பதைக் கண்டார்கள்; இந்த சூழ்-
நிலைகளில் நேபியர்களோடு யுத்தம்பண்ணுவது
கூடாத காரியம் என்று கண்டார்கள்; ஆதலால்
அவர்களின் பிரதான சேர்வைக்காரர்கள் அவர்க-
ளுடைய யுத்தக் கருவிகளைக்கேட்டு வாங்கி, இரக்-
கத்திற்காகக் கெஞ்சி, அவைகளைக் கொண்டு வந்-
து நேபியரின் காலடியில் போட்டார்கள்.

And thus they saw that the Nephites had power over them; and in these circumstances they found that it was not expedient that they should fight with the Nephites; therefore their chief captains demanded their weapons of war, and they brought them forth and cast them at the feet of the Nephites, pleading for mercy.

24 இப்பொழுதும் இதோ, இதுவே மரோனியின் வாஞ்-
சையாயிருந்தது. அவன் அவர்களை யுத்தக் கைதி-
களாகப் பிடித்து, பட்டணத்தைத் தங்கள் வசப்ப-
டுத்தினான். நேபியர்களான எல்லாக் கைதிகளும்
விடுவிக்கப்படும்படிச் செய்தான்; அவர்கள் மரோ-
னியின் சேனையைச் சேர்ந்துகொண்டு, அவன் சே-
னைக்கு மிகுந்த பெலனாய் இருந்தார்கள்.

Now behold, this was the desire of Moroni. He took them prisoners of war, and took possession of the city, and caused that all the prisoners should be liberated, who were Nephites; and they did join the army of Moroni, and were a great strength to his army.

25 அந்தப்படியே, அவன் தான் கைதிகளாகப் பி-
டித்த, லாமானியரை கித் பட்டணத்தைச் சுற்றிலும்,
அரண்களைப் பெலப்படுத்தும் பணியைத் துவங்-
கும்படிக் கட்டளையிட்டான்.

And it came to pass that he did cause the Lamanites, whom he had taken prisoners, that they should commence a labor in strengthening the fortifications round about the city Gid.

26 அந்தப்படியே, அவன் கித் பட்டணத்தை தனது
விருப்பத்தின்படியே அரணித்த பின்பு, அவன் தன்
கைதிகள் உதாரத்துவஸ்தலத்திற்கு கொண்டு
செல்லப்படும்படியாகக் கட்டளையிட்டான்; அவன்
அந்தப் பட்டணத்தையும் மிகவும் பெலமுள்ள
படையினால் காத்துவந்தான்.

And it came to pass that when he had fortified the city Gid, according to his desires, he caused that his prisoners should be taken to the city Bountiful; and he also guarded that city with an exceedingly strong force.

27 அந்தப்படியே, அவர்கள் லாமானியரின் சகல
வஞ்சகத் திட்டங்களையும் பொருட்படுத்தாமல்,
தாங்கள் பிடித்துச் சென்றிருந்த கைதிகள் யாவ-
ரையும் பாதுகாத்து, தாங்கள் மறுபடியும் பெற்ற
எல்லா நிலங்களையும், அனுகூலத்தையும் காத்து
வந்தார்கள்.

And it came to pass that they did, notwithstanding all the intrigues of the Lamanites, keep and protect all the prisoners whom they had taken, and also maintain all the ground and the advantage which they had retaken.

28 அந்தப்படியே, நேபியர் மறுபடியும் ஜெயமுள்ள-
வர்களாகி, தங்கள் உரிமைகளையும், தங்கள் சி-
லாக்கியங்களையும் மறுபடியும் பெறத் துவங்கி-
னார்கள்.

And it came to pass that the Nephites began again to be victorious, and to reclaim their rights and their privileges.

29 அநேக தடவைகளில் அவர்களை இரவில் சூழ்ந்-
துகொள்ளும்படி லாமானியர் முயற்சித்தார்கள்.
ஆனால் இந்த முயற்சிகளில் அவர்கள் அநேக கை-
திகளை இழந்தார்கள்.

Many times did the Lamanites attempt to encircle them about by night, but in these attempts they did lose many prisoners.

30 விஷத்தினாலோ அல்லது குடிவெறியினாலோ
நேபியரை அழித்துப் போடும்படியாக, அநேக தட-
வைகளில் தங்களின் திராட்சை ரசத்தை அவர்க-
ளுக்குக் கொடுக்க முயற்சித்தார்கள்.

And many times did they attempt to administer of their wine to the Nephites, that they might destroy them with poison or with drunkenness.

31 ஆனால் இதோ, நேபியர் தங்களின் இந்த உபத்தி-
ரவ காலத்திலே, தங்கள் தேவனாகிய கர்த்தரை நி-
னைவுகூருவதில் தாமதமாயிருக்கவில்லை. அவர்-
களின் கண்ணியினால் அவர்கள் பிடிக்கப்பட மு-
டியவில்லை; ஆம், முதலில் அவர்களின் திராட்சை
ரசத்தை லாமானிய கைதிகளில் சிலருக்கு கொடுக்-
காமல், பருகுவதில்லை.

But behold, the Nephites were not slow to remember the Lord their God in this their time of affliction. They could not be taken in their snares; yea, they would not partake of their wine, save they had first given to some of the Lamanite prisoners.

32 இப்படியாக அவர்கள் தங்களுக்கு விஷமொன்-
றும் கொடுக்கப்படாதபடி ஜாக்கிரதையாய் இருந்-
தார்கள்; ஏனெனில் அவர்களது திராட்சை ரசம்
ஒரு லாமானியனுக்கு விஷம் கொடுக்குமானால்
அது ஒரு நேபியனுக்கும் விஷம் கொடுக்கும். இப்ப-
டியாக அவர்கள் அவர்களது எல்லா மதுபானத்-
தையும் பரிசோதித்தார்கள்.

And they were thus cautious that no poison should be administered among them; for if their wine would poison a Lamanite it would also poison a Nephite; and thus they did try all their liquors.

33 இப்பொழுதும், அந்தப்படியே, மோரியாந்தன் பட்-
டணத்தைத் தாக்க, மரோனி ஆயத்தங்கள் செய்வது
அவசியமாயிற்று; ஏனெனில், இதோ, மோரியாந்தன்
பட்டணம் மிகவும் பெலனுள்ளதாகும்படிக்கு, லா-
மானியர் தங்கள் பிரயாசங்களினால் அரண்களை
எழுப்பியிருந்தார்கள்.

And now it came to pass that it was expedient for Moroni to make preparations to attack the city Morianton; for behold, the Lamanites had, by their labors, fortified the city Morianton until it had become an exceeding stronghold.

34 அவர்கள் அப்பட்டணத்தினுள் தொடர்ந்து புதிய
படைகளையும், புதிய உணவுப் பொருட்களையும்
கொண்டு வந்தார்கள்.

And they were continually bringing new forces into that city, and also new supplies of provisions.

35 இப்படியாக நேபியின் ஜனத்தின்மேல், நியாயாதி-
பதிகளின் இருபத்தொன்பதாம் வருஷ ஆளுகை
முடிவுற்றது.

And thus ended the twenty and ninth year of the reign of the judges over the people of Nephi.

# ஆல்மா 56

1 இப்பொழுதும், அந்தப்படியே, நியாயாதிபதிகளின்
ஆளுகையின் முப்பதாவது வருஷத்தின் துவக்க-
மாகிய முதல் மாதத்தின் இரண்டாம் நாளில், மரோ-
னி அப்பகுதியிலிருக்கும் ஜனங்களின் வர்த்தமா-
னங்களைக் குறித்து ஏலமனால் எழுதப்பட்ட ஒரு
நிருபத்தைப் பெற்றான்.

2 அவன் எழுதின வார்த்தைகளாவன: கர்த்தருக்-
குள்ளும், எங்களுடைய யுத்தத்தின் உபத்திரவத்தி-
னுள்ளும் எனக்கு மிகவும் பிரியமான சகோதரனாக
இருக்கும் மரோனியே, இதோ, என் அன்பான சகோ-
தரனே, தேசத்தின் இப்பகுதியிலுள்ள நம்முடைய
யுத்த நடவடிக்கையைக் குறித்து உன்னிடம்
சொல்ல சில உள்ளன.

3 இதோ, நேபியின் தேசத்திலிருந்து அம்மோன் கூட்-
டிவந்த அந்த மனுஷருடைய ஈராயிரம் குமாரர்கள்,
நீங்கள் அறிந்திருக்கிறபடி நம்முடைய தகப்பனா-
கிய லேகியின், மூத்த குமாரனாகிய லாமானின் சந்-
ததியே.

4 இப்பொழுது நான் அவர்களின் பாரம்பரியங்க-
ளைப் பற்றியோ அல்லது அவர்களின் அவிசுவா-
சத்தைப் பற்றியோ, உனக்கு மறுபடியும் சொல்ல
அவசியமில்லை. ஏனெனில் நீ இக்காரியங்கள்
அனைத்தையும் குறித்து அறிந்திருக்கிறாய்.

5 ஆதலால், இந்த ஈராயிரம் வாலிபர் தங்களின் யுத்-
தக் கருவிகளை எடுத்தார்களென்றும், நான், அவர்-
களின் தலைவனாய் இருக்க விரும்பினார்களென்-
றும், நம்முடைய தேசத்தைத் தற்காக்கப் புறப்பட்டு
வந்திருக்கிறோம் என்றும், உனக்குச் சொல்வது
எனக்குப் போதுமானதாயிருக்கிறது.

6 இப்பொழுது, இரத்தம் சிந்தும்படியாக, தங்கள்
சகோதரருக்கு விரோதமாய், தங்களின் யுத்தக் கரு-
விகளை எடுக்க மாட்டோமென்று, அவர்களின்
தகப்பன்மார்கள் செய்துகொண்ட உடன்படிக்கை-
யைக் குறித்தும், நீ அறிந்திருக்கிறாய்.

7 ஆனால் இருபத்தி ஆறாம் வருஷத்தில் அவர்க-
ளுக்காக நாங்கள் பட்ட உபத்திரவங்களையும் கஷ்-
டங்களையும் அவர்கள் கண்டபோது, அவர்கள்
தாங்கள் எடுத்துக்கொண்ட உடன்படிக்கையை மு-
றித்துப்போட்டு, எங்களைக் காப்பதற்காக தங்களு-
டைய யுத்த ஆயுதங்களை எடுக்க இருந்தார்கள்.

8 ஆனால் அவர்கள் எடுத்துக்கொண்ட ஆணை-
யை நிறைவேற்றுதலினிமித்தம், நாங்கள் அதிக-
மாய்த் துன்பப்படாத அளவிற்கு, தேவன் எங்களை
பெலப்படுத்துவார் என்று நான் எண்ணி, அவர்கள்
செய்த இந்த உடன்படிக்கையை முறித்துப்போட
அவர்களை அனுமதிக்கமாட்டேன்.

# Alma 56

And now it came to pass in the commencement of the thirtieth year of the reign of the judges, on the second day in the first month, Moroni received an epistle from Helaman, stating the affairs of the people in that quarter of the land.

And these are the words which he wrote, saying: My dearly beloved brother, Moroni, as well in the Lord as in the tribulations of our warfare; behold, my beloved brother, I have somewhat to tell you concerning our warfare in this part of the land.

Behold, two thousand of the sons of those men whom Ammon brought down out of the land of Nephi—now ye have known that these were descendants of Laman, who was the eldest son of our father Lehi;

Now I need not rehearse unto you concerning their traditions or their unbelief, for thou knowest concerning all these things—

Therefore it sufficeth me that I tell you that two thousand of these young men have taken their weapons of war, and would that I should be their leader; and we have come forth to defend our country.

And now ye also know concerning the covenant which their fathers made, that they would not take up their weapons of war against their brethren to shed blood.

But in the twenty and sixth year, when they saw our afflictions and our tribulations for them, they were about to break the covenant which they had made and take up their weapons of war in our defence.

But I would not suffer them that they should break this covenant which they had made, supposing that God would strengthen us, insomuch that we should not suffer more because of the fulfilling the oath which they had taken.

9 ஆனால் இதோ, நாம் மிகவும் சந்தோஷப்படும்படி-
யான ஓர் காரியம். ஏனெனில் இதோ, இருபத்தி
ஆறாம் வருஷத்திலே, ஏலமனாகிய நான் இந்த ஈரா-
யிரம் வாலிபருக்குத் தலைமை தாங்கி, அவர்களை
யூதேயா பட்டணத்திற்கு அணிவகுத்து, அப்பகுதி-
யில் இருந்த ஜனங்களுக்கு தலைவனாக, நீ நியமித்-
திருந்த அந்திபஸ்ஸூக்கு உதவிபுரியும்படியாகக்
கூட்டிவந்தேன்.

But behold, here is one thing in which we may have great joy. For behold, in the twenty and sixth year, I, Helaman, did march at the head of these two thousand young men to the city of Judea, to assist Antipus, whom ye had appointed a leader over the people of that part of the land.

10 நான் என் ஈராயிரம் குமாரர்களை (ஏனெனில்
அவர்கள் குமாரர்கள் என்று அழைக்கப்பட பாத்தி-
ரவான்களாயிருக்கிறார்கள்) அந்திபஸ்ஸின் சே-
னையோடே சேர்த்தேன். அந்த பெலத்தினிமித்தம்
அந்திபஸ் மிகவும் களிகூர்ந்தான்; ஏனெனில்
இதோ, லாமானியர்களின் சேனைகள், நம்முடைய
மனுஷரில் அநேகரை வெட்டிப்போட்டதினிமித்தம்,
அவர்களால் அவனுடைய சேனை குறைந்து போ-
யிற்று. இதினிமித்தம் நாம் துக்கிக்க வேண்டும்.

And I did join my two thousand sons, (for they are worthy to be called sons) to the army of Antipus, in which strength Antipus did rejoice exceedingly; for behold, his army had been reduced by the Lamanites because their forces had slain a vast number of our men, for which cause we have to mourn.

11 இருப்பினும், அவர்கள் தங்கள் தேசத்திற்காகவும்,
தங்கள் தேவனுக்காகவும் மரித்தார்கள், ஆம், அவர்-
கள் மகிழ்ச்சியாயிருக்கிறார்கள், என்றும் நினைத்-
து நாம் நம்மையே தேற்றிக்கொள்ளலாம்.

Nevertheless, we may console ourselves in this point, that they have died in the cause of their country and of their God, yea, and they are happy.

12 லாமானியரும் அநேகக் கைதிகளைத் தங்களிட-
மே வைத்துக் கொண்டார்கள். அவர்களில் யாவ-
ரும் பிரதான சேர்வைக்காரர்களே. ஏனெனில் மற்-
றொருவரையும் அவர்கள் உயிரோடு விட்டதில்-
லை. அவர்கள் கொல்லப்படாதிருந்தால், இச்சம-
யத்தில் நேபியின் தேசத்தில் இருப்பார்களென்று
எண்ணுகிறோம்.

And the Lamanites had also retained many prisoners, all of whom are chief captains, for none other have they spared alive. And we suppose that they are now at this time in the land of Nephi; it is so if they are not slain.

13 நம்முடைய வலிமைமிக்க மனுஷர் அநேகரின்
இரத்தத்தைச் சிந்தி, லாமானியர் கைப்பற்றியுள்ள
பட்டணங்கள் இவைகளே:

And now these are the cities of which the Lamanites have obtained possession by the shedding of the blood of so many of our valiant men:

14 மேன்தி தேசம், அல்லது மேன்தி பட்டணம். சீஸ்ரம்
பட்டணம், குமேனி பட்டணம், மற்றும் அந்திப்பரா
பட்டணம்.

The land of Manti, or the city of Manti, and the city of Zeezrom, and the city of Cumeni, and the city of Antiparah.

15 நான் யூதேயா பட்டணத்தை அடைந்தபோது
அவர்கள் வைத்திருந்த பட்டணங்கள் இவைகளே;
அந்திபஸ்ஸும் அவன் மனுஷரும் பட்டணத்தை
அரணித்துக் காக்க, தங்கள் பெலத்தோடு கடின-
மாக உழைப்பதைக் கண்டேன்.

And these are the cities which they possessed when I arrived at the city of Judea; and I found Antipus and his men toiling with their might to fortify the city.

16 ஆம், அவர்கள் தங்கள் பட்டணங்களைப் பாது-
காக்க பகலிலே பராக்கிரமமாய் யுத்தம் பண்ணி,
இரவிலே கடினமாய் உழைத்ததினாலே அவர்கள்
சரீரத்திலும் ஆவியிலும் சோர்ந்து போனார்கள்.
இவ்விதமாய் அவர்கள் சகல விதமான, மகா உபத்-
திரவங்களையும் அனுபவித்தார்கள்.

Yea, and they were depressed in body as well as in spirit, for they had fought valiantly by day and toiled by night to maintain their cities; and thus they had suffered great afflictions of every kind.

17 இப்பொழுது அவர்கள் அவ்விடத்திலே ஜெயம் கொள்வது, இல்லாவிடில் மடிந்து போவது, என்று தீர்மானித்திருந்தார்கள்; ஆதலால் என்னோடு நான் அழைத்து வந்த இந்தச் சிறு சேனை, ஆம், என்னுடைய அந்த குமாரர்கள், அவர்களுக்கு மி-குந்த நம்பிக்கையையும், அதிக சந்தோஷத்தையும் கொடுத்தார்கள், என்று நீ உறுதியாய் எண்ணிக் கொள்ளலாம்.

And now they were determined to conquer in this place or die; therefore you may well suppose that this little force which I brought with me, yea, those sons of mine, gave them great hopes and much joy.

18 இப்பொழுதும், அந்தப்படியே, அந்திபஸ் தன் சே-னைக்கு அதிக பெலத்தைப் பெற்றான், என்று லா-மானியர் கண்டபோது, அவர்கள் யூதேயா பட்ட-ணத்திற்கு விரோதமாகவோ, அல்லது எங்களுக்கு விரோதமாகவோ, யுத்தம் பண்ணப் போகக்கூடா-தென்ற அம்மோரோனின் கட்டளைகளால் கட்டா-யப்படுத்தப்பட்டிருந்தார்கள்.

And now it came to pass that when the Lamanites saw that Antipus had received a greater strength to his army, they were compelled by the orders of Ammoron to not come against the city of Judea, or against us, to battle.

19 இப்படியாக நாங்கள் கர்த்தரால் அனுக்கிரகம் பண்ணப்பட்டிருந்தோம். ஏனெனில் நாங்கள் பெ-லவீனராயிருந்தபோது, அவர்கள் எங்கள் மேல் வந்திருந்தார்களெனில், எங்களுடைய சிறு சே-னையை அழித்துப் போட்டிருக்கக்கூடும்; ஆனா-லும் இப்படியாக நாங்கள் காக்கப்பட்டோம்.

And thus were we favored of the Lord; for had they come upon us in this our weakness they might have perhaps destroyed our little army; but thus were we preserved.

20 அவர்கள் தாங்கள் கைப்பற்றியிருந்த பட்டணங்-களைத் தற்காத்துக் கொள்ள வேண்டுமென்று, அம்மோரோனால் கட்டளையிடப்பட்டிருந்தார்கள். இப்படியாக இருபத்தி ஆறாம் வருஷமும் முடிவுற்ற-து. இருபத்தி ஏழாம் வருஷத் துவக்கத்திலே, நாங்-கள் எங்கள் பட்டணத்தையும், எங்களையும் தற்-காத்துக்கொள்ள ஆயத்தப்பட்டிருந்தோம்.

They were commanded by Ammoron to maintain those cities which they had taken. And thus ended the twenty and sixth year. And in the commencement of the twenty and seventh year we had prepared our city and ourselves for defence.

21 இப்பொழுது லாமானியர் எங்கள்மேல் வரவேண்-டுமென்று, நாங்கள் வாஞ்சித்தோம். ஏனெனில் நாங்கள் அவர்களுடைய கொத்தளங்களில், அவர்-கள் மீது தாக்குதல் நடத்த விரும்பவில்லை.

Now we were desirous that the Lamanites should come upon us; for we were not desirous to make an attack upon them in their strongholds.

22 அந்தப்படியே, இரவிலாகிலும், பகலிலாகிலும் லாமானியர் எங்களைக் கடந்து போய் வடக்கிலி-ருந்த, எங்களின் மற்ற பட்டணங்களைத் தாக்கக் கூடாதபடிக்கு, அவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்க சுற்றிலும் வேவுகாரரை நிறுத்தி-னோம்.

And it came to pass that we kept spies out round about, to watch the movements of the Lamanites, that they might not pass us by night nor by day to make an attack upon our other cities which were on the northward.

23 ஏனெனில் அப்பட்டணங்களிலிருந்தவர்கள், அவர்களைச் சந்திக்க போதுமான பெலன் இல்லா-மலிருந்தார்கள், என்று நாங்கள் அறிந்தோம். ஆத-லால் அவர்கள் எங்களைக் கடந்து போனால், நாங்-கள் அவர்களைப் பின்னால் தாக்கவும், அந்தப்படி-யே அவர்களைப் பின்னால் கொண்டுவந்து அதே சமயத்தில் அவர்களை முன்னால் சந்திக்கவும் வாஞ்சையாயிருந்தோம். நாங்கள் அவர்களை மேற்கொள்ளலாம் என்று எண்ணினோம்; ஆனால் இதோ, எங்களது இந்த விருப்பத்தில் நாங்கள் ஏமாற்றமடைந்தோம்.

For we knew in those cities they were not sufficiently strong to meet them; therefore we were desirous, if they should pass by us, to fall upon them in their rear, and thus bring them up in the rear at the same time they were met in the front. We supposed that we could overpower them; but behold, we were disappointed in this our desire.

24 அவர்கள் போதுமான பெலனற்று விழுந்து விடா-
தபடி, தங்களது முழு சேனையோடு கூடவோ, அல்-
லது ஒரு பகுதி சேனையோடு கூடவோ, எங்களைக்
கடந்து செல்ல அவர்கள் துணியவில்லை.

They durst not pass by us with their whole army, neither durst they with a part, lest they should not be sufficiently strong and they should fall.

25 அவர்கள் சாரகெம்லா பட்டணத்திற்கு அணிவ-
குத்துச் செல்லவும் துணியவில்லை; நேபிகா பட்ட-
ணத்திற்குச் செல்லும்படி, சீதோன் ஆற்றுமுகப்-
பைக் கடக்கவும் அவர்கள் துணியவில்லை.

Neither durst they march down against the city of Zarahemla; neither durst they cross the head of Sidon, over to the city of Nephihah.

26 அந்தப்படியே, அவர்கள் தாங்கள் கைப்பற்றின
பட்டணங்களைத் தங்கள் சேனைகளைக் கொண்-
டு பாதுகாப்பதில் தீர்மானமாயிருந்தார்கள்.

And thus, with their forces, they were determined to maintain those cities which they had taken.

27 இப்பொழுதும், அந்தப்படியே, இவ்வருஷத்தின்
இரண்டாம் மாதத்தில், அந்த என் ஈராயிரம் குமாரர்-
களுடைய தகப்பன்மார்களிடமிருந்து அநேக
உணவுப்பொருட்கள் எங்களுக்குக் கொண்டுவரப்-
பட்டது.

And now it came to pass in the second month of this year, there was brought unto us many provisions from the fathers of those my two thousand sons.

28 சாரகெம்லா தேசத்திலிருந்து எங்களுக்கு ஈராயி-
ரம் மனுஷரும் அனுப்பப்பட்டிருந்தார்கள். இப்படி-
யாக நாங்கள் பதினாயிரம் மனுஷருடனும், அவர்-
களுக்கும், அவர்கள் மனைவிகளுக்கும், அவர்கள்
பிள்ளைகளுக்குமான ஆகாரத்துடனும் ஆயத்த-
மாயிருந்தோம்.

And also there were sent two thousand men unto us from the land of Zarahemla. And thus we were prepared with ten thousand men, and provisions for them, and also for their wives and their children.

29 லாமானியர் எங்கள் சேனைகள் அனுதினமும்
அதிகரிப்பதையும், எங்களை ஆதரிக்க உணவு
வந்து சேருவதையும் கண்டு, பயந்துபோய் எங்க-
ளுக்கு வருகிற உணவையும், பெலத்தையும் தடுத்-
து நிறுத்தும்படியாக அதிவேகமாகப் போகத் தொ-
டங்கினார்கள்.

And the Lamanites, thus seeing our forces increase daily, and provisions arrive for our support, they began to be fearful, and began to sally forth, if it were possible to put an end to our receiving provisions and strength.

30 இப்பொழுது லாமானியர் இதைப்பற்றி சஞ்சலப்-
படத் துவங்குவதை நாங்கள் கண்டபோது, அவர்க-
ளுக்கு பாதிப்பு ஏற்படுத்த, ஒரு உபாயம் பண்ண
வாஞ்சித்தோம்; ஆதலால் நான் என் சிறு குமாரரோ-
டு ஓர் அருகாமையிலிருக்கும் பட்டணத்திற்கு,
உணவுப் பொருட்களைக் கொண்டு போவதைப்-
போல, அணிவகுத்துப் போகவேண்டுமென்று அந்-
திபஸ் கட்டளையிட்டான்.

Now when we saw that the Lamanites began to grow uneasy on this wise, we were desirous to bring a stratagem into effect upon them; therefore Antipus ordered that I should march forth with my little sons to a neighboring city, as if we were carrying provisions to a neighboring city.

31 நாங்கள் கடற்கரையோரங்களில் அமைந்த பட்ட-
ணத்திற்குப் போவதைப்போல, அந்திப்பரா பட்ட-
ணத்திற்கு அருகாமையில் அணிவகுத்துச் செல்ல-
வேண்டும்.

And we were to march near the city of Antiparah, as if we were going to the city beyond, in the borders by the seashore.

32 அந்தப்படியே, நாங்கள் எங்களுடைய உணவுக-
ளோடு அந்தப் பட்டணத்திற்குப் போவதைப்போல
அணிவகுத்துப் போனோம்.

And it came to pass that we did march forth, as if with our provisions, to go to that city.

33 அந்தப்படியே, அந்திபஸ் தன் சேனையில் ஒரு
பகுதியைக் கூட்டிக்கொண்டு, மீதியானோரை பட்-
டணத்தைக் காக்க விட்டுச் சென்றான். ஆனால்
நான் என் சிறிய சேனையோடு சென்று, அந்திப்பரா
பட்டணத்திற்கு அருகே வரும்வரைக்கும், அவன் பு-
றப்படாமலிருந்தான்.

And it came to pass that Antipus did march forth with a part of his army, leaving the remainder to maintain the city. But he did not march forth until I had gone forth with my little army, and came near the city Antiparah.

34 இப்பொழுது, அந்திப்பரா பட்டணத்திலே லாமானியரின் வலிமைமிக்க சேனை நிறுத்தப்பட்டிருந்தது; ஆம், மிகவும் எண்ணிறைந்தோர் இருந்தார்கள்.

And now, in the city Antiparah were stationed the strongest army of the Lamanites; yea, the most numerous.

35 அந்தப்படியே, தங்கள் வேவுகாரரால் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவர்கள் தங்கள் சேனையோடு எங்களுக்கு விரோதமாய் வந்தார்கள்.

And it came to pass that when they had been informed by their spies, they came forth with their army and marched against us.

36 அந்தப்படியே, நாங்கள் அவர்களுக்கு முன்னே வடக்குநோக்கி பறந்தோடினோம். இப்படியாக நாங்கள் லாமானியரின் மிகுந்த வலிமையான சேனையை புறம்பே நடத்திப் போனோம்.

And it came to pass that we did flee before them, northward. And thus we did lead away the most powerful army of the Lamanites;

37 ஆம், வெகு தொலைவில், அவர்கள் தங்களை அந்திபஸ்ஸின் சேனை, தங்கள் ஊக்கத்தோடு பின் தொடர்வதைக் கண்டு, வலதோ அல்லது இடதோ, திரும்பாமல் எங்களுக்குப் பின்னாக நேர்மார்க்கமாய்த் பின்தொடர்ந்தார்கள்; நாங்கள் எண்ணுகிறபடி, எங்கள் ஜனங்களால் தாங்கள் சூழப்படுவதைத் தவிர்க்க, அந்திபஸ் தங்களை மேற்கொள்ளும் முன்பே, எங்களை வெட்டிப் போடவேண்டுமென்பது அவர்களின் நோக்கமாயிருந்தது.

Yea, even to a considerable distance, insomuch that when they saw the army of Antipus pursuing them, with their might, they did not turn to the right nor to the left, but pursued their march in a straight course after us; and, as we suppose, it was their intent to slay us before Antipus should overtake them, and this that they might not be surrounded by our people.

38 இப்பொழுது அந்திபஸ் எங்களுடைய அபாயத்தைக் கண்டவனாய், தன் சேனையின் வேகத்தைத் துரிதப்படுத்தினான். ஆனால் இதோ, அது இரவாயிருந்தபடியினாலே, அவர்கள் எங்களை நெருங்கவில்லை; அந்திபஸ்ஸும் எங்களை நெருங்கவில்லை; ஆதலால் இரவிற்காக நாங்கள் பாளயமிறங்கினோம்.

And now Antipus, beholding our danger, did speed the march of his army. But behold, it was night; therefore they did not overtake us, neither did Antipus overtake them; therefore we did camp for the night.

39 அந்தப்படியே, இதோ, காலை விடியுமுன்னே, லாமானியர் எங்களைப் பின்தொடர்ந்தார்கள். நாங்கள் அவர்களோடு போராடப் போதுமான பெலன் பெற்றிருக்கவில்லை. ஆம், என் சிறு குமாரர்கள் அவர்களுடைய கைகளுக்குள் விழ நான் விடவில்லை; ஆதலால் எங்கள் அணிவகுப்பை நாங்கள் தொடர்ந்து, வனாந்தரத்தினுள் அணிவகுத்துப் போனோம்.

And it came to pass that before the dawn of the morning, behold, the Lamanites were pursuing us. Now we were not sufficiently strong to contend with them; yea, I would not suffer that my little sons should fall into their hands; therefore we did continue our march, and we took our march into the wilderness.

40 இப்பொழுது அவர்கள் தாங்கள் சூழப்பட்டுவிடுவோமோ என்று பயந்து, வலதுபுறமோ அல்லது இடதுபுறமோ திரும்பத் துணியவில்லை. அவர்கள் என்னை மேற்கொண்டு, நாங்கள் அவர்களுக்கு எதிராய் நிற்க முடியாமல் கொல்லப்பட்டுப்போகாதபடியும், அவர்கள் தப்புவித்துப்போய் விடாதபடியும், நானும் வலதுபுறமோ இடதுபுறமோ திரும்பவில்லை. இப்படியாக அத்தினம் முழுவதுமாக இருள் சூழும் வரைக்குமாய் வனாந்தரத்தினுள் பறந்தோடினோம்.

Now they durst not turn to the right nor to the left lest they should be surrounded; neither would I turn to the right nor to the left lest they should overtake me, and we could not stand against them, but be slain, and they would make their escape; and thus we did flee all that day into the wilderness, even until it was dark.

41 அந்தப்படியே, விடியற்கால வெளிச்சம் உதித்தபோது லாமானியர் மறுபடியும் எங்களைக் கிட்டிச் சேருவதைக் கண்டு, அவர்களுக்கு முன்பாகப் பறந்தோடினோம்.

And it came to pass that again, when the light of the morning came we saw the Lamanites upon us, and we did flee before them.

42 ஆனால், அந்தப்படியே, எங்களை வெகுதூரம் தொடராமல் நின்றார்கள்; அது ஏழாவது மாதத்தின் மூன்றாம் நாளின் காலையாயிருந்தது.

But it came to pass that they did not pursue us far before they halted; and it was in the morning of the third day of the seventh month.

43 இப்பொழுது அவர்கள் அந்திபஸ்ஸினால் மேற்கொள்ளப்பட்டார்களா என்பது, எங்களுக்குத் தெரியாது. ஆனால் நான் என் மனுஷரை நோக்கி: இதோ, அவர்கள் நம்மை அவர்களுடைய கண்ணியிலே பிடிக்கும்படி, நாம் அவர்களுக்கு விரோதமாய் வரவேண்டும் என்ற நோக்கத்திற்காக அவர்கள் நின்றிருக்கிறார்கள், என்பதேயன்றி வேறொன்றும் நாம் அறியோம்.

And now, whether they were overtaken by Antipus we knew not, but I said unto my men: Behold, we know not but they have halted for the purpose that we should come against them, that they might catch us in their snare;

44 ஆதலால் என் குமாரரே, நீங்கள் அவர்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்கு போவீர்களா, என்ன சொல்லுகிறீர்கள்? என்றேன்.

Therefore what say ye, my sons, will ye go against them to battle?

45 என் பிரியமான சகோதரனாகிய மரோனியே, இப்பொழுதும் நான் உனக்குச் சொல்லுகிறேன், ஒருபோதும், சகல நேபியருக்குள்ளும் இப்படிப்பட்ட மன உறுதியை நான் கண்டதில்லை.

And now I say unto you, my beloved brother Moroni, that never had I seen so great courage, nay, not amongst all the Nephites.

46 ஏனெனில் நான் என்றுமே அவர்களை என் குமாரர்கள் என்று அழைத்தபடியால் (ஏனெனில் அவர்கள் அனைவரும் இளைஞர்களே) அவர்களும் என்னிடம்: தகப்பனே, இதோ, நம்முடைய தேவன் நம்மோடுகூட இருக்கிறார். நாம் விழுந்துபோக அவர் அனுமதியார்; ஆதலால் நாம் போவோம், அவர்கள் நம்மை ஒன்றும் செய்யாமல் விடுவார்களெனில், நம் சகோதரரை நாம் கொல்லமாட்டோம்; ஆதலால் அவர்கள் அந்திபஸ்ஸின் சேனையை மேற்கொள்ளாதபடி, நாம் போவோம், என்றார்கள்.

For as I had ever called them my sons (for they were all of them very young) even so they said unto me: Father, behold our God is with us, and he will not suffer that we should fall; then let us go forth; we would not slay our brethren if they would let us alone; therefore let us go, lest they should overpower the army of Antipus.

47 இப்பொழுதும் அவர்கள் என்றுமே யுத்தம் பண்ணினதில்லை. இருப்பினும் அவர்கள் மரணத்தைக் குறித்துப் பயப்படவில்லை. அவர்கள் தங்கள் ஜீவனைக் குறித்து நினைப்பதைக் காட்டிலும் தங்கள் தகப்பன்மார்களின் சுதந்திரத்தைக் குறித்து அதிகமாய் எண்ணினார்கள்; ஆம், தாங்கள் சந்தேகப்படாமலிருந்தால், தேவன் தங்களை விடுவிப்பார் என்று, அவர்கள் தங்களின் தாய்மாரால் போதிக்கப்பட்டிருந்தார்கள்.

Now they never had fought, yet they did not fear death; and they did think more upon the liberty of their fathers than they did upon their lives; yea, they had been taught by their mothers, that if they did not doubt, God would deliver them.

48 அவர்கள் தங்கள் தாய்மாரின் வார்த்தைகளை என்னிடம் மறுபடியும் சொல்லி, எங்கள் தாய்மார்கள் அதை அறிந்திருந்தார்களா என்று, நாங்கள் சந்தேகிப்பதில்லை, என்றார்கள்.

And they rehearsed unto me the words of their mothers, saying: We do not doubt our mothers knew it.

49 அந்தப்படியே, எங்களைப் பின்தொடர்ந்து வந்த லாமானியருக்கு விரோதமாக நான் என் இரண்டாயிரம் பேரோடு திரும்பிப்போனேன். இப்பொழுதும் இதோ, அந்திபஸ்ஸின் சேனைகள் அவர்களை மேற்கொண்டு, ஒரு பயங்கரமான யுத்தம் தொடங்கியிருந்தது.

And it came to pass that I did return with my two thousand against these Lamanites who had pursued us. And now behold, the armies of Antipus had overtaken them, and a terrible battle had commenced.

50 அந்திபஸ்ஸின் சேனை இந்த மிகக் குறுகிய காலத்தில் தாங்கள் மேற்கொண்ட அந்த வெகுதூர அணிவகுப்பின் நிமித்தம் களைப்படைந்து லாமானியர்களின் கைக்குள் விழவிருந்தார்கள்; நான் என்னுடைய இரண்டாயிரம் பேரோடு திரும்பியிராவிடில், அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேறப்

The army of Antipus being weary, because of their long march in so short a space of time, were about to fall into the hands of the Lamanites; and had I not returned with my two thousand they would have obtained their purpose.

51 ஏனெனில் அந்திபஸ்ஸும் அவனுடைய தலைவர்களில் அநேகரும் தீவிரித்து அணிவகுப்பை நடத்தியதால் களைப்படைந்து, பட்டயத்தினால் வீழ்ந்து போனார்கள். ஆதலால் அந்திபஸ்ஸின் மனுஷர், தங்கள் தலைவர்களின் வீழ்ச்சியினால் குழப்பமடைந்து லாமானியருக்கு முன்பாக வழிவிடத் துவங்கினார்கள்.

For Antipus had fallen by the sword, and many of his leaders, because of their weariness, which was occasioned by the speed of their march—therefore the men of Antipus, being confused because of the fall of their leaders, began to give way before the Lamanites.

52 அந்தப்படியே, லாமானியர் திடன்கொண்டு, அவர்களைப் பின்தொடரத் துவங்கினார்கள். இப்படியாக லாமானியர் அவர்களை அதிக பெலத்தோடே துரத்திக்கொண்டிருக்கும்போது, ஏலமன் அவர்களின் பின்னால் தன்னுடைய இரண்டாயிரம் பேரோடு வந்து, லாமானியரின் முழு சேனையுமே நின்று, ஏலமனின் மீது திரும்புமளவும், அவர்களை வெகுவாய்க் கொன்றுபோடத் துவங்கினான்.

And it came to pass that the Lamanites took courage, and began to pursue them; and thus were the Lamanites pursuing them with great vigor when Helaman came upon their rear with his two thousand, and began to slay them exceedingly, insomuch that the whole army of the Lamanites halted and turned upon Helaman.

53 இப்பொழுது லாமானியர் திரும்பியதை அந்திபஸ்ஸின் ஜனம் கண்டபோது, அவர்கள் தங்கள் மனுஷரைக் கூட்டிக்கொண்டு லாமானியரைப் பின்னே தாக்கினார்கள்.

Now when the people of Antipus saw that the Lamanites had turned them about, they gathered together their men and came again upon the rear of the Lamanites.

54 இப்பொழுதும், அந்தப்படியே, நேபியின் ஜனங்களும், அந்திபஸ்ஸின் ஜனங்களும், என்னுடைய இரண்டாயிரம் பேரோடு நானும் லாமானியரைச் சூழ்ந்துகொண்டு, ஆம், அவர்கள் தங்கள் யுத்தக் கருவிகளையும், யுத்தக் கைதிகளாய் தங்களையும், ஒப்படைக்கும்படி கட்டாயப்படுத்தப்படும் அளவில் அவர்களை வெட்டிப் போட்டோம்.

And now it came to pass that we, the people of Nephi, the people of Antipus, and I with my two thousand, did surround the Lamanites, and did slay them; yea, insomuch that they were compelled to deliver up their weapons of war and also themselves as prisoners of war.

55 இப்பொழுதும், அந்தப்படியே, அவர்கள் எங்களிடம் சரணடைந்தபோது, இதோ, என்னோடு யுத்தம் பண்ணின வாலிபரில் அநேகர் கொல்லப்பட்டிருக்கக்கூடுமோ என்று பயந்து, அவர்களை இலக்கமிட்டேன்.

And now it came to pass that when they had surrendered themselves up unto us, behold, I numbered those young men who had fought with me, fearing lest there were many of them slain.

56 ஆனால் இதோ, நான் மிகுந்த சந்தோஷமடையும்படிக்கு, அவர்களில் ஒரு ஆத்துமாவாகிலும் பூமியில் விழுந்து போகவில்லை; ஆம், அவர்கள் தேவபலத்தோடுகூட யுத்தம் பண்ணுவதுபோல யுத்தம் பண்ணினார்கள். ஆம், மனுஷர் ஒருபோதும் அப்படிப்பட்ட அற்புதமான பெலத்தோடு யுத்தம் பண்ணினதாக அறியப்படவில்லை; அப்படிப்பட்ட பலத்த வல்லமையோடு அவர்கள் லாமானியர்கள்மேல் விழுந்து, அதனால் அவர்களைப் பயப்படுத்தினார்கள்; இதினிமித்தமாகவே லாமானியர் யுத்தக் கைதிகளாகத் தங்களையே ஒப்புக்கொடுத்தார்கள்.

But behold, to my great joy, there had not one soul of them fallen to the earth; yea, and they had fought as if with the strength of God; yea, never were men known to have fought with such miraculous strength; and with such mighty power did they fall upon the Lamanites, that they did frighten them; and for this cause did the Lamanites deliver themselves up as prisoners of war.

57 எங்களுடைய கைதிகளை லாமானிய சேனைகளிடமிருந்து விலக்கி, அவர்களுக்கு காவல் காப்பதற்கு எந்த இடமும் எங்களுக்கு இல்லாதபடியினால், அவர்களை அந்திபஸ்ஸினால் கொல்லப்படாத மனுஷர் சிலருடன் சாரகெம்லா தேசத்திற்கு அனுப்பினோம். மீதியானோரை நான் கூட்டிக்கொண்டு, அவர்களை என் இள அம்மோனியருடன் சேர்த்து யூதேயா பட்டணத்திற்குத் திரும்பவும் அணிவகுத்துப் போனோம்.

And as we had no place for our prisoners, that we could guard them to keep them from the armies of the Lamanites, therefore we sent them to the land of Zarahemla, and a part of those men who were not slain of Antipus, with them; and the remainder I took and joined them to my stripling Ammonites, and took our march back to the city of Judea.

# ஆல்மா 57

1 இப்பொழுதும், அந்தப்படியே, நாங்கள் பிடித்து
வைத்திருக்கிற யுத்தக் கைதிகளை நான் விடுவித்-
தால், அவன் அந்திப்பரா பட்டணத்தை எங்களிடம்
ஒப்படைப்பதாக குறிப்பிட்டிருந்த ஒரு நிருபத்தை,
ராஜாவாகிய அம்மோரோனிடத்திலிருந்து நான்
பெற்றேன்.

2 ஆனால் எங்கள் பெலத்தினாலே அந்திப்பரா பட்-
டணத்தைக் கைப்பற்ற, எங்கள் படைகள் போது-
மானதாயிருக்கின்றன என்று நாங்கள் நிச்சயமா-
யிருக்கிறோம் என்றும், அந்தப் பட்டணத்திற்காக
கைதிகளை ஒப்படைத்து நாங்கள் எங்களையே
அஞ்ஞானிகளாய் கருதவேண்டும் என்றும், கைதி-
களை பரிமாற்றத்தில் மாத்திரமே ஒப்படைப்போம்
என்றும், நான் ராஜாவிற்கு ஒரு நிருபத்தை அனுப்-
பினேன்.

3 அம்மோரோன் என் நிருபத்தை நிராகரித்தான்.
ஏனெனில் அவன் கைதிகளை பரிமாற்றம் செய்ய
விரும்பவில்லை. ஆதலால் நாங்கள் அந்திப்பரா
பட்டணத்திற்கு எதிராகப் போக ஆயத்தங்களைத்
துவக்கினோம்.

4 ஆனால் அந்திப்பரா ஜனங்களோ பட்டணத்தை
விட்டுவிட்டு, தாங்கள் கைப்பற்றியிருந்த தங்க-
ளின் வசமிருந்த மற்ற பட்டணங்களில் அரண்க-
ளை எழுப்பப் போனார்கள்; இப்படியாக அந்திப்ப-
ரா பட்டணம் எங்களுடைய கைகளுக்குள் விழுந்-
தது.

5 இப்படியாக நியாயாதிபதிகளின் ஆளுகையின்
இருபத்தி எட்டாம் வருஷமும் நிறைவுற்றது.

6 அந்தப்படியே, இருபத்தி ஒன்பதாம் வருஷத் து-
வக்கத்திலே நாங்கள் உணவுப் பொருட்களைப்
பெற்றோம், என்னுடைய சிறு பட்டாளத்திலிருந்த
இரண்டாயிரம் மனுஷராகிய, தங்கள் சகோதரரு-
டன் சேரும்படி வந்த அம்மோனியரின் அறுபது கு-
மாரர்களைத் தவிர, சாரகெம்லா தேசத்திலிருந்தும்,
சுற்றுப்புற தேசத்திலிருந்தும், ஆறாயிரம் எண்-
ணிக்கை கொண்ட மனுஷரும் எங்களுடைய சே-
னையில் சேர்க்கப்பட்டார்கள். இப்பொழுதும்
இதோ, நாங்கள் பெலமுள்ளவர்களாயிருந்தோம்.
ஆம், அதிக உணவுப் பொருட்களும் எங்களுக்குக்
கொண்டுவரப்பட்டது.

7 அந்தப்படியே, குமேனி பட்டணத்தைக் காக்கும்ப-
டி நிறுத்தப்பட்டிருந்த சேனையோடு யுத்தம்பண்ண
வேண்டுமென்பது எங்களுடைய ஆவலாயிருந்த-
து.

# Alma 57

And now it came to pass that I received an epistle from Ammoron, the king, stating that if I would deliver up those prisoners of war whom we had taken that he would deliver up the city of Antiparah unto us.

But I sent an epistle unto the king, that we were sure our forces were sufficient to take the city of Antiparah by our force; and by delivering up the prisoners for that city we should suppose ourselves unwise, and that we would only deliver up our prisoners on exchange.

And Ammoron refused mine epistle, for he would not exchange prisoners; therefore we began to make preparations to go against the city of Antiparah.

But the people of Antiparah did leave the city, and fled to their other cities, which they had possession of, to fortify them; and thus the city of Antiparah fell into our hands.

And thus ended the twenty and eighth year of the reign of the judges.

And it came to pass that in the commencement of the twenty and ninth year, we received a supply of provisions, and also an addition to our army, from the land of Zarahemla, and from the land round about, to the number of six thousand men, besides sixty of the sons of the Ammonites who had come to join their brethren, my little band of two thousand. And now behold, we were strong, yea, and we had also plenty of provisions brought unto us.

And it came to pass that it was our desire to wage a battle with the army which was placed to protect the city Cumeni.

8 இப்பொழுதும் இதோ, நாங்கள் சீக்கிரமே எங்களுடைய வாஞ்சையை நிறைவேற்றினோம் என்று, உனக்குக் காண்பிக்கிறேன்; ஆம், எங்களுடைய பெலமான சேனையைக் கொண்டு, அல்லது எங்களுடைய பெலமான சேனையின் ஒரு பகுதியைக் கொண்டு, அவர்கள் உணவுப் பொருட்களைப் பெறுவதற்கு சற்றுமுன்னே, இரவில் நாங்கள் குமேனி பட்டணத்தை சூழ்ந்துகொண்டோம்.

And now behold, I will show unto you that we soon accomplished our desire; yea, with our strong force, or with a part of our strong force, we did surround, by night, the city Cumeni, a little before they were to receive a supply of provisions.

9 அந்தப்படியே, நாங்கள் பட்டணத்தைச் சுற்றி அநேக இரவுகள் பாளயமிறங்கினோம்; இரவில் லாமானியர் எங்கள் மேல் வந்து எங்களைக் கொன்று போடக்கூடாதென்பதினால், எங்கள் பட்டயங்களோடு உறங்கி, காவல் காத்தோம். அதற்கு அவர்கள் அநேகந் தடவை முயற்சித்தார்கள்; ஆனாலும் அவர்கள் இதை முயற்சித்த எல்லா சமயங்களிலும், அவர்களுடைய இரத்தம் சிந்தப்பட்டது.

And it came to pass that we did camp round about the city for many nights; but we did sleep upon our swords, and keep guards, that the Lamanites could not come upon us by night and slay us, which they attempted many times; but as many times as they attempted this their blood was spilt.

10 நெடு நாட்களுக்குப் பின் அவர்களின் உணவு வந்து சேர்ந்தது. அப்போது அவர்கள் இரவிலே பட்டணத்தில் பிரவேசிக்க இருந்தார்கள். நாங்கள் லாமானியராயிராமல் நேபியர்களாயிருந்தபடியால், நாங்கள் அவர்களையும் அவர்களுடைய ஆகாரத்தையும் கைப்பற்றினோம்.

At length their provisions did arrive, and they were about to enter the city by night. And we, instead of being Lamanites, were Nephites; therefore, we did take them and their provisions.

11 இப்படியாக லாமானியரின் ஆதரவு தடுக்கப்பட்டிருந்தும் அவர்கள் இன்னமும் பட்டணத்தை ஆட்கொண்டிருக்க தீர்மானித்திருந்தார்கள். ஆதலால் நாங்கள் அந்த உணவுப்பொருட்களை எடுத்து அவற்றை யூதேயாவிற்கும், நம்முடைய கைதிகளை சாரகெம்லா தேசத்திற்கும் அனுப்புவது அவசியமாயிற்று.

And notwithstanding the Lamanites being cut off from their support after this manner, they were still determined to maintain the city; therefore it became expedient that we should take those provisions and send them to Judea, and our prisoners to the land of Zarahemla.

12 அந்தப்படியே, சில நாட்களுக்குள்ளாகவே லாமானியர் ஆதரவுக்கான எல்லா நம்பிக்கைகளையும் இழக்கலானார்கள்; ஆதலால் அவர்கள் பட்டணத்தை எங்களின் கைகளில் விட்டுவிட்டார்கள்; இப்படியாக நாங்கள் குமேனி பட்டணத்தை கைப்பற்றுவதிலான எங்களின் திட்டங்களை நிறைவேற்றினோம்.

And it came to pass that not many days had passed away before the Lamanites began to lose all hopes of succor; therefore they yielded up the city unto our hands; and thus we had accomplished our designs in obtaining the city Cumeni.

13 ஆனால், அந்தப்படியே, நாங்கள் திரளானோராயிருந்தும், எங்களுடைய கைதிகள் அநேகராயிருந்ததினிமித்தம், எங்களின் எல்லா சேனைகளையும், அவர்களைக் காவல் காப்பதற்கோ, அல்லது அவர்களைக் கொன்று போடும்படிக்கோ தள்ளப்பட்டோம்.

But it came to pass that our prisoners were so numerous that, notwithstanding the enormity of our numbers, we were obliged to employ all our force to keep them, or to put them to death.

14 இதோ, அவர்கள் யுத்தக் கைதிகளாக சரணடைந்த பின்னர், அவர்களில் அநேகர், பலவந்தமாய் தப்பிக்க முயற்சித்ததாலும், கற்களாலும், தடிகளாலும், தங்கள் கைகளில் கிடைத்த எதைக்கொண்டும் சண்டை போட்டதினாலும், அவர்களில் இரண்டாயிரம் பேருக்கும் அதிகமாய்க் கொன்றுபோட்டோம்.

For behold, they would break out in great numbers, and would fight with stones, and with clubs, or whatsoever thing they could get into their hands, insomuch that we did slay upwards of two thousand of them after they had surrendered themselves prisoners of war.

15 ஆதலால் நாங்கள் அவர்களுடைய வாழ்க்கைக்-
கு ஒரு முடிவுகட்ட வேண்டும், அல்லது சாரகெம்லா
தேசம் வரைக்குமாய் பட்டயத்தைக் கையில் பிடித்-
தவாறு அவர்களைக் காவல் பண்ண வேண்டும்
என்பது அவசியமாயிற்று; லாமானியரிடத்தில்
இருந்து நாங்கள் எடுத்துக் கொண்டிருந்தபோதி-
லும், எங்களுடைய உணவுப் பொருட்கள் எங்கள்
சொந்த ஜனங்களுக்கு மாத்திரம் போதுமானதாயி-
ருந்ததே தவிர அதிகமாயில்லை.

Therefore it became expedient for us, that we should put an end to their lives, or guard them, sword in hand, down to the land of Zarahemla; and also our provisions were not any more than sufficient for our own people, notwithstanding that which we had taken from the Lamanites.

16 இப்பொழுதும், அந்த நிர்ப்பந்தமான சூழ்நிலைக-
ளில், இந்த யுத்தக் கைதிகளைக் குறித்து தீர்மா-
னிக்க வேண்டியது ஓர் மிக முக்கிய காரியமாயிற்று;
ஆயினும் அவர்களை சாரகெம்லா தேசத்திற்கு
அனுப்ப நாங்கள் முடிவெடுத்தோம்; ஆதலால்
நாங்கள் எங்களுடைய மனுஷரில் ஒரு பகுதியைத்
தேர்ந்தெடுத்து, சாரகெம்லா தேசத்திற்குக் கைதிக-
ளைக் கொண்டு போகும்படியான பொறுப்பை
அவர்களுக்கு அளித்தோம்.

And now, in those critical circumstances, it became a very serious matter to determine concerning these prisoners of war; nevertheless, we did resolve to send them down to the land of Zarahemla; therefore we selected a part of our men, and gave them charge over our prisoners to go down to the land of Zarahemla.

17 ஆனால், அந்தப்படியே, மறுநாள் அவர்கள் தி-
ரும்பினார்கள். இப்போதும் இதோ, நாங்கள் அவர்-
களிடத்தில் கைதிகளைக் குறித்து வினவவில்லை;
ஏனெனில் இதோ, லாமானியர் எங்களைத் தாக்கி-
னார்கள். அவர்கள் தக்க காலத்தில், திரும்பி,
அவர்களுடைய கைகளுக்குள் நாங்கள் விழுவதி-
லிருந்து எங்களைக் காப்பாற்றினார்கள். ஏனெ-
னில் இதோ, அம்மோரோன் அவர்களுடைய ஆதர-
வுக்கென்று புதிய உணவுப் பொருட்களையும்
எண்ணிறைந்த மனுஷ சேனையையும் அனுப்பி-
யிருந்தான்.

But it came to pass that on the morrow they did return. And now behold, we did not inquire of them concerning the prisoners; for behold, the Lamanites were upon us, and they returned in season to save us from falling into their hands. For behold, Ammoron had sent to their support a new supply of provisions and also a numerous army of men.

18 அந்தப்படியே, அவர்கள் எங்களை மேற்கொள்ள
இருந்தபோது, நாங்கள் கைதிகளோடு அனுப்பின
அந்த மனுஷர், தக்க காலத்தில் வந்து சேர்ந்து
அவர்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

And it came to pass that those men whom we sent with the prisoners did arrive in season to check them, as they were about to overpower us.

19 ஆனால் இதோ, இரண்டாயிரத்து அறுபது பே-
ரைக்கொண்ட என்னுடைய சிறிய பட்டாளம் மிக
பயங்கரமாக போர் புரிந்தது; ஆம், அவர்கள் லாமா-
னியருக்கு முன்பாக உறுதியாயிருந்து, தங்களை
எதிர்த்த அனைவருக்கும் மரணத்தை அளித்தார்-
கள்.

But behold, my little band of two thousand and sixty fought most desperately; yea, they were firm before the Lamanites, and did administer death unto all those who opposed them.

20 எங்களுடைய சேனையின் மீதியானோர் லாமா-
னியரிடமிருந்து பின்வாங்கவிருந்தபோது, இதோ,
அந்த இரண்டாயிரத்து அறுபது பேரும் உறுதியா-
யும் அஞ்சாதவர்களுமாயிருந்தார்கள்.

And as the remainder of our army were about to give way before the Lamanites, behold, those two thousand and sixty were firm and undaunted.

21 ஆம், அவர்கள் கட்டளையிலுள்ள ஒவ்வொரு
வார்த்தையையும் பூரணமாய் நிறைவேற்ற கவன-
மாய்க் கீழ்ப்படிந்தார்கள்; ஆம், அவர்களுடைய வி-
சுவாசத்திற்கேற்பவே அவர்களுக்கு நடப்பிக்கப்-
பட்டது; தங்கள் தாய்மாரால் தங்களுக்குப் போதித்-
தவையென்று, அவர்கள் எனக்குச் சொன்ன வார்த்-
தைகளை நினைவுகூர்ந்தேன்.

Yea, and they did obey and observe to perform every word of command with exactness; yea, and even according to their faith it was done unto them; and I did remember the words which they said unto me that their mothers had taught them.

22 இப்பொழுதும் இதோ, இந்த என் குமாரர்களுக்கும், கைதிகளைக்கூட்டிச் செல்லும்படியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மனுஷருக்குமே, இப்பெரும் ஜெயத்துக்காக நாம் கடன்பட்டிருக்கிறோம். ஏனெனில் அவர்களே, லாமானியரை அடித்தார்கள், ஆகவே அவர்களை மேன்தி பட்டணத்திற்கு திரும்பத் துரத்தியடிக்கப்பட்டார்கள்.

And now behold, it was these my sons, and those men who had been selected to convey the prisoners, to whom we owe this great victory; for it was they who did beat the Lamanites; therefore they were driven back to the city of Manti.

23 நாங்கள் எங்களுடைய குமேனி பட்டணத்தைத் தற்காத்து வந்தோம். அனைவரும் பட்டயத்தினாலே அழிக்கப்படவில்லையெனினும், நாங்கள் பெரும் இழப்படைந்தோம்.

And we retained our city Cumeni, and were not all destroyed by the sword; nevertheless, we had suffered great loss.

24 அந்தப்படியே, லாமானியர் முறிந்தோடிய பின்னர், காயப்பட்ட என் மனுஷர் மரித்தோர் மத்தியிலிருந்து எடுக்கப்படவேண்டுமென்று, உடனடியாக கட்டளைகளைப் பிறப்பித்து, அவர்களின் காயங்கள் கட்டுப்போடப்பட வேண்டுமென்று, கட்டளையிட்டேன்.

And it came to pass that after the Lamanites had fled, I immediately gave orders that my men who had been wounded should be taken from among the dead, and caused that their wounds should be dressed.

25 அந்தப்படியே, என்னுடைய இரண்டாயிரத்து அறுபதுபேரில், இருநூறுபேர் இரத்த இழப்பினால் மயக்கமடைந்தார்கள்; ஆயினும் நாங்கள் ஆச்சரியப்படவும், எங்களுடைய முழு சேனை சந்தோஷமடையவும், தேவனுடைய நன்மையினிமித்தம், அவர்களில் ஒரு ஆத்துமாவாகிலும் அழிந்து போகவில்லை; ஆம், அவர்களில் ஒருவரும் அதிகக் காயங்களைப் பெறாமலில்லை.

And it came to pass that there were two hundred, out of my two thousand and sixty, who had fainted because of the loss of blood; nevertheless, according to the goodness of God, and to our great astonishment, and also the joy of our whole army, there was not one soul of them who did perish; yea, and neither was there one soul among them who had not received many wounds.

26 இப்பொழுதும் நம்முடைய சகோதரரில் ஆயிரம்பேர் சங்கரிக்கப்பட்டிருக்க, இவர்கள் காக்கப்பட்டு தப்புவிக்கப்பட்டது, நமது முழுச் சேனைக்கும் ஆச்சரியமாயிருந்தது. நாங்கள் இது தேவனுடைய அற்புதமான வல்லமையினிமித்தமே என்று, நியாயமாய் நிதானிக்கிறோம், ஏனெனில் நியாயமுள்ள தேவன் ஒருவர் உண்டென்றும், சந்தேகிக்காமலிருக்கிற எவரும் அவருடைய அற்புதமான வல்லமையினாலே காக்கப்படுவார்களென்றும், நம்பும்படி போதிக்கப்பட்டதிலே அவர்களுக்கிருக்கிற மிகுந்த விசுவாசத்தினிமித்தமே ஆனது.

And now, their preservation was astonishing to our whole army, yea, that they should be spared while there was a thousand of our brethren who were slain. And we do justly ascribe it to the miraculous power of God, because of their exceeding faith in that which they had been taught to believe—that there was a just God, and whosoever did not doubt, that they should be preserved by his marvelous power.

27 நான் யாரைக் குறித்துப் பேசினேனோ, அவர்களின் விசுவாசம் இதுவே; அவர்கள் வாலிபர்கள், அவர்களின் மனங்கள் உறுதியாயிருக்கின்றன, அவர்கள் தொடர்ந்து தேவனில் தங்களின் நம்பிக்கையை வைக்கிறார்கள்.

Now this was the faith of these of whom I have spoken; they are young, and their minds are firm, and they do put their trust in God continually.

28 இப்பொழுதும், அந்தப்படியே, இப்படியாக நாங்கள் எங்களுடைய காயப்பட்ட மனுஷருக்கு உதவி புரிந்து, எங்களின் மரித்தோரையும், லாமானியரில் மரித்த அநேகரையும் அடக்கம் பண்ணின பின்பு, சாரகெம்லா தேசம்வரைக்குமாய் தங்களோடு புறப்பட்டுச் சென்ற கைதிகளைக் குறித்து கித்திடம் விசாரித்தோம்.

And now it came to pass that after we had thus taken care of our wounded men, and had buried our dead and also the dead of the Lamanites, who were many, behold, we did inquire of Gid concerning the prisoners whom they had started to go down to the land of Zarahemla with.

29 இப்பொழுது கித் அவர்களை, தேசம் மட்டும் போக காவல் காக்க, பட்டாளத்தின் மீது நியமிக்கப்பட்டிருந்த, பிரதான சேர்வைக்காரனாயிருந்தான்.

Now Gid was the chief captain over the band who was appointed to guard them down to the land.

30 இப்பொழுதும் கித் என்னிடம் சொன்ன வார்த்தைகள் இவைகளே: இதோ, நாங்கள் எங்கள் கைதிகளுடனே சாரகெம்லா தேசத்திற்குப் போகப் புறப்பட்டோம். அந்தப்படியே, லாமானியரின் பாளையத்தைக் கண்காணிக்கும்படி அனுப்பப்பட்டிருந்த நமது சேனையின் வேவுகாரரை சந்தித்தோம்.

And now, these are the words which Gid said unto me: Behold, we did start to go down to the land of Zarahemla with our prisoners. And it came to pass that we did meet the spies of our armies, who had been sent out to watch the camp of the Lamanites.

31 அவர்கள் எங்களை நோக்கி, இதோ லாமானியர்களின் சேனைகள் குமேனி பட்டணத்திற்கு நேராகப் போகிறார்கள். இதோ, அவர்கள் மேல் விழுந்து, நம் ஜனத்தை அழித்துப் போடுவார்கள், என்று கூக்குரலிட்டார்கள்.

And they cried unto us, saying—Behold, the armies of the Lamanites are marching towards the city of Cumeni; and behold, they will fall upon them, yea, and will destroy our people.

32 அந்தப்படியே, எங்களுடைய கைதிகள் அவர்களுடைய கூக்குரலைக் கேட்டார்கள். அது அவர்களை தைரியங்கொள்ளச் செய்தது. அவர்கள் எங்களுக்கு விரோதமாய் கலகம் பண்ணும்படி எழுந்தார்கள்.

And it came to pass that our prisoners did hear their cries, which caused them to take courage; and they did rise up in rebellion against us.

33 அந்தப்படியே, அவர்களுடைய கலகத்தினிமித்தம், எங்களுடைய பட்டயங்கள் அவர்கள்மேல் விழப்பண்ணினோம். அந்தப்படியே, அவர்கள் ஒரு கூட்டமாய் எங்கள் பட்டயங்களுக்குத் தப்பி ஓடியபோது, அவர்களில் அநேகர் கொல்லப்பட்டார்கள்; மீதியானோர் தப்பித்து எங்களிடமிருந்து ஓடிப்போனார்கள்.

And it came to pass because of their rebellion we did cause that our swords should come upon them. And it came to pass that they did in a body run upon our swords, in the which, the greater number of them were slain; and the remainder of them broke through and fled from us.

34 இதோ, அவர்கள் போனபோது நாங்கள் அவர்களை முந்தக்கூடாமல், தீவிரித்து குமேனி பட்டணத்திற்கு அணிவகுத்தோம். இதோ, பட்டணத்தைக் காப்பதில் நம்முடைய சகோதரருக்கு உதவிபுரியும்படி, நாங்கள் தக்க நேரத்தில் வந்து சேர்ந்தோம்.

And behold, when they had fled and we could not overtake them, we took our march with speed towards the city Cumeni; and behold, we did arrive in time that we might assist our brethren in preserving the city.

35 இதோ, நாங்கள் மறுபடியும் நம்முடைய விரோதிகளின் கைகளிலிருந்து தப்புவிக்கப்பட்டோம். நம்முடைய தேவனின் நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக; ஏனெனில் இதோ, நம்மை விடுவித்தவரே, இந்தப் பெரிய காரியத்தை நமக்குச் செய்திருக்கிறார்.

And behold, we are again delivered out of the hands of our enemies. And blessed is the name of our God; for behold, it is he that has delivered us; yea, that has done this great thing for us.

36 இப்பொழுது, அந்தப்படியே, ஏலமனாகிய நான், கித்தின் இவ்வார்த்தைகளைக் கேட்டபோது, நாங்கள் யாவரும் அழிந்து போகாதபடி, எங்களைக் காப்பதிலான தேவனுடைய அனுக்கிரகத்தினிமித்தம், நான் மிகுந்த சந்தோஷத்தினால் நிறைக்கப்பட்டேன்; ஆம், கொல்லப்பட்டுப் போனவர்களின் ஆத்துமாக்கள் தங்கள் தேவனுடைய இளைப்பாறுதலினுள்ளே பிரவேசித்திருக்கின்றன, என்று நம்புகிறேன்.

Now it came to pass that when I, Helaman, had heard these words of Gid, I was filled with exceeding joy because of the goodness of God in preserving us, that we might not all perish; yea, and I trust that the souls of them who have been slain have entered into the rest of their God.

# ஆல்மா 58

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, மேன்தி பட்ட-
ணத்தைக் கைப்பற்றுவது எங்களுடைய அடுத்த
நோக்கமாயிருந்தது; ஆனால் இதோ, எங்களுடைய
சிறு பட்டாளங்களைக் கொண்டு, அவர்களை பட்-
டணத்திற்கு வெளியே நடத்திக்கொண்டு வருவதற்-
கு எந்த வழியுமில்லாதிருந்தது. ஏனெனில் இதோ,
நாங்கள் இச்சமயம்வரை செய்து வந்ததை அவர்-
கள் நினைவுகூர்ந்தார்கள்; ஆதலால் அவர்களை
அவர்களுடைய கொத்தளங்களிலிருந்து வெளி-
யேற்றும்படி, எங்களால் அவர்களை வசப்படுத்த
முடியவில்லை.

2 அவர்கள் எங்கள் படையைக் காட்டிலும் மிகவும்
அதிகமானோராயிருந்ததினிமித்தம், அவர்களு-
டைய கொத்தளங்களுக்குப் போய் அவர்களைத்
தாக்க நாங்கள் துணியவில்லை.

3 ஆம், நாங்கள் மறுபடியும் எங்கள் வசமாக்கிக்
கொண்டிருந்த தேசத்தின் பகுதிகளைக் காக்கும்ப-
டியாக எங்களுடைய ஆட்களை நியமிப்பது அவ-
சியமாயிற்று; ஆதலால் சாரகெம்லா தேசத்திலிருந்-
து அதிகப் பெலத்தையும், புதிய உணவுப்பொருட்-
களையும் பெறும்படியாக நாங்கள் காத்திருக்க-
வேண்டியது அவசியமாயிற்று.

4 அந்தப்படியே, எங்கள் ஜனங்களின் விவகாரங்க-
ளைக் குறித்து, எங்களுடைய தேசத்தின் விசார-
ணைக்காரனுக்குத் தெரிவிக்கும் பொருட்டு,
அவனிடத்தில் ஒரு தூதுக்குழுவை அனுப்பி-
னேன். அந்தப்படியே, நாங்கள் சாரகெம்லா தேசத்-
திலிருந்து உணவுப் பொருட்களையும் பெலத்தை-
யும் பெறும்படிக்குக் காத்திருந்தோம்.

5 ஆனால் இதோ, இது எங்களுக்கு சிறிதளவே
ஆதாயமாயிருந்தது; ஏனெனில் லாமானியரும் நா-
ளுக்குநாள் அதிக பெலத்தையும், அதிக உணவுப்-
பொருட்களையும் பெற்று வந்தார்கள். இக்கால கட்-
டத்தில் எங்கள் சூழ்நிலை இவ்விதமாய் இருந்தது.

6 லாமானியர் சில நேரங்களில் எங்களுக்கு விரோ-
தமாக தாக்கவந்து, எங்களை சூழ்ச்சியால் அழித்-
துப்போட தீர்மானித்தார்கள். இருப்பினும் அவர்க-
ளின் அரண்களினிமித்தமும், அவர்களின் கொத்த-
ளங்களினிமித்தமும், அவர்களோடு யுத்தம்-
பண்ண எங்களால் போக முடியவில்லை.

7 அந்தப்படியே, இத்தகைய கடினமான சூழ்நிலை-
யில் உணவுத்தேவையால், நாங்கள் அழிந்துபோகு-
மளவும் அநேக மாதங்களாகக் காத்திருந்தோம்.

# Alma 58

And behold, now it came to pass that our next object was to obtain the city of Manti; but behold, there was no way that we could lead them out of the city by our small bands. For behold, they remembered that which we had hitherto done; therefore we could not decoy them away from their strongholds.

And they were so much more numerous than was our army that we durst not go forth and attack them in their strongholds.

Yea, and it became expedient that we should employ our men to the maintaining those parts of the land which we had regained of our possessions; therefore it became expedient that we should wait, that we might receive more strength from the land of Zarahemla and also a new supply of provisions.

And it came to pass that I thus did send an embassy to the governor of our land, to acquaint him concerning the affairs of our people. And it came to pass that we did wait to receive provisions and strength from the land of Zarahemla.

But behold, this did profit us but little; for the Lamanites were also receiving great strength from day to day, and also many provisions; and thus were our circumstances at this period of time.

And the Lamanites were sallying forth against us from time to time, resolving by stratagem to destroy us; nevertheless we could not come to battle with them, because of their retreats and their strongholds.

And it came to pass that we did wait in these difficult circumstances for the space of many months, even until we were about to perish for the want of food.

8 ஆனால், அந்தப்படியே, எங்களுடைய உதவிக்-
காக வந்த இரண்டாயிரம் மனுஷ சேனை எங்களுக்-
காக பத்திரமாகக் கொண்டுவந்த உணவை நாங்-
கள் பெற்றுக்கொண்டோம்; எங்களையும், எங்கள்
தேசத்தையும் எங்களுடைய விரோதிகளின் கைக-
ளுக்குள் விழாமல் தற்காக்க, ஆம், எண்ணமுடியாத
சத்துருவோடு போராட நாங்கள் பெற்ற உதவி
அனைத்தும் இதுவே.

But it came to pass that we did receive food, which was guarded to us by an army of two thousand men to our assistance; and this is all the assistance which we did receive, to defend ourselves and our country from falling into the hands of our enemies, yea, to contend with an enemy which was innumerable.

9 இப்பொழுது எங்களது இந்த இக்கட்டுக்களின் மு-
காந்தரத்தையோ, அல்லது எங்களுக்கு அவர்கள்
ஏன் அதிக பெலத்தை அனுப்பவில்லை என்பதற்-
கான முகாந்தரத்தையோ, நாங்கள் அறியோம்;
நாங்கள் தூக்கி எறியப்பட்டு, முழுவதுமாய் அழிக்-
கப்பட்டுப் போகும்படியாக, தேவனுடைய நியாயத்-
தீர்ப்புகள் எவ்விதத்திலும் எங்கள் தேசத்தின் மேல்
வந்துவிடுமோ, என்று நாங்கள் துக்கப்பட்டு பயத்-
தினால் ஆட்கொள்ளப்பட்டோம்.

And now the cause of these our embarrassments, or the cause why they did not send more strength unto us, we knew not; therefore we were grieved and also filled with fear, lest by any means the judgments of God should come upon our land, to our overthrow and utter destruction.

10 ஆதலால், தேவன் எங்களை பெலப்படுத்தி, எங்-
களுடைய சத்துருக்களின் கைகளுக்கு எங்களைத்
தப்புவித்து, ஆம், எங்களுடைய ஜனங்களின் ஆத-
ரவுக்கென்று, நாங்கள் பெற்ற பட்டணங்களையும்
எங்கள் தேசத்தையும், எங்கள் உடமைகளையும்,
நாங்கள் தக்க வைத்துக்கொள்ளும்படி, எங்களுக்-
கு பெலத்தை அருளும்படிக்கு, அவரிடத்தில் எங்-
கள் ஆத்துமாக்களை ஜெபத்திலே ஊற்றினோம்.

Therefore we did pour out our souls in prayer to God, that he would strengthen us and deliver us out of the hands of our enemies, yea, and also give us strength that we might retain our cities, and our lands, and our possessions, for the support of our people.

11 ஆம், அந்தப்படியே, நம்மை விடுவிப்பார் என்ற
உறுதிப்பாட்டுடன் தேவனாகிய கர்த்தர் எங்களை
விசாரித்தார். ஆம், அதனால் அவர் எங்களுடைய
ஆத்துமாக்களுக்கு சமாதானம் உரைத்து, பெரும்
விசுவாசத்தை எங்களுக்கு அருளி, அவரில் எங்-
கள் விடுதலையை நம்பச் செய்தார்.

Yea, and it came to pass that the Lord our God did visit us with assurances that he would deliver us; yea, insomuch that he did speak peace to our souls, and did grant unto us great faith, and did cause us that we should hope for our deliverance in him.

12 நாங்கள் பெற்ற எங்களுடைய சிறுசேனையினி-
மித்தம் நாங்கள் தைரியம்கொண்டு, எங்களுடைய
சத்துருக்களை மேற்கொள்ளவும், எங்களுடைய
தேசங்களையும், எங்களுடைய உடைமைகளை-
யும், எங்களுடைய மனைவிகளையும், எங்களு-
டைய பிள்ளைகளையும், எங்களுடைய சுதந்திர
நோக்கத்தையும் காக்கவும், உறுதியாய் தீர்மானித்-
திருந்தோம்.

And we did take courage with our small force which we had received, and were fixed with a determination to conquer our enemies, and to maintain our lands, and our possessions, and our wives, and our children, and the cause of our liberty.

13 அவ்விதம் மேன்தி பட்டணத்திலிருந்த லாமானி-
யருக்கு விரோதமாக நாங்கள் எங்களுடைய முழு-
பெலத்தோடு போனோம். பட்டணத்திற்கு அருகே
இருக்கும் வனாந்தர எல்லை அருகிலே எங்கள் கூ-
டாரங்களைப் போட்டோம்.

And thus we did go forth with all our might against the Lamanites, who were in the city of Manti; and we did pitch our tents by the wilderness side, which was near to the city.

14 அந்தப்படியே, மறுநாளில் பட்டணத்திற்கடுத்த
வனாந்தரத்தின் எல்லைகளில் நாங்கள் இருப்ப-
தை, லாமானியர் கண்டபோது, எங்களுடைய சே-
னையின் இலக்கத்தையும், பெலத்தையும் கண்டறி-
யும்படிக்கு, அவர்கள் தங்கள் வேவுகாரரை எங்க-
ளைச் சுற்றியும் அனுப்பினார்கள்.

And it came to pass that on the morrow, that when the Lamanites saw that we were in the borders by the wilderness which was near the city, that they sent out their spies round about us that they might discover the number and the strength of our army.

15 அந்தப்படியே, நாங்கள் எங்களுடைய இலக்கத்தின்படி பெலனற்றவர்களாயிருந்தோம் என்று அவர்கள் கண்டபோதும், அவர்கள் வந்து, எங்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணி, எங்களைக் கொன்று போட்டாலொழிய, நாங்கள் அவர்களுடைய ஆதரவை அவர்களுக்குத் தடுப்போம் என்று பயந்தும், தங்களின் எண்ணிறைந்த சேனைகளோடு எங்களை எளிதாக அழித்துப்போடலாம் என்று எண்ணியும், அதனாலே எங்களுக்கு விரோதமாய் வந்து யுத்தம் பண்ண ஆயத்தம் செய்யலானார்கள்.

And it came to pass that when they saw that we were not strong, according to our numbers, and fearing that we should cut them off from their support except they should come out to battle against us and kill us, and also supposing that they could easily destroy us with their numerous hosts, therefore they began to make preparations to come out against us to battle.

16 அவர்கள் எங்களுக்கு விரோதமாய் வர ஆயத்தப்பட்டிருப்பதை நாங்கள் கண்டபோது, இதோ, சில மனுஷரோடு கித், வனாந்தரத்தில் தன்னை ஒளித்துக் கொள்ளவும், தியோம்நரும், சில மனுஷரும், வனாந்தரத்திலே தங்களை ஒளித்துக் கொள்ளவும், கட்டளையிட்டேன்.

And when we saw that they were making preparations to come out against us, behold, I caused that Gid, with a small number of men, should secrete himself in the wilderness, and also that Teomner and a small number of men should secrete themselves also in the wilderness.

17 இப்பொழுதும் கித்தும், அவன் மனுஷரும் வலது புறத்திலும், மற்றவர்கள் இடது புறத்திலுமாய் இருந்தார்கள்; இதோ லாமானியர் வந்து யுத்தம் செய்யும் சமயத்திற்காக, நாங்கள் முதலில் எங்கள் கூடாரங்களைப் போட்டிருந்த அதே இடத்தில், என் படையில் மீதியானோருடன் நான் இருந்தேன்.

Now Gid and his men were on the right and the others on the left; and when they had thus secreted themselves, behold, I remained, with the remainder of my army, in that same place where we had first pitched our tents against the time that the Lamanites should come out to battle.

18 அந்தப்படியே, லாமானியர் தங்கள் எண்ணிறைந்த சேனையோடு எங்களுக்கு விரோதமாக வந்தார்கள். அவர்கள் வந்து எங்கள்மேல் தங்கள் பட்டயத்தோடு விழவிருந்தபோது என்னோடுகூட இருந்த மனுஷரை வனாந்தரத்தினுள் ஓடிப்போகும்படி கட்டளையிட்டேன்.

And it came to pass that the Lamanites did come out with their numerous army against us. And when they had come and were about to fall upon us with the sword, I caused that my men, those who were with me, should retreat into the wilderness.

19 அந்தப்படியே, லாமானியர் எங்களை முந்திக்கொண்டு வெட்டிப் போடவேண்டுமென்று மிகவும் வாஞ்சித்ததினாலே, அவர்கள் எங்களை வேகமாய்ப் பின்தொடர்ந்தார்கள்; ஆதலால் அவர்கள் வனாந்தரத்தினுள்ளும் எங்களைப் பின்தொடர்ந்தார்கள்; லாமானியரால் அவர்கள் கண்டுபிடிக்கப்படாதபடிக்கு, நாங்கள் கித் மற்றும் தியோம்நர் மத்தியிலே கடந்துபோனோம்.

And it came to pass that the Lamanites did follow after us with great speed, for they were exceedingly desirous to overtake us that they might slay us; therefore they did follow us into the wilderness; and we did pass by in the midst of Gid and Teomner, insomuch that they were not discovered by the Lamanites.

20 அந்தப்படியே, லாமானியர்கள் கடந்துபோன பின்னர், அல்லது அந்த சேனை கடந்துபோன பின்னர், கித்தும் தியோம்நரும் தங்கள் மறைவிடங்களிலிருந்து எழுந்து, லாமானியர்களின் வேவுகாரர்களை பட்டணத்திற்கு அவர்கள் திரும்பிப்போகாதபடி தடுத்தார்கள்.

And it came to pass that when the Lamanites had passed by, or when the army had passed by, Gid and Teomner did rise up from their secret places, and did cut off the spies of the Lamanites that they should not return to the city.

21 அந்தப்படியே, இவர்கள் அவர்களை தடுத்த பின்பு, பட்டணத்திற்கு ஓடிப்போய், பட்டணத்தைக் காக்கும்படி விடப்பட்டிருந்த, காவலாளிகளின்மேல் விழுந்து, அவர்களை அழித்துப் போட்டு, பட்டணத்தை வசப்படுத்திக் கொண்டார்கள்.

And it came to pass that when they had cut them off, they ran to the city and fell upon the guards who were left to guard the city, insomuch that they did destroy them and did take possession of the city.

22 இப்பொழுதும் கொஞ்சம் காவல்காரரைத் தவிர, மற்ற தங்களின் முழுச் சேனையையும் லாமானியர் வனாந்தரத்திற்குள் கூட்டிச் சென்றதினிமித்தமே இது சம்பவித்தது.

Now this was done because the Lamanites did suffer their whole army, save a few guards only, to be led away into the wilderness.

23 அந்தப்படியே, கித்தும், தியோம்நரும், அவர்களுடைய கொத்தளங்களை இப்படியாக வசமாக்கிக் கொண்டார்கள். அந்தப்படியே, சாரகெம்லா தேசத்திற்கு நேராய், நாங்கள் வனாந்தரத்தினுள் அதிகம் பிரயாணம் பண்ணின பின்பு, எங்களுடைய மார்க்கத்தைத் தொடர்ந்தோம்.

And it came to pass that Gid and Teomner by this means had obtained possession of their strongholds. And it came to pass that we took our course, after having traveled much in the wilderness towards the land of Zarahemla.

24 சாரகெம்லா தேசத்திற்கு நேராய் அவர்கள் போய்க்கொண்டிருந்ததை லாமானியர் கண்டபோது, தங்களை அழிவிற்கு வழிநடத்துவதற்கு திட்டம் தீட்டப்பட்டதோவென்று, மிகவும் பயந்தார்கள்; ஆதலால் அவர்கள் மறுபடியுமாக வனாந்தரத்திற்குள், ஆம், தாங்கள் வந்த வழியிலேயே பின்வாங்கிச் சென்றார்கள்.

And when the Lamanites saw that they were marching towards the land of Zarahemla, they were exceedingly afraid, lest there was a plan laid to lead them on to destruction; therefore they began to retreat into the wilderness again, yea, even back by the same way which they had come.

25 இதோ, இரவானபோதோ, நேபியர் தங்கள் அணிவகுப்பினிமித்தம் களைத்துப் போயிருப்பார்களென்றும், தாங்கள் அவர்களுடைய முழுச் சேனையையும் துரத்தியாகிவிட்டதென்றும், லாமானியரில் பிரதான சேர்வைக்காரர் நினைத்து, மேன்தி பட்டணத்தின்மேல் அக்கறைகொள்ளாமல், தங்கள் கூடாரங்களைப் போட்டார்கள்.

And behold, it was night and they did pitch their tents, for the chief captains of the Lamanites had supposed that the Nephites were weary because of their march; and supposing that they had driven their whole army therefore they took no thought concerning the city of Manti.

26 இப்பொழுது, அந்தப்படியே, இரவானபோது, என் மனுஷர் தூங்கக்கூடாதென்றும், வேறு வழியாய் மேன்தி தேசத்தை நோக்கி அணிவகுத்துப் போகவேண்டுமென்றும், நான் கட்டளையிட்டேன்.

Now it came to pass that when it was night, I caused that my men should not sleep, but that they should march forward by another way towards the land of Manti.

27 நாங்கள் இரவிலே அணிவகுத்துப் போனதினாலே இதோ, மறுநாளில் மேன்தி பட்டணத்தை அவர்களுக்கு முன்பாக நாங்கள் சென்று அடையும் விதமாக, நாங்கள் லாமானியருக்கு தூரத்திலிருந்தோம்.

And because of this our march in the night-time, behold, on the morrow we were beyond the Lamanites, insomuch that we did arrive before them at the city of Manti.

28 இப்படியாக அந்தப்படியே, இந்த உபாயத்தினால், இரத்தம் சிந்தாமலேயே மேன்தி பட்டணத்தை நாங்கள் வசப்படுத்திக் கொண்டோம்.

And thus it came to pass, that by this stratagem we did take possession of the city of Manti without the shedding of blood.

29 அந்தப்படியே, லாமானிய சேனைகள் பட்டணத்திற்கு அருகே வந்து சேர்ந்து, நாங்கள் அவர்களை சந்திக்க ஆயத்தமாயிருப்பதைக் கண்டபோது, அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டு, அவர்கள் வனாந்தரத்தினுள் ஓடிப்போகும் அளவுக்கு, பெரும் பயத்தினால் பீடிக்கப்பட்டார்கள்.

And it came to pass that when the armies of the Lamanites did arrive near the city, and saw that we were prepared to meet them, they were astonished exceedingly and struck with great fear, insomuch that they did flee into the wilderness.

30 ஆம், மேலும் அந்தப்படியே, லாமானியர்களின் சேனைகள் தேசத்தின் எல்லாப் பகுதிகளையும் விட்டு ஓடிப்போனார்கள். ஆனால் இதோ, அவர்கள் தேசத்திலிருந்து அநேக ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள்.

Yea, and it came to pass that the armies of the Lamanites did flee out of all this quarter of the land. But behold, they have carried with them many women and children out of the land.

31 லாமானியரால் கைப்பற்றப்பட்ட அந்தப் பட்ட-
ணங்கள் யாவும், இச்சமயத்திலே எங்கள் வசத்தி-
லுள்ளன; லாமானியரால் கைதிகளாய்ப் பிடிக்கப்-
பட்டு, கொண்டுசெல்லப்பட்டவர்களைத் தவிர,
மற்ற யாவருமான, எங்களுடைய தகப்பன்மார்க-
ளும், எங்கள் ஸ்திரீகளும், எங்கள் பிள்ளைகளும்
தங்களுடைய வீடுகளுக்குத் திரும்புகிறார்கள்.
32 ஆனால் இதோ, இவ்வளவு அநேக பட்டணங்க-
ளையும், பெரும் தேசப்பகுதிகளையும் காக்க, எங்க-
ளுடைய சேனைகள் சிறியதாயிருக்கின்றன.
33 ஆதலால் இதோ, எங்களுக்குச் சொந்தமாயிருந்த,
அந்த பட்டணங்களையும் அந்த தேசங்களையும்,
நாங்கள் பெறுமளவிற்கு, இந்த தேசங்களின் மேல்
எங்களுக்கு வெற்றியை அளித்த, நம் தேவனில்
நாங்கள் நம்பிக்கையாயிருக்கிறோம்.
34 இப்பொழுதும் அரசாங்கம் எங்களுக்கு அதிக பெ-
லத்தை அளிக்காதிருக்கிறதற்கான காரணத்தை
நாங்கள் அறியோம்; எங்களோடு வந்து சேர்ந்த
மனுஷரும் நாங்கள் ஏன் அதிக பெலத்தைப் பெற-
வில்லை என்பதற்கான காரணத்தை அறியார்.
35 இதோ, நீங்கள் ஜெயமற்றவர்களாயிருக்கிறீர்கள்
என்பதையேயன்றி வேறொன்றையும் நாங்கள்
அறியோம். நீங்கள் படைகளை தேசத்தின் அப்பகு-
திக்கு கூட்டிச் சென்றீர்கள். அப்படியானால் நாங்-
கள் முறுமுறுக்க விரும்பவில்லை.
36 அப்படியில்லையெனில், இதோ, எங்கள் உதவிக்-
கென்று அவர்கள் அதிக மனுஷரை அனுப்பாத-
தால், அரசாட்சியில் சில பிரிவினைகள் இருக்கு-
மோ என்று அஞ்சுகிறோம்; ஏனெனில் அவர்கள்
அனுப்பியதைக் காட்டிலும், அதிகமானோர் அங்கே
இருக்கிறார்கள், என்று நாங்கள் அறிவோம்.
37 ஆனால் இதோ, இது அவசியமற்றது, தேவன் எங்-
களுடைய சேனையின் பெலவீனத்திலும் எங்க-
ளை விடுவிப்பார் என்றும், ஆம், எங்களுடைய சத்-
துருக்களின் கைகளுக்கும் எங்களைத் தப்புவிப்-
பார் என்றும், நம்புகிறோம்.
38 இதோ, இது, இருபத்தி ஒன்பதாம் வருஷத்தின்
பிற்பகுதி, நாங்கள் எங்களுடைய தேசங்களை
வசப்படுத்திக் கொண்டோம்; லாமானியரோ நேபி
தேசத்திற்குப் பறந்தோடினார்கள்.
39 நான் இவ்வளவாகப் புகழ்ந்துரைத்த அம்மோன்
ஜனங்களுடைய அந்த குமாரர்கள், என்னோடு கூட
மேன்தி பட்டணத்திலிருக்கிறார்கள்; கர்த்தர் அவர்-
களுக்கு ஆதரவளித்து, ஆம், ஒரு ஆத்துமாவாகி-
லும் கொல்லப்பட்டுப்போகாதபடி, அவர்கள் பட்ட-
யத்தினால் வீழ்ந்து போவதிலிருந்து காத்தார்.

And those cities which had been taken by the Lamanites, all of them are at this period of time in our possession; and our fathers and our women and our children are returning to their homes, all save it be those who have been taken prisoners and carried off by the Lamanites.

But behold, our armies are small to maintain so great a number of cities and so great possessions.

But behold, we trust in our God who has given us victory over those lands, insomuch that we have obtained those cities and those lands, which were our own.

Now we do not know the cause that the government does not grant us more strength; neither do those men who came up unto us know why we have not received greater strength.

Behold, we do not know but what ye are unsuccessful, and ye have drawn away the forces into that quarter of the land; if so, we do not desire to murmur.

And if it is not so, behold, we fear that there is some faction in the government, that they do not send more men to our assistance; for we know that they are more numerous than that which they have sent.

But, behold, it mattereth not—we trust God will deliver us, notwithstanding the weakness of our armies, yea, and deliver us out of the hands of our enemies.

Behold, this is the twenty and ninth year, in the latter end, and we are in the possession of our lands; and the Lamanites have fled to the land of Nephi.

And those sons of the people of Ammon, of whom I have so highly spoken, are with me in the city of Manti; and the Lord has supported them, yea, and kept them from falling by the sword, insomuch that even one soul has not been slain.

40 ஆனால் இதோ, அவர்கள் அநேக காயங்களைப்
பெற்றார்கள்; எனினும் தேவன் தங்களை சுதந்தர-
வாளிகளாக மாற்றின சுதந்திரத்தில் அவர்கள்
உறுதியாய் நிற்கிறார்கள்; அவர்கள் ஒவ்வொரு நா-
ளும் தேவனாகிய தங்கள் கர்த்தரை நினைவுகூர
கவனமாயிருக்கிறார்கள்; ஆம், அவர்கள் அவரு-
டைய சட்டங்களையும், அவருடைய நியாயத்தீர்ப்-
புகளையும் அவருடைய கட்டளைகளையும் தொ-
டர்ந்து கைக்கொள்கிறார்கள்; வரப்போகிறதைக்
குறித்த தீர்க்கதரிசனங்களில் அவர்கள் கொண்டி-
ருக்கிற விசுவாசம் உறுதியாயிருக்கிறது.
41 இப்பொழுதும், என் பிரியமான சகோதரனாகிய
மரோனியே, நம்மை மீட்டுக்கொண்டு, நம்மை சுயா-
தீனராய் மாற்றின, நம் தேவனாகிய கர்த்தர், உன்-
னைத் தம்முடைய பிரசன்னத்தில் தொடர்ந்து
வைத்திருப்பாராக; ஆம், லாமானியர் நம்மிடமிருந்-
து எடுத்துக் கொண்ட, நமக்கு ஆதரவாயிருந்த சக-
லவற்றின் அதிகாரத்தையும், யாவையும் பெறுவ-
தில் நீ ஜெயமடையும்படிக்கு அவர் இந்த ஜனங்க-
ளுக்கு தயைபுரிவாராக. இப்பொழுது, இதோ, நான்
என் நிருபத்தை முடிக்கிறேன். நானே ஆல்மாவின்
குமாரனாகிய ஏலமன்.

But behold, they have received many wounds; nevertheless they stand fast in that liberty wherewith God has made them free; and they are strict to remember the Lord their God from day to day; yea, they do observe to keep his statutes, and his judgments, and his commandments continually; and their faith is strong in the prophecies concerning that which is to come.

And now, my beloved brother, Moroni, may the Lord our God, who has redeemed us and made us free, keep you continually in his presence; yea, and may he favor this people, even that ye may have success in obtaining the possession of all that which the Lamanites have taken from us, which was for our support. And now, behold, I close mine epistle. I am Helaman, the son of Alma.

# ஆல்மா 59

1 இப்பொழுது, அந்தப்படியே, நேபியின் ஜனங்க-
ளின்மேல் நியாயாதிபதிகள் ஆளுகையின் முப்ப-
தாவது வருஷத்தில், மரோனி ஏலமனின் நிருபத்-
தைப்பெற்று, படித்தபோது, இழந்துபோன அந்த தே-
சங்களை மீட்பதில் ஏலமன் பெற்ற மிகுதியான ஜெ-
யத்தையும், ஆம் அவனுடைய நலத்தையும் குறித்-
து மிகவும் களிகூர்ந்தான்.
2 ஆம், அவன் இருந்த அப்பகுதியின் சுற்றுப்புறங்-
களில் அமைந்த தேசமுழுவதிலும் உள்ள, தன்
ஜனங்கள் யாவரும் களிகூரும்படி அதை அவர்க-
ளுக்குத் தெரியப்பண்ணினான்.
3 அந்தப்படியே, ஏலமன் திரும்பப் பெறுவதிலே
இவ்வளவு அற்புதமாய் வெற்றியடைந்திருந்த தே-
சத்தின் அப்பகுதியை, சுலபமாய் காத்துவரும்ப-
டிக்கு, அவனுடைய சேனையைப் பெலப்படுத்த,
மனுஷரை ஏகமாய் கூடிவரச் செய்ய வேண்டுமென்-
று, தன் விருப்பத்தைத் தெரிவித்து அவன் பகோ-
ரனுக்கு உடனே ஒரு நிருபத்தை அனுப்பினான்.
4 அந்தப்படியே, இந்நிருபத்தை சாரகெம்லா தேசத்-
திற்கு மரோனி அனுப்பின பின்பு, லாமானியர் தங்-
களிடமிருந்து எடுத்துக்கொண்ட தேசங்கள் மற்றும்
பட்டணங்களின் மீதியானவற்றைப் பெறும்படி
மறுபடியும் ஒரு திட்டம் போடத் துவங்கினான்.
5 அந்தப்படியே, மரோனி இவ்விதமாய் லாமானிய-
ருக்கு விரோதமாய் யுத்தத்திற்குப் போக ஆயத்தப்-
பட்டுக் கொண்டிருந்தபோது, இதோ, மரோனி பட்ட-
ணத்திலிருந்தும், லேகியின் பட்டணத்திலிருந்தும்,
மோரியாந்தன் பட்டணத்திலிருந்தும், ஏகமாய்க் கூ-
டியிருந்த நேபிகாவின் ஜனங்கள் லாமானியர்க-
ளால் தாக்கப்பட்டார்கள்.
6 ஆம், மேன்தி தேசத்திலிருந்தும் சுற்றுப்புற தேசத்-
திலிருந்தும், பறந்தோட நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள்
வந்து, தேசத்தின் இப்பகுதியிலே லாமானியரோடு
சேர்ந்து கொண்டார்கள்.
7 இப்படியாக மிகவும் எண்ணிறைந்தவர்களாயும்,
ஆம், நாளுக்கு நாள் பெலனடைபவர்களாயும்
இருந்ததினால், அவர்கள் அம்மோரோனின் கட்ட-
ளையின்படியே நேபிகா ஜனத்திற்கு விரோதமாய்ப்-
போய், மாபெரும் படுகொலையினால் அவர்களை
வெட்டிப்போடத் துவங்கினார்கள்.
8 அவர்களின் சேனைகள் மிக அதிகமாயிருந்ததி-
னிமித்தம், நேபிகாவின் ஜனங்களில் மீதியானோர்
அவர்களுக்கு முன்பாக ஓடிப்போகும்படி கட்டா-
யப்படுத்தப்பட்டார்கள்; அவர்கள் வந்து, மரோனி-
யின் சேனையைச் சேர்ந்து கொண்டார்கள்.

# Alma 59

Now it came to pass in the thirtieth year of the reign of the judges over the people of Nephi, after Moroni had received and had read Helaman's epistle, he was exceedingly rejoiced because of the welfare, yea, the exceeding success which Helaman had had, in obtaining those lands which were lost.

Yea, and he did make it known unto all his people, in all the land round about in that part where he was, that they might rejoice also.

And it came to pass that he immediately sent an epistle to Pahoran, desiring that he should cause men to be gathered together to strengthen Helaman, or the armies of Helaman, insomuch that he might with ease maintain that part of the land which he had been so miraculously prospered in regaining.

And it came to pass when Moroni had sent this epistle to the land of Zarahemla, he began again to lay a plan that he might obtain the remainder of those possessions and cities which the Lamanites had taken from them.

And it came to pass that while Moroni was thus making preparations to go against the Lamanites to battle, behold, the people of Nephihah, who were gathered together from the city of Moroni and the city of Lehi and the city of Morianton, were attacked by the Lamanites.

Yea, even those who had been compelled to flee from the land of Manti, and from the land round about, had come over and joined the Lamanites in this part of the land.

And thus being exceedingly numerous, yea, and receiving strength from day to day, by the command of Ammoron they came forth against the people of Nephihah, and they did begin to slay them with an exceedingly great slaughter.

And their armies were so numerous that the remainder of the people of Nephihah were obliged to flee before them; and they came even and joined the army of Moroni.

9 இப்பொழுதும் நேபிகாவின் ஜனங்கள் பட்டணத்தைக் காக்கும்படியாக, அவர்களுக்கு உதவிபுரியும்பொருட்டு, ஆட்கள் அப்பட்டணத்திற்கு அனுப்பப்படவேண்டியது அவசியமென்று மரோனி எண்ணி, பட்டணத்தை லாமானியரிடமிருந்து மறுபடியும் பெறுவதைக் காட்டிலும், அதை அவர்களின் கைகளுக்குள் விழாமல் பாதுகாப்பதே சுலபம் என்றறிந்து, அவர்கள் சுலபமாய் காப்பார்கள் என்று யூகித்தான்.

And now as Moroni had supposed that there should be men sent to the city of Nephihah, to the assistance of the people to maintain that city, and knowing that it was easier to keep the city from falling into the hands of the Lamanites than to retake it from them, he supposed that they would easily maintain that city.

10 ஆதலால் அவன் தான் கைப்பற்றின அவ்விடங்களைக் காக்க தன் படைகள் யாவையும் நிறுத்தி வைத்துக் கொண்டான்.

Therefore he retained all his force to maintain those places which he had recovered.

11 இப்பொழுதும், நேபிகா பட்டணம் இழக்கப்பட்டது என்று மரோனி கண்டபோது, அவன் மிகவும் துக்கித்து, ஜனங்களின் துன்மார்க்கத்தால் அவர்கள் தங்கள் சகோதரரின் கைகளுக்குள் விழுந்தார்களோ, என்று சந்தேகிக்கத் துவங்கினான்.

And now, when Moroni saw that the city of Nephihah was lost he was exceedingly sorrowful, and began to doubt, because of the wickedness of the people, whether they should not fall into the hands of their brethren.

12 இப்பொழுது அவனுடைய பிரதான சேர்வைக்காரர்களும் இப்படியே எண்ணினார்கள். அவர்கள் மேல் லாமானியர் கொண்ட ஜெயத்தினிமித்தம், அது ஜனங்களுடைய துன்மார்க்கத்தினாலோ என்று சந்தேகித்து அதிர்ச்சியடைந்தார்கள்.

Now this was the case with all his chief captains. They doubted and marveled also because of the wickedness of the people, and this because of the success of the Lamanites over them.

13 அந்தப்படியே, தங்கள் தேசத்தின் விடுதலையைக் குறித்து கவலை கொள்ளாதிருந்ததினிமித்தம், மரோனி அரசாங்கத்தின் மேல் கோபம் கொண்டான்.

And it came to pass that Moroni was angry with the government, because of their indifference concerning the freedom of their country.

# ஆல்மா 60

1 அந்தப்படியே, அவன் தேசத்தின் விசாரணைக்கா-
ரனாயிருந்த பகோரனுக்கு மறுபடியும் எழுதினான்.
அவன் எழுதிய வார்த்தைகளாவன: இதோ, சார-
கெம்லா பட்டணத்திலிருக்கும் அத்தேசத்தின் மீ-
தான பிரதான நியாயாதிபதியும், விசாரணைக்கா-
ரனுமாகிய பகோரனுக்கும், இந்த யுத்தத்தின் வர்த்த-
மானங்களை விசாரித்து கவனிக்கும்படி இம்மக்க-
ளால் தெரிந்து கொள்ளப்பட்ட யாவருக்கும், எனது
நிருபத்தை அனுப்புகிறேன்.
2 ஏனெனில் இதோ, நான் கண்டிப்பான விதமாக சி-
லவற்றை அவர்களுக்குச் சொல்லவுள்ளேன்;
ஏனெனில் இதோ, நீங்கள் மனுஷரை ஏகமாய்க்கூ-
டச் செய்து, அவர்களைப் பட்டயங்களாலும், உடை-
வாள்களாலும் எல்லாவிதமான யுத்தக் கருவிக-
ளாலும் ஆயுதந்தரிப்பித்து, லாமானியர் நம் தேசத்-
தின் எப்பகுதிகளில் வந்தாலும், அவர்களுக்கு வி-
ரோதமாக அனுப்புவதற்காக நியமிக்கப்பட்டிருக்கி-
றீர்கள், என்பதை நீங்கள் அறிவீர்கள்.
3 இப்பொழுதும், இதோ, நான் உனக்குச் சொல்லுகி-
றேன், நானும், என் மனுஷரும், ஏலமனும், அவன்
மனுஷரும் மிகவும் பெரும் பாடுகளை அனுபவித்-
தோம்; ஆம், பசி, தாகம், களைப்பு மற்றும் எல்லாவி-
தமான சகல உபத்திரவங்களையும் சகித்திருக்கி-
றோம்.
4 ஆனால் இதோ, இவைகளை மட்டுமே நாங்கள்
அனுபவித்திருந்தால், நாங்கள் முணுமுணுக்க-
வோ, முறையிடவோ மாட்டோம்.
5 ஆனால், இதோ, நம் ஜனங்களுக்குள்ளே பெரும்
சங்காரம் உண்டாயிற்று; ஆம், ஆயிரக்கணக்கா-
னோர் பட்டயத்தினால் வீழ்ந்து போனார்கள், நம்மு-
டைய சேனைகளுக்கு நீங்கள் போதுமான பெலத்-
தையும் உதவியையும் அளித்திருப்பீர்களானால்,
அது வேறுவிதமாய் இருந்திருக்கும். ஆம், எங்களை
நீங்கள் உதாசீனம் செய்தது மிகவும் பெரிதாயிருந்த-
து.
6 இப்பொழுதும் இதோ, இந்த மிகப்பெரும் உதாசீ-
னத்தின் காரணத்தை நாங்கள் அறிய வாஞ்சிக்கி-
றோம். ஆம், உங்களது அக்கறையற்ற நிலையின்
காரணத்தை அறிய வாஞ்சிக்கிறோம்.
7 உங்களைச் சுற்றியும் உங்களுடைய விரோதிகள்
மரணக்கிரியைப் பரப்பிக்கொண்டு, ஆம், உங்கள்
சகோதரரில் ஆயிரக்கணக்கானோரைக் கொன்று
கொண்டிருக்கும்போது, உங்களுடைய சிங்கா-
சனங்களில் மெய்மறந்த நிலையில் உட்கார்ந்தி-
ருக்க, உங்களால் நினைக்கமுடிமோ?

# Alma 60

And it came to pass that he wrote again to the governor of the land, who was Pahoran, and these are the words which he wrote, saying: Behold, I direct mine epistle to Pahoran, in the city of Zarahemla, who is the chief judge and the governor over the land, and also to all those who have been chosen by this people to govern and manage the affairs of this war.

For behold, I have somewhat to say unto them by the way of condemnation; for behold, ye yourselves know that ye have been appointed to gather together men, and arm them with swords, and with cimeters, and all manner of weapons of war of every kind, and send forth against the Lamanites, in whatsoever parts they should come into our land.

And now behold, I say unto you that myself, and also my men, and also Helaman and his men, have suffered exceedingly great sufferings; yea, even hunger, thirst, and fatigue, and all manner of afflictions of every kind.

But behold, were this all we had suffered we would not murmur nor complain.

But behold, great has been the slaughter among our people; yea, thousands have fallen by the sword, while it might have otherwise been if ye had rendered unto our armies sufficient strength and succor for them. Yea, great has been your neglect towards us.

And now behold, we desire to know the cause of this exceedingly great neglect; yea, we desire to know the cause of your thoughtless state.

Can you think to sit upon your thrones in a state of thoughtless stupor, while your enemies are spreading the work of death around you? Yea, while they are murdering thousands of your brethren—

8 ஆம், பாதுகாப்பிற்காக அவர்கள் உங்களை சார்ந்திருந்தார்கள். ஆம், அவர்களுக்கு உதவி செய்யவும், அவர்களைப் பெலப்படுத்தும்படியாக சேனைகளை அனுப்பியும், அவர்களில் ஆயிரக்கணக்கானோர் பட்டயத்தினால் வீழ்வதைத் தடுக்கவுமே, உன்னை அவர்கள் இப்பதவியிலே அமர்த்தினார்கள்.

Yea, even they who have looked up to you for protection, yea, have placed you in a situation that ye might have succored them, yea, ye might have sent armies unto them, to have strengthened them, and have saved thousands of them from falling by the sword.

9 ஆனால் இதோ, இது மாத்திரம் அல்ல, நீங்கள் உங்கள் உணவுப்பொருட்களை அவர்களுக்கு நிறுத்தி வைத்தீர்கள். இந்த ஜனத்தின் நலனில் தாங்கள் கொண்டிருந்த வாஞ்சையினால் அநேகர் யுத்தம்பண்ணி, இரத்தம் சிந்தி தங்கள் ஜீவன்களை விட்டார்கள்; ஆம், அவர்களிடம் நீங்கள் காட்டிய மிகவும் பெரிய உதாசீனத்தினிமித்தம், அவர்கள் பசியால் அழிந்துபோக இருக்கும் சமயத்திலும், இக்காரியத்தைச் செய்தார்கள்.

But behold, this is not all—ye have withheld your provisions from them, insomuch that many have fought and bled out their lives because of their great desires which they had for the welfare of this people; yea, and this they have done when they were about to perish with hunger, because of your exceedingly great neglect towards them.

10 இப்பொழுதும், எனக்குப் பிரியமான சகோதரரே, ஏனெனில் நீங்கள் பிரியப்படத்தக்கவர்களாயிருக்கவேண்டும்; ஆம், நீங்கள் இந்த ஜனத்தின் நலனுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் அதிகக் கருத்தாய் நீங்கள் உங்களை தீவிரப்படுத்தியிருக்கவேண்டும்; ஆனால் இதோ, நீங்கள் அவர்களை உதாசீனப்படுத்தினதினிமித்தம், ஆயிரக்கணக்கானோரின் இரத்தப்பழி உங்கள் சிரசுகளின் மேல் சுமரும். ஆம், அவர்களுடைய எல்லா மன்றாடல்களும், அவர்களுடைய சகல பாடுகளும் தேவனுக்குத் தெரியும்.

And now, my beloved brethren—for ye ought to be beloved; yea, and ye ought to have stirred yourselves more diligently for the welfare and the freedom of this people; but behold, ye have neglected them insomuch that the blood of thousands shall come upon your heads for vengeance; yea, for known unto God were all their cries, and all their sufferings—

11 இதோ, நீங்கள் உங்கள் சிங்காசனங்களில் உட்கார்ந்துகொண்டு, தேவனுடைய மிகுந்த நன்மையினிமித்தம், நீங்கள் ஒன்றும் செய்யாமலேயே, அவர் உங்களை விடுவிப்பார் என்றும், நீங்கள் எண்ணமுடியுமோ? இதோ, நீங்கள் இப்படி எண்ணியிருந்தீர்களானால், வீணிலே இதை நீங்கள் யோசித்திருக்கிறீர்கள்.

Behold, could ye suppose that ye could sit upon your thrones, and because of the exceeding goodness of God ye could do nothing and he would deliver you? Behold, if ye have supposed this ye have supposed in vain.

12 உங்கள் சகோதரரில் மிகவும் அநேகர் கொல்லப்பட்டது, அவர்களின் துன்மார்க்கத்தினால் என்று எண்ணுகிறீர்களா? நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் இப்படி எண்ணியிருந்தால், வீணாகத்தான் எண்ணியிருக்கிறீர்கள். ஏனெனில் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அங்கே அநேகர் பட்டயத்தினால் வீழ்ந்து போனார்கள்; இதோ, இது உங்களது ஆக்கினைக்காகவே.

Do ye suppose that, because so many of your brethren have been killed it is because of their wickedness? I say unto you, if ye have supposed this ye have supposed in vain; for I say unto you, there are many who have fallen by the sword; and behold it is to your condemnation;

13 ஏனெனில் கர்த்தர் தம்முடைய நியாயமும், நியாயத்தீர்ப்பும், துன்மார்க்கர் மீது வரும்பொருட்டு நீதிமான்கள் கொல்லப்பட அனுமதிக்கிறார். ஆதலால் நீதிமான்கள் கொல்லப்பட்டுப்போனதாலே அவர்கள் தொலைந்து போனார்கள் என்று எண்ணிவிட வேண்டாம். ஆனால் இதோ, அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருடைய இளைப்பாறுதலில் பிரவேசிக்கிறார்கள்.

For the Lord suffereth the righteous to be slain that his justice and judgment may come upon the wicked; therefore ye need not suppose that the righteous are lost because they are slain; but behold, they do enter into the rest of the Lord their God.

14 இப்பொழுதும் இதோ, நான் உங்களுக்குச் சொல்-
லுகிறேன், இவர்களுடைய மிகுந்த சோம்பேறித்-
தனத்தினிமித்தமும், ஆம், நம்முடைய அரசாங்கத்-
தின் சோம்பேறித்தனத்தினிமித்தமும், கொல்லப்-
பட்டுப்போன தங்களின் சகோதரர்களின் மீது
இருந்த தங்களது மிகுந்த பெரும் உதாசீனத்தினி-
மித்தமும், இந்த ஜனங்களின் மேல் தேவனுடைய நி-
யாயத்தீர்ப்பு வருமே, என்று நான் மிகவும் பயப்படு-
கிறேன்.

And now behold, I say unto you, I fear exceedingly that the judgments of God will come upon this people, because of their exceeding slothfulness, yea, even the slothfulness of our government, and their exceedingly great neglect towards their brethren, yea, towards those who have been slain.

15 முதலில் எங்கள் தலைமையில் துவங்கிய துன்-
மார்க்கம் இல்லாதிருந்திருக்குமானால், எங்களு-
டைய சத்துருக்கள் எங்கள் மேல் வல்லமைகொள்-
ளாதபடி, நாங்கள் அவர்களை மேற்கொண்டிருப்-
போம்.

For were it not for the wickedness which first commenced at our head, we could have withstood our enemies that they could have gained no power over us.

16 ஆம், நமக்குள்ளே யுத்தம் உண்டாகாமல் இருந்தி-
ருந்தால், ஆம், நமக்குள்ளே மிகுந்த இரத்தம் சிந்து-
தலை ஏற்படுத்தின, இந்த ராஜ மனுஷர் இல்லாதி-
ருந்தால், ஆம், நமக்குள் நாமே போராடிக் கொண்டி-
ருந்த சமயத்தில், நாம் இதுவரை செய்து வந்ததைப்-
போல, நம் பெலத்தை ஒன்றுகூடச் செய்திருப்போ-
மேயானால், ஆம், நம்மேல் தாங்கள் பெற்றிருந்த
வல்லமையையும் அதிகாரத்தையும் ராஜ மனுஷர்
வாஞ்சிக்காமல் இருந்திருப்பார்களெனில், அவர்-
கள் எங்களுக்கு விரோதமாய் தங்கள் பட்டயங்க-
ளை எடுத்து, அதினிமித்தம் எங்களுக்குள் மிகுந்த
இரத்தம் சிந்துதலை உண்டாக்கினதைச் செய்யா-
மல், அதற்குப் பதிலாக நம்முடைய சுதந்திர நோக்-
கத்திற்கு விசுவாசமுள்ளவர்களாயிருந்து, எங்க-
ளுடனே ஒன்று சேர்ந்து நம்முடைய சத்துருக்களுக்-
கு விரோதமாய்ப் போயிருந்திருப்பார்கள்; ஆம்,
நாம் கர்த்தருடைய பெலத்தில் அவர்களுக்கு வி-
ரோதமாய்ப் போயிருந்தால், நம்முடைய விரோதிக-
ளைச் சிதறடித்திருப்போம். ஏனெனில் அவருடைய
வார்த்தை நிறைவேறும்படியாய் அது நடந்தேறியி-
ருக்கும்.

Yea, had it not been for the war which broke out among ourselves; yea, were it not for these king-men, who caused so much bloodshed among ourselves; yea, at the time we were contending among ourselves, if we had united our strength as we hitherto have done; yea, had it not been for the desire of power and authority which those king-men had over us; had they been true to the cause of our freedom, and united with us, and gone forth against our enemies, instead of taking up their swords against us, which was the cause of so much bloodshed among ourselves; yea, if we had gone forth against them in the strength of the Lord, we should have dispersed our enemies, for it would have been done, according to the fulfilling of his word.

17 ஆனால் இதோ, இப்போதும் லாமானியர் நம் தே-
சங்களை வசப்படுத்திக்கொண்டு நம்மேல் வந்து-
கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பட்டயத்தினால்
நம் ஜனங்களை, ஆம், நம் ஸ்திரீகளையும், நம் பிள்-
ளைகளையும் கொன்றும், அவர்களைக் கைதிக-
ளாய்க் கொண்டு சென்றும், சகலவித உபத்திரவங்-
களையும் அவர்கள் அனுபவிக்கும்படிச் செய்து
கொண்டிருக்கிறார்கள், இது வல்லமைக்காகவும்,
அதிகாரத்திற்காகவும், முயற்சித்துக் கொண்டிருக்-
கிறவர்களாகிய, ராஜ மனுஷரின் மிகுந்த துன்-
மார்க்கத்தினிமித்தமே நடந்தது.

But behold, now the Lamanites are coming upon us, taking possession of our lands, and they are murdering our people with the sword, yea, our women and our children, and also carrying them away captive, causing them that they should suffer all manner of afflictions, and this because of the great wickedness of those who are seeking for power and authority, yea, even those king-men.

18 ஆனால், இக்காரியத்தைக் குறித்து நான் ஏன்
அதிகமாய்ச் சொல்லவேண்டும்? ஏனெனில் நீயே
அதிகாரத்தை எதற்கு நாடுகிறாய் என நாங்கள்
அறியவில்லை. நீங்களும் கூட, உங்கள் நாட்டுக்கு
சதிகாரர்கள், என்பதையேயன்றி வேறொன்றும்
நாங்கள் அறியோம்.

But why should I say much concerning this matter? For we know not but what ye yourselves are seeking for authority. We know not but what ye are also traitors to your country.

19 அல்லது நீங்கள் நம் தேசத்தின் நடுவில் இருப்ப-
தினாலும், சுற்றிலும் பாதுகாக்கப்படுகிறதினா-
லும், எங்களை உதாசீனம் செய்து, எங்களுக்கு
உணவையும், எங்கள் சேனைகளைப் பெலப்ப-
டுத்த மனுஷரையும் அனுப்பாமல் விட்டீர்களோ?

Or is it that ye have neglected us because ye are in the heart of our country and ye are surrounded by security, that ye do not cause food to be sent unto us, and also men to strengthen our armies?

20 நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருடைய கட்ட-
ளைகளை மறந்து விட்டீர்களோ? ஆம், நம்முடைய
பிதாக்களின் சிறையிருப்பை மறந்துவிட்டீர்க-
ளோ? நாம் அநேகந்தரம் நம்முடைய சத்துருக்க-
ளின் கைகளுக்கு தப்புவிக்கப்பட்டதை மறந்து
போனீர்களோ?

Have ye forgotten the commandments of the Lord your God? Yea, have ye forgotten the captivity of our fathers? Have ye forgotten the many times we have been delivered out of the hands of our enemies?

21 அல்லது நாம் நம்முடைய சிங்காசனங்களில் உட்-
கார்ந்து கொண்டு, கர்த்தர் நமக்கு அளித்தவற்-
றைப் பயன்படுத்தாமல் இருக்கும்போதும், அவர்
நம்மை விடுவிப்பார், என்று எண்ணுகிறீர்களா?

Or do ye suppose that the Lord will still deliver us, while we sit upon our thrones and do not make use of the means which the Lord has provided for us?

22 ஆம், தேசத்தின் சுற்றுப்புறங்களிலான எல்லைக-
ளில் ஆயிரக்கணக்கானோர் பட்டயத்தினால் வீழ்ந்-
து, ஆம், காயப்பட்டு இரத்தம் சிந்திக்கொண்டிருக்-
கும்போது, உங்களைச் சுற்றி ஆயிரக்கணக்கானோ-
ரும், ஆம், பதினாயிரக்கணக்கானோரும் சோம்ப-
லாய் உட்கார்ந்திருக்க, நீங்கள் சோம்பலாய் அமர்ந்-
திருப்பீர்களா?

Yea, will ye sit in idleness while ye are surrounded with thousands of those, yea, and tens of thousands, who do also sit in idleness, while there are thousands round about in the borders of the land who are falling by the sword, yea, wounded and bleeding?

23 நீங்கள் இக்காரியங்களைக் கண்டு சும்மா உட்-
கார்ந்திருக்கையில், தேவன் உங்களை குற்றமற்ற-
வர்களாக நோக்குவார் என்று எண்ணுகிறீர்களா?
இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அப்படி-
யல்ல. முதலில் பாத்திரத்தின் உட்பகுதியை சுத்தம்
பண்ணுங்கள், பின்பு வெளிப்புறம் சுத்தம் பண்-
ணப்பட வேண்டும், என்று தேவன் சொன்னதை
நீங்கள் நினைவுகூர வேண்டுமென்று விரும்புகி-
றேன்.

Do ye suppose that God will look upon you as guiltless while ye sit still and behold these things? Behold I say unto you, Nay. Now I would that ye should remember that God has said that the inward vessel shall be cleansed first, and then shall the outer vessel be cleansed also.

24 இப்பொழுதும், தான் மீண்டும் கைப்பற்றின நம்
தேசத்தின் அப்பகுதிகளை ஏலமன் பாதுகாக்கவும்,
இப்பகுதியிலுள்ள நம் பூமியின் மீதியானதையும்
மீட்டுக்கொள்ளவும், நீங்கள் செய்ததிலிருந்து
மனந்திரும்பி, எழும்பி செயல்படத் தொடங்கி, எங்-
களுக்கும் அவனுக்கும் ஆகாரத்தையும் மனுஷ-
ரையும் அனுப்புங்கள். இதோ, நம்முடைய பெரிய
அரசாங்கத் தலைமையை ஆம், நம்முடைய பாத்தி-
ரத்தின் உட்புறத்தை முதலாவது சுத்தம் பண்ணா-
மல், லாமானியரோடு நாம் போர் புரிவது அவசிய-
மற்றது.

And now, except ye do repent of that which ye have done, and begin to be up and doing, and send forth food and men unto us, and also unto Helaman, that he may support those parts of our country which he has regained, and that we may also recover the remainder of our possessions in these parts, behold it will be expedient that we contend no more with the Lamanites until we have first cleansed our inward vessel, yea, even the great head of our government.

25 நீங்கள் என் நிருபத்தின்படி செய்யாமலும், வெ-
ளியே வந்து எனக்கு சுதந்திரத்தின் உண்மையான
உற்சாகத்தைக் காண்பிக்காமலும், எங்கள் சேனை-
யைப் பெலப்படுத்தி, திடப்படுத்த முற்படாமலும்,
அவர்களின் ஆதரவுக்கென்று உணவை வழங்கா-
மலும் இருப்பீர்களானால், இதோ நமது தேசத்தின்
இப்பகுதியைப் பாதுகாக்கும்படி, என் சுதந்திர மனு-
ஷரில் ஒரு பகுதியினரை விட்டுச் செல்வேன், வே-
றெந்த வல்லமையும் அவர்களுக்கு விரோதமாக
செயல்படக்கூடாதபடி, தேவனுடைய ஆசீர்வாதங்-
களையும் பெலத்தையும் அவர்கள் மேல் விட்டுச்
செல்வேன்.

And except ye grant mine epistle, and come out and show unto me a true spirit of freedom, and strive to strengthen and fortify our armies, and grant unto them food for their support, behold I will leave a part of my freemen to maintain this part of our land, and I will leave the strength and the blessings of God upon them, that none other power can operate against them—

26 இது அவர்களின் மிகுந்த விசுவாசம், மற்றும் தங்-
கள் உபத்திரவங்களில் அவர்கள் காத்த பொறுமை-
யினிமித்தமுமே.

And this because of their exceeding faith, and their patience in their tribulations—

27 நான் உன்னிடத்தில் வருவேன். உங்களுக்குள்-
ளே எவருக்கேனும் சுதந்திர வாஞ்சை இருக்குமே-
யானால், ஆம், சுதந்திரத்தின் ஒரு பொறியாகிலும்
மீதமாய் இருக்குமேயானால், இதோ நான் வல்ல-
மையையும் அதிகாரத்தையும் பறிக்க வாஞ்சிப்-
போர், நிர்மூலமாகும் வரையிலும் உங்களுக்குள்
கலகத்தைத் தூண்டுவேன்.

And I will come unto you, and if there be any among you that has a desire for freedom, yea, if there be even a spark of freedom remaining, behold I will stir up insurrections among you, even until those who have desires to usurp power and authority shall become extinct.

28 ஆம், இதோ, நான் உன் பெலத்திற்கோ, அல்லது
உன் அதிகாரத்திற்கோ பயப்படுவதில்லை,
ஆனால் என் தேவனுக்கே பயப்படுகிறேன்; அவரு-
டைய கட்டளைகளின்படியே என் தேசத்தைக்
காக்க எனது பட்டயத்தை உயர்த்துகிறேன். உங்க-
ளுடைய அக்கிரமத்தினிமித்தமே நாங்கள் மிகப்-
பெரிய இழப்பை அனுபவித்தோம்.

Yea, behold I do not fear your power nor your authority, but it is my God whom I fear; and it is according to his commandments that I do take my sword to defend the cause of my country, and it is because of your iniquity that we have suffered so much loss.

29 இதோ, இதுவே நேரம். ஆம், நேரம் சமீபமாயிருக்கி-
றது, நீங்கள் உங்கள் தேசத்தையும், உங்கள் சிறு-
பிள்ளைகளையும், தற்காக்க உங்களைத்தானே
செயல்படுத்தாவிடில் நியாயத்தின் பட்டயம் உங்-
கள் மேல் தொங்குகிறது; ஆம், அது உங்கள் மேல்
விழுந்து, நீங்கள் முற்றிலுமாய்ச் சங்காரமாகும்படி
உங்களைச் சந்திக்கும்.

Behold it is time, yea, the time is now at hand, that except ye do bestir yourselves in the defence of your country and your little ones, the sword of justice doth hang over you; yea, and it shall fall upon you and visit you even to your utter destruction.

30 இதோ, உங்களிடத்திலிருந்து உதவிக்காகக் காத்-
திருக்கிறேன்; நாங்கள் நிவாரணமடைய எங்க-
ளுக்கு நீங்கள் உதவி செய்யவில்லையெனில்,
இதோ, நான் சாரகெம்லா தேசம் மட்டும் உங்களிடத்-
தில் வந்து, நீங்கள் இனியும் எங்களது சுதந்திர
நோக்கிலே இந்த ஜனங்களின் முன்னேற்றத்தைத்
தடுக்க வல்லமை கொள்ளாதபடி, உங்களைப் பட்-
டயத்தினால் வெட்டிப் போடுவேன்.

Behold, I wait for assistance from you; and, except ye do administer unto our relief, behold, I come unto you, even in the land of Zarahemla, and smite you with the sword, insomuch that ye can have no more power to impede the progress of this people in the cause of our freedom.

31 ஏனெனில் இதோ, நீங்கள் ஜீவித்து, தமது நீதி-
யுள்ள ஜனத்தை அழித்துப் போடும்படியாய், உங்-
கள் அக்கிரமங்களிலே நிலைத்திருக்கும்படி கர்த்-
தர் அனுமதிப்பதில்லை.

For behold, the Lord will not suffer that ye shall live and wax strong in your iniquities to destroy his righteous people.

32 இதோ, லாமானியர்களுடைய தகப்பன்மார்களின் பாரம்பரியமே அவர்களின் வெறுப்பைத் தூண்டச் செய்து, ஆம், அது நம்மிலிருந்து பிரிந்து போனவர்களினாலே இரட்டிக்கப்பட்டு, உங்களுடைய துன்மார்க்கம், புகழ்ச்சியின் பிரியத்திலும், உலகத்தினுடைய வீணானவைகளிலும் இருக்கிறபோது, கர்த்தர் உங்களைத் தப்புவித்து, லாமானியருக்கு விரோதமாய் நியாயம் விசாரிக்க வருவார், என்று நீங்கள் எண்ண முடியுமா?

Behold, can you suppose that the Lord will spare you and come out in judgment against the Lamanites, when it is the tradition of their fathers that has caused their hatred, yea, and it has been redoubled by those who have dissented from us, while your iniquity is for the cause of your love of glory and the vain things of the world?

33 நீங்கள் தேவனுடைய நியாயப்பிரமாணங்களை மீறுகிறீர்கள் என்றும், அவைகளை உங்கள் கால்களால் மிதித்துப் போடுகிறீர்கள் என்றும், நீங்கள் அறிவீர்கள். இதோ, கர்த்தர் என்னை நோக்கி: நீங்கள் நியமித்திருக்கிற உங்கள் விசாரணைக்காரர் தங்கள் பாவங்களிலிருந்தும், அக்கிரமங்களிலிருந்தும் மனந்திரும்பாவிடில், அவர்களுக்கு விரோதமாக நீங்கள் யுத்தத்திற்குப் போவீர்களாக, என்கிறார்.

Ye know that ye do transgress the laws of God, and ye do know that ye do trample them under your feet. Behold, the Lord saith unto me: If those whom ye have appointed your governors do not repent of their sins and iniquities, ye shall go up to battle against them.

34 இப்பொழுதும் இதோ, மரோனியாகிய நான், என் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள நான் எடுத்துக் கொண்ட உடன்படிக்கையினால் நெருக்கப்படுகிறேன்; ஆதலால் நீங்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, எனக்கும், ஏலமனுக்கும், உங்களது ஆகாரத்தையும், உங்கள் மனுஷரையும், சீக்கிரமாய் அனுப்ப வேண்டுமென விரும்புகிறேன்.

And now behold, I, Moroni, am constrained, according to the covenant which I have made to keep the commandments of my God; therefore I would that ye should adhere to the word of God, and send speedily unto me of your provisions and of your men, and also to Helaman.

35 இதோ, இதை நீங்கள் செய்யவில்லையெனில், நான் தீவிரமாய் உங்களிடத்தில் வருவேன்; ஏனெனில் இதோ, நாங்கள் பசியால் அழிந்துபோக தேவன் எங்களை அனுமதியார்; ஆதலால் அவசியப்பட்டால் பட்டயத்தினால் கூட, உங்கள் உணவை அவர் எங்களுக்குக் கொடுப்பார். இப்பொழுது நீங்கள் தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றப் பார்த்துக் கொள்ளுங்கள்.

And behold, if ye will not do this I come unto you speedily; for behold, God will not suffer that we should perish with hunger; therefore he will give unto us of your food, even if it must be by the sword. Now see that ye fulfil the word of God.

36 இதோ, நானே உங்களின் பிரதான சேனாதிபதியாகிய மரோனி. நான் அதிகாரத்தை அல்ல, ஆனால் அதைத் தாழ்த்தவே நாடுகிறேன். நான் உலகத்தின் கனத்தை நாடாமல், என் தேவனுடைய மகிமைக்காவும், என் தேசத்தின் சுதந்திரத்திற்காகவும், நலனுக்காகவும் நாடுகிறேன். இந்தப்படியே நான் என் நிருபத்தை முடிக்கிறேன்.

Behold, I am Moroni, your chief captain. I seek not for power, but to pull it down. I seek not for honor of the world, but for the glory of my God, and the freedom and welfare of my country. And thus I close mine epistle.

# ஆல்மா 61

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, மரோனி தன் நி-
ருபத்தைப் பிரதான விசாரணைக்காரனுக்கு
அனுப்பிய உடனே, அவன் பிரதான விசாரணைக்-
காரனாகிய பகோரனிடத்திலிருந்து ஒரு நிருபத்-
தைப் பெற்றான். அவன் பெற்ற வார்த்தைகளா-
வன:
2 இத்தேசத்தின் பிரதான விசாரணைக்காரனாகிய,
பகோரன் என்னும் நான், இவ்வார்த்தைகளை சே-
னையின் பிரதான சேர்வைக்காரனாயிருக்கிற
மரோனிக்கு அனுப்புகிறேன். இதோ, மரோனியே
நான் உனக்குச் சொல்லுகிறேன், நான் உனது மி-
குந்த உபத்திரவங்களிலே சந்தோஷப்படுவதில்-
லை. ஆம், அது என் ஆத்துமாவைத் துக்கப்படுத்-
துகிறது.
3 ஆனாலும் இதோ, உன் உபத்திரவங்களில் சந்தோ-
ஷப்படுவோரும் உண்டு, ஆம், அவர்கள் எனக்கும்,
சுதந்திர மனுஷரான என் ஜனங்களுக்கும், விரோத-
மாக கலகத்தில் எழும்பினார்கள். ஆம், எழும்பியி-
ருக்கும் அந்த கலகக்காரர் மிகவும் அநேகராயிருக்-
கிறார்கள்.
4 இந்த நியாயாசனத்தை என்னிடத்திலிருந்து
பறிக்க வகைதேடின அவர்களே மிகுந்த அக்கிரமத்-
திற்குக் காரணமானவர்கள்; ஏனெனில் அவர்கள்
மிகவும் முகஸ்துதியாய்ப் பேசி, அநேக ஜனங்க-
ளின் இருதயங்களை புறம்பே வழிநடத்திப் போ-
னார்கள், அதுவே எங்களுக்குள்ளே மிகவும் உபத்-
திரவம் உண்டாகக் காரணமானது; அவர்கள் எங்க-
ளுக்கு உணவுப் பொருட்களைத் தடுத்து, எங்களது
சுதந்திர மனுஷர் உங்களிடத்திற்கு வரக்கூடாதப-
டிக்கு அவர்களைத் தடுத்தார்கள்.
5 இதோ, அவர்கள் முன்பிருந்து அவர்கள் என்-
னைத் துரத்தினார்கள்; நான் என்னால் திரட்ட மு-
டிந்தவரை மனுஷரை என்னோடு கூட்டிக்கொண்-
டு, கிதியோன் தேசத்திற்குப் பறந்தோடினேன்.
6 இதோ, நான் தேசத்தின் இப்பகுதி முழுமைக்கும்
ஒரு பிரகடனத்தை அனுப்பியிருக்கிறேன், இதோ,
அவர்கள் தங்கள் தேசத்தையும், தங்கள் சுதந்திரத்-
தையும் காத்துக்கொள்ளவும், எங்கள் குற்றங்க-
ளுக்காகப் பழிதீர்க்கவும், தங்கள் போர்க்கருவிக-
ளை எடுக்க, அனுதினமும் எங்களிடத்தில் வந்து-
கொண்டிருக்கிறார்கள்.
7 அவர்கள் எங்களிடத்தில் வந்ததினிமித்தம், எங்-
களுக்கு விரோதமாய்க் கலகத்தில் எழுந்தவர்கள்,
எங்களுக்குப் பயந்து, எங்களுக்கு விரோதமாய் யுத்-
தத்திற்கு வர அஞ்சுமளவிற்கு, தடுத்து நிறுத்தப்ப-
டுகிறார்கள்.

# Alma 61

Behold, now it came to pass that soon after Moroni had sent his epistle unto the chief governor, he received an epistle from Pahoran, the chief governor. And these are the words which he received:

I, Pahoran, who am the chief governor of this land, do send these words unto Moroni, the chief captain over the army. Behold, I say unto you, Moroni, that I do not joy in your great afflictions, yea, it grieves my soul.

But behold, there are those who do joy in your afflictions, yea, insomuch that they have risen up in rebellion against me, and also those of my people who are freemen, yea, and those who have risen up are exceedingly numerous.

And it is those who have sought to take away the judgment-seat from me that have been the cause of this great iniquity; for they have used great flattery, and they have led away the hearts of many people, which will be the cause of sore affliction among us; they have withheld our provisions, and have daunted our freemen that they have not come unto you.

And behold, they have driven me out before them, and I have fled to the land of Gideon, with as many men as it were possible that I could get.

And behold, I have sent a proclamation throughout this part of the land; and behold, they are flocking to us daily, to their arms, in the defence of their country and their freedom, and to avenge our wrongs.

And they have come unto us, insomuch that those who have risen up in rebellion against us are set at defiance, yea, insomuch that they do fear us and durst not come out against us to battle.

8 அவர்கள் சாரகெம்லா பட்டணம் அல்லது தேசத்தை வசப்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் மேல் ஒரு ராஜாவை நியமித்திருக்கிறார்கள், அவனோ லாமானியர்களின் ராஜாவிற்கு எழுதி, அதன்மூலம் அவனோடு கூட்டு சேர்ந்து கொண்டான்; அந்த ஒப்பந்தத்தின்படி அவன், தான் சாரகெம்லா பட்டணத்தைக் காக்கப்போவதாகவும், அதைக் காப்பதின் மூலம், லாமானியர் மீதமுள்ள தேசத்தையும் கைப்பற்றக்கூடும் என்றும், இந்த ஜனங்கள் யாவரும் லாமானியரால் மேற்கொள்ளப்பட்ட பின்பு, அவர்கள் மேல் தான் ராஜாவாக்கப்படுவான், என்றும் எண்ணுகிறான்.

They have got possession of the land, or the city, of Zarahemla; they have appointed a king over them, and he hath written unto the king of the Lamanites, in the which he hath joined an alliance with him; in the which alliance he hath agreed to maintain the city of Zarahemla, which maintenance he supposeth will enable the Lamanites to conquer the remainder of the land, and he shall be placed king over this people when they shall be conquered under the Lamanites.

9 இப்பொழுதும், உன்னுடைய நிருபத்திலே என்னை நீ கடிந்துகொண்டாய். ஆனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை; நான் கோபப்படாமல், உன் உள்ளத்தின் பெருந்தன்மையில் களிகூருகிறேன். பகோரனாகிய நான் என் ஜனத்தினுடைய உரிமைகளையும், சுதந்திரத்தையும் காக்கவே என் நியாயாசனத்தை வைத்துக் கொள்ளவேண்டுமென்று நாடுகிறேனே தவிர, அதிகாரத்திற்காக அல்ல. தேவன் நம்மை சுதந்திரவாளிகளாக்கிய, அந்த சுதந்திரத்திலே என் ஆத்துமா உறுதியாய் உள்ளது.

And now, in your epistle you have censured me, but it mattereth not; I am not angry, but do rejoice in the greatness of your heart. I, Pahoran, do not seek for power, save only to retain my judgment-seat that I may preserve the rights and the liberty of my people. My soul standeth fast in that liberty in the which God hath made us free.

10 இப்பொழுதும் இதோ, நாங்கள் இரத்தம் சிந்துமளவிற்கும் துன்மார்க்கத்தை எதிர்த்து நிற்போம். லாமானியர்கள் தங்கள் சொந்த தேசத்திலே தரித்திருப்பார்களெனில், அவர்கள் இரத்தத்தைச் சிந்தமாட்டோம்.

And now, behold, we will resist wickedness even unto bloodshed. We would not shed the blood of the Lamanites if they would stay in their own land.

11 எங்களுடைய சகோதரர் கலகம் பண்ணாமலும், பட்டயத்தை எங்களுக்கு விரோதமாய் எடுக்காமலும் இருப்பார்களெனில், நாங்கள் அவர்களின் இரத்தத்தைச் சிந்தமாட்டோம்.

We would not shed the blood of our brethren if they would not rise up in rebellion and take the sword against us.

12 தேவ நியாயத்தின்படி தேவைப்பட்டாலோ, அல்லது நாங்கள் செய்யும்படி அவர் கட்டளையிட்டாலோ, நாங்கள் எங்களை அடிமை நுகத்தடிக்கு கீழ்ப்படுத்துவோம்.

We would subject ourselves to the yoke of bondage if it were requisite with the justice of God, or if he should command us so to do.

13 ஆனால் இதோ, நாம் நம்முடைய சத்துருக்களுக்கு நம்மை கீழ்ப்படுத்தவேண்டுமென்று, அவர் கட்டளையிடாமல், நாம் அவரில் நம்முடைய நம்பிக்கையை வைக்கவேண்டுமென்று கட்டளையிடுகிறார், அவர் நம்மை விடுவிப்பார்.

But behold he doth not command us that we shall subject ourselves to our enemies, but that we should put our trust in him, and he will deliver us.

14 ஆதலால் எனக்குப் பிரியமான சகோதரனாகிய, மரோனியே, நாம் பொல்லாப்பை எதிர்ப்போமாக. நம்முடைய சுதந்திரத்தைக் காக்கவும், நம்முடைய சபையின் பெரிதான சிலாக்கியத்திலும், நம்முடைய மீட்பரும் தேவனுமானவருக்காக களிகூர்ந்திருக்கவும், நம்முடைய வார்த்தைகளால் தடுக்கவியலாத கலகங்கள், பிரிவினைகள் போன்ற பொல்லாப்புகளை, நமது பட்டயங்களால் எதிர்ப்போமாக.

Therefore, my beloved brother, Moroni, let us resist evil, and whatsoever evil we cannot resist with our words, yea, such as rebellions and dissensions, let us resist them with our swords, that we may retain our freedom, that we may rejoice in the great privilege of our church, and in the cause of our Redeemer and our God.

15 ஆதலால், உன் மனுஷர் சிலருடன் என்னிடத்தில் நீ சீக்கிரமாய் வா. மீதியானோரை லேகி மற்றும் தியான்குமின் பொறுப்பில் விட்டுவிட்டு, அவர்களுக்குள் இருக்கிற சுதந்திர ஆவியாகிய தேவ ஆவியின்படியே, அவர்கள் தேசத்தின் அப்பகுதியில் போர்புரிய, அவர்களுக்கு அதிகாரத்தைக் கொடுப்பாயாக.

Therefore, come unto me speedily with a few of your men, and leave the remainder in the charge of Lehi and Teancum; give unto them power to conduct the war in that part of the land, according to the Spirit of God, which is also the spirit of freedom which is in them.

16 இதோ, நீ என்னிடத்தில் வந்து சேரும்வரைக்கும், அவர்கள் அழிந்து போகக்கூடாதென்பதற்காக அவர்களுக்கு சில உணவுப் பொருட்களை அனுப்பியிருக்கிறேன்.

Behold I have sent a few provisions unto them, that they may not perish until ye can come unto me.

17 நீ இங்கு அணிவகுத்து வரும்போது, உன்னால் கூட்டிவர முடிந்த படையனைத்தையும் கூட்டிச் சேர். நமக்குள் இருக்கிற விசுவாசத்தின்படியே, நம்முடைய தேவனின் பெலத்தோடு கூட, நாம் அந்தக் கலகக்காரருக்கு விரோதமாய் தீவிரித்துப் போவோமாக.

Gather together whatsoever force ye can upon your march hither, and we will go speedily against those dissenters, in the strength of our God according to the faith which is in us.

18 நாம் லேகிக்கும், தியான்குமிற்கும், அதிக உணவை அனுப்பும்படிக்கு, சாரகெம்லா பட்டணத்தை வசப்படுத்துவோமாக; ஆம், நாம் கர்த்தருடைய பெலத்தோடு கூட அவர்களுக்கு விரோதமாய்ப் போய், இந்த பெரும் அக்கிரமத்திற்கு ஒரு முடிவு கட்டுவோமாக.

And we will take possession of the city of Zarahemla, that we may obtain more food to send forth unto Lehi and Teancum; yea, we will go forth against them in the strength of the Lord, and we will put an end to this great iniquity.

19 இப்பொழுதும் மரோனியே, உன் கடிதத்தைப் பெறுவதில் சந்தோஷமடைகிறேன். ஏனெனில் நான் நம்முடைய சகோதரருக்கு விரோதமாய்ப் போவது நியாயமான காரியமா என்று, சிறிது கவலைப்பட்டேன்.

And now, Moroni, I do joy in receiving your epistle, for I was somewhat worried concerning what we should do, whether it should be just in us to go against our brethren.

20 ஆனால் நீயோ, அவர்கள் மனந்திரும்பாவிடில், அவர்களுக்கு விரோதமாய் நீ போகவேண்டுமென்று கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டிருப்பதாக சொல்லியிருக்கிறாய்.

But ye have said, except they repent the Lord hath commanded you that ye should go against them.

21 நீ, லேகியையும், தியான்குமையும், கர்த்தரில் பெலப்படுத்தும்படியாக பார்த்துக்கொள்; அவர்களைப் பயப்படாதிருக்கச் சொல்லுவாயாக. ஏனெனில் தேவன் அவர்களையும், ஆம், தங்களை சுதந்திரவாளிகளாக்கின தேவனின் அந்த சுதந்திரத்தில் உறுதியாய்ப் பற்றிக்கொண்ட யாவரையும் விடுவிப்பார். இப்பொழுதும் எனக்குப் பிரியமான சகோதரனான மரோனிக்கு, என் கடிதத்தை முடிக்கிறேன்.

See that ye strengthen Lehi and Teancum in the Lord; tell them to fear not, for God will deliver them, yea, and also all those who stand fast in that liberty wherewith God hath made them free. And now I close mine epistle to my beloved brother, Moroni.

# ஆல்மா 62

1 இப்பொழுதும், அந்தப்படியே, மரோனி இந்நிருபத்-
தைப் பெற்றபோது, அவனது இருதயத்தில் தைரி-
யம் கொண்டு, பகோரன் தன் தேசத்தின் சுதந்திரத்-
திற்கும், நோக்கத்திற்கும், துரோகி அல்ல என்பதி-
னாலும், அவனுடைய விசுவாசத்தினிமித்தமும்,
மரோனியினுடைய இருதயம் மிகுந்த சந்தோஷத்தி-
னால் நிரப்பப்பட்டது.
2 அவன், பகோரனை நியாயாசனத்திலிருந்து வி-
ரட்டிவிட்டவர்களின் அக்கிரமத்தினிமித்தம், ஆம்,
அதிலும் குறிப்பாக தங்கள் தேசத்திற்கும் தங்கள்
தேவனுக்கும் விரோதமாக கலகம் பண்ணினவர்க-
ளினிமித்தம் அதிகம் துக்கித்தான்.
3 அந்தப்படியே, மரோனி, பகோரனின் வாஞ்சை-
யின்படியே சில மனுஷரைக் கூட்டிக்கொண்டு, தன்
சேனையின் மீதியானவர்கள் மேல் உள்ள பொறுப்-
பை லேகிக்கும், தியான்குமிற்கும் கொடுத்துவிட்டு,
கிதியோன் தேசத்திற்கு அணிவகுத்தான்.
4 அவன் நுழைந்த எவ்விடத்திலும் சுதந்திரக் கொ-
டியை உயர்த்தினான், கிதியோன் தேசத்தை நோக்-
கிய தன் அணிவகுப்பு முழுவதிலும் தன்னால் தி-
ரட்ட முடிந்த சேனையை பெற்றுக் கொண்டான்.
5 அந்தப்படியே, ஆயிரக்கணக்கானோர் அவனு-
டைய கொடியின் கீழ் கூடினார்கள், தாங்கள் அடி-
மைத்தனத்திற்குள் வராதபடி, தங்கள் சுதந்திரத்-
தை தற்காக்கும்படியாக தங்கள் பட்டயங்களை
எடுத்தார்கள்.
6 இப்படியாக, மரோனி தன் அணிவகுப்பு முழுவதி-
லும் தன்னால் திரட்டமுடிந்த மனுஷரைக் கூடச்
செய்த பின்னர், அவன் கிதியோன் தேசத்திற்குள்
வந்தான்; அவன் தன் படைகளை பகோரனின்
படைகளோடு சேர்த்தபோது அவர்கள் மிகவும் பல-
மடைந்தார்கள். சாரகெம்லா தேசத்திலிருந்து சுதந்-
திர மனுஷரைத் துரத்திவிட்டு, அந்த தேசத்தை
வசப்படுத்திக்கொண்ட, அக்கலகக்காரரின் ராஜா-
வான பச்சூஸின் மனுஷரை விட பலமடைந்திருந்-
தார்கள்.
7 அந்தப்படியே, மரோனியும் பகோரோனும் தங்கள்
சேனைகளோடு சாரகெம்லா தேசத்தினுள் சென்று,
பட்டணத்திற்கு விரோதமாக போய், பச்சூஸின்
ஆட்கள் யுத்தத்திற்கு வரும்மட்டும், அவர்களை
எதிர்த்து நின்றார்கள்.
8 இதோ, பச்சூஸ் கொல்லப்பட்டு, அவனுடைய
மனுஷர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டுப் போனார்-
கள், பகோரன் தன் நியாயாசனத்தில் மறுபடியும்
அமர்த்தப்பட்டான்.

# Alma 62

And now it came to pass that when Moroni had received this epistle his heart did take courage, and was filled with exceedingly great joy because of the faithfulness of Pahoran, that he was not also a traitor to the freedom and cause of his country.

But he did also mourn exceedingly because of the iniquity of those who had driven Pahoran from the judgment-seat, yea, in fine because of those who had rebelled against their country and also their God.

And it came to pass that Moroni took a small number of men, according to the desire of Pahoran, and gave Lehi and Teancum command over the remainder of his army, and took his march towards the land of Gideon.

And he did raise the standard of liberty in whatsoever place he did enter, and gained whatsoever force he could in all his march towards the land of Gideon.

And it came to pass that thousands did flock unto his standard, and did take up their swords in the defence of their freedom, that they might not come into bondage.

And thus, when Moroni had gathered together whatsoever men he could in all his march, he came to the land of Gideon; and uniting his forces with those of Pahoran they became exceedingly strong, even stronger than the men of Pachus, who was the king of those dissenters who had driven the freemen out of the land of Zarahemla and had taken possession of the land.

And it came to pass that Moroni and Pahoran went down with their armies into the land of Zarahemla, and went forth against the city, and did meet the men of Pachus, insomuch that they did come to battle.

And behold, Pachus was slain and his men were taken prisoners, and Pahoran was restored to his judgment-seat.

9 பச்சூஸின் மனுஷரும், பிடிபட்டு சிறையினுள்
போடப்பட்டிருந்த ராஜ மனுஷரும், சட்டப்படி விசா-
ரிக்கப்பட்டார்கள். அவர்கள் சட்டத்தின்படியே மர-
ணத்திற்குள்ளாக்கப்பட்டார்கள்; ஆம், அந்த பச்சூ-
ஸின் மனுஷரும், அந்த ராஜ மனுஷரும், தங்கள்
தேசத்தைத் தற்காப்பதற்காக தங்கள் ஆயுதங்க-
ளை உயர்த்தாமல், அதற்கு விரோதமாக யுத்தம்
பண்ணின எவரும் மரணத்திற்குள்ளாக்கப்பட்-
டார்கள்.

And the men of Pachus received their trial, according to the law, and also those king-men who had been taken and cast into prison; and they were executed according to the law; yea, those men of Pachus and those king-men, whosoever would not take up arms in the defence of their country, but would fight against it, were put to death.

10 இப்படியாக தங்கள் தேசத்தின் பாதுகாப்பிற்காக,
இந்த சட்டம் தீவிரமாய்க் கைக்கொள்ளப்பட
வேண்டியது அவசியமாயிற்று. ஆம், தங்கள் சுதந்-
திரத்தை மறுப்பதாக கண்டுபிடிக்கப்பட்ட எவரும்
சட்டத்தின்படி கடுமையாய் மரணத்திற்குள்ளாக்-
கப்பட்டார்கள்.

And thus it became expedient that this law should be strictly observed for the safety of their country; yea, and whosoever was found denying their freedom was speedily executed according to the law.

11 இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல் நியாயா-
திபதிகளின் ஆளுகையின் முப்பதாவது வருஷ-
மும் முடிவுற்றது; மரோனியும் பகோரனும், சுதந்திர
நோக்கத்திற்கு உண்மையாயிராத யாவர் மேலும்
மரணத்தை வரப்பண்ணி, சாரகெம்லா தேசத்தில்
தங்கள் சொந்த ஜனங்களுக்குள்ளே சமாதானத்-
தை நிலைவரப்பண்ணினார்கள்.

And thus ended the thirtieth year of the reign of the judges over the people of Nephi; Moroni and Pahoran having restored peace to the land of Zarahemla, among their own people, having inflicted death upon all those who were not true to the cause of freedom.

12 அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மேல் நியா-
யாதிபதிகளின் ஆளுகையின் முப்பத்தொன்றாம்
வருஷ துவக்கத்திலே, மரோனி, தேசத்தின் அப்பகு-
தியைக் காப்பதில் ஏலமனுக்கு உதவிபுரிய, உடனே
ஆறாயிரம் மனுஷசேனை அனுப்பப்படவும், உண-
வுகள் அனுப்பப்படவும், பண்ணினான்.

And it came to pass in the commencement of the thirty and first year of the reign of the judges over the people of Nephi, Moroni immediately caused that provisions should be sent, and also an army of six thousand men should be sent unto Helaman, to assist him in preserving that part of the land.

13 லேகி மற்றும் தியான்கும் படைகளுக்கும் அவன்
போதுமான அளவு உணவோடு, ஆறாயிரம் மனுஷ
சேனை, அனுப்பப்படவும் பண்ணினான். அந்தப்-
படியே, லாமானியருக்கு விரோதமாய் தேசத்தைப்
பலப்படுத்தும்படியாய் இது செய்யப்பட்டது.

And he also caused that an army of six thousand men, with a sufficient quantity of food, should be sent to the armies of Lehi and Teancum. And it came to pass that this was done to fortify the land against the Lamanites.

14 அந்தப்படியே, மரோனியும் பகோரனும், சாரகெம்-
லா தேசத்தில் பெரும் படையை விட்டுவிட்டு, நேபி-
கா பட்டணத்தில் இருக்கும் லாமானியரை வீழ்த்த
தீர்மானித்தவர்களாய், தங்களோடு பெரும் படை-
யைக் கூட்டிக்கொண்டு, அந்த பட்டணத்திற்கு நே-
ராய் அணிவகுத்துப் போனார்கள்.

And it came to pass that Moroni and Pahoran, leaving a large body of men in the land of Zarahemla, took their march with a large body of men towards the land of Nephihah, being determined to overthrow the Lamanites in that city.

15 அந்தப்படியே, அவர்கள் தேசத்திற்கு நேராய்
அணிவகுத்துப்போகும்போதே, லாமானியரில்
அநேகம் மனுஷரைப் பிடித்து, அவர்களில் அநேக-
ரை வெட்டி, அவர்களுடைய உணவுகளையும்,
அவர்களின் யுத்தக் கருவிகளையும் எடுத்துக்
கொண்டார்கள்.

And it came to pass that as they were marching towards the land, they took a large body of men of the Lamanites, and slew many of them, and took their provisions and their weapons of war.

16 அந்தப்படியே, அவர்கள் அவர்களை பிடித்துக்-
கொண்ட பின்பு, நேபியர்களுக்கு விரோதமாய் இனி
ஒருபோதும் யுத்தக் கருவிகளை எடுக்கமாட்டோம்,
என்ற உடன்படிக்கையினுள் அவர்களைப் பிரவே-
சிக்கும்படியாகச் செய்தார்கள்.

And it came to pass after they had taken them, they caused them to enter into a covenant that they would no more take up their weapons of war against the Nephites.

17 அவர்கள் இந்த உடன்படிக்கையினுள் பிரவே-
சித்த பின்பு, அவர்கள் அம்மோனின் ஜனங்களோ-
டு வாசம் பண்ண அவர்களை அனுப்பினார்கள்,
கணக்கின்படி கொல்லப்படாதவர்கள் நாலாயிரம்
பேராயிருந்தார்கள்.

And when they had entered into this covenant they sent them to dwell with the people of Ammon, and they were in number about four thousand who had not been slain.

18 அந்தப்படியே, அவர்களை அனுப்பிவிட்ட பின்பு,
தங்கள் அணிவகுப்பை நேபிகா தேசத்திற்கு நே-
ராய்த் தொடர்ந்தார்கள். அந்தப்படியே, அவர்கள்
நேபிகா பட்டணத்திற்கு வந்தபோது, நேபிகா பட்ட-
ணத்தின் அருகேயுள்ள நேபிகா சமபூமியில் பாள-
யமிறங்கினார்கள்.

And it came to pass that when they had sent them away they pursued their march towards the land of Nephihah. And it came to pass that when they had come to the city of Nephihah, they did pitch their tents in the plains of Nephihah, which is near the city of Nephihah.

19 இப்பொழுது, சமபூமியில் தங்களுக்கு விரோத-
மாக லாமானியர் யுத்தம்பண்ண வெளியே வர-
வேண்டுமென்று, மரோனி வாஞ்சித்திருந்தான்.
ஆனால் லாமானியரோ அவர்களின் மிகுந்த தைரி-
யத்தை அறிந்து, அவர்களின் எண்ணிக்கையின்
மிகுதியைக் கண்டபடியினாலே, அவர்களுக்கு வி-
ரோதமாக வர அஞ்சினார்கள். ஆதலால் அந்த நா-
ளிலே அவர்கள் யுத்தத்திற்கு வரவில்லை.

Now Moroni was desirous that the Lamanites should come out to battle against them, upon the plains; but the Lamanites, knowing of their exceedingly great courage, and beholding the greatness of their numbers, therefore they durst not come out against them; therefore they did not come to battle in that day.

20 இரவு சூழ்ந்தபோதோ, மரோனி இரவின் இருளிலே-
போய், லாமானியர் தங்கள் சேனையோடு பட்ட-
ணத்தின் எப்பகுதியில் பாளையமிறங்கியிருக்கி-
றார்கள் என்று உளவுபார்க்க அலங்கத்தின்மேல்
ஏறினான்.

And when the night came, Moroni went forth in the darkness of the night, and came upon the top of the wall to spy out in what part of the city the Lamanites did camp with their army.

21 அந்தப்படியே, அவர்கள் நுழைவாயிலின் அருகே
கிழக்கேயிருந்தார்கள்; அவர்கள் யாவரும் தூங்கிக்
கொண்டிருந்தார்கள். இப்பொழுதும் மரோனி தன்
சேனைக்குத் திரும்பி, அலங்கத்தின் மேலிருந்து,
அலங்கத்தின் உட்பகுதி வரைக்குமாய், பெல-
முள்ள கயிறுகளையும், ஏணிகளையும் கீழே
தொங்கவிட, அவைகளைத் துரிதமாய் ஆயத்தப்ப-
டுத்தும்படிக் கட்டளையிட்டான்.

And it came to pass that they were on the east, by the entrance; and they were all asleep. And now Moroni returned to his army, and caused that they should prepare in haste strong cords and ladders, to be let down from the top of the wall into the inner part of the wall.

22 அந்தப்படியே, மரோனி தன் மனுஷர் அணிவகுத்-
து, அலங்கத்தின் மேல் ஏறி, லாமானியர் தங்கள் சே-
னைகளோடு பாளையமிறங்காத, ஆம், பட்டணத்-
தின் மேற்குப் பகுதியிலே இறங்கப் பண்ணினான்.

And it came to pass that Moroni caused that his men should march forth and come upon the top of the wall, and let themselves down into that part of the city, yea, even on the west, where the Lamanites did not camp with their armies.

23 அந்தப்படியே, அவர்கள் யாவரும் தங்களுடைய
பெலமான கயிறுகளாலும், தங்கள் ஏணிகளாலும்
இரவிலே பட்டணத்திற்குள் இறக்கி விடப்பட்டார்-
கள்; இப்படியாக காலை வந்தபோது, அவர்கள் யா-
வரும் பட்டணத்தின் மதில்களுக்குள்ளே இருந்-
தார்கள்.

And it came to pass that they were all let down into the city by night, by the means of their strong cords and their ladders; thus when the morning came they were all within the walls of the city.

24 இப்பொழுதும், லாமானியர் எழுந்து, மதில்களுக்-
குள்ளே மரோனியின் சேனைகள் இருப்பதைக்
கண்டபோது, அவர்கள் மிகவும் பயந்துபோய், நு-
ழைவாயில் வழியே வெளியே ஓடிப்போனார்கள்.

And now, when the Lamanites awoke and saw that the armies of Moroni were within the walls, they were affrighted exceedingly, insomuch that they did flee out by the pass.

25 இப்பொழுதும் மரோனி அவர்கள் தனக்கு முன்-
பாக ஓடுகிறதைக்கண்டபோது, தன் மனுஷர்
அவர்களுக்கு எதிராகப் போகும்படிச்செய்து, அநே-
கரை வெட்டி, இன்னும் அநேகரைச் சூழ்ந்து, அவர்-
களைக் கைதிகளாகப் பிடிக்கச் செய்தான்; அவர்க-
ளில் மீதியானோர் கடற்கரை எல்லைகளில்
அமைந்த மரோனியின் தேசத்திற்குள் ஓடிப்போ-
னார்கள்.

And now when Moroni saw that they were fleeing before him, he did cause that his men should march forth against them, and slew many, and surrounded many others, and took them prisoners; and the remainder of them fled into the land of Moroni, which was in the borders by the seashore.

26 இப்படியாக மரோனியும் பகோரனும் நேபிகாவின்
பட்டணத்தை ஒரு ஆத்துமா கூட இழப்பில்லாமல்
வசப்படுத்திக்கொண்டார்கள்; லாமானியரில்
அநேகர் கொல்லப்பட்டார்கள்.

Thus had Moroni and Pahoran obtained the possession of the city of Nephihah without the loss of one soul; and there were many of the Lamanites who were slain.

27 இப்பொழுது, அந்தப்படியே, கைதிகளாக இருந்த
லாமானியரில் அநேகர், அம்மோன் ஜனங்களோடு
சேர்ந்து, சுதந்திரவாளிகளாய் மாறும்படி விரும்பி-
னார்கள்.

Now it came to pass that many of the Lamanites that were prisoners were desirous to join the people of Ammon and become a free people.

28 அந்தப்படியே, வாஞ்சித்த அனைவருக்கும் அவர்-
கள் வாஞ்சித்தவைகளுக்கேற்ப அது அனுமதிக்-
கப்பட்டது.

And it came to pass that as many as were desirous, unto them it was granted according to their desires.

29 இப்படியாக, லாமானியரின் எல்லா கைதிகளும்
அம்மோன் ஜனத்தோடு சேர்ந்து, மிகவும் கடினமாய்
உழைக்கவும், நிலத்தைப் பண்படுத்தவும், எல்லா-
விதமான தானியங்களை வளர்க்கவும், எல்லா
வகையான மந்தைகளையும் கால்நடைகளையும்
வளர்க்கவும் துவங்கினார்கள்; இப்படியாக நேபி-
யர்கள் ஒரு பெரிய பாரத்திலிருந்து விடுவிக்கப்பட்-
டார்கள்; ஆம், அவர்கள் எல்லா லாமானிய கைதிக-
ளிடமிருந்து விடுவிக்கப்பட்டார்கள்.

Therefore, all the prisoners of the Lamanites did join the people of Ammon, and did begin to labor exceedingly, tilling the ground, raising all manner of grain, and flocks and herds of every kind; and thus were the Nephites relieved from a great burden; yea, insomuch that they were relieved from all the prisoners of the Lamanites.

30 இப்பொழுது, அந்தப்படியே, நேபிகா பட்டணத்-
தை மரோனி வசப்படுத்திய பிறகு, அநேக கைதிக-
ளைப் பிடித்ததினால், லாமானிய சேனை மிகவும்
குறைந்து போயிற்று, அவன் கைதிகளாகப் பிடி-
பட்டுப்போன அநேக நேபியர்களைத் திரும்பவும்
பெற்றதினிமித்தம், மரோனியின் சேனை மிகவும்
பெலப்பட்டது. ஆகவே நேபிகா தேசத்திலிருந்து
லேகியின் தேசத்திற்கு மரோனி போனான்.

Now it came to pass that Moroni, after he had obtained possession of the city of Nephihah, having taken many prisoners, which did reduce the armies of the Lamanites exceedingly, and having regained many of the Nephites who had been taken prisoners, which did strengthen the army of Moroni exceedingly; therefore Moroni went forth from the land of Nephihah to the land of Lehi.

31 அந்தப்படியே, மரோனி தங்களுக்கு விரோதமாய்
வருகிறதை லாமானியர் கண்டபோது, அவர்கள்
மறுபடியும் பயந்து, மரோனியின் சேனைக்கு முன்-
பாகப் பறந்தோடினார்கள்.

And it came to pass that when the Lamanites saw that Moroni was coming against them, they were again frightened and fled before the army of Moroni.

32 அந்தப்படியே, அவர்கள் லேகியாலும், தியான்கு-
மினாலும் சந்திக்கப்படும்வரை, அவர்களை மரோ-
னியும் அவன் சேனையும் பட்டணந்தோறும் துரத்-
தினார்கள்; லேகியினிடத்திலிருந்தும், தியான்குமி-
னிடத்திலிருந்தும் லாமானியர் பறந்தோடி, அவர்-
கள் மரோனியின் தேசத்திலே சேரும்வரை கடற்க-
ரை எல்லைகளில் வந்தார்கள்.

And it came to pass that Moroni and his army did pursue them from city to city, until they were met by Lehi and Teancum; and the Lamanites fled from Lehi and Teancum, even down upon the borders by the seashore, until they came to the land of Moroni.

33 லாமானிய சேனைகள் யாவும் ஒன்று திரளும்
வகையில், மரோனி தேசத்திலே ஒரே படையாய்
கூட்டிச் சேர்க்கப்பட்டன. இப்பொழுது லாமானிய
ராஜாவாகிய அம்மோரோனும் அவர்களுடனிருந்-
தான்.

And the armies of the Lamanites were all gathered together, insomuch that they were all in one body in the land of Moroni. Now Ammoron, the king of the Lamanites, was also with them.

34 அந்தப்படியே, மரோனி தேசத்தின் எல்லைக-
ளைச் சுற்றிலும், மரோனியும், லேகியும், தியான்கு-
மும் தங்கள் சேனைகளோடு பாளையமிறங்கியி-
ருந்ததால், தெற்கே அமைந்த வனாந்தர எல்லைக-
ளிலும், கிழக்கே அமைந்த வனாந்தர எல்லைகளி-
லும் லாமானியர் சூழப்பட்டிருந்தார்கள்.

And it came to pass that Moroni and Lehi and Teancum did encamp with their armies round about in the borders of the land of Moroni, insomuch that the Lamanites were encircled about in the borders by the wilderness on the south, and in the borders by the wilderness on the east.

35 அவர்கள் இப்படியாக இராத்தங்கினார்கள்.
ஏனெனில் இதோ, தியான்குமைத் தவிர நேபியர்க-
ளும், லாமானியரும், தங்களுடைய நெடுந்தூர
அணிவகுப்பின் நிமித்தம் களைத்துப்போனதால்,
இரவில் எந்த ஒரு உபாயத்தையும் நிர்ணயிக்கவில்-
லை. ஆனால் தியான்குமோ, அதிக போராட்டங்க-
ளுக்கும், இரத்தம் சிந்துதலுக்கும், மிகுந்த பஞ்சத்-
திற்கும் வழிவகுத்த, தங்களுக்கும் லாமானியருக்கு-
மிடையே நடந்து வருகிற, இந்தப் பெரிதும் நெடுநா-
ளானதுமான யுத்தத்திற்கு, அம்மோரோனும் அவன்
சகோதரனாகிய அமலேக்கியாவுமே காரணமான-
வர்கள் என்று எண்ணி, அம்மோரான்மேல் மிகவும்
கோபமாயிருந்தான்.

And thus they did encamp for the night. For behold, the Nephites and the Lamanites also were weary because of the greatness of the march; therefore they did not resolve upon any stratagem in the night-time, save it were Teancum; for he was exceedingly angry with Ammoron, insomuch that he considered that Ammoron, and Amalickiah his brother, had been the cause of this great and lasting war between them and the Lamanites, which had been the cause of so much war and bloodshed, yea, and so much famine.

36 அந்தப்படியே, தியான்கும் தன் கோபத்திலே லா-
மானியப் பாளையத்தில் போய், பட்டணத்தின்
அலங்கத்தினுள் இறங்கினான். அவன் கயிறோடு
அங்கும் இங்குமாய் திரிந்து, ராஜாவைக் கண்டுபி-
டித்தான். அவன்மீது ஒரு ஈட்டியை எறிந்தான், அது
அவன் இருதயத்தினருகே ஊடுருவிச் சென்றது.
ஆனால் இதோ, ராஜா தான் சாகும் முன்பு தன் வே-
லையாட்களை எழுப்பி விட்டதினால், அவர்கள்
தியான்குமைத் துரத்திவந்து வெட்டிப் போட்டார்-
கள்.

And it came to pass that Teancum in his anger did go forth into the camp of the Lamanites, and did let himself down over the walls of the city. And he went forth with a cord, from place to place, insomuch that he did find the king; and he did cast a javelin at him, which did pierce him near the heart. But behold, the king did awaken his servants before he died, insomuch that they did pursue Teancum, and slew him.

37 இப்பொழுது, அந்தப்படியே, தியான்கும் செத்துப்-
போனான் என்று லேகியும், மரோனியும் அறிந்த-
போது, மிகவும் துக்கித்தார்கள்; ஏனெனில், இதோ,
அவன் தன் தேசத்திற்காக அதிக தைரியத்தோடு
போராடின மனுஷன், ஆம், சுதந்திரத்திற்கு உற்ற
நண்பன். அவன் மிகக் கொடிய பல உபத்திரவங்க-
ளை சகித்தவன். ஆனால் இதோ, அவன் மரித்து பூ-
லோகத்தார் போகும் வழியே போய் விட்டான்.

Now it came to pass that when Lehi and Moroni knew that Teancum was dead they were exceedingly sorrowful; for behold, he had been a man who had fought valiantly for his country, yea, a true friend to liberty; and he had suffered very many exceedingly sore afflictions. But behold, he was dead, and had gone the way of all the earth.

38 இப்பொழுது, அந்தப்படியே, மரோனி மறுநாள்
அணிவகுத்துப்போய், லாமானியர்மேல் விழுந்து,
அப்படியே அதிக சங்காரம் உண்டாகும்படி அவர்க-
ளை வெட்டிப்போட்டார்கள்; அவர்களை தேசத்தி-
லிருந்து துரத்தினார்கள்; அச்சமயத்திலே அவர்கள்
நேபியருக்கு விரோதமாய் வராதபடிக்கு, அவர்கள்
ஓடிப்போனார்கள்,

Now it came to pass that Moroni marched forth on the morrow, and came upon the Lamanites, insomuch that they did slay them with a great slaughter; and they did drive them out of the land; and they did flee, even that they did not return at that time against the Nephites.

39 இப்படியாக நேபியின் ஜனங்களின்மேல் நியாயா-
திபதிகளின் முப்பத்தொன்றாம் வருஷ ஆளுகை-
யும் முடிவுற்றது; இப்படியாக அவர்கள் அநேக வரு-
ஷங்களாக யுத்தங்களையும், இரத்தம் சிந்துதல்க-
ளையும், பஞ்சங்களையும், உபத்திரவங்களையும்
கொண்டிருந்தார்கள்.

And thus ended the thirty and first year of the reign of the judges over the people of Nephi; and thus they had had wars, and bloodsheds, and famine, and affliction, for the space of many years.

40 நேபியின் ஜனங்களுக்குள்ளே கொலைகளும்,
பிணக்குகளும், பிரிவினைகளும், எல்லாவிதமான
அக்கிரமமும் இருந்தன; இருப்பினும் நீதிமான்க-
ளுக்காக, நீதிமான்களின் ஜெபங்களினாலே,
அவர்கள் தப்புவிக்கப்பட்டார்கள்.

And there had been murders, and contentions, and dissensions, and all manner of iniquity among the people of Nephi; nevertheless for the righteous' sake, yea, because of the prayers of the righteous, they were spared.

41 ஆனால் இதோ, நேபியர்களுக்கும், லாமானியர்க-
ளுக்கும் இடையேயான யுத்த காலம் மிகவும் நீண்டி-
ருந்ததினாலே அநேகர் கடினப்பட்டுப்போனார்கள்,
அநேகர் தங்கள் உபத்திரவங்களினிமித்தம்,மென்-
மையானவர்களாகி, தாழ்மையின் ஆழங்களிலே,
தேவனுக்கு முன்பாகத் தங்களைத் தாழ்த்தினார்-
கள்.

But behold, because of the exceedingly great length of the war between the Nephites and the Lamanites many had become hardened, because of the exceedingly great length of the war; and many were softened because of their afflictions, insomuch that they did humble themselves before God, even in the depth of humility.

42 அந்தப்படியே, லாமானியர் சுலபமாய் நுழைய
ஏதுவான தேசத்தின் பகுதிகளைப் போதுமான
அளவு பெலப்படுத்தும்வரைக்குமாய், அவைக-
ளில் அரண்களை எழுப்பிய பின்பு, சாரகெம்லா
பட்டணத்திற்கு மரோனி திரும்பிப் போனான்; ஏல-
மனும் தன் சுதந்திர பூமிக்குத் திரும்பினான்; அங்கு
மறுபடியும் ஒருமுறை நேபியின் ஜனங்களுக்குள்-
ளே சமாதானம் நிலைவரப்பட்டது.

And it came to pass that after Moroni had fortified those parts of the land which were most exposed to the Lamanites, until they were sufficiently strong, he returned to the city of Zarahemla; and also Helaman returned to the place of his inheritance; and there was once more peace established among the people of Nephi.

43 மரோனி தன் சேனைகளின் பொறுப்பை மரோ-
னிகா என்ற பெயருடைய தனது குமாரனின் கைக-
ளில் ஒப்படைத்தான்; தன் மீதியான நாட்களைச்
சமாதானமாய்க் கழிக்க தனது சொந்த வீட்டுக்குத்
திரும்பினான்.

And Moroni yielded up the command of his armies into the hands of his son, whose name was Moronihah; and he retired to his own house that he might spend the remainder of his days in peace.

44 பகோரன் தன் நியாயாசனத்திற்குத் திரும்பிப்
போனான்; ஏலமன் தேவ வார்த்தையை ஜனங்க-
ளுக்குப் போதிக்கும் பொறுப்பை மறுபடியும் தன்-
மேல் எடுத்துக்கொண்டான்; அநேக யுத்தங்களும்
பிணக்குகளும் சம்பவித்ததினால், சபையில் மறுப-
டியும் ஒழுங்கு முறைகளை நிர்ணயிக்கவேண்டிய-
து அவசியமாயிற்று.

And Pahoran did return to his judgment-seat; and Helaman did take upon him again to preach unto the people the word of God; for because of so many wars and contentions it had become expedient that a regulation should be made again in the church.

45 ஆதலால், அநேக ஜனங்கள் தங்கள் துன்மார்க்-
கத்தைக் குறித்து உணரும்படியாகவும், அதினிமித்-
தம் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தே-
வனாகிய தங்கள் கர்த்தருக்காக ஞானஸ்நானம்
பெறும்படியாகவும், ஏலமனும் அவன் சகோதரரும்
அதிக வல்லமையோடு தேவ வார்த்தையை அறி-
வித்தார்கள்.

Therefore, Helaman and his brethren went forth, and did declare the word of God with much power unto the convincing of many people of their wickedness, which did cause them to repent of their sins and to be baptized unto the Lord their God.

46 அந்தப்படியே, அவர்கள் தேசமெங்கும் தேவ
சபையை மறுபடியும் ஸ்தாபித்தார்கள்.

And it came to pass that they did establish again the church of God, throughout all the land.

47 ஆம், சட்டத்தைக் குறித்த முறைமைகள் ஏற்படுத்-
தப்பட்டன. அவர்களுடைய நியாயாதிபதிகளும்
பிரதான நியாயாதிபதிகளும் தெரிந்து கொள்ளப்-
பட்டனர்.

Yea, and regulations were made concerning the law. And their judges, and their chief judges were chosen.

48 நேபியின் ஜனங்கள் தேசத்தில் மறுபடியும் விருத்-
தியடையத் தொடங்கினார்கள். அவர்கள் பலுகிப்-
பெருகி தேசத்தில் மறுபடியும் அதிக பெலன் பெறத்-
துவங்கினார்கள். அவர்கள் மிகவும் ஐஸ்வரிய-
வான்களாகத் துவங்கினார்கள்.

And the people of Nephi began to prosper again in the land, and began to multiply and to wax exceedingly strong again in the land. And they began to grow exceedingly rich.

49 ஆனாலும் தங்களுடைய ஐஸ்வரியங்களினிமித்-
தமும், அல்லது தங்கள் பெலத்தினிமித்தமும், அல்-
லது தங்களின் விருத்தியினிமித்தமும், அவர்கள்
தங்கள் கண்களின் மேட்டிமையால் உயர்த்தப்பட-
வில்லை; அவர்கள் தேவனாகிய தங்கள் கர்த்தரை
நினைவுகூர்வதில் தாமதிக்கவுமில்லை. ஆனால்
அவர்கள் அவருக்கு முன்பாகத் தங்களை மிகவும்
தாழ்த்தினார்கள்.

But notwithstanding their riches, or their strength, or their prosperity, they were not lifted up in the pride of their eyes; neither were they slow to remember the Lord their God; but they did humble themselves exceedingly before him.

50 ஆம், அவர்கள் கர்த்தர் தங்களுக்குச் செய்த மகத்-
துவமான காரியங்களான, மரணத்திலிருந்தும்,
கட்டுகளிலிருந்தும், சிறைகளிலிருந்தும், எல்லா-
விதமான உபத்திரவங்களிலிருந்தும் விடுவித்த-
தையும், தங்கள் சத்துருக்களின் கைகளுக்குத் தங்-
களை தப்புவித்ததையும் நினைவுகூர்ந்தார்கள்.

Yea, they did remember how great things the Lord had done for them, that he had delivered them from death, and from bonds, and from prisons, and from all manner of afflictions, and he had delivered them out of the hands of their enemies.

51 அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில்
இடைவிடாமல் தொடர்ந்து ஜெபித்ததால், அவர்கள்
தேசத்தில் பெலப்பட்டு விருத்தியடையும்படியாக,
கர்த்தர் தம்முடைய வார்த்தைக்கேற்ப அவர்களை
ஆசீர்வதித்தார்.

And they did pray unto the Lord their God continually, insomuch that the Lord did bless them, according to his word, so that they did wax strong and prosper in the land.

52 அந்தப்படியே, இவைகள் யாவும் சம்பவித்தன.
நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின்
ஆளுகையின் முப்பத்தைந்தாவது வருஷத்தில்
ஏலமன் மரணமடைந்தான்.

And it came to pass that all these things were done. And Helaman died, in the thirty and fifth year of the reign of the judges over the people of Nephi.

# ஆல்மா 63

1 அந்தப்படியே, நேபியின் ஜனங்கள் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் முப்பத்தாறாம் வருஷ துவக்கத்திலே, சிப்லோன், ஆல்மாவினால் ஏலமனுக்குக் கொடுக்கப்பட்ட அந்த பரிசுத்தப் பொருட்களைப் பெற்றுக்கொண்டான்.

2 அவன் நியாயவானாயிருந்து அவன் தேவனுக்கு முன்பாக தலைநிமிர்ந்து நடந்தான்; தன்னுடைய தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள, அவனும் அவன் சகோதரனும் தொடர்ந்து நன்மையைச் செய்ய முயற்சித்து வந்தார்கள்.

3 அந்தப்படியே, மரோனியும் மரித்துப் போனான். இப்படியாக நியாயாதிபதிகளின் ஆளுகையின் முப்பத்தாறாம் வருஷமும் முடிவுற்றது.

4 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் முப்பத்தேழாம் வருஷத்தில், ஒரு பெரும் கூட்டத்தினர், ஆம் ஐந்தாயிரத்து நானூறு மனுஷர் தங்கள் மனைவிகளுடனும், தங்கள் பிள்ளைகளுடனும், சாரகெம்லா தேசத்திலிருந்து புறப்பட்டு, வடக்கேயுள்ள தேசத்திற்குப் போனார்கள்.

5 அந்தப்படியே, ஆகோத் மிகவும் ஆர்வமுள்ள மனுஷனாயிருந்தபடியால், அவன் போய், பாழ்க்கடிப்பு தேசத்திற்கு அருகேயுள்ள உதாரத்துவஸ்தலத்தின் எல்லைகளில் தனக்கென்று ஒரு மிகப்பெரிய கப்பலைக் கட்டினான். அதை வடதேசத்திற்குச் செல்லும் இடுக்கமான நீண்டிருக்கிற நிலத்தின் பக்கமாய் உள்ள மேற்கு சமுத்திரத்தினுள்ளே செலுத்தினான்.

6 இதோ, அநேக நேபியர் அதனுள் பிரவேசித்து, அதிக உணவுப் பொருட்களையும், அநேக ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டனர். அவர்கள் வடக்கு திசை மார்க்கமாய் பயணம் சென்றார்கள். இப்படியாக முப்பதேழாவது வருஷமும் முடிவுற்றது.

7 முப்பத்தெட்டாம் வருஷத்தில், இம்மனுஷன் மற்ற கப்பல்களைக் கட்டினான். முதல் கப்பலும் திரும்ப வந்தது, இன்னும் அநேக ஜனங்கள் அதில் ஏறிக்கொண்டார்கள்; அவர்கள் அதிக உணவுப்பொருட்களையும் எடுத்துக் கொண்டு வடதேசத்திற்கு மறுபடியுமாய் பயணப்பட்டார்கள்.

8 அந்தப்படியே, அதற்குப் பின்பு அவர்களைப்பற்றி கேள்விப்படவேயில்லை. அவர்கள் சமுத்திரத்தின் ஆழங்களிலே அமிழ்ந்து போனார்கள் என்று எண்ணுகிறோம், அந்தப்படியே, மற்றொரு கப்பலும் புறப்பட்டுப்போனது; அதுவும் எங்கு போனதென்று அறியோம்.

# Alma 63

And it came to pass in the commencement of the thirty and sixth year of the reign of the judges over the people of Nephi, that Shiblon took possession of those sacred things which had been delivered unto Helaman by Alma.

And he was a just man, and he did walk uprightly before God; and he did observe to do good continually, to keep the commandments of the Lord his God; and also did his brother.

And it came to pass that Moroni died also. And thus ended the thirty and sixth year of the reign of the judges.

And it came to pass that in the thirty and seventh year of the reign of the judges, there was a large company of men, even to the amount of five thousand and four hundred men, with their wives and their children, departed out of the land of Zarahemla into the land which was northward.

And it came to pass that Hagoth, he being an exceedingly curious man, therefore he went forth and built him an exceedingly large ship, on the borders of the land Bountiful, by the land Desolation, and launched it forth into the west sea, by the narrow neck which led into the land northward.

And behold, there were many of the Nephites who did enter therein and did sail forth with much provisions, and also many women and children; and they took their course northward. And thus ended the thirty and seventh year.

And in the thirty and eighth year, this man built other ships. And the first ship did also return, and many more people did enter into it; and they also took much provisions, and set out again to the land northward.

And it came to pass that they were never heard of more. And we suppose that they were drowned in the depths of the sea. And it came to pass that one other ship also did sail forth; and whither she did go we know not.

9 அந்தப்படியே, இவ்வருஷத்தில் அநேக ஜனங்கள்
வடதேசத்திற்குப் புறப்பட்டுப் போனார்கள். இப்படி-
யாக முப்பத்தெட்டாம் வருஷமும் முடிவுற்றது.
10 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் முப்பத்தொன்பதாவது வருஷத்தில், சிப்லோ-
னும் மரித்துப் போனான். வடக்கேயுள்ள தேசத்திற்-
குப் போன ஜனங்களுக்கு உணவை எடுத்துச் செல்-
லும்படியாக கொரியாந்தன் கப்பலில் அத்தேசத்-
திற்குப் புறப்பட்டுப்போனான்.
11 ஆதலால், சிப்லோன் தான் மரிப்பதற்கு முன்பாக
ஏலமனின் குமாரனாகிய ஏலமன் என்ற தன் தகப்-
பனின் நாமத்தின்படியே அழைக்கப்பட்டவனுக்கு,
இந்தப் பரிசுத்த பொருட்களை ஒப்படைப்பது அவ-
சியமாயிற்று.
12 இப்பொழுதும் இதோ, வெளிப்படுத்தப்படக்கூடா-
து, என்று ஆல்மாவினால் கட்டளையிடப்பட்ட
அந்த பகுதிகளைத் தவிர, ஏலமன் வசத்திலிருந்த
அந்த எல்லா பொறிக்கப்பட்ட வார்த்தைகளும்
எழுதப்பட்டு, தேசமுழுவதிலுமுள்ள மனுபுத்திர-
ருக்கு அனுப்பப்பட்டது.
13 இருப்பினும் இக்காரியங்கள் பரிசுத்தமாய் வைக்-
கப்பட்டு, ஒரு தலைமுறையிலிருந்து மற்றொன்-
றுக்கு கையளிக்கப்படவேண்டும்; ஆதலால் சிப்-
லோனின் மரணத்திற்கு முன்பாகவே, இவை இந்த
வருஷத்தில் ஏலமனிடத்தில் ஒப்படைக்கப்பட்டன.
14 அந்தப்படியே, இந்த வருஷத்திலும் லாமானிய-
ருக்குள்ளே சில பிரிவினைக்காரர் இருந்தார்கள்;
அவர்கள் நேபியர்களுக்கு விரோதமாய் கோபம்-
கொள்ளும்படி மறுபடியும் தூண்டிவிடப்பட்டார்-
கள்.
15 அதே வருஷத்திலே, அவர்கள் மரோனிகாவின்
ஜனங்களுக்கு, அல்லது மரோனிகாவின் சேனைக்-
கு விரோதமாய் யுத்தம்பண்ண, எண்ணிறைந்த சே-
னையோடு வந்தார்கள், அதில் அவர்கள் அடிக்கப்-
பட்டு, அதிக இழப்பை அனுபவித்து, தங்களுடைய
சொந்த தேசங்களுக்கே திரும்ப துரத்தப்பட்டார்கள்.
16 இப்படியாக, நேபியின் ஜனத்தின்மேல் நியாயாதி-
பதிகளின் ஆளுகையின் முப்பத்தொன்பதாம்
வருஷமும் முடிவுற்றது.
17 இப்படியாக ஆல்மா அவனுடைய குமாரனான
ஏலமன் மற்றும் அவனுடைய குமாரனான சிப்-
லோன் ஆகியோரது விவரம் முடிவுற்றது.

And it came to pass that in this year there were many people who went forth into the land northward. And thus ended the thirty and eighth year.

And it came to pass in the thirty and ninth year of the reign of the judges, Shiblon died also, and Corianton had gone forth to the land northward in a ship, to carry forth provisions unto the people who had gone forth into that land.

Therefore it became expedient for Shiblon to confer those sacred things, before his death, upon the son of Helaman, who was called Helaman, being called after the name of his father.

Now behold, all those engravings which were in the possession of Helaman were written and sent forth among the children of men throughout all the land, save it were those parts which had been commanded by Alma should not go forth.

Nevertheless, these things were to be kept sacred, and handed down from one generation to another; therefore, in this year, they had been conferred upon Helaman, before the death of Shiblon.

And it came to pass also in this year that there were some dissenters who had gone forth unto the Lamanites; and they were stirred up again to anger against the Nephites.

And also in this same year they came down with a numerous army to war against the people of Moronihah, or against the army of Moronihah, in the which they were beaten and driven back again to their own lands, suffering great loss.

And thus ended the thirty and ninth year of the reign of the judges over the people of Nephi.

And thus ended the account of Alma, and Helaman his son, and also Shiblon, who was his son.

# ஏலமனின் புஸ்தகம்

*நேபியர்களைப்பற்றிய ஒரு விவரம். அவர்களுடைய யுத்தங்கள், பிணக்குகள், பிரிவினைகள். ஏலமனின் குமாரனாகிய ஏலமனின் பதிவேட்டின்படியும், அவனுடைய குமாரர்களின் பதிவேட்டின்படியேயும், கிறிஸ்துவின் வருகையின் முன்னால் இருந்த அநேக பரிசுத்த தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்களும், கிறிஸ்துவின் வருகை வரைக்குமாய். அநேக லாமானியர் மனமாறுதல் – அவர்களுடைய மனமாற்றத்தைப்பற்றிய ஓர் விவரம். லாமானியர்களின் நீதியின் ஓர் விவரம், ஏலமன் புஸ்தகம் என்று அழைக்கப்படுகிறதும், மற்றும் பிறவும் ஆகிய, ஏலமன் மற்றும் அவனுடைய குமாரர்களின் பதிவேட்டின்படியே கிறிஸ்துவின் வருகையின் வரைக்கும் லாமானியரின் நீதியையும், நேபியரின் துன்மார்க்கத்தையும், அருவருப்பையும், பற்றிய ஓர் விவரம்.*

## ஏலமன் 1

1 இப்பொழுதும் இதோ, அந்தப்படியே, நேபி ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் நாற்பதாவது வருஷ ஆளுகையின் துவக்கத்திலே, நேபியர்களின் ஜனங்களுக்குள்ளே ஓர் கடுமையான பிரச்சனை ஏற்படத் தொடங்கியது.

2 ஏனெனில் இதோ, பகோரன் மரித்து, பூலோகத்தார் போகிற வழியே போனான். ஆதலால் பகோரனின் குமாரர்களாகிய சகோதரர்களுள் யார் நியாயாசனத்தைப் பெறுவது, என்ற தீவிர பிணக்கு எழுந்தது.

3 இப்பொழுது, நியாயாசனத்திற்காகப் போராடி, ஜனங்களையும் போராடச் செய்தவர்களின் பெயர்கள்: பகோரன், பான்சீ, மற்றும் பக்குமெனி என்பவைகளே.

4 பகோரனின் குமாரர்கள் இவர்கள் மாத்திரமல்ல (ஏனெனில் அவனுக்கு அநேகர் இருந்தார்கள்), ஆனால் நியாயாசனத்திற்காக போராடியவர்கள் இவர்களே; ஆதலால் அவர்கள் ஜனங்களுக்குள்ளே மூன்று பிரிவுகளை உண்டுபண்ணினார்கள்.

5 ஆயினும், அந்தப்படியே, பகோரன், ஜனங்களின் சம்மதத்துடன் நேபி ஜனங்களின் மேல் பிரதான நியாயாதிபதியாகவும், விசாரணைக்காரனாகவும் நியமிக்கப்பட்டான்.

6 அந்தப்படியே, தான் நியாயாசனத்தைப் பெற முடியாது, என பக்குமெனி கண்டபோது, அவன் ஜனங்களின் சம்மதத்தோடு இணைந்து கொண்டான்.

# The Book of Helaman

*An account of the Nephites. Their wars and contentions, and their dissensions. And also the prophecies of many holy prophets, before the coming of Christ, according to the records of Helaman, who was the son of Helaman, and also according to the records of his sons, even down to the coming of Christ. And also many of the Lamanites are converted. An account of their conversion. An account of the righteousness of the Lamanites, and the wickedness and abominations of the Nephites, according to the record of Helaman and his sons, even down to the coming of Christ, which is called the book of Helaman, and so forth.*

## Helaman 1

And now behold, it came to pass in the commencement of the fortieth year of the reign of the judges over the people of Nephi, there began to be a serious difficulty among the people of the Nephites.

For behold, Pahoran had died, and gone the way of all the earth; therefore there began to be a serious contention concerning who should have the judgment-seat among the brethren, who were the sons of Pahoran.

Now these are their names who did contend for the judgment-seat, who did also cause the people to contend: Pahoran, Paanchi, and Pacumeni.

Now these are not all the sons of Pahoran (for he had many), but these are they who did contend for the judgment-seat; therefore, they did cause three divisions among the people.

Nevertheless, it came to pass that Pahoran was appointed by the voice of the people to be chief judge and a governor over the people of Nephi.

And it came to pass that Pacumeni, when he saw that he could not obtain the judgment-seat, he did unite with the voice of the people.

7 ஆனாலும் இதோ, பான்சீயும் அவன் தங்கள் வி-
சாரணைக்காரனாய் வரவேண்டுமென்று விரும்-
பின அந்த ஜனங்களின் பிரிவினரும், மிகுந்த கோ-
பம் கொண்டார்கள்; ஆகவே அவர்களை தங்கள்
சகோதரர்களுக்கு விரோதமாய்க் கலகம்பண்ண
எழுப்பிவிட, அந்த ஜனங்களிடத்தில் முகஸ்துதி-
யாய்ப் பேசவிருந்தான்.

But behold, Paanchi, and that part of the people that were desirous that he should be their governor, was exceedingly wroth; therefore, he was about to flatter away those people to rise up in rebellion against their brethren.

8 அந்தப்படியே, அவன் இப்படிச் செய்யவிருந்த-
போது, இதோ, அவன் பிடிக்கப்பட்டு, ஜனங்களின்
சம்மதத்துடன் விசாரிக்கப்பட்டு மரணத்திற்கேது-
வாய் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான்;
ஏனெனில் அவன் கலகம்பண்ணும்படி எழுந்து,
ஜனங்களுடைய சுதந்திரத்தை அழிக்க வகை தேடி-
னான்.

And it came to pass as he was about to do this, behold, he was taken, and was tried according to the voice of the people, and condemned unto death; for he had raised up in rebellion and sought to destroy the liberty of the people.

9 இப்பொழுது அவன் விசாரணைக்காரனாக வர-
வேண்டுமென்று விரும்பின அந்த ஜனங்கள்,
அவன் மரணத்திற்கேதுவாய் ஆக்கினைக்குள்ளா-
கத் தீர்க்கப்பட்டதைக் கண்டபோது, அவர்கள் கோ-
பப்பட்டு, இதோ, பகோரனின் நியாயாசனம் வரைக்-
குமாய் கிஸ்குமன் என்று பெயருள்ள ஒருவனை
அனுப்பினார்கள். அவன் பகோரனை நியாயா-
சனத்திலே உட்கார்ந்திருந்தபோதே கொன்று போட்-
டான்.

Now when those people who were desirous that he should be their governor saw that he was condemned unto death, therefore they were angry, and behold, they sent forth one Kishkumen, even to the judgment-seat of Pahoran, and murdered Pahoran as he sat upon the judgment-seat.

10 அவன் பகோரனின் வேலையாட்களால் தொட-
ரப்பட்டான்; ஆனால் இதோ, கிஸ்குமன் அதிவேக-
மாய் ஓடினதாலே, அவனை முந்த ஒரு மனுஷனா-
லும் முடியவில்லை.

And he was pursued by the servants of Pahoran; but behold, so speedy was the flight of Kishkumen that no man could overtake him.

11 அவன் தன்னை அனுப்பியவர்களிடத்திற்குப்
போனான். பகோரனை கிஸ்குமன் கொன்றான்
என்று, ஒருவருக்கும் சொல்லக்கூடாதென்று,
அவர்கள் யாவரும் தங்களின் என்றுமுள்ள சி-
ருஷ்டிகரின் மேல் ஆணையிட்டு உடன்படிக்கையி-
னுள் பிரவேசித்தார்கள்.

And he went unto those that sent him, and they all entered into a covenant, yea, swearing by their everlasting Maker, that they would tell no man that Kishkumen had murdered Pahoran.

12 இப்படியாக, பகோரனை கிஸ்குமன் கொன்றபோ-
து அவன் மாறுவேடத்தில் இருந்ததினால், நேபி-
யின் ஜனங்களுக்குள்ளே அவன் அறியப்படவில்-
லை. அவர்களில் எல்லோரும் கண்டுபிடிக்க முடி-
யாத விதமாய், கிஸ்குமனும், அவனோடுகூட ஒப்-
பந்தம் செய்துகொண்ட, அவனது கூட்டத்தாரும்
ஜனங்களோடு கலந்துவிட்டனர்; ஆனால் கண்டுபி-
டிக்கப்பட்ட யாவரும் மரணத்திற்கேதுவாய் ஆக்கி-
னைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டார்கள்.

Therefore, Kishkumen was not known among the people of Nephi, for he was in disguise at the time that he murdered Pahoran. And Kishkumen and his band, who had covenanted with him, did mingle themselves among the people, in a manner that they all could not be found; but as many as were found were condemned unto death.

13 இப்பொழுது, இதோ, தன் சகோதரன் பகோரனின்
ஸ்தானத்தில் ஜனங்களை ஆளும்படியாக, பிர-
தான நியாயாதிபதியாயும், விசாரணைக்காரனா-
யும் ஜனங்களின் சம்மதத்தின்படியே பக்குமெனி நி-
யமிக்கப்பட்டான்; அது அவனுடைய உரிமையின்-
படியாயிருந்தது. இவை யாவும் நியாயாதிபதிக-
ளின் ஆளுகையின் நாற்பதாவது வருஷத்தில்
நடந்தது. அதுவும் முடிவுற்றது.

And now behold, Pacumeni was appointed, according to the voice of the people, to be a chief judge and a governor over the people, to reign in the stead of his brother Pahoran; and it was according to his right. And all this was done in the fortieth year of the reign of the judges; and it had an end.

14 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் நாற்பத்தோராம் வருஷத்தில், லாமானியர்
எண்ணிறைந்த மனுஷ சேனையைத் திரட்டி,
அவர்களை பட்டயங்களினாலும் உடைவாள்களி-
னாலும், அம்புகளாலும், விற்களாலும், தலைக்கவ-
சங்களாலும், மார்புக் கவசங்களாலும், சகலவித
கேடயங்களாலும் ஆயுதந்தரிக்கப் பண்ணினார்-
கள்.

And it came to pass in the forty and first year of the reign of the judges, that the Lamanites had gathered together an innumerable army of men, and armed them with swords, and with cimeters and with bows, and with arrows, and with head-plates, and with breastplates, and with all manner of shields of every kind.

15 அவர்கள் நேபியர்களுக்கு விரோதமாய் மறுபடி-
யும் யுத்தம் பண்ண வந்தார்கள். அவர்கள் கொரி-
யாந்தமர் என்ற நாமமுடைய மனுஷனால் நடத்தப்-
பட்டார்கள். அவன் சாரகெம்லாவின் சந்ததி.
அவன் நேபியருக்குள்ளிருந்த கலகக்காரன்.
அவன் பெரியவனாயும், பலசாலியாயுமிருந்தான்.

And they came down again that they might pitch battle against the Nephites. And they were led by a man whose name was Coriantumr; and he was a descendant of Zarahemla; and he was a dissenter from among the Nephites; and he was a large and a mighty man.

16 ஆதலால், கொரியாந்தமர் பராக்கிரமசாலியாய்
இருந்தபடியால், அவனுடைய பெலத்தினாலும்,
அவனுடைய மிகுந்த ஞானத்தினாலும், நேபியர்க-
ளுக்கு விரோதமாய் நிற்கமுடியும் என்றும்,
அவனை அனுப்பினால், அவன் நேபியர்கள் மேல்
ஜெயம்பெற முடியுமென்றும், துபாலோத்து என்-
னும் பெயருடைய அம்மோரனின் குமாரனான லா-
மானிய ராஜா நினைத்தான்.

Therefore, the king of the Lamanites, whose name was Tubaloth, who was the son of Ammoron, supposing that Coriantumr, being a mighty man, could stand against the Nephites, with his strength and also with his great wisdom, insomuch that by sending him forth he should gain power over the Nephites—

17 ஆதலால் அவன் அவர்களை கோபம் அடையத்
தூண்டிவிட்டு, தன் சேனைகளை ஒன்று திரட்டி,
அவைகளின் தலைவனாக கொரியாந்தமரை நிய-
மித்து, அவர்கள் நேபியர்களுக்கு விரோதமாய் யுத்-
தம் பண்ண சாரகெம்லா தேசத்திற்குப் போகப்பண்-
ணினான்.

Therefore he did stir them up to anger, and he did gather together his armies, and he did appoint Coriantumr to be their leader, and did cause that they should march down to the land of Zarahemla to battle against the Nephites.

18 அந்தப்படியே, மிகுந்த பிணக்கினிமித்தமும், ரா-
ஜாங்கத்திலிருந்த கஷ்டத்தினிமித்தமும், அவர்கள்
சாரகெம்லா தேசத்தில் போதுமான காவற்காரர்க-
ளை வைக்கவில்லை; ஏனெனில் அந்த மாநகரமா-
கிய சாரகெம்லாவைத் தாக்க லாமானியர் தங்க-
ளின் தேசங்களுக்குள்ளே வரமாட்டார்கள் என்று
நினைத்திருந்தார்கள்.

And it came to pass that because of so much contention and so much difficulty in the government, that they had not kept sufficient guards in the land of Zarahemla; for they had supposed that the Lamanites durst not come into the heart of their lands to attack that great city Zarahemla.

19 அந்தப்படியே, கொரியாந்தமர் தன் எண்ணி-
றைந்த சேனையின் தலைமையேற்று அணிவகுத்-
துப்போய் பட்டணத்தின் குடிகளின்மேல் வந்தான்.
அவர்களுடைய அணிவகுப்பு மிகவும் வேகமாய்
இருந்ததாலே, நேபியர் தங்கள் சேனைகளைத் தி-
ரட்ட நேரமில்லாமல் போனது.

But it came to pass that Coriantumr did march forth at the head of his numerous host, and came upon the inhabitants of the city, and their march was with such exceedingly great speed that there was no time for the Nephites to gather together their armies.

20 ஆதலால், கொரியாந்தமர் பட்டணத்தின் நுழை-
வாயிலில் இருந்த காவல்காரனைக், கொன்று
போட்டு, அவன் தன் முழு சேனையோடுகூட பட்ட-
ணத்திற்குள்ளே போனான். அவர்கள் முழுப்பட்ட-
ணத்தையும் வசப்படுத்திக் கொள்ளும் அளவில்,
தங்களை எதிர்த்த அனைவரையும் சங்கரித்தனர்.

Therefore Coriantumr did cut down the watch by the entrance of the city, and did march forth with his whole army into the city, and they did slay every one who did oppose them, insomuch that they did take possession of the whole city.

21 அந்தப்படியே, பிரதான நியாயாதிபதியாகிய பக்குமெனி கொரியாந்தமர் முன்பு பறந்தோடி, பட்டணத்தின் மதில்கள் வரைக்கும் போனான். அந்தப்படியே, அவனைக் கொரியாந்தமர், அவன் செத்துப்போகும்படிக்கு மதிலில் மோதி அடித்தான். இப்படியாக பக்குமெனியின் நாட்கள் முடிவடைந்தது.

22 இப்பொழுதும், தான் சாரகெம்லா பட்டணத்தை வசப்படுத்திக்கொண்டதையும், நேபியர் தங்களுக்கு முன்பு ஓடுகிறதையும், கொல்லப்படுகிறதையும், பிடிபட்டு சிறையினுள் தள்ளப்படுகிறதையும், தேசமனைத்திலுமுள்ள மிக பலமுள்ள கொத்தளத்தைத் தான் கைப்பற்றினதையும் கண்டபோது, கொரியாந்தமர் தனது மனதில் திடன்கொண்டு, தேச முழுவதிற்கும் எதிராகப் போக இருந்தான்.

23 இப்பொழுது, அவன் சாரகெம்லா தேசத்தில் தங்கிவிடாமல், அவன் உதாரத்துவஸ்தல பட்டணத்திற்கு நேராய் தனது மிகப்பெரிய சேனையோடுகூட அணிவகுத்துப் போனான்; ஏனெனில், அவன் தேசத்தின் வடபகுதியைப் பிடிக்க, பட்டயத்தினால் வழியுண்டாக்கி போவது அவனது தீர்மானமாயிருந்தது.

24 அவர்களின் மிகுந்த பெலன் தேசத்தின் நடுவிலிருக்கிறதென்று எண்ணி, அவர்கள் சிறுகுழுக்களாய் கூடுவதைத்தவிர, திரளாகக்கூட நேரம் இராதவாறு அணிவகுத்துப்போனான்; இப்படியாய் அவர்கள், அவர்கள்மேல் விழுந்து அவர்களை பூமியிலே வெட்டிச் சாய்த்தார்கள்.

25 ஆனாலும் இதோ, கொல்லப்பட்ட நேபியர் எண்ணிக்கை அநேகமாயிருந்தாலும், கொரியாந்தமர் தேசத்தின் நடுவிலே அணிவகுத்திருப்பது, மரோனிகாவிற்கு மிகுந்த அனுகூலமாய் அமைந்தது.

26 ஏனெனில் இதோ, லாமானியர் தேசத்தின் நடுவிலே வரப்பயந்து, இதுவரைக்கும் செய்ததைப்போல பட்டணத்தின் சுற்றுப்புறங்களில் எல்லைகளிலிருந்தவாறே தாக்குவார்கள், என்று மரோனிகா, எண்ணியிருந்தான், ஆதலால் தங்களின் பலமுள்ள சேனைகள், எல்லைகளைச் சுற்றிலுமுள்ள அப்பகுதிகளைக் காக்கவேண்டுமென்று, மரோனிகா கட்டளையிட்டிருந்தான்.

27 இதோ, அவனுடைய வாஞ்சைக்கேற்ப லாமானியர் பயப்படாமல், தேசத்தின் நடுவே வந்து, தலைநகரமாகிய சாரகெம்லாவைப் பிடித்து, தேசத்தின் மிக முக்கிய பகுதிகளில் அணிவகுத்துப்போய் ஆண்கள், ஸ்திரீகள், பிள்ளைகளுமாக, ஜனங்களை மிகுதியாய் சங்காரம்பண்ணி, பல பட்டணங்களையும், அநேக கொத்தளங்களையும் வசப்படுத்திக்கொண்டார்கள்.

And it came to pass that Pacumeni, who was the chief judge, did flee before Coriantumr, even to the walls of the city. And it came to pass that Coriantumr did smite him against the wall, insomuch that he died. And thus ended the days of Pacumeni.

And now when Coriantumr saw that he was in possession of the city of Zarahemla, and saw that the Nephites had fled before them, and were slain, and were taken, and were cast into prison, and that he had obtained the possession of the strongest hold in all the land, his heart took courage insomuch that he was about to go forth against all the land.

And now he did not tarry in the land of Zarahemla, but he did march forth with a large army, even towards the city of Bountiful; for it was his determination to go forth and cut his way through with the sword, that he might obtain the north parts of the land.

And, supposing that their greatest strength was in the center of the land, therefore he did march forth, giving them no time to assemble themselves together save it were in small bodies; and in this manner they did fall upon them and cut them down to the earth.

But behold, this march of Coriantumr through the center of the land gave Moronihah great advantage over them, notwithstanding the greatness of the number of the Nephites who were slain.

For behold, Moronihah had supposed that the Lamanites durst not come into the center of the land, but that they would attack the cities round about in the borders as they had hitherto done; therefore Moronihah had caused that their strong armies should maintain those parts round about by the borders.

But behold, the Lamanites were not frightened according to his desire, but they had come into the center of the land, and had taken the capital city which was the city of Zarahemla, and were marching through the most capital parts of the land, slaying the people with a great slaughter, both men, women, and children, taking possession of many cities and of many strongholds.

28 மரோனிகா இதை அறிந்தபோது, அவர்கள் உதாரத்துவஸ்தலத்திற்கு போகும் முன்னே ஒரு சேனையோடு சுற்றிக் கொண்டு போகவேண்டுமென லேகியை அனுப்பினான்.

29 இப்படியாக அவன் செய்தான்; அவர்கள் உதாரத்துவஸ்தலத்திற்கு வருவதற்கு முன்னதாகவே சென்று, அவர்கள் சாரகெம்லா தேசத்திற்குத் திரும்பிப் போகத் துவங்கும்படிக்கு, அவர்கள் மேல் போர் தொடுத்தான்.

30 அந்தப்படியே, அவர்கள் பின்வாங்கும்போது மரோனிகா அவர்களுக்கு எதிரில் போய் அவர்கள் மேல் யுத்தம் பண்ணினான். அந்த யுத்தம் மிகுந்த இரத்தக்களமாயிற்று; ஆம், அநேகர் வெட்டப்பட்டார்கள். கொல்லப்பட்டவர்களில் கொரியாந்தமரும் காணப்பட்டான்.

31 இப்பொழுது, இதோ, நேபியர் லாமானியரை எல்லா பக்கங்களிலும், சூழ்ந்துகொண்டபடியால், அவர்கள் வடக்கிலோ, தெற்கிலோ, கிழக்கிலோ, மேற்கிலோ எந்த திசையிலும் பின்வாங்க முடியாமற்போனது.

32 இப்படியாக கொரியாந்தமர் லாமானியரை நேபியரின் நடுவே கொண்டுவந்து நிறுத்தினதால், அவர்கள் நேபியர்களின் வல்லமையினுள் அகப்பட்டார்கள். அவனும் கொல்லப்பட்டுப் போனான். லாமானியரும் தங்களையே நேபியர்களின் கைகளுக்குள் ஒப்புக்கொடுத்தார்கள்.

33 அந்தப்படியே, மரோனிகா மறுபடியும் சாரகெம்லா பட்டணத்தை வசப்படுத்தி, சிறைக்கைதிகளாகப் பிடிபட்ட லாமானியர் சமாதானமாய் தேசத்தை விட்டுப்போகும்படிச் செய்தான்.

34 இப்படியாக நியாயாதிபதிகளின் ஆளுகையின் நாற்பத்தோராம் வருஷமும் முடிவுற்றது.

But when Moronihah had discovered this, he immediately sent forth Lehi with an army round about to head them before they should come to the land Bountiful.

And thus he did; and he did head them before they came to the land Bountiful, and gave unto them battle, insomuch that they began to retreat back towards the land of Zarahemla.

And it came to pass that Moronihah did head them in their retreat, and did give unto them battle, insomuch that it became an exceedingly bloody battle; yea, many were slain, and among the number who were slain Coriantumr was also found.

And now, behold, the Lamanites could not retreat either way, neither on the north, nor on the south, nor on the east, nor on the west, for they were surrounded on every hand by the Nephites.

And thus had Coriantumr plunged the Lamanites into the midst of the Nephites, insomuch that they were in the power of the Nephites, and he himself was slain, and the Lamanites did yield themselves into the hands of the Nephites.

And it came to pass that Moronihah took possession of the city of Zarahemla again, and caused that the Lamanites who had been taken prisoners should depart out of the land in peace.

And thus ended the forty and first year of the reign of the judges.

## ஏலமன் 2

1 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின்
நாற்பத்திரண்டாம் வருஷத்தில், நேபியர்களுக்-
குள்ளும் லாமானியர்களுக்குள்ளும் மரோனிகா
சமாதானத்தை நிலைவரப்பண்ணின பின்பு,
இதோ, நியாயாசனத்தை நிரப்ப அங்கு ஒருவருமில்-
லை; எனவே நியாயாசனத்தை நிரப்புவது யார்
என்று ஜனங்களுக்குள்ளே மறுபடியும் பிணக்கு-
கள் ஏற்படத் துவங்கின.
2 அந்தப்படியே, ஏலமனின் குமாரனாகிய ஏலமன்,
ஜனங்களின் வேண்டுகோளின்படி நியாயாசனத்-
தை நிரப்பும்படியாய் நியமிக்கப்பட்டான்.
3 ஆனால் இதோ, பகோரனை கொலைபண்ணின
கிஸ்குமன், ஏலமனை அழிக்கவும் காத்திருந்தான்;
ஒருவரும் அவனுடைய துன்மார்க்கத்தைக் குறித்-
து அறியக்கூடாதென்று ஒரு உடன்படிக்கையி-
னுள் பிரவேசித்திருந்த அவனுடைய கூட்டத்தார்
அவனை ஆதரித்தார்கள்.
4 ஏனெனில் காதியாந்தன் என்ற ஒருவன் வார்த்-
தை ஜாலங்களிலும், கொலைகளையும் களவுக-
ளையும் இரகசியமாய்ப் பண்ணுவதாகிய தன் தந்-
திரங்களிலும் கைதேர்ந்தவனாய் இருந்ததால்
அவன் கிஸ்குமன் கூட்டத்திற்குத் தலைவனா-
னான்.
5 எனவே, தனது கூட்டத்தார் தன்னை நியாயா-
சனத்தில் அமர்த்தினால், அவர்கள் ஜனங்களுக்-
குள்ளே வல்லமையையும், அதிகாரத்தையும், பெற்-
றிருக்கும்படியாக அமர்த்தப்படுவார்களென்று
அவன் அவர்களிடமும், கிஸ்குமனுடனும் முகஸ்-
துதியாய்ப் பேசினான்; ஆகையால் கிஸ்குமன் ஏல-
மனை அழிக்க வகைதேடினான்.
6 அந்தப்படியே, அவன் ஏலமனை அழிக்க நேராய்
நியாயாசனத்திற்குப் போய்க்கொண்டிருக்கும்போ-
து, இதோ, ஏலமனின் வேலைக்காரரில் ஒருவன் ஜா-
மத்தில் வெளியே வந்து, மாறுவேஷம் பூண்டு, ஏல-
மனை அழிக்க இந்தக் கூட்டத்தினரால் போடப்-
பட்ட திட்டத்தைக் குறித்து அறிந்தான்.
7 அந்தப்படியே, அவன் கிஸ்குமனை சந்தித்து,
அவனுக்கு ஒரு சமிக்ஞை காட்டினான்; ஆதலால்
கிஸ்குமன், தான் ஏலமனைக் கொலை செய்யும்படி,
தன்னை அவன் நியாயாசனத்திற்குக் கூட்டிச் செல்-
லவேண்டுமென்ற, தனது வாஞ்சையின் நோக்கத்-
தினை அவனுக்கு தெரிவித்தான்.

## Helaman 2

And it came to pass in the forty and second year of the reign of the judges, after Moronihah had established again peace between the Nephites and the Lamanites, behold there was no one to fill the judgment-seat; therefore there began to be a contention again among the people concerning who should fill the judgment-seat.

And it came to pass that Helaman, who was the son of Helaman, was appointed to fill the judgment-seat, by the voice of the people.

But behold, Kishkumen, who had murdered Pahoran, did lay wait to destroy Helaman also; and he was upheld by his band, who had entered into a covenant that no one should know his wickedness.

For there was one Gadianton, who was exceedingly expert in many words, and also in his craft, to carry on the secret work of murder and of robbery; therefore he became the leader of the band of Kishkumen.

Therefore he did flatter them, and also Kishkumen, that if they would place him in the judgment-seat he would grant unto those who belonged to his band that they should be placed in power and authority among the people; therefore Kishkumen sought to destroy Helaman.

And it came to pass as he went forth towards the judgment-seat to destroy Helaman, behold one of the servants of Helaman, having been out by night, and having obtained, through disguise, a knowledge of those plans which had been laid by this band to destroy Helaman—

And it came to pass that he met Kishkumen, and he gave unto him a sign; therefore Kishkumen made known unto him the object of his desire, desiring that he would conduct him to the judgment-seat that he might murder Helaman.

8 ஏலமனின் வேலைக்காரன் கிஸ்குமனின் நோக்கம் முழுவதையும், அவன் நோக்கம் எப்படி கொலை செய்வது என்பதாயிருந்ததென்றும், அவன் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் அனைவருடைய நோக்கமும் எப்படி கொலை செய்வது, திருடுவது, மற்றும் அதிகாரத்தை அடைவது என்று இருந்ததென்றும் (இதுவே அவர்களுடைய இரகசிய திட்டமும், சங்கமுமாம்), அறிந்தவுடன், ஏலமனின் வேலைக்காரன் கிஸ்குமனை நோக்கி: நாம் நியாயாசனத்தினிடத்திற்குப் போவோம், என்றான்.

And when the servant of Helaman had known all the heart of Kishkumen, and how that it was his object to murder, and also that it was the object of all those who belonged to his band to murder, and to rob, and to gain power, (and this was their secret plan, and their combination) the servant of Helaman said unto Kishkumen: Let us go forth unto the judgment-seat.

9 இப்பொழுது கிஸ்குமனை இது வெகுவாய் சந்தோஷமடையச் செய்தது. ஏனெனில் அவன் தன் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று எண்ணினான், ஆனால் இதோ, அவர்கள் நியாயாசனத்திற்குப் போய்க்கொண்டிருக்கும்போது ஏலமனின் வேலைக்காரன் கிஸ்குமன் இருதயத்தில் குத்தினான், அவன் முனங்காமல், கீழே விழுந்து மரித்துப் போனான். அவன் ஓடிப்போய், தான் கண்டதும் கேட்டதும், நடந்ததுமான எல்லாக் காரியங்களையும் ஏலமனிடத்தில் சொன்னான்.

Now this did please Kishkumen exceedingly, for he did suppose that he should accomplish his design; but behold, the servant of Helaman, as they were going forth unto the judgment-seat, did stab Kishkumen even to the heart, that he fell dead without a groan. And he ran and told Helaman all the things which he had seen, and heard, and done.

10 அந்தப்படியே, இந்த திருடர்களின் கூட்டத்தினரையும், இரகசிய கொலைகாரர்களையும் பிடித்து சட்டத்தின்படி அவர்களை மரண தண்டனைக்குள்ளாக்கும்படியாக ஏலமன் ஆட்களை அனுப்பினான்.

And it came to pass that Helaman did send forth to take this band of robbers and secret murderers, that they might be executed according to the law.

11 ஆனால் இதோ, கிஸ்குமன் திரும்பாததை காதியாந்தன் கண்டு ஒருவேளை அவன் அழிக்கப்பட்டிருக்கக்கூடுமோ என்று பயந்தான்; ஆதலால், அவன் தன் கூட்டத்தார் தன்னைப் பின்பற்றும்படி கட்டளையிட்டான். அவர்கள் இரகசிய வழியாய் தேசத்தைவிட்டு, வனாந்தரத்தினுள் ஓடிப்போனார்கள்; இப்படியாக ஏலமன் அவர்களைப் பிடிக்கும்படி ஆட்களை அனுப்பியபோது அவர்களை எங்கும் பிடிக்க முடியாமற்போனது.

But behold, when Gadianton had found that Kishkumen did not return he feared lest that he should be destroyed; therefore he caused that his band should follow him. And they took their flight out of the land, by a secret way, into the wilderness; and thus when Helaman sent forth to take them they could nowhere be found.

12 காதியாந்தனைக் குறித்து இதற்குப் பின்பு அதிகமாய் பேசப்படும். இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் நாற்பத்திரண்டாம் வருஷமும் முடிவுற்றது.

And more of this Gadianton shall be spoken hereafter. And thus ended the forty and second year of the reign of the judges over the people of Nephi.

13 இதோ, இந்த காதியாந்தன் எப்படி நேபியின் ஜனங்கள், ஏறக்குறைய அனைவரும் வீழ்ச்சியடையவும், ஆம், அழியவும் வழிவகுத்தான் என்று இப்புஸ்தகத்தின் முடிவிலே காண்பீர்கள்.

And behold, in the end of this book ye shall see that this Gadianton did prove the overthrow, yea, almost the entire destruction of the people of Nephi.

14 இதோ நான் ஏலமனின் புஸ்தக முடிவை அல்ல, ஆனால் நேபியின் புஸ்தகத்தின் முடிவைக் குறிப்பிடுகிறேன். நான் எழுதின விவரம் யாவையும் அவைகளிலிருந்து எடுத்திருக்கிறேன்.

Behold I do not mean the end of the book of Helaman, but I mean the end of the book of Nephi, from which I have taken all the account which I have written.

## ஏலமன் 3

1 இப்பொழுதும், அந்தப்படியே, நியாயாதிபதிகளின்
ஆளுகையின் நாற்பத்தி மூன்றாம் வருஷத்தில்
சபையில் கொஞ்சம் பெருமை உண்டாயிருந்தது.
அதினிமித்தம் நேபியின் ஜனங்களுக்குள்ளே சில
பிரிவினைகள் உண்டானதைத் தவிர மற்ற எந்த பி-
ணக்குகளும் ஜனங்களுக்குள்ளிருக்கவில்லை.
அப்பிரச்சினையோ நாற்பத்தி மூன்றாம் வருஷத்-
திலே சரிசெய்யப்பட்டது.

2 நாற்பத்தி நாலாம் வருஷத்தில் ஜனங்களுக்குள்
எந்த பிணக்குமில்லை. நாற்பத்தி ஐந்தாம் வருஷத்-
திலும் அதிக பிணக்குகள் எதுவுமில்லை.

3 அந்தப்படியே, நாற்பத்தி ஆறாம் வருஷத்தில்,
ஆம், அங்கே அதிக பிணக்குகளும், அநேக பிரிவி-
னைகளும் உண்டானது; அதனாலே மிகவும் அதிக-
மானோர் சாரகெம்லா தேசத்தைவிட்டு வடக்கே-
யுள்ள தேசத்தை சுதந்தரிக்கும்படி அத்தேசத்திற்குப்
போனார்கள்.

4 அவர்கள் மிகவும் தொலைவான தூரம் பிரயா-
ணம் பண்ணி, பெரும் நீர்நிலை, மற்றும் அநேக
நதிகள் அண்டைக்கும் வந்தார்கள்.

5 ஆம், அந்த தேசத்தை முன்னமே சுதந்தரித்த
அநேக குடிகளின் நிமித்தமாக, பாழாய்ப் போகாத-
தும், மரங்கள் இல்லாத, எல்லா பகுதிகளுக்கும்
அவர்கள் சிதறிப் போனார்கள்.

6 இப்பொழுதும் மரங்கள் தவிர, தேசத்தின் எப்பகு-
தியும் பாழாய்ப் போயிருக்கவில்லை; ஆனால், தே-
சத்தை முன் சுதந்தரித்த ஜனங்களின் மிகுதியான
அழிவினிமித்தம், அது பாழ்கடிப்பு என்று அழைக்-
கப்பட்டது.

7 அங்கே தேசத்தின்மேலே சில மரங்களே இருந்ததி-
னிமித்தம், அங்கு போன ஜனங்கள் காரையினால்
செய்யப்படும் வேலையில் நிபுணர்களானார்கள்;
ஆதலால் அவர்கள் காரையினால் வீடுகளைக் கட்-
டி அதிலே குடியிருந்தார்கள்.

8 அந்தப்படியே, அவர்கள் பெருகி, படர்ந்து, தென்
தேசத்திலிருந்து வடதேசத்திற்குப்போய், தென்
சமுத்திரம் தொடங்கி வடசமுத்திரம் மட்டுமாயும்,
மேற்கு சமுத்திரம் தொடங்கி கிழக்கு சமுத்திரம் மட்-
டுமாயும், பூமியின் மீதெங்கும் போனார்கள்.

## Helaman 3

And now it came to pass in the forty and third year of the reign of the judges, there was no contention among the people of Nephi save it were a little pride which was in the church, which did cause some little dissensions among the people, which affairs were settled in the ending of the forty and third year.

And there was no contention among the people in the forty and fourth year; neither was there much contention in the forty and fifth year.

And it came to pass in the forty and sixth, yea, there was much contention and many dissensions; in the which there were an exceedingly great many who departed out of the land of Zarahemla, and went forth unto the land northward to inherit the land.

And they did travel to an exceedingly great distance, insomuch that they came to large bodies of water and many rivers.

Yea, and even they did spread forth into all parts of the land, into whatever parts it had not been rendered desolate and without timber, because of the many inhabitants who had before inherited the land.

And now no part of the land was desolate, save it were for timber; but because of the greatness of the destruction of the people who had before inhabited the land it was called desolate.

And there being but little timber upon the face of the land, nevertheless the people who went forth became exceedingly expert in the working of cement; therefore they did build houses of cement, in the which they did dwell.

And it came to pass that they did multiply and spread, and did go forth from the land southward to the land northward, and did spread insomuch that they began to cover the face of the whole earth, from the sea south to the sea north, from the sea west to the sea east.

9 வட தேசத்தில் இருந்த ஜனங்கள் கூடாரங்களிலும், காரையினாலான வீடுகளிலும் வாசம் பண்ணி, தக்க நேரத்தில் தங்கள் வீடுகளையும், பட்டணங்களையும், தங்கள் ஆலயங்களையும், தங்கள் ஜெப ஆலயங்களையும், தங்கள் பரிசுத்த ஸ்தலங்களையும், எல்லாவிதமான தங்கள் கட்டிடங்களையும் கட்டும்படியாக தேசத்தின் மீதெங்கும் துளிர்விடுகிற எந்த மரத்தையும் வளரச் செய்தார்கள்.

And the people who were in the land northward did dwell in tents, and in houses of cement, and they did suffer whatsoever tree should spring up upon the face of the land that it should grow up, that in time they might have timber to build their houses, yea, their cities, and their temples, and their synagogues, and their sanctuaries, and all manner of their buildings.

10 அந்தப்படியே, வடதேசத்தில் மரங்கள் மிகவும் குறைவாக இருந்ததால், அவைகளைக் கப்பல் வழியே அனுப்பி வைத்தார்கள்.

And it came to pass as timber was exceedingly scarce in the land northward, they did send forth much by the way of shipping.

11 இப்படியாக வடதேசத்திலுள்ளவர்கள் மரத்தினாலும், காரையினாலும், அநேக பட்டணங்களைக் கட்டும்படியாக இவர்கள் உதவினார்கள்.

And thus they did enable the people in the land northward that they might build many cities, both of wood and of cement.

12 அந்தப்படியே, பிறப்பிலேயே லாமானியர்களாயிருந்த அம்மோனின் ஜனங்கள் அநேகரும் இந்த தேசத்திற்குப் போனார்கள்.

And it came to pass that there were many of the people of Ammon, who were Lamanites by birth, did also go forth into this land.

13 இப்பொழுதும் இந்த ஜனங்களில் அநேகரால், தங்களின் நடவடிக்கைகளைக் கொண்ட பல பதிவேடுகள் வைக்கப்பட்டிருந்தன. அவைகள் அவர்களைக் குறித்து, குறிப்பாகவும் பெரிதாகவும் இருக்கின்றன.

And now there are many records kept of the proceedings of this people, by many of this people, which are particular and very large, concerning them.

14 ஆனால் இதோ, லாமானியர் நேபியரைப்பற்றியும், அவர்களின் யுத்தங்கள், பிணக்குகள், பிரிவினைகள், அவர்களின் போதனைகள், அவர்களின் தீர்க்கதரிசனங்கள், அவர்களின் கப்பல் வணிகம், அவர்கள் கப்பல் கட்டுதல், ஆலயங்கள், ஜெபவீடுகள், மற்றும் பரிசுத்த ஸ்தலங்களைக் கட்டுதல், அவர்களின் நீதி, அவர்களின் துன்மார்க்கம், அவர்களின் கொலைகள் அவர்களின் களவுகள், அவர்களின் சூறையாடல்கள், மற்றும் அவர்களின் எல்லாவிதமான அருவருப்புகள், வேசித்தனங்களைப்பற்றிய விவரம், ஆம், இந்த ஜனங்களின் நடவடிக்கைகளில் நூற்றில் ஒரு பாகம்கூட இதில் அடக்கப்பட முடியவில்லை.

But behold, a hundredth part of the proceedings of this people, yea, the account of the Lamanites and of the Nephites, and their wars, and contentions, and dissensions, and their preaching, and their prophecies, and their shipping and their building of ships, and their building of temples, and of synagogues and their sanctuaries, and their righteousness, and their wickedness, and their murders, and their robbings, and their plundering, and all manner of abominations and whoredoms, cannot be contained in this work.

15 ஆனால் இதோ, அநேக புஸ்தகங்களும், எல்லாவிதமான அநேக பதிவேடுகளும் அங்கே இருக்கின்றன. அவைகள் குறிப்பாக, நேபியர்களால் பாதுகாக்கப்பட்டிருந்தன.

But behold, there are many books and many records of every kind, and they have been kept chiefly by the Nephites.

16 நேபியர்கள் மீறுதலினுள் விழுந்து, கொலை செய்யப்பட்டு, களவாடப்பட்டு, வேட்டையாடப்பட்டு, துரத்தப்பட்டு, பூமியின் பரப்பின் மீதெங்கும் சிதறடிக்கப்பட்டு, இனி ஒருபோதும் நேபியர்கள் என்று அழைக்கப்படாதபடி லாமானியர்களுடன் கலந்து துன்மார்க்கராயும், பொல்லாதவர்களாயும், ஆக்ரோஷமுள்ளவர்களாயும், ஆம், லாமானியர்களாய் மாறிப்போவதற்கு முன்னதாக, அவைகள் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொன்றுக்கு கையளிக்கப்பட்டு வந்தன.

And they have been handed down from one generation to another by the Nephites, even until they have fallen into transgression and have been murdered, plundered, and hunted, and driven forth, and slain, and scattered upon the face of the earth, and mixed with the Lamanites until they are no more called the Nephites, becoming wicked, and wild, and ferocious, yea, even becoming Lamanites.

17 இப்பொழுதும், நான் என்னுடைய விவரத்திற்குத் திரும்புகிறேன்; நேபியின் ஜனங்களுக்குள்ளே பெரிய பிணக்குகளும், குழப்பங்களும், யுத்தங்களும், கலகங்களும் நடந்த பின்னரே நான் பேசியவை சம்பவித்தன.

And now I return again to mine account; therefore, what I have spoken had passed after there had been great contentions, and disturbances, and wars, and dissensions, among the people of Nephi.

18 நியாயாதிபதிகளின் ஆளுகையின் நாற்பத்தி ஆறாம் வருஷம் முடிவுற்றது;

The forty and sixth year of the reign of the judges ended;

19 அந்தப்படியே, நாற்பத்தி ஏழாம் வருஷத்திலும், நாற்பத்தி எட்டாம் வருஷத்திலும் தேசத்திலே பெரிய பிணக்குகள் இன்னும் இருந்தன.

And it came to pass that there was still great contention in the land, yea, even in the forty and seventh year, and also in the forty and eighth year.

20 எனினும் ஏலமன் நியாயாசனத்தை நியாயத்தோடும், நேர்மையோடும் காத்துவந்தான்; ஆம், அவன் தேவ கட்டளைகளையும், நியாயத்தீர்ப்புகளையும், கட்டளைகளையும் கைக்கொண்டுவந்தான்; அவன் தேவ பார்வைக்கு சரியாய்ப்பட்டதைத் தொடர்ந்து செய்து வந்தான்; அவன் தன் தகப்பனின் வழிகளிலே நடந்து தேசத்தில் விருத்தியடைந்தான்.

Nevertheless Helaman did fill the judgment-seat with justice and equity; yea, he did observe to keep the statutes, and the judgments, and the commandments of God; and he did do that which was right in the sight of God continually; and he did walk after the ways of his father, insomuch that he did prosper in the land.

21 அந்தப்படியே, அவனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவன் மூத்தவனுக்கு நேபியின் நாமத்தையும், இளையவனுக்கு லேகியின் நாமத்தையும் கொடுத்தான். அவர்கள் கர்த்தரின் வழியிலே வளர ஆரம்பித்தார்கள்.

And it came to pass that he had two sons. He gave unto the eldest the name of Nephi, and unto the youngest, the name of Lehi. And they began to grow up unto the Lord.

22 அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் நாற்பத்தி எட்டாம் வருஷத்தின் பிற்பகுதியில், நேபியர்களுக்குள்ளே யுத்தங்களும் பிணக்குகளும் சிறிதளவு குறைய ஆரம்பித்தன.

And it came to pass that the wars and contentions began to cease, in a small degree, among the people of the Nephites, in the latter end of the forty and eighth year of the reign of the judges over the people of Nephi.

23 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் நாற்பத்தி ஒன்பதாம் வருஷத்தில் ராஜாங்கத் தலைமைக்குத் தெரியாமல் தேசத்தில் அதிகம் குடியேறிய பகுதியில் காதியாந்தன் என்னும் கொள்ளைக்காரன் நிலைவரப்படுத்தின இரகசிய சங்கத்தைத் தவிர தேசத்திலே தொடர்ந்து சமாதானம் ஸ்தாபிக்கப்பட்டது; ஆதலால் அவர்கள் தேசத்திலிருந்து அழிக்கப்படவில்லை.

And it came to pass in the forty and ninth year of the reign of the judges, there was continual peace established in the land, all save it were the secret combinations which Gadianton the robber had established in the more settled parts of the land, which at that time were not known unto those who were at the head of government; therefore they were not destroyed out of the land.

24 அந்தப்படியே, அதே வருஷத்தில் ஆயிரக்கணக்கானோர் சபையிலே தங்களைச் சேர்த்துக்கொண்டு, மனந்திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானம் பெறும் அளவுக்கு, சபை மிகவும் விருத்தியடைந்தது.

And it came to pass that in this same year there was exceedingly great prosperity in the church, insomuch that there were thousands who did join themselves unto the church and were baptized unto repentance.

25 பிரதான ஆசாரியர்களும் ஆசிரியர்களும் கூட அளவுகடந்து ஆச்சரியப்படும்படியாக, சபையின் விருத்தி அதிகமாயும், ஜனங்களின் மேல் பொழிந்த ஆசீர்வாதங்கள் மிகுதியாயும் இருந்தன.

And so great was the prosperity of the church, and so many the blessings which were poured out upon the people, that even the high priests and the teachers were themselves astonished beyond measure.

26 அந்தப்படியே, அநேக ஆத்துமாக்கள், ஆம், பல்-
லாயிரக்கணக்கானோர் ஞானஸ்நானம் பெற்று,
தேவ சபையில் இணைந்துகொள்ளத்தக்கதாக,
கர்த்தருடைய கிரியை விருத்தியடைந்தது.

And it came to pass that the work of the Lord did prosper unto the baptizing and uniting to the church of God, many souls, yea, even tens of thousands.

27 இப்படியாக, தங்கள் இருதயத்தின் உண்மையோ-
டு கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை அழைக்கிற
யாவருக்கும், அவர் இரக்கமுள்ளவராயிருப்பார்
என்று பார்க்கிறோம்.

Thus we may see that the Lord is merciful unto all who will, in the sincerity of their hearts, call upon his holy name.

28 ஆம், இப்படியாக தேவ குமாரனாகிய, இயேசு கி-
றிஸ்துவில் விசுவாசமாயிருக்கிற யாவருக்கும் பர-
லோக வாசல் திறந்திருக்கிறது, என்று காண்கி-
றோம்.

Yea, thus we see that the gate of heaven is open unto all, even to those who will believe on the name of Jesus Christ, who is the Son of God.

29 ஆம், பிசாசினுடைய எல்லா வஞ்சனைகளை-
யும், கண்ணிகளையும், தந்திரங்களையும் தகர்த்-
தெறிவதும், துன்மார்க்கரை பிடிக்க ஆயத்தப்படுத்-
தப்பட்டிருக்கிற அந்த என்றுமுள்ள துன்பமிக்க
பாதாளத்தின் குறுக்கேயுள்ள இடுக்கமும், நெருக்க-
முமான பாதையில் கிறிஸ்துவின் மனுஷனை
நடத்துவதுமான, ஜீவனுள்ள வல்லமையுள்ள
தேவ வார்த்தையைப் பற்றிப்பிடிக்கிற யாவரும்,

Yea, we see that whosoever will may lay hold upon the word of God, which is quick and powerful, which shall divide asunder all the cunning and the snares and the wiles of the devil, and lead the man of Christ in a strait and narrow course across that everlasting gulf of misery which is prepared to engulf the wicked—

30 அவர்களுடைய ஆத்துமாக்கள், ஆம், அவர்களு-
டைய நித்திய ஆத்துமாக்கள் இனி வெளியே போ-
காதவாறு, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மற்றும்
நம்முடைய எல்லா பரிசுத்த பிதாக்களோடும் உட்-
காருவதற்கு பரலோக ராஜ்யத்திலிருக்கும் தேவனு-
டைய வலதுபாரிசத்தில் போய்ச்சேரும், என நாம்
பார்க்கிறோம்.

And land their souls, yea, their immortal souls, at the right hand of God in the kingdom of heaven, to sit down with Abraham, and Isaac, and with Jacob, and with all our holy fathers, to go no more out.

31 இந்த வருஷத்தில் சாரகெம்லா தேசத்திலும், நேபி-
யர்களால் வசப்படுத்தப்பட்டிருந்த பகுதிகளெங்கி-
லும், அதைச் சுற்றியுள்ள எல்லா இடங்களிலும்
தொடர்ந்து களிகூருதல் உண்டாயிருந்தது.

And in this year there was continual rejoicing in the land of Zarahemla, and in all the regions round about, even in all the land which was possessed by the Nephites.

32 அந்தப்படியே, நாற்பத்தி ஒன்பதாம் வருஷத்தின்
மீதி நாட்களிலும் அங்கே சமாதானமும், மிகுந்த சந்-
தோஷமும் உண்டாயிருந்தது; ஆம், நியாயாதிபதிக-
ளின் ஆளுகையின் ஐம்பதாவது வருஷத்திலும்
தொடர்ந்து, சமாதானமும் மிகுந்த சந்தோஷமும்
உண்டாயிருந்தது.

And it came to pass that there was peace and exceedingly great joy in the remainder of the forty and ninth year; yea, and also there was continual peace and great joy in the fiftieth year of the reign of the judges.

33 நியாயாதிபதிகளின் ஆளுகையின் ஐம்பத்தோ-
றாம் வருஷத்திலும் அங்கே சமாதானம் நிலவியது.
ஆயினும் சபையினுள் பெருமை நுழையத் துவங்-
கியது, தேவ சபையினுள் அல்ல, தேவ சபையினுள்
சார்ந்திருக்கிறோம் என்று அறிக்கை பண்ணுகிற
ஜனங்களினுடைய மனதில்.

And in the fifty and first year of the reign of the judges there was peace also, save it were the pride which began to enter into the church—not into the church of God, but into the hearts of the people who professed to belong to the church of God—

34 அவர்கள் தங்கள் சகோதரர் அநேகரைத் துன்பப்-
படுத்தும்படியாக பெருமையில் உயர்த்தப்பட்டிருந்-
தார்கள். இப்பொழுது இது பெரிய பொல்லாப்பாயி-
ருந்தது. இதினிமித்தம் ஜனங்களில் மிகுந்த தாழ்-
மையுடைய பகுதியினர் அதிக துன்புறுத்தல்க-
ளையும் சகித்து, மிகுந்த உபத்திரவங்களினூடே
நடக்கச் செய்தது.

And they were lifted up in pride, even to the persecution of many of their brethren. Now this was a great evil, which did cause the more humble part of the people to suffer great persecutions, and to wade through much affliction.

35 அவர்கள் இருதயம் தூய்மையாக்கப்பட்டு, தே-
வனிடம் தங்கள் இருதயங்களைக் கொடுப்பதினி-
மித்தமே வருகிற சுத்திகரிப்பினால் சுத்திகரிக்கப்ப-
டுமளவிற்கும், அவர்கள் ஆத்துமாக்கள் சந்தோ-
ஷத்தாலும், ஆறுதலாலும் நிரப்பப்படும் வரைக்கு-
மாய், அவர்கள் உபவாசமிருந்து, அடிக்கடி ஜெபித்-
து, தங்கள் தாழ்ச்சியில் மிகுந்த பெலனாயும், கி-
றிஸ்துவின் விசுவாசத்தில் மிக்க உறுதியாயும்
இருந்தார்கள்.

Nevertheless they did fast and pray oft, and did wax stronger and stronger in their humility, and firmer and firmer in the faith of Christ, unto the filling their souls with joy and consolation, yea, even to the purifying and the sanctification of their hearts, which sanctification cometh because of their yielding their hearts unto God.

36 அந்தப்படியே, ஜனங்களுடைய மிகுந்த ஐஸ்வரி-
யத்தினிமித்தமும், தேசத்தில் அவர்கள் விருத்திய-
டைந்ததினிமித்தமும் அவர்களுடைய இருதயங்க-
ளில் மிகுந்த பெருமை நுழையத் துவங்கியது
தவிர, ஐம்பத்தி இரண்டாம் வருஷமும் சமாதான-
மாய் முடிந்தது. அது அவர்களுக்குள் நாளுக்கு
நாள் வளரத்துவங்கியது.

And it came to pass that the fifty and second year ended in peace also, save it were the exceedingly great pride which had gotten into the hearts of the people; and it was because of their exceedingly great riches and their prosperity in the land; and it did grow upon them from day to day.

37 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் ஐம்பத்து மூன்றாம் வருஷத்தில் ஏலமன்
மரித்து, அவனுடைய மூத்தகுமாரன் நேபி,
அவனுக்குப் பதிலாய் ஆளுகையைத் தொடங்கி-
னான். அந்தப்படியே, அவன் நியாயாசனத்தில் நி-
யாயத்தோடும், நேர்மையோடும் அமர்ந்திருந்தான்;
ஆம், அவன் தேவ கட்டளைகளைக் கைக்கொண்-
டு, தன் தகப்பனின் வழிகளிலே நடந்தான்.

And it came to pass in the fifty and third year of the reign of the judges, Helaman died, and his eldest son Nephi began to reign in his stead. And it came to pass that he did fill the judgment-seat with justice and equity; yea, he did keep the commandments of God, and did walk in the ways of his father.

## ஏலமன் 4

1 அந்தப்படியே, ஐம்பத்தி நாலாம் வருஷத்தில்
சபைக்குள்ளே அநேக பிரிவினைகள் இருந்தன. மி-
குந்த இரத்தம் சிந்துதல் உண்டாகும்படியாக ஜனங்-
களுக்குள்ளே பிணக்குகள் ஏற்பட்டன.

2 கலகக்காரர் வெட்டப்பட்டு, தேசத்திலிருந்து வெ-
ளியே துரத்தப்பட்டார்கள். அவர்கள் லாமானிய ரா-
ஜாவினிடத்திற்குப் போனார்கள்.

3 அந்தப்படியே, அவர்கள் லாமானியரை நேபிய-
ருக்கு விரோதமாக யுத்தம் பண்ணும்படி கலக்கி-
விட முயற்சித்தார்கள்; ஆனால் இதோ, அந்த கல-
கக்காரரின் வார்த்தைகளுக்குச் செவிகொடுக்காத-
படிக்கு லாமானியர் மிகவும் பயந்திருந்தார்கள்.

4 ஆனால், அந்தப்படியே, நியாயாதிபதிகளின்
ஆளுகையின் ஐம்பத்தி ஆறாம் வருஷத்தில் நேபி-
யர்களிடத்திலிருந்து கலகக்காரர் லாமானியர்களி-
டத்திற்குப் போனார்கள்; நேபியர்களுக்கு விரோத-
மாய் அவர்களைக் கோபம் கொள்ளக் கலக்கிவிடு-
வதில் மற்றவர்களோடு இவர்களும் சேர்ந்து ஜெயம்
கண்டார்கள்; அந்த வருஷம் அவர்கள் யாவரும்
யுத்தத்திற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருந்தார்-
கள்.

5 ஐம்பத்தி ஏழாவது வருஷத்தில், அவர்கள் நேபி-
யர்களுக்கு விரோதமாய் யுத்தம் பண்ண வந்து மர-
ணக் கிரியையைத் துவங்கினார்கள்; ஆம், நியா-
யாதிபதிகளின் ஆளுகையின் ஐம்பத்தெட்டாம்
வருஷத்தில் சாரகெம்லா தேசத்தைப் பெறுவதி-
லும், ஆம், உதாரத்துவஸ்தலத்திற்கு அருகாமையி-
லுள்ள தேசத்தையும் மற்ற அனைத்து தேசங்களை-
யும் வசப்படுத்துவதிலும் ஜெயம் பெற்றார்கள்.

6 நேபியரும், மரோனிகாவின் சேனைகளும், உதா-
ரத்துவஸ்தலத்திற்குள்ளாகத் துரத்தப்பட்டார்கள்;

7 அங்கே அவர்கள் மேற்கு சமுத்திரம் தொடங்கி, கி-
ழக்கு சமுத்திரம் வரைக்குமாய் லாமானியருக்கு வி-
ரோதமாய் அரண்களை அமைத்தார்கள்; அந்த எல்-
லையில் அவர்கள் தங்கள் வடதேசத்தைத் தற்காக்-
கக் கொத்தளங்களைக் கட்டி, தங்கள் சேனைகளை
நிறுத்திய வழியே அத்தூரத்தை ஒரு நேபியன்
கடக்க ஒரு நாள் பிடிக்கும்.

8 அந்த நேபியர்களிலிருந்து வந்த கலகக்காரர், லா-
மானியரின் எண்ணிறைந்த சேனையின் துணை-
கொண்டு, தென் தேசத்தில் நேபியர்களின் வசமி-
ருந்த அனைத்தையும் பெற்றுக் கொண்டார்கள்.
இவை யாவும் நியாயாதிபதிகளின் ஆளுகையின்
ஐம்பத்தி எட்டாம் மற்றும் ஒன்பதாம் வருஷங்க-
ளில் நடைபெற்றன.

## Helaman 4

And it came to pass in the fifty and fourth year there were many dissensions in the church, and there was also a contention among the people, insomuch that there was much bloodshed.

And the rebellious part were slain and driven out of the land, and they did go unto the king of the Lamanites.

And it came to pass that they did endeavor to stir up the Lamanites to war against the Nephites; but behold, the Lamanites were exceedingly afraid, insomuch that they would not hearken to the words of those dissenters.

But it came to pass in the fifty and sixth year of the reign of the judges, there were dissenters who went up from the Nephites unto the Lamanites; and they succeeded with those others in stirring them up to anger against the Nephites; and they were all that year preparing for war.

And in the fifty and seventh year they did come down against the Nephites to battle, and they did commence the work of death; yea, insomuch that in the fifty and eighth year of the reign of the judges they succeeded in obtaining possession of the land of Zarahemla; yea, and also all the lands, even unto the land which was near the land Bountiful.

And the Nephites and the armies of Moronihah were driven even into the land of Bountiful;

And there they did fortify against the Lamanites, from the west sea, even unto the east; it being a day's journey for a Nephite, on the line which they had fortified and stationed their armies to defend their north country.

And thus those dissenters of the Nephites, with the help of a numerous army of the Lamanites, had obtained all the possession of the Nephites which was in the land southward. And all this was done in the fifty and eighth and ninth years of the reign of the judges.

9 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் அறுபதாவது வருஷத்தில், மரோனிகா தன் சேனைகளோடு தேசத்தின் அநேக பகுதிகளைப் பெறுவதில் ஜெயம் கொண்டான்; ஆம், அவர்கள் லாமானியரின் கைகளுக்குள் விழுந்த அநேக பட்டணங்களை மறுபடியும் கைப்பற்றினார்கள்.

And it came to pass in the sixtieth year of the reign of the judges, Moronihah did succeed with his armies in obtaining many parts of the land; yea, they regained many cities which had fallen into the hands of the Lamanites.

10 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் அறுபத்தி ஒன்றாவது வருஷத்தில், அவர்கள் தங்கள் வசமிருந்தவைகளில் பாதியளவாகிலும் மறுபடியும் கைப்பற்றுவதில் ஜெயம் கண்டார்கள்.

And it came to pass in the sixty and first year of the reign of the judges they succeeded in regaining even the half of all their possessions.

11 நேபியர்களுக்குள்ளே அவர்களின் துன்மார்க்கமும், அருவருப்புகளும் இல்லாமற் போயிருந்தால், அவர்களின் பெரும் இழப்பும், அவர்களுக்குள் சம்பவித்த கொடும் சங்காரமும் நடந்திருக்காது; ஆம், அந்த துன்மார்க்கமும், அருவருப்பும் தேவ சபையைச் சேர்ந்தவர்கள் என்று அறிக்கை பண்ணினவர்களுக்குள்ளும் இருந்தன.

Now this great loss of the Nephites, and the great slaughter which was among them, would not have happened had it not been for their wickedness and their abomination which was among them; yea, and it was among those also who professed to belong to the church of God.

12 அவர்களது இருதயங்களின் பெருமையினாலும், அவர்களின் மிகுந்த ஐஸ்வரியத்தினிமித்தமும், ஆம், எளிமையானோரை ஒடுக்கியதாலும், பசியாயிருப்போருக்கு தங்கள் உணவைக் கொடாததாலும், நிர்வாணிகளுக்கு தங்கள் வஸ்திரத்தைக் கொடாததாலும், தங்களின் தாழ்மையுள்ள சகோதரரைக் கன்னத்தில் அடித்ததாலும், பரிசுத்தமானவைகளை பரிகசிப்பதாலும், தீர்க்கதரிசனம் மற்றும் வெளிப்படுத்தலின் ஆவியை மறுதலித்ததாலும் கொலைகள் கொள்ளைகள் புரிந்ததாலும் பொய்யுரைத்ததாலும், களவாடியதாலும், விபசாரம் செய்ததாலும், பெரும் பிணக்குகளை எழப்பண்ணியதாலும், நேபியின் தேசத்திலிருந்த லாமானியருக்குள்ளே ஓடிப்போனதினிமித்தமே இது சம்பவித்தது.

And it was because of the pride of their hearts, because of their exceeding riches, yea, it was because of their oppression to the poor, withholding their food from the hungry, withholding their clothing from the naked, and smiting their humble brethren upon the cheek, making a mock of that which was sacred, denying the spirit of prophecy and of revelation, murdering, plundering, lying, stealing, committing adultery, rising up in great contentions, and deserting away into the land of Nephi, among the Lamanites—

13 அவர்களுடைய இந்த பெரும் துன்மார்க்கத்தினிமித்தமும், அவர்கள் தங்கள் சுயபெலத்திலே பெருமை பாராட்டினதினிமித்தமும், அவர்கள் தங்கள் சுயபெலத்திலே விடப்பட்டார்கள்; ஆதலால் அவர்கள் விருத்திபெறாமல், துன்புறுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு, தங்களின் வசமிருந்த ஏறக்குறைய எல்லா தேசங்களையும் இழக்கும் வரைக்குமாய் லாமானியர் முன்பு துரத்தியடிக்கப்பட்டார்கள்.

And because of this their great wickedness, and their boastings in their own strength, they were left in their own strength; therefore they did not prosper, but were afflicted and smitten, and driven before the Lamanites, until they had lost possession of almost all their lands.

14 ஆனால் இதோ, மரோனிகா அவர்கள் அக்கிரமத்தினிமித்தம் ஜனங்களுக்கு அநேகக் காரியங்களைப் பிரசங்கித்தான். ஏலமனின் குமாரர்களாகிய நேபியும் லேகியும் ஜனங்களுக்கு அநேகவற்றைப் பிரசங்கித்து, ஆம், அவர்களுடைய அக்கிரமங்களைக் குறித்தும், அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவில்லையெனில் அவர்களுக்குச் சம்பவிப்பதென்ன என்றும் அநேகவற்றை அவர்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்.

But behold, Moronihah did preach many things unto the people because of their iniquity, and also Nephi and Lehi, who were the sons of Helaman, did preach many things unto the people, yea, and did prophesy many things unto them concerning their iniquities, and what should come unto them if they did not repent of their sins.

15 அந்தப்படியே, அவர்கள் மனந்திரும்பினார்கள். அவர்கள் மனந்திரும்பிய அளவில் அவர்கள் விருத்தியடைந்தார்கள்.

And it came to pass that they did repent, and inasmuch as they did repent they did begin to prosper.

16 ஏனெனில் அவர்கள் மனந்திரும்பியதை மரோ-
னிகா கண்டபோது, அவர்கள் தங்கள் சொத்துக்க-
ளில் ஒரு பாதியையும், தங்களின் எல்லா தேசங்க-
ளிலும் ஒரு பாதியையும் திரும்பப் பெறும்படியாக
அவன் அவர்களை இடத்திற்கு இடம், பட்டணத்-
திற்கு பட்டணம் வழிநடத்திப்போக விழைந்தான்.
17 இப்படியாக நியாயாதிபதிகளின் ஆளுகையின்
அறுபத்தி ஒன்றாம் வருஷமும் முடிவுற்றது.
18 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் அறுபத்தி இரண்டாம் வருஷத்தில் லாமானி-
யரை மேற்கொண்டு அதிக உடைமைகளை மரோ-
னிகாவால் பெறமுடியவில்லை.
19 லாமானியர் எண்ணிறைந்தவர்களானபடியால்,
அவர்கள் மேல் வல்லமைகொள்ளுவது நேபியர்க-
ளுக்கு கூடாத காரியமானதால், அவர்கள் தங்கள்
மீதியான தேசங்களையும் பெற வைத்திருந்த திட்-
டத்தைக் கைவிட்டார்கள்; ஆதலால் மரோனிகா
தான் கைப்பற்றின அந்தப் பகுதிகளைப் பாது-
காப்பதில் தன் சேனைகள் யாவையும் ஈடுபடுத்தி-
னான்.
20 அந்தப்படியே, லாமானியரின் பெரும் எண்ணிக்-
கையினிமித்தம், தாங்கள் மேற்கொள்ளப்பட்டு, மி-
திக்கப்பட்டு, வெட்டுண்டு, அழிக்கப்படுவோமோ
என்று நேபியர் மிகவும் பயந்தார்கள்.
21 ஆம், அவர்கள் ஆல்மாவின் தீர்க்கதரிசனங்க-
ளையும், மோசியாவின் வார்த்தைகளையும் நி-
னைவுகூரத் துவங்கினார்கள்; அவர்கள் தாங்கள்
வணங்காக்கழுத்துள்ள ஜனமென்பதையும், தாங்-
கள் தேவ கட்டளைகளை அவசியமற்றதாய் எண்-
ணியிருப்பதையும் கண்டார்கள்.
22 மோசியாவின் சட்டங்களை அல்லது ஜனங்க-
ளுக்கு கொடுக்கவேண்டும் என்று கர்த்தரால்
அவனுக்கு கொடுக்கப்பட்டவைகளை தாங்கள்
மாற்றிப்போட்டு, தங்கள் கால்களால் மிதித்ததை
அவர்கள் கண்டார்கள்; அவர்கள், தங்கள் சட்டங்-
கள் கெட்டுப்போனதையும், தங்களின் துன்மார்க்-
கம் லாமானியருக்கு ஒத்ததாயிருக்குமளவிற்கு,
தாங்கள் துன்மார்க்க ஜனமாய் மாறியதையும்
கண்டார்கள்.
23 அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தம் சபை
படிப்படியாக நலிந்து போகத் துவங்கியது. அவர்-
கள் தீர்க்கதரிசன ஆவியிலும், வெளிப்படுத்தலின்
ஆவியிலும் அவிசுவாசமடையத் துவங்கினார்கள்;
தேவ நியாயத்தீர்ப்புகள் அவர்களது முகத்தை மு-
றைத்துப் பார்த்தது.
24 அவர்கள் தங்கள் சகோதரராகிய லாமானிய-
ரைப்போல பெலவீனமானதையும், கர்த்தருடைய
ஆவி தங்களைப் பாதுகாக்கவில்லை என்பதை-
யும் கண்டார்கள்; ஆம், கர்த்தருடைய ஆவி அசுத்த
ஆலயங்களில் வாசம் பண்ணாததினிமித்தம் அது
அவர்களிலிருந்து நீங்கிப்போயிற்று.

For when Moronihah saw that they did repent he did venture to lead them forth from place to place, and from city to city, even until they had regained the one-half of their property and the one-half of all their lands.

And thus ended the sixty and first year of the reign of the judges.

And it came to pass in the sixty and second year of the reign of the judges, that Moronihah could obtain no more possessions over the Lamanites.

Therefore they did abandon their design to obtain the remainder of their lands, for so numerous were the Lamanites that it became impossible for the Nephites to obtain more power over them; therefore Moronihah did employ all his armies in maintaining those parts which he had taken.

And it came to pass, because of the greatness of the number of the Lamanites the Nephites were in great fear, lest they should be overpowered, and trodden down, and slain, and destroyed.

Yea, they began to remember the prophecies of Alma, and also the words of Mosiah; and they saw that they had been a stiffnecked people, and that they had set at naught the commandments of God;

And that they had altered and trampled under their feet the laws of Mosiah, or that which the Lord commanded him to give unto the people; and they saw that their laws had become corrupted, and that they had become a wicked people, insomuch that they were wicked even like unto the Lamanites.

And because of their iniquity the church had begun to dwindle; and they began to disbelieve in the spirit of prophecy and in the spirit of revelation; and the judgments of God did stare them in the face.

And they saw that they had become weak, like unto their brethren, the Lamanites, and that the Spirit of the Lord did no more preserve them; yea, it had withdrawn from them because the Spirit of the Lord doth not dwell in unholy temples—

25 அவர்கள் அவிசுவாசம் மற்றும் அஞ்சத்தக்க துன்-
மார்க்க நிலையில் விழுந்ததினால், கர்த்தர் அவர்க-
ளைத் தம்முடைய அற்புத இணையற்ற வல்லமை-
யினால் பாதுகாப்பதை நிறுத்தினார்; அவர்கள்,
லாமானியர் தங்களைக் காட்டிலும் அதிகமாய்
இருப்பதையும், தேவனாகிய தங்கள் கர்த்தரிடத்-
தில் இசைந்திராமற் போனால், தவிர்க்கப்படமுடி-
யாமல் அழிந்துபோவோம் என்றும் கண்டார்கள்.
26 ஏனெனில் இதோ, மனுஷனுக்கு மனுஷ பெலத்தி-
லேயும், லாமானிய பெலம் தங்கள் பெலத்திற்கு
இணையானதெனக் கண்டார்கள். இப்படியாக
அவர்கள் இந்த பெரும் மீறுதலினுள் வீழ்ந்தார்கள்.
ஆம், சில வருஷங்களுக்குள்ளாகவே அவர்கள்
தங்கள் மீறுதலினிமித்தம் பெலவீனர்களானார்-
கள்.

Therefore the Lord did cease to preserve them by his miraculous and matchless power, for they had fallen into a state of unbelief and awful wickedness; and they saw that the Lamanites were exceedingly more numerous than they, and except they should cleave unto the Lord their God they must unavoidably perish.

For behold, they saw that the strength of the Lamanites was as great as their strength, even man for man. And thus had they fallen into this great transgression; yea, thus had they become weak, because of their transgression, in the space of not many years.

## ஏலமன் 5

1 அந்தப்படியே, இதே வருஷத்தில் இதோ, நேபி நியா-
யாசனத்தை சிசோரம் என்ற பெயர்கொண்ட ஒரு
மனுஷனிடத்தில் ஒப்படைத்தான்.

2 அவர்களுடைய சட்டங்களும் அவர்களுடைய
ராஜாங்கமும் ஜனங்களுடைய சம்மதத்தின்படி ஏற்-
படுத்தப்பட்டிருந்தபடியாலும், நன்மையைத் தெ-
ரிந்து கொண்டோரைக் காட்டிலும், பொல்லாப்-
பைத் தெரிந்து கொண்டோர் அதிகமாய் இருந்தபடி-
யாலும், சட்டங்கள் கெட்டுப்போனதாலும் அவர்-
கள் அழிவுக்கேதுவானவர்களாய் பழுத்து இருந்-
தார்கள்.

3 ஆம், இதுமட்டுமல்ல, அவர்கள் அழிக்கப்படுவது
தவிர, அவர்கள் சட்டத்தினாலோ, அல்லது நியா-
யத்தாலோ ஆளுகை செய்யப்பட முடியாத அள-
வுக்கு, வணங்காக் கழுத்துள்ள ஜனமாக இருந்தார்-
கள்.

4 அந்தப்படியே, அவர்களின் அக்கிரமத்தினிமித்-
தம் நேபி சோர்ந்து போனான்; அவன் நியாயாசனத்-
தைத் துறந்து, தன் மீதி நாட்கள் முழுவதும், தேவ
வார்த்தையைப் பிரசங்கிக்கும் பொறுப்பை தன்-
மேல் எடுத்துக்கொண்டான்; அவன் சகோதரனா-
கிய லேகியும் தன் மீதி நாட்கள் முழுவதும், தேவ
வார்த்தையைப் பிரசங்கிக்கும் பொறுப்பை தன்-
மேல் எடுத்துக்கொண்டான்.

5 அவர்கள் தங்கள் தகப்பனாகிய ஏலமன் தங்க-
ளுக்குச் சொன்ன வார்த்தைகளை நினைவு கூர்ந்-
தார்கள். அவன் பேசின வார்த்தைகள் இவைகளே:

6 இதோ, என் குமாரரே, தேவ கட்டளைகளை நீங்-
கள் கைக்கொள்ள நினைவில் கொள்ளவேண்டு-
மென்று நான் வாஞ்சிக்கிறேன்; நீங்கள் இவ்வார்த்-
தைகளை ஜனங்களுக்கு அறிவிக்கவேண்டுமென்-
று விரும்புகிறேன். இதோ, எருசலேம் தேசத்திலிருந்-
து வந்துவிட்ட நம்முடைய முதற் பெற்றோரின் பெ-
யர்களை உங்களுக்குச் சூட்டியிருக்கிறேன். இதை
நான் செய்தது ஏனெனில், நீங்கள் உங்கள் பெயர்க-
ளை நினைக்கும்போது அவர்களை நீங்கள் நி-
னைக்கவேண்டுமென்பதற்காக; அவர்களை நீங்-
கள் நினைவுகூரும்போது, அவர்களுடைய கிரி-
யைகளை நீங்கள் நினைவுகூருவீர்கள்; அவர்க-
ளுடைய கிரியைகளை நீங்கள் நினைவுகூரும்-
போது அவர்கள் நல்லோர் என்று சொல்லப்பட்டி-
ருப்பதையும் எழுதப்பட்டிருப்பதையும் நீங்கள்
அறிந்து கொள்வீர்கள்.

7 ஆதலால், என் குமாரரே, அவர்களைக் குறித்துச்
சொல்லப்பட்டும், எழுதப்பட்டும் இருப்பதைப்-
போல உங்களைப்பற்றி சொல்லப்படவும் எழுதப்ப-
டவும் நீங்கள் நன்மையானதையே செய்யவேண்டு-
மென்று விரும்புகிறேன்.

## Helaman 5

And it came to pass that in this same year, behold, Nephi delivered up the judgment-seat to a man whose name was Cezoram.

For as their laws and their governments were established by the voice of the people, and they who chose evil were more numerous than they who chose good, therefore they were ripening for destruction, for the laws had become corrupted.

Yea, and this was not all; they were a stiffnecked people, insomuch that they could not be governed by the law nor justice, save it were to their destruction.

And it came to pass that Nephi had become weary because of their iniquity; and he yielded up the judgment-seat, and took it upon him to preach the word of God all the remainder of his days, and his brother Lehi also, all the remainder of his days;

For they remembered the words which their father Helaman spake unto them. And these are the words which he spake:

Behold, my sons, I desire that ye should remember to keep the commandments of God; and I would that ye should declare unto the people these words. Behold, I have given unto you the names of our first parents who came out of the land of Jerusalem; and this I have done that when you remember your names ye may remember them; and when ye remember them ye may remember their works; and when ye remember their works ye may know how that it is said, and also written, that they were good.

Therefore, my sons, I would that ye should do that which is good, that it may be said of you, and also written, even as it has been said and written of them.

8 இப்பொழுதும் என் குமாரரே, இதோ, நான் உங்களிடத்தில் விரும்பும் வேறு சிலவும் உள்ளன. அந்த வாஞ்சை என்னவெனில், நீங்கள் மேன்மை பாராட்டும்படியாக, இக்காரியங்களைச் செய்யாமல், பரலோகத்தில் நித்தியமும் மங்காததுமான பொக்கிஷத்தை உங்களுக்கென்று சேர்த்து வைக்கும் பொருட்டே இவைகளைச் செய்யுங்கள் என்பதே, ஆம், அதினிமித்தம் நீங்கள் நித்திய ஜீவன் என்கிற அந்த விலையுயர்ந்த ஈவைப் பெறுவீர்கள்; அது நம்முடைய பிதாக்களுக்கும் அளிக்கப்பட்டது என்று நாம் எண்ண நமக்கு காரணமுண்டு.

And now my sons, behold I have somewhat more to desire of you, which desire is, that ye may not do these things that ye may boast, but that ye may do these things to lay up for yourselves a treasure in heaven, yea, which is eternal, and which fadeth not away; yea, that ye may have that precious gift of eternal life, which we have reason to suppose hath been given to our fathers.

9 நினைவுகூருங்கள், என் குமாரரே, இந்த ஜனத்திற்கு பென்யமீன் ராஜா சொன்ன வார்த்தைகளை நினைவுகூருங்கள்; ஆம், வரவிருக்கிற இயேசு கிறிஸ்துவின் பாவநிவர்த்தியாக்கும் இரத்தத்தினால் மாத்திரம் மனுஷன் இரட்சிக்கப்படமுடியுமே ஒழிய மற்ற எந்த வழியாலும், முறையினாலும் கூடாது என்று நினைவுகூருங்கள். ஆம், அவர் உலகத்தை மீட்க வருகிறார் என்று நினைவுகூருங்கள்.

O remember, remember, my sons, the words which king Benjamin spake unto his people; yea, remember that there is no other way nor means whereby man can be saved, only through the atoning blood of Jesus Christ, who shall come; yea, remember that he cometh to redeem the world.

10 அம்மோனிகா பட்டணத்தில் அமுலேக் சீஸ்ரமிடம் பேசின வார்த்தைகளை எண்ணிப்பாருங்கள்; ஏனெனில் அவன் அவனிடத்தில், கர்த்தர் மெய்யாகவே நம்முடைய ஜனத்தை மீட்க வருவார். ஆனால் அவர்களை அவர்களுடைய பாவங்களில் மீட்க வராமல், அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்கவே வருகிறார், என்றான்.

And remember also the words which Amulek spake unto Zeezrom, in the city of Ammonihah; for he said unto him that the Lord surely should come to redeem his people, but that he should not come to redeem them in their sins, but to redeem them from their sins.

11 மனந்திரும்புதலினிமித்தம் அவர்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து மீட்கும் வல்லமை அவருக்குப் பிதாவினிடத்திலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது, ஆகவே, அவர்கள் தங்கள் ஆத்தும இரட்சிப்புக்கேதுவாய் மீட்பரின் வல்லமையைப் பெறத் தக்கதாக, மனந்திரும்புதலின் நிபந்தனைகளைக்கொண்ட செய்திகளை அறிவிக்க தம்முடைய தூதர்களை அவர் அனுப்பியிருக்கிறார்.

And he hath power given unto him from the Father to redeem them from their sins because of repentance; therefore he hath sent his angels to declare the tidings of the conditions of repentance, which bringeth unto the power of the Redeemer, unto the salvation of their souls.

12 இப்பொழுதும், என் குமாரரே நினைவுகூருங்கள், தேவகுமாரனாகிய கிறிஸ்து என்கிற நம் மீட்பராகிய கன்மலையின் மேல் நீங்கள் உங்கள் அஸ்திபாரத்தைக் கட்டவேண்டுமென்று நினைவில் கொள்ளுங்கள்; பிசாசு தன் பலத்த காற்றுகளையும், ஆம், சூறாவளியில் தன் அம்புகளையும் அனுப்பி, ஆம், அவன் சகல கல்மழையாலும் அவனுடைய பலத்த புயலாலும் உங்களை அடிக்கும்போது, அது உங்களை பொல்லாத துரவிற்கும், நித்திய துன்பத்திற்கும் இழுத்துச் செல்ல வல்லமையற்றுப்போகும். ஏனெனில் நீங்கள் கட்டப்பட்டிருக்கிற கன்மலை உறுதியான அஸ்திபாரமாயிருக்கிறது. அந்த அஸ்திபாரத்தின்மேல் மனுஷர் கட்டினால் அவர்கள் விழுந்து போவதில்லை.

And now, my sons, remember, remember that it is upon the rock of our Redeemer, who is Christ, the Son of God, that ye must build your foundation; that when the devil shall send forth his mighty winds, yea, his shafts in the whirlwind, yea, when all his hail and his mighty storm shall beat upon you, it shall have no power over you to drag you down to the gulf of misery and endless wo, because of the rock upon which ye are built, which is a sure foundation, a foundation whereon if men build they cannot fall.

13 அந்தப்படியே, இவைகளே ஏலமன் தன் குமாரர்க-
ளுக்குப் போதித்த வார்த்தைகள்; ஆம், அவன்
அவர்களுக்கு எழுதப்படாத அநேக காரியங்களை-
யும், எழுதப்பட்ட அநேக காரியங்களையும் போதித்-
தான்.
14 அவர்கள் அவனுடைய வார்த்தைகளை நினை-
வு கூர்ந்தார்கள்; ஆதலால் உதாரத்துவஸ்தலம்
தொடங்கி, நேபியின் ஜனமனைவருக்குள்ளும்
தேவ வார்த்தையைப் போதிக்க, தேவ கட்டளைக-
ளைக் கைக்கொண்டவர்களாய், அவர்கள் போ-
னார்கள்.
15 அவர்கள் அங்கிருந்து கித் பட்டணத்திற்கும், கித்
பட்டணத்திலிருந்து மூலெக் பட்டணத்திற்கும் போ-
னார்கள்.
16 தென் தேசத்திலுள்ள நேபியின் ஜனம் அனைத்-
துக்குள்ளும் போகும்வரைக்குமாய், பட்டணம் பட்-
டணமாய்ப் போனார்கள்; அங்கிருந்து லாமானிய-
ருக்குள்ளே சாரகெம்லா தேசத்திற்குப் போனார்கள்.
17 அந்தப்படியே, நேபியர்களிலிருந்து போன கல-
கக்காரரில் அநேகரை தாறுமாறாகச்செய்யும் வித-
மாகவும், அவர்கள் வந்து, தங்கள் பாவங்களை
அறிக்கை பண்ணி மனந்திரும்புதலுக்கேதுவாய்
ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டு, தாங்கள் செய்த
சீர்கேடுகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டும்,
உடனே நேபியர்களிடத்தில் திரும்பும் விதமாகவும்,
அவர்கள் அதிக வல்லமையோடு பிரசங்கம் பண்-
ணினார்கள்.
18 அந்தப்படியே, நேபியும் லேகியும் லாமனியருக்-
குள்ளே மிகுந்த வல்லமையோடும், அதிகாரத்தோ-
டும் பிரசங்கித்தார்கள். ஏனெனில் அவர்கள் பேச-
வும், அவர்கள் பேசுவதெதுவோ, அது அவர்களுக்-
கு கொடுக்கப்படும்படியாகவும் அவர்களுக்கு அதி-
காரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டிருந்தது.
19 ஆதலால் சாரகெம்லா தேசத்திலும் சுற்றுப்புறங்க-
ளிலுமுள்ள லாமானியரில் எட்டாயிரம்பேர் மனந்-
திரும்புதலுக்கேதுவான ஞானஸ்நானம் பெற்று
தங்கள் தகப்பன்மார்களின் பாரம்பரியங்கள் துன்-
மார்க்கமானவை என்று உணர்ந்து கொள்ளும்
அளவுக்கு, லாமானியர்கள் பெரிதும் ஆச்சரியப்-
பட்டு உணர்ந்து கொள்ளத்தக்கதாக அவர்கள், பே-
சினார்கள்.
20 அந்தப்படியே, நேபியும் லேகியும் அங்கிருந்து நே-
பி தேசத்திற்குப் போனார்கள்.
21 அந்தப்படியே, அவர்கள் லாமானிய சேனையி-
னால் பிடிக்கப்பட்டு, சிறையினுள் போடப்பட்டார்-
கள்; ஆம், அம்மோனும் அவன் சகோதரரும், லிம்கி-
யின் வேலையாட்களால் போடப்பட்ட அதே சிறை-
யில் அவர்களும் போடப்பட்டார்கள்.

And it came to pass that these were the words which Helaman taught to his sons; yea, he did teach them many things which are not written, and also many things which are written.

And they did remember his words; and therefore they went forth, keeping the commandments of God, to teach the word of God among all the people of Nephi, beginning at the city Bountiful;

And from thenceforth to the city of Gid; and from the city of Gid to the city of Mulek;

And even from one city to another, until they had gone forth among all the people of Nephi who were in the land southward; and from thence into the land of Zarahemla, among the Lamanites.

And it came to pass that they did preach with great power, insomuch that they did confound many of those dissenters who had gone over from the Nephites, insomuch that they came forth and did confess their sins and were baptized unto repentance, and immediately returned to the Nephites to endeavor to repair unto them the wrongs which they had done.

And it came to pass that Nephi and Lehi did preach unto the Lamanites with such great power and authority, for they had power and authority given unto them that they might speak, and they also had what they should speak given unto them—

Therefore they did speak unto the great astonishment of the Lamanites, to the convincing them, insomuch that there were eight thousand of the Lamanites who were in the land of Zarahemla and round about baptized unto repentance, and were convinced of the wickedness of the traditions of their fathers.

And it came to pass that Nephi and Lehi did proceed from thence to go to the land of Nephi.

And it came to pass that they were taken by an army of the Lamanites and cast into prison; yea, even in that same prison in which Ammon and his brethren were cast by the servants of Limhi.

22 அவர்கள் அநேக நாட்கள் ஆகாரமில்லாமல் சி-
றையினுள் போடப்பட்டிருந்த பின்னர், இதோ,
அவர்களை வெட்டிப்போடும்படி அவர்களைப் பி-
டிக்க, சிறையினுள் போனார்கள்.

And after they had been cast into prison many days without food, behold, they went forth into the prison to take them that they might slay them.

23 அந்தப்படியே, தாங்கள் சுட்டெரிக்கப்படுவோமோ
என்று பயந்து அவர்கள் மேல் தங்கள் கைகளைப்
போடத் துணியாத அளவுக்கு, நேபியும், லேகியும்
அக்கினியால் சூழப்பட்டார்கள். ஆயினும் நேபியும்
லேகியும் எரிந்து போகவில்லை; அவர்கள் அக்கி-
னியின் நடுவே நின்றிருந்தும் சுட்டெரிக்கப்பட-
வில்லை.

And it came to pass that Nephi and Lehi were encircled about as if by fire, even insomuch that they durst not lay their hands upon them for fear lest they should be burned. Nevertheless, Nephi and Lehi were not burned; and they were as standing in the midst of fire and were not burned.

24 அவர்கள் அக்கினி ஸ்தம்பத்தினால் சூழப்பட்டி-
ருப்பதையும் அது அவர்களைப் பட்சித்துப் போ-
டாததையும் கண்டபோது அவர்களின் இருதயம்
தைரியம் கொண்டது.

And when they saw that they were encircled about with a pillar of fire, and that it burned them not, their hearts did take courage.

25 ஏனெனில் லாமானியர் தங்கள் மேல் கைகளைப்
போடவும் பயந்திருந்தார்கள் எனக் கண்டார்கள்;
அவர்கள் அவர்களின் அருகில் வரவும் துணியா-
மல், ஆச்சரியத்தினால் ஊமையாக்கப்பட்டவர்க-
ளைப் போல நின்று கொண்டிருந்தார்கள்.

For they saw that the Lamanites durst not lay their hands upon them; neither durst they come near unto them, but stood as if they were struck dumb with amazement.

26 அந்தப்படியே, நேபியும் லேகியும் நின்று அவர்க-
ளிடம் பேசத் துவங்கி சொன்னதாவது: பயப்படாதி-
ருங்கள், ஏனெனில் இதோ, நீங்கள் எங்கள் மேல்
கைகளைப் போட்டு வெட்டிப்போட முடியாது என்-
பதை உங்களுக்குத் தெரிவிக்கும் பொருட்டே தே-
வன் இந்த அற்புதமான காரியத்தை உங்களுக்குக்
காண்பித்திருக்கிறார்.

And it came to pass that Nephi and Lehi did stand forth and began to speak unto them, saying: Fear not, for behold, it is God that has shown unto you this marvelous thing, in the which is shown unto you that ye cannot lay your hands on us to slay us.

27 இதோ, அவர்கள் இந்த வார்த்தைகளைச் சொன்-
னவுடனே, பூமி மிகவும் அதிர்ந்து, சிறைச்சாலை-
யின் மதில்கள் கீழே விழுந்துவிடுவதைப் போல
நடுங்கின; ஆனால் இதோ, அவை விழவில்லை.
இதோ, சிறைச்சாலையிலிருந்தவர்கள் லாமனிய-
ரும், கலகக்காரர்களான நேபியருமே.

And behold, when they had said these words, the earth shook exceedingly, and the walls of the prison did shake as if they were about to tumble to the earth; but behold, they did not fall. And behold, they that were in the prison were Lamanites and Nephites who were dissenters.

28 அந்தப்படியே, அவர்கள் காரிருளான மேகத்தி-
னால் நிழலாடப்பட்டனர். அவர்களை பயங்கர-
மான திகில் ஆட்கொண்டது.

And it came to pass that they were overshadowed with a cloud of darkness, and an awful solemn fear came upon them.

29 அந்தப்படியே, காரிருளான மேகத்திற்கு மேல் ஏற்-
படுகின்றதுபோல ஒரு சத்தம் உண்டாகிச் சொன்ன-
தாவது: நீங்கள் மனந்திரும்புங்கள், நீங்கள் மனந்-
திரும்புங்கள், நற்செய்திகளை அறிவிக்க உங்க-
ளுக்குள் நான் அனுப்பின என் ஊழியக்காரர்க-
ளை இனி ஒருபோதும் அழிக்க வகை தேடாதீர்கள்.

And it came to pass that there came a voice as if it were above the cloud of darkness, saying: Repent ye, repent ye, and seek no more to destroy my servants whom I have sent unto you to declare good tidings.

30 அந்தப்படியே, அவர்கள் இந்த சத்தத்தைக் கேட்ட-
போது அது இடிமுழக்கத்தின் சத்தமாயோ, பெரும்
குமுறலின் சத்தமாயோ இல்லாமல், ஆனால் இதோ,
முனகல் சத்தம்போல, மிகவும் மெல்லிய அமர்ந்த
சத்தமாய் இருந்ததென்று உணர்ந்தார்கள். அது
அவர்களுடைய ஆத்துமாவை ஊடுருவிச் சென்ற-
து.

And it came to pass when they heard this voice, and beheld that it was not a voice of thunder, neither was it a voice of a great tumultuous noise, but behold, it was a still voice of perfect mildness, as if it had been a whisper, and it did pierce even to the very soul—

31 சத்தம் மெல்லியதாய் இருந்த போதும், இதோ, பூமி
மிகவும் நடுங்கிற்று, சிறைச்சாலையின் மதில்கள்
பூமியில் விழுவதுபோன்று மறுபடியும் அசைந்தன;
இதோ, அவர்கள்மேல் நிழலாடிய காரிருளான மே-
கம் கலைந்து போகவில்லை.

And notwithstanding the mildness of the voice, behold the earth shook exceedingly, and the walls of the prison trembled again, as if it were about to tumble to the earth; and behold the cloud of darkness, which had overshadowed them, did not disperse—

32 இதோ, சத்தம் மறுபடியும் உண்டாகி: நீங்கள்
மனந்திரும்புங்கள், நீங்கள் மனந்திரும்புங்கள்.
ஏனெனில் பரலோக ராஜ்யம் சமீபத்திலுள்ளது;
என் ஊழியக்காரர்களை அழிக்க இனி ஒருபோதும்
வகை தேடாதீர்கள், என்றது. அந்தப்படியே, பூமி
மறுபடியும் அதிர்ந்தது, மதில்கள் நடுங்கின.

And behold the voice came again, saying: Repent ye, repent ye, for the kingdom of heaven is at hand; and seek no more to destroy my servants. And it came to pass that the earth shook again, and the walls trembled.

33 மூன்றாம் முறையாக மறுபடியும் அந்த சத்தம்
உண்டாகி, மனுஷனால் உச்சரிக்கக்கூடாத அநேக
ஆச்சரியமான வார்த்தைகளை அவர்களுக்குச்
சொல்லிற்று; மதில்கள் மறுபடியும் நடுங்கின. பூமி
இரண்டாக பிளப்பது போன்று அதிர்ந்தது.

And also again the third time the voice came, and did speak unto them marvelous words which cannot be uttered by man; and the walls did tremble again, and the earth shook as if it were about to divide asunder.

34 அந்தப்படியே, தங்களை நிழலிட்ட அந்தக் காரிரு-
ளான மேகத்தினிமித்தம் லாமானியர் பறந்தோட மு-
டியவில்லை; ஆம், தங்கள் மேல் வந்த பயத்தினி-
மித்தமும், அவர்கள் நகர முடியாமலிருந்தார்கள்.

And it came to pass that the Lamanites could not flee because of the cloud of darkness which did overshadow them; yea, and also they were immovable because of the fear which did come upon them.

35 இப்போது, அவர்களுள் ஒருவன் பிறப்பால் நேபி-
யனாயிருந்தான். முன்பு அவன் தேவ சபையைச்
சார்ந்திருந்து பின்பு அவர்களிடமிருந்து பிரிந்து
போனவன்.

Now there was one among them who was a Nephite by birth, who had once belonged to the church of God but had dissented from them.

36 அந்தப்படியே, அவன் திரும்பியபோது, காரிரு-
ளான மேகத்தினூடே நேபி மற்றும் லேகியின் முகங்-
களைக் கண்டான்; இதோ, அவை தூதர்களின் மு-
கங்களைப்போல மிகுதியாய் பிரகாசித்தன. அவன்
அவர்கள் தங்கள் கண்களை வானத்திற்கு ஏறெ-
டுப்பதைக் கண்டான். அவர்கள் தாங்கள் காண்-
கிற ஏதோவொருவரிடத்திலே பேசுகிறதைப்போல-
வோ, அல்லது தங்கள் சத்தங்களை உயர்த்துகிற-
தைப்போலவோ காட்சியளித்தார்கள்.

And it came to pass that he turned him about, and behold, he saw through the cloud of darkness the faces of Nephi and Lehi; and behold, they did shine exceedingly, even as the faces of angels. And he beheld that they did lift their eyes to heaven; and they were in the attitude as if talking or lifting their voices to some being whom they beheld.

37 அந்தப்படியே, இம்மனுஷன் கூட்டத்தினர் திரும்-
பிப் பார்க்கும்படியாக அவர்களை நோக்கிக் கூக்கு-
ரலிட்டான். இதோ, அவர்களும் திரும்பி, காணத்தக்-
கதாக அவர்களுக்கும் வல்லமை அளிக்கப்பட்டது;
அவர்களும் நேபி மற்றும் லேகியின் முகங்களைக்
கண்டார்கள்.

And it came to pass that this man did cry unto the multitude, that they might turn and look. And behold, there was power given unto them that they did turn and look; and they did behold the faces of Nephi and Lehi.

38 அவர்கள் அந்த மனுஷனை நோக்கி: இதோ,
இவைகளுக்கெல்லாம் அர்த்தமென்ன. இம்மனு-
ஷர் யாரோடு சம்பாஷிக்கிறார்கள், என்றார்கள்.

And they said unto the man: Behold, what do all these things mean, and who is it with whom these men do converse?

39 இப்பொழுது இம்மனுஷனின் பெயர் அம்மினை-
தாப் என்பதாகும். அம்மினதாப் அவர்களை நோக்-
கி: அவர்கள் தேவதூதர்களோடு சம்பாஷிக்கிறார்-
கள் என்றான்.

Now the man's name was Aminadab. And Aminadab said unto them: They do converse with the angels of God.

40 அந்தப்படியே, லாமானியர் அவனை நோக்கி: இந்-
தக் காரிருளான மேகம் நம்மை நிழலாடுவதிலிருந்-
து நீக்கப்படும்படிக்கு நாம் செய்யவேண்டிய-
தென்ன என்றார்கள்.

And it came to pass that the Lamanites said unto him: What shall we do, that this cloud of darkness may be removed from overshadowing us?

41 அம்மினதாப் அவர்களை நோக்கி: நீங்கள் மனந்-
திரும்பி, ஆல்மா, அமுலேக், சீஸ்ரம் ஆகியோரால்
உங்களுக்குப் போதிக்கப்பட்ட கிறிஸ்துவிலே நீங்-
கள் விசுவாசம் வைக்கும்மட்டும் அந்த சத்தத்தினி-
டம் மன்றாடுங்கள்; இதை நீங்கள் செய்யும்போது,
உங்களை நிழலாடுகிற அந்தக் காரிருளான மேகம்
நீக்கப்படும்.

And Aminadab said unto them: You must repent, and cry unto the voice, even until ye shall have faith in Christ, who was taught unto you by Alma, and Amulek, and Zeezrom; and when ye shall do this, the cloud of darkness shall be removed from overshadowing you.

42 அந்தப்படியே, அவர்கள் யாவரும் பூமியை அதி-
ரப்பண்ணினவருடைய சத்தத்தினிடம் கூக்குர-
லிட்டார்கள்; ஆம், அந்தக் காரிருளான மேகம்
கலைந்து போகும்வரைக்கும் கூக்குரலிட்டார்கள்.

And it came to pass that they all did begin to cry unto the voice of him who had shaken the earth; yea, they did cry even until the cloud of darkness was dispersed.

43 அந்தப்படியே, அவர்கள் தங்கள் கண்களை
ஏறெடுத்து, அந்தக் காரிருளான மேகம் தங்களை
நிழலாடுவதிலிருந்து கலைந்து போகிறதைக் கண்-
டார்கள். இதோ அவர்கள், ஆம், ஒவ்வொரு ஆத்து-
மாவும் தாங்கள் அக்கினி ஸ்தம்பத்தினால் சூழப்-
பட்டிருப்பதைக் கண்டார்கள்.

And it came to pass that when they cast their eyes about, and saw that the cloud of darkness was dispersed from overshadowing them, behold, they saw that they were encircled about, yea every soul, by a pillar of fire.

44 நேபியும் லேகியும் அவர்கள் மத்தியில் இருந்தார்-
கள்; ஆம், அவர்கள் சூழப்பட்டிருந்தார்கள்; ஆம்,
அவர்கள் ஜொலிக்கிற அக்கினிக்கு நடுவே இருப்ப-
தைப்போலக் காணப்பட்டும், அது அவர்களைச்
சேதப்படுத்தவோ, சிறையின் மதில்களை எரிக்க-
வோ இல்லை; அவர்கள் சொல்லமுடியாத சந்தோ-
ஷத்தினால் நிரப்பப்பட்டு, மகிமையினால் நிறைந்-
திருந்தார்கள்.

And Nephi and Lehi were in the midst of them; yea, they were encircled about; yea, they were as if in the midst of a flaming fire, yet it did harm them not, neither did it take hold upon the walls of the prison; and they were filled with that joy which is unspeakable and full of glory.

45 இதோ, தேவனுடைய பரிசுத்த ஆவி பரலோகத்தி-
லிருந்து இறங்கிவந்து, அவர்களுடைய இருதயங்க-
ளில் பிரவேசித்தது. அவர்கள் அக்கினியால் நிரப்-
பப்படுவதைப்போல நிரப்பப்பட்டார்கள். அற்புத-
மான வார்த்தைகளை அவர்களால் பேசமுடிந்தது.

And behold, the Holy Spirit of God did come down from heaven, and did enter into their hearts, and they were filled as if with fire, and they could speak forth marvelous words.

46 அந்தப்படியே, முனகுதல் போன்ற சத்தம், ஆம்,
ஒரு இதமான சத்தம் உண்டாகி:

And it came to pass that there came a voice unto them, yea, a pleasant voice, as if it were a whisper, saying:

47 உலக அஸ்திபாரம் முதற்கொண்டு இருக்கிற
எனக்கு மிகவும் பிரியமானவரில் வைத்த உங்க-
ளின் விசுவாசத்தினிமித்தம் உங்களுக்கு சமாதா-
னம், சமாதானம் உண்டாவதாக, என்றது.

Peace, peace be unto you, because of your faith in my Well Beloved, who was from the foundation of the world.

48 இப்பொழுதும் அவர்கள் இதைக் கேட்டபோது,
சத்தம் எங்கிருந்து வருகிறது என்று காண தங்கள்
கண்களை ஏறெடுத்தார்கள்; இதோ, வானம் திறக்-
கிறதையும், வானத்திலிருந்து தூதர்கள் வந்து தங்-
களுக்குப் பணிவிடை புரிந்ததையும் கண்டார்கள்.

And now, when they heard this they cast up their eyes as if to behold from whence the voice came; and behold, they saw the heavens open; and angels came down out of heaven and ministered unto them.

49 இவைகளைக் கண்டும், கேட்டவர்களும் சுமார்
முன்னூறு ஆத்துமாக்களாயிருந்தார்கள்; அவர்-
கள் போய் ஆச்சரியப்படவோ, சந்தேகப்படவோ கூ-
டாதென்று சொல்லப்பட்டார்கள்.

And there were about three hundred souls who saw and heard these things; and they were bidden to go forth and marvel not, neither should they doubt.

50 அந்தப்படியே, அவர்கள் போய், தாங்கள் கண்டும் கேட்டதுமான காரியங்கள் அனைத்தையும் சுற்றுப்புறத்திலுள்ள பகுதிகள் முழுவதிலும் அறிவித்து ஜனங்களுக்கு ஊழியம்பண்ணினார்கள். இதினிமித்தம் அவர்கள் பெற்றிருந்த சாட்சியங்களின் முக்கியத்தினிமித்தம் அவர்களால் லாமானியரின் பெரும் பகுதியினர் உணர்த்தப்பட்டார்கள்.

And it came to pass that they did go forth, and did minister unto the people, declaring throughout all the regions round about all the things which they had heard and seen, insomuch that the more part of the Lamanites were convinced of them, because of the greatness of the evidences which they had received.

51 உணர்த்தப்பட்டவர்கள் அனைவரும், தங்களின் யுத்தக் கருவிகளையும், தங்களின் வெறுப்புணர்ச்சியையும் தங்கள் பிதாக்களின் பாரம்பரியத்தையும் விட்டு ஒதுக்கினார்கள்.

And as many as were convinced did lay down their weapons of war, and also their hatred and the tradition of their fathers.

52 அந்தப்படியே, அவர்கள் நேபியர்களுக்கு அவர்களின் சுதந்திர தேசங்களைக் கொடுத்தார்கள்.

And it came to pass that they did yield up unto the Nephites the lands of their possession.

## ஏலமன் 6

1 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின்
அறுபத்தி இரண்டாம் வருஷமும் முடிவுற்றபோது
இவை எல்லாம் சம்பவித்து, லாமானியரில் பெரும்-
பாலானோர் நீதியுள்ள ஜனமாய் மாறினதோடு,
அவர்களுடைய உறுதியினாலும், விசுவாசத்தில்
அவர்களுக்கிருந்த மாறாத்தன்மையினிமித்தமும்
அவர்களின் நீதி நேபியர்களைக் காட்டிலும் மிஞ்-
சிற்று.
2 ஏனெனில் இதோ, நேபியர்களில் அநேகர் கடின-
முள்ளவர்களாயும், மனந்திரும்பாதோராயும், மிக-
வும் கொடியவராயும் மாறி, அவர்கள் தேவ வார்த்-
தையையும், தங்களுக்குள் வந்த சகல போதகத்-
தையும், தீர்க்கதரிசனங்களையும் நிராகரித்தார்-
கள்.
3 ஆயினும் சபையின் ஜனமோ, லாமானியரின்
மனமாற்றத்தினிமித்தமும், ஆம், அவர்களுக்குள்
ஸ்தாபிக்கப்பட்ட தேவ சபையினிமித்தமும், மி-
குந்த சந்தோஷம் அடைந்தார்கள். அவர்கள் ஒருவ-
ருக்கொருவர் ஐக்கியம் கொண்டு, ஒருவரோடொரு-
வர் களிகூர்ந்திருந்து, மிகுந்த சந்தோஷம் அடைந்-
தார்கள்.
4 அந்தப்படியே, லாமானியரில் அநேகர் சாரகெம்-
லா தேசத்தினுள் வந்து, நேபியின் ஜனங்களுக்குத்
தாங்கள் மனமாறின விதத்தைக் குறித்து அறிவித்-
து, அவர்களை விசுவாசத்திற்குள்ளும் மனந்தி-
ரும்புதலுக்குள்ளும் ஊக்குவித்தார்கள்.
5 ஆம், அவர்களில் அநேகரைத் தாழ்மையின்
ஆழங்களில் கொண்டுவந்து, தேவனுக்கும், தேவ
ஆட்டுக்குட்டிக்கும் தாழ்மையான சீஷர்களாக்கும்-
படிக்கு, அநேகர் மிகுந்த வல்லமையோடும், அதிகா-
ரத்தோடும் பிரசங்கித்தார்கள்.
6 அந்தப்படியே, லாமானியரில் அநேகர் வடதேசத்-
திற்குப் போனார்கள்; ஜனங்களுக்குப் பிரசங்கிக்-
கும்படி, நேபியும் லேகியும்கூட வடதேசத்திற்கு போ-
னார்கள். இப்படியாக அறுபத்தி மூன்றாம் வருஷ-
மும் முடிவடைந்தது.
7 இதோ, நேபியருக்குள்ளோ அல்லது லாமானிய-
ருக்குள்ளோ, தாங்கள் விரும்புகிற தேசத்தின் எப்ப-
குதிக்கும் நேபியர்கள் போகும் அளவுக்கு, தேசமுழு-
வதும் சமாதானம் இருந்தது.
8 அந்தப்படியே, லாமானியருக்குள்ளோ அல்லது
நேபியருக்குள்ளோ, தாங்கள் போக விரும்புகிற
இடம் எதுவானாலும், லாமானியரும் போனார்கள்;
இப்படியாக, அவர்கள் தங்களின் விருப்பத்தின்ப-
டியே வாங்கவும், விற்கவும், ஆதாயம் பெறவும், ஒரு-
வரோடு ஒருவர் தொடர்பு வைத்திருந்தனர்.

## Helaman 6

And it came to pass that when the sixty and second year of the reign of the judges had ended, all these things had happened and the Lamanites had become, the more part of them, a righteous people, insomuch that their righteousness did exceed that of the Nephites, because of their firmness and their steadiness in the faith.

For behold, there were many of the Nephites who had become hardened and impenitent and grossly wicked, insomuch that they did reject the word of God and all the preaching and prophesying which did come among them.

Nevertheless, the people of the church did have great joy because of the conversion of the Lamanites, yea, because of the church of God, which had been established among them. And they did fellowship one with another, and did rejoice one with another, and did have great joy.

And it came to pass that many of the Lamanites did come down into the land of Zarahemla, and did declare unto the people of the Nephites the manner of their conversion, and did exhort them to faith and repentance.

Yea, and many did preach with exceedingly great power and authority, unto the bringing down many of them into the depths of humility, to be the humble followers of God and the Lamb.

And it came to pass that many of the Lamanites did go into the land northward; and also Nephi and Lehi went into the land northward, to preach unto the people. And thus ended the sixty and third year.

And behold, there was peace in all the land, insomuch that the Nephites did go into whatsoever part of the land they would, whether among the Nephites or the Lamanites.

And it came to pass that the Lamanites did also go whithersoever they would, whether it were among the Lamanites or among the Nephites; and thus they did have free intercourse one with another, to buy and to sell, and to get gain, according to their desire.

9 அந்தப்படியே, லாமானியரும், நேபியருமான இருவரும் மிகவும் ஐஸ்வரியவான்களானார்கள்; அவர்கள் தென் தேசத்திலும், வடதேசத்திலும் மிகவும் அதிகமான பொன்னையும், வெள்ளியையும் எல்லாவிதமான விலையுயர்ந்த உலோகங்களையும் வைத்திருந்தார்கள்.

And it came to pass that they became exceedingly rich, both the Lamanites and the Nephites; and they did have an exceeding plenty of gold, and of silver, and of all manner of precious metals, both in the land south and in the land north.

10 இப்பொழுது தென் தேசம் லேகி என்றும், வடதேசம் சிதேக்கியாவின் குமாரனின் பேரால் மூலெக் என்றும் அழைக்கப்பட்டது; ஏனெனில் கர்த்தர் மூலெக்கை வடதேசத்திற்கும், லேகியை தென்தேசத்திற்கும் அழைத்து வந்தார்.

Now the land south was called Lehi, and the land north was called Mulek, which was after the son of Zedekiah; for the Lord did bring Mulek into the land north, and Lehi into the land south.

11 இதோ, இவ்விரண்டு தேசங்களிலும், பொன்னும், வெள்ளியும், எல்லாவிதமான விலையுயர்ந்த தாதுக்களும் இருந்தன; எல்லா விதமான தாதுக்களைப் பயன்படுத்தவும், அதைச் சுத்திகரிக்கவும் அங்கே கைதேர்ந்த பணியாளர்கள் இருந்தார்கள்; இப்படியாக அவர்கள் ஐஸ்வர்யவான்களானார்கள்.

And behold, there was all manner of gold in both these lands, and of silver, and of precious ore of every kind; and there were also curious workmen, who did work all kinds of ore and did refine it; and thus they did become rich.

12 அவர்கள் வடக்கிலும், தெற்கிலும் தானியங்களை மிகுதியாய் விளையப் பண்ணினார்கள்; அவர்கள் வடக்கிலும், தெற்கிலும் மிகுதியாய் செழிப்படைந்தார்கள். அவர்கள் தேசத்தில் பெருகி, பலசாலிகளானார்கள். அவர்கள் அநேக ஆடு மாடுகளையும், ஆம், கொழுத்தவைகளையும் வளர்த்தார்கள்.

They did raise grain in abundance, both in the north and in the south; and they did flourish exceedingly, both in the north and in the south. And they did multiply and wax exceedingly strong in the land. And they did raise many flocks and herds, yea, many fatlings.

13 இதோ அவர்களுடைய பெண்கள் தங்களின் நிர்வாணத்தை மறைக்க உழைத்து, நூற்று, நன்றாய் பின்னப்பட்ட பட்டுச் சீலைகளையும், எல்லா விதமான துணிகளையும் செய்தார்கள். இப்படியாக, அறுபத்தி நான்காம் வருஷமும் சமாதானமாய் கடந்து போயிற்று.

Behold their women did toil and spin, and did make all manner of cloth, of fine-twined linen and cloth of every kind, to clothe their nakedness. And thus the sixty and fourth year did pass away in peace.

14 அறுபத்தி ஐந்தாம் வருஷத்திலும் அவர்கள் மிகுந்த சந்தோஷத்தையும் சமாதானத்தையும், ஆம், அதிகமான போதகத் தையும், வரப்போகிறவைகளைக் குறித்த அநேக தீர்க்கதரிசனங்களையும் பெற்றிருந்தார்கள். இப்படியாக அறுபத்தி ஐந்தாம் வருஷமும் கடந்து போயிற்று.

And in the sixty and fifth year they did also have great joy and peace, yea, much preaching and many prophecies concerning that which was to come. And thus passed away the sixty and fifth year.

15 அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் அறுபத்தி ஆறாம் வருஷத்தில், இதோ, சிசோரம் நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கும்போது, ஒரு அறியப்படாதவனால் கொலை செய்யப்பட்டான். அந்தப்படியே, அதே வருஷத்தில், அவனது ஸ்தானத்தில், ஜனங்களால் நியமிக்கப்பட்ட, அவனது குமாரனும் கொலை செய்யப்பட்டான். இப்படியாக அறுபத்தி ஆறாம் வருஷமும் முடிவுற்றது.

And it came to pass that in the sixty and sixth year of the reign of the judges, behold, Cezoram was murdered by an unknown hand as he sat upon the judgment-seat. And it came to pass that in the same year, that his son, who had been appointed by the people in his stead, was also murdered. And thus ended the sixty and sixth year.

16 அறுபத்தி ஏழாம் வருஷ துவக்கத்திலே ஜனங்கள் மறுபடியும் துன்மார்க்கராய் மாற ஆரம்பித்தார்கள்.

And in the commencement of the sixty and seventh year the people began to grow exceedingly wicked again.

17 ஏனெனில் இதோ, அவர்கள் கோபத்திற்கும், யுத்-
தங்களுக்கும், இரத்தம் சிந்துதலுக்கும், தூண்டப்ப-
டாமல் இருக்கும்வரைக்கும், கர்த்தர் அவர்களை
உலக ஐஸ்வரியங்களால் ஆசீர்வதித்தார்; ஆதலால்
அவர்கள் தங்கள் இருதயங்களைத் தங்களின்
ஐஸ்வரியத்தில் வைக்கத் துவங்கினார்கள்; ஆம்,
அவர்கள் ஒருவரை விட ஒருவர் உயர்ந்தவராயி-
ருக்கத்தக்கதான ஆதாயத்தைப் பெறும்படி வகை
தேடினார்கள்; ஆதலால், ஆதாயத்தைப் பெறுவ-
தற்காக, அவர்கள் இரகசியமாய்க் கொலைகளைச்
செய்யவும், திருடவும், கொள்ளையடிக்கவும் ஆரம்-
பித்தார்கள்.

For behold, the Lord had blessed them so long with the riches of the world that they had not been stirred up to anger, to wars, nor to bloodshed; therefore they began to set their hearts upon their riches; yea, they began to seek to get gain that they might be lifted up one above another; therefore they began to commit secret murders, and to rob and to plunder, that they might get gain.

18 இப்பொழுதும் இதோ, கிஸ்குமனாலும், காதியாந்-
தனாலும் உருவாக்கப்பட்ட கூட்டத்தை அந்த கொ-
லைகாரரும், கொள்ளைக்காரரும் சார்ந்திருந்தார்-
கள். இப்பொழுது காதியாந்தனின் கூட்டத்தைச்
சார்ந்த அநேகர் நேபியர்களுக்குள்ளும் இருந்தார்-
கள். ஆனாலும் இதோ அவர்களில் மிகவும் அதிக-
மானோர் மிக துன்மார்க்கமான லாமானியருக்குள்
இருந்தார்கள். அவர்கள் காதியாந்தனின் திருடர்க-
ளென்றும், கொலைகாரர்களென்றும் அழைக்கப்-
பட்டார்கள்.

And now behold, those murderers and plunderers were a band who had been formed by Kishkumen and Gadianton. And now it had come to pass that there were many, even among the Nephites, of Gadianton's band. But behold, they were more numerous among the more wicked part of the Lamanites. And they were called Gadianton's robbers and murderers.

19 இவர்களால்தான் பிரதான நியாயாதிபதியான சி-
சோரமும் அவன் குமாரனும் நியாயாசனத்திலே
இருக்கும்போதே கொல்லப்பட்டார்கள்; இதோ,
அவர்கள் கண்டுபிடிக்கப்படவேயில்லை.

And it was they who did murder the chief judge Cezoram, and his son, while in the judgment-seat; and behold, they were not found.

20 இப்பொழுதும், அந்தப்படியே, லாமானியர் தங்க-
ளுக்குள் கொள்ளைக்காரர்கள் இருக்கிறார்கள்
எனக் கண்டவுடன் மிகவும் வருந்தினார்கள்;
அவர்கள் அவர்களை பூமியின் பரப்பின் மீதிருந்து
அழித்துப்போட தங்கள் பெலத்திற்குட்பட்ட எல்லா
முயற்சிகளையும் மேற்கொண்டார்கள்.

And now it came to pass that when the Lamanites found that there were robbers among them they were exceedingly sorrowful; and they did use every means in their power to destroy them off the face of the earth.

21 ஆனால் இதோ, அவர்கள் அந்தத் திருடர் கூட்டத்-
தோடு ஐக்கியமாகி, அவர்கள் எத்தகைய கஷ்ட-
மான சூழ்நிலையிலிருந்தாலும், அவர்கள் தங்கள்
கொலைகளுக்காவும், கொள்ளைகளுக்காவும்,
தங்கள் களவுகளுக்காவும் தண்டிக்கப்படக்கூடாத-
படிக்கு ஒருவருக்கொருவர் பாதுகாத்து, காப்பாற்-
றவேண்டுமென்ற அவர்களுடைய உடன்படிக்கை-
களுக்குள்ளும் வாக்குறுதிகளுக்குள்ளும் பிரவே-
சிக்கும் அளவுக்கு, நேபியர்களின் அதிகமானோ-
ரின் இருதயங்களை சாத்தான் ஏவிவிட்டான்.

But behold, Satan did stir up the hearts of the more part of the Nephites, insomuch that they did unite with those bands of robbers, and did enter into their covenants and their oaths, that they would protect and preserve one another in whatsoever difficult circumstances they should be placed, that they should not suffer for their murders, and their plunderings, and their stealings.

22 அந்தப்படியே, அவர்கள் தங்கள் அறிகுறிகளை,
ஆம், தங்கள் இரகசிய அறிகுறிகளையும் தங்கள்
இரகசிய வார்த்தைகளையும் பெற்றிருந்தார்கள்;
இது உடன்படிக்கையினுள் பிரவேசித்திருந்த சகோ-
தரனை வேறுபடுத்தவும், அவன் சகோதரன் எத்த-
கைய துன்மார்க்கம் செய்திருப்பினும் அவன் தன-
து சகோதரனாலோ அல்லது இந்த உடன்படிக்கை-
யினுள் பிரவேசித்திருந்த அவன் கூட்டத்தை சார்ந்-
தோராலோ காயப்படுத்தப்படக் கூடாதென்பதற்கா-
கவுமாகும்.

And it came to pass that they did have their signs, yea, their secret signs, and their secret words; and this that they might distinguish a brother who had entered into the covenant, that whatsoever wickedness his brother should do he should not be injured by his brother, nor by those who did belong to his band, who had taken this covenant.

23 இப்படியாக அவர்கள் தங்கள் தேசத்தின் சட்டங்களுக்கும், தங்கள் தேவனின் நியாயப் பிரமாணங்களுக்கும் விரோதமாக கொலையையும், களவையும், திருட்டையும், வேசித்தனத்தையும் மற்றும் எல்லாவிதமான துன்மார்க்கங்களையும் செய்ய முடிந்தது,

24 அவர்களுடைய கூட்டத்தைச் சார்ந்த எவரும் தங்களுடைய துன்மார்க்கத்தையும், தங்களுடைய அருவருப்புகளையும் உலகத்திற்கு வெளிப்படுத்தினால், அவர்கள் தங்கள் தேசத்தின் சட்டங்களால் அல்ல, காதியாந்தன் மற்றும் கிஸ்குமனால் கொடுக்கப்பட்ட தங்கள் துன்மார்க்கத்தின்படியேயான சட்டங்களுக்குத்தக்கதாக விசாரிக்கப்படவேண்டும்.

25 இப்பொழுது இதோ, அந்த இரகசிய ஆணைகளும், உடன்படிக்கைகளும் ஜனங்களை அழிவிற்குள்ளாகக் கொண்டுபோகும் வழி என்பதினால், அவைகள் உலகினுள் போகக்கூடாதென்று ஆல்மா தன் குமாரனுக்குக் கட்டளையிட்டான்.

26 இப்பொழுதும் இதோ, ஏலமனிடம் ஒப்படைக்கப்பட்ட அந்தப் பதிவேடுகளின் மூலமாக காதியாந்தனுக்கு இந்த இரகசிய ஆணைகளும் உடன்படிக்கைகளும் கிடைக்கவில்லை; ஆனால் இதோ, தவிர்க்கப்பட்ட கனியை புசிக்கும்படியாக நம்முடைய முதற்பெற்றோரை வஞ்சித்த அவன்தான் இவைகளையும் காதியாந்தனின் இருதயத்திலே போட்டான்.

27 ஆம், தன் சகோதரனாகிய ஆபேலைக் கொலை செய்தால் அது உலகத்திற்குத் தெரிவிக்கப்பட மாட்டாது என்று காயினுடன் ஒரு திட்டம் தீட்டின அவன்தான். அவன் அச்சமயம் முதற்கொண்டு. காயீனோடும், தன்னைப் பின்பற்றினவர்களோடும் ஒரு திட்டம் தீட்டினான்.

28 பரலோகத்தை கிட்டிச்சேர, போதுமான ஒரு உயரமான கோபுரத்தை ஜனங்கள் கட்டும்படியான வாஞ்சையை அவர்கள் இருதயங்களில் போட்டவனும் அவன்தான். அந்தக் கோபுரத்திலிருந்து இத்தேசத்திற்கு வந்த ஜனங்களையும் அவன்தான் வழிநடத்திக்கொண்டு போனான். அவன் ஜனங்களை முழு அழிவிற்கும், என்றுமுள்ள பாதாளத்திற்கும் இழுத்துப் போகுமளவும், அவன் உலகம் முழுவதும் காரிருளான கிரியைகளையும் அருவருப்புகளையும் பரப்பினான்.

29 ஆம், காரிருளான கிரியையும், இரகசியக் கொலையையும் இன்னும் செய்யும்படியாக காதியாந்தனின் இருதயத்திலே அந்த வாஞ்சையை போட்டவனும் அவன்தான்; அதை அவன் மனுஷ துவக்கம் கொண்டு இந்நாள் வரைக்குமாய் நடத்தி வந்திருக்கிறான்.

And thus they might murder, and plunder, and steal, and commit whoredoms and all manner of wickedness, contrary to the laws of their country and also the laws of their God.

And whosoever of those who belonged to their band should reveal unto the world of their wickedness and their abominations, should be tried, not according to the laws of their country, but according to the laws of their wickedness, which had been given by Gadianton and Kishkumen.

Now behold, it is these secret oaths and covenants which Alma commanded his son should not go forth unto the world, lest they should be a means of bringing down the people unto destruction.

Now behold, those secret oaths and covenants did not come forth unto Gadianton from the records which were delivered unto Helaman; but behold, they were put into the heart of Gadianton by that same being who did entice our first parents to partake of the forbidden fruit—

Yea, that same being who did plot with Cain, that if he would murder his brother Abel it should not be known unto the world. And he did plot with Cain and his followers from that time forth.

And also it is that same being who put it into the hearts of the people to build a tower sufficiently high that they might get to heaven. And it was that same being who led on the people who came from that tower into this land; who spread the works of darkness and abominations over all the face of the land, until he dragged the people down to an entire destruction, and to an everlasting hell.

Yea, it is that same being who put it into the heart of Gadianton to still carry on the work of darkness, and of secret murder; and he has brought it forth from the beginning of man even down to this time.

30 இதோ, அவனே எல்லா பாவத்திற்கும் காரணனாய் இருக்கிறான். இதோ, அவன் தன் காரிருளான கிரியைகளையும், இரகசியக் கொலையையும் செய்து, அவர்களின் திட்டங்களையும், அவர்களின் ஆணைகளையும், அவர்களின் உடன்படிக்கைகளையும், அவர்களின் அஞ்சத்தக்க துன்மார்க்கத்தின் திட்டங்களையும், அவன் மனுபுத்திரரின் இருதயங்களைப் பிடித்துப் போடுவதற்குத் தக்கதாக தலைமுறையிலிருந்து தலைமுறைக்கு கையளித்து வருகிறான்.

And behold, it is he who is the author of all sin. And behold, he doth carry on his works of darkness and secret murder, and doth hand down their plots, and their oaths, and their covenants, and their plans of awful wickedness, from generation to generation according as he can get hold upon the hearts of the children of men.

31 இப்பொழுதும் இதோ, ஆம், இதனால் அவர்கள் மிகவும் துன்மார்க்கராகும் அளவுக்கு அவன் நேபியர்களின் இருதயங்களை பெரிதும் பற்றிக்கொண்டான். ஆம், அவர்களின் பெரும்பகுதியினர் நீதியின் மார்க்கத்தினின்று விலகி, தேவ கட்டளைகளைத் தங்கள் பாதங்களுக்குக் கீழ் மிதித்துப்போட்டு, தங்களின் சொந்த வழிகளுக்குத் திரும்பி, தங்களுக்கென்று தங்கள் பொன்னினாலும், தங்கள் வெள்ளியினாலும் விக்கிரகங்களைச் செய்தார்கள்.

And now behold, he had got great hold upon the hearts of the Nephites; yea, insomuch that they had become exceedingly wicked; yea, the more part of them had turned out of the way of righteousness, and did trample under their feet the commandments of God, and did turn unto their own ways, and did build up unto themselves idols of their gold and their silver.

32 அந்தப்படியே, அதில் அநேகம் அவர்களுக்கு நேபியின் ஜனங்களின்மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் அறுபத்தி ஏழாம் வருஷத்தில் வரும் அளவுக்கு இந்த அக்கிரமங்கள் யாவும் அவர்களுக்குக் குறுகிய காலத்திற்குள்ளாகவே வந்தது.

And it came to pass that all these iniquities did come unto them in the space of not many years, insomuch that a more part of it had come unto them in the sixty and seventh year of the reign of the judges over the people of Nephi.

33 நீதிமான்களுக்கு பெரும் துக்கத்தையும் புலம்பலையும் உண்டாக்கும் வண்ணம், அவர்கள் தங்கள் அக்கிரமங்களிலே அறுபத்தி எட்டாம் வருஷத்திலும் வளரத் துவங்கினார்கள்.

And they did grow in their iniquities in the sixty and eighth year also, to the great sorrow and lamentation of the righteous.

34 இப்படியாக நேபியர்கள் அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்து, துன்மார்க்கத்திலும், அருவருப்புகளிலும் வளரத் துவங்குவதையும், லாமானியர் தங்கள் தேவனுடைய ஞானத்தில் மிகுதியாய் வளரத் துவங்குவதையும் நாம் காண்கிறோம்; ஆம், அவர்கள் அவருடைய நியமங்களையும் கட்டளைகளையும் கைக்கொண்டு அவருக்கு முன்பாக சத்தியத்திலும், சன்மார்க்கத்திலும் நடக்கத் துவங்கினார்கள்.

And thus we see that the Nephites did begin to dwindle in unbelief, and grow in wickedness and abominations, while the Lamanites began to grow exceedingly in the knowledge of their God; yea, they did begin to keep his statutes and commandments, and to walk in truth and uprightness before him.

35 இப்படியாக நேபியர்களின் துன்மார்க்கத்தினிமித்தமும், அவர்களுடைய இருதயத்தின் கடினத்தினிமித்தமும், அவர்களிடமிருந்து கர்த்தருடைய ஆவி நீங்கத் துவங்கியது, என்று நாம் காண்கிறோம்.

And thus we see that the Spirit of the Lord began to withdraw from the Nephites, because of the wickedness and the hardness of their hearts.

36 இப்படியாக, லாமானியரின் எளிமையினிமித்தமும், கர்த்தருடைய வார்த்தைகளில் நம்பிக்கை வைக்க மனமுள்ளவர்களாயிருந்தபடியாலும், அவர் அவர்கள்மேல் தமது ஆவியை ஊற்றத் துவங்கினார் என்றும் நாம் காண்கிறோம்.

And thus we see that the Lord began to pour out his Spirit upon the Lamanites, because of their easiness and willingness to believe in his words.

37 அந்தப்படியே, லாமானியர் காதியாந்தனின் திரு-
டர் கூட்டத்தை வேட்டையாடினார்கள்; லாமானிய-
ருக்குள்ளிருந்து இந்தத் திருடர் கூட்டம் முற்றிலு-
மாய் அழிக்கப்படுமட்டிலும், அவர்களில் அதிக
துன்மார்க்கப் பகுதியினருக்குள்ளே அவர்கள்
தேவ வார்த்தையைப் பிரசங்கித்தார்கள்.

And it came to pass that the Lamanites did hunt the band of robbers of Gadianton; and they did preach the word of God among the more wicked part of them, insomuch that this band of robbers was utterly destroyed from among the Lamanites.

38 அந்தப்படியே, மறுபுறத்திலே நேபியர்கள், காதி-
யாந்தன் திருடர் கூட்டத்திலும் பெரும் துன்மார்க்க-
ரில் துவங்கி, அவர்கள் நேபியர்களின் தேசமெங்-
கும் பரவி, நீதிமான்கள் அதிகமானோரை வஞ்சிக்-
கும் வரைக்குமாயும், அவர்களுடைய கொள்ளைக-
ளில் பங்குகொண்டு அவர்களுடைய இரகசியக்
கொலைகளிலும், சங்கங்களிலும் நம்பி சேர்ந்து-
கொள்ளும் வரைக்குமாயும் அவர்களை வளர்த்து
ஆதரித்தார்கள்.

And it came to pass on the other hand, that the Nephites did build them up and support them, beginning at the more wicked part of them, until they had overspread all the land of the Nephites, and had seduced the more part of the righteous until they had come down to believe in their works and partake of their spoils, and to join with them in their secret murders and combinations.

39 இப்படியாக அவர்கள் எளிமையானோரையும், சி-
றுமையானோரையும், தேவனைத் தாழ்மையாய்
பின்பற்றுகிறவர்களையும், தங்கள் பாதங்களுக்-
குக் கீழ் மிதித்து, அடித்து, பீறிப்போட்டு அவர்க-
ளுக்குத் தங்கள் முதுகுகளைக் காண்பிக்கும் அள-
விலும் அவர்கள் ராஜாங்கத்தின் முழு அதிகாரத்-
தையும் பெற்றுக்கொண்டார்கள்.

And thus they did obtain the sole management of the government, insomuch that they did trample under their feet and smite and rend and turn their backs upon the poor and the meek, and the humble followers of God.

40 இப்படியாக அவர்கள் அஞ்சத்தக்க நிலையிலி-
ருந்து, என்றுமுள்ள அழிவிற்கேதுவாய் பழுத்தி-
ருந்தார்கள் என்பதை நாம் காண்கிறோம்.

And thus we see that they were in an awful state, and ripening for an everlasting destruction.

41 அந்தப்படியே, நேபியின் ஜனங்கள் மேல் நியாயா-
திபதிகளின் ஆளுகையின் அறுபத்தி எட்டாம்
வருஷமும் முடிவுற்றது.

And it came to pass that thus ended the sixty and eighth year of the reign of the judges over the people of Nephi.

***ஏலமனின் குமாரனாகிய நேபியின் தீர்க்கதரி-
சனம்*** *– நேபியின் ஜனங்கள் தங்கள் துன்மார்க்கத்தி-
லிருந்து மனந்திரும்பாவிடில், அவர்கள் முழுவது-
மாய் அழியும்படியாய் தமது கோபத்தினால் அவர்க-
ளை சந்திப்பேன் என்று தேவன் பயமுறுத்தல். தே-
வன் நேபியின் ஜனங்களை வாதையினால் அடித்-
தல். அவர்கள் மனந்திரும்பி அவரிடம் திரும்புதல்.
லாமானியனான சாமுவேல் நேபியர்களுக்குத் தீர்க்-
கதரிசனம் உரைத்தல்.*

## ஏலமன் 7

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, நேபியின்
ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகை-
யின் அறுபத்தி ஒன்பதாம் வருஷத்திலே ஏல-
மனின் குமாரனாகிய நேபி வடதேசத்திலிருந்து சா-
ரகெம்லா தேசத்திற்குத் திரும்பினான்.
2 ஏனென்றால் அவன் வடதேசத்திலிருந்த ஜனங்க-
ளுக்குள்ளே போய், அவர்களுக்கு தேவ வசனத்-
தைப் பிரசங்கித்து, அவர்களுக்கு அநேகக் காரியங்-
களைத் தீர்க்கதரிசனமாய் உரைத்தான்.
3 அவர்களுக்குள்ளே அவன் தங்கக்கூடாமல் மறு-
படியும் தன் சொந்த தேசத்திற்குத் திரும்பும் அள-
வுக்கு, அவர்கள் அவனுடைய எல்லா வார்த்தைக-
ளையும் நிராகரித்தனர்.
4 அவன் தன் ஜனங்கள் அப்படிப்பட்ட அஞ்சத்-
தக்க, துன்மார்க்க நிலையிலே இருப்பதையும், தே-
சத்தின் உரிமையையும், அதிகாரத்தையும் பிடுங்-
கிக்கொண்டு, காதியாந்தன் திருடர்கள் நியாயா-
சனங்களில் இருக்கிறதையும், தேவ கட்டளைக-
ளை ஒதுக்கி, அவருக்கு முன்பாக கொஞ்சமும் சரி-
யாய்ச் செய்யாமல், மனுபுத்திரருக்கு எந்த நியாயத்-
தையும் செய்யாமல்;
5 நீதிமான்களை அவர்களுடைய நீதியினிமித்தம்
ஆக்கினைக்குட்படுத்தி, அவர்களது பணத்தினி-
மித்தம் குற்றமுள்ளோரையும், துன்மார்க்கரையும்
தண்டிக்காமல் விட்டுவிட்டு, தங்கள் விருப்பப்படி-
யே ஆளவும், உலகத்தின் லாபத்தையும் புகழையும்
பெறும்படிக்கும், இதற்கும் மேலாக சுலபமாய் விப-
சாரம் பண்ணவும், திருடவும், கொலை செய்யவும்,
தங்களுடைய சுய சித்தப்படி நடக்கவும், மேலும் ரா-
ஜாங்கத்தின் தலைமை அலுவலில் இருப்பதையும்,
கண்டான்.
6 இப்பொழுதும், சில வருஷங்களுக்குள்ளாகவே
இப்பெரிய அக்கிரமம் நேபியர்கள் மேல் வந்தது; நே-
பி இதைக் கண்டபோது, நெஞ்சுக்குள் அவனது
இருதயம் துக்கத்தால் நிறைந்தது; அவன் தன் ஆத்-
தும வியாகுலத்தோடு ஓலமிட்டான்.

*The Prophecy of Nephi, the Son of Helaman—God threatens the people of Nephi that he will visit them in his anger, to their utter destruction except they repent of their wickedness. God smiteth the people of Nephi with pestilence; they repent and turn unto him. Samuel, a Lamanite, prophesies unto the Nephites.*

## Helaman 7

Behold, now it came to pass in the sixty and ninth year of the reign of the judges over the people of the Nephites, that Nephi, the son of Helaman, returned to the land of Zarahemla from the land northward.

For he had been forth among the people who were in the land northward, and did preach the word of God unto them, and did prophesy many things unto them;

And they did reject all his words, insomuch that he could not stay among them, but returned again unto the land of his nativity.

And seeing the people in a state of such awful wickedness, and those Gadianton robbers filling the judgment-seats—having usurped the power and authority of the land; laying aside the commandments of God, and not in the least aright before him; doing no justice unto the children of men;

Condemning the righteous because of their righteousness; letting the guilty and the wicked go unpunished because of their money; and moreover to be held in office at the head of government, to rule and do according to their wills, that they might get gain and glory of the world, and, moreover, that they might the more easily commit adultery, and steal, and kill, and do according to their own wills—

Now this great iniquity had come upon the Nephites, in the space of not many years; and when Nephi saw it, his heart was swollen with sorrow within his breast; and he did exclaim in the agony of his soul:

7 என் தகப்பனாகிய நேபி, எருசலேம் தேசத்திலிருந்து முதலாவதாக வந்த அந்த நாட்களில் என் நாட்களும் இருந்திருக்குமேயானால், நான் அவரோடுகூட வாக்குத்தத்தத்தின் தேசத்திலே சந்தோஷமாயிருந்திருப்பேன். அப்போது அவருடைய ஜனங்கள் நடத்தப்படுவதற்கு எளிதானவர்களாயும், தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்வதில் உறுதியுள்ளவர்களாயும், அக்கிரமம் செய்ய தயங்கினவர்களாயும் இருந்தார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்க துரிதப்பட்டார்கள்.

Oh, that I could have had my days in the days when my father Nephi first came out of the land of Jerusalem, that I could have joyed with him in the promised land; then were his people easy to be entreated, firm to keep the commandments of God, and slow to be led to do iniquity; and they were quick to hearken unto the words of the Lord—

8 ஆம், என் நாட்கள் அந்நாட்களில் இருந்திருக்குமேயானால், அப்பொழுது என் ஆத்துமா என் சகோதரரின் நீதியிலே சந்தோஷமடைந்திருக்கும்.

Yea, if my days could have been in those days, then would my soul have had joy in the righteousness of my brethren.

9 ஆனால் இதோ, இவைகளே என் நாட்களாக இருக்கின்றன. என் சகோதரரின் இந்த துன்மார்க்கத்தினிமித்தம், என் ஆத்துமா துக்கத்தால் நிறைக்கப்பட்டிருக்கும்படிக்கு நிர்பந்தப்பட்டிருக்கிறேன்.

But behold, I am consigned that these are my days, and that my soul shall be filled with sorrow because of this the wickedness of my brethren.

10 இதோ, இப்பொழுதும், அந்தப்படியே, இது சாரகெம்லா பட்டணத்திலுள்ள முக்கியமான சந்தைக்குப் போகிற அந்த நெடுஞ்சாலைக்கு அருகே அமைந்த நேபியின் தோட்டத்திலுள்ள கோபுரத்தின் மேல் நடந்தது. ஆதலால் நேபி தன் தோட்டத்தில் இருந்த கோபுரத்தின் மேல் முகங்குப்புற விழுந்திருந்தான். அக்கோபுரம் நெடுஞ்சாலைக்குப் போகிற வழியருகில் இருந்த தோட்ட வாசலுக்கும் அருகாமையிலிருந்தது.

And behold, now it came to pass that it was upon a tower, which was in the garden of Nephi, which was by the highway which led to the chief market, which was in the city of Zarahemla; therefore, Nephi had bowed himself upon the tower which was in his garden, which tower was also near unto the garden gate by which led the highway.

11 அந்தப்படியே, அங்கே வழிப்போக்கர் சிலர் கோபுரத்தின் மேல் தேவனிடத்தில் தன் ஆத்துமாவை நேபி ஊற்றுவதைக் கண்டு, அவர்கள் ஓடி தாங்கள் கண்டதை ஜனங்களுக்குச் சொன்னார்கள், ஜனங்களின் துன்மார்க்கத்தினிமித்தம், இப்படி மிகுதியாய்த் துன்பப்படுகிறதின் காரணத்தை அறியும்படிக்கு ஜனங்கள் திரள்கூட்டமாய் வந்தார்கள்.

And it came to pass that there were certain men passing by and saw Nephi as he was pouring out his soul unto God upon the tower; and they ran and told the people what they had seen, and the people came together in multitudes that they might know the cause of so great mourning for the wickedness of the people.

12 இப்பொழுதும் நேபி எழுந்தபோது, அவன் ஏகமாய்க் கூடின ஜனங்களின் திரள்கூட்டத்தைக் கண்டான்.

And now, when Nephi arose he beheld the multitudes of people who had gathered together.

13 அந்தப்படியே, அவன் தன் வாயைத் திறந்து அவர்களை நோக்கி சொன்னான்: இதோ நீங்கள் ஏன் ஏகமாய்க் கூடியிருக்கிறீர்கள்? நான் உங்களுடைய அக்கிரமங்களைக் குறித்து சொல்ல வேண்டுமென்பதற்காகவா?

And it came to pass that he opened his mouth and said unto them: Behold, why have ye gathered yourselves together? That I may tell you of your iniquities?

14 ஆம், உங்களுடைய துன்மார்க்கங்களினிமித்தம், என் இருதயத்தில் ஏற்பட்ட மிகுந்த துன்பத்தினிமித்தம், என் ஆத்துமாவை என் தேவனுக்கென்று ஊற்றும்படியாக என் கோபுரத்தின் மேல் நான் வந்த காரணத்தினிமித்தமே!

Yea, because I have got upon my tower that I might pour out my soul unto my God, because of the exceeding sorrow of my heart, which is because of your iniquities!

15 என் துயரத்தினிமித்தமும், புலம்பலினிமித்தமும்,
நீங்கள் கூடி அதிசயிக்கிறீர்கள். ஆம், நீங்கள் அதிச-
யப்பட மிகவும் அவசியம் உண்டு. ஆம், பிசாசு உங்-
களுடைய இருதயங்களை மிகவும் கெட்டியாய்ப்
பிடித்துக்கொள்ள, நீங்கள் உங்களையே கொடுத்த-
தினிமித்தமே, நீங்கள் அதிசயிக்கவேண்டும்.

And because of my mourning and lamentation ye have gathered yourselves together, and do marvel; yea, and ye have great need to marvel; yea, ye ought to marvel because ye are given away that the devil has got so great hold upon your hearts.

16 ஆம், என்றுமுள்ள துன்பத்திற்கும், முடிவில்லா
துயரத்திற்கும், உங்களின் ஆத்துமாக்களை எறிய
வகை தேடிக்கொண்டிருப்பவனின் வஞ்சனைக்கு
நீங்கள் எப்படி இடங்கொடுப்பீர்கள்?

Yea, how could you have given way to the enticing of him who is seeking to hurl away your souls down to everlasting misery and endless wo?

17 நீங்கள் மனந்திரும்புங்கள், மனந்திரும்புங்கள்!
நீங்கள் ஏன் மரித்துப்போக வேண்டும்? திரும்புங்-
கள். உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்-
கள். அவர் ஏன் உங்களைக் கைவிட்டார்?

O repent ye, repent ye! Why will ye die? Turn ye, turn ye unto the Lord your God. Why has he forsaken you?

18 உங்களுடைய இருதயங்களை நீங்கள் கடினப்ப-
டுத்தினதினிமித்தம், ஆம், நல் மேய்ப்பனின் சத்தத்-
திற்குச் செவிகொடாமல், ஆம், உங்களுக்கு விரோத-
மாய் அவரைக் கோபமூளச் செய்தீர்கள்.

It is because you have hardened your hearts; yea, ye will not hearken unto the voice of the good shepherd; yea, ye have provoked him to anger against you.

19 இதோ, நீங்கள் மனந்திரும்பாவிடில், உங்களைக்
கூட்டுவதற்குப் பதிலாக, இதோ, நீங்கள் நாய்களுக்-
கும் காட்டு விலங்குகளுக்கும் மாம்சமாகும்படி
அவர் உங்களைச் சிதறடிப்பார்.

And behold, instead of gathering you, except ye will repent, behold, he shall scatter you forth that ye shall become meat for dogs and wild beasts.

20 உங்கள் தேவன் உங்களைத் தப்புவித்த அதே நா-
ளில், அவரை நீங்கள் மறந்து போகக்கூடுமோ?

O, how could you have forgotten your God in the very day that he has delivered you?

21 ஆனால், இதோ, ஆதாயம் பெறவும், மனுஷரால்
புகழப்படவும், ஆம், பொன்னையும் வெள்ளியை-
யும் பெறவேண்டியே அதைச் செய்தீர்கள். நீங்கள்
ஐஸ்வரியத்தின் மேலும், உலகத்தின் வீணானவை-
களின் மேலும் உங்கள் இருதயங்களை வைத்ததா-
லேதான், நீங்கள் கொலை, கொள்ளை, திருட்டு,
உங்கள் அயலாருக்கு விரோதமாய் பொய் சாட்சி,
மற்றும் எல்லாவிதமான அக்கிரமத்தையும் செய்கி-
றீர்கள்.

But behold, it is to get gain, to be praised of men, yea, and that ye might get gold and silver. And ye have set your hearts upon the riches and the vain things of this world, for the which ye do murder, and plunder, and steal, and bear false witness against your neighbor, and do all manner of iniquity.

22 நீங்கள் மனந்திரும்பாவிடில், இந்தக் காரணத்தி-
னிமித்தம், உங்கள் மேல் அழிவு வரும். நீங்கள்
மனந்திரும்பாவிடில், இதோ நம்முடைய வசமிருக்-
கும் தேசத்திலுள்ள இந்த மாநகரமும், சுற்றியுமுள்ள
அந்த எல்லா மாநகரங்களும், உங்களுக்கு இடமில்-
லாமல் எடுத்துக் கொள்ளப்படும்; ஏனெனில்
இதோ, நீங்கள் உங்களுடைய விரோதிகளை எதிர்த்-
து நிற்க, கர்த்தர் இதுவரைக்கும் செய்ததைப்போல,
உங்களுக்கு பெலத்தை அருளமாட்டார்.

And for this cause wo shall come unto you except ye shall repent. For if ye will not repent, behold, this great city, and also all those great cities which are round about, which are in the land of our possession, shall be taken away that ye shall have no place in them; for behold, the Lord will not grant unto you strength, as he has hitherto done, to withstand against your enemies.

23 ஏனெனில் இதோ, கர்த்தர் உரைப்பதாவது: தங்-
கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பி, என் வார்த்-
தைக்கு செவிகொடுத்தாலொழிய ஒருவரைவிட
ஒருவருக்கு அதிகமாய்த் துன்மார்க்கருக்கு என்
பெலத்தை நான் காண்பிப்பதில்லை. இப்பொழு-
தும் ஆதலால், என் சகோதரரே, நீங்கள் மனந்திரும்-
பாவிடில் உங்களைக் காட்டிலும் லாமானியர்க-
ளுக்கு நலமாயிருக்கும் என்பதை நீங்கள் அறிந்து-
கொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன்.

For behold, thus saith the Lord: I will not show unto the wicked of my strength, to one more than the other, save it be unto those who repent of their sins, and hearken unto my words. Now therefore, I would that ye should behold, my brethren, that it shall be better for the Lamanites than for you except ye shall repent.

24 ஏனெனில் இதோ, அவர்கள் உங்களைக் காட்டி-
லும் நீதியுள்ளவர்கள். ஏனெனில் அவர்கள் நீங்-
கள் பெற்ற அந்த மகா ஞானத்திற்கு விரோதமாக
பாவம் செய்யவில்லை; ஆதலால் கர்த்தர் அவர்க-
ளுக்கு இரக்கமுள்ளவராயிருப்பார்; ஆம், நீங்கள்
மனந்திரும்பாவிடில், நீங்கள் முழுவதுமாய் அழிக்-
கப்பட்டாலும், அவர் அவர்களின் நாட்களை நீட்-
டித்து, அவர்களின் சந்தானத்தைப் பெருகப்பண்-
ணுவார்.

For behold, they are more righteous than you, for they have not sinned against that great knowledge which ye have received; therefore the Lord will be merciful unto them; yea, he will lengthen out their days and increase their seed, even when thou shalt be utterly destroyed except thou shalt repent.

25 ஆம், உங்களுக்குள் வந்த இந்த மகா அருவருப்பி-
னிமித்தம் உங்களுக்கு ஐயோ; காதியாந்தனால் ஸ்-
தாபிக்கப்பட்ட அந்த இரகசியக் கூட்டத்தோடு நீங்-
கள் சேர்ந்து கொண்டீர்களே!

Yea, wo be unto you because of that great abomination which has come among you; and ye have united yourselves unto it, yea, to that secret band which was established by Gadianton!

26 ஆம், உங்களுடைய மிகுந்த ஐஸ்வரியங்களினி-
மித்தமும், நன்மையானதற்கு அப்பால் உங்களை
உயரப்பண்ணின அந்த பெருமையை உங்களு-
டைய இருதயங்களுள் நீங்கள் நுழைய அனுமதித்-
ததினிமித்தமும், உங்களுக்கு ஐயோ!

Yea, wo shall come unto you because of that pride which ye have suffered to enter your hearts, which has lifted you up beyond that which is good because of your exceedingly great riches!

27 ஆம், உங்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமும்,
அருவருப்புகளினிமித்தமும், உங்களுக்கு ஐயோ!

Yea, wo be unto you because of your wickedness and abominations!

28 நீங்கள் மனந்திரும்பாவிடில் நீங்கள் அழிந்து-
போவீர்கள்; ஆம், உங்கள் தேசங்களும் உங்களிடத்-
திலிருந்து எடுத்துக் கொள்ளப்படும். நீங்கள் பூமி-
யின் பரப்பின் மேலிருந்து நிர்மூலமாக்கப்படுவீர்-
கள்.

And except ye repent ye shall perish; yea, even your lands shall be taken from you, and ye shall be destroyed from off the face of the earth.

29 இதோ, இப்பொழுதும், நான் நானே இவைகளைச்
சொல்லுவதில்லை. ஏனெனில், நானாகவே இவை-
களை அறிந்துகொள்ளவில்லை; ஆனால் இதோ,
தேவனாகிய கர்த்தர் எனக்கு இவை சத்தியமான-
வை என்று தெரியப்படுத்தியதினிமித்தம் அவை
அப்படியே ஆகும், என்று சாட்சி கொடுக்கிறேன்.

Behold now, I do not say that these things shall be, of myself, because it is not of myself that I know these things; but behold, I know that these things are true because the Lord God has made them known unto me, therefore I testify that they shall be.

# ஏலமன் 8

1 இப்பொழுதும், அந்தப்படியே, நேபி இந்த வார்த்தை-
களைச் சொன்னபோது, இதோ, அங்கிருந்த மனு-
ஷர்களில் நியாயாதிபதிகளாயும், காதியாந்தனின்
இரகசியக் கூட்டத்தைச் சார்ந்தவராயும் இருந்தவர்-
கள் இருந்தபடியால், அவர்கள் கோபமடைந்து
அவனுக்கு விரோதமாய் ஜனங்களிடத்தில் கூக்குர-
லிட்டு, இவன் செய்த குற்றத்தினிமித்தம் இவன்
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படும்படி இவனை
ஏன் நீங்கள் பிடித்துக் கொண்டு போகக்கூடாது
என்றார்கள்.

2 இம்மனுஷன் இந்த ஜனத்திற்கும், நம்முடைய சட்-
டங்களுக்கும் விரோதமாக நிந்திக்கிறதையும் ஏன்
நீங்கள் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டுமி-
ருக்கிறீர்கள்?

3 ஏனெனில் இதோ, நேபி அவர்களிடம் அவர்களு-
டைய சட்டங்களின் சீர்கேட்டைக் குறித்துப் பேசி-
னான்; ஆம், நேபி பேசின அநேகக் காரியங்கள் எழு-
தப்படமுடியாது; தேவ கட்டளைகளுக்கு விரோத-
மாக அவன் ஒன்றும் பேசவில்லை.

4 அவன் அந்த நியாயாதிபதிகளின் காரிருளின்
இரகசியக் கிரியைகளைக் குறித்து அவர்களிடம்
தெளிவாய் சொன்னதினிமித்தம் அவர்கள் அவன்
மேல் கோபம் கொண்டார்கள்; ஆயினும், ஜனங்கள்
ஒருவேளை தங்களுக்கு விரோதமாகக் கூக்குரல்
இடக்கூடும் என்று அஞ்சி, அவர்கள் அவன் மேல்
தங்கள் சொந்த கைகளைப் போடத் துணியவில்-
லை.

5 ஆதலால் அவர்கள் ஜனங்களை நோக்கி: இம்-
மனுஷன் நம்மை நிந்திக்கும்படி ஏன் விட்டு வைக்-
கிறீர்கள்? ஏனெனில் இதோ, இந்த ஜனங்களெல்-
லோரும் அழிவுக்குள்ளாகப்படுவார்களென்று
ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறான்; ஆம், இம்மகா
பட்டணங்களில் நமக்கு இடம் இல்லாமற்போகும்ப-
டியாய், அவைகள் நம்மிடமிருந்து எடுத்துக்கொள்-
ளப்படும், என்கிறான்.

6 இப்பொழுதும் அது சாத்தியமில்லை என்று நமக்-
குத் தெரியும். ஏனெனில், இதோ, நாம் வல்லமையு-
டையவர்கள். நம்முடைய நகரங்கள் சிறந்தவை.
ஆதலால் நம்முடைய சத்துருக்கள் நம்மேல் அதி-
காரம் பெற முடியாது.

7 அந்தப்படியே, அவர்கள் இப்படியாக ஜனங்களை
நேபிக்கு விரோதமாக தூண்டிவிட்டு அவர்களுக்-
குள்ளே பிணக்குகளை விளைவித்தார்கள்; ஏனெ-
னில் சிலர், இம்மனுஷனை விட்டுவிடுங்கள்,
அவன் நல்லவன். அவன் சொல்லுகிற அந்தக் காரி-
யங்கள், நாம் மனந்திரும்பாவிடில் மெய்யாகவே நி-
றைவேறும், என்று கூக்குரலிட்டார்கள்

# Helaman 8

And now it came to pass that when Nephi had said these words, behold, there were men who were judges, who also belonged to the secret band of Gadianton, and they were angry, and they cried out against him, saying unto the people: Why do ye not seize upon this man and bring him forth, that he may be condemned according to the crime which he has done?

Why seest thou this man, and hearest him revile against this people and against our law?

For behold, Nephi had spoken unto them concerning the corruptness of their law; yea, many things did Nephi speak which cannot be written; and nothing did he speak which was contrary to the commandments of God.

And those judges were angry with him because he spake plainly unto them concerning their secret works of darkness; nevertheless, they durst not lay their own hands upon him, for they feared the people lest they should cry out against them.

Therefore they did cry unto the people, saying: Why do you suffer this man to revile against us? For behold he doth condemn all this people, even unto destruction; yea, and also that these our great cities shall be taken from us, that we shall have no place in them.

And now we know that this is impossible, for behold, we are powerful, and our cities great, therefore our enemies can have no power over us.

And it came to pass that thus they did stir up the people to anger against Nephi, and raised contentions among them; for there were some who did cry out: Let this man alone, for he is a good man, and those things which he saith will surely come to pass except we repent;

8 ஆம், இதோ, அவன் நமக்குச் சாட்சி கொடுத்தபடி-
யே நியாயத்தீர்ப்புகள் யாவும் நம்மேல் வரும்;
ஏனெனில் நம்முடைய அக்கிரமங்களைக் குறித்து
அவன் சரியானதையே நமக்கு சாட்சி பகர்ந்திருக்-
கிறான். இதோ அவைகள் அநேகமாயிருக்கிறது.
அவன் நம்முடைய அக்கிரமங்களைக் குறித்து
அறிந்திருக்கிறதைப் போலவே நமக்கு சம்பவிக்-
கப்போகிற எல்லா காரியங்களையும் அறிந்திருக்-
கிறான்;

Yea, behold, all the judgments will come upon us which he has testified unto us; for we know that he has testified aright unto us concerning our iniquities. And behold they are many, and he knoweth as well all things which shall befall us as he knoweth of our iniquities;

9 ஆம், இதோ, அவன் ஒரு தீர்க்கதரிசியாய் இல்லா-
மலிருந்தால், இக்காரியங்களைக் குறித்து அவன்
சொல்லியிருக்கமாட்டான்.

Yea, and behold, if he had not been a prophet he could not have testified concerning those things.

10 அந்தப்படியே, நேபியை அழிக்க வகைதேடின
அந்த ஜனங்கள் பயத்தினால் கட்டாயப்படுத்தப்-
பட்டு, அவன் மேல் தங்கள் கைகளைப்போடத் து-
ணியவில்லை; ஆகவே தான் சிலரின் கண்களில்
தயை பெற்றாகிவிட்டது, அவர்களில் மீதியானோர்
பயந்தார்கள், எனக்கண்டு அவர்களிடம் மறுபடி-
யும் பேச ஆரம்பித்தான்.

And it came to pass that those people who sought to destroy Nephi were compelled because of their fear, that they did not lay their hands on him; therefore he began again to speak unto them, seeing that he had gained favor in the eyes of some, insomuch that the remainder of them did fear.

11 ஆதலால் அவன் அவர்களிடம் அதிகம் பேசும்படி
நெருக்கப்பட்டவனாய், சொன்னான், இதோ, என்
சகோதரரே, சிவந்த சமுத்திரத்தின் தண்ணீர்களை
அடிக்க மோசே என்ற ஒரு மனுஷனுக்கு தேவன்
வல்லமை கொடுத்தாரென்றும், அவை அங்கேயும்,
இங்கேயுமாக பிரிந்து நின்றதினிமித்தம் நம்முடைய
பிதாக்களாகிய இஸ்ரவேலர் உலர்ந்த பூமியின் மேல்
நடந்தார்களென்றும், தண்ணீர்கள் எகிப்தியரின்
சேனைகளின் மேல் மூடி, அவர்களை விழுங்கிப்-
போட்டதென்றும் நீங்கள் வாசிக்கவில்லையா?

Therefore he was constrained to speak more unto them saying: Behold, my brethren, have ye not read that God gave power unto one man, even Moses, to smite upon the waters of the Red Sea, and they parted hither and thither, insomuch that the Israelites, who were our fathers, came through upon dry ground, and the waters closed upon the armies of the Egyptians and swallowed them up?

12 இப்பொழுதும் இதோ, தேவன் அம்மனுஷனுக்கு
இப்பேர்ப்பட்ட வல்லமையைத் தந்தாரெனில், நீங்-
கள் ஏன் உங்களுக்குள்ளே தர்க்கித்து நீங்கள்
மனந்திரும்பவில்லையெனில், உங்கள்மேல் வரு-
கிற தீர்ப்புகளைக் குறித்து நான் அறியும்படிக்கு
அவர் எனக்கு எந்த அதிகாரத்தையும் கொடுக்க-
வில்லை என்று வாக்குவாதம் பண்ணவேண்டும்?

And now behold, if God gave unto this man such power, then why should ye dispute among yourselves, and say that he hath given unto me no power whereby I may know concerning the judgments that shall come upon you except ye repent?

13 ஆனால் இதோ, நீங்கள் என் வார்த்தைகளை மட்-
டுமல்ல, நம்முடைய பிதாக்களால் பேசப்பட்ட எல்-
லா வார்த்தைகளையும், தனக்கு மிகுந்த வல்லமை
அருளப்பட்டிருந்தவனாகிய மோசே என்ற இந்த
மனுஷன் பேசிய வார்த்தைகளான, ஆம், மேசியா-
வின் வருகையைக் குறித்து அவன் பேசின வார்த்-
தைகளையும் மறுக்கிறீர்கள்.

But, behold, ye not only deny my words, but ye also deny all the words which have been spoken by our fathers, and also the words which were spoken by this man, Moses, who had such great power given unto him, yea, the words which he hath spoken concerning the coming of the Messiah.

14 ஆம், அவன் தேவ குமாரன் வருவார் என்று சாட்சி
பகரவில்லையா? அவன் வனாந்தரத்தில் வெண்-
கல சர்ப்பத்தை உயர்த்தியதைப் போலவே, வரப்-
போகிற அவரும் உயர்த்தப்படுவார்.

Yea, did he not bear record that the Son of God should come? And as he lifted up the brazen serpent in the wilderness, even so shall he be lifted up who should come.

15 அந்த சர்ப்பத்தைப் பார்த்த அநேகர் பிழைத்த-
தைப் போலவே, விசுவாசத்தோடும், நொறுங்குண்ட
ஆவியோடும், தேவ குமாரனைக் காண்கிற அநேக-
ரும் நித்தியமான ஜீவன் பெறத்தக்கதாகப் பிழைத்-
திருப்பார்கள்.

And as many as should look upon that serpent should live, even so as many as should look upon the Son of God with faith, having a contrite spirit, might live, even unto that life which is eternal.

16 இப்பொழுதும், இதோ, இவைகளைக் குறித்து
மோசே மாத்திரமல்ல, அவன் நாட்கள் தொடங்கி,
ஆபிரகாம் வரை, இருந்த சகல பரிசுத்த தீர்க்கதரிசி-
களும் சாட்சி பகர்ந்தார்கள்.

And now behold, Moses did not only testify of these things, but also all the holy prophets, from his days even to the days of Abraham.

17 ஆம், இதோ, ஆபிரகாம் அவருடைய வருகை-
யைக் கண்டு, ஆனந்தத்தால் நிரப்பப்பட்டு களி-
கூர்ந்தான்.

Yea, and behold, Abraham saw of his coming, and was filled with gladness and did rejoice.

18 ஆம், இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
இவைகளை ஆபிரகாம் மாத்திரம் அல்ல, ஆம்,
அவருடைய குமாரனின் முறைமையின்படி
அழைக்கப்பட்டவர்களும் கூட, தேவ முறைமை-
யின்படியே அழைக்கப்பட்ட, ஆபிரகாமின் நாட்க-
ளுக்கு முன்பு இருந்த அநேகர் அறிந்திருந்தார்கள்.
ஜனங்களுக்கு மீட்பு வரவேண்டுமென்று அவரு-
டைய வருகைக்கு அநேக ஆயிரம் வருஷங்களுக்கு
முன்பே தெரிவிக்கப்படவேண்டுமென்றே இது இப்-
படி செய்யப்பட்டது.

Yea, and behold I say unto you, that Abraham not only knew of these things, but there were many before the days of Abraham who were called by the order of God; yea, even after the order of his Son; and this that it should be shown unto the people, a great many thousand years before his coming, that even redemption should come unto them.

19 இப்பொழுதும் ஆபிரகாமின் நாட்கள் தொடங்கி,
அநேக தீர்க்கதரிசிகள் இவைகளைக் குறித்து சாட்-
சி கொடுத்திருக்கிறார்களென்றும், நீங்கள் அறிய-
வேண்டுமென விரும்புகிறேன்; ஆம், இதோ, தீர்க்க-
தரிசி சீனஸ் தைரியமாய் சாட்சி கொடுத்தான்;
அதற்காக அவன் கொல்லப்பட்டான்.

And now I would that ye should know, that even since the days of Abraham there have been many prophets that have testified these things; yea, behold, the prophet Zenos did testify boldly; for the which he was slain.

20 இதோ, சீனாக்கும், இசையாசும், ஏசாயாவும், எரே-
மியாவும் (எரேமியா, எருசலேம் அழிவைக் குறித்து
சாட்சி கொடுத்த அதே தீர்க்கதரிசி) இப்பொழுதும்
எரேமியாவின் வார்த்தைகளின்படி எருசலேம்
அழிக்கப்பட்டதென்று நாம் அறிகிறோம். அப்படி-
யானால் அவனுடைய தீர்க்கதரிசனத்தின்படி தேவ
குமாரன் ஏன் வரவில்லை?

And behold, also Zenock, and also Ezias, and also Isaiah, and Jeremiah, (Jeremiah being that same prophet who testified of the destruction of Jerusalem) and now we know that Jerusalem was destroyed according to the words of Jeremiah. O then why not the Son of God come, according to his prophecy?

21 இப்பொழுதும், எருசலேம் அழிக்கப்பட்டதா என்-
று நீங்கள் தர்க்கம் பண்ணுவீர்களோ? மூலெக்-
கைத் தவிர செதேக்கியாவின் குமாரர்கள் கொல்-
லப்படவில்லை என்று சொல்லுவீரோ? ஆம், நம்-
மோடே செதேக்கியாவின் சந்ததியார் இருக்கிறார்க-
ளென்றும், அவர்கள் எருசலேம் தேசத்திலிருந்து து-
ரத்தியடிக்கப்பட்டவர்கள் என்றும் நீங்கள் காண-
வில்லையா? இதோ, இவை மாத்திரமல்ல.

And now will you dispute that Jerusalem was destroyed? Will ye say that the sons of Zedekiah were not slain, all except it were Mulek? Yea, and do ye not behold that the seed of Zedekiah are with us, and they were driven out of the land of Jerusalem? But behold, this is not all—

22 நம்முடைய பிதாவான லேகி இவைகளை சாட்சி
கொடுத்ததனிமித்தம் எருசலேமிலிருந்து துரத்திய-
டிக்கப்பட்டார். நேபியும், இக்காலம் வரைக்குமாய்
உள்ள நம்முடைய பிதாக்களில் ஏறக்குறைய
அனைவரும், இவைகளை சாட்சி பகர்ந்திருக்கி-
றார்கள் ஆம், அவர்கள் கிறிஸ்துவின் வருகை-
யைக் குறித்து சாட்சி கொடுத்து வரப்போகிற அவ-
ருடைய நாளை எதிர்நோக்கி களிகூர்ந்தும் இருக்கி-
றார்கள்.
23 இதோ, அவரே தேவன். அவர் அவர்களோடு இருக்-
கிறார். அவர்கள் அவரால் மீட்கப்படும்பொருட்டு,
அவர் அவர்களுக்கு தம்மையே வெளிப்படுத்தி-
னார்; வரப்போகிறவைகளினிமித்தம் அவர்கள்
அவரை மகிமைப்படுத்தினார்கள்.
24 இப்பொழுதும் இவைகளை நீங்கள் அறிந்து
இவைகளை நீங்கள் பொய்யுரைத்தாலொழிய
மறுக்க முடியாது என்று அறிகிறீர்கள். ஆதலால்
இதில் நீங்கள் பாவம் புரிந்தீர்கள். ஏனெனில், நீங்-
கள் அநேக சாட்சிகளைப் பெற்றிருப்பினும் இவை-
கள் அனைத்தையும் நீங்கள் நிராகரித்தீர்கள். ஆம்,
அவை உண்மையானவை என்பதற்கு சாட்சியாக
நீங்கள் அனைத்துக் காரியங்களையும், ஆம், பர-
லோகத்திலுள்ளவைகளையும், பூமியிலுள்ள
அனைத்துக் காரியங்களையும் பெற்றிருக்கிறீர்-
கள்.
25 இதோ, நீங்கள் சத்தியத்தை நிராகரித்து, உங்களு-
டைய பரிசுத்த தேவனுக்கு விரோதமாக கலகம்
பண்ணினீர்கள்; ஒன்றும் கெடுக்க முடியாததும்,
அசுத்தமான ஒன்றும் வரமுடியாததுமான பரலோ-
கத்தில், உங்களுக்காக பொக்கிஷங்களைச் சேர்த்து
வைக்காமல், இச்சமயத்தில்கூட, நீங்கள் நியாயத்-
தீர்ப்பின் நாளுக்காக உங்களுக்கு விரோதமாய்
கோபத்தையே சேமித்து வைக்கிறீர்கள்.
26 ஆம், உங்களுடைய கொலைகளினிமித்தமும்,
உங்களுடைய வேசித்தனங்கள் மற்றும் துன்மார்க்-
கத்தினிமித்தமும், நீங்கள் இச்சமயத்திலும் என்று-
முள்ள அழிவிற்காகப் பழுத்துக்கொண்டிருக்கிறீர்-
கள்; ஆம், நீங்கள் மனந்திரும்பாவிடில் அது சீக்கிர-
மாய் உங்களுக்குள் சம்பவிக்கும்.
27 ஆம், இதோ, அது இப்பொழுது உங்கள் நுழைவா-
யிலில் இருக்கிறது; ஆம், நீங்கள் நியாயாசனத்திற்-
குப் போய் காணுங்கள்; இதோ, உங்கள் நியாயாதிப-
தி கொலை செய்யப்பட்டிருக்கிறான். அவன் தன்
இரத்தத்திலே விழுந்து கிடக்கிறான்; நியாயாசனத்-
தில் உட்கார வகை தேடுகிற தன் சகோதரனால்
கொலை செய்யப்பட்டிருக்கிறான்.
28 இதோ, அவர்கள் இருவரும் காதியாந்தனாலும்,
மனுஷ ஆத்துமாக்களை அழிக்க வகை தேடுகிற
அந்த பொல்லாதவனாலும் தோற்றுவிக்கப்பட்ட
உங்களுடைய இரகசிய கூட்டத்தைச் சார்ந்தவர்-
கள்.

Our father Lehi was driven out of Jerusalem because he testified of these things. Nephi also testified of these things, and also almost all of our fathers, even down to this time; yea, they have testified of the coming of Christ, and have looked forward, and have rejoiced in his day which is to come.

And behold, he is God, and he is with them, and he did manifest himself unto them, that they were redeemed by him; and they gave unto him glory, because of that which is to come.

And now, seeing ye know these things and cannot deny them except ye shall lie, therefore in this ye have sinned, for ye have rejected all these things, notwithstanding so many evidences which ye have received; yea, even ye have received all things, both things in heaven, and all things which are in the earth, as a witness that they are true.

But behold, ye have rejected the truth, and rebelled against your holy God; and even at this time, instead of laying up for yourselves treasures in heaven, where nothing doth corrupt, and where nothing can come which is unclean, ye are heaping up for yourselves wrath against the day of judgment.

Yea, even at this time ye are ripening, because of your murders and your fornication and wickedness, for everlasting destruction; yea, and except ye repent it will come unto you soon.

Yea, behold it is now even at your doors; yea, go ye in unto the judgment-seat, and search; and behold, your judge is murdered, and he lieth in his blood; and he hath been murdered by his brother, who seeketh to sit in the judgment-seat.

And behold, they both belong to your secret band, whose author is Gadianton and the evil one who seeketh to destroy the souls of men.

# ஏலமன் 9

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, நேபி இவ்வார்த்தைகளைப் பேசினபோது, அவர்களுக்குள்ளிருந்த சில மனுஷர் நியாயாசனத்திற்கு ஓடினார்கள்; ஆம், போனவர்கள் ஐந்து பேராயிருந்தார்கள். அவர்கள் போனபோது தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது:

2 இதோ, இம்மனுஷன் தீர்க்கதரிசிதானா என்றும், நமக்கு இப்படிப்பட்ட அற்புதமான காரியங்களை தீர்க்கதரிசனமுரைக்கும்படி தேவனால் அவன் கட்டளையிடப்பட்டிருக்கிறானா என்றும், இப்பொழுது நாம் மெய்யாகவே அறிந்துகொள்வோம். இதோ, அவர் அப்படிச் செய்திருப்பார் என்று நாம் விசுவாசிக்கிறதில்லை; ஆம், அவன் ஒரு தீர்க்கதரிசி என்று நாம் விசுவாசிக்கிறதில்லை; ஆயினும், அவன் இந்தப் பிரதான நியாயாதிபதியைப்பற்றிச் சொன்ன காரியம் உண்மையாயிருந்தால், அதாவது அவன் மரித்துப் போயிருந்தால், அப்பொழுது அவன் பேசிய மற்ற வார்த்தைகளும் உண்மையென்று நாம் விசுவாசிப்போம்.

3 அந்தப்படியே, அவர்கள் தங்களால் முடிந்தமட்டும் ஓடி நியாயாசனத்திற்கு வந்தார்கள்; இதோ, பிரதான நியாயாதிபதி பூமியிலே விழுந்து, தன் இரத்தத்திலே கிடந்தான்.

4 இப்பொழுது இதோ, இதை அவர்கள் கண்டபோது, பூமியில் விழும் அளவுக்கு, அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள், ஏனெனில் அவர்கள் பிரதான நியாயாதிபதியைக் குறித்து நேபி சொன்ன வார்த்தைகளை விசுவாசித்திருக்கவில்லை.

5 ஆனால் இப்பொழுது, அவர்கள் கண்டபோது விசுவாசித்தார்கள், நேபி சொன்ன தீர்ப்புகள் யாவும் ஜனங்கள்மேல் வருமே என்ற பயம் இவர்களை ஆட்கொண்டது, ஆகவே அவர்கள் நடுங்கி பூமியில் விழுந்தார்கள்.

6 இப்பொழுது நியாயாதிபதி கொலை செய்யப்பட்ட உடனே, அவனை அவன் சகோதரன் இரகசியமாய், மாறுவேடத்தில் குத்திவிட்டு, ஓடிப்போனான். வேலையாட்கள் ஓடி ஜனங்களுக்குள்ளே கொலையைப்பற்றிய செய்தியைக் கூக்குரலிட்டு அறிவித்தார்கள்.

7 இதோ, நியாயாசனம் இருந்த இடத்திலே ஜனங்கள் திரளாய்க் கூடினார்கள். இதோ, அவர்கள் ஆச்சரியப்படும்படியாய், அந்த ஐந்துபேர் பூமியில் விழுந்து கிடப்பதை கண்டார்கள்.

# Helaman 9

Behold, now it came to pass that when Nephi had spoken these words, certain men who were among them ran to the judgment-seat; yea, even there were five who went, and they said among themselves, as they went:

Behold, now we will know of a surety whether this man be a prophet and God hath commanded him to prophesy such marvelous things unto us. Behold, we do not believe that he hath; yea, we do not believe that he is a prophet; nevertheless, if this thing which he has said concerning the chief judge be true, that he be dead, then will we believe that the other words which he has spoken are true.

And it came to pass that they ran in their might, and came in unto the judgment-seat; and behold, the chief judge had fallen to the earth, and did lie in his blood.

And now behold, when they saw this they were astonished exceedingly, insomuch that they fell to the earth; for they had not believed the words which Nephi had spoken concerning the chief judge.

But now, when they saw they believed, and fear came upon them lest all the judgments which Nephi had spoken should come upon the people; therefore they did quake, and had fallen to the earth.

Now, immediately when the judge had been murdered—he being stabbed by his brother by a garb of secrecy, and he fled, and the servants ran and told the people, raising the cry of murder among them;

And behold the people did gather themselves together unto the place of the judgment-seat—and behold, to their astonishment they saw those five men who had fallen to the earth.

8 இப்பொழுதும் இதோ, நேபியின் தோட்டத்தில் கூ-
டியிருந்த திரளானோரைப்பற்றி ஜனங்கள் ஒன்-
றும் அறிந்திருக்கவில்லை; ஆதலால் அவர்கள்
தங்களுக்குள்ளே: இந்த மனுஷர்கள்தான் நியாயா-
திபதியைக் கொலை செய்தார்கள். அவர்கள் நம்மி-
டமிருந்து ஓடமுடியாதபடிக்கு தேவன் அவர்களை
அடித்திருக்கிறார், என்று சொன்னார்கள்.

And now behold, the people knew nothing concerning the multitude who had gathered together at the garden of Nephi; therefore they said among themselves: These men are they who have murdered the judge, and God has smitten them that they could not flee from us.

9 அந்தப்படியே, அவர்கள், அவர்களைப் பிடித்துக்
கட்டி, சிறைச்சாலையில் போட்டார்கள். நியாயாதி-
பதி கொல்லப்பட்டார் என்றும், கொலையாளிகள்
பிடிக்கப்பட்டு சிறையினுள் போடப்பட்டார்க-
ளென்றும் பிரகடனம் தூர இடங்களுக்கும் அனுப்-
பப்பட்டது.

And it came to pass that they laid hold on them, and bound them and cast them into prison. And there was a proclamation sent abroad that the judge was slain, and that the murderers had been taken and were cast into prison.

10 அந்தப்படியே, மறுநாளில் கொல்லப்பட்ட மகா,
பிரதான நியாயாதிபதியின் அடக்கத்தின்போது,
ஜனங்கள் துக்கிக்கவும் உபவாசிக்கவும் திரளாய்க்
கூடியிருந்தார்கள்.

And it came to pass that on the morrow the people did assemble themselves together to mourn and to fast, at the burial of the great chief judge who had been slain.

11 நேபியின் தோட்டத்திலே இருந்து அவனுடைய
வார்த்தைகளைக் கேட்ட அந்த நியாயாதிபதிகளும்
அடக்கத்தின்போது திரளாய்க் கூடியிருந்தார்கள்.

And thus also those judges who were at the garden of Nephi, and heard his words, were also gathered together at the burial.

12 அந்தப்படியே, அவர்கள் ஜனங்களிடத்தில்: பிர-
தான நியாயாதிபதி மரித்துப்போனானா என்ப-
தைக் குறித்து விசாரிக்க அனுப்பப்பட்ட அந்த ஐந்-
து பேர் எங்கே, என்று கேட்டார்கள். அதற்கு அவர்-
கள் பிரதியுத்தரமாக: நீங்கள் அனுப்பினதாக
சொல்லுகிற அந்த ஐந்து பேரைக் குறித்து நாங்கள்
அறியோம்; ஆனால், சிறைச்சாலையினுள் போடப்-
பட்ட, கொலைபாதகர்களான ஐந்து பேர் இருக்கி-
றார்கள், என்றார்கள்.

And it came to pass that they inquired among the people, saying: Where are the five who were sent to inquire concerning the chief judge whether he was dead? And they answered and said: Concerning this five whom ye say ye have sent, we know not; but there are five who are the murderers, whom we have cast into prison.

13 அந்தப்படியே, அவர்களை அழைத்து வரும்ப-
டிக்கு நியாயாதிபதிகள் விரும்பினார்கள்; அவர்-
கள் அழைத்து வரப்பட்டார்கள். இதோ, அவர்கள்
அனுப்பப்பட்ட ஐந்து பேராயிருந்தார்கள்; இதோ,
நடந்த விஷயத்தைக் குறித்து தெரிந்து கொள்ளும்-
படி நியாயாதிபதிகள் அவர்களை விசாரித்தார்-
கள். அவர்கள் செய்த அனைத்தையும் அவர்களுக்-
குச் சொன்னார்கள்:

And it came to pass that the judges desired that they should be brought; and they were brought, and behold they were the five who were sent; and behold the judges inquired of them to know concerning the matter, and they told them all that they had done, saying:

14 நாங்கள் ஓடி, நியாயாசனத்தின் இடத்திற்கு வந்-
தோம். நேபி சொன்னதைப்போலவே சகலவற்றை-
யும் நாங்கள் கண்டபோது, நாங்கள் பூமியில் வி-
ழுந்துபோகுமளவும் ஆச்சரியப்பட்டுப் போனோம்;
நாங்கள் அதிர்ச்சியிலிருந்து விடுபடும்முன்பே
இதோ, அவர்கள் எங்களை சிறைச்சாலையினுள்
போட்டார்கள்.

We ran and came to the place of the judgment-seat, and when we saw all things even as Nephi had testified, we were astonished insomuch that we fell to the earth; and when we were recovered from our astonishment, behold they cast us into prison.

15 இப்பொழுதும் இந்த மனுஷனின் கொலையைப்
பொறுத்தவரையில், அதைச் செய்தது யார் என்று
நாங்கள் அறியோம்; நாங்கள் அறிந்ததெல்லாம்,
நீங்கள் விரும்பினபடியே நாங்கள் ஓடிவந்தோம்.
இதோ, நேபியின் வார்த்தைகளின்படியே அவன்
செத்துப் போயிருந்தான்.

Now, as for the murder of this man, we know not who has done it; and only this much we know, we ran and came according as ye desired, and behold he was dead, according to the words of Nephi.

16 இப்பொழுதும், அந்தப்படியே, நியாயாதிபதிகள்
விஷயத்தை ஜனங்களுக்கு விளக்கி, நேபிக்கு வி-
ரோதமாய்க் கூக்குரலிட்டு: இதோ, இந்த நேபி நியா-
யாதிபதியை வெட்டும்படி ஒருவனிடம் ஒப்பந்தம்
பண்ணியிருந்தான், என நாங்கள் அறிவோம். தன்-
னை பெரிய மனுஷனாயும், தேவனால் தெரிந்து
கொள்ளப்பட்டவனாயும், தீர்க்கதரிசியாயும் உயர்த்-
திக் கொள்ளும்படிக்கும், நம்மை அவனுடைய வி-
சுவாசத்திற்குள் மனம்மாறச் செய்யும்படிக்கும்,
அதை அவன் நமக்கு அறிவித்திருக்கலாம்.

And now it came to pass that the judges did expound the matter unto the people, and did cry out against Nephi, saying: Behold, we know that this Nephi must have agreed with some one to slay the judge, and then he might declare it unto us, that he might convert us unto his faith, that he might raise himself to be a great man, chosen of God, and a prophet.

17 இப்பொழுதும் இதோ, இம்மனுஷனை நாம் சோ-
திப்போம். அவன் தன் குற்றத்தை அறிக்கை பண்-
ணி இந்த நியாயாதிபதியின் உண்மைக் கொலை-
காரனை நமக்குத் தெரியப் பண்ணுவான்.

And now behold, we will detect this man, and he shall confess his fault and make known unto us the true murderer of this judge.

18 அந்தப்படியே, அந்த ஐவரும் அடக்க நாளில் விடு-
விக்கப்பட்டார்கள். ஆயினும், இவர்கள் நியாயாதி-
பதிகளை அவர்கள் நேபிக்கு விரோதமாய்ப் பேசின
வார்த்தைகளினிமித்தம் கடிந்துகொண்டு, அவர்க-
ளை மலைக்கச் செய்யுமளவும் ஒவ்வொருவராய்
அவர்களோடு விவாதித்தார்கள்.

And it came to pass that the five were liberated on the day of the burial. Nevertheless, they did rebuke the judges in the words which they had spoken against Nephi, and did contend with them one by one, insomuch that they did confound them.

19 ஆயினும் அவர்கள், நேபி பிடிக்கப்பட்டு, கட்டப்-
பட்டு, திரளானோருக்கு முன்பாகக் கொண்டு வரப்-
படும்படிச் செய்தார்கள். அவர்கள் அவனில் குற்றம்
கண்டுபிடித்து, அதினிமித்தம் அவர்கள் அவனை
மரணத்திற்கேதுவாக குற்றம் சுமத்துவதற்காக,
அவர்கள் பலவிதமான வழிகளில் அவனிடத்தில்
குறுக்கு விசாரணை செய்தார்கள்.

Nevertheless, they caused that Nephi should be taken and bound and brought before the multitude, and they began to question him in divers ways that they might cross him, that they might accuse him to death—

20 அவர்கள் அவனை நோக்கி: நீ சதிகாரன்; இந்தக்
கொலையைப் புரிந்த அந்த மனுஷன் யார்? இப்-
பொழுது நீ சொல்லி, உன் குற்றத்தை ஒப்புக்கொள்
என்றார்கள்; அவர்கள், இதோ பணம். நீ எங்களி-
டத்தில் சொல்லி, நீ அவனோடுகூட செய்து-
கொண்ட ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்வாயாகில்,
நாங்கள் உன் ஜீவனை உனக்குக் கொடுப்போம்,
என்றார்கள்.

Saying unto him: Thou art confederate; who is this man that hath done this murder? Now tell us, and acknowledge thy fault; saying, Behold here is money; and also we will grant unto thee thy life if thou wilt tell us, and acknowledge the agreement which thou hast made with him.

21 ஆனால் நேபி அவர்களை நோக்கி: நீங்கள் மூடர்-
களாயும், நீங்கள் இருதயத்தில் விருத்தசேதனம்
இல்லாதவர்களாயும், நீங்கள் குருடராயும், நீங்கள்
வணங்காக்கழுத்துள்ளவர்களாயும் இருப்பவர்க-
ளே, நீங்கள் எவ்வளவு காலம்தான் உங்களுடைய
இந்தப் பாவ வழியில் போக தேவனாகிய உங்கள்
கர்த்தர் அனுமதிப்பார், என அறிவீர்களா?

But Nephi said unto them: O ye fools, ye uncircumcised of heart, ye blind, and ye stiffnecked people, do ye know how long the Lord your God will suffer you that ye shall go on in this your way of sin?

22 நீங்கள் மனந்திரும்பாவிட்டால், இச்சமயம் உங்க-
ளுக்காகக் காத்திருக்கும், அந்தப் பெரும் சங்காரத்-
தினிமித்தம், நீங்கள் ஓலமிட்டு, துக்கிக்கத் துவங்க-
வேண்டுமே.

O ye ought to begin to howl and mourn, because of the great destruction which at this time doth await you, except ye shall repent.

23 இதோ, நம்முடைய பிரதான நியாயாதிபதியாகிய
சிசோரமை கொலை பண்ண ஒரு மனுஷனோடு
ஒப்பந்தம் செய்து கொண்டேன், என்று நீங்கள்
சொல்லுகிறீர்கள். இதோ, நான் உங்களுக்குச் சொல்-
லுகிறேன், ஆம் உங்களுக்குள்ளிருக்கிற துன்-
மார்க்கத்தையும் அருவருப்புகளையும் நான்
அறிந்திருக்கிறேன் என்று, உங்களுக்கு சாட்சியாக
இந்தக் காரியம் இருக்கும் பொருட்டும், இதைக் கு-
றித்து நீங்கள் அறியும்படிக்குமே இதை நான் உங்க-
ளுக்கு சாட்சி பகர்ந்தேன்.

Behold ye say that I have agreed with a man that he should murder Seezoram, our chief judge. But behold, I say unto you, that this is because I have testified unto you that ye might know concerning this thing; yea, even for a witness unto you, that I did know of the wickedness and abominations which are among you.

24 இதை நான் செய்ததினிமித்தம், இக்காரியத்தை
அவன் செய்ய வேண்டுமென ஒரு மனுஷனோடு
நான் ஒப்பந்தம் செய்து கொண்டேன் என்கிறீர்கள்;
ஆம், இந்த அறிகுறியை நான் உங்களுக்குக் காண்-
பித்ததினிமித்தம், நீங்கள் என்மேல் கோபம்
கொண்டு, என் ஜீவனை அழிக்கத் தேடுகிறீர்கள்.

And because I have done this, ye say that I have agreed with a man that he should do this thing; yea, because I showed unto you this sign ye are angry with me, and seek to destroy my life.

25 இப்பொழுது இதோ, நான் உங்களுக்கு மற்றொரு
அறிகுறியைக் காண்பித்து, நீங்கள் இக்காரியத்தில்
என்னை அழிக்க முடிகிறதா, என்று பார்க்கிறேன்.

And now behold, I will show unto you another sign, and see if ye will in this thing seek to destroy me.

26 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: சிசோ-
ரமின் சகோதரனாகிய, சியான்தம்மின் வீட்டுக்குப்
போங்கள். அவனை நோக்கி,

Behold I say unto you: Go to the house of Seantum, who is the brother of Seezoram, and say unto him—

27 இந்த ஜனத்தைக் குறித்து அதிக பொல்லாப்பை
தீர்க்கதரிசனமாய் உரைக்கிற நேபி என்ற அந்த
மாய்மால தீர்க்கதரிசி உன்னோடு ஒப்பந்தம் செய்து-
கொண்டானா, அதினிமித்தம் நீ உன் சகோதரனா-
கிய, சிசோரமைக் கொலை செய்தாயா என்று கே-
ளுங்கள்.

Has Nephi, the pretended prophet, who doth prophesy so much evil concerning this people, agreed with thee, in the which ye have murdered Seezoram, who is your brother?

28 இதோ, அவன் உங்களை நோக்கி, இல்லை, என்-
பான்.

And behold, he shall say unto you, Nay.

29 நீங்கள் அவனை நோக்கி: நீ உன் சகோதரனை
கொலை செய்தாயா, என்று கேளுங்கள்.

And ye shall say unto him: Have ye murdered your brother?

30 அவன் பயந்து, சொல்வதறியாது நிற்பான். இதோ,
அவன் மறுதலிப்பான்; அவன் ஆச்சரியப்பட்ட-
வனைப்போல நடிப்பான். ஆயினும் தான் நிரபரா-
தி என்று உங்களிடம் அறிக்கை பண்ணுவான்.

And he shall stand with fear, and wist not what to say. And behold, he shall deny unto you; and he shall make as if he were astonished; nevertheless, he shall declare unto you that he is innocent.

31 ஆனால் இதோ, நீங்கள் அவனைச் சோதியுங்கள்.
நீங்கள் அவனுடைய அங்கியின் வஸ்திரத்தில்
இரத்தத்தைக் காண்பீர்கள்.

But behold, ye shall examine him, and ye shall find blood upon the skirts of his cloak.

32 நீங்கள் இதைக் காணும்போது, இந்த இரத்தம் எங்-
கிருந்து வந்தது? இது உன் சகோதரனுடைய இரத்-
தம் என்று நாங்கள் அறியோமோ, என்று சொல்லுங்-
கள்.

And when ye have seen this, ye shall say: From whence cometh this blood? Do we not know that it is the blood of your brother?

33 அவன் நடுங்கி, மரணம் தன்மேல் வந்ததைப்-
போல, வெளுத்துக் காணப்படுவான்.

And then shall he tremble, and shall look pale, even as if death had come upon him.

34 அப்பொழுது நீங்கள்: உன் முகத்தில் காணப்படு-
கிற இந்த பயம் மற்றும் வெளுப்பினிமித்தம், இதோ,
நீயே குற்றவாளி என்று அறிவோம், என்று சொல்-
லுங்கள்.

And then shall ye say: Because of this fear and this paleness which has come upon your face, behold, we know that thou art guilty.

35 அவனை பயங்கர பயம் பிடிக்கும்; அவன் உங்களிடம் அறிக்கை பண்ணி, அந்தக் கொலையை தான் செய்யவில்லை என்று, ஒருபோதும் மறுதலிக்கமாட்டான்.

36 பின்பு அவன் உங்களை நோக்கி, நேபியாகிய நான், தேவ வல்லமையினால் அருளப்பட்டாலொழிய இந்த விஷயத்தைக் குறித்து ஒன்றும் அறிவதில்லை, என்பான். பின்பு நீங்கள் நான் நேர்மையானவனென்றும், நான் உங்களிடத்தில் தேவனால் அனுப்பப்பட்டவனென்றும் அறிந்து கொள்வீர்கள், என்பான்.

37 அந்தப்படியே, அவர்கள் தங்களுக்கு நேபி சொன்னபடியே போய்ச் செய்தார்கள். இதோ, அவன் சொன்ன வார்த்தைகள் மெய்யானவை; ஏனெனில் அவனது வார்த்தைகளின்படியே அவன் மறுதலித்தான்; அவனது வார்த்தைகளின்படியே அவன் அறிக்கையுமிட்டான்.

38 அந்த ஐவரும், நேபியும் விடுதலையாக்கப்படும் அளவில், அவன், தானே அந்தக் கொலைபாதகன் என்று நிரூபிக்கும்படிக்கு கொண்டுவரப்பட்டான்.

39 அங்கே நேபியர்களில் சிலர் நேபியின் வார்த்தைகளில் விசுவாசித்தார்கள்; சிலர் அந்த ஐவரின் சாட்சியமத்தினிமித்தம் விசுவாசித்தார்கள். ஏனெனில் அவர்கள் சிறையிலிருக்கும்போது மனமாற்றப்பட்டவர்கள்.

40 இப்பொழுது, ஜனங்களுக்குள் நேபி ஒரு தீர்க்கதரிசி என்று சொன்ன சிலர் இருந்தார்கள்.

41 வேறு சிலர்: இதோ, இவன் தெய்வம், இவன் தெய்வமாயிராமலிருந்தால், இவன் சகல காரியங்களையும் அறியக்கூடாதே. ஏனெனில் இதோ, இவன் நம்முடைய இருதயத்தின் நினைப்புகளையும், காரியங்களையும் நமக்குச் சொன்னான்; நம்முடைய பிரதான நியாயாதிபதியைக் கொன்ற உண்மையான கொலை பாதகனையும் நமக்குத் தெரியப் பண்ணினான், என்றார்கள்.

And then shall greater fear come upon him; and then shall he confess unto you, and deny no more that he has done this murder.

And then shall he say unto you, that I, Nephi, know nothing concerning the matter save it were given unto me by the power of God. And then shall ye know that I am an honest man, and that I am sent unto you from God.

And it came to pass that they went and did, even according as Nephi had said unto them. And behold, the words which he had said were true; for according to the words he did deny; and also according to the words he did confess.

And he was brought to prove that he himself was the very murderer, insomuch that the five were set at liberty, and also was Nephi.

And there were some of the Nephites who believed on the words of Nephi; and there were some also, who believed because of the testimony of the five, for they had been converted while they were in prison.

And now there were some among the people, who said that Nephi was a prophet.

And there were others who said: Behold, he is a god, for except he was a god he could not know of all things. For behold, he has told us the thoughts of our hearts, and also has told us things; and even he has brought unto our knowledge the true murderer of our chief judge.

## ஏலமன் 10

1 அந்தப்படியே, ஜனங்களுக்குள் பிரிவினை உண்-
டாகி, அவர்கள் அங்கும் இங்குமாக பிரிந்துபோய்,
அவர்கள் நடுவே நின்றுகொண்டிருந்த நேபியை
தனியே விட்டுவிட்டு தங்கள் வழிகளிலே போனார்-
கள்.

2 அந்தப்படியே, கர்த்தர் தனக்கு காண்பித்தவற்றை
யோசித்துக்கொண்டே நேபி தன் சொந்த வீட்டுக்குப்
போகிற தன் வழியிலே போனான்.

3 அந்தப்படியே, அவன் நேபியின் ஜனங்களின்
துன்மார்க்கத்தினாலும், அவர்களுடைய காரிரு-
ளான இரகசியக் கிரியைகளினாலும், அவர்களு-
டைய கொலைகளினாலும், அவர்களுடைய கள-
வுகளினாலும் மற்றும் எல்லாவிதமான அக்கிரமங்-
களினாலும் துக்கித்து அவன் அந்தப்படியே, யோ-
சித்துக் கொண்டிருந்தான். அந்தப்படியே, அவன்
இப்படியாக தன் இருதயத்தில் யோசித்துக் கொண்-
டிருக்கும்போது, இதோ ஒரு சத்தம் அவனுக்கு வந்-
து:

4 நேபியே, நீ செய்தவைகளினிமித்தம் நீ பாக்கிய-
வானாயிருக்கிறாய்; நான் இந்த ஜனங்களுக்காக
உன்னிடம் கொடுத்த வார்த்தையை நீ சோர்ந்து
போகாமல் அறிவித்தாய் என்பதை நான் பார்த்தி-
ருக்கிறேன். நீ அவர்களுக்குப் பயப்படாமல், உன்
சொந்த ஜீவனைக் குறித்துக் கவலைப்படாமல்,
என் சித்தத்தையும் என் கட்டளைகளைக் கைக்-
கொள்ளவும் வகை தேடினாய்.

5 இப்பொழுதும் இதை நீ சோர்வில்லாமல் இப்படி
செய்ததனிமித்தம், இதோ, நான் உன்னை என்-
றென்றுமாய் ஆசீர்வதிப்பேன்; நான் உன்னை
வார்த்தையிலும் செயலிலுமாக, விசுவாசத்திலும்
கிரியைகளிலுமாக பலவானாக்குவேன்; ஆம், நீ
என் சித்தத்திற்கு முரணானதைக் கேட்காததினி-
மித்தம், உன் வார்த்தையின்படி சகலமும் உனக்குச்
செய்யப்படும்.

6 இதோ, நேபியே, நானே தேவன். இதோ, நீ இந்த
ஜனத்தின் மேல் வல்லமை கொண்டிருந்து, இந்த
ஜனத்தின் துன்மார்க்கத்திற்குத் தக்கதாக, பூமியை
பஞ்சத்தாலும், வாதையினாலும், அழிவினாலும்
அடிப்பாய் என்று, என் தூதர்களின் முன்பாக
இதை உனக்கு அறிவிக்கிறேன்.

7 இதோ, நீ பூமியில் முத்திரிக்கும் எதுவும் பரலோ-
கத்திலும் முத்திரிக்கப்படும்படியாகவும், நீ பூமியில்
கட்டவிழ்க்கிற எதுவும் பரலோகத்திலும் கட்ட-
விழ்க்கப்படும்படியான வல்லமையை உனக்குத்
தருவேன்; இப்படியாக, நீ இந்த ஜனங்களுக்குள்ளே
வல்லமை பெற்றிருப்பாய்.

8 இப்படியாக, நீ இந்த ஆலயத்தைப் பார்த்து, அது
இரண்டாய்ப் பிளப்பதாக என்பாயாகில், அது அப்-
படியே சம்பவிக்கும்.

## Helaman 10

And it came to pass that there arose a division among the people, insomuch that they divided hither and thither and went their ways, leaving Nephi alone, as he was standing in the midst of them.

And it came to pass that Nephi went his way towards his own house, pondering upon the things which the Lord had shown unto him.

And it came to pass as he was thus pondering—being much cast down because of the wickedness of the people of the Nephites, their secret works of darkness, and their murderings, and their plunderings, and all manner of iniquities—and it came to pass as he was thus pondering in his heart, behold, a voice came unto him saying:

Blessed art thou, Nephi, for those things which thou hast done; for I have beheld how thou hast with unwearyingness declared the word, which I have given unto thee, unto this people. And thou hast not feared them, and hast not sought thine own life, but hast sought my will, and to keep my commandments.

And now, because thou hast done this with such unwearyingness, behold, I will bless thee forever; and I will make thee mighty in word and in deed, in faith and in works; yea, even that all things shall be done unto thee according to thy word, for thou shalt not ask that which is contrary to my will.

Behold, thou art Nephi, and I am God. Behold, I declare it unto thee in the presence of mine angels, that ye shall have power over this people, and shall smite the earth with famine, and with pestilence, and destruction, according to the wickedness of this people.

Behold, I give unto you power, that whatsoever ye shall seal on earth shall be sealed in heaven; and whatsoever ye shall loose on earth shall be loosed in heaven; and thus shall ye have power among this people.

And thus, if ye shall say unto this temple it shall be rent in twain, it shall be done.

9 நீ இந்த மலையை நோக்கி, நீ தாழ்ந்து சமபூமியாகு
என்பாயாகில், அது அப்படியே சம்பவிக்கும்.

And if ye shall say unto this mountain, Be thou cast down and become smooth, it shall be done.

10 இதோ, தேவன் இந்த ஜனத்தை அடிப்பாராக என்-
று நீ சொல்லுவாயாகில், அது அப்படியே சம்பவிக்-
கும்.

And behold, if ye shall say that God shall smite this people, it shall come to pass.

11 இப்பொழுதும் இதோ, நீ போய், நீங்கள் மனந்தி-
ரும்பாவிட்டால், நீங்கள் அழிவுக்குள்ளாகும்
வரைக்குமாய் அடிக்கப்படுவீர்களென்று, சர்வ
வல்லவராகிய, தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார்,
என இந்த ஜனத்திற்கு அறிவிக்க வேண்டுமென்று,
உனக்கு நான் கட்டளையிடுகிறேன்.

And now behold, I command you, that ye shall go and declare unto this people, that thus saith the Lord God, who is the Almighty: Except ye repent ye shall be smitten, even unto destruction.

12 இதோ, இப்பொழுதும், அந்தப்படியே, கர்த்தர் இந்த
வார்த்தைகளை நேபியினிடத்தில் பேசினபோது,
அவன் நின்று தன்னுடைய சொந்த வீட்டுக்குப்
போகாமல், தேசத்தின்மேல் பரவிக்கிடக்கிற திரளா-
னோரிடத்தில் திரும்பி, அவர்கள் மனந்திரும்பாவி-
டில், அவர்களுடைய அழிவைக் குறித்து, கர்த்தர்
தன்னிடம் பேசின வார்த்தையை அவர்களுக்கு
அறிவிக்கத் துவங்கினான்.

And behold, now it came to pass that when the Lord had spoken these words unto Nephi, he did stop and did not go unto his own house, but did return unto the multitudes who were scattered about upon the face of the land, and began to declare unto them the word of the Lord which had been spoken unto him, concerning their destruction if they did not repent.

13 இப்பொழுதும் இதோ, நேபி, பிரதான நியாயாதிப-
தியின் மரணத்தைக் குறித்து அவர்களுக்குச்
சொன்னதில் செய்த, மகா அற்புதத்தையும் பொ-
ருட்படுத்தாமல், அவர்கள் தங்கள் இருதயங்க-
ளைக் கடினப்படுத்தி, கர்த்தருடைய வார்த்தைக-
ளுக்குச் செவிகொடுக்கவில்லை.

Now behold, notwithstanding that great miracle which Nephi had done in telling them concerning the death of the chief judge, they did harden their hearts and did not hearken unto the words of the Lord.

14 ஆதலால் நேபி அவர்களுக்கு கர்த்தருடைய
வார்த்தைகளை அறிவித்து சொன்னதாவது, கர்த்-
தர் சொல்லுகிறது என்னவெனில், நீங்கள் மனந்தி-
ரும்பாவிடில் அழிவிற்குள்ளாக போகுமட்டும்
அடிக்கப்படுவீர்கள்.

Therefore Nephi did declare unto them the word of the Lord, saying: Except ye repent, thus saith the Lord, ye shall be smitten even unto destruction.

15 அந்தப்படியே, நேபி அவர்களுக்கு வார்த்தைக-
ளை அறிவித்தபோது இதோ, அவர்கள் இன்னும்
தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி அவனு-
டைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை;
ஆதலால், அவர்கள் அவனுக்கு விரோதமாய் நிந்-
தித்து, அவனைச் சிறைச்சாலையினுள் தள்ளத்
தங்கள் கைகளை அவன் மேல் போட வகை தேடி-
னார்கள்.

And it came to pass that when Nephi had declared unto them the word, behold, they did still harden their hearts and would not hearken unto his words; therefore they did revile against him, and did seek to lay their hands upon him that they might cast him into prison.

16 ஆனால் இதோ, தேவ வல்லமை அவனோடுகூட
இருந்தது. அவனை சிறைச்சாலையினுள் தள்ள
அவர்களால் அவனைப் பிடிக்கக்கூடாமற் போ-
யிற்று. ஏனெனில் அவன் ஆவியானவரால் எடுத்-
துக் கொள்ளப்பட்டு, அவர்கள் நடுவிலிருந்து வெ-
ளியே கொண்டு போகப்பட்டான்.

But behold, the power of God was with him, and they could not take him to cast him into prison, for he was taken by the Spirit and conveyed away out of the midst of them.

17 அந்தப்படியே, அவன் அவர்கள் யாவருக்கும்
அறிவித்து, அல்லது ஜனங்கள் எல்லோருக்குள்-
ளும் அது அனுப்பப்படுமளவுக்கு தேவ வார்த்தை-
யைப் பிரசங்கித்து, இப்படியாக ஆவியானவரால்
ஒரு கூட்டத்திலிருந்து மற்றொரு கூட்டத்திற்குப்
போனான்.

And it came to pass that thus he did go forth in the Spirit, from multitude to multitude, declaring the word of God, even until he had declared it unto them all, or sent it forth among all the people.

18 அந்தப்படியே, அவர்கள் அவனுடைய வார்த்தை-
யைக் கேட்கவில்லை; அவர்கள் தங்களுக்குள்ளே-
யே பிரிந்துபோய் ஒருவரையொருவர் பட்டயத்தால்
வெட்டத் துவங்குமளவுக்கு அங்கே பிணக்குகள்
எழத் துவங்கின.

19 இப்படியாக, நேபியின் ஜனங்களின்மேல் நியா-
யாதிபதிகளின் ஆளுகையின் எழுபத்தி ஒன்றாம்
வருஷமும் முடிவடைந்தது.

And it came to pass that they would not hearken unto his words; and there began to be contentions, insomuch that they were divided against themselves and began to slay one another with the sword.

And thus ended the seventy and first year of the reign of the judges over the people of Nephi.

# ஏலமன் 11

1 இப்பொழுதும், அந்தப்படியே, நியாயாதிபதிகளின் ஆளுகையின் எழுபத்தி இரண்டாம் வருஷத்தில், தேசம் முழுவதும் நேபியின் எல்லா ஜனங்களுக்குள்ளும், தேசம் முழுவதிலும், யுத்தங்கள் சம்பவிக்கும் அளவில், பிணக்குகள் அதிகரித்தன.

2 இந்த அழிவின் கிரியையையும், துன்மார்க்கத்தையும் செய்து வந்தவர்களும், இந்த இரகசிய திருடர் கூட்டத்தார்தான். இந்த யுத்தம் அந்த வருஷம் முழுவதும் நீடித்திருந்தது; அது எழுபத்தி மூன்றாம் வருஷத்திலும் நீடித்திருந்தது.

3 அந்தப்படியே, இந்த வருஷத்தில் நேபி கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டு:

4 கர்த்தாவே, பட்டயத்தால் இந்த ஜனம் அழிந்துபோக அனுமதியாதேயும்; ஆனால் கர்த்தாவே அவர்களைத் தேவனாகிய தங்கள் கர்த்தரைக் குறித்து நினைக்கத் தூண்டும்படிக்கு, அதற்குப் பதிலாக தேசத்திலே பஞ்சம் இருப்பதாக. ஒருவேளை அவர்கள் மனந்திரும்பி உம்மிடத்தில் திரும்புவார்கள்.

5 எனவே, நேபியின் வார்த்தைகளின்படி அது அப்படியே சம்பவித்தது. தேசத்தில் நேபியின் எல்லா ஜனங்களுக்குள்ளும் மிகுந்த பஞ்சம் உண்டாயிற்று. இப்படியாக எழுபத்தி நாலாம் வருஷத்தில் பஞ்சம் தொடர்ந்தது. பட்டயத்தால் அழிவின் கிரியை நின்றுபோனாலும், பஞ்சத்தால் மிகவும் கொடியதானது.

6 இந்த அழிவின் கிரியை எழுபத்தி ஐந்தாம் வருஷத்திலும் தொடர்ந்தது. பூமியானது வெட்டாந்தரையாக்கப்பட்டபோது, தானியங்களை விளைவிக்கிற காலத்தில் தானியங்களைக் கொடுக்காமற்போனது; அதினிமித்தம் அவர்கள் அடிக்கப்பட்டு தேசத்தின் அதிக துன்மார்க்கப் பகுதிகளில் இருக்கிற, ஆயிரக்கணக்கானோர் அழிந்து போகும்படியாக லாமானியருக்குள்ளும் நேபியருக்குள்ளும் பூமியனைத்தும் அடிக்கப்பட்டது.

7 அந்தப்படியே, ஜனங்கள் தாங்கள் பஞ்சத்தால் அழியவிருக்கிறதைக் கண்டபோது, தேவனாகிய தங்கள் கர்த்தரை நினைவுகூரத் துவங்கினார்கள்; அவர்கள் நேபியின் வார்த்தைகளை நினைவுகூரத் துவங்கினார்கள்.

# Helaman 11

And now it came to pass in the seventy and second year of the reign of the judges that the contentions did increase, insomuch that there were wars throughout all the land among all the people of Nephi.

And it was this secret band of robbers who did carry on this work of destruction and wickedness. And this war did last all that year; and in the seventy and third year it did also last.

And it came to pass that in this year Nephi did cry unto the Lord, saying:

O Lord, do not suffer that this people shall be destroyed by the sword; but O Lord, rather let there be a famine in the land, to stir them up in remembrance of the Lord their God, and perhaps they will repent and turn unto thee.

And so it was done, according to the words of Nephi. And there was a great famine upon the land, among all the people of Nephi. And thus in the seventy and fourth year the famine did continue, and the work of destruction did cease by the sword but became sore by famine.

And this work of destruction did also continue in the seventy and fifth year. For the earth was smitten that it was dry, and did not yield forth grain in the season of grain; and the whole earth was smitten, even among the Lamanites as well as among the Nephites, so that they were smitten that they did perish by thousands in the more wicked parts of the land.

And it came to pass that the people saw that they were about to perish by famine, and they began to remember the Lord their God; and they began to remember the words of Nephi.

8 ஜனங்கள் தங்களின் பிரதான நியாயாதிபதிகளுடனும், தங்களின் தலைவர்களுடனும் நேபியினிடத்தில்: இதோ, நீ தேவனுடைய மனுஷன் என்று நாங்கள் அறிவோம். ஆகவே எங்களுடைய அழிவைக் குறித்து நீ சொன்ன எல்லா வார்த்தைகளுமே நிறைவேறாதிருக்கும்படிக்கு, நீ தேவனாகிய நம்முடைய கர்த்தர் இந்த பஞ்சத்தை நம்மிடத்திலிருந்து திருப்பிப்போடும்படியாக அவரிடத்தில் கூக்குரலிட்டு, என்று சொல்லச் சொல்லி கெஞ்சத் துவங்கினார்கள்.

And the people began to plead with their chief judges and their leaders, that they would say unto Nephi: Behold, we know that thou art a man of God, and therefore cry unto the Lord our God that he turn away from us this famine, lest all the words which thou hast spoken concerning our destruction be fulfilled.

9 அந்தப்படியே, நியாயாதிபதிகள் நேபியை நோக்கி, வாஞ்சிக்கப்பட்ட வார்த்தைகளின்படியே சொன்னார்கள். அந்தப்படியே, நேபி ஜனங்கள் மனந்திரும்பினார்களென்றும், இரட்டுடுத்தி தங்களைத் தாழ்த்தினார்களென்றும் கண்டபோது, மீண்டும் அவன் கர்த்தரை நோக்கிக் கூக்குரலிட்டு சொன்னதாவது:

And it came to pass that the judges did say unto Nephi, according to the words which had been desired. And it came to pass that when Nephi saw that the people had repented and did humble themselves in sackcloth, he cried again unto the Lord, saying:

10 கர்த்தாவே இதோ, இந்த ஜனங்கள் மனந்திரும்பினார்கள்; அவர்கள் தங்கள் மத்தியிலிருந்து காதியாந்தன் கூட்டத்தினர் அழிந்து போகும்படிக்கும், அவர்கள் தங்களுடைய இரகசியத் திட்டங்களை பூமியிலே புதைக்கும்படிக்கும், அவர்கள் துரத்தியடித்தனர்.

O Lord, behold this people repenteth; and they have swept away the band of Gadianton from amongst them insomuch that they have become extinct, and they have concealed their secret plans in the earth.

11 இப்பொழுதும் கர்த்தாவே, அவர்களுடைய இந்த தாழ்மையினிமித்தம், நீர் உம்முடைய கோபத்தை திருப்புவீரா, நீர் ஏற்கனவே அழித்துப்போட்ட அந்த துன்மார்க்கரின் அழிவிலே உம்முடைய கோபம் முடிவதாக.

Now, O Lord, because of this their humility wilt thou turn away thine anger, and let thine anger be appeased in the destruction of those wicked men whom thou hast already destroyed.

12 கர்த்தாவே, நீர் உம்முடைய கோபத்தை, ஆம், கொடிய கோபத்தைத் திருப்பி, இந்த பஞ்சம் இத்தேசத்திலிருந்து முடியச் செய்வீரா.

O Lord, wilt thou turn away thine anger, yea, thy fierce anger, and cause that this famine may cease in this land.

13 கர்த்தாவே, நீர் எனக்குச் செவிகொடுத்து, என் வார்த்தைகளின்படி நடக்கச் செய்து, பூமியானது தன் கனியையும், தானியக் காலத்தில் தானியத்தையும் கொடுக்கும்படி, பூமியின்மேல் மழையைப் பெய்யப்பண்ணுவீரா.

O Lord, wilt thou hearken unto me, and cause that it may be done according to my words, and send forth rain upon the face of the earth, that she may bring forth her fruit, and her grain in the season of grain.

14 கர்த்தாவே, பட்டயத்தின் வாதை நிற்கும்படியாக, அங்கே பஞ்சம் உண்டாவதாக என்று நான் சொன்னபோது, நீர் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்தீர்; இந்த ஜனம் மனந்திரும்பினால் அவர்களைத் தப்புவிப்பேன், என்று நீர் சொன்னதினிமித்தம், இச்சமயத்திலும் என் வார்த்தைகளுக்கு நீர் செவிகொடுப்பீர், என்று அறிந்திருக்கிறேன்.

O Lord, thou didst hearken unto my words when I said, Let there be a famine, that the pestilence of the sword might cease; and I know that thou wilt, even at this time, hearken unto my words, for thou saidst that: If this people repent I will spare them.

15 ஆம், கர்த்தாவே, தங்கள் மேல் வந்த பஞ்சத்தினாலும், வாதையினாலும், அழிவினாலும் அவர்கள் மனந்திரும்பினார்கள் என்று பார்க்கிறீர்.

Yea, O Lord, and thou seest that they have repented, because of the famine and the pestilence and destruction which has come unto them.

16 இப்பொழுதும் கர்த்தாவே நீர் உமது கோபத்தைத்
திருப்புவீரா. அவர்கள் உம்மை சேவிப்பார்களா
என மறுபடியும் சோதிப்பீரா. அப்படியானால், கர்த்-
தாவே நீர் சொன்ன பிரகாரம், உம் வார்த்தைகளின்-
படி அவர்களை ஆசீர்வதிக்க உம்மால்கூடும்.

And now, O Lord, wilt thou turn away thine anger, and try again if they will serve thee? And if so, O Lord, thou canst bless them according to thy words which thou hast said.

17 அந்தப்படியே, எழுபத்தி ஆறாம் வருஷத்தில்
கர்த்தர் தமது கோபத்தை ஜனங்களிடத்திலிருந்து
திருப்பி, பூமியின் மேல் மழையைப் பொழியப்
பண்ணினார். அதனால், அது கனியின் காலத்தில்
தன் கனிகளைத் தந்தது. அந்தப்படியே, அது தன்
தானியத்தின் காலத்தில் தன் தானியங்களைத் தந்-
தது.

And it came to pass that in the seventy and sixth year the Lord did turn away his anger from the people, and caused that rain should fall upon the earth, insomuch that it did bring forth her fruit in the season of her fruit. And it came to pass that it did bring forth her grain in the season of her grain.

18 இதோ, ஜனங்கள் களிகூர்ந்து தேவனை மகி-
மைப்படுத்தினார்கள். தேசம் முழுவதும் களிகூரு-
தலினால் நிறைந்தது; அவர்கள் இனிமேலும் நேபி-
யை அழிக்க வகை தேடவில்லை, ஆனால் அவன்
தேவனிடத்திலிருந்து மிகுந்த வல்லமையையும்,
அதிகாரத்தையும் பெற்ற பெரிய தீர்க்கதரிசி என்-
றும் தேவ மனுஷன் என்றும் அவர்கள் மரியாதை
கொடுத்தார்கள்.

And behold, the people did rejoice and glorify God, and the whole face of the land was filled with rejoicing; and they did no more seek to destroy Nephi, but they did esteem him as a great prophet, and a man of God, having great power and authority given unto him from God.

19 இதோ, அவன் சகோதரனாகிய லேகி, நீதிக்கடுத்த
காரியங்களில் அவனுக்கு கொஞ்சமும் சளைத்த-
வனல்ல.

And behold, Lehi, his brother, was not a whit behind him as to things pertaining to righteousness.

20 நேபியின் ஜனங்கள் மறுபடியும் தேசத்தில் விருத்-
தியடையத் துவங்கி, தங்களுடைய பாழான ஸ்த-
லங்களைக் கட்டத்துவங்கி, வடக்கிலும், தெற்கி-
லும், மேற்கு சமுத்திரம் தொடங்கி கிழக்கு சமுத்திரம்
வரைக்குமாய், தேசம் முழுவதையும் அவர்கள் நி-
ரப்புமளவும் பலுகிப்பெருகி படர்ந்தார்கள்.

And thus it did come to pass that the people of Nephi began to prosper again in the land, and began to build up their waste places, and began to multiply and spread, even until they did cover the whole face of the land, both on the northward and on the southward, from the sea west to the sea east.

21 அந்தப்படியே, எழுபத்தி ஆறாம் வருஷம் சமாதா-
னமாய் முடிவடைந்தது. எழுபத்தி ஏழாம் வருஷம்
சமாதானமாய் துவங்கியது; சபை தேசத்தின் மீ-
தெங்கும் பரவியது; நேபியர்களும், லாமானியர்க-
ளுமாக ஜனங்களில் அதிகமானோர் சபையைச்
சார்ந்திருந்தார்கள்; அவர்கள் தேசத்தில் மிகுந்த
சமாதானத்தைப் பெற்றிருந்தார்கள்; இப்படியாக
எழுபத்தி ஏழாம் வருஷமும் முடிவடைந்தது.

And it came to pass that the seventy and sixth year did end in peace. And the seventy and seventh year began in peace; and the church did spread throughout the face of all the land; and the more part of the people, both the Nephites and the Lamanites, did belong to the church; and they did have exceedingly great peace in the land; and thus ended the seventy and seventh year.

22 தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட உபதேசத்தின்
கருத்துக்களைக் குறித்து சில பிணக்குகள் எழுந்த-
தே தவிர, எழுபத்தி எட்டாம் வருஷத்திலும் அவர்-
கள் சமாதானம் பெற்றிருந்தனர்.

And also they had peace in the seventy and eighth year, save it were a few contentions concerning the points of doctrine which had been laid down by the prophets.

23 எழுபத்தி ஒன்பதாம் வருஷத்தில் மிகுந்த தர்க்-
கங்கள் வரத் துவங்கியது. ஆனால், அந்தப்படியே,
அநேக வெளிப்படுத்தல்களை தினமும் பெற்று,
உபதேசத்தின் மெய்யான கருத்துக்களைக் குறித்து
அறிந்தவர்களான நேபியும், லேகியும், அவர்களு-
டைய சகோதரரில் அநேகரும், அதே வருஷத்தில்
அவர்களின் தர்க்கத்துக்கு முடிவு வரும்பொருட்டு
ஜனங்களுக்குப் பிரசங்கித்தார்கள்.

And in the seventy and ninth year there began to be much strife. But it came to pass that Nephi and Lehi, and many of their brethren who knew concerning the true points of doctrine, having many revelations daily, therefore they did preach unto the people, insomuch that they did put an end to their strife in that same year.

24 அந்தப்படியே, நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் எண்பதாவது வருஷத்தில், லாமானியரிடத்தில் சில வருஷங்களுக்கு முன்னதாகவே போய், லாமானியரின் பெயரைத் தங்கள் மேல் எடுத்துக்கொண்ட நேபியின் ஜனங்களிலிருந்த கலகத்தார் சிலரும், லாமானியரின் மெய்யான சந்ததியினர் சிலரும், அவர்களால், அதாவது அந்த கலகக்காரரால் கோபப்படும்படி தூண்டிவிடப்பட்டு, தங்கள் சகோதரரோடு யுத்தம் பண்ணத் துவங்கினார்கள்.

And it came to pass that in the eightieth year of the reign of the judges over the people of Nephi, there were a certain number of the dissenters from the people of Nephi, who had some years before gone over unto the Lamanites, and taken upon themselves the name of Lamanites, and also a certain number who were real descendants of the Lamanites, being stirred up to anger by them, or by those dissenters, therefore they commenced a war with their brethren.

25 அவர்கள் கொலையையும், களவையும் செய்தார்கள்; பின்பு அவர்கள் மலைகளுக்கும், வனாந்தரத்திற்கும், இரகசிய இடங்களுக்கும் திரும்பி தாங்கள் கண்டுபிடிக்க முடியாதபடிக்கு ஒளிந்து கொண்டார்கள். கலகக்காரர் அவர்களிடத்தில் போய்க்கொண்டிருந்தபடியால், அவர்களின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துக்கொண்டே வந்தது.

And they did commit murder and plunder; and then they would retreat back into the mountains, and into the wilderness and secret places, hiding themselves that they could not be discovered, receiving daily an addition to their numbers, inasmuch as there were dissenters that went forth unto them.

26 இப்படியாக சிறிதுகாலத்தில், ஆம், சில வருஷங்களுக்குள்ளாகவே அவர்கள் பெரிய திருடர் கூட்டமானார்கள்; அவர்கள் காதியாந்தனின் இரகசியத் திட்டங்களைக் கண்டறிந்து, இப்படியாக அவர்கள் காதியாந்தன் திருடர்களானார்கள்.

And thus in time, yea, even in the space of not many years, they became an exceedingly great band of robbers; and they did search out all the secret plans of Gadianton; and thus they became robbers of Gadianton.

27 இப்பொழுதும் இதோ, இந்தத் திருடர்கள், நேபி ஜனங்களுக்குள்ளும், லாமானிய ஜனங்களுக்குள்ளும் கூட பெரும் பாதிப்பை, ஆம், பெரும் அழிவை உண்டாக்கினார்கள்.

Now behold, these robbers did make great havoc, yea, even great destruction among the people of Nephi, and also among the people of the Lamanites.

28 அந்தப்படியே, இந்த அழிவின் கிரியையை நிறுத்துவது அவசியமானது. ஆதலால் அவர்கள் பராக்கிரமசாலிகளின் சேனையை, வனாந்தரத்தினுள்ளும், மலையின் மேலும் போய், இந்தத் திருடர் கூட்டத்தைக் கண்டுபிடித்து அவர்களை அழித்துப்போட அனுப்பினார்கள்.

And it came to pass that it was expedient that there should be a stop put to this work of destruction; therefore they sent an army of strong men into the wilderness and upon the mountains to search out this band of robbers, and to destroy them.

29 ஆனால், இதோ, அந்தப்படியே, அதே வருஷத்தில் அவர்கள் தங்கள் சொந்த தேசங்களுக்குள்ளாகத் துரத்தியடிக்கப்பட்டார்கள். இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிகளின் ஆளுகையின் எண்பதாவது வருஷமும் முடிவுற்றது.

But behold, it came to pass that in that same year they were driven back even into their own lands. And thus ended the eightieth year of the reign of the judges over the people of Nephi.

30 அந்தப்படியே, எண்பத்தி ஒன்றாம் வருஷத் துவக்கத்தில் அவர்கள் இந்த திருடர் கூட்டத்திற்கு விரோதமாக மறுபடியும் போய் அநேகரை அழித்தார்கள்; அவர்களும் மிகுந்த அழிவினால் சந்திக்கப்பட்டார்கள்.

And it came to pass in the commencement of the eighty and first year they did go forth again against this band of robbers, and did destroy many; and they were also visited with much destruction.

31 மலைகளிலும் வனாந்தரங்களிலும் பெருகின அந்தத் திருடர்களின் எண்ணிக்கையின் மிகுதியினிமித்தம் அவர்கள் மறுபடியும் வனாந்தரத்திலிருந்தும், மலைகளிலிருந்தும் தங்கள் சொந்த தேசங்களுக்குத் திரும்பும்படியாகக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

And they were again obliged to return out of the wilderness and out of the mountains unto their own lands, because of the exceeding greatness of the numbers of those robbers who infested the mountains and the wilderness.

32 அந்தப்படியே, இந்த வருஷம் முடிவுற்றது. திருடர்கள் இன்னும் பெருகி பலம்கொண்டு நேபியரின் மற்றும் லாமானியரின் சேனை முழுவதையும் எதிர்த்தார்கள்; அவர்கள் தேசத்தின் மேலிருந்த ஜனங்கள் மீது பெரும் பயம் வரக் காரணமாயிருந்தார்கள்.

And it came to pass that thus ended this year. And the robbers did still increase and wax strong, insomuch that they did defy the whole armies of the Nephites, and also of the Lamanites; and they did cause great fear to come unto the people upon all the face of the land.

33 ஆம், அவர்கள் தேசத்தின் அநேக பகுதிகளுக்குச் சென்று அவர்களுக்குள்ளே மிகுந்த அழிவை ஏற்படுத்தினார்கள்; ஆம், அவர்கள் அநேகரைக் கொன்று, மற்றவர்களைக், குறிப்பாக அவர்களுடைய ஸ்திரீகளையும், பிள்ளைகளையும் வனாந்தரத்தினுள் கைதிகளாகக் கொண்டு போனார்கள்.

Yea, for they did visit many parts of the land, and did do great destruction unto them; yea, did kill many, and did carry away others captive into the wilderness, yea, and more especially their women and their children.

34 ஜனங்களின் அக்கிரமத்தினிமித்தம் அவர்கள் மேல் வந்த இந்தப் பெரும் பொல்லாப்பு அவர்களை தேவனாகிய தங்கள் கர்த்தரை மறுபடியும் நினைவுகூரும்படியாய் தூண்டிற்று.

Now this great evil, which came unto the people because of their iniquity, did stir them up again in remembrance of the Lord their God.

35 இப்படியாக நியாயாதிபதிகளின் ஆளுகையின் எண்பத்தி ஒன்றாம் வருஷமும் முடிவடைந்தது.

And thus ended the eighty and first year of the reign of the judges.

36 எண்பத்தி இரண்டாம் வருஷத்தில் அவர்கள் மறுபடியும் தேவனாகிய தங்கள் கர்த்தரை மறக்கத் தொடங்கினார்கள். எண்பத்தி மூன்றாம் வருஷத்தில் அவர்கள் அக்கிரமத்திலே பலத்தார்கள். எண்பத்தி நான்காம் வருஷத்தில் அவர்கள் தங்கள் வழிகளைச் சீர்ப்படுத்தவில்லை.

And in the eighty and second year they began again to forget the Lord their God. And in the eighty and third year they began to wax strong in iniquity. And in the eighty and fourth year they did not mend their ways.

37 அந்தப்படியே, எண்பத்தி ஐந்தாம் வருஷத்தில், அவர்கள் தங்கள் பெருமையிலும், தங்கள் துன்மார்க்கத்திலும் மென்மேலும் திடனடைந்து, அப்படியாக அழிவிற்கேதுவாய் பழுத்திருந்தார்கள்.

And it came to pass in the eighty and fifth year they did wax stronger and stronger in their pride, and in their wickedness; and thus they were ripening again for destruction.

38 இப்படியாக எண்பத்து ஐந்தாம் வருஷமும் முடிவடைந்தது.

And thus ended the eighty and fifth year.

# ஏலமன் 12

1 இப்படியாக மனுபுத்திரரின் உள்ளங்கள் எவ்வளவு
பொய்மையும் நிலையற்றதுமாயிருக்கிறது என
நாம் காணலாம்; ஆம், கர்த்தர் தன் மேல் தங்களு-
டைய நம்பிக்கையை வைக்கிறவர்களை தம்மு-
டைய மாபெரும் முடிவற்ற நன்மையால் ஆசீர்வ-
தித்து விருத்தியடையச் செய்வதை நாம் காண-
லாம்.
2 ஆம், அவர் தம்முடைய ஜனத்தை விருத்தியடை-
யச் செய்து, ஆம், அவர்கள் தங்கள் வயல்களிலும்,
ஆடுகளிலும், தங்கள் மாடுகளிலும், பொன்னிலும்,
வெள்ளியிலும், எல்லாவிதமும், வகையுமான வி-
லையுயர்ந்த அழகிய பொருட்களிலும் பெருகப்-
பண்ணி அவர்களுடைய ஜீவனைத் தப்புவித்து,
அவர்களை அவர்களுடைய விரோதிகளின் கைக-
ளுக்குத் தப்புவித்து, அவர்களுடைய விரோதிகள்
அவர்களுக்கு விரோதமாக யுத்தங்களை அறிவிக்-
கக் கூடாதபடிக்கு, ஆம் அவர்களுடைய இருதயங்-
களை இளகப்பண்ணி, இப்படியாக தன் ஜனத்தி-
னுடைய நலனுக்காயும், மகிழ்ச்சிக்காயும், சகல கா-
ரியங்களையும் செய்யும் அச்சமயத்தில்தானே,
அவர்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி,
தேவனாகிய தங்கள் கர்த்தரை மறந்து, பரிசுத்தரை
தங்கள் கால்களில் போட்டு மிதிக்கிறார்கள். ஆம்,
இது அவர்களுடைய சௌகரியத்தினாலும், அவர்-
களுடைய மிகுந்த செழிப்பினிமித்தமே.
3 இப்படியாக கர்த்தர் தம்முடைய ஜனத்தை அநேக
உபத்திரவங்களினால் தண்டிக்காவிட்டால், ஆம்,
அவர் அவர்களை மரணத்தினாலும், பயங்கரத்தி-
னாலும், பஞ்சத்தாலும், எல்லா விதமான வாதையி-
னாலும் விசாரிக்காவிட்டால், அவர்கள் அவரை நி-
னைவுகூரமாட்டார்கள், என்று நாம் காண்கிறோம்.
4 மனுபுத்திரர் எவ்வளவு மூடராயும், வீணராயும்,
எவ்வளவு பொல்லாதவராயும், அக்கிரமத்தைச்
செய்ய துரிதப்படுவராயும், நன்மை செய்ய காலம்
தாமதிப்பவராயும், ஆம் பொல்லாதவனின் வார்த்-
தைகளுக்குச் செவிகொடுப்பதற்கு துரிதமாயும்,
உலகத்தின் வீணானவைகளின் மேல் தங்கள் இரு-
தயங்களை வைப்பவர்களாயும் இருக்கிறார்கள்!
5 ஆம் பெருமையிலே சீக்கிரமாய் உயர்த்தப்படத்
துரிதப்படுபவராயும், ஆம், மேட்டிமை பாராட்டவும்,
அக்கிரமமான எல்லாவற்றையும் செய்யவும் துரி-
தப்படுபவராயும், தேவனாகிய தங்கள் கர்த்தரில் நி-
னைவுகூரவும், ஆம் அவருடைய ஆலோசனைக-
ளுக்குச் செவி கொடுக்க காலம் தாமதிப்பவராயும்,
ஆம் ஞானமான பாதைகளில் நடக்க காலம் தாம-
திப்பவராயும் இருக்கிறார்கள்.

# Helaman 12

And thus we can behold how false, and also the unsteadiness of the hearts of the children of men; yea, we can see that the Lord in his great infinite goodness doth bless and prosper those who put their trust in him.

Yea, and we may see at the very time when he doth prosper his people, yea, in the increase of their fields, their flocks and their herds, and in gold, and in silver, and in all manner of precious things of every kind and art; sparing their lives, and delivering them out of the hands of their enemies; softening the hearts of their enemies that they should not declare wars against them; yea, and in fine, doing all things for the welfare and happiness of his people; yea, then is the time that they do harden their hearts, and do forget the Lord their God, and do trample under their feet the Holy One—yea, and this because of their ease, and their exceedingly great prosperity.

And thus we see that except the Lord doth chasten his people with many afflictions, yea, except he doth visit them with death and with terror, and with famine and with all manner of pestilence, they will not remember him.

O how foolish, and how vain, and how evil, and devilish, and how quick to do iniquity, and how slow to do good, are the children of men; yea, how quick to hearken unto the words of the evil one, and to set their hearts upon the vain things of the world!

Yea, how quick to be lifted up in pride; yea, how quick to boast, and do all manner of that which is iniquity; and how slow are they to remember the Lord their God, and to give ear unto his counsels, yea, how slow to walk in wisdom's paths!

6 இதோ, தங்களைச் சிருஷ்டித்தவராகிய தேவனாகிய தங்கள் கர்த்தர் தங்கள் மேல் ஆட்சி செய்யவும், ஆளுகை பண்ணவும் விரும்புகிறதில்லை; அவருடைய மிகுந்த நன்மையும், அவருடைய இரக்கமும், தங்கள் மேல் இருந்தாலும், அவர்கள் அவருடைய ஆலோசனையைத் தள்ளி விடுகிறார்கள். அவர் தங்களை வழிநடத்துபவராக இருக்க அவர்கள் விரும்புவதில்லை.

Behold, they do not desire that the Lord their God, who hath created them, should rule and reign over them; notwithstanding his great goodness and his mercy towards them, they do set at naught his counsels, and they will not that he should be their guide.

7 மனுபுத்திரரின் ஒன்றுமில்லாமை எவ்வளவு பெரிதாயிருக்கிறது; ஆம், அவர்கள் பூமியின் தூசிக்கும் குறைவானவர்கள்.

O how great is the nothingness of the children of men; yea, even they are less than the dust of the earth.

8 ஏனெனில் இதோ, நம்முடைய மகத்துவமுள்ள என்றுமுள்ள தேவனுடைய கட்டளையினாலே பூமியின் தூசியானது பிரிந்து போகும்படியாக, அங்கேயும் இங்கேயுமாக நகர்கிறது.

For behold, the dust of the earth moveth hither and thither, to the dividing asunder, at the command of our great and everlasting God.

9 ஆம், இதோ, அவருடைய சத்தத்தில், குன்றுகளும் பர்வதங்களும் நடுங்கி குலுங்குகின்றன.

Yea, behold at his voice do the hills and the mountains tremble and quake.

10 அவருடைய சத்தத்தின் வல்லமையினால் அவை பிளந்து, ஆம், ஒரு பள்ளத்தாக்கைப் போல தட்டையாகின்றன.

And by the power of his voice they are broken up, and become smooth, yea, even like unto a valley.

11 ஆம், அவருடைய சத்தத்தின் வல்லமையினாலே பூமி முழுவதும் நடுங்குகிறது.

Yea, by the power of his voice doth the whole earth shake;

12 ஆம், அவருடைய சத்தத்தின் வல்லமையினாலே அஸ்திபாரங்களின் மையம் முதற்கொண்டு அசைகிறது.

Yea, by the power of his voice, do the foundations rock, even to the very center.

13 ஆம், அவர் பூமியைப் பார்த்து, நகர்ந்து போ என்றால், அது நகர்ந்து போகும்.

Yea, and if he say unto the earth—Move—it is moved.

14 ஆம், அவர் பூமியைப் பார்த்து, நாளானது பல மணிநேரத்திற்கு நீண்டிருக்கும்படி நீ பின்னோக்கிப்போ என்றால், அது அப்படியே செய்யப்படுகிறது.

Yea, if he say unto the earth—Thou shalt go back, that it lengthen out the day for many hours—it is done;

15 இப்படியாக அவருடைய வார்த்தையின்படி பூமி பின்னோக்கிப் போகிறது. சூரியன் நகராமல் நின்று கொண்டிருப்பதைப்போல மனுஷனுக்கு அது காட்சியளிக்கிறது; ஆம், இதோ, இது அப்படித்தான்; ஏனெனில் நிச்சயமாக சூரியன் அல்ல, பூமியே சுற்றுகிறது.

And thus, according to his word the earth goeth back, and it appeareth unto man that the sun standeth still; yea, and behold, this is so; for surely it is the earth that moveth and not the sun.

16 இதோ, அவர் பெரும் ஆழங்களில் உள்ள தண்ணீர்களை நோக்கி, வற்றிப்போகக் கடவது என்றால் அது அப்படியே நடக்கும்.

And behold, also, if he say unto the waters of the great deep—Be thou dried up—it is done.

17 இதோ, அவர் இந்தப் பர்வதத்தைப் பார்த்து, நீ எழுந்து வந்து, அந்தப் பட்டணம் புதைந்து போகும்படியாய், அதன்மேல் விழுவாயாக என்றால், அது அப்படியே சம்பவிக்கும்.

Behold, if he say unto this mountain—Be thou raised up, and come over and fall upon that city, that it be buried up—behold it is done.

18 இதோ, ஒரு மனுஷன் பூமியிலே பொக்கிஷத்தை மறைத்தானாகில், கர்த்தர், மறைத்தவனுடைய அக்கிரமத்தினிமித்தம் அது சபிக்கப்பட்டிருப்பதாக என்றாராகில், இதோ, அது சபிக்கப்பட்டிருக்கும்.

And behold, if a man hide up a treasure in the earth, and the Lord shall say—Let it be accursed, because of the iniquity of him who hath hid it up—behold, it shall be accursed.

19 இக்காலம் முதற்கொண்டு, இனியும் என்றென்று-
மாயும் ஒரு மனுஷனும் உன்னை காணாதபடிக்கு நீ
சபிக்கப்பட்டிருப்பாய் என்று கர்த்தர் சொல்வாரா-
கில், இதோ, அதை மனுஷன் இப்போதிலிருந்து
என்றென்றுமாயும் பெறப்போவதில்லை.

And if the Lord shall say—Be thou accursed, that no man shall find thee from this time henceforth and forever—behold, no man getteth it henceforth and forever.

20 இதோ, கர்த்தர் மனுஷனைப் பார்த்து, உன்னு-
டைய அக்கிரமத்தினிமித்தம் நீ என்றென்றுமாய்
சபிக்கப்பட்டிருப்பாய் என்று சொன்னால், அது சம்-
பவிக்கும்.

And behold, if the Lord shall say unto a man—Because of thine iniquities, thou shalt be accursed forever—it shall be done.

21 கர்த்தர் உன் அக்கிரமங்களினிமித்தம் நீ என் சமு-
கத்தினின்று அறுப்புண்டு போவாய் என்று சொல்-
வாராகில், அது அப்படியே நிறைவேறும்படியாயும்
செய்வார்.

And if the Lord shall say—Because of thine iniquities thou shalt be cut off from my presence—he will cause that it shall be so.

22 அவர் இதை எவனிடத்தில் சொல்லுகிறாரோ
அவனுக்கு ஐயோ. ஏனெனில் அக்கிரமத்தைச் செய்-
கிறவனிடத்தில் அது நிறைவேறி அவன் இரட்சிக்-
கப்பட முடியாமற் போகும். எனவே இந்த காரணத்-
திற்காக, மனுஷன் இரட்சிக்கப்படும்படியாக, மனந்-
திரும்புதல் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

And wo unto him to whom he shall say this, for it shall be unto him that will do iniquity, and he cannot be saved; therefore, for this cause, that men might be saved, hath repentance been declared.

23 ஆதலால் மனந்திரும்பி, தேவனாகிய தங்கள்
கர்த்தருடைய குரலுக்குச் செவிகொடுப்போர் பாக்-
கியவான்கள்; ஏனெனில் இவர்களே இரட்சிக்கப்ப-
டுபவர்கள்.

Therefore, blessed are they who will repent and hearken unto the voice of the Lord their God; for these are they that shall be saved.

24 மனுஷரை மனந்திரும்பப்பண்ணி நற்கிரியைக-
ளுக்குக் கொண்டுவரும்படியாகவும், அவர்கள் தங்-
களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக, கிருபை-
யின்படி கிருபைக்கு திரும்பச் சேர்க்கப்படும்படியா-
கவும், தேவன் தம்முடைய மகா பூரணத்திலே அரு-
ளுவாராக.

And may God grant, in his great fulness, that men might be brought unto repentance and good works, that they might be restored unto grace for grace, according to their works.

25 மனுஷர் யாவரும் இரட்சிக்கப்படும்படியாய் வி-
ரும்புகிறேன். ஆனால் அந்தப் பெரிதும், கடைசியு-
மான நாளில் சிலர் தள்ளப்படுவார்கள், ஆம், கர்த்-
தருடைய பிரசன்னத்தினின்று தள்ளப்படுவார்-
கள், என்று வாசிக்கிறோம்;

And I would that all men might be saved. But we read that in the great and last day there are some who shall be cast out, yea, who shall be cast off from the presence of the Lord;

26 ஆம், நன்மை செய்தவர்கள் என்றுமுள்ள ஜீ-
வனையும், பொல்லாப்பைச் செய்தவர்கள் என்று-
முள்ள அழிவையும் பெறுவார்கள், என்று சொல்-
லப்பட்ட வார்த்தைகள் நிறைவேறத்தக்கதாக,
அவர்கள் முடிவற்ற துர்பாக்கிய நிலைக்கு ஒப்புக்
கொடுக்கப்படுவார்கள். இது இப்படியாக இருக்கிற-
து. ஆமென்.

Yea, who shall be consigned to a state of endless misery, fulfilling the words which say: They that have done good shall have everlasting life; and they that have done evil shall have everlasting damnation. And thus it is. Amen.

*நேபியர்களுக்கு லாமானியனான சாமுவேலின் தீர்க்கதரிசனம்.*

## ஏலமன் 13

1 இப்பொழுதும், அந்தப்படியே, எண்பத்தி ஆறாம்
வருஷத்தில், நேபியர்கள் இன்னும் துன்மார்க்கத்-
தில், ஆம், பெரும் துன்மார்க்கத்தில் நிலைத்திருக்-
கையில், லாமானியர் மோசேயின் நியாயப்பிரமா-
ணத்தின்படி தேவ கட்டளைகளை கைக்கொள்ளு-
வதை கடுமையாய் ஆசரித்து வந்தார்கள்.
2 அந்தப்படியே, இந்த வருஷத்தில் லாமானி-
யனான சாமுவேல் என்பவன் சாரகெம்லா தேசத்-
திற்குள் வந்து, ஜனங்களுக்குள்ளே பிரசங்கம்
பண்ணத் தொடங்கினான். அந்தப்படியே, மனந்தி-
ரும்புதலைக் குறித்து ஜனங்களுக்கு அநேக நாட்-
கள் பிரசங்கம் பண்ணினான். அவர்கள் அவனை
வெளியே தள்ளினார்கள். அவன் தன் சொந்த தே-
சத்திற்குத் திரும்பவிருந்தான்.
3 இதோ, அவன் மீண்டும் திரும்பி, தன் இருதயத்-
தில் வருகிற எக்காரியத்தையும் ஜனங்களுக்கு
தீர்க்கதரிசனமாய் சொல்லவேண்டுமென்ற கர்த்த-
ருடைய சத்தம் அவனுக்கு உண்டானது.
4 அந்தப்படியே, அவன் பட்டணத்தினுள் பிரவே-
சிக்க அவர்கள் அனுமதிக்கமாட்டார்கள்; ஆதலால்
அவன் போய் அதன் மதில் மேல் ஏறி, தன் கையை
நீட்டி, தன் இருதயத்தில் கர்த்தர் வைக்கிற எக்காரி-
யத்தையும் ஜனங்களுக்கு உரத்த சத்தமாய் தீர்க்கத-
ரிசனமுரைத்தான்.
5 அவன் அவர்களை நோக்கி: இதோ, லாமானி-
யனான சாமுவேல் ஆகிய நான், கர்த்தர் என் இருத-
யத்தில் வைக்கிற அவருடைய வார்த்தைகளையே
பேசுகிறேன்; இதோ, இந்த ஜனங்களின் மேல் நியா-
யத்தின் பட்டயம் தொங்குகிறது என்று இந்த ஜனங்-
களுக்கு சொல்லும்படியாக அவர் என் இருதயத்தில்
ஏவினார்; நானூறு வருஷங்கள் கடப்பதற்கு முன்-
னமே இந்த ஜனங்களின் மேல் நியாயத்தின் பட்ட-
யம் விழும்.
6 ஆம், இந்த ஜனங்களுக்கு பெரும் அழிவு காத்தி-
ருக்கிறது. மெய்யாகவே அது இந்த ஜனங்களுக்கு
சம்பவிக்கும். மனந்திரும்புதலும், மெய்யாகவே
உலகினுள் வந்து, அநேகக் காரியங்களைச் சகித்து,
தன் ஜனங்களுக்காகக் கொல்லப்படவிருக்கிற
கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசமே
அல்லாமல் வேறொன்றும் இந்த ஜனங்களை இரட்-
சிக்க முடியாது.

*The prophecy of Samuel, the Lamanite, to the Nephites.*

## Helaman 13

And now it came to pass in the eighty and sixth year, the Nephites did still remain in wickedness, yea, in great wickedness, while the Lamanites did observe strictly to keep the commandments of God, according to the law of Moses.

And it came to pass that in this year there was one Samuel, a Lamanite, came into the land of Zarahemla, and began to preach unto the people. And it came to pass that he did preach, many days, repentance unto the people, and they did cast him out, and he was about to return to his own land.

But behold, the voice of the Lord came unto him, that he should return again, and prophesy unto the people whatsoever things should come into his heart.

And it came to pass that they would not suffer that he should enter into the city; therefore he went and got upon the wall thereof, and stretched forth his hand and cried with a loud voice, and prophesied unto the people whatsoever things the Lord put into his heart.

And he said unto them: Behold, I, Samuel, a Lamanite, do speak the words of the Lord which he doth put into my heart; and behold he hath put it into my heart to say unto this people that the sword of justice hangeth over this people; and four hundred years pass not away save the sword of justice falleth upon this people.

Yea, heavy destruction awaiteth this people, and it surely cometh unto this people, and nothing can save this people save it be repentance and faith on the Lord Jesus Christ, who surely shall come into the world, and shall suffer many things and shall be slain for his people.

7 இதோ, கர்த்தருடைய தூதன் அதை எனக்கு அறி-
வித்தான். அவன் என் ஆத்துமாவிற்கு நற்செய்தி-
யைக் கொண்டு வந்தான். இதோ, நீங்கள் நற்செய்தி-
யைப் பெறும்படியாக அதை அறிவிக்க நான் உங்க-
ளிடத்தில் அனுப்பப்பட்டேன். ஆனால் இதோ, நீங்-
கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை.

And behold, an angel of the Lord hath declared it unto me, and he did bring glad tidings to my soul. And behold, I was sent unto you to declare it unto you also, that ye might have glad tidings; but behold ye would not receive me.

8 ஆதலால் கர்த்தர் சொல்லுகிறதாவது: அவர்க-
ளின் இருதயக் கடினத்தினிமித்தம் நேபியர்களான
ஜனங்கள் மனந்திரும்பாவிட்டால் நான் என்
வார்த்தையை அவர்களிடத்திலிருந்து எடுத்துப்
போடுவேன். நான் என் ஆவியை அவர்களிடத்தி-
லிருந்து நீங்கலாக்குவேன். இனி ஒருபோதும் அவர்-
களை பொறுத்துக்கொள்ளேன். நான் அவர்களு-
டைய சகோதரரின் இருதயங்களை அவர்களுக்கு
விரோதமாய்த் திருப்புவேன்.

Therefore, thus saith the Lord: Because of the hardness of the hearts of the people of the Nephites, except they repent I will take away my word from them, and I will withdraw my Spirit from them, and I will suffer them no longer, and I will turn the hearts of their brethren against them.

9 நானூறு வருஷங்கள் கடந்துபோகும் முன்னே
அவர்கள் அடிக்கப்படும்படியாகச் செய்வேன்; ஆம்,
நான் அவர்களை பட்டயத்தாலும், பஞ்சத்தாலும்,
வாதையினாலும் விசாரிப்பேன்.

And four hundred years shall not pass away before I will cause that they shall be smitten; yea, I will visit them with the sword and with famine and with pestilence.

10 ஆம், நான் என்னுடைய கொடிய கோபத்தினால்
அவர்களை விசாரிப்பேன். உன் சத்துருக்களின்
நாலாம் தலைமுறையினராய் ஜீவித்திருப்போர்
உங்களுடைய முழு அழிவையும் காண்பார்கள்;
நீங்கள் மனந்திரும்பாவிடில், இது மெய்யாகவே சம்-
பவிக்கும் என்று கர்த்தர் உரைக்கிறார்; அந்த நா-
லாம் தலைமுறையினரே உங்களை அழிவை சந்-
திப்பார்கள்.

Yea, I will visit them in my fierce anger, and there shall be those of the fourth generation who shall live, of your enemies, to behold your utter destruction; and this shall surely come except ye repent, saith the Lord; and those of the fourth generation shall visit your destruction.

11 ஆனால், நீங்கள் மனந்திரும்பி, உங்கள் தேவனா-
கிய கர்த்தரிடத்தில் மறுபடியும் திரும்புவீர்களெ-
னில், நான் என் கோபத்தைத் திருப்புவேன் என்று
கர்த்தர் உரைக்கிறார்; ஆம், கர்த்தர் உரைப்பதாவது,
மனந்திரும்பி என்னிடத்தில் திரும்புகிறவர்கள்
பாக்கியவான்கள், மனந்திரும்பாதவனுக்கோ
ஐயோ.

But if ye will repent and return unto the Lord your God I will turn away mine anger, saith the Lord; yea, thus saith the Lord, blessed are they who will repent and turn unto me, but wo unto him that repenteth not.

12 ஆம், இப்பெரும் பட்டணமான சாரகெம்லாவிற்கு
ஐயோ; இதோ, நீதிமான்களினிமித்தமே அது காக்-
கப்படுகிறது; ஆம், இப்பெரும் பட்டணத்திற்கு
ஐயோ. ஆம், அநேகர், இப்பெரும் பட்டணத்திலிருக்-
கிற பெரும்பாலானோர் எனக்கு விரோதமாக தங்-
கள் இருதயங்களை கடினப்படுத்தப் போவதாக
நான் உணர்கிறேன் என கர்த்தர் சொல்வதால் இப்-
பெரும் பட்டணத்திற்கு ஐயோ, என்று கர்த்தர்
உரைக்கிறார்.

Yea, wo unto this great city of Zarahemla; for behold, it is because of those who are righteous that it is saved; yea, wo unto this great city, for I perceive, saith the Lord, that there are many, yea, even the more part of this great city, that will harden their hearts against me, saith the Lord.

13 மனந்திரும்புபவர்கள் பாக்கியவான்கள். ஏனெ-
னில் அவர்களை நான் தப்புவிப்பேன். ஆனால்
இதோ, இப்பெரும் பட்டணத்தில் நீதிமான்கள் இல்-
லையெனில், இதோ, வானத்திலிருந்து அக்கினி-
யை வரப்பண்ணி, இதை அழியப் பண்ணுவேன்.

But blessed are they who will repent, for them will I spare. But behold, if it were not for the righteous who are in this great city, behold, I would cause that fire should come down out of heaven and destroy it.

14 ஆனால் இதோ, நீதிமான்களினிமித்தமே இது தப்-
புவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதோ, கர்த்தர்
சொல்வதாவது, நீங்கள் உங்களுக்குள்ளிருந்து நீ-
திமான்களை தள்ளுகிற காலம் வரும்போது, நீங்-
கள் அழிவிற்கேதுவாய் பழுத்திருப்பீர்கள்; ஆம்,
அவளது துன்மார்க்கம் மற்றும் அருவருப்புகளி-
னிமித்தம் இந்த பெரும் பட்டணத்திற்கு ஐயோ.

But behold, it is for the righteous' sake that it is spared. But behold, the time cometh, saith the Lord, that when ye shall cast out the righteous from among you, then shall ye be ripe for destruction; yea, wo be unto this great city, because of the wickedness and abominations which are in her.

15 ஆம், அவளது துன்மார்க்கம் மற்றும் அருவருப்-
புகளினிமித்தம் கிதியோன் பட்டணத்திற்கு ஐயோ.

Yea, and wo be unto the city of Gideon, for the wickedness and abominations which are in her.

16 ஆம், சுற்றுப்புற தேசத்திலுள்ள, நேபியர்கள்
வசப்பட்டிருக்கிற பட்டணங்கள் யாவிற்கும்,
அவைகளிலுள்ள துன்மார்க்கம் மற்றும் அருவ-
ருப்புகளினிமித்தம் ஐயோ.

Yea, and wo be unto all the cities which are in the land round about, which are possessed by the Nephites, because of the wickedness and abominations which are in them.

17 சேனைகளின் கர்த்தர் உரைப்பதாவது, இதோ, தே-
சத்தின் மேலிருக்கிற ஜனங்களின் நிமித்தம், ஆம்,
அவர்களின் துன்மார்க்கம் மற்றும் அருவருப்புக-
ளினிமித்தம் தேசத்தின் மீது ஒரு சாபம் வரும்.

And behold, a curse shall come upon the land, saith the Lord of Hosts, because of the people's sake who are upon the land, yea, because of their wickedness and their abominations.

18 நம்முடைய மகத்துவமிக்க, உண்மையுள்ள தே-
வனாகிய, சேனைகளின் கர்த்தர் உரைப்பதாவது.
பூமியில் பொக்கிஷங்களை மறைத்து வைக்கிற
எவனும், நீதிமானாயிருந்து, அதைக் கர்த்தருக்-
குள்ளாக மறைத்து வைக்காவிடில், தேசத்தின்
கொடிய சாபத்தினிமித்தம், அவன் அதை இனி ஒரு-
போதும் கண்டடைவதில்லை.

And it shall come to pass, saith the Lord of Hosts, yea, our great and true God, that whoso shall hide up treasures in the earth shall find them again no more, because of the great curse of the land, save he be a righteous man and shall hide it up unto the Lord.

19 கர்த்தர் சொல்லுகிறதாவது, அவர்கள் எனக்குள்-
ளாக பொக்கிஷங்களை மறைத்து வைத்திருக்க
விரும்புகிறேன்; எனக்குள்ளாகத் தங்கள் பொக்கி-
ஷங்களை மறைக்காத எவரும் சபிக்கப்பட்டவரே;
ஏனெனில் நீதிமான்களைத் தவிர வேறொருவரும்
தங்கள் பொக்கிஷங்களை எனக்குள்ளாக மறைத்-
து வைப்பதில்லை; எனக்குள்ளாக தன் பொக்கி-
ஷங்களை மறைத்து வைக்காதவனும் அவனது
பொக்கிஷமும் சபிக்கப்பட்டிருக்கும், தேசத்தின் சா-
பத்தினிமித்தம், அதை ஒருவனும் மீட்டுக் கொள்வ-
தில்லை.

For I will, saith the Lord, that they shall hide up their treasures unto me; and cursed be they who hide not up their treasures unto me; for none hideth up their treasures unto me save it be the righteous; and he that hideth not up his treasures unto me, cursed is he, and also the treasure, and none shall redeem it because of the curse of the land.

20 கர்த்தர் உரைப்பதாவது, அவர்கள் தங்கள் இருத-
யங்களை ஐஸ்வரியத்தின்மேல் வைத்ததினிமித்-
தம், அவர்கள் தங்கள் பொக்கிஷங்களை மறைத்து
வைக்கிற நாள் வரும்; அவர்கள் தங்கள் இருதயங்-
களை தங்கள் ஐஸ்வரியங்களின்மேல் வைத்ததி-
னிமித்தம், அவர்கள் தங்கள் சத்துருக்களுக்கு
முன்பாக ஓடுகையில் தங்கள் பொக்கிஷங்களை
மறைத்து வைப்பார்கள்; அவர்கள் அவைகளை
எனக்குள்ளாக மறைத்து வைக்காததினிமித்தம்,
அவர்களும் அவர்களின் பொக்கிஷமும் சபிக்கப்-
பட்டிருக்கும். அந்நாளிலே அவர்கள் அடிக்கப்பட்-
டுப் போவார்கள்.

And the day shall come that they shall hide up their treasures, because they have set their hearts upon riches; and because they have set their hearts upon their riches, and will hide up their treasures when they shall flee before their enemies; because they will not hide them up unto me, cursed be they and also their treasures; and in that day shall they be smitten, saith the Lord.

21 இதோ, இப்பெரும் பட்டணத்தின் ஜனங்களாகிய நீங்கள் என் வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்; ஆம், கர்த்தர் சொல்லுகிற வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்; ஏனெனில் இதோ, அவர் சொல்லுகிறதாவது, நீங்கள் உங்கள் ஐஸ்வரியத்தினிமித்தம் நீங்கள் சபிக்கப்படுகிறீர்கள், அவைகள்மேல் உங்கள் இருதயங்களை வைத்து, அவைகளை உங்களுக்குக் கொடுத்தவருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடாததினிமித்தம், உங்கள் ஐஸ்வரியங்களும் சபிக்கப்பட்டிருக்கும்.

Behold ye, the people of this great city, and hearken unto my words; yea, hearken unto the words which the Lord saith; for behold, he saith that ye are cursed because of your riches, and also are your riches cursed because ye have set your hearts upon them, and have not hearkened unto the words of him who gave them unto you.

22 உங்களுடைய தேவனாகிய கர்த்தர் உங்களை ஆசீர்வதித்து கொடுத்த இக்காரியங்களுக்காக அவரை நீங்கள் நினைவுகூர்வதில்லை. ஆனால் நீங்கள் உங்கள் ஐஸ்வரியங்களை எப்பொழுதும் நினைவில் கொண்டிருக்கிறீர்கள். அவைகளுக்காக தேவனாகிய உங்கள் கர்த்தருக்கு நன்றி சொல்வதில்லை; ஆம், உங்கள் இருதயங்கள் கர்த்தரை நோக்கி இழுக்கப்படுவதில்லை. அவை பெருமையினால் மேன்மை பாராட்டவும், பொறாமை, பிணக்குகள், வெறுப்பு, துன்புறுத்தல்கள், கொலைகள் மற்றும் எல்லாவிதமான அக்கிரமங்களாலும் நிறைந்துள்ளன.

Ye do not remember the Lord your God in the things with which he hath blessed you, but ye do always remember your riches, not to thank the Lord your God for them; yea, your hearts are not drawn out unto the Lord, but they do swell with great pride, unto boasting, and unto great swelling, envyings, strifes, malice, persecutions, and murders, and all manner of iniquities.

23 இதினிமித்தம் தேவனாகிய கர்த்தர், தேசத்தின் மேலும் உங்கள் ஐஸ்வரியங்களின் மேலும் ஒரு சாபம் வரப் பண்ணினார், இது உங்களின் அக்கிரமங்களினிமித்தமே.

For this cause hath the Lord God caused that a curse should come upon the land, and also upon your riches, and this because of your iniquities.

24 ஆம், அவர்கள் பழங்காலத்தில் செய்ததைப்போலவே, நீங்களும் தீர்க்கதரிசிகளை வெளியே தள்ளி, அவர்களைக் கேலிசெய்து, அவர்கள் மேல் கல்லெறிந்து, அவர்களை வெட்டி, அவர்களுக்கு எல்லாவிதமான அக்கிரமத்தைப்பண்ணுகிற இந்தக் காலம் வந்ததால், இந்த ஜனங்களுக்கு ஐயோ.

Yea, wo unto this people, because of this time which has arrived, that ye do cast out the prophets, and do mock them, and cast stones at them, and do slay them, and do all manner of iniquity unto them, even as they did of old time.

25 இப்பொழுதும் நீங்கள் பேசும்போது, எங்களுடைய நாட்கள், எங்களின் பிதாக்களின் நாட்களில் இருந்திருக்குமேயானால், நாங்கள் தீர்க்கதரிசிகளைக் கொன்று போட்டிருக்கமாட்டோம்; அவர்களின் மேல் கல்லெறிந்திருக்கமாட்டோம், அவர்களைப் புறம்பே தள்ளிவிட்டிருக்கமாட்டோம், என்கிறீர்கள்.

And now when ye talk, ye say: If our days had been in the days of our fathers of old, we would not have slain the prophets; we would not have stoned them, and cast them out.

26 இதோ, அவர்களைப் பார்க்கிலும் நீங்கள் கெட்டவர்கள்; கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன், உங்களுக்குள் ஒரு தீர்க்கதரிசி வந்து, உங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் குறித்து சாட்சி கூறும் கர்த்தரின் வார்த்தையை உங்களுக்கு அறிவித்தால், நீங்கள் அவன் மேல் கோபம் கொண்டு, அவனைத் தள்ளி, அவனை அழித்துப்போட எல்லா வழிகளிலும் வகை தேடுகிறீர்கள்; ஆம், அவன் உங்கள் நடத்தை பொல்லாததாயிருக்கிறது என்று சொன்னதினிமித்தம், அவன் கள்ளத் தீர்க்கதரிசி என்றும், அவன் பாவியென்றும், அவன் பிசாசு பிடித்தவனென்றும் சொல்லுகிறீர்கள்.

Behold ye are worse than they; for as the Lord liveth, if a prophet come among you and declareth unto you the word of the Lord, which testifieth of your sins and iniquities, ye are angry with him, and cast him out and seek all manner of ways to destroy him; yea, you will say that he is a false prophet, and that he is a sinner, and of the devil, because he testifieth that your deeds are evil.

27 ஆனால் இதோ, உங்களுக்குள் ஒரு மனுஷன் வந்-
து சொல்வான், இதைச் செய்யுங்கள், இதில் அக்கிர-
மம் இல்லை, அதைச் செய்யுங்கள், நீங்கள் கஷ்டப்-
படுவதில்லை; ஆம்; உங்கள் சொந்த இருதயங்க-
ளின் பெருமையின்படியே நடவுங்கள்; ஆம், உங்-
கள் கண்களின் பெருமையின்படியே நடந்து, உங்-
கள் இருதயம் வாஞ்சிக்கிறதெதுவோ அதைச் செய்-
யுங்கள், உங்களுக்குள் ஒருவன் வந்து இதைச்
சொல்வானாகில், நீங்கள் அவனை ஏற்றுக்கொண்-
டு, அவன் ஒரு தீர்க்கதரிசி, என்பீர்கள்.

But behold, if a man shall come among you and shall say: Do this, and there is no iniquity; do that and ye shall not suffer; yea, he will say: Walk after the pride of your own hearts; yea, walk after the pride of your eyes, and do whatsoever your heart desireth—and if a man shall come among you and say this, ye will receive him, and say that he is a prophet.

28 ஆம், நீங்கள் அவனை கனம்பண்ணி, அவனுக்கு
உங்களுடைய பொருட்களைக் கொடுப்பீர்கள்; நீங்-
கள் அவனுக்கு உங்களுடைய பொன்னையும், உங்-
களுடைய வெள்ளியையும் கொடுத்து, விலையு-
யர்ந்த ஆடையை அவனுக்குப் போர்த்துவீர்கள்;
அவன் உங்களிடத்தில் இச்சகமாய்ப் பேசி, எல்லாம்
நலமே என்று சொல்லுகிறதினிமித்தம், அவனில்
நீங்கள் குற்றம் கண்டுபிடிப்பதில்லை.

Yea, ye will lift him up, and ye will give unto him of your substance; ye will give unto him of your gold, and of your silver, and ye will clothe him with costly apparel; and because he speaketh flattering words unto you, and he saith that all is well, then ye will not find fault with him.

29 துன்மார்க்கமும், மாறுபாடுமுள்ள தலைமுறை-
யே, இதயக் கடினமும், வணங்காக் கழுத்துமுள்ள
ஜனமே, கர்த்தர் உங்களை எவ்வளவு காலம் விட்டு-
வைப்பார் என்று எண்ணுகிறீர்கள்? ஆம், எவ்வள-
வு காலம் தான் நீங்கள் மூடரும் குருடருமான வழி-
காட்டிகளால் நடத்தப்பட உங்களையே அனுமதிப்-
பீர்கள்? ஆம் எவ்வளவு காலம்தான் வெளிச்சத்திற்-
குப் பதிலாக இருளைத் தெரிந்துகொள்வீர்கள்?

O ye wicked and ye perverse generation; ye hardened and ye stiffnecked people, how long will ye suppose that the Lord will suffer you? Yea, how long will ye suffer yourselves to be led by foolish and blind guides? Yea, how long will ye choose darkness rather than light?

30 ஆம், இதோ கர்த்தருடைய உக்கிரம் ஏற்கனவே
உங்களுக்கு விரோதமாய் மூட்டிவிடப்பட்டிருக்கிற-
து; இதோ, உங்களுடைய அக்கிரமத்தினிமித்தம்,
அவர் தேசத்தை சபித்திருக்கிறார்.

Yea, behold, the anger of the Lord is already kindled against you; behold, he hath cursed the land because of your iniquity.

31 இதோ, அவர் உங்கள் ஐஸ்வரியங்களை சபித்து,
அவை நிலைகொள்ளாமலும், நீங்கள் அவைக-
ளைப் பெற்றிருக்க முடியாமற் போகும் காலமும்
வரும்; உங்களுடைய ஏழ்மையின் நாட்களில்
அவைகளை நீங்கள் திரும்பப் பெற முடியாது.

And behold, the time cometh that he curseth your riches, that they become slippery, that ye cannot hold them; and in the days of your poverty ye cannot retain them.

32 உங்களுடைய ஏழ்மையின் காலத்தில் கர்த்தரி-
டத்தில் நீங்கள் கூக்குரலிடுவீர்கள்; நீங்கள் வீணி-
லே கூக்குரலிடுவீர்கள்; ஏனெனில் உங்கள்மேல்
உங்களின் பாழ்க்கடிப்பு ஏற்கனவே வந்துவிட்டது,
உங்கள் அழிவு உறுதியாக்கப்பட்டிருக்கிறது, அந்-
நாளிலே நீங்கள் அழுது, ஓலமிடுவீர்கள் என்று சே-
னைகளின் கர்த்தர் சொல்லுகிறார். அப்பொழுது
நீங்கள் புலம்பி சொல்வீர்கள்:

And in the days of your poverty ye shall cry unto the Lord; and in vain shall ye cry, for your desolation is already come upon you, and your destruction is made sure; and then shall ye weep and howl in that day, saith the Lord of Hosts. And then shall ye lament, and say:

33 நான் மனந்திரும்பி, தீர்க்கதரிசிகளை கொலை
பண்ணாமலும், அவர்களைக் கல்லெறியாமலும்,
அவர்களை புறம்பே தள்ளாமலும் இருந்தேனே.
ஆம், அந்நாளில் நீங்கள்: தேவனாகிய நம்முடைய
கர்த்தர் நமக்கு ஐஸ்வரியங்களைக் கொடுத்த அந்த
நாளில் அவரை நினைத்திருந்தோமானால்,
அவைகளை நாம் இழக்கும்படியாய் அவை நிலை
கொள்ளாமற் போயிராது; ஏனெனில் இதோ, நம்மு-
டைய ஐஸ்வரியங்கள் நம்மை விட்டுப் போயிற்று.

O that I had repented, and had not killed the prophets, and stoned them, and cast them out. Yea, in that day ye shall say: O that we had remembered the Lord our God in the day that he gave us our riches, and then they would not have become slippery that we should lose them; for behold, our riches are gone from us.

34 இதோ, நாம் இங்கே ஒரு கருவியை வைக்கிறோம். அது மறுநாளில் தொலைந்து போகிறது; இதோ, நம்முடைய பட்டயங்களை நாம் யுத்தத்திற்காகத் தேடும் நாளிலே அவை நம்மிடத்திலிருந்து எடுத்துக் கொள்ளப்படுகிறது.

Behold, we lay a tool here and on the morrow it is gone; and behold, our swords are taken from us in the day we have sought them for battle.

35 ஆம், நம்முடைய பொக்கிஷங்களை மறைத்து வைத்தோம். தேசத்தின் மீதுள்ள சாபத்தினிமித்தம் அவை நம்மிடத்திலிருந்து நழுவிப்போயின.

Yea, we have hid up our treasures and they have slipped away from us, because of the curse of the land.

36 கர்த்தருடைய வார்த்தை நம்மிடத்தில் வந்த அந்த நாளிலே நாம் மனந்திரும்பியிருக்க வேண்டும்; ஏனெனில் இதோ, தேசம் சபிக்கப்பட்டது. அனைத்தும் நிலைகொள்ளாமற் போயின. அவைகளை நாம் வைத்திருக்க முடியவில்லை.

O that we had repented in the day that the word of the Lord came unto us; for behold the land is cursed, and all things are become slippery, and we cannot hold them.

37 இதோ, நாம் பிசாசுகளால் சூழப்பட்டிருக்கிறோம். ஆம் நம்முடைய ஆத்துமாக்களை அழிக்க வகை தேடுகிறவனின் தூதர்களால் நாம் சுற்றிவளைக்கப்பட்டிருக்கிறோம். இதோ, நம்முடைய அக்கிரமங்கள் பெரிதாயிருக்கின்றன. கர்த்தாவே, நீர் உம்முடைய உக்கிரத்தை எங்களிடமிருந்து திருப்பிக் கொள்ளமுடியாதா. அக்காலத்தில் உங்களின் பேச்சு இவ்விதமாயிருக்கும்.

Behold, we are surrounded by demons, yea, we are encircled about by the angels of him who hath sought to destroy our souls. Behold, our iniquities are great. O Lord, canst thou not turn away thine anger from us? And this shall be your language in those days.

38 இதோ, உங்களுடைய சோதனைக் காலம் கடந்து போயிற்று. நித்தியமாய் காலம் கடந்து போகுமட்டும், உங்களுடைய இரட்சிப்பின் நாளை தள்ளிப்போட்டீர்கள். உங்களுடைய அழிவு நிச்சயிக்கப்பட்டுள்ளது; ஆம், நீங்கள் பெற முடியாததை, உங்கள் வாழ்நாள் முழுவதும் தேடினீர்கள், நீங்கள் அக்கிரமம் செய்து, மகிழ்ச்சியைத் தேடினீர்கள். அதுவே நம்முடைய வல்லவரும், நித்தியத் தலைவருமானவரில் இருக்கிற நீதியின் தன்மைக்குப் புறம்பானது.

But behold, your days of probation are past; ye have procrastinated the day of your salvation until it is everlastingly too late, and your destruction is made sure; yea, for ye have sought all the days of your lives for that which ye could not obtain; and ye have sought for happiness in doing iniquity, which thing is contrary to the nature of that righteousness which is in our great and Eternal Head.

39 என் வார்த்தைகளைக் கேட்கிற தேசத்திலிருக்கிற ஜனங்களே! கர்த்தருடைய கோபம் உங்களிடத்திலிருந்து திரும்பும்படிக்கும், நீங்கள் மனந்திரும்பி இரட்சிக்கப்பட வேண்டும் என்றும் ஜெபிக்கிறேன்.

O ye people of the land, that ye would hear my words! And I pray that the anger of the Lord be turned away from you, and that ye would repent and be saved.

## ஏலமன் 14

1 இப்பொழுதும், அந்தப்படியே, லாமானியனான சாமுவேல், எழுதப்பட முடியாத இன்னும் அநேக பெரிய காரியங்களை தீர்க்கதரிசனமுரைத்தான்.

2 இதோ, அவன் அவர்களை நோக்கி: இதோ, நான் உங்களுக்கு ஒரு அறிகுறியைக் கொடுக்கிறேன்; ஐந்து வருஷங்களுக்குப் பின்பு, இதோ, அவருடைய நாமத்தை விசுவாசிக்கிற யாவரையும் மீட்க தேவ குமாரன் வருவார்.

3 இதோ, அவருடைய வருகைக்கு ஓர் அறிகுறியாக இதை உங்களுக்குக் கொடுக்கிறேன்; இதோ, அவர் வருகைக்கு முந்தின இரவில் மனுஷனுக்கு ஒரு பகலைப்போல காட்சியளிக்கும் அளவில், இருளே இல்லாதபடி வானத்தில் பெரும் வெளிச்சங்கள் தோன்றும்.

4 ஆகையால், அங்கே ஒரு பகல், ஒரு இரவு, மற்றும் ஒரு பகல் ஆகியவை ஒரு பகலைப்போலவும், இரவு இல்லாததைப் போலவும் இருக்கும். இது உங்களுக்கு ஓர் அறிகுறியாக இருக்கும்; நீங்கள் சூரியனின் உதயத்தையும் அது அஸ்தமிக்கிறதையும் அறிவீர்கள்; ஆகையால், அங்கே இரு பகல், ஓர் இரவு இருப்பதை நிச்சயமாக அறிந்து கொள்வீர்கள்; ஆயினும் அந்த இரவில் இருள் சூழாது, அது அவர் பிறப்பதற்கு முந்திய இரவாகும்.

5 இதோ, நீங்கள் என்றுமே கண்டிராத ஓர் புதிய நட்சத்திரம் எழும்பும்; இதுவும் உங்களுக்கு ஓர் அறிகுறியாயிருக்கும்.

6 இதோ, இவை மாத்திரமல்ல, வானத்தில் அநேக அறிகுறிகளும், அற்புதங்களும் தோன்றும்.

7 நீங்கள் யாவரும் பூமியில் விழுந்து போகும்படியாய் ஆச்சரியப்பட்டு மலைத்துப் போவீர்கள்.

8 தேவ குமாரன்மேல் விசுவாசிக்கிற எவரும் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

9 இதோ, நான் வந்து இக்காரியத்தை உங்களுக்கு சொல்லவேண்டுமென்று கர்த்தர் எனக்கு அவரது தூதன் மூலம் கட்டளையிட்டார்; ஆம், நான் இவைகளை உங்களுக்கு தீர்க்கதரிசனமுரைக்க வேண்டுமென்று அவர் கட்டளையிட்டிருக்கிறார். ஆம், அவர் என்னை நோக்கி, இந்த ஜனங்களிடத்தில், மனந்திரும்புங்கள், கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கள் என்றும் கூக்குரலிடுவாயாக என்றார்.

## Helaman 14

And now it came to pass that Samuel, the Lamanite, did prophesy a great many more things which cannot be written.

And behold, he said unto them: Behold, I give unto you a sign; for five years more cometh, and behold, then cometh the Son of God to redeem all those who shall believe on his name.

And behold, this will I give unto you for a sign at the time of his coming; for behold, there shall be great lights in heaven, insomuch that in the night before he cometh there shall be no darkness, insomuch that it shall appear unto man as if it was day.

Therefore, there shall be one day and a night and a day, as if it were one day and there were no night; and this shall be unto you for a sign; for ye shall know of the rising of the sun and also of its setting; therefore they shall know of a surety that there shall be two days and a night; nevertheless the night shall not be darkened; and it shall be the night before he is born.

And behold, there shall a new star arise, such an one as ye never have beheld; and this also shall be a sign unto you.

And behold this is not all, there shall be many signs and wonders in heaven.

And it shall come to pass that ye shall all be amazed, and wonder, insomuch that ye shall fall to the earth.

And it shall come to pass that whosoever shall believe on the Son of God, the same shall have everlasting life.

And behold, thus hath the Lord commanded me, by his angel, that I should come and tell this thing unto you; yea, he hath commanded that I should prophesy these things unto you; yea, he hath said unto me: Cry unto this people, repent and prepare the way of the Lord.

10 இப்பொழுதும் நான் லாமானியன் என்பதாலும்,
கர்த்தர் எனக்குக் கட்டளையிட்ட வார்த்தைகளை
உங்களிடத்தில் பேசினதாலும், அவை உங்களுக்கு
விரோதமாய் கடினமாயிருந்ததாலும், நீங்கள் என்-
னோடு கோபம்கொண்டு, என்னை அழிக்க வகை-
தேடி, என்னை உங்கள் மத்தியிலிருந்து வெளியே
தள்ளினீர்கள்.

And now, because I am a Lamanite, and have spoken unto you the words which the Lord hath commanded me, and because it was hard against you, ye are angry with me and do seek to destroy me, and have cast me out from among you.

11 நீங்கள் என் வார்த்தைகளைக் கேட்பீர்கள். நீங்-
கள் உங்கள் அக்கிரமத்தினிமித்தம், உங்களுக்காக
காத்திருக்கிற தேவ நியாயத்தீர்ப்புகளைக் குறித்து
கேட்டு, மனந்திரும்புதலின் நிபந்தனைகளை நீங்-
கள் அறியும்படிக்கும் இந்த நோக்கத்திற்காகவே
நான் பட்டணத்தின் மதில்களின் மேல் ஏறி வந்தி-
ருக்கிறேன்.

And ye shall hear my words, for, for this intent have I come up upon the walls of this city, that ye might hear and know of the judgments of God which do await you because of your iniquities, and also that ye might know the conditions of repentance;

12 ஆதியிலிருந்து சகலத்தையும் சிருஷ்டித்தவரும்,
வானத்திற்கும் பூமிக்கும் பிதாவானவருமான, தேவ
குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வருகையைக்
குறித்து அறியவும், அவருடைய நாமத்தை நீங்கள்
விசுவாசிக்கத்தக்கதாக, அவருடைய வருகையின்
அறிகுறிகளையும் அறிந்துகொள்ளவும் வேண்-
டும்.

And also that ye might know of the coming of Jesus Christ, the Son of God, the Father of heaven and of earth, the Creator of all things from the beginning; and that ye might know of the signs of his coming, to the intent that ye might believe on his name.

13 நீங்கள் அவருடைய நாமத்தை விசுவாசித்தால்,
நீங்கள் உங்கள் எல்லா பாவங்களிலிருந்தும் மனந்-
திரும்புவீர்கள். அதினிமித்தம் அவைகளுக்கான
மன்னிப்பை, அவருடைய நற்செயலின் மூலம்
பெற்றுக்கொள்ளலாம்.

And if ye believe on his name ye will repent of all your sins, that thereby ye may have a remission of them through his merits.

14 இதோ, மறுபடியும் நான் உங்களுக்கு, ஆம், அவரு-
டைய மரணத்தின் அறிகுறியாக மற்றொரு அறிகு-
றியைக் கொடுக்கிறேன்.

And behold, again, another sign I give unto you, yea, a sign of his death.

15 இதோ, இரட்சிப்பு வரும்படியாக அவர் நிச்சயமாக
மரிக்கவேண்டும்; ஆம், மரித்தோரின் உயிர்த்தெழுத-
லை சம்பவிக்கப்பண்ணி, அதினிமித்தம் மனுஷர்
கர்த்தரின் சமுகத்தினுள் கொண்டுவரப்படும் பொ-
ருட்டு, அவர் மரிப்பது, அவர் செய்யவேண்டியதும்
அவசியமானதுமாய் இருக்கிறது.

For behold, he surely must die that salvation may come; yea, it behooveth him and becometh expedient that he dieth, to bring to pass the resurrection of the dead, that thereby men may be brought into the presence of the Lord.

16 ஆம், இதோ, இந்த மரணம் உயிர்த்தெழுதலை சம்-
பவிக்கப்பண்ணி, அந்த முதலாம் மரணமாகிய
ஆவிக்குரிய மரணத்திலிருந்து சகல மனுக்குலத்-
தையும் மீட்கிறது; ஏனெனில், ஆதாமின் வீழ்ச்சியி-
னாலே சகல மனுக்குலமும் கர்த்தருடைய பிரசன்-
னத்திலிருந்து அறுப்புண்டு, அவர்கள் உலகப்பிர-
காரமான மற்றும் ஆவிக்குரிய காரியங்களுக்காக
மரித்தவர்களென எண்ணப்பட்டார்கள்.

Yea, behold, this death bringeth to pass the resurrection, and redeemeth all mankind from the first death—that spiritual death; for all mankind, by the fall of Adam being cut off from the presence of the Lord, are considered as dead, both as to things temporal and to things spiritual.

17 ஆனால் இதோ, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
மனுக்குலத்தை, ஆம், சகல மனுக்குலத்தையும் மீட்-
டு, அவர்களை மறுபடியும் கர்த்தருடைய சமுகத்-
தில் கொண்டு வருகிறது.

But behold, the resurrection of Christ redeemeth mankind, yea, even all mankind, and bringeth them back into the presence of the Lord.

18 ஆம், மனந்திரும்புகிற எவனும் வெட்டப்பட்டு அக்கினிக்குள் போடப்படமாட்டான் என்றும், மனந்திரும்பாத எவனும் வெட்டப்பட்டு அக்கினிக்குள்ளாக போடப்படுவான் என்ற மனந்திரும்புதலின் நிபந்தனையை அது சம்பவிக்கப்பண்ணும்; ஆம், அவர்கள் நீதிக்கடுத்த காரியங்களிலிருந்து அறுப்புண்டதால் இரண்டாவது மரணமாகிய ஆவிக்குரிய மரணம் அவர்கள் மேல் மறுபடியும் வருகிறது.

Yea, and it bringeth to pass the condition of repentance, that whosoever repenteth the same is not hewn down and cast into the fire; but whosoever repenteth not is hewn down and cast into the fire; and there cometh upon them again a spiritual death, yea, a second death, for they are cut off again as to things pertaining to righteousness.

19 ஆதலால் மனந்திரும்புங்கள். இக்காரியங்களை அறிந்து அதைச் செய்யாமல், நீங்கள் ஆக்கினைக்குள்ளாக வர உங்களையே அனுமதித்து, இந்த இரண்டாம் மரணத்தைப் பெறும்படியாய் கொண்டு வரப்படாதபடிக்கு மனந்திரும்புங்கள்.

Therefore repent ye, repent ye, lest by knowing these things and not doing them ye shall suffer yourselves to come under condemnation, and ye are brought down unto this second death.

20 ஆனால் இதோ, மற்றொரு அறிகுறியாகிய அவருடைய மரணத்தின் அறிகுறியைக் குறித்து உங்களுக்குச் சொன்னதுபோல, அவரது மரணத்தின் அடையாளமாக, இதோ, அவர் மரிக்கும் அந்நாளில் சூரியனும் சந்திரனும், நட்சத்திரங்களும் இருண்டு தங்கள் வெளிச்சதைக் கொடுக்க மறுக்கும்; அவர் மரணமடையும் காலம் துவங்கி மரித்தோரிலிருந்து மறுபடியும் உயிர்த்தெழும் காலம் வரைக்குமான மூன்று நாளளவும் இந்த தேசத்தின் மேல் எந்த ஒளியும் இராது.

But behold, as I said unto you concerning another sign, a sign of his death, behold, in that day that he shall suffer death the sun shall be darkened and refuse to give his light unto you; and also the moon and the stars; and there shall be no light upon the face of this land, even from the time that he shall suffer death, for the space of three days, to the time that he shall rise again from the dead.

21 ஆம், அவர் ஆவியை விடும் சமயத்தில் அங்கே பலமணி நேரத்திற்கு இடிகளும், மின்னல்களும் இருக்கும். பூமி அதிர்ந்து நடுங்கும், பெரும்பாலும் ஒரே கட்டியாக இருப்பதாக நீங்கள் அறிகிற, மண்ணின் மேலும், கீழுமான இப்பூமியின் பரப்பிலுள்ள, அல்லது இப்பொழுதும் ஒரே கெட்டியான கற்பாறையின் பெரும் பகுதி நொறுக்கப்படும்.

Yea, at the time that he shall yield up the ghost there shall be thunderings and lightnings for the space of many hours, and the earth shall shake and tremble; and the rocks which are upon the face of this earth, which are both above the earth and beneath, which ye know at this time are solid, or the more part of it is one solid mass, shall be broken up;

22 ஆம், அவைகள் இரண்டாகப் பிளந்துபோகும். அதற்குப் பின்பு அவை மண்ணின் மேலும், கீழுமாக பூமியனைத்தின் பரப்பிலும் சிறு குவியல்களாகவும், பிளவுபட்டவைகளாகவும், உடைந்துபோன துகள்களாகவும் காணப்படும்.

Yea, they shall be rent in twain, and shall ever after be found in seams and in cracks, and in broken fragments upon the face of the whole earth, yea, both above the earth and beneath.

23 இதோ, அங்கே பெரும் புயல்களிருக்கும். அங்கே அநேக மலைகள் ஒரு பள்ளத்தாக்கைப் போல தாழ்த்தப்படும். இப்போது பள்ளத்தாக்குகள் என்று அழைக்கப்படுகிற அநேக இடங்கள், அதிக உயரம் கொண்ட மலைகளாக மாறும்.

And behold, there shall be great tempests, and there shall be many mountains laid low, like unto a valley, and there shall be many places which are now called valleys which shall become mountains, whose height is great.

24 அநேக நெடுஞ்சாலைகள் உடைக்கப்பட்டுப் போகும். அநேக பட்டணங்கள் பாழாய்ப் போகும்.

And many highways shall be broken up, and many cities shall become desolate.

25 அநேக கல்லறைகள் திறக்கப்பட்டு, தங்கள் மரித்தோரில் அநேகரை விடுவிக்கும், அநேக பரிசுத்தவான்கள் அநேகருக்கு காட்சியளிப்பார்கள்.

And many graves shall be opened, and shall yield up many of their dead; and many saints shall appear unto many.

26 இதோ, இப்படியாக தூதன் என்னிடத்தில் பேசி-
னான்; ஏனெனில் அவன் என்னை நோக்கி, அங்கே
பலமணிநேரங்களாக இடிகளும், மின்னல்களும்
இருக்குமென்றான்.

And behold, thus hath the angel spoken unto me; for he said unto me that there should be thunderings and lightnings for the space of many hours.

27 அவன் என்னை நோக்கி, இடிகளும், மின்னல்க-
ளும், புயல்களும் நீடித்திருக்கையில், இவை நடக்-
கும் பொருட்டு மூன்று நாளளவும் அந்தக் காரிருள்
பூமி முழுவதையும் மூடும், என்றான்.

And he said unto me that while the thunder and the lightning lasted, and the tempest, that these things should be, and that darkness should cover the face of the whole earth for the space of three days.

28 மனுபுத்திரருக்குள்ளே அவிசுவாசத்தின் எக்கார-
ணமும் இருக்கக்கூடாதென்ற நோக்கத்திற்காகவும்,
இந்த தேசத்தின் மேல் எங்கும் வருகிற இந்த அறிகு-
றிகளையும் அற்புதங்களையும் அவர்கள் விசுவா-
சிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், இதைக்
காட்டிலும் பெரிய காரியங்களை அநேகர் காண்-
பார்கள் என்றும், தூதன் சொன்னான்,

And the angel said unto me that many shall see greater things than these, to the intent that they might believe that these signs and these wonders should come to pass upon all the face of this land, to the intent that there should be no cause for unbelief among the children of men—

29 விசுவாசிக்கிற எவனும் இரட்சிக்கப்படவும், விசு-
வாசிக்காத எவன் மேலும் நீதியான நியாயத்தீர்ப்பு
வரவேண்டுமென்பதே இதன் நோக்கமாயிருக்கிற-
து; அவர்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்-
டால், அவர்கள் தங்கள் சொந்த ஆக்கினைத் தீர்ப்-
பை தங்கள் மேல் வரப்பண்ணுகிறார்கள்.

And this to the intent that whosoever will believe might be saved, and that whosoever will not believe, a righteous judgment might come upon them; and also if they are condemned they bring upon themselves their own condemnation.

30 இதோ, என் சகோதரரே, நினைவுகூருங்கள், நி-
னைவுகூருங்கள், கெட்டுப்போகிற எவனும் தானா-
கவே கெட்டுப்போகிறான்; அக்கிரமத்தைச் செய்கிற
எவனும் தாமாகவே அக்கிரமத்தைச் செய்கிறான்;
ஏனெனில் இதோ, நீங்கள் சுதந்தரவாளிகளாயிருக்-
கிறீர்கள்; நீங்கள் நீங்களாகவே காரியங்களை
நடப்பிக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள்; ஏனெ-
னில் இதோ, தேவன் உங்களுக்கு அறிவைத் தந்தி-
ருக்கிறார், அவர் உங்களை சுதந்தரவாளிகளாக்கி-
யிருக்கிறார்.

And now remember, remember, my brethren, that whosoever perisheth, perisheth unto himself; and whosoever doeth iniquity, doeth it unto himself; for behold, ye are free; ye are permitted to act for yourselves; for behold, God hath given unto you a knowledge and he hath made you free.

31 நீங்கள் தீமையிலிருந்து நன்மையை அறியத்தக்-
கதாக அவர் உங்களை அனுமதித்திருக்கிறார். நீங்-
கள் ஜீவனையோ அல்லது மரணத்தையோ தெரிந்-
துகொள்ளும்படி அவர் உங்களை அனுமதித்திருக்-
கிறார். நீங்கள் நன்மையைச் செய்து, நன்மையான-
வைகளிடத்தில் மறுபடியும் சேர்க்கப்படலாம். அல்-
லது நன்மையானது மறுபடியும் உங்களிடத்தில்
சேர்க்கப்படலாம்; இல்லாவிடில் பொல்லாப்பைச்
செய்து பொல்லாப்பை மறுபடியும் உங்களிடத்தில்
சேரச் செய்யலாம்.

He hath given unto you that ye might know good from evil, and he hath given unto you that ye might choose life or death; and ye can do good and be restored unto that which is good, or have that which is good restored unto you; or ye can do evil, and have that which is evil restored unto you.

# ஏலமன் 15

1 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, இதோ,
நீங்கள் மனந்திரும்பாவிடில், உங்கள் வீடுகள் பா-
ழாக்கப்படும் என்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.

2 ஆம், நீங்கள் மனந்திரும்பாவிடில், உங்கள் ஸ்திரீ-
கள் பால் கொடுக்கும் அந்த நாளிலே மிகவும் துக்-
கப்படவேண்டியதாயிருக்கும்; ஏனெனில் நீங்கள்
ஓடிப்போக முயற்சிப்பீர்கள். அடைக்கலமான ஓர்
இடமும் அங்கே இராது; ஆம், பிள்ளையோடு இருப்-
பவர்களுக்கு ஐயோ. கனமாயிருப்பதாலே அவர்க-
ளால் ஓடமுடியாது; அதனால் அவர்கள் மிதிக்கப்-
பட்டு, மடிந்து போகும்படியாய் விடப்படுவார்கள்.

3 ஆம், நேபியின் ஜனங்களென்று அழைக்கப்படு-
கின்ற இந்த ஜனங்களுக்கு காண்பிக்கப்படும் இந்த
எல்லா அறிகுறிகளையும், அற்புதங்களையும்
இவர்கள் கண்டு மனந்திரும்பாவிடில், அவர்களுக்-
கு ஐயோ; ஏனெனில் இதோ, அவர்கள் கர்த்தரு-
டைய தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாய் இருக்கி-
றார்கள்; ஆம், அவர் நேபியின் ஜனத்தை நேசித்து,
அவர்களைத் தண்டித்தும் இருக்கிறார்; ஆம், அவர்
அவர்களை நேசிப்பதால், அவர்களுடைய அக்கி-
ரம நாட்களில், அவர் அவர்களைத் தண்டித்திருக்-
கிறார்.

4 இதோ, என் சகோதரரே, லாமானியரின் கிரியை-
கள் தொடர்ந்து பொல்லாப்பாயிருந்ததினிமித்தம்
அவர் அவர்களை வெறுத்தார். இது அவர்களு-
டைய பிதாக்களின் அக்கிரமமான பாரம்பரியத்தி-
னிமித்தமே. ஆனால் இதோ, இரட்சிப்பு அவர்களுக்-
கு நேபியர்களின் போதகத்தின் மூலமாய் வந்திருக்-
கிறது; இந்நோக்கத்திற்காக கர்த்தர் அவர்களுடைய
நாட்களை நீடித்திருக்கிறார்.

5 அவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் கட-
மையின் பாதையில் இருப்பதையும், தேவனுக்கு
முன்பாக பயபக்தியோடு நடப்பதையும், அவர்கள்
மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, அவரு-
டைய கட்டளைகளையும், அவருடைய ஒழுங்குக-
ளையும், அவருடைய நியாயத்தீர்ப்புகளையும்,
கைக்கொண்டு ஆசரிக்கிறதையும் நீங்கள் காண-
வேண்டுமென விரும்புகிறேன்.

6 ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்-
களில் பெரும்பாலானவர்கள் இதைச் செய்து, தங்-
கள் சகோதரரில் மீதியானவர்களையும் சத்தியத்-
தின் ஞானத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு
சலிப்பில்லாமல் கருத்தோடு முயற்சிக்கிறார்கள்;
ஆதலால் அவர்கள் எண்ணிக்கை அனுதினமும்
பெருகிக்கொண்டே வருகிறது.

# Helaman 15

And now, my beloved brethren, behold, I declare unto you that except ye shall repent your houses shall be left unto you desolate.

Yea, except ye repent, your women shall have great cause to mourn in the day that they shall give suck; for ye shall attempt to flee and there shall be no place for refuge; yea, and wo unto them which are with child, for they shall be heavy and cannot flee; therefore, they shall be trodden down and shall be left to perish.

Yea, wo unto this people who are called the people of Nephi except they shall repent, when they shall see all these signs and wonders which shall be showed unto them; for behold, they have been a chosen people of the Lord; yea, the people of Nephi hath he loved, and also hath he chastened them; yea, in the days of their iniquities hath he chastened them because he loveth them.

But behold my brethren, the Lamanites hath he hated because their deeds have been evil continually, and this because of the iniquity of the tradition of their fathers. But behold, salvation hath come unto them through the preaching of the Nephites; and for this intent hath the Lord prolonged their days.

And I would that ye should behold that the more part of them are in the path of their duty, and they do walk circumspectly before God, and they do observe to keep his commandments and his statutes and his judgments according to the law of Moses.

Yea, I say unto you, that the more part of them are doing this, and they are striving with unwearied diligence that they may bring the remainder of their brethren to the knowledge of the truth; therefore there are many who do add to their numbers daily.

7 இதோ, சத்திய ஞானத்திற்குக் கொண்டுவரப்பட்ட
அநேகர் தங்களுடைய பிதாக்களின் துன்மார்க்க
அருவருப்பான பாரம்பரியங்களை அறிகிறதை-
யும், கர்த்தர் மேல் விசுவாசம் வைக்கவும் மனந்தி-
ரும்புதலுக்குள்ளாக அவர்களை நடத்துகிற பரி-
சுத்த வேத வாக்கியங்களையும், ஆம், எழுதப்பட்ட
பரிசுத்த தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்களை-
யும் விசுவாசிக்க வழிநடத்தப்படுகிறதையும்,
இதோ, நீங்கள் கண்டும் அறிந்தும் இருக்கிறீர்கள்.
இந்த விசுவாசமும், மனந்திரும்புதலும் இருதய
மாற்றத்தை அவர்களுக்குக் கொண்டுவருகிறது.
8 ஆகவே, இப்படி வந்த அநேகரும் விசுவாசத்திலும்
தங்களை விடுதலை பண்ணின காரியத்திலும்
உறுதியாயும், அசைக்க முடியாதவர்களாயும் இருக்-
கிறார்கள் என்று நீங்களே அறிகிறீர்கள்.
9 அவர்கள் தங்களின் யுத்தக் கருவிகளை புதைத்-
து வைத்தார்களென்றும், அவற்றை எடுத்தால்,
தாங்கள் பாவம் செய்துவிடுவோமோ, என்று பயந்-
திருக்கிறார்களென்றும் நீங்கள் அறிவீர்கள்; ஆம்,
அவர்கள் பாவம் செய்யப் பயப்படுகிறதையும் நீங்-
கள் காணலாம். ஏனெனில் இதோ, அவர்கள் தங்-
கள் விரோதிகளால் தாங்கள் மிதிபடவும் கொல்-
லப்படவும் அனுமதிப்பார்கள், தங்கள் பட்டயத்-
தை அவர்களுக்கு விரோதமாக எடுக்க மாட்டார்-
கள். இது கிறிஸ்துவில் அவர்கள் வைத்திருக்கிற
விசுவாசத்தினிமித்தமே.
10 இப்பொழுதும் அவர்கள் தாங்கள் நம்பவேண்டிய
காரியத்தை நம்பிய, உறுதியினிமித்தமும், தாங்கள்
ஒருமுறை ஞானத்தைப் பெற்றபோது அதனால்
உண்டான உறுதியினிமித்தமும், இதோ, கர்த்தர்
அவர்களை ஆசீர்வதித்து, அவர்களுடைய துன்-
மார்க்கத்தைப் பொருட்படுத்தாமல் அவர்களு-
டைய நாட்களை நீடிக்கப்பண்ணுவார்.
11 ஆம், நம்முடைய சகோதரரான லாமானியர் அவி-
சுவாசத்தில் படிப்படியாக நலிந்து போனாலும்,
அவர்களை சத்திய ஞானத்திற்கு மறுபடியும்
கொண்டுவருதலைக் குறித்து நம்முடைய பிதாக்க-
ளாலும், தீர்க்கதரிசி சீனஸ் மற்றும் மற்ற அநேக
தீர்க்கதரிசிகளால் சொல்லப்பட்ட காலம் வரும்வ-
ரைக்கும், கர்த்தர் அவர்களின் நாட்களை நீடிக்கப்-
பண்ணுவார்.
12 ஆம், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பிற்கா-
லங்களில் கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் நம்மு-
டைய சகோதரராகிய லாமானியருக்கு நீட்டிக்கப்-
பட்டுள்ளன. அவர்கள் அநேக உபத்திரவங்களைப்
பெறவிருப்பினும், பூமியின் பரப்பின் மேல் அங்கும்
இங்குமாக அலைக்கழிக்கப்பட்டு, வேட்டையாடப்-
பட்டு, அடிக்கப்பட்டு, தூரமாய் சிதறடிக்கப்பட்டு,
அடைக்கலத்திற்கு இடமில்லாதிருப்பினும், கர்த்தர்
அவர்களுக்கு இரக்கமுள்ளவராயிருப்பார்.

And behold, ye do know of yourselves, for ye have witnessed it, that as many of them as are brought to the knowledge of the truth, and to know of the wicked and abominable traditions of their fathers, and are led to believe the holy scriptures, yea, the prophecies of the holy prophets, which are written, which leadeth them to faith on the Lord, and unto repentance, which faith and repentance bringeth a change of heart unto them—

Therefore, as many as have come to this, ye know of yourselves are firm and steadfast in the faith, and in the thing wherewith they have been made free.

And ye know also that they have buried their weapons of war, and they fear to take them up lest by any means they should sin; yea, ye can see that they fear to sin—for behold they will suffer themselves that they be trodden down and slain by their enemies, and will not lift their swords against them, and this because of their faith in Christ.

And now, because of their steadfastness when they do believe in that thing which they do believe, for because of their firmness when they are once enlightened, behold, the Lord shall bless them and prolong their days, notwithstanding their iniquity—

Yea, even if they should dwindle in unbelief the Lord shall prolong their days, until the time shall come which hath been spoken of by our fathers, and also by the prophet Zenos, and many other prophets, concerning the restoration of our brethren, the Lamanites, again to the knowledge of the truth—

Yea, I say unto you, that in the latter times the promises of the Lord have been extended to our brethren, the Lamanites; and notwithstanding the many afflictions which they shall have, and notwithstanding they shall be driven to and fro upon the face of the earth, and be hunted, and shall be smitten and scattered abroad, having no place for refuge, the Lord shall be merciful unto them.

13 இது அவர்கள் தங்கள் மீட்பரும் தங்களின் மகத்-
துவமுள்ள மெய்யான மேய்ப்பருமானவரைக் கு-
றித்த ஞானமான சத்திய ஞானத்திற்கு மறுபடியும்
கொண்டுவரப்படுவார்களென்றும், அவருடைய
ஆடுகளுக்குள் எண்ணப்படுவார்களென்றது-
மான தீர்க்கதரிசனத்தின்படியே ஆகும்.

And this is according to the prophecy, that they shall again be brought to the true knowledge, which is the knowledge of their Redeemer, and their great and true shepherd, and be numbered among his sheep.

14 ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
நீங்கள் மனந்திரும்பாவிடில் உங்களிலும் அவர்க-
ளுக்கே நலமாயிருக்கும்.

Therefore I say unto you, it shall be better for them than for you except ye repent.

15 ஏனெனில் இதோ, உங்களுக்குக் காண்பிக்கப்-
பட்ட அந்த பலத்த கிரியைகள், தங்கள் பிதாக்க-
ளின் பாரம்பரியங்களினிமித்தம், அவிசுவாசத்தில்
படிப்படியாக நலிந்துபோன அவர்களிடத்தில்
காண்பிக்கப்பட்டிருந்தால், அவர்கள் மறுபடியும்
அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்து போயிருக்க-
மாட்டார்கள், என்று நீங்களே காணலாம்.

For behold, had the mighty works been shown unto them which have been shown unto you, yea, unto them who have dwindled in unbelief because of the traditions of their fathers, ye can see of yourselves that they never would again have dwindled in unbelief.

16 ஆதலால் கர்த்தர் சொல்லுகிறதாவது: நான்
அவர்களை முழுவதுமாய் அழிக்கமாட்டேன்.
ஆனால் என்னுடைய ஞானத்தின் நாளிலே அவர்-
கள் மறுபடியும் என்னிடத்தில் திரும்பிவரப் பண்-
ணுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.

Therefore, saith the Lord: I will not utterly destroy them, but I will cause that in the day of my wisdom they shall return again unto me, saith the Lord.

17 இப்பொழுதும் இதோ, நேபியர்களைக் குறித்து
கர்த்தர் சொல்லுகிறதாவது: அவர்கள் மனந்திரும்-
பவில்லையானாலும், என் சித்தத்தைச் செய்யவில்-
லையானாலும் நான் அவர்களை முழுவதுமாய்
அழித்துப்போடுவேன். அவர்களுக்கு மத்தியிலே
அநேக பலத்த கிரியைகளைச் செய்திருப்பினும்,
அவர்களின் அவிசுவாசத்தினிமித்தமே என்று கர்த்-
தர் உரைக்கிறார்; கர்த்தர் ஜீவிக்கிறபடியாலே
இவைகள் சம்பவிக்கும் என்று கர்த்தர் சொல்லுகி-
றார்.

And now behold, saith the Lord, concerning the people of the Nephites: If they will not repent, and observe to do my will, I will utterly destroy them, saith the Lord, because of their unbelief notwithstanding the many mighty works which I have done among them; and as surely as the Lord liveth shall these things be, saith the Lord.

# ஏலமன் 16

1 இப்பொழுதும், அந்தப்படியே, பட்டணத்தின் மதில்-
கள் மேலே லாமானியனான சாமுவேல் பேசிய
வார்த்தைகளை அநேகர் கேட்டனர். அவனுடைய
வார்த்தையில் விசுவாசித்த அநேகர் போய் நேபி-
யைத் தேடினார்கள்; அவர்கள் போய் அவனைக்
கண்டவுடன் அவனிடத்தில் தங்கள் பாவங்களை
மறுக்காமல் அறிக்கை பண்ணி, கர்த்தருக்குள்-
ளாக நாங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்-
று விரும்பினார்கள்.
2 சாமுவேலின் வார்த்தைகளில் விசுவாசிக்காத
அங்கு இருந்த அநேகரும், அவன் மேல் கோபம்
கொண்டார்கள்; அவர்கள் மதிலின் மேலே நின்ற
அவனை நோக்கி கற்களை எறிந்தார்கள். அவன்
மதிலின் மேலே நின்றபோது அநேகர் அம்புகளை
அவன் மேல் விட்டனர்; ஆனால் அவர்கள்
அவனைத் தங்கள் கற்களாலும் அம்புகளாலும்
அடிக்க முடியாதபடிக்கு கர்த்தருடைய ஆவியான-
வர் அவனோடு இருந்தார்.
3 இப்பொழுதும், அவர்கள் அவனை அடிக்க முடி-
யாதென்று கண்டபோது, அநேகர் அவன் வார்த்-
தையில் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற நேபி-
யிடம் போனார்கள்.
4 இதோ, கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார் என்று
ஜனங்கள் அறியவேண்டுமென்பதற்காக, நேபி
அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, தீர்க்கத-
ரிசனமுரைத்து, பிரசங்கம் பண்ணி, ஜனங்களுக்கு
மனந்திரும்புதலை கூக்குரலிட்டு, அறிகுறிகளை-
யும், அற்புதங்களையும் காண்பித்து, அதிசயங்க-
ளைச் செய்து வந்தான்.
5 அவைகள் சம்பவிக்கிற காலத்தின்போது
அவைகள் தங்களுக்கு முன்னதாகவே அறிவிக்கப்-
பட்டதென்று அவர்கள் அறியவும், நினைவுகூர-
வும், அதினிமித்தம் விசுவாசிக்கவுமே, அவன் சீக்கி-
ரமாய் வரப்போகிற காரியங்களை அவர்களுக்குச்
சொல்லி வந்தான்; ஆதலால் சாமுவேலின் வார்த்-
தைகளில் விசுவாசித்த அநேகரும், மனந்திரும்பி,
தங்கள் பாவங்களுக்காக அறிக்கைபண்ணி, ஞா-
னஸ்நானம் பெற அவனிடம் போனார்கள்.

# Helaman 16

And now, it came to pass that there were many who heard the words of Samuel, the Lamanite, which he spake upon the walls of the city. And as many as believed on his word went forth and sought for Nephi; and when they had come forth and found him they confessed unto him their sins and denied not, desiring that they might be baptized unto the Lord.

But as many as there were who did not believe in the words of Samuel were angry with him; and they cast stones at him upon the wall, and also many shot arrows at him as he stood upon the wall; but the Spirit of the Lord was with him, insomuch that they could not hit him with their stones neither with their arrows.

Now when they saw that they could not hit him, there were many more who did believe on his words, insomuch that they went away unto Nephi to be baptized.

For behold, Nephi was baptizing, and prophesying, and preaching, crying repentance unto the people, showing signs and wonders, working miracles among the people, that they might know that the Christ must shortly come—

Telling them of things which must shortly come, that they might know and remember at the time of their coming that they had been made known unto them beforehand, to the intent that they might believe; therefore as many as believed on the words of Samuel went forth unto him to be baptized, for they came repenting and confessing their sins.

6 ஆனால் அவர்களில் அதிகமானோர் சாமுவே-
லின் வார்த்தைகளில் விசுவாசிக்கவில்லை; ஆத-
லால் அவர்கள் தங்கள் கற்களாலும், தங்கள் அம்பு-
களாலும் அவனை அடிக்க முடிவில்லை என்று
கண்டபோது, அவர்கள் தங்கள் தலையாரிகளை
நோக்கி: இம்மனுஷனைப் பிடித்து அவனைக் கட்-
டிப்போடுங்கள். இதோ, பிசாசு அவனுள் இருக்கிற-
து, அவனில் இருக்கிற பிசாசின் வல்லமையினால்
அவனை நம்முடைய கற்களாலும், நம்முடைய
அம்புகளாலும் அடிக்க முடியவில்லை; ஆதலால்
அவனைப் பிடித்து, கட்டி, இழுத்துப் போங்கள்,
என்றார்கள்.

But the more part of them did not believe in the words of Samuel; therefore when they saw that they could not hit him with their stones and their arrows, they cried unto their captains, saying: Take this fellow and bind him, for behold he hath a devil; and because of the power of the devil which is in him we cannot hit him with our stones and our arrows; therefore take him and bind him, and away with him.

7 அவர்கள் அவன் மீது கைகளைப்போட போன-
போது, அவன் மதிலிலிருந்து தாழக்குதித்து, அவர்-
கள் தேசங்களிலிருந்து, தன் தேசத்திற்குள்ளாக
ஓடினான், ஆம், தன்னுடைய சொந்த ஜனங்களுக்-
குள்ளே பிரசங்கிக்கவும், தீர்க்கதரிசனமுரைக்கவும்
துவங்கினான்.

And as they went forth to lay their hands on him, behold, he did cast himself down from the wall, and did flee out of their lands, yea, even unto his own country, and began to preach and to prophesy among his own people.

8 இதோ, அதற்குப் பின்பு நேபியர்கள் அவனைப்-
பற்றி அதிகமாய் கேள்விப்படவேயில்லை. ஜனங்க-
ளுடைய விவகாரங்கள் இப்படியாயிருந்தது.

And behold, he was never heard of more among the Nephites; and thus were the affairs of the people.

9 நேபியின் ஜனங்களின் மேல் நியாயாதிபதிக-
ளின் ஆளுகையின் எண்பத்தி ஆறாம் வருஷமும்
முடிவடைந்தது.

And thus ended the eighty and sixth year of the reign of the judges over the people of Nephi.

10 ஜனங்களில் பெரும்பாலானாவர்கள் தங்கள் பெ-
ருமையிலும், துன்மார்க்கத்திலும் நிலைத்திருந்-
தார்கள், குறைவானவர்கள் தேவனுக்கு அதிக பய-
பக்தியோடே நடந்து வந்தார்கள். இப்படியாக நியா-
யாதிபதிகளின் ஆளுகையின் எண்பத்தி ஏழாம்
வருஷமும் முடிவடைந்தது.

And thus ended also the eighty and seventh year of the reign of the judges, the more part of the people remaining in their pride and wickedness, and the lesser part walking more circumspectly before God.

11 நியாயாதிபதிகளின் ஆளுகையில் எண்பத்தி
எட்டாம் வருஷத்திலும் நிலைமை இப்படியேதான்
இருந்தது.

And these were the conditions also, in the eighty and eighth year of the reign of the judges.

12 ஜனங்கள் அக்கிரமத்திலே இன்னும் அதிகமாய்
கடினப்பட்டிருப்பதைத் தவிர, ஜனங்களின் விவ-
காரங்களில் சில மாற்றங்களே இருந்தன. நியாயா-
திபதிகளின் எண்பத்தி ஒன்பதாம் வருஷத்தின்
ஆளுகையில் ஜனங்கள் தேவ கட்டளைகளுக்கு
விரோதமான அநேகவற்றைச் செய்து வந்தார்கள்.

And there was but little alteration in the affairs of the people, save it were the people began to be more hardened in iniquity, and do more and more of that which was contrary to the commandments of God, in the eighty and ninth year of the reign of the judges.

13 ஆனால், அந்தப்படியே, நியாயாதிபதிகளின்
ஆளுகையின் தொண்ணூறாவது வருஷத்தில்
ஜனங்களுக்கு பெரிய அறிகுறிகளும், அற்புதங்க-
ளும் கொடுக்கப்பட்டன; தீர்க்கதரிசிகளின் வார்த்-
தைகள் நிறைவேறத் துவங்கின.

But it came to pass in the ninetieth year of the reign of the judges, there were great signs given unto the people, and wonders; and the words of the prophets began to be fulfilled.

14 தூதர்கள் மனுஷருக்கும், ஞானிகளுக்கும்
தோன்றி அவர்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை
உண்டாக்குகிற மகிழ்ச்சியான செய்திகளை அறி-
வித்தார்கள்; இப்படியாக இந்த வருஷத்திலே வேத
வாக்கியங்கள் நிறைவேறத் துவங்கின.

And angels did appear unto men, wise men, and did declare unto them glad tidings of great joy; thus in this year the scriptures began to be fulfilled.

15 ஆயினும் நேபியர்களிலும், லாமானியர்களிலும்
அதிகமாய் விசுவாசித்தவர்களைத் தவிர மற்ற
ஜனங்கள் யாவரும் தங்கள் இருதயங்களைக் கடி-
னப்படுத்தத் துவங்கி, தங்களுடைய சுயபலத்தி-
லும், சுய ஞானத்திலும் சார்ந்திருக்கத் துவங்கி:

Nevertheless, the people began to harden their hearts, all save it were the most believing part of them, both of the Nephites and also of the Lamanites, and began to depend upon their own strength and upon their own wisdom, saying:

16 அநேகவற்றுள் சிலவற்றை அவர்கள் சரியாய் யூ-
கித்திருக்க முடியும்; ஆனால், பேசப்பட்டுள்ள, இந்த
பெரிதும் அற்புதமானதுமான கிரியைகள் யாவும்
நிறைவேறாது என்று அறிவோம், என்றார்கள்.

Some things they may have guessed right, among so many; but behold, we know that all these great and marvelous works cannot come to pass, of which has been spoken.

17 அவர்கள் தங்களுக்குளே சம்பாஷித்து விவாதிக்-
கத் துவங்கி:

And they began to reason and to contend among themselves, saying:

18 கிறிஸ்து என்ற ஒருவர் வருவார் என்பது சரி-
யல்ல; அப்படியே அவர் வந்தாலும் பேசப்பட்டிருக்-
கிறபடி அவர் தேவ குமாரனாயும், வானத்துக்கும் பூ-
மிக்கும் பிதாவாய் இருக்கிறதாலும், அவர் தம்மை
நமக்கும், எருசலேமில் இருக்கப்போகிறவர்களுக்-
கும் ஏன் காண்பிக்க மாட்டார்?

That it is not reasonable that such a being as a Christ shall come; if so, and he be the Son of God, the Father of heaven and of earth, as it has been spoken, why will he not show himself unto us as well as unto them who shall be at Jerusalem?

19 ஆம், அவர் தம்மை ஏன் இத்தேசத்திலும் எருசலே-
மிலும் அவர் காண்பிக்க மாட்டார்.

Yea, why will he not show himself in this land as well as in the land of Jerusalem?

20 இதோ, நமக்குள் அல்ல. தூரமாயிருக்கிறதும் நாம்
அறியாததுமான தேசத்தில் சம்பவிக்கப்போகிற,
ஏதோ ஒரு பெரிதும் அற்புதமானதுமான காரியத்-
தில் நாம் விசுவாசம் வைக்கத்தக்கதாக நம்முடைய
பிதாக்களால் நமக்கு கையளிக்கப்பட்டு வந்த, இது
ஒரு துன்மார்க்க பாரம்பரியம் என்று அறிவோம்.
ஆகவே அவர்கள் நம்மை அறியாமையில் வைத்தி-
ருக்கலாம்; ஏனெனில் நாம் அவைகள் உண்மை-
யென்று நம்முடைய சொந்த கண்களால் பார்க்க
இயலாதே.

But behold, we know that this is a wicked tradition, which has been handed down unto us by our fathers, to cause us that we should believe in some great and marvelous thing which should come to pass, but not among us, but in a land which is far distant, a land which we know not; therefore they can keep us in ignorance, for we cannot witness with our own eyes that they are true.

21 வார்த்தையைப் போதிக்கும்படி நாம் அவர்களை
சார்ந்திருப்பதால், அவர்களுடைய வார்த்தைக-
ளுக்கு நாம் வேலையாட்களாகவும், அவர்களுக்-
கும் நாம் வேலையாட்களாகவும் நம்மைக் கீழ்ப்ப-
டுத்தும்படிக்கு, நமக்குப் புரியாத சில பெரிய இரகசி-
யத்தை பொல்லாதவனுடைய தந்திரமான, இரகசி-
யமான திறமைகளால் அவர்கள் செய்கிறார்கள்.
நாம் அவர்களுக்கு இடங்கொடுத்தால், நம்முடைய
வாழ்க்கை முழுவதும், அவர்கள் நம்மை அறியா-
மையில் வைப்பார்கள்.

And they will, by the cunning and the mysterious arts of the evil one, work some great mystery which we cannot understand, which will keep us down to be servants to their words, and also servants unto them, for we depend upon them to teach us the word; and thus will they keep us in ignorance if we will yield ourselves unto them, all the days of our lives.

22 ஜனங்கள் மூடத்தனமும், வீணானதுமான அநேக
பல காரியங்களை தங்கள் இருதயங்களிலே யோ-
சித்தார்கள்; சாத்தான் அவர்களைத் தொடர்ந்து
அக்கிரமம் செய்ய தூண்டிவிட்டபடியால், அவர்கள்
மிகவும் கலங்கிப்போனார்கள்; ஆம், நன்மையான-
திற்கும், வரப்போகிறவைகளுக்கும் விரோதமாக,
ஜனங்களுடைய இருதயங்களைக் கடினப்படுத்-
தும்படியாக அவன் தேசம் முழுவதும் போய் வதந்-
திகளையும், பிணக்குகளையும் பரப்பினான்.

And many more things did the people imagine up in their hearts, which were foolish and vain; and they were much disturbed, for Satan did stir them up to do iniquity continually; yea, he did go about spreading rumors and contentions upon all the face of the land, that he might harden the hearts of the people against that which was good and against that which should come.

23 கர்த்தருடைய ஜனங்களுக்குள்ளே அறிகுறிக-
ளும், அதிசயங்களும் செய்யப்பட்டிருந்தும், அவர்-
கள் அநேக அற்புதங்களை நடப்பித்திருந்தும், சாத்-
தான் தேசம் முழுவதுமுள்ள ஜனங்களின் இருத-
யங்களை இறுகப் பிடித்திருந்தான்.

And notwithstanding the signs and the wonders which were wrought among the people of the Lord, and the many miracles which they did, Satan did get great hold upon the hearts of the people upon all the face of the land.

24 இப்படியாக நேபியின் ஜனங்களின் மேல் நியாயா-
திபதிகளின் ஆளுகையின் தொண்ணூறாவது
வருஷமும் முடிவுற்றது.

And thus ended the ninetieth year of the reign of the judges over the people of Nephi.

25 இப்படியாக, ஏலமன், மற்றும் அவனுடைய குமா-
ரர்களுடைய பதிவேட்டின்படி, ஏலமனின் புஸ்தகம்
முடிவுற்றது.

And thus ended the book of Helaman, according to the record of Helaman and his sons.

# மூன்றாம் நேபி

## ஏலமனின் குமாரனாகிய, நேபி-யின் குமாரனான

## நேபியின் புஸ்தகம்

*யூதாவின் ராஜாவாகிய, சிதேக்கியாவின் ஆளுகை-
யின் முதலாம் வருஷத்தில், எருசலேமை விட்டு-
வந்த, லேகியினுடைய குமாரனான, நேபியின் சந்த-
தியான ஏலமன், ஏலமனுடைய குமாரன். அவன்
ஆல்மாவினுடைய குமாரனான ஆல்மாவினுடைய
குமாரன்.*

## 3 நேபி 1

1 இப்பொழுது, அந்தப்படியே, தொண்ணூற்று ஒன்-
றாம் வருஷமும் கடந்து போயிற்று. எருசலேமை
விட்டு லேகி வந்த காலத்திலிருந்து அது அறுநூறு
வருஷமாயிருந்தது; அந்த வருஷத்தில்தான் லா-
சோனியஸ் தேசத்தின்மேல் பிரதான நியாயாதிபதி-
யாயும் விசாரணைக்காரனாயும் இருந்தான்.
2 ஏலமனின் குமாரனாகிய நேபி, தன்னுடைய
மூத்த குமாரனாகிய நேபியினிடத்தில் பித்தளைத்
தகடுகளையும், வைக்கப்பட்டிருந்த சகல பதிவேடு-
களையும், எருசலேமை விட்டு லேகி புறப்பட்டது
முதல் பரிசுத்தமாக பாதுகாக்கப்பட்டு வந்த எல்லா-
வற்றையும் குறித்த பொறுப்பையும் கொடுத்துவிட்-
டு சாரகெம்லா தேசத்தைவிட்டுப் புறப்பட்டுப் போ-
னான்.
3 அவன் தேசத்தைவிட்டுப் போன பின்பு, அவன்
எங்கு போனான் என்று ஒருவனும் அறியவில்லை;
அவனுடைய குமாரனான நேபி அவனுக்குப் பதி-
லாக பதிவேடுகளை, ஆம், இந்த ஜனத்தின் பதிவே-
டுகளை வைத்திருந்தான்.
4 அந்தப்படியே, தொண்ணூற்று இரண்டாம் வருஷ
துவக்கத்திலே, இதோ, தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரி-
சனங்கள் முழுமையாக நிறைவேறத் துவங்கின;
ஏனெனில் ஜனங்களுக்குள்ளே பெரிய அறிகுறிக-
ளும் பெரிய அற்புதங்களும் ஏற்படத் துவங்கின.
5 ஆனால், லாமானியனான சாமுவேலினால் பே-
சப்பட்ட வார்த்தைகள் நிறைவேறும் காலம் கடந்து
போயிற்று, என்று சிலர் சொல்லத் துவங்கினார்கள்.
6 அவர்கள் தங்கள் சகோதரர் குறித்து களிகூரத் து-
வங்கி, இதோ, காலம் கடந்து போயிற்று. சாமுவே-
லின் வார்த்தைகள் நிறைவேறவில்லை; ஆதலால்
இதைக் குறித்த உங்களின் சந்தோஷமும் விசுவாச-
மும் விருதாவாய்ப்போனது, என்றார்கள்.

# Third Nephi

## The Book of Nephi

## the Son of Nephi, Who Was the Son of Helaman

*And Helaman was the son of Helaman, who was the son of Alma, who was the son of Alma, being a descendant of Nephi who was the son of Lehi, who came out of Jerusalem in the first year of the reign of Zedekiah, the king of Judah.*

## 3 Nephi 1

Now it came to pass that the ninety and first year had passed away and it was six hundred years from the time that Lehi left Jerusalem; and it was in the year that Lachoneus was the chief judge and the governor over the land.

And Nephi, the son of Helaman, had departed out of the land of Zarahemla, giving charge unto his son Nephi, who was his eldest son, concerning the plates of brass, and all the records which had been kept, and all those things which had been kept sacred from the departure of Lehi out of Jerusalem.

Then he departed out of the land, and whither he went, no man knoweth; and his son Nephi did keep the records in his stead, yea, the record of this people.

And it came to pass that in the commencement of the ninety and second year, behold, the prophecies of the prophets began to be fulfilled more fully; for there began to be greater signs and greater miracles wrought among the people.

But there were some who began to say that the time was past for the words to be fulfilled, which were spoken by Samuel, the Lamanite.

And they began to rejoice over their brethren, saying: Behold the time is past, and the words of Samuel are not fulfilled; therefore, your joy and your faith concerning this thing hath been vain.

7 அந்தப்படியே, அவர்கள் தேசமெங்கும் பெரிய கலகம் உண்டாக்கினார்கள்; பேசப்பட்டவைகள் எந்த வகையிலும் நிறைவேறாமல் போகுமோ என்று, விசுவாசித்திருந்த ஜனங்கள் மிகவும் விசனமடையத் துவங்கினார்கள்.

And it came to pass that they did make a great uproar throughout the land; and the people who believed began to be very sorrowful, lest by any means those things which had been spoken might not come to pass.

8 இருப்பினும் தங்களின் விசுவாசம் விருதாவாய்ப் போகவில்லை என்று அவர்கள் அறியும்படிக்கு இரவே இல்லாமல் ஒரே பகலைப்போல காட்சியளிக்கிற அந்தப் பகல், இரவு, பகலுக்காக அவர்கள் திடமனதோடு காத்திருந்தார்கள்.

But behold, they did watch steadfastly for that day and that night and that day which should be as one day as if there were no night, that they might know that their faith had not been vain.

9 இப்பொழுது, அந்தப்படியே, தீர்க்கதரிசி சாமுவேலினால் கொடுக்கப்பட்ட அறிகுறி நிறைவேறாமற் போனால், அந்தப் பாரம்பரியங்களில் விசுவாசித்த யாவரும் மரணத்திற்குள்ளாக்கப்பட, ஒரு நாளானது அவிசுவாசிகளால் குறிக்கப்பட்டது.

Now it came to pass that there was a day set apart by the unbelievers, that all those who believed in those traditions should be put to death except the sign should come to pass, which had been given by Samuel the prophet.

10 இப்பொழுது. அந்தப்படியே, நேபியின் குமாரனாகிய நேபி தன் ஜனங்களுடைய இந்த துன்மார்க்கத்தைக் கண்டவுடன் அவனுடைய இருதயம் மிகவும் விசனமடைந்தது.

Now it came to pass that when Nephi, the son of Nephi, saw this wickedness of his people, his heart was exceedingly sorrowful.

11 அந்தப்படியே, அவன் வெளியே போய் பூமியில் சாஷ்டாங்கமாய் விழுந்து, தங்கள் பிதாக்களின் பாரம்பரியத்தின் மீதிருந்த அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம், அழிக்கப்படவிருந்தவர்களாகிய தன் ஜனத்துக்காக தன் தேவனிடத்தில் ஊக்கமாய்க் கூக்குரலிட்டான்.

And it came to pass that he went out and bowed himself down upon the earth, and cried mightily to his God in behalf of his people, yea, those who were about to be destroyed because of their faith in the tradition of their fathers.

12 அந்தப்படியே, அவன் அந்த நாள் முழுவதும் கர்த்தரிடத்தில் ஊக்கமாய்க் கூக்குரலிட்டான். இதோ, கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி:

And it came to pass that he cried mightily unto the Lord all that day; and behold, the voice of the Lord came unto him, saying:

13 உன் தலையை உயர்த்தி களிகூருவாயாக; ஏனெனில் இதோ, காலம் சமீபமாயிருக்கிறது, இன்று இரவு அறிகுறி கொடுக்கப்படும், என்னுடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் நாவால் பேசப்படும்படி, நான் செய்த சகலத்தையும் நான் நிறைவேறப் பண்ணுவேன் என்று, உலகிற்குக் காண்பிக்கும்படியாக நாளை நான் உலகினுள் வருகிறேன்.

Lift up your head and be of good cheer; for behold, the time is at hand, and on this night shall the sign be given, and on the morrow come I into the world, to show unto the world that I will fulfil all that which I have caused to be spoken by the mouth of my holy prophets.

14 இதோ, உலக அஸ்திபாரம் முதல் மனுபுத்திரருக்கு நான் தெரியப்பண்ணின சகல காரியங்களையும் நிறைவேற்றவும், பிதா மற்றும் குமாரனுடைய சித்தத்தைச் செய்யவும், என்னிமித்தம் பிதாவினுடைய சித்தத்தையும், என் மாம்சத்தினிமித்தம் குமாரனுடைய சித்தத்தையும் செய்ய, நான் என் சொந்தமானோருக்குள்ளே வருகிறேன். இதோ, காலம் சமீபமாயிருக்கிறது, இன்று இரவு அறிகுறி கொடுக்கப்படும்.

Behold, I come unto my own, to fulfil all things which I have made known unto the children of men from the foundation of the world, and to do the will, both of the Father and of the Son—of the Father because of me, and of the Son because of my flesh. And behold, the time is at hand, and this night shall the sign be given.

15 அந்தப்படியே, நேபிக்கு உண்டான வார்த்தைகள்
சொல்லப்பட்டபடியே நிறைவேறின; ஏனெனில்
இதோ, சூரியன் அஸ்தமிக்கையில் அங்கே இருள்
சூழவில்லை; இரவு வந்தபோது அங்கே இருளில்-
லாததால் ஜனங்கள் ஆச்சரியப்படத் துவங்கினார்-
கள்.

And it came to pass that the words which came unto Nephi were fulfilled, according as they had been spoken; for behold, at the going down of the sun there was no darkness; and the people began to be astonished because there was no darkness when the night came.

16 தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை விசுவாசித்த-
வர்களுக்காகப் போட்ட அந்த மகா அழிவின் திட்-
டம் வீணாய்ப்போனது, என்று தீர்க்கதரிசிகளின்
வார்த்தைகளை விசுவாசியாத அநேகர் அறிந்து பூ-
மியில் விழுந்து மரித்தவர்களைப் போலானார்கள்,
ஏனெனில் கொடுக்கப்பட்ட அறிகுறி ஏற்கனவே
சமீபத்திலிருந்தது.

And there were many, who had not believed the words of the prophets, who fell to the earth and became as if they were dead, for they knew that the great plan of destruction which they had laid for those who believed in the words of the prophets had been frustrated; for the sign which had been given was already at hand.

17 தேவ குமாரன் சீக்கிரமாய் தோன்றுவார், என்று
அவர்கள் அறியத் துவங்கினார்கள். ஆம், இறுதி-
யாக வட தேசத்திலும், தென் தேசத்திலும், மேற்கு
தொடங்கி கிழக்கு வரைக்குமாக, பூமியிலிருந்த
சகல ஜனங்களும், மிகவும் ஆச்சரியப்பட்டுப் போய்
பூமியில் விழுந்தார்கள்.

And they began to know that the Son of God must shortly appear; yea, in fine, all the people upon the face of the whole earth from the west to the east, both in the land north and in the land south, were so exceedingly astonished that they fell to the earth.

18 இந்தக் காரியங்களைக் குறித்து அநேக வருஷ-
மாய்த் தீர்க்கதரிசிகள் சாட்சி பகர்ந்து வருகிறார்க-
ளென்றும், கொடுக்கப்பட்ட அறிகுறி ஏற்கனவே
நடந்து கொண்டிருக்கிறதென்றும் அவர்கள் அறிந்-
ததால், தங்கள் அக்கிரமத்தினிமித்தமும் தங்களின்
அவிசுவாசத்தினிமித்தமும், அஞ்சத் துவங்கினார்-
கள்.

For they knew that the prophets had testified of these things for many years, and that the sign which had been given was already at hand; and they began to fear because of their iniquity and their unbelief.

19 அந்தப்படியே, அந்த இரவு முழுவதும் அங்கே இரு-
ளே இல்லாமல், அது நண்பகலைப்போல ஒளிமிக்-
கதாயிருந்தது. அந்தப்படியே, காலையில் மறுபடி-
யும் சூரியன் தன்னுடைய சரியான ஒழுங்கின்படி-
யே உதித்தது. கொடுக்கப்பட்ட அறிகுறியினிமித்-
தம், அந்நாளில்தான் கர்த்தர் பிறப்பார் என்று,
அவர்கள் அறிந்தார்கள்.

And it came to pass that there was no darkness in all that night, but it was as light as though it was midday. And it came to pass that the sun did rise in the morning again, according to its proper order; and they knew that it was the day that the Lord should be born, because of the sign which had been given.

20 தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுக்கேற்ப, ஆம்,
சகலமும் துல்லியமாக நிறைவேறியது.

And it had come to pass, yea, all things, every whit, according to the words of the prophets.

21 அந்தப்படியே, வார்த்தைக்கேற்ப ஒரு புதிய நட்-
சத்திரமும் தோன்றியது.

And it came to pass also that a new star did appear, according to the word.

22 அந்தப்படியே, ஜனங்கள் தாங்கள் கண்ட அந்த
அறிகுறிகளிலும், அற்புதங்களிலும் விசுவாசிக்கா-
தபடிக்கு அவர்களுடைய இருதயங்களைக் கடி-
னப்படுத்துவதற்காக, இச்சமயம் முதற்கொண்டு
அவர்களுக்குள்ளே உண்மைக்கு புறம்பானவைக-
ளை சாத்தான் அனுப்பினான். ஆனாலும் இந்த
பொய்களும் வஞ்சனைகளும் இருந்தும்கூட,
ஜனங்களில் பெரும்பாலானோர் விசுவாசித்து,
கர்த்தருக்குள்ளாக மனம் மாறினார்கள்.

And it came to pass that from this time forth there began to be lyings sent forth among the people, by Satan, to harden their hearts, to the intent that they might not believe in those signs and wonders which they had seen; but notwithstanding these lyings and deceivings the more part of the people did believe, and were converted unto the Lord.

23 அந்தப்படியே, நேபியும் மற்ற அநேகரும் ஜனங்க-
ளுக்குள்ளே போய் மனந்திரும்புதலுக்கேதுவாய்
ஞானஸ்நானம் கொடுத்தார்கள், அதினிமித்தம்
அங்கே பாவங்களுக்காக மிகுந்த மன்னிப்பு உண்-
டாயிற்று. இப்படியாக ஜனங்கள் மறுபடியுமாக தே-
சத்திலே சமாதானத்தை அடையத் துவங்கினார்-
கள்.

And it came to pass that Nephi went forth among the people, and also many others, baptizing unto repentance, in the which there was a great remission of sins. And thus the people began again to have peace in the land.

24 மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஆசரிக்க
இனிமேலும் அவசியமில்லை என்று வேத வாக்கி-
யங்களினால் நிரூபிக்க முயற்சித்துப் பிரசங்கித்த
சிலரைத் தவிர, அங்கே எந்த பிணக்குகளும் கா-
ணப்படவில்லை. இப்பொழுது வேத வாக்கியங்க-
ளைப் புரிந்து கொள்ளாமல், இந்த காரியத்தில்
அவர்கள் பிழை செய்தனர்.

And there were no contentions, save it were a few that began to preach, endeavoring to prove by the scriptures that it was no more expedient to observe the law of Moses. Now in this thing they did err, having not understood the scriptures.

25 ஆனால், அந்தப்படியே, நியாயப்பிரமாணம் இன்-
னும் நிறைவேறவில்லை என்றும், அது பூரணமாய்
நிறைவேற வேண்டுமென்றும் அவர்களுக்குத் தெ-
ரிவிக்கப்பட்டதால், அவர்கள் சீக்கிரமாய் மனம் மா-
றி, தங்களின் தவறை உணர்ந்து கொண்டார்கள்;
ஆம், அது நிறைவேறவேண்டுமென்றும், அது முழு-
வதும் நிறைவேறுமளவும் ஒரு எழுத்தாகிலும் ஒரு
எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது என்ற
வார்த்தை அவர்களுக்கு உண்டானது; ஆதலால்
இந்த வருஷத்திலே அவர்கள் தங்களுடைய பிழை-
யைக் குறித்த ஞானத்திற்குக் கொண்டு வரப்பட்-
டார்கள், அவர்கள் தங்கள் தவறுதல்களை அறிக்-
கை பண்ணினார்கள்.

But it came to pass that they soon became converted, and were convinced of the error which they were in, for it was made known unto them that the law was not yet fulfilled, and that it must be fulfilled in every whit; yea, the word came unto them that it must be fulfilled; yea, that one jot or tittle should not pass away till it should all be fulfilled; therefore in this same year were they brought to a knowledge of their error and did confess their faults.

26 பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லோருடைய தீர்க்கத-
ரிசன வார்த்தைகளின்படியே சம்பவித்த அறிகுறி-
களினிமித்தம், ஜனங்களுக்கு நற்செய்திகளைக்
கொண்டுவந்து, இப்படியாக தொண்ணூற்று
இரண்டாம் வருஷமும் கடந்துபோயிற்று.

And thus the ninety and second year did pass away, bringing glad tidings unto the people because of the signs which did come to pass, according to the words of the prophecy of all the holy prophets.

27 அந்தப்படியே, மலைகளில் வாசம்பண்ணினவர்-
களும், தேசத்தின்மேல் பெருகினவர்களுமாகிய,
காதியாந்தன் திருடர்களைத் தவிர, மற்றபடி
தொண்ணூற்று மூன்றாம் வருஷமும், சமாதான-
மாய்க் கடந்து போயிற்று; ஏனெனில் அவர்களு-
டைய கொத்தளங்களும், அவர்களுடைய மறைவி-
டங்களும், மிகவும் பலமுள்ளதாய் இருந்தபடியா-
லே, ஜனங்கள் அவர்களை மேற்கொள்ளமுடிய-
வில்லை. ஆதலால் அவர்கள் அநேக கொலைக-
ளைப் புரிந்து, ஜனங்களுக்குள்ளே பெரும் சங்கா-
ரத்தை உண்டாக்கினார்கள்.

And it came to pass that the ninety and third year did also pass away in peace, save it were for the Gadianton robbers, who dwelt upon the mountains, who did infest the land; for so strong were their holds and their secret places that the people could not overpower them; therefore they did commit many murders, and did do much slaughter among the people.

28 அந்தப்படியே, தொண்ணூற்று நாலாம் வருஷத்-
தில், நேபியினரின் அநேக கொலைகாரர் அவர்க-
ளிடம் போனபடியினாலே அவர்கள் பெரிய அள-
விலே பெருகத் தொடங்கினார்கள், இது தேசத்தின்
மீதிருந்த நேபியர்களுக்கு அதிக துக்கத்தை ஏற்ப-
டுத்தியது.

And it came to pass that in the ninety and fourth year they began to increase in a great degree, because there were many dissenters of the Nephites who did flee unto them, which did cause much sorrow unto those Nephites who did remain in the land.

29 லாமானியருக்குள்ளும் மிகுந்த துக்கம் உண்டா-
கக் காரணமிருந்தது; ஏனெனில் இதோ, வளர்ந்து,
நாளடைவில் பலமடைந்து, தங்களுக்கென்று நி-
தானிக்கிறவர்களாய் மாறின அவர்களின் பிள்-
ளைகள், சோரமியரான சிலருடைய, பொய்யான
மற்றும் முகஸ்துதியான வார்த்தைகளினால், அந்த
காதியாந்தன் திருடர்களுடன் சேரும்படிக்கு வழிந-
டத்தப்பட்டுப் போனார்கள்.
30 இப்படியாக லாமானியர்களும் உபத்திரவப்பட்டு,
எழும்புகிற தலைமுறையினரின் துன்மார்க்கத்தி-
னிமித்தம், தங்களுடைய விசுவாசத்திலும் நீதியி-
லும் குறைந்து போகத் துவங்கினார்கள்.

And there was also a cause of much sorrow among the Lamanites; for behold, they had many children who did grow up and began to wax strong in years, that they became for themselves, and were led away by some who were Zoramites, by their lyings and their flattering words, to join those Gadianton robbers.

And thus were the Lamanites afflicted also, and began to decrease as to their faith and righteousness, because of the wickedness of the rising generation.

# 3 நேபி 2

# 3 Nephi 2

1 அந்தப்படியே, தொண்ணூற்று ஐந்தாம் வருஷமும்
கடந்து போயிற்று. ஜனங்கள் தாங்கள் கேட்ட அந்த
அறிகுறிகளையும் அற்புதங்களையும் மறக்கத் து-
வங்கினார்கள். வானத்திலிருந்து வந்த அறிகுறி-
யையோ அல்லது அற்புதத்தையோ பற்றிய ஆச்சரி-
யமும் குன்ற ஆரம்பித்தது, இதனால் அவர்கள் தங்-
கள் இருதயங்களில் கடினம் கொள்ளத் துவங்கி,
தங்கள் மனதில் குருடர்களாகி, தாங்கள் கண்டதும்
கேட்டதுமான யாவற்றையும் அவநம்பிக்கை
கொள்ளத் துவங்கினார்கள்.

And it came to pass that thus passed away the ninety and fifth year also, and the people began to forget those signs and wonders which they had heard, and began to be less and less astonished at a sign or a wonder from heaven, insomuch that they began to be hard in their hearts, and blind in their minds, and began to disbelieve all which they had heard and seen—

2 ஜனங்களுடைய இருதயங்களை வழிநடத்திப்-
போய், வஞ்சிக்கத்தக்கதாக, மனுஷராலும் பிசாசின்
வல்லமையாலும் இது நடப்பிக்கப்பட்டதென்று,
அவர்கள் தங்கள் இருதயங்களிலே சில வீணான
காரியங்களை எண்ணிக்கொண்டார்கள்; இப்படி-
யாக சாத்தான் ஜனங்களுடைய இருதயங்களை
மறுபடியும் வசப்படுத்திக்கொண்டு, அவர்களு-
டைய கண்களைக் குருடாக்கி, கிறிஸ்துவினு-
டைய உபதேசம் மூடத்தனமும், வீணானதுமாயி-
ருக்கிறதென்று அவர்கள் நம்பும்படி வழிநடத்தி-
னான்.

Imagining up some vain thing in their hearts, that it was wrought by men and by the power of the devil, to lead away and deceive the hearts of the people; and thus did Satan get possession of the hearts of the people again, insomuch that he did blind their eyes and lead them away to believe that the doctrine of Christ was a foolish and a vain thing.

3 அந்தப்படியே, ஜனங்கள் துன்மார்க்கத்திலும்
அருவருப்புகளிலும் பெருகத் துவங்கினார்கள்;
இனிமேலும் அறிகுறிகளோ அல்லது அற்புதங்க-
ளோ கொடுக்கப்படும் என்று அவர்கள் விசுவாசிக்-
கவில்லை; சாத்தான் போய் ஜனங்களுடைய இருத-
யங்களை நடத்திச் சென்று அவர்களைச் சோதித்து
தேசத்தில் அவர்கள் பெரும் துன்மார்க்கம் செய்யும்-
படியாக அவர்களை ஏவினான்.

And it came to pass that the people began to wax strong in wickedness and abominations; and they did not believe that there should be any more signs or wonders given; and Satan did go about, leading away the hearts of the people, tempting them and causing them that they should do great wickedness in the land.

4 இப்படியாக தொண்ணூற்று ஆறாம் வருஷமும்,
தொண்ணூற்று ஏழாம் வருஷமும், தொண்ணூற்று
எட்டாம் வருஷமும், தொண்ணூற்று ஒன்பதாம்
வருஷமும் கடந்து போயிற்று.

And thus did pass away the ninety and sixth year; and also the ninety and seventh year; and also the ninety and eighth year; and also the ninety and ninth year;

5 நேபியர்களின் ஜனங்கள்மேல் ராஜாவாக இருந்த,
மோசியாவின் நாட்கள் துவங்கி, நூறு வருஷமும்
கடந்து போயிற்று.

And also an hundred years had passed away since the days of Mosiah, who was king over the people of the Nephites.

6 எருசலேமை விட்டு லேகி போனதிலிருந்து, அறு-
நூற்று ஒன்பது வருஷங்கள் கடந்து போயின.

And six hundred and nine years had passed away since Lehi left Jerusalem.

7 கிறிஸ்து உலகினுள் வரவேண்டுமென்று தீர்க்கத-
ரிசிகளால் பேசப்பட்ட அந்த அறிகுறி கொடுக்கப்-
பட்ட காலம் துவங்கி, ஒன்பது வருஷங்கள் கடந்து
போயின.

And nine years had passed away from the time when the sign was given, which was spoken of by the prophets, that Christ should come into the world.

8 இப்போதும் அந்த அறிகுறி கொடுக்கப்பட்ட கால-
கட்டம் முதல், அல்லது கிறிஸ்துவினுடைய வரு-
கையிலிருந்து, தங்கள் காலத்தை நேபியர்கள்
கணக்கிடத் துவங்கினார்கள்; ஆதலால் ஒன்பது
வருஷங்கள் கடந்து போயின.

Now the Nephites began to reckon their time from this period when the sign was given, or from the coming of Christ; therefore, nine years had passed away.

9 நேபியின் தகப்பனும், பதிவேடுகளை வைத்தி-
ருக்கும் பொறுப்பை உடையவனுமாகிய நேபி, சார-
கெம்லா தேசத்திற்குத் திரும்பவில்லை. அவன் தே-
சம் முழுவதிலும் காணப்படவுமில்லை.

And Nephi, who was the father of Nephi, who had the charge of the records, did not return to the land of Zarahemla, and could nowhere be found in all the land.

10 அந்தப்படியே, ஜனங்களுக்குள் அனுப்பப்பட்ட
அதிக பிரசங்கங்களையும் தீர்க்கதரிசனங்களை-
யும் பொருட்படுத்தாமல், அவர்கள் துன்மார்க்கத்தி-
லே நிலைத்திருந்தார்கள்; இப்படியாக பத்தாம் வரு-
ஷமும் கடந்து போயிற்று; பதினோராம் வருஷமும்
அக்கிரமத்திலே கடந்து போயிற்று.

And it came to pass that the people did still remain in wickedness, notwithstanding the much preaching and prophesying which was sent among them; and thus passed away the tenth year also; and the eleventh year also passed away in iniquity.

11 அந்தப்படியே, பதிமூன்றாம் வருஷத்தில் அங்கே
தேசம் முழுவதிலும் யுத்தங்களும் பிணக்குகளும்
உண்டானது. ஏனெனில் காதியாந்தன் திருடர்கள்
அதிகமாய்ப் பெருகி, ஜனங்களில் அநேகரை வெட்-
டி, அநேக பட்டணங்களைப் பாழாக்கி, தேசம் முழு-
வதிலும் மிகுந்த சாவையும் சங்காரத்தையும் உண்-
டாக்கினதால், நேபியர்களும் லாமானியர்களு-
மான சகல ஜனங்களும் அவர்களுக்கு விரோதமாக
ஆயுதங்களை எடுக்க வேண்டியது அவசியமான-
து.

And it came to pass in the thirteenth year there began to be wars and contentions throughout all the land; for the Gadianton robbers had become so numerous, and did slay so many of the people, and did lay waste so many cities, and did spread so much death and carnage throughout the land, that it became expedient that all the people, both the Nephites and the Lamanites, should take up arms against them.

12 ஆதலால், கர்த்தருக்குள்ளாக மனம் மாறிய லா-
மானியர் அனைவரும் தங்கள் சகோதரராகிய நேபி-
யருடன் இணைந்தார்கள், அவர்கள் தங்கள் ஜீ-
வன், தங்கள் ஸ்திரீகள் மற்றும் தங்கள் பிள்ளைக-
ளின் பாதுகாப்பிற்காக அந்த காதியாந்தன் திருடர்-
களுக்கு விரோதமாக ஆயுதங்களை எடுக்கவும்,
ஆம், தங்கள் உரிமைகளையும், தங்கள் சபை மற்-
றும் தங்கள் ஆராதனையின் சிலாக்கியங்களை-
யும், தங்கள் சுதந்திரத்தையும், தங்கள் விடுதலை-
யையும் காக்கவும் கட்டாயப்படுத்தப்பட்டார்கள்.

Therefore, all the Lamanites who had become converted unto the Lord did unite with their brethren, the Nephites, and were compelled, for the safety of their lives and their women and their children, to take up arms against those Gadianton robbers, yea, and also to maintain their rights, and the privileges of their church and of their worship, and their freedom and their liberty.

13 அந்தப்படியே, இந்த பதிமூன்றாம் வருஷம் கடந்-
துபோகும் முன்னே, மிகவும் கொடியதாய் மாறிப்-
போன இந்த யுத்தத்தினிமித்தம், மிகுந்த அழிவி-
னால் நேபியர் பயப்படுத்தப்பட்டார்கள்.

And it came to pass that before this thirteenth year had passed away the Nephites were threatened with utter destruction because of this war, which had become exceedingly sore.

14 அந்தப்படியே, நேபியரோடு இணைந்த அந்த லா-
மானியரும் நேபியர்களுக்குள்ளே எண்ணப்பட்-
டார்கள்;

And it came to pass that those Lamanites who had united with the Nephites were numbered among the Nephites;

15 அவர்களுடைய சாபம் அவர்களிடமிருந்து எடுக்-
கப்பட்டு, அவர்களுடைய சருமம் நேபியர்களைப்
போலவே வெண்மையானது.

And their curse was taken from them, and their skin became white like unto the Nephites;

16 அவர்களுடைய வாலிபரும் அவர்களுடைய கு-
மாரத்திகளும் மிகவும் அழகுடையவர்களானார்-
கள், அவர்கள் நேபியர்களுக்குள்ளே எண்ணப்பட்-
டு, நேபியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். இப்-
படியாக பதிமூன்றாம் வருஷமும் முடிவுற்றது.

And their young men and their daughters became exceedingly fair, and they were numbered among the Nephites, and were called Nephites. And thus ended the thirteenth year.

17 அந்தப்படியே, பதினான்காம் வருஷ துவக்கத்-
தில் திருடர்களுக்கும் நேபியின் ஜனங்களுக்கும்
இடையே யுத்தம் தொடர்ந்து அது மிகவும் கொடிய-
தாயிற்று; இருப்பினும் நேபியின் ஜனங்கள் திருடர்-
களின்மேல் ஆதிக்கம் பெற்றதினாலே, அவர்கள்
அவர்களைத் தங்களின் தேசங்களிலிருந்து மலை-
களுக்கும் அவர்களுடைய இரகசிய இடங்களுக்கும்
திரும்பத் துரத்தினார்கள்.
18 இப்படியாக பதினான்காம் வருஷமும் முடிவுற்ற-
து. பதினைந்தாம் வருஷத்தில் அவர்கள் நேபியின்
ஜனங்களுக்கு விரோதமாய் வந்தார்கள்; நேபியின்
ஜனங்களுடைய துன்மார்க்கத்தினாலும், அவர்க-
ளுடைய அநேக பிணக்குகளாலும், கலகங்களி-
னாலும் காதியாந்தன் திருடர்கள் அவர்கள்மேல்
பல அனுகூலங்களைப் பெற்றிருந்தார்கள்.
19 இப்படியாக பதினைந்தாம் வருஷம் முடிவுற்றது,
இப்படியாக ஜனங்கள் அநேக உபத்திரவங்களின்
நிலையிலிருந்தார்கள்; சங்காரப் பட்டயம் அவர்-
கள் மேல் தொங்கிக் கொண்டிருந்தது. அவர்கள்
அதனால் வெட்டப்படவிருந்தார்கள். இது அவர்க-
ளின் அக்கிரமத்தினிமித்தமே.

And it came to pass in the commencement of the fourteenth year, the war between the robbers and the people of Nephi did continue and did become exceedingly sore; nevertheless, the people of Nephi did gain some advantage of the robbers, insomuch that they did drive them back out of their lands into the mountains and into their secret places.

And thus ended the fourteenth year. And in the fifteenth year they did come forth against the people of Nephi; and because of the wickedness of the people of Nephi, and their many contentions and dissensions, the Gadianton robbers did gain many advantages over them.

And thus ended the fifteenth year, and thus were the people in a state of many afflictions; and the sword of destruction did hang over them, insomuch that they were about to be smitten down by it, and this because of their iniquity.

# 3 நேபி 3

# 3 Nephi 3

1 இப்பொழுதும், அந்தப்படியே, கிறிஸ்துவின் வருகையிலிருந்து பதினாறாவது வருஷத்தில், தேசத்தின் விசாரணைக்காரனாகிய லாசோனியஸ், இந்தத் திருடர்கள் கூட்டத்தின் தலைவனும், விசாரணைக்காரனுமானவனிடத்திலிருந்து ஒரு நிருபத்தைப் பெற்றான்; எழுதப்பட்டிருந்த வார்த்தைகளாவன:

And now it came to pass that in the sixteenth year from the coming of Christ, Lachoneus, the governor of the land, received an epistle from the leader and the governor of this band of robbers; and these were the words which were written, saying:

2 தேசத்தின் மகா கனம்பொருந்திய பிரதான விசாரணைக்காரனாகிய லாசோனியஸே, இதோ, நான் உனக்கு இந்த நிருபத்தை எழுதுகிறேன், நீ உங்களுடையது என்று எண்ணுகிற உரிமையையும், சுதந்திரத்தையும், பாதுகாப்பதில் நீ கொண்டிருக்கிற உறுதியினிமித்தமும், உன் ஜனத்தின் உறுதியினிமித்தம் உனக்கு மிகுந்த பெரும் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்; ஆம், உங்களுடைய சுதந்திரத்தையும் உங்களுடைய சொத்துக்களையும், உங்களுடைய நாட்டையும், அல்லது அப்படி நீங்கள் அழைக்கும் எதையும் தற்காப்பதில், ஒரு தேவ கரத்தால் ஆதரிக்கப்பட்டவனைப் போல உறுதியாய் செயல்படுகிறாய்.

Lachoneus, most noble and chief governor of the land, behold, I write this epistle unto you, and do give unto you exceedingly great praise because of your firmness, and also the firmness of your people, in maintaining that which ye suppose to be your right and liberty; yea, ye do stand well, as if ye were supported by the hand of a god, in the defence of your liberty, and your property, and your country, or that which ye do call so.

3 மகா கனம்பொருந்திய லாசோனியஸே, இப்பொழுதும் இச்சமயத்தில் ஆயுதங்களோடு நின்றிருப்பவர்களும், நேபியர்கள் மேல் விழுந்து அவர்களை அழித்துப் போடுங்கள், என்ற வார்த்தைக்காக மிகுந்த ஆவலோடு காத்திருப்பவர்களுமாகிய என் சேர்வைக்குக் கீழிருக்கிற அநேக தைரியமான மனுஷருக்கு விரோதமாக உன்னால் நிற்கக் கூடுமென்று எண்ணுவதற்கு நீ எவ்வளவு மூடனாயும், வீணனாயும் இருக்கவேண்டும், இது எனக்கு பரிதாபமாகவே தோன்றுகிறது.

And it seemeth a pity unto me, most noble Lachoneus, that ye should be so foolish and vain as to suppose that ye can stand against so many brave men who are at my command, who do now at this time stand in their arms, and do await with great anxiety for the word—Go down upon the Nephites and destroy them.

4 நான் அவர்களின் அடக்கக்கூடாத ஆவியை அறிந்து, யுத்தக் களத்திலே அவர்களை அறிந்து, நீங்கள் அவர்களுக்குச் செய்த அநேக தவறுதல்களினிமித்தம், உங்கள் மேலுள்ள அவர்களின் நித்திய வெறுப்பையும் நான் அறிந்திருக்கிறதாலும், ஆகவே உங்களுக்கு விரோதமாக அவர்கள் வந்தால் அவர்கள் உங்களை முழுவதுமாய் அழித்துப் போடும்படியாக சந்திப்பார்களென்பதை அறிகிறேன்.

And I, knowing of their unconquerable spirit, having proved them in the field of battle, and knowing of their everlasting hatred towards you because of the many wrongs which ye have done unto them, therefore if they should come down against you they would visit you with utter destruction.

5 ஆதலாலே நீங்கள் சரியென்று விசுவாசிப்பதில் உங்களுடைய உறுதியினிமித்தமும், யுத்தக் களத்தில் உங்களுடைய வீரமான உத்வேகத்தினிமித்தமும், உங்களின் நலனுக்காக அக்கறை கொண்டு, இந்த நிருபத்தை எழுதி, என் சொந்தக் கையினாலே அதை முத்திரையிடுகிறேன்.

Therefore I have written this epistle, sealing it with mine own hand, feeling for your welfare, because of your firmness in that which ye believe to be right, and your noble spirit in the field of battle.

6 ஆதலால் என்னுடைய இந்த ஜனங்கள் உங்க-
ளைப் பட்டயத்தினால் சந்தித்து அழிவு உங்கள்
மேல் வருவதைவிட, என் ஜனத்திடம் உங்களு-
டைய பட்டணங்களையும், உங்களுடைய தேசங்க-
ளையும், உங்களுடைய சொத்துக்களையும் ஒப்பு-
விக்கவேண்டுமென்று விரும்பி உங்களுக்கு எழுது-
கிறேன்.

Therefore I write unto you, desiring that ye would yield up unto this my people, your cities, your lands, and your possessions, rather than that they should visit you with the sword and that destruction should come upon you.

7 அல்லது வேறு வார்த்தைகளிலெனில், நீங்கள்
எங்களைப் போலிருக்கும்படியாக, எங்களுக்கு
அடிமைகளாக அல்ல, எங்களுடைய பொருட்கள்
அனைத்துக்கும் எங்களின் சகோதரராயும், பங்கா-
ளிகளாயும் இருக்கும்பொருட்டு, நீங்கள் உங்களை-
யே எங்களுக்கு ஒப்படைத்து, எங்களோடு ஐக்கிய-
மாகி, எங்களுடைய இரகசியக் கிரியைகளை
அறிந்து, எங்களுடைய சகோதரராகுங்கள்.

Or in other words, yield yourselves up unto us, and unite with us and become acquainted with our secret works, and become our brethren that ye may be like unto us—not our slaves, but our brethren and partners of all our substance.

8 இதோ, நீங்கள் இதைச் செய்தால், நீங்கள் அழிக்-
கப்படமாட்டீர்கள், என்ற உறுதி மொழியுடனே உங்-
களுக்கு நான் ஆணையிடுகிறேன். ஆனால் இதை
நீங்கள் செய்யவில்லையெனில், அடுத்த மாதத்தில்,
என் சேனைகள் உங்களுக்கு விரோதமாக வர-
வேண்டுமென்று நான் கட்டளையிடுவேன், என்ற
உறுதிமொழியுடனே உங்களுக்கு நான் ஆணையி-
டுகிறேன். அவர்கள் தங்கள் கையை அடக்காம-
லும், உங்கள் ஜீவன்களைத் தப்புவிக்காமல், உங்க-
ளை வெட்டிப்போட்டு, நீங்கள் நிர்மூலமாகிப்போ-
கும் வரைக்குமாய் பட்டயத்தை உங்கள் மேல் வி-
ழப்பண்ணுவார்கள்.

And behold, I swear unto you, if ye will do this, with an oath, ye shall not be destroyed; but if ye will not do this, I swear unto you with an oath, that on the morrow month I will command that my armies shall come down against you, and they shall not stay their hand and shall spare not, but shall slay you, and shall let fall the sword upon you even until ye shall become extinct.

9 இதோ, கித்தியானியாகிய நானே, இந்த காதியாந்-
தன் இரகசிய சங்கத்திற்கு விசாரணைக்காரன்; இச்-
சங்கமும் இதன் கிரியைகளும் நன்மையானவை
என்று அறிந்திருக்கிறேன். இவை பூர்வகாலத்த-
வை, அவை எங்களுக்கு கையளிக்கப்பட்டிருக்கி-
றது.

And behold, I am Giddianhi; and I am the governor of this the secret society of Gadianton; which society and the works thereof I know to be good; and they are of ancient date and they have been handed down unto us.

10 லாசோனியஸே, நான் உனக்கு இந்த நிருபத்தை
எழுதுகிறேன். அவர்களுடைய ராஜாங்க உரிமைக-
ளை அவர்களுக்குக் கொடாமலிருந்ததில், உள்ள
உங்களுடைய துன்மார்க்கத்தினிமித்தம், உங்களி-
டமிருந்து பிரிந்து போனவர்களாகிய, இந்த என்
ஜனங்கள், தங்களுடைய உரிமைகளையும் ரா-
ஜாங்கத்தையும் மறுபடியும் பெறத்தக்கதாக, நீங்கள்
இரத்தம் சிந்துதல் இல்லாமல் உங்களுடைய தேசங்-
களையும், உங்களுடைய சொத்துக்களையும், ஒப்-
படைப்பீர்களென்று நம்புகிறேன். இதை நீங்கள்
செய்யவில்லையெனில், நான் அவர்களுக்கு
இழைக்கப்பட்ட அநீதிகளுக்காக சரிக்கட்டுவேன்,
நானே கித்தியானி.

And I write this epistle unto you, Lachoneus, and I hope that ye will deliver up your lands and your possessions, without the shedding of blood, that this my people may recover their rights and government, who have dissented away from you because of your wickedness in retaining from them their rights of government, and except ye do this, I will avenge their wrongs. I am Giddianhi.

11 இப்பொழுதும், அந்தப்படியே, லாசோனியஸ் இந்த நிருபத்தைப் பெற்றபோது, நேபியர்களின் தேசத்தின் உரிமையைக் கித்தியானி கோரினதினிமித்தமும், ஜனங்களைப் பயமுறுத்தினதினிமித்தமும், துன்மார்க்கமும் அருவருப்புமுள்ள திருடர்களோடு போகப் பிரிந்து சென்றதின் மூலமும், அவர்களே தவறிழைத்து, ஒரு தவறும் இழைக்காதவர்களின் தவறுகளைச் சரிக்கட்டுவதாகக் கோருகிற, அவனுடைய தைரியத்தினிமித்தமும் மிகவும் ஆச்சரியப்பட்டுப்போனான்.

And now it came to pass when Lachoneus received this epistle he was exceedingly astonished, because of the boldness of Giddianhi demanding the possession of the land of the Nephites, and also of threatening the people and avenging the wrongs of those that had received no wrong, save it were they had wronged themselves by dissenting away unto those wicked and abominable robbers.

12 இப்பொழுதும் இதோ, இந்த விசாரணைக்காரனாகிய லாசோனியஸ் நியாயவானாயிருந்தான். அவனை ஒரு திருடனின் கோரிக்கைகளாலும், பயமுறுத்தல்களாலும் அச்சுறுத்தப்பட முடியவில்லை; ஆதலால் அவன் திருடர்களின் விசாரணைக்காரனான கித்தியானியின் நிருபத்திற்குச் செவிகொடாமல், திருடர்கள் தங்களுக்கு விரோதமாக வரவிருக்கிற சமயத்தில், தாங்கள் பெலனைப் பெறத்தக்கதாக கர்த்தரிடத்தில் தன் ஜனங்கள் கூக்குரலிடச் செய்தான்.

Now behold, this Lachoneus, the governor, was a just man, and could not be frightened by the demands and the threatenings of a robber; therefore he did not hearken to the epistle of Giddianhi, the governor of the robbers, but he did cause that his people should cry unto the Lord for strength against the time that the robbers should come down against them.

13 ஆம், அவர்கள் தங்கள் ஸ்திரீகளையும், தங்கள் பிள்ளைகளையும், தங்கள் மந்தைகளையும், தங்கள் கால்நடைகளையும், தங்களுடைய நிலத்தைத் தவிர தங்களுக்குள்ள எல்லா பொருட்களையும், ஓர் இடத்தில் சேர்க்கும்படியாய் ஜனங்கள் யாவருக்குள்ளும் ஒரு பிரகடனத்தை அனுப்பினான்.

Yea, he sent a proclamation among all the people, that they should gather together their women, and their children, their flocks and their herds, and all their substance, save it were their land, unto one place.

14 அவர்களைச் சுற்றியும் கொத்தளங்கள் எழுப்பப்படவும் அவைகளின் பெலன் மிகவும் அதிகமாயிருக்கும்படியும் செய்தான். அவர்களைக் காவல் காக்கவும், பகலும் இரவும் அவர்களைத் திருடர்களிடமிருந்து காக்கவும், சுற்றிலும் காவல்காரராய் நேபியர் மற்றும் லாமானியர்களின் சேனைகளும், அல்லது நேபியர்களுக்குள் இலக்கமிடப்பட்ட அனைவரும் நிறுத்தப்படும்படிச் செய்தான்.

And he caused that fortifications should be built round about them, and the strength thereof should be exceedingly great. And he caused that armies, both of the Nephites and of the Lamanites, or of all them who were numbered among the Nephites, should be placed as guards round about to watch them, and to guard them from the robbers day and night.

15 ஆம், அவன் அவர்களை நோக்கி, கர்த்தர் ஜீவிக்குமளவும், நீங்கள் உங்களுடைய எல்லா அக்கிரமங்களிலிருந்தும் மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் கூக்குரலிடாவிடில், நீங்கள் அந்த காதியாந்தன் திருடர்களின் கைகளிலிருந்து ஒருக்காலும் விடுவிக்கப்படமாட்டீர்கள்.

Yea, he said unto them: As the Lord liveth, except ye repent of all your iniquities, and cry unto the Lord, ye will in nowise be delivered out of the hands of those Gadianton robbers.

16 லாசோனியஸின் வார்த்தைகளும், தீர்க்கதரிசனங்களும் மிகவும் மகத்துவமாகவும், அற்புதமாகவும் இருந்தபடியால், அவைகள் ஜனங்கள் அனைவரின் மேலும் பயத்தை உண்டாக்கின; அவர்கள் லாசோனியஸின் வார்த்தைகளின்படியே செய்ய ஊக்கமாய் முயற்சித்தார்கள்.

And so great and marvelous were the words and prophecies of Lachoneus that they did cause fear to come upon all the people; and they did exert themselves in their might to do according to the words of Lachoneus.

17 அந்தப்படியே, திருடர்கள் வனாந்தரத்தை விட்டு நேபியர்களின் சேனைகள் அனைத்திற்கும் விரோதமாக வரும் சமயத்தில், அவர்களை வழிநடத்த, அவர்கள் மேல் லாசோனியஸ் பிரதான சேர்வைக்காரர்களை நியமித்தான்.

And it came to pass that Lachoneus did appoint chief captains over all the armies of the Nephites, to command them at the time that the robbers should come down out of the wilderness against them.

18 இப்பொழுதும் பிரதான சேர்வைக்காரரில் பிரதா-
னமானவனும், நேபியர்களின் சேனைகள்
அனைத்திலும் தலைமை சேனாதிபதியுமானவன்
நியமிக்கப்பட்டான். அவனுடைய நாமம் கித்கித்-
தோனி என்பதாகும்.

Now the chiefest among all the chief captains and the great commander of all the armies of the Nephites was appointed, and his name was Gidgiddoni.

19 இப்பொழுதும் (தாங்கள் துன்மார்க்கமாய் இராத
காலத்தில்) வெளிப்படுத்தலின் ஆவியையும், தீர்க்-
கதரிசன ஆவியையும் பெற்றிருக்கிறவனையே,
தங்களின் பிரதான சேர்வைக்காரனாக நியமிப்ப-
து, நேபியர்கள் எல்லாருக்குள்ளும் இருந்த வழக்க-
மாயிருந்தது; எனவே இந்த கித்கித்தோனி அவர்க-
ளுக்குள் பெரிய தீர்க்கதரிசியாயும், பிரதான நியா-
யாதிபதியாயுமிருந்தான்.

Now it was the custom among all the Nephites to appoint for their chief captains, (save it were in their times of wickedness) some one that had the spirit of revelation and also prophecy; therefore, this Gidgiddoni was a great prophet among them, as also was the chief judge.

20 இப்பொழுதும் ஜனங்கள் கித்கித்தோனியைப்
பார்த்து: கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணி, நாங்கள்
திருடர்கள்மேல் விழுந்து, அவர்களை அவர்களு-
டைய சொந்த நிலங்களிலேயே அழிக்கும்படியாக,
மலைகள் மேலும் வனாந்தரத்தினுள்ளும் போகும்-
படி எங்களை அனுமதிப்பீராக, என்றார்கள்.

Now the people said unto Gidgiddoni: Pray unto the Lord, and let us go up upon the mountains and into the wilderness, that we may fall upon the robbers and destroy them in their own lands.

21 ஆனால் கித்கித்தோனி அவர்களை நோக்கி: கர்த்-
தர் தடை செய்கிறார்; ஏனெனில் நாம் அவர்களுக்கு
விரோதமாகப் போனால், கர்த்தர் நம்மை அவர்க-
ளுடைய கைகளுக்குள் ஒப்படைப்பார்; ஆதலால்
நாம் நம்முடைய தேசங்களின் மையப்பகுதியிலே,
நம்மை ஆயத்தப்படுத்தி, நம்முடைய சேனைகள்
அனைத்தையும் ஏகமாய்க் கூட்டுவோம். நாம்
அவர்களுக்கு விரோதமாய்ப் போகாமல், அவர்கள்
நமக்கு விரோதமாய் வரும்வரைக்கும் காத்திருப்-
போம். எனவே கர்த்தர் ஜீவிக்குமளவும், நாம் இதைச்
செய்வோமானால், அவர் அவர்களை நம்முடைய
கைகளுக்குள் ஒப்புக்கொடுப்பார்.

But Gidgiddoni saith unto them: The Lord forbid; for if we should go up against them the Lord would deliver us into their hands; therefore we will prepare ourselves in the center of our lands, and we will gather all our armies together, and we will not go against them, but we will wait till they shall come against us; therefore as the Lord liveth, if we do this he will deliver them into our hands.

22 அந்தப்படியே, பதினேழாம் வருஷத்தில், வரு-
ஷத்தின் பிற்பகுதியிலே, லாசோனியஸின் பிரக-
டனம் தேசம் முழுவதும் போனது. அவர்கள் தங்கள்
குதிரைகளையும், தங்கள் இரதங்களையும், தங்கள்
கால்நடைகளையும், தங்கள் மந்தைகளையும், தங்-
களின் ஆடுகளையும், தங்களின் தானியங்களை-
யும், தங்களின் எல்லா வஸ்திரங்களையும் எடுத்-
துக் கொண்டு, தங்களுடைய விரோதிகளை எதிர்த்-
து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளும்படியாக,
தாங்கள் யாவரும் ஏகமாய்க் கூடவேண்டுமென்று
நிர்ணயிக்கப்பட்ட இடத்திற்கு போகும் மட்டுமாய்,
அவர்கள் ஆயிரம் பேராயும், பதினாராயிரம் பேரா-
யும் அணிவகுத்துப் போனார்கள்.

And it came to pass in the seventeenth year, in the latter end of the year, the proclamation of Lachoneus had gone forth throughout all the face of the land, and they had taken their horses, and their chariots, and their cattle, and all their flocks, and their herds, and their grain, and all their substance, and did march forth by thousands and by tens of thousands, until they had all gone forth to the place which had been appointed that they should gather themselves together, to defend themselves against their enemies.

23 நிர்ணயிக்கப்பட்ட தேசம் சாரகெம்லா தேசமாயி-
ருந்தது, சாரகெம்லா தேசத்திற்கும், உதாரத்துவஸ்த-
லத்திற்குமிடையே, ஆம், உதாரத்துவஸ்தலத்திற்-
கும், பாழ்க்கடிப்பு தேசத்திற்கும், இடையே உள்ள
கோடுவரைக்கும் நீண்டிருந்த தேசமாயிருந்தது.

And the land which was appointed was the land of Zarahemla, and the land which was between the land Zarahemla and the land Bountiful, yea, to the line which was between the land Bountiful and the land Desolation.

24 நேபியர்கள் என்று அழைக்கப்பட்ட அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் இந்த தேசத்தில் திரண்டிருந்தார்கள். இப்பொழுதும் வடதேசத்தின் மேலிருந்த அந்த பயங்கரமான சாபத்தினிமித்தம், லாசோனியஸ் அவர்கள் தென் தேசத்தில் ஏகமாய்க் கூடும்படிச் செய்தான்.

And there were a great many thousand people who were called Nephites, who did gather themselves together in this land. Now Lachoneus did cause that they should gather themselves together in the land southward, because of the great curse which was upon the land northward.

25 அவர்கள் தங்கள் பகைவருக்கு விரோதமாக தங்களைக் காத்துக் கொள்ளும்படியாகக் கொத்தளங்களை எழுப்பினார்கள்; அவர்கள் ஒரே தேசத்திலே, ஒரே குழுவாக வாசம் பண்ணினார்கள். தங்கள் பாவங்கள் எல்லாவற்றிலுமிருந்து மனந்திரும்பும் அளவுக்கு அவர்கள் லாசோனியஸ் பேசின வார்த்தைகளுக்குப் பயந்தார்கள்; தங்கள் பகைவர்கள் தங்களுக்கு விரோதமாக யுத்தத்திற்கு வருகிற சமயத்தில் தங்களைத் தப்புவிக்க வேண்டுமென்று, தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் தங்கள் ஜெபங்களை ஏறெடுத்தார்கள்.

And they did fortify themselves against their enemies; and they did dwell in one land, and in one body, and they did fear the words which had been spoken by Lachoneus, insomuch that they did repent of all their sins; and they did put up their prayers unto the Lord their God, that he would deliver them in the time that their enemies should come down against them to battle.

26 அவர்கள் தங்கள் பகைவரினிமித்தம் மிகவும் வேதனைப்பட்டார்கள். கித்கித்தோனி, அவர்கள் எல்லாவிதமான யுத்தக் கருவிகளைச் செய்யவேண்டுமென்றும், அவர்கள் மார்புக்கவசத்தையும், கேடயத்தையும், பரிசையையும் தரித்து, தன்னுடைய அறிவுரையின்படி பெலவான்களாய் இருக்கும்படிச் செய்தான்.

And they were exceedingly sorrowful because of their enemies. And Gidgiddoni did cause that they should make weapons of war of every kind, and they should be strong with armor, and with shields, and with bucklers, after the manner of his instruction.

# 3 நேபி 4

1 அந்தப்படியே, பதினெட்டாம் வருஷ பிற்பகுதியி-
லே அந்தத் திருடர் சேனைகள் யுத்தத்திற்காக
ஆயத்தப்பட்டு, கீழ் இறங்கி வந்து, குன்றுகளிலி-
ருந்தும், மலைகளிலிருந்தும், வனாந்தரத்திலிருந்-
தும், தங்கள் கொத்தளங்களிலிருந்தும், தங்கள்
மறைவிடங்களிலிருந்தும் வெளியேறி, வடதேசத்-
திலும் தென்தேசத்திலும் ஆக இரண்டிலுமுள்ள நி-
லங்களை ஆக்கிரமித்து, நேபியர்களால் கைவிடப்-
பட்ட தேசங்களையும், பாழாய்ப் போகவிடப்பட்ட
பட்டணங்களையும் வசப்படுத்தத் துவங்கினார்-
கள்.

2 ஆனால் இதோ, நேபியர்களால் கைவிடப்பட்ட
அந்த நிலங்களில், எந்த வனவிலங்குகளோ, அல்-
லது வேட்டைக்குரிய மிருகங்களோ காணப்பட-
வில்லை. வனாந்தரத்திலேயல்லாமல் வேறெங்கும்
திருடர்களுக்கான வேட்டைக்குரிய மிருகங்கள்
உண்டாயிருக்கவில்லை.

3 திருடர்கள் உணவு வேண்டி வனாந்தரத்தைத்
தவிர வேறெங்கும் ஜீவித்திருக்க முடியவில்லை,
ஏனெனில் நேபியர்கள் தங்கள் தேசங்களைக் கை-
விட்டுவிட்டு, தங்கள் மந்தைகளையும் தங்கள்
கால்நடைகளையும் தங்களின் எல்லா வஸ்துக்க-
ளையும் கூட்டி அவர்கள் ஒரே கூட்டமாய் இருந்தார்-
கள்.

4 ஆதலால் திருடர்கள் நேரடியாக வந்து நேபியர்க-
ளோடு யுத்தம் செய்வதைத் தவிர, அவர்கள் களவா-
டி ஆகாரத்தைப் பெற எந்த வாய்ப்பும் இல்லாமற்
போயிற்று; நேபியர்கள் ஒரே குழுவாய் இருந்ததா-
லும், அவர்கள் அதிகமானோராய் இருந்ததாலும்,
தங்களுக்கென்று தாங்கள் ஏழுவருஷம் தொடர்ந்து
ஜீவித்திருக்கும்படி அவர்கள் வஸ்துக்களையும்,
குதிரைகளையும், கால்நடைகளையும், எல்லா
வகையான மந்தைகளையும் வைத்திருந்ததாலும்,
அந்தக் காலத்திற்குள்ளாக திருடர்களைப் பூமியி-
லிருந்து அழித்துப் போடவும் நம்பிக்கையாயிருந்-
தார்கள்; இப்படியாக பதினெட்டாம் வருஷமும்
கடந்து போயிற்று.

5 அந்தப்படியே, களவாடுவதையும், கொள்ளையி-
டுவதையும், கொலை செய்வதையும் தவிர, அவர்-
கள் ஜீவித்திருக்க எந்த ஒரு வழியும் இல்லாததி-
னால், கித்தியானி பத்தொன்பதாவது வருஷத்தில்
தான் நேபியர்களுக்கு விரோதமாய் யுத்தத்திற்குப்
போவது அவசியமெனக் கண்டான்.

6 நேபியர்கள் தங்கள் மேல் வந்து, தங்களைக்
கொன்றுபோடக்கூடும் என்று அவர்கள் அஞ்சி,
அவர்கள் தானியங்களை விளைவிக்கும்படி தே-
சத்தின்மேல் பரவ தைரியங்கொள்ளவில்லை;
ஆதலால் கித்தியானி தன் சேனைகள் இவ்வருஷத்-
திலே நேபியர்களுக்கு விரோதமாக யுத்தத்திற்குப்
போகவேண்டுமெனக் கட்டளையிட்டான்.

# 3 Nephi 4

And it came to pass that in the latter end of the eighteenth year those armies of robbers had prepared for battle, and began to come down and to sally forth from the hills, and out of the mountains, and the wilderness, and their strongholds, and their secret places, and began to take possession of the lands, both which were in the land south and which were in the land north, and began to take possession of all the lands which had been deserted by the Nephites, and the cities which had been left desolate.

But behold, there were no wild beasts nor game in those lands which had been deserted by the Nephites, and there was no game for the robbers save it were in the wilderness.

And the robbers could not exist save it were in the wilderness, for the want of food; for the Nephites had left their lands desolate, and had gathered their flocks and their herds and all their substance, and they were in one body.

Therefore, there was no chance for the robbers to plunder and to obtain food, save it were to come up in open battle against the Nephites; and the Nephites being in one body, and having so great a number, and having reserved for themselves provisions, and horses and cattle, and flocks of every kind, that they might subsist for the space of seven years, in the which time they did hope to destroy the robbers from off the face of the land; and thus the eighteenth year did pass away.

And it came to pass that in the nineteenth year Giddianhi found that it was expedient that he should go up to battle against the Nephites, for there was no way that they could subsist save it were to plunder and rob and murder.

And they durst not spread themselves upon the face of the land insomuch that they could raise grain, lest the Nephites should come upon them and slay them; therefore Giddianhi gave commandment unto his armies that in this year they should go up to battle against the Nephites.

7 அந்தப்படியே, அவர்கள் யுத்தத்திற்கு வந்தார்கள்; அது ஆறாம் மாதமாய் இருந்தது. இதோ, அவர்கள் யுத்தத்திற்கு வந்த அந்த நாள் கொடியதும் பயங்கரமுமாயும் இருந்தது. அவர்கள் திருடர்களின் முறைப்படி அரைக் கட்டியிருந்தார்கள், அவர்கள் ஆட்டுத் தோலை தங்கள் அரைகளில் கட்டியிருந்தார்கள். அவர்கள் இரத்தத்தால் சாயம் பூசப்பட்டிருந்தார்கள்; அவர்களின் தலைகள் சிரைக்கப்பட்டிருந்தன; அவர்கள் அவைகள்மேல் தலைச்சீராவை அணிந்திருந்தார்கள்; கித்தியானியின் சேனைகள் தங்கள் கவசத்தினாலும், தாங்கள் இரத்தத்தினால் சாயம் பூசப்பட்டதினாலும் அவர்களின் தோற்றம் கொடியதாயும் பயங்கரமாயுமிருந்தது.

And it came to pass that they did come up to battle; and it was in the sixth month; and behold, great and terrible was the day that they did come up to battle; and they were girded about after the manner of robbers; and they had a lamb-skin about their loins, and they were dyed in blood, and their heads were shorn, and they had head-plates upon them; and great and terrible was the appearance of the armies of Giddianhi, because of their armor, and because of their being dyed in blood.

8 அந்தப்படியே, நேபியர்களின் சேனைகள், கித்தியானியின் சேனையினுடைய தோற்றத்தைக் கண்டபோது, அவர்கள் பூமியில் விழுந்து, தங்கள் தேவனாகிய கர்த்தர் தங்களைக் காத்து, தங்களின் விரோதிகளின் கைகளுக்கு தங்களைத் தப்புவிக்கவேண்டுமென்று, தங்கள் கூக்குரல்களை உயர்த்தினார்கள்.

And it came to pass that the armies of the Nephites, when they saw the appearance of the army of Giddianhi, had all fallen to the earth, and did lift their cries to the Lord their God, that he would spare them and deliver them out of the hands of their enemies.

9 அந்தப்படியே, கித்தியானியின் சேனைகள் இதைக் கண்டபோது, அவர்கள் தங்கள் சந்தோஷத்தினிமித்தம் உரத்த சத்தமாய் ஆர்ப்பரிக்கத் துவங்கினார்கள், ஏனெனில், தங்கள் சேனைகள் பயங்கரமாயிருப்பதினாலே நேபியர்கள் பயந்து விழுந்தார்கள் என்று அவர்கள் நினைத்திருந்தார்கள்.

And it came to pass that when the armies of Giddianhi saw this they began to shout with a loud voice, because of their joy, for they had supposed that the Nephites had fallen with fear because of the terror of their armies.

10 ஆனால் இக்காரியத்தில் அவர்கள் ஏமாந்து போனார்கள், ஏனெனில் நேபியர்கள் அவர்களுக்குப் பயப்படவில்லை. ஆனால், அவர்கள் தங்கள் தேவனுக்குப் பயந்து, பாதுகாப்புக்காக அவரை வேண்டினார்கள்; ஆதலால், கித்தியானியின் சேனைகள் இவர்கள் மேல் விழவந்தபோதோ, இவர்கள் அவர்களைச் சந்திக்க ஆயத்தமாயிருந்தார்கள்; ஆம், கர்த்தருடைய பெலத்திலே அவர்களைச் சந்தித்தார்கள்.

But in this thing they were disappointed, for the Nephites did not fear them; but they did fear their God and did supplicate him for protection; therefore, when the armies of Giddianhi did rush upon them they were prepared to meet them; yea, in the strength of the Lord they did receive them.

11 யுத்தம் இந்த ஆறாவது மாதத்தில் துவங்கியது; அந்த யுத்தம் கொடியதும் பயங்கரமுமாயிருந்தது. ஆம், அதில் ஏற்பட்ட சங்காரம் கொடியதும் பயங்கரமாயுமிருந்தது, லேகி எருசலேமைவிட்டு வந்தது துவங்கி, அவனுடைய ஜனங்கள் எல்லோருக்குள்ளும் இப்படிப்பட்ட மிகப்பெரும் சங்காரம் அறியப்படாத அளவிலிருந்தது.

And the battle commenced in this the sixth month; and great and terrible was the battle thereof, yea, great and terrible was the slaughter thereof, insomuch that there never was known so great a slaughter among all the people of Lehi since he left Jerusalem.

12 கித்தியானியின் பயமுறுத்தல்களையும் ஆணைகளையும் பொருட்படுத்தாமல், இதோ, அவர்கள் தங்களுக்கு முன்பாக திரும்பிப் போகுமளவிற்கு நேபியர்கள் அவர்களை அடித்தார்கள்.

And notwithstanding the threatenings and the oaths which Giddianhi had made, behold, the Nephites did beat them, insomuch that they did fall back from before them.

13 அந்தப்படியே, கித்கித்தோனி தன் சேனைகள் அவர்களை வனாந்தர எல்லைகள் மட்டுமாய்த் துரத்தி, வழியிலே தங்கள் கைகளுக்குள் விழுகிற எவரையும் தப்புவிக்கக்கூடாதென்று கட்டளையிட்டான்; இப்படியாக கித்கித்தோனியின் கட்டளையை நிறைவேற்றும்வரை அவர்கள் அவர்களை வனாந்தர எல்லை மட்டும் துரத்தி, அவர்களைக் கொன்றும் போட்டார்கள்.

And it came to pass that Gidgiddoni commanded that his armies should pursue them as far as the borders of the wilderness, and that they should not spare any that should fall into their hands by the way; and thus they did pursue them and did slay them, to the borders of the wilderness, even until they had fulfilled the commandment of Gidgiddoni.

14 அந்தப்படியே, நின்று தைரியத்தோடே சண்டையிட்ட கித்தியானியும் ஓடஓட துரத்தப்பட்டான். அவன் அதிக யுத்தம் பண்ணி களைத்துப்போயிருந்ததால் அவன் முந்தப்பட்டு, வெட்டப்பட்டான். இதுவே திருடனாகிய கித்தியானியின் முடிவாயிருந்தது.

And it came to pass that Giddianhi, who had stood and fought with boldness, was pursued as he fled; and being weary because of his much fighting he was overtaken and slain. And thus was the end of Giddianhi the robber.

15 அந்தப்படியே, நேபியர்களின் சேனைகள் மறுபடியும் தங்களுடைய பாதுகாப்பு ஸ்தலத்திற்குத் திரும்பினார்கள். அந்தப்படியே, இந்த பத்தொன்பதாவது வருஷமும் கடந்து போயிற்று. திருடர்கள் மறுபடியும் யுத்தத்திற்கு வரவில்லை; அவர்கள் இருபதாவது வருஷத்திலும் மறுபடியும் வரவில்லை.

And it came to pass that the armies of the Nephites did return again to their place of security. And it came to pass that this nineteenth year did pass away, and the robbers did not come again to battle; neither did they come again in the twentieth year.

16 இருபத்தோராம் வருஷத்தில், அவர்கள் யுத்தத்திற்கு வராமல், நேபியின் ஜனங்களைச் சுற்றி எல்லா பக்கங்களிலும் முற்றுகையிட வந்தார்கள்; நேபியின் ஜனங்களை அவர்களுடைய நிலங்களுக்குச் செல்லாமல் தடுப்பதாலும், எல்லா பக்கங்களிலிருந்தும் அவர்களைச் சூழ்வதாலும், அவர்களுடைய எல்லா வெளிப்புற சிலாக்கியங்களிலிருந்தும் அவர்களைத் தடுப்பதாலும், தங்களுடைய விருப்பங்களின்படியே அவர்களை விட்டுக்கொடுக்கச் செய்யமுடியும், என்று எண்ணினார்கள்.

And in the twenty and first year they did not come up to battle, but they came up on all sides to lay siege round about the people of Nephi; for they did suppose that if they should cut off the people of Nephi from their lands, and should hem them in on every side, and if they should cut them off from all their outward privileges, that they could cause them to yield themselves up according to their wishes.

17 இப்பொழுது இவர்கள் தங்களுக்கென்று செம்னாரியா என்ற பெயர் கொண்ட வேறொரு தலைவனை நியமித்துக் கொண்டார்கள்; ஆதலால் செம்னாரியாதான் இந்த முற்றுகையை செய்யப்பண்ணினான்.

Now they had appointed unto themselves another leader, whose name was Zemnarihah; therefore it was Zemnarihah that did cause that this siege should take place.

18 ஆனால் இதோ, இது நேபியர்களுக்கு அனுகூலமாய் அமைந்தது; அவர்கள் அதிக உணவை சேமித்து வைத்திருந்ததால், நேபியர்களின் மேல் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தும்படியாக, திருடர்களால் நீண்ட காலம் போதுமான முற்றுகை பண்ண முடியாமற் போயிற்று.

But behold, this was an advantage to the Nephites; for it was impossible for the robbers to lay siege sufficiently long to have any effect upon the Nephites, because of their much provision which they had laid up in store,

19 திருடர்களுள்ளோ உணவுத் தட்டுப்பாடு இருந்ததால், இதோ, ஜீவியத்திற்கென்று அவர்களிடம் மாமிசமேயல்லாமல் வேறொன்றும் இல்லை, அந்த மாமிசத்தை அவர்கள் வனாந்தரத்தில் பெற்றார்கள்.

And because of the scantiness of provisions among the robbers; for behold, they had nothing save it were meat for their subsistence, which meat they did obtain in the wilderness;

20 அந்தப்படியே, வேட்டைக்குரிய வனவிலங்குகள் வனாந்தரத்தில் கிடைக்க அரிதாய் இருந்ததால், திருடர்கள் அழிந்து போக இருந்தார்கள்.

And it came to pass that the wild game became scarce in the wilderness insomuch that the robbers were about to perish with hunger.

21 நேபியர்கள் இரவும் பகலும் தொடர்ந்து அணிவ-
குத்துப்போய் அவர்களுடைய சேனைகள்மேல் வி-
ழுந்து அவர்களை ஆயிரக்கணக்கிலும், பதினாயி-
ரக்கணக்கிலும் வெட்டிப் போட்டார்கள்.

And the Nephites were continually marching out by day and by night, and falling upon their armies, and cutting them off by thousands and by tens of thousands.

22 இப்படியாக இரவும் பகலுமாக தங்கள் மேல் வந்த
அந்த மகா அழிவினிமித்தம், தங்களின் திட்டத்-
தைக் கைவிடவேண்டுமென்பது செம்னாரியா
ஜனங்களின் வாஞ்சையானது.

And thus it became the desire of the people of Zemnarihah to withdraw from their design, because of the great destruction which came upon them by night and by day.

23 அந்தப்படியே, அவர்கள் முற்றுகையிடுவதிலி-
ருந்து பின்வாங்கி, வடதேசத்தின் தூரப் பகுதிக-
ளுக்குப் போகவேண்டுமென தன் ஜனங்களுக்கு
செம்னாரியா கட்டளையிட்டான்.

And it came to pass that Zemnarihah did give command unto his people that they should withdraw themselves from the siege, and march into the furthermost parts of the land northward.

24 இப்பொழுது கித்கித்தோனி அவர்களுடைய திட்-
டத்தை தெரிந்தவனாய், உணவுப்பற்றாக்குறையி-
னிமித்தமும், அவர்களுள் செய்யப்பட்ட அந்தப்
பெரும் சங்காரத்தினிமித்தமுமான அவர்களுடைய
பெலவீனத்தை அறிந்தவனாய், இரவு நேரத்தில்
தன் சேனைகளை அனுப்பி அவர்கள் பின்வாங்-
கும் வழியில் தன் சேனைகளை நிறுத்தினான்.

And now, Gidgiddoni being aware of their design, and knowing of their weakness because of the want of food, and the great slaughter which had been made among them, therefore he did send out his armies in the night-time, and did cut off the way of their retreat, and did place his armies in the way of their retreat.

25 அவர்கள் இரவு வேளையில் இதைச் செய்துவிட்-
டு, திருடர்களையும் கடந்து அணிவகுத்துப்போன-
தால், மறுநாளில் திருடர்கள் தங்கள் அணிவகுப்-
பைத் துவங்கியபோது, அவர்கள் முன்னாலும்
பின்னாலுமாக நேபியின் சேனைகளால் சந்திக்கப்-
பட்டார்கள்.

And this did they do in the night-time, and got on their march beyond the robbers, so that on the morrow, when the robbers began their march, they were met by the armies of the Nephites both in their front and in their rear.

26 தெற்கில் இருந்த திருடர்களும், அவர்களுடைய
பாதுகாப்பிடங்களில் வெட்டப்பட்டார்கள். இவை
யாவும் கித்கித்தோனியின் கட்டளையால் நடப்பிக்-
கப்பட்டது.

And the robbers who were on the south were also cut off in their places of retreat. And all these things were done by command of Gidgiddoni.

27 அங்கே பல்லாயிரக்கணக்கானோர் தங்களையே
கைதிகளாக நேபியர்களிடத்தில் ஒப்புக்கொடுத்-
தார்கள், அவர்களில் மீதியானோர் கொல்லப்பட்-
டார்கள்.

And there were many thousands who did yield themselves up prisoners unto the Nephites, and the remainder of them were slain.

28 அவர்களுடைய தலைவனாகிய செம்னாரியா பி-
டிக்கப்பட்டு அவன் மரித்துப்போகும் மட்டும் ஒரு
மரத்தில் தொங்கவிடப்பட்டான். அவர்கள் அவன்
மரித்துப்போகுமட்டும் அவனைத் தொங்கவிட்ட
பின்னர், அந்த மரத்தை பூமியில் சாய்த்து உரத்த
சத்தமாய் சொன்னதாவது:

And their leader, Zemnarihah, was taken and hanged upon a tree, yea, even upon the top thereof until he was dead. And when they had hanged him until he was dead they did fell the tree to the earth, and did cry with a loud voice, saying:

29 கர்த்தர் தமது ஜனத்தை நீதியோடும், பரிசுத்த இரு-
தயத்தோடும் காப்பாராக. வல்லமையினிமித்தமும்,
இரகசிய சங்கங்களினிமித்தமும் அவர்களைக்
கொல்ல நாடுகிற யாவரும் இந்த மனுஷன் பூமியில்
விழத் தள்ளப்பட்டதைப் போலவே பூமியிலே வி-
ழத்தள்ளுவாராக.

May the Lord preserve his people in righteousness and in holiness of heart, that they may cause to be felled to the earth all who shall seek to slay them because of power and secret combinations, even as this man hath been felled to the earth.

30 இந்த ஜனங்கள் பாதுகாப்புக்கென்று தங்களின் தேவனுடைய நாமத்தைக் கூப்பிடும் காலம் வரைக்குமாய், ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனுமானவர் இவர்களை நீதியிலே காப்பாராக என, அவர்கள் களிகூர்ந்து, ஏகசத்தமாய் மறுபடியும் கூக்குரலிட்டார்கள்.

And they did rejoice and cry again with one voice, saying: May the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob, protect this people in righteousness, so long as they shall call on the name of their God for protection.

31 அந்தப்படியே, அவர்கள் யாவரும் தேவன் தங்களைத் தங்களுடைய பகைவரின் கைகளுக்குள் விழாமல் காப்பாற்றியதில், அவர் செய்த அந்த மகத்துவமான காரியத்தினிமித்தம், கூடிவந்து அவரை ஏகமாய்ப் பாடித் துதித்தார்கள்.

And it came to pass that they did break forth, all as one, in singing, and praising their God for the great thing which he had done for them, in preserving them from falling into the hands of their enemies.

32 ஆம், அவர்கள் கூக்குரலிட்டு அதி உன்னத தேவனுக்கு ஓசன்னா என்றார்கள். மகா உன்னதமான தேவனாகிய, சர்வ வல்ல தேவனாகிய கர்த்தரின் நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக, என்று கூக்குரலிட்டார்கள்.

Yea, they did cry: Hosanna to the Most High God. And they did cry: Blessed be the name of the Lord God Almighty, the Most High God.

33 தங்களுடைய விரோதிகளின் கைகளுக்குத் தங்களைத் தப்புவித்த தேவனுடைய பெரிதான கிருபையினிமித்தம் அவர்கள் இருதயம் சந்தோஷத்தால் பொங்கி அதிகம் கண்ணீர் வடித்தார்கள்; தங்களுடைய மனந்திரும்புதலினாலும், தங்களுடைய மனத்தாழ்ச்சியினிமித்தமுமே, அவர்கள் அந்த என்றுமுள்ள அழிவிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்று அவர்கள் அறிவார்கள்.

And their hearts were swollen with joy, unto the gushing out of many tears, because of the great goodness of God in delivering them out of the hands of their enemies; and they knew it was because of their repentance and their humility that they had been delivered from an everlasting destruction.

# 3 நேபி 5

1 இப்பொழுதும் இதோ, எல்லா பரிசுத்த தீர்க்கதரிசிக-
ளும் பேசிய வார்த்தைகளைச் சிறிதளவாகிலும்
சந்தேகப்படுகிற ஒரு ஜீவனுள்ள ஆத்துமாகூட நே-
பியின் ஜனங்களெல்லோருக்குள்ளும் இருக்கவில்-
லை; ஏனெனில் அவை நிறைவடைய வேண்டியது
அவசியம், என்று அவர்கள் அறிந்திருந்தார்கள்.
2 தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளின்படியே கொ-
டுக்கப்பட்ட அநேக அறிகுறிகளினிமித்தம், கிறிஸ்-
து வந்திருப்பது அவசியமானது என்று அவர்கள்
அறிந்திருந்தார்கள். ஏற்கனவே சம்பவித்த காரி-
யங்களினிமித்தம் பேசப்பட்டவைகளின்படியே,
எல்லாக் காரியங்களுமே சம்பவிக்கவேண்டியது
அவசியமாயிருக்கிறது, என்று அவர்கள் ஏற்கன-
வே அறிந்திருந்தார்கள்.
3 ஆதலால் அவர்கள் தங்கள் எல்லா பாவங்களை-
யும் தங்கள் அருவருப்புகளையும், தங்கள் வேசித்-
தனங்களையும் விட்டுவிட்டு, தேவனை இராப்பக-
லாய் சகல கருத்தோடும் சேவித்தார்கள்.
4 இப்பொழுதும், அந்தப்படியே, கொல்லப்படாத
ஒருவரும் தப்பித்துப் போகாத வண்ணம், எல்லா
திருடர்களையும் சிறைபிடித்த பின்பு, அவர்கள்
தங்கள் கைதிகளை சிறையில் போட்டு அவர்க-
ளுக்கு தேவ வார்த்தை அறிவிக்கப்படும்படிச் செய்-
தார்கள்; எவ்வளவுபேர் தங்கள் பாவங்களிலிருந்-
து மனந்திரும்பி, இனி ஒருபோதும் கொலை செய்ய-
மாட்டோம் என்று உடன்படிக்கையினுள் பிரவே-
சிக்கிறார்களோ, அவ்வளவு பேரும் சுதந்தரமாக்கப்-
பட்டார்கள்.
5 ஆனால் எவ்வளவுபேர் உடன்படிக்கையினுள்
பிரவேசிக்காமல், அந்த இரகசியக் கொலைகளை
இன்னும் தங்கள் இருதயங்களில் வைத்திருந்தார்-
களோ, ஆம், எவ்வளவுபேர் தங்கள் சகோதரருக்கு
விரோதமாகப் பயமுறுத்துபவர்களாகக் காணப்-
பட்டார்களோ அவ்வளவுபேரும் ஆக்கினைக்குள்-
ளாகத் தீர்க்கப்பட்டு சட்டத்தின்படி தண்டிக்கப்பட்-
டார்கள்.
6 இப்படியாக அதிக துன்மார்க்கமும், அநேகக் கொ-
லைகளும் செய்த, அந்த பொல்லாததும், இரகசிய-
மானதும், அருவருப்புமுள்ள மொத்த சங்கத்துக்-
கும் ஒரு முடிவு கட்டினார்கள்.
7 இப்படியாக இருபத்தி இரண்டாம் வருஷமும்,
இருபத்தி மூன்றாம் வருஷமும், இருபத்தி நான்கும்,
இருபத்தி ஐந்தும் கடந்து போயின; இந்தப்படியே
இருபத்தி ஐந்து வருஷங்களும் கடந்துபோயின.

# 3 Nephi 5

And now behold, there was not a living soul among all the people of the Nephites who did doubt in the least the words of all the holy prophets who had spoken; for they knew that it must needs be that they must be fulfilled.

And they knew that it must be expedient that Christ had come, because of the many signs which had been given, according to the words of the prophets; and because of the things which had come to pass already they knew that it must needs be that all things should come to pass according to that which had been spoken.

Therefore they did forsake all their sins, and their abominations, and their whoredoms, and did serve God with all diligence day and night.

And now it came to pass that when they had taken all the robbers prisoners, insomuch that none did escape who were not slain, they did cast their prisoners into prison, and did cause the word of God to be preached unto them; and as many as would repent of their sins and enter into a covenant that they would murder no more were set at liberty.

But as many as there were who did not enter into a covenant, and who did still continue to have those secret murders in their hearts, yea, as many as were found breathing out threatenings against their brethren were condemned and punished according to the law.

And thus they did put an end to all those wicked, and secret, and abominable combinations, in the which there was so much wickedness, and so many murders committed.

And thus had the twenty and second year passed away, and the twenty and third year also, and the twenty and fourth, and the twenty and fifth; and thus had twenty and five years passed away.

8 அங்கே அநேகக் காரியங்கள் நடந்தேறியது, சில-
ருடைய கண்களுக்கு அவை பெரிதாயும், அற்புத-
மாயுமிருந்திருக்கும்; ஆயினும், அவை யாவும் இந்-
தப் புஸ்தகத்தில் எழுதப்படமுடியாது; ஆம், இருபத்-
தைந்து வருஷங்களில், ஜனங்களுக்குள்ளே சம்ப-
வித்த அநேகத்தில், நூற்றில் ஒரு பகுதியாகிலும்
இப்புஸ்தகம் கொண்டிருக்க முடியாது;

9 ஆனால் இதோ, இந்த ஜனங்களினுடைய நடவ-
டிக்கைகள் அனைத்தையும் கொண்டிருக்கிற பதி-
வேடுகள் உள்ளன. குறுகிய ஆனால் மெய்யான
ஒரு குறிப்பு நேபியினால் கொடுக்கப்பட்டது.

10 ஆதலால் இக்காரியங்களைக் கொண்டு, நேபி-
யின் தகடுகள் என்று அழைக்கப்படுகிற, தகடுக-
ளின் மேல் பதிக்கப்பட்ட, நேபியின் பதிவேட்டின்ப-
டி என் பதிவேட்டைச் செய்திருக்கிறேன்.

11 இதோ, என் சொந்தக் கைகளால் செய்த தகடுக-
ளின் மேலே, இந்த பதிவேட்டைச் செய்கிறேன்.

12 இதோ, ஜனங்களுக்குள்ளே சபையை ஆல்மா ஸ்-
தாபித்த தேசமாகிய, மார்மன் தேசத்தின் பேரிலே
அழைக்கப்பட்டவனாய், நான் மார்மன் என்று
அழைக்கப்படுகிறேன், ஆம், அவர்களுடைய மீறு-
தல்களுக்குப் பிறகு அவர்களுக்குள்ளே ஸ்தாபிக்-
கப்பட்ட முதல் சபை இதுவே.

13 இதோ, தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சீ-
ஷன் நான். அவருடைய ஜனங்கள் நித்திய ஜீ-
வனைப் பெறும்படிக்கே, அவருடைய வார்த்தை-
யைப் பிரசங்கிப்பதற்காக, அவரால் அழைக்கப்-
பட்டிருக்கிறேன்.

14 கடந்து போன, பரிசுத்தவான்களின் ஜெபங்கள்
அவர்களுடைய விசுவாசத்திற்கேற்ப நிறைவேறத்-
தக்கதாக, நடந்தேறிய காரியங்களான இவைக-
ளைக் குறித்து பதிவேட்டை நான் தேவ சித்தத்தின்-
படியே செய்யவேண்டியது அவசியமாயிற்று.

15 ஆம், எருசலேமை விட்டு லேகி வந்த காலம் து-
வங்கி, இந்நாள் வரைக்குமாய் சம்பவித்தவைக-
ளைப்பற்றிய, ஒரு சிறிய பதிவேடு.

16 ஆதலால் எனக்கு முன்னதாக இருந்தவர்களால்
கொடுக்கப்பட்ட விவரங்களிலிருந்து என் நாட்க-
ளின் துவக்கம் வரைக்குமாய் நான் என்னுடைய
பதிவேட்டைச் செய்கிறேன்.

17 பிறகு நான் என் சொந்தக் கண்களால் கண்ட-
வைகளைப்பற்றிய ஒரு பதிவேட்டைச் செய்கி-
றேன்.

18 நான் செய்கிற இப்பதிவேடு நியாயமானதும்
மெய்யானதுமான பதிவேடு என்று நான் அறிந்தி-
ருக்கிறேன்; ஆயினும் எங்களுடைய மொழியின்ப-
டி, அநேக காரியங்களை எங்களால் எழுதக் கூடா-
மற்போகிறது.

And there had many things transpired which, in the eyes of some, would be great and marvelous; nevertheless, they cannot all be written in this book; yea, this book cannot contain even a hundredth part of what was done among so many people in the space of twenty and five years;

But behold there are records which do contain all the proceedings of this people; and a shorter but true account was given by Nephi.

Therefore I have made my record of these things according to the record of Nephi, which was engraven on the plates which were called the plates of Nephi.

And behold, I do make the record on plates which I have made with mine own hands.

And behold, I am called Mormon, being called after the land of Mormon, the land in which Alma did establish the church among the people, yea, the first church which was established among them after their transgression.

Behold, I am a disciple of Jesus Christ, the Son of God. I have been called of him to declare his word among his people, that they might have everlasting life.

And it hath become expedient that I, according to the will of God, that the prayers of those who have gone hence, who were the holy ones, should be fulfilled according to their faith, should make a record of these things which have been done—

Yea, a small record of that which hath taken place from the time that Lehi left Jerusalem, even down until the present time.

Therefore I do make my record from the accounts which have been given by those who were before me, until the commencement of my day;

And then I do make a record of the things which I have seen with mine own eyes.

And I know the record which I make to be a just and a true record; nevertheless there are many things which, according to our language, we are not able to write.

19 இப்பொழுது, நான் என்னைக் குறித்த எனது பேச்சை நிறுத்திவிட்டு, எனக்கு முன் நடந்தவைகளைப்பற்றிய என் குறிப்பைக் கொடுக்கப்போகிறேன்.

And now I make an end of my saying, which is of myself, and proceed to give my account of the things which have been before me.

20 நானே மார்மன். நான் லேகியின் சுத்தமான சந்ததி. நான் என் தேவனையும் என் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவையும் ஸ்தோத்திரிக்க முகாந்தரமுண்டு, ஏனெனில் அவர் எங்கள் பிதாக்களை எருசலேம் தேசத்தைவிட்டு கூட்டிவந்தார் (அவரும் அவர் அத்தேசத்திலிருந்து கூட்டிவந்தவர்களுமே தவிர வேறொருவரும் இதை அறியார்) அவர் எனக்கும், என் ஜனத்திற்கும், எங்கள் ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கேதுவான அதிக ஞானத்தைக் கொடுத்திருக்கிறார்.

I am Mormon, and a pure descendant of Lehi. I have reason to bless my God and my Savior Jesus Christ, that he brought our fathers out of the land of Jerusalem, (and no one knew it save it were himself and those whom he brought out of that land) and that he hath given me and my people so much knowledge unto the salvation of our souls.

21 நிச்சயமாகவே, அவர் யாக்கோபின் வீட்டாரை ஆசீர்வதித்து, யோசேப்பின் சந்ததியாருக்கு இரக்கமுள்ளவராய் இருந்திருக்கிறார்.

Surely he hath blessed the house of Jacob, and hath been merciful unto the seed of Joseph.

22 லேகியின் பிள்ளைகள் எவ்வளவாய் தமது கட்டளைகளைக் கைக்கொண்டிருக்கிறார்களோ அவ்வளவாய் அவர் அவர்களை ஆசீர்வதித்து, தம்முடைய வார்த்தையின்படியே அவர்களை விருத்தியடையப் பண்ணியிருக்கிறார்.

And insomuch as the children of Lehi have kept his commandments he hath blessed them and prospered them according to his word.

23 ஆம், நிச்சயமாகவே அவர் யோசேப்பின் சந்ததியின் மீதியானோரை மறுபடியும் அவர்களின் தேவனாகிய கர்த்தருடைய ஞானத்திற்குக் கொண்டுவருவார்.

Yea, and surely shall he again bring a remnant of the seed of Joseph to the knowledge of the Lord their God.

24 கர்த்தர் ஜீவிக்கிற நிச்சயம் போலவே, பூமியின் பரப்பின் மீதெங்கும் சிதறிக்கிடக்கிற யாக்கோபின் சந்ததியின் மீதியானோர் அனைவரையும் அவர் பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டிச் சேர்ப்பார்.

And as surely as the Lord liveth, will he gather in from the four quarters of the earth all the remnant of the seed of Jacob, who are scattered abroad upon all the face of the earth.

25 அவர் யாக்கோபின் வீட்டார் எல்லோருடனும் உடன்படிக்கை செய்துகொண்டதுபோலவே, அவர் யாக்கோபின் வீட்டாரோடு செய்துகொண்ட உடன்படிக்கை குறித்த ஞானத்துக்கு யாக்கோபின் வீட்டார் எல்லோரையும் திரும்பக் கொண்டுவரும்படியாக, யாக்கோபின் வீட்டாரோடு அவர் செய்து கொண்ட உடன்படிக்கை, அவருடைய ஏற்ற காலத்திலே நிறைவேறும்.

And as he hath covenanted with all the house of Jacob, even so shall the covenant wherewith he hath covenanted with the house of Jacob be fulfilled in his own due time, unto the restoring all the house of Jacob unto the knowledge of the covenant that he hath covenanted with them.

26 அப்பொழுது அவர்கள் தேவகுமாரனும், தங்கள் மீட்பருமான, இயேசு கிறிஸ்துவை அறிவார்கள். அப்பொழுது அவர்கள் தாங்கள் எங்கிருந்து சிதறடிக்கப்பட்டுப் போனார்களோ அங்கேயே, தங்கள் சொந்த தேசங்களுக்கே, பூமியின் நான்கு திசைகளிலிருந்தும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள், ஆம், கர்த்தர் ஜீவிக்குமளவும் அது அப்படியே சம்பவிக்கும். ஆமென்.

And then shall they know their Redeemer, who is Jesus Christ, the Son of God; and then shall they be gathered in from the four quarters of the earth unto their own lands, from whence they have been dispersed; yea, as the Lord liveth so shall it be. Amen.

# 3 நேபி 6

1 இப்பொழுதும், அந்தப்படியே, இருபத்தி ஆறாம்
வருஷத்தில் நேபியர்களின் ஜனங்கள் எல்லோரும்,
ஒவ்வொரு மனுஷனும் தன் குடும்பத்தையும், தன்
மந்தைகளையும், குதிரைகளையும், தன்தன் கால்-
நடைகளையும், தங்களுக்குச் சொந்தமாயிருந்த
சகல பொருட்களையும் எடுத்துக் கொண்டு தங்கள்
சொந்த தேசங்களுக்குத் திரும்பினார்கள்.
2 அந்தப்படியே, அவர்கள் தங்களுடைய எல்லா
உணவுகளையும் சாப்பிடாதிருந்ததினால், அவர்-
கள் தாங்கள் சாப்பிடாமல் வைத்திருந்த தங்களின்
எல்லாவிதமான தானியங்களையும், தங்கள்
பொன்னையும், தங்கள் வெள்ளியையும், சகல வி-
லையுயர்ந்த பொருட்களையும், தங்களோடு எடுத்-
துக்கொண்டு, வடக்கிலும், தெற்கிலும், வடதேசத்தி-
லும், தென்தேசத்திலும் உள்ள தங்களுடைய
சொந்த தேசங்களுக்கும், தங்களுடைய ஆஸ்திக-
ளுக்கும் திரும்பினார்கள்.
3 அவர்கள் லாமானிராய் இருக்க வாஞ்சித்து, தே-
சத்திலே சமாதானத்தைக் கைக்கொள்ளும்படியாக
ஓர் உடன்படிக்கையினுள் பிரவேசித்த, அந்தத் திரு-
டர்களுக்கு, தங்கள் பிரயாசத்தினால் ஜீவித்திருக்க,
அவர்களுடைய எண்ணிக்கைகளுக்குத் தக்கதாக,
பெற்றுக்கொள்ளும்படிக்கு, நிலங்களை வழங்கி-
னார்கள். இப்படியாக அவர்கள் தேசமெங்கிலும்
சமாதானத்தை நிலைவரப்பண்ணினார்கள்.
4 அவர்கள் மறுபடியும் விருத்தியடையவும், பெ-
லன்கொள்ளவும் துவங்கினார்கள், இருபத்தி
ஆறாம் மற்றும் ஏழாம் வருஷங்கள் கடந்துபோ-
யின. தேசத்திலே பெரும் ஒழுங்கு இருந்தது. அவர்-
கள் தங்களுடைய சட்டங்களை சமத்துவத்திற்கும்,
நியாயத்திற்கும் ஏற்றதாய் இருக்கும்படி இயற்றி-
னார்கள்.
5 இப்பொழுது அவர்கள் மீறுதலினுள் விழுவதைத்
தவிர, ஜனங்கள் தொடர்ந்து விருத்தியடைவதற்-
குத் தடையாக தேசம் முழுவதிலும் வேறொன்று-
மில்லை.
6 இப்பொழுதும், கித்கித்தோனியும், நியாயாதிபதி-
யாகிய லாசோனியஸும், தலைவர்களாக நியமிக்-
கப்பட்டவர்களுமே, இந்தப் பெரும் சமாதானத்தை
தேசத்தில் நிலைவரப்பண்ணினார்கள்.
7 அந்தப்படியே, அங்கே அநேக பட்டணங்கள் புதி-
தாகக் கட்டப்பட்டன, அங்கே அநேக பழைய பட்ட-
ணங்கள் பழுது நீக்கப்பட்டன.
8 பட்டணத்திலிருந்து பட்டணத்திற்கும், தேசத்திலி-
ருந்து தேசத்திற்கும், ஓரிடத்திலிருந்து இன்னோரி-
டத்திற்கும் போகிற, அநேக நெடுஞ்சாலைகள் போ-
டப்பட்டன, சாலைகள் பல அமைக்கப்பட்டன.
9 இப்படியாக, இருபத்தி எட்டாம் வருஷமும் கடந்து
போயிற்று. ஜனங்கள் தொடர்ந்து சமாதானத்தைப்
பெற்றார்கள்.

# 3 Nephi 6

And now it came to pass that the people of the Nephites did all return to their own lands in the twenty and sixth year, every man, with his family, his flocks and his herds, his horses and his cattle, and all things whatsoever did belong unto them.

And it came to pass that they had not eaten up all their provisions; therefore they did take with them all that they had not devoured, of all their grain of every kind, and their gold, and their silver, and all their precious things, and they did return to their own lands and their possessions, both on the north and on the south, both on the land northward and on the land southward.

And they granted unto those robbers who had entered into a covenant to keep the peace of the land, who were desirous to remain Lamanites, lands, according to their numbers, that they might have, with their labors, wherewith to subsist upon; and thus they did establish peace in all the land.

And they began again to prosper and to wax great; and the twenty and sixth and seventh years passed away, and there was great order in the land; and they had formed their laws according to equity and justice.

And now there was nothing in all the land to hinder the people from prospering continually, except they should fall into transgression.

And now it was Gidgiddoni, and the judge, Lachoneus, and those who had been appointed leaders, who had established this great peace in the land.

And it came to pass that there were many cities built anew, and there were many old cities repaired.

And there were many highways cast up, and many roads made, which led from city to city, and from land to land, and from place to place.

And thus passed away the twenty and eighth year, and the people had continual peace.

10 ஆனால், அந்தப்படியே, இருபத்தி ஒன்பதாம்
வருஷத்தில் ஜனங்களுக்குள்ளே சில வாக்குவா-
தங்கள் இருக்கத் துவங்கியது, பெரும் துன்புறுத்-
தல்களைச் செய்யும் அளவிற்கு, சிலர் தங்களு-
டைய மிகுந்த பெரும் ஐஸ்வரியங்களினிமித்தம்
பெருமையாலும் மேட்டிமையாலும் உயர்த்தப்பட்-
டார்கள்.

But it came to pass in the twenty and ninth year there began to be some disputings among the people; and some were lifted up unto pride and boastings because of their exceedingly great riches, yea, even unto great persecutions;

11 ஏனெனில் தேசத்திலே அநேக வியாபாரிகளும்,
அநேக நியாயசாஸ்திரிகளும், அநேக அதிகாரிக-
ளுமிருந்தார்கள்.

For there were many merchants in the land, and also many lawyers, and many officers.

12 ஜனங்கள் பதவிகளினாலும், அவர்களுடைய
ஐஸ்வரியங்களின்படியேயும், கல்வி கற்பதற்கான
அவர்களின் வாய்ப்புகளின்படியேயும், வேறுபடுத்-
தப்பட்டனர். ஆம், சிலர் தங்களுடைய வறுமையி-
னிமித்தம் அறியாமையிலிருந்தார்கள். மற்றவர்க-
ளோ தங்களுடைய ஐஸ்வரியங்களினிமித்தம்
அதிகக் கல்வியைப் பெற்றனர்.

And the people began to be distinguished by ranks, according to their riches and their chances for learning; yea, some were ignorant because of their poverty, and others did receive great learning because of their riches.

13 சிலர் பெருமையில் உயர்த்தப்பட்டிருந்தார்கள்.
மற்றவர்களோ மிகவும் தாழ்மையாய் இருந்தார்கள்
சிலர் நிந்தைக்கு நிந்தையை சரிக்கட்டினார்கள்.
மற்றவர்களோ நிந்தைகளையும், துன்புறுத்தல்க-
ளையும், எல்லாவிதமான உபத்திரவங்களையும்
பெற்றும், எதிர்த்து நிந்திக்காமல், தேவனுக்கு முன்-
பாக தாழ்மையாகவும், பச்சாதாபமுள்ளவர்களாக-
வும் இருந்தார்கள்.

Some were lifted up in pride, and others were exceedingly humble; some did return railing for railing, while others would receive railing and persecution and all manner of afflictions, and would not turn and revile again, but were humble and penitent before God.

14 சபை உடைந்துபோகுமளவும் தேசம் எங்கிலும்
பெரும் சமநிலையின்மை ஏற்படத் துவங்கியது,
ஆம், முப்பதாவது வருஷத்தில் சபையானது,
மெய்யான விசுவாசத்திற்கு மனமாறிய லாமானிய-
ரில் சிலர் மத்தியிலிருந்ததைத் தவிர தேசம் எங்கி-
லும் உடைந்துபோயிற்று. அவர்கள் திடமனதாயும்,
உறுதியாயும், அசைக்கமுடியாதவர்களாயும், கட்ட-
ளைகளைச் சகல கருத்தோடும் கைக்கொள்ள மன-
துள்ளவர்களாயும் இருந்ததால், அதிலிருந்து வில-
கவில்லை.

And thus there became a great inequality in all the land, insomuch that the church began to be broken up; yea, insomuch that in the thirtieth year the church was broken up in all the land save it were among a few of the Lamanites who were converted unto the true faith; and they would not depart from it, for they were firm, and steadfast, and immovable, willing with all diligence to keep the commandments of the Lord.

15 இப்பொழுது ஜனங்களின் இந்த அக்கிரமத்திற்-
கான காரணம் இதுவே, ஜனங்களை எல்லாவித-
மான அக்கிரமத்தை செய்யத் தூண்டவும், பெரு-
மையினால் அவர்களை இறுமாப்படையச் செய்ய-
வும், வல்லமை, அதிகாரம், ஐஸ்வரியம், மற்றும்
உலகத்தின் வீணானவைகளைத் தேடும்படி, அவர்-
களைத் தூண்டிவிடவும் சாத்தான் பெரும் வல்ல-
மை கொண்டிருந்தான்.

Now the cause of this iniquity of the people was this—Satan had great power, unto the stirring up of the people to do all manner of iniquity, and to the puffing them up with pride, tempting them to seek for power, and authority, and riches, and the vain things of the world.

16 இப்படியாக எல்லாவிதமான அக்கிரமங்களை-
யும் செய்யும்படி ஜனங்களுடைய இருதயங்களை
சாத்தான் நடத்திச் சென்றான். ஆதலால் அவர்கள்
சமாதானத்தை சில வருஷங்கள் மட்டுமே அனுப-
வித்தார்கள்.

And thus Satan did lead away the hearts of the people to do all manner of iniquity; therefore they had enjoyed peace but a few years.

17 இப்படியாக முப்பதாவது வருஷத் துவக்கத்திலே, ஜனங்களை தான் எவ்விடத்திற்குத் தூக்கிச் செல்லவேண்டுமென்றும், அவர்கள் எத்தகைய அக்கிரமத்தைச் செய்யவேண்டுமென்றும், பிசாசு தான் விரும்புகிற பிரகாரம் அவனுடைய தூண்டுதல்களால் அநேக காலமளவும் அவர்களை வழிநடத்தும்படியாக ஒப்படைக்கப்பட்டு, இப்படியாக இந்த முப்பதாவது வருஷத் துவக்கத்திலே, அவர்கள் கொடிய துன்மார்க்க நிலையிலே இருந்தார்கள்.

And thus, in the commencement of the thirtieth year—the people having been delivered up for the space of a long time to be carried about by the temptations of the devil whithersoever he desired to carry them, and to do whatsoever iniquity he desired they should—and thus in the commencement of this, the thirtieth year, they were in a state of awful wickedness.

18 இப்பொழுதும், அவர்கள் அறியாமையில் பாவம் செய்யவில்லை. ஏனெனில் அவர்கள் தங்களைக் குறித்த தேவ சித்தத்தை அறிந்திருந்தார்கள். ஏனெனில் அது அவர்களுக்குப் போதிக்கப்பட்டிருந்தது. ஆதலால் அவர்கள் தேவனுக்கு விரோதமாய் வேண்டுமென்றே கலகம் பண்ணினார்கள்.

Now they did not sin ignorantly, for they knew the will of God concerning them, for it had been taught unto them; therefore they did wilfully rebel against God.

19 இப்பொழுதும் லாசோனியஸின் குமாரனாகிய, லாசோனியஸின் காலங்களிலே இது சம்பவித்தது. ஏனெனில் லாசோனியஸ் தன் தகப்பனின் ஆசனத்தில் அமர்ந்து, அந்த வருஷத்தில் ஜனத்தை ஆட்சி செய்தான்.

And now it was in the days of Lachoneus, the son of Lachoneus, for Lachoneus did fill the seat of his father and did govern the people that year.

20 மனுஷர் பரலோகத்திலிருந்து ஏவப்படத்துவங்கி, தேசமெங்கிலும் ஜனங்களுக்குள் நின்று, ஜனங்களுடைய பாவங்களையும், அக்கிரமங்களையும் குறித்து தைரியமாய்ப் பிரசங்கம்பண்ணி, சாட்சி பகரவும், தமது ஜனத்திற்காக கர்த்தர் செய்யவிருக்கிற மீட்பையும் அல்லது வேறு வார்த்தைகளிலெனில் கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலைக் குறித்து அவர்களுக்கு சாட்சி பகரவும் அனுப்பப்பட்டார்கள். அவர்கள் அவருடைய மரணத்தைக் குறித்தும், பாடுகளைக் குறித்தும் தைரியமாய் சாட்சி கொடுத்தார்கள்.

And there began to be men inspired from heaven and sent forth, standing among the people in all the land, preaching and testifying boldly of the sins and iniquities of the people, and testifying unto them concerning the redemption which the Lord would make for his people, or in other words, the resurrection of Christ; and they did testify boldly of his death and sufferings.

21 இப்பொழுது இக்காரியங்களைக் குறித்து சாட்சி கொடுத்தவர்களினிமித்தம், ஜனங்களில் அநேகர் மிகவும் கோபம் கொண்டார்கள். கோபப்பட்டவர்கள் பெரும்பாலானோர் பிரதான நியாயாதிபதிகளாயும், பிரதான ஆசாரியர்களாயும், நியாயசாஸ்திரிகளாயும் இருந்தவர்கள். ஆம், இக்காரியங்களைக் குறித்து சாட்சி பகர்ந்தவர்களோடு நியாயசாஸ்திரிகளாக இருந்த அனைவரும் கோபம் கொண்டார்கள்.

Now there were many of the people who were exceedingly angry because of those who testified of these things; and those who were angry were chiefly the chief judges, and they who had been high priests and lawyers; yea, all those who were lawyers were angry with those who testified of these things.

22 இப்பொழுதும் தேசத்தின் விசாரணைக்காரனால் அவர்களின் ஆக்கினைத்தீர்ப்பு ஒப்பமிடப்படாவிடில், யாரையும் சாவுக்கேதுவாய் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க நியாயசாஸ்திரிக்கோ, நியாயாதிபதிக்கோ, பிரதான ஆசாரியனுக்கோ அதிகாரமில்லை.

Now there was no lawyer nor judge nor high priest that could have power to condemn any one to death save their condemnation was signed by the governor of the land.

23 இப்பொழுதும் கிறிஸ்துவைக் குறித்த காரியங்களைப்பற்றி தைரியமாய் சாட்சி சொன்னவர்களில் அநேகர், நியாயாதிபதிகளால் பிடிக்கப்பட்டு, இரகசியமாய் சாகடிக்கப்பட்டார்கள். அவர்கள் மரித்துப்போன பிறகும், அவர்களின் மரணச் செய்தி தேசத்தின் விசாரணைக்காரனுக்கு எட்டவில்லை.

Now there were many of those who testified of the things pertaining to Christ who testified boldly, who were taken and put to death secretly by the judges, that the knowledge of their death came not unto the governor of the land until after their death.

24 இப்பொழுதும் இதோ, தேசத்தின் விசாரணைக்கா-
ரனிடத்திலிருந்து அதிகாரம் பெற்ற பிறகே, எந்த
மனுஷனும் மரணத்திற்குள்ளாக்கப்படவேண்டு-
மென்ற, தேசத்தின் சட்டங்களுக்கு இது முரண்பா-
டாய் இருந்தது.

Now behold, this was contrary to the laws of the land, that any man should be put to death except they had power from the governor of the land—

25 ஆதலால் சட்டத்தின்படியல்லாமல், கர்த்தரு-
டைய தீர்க்கதரிசிகளை மரணத்திற்கேதுவாய் ஆக்-
கினைக்குள்ளாகத் தீர்த்த இந்த நியாயாதிபதிக-
ளுக்கு விரோதமாக, சாரகெம்லா தேசத்தில் இருக்-
கும் தேசத்தின் விசாரணைக்காரனுக்கு ஒரு முறை-
யீடு வந்தது.

Therefore a complaint came up unto the land of Zarahemla, to the governor of the land, against these judges who had condemned the prophets of the Lord unto death, not according to the law.

26 இப்பொழுது, அந்தப்படியே, அவர்கள் பிடிக்கப்-
பட்டு, அவர்கள் செய்த குற்றத்திற்குத்தக்கதாக,
ஜனங்களால் ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின்படியே,
நியாயந்தீர்க்கப்படும்படிக்கு நியாயாதிபதிக்கு
முன்பாக கொண்டு போகப்பட்டார்கள்.

Now it came to pass that they were taken and brought up before the judge, to be judged of the crime which they had done, according to the law which had been given by the people.

27 இப்பொழுது, அந்தப்படியே, அந்த நியாயாதிபதி-
களுக்கு அநேக நண்பர்களும், இனத்தாரும் இருந்-
தார்கள், ஏறக்குறைய எல்லா நியாயசாஸ்திரிக-
ளும், பிரதான ஆசாரியர்களும், ஆம், மீதியானவர்-
கள், ஏகமாய்க் கூடி, சட்டத்தின்படி விசாரிக்கப்பட-
விருந்த அந்த நியாயாதிபதிகளுடைய இனத்தாரு-
டன் இணைந்தார்கள்.

Now it came to pass that those judges had many friends and kindreds; and the remainder, yea, even almost all the lawyers and the high priests, did gather themselves together, and unite with the kindreds of those judges who were to be tried according to the law.

28 அவர்கள் ஒருவருக்கொருவர் பூர்வகாலத்தின-
ரால் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையினுள்ளாக
பிரவேசித்தார்கள். அந்த உடன்படிக்கை எல்லா நீ-
திக்கும் விரோதமாய்த் திரண்டு எழும்பும்படியாக
பிசாசினால் கொடுக்கப்பட்டும், நிர்வகிக்கப்பட்டும்
வந்தது.

And they did enter into a covenant one with another, yea, even into that covenant which was given by them of old, which covenant was given and administered by the devil, to combine against all righteousness.

29 ஆதலால் அவர்கள் கர்த்தருடைய ஜனங்களுக்கு
விரோதமாகச் சேர்ந்துகொண்டு, அவர்களை
அழிக்கவும், சட்டத்தின்படி நிர்வகிக்கப்படவிருந்த,
நியாயத்தின் பிடியிலிருந்து கொலைக் குற்றம் பு-
ரிந்தோரை விடுவிக்கவும் ஓர் உடன்படிக்கையி-
னுள் பிரவேசித்தார்கள்.

Therefore they did combine against the people of the Lord, and enter into a covenant to destroy them, and to deliver those who were guilty of murder from the grasp of justice, which was about to be administered according to the law.

30 அவர்கள் தங்கள் தேசத்தின் சட்டத்தையும், உரி-
மைகளையும் எதிர்த்து விசாரணைக்காரனை
அழிக்கவும், தேசம் இனி ஒருபோதும் சுதந்திரமாய்
இராமல், ராஜாக்களுக்குக் கீழ்ப்பட்டு இருக்கும்படி-
யாக, தேசத்தின் மேல் ஒரு ராஜாவை ஸ்தாபிக்கவும்
அவர்கள் ஒருவரோடு ஒருவர் உடன்படிக்கை செய்-
துகொண்டார்கள்.

And they did set at defiance the law and the rights of their country; and they did covenant one with another to destroy the governor, and to establish a king over the land, that the land should no more be at liberty but should be subject unto kings.

## 3 நேபி 7

1 இப்பொழுதும் இதோ, அவர்கள் தேசத்தின்மேல் ஒரு
ராஜாவை ஏற்படுத்தவில்லையென்று உங்களுக்-
குக் காட்டுவேன்; ஆனால் இதே வருஷத்தில், ஆம்,
முப்பதாவது வருஷத்தில் அவர்கள் நியாயாசனத்-
தை அழித்து, ஆம், தேசத்தின் பிரதான நியாயாதிப-
தியைக் கொலைபண்ணினார்கள்.
2 ஜனங்கள் ஒருவருக்கு விரோதமாய் ஒருவர் பிரிந்-
து போனார்கள்; தன் குடும்பம் தன் கோத்திரம் மற்-
றும் நண்பர்களுக்குத் தக்கதாக அவர்களில் ஒவ்-
வொருவரும் மற்றவரிடத்திலிருந்து கோத்திரங்க-
ளாகப் பிரிந்தார்கள். இப்படியாக அவர்கள் தேசத்-
தின் ராஜாங்கத்தை அழித்துப் போட்டார்கள்.
3 ஒவ்வொரு கோத்திரமும் தங்கள்மேல் ஒரு பிரதா-
னியையோ அல்லது ஒரு தலைவனையோ நியமித்-
திருந்தது; இப்படியாக அவர்கள் கோத்திரங்களாக-
வும் கோத்திரங்களின் தலைவர்களாகவும் ஆனார்-
கள்.
4 இப்பொழுதும் இதோ, அதிகக் குடும்பத்தையும்,
அநேக கோத்திரங்களையும், நண்பர்களையும்
பெற்றிராத மனுஷன் ஒருவனும் அவர்களுக்குள்-
ளில்லை; ஆதலால் அவர்களின் கோத்திரங்கள் மி-
கவும் பெரிதாயின.
5 இப்பொழுதும் இவையெல்லாம் நிறைவேறிய
பின்பும், அவர்களுக்குள் இதுவரைக்கும் எந்த யுத்-
தங்களும் வந்ததில்லை; இந்த அக்கிரமம் யாவும்
ஜனங்கள் தங்களையே சாத்தானின் வல்லமைக்கு
ஒப்புக்கொடுத்ததினிமித்தம் அவர்கள் மேல் வந்த-
து.
6 தீர்க்கதரிகளைக் கொலை செய்தவர்களுடைய
நண்பர்கள் மற்றும் இனத்தாரின் இரகசிய சங்கத்தி-
னிமித்தம், ராஜாங்கத்தின் ஒழுங்குமுறைகள்
அழிக்கப்பட்டன.
7 அவர்கள் தேசத்திலே பெரும் பிணக்கை ஏற்படுத்-
தியதினிமித்தம் நீதிமான்களில் பெரும்பாலோர்
கிட்டத்தட்ட எல்லோருமே துன்மார்க்கரானார்கள்;
ஆம், அவர்களுக்குள் சில நீதிமான்கள் மாத்திரமி-
ருந்தார்கள்.
8 இப்படியாக ஆறு வருஷங்கள் கடந்துபோவதற்கு
முன்னதாகவே, ஜனங்களில் பெரும்பாலானோர்,
நாய் தான் கக்கினதைத் தின்பது போலவும், அல்ல-
து கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளத் திரும்புவ-
து போலவும், தங்கள் நீதியிலிருந்து புறம்பே போ-
னார்கள்.
9 இப்பொழுதும் ஜனங்கள் மேல் இப்பேர்ப்பட்ட மி-
கப்பெரிய அக்கிரமத்தைக் கொண்டுவந்த இந்த
இரகசிய சங்கம், ஏகமாய்க் கூடி யாக்கோபு என்று
தாங்கள் அழைத்த ஒரு மனுஷனை தங்கள் தலை-
மையாக வைத்தார்கள்.

## 3 Nephi 7

Now behold, I will show unto you that they did not establish a king over the land; but in this same year, yea, the thirtieth year, they did destroy upon the judgment-seat, yea, did murder the chief judge of the land.

And the people were divided one against another; and they did separate one from another into tribes, every man according to his family and his kindred and friends; and thus they did destroy the government of the land.

And every tribe did appoint a chief or a leader over them; and thus they became tribes and leaders of tribes.

Now behold, there was no man among them save he had much family and many kindreds and friends; therefore their tribes became exceedingly great.

Now all this was done, and there were no wars as yet among them; and all this iniquity had come upon the people because they did yield themselves unto the power of Satan.

And the regulations of the government were destroyed, because of the secret combination of the friends and kindreds of those who murdered the prophets.

And they did cause a great contention in the land, insomuch that the more righteous part of the people had nearly all become wicked; yea, there were but few righteous men among them.

And thus six years had not passed away since the more part of the people had turned from their righteousness, like the dog to his vomit, or like the sow to her wallowing in the mire.

Now this secret combination, which had brought so great iniquity upon the people, did gather themselves together, and did place at their head a man whom they did call Jacob;

10 அவர்கள் அவனைத் தங்கள் ராஜா என்று
அழைத்தார்கள்; ஆதலால் அவன் இந்த துன்-
மார்க்க கூட்டத்திற்கு ராஜாவானான். இயேசுவைக்
குறித்து சாட்சி பகர்ந்த தீர்க்கதரிசிகளுக்கு விரோத-
மாக, தன் சத்தத்தை உயர்த்தியவர்களில் இவனும்
பிரதானியானவன்.

And they did call him their king; therefore he became a king over this wicked band; and he was one of the chiefest who had given his voice against the prophets who testified of Jesus.

11 அந்தப்படியே, தங்கள் தலைவன் ஒவ்வொரு-
வனும் தன்தன் கோத்திரத்திற்குத் தக்கதாக தங்கள்
சட்டங்களை ஸ்தாபித்ததிலேயல்லாமல் ஒன்றாக
இணைந்திருந்த ஜனங்களின் கோத்திரங்களைப்
போல அவர்கள் எண்ணிக்கையிலே அதிகமா-
னோராய் இருக்கவில்லை; இருந்தாலும் அவர்கள்
விரோதிகளாயிருந்தார்கள். அவர்கள் நீதியுள்ள
ஜனமாயில்லாதிருந்தும்கூட, ராஜாங்கத்தை அழிக்-
கும்படியான உடன்படிக்கையினுள் பிரவேசித்த-
வர்களுடன், வெறுப்பிலே ஒன்றுபட்டிருந்தார்கள்.

And it came to pass that they were not so strong in number as the tribes of the people, who were united together save it were their leaders did establish their laws, every one according to his tribe; nevertheless they were enemies; notwithstanding they were not a righteous people, yet they were united in the hatred of those who had entered into a covenant to destroy the government.

12 ஆகையால், தங்களுடைய விரோதிகள் தங்க-
ளைக் காட்டிலும் அதிகமானோராய் இருப்பதைக்-
கண்டு, அந்தக் கூட்டத்திற்கு தான் ராஜாவாக
இருப்பதினாலும் யாக்கோபு தன் தேசத்தின் வட-
கோடிக்குப் பறந்தோடி, அங்கே அவர்கள் கலகக்கா-
ரருடன் இணைக்கப்பட்டு (ஏனெனில் அங்கே
அநேக கலகக்காரர் இருப்பார்களென்று அவன்
அவர்களிடம் இச்சகம் பேசி) ஜனங்களின் கோத்தி-
ரங்களோடு போராட போதுமான பெலனுள்ளவர்க-
ளாகும் வரைக்கும் அங்கே தங்களுக்கென்று ஒரு
ராஜ்யத்தைக் கட்டவேண்டுமென்று கட்டளையிட்-
டான், அவர்களும் அப்படியே செய்தார்கள்.

Therefore, Jacob seeing that their enemies were more numerous than they, he being the king of the band, therefore he commanded his people that they should take their flight into the northernmost part of the land, and there build up unto themselves a kingdom, until they were joined by dissenters, (for he flattered them that there would be many dissenters) and they become sufficiently strong to contend with the tribes of the people; and they did so.

13 அவர்களின் அணிவகுப்பு மிகவும் துரிதமாய்
இருந்தபடியாலே, அவர்களைத் தடைசெய்ய முடி-
யாதபடிக்கு ஜனங்களிடத்திலிருந்து வெகுதூர-
மாய்ப் போனார்கள். இப்படியாக முப்பதாவது வரு-
ஷமும் முடிவடைந்தது; நேபியின் ஜனங்களுடைய
விவகாரங்கள் இப்படியாய் இருந்தது.

And so speedy was their march that it could not be impeded until they had gone forth out of the reach of the people. And thus ended the thirtieth year; and thus were the affairs of the people of Nephi.

14 அந்தப்படியே, முப்பத்தோறாம் வருஷத்தில்
அவர்களின் ஒவ்வொரு மனுஷனும் தன்தன் கு-
டும்பம், இனம் மற்றும் நண்பர்களுக்குத் தக்கதாக
கோத்திரங்களாக பிரிந்து போனார்கள்; ஆயினும்
அவர்கள் ஒருவரோடு ஒருவர் யுத்தத்திற்கு போக-
மாட்டோமென்று ஓர் ஒப்பந்தத்திற்குள் பிரவேசித்-
தார்கள். ஆனால் அவர்கள் தங்களுடைய சட்டங்க-
ளின்படியேயும், தங்களுடைய ராஜாங்கத்தின் மு-
றைமையின்படியேயும் இணைந்திருக்கவில்லை.
ஏனெனில் அவைகள் அவர்களுடைய பிரதானிக-
ளாயும் அவர்களுடைய தலைவர்களாயும் இருந்த-
வர்களுடைய எண்ணங்களின்படியே ஏற்படுத்தப்-
பட்டன. அவர்கள் ஒரு கோத்திரம் மற்றொரு கோத்-
திரத்திற்கு விரோதமாக மீறுதல் பண்ணக்கூடா-
தென்று மிக திருத்தமான சட்டங்களை ஏற்படுத்தி-
னார்கள். அதினிமித்தம் அவர்களுக்கு தேசத்தில்
ஓரளவுக்கு சமாதானம் இருந்தது; ஆயினும் அவர்-
களுடைய இருதயங்கள் தங்கள் தேவனாகிய கர்த்-
தரிடத்திலிருந்து திருப்பப்பட்டது. அவர்கள் தீர்க்க-
தரிசிகளைக் கல்லெறிந்து, தங்கள் மத்தியிலிருந்து
அவர்களைப் புறம்பே தள்ளினார்கள்.

And it came to pass in the thirty and first year that they were divided into tribes, every man according to his family, kindred and friends; nevertheless they had come to an agreement that they would not go to war one with another; but they were not united as to their laws, and their manner of government, for they were established according to the minds of those who were their chiefs and their leaders. But they did establish very strict laws that one tribe should not trespass against another, insomuch that in some degree they had peace in the land; nevertheless, their hearts were turned from the Lord their God, and they did stone the prophets and did cast them out from among them.

15 அந்தப்படியே, தூதர்களாலும், கர்த்தருடைய சத்-
தத்தாலும், நேபி சந்திக்கப்பட்டவனாயும், அதனா-
லே தூதர்களைக் கண்டவனாயும், கண்கண்ட சாட்-
சியாயுமிருந்து, கிறிஸ்துவினுடைய ஊழியத்தைக்
குறித்து அவன் அறிந்துகொள்ளும்படியாக
அவனுக்கு வல்லமை கொடுக்கப்பட்டிருந்து, நீதி-
யிலிருந்து உடனே தங்களுடைய துன்மார்க்கத்திற்-
கும், அருவருப்புகளுக்கும் அவர்கள் திரும்பின-
திற்கு கண்கண்ட சாட்சியுமாயிருந்தான்.

And it came to pass that Nephi—having been visited by angels and also the voice of the Lord, therefore having seen angels, and being eye-witness, and having had power given unto him that he might know concerning the ministry of Christ, and also being eye-witness to their quick return from righteousness unto their wickedness and abominations;

16 ஆகவே அவர்களுடைய இருதயங்களின் கடினத்-
தினிமித்தமும், அவர்களுடைய எண்ணங்களின்
குருட்டுத்தன்மையினிமித்தமும், சஞ்சலப்பட்ட-
வனாயும் இருக்கிறபடியால், அதே வருஷத்தில்
அவர்களுக்குள்ளே போய், மனந்திரும்புதலைக் கு-
றித்தும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மே-
லுள்ள விசுவாசத்தின்மூலம், பாவமன்னிப்பைக்
குறித்தும், தைரியமாய் சாட்சி பகரத் துவங்கினான்.

Therefore, being grieved for the hardness of their hearts and the blindness of their minds—went forth among them in that same year, and began to testify, boldly, repentance and remission of sins through faith on the Lord Jesus Christ.

17 அவன் அவர்களுக்கு அநேக காரியங்களைப்
போதித்தான்; அவைகள் எல்லாவற்றையும் எழுத-
முடியாது. அவைகளில் ஒரு பகுதியும் போதுமான-
தாய் இராது. ஆதலால் அவைகள் இப்புஸ்தகத்தில்
எழுதப்படவில்லை. நேபி வல்லமையோடும் மி-
குந்த அதிகாரத்தோடும் போதித்தான்.

And he did minister many things unto them; and all of them cannot be written, and a part of them would not suffice, therefore they are not written in this book. And Nephi did minister with power and with great authority.

18 அந்தப்படியே, அவன் அவர்களைக் காட்டிலும்
அதிக வல்லமையைக் கொண்டிருந்ததால், அவர்-
கள் அவனோடு கோபமாயிருந்தார்கள். ஏனெனில்
தூதர்கள் அவனுக்கு அனுதினமும் பணிவிடை
செய்யத்தக்கதாக, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து-
வின்மேல் அவனுடைய விசுவாசம் பெரிதாய்
இருந்தமையால், அவனுடைய வார்த்தைகளை
அவர்கள் நம்பாமல் இருக்க முடியவில்லை.

And it came to pass that they were angry with him, even because he had greater power than they, for it were not possible that they could disbelieve his words, for so great was his faith on the Lord Jesus Christ that angels did minister unto him daily.

19 அவன் இயேசுவின் நாமத்தில் பிசாசுகளையும்
அசுத்த ஆவிகளையும் துரத்தினான்; ஜனங்களால்
கல்லெறியப்பட்டு, மரித்துப்போன தன் சகோத-
ரனையும்கூட அவன் மரித்தோரிலிருந்து எழுப்பி-
னான்.

And in the name of Jesus did he cast out devils and unclean spirits; and even his brother did he raise from the dead, after he had been stoned and suffered death by the people.

20 ஜனங்கள் அதைக் கண்டு, அதற்கு சாட்சியாயி-
ருந்து, அவனுடைய வல்லமையினிமித்தம் அவன்-
மேல் கோபப்பட்டார்கள்; ஜனங்களின் பார்வையி-
லேயே இயேசுவின் நாமத்தில் அவன் அநேக பல
அற்புதங்களையும் செய்தான்.

And the people saw it, and did witness of it, and were angry with him because of his power; and he did also do many more miracles, in the sight of the people, in the name of Jesus.

21 அந்தப்படியே, முப்பத்தோராம் வருஷம் கடந்து-
போயிற்று, அங்கிருந்த சிலர் மாத்திரம் கர்த்தருக்-
குள்ளாக மனம் மாறினார்கள்; ஆனாலும் மனம்
மாறியவர்கள் அனைவருமே, தாங்கள் விசுவா-
சித்த இயேசு கிறிஸ்துவில் இருந்த தேவ ஆவியா-
லும், வல்லமையாலும், அவர்கள் சந்திக்கப்பட்-
டார்களென்று ஜனங்களுக்கு மெய்யாகவே நடத்-
தையில் தெரிவித்தார்கள்.

And it came to pass that the thirty and first year did pass away, and there were but few who were converted unto the Lord; but as many as were converted did truly signify unto the people that they had been visited by the power and Spirit of God, which was in Jesus Christ, in whom they believed.

22 தங்களிலிருந்து பிசாசுகள் துரத்தப்பட்டவர்க-
ளும், தங்கள் பெலவீனங்களிலிருந்தும் தங்கள்
நோய்களிலிருந்தும் சுகப்பட்டவர்களுமான அநே-
கரும், தாங்கள் தேவ ஆவியினால் ஆட்கொள்ளப்-
பட்டு சுகப்படுத்தப்பட்டோம், என்று ஜனங்களுக்கு
மெய்யாகவே வெளிப்படுத்தினார்கள்; அவர்கள்
அறிகுறிகளையும் காண்பித்து, ஜனங்களுக்குள்-
ளே சில அற்புதங்களையும் செய்தார்கள்.

And as many as had devils cast out from them, and were healed of their sicknesses and their infirmities, did truly manifest unto the people that they had been wrought upon by the Spirit of God, and had been healed; and they did show forth signs also and did do some miracles among the people.

23 இப்படியாக முப்பத்திரண்டாம் வருஷமும் கடந்து
போயிற்று. முப்பத்தி மூன்றாம் வருஷ துவக்கத்தில்
நேபி ஜனங்களிடத்தில் கூக்குரலிட்டான்; அவன்
அவர்களுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்-
னிப்பையும் பிரசங்கித்தான்.

Thus passed away the thirty and second year also. And Nephi did cry unto the people in the commencement of the thirty and third year; and he did preach unto them repentance and remission of sins.

24 இப்பொழுதும் ஜலத்தினால் ஞானஸ்நானம் பெ-
றாமல் எவரும் மனந்திரும்புதலுக்கு கொண்டுவ-
ரப்படவில்லை என்றும், நீங்கள் நினைவுகூர-
வேண்டுமென்று விரும்புகிறேன்.

Now I would have you to remember also, that there were none who were brought unto repentance who were not baptized with water.

25 ஆதலால் மனந்திரும்பி தங்கள் பாவங்களுக்-
கான மன்னிப்பைப் பெற்றோம் என்று தேவனுக்கு
முன்பாகவும், ஜனங்களுக்கு முன்பாகவும் சாட்சி-
யாகவும், சாட்சியமாகவும் இருக்கும் பொருட்டு, தங்-
களிடம் வருகிற யாவரும் தண்ணீரால் ஞானஸ்நா-
னம் பெறும்படியாக, இந்த ஊழியத்துக்கு நேபியால்
மனுஷர் நியமிக்கப்பட்டார்கள்.

Therefore, there were ordained of Nephi, men unto this ministry, that all such as should come unto them should be baptized with water, and this as a witness and a testimony before God, and unto the people, that they had repented and received a remission of their sins.

26 இந்த வருஷத்தின் துவக்கத்திலே அநேகர் மனந்-
திரும்புதலுக்கேதுவாக ஞானஸ்நானம் பெற்றார்-
கள்; இப்படியாக வருஷத்தின் அதிக பகுதி கடந்து-
போயிற்று.

And there were many in the commencement of this year that were baptized unto repentance; and thus the more part of the year did pass away.

## 3 நேபி 8

1 இப்பொழுதும், அந்தப்படியே, எங்களுடைய பதி-
வேட்டின்படியே, எங்களுடைய பதிவேடுகள் மெய்-
யென அறிவோம். ஏனெனில் இதோ, பதிவேடுகளை
வைத்திருந்தவர் நியாயவான் என்று அறிவோம்,
ஏனெனில் அவன் மெய்யாகவே அநேக அற்புதங்க-
ளை இயேசுவின் நாமத்தில் செய்தான்; எந்த மனு-
ஷனும், தன் அக்கிரமத்திலிருந்து முழுவதுமாய்
சுத்திகரிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே அவனால்
இயேசுவின் நாமத்தில் அற்புதங்களைச் செய்யமுடி-
யும்.
2 இப்பொழுதும், அந்தப்படியே, எங்களுடைய கா-
லத்தைக் கணக்கிடுவதில் இந்த மனுஷன் எந்த பி-
ழையையும் செய்திருக்கவில்லையானால், முப்பத்-
தி மூன்றாம் வருஷம் கடந்துபோயிற்று.
3 தேசத்தின் மேல் மூன்று நாட்களளவும் காரிருள்
இருக்கும் என்ற நேரத்துக்காக, லாமானியனான சா-
முவேல் தீர்க்கதரிசியால் கொடுக்கப்பட்ட அறிகு-
றிக்காக, ஜனங்கள் மிகவும் நேர்மையாகத் தேடத்
தொடங்கினார்கள்.
4 அநேக அறிகுறிகள் கொடுக்கப்பட்டிருந்தும்
ஜனங்களுக்குள்ளே அதிக சந்தேகங்களும் விவா-
தங்களும் இருக்கத் துவங்கின.
5 அந்தப்படியே, முப்பத்தி நாலாம் வருஷத்தின் மு-
தலாம் மாதத்தின் நான்காம் நாளன்று தேசம் எங்-
கும் கேள்விப்பட்டிராத ஓர் பெரும் புயல் எழுந்தது.
6 அங்கே பெரிதும் பயங்கரமானதுமான புயல் சீற்-
றம் ஏற்பட்டது; பயங்கரமான இடிமுழக்கம் பூமி மு-
ழுவதையும் இரண்டாகப் பிளந்து போகப்பண்ணு-
வது போல் அதை அசைத்தது.
7 தேசம் முழுவதும் ஒருபோதும் கேள்விப்பட்டிராத
வெளிச்சமிக்க மின்னல்கள் மின்னின.
8 சாரகெம்லா பட்டணம் தீப்பிடித்தது.
9 மரோனி பட்டணம் சமுத்திரத்தின் ஆழங்களிலே-
யே மூழ்கி, அதனுடைய குடிகள் அமிழ்ந்து போ-
னார்கள்.
10 மரோனிகா பட்டணத்தின்மேல் மண் வாரிப் போ-
டப்பட்டது. அதனால் பட்டணம் இருந்த இடத்திலே
ஒரு பெரிய மலை உண்டானது.
11 தென் தேசத்திலே ஏற்பட்ட அழிவு பெரிதும் பயங்-
கரமுமாயிருந்தது.

## 3 Nephi 8

And now it came to pass that according to our record, and we know our record to be true, for behold, it was a just man who did keep the record—for he truly did many miracles in the name of Jesus; and there was not any man who could do a miracle in the name of Jesus save he were cleansed every whit from his iniquity—

And now it came to pass, if there was no mistake made by this man in the reckoning of our time, the thirty and third year had passed away;

And the people began to look with great earnestness for the sign which had been given by the prophet Samuel, the Lamanite, yea, for the time that there should be darkness for the space of three days over the face of the land.

And there began to be great doubtings and disputations among the people, notwithstanding so many signs had been given.

And it came to pass in the thirty and fourth year, in the first month, on the fourth day of the month, there arose a great storm, such an one as never had been known in all the land.

And there was also a great and terrible tempest; and there was terrible thunder, insomuch that it did shake the whole earth as if it was about to divide asunder.

And there were exceedingly sharp lightnings, such as never had been known in all the land.

And the city of Zarahemla did take fire.

And the city of Moroni did sink into the depths of the sea, and the inhabitants thereof were drowned.

And the earth was carried up upon the city of Moronihah, that in the place of the city there became a great mountain.

And there was a great and terrible destruction in the land southward.

12 ஆனால் இதோ, வடதேசத்தில் அழிவு இன்னும் பெரிதும் பயங்கரமுமாயிருந்தது; இதோ, புயல் சீற்றத்தினாலும் சூறாவளியாலும், இடிமுழக்கங்களாலும், மின்னல்களினாலும், பூமியனைத்தின் பயங்கரமான அதிர்ச்சியினிமித்தமும் பூமியே மாறிப்போனது.

But behold, there was a more great and terrible destruction in the land northward; for behold, the whole face of the land was changed, because of the tempest and the whirlwinds, and the thunderings and the lightnings, and the exceedingly great quaking of the whole earth;

13 நெடுஞ்சாலைகள் உடைந்து போயின. சமமான சாலைகள் அழிந்துபோயின. சீரான அநேக இடங்கள் கரடுமுரடாய் மாறின.

And the highways were broken up, and the level roads were spoiled, and many smooth places became rough.

14 அநேக பெரிதும் குறிப்படத்தக்கதுமான பட்டணங்கள் மூழ்கின, அநேகம் எரிந்துபோயின, அதின் கட்டிடங்கள் பூமிக்குள் விழுந்துபோகுமட்டும் அநேகம் அசைக்கப்பட்டன, அதன் குடிகள் சங்கரிக்கப்பட்டார்கள், அந்த இடங்கள் பாழாய்ப்போயின.

And many great and notable cities were sunk, and many were burned, and many were shaken till the buildings thereof had fallen to the earth, and the inhabitants thereof were slain, and the places were left desolate.

15 மீந்துபோன சில பட்டணங்கள் இருந்தன; ஆனால் அவைகளின் சேதம் மிகவும் பெரிதாய் இருந்தது. அவைகளிலிருந்த அநேகர் சங்கரிக்கப்பட்டார்கள்.

And there were some cities which remained; but the damage thereof was exceedingly great, and there were many in them who were slain.

16 சிலர் சுழற்காற்றில் வாரிக்கொண்டு போகப்பட்டனர்; அவர்கள் கொண்டுபோகப்பட்டனர் என்று அறிவார்களேயொழிய அவர்கள் போன இடத்தை ஒருவனும் அறியான்.

And there were some who were carried away in the whirlwind; and whither they went no man knoweth, save they know that they were carried away.

17 இப்படியாக கொந்தளிப்பினாலும், இடிமுழக்கங்களாலும், மின்னல்களாலும், பூமியின் அசைவினாலும் பூமி அனைத்தும் உருமாறிப்போனது.

And thus the face of the whole earth became deformed, because of the tempests, and the thunderings, and the lightnings, and the quaking of the earth.

18 இதோ, கன்மலைகள் இரண்டாகப் பிளந்து, அவைகள் பூமியின் மீதெங்கும் உடைந்து கிடந்தன, அவை தேசத்தின் மீதெங்கும் உடைந்த துண்டுகளாகவும், பிளவடைந்தவைகளாகவும், துகள்களாகவும் காணப்பட்டன.

And behold, the rocks were rent in twain; they were broken up upon the face of the whole earth, insomuch that they were found in broken fragments, and in seams and in cracks, upon all the face of the land.

19 அந்தப்படியே, இதோ, அவை மூன்றுமணி நேரம் வரைக்குமாய் நீண்டிருந்ததால், இடிமுழக்கங்களும் மின்னல்களும், புயலும் கொந்தளிப்பும், பூமியின் அதிர்வுகளும் நின்றபோது, அந்த நேரமானது இன்னும் கூட அதிகம் என்று சிலரால் சொல்லப்பட்டது. ஆயினும் இந்த பெரிதும் பயங்கரமுமான காரியங்கள் எல்லாம் ஏறக்குறைய மூன்று மணிநேரம் சம்பவித்தது, பின்பு இதோ, தேசத்தின் மேல் காரிருள் சூழ்ந்தது.

And it came to pass that when the thunderings, and the lightnings, and the storm, and the tempest, and the quakings of the earth did cease—for behold, they did last for about the space of three hours; and it was said by some that the time was greater; nevertheless, all these great and terrible things were done in about the space of three hours—and then behold, there was darkness upon the face of the land.

20 அந்தப்படியே, தேசத்தின் மேல் பயங்கரமான காரிருள் இருந்ததால், வீழ்ந்துபோகாத அதன் குடிகள் காரிருளின் புகைமண்டலத்தை உணரமுடிந்தது.

And it came to pass that there was thick darkness upon all the face of the land, insomuch that the inhabitants thereof who had not fallen could feel the vapor of darkness;

21 காரிருளினிமித்தம் வெளிச்சமோ, விளக்குகளோ அல்லது தீப்பந்தங்களோ இல்லை; அவர்களுடைய அருமையான காய்ந்துபோன மரங்களைத் தீ மூட்டவும் முடியவில்லை. அதனால் அங்கே எந்த வெளிச்சமும் இல்லை.

22 அங்கே எந்த ஒரு வெளிச்சத்தையோ, தீயையோ, மங்கின ஒளியையோ, சூரியனையோ, சந்திரனையோ, நட்சத்திரங்களையோ, காணமுடியவில்லை, ஏனெனில் தேசத்தின் மேலிருந்த காரிருளின் மூடுபனி அவ்வளவு அதிகமாயிருந்தது.

23 அந்தப்படியே, அது மூன்று நாட்களவும் நீடித்ததால் அங்கே எந்த வெளிச்சமும் காணப்படவில்லை, அங்கே எல்லா ஜனங்களுக்குள்ளாகவும் தொடர்ந்து துக்கிப்பும், புலம்பலும் அழுகையுமிருந்தது; ஆம், அவர்கள் மேல் வந்த காரிருளினிமித்தமும், மிகுந்த அழிவினிமித்தமும் ஜனங்களுடைய முனகல் அதிகமாயிருந்தது.

24 அவர்கள் இந்தப் பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு முன்னதாகவே நாம் மனந்திரும்பியிருக்கவேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய சகோதரர்கள் தப்புவிக்கப்பட்டிருப்பார்கள், அவர்கள் அந்த மகா பட்டணமாகிய சாரகெம்லாவிலே எரிந்து போயிருக்கமாட்டார்கள், என்று கூக்குரலிட்டுச் சொன்னது கேட்கப்பட்டது.

25 மற்றொரு இடத்தில் அவர்கள் கூக்குரலிட்டு துக்கித்துச் சொன்னதாக கேட்கப்பட்டதாவது: நாங்கள் இந்தப் பெரிதும் பயங்கரமுமான நாளுக்கு முன்பாகவே மனந்திரும்பி, தீர்க்கதரிசிகளைக் கொலை செய்து, கல்லெறிந்து, துரத்தாமலிருந்திருந்தால் நம்முடைய தாய்மார்களும், நம்முடைய அழகான குமாரத்திகளும், நம்முடைய பிள்ளைகளும் அந்த மகா நகரமாகிய மரோனிகாவிலே புதைபட்டிருக்காமல் தப்புவிக்கப்பட்டிருப்பார்கள். இப்படியாக ஜனங்களின் புலம்பல்கள் பெரிதும் பயங்கரமுமாயிருந்தன.

And there could be no light, because of the darkness, neither candles, neither torches; neither could there be fire kindled with their fine and exceedingly dry wood, so that there could not be any light at all;

And there was not any light seen, neither fire, nor glimmer, neither the sun, nor the moon, nor the stars, for so great were the mists of darkness which were upon the face of the land.

And it came to pass that it did last for the space of three days that there was no light seen; and there was great mourning and howling and weeping among all the people continually; yea, great were the groanings of the people, because of the darkness and the great destruction which had come upon them.

And in one place they were heard to cry, saying: O that we had repented before this great and terrible day, and then would our brethren have been spared, and they would not have been burned in that great city Zarahemla.

And in another place they were heard to cry and mourn, saying: O that we had repented before this great and terrible day, and had not killed and stoned the prophets, and cast them out; then would our mothers and our fair daughters, and our children have been spared, and not have been buried up in that great city Moronihah. And thus were the howlings of the people great and terrible.

## 3 நேபி 9

1 அந்தப்படியே, இந்த பூமியின் எல்லா குடிகளுக்குள்ளும், இந்த தேசத்தின் மேலெங்கும், ஒரு சத்தம் கேட்கப்பட்டது, அது கூக்குரலிட்டதாவது,

2 இந்த ஜனங்களுக்கு ஐயோ, ஐயோ, ஐயோ; இந்த பூமியெங்கும் உள்ள குடிகள் மனந்திரும்பாவிடில் அவர்களுக்கு ஐயோ; ஏனெனில் என் ஜனத்தின் அழகான குமாரர்களும் குமாரத்திகளும் மடிந்து போனதினிமித்தம், பிசாசு நகைக்கிறான், அவனுடைய தூதர்கள் களிகூருகிறார்கள்; அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தமும், அருவருப்புகளினிமித்தமும் அவர்கள் வீழ்ந்து போனார்கள்.

3 இதோ, அந்த மகா பட்டணமாகிய சாரகெம்லாவையும், அதனுடைய குடிகளையும் நான் அக்கினியாலே சுட்டெரித்தேன்.

4 இதோ, அந்தப் பெரிய பட்டணமாகிய மரோனியை, சமுத்திரத்தின் ஆழங்களில் மூழ்கவும், அதன் குடிகளை அமிழவும் பண்ணினேன்.

5 இதோ, அவர்களுக்கு விரோதமாய், என்னிடத்தில் தீர்க்கதரிசிகள் மற்றும் பரிசுத்தவான்களின் இரத்தம் இனி ஒருபோதும் வராதபடிக்கு, என் முகத்திற்கு முன்பாக அவர்களுடைய அக்கிரமங்களையும் அருவருப்புகளையும் மறைப்பதற்காக, அந்த மகா பட்டணமாகிய மரோனிகாவையும் அதன் குடிகளையும் மண்ணால் மூடினேன்.

6 இதோ கில்காலின் பட்டணத்தை மூழ்கப்பண்ணி, அதனுடைய குடிகள் பூமியின் ஆழங்களில் புதைக்கப்படவும் பண்ணினேன்.

7 ஆம், ஓனிகா பட்டணத்தின் மீதும் அதின் குடிகள் மீதும், மோகூம் பட்டணத்தின் மீதும் அதின் குடிகள் மீதும், எருசலேம் பட்டணத்தின் மீதும் அதின் குடிகள் மீதும், தீர்க்கதரிசிகள் மற்றும் பரிசுத்தவான்களின் இரத்தம் இனி ஒருபோதும் என்னிடத்தில் அவர்களுக்கு விரோதமாக வராமல் இருக்கும்படியாக, அதினிமித்தம் அவர்களுடைய துன்மார்க்கத்தையும் அருவருப்புகளையும் என் முகத்தின் முன்பிருந்து மறைக்கும் பொருட்டு, அவைகளின் இடத்திலே தண்ணீர்களை வரப்பண்ணினேன்.

8 இதோ, காதியாந்தி பட்டணத்தையும், காதியோம்நா பட்டணத்தையும், யாக்கோபு பட்டணத்தையும், கிம்கிம்நோ பட்டணத்தையும், இவை அனைத்தையும், நான் மூழ்கும்படிச் செய்து, அவைகளின் இடத்தில் மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் வரப்பண்ணினேன்; தீர்க்கதரிசிகள் மற்றும் பரிசுத்தவான்களின் இரத்தம் இனி ஒருபோதும் என்னிடத்தில் அவைகளின் குடிகளுக்கு விரோதமாய் வராதபடிக்கு, அவர்களுடைய துன்மார்க்கத்தையும் அருவருப்புகளையும் என் முகத்துக்கு முன்பிருந்து மறைக்கத்தக்கதாக, அவர்களைப் பூமியின் ஆழங்களிலே புதைத்தேன்.

## 3 Nephi 9

And it came to pass that there was a voice heard among all the inhabitants of the earth, upon all the face of this land, crying:

Wo, wo, wo unto this people; wo unto the inhabitants of the whole earth except they shall repent; for the devil laugheth, and his angels rejoice, because of the slain of the fair sons and daughters of my people; and it is because of their iniquity and abominations that they are fallen!

Behold, that great city Zarahemla have I burned with fire, and the inhabitants thereof.

And behold, that great city Moroni have I caused to be sunk in the depths of the sea, and the inhabitants thereof to be drowned.

And behold, that great city Moronihah have I covered with earth, and the inhabitants thereof, to hide their iniquities and their abominations from before my face, that the blood of the prophets and the saints shall not come any more unto me against them.

And behold, the city of Gilgal have I caused to be sunk, and the inhabitants thereof to be buried up in the depths of the earth;

Yea, and the city of Onihah and the inhabitants thereof, and the city of Mocum and the inhabitants thereof, and the city of Jerusalem and the inhabitants thereof; and waters have I caused to come up in the stead thereof, to hide their wickedness and abominations from before my face, that the blood of the prophets and the saints shall not come up any more unto me against them.

And behold, the city of Gadiandi, and the city of Gadiomnah, and the city of Jacob, and the city of Gimgimno, all these have I caused to be sunk, and made hills and valleys in the places thereof; and the inhabitants thereof have I buried up in the depths of the earth, to hide their wickedness and abominations from before my face, that the blood of the prophets and the saints should not come up any more unto me against them.

9 இதோ, ராஜாவாகிய யாக்கோபின் ஜனங்களால் சு-
தந்தரிக்கப்பட்ட அந்த மகா பட்டணமாகிய யாக்-
கோபுகாத்தை, அவர்களின் பாவங்களினிமித்த-
மும், துன்மார்க்கங்களினிமித்தமும், அக்கினியால்
சுட்டெரிக்கப் பண்ணினேன். அவர்களுடைய இரக-
சியக் கொலைகளின் நிமித்தமும், சங்கங்களினி-
மித்தமும், பூமியெங்குமுள்ள எல்லா துன்மார்க்கத்-
திலும் அவர்களின் துன்மார்க்கம் பெரிதாயிருந்த-
து. ஏனெனில் அவர்களே என் ஜனத்தின் சமாதா-
னத்தையும் தேசத்தின் ராஜாங்கத்தையும் அழித்-
துப் போட்டார்கள்; ஆதலால் தீர்க்கதரிசிகள் மற்-
றும் பரிசுத்தவான்களின் இரத்தம் அவர்களுக்கு
விரோதமாக இனி என்னிடத்தில் வராதபடிக்கு, என்
முகத்தின் முன்பிருந்து அவர்களை அழித்துப்போ-
டும் பொருட்டு, அவர்களை எரிந்து போகப்பண்-
ணினேன்.

And behold, that great city Jacobugath, which was inhabited by the people of king Jacob, have I caused to be burned with fire because of their sins and their wickedness, which was above all the wickedness of the whole earth, because of their secret murders and combinations; for it was they that did destroy the peace of my people and the government of the land; therefore I did cause them to be burned, to destroy them from before my face, that the blood of the prophets and the saints should not come up unto me any more against them.

10 இதோ, லாமான் பட்டணத்தையும், யோஸின் பட்-
டணத்தையும், காத்தின் பட்டணத்தையும், கிஸ்கு-
மனின் பட்டணத்தையும், அவைகளின் குடிகளை-
யும், அவர்களுடைய துன்மார்க்கத்தையும் அவர்க-
ளுடைய அருவருப்புகளையும் குறித்து, அவர்க-
ளுக்குள்ளே அறிவிக்க நான் அனுப்பின, தீர்க்கத-
ரிசிகளைப் புறம்பே தள்ளி, கல்லெறிந்ததிலும்
உள்ள அவர்களின் துன்மார்க்கத்தினிமித்தம், அக்-
கினியால் எரிந்துபோகப் பண்ணினேன்.

And behold, the city of Laman, and the city of Josh, and the city of Gad, and the city of Kishkumen, have I caused to be burned with fire, and the inhabitants thereof, because of their wickedness in casting out the prophets, and stoning those whom I did send to declare unto them concerning their wickedness and their abominations.

11 அவர்களுக்குள்ளே ஒரு நீதிமானும் இராதபடிக்கு
அவர்கள் எல்லோரையும் துரத்திவிட்டதால், அவர்-
களுக்குள்ளே நான் அனுப்பின தீர்க்கதரிசிகள்
மற்றும் பரிசுத்தவான்களின் இரத்தம், அவர்களுக்-
கு விரோதமாய் பூமியிலிருந்து என்னை நோக்கி
கூக்குரலிடாதபடிக்கு, அவர்களுடைய துன்மார்க்-
கத்தையும் அருவருப்புகளையும் என் முகத்தின்
முன்னின்று மறைக்கும் பொருட்டு, அக்கினியை
அனுப்பி அவர்களை அழித்துப் போட்டேன்.

And because they did cast them all out, that there were none righteous among them, I did send down fire and destroy them, that their wickedness and abominations might be hid from before my face, that the blood of the prophets and the saints whom I sent among them might not cry unto me from the ground against them.

12 அவர்களின் துன்மார்க்கத்தினிமித்தமும், அவர்-
களின் அருவருப்புகளினிமித்தமும், இந்த தேசத்-
தின் மேலும், இந்த ஜனத்தின்மேலும், அநேக பெரிய
அழிவுகளை வரப்பண்ணினேன்.

And many great destructions have I caused to come upon this land, and upon this people, because of their wickedness and their abominations.

13 அவர்களைக் காட்டிலும் அதிக நீதியுள்ளவர்க-
ளாய் இருந்ததினிமித்தம் தப்புவிக்கப்பட்டவர்க-
ளாகிய நீங்கள் எல்லோரும், இப்பொழுதாவது என்-
னிடத்தில் திரும்பி, உங்கள் பாவங்களிலிருந்து
மனந்திரும்பி, நான் உங்களை குணப்படுத்தும்படி-
யாக மனம் மாறமாட்டீர்களோ?

O all ye that are spared because ye were more righteous than they, will ye not now return unto me, and repent of your sins, and be converted, that I may heal you?

14 ஆம், மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன். என்னிடத்தில் நீங்கள் வந்தால், நித்திய ஜீ-
வனைப் பெறுவீர்கள். இதோ, என் இரக்கத்தின் பு-
யம் உங்களுக்கு நேராய் நீட்டப்பட்டிருக்கிறது. யார்
வந்தாலும், அவனை நான் ஏற்றுக்கொள்ளுவேன்.
என்னிடத்தில் வருகிறவர்கள் பாக்கியவான்கள்.

Yea, verily I say unto you, if ye will come unto me ye shall have eternal life. Behold, mine arm of mercy is extended towards you, and whosoever will come, him will I receive; and blessed are those who come unto me.

15 இதோ, நானே தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து,
நான் வானத்தையும் பூமியையும் மற்றும் அவைக-
ளிலுள்ள யாவையும் சிருஷ்டித்தேன். நான் ஆதியி-
லிருந்தே பிதாவோடு இருந்தேன். நான் பிதாவிலும்,
பிதா என்னிலும் இருக்கிறார்; என்னிலே பிதா தம்-
முடைய நாமத்தை மகிமைப்படுத்தினார்.

Behold, I am Jesus Christ the Son of God. I created the heavens and the earth, and all things that in them are. I was with the Father from the beginning. I am in the Father, and the Father in me; and in me hath the Father glorified his name.

16 நான் என்னுடையவர்களிடம் வந்தேன். என்னு-
டையவர்களோ என்னை ஏற்றுக்கொள்ளவில்-
லை. என் வருகையைக் குறித்த வேதவாக்கியங்-
கள் நிறைவேறின.

I came unto my own, and my own received me not. And the scriptures concerning my coming are fulfilled.

17 என்னை ஏற்றுக்கொண்ட அனைவரும், தேவனு-
டைய குமாரராகும்படி அவர்களுக்கு நான் அருளி-
யிருக்கிறேன்; அப்படியே என் நாமத்தில் விசுவா-
சிக்கிற அனைவருக்கும் செய்வேன், ஏனெனில்
இதோ, என்னாலே மீட்பு வருகிறது. என்னிலே மோ-
சேயின் நியாயப்பிரமாணம் நிறைவேறுகிறது.

And as many as have received me, to them have I given to become the sons of God; and even so will I to as many as shall believe on my name, for behold, by me redemption cometh, and in me is the law of Moses fulfilled.

18 நானே உலகத்தின் ஒளியும், ஜீவனுமாயிருக்கி-
றேன். நானே அல்பாவும், ஓமெகாவும் ஆதியும் அந்-
தமுமாயிருக்கிறேன்.

I am the light and the life of the world. I am Alpha and Omega, the beginning and the end.

19 இனி இரத்தம் சிந்துதலை எனக்கு நீங்கள் படைக்-
கவேண்டாம்; ஆம், உங்களுடைய பலிகளும் உங்க-
ளுடைய தகன பலிகளும் ஒழிக்கப்படும். ஏனெ-
னில் நான் உங்களுடைய எந்த பலிகளையும்
தகனபலிகளையும் ஏற்றுக் கொள்வதில்லை.

And ye shall offer up unto me no more the shedding of blood; yea, your sacrifices and your burnt offerings shall be done away, for I will accept none of your sacrifices and your burnt offerings.

20 நீங்கள் நொறுங்குண்ட இருதயத்தையும், நருங்-
குண்ட ஆவியையும் எனக்கு பலியாக செலுத்துங்-
கள். லாமானியர் மனம் மாறிய சமயத்தில் என்மேல்
அவர்கள் வைத்த விசுவாசத்தினிமித்தம், அவர்க-
ளுக்கு அக்கினியாலும் பரிசுத்த ஆவியானவரா-
லும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது போலவே,
என்னிடத்தில் நொறுங்குண்ட இருதயத்தோடும்
நருங்குண்ட ஆவியோடும் வருகிற எவருக்கும் அக்-
கினியாலும் பரிசுத்த ஆவியானவராலும் ஞானஸ்-
நானம் கொடுப்பேன். இதை அவர்கள் அறிந்திருக்-
கவில்லை.

And ye shall offer for a sacrifice unto me a broken heart and a contrite spirit. And whoso cometh unto me with a broken heart and a contrite spirit, him will I baptize with fire and with the Holy Ghost, even as the Lamanites, because of their faith in me at the time of their conversion, were baptized with fire and with the Holy Ghost, and they knew it not.

21 இதோ, உலகத்தைப் பாவத்திலிருந்து இரட்சிக்-
கும்படி உலகத்திற்கு மீட்பைக் கொண்டுவருவதற்-
கே நான் உலகத்திற்கு வந்தேன்.

Behold, I have come unto the world to bring redemption unto the world, to save the world from sin.

22 ஆதலால் மனந்திரும்பி ஒரு சிறுபிள்ளையைப்-
போல என்னிடத்தில் வருகிற எவரையும் நான் ஏற்-
றுக்கொள்வேன். ஏனெனில் பரலோக ராஜ்யம் அப்-
படிப்பட்டவர்களுடையதே. இதோ, அப்படிப்பட்ட-
வர்களுக்காகவே நான் என் ஜீவனை ஈந்து மறுபடி-
யும் அதை எடுத்துக்கொண்டேன்; ஆதலால் பூமி-
யின் கடையாந்தரங்களே மனந்திரும்பி என்னிடத்-
தில் வந்து இரட்சிப்பைப் பெறுங்கள்.

Therefore, whoso repenteth and cometh unto me as a little child, him will I receive, for of such is the kingdom of God. Behold, for such I have laid down my life, and have taken it up again; therefore repent, and come unto me ye ends of the earth, and be saved.

# 3 நேபி 10

1 இப்பொழுதும், இதோ, அந்தப்படியே, தேசத்திலி-
ருந்த சகல ஜனங்களும் இவ்வார்த்தைகளைக்
கேட்டு, அது பற்றி சாட்சியளித்தார்கள். இவ்வார்த்-
தைகளுக்குப் பின்பு, பல மணிநேரத்திற்கு தேசத்-
தில் அமைதி நிலவியது.
2 ஜனங்கள் மிகுதியாய் ஆச்சரியப்பட்டதினிமித்-
தம், அவர்கள் கொல்லப்பட்டுப்போன தங்களு-
டைய வம்சத்தாரின் இழப்பிற்காய் புலம்புவதை-
யும் துக்கிப்பதையும் நிறுத்தினார்கள்; ஆதலால்
தேசமெங்கும் பலமணிநேரம் அமைதி நிலவியது.
3 அந்தப்படியே, அங்கே ஒரு சத்தம் மறுபடியும்
ஜனங்களுக்குள் உண்டானது. ஜனங்கள் அனை-
வரும் அதைக் கேட்டு அதைப்பற்றி சாட்சியளித்த-
தாவது:
4 யாக்கோபின் சந்ததியும், ஆம், இஸ்ரவேலின் வீட்-
டாருமாகிய வீழ்ந்துபோன இப்பெரும் பட்டணங்க-
ளின் ஜனமே, கோழி தன் குஞ்சுகளைத் தன்னு-
டைய சிறகுகளுக்குள் கூட்டிச் சேர்ப்பதைப்போல,
நானும் உங்களை எவ்வளவு விசை கூட்டிச் சேர்த்து
உங்களைப் போஷித்தேன்.
5 மறுபடியும் வீழ்ந்துபோன இஸ்ரவேலின் வீட்டா-
ராகிய ஜனங்களே, கோழி தன் குஞ்சுகளைத் தன் சி-
றகுகளுக்குள் சேர்த்து வைப்பதைப்போல, நானும்
உங்களை எவ்வளவு விசை கூட்டிச் சேர்த்திருக்கி-
றேன், ஆம், எருசலேமில் வாசம் பண்ணுகிற இஸ்ர-
வேலின் வீட்டாராகிய ஜனங்களே நீங்களும் வீழ்ந்-
துபோனதாலே, ஆம், கோழி தன் குஞ்சுகளைக் கூட்-
டிச் சேர்ப்பதைப்போல நான் உங்களை எவ்வளவு
விசை கூட்டிச் சேர்த்தேன். நீங்கள் மனதில்லாதிருந்-
தீர்கள்.
6 நான் தப்புவிக்கப்பண்ணின இஸ்ரவேலின் வீட்-
டாரே, நீங்கள் மனந்திரும்பி, இருதயத்தின் முழு
நோக்கத்தோடு என்னிடத்தில் திரும்பினால், கோழி
தன் குஞ்சுகளைத் தன்னுடைய சிறகுகளுக்குக் கீழ்
கூட்டிச்சேர்ப்பதைப்போல நானும் உங்களை எத்-
தனைமுறை கூட்டிச் சேர்ப்பேன்.
7 அப்படியில்லையெனில், இஸ்ரவேலின் வீட்டா-
ரே, உங்களுடைய பிதாக்களுடனான உடன்படிக்-
கை நிறைவேறும் காலம் மட்டுமாய் உங்கள் வா-
சஸ்தலங்கள் பாழாய்ப் போகும்.
8 இப்பொழுதும், அந்தப்படியே, ஜனங்கள் இவ்-
வார்த்தைகளைக் கேட்டபின்பு, இதோ, அவர்கள்
தங்கள் இனத்தார் மற்றும் சிநேகிதர்களின் இழப்பி-
னிமித்தம் மறுபடியும் அழுது புலம்பத் துவங்கி-
னார்கள்.

# 3 Nephi 10

And now behold, it came to pass that all the people of the land did hear these sayings, and did witness of it. And after these sayings there was silence in the land for the space of many hours;

For so great was the astonishment of the people that they did cease lamenting and howling for the loss of their kindred which had been slain; therefore there was silence in all the land for the space of many hours.

And it came to pass that there came a voice again unto the people, and all the people did hear, and did witness of it, saying:

O ye people of these great cities which have fallen, who are descendants of Jacob, yea, who are of the house of Israel, how oft have I gathered you as a hen gathereth her chickens under her wings, and have nourished you.

And again, how oft would I have gathered you as a hen gathereth her chickens under her wings, yea, O ye people of the house of Israel, who have fallen; yea, O ye people of the house of Israel, ye that dwell at Jerusalem, as ye that have fallen; yea, how oft would I have gathered you as a hen gathereth her chickens, and ye would not.

O ye house of Israel whom I have spared, how oft will I gather you as a hen gathereth her chickens under her wings, if ye will repent and return unto me with full purpose of heart.

But if not, O house of Israel, the places of your dwellings shall become desolate until the time of the fulfilling of the covenant to your fathers.

And now it came to pass that after the people had heard these words, behold, they began to weep and howl again because of the loss of their kindred and friends.

9 அந்தப்படியே, இப்படியாக மூன்று நாட்கள் கடந்துபோயிற்று. காலையில் பூமியின் மீதிருந்த காரிருள் கலைந்து போயிற்று. பூமி அதிர்வதிலிருந்து நின்றது. கன்மலைகள் பிளந்து போவதிலிருந்து நின்றன. பெரும் முனகுதல்களும் முற்றுப்பெற்றன. இடிபாடான சகல சத்தங்களும் கடந்துபோயின.

And it came to pass that thus did the three days pass away. And it was in the morning, and the darkness dispersed from off the face of the land, and the earth did cease to tremble, and the rocks did cease to rend, and the dreadful groanings did cease, and all the tumultuous noises did pass away.

10 பூமியானது மறுபடியும் ஒன்றாய்க் கூடினதால் அது நின்றது. தப்புவிக்கப்பட்டு உயிரோடு இருந்த ஜனங்களின் துக்கமும், அழுகையும் புலம்பலும் நின்றன. அவர்களின் துக்கம் சந்தோஷமாயும், அவர்களின் புலம்பல்கள் தங்கள் மீட்பரான, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு துதியாயும், நன்றி செலுத்துவதாயும் மாறின.

And the earth did cleave together again, that it stood; and the mourning, and the weeping, and the wailing of the people who were spared alive did cease; and their mourning was turned into joy, and their lamentations into the praise and thanksgiving unto the Lord Jesus Christ, their Redeemer.

11 இப்படியாக இதுவரைக்கும் தீர்க்கதரிசிகளால் பேசப்பட்ட வேதவாக்கியங்கள் நிறைவேறின.

And thus far were the scriptures fulfilled which had been spoken by the prophets.

12 ஜனங்களில் அதிக நீதிமான்களாயிருந்தவர்களே தப்புவிக்கப்பட்டனர். இவர்களே தீர்க்கதரிசிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களைக் கல்லெறியாதிருந்தவர்கள்; பரிசுத்தவான்களின் இரத்தத்தைச் சிந்தாதிருந்து தப்புவிக்கப்பட்டவர்கள் இவர்களே.

And it was the more righteous part of the people who were saved, and it was they who received the prophets and stoned them not; and it was they who had not shed the blood of the saints, who were spared—

13 அவர்கள் மூழ்கி புதைபட்டுப் போகாமல் தப்புவிக்கப்பட்டனர். அவர்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் அமிழ்ந்து போகவில்லை, அவர்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்படவோ, ஒன்றும் அவர்கள் மேல் விழுந்து, மரணத்திற்கேதுவாய் அவர்கள் நொறுக்கப்படவோ இல்லை; அவர்கள் சுழல் காற்றினால் எடுத்துச் செல்லப்படவோ, புகை மற்றும் காரிருளின் தாக்கத்தினால் மேற்கொள்ளப்படவோ இல்லை.

And they were spared and were not sunk and buried up in the earth; and they were not drowned in the depths of the sea; and they were not burned by fire, neither were they fallen upon and crushed to death; and they were not carried away in the whirlwind; neither were they overpowered by the vapor of smoke and of darkness.

14 இப்பொழுதும் வாசிக்கிற எவனும், புரிந்து கொள்ளக்கடவன். வேதங்களை வைத்திருக்கிறவன் அவைகளை ஆராய்ந்து, அக்கினியாலும் புகையினாலும், புயல்களாலும், சுழல்காற்றுகளாலும், அவர்களை ஏற்றுக்கொள்ளும்படியான பூமியின் பிளவுகளாலும், ஏற்பட்ட இந்த மரணங்களும், அழிவுகளும், மற்றும் இந்தக் காரியங்கள் யாவும், அநேக பரிசுத்த தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசனங்களின்படியே நிறைவேறவில்லையோ என்று நோக்கிப் பார்க்கக் கடவன்.

And now, whoso readeth, let him understand; he that hath the scriptures, let him search them, and see and behold if all these deaths and destructions by fire, and by smoke, and by tempests, and by whirlwinds, and by the opening of the earth to receive them, and all these things are not unto the fulfilling of the prophecies of many of the holy prophets.

15 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஆம், அநேகர் இக்காரியங்களைக் குறித்து கிறிஸ்துவின் வருகையின்போது சாட்சி கொடுத்தார்கள். இக்காரியங்களைக் குறித்து சாட்சி பகர்ந்ததினிமித்தம் கொல்லப்பட்டும் போனார்கள்.

Behold, I say unto you, Yea, many have testified of these things at the coming of Christ, and were slain because they testified of these things.

16 ஆம், தீர்க்கதரிசி சீனஸ் இக்காரியங்களைக் குறித்துச் சாட்சி கொடுத்தான். சீனாக்கும் இவைகளைக் குறித்துச் சொல்லியிருக்கிறான். ஏனெனில் அவர்களுடைய சந்ததியாரின் மீதியானவர்களான, நம்மைக் குறித்து குறிப்பாக அவர்கள் சாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

Yea, the prophet Zenos did testify of these things, and also Zenock spake concerning these things, because they testified particularly concerning us, who are the remnant of their seed.

17 இதோ, நம்முடைய பிதாவாகிய யாக்கோபும் யோ-
சேப்பின் சந்ததியாரின் மீதியானவர்களைக் குறித்-
து சாட்சி கொடுத்தாரே. இதோ, நாம் யோசேப்பின்
சந்ததியாரில் மீதியானவர்கள் அல்லவா? நம்மைப்-
பற்றி சாட்சி கொடுக்கும் இக்காரியங்கள் எருசலே-
மை விட்டு நம்முடைய பிதாவாகிய லேகி கொண்-
டுவந்த பித்தளைத் தகடுகளின்மேல் எழுதப்பட்டி-
ருக்கவில்லையா?
18 அந்தப்படியே, முப்பத்தி நான்காம் வருஷ முடி-
வில், இதோ, தப்புவிக்கப்பட்ட நேபியின் ஜனங்க-
ளுக்கும், தப்புவிக்கப்பட்டு லாமானியர்கள் என்ற-
ழைக்கப்பட்டவர்களுக்கும், பெரும் அனுக்கிரகங்-
கள் காண்பிக்கப்பட்டதென்றும், அவர்களுடைய
சிரசுகளின் மேல் பெரும் ஆசீர்வாதங்கள் ஊற்றப்-
பட்டதென்றும், இதினிமித்தம் பரலோகத்திற்கு கி-
றிஸ்து ஏறினவுடனே அவர் அவர்களிடத்தில்
மெய்யாகவே தம்மை வெளிப்படுத்தினார் என்ப-
தையும், உங்களுக்குக் காண்பிப்பேன்.
19 அவர் அவர்களுக்குத் தம்முடைய சரீரத்தைக்
காண்பித்து அவர்களிடத்தில் பணிவிடை செய்-
கிற, அவருடைய ஊழியத்தைக் குறித்த குறிப்பு-
கள் இதற்குப் பின்பு கொடுக்கப்படும். ஆகவே, இப்-
போதைக்கு என் வார்த்தைகளை முடித்துக் கொள்-
கிறேன்.

Behold, our father Jacob also testified concerning a remnant of the seed of Joseph. And behold, are not we a remnant of the seed of Joseph? And these things which testify of us, are they not written upon the plates of brass which our father Lehi brought out of Jerusalem?

And it came to pass that in the ending of the thirty and fourth year, behold, I will show unto you that the people of Nephi who were spared, and also those who had been called Lamanites, who had been spared, did have great favors shown unto them, and great blessings poured out upon their heads, insomuch that soon after the ascension of Christ into heaven he did truly manifest himself unto them—

Showing his body unto them, and ministering unto them; and an account of his ministry shall be given hereafter. Therefore for this time I make an end of my sayings.

*இயேசு கிறிஸ்து உதாரத்துவஸ்தலத்தில் திரளா-
னோர் ஏகமாய்க் கூடியிருக்கையில், நேபியின்
ஜனங்களுக்குத் தம்மைக் காண்பித்து, அவர்களுக்-
குஊழியம் செய்தார்; இப்படியே அவர் அவர்களுக்-
குத் தம்மைக் காண்பித்தார்.*

## 3 நேபி 11

1 இப்பொழுதும், அந்தப்படியே, உதாரத்துவஸ்தலத்-
தில் இருந்த ஆலயத்தைச் சுற்றியும் நேபியின்
ஜனங்கள் திரளானோர் ஏகமாய்க் கூடியிருந்தார்-
கள்; அவர்கள், ஆச்சரியப்பட்டும் வியந்து கொண்-
டும் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டும் இருந்-
தார்கள். சம்பவித்த அந்தப் பெரிதும் அற்புதமு-
மான மாற்றத்தை அவர்கள் ஒருவருக்கொருவர்
காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.
2 யாரைப்பற்றிய மரணத்தைக் குறித்து அறிகுறி
கொடுக்கப்பட்டிருந்ததோ, அந்த இயேசு கிறிஸ்து-
வைக் குறித்து அவர்கள் சம்பாஷித்துக் கொண்டு-
மிருந்தார்கள்.
3 அந்தப்படியே, அவர்கள் ஒருவரோடு ஒருவர் இப்-
படியாக சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது,
அவர்கள் பரலோகத்திலிருந்து வந்ததைப் போன்ற
ஒரு சத்தத்தைக் கேட்டார்கள்; தாங்கள் கேட்ட சத்-
தத்தை அவர்கள் புரிந்து கொள்ளாததால், அவர்-
கள் தங்கள் கண்களைச் சுற்றிலும் ஏறெடுத்தார்-
கள், அது ஒரு முரடான சத்தமாயிருக்கவில்லை.
அது ஒரு உரத்த சத்தமாயுமிருக்கவில்லை, ஆயி-
னும் அது மெல்லிய சத்தமாயிருந்தும்கூட, அதைக்
கேட்டவர்களின் உள்ளத்தை ஊடுருவிப்போனது.
அதனால் அவர்களுடைய சரீரத்தில் அது அசையச்
செய்யாத எந்தப் பகுதியும் இல்லை. ஆம், அது
அவர்களது ஆத்துமாவில் ஊடுருவிப்போய் அவர்-
களுடைய இருதயங்களை அனலடையச் செய்தது.
4 அந்தப்படியே, அவர்கள் மறுபடியும் அந்த சத்தத்-
தைக் கேட்டார்கள். அவர்கள் அதைப் புரிந்து-
கொள்ளவில்லை.
5 மறுபடியும் மூன்றாந்தரம் அவர்கள் அந்த சத்தத்-
தைக் கேட்டு, அதைக் கேட்கத்தக்கதாக தங்கள் கா-
துகளைத் திறந்தார்கள். அவர்கள் தங்கள் கண்க-
ளை, சத்தம் வருகிறதற்கு நேராய் ஏறெடுத்தார்கள்;
சத்தம் வந்த வானத்திற்கு நேராய் அசையாமல்
பார்த்துக் கொண்டே இருந்தார்கள்.
6 இதோ, மூன்றாந்தரம் அவர்கள் தாங்கள் கேட்ட
அந்த சத்தத்தைப் புரிந்து கொண்டார்கள்; அது
அவர்களை நோக்கி:
7 இதோ, என் நேசகுமாரன், இவரில் நான் பிரியமா-
யிருக்கிறேன், இவரில் என் நாமத்தை நான் மகி-
மைப்படுத்தினேன், அவருக்குச் செவிகொடுங்கள்
என்றது.

*Jesus Christ did show himself unto the people of Nephi, as the multitude were gathered together in the land Bountiful, and did minister unto them; and on this wise did he show himself unto them.*

## 3 Nephi 11

And now it came to pass that there were a great multitude gathered together, of the people of Nephi, round about the temple which was in the land Bountiful; and they were marveling and wondering one with another, and were showing one to another the great and marvelous change which had taken place.

And they were also conversing about this Jesus Christ, of whom the sign had been given concerning his death.

And it came to pass that while they were thus conversing one with another, they heard a voice as if it came out of heaven; and they cast their eyes round about, for they understood not the voice which they heard; and it was not a harsh voice, neither was it a loud voice; nevertheless, and notwithstanding it being a small voice it did pierce them that did hear to the center, insomuch that there was no part of their frame that it did not cause to quake; yea, it did pierce them to the very soul, and did cause their hearts to burn.

And it came to pass that again they heard the voice, and they understood it not.

And again the third time they did hear the voice, and did open their ears to hear it; and their eyes were towards the sound thereof; and they did look steadfastly towards heaven, from whence the sound came.

And behold, the third time they did understand the voice which they heard; and it said unto them:

Behold my Beloved Son, in whom I am well pleased, in whom I have glorified my name—hear ye him.

8 அந்தப்படியே, அவர்கள் புரிந்துகொண்டபோது, அவர்கள் மறுபடியும் தங்கள் கண்களை வானத்திற்கு நேராய் ஏறெடுத்தார்கள்; இதோ, வானத்திலிருந்து ஒரு மனுஷன் இறங்குவதைக் கண்டார்கள்; அவர் ஒரு வெண்ணிற அங்கியை அணிந்திருந்தார். அவர் கீழே வந்து அவர்கள் மத்தியில் நின்றார்; திரளானோர் யாவரின் கண்களும் அவர்மேல் திரும்பினது. அவர்கள் ஒருவருக்கொருவர் பேசும்படி தங்கள் வாயைத் திறக்க பயந்தார்கள், அதற்கு அர்த்தம் என்னவென்று புரியாதிருந்தார்கள். ஏனெனில் தங்களுக்குத் தோன்றியது ஒரு தூதன் என்று நினைத்தார்கள்.

And it came to pass, as they understood they cast their eyes up again towards heaven; and behold, they saw a Man descending out of heaven; and he was clothed in a white robe; and he came down and stood in the midst of them; and the eyes of the whole multitude were turned upon him, and they durst not open their mouths, even one to another, and wist not what it meant, for they thought it was an angel that had appeared unto them.

9 அந்தப்படியே, அவர் தம்முடைய கரத்தை நீட்டி ஜனங்களிடத்தில் பேசிச் சொன்னதாவது:

And it came to pass that he stretched forth his hand and spake unto the people, saying:

10 இதோ, உலகினுள் வருவதாக தீர்க்கதரிசிகள் சாட்சி பகர்ந்த, இயேசு கிறிஸ்து நானே.

Behold, I am Jesus Christ, whom the prophets testified shall come into the world.

11 இதோ, நானே இவ்வுலகின் ஒளியும் ஜீவனுமாயிருக்கிறேன்; என் பிதா எனக்குக் கொடுத்த அந்த கசப்பான பாத்திரத்திலிருந்து பானம் பண்ணியிருக்கிறேன், உலகினுடைய பாவங்களை என்மேல் எடுத்துக்கொண்டதினிமித்தம் பிதாவை மகிமைப்படுத்தியிருக்கிறேன், இப்படியாக ஆதியிலிருந்து சகல காரியங்களிலும் பிதாவானவரின் சித்தத்திற்கு பொறுமையோடு கீழ்ப்படிந்திருக்கிறேன்.

And behold, I am the light and the life of the world; and I have drunk out of that bitter cup which the Father hath given me, and have glorified the Father in taking upon me the sins of the world, in the which I have suffered the will of the Father in all things from the beginning.

12 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைப் பேசினவுடனே, திரளானோரும் பூமியில் விழுந்தார்கள்; ஏனெனில் கிறிஸ்து பரலோகத்திற்கு ஏறின பிறகு, அவர் தம்மையே தங்களுக்கு வெளிப்படுத்துவார் என்று, தங்களுக்குள் தீர்க்கதரிசினமுரைக்கப்பட்டதை அவர்கள் நினைவுகூர்ந்தார்கள்.

And it came to pass that when Jesus had spoken these words the whole multitude fell to the earth; for they remembered that it had been prophesied among them that Christ should show himself unto them after his ascension into heaven.

13 அந்தப்படியே, கர்த்தர் அவர்களுக்கு பேசிச் சொன்னதாவது:

And it came to pass that the Lord spake unto them saying:

14 இஸ்ரவேலின் தேவனும் பூமியனைத்தின் தேவனும் நான் என்பதையும், உலகத்தினுடைய பாவத்திற்காக கொலை செய்யப்பட்டிருக்கிறேன் என்பதையும் நீங்கள் அறியத்தக்கதாக, எழுந்துவந்து உங்களுடைய கைகளை என் விலாவினுள் போட்டு, என் கைகளிலும் என் கால்களிலும் உள்ள ஆணிகளின் தழும்புகளை உணருங்கள்.

Arise and come forth unto me, that ye may thrust your hands into my side, and also that ye may feel the prints of the nails in my hands and in my feet, that ye may know that I am the God of Israel, and the God of the whole earth, and have been slain for the sins of the world.

15 அந்தப்படியே, திரளானோர் போய், தங்கள் கைகளை அவருடைய விலாவினுள் போட்டும், அவருடைய கைகளிலும் கால்களிலும் உள்ள ஆணிகளின் தழும்புகளைத் தொட்டும் பார்த்தார்கள்; இப்படியாக அவர்கள் யாவரும் போய், தங்கள் கண்களால் கண்டும், தங்கள் கைகளினால் உணர்ந்தும், வரப்போகிறவர் என்று தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டவர் அவரே என்று, மெய்யாகவே அறியவும், சாட்சி கொடுக்கவும், அவர்கள் ஒவ்வொருவராய் போனார்கள்.

And it came to pass that the multitude went forth, and thrust their hands into his side, and did feel the prints of the nails in his hands and in his feet; and this they did do, going forth one by one until they had all gone forth, and did see with their eyes and did feel with their hands, and did know of a surety and did bear record, that it was he, of whom it was written by the prophets, that should come.

16 அவர்கள் யாவரும் போய் தாங்களே கண்டபின்பு, அவர்கள் ஒருமித்துக் கூக்குரலிட்டுச் சொன்னதாவது:

And when they had all gone forth and had witnessed for themselves, they did cry out with one accord, saying:

17 ஓசன்னா! அதி உன்னத தேவனுடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படுவதாக! அவர்கள் இயேசுவின் பாதத்தில் விழுந்து அவரைத் தொழுதுகொண்டார்கள்.

Hosanna! Blessed be the name of the Most High God! And they did fall down at the feet of Jesus, and did worship him.

18 அந்தப்படியே, அவர் நேபியை நோக்கி, (ஏனெனில் திரளானோருக்குள்ளே நேபியும் இருந்தான்) அவன் முன்னே வரவேண்டுமெனக் கட்டளையிட்டார்.

And it came to pass that he spake unto Nephi (for Nephi was among the multitude) and he commanded him that he should come forth.

19 நேபி எழுந்து முன்னே போய், கர்த்தருக்கு முன்பாக குனிந்து, அவருடைய பாதத்தை முத்தமிட்டான்.

And Nephi arose and went forth, and bowed himself before the Lord and did kiss his feet.

20 அவன் எழவெண்டுமென கர்த்தர் அவனுக்குக் கட்டளையிட்டார். அவன் எழுந்து அவருக்கு முன்பாக நின்றான்.

And the Lord commanded him that he should arise. And he arose and stood before him.

21 கர்த்தர் அவனை நோக்கி: நான் பரத்திற்கு மறுபடியும் ஏறின பின்பு இந்த ஜனத்திற்கு நீ ஞானஸ்நானம் கொடுக்கும்படிக்கு, நான் உனக்கு அதிகாரத்தைக் கொடுக்கிறேன், என்றார்.

And the Lord said unto him: I give unto you power that ye shall baptize this people when I am again ascended into heaven.

22 மறுபடியும் கர்த்தர் மற்றவர்களையும் அழைத்து அவர்களிடமும் அவ்வண்ணமே பேசினார்; ஞானஸ்நானம் கொடுக்க அவர்களுக்கு அவர் அதிகாரம் கொடுத்தார். அவர் அவர்களை நோக்கி: இப்படியே நீங்கள் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும்; உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் இருக்கக்கூடாது.

And again the Lord called others, and said unto them likewise; and he gave unto them power to baptize. And he said unto them: On this wise shall ye baptize; and there shall be no disputations among you.

23 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் வார்த்தைகளின் மூலம் தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பி என் நாமத்தில் ஞானஸ்நானம் பெற விரும்புகிற எவருக்கும், நீங்கள் இவ்விதத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள், இதோ, நீங்கள் தண்ணீரில் இறங்கி நின்று, என் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்.

Verily I say unto you, that whoso repenteth of his sins through your words, and desireth to be baptized in my name, on this wise shall ye baptize them—Behold, ye shall go down and stand in the water, and in my name shall ye baptize them.

24 இப்பொழுதும் இதோ, நீங்கள் அவர்களைப் பெயர் சொல்லி அழைத்து சொல்லவேண்டிய வார்த்தைகளாவன:

And now behold, these are the words which ye shall say, calling them by name, saying:

25 இயேசு கிறிஸ்துவினால் எனக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதால், நான் உனக்கு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன், ஆமென்.

Having authority given me of Jesus Christ, I baptize you in the name of the Father, and of the Son, and of the Holy Ghost. Amen.

26 பிறகு நீங்கள் அவர்களைத் தண்ணீரில் மூழ்கப்பண்ணி, மறுபடியும் தண்ணீரை விட்டு வெளியே வரப்பண்ணவேண்டும்.

And then shall ye immerse them in the water, and come forth again out of the water.

27 இந்த விதமாக, நீங்கள் என் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள். ஏனெனில் இதோ, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் ஒன்றாயிருக்கிறோம்; நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறார். பிதாவும் நானும் ஒன்றாயிருக்கிறோம்.

And after this manner shall ye baptize in my name; for behold, verily I say unto you, that the Father, and the Son, and the Holy Ghost are one; and I am in the Father, and the Father in me, and the Father and I are one.

28 நான் உங்களுக்குக் கட்டளையிட்டபடியே நீங்கள்
ஞானஸ்நானம் கொடுங்கள். இதுவரைக்கும் இருந்-
ததைப்போல, உங்களுக்குள் வாக்குவாதங்கள்
இல்லாதிருப்பதாக. என் உபதேசத்தின் எந்தப் பகு-
திகளைப்பற்றியும், இதுவரைக்கும் இருந்ததைப்-
போல, உங்களுக்குள் வாக்குவாதங்கள் இல்லாம-
லிருப்பதாக.

And according as I have commanded you thus shall ye baptize. And there shall be no disputations among you, as there have hitherto been; neither shall there be disputations among you concerning the points of my doctrine, as there have hitherto been.

29 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன், பிணக்கின் ஆவியையுடையவன்
என்னுடையவனல்ல. பிணக்குகளின் தகப்பனா-
கிய பிசாசினுடையவன், அவன் மனுஷர் ஒருவ-
ரோடு ஒருவர் கோபத்தோடு சண்டையிடவேண்டு-
மென்று அவர்களுடைய இருதயங்களைத் தூண்-
டிவிடுகிறான்.

For verily, verily I say unto you, he that hath the spirit of contention is not of me, but is of the devil, who is the father of contention, and he stirreth up the hearts of men to contend with anger, one with another.

30 இதோ, மனுஷ இருதயங்களைக் கோபத்தோடு
ஒருவருக்கு விரோதமாய் மற்றொருவரைத் தூண்-
டிவிடுவது என்னுடைய உபதேசம் அல்ல; ஆனால்
அப்படிப்பட்டவைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்-
பதே என்னுடைய உபதேசமாயிருக்கிறது.

Behold, this is not my doctrine, to stir up the hearts of men with anger, one against another; but this is my doctrine, that such things should be done away.

31 இதோ, மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன். நான் உங்களுக்கு என்
உபதேசத்தை அறிவிப்பேன்.

Behold, verily, verily, I say unto you, I will declare unto you my doctrine.

32 இதுவே என் உபதேசமாய் இருக்கிறது. இந்த உப-
தேசம் பிதா எனக்குக் கொடுத்ததாயிருக்கிறது,
நான் பிதாவைக் குறித்து சாட்சி கொடுக்கிறேன். பி-
தா என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறார். பரி-
சுத்த ஆவியானவர் பிதாவைக் குறித்தும் என்-
னைக் குறித்தும் சாட்சி கொடுக்கிறார். பிதா எல்லா
இடங்களிலுமுள்ள மனுஷரெல்லாரும் மனந்தி-
ரும்பி, என்னில் விசுவாசிக்கவேண்டுமென்று கட்-
டளையிடுகிறார் என்று, நான் சாட்சி கொடுக்கி-
றேன்.

And this is my doctrine, and it is the doctrine which the Father hath given unto me; and I bear record of the Father, and the Father beareth record of me, and the Holy Ghost beareth record of the Father and me; and I bear record that the Father commandeth all men, everywhere, to repent and believe in me.

33 என்னில் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுகிற
எவனும் இரட்சிக்கப்படுவான். அவர்களே தேவ ரா-
ஜ்யத்தைச் சுதந்தரிப்பார்கள்.

And whoso believeth in me, and is baptized, the same shall be saved; and they are they who shall inherit the kingdom of God.

34 என்னில் விசுவாசியாமலும் ஞானஸ்நானம் பெ-
றாமலும் இருக்கிற எவனும் ஆக்கினைக்குள்ளா-
கத் தீர்க்கப்படுவான்.

And whoso believeth not in me, and is not baptized, shall be damned.

35 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். இதுவே என் உபதேசமாயிருக்கிற-
து. பிதாவினாலானது என்று அதைக் குறித்து சாட்-
சி கொடுக்கிறேன். என்னில் விசுவாசிக்கிறவன்
என் பிதாவிலும் விசுவாசிக்கிறான்; அவனிடத்தில்
பிதாவும் என்னைப்பற்றி சாட்சிகொடுப்பார்.
ஏனெனில் அவர் அவனை அக்கினியாலும் பரி-
சுத்த ஆவியானவராலும் சந்திப்பார்.

Verily, verily, I say unto you, that this is my doctrine, and I bear record of it from the Father; and whoso believeth in me believeth in the Father also; and unto him will the Father bear record of me, for he will visit him with fire and with the Holy Ghost.

36 இப்படியாக, பிதா என்னைக் குறித்து சாட்சி கொ-
டுப்பார். அவனிடத்தில் பரிசுத்த ஆவியானவர் பி-
தாவைப்பற்றியும் என்னைப்பற்றியும் சாட்சி கொ-
டுப்பார், ஏனெனில் பிதாவும் நானும் பரிசுத்த ஆவி-
யானவரும் ஒன்றாயிருக்கிறோம்.

And thus will the Father bear record of me, and the Holy Ghost will bear record unto him of the Father and me; for the Father, and I, and the Holy Ghost are one.

37 மறுபடியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பி ஒரு சிறுபிள்ளையைப் போலாகி, என் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் நீங்கள் எந்தவிதத்திலும் இவைகளைப் பெற்றுக்கொள்ள முடியாது.

And again I say unto you, ye must repent, and become as a little child, and be baptized in my name, or ye can in nowise receive these things.

38 மறுபடியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பி என் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளவேண்டும், ஒரு சிறு பிள்ளையைப் போலாகிட வேண்டும். இல்லாவிடில் நீங்கள் ஒருபோதும் தேவனின் ராஜ்யத்தைச் சுதந்தரிக்க முடியாது.

And again I say unto you, ye must repent, and be baptized in my name, and become as a little child, or ye can in nowise inherit the kingdom of God.

39 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இதுவே என் உபதேசம். இதின்மேல் கட்டுகிற எவனும் என் கன்மலையின்மேல் கட்டுகிறான். பாதாளத்தின் வாசல்கள் அவனை மேற்கொள்ளாது.

Verily, verily, I say unto you, that this is my doctrine, and whoso buildeth upon this buildeth upon my rock, and the gates of hell shall not prevail against them.

40 இதற்கு அதிகமாகவோ, குறைவாகவோ அறிக்கைபண்ணி, அதை என் உபதேசமென்று நிலைநிறுத்துகிறவன் எவனோ, அவனே பொல்லாப்பினிடத்திலிருந்து வருகிறவனாயும், என் கன்மலையின்மேல் கட்டப்படாதவனுயுமாயிருக்கிறான்; ஆனால் அவன் மணல் அஸ்திபாரத்தின் மேல் கட்டுகிறான். வெள்ளம் வரும்போதும், அவைகள் மேல் காற்று அடிக்கும்போதும், அப்படிப்பட்டவர்களை ஏற்றுக்கொள்ள பாதாளத்தின் வாசல்கள் திறந்திருக்கும்.

And whoso shall declare more or less than this, and establish it for my doctrine, the same cometh of evil, and is not built upon my rock; but he buildeth upon a sandy foundation, and the gates of hell stand open to receive such when the floods come and the winds beat upon them.

41 ஆதலால், இந்த ஜனங்களுக்குள் போய், பூமியின் கடையாந்தரங்கள் வரைக்குமாய் நான் பேசிய வார்த்தைகளை அறிவியுங்கள்.

Therefore, go forth unto this people, and declare the words which I have spoken, unto the ends of the earth.

# 3 நேபி 12

# 3 Nephi 12

1 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளை நேபியி-
னிடத்திலும் அழைக்கப்பட்டவர்களிடத்திலும்
(இப்பொழுது அழைக்கப்பட்டு ஞானஸ்நானம்
கொடுக்க வல்லமையையும், அதிகாரத்தையும்
பெற்றவர்களின் எண்ணிக்கை பன்னிரண்டாயி-
ருந்தது) பேசின பின்பு, இதோ, அவர் திரளானோ-
ருக்கு நேராய் தன் கரத்தை நீட்டி அவர்களிடத்தில்
உரத்த சத்தமாய்ச் சொன்னதாவது: உங்களுக்கு
ஊழியம்பண்ணவும் உங்களுடைய பணிவிடைக்-
காரராய் இருக்கும்படிக்கும் உங்களுக்குள்ளிருந்து
நான் தெரிந்துகொண்ட இந்த பன்னிரெண்டு பேரு-
டைய வார்த்தைகளுக்கு நீங்கள் செவிகொடுத்-
தால், நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்-
பீர்கள்; உங்களுக்கு ஜலத்தினால் ஞானஸ்நானம்
கொடுக்க அவர்களுக்கு நான் வல்லமையைக்
கொடுத்திருக்கிறேன், நீங்கள் ஜலத்தினால் ஞா-
னஸ்நானம் பெற்ற பின்பு இதோ, நான் உங்களுக்கு
அக்கினியாலும் பரிசுத்த ஆவியானவராலும் ஞா-
னஸ்நானம் கொடுப்பேன்; ஆதலால் என்னில் நீங்-
கள் விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்றுக்-
கொண்டால், அதன்பின்பு நீங்கள் என்னைக்கண்-
டு, நான் இருக்கிறேன் என அறிந்து, நீங்கள் பாக்கி-
யவான்களாயிருப்பீர்கள்.

And it came to pass that when Jesus had spoken these words unto Nephi, and to those who had been called, (now the number of them who had been called, and received power and authority to baptize, was twelve) and behold, he stretched forth his hand unto the multitude, and cried unto them, saying: Blessed are ye if ye shall give heed unto the words of these twelve whom I have chosen from among you to minister unto you, and to be your servants; and unto them I have given power that they may baptize you with water; and after that ye are baptized with water, behold, I will baptize you with fire and with the Holy Ghost; therefore blessed are ye if ye shall believe in me and be baptized, after that ye have seen me and know that I am.

2 மறுபடியும் நீங்கள் என்னைக் கண்டதாகவும்,
நான் இருப்பதாக அறிந்திருப்பதாகவும், நீங்கள்
சாட்சி கொடுக்க இருப்பதால், உங்களுடைய வார்த்-
தைகளை விசுவாசிக்கிறவர்கள் அதிக பாக்கிய-
வான்களாயிருப்பார்கள். ஆம், உங்களுடைய
வார்த்தைகளை விசுவாசித்து தாழ்மையின்
ஆழங்களில் வந்து ஞானஸ்நானம் பெறுகிறவர்-
கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் அக்கி-
னியாலும் பரிசுத்த ஆவியானவராலும் சந்திக்கப்-
பட்டு, தங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பைப்
பெறுவார்கள்.

And again, more blessed are they who shall believe in your words because that ye shall testify that ye have seen me, and that ye know that I am. Yea, blessed are they who shall believe in your words, and come down into the depths of humility and be baptized, for they shall be visited with fire and with the Holy Ghost, and shall receive a remission of their sins.

3 ஆம், என்னிடத்தில் வருகிற, ஆவியில் எளிமை-
யுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெனில் பர-
லோக ராஜ்யம் அவர்களுடையது.

Yea, blessed are the poor in spirit who come unto me, for theirs is the kingdom of heaven.

4 மறுபடியும் துயரப்படுகிறவர்கள் யாவரும் பாக்-
கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதலடை-
வார்கள்.

And again, blessed are all they that mourn, for they shall be comforted.

5 சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.
ஏனெனில் அவர்கள் பூமியைச் சுதந்தரிப்பார்கள்.

And blessed are the meek, for they shall inherit the earth.

6 நீதியின்மேல் பசியும் தாகமும் உள்ள யாவரும்
பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் பரிசுத்த
ஆவியானவரால் நிறைக்கப்படுவார்கள்.

And blessed are all they who do hunger and thirst after righteousness, for they shall be filled with the Holy Ghost.

7 இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள். ஏனெ-
னில் அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

And blessed are the merciful, for they shall obtain mercy.

8 இருதயத்தில் தூய்மையுள்ளவர்கள் யாவரும்
பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் தே-
வனைக் காண்பார்கள்.

And blessed are all the pure in heart, for they shall see God.

9 சமாதானம் பண்ணுகிறவர்கள் யாவரும் பாக்கி-
யவான்கள், ஏனெனில் அவர்கள் தேவனுடைய
புத்திரர் என்று அழைக்கப்படுவார்கள்.

And blessed are all the peacemakers, for they shall be called the children of God.

10 என் நாமத்தினிமித்தம் துன்பப்படுகிற யாவரும்
பாக்கியவான்கள், ஏனெனில் பரலோக ராஜ்யம்
அவர்களுடையது.

And blessed are all they who are persecuted for my name's sake, for theirs is the kingdom of heaven.

11 என்னிமித்தம் மனுஷர் உங்களை நிந்தித்துத்
துன்புறுத்தி, உங்களுக்கு விரோதமாக சகலவித-
மான பொல்லாதவைகளைப் பொய்யாய்ச் சொல்-
வார்களானால், நீங்கள் பாக்கியவான்களாயிருப்-
பீர்கள்.

And blessed are ye when men shall revile you and persecute, and shall say all manner of evil against you falsely, for my sake;

12 நீங்கள் மிகுந்த சந்தோஷத்தைப் பெற்று, அதிக-
மாய் மகிழ்ந்திருப்பீர்கள், ஏனெனில் பரலோகத்தில்
உங்களுடைய பலன் மிகுதியாயிருக்கும்; உங்க-
ளுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அவர்-
கள் அப்படியே துன்புறுத்தினார்கள்.

For ye shall have great joy and be exceedingly glad, for great shall be your reward in heaven; for so persecuted they the prophets who were before you.

13 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன், நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கும்
பொறுப்பை உங்களுக்குக் கொடுக்கிறேன்;
ஆனால் உப்பானது சாரமற்றுப் போனால் எதி-
னால் பூமி சாரமேற்றப்படும், அதன் பின்பு உப்பா-
னது வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால்
மிதிக்கப்படுவதற்கும் ஒழிய, வேறொன்றுக்கும் உத-
வாது.

Verily, verily, I say unto you, I give unto you to be the salt of the earth; but if the salt shall lose its savor wherewith shall the earth be salted? The salt shall be thenceforth good for nothing, but to be cast out and to be trodden under foot of men.

14 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். நீங்கள் இந்த ஜனத்திற்கு ஒளியா-
யிருக்கும் பொறுப்பை நான் உங்களுக்குக் கொடுக்-
கிறேன். மலையில் அமைந்துள்ள பட்டணம்
மறைக்கப்பட முடியாது.

Verily, verily, I say unto you, I give unto you to be the light of this people. A city that is set on a hill cannot be hid.

15 இதோ, மனுஷர் மெழுகுவர்த்தியைக் கொளுத்தி
மரக்காலால் மூடிவைப்பார்களா? இல்லையே, மெ-
ழுகுவர்த்தியைத் தண்டின்மேல் வைப்பார்கள்.
அது வீட்டிலுள்ள யாவருக்கும் ஒளி கொடுக்கும்.

Behold, do men light a candle and put it under a bushel? Nay, but on a candlestick, and it giveth light to all that are in the house;

16 ஆதலால் இவ்விதமாய், ஜனங்கள் உங்களுடைய
நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலுள்ள
உங்களுடைய பிதாவை மகிமைப்படுத்தும்படி,
அவர்களுக்கு முன்பாக உங்கள் வெளிச்சம் பிரகா-
சிக்கக்கடவது.

Therefore let your light so shine before this people, that they may see your good works and glorify your Father who is in heaven.

17 நியாயப்பிரமாணத்தையோ, தீர்க்கதரிசிகளின்
வார்த்தைகளையோ அழிக்க வந்தேன் என்று எண்-
ணாதிருங்கள். அழிக்கிறதற்கல்ல, நிறைவேற்றுவ-
தற்கே வந்தேன்.

Think not that I am come to destroy the law or the prophets. I am not come to destroy but to fulfil;

18 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
நியாயப்பிரமாணத்திலிருந்து ஒரு எழுத்தாகிலும்
உறுப்பாகிலும் ஒழிந்து போகவில்லை. ஆனால்
என்னில் அவை யாவும் நிறைவேறிற்று.

For verily I say unto you, one jot nor one tittle hath not passed away from the law, but in me it hath all been fulfilled.

19 இதோ, நீங்கள் என்னில் விசுவாசிக்கும்படிக்கும்,
நீங்கள் உங்களுடைய பாவங்களிலிருந்து மனந்தி-
ரும்பி, என்னிடத்தில் நொறுங்குண்ட இருதயத்தோ-
டும் நருங்குண்ட ஆவியோடும் வரும்படிக்கும் நான்
உங்களுக்கு நியாயப்பிரமாணத்தையும் என் பிதா-
வினுடைய கட்டளைகளையும் கொடுத்திருக்கி-
றேன். இதோ, உங்களுக்கு முன்பாகக் கட்டளைகள்
இருக்கின்றன. நியாயப்பிரமாணமும் நிறைவேற்-
றப்பட்டது.

And behold, I have given you the law and the commandments of my Father, that ye shall believe in me, and that ye shall repent of your sins, and come unto me with a broken heart and a contrite spirit. Behold, ye have the commandments before you, and the law is fulfilled.

20 ஆதலால் நீங்கள் என்னிடத்தில் வந்து இரட்சிப்ப-
டையுங்கள்; ஏனெனில் மெய்யாகவே நான் உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன். நான் இச்சமயத்தில் உங்க-
ளுக்குக் கட்டளையிட்ட என் கட்டளைகளை நீங்-
கள் கைக்கொள்ளாவிடில் நீங்கள் ஒருபோதும் பர-
லோக ராஜ்யத்தினுள் பிரவேசிக்கமுடியாது.

Therefore come unto me and be ye saved; for verily I say unto you, that except ye shall keep my commandments, which I have commanded you at this time, ye shall in no case enter into the kingdom of heaven.

21 கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொ-
லை செய்கிறவன் எவனும் தேவ நியாயத்தீர்ப்பின்
பயங்கரத்திற்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்-
வத்தாரால் சொல்லப்பட்டதும், உங்களுக்கு முன்-
பாகவே எழுதப்பட்டதாயும் இருக்கிறது, என்று நீங்-
கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.

Ye have heard that it hath been said by them of old time, and it is also written before you, that thou shalt not kill, and whosoever shall kill shall be in danger of the judgment of God;

22 ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தன்
சகோதரனிடத்தில் கோபம் கொள்ளுகிற எவனும்
அவருடைய நியாயத்தீர்ப்பின் பயங்கரத்திற்கு
ஏதுவாயிருப்பான். தன் சகோதரனை வீணனென்-
று சொல்லுகிறவன் எவனும் ஆலோசனைச் சங்கத்-
தீர்ப்பின் பயங்கரத்திற்கு ஏதுவாயிருப்பான். மூ-
டனே, என்று சொல்லுகிற எவனும் பாதாள அக்கி-
னியின் பயங்கரத்திற்கு ஏதுவாயிருப்பான்.

But I say unto you, that whosoever is angry with his brother shall be in danger of his judgment. And whosoever shall say to his brother, Raca, shall be in danger of the council; and whosoever shall say, Thou fool, shall be in danger of hell fire.

23 ஆதலால் நீ என்னிடத்தில் வந்தோ, அல்லது என்-
னிடத்தில் வரவிரும்பி, உன்பேரில் உன்னுடைய
சகோதரனுக்கு குறை உண்டென்று நினைவுகூர்ந்-
தால்,

Therefore, if ye shall come unto me, or shall desire to come unto me, and rememberest that thy brother hath aught against thee—

24 நீ உன் சகோதரனிடத்தில் போய், முதலில் உன்
சகோதரனிடத்தில் ஒப்புரவாகி, பின்பு என்னிடத்-
தில் இருதயத்தின் முழு நோக்கத்தோடு வருவாயாக.
நான் உன்னை ஏற்றுக்கொள்வேன்.

Go thy way unto thy brother, and first be reconciled to thy brother, and then come unto me with full purpose of heart, and I will receive you.

25 நீ உன் சத்துருவோடு வழியிலிருக்கும்போதே, சீக்-
கிரமாய் அவனோடு ஒப்புரவாகு. இல்லாவிடில்
அவன் எந்நேரத்திலும் உன்னில் குற்றம் காண்-
பான். நீ சிறையினுள் போடப்படுவாய்.

Agree with thine adversary quickly while thou art in the way with him, lest at any time he shall get thee, and thou shalt be cast into prison.

26 மெய்யாகவே, மெய்யாகவே நான் உனக்குச் சொல்-
லுகிறேன். ஒரு சினயீனும் குறைவின்றிக் கொடுத்-
துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து வெளியே
உன்னால் எந்த வழியிலும் வரமுடியாதே. நீ சிறை-
யிலிருக்கும்போது உன்னால் ஒரு சீனயீனையாகி-
லும் கொடுக்கமுடியுமா? முடியாது, என்று மெய்யா-
கவே மெய்யாகவே, நான் உனக்குச் சொல்லுகிறேன்.

Verily, verily, I say unto thee, thou shalt by no means come out thence until thou hast paid the uttermost senine. And while ye are in prison can ye pay even one senine? Verily, verily, I say unto you, Nay.

27 இதோ, நீ விபசாரம் பண்ணாதிருப்பாயாக என்று
பூர்வத்தாரால் எழுதப்பட்டிருக்கிறது.

Behold, it is written by them of old time, that thou shalt not commit adultery;

28 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஒரு ஸ்திரீயை இச்சிக்கும்படியாக அவளைக் காண்கிற எவனும், ஏற்கனவே தன் இருதயத்தில் விபசாரம் செய்தாயிற்று.

But I say unto you, that whosoever looketh on a woman, to lust after her, hath committed adultery already in his heart.

29 இதோ, இவைகளில் ஒன்றையும் உன் இருதயத்தில் பிரவேசிக்க அனுமதிக்கக்கூடாது, என்று உங்களுக்கு ஒரு கட்டளையைக் கொடுக்கிறேன்.

Behold, I give unto you a commandment, that ye suffer none of these things to enter into your heart;

30 நீ பாதாளத்தில் தள்ளப்படுவதைக் காட்டிலும், நீ உன் சிலுவையை எடுத்துக்கொள்ளும்படியாக, நீ உன்னைத்தானே இக்காரியங்களிலிருந்து வெறுப்பது நலமாயிருக்கும்.

For it is better that ye should deny yourselves of these things, wherein ye will take up your cross, than that ye should be cast into hell.

31 தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், அவளுக்கு தள்ளுதற் சீட்டைக் கொடுக்கக் கடவன் என்று எழுதப்பட்டிருக்கிறது.

It hath been written, that whosoever shall put away his wife, let him give her a writing of divorcement.

32 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், அவளை விபச்சாரம் செய்யப் பண்ணுகிறான்; தள்ளப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரம் செய்கிறவனாயிருப்பான்.

Verily, verily, I say unto you, that whosoever shall put away his wife, saving for the cause of fornication, causeth her to commit adultery; and whoso shall marry her who is divorced committeth adultery.

33 அன்றியும் உனக்கென்று நீ பொய்யாணையிடாமல், கர்த்தருக்கு முன்பாக உன் ஆணைகளைச் செலுத்துவாயாக, என்று எழுதப்பட்டிருக்கிறது.

And again it is written, thou shalt not forswear thyself, but shalt perform unto the Lord thine oaths;

34 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். சத்தியம் பண்ணவேண்டாம். வானத்தின்பேரில் சத்தியம் பண்ணவேண்டாம். அது தேவனுடைய சிங்காசனம்.

But verily, verily, I say unto you, swear not at all; neither by heaven, for it is God’s throne;

35 பூமியின் பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம். அது அவருடைய பாதப்படி.

Nor by the earth, for it is his footstool;

36 உன் சிரசின்பேரிலும் சத்தியம் பண்ணவேண்டாம். ஏனெனில் அதின் ஒரு மயிரையாவது கறுப்பாக்கவோ வெண்மையாக்கவோ உன்னால் கூடாதே;

Neither shalt thou swear by thy head, because thou canst not make one hair black or white;

37 உங்கள் சம்பாஷணையில் உள்ளதை உள்ளதென்றும், இல்லாததை, இல்லையென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினதாய் வருகிறதெதுவும் பொல்லாப்பாயிருக்கிறது.

But let your communication be Yea, yea; Nay, nay; for whatsoever cometh of more than these is evil.

38 இதோ, கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று எழுதப்பட்டிருக்கிறது;

And behold, it is written, an eye for an eye, and a tooth for a tooth;

39 நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், தீமையோடு நீங்கள் எதிர்த்து நிற்கவேண்டாம். ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டு.

But I say unto you, that ye shall not resist evil, but whosoever shall smite thee on thy right cheek, turn to him the other also;

40 ஒருவன் உன்னோடு வழக்குத் தொடுத்து, உன்னுடைய மேல் சட்டையை எடுத்துக்கொண்டால், அவன் உன் அங்கியையும் எடுத்துக் கொள்ளட்டும்.

And if any man will sue thee at the law and take away thy coat, let him have thy cloak also;

41 ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம் பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ.

And whosoever shall compel thee to go a mile, go with him twain.

42 உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு. உன்னி-
டத்தில் கடன் கேட்க விரும்புகிறவனுக்கு, முகங்-
கோணாதே.

Give to him that asketh thee, and from him that would borrow of thee turn thou not away.

43 இதோ, நீ உன் அயலானைச் சிநேகித்து உன் வி-
ரோதியை வெறுப்பாயாக என்றும் எழுதப்பட்டிருக்-
கிறது.

And behold it is written also, that thou shalt love thy neighbor and hate thine enemy;

44 ஆனால் இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன். உங்கள் விரோதிகளைச் சிநேகியுங்கள். உங்-
களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்க-
ளைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.
உங்களை இகழ்ச்சியுடன் பயன்படுத்துபவர்களுக்-
காகவும், உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்-
காகவும் ஜெபியுங்கள்.

But behold I say unto you, love your enemies, bless them that curse you, do good to them that hate you, and pray for them who despitefully use you and persecute you;

45 இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்தி-
லுள்ள உங்களுடைய பிதாவின் பிள்ளைகளாயி-
ருப்பீர்கள்; ஏனெனில் அவர் தமது சூரியனைப்
பொல்லாதவர்கள் மேலும், நல்லவர்கள் மேலும்
எழப்பண்ணுகிறார்.

That ye may be the children of your Father who is in heaven; for he maketh his sun to rise on the evil and on the good.

46 ஆதலால் பூர்வகாலத்தின் நியாயப்பிரமாணத்-
திற்கு கீழ்பட்ட அந்தக் காரியங்கள், என்னில் நி-
றைவேற்றப்பட்டன.

Therefore those things which were of old time, which were under the law, in me are all fulfilled.

47 பழையவை ஒழிந்து போயின, அனைத்தும் புதி-
தாயின.

Old things are done away, and all things have become new.

48 பூரண சற்குணராயிருக்கிற என்னைப்போல-
வோ, அல்லது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா-
வைப் போலவோ, நீங்களும் பூரண சற்குணராயி-
ருக்க வேண்டுமென, வாஞ்சிக்கிறேன்.

Therefore I would that ye should be perfect even as I, or your Father who is in heaven is perfect.

# 3 நேபி 13

# 3 Nephi 13

1 எளியோருக்கு நீங்கள் தர்மம் செய்யவேண்டுமென்-
று, நான் வாஞ்சிக்கிறேன் என்று, மெய்யாகவே,
மெய்யாகவே சொல்லுகிறேன்; ஆனால் மனுஷர்
காணவேண்டுமென்பதற்காக அவர்களுக்கு முன்-
பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்-
கையாயிருங்கள்; அப்படிச் செய்தால் பரலோகத்தி-
லிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப்
பலனில்லை.

Verily, verily, I say that I would that ye should do alms unto the poor; but take heed that ye do not your alms before men to be seen of them; otherwise ye have no reward of your Father who is in heaven.

2 ஆதலால் நீ தர்மம் செய்யும்போது, மனுஷருடைய
மகிமையைப் பெறும்படியாக, மாயக்காரர் ஜெப
ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல,
உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே. அவர்கள்
தங்கள் பலனை அடைந்தார்கள், என்று மெய்யாக-
வே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Therefore, when ye shall do your alms do not sound a trumpet before you, as will hypocrites do in the synagogues and in the streets, that they may have glory of men. Verily I say unto you, they have their reward.

3 நீயோ தர்மம் செய்யும்போது, உன் வலது கரம்
செய்கிறதை, உன் இடது கரம் அறியாதிருக்கக்கட-
வது.

But when thou doest alms let not thy left hand know what thy right hand doeth;

4 இப்படிச் செய்வதினால் உன் தர்மமும் அந்தரங்க-
மாய் இருக்கும், அந்தரங்கத்தில் காண்கிற உன் பி-
தாவும், உனக்கு வெளியரங்கமாய் பலனளிப்பார்.

That thine alms may be in secret; and thy Father who seeth in secret, himself shall reward thee openly.

5 நீ ஜெபம் செய்யும்போது மாயக்காரரைப்போல்
செய்யவேண்டாம். ஏனெனில் மனுஷரால் காணப்-
படும்படிக்கு அவர்கள் ஜெப ஆலயங்களிலும், வீதி-
களின் சந்திகளிலும் நின்று ஜெபிக்க விரும்புகி-
றார்கள். அவர்கள் தங்கள் பலனைப் பெற்றுக்
கொண்டார்கள், என்று மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன்.

And when thou prayest thou shalt not do as the hypocrites, for they love to pray, standing in the synagogues and in the corners of the streets, that they may be seen of men. Verily I say unto you, they have their reward.

6 நீயோ ஜெபிக்கும்போது, உனது அறைவீட்டினுள்
பிரவேசித்து, உன் கதவைப் பூட்டிய பின்பு, அந்த-
ரங்கத்திலிருக்கிற உன் பிதாவினிடத்தில் ஜெபம்
பண்ணு; அந்தரங்கத்தில் காண்கிற உன் பிதாவும்
வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.

But thou, when thou prayest, enter into thy closet, and when thou hast shut thy door, pray to thy Father who is in secret; and thy Father, who seeth in secret, shall reward thee openly.

7 நீங்களோ ஜெபிக்கும்போது, அஞ்ஞானிகளைப்
போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்,
அவர்கள் தாங்கள் அதிகமாய்ப் பேசினால் தாங்-
கள் கேட்கப்படுவோம், என்று நினைத்துக் கொள்-
கிறார்கள்.

But when ye pray, use not vain repetitions, as the heathen, for they think that they shall be heard for their much speaking.

8 ஆதலால் நீங்கள் அவர்களைப் போல இருக்க
வேண்டாம். ஏனெனில் நீங்கள் உங்களுடைய பிதா-
வினிடத்தில் கேட்பதற்கு முன்பதாகவே, உங்களுக்-
குத் தேவையானவைகளை அவர் அறிந்திருக்கி-
றார்.

Be not ye therefore like unto them, for your Father knoweth what things ye have need of before ye ask him.

9 ஆதலால் இவ்விதமாய் நீங்கள் ஜெபியுங்கள்: பர-
மண்டலத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்மு-
டைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

After this manner therefore pray ye: Our Father who art in heaven, hallowed be thy name.

10 உமது சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது-
போல பூமியிலும் செய்யப்படுவதாக.

Thy will be done on earth as it is in heaven.

11 நாங்கள் எங்களுடைய கடனாளிகளை மன்னிப்பதைப் போல, எங்களுடைய கடன்களை எங்களுக்கு மன்னியும்.

And forgive us our debts, as we forgive our debtors.

12 சோதனைக்குள் எங்களை உட்படுத்தாமல் தீமையிலிருந்து இரட்சியும்.

And lead us not into temptation, but deliver us from evil.

13 ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

For thine is the kingdom, and the power, and the glory, forever. Amen.

14 நீங்கள் மனுஷருடைய மீறுதல்களை மன்னித்தால், உங்களுடைய பரலோக பிதாவும் உங்களை மன்னிப்பார்.

For, if ye forgive men their trespasses your heavenly Father will also forgive you;

15 நீங்கள் மனுஷருடைய மீறுதல்களை மன்னியாவிட்டால், உங்களுடைய பிதாவும் உங்களின் மீறுதல்களை மன்னியார்.

But if ye forgive not men their trespasses neither will your Father forgive your trespasses.

16 நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள். ஏனெனில் அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்படியாக, தங்கள் முகங்களை வாடலாய் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்தார்களென்று மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

Moreover, when ye fast be not as the hypocrites, of a sad countenance, for they disfigure their faces that they may appear unto men to fast. Verily I say unto you, they have their reward.

17 ஆனால், நீயோ உபவாசிக்கும்போது, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உனது முகத்தைக் கழுவு.

But thou, when thou fastest, anoint thy head, and wash thy face;

18 நீ உபவாசிக்கும்போது மனுஷருக்கு அல்ல, அந்தரங்கமாய் இருக்கிற உனது பிதாவுக்கே நீ காண்பிக்கவேண்டும். அந்தரங்கத்தில் காண்கிற உனது பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.

That thou appear not unto men to fast, but unto thy Father, who is in secret; and thy Father, who seeth in secret, shall reward thee openly.

19 பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் கெடுக்கும். திருடர்கள் கன்னமிட்டுத் திருடுவார்கள்.

Lay not up for yourselves treasures upon earth, where moth and rust doth corrupt, and thieves break through and steal;

20 ஆனால் பரலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியும், துருவும் கெடுப்பதுமில்லை. அங்கே திருடர்கள் கன்னமிட்டுத் திருடுவதுமில்லை.

But lay up for yourselves treasures in heaven, where neither moth nor rust doth corrupt, and where thieves do not break through nor steal.

21 உங்கள் பொக்கிஷம் எங்கே உள்ளதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

For where your treasure is, there will your heart be also.

22 சரீரத்தின் ஒளி கண். ஆதலால் உன் கண் ஒரே நோக்கு உடையதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் ஒளி நிறைந்ததாயிருக்கும்.

The light of the body is the eye; if, therefore, thine eye be single, thy whole body shall be full of light.

23 உன் கண் பொல்லாததாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் காரிருள் நிறைந்ததாயிருக்கும். ஆதலால் உனக்குள் இருக்கும் ஒளி காரிருளாய் இருந்தால், அந்தக் காரிருள் எவ்வளவு பெரிதாயிருக்கும்!

But if thine eye be evil, thy whole body shall be full of darkness. If, therefore, the light that is in thee be darkness, how great is that darkness!

24 இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் முடியாது; ஏனெனில் அவன் ஒருவனைப் பகைத்து, மற்றொருவனை சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றொருவனை அசட்டை பண்ணுவான். உங்களால் தேவனுக்கும், உலகப்பொருளுக்கும் ஊழியஞ் செய்யமுடியாதே.

No man can serve two masters; for either he will hate the one and love the other, or else he will hold to the one and despise the other. Ye cannot serve God and Mammon.

25 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைப் பேசினவுடனே, அவர் தாம் தெரிந்துகொண்ட பன்னிருவரைப் பார்த்து அவர்களிடத்தில் சொன்னதாவது: நான் பேசின வார்த்தைகளை நினைவில் கொள்ளுங்கள். ஏனெனில் இதோ, இந்த ஜனத்திற்கு ஊழியஞ் செய்யும்படிக்கு நான் தெரிந்துகொண்டவர்கள் நீங்களே. ஆதலால் எதை உண்போம் அல்லது எதைக் குடிப்போம் என்று உங்கள் உயிருக்காவும், எதை உடுப்போமென்று உங்கள் உடலுக்காவும் கவலைப்படாதிருங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். உணவைவிட உயிரும் உடையைவிட உடலும் முக்கியமல்லவா?

And now it came to pass that when Jesus had spoken these words he looked upon the twelve whom he had chosen, and said unto them: Remember the words which I have spoken. For behold, ye are they whom I have chosen to minister unto this people. Therefore I say unto you, take no thought for your life, what ye shall eat, or what ye shall drink; nor yet for your body, what ye shall put on. Is not the life more than meat, and the body than raiment?

26 ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை. களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; இருப்பினும் உங்களுடைய பரலோக பிதா அவைகளைப் போஷிக்கிறார். அவைகளைக் காட்டிலும் நீங்கள் விசேஷித்தவர்களல்லவா?

Behold the fowls of the air, for they sow not, neither do they reap nor gather into barns; yet your heavenly Father feedeth them. Are ye not much better than they?

27 கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் வளர்த்தியோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?

Which of you by taking thought can add one cubit unto his stature?

28 உடைக்காக நீங்கள் கவலைப்படுகிறதென்ன? வெளியின் புஷ்பங்கள் எப்படி வளர்கிறதென்று பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை.

And why take ye thought for raiment? Consider the lilies of the field how they grow; they toil not, neither do they spin;

29 ஆயினும் சாலொமோன் தன் சர்வ மகிமையிலும் இவைகளில் ஒன்றைப்போல உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And yet I say unto you, that even Solomon, in all his glory, was not arrayed like one of these.

30 ஆதலால் இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் வெளியின் புல்லுக்கு தேவன் இவ்விதமாய் உடுத்தினால், அற்ப விசுவாசிகளாய் நீங்கள் இல்லாதிருந்தால் அப்படியே அவர் உங்களுக்கும் உடுத்துவார்.

Wherefore, if God so clothe the grass of the field, which today is, and tomorrow is cast into the oven, even so will he clothe you, if ye are not of little faith.

31 ஆதலால் எதை உண்போம், எதைக் குடிப்போம், எதை உடுப்போமென்று, கவலைப்படவேண்டாம்.

Therefore take no thought, saying, What shall we eat? or, What shall we drink? or, Wherewithal shall we be clothed?

32 ஏனெனில் இவைகள் யாவும் உங்களுக்குத் தேவையாயிருக்கிறது, என்று உங்களுடைய பரலோக பிதா அறிவார்.

For your heavenly Father knoweth that ye have need of all these things.

33 ஆனால் முதலில் தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.

But seek ye first the kingdom of God and his righteousness, and all these things shall be added unto you.

34 ஆதலால் நாளையைக் குறித்து கவலைப்படாதிருங்கள். நாளைய தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்பட்டுக்கொள்ளும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

Take therefore no thought for the morrow, for the morrow shall take thought for the things of itself. Sufficient is the day unto the evil thereof.

## 3 நேபி 14

1 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இவ்வார்த்-
தைகளைப் பேசின பின்பு, அவர் மறுபடியும் திர-
ளானோரிடத்தில் திரும்பி, தமது வாயைத் திறந்து
அவர்களிடத்தில் மறுபடியும் சொன்னதாவது:
மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். நீங்கள் குற்றவாளிகளென்று
தீர்க்கப்படாதபடிக்கு, நீங்கள் பிறரைக் குற்றவாளி-
களென்று தீர்க்காதிருங்கள்.
2 ஏனெனில் நீங்கள் செய்கிற தீர்ப்பின்படியே, நீங்-
களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் அளக்கிற அள-
வின்படியே உங்களுக்கும் திரும்ப அளக்கப்படும்.
3 நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தைக் கவனி-
யாமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்-
பைப் பார்ப்பதென்ன?
4 அல்லது, நீ உன் சகோதரனிடத்தில், நான் உன்
கண்ணிலிருக்கும் துரும்பை நான் எடுத்துவிடுகி-
றேன், என்று எப்படி சொல்லுவாய். இதோ, உன்
கண்ணில்தான் உத்திரம் இருக்கிறதே.
5 மாயக்காரனே, முதலில் உன் கண்ணிலிருக்கும்
உத்திரத்தை எடுத்துப் போடு. அப்பொழுது உன்
சகோதரனின் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்-
துப்போட நீ தெளிவாய்க் காண்பாய்.
6 பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்-
கள். உங்களுடைய முத்துக்களைப் பன்றிகள் முன்
போடாதேயுங்கள், போட்டால் தங்கள் கால்களின்
கீழ் அவைகளை மிதித்து, திரும்பிவந்து, உங்க-
ளைப் பீறிவிடும்.
7 கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்-
கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள்
அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.
8 கேட்கிற எவனும் பெற்றுக்கொள்கிறான்; தேடுகி-
றவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்கு அது தி-
றக்கப்படும்.
9 தன்னிடம் ஆகாரத்தைக் கேட்கும் மகனுக்கு, கல்-
லைக் கொடுக்கும் மனுஷன் உங்களுக்குள்
எவனாகிலும் உண்டோ?
10 அல்லது மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்-
பைக் கொடுப்பானோ?
11 இப்படியானால் பொல்லாதவர்களாகிய நீங்கள்
உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொ-
டுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற
உங்கள் பிதா தம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு நல-
மானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்ல-
வா?

## 3 Nephi 14

And now it came to pass that when Jesus had spoken these words he turned again to the multitude, and did open his mouth unto them again, saying: Verily, verily, I say unto you, Judge not, that ye be not judged.

For with what judgment ye judge, ye shall be judged; and with what measure ye mete, it shall be measured to you again.

And why beholdest thou the mote that is in thy brother's eye, but considerest not the beam that is in thine own eye?

Or how wilt thou say to thy brother: Let me pull the mote out of thine eye—and behold, a beam is in thine own eye?

Thou hypocrite, first cast the beam out of thine own eye; and then shalt thou see clearly to cast the mote out of thy brother's eye.

Give not that which is holy unto the dogs, neither cast ye your pearls before swine, lest they trample them under their feet, and turn again and rend you.

Ask, and it shall be given unto you; seek, and ye shall find; knock, and it shall be opened unto you.

For every one that asketh, receiveth; and he that seeketh, findeth; and to him that knocketh, it shall be opened.

Or what man is there of you, who, if his son ask bread, will give him a stone?

Or if he ask a fish, will he give him a serpent?

If ye then, being evil, know how to give good gifts unto your children, how much more shall your Father who is in heaven give good things to them that ask him?

12 ஆதலால் மனுஷர் உங்களுக்கு செய்யவேண்டுமென நீங்கள் விரும்புகிற அனைத்தையும், நீங்களும் அவர்களுக்கு அப்படியே செய்யுங்கள். ஏனெனில் இதுவே நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுமாய் இருக்கிறது.

Therefore, all things whatsoever ye would that men should do to you, do ye even so to them, for this is the law and the prophets.

13 இடுக்கமான வாசல்வழியே பிரவேசியுங்கள். அழிவுக்குப் போகிற வாசல் அகலமாயும் வழி விரிவாயும் இருக்கிறது. அதன் வழியாய்ப் போகிறவர்கள் பலர்.

Enter ye in at the strait gate; for wide is the gate, and broad is the way, which leadeth to destruction, and many there be who go in thereat;

14 ஜீவனுக்கேதுவாய் போகிற வாசலோ இடுக்கமும் நெருக்கமுமாய் இருக்கிறது. அதைக் கண்டடைபவர்கள் சிலரே.

Because strait is the gate, and narrow is the way, which leadeth unto life, and few there be that find it.

15 கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். ஆனால் உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.

Beware of false prophets, who come to you in sheep’s clothing, but inwardly they are ravening wolves.

16 நீங்கள் அவர்களை அவர்களுடைய கனிகளாலே அறிவீர்கள். மனுஷர் முட்செடிகளிலிருந்து திராட்சைப் பழங்களையும், நெரிஞ்சில்களிலிருந்து அத்திப் பழங்களையும் பறிப்பாரோ?

Ye shall know them by their fruits. Do men gather grapes of thorns, or figs of thistles?

17 அப்படியே நல்ல மரம் எதுவும் நல்ல கனியைக் கொடுக்கும். கெட்ட மரம் கெட்ட கனியைக் கொடுக்கும்.

Even so every good tree bringeth forth good fruit; but a corrupt tree bringeth forth evil fruit.

18 நல்ல மரம் கெட்ட கனியைக் கொடுக்காது. கெட்ட மரமும் நல்ல கனியைக் கொடுக்காது.

A good tree cannot bring forth evil fruit, neither a corrupt tree bring forth good fruit.

19 நல்ல கனியைக் கொடுக்காத எந்த மரமும் வெட்டப்பட்டு, அக்கினியிலே போடப்படும்.

Every tree that bringeth not forth good fruit is hewn down, and cast into the fire.

20 ஆதலால் அவர்களுடைய கனிகளாலே அவர்களை நீங்கள் அறிவீர்கள்.

Wherefore, by their fruits ye shall know them.

21 கர்த்தாவே, கர்த்தாவே, என்று என்னிடம் சொல்லுகிற ஒவ்வொருவரும் அல்ல, பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தினுள் பிரவேசிப்பான்.

Not every one that saith unto me, Lord, Lord, shall enter into the kingdom of heaven; but he that doeth the will of my Father who is in heaven.

22 அந்நாளில் அநேகர் என்னிடத்தில் கர்த்தாவே, கர்த்தாவே, நாங்கள் உம்முடைய நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைக்கவில்லையா. உம்முடைய நாமத்தில் பிசாசுகளைத் துரத்தவில்லையா. உம்முடைய நாமத்தில் அநேக அற்புதமான கிரியைகளைச் செய்யவில்லையா? என்பார்கள்.

Many will say to me in that day: Lord, Lord, have we not prophesied in thy name, and in thy name have cast out devils, and in thy name done many wonderful works?

23 நான் அப்பொழுது அவர்களை நோக்கி: நான் உங்களை ஒருக்காலும் அறியேன். அக்கிரமக்காரரே என்னிடத்திலிருந்து விலகிப்போங்கள், என்று சொல்வேன்.

And then will I profess unto them: I never knew you; depart from me, ye that work iniquity.

24 ஆதலால், என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு, அதைச் செய்கிறவன் எவனோ, அவனை நான் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின ஒரு புத்திமானுக்கு ஒப்பிடுவேன்.

Therefore, whoso heareth these sayings of mine and doeth them, I will liken him unto a wise man, who built his house upon a rock—

25 மழை சொரிந்து, வெள்ளம் வந்து காற்று அடித்து அந்த வீட்டின்மேல் மோதியது. அது கன்மலையின்மேல் கட்டப்பட்டிருந்ததால் அது விழுந்து போகவில்லை.

And the rain descended, and the floods came, and the winds blew, and beat upon that house; and it fell not, for it was founded upon a rock.

26
என் வார்த்தைகளைக் கேட்டு, அதைச் செய்யாத-
வன் ஒவ்வொருவனும், மணல் மேல் தன் வீட்டைக்
கட்டின ஒரு புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்-
படுவான்.

And every one that heareth these sayings of mine and doeth them not shall be likened unto a foolish man, who built his house upon the sand—

27
மழை சொரிந்து, வெள்ளம் வந்து, காற்று அடித்து
அந்த வீட்டின்மேல் மோதியது, அப்பொழுது அது
விழுந்தது. அதனுடைய வீழ்ச்சி பெரிதாயிருந்தது.

And the rain descended, and the floods came, and the winds blew, and beat upon that house; and it fell, and great was the fall of it.

# 3 நேபி 15

1 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இவைகளைச்
சொல்லி முடித்த பின்பு, அவர் தமது கண்களைத்
திரளானோரைச் சுற்றிலும் பார்த்து, அவர்களை
நோக்கி சொன்னதாவது: இதோ, நான் பிதாவினி-
டத்தில் ஏறிப்போகும் முன்பு நான் போதித்த காரி-
யங்களை நீங்கள் கேட்டீர்கள். ஆதலால், இந்த என்
வார்த்தைகளை நினைவுகூர்ந்து அதைச் செய்கிற-
வன் எவனோ, அவனை நான் கடைசி நாளில்
எழுப்புவேன்.
2 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைச்
சொன்னபோது, அவர்களுக்குள் சிலர் மோசேயின்
நியாயப்பிரமாணத்தைக் குறித்து அவர் என்ன
சொல்லப்போகிறார் என்று ஆச்சரியப்பட்டு
மலைத்துப்போனதை அவர் அறிந்தார்; ஏனெனில்
பழையவை எல்லாம் ஒழிந்து போயின. அனைத்-
தும் புதியவையாயின என்ற வார்த்தைகளை
அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.
3 அவர் அவர்களை நோக்கி: பழையவை எல்லாம்
ஒழிந்து போயின. அனைத்தும் புதியவையாயின
என்று நான் சொன்னதினிமித்தம் நீங்கள் மலைத்-
துப் போகவேண்டாம்.
4 இதோ, மோசேயினிடத்தில் கொடுக்கப்பட்ட நியா-
யப்பிரமாணம் நிறைவேறியது, என்று நான் உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன்.
5 இதோ, நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தவர் நா-
னே. இஸ்ரவேல் என்ற என் ஜனத்தோடு உடன்படிக்-
கை பண்ணினவரும் நானே. ஆதலால் என்னில் நி-
யாயப்பிரமாணம் நிறைவேறியது. ஏனெனில் நான்
நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவே வந்தேன்.
ஆகவே அது முடிந்து போயிற்று.
6 இதோ, நான் தீர்க்கதரிசிகளை அழிப்பதில்லை.
ஏனெனில் என்னில் நிறைவேறாமல் இருக்கிற
அனைத்தும் நிறைவேறும், என்று மெய்யாகவே
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
7 பழையவை ஒழிந்து போயின, என்று நான் உங்க-
ளுக்குச் சொன்னதினிமித்தம், வரப்போகிறவைக-
ளைக் குறித்து சொல்லப்பட்டதை நான் அழிப்ப-
தில்லை.
8 ஏனெனில் இதோ, என் ஜனத்தோடு நான் செய்த
உடன்படிக்கை முழுவதும் நிறைவேறவில்லை;
ஆனால், மோசேயினிடத்தில் கொடுக்கப்பட்ட நியா-
யப்பிரமாணம் என்னில் முடிந்து போயிற்று.
9 இதோ, நானே நியாயப்பிரமாணமும், ஒளியுமாயி-
ருக்கிறேன். என்னை நோக்கிப்பார்த்து, முடிவுபரி-
யந்தம் நிலைத்திருங்கள். அப்பொழுது நீங்கள் ஜீ-
விப்பீர்கள்; ஏனெனில் முடிவுபரியந்தம் நிலைத்தி-
ருப்பவனுக்கு நித்திய ஜீவனை அளிப்பேன்.

# 3 Nephi 15

And now it came to pass that when Jesus had ended these sayings he cast his eyes round about on the multitude, and said unto them: Behold, ye have heard the things which I taught before I ascended to my Father; therefore, whoso remembereth these sayings of mine and doeth them, him will I raise up at the last day.

And it came to pass that when Jesus had said these words he perceived that there were some among them who marveled, and wondered what he would concerning the law of Moses; for they understood not the saying that old things had passed away, and that all things had become new.

And he said unto them: Marvel not that I said unto you that old things had passed away, and that all things had become new.

Behold, I say unto you that the law is fulfilled that was given unto Moses.

Behold, I am he that gave the law, and I am he who covenanted with my people Israel; therefore, the law in me is fulfilled, for I have come to fulfil the law; therefore it hath an end.

Behold, I do not destroy the prophets, for as many as have not been fulfilled in me, verily I say unto you, shall all be fulfilled.

And because I said unto you that old things have passed away, I do not destroy that which hath been spoken concerning things which are to come.

For behold, the covenant which I have made with my people is not all fulfilled; but the law which was given unto Moses hath an end in me.

Behold, I am the law, and the light. Look unto me, and endure to the end, and ye shall live; for unto him that endureth to the end will I give eternal life.

10 இதோ, நான் உங்களுக்கு கட்டளைகளைக் கொடுத்திருக்கிறேன். ஆதலால் என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளுமாயிருக்கிறது. ஏனெனில் அவைகள் மெய்யாகவே என்னைக் குறித்து சாட்சி கொடுத்தன.

Behold, I have given unto you the commandments; therefore keep my commandments. And this is the law and the prophets, for they truly testified of me.

11 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைப் பேசின பின்பு, அவர் தாம் தெரிந்துகொண்ட அந்தப் பன்னிருவரை நோக்கி:

And now it came to pass that when Jesus had spoken these words, he said unto those twelve whom he had chosen:

12 நீங்கள் என் சீஷர்கள். யோசேப்பின் வீட்டாரில் மீதியானோரான இந்த ஜனத்திற்கு நீங்களே ஒளியாயிருக்கிறீர்கள்.

Ye are my disciples; and ye are a light unto this people, who are a remnant of the house of Joseph.

13 இதோ, உங்களுடைய சுதந்திர பூமி இதுவே; பிதா இதை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்.

And behold, this is the land of your inheritance; and the Father hath given it unto you.

14 எருசலேமிலிருக்கும் உங்கள் சகோதரருக்கு நான் இதைச் சொல்லவேண்டும், என்ற கட்டளையை பிதா என்னிடத்தில் எச்சமயத்திலும் கொடுத்ததில்லை.

And not at any time hath the Father given me commandment that I should tell it unto your brethren at Jerusalem.

15 தேசத்திலிருந்து பிதா வழிநடத்திப்போன இஸ்ரவேலின் வீட்டாரைச் சேர்ந்த மற்ற கோத்திரங்களைக் குறித்து, அவர்களிடத்தில் நான் சொல்லவேண்டுமென்ற கட்டளையை, பிதா எனக்கு எச்சமயத்திலும் கொடுத்ததில்லை.

Neither at any time hath the Father given me commandment that I should tell unto them concerning the other tribes of the house of Israel, whom the Father hath led away out of the land.

16 நான் அவர்களுக்குச் சொல்லவேண்டுமென்று பிதா எனக்குக் கட்டளையிட்டது இவைகள் மாத்திரமே.

This much did the Father command me, that I should tell unto them:

17 இம்மந்தையில்லாத மற்ற ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அவைகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கும்; அப்பொழுது அங்கே ஒரே மந்தையிருக்கும், ஒரே மேய்ப்பனிருப்பார்.

That other sheep I have which are not of this fold; them also I must bring, and they shall hear my voice; and there shall be one fold, and one shepherd.

18 இப்பொழுதும், வணங்காக்கழுத்தினிமித்தமும் அவிசுவாசத்தினிமித்தமும், அவர்கள் என் வார்த்தையை அறிந்து கொள்ளவில்லை. ஆதலால் இதைக் குறித்து, அவர்களிடத்தில் மேலும் ஒன்றும் சொல்லக்கூடாதென்று, பிதாவினால் கட்டளையிடப்பட்டேன்.

And now, because of stiffneckedness and unbelief they understood not my word; therefore I was commanded to say no more of the Father concerning this thing unto them.

19 பிதா எனக்குக் கட்டளையிட்டார் என்று மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தம் நீங்கள் அவர்களிடத்திலிருந்து பிரிக்கப்பட்டீர்கள், என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆதலால் அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தமே அவர்கள் உங்களைக் குறித்து அறிந்திருக்கவில்லை.

But, verily, I say unto you that the Father hath commanded me, and I tell it unto you, that ye were separated from among them because of their iniquity; therefore it is because of their iniquity that they know not of you.

20 மற்ற கோத்திரங்களை அவர்களிடத்திலிருந்து பிதா பிரித்து வைத்தார் என்று மறுபடியும் மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தமே அவர்கள் தங்களைப்பற்றி அறிந்திருக்கவில்லை.

And verily, I say unto you again that the other tribes hath the Father separated from them; and it is because of their iniquity that they know not of them.

21 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
இந்த மந்தையில்லாத மற்ற ஆடுகளும் எனக்கு
உண்டு; அவர்களையும் நான் கொண்டுவரவேண்-
டும், அவர்கள் என் சத்தத்தைக் கேட்பார்கள். அப்-
பொழுது அங்கே ஒரே மந்தையாயும், ஒரே மேய்ப்-
பனுடையவர்களுமாயிருப்பார்கள் என்று நான்
சொன்னது உங்களைக் குறித்தே.

And verily I say unto you, that ye are they of whom I said: Other sheep I have which are not of this fold; them also I must bring, and they shall hear my voice; and there shall be one fold, and one shepherd.

22 அவர்களோ என்னைப் புரிந்து கொள்ளாமல்,
அது புறஜாதியாரைக் குறிக்கிறது, என்று நினைத்-
தார்கள்; ஏனெனில் புறஜாதியார் தங்களுடைய
போதகத்தினால் மனம் மாற்றப்படவேண்டும், என்-
று அவர்கள் அறிந்திருக்கவில்லை.

And they understood me not, for they supposed it had been the Gentiles; for they understood not that the Gentiles should be converted through their preaching.

23 என்னுடைய சத்தத்தை அவர்கள் கேட்பார்கள்
என்று நான் சொன்னபோது அவர்கள் என்னைப்
புரிந்து கொள்ளவில்லை. புறஜாதியார் என் சத்தத்-
தை ஒருபோதும் கேட்பதில்லை என்றபோதும், பரி-
சுத்த ஆவியானவராலே அல்லாமல் வேறு எவ்வி-
தத்திலும் என்னை அவர்களுக்கு வெளிப்படுத்து-
வதில்லை என்றபோதும் அவர்கள் என்னைப் பு-
ரிந்து கொள்ளவில்லை.

And they understood me not that I said they shall hear my voice; and they understood me not that the Gentiles should not at any time hear my voice—that I should not manifest myself unto them save it were by the Holy Ghost.

24 ஆனால் இதோ, நீங்கள் என் சத்தத்தைக் கேட்டும்,
என்னைக் கண்டும் இருக்கிறீர்கள்; நீங்கள் என்
ஆடுகள், பிதா எனக்குக் கொடுத்தவர்களுக்குள்-
ளே நீங்களும் எண்ணப்பட்டிருக்கிறீர்கள்.

But behold, ye have both heard my voice, and seen me; and ye are my sheep, and ye are numbered among those whom the Father hath given me.

# 3 நேபி 16

1 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இத்தேசத்திலும், எருசலேம் தேசத்திலும், நான் ஊழியம் செய்யப்போன தேசத்தின் சுற்றிலுமுள்ள எந்தப் பகுதியிலும் இராத மற்ற ஆடுகளும் எனக்கு உண்டு.

2 நான் யாரைக் குறித்துப் பேசுகிறேனோ, அவர்கள் இன்னும் என் சத்தத்தைக் கேட்கவில்லை; நான் என்னை அவர்களுக்கு எப்போதும் காண்பிக்கவுமில்லை.

3 ஆனாலும் அங்கே ஒரே மந்தையும், ஒரே மேய்ப்பனும் இருக்கும்படியாக, நான் அவர்களுக்குள் போகவும், அவர்கள் என் சத்தத்தைக் கேட்டு, என் ஆடுகளுக்குள்ளே எண்ணப்படவும் வேண்டுமென்று, நான் பிதாவினிடத்திலிருந்து ஒரு கட்டளையைப் பெற்றிருக்கிறேன். ஆதலால் நான் என்னை அவர்களிடத்தில் காண்பிக்கப்போகிறேன்.

4 தங்களுடைய அவிசுவாசத்தினால் பூமியின் பரப்பின் மேலெங்கும் சிதறடிக்கப்பட்டுப் போகவிருக்கிற, அவர்களுடைய சந்ததியாரின் மீதியானோராகிய, புறஜாதியாரின் முழுமை நிறைவேறும் மட்டும், அல்லது, அவர்கள் தங்கள் மீட்பராகிய என்னைப்பற்றிய ஞானத்திற்குக் கொண்டுவரப்படும்படிக்கு, நீங்கள் எழுதுகிற, சொல்லப்பட்ட இவை, பாதுகாக்கப்பட்டு, புறஜாதியாருக்கு வெளியரங்கமாக்கப்படும்படிக்கு, தாங்கள் பரிசுத்த ஆவியாலே உங்களைப்பற்றியும், தாங்கள் அறிந்திராத மற்ற கோத்திரங்களைப்பற்றியும், என்னைக் கண்டவர்களும், என் ஊழியத்தில் என்னோடு இருந்தவர்களுமாகிய, எருசலேமிலிருந்த என் ஜனங்கள், ஞானத்தைப் பெற பிதாவினிடத்தில் என் நாமத்தில் கேட்காதபடிக்கு, நான் போன பின்பு சொல்லப்பட்ட இவற்றை நீங்கள் எழுதிவைக்கவேண்டுமென்று உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்.

5 பின்பு நான் அவர்களைப் பூமியின் நான்கு மூலைகளிலிருந்தும் கூட்டிச் சேர்ப்பேன். பின்பு பிதாவானவர் இஸ்ரவேலின் வீட்டாராகிய ஜனங்கள் யாவருக்கும் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றுவேன்.

6 என்னிலும், என்னைக் குறித்தும், பிதாவைக் குறித்தும், சாட்சி கொடுக்கிற பரிசுத்த ஆவியானவரிலும், பரிசுத்த ஆவியைக் குறித்ததுமான, தங்களது விசுவாசத்தினிமித்தம் புறஜாதிகள் பாக்கியவான்களாயிருக்கிறார்கள்.

7 இதோ, என்னில் அவர்களின் விசுவாசத்தினிமித்தமும், இஸ்ரவேலின் வீட்டாரே, உங்களின் அவிசுவாசத்தினிமித்தமும், இக்காரியங்களின் முழுமை அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்படிக்கு, பிற்காலத்தில் சத்தியம் புறஜாதியாரிடத்தில் வரும், என்று பிதா உரைக்கிறார்.

# 3 Nephi 16

And verily, verily, I say unto you that I have other sheep, which are not of this land, neither of the land of Jerusalem, neither in any parts of that land round about whither I have been to minister.

For they of whom I speak are they who have not as yet heard my voice; neither have I at any time manifested myself unto them.

But I have received a commandment of the Father that I shall go unto them, and that they shall hear my voice, and shall be numbered among my sheep, that there may be one fold and one shepherd; therefore I go to show myself unto them.

And I command you that ye shall write these sayings after I am gone, that if it so be that my people at Jerusalem, they who have seen me and been with me in my ministry, do not ask the Father in my name, that they may receive a knowledge of you by the Holy Ghost, and also of the other tribes whom they know not of, that these sayings which ye shall write shall be kept and shall be manifested unto the Gentiles, that through the fulness of the Gentiles, the remnant of their seed, who shall be scattered forth upon the face of the earth because of their unbelief, may be brought in, or may be brought to a knowledge of me, their Redeemer.

And then will I gather them in from the four quarters of the earth; and then will I fulfil the covenant which the Father hath made unto all the people of the house of Israel.

And blessed are the Gentiles, because of their belief in me, in and of the Holy Ghost, which witnesses unto them of me and of the Father.

Behold, because of their belief in me, saith the Father, and because of the unbelief of you, O house of Israel, in the latter day shall the truth come unto the Gentiles, that the fulness of these things shall be made known unto them.

8 அவர்கள் இந்த தேசத்தின் பரப்பின் மேல் வந்தி-
ருந்தாலும், இஸ்ரவேலின் வீட்டாராகிய என் ஜனத்-
தைச் சிதறடித்ததினிமித்தம், புறஜாதியாரில் விசு-
வாசியாதவர்களுக்கு ஐயோ, என்று பிதா உரைக்கி-
றார். இஸ்ரவேலின் வீட்டாராகிய என் ஜனங்கள்
அவர்கள் மத்தியிலிருந்து தள்ளப்பட்டு, அவர்க-
ளுடைய கால்களால் மிதிக்கப்பட்டார்கள்.

But wo, saith the Father, unto the unbelieving of the Gentiles—for notwithstanding they have come forth upon the face of this land, and have scattered my people who are of the house of Israel; and my people who are of the house of Israel have been cast out from among them, and have been trodden under feet by them;

9 புறஜாதியார் மேலுள்ள பிதாவின் இரக்கங்களா-
லும், இஸ்ரவேலின் வீட்டாராகிய என் ஜனத்தின்
மேலுள்ள பிதாவின் நியாயத்தீர்ப்புகளினிமித்த-
மும், மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்-
குச் சொல்லுகிறேன், இவை அனைத்திற்குப் பின்-
பும், இஸ்ரவேலின் வீட்டாராகிய என் ஜனம் அடிக்-
கப்படவும், உபத்திரவப்படுத்தப்படவும், கொல்லப்-
படவும், அவர்களின் மத்தியிலிருந்து வெளியே து-
ரத்தப்படவும், அவர்களால் வெறுக்கப்படவும்,
அவர்களுக்குள்ளே சீறுதலாகவும், பழிச் சொல்லா-
கவும் ஆகும்படிச் செய்தேன்.

And because of the mercies of the Father unto the Gentiles, and also the judgments of the Father upon my people who are of the house of Israel, verily, verily, I say unto you, that after all this, and I have caused my people who are of the house of Israel to be smitten, and to be afflicted, and to be slain, and to be cast out from among them, and to become hated by them, and to become a hiss and a byword among them—

10 நான் உங்களிடத்தில் சொல்லவேண்டுமென பிதா
கட்டளையிடுவதாவது: புறஜாதிகள் என் சுவிசே-
ஷத்திற்கு விரோதமாய் பாவம் செய்து, என் சுவிசே-
ஷத்தின் முழுமையை நிராகரித்து எல்லா தேசங்க-
ளைவிடவும், பூமியின் மீதெங்குமுள்ள ஜனங்க-
ளைவிடவும், தங்களின் இருதயத்தின் பெருமையி-
னால் உயர்த்தப்பட்டு, எல்லாவிதமான பொய்களா-
லும், வஞ்சகங்களாலும், பொல்லாப்புகளாலும்,
எல்லா விதமான மாய்மாலங்களாலும், கொலைக-
ளாலும், ஆசாரிய வஞ்சகங்களாலும், வேசித்தனங்-
களாலும், இரகசிய அருவருப்புகளாலும் நிறைக்-
கப்பட்டிருக்கும் நாளிலே இக்காரியங்கள் யாவை-
யும் அவர்கள் செய்து, என் சுவிசேஷத்தின் முழு-
மையை நிராகரித்தால் இதோ, நான் என் சுவிசே-
ஷத்தின் முழுமையை அவர்கள் மத்தியிலிருந்து
எடுத்துப் போடுவேன், என்று பிதா உரைக்கிறார்.

And thus commandeth the Father that I should say unto you: At that day when the Gentiles shall sin against my gospel, and shall reject the fulness of my gospel, and shall be lifted up in the pride of their hearts above all nations, and above all the people of the whole earth, and shall be filled with all manner of lyings, and of deceits, and of mischiefs, and all manner of hypocrisy, and murders, and priestcrafts, and whoredoms, and of secret abominations; and if they shall do all those things, and shall reject the fulness of my gospel, behold, saith the Father, I will bring the fulness of my gospel from among them.

11 இஸ்ரவேலின் வீட்டாரே, என் ஜனங்களிடம் செய்-
துகொண்ட என் உடன்படிக்கையை அப்பொழுது
நான் நினைவு கூருவேன், நான் அவர்களிடத்தில்
என் சுவிசேஷத்தைக் கொண்டு வருவேன்.

And then will I remember my covenant which I have made unto my people, O house of Israel, and I will bring my gospel unto them.

12 புறஜாதிகள் உங்கள்மேல் வல்லமை கொண்டி-
ருப்பதில்லை என்று இஸ்ரவேலின் வீட்டாரே உங்க-
ளுக்கு நான் காண்பிப்பேன். ஆனால், இஸ்ரவே-
லின் வீட்டாரே உங்களுடன் செய்துகொண்ட என்
உடன்படிக்கையை நான் நினைவுகூருவேன். நீங்-
கள் என் சுவிசேஷத்தின் முழுமையின் ஞானத்திற்-
கு வருவீர்கள்.

And I will show unto thee, O house of Israel, that the Gentiles shall not have power over you; but I will remember my covenant unto you, O house of Israel, and ye shall come unto the knowledge of the fulness of my gospel.

13 ஆனால் புறஜாதியார் மனந்திரும்பி, என்னிடத்-
தில் திரும்புவார்களெனில், இதோ, இஸ்ரவேலின்
வீட்டாரே, அவர்கள் என் ஜனங்களுக்குள்ளாக
எண்ணப்படுவார்கள், என்று பிதா உரைக்கிறார்.

But if the Gentiles will repent and return unto me, saith the Father, behold they shall be numbered among my people, O house of Israel.

14 இஸ்ரவேலின் வீட்டாரைச் சேர்ந்த என் ஜனத்தார், அவர்களுக்கு மத்தியிலே போய் அவர்களை மிதிக்கும்படியாக நான் அனுமதிப்பதில்லை, என்று பிதா உரைக்கிறார்.

And I will not suffer my people, who are of the house of Israel, to go through among them, and tread them down, saith the Father.

15 ஆனால் அவர்கள் என்னிடத்தில் திரும்பாமலும், என் சத்தத்திற்குச் செவிகொடாமலும் இருந்தால், ஆம், என் ஜனமாகிய இஸ்ரவேலின் வீட்டாரே, அவர்கள் அவர்களுக்குள்ளே போய் அவர்களை மிதித்துப்போடும்படி அனுமதிப்பேன். இஸ்ரவேலின் வீட்டாரே அவர்கள் வெளியே எறியப்படுவதற்கும், என் ஜனத்தின் காலால் மிதிபடவும் ஒழிய, வேறொன்றுக்கும் உதவாத சாரமற்றுப்போன உப்புக்கு அவர்கள் ஒப்பாயிருப்பார்கள்.

But if they will not turn unto me, and hearken unto my voice, I will suffer them, yea, I will suffer my people, O house of Israel, that they shall go through among them, and shall tread them down, and they shall be as salt that hath lost its savor, which is thenceforth good for nothing but to be cast out, and to be trodden under foot of my people, O house of Israel.

16 மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பிதா எனக்குக் கட்டளையிட்டதாவது, நான் இந்த ஜனத்திற்கு இந்த இடத்தை அவர்களின் சுதந்திரமாக கொடுக்கவேண்டும்.

Verily, verily, I say unto you, thus hath the Father commanded me—that I should give unto this people this land for their inheritance.

17 அப்பொழுது, இப்படிச் சொல்லுகிற ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகள் நிறைவேறும்.

And then the words of the prophet Isaiah shall be fulfilled, which say:

18 உன்னுடைய காவல்காரர் தொனியை எழுப்புவார்கள்; அவர்கள் ஒருமித்துக் கெம்பீரிப்பார்கள். ஏனெனில் கர்த்தர் சீயோனை மறுபடியும் கொண்டுவரும்போது அவர்கள் கண்ணாரக் காண்பார்கள்.

Thy watchmen shall lift up the voice; with the voice together shall they sing, for they shall see eye to eye when the Lord shall bring again Zion.

19 எருசலேமின் பாழான இடங்களே, பூரிப்படைந்து, ஏகமாய்ப் பாடுங்கள்; கர்த்தர் தம் ஜனத்தைத் தேற்றி, எருசலேமை மீட்டுக்கொண்டார்.

Break forth into joy, sing together, ye waste places of Jerusalem; for the Lord hath comforted his people, he hath redeemed Jerusalem.

20 கர்த்தர் தமது பரிசுத்த புயத்தை எல்லா தேசங்களின் கண்களுக்கும் வெளிப்படுத்தினார். பூமியின் கடையாந்திரங்கள் யாவும், தேவனுடைய இரட்சிப்பைக் காணும்.

The Lord hath made bare his holy arm in the eyes of all the nations; and all the ends of the earth shall see the salvation of God.

# 3 நேபி 17

1 இதோ, இப்பொழுது, அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைப் பேசின பின்பு, அவர் மறுபடியும் திரளானோரைச் சுற்றிலும் பார்த்து, அவர்களை நோக்கி: இதோ, என் நேரம் சமீபமாயிருக்கிறது.

2 நீங்கள் பெலவீனராயிருப்பதாலே, இச்சமயத்தில் உங்களிடத்தில் நான் பேசவேண்டுமென்று பிதாவினால் கட்டளையிடப்பட்ட என் வார்த்தைகள் அனைத்தையும் உங்களால் புரிந்துகொள்ள முடியாதென்று உணர்கிறேன்.

3 ஆகவே நீங்கள் உங்கள் வீடுகளுக்குப் போய், நான் சொன்ன காரியங்களைத் தியானித்து, நீங்கள் புரிந்துகொள்ளும்படியாக என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டு, நாளைக்கென்று உங்கள் மனங்களை ஆயத்தம் பண்ணுங்கள், நான் மறுபடியும் உங்களிடம் வருகிறேன்.

4 இப்பொழுதோ நான் பிதாவினிடத்திற்கும், காணாமற்போன இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு என்னைக் காண்பிக்கும்படிக்கும் போகிறேன். ஏனெனில் அவர்கள் பிதாவின் பார்வையில் தொலைந்துபோனவர்களல்ல, ஏனெனில் அவர் அவர்களை எங்கே கூட்டிச் சென்றிருக்கிறார் என்பதை அறிவார்.

5 அந்தப்படியே, இயேசு இவ்வாறு பேசினவுடனே, அவர் தம்முடைய கண்களை மறுபடியும் திரளானோருக்கு நேராய் ஏறெடுத்து, அவர்கள் கண்ணீர் விடுவதையும், அவர் தங்களோடு சற்று அதிகமாய்த் தங்கவேண்டுமென்று கேட்பதுபோன்று அவர்கள் அவரையே, கண்ணிமைக்காமல் பார்த்ததையும் கண்டார்.

6 அவர் அவர்களை நோக்கி: இதோ, என் உள்ளம் உங்கள் பேரில் மனதுருக்கத்தால் நிரம்பியிருக்கிறது.

7 உங்களிடையே வியாதியஸ்தர் எவரேனும் உண்டா? அவர்களை இங்கே கொண்டு வாருங்கள். உங்களிடையே முடவர், குருடர், சப்பாணி, ஊனர், குஷ்டரோகி, சூம்பின உறுப்படையர், செவிடர், எந்த விதத்திலும் உபத்திரவப்பட்டவர் எவரேனும் உண்டா? அவர்களை இங்கே கொண்டு வாருங்கள். நான் அவர்களை சுகப்படுத்துவேன், ஏனெனில் நான் உங்கள்மேல் மனதுருக்கமாயிருக்கிறேன். என் உள்ளம் இரக்கத்தால் நிரம்பியிருக்கிறது.

8 நான் எருசலேமிலிருக்கும் உங்களுடைய சகோதரருக்குச் செய்ததை, உங்களுக்கும் காண்பிக்கவேண்டுமென்று நீங்கள் வாஞ்சிக்கிறீர்கள், என்று நான் உணர்கிறேன், ஏனெனில் உங்கள் விசுவாசம் நான் உங்களை சுகப்படுத்த போதுமானதாயிருக்கிறது, என்று காண்கிறேன்.

# 3 Nephi 17

Behold, now it came to pass that when Jesus had spoken these words he looked round about again on the multitude, and he said unto them: Behold, my time is at hand.

I perceive that ye are weak, that ye cannot understand all my words which I am commanded of the Father to speak unto you at this time.

Therefore, go ye unto your homes, and ponder upon the things which I have said, and ask of the Father, in my name, that ye may understand, and prepare your minds for the morrow, and I come unto you again.

But now I go unto the Father, and also to show myself unto the lost tribes of Israel, for they are not lost unto the Father, for he knoweth whither he hath taken them.

And it came to pass that when Jesus had thus spoken, he cast his eyes round about again on the multitude, and beheld they were in tears, and did look steadfastly upon him as if they would ask him to tarry a little longer with them.

And he said unto them: Behold, my bowels are filled with compassion towards you.

Have ye any that are sick among you? Bring them hither. Have ye any that are lame, or blind, or halt, or maimed, or leprous, or that are withered, or that are deaf, or that are afflicted in any manner? Bring them hither and I will heal them, for I have compassion upon you; my bowels are filled with mercy.

For I perceive that ye desire that I should show unto you what I have done unto your brethren at Jerusalem, for I see that your faith is sufficient that I should heal you.

9 அந்தப்படியே, அவர் இவ்வாறு பேசின பின்பு, திரளானோர் அனைவரும் ஒரு மனதாய்த் தங்கள் வியாதியஸ்தரோடும், தங்கள் உபத்திரவப்பட்டோருடனும், தங்கள் முடவர்களுடனும், தங்கள் குருடர்களுடனும், தங்கள் ஊமையோருடனும், எந்த விதத்திலும் உபத்திரவப்பட்ட அனைவருடனும் போனார்கள். அவர், அவர்கள் தம்மிடத்தில் அழைத்துவரப்பட்டபோது, அவர்கள் ஒவ்வொருவரையும் சுகப்படுத்தினார்.

And it came to pass that when he had thus spoken, all the multitude, with one accord, did go forth with their sick and their afflicted, and their lame, and with their blind, and with their dumb, and with all them that were afflicted in any manner; and he did heal them every one as they were brought forth unto him.

10 சுகப்பட்டோரும், சுகமாயிருந்தோருமான யாவரும் அவருடைய பாதத்தில் விழுந்து, அவரைத் தொழுதுகொண்டார்கள்; திரள்கூட்டம் அதிகமாயிருந்ததினிமித்தம், வரமுடிந்த யாவரும் அவருடைய பாதத்தைத் தங்கள் கண்ணீரால் கழுவும் அளவுக்கு, அவருடைய பாதத்தை முத்தமிட்டார்கள்.

And they did all, both they who had been healed and they who were whole, bow down at his feet, and did worship him; and as many as could come for the multitude did kiss his feet, insomuch that they did bathe his feet with their tears.

11 அந்தப்படியே, அவர்களுடைய சிறுபிள்ளைகளைக் கூட்டிவரும்படிக்கு அவர் கட்டளையிட்டார்.

And it came to pass that he commanded that their little children should be brought.

12 அவர்கள் தங்கள் சிறுபிள்ளைகளைக் கூட்டிவந்து, அவரைச் சுற்றிலும் தரையிலே உட்கார வைத்தார்கள். இயேசு நடுவிலே நின்றார். அவர்கள் எல்லோரும் அவரிடம் கொண்டுவரப்படும் வரைக்கும் திரளானோர் வழிவிட்டார்கள்.

So they brought their little children and set them down upon the ground round about him, and Jesus stood in the midst; and the multitude gave way till they had all been brought unto him.

13 அந்தப்படியே, அவர்கள் அனைவரும் கொண்டுவரப்பட்டபோது, இயேசு நடுவிலே நின்று, திரளானோர் பூமியில் முழங்கால்படியிடும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

And it came to pass that when they had all been brought, and Jesus stood in the midst, he commanded the multitude that they should kneel down upon the ground.

14 அந்தப்படியே, அவர்கள் பூமியில் முழங்கால்படியிட்டபோது, இயேசு தமக்குள்ளே துக்கித்து, பிதாவே, இஸ்ரவேல் வீட்டாரின் துன்மார்க்கத்தினிமித்தம் நான் கலங்கியிருக்கிறேன், என்றார்.

And it came to pass that when they had knelt upon the ground, Jesus groaned within himself, and said: Father, I am troubled because of the wickedness of the people of the house of Israel.

15 அவர் இவ்வார்த்தைகளைச் சொன்னபோது அவரும் பூமியிலே முழங்கால்படியிட்டார்; இதோ, அவர் பிதாவினிடத்தில் ஜெபித்தார். அவர் ஜெபித்த காரியங்கள் எழுதப்படமுடியாது. அவர் ஜெபித்ததைக் கேட்ட திரளானோர் சாட்சி கொடுத்தார்கள்.

And when he had said these words, he himself also knelt upon the earth; and behold he prayed unto the Father, and the things which he prayed cannot be written, and the multitude did bear record who heard him.

16 இவ்விதமாய் அவர்கள் சாட்சி கொடுக்கிறார்கள்: இயேசு பிதாவினிடத்தில் பேசினதை நாங்கள் கண்டதும் கேட்டதும், முன்பு ஒருக்காலும் கண் காணாததும், காது கேளாததுமான, பெரிதும் மகத்துவமுள்ளதுமான காரியங்களாய் இருந்தன.

And after this manner do they bear record: The eye hath never seen, neither hath the ear heard, before, so great and marvelous things as we saw and heard Jesus speak unto the Father;

17 நாங்கள் கண்டதும் கேட்டதுமான, இயேசு பேசின அந்தப் பெரியதும் மகத்துவமுள்ளதுமான காரியங்களை எந்த நாவும் பேசமுடியாது, எந்த மனுஷனாலும் அவை எழுதப்படவும் முடியாது, மனுஷரின் இருதயங்கள் எண்ணிப்பார்க்கவும் முடியாது, எங்களுக்காக அவர் பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணுகிறதை நாங்கள் கேட்ட அச்சமயத்தில், எங்கள் ஆத்துமாக்களை நிறைத்த அந்த சந்தோஷத்தை ஒருவராலும் எண்ணிப்பார்க்க முடியாது.

And no tongue can speak, neither can there be written by any man, neither can the hearts of men conceive so great and marvelous things as we both saw and heard Jesus speak; and no one can conceive of the joy which filled our souls at the time we heard him pray for us unto the Father.

18 அந்தப்படியே, இயேசு பிதாவிடத்தில் ஜெபம்பண்ணுகிறதை முடித்தவுடனே அவர் எழுந்தார். ஆனால் திரளானோர் மேற்கொள்ளப்பட்டிருக்கும்படியாக, அவர்களது சந்தோஷம் மிகுதியாயிருந்தது.

And it came to pass that when Jesus had made an end of praying unto the Father, he arose; but so great was the joy of the multitude that they were overcome.

19 அந்தப்படியே, இயேசு அவர்களிடத்தில் பேசி, அவர்கள் எழும்படிச் சொன்னார்.

And it came to pass that Jesus spake unto them, and bade them arise.

20 அவர்கள் பூமியிலிருந்து எழுந்தார்கள். அவர் அவர்களை நோக்கி: உங்களுடைய விசுவாசத்தினிமித்தம் நீங்கள் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். இப்பொழுதும் இதோ, என் சந்தோஷம் நிறைவாயிருக்கிறது, என்றார்.

And they arose from the earth, and he said unto them: Blessed are ye because of your faith. And now behold, my joy is full.

21 அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னபின்பு அழுதார். திரளானோர் அதற்கு சாட்சி கொடுத்தார்கள். அவர் அவர்களுடைய சிறுபிள்ளைகளை ஒவ்வொருவராய் எடுத்து, அவர்களை ஆசீர்வதித்து அவர்களுக்காக பிதாவினிடத்தில் ஜெபித்தார்.

And when he had said these words, he wept, and the multitude bare record of it, and he took their little children, one by one, and blessed them, and prayed unto the Father for them.

22 அவர் இதைச் செய்தபோது அவர் மறுபடியும் அழுதார்;

And when he had done this he wept again;

23 அவர் திரளானோருடன் பேசி, அவர்களை நோக்கி: உங்கள் சிறுபிள்ளைகளைப் பாருங்கள், என்றார்.

And he spake unto the multitude, and said unto them: Behold your little ones.

24 அவர்கள் பார்க்க தங்கள் கண்களை வானத்திற்கு நேராய் ஏறெடுத்தார்கள். அவர்கள் வானம் திறக்கிறதைக் கண்டார்கள். தூதர்கள் அக்கினியால் சூழப்பட்டு, வானத்திலிருந்து இறங்குவதுபோலக் கண்டார்கள். அவர்கள் கீழே வந்து அந்த சிறுபிள்ளைகளைச் சுற்றிலும் நின்றார்கள். அப்பொழுது அவர்கள் அக்கினியால் சூழப்பட்டார்கள். தூதர்கள் அவர்களுக்குப் பணிவிடை செய்தார்கள்.

And as they looked to behold they cast their eyes towards heaven, and they saw the heavens open, and they saw angels descending out of heaven as it were in the midst of fire; and they came down and encircled those little ones about, and they were encircled about with fire; and the angels did minister unto them.

25 திரளானோர் பார்த்து, கேட்டு, சாட்சி கொடுத்தார்கள்; அவர்களில் அனைவரும் ஒவ்வொருவரும் தாமே பார்த்தும் கேட்டும் இருந்ததால், அவர்களுடைய பதிவுகள் உண்மையானவை என்று அறிந்திருக்கிறார்கள்; அவர்கள் எண்ணிக்கையிலே ஏறக்குறைய இரண்டாயிரத்து ஐநூறு ஆத்துமாக்களாய் இருந்தார்கள்; அவர்களில் ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் அடங்குவர்.

And the multitude did see and hear and bear record; and they know that their record is true for they all of them did see and hear, every man for himself; and they were in number about two thousand and five hundred souls; and they did consist of men, women, and children.

# 3 நேபி 18

1 அந்தப்படியே, தம்மிடத்தில் கொஞ்சம் அப்பத்தையும் திராட்சை ரசத்தையும் கொண்டுவரும்படி, இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

2 அவர்கள் அப்பமும், திராட்சை ரசமும் கொண்டுவரப் போயிருந்த போது, அவர் திரளானோரை தரையில் உட்காரும்படி கட்டளையிட்டார்.

3 சீஷர்கள் அப்பத்தோடும், திராட்சை ரசத்தோடும் வந்தபோது, அவர் அப்பத்தை எடுத்து, பிட்டு அதை ஆசீர்வதித்தார்; அவர் சீஷர்களுக்குக் கொடுத்து அதை உண்ணும்படிக் கட்டளையிட்டார்.

4 அவர்கள் உண்டு திருப்தியானபோது, அவர்கள் திரளானோருக்குக் கொடுக்கவேண்டுமெனக் கட்டளையிட்டார்.

5 திரளானோர் உண்டு திருப்தியானபோது, அவர் சீஷர்களை நோக்கி: இதோ, உங்களில் ஒருவன் நியமிக்கப்படுவான். விசுவாசித்து என் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் யாவருமாகிய என் சபையின் ஜனங்களுக்கு, அப்பத்தைப் பிட்டு அதை ஆசீர்வதித்து, அதைக் கொடுக்கும்படியான அதிகாரத்தை அவனுக்குக் கொடுப்பேன்.

6 நான் செய்ததுபோலவே, நான் அப்பத்தைப் பிட்டு, அதை ஆசீர்வதித்து அதை உங்களுக்குக் கொடுத்ததைப் போலவே, நீங்களும் எப்பொழுதும் ஆசரிப்பீர்களாக.

7 நான் உங்களுக்குக் காண்பித்த என் சரீரத்தின் நினைவாக- இதைச் செய்வீர்களாக. நீங்கள் என்னை எப்பொழுதும் நினைவுகூருகிறீர்கள் என்று அது பிதாவுக்கு சாட்சியமாக இருக்கும். நீங்கள் என்னை எப்பொழுதும் நினைவுகூர்ந்தால், உங்களுடனே கூட இருக்கும்படி என் ஆவியைப் பெறுவீர்கள்.

8 அந்தப்படியே, அவர் இந்த வார்த்தைகளைச் சொன்ன பின்பு, பாத்திரத்திலிருந்து திராட்சை ரசத்தை எடுத்து, அதைப் பருகவேண்டுமென்றும், திரளானோரும் அதைப் பருகும்படி அவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும், தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளையிட்டார்.

9 அந்தப்படியே, அவர்கள் அப்படியே செய்து அதைப் பானம் பண்ணி திருப்தியானார்கள்; அவர்கள் திரளானோருக்கும் கொடுத்தார்கள்; அவர்கள் பானம் பண்ணி திருப்தியானார்கள்.

10 சீஷர்கள் இதைச் செய்த பின்னர், இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இந்தக் காரியத்தைச் செய்ததினிமித்தம் பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். இது என் கட்டளைகளை நிறைவேற்றுகிறது. நான் உங்களுக்குக் கட்டளையிட்டதைச் செய்ய நீங்கள் மனமுள்ளவர்களாயிருக்கிறீர்கள் என்று இது பிதாவுக்குச் சாட்சி கொடுக்கிறது.

# 3 Nephi 18

And it came to pass that Jesus commanded his disciples that they should bring forth some bread and wine unto him.

And while they were gone for bread and wine, he commanded the multitude that they should sit themselves down upon the earth.

And when the disciples had come with bread and wine, he took of the bread and brake and blessed it; and he gave unto the disciples and commanded that they should eat.

And when they had eaten and were filled, he commanded that they should give unto the multitude.

And when the multitude had eaten and were filled, he said unto the disciples: Behold there shall one be ordained among you, and to him will I give power that he shall break bread and bless it and give it unto the people of my church, unto all those who shall believe and be baptized in my name.

And this shall ye always observe to do, even as I have done, even as I have broken bread and blessed it and given it unto you.

And this shall ye do in remembrance of my body, which I have shown unto you. And it shall be a testimony unto the Father that ye do always remember me. And if ye do always remember me ye shall have my Spirit to be with you.

And it came to pass that when he said these words, he commanded his disciples that they should take of the wine of the cup and drink of it, and that they should also give unto the multitude that they might drink of it.

And it came to pass that they did so, and did drink of it and were filled; and they gave unto the multitude, and they did drink, and they were filled.

And when the disciples had done this, Jesus said unto them: Blessed are ye for this thing which ye have done, for this is fulfilling my commandments, and this doth witness unto the Father that ye are willing to do that which I have commanded you.

11 மனந்திரும்பி என் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறுகிறவர்களுக்கு இதை நீங்கள் எப்பொழுதும் செய்யுங்கள்; இதினிமித்தம் நீங்கள் என்னை எப்பொழுதும் நினைவுகூருகிறீர்களென்று பிதாவுக்கு சாட்சி கொடுக்க நான் உங்களுக்காக சிந்தின என் இரத்தத்தை நினைவுகூரும்படியாய் இதைச் செய்யுங்கள். நீங்கள் என்னை எப்பொழுதும் நினைவுகூர்ந்தால், உங்களுடனேகூட இருக்கும்படி என் ஆவியைப் பெறுவீர்கள்.

And this shall ye always do to those who repent and are baptized in my name; and ye shall do it in remembrance of my blood, which I have shed for you, that ye may witness unto the Father that ye do always remember me. And if ye do always remember me ye shall have my Spirit to be with you.

12 நீங்கள் இவைகளைச் செய்யவேண்டுமென்று நான் உங்களுக்கு ஒரு கட்டளையைக் கொடுக்கிறேன். இவைகளை நீங்கள் எப்பொழுதும் செய்வீர்களானால் நீங்கள் பாக்கியவான்கள். ஏனெனில் நீங்கள் என் கன்மலையின்மேல் கட்டப்பட்டிருக்கிறீர்கள்.

And I give unto you a commandment that ye shall do these things. And if ye shall always do these things blessed are ye, for ye are built upon my rock.

13 ஆனால் உங்களில் இவைகளுக்கு அதிகமாயோ அல்லது குறைவாகவோ செய்கிற எவனும் என் கன்மலையின்மேல் கட்டாதவன். மணலான அஸ்திவாரத்தின் மேல் கட்டியவன். மழைபொழிந்து, வெள்ளம் பெருக்கெடுத்து, காற்று வீசி அவற்றின் மேல் அடிக்கும்போது, அவை வீழ்ந்து போகும். பாதாளத்தின் வாசல்கள் அவர்களை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாய் திறந்திருக்கிறது.

But whoso among you shall do more or less than these are not built upon my rock, but are built upon a sandy foundation; and when the rain descends, and the floods come, and the winds blow, and beat upon them, they shall fall, and the gates of hell are ready open to receive them.

14 ஆகவே, நான் உங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று, பிதாவினால் நான் கட்டளையிடப்பட்டு, கொடுத்த என் கட்டளைகளை நீங்கள் கைக்கொண்டால், நீங்கள் பாக்கியவான்கள்.

Therefore blessed are ye if ye shall keep my commandments, which the Father hath commanded me that I should give unto you.

15 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் விழித்திருந்து எப்பொழுதும் ஜெபிக்க வேண்டும். இல்லையேல் நீங்கள் பிசாசினால் சோதிக்கப்பட்டு, அவனால் சிறைக்கைதியாய் நடத்திச் செல்லப்படுவீர்கள்.

Verily, verily, I say unto you, ye must watch and pray always, lest ye be tempted by the devil, and ye be led away captive by him.

16 நான் உங்கள் மத்தியிலே ஜெபித்ததுபோல, நீங்களும் என் சபையிலே, மனந்திரும்பி என் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறுகிற என் ஜனங்கள் மத்தியிலும் ஜெபியுங்கள். இதோ, நானே ஒளியாயிருக்கிறேன்; நான் உங்களுக்காக உதாரணத்தை ஏற்படுத்தியிருக்கிறேன், என்றார்.

And as I have prayed among you even so shall ye pray in my church, among my people who do repent and are baptized in my name. Behold I am the light; I have set an example for you.

17 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைத் தமது சீஷர்களுக்குப் பேசி முடித்தபோது, அவர் மறுபடியும் திரளானோருக்கு நேராய்த் திரும்பி, அவர்களை நோக்கி:

And it came to pass that when Jesus had spoken these words unto his disciples, he turned again unto the multitude and said unto them:

18 இதோ, மெய்யாகவே மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், சோதனைக்குட்படாதபடிக்கு நீங்கள் விழித்திருந்து, எப்பொழுதும் ஜெபிக்கவேண்டும்; ஏனெனில் கோதுமையை அரிப்பதுபோல, சாத்தான் உங்களை அரிப்பதற்கு வாஞ்சிக்கிறான்.

Behold, verily, verily, I say unto you, ye must watch and pray always lest ye enter into temptation; for Satan desireth to have you, that he may sift you as wheat.

19 ஆதலால் நீங்கள் எப்பொழுதும் என் நாமத்தினாலே பிதாவிடத்தில் ஜெபிக்கவேண்டும்.

Therefore ye must always pray unto the Father in my name;

20 சரியானதெதையும், என் நாமத்தினாலே பிதாவிடத்தில் கேட்டு, நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள் என்று விசுவாசித்தால், இதோ, அது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

And whatsoever ye shall ask the Father in my name, which is right, believing that ye shall receive, behold it shall be given unto you.

21 உங்கள் மனைவிகளும், உங்கள் பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்படும்படி உங்கள் குடும்பங்களில் எப்பொழுதும் என் நாமத்தினாலே பிதாவிடத்தில் ஜெபியுங்கள்.

Pray in your families unto the Father, always in my name, that your wives and your children may be blessed.

22 இதோ, நீங்கள் அடிக்கடி ஒருமித்து கூடவேண்டும்; நீங்கள் ஒருமித்து கூடுகிறபோது, உங்களிடத்தில் வராதபடி எந்த மனுஷனையும் தடைபண்ணாதிருந்து அவர்கள் உங்களிடத்தில் வரும்படி அனுமதித்து, அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்.

And behold, ye shall meet together oft; and ye shall not forbid any man from coming unto you when ye shall meet together, but suffer them that they may come unto you and forbid them not;

23 ஆனால் நீங்கள் அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களைப் புறம்பே தள்ளாதிருங்கள்; அவர்கள் உங்களிடத்தில் அடிக்கடி வந்தால், நீங்கள் அவர்களுக்காக என் நாமத்தினாலே பிதாவிடத்தில் ஜெபியுங்கள்.

But ye shall pray for them, and shall not cast them out; and if it so be that they come unto you oft ye shall pray for them unto the Father, in my name.

24 ஆதலால், உங்களுடைய வெளிச்சம் உலகத்திற்குப் பிரகாசிக்கும்படி உயரப் பிடியுங்கள். இதோ, நீங்கள் நான் செய்ததைக் கண்டிருப்பதாலே, நானே நீங்கள் உயரப்பிடிக்க வேண்டிய வெளிச்சமாயிருக்கிறேன். இதோ, நான் பிதாவினிடத்தில் ஜெபித்ததை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். நீங்கள் யாவரும் கண்டிருக்கிறீர்கள்.

Therefore, hold up your light that it may shine unto the world. Behold I am the light which ye shall hold up—that which ye have seen me do. Behold ye see that I have prayed unto the Father, and ye all have witnessed.

25 உங்களில் ஒருவரும் புறம்பே போகக்கூடாது என்று நான் கட்டளையிட்டிருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். ஆயினும் நீங்கள் உணர்ந்து காணும்படியாக என்னிடத்தில் வரவேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறேன், நீங்களும் உலகத்திற்கு இப்படியே செய்வீர்களாக; இந்தக் கட்டளையை மீறுகிற எவனும் சோதனைக்குள் நடத்தப்படும்படியாக தன்னையே அனுமதிக்கிறான், என்றார்.

And ye see that I have commanded that none of you should go away, but rather have commanded that ye should come unto me, that ye might feel and see; even so shall ye do unto the world; and whosoever breaketh this commandment suffereth himself to be led into temptation.

26 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, அவர் தாம் தெரிந்துகொண்ட சீஷர்கள்மேல் தம்முடைய கண்களை மறுபடியும் ஏறெடுத்து, அவர்களை நோக்கிச் சொன்னதாவது:

And now it came to pass that when Jesus had spoken these words, he turned his eyes again upon the disciples whom he had chosen, and said unto them:

27 இதோ, மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் உங்களுக்கு மற்றொரு கட்டளையைக் கொடுக்கிறேன். பின்பு பிதா எனக்குக் கொடுத்த மற்ற கட்டளைகளை நான் நிறைவேற்றும்படியாக, என் பிதாவிடத்தில் போகவேண்டும்.

Behold verily, verily, I say unto you, I give unto you another commandment, and then I must go unto my Father that I may fulfil other commandments which he hath given me.

28 இப்பொழுதும் இதோ, நீங்கள் பரிமாறும்போது, அபாத்திரமாய் என் மாம்சத்தையும் இரத்தத்தையும் அறிந்தே புசிக்கிறவன் எவனையும் நீங்கள் அனுமதிக்கவேண்டாம், என்ற இந்தக் கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.

And now behold, this is the commandment which I give unto you, that ye shall not suffer any one knowingly to partake of my flesh and blood unworthily, when ye shall minister it;

29 என் மாம்சத்தையும் இரத்தத்தையும் அபாத்திரமாய்ப் புசித்துக் குடிக்கிற எவனும் தன்னுடைய ஆத்துமாவுக்கென்று ஆக்கினைத்தீர்ப்பைப் புசித்துக் குடிக்கிறான்; ஆதலால் என் மாம்சத்தையும், இரத்தத்தையும், புசித்துக் குடிக்க ஒரு மனுஷனை அபாத்திரன், என்று நீங்கள் கண்டால் அவனைத் தடைபண்ணுவீர்களாக.

For whoso eateth and drinketh my flesh and blood unworthily eateth and drinketh damnation to his soul; therefore if ye know that a man is unworthy to eat and drink of my flesh and blood ye shall forbid him.

30 ஆயினும் நீங்கள் அவனை உங்களிலிருந்து புறம்பே தள்ளாமல், நீங்கள் அவனுக்கு ஊழியம்பண்ணி, அவனுக்காக என் நாமத்தில் பிதாவிடத்தில் ஜெபம்பண்ணுவீர்களாக; அவன் மனந்திரும்பி என் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றால், நீங்கள் அவனை ஏற்றுக் கொண்டு என் மாம்சத்தையும் இரத்தத்தையும் அவனுக்கு பகிர்ந்தளிப்பீர்களாக.

Nevertheless, ye shall not cast him out from among you, but ye shall minister unto him and shall pray for him unto the Father, in my name; and if it so be that he repenteth and is baptized in my name, then shall ye receive him, and shall minister unto him of my flesh and blood.

31 அவன் மனந்திரும்பாவிட்டால், அவன் என் ஜனத்தை அழிக்காதபடிக்கு, அவன் என் ஜனங்களுக்குள்ளே எண்ணப்படமாட்டான். ஏனெனில் இதோ, நான் என் ஆடுகளை அறிவேன். அவர்கள் எண்ணப்பட்டிருக்கிறார்கள்.

But if he repent not he shall not be numbered among my people, that he may not destroy my people, for behold I know my sheep, and they are numbered.

32 ஆயினும் அவனை நீங்கள் உங்கள் ஜெப ஆலயங்களிலிருந்தும், உங்களின் ஆராதிக்கும் ஸ்தலங்களிலிருந்தும், புறம்பே தள்ளாமல், அப்படிப்பட்டோருக்கு தொடர்ந்து ஊழியம் செய்வீர்களாக; ஏனெனில் அவர்கள் திரும்பிவந்து, மனந்திரும்பி, இருதயத்தின் முழுநோக்கோடு என்னிடத்தில் வருவார்களென்றும், அப்பொழுது நான் அவர்களை குணப்படுத்துவேனென்பதைத் தவிர வேறெதையும் நீங்கள் அறியீர்கள்; நீங்கள் அவர்களுக்கு இரட்சிப்பைக் கொண்டுவருகிற கருவிகளாயிருப்பீர்கள்.

Nevertheless, ye shall not cast him out of your synagogues, or your places of worship, for unto such shall ye continue to minister; for ye know not but what they will return and repent, and come unto me with full purpose of heart, and I shall heal them; and ye shall be the means of bringing salvation unto them.

33 ஆதலால் நீங்கள் ஆக்கினைக்குள்ளாக வராதபடிக்கு நான் உங்களுக்குக் கட்டளையிட்ட இந்த வார்த்தைகளை கைக்கொள்ளுவீர்களாக; ஏனெனில் பிதா ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிற மனுஷனுக்கு ஐயோ.

Therefore, keep these sayings which I have commanded you that ye come not under condemnation; for wo unto him whom the Father condemneth.

34 உங்களுக்குள்ளிருந்த வாக்குவாதங்களினிமித்தம், இந்தக் கட்டளைகளை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். உங்களுக்குள் வாக்குவாதங்கள் இல்லாமல் இருந்ததேயானால், நீங்கள் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

And I give you these commandments because of the disputations which have been among you. And blessed are ye if ye have no disputations among you.

35 உங்களினிமித்தம் பிதாவிடத்தில் நான் போகவேண்டியது அவசியமாயிருப்பதாலே, நான் இப்பொழுது பிதாவினிடத்திற்குப் போகிறேன்.

And now I go unto the Father, because it is expedient that I should go unto the Father for your sakes.

36 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைச் சொன்ன பின்பு, அவர் தாம் தெரிந்துகொண்ட சீஷர்கள் அனைவரையும், ஒவ்வொருவராக தொடும்வரையில், தன் கரத்தால் தொட்டு, அவர்களைத் தொட்டபடியே அவர்களிடத்தில் பேசினார்.

And it came to pass that when Jesus had made an end of these sayings, he touched with his hand the disciples whom he had chosen, one by one, even until he had touched them all, and spake unto them as he touched them.

37 அவர் பேசின வார்த்தைகளை திரளானோர் கேட்-
கவில்லை. ஆதலால் அவர்கள் சாட்சி கொடுக்க-
வில்லை; ஆனால் அவர் பரிசுத்த ஆவியானவ-
ரைக் கொடுக்கும்படியான வல்லமையைத் தங்க-
ளுக்கு அளித்தார் என்று சீஷர்கள் சாட்சி பகர்ந்-
தார்கள். இந்த சாட்சி உண்மையென்று இப்போதி-
ருந்து நான் உங்களுக்குக் காண்பிக்கிறேன்.

And the multitude heard not the words which he spake, therefore they did not bear record; but the disciples bare record that he gave them power to give the Holy Ghost. And I will show unto you hereafter that this record is true.

38 அந்தப்படியே, இயேசு அவர்கள் யாவரையும்
தொட்டவுடனே, திரளானோர் இயேசுவைக் காண-
முடியாதபடி ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழ-
லாடியது.

And it came to pass that when Jesus had touched them all, there came a cloud and overshadowed the multitude that they could not see Jesus.

39 அவர்கள் மேகத்தால் மூடப்பட்டிருந்தபோது
அவர் அவர்களிடமிருந்து புறப்பட்டு, பரலோகத்-
திற்கு ஏறினார். சீஷர்கள் கண்டு, அவர் பரலோகத்-
திற்கு மறுபடியும் ஏறினார், என்று சாட்சி பகர்ந்தார்-
கள்.

And while they were overshadowed he departed from them, and ascended into heaven. And the disciples saw and did bear record that he ascended again into heaven.

# 3 நேபி 19

1 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு பரலோகத்-
திற்கு ஏறிய பின்பு, திரளானோர் கலைந்து, அவன-
வன் தன் மனைவியையும் தன் பிள்ளைகளையும்
கூட்டிக்கொண்டு தங்கள் சொந்த வீடுகளுக்குத் தி-
ரும்பினார்கள்.

2 திரளானவர்கள் இயேசுவைக் கண்டார்களென்-
றும், அவர் அவர்களுக்கு ஊழியம் பண்ணினார்
என்றும், நாளை மறுபடியும் அவர் திரளானோருக்-
கு தோன்றுவார் என்றும், இருள் சூழ்வதற்கு முன்-
னதாகவே, தூர இடங்களில் ஜனங்களுக்குள்
உடனே செய்தி அறிவிக்கப்பட்டது.

3 ஆம், இரவு முழுவதும் இயேசுவைப்பற்றிய செய்தி
தூர இடங்களில் அறிவிக்கப்பட்டது; ஜனங்களுக்-
குள் அனுப்பப்பட்டவர்கள் அநேகராயிருந்தார்-
கள். ஆம், இயேசு திரளானோருக்கு தோன்றவிருக்-
கும் இடத்திலே நாளை அவர்கள் இருக்கும்படி, மிக
அதிக எண்ணிக்கையுள்ளவர்கள் அந்த இரவு மு-
ழுவதும் பிரயாசப்பட்டார்கள்.

4 அந்தப்படியே, மறுநாள் திரளானோர் ஏகமாய்க்
கூடியிருந்தபோது, இதோ, நேபியும், அவன் மரித்-
தோரிலிருந்து எழுப்பின அவன் சகோதரனாகிய தீ-
மோத்தேயு என்ற பெயர் கொண்டவனும், அவனு-
டைய குமாரனாகிய யோனா என்ற பெயர் உடைய-
வனும், மத்தோனியும் அவன் சகோதரனாகிய மத்-
தோனிகாவும், குமேனும், குமேன்யான்கீயும், எரேமி-
யாவும், சேம்னோனும், யோனாவும், சிதேக்கியாவும்,
ஏசாயாவும், இப்பொழுது இயேசு தெரிந்துகொண்ட
பெயர்களுடைய சீஷர்கள் வந்து அந்தப்படியே, தி-
ரள்கூட்டத்தாரின் நடுவே நின்றார்கள்.

5 இதோ, திரள்கூட்டம் மிகவும் அதிகமாயிருந்தபடி-
யாலே, அது பன்னிரண்டு குழுக்களாக பிரிக்கப்ப-
டும்படிச் செய்தார்கள்.

6 பன்னிரண்டு பேரும் திரள்கூட்டத்தாருக்குப் போ-
தித்தார்கள். இதோ, திரள் கூட்டத்தார் பூமியின்
பரப்பின் மேல் முழங்கால்படியிட்டு, இயேசுவின் நா-
மத்தினாலே பிதாவினிடத்தில் ஜெபம் செய்யச்
செய்தார்கள்.

7 சீஷர்களும் பிதாவினிடத்தில் இயேசுவின் நாமத்-
தினாலே ஜெபம் பண்ணினார்கள். அந்தப்படியே,
அவர்கள் எழுந்து ஜனங்களுக்குப் பணிவிடை
செய்தார்கள்.

8 இயேசு பேசின வார்த்தைகளிலிருந்து ஒன்றும்
வேறுபடாமல், இயேசு பேசின அதே வார்த்தைக-
ளை அவர்கள் சொன்ன பின்பு, இதோ, அவர்கள்
மறுபடியும் முழங்கால்படியிட்டு, இயேசுவின் நாமத்-
தினாலே பிதாவினிடத்தில் ஜெபித்தார்கள்.

# 3 Nephi 19

And now it came to pass that when Jesus had ascended into heaven, the multitude did disperse, and every man did take his wife and his children and did return to his own home.

And it was noised abroad among the people immediately, before it was yet dark, that the multitude had seen Jesus, and that he had ministered unto them, and that he would also show himself on the morrow unto the multitude.

Yea, and even all the night it was noised abroad concerning Jesus; and insomuch did they send forth unto the people that there were many, yea, an exceedingly great number, did labor exceedingly all that night, that they might be on the morrow in the place where Jesus should show himself unto the multitude.

And it came to pass that on the morrow, when the multitude was gathered together, behold, Nephi and his brother whom he had raised from the dead, whose name was Timothy, and also his son, whose name was Jonas, and also Mathoni, and Mathonihah, his brother, and Kumen, and Kumenonhi, and Jeremiah, and Shemnon, and Jonas, and Zedekiah, and Isaiah—now these were the names of the disciples whom Jesus had chosen—and it came to pass that they went forth and stood in the midst of the multitude.

And behold, the multitude was so great that they did cause that they should be separated into twelve bodies.

And the twelve did teach the multitude; and behold, they did cause that the multitude should kneel down upon the face of the earth, and should pray unto the Father in the name of Jesus.

And the disciples did pray unto the Father also in the name of Jesus. And it came to pass that they arose and ministered unto the people.

And when they had ministered those same words which Jesus had spoken—nothing varying from the words which Jesus had spoken—behold, they knelt again and prayed to the Father in the name of Jesus.

9 அவர்கள் தாங்கள் மிகவும் வாஞ்சித்த காரியத்-
திற்காக ஜெபித்தார்கள்; பரிசுத்த ஆவியானவர்
அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென
வாஞ்சித்தார்கள்.

And they did pray for that which they most de-
sired; and they desired that the Holy Ghost should be
given unto them.

10 அவர்கள் இவ்விதமாய் ஜெபித்த பின்பு, அவர்-
கள் தண்ணீரின் ஓரத்திற்குச் சென்றார்கள். திரளா-
னோர் அவர்களைப் பின்தொடர்ந்தார்கள்.

And when they had thus prayed they went down
unto the water's edge, and the multitude followed
them.

11 அந்தப்படியே, நேபி தண்ணீருக்குள் போய் ஞா-
னஸ்நானம் பெற்றுக்கொண்டான்.

And it came to pass that Nephi went down into the
water and was baptized.

12 அவன் தண்ணீருக்கு வெளியே வந்து ஞானஸ்-
நானம் கொடுக்க ஆரம்பித்தான். அவன் இயேசு தெ-
ரிந்துகொண்ட அனைவருக்கும் ஞானஸ்நானம்
கொடுத்தான்.

And he came up out of the water and began to bap-
tize. And he baptized all those whom Jesus had cho-
sen.

13 அந்தப்படியே, அவர்கள் யாவரும் ஞானஸ்நா-
னம் பெற்று, தண்ணீரிலிருந்து வெளியே வந்த
பின்பு, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தது,
அவர்கள் பரிசுத்த ஆவியானவராலும் அக்கினியா-
லும் நிரப்பப்பட்டார்கள்.

And it came to pass when they were all baptized
and had come up out of the water, the Holy Ghost
did fall upon them, and they were filled with the
Holy Ghost and with fire.

14 இதோ, அவர்கள் அக்கினியால் சூழப்படுவதைப்-
போல் சூழப்பட்டார்கள்; அது வானத்திலிருந்து
வந்தது. திரளானோர் அதைக் கண்டு சாட்சி கொ-
டுத்தனர். தூதர்கள் பரலோகத்திலிருந்து கீழே வந்-
து அவர்களுக்குப் பணிவிடை செய்தார்கள்.

And behold, they were encircled about as if it were
by fire; and it came down from heaven, and the mul-
titude did witness it, and did bear record; and angels
did come down out of heaven and did minister unto
them.

15 அந்தப்படியே, தூதர்கள் சீஷர்களுக்குப் பணிவி-
டை செய்துகொண்டிருக்கையில், இதோ, இயேசு
வந்து நடுவே நின்று, அவர்களுக்கு ஊழியம் செய்-
தார்.

And it came to pass that while the angels were
ministering unto the disciples, behold, Jesus came
and stood in the midst and ministered unto them.

16 அந்தப்படியே, அவர் திரளானோரிடம் பேசி,
அவர்கள் பூமியின்மேல் மறுபடியும் முழங்கால்படி-
யிட வேண்டுமென்றும், அவருடைய சீஷர்களும் பூ-
மியின்மேல் முழங்கால்படியிட வேண்டுமென்றும்,
கட்டளையிட்டார்.

And it came to pass that he spake unto the multi-
tude, and commanded them that they should kneel
down again upon the earth, and also that his disci-
ples should kneel down upon the earth.

17 அந்தப்படியே, அவர்கள் யாவரும் பூமியின்மேல்
முழங்கால்படியிட்ட பின்பு, அவர் தம்முடைய சீ-
ஷர்கள் ஜெபிக்கவேண்டுமென்று அவர்களுக்குக்
கட்டளையிட்டார்.

And it came to pass that when they had all knelt
down upon the earth, he commanded his disciples
that they should pray.

18 இதோ, அவர்கள் ஜெபிக்க ஆரம்பித்தார்கள்; அவ-
ரைத் தங்கள் கர்த்தரென்றும் தங்கள் தேவனென்-
றும் கூப்பிட்டு, அவர்கள் இயேசுவினிடத்தில் ஜெ-
பித்தார்கள்.

And behold, they began to pray; and they did pray
unto Jesus, calling him their Lord and their God.

19 அந்தப்படியே, இயேசு அவர்கள் நடுவிலிருந்து
போய், அவர்களிடமிருந்து சற்றுதூரம் போய், பூமி-
மட்டும் குனிந்து சொன்னதாவது:

And it came to pass that Jesus departed out of the
midst of them, and went a little way off from them
and bowed himself to the earth, and he said:

20 பிதாவே, நான் தெரிந்துகொண்ட இவர்களுக்கு
நீர் பரிசுத்த ஆவியானவரை அளித்ததற்காக உமக்-
கு நன்றி செலுத்துகிறேன்; அவர்கள் என்னில்
வைத்த விசுவாசத்தினிமித்தமே அவர்களை இவ்-
வுலகிலிருந்து தெரிந்துகொண்டேன்.

Father, I thank thee that thou hast given the Holy
Ghost unto these whom I have chosen; and it is be-
cause of their belief in me that I have chosen them
out of the world.

21 பிதாவே, அவர்களுடைய வார்த்தைகளை நம்புகிற யாவருக்கும் நீர் பரிசுத்த ஆவியானவரை அளிக்கும்படி உம்மை வேண்டுகிறேன்.

Father, I pray thee that thou wilt give the Holy Ghost unto all them that shall believe in their words.

22 பிதாவே, அவர்கள் என்னில் விசுவாசிக்கிறதினிமித்தம் நீர் அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரைக் கொடுத்திருக்கிறீர்; நீர் அவர்களுக்குச் செவிகொடுப்பதினிமித்தம் அவர்கள் என்னில் விசுவாசிப்பதை நீர் காண்கிறீர். அவர்கள் என்னை நோக்கி ஜெபிக்கிறார்கள்; நான் அவர்களோடு இருப்பதினாலே அவர்கள் என்னை நோக்கி ஜெபிக்கிறார்கள்.

Father, thou hast given them the Holy Ghost because they believe in me; and thou seest that they believe in me because thou hearest them, and they pray unto me; and they pray unto me because I am with them.

23 இப்பொழுதும் பிதாவே, அவர்களுக்காகவும், அவர்களுடைய வார்த்தைகளை விசுவாசிக்கிற யாவருக்காகவும், அவர்கள் என்னில் விசுவாசிக்கவும் நாம் ஒன்றாய் இருக்கும்படி, பிதாவே, நீர் என்னில் இருப்பதைப்போல, நான் அவர்களிலும் இருக்கும்படியாக உம்மிடத்தில் ஜெபிக்கிறேன்.

And now Father, I pray unto thee for them, and also for all those who shall believe on their words, that they may believe in me, that I may be in them as thou, Father, art in me, that we may be one.

24 அந்தப்படியே, இயேசு இவ்விதமாய் பிதாவினிடத்தில் ஜெபித்த பின், அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்தார். இதோ, அவர்கள் இடைவிடாமல் இன்னும் தொடர்ந்து அவரை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள்; அவர்கள் என்ன ஜெபிக்க வேண்டுமென்று அவர்களுக்குக் கொடுக்கப்பட்டதாலே, அவர்கள் அதிக வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. அவர்கள் வாஞ்சையினால் நிரப்பப்பட்டிருந்தார்கள்.

And it came to pass that when Jesus had thus prayed unto the Father, he came unto his disciples, and behold, they did still continue, without ceasing, to pray unto him; and they did not multiply many words, for it was given unto them what they should pray, and they were filled with desire.

25 அந்தப்படியே, இயேசு அவர்கள் தம்மை நோக்கி ஜெபித்தபோது அவர்களை ஆசீர்வதித்தார்; அவருடைய முகரூபம் அவர்கள் மேல் புன்னகை பூத்தது. அவருடைய முகரூபத்தின் வெளிச்சம் அவர்கள் மேல் பிரகாசித்தது. இதோ, அவர்கள் இயேசுவின் முகரூபத்தைப் போலவும் மற்றும் அவரின் வஸ்திரங்களைப் போலவும் வெண்மையாக இருந்தார்கள்; இதோ, அந்த வெண்மை எல்லா வெண்மையையும் மிஞ்சியது. ஆம், அந்த வெண்மையைப்போல உலகினுள் வேறொன்றும் இருக்கமுடியாது.

And it came to pass that Jesus blessed them as they did pray unto him; and his countenance did smile upon them, and the light of his countenance did shine upon them, and behold they were as white as the countenance and also the garments of Jesus; and behold the whiteness thereof did exceed all the whiteness, yea, even there could be nothing upon earth so white as the whiteness thereof.

26 இயேசு அவர்களை நோக்கி: தொடர்ந்து ஜெபியுங்கள் என்றார்; எனினும் அவர்கள் ஜெபிப்பதை நிறுத்தவில்லை.

And Jesus said unto them: Pray on; nevertheless they did not cease to pray.

27 அவர் மறுபடியும் அவர்களிடமிருந்து திரும்பி சற்றுதூரம் போய், பூமியிலே குனிந்தார். அவர் மறுபடியும் பிதாவினிடத்தில் ஜெபித்து:

And he turned from them again, and went a little way off and bowed himself to the earth; and he prayed again unto the Father, saying:

28 பிதாவே, நான் தெரிந்து கொண்டவர்களை,
அவர்களுடைய விசுவாசத்தினிமித்தம் நீர் சுத்திக-
ரித்ததிற்காக உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான்
அவர்களுக்காகவும், அவர்களுடைய வார்த்தைக-
ளை விசுவாசிக்க இருக்கிறவர்களுக்காகவும் கூட
ஜெபிக்கிறேன். அவர்கள் என்னில் சுத்திகரிக்கப்-
பட்டதுபோல, அவர்களுடைய வார்த்தைகளின்
மேலுள்ள விசுவாசத்தின் மூலம், இவர்கள் என்-
னில் சுத்திகரிக்கப்படுவார்களாக.

Father, I thank thee that thou hast purified those whom I have chosen, because of their faith, and I pray for them, and also for them who shall believe on their words, that they may be purified in me, through faith on their words, even as they are purified in me.

29 பிதாவே, நான் உலகத்திற்காக அல்ல. உலகத்திலி-
ருந்து நீர் எனக்குக் கொடுத்தவர்களின் விசுவாசத்-
தினிமித்தம் அவர்களுக்காகவும், அவர்கள் என்-
னில் சுத்திகரிக்கப்படவும், பிதாவே, நாம் ஒன்றாய்
இருக்கும்படி, நீர் என்னில் இருப்பதைப் போல,
நான் அவர்களில் இருக்கும்படிக்கும், நான் அவர்க-
ளில் மகிமையடையும்படிக்கும் ஜெபிக்கிறேன்,
என்றார்.

Father, I pray not for the world, but for those whom thou hast given me out of the world, because of their faith, that they may be purified in me, that I may be in them as thou, Father, art in me, that we may be one, that I may be glorified in them.

30 இயேசு இவ்வார்த்தைகளைப் பேசினவுடனே,
அவர் மறுபடியும் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்-
தார்; இதோ, அவர்கள் அவரிடத்தில் இடைவிடாமல்
ஊக்கமாய் ஜெபித்தார்கள். அவர் மறுபடியும்
அவர்களைப் பார்த்து புன்னகை பூத்தார். இதோ,
அவர்களும் இயேசுவைப் போலவே வெண்மையா-
யிருந்தார்கள்.

And when Jesus had spoken these words he came again unto his disciples; and behold they did pray steadfastly, without ceasing, unto him; and he did smile upon them again; and behold they were white, even as Jesus.

31 அந்தப்படியே, அவர் மீண்டும் சற்றுதூரம் போய்
பிதாவினிடத்தில் ஜெபித்தார்.

And it came to pass that he went again a little way off and prayed unto the Father;

32 அவர் ஜெபித்த வார்த்தைகளை நாவு பேசமுடியா-
து. அவர் ஜெபித்த வார்த்தைகள் மனுஷனால்
எழுத்தப்படவும் முடியாது.

And tongue cannot speak the words which he prayed, neither can be written by man the words which he prayed.

33 திரளானோர் கேட்டு சாட்சி பகர்கிறார்கள்; அவர்-
களது இருதயங்கள் திறந்திருந்தன. அவர் ஜெபித்த
வார்த்தைகளை அவர்கள் தங்கள் இருதயங்களி-
லே புரிந்துகொண்டார்கள்.

And the multitude did hear and do bear record; and their hearts were open and they did understand in their hearts the words which he prayed.

34 எனினும் அவர் ஜெபித்த வார்த்தைகள் மிகவும்
மகத்தானதும் அற்புதமாயும் இருந்ததால், அவை
மனுஷனால் எழுதப்படவோ, சொல்லப்படவோ மு-
டியாது.

Nevertheless, so great and marvelous were the words which he prayed that they cannot be written, neither can they be uttered by man.

35 அந்தப்படியே, இயேசு ஜெபித்து முடித்த பின்பு
அவர் சீஷர்களிடத்தில் மறுபடியும் வந்து, அவர்க-
ளை நோக்கி: யூதர் எல்லோருக்குள்ளும் இப்படிப்-
பட்ட உறுதியான விசுவாசத்தை நான் கண்டதில்-
லை. ஆகவே அவர்களுடைய அவிசுவாசத்தினி-
மித்தம் நான் அவர்களிடத்தில் பெரும் அற்புதங்க-
ளைக் காண்பிக்க முடியவில்லை.

And it came to pass that when Jesus had made an end of praying he came again to the disciples, and said unto them: So great faith have I never seen among all the Jews; wherefore I could not show unto them so great miracles, because of their unbelief.

36 மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன். நீங்கள் இப்படிப்பட்ட விசேஷித்த காரியங்க-
ளைக் கண்டதைப்போல அவர்களில் ஒருவனும்
கண்டதில்லை; நீங்கள் இப்படிப்பட்ட விசேஷித்த
காரியங்களைக் கேட்டதைப் போல அவர்கள் கேட்-
டதேயில்லை.

Verily I say unto you, there are none of them that have seen so great things as ye have seen; neither have they heard so great things as ye have heard.

# 3 நேபி 20

# 3 Nephi 20

1 அந்தப்படியே, அவர் திரளானோரும், தம்முடைய சீ-
ஷரும் ஜெபம் செய்வதை நிறுத்தவேண்டுமென்று
கட்டளையிட்டார். அவர்கள் தங்கள் இருதயங்களி-
லே ஜெபம் செய்வதை நிறுத்தக்கூடாதென்று அவர்-
களுக்கு அவர் கட்டளையிட்டார்.

And it came to pass that he commanded the multitude that they should cease to pray, and also his disciples. And he commanded them that they should not cease to pray in their hearts.

2 அவர்கள் எழுந்து தங்கள் காலூன்றி நிற்கும்படி
அவர் கட்டளையிட்டார். அவர்கள் எழுந்து கா-
லூன்றி நின்றார்கள்.

And he commanded them that they should arise and stand up upon their feet. And they arose up and stood upon their feet.

3 அந்தப்படியே, அவர் மறுபடியும் அப்பத்தைப்
பிட்டு, அதை ஆசீர்வதித்து, புசிக்கும்படி சீஷர்க-
ளுக்குக் கொடுத்தார்.

And it came to pass that he brake bread again and blessed it, and gave to the disciples to eat.

4 அவர்கள் புசித்த பின்பு, அவர்கள் அப்பத்தைப்
பிட்டு அதை திரளானோருக்கு கொடுக்கவேண்டு-
மென்று கட்டளையிட்டார்.

And when they had eaten he commanded them that they should break bread, and give unto the multitude.

5 அவர்கள் திரளானோருக்குக் கொடுத்த பின்பு,
அவர்கள் பானம்பண்ணும்படி அவர்களுக்கு தி-
ராட்சைரசத்தைக் கொடுத்து, அவர்கள் திரளா-
னோருக்குக் கொடுக்கவேண்டுமென்று அவர்க-
ளுக்குக் கட்டளையிட்டார்.

And when they had given unto the multitude he also gave them wine to drink, and commanded them that they should give unto the multitude.

6 இப்பொழுது, சீஷர்களாலோ, திரளானோராலோ
எந்த அப்பமும் திராட்சைரசமும் கொண்டுவரப்பட-
வில்லை.

Now, there had been no bread, neither wine, brought by the disciples, neither by the multitude;

7 ஆனாலும் அவர் புசிக்கும்படியாக அவர்களுக்கு
அப்பத்தையும், பானம்பண்ணும்படியாக திராட்-
சைரசத்தையும் மெய்யாகவே தந்தார்.

But he truly gave unto them bread to eat, and also wine to drink.

8 அவர் அவர்களை நோக்கி: இந்த அப்பத்தைப் பு-
சிக்கிற எவனும் என் சரீரத்தை தன் ஆத்துமாவிற்-
காக புசிக்கிறான், இந்த திராட்சைரசத்தை பானம்-
பண்ணும் எவனும் தன் ஆத்துமாவுக்காக பானம்-
பண்ணுகிறான். அவன் ஆத்துமா இனி பசியோ,
தாகமோ அடையாமல் நிரப்பப்பட்டிருக்கும், என்-
றார்.

And he said unto them: He that eateth this bread eateth of my body to his soul; and he that drinketh of this wine drinketh of my blood to his soul; and his soul shall never hunger nor thirst, but shall be filled.

9 இப்பொழுது, திரளானோர் யாவரும் புசித்து பா-
னம்பண்ணின பின்பு, இதோ, அவர்கள் ஆவியான-
வராலே நிரப்பப்பட்டார்கள்; அவர்கள் ஏகசத்த-
மாய்க் கூக்குரலிட்டு, தாங்கள் கண்டவரும் கேட்ட-
வருமாகிய இயேசுவை மகிமைப் படுத்தினார்கள்.

Now, when the multitude had all eaten and drunk, behold, they were filled with the Spirit; and they did cry out with one voice, and gave glory to Jesus, whom they both saw and heard.

10 அந்தப்படியே, அவர்கள் யாவரும் இயேசுவை
மகிமைப் படுத்திய பின்பு, அவர் அவர்களை
நோக்கி சொன்னார்: இதோ, இப்பொழுதும் இஸ்ர-
வேலின் வீட்டாரின் மீதியானோராகிய இந்த ஜனத்-
தைக் குறித்து பிதா எனக்குக் கட்டளையிட்ட கட்ட-
ளையை நான் முடிக்கிறேன்.

And it came to pass that when they had all given glory unto Jesus, he said unto them: Behold now I finish the commandment which the Father hath commanded me concerning this people, who are a remnant of the house of Israel.

11 நான் உங்களிடம் பேசி ஏசாயாவின் வார்த்தை-
கள் நிறைவேறுகிறபோது, என்று சொன்னதை நி-
னைவுகூருங்கள், இதோ, அவைகள் எழுதப்பட்டி-
ருக்கின்றன. நீங்கள் அவைகளை உங்களுக்கு
முன்பாக வைத்திருக்கிறீர்கள். ஆதலால் அவைக-
ளை ஆராய்ந்து பாருங்கள்.

Ye remember that I spake unto you, and said that when the words of Isaiah should be fulfilled—behold they are written, ye have them before you, therefore search them—

12 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். அவைகள் நிறைவேறுகிறபோது-
தான், இஸ்ரவேலின் வீட்டாரே, தன்னுடைய ஜனத்-
திற்கு பிதா செய்த உடன்படிக்கையும் நிறைவேறும்.

And verily, verily, I say unto you, that when they shall be fulfilled then is the fulfilling of the covenant which the Father hath made unto his people, O house of Israel.

13 பூமியின் பரப்பின் மீதெங்கும் சிதறடிக்கப்படவி-
ருக்கிற மீதியானோர் கிழக்கிலிருந்தும் மேற்கிலி-
ருந்தும், தெற்கிலிருந்தும், வடக்கிலிருந்தும் கூட்-
டிச் சேர்க்கப்படுவார்கள்; அவர்கள் தங்களை விடு-
வித்த தங்கள் தேவனாகிய கர்த்தருடைய ஞானத்-
திற்குக் கொண்டுவரப்படுவார்கள்.

And then shall the remnants, which shall be scattered abroad upon the face of the earth, be gathered in from the east and from the west, and from the south and from the north; and they shall be brought to the knowledge of the Lord their God, who hath redeemed them.

14 நான் இந்த தேசத்தை நீங்கள் சுதந்தரிக்கும்படி-
யாக உங்களுக்குக் கொடுக்கவேண்டுமென பிதா
எனக்குக் கட்டளையிட்டார்.

And the Father hath commanded me that I should give unto you this land, for your inheritance.

15 நான் உங்களுக்கு சொல்லுகிறேன். என் ஜனத்தை
அவர்கள் சிதறடித்த பின்னர், தாங்கள் பெறும்
ஆசீர்வாதத்திற்குப் பின்பு புறஜாதியார் மனந்தி-
ரும்பவில்லையெனில்,

And I say unto you, that if the Gentiles do not repent after the blessing which they shall receive, after they have scattered my people—

16 அப்பொழுது யாக்கோபு வீட்டாரின் மீதியானவர்-
களாகிய நீங்கள் அவர்களுக்குள்ளே போங்கள்;
அநேகராய் இருக்கும் அவர்களுக்குள்ளே நீங்கள்
இருப்பீர்கள்; நீங்கள் அவர்களுக்குள்ளே காட்டு மி-
ருகங்கள் மத்தியில் இருக்கிற சிங்கம் போலவும்,
ஆட்டு மந்தைக்குள்ளே இருக்கிற பால சிங்கத்-
தைப்போலவும் இருப்பீர்கள். அது அவைகளி-
னுள்ளே போனால் மிதித்து, துண்டுகளாக பீறிப்-
போடும், ஒருவரும் காப்பாற்றக்கூடாமற் போகும்.

Then shall ye, who are a remnant of the house of Jacob, go forth among them; and ye shall be in the midst of them who shall be many; and ye shall be among them as a lion among the beasts of the forest, and as a young lion among the flocks of sheep, who, if he goeth through both treadeth down and teareth in pieces, and none can deliver.

17 உனது கரம் உன் சத்துருக்களுக்கு மேலாக உயர்த்-
தப்பட்டிருக்கும், உன் சத்துருக்களெல்லாம் தள்-
ளப்படுவார்கள்.

Thy hand shall be lifted up upon thine adversaries, and all thine enemies shall be cut off.

18 ஒரு மனுஷன் தன் அரிக்கட்டுகளை களத்திலே
சேர்ப்பதைப் போல, நான் என் ஜனத்தை ஏகமாய்ச்
சேர்ப்பேன்.

And I will gather my people together as a man gathereth his sheaves into the floor.

19 பிதா உடன்படிக்கை செய்துகொண்டவர்களா-
கிய உங்களை நான் என் ஜனமாக்குவேன். ஆம்,
நான் உங்களுடைய கொம்பை இரும்பாக்குவேன்.
நான் உங்களுடைய குளம்பை பித்தளையாக்கு-
வேன். நீங்கள் அநேகரை துண்டுகளாக வெட்டிப்-
போடுவீர்கள், நான் அவர்களின் கொள்ளையை
கர்த்தரிடத்தில், அவர்களின் பொருட்களை பூமி-
யனைத்திற்கும் கர்த்தரானவரிடத்தில் அர்ப்ப-
ணிப்பேன். இதோ, அதைச் செய்கிறவர் நானே.

For I will make my people with whom the Father hath covenanted, yea, I will make thy horn iron, and I will make thy hoofs brass. And thou shalt beat in pieces many people; and I will consecrate their gain unto the Lord, and their substance unto the Lord of the whole earth. And behold, I am he who doeth it.

20 பிதா சொல்லுகிறதாவது. என் நியாயத்தின் பட்ட-
யம் அந்நாளிலே அவர்கள்மேல் தொங்கிக்கொண்-
டிருக்கும்; பிதா சொல்லுகிறதாவது, அவர்கள்
மனந்திரும்பாவிடில், அது அவர்கள் மேல், ஆம். பு-
றஜாதியார் தேசங்கள் அனைத்தின் மேலும் விழும்.

And it shall come to pass, saith the Father, that the sword of my justice shall hang over them at that day; and except they repent it shall fall upon them, saith the Father, yea, even upon all the nations of the Gentiles.

21 இஸ்ரவேலின் வீட்டாரே, என் ஜனத்தை நான் ஸ்-
திரப்படுத்துவேன்.

And it shall come to pass that I will establish my people, O house of Israel.

22 இதோ, நான் உன் தகப்பனாகிய யாக்கோபோடு
செய்த உடன்படிக்கையை நிறைவேறப்பண்ணும்-
படியாக இந்த ஜனத்தை இத்தேசத்திலே ஸ்திரப்ப-
டுத்துவேன். அது புதிய எருசலேமாய் இருக்கும்.
இந்த ஜனத்திற்கு நடுவே பரலோகத்தின் வல்லமை-
கள் இருக்கும்; ஆம், நானும் உங்களின் நடுவிலே
இருப்பேன்.

And behold, this people will I establish in this land, unto the fulfilling of the covenant which I made with your father Jacob; and it shall be a New Jerusalem. And the powers of heaven shall be in the midst of this people; yea, even I will be in the midst of you.

23 இதோ, என்னைப்போல உங்கள் சகோதரர்களுக்-
குள்ளிருந்து உங்களுக்கென்று உங்கள் தேவனா-
கிய கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை எழும்பப்பண்ணு-
வார்; அவர் உங்களுக்கு சொல்லுகிறது எதுவானா-
லும், எல்லா காரியங்களிலும் நீங்கள் செவிகொ-
டுக்கவேண்டும். அந்த தீர்க்கதரிசிக்கு செவிகொ-
டாத ஒவ்வொரு ஆத்துமாவும் ஜனங்களுக்குள்ளி-
ருந்து தள்ளப்பட்டுப் போகும் என்று என்னைக் கு-
றித்தே மோசே பேசியிருக்கிறான்.

Behold, I am he of whom Moses spake, saying: A prophet shall the Lord your God raise up unto you of your brethren, like unto me; him shall ye hear in all things whatsoever he shall say unto you. And it shall come to pass that every soul who will not hear that prophet shall be cut off from among the people.

24 மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன். ஆம் சாமுவேல் துவங்கி எல்லா தீர்க்கதரிசிக-
ளும், அதற்குப் பின்னே வந்து பேசின அநேகரும்,
என்னைக் குறித்து சாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

Verily I say unto you, yea, and all the prophets from Samuel and those that follow after, as many as have spoken, have testified of me.

25 இதோ, நீங்கள் தீர்க்கதரிசிகளின் பிள்ளைகளாய்
இருக்கிறீர்கள்; நீங்கள் இஸ்ரவேல் வீட்டாரைச்
சேர்ந்தவர்களாய் இருக்கிறீர்கள்; பிதா ஆபிரகா-
மை நோக்கி: உன் சந்ததியாலே உலகத்தின் சகல
இனத்தாரும் ஆசீர்வதிக்கப்படுவார்கள் என்று
சொல்லி, உங்கள் பிதாக்களிடத்தில் செய்து-
கொண்ட உடன்படிக்கையைச் சேர்ந்தவர்களாயி-
ருக்கிறீர்கள்.

And behold, ye are the children of the prophets; and ye are of the house of Israel; and ye are of the covenant which the Father made with your fathers, saying unto Abraham: And in thy seed shall all the kindreds of the earth be blessed.

26 முதலில் நான் உங்களுக்குள் வரவேண்டுமென்று
பிதா என்னை எழப்பண்ணி, உங்களில் ஒவ்வொ-
ருவனையும் தன் தன் அக்கிரமங்களிலிருந்து வில-
கிப்போகப்பண்ணி, உங்களை ஆசீர்வதிக்கும்படி
என்னை அனுப்பினார்; இது நீங்கள் உடன்படிக்-
கையின் பிள்ளைகளாய் இருப்பதினாலேதான்.

The Father having raised me up unto you first, and sent me to bless you in turning away every one of you from his iniquities; and this because ye are the children of the covenant—

27 நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்ட பின்பு, உங்கள் சந்த-
தியால் உலகத்தின் இனங்கள் யாவும் ஆசீர்வதிக்-
கப்பட்டிருக்கும் என்று, ஆபிரகாமிடத்தில் பிதா
சொல்லி, தாம் செய்துகொண்ட உடன்படிக்கையை
நிறைவேற்றுகிறார். இதனால் என் மூலமாக புறஜா-
தியார்மேல் பரிசுத்த ஆவி ஊற்றப்படும். புறஜாதி-
யார் மேலான இந்த ஆசீர்வாதம், இஸ்ரவேலின் வீட்-
டாரே, என் ஜனத்தைச் சிதறடிப்பதற்கேதுவாய் எல்-
லாரைக்காட்டிலும் அவர்களைப் பலவான்களாக்-
கும்.

And after that ye were blessed then fulfilleth the Father the covenant which he made with Abraham, saying: In thy seed shall all the kindreds of the earth be blessed—unto the pouring out of the Holy Ghost through me upon the Gentiles, which blessing upon the Gentiles shall make them mighty above all, unto the scattering of my people, O house of Israel.

28 அவர்கள் இந்த தேசத்தின் ஜனங்களுக்கு சவுக்-
காய் இருப்பார்கள். ஆயினும் அவர்கள் என் சுவி-
சேஷத்தின் பரிபூரணத்தைப் பெறுகிறபோது,
எனக்கு விரோதமாய்த் தங்கள் இருதயங்களைக்
கடினப்படுத்தினால், அவர்களுடைய அக்கிரமங்க-
ளை அவர்களின் சொந்த சிரசுகளின்மேல் திருப்பு-
வேன், என்று பிதா சொல்லுகிறார்.

And they shall be a scourge unto the people of this land. Nevertheless, when they shall have received the fulness of my gospel, then if they shall harden their hearts against me I will return their iniquities upon their own heads, saith the Father.

29 அப்பொழுது என் ஜனத்தோடு நான் செய்த உடன்படிக்கையை நான் நினைவுகூருவேன்; என்னுடைய சொந்த ஏற்ற காலத்தில் அவர்களை ஏகமாய்க் கூடப்பண்ணுவேன் என்றும், அவர்களுடைய பிதாக்களுடைய தேசமான, அவர்களுக்கு வாக்குத்தத்தத்தின் தேசமாய் என்றென்றும் இருக்கிற எருசலேமின் தேசத்தை, அவர்கள் சுதந்தரிக்கும்படி மறுபடியும் அவர்களுக்குக் கொடுப்பேன் என்றும், அவர்களோடு நான் உடன்படிக்கை செய்துள்ளேன் என்றும், பிதா உரைக்கிறார்.

And I will remember the covenant which I have made with my people; and I have covenanted with them that I would gather them together in mine own due time, that I would give unto them again the land of their fathers for their inheritance, which is the land of Jerusalem, which is the promised land unto them forever, saith the Father.

30 என் சுவிசேஷத்தின் பரிபூரணம் அவர்களுக்குப் பிரசங்கிக்கப்படும் காலம் வருகிறது;

And it shall come to pass that the time cometh, when the fulness of my gospel shall be preached unto them;

31 தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து நானே என்று அவர்கள் என்னில் விசுவாசித்து, என் நாமத்தில் பிதாவினிடத்தில் ஜெபிப்பார்கள்.

And they shall believe in me, that I am Jesus Christ, the Son of God, and shall pray unto the Father in my name.

32 அப்பொழுது அவர்களுடைய காவற்காரரர்கள் தங்கள் தொனியை உயர்த்தி, ஏகசத்தத்தோடு பாடுவார்கள். ஏனெனில் அவர்கள் கண்ணாரக் காண்பார்கள்.

Then shall their watchmen lift up their voice, and with the voice together shall they sing; for they shall see eye to eye.

33 பின்பு பிதா அவர்களை மறுபடியும் கூடச்செய்து அவர்கள் சுதந்தரிக்கும்படியான தேசமாக எருசலேமை அவர்களுக்குத் தருவார்.

Then will the Father gather them together again, and give unto them Jerusalem for the land of their inheritance.

34 அப்பொழுது, எருசலேமின் பாழான இடங்களே, ஏகமாய்ப் பாடுங்கள். பிதா தம் ஜனத்தைத் தேற்றினார். அவர் எருசலேமை மீட்டுக்கொண்டார், என்று அவர்கள் சந்தோஷப்படுவார்கள்.

Then shall they break forth into joy—Sing together, ye waste places of Jerusalem; for the Father hath comforted his people, he hath redeemed Jerusalem.

35 பிதா எல்லா தேசங்களின் கண்களுக்கு முன்பாக தம்முடைய பரிசுத்த புயத்தை வெளிப்படுத்தினார்; பூமியின் கடையாந்திரங்கள் அனைத்தும் பிதாவின் இரட்சிப்பைக் காண்பார்கள்; பிதாவும் நானும் ஒன்றாயிருக்கிறோம்.

The Father hath made bare his holy arm in the eyes of all the nations; and all the ends of the earth shall see the salvation of the Father; and the Father and I are one.

36 அப்பொழுது எழுதப்பட்டதெதுவோ அது சம்பவிக்கும், விழித்திரு. மறுபடியும் விழித்திருந்து, சீயோனே, உன் பெலத்தைத் தரித்துக்கொள். பரிசுத்த நகரமாகிய எருசலேமே, உன்னுடைய அழகான வஸ்திரங்களை உடுத்திக்கொள், ஏனெனில் இனிமேல் உன்னிடத்தில் விருத்தசேதனமில்லாதவனும் அசுத்தமுள்ளவனும் வருவதில்லை.

And then shall be brought to pass that which is written: Awake, awake again, and put on thy strength, O Zion; put on thy beautiful garments, O Jerusalem, the holy city, for henceforth there shall no more come into thee the uncircumcised and the unclean.

37 உன்னிடத்திலிருந்து புழுதியைத் தட்டிவிடு, எருசலேமே எழுந்து உட்காரு, சீயோனின் சிறைபிடிக்கப்பட்ட குமாரத்தியே, உன் கழுத்தின் கட்டுகளிலிருந்து, உன்னை அவிழ்த்துக்கொள்.

Shake thyself from the dust; arise, sit down, O Jerusalem; loose thyself from the bands of thy neck, O captive daughter of Zion.

38 கர்த்தர் சொல்லுகிறதாவது: நீங்கள் ஒன்றுமில்லாமைக்கு உங்களையே விற்றீர்கள், நீங்கள் பணமின்றி மீட்கப்படுவீர்கள்.

For thus saith the Lord: Ye have sold yourselves for naught, and ye shall be redeemed without money.

39 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். என் ஜனம் என் நாமத்தை அறி-
யும், ஆம், அந்நாளிலே பேசுகிறவர் நானே என்று
அவர்கள் அறிந்துகொள்வார்கள்.

Verily, verily, I say unto you, that my people shall know my name; yea, in that day they shall know that I am he that doth speak.

40 அப்பொழுது அவர்கள், அவர்களுக்கு நற்செய்தி-
களைக் கொண்டுவந்து, சமாதானத்தை அறிவித்-
து, நன்மையான நற்செய்திகளை அவர்களுக்குக்
கொண்டுவந்து, இரட்சிப்பை அறிவித்து, சீயோ-
னை நோக்கி உனது தேவன் ராஜரீகம் பண்ணுகி-
றார் என்று சொல்லுகிறவனுடைய பாதங்கள்
மலைகளின்மேல் எவ்வளவு அழகாயிருக்கின்றன,
என்பார்கள்.

And then shall they say: How beautiful upon the mountains are the feet of him that bringeth good tidings unto them, that publisheth peace; that bringeth good tidings unto them of good, that publisheth salvation; that saith unto Zion: Thy God reigneth!

41 அப்பொழுது ஒரு கூக்குரல் கேட்கப்படும், புறப்ப-
டுங்கள், புறப்படுங்கள், அங்கிருந்து போங்கள்
அசுத்தமானதைத் தொடாதேயுங்கள். அவள் நடு-
விலிருந்து வெளியேறுங்கள்; கர்த்தருடைய பாத்-
திரங்களை சுமப்பவர்களே சுத்தமாயிருங்கள்.

And then shall a cry go forth: Depart ye, depart ye, go ye out from thence, touch not that which is unclean; go ye out of the midst of her; be ye clean that bear the vessels of the Lord.

42 நீங்கள் தீவிரிக்கவும் வேண்டாம், ஓடிப்போகவும்
வேண்டாம்; ஏனெனில் கர்த்தர் உங்களுக்கு முன்-
பாகப் போவார். இஸ்ரவேலின் தேவன் உங்களைப்
பின்னிருந்து காப்பார்.

For ye shall not go out with haste nor go by flight; for the Lord will go before you, and the God of Israel shall be your rearward.

43 இதோ, என் ஊழியக்காரர் விவேகமாய் நடந்து-
கொள்வார்; அவர் மேன்மையடைந்து புகழப்பட்டு
உன்னதமாயிருப்பார்.

Behold, my servant shall deal prudently; he shall be exalted and extolled and be very high.

44 அவருடைய முகரூபம் மற்ற எந்த மனுஷரையும்-
விடவும், அவருடைய உருவம் மனுபுத்திரர் யாரை-
யும் விட உருக்குலைக்கப்பட்டதால், அநேகர் உம்-
மைக்கண்டு, ஆச்சரியமடைந்தார்கள்.

As many were astonished at thee—his visage was so marred, more than any man, and his form more than the sons of men—

45 அப்படியாக அவர் அநேக ஜாதிகளின் மீது தெ-
ளிப்பார்; ராஜாக்கள் தங்களுக்குச் சொல்லப்படாத-
வைகளை காண்கிறதினிமித்தம் அவர்களுடைய
வாய்கள் அவரால் அடைக்கப்பட்டிருக்கும்; அவர்-
கள் தாங்கள் கேள்விப்படாதவைகளை நிதானிப்-
பார்கள்.

So shall he sprinkle many nations; the kings shall shut their mouths at him, for that which had not been told them shall they see; and that which they had not heard shall they consider.

46 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன். பிதா எனக்குக் கட்டளையிட்டப-
டியே இக்காரியங்கள் யாவும் நிச்சயமாகவே வரும்.
அப்பொழுது பிதா தமது ஜனத்தோடு செய்து-
கொண்ட இந்த உடன்படிக்கை நிறைவேறும்; பின்பு
எருசலேம் மறுபடியும் என் ஜனத்தால் குடியேற்றப்-
படும். அது அவர்களின் சுதந்திர பூமியாய் இருக்-
கும்.

Verily, verily, I say unto you, all these things shall surely come, even as the Father hath commanded me. Then shall this covenant which the Father hath covenanted with his people be fulfilled; and then shall Jerusalem be inhabited again with my people, and it shall be the land of their inheritance.

# 3 நேபி 21

1 மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
இக்காரியங்கள் சம்பவிக்கும் காலத்தை நீங்கள்
அறியும்படிக்கு உங்களுக்கு ஒரு அறிகுறியைக்
கொடுக்கிறேன். இஸ்ரவேலின் வீட்டாரே, என்
ஜனத்தை அவர்களுடைய நீண்ட சிதறுதலிலிருந்-
து ஒன்றுகூட்டி, அவர்கள் மத்தியில் மறுபடியும்
என்னுடைய சீயோனை ஸ்தாபிப்பேன்.
2 இதோ, நான் உங்களுக்கு ஓர் அறிகுறியாகக் கொ-
டுக்கிற காரியம் இதுவே. மெய்யாகவே நான் உங்க-
ளுக்குச் சொல்லுகிறேன், யாக்கோபு வீட்டாரின் மீ-
தியானவர்களாகிய இந்த ஜனத்தைக் குறித்தும்,
அவர்களால் சிதறடிக்கப்படப் போகிற இந்த என்
ஜனங்களைக் குறித்தும் அறியத்தக்கதாக, நான்
உங்களுக்குத் தெரிவிக்கிற இக்காரியங்களும்,
இனிமேல் என்னைப்பற்றி நானே அறிவிக்கிறவை-
களும், பிதாவினால் உங்களுக்குக் கொடுக்கப்பட-
விருக்கிற, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையி-
னாலே புறஜாதியாருக்குத் தெரிவிக்கப்படும்.

3 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன், பிதாவினால் அவர்களுக்கு இக்-
காரியங்கள் தெரிவிக்கப்பட்டு, பிதாவினிடத்திலி-
ருந்து, அவர்கள் மூலமாக உங்களிடத்தில் வரும்.
4 இக்காரியங்கள் அவர்களிடத்திலிருந்து உங்களு-
டைய சந்ததியின் மீதியானோரிடத்தில் வரத்தக்க-
தாகவும், இஸ்ரவேலின் வீட்டாரே, தமது ஜனத்தோடு
பிதா செய்துகொண்ட அவருடைய உடன்படிக்கை
நிறைவேறத்தக்கதாகவும், அவர்கள் இந்த தேசத்தி-
லே ஸ்திரப்படுத்தப்பட்டு, பிதாவின் வல்லமையி-
னால் சுதந்திர ஜனமாக ஏற்படுத்தப்படவேண்டிய-
து பிதாவின் ஞானமாயிருக்கிறது;
5 ஆதலால், இக்கிரியைகளும், இனிமேல் உங்க-
ளுக்குள் செய்யப்படவிருக்கிற கிரியைகளும், புற-
ஜாதியாரிடத்திலிருந்து, அக்கிரமத்தினிமித்தம்
அவிசுவாசத்திலே படிப்படியாக நலிகிற உங்கள்
சந்ததிக்கு வரும்போது,
6 பிதாவானவர் தம்முடைய வல்லமையை புறஜா-
தியாருக்குக் காண்பிக்கும்படியாக, இஸ்ரவேலின்
வீட்டாரே, அவர்கள் என் ஜனத்திற்குள்ளே எண்-
ணப்படும்படிக்கு, இந்த நோக்கத்திற்காகவே, அவர்-
கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாமல்
மனந்திரும்பி, என்னிடத்தில் வந்து, என் நாமத்தில்
ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, என்னுடைய
உபதேசத்தின் உண்மைக் கொள்கைகளை அறி-
யும்படிக்கு, அது புறஜாதியாரிடத்திலிருந்து வர-
வேண்டுமென்பது அவருடைய சித்தமாயிருக்கிற-
து.

# 3 Nephi 21

And verily I say unto you, I give unto you a sign, that ye may know the time when these things shall be about to take place—that I shall gather in, from their long dispersion, my people, O house of Israel, and shall establish again among them my Zion;

And behold, this is the thing which I will give unto you for a sign—for verily I say unto you that when these things which I declare unto you, and which I shall declare unto you hereafter of myself, and by the power of the Holy Ghost which shall be given unto you of the Father, shall be made known unto the Gentiles that they may know concerning this people who are a remnant of the house of Jacob, and concerning this my people who shall be scattered by them;

Verily, verily, I say unto you, when these things shall be made known unto them of the Father, and shall come forth of the Father, from them unto you;

For it is wisdom in the Father that they should be established in this land, and be set up as a free people by the power of the Father, that these things might come forth from them unto a remnant of your seed, that the covenant of the Father may be fulfilled which he hath covenanted with his people, O house of Israel;

Therefore, when these works and the works which shall be wrought among you hereafter shall come forth from the Gentiles, unto your seed which shall dwindle in unbelief because of iniquity;

For thus it behooveth the Father that it should come forth from the Gentiles, that he may show forth his power unto the Gentiles, for this cause that the Gentiles, if they will not harden their hearts, that they may repent and come unto me and be baptized in my name and know of the true points of my doctrine, that they may be numbered among my people, O house of Israel;

7 இக்காரியங்கள் சம்பவிக்கும்போது, உன் சந்ததி இவைகளைக் குறித்து அறியத் துவங்கும்போது, பிதா இஸ்ரவேலின் வீட்டாராகிய ஜனங்களிடத்தில் செய்துகொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கேதுவான அவருடைய கிரியை ஏற்கனவே துவங்கி விட்டது, என்று அவர்கள் அறியத்தக்கதாக, இது அவர்களுக்கு ஒரு அறிகுறியாக இருக்கும்.

And when these things come to pass that thy seed shall begin to know these things—it shall be a sign unto them, that they may know that the work of the Father hath already commenced unto the fulfilling of the covenant which he hath made unto the people who are of the house of Israel.

8 அந்த நாள் வருகிறபோது, ராஜாக்கள் தங்கள் வாய்களை மூடுவார்கள்; ஏனெனில், தங்களுக்குச் சொல்லப்படாதவைகளைக் காண்பார்கள்; தாங்கள் கேள்விப்படாததை கருத்தில் கொள்வார்கள்.

And when that day shall come, it shall come to pass that kings shall shut their mouths; for that which had not been told them shall they see; and that which they had not heard shall they consider.

9 ஏனெனில் அந்த நாளிலே என்னிமித்தம் பிதா, பெரிதும் அற்புதமுமான ஒரு கிரியையை அவர்களுக்கு மத்தியிலே செய்வார்; அதை ஒரு மனுஷன் அவர்களுக்கு அறிவித்தாலும், அதை விசுவாசியாதவர்களும் அவர்களுக்குள்ளே இருப்பார்கள்.

For in that day, for my sake shall the Father work a work, which shall be a great and a marvelous work among them; and there shall be among them those who will not believe it, although a man shall declare it unto them.

10 ஆனால் இதோ, என் ஊழியக்காரனின் ஜீவன் என் கரத்திலிருக்கும்; ஆகவே அவர்கள் அவனுக்குக் கேடு உண்டாக்கமாட்டார்கள். இருப்பினும் அவர்களால் அவன் உருக்குலைக்கப்படுவான். ஆயினும் என் ஞானம் பிசாசின் தந்திரத்தைக் காட்டிலும் பெரிது என்று அவர்களுக்குக் காண்பிக்கும் பொருட்டு, நான் அவனை குணமாக்குவேன்.

But behold, the life of my servant shall be in my hand; therefore they shall not hurt him, although he shall be marred because of them. Yet I will heal him, for I will show unto them that my wisdom is greater than the cunning of the devil.

11 ஆதலால் இயேசு கிறிஸ்துவாகிய, என் வார்த்தைகளில் விசுவாசியாதவன் எவனோ, பிதாவானவர் அவ்வார்த்தைகளை புறஜாதியாருக்குள்ளே அவன் கொண்டு போகப்பண்ணி, அவைகளை புறஜாதியாருக்குள்ளே கொண்டு செல்லும்பொருட்டு அவனுக்கு வல்லமையை அருளுவார், (மோசே சொன்னது போலவே அது நடந்தேறும்) என் உடன்படிக்கையின் ஜனத்திலிருந்து அவர்கள் அறுப்புண்டு போவார்கள்.

Therefore it shall come to pass that whosoever will not believe in my words, who am Jesus Christ, which the Father shall cause him to bring forth unto the Gentiles, and shall give unto him power that he shall bring them forth unto the Gentiles, (it shall be done even as Moses said) they shall be cut off from among my people who are of the covenant.

12 யாக்கோபின் மீதியானவர்களாகிய என் ஜனம் புறஜாதிகளின் மத்தியிலே இருப்பார்கள், ஆம், அவர்கள் மத்தியிலே போனால், தப்புவிப்பார் இல்லாமல், மிதித்துத் பீறிப்போடுகிற, சிங்கம் காட்டு மிருகங்களுக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், பாலசிங்கம் ஆட்டு மந்தைக்குள்ளே இருக்கிறதற்குச் சமானமாகவும், அவர்களின் நடுவே இருப்பார்கள்.

And my people who are a remnant of Jacob shall be among the Gentiles, yea, in the midst of them as a lion among the beasts of the forest, as a young lion among the flocks of sheep, who, if he go through both treadeth down and teareth in pieces, and none can deliver.

13 அவர்களுடைய கரம் அவர்களின் சத்துருக்களின்மேல் உயர்த்தப்பட்டிருக்கும். அவர்களுடைய விரோதிகளெல்லாம் வெட்டப்பட்டுப் போவார்கள்.

Their hand shall be lifted up upon their adversaries, and all their enemies shall be cut off.

14 ஆம், புறஜாதியார் மனந்திரும்பாவிடில் அவர்களுக்கு ஐயோ; ஏனெனில் அந்நாளிலே, நான் உன் நடுவிலிருந்து குதிரைகளைக் கொன்றுபோட்டு, உனது இரதங்களை அழித்துப் போடுவேன், என்று பிதா உரைக்கிறார்.

Yea, wo be unto the Gentiles except they repent; for it shall come to pass in that day, saith the Father, that I will cut off thy horses out of the midst of thee, and I will destroy thy chariots;

15 நான் உன் தேசத்தின் பட்டணங்களை அழித்துப் போட்டு, உனது எல்லா கொத்தளங்களையும் தரைமட்டமாக்குவேன்.

And I will cut off the cities of thy land, and throw down all thy strongholds;

16 நான் உன் தேசத்திலிருந்து சூனியங்களை வெளியேற்றுவேன், இனி எந்த அஞ்சனம் பார்க்கிறவனையும் நீ வைத்திருப்பதில்லை;

And I will cut off witchcrafts out of thy land, and thou shalt have no more soothsayers;

17 நான் உன் வார்ப்பிக்கப்பட்ட சொரூபங்களையும் அழித்துப் போடுவேன். உன் நடுவிலிருந்து உன்னுடைய நிற்கிற சொரூபங்களை நீக்குவேன். நீ இனி உன் கைகளின் கிரியைகளை ஒருபோதும் வணங்குவதில்லை.

Thy graven images I will also cut off, and thy standing images out of the midst of thee, and thou shalt no more worship the works of thy hands;

18 நான் உன் நடுவிலிருந்து உன்னுடைய தோப்புகளை பிடுங்கிப் போடுவேன்; அப்படியே நான் உன்னுடைய பட்டணங்களை அழித்துப் போடுவேன்.

And I will pluck up thy groves out of the midst of thee; so will I destroy thy cities.

19 எல்லா பொய்யுரைகளும், வஞ்சனைகளும், பொறாமைகளும், பிணக்குகளும், ஆசாரிய வஞ்சகங்களும், வேசித்தனங்களும் நீக்கப்படும்.

And it shall come to pass that all lyings, and deceivings, and envyings, and strifes, and priestcrafts, and whoredoms, shall be done away.

20 இஸ்ரவேலின் வீட்டாரே, அந்நாளில் மனந்திரும்பாமலும், என்னுடைய பிரியமான குமாரனிடத்தில் வராமலுமிருக்கிற எவரையும் என் ஜனத்திற்குள்ளிருந்து நீக்கிப்போடுவேன்;

For it shall come to pass, saith the Father, that at that day whosoever will not repent and come unto my Beloved Son, them will I cut off from among my people, O house of Israel;

21 நான் அவர்கள்மேல் நீதியைச் சரிக்கட்டி, கோபத்தை வரப்பண்ணுவேன், அப்படியே அஞ்ஞானிகள் மேலும், அவர்கள் கேள்விப்படாத அளவில் வரப்பண்ணுவேன்.

And I will execute vengeance and fury upon them, even as upon the heathen, such as they have not heard.

22 அவர்கள் மனந்திரும்பி, என் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாமல் இருந்தார்களெனில், அவர்களுக்குள்ளே என் சபையை நான் ஸ்தாபிப்பேன். அவர்கள் உடன்படிக்கையினுள் வந்து, யாக்கோபின் மீதியானவர்களாகிய இவர்களுடன் எண்ணப்படுவார்கள். இந்த தேசத்தை இவர்களுடைய சுதந்திரத்திற்காக நான் இவர்களுக்குக் கொடுத்திருக்கிறேன்.

But if they will repent and hearken unto my words, and harden not their hearts, I will establish my church among them, and they shall come in unto the covenant and be numbered among this the remnant of Jacob, unto whom I have given this land for their inheritance;

23 யாக்கோபின் மீதியானோரும், என் ஜனமும், வரப்போகிற இஸ்ரவேல் வீட்டார் அநேகரும், புதிய எருசலேம் என்று அழைக்கப்படுகிற ஒரு பட்டணத்தைக் கட்டும்படியாக, என் ஜனத்துக்கு உதவிபுரிவார்கள்.

And they shall assist my people, the remnant of Jacob, and also as many of the house of Israel as shall come, that they may build a city, which shall be called the New Jerusalem.

24 பூமியின் மீதெங்கும் சிதறடிக்கப்பட்டிருக்கிறவர்கள், புதிய எருசலேமிற்குள்ளாக, கூட்டிச்சேர்க்கப்படும்படி அவர்கள் என் ஜனத்துக்கு உதவி புரிவார்கள்.

And then shall they assist my people that they may be gathered in, who are scattered upon all the face of the land, in unto the New Jerusalem.

25 அப்பொழுது பரலோகத்தின் வல்லமை அவர்களுக்குள்ளே வரும்; நானும் அவர்களுக்கு நடுவே இருப்பேன்.

And then shall the power of heaven come down among them; and I also will be in the midst.

26 இந்த சுவிசேஷம் இந்த ஜனங்களின் மீதியானோ-
ருக்குள்ளேயும் பிரசங்கிக்கப்படும், அந்த நாளிலே,
பிதாவின் கிரியையும் துவங்கும். மெய்யாகவே
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், என் ஜனங்க-
ளில் சிதறடிக்கப்பட்டுப்போன எல்லாருக்குள்ளும்,
ஆம், எருசலேமை விட்டு பிதா நடத்திச் சென்ற தொ-
லைந்து போனவர்களுமான கோத்திரங்களுக்குள்-
ளும், அந்நாளில் பிதாவின் கிரியை துவங்கும்.

And then shall the work of the Father commence at that day, even when this gospel shall be preached among the remnant of this people. Verily I say unto you, at that day shall the work of the Father commence among all the dispersed of my people, yea, even the tribes which have been lost, which the Father hath led away out of Jerusalem.

27 ஆம், அவர்கள் என் நாமத்தினாலே பிதாவை
அழைக்கும்படியாக, அதனிமித்தம் அவர்கள் என்-
னிடத்தில் வர, பிதா வழியை ஆயத்தப்படுத்துவது-
டன், சிதறடிக்கப்பட்டுப்போன என் ஜனங்கள் எல்-
லோருக்குள்ளும் கிரியை துவங்கும்.

Yea, the work shall commence among all the dispersed of my people, with the Father to prepare the way whereby they may come unto me, that they may call on the Father in my name.

28 ஆம், அப்பொழுது பிதாவினுடைய ஜனங்கள்
தங்களின் சுதந்திர தேசத்தில் கூடும்படியாக, பிதா
எல்லா தேசங்களுக்கும் வழியை ஆயத்தப்படுத்து-
வதுடன், அக்கிரியை துவங்கும்.

Yea, and then shall the work commence, with the Father among all nations in preparing the way whereby his people may be gathered home to the land of their inheritance.

29 அவர்கள் எல்லா தேசங்களிலிருந்தும் போவார்-
கள்; அவர்கள் தீவிரித்தோ அல்லது ஓடியோ போக-
மாட்டார்கள். ஏனெனில் நான் அவர்கள் முன்னே
போவேன். நான் அவர்களுக்கு பின்னாலுமிருப்-
பேன், என்று பிதா உரைக்கிறார்.

And they shall go out from all nations; and they shall not go out in haste, nor go by flight, for I will go before them, saith the Father, and I will be their rearward.

# 3 நேபி 22

1 பின்பு எழுதப்பட்டவை சம்பவிக்கும்: பிள்ளை பெ-
றாத மலடியே, பாடு, குழந்தை பெறாமல் கர்ப்பவே-
தனைப்படாதவளே, கெம்பீரமாய்ப்பாடி, கூவிச்சத்-
தமிடு; ஏனெனில் வாழ்க்கைப்பட்டவளுடைய
பிள்ளைகளைப் பார்க்கிலும், மலடியின் பிள்ளை-
கள் அநேகம், என்று கர்த்தர் உரைக்கிறார்.

2 உன் கூடாரத்தின் இடத்தை விசாலமாக்கு, உன்
வாசஸ்தலங்களின் திரைகளை அவர்கள் விரி-
வாக்கட்டும். தடை செய்யாதே. உன் கயிறுகளை நீ-
ளமாக்கி, உன் முளைகளை உறுதிப்படுத்து.

3 ஏனெனில் நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும்
இடங்கொண்டு பெருகுவாய். உன் சந்ததியார் புற-
ஜாதிகளை சுதந்தரித்துக்கொண்டு, பாழாய்ப்-
போன பட்டணங்களை குடியேறப்பண்ணுவார்-
கள்.

4 பயப்படாதே, நீ வெட்கப்படுவதில்லை; தாறுமா-
றாக்கப்படுவதுமில்லை, நீ வெட்கமடைய விடப்ப-
டுவதில்லை. ஏனெனில் உன் வாலிபத்தின் வெட்-
கத்தை நீ மறந்து, உன் வாலிபத்தின் நிந்தையை நி-
னையாதிருப்பாய். உன் விதவையிருப்பின் நிந்-
தையை இனி நினையாதிருப்பாய்.

5 உன் சிருஷ்டிகரே, உன் புருஷர், சேனைகளின்
கர்த்தர் என்பது அவருடைய நாமம், இஸ்ரவேலின்
பரிசுத்தர் உன் மீட்பர். அவர் பூமி முழுவதற்குமான
தேவன் எனப்படுவார்.

6 கைவிடப்பட்டு ஆவியிலே சஞ்சலப்பட்ட ஸ்திரீ-
யைப்போலவும், இளம் பிராயத்தில் விவாகஞ் செய்-
து தள்ளப்பட்ட மனைவியைப் போலவும் இருக்கிற
உன்னைக் கர்த்தர் அழைத்தார், என்று உன் தேவன்
சொல்லுகிறார்.

7 இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன்.
ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச்
சேர்த்துக் கொள்வேன்.

8 அற்ப கோபத்தினால் என் முகத்தை உன்னிடமி-
ருந்து இமைப்பொழுது மறைத்திருந்தேன். ஆனா-
லும் நித்திய கிருபையுடன் உனக்கு இரங்குவேன்
என்று கர்த்தராகிய உன் மீட்பர் சொல்லுகிறார்.

9 இது எனக்கு நோவாவின் காலத்தில் உண்டான
வெள்ளம் போலிருக்கும், நோவாவின் காலத்தி-
லுண்டான வெள்ளம் இனி பூமியின்மேல் புரண்டு
வருவதில்லை என்று நான் ஆணையிட்டதுபோல,
உன்மேல் நான் கோபம் கொண்டிருப்பதில்லை-
யென்றும் ஆணையிட்டேன்.

10 மலைகள் விலகினாலும் பர்வதங்கள் நிலைபெ-
யர்ந்தாலும் என் கிருபை உன்னைவிட்டு விலகாம-
லும், என் சமாதானத்தின் உடன்படிக்கை நிலை-
பெயராமலும் இருக்கும் என்று உன்மேல் மனதுருகு-
கிற கர்த்தர் சொல்லுகிறார்.

# 3 Nephi 22

And then shall that which is written come to pass: Sing, O barren, thou that didst not bear; break forth into singing, and cry aloud, thou that didst not travail with child; for more are the children of the desolate than the children of the married wife, saith the Lord.

Enlarge the place of thy tent, and let them stretch forth the curtains of thy habitations; spare not, lengthen thy cords and strengthen thy stakes;

For thou shalt break forth on the right hand and on the left, and thy seed shall inherit the Gentiles and make the desolate cities to be inhabited.

Fear not, for thou shalt not be ashamed; neither be thou confounded, for thou shalt not be put to shame; for thou shalt forget the shame of thy youth, and shalt not remember the reproach of thy youth, and shalt not remember the reproach of thy widowhood any more.

For thy maker, thy husband, the Lord of Hosts is his name; and thy Redeemer, the Holy One of Israel—the God of the whole earth shall he be called.

For the Lord hath called thee as a woman forsaken and grieved in spirit, and a wife of youth, when thou wast refused, saith thy God.

For a small moment have I forsaken thee, but with great mercies will I gather thee.

In a little wrath I hid my face from thee for a moment, but with everlasting kindness will I have mercy on thee, saith the Lord thy Redeemer.

For this, the waters of Noah unto me, for as I have sworn that the waters of Noah should no more go over the earth, so have I sworn that I would not be wroth with thee.

For the mountains shall depart and the hills be removed, but my kindness shall not depart from thee, neither shall the covenant of my peace be removed, saith the Lord that hath mercy on thee.

11 சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றினால் அடி-
பட்டவளே, ஆதரவற்றவளே இதோ, அழகிய வண்-
ணங்களாலே உன் கற்களைக் கிடத்தி, நீல இரத்தி-
னங்களால் உனக்கு அஸ்திபாரம் அமைப்பேன்.

O thou afflicted, tossed with tempest, and not comforted! Behold, I will lay thy stones with fair colors, and lay thy foundations with sapphires.

12 உன் பலகணிகளைப் பளிங்கும், உன் வாசல்க-
ளை மாணிக்கக் கற்களும், உன் மதில்களையெல்-
லாம் உச்சிதமான கற்களுமாக்குவேன்.

And I will make thy windows of agates, and thy gates of carbuncles, and all thy borders of pleasant stones.

13 உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்-
கப்பட்டிருப்பார்கள்; உன் பிள்ளைகளினுடைய
சமாதானம் பெரிதாயிருக்கும்.

And all thy children shall be taught of the Lord; and great shall be the peace of thy children.

14 நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய்; கொடுமைக்-
குத் தூரமாவாய்; பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத்
தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை.

In righteousness shalt thou be established; thou shalt be far from oppression for thou shalt not fear, and from terror for it shall not come near thee.

15 இதோ, உனக்கு விரோதமாய் நிச்சயமாக கூட்டம்
கூடுவார்கள், அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல.
எவர்கள் உனக்கு விரோதமாய்க் கூடுகிறார்களோ,
அவர்கள் உனக்குச் சாதகமாய் விழுவார்கள்.

Behold, they shall surely gather together against thee, not by me; whosoever shall gather together against thee shall fall for thy sake.

16 இதோ, கரிநெருப்பை ஊதி தன் கிரியைகளான
ஆயுதத்தை உண்டுபண்ணுகிற கொல்லனையும்
நான் சிருஷ்டித்தேன்; கெடுத்து நிக்கிரகமாக்குகிற-
வனையும் நான் சிருஷ்டித்தேன்.

Behold, I have created the smith that bloweth the coals in the fire, and that bringeth forth an instrument for his work; and I have created the waster to destroy.

17 உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த
ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய்
நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்ப-
டுத்துவாய். இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சு-
தந்திரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீ-
தியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்.

No weapon that is formed against thee shall prosper; and every tongue that shall revile against thee in judgment thou shalt condemn. This is the heritage of the servants of the Lord, and their righteousness is of me, saith the Lord.

# 3 நேபி 23

1 இப்பொழுதும் இதோ, இக்காரியங்களை நீங்கள்
ஆராயவேண்டும் என்று நான் உங்களுக்குச் சொல்-
லுகிறேன். ஆம், நீங்கள் இக்காரியங்களைக் கருத்-
தாய் ஆராயவேண்டும் என்ற கட்டளையை உங்க-
ளுக்குக் கொடுக்கிறேன்; ஏனெனில் ஏசாயாவின்
வார்த்தைகள் விசேஷித்தவையாயிருக்கின்றன.
2 ஏனெனில் நிச்சயமாகவே இஸ்ரவேலின் வீட்டா-
ராகிய என் ஜனத்தைக் குறித்து எல்லாவற்றையும்-
பற்றி அவன் பேசினான். ஆகவே அவன் புறஜாதி-
யாருக்கும் பேசுவது அவசியமானதே.
3 அவன் பேசின அனைத்துக் காரியங்களும்,
அவன் பேசின வார்த்தைகளின்படியே சம்பவித்-
தும், சம்பவிக்கவும் இருக்கின்றன.
4 ஆதலால், என் வார்த்தைகளுக்குச் செவிகொ-
டுங்கள்; நான் உங்களுக்குச் சொன்ன காரியங்க-
ளை எழுதுங்கள். பிதாவினுடைய காலம் மற்றும்
சித்தத்தின்படியே அவை புறஜாதியாருக்குள் போ-
கும்.
5 என் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, மனந்-
திரும்பி, ஞானஸ்நானம் பெறுகிற எவனும் இரட்-
சிக்கப்படுவான். தீர்க்கதரிசிகளின் வார்த்தைக-
ளை ஆராய்ந்து பாருங்கள். ஏனெனில் இவைக-
ளைக் குறித்து சாட்சி கொடுக்கிற அநேகர் இருக்கி-
றார்கள்.
6 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இவ்வார்த்-
தைகளைச் சொன்னவுடனே, அவர் மறுபடியும்
அவர்களை நோக்கி சொன்னார், அவர்கள் பெற்-
றுக்கொண்ட எல்லா வேதவாக்கியங்களையும்
அவர்களுக்கு அவர் விவரித்துச் சொன்ன பின்பு,
அவர் அவர்களை நோக்கி: இதோ, நீங்கள் எழுத-
வேண்டுமென நான் விரும்பும், நீங்கள் பெற்றிராத
மற்ற வேத வாக்கியங்கள், என்றார்.
7 அந்தப்படியே, அவர் நேபியை நோக்கி: நீ வைத்தி-
ருக்கிற பதிவேடுகளை இங்கே கொண்டுவா என்-
றார்.
8 நேபி பதிவேடுகளைக் கொண்டுவந்து அவருக்கு
முன்பாக வைத்தபோது, அவர் கண்களை ஏறெ-
டுத்துச் சொன்னதாவது:
9 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
பிதா என்னில் தமது நாமத்தை மகிமைப்படுத்து-
கிற அந்நாளில் மரித்தோரிலிருந்து அநேக பரிசுத்த-
வான்கள் எழுந்து அநேகருக்குத் தோன்றி அவர்க-
ளுக்குப் பணிவிடை செய்வார்களென்று, இந்த
ஜனத்திற்குச் சாட்சிகூரவேண்டுமென்று என் ஊழி-
யக்காரனாகிய லாமானியனான சாமுவேலுக்குக்
கட்டளையிட்டேன். அவர் அவர்களை நோக்கி:
அது அப்படியில்லையா என்றார்.

# 3 Nephi 23

And now, behold, I say unto you, that ye ought to search these things. Yea, a commandment I give unto you that ye search these things diligently; for great are the words of Isaiah.

For surely he spake as touching all things concerning my people which are of the house of Israel; therefore it must needs be that he must speak also to the Gentiles.

And all things that he spake have been and shall be, even according to the words which he spake.

Therefore give heed to my words; write the things which I have told you; and according to the time and the will of the Father they shall go forth unto the Gentiles.

And whosoever will hearken unto my words and repenteth and is baptized, the same shall be saved. Search the prophets, for many there be that testify of these things.

And now it came to pass that when Jesus had said these words he said unto them again, after he had expounded all the scriptures unto them which they had received, he said unto them: Behold, other scriptures I would that ye should write, that ye have not.

And it came to pass that he said unto Nephi: Bring forth the record which ye have kept.

And when Nephi had brought forth the records, and laid them before him, he cast his eyes upon them and said:

Verily I say unto you, I commanded my servant Samuel, the Lamanite, that he should testify unto this people, that at the day that the Father should glorify his name in me that there were many saints who should arise from the dead, and should appear unto many, and should minister unto them. And he said unto them: Was it not so?

10 அவரது சீஷர்கள் பிரதியுத்தரமாக: ஆம், கர்த்தா-
வே, சாமுவேல் உம்முடைய வார்த்தைகளின்படியே
தீர்க்கதரிசனம் உரைத்தான். அவைகளெல்லாம் நி-
றைவேறின, என்றார்கள்.

11 இயேசு அவர்களை நோக்கி: அநேக பரிசுத்த-
வான்கள் எழுந்து, அநேகருக்குத் தோன்றி, அவர்க-
ளுக்குப் பணிவிடை செய்தார்களென்று, இந்த கா-
ரியத்தை நீங்கள் எழுதாதிருப்பது எப்படி? என்றார்.

12 அந்தப்படியே, இக்காரியம் எழுதப்படவில்லை
என்று நேபி நினைவுகூர்ந்தான்.

13 அந்தப்படியே, அது எழுதப்படவேண்டுமென்று
இயேசு கட்டளையிட்டார். ஆதலால் அவர் கட்ட-
ளையிட்டபடியே அது எழுதப்பட்டது.

14 இப்பொழுதும், அந்தப்படியே, அவர்கள் எழுதின
எல்லா வேத வாக்கியங்களையும் இயேசு ஏகமாய்
விளக்கிச் சொன்னபோது, தாம் அவர்களுக்கு வி-
ளக்கிச் சொன்னவைகளை, அவர்கள் போதிக்க-
வேண்டுமென்று, அவர்களுக்கு அவர் கட்டளை-
யிட்டார்.

And his disciples answered him and said: Yea, Lord, Samuel did prophesy according to thy words, and they were all fulfilled.

And Jesus said unto them: How be it that ye have not written this thing, that many saints did arise and appear unto many and did minister unto them?

And it came to pass that Nephi remembered that this thing had not been written.

And it came to pass that Jesus commanded that it should be written; therefore it was written according as he commanded.

And now it came to pass that when Jesus had expounded all the scriptures in one, which they had written, he commanded them that they should teach the things which he had expounded unto them.

# 3 நேபி 24

1 அந்தப்படியே, அவன் அவர்களுக்குச் சொல்லவி-
ருக்கிற, மல்கியாவிற்கு பிதாவானவர் கொடுத்த
வார்த்தைகளை, அவர்கள் எழுதவேண்டுமென்று
அவர் அவர்களுக்குக் கட்டளையிட்டார். அந்தப்ப-
டியே, அவைகள் எழுதப்பட்ட பின்பு அவர் அவை-
களை விளக்கிச் சொன்னார். அவர் அவர்களிடத்-
தில் சொன்ன வார்த்தைகள் இவைகளே: பிதா மல்-
கியாவிடம் சொன்னது இதுவே, இதோ, நான் என்
தூதுவனை அனுப்புவேன். அவன் எனக்கு முன்-
பாக வழியை ஆயத்தப்படுத்துவான். அப்பொழுது
நீங்கள் தேடுகிற ஆண்டவரும், நீங்கள் களிகூர்கிற
உடன்படிக்கையின் தூதனுமானவர், தம்முடைய
ஆலயத்திற்கு திடீரென்று வருவார். இதோ, அவர்
வருவாரென்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகி-
றார்.
2 அவருடைய வருகையின் நாளில் நிலைத்திருப்-
பவன் யார்? அவர் தோன்றும்போது நிலைநிற்ப-
வன் யார்? அவர் புடமிடுகிறவனின் நெருப்பைப்
போலவும், வண்ணானுடைய சவுக்காரம் போலவும்
இருப்பார்.
3 அவர் வெள்ளியைப் புடமிட்டு சுத்திகரிப்பவராக
உட்காருவார்: அவர் லேவியின் குமாரர்களைச் சுத்-
திகரித்தும், அவர்கள் நீதியினாலே காணிக்கை-
யைக் கர்த்தருக்கு படைக்கும்படிக்கு, அவர்களை
பொன்னைப் போலவும், வெள்ளியைப் போலவும்
சுத்திகரிப்பார்.
4 அப்பொழுது பழங்காலத்தைப் போலவும், முந்-
தின வருஷங்களில் இருந்ததைப் போலவும், யூதா-
வின் காணிக்கையும், எருசலேமின் காணிக்கையும்
கர்த்தருக்கு உகந்ததாகும்.
5 நான் நியாயந்தீர்க்கும்படியாக உங்கள் அருகில்
வருவேன். சூனியக்காரர்களுக்கு விரோதமாகவும்,
விபச்சாரக்காரர்களுக்கு விரோதமாகவும், பொய்
ஆணையிடுபவர்களுக்கு விரோதமாகவும், கூலிக்-
காரனை அவன் கூலியிலும், விதவையையும்,
தகப்பனில்லாதோரையும் ஒடுக்குபவர்களுக்கும்,
அந்நியரை நிராகரித்து எனக்குப் பயப்படாதவர்க-
ளுக்கும் விரோதமாகவும் நான் விரைந்துவரும்
சாட்சியாவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்-
லுகிறார்.
6 நானே கர்த்தர், நான் மாறுவதில்லை; ஆதலால்
யாக்கோபின் குமாரராகிய நீங்கள் பட்சிக்கப்பட்டுப்
போவதில்லை.
7 நீங்கள் உங்களுடைய பிதாக்களின் நாட்களிலி-
ருந்தே என்னுடைய நியமங்களிலிருந்து விலகிப்-
போய், அவைகளைக் கைக்கொள்ளவில்லை.
என்னிடத்தில் திரும்புங்கள். நானும் உங்களிடத்-
தில் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர்
உரைக்கிறார். ஆனாலும் நாங்கள் எந்த விதத்தில்
திரும்பவேண்டுமென்று நீங்கள் கேட்கிறீர்கள்.

# 3 Nephi 24

And it came to pass that he commanded them that they should write the words which the Father had given unto Malachi, which he should tell unto them. And it came to pass that after they were written he expounded them. And these are the words which he did tell unto them, saying: Thus said the Father unto Malachi—Behold, I will send my messenger, and he shall prepare the way before me, and the Lord whom ye seek shall suddenly come to his temple, even the messenger of the covenant, whom ye delight in; behold, he shall come, saith the Lord of Hosts.

But who may abide the day of his coming, and who shall stand when he appeareth? For he is like a refiner's fire, and like fuller's soap.

And he shall sit as a refiner and purifier of silver; and he shall purify the sons of Levi, and purge them as gold and silver, that they may offer unto the Lord an offering in righteousness.

Then shall the offering of Judah and Jerusalem be pleasant unto the Lord, as in the days of old, and as in former years.

And I will come near to you to judgment; and I will be a swift witness against the sorcerers, and against the adulterers, and against false swearers, and against those that oppress the hireling in his wages, the widow and the fatherless, and that turn aside the stranger, and fear not me, saith the Lord of Hosts.

For I am the Lord, I change not; therefore ye sons of Jacob are not consumed.

Even from the days of your fathers ye are gone away from mine ordinances, and have not kept them. Return unto me and I will return unto you, saith the Lord of Hosts. But ye say: Wherein shall we return?

8 மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? இருப்பி-
னும் என்னை நீங்கள் வஞ்சித்திருக்கிறீர்கள். நீங்க-
ளோ எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்.
தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே.

Will a man rob God? Yet ye have robbed me. But ye say: Wherein have we robbed thee? In tithes and offerings.

9 முழு தேசத்தாராகிய நீங்கள், என்னை வஞ்சித்த-
தினிமித்தம், நீங்கள் ஒரு சாபத்தால் சபிக்கப்பட்டி-
ருக்கிறீர்கள்.

Ye are cursed with a curse, for ye have robbed me, even this whole nation.

10 என் வீட்டில் ஆகாரம் இருக்கும்படி, பண்டகசா-
லையிலே தசமபாகங்களை எல்லாம் நீங்கள்
கொண்டு வாருங்கள்; அதனாலே நான் வானத்தி-
லே பலகணிகளைத் திறந்து, இடம்கொள்ளாமல்
போகுமளவும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை ஊற்ற-
மாட்டேனோவென்றும், அதனால் என்னை இப்-
பொழுது சோதித்துப் பாருங்கள், என்றும் சேனைக-
ளின் கர்த்தர் உரைக்கிறார்.

Bring ye all the tithes into the storehouse, that there may be meat in my house; and prove me now herewith, saith the Lord of Hosts, if I will not open you the windows of heaven, and pour you out a blessing that there shall not be room enough to receive it.

11 நான் பட்சிக்கிறவனை உங்கள் நிமித்தம் கடிந்து-
கொள்வேன், அவன் உங்கள் நிலங்களின் கனிக-
ளை அழிப்பதில்லை. வெளியிலுள்ள உங்கள் தி-
ராட்சைச்செடிகள் காலத்திற்கு முன்னாகவே தன்
கனிகளைத் தள்ளுகிறதுமில்லை, என்று சேனை-
களின் கர்த்தர் உரைக்கிறார்.

And I will rebuke the devourer for your sakes, and he shall not destroy the fruits of your ground; neither shall your vine cast her fruit before the time in the fields, saith the Lord of Hosts.

12 எல்லா தேசங்களும் உங்களை ஆசீர்வதிக்கப்பட்-
டவர்கள் என்று அழைப்பார்கள். நீங்கள் விரும்-
பப்படத்தக்க தேசமாயிருப்பீர்கள், என்று சேனைக-
ளின் கர்த்தர் சொல்லுகிறார்.

And all nations shall call you blessed, for ye shall be a delightsome land, saith the Lord of Hosts.

13 நீங்கள் எனக்கு விரோதமாய்ப் பேசின வார்த்தை-
கள் கடினமாய் இருக்கிறது, என்று கர்த்தர் உரைக்-
கிறார். இருப்பினும் உமக்கு விரோதமாய் என்ன பே-
சினோம், என்று கேட்கிறீர்கள்.

Your words have been stout against me, saith the Lord. Yet ye say: What have we spoken against thee?

14 தேவனை சேவிப்பது வீணே. அவருடைய நிய-
மங்களை கைக்கொண்டதாலும் சேனைகளின்
கர்த்தருக்கு முன்பாக நாம் துக்கித்து நடந்ததாலும்
நமக்கு என்ன பிரயோஜனம்? என்று சொன்னீர்கள்.

Ye have said: It is vain to serve God, and what doth it profit that we have kept his ordinances and that we have walked mournfully before the Lord of Hosts?

15 இப்பொழுதும் பெருமைக்காரர்களை மகிழ்ச்சி-
யுள்ளவர்கள் என்று சொல்லுகிறோம்; ஆம், தீமை
செய்கிறவர்கள் திடப்படுத்தப்படுகிறார்கள், ஆம்,
தேவனை சோதிக்கிறவர்கள் விடுவிக்கப்பட்டும்
இருக்கிறார்களே, என்றீர்கள்.

And now we call the proud happy; yea, they that work wickedness are set up; yea, they that tempt God are even delivered.

16 அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவ-
ரோடு ஒருவர் அடிக்கடி பேசினார்கள். கர்த்தர் செ-
விகொடுத்துக் கேட்டார்; கர்த்தருக்குப் பயந்தவர்க-
ளுக்காகவும், அவருடைய நாமத்தை தியானிக்கிற-
வர்களுக்காகவும் ஞாபகப் புஸ்தகம் ஒன்று அவ-
ருக்கு முன்பாக எழுதப்பட்டிருந்தது.

Then they that feared the Lord spake often one to another, and the Lord hearkened and heard; and a book of remembrance was written before him for them that feared the Lord, and that thought upon his name.

17 நான் என் ஆபரணங்களைச் செய்யும் அந்நாளி-
லே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள்
என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஒரு
மனுஷன் தன்னை சேவிக்கிற தன்னுடைய சொந்த
மகனைத் தப்புவிக்கிறதைப் போல, நான் அவர்க-
ளைத் தப்புவிப்பேன்.

And they shall be mine, saith the Lord of Hosts, in that day when I make up my jewels; and I will spare them as a man spareth his own son that serveth him.

18 அப்பொழுது நீங்கள் திரும்பி வந்து, நீதிமானை-
யும் துன்மார்க்கனையும், தேவனை சேவிப்ப-
வனையும் அவரைச் சேவிக்காதவனையும் பகுத்த-
றிவீர்கள்.

Then shall ye return and discern between the righteous and the wicked, between him that serveth God and him that serveth him not.

# 3 நேபி 25

1 ஏனெனில் இதோ, சூளையைப் போல எரிகிற நாள்
வருகிறது; பெருமைக்காரர் யாவரும், ஆம், துன்-
மார்க்கம்பண்ணுகிற யாவரும் தாளடியாயிருப்-
பார்கள்; வரப்போகிற நாள் அவர்களை எரித்துப்
போடும். அது அவர்களுக்கு வேரையும் கொப்பை-
யும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்-
தர் உரைக்கிறார்.
2 ஆனால் என் நாமத்திற்குப் பயந்திருக்கிற உங்-
கள்மேல் நீதியின் குமாரன் தன் செட்டைகளின்
ஆரோக்கியத்தை வைத்து எழும்புவார்; நீங்கள்
வெளியே புறப்பட்டுப்போய் தொழுவத்திலுள்ள
கன்றுகளைப் போல வளருவீர்கள்.
3 நீங்கள் துன்மார்க்கரை மிதிப்பீர்கள்; நான்
இதைச் செய்கிற அந்நாளிலே உங்கள் உள்ளங்-
கால்களின் கீழ் அவர்கள் சாம்பலாயிருப்பார்கள்
என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார்.
4 ஓரேபிலே இஸ்ரவேலரெல்லாருக்காகவும் கட்ட-
ளைகளுடனும், நியாயங்களுடனும், நான் கட்ட-
ளையிட்ட என் தாசனாகிய மோசேயின் நியாயப்பி-
ரமாணத்தை நினையுங்கள்.
5 இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான
நாள் வருவதற்கு முன்னமே தீர்க்கதரிசியாகிய எலி-
யாவை உங்களிடத்திற்கு அனுப்புவேன்
6 நான் வந்து பூமியை ஒரு சங்காரத்தால் அடிக்கா-
தபடிக்கு, அவன் பிதாக்களின் இருதயங்களை
பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளின் இருத-
யங்களை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்பு-
வான்.

# 3 Nephi 25

For behold, the day cometh that shall burn as an oven; and all the proud, yea, and all that do wickedly, shall be stubble; and the day that cometh shall burn them up, saith the Lord of Hosts, that it shall leave them neither root nor branch.

But unto you that fear my name, shall the Son of Righteousness arise with healing in his wings; and ye shall go forth and grow up as calves in the stall.

And ye shall tread down the wicked; for they shall be ashes under the soles of your feet in the day that I shall do this, saith the Lord of Hosts.

Remember ye the law of Moses, my servant, which I commanded unto him in Horeb for all Israel, with the statutes and judgments.

Behold, I will send you Elijah the prophet before the coming of the great and dreadful day of the Lord;

And he shall turn the heart of the fathers to the children, and the heart of the children to their fathers, lest I come and smite the earth with a curse.

## 3 நேபி 26

1 இப்பொழுதும், அந்தப்படியே, இயேசு இக்காரியங்க-
ளைச் சொன்னவுடனே, அவர் திரளானோருக்கு
அவைகளை விளக்கிச் சொன்னார்; அவர் பெரி-
தும் சிறியதுமான சகலவற்றையும் அவர்களுக்கு
விளக்கிச் சொன்னார்.
2 அவர் சொல்கிறார்: உங்களிடம் இல்லாத இந்த
வேதவாக்கியங்களை, நான் உங்களுக்குக் கொடுக்-
கவேண்டுமென, பிதா கட்டளையிட்டார். ஏனெ-
னில் அவை எதிர்கால தலைமுறையினருக்குக்
கொடுக்கப்படவேண்டுமென்பது அவரிலுள்ள
ஞானமாயிருந்தது.
3 அவர் ஆதியிலிருந்து தாம் தம்முடைய மகிமை-
யிலே வருகிற காலம் வரைக்குமாக, எல்லா காரி-
யங்களையும் விளக்கிச் சொன்னார். ஆம், கடுமை-
யான வெப்பத்தால் பஞ்சபூதங்கள் வெந்து உருகிப்-
போய், பூமி புஸ்தகச் சுருளைப்போல் சுருட்டப்பட்-
டு வானங்களும், பூமியும் கடந்துபோகுமளவும் பூ-
மியின் பரப்பின் மேல் வரவிருக்கிற எல்லா காரி-
யங்களையும் விளக்கிச் சொன்னார்.
4 எல்லா ஜனங்களும், எல்லா இனத்தாரும், சகல
தேசத்தாரும், பாஷைக்காரரும் தங்களுடைய கிரி-
யைகள் நன்மையானவைகளோ, அல்லது தீமை-
யானவைகளோ என்பதற்கேற்ப நியாயந்தீர்க்கப்ப-
டும்படி, தேவனுக்கு முன்பாக நிற்கிற அந்தப் பெரி-
தும் கடைசியுமான நாள் வரைக்குமான காரியங்க-
ளை விவரித்துச் சொன்னார்.
5 உலகம் துவங்குவதற்கு முன்னமே இருந்த கிறிஸ்-
துவிலுள்ள இரக்கம், நியாயம், பரிசுத்தம் ஆகிய-
வற்றின்படியே ஒன்று ஒரு புறத்திலும், மற்றொன்று
மறுபுறத்திலுமாக இணையாயிருந்து, அவர்கள்
நல்லவர்களாக இருந்தால், என்றுமுள்ள ஜீவனின்
உயிர்த்தெழுதலுக்கும், அவர்கள் தீயவர்களாக
இருந்தால், ஆக்கினையின் உயிர்த்தெழுதலுக்கு-
மாக நியாயந்தீர்க்கப்படுவார்கள்;
6 இப்போதும், இயேசு மெய்யாகவே ஜனங்களுக்குப்
போதித்த காரியங்களில் நூற்றில் ஒரு பகுதிகூட
இந்தப் புஸ்தகத்தில் எழுதப்படமுடியாது.
7 ஆனால் இதோ, அவர் ஜனங்களுக்குப் போதித்த
காரியங்களில் அதிகமானவை நேபியின் தகடுக-
ளில் அடங்கியிருக்கிறது.
8 நான் எழுதின இந்தக் காரியங்கள், அவர் ஜனங்க-
ளுக்குப் போதித்தவைகளில் கொஞ்சமே; இயேசு
பேசின வார்த்தைகளின்படியே, புறஜாதிகளிலி-
ருந்து இந்த ஜனங்களிடமாக இவைகள் மறுபடியும்
கொண்டுவரப்படும்படிக்கான நோக்கத்திற்காகவே
இவைகளை எழுதினேன்.

## 3 Nephi 26

And now it came to pass that when Jesus had told these things he expounded them unto the multitude; and he did expound all things unto them, both great and small.

And he saith: These scriptures, which ye had not with you, the Father commanded that I should give unto you; for it was wisdom in him that they should be given unto future generations.

And he did expound all things, even from the beginning until the time that he should come in his glory—yea, even all things which should come upon the face of the earth, even until the elements should melt with fervent heat, and the earth should be wrapt together as a scroll, and the heavens and the earth should pass away;

And even unto the great and last day, when all people, and all kindreds, and all nations and tongues shall stand before God, to be judged of their works, whether they be good or whether they be evil—

If they be good, to the resurrection of everlasting life; and if they be evil, to the resurrection of damnation; being on a parallel, the one on the one hand and the other on the other hand, according to the mercy, and the justice, and the holiness which is in Christ, who was before the world began.

And now there cannot be written in this book even a hundredth part of the things which Jesus did truly teach unto the people;

But behold the plates of Nephi do contain the more part of the things which he taught the people.

And these things have I written, which are a lesser part of the things which he taught the people; and I have written them to the intent that they may be brought again unto this people, from the Gentiles, according to the words which Jesus hath spoken.

9 இதை அவர்கள் பெற்ற பின்பு, அவர்கள் தங்கள் விசுவாசத்தைச் சோதித்தறியும்படியாக முதலில் அவர்கள் பெற்றுக் கொள்வது அவசியமாயிருக்கிறது. அவர்கள் இந்தக் காரியங்களை விசுவாசித்தார்களானால், அப்பொழுது பெரிய காரியங்கள் அவர்களுக்கு வெளியரங்கமாக்கப்படும்.

And when they shall have received this, which is expedient that they should have first, to try their faith, and if it shall so be that they shall believe these things then shall the greater things be made manifest unto them.

10 அவர்கள் இக்காரியங்களை விசுவாசிக்கவில்லையெனில் அவர்களுடைய ஆக்கினைக்கேதுவாக, அவர்களிடத்திலிருந்து இந்தப் பெரிய காரியங்கள் நிறுத்தி வைக்கப்படும்.

And if it so be that they will not believe these things, then shall the greater things be withheld from them, unto their condemnation.

11 இதோ நேபியின் தகடுகளின்மேல் வரையப்பட்டிருந்த எல்லாவற்றையும் நான் அவர்களுக்கு எழுத இருந்தேன். ஆனால் கர்த்தரோ நான் என் ஜனத்தின் விசுவாசத்தை சோதிப்பேன், என்று சொல்லி அதைத் தடுத்தார்.

Behold, I was about to write them, all which were engraven upon the plates of Nephi, but the Lord forbade it, saying: I will try the faith of my people.

12 ஆதலால் மார்மனாகிய நான் கர்த்தரால் எனக்கு கட்டளையிடப்பட்டவைகளாகிய காரியங்களை எழுதுகிறேன். இப்பொழுதும் மார்மனாகிய நான், என் வார்த்தைகளை நிறுத்திவிட்டு, எனக்குக் கட்டளையிட்டவைகளை எழுதத் துவங்குகிறேன்.

Therefore I, Mormon, do write the things which have been commanded me of the Lord. And now I, Mormon, make an end of my sayings, and proceed to write the things which have been commanded me.

13 ஆதலால், மூன்று நாட்களளவும் கர்த்தர் மெய்யாகவே ஜனங்களுக்குப் போதித்தார் என்பதை, நீங்கள் காணவேண்டுமென வாஞ்சிக்கிறேன்; அதற்குப் பின்பு, அவர் தம்மையே அவர்களுக்கு அடிக்கடி காண்பித்து, அடிக்கடி அப்பத்தைப் பிட்டு, அதை ஆசீர்வதித்து, அதை அவர்களுக்குக் கொடுத்தார்.

Therefore, I would that ye should behold that the Lord truly did teach the people, for the space of three days; and after that he did show himself unto them oft, and did break bread oft, and bless it, and give it unto them.

14 அந்தப்படியே, பேசப்பட்டிருக்கிற திரளானோரின் பிள்ளைகளுக்கு அவர் போதித்து ஊழியம் செய்து, அவர் அவர்களுடைய நாவுகளைக் கட்டவிழ்த்தார். அப்பொழுது அவர்கள், அவர் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினதைக் காட்டிலும் பெரிதான காரியங்களை, தங்கள் பிதாக்களிடம் பெரிதும் அற்புதமுமான காரியங்களைப் பேசினார்கள். அவர்கள் உச்சரிக்கும்படியாக அவர் அவர்களுடைய நாவுகளைக் கட்டவிழ்த்தார்.

And it came to pass that he did teach and minister unto the children of the multitude of whom hath been spoken, and he did loose their tongues, and they did speak unto their fathers great and marvelous things, even greater than he had revealed unto the people; and he loosed their tongues that they could utter.

15 அந்தப்படியே, அவர் பரலோகத்திற்கு ஏறின பின்பு, அவர் இரண்டாந்தரம் தம்மையே அவர்களுக்குக் காண்பித்து, பிதாவினிடத்திற்குத் திரும்பிப் போகுமுன்னால், அவர்களுடைய எல்லா சுகவீனரையும், அவர்களுடைய முடவரையும் சுகமாக்கி, அவர்களுடைய குருடர்களின் கண்களைத் திறந்து, செவிடரின் காதுகளைத் திறந்து, அவர்களுக்குள் எல்லாவித சுகமாக்குதலையும் செய்து, மரித்தோரிலிருந்து ஒரு மனுஷனை எழுப்பி, தம்முடைய வல்லமையை அவர்களுக்குக் காண்பித்த பின்பு பிதாவினிடத்திற்கு ஏறிப்போனார்,

And it came to pass that after he had ascended into heaven—the second time that he showed himself unto them, and had gone unto the Father, after having healed all their sick, and their lame, and opened the eyes of their blind and unstopped the ears of the deaf, and even had done all manner of cures among them, and raised a man from the dead, and had shown forth his power unto them, and had ascended unto the Father—

16 இதோ, அந்தப்படியே, மறுநாளில் திரளானோர்
ஏகமாய்க் கூடினார்கள். அவர்கள் இந்த பிள்ளை-
கள் பேசுவதைக் பார்க்கவும் கேட்கவும் செய்தார்-
கள்; ஆம், குழந்தைகள்கூட தங்கள் வாய்களைத்
திறந்து அற்புதமானவைகளை உச்சரித்தார்கள்;
அவர்கள் உச்சரித்தவைகள் அங்கே எந்த மனு-
ஷனும் எழுதக்கூடாதபடி தவிர்க்கப்பட்டன.

Behold, it came to pass on the morrow that the multitude gathered themselves together, and they both saw and heard these children; yea, even babes did open their mouths and utter marvelous things; and the things which they did utter were forbidden that there should not any man write them.

17 அந்தப்படியே, இயேசு தெரிந்துகொண்ட சீஷர்கள்
அந்தக் காலம் முதற்கொண்டு தங்களிடத்தில் வந்த
அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுக்கவும் போதிக்-
கவும் துவங்கினார்கள்; இயேசுவின் நாமத்தில் ஞா-
னஸ்நானம் பெற்றுக்கொண்ட அநேகரும் பரிசுத்த
ஆவியானவரால் நிரப்பப்பட்டார்கள்.

And it came to pass that the disciples whom Jesus had chosen began from that time forth to baptize and to teach as many as did come unto them; and as many as were baptized in the name of Jesus were filled with the Holy Ghost.

18 அவர்களில் அநேகர் பேசக்கூடாத காரியங்க-
ளைக் கண்டும் கேட்டும் இருந்தார்கள். அவைகள்
எழுதப்படுவது நியாயமல்ல.

And many of them saw and heard unspeakable things, which are not lawful to be written.

19 அவர்கள் போதித்து, ஒருவருக்கொருவர் ஊழி-
யம் செய்தார்கள். எல்லோரும் ஒருவரோடு ஒருவர்
நியாயமாய் நடந்து, தங்களுக்குள்ளிருந்த எல்லா
பொருட்களையும் பொதுவாக வைத்துக் கொண்-
டார்கள்.

And they taught, and did minister one to another; and they had all things common among them, every man dealing justly, one with another.

20 அந்தப்படியே, இயேசு தங்களுக்குக் கட்டளை-
யிட்டபடியே அவர்கள் எல்லாக் காரியங்களையும்
செய்தார்கள்.

And it came to pass that they did do all things even as Jesus had commanded them.

21 இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றவர்-
கள், கிறிஸ்துவின் சபையார் என்று அழைக்கப்-
பட்டனர்.

And they who were baptized in the name of Jesus were called the church of Christ.

# 3 நேபி 27

# 3 Nephi 27

1 அந்தப்படியே, இயேசுவின் சீஷர்கள் பிரயாணம்
பண்ணி, தாங்கள் கண்டதும் கேட்டதுமானவைக-
ளைப் பிரசங்கித்து, இயேசுவின் நாமத்தில் ஞா-
னஸ்நானம் கொடுத்துக் கொண்டிருக்கும் வேளை-
யில், அந்தப்படியே, சீஷர்கள் ஏகமாய்க் கூட்டப்பட்-
டு, வல்லமையான ஜெபத்திலும் உபவாசத்திலும்
இணைந்திருந்தார்கள்.

And it came to pass that as the disciples of Jesus were journeying and were preaching the things which they had both heard and seen, and were baptizing in the name of Jesus, it came to pass that the disciples were gathered together and were united in mighty prayer and fasting.

2 அவர்கள் அவருடைய நாமத்தில் பிதாவினிடத்-
தில் ஜெபித்துக் கொண்டிருந்ததால் இயேசு மறுபடி-
யும் தம்மையே அவர்களிடத்தில் காண்பித்தார்;
இயேசு வந்து, அவர்கள் நடுவே நின்று அவர்களி-
டத்தில்: நான் உங்களுக்கு எதைக் கொடுக்கவேண்-
டுமென்று வாஞ்சிக்கிறீர்கள் என்றார்.

And Jesus again showed himself unto them, for they were praying unto the Father in his name; and Jesus came and stood in the midst of them, and said unto them: What will ye that I shall give unto you?

3 அவர்கள் அவரிடத்தில்: ஆண்டவரே, நாங்கள்
இந்த சபையை எந்த நாமத்தினாலே அழைக்க
வேண்டுமென்று நீர் எங்களுக்குச் சொல்லவேண்டு-
மென்று விரும்புகிறோம்; ஏனெனில் இந்த விஷயத்-
தைக் குறித்து ஜனங்களுக்குள்ளே வாக்குவாதங்-
கள் இருக்கின்றன, என்றார்கள்.

And they said unto him: Lord, we will that thou wouldst tell us the name whereby we shall call this church; for there are disputations among the people concerning this matter.

4 கர்த்தர் அவர்களை நோக்கி: மெய்யாகவே, மெய்-
யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இக்-
காரியத்தினாலே ஜனங்கள் ஏன் முறுமுறுத்து வாக்-
குவாதம் பண்ணவேண்டும்?

And the Lord said unto them: Verily, verily, I say unto you, why is it that the people should murmur and dispute because of this thing?

5 என்னுடைய நாமமாகிய கிறிஸ்துவின் நாமத்-
தை உங்கள்மேல் எடுத்துக் கொள்ளவேண்டும்
என்று சொல்லுகிற வேத வார்த்தைகளை அவர்-
கள் வாசிக்கவில்லையா? ஏனெனில் கடைசி நா-
ளின்போது இந்த நாமத்தின்படியே நீங்கள்
அழைக்கப்படுவீர்கள்

Have they not read the scriptures, which say ye must take upon you the name of Christ, which is my name? For by this name shall ye be called at the last day;

6 என் நாமத்தை தன் மீது எடுத்துக்கொண்டு, முடி-
வுபரியந்தம் நிலைநிற்கிறவன் எவனோ, அவனே
கடைசிநாளின்போது இரட்சிக்கப்படுவான்.

And whoso taketh upon him my name, and endureth to the end, the same shall be saved at the last day.

7 ஆதலால் நீங்கள் எதைச் செய்தாலும், அதை என்
நாமத்தினாலே செய்யுங்கள்; ஆதலால் நீங்கள்
சபையை என் நாமத்தினால் அழையுங்கள்; பிதா
என் நிமித்தம் சபையை ஆசீர்வதிக்கும்படியாக,
நீங்கள் என் நாமத்தில் பிதாவினிடத்தில் விண்-
ணப்பம் பண்ணுங்கள்.

Therefore, whatsoever ye shall do, ye shall do it in my name; therefore ye shall call the church in my name; and ye shall call upon the Father in my name that he will bless the church for my sake.

8 என் நாமத்தினால் அழைக்கப்பட்டாலொழிய
அது எப்படி என் சபையாக முடியும்? ஏனெனில்
ஒரு சபை மோசேயின் நாமத்தினால் அழைக்கப்-
பட்டால் அது மோசேயின் சபையாகுமே; அல்லது
அது ஒரு மனுஷனுடைய நாமத்தினால் அழைக்-
கப்பட்டால், அது மனுஷனின் சபையாகுமே.
ஆனால் அது என் சுவிசேஷத்தின் மேல் கட்டப்பட்-
டிருந்தால், என் நாமத்தினால் அது அழைக்கப்பட்-
டால், அப்பொழுது அது என் சபையாயிருக்கும்.

And how be it my church save it be called in my name? For if a church be called in Moses’ name then it be Moses’ church; or if it be called in the name of a man then it be the church of a man; but if it be called in my name then it is my church, if it so be that they are built upon my gospel.

9 மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
நீங்கள் என் சுவிசேஷத்தின் மேல் கட்டப்பட்டிருக்-
கிறீர்கள்; ஆதலால் நீங்கள் விண்ணப்பம் பண்ணு-
கிற காரியம் எதுவாயிருந்தாலும், என் நாமத்தினா-
லே கூப்பிடுங்கள். நீங்கள் சபைக்காக பிதாவிடம்
விண்ணப்பம் பண்ணினால், அது என் நாமத்தி-
னாலேயானால் பிதா உங்களுக்குச் செவிகொடுப்-
பார்.

Verily I say unto you, that ye are built upon my gospel; therefore ye shall call whatsoever things ye do call, in my name; therefore if ye call upon the Father, for the church, if it be in my name the Father will hear you;

10 சபையானது என் சுவிசேஷத்தின்மேல் கட்டப்-
பட்டிருந்தால், பிதா தம்முடைய சுயகிரியைகளை
அதில் விளங்கப்பண்ணுவார்.

And if it so be that the church is built upon my gospel then will the Father show forth his own works in it.

11 ஆனால் அது என் சுவிசேஷத்தின்மேல் கட்டப்ப-
டாமல், மனுஷரின் கிரியைகளின்மேலோ, அல்லது
பிசாசின் கிரியைகளின்மேலோ கட்டப்பட்டிருந்-
தால் மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகி-
றேன், அவர்கள் தங்கள் கிரியைகளில் கொஞ்சகா-
லம் மகிழ்ந்திருப்பார்கள், சீக்கிரமாய் முடிவு வரும்-
போது, அவர்கள் வெட்டப்பட்டு திரும்பிவரமுடி-
யாத இடமாகிய அக்கினியினுள் போடப்படுவார்-
கள்.

But if it be not built upon my gospel, and is built upon the works of men, or upon the works of the devil, verily I say unto you they have joy in their works for a season, and by and by the end cometh, and they are hewn down and cast into the fire, from whence there is no return.

12 ஏனெனில் அவர்களுடைய கிரியைகள் அவர்க-
ளைப் பின்தொடர்கிறது. ஏனெனில் அவர்களின்
கிரியைகளின் நிமித்தமே அவர்கள் வெட்டப்படுகி-
றார்கள்; ஆதலால் நான் உங்களுக்குச் சொன்ன-
வைகளை நினைவுகூருங்கள்.

For their works do follow them, for it is because of their works that they are hewn down; therefore remember the things that I have told you.

13 இதோ, நான் என் சுவிசேஷத்தை உங்களுக்குக்
கொடுத்திருக்கிறேன். நான் உங்களுக்குக் கொடுத்த
சுவிசேஷம் இதுவே, என் பிதா என்னை அனுப்பி-
னதினிமித்தம், என் பிதாவினுடைய சித்தத்தை
செய்யவே நான் உலகத்திற்கு வந்தேன்.

Behold I have given unto you my gospel, and this is the gospel which I have given unto you—that I came into the world to do the will of my Father, because my Father sent me.

14 நான் சிலுவையில் உயர்த்தப்படவும், நான் சிலு-
வையின்மேல் உயர்த்தப்பட்ட பின்பு, நான் எல்லா
மனுஷரையும் என்னிடத்தில் இழுக்கும்படியாக-
வும், மனுஷரால் நான் உயர்த்தப்பட்டதுபோல, பி-
தாவினால் மனுஷரும் உயர்த்தப்பட்டு, எனக்கு
முன்பாக நின்று, தங்களுடைய கிரியைகள் நன்-
மையானவையோ, அல்லது தீமையானவையோ-
வென்று நியாயந்தீர்க்கப்படும் பொருட்டே என் பி-
தா என்னை அனுப்பினார்.

And my Father sent me that I might be lifted up upon the cross; and after that I had been lifted up upon the cross, that I might draw all men unto me, that as I have been lifted up by men even so should men be lifted up by the Father, to stand before me, to be judged of their works, whether they be good or whether they be evil—

15 இதற்காகவே நான் உயர்த்தப்பட்டிருக்கிறேன்.
ஆதலால் எல்லா மனுஷரும் அவர்களுடைய கிரி-
யைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும்பொ-
ருட்டு பிதாவின் வல்லமையினாலே அவர்களை
என்னிடத்தில் இழுத்துக் கொள்வேன்.

And for this cause have I been lifted up; therefore, according to the power of the Father I will draw all men unto me, that they may be judged according to their works.

16 மனந்திரும்பி என் நாமத்தில் ஞானஸ்நானம் பெ-
றுகிற எவனும் நிரப்பப்படுவான்; அவன் முடிவுப-
ரியந்தம் நிலைநிற்பானெனில், இதோ, நான் உல-
கத்தை நியாயந்தீர்க்க நிற்கும் அந்நாளிலே, என் பி-
தாவிற்கு முன்பாய் அவனை குற்றமற்றவனாய்க்
கருதுவேன்.

And it shall come to pass, that whoso repenteth and is baptized in my name shall be filled; and if he endureth to the end, behold, him will I hold guiltless before my Father at that day when I shall stand to judge the world.

17 முடிவுபரியந்தம் நிலைநிற்காதவனே வெட்டப்பட்டு அக்கினியினுள் போடப்படுவான். அதிலிருந்து பிதாவின் நியாயத்தின் நிமித்தம் அவர்கள் ஒருபோதும் திரும்பவே முடியாது.

And he that endureth not unto the end, the same is he that is also hewn down and cast into the fire, from whence they can no more return, because of the justice of the Father.

18 அவர் மனுபுத்திரருக்குக் கொடுத்த வார்த்தை இதுவே. இந்த நோக்கத்திற்காகவே அவர் தாம் கொடுத்த வார்த்தைகளை நிறைவேற்றுகிறார், அவர் பொய்யுரைக்காமல், தம்முடைய எல்லா வார்த்தைகளையும் நிறைவேறப் பண்ணுகிறார்.

And this is the word which he hath given unto the children of men. And for this cause he fulfilleth the words which he hath given, and he lieth not, but fulfilleth all his words.

19 அசுத்தமான ஒன்றும் அவருடைய ராஜ்யத்தினுள் பிரவேசிக்க முடியாது; ஆதலால் தங்களுடைய விசுவாசத்தினிமித்தமும், தங்களுடைய சகல பாவங்களிலிருந்தும் மனந்திரும்பியதினிமித்தமும், முடிவுபரியந்தம் தங்களுடைய விசுவாசத்தினிமித்தமும், என் இரத்தத்தால் தங்களுடைய வஸ்திரங்களைக் கழுவியோரைத் தவிர வேறொருவரும் அவருடைய இளைப்பாறுதலினுள்ளே பிரவேசிப்பதில்லை.

And no unclean thing can enter into his kingdom; therefore nothing entereth into his rest save it be those who have washed their garments in my blood, because of their faith, and the repentance of all their sins, and their faithfulness unto the end.

20 இப்பொழுது இதுவே கட்டளையாயிருக்கிறது: பூமியின் கடையாந்தரங்களே, எனக்கு முன்பாகக் கடைசி நாளில் கறைதிரையற்றவர்களாய் நிற்கும்படிக்கு, நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதினாலே சுத்திகரிக்கப்படும்படிக்கு, நீங்கள் மனந்திரும்பி என்னிடத்தில் வந்து என் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்.

Now this is the commandment: Repent, all ye ends of the earth, and come unto me and be baptized in my name, that ye may be sanctified by the reception of the Holy Ghost, that ye may stand spotless before me at the last day.

21 மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், இதுவே என் சுவிசேஷம், என் சபையிலே நீங்கள் செய்யவேண்டியவைகளை அறிந்திருக்கிறீர்கள்; ஏனெனில் நான் செய்யக் கண்ட கிரியைகளை நீங்களும் செய்வீர்களாக; ஏனெனில் நான் செய்யக் கண்டவைகளை நீங்களும் செய்வீர்களாக.

Verily, verily, I say unto you, this is my gospel; and ye know the things that ye must do in my church; for the works which ye have seen me do that shall ye also do; for that which ye have seen me do even that shall ye do;

22 ஆதலால் இவைகளை நீங்கள் செய்வீர்களானால் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாய் இருப்பீர்கள், நீங்கள் கடைசி நாளின்போது உயர்த்தப்படுவீர்கள்.

Therefore, if ye do these things blessed are ye, for ye shall be lifted up at the last day.

23 தவிர்க்கப்பட்டவைகளைத் தவிர, நீங்கள் கண்டதும் கேட்டதுமானவைகளை எழுதுங்கள்.

Write the things which ye have seen and heard, save it be those which are forbidden.

24 சம்பவித்தவைகள் எழுதப்பட்டிருக்கிறதைப் போல, சம்பவிக்கப்போகிற இந்த ஜனங்களினுடைய கிரியைகளையும் எழுதுங்கள்.

Write the works of this people, which shall be, even as hath been written, of that which hath been.

25 ஏனெனில் இதோ, எழுதப்பட்ட புஸ்தகங்களிலிருந்தும், எழுதப்படப் போகிறவைகளிலிருந்தும், இந்த ஜனங்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள், ஏனெனில் அவைகளினாலே அவர்களுடைய கிரியைகள் மனுஷருக்குத் தெரிவிக்கப்படும்.

For behold, out of the books which have been written, and which shall be written, shall this people be judged, for by them shall their works be known unto men.

26 இதோ, அனைத்தும் பிதாவினால் எழுதப்பட்டிருக்கிறது; ஆதலால் எழுதப்படப் போகிற புஸ்தகங்களினாலே உலகம் நியாயந்தீர்க்கப்படும்.

And behold, all things are written by the Father; therefore out of the books which shall be written shall the world be judged.

27 நான் உங்களுக்குக் கொடுக்கப்போகிறதும், நியாயமானதாய் இருக்கப்போகிறதுமான, நியாயத்தீர்ப்பிற்கேற்ப இந்த ஜனங்களுக்கு நீங்கள் நியாயாதிபதிகளாக இருப்பீர்கள் என்று அறிந்து கொள்ளுங்கள். ஆதலால் நீங்கள் எத்தகைய மனுஷராய் இருக்க வேண்டும்? மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். என்னைப்போலவே இருக்கவேண்டும்.

And know ye that ye shall be judges of this people, according to the judgment which I shall give unto you, which shall be just. Therefore, what manner of men ought ye to be? Verily I say unto you, even as I am.

28 இப்பொழுது நான் பிதாவினிடத்திற்குப் போகிறேன். மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் நீங்கள் கேட்கிற காரியங்கள் எதுவாய் இருந்தாலும், உங்களுக்குக் கொடுக்கப்படும்.

And now I go unto the Father. And verily I say unto you, whatsoever things ye shall ask the Father in my name shall be given unto you.

29 ஆதலால், கேளுங்கள், பெற்றுக்கொள்வீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனெனில் கேட்கிறவன் பெற்றுக்கொள்கிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

Therefore, ask, and ye shall receive; knock, and it shall be opened unto you; for he that asketh, receiveth; and unto him that knocketh, it shall be opened.

30 இப்பொழுதும், இதோ, உங்களினிமித்தமும், இந்த தலைமுறையினிமித்தமும், என் சந்தோஷம் பூரணப்பட்டிருக்குமளவிற்கு மிகுதியாயிருக்கிறது; ஆம், உங்கள் நிமித்தமும், இந்த தலைமுறையினிமித்தமும், பிதாவும் பரிசுத்த தூதர்கள் யாவரும் மகிழ்ந்திருக்கிறார்கள்; ஏனெனில் அவர்களில் ஒருவரும் தொலைந்து போகிறதில்லை.

And now, behold, my joy is great, even unto fulness, because of you, and also this generation; yea, and even the Father rejoiceth, and also all the holy angels, because of you and this generation; for none of them are lost.

31 இதோ, நீங்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று மனதாயிருக்கிறேன்; அவர்கள் என்று நான் சொல்லும்போது, இந்தத் தலைமுறையினரில் இப்பொழுது உயிரோடு இருப்பவர்களைக் குறிப்பிடுகிறேன்; அவர்களில் ஒருவனும் தொலையவில்லை; அவர்களில் என் சந்தோஷம் பூரணப்பட்டிருக்கிறது.

Behold, I would that ye should understand; for I mean them who are now alive of this generation; and none of them are lost; and in them I have fulness of joy.

32 ஆனால் இதோ, இந்தத் தலைமுறையிலிருந்து நான்காவது தலைமுறைக்காக நான் துக்கிக்கிறேன். ஏனெனில் கேட்டின் மகனைப்போலவே, அவர்களும் அவனால் சிறைபிடிக்கப்பட்டுப் போகிறார்கள்; ஏனெனில் அவர்கள் என்னை வெள்ளிக்காகவும், பொன்னிற்காகவும், பொட்டுப்பூச்சி அரிக்கிறதும், திருடர்கள் கன்னமிட்டுத் திருடுகிறவைகளுக்காவும் விற்பார்கள். அந்நாளிலே அவர்களுடைய கிரியைகளை அவர்களின் சொந்த சிரசுகளின்மேல் திருப்பும்படியாக அவர்களைச் சந்திப்பேன்.

But behold, it sorroweth me because of the fourth generation from this generation, for they are led away captive by him even as was the son of perdition; for they will sell me for silver and for gold, and for that which moth doth corrupt and which thieves can break through and steal. And in that day will I visit them, even in turning their works upon their own heads.

33 அந்தப்படியே, இயேசு இவைகளைச் சீஷர்களுக்குச் சொல்லிமுடித்த பின்பு, அவர் தமது சீஷர்களை நோக்கி: இடுக்கமான வாசல் வழியே உட்பிரவேசியுங்கள்; ஏனெனில் ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழிநெருக்கமுமாய் இருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். மரணத்திற்குப் போகிற வாசலோ விரிவும், வழிவிசாலமுமாயிருக்கிறது. ஒரு மனுஷனும் கிரியை நடப்பிக்க முடியாத இரவு வரும்வரைக்கும் அதன் வழியே அநேகர் பிரயாணப்படுவார்கள்.

And it came to pass that when Jesus had ended these sayings he said unto his disciples: Enter ye in at the strait gate; for strait is the gate, and narrow is the way that leads to life, and few there be that find it; but wide is the gate, and broad the way which leads to death, and many there be that travel therein, until the night cometh, wherein no man can work.

# 3 நேபி 28

1 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைச் சொன்-
னவுடனே, அவர் தமது சீஷர்களிடத்தில், ஒருவர்
பின் ஒருவரோடே பேசி, நான் பிதாவினிடத்தில்
போன பின்னர், என்னிடத்தில் நீங்கள் வாஞ்சிப்ப-
து என்ன? என்றார்.
2 மூன்று பேரைத் தவிர அவர்கள் யாவரும் பேசிய-
தாவது: நாங்கள் மனுஷன் ஜீவிக்கிற காலம்
வரைக்கும் வாழ்ந்த பின்பு, நீர் எங்களை அழைத்த
எங்கள் ஊழியம் முடிவுபெற்றதும், நாங்கள் சீக்கிர-
மாய் உம்மிடத்திலே உமது ராஜ்யத்தில் வரும்படி
வாஞ்சிக்கிறோம், என்றார்கள்.
3 அவர் அவர்களை நோக்கி: இக்காரியத்தை என்-
னிடத்தில் நீங்கள் வாஞ்சித்ததினிமித்தம் பாக்கிய-
வான்களாயிருக்கிறீர்கள்; ஆதலால், நீங்கள் எழு-
பத்திரண்டு வயதான பின்பு, என்னுடைய ராஜ்யத்-
திலே என்னிடம் வருவீர்கள்; என்னில் நீங்கள்
இளைப்பாறுதலைக் காண்பீர்கள்.
4 அவர் அவர்களிடத்தில் பேசிய பின்பு, அவர்
அந்த மூவரிடத்தில் திரும்பி, அவர்களை நோக்கி:
நான் பிதாவினிடத்தில் போன பின்பு, நான் உங்க-
ளுக்கு என்ன செய்யவேண்டுமென வாஞ்சிக்கிறீர்-
கள் என்றார்.
5 அவர்கள் தங்கள் இருதயங்களிலே துக்கித்தார்-
கள். ஏனெனில் அவர்கள் தாங்கள் வாஞ்சித்த காரி-
யத்தை அவரிடத்தில் சொல்லத் துணியவில்லை.
6 அவர் அவர்களை நோக்கி: இதோ, நான் உங்களு-
டைய எண்ணங்களை அறிந்திருக்கிறேன். நான்
யூதர்களால் உயர்த்தப்படும் முன்பு, என் ஊழியத்-
தில் என்னோடு இருந்த, எனக்குப் பிரியமான யோ-
வான், என்னிடத்தில் வாஞ்சித்த காரியத்தையே
நீங்களும் வாஞ்சித்திருக்கிறீர்கள்.
7 ஆதலால், நீங்கள் அதிக பாக்கியவான்களாயி-
ருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் மரணத்தை ஒரு-
போதும் ருசி பார்ப்பதில்லை; நான் என் மகிமையி-
லே பரலோக வல்லமைகளோடு வரும்போது, பிதா-
வின் சித்தத்தின்படியே அனைத்துக் காரியங்களும்
நிறைவேறித்தீருமளவும், மனுபுத்திரருக்கு பிதா-
வின் சகல நடப்பிதல்களையும் காணும்படியாக
நீங்கள் ஜீவித்திருப்பீர்கள்.
8 நீங்கள் இனி ஒருபோதும் மரணத்தின் வேதனை-
களை சகித்திருப்பதில்லை. ஆனால் நான் என்
மகிமையிலே வரும்போது, நீங்கள் இமைப்பொழு-
திலே அநித்தியத்திலிருந்து நித்தியத்திற்கு மாற்றப்-
படுவீர்கள்; பின்பு நீங்கள் என் பிதாவினுடைய ரா-
ஜ்யத்திலே ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

# 3 Nephi 28

And it came to pass when Jesus had said these words, he spake unto his disciples, one by one, saying unto them: What is it that ye desire of me, after that I am gone to the Father?

And they all spake, save it were three, saying: We desire that after we have lived unto the age of man, that our ministry, wherein thou hast called us, may have an end, that we may speedily come unto thee in thy kingdom.

And he said unto them: Blessed are ye because ye desired this thing of me; therefore, after that ye are seventy and two years old ye shall come unto me in my kingdom; and with me ye shall find rest.

And when he had spoken unto them, he turned himself unto the three, and said unto them: What will ye that I should do unto you, when I am gone unto the Father?

And they sorrowed in their hearts, for they durst not speak unto him the thing which they desired.

And he said unto them: Behold, I know your thoughts, and ye have desired the thing which John, my beloved, who was with me in my ministry, before that I was lifted up by the Jews, desired of me.

Therefore, more blessed are ye, for ye shall never taste of death; but ye shall live to behold all the doings of the Father unto the children of men, even until all things shall be fulfilled according to the will of the Father, when I shall come in my glory with the powers of heaven.

And ye shall never endure the pains of death; but when I shall come in my glory ye shall be changed in the twinkling of an eye from mortality to immortality; and then shall ye be blessed in the kingdom of my Father.

9 அன்றியும், நீங்கள் உலகத்தினுடைய பாவங்க-
ளுக்காகவே அல்லாமல் வேறு எதற்காகவும், மாம்-
சத்தில் சஞ்சரித்திருக்கும்போது, வேதனையையோ
துக்கத்தையோ அனுபவிப்பதில்லை; இதையெல்-
லாம் நீங்கள் என்னில் வாஞ்சித்த காரியத்தின் நி-
மித்தமே நான் செய்வேன். ஏனெனில் உலகம் நி-
லைத்திருக்கும் வரைக்கும் மனுஷ ஆத்துமாக்க-
ளை நீங்கள் என்னிடம் கொண்டு வரவேண்டு-
மென வாஞ்சித்தீர்களே.

And again, ye shall not have pain while ye shall dwell in the flesh, neither sorrow save it be for the sins of the world; and all this will I do because of the thing which ye have desired of me, for ye have desired that ye might bring the souls of men unto me, while the world shall stand.

10 இதினிமித்தம் நீங்கள் சந்தோஷத்தைப் பூரண-
மாய்ப் பெறுவீர்கள்; நீங்கள் என் பிதாவின் ராஜ்-
யத்தில் வீற்றிருப்பீர்கள்; ஆம், பிதா எனக்கு சந்-
தோஷத்தின் பூரணத்தைக் கொடுத்ததைப் போல-
வே, உங்களுடைய சந்தோஷமும் பூரணமாயிருக்-
கும்; என்னைப் போலவே நீங்களும் இருப்பீர்கள்.
நான் பிதாவைப் போலவே இருக்கிறேன், பிதாவும்
நானும் ஒன்றாயிருக்கிறோம்.

And for this cause ye shall have fulness of joy; and ye shall sit down in the kingdom of my Father; yea, your joy shall be full, even as the Father hath given me fulness of joy; and ye shall be even as I am, and I am even as the Father; and the Father and I are one;

11 பரிசுத்த ஆவியானவர் பிதாவைக் குறித்தும்,
என்னைக் குறித்தும் சாட்சி பகருவார்; பிதா என்-
னிமித்தம் பரிசுத்தாவியானவரை மனுபுத்திரருக்-
குக் கொடுக்கிறார்.

And the Holy Ghost beareth record of the Father and me; and the Father giveth the Holy Ghost unto the children of men, because of me.

12 அந்தப்படியே, இயேசு இவ்வார்த்தைகளைப் பே-
சின பின்பு அவர் தரித்திருக்கவேண்டிய அந்த மூ-
வரையும் தவிர மற்றவர்களை, ஒவ்வொருவராய்த்
தமது விரலால் தொட்ட பின், புறப்பட்டார்.

And it came to pass that when Jesus had spoken these words, he touched every one of them with his finger save it were the three who were to tarry, and then he departed.

13 இதோ, வானங்கள் திறந்தன. அவர்கள் வானத்-
திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, பேச முடியாத கா-
ரியங்களைக் கண்டார்கள் மற்றும் கேட்டார்கள்.

And behold, the heavens were opened, and they were caught up into heaven, and saw and heard unspeakable things.

14 அவர்கள் அவற்றை உச்சரிக்கக்கூடாதென்று
தடைபண்ணப்பட்டிருந்தார்கள்; அவர்கள் கண்ட-
தும் கேட்டதுமானவைகளை உச்சரிக்க வல்லமை-
யும் கொடுக்கப்படவில்லை.

And it was forbidden them that they should utter; neither was it given unto them power that they could utter the things which they saw and heard;

15 அவர்கள் சரீரத்திலிருந்தார்களா அல்லது சரீரத்-
திற்கு புறம்பே இருந்தார்களா என்று அவர்களால்
சொல்ல முடியவில்லை; தேவனுடைய காரியங்க-
ளை அவர்கள் காணும்படியாக, அவர்கள் இந்த
மாம்ச சரீரத்திலிருந்து அழியா நிலைக்கு மாற்றப்-
பட்டு, மறுரூபமாக்கப்பட்டதைப் போல அவர்க-
ளுக்கு தென்பட்டதாம்.

And whether they were in the body or out of the body, they could not tell; for it did seem unto them like a transfiguration of them, that they were changed from this body of flesh into an immortal state, that they could behold the things of God.

16 ஆனால், அந்தப்படியே, அவர்கள் பூமியின் பரப்-
பின் மேல் மறுபடியும் ஊழியம் செய்தார்கள். ஆயி-
னும் அவர்களுக்குப் பரலோகத்தில் கொடுக்கப்-
பட்ட கட்டளையினிமித்தம் அவர்கள் கண்டதும்
கேட்டதுமான காரியங்களைக் குறித்து அவர்கள்
ஊழியம் செய்யவில்லை.

But it came to pass that they did again minister upon the face of the earth; nevertheless they did not minister of the things which they had heard and seen, because of the commandment which was given them in heaven.

17 இப்பொழுது அவர்கள் மறுரூபமாக்கப்பட்ட நா-
ளிலிருந்து அவர்கள் அநித்தியமானவர்களா அல்-
லது நித்தியமானவர்களா என்று நான் அறியேன்;

And now, whether they were mortal or immortal, from the day of their transfiguration, I know not;

18 ஆனால் கொடுக்கப்பட்டுள்ள பதிவேட்டின்படி
நான் அறிந்தது இவ்வளவே, அவர்கள் பூமியின் மீ-
தெங்கும் போய், எல்லா ஜனத்திற்கும் ஊழியம்
செய்து, தங்களுடைய போதனையை விசுவாசித்த
அநேகரை சபையிலே இணையச் செய்து, அவர்க-
ளுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஞானஸ்-
நானம் பெற்ற அனைவரும் பரிசுத்த ஆவியானவ-
ரைப் பெற்றார்கள்.

But this much I know, according to the record which hath been given—they did go forth upon the face of the land, and did minister unto all the people, uniting as many to the church as would believe in their preaching; baptizing them, and as many as were baptized did receive the Holy Ghost.

19 அவர்கள் சபையைச் சாராதவர்களால் சிறையி-
னுள் போடப்பட்டார்கள். சிறைகள் அவர்களைக்
கொள்ள முடியாமல் இரண்டாகப் பிளந்தன.

And they were cast into prison by them who did not belong to the church. And the prisons could not hold them, for they were rent in twain.

20 அவர்கள் பூமியில் ஆழத்திலே போடப்பட்டார்-
கள்; அவர்களோ தேவ வார்த்தையால் பூமியை
அடித்தார்கள். இதினிமித்தம் அவருடைய வல்ல-
மையினால் அவர்கள் பூமியின் ஆழங்களிலிருந்து
விடுவிக்கப்பட்டார்கள்; ஆதலால் அவர்களை
வைத்திருக்க போதுமான துரவுகளை வெட்ட
அவர்களால் கூடாமற் போயிற்று.

And they were cast down into the earth; but they did smite the earth with the word of God, insomuch that by his power they were delivered out of the depths of the earth; and therefore they could not dig pits sufficient to hold them.

21 மூன்றுதரம் அவர்கள் அடுப்பிலே போடப்பட்-
டார்கள். ஒரு கேடும் அவர்களுக்கு நேரவில்லை.

And thrice they were cast into a furnace and received no harm.

22 இரண்டு தரம் வனவிலங்குகளின் கெபிக்குள்
போடப்படார்கள்; இதோ, அவர்களோ பால் குடிக்-
கிற ஆட்டுக்குட்டியுடன் ஒரு சிறு பிள்ளை விளை-
யாடுவதைப் போல மிருகங்களிடம் விளையாடி-
னார்கள். ஒரு கேடும் அவர்களுக்கு நேரிடவில்லை.

And twice were they cast into a den of wild beasts; and behold they did play with the beasts as a child with a suckling lamb, and received no harm.

23 அந்தப்படியே, அவர்கள் நேபியின் ஜனங்கள்
எல்லோருக்குள்ளும் போய் பூமியின் மேலுள்ள
எல்லா ஜனங்களுக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்-
தைப் பிரசங்கித்தார்கள்; அவர்கள் கர்த்தருக்குள்-
ளாக மனம்மாறி கிறிஸ்துவின் சபையோடு
இணைந்தார்கள், இப்படியாக அந்த தலைமுறையி-
னரின் ஜனம் இயேசுவின் வார்த்தையின்படியே
ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

And it came to pass that thus they did go forth among all the people of Nephi, and did preach the gospel of Christ unto all people upon the face of the land; and they were converted unto the Lord, and were united unto the church of Christ, and thus the people of that generation were blessed, according to the word of Jesus.

24 இப்பொழுதும், மார்மனாகிய நான் சிறிது காலத்-
துக்கு இக்காரியங்களைக் குறித்துச் சொல்வதிலி-
ருந்து நிறுத்துகிறேன்.

And now I, Mormon, make an end of speaking concerning these things for a time.

25 இதோ, மரணத்தை ஒருபோதும் ருசிபார்க்காதி-
ருப்பவர்களின் பெயர்களை எழுத இருந்தேன்.
ஆனால் கர்த்தர் அதற்குத் தடைபண்ணினார்; ஆத-
லால் நான் அவைகளை எழுதுகிறதில்லை, ஏனெ-
னில் அவை உலகத்திலிருந்து மறைக்கப்பட்டுள்-
ளன.

Behold, I was about to write the names of those who were never to taste of death, but the Lord forbade; therefore I write them not, for they are hid from the world.

26 ஆனால் இதோ, நான் அவர்களைக் கண்டிருக்கி-
றேன். அவர்கள் எனக்குப் பணிவிடை செய்திருக்-
கிறார்கள்.

But behold, I have seen them, and they have ministered unto me.

27 இதோ, அவர்கள் புறஜாதிகளுக்குள்ளே இருப்-
பார்கள். புறஜாதியார் அவர்களை அறிந்திருக்க-
மாட்டார்கள்.

And behold they will be among the Gentiles, and the Gentiles shall know them not.

28 அவர்கள் யூதர்களுக்குள்ளும் இருப்பார்கள், யூ-
தர்கள் அவர்களை அறிந்திருக்கமாட்டார்கள்.

They will also be among the Jews, and the Jews shall know them not.

29 அவர்கள் இஸ்ரவேலின் சிதறடிக்கப்பட்ட இனத்தார் அனைவருக்கும், சகல தேசத்தாருக்கும், இனத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனங்களுக்கும் ஊழியம் செய்கிறதும், அவர்கள் தங்கள் வாஞ்சை நிறைவேறத்தக்கதாய், தங்களுக்குள்ளிருக்கும் தேவனுடைய உணர்த்தும் வல்லமையினிமித்தம் அவர்களிலிருந்து அநேக ஆத்துமாக்களையும் இயேசுவினிடத்தில் கொண்டுவருவதும் தமது ஞானத்திற்கு ஏற்றது, என கர்த்தர் காணும்போது அது சம்பவிக்கும்.

And it shall come to pass, when the Lord seeth fit in his wisdom that they shall minister unto all the scattered tribes of Israel, and unto all nations, kindreds, tongues and people, and shall bring out of them unto Jesus many souls, that their desire may be fulfilled, and also because of the convincing power of God which is in them.

30 அவர்கள் தேவதூதர்களைப் போன்றவர்கள். அவர்கள் இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் ஜெபித்தால், தங்களுக்கு நல்லவர்களாகப்படுகிற எந்த மனுஷனுக்கும் தங்களையே அவர்கள் காண்பிக்கமுடியும்.

And they are as the angels of God, and if they shall pray unto the Father in the name of Jesus they can show themselves unto whatsoever man it seemeth them good.

31 ஆதலால், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாகவே அனைவரும் நிற்கவேண்டிய அந்தப் பெரிதும் வருகிறதுமான நாளிற்கு முன்பதாகவே பெரிதும் அற்புதமானதுமான கிரியைகள் அவர்களால் நடப்பிக்கப்படும்.

Therefore, great and marvelous works shall be wrought by them, before the great and coming day when all people must surely stand before the judgment-seat of Christ;

32 ஆம், நியாயத்தீர்ப்பின் நாளுக்கு முன்பதாக, புறஜாதியாருக்குள்ளேயும் அவர்களால் பெரிதும், அற்புதமானதுமான கிரியை நடப்பிக்கப்படும்.

Yea even among the Gentiles shall there be a great and marvelous work wrought by them, before that judgment day.

33 கிறிஸ்துவினுடைய எல்லா அற்புதமான கிரியைகளின் விவரத்தைக் கொடுக்கிற அனைத்து வேதங்களையும் நீங்கள் வைத்திருந்தால், கிறிஸ்துவினுடைய வார்த்தைகளின்படியே இவைகள் நிச்சயமாகவே வரும் என்பதை அறியுங்கள்.

And if ye had all the scriptures which give an account of all the marvelous works of Christ, ye would, according to the words of Christ, know that these things must surely come.

34 இயேசுவின் வார்த்தைகளுக்கும், அவர் தெரிந்துகொண்டு அவர்களுக்குள்ளே அனுப்பியவர்களுக்கும் செவிகொடாதிருக்கிறவனுக்கு ஐயோ, ஏனெனில் இயேசுவின் வார்த்தைகளையும் அவர் அனுப்பியவர்களின் வார்த்தைகளையும் ஏற்றுக்கொள்ளாதவன் அவரை ஏற்றுக் கொள்வதில்லை; ஆதலால் அவர் அவர்களைக் கடைசி நாளின்போது ஏற்றுக்கொள்வதில்லை.

And wo be unto him that will not hearken unto the words of Jesus, and also to them whom he hath chosen and sent among them; for whoso receiveth not the words of Jesus and the words of those whom he hath sent receiveth not him; and therefore he will not receive them at the last day;

35 அவர்கள் பிறக்காமல் இருந்திருந்தால், அது அவர்களுக்கு நலமாயிருந்திருக்கும். இரட்சிப்பு வரும்படிக்கு, மனுஷரின் காலால் மிதிக்கப்பட்டு, நிந்திக்கப்பட்ட தேவனின் நியாயத்திற்கு உங்களையே நீங்கள் நீங்கலாக்கிக் கொள்ளலாம், என்று எண்ணுகிறீர்களா?

And it would be better for them if they had not been born. For do ye suppose that ye can get rid of the justice of an offended God, who hath been trampled under feet of men, that thereby salvation might come?

36 இப்பொழுதும் இதோ, கர்த்தர் தெரிந்துகொண்டோரைக் குறித்து நான் பேசின, குறிப்பாக பரலோகங்களுக்குள் எடுத்துக்கொள்ளப்பட்ட மூவரும் அநித்தியத்திலிருந்து சாவற்ற நிலைமைக்கு சுத்திகரிக்கப்பட்டார்களா இல்லையா என்பதை நான் அறியேன்.

And now behold, as I spake concerning those whom the Lord hath chosen, yea, even three who were caught up into the heavens, that I knew not whether they were cleansed from mortality to immortality—

37 ஆனாலும் இதோ, நான் எழுதினது முதல், நான் கர்த்தரிடத்தில் விசாரித்தேன். அவர்களுடைய சரீரங்களில் மாற்றம் வரவேண்டியது அவசியம் என்றும், இல்லாவிடில் அவர்கள் மரணத்தை ருசிபார்ப்பது அவசியமென்றும், அவர் எனக்கு அதை தெரியப்படுத்தினார்.

But behold, since I wrote, I have inquired of the Lord, and he hath made it manifest unto me that there must needs be a change wrought upon their bodies, or else it needs be that they must taste of death;

38 ஆதலால் மரணத்தை அவர்கள் ருசிபார்க்காதிருக்கும்படி அவர்கள் உலகத்தினுடைய பாவங்களுக்கே அல்லாமல் வேறு எதற்காகவும் வலியையோ, துக்கத்தையோ அனுபவிக்காமலிருக்க அவர்களுடைய சரீரங்களில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

Therefore, that they might not taste of death there was a change wrought upon their bodies, that they might not suffer pain nor sorrow save it were for the sins of the world.

39 இந்த மாற்றம் கடைசிநாளில் ஏற்படும் மாற்றத்திற்குச் சமமானதல்ல; ஆனால் சாத்தான் அவர்கள் மேல் வல்லமை எதுவும் கொள்ளாமல், அவர்களைச் சோதிக்காதவாறு ஓர் மாற்றம் அவர்கள்மேல் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் பரிசுத்தராயிருக்கும்படிக்கு, பூமியின் வல்லமைகள் அவர்களைத் தடுக்காதபடி, அவர்கள் மாம்சத்திலே சுத்திகரிக்கப்பட்டார்கள்.

Now this change was not equal to that which shall take place at the last day; but there was a change wrought upon them, insomuch that Satan could have no power over them, that he could not tempt them; and they were sanctified in the flesh, that they were holy, and that the powers of the earth could not hold them.

40 இந்த நிலையிலே அவர்கள் கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின் நாள்வரைக்கும் நிலைத்திருக்க வேண்டும். அந்நாளிலே அவர்கள் பெரிதான மாற்றத்தைப் பெற்று, இனி ஒருபோதும் வெளியே போகாமல், பரலோகத்தில் நித்தியமாய் தேவனோடு வாசம்பண்ண, பிதாவின் ராஜ்யத்தினுள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

And in this state they were to remain until the judgment day of Christ; and at that day they were to receive a greater change, and to be received into the kingdom of the Father to go no more out, but to dwell with God eternally in the heavens.

# 3 நேபி 29

1 இப்பொழுதும் இதோ, கர்த்தர் புறஜாதிகளுக்குத் தம்முடைய வார்த்தையின்படியே இவ்வார்த்தைகள் வரும் என்று தம்முடைய ஞானத்தில் சரியென்று காண்கிறபோது, இஸ்ரவேல் புத்திரர் அவர்களுடைய சுதந்திர பூமிகளில் மீண்டும் சேர்க்கப்படுவார்கள் என்பதைக் குறித்து, பிதாவானவர் அவர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கை, ஏற்கனவே நிறைவேறத் துவங்கியது, என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள், என நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

2 பரிசுத்த தீர்க்கதரிசிகளால் பேசப்பட்ட கர்த்தருடைய வார்த்தைகள் யாவும் நிறைவேறும் என்றும் நீங்கள் அறிவீர்கள்; கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தம்முடைய வருகையைத் தாமதிக்கிறார் என்று நீங்கள் சொல்லவேண்டாம்.

3 பேசப்பட்ட வார்த்தைகள் வீணென்று நீங்கள் உங்கள் இருதயங்களில் எண்ணிக் கொள்ளவும் வேண்டாம். ஏனெனில் இதோ, கர்த்தர் இஸ்ரவேலின் வீட்டாராகிய தம்முடைய ஜனத்தோடு செய்துகொண்ட தம்முடைய உடன்படிக்கையை நினைவுகூருவார்.

4 இந்த வார்த்தைகள் உங்களுக்குள்ளே வருகிறதை நீங்கள் காணும்போது, நீங்கள் இனி ஒருபோதும் கர்த்தருடைய செய்கைகளை நிந்திக்க வேண்டியதில்லை. ஏனெனில் அவருடைய நியாயத்தின் பட்டயம் அவருடைய வலது கரத்திலிருக்கிறது. இதோ, அந்த நாளில், நீங்கள் அவருடைய செய்கைகளை நிந்தித்தால், அது உங்களை சீக்கிரமாய் மேற்கொள்ளும்படி அவர் செய்திடுவார்.

5 கர்த்தருடைய செய்கைகளை நிந்திக்கிறவனுக்கு ஐயோ; ஆம், கிறிஸ்துவையும் அவருடைய கிரியைகளையும் மறுதலிப்பவனுக்கு ஐயோ!

6 ஆம், கர்த்தருடைய வெளிப்படுத்தல்களை மறுதலித்து, கர்த்தர் வெளிப்படுத்தலினாலாவது, தீர்க்கதரிசனத்தினாலாவது, வரங்களினாலாவது, பாஷைகளினாலாவது, சுகப்படுத்தலினாலாவது, அல்லது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலாவது இனி ஒருபோதும் கிரியை செய்வதில்லை என்று சொல்பவனுக்கு ஐயோ!

7 ஆம், இயேசு கிறிஸ்துவினால் எந்த ஒரு அற்புதத்தையும் செய்யமுடியாதென்று அந்நாளிலே லாபத்திற்கென்று சொல்லுகிறவனுக்கு ஐயோ. இப்படிச் செய்கிறவன் கேட்டின் மகனைப் போலாவான். கிறிஸ்துவின் வார்த்தையின்படி அப்படிப்பட்டவனுக்கு இரக்கமே கிடையாது.

# 3 Nephi 29

And now behold, I say unto you that when the Lord shall see fit, in his wisdom, that these sayings shall come unto the Gentiles according to his word, then ye may know that the covenant which the Father hath made with the children of Israel, concerning their restoration to the lands of their inheritance, is already beginning to be fulfilled.

And ye may know that the words of the Lord, which have been spoken by the holy prophets, shall all be fulfilled; and ye need not say that the Lord delays his coming unto the children of Israel.

And ye need not imagine in your hearts that the words which have been spoken are vain, for behold, the Lord will remember his covenant which he hath made unto his people of the house of Israel.

And when ye shall see these sayings coming forth among you, then ye need not any longer spurn at the doings of the Lord, for the sword of his justice is in his right hand; and behold, at that day, if ye shall spurn at his doings he will cause that it shall soon overtake you.

Wo unto him that spurneth at the doings of the Lord; yea, wo unto him that shall deny the Christ and his works!

Yea, wo unto him that shall deny the revelations of the Lord, and that shall say the Lord no longer worketh by revelation, or by prophecy, or by gifts, or by tongues, or by healings, or by the power of the Holy Ghost!

Yea, and wo unto him that shall say at that day, to get gain, that there can be no miracle wrought by Jesus Christ; for he that doeth this shall become like unto the son of perdition, for whom there was no mercy, according to the word of Christ!

8 ஆம், இனியும் நீங்கள் யூதர்களையும், இஸ்ரவேல்
வீட்டாரின் மீதியானோர் எவரையும் கோபிக்கவோ,
நிந்திக்கவோ, கேலிப்பொருளாக்கவோ வேண்டாம்;
ஏனெனில் இதோ, கர்த்தர் அவர்களுடனான தமது
உடன்படிக்கையை நினைவுகூருகிறார். அவர்
ஆணையிட்டபடியே அவர்களுக்குச் செய்வார்.
9 ஆதலால் கர்த்தர் இஸ்ரவேலின் வீட்டாரிடத்தில்
செய்த உடன்படிக்கையை நிறைவேற்றும்படிக்கு,
நியாயந்தீர்க்காமல் இருக்கும்படி அவருடைய வல-
து கரத்தை இடது புறமாக உங்களால் திருப்பக்கூ-
டும் என்று நீங்கள் நினையாதிருங்கள்.

Yea, and ye need not any longer hiss, nor spurn, nor make game of the Jews, nor any of the remnant of the house of Israel; for behold, the Lord remembereth his covenant unto them, and he will do unto them according to that which he hath sworn.

Therefore ye need not suppose that ye can turn the right hand of the Lord unto the left, that he may not execute judgment unto the fulfilling of the covenant which he hath made unto the house of Israel.

# 3 நேபி 30

1 புறஜாதியாரே, செவிகொடுங்கள். நான் உங்களைக்
குறித்து பேசவேண்டுமென்று எனக்குக் கட்டளை-
யிட்டிருக்கிற, ஜீவிக்கிற தேவனுடைய குமாரனா-
கிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கே-
ளுங்கள். ஏனெனில் இதோ, நான் எவ்விதமாய் எழு-
தவேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறதாவது:
2 சகல புறஜாதியாரே, உங்கள் துன்மார்க்க வழிக-
ளிலிருந்து திரும்புங்கள், நீங்கள் உங்கள் பாவங்க-
ளுக்கான மன்னிப்பைப் பெற்று, பரிசுத்த ஆவியா-
னவரால் நிரப்பப்படும்படிக்கும், இஸ்ரவேலின்
வீட்டாராகிய என் ஜனத்தாரோடு நீங்கள் எண்ணப்-
படும் பொருட்டும், உங்களுடைய பொல்லாத கிரி-
யைகளிலிருந்தும், உங்களுடைய பொய்கள், மற்-
றும் வஞ்சனைகளிலிருந்தும், உங்களுடைய வே-
சித்தனங்களிலிருந்தும், உங்களுடைய இரகசிய
அருவருப்புகளிலிருந்தும், உங்களுடைய விக்கிரக
ஆராதனைகளிலிருந்தும், உங்களுடைய கொலை-
களிலிருந்தும், உங்களுடைய ஆசாரிய வஞ்சகங்க-
ளிலிருந்தும், உங்களுடைய பொறாமைகளிலிருந்-
தும், உங்களுடைய பிணக்குகளிலிருந்தும், உங்க-
ளுடைய எல்லா துன்மார்க்கங்களிலிருந்தும், அரு-
வருப்புகளிலிருந்தும், மனந்திரும்பி, என்னிடத்-
தில் வந்து, என் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்
கொள்ளுங்கள்.

# 3 Nephi 30

Hearken, O ye Gentiles, and hear the words of Jesus Christ, the Son of the living God, which he hath commanded me that I should speak concerning you, for, behold he commandeth me that I should write, saying:

Turn, all ye Gentiles, from your wicked ways; and repent of your evil doings, of your lyings and deceivings, and of your whoredoms, and of your secret abominations, and your idolatries, and of your murders, and your priestcrafts, and your envyings, and your strifes, and from all your wickedness and abominations, and come unto me, and be baptized in my name, that ye may receive a remission of your sins, and be filled with the Holy Ghost, that ye may be numbered with my people who are of the house of Israel.

# நான்காம் நேபி

## இயேசு கிறிஸ்துவின் சீஷர்களுள் ஒருவனான நேபியின் குமாரனா-கிய

## நேபியின் புஸ்தகம்

*அவனுடைய பதிவேட்டின்படியே, நேபியின் ஜனங்-களைப்பற்றிய விவரம்.*

1 அந்தப்படியே, முப்பத்து நான்காம் வருஷமும், முப்-
பத்து ஐந்தாம் வருஷமும் கடந்து போயின, இதோ,
இயேசுவின் சீஷர்கள் சுற்றிலுமுள்ள தேசங்கள்
அனைத்திலும் கிறிஸ்துவின் சபையை ஸ்தாபித்-
தார்கள். அவர்களிடத்தில் வந்த அநேகர், தங்கள்
பாவங்களிலிருந்து உண்மையாகவே மனந்திரும்-
பி, இயேசுவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்-
றுக்கொண்டார்கள்; அவர்கள் பரிசுத்த ஆவியான-
வரையும் பெற்றுக் கொண்டார்கள்.
2 அந்தப்படியே, முப்பத்து ஆறாம் வருஷத்தில் நே-
பியரும், லாமானியருமான தேசத்தின் மீதிருந்த
ஜனங்கள் யாவரும் கர்த்தருக்குள்ளாக மனம்மாற்-
றப்பட்டார்கள். அவர்களுக்குள் எந்த பிணக்குக-
ளும், பிணக்குகளும் இல்லை. ஒவ்வொரு மனு-
ஷனும் மற்றவனிடம் நியாயமாய் நடந்துகொண்-
டான்.
3 அவர்களுக்குள் எல்லாமும் பொதுவாயிருந்தன;
ஆதலால் அவர்களுக்குள் ஐஸ்வரியவான்களும்
இல்லை, தரித்திரருமில்லை, அடிமைப்பட்டவர்க-
ளும் இல்லை, சுயாதீனர்களும் இல்லை. அவர்கள்
யாவரும் சுயாதீனர்களாக்கப்பட்டு, பரலோக
ஈவைப் புசிக்கிறவர்களாக இருந்தார்கள்.
4 அந்தப்படியே, முப்பத்து ஏழாம் வருஷமும் கடந்-
து போயிற்று, தேசத்தில் தொடர்ந்து சமாதானம் நி-
லவியது.
5 இயேசுவின் சீஷர்களால் அங்கே பெரிய அற்புத-
மான கிரியைகள் நடப்பிக்கப்பட்டன. அவர்கள்
வியாதியஸ்தர்களை சுகப்படுத்தினார்கள். மரித்-
தோரை எழுப்பினார்கள், முடவரை நடக்கச் செய்-
தார்கள், குருடர் தங்கள் பார்வைகளைப் பெறச்
செய்தார்கள். செவிடரைக் காது கேட்கச் செய்தார்-
கள். எல்லாவிதமான அற்புதங்களையும் அவர்கள்
மனுபுத்திரர் மத்தியில் நடப்பித்தார்கள். இயேசு-
வின் நாமத்தினாலேயன்றி வேறு ஒன்றினாலும்
அவர்கள் அற்புதங்களைச் செய்யவில்லை.

# Fourth Nephi

## The Book of Nephi

## Who Is the Son of Nephi—One of the Disciples of Jesus Christ

*An account of the people of Nephi, according to his record.*

And it came to pass that the thirty and fourth year passed away, and also the thirty and fifth, and behold the disciples of Jesus had formed a church of Christ in all the lands round about. And as many as did come unto them, and did truly repent of their sins, were baptized in the name of Jesus; and they did also receive the Holy Ghost.

And it came to pass in the thirty and sixth year, the people were all converted unto the Lord, upon all the face of the land, both Nephites and Lamanites, and there were no contentions and disputations among them, and every man did deal justly one with another.

And they had all things common among them; therefore there were not rich and poor, bond and free, but they were all made free, and partakers of the heavenly gift.

And it came to pass that the thirty and seventh year passed away also, and there still continued to be peace in the land.

And there were great and marvelous works wrought by the disciples of Jesus, insomuch that they did heal the sick, and raise the dead, and cause the lame to walk, and the blind to receive their sight, and the deaf to hear; and all manner of miracles did they work among the children of men; and in nothing did they work miracles save it were in the name of Jesus.

6 இப்படியே முப்பத்து எட்டாம் வருஷமும் முப்பத்து ஒன்பதாம் வருஷமும், நாற்பத்தி ஒன்றாம் வருஷமும், நாற்பத்தி இரண்டாம் வருஷமும், ஆம், நாற்பத்தி ஒன்பதாம் வருஷங்கள் வரைக்குமாய் கடந்து போயின. ஐம்பத்தி ஒன்றாம், ஐம்பத்தி இரண்டாம் வருஷங்களும், ஆம், ஐம்பத்தி ஒன்பதாம் வருஷங்கள் வரைக்குமாய் கடந்து போயின.

And thus did the thirty and eighth year pass away, and also the thirty and ninth, and forty and first, and the forty and second, yea, even until forty and nine years had passed away, and also the fifty and first, and the fifty and second; yea, and even until fifty and nine years had passed away.

7 கர்த்தர் அவர்களை தேசத்தில் மிகுதியாய் விருத்தியடையப்பண்ணினார்; ஆம், எரிக்கப்பட்ட பட்டணங்கள் இருந்த இடத்திலேயே அவர்கள் மறுபடியும் பட்டணங்களைக் கட்டினார்கள்.

And the Lord did prosper them exceedingly in the land; yea, insomuch that they did build cities again where there had been cities burned.

8 ஆம், அந்த பெரும் பட்டணமாகிய சாரகெம்லா மறுபடியும் கட்டப்படப் பண்ணினர்.

Yea, even that great city Zarahemla did they cause to be built again.

9 ஆனால் அநேக பட்டணங்கள் மூழ்கிப்போய், அவைகள் இருந்த இடங்களிலேயே தண்ணீர்கள் வந்ததால், இப்பட்டணங்கள் புதுப்பிக்கப்பட முடியவில்லை.

But there were many cities which had been sunk, and waters came up in the stead thereof; therefore these cities could not be renewed.

10 இப்பொழுதும் இதோ, அந்தப்படியே, நேபியின் ஜனங்கள் பெலவான்களாக வளர்ந்து, மிகவும் சீக்கிரமாய்ப் பெருகி, மிகவும் அழகான, வசீகரமுள்ள ஜனமானார்கள்.

And now, behold, it came to pass that the people of Nephi did wax strong, and did multiply exceedingly fast, and became an exceedingly fair and delightsome people.

11 அவர்கள் விவாகம் பண்ணினார்கள். விவாகம் செய்து கொடுக்கப்பட்டார்கள். அவர்களுக்கு கர்த்தர் செய்த திரளான வாக்குத்தத்தங்களின்படியே ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

And they were married, and given in marriage, and were blessed according to the multitude of the promises which the Lord had made unto them.

12 அவர்கள் இதற்குமேல் மோசேயின் நியாயப்பிரமாணத்தினுடைய சடங்குகளின்படியேயும், நியமங்களின்படியேயும் நடவாமல், உபவாசத்திலும் ஜெபத்திலும் தரித்திருந்து, ஜெபிக்கவும், கர்த்தருடைய வார்த்தையைக் கேட்கவும் அடிக்கடி ஏகமாய்க் கூடி, அவர்கள் தங்கள் கர்த்தரும் தேவனுமானவரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட கட்டளைகளின்படியே நடந்தார்கள்.

And they did not walk any more after the performances and ordinances of the law of Moses; but they did walk after the commandments which they had received from their Lord and their God, continuing in fasting and prayer, and in meeting together oft both to pray and to hear the word of the Lord.

13 அந்தப்படியே, தேசம் எல்லாவற்றிலுமிருந்த சகல ஜனங்களுக்குள்ளும் எந்த பிணக்கும் இல்லை; ஆனால் இயேசுவின் சீஷர்களுக்குள்ளே பெரும் அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டன.

And it came to pass that there was no contention among all the people, in all the land; but there were mighty miracles wrought among the disciples of Jesus.

14 அந்தப்படியே, எழுபத்தி ஒன்றாம் வருஷமும், எழுபத்தி இரண்டாம் வருஷமும், இப்படியே எழுபத்தி ஒன்பதாம் வருஷம் வரைக்குமாய் கடந்து போயிற்று, ஆம், நூறு வருஷங்கள் கடந்து போயிற்று; இயேசு தெரிந்துகொண்ட சீஷர்களில் தரித்திருக்கவேண்டுமென்ற அந்த மூவரைத் தவிர, மற்ற அனைவரும் தேவ பரதீசுக்குப் போனார்கள்; அவர்களுடைய ஸ்தானங்களில் மற்ற சீஷர்கள் நியமிக்கப்பட்டார்கள்; அந்த தலைமுறையினர் அநேகரும் கடந்து போனார்கள்.

And it came to pass that the seventy and first year passed away, and also the seventy and second year, yea, and in fine, till the seventy and ninth year had passed away; yea, even an hundred years had passed away, and the disciples of Jesus, whom he had chosen, had all gone to the paradise of God, save it were the three who should tarry; and there were other disciples ordained in their stead; and also many of that generation had passed away.

15 அந்தப்படியே, ஜனங்களுடைய இருதயங்களில் வாசமாயிருந்த தேவ அன்பினிமித்தம் தேசத்தில் எந்த பிணக்கும் இல்லாமலிருந்தது.

And it came to pass that there was no contention in the land, because of the love of God which did dwell in the hearts of the people.

16 அங்கு பொறாமைகளோ, பிணக்குகளோ, குழப்-
பங்களோ, வேசித்தனங்களோ, பொய்யுரைகளோ,
கொலைகளோ, எந்த விதமான காமவிகாரமோ
இருக்கவில்லை. தேவ கரத்தால் சிருஷ்டிக்கப்பட்ட
ஜனங்கள் எல்லாருக்குள்ளும், இவர்களைக் காட்-
டிலும் மிகுந்த மகிழ்ச்சியான ஜனம் நிச்சயமாய்
இருந்திருக்க முடியாது.

And there were no envyings, nor strifes, nor tumults, nor whoredoms, nor lyings, nor murders, nor any manner of lasciviousness; and surely there could not be a happier people among all the people who had been created by the hand of God.

17 அங்கே திருடர்களோ, கொலைகாரர்களோ, லா-
மானியரோ அல்லது எந்தப் பிரிவும் இல்லை, அவர்-
கள் கிறிஸ்துவினுடைய பிள்ளைகளாய் ஒன்றா-
யும், தேவ ராஜ்யத்திற்கு சுதந்தரவாளிகளாயும்
இருந்தார்கள்.

There were no robbers, nor murderers, neither were there Lamanites, nor any manner of -ites; but they were in one, the children of Christ, and heirs to the kingdom of God.

18 அவர்கள் எவ்வளவு பாக்கியவான்கள்! ஏனெ-
னில் கர்த்தர் அவர்களை அவர்களுடைய எல்லா
நடவடிக்கைகளிலும் ஆசீர்வதித்தார்; ஆம், நூற்-
றிப்பத்து வருஷங்கள் கடந்துபோகுமட்டும் அவர்-
கள் ஆசீர்வதிக்கப்பட்டு விருத்தியடைந்தார்கள்;
கிறிஸ்து தொடங்கி முதல் தலைமுறை கடந்துபோ-
யிற்று. தேசம் முழுவதிலும் எந்தப் பிணக்குமில்-
லை.

And how blessed were they! For the Lord did bless them in all their doings; yea, even they were blessed and prospered until an hundred and ten years had passed away; and the first generation from Christ had passed away, and there was no contention in all the land.

19 அந்தப்படியே, இந்தக் கடைசி பதிவேட்டை வைத்-
திருந்த அந்த நேபி மரித்துப் போனான் (அவன் நே-
பியின் பதிவேடுகள் மேல் அதை வைத்திருந்தான்)
அவனுக்குப் பதிலாக அவன் குமாரன் ஆமோஸ்
அதை வைத்திருந்தான்; அவனும் அதை நேபியின்
தகடுகளின்மேல் வைத்திருந்தான்.

And it came to pass that Nephi, he that kept this last record, (and he kept it upon the plates of Nephi) died, and his son Amos kept it in his stead; and he kept it upon the plates of Nephi also.

20 அவன் அதை எண்பத்தி நான்கு வருஷங்கள்
வைத்திருந்தான், ஜனங்களில் சிறுபகுதியினர்
சபையிலிருந்து கலகம்பண்ணி, தங்கள் மேல் லா-
மானியரின் பெயரை எடுத்துக்கொண்டதைத்
தவிர, தேசத்தில் இன்னும் சமாதானம் நிலவியது;
அங்கே தேசத்தில் மறுபடியும் லாமானியர் இருக்கத்
துவங்கினார்கள்.

And he kept it eighty and four years, and there was still peace in the land, save it were a small part of the people who had revolted from the church and taken upon them the name of Lamanites; therefore there began to be Lamanites again in the land.

21 அந்தப்படியே, ஆமோஸும் மரித்துப் போனான்,
(அது கிறிஸ்துவின் வருகையிலிருந்து நூற்றி
தொண்ணூற்று நான்காம் வருஷமாயிருந்தது)
அவன் குமாரனாகிய ஆமோஸ் அவனுக்குப் பதி-
லாக பதிவேடுகளை வைத்திருந்தான் அவனும்
அதை நேபியின் தகடுகளின்மேல் வைத்திருந்-
தான்; இந்தப் புஸ்தகமாகிய நேபியின் புஸ்தகத்தில்
அதுவும் எழுதப்பட்டிருக்கிறது.

And it came to pass that Amos died also, (and it was an hundred and ninety and four years from the coming of Christ) and his son Amos kept the record in his stead; and he also kept it upon the plates of Nephi; and it was also written in the book of Nephi, which is this book.

22 அந்தப்படியே, இருநூறு வருஷங்கள் கடந்து போ-
யிற்று; சிலரைத் தவிர மற்ற அனைத்து இரண்டாம்
தலைமுறையினரும் கடந்து போயினர்.

And it came to pass that two hundred years had passed away; and the second generation had all passed away save it were a few.

23 இப்பொழுதும் மார்மனாகிய நான், தேசத்தின்
மேல் எங்கும் பரந்திருக்கும்படியாக ஜனங்கள் பெ-
ருகினார்களென்றும், அவர்கள் கிறிஸ்துவில்
கொண்டிருந்த வளர்ச்சியினிமித்தம், மிகுந்த ஐஸ்-
வரியவான்களானார்களென்றும் நீங்கள் அறிந்தி-
ருக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

And now I, Mormon, would that ye should know that the people had multiplied, insomuch that they were spread upon all the face of the land, and that they had become exceedingly rich, because of their prosperity in Christ.

24 இப்பொழுதும் இந்த இருநூற்றி ஒன்றாம் வரு-
ஷத்தில், அவர்களுள் சிலர் விலையுயர்ந்த வஸ்தி-
ரங்களையும், எல்லாவிதமான அழகிய முத்துக்க-
ளையும், உலகத்தின் வசீகர பொருட்களையும்
உடுத்துவது போன்ற பெருமையானவைகளில்
தங்களை உயர்த்தத் துவங்கினார்கள்.

And now, in this two hundred and first year there began to be among them those who were lifted up in pride, such as the wearing of costly apparel, and all manner of fine pearls, and of the fine things of the world.

25 அந்தச் சமயம் தொடங்கி அவர்கள் தங்கள் சா-
மான்களையும், பொருட்களையும் பொதுவான-
தாய் பாவிக்கவில்லை.

And from that time forth they did have their goods and their substance no more common among them.

26 அவர்கள் வகுப்பு வாரியாகப் பிரிக்கப்படத் து-
வங்கினார்கள்; லாபம்பெற அவர்கள் தங்களுக்-
கென்று சபைகளைக் கட்டத் துவங்கினார்கள், கி-
றிஸ்துவின் மெய்யான சபையை மறுதலிக்கத் து-
வங்கினார்கள்.

And they began to be divided into classes; and they began to build up churches unto themselves to get gain, and began to deny the true church of Christ.

27 அந்தப்படியே, இருநூற்றி பத்து வருஷங்கள்
கடந்து போனபோது, அங்கே தேசத்தில் அநேக
சபைகளிருந்தன; ஆம், கிறிஸ்துவை அறிந்திருப்-
பதாக முழக்கமிட்ட அநேக சபைகள் அங்கே இருந்-
தன. இருப்பினும் அவர்கள் எல்லா வித துன்மார்க்-
கத்தையும் பெற்றுக்கொண்டு, அவர்களது தகுதி-
யின்மையினிமித்தம் தடைசெய்யப்பட்டவனுக்கு
பரிசுத்தமானதைக் கொடுக்குமளவுக்கு சுவிசே-
ஷத்தின் பெரும் பகுதிகளை மறுதலித்தார்கள்.

And it came to pass that when two hundred and ten years had passed away there were many churches in the land; yea, there were many churches which professed to know the Christ, and yet they did deny the more parts of his gospel, insomuch that they did receive all manner of wickedness, and did administer that which was sacred unto him to whom it had been forbidden because of unworthiness.

28 அக்கிரமத்தினிமித்தமும், அவர்களுடைய இருத-
யங்களைப் பிடித்திருந்த சாத்தானின் வல்லமையி-
னிமித்தமும் இந்தச் சபை மிகுதியாய் விருத்திய-
டைந்தது.

And this church did multiply exceedingly because of iniquity, and because of the power of Satan who did get hold upon their hearts.

29 மறுபடியும் கிறிஸ்துவை மறுதலித்த மற்றொரு
சபையும் அங்கே இருந்தது; அவர்கள் கிறிஸ்து-
வின் மெய்யான சபையோரை அவர்களுடைய
தாழ்மையினிமித்தமும், கிறிஸ்துவிலிருந்த அவர்-
களுடைய நம்பிக்கையினிமித்தமும் துன்புறுத்தி-
னார்கள்; அவர்கள் மத்தியில் நடந்த அநேக அற்பு-
தங்களினிமித்தமும் அவர்களை நிந்தித்தார்கள்.

And again, there was another church which denied the Christ; and they did persecute the true church of Christ, because of their humility and their belief in Christ; and they did despise them because of the many miracles which were wrought among them.

30 அவர்களோடு தங்கியிருந்த இயேசுவின் சீஷர்க-
ளின்மேல் பலத்தையும் அதிகாரத்தையும் பிரயோ-
கித்து அவர்களை சிறையினுள் போட்டார்கள்,
ஆனால் அவர்களுக்குள் இருந்த தேவ வார்த்தை-
யின் வல்லமையினாலே, சிறைச்சாலைகள் இரண்-
டாகப் பிளந்தன, அவர்களுக்குள் பலத்த அற்புதங்-
களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

Therefore they did exercise power and authority over the disciples of Jesus who did tarry with them, and they did cast them into prison; but by the power of the word of God, which was in them, the prisons were rent in twain, and they went forth doing mighty miracles among them.

31 இந்த அற்புதங்கள் எல்லாம் சம்பவித்தும் ஜனங்-
கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி, இயே-
சுவை அவருடைய வார்த்தையின்படியே கொலை
செய்ய யூதர்கள் எருசலேமில் வகை தேடினது போ-
லவே, இவர்களையும் கொலை செய்ய வகை தேடி-
னார்கள்.

Nevertheless, and notwithstanding all these miracles, the people did harden their hearts, and did seek to kill them, even as the Jews at Jerusalem sought to kill Jesus, according to his word.

32 அவர்கள் அவர்களை அக்கினி சூளைகளிலே
போட்டார்கள். அவர்கள் எந்தக் கேடும் அடையா-
மல் வெளியேறினார்கள்.

And they did cast them into furnaces of fire, and they came forth receiving no harm.

33 அவர்கள் அவர்களை காட்டு மிருகங்களின் கெ-
பிகளினுள்ளும் போட்டார்கள். சிறுபிள்ளை ஆட்-
டுக்குட்டியோடு விளையாடுவதைப் போல அவர்-
கள் காட்டு மிருகங்களிடம் விளையாடினார்கள்;
அவர்கள் அவைகளிடமிருந்து எந்தக் கேடும்
அடையாமல் வெளிவந்தார்கள்.

And they also cast them into dens of wild beasts, and they did play with the wild beasts even as a child with a lamb; and they did come forth from among them, receiving no harm.

34 ஆயினும் ஜனங்கள் தங்கள் இருதயங்களைக்
கடினப்படுத்தினார்கள். ஏனெனில் அவர்கள்
அநேக சபைகளைக் கட்டும்படியாகவும், எல்லாவி-
தமான அக்கிரமங்களைச் செய்யும்படியாகவும்,
அநேக ஆசாரியர்களாலும், கள்ளத்தீர்க்கதரிசிக-
ளாலும் வழிநடத்தப்பட்டார்கள். அவர்கள் இயேசு-
வின் ஜனங்களை அடித்தார்கள்; ஆனால் இயேசு-
வின் ஜனம் அவர்களைத் திரும்ப அடிக்கவில்லை.
இப்படியாக அவர்கள் வருஷா வருஷம் இருநூற்றி
முப்பது வருஷங்கள் கடந்துபோகுமட்டுமாய் அவி-
சுவாசத்திலும், துன்மார்க்கத்திலும் படிப்படியாக
நலிந்தார்கள்.

Nevertheless, the people did harden their hearts, for they were led by many priests and false prophets to build up many churches, and to do all manner of iniquity. And they did smite upon the people of Jesus; but the people of Jesus did not smite again. And thus they did dwindle in unbelief and wickedness, from year to year, even until two hundred and thirty years had passed away.

35 இப்பொழுதும், அந்தப்படியே, இந்த வருஷத்தில்,
ஆம், இருநூற்றி முப்பத்தோராம் வருஷத்தில்
ஜனங்களுக்குள்ளே ஒரு பெரிய பிரிவினை உண்-
டாயிற்று.

And now it came to pass in this year, yea, in the two hundred and thirty and first year, there was a great division among the people.

36 அந்தப்படியே, இந்த வருஷத்தில், நேபியர்கள்
என்று அழைக்கப்பட்ட, கிறிஸ்துவில் மெய்யான
விசுவாசம் கொண்ட ஜனமொன்று எழுந்தது;
அவர்களுள் யாக்கோபினர், யோசேப்பினர் மற்றும்
சோரமியர் என்று லாமானியர்களால் அழைக்கப்-
பட்டவர்களும் இருந்தார்கள்.

And it came to pass that in this year there arose a people who were called the Nephites, and they were true believers in Christ; and among them there were those who were called by the Lamanites—Jacobites, and Josephites, and Zoramites;

37 (தரித்திருக்கவேண்டிய இயேசுவின் மூன்று சீஷர்-
கள் உள்ளிட்ட) கிறிஸ்துவில் மெய்யான விசுவாசி-
களும், கிறிஸ்துவை மெய்யாகவே தொழுதுகொள்-
பவர்களும், நேபியரென்றும், யாக்கோபினரென்-
றும், யோசேப்பினரென்றும், சோரமியரென்றும்
அழைக்கப்பட்டார்கள்.

Therefore the true believers in Christ, and the true worshipers of Christ, (among whom were the three disciples of Jesus who should tarry) were called Nephites, and Jacobites, and Josephites, and Zoramites.

38 அந்தப்படியே, சுவிசேஷத்தை மறுதலித்தவர்கள்
லாமானியரென்றும், லெமுவேலரென்றும், இஸ்ம-
வேலரென்றும் அழைக்கப்பட்டார்கள்; அவர்கள்
அவிசுவாசத்தில் படிப்படியாக நலியாமல், கிறிஸ்-
துவின் சுவிசேஷத்தை எதிர்த்து வேண்டுமென்றே
கலகம் பண்ணினார்கள், அவர்களின் பிதாக்கள்
ஆரம்பத்திலிருந்தே நலிந்திருந்ததைப் போல, தங்-
கள் பிள்ளைகளும் விசுவாசிக்கக் கூடாதென்று
போதித்து வந்தார்கள்.

And it came to pass that they who rejected the gospel were called Lamanites, and Lemuelites, and Ishmaelites; and they did not dwindle in unbelief, but they did wilfully rebel against the gospel of Christ; and they did teach their children that they should not believe, even as their fathers, from the beginning, did dwindle.

39 ஆரம்பத்தில் இருந்ததைப் போல அவர்களு-
டைய பிதாக்களின் துன்மார்க்கத்தினாலும், அரு-
வருப்பினாலுமே அது சம்பவித்தது. ஆரம்பத்திலி-
ருந்தே லாமானியர் நேபியின் பிள்ளைகளை வெ-
றுக்கப் போதிக்கப்பட்டதைப் போலவே, இவர்க-
ளும் தேவ பிள்ளைகளை வெறுக்கப் போதிக்கப்-
பட்டார்கள்.

And it was because of the wickedness and abomination of their fathers, even as it was in the beginning. And they were taught to hate the children of God, even as the Lamanites were taught to hate the children of Nephi from the beginning.

40 அந்தப்படியே, இருநூற்றி நாற்பத்தி நான்கு வரு-
ஷங்கள் கடந்து போயிற்று. ஜனங்களின் விவகா-
ரங்களும் இப்படி இருந்தது. ஜனங்களில் அதிக
துன்மார்க்கரின் ஒரு பகுதி, பலம் பொருந்தி, தேவ-
ஜனத்தைக் காட்டிலும் அதிக எண்ணிக்கையுள்ள-
வர்களானார்கள்.

41 அவர்கள் தங்களுக்கென்று சபைகளைக் கட்ட-
வும், அவைகளை எல்லாவித விலையுயர்ந்த பொ-
ருட்களால் அலங்கரிக்கவும் தொடர்ந்து ஈடுபட்-
டார்கள். இப்படியாக இருநூற்று ஐம்பது வருஷங்க-
ளும், இருநூற்று அறுபது வருஷங்களும் கடந்து
போயின.

42 அந்தப்படியே, ஜனங்களில் துன்மார்க்கப் பிரிவி-
னர் மறுபடியும் காதியாந்தனின் இரகசிய ஒப்பந்-
தங்களையும், சங்கங்களையும் ஸ்தாபிக்கத் துவங்-
கினார்கள்.

43 நேபியின் ஜனம் என்று அழைக்கப்பட்ட ஜனத்-
தார் தங்களின் மிகுந்த சம்பத்துகளினிமித்தம், தங்-
கள் இருதயங்களிலே பெருமைகொண்டு, லாமா-
னியரான தங்கள் சகோதரரைப் போலவே வீணரா-
னார்கள்.

44 இந்த சமயம் முதற்கொண்டு சீஷர்கள் உலகத்தின்
பாவங்களுக்காக துக்கப்பட ஆரம்பித்தார்கள்.

45 அந்தப்படியே, முன்னூறு வருஷங்கள் கடந்து
போனபின்பு, நேபியரும் லாமானியரும் ஒருவர்-
போல ஒருவர் மிகவும் துன்மார்க்கரானார்கள்.

46 அந்தப்படியே, காதியாந்தனின் திருடர்கள் தேசத்-
தின் மீதெங்கும் பரவினார்கள்; இயேசுவின் சீஷர்க-
ளைத் தவிர வேறு நீதிமான்கள் ஒருவரும் அங்கு
இல்லை. அவர்கள் பொன்னையும் வெள்ளியை-
யும் ஏராளமாய் சேர்த்திருந்தார்கள். எல்லாவித-
மான வாணிகத்தையும் மேற்கொண்டார்கள்.

47 அந்தப்படியே, முன்னூற்று ஐந்து வருஷங்கள்
கடந்த பின்னர் (இன்னும் ஜனங்கள் துன்மார்க்கத்-
தில் இருந்தார்கள்) ஆமோஸ் மரித்தான்; அவன்
சகோதரனாகிய அம்மாரோன் அவனுக்குப் பதிலாக
பதிவேடுகளை வைத்திருந்தான்.

48 அந்தப்படியே, முன்னூற்று இருபது வருஷங்கள்
கடந்து போன பின்பு, அம்மாரோன் பரிசுத்த ஆவி-
யானவரால் ஏவப்பட்டு, கிறிஸ்து வருகையிலிருந்-
து முன்னூற்று இருபது வருஷம் வரைக்கும், தலை-
முறை தலைமுறையாய் கையளிக்கப்பட்ட பரிசுத்-
தமான எல்லா பரிசுத்த பதிவேடுகளையும் மறைத்-
து வைத்தான்.

And it came to pass that two hundred and forty and four years had passed away, and thus were the affairs of the people. And the more wicked part of the people did wax strong, and became exceedingly more numerous than were the people of God.

And they did still continue to build up churches unto themselves, and adorn them with all manner of precious things. And thus did two hundred and fifty years pass away, and also two hundred and sixty years.

And it came to pass that the wicked part of the people began again to build up the secret oaths and combinations of Gadianton.

And also the people who were called the people of Nephi began to be proud in their hearts, because of their exceeding riches, and become vain like unto their brethren, the Lamanites.

And from this time the disciples began to sorrow for the sins of the world.

And it came to pass that when three hundred years had passed away, both the people of Nephi and the Lamanites had become exceedingly wicked one like unto another.

And it came to pass that the robbers of Gadianton did spread over all the face of the land; and there were none that were righteous save it were the disciples of Jesus. And gold and silver did they lay up in store in abundance, and did traffic in all manner of traffic.

And it came to pass that after three hundred and five years had passed away, (and the people did still remain in wickedness) Amos died; and his brother, Ammaron, did keep the record in his stead.

And it came to pass that when three hundred and twenty years had passed away, Ammaron, being constrained by the Holy Ghost, did hide up the records which were sacred—yea, even all the sacred records which had been handed down from generation to generation, which were sacred—even until the three hundred and twentieth year from the coming of Christ.

49 அவை கர்த்தருடைய தீர்க்கதரிசனங்கள் மற்றும்
வாக்குத்தத்தங்களின்படியே, யாக்கோபின் வீட்டா-
ரின் மீதியானோரிடத்திற்கு மறுபடியும் வரும்படி-
யாக அவன் அவைகளைக் கர்த்தருக்குள்ளாக
மறைத்து வைத்தான். இப்படியே அம்மாரோனின்
பதிவேட்டின் முடிவு இருக்கிறது.

And he did hide them up unto the Lord, that they might come again unto the remnant of the house of Jacob, according to the prophecies and the promises of the Lord. And thus is the end of the record of Ammaron.

# மார்மன் புஸ்தகம்

## மார்மன் 1

1 இப்பொழுதும் மார்மனாகிய நான் கண்டும் கேட்ட-
துமான காரியங்களைப் பதிவுசெய்து அதை மார்-
மன் புஸ்தகம் என்று அழைக்கிறேன்.

2 அம்மாரோன் கர்த்தருக்குள் பதிவேடுகளை
மறைக்கவிருக்கும் சமயத்தில் அவன் என்னிடத்-
தில் வந்து (நான் பத்து வயதுடையவனாயும், என்
ஜனங்களின் கல்வி முறையின்படியே நானும் சற்-
றே படிக்கவும் துவங்கினேன்) அம்மாரோன் என்னி-
டத்தில், நீ தெளிந்த புத்தியுள்ள பிள்ளை என்றும்
புரிந்து கொள்வதில் விவேகமுள்ளவன் என்றும்,
நான் அறிவேன் என்றான்;

3 ஆதலால் நீ இருபத்தி நான்கு வயதாகிறபோது,
இந்த ஜனத்தைக் குறித்து நீ கவனித்துக் கொண்ட-
வைகளை நினைவுகூர வேண்டும் என்று நான் வி-
ரும்புகிறேன்; நீ அந்த வயதாகிறபோது அந்தூம் தே-
சத்திலிருக்கும் ஷிம் என்றழைக்கப்படுகிற
மலைக்குப் போ. இந்த ஜனத்தைக் குறித்த எல்லா
பரிசுத்த பதிவுகளையும் நான் கர்த்தருக்குள்ளாக
அங்கே புதைத்து வைத்திருக்கிறேன்.

4 இதோ, நீ உனக்கென்று நேபியின் தகடுகளை
எடுத்துக்கொண்டு, மீதியானவைகளை அவைகள்
இருக்கிற இடத்திலேயே விட்டுவிடு; இந்த ஜனத்-
தைக் குறித்து நீ கவனித்த எல்லா காரியங்களை-
யும், நேபியின் தகடுகளின்மேல் பொறித்து வை.

5 நேபியின் சந்ததியான மார்மனாகிய நான் (என்
தகப்பனின் பெயர் மார்மன் என்பதாகும்) அம்மா-
ரோன் எனக்குக் கட்டளையிட்டவைகளை நினை-
வுகூர்ந்தேன்.

6 அந்தப்படியே, எனக்கு பதினோரு வயதாயிருக்-
கும்போது, நான் என் தகப்பனால் தென் தேசமாகிய
சாரகெம்லா தேசத்துக்கு தூக்கிச் செல்லப்பட்டேன்.

7 தேசத்தின் மேற்பகுதி முழுவதும் கட்டிடங்களால்
நிரப்பப்பட்டிருந்தது. ஜனங்கள் ஏறக்குறைய
சமுத்திரத்தின் மணலைப்போல பெருகியிருந்தார்-
கள்.

8 அந்தப்படியே, இந்த வருஷத்தில் நேபியர்களும்,
யாக்கோபினரும், யோசேப்பினரும், சோரமியரும்
அடங்கிய நேபியருக்கிடையே யுத்தம் துவங்கியது;
இந்த யுத்தம் நேபியருக்கும், லாமானியருக்கும், லெ-
முவேலருக்கும், இஸ்மவேலருக்கும் இடையே நடந்-
தது.

9 இப்பொழுது லாமானியரும் லெமுவேலரும், இஸ்-
மவேலரும் லாமானியர் என்றழைக்கப்பட்டனர்,
இரண்டு குழுக்களாய் இருந்தவர்கள் நேபியர்களும்
லாமானியர்களுமே.

# The Book of Mormon

## Mormon 1

And now I, Mormon, make a record of the things which I have both seen and heard, and call it the Book of Mormon.

And about the time that Ammaron hid up the records unto the Lord, he came unto me, (I being about ten years of age, and I began to be learned somewhat after the manner of the learning of my people) and Ammaron said unto me: I perceive that thou art a sober child, and art quick to observe;

Therefore, when ye are about twenty and four years old I would that ye should remember the things that ye have observed concerning this people; and when ye are of that age go to the land Antum, unto a hill which shall be called Shim; and there have I deposited unto the Lord all the sacred engravings concerning this people.

And behold, ye shall take the plates of Nephi unto yourself, and the remainder shall ye leave in the place where they are; and ye shall engrave on the plates of Nephi all the things that ye have observed concerning this people.

And I, Mormon, being a descendant of Nephi, (and my father's name was Mormon) I remembered the things which Ammaron commanded me.

And it came to pass that I, being eleven years old, was carried by my father into the land southward, even to the land of Zarahemla.

The whole face of the land had become covered with buildings, and the people were as numerous almost, as it were the sand of the sea.

And it came to pass in this year there began to be a war between the Nephites, who consisted of the Nephites and the Jacobites and the Josephites and the Zoramites; and this war was between the Nephites, and the Lamanites and the Lemuelites and the Ishmaelites.

Now the Lamanites and the Lemuelites and the Ishmaelites were called Lamanites, and the two parties were Nephites and Lamanites.

10 அந்தப்படியே, சீதோன் நதிக்கு அருகே, சாரகெம்லா எல்லைகளில் அவர்களுக்குள்ளே யுத்தம் துவங்கியது.

And it came to pass that the war began to be among them in the borders of Zarahemla, by the waters of Sidon.

11 அந்தப்படியே, முப்பதாயிரம் எண்ணிக்கைக்கும் அதிகமான பெரும் எண்ணிக்கையுள்ள மனுஷரை நேபியர்கள் ஏகமாய்க் கூட்டிச் சேர்த்திருந்தனர். அந்தப்படியே, இந்த வருஷத்தில் அவர்கள் அநேக யுத்தங்கள் செய்தார்கள். அவைகளில் நேபியர்கள் லாமானியரை தோற்கடித்து அவர்களில் அநேகரை வெட்டிப்போட்டார்கள்.

And it came to pass that the Nephites had gathered together a great number of men, even to exceed the number of thirty thousand. And it came to pass that they did have in this same year a number of battles, in which the Nephites did beat the Lamanites and did slay many of them.

12 அந்தப்படியே, லாமானியர் தங்கள் திட்டங்களைக் கைவிட்டுவிட்டார்கள். தேசத்தில் சமாதானம் நிலவியது. இரத்தம் சிந்துதல் இல்லாதவாறு ஏறக்குறைய நான்கு வருஷங்கள் அளவும் சமாதானம் நிலைத்திருந்தது.

And it came to pass that the Lamanites withdrew their design, and there was peace settled in the land; and peace did remain for the space of about four years, that there was no bloodshed.

13 ஆனால் கர்த்தர் தமது பிரியமான சீஷர்களை எடுத்துக் கொள்ளவும், ஜனங்களினுடைய அக்கிரமத்தினிமித்தம், அற்புதக் கிரியைகளும், சுகமாக்குகிற கிரியைகளும், நின்று போகுமளவும் தேசம் முழுவதிலும் துன்மார்க்கம் இருந்தது.

But wickedness did prevail upon the face of the whole land, insomuch that the Lord did take away his beloved disciples, and the work of miracles and of healing did cease because of the iniquity of the people.

14 கர்த்தரிடத்திலிருந்து எந்த வரங்களும் அங்கே இல்லை. அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தமும் அவிசுவாசத்தினிமித்தமும், பரிசுத்த ஆவியானவர் ஒருவர் மேலும் வரவில்லை.

And there were no gifts from the Lord, and the Holy Ghost did not come upon any, because of their wickedness and unbelief.

15 நான் பதினைந்து வயதுடையவனாயும் சற்று தெளிந்த மனமுள்ளவனாயும் இருந்தபடியால், நான் கர்த்தரால் சந்திக்கப்பட்டு, இயேசுவின் நன்மையை ருசிபார்த்து அறிந்து கொண்டேன்.

And I, being fifteen years of age and being somewhat of a sober mind, therefore I was visited of the Lord, and tasted and knew of the goodness of Jesus.

16 நான் இந்த ஜனத்திற்குப் போதிக்கப் பிரயத்தனம் பண்ணினேன். ஆனாலும் என் வாய் அடைக்கப்பட்டிருந்தது. நான் அவர்களுக்குப் பிரசங்கிப்பதற்கு தடைபண்ணப்பட்டேன்; இதோ, அவர்கள் தங்கள் தேவனுக்கு விரோதமாக மனதாரக் கலகம்பண்ணினார்கள்; அவர்களுடைய அக்கிரமத்தினிமித்தம் பிரியமான சீஷர்கள் தேசத்தைவிட்டு வெளியே கொண்டு செல்லப்பட்டார்கள்.

And I did endeavor to preach unto this people, but my mouth was shut, and I was forbidden that I should preach unto them; for behold they had wilfully rebelled against their God; and the beloved disciples were taken away out of the land, because of their iniquity.

17 நான் அவர்களுக்குள்ளே இருந்தாலும், அவர்களுடைய இருதயக் கடினத்தினிமித்தம் அவர்களுக்குப் போதிப்பதிலிருந்து தடை செய்யப்பட்டேன்; அவர்களுடைய இருதயங்களின் கடினத்தினிமித்தம் அவர்களுக்காக தேசம் சபிக்கப்பட்டது.

But I did remain among them, but I was forbidden to preach unto them, because of the hardness of their hearts; and because of the hardness of their hearts the land was cursed for their sake.

18 லாமானியர் மத்தியிலிருந்த இந்த காதியாந்தன் திருடர்கள், தேசத்தை ஆக்கிரமித்ததால், அதிலிருந்த குடிகள் பூமியிலே தங்கள் பொக்கிஷங்களை மறைக்க ஆரம்பித்தார்கள்; கர்த்தர் தேசத்தை சபித்ததினால், அவர்கள் அவற்றை வைத்திருக்கவும், மறுபடியும் தங்களிடத்தில் தக்கவைத்திருக்கவும் கூடாதபடிக்கு அவைகள் நழுவிப்போயின.

And these Gadianton robbers, who were among the Lamanites, did infest the land, insomuch that the inhabitants thereof began to hide up their treasures in the earth; and they became slippery, because the Lord had cursed the land, that they could not hold them, nor retain them again.

19 அந்தப்படியே, அங்கே சூனியங்களும், பில்லிசூ-
னியங்களும், மாயாஜாலங்களும் இருந்தன; அபி-
நாதி மற்றும் லாமானியனான சாமுவேலின் எல்லா
வார்த்தைகளும் நிறைவேறத்தக்கதாக தேசத்தின்
மேல் எங்கும் பொல்லாங்கனின் வல்லமை சூழ்ந்தி-
ருந்தது.

And it came to pass that there were sorceries, and witchcrafts, and magics; and the power of the evil one was wrought upon all the face of the land, even unto the fulfilling of all the words of Abinadi, and also Samuel the Lamanite.

# மார்மன் 2

1 அந்தப்படியே, அதே வருஷத்தில் நேபியர்களுக்கும்
லாமானியர்களுக்கும் இடையே மறுபடியும் யுத்தம்
துவங்கியது. நான் வாலிபனாயிருந்தாலும் உரு-
வத்தில் பெரியவனாயிருந்தேன். ஆதலால் நேபி-
யின் ஜனங்கள் நான் அவர்களுடைய தலைவனா-
யோ, அல்லது அவர்களுடைய சேனைகளின்
தலைவனாயோ இருக்க என்னை நியமித்தார்கள்.
2 ஆனபடியால், அந்தப்படியே, என்னுடைய பதி-
னாறாவது வயதில், நேபிய சேனைகளின் முன்-
னின்று லாமானியருக்கு விரோதமாய்ப் போனேன்.
அதிலிருந்து முந்நூற்றி இருபத்தாறு வருஷங்கள்
கடந்து போயின.
3 அந்தப்படியே, முன்னூற்றி இருபத்தி ஏழாம் வரு-
ஷத்தில் அவர்கள் என் சேனையைப் பயமுறுத்தும்
அளவில், லாமானியர் எங்கள் மேல் மிகுந்த வல்ல-
மையோடு வந்தார்கள்; ஆனாலும் அவர்கள் யுத்தம்
செய்யாமல், வடதேசங்களுக்கு நேராய் பின்வாங்-
கிப் போனார்கள்.
4 அந்தப்படியே, நாங்கள் அங்கோலா என்ற பட்ட-
ணத்திற்கு வந்து பட்டணத்தைக் கைப்பற்றி, லா-
மானியருக்கு விரோதமாக எங்களைத் தற்காக்க
ஆயத்தங்களை மேற்கொண்டோம். அந்தப்படியே,
நாங்கள் பட்டணத்தை எங்கள் பெலத்தால் அரண்
அமைத்தோம். எங்களுடைய எல்லா அரண்களும்
இருந்தபோதிலும் லாமானியர் எங்கள் மேல் வந்து
எங்களைப் பட்டணத்தைவிட்டுத் துரத்தினார்கள்.
5 அவர்கள் எங்களை தாவீதின் தேசத்தைவிட்டும்
துரத்தினார்கள்.
6 நாங்கள் அணிவகுத்து கடற்கரையோரமாய்,
மேற்கு எல்லைகளில் அமைந்த, யோசுவாவின் தே-
சத்திற்கு வந்தோம்.
7 அந்தப்படியே, எங்களால் முடிந்தவரை வேகமாக
எங்கள் ஜனங்களை ஒரு குழுவாய்ச் சேர்க்க, அவர்-
களை ஏகமாய்க் கூடச் செய்தோம்.
8 இதோ, அந்த தேசம் திருடர்களாலும், லாமானியர்-
களாலும் நிறைந்திருந்தது; என் ஜனத்தின்மேல்
தொங்கிக்கொண்டிருந்த அந்தப் பெரிய அழிவை-
யும் பொருட்படுத்தாமல், அவர்கள் தங்களுடைய
பொல்லாத செய்கைகளிலிருந்து மனந்திரும்ப-
வில்லை; ஆதலால் நேபியர்களுக்குள்ளும், லாமா-
னியர்களுக்குள்ளும், இரண்டு பக்கத்திலும் இரத்-
தம் சிந்துதலும், கொலைகளும் தேசத்தின் மேல்மு-
ழுவதும் பரவியது; அது தேசம் முழுவதும் ஒரு முழு
புரட்சியைக் கொண்டுவந்தது.

# Mormon 2

And it came to pass in that same year there began to be a war again between the Nephites and the Lamanites. And notwithstanding I being young, was large in stature; therefore the people of Nephi appointed me that I should be their leader, or the leader of their armies.

Therefore it came to pass that in my sixteenth year I did go forth at the head of an army of the Nephites, against the Lamanites; therefore three hundred and twenty and six years had passed away.

And it came to pass that in the three hundred and twenty and seventh year the Lamanites did come upon us with exceedingly great power, insomuch that they did frighten my armies; therefore they would not fight, and they began to retreat towards the north countries.

And it came to pass that we did come to the city of Angola, and we did take possession of the city, and make preparations to defend ourselves against the Lamanites. And it came to pass that we did fortify the city with our might; but notwithstanding all our fortifications the Lamanites did come upon us and did drive us out of the city.

And they did also drive us forth out of the land of David.

And we marched forth and came to the land of Joshua, which was in the borders west by the seashore.

And it came to pass that we did gather in our people as fast as it were possible, that we might get them together in one body.

But behold, the land was filled with robbers and with Lamanites; and notwithstanding the great destruction which hung over my people, they did not repent of their evil doings; therefore there was blood and carnage spread throughout all the face of the land, both on the part of the Nephites and also on the part of the Lamanites; and it was one complete revolution throughout all the face of the land.

9 இப்பொழுதும், லாமானியருக்கு ஒரு ராஜா இருந்-
தான். அவன் பெயர் ஆரோன் என்பதாகும்; அவன்
எங்களுக்கு விரோதமாக நாற்பத்தி நான்கு ஆயிரம்-
பேர் அடங்கிய சேனையோடுகூட வந்தான். இதோ,
நான் அவனை நாற்பத்தி இரண்டு ஆயிரத்தோடு
எதிர்கொண்டேன். அந்தப்படியே, நான் என் சே-
னையைக்கொண்டு அவன் எனக்கு முன்பாக
ஓடும்படிக்கு அடித்தேன். இதோ, இவை யாவும் சமப-
வித்து, முன்னூற்றி முப்பது வருஷங்கள் கடந்து-
போயிற்று.

And now, the Lamanites had a king, and his name was Aaron; and he came against us with an army of forty and four thousand. And behold, I withstood him with forty and two thousand. And it came to pass that I beat him with my army that he fled before me. And behold, all this was done, and three hundred and thirty years had passed away.

10 அந்தப்படியே, நேபியர் தங்கள் அக்கிரமங்களுக்-
காக மனந்திரும்பத் துவங்கி, தீர்க்கதரிசி சாமுவேல்
தீர்க்கதரிசனமுரைத்தது போலவே அழ ஆரம்பித்-
தார்கள்; ஏனெனில் இதோ, தேசத்திலே திருடர்க-
ளும், கொள்ளையர்களும், கொலைகாரர்களும்,
மாயாஜாலமும், சூனியமும் இருந்ததால், ஒருவனும்
தனக்குரியதை தன்னிடத்தில் வைத்திருக்க முடிய-
வில்லை.

And it came to pass that the Nephites began to repent of their iniquity, and began to cry even as had been prophesied by Samuel the prophet; for behold no man could keep that which was his own, for the thieves, and the robbers, and the murderers, and the magic art, and the witchcraft which was in the land.

11 இவைகளினிமித்தம், தேசமெங்கிலும், மிகக் கு-
றிப்பாக நேபியின் ஜனங்களுக்குள்ளே துக்கமும்,
புலம்பலும் ஏற்படத் துவங்கியது.

Thus there began to be a mourning and a lamentation in all the land because of these things, and more especially among the people of Nephi.

12 அந்தப்படியே, மார்மனாகிய நான், கர்த்தருக்கு
முன்பாக அவர்களுடைய புலம்பலையும், அவர்க-
ளுடைய துக்கிப்பையும், அவர்களுடைய துன்பத்-
தையும் கண்டபோது, கர்த்தருடைய இரக்கங்களை-
யும், நீடியபொறுமையையும் அறிந்தவனாய், என்
இருதயம் எனக்குள் களிகூரத் துவங்கியது, ஆத-
லால் அவர் அவர்களுக்கு இரக்கமாய் இருந்து,
அவர்கள் மறுபடியும் நீதியுள்ள ஜனமாவார்கள்,
என்று நான் எண்ணினேன்.

And it came to pass that when I, Mormon, saw their lamentation and their mourning and their sorrow before the Lord, my heart did begin to rejoice within me, knowing the mercies and the long-suffering of the Lord, therefore supposing that he would be merciful unto them that they would again become a righteous people.

13 இதோ, இந்த என் சந்தோஷம் வீணாயிருந்தது.
ஏனெனில் தேவனின் நன்மையினிமித்தம், அவர்க-
ளுடைய துக்கிப்பு, மனந்திரும்புதலுக்கேதுவாய்
இருக்கவில்லை; ஆனால் பாவத்திலே தங்களை
கர்த்தர் மகிழ்ச்சியாய் எப்போதும் இருக்கச் செய்வ-
தில்லையே என்று, அது ஆக்கினைக்குள்ளான-
வர்களின் துக்கிப்பாயிருந்தது.

But behold this my joy was vain, for their sorrowing was not unto repentance, because of the goodness of God; but it was rather the sorrowing of the damned, because the Lord would not always suffer them to take happiness in sin.

14 அவர்கள் நொறுங்குண்ட இருதயத்தோடும் நருங்-
குண்ட ஆவிகளோடும் இயேசுவினிடத்தில் வரா-
மல், தேவனை சபித்து சாகவிரும்பினார்கள். இருப்-
பினும், தங்கள் ஜீவன்களுக்காக பட்டயத்தோடு
போராட மனதாயிருந்தார்கள்.

And they did not come unto Jesus with broken hearts and contrite spirits, but they did curse God, and wish to die. Nevertheless they would struggle with the sword for their lives.

15 அந்தப்படியே, என் துக்கம் மறுபடியும் என்னிடத்-
திலே திரும்பினது. கிருபையின் நாள், அவர்களை
இம்மைக்குரியவற்றிலும், ஆவிக்குரியவற்றிலும்
கடந்துபோனதை நான் கண்டேன். அவர்களில்
ஆயிரக்கணக்கானோர் தங்கள் தேவனுக்கு விரோ-
தமாய், வெளியரங்கமாய் கலகம் பண்ணினதால்
வெட்டப்பட்டு தேசத்தின்மேல் சாணம் போல குவிக்-
கப்பட்டிருந்தனர். இப்படியாக முன்னூற்று நாற்பத்-
தி நான்கு வருஷங்கள் கடந்து போயின.

And it came to pass that my sorrow did return unto me again, and I saw that the day of grace was passed with them, both temporally and spiritually; for I saw thousands of them hewn down in open rebellion against their God, and heaped up as dung upon the face of the land. And thus three hundred and forty and four years had passed away.

16 அந்தப்படியே, முன்னூற்று நாற்பத்தி ஐந்தாவது வருஷத்திலே நேபியர்கள் லாமானியருக்கு முன்பாக ஓட ஆரம்பித்தார்கள். அவர்கள் பறந்தோடுவதை நிறுத்த முடிவதற்கு முன்னதாக, அவர்கள் யாசோன் தேசம் வரும் மட்டுமாய் பின் தொடரப்பட்டார்கள்.

And it came to pass that in the three hundred and forty and fifth year the Nephites did begin to flee before the Lamanites; and they were pursued until they came even to the land of Jashon, before it was possible to stop them in their retreat.

17 இப்பொழுதும், பதிவேடுகள் அழியக்கூடாதென்று அம்மாரோன் கர்த்தருக்குள்ளாக புதைத்த பூமிக்கு அருகே, யாசோன் பட்டணம் இருந்தது. இதோ, நான் அம்மாரோனின் வார்த்தையின்படியே போய், நேபியின் தகடுகளை எடுத்து அம்மாரோனின் வார்த்தைகளின்படியே ஒரு பதிவேட்டைச் செய்தேன்.

And now, the city of Jashon was near the land where Ammaron had deposited the records unto the Lord, that they might not be destroyed. And behold I had gone according to the word of Ammaron, and taken the plates of Nephi, and did make a record according to the words of Ammaron.

18 நேபியின் தகடுகளின் மேல் சகல துன்மார்க்கத்தையும், அருவருப்புகளையும் பற்றிய முழுக் குறிப்பை நான் எழுதினேன்; ஆனால் அவர்களுடைய துன்மார்க்கத்தையும் அருவருப்புகளையும்பற்றிய முழுக்குறிப்பை நான் இந்தத் தகடுகளின் மேல் எழுதுவதில்லை, ஏனெனில் இதோ, மனுஷனுடைய வழிகளைக் காணும்படியாக நான் போதுமான வயதை அடைந்தது முதல், என் கண்களுக்கு முன்பாக துன்மார்க்கமும், அருவருப்புகளுமான தொடர் காட்சி இருந்து கொண்டிருக்கிறது.

And upon the plates of Nephi I did make a full account of all the wickedness and abominations; but upon these plates I did forbear to make a full account of their wickedness and abominations, for behold, a continual scene of wickedness and abominations has been before mine eyes ever since I have been sufficient to behold the ways of man.

19 அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தம் நான் சஞ்சலம் அடைந்துள்ளேன்; அவர்களுடைய துன்மார்க்கத்தினிமித்தம் என் இருதயம் என் நாட்களெல்லாம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது; இருப்பினும் கடைசி நாளின்போது, நான் உயர்த்தப்படுவேன் என்று அறிவேன்.

And wo is me because of their wickedness; for my heart has been filled with sorrow because of their wickedness, all my days; nevertheless, I know that I shall be lifted up at the last day.

20 அந்தப்படியே, இந்த வருஷத்தில் நேபியின் ஜனங்கள் மறுபடியும் வேட்டையாடப்பட்டு துரத்தப்பட்டார்கள். அந்தப்படியே, வடக்கேயிருந்த சேம் என்றழைக்கப்பட்ட தேசத்திற்கு வரும் வரைக்குமாய் நாங்கள் துரத்தியடிக்கப்பட்டோம்.

And it came to pass that in this year the people of Nephi again were hunted and driven. And it came to pass that we were driven forth until we had come northward to the land which was called Shem.

21 அந்தப்படியே, நாங்கள் சேம் பட்டணத்தை அரண் அமைத்து, ஒருவேளை எங்கள் ஜனங்களை அழிவிலிருந்து எங்களால் மீட்கக்கூடும் என்பதினால், முடிந்தமட்டும் எங்கள் ஜனங்களைக் கூட்டினோம்.

And it came to pass that we did fortify the city of Shem, and we did gather in our people as much as it were possible, that perhaps we might save them from destruction.

22 அந்தப்படியே, முன்னூற்றி நாற்பத்தாறாம் வருஷத்தில் அவர்கள் மறுபடியும் எங்கள் மேல் வரத் துவங்கினார்கள்.

And it came to pass in the three hundred and forty and sixth year they began to come upon us again.

23 அந்தப்படியே, நான் என் ஜனங்களிடத்தில் பேசி, அவர்கள் லாமானியருக்கு முன்பாக தைரியமாய் நின்று, தங்கள் மனைவிகளுக்காகவும், தங்கள் பிள்ளைகளுக்காகவும், தங்கள் வீடுகளுக்காகவும், தங்கள் குடும்பங்களுக்காகவும் யுத்தம் பண்ணும்படியாக அவர்களைப் பெரும் ஊக்கத்தோடு ஏவினேன்.

And it came to pass that I did speak unto my people, and did urge them with great energy, that they would stand boldly before the Lamanites and fight for their wives, and their children, and their houses, and their homes.

24 இதனால் அவர்கள் லாமானியருக்கு முன்பாக ஓடாமல், அவர்களுக்கு விரோதமாக தைரியமாய் நிற்கும்படிக்கு, என் வார்த்தைகள் அவர்களைச் சற்று வேகம்கொள்ள எழுப்பிற்று.

And my words did arouse them somewhat to vigor, insomuch that they did not flee from before the Lamanites, but did stand with boldness against them.

25 அந்தப்படியே, முப்பதாயிரம் அடங்கிய சேனையோடு, நாங்கள் ஐம்பதாயிரம் அடங்கிய சேனைக்கு விரோதமாக யுத்தம் பண்ணினோம். அந்தப்படியே, நாங்கள் அவர்களுக்கு முன்பாக மிகுந்த உறுதியோடு நின்றபடியால், அவர்கள் எங்களுக்கு முன்பிருந்து ஓடினார்கள்.

And it came to pass that we did contend with an army of thirty thousand against an army of fifty thousand. And it came to pass that we did stand before them with such firmness that they did flee from before us.

26 அந்தப்படியே, அவர்கள் ஓடிய பின்பு, நாங்கள் எங்கள் சேனைகளோடு அவர்களைப் பின்தொடர்ந்து, அவர்களை மறுபடியும் சந்தித்து அவர்களை அடித்தோம்; ஆனாலும் கர்த்தருடைய பெலன் எங்களோடு இருக்கவில்லை; ஆம், நாங்கள் தனியே விடப்பட்டோம். கர்த்தருடைய ஆவியானவர் எங்களிடத்தில் தரித்திருக்கவில்லை; ஆதலால் நாங்கள் எங்கள் சகோதரரைப்போல பெலவீனரானோம்.

And it came to pass that when they had fled we did pursue them with our armies, and did meet them again, and did beat them; nevertheless the strength of the Lord was not with us; yea, we were left to ourselves, that the Spirit of the Lord did not abide in us; therefore we had become weak like unto our brethren.

27 என் ஜனங்களினுடைய துன்மார்க்கத்தினிமித்தமும், அருவருப்புகளினிமித்தமும், அவர்களுக்குள்ளிருந்த இந்தப் பெரும் சீரழிவினிமித்தமும், என் இருதயம் துக்கமடைந்தது. ஆனால், இதோ, நாங்கள் எங்கள் சுதந்திர தேசங்களை மறுபடியும் ஆக்கிரமிக்கும் வரைக்குமாக, லாமானியருக்கும் காதியாந்தன் திருடர்களுக்கும் விரோதமாகப் போனோம்.

And my heart did sorrow because of this the great calamity of my people, because of their wickedness and their abominations. But behold, we did go forth against the Lamanites and the robbers of Gadianton, until we had again taken possession of the lands of our inheritance.

28 முன்னூற்று நாற்பத்தி ஒன்பது வருஷங்கள் கடந்து போயின. முன்னூற்றி ஐம்பதாவது வருஷத்தில் எங்களுடைய சுதந்திர தேசங்களை நாங்கள் பெறும்படியாக, ஒரு ஒப்பந்தத்தை லாமானியரோடும், காதியாந்தன் திருடர்களோடும் செய்து கொண்டோம்.

And the three hundred and forty and ninth year had passed away. And in the three hundred and fiftieth year we made a treaty with the Lamanites and the robbers of Gadianton, in which we did get the lands of our inheritance divided.

29 தென் தேசத்திற்குப் போகிற குறுகிய வழி உள்ளிட்ட வடதேசத்தை லாமானியர் எங்களுக்குக் கொடுத்தார்கள். தென் தேசம் அனைத்தையும் நாங்கள் லாமானியரிடம் கொடுத்தோம்.

And the Lamanites did give unto us the land northward, yea, even to the narrow passage which led into the land southward. And we did give unto the Lamanites all the land southward.

## மார்மன் 3

1 அந்தப்படியே, மேலும் பத்து ஆண்டுகள் கடந்து போகுமட்டும் லாமானியர் மறுபடியும் யுத்தத்திற்கு வரவில்லை. இதோ என் ஜனமாகிய நேபியர்களை தங்கள் தேசங்களையும், தங்கள் ஆயுதங்களையும், யுத்த சமயத்திற்காக ஆயத்தம் பண்ணும்படிச் செய்தேன்.

2 அந்தப்படியே, கர்த்தர் என்னிடத்தில் சொன்னதாவது: நீங்கள் மனந்திரும்பி, என்னிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்று, என் சபையை மறுபடியும் கட்டுங்கள். நீங்கள் தப்புவிக்கப்படுவீர்கள், என்று இந்த ஜனத்திற்கு கூக்குரலிடு.

3 நான் இந்த ஜனத்தை நோக்கி கூக்குரலிட்டேன், ஆனால் அது வீணாய்ப்போயிற்று; அவர்கள் கர்த்தரே தங்களைத் தப்புவிக்கப்பண்ணினார் என்றும், மனந்திரும்பும்படியாக ஒரு தருணத்தை தங்களுக்குத் தந்திருக்கிறார் என்றும் உணராமல் இருந்தார்கள். மேலும் இதோ, அவர்கள் தங்கள் இருதயங்களை தேவனாகிய தங்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கடினப்படுத்தினார்கள்.

4 அந்தப்படியே, இந்த பத்தாவது வருஷமும் கடந்துபோன பின்பு, கிறிஸ்துவின் வருகையிலிருந்து எல்லாம் சேர்ந்து முன்னூற்று அறுபது வருஷங்கள் ஆனபோது, அவர்கள் எங்களுக்கு விரோதமாக மறுபடியும் யுத்தம் செய்யும்படிவர ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எனக்குத் தெரிவிக்கும்படியாக, லாமானியரின் ராஜா எனக்கு ஒரு நிருபத்தை அனுப்பினான்.

5 அந்தப்படியே, தென்தேசத்திற்குப் போகிற குறுகிய வழியோரமாய், எல்லைகளுக்கு அருகே இருந்த பாழ்க்கடிப்பு என்ற தேசத்தில் அமைந்த பட்டணத்தில் என் ஜனம் ஏகமாய்க்கூடச் செய்தேன்.

6 லாமானிய சேனைகளைத் தடுத்து நிறுத்தவும் அவர்கள் எங்கள் சேதங்களில் யாதொன்றையும் கைப்பற்றக்கூடாதபடிக்கும், அங்கே எங்களுடைய சேனைகளை நிறுத்தினோம்; ஆகவே எங்களுடைய எல்லா சேனைகளோடும் அவர்களுக்கு எதிராக பெலப்படுத்தினோம்.

7 அந்தப்படியே, முன்னூற்றி அறுபத்தோராம் வருஷத்தில், லாமானியர் எங்களுக்கு விரோதமாக யுத்தம் செய்ய பாழ்க்கடிப்பு பட்டணத்திற்கு வந்தார்கள்; அந்தப்படியே, அந்த வருஷத்தில் அவர்கள் மறுபடியும் தங்கள் சொந்த தேசங்களுக்கு திரும்புமளவுக்கு நாங்கள் அவர்களை அடித்தோம்.

8 முன்னூற்றி அறுபத்தி இரண்டாம் வருஷத்தில் அவர்கள் மறுபடியும் யுத்தத்திற்கு வந்தார்கள். நாங்கள் அவர்களை மறுபடியும் அடித்து அவர்களில் பெரும் எண்ணிக்கையினரை வெட்டி, அவர்களில் மரித்தோர் சமுத்திரத்தினுள் எறியப்பட்டனர்.

## Mormon 3

And it came to pass that the Lamanites did not come to battle again until ten years more had passed away. And behold, I had employed my people, the Nephites, in preparing their lands and their arms against the time of battle.

And it came to pass that the Lord did say unto me: Cry unto this people—Repent ye, and come unto me, and be ye baptized, and build up again my church, and ye shall be spared.

And I did cry unto this people, but it was in vain; and they did not realize that it was the Lord that had spared them, and granted unto them a chance for repentance. And behold they did harden their hearts against the Lord their God.

And it came to pass that after this tenth year had passed away, making, in the whole, three hundred and sixty years from the coming of Christ, the king of the Lamanites sent an epistle unto me, which gave unto me to know that they were preparing to come again to battle against us.

And it came to pass that I did cause my people that they should gather themselves together at the land Desolation, to a city which was in the borders, by the narrow pass which led into the land southward.

And there we did place our armies, that we might stop the armies of the Lamanites, that they might not get possession of any of our lands; therefore we did fortify against them with all our force.

And it came to pass that in the three hundred and sixty and first year the Lamanites did come down to the city of Desolation to battle against us; and it came to pass that in that year we did beat them, insomuch that they did return to their own lands again.

And in the three hundred and sixty and second year they did come down again to battle. And we did beat them again, and did slay a great number of them, and their dead were cast into the sea.

9 இப்பொழுதும் என் ஜனமாகிய நேபியர் செய்த
இந்த பெரிய காரியத்தினிமித்தம், அவர்கள் தங்கள்
சுயபெலத்தில் பெருமைகொள்ளத் துவங்கி, தங்-
கள் விரோதிகளால் கொல்லப்பட்ட தங்களுடைய
சகோதரர்களின் இரத்தத்திற்காக தாங்களே நீதி-
யைச் சரிக்கட்டுவோம் என்று பரலோக சாட்சியாக
ஆணையிடத் துவங்கினார்கள்.
10 அவர்கள் தங்கள் விரோதிகளுக்கு விரோதமாய்
யுத்தத்திற்குப் போய் அவர்களை பூமியின் மீதிருந்-
து நிர்மூலமாக்குவோம் என்று பரலோகத்தின் பேரி-
லும், தேவ சிங்காசனத்தின் பேரிலும் ஆணையிட்-
டார்கள்.
11 அந்தப்படியே, மார்மனாகிய நான் இந்த ஜனத்தி-
னுடைய துன்மார்க்கத்தினிமித்தமும், அருவருப்-
பினிமித்தமும், இச்சமயம் துவங்கி அவர்களுக்கு
சேர்வைக்காரனாயும் தலைவனாயுமிருக்க முழு-
மையாக மறுத்தேன்.
12 இதோ, நான் அவர்களை வழிநடத்தினேன். அவர்-
களுடைய துன்மார்க்கத்தைப் பொருட்படுத்தா-
மல், நான் அவர்களை அநேகந்தரம் யுத்தத்திற்கு
வழிநடத்தி, எனக்குள் இருக்கிற தேவ அன்பின்படி-
யே என் முழுஇருதயத்தோடு அவர்களை நேசித்-
தேன்; அவர்களுக்காக நாள் முழுவதும் என் ஆத்து-
மா என் தேவனிடத்தில் ஜெபத்தில் ஊற்றப்பட்டது;
இருப்பினும் அவர்களுடைய இருதயங்களின் கடி-
னத்தினிமித்தம் அது விசுவாசமற்றிருந்தது.
13 மும்முறை அவர்களை அவர்களுடைய பகைவ-
ரின் கைகளிலிருந்து விடுவித்தேன். அவர்களோ
தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்பவில்லை.
14 அவர்கள் தங்கள் விரோதிகளுடன் யுத்தத்திற்-
கென்று போய், தங்களுடைய சகோதரரின் இரத்தத்-
திற்காக தாங்களே நீதியைச் சரிக்கட்டுவோம், என்-
று நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு
கிறிஸ்துவினால், தங்களுக்கு தடை செய்யப்பட்ட
எல்லாவற்றினாலும், அவர்கள் ஆணையிட்டபோ-
து, இதோ, கர்த்தருடைய சத்தம் எனக்குண்டாகி:
15 பழிவாங்குதல் என்னுடையது. நானே திரும்பக்
கொடுப்பேன். நான் இந்த ஜனத்தை விடுவித்த பிற-
கும் அவர்கள் மனந்திரும்பாததினால், இதோ,
அவர்கள் பூமியின் பரப்பின் மேலிருந்து அறுப்-
புண்டு போவார்கள், என்றது.
16 அந்தப்படியே, நான் என்னுடைய விரோதிகளுக்-
கு விரோதமாகப் போக முழுமையாய் மறுத்தேன்;
கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டிருந்தபடியே செய்-
தேன். வரப்போகிறவைகளைக் குறித்து சாட்சி
கொடுத்த ஆவியினுடைய வெளிப்படுதல்களின்-
படியே, நான் கண்டதும் கேட்டதுமானவைகளை
உலகத்திற்கு வெளியரங்கமாக்க வெறும் பார்வை-
யாளனாக நின்று கொண்டிருந்தேன்.

And now, because of this great thing which my people, the Nephites, had done, they began to boast in their own strength, and began to swear before the heavens that they would avenge themselves of the blood of their brethren who had been slain by their enemies.

And they did swear by the heavens, and also by the throne of God, that they would go up to battle against their enemies, and would cut them off from the face of the land.

And it came to pass that I, Mormon, did utterly refuse from this time forth to be a commander and a leader of this people, because of their wickedness and abomination.

Behold, I had led them, notwithstanding their wickedness I had led them many times to battle, and had loved them, according to the love of God which was in me, with all my heart; and my soul had been poured out in prayer unto my God all the day long for them; nevertheless, it was without faith, because of the hardness of their hearts.

And thrice have I delivered them out of the hands of their enemies, and they have repented not of their sins.

And when they had sworn by all that had been forbidden them by our Lord and Savior Jesus Christ, that they would go up unto their enemies to battle, and avenge themselves of the blood of their brethren, behold the voice of the Lord came unto me, saying:

Vengeance is mine, and I will repay; and because this people repented not after I had delivered them, behold, they shall be cut off from the face of the earth.

And it came to pass that I utterly refused to go up against mine enemies; and I did even as the Lord had commanded me; and I did stand as an idle witness to manifest unto the world the things which I saw and heard, according to the manifestations of the Spirit which had testified of things to come.

17 ஆதலால், புறஜாதியாராகிய உங்களுக்கும், இஸ்ரவேலின் வீட்டாராகிய உங்களுக்கும், நான் எழுதுகிறதென்னவெனில், கிரியை துவங்கும்போது, நீங்கள் உங்களுடைய சுதந்திர பூமிக்குத் திரும்பிப்போக ஆயத்தம் செய்யவிருப்பீர்கள்.

Therefore I write unto you, Gentiles, and also unto you, house of Israel, when the work shall commence, that ye shall be about to prepare to return to the land of your inheritance;

18 ஆம், இதோ, நான் பூமியின் கடையாந்திரமனைத்திற்கும் எழுதுகிறேன். ஆம், எருசலேம் தேசத்தில் இயேசு தம்முடைய சீஷர்களாகத் தெரிந்துகொண்ட பன்னிருவரால் உங்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படப் போகிற இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரே, உங்களுக்கும் நான் எழுதுகிறேன்.

Yea, behold, I write unto all the ends of the earth; yea, unto you, twelve tribes of Israel, who shall be judged according to your works by the twelve whom Jesus chose to be his disciples in the land of Jerusalem.

19 இயேசு இத்தேசத்தில் தெரிந்துகொண்ட பன்னிருவராலும் நியாயந்தீர்க்கப்படப் போகிற இந்த ஜனத்தின் மீதியானோருக்கும் எழுதுகிறேன்; அவர்களோ இயேசு எருசலேம் தேசத்தில் தெரிந்துகொண்ட மற்ற பன்னிருவரால் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

And I write also unto the remnant of this people, who shall also be judged by the twelve whom Jesus chose in this land; and they shall be judged by the other twelve whom Jesus chose in the land of Jerusalem.

20 இவைகளை ஆவியானவர் எனக்கு வெளிப்படுத்துகிறார்; ஆதலால் நான் உங்கள் யாவருக்கும் எழுதுகிறேன். நீங்கள் அனைவரும் ஆம், ஆதாமின் முழு மனுஷ குடும்பத்தைச் சேர்ந்த சகல ஆத்துமாவும், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டுமென்றும், நன்மையானாலும் தீமையானாலும், உங்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும்படிக்கு, நீங்கள் நிற்கவேண்டும் என்பதையும், நீங்கள் அறியவேண்டும் என்னும் காரணத்துக்காகவும், நான் உங்களுக்கு எழுதுகிறேன்.

And these things doth the Spirit manifest unto me; therefore I write unto you all. And for this cause I write unto you, that ye may know that ye must all stand before the judgment-seat of Christ, yea, every soul who belongs to the whole human family of Adam; and ye must stand to be judged of your works, whether they be good or evil;

21 உங்கள் மத்தியில் இருக்கப்போகும் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நீங்கள் விசுவாசிக்கவும், கர்த்தருடைய உடன்படிக்கையின் ஜனமாகிய யூதர்கள், தாங்கள் கொன்றுபோட்ட அந்த இயேசுவே மெய்யான கிறிஸ்து என்றும், மெய்யான தேவனென்றும் சாட்சி பகர, அவரைத் தவிர, தாங்கள் கண்டு, கேட்ட, பிற சாட்சி உண்டாயிருக்கவும், இதை உங்களுக்கு எழுதுகிறேன்.

And also that ye may believe the gospel of Jesus Christ, which ye shall have among you; and also that the Jews, the covenant people of the Lord, shall have other witness besides him whom they saw and heard, that Jesus, whom they slew, was the very Christ and the very God.

22 உலகத்தின் கடையாந்திரங்கள் யாவிலும் உள்ள நீங்கள் அனைவரும் மனந்திரும்பி, கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க ஆயத்தப்பட்டிருக்கும்படி ஏவிட நான் விரும்புகிறேன்.

And I would that I could persuade all ye ends of the earth to repent and prepare to stand before the judgment-seat of Christ.

# மார்மன் 4

1 இப்பொழுதும், அந்தப்படியே, முன்றூற்றி அறுபத்-
தி மூன்றாம் வருஷத்திலே, நேபியர்கள் தங்கள் சே-
னைகளோடு, பாழ்க்கடிப்பு தேசத்தைவிட்டு லாமா-
னியருக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போனார்கள்.

2 அந்தப்படியே, நேபியர்களின் சேனைகள் மறுபடி-
யும் பாழ்க்கடிப்பின் தேசத்திற்கு விரட்டியடிக்கப்-
பட்டார்கள். அவர்கள் களைப்பாய் இருந்தபோதே
லாமானியரின் புது சேனை அவர்கள்மேல் வந்தது.
அவர்களுக்குள் கொடிய யுத்தம் நேரிட்டது. இதினி-
மித்தம், லாமானியர் பாழ்க்கடிப்பு பட்டணத்தை
ஆக்கிரமித்து, நேபியர்களின் அநேகரை வெட்டிப்-
போட்டு, அநேகரை கைதிகளாகப் பிடித்தார்கள்.

3 மீதியானோர் ஓடி, தியான்கும் பட்டணத்தின் குடி-
களோடு சேர்ந்துகொண்டார்கள். இப்பொழுது தி-
யான்கும் பட்டணம் கடற்கரையோரமாய் அமைந்-
திருந்த எல்லைகளில் இருந்தது; அது பாழ்க்கடிப்-
பின் பட்டணத்திற்கு அருகேயுமிருந்தது.

4 நேபியர் சேனை லாமானியரிடத்திற்குப் போனதி-
னிமித்தம் அவர்கள் அடிக்கப்படத் துவங்கினார்-
கள். அப்படியில்லையெனில், லாமானியர் அவர்-
கள் மேல் பலம் கொண்டிருக்க முடியாது.

5 ஆனால் இதோ, தேவ நியாயத்தீர்ப்பு துன்மார்க்க-
ரை மேற்கொள்ளும், துன்மார்க்கராலே தான் துன்-
மார்க்கர் தண்டிக்கப்படுகிறார்கள்; ஏனெனில்
துன்மார்க்கரே மனுபுத்திரரின் இருதயங்களை
இரத்தம் சிந்துதலுக்கேதுவாய் தூண்டிவிடுகிறார்-
கள்.

6 அந்தப்படியே, லாமானியர் தியான்கும் பட்டணத்-
திற்கு விரோதமாக வர ஆயத்தங்களைச் செய்தனர்.

7 அந்தப்படியே, முன்னூற்றி அறுபத்து நான்காம்
வருஷத்தில், தியான்கும் பட்டணத்தையும் வசப்ப-
டுத்தும்படிக்கு, லாமானியர் தியான்கும் பட்டணத்-
திற்கு விரோதமாக வந்தார்கள்.

8 அந்தப்படியே, அவர்கள் நேபியர்களால் அடிக்-
கப்பட்டு, துரத்தப்பட்டார்கள். நேபியர்கள் தாங்கள்
லாமானியரைத் துரத்தினதைக் கண்டபோது,
அவர்கள் மறுபடியும் தங்கள் சுயபெலத்திலே மேன்-
மை பாராட்டினார்கள். அவர்கள் தங்கள் சுயபெ-
லத்திலே போய், மறுபடியும் பாழ்க்கடிப்பு பட்டணத்-
தைக் கைப்பற்றினார்கள்.

9 இப்பொழுது இவைகளெல்லாம் முடிந்தது. நேபி-
யர்களிலும், லாமானியர்களிலும், இருபுறங்களி-
லும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள்.

# Mormon 4

And now it came to pass that in the three hundred and sixty and third year the Nephites did go up with their armies to battle against the Lamanites, out of the land Desolation.

And it came to pass that the armies of the Nephites were driven back again to the land of Desolation. And while they were yet weary, a fresh army of the Lamanites did come upon them; and they had a sore battle, insomuch that the Lamanites did take possession of the city Desolation, and did slay many of the Nephites, and did take many prisoners.

And the remainder did flee and join the inhabitants of the city Teancum. Now the city Teancum lay in the borders by the seashore; and it was also near the city Desolation.

And it was because the armies of the Nephites went up unto the Lamanites that they began to be smitten; for were it not for that, the Lamanites could have had no power over them.

But, behold, the judgments of God will overtake the wicked; and it is by the wicked that the wicked are punished; for it is the wicked that stir up the hearts of the children of men unto bloodshed.

And it came to pass that the Lamanites did make preparations to come against the city Teancum.

And it came to pass in the three hundred and sixty and fourth year the Lamanites did come against the city Teancum, that they might take possession of the city Teancum also.

And it came to pass that they were repulsed and driven back by the Nephites. And when the Nephites saw that they had driven the Lamanites they did again boast of their own strength; and they went forth in their own might, and took possession again of the city Desolation.

And now all these things had been done, and there had been thousands slain on both sides, both the Nephites and the Lamanites.

10 அந்தப்படியே, முன்னூற்றி அறுபத்தாறாவது வருஷமும் கடந்துபோனது, லாமானியர் யுத்தம் செய்வதற்கென நேபியர்கள் மேல் மறுபடியும் வந்தார்கள்; நேபியர்களோ இன்னும் தாங்கள் செய்த பொல்லாப்புக்காக மனந்திரும்பாமல், தங்கள் துன்மார்க்கத்தில் தொடர்ந்து திளைத்திருந்தார்கள்.

And it came to pass that the three hundred and sixty and sixth year had passed away, and the Lamanites came again upon the Nephites to battle; and yet the Nephites repented not of the evil they had done, but persisted in their wickedness continually.

11 நேபியருக்குள்ளும் லாமானியருக்குள்ளும், ஆக இரு ஜனங்களுக்குள்ளும் இருந்த இரத்தமும், சங்காரமுமான பயங்கர காட்சியை நாவினால் விவரிக்கவோ, அல்லது பூரண விவரத்தை மனுஷனால் எழுதவோ முடியாது. ஒவ்வொரு இருதயமும் கடினப்பட்டிருந்ததாலே, அவர்கள் இரத்தம் சிந்துதலில் தொடர்ந்து களிகூர்ந்தார்கள்.

And it is impossible for the tongue to describe, or for man to write a perfect description of the horrible scene of the blood and carnage which was among the people, both of the Nephites and of the Lamanites; and every heart was hardened, so that they delighted in the shedding of blood continually.

12 கர்த்தருடைய வார்த்தைகளின்படியே இந்த ஜனங்களுக்குள்ளிருந்த பெரும் துன்மார்க்கத்தைப் போல, லேகியின் பிள்ளைகள் எல்லோர் மத்தியிலோ, இஸ்ரவேல் வீட்டார் மத்தியிலோ, எல்லாருக்குள்ளும் என்றுமே இருந்ததில்லை.

And there never had been so great wickedness among all the children of Lehi, nor even among all the house of Israel, according to the words of the Lord, as was among this people.

13 அந்தப்படியே, லாமானியர் பாழ்க்கடிப்பின் பட்டணத்தைக் கைப்பற்றினார்கள். இது ஏனென்றால் அவர்களுடைய எண்ணிக்கை நேபியர்களின் எண்ணிக்கையை மிஞ்சிற்று.

And it came to pass that the Lamanites did take possession of the city Desolation, and this because their number did exceed the number of the Nephites.

14 அவர்கள் தியான்கும் பட்டணத்திற்கு விரோதமாக அணிவகுத்துப்போய், அதன் குடிகளைத் துரத்திவிட்டு, பெண்களும், பிள்ளைகளுமான அநேகரை கைதிகளாகப் பிடித்து, அவர்களைத் தங்களின் விக்கிரக தெய்வங்களுக்குப் பலியாகக் கொடுத்தார்கள்.

And they did also march forward against the city Teancum, and did drive the inhabitants forth out of her, and did take many prisoners both women and children, and did offer them up as sacrifices unto their idol gods.

15 அந்தப்படியே, முன்னூற்றி அறுபத்தி ஏழாம் வருஷத்தில், லாமானியர் தங்களின் பெண்களையும் சிறுபிள்ளைகளையும் பலியிட்டதினிமித்தம் நேபியர் கோபமடைந்து, அவர்கள் மறுபடியும் லாமானியரை அடித்து அவர்களுடைய தேசங்களைவிட்டு, அவர்களைத் துரத்தும்படிக்கு, பெரும் சினத்துடனே லாமானியருக்கு விரோதமாய்ப் போனார்கள்.

And it came to pass that in the three hundred and sixty and seventh year, the Nephites being angry because the Lamanites had sacrificed their women and their children, that they did go against the Lamanites with exceedingly great anger, insomuch that they did beat again the Lamanites, and drive them out of their lands.

16 முன்னூற்றி எழுபத்தைந்தாம் வருஷம் வரைக்குமாய் லாமானியர் நேபியருக்கு விரோதமாய் மறுபடியும் வரவில்லை.

And the Lamanites did not come again against the Nephites until the three hundred and seventy and fifth year.

17 இந்த வருஷத்தில் அவர்கள் தங்களுடைய எல்லா பெலத்தோடும் நேபியர்களுக்கு விரோதமாய் மறுபடியும் வந்தார்கள்; அவர்களுடைய எண்ணிக்கையின் மிகுதியினிமித்தம் அவர்கள் எண்ணப்படவில்லை.

And in this year they did come down against the Nephites with all their powers; and they were not numbered because of the greatness of their number.

18 அந்த சமயம் முதற்கொண்டு, நேபியர் லாமானியர்மேல் பலம்கொள்ள முடியாமல், சூரியனுக்கு முன்பாக, பனியைப்போல அவர்களால் அழிக்கப்படத் துவங்கினார்கள்.

And from this time forth did the Nephites gain no power over the Lamanites, but began to be swept off by them even as a dew before the sun.

19 அந்தப்படியே, லாமானியர் மறுபடியும் பாழ்க்க-
டிப்பு பட்டணத்திற்கு விரோதமாக வந்தார்கள்.
பாழ்க்கடிப்பு தேசத்திலே ஒரு பெரும் கொடிய யுத்-
தம் நடத்தப்பட்டது. அதில் அவர்கள் நேபியர்களை
வீழ்த்தினார்கள்.

And it came to pass that the Lamanites did come down against the city Desolation; and there was an exceedingly sore battle fought in the land Desolation, in the which they did beat the Nephites.

20 அவர்கள் அவர்களுக்கு முன்னிருந்து மறுபடி-
யும் ஓடி, போவாஸ் பட்டணத்திற்கு வந்தார்கள்;
அவர்கள் இரண்டாம் விசை வரும்வரைக்கும் லா-
மானியர் அவர்களை வீழ்த்தாதபடிக்கு, அங்கே
அவர்கள் லாமானியருக்கு விரோதமாக அதிக தை-
ரியத்தோடு நின்றார்கள்.

And they fled again from before them, and they came to the city Boaz; and there they did stand against the Lamanites with exceeding boldness, insomuch that the Lamanites did not beat them until they had come again the second time.

21 அவர்கள் இரண்டாம் விசை வந்தபோது, நேபியர்
துரத்தப்பட்டு, பெரும் சங்காரம் உண்டாகும்படி
வெட்டப்பட்டார்கள். அவர்களுடைய பெண்களும்
அவர்களுடைய பிள்ளைகளும் மறுபடியும் விக்கி-
ரகங்களுக்கு பலியிடப்பட்டார்கள்.

And when they had come the second time, the Nephites were driven and slaughtered with an exceedingly great slaughter; their women and their children were again sacrificed unto idols.

22 அந்தப்படியே, பட்டணங்களிலும், கிராமங்களி-
லுமுள்ள குடிகள் எல்லோரையும், நேபியர் தங்க-
ளோடு கூட்டிக்கொண்டு, மறுபடியும் அவர்களுக்கு
முன்னிருந்து பறந்தோடினார்கள்.

And it came to pass that the Nephites did again flee from before them, taking all the inhabitants with them, both in towns and villages.

23 இப்பொழுதும், மார்மனாகிய நான், தேசத்தை லா-
மானியர் மேற்கொள்ள இருப்பதைக் கண்டு, ஷிம்
என்ற மலைக்குப்போய் அம்மாரோன் கர்த்தருக்-
குள்ளாக மறைத்து வைத்த சகல பதிவேடுகளை-
யும் எடுத்தேன்.

And now I, Mormon, seeing that the Lamanites were about to overthrow the land, therefore I did go to the hill Shim, and did take up all the records which Ammaron had hid up unto the Lord.

# மார்மன் 5

1 அந்தப்படியே, நான் நேபியருக்குள்ளே போய், நான்
அவர்களுக்கு இனி ஒருபோதும் உதவிசெய்வதில்-
லை, என்று நான் செய்துகொண்ட ஆணையிலி-
ருந்து மனம் மாறினேன். அவர்கள் தங்கள் சேனை-
களின் சேர்வையை எனக்கு மறுபடியும் தந்தார்கள்.
அவர்களுடைய உபத்திரவங்களிலிருந்து நான்
அவர்களை விடுவிக்கக்கூடும் என, அவர்கள் என்-
னைப் பார்த்தார்கள்.
2 ஆனால் நான் நம்பிக்கையற்றிருந்தேன். ஏனெ-
னில் அவர்கள் மேல் வரவிருக்கிற கர்த்தருடைய
நியாயத்தீர்ப்புகளை நான் அறிந்திருந்தேன்;
ஏனெனில் அவர்கள் தங்கள் அக்கிரமங்களுக்காக
மனந்திரும்பாமல், தங்களைப் படைத்தவரை
நோக்கி கூப்பிடாமல், தங்களுடைய ஜீவன்களுக்-
காகப் போராடினார்கள்.
3 அந்தப்படியே, நாங்கள் யோர்தான் பட்டணத்திற்-
கு ஓடினபோது லாமானியர் எங்களுக்கு விரோத-
மாய் வந்தார்கள்; ஆனால் அவர்கள் இதோ, அச்சம-
யத்தில் பட்டணத்தைக் கைப்பற்றக்கூடாமல் துரத்-
திவிடப்பட்டார்கள்.
4 அந்தப்படியே, அவர்கள் மறுபடியும் எங்களுக்கு
விரோதமாய் வந்தார்கள். நாங்கள் பட்டணத்தைத்
தற்காத்தோம். நேபியர்கள் தற்காத்து வந்த மற்ற
பட்டணங்களும் உண்டு. அவர்கள் எங்களுக்கு
முன்னேயிருக்கிற தேசத்துக்குள் வந்து, எங்கள் தே-
சத்தின் குடிகளை அழிக்க முடியாமல், அதிலிருக்-
கும் கொத்தளங்கள் அவர்களைத் தடுத்தன.
5 ஆனால், அந்தப்படியே, நாங்கள் கடந்து வந்த தே-
சங்கள் எதுவானாலும், அதின் குடிகள் எங்களோடு
சேர்ந்து வரவில்லையெனில் அவர்கள் லாமானிய-
ரால் அழிக்கப்பட்டனர். அவர்களுடைய பட்ட-
ணங்கள், கிராமங்கள், நகரங்கள் ஆகியவை அக்-
கினிக்கு இரையாயின. இப்படியாக முன்னூற்றி
எழுபத்தொன்பது வருஷங்கள் கடந்துபோயின.
6 அந்தப்படியே, முன்னூற்றி எண்பதாவது வரு-
ஷத்தில் லாமானியர் மறுபடியும் யுத்தத்திற்கென்று
எங்களுக்கு விரோதமாக வந்தார்கள். நாங்கள்
அவர்களுக்கு விரோதமாக தைரியமாய், நின்றோம்.
ஆனால் அதுவெல்லாம் வீணாய்ப்போயிற்று.
ஏனெனில் அவர்களுடைய எண்ணிக்கை அதிக-
மாயிருந்தபடியால், அவர்கள் நேபிய ஜனங்களை
தங்கள் கால்களுக்குக் கீழ் மிதித்துப் போட்டார்கள்.
7 அந்தப்படியே, நாங்கள் மறுபடியும் ஓடினோம்.
லாமானியரை விட வேகமாய் ஓடினவர்கள் தப்பித்-
துக் கொண்டார்கள். ஓட்டத்தில் லாமானியரை
மிஞ்ச முடியாதவர்கள் வீழ்த்தப்பட்டு அழிக்கப்பட்-
டார்கள்.

# Mormon 5

And it came to pass that I did go forth among the Nephites, and did repent of the oath which I had made that I would no more assist them; and they gave me command again of their armies, for they looked upon me as though I could deliver them from their afflictions.

But behold, I was without hope, for I knew the judgments of the Lord which should come upon them; for they repented not of their iniquities, but did struggle for their lives without calling upon that Being who created them.

And it came to pass that the Lamanites did come against us as we had fled to the city of Jordan; but behold, they were driven back that they did not take the city at that time.

And it came to pass that they came against us again, and we did maintain the city. And there were also other cities which were maintained by the Nephites, which strongholds did cut them off that they could not get into the country which lay before us, to destroy the inhabitants of our land.

But it came to pass that whatsoever lands we had passed by, and the inhabitants thereof were not gathered in, were destroyed by the Lamanites, and their towns, and villages, and cities were burned with fire; and thus three hundred and seventy and nine years passed away.

And it came to pass that in the three hundred and eightieth year the Lamanites did come again against us to battle, and we did stand against them boldly; but it was all in vain, for so great were their numbers that they did tread the people of the Nephites under their feet.

And it came to pass that we did again take to flight, and those whose flight was swifter than the Lamanites' did escape, and those whose flight did not exceed the Lamanites' were swept down and destroyed.

8 இப்பொழுதும் இதோ, மார்மனாகிய நான் என்
கண்களுக்கு முன்னிருந்த அந்த பயங்கரமான
இரத்தமும், சங்காரமுமுள்ள காட்சியை மனுஷர்
முன் வைத்து அவர்களுடைய ஆத்துமாக்களை
வேதனைக்குள்ளாக்க வேண்டுமென்பது என்
வாஞ்சை அல்ல. இக்காரியங்கள் கண்டிப்பாக
அறிவிக்கப்படுமென்றும், மறைக்கப்பட்ட சகல-
மும் வீடுகளின் கூரைகளின்மேல் வெளிப்படுத்-
தப்படுமென்றும், அறிந்து,

And now behold, I, Mormon, do not desire to harrow up the souls of men in casting before them such an awful scene of blood and carnage as was laid before mine eyes; but I, knowing that these things must surely be made known, and that all things which are hid must be revealed upon the house-tops—

9 இவைகளைக் குறித்த ஞானம் இந்த ஜனங்களி-
னுடைய மீதியானோருக்கும், இந்த ஜனங்களை சி-
தறடிக்கப்பண்ணுவார்கள் என்று கர்த்தர் சொன்ன
புறஜாதிகளுக்கும் வருமென்ற விவரம் தெரிய-
வேண்டும் என்றும், இந்த ஜனங்கள் அவர்களுக்-
குள் துச்சமாக எண்ணப்படுவார்கள் என்றும்,
நான் பெற்றுக்கொண்ட கட்டளையினிமித்தமும்,
இந்த ஜனங்களின் துன்மார்க்கத்தினால் உங்களுக்-
கு பெரும் துக்கம் ஏற்படக்கூடாதென்பதற்காகவும்,
நான் கண்டவைகளைக் குறித்த முழுத்தொகுப்-
பைக் கொடுக்கத் துணியாமல், சிறு சுருக்கத்தையே
எழுதுகிறேன்.

And also that a knowledge of these things must come unto the remnant of these people, and also unto the Gentiles, who the Lord hath said should scatter this people, and this people should be counted as naught among them—therefore I write a small abridgment, daring not to give a full account of the things which I have seen, because of the commandment which I have received, and also that ye might not have too great sorrow because of the wickedness of this people.

10 இப்பொழுதும் இதோ, நான் அவர்களுடைய சந்த-
திக்காகவும், அவர்களுடைய ஆசீர்வாதங்கள் எங்-
கிருந்து வருகிறதென்று உணர்ந்து தெரிந்துகொள்-
கிற, இஸ்ரவேலின் வீட்டாரில் அக்கறை கொண்டி-
ருக்கிற, புறஜாதிகளுக்காகவும் இதைச் சொல்லுகி-
றேன்.

And now behold, this I speak unto their seed, and also to the Gentiles who have care for the house of Israel, that realize and know from whence their blessings come.

11 அப்படிப்பட்டவர்களே இஸ்ரவேலின் வீட்டாரின்
பேராபத்துகளுக்காக துக்கிப்பார்கள் என்று நான்
அறிவேன்; ஆம், அவர்கள் இந்த ஜனத்தின் அழி-
விற்காக துக்கிப்பார்கள். இயேசுவின் கரங்களால்
அரவணைக்கப்பட்டிருக்க, இந்த ஜனம் மனந்தி-
ரும்பவில்லையே என்றும் அவர்கள் துக்கிப்பார்-
கள்.

For I know that such will sorrow for the calamity of the house of Israel; yea, they will sorrow for the destruction of this people; they will sorrow that this people had not repented that they might have been clasped in the arms of Jesus.

12 இப்பொழுது இவைகள் யாக்கோபின் வீட்டாரு-
டைய மீதியானோருக்கு எழுதப்பட்டிருக்கிறது;
துன்மார்க்கம் அவைகளை அவர்களிடத்திற்குக்
கொண்டு செல்லாது என்று தேவன் அறிந்திருப்ப-
தாலே, அவைகள் இவ்விதமாய் எழுதப்பட்டிருக்கி-
றது; அவைகள் கர்த்தருடைய சொந்த ஏற்ற காலத்-
தில் வரும்படிக்கு அவருக்குள்ளாக மறைக்கப்பட
வேண்டும்.

Now these things are written unto the remnant of the house of Jacob; and they are written after this manner, because it is known of God that wickedness will not bring them forth unto them; and they are to be hid up unto the Lord that they may come forth in his own due time.

13 நான் பெற்றுக்கொண்ட கட்டளை இதுவே; இதோ,
கர்த்தர் தம்முடைய ஞானத்தில் சரியென்று கா-
ணும்போது, அவருடைய கட்டளையின்படியே
அவை வெளிவரும்.

And this is the commandment which I have received; and behold, they shall come forth according to the commandment of the Lord, when he shall see fit, in his wisdom.

14 இதோ, அவை யூதர்களின் அவிசுவாசிகளுக்குள்-
ளே போகும், அவை போகிற நோக்கம் என்னவெ-
னில், இயேசுவே ஜீவிக்கிற தேவனின் குமாரனாகிய
கிறிஸ்து என்று அவர்களுக்கு உணர்த்தவும், யூதர்-
கள் அல்லது இஸ்ரவேல் வீட்டாரெல்லாரும் தே-
வனாகிய அவர்களின் கர்த்தர் அவர்களுக்குக்
கொடுத்த உடன்படிக்கையை நிறைவேற்றும்படிக்-
கு, அவர்களுடைய சுதந்திர தேசத்திற்குள் திரும்பச்
சேர்க்கப்படும்படியான தம்முடைய பெரிதும், நித்-
தியமுமான திட்டத்தை தமக்கு மிகவும் பிரியமான-
வரின் மூலம் பிதா நிறைவேற்றவும்,

And behold, they shall go unto the unbelieving of the Jews; and for this intent shall they go—that they may be persuaded that Jesus is the Christ, the Son of the living God; that the Father may bring about, through his most Beloved, his great and eternal purpose, in restoring the Jews, or all the house of Israel, to the land of their inheritance, which the Lord their God hath given them, unto the fulfilling of his covenant;

15 இந்த ஜனத்தினுடைய சந்ததியார், புறஜாதிகளி-
டத்திலிருந்து தங்களிடத்தில் வரவிருக்கிற அவரு-
டைய சுவிசேஷத்தை பூரணமாய் விசுவாசிக்கும்ப-
டிக்கும், நமக்குள் இருக்கிற லாமானியர் மத்தியிலே
கூட என்றுமே இருந்திராத, நம் மத்தியிலும் இருந்தி-
ராத, விவரிப்பதற்கு அப்பாற்பட்டு, இந்த ஜனங்கள்
சிதறடிக்கப்பட்டு, கருமையானவர்களாயும், அசுசி-
யுள்ளவர்களாயும், அருவருக்கத்தக்கவர்களாயும்
இருப்பார்கள். இது அவர்களுடைய அவிசுவாசத்-
தினாலும், விக்கிரக ஆராதனையினிமித்தமுமே.

And also that the seed of this people may more fully believe his gospel, which shall go forth unto them from the Gentiles; for this people shall be scattered, and shall become a dark, a filthy, and a loathsome people, beyond the description of that which ever hath been amongst us, yea, even that which hath been among the Lamanites, and this because of their unbelief and idolatry.

16 ஏனெனில் இதோ, கர்த்தருடைய ஆவி அவர்களு-
டைய பிதாக்களிடம் கிரியை செய்வதிலிருந்து ஏற்-
கனவே நின்றுவிட்டது; அவர்கள் உலகில் கிறிஸ்-
துவும் தேவனுமில்லாதிருக்கிறார்கள், அவர்கள்
காற்றினால் பறக்கடிக்கப்படுகிற பதரைப்போல
துரத்தப்படுகிறார்கள்.

For behold, the Spirit of the Lord hath already ceased to strive with their fathers; and they are without Christ and God in the world; and they are driven about as chaff before the wind.

17 அவர்கள் ஒரு காலத்தில் விரும்பத்தக்க ஜனமாய்
இருந்தார்கள்; அவர்கள் கிறிஸ்துவை தங்கள்
மேய்ப்பராக வைத்திருந்தார்கள்; ஆம், அவர்கள்
பிதாவாகிய தேவனாலேயே வழிநடத்தப்பட்டார்-
கள்.

They were once a delightsome people, and they had Christ for their shepherd; yea, they were led even by God the Father.

18 காற்றினால் பறக்கடிக்கப்படுகிற பதரைப் போல-
வோ அல்லது துடுப்போ, நங்கூரமோ, திசை மாற்று-
வதற்கு ஒன்றுமே இல்லாமல் அலைகளின் மேல்
அலைக்கழிக்கப்படுகிற ஓடத்தைப் போலவோ,
அவர்கள் சாத்தானால் வழிநடத்தப்படுகிறார்கள்;
அதைப் போலவே அவர்களும் இருக்கிறார்கள்.

But now, behold, they are led about by Satan, even as chaff is driven before the wind, or as a vessel is tossed about upon the waves, without sail or anchor, or without anything wherewith to steer her; and even as she is, so are they.

19 இதோ, அவர்கள் தேசத்தில் பெற்றிருக்கவேண்-
டிய அவர்களுடைய ஆசீர்வாதங்களை, கர்த்தர் தே-
சத்தை சுதந்தரிக்கப் போகும் புறஜாதியாருக்காக
வைத்திருக்கிறார்.

And behold, the Lord hath reserved their blessings, which they might have received in the land, for the Gentiles who shall possess the land.

20 ஆனால் இதோ, அவர்கள் புறஜாதிகளால் துரத்-
தப்பட்டு, சிதறடிக்கப்படுவார்கள்; அவர்கள் புற-
ஜாதிகளால் துரத்தப்பட்டு, சிதறடிக்கப்பட்ட பின்பு,
இதோ, கர்த்தர் தாம் ஆபிரகாமினிடத்திலும், இஸ்ர-
வேல் வீட்டார் எல்லாருடனும் செய்துகொண்ட
உடன்படிக்கையை நினைவுகூருவார்.

But behold, it shall come to pass that they shall be driven and scattered by the Gentiles; and after they have been driven and scattered by the Gentiles, behold, then will the Lord remember the covenant which he made unto Abraham and unto all the house of Israel.

21 அவர்களுக்காக தன்னிடத்தில் விண்ணப்பம்
பண்ணப்பட்ட, நீதிமான்களின் ஜெபங்களையும்
கர்த்தர் நினைவுகூருவார்.

And also the Lord will remember the prayers of the righteous, which have been put up unto him for them.

22 அப்படியானால், புறஜாதியாரே, நீங்கள் மனந்தி-
ரும்பி, உங்களுடைய பொல்லாத வழிகளிலிருந்து
திரும்பாமல், தேவ வல்லமைக்கு முன்பாக நீங்கள்
எப்படி நிற்க முடியும்?
23 நீங்கள் தேவ கரங்களிலிருக்கிறீர்கள் என்று நீங்-
கள் அறிந்திருக்கவில்லையா? அவருக்கு எல்லா
வல்லமையும் உண்டென்றும், அவருடைய மகா
கட்டளையினால், பூமி ஒரு புஸ்தகச் சுருளைப்-
போல சுருட்டப்படும் என்றும் நீங்கள் அறியீர்களா?
24 ஆதலால் அவர் உங்களுக்கு விரோதமாய் நியா-
யம் விசாரிக்க வராதபடிக்கும், யாக்கோபின் சந்ததி-
யின் மீதியானோர் உங்களுக்குள் ஒரு சிங்கத்தைப்-
போல வந்து, உங்களைத் துண்டுதுண்டாகக் கிழித்-
துப் போடாதபடிக்கும், நீங்கள் மனந்திரும்பி, அவ-
ருக்கு முன்பாக உங்களையே தாழ்த்துங்கள். உங்க-
ளை விடுவிக்க அங்கே ஒருவருமில்லை.

And then, O ye Gentiles, how can ye stand before the power of God, except ye shall repent and turn from your evil ways?

Know ye not that ye are in the hands of God? Know ye not that he hath all power, and at his great command the earth shall be rolled together as a scroll?

Therefore, repent ye, and humble yourselves before him, lest he shall come out in justice against you—lest a remnant of the seed of Jacob shall go forth among you as a lion, and tear you in pieces, and there is none to deliver.

# மார்மன் 6

1 இப்பொழுதும் நேபியர்களாகிய என் ஜனத்தின்
அழிவைக் குறித்த என் பதிவேட்டினை முடிக்கி-
றேன். அந்தப்படியே, நாங்கள் லாமானியர் முன்-
பாக அணிவகுத்துச் சென்றோம்.

2 மார்மனாகிய நான் லாமானிய ராஜாவுக்கு ஒரு நி-
ருபத்தை எழுதி, அவர்களோடு நாங்கள் யுத்தம்
தொடுக்கும்படியாக குமோரா என்று அழைக்கப்-
பட்ட குன்றுக்கு அருகேயுள்ள, குமோரா தேசத்தில்
எங்களுடைய ஜனங்களை நாங்கள் ஏகமாய்க் கூ-
டச் செய்ய, எங்களுக்கு அனுமதி வழங்கும்படி
அவனிடத்தில் விருப்பம் தெரிவித்தேன்.

3 அந்தப்படியே, நான் விரும்பின காரியத்தைக் கு-
றித்த அனுமதியை, லாமானிய ராஜா எனக்கு
வழங்கினான்.

4 அந்தப்படியே, நாங்கள் குமோரா தேசத்திற்கு
அணிவகுத்துப்போய், குமோரா குன்றைச் சுற்றி-
லும் எங்களுடைய கூடாரங்களைப் போட்டோம்;
அது அநேக தண்ணீர்கள், நதிகள், ஊற்றுக்கள்
கொண்ட தேசமாயிருந்தது; இங்கே நாங்கள் லாமா-
னியர்மேல் அனுகூலம் கொள்ள நம்பிக்கையாயி-
ருந்தோம்.

5 முன்னூற்றி எண்பத்தி நான்கு வருஷங்கள் கடந்-
து போனபோது, நாங்கள் குமோரா தேசத்தில் எங்க-
ளுடைய ஜனங்களில் மீதியானோர் அனைவரை-
யும் கூட்டினோம்.

6 அந்தப்படியே, நாங்கள் எங்களுடைய ஜனங்கள்
எல்லோரையும் குமோரா தேசத்தில் ஒன்றுகூட்டிய-
போது, மார்மனாகிய நான் முதுமையடையத் தொ-
டங்கினேன்; இது என் ஜனத்தினுடைய கடைசிப்
போராட்டம் என்பதை அறிந்தவனாயும், எங்களு-
டைய பிதாக்களால் கையளிக்கப்பட்டுவந்த பரி-
சுத்தமான பதிவேடுகளை, லாமானியர் கைகளுக்-
குள் விழ நான் அனுமதிக்கக்கூடாதென்று (ஏனெ-
னில் லாமானியர் அவைகளை அழித்துப் போடு-
வார்கள்) கர்த்தரால் கட்டளையிடப்பட்டதாலும்,
நான் இந்தப் பதிவேட்டை நேபியின் தகடுகளிலி-
ருந்து எழுதி, என் குமாரனாகிய மரோனிக்கு நான்
கொடுத்த அந்த சில தகடுகளைத் தவிர, கர்த்தரு-
டைய கரத்தால் என் பொறுப்பில் விடப்பட்ட மற்ற
எல்லா பதிவேடுகளையும், குமோரா குன்றில்
மறைத்து வைத்தேன்.

7 அந்தப்படியே, என் ஜனம் தங்கள் மனைவிக-
ளோடும், தங்கள் பிள்ளைகளோடும் இப்பொழுது
லாமானிய சேனைகள் தங்களுக்கு நேராக வருவ-
தைக் கண்டு, எல்லா துன்மார்க்கரின் இருதயங்க-
ளையும் நிரப்புகிற அந்த மரணத்தின் அஞ்சத்தக்க
பயத்தோடுகூட, அவர்களை எதிர்கொள்ளக் காத்-
திருந்தார்கள்.

# Mormon 6

And now I finish my record concerning the destruction of my people, the Nephites. And it came to pass that we did march forth before the Lamanites.

And I, Mormon, wrote an epistle unto the king of the Lamanites, and desired of him that he would grant unto us that we might gather together our people unto the land of Cumorah, by a hill which was called Cumorah, and there we could give them battle.

And it came to pass that the king of the Lamanites did grant unto me the thing which I desired.

And it came to pass that we did march forth to the land of Cumorah, and we did pitch our tents around about the hill Cumorah; and it was in a land of many waters, rivers, and fountains; and here we had hope to gain advantage over the Lamanites.

And when three hundred and eighty and four years had passed away, we had gathered in all the remainder of our people unto the land of Cumorah.

And it came to pass that when we had gathered in all our people in one to the land of Cumorah, behold I, Mormon, began to be old; and knowing it to be the last struggle of my people, and having been commanded of the Lord that I should not suffer the records which had been handed down by our fathers, which were sacred, to fall into the hands of the Lamanites, (for the Lamanites would destroy them) therefore I made this record out of the plates of Nephi, and hid up in the hill Cumorah all the records which had been entrusted to me by the hand of the Lord, save it were these few plates which I gave unto my son Moroni.

And it came to pass that my people, with their wives and their children, did now behold the armies of the Lamanites marching towards them; and with that awful fear of death which fills the breasts of all the wicked, did they await to receive them.

8 அந்தப்படியே, அவர்கள் எங்களுக்கு விரோதமாக
யுத்தம் செய்ய வந்தார்கள். அவர்களுடைய எண்-
ணிக்கையின் மிகுதியினிமித்தம், ஒவ்வொரு ஆத்-
துமாவும் திகிலால் நிறைந்திருந்தது.

And it came to pass that they came to battle against us, and every soul was filled with terror because of the greatness of their numbers.

9 அந்தப்படியே, அவர்கள் என் ஜனத்தின்மேல் பட்-
டயத்தோடும், வில்லோடும், அம்போடும், கோடரி-
யோடும் மற்றும் எல்லா விதத்திலான யுத்தக் கருவி-
களோடும் விழுந்தார்கள்.

And it came to pass that they did fall upon my people with the sword, and with the bow, and with the arrow, and with the ax, and with all manner of weapons of war.

10 அந்தப்படியே, என்னோடு இருந்த என் பத்தாயி-
ரம் மனுஷரும் வெட்டப்பட்டார்கள், அவர்களுக்கு
மத்தியிலே நான் காயப்பட்டு விழுந்தேன்; அவர்கள்
என் ஜீவனுக்கு முடிவுகட்டாமல் என் அருகே கடந்-
து போனார்கள்.

And it came to pass that my men were hewn down, yea, even my ten thousand who were with me, and I fell wounded in the midst; and they passed by me that they did not put an end to my life.

11 அவர்கள் போய் எங்களில் இருபத்தி நாலுபே-
ரைத் தவிர (அவர்களுக்குள் என் மகன் மரோனியு-
மிருந்தான்) மற்ற என் ஜனங்கள் யாவரையும்
வெட்டிப்போட்டார்கள். எங்கள் ஜனங்கள் மரித்தி-
ருக்க, நாங்கள் பிழைத்திருந்து, மறுநாள் காலை-
யில் லாமானியர் தங்கள் பாளயங்களுக்குத் திரும்-
பின பின்பு, நான் முன்னிருந்து வழிநடத்திப்போன
என் ஜனங்களில் பதினாயிரம்பேர் வெட்டப்பட்டுக்
கிடப்பதை குமோரா குன்றின் மேலிருந்து பார்த்-
தோம்.

And when they had gone through and hewn down all my people save it were twenty and four of us, (among whom was my son Moroni) and we having survived the dead of our people, did behold on the morrow, when the Lamanites had returned unto their camps, from the top of the hill Cumorah, the ten thousand of my people who were hewn down, being led in the front by me.

12 என் குமாரனாகிய மரோனியால் வழிநடத்திப்பட்-
டுப்போன, என் ஜனங்களின் பதினாயிரம்பேரை-
யும் கண்டோம்.

And we also beheld the ten thousand of my people who were led by my son Moroni.

13 இதோ, கித்கித்தோனாவின் பதினாயிரம் பேரும்
வீழ்ந்து போனார்கள். அவர்களுக்குள்ளே
அவனும் இருந்தான்.

And behold, the ten thousand of Gidgiddonah had fallen, and he also in the midst.

14 லாமா தன்னுடைய பதினாயிரம் பேரோடு விழுந்-
தான்; கில்கால் தன்னுடைய பதினாயிரம் பேரோடு
விழுந்தான்; லிம்கா தன்னுடைய பதினாயிரம் பே-
ரோடு விழுந்தான்; எனீயும் தன்னுடைய பதினாயி-
ரம் பேரோடு விழுந்தான்; குமேனிகாவும், மரோனி-
காவும், அந்தியோனமும், சிப்லோமும், சேமும், யோ-
சும் ஆக ஒவ்வொருவரும் தங்களுடைய பதினாயி-
ரம் பேரோடு விழுந்தார்கள்.

And Lamah had fallen with his ten thousand; and Gilgal had fallen with his ten thousand; and Limhah had fallen with his ten thousand; and Jeneum had fallen with his ten thousand; and Cumenihah, and Moronihah, and Antionum, and Shiblom, and Shem, and Josh, had fallen with their ten thousand each.

15 அந்தப்படியே, அங்கே இன்னும் பத்துபேர், ஒவ்-
வொருவரும் தங்களின் பதினாயிரம் பேருடன் பட்-
டயத்தால் வீழ்ந்து போனார்கள்; என்னோடுகூட
இருந்த அந்த இருபத்தி நான்கு பேரையும், தென் நா-
டுகளுக்குத் தப்பிப்போன சிலரையும், லாமானிய-
ரோடு சேர்ந்துகொண்ட சிலரையும் தவிர, என் எல்-
லா ஜனங்களும் வீழ்ந்துபோனார்கள்; பூமியின்
மேல் கிடக்கும் அவர்களின் சரீரமும் எலும்புகளும்,
இரத்தமும், பூமியின் பரப்பின்மீது அழுகி, மண்-
ணோடு மண்ணாகி தங்களின் தாய் பூமிக்கே திரும்-
பிப்போக அவர்களை வெட்டிப் போட்டவர்களின்
கைகளால் விடப்பட்டிருக்கின்றன.

And it came to pass that there were ten more who did fall by the sword, with their ten thousand each; yea, even all my people, save it were those twenty and four who were with me, and also a few who had escaped into the south countries, and a few who had deserted over unto the Lamanites, had fallen; and their flesh, and bones, and blood lay upon the face of the earth, being left by the hands of those who slew them to molder upon the land, and to crumble and to return to their mother earth.

16 என் ஜனங்களில் கொன்று போடப்பட்டவர்களி-
னிமித்தம் என் ஆத்துமா வியாகுலத்தால் கிழிந்தது,
நான் கூக்குரலிட்டு:

And my soul was rent with anguish, because of the slain of my people, and I cried:

17 சௌந்தரியமுள்ளவர்களே, நீங்கள் கர்த்தரு-
டைய வழிகளிலிருந்து விலகிப்போனதெப்படி!
சௌந்தரியமுள்ளவர்களே, உங்களை ஏற்றுக்-
கொள்ள கரங்களை விரித்து நின்ற, அந்த இயேசு-
வை உங்களால் எப்படி தள்ளிவிட முடிந்தது!

O ye fair ones, how could ye have departed from the ways of the Lord! O ye fair ones, how could ye have rejected that Jesus, who stood with open arms to receive you!

18 இதோ, இதை நீங்கள் செய்திருக்கவில்லையெ-
னில், நீங்கள் வீழ்ந்து போயிருக்கமாட்டீர்கள்.
ஆனால் இதோ, நீங்கள் வீழ்ந்து போனீர்கள். உங்-
கள் இழப்பினிமித்தம் நான் துக்கிக்கிறேன்.

Behold, if ye had not done this, ye would not have fallen. But behold, ye are fallen, and I mourn your loss.

19 சௌந்தரியமுள்ள குமாரரே, குமாரத்திகளே,
தகப்பன்மாரே, தாய்மாரே, புருஷரே, மனைவிகளே,
சௌந்தரியமானவர்களே, நீங்கள் எப்படி வீழ்ந்து
போனீர்கள்!

O ye fair sons and daughters, ye fathers and mothers, ye husbands and wives, ye fair ones, how is it that ye could have fallen!

20 ஆனால், இதோ, நீங்கள் போனீர்கள், என் வே-
தனை உங்களைத் திரும்பி அழைத்துவராது.

But behold, ye are gone, and my sorrows cannot bring your return.

21 உங்களுடைய சாவுக்கேதுவான சரீரங்கள் சாவா-
மையைத் தரித்துக்கொள்ளும் நாள் சீக்கிரத்தில்
வருகிறது, அழிவினால் கெட்டுப்போகிற இந்த சரீ-
ரங்கள் சீக்கிரத்தில் அழிவில்லாத சரீரங்களாக மாற
வேண்டும்; அப்பொழுது நீங்கள் உங்களுடைய கி-
ரியைகளுக்குத் தக்கதாக நியாயந்தீர்க்கப்படும்படி
கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்க
வேண்டும்; நீங்கள் நீதிமான்களாயிருந்தால், உங்க-
ளுக்கு முன்போன உங்களுடைய பிதாக்களோடு
ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

And the day soon cometh that your mortal must put on immortality, and these bodies which are now moldering in corruption must soon become incorruptible bodies; and then ye must stand before the judgment-seat of Christ, to be judged according to your works; and if it so be that ye are righteous, then are ye blessed with your fathers who have gone before you.

22 இந்தப் பெரும் அழிவு உங்கள்மேல் வருமுன்னே
நீங்கள் மனந்திரும்பியிருக்க வேண்டும். ஆனால்
இதோ, நீங்களோ கடந்து போனீர்கள், பிதா, ஆம்,
பரலோகத்தின் நித்திய பிதா, உங்களுடைய நிலை-
யை அறிந்திருக்கிறார்; அவர் தம்முடைய நியாயம்
மற்றும் இரக்கத்தின்படியே உங்களுக்குச் செய்வார்.

O that ye had repented before this great destruction had come upon you. But behold, ye are gone, and the Father, yea, the Eternal Father of heaven, knoweth your state; and he doeth with you according to his justice and mercy.

## மார்மன் 7

1 இதோ, இந்த ஜனங்களின் தப்புவிக்கப்பட்ட மீதியா-
னோர், தங்களுடைய பிதாக்களின் காரியங்க-
ளைக் குறித்து அறியத்தக்கதாக என் வார்த்தைக-
ளை அவர்களுக்குக் கொடுப்பது தேவனுக்கு சித்த-
மாயிருந்தால், நான் அவர்களிடத்தில் சற்று பேசுகி-
றேன்; ஆம், இஸ்ரவேலின் வீட்டாரின் மீதியானவர்-
களே, நான் உங்களிடத்தில் பேசுகிறேன்; நான் பேசு-
கிற வார்த்தைகள் இவைகளே.
2 நீங்கள் இஸ்ரவேல் வீட்டார் என்பதை அறிந்து
கொள்ளுங்கள்.
3 நீங்கள் மனந்திரும்புதலுக்குள் வரவேண்டும்,
இல்லாவிடில் நீங்கள் இரட்சிக்கப்பட முடியாது என்-
பதை அறிந்து கொள்ளுங்கள்.
4 தேவன் உங்களுக்குக் கட்டளையிட்டாலொழிய,
நீங்கள் உங்களுடைய யுத்தக்கருவிகளை கீழே
போட்டு, இனி ஒருபோதும் இரத்தம் சிந்துதலில் மன-
மகிழ்ச்சியாயிராமல், அவைகளை மறுபடியும்
எடுக்க கூடாதென்று நீங்கள் அறியுங்கள்.
5 நீங்கள் உங்களுடைய பிதாக்களினுடைய ஞா-
னத்திற்கு வந்து, உங்களுடைய எல்லா பாவங்களி-
லிருந்தும், அக்கிரமங்களிலிருந்தும் மனந்திரும்பி,
இயேசு கிறிஸ்துவே தேவ குமாரனென்றும், அவர்
யூதர்களால் கொலையுண்டார் என்றும், பிதாவின்
வல்லமையால் மறுபடியும் எழுந்தாரென்றும், அதி-
னிமித்தம் கல்லறையின் மேல் ஜெயம் கொண்டா-
ரென்றும், அவரில்தானே மரணத்தின் கொடுக்கும்
விழுங்கப்பட்டதென்றும் விசுவாசிக்கவேண்டு-
மென்றும் அறியுங்கள்.
6 அதினிமித்தம் மனுஷர் அவருடைய நியாயா-
சனத்திற்கு முன்பாக நிற்க எழுப்பப்பட்டு, அவர்
மரித்தோரின் உயிர்த்தெழுதலை சம்பவிக்கப்பண்-
ணுகிறார்.
7 அவர் உலகத்தின் மீட்பை சம்பவிக்கப்பண்ணி-
னார், அதனாலே நியாயத்தீர்ப்பின் நாளிலே அவ-
ருக்கு முன்பாகக் குற்றமற்றவனாகக் காணப்படுகி-
றவன் தேவ சமுகத்தில் அவருடைய ராஜ்யத்தில்
வாசம்பண்ணவும், ஒன்றான தேவனாயிருக்கிற பி-
தாவிற்கும் குமாரனுக்கும், பரிசுத்த ஆவியானவ-
ருக்கும் உன்னதத்திலுள்ள பாடகர்களுடனே முடி-
வற்ற மகிழ்ச்சியான நிலையிலே இடைவிடாமல் து-
திகளைப் பாடவும் அனுமதித்திருக்கிறார்.
8 ஆகவே மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தில் ஞா-
னஸ்நானம் பெற்றுக்கொண்டு, உங்களுக்கு முன்-
பாக வைக்கப்படும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை-
யும் இப்பதிவேடுகளில் மாத்திரமல்ல, யூதர்களிடமி-
ருந்து புறஜாதியாருக்கும், பின்பு புறஜாதியாரிடத்-
திலிருந்து உங்களுக்கும் வரவிருக்கிற பதிவேடுக-
ளையும், பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்.

## Mormon 7

And now, behold, I would speak somewhat unto the remnant of this people who are spared, if it so be that God may give unto them my words, that they may know of the things of their fathers; yea, I speak unto you, ye remnant of the house of Israel; and these are the words which I speak:

Know ye that ye are of the house of Israel.

Know ye that ye must come unto repentance, or ye cannot be saved.

Know ye that ye must lay down your weapons of war, and delight no more in the shedding of blood, and take them not again, save it be that God shall command you.

Know ye that ye must come to the knowledge of your fathers, and repent of all your sins and iniquities, and believe in Jesus Christ, that he is the Son of God, and that he was slain by the Jews, and by the power of the Father he hath risen again, whereby he hath gained the victory over the grave; and also in him is the sting of death swallowed up.

And he bringeth to pass the resurrection of the dead, whereby man must be raised to stand before his judgment-seat.

And he hath brought to pass the redemption of the world, whereby he that is found guiltless before him at the judgment day hath it given unto him to dwell in the presence of God in his kingdom, to sing ceaseless praises with the choirs above, unto the Father, and unto the Son, and unto the Holy Ghost, which are one God, in a state of happiness which hath no end.

Therefore repent, and be baptized in the name of Jesus, and lay hold upon the gospel of Christ, which shall be set before you, not only in this record but also in the record which shall come unto the Gentiles from the Jews, which record shall come from the Gentiles unto you.

9 ஏனெனில் இதோ, அதை நீங்கள் விசுவாசிக்கும்-
பொருட்டு இது எழுதப்பட்டிருக்கிறது; நீங்கள்
அதை விசுவாசித்தால் இதையும் விசுவாசிப்பீர்கள்;
நீங்கள் இதை விசுவாசித்தால் நீங்கள் உங்கள் பி-
தாக்களைக் குறித்தும், அவர்களுக்குள் தேவ வல்-
லமையால் நடப்பிக்கப்பட்ட மகத்துவமுள்ள கிரி-
யைகளைக் குறித்தும் அறிவீர்கள்.
10 நீங்கள் யாக்கோபின் சந்ததியாரின் மீதியானவர்-
கள் என்றும் அறிந்துகொள்வீர்கள்; ஆதலால் நீங்-
கள் முதல் உடன்படிக்கையின் ஜனங்களுக்குள்ளே
எண்ணப்படுவீர்கள்; நீங்கள் கிறிஸ்துவில் விசு-
வாசித்து நம்முடைய இரட்சகர் நமக்குக் கட்டளை-
யிட்டபடியே அவருடைய எடுத்துக்காட்டைப் பின்-
பற்றி நீங்கள் முதலில் ஜலத்தாலும், பின்பு அக்கி-
னியாலும், பரிசுத்த ஆவியானவராலும், ஞானஸ்-
நானம் பெறுவீர்களானால், நியாயத்தீர்ப்பின் நா-
ளிலே அது உங்களுக்கு நலமாயிருக்கும். ஆமென்.

For behold, this is written for the intent that ye may believe that; and if ye believe that ye will believe this also; and if ye believe this ye will know concerning your fathers, and also the marvelous works which were wrought by the power of God among them.

And ye will also know that ye are a remnant of the seed of Jacob; therefore ye are numbered among the people of the first covenant; and if it so be that ye believe in Christ, and are baptized, first with water, then with fire and with the Holy Ghost, following the example of our Savior, according to that which he hath commanded us, it shall be well with you in the day of judgment. Amen.

## மார்மன் 8

1 இதோ மரோனியாகிய நான் என் தகப்பனாகிய மார்-
மனின் பதிவேடுகளை முடிக்கிறேன். இதோ, என்
தகப்பனால் எனக்குக் கட்டளையிடப்பட்ட, எழுத-
வேண்டிய சில உண்டு.
2 இப்பொழுதும், அந்தப்படியே, குமோராவில்
நடந்த அந்தப் பெரிதும் பயங்கரமுமான யுத்தத்திற்-
குப் பிறகு, இதோ, தென்தேசத்திற்குள் தப்பித்துப்-
போன நேபியர்கள் யாவரும் அழிக்கப்படும்வ-
ரைக்கும் லாமானியரால் வேட்டையாடப்பட்டனர்.
3 என் தகப்பனும் அவர்களால் கொல்லப்பட்டான்,
என் ஜனத்தினுடைய அழிவைப்பற்றிய சோகக்
கதையை எழுத நான் மாத்திரம் மிஞ்சியிருக்கி-
றேன். ஆனால் இதோ, அவர்கள் போய்விட்டார்கள்,
நான் என் தகப்பனின் கட்டளையை நிறைவேற்று-
கிறேன். அவர்கள் என்னைக் கொல்லுவார்களா
என்பதையும் நான் அறியேன்.
4 ஆதலால் நான் பதிவேடுகளை எழுதி, அவைக-
ளை பூமியிலே மறைத்து வைப்பேன்; நான் எங்கு
போகிறேன் என்பது முக்கியமல்ல.
5 இதோ, என் தகப்பன் இந்தப் பதிவேட்டை எழுதி,
அதற்கான நோக்கத்தையும் எழுதியிருக்கிறார்.
இதோ, தகடுகளின்மேல் இடமிருந்தால் நான் அதை-
யும் எழுதுவேன், ஆனால் நான் எழுதவில்லை; தா-
துக்களும் என்னிடமில்லை, நானோ தனியாய்
இருக்கிறேன். என் தகப்பனும் என் உற்றாரும் யுத்-
தத்திலே கொல்லப்பட்டார்கள், எனக்கு நண்பர்க-
ளோ, போவதற்கு இடமோ இல்லை; நான் ஜீவித்தி-
ருக்கும்படி கர்த்தர் என்னை எவ்வளவு காலம்
அனுமதிப்பார் என்று, நான் அறியேன்.
6 இதோ, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமானவரு-
டைய வருகை துவங்கி, நானூறு வருஷங்கள்
கடந்துபோயின.
7 இதோ, என்னுடைய ஜனமாகிய நேபியர் இல்லாது
போகுமட்டும், அவர்களை லாமானியர் பட்டணந்-
தோறும், இடந்தோறும் வேட்டையாடினார்கள்;
அவர்களுடைய வீழ்ச்சி பெரிதாயிருந்தது; ஆம்,
நேபியர்களாகிய என் ஜனத்தினுடைய அழிவு, பெ-
ரிதும் விசித்திரமுமாயிருக்கிறது.
8 இதோ, கர்த்தருடைய கரம் அதைச் செய்திற்று.
லாமானியர் ஒருவரோடு ஒருவர் யுத்தம் செய்வதை-
யும் காணுங்கள்; இந்த தேசத்தின் பரப்பு கொலை-
யும் இரத்தம் சிந்துதலும் கொண்ட ஒரு தொடர் சுற்-
று; யுத்தத்தின் முடிவை ஒருவனும் அறியான்.
9 இப்பொழுது, இதோ, அவர்களைக் குறித்து நான்
ஒன்றும் சொல்வதில்லை. ஏனெனில் தேசத்தின்
மேல் லாமானியர்களையும், திருடர்களையும் தவிர
வேறொருவரும் இல்லை.

## Mormon 8

Behold I, Moroni, do finish the record of my father, Mormon. Behold, I have but few things to write, which things I have been commanded by my father.

And now it came to pass that after the great and tremendous battle at Cumorah, behold, the Nephites who had escaped into the country southward were hunted by the Lamanites, until they were all destroyed.

And my father also was killed by them, and I even remain alone to write the sad tale of the destruction of my people. But behold, they are gone, and I fulfil the commandment of my father. And whether they will slay me, I know not.

Therefore I will write and hide up the records in the earth; and whither I go it mattereth not.

Behold, my father hath made this record, and he hath written the intent thereof. And behold, I would write it also if I had room upon the plates, but I have not; and ore I have none, for I am alone. My father hath been slain in battle, and all my kinsfolk, and I have not friends nor whither to go; and how long the Lord will suffer that I may live I know not.

Behold, four hundred years have passed away since the coming of our Lord and Savior.

And behold, the Lamanites have hunted my people, the Nephites, down from city to city and from place to place, even until they are no more; and great has been their fall; yea, great and marvelous is the destruction of my people, the Nephites.

And behold, it is the hand of the Lord which hath done it. And behold also, the Lamanites are at war one with another; and the whole face of this land is one continual round of murder and bloodshed; and no one knoweth the end of the war.

And now, behold, I say no more concerning them, for there are none save it be the Lamanites and robbers that do exist upon the face of the land.

10 ஜனங்களுடைய துன்மார்க்கம் பெரிதாகி அவர்-
களை ஜனங்களோடு தரித்திருக்க கர்த்தர் அனும-
தியாமல் போகும்வரைக்கும் தேசத்தில் இருந்த,
இயேசுவின் சீஷர்களைத் தவிர அங்கே வேறொரு-
வனும் மெய்யான தேவனை அறிந்திருக்கவில்-
லை; அவர்கள் தேசத்தில் இருக்கிறார்களா என்று
ஒருவனும் அறியான்.
11 ஆனால் இதோ, என் தகப்பனும் நானும் அவர்க-
ளைக் கண்டிருக்கிறோம். அவர்கள் எங்களுக்குப்
பணிவிடை செய்திருக்கிறார்கள்.
12 இந்தப் பதிவேட்டைப் பெற்று, இதிலிருக்கும் பரி-
பூரணமின்மையினிமித்தம் அதை குறை சொல்லா-
திருக்கிறவன், இவற்றைக் காட்டிலும் பெரிய காரி-
யங்களை அறிந்துகொள்வான். இதோ, நான் மரோ-
னி, கூடுமானால் நான் சகலவற்றையும் உங்களுக்-
குத் தெரிவிப்பேன்.
13 இதோ, இந்த ஜனத்தைக் குறித்துப் பேசுவதை
நான் நிறுத்துகிறேன். நான் மார்மனின் குமாரன்.
என் தகப்பன் நேபியின் சந்ததியாராவார்.
14 நானே இப்பதிவேட்டினைக் கர்த்தருக்குள்
மறைத்து வைக்கிறேன்; கர்த்தருடைய கட்டளை-
யினிமித்தம், அந்தத் தகடுகளுக்கு மதிப்பில்லை.
ஏனெனில் லாபம் பெறுவதற்கென ஒருவனும்
அதைப் பெறப்போவதில்லையென்று அவர் உண்-
மையாகவே சொல்கிறார்; அதன் குறிப்புகளோ பெ-
ரும் மதிப்புள்ளவை; அதை வெளிச்சத்திற்குக்
கொண்டு வருபவனை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.
15 தேவனால் அருளப்பட்டாலொழிய ஒருவனும்
அதை வெளிச்சத்திற்குக் கொண்டுவரக்கூடிய வல்-
லமையைப் பெற்றிருக்கமாட்டான்; தேவனுக்குச்
சித்தமாயிருந்தால் அவருடைய மகிமைக்கென்ற
ஒரே நோக்கத்திற்காகவோ, அல்லது கர்த்தருடைய
பூர்வகால, நீண்டகாலத்துக்கு முன்பே சிதறடிக்கப்-
பட்ட, உடன்படிக்கையின் ஜனங்களின் நலனுக்கா-
கவோ அது நடந்தேறும்.
16 இந்தக் காரியத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு-
வருபவன் பாக்கியவான்; ஏனெனில் தேவ வார்த்-
தையின்படியே அது இருளிலிருந்து வெளிச்சத்-
துக்கு வரும். ஆம், அது பூமியிலிருந்து வெளிக்-
கொண்டு வரப்பட்டு, இருளிலிருந்து பிரகாசித்து,
ஜனங்களினுடைய ஞானத்திற்கேதுவாய் வரும்;
அது தேவ வல்லமையினால் நடக்கும்.
17 பிழைகள் இருக்குமாயின் அது மனிதனாலான
பிழைகளே. ஆனால் இதோ, நாங்கள் ஒரு பிழை-
யையும் அறியோம்; இருப்பினும் தேவன் சகலத்-
தையும் அறிந்திருக்கிறார்; ஆகவே, ஆக்கினைக்-
குள்ளாகத் தீர்க்கிறவன், நரக அக்கினியின் ஆபத்-
துக்குட்படாதபடிக்கு ஜாக்கிரதையாய் இருப்பா-
னாக.

And there are none that do know the true God save it be the disciples of Jesus, who did tarry in the land until the wickedness of the people was so great that the Lord would not suffer them to remain with the people; and whether they be upon the face of the land no man knoweth.

But behold, my father and I have seen them, and they have ministered unto us.

And whoso receiveth this record, and shall not condemn it because of the imperfections which are in it, the same shall know of greater things than these. Behold, I am Moroni; and were it possible, I would make all things known unto you.

Behold, I make an end of speaking concerning this people. I am the son of Mormon, and my father was a descendant of Nephi.

And I am the same who hideth up this record unto the Lord; the plates thereof are of no worth, because of the commandment of the Lord. For he truly saith that no one shall have them to get gain; but the record thereof is of great worth; and whoso shall bring it to light, him will the Lord bless.

For none can have power to bring it to light save it be given him of God; for God wills that it shall be done with an eye single to his glory, or the welfare of the ancient and long dispersed covenant people of the Lord.

And blessed be he that shall bring this thing to light; for it shall be brought out of darkness unto light, according to the word of God; yea, it shall be brought out of the earth, and it shall shine forth out of darkness, and come unto the knowledge of the people; and it shall be done by the power of God.

And if there be faults they be the faults of a man. But behold, we know no fault; nevertheless God knoweth all things; therefore, he that condemneth, let him be aware lest he shall be in danger of hell fire.

18 எனக்குக் காட்டு. இல்லாவிட்டால் நீ அடிக்கப்படு-
வாய் என்று சொல்லுகிறவன், கர்த்தரால் தடை
செய்யப்பட்டதை, கட்டளையிடாதபடிக்கு, ஜாக்கிர-
தையாய் இருப்பானாக.

And he that saith: Show unto me, or ye shall be smitten—let him beware lest he commandeth that which is forbidden of the Lord.

19 ஏனெனில் இதோ, துரிதமாய் நியாயம் விசாரிக்கி-
றவன் மறுபடியும் துரிதமாய் நியாயம் விசாரிக்கப்-
படுவான்; ஏனெனில் அவனுடைய கிரியைகளின்-
படியே அவனுடைய சம்பளமும் இருக்கும்; ஆகவே
அடிக்கிறவன் திரும்ப கர்த்தரால் அடிக்கப்படு-
வான்.

For behold, the same that judgeth rashly shall be judged rashly again; for according to his works shall his wages be; therefore, he that smiteth shall be smitten again, of the Lord.

20 வேதவாக்கியம் சொல்வதைப் பாருங்கள், மனு-
ஷன் அடிக்கவும் வேண்டாம், அவன் நியாயம் வி-
சாரிக்கவும் வேண்டாம்; ஏனெனில் நியாயத்தீர்ப்பு
என்னுடையது. பழிவாங்குதலும் என்னுடையது.
நான் சரிக்கட்டுவேன் என்று கர்த்தர் உரைக்கிறார்.

Behold what the scripture says—man shall not smite, neither shall he judge; for judgment is mine, saith the Lord, and vengeance is mine also, and I will repay.

21 கர்த்தருடைய கிரியைகளுக்கு விரோதமாகவும்,
இஸ்ரவேலின் வீட்டாராகிய கர்த்தருடைய உடன்ப-
டிக்கையின் ஜனங்களுக்கு விரோதமாகவும் கோ-
பம்கொண்டு பிணக்குகளை ஏற்படுத்தி, கர்த்தரு-
டைய கிரியையை அழிப்போம். இஸ்ரவேலின் வீட்-
டாரிடம் தாம் செய்த தம்முடைய உடன்படிக்கை-
யை கர்த்தர் நினைவுகூர்வதில்லை, என்று சொல்-
கிறவன் வெட்டப்பட்டு, அக்கினிக்குள் போடப்படு-
கிற அபாயத்திலிருக்கிறான்.

And he that shall breathe out wrath and strifes against the work of the Lord, and against the covenant people of the Lord who are the house of Israel, and shall say: We will destroy the work of the Lord, and the Lord will not remember his covenant which he hath made unto the house of Israel—the same is in danger to be hewn down and cast into the fire;

22 ஏனெனில் அவருடைய எல்லா வாக்குத்தத்தங்க-
ளும் நிறைவேறுமளவும், கர்த்தருடைய நித்திய
நோக்கங்கள் தொடரும்.

For the eternal purposes of the Lord shall roll on, until all his promises shall be fulfilled.

23 ஏசாயாவின் தீர்க்கதரிசனங்களை ஆராயுங்கள்.
இதோ, அவைகளை நான் எழுதமுடியாது. ஆம்,
இதோ நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இந்த தே-
சத்தை சுதந்தரித்து எனக்கு முன்னே போன அந்த
பரிசுத்தவான்கள் கூக்குரலிடுவார்கள்; ஆம், புழு-
தியிலிருந்து அவர்கள் கூக்குரலிடுவார்கள். கர்த்-
தர் ஜீவிக்குமளவும் அவர் அவர்களோடு செய்து-
கொண்ட உடன்படிக்கையை நினைவுகூருவார்.

Search the prophecies of Isaiah. Behold, I cannot write them. Yea, behold I say unto you, that those saints who have gone before me, who have possessed this land, shall cry, yea, even from the dust will they cry unto the Lord; and as the Lord liveth he will remember the covenant which he hath made with them.

24 அவர்களின் ஜெபங்கள், அவர்களுடைய சகோத-
ரருக்காகவே என்று அவர் அறிவார். அவர் அவர்க-
ளுடைய விசுவாசத்தை அறிந்திருந்தார். ஏனெ-
னில் அவருடைய நாமத்தில் அவர்கள் மலைக-
ளைப் பெயர்க்க முடிந்தது. அவருடைய நாமத்தில்
அவர்களால் பூமியை அசையப் பண்ண முடிந்தது.
அவருடைய நாமத்தின் வல்லமையால் அவர்க-
ளால் பூமியை அசைக்க முடிந்தது. அவர்கள் அவ-
ருடைய வார்த்தையின் வல்லமையினாலே, சி-
றைச்சாலைகளை பூமியில் விழச் செய்தார்கள்;
ஆம், கடுமையான சூளையோ, காட்டு மிருகங்க-
ளோ, விஷ சர்ப்பங்களோ, அவருடைய வார்த்தை-
யின் வல்லமையினிமித்தம் அவர்களுக்கு எந்தக்
கேடும் விளைவிக்கவில்லை.

And he knoweth their prayers, that they were in behalf of their brethren. And he knoweth their faith, for in his name could they remove mountains; and in his name could they cause the earth to shake; and by the power of his word did they cause prisons to tumble to the earth; yea, even the fiery furnace could not harm them, neither wild beasts nor poisonous serpents, because of the power of his word.

25 மேலும் இதோ, இக்காரியங்களைக் கொண்டுவ-
ரும்படியாக கர்த்தர் அனுமதிப்பவனுக்காகவும்
அவர்களுடைய ஜெபங்கள் இருந்தன.

And behold, their prayers were also in behalf of him that the Lord should suffer to bring these things forth.

26 அவை வராது என்று ஒருவனும் சொல்லவேண்-
டாம், ஏனெனில் அவை நிச்சயமாகவே வரும்.
ஏனெனில் கர்த்தர் அதைச் சொல்லியிருக்கிறார்;
கர்த்தருடைய கரத்தினால் அவைகள் பூமியிலி-
ருந்து வெளிவரும், ஒருவனும் அதைத் தடுக்கமுடி-
யாது; அற்புதங்கள் ஒழிந்துவிட்டன என்று சொல்-
லப்படும் நாளிலே அது வரும்; மரித்தோரிலிருந்து
ஒருவன் பேசுகிற வண்ணமாய் அது வரும்.

And no one need say they shall not come, for they surely shall, for the Lord hath spoken it; for out of the earth shall they come, by the hand of the Lord, and none can stay it; and it shall come in a day when it shall be said that miracles are done away; and it shall come even as if one should speak from the dead.

27 இரகசிய சங்கங்களாலும், காரிருளின் கிரியைக-
ளினிமித்தமும், பரிசுத்தவான்களின் இரத்தம் கர்த்-
தரிடத்தில் கூக்குரலிடும் நாளில் அது வரும்.

And it shall come in a day when the blood of saints shall cry unto the Lord, because of secret combinations and the works of darkness.

28 ஆம், தேவ வல்லமை மறுதலிக்கப்பட்டு, சபை-
கள் தீட்டுப்படுத்தப்பட்டு தங்கள் இருதயங்களின்
பெருமையினால் உயர்த்தப்பட்டிருக்கும் நாளிலே,
ஆம், தங்கள் சபைகளைச் சார்ந்திருப்போர் பொ-
றாமை கொள்ளும்படிக்கு, ஆம், சபைத் தலைவர்க-
ளும், ஆசிரியர்களும் தங்கள் இருதயங்களின் பெ-
ருமையில் உயர்த்தப்படும் நாளிலே அது வரும்;

Yea, it shall come in a day when the power of God shall be denied, and churches become defiled and be lifted up in the pride of their hearts; yea, even in a day when leaders of churches and teachers shall rise in the pride of their hearts, even to the envying of them who belong to their churches.

29 ஆம், அந்நிய தேசங்களிலே அக்கினி, சூறாவளி,
புகைக்காடு என்று கேள்விப்படும் நாளிலே அது
வரும்.

Yea, it shall come in a day when there shall be heard of fires, and tempests, and vapors of smoke in foreign lands;

30 ஆம், மேலும் பல இடங்களிலும் யுத்தங்கள், யுத்த
வதந்திகள், பூமி அதிர்ச்சிகளைப்பற்றி கேள்விப்ப-
டுவார்கள்.

And there shall also be heard of wars, rumors of wars, and earthquakes in divers places.

31 ஆம், பூமியின் பரப்பின் மீது பெரும் சீர்கேடுகள்
இருக்கும் நாளிலே அது வரும்; அங்கே கொலைக-
ளும், களவுகளும், பொய்யுரைகளும், வஞ்சனைக-
ளும், வேசித்தனங்களும், சகலவிதமான அருவ-
ருப்புகளும் இருக்கும்; அங்கே அநேகர் இதைச்
செய், அல்லது அதைச் செய், அதனால் ஒன்றுமில்-
லை, கர்த்தர் அப்படிப்பட்டவர்களை கடைசி நாளி-
லே காப்பார் என்பார்கள். ஆனால் அப்படிப்பட்ட-
வர்களுக்கு ஐயோ. அவர்கள் கசப்பான பிச்சிலும்,
அக்கிரமக்கட்டிலும் இருக்கிறார்களே.

Yea, it shall come in a day when there shall be great pollutions upon the face of the earth; there shall be murders, and robbing, and lying, and deceivings, and whoredoms, and all manner of abominations; when there shall be many who will say, Do this, or do that, and it mattereth not, for the Lord will uphold such at the last day. But wo unto such, for they are in the gall of bitterness and in the bonds of iniquity.

32 ஆம், சபைகள் கட்டப்பட்டு, என்னிடத்தில் வா-
ருங்கள். உங்களின் பணத்தினிமித்தம், உங்களு-
டைய பாவங்கள் மன்னிக்கப்படும், என்று சொல்-
லும் நாளில் அது வரும்.

Yea, it shall come in a day when there shall be churches built up that shall say: Come unto me, and for your money you shall be forgiven of your sins.

33 துன்மார்க்கமும், மாறுபாடும், வணங்காக்கழுத்-
துமுள்ள ஜனமே, நீங்கள் ஏன் லாபம் பெறுவதற்-
கென சபைகளைக் கட்டியிருக்கிறீர்கள்? உங்கள்
ஆத்துமாக்களின் மேல் ஆக்கினைத்தீர்ப்பைக்
கொண்டுவரும்படியாக, ஏன் தேவ வார்த்தையை
மாற்றிப்போட்டீர்கள்? இதோ, தேவனின் வெளிப்ப-
டுத்தல்களைப் பாருங்கள்; ஏனெனில் இதோ,
இவைகளெல்லாம் நிறைவேறும் காலம் அந்நா-
ளில் வருகிறது.

O ye wicked and perverse and stiffnecked people, why have ye built up churches unto yourselves to get gain? Why have ye transfigured the holy word of God, that ye might bring damnation upon your souls? Behold, look ye unto the revelations of God; for behold, the time cometh at that day when all these things must be fulfilled.

34 இதோ, இக்காரியங்கள் உங்களுக்குள் வரும் அந்நாளிலே, விரைவாய் வரவேண்டியதைக் குறித்த பெரிதும், அற்புதமுமான காரியங்களை கர்த்தர் எனக்குக் காண்பித்தார்.

Behold, the Lord hath shown unto me great and marvelous things concerning that which must shortly come, at that day when these things shall come forth among you.

35 இதோ, நீங்கள் இருப்பதைப்போல நான் உங்களிடத்தில் பேசுகிறேன். ஆனாலும் நீங்கள் இல்லை. ஆனால் இதோ, இயேசு கிறிஸ்து உங்களை எனக்குக் காண்பித்திருக்கிறார். நான் உங்களுடைய நடவடிக்கைகளை அறிந்திருக்கிறேன்.

Behold, I speak unto you as if ye were present, and yet ye are not. But behold, Jesus Christ hath shown you unto me, and I know your doing.

36 நீங்கள் உங்களுடைய இருதயங்களின் பெருமையோடு நடக்கிறீர்கள் என்று நான் அறிவேன்; மேன்மையான வஸ்திரங்களை அணிந்து அதினிமித்தம் பொறாமைக்குள்ளும், பிணக்குகள், வெறுப்புகள், துன்புறுத்தல்கள் மற்றும் எல்லாவிதமான அக்கிரமங்களால், தங்கள் இருதயங்களின் பெருமையினால் உயர்த்தப்படாதிருக்கிறவர்கள் வெகு சிலரே; உங்களுடைய சபைகள், ஆம், ஒவ்வொருவரும் உங்களின் இருதயங்களின் பெருமையினால் கெட்டுப்போனீர்கள்.

And I know that ye do walk in the pride of your hearts; and there are none save a few only who do not lift themselves up in the pride of their hearts, unto the wearing of very fine apparel, unto envying, and strifes, and malice, and persecutions, and all manner of iniquities; and your churches, yea, even every one, have become polluted because of the pride of your hearts.

37 ஏனெனில் இதோ, நீங்கள் எளியவரையும், வறியவரையும், வியாதியஸ்தரையும், உபத்திரவப்படுவோரையும் நேசிப்பதைக் காட்டிலும், அதிகமாய் நீங்கள் பணத்தையும், உங்கள் பொக்கிஷங்களையும், உங்களின் மேன்மையான வஸ்திரங்களையும், உங்கள் சபைகளை அலங்காரம் செய்வதையும் நேசிக்கிறீர்கள்.

For behold, ye do love money, and your substance, and your fine apparel, and the adorning of your churches, more than ye love the poor and the needy, the sick and the afflicted.

38 துருப்பிடித்துப் போகிறவைகளுக்காக, தங்களையே விற்கும் நாசக்காரரே, மாய்மாலக்காரரே, ஆசிரியரே, நீங்கள் ஏன் தேவனின் பரிசுத்த சபையைக் கெடுத்தீர்கள்? ஏன் கிறிஸ்துவின் நாமத்தை உங்கள் மேல் எடுத்துக்கொள்ள வெட்கப்படுகிறீர்கள் என்றும் தீராத துர்பாக்கியத்தைக் காட்டிலும், நித்திய மகிழ்ச்சியின் மதிப்பு பெரியது, என்று நீங்கள் ஏன் நினைப்பதில்லை, உலகப்பிரகார பெருமையினிமித்தமா?

O ye pollutions, ye hypocrites, ye teachers, who sell yourselves for that which will canker, why have ye polluted the holy church of God? Why are ye ashamed to take upon you the name of Christ? Why do ye not think that greater is the value of an endless happiness than that misery which never dies—because of the praise of the world?

39 ஜீவனற்று இருப்பவைகளால் நீங்கள் உங்களையே அலங்கரித்துக்கொண்டு, பசியுள்ளோரும், வறியவரும், வஸ்திரமில்லாதோரும், வியாதியஸ்தரும், உபத்திரவப்படுவோரும் உங்களைக் கடந்துபோக அனுமதித்து அவர்களைக் கவனியாதிருப்பது எதனாலே?

Why do ye adorn yourselves with that which hath no life, and yet suffer the hungry, and the needy, and the naked, and the sick and the afflicted to pass by you, and notice them not?

40 ஆம், லாபம்பெற நீங்கள் ஏன் உங்களுடைய இரகசிய அருவருப்புகளை உருவாக்கி, விதவைகள் கர்த்தருக்கு முன்பாக துக்கிக்கவும், அனாதைகளும் கர்த்தருக்கு முன்பாக துக்கிக்கச் செய்கிறீர்கள், மேலும் உங்கள் தலைகளின்மேல் பழிதீர்க்க, அவர்களுடைய பிதாக்கள் மற்றும் அவர்களுடைய புருஷர்களின் இரத்தம் கர்த்தரிடத்தில் பூமியிலிருந்து கூக்குரலிடச் செய்வது ஏன்?

Yea, why do ye build up your secret abominations to get gain, and cause that widows should mourn before the Lord, and also orphans to mourn before the Lord, and also the blood of their fathers and their husbands to cry unto the Lord from the ground, for vengeance upon your heads?

41 இதோ, பழிதீர்த்தலின் பட்டயம் உங்கள்மேல் தொங்கிக்கொண்டிருக்கிறது; பரிசுத்தவான்களின் இரத்தத்துக்காக அவர் உங்கள்மேல் பழிதீர்க்கிற காலம் சீக்கிரமாய் வரும். ஏனெனில் இனிமேலும் அவர் அவர்களுடைய கூக்குரல்களைச் சகித்துக் கொள்ள மாட்டார்.

Behold, the sword of vengeance hangeth over you; and the time soon cometh that he avengeth the blood of the saints upon you, for he will not suffer their cries any longer.

# மார்மன் 9

1 இப்பொழுதும் கிறிஸ்துவை விசுவாசியாதவர்க-
ளைக் குறித்தும் நான் பேசுகிறேன்.
2 இதோ, உங்களுடைய விசாரிப்பின் நாளை விசு-
வாசிப்பீர்களா, இதோ, கர்த்தர் வரும்போது, ஆம், பூ-
மி ஒரு புஸ்தகச் சுருளைப்போல ஒன்றாகச் சுருட்-
டப்பட்டு, பஞ்சபூதங்கள் மிகுந்த சூட்டினால் உரு-
கிப்போகும். ஆம், அந்த மகா நாளில், தேவ ஆட்டுக்-
குட்டியானவருக்கு முன்பாக நீங்கள் கொண்டுவ-
ரப்படும் அந்த மகா நாளிலே, நீங்கள் தேவன் இல்-
லை என்று சொல்வீர்களா?
3 அதற்குமேலும் நீங்கள் கிறிஸ்துவை மறுதலிப்-
பீர்களா, அல்லது தேவ ஆட்டுக்குட்டியானவரைப்
பார்க்கமுடியுமா? உங்களுடைய குற்றவுணர்வோ-
டே அவருடன் வாசம்பண்ணமுடியும் என்று எண்-
ணுகிறீர்களா? அவருடைய விதிகளை மீறினோம்
என்ற குற்றவுணர்வால் உங்களுடைய ஆத்துமாக்-
கள் வேதனைக்குள்ளாக்கப்பட்டிருக்க, அந்த பரி-
சுத்தமானவரோடு மகிழ்ச்சியுடன் வாசம்பண்ணமு-
டியும் என்று எண்ணுகிறீர்களா?
4 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். பாதா-
ளத்தில் நீங்கள் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்ட
ஆத்துமாக்களோடு வாசம்பண்ணுவதைக்காட்டி-
லும், அந்த பரிசுத்த நீதிபரராகிய தேவனுக்கு முன்-
பாக, உங்களுடைய அசுசியினுடைய உணர்வோடு,
அவருடன் வாசம்பண்ணுவது உங்களுக்கு அதிக
துர்பாக்கியமாயிருக்கும்.
5 ஏனெனில் இதோ, நீங்கள் தேவனுக்கு முன்பாக
உங்களுடைய நிர்வாணத்தையும், தேவமகிமை-
யையும், இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தத்தையும் கா-
ணும்படியாக கொண்டு வரப்படும்பொழுது, அது
உங்கள்மேல் அவிக்கமுடியாத ஜூவாலையை பற்-
றவைக்கும்.
6 அவிசுவாசிகளே கர்த்தரிடத்தில் திரும்புங்கள்;
ஒருவேளை நீங்கள் அந்தப் பெரிதும் கடைசியு-
மான நாளிலே, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்-
தால் கழுவப்பட்டு, அப்பழுக்கற்றவர்களாயும், சுத்-
தமுள்ளவர்களாயும், சௌந்தரியமுள்ளவர்களா-
யும், வெண்ணிறத்தாராயும் காணப்படும்படிக்கு,
இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் பலமாய்க்
கூக்குரலிடுங்கள்.
7 தேவ வெளிப்படுத்தல்களை மறுதலித்து, அவை
நிறுத்தப்பட்டுவிட்டன என்றும், வெளிப்படுத்தல்-
களோ, தீர்க்கதரிசனங்களோ, வரங்களோ, சுகப்ப-
டுத்தலோ, அன்னிய பாஷைகளில் பேசுதலோ,
அன்னிய பாஷைகளை வியாக்கியானம் பண்ணு-
தலோ இல்லை என்றும், சொல்லுகிறவர்களுக்கு
நான் மறுபடியும் பேசுவதாவது;

# Mormon 9

And now, I speak also concerning those who do not believe in Christ.

Behold, will ye believe in the day of your visitation—behold, when the Lord shall come, yea, even that great day when the earth shall be rolled together as a scroll, and the elements shall melt with fervent heat, yea, in that great day when ye shall be brought to stand before the Lamb of God—then will ye say that there is no God?

Then will ye longer deny the Christ, or can ye behold the Lamb of God? Do ye suppose that ye shall dwell with him under a consciousness of your guilt? Do ye suppose that ye could be happy to dwell with that holy Being, when your souls are racked with a consciousness of guilt that ye have ever abused his laws?

Behold, I say unto you that ye would be more miserable to dwell with a holy and just God, under a consciousness of your filthiness before him, than ye would to dwell with the damned souls in hell.

For behold, when ye shall be brought to see your nakedness before God, and also the glory of God, and the holiness of Jesus Christ, it will kindle a flame of unquenchable fire upon you.

O then ye unbelieving, turn ye unto the Lord; cry mightily unto the Father in the name of Jesus, that perhaps ye may be found spotless, pure, fair, and white, having been cleansed by the blood of the Lamb, at that great and last day.

And again I speak unto you who deny the revelations of God, and say that they are done away, that there are no revelations, nor prophecies, nor gifts, nor healing, nor speaking with tongues, and the interpretation of tongues;

8 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
இவைகளை மறுதலிக்கிறவன் கிறிஸ்துவின் சுவி-
சேஷத்தை அறியான்; ஆம், அவன் வேத வாக்கி-
யங்களை வாசிக்கவில்லை; வாசித்திருந்தாலும்
அவன் அவைகளை அறிந்து கொள்ளவில்லை.
9 ஏனெனில் தேவன், நேற்றும் இன்றும் என்றென்-
றும் மாறாதவராயிருக்கிறார் என்றும், அவரில் யா-
தொரு மாறுதலும், யாதொரு மாறுதலின் நிழலாட்-
டமுமில்லை என்றும், நாம் வாசிப்பதில்லையா?
10 இப்பொழுதும் மாறுதலும், மாறுதலின் நிழலாட்ட-
மும் இருக்கிற, ஓர் தேவனை நீங்கள் உங்களுக்குள்
கற்பனை செய்திருப்பீர்களெனில், அற்புதங்க-
ளின் தேவனல்லாத ஒரு தேவனை நீங்கள் உங்க-
ளுக்குள் கற்பனை செய்திருக்கிறீர்கள்.
11 ஆனால் இதோ, நான் உங்களுக்கு அற்புதங்க-
ளின் தேவனாகிய ஆபிரகாமின் தேவனையும்,
ஈசாக்கின் தேவனையும், யாக்கோபின் தேவனை-
யும் காண்பிப்பேன்; அதே தேவன்தான் வானத்தை-
யும், பூமியையும் அதிலுள்ள சகலத்தையும் சிருஷ்-
டித்தார்.
12 இதோ, அவர் ஆதாமை சிருஷ்டித்தார். ஆதாமின்
மூலம் மனுஷனின் வீழ்ச்சி வந்தது. மனுஷனு-
டைய வீழ்ச்சியினிமித்தம் பிதாவும், குமாரனாகிய
இயேசு கிறிஸ்துவும் வந்தார். இயேசு கிறிஸ்துவி-
னாலே மனுஷனுடைய மீட்பு வந்தது.
13 இயேசு கிறிஸ்துவினால் வந்த மனுஷனுடைய
மீட்பினிமித்தம், அவர்கள் கர்த்தருடைய சமுகத்தி-
னுள் மறுபடியும் கொண்டுவரப்படுகிறார்கள்;
ஆம், இதினிமித்தமே சகல மனுஷரும் மீட்கப்படுகி-
றார்கள். ஏனெனில் கிறிஸ்துவின் மரணம் உயிர்த்-
தெழுதலைக் கொண்டுவருகிறது. அது நித்திய நித்-
திரையிலிருந்து மீட்பைக் கொண்டு வருகிறது. எக்-
காளம் தொனிக்கும்போது அந்த நித்திரையிலிருந்-
து சகல மனுஷரும் தேவ வல்லமையினால் விழித்-
துக்கொள்வார்கள்; பெரியவர்களும் சிறியவர்க-
ளும் வந்து, உலகப்பிரகார மரணமாகிய இந்த மர-
ணத்தின் நித்திய கட்டிலிருந்து மீட்கப்பட்டு,
அவிழ்க்கப்பட்டோராய் அவருடைய நியாயவிசார-
ணைக் கூண்டுக்கு முன்பாக சகலமானோரும் நிற்-
பார்கள்.
14 பின்னர் பரிசுத்தமானவரின் நியாயத்தீர்ப்பு
அவர்கள் மேல் வருகிறது; அசுசியானவன் அசுசி-
யாயும், நீதிமான் இன்னும் நீதிமானாயும், மகிழ்ச்சி-
யுடையவன் இன்னும் மகிழ்ச்சியாயும், மகிழ்ச்சி-
யில்லாதவன் இன்னும் மகிழ்ச்சியில்லாதவனாயும்
இருக்கிற காலம் வரும்.

Behold I say unto you, he that denieth these things knoweth not the gospel of Christ; yea, he has not read the scriptures; if so, he does not understand them.

For do we not read that God is the same yesterday, today, and forever, and in him there is no variableness neither shadow of changing?

And now, if ye have imagined up unto yourselves a god who doth vary, and in whom there is shadow of changing, then have ye imagined up unto yourselves a god who is not a God of miracles.

But behold, I will show unto you a God of miracles, even the God of Abraham, and the God of Isaac, and the God of Jacob; and it is that same God who created the heavens and the earth, and all things that in them are.

Behold, he created Adam, and by Adam came the fall of man. And because of the fall of man came Jesus Christ, even the Father and the Son; and because of Jesus Christ came the redemption of man.

And because of the redemption of man, which came by Jesus Christ, they are brought back into the presence of the Lord; yea, this is wherein all men are redeemed, because the death of Christ bringeth to pass the resurrection, which bringeth to pass a redemption from an endless sleep, from which sleep all men shall be awakened by the power of God when the trump shall sound; and they shall come forth, both small and great, and all shall stand before his bar, being redeemed and loosed from this eternal band of death, which death is a temporal death.

And then cometh the judgment of the Holy One upon them; and then cometh the time that he that is filthy shall be filthy still; and he that is righteous shall be righteous still; he that is happy shall be happy still; and he that is unhappy shall be unhappy still.

15 இப்பொழுதும், அற்புதங்களைச் செய்யக்கூடாத ஒரு தேவனை தங்களுக்குள் கற்பனை செய்துகொண்ட அனைவரையும் நான் கேட்கிறேன். நான் சொன்ன இந்தக் காரியங்கள் யாவும் கடந்து விட்டதா? முடிவு வந்து விட்டதா? இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். இல்லை; தேவன் அற்புதங்களின் தேவனாயிருப்பதை நிறுத்திவிடல்லை.

And now, O all ye that have imagined up unto yourselves a god who can do no miracles, I would ask of you, have all these things passed, of which I have spoken? Has the end come yet? Behold I say unto you, Nay; and God has not ceased to be a God of miracles.

16 இதோ, தேவன் நடப்பித்தவைகள் நம்முடைய கண்களுக்கு அற்புதமாய் இல்லையா? ஆம், தேவனுடைய அற்புதமான கிரியைகளை அறிந்துகொள்ளத்தக்கவன் யார்?

Behold, are not the things that God hath wrought marvelous in our eyes? Yea, and who can comprehend the marvelous works of God?

17 அவருடைய வார்த்தையினால் வானமும், பூமியும் உண்டானது, அவருடைய வார்த்தையின் வல்லமையினால் மனுஷன் பூமியின் தூசிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டான்; அவருடைய வார்த்தையின் வல்லமையால் அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டது அற்புதமில்லையென்று, சொல்லத்தக்கவன் யார்?

Who shall say that it was not a miracle that by his word the heaven and the earth should be; and by the power of his word man was created of the dust of the earth; and by the power of his word have miracles been wrought?

18 இயேசு கிறிஸ்து அநேக பலத்த அற்புதங்களை செய்யவில்லை என்று யாரால் சொல்லமுடியும்? அவருடைய அப்போஸ்தலர்களின் கைகளினால் அநேக பலத்த அற்புதங்கள் நடப்பிக்கப்பட்டன.

And who shall say that Jesus Christ did not do many mighty miracles? And there were many mighty miracles wrought by the hands of the apostles.

19 அப்பொழுது அற்புதங்கள் செய்யப்பட்டிருந்தால், பின்பு தேவன் ஏன் அற்புதங்களின் தேவனாய் இருப்பதைவிட்டு, இன்னும் மாறாதவராய் இருக்க முடியும்? இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர் மாறுவதில்லை; அப்படியானால் அவர் தேவனாய் இருக்கமாட்டார்; அவர் தேவனாய் இல்லாமலிருக்கவுமாட்டார், அற்புதங்களின் தேவனாய் இருக்கிறார்.

And if there were miracles wrought then, why has God ceased to be a God of miracles and yet be an unchangeable Being? And behold, I say unto you he changeth not; if so he would cease to be God; and he ceaseth not to be God, and is a God of miracles.

20 மனுபுத்திரருக்குள்ளே அவர் அற்புதங்கள் செய்யாமல் இருப்பதின் காரணம் என்னவெனில், அவர்கள் அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்து, நீதியான பாதையிலிருந்து விலகி, தாங்கள் நம்பவேண்டிய தேவனை அறியாமலிருப்பதே.

And the reason why he ceaseth to do miracles among the children of men is because that they dwindle in unbelief, and depart from the right way, and know not the God in whom they should trust.

21 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கிறிஸ்துவில் விசுவாசித்து, யாதொன்றையும் சந்தேகிக்காமல், கிறிஸ்துவின் நாமத்தில் பிதாவினிடத்தில் எவனும் எதைக் கேட்டாலும் அது அவனுக்குக் கொடுக்கப்படும். இந்த வாக்குத்தத்தம் உலகத்தின் முடிவுபரியந்தமும் உள்ள அனைவருக்கும் ஆகும்.

Behold, I say unto you that whoso believeth in Christ, doubting nothing, whatsoever he shall ask the Father in the name of Christ it shall be granted him; and this promise is unto all, even unto the ends of the earth.

22 ஏனெனில் இதோ, திரளானோர் கேட்டுக்கொண்டிருக்கையிலே, தரித்திருக்கவேண்டிய தமது சீஷர்களுக்கும், தம்முடைய சகல சீஷர்களுக்கும், தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து சொன்னதாவது: நீங்கள் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கியுங்கள்.

For behold, thus said Jesus Christ, the Son of God, unto his disciples who should tarry, yea, and also to all his disciples, in the hearing of the multitude: Go ye into all the world, and preach the gospel to every creature;

23 விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்;

And he that believeth and is baptized shall be saved, but he that believeth not shall be damned;

24 விசுவாசிப்பவர்களை இந்த அறிகுறிகள் தொட-
ரும், என்னுடைய நாமத்தில் அவர்கள் பிசாசுக-
ளைத் துரத்துவார்கள்; அவர்கள் புது பாஷைகளி-
லே பேசுவார்கள்; அவர்கள் சர்ப்பங்களை எடுப்-
பார்கள்; அவர்கள் கடுமையான விஷமான
எதைப் பானம்பண்ணினாலும் அது அவர்களுக்-
குக் கேடு விளைவிக்காது; அவர்கள் வியாதியஸ்-
தர் மேல் கைகளை வைப்பார்கள், அவர்கள் சுகம்-
பெறுவார்கள்.

And these signs shall follow them that believe—in my name shall they cast out devils; they shall speak with new tongues; they shall take up serpents; and if they drink any deadly thing it shall not hurt them; they shall lay hands on the sick and they shall recover;

25 ஒன்றையும் சந்தேகிக்காமல், என் நாமத்தில் விசு-
வாசிக்கிறவன் எவனோ, அவனுக்கு என் வார்த்-
தைகளனைத்தையும், பூமியின் கடையாந்தரம்
வரைக்குமாய் மெய்ப்பிப்பேன்.

And whosoever shall believe in my name, doubting nothing, unto him will I confirm all my words, even unto the ends of the earth.

26 இப்பொழுதும் இதோ, கர்த்தருடைய கிரியைக-
ளுக்கு விரோதமாக நிற்கத்தக்கவன் யார்? அவரு-
டைய வார்த்தைகளை மறுப்பவன் யார்? கர்த்தரு-
டைய சர்வ வல்லமைக்கு விரோதமாய் எழும்பத்-
தக்கவன் யார்? கர்த்தருடைய கிரியைகளை நிந்-
திப்பவன் யார்? கிறிஸ்துவின் பிள்ளைகளை நிந்-
திக்கிறவன் யார்? இதோ, கர்த்தருடைய கிரியைக-
ளை நிந்திக்கிறவர்களே, நீங்கள் மலைத்துப்போய்
அழிவீர்கள்.

And now, behold, who can stand against the works of the Lord? Who can deny his sayings? Who will rise up against the almighty power of the Lord? Who will despise the works of the Lord? Who will despise the children of Christ? Behold, all ye who are despisers of the works of the Lord, for ye shall wonder and perish.

27 நிந்திக்காமலும் ஆச்சரியப்படாமலும் இருந்து,
கர்த்தருடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து,
உங்களுக்குத் தேவையாயிருக்கிற எதையும் இயேசு-
வின் நாமத்தில் பிதாவினிடத்தில் கேளுங்கள். சந்-
தேகிக்காமல் நம்பிக்கையுடன் பூர்வகாலம் தொட்டு
உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரிடத்தில் வந்-
து, அவருக்கு முன்பாக அதிக பயத்தோடும், நடுக்-
கத்தோடும், உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயா-
சப்படுங்கள்.

O then despise not, and wonder not, but hearken unto the words of the Lord, and ask the Father in the name of Jesus for what things soever ye shall stand in need. Doubt not, but be believing, and begin as in times of old, and come unto the Lord with all your heart, and work out your own salvation with fear and trembling before him.

28 உங்களுடைய சோதனைக்காலத்தில் ஞானமாய்
இருங்கள், எல்லா அசுத்தங்களிலிருந்தும் உங்க-
ளை விலக்கிக்கொள்ளுங்கள்; உங்களுடைய இச்-
சைகளை நிறைவேற்றும்படி கேளாமல், நீங்கள்
சோதனைக்குட்படாமல் மெய்யான ஜீவிக்கிற தே-
வனையே சேவிப்போம் என்ற அசைவில்லா உறுதி-
யுடன் கேளுங்கள்.

Be wise in the days of your probation; strip yourselves of all uncleanness; ask not, that ye may consume it on your lusts, but ask with a firmness unshaken, that ye will yield to no temptation, but that ye will serve the true and living God.

29 அபாத்திரராய் நீங்கள் ஞானஸ்நானம் பெறாதப-
டி பார்த்துக்கொள்ளுங்கள்; அபாத்திரராய் நீங்கள்
கிறிஸ்துவின் திருவிருந்தைப் புசிக்காதபடி பார்த்-
துக்கொள்ளுங்கள்; அனைத்தையும் பாத்திரராய்
செய்யவும், அதை ஜீவிக்கிற தேவனுடைய குமா-
ரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் செய்யப்-
பாருங்கள். இதைச் செய்து முடிவுபரியந்தம் நி-
லைத்திருப்பீர்களெனில் நீங்கள் ஒருபோதும் தள்-
ளப்படுவதில்லை.

See that ye are not baptized unworthily; see that ye partake not of the sacrament of Christ unworthily; but see that ye do all things in worthiness, and do it in the name of Jesus Christ, the Son of the living God; and if ye do this, and endure to the end, ye will in nowise be cast out.

30 இதோ, நான் மரித்தோரிலிருந்து பேசுவதைப்-
போல உங்களிடத்திலே பேசுகிறேன்; ஏனெனில்
நீங்கள் என் வார்த்தைகளைப் பெறுவீர்கள், என்று
நான் அறிந்திருக்கிறேன்.

Behold, I speak unto you as though I spake from the dead; for I know that ye shall have my words.

31 என்னுடைய பூரணமின்மையினிமித்தம் என்-
னையும், என் தகப்பனின் பூரணமின்மையினிமித்-
தம் அவரையும் அவருக்கு முன்பாக எழுதினவர்க-
ளையும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்க வேண்டாம்;
நாங்கள் இருந்ததைக் காட்டிலும் நீங்கள் அதிக
ஞானமாய் இருக்கக் கற்றுக்கொள்ளும்படியாக,
தேவன் உங்களுக்கு எங்களின் தவறுகளை வெளி-
யரங்கப்படுத்தினாரே என்று அவருக்கு ஸ்தோத்தி-
ரங்களை ஏறெடுங்கள்.

Condemn me not because of mine imperfection, neither my father, because of his imperfection, neither them who have written before him; but rather give thanks unto God that he hath made manifest unto you our imperfections, that ye may learn to be more wise than we have been.

32 இப்பொழுதும் இதோ, எங்களுக்குக் கையளிக்கப்-
பட்டு, எங்களுடைய பேச்சு வழக்கத்தின்படியே
எங்களால் மாற்றப்பட்ட, சீர்திருத்தப்பட்ட எகிப்திய
பாஷை என்று எங்களுக்குள் அழைக்கப்பட்ட
எழுத்துக்களால், எங்களுடைய ஞானத்தின்படி
இந்தப் பதிவேட்டை எழுதியிருக்கிறோம்.

And now, behold, we have written this record according to our knowledge, in the characters which are called among us the reformed Egyptian, being handed down and altered by us, according to our manner of speech.

33 எங்களுடைய தகடுகள் போதுமான அளவு பெரி-
தாக இருந்திருந்தால், நாங்கள் எபிரேயு பாஷையி-
லே எழுதியிருப்போம்; ஆனால் எபிரேயு பாஷை-
யும் எங்களால் மாற்றப்பட்டது; நாங்கள் எபிரேயு
பாஷையிலே எழுதியிருந்தால் இதோ, நீங்கள் எங்க-
ளுடைய பதிவேட்டில் எந்த பூரணமின்மையையும்
கண்டிருக்கமாட்டீர்கள்.

And if our plates had been sufficiently large we should have written in Hebrew; but the Hebrew hath been altered by us also; and if we could have written in Hebrew, behold, ye would have had no imperfection in our record.

34 நாங்கள் எழுதினவைகளைக் கர்த்தர் அறிந்தி-
ருக்கிறார்; மற்ற எந்த ஜனமும் எங்களுடைய பா-
ஷையை அறிந்திருக்கவில்லை என்பதையும்
கர்த்தர் அறிந்திருக்கிறார்; எங்களுடைய பாஷை-
யை வேறு எந்த ஜனமும் அறியாததினாலே, அதனு-
டைய மொழிபெயர்ப்புக்கு அவர் ஒரு வழியை
ஆயத்தப்படுத்தியிருக்கிறார்.

But the Lord knoweth the things which we have written, and also that none other people knoweth our language; and because that none other people knoweth our language, therefore he hath prepared means for the interpretation thereof.

35 அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்துபோன,
நம்முடைய சகோதரரின் இரத்தத்தை நம்முடைய
வஸ்திரங்களிலிருந்து நாம் நீக்கும்படிக்கே இவை-
கள் எழுதப்பட்டிருக்கின்றன.

And these things are written that we may rid our garments of the blood of our brethren, who have dwindled in unbelief.

36 இதோ, நம்முடைய சகோதரரைப்பற்றி, கிறிஸ்து-
வின் ஞானத்திற்கு அவர்கள் திரும்பி வரவேண்டு-
மென்று, நாங்கள் வாஞ்சித்த இந்தக் காரியங்கள்,
தேசத்திலே வாசம் பண்ணின பரிசுத்தவான்கள்
எல்லாருடைய ஜெபங்களின்படியே இருக்கிறது.

And behold, these things which we have desired concerning our brethren, yea, even their restoration to the knowledge of Christ, are according to the prayers of all the saints who have dwelt in the land.

37 அவர்களுடைய விசுவாசத்திற்கேற்ப அவர்க-
ளின் ஜெபம் பதிலளிக்கப்படும்படி கர்த்தராகிய
இயேசு கிறிஸ்து அருளுவாராக. பிதாவாகிய தே-
வன் தாம் இஸ்ரவேலின் வீட்டாருக்குச் செய்த
உடன்படிக்கையை நினைவுகூர்வாராக. இயேசு கி-
றிஸ்துவின் நாமத்தின் மேலுள்ள விசுவாசத்தின்
மூலம், அவர் அவர்களை என்றென்றுமாய் ஆசீர்வ-
திப்பாராக. ஆமென்.

And may the Lord Jesus Christ grant that their prayers may be answered according to their faith; and may God the Father remember the covenant which he hath made with the house of Israel; and may he bless them forever, through faith on the name of Jesus Christ. Amen.

# ஏத்தேரின் புஸ்தகம்

*மோசியா ராஜாவின் நாட்களில், லிம்கி ஜனங்களால் கண்டெடுக்கப்பட்ட அந்த இருபத்தி நான்கு தகடுகளிலிருந்து எடுக்கப்பட்ட யாரேதியர்களின் பதிவேடு.*

## ஏத்தேர் 1

1 இப்பொழுதும் மரோனியாகிய நான், இந்த வடதே-
சத்திலே கர்த்தருடைய கரத்தினால் அழிக்கப்பட்ட,
அந்த பூர்வ காலத்துக் குடிகளைக் குறித்த ஒரு வி-
வரத்தைக் கொடுக்கிறேன்.
2 ஏத்தேரின் புஸ்தகம் என்று அழைக்கப்படுகிற,
லிம்கியின் ஜனங்களால் கண்டெடுக்கப்பட்ட இரு-
பத்தி நான்கு தகடுகளிலிருந்து என் விவரத்தை
எடுக்கிறேன்.
3 உலகத்தினுடைய சிருஷ்டிப்பைக் குறித்தும்,
ஆதாமைக் குறித்தும், பெரிய கோபுரம் வரைக்கு-
மான சமயம் முதலிலிருந்த விவரத்தையும், அச்சம-
யம் வரைக்கும் மனுபுத்திரருக்குள்ளே சம்பவித்த
காரியங்கள் அனைத்தையும் பேசுகிற, இந்தப் பதி-
வேட்டின் முதற் பகுதி, யூதர்கள் மத்தியிலும் இருந்த-
து, என்று எண்ணுகிறேன்.
4 ஆதலால் ஆதாமின் நாட்களிலிருந்து, அச்சமயம்
வரைக்கும் சம்பவித்த அந்தக் காரியங்களை நான்
எழுதுவதில்லை; ஆனால் அவைகள் தகடுகளின்
மேல் எழுதப்பட்டிருந்தன; அவைகளைக் கண்ட-
டைகிறவன் எவனோ, அவனே முழு விவரத்தையும்
பெறத்தக்கதான வல்லமையைப் பெற்றிருப்பான்.
5 ஆனால் இதோ, நான் முழு விவரத்தையும் கொ-
டுக்காமல், கோபுரம் துவங்கி, அவர்கள் அழிக்கப்-
பட்டது வரையிலான ஒரு பகுதியை மாத்திரம்
கொடுக்கிறேன்.
6 நான் இந்தப் பிரகாரமாய் விவரத்தைக் கொடுக்கி-
றேன். இந்தப் பதிவேட்டினை எழுதினவன் ஏத்தேர்.
அவன் கொரியாந்தரின் சந்ததியான்.
7 கொரியாந்தர், மோரானின் குமாரன்.
8 மோரான் ஏத்தேமின் குமாரன்.
9 ஏத்தேம் ஆகாவின் குமாரன்.
10 ஆகா, சேத்தின் குமாரன்.
11 சேத், சிப்லோனின் குமாரன்.
12 சிப்லோன், கோமின் குமாரன்.
13 கோம், கொரியாந்தமின் குமாரன்.
14 கொரியாந்தம், அம்னிகாத்தாவின் குமாரன்.
15 அம்னிகாத்தா, ஆரோனின் குமாரன்.
16 ஆரோன், இயர்தமின் குமாரனாகிய கேத்தின் சந்-
ததி.

# The Book of Ether

*The record of the Jaredites, taken from the twenty-four plates found by the people of Limhi in the days of King Mosiah.*

## Ether 1

And now I, Moroni, proceed to give an account of those ancient inhabitants who were destroyed by the hand of the Lord upon the face of this north country.

And I take mine account from the twenty and four plates which were found by the people of Limhi, which is called the Book of Ether.

And as I suppose that the first part of this record, which speaks concerning the creation of the world, and also of Adam, and an account from that time even to the great tower, and whatsoever things transpired among the children of men until that time, is had among the Jews—

Therefore I do not write those things which transpired from the days of Adam until that time; but they are had upon the plates; and whoso findeth them, the same will have power that he may get the full account.

But behold, I give not the full account, but a part of the account I give, from the tower down until they were destroyed.

And on this wise do I give the account. He that wrote this record was Ether, and he was a descendant of Coriantor.

Coriantor was the son of Moron.

And Moron was the son of Ethem.

And Ethem was the son of Ahah.

And Ahah was the son of Seth.

And Seth was the son of Shiblon.

And Shiblon was the son of Com.

And Com was the son of Coriantum.

And Coriantum was the son of Amnigaddah.

And Amnigaddah was the son of Aaron.

And Aaron was a descendant of Heth, who was the son of Hearthom.

17 இயர்தம், லிப்பின் குமாரன்.

And Hearthom was the son of Lib.

18 லிப், கீஸின் குமாரன்.

And Lib was the son of Kish.

19 கீஸ், கோரோமின் குமாரன்.

And Kish was the son of Corom.

20 கோரோம் லேவியின் குமாரன்.

And Corom was the son of Levi.

21 லேவி, கிம்மின் குமாரன்.

And Levi was the son of Kim.

22 கிம், மோரியாந்தனின் குமாரன்.

And Kim was the son of Morianton.

23 மோரியாந்தன், ரிப்லாகீஸின் சந்ததியான்.

And Morianton was a descendant of Riplakish.

24 ரிப்லாகீஸ், சேஸின் குமாரன்.

And Riplakish was the son of Shez.

25 சேஸ், கேத்தின் குமாரன்.

And Shez was the son of Heth.

26 கேத், கோமின் குமாரன்.

And Heth was the son of Com.

27 கோம், கொரியாந்தமின் குமாரன்.

And Com was the son of Coriantum.

28 கொரியாந்தம், எமரின் குமாரன்.

And Coriantum was the son of Emer.

29 எமர், ஓமரின் குமாரன்.

And Emer was the son of Omer.

30 ஓமர், சியுலின் குமாரன்.

And Omer was the son of Shule.

31 சியுல், கிப்பின் குமாரன்.

And Shule was the son of Kib.

32 கிப், யாரேதின் குமாரனாகிய ஓரீகாவின் குமாரன்.

And Kib was the son of Orihah, who was the son of Jared;

33 கர்த்தர் ஜனங்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கி, அவர்கள் பூமியின் பரப்பின் மீதெங்கும் சிதறடிக்கப்படவேண்டுமென தம்முடைய கோபத்திலே ஆணையிட்ட சமயத்தில், பெரிய கோபுரத்திலிருந்து இந்த யாரேது தன் சகோதரனுடனும், அவர்களுடைய குடும்பங்களுடனும், வேறு சிலருடனும், அவர்களுடைய குடும்பங்களுடனும் வந்தான். கர்த்தருடைய வார்த்தையின்படியே ஜனங்கள் சிதறடிக்கப்பட்டார்கள்.

Which Jared came forth with his brother and their families, with some others and their families, from the great tower, at the time the Lord confounded the language of the people, and swore in his wrath that they should be scattered upon all the face of the earth; and according to the word of the Lord the people were scattered.

34 யாரேதின் சகோதரன் பெரிய பலசாலியான மனுஷனும். கர்த்தரிடத்தில் மிகவும் சிலாக்கியம் பெற்ற மனுஷனாயும் இருந்தபடியால், அவன் சகோதரனாகிய யாரேது அவனை நோக்கி: நம்முடைய வார்த்தைகளை நாம் புரியாதபடிக்கு கர்த்தர் நம்மைத் தாறுமாறாக்காதவாறு, அவரிடத்தில் கூக்குரலிடு என்றான்.

And the brother of Jared being a large and mighty man, and a man highly favored of the Lord, Jared, his brother, said unto him: Cry unto the Lord, that he will not confound us that we may not understand our words.

35 அந்தப்படியே, யாரேதின் சகோதரன் கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டான். கர்த்தர் யாரேதின் மேல் மனதுருக்கமாயிருந்தார்; ஆதலால் அவர் யாரேதின் பாஷையைத் தாறுமாறாக்கவில்லை; யாரேதும் அவன் சகோதரனும் தாறுமாறாக்கப்படவில்லை.

And it came to pass that the brother of Jared did cry unto the Lord, and the Lord had compassion upon Jared; therefore he did not confound the language of Jared; and Jared and his brother were not confounded.

36 யாரேது தன்னுடைய சகோதரனை நோக்கி: நம்முடைய நண்பர்களிடத்திலிருந்து அவர் தம்முடைய கோபத்தைத் திருப்பி, அவர் அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்காதபடி கர்த்தரிடத்தில் மறுபடியும் கூக்குரலிடு, என்றான்.

Then Jared said unto his brother: Cry again unto the Lord, and it may be that he will turn away his anger from them who are our friends, that he confound not their language.

37 அந்தப்படியே, யாரேதின் சகோதரன் கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டான். கர்த்தர் அவர்களுடைய நண்பர்கள் மேலும் அவர்களுடைய குடும்பங்கள் மேலும் இரங்கினார், அதினிமித்தம் அவர்கள் தாறுமாறாக்கப்படவில்லை.

And it came to pass that the brother of Jared did cry unto the Lord, and the Lord had compassion upon their friends and their families also, that they were not confounded.

38 அந்தப்படியே, யாரேது மறுபடியும் தன் சகோதரனிடத்தில் பேசினதாவது: நீ போய் கர்த்தர் நம்மை தேசத்தைவிட்டு அனுப்பப்போகிறாரா என்று அவரிடத்தில் விசாரி, அவர் நம்மை தேசத்தைவிட்டு அனுப்பினால், நாம் எங்கே போகவேண்டும் என்று அவரிடத்தில் கூக்குரலிடு. பூமியின் மேலுள்ள சகல தேசங்களிலும் சிறந்த தேசத்திற்குள் நம்மை அழைத்துச் செல்வார் என்று கர்த்தரேயன்றி யார் அறிவார்? அது அப்படியானால் அதை நம்முடைய சுதந்திரமாக நாம் பெற்றுக்கொள்ளும்படி கர்த்தரிடத்தில் விசுவாசமாயிருப்போமாக.

And it came to pass that Jared spake again unto his brother, saying: Go and inquire of the Lord whether he will drive us out of the land, and if he will drive us out of the land, cry unto him whither we shall go. And who knoweth but the Lord will carry us forth into a land which is choice above all the earth? And if it so be, let us be faithful unto the Lord, that we may receive it for our inheritance.

39 அந்தப்படியே, யாரேதின் வாயால் பேசப்பட்டபடியே, யாரேதின் சகோதரன் கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டான்.

And it came to pass that the brother of Jared did cry unto the Lord according to that which had been spoken by the mouth of Jared.

40 அந்தப்படியே, கர்த்தர் யாரேதின் சகோதரனுக்குச் செவிகொடுத்து, அவன் மேல் மனதுருகி, அவனை நோக்கி:

And it came to pass that the Lord did hear the brother of Jared, and had compassion upon him, and said unto him:

41 நீ போய் உன் மந்தையில் எல்லா இனத்திலும் ஆணும் பெண்ணுமானவையையும், எல்லா விதமான பூமியின் விதைகளையும், உன் குடும்பங்களையும், உன் சகோதரனாகிய யாரேதையும், அவன் குடும்பத்தையும், உன் சிநேகிதர்களையும், அவர்களுடைய குடும்பத்தினரையும், யாரேதின் சிநேகிதர்களையும், அவர்களுடைய குடும்பங்களையும், ஏகமாய்க் கூட்டுவாயாக.

Go to and gather together thy flocks, both male and female, of every kind; and also of the seed of the earth of every kind; and thy families; and also Jared thy brother and his family; and also thy friends and their families, and the friends of Jared and their families.

42 இதை நீ செய்த பின்பு, நீ அவர்களுக்கு தலைமையேற்று வடக்கேயுள்ள பள்ளத்தாக்கிற்கு இறங்கிப்போவாயாக. அங்கே நான் உன்னை சந்திப்பேன். பூமியிலுள்ள எல்லா தேசங்களிலும் சிறந்த தேசத்தினுள் நான் உன்னை வழிநடத்திச் செல்வேன்.

And when thou hast done this thou shalt go at the head of them down into the valley which is northward. And there will I meet thee, and I will go before thee into a land which is choice above all the lands of the earth.

43 அங்கே நான் உன்னையும் உன் சந்ததியையும் ஆசீர்வதித்து உன் சந்ததியையும் உன் சகோதரனுடைய சந்ததியையும் எனக்கென்று எழுப்பி, உன்னோடுகூட வருகிறவர்களையும், ஒரு பெரிய தேசமாக்குவேன். உன் சந்ததியாரைக்கொண்டு, நான் எனக்கென்று எழும்பப்பண்ணுகிற தேசத்திலும் மேலானவர்கள் ஒருவரும் பூமியின் பரப்பின் மேல் எங்கும் இருக்கமாட்டார்கள். நீ என்னிடத்தில் இதுவரைக்கும் நீண்ட நேரம் கூக்குரலிட்டதினிமித்தம், இதை நான் உனக்குச் செய்வேன் என்றார்.

And there will I bless thee and thy seed, and raise up unto me of thy seed, and of the seed of thy brother, and they who shall go with thee, a great nation. And there shall be none greater than the nation which I will raise up unto me of thy seed, upon all the face of the earth. And thus I will do unto thee because this long time ye have cried unto me.

## ஏத்தேர் 2

1 அந்தப்படியே, யாரேதும் அவன் சகோதரனும்,
அவர்களுடைய குடும்பங்களும் யாரேது மற்றும்
அவன் சகோதரனின் சிநேகிதர்களும் அவர்களின்
குடும்பங்களும், தங்கள் மந்தைகளிலுள்ள எல்லா
இனத்திலுமான ஆணும் பெண்ணுமாக ஏகமாய்க்-
கூட்டி, வடக்கேயுள்ள பள்ளத்தாக்கினுள் போ-
னார்கள் (அந்தப் பள்ளத்தாக்கின் பெயர் நிம்ரோத்
என்பதாகும். அது அந்த பராக்கிரமசாலியான
வேட்டைக்காரனின் பெயரால் அழைக்கப்பட்டது).
2 அவர்கள் கண்ணிகளை வைத்து ஆகாயத்தின்
பட்சிகளைப் பிடித்தார்கள்; அவர்கள் ஒரு பாத்தி-
ரத்தை ஆயத்தம் பண்ணி, அதிலே தங்களுடன்
ஜலத்தின் மீன்களைக் கொண்டுபோனார்கள்.
3 அவர்கள் தங்களுடன் தேனடையையும் கொண்-
டு சென்றார்கள். அதற்கு தேனீ என்று அர்த்தமாம்;
இப்படியாக அவர்கள் தங்களுடனே தேனீக்கள்
கூட்டத்தையும் பூமியின் மேலிருந்த எல்லாவற்றை-
யும் எல்லா வகையான விதைகளையும் எடுத்துச்
சென்றார்கள்.
4 அந்தப்படியே, அவர்கள் நிம்ரோத்தின் பள்ளத்-
தாக்கினுள்ளே வந்தபோது, கர்த்தர் கீழே இறங்கி
வந்து, யாரேதின் சகோதரனுடனே பேசினார்; அவர்
மேகத்திலே இருந்தார். யாரேதின் சகோதரன் அவ-
ரைக் காணவில்லை.
5 அந்தப்படியே, வனாந்தரத்தினுள், ஆம், மனு-
ஷனே இருந்திராத பகுதிக்கு அவர்கள் போக-
வேண்டுமென, கர்த்தர் அவர்களுக்கு கட்டளை-
யிட்டார். அந்தப்படியே, கர்த்தர் அவர்களுக்கு முன்-
னே போய் மேகத்தில் நின்றவாறே அவர்களுடன்
பேசி, அவர்கள் எங்கே பிரயாணம்பண்ண வேண்-
டுமென அறிவுறுத்தினார்.
6 அந்தப்படியே, அவர்கள் வனாந்தரத்தில் பிரயா-
ணம்பண்ணி, தோணிகளைக் கட்டி, அதிலே கர்த்த-
ருடைய கரத்தினால் வழிகாட்டப்பட்டபடியே
அவர்கள் அநேக தண்ணீர்களைக் கடந்தார்கள்.
7 அவர்களை சமுத்திரத்திற்கு அப்பால் வனாந்த-
ரத்தில் நிற்க கர்த்தர் அனுமதிக்கமாட்டார், ஆனால்
தேவனாகிய கர்த்தர் நீதியான ஜனத்திற்கென்று பா-
துகாத்திருக்கிற, மற்ற தேசங்கள் எல்லாவற்றிலும்
சிறந்ததான, வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு அவர்-
கள் வர அனுமதிப்பார்.

## Ether 2

And it came to pass that Jared and his brother, and their families, and also the friends of Jared and his brother and their families, went down into the valley which was northward, (and the name of the valley was Nimrod, being called after the mighty hunter) with their flocks which they had gathered together, male and female, of every kind.

And they did also lay snares and catch fowls of the air; and they did also prepare a vessel, in which they did carry with them the fish of the waters.

And they did also carry with them deseret, which, by interpretation, is a honey bee; and thus they did carry with them swarms of bees, and all manner of that which was upon the face of the land, seeds of every kind.

And it came to pass that when they had come down into the valley of Nimrod the Lord came down and talked with the brother of Jared; and he was in a cloud, and the brother of Jared saw him not.

And it came to pass that the Lord commanded them that they should go forth into the wilderness, yea, into that quarter where there never had man been. And it came to pass that the Lord did go before them, and did talk with them as he stood in a cloud, and gave directions whither they should travel.

And it came to pass that they did travel in the wilderness, and did build barges, in which they did cross many waters, being directed continually by the hand of the Lord.

And the Lord would not suffer that they should stop beyond the sea in the wilderness, but he would that they should come forth even unto the land of promise, which was choice above all other lands, which the Lord God had preserved for a righteous people.

8 அச்சமயம் முதற்கொண்டு என்றென்றுமாய் இந்த
வாக்குத்தத்தத்தின் தேசத்தை சுதந்தரிக்கிற எவரும்
மெய்யான ஒரே தேவனாகிய அவரையே சேவிக்க-
வேண்டும். இல்லையேல் அவர்கள் மேல் அவரு-
டைய முழுக்கோபமும் வருகிறபோது, அவர்கள் து-
டைக்கப்பட்டுப் போவார்கள் என்று, அவர் யாரே-
தின் சகோதரனுக்கு தம்முடைய கோபத்திலே
ஆணையிட்டார்.

And he had sworn in his wrath unto the brother of Jared, that whoso should possess this land of promise, from that time henceforth and forever, should serve him, the true and only God, or they should be swept off when the fulness of his wrath should come upon them.

9 இப்பொழுதும் வாக்குத்தத்தத்தின் தேசமாகிய
இந்த தேசத்தைக் குறித்து தேவனுடைய கட்டளை-
களை நாம் பார்க்கலாம்; அதைச் சுதந்தரிக்கும்
எந்த தேசமும் தேவனை சேவிக்கும். இல்லையேல்
அவர்கள்மேல் அவருடைய முழுக்கோபமும் வரும்-
போது அவர்கள் துடைக்கப்பட்டுப் போவார்கள்.
அவர்கள் அக்கிரமத்திலே பழுக்கும்போது அவரு-
டைய முழுக்கோபமும் அவர்கள்மேல் வரும்.

And now, we can behold the decrees of God concerning this land, that it is a land of promise; and whatsoever nation shall possess it shall serve God, or they shall be swept off when the fulness of his wrath shall come upon them. And the fulness of his wrath cometh upon them when they are ripened in iniquity.

10 ஏனெனில் இதோ, இந்த தேசம் மற்ற எல்லா தேசங்-
களைக் காட்டிலும் சிறந்த தேசமாக இருந்தது. ஆத-
லால் அதை சுதந்தரிக்கிறவர்கள் தேவனை சே-
விக்க வேண்டும்; இல்லையேல் துடைக்கப்பட்டுப்-
போவார்கள். ஏனெனில் அது தேவனுடைய நித்திய
கட்டளையாக இருக்கிறது. தேசத்தின் புத்திரர் மத்-
தியிலே அக்கிரமம் முழுமை அடையும்வரைக்கும்,
அவர்கள் துடைக்கப்பட்டுப் போவதில்லை.

For behold, this is a land which is choice above all other lands; wherefore he that doth possess it shall serve God or shall be swept off; for it is the everlasting decree of God. And it is not until the fulness of iniquity among the children of the land, that they are swept off.

11 புறஜாதியாரே, நீங்கள் மனந்திரும்பவும் தேசத்-
தின் குடிகள் இதுவரைக்கும் செய்ததைப்போல, தே-
வனுடைய முழுமையான உக்கிரத்தை உங்கள்-
மேல் நீங்கள் கொண்டுவராதபடிக்கு, நீங்கள் மனந்-
திரும்பி, உங்களின் அக்கிரமங்கள் முழுமையாவ-
து தொடராமலிருக்கவும், தேவ கட்டளைகளை நீங்-
கள் அறியத்தக்கதாக, இது உங்களிடத்தில் வருகிற-
து.

And this cometh unto you, O ye Gentiles, that ye may know the decrees of God—that ye may repent, and not continue in your iniquities until the fulness come, that ye may not bring down the fulness of the wrath of God upon you as the inhabitants of the land have hitherto done.

12 இதோ, இது சிறந்த தேசமாய் இருக்கிறது. இதை சு-
தந்தரிக்கிற எந்த ஜாதியும், நாங்கள் எழுதினவைக-
ளாலே வெளியரங்கப்பட்ட இயேசு கிறிஸ்துவாகிய,
இந்த தேசத்தின் தேவனை சேவித்தால் அவர்கள்
அடிமைத்தனத்திலிருந்தும், சிறைத்தனத்தலிருந்-
தும், வானத்தின் கீழே மற்ற எல்லா தேசங்களிலி-
ருந்தும் சுதந்தரவாளிகளாக இருப்பார்கள்.

Behold, this is a choice land, and whatsoever nation shall possess it shall be free from bondage, and from captivity, and from all other nations under heaven, if they will but serve the God of the land, who is Jesus Christ, who hath been manifested by the things which we have written.

13 இப்பொழுதும், நான் என் பதிவேட்டைத் தொடரு-
கிறேன்; ஏனெனில் இதோ, அந்தப்படியே, கர்த்தர்
யாரேதையும், அவன் சகோதரரையும், தேசங்க-
ளைப் பிரிக்கிற அந்த மகா சமுத்திரம் வரைக்கு-
மாய்க் கொண்டு வந்தார். அவர்கள் சமுத்திரத்தின்
அருகாமைக்கு வந்தபோது, அவர்கள் பாளையமி-
றங்கினார்கள்; அவர்கள் அவ்விடத்தை மோரீ-
யான்கூமர் என்று அழைத்தார்கள். அவர்கள் கூ-
டாரங்களில் வசித்தார்கள், அவர்கள் நான்கு வரு-
ஷகாலமளவும் கடற்கரையில் கூடாரங்களில்
வசித்தார்கள்.

And now I proceed with my record; for behold, it came to pass that the Lord did bring Jared and his brethren forth even to that great sea which divideth the lands. And as they came to the sea they pitched their tents; and they called the name of the place Moriancumer; and they dwelt in tents, and dwelt in tents upon the seashore for the space of four years.

14 அந்தப்படியே, நான்கு வருஷங்கள் முடிவில் கர்த்-
தர் மறுபடியும் யாரேதின் சகோதரனிடத்தில் வந்து
மேகத்தில் நின்று, அவனுடன் பேசினார். மூன்று
மணிநேரம் அளவும், கர்த்தர் யாரேதின் சகோதரனு-
டன் பேசி, கர்த்தருடைய நாமத்தில் விண்ணப்பம்
பண்ண அவன் நினைவுகூராததின் நிமித்தம்
அவனை சிட்சித்தார்.

And it came to pass at the end of four years that the Lord came again unto the brother of Jared, and stood in a cloud and talked with him. And for the space of three hours did the Lord talk with the brother of Jared, and chastened him because he remembered not to call upon the name of the Lord.

15 யாரேதின் சகோதரன் தான் செய்த பொல்லாப்பி-
லிருந்து மனந்திரும்பி, தன்னோடு இருந்த தன்
சகோதரருக்காக கர்த்தருடைய நாமத்தில் விண்-
ணப்பம் பண்ணினான். கர்த்தர் அவனை நோக்கி,
நான் உன்னையும் தங்களுடைய பாவங்களிலி-
ருந்து உன் சகோதரரையும் மன்னிப்பேன்; ஆனால்
நீ இனி ஒருபோதும் பாவம் செய்யாதே, ஏனெனில்
என் ஆவி மனுஷனோடு எப்பொழுதும் கிரியை
செய்வதில்லை என்பதை நினைவுகூர்வாயாக.
ஆகையால் நீங்கள் பாவத்தில் முழுமையாகப்
பழுப்பீர்களெனில், நீங்கள் கர்த்தருடைய பிரசன்-
னத்திலிருந்து அறுப்புண்டு போவீர்கள்; நான் உங்-
களுடைய சுதந்தரத்திற்கென உங்களுக்குக் கொ-
டுக்கும் தேசத்தைப்பற்றிய என் நினைவுகள்
இவைகளே; ஏனெனில் அது மற்ற தேசங்களெல்-
லாவற்றிற்கும் மேலாக சிறந்த தேசமாக இருக்கிறது,
என்றார்.

And the brother of Jared repented of the evil which he had done, and did call upon the name of the Lord for his brethren who were with him. And the Lord said unto him: I will forgive thee and thy brethren of their sins; but thou shalt not sin any more, for ye shall remember that my Spirit will not always strive with man; wherefore, if ye will sin until ye are fully ripe ye shall be cut off from the presence of the Lord. And these are my thoughts upon the land which I shall give you for your inheritance; for it shall be a land choice above all other lands.

16 கர்த்தர் சொன்னதாவது: நீங்கள் இதுவரைக்கும்
கட்டின தோணிகளின் விதத்தின்படியே வேலை-
செய்து கட்டுங்கள். அந்தப்படியே, யாரேதின் சகோ-
தரனும் அவனுடைய சகோதரரும் கர்த்தருடைய
போதனைகளுக்குத் தக்கதாக அவர்கள் கட்டியி-
ருந்தவைகளின் பிரகாரம் வேலை செய்து, தோணி-
களைக் கட்டினார்கள். அவைகள் சிறியதாயும்,
தண்ணீர் மேலிருக்கிற பட்சியைப் போல அவை-
கள் லகுவாயும் இருந்தன.

And the Lord said: Go to work and build, after the manner of barges which ye have hitherto built. And it came to pass that the brother of Jared did go to work, and also his brethren, and built barges after the manner which they had built, according to the instructions of the Lord. And they were small, and they were light upon the water, even like unto the lightness of a fowl upon the water.

17 அவைகள் ஒரு கிண்ணம் எப்படி தண்ணீரைக்
கொண்டிருக்கிறதோ அதைப்போல அவைகள் மி-
கவும் இறுக்கமான முறையில் கட்டப்பட்டன;
அதனுடைய அடிப்பாகம் ஒரு கிண்ணத்தைப்-
போல இறுக்கமாய் இருந்தது; அவைகளுடைய பக்-
கங்களும் ஒரு கிண்ணத்தைப்போல இறுக்கமாயி-
ருந்தன; அதன் முனைகளோ கூர்மையாயிருந்தன;
அதனுடைய மேல் பகுதி ஒரு கிண்ணத்தைப்போல
இறுக்கமாயிருந்தது; அதனுடைய நீளம் ஒரு மரத்-
தினுடைய நீளமாயிருந்தது; அதனுடைய கதவு மூ-
டப்பட்டபோது ஒரு கிண்ணத்தைப்போல இறுக்க-
மாயிருந்தது.

And they were built after a manner that they were exceedingly tight, even that they would hold water like unto a dish; and the bottom thereof was tight like unto a dish; and the sides thereof were tight like unto a dish; and the ends thereof were peaked; and the top thereof was tight like unto a dish; and the length thereof was the length of a tree; and the door thereof, when it was shut, was tight like unto a dish.

18 அந்தப்படியே, யாரேதின் சகோதரன் கர்த்தரிடத்-
தில் கூக்குரலிட்டு, கர்த்தாவே நீர் எனக்குக் கட்ட-
ளையிட்ட வேலையை நான் செய்தேன். நீர் எனக்கு
ஏவினபடியே நான் தோணிகளைச் செய்தேன்.

And it came to pass that the brother of Jared cried unto the Lord, saying: O Lord, I have performed the work which thou hast commanded me, and I have made the barges according as thou hast directed me.

19 கர்த்தாவே, அவைகளில் வெளிச்சமில்லை; நாங்கள் எங்கே திரும்புவோம்? நாங்கள் அழிந்துபோவோம். ஏனெனில் அவைகளுக்குள் இருக்கிற காற்றேயல்லாமல் வேறு காற்று இல்லாததினால், அவைகளுக்குள் மூச்சுவிடக்கூடாமல் அழிந்துபோவோம், என்றான்.

And behold, O Lord, in them there is no light; whither shall we steer? And also we shall perish, for in them we cannot breathe, save it is the air which is in them; therefore we shall perish.

20 கர்த்தர் யாரேதின் சகோதரனை நோக்கி: இதோ, நீ மேலும் கீழும் துவாரமிடுவாயாக. உங்களுக்கு காற்று வேண்டும்போது, நீங்கள் துவாரத்தைத் திறந்து காற்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் மேல் தண்ணீர் வந்து, நீங்கள் தண்ணீரிலே அழிந்துபோகாதபடிக்கு, இதோ, நீங்கள் துவாரத்தை மூடவேண்டும் என்றார்.

And the Lord said unto the brother of Jared: Behold, thou shalt make a hole in the top, and also in the bottom; and when thou shalt suffer for air thou shalt unstop the hole and receive air. And if it be so that the water come in upon thee, behold, ye shall stop the hole, that ye may not perish in the flood.

21 அந்தப்படியே, கர்த்தர் கட்டளையிட்டபடியே யாரேதின் சகோதரன் செய்தான்.

And it came to pass that the brother of Jared did so, according as the Lord had commanded.

22 அவன் கர்த்தரிடத்தில் மறுபடியும் கூக்குரலிட்டுச் சொன்னதாவது: கர்த்தாவே, இதோ நீர் எனக்குக் கட்டளையிட்டபடியே நான் செய்தேன்; நான் என் ஜனத்திற்காக மரக்கலங்களை ஆயத்தப்படுத்தினேன். இதோ, அவைகளில் ஒளி இல்லை. இதோ, கர்த்தாவே நாங்கள் இந்த பெரும் தண்ணீரைக் காரிருளிலே கடக்க நீர் அனுமதிப்பீரோ?

And he cried again unto the Lord saying: O Lord, behold I have done even as thou hast commanded me; and I have prepared the vessels for my people, and behold there is no light in them. Behold, O Lord, wilt thou suffer that we shall cross this great water in darkness?

23 கர்த்தர் யாரேதின் சகோதரனிடத்தில் சொன்னதாவது: உங்களுடைய மரக்கலங்களில் ஒளி உண்டாயிருக்க நான் என்ன செய்யவேண்டுமென நீங்கள் வாஞ்சிக்கிறீர்கள்? ஏனெனில் இதோ நீங்கள் பலகணிகளை வைத்திருக்க முடியாது. அவை துண்டுகளாக உடைந்துவிடும்; நீங்கள் அக்கினியையும் உங்களுடனே எடுத்துச் செல்லக்கூடாது, ஏனெனில் நீங்கள் அக்கினியின் வெளிச்சத்திலும் போவதில்லை.

And the Lord said unto the brother of Jared: What will ye that I should do that ye may have light in your vessels? For behold, ye cannot have windows, for they will be dashed in pieces; neither shall ye take fire with you, for ye shall not go by the light of fire.

24 ஏனெனில் இதோ, சமுத்திரத்தின் மத்தியில் ஒரு திமிங்கலத்தைப்போல இருப்பீர்கள்; மலைகளைப் போன்ற அலைகள் உங்கள் மேல் மோதும். இருப்பினும் நான் உங்களை சமுத்திரத்தின் ஆழங்களிலிருந்து மறுபடியும் கொண்டுவருவேன்; ஏனெனில் காற்று என் வாயிலிருந்து புறப்பட்டுப்போனது. நான் மழைகளையும் பிரளயங்களையும் அனுப்பினேன்.

For behold, ye shall be as a whale in the midst of the sea; for the mountain waves shall dash upon you. Nevertheless, I will bring you up again out of the depths of the sea; for the winds have gone forth out of my mouth, and also the rains and the floods have I sent forth.

25 இதோ இவைகளுக்கெதிராக நான் உங்களை ஆயத்தப்படுத்துகிறேன்; ஏனெனில் சமுத்திரத்தின் அலைகளுக்கும், சென்றிருக்கிற காற்றுக்களுக்கும், வரவிருக்கிற பிரளயத்திற்கும் எதிராக நான் உங்களை ஆயத்தப்படுத்தினாலொழிய நீங்கள் இந்தப் பெரும் ஆழத்தைக் கடக்கமுடியாது. நீங்கள் சமுத்திரத்தின் ஆழங்களில் விழுங்கப்படும்போது உங்களுக்கு ஒளியுண்டாயிருக்கும்படிக்கு நான் உங்களுக்கு எதை ஆயத்தப்படுத்தவேண்டுமென நீங்கள் வாஞ்சிக்கிறீர்கள்?

And behold, I prepare you against these things; for ye cannot cross this great deep save I prepare you against the waves of the sea, and the winds which have gone forth, and the floods which shall come. Therefore what will ye that I should prepare for you that ye may have light when ye are swallowed up in the depths of the sea?

# ஏத்தேர் 3

1 அந்தப்படியே, யாரேதின் சகோதரன் (இப்பொழுது
ஆயத்தப்பட்டிருந்த மரக்கலங்களின் எண்ணிக்-
கை எட்டாக இருந்தது) மிகுந்த உயரத்தினிமித்தம்
சேலீம் மலை என்று அழைக்கப்பட்ட மலைக்குப்-
போய், பாறையிலிருந்து பதினாறு சிறிய கற்களை
உருக்கிக் கொண்டுவந்தான், அவைகள் ஒளி ஊடு-
ருவக்கூடிய கண்ணாடியைப்போல வெண்மையா-
யும், தெளிவாயுமிருந்தன; அவன் அவைகளை
தன் கைகளில் எடுத்துக்கொண்டு மலையின் சிக-
ரத்துக்குப்போய் கர்த்தரிடத்தில் கூக்குரலிட்டுச்
சொன்னதாவது:
2 கர்த்தாவே நாங்கள் பிரளயத்தினால் சூழப்பட-
வேண்டும் என்று நீர் சொன்னீர். இப்போதும் இதோ,
கர்த்தாவே உமக்கு முன்பாக உம்முடைய தாசனின்
பலவீனத்தினிமித்தம் கோபமாயிராதேயும்; நீர் பரி-
சுத்தரென்றும், பரலோகங்களிலே வாசம்பண்ணு-
கிறீரென்றும், உமக்கு முன்பாக நாங்கள் அபாத்திர-
ரென்றும் அறிவோம், வீழ்ச்சியினிமித்தம் எங்கள் சு-
பாவங்கள் தொடர்ந்து பொல்லாதவைகளாயின;
ஆயினும், கர்த்தாவே, நாங்கள் உம்மை அழைக்க-
வும், எங்களுடைய வாஞ்சைகளுக்குத்தக்கதாக
உம்மிடத்திலிருந்து நாங்கள் பெற்றுக்கொள்ளும்-
படியாக, நீர் எங்களுக்கு ஒரு கட்டளையைக் கொ-
டுத்திருக்கிறீர்.
3 கர்த்தாவே இதோ, எங்களுடைய அக்கிரமத்தினி-
மித்தம் நீர் எங்களை அடித்து, எங்களைத் துரத்தி-
னீர். ஏனெனில் இந்த அநேக வருஷங்கள் நாங்கள்
வனாந்தரத்தில் இருந்தோம். ஆயினும் நீர் எங்கள்
மேல் இரக்கமாய் இருந்தீர். கர்த்தாவே என்மேல் மன-
துருகி, உம்முடைய ஜனமாகிய இவர்களிடமிருந்து
உம்முடைய கோபத்தைத் திருப்பும். இந்த மகா
ஆழத்தினை, அவர்கள் காரிருளிலே கடக்க அனு-
மதியாதேயும், ஆனால் பாறையிலிருந்து நான்
உருக்கின இந்த கற்களைப் பாரும்.
4 கர்த்தாவே, நீர் சர்வ வல்லமையை உடையவ-
ரென்றும் மனுஷனுடைய நலனுக்காக உம்மால்
எதையும் செய்யக்கூடுமென்றும் நான் அறிந்திருக்-
கிறேன். ஆதலால் கர்த்தாவே உம்முடைய விரலி-
னாலே இக்கற்களைத்தொட்டு, அவைகள் காரிரு-
ளிலே பிரகாசிக்கும்படிக்கும் நாங்கள் சமுத்திரத்-
தை கடக்கும்போது நாங்கள் ஆயத்தம்பண்ணின
மரக்கலங்களில் வெளிச்சம் இருக்கவும் அவைக-
ளை ஆயத்தப்படுத்தும்.
5 கர்த்தாவே, இதோ, உம்மாலே இதைச் செய்யக்கூ-
டும். மனுஷனுடைய அறிவுக்கு சிறியதாய்த் தெரி-
கிற பெரும் வல்லமையை உம்மாலே காண்பிக்கக்-
கூடும் என்று நாங்கள் அறிவோம்.

# Ether 3

And it came to pass that the brother of Jared, (now the number of the vessels which had been prepared was eight) went forth unto the mount, which they called the mount Shelem, because of its exceeding height, and did molten out of a rock sixteen small stones; and they were white and clear, even as transparent glass; and he did carry them in his hands upon the top of the mount, and cried again unto the Lord, saying:

O Lord, thou hast said that we must be encompassed about by the floods. Now behold, O Lord, and do not be angry with thy servant because of his weakness before thee; for we know that thou art holy and dwellest in the heavens, and that we are unworthy before thee; because of the fall our natures have become evil continually; nevertheless, O Lord, thou hast given us a commandment that we must call upon thee, that from thee we may receive according to our desires.

Behold, O Lord, thou hast smitten us because of our iniquity, and hast driven us forth, and for these many years we have been in the wilderness; nevertheless, thou hast been merciful unto us. O Lord, look upon me in pity, and turn away thine anger from this thy people, and suffer not that they shall go forth across this raging deep in darkness; but behold these things which I have molten out of the rock.

And I know, O Lord, that thou hast all power, and can do whatsoever thou wilt for the benefit of man; therefore touch these stones, O Lord, with thy finger, and prepare them that they may shine forth in darkness; and they shall shine forth unto us in the vessels which we have prepared, that we may have light while we shall cross the sea.

Behold, O Lord, thou canst do this. We know that thou art able to show forth great power, which looks small unto the understanding of men.

6 அந்தப்படியே, யாரேதின் சகோதரன் இவ்வார்த்-
தைகளைச் சொன்னவுடனே, இதோ, கர்த்தர் தமது
கரத்தை நீட்டி கற்களை ஒவ்வொன்றாய் தம்மு-
டைய விரலால் தொட்டார். யாரேதின் சகோதரனின்
கண்களிலிருந்து திரை எடுக்கப்பட்டது. அவன்
கர்த்தருடைய விரலைக் கண்டான்; மாம்சத்தினா-
லும், இரத்தத்தினாலுமான மனுஷனுடைய விர-
லைப்போல அது இருந்தது; யாரேதின் சகோதரன்
பயத்தினால் மேற்கொள்ளப்பட்டு, கர்த்தருக்கு
முன்பாக கீழே விழுந்தான்.

And it came to pass that when the brother of Jared had said these words, behold, the Lord stretched forth his hand and touched the stones one by one with his finger. And the veil was taken from off the eyes of the brother of Jared, and he saw the finger of the Lord; and it was as the finger of a man, like unto flesh and blood; and the brother of Jared fell down before the Lord, for he was struck with fear.

7 யாரேதின் சகோதரன் பூமியிலே விழுந்ததைக்
கர்த்தர் கண்டு அவனை நோக்கி: எழுந்திரு, ஏன்
விழுந்தாய் என்றார்.

And the Lord saw that the brother of Jared had fallen to the earth; and the Lord said unto him: Arise, why hast thou fallen?

8 அவன் கர்த்தரை நோக்கி: நான் கர்த்தருடைய வி-
ரலைக் கண்டேன். அவர் என்னை அடிப்பாரோ
என்று பயந்தேன்; கர்த்தருக்கு மாம்சமும் இரத்தமும்
உண்டென்று நான் அறியாதிருந்தேன் என்றான்.

And he saith unto the Lord: I saw the finger of the Lord, and I feared lest he should smite me; for I knew not that the Lord had flesh and blood.

9 கர்த்தர் அவனை நோக்கி: உன்னுடைய விசுவா-
சத்தினிமித்தம் நான் மாம்சத்தையும், இரத்தத்தை-
யும் என்மேல் எடுத்துக்கொள்வேன் என்று நீ கண்-
டிருக்கிறாய்: உன்னைப்போல இவ்வளவு மிகுந்த
விசுவாசத்தோடு மனுஷன் என்றுமே எனக்கு முன்-
பு வந்ததில்லை: ஏனெனில் அப்படியில்லையெ-
னில் நீ என் விரலைக் கண்டிருக்கமுடியாது. இதற்-
கும் அதிகமாய் நீ கண்டாயோ என்றார்.

And the Lord said unto him: Because of thy faith thou hast seen that I shall take upon me flesh and blood; and never has man come before me with such exceeding faith as thou hast; for were it not so ye could not have seen my finger. Sawest thou more than this?

10 அவன் பிரதியுத்தரமாக: இல்லை, கர்த்தாவே, உம்-
மை எனக்குக் காண்பித்தருளும் என்றான்.

And he answered: Nay; Lord, show thyself unto me.

11 கர்த்தர் அவனை நோக்கி: நான் பேசவிருக்கிற
வார்த்தைகளை நீ விசுவாசிப்பாயா என்றார்.

And the Lord said unto him: Believest thou the words which I shall speak?

12 அவன் பிரதியுத்தரமாக: ஆம், கர்த்தாவே நீர் சத்தி-
யத்தின் தேவனாய் இருப்பதினாலே பொய்யுரைக்க
முடியாது. நீர் உண்மையையே பேசுகிறீர் என்று
நான் அறிவேன் என்றான்.

And he answered: Yea, Lord, I know that thou speakest the truth, for thou art a God of truth, and canst not lie.

13 அவன் இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே,
இதோ, கர்த்தர் தம்மையே அவனுக்குக் காண்பித்து,
நீ இவைகளை அறிந்திருக்கிறதினிமித்தம் நீ வீழ்ச்-
சியிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறாய்; ஆதலால் நீ
மறுபடியும் என் சமுகத்தினுள் கொண்டுவரப்பட்டி-
ருக்கிறாய்; எனவே நான் என்னையே உனக்குக்
காண்பிக்கிறேன்.

And when he had said these words, behold, the Lord showed himself unto him, and said: Because thou knowest these things ye are redeemed from the fall; therefore ye are brought back into my presence; therefore I show myself unto you.

14 இதோ, என் ஜனத்தை மீட்பதற்காக உலகத்தினு-
டைய அஸ்திவாரத்திலிருந்தே ஆயத்தம் பண்ணப்-
பட்டவர் நானே. இதோ, நானே இயேசு கிறிஸ்து. நா-
னே பிதாவும் குமாரனுமானவர். என்னிலே சகல
மனுக்குலமும் ஜீவனைப் பெற்றிருக்கும். என் நா-
மத்தில் விசுவாசிக்கிறவர்கள் அதை நித்தியமாய்ப்
பெற்றிருப்பார்கள். அவர்கள் என் குமாரர்களும் கு-
மாரத்திகளுமாவார்கள்.

Behold, I am he who was prepared from the foundation of the world to redeem my people. Behold, I am Jesus Christ. I am the Father and the Son. In me shall all mankind have life, and that eternally, even they who shall believe on my name; and they shall become my sons and my daughters.

15 நீ என்னில் விசுவாசித்ததுபோல மனுஷன் என்றுமே விசுவாசிக்காததினிமித்தம் நான் சிருஷ்டித்த மனுஷனுக்கு என்னை நான் என்றுமே காண்பித்ததில்லை. நீ என் சாயலின்படி சிருஷ்டிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறாயா? ஆம், சகல மனுஷரும் ஆதியிலே என் சொந்த சாயலிலேயே சிருஷ்டிக்கப்பட்டார்கள்.

And never have I showed myself unto man whom I have created, for never has man believed in me as thou hast. Seest thou that ye are created after mine own image? Yea, even all men were created in the beginning after mine own image.

16 இதோ, நீ காண்கிற இந்த சரீரம் என் ஆவியின் சரீரமாயிருக்கிறது. மனுஷனை என் ஆவியின் சரீரத்தைப் போலவே நான் சிருஷ்டித்திருக்கிறேன்; நான் உனக்கு ஆவியிலே தென்படுவதைப்போலவே என் ஜனத்துக்கு மாம்சத்திலே தென்படுவேன்.

Behold, this body, which ye now behold, is the body of my spirit; and man have I created after the body of my spirit; and even as I appear unto thee to be in the spirit will I appear unto my people in the flesh.

17 இப்பொழுதும் எழுதப்பட்ட இவைகளின் முழு விவரத்தை என்னால் எழுதமுடியாதென்று மரோனியாகிய நான் சொன்னேன். ஆதலால் இயேசு நேபியருக்கு தம்மையே காண்பித்த அதே சரீரத்தின் விதத்திலும், சாயலிலேயும் இம்மனுஷனுக்குக் காண்பித்தார், என்று சொல்வது எனக்கு போதுமானதாயிருக்கிறது.

And now, as I, Moroni, said I could not make a full account of these things which are written, therefore it sufficeth me to say that Jesus showed himself unto this man in the spirit, even after the manner and in the likeness of the same body even as he showed himself unto the Nephites.

18 அவர் நேபியர்களுக்குப் பணிவிடை செய்ததுபோல அவனுக்குப் பணிவிடை செய்தார்; கர்த்தர் அவனுக்கு அநேக பெரும் கிரியைகளைக் காண்பித்ததினிமித்தம் தாமே தேவன் என்று இந்த மனுஷன் அறியத்தக்கதாக இவையெல்லாம் செய்தார்.

And he ministered unto him even as he ministered unto the Nephites; and all this, that this man might know that he was God, because of the many great works which the Lord had showed unto him.

19 இந்த மனுஷனின் ஞானத்தினிமித்தம் அவன் திரைச்சீலைக்குள்ளிருந்தே பார்ப்பதிலிருந்து தடுக்க முடியவில்லை; அவன் இயேசுவின் விரலைக் கண்டான். அதை அவன் கண்டபோது, அவன் அச்சத்தால் விழுந்தான்; ஏனெனில் அது கர்த்தருடைய விரலென்று அவன் அறிந்திருந்தான். யாதொன்றையும் சந்தேகிக்காமல் அறிந்திருந்தபடியால், அவனுக்கு இதற்கு மேலும் விசுவாசம் தேவை இருக்கவில்லை.

And because of the knowledge of this man he could not be kept from beholding within the veil; and he saw the finger of Jesus, which, when he saw, he fell with fear; for he knew that it was the finger of the Lord; and he had faith no longer, for he knew, nothing doubting.

20 ஆதலால் தேவனைக் குறித்த பூரண ஞானத்தை அவன் பெற்றிருந்ததால், அவன் திரைக்குள்ளிருந்து தடுக்கப்பட முடிவில்லை; ஆதலால் அவன் இயேசுவைக் கண்டான்; அவர் அவனுக்குப் பணிவிடை செய்தார்.

Wherefore, having this perfect knowledge of God, he could not be kept from within the veil; therefore he saw Jesus; and he did minister unto him.

21 அந்தப்படியே, கர்த்தர் யாரேதின் சகோதரனை நோக்கி: இதோ, நான் என் நாமத்தை மாம்சத்திலே மகிமைப்படுத்தும் சமயம் வருமளவும், நீ கண்டதும் கேட்டதுமான இவைகள் உலகத்தினுள் போகவிடாதே; ஆகையால் நீ கண்டும் கேட்டதுமான காரியங்களை பொக்கிஷப்படுத்து. அதை ஒருவனுக்கும் காண்பிக்கவேண்டாம்.

And it came to pass that the Lord said unto the brother of Jared: Behold, thou shalt not suffer these things which ye have seen and heard to go forth unto the world, until the time cometh that I shall glorify my name in the flesh; wherefore, ye shall treasure up the things which ye have seen and heard, and show it to no man.

22 இதோ, நீ என்னிடத்தில் வரும்போது, அவைகளை நீ எழுதி ஒருவனும் அதை மொழிபெயர்க்க முடியாதபடி அதை முத்திரையிடுவாயாக; ஏனெனில் வாசிக்கப்பட முடியாத பாஷையிலே அவைகளை நீ எழுதுவாயாக.

And behold, when ye shall come unto me, ye shall write them and shall seal them up, that no one can interpret them; for ye shall write them in a language that they cannot be read.

23 இதோ, இந்த இரண்டு கற்களை உனக்குக் கொடுக்கிறேன். நீ எழுதுகிறவைகளோடு சேர்த்து இவற்றையும் முத்திரையிடுவாயாக.

And behold, these two stones will I give unto thee, and ye shall seal them up also with the things which ye shall write.

24 இதோ, நீ எழுதுகிற பாஷையை நான் தாறுமாறாக்கினேன்; ஆகையால் இக்கற்கள் நீ எழுதுகிறவைகளை என்னுடைய சொந்த ஏற்ற வேளையில், மனுஷ கண்களுக்கு தெளிவுபடுத்த வைப்பேன்.

For behold, the language which ye shall write I have confounded; wherefore I will cause in my own due time that these stones shall magnify to the eyes of men these things which ye shall write.

25 கர்த்தர் இவ்வார்த்தைகளைச் சொன்னவுடனே, உலகத்திலிருந்த சகல குடிகளையும் இருக்கப்போகிற சகலமானோரையும் அவர் யாரேதின் சகோதரனுக்குக் காண்பித்தார்; அவர் பூமியின் கடையாந்தரம் வரையிலும் அவனுடைய பார்வையிலிருந்து நிறுத்தி வைக்கவில்லை.

And when the Lord had said these words, he showed unto the brother of Jared all the inhabitants of the earth which had been, and also all that would be; and he withheld them not from his sight, even unto the ends of the earth.

26 அவன் தம்மில் விசுவாசித்தால், தாம் அவனுக்கு சகலத்தையும் காண்பிக்கக்கூடும் என்று, அவர் அவனுக்கு முற்காலங்களில் சொல்லியிருந்தார், அது அவனுக்குக் காண்பிக்கப்படவேண்டும். கர்த்தர் தனக்குச் சகலத்தையும் காண்பிக்க முடியும் என்று அவன் அறிந்திருந்ததாலே, கர்த்தர் அவனுக்கு எதையும் நிறுத்தி வைக்கமுடியவில்லை.

For he had said unto him in times before, that if he would believe in him that he could show unto him all things—it should be shown unto him; therefore the Lord could not withhold anything from him, for he knew that the Lord could show him all things.

27 கர்த்தர் அவனை நோக்கி: இவைகளை எழுதி முத்திரையிடு; நான் அவைகளை என்னுடைய சொந்த ஏற்ற வேளையில் மனுபுத்திரருக்குக் காண்பிப்பேன், என்றார்.

And the Lord said unto him: Write these things and seal them up; and I will show them in mine own due time unto the children of men.

28 அந்தப்படியே, அவன் தான் பெற்ற இரண்டு கற்களையும் முத்திரையிட்டு, கர்த்தர் அவைகளை மனுபுத்திரருக்குக் காண்பிக்கும்வரைக்கும், அவைகளை அவன் காண்பிக்கக்கூடாதென்று, அவனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டார்.

And it came to pass that the Lord commanded him that he should seal up the two stones which he had received, and show them not, until the Lord should show them unto the children of men.

# ஏத்தேர் 4

1 மலையிலிருந்து இறங்கி, கர்த்தருடைய சமுகத்தை விட்டுப்போய், தான் கண்ட காரியங்களை எழுதும்படியாக யாரேதின் சகோதரனுக்குக் கர்த்தர் கட்டளையிட்டார்; அவர் சிலுவையிலே உயர்த்தப்படுமளவும் மனுபுத்திரருக்குள்ளே அவை வர தடை செய்யப்பட்டன; கிறிஸ்து தம்முடைய ஜனங்களுக்கு தம்மைக் காண்பிக்கும்வரைக்கும் அவைகள் உலகத்தினுள் வரக்கூடாதென்ற முகாந்தரத்தினிமித்தம் மோசியா ராஜா அவைகளை வைத்திருந்தான்.

2 கிறிஸ்து தம்மை தமது ஜனங்களுக்கு உண்மையாகவே காண்பித்த பின்னர், அவைகள் வெளியரங்கப்படவேண்டுமென்று கட்டளையிட்டார்.

3 இப்பொழுதும் அதற்குப் பின்னர், அவர்கள் யாவரும் அவிசுவாசத்தில் படிப்படியாக நலிந்தார்கள்; லாமானியரைத் தவிர அங்கே ஒருவருமில்லை. அவர்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தை மறுதலித்திருந்தார்கள்; ஆதலால் அவைகளை மறுபடியும் பூமியிலே மறைத்து வைக்கும்படி நான் கட்டளையிடப்பட்டேன்.

4 இதோ, யாரேதின் சகோதரன் கண்ட அதே காரியங்களைத்தான் நான் இந்த தகடுகளில் எழுதியிருக்கிறேன்; யாரேதின் சகோதரனுக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளைக்காட்டிலும் பெரிதானவைகள் ஒருபோதும் வெளிப்படுத்தப்பட்டதில்லை.

5 ஆகையால் அவைகளை எழுதும்படியாக கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார்; நான் அவைகளை எழுதியிருக்கிறேன். நான் அவைகளை முத்திரையிடவேண்டும் என்றும் அவர் எனக்குக் கட்டளையிட்டார்; நான் அவைகளினுடைய மொழிபெயர்ப்பையும் முத்திரையிடவேண்டுமென அவர் கட்டளையிட்டார்; ஆதலால் நான் கர்த்தருடைய கட்டளையின்படியே மொழிபெயர்ப்புக் கருவிகளையும் முத்திரையிட்டேன்.

6 கர்த்தர் என்னை நோக்கி: புறஜாதியார் தங்கள் அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பி, கர்த்தருக்கு முன்பாக சுத்தமாகும் நாள் வரைக்கும் அவைகள் அவர்களுக்குள்ளே போவதில்லை, என்றார்.

7 கர்த்தர் உரைப்பதாவது, அந்நாளிலே அவர்கள் என்னிலே சுத்திகரிக்கப்படும்பொருட்டு, யாரேதின் சகோதரனைப்போலவே என்னில் விசுவாசத்தைப் பிரயோகிப்பார்கள். அப்பொழுது நான் அவர்களுக்கு யாரேதின் சகோதரன் கண்ட காரியங்களையும், என்னுடைய சகல வெளிப்படுத்தல்களையும், வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் தெரிவிக்கும் வரைக்குமாய் வெளியரங்கமாக்குவேன் என்று, அவைகளின் பிதாவும், தேவகுமாரனுமாகிய இயேசு கிறிஸ்து சொல்லுகிறார்.

# Ether 4

And the Lord commanded the brother of Jared to go down out of the mount from the presence of the Lord, and write the things which he had seen; and they were forbidden to come unto the children of men until after that he should be lifted up upon the cross; and for this cause did king Mosiah keep them, that they should not come unto the world until after Christ should show himself unto his people.

And after Christ truly had showed himself unto his people he commanded that they should be made manifest.

And now, after that, they have all dwindled in unbelief; and there is none save it be the Lamanites, and they have rejected the gospel of Christ; therefore I am commanded that I should hide them up again in the earth.

Behold, I have written upon these plates the very things which the brother of Jared saw; and there never were greater things made manifest than those which were made manifest unto the brother of Jared.

Wherefore the Lord hath commanded me to write them; and I have written them. And he commanded me that I should seal them up; and he also hath commanded that I should seal up the interpretation thereof; wherefore I have sealed up the interpreters, according to the commandment of the Lord.

For the Lord said unto me: They shall not go forth unto the Gentiles until the day that they shall repent of their iniquity, and become clean before the Lord.

And in that day that they shall exercise faith in me, saith the Lord, even as the brother of Jared did, that they may become sanctified in me, then will I manifest unto them the things which the brother of Jared saw, even to the unfolding unto them all my revelations, saith Jesus Christ, the Son of God, the Father of the heavens and of the earth, and all things that in them are.

8 கர்த்தருடைய வார்த்தைக்கு விரோதமாக பிணக்-
கு செய்கிறவன் சபிக்கப்பட்டவனாயிருப்பானாக;
இக்காரியங்களை மறுதலிக்கிறவன் சபிக்கப்பட்ட-
வனாயிருப்பானாக. ஏனெனில் அவர்களுக்கு
நான் எந்தப் பெரும் காரியங்களையும் காண்பிப்ப-
தில்லை என்றும், பேசுகிறவர் நானே என்றும், இயே-
சு கிறிஸ்து சொல்கிறார்.
9 என்னுடைய கட்டளைக்கு வானங்கள் திறக்கப்-
பட்டு மூடப்படுகின்றன; என் வார்த்தைக்கு பூமி
அதிரும்; என் கட்டளைக்கு அதன் குடிகள் அக்கி-
னியால் கடந்து போவதைப்போல கடந்து போவார்-
கள்.
10 என் வார்த்தைகளை விசுவாசியாதவன் என் சீ-
ஷர்களை விசுவாசிப்பதில்லை; நான் பேசவில்-
லையென்றால் நிதானித்துப் பாருங்கள்; ஏனெ-
னில் கடைசி நாளிலே நான் தான் பேசுகிறேன் என்-
று, நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.
11 ஆனால் நான் பேசின இவைகளை விசுவாசிக்கி-
றவன் எவனோ அவனை என் ஆவியின் வெளிப்ப-
டுதலினாலே சந்திப்பேன். அவன் அறிந்து சாட்சி
பகருவான். ஏனெனில் என் ஆவியினிமித்தம்
அவன் இக்காரியங்களை உண்மை என்று அறிந்து-
கொள்வான்; ஏனெனில் அது மனுஷனை நன்மை
செய்யுமாறு வற்புறுத்துகிறது.
12 மனுஷனை நல்லதைச் செய்யத் தூண்டும் எது-
வும் என்னுடையது; என்னையல்லாமல் வேறு யா-
ரிடத்திலிருந்தும் நன்மை வருவதில்லை. மனுஷ-
ரை எல்லா நன்மைக்கும் வழிநடத்துபவரும் நா-
னே. என் வார்த்தைகளை விசுவாசிக்காதவன்,
நான் இருக்கிறேன் என்று விசுவாசிக்கமாட்டான்,
என்னை விசுவாசிக்காதவன் என்னை அனுப்பின
பிதாவை விசுவாசிக்கமாட்டான். ஏனெனில் இதோ,
நானே பிதாவும், நானே ஒளியும், ஜீவனும், உலகத்-
தின் சத்தியமுமாயிருக்கிறேன்.
13 புறஜாதியாரே, என்னிடத்தில் வாருங்கள். அவிசு-
வாசத்தினிமித்தம் மறைக்கப்பட்ட ஞானமாகிய
பெரும் காரியங்களை உங்களுக்குக் காண்பிப்-
பேன்.
14 இஸ்ரவேலின் வீட்டாரே, என்னிடத்தில் வாருங்-
கள். உலகத்தினுடைய அஸ்திபாரம் முதலாய் உங்-
களுக்காக எவ்வளவு பெரிதான காரியங்களை, பி-
தா ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார் என்று உங்-
களுக்கு வெளியரங்கமாக்கப்படும். அவிசுவாசத்தி-
னிமித்தம் அது உங்களுக்கு வரவில்லை.

And he that will contend against the word of the Lord, let him be accursed; and he that shall deny these things, let him be accursed; for unto them will I show no greater things, saith Jesus Christ; for I am he who speaketh.

And at my command the heavens are opened and are shut; and at my word the earth shall shake; and at my command the inhabitants thereof shall pass away, even so as by fire.

And he that believeth not my words believeth not my disciples; and if it so be that I do not speak, judge ye; for ye shall know that it is I that speaketh, at the last day.

But he that believeth these things which I have spoken, him will I visit with the manifestations of my Spirit, and he shall know and bear record. For because of my Spirit he shall know that these things are true; for it persuadeth men to do good.

And whatsoever thing persuadeth men to do good is of me; for good cometh of none save it be of me. I am the same that leadeth men to all good; he that will not believe my words will not believe me—that I am; and he that will not believe me will not believe the Father who sent me. For behold, I am the Father, I am the light, and the life, and the truth of the world.

Come unto me, O ye Gentiles, and I will show unto you the greater things, the knowledge which is hid up because of unbelief.

Come unto me, O ye house of Israel, and it shall be made manifest unto you how great things the Father hath laid up for you, from the foundation of the world; and it hath not come unto you, because of unbelief.

15 இதோ, உங்களை உங்களுடைய துன்மார்க்க-
மான, அஞ்சத்தக்க நிலையிலும், இருதயக் கடினத்-
தன்மையிலும், மனதின் குருட்டுத்தன்மையிலும்
நினைக்கச் செய்கிற, அந்த அவிசுவாசமென்னும்
திரையைக் கிழிக்கும்போதுதான், உலக அஸ்திபா-
ரம் முதல் உங்களிடத்திலிருந்து மறைக்கப்பட்ட
பெரிதும் மகத்துவமுள்ள காரியங்கள், ஆம் நொ-
றுங்குண்ட இருதயத்தோடும், நருங்குண்ட ஆவி-
யோடும் என் நாமத்தினாலே பிதாவை நீங்கள் தொ-
ழுதுகொண்டால், இஸ்ரவேலின் வீட்டாராகிய உங்-
களுடைய பிதாக்களுடன், பிதாவானவர் செய்து-
கொண்ட உடன்படிக்கையை அவர் நினைவுகூர்ந்-
தார், என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

Behold, when ye shall rend that veil of unbelief which doth cause you to remain in your awful state of wickedness, and hardness of heart, and blindness of mind, then shall the great and marvelous things which have been hid up from the foundation of the world from you—yea, when ye shall call upon the Father in my name, with a broken heart and a contrite spirit, then shall ye know that the Father hath remembered the covenant which he made unto your fathers, O house of Israel.

16 அப்பொழுது நான் என் ஊழியனான யோவா-
னால் எழுதப்படும்படிச் செய்த, என் வெளிப்படுத்-
தல்கள் எல்லா ஜனத்தின் கண்களுக்கும் தெரிவிக்-
கப்படும். இக்காரியங்களை நீங்கள் காணும்போது
அவைகள் உண்மையாகவே வெளியரங்கமாக்கப்-
படும் சமயம் சமீபமாயிருக்கிறது, என்று அறிவீர்-
கள் என்பதை நினைவுகூருங்கள்.

And then shall my revelations which I have caused to be written by my servant John be unfolded in the eyes of all the people. Remember, when ye see these things, ye shall know that the time is at hand that they shall be made manifest in very deed.

17 ஆதலால் இந்தப் பதிவேட்டினை நீங்கள் பெறும்-
போது, தேசத்தின்மேல் எங்கும் பிதாவினுடைய கி-
ரியை துவங்கியது என்று நீங்கள் அறிவீர்கள்.

Therefore, when ye shall receive this record ye may know that the work of the Father has commenced upon all the face of the land.

18 ஆதலால் உலகத்தின் கடையாந்திரங்கள் எல்-
லாம் மனந்திரும்பி, என்னிடத்தில் வந்து, என் நா-
மத்தில் என் சுவிசேஷத்தை விசுவாசித்து, ஞானஸ்-
நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; ஏனெனில் விசு-
வாசித்து ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுகிற-
வன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவன் ஆக்-
கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். என் நாமத்-
தில் விசுவாசிக்கிறவர்களுக்கு அறிகுறிகள் பின்
தொடரும்.

Therefore, repent all ye ends of the earth, and come unto me, and believe in my gospel, and be baptized in my name; for he that believeth and is baptized shall be saved; but he that believeth not shall be damned; and signs shall follow them that believe in my name.

19 கடைசி நாளில் என் நாமத்தில் விசுவாசமாய்க்
காணப்படுகிறவன் எவனோ அவன் பாக்கிய-
வான். ஏனெனில் அவனுக்காக உலகத்தின் அஸ்தி-
பாரம் முதல் ஆயத்தப்படுத்தப்பட்ட ராஜ்யத்தில்
வாசம்பண்ணும்படியாக உயர்த்தப்படுவான்.
இதோ, அதைச் சொன்னவர் நானே. ஆமென்.

And blessed is he that is found faithful unto my name at the last day, for he shall be lifted up to dwell in the kingdom prepared for him from the foundation of the world. And behold it is I that hath spoken it. Amen.

# ஏத்தேர் 5

1 இப்பொழுதும் மரோனியான நான் எனக்குக் கட்டளையிட்டபடியே, எனது ஞாபகத்தின்படியே வார்த்தைகளை எழுதியிருக்கிறேன்; நான் முத்திரையிட்ட காரியங்களை உனக்குச் சொல்லியிருக்கிறேன்; ஆதலால் நீ மொழிபெயர்ப்பதற்காக அவைகளைத் தொடாதிருப்பாயாக; அது தேவ ஞானமாயிருந்தாலொழிய, அந்தக் காரியம் உனக்கு தடை செய்யப்பட்டதாயிருக்கிறது.

2 இதோ, இந்தப் பணியை நடப்பிக்கும்படி உதவி செய்கிறவர்களுக்கு, இத்தகடுகளைக் காண்பிக்கிற பாக்கியத்தை நீ பெறலாம்.

3 தேவ வல்லமையால் அவை மூவருக்கு காண்பிக்கப்படும். ஆகையால் இவைகள் நிச்சயமாகவே சத்தியமானவை என்று அவர்கள் அறிவார்கள்.

4 மூன்று சாட்சிகளின் நாவுகளினாலே இக்காரியங்கள் ஸ்தாபிக்கப்படும்; மூவரின் சாட்சியமத்திலும், இப்பணியிலும் தேவ வல்லமையும், அவருடைய வார்த்தையும் காண்பிக்கப்படும். இதைக் குறித்து பிதாவும் குமாரனும், பரிசுத்த ஆவியானவரும் சாட்சி கொடுக்கிறார்கள். இவை யாவும் உலகத்திற்கு விரோதமாக கடைசி நாளின்போது சாட்சியமாக நிற்கும்.

5 அவர்கள் மனந்திரும்பி, இயேசுவின் நாமத்தில் பிதாவினிடத்தில் வந்தால், அவர்கள் தேவ ராஜ்யத்தினுள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

6 இப்பொழுது, இக்காரியங்களுக்கான அதிகாரத்தை நான் பெற்றிருக்கவில்லையா என்று நீங்களே நிதானித்துப் பாருங்கள்; நீங்கள் என்னைப் பார்க்கும்போது, நான் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறேன் என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள். கடைசி நாளின்போது தேவனுக்கு முன்பாக நாம் நிற்போம். ஆமென்.

# Ether 5

And now I, Moroni, have written the words which were commanded me, according to my memory; and I have told you the things which I have sealed up; therefore touch them not in order that ye may translate; for that thing is forbidden you, except by and by it shall be wisdom in God.

And behold, ye may be privileged that ye may show the plates unto those who shall assist to bring forth this work;

And unto three shall they be shown by the power of God; wherefore they shall know of a surety that these things are true.

And in the mouth of three witnesses shall these things be established; and the testimony of three, and this work, in the which shall be shown forth the power of God and also his word, of which the Father, and the Son, and the Holy Ghost bear record—and all this shall stand as a testimony against the world at the last day.

And if it so be that they repent and come unto the Father in the name of Jesus, they shall be received into the kingdom of God.

And now, if I have no authority for these things, judge ye; for ye shall know that I have authority when ye shall see me, and we shall stand before God at the last day. Amen.

# ஏத்தேர் 6

1 இப்பொழுதும் மரோனியான நான், யாரேது மற்றும்
அவனுடைய சகோதரனுடைய வரலாற்றைக் கொ-
டுக்கத் துவங்குகிறேன்.

2 அந்தப்படியே, மலையின்மேல் யாரேதின் சகோத-
ரனால் எடுத்துச் செல்லப்பட்ட கற்களை கர்த்தர்
ஆயத்தப்பண்ணின பின்பு, யாரேதின் சகோதரன்
மலையிலிருந்து இறங்கி, ஆயத்தம்பண்ணப்பட்ட
மரக்கலன்களில் கற்களை ஒவ்வொரு முனையி-
லும் ஒன்று என்ற விதத்தில் வைத்தான்; இதோ,
அவைகள் மரக்கலங்களுக்கு ஒளி கொடுத்தன.

3 அவர்கள் பெரும் தண்ணீர்களைக் காரிருளில்
கடக்காதபடிக்கு, புருஷருக்கும் ஸ்திரீகளுக்கும்,
பிள்ளைகளுக்கும் ஒளிகொடுத்து, கர்த்தர் இவ்வி-
தமாய்க் கற்களை இருளில் பிரகாசிக்கப்பண்ணி-
னார்.

4 அந்தப்படியே, அவர்கள் தாங்கள் தண்ணீர்க-
ளின்மேல் நிலைத்திருக்க எல்லா விதமான உண-
வையும், தங்களுடைய ஆடுகளுக்கும் மாடுகளுக்-
கும் அவர்கள் தங்களோடு கூட்டிக்கொண்டுபோன
எந்த மிருகத்திற்காகிலும், விலங்கிற்காகிலும், பட்-
சிக்காகிலும் உணவையும் ஆயத்தப்படுத்தின பின்-
பு, அந்தப்படியே, அவர்கள் இவைகளெல்லாவற்-
றையும் செய்த பின்பு, அவர்கள் தங்கள் மரக்கலங்-
களில் அல்லது தோணிகளில் ஏறி, தங்களையே
கர்த்தராகிய தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து,
சமுத்திரத்தினுள் பிரயாணத்தைத் தொடங்கினார்-
கள்.

5 அந்தப்படியே, தேவனாகிய கர்த்தர் வாக்குத்தத்-
தத்தின் தேசத்திற்கு நேராக தண்ணீர்களின்மேல்
அதிவேகமான காற்று அடிக்கும்படியாகச் செய்தார்;
இப்படியாக அவர்கள் காற்றுக்கு முன்பாக, சமுத்தி-
ரத்தின் அலைகளின் மேல் தூக்கிவீசப்பட்டார்கள்.

6 அந்தப்படியே, அவர்கள் மேல் விழுந்த மலை-
போன்ற அலைகளினிமித்தமும், காற்றின் வேகத்-
தினால் ஏற்பட்ட பெரிய பயங்கர சூறாவளிகளினி-
மித்தமும், அவர்கள் அநேகந்தரம் சமுத்திரத்தின்
ஆழங்களில் புதைக்கப்பட்டார்கள்.

7 அந்தப்படியே, அவர்கள் ஆழத்திலே புதைக்கப்-
பட்டபோதும், அவர்களுடைய மரக்கலங்கள் ஒரு
கிண்ணத்தைப்போல இறுக்கமாயிருந்ததாலும்,
நோவாவின் பேழையைப்போல் இறுக்கமாயிருந்த-
தாலும் எந்த தண்ணீரும் அவர்களுக்கு தீங்கு வி-
ளைவிக்கவில்லை. ஆகவே அவர்கள் அதிக தண்-
ணீர்களால் சூழப்பட்டபோது, அவர்கள் கர்த்தரி-
டத்தில் கூக்குரலிட்டார்கள். அவர் அவர்களை மறு-
படியும் தண்ணீர்கள் மேலே கொண்டுவந்தார்.

# Ether 6

And now I, Moroni, proceed to give the record of Jared and his brother.

For it came to pass after the Lord had prepared the stones which the brother of Jared had carried up into the mount, the brother of Jared came down out of the mount, and he did put forth the stones into the vessels which were prepared, one in each end thereof; and behold, they did give light unto the vessels.

And thus the Lord caused stones to shine in darkness, to give light unto men, women, and children, that they might not cross the great waters in darkness.

And it came to pass that when they had prepared all manner of food, that thereby they might subsist upon the water, and also food for their flocks and herds, and whatsoever beast or animal or fowl that they should carry with them—and it came to pass that when they had done all these things they got aboard of their vessels or barges, and set forth into the sea, commending themselves unto the Lord their God.

And it came to pass that the Lord God caused that there should be a furious wind blow upon the face of the waters, towards the promised land; and thus they were tossed upon the waves of the sea before the wind.

And it came to pass that they were many times buried in the depths of the sea, because of the mountain waves which broke upon them, and also the great and terrible tempests which were caused by the fierceness of the wind.

And it came to pass that when they were buried in the deep there was no water that could hurt them, their vessels being tight like unto a dish, and also they were tight like unto the ark of Noah; therefore when they were encompassed about by many waters they did cry unto the Lord, and he did bring them forth again upon the top of the waters.

8 அந்தப்படியே, அவர்கள் தண்ணீர்கள் மேலே இருந்தபோது, காற்று வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு நேராய் வீசுவதிலிருந்து ஓயவில்லை; இப்படியாக அவர்கள் காற்றுக்கு முன்பாகத் தள்ளப்பட்டார்கள்.

And it came to pass that the wind did never cease to blow towards the promised land while they were upon the waters; and thus they were driven forth before the wind.

9 அவர்கள் கர்த்தருக்கு துதிகளைப் பாடினார்கள்; ஆம் யாரேதின் சகோதரன் கர்த்தருக்கு துதிகளைப் பாடினான்; அவன் கர்த்தருக்கு நன்றி செலுத்தி, நாள் முழுவதும் துதித்தான்; இரவு வந்தபோதும் அவர்கள் கர்த்தரைத் துதிப்பதிலிருந்து ஓயவில்லை.

And they did sing praises unto the Lord; yea, the brother of Jared did sing praises unto the Lord, and he did thank and praise the Lord all the day long; and when the night came, they did not cease to praise the Lord.

10 இப்படியாக, அவர்கள் அடித்துச் செல்லப்பட்டார்கள்; சமுத்திரத்தின் எந்த பயங்கர மிருகத்தினாலும் அவைகளை உடைக்க முடியவில்லை; திமிங்கலத்தினாலும் அவர்களுக்குக் கேடு உண்டாக்க முடியவில்லை; தண்ணீருக்கு மேலோ அல்லது தண்ணீருக்குக் கீழோ, அவர்கள் தொடர்ந்து வெளிச்சம் பெற்றிருந்தார்கள்.

And thus they were driven forth; and no monster of the sea could break them, neither whale that could mar them; and they did have light continually, whether it was above the water or under the water.

11 இப்படியாக அவர்கள் முன்னூற்றி நாற்பத்தி நான்கு நாட்கள் தண்ணீர் மேல் அடித்துச் செல்லப்பட்டார்கள்.

And thus they were driven forth, three hundred and forty and four days upon the water.

12 அவர்கள் வாக்குத்தத்தத்தின் தேசத்தில் கரையேறினார்கள். அவர்கள் வாக்குத்தத்தத்தின் தேசத்தின் கரைகளில் தங்கள் பாதங்களை வைத்தவுடனேயே, தேசத்தின் மேல் தாங்கள் பணிந்து கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்தி, அவர்கள் மேல் இருந்த அவருடைய திரளான மென்மையான இரக்கத்தினிமித்தம், கர்த்தரின் சமுகத்தில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

And they did land upon the shore of the promised land. And when they had set their feet upon the shores of the promised land they bowed themselves down upon the face of the land, and did humble themselves before the Lord, and did shed tears of joy before the Lord, because of the multitude of his tender mercies over them.

13 அந்தப்படியே, அவர்கள் பூமியின் மீது போய் பூமியைப் பண்படுத்தத் துவங்கினார்கள்.

And it came to pass that they went forth upon the face of the land, and began to till the earth.

14 யாரேதிற்கு நான்கு குமாரர்களிருந்தார்கள் அவர்கள் யாக்கோம், கில்கா, மாகா, ஓரீகா என்று அழைக்கப்பட்டார்கள்.

And Jared had four sons; and they were called Jacom, and Gilgah, and Mahah, and Orihah.

15 யாரேதின் சகோதரனும் குமாரர்களையும், குமாரத்திகளையும், பெற்றெடுத்தான்.

And the brother of Jared also begat sons and daughters.

16 யாரேது மற்றும் அவனது சகோதரனின் நண்பர்களும் எண்ணிக்கையிலே இருபத்திரண்டு ஆத்துமாக்களாய் இருந்தார்கள். அவர்கள் வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு வருவதற்கு முன்னதாகவே குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றெடுத்தார்கள்; ஆதலால் அவர்கள் அநேகராய்ப் பெருகத் துவங்கினார்கள்.

And the friends of Jared and his brother were in number about twenty and two souls; and they also begat sons and daughters before they came to the promised land; and therefore they began to be many.

17 அவர்கள் கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மையாய் நடக்கப் போதிக்கப்பட்டார்கள்; அவர்கள் பரத்திலிருந்தும் போதிக்கப்பட்டார்கள்.

And they were taught to walk humbly before the Lord; and they were also taught from on high.

18 அந்தப்படியே, அவர்கள் பூமியின் மேலே படரவும், பெருகவும், பூமியைப் பண்படுத்தவும் துவங்கினார்கள்; அவர்கள் தேசத்திலே பலசாலிகளாக இருந்தார்கள்.

And it came to pass that they began to spread upon the face of the land, and to multiply and to till the earth; and they did wax strong in the land.

19 யாரேதின் சகோதரன் வயது முதிர்ந்தவனாய், சீக்கிரத்திலே கல்லறைக்குப் போகவேண்டும் என்று கண்டான்; ஆதலால் அவன் யாரேதைப் பார்த்து நம்முடைய கல்லறைகளுக்குப் போகும் முன் நம்முடைய ஜனங்கள் நம்மிடத்தில் வாஞ்சிப்பதென்ன என்று அவர்களிடத்திலிருந்து, நாம் அறியும்படிக்கும் அவர்களைத் தொகையிடும்படிக்கும் ஏகமாய்க் கூடச்செய்வோமாக என்றான்.

And the brother of Jared began to be old, and saw that he must soon go down to the grave; wherefore he said unto Jared: Let us gather together our people that we may number them, that we may know of them what they will desire of us before we go down to our graves.

20 அப்படியே ஜனங்களும் ஏகமாய்க் கூட்டப்பட்டார்கள். இப்பொழுது யாரேதின் சகோதரனின் குமாரர்கள் குமாரத்திகள் எண்ணிக்கை இருபத்தி இரண்டு ஆத்துமாக்களாய் இருந்தது; யாரேதின் குமாரர் குமாரத்திகளின் எண்ணிக்கை பன்னிரண்டாயிருந்தது. அவனுக்கு நான்கு குமாரர்கள் இருந்தார்கள்.

And accordingly the people were gathered together. Now the number of the sons and the daughters of the brother of Jared were twenty and two souls; and the number of sons and daughters of Jared were twelve, he having four sons.

21 அந்தப்படியே, அவர்கள் தங்கள் ஜனங்களை எண்ணினார்கள். அவர்களை எண்ணினபின்பு தாங்கள் தங்கள் கல்லறைகளுக்கு போவதற்கு முன்பு அவர்கள் தங்களிடத்தில் வாஞ்சிக்கிற காரியம் என்னவென்று கேட்டார்கள்.

And it came to pass that they did number their people; and after that they had numbered them, they did desire of them the things which they would that they should do before they went down to their graves.

22 அந்தப்படியே, ஜனங்கள் அவர்களுடைய குமாரர்களில் ஒருவன் தங்கள் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படவேண்டும் என்று விரும்பினார்கள்.

And it came to pass that the people desired of them that they should anoint one of their sons to be a king over them.

23 இப்பொழுதும் இதோ, இது அவர்களுக்கு துயரமாயிருந்தது. யாரேதின் சகோதரன் அவர்களை நோக்கி: இக்காரியம் நிச்சயமாகவே சிறைத்தனத்திற்குள் வழிநடத்தும், என்றான்.

And now behold, this was grievous unto them. And the brother of Jared said unto them: Surely this thing leadeth into captivity.

24 ஆனால் யாரேது தன் சகோதரனை நோக்கி: அவர்கள் ஒரு ராஜாவைப்பெற அவர்களை அனுமதியும், என்றான். ஆதலால் அவன் அவர்களை நோக்கி: எங்கள் குமாரர்களுள் நீங்கள் விரும்புகிற யாரையேனும் ராஜாவாகத் தெரிந்துகொள்ளுங்கள், என்றான்.

But Jared said unto his brother: Suffer them that they may have a king. And therefore he said unto them: Choose ye out from among our sons a king, even whom ye will.

25 அந்தப்படியே, யாரேதின் சகோதரனின் முதற்பேரானவனை அவர்கள் தெரிந்துகொண்டார்கள்: அவன் பெயர் பகாகு என்பதாகும். அந்தப்படியே, அவர்களின் ராஜாவாக இருக்க அவன் மறுத்தான். அவன் தகப்பன் அவனை கட்டாயப்படுத்தவேண்டுமென ஜனங்கள் விரும்பினார்கள். அவன் தகப்பனோ அப்படிச் செய்யவிரும்பவில்லை; அவர்கள் ஒருவனையும் தங்கள் ராஜாவாக இருக்கக் கட்டாயப்படுத்தக் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

And it came to pass that they chose even the firstborn of the brother of Jared; and his name was Pagag. And it came to pass that he refused and would not be their king. And the people would that his father should constrain him, but his father would not; and he commanded them that they should constrain no man to be their king.

26 அந்தப்படியே, அவர்கள் பகாகுவின் எல்லா சகோதரரையும் தெரிந்துகொண்டார்கள். அவர்களோ விரும்பவில்லை.

And it came to pass that they chose all the brothers of Pagag, and they would not.

27 அந்தப்படியே, யாரேதின் குமாரர்களில் ஒருவனைத் தவிர வேறொருவரும் விரும்பவில்லை; ஜனங்களின் மேல் ஒரீகா, ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான்.

And it came to pass that neither would the sons of Jared, even all save it were one; and Orihah was anointed to be king over the people.

28 அவன் ஆளத்துவங்கினான், ஜனங்கள் விருத்தி-
யடையத் துவங்கினார்கள்; அவர்கள் மிகவும் ஐஸ்-
வரியவான்களானார்கள்.

And he began to reign, and the people began to prosper; and they became exceedingly rich.

29 அந்தப்படியே, யாரேதும் அவனுடைய சகோத-
ரனும் மரித்தார்கள்.

And it came to pass that Jared died, and his brother also.

30 அந்தப்படியே, ஒரீகா கர்த்தருக்கு முன்பாகத் தாழ்-
மையாக நடந்து, கர்த்தர் தனது பிதாக்களுக்கு எவ்-
வளவு பெரிய காரியங்களைச் செய்தார் என்று நி-
னைவுகூர்ந்து, தங்களுடைய பிதாக்களுக்கு கர்த்-
தர் எவ்வளவு பெரிய காரியங்களைச் செய்தார்
என்று, தன் ஜனத்திற்குப் போதித்தான்.

And it came to pass that Orihah did walk humbly before the Lord, and did remember how great things the Lord had done for his father, and also taught his people how great things the Lord had done for their fathers.

# ஏத்தேர் 7

1 அந்தப்படியே, ஒரீகா தன் நாட்கள் முழுவதும் தே-
சத்திலே நீதியோடு நியாயம் விசாரித்து வந்தான்.
அவன் நாட்களோ நீடித்திருந்தது.

2 அவன் குமாரரையும் குமாரத்திகளையும் பெற்-
றெடுத்தான்; ஆம், அவன் பெற்றெடுத்த முப்பத்-
தொரு பேரில் இருபத்தி மூன்று பேர் குமாரர்கள்.

3 அந்தப்படியே, அவன் கிப்பை தன் முதிர்வயதி-
லே பெற்றான். அந்தப்படியே, கிப் அவனுடைய ஸ்-
தானத்தில் ஆட்சி செய்தான். கிப் கோரிஹோரைப்
பெற்றான்.

4 கோரிஹோர் முப்பத்திரண்டு வயதானபோது,
அவன் தன் பிதாவுக்கு விரோதமாகக் கலகம் பண்-
ணி, நிகோர் என்னும் தேசத்திற்குப் போய், அங்கே
வாசம் பண்ணினான்; அவன் குமாரரையும் குமா-
ரத்திகளையும் பெற்றெடுத்தான். அவர்கள் மிகவும்
அழகாயிருந்தார்கள்; ஆதலால் கோரிஹோர்
அநேக ஜனங்களைத் தனக்குப் பின்பு இழுத்துக்-
கொண்டான்.

5 அவன் ஒரு சேனையை ஏகமாய்க் கூட்டின பின்-
பு, அவன் ராஜா வாசம் பண்ணின மோரான் தேசத்-
திற்கு வந்து அவனைச் சிறைப் பிடித்தான். அவர்-
கள் சிறைத்தனத்தினுள் கொண்டுவரப்படுவார்-
கள் என்ற யாரேதின் சகோதரனின் வார்த்தை நி-
றைவேறினது.

6 ராஜா வாசம்பண்ணின மோரான் தேசம் நேபியர்-
களால் பாழ்க்கடிப்பு என்றழைக்கப்பட்ட தேசத்திற்-
கு அருகாமையிலிருந்தது.

7 அந்தப்படியே, கிப்பும் அவன் ஜனமும் அவன் கு-
மாரனாகிய கோரிஹோரின் கீழ் அவன் மிகவும் மு-
திர்வயதடையும்வரை சிறைவாசமாயிருந்தார்கள்;
கிப் தன் வயதான காலத்திலும், தான் சிறைத்தனத்-
திலிருக்கிற போதே சியுலைப் பெற்றான்.

8 அந்தப்படியே, சியுல் தன் சகோதரனோடு கோப-
மாயிருந்தான். சியுல் பெலவானாகி, ஒரு மனுஷ
பெலத்திற்கு சமானமாய் பராக்கிரமம் அடைந்-
தான்; அவன் பகுத்தறிவதிலும் பலவானாயிருந்-
தான்.

9 ஆதலால் அவன் எப்பிராயீம் மலைக்கு வந்து,
அவன் தன்னோடு இழுத்துச் சென்றவர்களுக்காக
மலையிலிருந்து உருக்கி, இரும்பிலிருந்து பட்ட-
யங்களைச் செய்தான்; அவன் அவர்களை பட்ட-
யங்களால் ஆயுதந்தரிக்கச் செய்த பின்னர் அவன்
நிகோரின் பட்டணத்திற்குத் திரும்பி தன் சகோத-
ரனாகிய கோரிஹோருடன் யுத்தம் பண்ணினான்.
இதனாலே அவன் ராஜ்யத்தைப் பெற்று, அதை தன்
தகப்பனாகிய கிப்புக்கு மீட்டுக் கொடுத்தான்.

# Ether 7

And it came to pass that Orihah did execute judgment upon the land in righteousness all his days, whose days were exceedingly many.

And he begat sons and daughters; yea, he begat thirty and one, among whom were twenty and three sons.

And it came to pass that he also begat Kib in his old age. And it came to pass that Kib reigned in his stead; and Kib begat Corihor.

And when Corihor was thirty and two years old he rebelled against his father, and went over and dwelt in the land of Nehor; and he begat sons and daughters, and they became exceedingly fair; wherefore Corihor drew away many people after him.

And when he had gathered together an army he came up unto the land of Moron where the king dwelt, and took him captive, which brought to pass the saying of the brother of Jared that they would be brought into captivity.

Now the land of Moron, where the king dwelt, was near the land which is called Desolation by the Nephites.

And it came to pass that Kib dwelt in captivity, and his people under Corihor his son, until he became exceedingly old; nevertheless Kib begat Shule in his old age, while he was yet in captivity.

And it came to pass that Shule was angry with his brother; and Shule waxed strong, and became mighty as to the strength of a man; and he was also mighty in judgment.

Wherefore, he came to the hill Ephraim, and he did molten out of the hill, and made swords out of steel for those whom he had drawn away with him; and after he had armed them with swords he returned to the city Nehor, and gave battle unto his brother Corihor, by which means he obtained the kingdom and restored it unto his father Kib.

10 இப்பொழுதும், சியுல் செய்த காரியத்தினிமித்தம், அவன் தகப்பன் அவனுக்கு ராஜ்யத்தை அருளினான்; ஆதலால் அவன் தன் தகப்பனுக்குப் பதிலாக ராஜரீகம் பண்ணலானான்.

And now because of the thing which Shule had done, his father bestowed upon him the kingdom; therefore he began to reign in the stead of his father.

11 அந்தப்படியே, அவன் நீதியாய் விசாரணை பண்ணினான்; அவன் தேசத்தின் மேல் எங்கும் தன் ராஜ்யத்தை விஸ்தாரம் பண்ணினான். ஏனெனில் ஜனங்கள் மிகவும் அதிகமானார்கள்.

And it came to pass that he did execute judgment in righteousness; and he did spread his kingdom upon all the face of the land, for the people had become exceedingly numerous.

12 அந்தப்படியே, சியுலும் அநேக குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

And it came to pass that Shule also begat many sons and daughters.

13 கோரிஹோர் தான் செய்த அநேக பொல்லாப்புகளிலிருந்து மனந்திரும்பினான். ஆகவே சியுல் அவனுக்குத் தன் ராஜ்யத்திலே அதிகாரம் கொடுத்தான்.

And Corihor repented of the many evils which he had done; wherefore Shule gave him power in his kingdom.

14 அந்தப்படியே, கோரிஹோருக்கு அநேக குமாரரும், குமாரத்திகளும் இருந்தார்கள். கோரிஹோரின் குமாரருக்குள்ளே நோவா என்று அழைக்கப்பட்ட ஒருவன் இருந்தான்.

And it came to pass that Corihor had many sons and daughters. And among the sons of Corihor there was one whose name was Noah.

15 அந்தப்படியே, நோவா, ராஜாவாகிய சியுலுக்கு விரோதமாயும், தன் தகப்பனாகிய கோரிஹோருக்கு விரோதமாயும் கலகம்பண்ணி, தன் சகோதரனாகிய கோஹோரையும், தன் சகோதரர் அனைவரையும், ஜனத்தில் அநேகரையும் கூட்டிக்கொண்டு போனான்.

And it came to pass that Noah rebelled against Shule, the king, and also his father Corihor, and drew away Cohor his brother, and also all his brethren and many of the people.

16 அவன் ராஜாவாகிய சியுலோடு யுத்தம் பண்ணினான். அதிலே அவன் தன் முதற் சுதந்திர பூமியைப் பெற்றான்; அத்தேசத்தின் அப்பகுதிக்கு அவன் ராஜாவானான்.

And he gave battle unto Shule, the king, in which he did obtain the land of their first inheritance; and he became a king over that part of the land.

17 அந்தப்படியே, அவன் ராஜாவாகிய சியுலோடு மறுபடியும் யுத்தம் பண்ணினான்; அவன் ராஜாவாகிய சியுலை மாரானுக்கு சிறை பிடித்துத் தூக்கிச் சென்றான்.

And it came to pass that he gave battle again unto Shule, the king; and he took Shule, the king, and carried him away captive into Moron.

18 அந்தப்படியே, அவன் அவனை மரணத்திற்குள்ளாக்க இருக்கும்போது, சியுலின் குமாரர்கள் நோவாவின் வீட்டினுள் இரவிலே நுழைந்து, அவனை வெட்டி, சிறைக் கதவை உடைத்துத் தங்கள் தகப்பனை வெளியே கொண்டுவந்து, அவனுடைய சொந்த ராஜ்யத்திலே, சிங்காசனத்தின் மேல் அவனை அமர்த்தினார்கள்.

And it came to pass as he was about to put him to death, the sons of Shule crept into the house of Noah by night and slew him, and broke down the door of the prison and brought out their father, and placed him upon his throne in his own kingdom.

19 ஆதலால் நோவாவின் குமாரர் அவனுக்குப் பதிலாக, அவன் ராஜ்யத்தைக் கட்டினார்கள்; இருப்பினும் அவர்கள் ராஜாவாகிய சியுலுக்கு மேலே எந்த வல்லமையையும் பெறவில்லை. ராஜாவாகிய சியுலின் ஆளுகைக்குக் கீழ் இருந்த ஜனங்கள் மிகவும் விருத்தியடைந்து பெலனடைந்தார்கள்.

Wherefore, the son of Noah did build up his kingdom in his stead; nevertheless they did not gain power any more over Shule the king, and the people who were under the reign of Shule the king did prosper exceedingly and wax great.

20 தேசம் பிரிக்கப்பட்டது; சியுலின் ராஜ்யம் என்றும், நோவாவின் குமாரனாகிய கோஹோரின் ராஜ்யம் என்றும் இரண்டு ராஜ்யங்களிருந்தன.

And the country was divided; and there were two kingdoms, the kingdom of Shule, and the kingdom of Cohor, the son of Noah.

21 நோவாவின் குமாரனாகிய கோஹோர் தன் ஜனங்களை சியுலோடு யுத்தம் பண்ணச் செய்தான். அதிலே சியுல் அவர்களை அடித்து கோஹோரை வெட்டிப்போட்டான்.

And Cohor, the son of Noah, caused that his people should give battle unto Shule, in which Shule did beat them and did slay Cohor.

22 இப்பொழுது கோஹோருக்கு நிம்ரோத் என்று அழைக்கப்பட்ட குமாரன் ஒருவன் இருந்தான்; நிம்ரோத் சியுலுக்கு கோஹோரின் ராஜ்யத்தைக் கொடுத்து அவன் சியுலின் கண்களில் தயை பெற்றான்; ஆகையால் சியுல் அவன் மேல் பெரும் தயைகளை அருளினான். அவன் தன் இஷ்டப்படியெல்லாம் சியுலின் ராஜ்யத்திலே செய்தான்.

And now Cohor had a son who was called Nimrod; and Nimrod gave up the kingdom of Cohor unto Shule, and he did gain favor in the eyes of Shule; wherefore Shule did bestow great favors upon him, and he did do in the kingdom of Shule according to his desires.

23 சியுலின் ராஜாங்கத்திலேயும், கர்த்தரிடத்திலிருந்து அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் ஜனங்களுக்குள்ளே வந்து, ஜனங்களுடைய துன்மார்க்கமும், விக்கிரக ஆராதனையும் தேசத்தின் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதென்றும், அவர்கள் மனந்திரும்பவில்லையெனில், அவர்கள் அழிக்கப்படுவார்களென்றும் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள்.

And also in the reign of Shule there came prophets among the people, who were sent from the Lord, prophesying that the wickedness and idolatry of the people was bringing a curse upon the land, and they should be destroyed if they did not repent.

24 அந்தப்படியே, ஜனங்கள் தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாகக் கலகம்பண்ணி, அவர்களைக் கேலி செய்தார்கள். அந்தப்படியே, தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிற எல்லாருக்கும் எதிராக சியுல் ராஜா நியாயம் விசாரித்தான்.

And it came to pass that the people did revile against the prophets, and did mock them. And it came to pass that king Shule did execute judgment against all those who did revile against the prophets.

25 அவன் தேசம் முழுவதும் ஒரு சட்டத்தை நிறைவேற்றினான். அதன் மூலமாய் தீர்க்கதரிசிகள் தாங்கள் விரும்புகிற எவ்விடத்திற்கும் போகக்கூடிய அதிகாரத்தைப் பெற்றார்கள்; இப்படியாக ஜனங்கள் மனந்திரும்புதலுக்குக் கொண்டுவரப்பட்டார்கள்.

And he did execute a law throughout all the land, which gave power unto the prophets that they should go whithersoever they would; and by this cause the people were brought unto repentance.

26 ஜனங்கள் தங்கள் அக்கிரமங்களிலிருந்தும், விக்கிரக ஆராதனைகளிலிருந்தும் மனந்திரும்பினபடியால், கர்த்தர் அவர்களைத் தப்புவித்தார். அவர்கள் மறுபடியும் தேசத்தில் விருத்தியடைய ஆரம்பித்தார்கள். அந்தப்படியே, சியுல் தன் வயதான காலத்தில் குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றான்.

And because the people did repent of their iniquities and idolatries the Lord did spare them, and they began to prosper again in the land. And it came to pass that Shule begat sons and daughters in his old age.

27 ஆதலால் அங்கே சியுலின் நாட்களில் யுத்தங்கள் இருக்கவில்லை. கர்த்தர் அவனுடைய பிதாக்களை அந்தப் பெரும் ஆழங்களைக் கடந்து, வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு கொண்டுவருவதற்காக அவர் செய்த அந்த மாபெரும் காரியங்களை அவன் நினைவுகூர்ந்தான்; ஆதலால் அவன் தன் நாட்கள் முழுவதிலும் நீதியாய் நியாயம் விசாரித்தான்.

And there were no more wars in the days of Shule; and he remembered the great things that the Lord had done for his fathers in bringing them across the great deep into the promised land; wherefore he did execute judgment in righteousness all his days.

## ஏத்தேர் 8

1 அந்தப்படியே, அவன் ஓமரைப் பெற்றெடுத்தான்.
ஓமர் அவனுக்குப் பதிலாக ஆளுகை பண்ணி-
னான். ஓமர், யாரேதைப் பெற்றெடுத்தான்; யாரேது
குமாரரையும், குமாரத்திகளையும் பெற்றெடுத்-
தான்.
2 யாரேது தன் தகப்பனுக்கு விரோதமாய்க் கலகம்-
பண்ணி, கேத்தின் தேசத்திலே வாசம் பண்ணி-
னான். அந்தப்படியே, அவன் தன்னுடைய வஞ்சக
வார்த்தைகளினாலே, ராஜ்யத்தின் பாதியை பெ-
றும்வரைக்குமாக அநேக ஜனங்களிடத்தில் முகஸ்-
துதியாய்ப் பேசினான்.
3 அவன் ராஜ்யத்தின் பாதியை பெற்றுக்கொண்ட
பின்பு, அவன் தன் தகப்பனோடு போர் தொடுத்-
தான். அவன் தன் தகப்பனைச் சிறைத்தனத்திற்-
குள்ளாகக் கொண்டுபோய், சிறைவாசம் மேற்-
கொள்ளச் செய்தான்.
4 இப்பொழுதும், ஓமரின் ஆளுகையின் நாட்க-
ளில், அவன் தன் வாழ்நாட்களின் பாதியை சி-
றைத்தனத்தில் கழித்தான். அந்தப்படியே, அவன்
குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான். அவர்-
களுக்குள் எஸ்ரோமும், கொரியாந்தமரும் இருந்-
தார்கள்.
5 அவர்கள் தங்கள் சகோதரனாகிய யாரேதின் செ-
யல்களால் மிகவும் கோபம்கொண்டதினிமித்தம்,
அவர்கள் ஒரு சேனையைத் திரட்டி யாரேதோடு
போர் தொடுத்தார்கள். அந்தப்படியே, அவர்கள்
அவனோடு இரவில் போர் தொடுத்தார்கள்.
6 அந்தப்படியே, அவர்கள் யாரேதின் சேனையை
வெட்டிப்போட்ட பின்பு, அவர்கள் அவனையும்
வெட்டிப்போட இருந்தார்கள்; அவன் தன்னை
வெட்டிப்போட வேண்டாமென்றும், ராஜ்யத்தை
தன் தகப்பனிடத்தில் கொடுக்க விரும்புவதாகவும்
கெஞ்சினான். அந்தப்படியே, அவர்கள் அவன் ஜீ-
வனைத் தப்புவித்தார்கள்.
7 இப்பொழுதும் யாரேது தன் இருதயத்தை ராஜ்யத்-
தின் மேலும், உலகத்தின் மகிமையின் மேலும்
வைத்ததினிமித்தம் ராஜ்யத்தின் இழப்பினால் மிக-
வும் வருந்தினான்.
8 இப்பொழுதும் யாரேதின் குமாரத்தி மிகவும் கை-
தேர்ந்தவளாய் இருந்தபடியால், தன் தகப்பனின்
துக்கங்களைக் கண்டு, தன் தகப்பனுக்கு ராஜ்யத்-
தை மீட்டுத்தர ஒரு திட்டம் வகுக்க நினைத்தாள்.

## Ether 8

And it came to pass that he begat Omer, and Omer reigned in his stead. And Omer begat Jared; and Jared begat sons and daughters.

And Jared rebelled against his father, and came and dwelt in the land of Heth. And it came to pass that he did flatter many people, because of his cunning words, until he had gained the half of the kingdom.

And when he had gained the half of the kingdom he gave battle unto his father, and he did carry away his father into captivity, and did make him serve in captivity;

And now, in the days of the reign of Omer he was in captivity the half of his days. And it came to pass that he begat sons and daughters, among whom were Esrom and Coriantumr;

And they were exceedingly angry because of the doings of Jared their brother, insomuch that they did raise an army and gave battle unto Jared. And it came to pass that they did give battle unto him by night.

And it came to pass that when they had slain the army of Jared they were about to slay him also; and he pled with them that they would not slay him, and he would give up the kingdom unto his father. And it came to pass that they did grant unto him his life.

And now Jared became exceedingly sorrowful because of the loss of the kingdom, for he had set his heart upon the kingdom and upon the glory of the world.

Now the daughter of Jared being exceedingly expert, and seeing the sorrows of her father, thought to devise a plan whereby she could redeem the kingdom unto her father.

9 இப்பொழுதும் யாரேதின் குமாரத்தி மிகவும் ரூப-
வதியாய் இருந்தாள். அந்தப்படியே, அவள் தன்
தகப்பனிடத்தில் பேசி, அவனை நோக்கி: என்ன மு-
காந்தரத்தினிமித்தம் என் தகப்பனுக்கு இவ்வளவு
துக்கம் ஏற்பட்டிருக்கிறது, நம்முடைய பிதாக்கள்
பெரும் ஆழத்தைக் கடந்து கொண்டுவந்த பதி-
வேட்டினை அவர் வாசித்ததில்லையா? இதோ,
அவர்களுடைய இரகசிய திட்டங்களினிமித்தம் ரா-
ஜ்யங்களையும், பெரும் மகிமையையும் பெற்றார்-
கள் என்று பூர்வத்தினரைக் குறித்து ஒரு விவரம்
அங்கே இல்லையா?

Now the daughter of Jared was exceedingly fair.
And it came to pass that she did talk with her father,
and said unto him: Whereby hath my father so much
sorrow? Hath he not read the record which our fa-
thers brought across the great deep? Behold, is there
not an account concerning them of old, that they by
their secret plans did obtain kingdoms and great
glory?

10 இப்பொழுதும், ஆதலால், என் தகப்பன் கீம்நோ-
ரின் குமாரனாகிய ஆகீஸை அழைக்க ஆளனுப்பு-
வாராக; இதோ, நான் அழகாயிருக்கிறேன். நான்
அவன் முன்பு நடனமாடுவேன். அவன் என்னை
மனைவியாக ஏற்றுக்கொள்ள விரும்பும்படியாக
நான் அவனைப் பிரியப்படுத்துவேன்; ஆதலால்
தனக்கு மனைவியாக என்னைக் கொடுக்கவேண்-
டுமென்று அவன் உம்மிடத்தில் வாஞ்சித்தால், நீர்
அவனிடத்தில், நீ ராஜாவாகிய என் தகப்பனுடைய
தலையை என்னிடத்தில் கொண்டுவந்தால், நான்
அவளைக் கொடுப்பேன், என்று சொல்லும், என்-
றாள்.

And now, therefore, let my father send for Akish,
the son of Kimnor; and behold, I am fair, and I will
dance before him, and I will please him, that he will
desire me to wife; wherefore if he shall desire of thee
that ye shall give unto him me to wife, then shall ye
say: I will give her if ye will bring unto me the head
of my father, the king.

11 இப்பொழுதும் ஓமர், ஆகீஸின் நண்பனாய் இருந்-
தான். யாரேது ஆகீஸை அழைத்திருந்தபோது, யா-
ரேதின் குமாரத்தி அவனுக்கு முன்பாக நடனமாடி
அவனைப் பிரியப்படுத்தினதினிமித்தம் அவன்
அவளை மனைவியாய்ப் பெற வாஞ்சித்தான். அந்-
தப்படியே, அவன் யாரேதை நோக்கி, அவளை
எனக்கு மனைவியாகக் கொடும், என்றான்.

And now Omer was a friend to Akish; wherefore,
when Jared had sent for Akish, the daughter of Jared
danced before him that she pleased him, insomuch
that he desired her to wife. And it came to pass that
he said unto Jared: Give her unto me to wife.

12 யாரேது அவனை நோக்கி: நீ என்னிடத்தில் ராஜா-
வாகிய என் தகப்பனுடைய தலையைக் கொண்டு-
வந்தால், நான் அவளை உனக்குத் தருவேன், என்-
றான்.

And Jared said unto him: I will give her unto you,
if ye will bring unto me the head of my father, the
king.

13 அந்தப்படியே, ஆகீஸ் யாரேதின் வீட்டிலே தன்
உறவினர்கள் யாவரையும் கூடச் செய்து, அவர்க-
ளை நோக்கி: நான் உங்களிடத்தில் வாஞ்சிக்கிற
இக்காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாய்
இருப்பீர்களென்று எனக்கு நீங்கள் ஆணையிட்டுக்
கொடுப்பீர்களா, என்றான்.

And it came to pass that Akish gathered in unto
the house of Jared all his kinsfolk, and said unto
them: Will ye swear unto me that ye will be faithful
unto me in the thing which I shall desire of you?

14 அந்தப்படியே, ஆகீஸ் வாஞ்சித்த அவ்வுதவியிலி-
ருந்து விலகிப்போகிற எவனும் தன் தலையை
இழக்க வேண்டுமென்றும், ஆகீஸ் தங்களுக்கு தெரி-
விக்கப்பண்ணுகிற எந்தக் காரியத்தையும் வெளி-
யரங்கமாக்குகிற எவனும் தன் ஜீவனை இழக்க
வேண்டுமென்றும் அவர்கள் அவனிடத்தில் பர-
லோக தேவன் மீதும், பரலோகங்கள்மீதும், பூமி-
யின்மீதும், தங்கள் சிரசுகளின்மீதும் ஆணையிட்-
டார்கள்.

And it came to pass that they all sware unto him,
by the God of heaven, and also by the heavens, and
also by the earth, and by their heads, that whoso
should vary from the assistance which Akish desired
should lose his head; and whoso should divulge
whatsoever thing Akish made known unto them, the
same should lose his life.

15 அந்தப்படியே, அவர்கள் இப்படியாக ஆகீஸுக்கு உடன்பட்டார்கள். அதிகாரத்திற்காக வகைதேடின பழங்காலத்தினரால் தங்களுக்குக் கொடுக்கப்பட்டதும், ஆதியிலிருந்தே கொலைபாதகனான காயீனிடத்திலிருந்து கையளிக்கப்பட்டதுமான உறுதிமொழிகளை ஆகீஸ் அவர்களுக்குச் செய்வித்தான்.

And it came to pass that thus they did agree with Akish. And Akish did administer unto them the oaths which were given by them of old who also sought power, which had been handed down even from Cain, who was a murderer from the beginning.

16 இந்த உறுதிமொழிகளை ஜனங்களுக்குச் செய்விக்கவும், அவர்களை இருளில் வைக்கவும், அதிகாரத்தைப் பெற, அதிகாரம் பெற உதவவும், கொலை செய்யவும், களவுசெய்யவும், பொய்யுரைக்கவும், எல்லாவிதமான துன்மார்க்கத்தையும், வேசித்தனங்களைச் செய்யவும், அவர்கள் பிசாசின் வல்லமையினால் வைக்கப்பட்டிருந்தனர்.

And they were kept up by the power of the devil to administer these oaths unto the people, to keep them in darkness, to help such as sought power to gain power, and to murder, and to plunder, and to lie, and to commit all manner of wickedness and whoredoms.

17 பழங்காலக் காரியங்களைத் தேடும்படியான ஓர் யோசனையை அவன் இருதயத்தினுள் போட்டது யாரேதின் குமாரத்திதான்; யாரேது அதை ஆகீஸின் இருதயத்தினுள் போட்டான்; ஆதலால் ஆகீஸ் அதை தன் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் கொடுத்து, தான் விரும்புகிற எந்த காரியத்தையும் செய்ய நல்ல வாக்குத்தத்தங்களாலே அவர்களை வழிநடத்திப்போனான்.

And it was the daughter of Jared who put it into his heart to search up these things of old; and Jared put it into the heart of Akish; wherefore, Akish administered it unto his kindred and friends, leading them away by fair promises to do whatsoever thing he desired.

18 அந்தப்படியே, பூர்வ காலத்தினரைப்போல அவர்கள் ஒரு இரகசிய சங்கத்தைத் தோற்றுவித்தார்கள்; அந்த சங்கம் தேவனுடைய பார்வைக்கு சகலத்தையும் விட மிக அருவருக்கத்தக்கதும், பொல்லாததுமாயிருந்தது.

And it came to pass that they formed a secret combination, even as they of old; which combination is most abominable and wicked above all, in the sight of God;

19 கர்த்தர் இரகசிய சங்கங்கள் மூலம் கிரியை செய்வதில்லையாதலால், அவர் மனுஷன் இரத்தத்தை சிந்தவேண்டுமென்று விரும்புவதுமில்லை. ஆனால் சகலத்திலும் மனுஷ தொடக்கத்திலிருந்தே அதைத் தவிர்த்திருக்கிறார்.

For the Lord worketh not in secret combinations, neither doth he will that man should shed blood, but in all things hath forbidden it, from the beginning of man.

20 இப்பொழுதும் மரோனியாகிய நான் அவர்களுடைய உறுதிமொழிகளையும், சங்கங்களையும் குறித்து எழுதுவதில்லை. ஏனெனில் அவை சகல ஜனங்களுக்குள்ளும், லாமானியருக்குள்ளும் இருக்கிறதென்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

And now I, Moroni, do not write the manner of their oaths and combinations, for it hath been made known unto me that they are had among all people, and they are had among the Lamanites.

21 அவை நான் இப்பொழுது பேசிக்கொண்டிருக்கிற இந்த ஜனத்தின் அழிவையும், நேபியின் ஜனத்தின் அழிவையும் ஏற்படுத்தின.

And they have caused the destruction of this people of whom I am now speaking, and also the destruction of the people of Nephi.

22 வல்லமையையும் ஆதாயத்தையும் பெற, தேசம் முழுவதும் இரகசிய சங்கங்கள் பரவும் வரைக்குமாய் அதை ஆதரிக்கிற எந்த தேசமும் இதோ, அழிக்கப்படும்; ஏனெனில் கர்த்தர் அவர்களால் சிந்தப்படும் அவருடைய பரிசுத்தவான்களின் இரத்தம் எப்பொழுதும் பூமியிலிருந்து அவரிடத்தில் பழிதீர்க்கும்படி கூக்குரலிடும்படியாக அனுமதிப்பதில்லை. இருப்பினும் அவர் அவர்களை பழிதீர்ப்பதில்லை.

And whatsoever nation shall uphold such secret combinations, to get power and gain, until they shall spread over the nation, behold, they shall be destroyed; for the Lord will not suffer that the blood of his saints, which shall be shed by them, shall always cry unto him from the ground for vengeance upon them and yet he avenge them not.

23 ஆதலால் புறஜாதியாராகிய நீங்கள் உங்கள் பா-
வங்களிலிருந்து மனந்திரும்பவும் வல்லமையும்
லாபத்தையும் பெற ஏற்படுத்தப்பட்ட இந்த கொ-
லைச் சங்கங்கள் உங்கள் மேல் அதிகாரத்தைச் செ-
லுத்த அனுமதியாமல் இருக்கவும், இவைகள் உங்க-
ளுக்குக் காண்பிக்கப்படவேண்டியது தேவனு-
டைய ஞானமாயிருக்கிறது. இவைகள் இருக்க
அனுமதித்தால், உங்களை வீழ்த்தவும், அழிக்கவும்,
கிரியை ஆம், அழிவின் கிரியை உங்கள் மேல்
வரும். ஆம், நித்திய பிதாவின் நீதியின் பட்டயம்,
நீங்கள் வீழ்ந்து அழிந்து போகும்படியாய் உங்கள்-
மேல் விழும்.

Wherefore, O ye Gentiles, it is wisdom in God that these things should be shown unto you, that thereby ye may repent of your sins, and suffer not that these murderous combinations shall get above you, which are built up to get power and gain—and the work, yea, even the work of destruction come upon you, yea, even the sword of the justice of the Eternal God shall fall upon you, to your overthrow and destruction if ye shall suffer these things to be.

24 ஆதலால் உங்களுக்குள் இக்காரியங்கள் வருகிற-
தை நீங்கள் காணும்போது, உங்களுக்குள்ளிருக்-
கப்போகும் இந்த இரகசிய சங்கத்தினிமித்தம், உங்க-
ளுடைய அஞ்சத்தக்க நிலையில் நீங்கள் விழித்தெ-
ழுவீர்களாக, என்று கர்த்தர் உங்களுக்குக் கட்ட-
ளையிடுகிறார்; இல்லையேல் கொல்லப்பட்டோ-
ரின் இரத்தத்தினிமித்தம், அதற்கு ஐயோ, ஏனெனில்
அதன்மீதும், அதைக் கட்டியெழுப்பினவர்கள் மீ-
தும் பழிதீர்க்கும்படியாக புழுதியிலிருந்து அவர்-
கள் கூக்குரலிடுகிறார்கள்.

Wherefore, the Lord commandeth you, when ye shall see these things come among you that ye shall awake to a sense of your awful situation, because of this secret combination which shall be among you; or wo be unto it, because of the blood of them who have been slain; for they cry from the dust for vengeance upon it, and also upon those who built it up.

25 அதைக் கட்டுகிற எவனும் சகல இடங்கள், தேசங்-
கள், மற்றும் நாடுகளின் சுதந்திரத்தை வீழ்த்த
வகை தேடுகிறான்; சகல பொய்களுக்கும் தகப்-
பனான பிசாசினால் அது கட்டி எழுப்பப்பட்டிருப்-
பதாலே, அது சகல ஜனங்களுக்கும் அழிவை வரப்-
பண்ணுகிறது. அதே பொய்யனே நம்முடைய மு-
தற்பெற்றோரை வஞ்சித்தான். ஆம், அதே பொய்-
யனே ஆதியிலிருந்து மனுஷனைக் கொலை செய்-
யும்படி தூண்டினான்; மனுஷர் தீர்க்கதரிசிகளைக்
கொலைபண்ணவும், அவர்களைக் கல்லெறிய-
வும், அவர்களைத் துரத்தவும், அவர்களுடைய
இருதயங்களை ஆதியிலிருந்தே அவன் கடினப்ப-
டுத்தினான்.

For it cometh to pass that whoso buildeth it up seeketh to overthrow the freedom of all lands, nations, and countries; and it bringeth to pass the destruction of all people, for it is built up by the devil, who is the father of all lies; even that same liar who beguiled our first parents, yea, even that same liar who hath caused man to commit murder from the beginning; who hath hardened the hearts of men that they have murdered the prophets, and stoned them, and cast them out from the beginning.

26 ஆதலால் பொல்லாப்பு முற்றுப்பெறவும், மனுபுத்-
திரரின் இருதயங்களின் மேல் சாத்தானுக்கு எந்த
வல்லமையும் இராத சமயம் வரவும், ஆனால் அவர்-
கள் சகல நீதியின் ஊற்றுக்கு வந்து இரட்சிக்கப்பட,
அவர்கள் தொடர்ந்து நன்மையே செய்யும்படி
இணங்கச்செய்யவுமே, மரோனியாகிய நான் இவை-
களை எழுதும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறேன்.

Wherefore, I, Moroni, am commanded to write these things that evil may be done away, and that the time may come that Satan may have no power upon the hearts of the children of men, but that they may be persuaded to do good continually, that they may come unto the fountain of all righteousness and be saved.

# ஏத்தேர் 9

1 இப்பொழுதும் மரோனியாகிய நான் என் பதிவேட்-
டினைத் தொடர்கிறேன். ஆதலால் இதோ, அந்தப்ப-
டியே, ஆகீஸ் மற்றும் அவனது நண்பர்களுடைய
இரகசிய சங்கங்களினிமித்தம், இதோ, அவர்கள்
ஓமரின் ராஜ்யத்தை வீழ்த்தினார்கள்.

2 ஆயினும் அவனுடைய அழிவை நாடாதிருந்த
ஓமரிடத்திலும், அவனது குமாரர்களிடத்திலும்
அவனுடைய குமாரத்திகளிடத்திலும் கர்த்தர் இரக்-
கமுள்ளவராயிருந்தார்.

3 கர்த்தர் ஓமருக்கு தரிசனத்திலே அவன் தேசத்தை-
விட்டு புறப்படவேண்டுமென எச்சரித்தார். ஆத-
லால் ஓமர் தன் குடும்பத்துடன் தேசத்தைவிட்டுப் பு-
றப்பட்டுப்போய் அநேக நாட்கள் பயணம்பண்ணி,
ஷிம் என்ற மலைக்கு அருகே கடந்துபோய், நேபி-
யர்கள் அழிக்கப்பட்டுப்போன இடத்திற்கு வந்து,
அங்கிருந்து கிழக்கே போய் யாரேதையும் அவன் கு-
டும்பத்தையும் தவிர அவன் குமாரர்களும், குமாரத்-
திகளும் அவன் வீட்டார் எல்லோரும் கடற்கரை-
யோரமாய் ஆப்லோம் என்ற இடத்துக்கு வந்து அங்-
கே பாளையமிறங்கினார்கள்.

4 அந்தப்படியே, துன்மார்க்கத்தின் கரத்தால் யாரே-
து ஜனங்களின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்-
ணப்பட்டான்; அவன் தன் குமாரத்தியை ஆகீ-
ஸூக்கு மனைவியாகக் கொடுத்தான்.

5 அந்தப்படியே, ஆகீஸ் தன் மாமனின் ஜீவனை
வாங்க வகை தேடினான்; அவன் பூர்வத்தாரின்
உறுதிமொழியை எடுத்துக் கொண்டோரிடம் விண்-
ணப்பித்தான். அவர்களோ அவனுடைய மாமன்
தன்னுடைய சிங்காசனத்தில் உட்கார்ந்து, ஜனங்க-
ளை விசாரித்துக்கொண்டிருந்தபோது அவனது
தலையை வாங்கினார்கள்.

6 இந்த துன்மார்க்கமும், இரகசிய சங்கமும் அதிக-
மாய் பரவினதினாலே, அது எல்லா ஜனங்களு-
டைய இருதயத்தையும் கெடுத்தது; ஆதலால் தன்
சிங்காசனத்திலேயே யாரேது கொலை செய்யப்பட்-
டான். ஆகீஸ் அவனுக்குப் பதிலாக ஆளுகை பண்-
ணினான்.

7 அந்தப்படியே, ஆகீஸ் தன் குமாரன் மேல் பொறா-
மைகொண்டு, அவனை சிறையிலடைத்து, அவன்
மரணம் அடையும் வரைக்கும் அவனுக்குக் கொஞ்-
சம் உணவைக் கொடுத்தான் அல்லது எந்த உண-
வையும் தரவில்லை.

8 இப்பொழுதும் மரித்தவனின் சகோதரன் (அவன்
பெயர் நிம்ரா என்பதாகும்) தன் தகப்பன் தன்னு-
டைய சகோதரனுக்கு செய்ததினிமித்தம் தன் தகப்-
பன் மேல் கோபமாயிருந்தான்.

# Ether 9

And now I, Moroni, proceed with my record. Therefore, behold, it came to pass that because of the secret combinations of Akish and his friends, behold, they did overthrow the kingdom of Omer.

Nevertheless, the Lord was merciful unto Omer, and also to his sons and to his daughters who did not seek his destruction.

And the Lord warned Omer in a dream that he should depart out of the land; wherefore Omer departed out of the land with his family, and traveled many days, and came over and passed by the hill of Shim, and came over by the place where the Nephites were destroyed, and from thence eastward, and came to a place which was called Ablom, by the seashore, and there he pitched his tent, and also his sons and his daughters, and all his household, save it were Jared and his family.

And it came to pass that Jared was anointed king over the people, by the hand of wickedness; and he gave unto Akish his daughter to wife.

And it came to pass that Akish sought the life of his father-in-law; and he applied unto those whom he had sworn by the oath of the ancients, and they obtained the head of his father-in-law, as he sat upon his throne, giving audience to his people.

For so great had been the spreading of this wicked and secret society that it had corrupted the hearts of all the people; therefore Jared was murdered upon his throne, and Akish reigned in his stead.

And it came to pass that Akish began to be jealous of his son, therefore he shut him up in prison, and kept him upon little or no food until he had suffered death.

And now the brother of him that suffered death, (and his name was Nimrah) was angry with his father because of that which his father had done unto his brother.

9 அந்தப்படியே, நிம்ரா கொஞ்சம் மனுஷரை ஏகமாய்க் கூட்டி தேசத்தைவிட்டு வெளியேறி வந்து, ஓமருடன் வாசம்பண்ணினான்.

And it came to pass that Nimrah gathered together a small number of men, and fled out of the land, and came over and dwelt with Omer.

10 அந்தப்படியே, ஆகீஸ் மற்ற குமாரரையும் பெற்றான், அவன் விரும்பினபடியே எல்லா விதமான அக்கிரமத்தையும் செய்ய அவர்கள் அவனிடத்தில் உறுதிகொடுத்திருந்தாலும், அவர்கள் ஜனங்களின் இருதயங்களை ஜெயம்கொண்டார்கள்.

And it came to pass that Akish begat other sons, and they won the hearts of the people, notwithstanding they had sworn unto him to do all manner of iniquity according to that which he desired.

11 ஆகீஸ் அதிகாரத்தை வாஞ்சித்திருந்ததைப் போல, ஆகீஸின் ஜனங்கள் ஆதாயத்தை விரும்பியிருந்தார்கள்; ஆதலால் ஆகீஸின் குமாரர்கள் அவர்களுக்குப் பணத்தைத் தந்து, அதன்மூலம் ஜனத்தின் பெரும் பகுதியினரை தங்களுக்குப் பின்னே இழுத்துச் சென்றார்கள்.

Now the people of Akish were desirous for gain, even as Akish was desirous for power; wherefore, the sons of Akish did offer them money, by which means they drew away the more part of the people after them.

12 ஆகீஸின் குமாரர்களுக்கும், ஆகீஸூக்கும் இடையே ஒரு யுத்தம் துவங்கியது. முப்பது ஆத்துமாக்களையும், ஓமரின் வீட்டாரோடு ஓடினவர்களையும் தவிர, ராஜ்யத்தின் ஜனங்களில் கிட்டத்தட்ட அனைவரும் அழிவிற்குள்ளாகும்படியாக அது அநேக வருஷமளவும் நீடித்தது.

And there began to be a war between the sons of Akish and Akish, which lasted for the space of many years, yea, unto the destruction of nearly all the people of the kingdom, yea, even all, save it were thirty souls, and they who fled with the house of Omer.

13 ஆதலால் ஓமர் மறுபடியும் அவனுடைய சுதந்திர பூமியிலே திரும்பக் கொண்டுவரப்பட்டான்.

Wherefore, Omer was restored again to the land of his inheritance.

14 அந்தப்படியே, ஓமர் வயதானவனானான். ஆயினும் அவன் தன் முதிர்வயதிலே எமரைப் பெற்றெடுத்தான். அவன் எமரைத் தன் ஸ்தானத்திலே ராஜரீகம் பண்ணும்படியாக ராஜாவாக அபிஷேகம் பண்ணினான்.

And it came to pass that Omer began to be old; nevertheless, in his old age he begat Emer; and he anointed Emer to be king to reign in his stead.

15 அவன் எமரை ராஜாவாக அபிஷேகம் பண்ணின பின்பு, இரண்டு வருஷ காலமளவும் அவன் தேசத்திலே சமாதானத்தைக் கண்டான், துக்கத்தால் நிறைந்த வெகு அதிகமான நாட்களைக் கண்டு அவன் மரித்துப் போனான். அந்தப்படியே, எமர் அவன் ஸ்தானத்திலே ராஜரீகம்பண்ணி, தன் தகப்பனுடைய பாதச்சுவட்டைப் பின்பற்றினான்.

And after that he had anointed Emer to be king he saw peace in the land for the space of two years, and he died, having seen exceedingly many days, which were full of sorrow. And it came to pass that Emer did reign in his stead, and did fill the steps of his father.

16 கர்த்தர் மறுபடியும் பூமியிலிருந்து சாபத்தை எடுத்துப்போடத் தொடங்கினார். எமரின் ராஜரீகத்தின் கீழ் எமரின் வீட்டார் செழிக்கத் துவங்கினார்கள். அறுபத்திரண்டு வருஷகால அளவில் அவர்கள் வெகு பலசாலிகளாகவும் மிகவும் ஐஸ்வரியவான்களாகவும் ஆனார்கள்.

And the Lord began again to take the curse from off the land, and the house of Emer did prosper exceedingly under the reign of Emer; and in the space of sixty and two years they had become exceedingly strong, insomuch that they became exceedingly rich—

17 அவர்கள் சகலவிதமான கனிகளையும், தானியங்களையும், பட்டுக்களையும், மெல்லிய வஸ்திரங்களையும், பொன்னையும், வெள்ளியையும், விலையேறப்பெற்ற பொருட்களையும்,

Having all manner of fruit, and of grain, and of silks, and of fine linen, and of gold, and of silver, and of precious things;

18 சகல விதமான மந்தைகளையும், எருதுகளையும், பசுக்களையும், ஆடுகளையும், பன்றிகளையும், வெள்ளாடுகளையும், மனுஷனுக்கு உணவாகப் பயன்படும் மற்ற அநேக விதமான மிருகங்களையும் வைத்திருந்தார்கள்.

And also all manner of cattle, of oxen, and cows, and of sheep, and of swine, and of goats, and also many other kinds of animals which were useful for the food of man.

19 அவர்கள் குதிரைகளையும் கழுதைகளையும்
வைத்திருந்தார்கள். அங்கே யானைகளும், சூரி-
லம்ஸங்களும், குமாம்ஸ்களும் இருந்தன. அவை-
கள் யாவும் மனுஷருக்கு பயனுள்ளவைகளாயி-
ருந்தன. மிகவும் குறிப்பாக யானைகளும், சூரிலம்-
ஸூகளும், குமாம்ஸ்களும் உபயோகமாயிருந்தன.

And they also had horses, and asses, and there were elephants and cureloms and cumoms; all of which were useful unto man, and more especially the elephants and cureloms and cumoms.

20 இவ்விதமாக மற்ற எல்லா தேசங்களையும்விட சி-
றந்த தேசமான இந்த தேசத்தின் மேல் கர்த்தர் தம்மு-
டைய ஆசீர்வாதங்களை ஊற்றினார்; தேசத்தை சு-
தந்தரிக்கும் எவரும் அதைக் கர்த்தருக்கேதுவாய் சு-
தந்தரிக்கவேண்டும், இல்லையேல் அவர்கள் அக்கி-
ரமத்தில் பழுத்திருக்கும்போது அவர்கள் அழிக்கப்-
படுவார்கள், என்று அவர் கட்டளையிட்டார்; அப்ப-
டிப்பட்டவர்கள் மேல் நான் என்னுடைய கோபாக்-
கினையின் முழுமையை ஊற்றுவேன், என்று கர்த்-
தர் உரைக்கிறார்.

And thus the Lord did pour out his blessings upon this land, which was choice above all other lands; and he commanded that whoso should possess the land should possess it unto the Lord, or they should be destroyed when they were ripened in iniquity; for upon such, saith the Lord: I will pour out the fulness of my wrath.

21 எமர் தன் வாழ்நாட்கள் முழுவதிலும் நீதியாய் நி-
யாயம் விசாரித்தான். அவன் அநேக குமாரர்களை-
யும், குமாரத்திகளையும் பெற்றான். அவன் கொரி-
யாந்தமைப் பெற்றான். தன் ஸ்தானத்திலே ஆளு-
கைபண்ணும்படியாக அவன் கொரியாந்தமை
அபிஷேகம் பண்ணினான்.

And Emer did execute judgment in righteousness all his days, and he begat many sons and daughters; and he begat Coriantum, and he anointed Coriantum to reign in his stead.

22 அவன் கொரியாந்தமைத் தன்னுடைய ஸ்தானத்-
திலே ஆளுகைபண்ணும்படியாக அபிஷேகம்
பண்ணின பின்னர் அவன் நான்கு வருஷங்கள்
வாழ்ந்தான். அவன் தேசத்தில் சமாதானத்தைக்
கண்டான்; ஆம், அவன் நீதியின் குமாரனைக் கண்-
டு தன் நாளில் களிகூர்ந்து மகிமைப்பட்டான்;
அவன் சமாதானமாய் மரித்தான்.

And after he had anointed Coriantum to reign in his stead he lived four years, and he saw peace in the land; yea, and he even saw the Son of Righteousness, and did rejoice and glory in his day; and he died in peace.

23 அந்தப்படியே, கொரியாந்தம் தன் பிதாவின் மு-
றைகளின்படி நடந்து, அநேக பலமான பட்டணங்-
களைக் கட்டி, தன் நாட்கள் முழுவதும் தன் ஜனங்-
களுக்கு நன்மையானதைக் கொடுத்தான். அந்தப்-
படியே, அவன் மிகவும் வயதாகும்வரைக்கும் பிள்-
ளைகள் ஏதுமில்லாதிருந்தான்.

And it came to pass that Coriantum did walk in the steps of his father, and did build many mighty cities, and did administer that which was good unto his people in all his days. And it came to pass that he had no children even until he was exceedingly old.

24 அந்தப்படியே, அவன் மனைவி நூற்றிரண்டு
வயதாயிருந்து மரித்தாள். அந்தப்படியே, கொரி-
யாந்தம் தன் முதிர்வயதிலே ஒரு இளம் வேலைக்-
காரியை மனைவியாகக்கொண்டு, குமாரர்களை-
யும் குமாரத்திகளையும் பெற்றான்; ஆதலால்
அவன் நூற்றி நாற்பத்தி இரண்டு வயதாகும்வ-
ரைக்கும் வாழ்ந்தான்.

And it came to pass that his wife died, being an hundred and two years old. And it came to pass that Coriantum took to wife, in his old age, a young maid, and begat sons and daughters; wherefore he lived until he was an hundred and forty and two years old.

25 அந்தப்படியே, அவன் கோமைப் பெற்றான். கோம்
அவன் ஸ்தானத்தில் ஆளுகை பண்ணினான்.
அவன் நாற்பத்தி ஒன்பது வருஷம் ஆளுகை பண்-
ணினான். அவன் கேத்தை பெற்றான்; மற்ற குமா-
ரர்களையும் குமாரத்திகளையும் பெற்றான்.

And it came to pass that he begat Com, and Com reigned in his stead; and he reigned forty and nine years, and he begat Heth; and he also begat other sons and daughters.

26 ஜனங்கள் மறுபடியும் தேசத்தின் மேலெங்கும் பர-
வினார்கள். மறுபடியும் அங்கே தேசத்தின் மேல் மி-
கப் பெரும் துன்மார்க்கம் ஏற்படத் துவங்கியது.
கேத் தன் தகப்பனை அழிக்க பழங்காலத்தினரின்
திட்டங்களை மறுபடியும் தழுவத் துவங்கினான்.

And the people had spread again over all the face of the land, and there began again to be an exceedingly great wickedness upon the face of the land, and Heth began to embrace the secret plans again of old, to destroy his father.

27 அந்தப்படியே, அவன் தன் சொந்த பட்டயத்தி-
னால் தன் தகப்பனை வெட்டி, அவனை சிங்கா-
சனத்திலிருந்து கீழிறக்கினான். அவன் அவனு-
டைய ஸ்தானத்திலே ஆளுகை பண்ணினான்.

And it came to pass that he did dethrone his father, for he slew him with his own sword; and he did reign in his stead.

28 தேசத்திலே மறுபடியும் தீர்க்கதரிசிகள் வந்து,
அவர்களுக்கு மனந்திரும்புதலைப் பிரசங்கித்தார்-
கள், அவர்கள் கர்த்தருடைய வழியை ஆயத்தப்ப-
டுத்தவேண்டுமென்றும், இல்லாவிடில் தேசத்தின்
மேல் சாபம் வருமென்றும், ஆம், அவர்கள் மனந்தி-
ரும்பாவிடில் அங்கே ஒரு கொடிய பஞ்சம் ஏற்பட்டு,
அதினாலே அவர்கள் அழிக்கப்படுவார்களென்-
றும் பிரசங்கித்தார்கள்.

And there came prophets in the land again, crying repentance unto them—that they must prepare the way of the Lord or there should come a curse upon the face of the land; yea, even there should be a great famine, in which they should be destroyed if they did not repent.

29 ஜனங்கள் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை வி-
சுவாசியாமல் அவர்களைப் புறம்பே தள்ளினார்-
கள்; அவர்களில் சிலரை அவர்கள் துரவுகளில்
தள்ளி அவர்களை அழியவிட்டார்கள். அந்தப்படி-
யே, ராஜாவாகிய கேத்தின் கட்டளையின்படியே
அவர்கள் இவைகள் யாவையும் செய்தார்கள்.

But the people believed not the words of the prophets, but they cast them out; and some of them they cast into pits and left them to perish. And it came to pass that they did all these things according to the commandment of the king, Heth.

30 அந்தப்படியே, பூமியின் பரப்பின் மீது பெரும்
பஞ்சம் துவங்கியது. பூமியின்மேல் மழை இல்லாத-
தால், பஞ்சத்தினிமித்தம் குடிகள் மிகவும் சீக்கிர-
மாய் அழிய ஆரம்பித்தார்கள்.

And it came to pass that there began to be a great dearth upon the land, and the inhabitants began to be destroyed exceedingly fast because of the dearth, for there was no rain upon the face of the earth.

31 தேசத்தின்மேல் விஷ சர்ப்பங்களும் வந்து, அநேக
ஜனங்களுக்கு விஷமேற்றின. அந்தப்படியே, அவர்-
களுடைய மந்தைகள் விஷ சர்ப்பங்களுக்கு முன்-
பாக, சாரகெம்லா என்று நேபியர்களால் அழைக்-
கப்பட்ட தென் தேசத்திற்கு நேராய் பறந்தோட ஆரம்-
பித்தன.

And there came forth poisonous serpents also upon the face of the land, and did poison many people. And it came to pass that their flocks began to flee before the poisonous serpents, towards the land southward, which was called by the Nephites Zarahemla.

32 அந்தப்படியே, அவைகளில் அநேகம் வழியிலே-
யே மாண்டன. ஆயினும் சில தென் தேசத்திற்குப்
பறந்தோடின.

And it came to pass that there were many of them which did perish by the way; nevertheless, there were some which fled into the land southward.

33 அந்தப்படியே, சர்ப்பங்கள் இனி ஒருபோதும்
அவைகளைப் பின்தொடராதிருக்கவும், ஜனங்கள்
கடந்துபோகாதபடி வழியை அவைகள் அடைக்க-
வும், கடக்க முயற்சிக்கும் எவரும் விஷ சர்ப்பங்க-
ளால் வீழ்ந்து போகும்படியாகவும், கர்த்தர் செய்-
தார்.

And it came to pass that the Lord did cause the serpents that they should pursue them no more, but that they should hedge up the way that the people could not pass, that whoso should attempt to pass might fall by the poisonous serpents.

34 அந்தப்படியே, ஜனங்கள் மிருகங்களின் மார்க்-
கத்தைப் பின்பற்றி, அவைகள் அனைத்தையும்
பட்சிக்கும்வரை, வழியில் விழுந்தவைகளின் பிரே-
தங்களைப் பட்சித்தார்கள். இப்பொழுது தாங்கள்
அழிந்தாக வேண்டுமென்று ஜனங்கள் கண்டபோ-
து, அவர்கள் தங்கள் அக்கிரமங்களிலிருந்து
மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் கூக்குரலிடத் துவங்-
கினார்கள்.

And it came to pass that the people did follow the course of the beasts, and did devour the carcasses of them which fell by the way, until they had devoured them all. Now when the people saw that they must perish they began to repent of their iniquities and cry unto the Lord.

35 அந்தப்படியே, அவர்கள் கர்த்தருக்கு முன்பாகத்
தங்களைப் போதுமான அளவு தாழ்த்தின பின்பு,
அவர் பூமியின் பரப்பின்மீது மழையை அனுப்பி-
னார்; ஜனங்கள் மறுபடியும் செழிக்கத் துவங்கி,
வடதேசங்களிலும், சுற்றுப் புறத்திலுள்ள சகல தே-
சங்களிலும் கனியிருக்கத் துவங்கியது. அவர்க-
ளைப் பஞ்சத்திலிருந்து பாதுகாப்பதில் கர்த்தர்
தம்முடைய வல்லமையைக் காண்பித்தார்.

And it came to pass that when they had humbled themselves sufficiently before the Lord he did send rain upon the face of the earth; and the people began to revive again, and there began to be fruit in the north countries, and in all the countries round about. And the Lord did show forth his power unto them in preserving them from famine.

# ஏத்தேர் 10

1 அந்தப்படியே, கேத்தினுடைய சந்ததியாகிய சேஸ் –
ஏனெனில் சேஸ்ஸைத்தவிர கேத்தும் அவன் வீட்-
டார் அனைவரும் பஞ்சத்தால் அழிந்து போனார்-
கள், ஆதலால் சேஸ் வீழ்ந்துபோன ஜனத்தை மறு-
படியும் பலப்படுத்தத் துவங்கினான்.

2 அந்தப்படியே, சேஸ் தன் பிதாக்களுடைய அழி-
வை நினைவுகூர்ந்தான். அவன் நீதியுள்ள ராஜ்-
யத்தை எழுப்பினான்; ஏனெனில் கர்த்தர் யாரே-
தையும் அவன் சகோதரனையும் சமுத்திரத்தைக்
கடந்துகொண்டு வருவதில் செய்தவற்றை அவன்
நினைவுகூர்ந்தான்; அவன் கர்த்தருடைய வழிக-
ளில் நடந்தான். அவன் குமாரரையும் குமாரத்திக-
ளையும் பெற்றான்.

3 சேஸ் என்ற பெயருடைய அவனுடைய மூத்த கு-
மாரன் அவனுக்கு விரோதமாக கலகம் பண்ணி-
னான். ஆயினும், சேஸ் தன்னுடைய மிகுந்த ஐஸ்வ-
ரியத்தினாலே ஒரு திருடனால் கொல்லப்பட்டான்.
அது அவனுடைய தகப்பனுக்கு மறுபடியும் சமாதா-
னத்தைக் கொண்டுவந்தது.

4 அந்தப்படியே, அவன் தகப்பன் பூமியின்மேல்
அநேக பட்டணங்களைக் கட்டினான். ஜனங்கள்
மறுபடியும் தேசத்தின் மேல் பரவ ஆரம்பித்தார்கள்.
சேஸ் மிகவும் வயதான காலம் வரைக்குமாய் ஜீ-
வனம் பண்ணினான். அவன் ரிப்லாகீஸைப் பெற்-
றான். அவன் மரித்து அவனுடைய ஸ்தானத்தில்
ரிப்லாகீஸ் ஆளுகை பண்ணினான்.

5 அந்தப்படியே, ரிப்லாகீஸ் கர்த்தருடைய பார்-
வைக்குச் சரியானதைச் செய்யவில்லை. ஏனெ-
னில் அவன் அநேக மனைவிகளையும் மறுமனை-
யாட்டிகளையும் வைத்திருந்தான். சுமக்க முடியாத-
வைகளை மனுஷருடைய தோள்களின்மேல்
வைத்தான். ஆம், அவன் அவர்கள் மேல் பலத்த
வரிச்சுமையை சுமத்தினான். வரிகளைக்கொண்டு
அவன் அநேக விசாலமான கட்டிடங்களைக் கட்டி-
னான்.

6 அவன் தனக்காக ஒரு மிகுந்த அழகான சிங்கா-
சனத்தை எழுப்பினான், அநேக சிறைச்சாலைக-
ளையும் கட்டினான், வரிகளுக்கு கீழ்ப்படியாதவர்-
களை அவன் சிறையினுள் தள்ளினான்; வரிக-
ளைக் கட்ட இயலாதோரையும் அவன் சிறையி-
னுள் தள்ளினான்; அவர்கள் தாங்களே தங்களைத்
தாங்கிக்கொள்ள தொடர்ந்து வேலை செய்யும்படி-
யாய் செய்தான்; பணிசெய்ய மறுப்போரை மரணத்-
திற்குள்ளாகும்படி செய்தான்.

# Ether 10

And it came to pass that Shez, who was a descendant of Heth—for Heth had perished by the famine, and all his household save it were Shez—wherefore, Shez began to build up again a broken people.

And it came to pass that Shez did remember the destruction of his fathers, and he did build up a righteous kingdom; for he remembered what the Lord had done in bringing Jared and his brother across the deep; and he did walk in the ways of the Lord; and he begat sons and daughters.

And his eldest son, whose name was Shez, did rebel against him; nevertheless, Shez was smitten by the hand of a robber, because of his exceeding riches, which brought peace again unto his father.

And it came to pass that his father did build up many cities upon the face of the land, and the people began again to spread over all the face of the land. And Shez did live to an exceedingly old age; and he begat Riplakish. And he died, and Riplakish reigned in his stead.

And it came to pass that Riplakish did not do that which was right in the sight of the Lord, for he did have many wives and concubines, and did lay that upon men’s shoulders which was grievous to be borne; yea, he did tax them with heavy taxes; and with the taxes he did build many spacious buildings.

And he did erect him an exceedingly beautiful throne; and he did build many prisons, and whoso would not be subject unto taxes he did cast into prison; and whoso was not able to pay taxes he did cast into prison; and he did cause that they should labor continually for their support; and whoso refused to labor he did cause to be put to death.

7 ஆதலால் அவன் ஒருவனுடைய எல்லா அருமை-
யான வேலைகளையும், ஆம், அவனுடைய பசும்-
பொன்னையும் சிறையிலே புடமிடப்படும்படியா-
கச் செய்தான்; எல்லா விதமான நுட்பமான கைவே-
லைகளையும் அவன் சிறையிலே செய்யும்படிச்
செய்தான். அந்தப்படியே, அவன் ஜனங்களைத்
தன்னுடைய வேசித்தனங்களாலும், அருவருப்புக-
ளாலும் துன்பப்படுத்தினான்.

Wherefore he did obtain all his fine work, yea, even his fine gold he did cause to be refined in prison; and all manner of fine workmanship he did cause to be wrought in prison. And it came to pass that he did afflict the people with his whoredoms and abominations.

8 அவன் நாற்பத்திரண்டு வருஷ காலமளவும் ராஜ-
ரீகம்பண்ணின பின்பு, ஜனங்கள் அவனுக்கு வி-
ரோதமாகக் கலகத்தில் எழும்பினார்கள்; அங்கே,
அதினாலே ரிப்லாகீஸ் கொல்லப்பட்டு, அவனு-
டைய சந்ததியினர் தேசத்திலிருந்து வெளியே துரத்-
தப்படும் அளவுக்கு தேசத்திலே மறுபடியும் யுத்தம்
துவங்கியது.

And when he had reigned for the space of forty and two years the people did rise up in rebellion against him; and there began to be war again in the land, insomuch that Riplakish was killed, and his descendants were driven out of the land.

9 அந்தப்படியே, அநேக வருஷங்களுக்குப் பின்பு
மோரியாந்தன் (ரிப்லாகீஸின் வம்சத்தான்) தள்ளப்-
பட்டவர்கள் அடங்கிய ஓர் சேனையை ஏகமாய்க்
கூட்டிப்போய் ஜனங்களோடு யுத்தம் பண்ணி-
னான்; அவன் அநேக பட்டணங்களின்மேல் அதி-
காரம் பெற்றான்; யுத்தம் மிகவும் கொடிதாகி அநேக
வருஷமளவும் நீடித்தது. அவன் தேசம் முழுவதும்
அதிகாரம்பெற்று தன்னையே தேசம் முழுவதும் ரா-
ஜாவாக நியமித்துக்கொண்டான்.

And it came to pass after the space of many years, Morianton, (he being a descendant of Riplakish) gathered together an army of outcasts, and went forth and gave battle unto the people; and he gained power over many cities; and the war became exceedingly sore, and did last for the space of many years; and he did gain power over all the land, and did establish himself king over all the land.

10 அவன் தன்னையே ராஜாவாக நியமித்த பின்பு,
அவன் ஜனங்களின் சுமையை லகுவாக்கி, அதினி-
மித்தம் ஜனங்களுடைய கண்களில் தயை பெற்-
றான். அவர்கள் அவனைத் தங்கள் ராஜாவாக
அபிஷேகம் பண்ணினார்கள்.

And after that he had established himself king he did ease the burden of the people, by which he did gain favor in the eyes of the people, and they did anoint him to be their king.

11 அவன் ஜனங்களுக்கு நியாயத்தைச் செய்துவந்-
தான். ஆனால் தன்னுடைய அநேக வேசித்தனங்க-
ளினிமித்தம், தனக்கு அப்படிச் செய்யவில்லை,
ஆகவே அவன் கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்-
து அறுப்புண்டு போனான்.

And he did do justice unto the people, but not unto himself because of his many whoredoms; wherefore he was cut off from the presence of the Lord.

12 அந்தப்படியே, மோரியாந்தன் அநேக பட்டணங்க-
ளைக் கட்டினான். ஜனங்கள் அவன் ஆளுகை-
யின் கீழ், கட்டிடங்களிலும், பொன்னிலும் வெள்-
ளியிலும், தானியங்கள், ஆடுகள், மாடுகள் ஆகிய-
வை வளர்ப்பிலும், தங்களுக்கு திரும்பக் கொடுக்-
கப்பட்ட அனைத்திலும் ஐஸ்வரியவான்களானார்-
கள்.

And it came to pass that Morianton built up many cities, and the people became exceedingly rich under his reign, both in buildings, and in gold and silver, and in raising grain, and in flocks, and herds, and such things which had been restored unto them.

13 மோரியாந்தன் மிகவும் அதிக காலம் உயிரோடி-
ருந்தான். பின்பு அவன் கிம்மை பெற்றான், கிம்
தன் தகப்பனுடைய ஸ்தானத்தில் ஆளுகை பண்-
ணினான். அவன் எட்டு வருஷங்கள் ராஜரீகம்
பண்ணினான். அவன் தகப்பனும் மரித்தான். அந்-
தப்படியே, கிம் நீதியிலே ராஜரீகம் பண்ணவில்லை.
ஆதலால் அவன் கர்த்தரிடத்தில் தயை பெறவில்-
லை.

And Morianton did live to an exceedingly great age, and then he begat Kim; and Kim did reign in the stead of his father; and he did reign eight years, and his father died. And it came to pass that Kim did not reign in righteousness, wherefore he was not favored of the Lord.

14 அவனுடைய சகோதரன் அவனுக்கு விரோதமாகக் கலகத்தில் எழும்பி, அதனாலே அவன் அவனை சிறைத்தனத்திற்குள்ளாகக் கொண்டுவந்தான்; அவன் தன் வாழ்நாட்கள் முழுவதிலும் சிறைத்தனத்திலே தரித்திருந்தான்; அவன் சிறைத்தனத்திலே குமாரர்களையும் குமாரத்திகளையும் பெற்றான். அவன் தன் வயதான காலத்தில் லேவியைப் பெற்று மரித்துப் போனான்.

And his brother did rise up in rebellion against him, by which he did bring him into captivity; and he did remain in captivity all his days; and he begat sons and daughters in captivity, and in his old age he begat Levi; and he died.

15 அந்தப்படியே, லேவி தன் தகப்பனின் மரணத்திற்குப் பின்பு சிறைத்தனத்திலே நாற்பத்திரண்டு வருஷகாலம் சேவை செய்தான். அவன் தேசத்தின் ராஜாவிற்கு விரோதமாக யுத்தம் பண்ணி, அதினிமித்தம் தனக்கென்று ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டான்.

And it came to pass that Levi did serve in captivity after the death of his father, for the space of forty and two years. And he did make war against the king of the land, by which he did obtain unto himself the kingdom.

16 அவன் தனக்கென்று ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், அவன் கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதைச் செய்தான்; ஜனங்கள் தேசத்தில் விருத்தியடைந்தார்கள்; அவன் நல்ல முதிர் வயதுவரைக்கும் ஜீவனம்பண்ணி குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்; அவன் கோரோமையும் பெற்றான். அவனைத் தன்னுடைய ஸ்தானத்திலே ராஜாவாக அபிஷேகம் பண்ணினான்.

And after he had obtained unto himself the kingdom he did that which was right in the sight of the Lord; and the people did prosper in the land; and he did live to a good old age, and begat sons and daughters; and he also begat Corom, whom he anointed king in his stead.

17 அந்தப்படியே, கோரோம் தன் நாட்கள் முழுவதிலும் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதையே செய்தான்; அவன் அநேக குமாரர்களையும் குமாரத்திகளையும் பெற்றான்; அவன் அநேக நாட்களைக் கண்ட பின்னர் பூமியிலுள்ளவர்களைப் போலவே அவனும் மரித்துப் போனான்; கீஸ் அவன் ஸ்தானத்திலே ராஜரீகம் பண்ணினான்.

And it came to pass that Corom did that which was good in the sight of the Lord all his days; and he begat many sons and daughters; and after he had seen many days he did pass away, even like unto the rest of the earth; and Kish reigned in his stead.

18 அந்தப்படியே, கீஸ்ஸூம் மரித்துப் போனான். அவன் ஸ்தானத்திலே லிப் ஆட்சி செய்தான்.

And it came to pass that Kish passed away also, and Lib reigned in his stead.

19 அந்தப்படியே, லிப்பும் கர்த்தருடைய பார்வைக்குச் செம்மையானதையே செய்தான். லிப்பின் காலத்தில்தான் விஷசர்ப்பங்கள் கொல்லப்பட்டன. ஆதலால் தென் தேசம் வனவிலங்குகளால் நிரப்பப்பட்டிருந்ததால், தேசத்தின் ஜனங்களுக்காக உணவை வேட்டையாடும்படி அவர்கள் தென்தேசத்திற்குள்ளே போனார்கள். லிப்பும் ஒரு பெரிய வேட்டைக்காரனானான்.

And it came to pass that Lib also did that which was good in the sight of the Lord. And in the days of Lib the poisonous serpents were destroyed. Wherefore they did go into the land southward, to hunt food for the people of the land, for the land was covered with animals of the forest. And Lib also himself became a great hunter.

20 சமுத்திரம் நிலத்தைப் பிரிக்கும் இடத்திற்குப் பக்கத்திலே இருந்த குறுகிய பூமிக்கு அருகாமையிலே அவர்கள் ஒரு பெரிய பட்டணத்தைக் கட்டினார்கள்.

And they built a great city by the narrow neck of land, by the place where the sea divides the land.

21 வேட்டையாட வனாந்தரம்போல தென்தேசம் இருக்கும்படியாக அதை அவர்கள் பாதுகாத்தார்கள். வடதேசம் முழுவதும் குடிகளால் நிறைக்கப்பட்டிருந்தது.

And they did preserve the land southward for a wilderness, to get game. And the whole face of the land northward was covered with inhabitants.

22 அவர்கள் மிகுந்த உழைப்பாளிகளாயிருந்தார்கள். அவர்கள் லாபம் பெறும்படிக்கு வாங்கி விற்று, ஒருவரோடு ஒருவர் கொடுக்கல் வாங்கல் பண்ணினார்கள்.

And they were exceedingly industrious, and they did buy and sell and traffic one with another, that they might get gain.

23 அவர்கள் எல்லாவிதமான தாதுக்களாலும் வே-
லை செய்தார்கள். அவர்கள் பொன்னையும்,
வெள்ளியையும், இரும்பையும், பித்தளையையும்
எல்லா விதமான உலோகங்களையும் செய்தார்கள்;
அவர்கள் அதைப் பூமியிலிருந்து தோண்டி எடுத்-
தார்கள்; ஆதலால் பொன், வெள்ளி, இரும்பு, செம்பு
ஆகியவைகளின் தாதுக்களை எடுக்க அவர்கள்
மண்ணை பெரும் குவியல்களாக எடுத்துப் போட்-
டார்கள். அவர்கள் எல்லா விதமான நேர்த்தியான
வேலைகளையும் செய்தார்கள்.

And they did work in all manner of ore, and they did make gold, and silver, and iron, and brass, and all manner of metals; and they did dig it out of the earth; wherefore, they did cast up mighty heaps of earth to get ore, of gold, and of silver, and of iron, and of copper. And they did work all manner of fine work.

24 அவர்கள் பட்டுக்களையும் அருமையாய் நெய்-
யப்பட்ட வஸ்திரங்களையும் வைத்திருந்தார்கள்,
அவர்கள் தங்கள் நிர்வாணத்தை மூட எல்லா வித-
மான துணிகளையும் நெய்தார்கள்.

And they did have silks, and fine-twined linen; and they did work all manner of cloth, that they might clothe themselves from their nakedness.

25 பூமியைப் பண்படுத்தவும், உழுதிடவும், விதைக்-
கவும், அறுவடை செய்யவும், களைபறிக்கவும், கதி-
ரடிக்கவும் அவர்கள் எல்லா விதமான கருவிகளை-
யும் தயாரித்தார்கள்.

And they did make all manner of tools to till the earth, both to plow and to sow, to reap and to hoe, and also to thrash.

26 அவர்கள் எல்லாவிதமான கருவிகளையும் செய்-
து, அவைகளை வைத்து தங்கள் மிருகஜீவன்க-
ளை வேலைக்குப் பயன்படுத்தினார்கள்.

And they did make all manner of tools with which they did work their beasts.

27 அவர்கள் எல்லா விதமான யுத்தக் கருவிகளை-
யும் செய்தார்கள். அவர்கள் மிகவும் நுணுக்கமான
வேலைப்பாடுகள் அடங்கிய பணிகளையும் செய்-
தார்கள்.

And they did make all manner of weapons of war. And they did work all manner of work of exceedingly curious workmanship.

28 அவர்களைக் காட்டிலும் அதிகமாய் ஆசீர்வதிக்-
கப்பட்ட, கர்த்தருடைய கரத்தால் அதிகமாய் விருத்-
தி பண்ணப்பட்ட ஜனம் இருந்திருக்கவே முடியாது.
அவர்கள் எல்லா தேசங்களைக் காட்டிலும் சிறந்த
தேசத்தில் இருந்தார்கள். ஏனெனில் கர்த்தர் அதைச்
சொல்லியிருக்கிறார்.

And never could be a people more blessed than were they, and more prospered by the hand of the Lord. And they were in a land that was choice above all lands, for the Lord had spoken it.

29 அந்தப்படியே, லிப் அநேக வருஷங்கள் வாழ்ந்து
குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்;
அவன் இயர்தமையும் பெற்றான்.

And it came to pass that Lib did live many years, and begat sons and daughters; and he also begat Hearthom.

30 அந்தப்படியே, இயர்தம் தன் தகப்பனுடைய ஸ்தா-
னத்திலே ராஜரீகம் பண்ணினான். இயர்தம் இருபத்-
தி நான்கு வருஷங்கள் ராஜரீகம் பண்ணின பின்பு,
இதோ, ராஜ்யம் அவனிடத்திலிருந்து பறிக்கப்பட்ட-
து; அவன் அநேக வருஷங்களாய், ஆம், தன் மீதி
நாட்கள் முழுவதும் சிறைத்தனத்திலே சேவித்தான்.

And it came to pass that Hearthom reigned in the stead of his father. And when Hearthom had reigned twenty and four years, behold, the kingdom was taken away from him. And he served many years in captivity, yea, even all the remainder of his days.

31 அவன் கேத்தைப் பெற்றான். கேத் தன் வாழ்நாட்-
களையெல்லாம் சிறைத்தனத்தில் ஜீவித்தான். கேத்
ஆரோனைப் பெற்றான். ஆரோன் தன் வாழ்நாட்-
கள் எல்லாம் சிறையிலேயே வாசம் பண்ணினான்;
அவன் அம்னிகாத்தாவைப் பெற்றான். அம்னி-
காத்தாவும் தன் வாழ்நாட்கள் முழுவதும் சிறைத்-
தனத்திலே வாசம் பண்ணினான்; அவன் கொரி-
யாந்தாமைப் பெற்றான். கொரியாந்தாம் தன் வாழ்-
நாட்கள் முழுவதும் சிறைத்தனத்திலே வாசம் பண்-
ணினான்; அவன் கோம்மைப் பெற்றான்.

And he begat Heth, and Heth lived in captivity all his days. And Heth begat Aaron, and Aaron dwelt in captivity all his days; and he begat Amnigaddah, and Amnigaddah also dwelt in captivity all his days; and he begat Coriantum, and Coriantum dwelt in captivity all his days; and he begat Com.

32 அந்தப்படியே, கோம் ராஜ்ஜியத்தின் பாதியை தன் வசப்படுத்தினான். அவன் பாதி ராஜ்யத்தை நாற்பத்திரண்டு வருஷங்கள் ஆண்டுவந்தான்; அவன் அம்கித் என்ற ராஜாவுக்கு விரோதமாக யுத்தத்திற்குப் போனான்; அவர்கள் அநேக வருஷங்களாக யுத்தம் பண்ணி, அந்த நேரத்தில் கோம், அம்கித் மேல் வல்லமை பெற்று, ராஜ்யத்தின் மீதியின் மேலும் அதிகாரம் பெற்றான்.

And it came to pass that Com drew away the half of the kingdom. And he reigned over the half of the kingdom forty and two years; and he went to battle against the king, Amgid, and they fought for the space of many years, during which time Com gained power over Amgid, and obtained power over the remainder of the kingdom.

33 கோமின் நாட்களில் தேசத்தில் திருடர்கள் இருக்கத் துவங்கினார்கள்; அவர்கள் பூர்வகாலத் திட்டங்களைத் தழுவி, பூர்வத்தாரின் முறையின்படியே உறுதிமொழிகளை எடுத்துக்கொண்டு, ராஜ்யத்தை அழிக்க மறுபடியும் வகைதேடினார்கள்.

And in the days of Com there began to be robbers in the land; and they adopted the old plans, and administered oaths after the manner of the ancients, and sought again to destroy the kingdom.

34 இப்பொழுதும் கோம் அவர்களுக்கு விரோதமாய் அதிகமாய் யுத்தம் பண்ணினான், ஆயினும், அவன் அவர்களுக்கு விரோதமாய் ஜெயிக்கவில்லை.

Now Com did fight against them much; nevertheless, he did not prevail against them.

## ஏத்தேர் 11

1 அங்கே கோமின் நாட்களிலும் அநேக தீர்க்கதரிசிகள் வந்து, அந்தப் பெரிய ஜனம் மனந்திரும்பி, கர்த்தரிடத்தில் திரும்பி, தங்கள் கொலைகளையும், துன்மார்க்கத்தையும் விட்டுவிடவில்லையெனில் அழிந்துபோவார்களென்று தீர்க்கதரிசனமுரைத்தார்கள்.

2 அந்தப்படியே, தீர்க்கதரிசிகள் ஜனங்களால் புறக்கணிக்கப்பட்டார்கள். ஜனங்கள் அவர்களை அழிக்க வகைதேடியதால் அவர்கள் பாதுகாப்புக்காக கோமிடத்தில் ஓடினார்கள்.

3 அவர்கள் கோமிடத்தில் அநேக காரியங்களை தீர்க்கதரிசனமாய்ச் சொன்னார்கள்; அவன் தன் மீதிநாட்கள் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டான்.

4 அவன் நல்ல முதிர்வயது வரைக்கும் வாழ்ந்து, சிப்லோமைப் பெற்றான்; அவன் ஸ்தானத்தில் சிப்லோம் அரசாண்டான். சிப்லோமின் சகோதரன் அவனுக்கு விரோதமாய்க் கலகம் பண்ணினான். தேசம் முழுவதிலும் மிகப்பெரிய யுத்தம் இருக்கத் துவங்கியது.

5 அந்தப்படியே, ஜனங்களுடைய அழிவைக் குறித்து தீர்க்கதரிசனமுரைத்த சகல தீர்க்கதரிசிகளையும் மரணத்திற்குள்ளாக்கும்படி, சிப்லோமின் சகோதரன் செய்தான்.

6 அங்கே தேசமெங்கும் பெரும் சீரழிவு உண்டாயிருந்தது, ஜனங்கள் தங்கள் அக்கிரமத்திலிருந்து மனந்திரும்பவில்லையெனில், பூமியின் மேலும் அவர்கள் மேலும் பெரும் சாபம் வருமென்றும், பூமியின் பரப்பின் மேல் என்றுமே இராத அளவிற்கு அவர்களுக்குள்ளே ஒரு பெரும் அழிவு ஏற்படுமென்றும், தேசத்தின்மேல் மண்குவியல்களைப்போல அவர்களுடைய எலும்புகள் குவிக்கப்படுமென்றும் அவர்கள் சாட்சி கொடுத்தார்கள்.

7 அவர்கள் தங்களுடைய துன்மார்க்க சங்கங்களினிமித்தம் கர்த்தருடைய சத்தத்திற்கு செவிகொடுக்கவில்லை; ஆதலால் பூமியின் பரப்பின்மேல் என்றுமே இருந்திராத ஒரு பெரும் அழிவு அங்கே இருக்கத்தக்கதாக, தேசத்தின் மீதெங்கும் யுத்தங்களும், பிணக்குகளும், அநேக பஞ்சங்களும், வாதைகளும் உண்டாயிருந்தன. இவையெல்லாம் சிப்லோமின் நாட்களில் சம்பவித்தன.

8 ஜனங்கள் தங்கள் அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பத் துவங்கினார்கள்; அவர்கள் செய்த அளவுக்கு, கர்த்தர் அவர்கள்மேல் இரங்கினார்.

9 அந்தப்படியே, சிப்லோம் கொல்லப்பட்டான். சேத் சிறைத்தனத்திற்குள்ளாகக் கொண்டுவரப்பட்டு, தன் நாட்களெல்லாம் சிறைத்தனத்திலே வாசம் பண்ணினான்.

## Ether 11

And there came also in the days of Com many prophets, and prophesied of the destruction of that great people except they should repent, and turn unto the Lord, and forsake their murders and wickedness.

And it came to pass that the prophets were rejected by the people, and they fled unto Com for protection, for the people sought to destroy them.

And they prophesied unto Com many things; and he was blessed in all the remainder of his days.

And he lived to a good old age, and begat Shiblom; and Shiblom reigned in his stead. And the brother of Shiblom rebelled against him, and there began to be an exceedingly great war in all the land.

And it came to pass that the brother of Shiblom caused that all the prophets who prophesied of the destruction of the people should be put to death;

And there was great calamity in all the land, for they had testified that a great curse should come upon the land, and also upon the people, and that there should be a great destruction among them, such an one as never had been upon the face of the earth, and their bones should become as heaps of earth upon the face of the land except they should repent of their wickedness.

And they hearkened not unto the voice of the Lord, because of their wicked combinations; wherefore, there began to be wars and contentions in all the land, and also many famines and pestilences, insomuch that there was a great destruction, such an one as never had been known upon the face of the earth; and all this came to pass in the days of Shiblom.

And the people began to repent of their iniquity; and inasmuch as they did the Lord did have mercy on them.

And it came to pass that Shiblom was slain, and Seth was brought into captivity, and did dwell in captivity all his days.

10 அந்தப்படியே, அவனுடைய குமாரனான ஆகா ராஜ்யத்தைப் பெற்றான்; அவன் தன் நாட்கள் முழுவதும் ஜனங்கள்மீது ராஜரீகம் பண்ணினான். அவன் தன் நாட்களில் எல்லா விதமான அக்கிரமத்தையும் செய்து, அதினாலே அதிக இரத்தத்தைச் சிந்தினான். அவன் நாட்கள் கொஞ்சமாயிருந்தன.

And it came to pass that Ahah, his son, did obtain the kingdom; and he did reign over the people all his days. And he did do all manner of iniquity in his days, by which he did cause the shedding of much blood; and few were his days.

11 ஆகாக்கினுடைய சந்ததியானாகிய ஏத்தேம் ராஜ்யத்தைப் பெற்றான்; அவனும் தன் நாட்களில் துன்மார்க்கமானதைச் செய்தான்.

And Ethem, being a descendant of Ahah, did obtain the kingdom; and he also did do that which was wicked in his days.

12 அந்தப்படியே, ஏத்தேமின் நாட்களில் அநேக தீர்க்கதரிசிகள் வந்து ஜனங்களுக்கு மறுபடியும் தீர்க்கதரிசனமுரைத்தார்கள்; ஆம், அவர்கள் தங்கள் அக்கிரமங்களிலிருந்து மனந்திரும்பாவிடில், கர்த்தர் அவர்களை பூமியின் பரப்பின்மேலிருந்து முழுவதுமாய் அழியப்பண்ணுவார், என்று தீர்க்கதரிசனமுரைத்தார்கள்.

And it came to pass that in the days of Ethem there came many prophets, and prophesied again unto the people; yea, they did prophesy that the Lord would utterly destroy them from off the face of the earth except they repented of their iniquities.

13 அந்தப்படியே, ஜனங்கள் தங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தி, அவர்களுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுக்கவில்லை; தீர்க்கதரிசிகள் துக்கித்து, ஜனங்களிடமிருந்து பின்வாங்கினார்கள்.

And it came to pass that the people hardened their hearts, and would not hearken unto their words; and the prophets mourned and withdrew from among the people.

14 அந்தப்படியே, ஏத்தேம் தன் நாட்கள் முழுவதிலும் துன்மார்க்கமாய் நியாயம் விசாரித்து வந்தான்; அவன் மோரானைப் பெற்றான். அந்தப்படியே, அவன் ஸ்தானத்தில் மோரான் ராஜ்ஜியபாரம் பண்ணினான். மோரான் கர்த்தருக்கு முன்பாக பொல்லாப்பானதைச் செய்தான்.

And it came to pass that Ethem did execute judgment in wickedness all his days; and he begat Moron. And it came to pass that Moron did reign in his stead; and Moron did that which was wicked before the Lord.

15 அந்தப்படியே, வல்லமையையும், லாபத்தையும் பெறக் கட்டப்பட்ட அந்த இரகசிய சங்கத்தினிமித்தம் ஜனங்களுக்குள்ளே ஒரு கலகம் உண்டாயிற்று; அவர்களுக்குள்ளே அக்கிரமம் செய்வதில் பலசாலியான ஒருவன் எழும்பி, மோரானிடத்தில் போர் தொடுத்தான். அதிலே அவன் ராஜ்யத்தின் பாதியை வீழ்த்தி, அநேக வருஷங்களாக அந்தப் பாதியை பாதுகாத்து வந்தான்.

And it came to pass that there arose a rebellion among the people, because of that secret combination which was built up to get power and gain; and there arose a mighty man among them in iniquity, and gave battle unto Moron, in which he did overthrow the half of the kingdom; and he did maintain the half of the kingdom for many years.

16 அந்தப்படியே, மோரான் அவனை வீழ்த்தி, ராஜ்யத்தை மறுபடியும் பெற்றான்.

And it came to pass that Moron did overthrow him, and did obtain the kingdom again.

17 அந்தப்படியே, அங்கே மற்றொரு பலசாலி எழும்பினான்; அவன் யாரேதின் சகோதரனின் சந்ததியான்.

And it came to pass that there arose another mighty man; and he was a descendant of the brother of Jared.

18 அந்தப்படியே, அவன் மோரானை வீழ்த்தி, ராஜ்யத்தைப் பெற்றுக்கொண்டான். ஆதலால் மோரான் தன் மீதியான நாட்கள் எல்லாம் சிறைத்தனத்திலே வாசம் பண்ணினான்; அவன் கொரியாந்தரைப் பெற்றான்.

And it came to pass that he did overthrow Moron and obtain the kingdom; wherefore, Moron dwelt in captivity all the remainder of his days; and he begat Coriantor.

19 அந்தப்படியே, கொரியாந்தர் தன் நாட்களெல்லாம் சிறைத்தனத்தில் வாசம் பண்ணினான்.

And it came to pass that Coriantor dwelt in captivity all his days.

20 கொரியாந்தரின் நாட்களில், அங்கே அநேக தீர்க்-
கதரிசிகள் வந்து, பெரிதும் அற்புதமுமான காரியங்-
களைக் குறித்து தீர்க்கதரிசனமுரைத்து, ஜனங்க-
ளுக்கு மனந்திரும்புதலை அறிவித்து, அவர்கள்
மனந்திரும்பாவிட்டால், அவர்களின் முழுவது-
மான அழிவுக்கு ஏதுவாய் தேவனாகிய கர்த்தர் நி-
யாயம் விசாரிப்பார் என்றும்,

And in the days of Coriantor there also came many prophets, and prophesied of great and marvelous things, and cried repentance unto the people, and except they should repent the Lord God would execute judgment against them to their utter destruction;

21 தேவனாகிய கர்த்தர் அவர்களுடைய பிதாக்க-
ளைக் கொண்டுவந்த விதத்தின்படியே, தம்முடைய
வல்லமையாலே மற்ற ஜனங்களை சுதந்தரிக்க
அனுப்பவோ அல்லது கொண்டுவரவோ செய்வார்,
என்றார்கள்.

And that the Lord God would send or bring forth another people to possess the land, by his power, after the manner by which he brought their fathers.

22 அவர்கள் தங்களுடைய இரகசிய சமுதாயம்,
துன்மார்க்க அருவருப்புகள் ஆகியவைகளினி-
மித்தம், தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் அனைத்-
தையும் மறுதலித்தார்கள்.

And they did reject all the words of the prophets, because of their secret society and wicked abominations.

23 அந்தப்படியே, கொரியாந்தர் ஏத்தேரைப் பெற்று,
தன் நாட்கள் அனைத்திலும் சிறைத்தனத்திலே வா-
சம்பண்ணி மரித்துப்போனான்.

And it came to pass that Coriantor begat Ether, and he died, having dwelt in captivity all his days.

## ஏத்தேர் 12

1 அந்தப்படியே, ஏத்தேரின் நாட்கள், கொரியாந்தம-
ரின் நாட்களின்போது இருந்தன; கொரியாந்தமர்
தேசமனைத்திற்கும் ராஜாவாக இருந்தான்.

2 ஏத்தேர் கர்த்தருடைய தீர்க்கதரிசியாய் இருந்-
தான். ஆதலால் ஏத்தேர் கொரியாந்தமரின் நாட்க-
ளில் வந்து, ஜனங்களுக்கு தீர்க்கதரிசனமுரைக்கத்
துவங்கினான். ஏனெனில் அவனுக்குள் இருந்த
கர்த்தருடைய ஆவியினிமித்தம் அவனைத் தடை-
பண்ணக்கூடாமல் போனது.

3 அவன் காலையிலிருந்து, சூரியன் அஸ்தமிக்-
கும்வரைக்கும் மனந்திரும்புதலுக்கேதுவாய் தே-
வனில் விசுவாசிக்கவும், இல்லையேல் அவர்கள்
அழிக்கப்படுவார்கள் என்றும், ஜனங்களுக்கு
உணர்த்தி, சகலமும் விசுவாசத்தினால் நிறைவேறி-
னது, என்று அவர்களிடத்தில் சொன்னான்.

4 ஆகவே தேவனில் விசுவாசிக்கிறவன் எவனும்,
தேவனுடைய வலது பாரிசத்தில், ஆம், ஒரு மேன்-
மையான உலகத்தை நிச்சயமாய் நம்பியிருப்பான்.
அந்த நம்பிக்கையோ விசுவாசத்தினால் வந்து,
மனுஷ ஆத்துமாக்களுக்கு ஒரு நங்கூரமாகிறது,
அது அவர்களை உறுதியுள்ளவர்களாயும், அசை-
வில்லாதவர்களாயும், நற்கிரியைகளில் எப்பொழு-
தும் பெருகுகிறவர்களாயும் இருக்கப்பண்ணி, தே-
வனை மகிமைப்படுத்தும்படியாக அவர்களை
நடத்திச் செல்லுகிறது.

5 அந்தப்படியே, ஏத்தேர் பெரிதும் அற்புதமுமான-
வைகளை ஜனங்களுக்குத் தீர்க்கதரிசனமுரைத்-
தான். அவர்களோ அவைகளைக் காணாததினி-
மித்தம் விசுவாசிக்கவில்லை.

6 இப்பொழுதும் மரோனியாகிய நான் இவைக-
ளைக் குறித்து சற்று உங்களிடத்தில் பேச விரும்பு-
கிறேன். காணப்படாதவை நம்பப்படுவதே விசுவா-
சம், என்று நான் உலகுக்குக் காண்பிப்பேன்; ஆக-
வே நீங்கள் காணாததினிமித்தம் வாக்குவாதம்
பண்ணாதிருங்கள். ஏனெனில் உங்கள் விசுவாசம்
பரிட்சிக்கப்படும்வரைக்கும் நீங்கள் சாட்சியைப்
பெறுவதில்லை.

7 கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த
பின்பு, விசுவாசத்தினிமித்தம் அவர் தம்மையே நம்-
முடைய பிதாக்களுக்கு, காண்பித்தார்; அவர்கள்
அவரில் விசுவாசம் வைக்கும்வரைக்கும் அவர் தம்-
மை அவர்களுக்குக் காண்பிக்கவில்லை; ஆத-
லால், சிலர் அவரில் விசுவாசம் வைத்திருக்க-
வேண்டியது அவசியம். அவர் தம்மை உலகுக்குக்
காண்பிக்கவில்லை.

## Ether 12

And it came to pass that the days of Ether were in the days of Coriantumr; and Coriantumr was king over all the land.

And Ether was a prophet of the Lord; wherefore Ether came forth in the days of Coriantumr, and began to prophesy unto the people, for he could not be restrained because of the Spirit of the Lord which was in him.

For he did cry from the morning, even until the going down of the sun, exhorting the people to believe in God unto repentance lest they should be destroyed, saying unto them that by faith all things are fulfilled—

Wherefore, whoso believeth in God might with surety hope for a better world, yea, even a place at the right hand of God, which hope cometh of faith, maketh an anchor to the souls of men, which would make them sure and steadfast, always abounding in good works, being led to glorify God.

And it came to pass that Ether did prophesy great and marvelous things unto the people, which they did not believe, because they saw them not.

And now, I, Moroni, would speak somewhat concerning these things; I would show unto the world that faith is things which are hoped for and not seen; wherefore, dispute not because ye see not, for ye receive no witness until after the trial of your faith.

For it was by faith that Christ showed himself unto our fathers, after he had risen from the dead; and he showed not himself unto them until after they had faith in him; wherefore, it must needs be that some had faith in him, for he showed himself not unto the world.

8 மனுஷருடைய விசுவாசத்தினிமித்தம் அவர் தம்-
மையே உலகுக்குக் காண்பித்து, பிதாவின் நாமத்-
தை மகிமைப்படுத்தி, மற்றவர்கள் பரலோக ஈவின்
பங்காளிகளாய் இருக்கும்படிக்கும், தாங்கள் கண்-
டிராத அந்தக் காரியங்களில் நம்பிக்கை வைக்கும்-
படிக்கும் ஓர் வழியை ஆயத்தப்படுத்தினார்.

But because of the faith of men he has shown himself unto the world, and glorified the name of the Father, and prepared a way that thereby others might be partakers of the heavenly gift, that they might hope for those things which they have not seen.

9 ஆதலால், உங்களுக்கு விசுவாசமிருந்தால் மாத்-
திரம், நீங்கள் நம்பிக்கை அடைந்து, ஈவின் பங்கா-
ளிகளாய் இருப்பீர்கள்.

Wherefore, ye may also have hope, and be partakers of the gift, if ye will but have faith.

10 இதோ, விசுவாசத்தினாலே பூர்வகாலத்தினர் தே-
வனுடைய பரிசுத்த முறைமையின்படி அழைக்கப்-
பட்டிருந்தார்கள்.

Behold it was by faith that they of old were called after the holy order of God.

11 ஆதலால், விசுவாசத்தினாலே மோசேயின் நியா-
யப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. ஆனால் தம்மு-
டைய குமாரனென்னும் ஈவினால், தேவன் ஒரு
அதிமேன்மையுள்ள வழியை ஆயத்தப்படுத்தி-
னார், விசுவாசத்தினாலே அது நிறைவேற்றப்பட்டி-
ருக்கிறது.

Wherefore, by faith was the law of Moses given. But in the gift of his Son hath God prepared a more excellent way; and it is by faith that it hath been fulfilled.

12 மனுப்புத்திரருக்குள்ளே விசுவாசம் இல்லை-
யென்றால் தேவன் அவர்கள் மத்தியிலே எந்த அற்-
புதத்தையும் செய்யமுடியாது. ஆதலால் அவர்க-
ளுக்குள் விசுவாசம் உண்டாகும் வரைக்கும் அவர்
தம்மைக் காண்பிக்கவில்லை.

For if there be no faith among the children of men God can do no miracle among them; wherefore, he showed not himself until after their faith.

13 இதோ, ஆல்மா மற்றும் அமுலேக்கின் விசுவாசமே
அந்த சிறைச்சாலையை பூமியில் விழப்பண்ணிய-
து.

Behold, it was the faith of Alma and Amulek that caused the prison to tumble to the earth.

14 இதோ, நேபி மற்றும் லேகியின் விசுவாசமே, லாமா-
னியர் அக்கினியாலும், பரிசுத்த ஆவியானவரா-
லும் ஞானஸ்நானம் பெறத்தக்கதான மாற்றத்தை
அவர்கள் மேல் கொண்டுவந்தது.

Behold, it was the faith of Nephi and Lehi that wrought the change upon the Lamanites, that they were baptized with fire and with the Holy Ghost.

15 இதோ, அம்மோன் மற்றும் அவனது சகோதரரின்
விசுவாசம், லாமானியருக்குள் ஒரு பெரும் அற்பு-
தத்தை சம்பவிக்கப் பண்ணினது.

Behold, it was the faith of Ammon and his brethren which wrought so great a miracle among the Lamanites.

16 ஆம், கிறிஸ்துவுக்கு முன்னிருந்தவர்களும், பின்-
னிருந்தவர்களுமான அற்புதத்தைச் செய்த யாவ-
ரும் அவைகளை விசுவாசத்தினாலே செய்தார்கள்.

Yea, and even all they who wrought miracles wrought them by faith, even those who were before Christ and also those who were after.

17 அந்த மூன்று சீஷர்களும் விசுவாசத்தினிமித்த-
மே, தாங்கள் மரணத்தை ருசி பார்ப்பதில்லை-
யென்ற வாக்குத்தத்தத்தைப் பெற்றுக் கொண்டார்-
கள்; அவர்கள் தங்களுக்குள் விசுவாசம் உண்டா-
கும் வரைக்கும் அந்த வாக்குத்தத்தத்தைப் பெற-
வில்லை.

And it was by faith that the three disciples obtained a promise that they should not taste of death; and they obtained not the promise until after their faith.

18 அவர்களுக்குள் விசுவாசம் உண்டாகும் வரை
எப்பொழுதும் எந்த அற்புதமும் செய்யப்படவில்-
லை; ஆதலால் அவர்கள் முதலில் தேவகுமாரனை
விசுவாசித்தார்கள்.

And neither at any time hath any wrought miracles until after their faith; wherefore they first believed in the Son of God.

19 கிறிஸ்து வருவதற்கு முன்கூட்டியே, திரையினுள்
இருந்த தடுக்கப்படமுடியாத, மிகவும் விசுவாசமு-
டைய அநேகர் இருந்தார்கள், தங்கள் விசுவாசக்-
கண்ணால் கண்டவைகளை தங்களின் கண்க-
ளால் நிச்சயமாகவே கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

And there were many whose faith was so exceedingly strong, even before Christ came, who could not be kept from within the veil, but truly saw with their eyes the things which they had beheld with an eye of faith, and they were glad.

20 இதோ, இவர்களில் ஒருவன் யாரேதின் சகோதரன்
என்று இந்தப் பதிவேட்டில் நாம் பார்க்கிறோம்; தே-
வனில் அவன் விசுவாசம் மிகப் பெரிதாயிருந்ததா-
லே, தேவன் தம்முடைய விரலை நீட்டினபோது,
அவன் விசுவாசத்தால் பெற்ற வார்த்தையாகிய,
அவன் அவரிடத்தில் பேசின வார்த்தையினிமித்த-
மே, அதை அவர் யாரேதின் சகோதரனின் பார்வை-
யிலிருந்து மறைக்க முடியவில்லை.

And behold, we have seen in this record that one of these was the brother of Jared; for so great was his faith in God, that when God put forth his finger he could not hide it from the sight of the brother of Jared, because of his word which he had spoken unto him, which word he had obtained by faith.

21 யாரேதின் சகோதரன் கர்த்தருடைய விரலைக்
கண்டபிறகு, விசுவாசத்தால் யாரேதின் சகோதரன்
பெற்ற வாக்குத்தத்தத்தினிமித்தம், கர்த்தர் அவனு-
டைய பார்வையிலிருந்து எதையும் மறைக்க முடி-
யவில்லை; ஆதலால் திரையினுள் இனியும் வைக்-
கப்பட முடியாததால், அவர் அவனுக்குச் சகலத்-
தையும் காண்பித்தார்.

And after the brother of Jared had beheld the finger of the Lord, because of the promise which the brother of Jared had obtained by faith, the Lord could not withhold anything from his sight; wherefore he showed him all things, for he could no longer be kept without the veil.

22 இக்காரியங்கள் தங்களுடைய சகோதரருக்கு புற-
ஜாதியார் மூலமாக வருமென்ற வாக்குத்தத்தத்தை
என் பிதாக்கள் விசுவாசத்தினாலே பெற்றுக்
கொண்டார்கள்; ஆதலால், ஆம், கர்த்தராகிய இயே-
சு கிறிஸ்து எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

And it is by faith that my fathers have obtained the promise that these things should come unto their brethren through the Gentiles; therefore the Lord hath commanded me, yea, even Jesus Christ.

23 நான் அவரிடத்தில், கர்த்தாவே, எழுதுவதில் எங்-
களுக்குள்ள பெலவீனத்தினிமித்தம் புறஜாதியார்
இக்காரியங்களை பரியாசம் பண்ணுவார்கள்;
ஏனெனில் கர்த்தாவே நீர் எங்களை விசுவாசத்தி-
னிமித்தம் வார்த்தையில் வல்லவர்களாக்கினீர்;
ஆனால் எழுதுவதில் எங்களை நீர் வல்லவர்க-
ளாக்கவில்லை; ஏனெனில் இந்த எல்லா ஜனத்திற்-
கும் நீர் கொடுத்த பரிசுத்த ஆவியானவராலே, இவர்-
களை நீர் அதிகமாக பேசும்படிச் செய்திருக்கிறீர்.

And I said unto him: Lord, the Gentiles will mock at these things, because of our weakness in writing; for Lord thou hast made us mighty in word by faith, but thou hast not made us mighty in writing; for thou hast made all this people that they could speak much, because of the Holy Ghost which thou hast given them;

24 எங்களுடைய செம்மையற்ற கைகளினிமித்தம்
கொஞ்சம் மாத்திரம் நாங்கள் எழுதும்படி நீர் செய்-
திருக்கிறீர். இதோ, நீர் எங்களை யாரேதின் சகோத-
ரனைப்போல எழுதுவதில் வல்லவர்களாக்கவில்-
லை. ஏனெனில் அவன் எழுதின காரியங்களை
வாசிக்கும்போது, மனுஷனை மேற்கொள்ளும்
அளவுக்கு அவனை உம்மைப்போலவே பெலவா-
னாக்கினீர்.

And thou hast made us that we could write but little, because of the awkwardness of our hands. Behold, thou hast not made us mighty in writing like unto the brother of Jared, for thou madest him that the things which he wrote were mighty even as thou art, unto the overpowering of man to read them.

25 நாங்கள் எங்களுடைய வார்த்தைகளை எழுதமு-
டியாத அளவுக்கு, நீர் அவைகளை வல்லமையா-
னதும், மகத்துவமானதுமாக்கினீர்; ஆதலால் நாங்-
கள் எழுதும்போது எங்களுடைய பெலவீனத்தைக்-
கண்டு, நாங்கள் வார்த்தைகளை அமைப்பதிலே
தள்ளாடிப்போகிறோம்; புறஜாதியார் எங்களுடைய
வார்த்தைகளைப் பரியாசம் பண்ணுவார்களோ
என்று, நான் அஞ்சுகிறேன்.

Thou hast also made our words powerful and great, even that we cannot write them; wherefore, when we write we behold our weakness, and stumble because of the placing of our words; and I fear lest the Gentiles shall mock at our words.

26 நான் இதைச் சொன்னபோது, கர்த்தர் என்னை நோக்கி: மூடர் பரியாசம் பண்ணுவார்கள்; ஆனால் அவர்கள் துக்கிப்பார்கள்; என் கிருபை சாந்த குணமுள்ளவர்களுக்குப் போதுமானதாயிருக்கிறது. அவர்கள் உங்கள் பெலவீனத்தினிமித்தம் அனுகூலம் கொள்வதில்லை.

And when I had said this, the Lord spake unto me, saying: Fools mock, but they shall mourn; and my grace is sufficient for the meek, that they shall take no advantage of your weakness;

27 மனுஷர் என்னிடத்தில் வந்தால், நான் அவர்களுக்கு அவர்களுடைய பெலவீனத்தைக் காண்பிப்பேன், மனுஷர் தாழ்மையாய் இருக்கும்படிக்கு நான் அவர்களுக்கு பெலவீனத்தைக் கொடுக்கிறேன். எனக்கு முன்பாகத் தாழ்மையாயிருக்கிற அனைத்து மனுஷருக்கும் என் கிருபையே போதுமானதாயிருக்கிறது. அவர்கள் எனக்கு முன்பாகத் தாழ்மையாயிருந்து என்னிடத்தில் விசுவாசமாயிருந்தால், நான் அவர்களுக்கு பெலவீனமுள்ளவைகளைப் பெலமுள்ளவைகளாக்குவேன்.

And if men come unto me I will show unto them their weakness. I give unto men weakness that they may be humble; and my grace is sufficient for all men that humble themselves before me; for if they humble themselves before me, and have faith in me, then will I make weak things become strong unto them.

28 இதோ, நான் புறஜாதியாருக்கு அவர்களுடைய பெலவீனத்தைக் காண்பிப்பேன். விசுவாசம், நம்பிக்கை, தயாளத்துவம் ஆகியவை, சகல நீதிக்கும் ஊற்றாயிருக்கிற என்னிடத்தில் கொண்டுவந்து சேர்க்கும் என்று, நான் அவர்களுக்குக் காண்பிப்பேன்.

Behold, I will show unto the Gentiles their weakness, and I will show unto them that faith, hope and charity bringeth unto me—the fountain of all righteousness.

29 மரோனியாகிய நான் இந்த வார்த்தைகளைக் கேட்டபோது, தேற்றப்பட்டுச் சொன்னதாவது, கர்த்தாவே உமது நீதி விளங்குவதாக. ஏனெனில் மனுபுத்திரரிடம் அவர்களுடைய விசுவாசத்தின்படியே கிரியை செய்கிறீர், என்று நான் அறிவேன்.

And I, Moroni, having heard these words, was comforted, and said: O Lord, thy righteous will be done, for I know that thou workest unto the children of men according to their faith;

30 யாரேதின் சகோதரன் சீரின் மலையை நோக்கி, பெயர்ந்து போ என்றான். அது பெயர்ந்து போயிற்று. அவனுக்கு விசுவாசமில்லாதிருந்தால் அது பெயர்ந்து போயிருக்காது; ஆதலால் மனுஷருக்கு விசுவாசம் உண்டான பிறகே நீர் கிரியை செய்கிறீர்.

For the brother of Jared said unto the mountain Zerin, Remove—and it was removed. And if he had not had faith it would not have moved; wherefore thou workest after men have faith.

31 ஏனெனில் இவ்விதமாய் தானே நீர் உம்மையே உம்முடைய சீஷர்களுக்குக் காண்பித்தீர்; ஏனெனில் அவர்களுக்கு விசுவாசம் உண்டாகி, உம்முடைய நாமத்தினாலே பேசின பின்னரே, நீர் உம்மைப் பெரும் வல்லமையோடு அவர்களுக்குக் காண்பித்தீர்.

For thus didst thou manifest thyself unto thy disciples; for after they had faith, and did speak in thy name, thou didst show thyself unto them in great power.

32 மனுஷனுக்கு மிக அதிகமான நம்பிக்கை உண்டாயிருக்கும் பொருட்டு, என் பிதாவினுடைய வாசஸ்தலங்களுக்குள்ளே மனுஷனுக்கான ஒரு வீட்டை ஆயத்தப்படுத்தினேன் என்று நீர் சொன்னதை நினைவுகூருகிறேன்; ஆதலால் மனுஷன் நம்ப வேண்டும்; இல்லாவிடில் அவன் நீர் ஆயத்தம்பண்ணின இடத்தில் சுதந்திரத்தைப் பெற முடியாது.

And I also remember that thou hast said that thou hast prepared a house for man, yea, even among the mansions of thy Father, in which man might have a more excellent hope; wherefore man must hope, or he cannot receive an inheritance in the place which thou hast prepared.

33 மனுபுத்திரருக்கு ஒரு இடத்தை ஆயத்தம் பண்ணும் பொருட்டு, அதை மறுபடியும் நீர் எடுத்துக்கொள்ளும்படியாக, உலகத்திற்காக உமது ஜீவனையே கொடுக்குமளவுக்கு நீர் உலகத்தில் அன்புகூர்ந்தீரென்றும், நீர் சொன்னதை நான் மறுபடியுமாய் நினைவுகூர்கிறேன்.

And again, I remember that thou hast said that thou hast loved the world, even unto the laying down of thy life for the world, that thou mightest take it again to prepare a place for the children of men.

34 இப்பொழுதும் நீர் மனுபுத்திரருக்காக வைத்தி-
ருக்கும் இந்த அன்பே தயாளத்துவமென்று நான்
அறிகிறேன்; ஆதலால் மனுபுத்திரருக்குத் தயாளத்-
துவம் இல்லாதிருந்தால், நீர் உம்முடைய பிதாவின்
வாசஸ்தலங்களில் ஆயத்தப்படுத்தியுள்ள இடத்-
தை அவர்கள் சுதந்தரிக்க முடியாது.

And now I know that this love which thou hast had for the children of men is charity; wherefore, except men shall have charity they cannot inherit that place which thou hast prepared in the mansions of thy Father.

35 ஆதலால் எங்களுடைய பெலவீனத்தினிமித்தம்,
புறஜாதியாருக்கு தயாளத்துவம் இல்லாதிருந்தால்,
நீர் அவர்களை விசாரித்து, ஆம், அவர்கள் பெற்-
றுக்கொண்ட அவர்களுடைய தாலந்தை எடுத்து,
ஏராளமாய் வைத்திருப்பவர்களிடம் கொடுப்பேன்
என்று, நீர் சொன்னதை இந்தக் காரியத்தினிமித்தம்
நான் அறிவேன்.

Wherefore, I know by this thing which thou hast said, that if the Gentiles have not charity, because of our weakness, that thou wilt prove them, and take away their talent, yea, even that which they have received, and give unto them who shall have more abundantly.

36 அந்தப்படியே, புறஜாதியார் தயாளத்துவத்தைப்
பெற்றிருக்கும்படி, கர்த்தர் அவர்களுக்கு கிருபை-
யைத் தந்தருளவேண்டுமென்று நான் அவரிடத்-
தில் விண்ணப்பம் பண்ணினேன்.

And it came to pass that I prayed unto the Lord that he would give unto the Gentiles grace, that they might have charity.

37 அந்தப்படியே, கர்த்தர் என்னை நோக்கி: அவர்க-
ளுக்கு தயாளத்துவம் இல்லையெனில், அது எனக்-
குப் பொருட்டல்ல. நீ விசுவாசமுள்ளவனாயிருந்-
தாய். ஆதலால் உன் வஸ்திரங்கள் சுத்தமாக்கப்ப-
டும். நீ உனது பெலவீனத்தைக் கண்டதினிமித்தம்,
என் பிதாவின் வாசஸ்தலங்களிலே நான் ஆயத்-
தப்படுத்தியுள்ள இடத்தில் உட்காருமளவுக்கு, நீ
பெலப்படுத்தப்படுவாய்.

And it came to pass that the Lord said unto me: If they have not charity it mattereth not unto thee, thou hast been faithful; wherefore, thy garments shall be made clean. And because thou hast seen thy weakness thou shalt be made strong, even unto the sitting down in the place which I have prepared in the mansions of my Father.

38 இப்பொழுதும் மரோனியாகிய நான் கிறிஸ்துவி-
னுடைய நியாயாசனத்திற்கு முன்பாக புறஜாதியா-
ரையும் ஆம், நான் நேசிக்கிற என் சகோதரரையும்
சந்திக்கும்வரைக்கும் அவர்களை வாழ்த்தி விடை-
பெறுகிறேன். என் வஸ்திரங்கள் உங்கள் இரத்தத்தி-
னால் கறைபடவில்லை என்று அங்கே சகல மனு-
ஷரும் அறிவார்கள்.

And now I, Moroni, bid farewell unto the Gentiles, yea, and also unto my brethren whom I love, until we shall meet before the judgment-seat of Christ, where all men shall know that my garments are not spotted with your blood.

39 அப்பொழுது நான் இயேசுவைக் கண்டேனென்-
றும், அவர் முகமுகமாய் என்னுடன் பேசினாரென்-
றும், ஒரு மனுஷன் மற்றவனிடத்தில் என்னுடைய
பாஷையில் பேசுவதைப்போல, அவர் இவைகளை
என்னிடத்தில் தெளிவாய்த் தாழ்மையோடு பேசி-
னாரென்றும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

And then shall ye know that I have seen Jesus, and that he hath talked with me face to face, and that he told me in plain humility, even as a man telleth another in mine own language, concerning these things;

40 எழுதுவதில் எனக்குள்ள என் பெலவீனத்தினி-
மித்தம் நான் சிலவற்றை மாத்திரமே எழுதியிருக்கி-
றேன்.

And only a few have I written, because of my weakness in writing.

41 இப்பொழுதும், பிதாவாகிய தேவன், கர்த்தராகிய
இயேசு கிறிஸ்து, மற்றும் அவர்களைக் குறித்து
சாட்சி கொடுக்கிற பரிசுத்த ஆவியானவரின் கிரு-
பையும் உங்களில் என்றென்றுமாயும் நிலைத்தி-
ருக்கும்படி, தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலர்க-
ளும் எழுதியிருக்கிற இந்த இயேசுவை நீங்கள் தேட-
வேண்டுமென்று உங்களுக்கு பரிந்துரைக்கிறேன்,
ஆமென்.

And now, I would commend you to seek this Jesus of whom the prophets and apostles have written, that the grace of God the Father, and also the Lord Jesus Christ, and the Holy Ghost, which beareth record of them, may be and abide in you forever. Amen.

## ஏத்தேர் 13

1 இப்பொழுதும் மரோனியாகிய நான் எந்த ஜனத்-
தைக் குறித்து எழுதிக்கொண்டிருக்கிறேனோ,
அவர்களுடைய அழிவைப்பற்றிய என் பதிவேட்-
டை முடிக்கப் போகிறேன்.
2 இதோ அவர்கள் ஏத்தேரின் வார்த்தைகளனைத்-
தையும் மறுதலித்தார்கள்; அவன் மனுஷனுடைய
ஆரம்பத்திலிருந்து சகல காரியங்களையும் சொன்-
னான். இந்த தேசத்தின் பரப்பிலிருந்து ஜலம் வற்-
றின பின்பு, அது மற்ற எல்லா தேசங்களிலும் சி-
றந்த தேசமாயும், கர்த்தருடைய தெரிந்துகொள்ளப்-
பட்ட தேசமாயும் மாறினதென்று அவர்களுக்கு
மெய்யாகவே சொன்னான். ஆதலால் அந்த தேசத்-
தின்மேல் வாசம் பண்ணுகிற சகல மனுஷரும்
அவரை சேவிக்கவேண்டுமென்று கர்த்தர் வாஞ்சித்-
திருக்க வேண்டும்.
3 கர்த்தருடைய பரிசுத்த அடைக்கல ஸ்தலமாகிய,
புதிய எருசலேம் வானத்திலிருந்து இறங்கி வர-
வேண்டிய இடமும் அதுவே.
4 இதோ, ஏத்தேர் கிறிஸ்துவின் நாட்களைக் கண்-
டான். அவன் இந்த தேசத்தின் மேல் ஒரு புதிய எருச-
லேமைக் குறித்துப் பேசினான்.
5 அவன் இஸ்ரவேலரின் வீட்டாரைக் குறித்தும்,
லேகி அங்கிருந்து வரவேண்டிய இடமாகிய எருச-
லேமைக் குறித்தும், அது அழிக்கப்பட்டுப்போன பி-
றகு அது மறுபடியும் கர்த்தருக்கு பரிசுத்த நகரமாகக்
கட்டப்படுமென்றும் சொன்னான்; ஆதலால் அது
பழங்காலத்திலிருந்து இருந்துவருவதால் அது பு-
திய எருசலேமாக இருக்கமுடியாது; ஆனால் அது
மறுபடியும் கட்டப்பட்டு கர்த்தரின் பரிசுத்த நகர-
மாக வேண்டும், அது இஸ்ரவேலரின் வீட்டாருக்கா-
கக் கட்டப்படவேண்டும்.
6 அவன் யோசேப்பின் சந்ததியாரின் மீதியானவர்-
களுக்காக, இந்த தேசத்தின் மேல் ஒரு புதிய எருச-
லேம் கட்டப்படவேண்டுமென்றும் இவைகளுக்-
கான ஒரு முன்னடையாளம் இருந்திருக்கிறதென்-
றும் சொன்னான்.
7 ஏனெனில் யோசேப்பு தன் தகப்பனை எகிப்து தே-
சத்திற்குக் கொண்டுவந்ததும் அவன் அங்கு மரித்-
துப்போனான்; ஆதலால் யோசேப்பின் தகப்பன்
அழிந்துபோகக் கூடாதென்று, கர்த்தர் அவன் மேல்
இரக்கமாய் இருந்ததைப்போல, யோசேப்பின் சந்த-
தியாரும் அழிந்துபோகாதபடி, அவர் அவர்கள்மேல்
இரக்கமாய் இருப்பதற்காக, அவர் யோசேப்பின் சந்-
ததியாரின் மீதியானவர்களை எருசலேம் தேசத்-
தைவிட்டு கொண்டுவந்தார்.

## Ether 13

And now I, Moroni, proceed to finish my record concerning the destruction of the people of whom I have been writing.

For behold, they rejected all the words of Ether; for he truly told them of all things, from the beginning of man; and that after the waters had receded from off the face of this land it became a choice land above all other lands, a chosen land of the Lord; wherefore the Lord would have that all men should serve him who dwell upon the face thereof;

And that it was the place of the New Jerusalem, which should come down out of heaven, and the holy sanctuary of the Lord.

Behold, Ether saw the days of Christ, and he spake concerning a New Jerusalem upon this land.

And he spake also concerning the house of Israel, and the Jerusalem from whence Lehi should come—after it should be destroyed it should be built up again, a holy city unto the Lord; wherefore, it could not be a new Jerusalem for it had been in a time of old; but it should be built up again, and become a holy city of the Lord; and it should be built unto the house of Israel—

And that a New Jerusalem should be built up upon this land, unto the remnant of the seed of Joseph, for which things there has been a type.

For as Joseph brought his father down into the land of Egypt, even so he died there; wherefore, the Lord brought a remnant of the seed of Joseph out of the land of Jerusalem, that he might be merciful unto the seed of Joseph that they should perish not, even as he was merciful unto the father of Joseph that he should perish not.

8 ஆதலால் யோசேப்பின் வீட்டாரின் மீதியானவர்-
கள் இந்த தேசத்தில் விருத்தியடைவார்கள்; அது
அவர்களுடைய சுதந்திர பூமியாய் இருக்கும்; அவர்-
கள் பழங்காலத்து எருசலேமைப் போலவே, கர்த்த-
ருக்கென்று ஒரு பரிசுத்த நகரத்தைக் கட்டுவார்கள்;
பூமி கடந்து போகும்போது வரும் முடிவு வரைக்கும்
அவர்கள் தாறுமாறாக்கப்படுவதில்லை.

Wherefore, the remnant of the house of Joseph shall be built upon this land; and it shall be a land of their inheritance; and they shall build up a holy city unto the Lord, like unto the Jerusalem of old; and they shall no more be confounded, until the end come when the earth shall pass away.

9 அங்கே ஒரு புதிய வானமும், புதிய பூமியும் இருக்-
கும்; பழையவை ஒழிந்து போனாலும், அவை
பழையவை போலிருக்கும், சகலமும் புதிதாகியி-
ருக்கின்றன.

And there shall be a new heaven and a new earth; and they shall be like unto the old save the old have passed away, and all things have become new.

10 அதன் பின்பு புதிய எருசலேம் வரும்; அங்கே வா-
சம்பண்ணுபவர்களெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்ட-
வர்கள். ஏனெனில் அவர்களுடைய வஸ்திரங்களே
ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தால் வெண்மை-
யாக்கப்பட்டது; இஸ்ரவேலின் வீட்டாராகிய யோ-
சேப்பின் சந்ததியாரின் மீதியானவர்களுக்குள்ளே
எண்ணப்படுபவர்கள் அவர்களே.

And then cometh the New Jerusalem; and blessed are they who dwell therein, for it is they whose garments are white through the blood of the Lamb; and they are they who are numbered among the remnant of the seed of Joseph, who were of the house of Israel.

11 அதன் பின்பு பூர்வகாலத்து எருசலேம் வரும்;
அதனுடைய குடிகள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்;
ஏனெனில் அவர்கள் ஆட்டுக்குட்டியானவரின்
இரத்தத்தால் கழுவப்பட்டிருக்கிறார்கள். அவர்க-
ளே சிதறடிக்கப்பட்டு, உலகத்தின் நான்கு திசைக-
ளிலிருந்தும், வடதேசங்களிலிருந்தும் கூட்டிச்-
சேர்க்கப்பட்டிருப்பவர்கள், தேவன் அவர்களு-
டைய பிதாவாகிய ஆபிரகாமோடு செய்த உடன்ப-
டிக்கை நிறைவேறுவதில் பங்கேற்கிறவர்களுமா-
யிருக்கிறார்கள்.

And then also cometh the Jerusalem of old; and the inhabitants thereof, blessed are they, for they have been washed in the blood of the Lamb; and they are they who were scattered and gathered in from the four quarters of the earth, and from the north countries, and are partakers of the fulfilling of the covenant which God made with their father, Abraham.

12 இந்தக் காரியங்கள் வரும்போது, முந்தினோர் பிந்-
தினோராயும், பிந்தினோர் முந்தினோராயும் இருப்-
பார்கள் என்கிற வேதவசனத்தை நிறைவேற்றுகிற-
து, மற்றும் பிந்தினோராயிருந்தவர்கள் முந்தினோ-
ராயிருப்பார்கள்.

And when these things come, bringeth to pass the scripture which saith, there are they who were first, who shall be last; and there are they who were last, who shall be first.

13 நான் இன்னும் அதிகமாய் எழுத இருந்தேன்.
ஆனால் நான் தடை செய்யப்பட்டேன்; ஆனால் ஏத்-
தேரின் தீர்க்கதரிசனங்கள் பெரிதும் அதிசயமுமா-
னவைகள்; அவர்கள் அவனை வீணனென்று
எண்ணினார்கள். அவனை புறம்பே தள்ளினார்-
கள்; அவன் பகலிலே கன்மலை இடுக்கில் ஒளிந்து
கொண்டான். ஜனங்களுக்குள்ளே வரவேண்டிய-
வைகளை காணும்படியாய் இரவிலே போனான்.

And I was about to write more, but I am forbidden; but great and marvelous were the prophecies of Ether; but they esteemed him as naught, and cast him out; and he hid himself in the cavity of a rock by day, and by night he went forth viewing the things which should come upon the people.

14 ஜனத்தின்மேல் வந்த அழிவுகளை, இரவிலே
பார்த்து, கன்மலை இடுக்கிலே இருக்கும்போது,
இந்த வரலாற்றின் மீதியை எழுதினான்.

And as he dwelt in the cavity of a rock he made the remainder of this record, viewing the destructions which came upon the people, by night.

15 அந்தப்படியே, அவன் ஜனங்களுக்குள்ளிருந்து
துரத்தப்பட்ட அதே வருஷத்தில் அங்கே ஜனங்க-
ளுக்குள்ளே பெரும் யுத்தம் துவங்கியது, பலசாலி-
களான அநேகர் எழும்பி, பேசப்பட்டிருக்கிறபடியே,
தங்களுடைய துன்மார்க்க இரகசிய திட்டங்களால்,
கொரியாந்தமரை அழிக்க வகை தேடினார்கள்.

And it came to pass that in that same year in which he was cast out from among the people there began to be a great war among the people, for there were many who rose up, who were mighty men, and sought to destroy Coriantumr by their secret plans of wickedness, of which hath been spoken.

16 இப்பொழுதும் கொரியாந்தமர் தான் யுத்தத்தின்
சகல கலைகளையும், உலகத்தின் சகல சூதுகளை-
யும் கற்றறிந்தபடியால், அவன் தன்னை அழிக்க
வகை தேடினவர்களுக்கு விரோதமாக யுத்தம் தொ-
டுத்தான்.

And now Coriantumr, having studied, himself, in all the arts of war and all the cunning of the world, wherefore he gave battle unto them who sought to destroy him.

17 ஆனால் அவனோ, அவனுடைய அழகான குமா-
ரரோ, குமாரத்திகளோ, கோஹோரின் அழகான கு-
மாரரோ, குமாரத்திகளோ, கோரிஹோரின் அழகான
குமாரரோ, குமாரத்திகளோ மனந்திரும்பவில்லை;
முடிவாக பூமியின் மேற்பரப்பிலெங்கும் தங்கள் பா-
வங்களிலிருந்து மனந்திரும்பின அழகான குமார-
ரும், குமாரத்திகளும் ஒருவரும் இல்லை.

But he repented not, neither his fair sons nor daughters; neither the fair sons and daughters of Cohor; neither the fair sons and daughters of Corihor; and in fine, there were none of the fair sons and daughters upon the face of the whole earth who repented of their sins.

18 ஆதலால், அந்தப்படியே, முதல் வருஷத்தில் ஏத்-
தேர் ஒரு கன்மலையின் துவாரத்தில் வாசம் பண்-
ணிக்கொண்டிருந்தபோது, அந்த இரகசியச் சங்கங்-
களைச் சார்ந்தவர்களின் பட்டயங்களால் அநேகர்
கொல்லப்பட்டு, அவர்கள் ராஜ்யத்தைப் பெறும்ப-
டிக்கு கொரியாந்தமருக்கு விரோதமாக யுத்தம் பண்-
ணினார்கள்.

Wherefore, it came to pass that in the first year that Ether dwelt in the cavity of a rock, there were many people who were slain by the sword of those secret combinations, fighting against Coriantumr that they might obtain the kingdom.

19 அந்தப்படியே, கொரியாந்தமரின் குமாரர்கள்
அதிக சண்டையிட்டு இரத்தம் மிகுதியாகச் சிந்தி-
னார்கள்.

And it came to pass that the sons of Coriantumr fought much and bled much.

20 இரண்டாவது வருஷத்தில் கர்த்தருடைய வார்த்-
தை ஏத்தேருக்கு உண்டாகி, அவன் போய் கொரி-
யாந்தமரிடத்தில் அவனும், அவனது வீட்டாரனை-
வரும் மனந்திரும்புவார்களாகில், கர்த்தர்
அவனுக்கு அவனுடைய ராஜ்யத்தைக் கொடுத்து
ஜனங்களைத் தப்புவிப்பார்.

And in the second year the word of the Lord came to Ether, that he should go and prophesy unto Coriantumr that, if he would repent, and all his household, the Lord would give unto him his kingdom and spare the people—

21 இல்லையென்றால், அவனைத் தவிர அவன் வீட்-
டாரனைவரும் அழிக்கப்படுவார்கள், மற்ற ஜனங்-
கள் தேசத்தைத் தங்களுடைய சுதந்தரத்திற்காகப்
பெறுவார்கள் என்பதைக் குறித்த தீர்க்கதரிசனங்-
கள் நிறைவேறுகிறதைப் பார்க்க அவன் ஜீவித்தி-
ருப்பான் என்றும், கொரியாந்தமர் அவர்களால்
அடக்கம் பண்ணப்படுவான் என்றும், கொரியாந்த-
மரைத் தவிர மற்ற எல்லா ஆத்துமாக்களும் அழிக்-
கப்படுமென்றும் தீர்க்கதரிசனமாய் சொல்லு, என்-
றது.

Otherwise they should be destroyed, and all his household save it were himself. And he should only live to see the fulfilling of the prophecies which had been spoken concerning another people receiving the land for their inheritance; and Coriantumr should receive a burial by them; and every soul should be destroyed save it were Coriantumr.

22 அந்தப்படியே, கொரியாந்தமரோ, அவன் வீட்டா-
ரோ, ஜனங்களோ மனந்திரும்பவில்லை, யுத்தங்க-
ளும் ஓயவில்லை. அவர்கள் ஏத்தேரைக் கொல்ல
வகை தேடினார்கள். ஆனால் அவனோ அவர்கள்
முன்னிருந்து ஓடி மறுபடியும் கன்மலையின் இடுக்-
கிலே ஒளிந்துகொண்டான்.

And it came to pass that Coriantumr repented not, neither his household, neither the people; and the wars ceased not; and they sought to kill Ether, but he fled from before them and hid again in the cavity of the rock.

23 அந்தப்படியே, அங்கே சாரேத் எழும்பி, கொரியாந்-
தமரிடத்தில் போர் தொடுத்தான்; அவன் அவனை
தோற்கடித்து அதினிமித்தம் மூன்றாம் வருஷத்தில்
அவன் அவனை சிறைத்தனத்திற்குள்ளாகக்
கொண்டுவந்தான்.

And it came to pass that there arose up Shared, and he also gave battle unto Coriantumr; and he did beat him, insomuch that in the third year he did bring him into captivity.

24 நான்காம் வருஷத்திலே கொரியாந்தமரின் குமா-
ரர்கள் சாரேத்தை அடித்து, தன் தகப்பனுக்கு மறுப-
டியும் ராஜ்யத்தைப் பெற்றுத் தந்தார்கள்.

And the sons of Coriantumr, in the fourth year, did beat Shared, and did obtain the kingdom again unto their father.

25 இப்பொழுது தேசத்தின் மேல் எங்கும் யுத்தம் து-
வங்கி, ஒவ்வொரு மனுஷனும் தன் கூட்டத்தோடு
தான் வாஞ்சிக்கிறதற்காக சண்டைபோட்டான்.

Now there began to be a war upon all the face of the land, every man with his band fighting for that which he desired.

26 அங்கே திருடர்கள் இருந்தார்கள். இறுதியாகத் தே-
சத்தின் மேல் எல்லா விதமான துன்மார்க்கங்களும்
இருந்தன.

And there were robbers, and in fine, all manner of wickedness upon all the face of the land.

27 அந்தப்படியே, கொரியாந்தமர் சாரேத்தோடு மிக-
வும் கோபப்பட்டு, அவன் அவனுக்கு விரோதமாக
தன் சேனைகளோடு போரிடப் போனான்; அவர்கள்
பெரும் கோபத்தோடு சந்தித்துக் கொண்டார்கள்.
அவர்கள் கில்கால் பள்ளத்தாக்கிலே சந்தித்தார்-
கள்; யுத்தம் மிகவும் கொடியதானது.

And it came to pass that Coriantumr was exceedingly angry with Shared, and he went against him with his armies to battle; and they did meet in great anger, and they did meet in the valley of Gilgal; and the battle became exceedingly sore.

28 அந்தப்படியே, சாரேத் அவனுக்கு விரோதமாக
மூன்று நாட்களளவும் யுத்தம் பண்ணினான். அந்-
தப்படியே, கொரியாந்தமர் அவனை தோற்கடித்து
ஏஸ்லோன் சமபூமிக்கு வரும்வரைக்கும்
அவனைப் பின்தொடர்ந்தான்.

And it came to pass that Shared fought against him for the space of three days. And it came to pass that Coriantumr beat him, and did pursue him until he came to the plains of Heshlon.

29 அந்தப்படியே, சாரேத் அவனோடு மறுபடியும் சம-
பூமியின் மேல் யுத்தம் புரிந்தான்; இதோ, அவன்
கொரியாந்தமரை தோற்கடித்து, அவனை மறுபடி-
யும் கில்கால் பள்ளத்தாக்குக்கு துரத்தினான்.

And it came to pass that Shared gave him battle again upon the plains; and behold, he did beat Coriantumr, and drove him back again to the valley of Gilgal.

30 கொரியாந்தமர் மறுபடியும் சாரேத்தோடு கில்கால்
பள்ளத்தாக்கிலே யுத்தம் பண்ணினான், அதிலே
அவன் சாரேத்தை தோற்கடித்து அவனை வெட்டிப்-
போட்டான்.

And Coriantumr gave Shared battle again in the valley of Gilgal, in which he beat Shared and slew him.

31 சாரேத் கொரியாந்தமரை அவன் தொடையில் கா-
யப்படுத்தினான், அதினாலே அவன் இரண்டு வரு-
ஷங்களளவும் யுத்தத்திற்குப் போகாதிருந்தான்.
அந்த சமயத்திலே தேசங்களிலிருந்த ஜனங்களெல்-
லாரும் இரத்தம் சிந்திக்கொண்டிருந்தார்கள். அவர்-
களைத் தடுக்க அங்கே ஒருவருமில்லை.

And Shared wounded Coriantumr in his thigh, that he did not go to battle again for the space of two years, in which time all the people upon the face of the land were shedding blood, and there was none to restrain them.

# ஏத்தேர் 14

1 இப்பொழுதும் ஜனங்களினுடைய அக்கிரமத்தினி-
மித்தம் தேசமெங்கும் ஒரு சாபம் உண்டானது. அதி-
னிமித்தம் ஒரு மனுஷன் தன் கருவியையோ, அல்-
லது தன் பட்டயத்தையோ, தன் அலமாரியின் மே-
லோ, அல்லது அதை வைக்கிற இடத்திலோ வைத்-
தால், இதோ, மறுநாளில் அவன் அதைக் காணமுடி-
யாது. தேசத்தின்மேல் சாபம் அவ்வளவு கொடியதா-
யிருந்தது.
2 ஆகையால் ஒவ்வொரு மனுஷனும் தனக்குச்
சொந்தமானதைத் தன் கைகளால் பற்றிக்கொள்-
வான். அவன் வாங்கவும் மாட்டான். கொடுக்கவும்
மாட்டான்; அவனவன் தன் சொத்தையும், தன்
சொந்த ஜீவனையும், தன் மனைவிகள் மற்றும்
பிள்ளைகளின் ஜீவன்களையும், தற்காப்பதற்-
கென்று தன் பட்டயத்தின் பிடியை தன் வலது கரத்-
தால் பிடித்திருந்தான்.
3 இப்பொழுதும் இரண்டு வருஷங்களுக்குப் பின்பு,
சாரேத்தின் மரணத்திற்குப் பின்பு, இதோ, அங்கே
சாரேத்தின் சகோதரன் எழும்பி, கொரியாந்தமரிடத்-
தில் யுத்தம் பண்ணினான். அதிலே கொரியாந்தமர்
அவனை தோற்கடித்து, அவனை ஆகீஸின்
வனாந்தரம் வரைக்குமாய்த் துரத்தினான்.
4 அந்தப்படியே, சாரேத்தின் சகோதரன் அவனோடு
ஆகீஸின் வனாந்தரத்திலே யுத்தம் பண்ணினான்;
யுத்தம் மிகவும் கொடியதாகி அநேக ஆயிரக்கணக்-
கானோர் பட்டயத்தால் வீழ்ந்து போனார்கள்.
5 அந்தப்படியே, கொரியாந்தமர் வனாந்தரத்தை
முற்றுகையிட்டான்; சாரேத்தின் சகோதரன் வனாந்-
தரத்தைவிட்டு இரவிலே அணிவகுத்துப்போய்,
கொரியாந்தமரின் சேனைகள் குடித்து வெறித்தி-
ருக்கும்போது, அவர்களில் ஒரு பகுதியினரை
வெட்டிப்போட்டான்.
6 அவன் மோரான் தேசத்திற்கு வந்து கொரியாந்த-
மரின் சிங்காசனத்தின் மேல் தன்னையே அமர்த்-
திக்கொண்டான்.
7 அந்தப்படியே, கொரியாந்தமர் வனாந்தரத்தில்
தன் சேனையோடு இரண்டு வருஷங்களளவும் வா-
சம் பண்ணினான். அதினாலே அவன் சேனைக்குப்
பெரும் பலத்தைப் பெற்றுக்கொண்டான்.
8 இப்பொழுதும் கீலேயாத் என்னும் பேர்கொண்ட
சாரேத்தின் சகோதரன், இரகசிய சங்கங்களினிமித்-
தம் தன் சேனைக்கும் மிகுந்த பலத்தைப் பெற்றான்.
9 அந்தப்படியே, அவன் தன் சிங்காசனத்தின் மேல்
வீற்றிருக்கும்போது, அவனை அவனது பிரதான
ஆசாரியன் கொலை செய்தான்.

# Ether 14

And now there began to be a great curse upon all the land because of the iniquity of the people, in which, if a man should lay his tool or his sword upon his shelf, or upon the place whither he would keep it, behold, upon the morrow, he could not find it, so great was the curse upon the land.

Wherefore every man did cleave unto that which was his own, with his hands, and would not borrow neither would he lend; and every man kept the hilt of his sword in his right hand, in the defence of his property and his own life and of his wives and children.

And now, after the space of two years, and after the death of Shared, behold, there arose the brother of Shared and he gave battle unto Coriantumr, in which Coriantumr did beat him and did pursue him to the wilderness of Akish.

And it came to pass that the brother of Shared did give battle unto him in the wilderness of Akish; and the battle became exceedingly sore, and many thousands fell by the sword.

And it came to pass that Coriantumr did lay siege to the wilderness; and the brother of Shared did march forth out of the wilderness by night, and slew a part of the army of Coriantumr, as they were drunken.

And he came forth to the land of Moron, and placed himself upon the throne of Coriantumr.

And it came to pass that Coriantumr dwelt with his army in the wilderness for the space of two years, in which he did receive great strength to his army.

Now the brother of Shared, whose name was Gilead, also received great strength to his army, because of secret combinations.

And it came to pass that his high priest murdered him as he sat upon his throne.

10 அந்தப்படியே, இரகசிய சங்கங்களைச் சேர்ந்த ஒருவன் அவனை இரகசிய பாதையில் கொலை-பண்ணி, ராஜ்யத்தை தனக்கென்று பெற்றுக்-கொண்டான்; அவனது பெயர் லிப். ஜனத்தார் எல்-லாருக்குள்ளும் எந்த ஒரு மனுஷனைக்காட்டிலும் அதிக பருத்த உடல்வாகை உடையவனாய் லிப் வி-ளங்கினான்.

And it came to pass that one of the secret combinations murdered him in a secret pass, and obtained unto himself the kingdom; and his name was Lib; and Lib was a man of great stature, more than any other man among all the people.

11 அந்தப்படியே, லிப்பின் முதலாம் வருஷத்தில், கொரியாந்தமர் மோரானின் தேசத்திற்கு வந்து, லிப்-போடு போர் புரிந்தான்.

And it came to pass that in the first year of Lib, Coriantumr came up unto the land of Moron, and gave battle unto Lib.

12 அந்தப்படியே, அவன் லிப்போடு சண்டை போட்-டான். அதிலே லிப் அவன் கரத்தை வெட்டினதாலே, அவன் காயமடைந்தான்; ஆயினும் கொரியாந்தம-ரின் சேனை லிப்பை துரத்தி அவன் கடற்கரையரு-கேயுள்ள எல்லைகளுக்கு ஓடும்படிக்கு முன்னேறி-யது.

And it came to pass that he fought with Lib, in which Lib did smite upon his arm that he was wounded; nevertheless, the army of Coriantumr did press forward upon Lib, that he fled to the borders upon the seashore.

13 அந்தப்படியே, கொரியாந்தமர் அவனைப் பின்-தொடர்ந்தான். லிப் கடற்கரையிலே அவனோடு போர் புரிந்தான்.

And it came to pass that Coriantumr pursued him; and Lib gave battle unto him upon the seashore.

14 அந்தப்படியே, கொரியாந்தமரின் சேனையை லிப் வெட்டினதாலே, அவர்கள் மறுபடியும் ஆகீஸின் வனாந்திரத்திற்கு ஓடிப்போனார்கள்.

And it came to pass that Lib did smite the army of Coriantumr, that they fled again to the wilderness of Akish.

15 அந்தப்படியே, லிப் ஆகோஸ் சமவெளிகளுக்கு வரும்வரைக்குமாய் அவனைத் துரத்தினான். லிப் முன்பாக கொரியாந்தமர் ஓடும்போது, அவன் தன்-னுடன் அப்பகுதியிலிருந்த சகல ஜனங்களையும் கூட்டிக்கொண்டு போனான்.

And it came to pass that Lib did pursue him until he came to the plains of Agosh. And Coriantumr had taken all the people with him as he fled before Lib in that quarter of the land whither he fled.

16 அவன் ஆகோஸ் சமவெளிகளுக்கு வந்தபோது, அவன் லிப்போடு யுத்தம் பண்ணினான்; அவன் மரணம் அடையும் வரைக்கும் அவனை அடித்-தான்; ஆயினும் அவனுக்குப் பதிலாக லிப்பின் சகோதரன் கொரியாந்தமருக்கு விரோதமாய் வந்-தான். யுத்தம் மிகவும் கொடியதாகி அதினிமித்தம் கொரியாந்தமர் மறுபடியும் லிப்பின் சகோதரனின் சேனைக்கு முன்பாக ஓடினான்.

And when he had come to the plains of Agosh he gave battle unto Lib, and he smote upon him until he died; nevertheless, the brother of Lib did come against Coriantumr in the stead thereof, and the battle became exceedingly sore, in the which Coriantumr fled again before the army of the brother of Lib.

17 இப்பொழுது லிப்பின் சகோதரனின் பெயர் சிஸ் என்பதாகும். அந்தப்படியே, சிஸ், கொரியாந்தம-ரைப் பின்தொடர்ந்து போய், அநேக பட்டணங்க-ளை வீழ்த்தினான். அவன் பெண்களையும், பிள்-ளைகளையும் வெட்டினான். அவன் பட்டணங்க-ளை எரித்துப்போட்டான்.

Now the name of the brother of Lib was called Shiz. And it came to pass that Shiz pursued after Coriantumr, and he did overthrow many cities, and he did slay both women and children, and he did burn the cities.

18 அங்கே சிஸ்ஸைப்பற்றிய பயம் தேசமெங்கிலும் பரவியது; ஆம், சிஸ்ஸின் சேனைக்கு முன்பாக நிற்கத்தக்கவன் யார்? என்ற ஒரு கூக்குரல் தேச-மெங்கும் பரவியது, இதோ, அவன் தனக்கு முன்பா-கப் பூமியை துடைத்துப் போடுகிறான்

And there went a fear of Shiz throughout all the land; yea, a cry went forth throughout the land—Who can stand before the army of Shiz? Behold, he sweepeth the earth before him!

19 அந்தப்படியே, ஜனங்கள் தேசத்தின்மேல் எங்கி-லும் சேனைகளாக ஏகமாய்க் கூட ஆரம்பித்தார்-கள்.

And it came to pass that the people began to flock together in armies, throughout all the face of the land.

20 அவர்கள் பிரிந்திருந்தார்கள்; அவர்களில் ஒரு பகுதியினர் சிஸ்ஸின் சேனையிடம் ஓடினார்கள். அவர்களில் ஒரு பகுதியினர் கொரியாந்தமரின் சேனையிடம் ஓடினார்கள்.

And they were divided; and a part of them fled to the army of Shiz, and a part of them fled to the army of Coriantumr.

21 யுத்தம் கொடியதாயும், நீண்ட நாள் இருந்ததாலும் இரத்தம் சிந்துதலும், சங்காரமும் நீண்டுகொண்டே போனதாலும், தேசத்தின் மேற்பரப்பெல்லாம் மரித்தோரின் சரீரங்களால் மூடப்பட்டிருந்தது.

And so great and lasting had been the war, and so long had been the scene of bloodshed and carnage, that the whole face of the land was covered with the bodies of the dead.

22 யுத்தம் வேகமாயும் துரிதமாயும் நடந்ததால் மரித்தோரை அடக்கம்பண்ண அங்கே ஒருவரும் மீந்திருக்கவில்லை, ஆனால் புருஷர்கள், ஸ்திரீகள், பிள்ளைகள் ஆகியோரின் உடல்கள் மாம்சப் புழுக்களுக்கு இரையாகும்படி தேசத்தின்மேல் சிதறவிடப்பட்டிருக்க, அவர்கள் அணிவகுத்துப்போய் யுத்தங்களில் தொடர்ந்து இரத்தம் சிந்திக்கொண்டிருந்தார்கள்.

And so swift and speedy was the war that there was none left to bury the dead, but they did march forth from the shedding of blood to the shedding of blood, leaving the bodies of both men, women, and children strewed upon the face of the land, to become a prey to the worms of the flesh.

23 அதனுடைய துர்நாற்றமோ, தேசத்தின் மீதெங்கும் பரவிப்போனது. தேசத்தின் பரப்பளவு முழுவதும் பரவியது; ஆகவே ஜனங்கள் அதனுடைய நாற்றத்தினிமித்தம், இரவும் பகலும் அவதிப்பட்டார்கள்.

And the scent thereof went forth upon the face of the land, even upon all the face of the land; wherefore the people became troubled by day and by night, because of the scent thereof.

24 இருப்பினும் கொரியாந்தமரை சிஸ் பின் தொடர்வதிலிருந்து ஓயவில்லை. கொல்லப்பட்ட தன் சகோதரனின் இரத்தத்துக்காக கொரியாந்தமர் மேல் பழிதீர்க்கவும் ஆணையிட்டான். கொரியாந்தமர் பட்டயத்தால் வீழ்ந்து போவதில்லையென்று ஏத்தேருக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டானது.

Nevertheless, Shiz did not cease to pursue Coriantumr; for he had sworn to avenge himself upon Coriantumr of the blood of his brother, who had been slain, and the word of the Lord which came to Ether that Coriantumr should not fall by the sword.

25 இப்படியாக கர்த்தர் அவர்களைத் தம்முடைய உக்கிரத்தின் முழுமையில் விசாரித்தார் என்றும், அவர்களுடைய துன்மார்க்கமும் அருவருப்புகளும் அவர்களின் என்றுமுள்ள அழிவுக்கு வழியை ஆயத்தப்படுத்திக் கொடுத்ததென்றும் நாம் காண்கிறோம்.

And thus we see that the Lord did visit them in the fulness of his wrath, and their wickedness and abominations had prepared a way for their everlasting destruction.

26 அந்தப்படியே, கொரியாந்தமரை கடற்கரையோரமாய் உள்ள எல்லைகள் வரைக்குமாய் கிழக்கே சிஸ் பின்தொடர்ந்தான். அங்கே அவன் மூன்று நாளளவும் சிஸ்ஸிடத்தில் யுத்தம் தொடுத்தான்.

And it came to pass that Shiz did pursue Coriantumr eastward, even to the borders by the seashore, and there he gave battle unto Shiz for the space of three days.

27 சிஸ்ஸின் சேனைகளுக்குள்ளே அழிவு மிகக் கொடூரமாயிருந்ததாலே, ஜனங்கள் பயப்படத் துவங்கி, கொரியாந்தமர் சேனைகளுக்கு முன்பாக ஓடத்துவங்கினார்கள். அவர்கள் கோரிஹோரின் தேசத்திற்கு ஓடி, தங்களோடு சேராத, தங்களுக்கு முன்னிருந்த குடிகள் யாவரையும் நிர்மூலமாக்கினார்கள்.

And so terrible was the destruction among the armies of Shiz that the people began to be frightened, and began to flee before the armies of Coriantumr; and they fled to the land of Corihor, and swept off the inhabitants before them, all them that would not join them.

28 அவர்கள் கோரிஹோரின் பள்ளத்தாக்கிலே பா-
ளையமிறங்கினார்கள்; கொரியாந்தமர் சுர் என்ற
பள்ளத்தாக்கிலே பாளையமிறங்கினான்; இப்பொ-
ழுதும் சுர் பள்ளத்தாக்கு கோம்நரின் மலைக்கு
அருகாமையில் இருந்தது; ஆதலால் கொரியாந்த-
மர் தன் சேனைகளை ஏகமாய் கோம்நரின் மலைக-
ளின் மேல்கூட்டி, சிஸ்ஸின் சேனைகளை யுத்தத்-
திற்கு வரும்படி எக்காளம் ஊதி அழைத்தான்.
29 அந்தப்படியே, அவர்கள் வந்தார்கள், ஆனால்
மறுபடியும் துரத்தப்பட்டார்கள்; இரண்டாம் விசை-
யும் வந்தார்கள், அவர்கள் இரண்டாம் விசையும் து-
ரத்தியடிக்கப்பட்டார்கள். அந்தப்படியே, அவர்கள்
மூன்றாம் விசையும் வந்தார்கள், யுத்தம் வெகு தீவி-
ரமடைந்தது.
30 அந்தப்படியே, அவனுக்கு ஆழமான அநேகக் கா-
யங்களை உண்டாக்கும்படிக்கு, கொரியாந்தமரை
சிஸ் வெட்டினான்; கொரியாந்தமர் தன் இரத்தத்தை
இழந்தவனாய், மயக்கம்போட்டு மரித்தவனைப்-
போல எடுத்துச் செல்லப்பட்டான்.
31 இப்பொழுது இருபுறத்திலும் புருஷர், ஸ்திரீகள்,
பிள்ளைகள் ஆகியோரின் இழப்பு அதிகமாயிருந்-
ததால், சிஸ் தன் ஜனம் கொரியாந்தமரின் சேனைக-
ளைத் துரத்திக்கொண்டு போகவேண்டாமென்று
கட்டளையிட்டான்; ஆதலால், அவர்கள் தங்கள்
பாளையத்திற்குத் திரும்பினார்கள்.

And they pitched their tents in the valley of Corihor; and Coriantumr pitched his tents in the valley of Shurr. Now the valley of Shurr was near the hill Comnor; wherefore, Coriantumr did gather his armies together upon the hill Comnor, and did sound a trumpet unto the armies of Shiz to invite them forth to battle.

And it came to pass that they came forth, but were driven again; and they came the second time, and they were driven again the second time. And it came to pass that they came again the third time, and the battle became exceedingly sore.

And it came to pass that Shiz smote upon Coriantumr that he gave him many deep wounds; and Coriantumr, having lost his blood, fainted, and was carried away as though he were dead.

Now the loss of men, women and children on both sides was so great that Shiz commanded his people that they should not pursue the armies of Coriantumr; wherefore, they returned to their camp.

# ஏத்தேர் 15

1 அந்தப்படியே, கொரியாந்தமர் தன் காயங்களிலிருந்து குணமடைந்தபோது, ஏத்தேர் தன்னிடத்தில் பேசின வார்த்தைகளை நினைவுகூரத் துவங்கினான்.

2 அவன் தன் ஜனங்களில் ஏற்கனவே ஏறக்குறைய இருபது லட்சம் பேர் பட்டயத்தினால் கொல்லப்பட்டதைக் கண்டு அவன் தன் உள்ளத்தில் துக்கிக்கத் துவங்கினான்; ஆம், இருபது லட்சம் பராக்கிரமசாலிகள், அவர்களுடைய மனைவிகள், மற்றும் அவர்களுடைய பிள்ளைகளும் கொல்லப்பட்டார்கள்.

3 அவன் தான் செய்த பொல்லாப்பினிமித்தம் மனந்திரும்பத் துவங்கினான்; சகல தீர்க்கதரிசிகளின் வாயால் பேசப்பட்ட வார்த்தைகளை நினைவுகூரத்துவங்கினான். அவைகள் இதுவரைக்கும் பூரணமாய் நிறைவேறினது எனக் கண்டான்; அவன் ஆத்துமா துக்கித்து, ஆறுதலடைய மறுத்தது.

4 அந்தப்படியே, அவன் ஜனங்களைத் தப்புவிக்க வேண்டுமென்றும், ஜனங்களுடைய ஜீவன்களினிமித்தம் ராஜ்யத்தை துறப்பதென்றும் விரும்புவதாக, சிஸ்ஸூக்கு ஒரு நிருபத்தை எழுதினான்.

5 அந்தப்படியே, சிஸ் அவனுடைய இந்த நிருபத்தைப் பெற்றபோது, அவன் தன்னை ஒப்புக்கொடுத்தால், அவனைத் தன்னுடைய சொந்தப் பட்டயத்தினால் வெட்டி, ஜனங்களுடைய ஜீவன்களைத் தப்புவிப்பதாகத் தெரிவித்து, அவன் கொரியாந்தமருக்கு ஒரு நிருபத்தை எழுதினான்.

6 அந்தப்படியே, ஜனங்கள் தங்கள் அக்கிரமத்திலிருந்து மனந்திரும்பவில்லை; கொரியாந்தமரின் ஜனங்கள் சிஸ்ஸின் ஜனங்களுக்கு விரோதமாக கோபத்தால் தூண்டப்பட்டார்கள். சிஸ்ஸின் ஜனங்கள் கொரியாந்தமரின் ஜனங்களுக்கு விரோதமாக கோபத்தால் தூண்டப்பட்டார்கள். ஆதலால் சிஸ்ஸின் ஜனங்கள் கொரியாந்தமரின் ஜனங்களோடு யுத்தம் தொடுத்தார்கள்.

7 கொரியாந்தமர் தான் வீழ்ந்து போக இருக்கிறோம் என்று கண்டபோது, அவன் மறுபடியும் சிஸ்ஸின் ஜனங்களுக்கு முன்பாக ஓடினான்.

8 அந்தப்படியே, அவன் ரிப்லியான்கும் தண்ணீர்களுக்கு வந்தான். அதற்கு பெரிய அல்லது அனைத்தையும் மிஞ்சத்தக்கது, என்று அர்த்தமாம்; ஆதலால் அவர்கள் இந்தத் தண்ணீர்களுக்கு வந்தபோது, அவர்கள் தங்கள் கூடாரங்களைப் போட்டார்கள்; சிஸ்ஸூம் தன் கூடாரங்களை அவர்களுக்கு அருகே போட்டான். ஆதலால் மறுநாளில் அவர்கள் யுத்தத்திற்கு வந்தார்கள்.

# Ether 15

And it came to pass when Coriantumr had recovered of his wounds, he began to remember the words which Ether had spoken unto him.

He saw that there had been slain by the sword already nearly two millions of his people, and he began to sorrow in his heart; yea, there had been slain two millions of mighty men, and also their wives and their children.

He began to repent of the evil which he had done; he began to remember the words which had been spoken by the mouth of all the prophets, and he saw them that they were fulfilled thus far, every whit; and his soul mourned and refused to be comforted.

And it came to pass that he wrote an epistle unto Shiz, desiring him that he would spare the people, and he would give up the kingdom for the sake of the lives of the people.

And it came to pass that when Shiz had received his epistle he wrote an epistle unto Coriantumr, that if he would give himself up, that he might slay him with his own sword, that he would spare the lives of the people.

And it came to pass that the people repented not of their iniquity; and the people of Coriantumr were stirred up to anger against the people of Shiz; and the people of Shiz were stirred up to anger against the people of Coriantumr; wherefore, the people of Shiz did give battle unto the people of Coriantumr.

And when Coriantumr saw that he was about to fall he fled again before the people of Shiz.

And it came to pass that he came to the waters of Ripliancum, which, by interpretation, is large, or to exceed all; wherefore, when they came to these waters they pitched their tents; and Shiz also pitched his tents near unto them; and therefore on the morrow they did come to battle.

9 அந்தப்படியே, அவர்கள் மிகவும் கொடிய யுத்தத்-
தை நடத்தினார்கள். அதிலே கொரியாந்தமர் மறுப-
டியும் காயமடைந்து, இரத்த இழப்பினால் மயக்கம-
டைந்தான்.

And it came to pass that they fought an exceedingly sore battle, in which Coriantumr was wounded again, and he fainted with the loss of blood.

10 அந்தப்படியே, கொரியாந்தமரின் சேனைகள்
அவர்களைத் தங்களுக்கு முன்பாக ஓடச் செய்யும்-
படிக்கு, சிஸ்ஸின் சேனைகளைத் தாக்கினார்கள்.
அவர்கள் தெற்கே ஓடி, ஓகாத்து என்று அழைக்கப்-
பட்ட ஸ்தலத்திலே தங்கள் கூடாரங்களைப் போட்-
டார்கள்.

And it came to pass that the armies of Coriantumr did press upon the armies of Shiz that they beat them, that they caused them to flee before them; and they did flee southward, and did pitch their tents in a place which was called Ogath.

11 அந்தப்படியே, கொரியாந்தமரின் சேனை ராமா
என்ற மலைக்கு அருகாமையில் பாளையமிறங்கி-
னார்கள்; அதே மலையில் தான் என் தகப்பனாகிய
மார்மன் கர்த்தருக்குள்ளே பரிசுத்தமான பதிவேடு-
களை மறைத்து வைத்தார்.

And it came to pass that the army of Coriantumr did pitch their tents by the hill Ramah; and it was that same hill where my father Mormon did hide up the records unto the Lord, which were sacred.

12 அந்தப்படியே, அவர்கள் ஏத்தேரைத் தவிர தேசத்-
தின் மேல் இருந்த கொல்லப்பட்டுப் போகாத ஜனங்-
கள் யாவரையும் ஏகமாய்க் கூட்டினார்கள்.

And it came to pass that they did gather together all the people upon all the face of the land, who had not been slain, save it was Ether.

13 அந்தப்படியே, ஏத்தேர் ஜனங்களுடைய நடப்பித்-
தல்கள் யாவையும் கண்டான்; கொரியாந்தமரைச்
சார்ந்த ஜனங்கள் கொரியாந்தமரின் சேனையில்
சேருவதையும், சிஸ்ஸைச் சார்ந்த ஜனங்கள் சிஸ்-
ஸின் சேனையில் சேருவதையும் அவன் கண்டான்.

And it came to pass that Ether did behold all the doings of the people; and he beheld that the people who were for Coriantumr were gathered together to the army of Coriantumr; and the people who were for Shiz were gathered together to the army of Shiz.

14 ஆதலால் அவர்கள் தங்களால் பெறமுடிந்த பலம்
யாவையும் பெறும்படிக்கு, தேசத்தின் மேலுள்ள
சகல ஜனங்களையும் நான்கு வருஷகாலம் திரட்-
டிக்கொண்டிருந்தார்கள்.

Wherefore, they were for the space of four years gathering together the people, that they might get all who were upon the face of the land, and that they might receive all the strength which it was possible that they could receive.

15 அந்தப்படியே, அவர்கள் யாவரும் ஒவ்வொருவ-
ரும் தான் விரும்பின சேனையில் தன் மனைவிக-
ளோடும், பிள்ளைகளோடும் சேர்க்கப்பட்டார்கள்.
புருஷரும், ஸ்தீரீகளும், பிள்ளைகளும், கேடயங்க-
ளையும், மார்புக்கவசங்களையும், தலைக்கவசங்க-
ளையும் பெற்று, யுத்தக்கருவிகளால் ஆயுதந்தரித்-
து, யுத்த முறையின்படி வஸ்திரமணிந்திருந்த
அவர்கள், யுத்தம் பண்ண ஒருவருக்கு விரோதமாக
ஒருவர் அணிவகுத்துப் போனார்கள்; அவர்கள்
நாள் முழுவதும் யுத்தம் பண்ணியும் ஜெயம் பெற-
வில்லை.

And it came to pass that when they were all gathered together, every one to the army which he would, with their wives and their children—both men, women and children being armed with weapons of war, having shields, and breastplates, and headplates, and being clothed after the manner of war—they did march forth one against another to battle; and they fought all that day, and conquered not.

16 அந்தப்படியே, இரவானபோது அவர்கள் களைத்-
துப்போய் தங்கள் பாளையத்திற்குத் திரும்பினார்-
கள்; அவர்கள் தங்கள் பாளயத்திற்குத் திரும்பின
பின்பு, மாண்டுபோன தங்கள் ஜனங்களது இழப்பி-
னிமித்தம் புலம்பி, துக்கித்தார்கள்; அவர்களு-
டைய கூக்குரல்களும், புலம்பல்களும், துக்கங்க-
ளும், மிகுதியாய் இருந்தபடியால், அவைகள் வெகு-
வாய் காற்றையும் கிழித்தன.

And it came to pass that when it was night they were weary, and retired to their camps; and after they had retired to their camps they took up a howling and a lamentation for the loss of the slain of their people; and so great were their cries, their howlings and lamentations, that they did rend the air exceedingly.

17 அந்தப்படியே, மறுநாளில் அவர்கள் மறுபடியும்
யுத்தத்திற்கு போனார்கள். அந்த நாள் பெரிதும்
பயங்கரமுமாய் இருந்தது; ஆயினும் அவர்கள் ஜெ-
யம் பெறவில்லை. இரவு வந்தபோது, அவர்கள்
மாண்டுபோன தங்கள் ஜனங்களின் இழப்பினிமித்-
தம், தங்கள் கூக்குரலாலும், தங்கள் புலம்பல்களா-
லும், தங்கள் துக்கங்களாலும் மறுபடியும் காற்-
றைக் கிழித்தார்கள்.

And it came to pass that on the morrow they did go again to battle, and great and terrible was that day; nevertheless, they conquered not, and when the night came again they did rend the air with their cries, and their howlings, and their mournings, for the loss of the slain of their people.

18 அந்தப்படியே, கொரியாந்தமர் தான் யுத்தத்துக்கு
மறுபடியும் வரமாட்டானென்றும், அவனது ராஜ்-
யத்தை எடுத்துக்கொண்டு, ஜனங்களினுடைய ஜீ-
வன்களைத் தப்புவிக்கவேண்டுமென்றும் வாஞ்-
சித்து, ஒரு நிருபத்தை மறுபடியும் சிஸ்ஸூக்கு எழு-
தினான்.

And it came to pass that Coriantumr wrote again an epistle unto Shiz, desiring that he would not come again to battle, but that he would take the kingdom, and spare the lives of the people.

19 இதோ, கர்த்தருடைய ஆவி அவர்களுடன் கிரி-
யை செய்வதிலிருந்து நின்றது. சாத்தான் ஜனங்க-
ளினுடைய இருதயங்களின் மேல் முழு வல்லமை
கொண்டான்; ஏனெனில் அவர்கள் தாங்கள் அழிந்-
துபோகும்படியாக தங்கள் இருதயங்கள் கடினப்ப-
டவும், தங்கள் மனங்கள் குருடடையவும் ஒப்புக்-
கொடுத்தார்கள்; ஆதலால் அவர்கள் மறுபடியும்
யுத்தத்திற்குப் போனார்கள்.

But behold, the Spirit of the Lord had ceased striving with them, and Satan had full power over the hearts of the people; for they were given up unto the hardness of their hearts, and the blindness of their minds that they might be destroyed; wherefore they went again to battle.

20 அந்தப்படியே, அவர்கள் அந்த நாள் முழுவதும்
யுத்தம் பண்ணினார்கள், இரவு வந்தபோது அவர்-
கள் தங்கள் பட்டயங்களைப் பிடித்தவர்களாய்
உறங்கினார்கள்.

And it came to pass that they fought all that day, and when the night came they slept upon their swords.

21 மறுநாளிலும் அவர்கள் இரவுவரைக்கும் யுத்தம்
பண்ணினார்கள்.

And on the morrow they fought even until the night came.

22 இரவு வந்தபோது அவர்கள் யாவரும், திராட்சை
ரசத்தால் குடித்து வெறித்த மனுஷனைப்போல,
கோபத்தால் வெறித்திருந்தார்கள்; அவர்கள் மறுப-
டியும் தங்கள் பட்டயங்களைப் பிடித்தவர்களாய்
உறங்கினார்கள்.

And when the night came they were drunken with anger, even as a man who is drunken with wine; and they slept again upon their swords.

23 மறுநாளில் அவர்கள் மறுபடியும் சண்டையிட்-
டார்கள்; இரவு வந்தபோது கொரியாந்தமரின்
ஜனங்களில் ஐம்பத்து இரண்டுபேரும், சிஸ்ஸின்
ஜனங்களில் அறுபத்தி ஒன்பது பேரும் தவிர,
அவர்களில் மற்ற யாவரும் பட்டயத்தால் வீழ்ந்தி-
ருந்தார்கள்.

And on the morrow they fought again; and when the night came they had all fallen by the sword save it were fifty and two of the people of Coriantumr, and sixty and nine of the people of Shiz.

24 அந்தப்படியே, அவர்கள் அந்த இரவிலே தங்கள்
பட்டயங்களைப் பிடித்தவர்களாய் உறங்கினார்-
கள். மறுநாளில் அவர்கள் மறுபடியும் யுத்தம் பண்-
ணினார்கள். அவர்கள் அந்த நாள் முழுவதும் தங்-
கள் ஊக்கத்தோடும் தங்கள் பட்டயங்களோடும்,
தங்கள் கேடயங்களோடும் சண்டையிட்டார்கள்.

And it came to pass that they slept upon their swords that night, and on the morrow they fought again, and they contended in their might with their swords and with their shields, all that day.

25 இரவு வந்தபோது அங்கே சிஸ்ஸின் ஜனங்கள்
முப்பத்திரண்டு பேரும், கொரியாந்தமரின் ஜனங்-
கள் இருபத்தி ஏழுபேரும் இருந்தார்கள்.

And when the night came there were thirty and two of the people of Shiz, and twenty and seven of the people of Coriantumr.

26 அந்தப்படியே, அவர்கள் உண்டு, உறங்கி, நாளை மரிப்பதற்கென்று ஆயத்தம் பண்ணினார்கள். மனுஷருடைய பலத்தின்படி அவர்கள் பெரியவர்களாயும், பராக்கிரமசாலிகளாயும் இருந்தார்கள்.

And it came to pass that they ate and slept, and prepared for death on the morrow. And they were large and mighty men as to the strength of men.

27 அந்தப்படியே, அவர்கள் மூன்று மணிநேரமளவும் சண்டையிட்டார்கள். அவர்கள் இரத்த இழப்பினால் மயக்கம் அடைந்தார்கள்.

And it came to pass that they fought for the space of three hours, and they fainted with the loss of blood.

28 அந்தப்படியே, கொரியாந்தமரின் மனுஷர் நடக்கும் அளவிற்குப் போதுமான பெலத்தைப் பெற்ற பின்பு, தங்கள் ஜீவன்களைக் காக்க ஓட இருந்தார்கள்; ஆனால் இதோ, சிஸ்ஸும், அவன் மனுஷரும் எழுந்தார்கள். தான் கொரியாந்தமரைக் கொல்லப்போவதாகவும், இல்லையேல் பட்டயத்தால் அழிந்து போகப்போவதாகவும் அவன் தன் உக்கிரத்திலே ஆணையிட்டான்.

And it came to pass that when the men of Coriantumr had received sufficient strength that they could walk, they were about to flee for their lives; but behold, Shiz arose, and also his men, and he swore in his wrath that he would slay Coriantumr or he would perish by the sword.

29 ஆதலால் அவன் அவர்களைத் தொடர்ந்துபோய், மறுநாளில் அவர்களை மேற்கொண்டான். அவர்கள் மறுபடியும் பட்டயத்தால் சண்டையிட்டார்கள். அந்தப்படியே, கொரியாந்தமரையும், சிஸ்ஸையும் தவிர அவர்கள் எல்லாரும் பட்டயத்தால் விழுந்தார்கள். இதோ, சிஸ் இரத்த இழப்பினால் மயக்கமடைந்தான்.

Wherefore, he did pursue them, and on the morrow he did overtake them; and they fought again with the sword. And it came to pass that when they had all fallen by the sword, save it were Coriantumr and Shiz, behold Shiz had fainted with the loss of blood.

30 அந்தப்படியே, கொரியாந்தமர் பட்டயத்தின் மேல் சாய்ந்து சற்று ஓய்வு எடுத்துக்கொண்டு, பின்பு சிஸ்ஸின் தலையை வெட்டினான்.

And it came to pass that when Coriantumr had leaned upon his sword, that he rested a little, he smote off the head of Shiz.

31 அந்தப்படியே, அவன் சிஸ்ஸின் தலையை வெட்டின பின்பு, சிஸ் தன் கைகளை ஊன்றி எழுந்து விழுந்தான். அதன் பின்பு அவன் மூச்சுத் திணறி மரித்தான்.

And it came to pass that after he had smitten off the head of Shiz, that Shiz raised up on his hands and fell; and after that he had struggled for breath, he died.

32 அந்தப்படியே, கொரியாந்தமர் பூமியிலே விழுந்து ஜீவனற்றவனைப் போலானான்.

And it came to pass that Coriantumr fell to the earth, and became as if he had no life.

33 கர்த்தர் ஏத்தேரிடத்தில் பேசி, அவனைப் போ, என்றார். அவன் போய் கர்த்தருடைய வார்த்தைகள் அனைத்தும் நிறைவேறியதைக் கண்டான்; அவன் தன் பதிவேட்டை முடித்தான் (அதில் நூற்றில் ஒரு பகுதியைக்கூட நான் எழுதவில்லை) லிம்கியின் ஜனங்கள் அதைக் கண்டெடுக்கும் வண்ணம், அதை அவன் மறைத்து வைத்தான்.

And the Lord spake unto Ether, and said unto him: Go forth. And he went forth, and beheld that the words of the Lord had all been fulfilled; and he finished his record; (and the hundredth part I have not written) and he hid them in a manner that the people of Limhi did find them.

34 ஏத்தேரால் எழுதப்பட்ட கடைசி வார்த்தைகள் இவைகளே: நான் தேவனுடைய ராஜ்யத்தில் இரட்சிக்கப்படுவேனேயாகில், நான் மறுரூபமாக்கப்பட கர்த்தர் சித்தமாயிருந்தாலோ, அல்லது மாம்சத்தில் கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்றிருந்தாலோ, அது பொருட்டல்ல. ஆமென்.

Now the last words which are written by Ether are these: Whether the Lord will that I be translated, or that I suffer the will of the Lord in the flesh, it mattereth not, if it so be that I am saved in the kingdom of God. Amen.

# மரோனியின் புஸ்தகம்

## மரோனி 1

1 இப்பொழுது மரோனியாகிய நான், யாரேதின்
ஜனங்களுடைய விவரத்தைச் சுருக்கமாக எழுதி
முடித்த பின்பு, நான் அதிகமாக எழுதியதாக எண்-
ணவில்லை. ஆனால் நானோ இன்னும் அழியாதி-
ருக்கிறேன்; லாமானியர் என்னை அழிக்காதபடிக்-
கு, நான் என்னை அவர்களுக்குக் காண்பிப்பதில்-
லை.
2 இதோ, அவர்களுடைய யுத்தங்கள் அவர்களுக்-
குள்ளே தீவிரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய
வெறுப்பினிமித்தம் அவர்கள் கிறிஸ்துவை மறுத-
லிக்காத ஒவ்வொரு நேபியனையும் மரணத்திற்-
குள்ளாக்குகிறார்கள்.
3 மரோனியாகிய நான் கிறிஸ்துவை மறுதலிப்ப-
தில்லை; ஆதலால் என் சொந்த ஜீவனின் பாது-
காப்பிற்காக அங்கேயும் இங்கேயுமாக அலைகி-
றேன்.
4 ஆகவே நான் எண்ணியதற்கு மாறாக, நான் இன்-
னும் சில காரியங்களை எழுதுகிறேன்; ஏனெனில்
நான் இன்னும் அதிகம் எழுதக்கூடாதென்று நி-
னைத்திருந்தேன்; ஆனால் எதிர்காலத்தில் எப்போ-
தாவது, கர்த்தருடைய சித்தத்தின்படி, என் சகோத-
ரர்களாகிய லாமானியர்களுக்குப் பிரயோஜனமா-
யிருக்கும் பொருட்டு, இன்னும் சிலவற்றை எழுது-
கிறேன்.

# The Book of Moroni

## Moroni 1

Now I, Moroni, after having made an end of abridging the account of the people of Jared, I had supposed not to have written more, but I have not as yet perished; and I make not myself known to the Lamanites lest they should destroy me.

For behold, their wars are exceedingly fierce among themselves; and because of their hatred they put to death every Nephite that will not deny the Christ.

And I, Moroni, will not deny the Christ; wherefore, I wander whithersoever I can for the safety of mine own life.

Wherefore, I write a few more things, contrary to that which I had supposed; for I had supposed not to have written any more; but I write a few more things, that perhaps they may be of worth unto my brethren, the Lamanites, in some future day, according to the will of the Lord.

# மரோனி 2

1 கிறிஸ்து தாம் தெரிந்துகொண்ட பன்னிருவராகிய
தமது சீஷர்களின் மேல், தம்முடைய கைகளை
வைத்து, அவர்களோடே பேசிய அவருடைய
வார்த்தைகள்.
2 அவர் அவர்களைப் பெயர் சொல்லி அழைத்து,
நீங்கள் வல்லமையான ஜெபத்தில் என் நாமத்தி-
னாலே பிதாவை அழையுங்கள்; இதை நீங்கள்
செய்த பின்பு, நீங்கள் உங்கள் கைகளை வைக்கிற-
வனுக்குப் பரிசுத்த ஆவியானவரை நீங்கள் அரு-
ளும்படியான வல்லமையைப் பெறுவீர்கள்; என்
நாமத்தினாலே அதைக் கொடுங்கள். ஏனெனில்
என்னுடைய அப்போஸ்தலர்களும் அப்படியே
செய்கிறார்கள், என்றார்.
3 இப்பொழுது கிறிஸ்து தாம் முதல் தோன்றியபோ-
து அவர்களிடம் பேசிய வார்த்தைகள் இவை; திர-
ளானோர் இதைக் கேட்கவில்லை. ஆனால் சீஷர்-
கள் அதைக் கேட்டார்கள்; அவர்கள் எத்தனைபேர்
மேல் தங்கள் கைகளை வைத்தார்களோ, யாவர்மே-
லும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.

# Moroni 2

The words of Christ, which he spake unto his disciples, the twelve whom he had chosen, as he laid his hands upon them—

And he called them by name, saying: Ye shall call on the Father in my name, in mighty prayer; and after ye have done this ye shall have power that to him upon whom ye shall lay your hands, ye shall give the Holy Ghost; and in my name shall ye give it, for thus do mine apostles.

Now Christ spake these words unto them at the time of his first appearing; and the multitude heard it not, but the disciples heard it; and on as many as they laid their hands, fell the Holy Ghost.

# மரோனி 3

1 சபையின் மூப்பர்கள் என்று அழைக்கப்பட்ட சீ-
ஷர்கள், ஆசாரியர்களையும், ஆசிரியர்களையும்
நியமனம் செய்த முறையாவது,
2 அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தினாலே பிதாவி-
னிடத்தில் ஜெபம் பண்ணின பின்பு, அவர்கள் தங்-
கள் கைகளை அவர்கள் மேல் வைத்துச் சொன்ன-
தாவது:
3 முடிவுபரியந்தம் அவரது நாமத்தில் விசுவாசமாய்
நிலைத்திருந்து, இயேசு கிறிஸ்து மூலமாய் மனந்தி-
ரும்புதலையும், பாவமன்னிப்பையும் பிரசங்கிக்க,
உன்னை ஆசாரியனாக (அல்லது அவன் ஆசிரி-
யனாயிருந்தால், உன்னை ஆசிரியராக) இயேசு கி-
றிஸ்துவின் நாமத்தில் நியமனம் செய்கிறேன்.
ஆமென்.
4 இப்படியாக அவர்கள் தேவன் மனுஷருக்குக்
கொடுக்கும் வரங்களுக்கும் அழைப்புகளுக்கும்
தக்கதாக ஆசாரியர்களையும் ஆசிரியர்களையும்
நியமனம் செய்தார்கள்; அவர்களுக்குள்ளிருந்த
பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே
அவர்களை அவர்கள் நியமனம் செய்தார்கள்.

# Moroni 3

The manner which the disciples, who were called the elders of the church, ordained priests and teachers—

After they had prayed unto the Father in the name of Christ, they laid their hands upon them, and said:

In the name of Jesus Christ I ordain you to be a priest (or if he be a teacher, I ordain you to be a teacher) to preach repentance and remission of sins through Jesus Christ, by the endurance of faith on his name to the end. Amen.

And after this manner did they ordain priests and teachers, according to the gifts and callings of God unto men; and they ordained them by the power of the Holy Ghost, which was in them.

# மரோனி 4

1 அவர்களது மூப்பர்களும் ஆசாரியர்களும் சபைக்-
குக் கிறிஸ்துவினுடைய மாம்சத்தையும், இரத்தத்-
தையும் ஆசீர்வதித்துக் கொடுத்த விவரமாவது;
அவர்கள் அதைக் கிறிஸ்துவினுடைய கட்டளைக-
ளுக்குத் தக்கதாக ஆசீர்வதித்துக் கொடுத்தார்கள்;
ஆதலால் அந்த முறை உண்மையென்று நாம் அறி-
வோம்; மூப்பனோ அல்லது ஆசாரியனோ அதை
ஆசீர்வதித்துக் கொடுத்தான்.
2 அவர்கள் சபையோடு முழங்கால்படியிட்டு, கி-
றிஸ்துவின் நாமத்தினாலே பிதாவினிடத்தில் ஜெ-
பித்துச் சொன்னதாவது:
3 நித்திய பிதாவாகிய தேவனே, இந்த அப்பத்தில்
பங்கெடுக்கிற யாவருடைய ஆத்துமாக்களுக்கா-
வும், அவர்கள் உம்முடைய குமாரனுடைய சரீரத்-
தின் நினைவுகூருதலில் புசிக்கும்படியாகவும்,
அவருடைய ஆவியை அவர்கள் எப்பொழுதும்
தங்களோடே கொண்டிருக்கும்படியாகவும், உம்மு-
டைய குமாரனுடைய நாமத்தை தங்கள் மீது தரித்-
துக்கொள்ளும்படியாகவும், அவரை எப்பொழுதும்
நினைவுகூரும்படியாகவும், தங்களுக்கு அவர்
கொடுத்திருக்கிற அவருடைய கட்டளைகளைக்
கைக்கொள்ளும்படியாகவும், சித்தமுள்ளவர்க-
ளாக இருக்கிறார்கள் என்று, நித்திய பிதாவாகிய
தேவனே உம்மிடத்தில் சாட்சி பகரவும், இதை ஆசீர்-
வதித்து பரிசுத்தப்படுத்துமாறு உம்முடைய குமா-
ரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்-
டிக்கொள்கிறோம். ஆமென்.

# Moroni 4

The manner of their elders and priests administering the flesh and blood of Christ unto the church; and they administered it according to the commandments of Christ; wherefore we know the manner to be true; and the elder or priest did minister it—

And they did kneel down with the church, and pray to the Father in the name of Christ, saying:

O God, the Eternal Father, we ask thee in the name of thy Son, Jesus Christ, to bless and sanctify this bread to the souls of all those who partake of it; that they may eat in remembrance of the body of thy Son, and witness unto thee, O God, the Eternal Father, that they are willing to take upon them the name of thy Son, and always remember him, and keep his commandments which he hath given them, that they may always have his Spirit to be with them. Amen.

# மரோனி 5

1 திராட்சை ரசத்தை ஆசீர்வதித்து வழங்கும் முறை – இதோ, அவர்கள் பாத்திரத்தை எடுத்துச் சொன்னதாவது:
2 நித்திய பிதாவாகிய தேவனே, இந்த திராட்சை ரசத்தை பானம் பண்ணுகிற யாவருடைய ஆத்துமாக்களுக்காவும், அவர்களுக்காக சிந்தப்பட்ட உமது குமாரனுடைய இரத்தத்தின் நினைவுகூருதலில் அவர்கள் இதைச் செய்யும்படியாகவும், அவருடைய ஆவியை அவர்கள் தங்களோடே கொண்டிருக்கும்படி அவரை எப்பொழுதும் நினைவுகூருகிறார்கள் என்று, நித்திய பிதாவாகிய தேவனே, உம்மிடத்தில் அவர்கள் சாட்சி பகரும்படியாகவும், இதை ஆசீர்வதித்து பரிசுத்தப்படுத்துமாறு, உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

# Moroni 5

The manner of administering the wine—Behold, they took the cup, and said:

O God, the Eternal Father, we ask thee, in the name of thy Son, Jesus Christ, to bless and sanctify this wine to the souls of all those who drink of it, that they may do it in remembrance of the blood of thy Son, which was shed for them; that they may witness unto thee, O God, the Eternal Father, that they do always remember him, that they may have his Spirit to be with them. Amen.

# மரோனி 6

1 இப்பொழுது நான் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பேசுகிறேன். இதோ, மூப்பர்களும், ஆசாரியர்களும், ஆசிரியர்களும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டார்கள், ஞானஸ்நானத்திற்குப் பாத்திரவான்கள் என்பதற்கேற்ப கனிகளைக் கொடுக்காவிட்டால், அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்படவில்லை.

2 அவர்கள் நொறுங்குண்ட இருதயத்தோடும், நருங்குண்ட ஆவியோடும் வந்து, தங்களுடைய சகல பாவங்களிலிருந்தும் மெய்யாகவே தாங்கள் மனந்திரும்பினோம் என்று, சபையிலே சாட்சி கொடுத்தாலொழிய, அவர்கள் ஒருவரையும் ஞானஸ்நானத்திற்குள் ஏற்றுக்கொள்ளவில்லை.

3 கிறிஸ்துவின் நாமத்தை தங்கள் மேல் தரித்துக்கொண்டு, அவரை முடிவுபரியந்தமும் சேவிக்க உறுதிகொண்டிருந்தாலொழிய, ஒருவரும் ஞானஸ்நானம் கொடுக்கப்பட ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

4 அவர்கள் ஞானஸ்நானம் கொடுக்கப்பட ஏற்றுக்கொள்ளப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நடப்பிக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட பின்பு, அவர்கள் கிறிஸ்துவினுடைய சபையின் ஜனங்களோடே எண்ணப்பட்டார்கள்; அவர்கள் நினைவுகூரப்பட்டு தேவனுடைய நல்வசனத்தினால் போஷிக்கப்படவும், அவர்களை நல்வழியில் வைத்திருக்கவும், தொடர்ந்து ஜெபத்தில் விழிப்புடன் வைத்திருக்கவும், அவர்களுடைய விசுவாசத்தைத் துவங்குகிறவரும், முடிக்கிறவருமாயிருக்கிற கிறிஸ்துவின் இரட்சிக்கிற வல்லமையில் மாத்திரம் சார்ந்திருக்கவும், அவர்களுடைய பெயர்கள் குறிக்கப்பட்டன.

5 சபை உபவாசித்திருக்கவும், ஜெபிக்கவும், தங்களுடைய ஆத்தும நலனைக் குறித்து ஒருவரோடு ஒருவர் பேசவும் அடிக்கடி கூடியது.

6 கர்த்தராகிய இயேசுவை நினைவுகூரும்படியாக, அவர்கள் அப்பத்திலும், திராட்சைரசத்திலும் பங்கேற்க, அடிக்கடி கூடினார்கள்.

7 அவர்கள் தங்களுக்குள் எந்த அக்கிரமும் இருக்கக்கூடாதென்று கண்டிப்புடன் கவனித்து வந்தார்கள்; அக்கிரமம் செய்வதாக யாராவது கண்டுபிடிக்கப்பட்டால், சபையின் மூன்று சாட்சிகள் அவர்களை மூப்பர்களுக்கு முன்பாக ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்கள். அவர்கள் மனந்திரும்பாமலும், அறிக்கைபண்ணாமலும் இருப்பார்களெனில், அவர்களுடைய பெயர்கள் அழிக்கப்பட்டன. அவர்கள் கிறிஸ்துவினுடைய ஜனங்களுக்குள் எண்ணப்படவில்லை.

# Moroni 6

And now I speak concerning baptism. Behold, elders, priests, and teachers were baptized; and they were not baptized save they brought forth fruit meet that they were worthy of it.

Neither did they receive any unto baptism save they came forth with a broken heart and a contrite spirit, and witnessed unto the church that they truly repented of all their sins.

And none were received unto baptism save they took upon them the name of Christ, having a determination to serve him to the end.

And after they had been received unto baptism, and were wrought upon and cleansed by the power of the Holy Ghost, they were numbered among the people of the church of Christ; and their names were taken, that they might be remembered and nourished by the good word of God, to keep them in the right way, to keep them continually watchful unto prayer, relying alone upon the merits of Christ, who was the author and the finisher of their faith.

And the church did meet together oft, to fast and to pray, and to speak one with another concerning the welfare of their souls.

And they did meet together oft to partake of bread and wine, in remembrance of the Lord Jesus.

And they were strict to observe that there should be no iniquity among them; and whoso was found to commit iniquity, and three witnesses of the church did condemn them before the elders, and if they repented not, and confessed not, their names were blotted out, and they were not numbered among the people of Christ.

8 ஆனால் அவர்கள் அடிக்கடி மனந்திரும்பி, உண்-
மையான நோக்கத்தோடு மன்னிப்பை நாடும்போது
அவர்கள் மன்னிக்கப்பட்டார்கள்.

9 ஆவியின் கிரியைகள் மற்றும் பரிசுத்த ஆவியா-
னவரின் வல்லமைக்கேற்ப அவர்களுடைய கூட்-
டங்கள் சபையால் நடத்தப்பட்டன; ஏனெனில் பிர-
சங்கிக்கவோ, அல்லது புத்தி சொல்லவோ, அல்லது
ஜெபிக்கவோ, அல்லது விண்ணப்பம் பண்ணவோ,
அல்லது பாடவோ, பரிசுத்த ஆவியானவரின் வல்-
லமை அவர்களை எப்படி நடத்துகிறதோ அப்படி-
யே செய்யப்பட்டது.

But as oft as they repented and sought forgiveness, with real intent, they were forgiven.

And their meetings were conducted by the church after the manner of the workings of the Spirit, and by the power of the Holy Ghost; for as the power of the Holy Ghost led them whether to preach, or to exhort, or to pray, or to supplicate, or to sing, even so it was done.

## மரோனி 7

1 இப்பொழுதும், மரோனியாகிய நான், விசுவாசத்-
தையும் நம்பிக்கையையும், தயாளத்துவத்தையும்
குறித்து என் தகப்பனாகிய மார்மன் பேசிய வார்த்-
தைகளில் சிலவற்றை எழுதுகிறேன். ஏனெனில்
ஜனங்கள் ஆராதனை ஸ்தலமாக இருக்கக் கட்டின
ஜெப வீட்டிலே அவர் அவர்களுக்குப் போதித்தபோ-
து, அவர்களிடத்தில் இவ்விதமாய்ப் பேசினார்.
2 இப்பொழுதும் என் பிரியமான சகோதரரே, மார்-
மனாகிய நான் உங்களிடத்தில் பேசுகிறேன்; பிதா-
வாகிய தேவன், நம்முடைய கர்த்தராகிய இயேசு கி-
றிஸ்து ஆகியோரின் கிருபையாலும், அவருடைய
பரிசுத்த சித்தத்தாலும், எனக்குள்ள அவருடைய
அழைப்பின் வரத்தின் நிமித்தமும், நான் இச்சமயத்-
தில் உங்களிடத்தில் பேச அனுமதிக்கப்பட்டிருக்கி-
றேன்.
3 ஆதலால் கிறிஸ்துவின் சமாதானமுள்ள சீஷர்க-
ளாயும் இக்காலம் முதற்கொண்டு, நீங்கள் அவரோ-
டு பரலோகத்தில் இளைப்பாறும்வரைக்குமாய் இப்-
போதிலிருந்து கர்த்தருடைய இளைப்பாறுதலி-
னுள் பிரவேசிக்கவேண்டிய போதுமான நம்பிக்-
கையைப் பெற்றவர்களுமாயிருக்கிற சபையோரே,
உங்களிடத்தில் பேசுவேன்.
4 இப்பொழுதும் என் சகோதரரே, நீங்கள் மனுபுத்தி-
ரரோடு சமாதானமாய் நடக்கிறதாலே இக்காரியங்க-
ளை உங்களைக் குறித்து நிதானிக்கிறேன்.
5 ஏனெனில் அவர்களுடைய கிரியைகளினாலே
அவர்களை நீங்கள் அறிவீர்கள் என்ற தேவ
வசனத்தை நான் நினைவுகூருகிறேன்; ஏனெனில்
அவர்களுடைய கிரியைகள் நல்லதாயிருந்தால்,
அப்போது அவர்களும் நல்லவர்களாய் இருக்கி-
றார்கள்.
6 ஏனெனில் இதோ, பொல்லாதவனாய் இருக்கிற
மனுஷன் நல்லதைச் செய்யமுடியாதென்று தேவன்
சொல்லியிருக்கிறார்; அவன் தேவனுக்கு ஒரு பொ-
ருளைக் கொடுத்தாலோ அல்லது ஜெபித்தாலோ,
அவன் அதை உண்மையான நோக்கத்தோடு செய்-
யவில்லையெனில், அவனுக்கு எந்தப் பிரயோஜன-
முமில்லை.
7 ஏனெனில் இதோ, அது அவனுக்கு நீதியாய் எண்-
ணப்படாது.
8 இதோ, ஒரு பொல்லாத மனுஷன் பொருளைக்
கொடுத்தால், அவன் அதை விருப்பமில்லாமல்
செய்கிறான்; ஆகவே அது அவனே அப்பொருளை
வைத்துக்கொண்டதற்குச் சமமாய் எண்ணப்படும்;
ஆதலால் அவன் தேவனுக்கு முன்பாக தீயவனாக
எண்ணப்படுவான்.

## Moroni 7

And now I, Moroni, write a few of the words of my father Mormon, which he spake concerning faith, hope, and charity; for after this manner did he speak unto the people, as he taught them in the synagogue which they had built for the place of worship.

And now I, Mormon, speak unto you, my beloved brethren; and it is by the grace of God the Father, and our Lord Jesus Christ, and his holy will, because of the gift of his calling unto me, that I am permitted to speak unto you at this time.

Wherefore, I would speak unto you that are of the church, that are the peaceable followers of Christ, and that have obtained a sufficient hope by which ye can enter into the rest of the Lord, from this time henceforth until ye shall rest with him in heaven.

And now my brethren, I judge these things of you because of your peaceable walk with the children of men.

For I remember the word of God which saith by their works ye shall know them; for if their works be good, then they are good also.

For behold, God hath said a man being evil cannot do that which is good; for if he offereth a gift, or prayeth unto God, except he shall do it with real intent it profiteth him nothing.

For behold, it is not counted unto him for righteousness.

For behold, if a man being evil giveth a gift, he doeth it grudgingly; wherefore it is counted unto him the same as if he had retained the gift; wherefore he is counted evil before God.

9 அதுபோலவே ஒரு மனுஷன் இருதயத்தின் உண்-
மையான நோக்கமிராமல் ஜெபிப்பானேயாகில்,
அது அவனுக்குத் தீமையானதாக எண்ணப்படும்;
ஆம், அப்படிப்பட்டவைகளை தேவன் ஏற்றுக்-
கொள்ளாததினாலே, அது அவனுக்குப் பிரயோ-
ஜனப்படுவதில்லை.

And likewise also is it counted evil unto a man, if he shall pray and not with real intent of heart; yea, and it profiteth him nothing, for God receiveth none such.

10 ஆதலால் பொல்லாத மனுஷன் நன்மை எதுவும்
செய்யமுடியாது; அவன் நன்மையான ஈவையும்
கொடுக்கமாட்டான்.

Wherefore, a man being evil cannot do that which is good; neither will he give a good gift.

11 ஏனெனில் இதோ, ஒரு கசப்பான ஊற்று நல்ல
தண்ணீரைக் கொடுக்க முடியாது; ஒரு நல்ல ஊற்று
கசப்பான தண்ணீரைக் கொடுக்க முடியாது. ஆத-
லால் மனுஷன் பிசாசுக்கு ஊழியனாயிருந்து கி-
றிஸ்துவைப் பின்பற்ற முடியாது; அவன் கிறிஸ்து-
வைப் பின்பற்றினால் அவன் பிசாசின் ஊழி-
யனாய் இருக்கமுடியாது.

For behold, a bitter fountain cannot bring forth good water; neither can a good fountain bring forth bitter water; wherefore, a man being a servant of the devil cannot follow Christ; and if he follow Christ he cannot be a servant of the devil.

12 ஆதலால் நன்மையான சகல காரியமும் தேவனி-
டத்திலிருந்து வருகிறது; பொல்லாதவை பிசாசினி-
டத்திலிருந்து வருகிறது; பிசாசு தேவனுக்கு விரோ-
தமாயிருந்து, அவருக்கு விரோதமாய் தொடர்ந்து
சண்டையிட்டுக்கொண்டு, பாவத்திற்கும், பொல்-
லாததைத் தொடர்ந்து செய்வதற்கும் நயம் காட்டி
அழைக்கிறான்.

Wherefore, all things which are good cometh of God; and that which is evil cometh of the devil; for the devil is an enemy unto God, and fighteth against him continually, and inviteth and enticeth to sin, and to do that which is evil continually.

13 ஆனால் இதோ, தேவனாலானது நல்லதைத் தொ-
டர்ந்து செய்யும்படி நயம் காட்டி அழைக்கிறது; ஆத-
லால் நன்மை செய்யவும், தேவனை நேசிக்கவும்,
அவரைச் சேவிக்கவும், நயம்காட்டி அழைக்கிற எல்-
லாம் தேவனால் ஏவப்பட்டவை.

But behold, that which is of God inviteth and enticeth to do good continually; wherefore, every thing which inviteth and enticeth to do good, and to love God, and to serve him, is inspired of God.

14 ஆதலால் எனக்குப் பிரியமான சகோதரரே,
பொல்லாததை தேவனாலானது என்றும், அல்லது
நன்மையானதையும், தேவனாலானதையும் பிசா-
சினாலானது என்றும் நிதானிக்காமல் ஜாக்கிரதை-
யாயிருங்கள்.

Wherefore, take heed, my beloved brethren, that ye do not judge that which is evil to be of God, or that which is good and of God to be of the devil.

15 இதோ, என் சகோதரரே நீங்கள் தீமையிலிருந்து
நன்மையை அறிய நிதானிக்கும்படி விடப்பட்டி-
ருக்கிறீர்கள்; இருண்ட இரவிலிருந்து பகல் வெ-
ளிச்சத்தை அறிவதெப்படியோ அப்படியே பூரண
ஞானத்தோடு அறியத்தக்கதாக நிதானிக்கிற வழி
தெளிவாயிருக்கிறது.

For behold, my brethren, it is given unto you to judge, that ye may know good from evil; and the way to judge is as plain, that ye may know with a perfect knowledge, as the daylight is from the dark night.

16 ஏனெனில் இதோ, ஒவ்வொருவனும் தீமையிலி-
ருந்து நன்மையை அறியத்தக்கதாக அவனுக்கு கி-
றிஸ்துவின் ஆவி கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆத-
லால் நிதானிக்கிற வழியை நான் உங்களுக்குக்
காண்பிக்கிறேன்; ஏனெனில் நன்மையைச் செய்ய
அழைத்து கிறிஸ்துவில் விசுவாசிக்க ஏவும் எது-
வும் கிறிஸ்துவினுடைய வல்லமையாலும், ஈவி-
னாலும் அனுப்பப்பட்டவை; ஆகையால் அது தே-
வனாலானது என்று நீங்கள் பூரண ஞானத்தோடு
அறிந்துகொள்ளலாம்.

For behold, the Spirit of Christ is given to every man, that he may know good from evil; wherefore, I show unto you the way to judge; for every thing which inviteth to do good, and to persuade to believe in Christ, is sent forth by the power and gift of Christ; wherefore ye may know with a perfect knowledge it is of God.

17 ஆனால் பொல்லாதவைகளைச் செய்யவும், கி-
றிஸ்துவில் விசுவாசியாதிருக்கவும், அவரை மறுத-
லிக்கவும், தேவனை சேவிக்காதிருக்கும்படியாக
மனுஷனைத் தூண்டுகிற எதுவும் பிசாசினாலான-
து என்று நீங்கள் பூரண ஞானத்தோடு அறிந்து
கொள்ளலாம். ஏனெனில் பிசாசு கிரியை செய்வது
இவ்விதமாயிருக்கிறது. ஏனெனில் ஒருவனை,
ஒரே ஒருவனைக்கூட நன்மை செய்ய, அவனோ,
அவனுடைய தூதர்களோ, அவனுக்குக் கீழ்ப்படிந்-
திருக்கிறவர்களோ உணர்த்துவதில்லை.

But whatsoever thing persuadeth men to do evil, and believe not in Christ, and deny him, and serve not God, then ye may know with a perfect knowledge it is of the devil; for after this manner doth the devil work, for he persuadeth no man to do good, no, not one; neither do his angels; neither do they who subject themselves unto him.

18 இப்பொழுதும், என் சகோதரரே, நீங்கள் நிதானிக்-
கிற ஒளியாகிய கிறிஸ்துவின் ஒளியை நீங்கள்
அறிந்திருக்கிறதைக் கண்டு, தவறாய் நிதானிக்கா-
தபடி பார்த்துக் கொள்ளுங்கள்; நீங்கள் எப்படி நி-
தானிக்கிறீர்களோ அதே தீர்ப்பைக்கொண்டு நீங்-
கள் நியாயந்தீர்க்கப்படுவீர்கள்.

And now, my brethren, seeing that ye know the light by which ye may judge, which light is the light of Christ, see that ye do not judge wrongfully; for with that same judgment which ye judge ye shall also be judged.

19 ஆதலால் சகோதரரே நீங்கள் தீமையிலிருந்து
நன்மையை அறியத்தக்கதாக, கிறிஸ்துவின் ஒளி-
யிலே கருத்தாய்த் தேடவேண்டுமென்று உங்களை
வேண்டிக்கொள்கிறேன்; நீங்கள் எல்லா நன்மை-
யானவைகளையும் ஏற்றுக்கொண்டு அதைக் குற்-
றமெனத் தீர்க்காமலிருந்தால், நீங்கள் நிச்சயமாக-
வே கிறிஸ்துவின் பிள்ளையாய் இருப்பீர்கள்.

Wherefore, I beseech of you, brethren, that ye should search diligently in the light of Christ that ye may know good from evil; and if ye will lay hold upon every good thing, and condemn it not, ye certainly will be a child of Christ.

20 இப்பொழுதும் என் சகோதரரே, நீங்கள் எல்லா
நன்மையான காரியத்தையும் எப்படி ஏற்றுக்-
கொள்ளக் கூடும்?

And now, my brethren, how is it possible that ye can lay hold upon every good thing?

21 இப்பொழுதும், நான் பேசுவேன் என்று நான்
சொன்ன அந்த விசுவாசத்திற்கு வருகிறேன்; நீங்-
கள் எல்லா நன்மையான காரியத்தையும் ஏற்றுக்-
கொள்ளத்தக்கதான வழியை உங்களுக்குச் சொல்-
லுவேன்.

And now I come to that faith, of which I said I would speak; and I will tell you the way whereby ye may lay hold on every good thing.

22 ஏனெனில் இதோ, அநாதியாய் என்றென்றுமாய்
சகலத்தையும் தேவன் அறிந்து, இதோ, கிறிஸ்து-
வின் வருகையைக் குறித்து வெளியரங்கமாக்க-
வும், மனுபுத்திரருக்குள்ளே ஊழியம் பண்ணவும்
தூதர்களை அனுப்பினார்; ஒவ்வொரு நல்ல காரி-
யமும் கிறிஸ்துவினாலே வர வேண்டும்.

For behold, God knowing all things, being from everlasting to everlasting, behold, he sent angels to minister unto the children of men, to make manifest concerning the coming of Christ; and in Christ there should come every good thing.

23 தேவனும் தம்முடைய சொந்த வாயினால், கிறிஸ்-
து வருவாரென்று தீர்க்கதரிசிகளுக்கு அறிவித்தார்.

And God also declared unto prophets, by his own mouth, that Christ should come.

24 இதோ, நன்மையானவைகளை மனுபுத்திரருக்கு
பல வழிகளில் வெளிப்படுத்தினார்; நன்மையான
காரியங்கள் அனைத்தும் கிறிஸ்துவினிடத்திலி-
ருந்து வருகிறது; இல்லாவிடில் மனுஷர் வீழ்த்தப்-
பட்டார்கள், நன்மையான ஒன்றும் அவர்களுக்கு
வந்திருக்காது.

And behold, there were divers ways that he did manifest things unto the children of men, which were good; and all things which are good cometh of Christ; otherwise men were fallen, and there could no good thing come unto them.

25 ஆதலால் தூதர்களின் ஊழியத்தினாலும், தே-
வனின் வாயிலிருந்து புறப்பட்டுப் போகிற ஒவ்-
வொரு வார்த்தையினாலும், மனுஷர் கிறிஸ்து-
வில் விசுவாசத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்தார்-
கள்; இப்படியாக விசுவாசத்தினாலே அவர்கள்
ஒவ்வொரு நன்மையான காரியத்தையும் ஏற்றுக்
கொண்டார்கள்; கிறிஸ்துவின் வருகை வரைக்கு-
மாய் இப்படியிருந்தது.

Wherefore, by the ministering of angels, and by every word which proceeded forth out of the mouth of God, men began to exercise faith in Christ; and thus by faith, they did lay hold upon every good thing; and thus it was until the coming of Christ.

26 அவர் வந்த பிறகு, மனுஷரும் அவருடைய நா-
மத்தில் வைத்த விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்-
டார்கள்; விசுவாசத்தினால் அவர்கள் தேவ குமாரர்-
களாகிறார்கள். கிறிஸ்து ஜீவிப்பது நிச்சயமாயி-
ருப்பதுபோலவே, அவர் நம்முடைய பிதாக்களுக்கு
நிச்சயமாய் பேசிச் சொன்ன வார்த்தைகளாவன:
நீங்கள் நன்மையான எதையும் விசுவாசத்தோடே
பெற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையுடனே,
என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்கிற எது-
வும், இதோ, அது உங்களுக்குக் கொடுக்கப்படும்.

And after that he came men also were saved by faith in his name; and by faith, they become the sons of God. And as surely as Christ liveth he spake these words unto our fathers, saying: Whatsoever thing ye shall ask the Father in my name, which is good, in faith believing that ye shall receive, behold, it shall be done unto you.

27 ஆதலால், எனக்குப் பிரியமான சகோதரரே, கி-
றிஸ்து மனுபுத்திரர் மேல் வைத்திருந்த தம்முடைய
இரக்க உரிமைகளைப் பிதாவினிடத்திலிருந்து
கோரத்தக்கதாக, அவர் பரலோகத்திற்கு ஏறி, தே-
வனுடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்ததினிமித்-
தம் அற்புதங்கள் ஓய்ந்துபோனதா?

Wherefore, my beloved brethren, have miracles ceased because Christ hath ascended into heaven, and hath sat down on the right hand of God, to claim of the Father his rights of mercy which he hath upon the children of men?

28 ஏனெனில் அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவு-
களை நிறைவேற்றினார். அவர் தம்மில் விசுவாசம்
வைத்திருப்போர் யாவர் மேலும் உரிமை கோருகி-
றார்; அவரில் விசுவாசம் வைத்திருக்கிறவர்கள்
எல்லா நன்மையான காரியத்தையும் பற்றிக்
கொள்வார்கள்; ஆதலால் அவர் மனுபுத்திரருக்-
காக பரிந்துரைக்கிறார்; அவர் நித்தியமாய் பரலோ-
கங்களில் வாசம் பண்ணுகிறார்.

For he hath answered the ends of the law, and he claimeth all those who have faith in him; and they who have faith in him will cleave unto every good thing; wherefore he advocateth the cause of the children of men; and he dwelleth eternally in the heavens.

29 எனக்குப் பிரியமான சகோதரரே, அவர் இதைச்
செய்ததினிமித்தம் அற்புதங்கள் ஓய்ந்ததோ? இதோ
நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், அப்படியல்ல,
மனுபுத்திரருக்குள்ளே தூதர்களும் பணிவிடை
செய்வதிலிருந்து ஓய்ந்து போகவில்லை.

And because he hath done this, my beloved brethren, have miracles ceased? Behold I say unto you, Nay; neither have angels ceased to minister unto the children of men.

30 ஏனெனில் இதோ, பெலமான விசுவாசமும், எல்-
லா வகையான தெய்வத் தன்மையைக்கொண்ட
உறுதியான மனதோடு இருப்பவர்களுக்கு தங்க-
ளையே காண்பித்து, அவருடைய வார்த்தையின்
கட்டளையின்படியே ஊழியம்பண்ணவும், அவர்-
கள் அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள்.

For behold, they are subject unto him, to minister according to the word of his command, showing themselves unto them of strong faith and a firm mind in every form of godliness.

31 அவர்களுடைய ஊழியத்தின் அலுவலாவது,
மனுஷரை மனந்திரும்புதலுக்கு அழைத்தலும்,
மனுபுத்திரருக்குள்ளே பிதா செய்த தம்முடைய
உடன்படிக்கைகளை நிறைவேற்றி, அதன் கிரி-
யையைச் செய்தலும், அவர்கள் அவரைக் குறித்து
சாட்சியம் கொடுக்கும்படியாக, கர்த்தரால் தெரிந்து
கொள்ளப்பட்ட பாத்திரவான்களுக்கு கிறிஸ்துவி-
னுடைய வார்த்தையை அறிவித்து, மனுபுத்திரருக்-
குள்ளே வழியை ஆயத்தப்படுத்துவதுமாகும்.

And the office of their ministry is to call men unto repentance, and to fulfil and to do the work of the covenants of the Father, which he hath made unto the children of men, to prepare the way among the children of men, by declaring the word of Christ unto the chosen vessels of the Lord, that they may bear testimony of him.

32 இப்படிச் செய்வதின் மூலமாக, தேவனாகிய கர்த்தர் மனுஷரில் மீதியானோர் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கவும், பரிசுத்த ஆவியானவர் தம்முடைய வல்லமைக்கேற்ப அவர்களுடைய இருதயங்களில் இடம்கொள்ளும்படியாகவும், ஒரு வழியை ஆயத்தப்படுத்துகிறார்; இப்படியாக பிதா தாம் மனுபுத்திரருடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளை நிறைவேறப்பண்ணுகிறார்.

And by so doing, the Lord God prepareth the way that the residue of men may have faith in Christ, that the Holy Ghost may have place in their hearts, according to the power thereof; and after this manner bringeth to pass the Father, the covenants which he hath made unto the children of men.

33 கிறிஸ்து, நீங்கள் என்னில் விசுவாசம் கொண்டிருந்தால், எனக்குத் தேவையான எந்த காரியத்தையும் செய்ய வல்லமையை நீங்கள் பெறுவீர்கள் என்று சொல்லியிருக்கிறார்.

And Christ hath said: If ye will have faith in me ye shall have power to do whatsoever thing is expedient in me.

34 அவர், பூமியின் கடையாந்தரங்களே, நீங்கள் இரட்சிக்கப்படும்படி, மனந்திரும்பி என்னிடத்தில் வந்து, என் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, என்னை விசுவாசியுங்கள், என்றும் சொல்லியிருக்கிறார்.

And he hath said: Repent all ye ends of the earth, and come unto me, and be baptized in my name, and have faith in me, that ye may be saved.

35 இப்பொழுதும், எனக்குப் பிரியமான சகோதரரே, நான் உங்களிடத்தில் பேசின இக்காரியங்கள் உண்மையானவையானால், அவை சத்தியமானவையென்பதை கடைசி நாளில் வல்லமையோடும் மகா மகிமையோடும் தேவன் உங்களுக்குக் காண்பிப்பார். அவைகள் உண்மையாய் இருக்குமானால், அற்புதங்களின் நாள் ஒழிந்து போனதோ?

And now, my beloved brethren, if this be the case that these things are true which I have spoken unto you, and God will show unto you, with power and great glory at the last day, that they are true, and if they are true has the day of miracles ceased?

36 அல்லது மனுபுத்திரர் முன்பு தூதர்கள் தோன்றுவதை நிறுத்திவிட்டார்களோ? அல்லது அவர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அவர்களிடத்திலிருந்து எடுத்துக்கொண்டாரோ? அல்லது அவர் காலத்தின் கடைசிவரைக்கும், அல்லது பூமி நிலைத்திருக்கும்வரைக்கும், அல்லது அதின்மேல் இரட்சிக்கப்பட ஒரு மனுஷன் இருக்கும்வரைக்குமாய் அப்படிச் செய்வாரோ?

Or have angels ceased to appear unto the children of men? Or has he withheld the power of the Holy Ghost from them? Or will he, so long as time shall last, or the earth shall stand, or there shall be one man upon the face thereof to be saved?

37 இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். அப்படியல்ல; ஏனெனில் விசுவாசத்தினாலே அற்புதங்கள் நடப்பிக்கப்படுகின்றன; விசுவாசத்தினாலே தூதர்கள் தோன்றி மனுஷருக்குள்ளே ஊழியம் செய்கிறார்கள்; ஆகையால் இவைகள் ஓய்ந்து போயிருந்தால், இது அவிசுவாசத்தினிமித்தமே என்பதினால் மனுபுத்திரருக்கு ஐயோ, மற்றும் எல்லாம் வீணானது.

Behold I say unto you, Nay; for it is by faith that miracles are wrought; and it is by faith that angels appear and minister unto men; wherefore, if these things have ceased wo be unto the children of men, for it is because of unbelief, and all is vain.

38 ஏனெனில் கிறிஸ்துவின் வார்த்தைகளின்படி, அவருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தாலொழிய, ஒருவனும் இரட்சிக்கப்பட முடியாது; ஆகையால் இவைகள் ஒழிந்து போயிருக்குமானால், விசுவாசமும் ஒழிந்து போயிருக்கும்; மீட்பு செய்யப்படாததைப்போல அவர்கள் இருப்பதால், மனுஷனின் நிலை பரிதாபத்திற்குரியதாயிருக்கிறது.

For no man can be saved, according to the words of Christ, save they shall have faith in his name; wherefore, if these things have ceased, then has faith ceased also; and awful is the state of man, for they are as though there had been no redemption made.

39 ஆனால் இதோ, எனக்குப் பிரியமான சகோதரரே, உங்களைக் குறித்து நான் மேன்மையானவைகளை நிதானிக்கிறேன்; உங்களுடைய சாந்த குணத்தினிமித்தம் நீங்கள் கிறிஸ்துவில் விசுவாசிக்கிறீர்கள் என்று நான் எண்ணுகிறேன்; ஏனெனில் அவரில் உங்களுக்கு விசுவாசம் இல்லையெனில், அவருடைய சபையின் ஜனங்களுக்குள்ளே நீங்கள் எண்ணப்பட அபாத்திரராய் இருப்பீர்கள்.

But behold, my beloved brethren, I judge better things of you, for I judge that ye have faith in Christ because of your meekness; for if ye have not faith in him then ye are not fit to be numbered among the people of his church.

40 எனக்குப் பிரியமான சகோதரரே, மறுபடியும் நான் உங்களிடத்தில் நம்பிக்கையைக் குறித்துப் பேசுகிறேன். நீங்கள் நம்பிக்கை இல்லாமல், விசுவாசத்தைப் பெறுவதெப்படி?

And again, my beloved brethren, I would speak unto you concerning hope. How is it that ye can attain unto faith, save ye shall have hope?

41 நீங்கள் எதை நம்புவீர்கள்? இதோ கிறிஸ்துவின் பாவநிவர்த்தி மற்றும் நித்திய ஜீவனுக்கேதுவாய் எழும்பும்படியான அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலம், நீங்கள் நம்பிக்கையைப் பெற்றிருப்பீர்கள், என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். வாக்குத்தத்தத்தின்படியே அவரில் உள்ள உங்களுடைய விசுவாசத்தினிமித்தம் ஆகும்.

And what is it that ye shall hope for? Behold I say unto you that ye shall have hope through the atonement of Christ and the power of his resurrection, to be raised unto life eternal, and this because of your faith in him according to the promise.

42 ஆதலால், ஒரு மனுஷனுக்கு விசுவாசமிருந்தால் அவன் நம்பிக்கையை உடையவனாக இருக்கவேண்டும்; ஏனெனில் விசுவாசமில்லாமல், எந்த நம்பிக்கையும் இருக்கமுடியாது.

Wherefore, if a man have faith he must needs have hope; for without faith there cannot be any hope.

43 மறுபடியும் அவன் சாந்தமாயும், இருதயத்தின் தாழ்மையோடும் இராவிட்டால், இதோ அவன் விசுவாசத்தையும், நம்பிக்கையையும் பெறமுடியாது என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்.

And again, behold I say unto you that he cannot have faith and hope, save he shall be meek, and lowly of heart.

44 அப்படியிருந்தால் அவனது விசுவாசமும், நம்பிக்கையும் வீணே. ஏனெனில் சாந்த குணமுள்ளவர்களையும், இருதயத்தில் தாழ்மையுள்ளவர்களையும் தவிர, வேறு ஒருவரும் தேவனுக்கு முன் ஏற்கப்படுவதில்லை; சாந்தமாயும் இருதயத்தில் தாழ்மையாயுமிருந்து, இயேசுவே கிறிஸ்து என்று பரிசுத்த ஆவியின் வல்லமையினாலே அறிக்கை பண்ணுகிறவன் நிச்சயமாய்த் தயாளத்துவத்தைப் பெறவேண்டும். ஏனெனில் அவனுக்குத் தயாளம் இல்லையானால், அவன் வெறுமையானவன். ஆகவே அவன் தயாளம் கொண்டிருக்க வேண்டும்.

If so, his faith and hope is vain, for none is acceptable before God, save the meek and lowly in heart; and if a man be meek and lowly in heart, and confesses by the power of the Holy Ghost that Jesus is the Christ, he must needs have charity; for if he have not charity he is nothing; wherefore he must needs have charity.

45 தயாளத்துவம் நீடிய பொறுமையும் தயவுமுள்ளது, பொறாமைப்படாது, இறுமாப்பு அடையாது. சுயமாய் நாடாது. எளிதில் கோபப்படாது, பொல்லாப்பு நினையாது. அக்கிரமத்தில் களிகூராமல் சத்தியத்தில் களிகூரும். சகலத்தையும் தாங்கும். சகலத்தையும் விசுவாசிக்கும். சகலத்தையும் நம்பும். சகலத்தையும் சகிக்கும்.

And charity suffereth long, and is kind, and envieth not, and is not puffed up, seeketh not her own, is not easily provoked, thinketh no evil, and rejoiceth not in iniquity but rejoiceth in the truth, beareth all things, believeth all things, hopeth all things, endureth all things.

46 ஆகையால் எனக்குப் பிரியமான சகோதரரே, உங்களுக்குத் தயாளத்துவம் இல்லையெனில் நீங்கள் ஒன்றுமில்லை. ஏனெனில் தயாளத்துவம் ஒருக்காலும் ஒழியாது. ஆதலால் சகலத்திலும் மேன்மையான தயாளத்துவத்தைப் பற்றிக்கொள்ளுங்கள். ஏனெனில் சகலமும் ஒழிந்துபோகும்.

Wherefore, my beloved brethren, if ye have not charity, ye are nothing, for charity never faileth. Wherefore, cleave unto charity, which is the greatest of all, for all things must fail—

47 ஆனால் தயாளத்துவம் கிறிஸ்துவின் தூய அன்பாய் இருக்கிறது. அது என்றென்றும் நிலைத்திருக்கும்; கடைசி நாளின்போது, அதை உடையவனாய்க் காணப்படுகிற எவனும், நன்மையை அடைவான்.

48 ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, பிதா தம்முடைய குமாரனான, இயேசு கிறிஸ்துவை உண்மையாக பின்பற்றுகிறவர்களாய் இருக்கிற யாவர் மேலும், அவர் அருளின இந்த அன்பினால் நீங்களும் நிரப்பப்படவும், தேவனுடைய குமாரர்களாக, அவர் இருக்கிற விதமாகவே நாம் அவரைப் பார்ப்போம் என்பதால், அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாமும் இருக்கும்படிக்கு, இந்த நம்பிக்கையை நாம் கொண்டிருக்கவும், அவர் தூயவராயிருப்பதைப் போலவே நாமும் தூய்மையாக்கப்படவும், அவரிடத்தில் இருதயத்தின் முழு ஊக்கத்தோடும் ஜெபியுங்கள். ஆமென்.

But charity is the pure love of Christ, and it endureth forever; and whoso is found possessed of it at the last day, it shall be well with him.

Wherefore, my beloved brethren, pray unto the Father with all the energy of heart, that ye may be filled with this love, which he hath bestowed upon all who are true followers of his Son, Jesus Christ; that ye may become the sons of God; that when he shall appear we shall be like him, for we shall see him as he is; that we may have this hope; that we may be purified even as he is pure. Amen.

# மரோனி 8

1 என் தகப்பனாகிய மார்மன், மரோனியாகிய எனக்-
கு எழுதின ஒரு நிருபம்; நான் ஊழியத்திற்கு என்
அழைப்பினைப் பெற்றவுடனே, அது எனக்கு எழு-
தப்பட்டது. அவர் எனக்கு எழுதின விதமாவது,

2 எனக்குப் பிரியமான குமாரனாகிய மரோனியே,
உன்னுடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உன்-
னைக் குறித்து சிந்தையுள்ளவராய், உன்னைத்
தம்முடைய ஊழியத்திற்கும், தம்முடைய பரிசுத்த
பணிக்கும் அழைத்திருப்பதினிமித்தம், நான் மிக-
வும் களிகூருகிறேன்.

3 நான் எப்பொழுதும் உன்னை என் ஜெபங்களில்
நினைவுகூர்ந்து, பிதாவாகிய தேவன், நீ முடிவுபரி-
யந்தமும் அவருடைய நாமத்தில் விசுவாசமாய் நி-
லைத்திருக்கும்வரை, அவர் உன்னைத் தம்முடைய
முடிவற்ற நன்மையினாலும், கிருபையினாலும்
பராமரிக்க வேண்டுமென்று, அவருடைய பரிசுத்த
குழந்தையாகிய இயேசுவின் நாமத்தில் தொடர்ந்து
ஜெபிக்கிறேன்.

4 இப்பொழுதும் என் குமாரனே, என்னை மிகவும்
சஞ்சலப்படுத்துகிறதைக் குறித்து நான் உனக்குச்
சொல்லுகிறேன்; ஏனெனில் உங்களுக்குள்ளே
வாக்குவாதங்கள் எழுமோ என்று என்னை சஞ்ச-
லப்படுத்துகிறது.

5 ஏனெனில், நான் அறிந்தது மெய்யானால், உங்க-
ளுடைய சிறுபிள்ளைகளின் ஞானஸ்நானத்தைக்
குறித்து உங்களுக்குள்ளே வாக்குவாதங்கள் இருந்-
தன.

6 இப்பொழுதும் என் குமாரனே, இந்தப் பெரும் தவ-
று உங்களுக்குள்ளிருந்து நீக்கப்படும்படியாக, நீ
கருத்தாய் ஊழியம் பண்ணவேண்டும். ஏனெனில்
இந்த நோக்கத்திற்காகவே நான் இந்த நிருபத்தை
எழுதினேன்.

7 ஏனெனில் நான் இந்தக் காரியத்தை உன்னிடத்தி-
லிருந்து அறிந்த உடனே, நான் இதைக் குறித்து
கர்த்தரிடத்தில் விசாரித்தேன். பரிசுத்த ஆவியான-
வரின் வல்லமையினாலே கர்த்தருடைய வார்த்தை
என்னிடத்தில் உண்டாகி:

# Moroni 8

An epistle of my father Mormon, written to me, Moroni; and it was written unto me soon after my calling to the ministry. And on this wise did he write unto me, saying:

My beloved son, Moroni, I rejoice exceedingly that your Lord Jesus Christ hath been mindful of you, and hath called you to his ministry, and to his holy work.

I am mindful of you always in my prayers, continually praying unto God the Father in the name of his Holy Child, Jesus, that he, through his infinite goodness and grace, will keep you through the endurance of faith on his name to the end.

And now, my son, I speak unto you concerning that which grieveth me exceedingly; for it grieveth me that there should disputations rise among you.

For, if I have learned the truth, there have been disputations among you concerning the baptism of your little children.

And now, my son, I desire that ye should labor diligently, that this gross error should be removed from among you; for, for this intent I have written this epistle.

For immediately after I had learned these things of you I inquired of the Lord concerning the matter. And the word of the Lord came to me by the power of the Holy Ghost, saying:

8 உங்களுடைய மீட்பரும், உங்களுடைய கர்த்த-
ரும், உங்களுடைய தேவனுமான கிறிஸ்துவினு-
டைய வார்த்தைகளுக்குச் செவிகொடுங்கள்.
இதோ, நான் உலகத்திற்கு நீதிமான்களை அல்ல,
பாவிகளை மனந்திரும்ப அழைக்கவே வந்தேன்;
பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்-
லாமல் சுகமுள்ளவர்களுக்கல்ல; ஆதலால் சிறு-
பிள்ளைகள் பாவம் செய்யக் கூடாதவர்களாத-
லால் அவர்கள் சுகமுள்ளவர்களாக இருக்கிறார்-
கள்; ஆகவே ஆதாமின் சாபம் அவர்கள்மேல் வல்-
லமை கொள்ளாதபடி, அது அவர்களிடமிருந்து
என்னுள் எடுத்துக் கொள்ளப்பட்டது; விருத்தசே-
தன நியாயப்பிரமாணமும் என்னில் ஒழிந்துபோ-
யிற்று.

Listen to the words of Christ, your Redeemer, your Lord and your God. Behold, I came into the world not to call the righteous but sinners to repentance; the whole need no physician, but they that are sick; wherefore, little children are whole, for they are not capable of committing sin; wherefore the curse of Adam is taken from them in me, that it hath no power over them; and the law of circumcision is done away in me.

9 பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாய் தேவனு-
டைய வார்த்தையை எனக்கு வெளிப்படுத்தினார்;
ஆதலால் என் பிரியமான குமாரனே, நீ சிறுபிள்-
ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டு-
மென்பது, தேவனுக்கு முன்பு முற்றிலும் கேலி செய்-
வதாயிருக்கிறது, என்று நான் அறிகிறேன்.

And after this manner did the Holy Ghost manifest the word of God unto me; wherefore, my beloved son, I know that it is solemn mockery before God, that ye should baptize little children.

10 இதோ, பொறுப்பேற்கக்கூடியவர்களுக்கும், பா-
வத்தைச் செய்யக்கூடுபவர்களுக்கும் பாவமன்-
னிப்பையும், ஞானஸ்நானத்தையும் போதிக்க-
வேண்டுமென்று நான் உனக்குச் சொல்லுகிறேன்;
ஆம், மனந்திரும்பி, ஞானஸ்நானம் பெற்று தங்க-
ளின் சிறுபிள்ளைகளைப் போலவே தாழ்மையா-
யிருக்கவேண்டுமென்று பெற்றோருக்குப் போதி;
அவர்கள் தங்களுடைய சிறுபிள்ளைகளுடனே
இரட்சிக்கப்படுவார்கள்.

Behold I say unto you that this thing shall ye teach—repentance and baptism unto those who are accountable and capable of committing sin; yea, teach parents that they must repent and be baptized, and humble themselves as their little children, and they shall all be saved with their little children.

11 அவர்களுடைய சிறுபிள்ளைகளுக்கு மனந்தி-
ரும்புதலோ, ஞானஸ்நானமோ அவசியமில்லை.
இதோ, ஞானஸ்நானம், பாவமன்னிப்புகேதுவாய்
கட்டளைகளை நிறைவேற்றும்படிக்கான, மனந்தி-
ரும்புதலுக்காகவேயாகும்.

And their little children need no repentance, neither baptism. Behold, baptism is unto repentance to the fulfilling the commandments unto the remission of sins.

12 சிறுபிள்ளைகள் உலக அஸ்திபாரம் முதற்-
கொண்டு கிறிஸ்துவில் ஜீவனுள்ளோராய் இருக்கி-
றார்கள்; இப்படி இல்லையெனில், தேவன் பட்சபா-
தமுள்ள தேவனாயும், மாறுகிற தேவனாயும் மனு-
ஷரை மதிக்கிறவராயுமிருக்கிறார்; ஏனெனில் எவ்-
வளவு சிறுபிள்ளைகள் ஞானஸ்நானம் இல்லா-
மல் மரித்துப் போயிருக்கிறார்கள்.

But little children are alive in Christ, even from the foundation of the world; if not so, God is a partial God, and also a changeable God, and a respecter to persons; for how many little children have died without baptism!

13 ஆதலால் ஞானஸ்நானம் இல்லாமல் சிறுபிள்-
ளைகள் இரட்சிக்கப்பட முடியாதென்றால், அவர்-
கள் முடிவில்லாத பாதாளத்திற்குச் சென்றிருக்க
வேண்டும்.

Wherefore, if little children could not be saved without baptism, these must have gone to an endless hell.

14 இதோ, நான் உனக்குச் சொல்லுகிறேன், சிறுபிள்-
ளைகளுக்கு ஞானஸ்நானம் தேவை என்று எண்-
ணுகிறவன், கசப்பான பிச்சிலும், அக்கிரமக் கட்டு-
களிலும் இருக்கிறான்; அவனுக்கு விசுவாசமோ,
நம்பிக்கையோ, தயாளத்துவமோ இல்லை; ஆகை-
யால் அவன் இதை எண்ணிக்கொண்டி ருக்கும்-
போதே கொல்லப்படுவானெனில், அவன் பாதா-
ளத்திற்குப் போகவேண்டும்.

Behold I say unto you, that he that supposeth that little children need baptism is in the gall of bitterness and in the bonds of iniquity; for he hath neither faith, hope, nor charity; wherefore, should he be cut off while in the thought, he must go down to hell.

15 தேவன் ஞானஸ்நானத்தின் நிமித்தம் ஒரு பிள்-
ளையை இரட்சிக்கிறார் என்றும், ஞானஸ்நானம்
இல்லாததால் மற்றொன்று அழிய வேண்டும் என்-
றும், எண்ணுவது பயங்கரமான துன்மார்க்கமாயி-
ருக்கிறது.

For awful is the wickedness to suppose that God saveth one child because of baptism, and the other must perish because he hath no baptism.

16 இவ்விதமாய் கர்த்தருடைய வழிகளை புரட்டிப்
போடுகிறவர்களுக்கு ஐயோ, ஏனெனில் அவர்கள்
மனந்திரும்பாவிட்டால் அழிந்து போவார்கள்.
இதோ, தேவனிடத்திலிருந்து அதிகாரத்தைப் பெற்-
றவனாய் தைரியத்துடனே பேசுகிறேன்; மனுஷன்
செய்யக்கூடியவற்றைக் குறித்து நான் அஞ்சுவ-
தில்லை; ஏனெனில் பூரண அன்பு பயத்தைப் புறம்-
பே தள்ளும்.

Wo be unto them that shall pervert the ways of the Lord after this manner, for they shall perish except they repent. Behold, I speak with boldness, having authority from God; and I fear not what man can do; for perfect love casteth out all fear.

17 என்றுமுள்ள நித்திய அன்பாகிய தயாளத்துவத்-
தினால் நான் நிரப்பப்பட்டிருக்கிறேன்; ஆதலால்
எல்லா பிள்ளைகளும் எனக்குச் சமமாயிருக்கி-
றார்கள்; ஆகவே நான் பூரண அன்போடே சிறுபிள்-
ளைகளை நேசிக்கிறேன்; அவர்கள் யாவரும் ஒன்-
றுபோல இரட்சிப்பைப் புசிக்கிறவர்களாக இருக்கி-
றார்கள்.

And I am filled with charity, which is everlasting love; wherefore, all children are alike unto me; wherefore, I love little children with a perfect love; and they are all alike and partakers of salvation.

18 ஏனெனில் தேவன் ஒரு பட்சபாதமுள்ள தே-
வனும் அல்ல, மாறுகிறவரும் அல்ல; அவர் நித்திய
நித்தியமாய் என்றென்றைக்கும் மாறாதவராயிருக்-
கிறார் என்று, நான் அறிவேன்.

For I know that God is not a partial God, neither a changeable being; but he is unchangeable from all eternity to all eternity.

19 சிறுபிள்ளைகள் மனந்திரும்ப முடியாது; ஆகவே
அவர்களுக்கு தேவனுடைய தூய இரக்கங்களை
மறுப்பது பயங்கரமான துன்மார்க்கமாயிருக்கிற-
து. ஏனெனில் அவருடைய இரக்கத்தினிமித்தம்
அவர்கள் யாவரும் அவரில் ஜீவனுள்ளோராய்
இருக்கிறார்கள்.

Little children cannot repent; wherefore, it is awful wickedness to deny the pure mercies of God unto them, for they are all alive in him because of his mercy.

20 சிறுபிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் வேண்டு-
மென்று சொல்லுகிறவன் கிறிஸ்துவினுடைய
இரக்கங்களை மறுத்து, அவருடைய பாவநிவர்த்தி-
யையும், அவருடைய மீட்பின் வல்லமையையும்
ஒன்றுமில்லாததாக்குகிறான்.

And he that saith that little children need baptism denieth the mercies of Christ, and setteth at naught the atonement of him and the power of his redemption.

21 அப்படிப்பட்டவர்களுக்கு ஐயோ. ஏனெனில்
அவர்கள் மரண பயங்கரம், மற்றும் முடிவற்ற பா-
தாள வேதனையிலிருக்கிறார்கள். நான் அதைத்
தைரியமாய்ப் பேசுகிறேன்; தேவன் எனக்குக் கட்ட-
ளையிட்டார். அவைகளைக் கவனித்துச் செவி-
கொடுங்கள், அல்லது அவைகள் கிறிஸ்துவின் நி-
யாயாசனத்திற்கு முன்பு உங்களுக்கு விரோதமாக
நிற்கும்.

Wo unto such, for they are in danger of death, hell, and an endless torment. I speak it boldly; God hath commanded me. Listen unto them and give heed, or they stand against you at the judgment-seat of Christ.

22 ஏனெனில் இதோ சிறுபிள்ளைகள் யாவரும், நி-
யாயப்பிரமாணமில்லாத யாவரும் கிறிஸ்துவில் ஜீ-
விக்கிறார்கள்; ஏனெனில் நியாயப்பிரமாணமில்-
லாத யாவர் மேலும் மீட்பின் வல்லமை வருகிறது;
ஆகையால் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாத-
வன் அல்லது ஆக்கினைக்குள்ளாக இராதவன்
மனந்திரும்ப முடியாது; அப்படிப்பட்டவர்களுக்கு
ஞானஸ்நானம் எதையும் கொண்டுவருவதில்லை.

For behold that all little children are alive in Christ, and also all they that are without the law. For the power of redemption cometh on all them that have no law; wherefore, he that is not condemned, or he that is under no condemnation, cannot repent; and unto such baptism availeth nothing—

23 கிறிஸ்துவின் இரக்கங்களையும், அவருடைய
பரிசுத்த ஆவியின் வல்லமையையும் மறுத்து,
செத்த கிரியைகளிலே நம்பிக்கை வைப்பது தே-
வனுக்கு முன்பாக கேலியாயிருக்கும்.

But it is mockery before God, denying the mercies of Christ, and the power of his Holy Spirit, and putting trust in dead works.

24 இதோ, என் குமாரனே, இது இப்படியிருக்கக்கூடா-
து; ஏனெனில் மனந்திரும்புதல் ஆக்கினைக்குக்
கீழ் இருப்பவர்களுக்கும், மீறப்பட்ட நியாயப்பிரமா-
ணத்தின் சாபத்தின் கீழ் இருப்பவர்களுக்குமே.

Behold, my son, this thing ought not to be; for repentance is unto them that are under condemnation and under the curse of a broken law.

25 மனந்திரும்புதலின் முதற்கனிகள் ஞானஸ்நா-
னம்; கட்டளைகளை நிறைவேற்றுவதால், விசுவா-
சத்தினாலே ஞானஸ்நானம் வருகிறது. கட்டளைக-
ளை நிறைவேற்றுதல் பாவமன்னிப்பைக் கொண்-
டுவருகிறது.

And the first fruits of repentance is baptism; and baptism cometh by faith unto the fulfilling the commandments; and the fulfilling the commandments bringeth remission of sins;

26 பாவமன்னிப்பு, சாந்த குணத்தையும், இருதயத்-
தின் தாழ்மையையும் கொண்டுவருகிறது; சாந்த கு-
ணம், இருதயத்தின் தாழ்மை ஆகியவைகளினி-
மித்தம் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் வரு-
கிறது. அந்த தேற்றரவாளனோ நம்பிக்கையாலும்
பூரண அன்பினாலும் நிரப்புகிறார். அந்த அன்போ
தேவனோடு சகல பரிசுத்தவான்களும் வாசம் செய்-
யும் முடிவு வரும்வரைக்கும் ஜெபத்திற்கேதுவாய்
கருத்தாய் நிலைத்திருக்கும்.

And the remission of sins bringeth meekness, and lowliness of heart; and because of meekness and lowliness of heart cometh the visitation of the Holy Ghost, which Comforter filleth with hope and perfect love, which love endureth by diligence unto prayer, until the end shall come, when all the saints shall dwell with God.

27 இதோ, என் குமாரனே, நான் சீக்கிரமாய் லாமானி-
யருக்கு விரோதமாக போகவில்லையெனில் நான்
மறுபடியும் உனக்கு எழுதுவேன். இதோ, அவர்கள்
மனந்திரும்பவில்லையெனில் இந்த தேசம் அல்ல-
து நேபிய ஜனங்களின் பெருமை அவர்களுக்கு
அழிவைக் கொண்டுவரும்.

Behold, my son, I will write unto you again if I go not out soon against the Lamanites. Behold, the pride of this nation, or the people of the Nephites, hath proven their destruction except they should repent.

28 என் குமாரனே அவர்களுக்கு மனந்திரும்புதல்
வரும்படிக்கு அவர்களுக்காக ஜெபி. ஆனால்
இதோ, ஆவி அவர்களோடு போராடுவதிலிருந்து
ஓய்ந்துவிட்டதோ என்று அஞ்சுகிறேன்; தேசத்தின்
இப்பகுதியிலே அவர்கள் தேவனிடத்திலிருந்து
வருகிற சகல வல்லமையையும் அதிகாரத்தையும்
தோற்கடிக்க வகை தேடுகிறார்கள்; அவர்கள் பரி-
சுத்த ஆவியானவரை மறுக்கிறார்கள்.

Pray for them, my son, that repentance may come unto them. But behold, I fear lest the Spirit hath ceased striving with them; and in this part of the land they are also seeking to put down all power and authority which cometh from God; and they are denying the Holy Ghost.

29 என் குமாரனே, அவர்கள் அப்பெரும் ஞானத்-
தைப் புறக்கணித்த பின்பு, தீர்க்கதரிசிகளால் பே-
சப்பட்ட தீர்க்கதரிசனங்களும், நம்முடைய இரட்ச-
கர் தாமே பேசிய வார்த்தைகளும் நிறைவேறத்தக்க-
தாக, அவர்கள் சீக்கிரமாய் அழிய வேண்டும்.

And after rejecting so great a knowledge, my son, they must perish soon, unto the fulfilling of the prophecies which were spoken by the prophets, as well as the words of our Savior himself.

30 என் குமாரனே, நான் உனக்கு மறுபடியும் எழுதும்-
வரை அல்லது சந்திக்கும்வரை உன்னிடத்தில்
இருந்து விடை பெற்றுக்கொள்கிறேன். ஆமென்.

Farewell, my son, until I shall write unto you, or shall meet you again. Amen.

*தன் குமாரனாகிய மரோனிக்கு மார்மனின் இரண்டா-
வது நிருபம்.*

# மரோனி 9

1 என் பிரியமான குமாரனே, நான் இன்னும் உயிரோ-
டு இருக்கிறேன் என்று நீ அறியவேண்டுமென நான்
எழுதுகிறேன். சஞ்சலமானதை உனக்கு எழுதுகி-
றேன்.
2 ஏனெனில் இதோ லாமானியரோடு நான் கொடிய
யுத்தத்தில் ஈடுபட்டேன். அதிலே நாங்கள் கைப்பற்-
றவில்லை; அர்க்கியாந்தூஸ் பட்டயத்தால் வீழ்ந்து
போனான். லூராமும் எம்ரோனும் கூட அப்படியே.
ஆம், நாம் நம்முடைய சிறந்த மனுஷரில் அநேகரை
இழந்து விட்டோம்.
3 இப்பொழுதும் இதோ, என் குமாரனே, லாமானியர்
இந்த ஜனத்தை அழித்துவிடுவார்களோ என்று
நான் அஞ்சுகிறேன்; ஏனெனில் அவர்கள் மனந்தி-
ரும்புவதில்லை. ஒருவரோடொருவர் கோபம்-
கொள்ளும்படியாக சாத்தான் அவர்களைத் தொ-
டர்ந்து தூண்டுகிறான்.
4 இதோ, நான் அவர்களோடு தொடர்ந்து பிரயாசப்-
படுகிறேன்; நான் அவர்களிடத்தில் தேவ வார்த்-
தையை கண்டிப்புடன் பேசும்போது, அவர்கள்
எனக்கு விரோதமாக நடுங்கிப்போய் கோபம்
கொள்ளுகிறார்கள்; நான் கண்டிப்பாய் இராதபோ-
தோ அவர்கள் அதற்கு விரோதமாய் தங்கள் இருத-
யத்தைக் கடினப்படுத்துகிறார்கள்; ஆதலால் கர்த்-
தருடைய ஆவி அவர்களோடு கிரியை செய்வதிலி-
ருந்து நின்றுவிட்டதோ, என்று அஞ்சுகிறேன்.
5 அவர்கள் மிகவும் கோபப்படுவதினால், அவர்க-
ளுக்கு மரணபயம் இல்லையோ என்று எனக்குத்
தோன்றுகிறது; ஒருவரோடொருவர் அன்பை
அவர்கள் இழந்துவிட்டார்கள்; அவர்கள் தொடர்ந்-
து இரத்த தாகம் கொண்டு, தொடர்ந்து பழிதீர்க்கி-
றார்கள்.
6 இப்பொழுதும் எனக்குப் பிரியமான குமாரனே,
அவர்களுடைய கடினத்தன்மையைப் பொருட்ப-
டுத்தாமல், நாம் கருத்தாய் பிரயாசப்படுவோமாக;
நாம் பிரயாசப்படுவதிலிருந்து ஓய்ந்துவிட்டால்
நாம் ஆக்கினைக்குள்ளாகக் கொண்டுவரப்படு-
வோம்; ஏனெனில் நாம் எல்லா நீதிக்கும் சத்துருவா-
னவனை மேற்கொள்ளவும், நம்முடைய ஆத்து-
மாக்கள் தேவ ராஜ்யத்தில் இளைப்பாறத்தக்கதாக-
வும், நாம் இந்தக் களிமண்ணாலான வாசஸ்தலத்-
திலிருக்கும்போது நாம் செய்யவேண்டிய வேலை
ஒன்று உண்டு.

*The second epistle of Mormon to his son Moroni.*

# Moroni 9

My beloved son, I write unto you again that ye may know that I am yet alive; but I write somewhat of that which is grievous.

For behold, I have had a sore battle with the Lamanites, in which we did not conquer; and Archeantus has fallen by the sword, and also Luram and Emron; yea, and we have lost a great number of our choice men.

And now behold, my son, I fear lest the Lamanites shall destroy this people; for they do not repent, and Satan stirreth them up continually to anger one with another.

Behold, I am laboring with them continually; and when I speak the word of God with sharpness they tremble and anger against me; and when I use no sharpness they harden their hearts against it; wherefore, I fear lest the Spirit of the Lord hath ceased striving with them.

For so exceedingly do they anger that it seemeth me that they have no fear of death; and they have lost their love, one towards another; and they thirst after blood and revenge continually.

And now, my beloved son, notwithstanding their hardness, let us labor diligently; for if we should cease to labor, we should be brought under condemnation; for we have a labor to perform whilst in this tabernacle of clay, that we may conquer the enemy of all righteousness, and rest our souls in the kingdom of God.

7 இப்பொழுதும் இந்த ஜனத்தினுடைய பாடுக-
ளைக் குறித்து நான் சிலவற்றை எழுதுகிறேன்.
நான் அமோரோனிடத்திலிருந்து பெற்ற விவரத்-
தின்படி, இதோ சேரீஸ்யா கோபுரத்திலிருந்து பிடித்-
துச் சென்ற அநேக கைதிகள்லாமானியரிடத்திலி-
ருக்கிறார்கள். அங்கே புருஷரும் ஸ்திரீகளும், சிறு-
பிள்ளைகளுமிருந்தார்கள்.

And now I write somewhat concerning the sufferings of this people. For according to the knowledge which I have received from Amoron, behold, the Lamanites have many prisoners, which they took from the tower of Sherrizah; and there were men, women, and children.

8 அந்த ஸ்திரீகளின் புருஷர்களையும், பிள்ளைக-
ளின் தகப்பன்களையும் கொன்று போட்டார்கள்.
அவர்கள் ஸ்திரீகளைத் தங்களுடைய புருஷர்க-
ளின் மாம்சத்தைக் கொண்டும், பிள்ளைகளைத்
தங்கள் தகப்பன்களின் மாம்சத்தைக் கொண்டும்
போஷிக்கிறார்கள். தண்ணீரையோ கொஞ்சமாய்
அவர்களுக்குக் கொடுக்கிறார்கள்.

And the husbands and fathers of those women and children they have slain; and they feed the women upon the flesh of their husbands, and the children upon the flesh of their fathers; and no water, save a little, do they give unto them.

9 லாமானியரின் இந்த அருவருப்பு பெரிதாயிருந்-
தாலும், மோரியான்தமில் உள்ள நம்முடைய ஜனத்-
தினுடைய அருவருப்பிலும் பெரிதல்ல. ஏனெனில்
இதோ, அவர்கள் லாமானிய குமாரத்திகளை சிறை
பிடித்துப்போனார்கள். சகலத்திலும் மேன்மையா-
னதும், விலையேறப் பெற்றதுமான கற்பையும் நற்-
குணத்தையும் அவர்களிடமிருந்து பறித்தார்கள்,

And notwithstanding this great abomination of the Lamanites, it doth not exceed that of our people in Moriantum. For behold, many of the daughters of the Lamanites have they taken prisoners; and after depriving them of that which was most dear and precious above all things, which is chastity and virtue—

10 அவர்கள் இதைச் செய்த பின்பு, அவர்களுடைய
சரீரங்களை மரணமட்டுமாய் சித்திரவதை செய்து,
மிகவும் கொடிய முறையில் அவர்களைக் கொலை
பண்ணினார்கள்; இதை அவர்கள் செய்த பின்பு,
தங்களுடைய இருதயங்களின் கடினத்தினிமித்தம்
அவர்களுடைய சரீரங்களை வனமிருகங்களைப்-
போல் பட்சிக்கிறார்கள்; அவர்கள் அதை தைரியத்-
திற்கு அடையாளமாகச் செய்கிறார்கள்.

And after they had done this thing, they did murder them in a most cruel manner, torturing their bodies even unto death; and after they have done this, they devour their flesh like unto wild beasts, because of the hardness of their hearts; and they do it for a token of bravery.

11 என் பிரியமான குமாரனே, நாகரீகமற்ற இப்படி
ஒரு ஜனம் இருக்கமுடியுமோ.

O my beloved son, how can a people like this, that are without civilization—

12 சில வருஷங்களே கடந்து போயின. அவர்கள்
ஒழுக்கமுள்ளவர்களாயும், பிரியப்படத்தக்கவர்க-
ளாயுமிருந்தார்கள்.

(And only a few years have passed away, and they were a civil and a delightsome people)

13 என் குமாரனே, இவ்வளவு அருவருப்பிலே பிரி-
யப்படுகிற இப்படியொரு ஜனம் இருக்கக்கூடுமோ,

But O my son, how can a people like this, whose delight is in so much abomination—

14 தேவன் தம்முடைய புயத்தை நியாயவிசாரிப்பி-
லே நமக்கு விரோதமாய் நீட்டாதிருப்பார் என்று
நாம் எப்படி எதிர்பார்க்க முடியும்?

How can we expect that God will stay his hand in judgment against us?

15 இதோ, என் இருதயம் அழுகிறது; இந்த ஜனத்திற்கு
ஐயோ. தேவனே நியாயவிசாரிப்புக்கென வாரும்.
உமது முகத்திற்கு முன்னிருந்து அவர்களுடைய
பாவங்களையும், துன்மார்க்கங்களையும், அருவ-
ருப்புகளையும் மறைத்தருளும்!

Behold, my heart cries: Wo unto this people. Come out in judgment, O God, and hide their sins, and wickedness, and abominations from before thy face!

16 மறுபடியும் என் குமாரனே, சேரீஸ்யாவில் அநேக விதவைகளும், அவர்களுடைய குமாரத்திகளும் மீந்திருக்கிறார்கள். லாமானியர் தூக்கிச் செல்லாத, உணவுப் பொருட்களை, இதோ, சீநேப்பின் சேனை தூக்கிச் சென்று, அவர்கள் உணவுக்காக எங்கும் அலையும்படி விட்டுவிட்டார்கள். அநேக முதிர்வயதான ஸ்திரீகள் வழியிலேயே மயக்கம் அடைந்து மரித்துப் போகிறார்கள்.

And again, my son, there are many widows and their daughters who remain in Sherrizah; and that part of the provisions which the Lamanites did not carry away, behold, the army of Zenephi has carried away, and left them to wander whithersoever they can for food; and many old women do faint by the way and die.

17 என்னோடு கூட இருக்கிற சேனை பெலவீனமானது; லாமானியரின் சேனைகள் சேரீஸ்யாவிற்கும் எனக்கும் நடுவிலே இருக்கிறார்கள்; ஆரோனுடைய சேனைக்கு தப்பியோடினவர்கள் அவர்களுடைய பயங்கரமான முரட்டுத்தனத்தினிமித்தம் பாதிப்புக்குள்ளானார்கள்.

And the army which is with me is weak; and the armies of the Lamanites are betwixt Sherrizah and me; and as many as have fled to the army of Aaron have fallen victims to their awful brutality.

18 என் ஜனம் எவ்வளவு தரக்குறைவானவர்கள். அவர்கள் ஒழுங்கும், இரக்கமும் இல்லாதிருக்கிறார்கள். இதோ, நான் வெறும் மனுஷனே, மனுஷனுக்கு உரிய பெலத்தையே பெற்றிருக்கிறேன். இனிமேலும் என் கட்டளைகளை நிறைவேற்ற முடியாது.

O the depravity of my people! They are without order and without mercy. Behold, I am but a man, and I have but the strength of a man, and I cannot any longer enforce my commands.

19 அவர்கள் தங்கள் புரட்டிலே பெலனுள்ளவர்களானார்கள்; அவர்கள் அவ்வண்ணமே முரட்டுத்தன்மை உடையவர்களாயிருந்து முதியோரையும், வாலிபரையும் விட்டுவைக்கவில்லை; நன்மையைத் தவிர மற்ற அனைத்திலும் அவர்கள் பிரியப்படுகிறார்கள்; தேசத்தின் மேலுள்ள நம்முடைய ஸ்திரீகள் நம்முடைய பிள்ளைகள் ஆகியோரின் பாடுகள் அனைத்தையும் மிஞ்சுகிறதாயிருக்கிறது; ஆம் நாவு சொல்லவும் முடியாது. அது எழுதப்படவும் கூடாது.

And they have become strong in their perversion; and they are alike brutal, sparing none, neither old nor young; and they delight in everything save that which is good; and the suffering of our women and our children upon all the face of this land doth exceed everything; yea, tongue cannot tell, neither can it be written.

20 இப்பொழுதும் என் குமாரனே, இந்தப் பயங்கரமான காட்சியிலே இனிமேலும் நான் வாசம் செய்யப்போவதில்லை. இதோ, நீ இந்த ஜனத்தின் துன்மார்க்கத்தை அறிந்திருக்கிறாய்; அவர்கள் கொள்கை இல்லாமலும் உணர்வு இல்லாமலும் இருக்கிறார்கள் என்று நீ அறிந்திருக்கிறாய்; அவர்களுடைய துன்மார்க்கம் லாமானியரையும் மிஞ்சுவதாய் இருக்கிறது.

And now, my son, I dwell no longer upon this horrible scene. Behold, thou knowest the wickedness of this people; thou knowest that they are without principle, and past feeling; and their wickedness doth exceed that of the Lamanites.

21 இதோ, என் குமாரனே, அவர் என்னை அடிக்காதபடிக்கு தேவனிடத்தில் நான் அவர்களைக் குறித்துப் பரிந்துரைக்க முடியாது.

Behold, my son, I cannot recommend them unto God lest he should smite me.

22 இதோ, என் குமாரனே, நான் உன்னை தேவனிடத்தில் பரிந்துரைத்து, நீ இரட்சிக்கப்படுவாய் என்று கிறிஸ்துவிலே நம்பிக்கையாய் இருக்கிறேன்; தேவனுடைய ஜனம் அவரிடத்திற்குத் திரும்புவதையோ அல்லது அவர்களின் முழு அழிவினையோ காண, அவர் உன் ஜீவனைத் தப்புவிக்கும்படி அவரிடத்தில் ஜெபிக்கிறேன்; ஏனெனில் அவர்கள் மனந்திரும்பி, அவரிடத்தில் திரும்பினாலொழிய அவர்கள் அழிந்துபோவார்கள் என்று நான் அறிவேன்.

But behold, my son, I recommend thee unto God, and I trust in Christ that thou wilt be saved; and I pray unto God that he will spare thy life, to witness the return of his people unto him, or their utter destruction; for I know that they must perish except they repent and return unto him.

23 தங்களுடைய இருதயங்களின் வாஞ்சையினி-
மித்தம், இரத்தத்தையும், பழிவாங்குதலையும் தேடி,
அவர்கள் அழிந்து போனால் அது யாரேதியர்க-
ளின் அழிவிற்கு ஒப்பாயிருக்கும்.

And if they perish it will be like unto the Jaredites, because of the wilfulness of their hearts, seeking for blood and revenge.

24 அவர்கள் அழிந்து போனால், நம்முடைய சகோத-
ரரில் அநேகர் பிரிந்து லாமானியரைச் சேர்ந்து
கொண்டார்கள் என்று நாம் அறிவோம். இன்னும்
அநேகர் பிரிந்து அவர்களைச் சேர்ந்து கொள்வார்-
கள்; ஆதலால் நீ தப்புவிக்கப்பட்டால், சிலவற்-
றைக் குறித்து எழுது. நான் மரிப்பேன், உன்னைக்
காணமாட்டேன். ஆனால் நான் உன்னிடத்தில் ஒப்-
படைக்க வேண்டிய பரிசுத்த பதிவேடுகளை நான்
வைத்திருப்பதால், நான் உன்னை சீக்கிரத்தில்
காண்பேன், என்று நம்புகிறேன்.

And if it so be that they perish, we know that many of our brethren have deserted over unto the Lamanites, and many more will also desert over unto them; wherefore, write somewhat a few things, if thou art spared and I shall perish and not see thee; but I trust that I may see thee soon; for I have sacred records that I would deliver up unto thee.

25 என் குமாரனே, கிறிஸ்துவிலே விசுவாசமாயிரு,
உன்னை மரணத்திற்குள்ளாக அமிழ்ந்து போகும்-
படியாக, நான் எழுதியவைகள் உன்னை சஞ்சலப்-
படுத்தாமல் இருப்பதாக. கிறிஸ்து உன்னை உயர்த்-
துவாராக. அவருடைய பாடுகளும் மரணமும், நம-
து பிதாக்களுக்குத் தம்முடைய சரீரத்தைக் காண்-
பித்ததுவும், அவருடைய இரக்கமும் நீடிய சாந்த-
மும், அவருடைய மகிமை, நித்திய ஜீவன் ஆகிய-
வைகளின் நம்பிக்கையும் உன் மனதில் என்றென்-
றும் தங்குவதாக.

My son, be faithful in Christ; and may not the things which I have written grieve thee, to weigh thee down unto death; but may Christ lift thee up, and may his sufferings and death, and the showing his body unto our fathers, and his mercy and long-suffering, and the hope of his glory and of eternal life, rest in your mind forever.

26 பரலோகத்தின் உன்னதத்தில் அவரது சிங்கா-
சனம் இருக்கிற, பிதாவாகிய தேவன், மற்றும் அவர-
து வல்லமையின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும்
நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆகியோ-
ரின் கிருபை, சகலமும் அவருக்குக் கீழ்ப்படும்வ-
ரைக்குமாய் உன்னோடு என்றென்றுமாய்த் தரித்தி-
ருப்பதாக. ஆமென்.

And may the grace of God the Father, whose throne is high in the heavens, and our Lord Jesus Christ, who sitteth on the right hand of his power, until all things shall become subject unto him, be, and abide with you forever. Amen.

## மரோனி 10

1 இப்பொழுதும், மரோனியாகிய நான் எனக்கு நன்-
மையாய்ப் படுகிற சிலவற்றை எழுதுகிறேன்; நான்
லாமானியராகிய என் சகோதரருக்கு எழுதுகிறேன்.
கிறிஸ்து வருகையின் அறிகுறி கொடுக்கப்பட்ட
பின்பு, நானூற்றி இருபதுக்கும் அதிகமான வரு-
ஷங்கள் கடந்து போயிற்று என்று, அவர்கள் அறிய-
வேண்டுமென விரும்புகிறேன்.
2 நான் உங்களுக்குப் புத்தி சொல்லும்படியாகப் பே-
சிய சில வார்த்தைகளுக்குப் பின்பு, இந்தப் பதிவே-
டுகளை முத்திரையிடுகிறேன்.
3 இதோ, நீங்கள் இவைகளை வாசித்து, அதினிமித்-
தம் கர்த்தர் மனுபுத்திரருக்கு ஆதாமின் சிருஷ்டிப்பு
தொடங்கி, நீங்கள் இவைகளைப் பெறும் சமயம்
வரைக்குமாய், கர்த்தர் எவ்வளவு இரக்கமுள்ளவ-
ராயிருந்திருக்கிறார் என்று மனுபுத்திரர் வாசிக்க
வேண்டுமென்பது தேவ சித்தமாயிருந்தால், அதை
நீங்கள் வாசித்து உங்கள் இருதயங்களில் தியா-
னிக்கவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்-
லுகிறேன்.
4 இக்காரியங்களை நீங்கள் பெறும்போது, நீங்கள்
கிறிஸ்துவின் நாமத்தில் நித்திய பிதாவாகிய தே-
வனிடத்தில், இக்காரியங்கள் சத்தியமற்றவையா
என்று கேட்கவேண்டுமென்று உங்களுக்கு புத்தி
சொல்லுகிறேன்; நீங்கள் அக்கறையுள்ள இருதயத்-
தோடும், உண்மையான நோக்கத்தோடும், கிறிஸ்து-
வில் விசுவாசம் வைத்துக் கேட்பீர்களானால், அவர்
அதன் சத்தியத்தை உங்களுக்குப் பரிசுத்த ஆவியா-
னவரின் வல்லமையிலே வெளிப்படுத்துவார்.
5 பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே,
நீங்கள் சகலத்தையும்பற்றிய சத்தியத்தை அறிந்து-
கொள்வீர்கள்.
6 நன்மையான எக்காரியமும், நியாயமாயும், சத்தி-
யமாயும் இருக்கிறது; ஆதலால் நன்மையாயிருக்-
கிற எதுவும் கிறிஸ்துவை மறுதலிக்காது, ஆனால்
அவர் இருக்கிறார் என்றே ஊர்ஜிதப்படுத்தும்.
7 பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே,
அவர் ஜீவிக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து-
கொள்ளலாம்; ஆதலால் நீங்கள் தேவ வல்லமை-
யை மறுதலிக்க வேண்டாமென்று உங்களுக்கு புத்-
தி சொல்லுகிறேன்; அவர் இன்றும் நாளைக்கும்
என்றென்றும் மாறாதவராயிருந்து, மனுபுத்திரரின்
விசுவாசத்திற்குத் தக்கதாக வல்லமையால் கிரியை
செய்கிறார்.

## Moroni 10

Now I, Moroni, write somewhat as seemeth me good; and I write unto my brethren, the Lamanites; and I would that they should know that more than four hundred and twenty years have passed away since the sign was given of the coming of Christ.

And I seal up these records, after I have spoken a few words by way of exhortation unto you.

Behold, I would exhort you that when ye shall read these things, if it be wisdom in God that ye should read them, that ye would remember how merciful the Lord hath been unto the children of men, from the creation of Adam even down until the time that ye shall receive these things, and ponder it in your hearts.

And when ye shall receive these things, I would exhort you that ye would ask God, the Eternal Father, in the name of Christ, if these things are not true; and if ye shall ask with a sincere heart, with real intent, having faith in Christ, he will manifest the truth of it unto you, by the power of the Holy Ghost.

And by the power of the Holy Ghost ye may know the truth of all things.

And whatsoever thing is good is just and true; wherefore, nothing that is good denieth the Christ, but acknowledgeth that he is.

And ye may know that he is, by the power of the Holy Ghost; wherefore I would exhort you that ye deny not the power of God; for he worketh by power, according to the faith of the children of men, the same today and tomorrow, and forever.

8 என் சகோதரரே, நீங்கள் தேவ வரங்களை மறுதலிக்க வேண்டாமென்று உங்களுக்கு மறுபடியும் புத்தி சொல்லுகிறேன்; ஏனெனில் அவைகள் அநேகமுண்டு; அவைகள் ஒரே தேவனிடத்திலிருந்து வருகின்றன. இந்த வரங்கள் பலவகைகளில் அருளப்படுகின்றன; ஆனால் அதே தேவன் இவையனைத்தின் மூலமாகவும் கிரியை செய்கிறார். அவைகளால் பிரயோஜனப்படத்தக்கதாக தேவ ஆவியின் வெளியரங்கப்படுத்துதலினாலே அவைகள் மனுஷர்களுக்குக் கொடுக்கப்படும்.

And again, I exhort you, my brethren, that ye deny not the gifts of God, for they are many; and they come from the same God. And there are different ways that these gifts are administered; but it is the same God who worketh all in all; and they are given by the manifestations of the Spirit of God unto men, to profit them.

9 ஏனெனில் ஒருவனுக்கு தேவ ஆவியால் இதோ, ஞானவார்த்தையைப் போதிக்கும்படியாகவும் அருளப்படுகிறது.

For behold, to one is given by the Spirit of God, that he may teach the word of wisdom;

10 வேறொருவனுக்கு அதே ஆவியானவரால், அறிவுப்பூர்வமான வார்த்தையைப் போதிக்கும்படியாகவும்.

And to another, that he may teach the word of knowledge by the same Spirit;

11 வேறொருவனுக்கு மிகப்பெரும் விசுவாசமும் அருளப்படுகிறது; மற்றொருவனுக்கு அதே ஆவியானவரால் சுகப்படுத்தும் வரங்களும்;

And to another, exceedingly great faith; and to another, the gifts of healing by the same Spirit;

12 மறுபடியும் வேறொருவனுக்கு பலத்த அற்புதங்களைச் செய்யத்தக்கதாகவும்;

And again, to another, that he may work mighty miracles;

13 மறுபடியும், வேறொருவனுக்கு சகலத்தையும் குறித்து தீர்க்கதரிசனமுரைக்கும்படியாகவும்;

And again, to another, that he may prophesy concerning all things;

14 மறுபடியும், வேறொருவனுக்கு, தூதர்களையும், பணிவிடை செய்யும் ஆவிகளையும் காணும்படியும்;

And again, to another, the beholding of angels and ministering spirits;

15 மறுபடியும், வேறொருவனுக்கு, எல்லா வகையான பாஷைகளும்;

And again, to another, all kinds of tongues;

16 மறுபடியும், வேறொருவனுக்கு, மொழிகளையும், எல்லா விதமான பாஷைகளையும் மொழிபெயர்க்கவும் அருளப்படுகின்றன.

And again, to another, the interpretation of languages and of divers kinds of tongues.

17 இந்த வரங்கள் யாவும் கிறிஸ்துவின் ஆவியால் வருகின்றன; அவருடைய சித்தத்தின்படியே அவை வெவ்வேறுவிதமாய் ஒவ்வொரு மனுஷனுக்கும் வருகிறது.

And all these gifts come by the Spirit of Christ; and they come unto every man severally, according as he will.

18 எனக்குப் பிரியமான சகோதரரே, ஒவ்வொரு நல்ல வரமும் கிறிஸ்துவினிடத்திலிருந்து வருகிறதென்று நீங்கள் நினைவுகூரவேண்டுமென்று புத்தி சொல்கிறேன்.

And I would exhort you, my beloved brethren, that ye remember that every good gift cometh of Christ.

19 என் பிரியமான சகோதரரே, அவர் நேற்றும் இன்றும் என்றென்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதையும், நான் பேசின ஆவிக்குரிய வரங்களாகிய இவைகள் யாவும் மனுபுத்திரரின் அவிசுவாசத்தினால் மாத்திரமே ஒழிய, வேறொன்றாலும் உலகம் இருக்கும் காலம் வரைக்குமாய் எடுத்துப்போடப்படாது, என நான் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்.

And I would exhort you, my beloved brethren, that ye remember that he is the same yesterday, today, and forever, and that all these gifts of which I have spoken, which are spiritual, never will be done away, even as long as the world shall stand, only according to the unbelief of the children of men.

20 ஆதலால், அங்கே விசுவாசம் இருக்கவேண்டும்;
ஆகவே விசுவாசமிருக்க வேண்டுமெனில் அங்கே
நம்பிக்கையும் இருக்கவேண்டும்; அங்கே நம்பிக்-
கை இருக்கவேண்டுமெனில் அங்கே தயாளத்துவ-
மும் இருக்கவேண்டும்.

Wherefore, there must be faith; and if there must be faith there must also be hope; and if there must be hope there must also be charity.

21 நீங்கள் தயாளத்துவத்தைப் பெற்றிராவிட்டால்,
நீங்கள் ஒருக்காலும் தேவ ராஜ்யத்தினுள் இரட்சிக்-
கப்பட முடியாது; உங்களுக்கு விசுவாசம் இல்லா-
விட்டால், நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தில் இரட்-
சிக்கப்பட முடியாது. நீங்கள் நம்பிக்கையைப் பெற்-
றிராவிட்டாலும் இரட்சிக்கப்பட முடியாது.

And except ye have charity ye can in nowise be saved in the kingdom of God; neither can ye be saved in the kingdom of God if ye have not faith; neither can ye if ye have no hope.

22 நீங்கள் நம்பிக்கையைப் பெற்றிராவிட்டால், நீங்-
கள் விரக்தியிலே தரித்திருக்க வேண்டும்; விரக்தி
அக்கிரமத்தினிமித்தம் வருகிறது.

And if ye have no hope ye must needs be in despair; and despair cometh because of iniquity.

23 கிறிஸ்து உண்மையாகவே நம்முடைய பிதாக்க-
ளிடத்தில்: நீங்கள் விசுவாசத்தைப் பெற்றிருந்-
தால், என்னால் முடியும் எல்லாக் காரியங்களையும்
நீங்களும் செய்யக்கூடும், என்றார்.

And Christ truly said unto our fathers: If ye have faith ye can do all things which are expedient unto me.

24 இப்பொழுதும் நான் பூமியின் கடையாந்திரங்கள்
எல்லாவற்றிற்கும் பேசுகிறேன், உங்களுக்குள்ளே
தேவ வல்லமையும், வரங்களும் ஓய்ந்துபோகும்
நாள் வருமேயானால், அது அவிசுவாசத்தின் நி-
மித்தமாகவே இருக்கும்.

And now I speak unto all the ends of the earth—that if the day cometh that the power and gifts of God shall be done away among you, it shall be because of unbelief.

25 அப்படியானால் மனுபுத்திரருக்கு ஐயோ; உங்க-
ளுக்குள்ளே நல்லது செய்ய எவரும் இல்லை, ஒரு-
வன் கூட இல்லை. உங்களுக்குள்ளே நன்மை செய்-
கிறவன் ஒருவன் இருந்தானேயாகில், அவன் தேவ
வல்லமையாலும் வரங்களாலும் கிரியை செய்-
வான்.

And wo be unto the children of men if this be the case; for there shall be none that doeth good among you, no not one. For if there be one among you that doeth good, he shall work by the power and gifts of God.

26 இவைகளைச் செய்து மரித்துப்போகிறவனுக்கு
ஐயோ, ஏனெனில் அவர்கள் தங்கள் பாவங்களில்
மரிக்கிறார்கள். அவர்கள் தேவ ராஜ்யத்தில் இரட்-
சிக்கப்பட முடியாது; நான் இதை கிறிஸ்துவின்
வார்த்தைகளின்படியே பேசுகிறேன்; நான் பொய்
சொல்வதில்லை.

And wo unto them who shall do these things away and die, for they die in their sins, and they cannot be saved in the kingdom of God; and I speak it according to the words of Christ; and I lie not.

27 இக்காரியங்களை நினைவுகூரும்படியாய் உங்க-
ளுக்குப் புத்தி சொல்லுகிறேன்; நான் பொய் சொல்-
வதில்லை என்று நீங்கள் அறியத்தக்கதான காலம்
சீக்கிரத்தில் வருகிறது. ஏனெனில் நீங்கள் என்னை
தேவனின் நியாயவிசாரணைக் கூண்டிலே காண்-
பீர்கள்; தேவனாகிய கர்த்தர் உங்களை நோக்கி:
மரித்தோரிலிருந்து கூக்குரலிடுகிறவன் போலவும்,
ஆம், புழுதியிலிருந்து பேசுகிறவனைப்போலவும்,
எழுதப்பட்ட இம்மனுஷனின் வார்த்தைகளை உங்-
களுக்கு நான் அறிவிக்கவில்லையா? என்பார்.

And I exhort you to remember these things; for the time speedily cometh that ye shall know that I lie not, for ye shall see me at the bar of God; and the Lord God will say unto you: Did I not declare my words unto you, which were written by this man, like as one crying from the dead, yea, even as one speaking out of the dust?

28 நான் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறத்தக்கதாக
இவைகளை அறிவிக்கிறேன். இதோ, அவைகள்
நித்திய தேவனின் நாவிலிருந்து புறப்பட்டுவரும்.
அவருடைய வார்த்தை ஒரு தலைமுறையிலிருந்து
மற்றொன்றுக்கு பயில்காட்டும்.

I declare these things unto the fulfilling of the prophecies. And behold, they shall proceed forth out of the mouth of the everlasting God; and his word shall hiss forth from generation to generation.

29 நான் எழுதியவை உண்மையென்று தேவன் உங்-
களுக்குக் காண்பிப்பார்.

And God shall show unto you, that that which I have written is true.

30 மறுபடியும் நீங்கள் கிறிஸ்துவிடம் வந்து, ஒவ்-
வொரு நல்ல வரத்தையும் பெற்றுக்கொண்டு,
பொல்லாத வரத்தையும், அசுத்தமானதையும் தொ-
டாதிருக்க வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி
சொல்லுகிறேன்.

And again I would exhort you that ye would come unto Christ, and lay hold upon every good gift, and touch not the evil gift, nor the unclean thing.

31 எருசலேமே புழுதியிலிருந்து விழித்தெழு; ஆம், சீ-
யோனின் குமாரத்தியே, நீ உன் அழகான வஸ்திரங்-
களைத் தரித்துக்கொள்; இஸ்ரவேலின் வீட்டாரே,
நீங்கள் ஒருபோதும் தாறுமாறாக போகாதபடிக்கும்,
நித்திய பிதா உங்களோடு செய்துகொண்ட உடன்ப-
டிக்கைகளை நிறைவேற்றும்படிக்கும், உங்களது
முளைகளைப் பெலப்படுத்தி, உங்களது எல்லைக-
ளை என்றென்றுமாய் விஸ்தாரப்படுத்துங்கள்.

And awake, and arise from the dust, O Jerusalem; yea, and put on thy beautiful garments, O daughter of Zion; and strengthen thy stakes and enlarge thy borders forever, that thou mayest no more be confounded, that the covenants of the Eternal Father which he hath made unto thee, O house of Israel, may be fulfilled.

32 ஆம், கிறிஸ்துவினிடத்தில் வந்து அவரில் பூர-
ணப்பட்டிருங்கள். எல்லா அசுத்தங்களிலிருந்தும்
உங்களை விலக்கிக் காத்துக் கொள்ளுங்கள், நீங்-
கள் எல்லா அசுத்தங்களிலிருந்தும் உங்களை வி-
லக்கிக் காத்து, தேவனில் உங்கள் முழுஊக்கத்தோ-
டும், மனதோடும், பெலத்தோடும் அன்புகூருவீர்க-
ளானால் அவருடைய கிருபை உங்களுக்குப் போ-
துமானதாயிருக்கும், அவருடைய கிருபையினி-
மித்தம் நீங்கள் கிறிஸ்துவில் பூரணப்படுவீர்கள்;
தேவ கிருபையினால் நீங்கள் கிறிஸ்துவில் பூர-
ணப்படுவீர்களானால், நீங்கள் தேவ வல்லமை-
யை ஒருக்காலும் மறுக்கமுடியாது.

Yea, come unto Christ, and be perfected in him, and deny yourselves of all ungodliness; and if ye shall deny yourselves of all ungodliness, and love God with all your might, mind and strength, then is his grace sufficient for you, that by his grace ye may be perfect in Christ; and if by the grace of God ye are perfect in Christ, ye can in nowise deny the power of God.

33 மறுபடியும் நீங்கள் தேவ கிருபையினால் கிறிஸ்-
துவில் பூரணப்பட்டு, அவருடைய வல்லமையை
மறுதலிக்காமல் இருப்பீர்களானால், தேவ கிருபை-
யினால் கிறிஸ்துவின் இரத்தம் சிந்துதலின்மூலம்
நீங்கள் கிறிஸ்துவில் பரிசுத்தப்பட்டிருப்பீர்கள்.
அது நீங்கள் கறையற்றவர்களாக, பரிசுத்தமாக மா-
றத்தக்கதாக உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்-
புப் பெறும்படியான பிதாவின் உடன்படிக்கையி-
லுள்ளது.

And again, if ye by the grace of God are perfect in Christ, and deny not his power, then are ye sanctified in Christ by the grace of God, through the shedding of the blood of Christ, which is in the covenant of the Father unto the remission of your sins, that ye become holy, without spot.

34 இப்பொழுது நான் உங்கள் யாவரிடத்திலிருந்தும்
விடை பெற்றுக்கொள்கிறேன். என் ஆவியும், சரீர-
மும் மறுபடியும் இணையும் வரைக்குமாயும், தேவ
பரதீசில் இளைப்பாற சீக்கிரம் போகவிருக்கிறேன்;
ஜீவனுள்ளோருக்கும் மரித்தோருக்கும் நித்திய நி-
யாயாதிபதியாகிய மகா யேகோவாவின் இன்ப-
மான நியாயவிசாரணைக் கூண்டுக்கு முன்பாக
உங்களைக் காணும்படியாக காற்றினூடே ஜெயத்-
தோடு கொண்டுவரப்படுகிறேன். ஆமென்.

And now I bid unto all, farewell. I soon go to rest in the paradise of God, until my spirit and body shall again reunite, and I am brought forth triumphant through the air, to meet you before the pleasing bar of the great Jehovah, the Eternal Judge of both quick and dead. Amen.

*நிறைவுற்றது*

*The End*